உ

கணபதிதுணை.

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

ஸ்ரீ மகாபாரதம்.

(முதல் வால்யம்)



இஃது,

திருமயிலை வித்வான்

சண்முகம்பிள்ளையவர்களால்

வசனரூபமாக எழுதுவித்து

ப. மு. செல்வராஜ முதலியாரவர்களால்

தமது

அமெரிக்கன் அச்சுக்கூடத்தில்

பதிப்பித்துப்பிரசுரிக்கப்பட்டது.

சென்னை:

1890.

Sivakami Vilasam Press, Choolai Madras.

உ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

ஸ்ரீ மகாபாரதம்.

ஆதிபர்வம்.

காப்பு.

கலிநிலைத்துறை.

நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வாமரோ.

முருகார் மலர்த்தாம முடியோனை யடியார் முயற்சித்திறந்
திருகாமல் விளைவிக்கு மதயானை வதனச் செழுங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து முக்கோடி புத்தேளிரு
மொருகோடி பூதேவ ருங்கைதொ ழுங்கோவை யுறவுன்னுவாம்.

கடவுள் வணக்கம்.

கலிவிருத்தம்.

உலக மாக்கலுங் காக்கலு முண்மையால்
இலக நீக்கலு மென்றுந் தவிர்கலார்
சலச வாண்மலர்த் தாள்களென் னெஞ்சினு
நிலவு சென்னியி னுந்நிலை யாமரோ.

முருகக்கடவுள் வணக்கம்.

வந்த வேலை யெரித்த மலர்க்கணான்
றந்த வேளைத் தயித்தியர் காலனை
யெந்த வேளையு மென்னுள நீங்கலாக்
கந்த வேளைக் கருத்தி லிருத்துவாம்.

நாமகள் வணக்கம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை யாற்றிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளர்கின்றாளே.

திருமால் வணக்கம்.

எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆரணனை யாரணத்துட் பொருளை யண்ட மளந்தானை யளக்கரிய வாட் லானைக், காரணனைக் காரணங்கள் கடந்தோன் றன்னைக் கண்மணியைக் கண் மணிக்கு ளொளியாய் நின்ற, பூரணனைப் பூரணப்பொற் கலசக் கொங்கைப் பூமாது நாயகனைப் பொருவில் செங்கை, வாரணனை வாரணமுன் வந்து தோன்று மாதவனைக் காதலுடன் வணங்கி வாழ்வாம்.

நடேசர் துதி.

கார்மலி பொழிற் புலியூர் கவின்பெறச்
சீர்மலி நான்மறைச் செல்வர் செய்கிற்கும்
நார்மலி பூசனைக் கிரங்கி நாடொறும்
ஏர்மலி நடஞ்செயு மிறைவற் போற்றுவாம்.

திராவிட பாஷியகாரர்.

பேசுசீரெழுத் தஞ்சின் முப்பொருள் பெரிதுணர்த்திப்
பாசவேர்களைந் தென்றனைப் பரிவினி னாண்ட
தேசுபூத்ததென் றுரைசெயிற் றிகழ்சிவ ஞான
தேசிகோத்தமன் சேவடி தொழுதிருள் செகுப்பாம்.

ஞானப்பிரகாசர் துதி.

சொல்லினாற்றொடர் வருந்தன தூயசே வடிகள்
வல்லிரைந்தென்றன் முடிமிசை வயங்கிடச் சூட்டிக்
கல்லினைக்கனி விருத்தருள் காஞ்சியின் மேய
நல்லஞானப் பிரகாசனை நயந்திருள் களைவாம்.

வியாசர் வணக்கம்.

கலிவிருத்தம்.

வேத மாதி விளங்கிய நூலெலாம், ஓதி யாரு முளந்தெளி வெய்திடப் போதி யாநின்ற புங்கவ னன்புடை, வாத ராயணன் றன்னை வழுத்துவாம்.

அவையடக்க முதலியன.

கலிநிலைத்துறை.

முன்சொ லாகிய சொல்லெலா முழுதுணர் முனிவன்
றன்சொ லாகிய மாப்பெருங் காப்பியந் தன்னைத்
தென்சொ லாலுரை செய்தலிற் செழுஞ்சுவை யில்லாப்
புன்சொ லாயினும் பொறுத்தருள் புரிவரே புலவோர்.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

அகத்தியன் பயந்த செஞ்சொ லாரணங் கம்பு யாதன்
முகத்தினில் வாழு மந்த மொய்குழ லருளி னாலே
பகைத்தெதிர் பொருத தெய்வப் பாரதக் கதையை முந்நீர்ச்
செகத்தினில் விருத்த யாப்பாற் செய்கெனச் செய்த தன்றே.

முற்றிற்று.

௳

நூல்வரலாறு.

உலகமெல்லாம் பிழைக்கும்படி பதினெண் புராணங்களையும், வேதாந்த சூத்திரத்தையும், அருளிச் செய்தது மல்லாமல் இம் மகாபாரத்தையும் வடமொழியிற் செய்தருளிய ஸ்ரீ வியாசபகவானுடைய தாமரை போன்ற பாதங்களை எமது முடியினுக் காபரணமாகப் பூண்டு மகா பாரதத்தைத் தமிழில் வசனமாகச் சொல்லத் தொடங்கினேன்.

கடல்புடை சூழ்ந்த காசியின்கண் தவஞ் செய்வதற் கிடமெனத் தக்கவர் புகழும் நைமிசவனத்தில் சவுனகர் முதலிய முனிவர்கள் இருப்பத்தாறாயிரவர்களும் ஒன்று கூடி யிருக்கும் சமயத்தில் சகல புராணங்களையும் வியாசபகவானிடம் சந்தேக விபரீதமறக் கற்றுணர்ந்த சூதமுனிவர் எழுந்தருளினார். அவர் எழுந்தருளவே அவர்க்கு அர்க்கியம் பாத்தியம் ஆசமன்யம் முதலிய சோடசோபசாரங்களையுஞ் செய்து அவரைப்பார்த்து ஒரு வசனஞ் சொல்லுகின்றனர். தபோதனமே! முனிவர்க்கிறையே எழுந்தருளப் பெற்றமையால் யாங்கள் பெறுப் பொருளொன்றுமில்லை. ஆயினும் அடியேங்கள் உம்மை யிறைஞ்சிக் கேட்பதற்கு முன்னே உமது திருவாக்கான் மச்சியம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பாகவதம், சைவம், இலிங்க முதலிய பதினெண் புராணங்களையும் சொல்லக் கேட்டறிந்தோம். இனி ஐந்தாம்வேத மென்று சொல்லப்பட்ட மகாபாரதக்கதையைக்கேட்க விரும்புகின்றோ மென்று சொல்லச் சூதமுனிவர் சொல்லுகின்றனர். நீங்கள் வினவிய விஷயம் முன்னே ஜெனமேஜய மகாராஜன் கேட்டுப் பாவ விமோசனமடைந்தனன் என; முனிவர்கள் அனைவரும் அக்கதை நிகழ்ந்த நாடு, நகரம், அதை யாண்டவரசன், அவன் தோன்றிய மரபு இவைகளை நன்றாய் விளங்கவுரைக்க வேண்டுமென்று கேட்க, எம்மோ டொருங்குகற்ற வைசம்பாயனர் ஜெனமேஜயனுக்கு விள்ங்கக் கூறினர்; அவ்வாறே யானும் உங்களுக்குச் சொல்லுகின்றேனெனச் சொல்லத் தொடங்கினர். தாமரை மலரின் கண் வசிக்கும் பிரமசிருட்டிக்குட்பட்ட உலகம் சம்பு, இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கார முதலிய ஏழுவகைத் தீவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சம்புத் தீவாகிய நாவலந் தீவிலோ அங்கம், வங்கம், கலிங்க முதலிய ஐம்பத்தாறு தேசங்களுண்டு அத்தீவிலுள்ள நாட்டிலெல்லாம் சிறந்து இமயமலையினையும், கங்கையையும் தன்னிடங்கொண்டு, அன்பு, அருள், பொறை, அறிவு முதலிய நல்லொழுக்க மெல்லா நிறையப்பெற்று விளங்கும் குடிகள் வசிக்கப் பெற்றுள்ள குரு நாடென்றொன்றுளது. அந்நாட்டிற்கு முகத்திற் கண் போலும், அறத்து ளில்லறம் போலும், பசுவிற்காமதேனுப் போலும், சங்கினுட் பாஞ்ச சன்னியம் போலும், நாவினுண் மெய்ந்நாப் போலும் அத்தின நகரமென்பது இராஜதானியாய்ச் சிறந்துள்ளது.

அந்நகரமானது சந்திரகுலத்தார் அரசுசெய்யும் பட்டணமாய்ச் சொர்க்கமத்திய பாதல மென்னு மூன்றுலகத்தினரும் துதிக்கப்பட்டதாயும், அமராவதின் ஐஸ்வரியமும், அளகாபுரியின் சம்பத்தும் நாணத்தக்கதாயு முள்

ளது. மேலும் அந்த நகரம் அந்தணர் வீதி, அரசர் வீதி, சூத்திரர் வீதி, கணிகையர் வீதி, முதலிய வீதிகள் வரிசைவரிசையா யிருக்கப் பெற்ற தாயும், கல்வி மண்டபம், கணக்குழி மண்டபம், துலாதான மண்டபம், பாடல் மண்டபம், அத்தாணி மண்டப முதலியவை அடுக்கடுக்காய் நிறையப்பெற்று, மாஞ்சோலை, பலாச்சோலை, வாழைச்சோலை, கமுகஞ்சோலை, தென்னஞ் சோலை முதலிய சோலைகள் புடை சூழ்ந்து முள்ளது. அந்த நகரில் அயல் நாட்டார் வந்துவசித்துத் தத்தமக்குரிய பண்டமாற்றிப் பொருட்குவியைத் தாம் வெறுக்கக் கைக்கொண்டு செல்வாராயின் அதன் சிறப்பினை என்னொரு நாவால் எடுத்துச் சொல்லுந் தன்மையை யுடையதன்று. அந்த நகரத்திற் கரசனே சந்திர வம்சத்திற் பிறந்து தன்னாணையை மேருபருவதத்தில் எழுதி வைத்துப் பகைவரென்ற பேரில்லாமல் ஓட்டிக் குடிகளிடத்து அன்பு பாராட்டி யாவரையு நண்பாகக் கூட்டித் தன் பேட்டியை யாவர்க்கு மீட்டிய பரீட்சித்து மகாராஜன் குமாரன் ஜெனமேஜயனென்னும் பூபாலன். அவனே தன் தந்தையாகிய பரீட்சித்து மகாராஜனைப் பார்க்கிலும் பதின்மடங்கதிக மாக, குடிகளுக்கு நன்மை செய்து வருவதனால் இராஜனென்று தன்னைச் சொல்வதற் கிணங்க ஆறில் ஒரு கடமைகொண்டு தன்னுயிர் போல் மன்னு யிரைப் புரந்து வருநாளில் ஒருநாள் சத்திரயாகஞ் செய்ய வுத்தேசித்தான். அப்படியே யுத்தேசித்ததும் யாகசாலையிற் சென்று யாகஞ் செய்யத் தொடங்கினன். இவன் இப்படி யாகஞ் செய்துகொண் டிருக்குஞ் சமயத் தில் தேவாசுகுலத்திற் பிறந்த குக்குரன் மனைவி சரமை யென்பவள் பெற்ற மக்களில் சார்மேயனென்பவன் அந்த யாகசாலைக்குட் பிரவேசிக்கப்போனன். அதைக் கண்ட அரசன் சகோதரர்களாகிய சுதசேனன், உக்கிரசேனன், பீமசேனன் என்பவர் அவனை அடித்துத் துறத்தினர். அவனே அழுத கண் ணும் சிந்திய மூக்கு முடையானுய்த் தன் தாயிடமே சென்று முறையிட் டான்; அதைக் கேட்டவுடன் இடியோசை கேட்ட நாகம்போல ஏங்கித் துடி துடித்து தன் மகனை யழைத்துக்கொண்டு ஓடோடியும் வந்து யாகசாலையை யடைந்து ஜெனமேஜய மகாராஜனைக் கண்டு அரசே! யான் ஈன்றமக்களிற் சார்மேயனென்னும் இளங்கன்றை யடித்து வெருட்டி வருத்தினர், உமக் குப் பின் தோன்றினேரென்று சொல்லியது மன்றி, மனுநூல் வரம்பு கண்ட வேந்தர் வேந்தே இதுவுமுமக்கு மரபோ என்று போயினள்.

அனந்தரம் அரசன் திகிலடைந்து இனியென்ன விளையுமோவென் றேங் கித் தான் மேற்கொண்ட சத்திரயாகத்தை நிறைவேற்றித் தன் அத்தினு புரமே வந்து அரசு செய்துகொண்டு வந்தான். அவ்வாறு அரசு செய்து வரு நாளில் சரமை சொல்லியதைச் சிந்தித்து மதிமயங்கி, இப்பொல்லாங்குக்கு என்ன செய்வேன், யாரிடஞ்சென்று முறையிடுவேன், இதற்குக் கழுவாய் யாதோ? அவ்வம்மை யிருந்தால் அதற்குப் பரிகாரஞ் செய்து கொள்ள லாமே மறைந்து போயினளே யென்று மன நொந்து, வருவதை முன் னறிந்து சொல்லித் தமக்குக் கொடுமை நேரினும் நடுவு நிலையாகநின் றொரு சேர அரசனுக் கறிவிக்கும் அமாத்தியர் புரோகிதர் முதலியோர்க் கிதனை

யமிவித்தான். அதற்கு அவர்கள் ஒன்றுந்தோன்ருமல் சும்மாகிடப்பதறிந்து அவர்களிடத்து தன்னரசினை நான்குவருடகாலம் அரசுசெய்துவாருங்க ளென்று கட்டளையிட்டுத் தான் காடுகள், மலைகள், ஆறுகள், பாலைவனங்கள், மலைக்குகைகள், முதலியவையெல்லாம் கடந்து தெய்வகதியாய்ச் சோமா சிரவசுவென்னுந் தவச்சிரேட்டனைக் கண்டு ஓடோடியுஞ்சென்று வணங்கிச், சரமையென்னு மாதுசிரோமணியால் தனக்கு நேரிட்ட மனத்துன்பத்தை யும், யாகத்தின் விக்கினத்தையும் எடுத்துக்கூறி; அதனால் தன்னாட்டை மந் திரிகளிட மொப்புவித்து வனசஞ்சாரமாகத் தான் வந்தமையுஞ்சொல்ல, அதற்குமுனிபுங்கவர் அஞ்சாதை! மகாராஜாவே உன் மனக்குறை நீங்க வேண்டுமென்ருல் சாந்தியாகஞ் செய்ய வேண்டுமென்ன, உடனே அவ் வரசன் அதற்குவேண்டும் பொருள்களைத் தன்னகரத்தினின்றும் வருவித்து அம்முனிவரையே புரோகிதராகக்கொண்டு அந்தயாகத்தை நிறைவேற்றிக் கோதானம், பூதானம், வஸ்திரதானம், அன்னதானம், கன்னியாதான முத லிய சோடச மகாதானங்களையும் வழங்கி; தன்மனக்குறைவிண்டு முன்போல வே தன்னகரமே சென்று அரசாட்சி செய்துகொண்டு வந்தான். இது நிற்க,

உதங்கன்கதை.

உதங்கனென்னும் அந்தணன், பிரமசரிய நிலையிற் குறைவின்றி நடந்து இருக்கு, எசர், சாமம், அதர்வணமென்னும் நான்கு வேதங்களையும், சாங் கோக்கியம், கடகவல்லி, கேன முதலிய உபநிடதங்களையும், தருக்கம், மீமா ஞ்சை முதலிய வேதாங்கங்களையும், மனு முதலிய ஸ்மிருதிகளையும், ஸ்காந்த முதலிய புராணங்களையும், வேதாந்த சூத்திரத்தையும், பதினெண் கீதைக ளையும், வழுவறக் கற்றுணர்ந்த பயிலவமுனிவரிடத்தே சென்று தான் அவர் க்கு அருள்வரும்படி பண்பாக வழிபாடுசெய்து வந்தான்; அதைக்கண்ட அம் முனிவர் இவன் சற்பாத்திரனென்றுணர்ந்து தான்கற்றறிந்த அந்நூற்களனை த்தும் ஐயந்திரிபறவுணர்த்தி இவனைச் சர்வக்ஞபீடமென்று யாவருஞ்சொல் லும்படி கற்பித்தருளினர். இதைக்கண்ட உதங்கன் தன்னுசிரியனைவணங்கி ஐயா! அடியேன் மாட்டுத் தாங்கள் கல்வியிலெடுத்துக்கொண்ட சிரமத்தின் பொருட்டுக் குருதக்ஷிணைகொடுக்க விரும்புகின்றேன், தங்கள்கருத்தை வெளியிடவேண்டுமென்று வணங்கிக்கேட்டான். அதற்கு அவர் அவன்செய்ந் நன்றி மறவாமையைநோக்கி நனிதவமகிழ்ந்து எனக்கு ஒன்றும் வேண்டுவ தில்லையென்று மறுத்தார். மீளவும் உதங்கன்வேண்ட அம்முனிவர் உனது தாயைக்கேள், அவள் வேண்டியதைக்கொடுவென்று தம்மனைவியிடம் அனு ப்பினர், அவனும் அவ்வாறே அம்முனிவன் மனைவிபிடஞ்சென்று வணங்கிக் கேட்க அம்மங்கையர்க்கரசியார்மகிழ்ந்து உதங்கா! எவ்வுயிரையும் தன்னு யிரெனக்காக்கும் பவுடியந்த மகாராஜனுடைய மனைவி காதிலணிந்திருக்கும் கம்மலை யெனக்குக் கொண்டுவந்து கொடுப்பதே குருதக்ஷிணையாமென; அதைக்கேட்ட உதங்கன் விம்மிதமடைந்து அக்கம்மலை இத்தனைநாளிற்கொ ண்டுவந்து தருகிறேனென்று கெடுவிட்டு விடைபெற்றுப் பவுடியந்தமகாரா

ஜன் அரசுசெய்யு நகரத்தைநோக்கி நடந்தான். அவ்வாறு செல்லுகையில் வழியில் ஒருமகாபுருஷன் வெள்ளை யெருதிலேறிக்கொண்டு வழிமறிக்க, உதங்கன் அம்மகாபுருடனுக்கு வந்தனை முதலியவைசெய்து தன்வரலாற்றை யெல்லாஞ் சொல்லித் தன்னை மறிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ள, அம்மகாபுருஷன் என்கட்டளையில்லாமல் நீ இவ்வழியாகப் போகவே யொண்ணாது. நீ குருதக்ஷிணையின்பொருட்டுச் செல்வதினால் இவ்வெருதின் கோமயத்தினையேனு மருந்திப் போவாயாயின் போகவிடை தருவேனென்ன, உதங்கனும் அவ்வாறே யதனையருந்தி அவரிடம் விடைபெற்றுக்கொண்டுபோயினன். போனவன் ஏவலாளரால் அவ்வரசனுக்குத் தன்வரவைத்தெரிவித்து அவ்வரசன் வந்தனைவழிபாடுகள் செய்யவேற்று அவனுக்கு ஆசீர்வசனஞ் சொல்லி, அவ்வரசனிட்ட பொற்பீடத்திலிருந்து தான் வந்தகாரியத்தை யெடுத்துச்சொல்வானாயினன். அரசனே நான் பயிலவமுனிவன்பாற் கல்வி பயின்று வணங்கிநின்றேன், அம்முனிவன் தன்மனைவிவேண்டியதைக் குருதக்ஷிணையாகக்கொடுவென்றனன். அவ்வம்மை உமதுபேரைக்கூறி உம்முடைய மனைவி காதிலணிந்திருக்கும் கம்மலைக் கொண்டுவந்து கொடுவென்றுகேட்டாள். நான் இத்தனைநாளில் கொண்டுவந்து கொடுக்கிறேன் என்று சொல்லி வந்தேன். இதுதான் என்வரலாறென்று சொல்ல; அதற்கரசன் மகிழ்ந்து அந்தப்புரத்தில் என்மனைவியிருக்கின்றனள், அவளிடஞ்சென்று நான் கொடுக்கச்சொன்னதாகப் பெற்றுக்கொண்டு போமென்று விடைகொடுத்தனுப்பினன். அவ்வுதங்கன் இராஜபத்தினியை அந்தப்புறமெங்குந் தேடியுங் காணமல்வருந்தி, மீண்டும் அரசனிடமேசென்று இச்செய்தியையறிவித்தான். அரசன், மகானுபாவா! என்மனைவி அசுசியாயிருப்பவர் கண்ணுக்குத்தோன்றாள், ஆகையால் நீர்சுசியாய்ச் செல்வீராயின் உமது கண்ணுக்குத் தோன்றி நீர் நாடிவந்தபொருளையுங் கொடுப்பாளென்ன; உதங்கனும் தீர்த்தக்கரையிற் சென்று ஸ்நானம், சந்தியாவந்தனம், ஜபமுதலியவை முடித்துகொண்டு அரசன் அரண்மனைக்குச்சென்றான். உடனே அப்பதிவிரதாசிரோமணி கண்ணுக்குத்தோன்றி இதோ நீர்கருதிவந்தகம்மலை வாங்கிக்கொண்டுபோமெனக் கையிலேகொடுத்துப் பின்வருமாறு சொல்லுகின்றாள், சொர்க்கலோகவாசியாகிய ஒருபெரியவர் யாதோ ஒருகாரியமாய் நாகலோகஞ்சென்று ஆதிசேடனைக் கண்டுமீளுந்தருணத்தில் அவ்வாதிசேடன் அவருக்குக் காணிக்கையாகத் தன்சிரோமணிகளிற் சில கொடுக்கப்பெற்றுச் சொர்க்கலோகநோக்கிப் போகும்போது இப்பூவுலகத்தில் எம்மரசன் நல்லொழுக்கம், நற்செயல்களைக்கேள்விப்பட்டு அவரைக்காணவந்தார். நானும் அரசனும் அப்போது சிங்காரவனத்திலிருந்தோம். அப்பெரியவர் நாங்கள்செய்த வந்தனைவழிபாடுகளையேற்று ஆசிர்வசனஞ்சொல்லி, என்னைப்பார்த்து, அம்மா! பாற்கடலிற்பிறந்த திருமகள்போலும் பேரழகும், அருந்ததிபோலும் கற்பினலமும் பெற்றிருக்கின்றனை! உன்னை யெவரேனும்கண்டால் மனங்கவரத்தக்க அழகினையும் வாய்ந்திருக்கின்றனை! பிறர்கண்ணுக்குப் புலப்படாத வண்ணம் நான் கொடுக்கும் நாகரத்தினத்தைக் கம்மலிற் பதித்தணிந்திரு: நீயோ நல்லொ

மூக்கத்தினையுடைய சாதுக்களுக்கும், உன்கணவனுக்குமே யன்றி, சிறிது அசுசி உடையாருக்கும், தீயவொழுக்கமுடையாருக்கும் கண்ணில் தோன்ற மாட்டாய். இதனால் உன்கற்புக்குச் சிறிதேனும் இடையூறு நேரிடாதென்று சொல்லிக்கொடுத்து வாழ்த்திப்போயினர். அவ்வாறே யானும் அந்நாகரத்தினத்தைக் கம்மலிற்பதித்து அணிந்துகொண்டேன். பின்பு ஆதிசேடன் நமது நாட்டுப்பொருள் சொர்க்கலோகத்தல்லது பூலோகத்திலிருப்பது தகுதியன்றே! இதற்கு என்ன செய்வதென்று தன் மந்திரிமாரோடும் ஆலோசிக்கையில் தக்ஷகன் அந்தக்ஷணமெழுந்து வணங்கி,யான் எவ்வாறேனும் அந்த ரத்தினங் கொண்டுவந்து சேர்க்கிறேனென்று உறுதிமொழிகூறி, இவ்வாபரணத்தைக் கவர்ந்துபோக வெகுசாக்கிரதையாகக் காத்துக்கொண்டிருக்கின்றான்; ஆகையால் இவ்வாபரணத்தை யெங்கேனும் மறதியாகத் தரையில் வைப்பீராயின் மோசம்போவீர் என்று சொல்லிப் பின்னுஞ் சொல்கின்றாள்.

அந்தணச்சிரேஷ்டரே! இக்கம்மலையணியும் அம்மை மிகச்சிறந்தபதிவிரதையாயினும், அவ்வம்மணி யெங்கேனும், மறந்துவைக்கப் போகின்றனள். இதைமறவாமல் உமது ஆசிரியர்மனைவிக்கும் சொல்லுமென இறந்துகூற, அதற்கு அவ்வுதங்கனும் அக்கம்மலைப்பெற்றதைப்பார்க்கிலும் பதின்மடங்கு அவ்வரசன்மனைவி கற்புடைமைக்கு மிகவுமகிழ்ச்சியடைந்து அரசனிடம் வந்துதான் அக்கம்மலைப்பெற்றதை யறிவிக்க, அரசன் அந்தணர்பெருமானே! இன்று என்வீட்டிற் புசித்துப்போமென்று வேண்டிக்கொள்ள, அவ்வேண்டுகோளுக் கிசைந்து அவ்வரசனோடுதானும் அந்தப்புரஞ் சென்றனன். உடனே வேலைக்காரர் தலைவாழையிலைபோட்டு முல்லையரும்புபோன்ற சன்னசம்பா வரிசிச்சோறுபடைத்துத் தங்கச்சிகரம்போலும் அதன்மேல் துவரம்பருப்பைப் போட்டுப் புத்துருக்கு நெய்யைவிட்டுக் கார்த்தல், புளித்தல் முதலிய அறுவகைச் சுவையோடுகூடிய பொரிக்கறி முதலியவற்றைப்பரப்பி யுண்ணுமென்றுபசாரஞ்செய்து நிற்கின்றசமையத்தில் உதங்கன் சாப்பிடுகின்ற கவளமொன்றில் ஒருமயிர் தெய்வகதியா யிருக்கக்கண்டு கோபித்து அரசனைப் பார்த்து ‘கலத்தில் சோற்றையிட்டுக் கழுத்தையறுத்ததுபோல’ எனக்கு அசுசியான அன்னம்படைத்தமையால் இக்குற்றத்திற்காக நீ கண்ணொளி யிழக்கக்கடவாயென்று கடுஞ்சாபமிட்டான். அவ்வரசன் திடுக்கிட்டு இதுஎன்பிழையேயன்று, அவ்வாறு அதனை யெனதாகப்பாவித்தாலும் இத்தன்மையான விபரீதசாபமிடுவது மூமக்குத் தகுதியாமா? நீர்சிறிதும் முன்பின் யோசியாமல் கொடியசாபமிட்டமையால் நீர் இனி எப்போதும் மணஞ்செய்துகொள்ளாமல் நிலமுழுதுந் திரியக்கடவீரென்று பிரதிசாபமிட்டனன்.

உதங்கன் அரசனைநோக்கி எனக்கு நீரிட்டசாபம் பொருந்தாதிருக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, உலகத்தைகாக்கும் அரசர்கள் இட்டசாபத்திற்குப் பிரதிசாபங்கொடுப்பதை யெங்கேனுங்கேட்டிருக்கிறீரா? ஐயாநீர் எனக்குச் சித்தசாந்தமில்லாமலும் முன்பின்சிறிதும் யோசியாமலும் இட்ட கொடுஞ்சாபத்தை நிவிர்த்திசெய்ய வேண்டுமென்று வேண்ட, உதங்கன் அவ்வாறே அரசனுக்கு அந்தச்சாபம் பொருந்ாதவண்ணஞ்செய்து விடை

பெற்றுத் தன் ஆசிரியராகியபயிலவமுனிவன் இருக்கையைநோக்கிச்சென்ருன். அப்படிச்செல்லுந்தருணத்தில் சூரியாஸ்தமனமாயிற்று. அதையுணர்ந்த உதங்கன் சந்தியாவந்தனம்செய்வதற்காக ஓர் தடாகக்கரையிலிறங்கி அக்கம்மலேப் பூமியில் மறதியாகவைத்துச் சந்தியாவந்தனஞ் செய்துக்கொண்டிருந்தான். அப்போது 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்றபடி இப்படிப் பட்டசமயம் எப்போது வாய்க்குமோ என்று எண்ணிக்கொண்டிருந்த தக்ஷகனென்னும் நாகராஜன் அக்கம்மலேப் பிராமணவேடங்கொண்டு எடுத்துக் கொண்டோடினன். இதைக்கண்ட உதங்கனும் பின்ருெடர்ந்து வருவதனுல் தக்ஷகனும் நாகலோகஞ்சென்று அவ்வுலகிலிருப்பவர் அவன்கண்ணுக்குத் தோன்ருவண்ண மாயஞ்செய்தான். உதங்கனே 'வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம்' என்றபடி இவர்களைக் கோபமாகக்கேட்டு வாங்கிக்கொண்டு போவதிலும் இரந்து கேட்டுக்கைக்கொண்டு செல்வதேநன்று. 'நாமோ அற்ப சந்தோஷம் அதிகநஷ்டம்' என்றபடி அக்கம்மலேப்பெற்றபெருமகிழ்ச்சியால் அக்கம்மலேக்கொடுத்த இராசபத்தினி சொன்னதனேயு மறந்துவிட்டோமே; 'விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில்விழுவார்போல்' ஆனேமே! என் பலவாறு நொந்து அந்நாகலோக முழுதுஞ் சுற்றித் திரிந்து எங்கேபார்த்தாலும் இரத்தினமயமான மாடமாளிகைகளும், சிங்காரவனங்களும், தாமரைப் பொய்கைகளுமே யல்லது வேருென்றுங் காணுது திப்பிரமைகொண்டு நின்ருன். இவ்வாறு நிற்கையில் ஒருபுறத்தே இரண்டுமாதர்கள் பவளம்போன்ற விரல்களில்கறுப்பு நூலேயும், வெள்ளைநூலேயுஞ் சுற்றிக்கொண்டிருப்பதையும், அதற்கப்பால் பன்னிரண் டிதழுடன் சேர்ந்து அறுகோணம்போ லிருக்கின்றதாகிய ஒருபீடத்தினேயும், அப்பீடத்தின் கோணங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குமாரராக அறுவர் வீற்றிருப்பதையுங் கண்டு வியந்து; இனி நாமென்னசெய்வது! நாம் இந்நாகலோகவாசிகளேத் துதித்தல்லது பெறுவதரிதென்று துணிந்து பின்வருமாறு துதிக்கலாயினன். அருந்தவர் தலைவரான காசிபர்மக்களே! கத்துருசெய்த பெருந்தவமே! பரம்பொருளாகிய பரமசிவனுக்கு ஆபரணமாயும், அப்பரமன் கைவில்லாகிய மேருவுக்கு நாணுயும் விளங்கி, சிதரனுகிய அருங்கருணைக்கடலுக்குப் பாயலாயும், அமுதங்கடைந்த காலத்தில் மந்தரகிரியென்னு மத்துக்குத் தாம்பாயும், நிலவுலகத்தைத் தாங்கும் பேராற்றலுமுடையோரே! உபகாரமென்னுஞ் சொற்குப் பொருள் உம்மையல்லது பிறராரைக் கூறலாம்? என் ஆசிரியன் மனேவிக்காகக் கொண்டுவந்த கம்மலே யென்னிடங் கொடுத்துவிட்டு என்னேத் துன்பக்கடலின் றெடுத்துக் கரையேற்றுங்க ளென்ருன். இவ்வாறு துதிரூபமாகச் சொல்லியும் "சற்பாத்திரமல்லாவிடத்துப் பிச்சையிட்டது போல்' தோன்றக்கண்டு, ஒன்றுஞ்செய்ய வகையறியாமல் இனி உயிர்விடத்துணிவதே நலமென்று துணிந்து விட வெளியில் வந்துநின்ற சமயத்தில் வாயுவேகமான ஓர் திவ்யாஸ்வத்தி லாரோகணித்துக்கொண்டு அக்கினிபோலும் விளங்கும் ஓர் தேவபுருஷன் உதங்கனுடைய கண்களுக்கு நேராகத் தோன்றினன். உடனே மிகவும் வறியவனுகிய நித்தியதரித்திரனுக்

குப் பணப்புதையல் கிடைத்தாற்போல அதிக மகிழ்ச்சியடைந்து அவனு க்கு வந்தனை வழிபாடுகளையெல்லாம் செய்து முடித்துநிற்க அத்தேவபுரு ஷன் நீ வருந்துங்காரண மென்னவென்று கேட்க, உதங்கனும் ஆதியோ டந்தமாகத் தன்வரலாறு முழுவதுந்தெரிவித்தான். அதைக்கேட்டு நீஒன் றுக்கும் அஞ்சாதை! ஆயின் இக்குதிரையின் காதில் ஊதென்று சொல்ல ஒரு அழற்சியுண்டாகித் திருமறுமார்பன் பாஞ்சசன்னியத்தின் பேரொ லியைக்கேட்டு அஞ்சுகின்ற அசுரரைப்போலப் பாதாளலோகத்தாரெல் லாம் பதைபதைத்து நடுநடுங்கித் துடிதுடித்து நெஞ்சுலர்ந்து மெய்சோர் ந்து இதென்ன விபரீதம்! இவ்வழற்சியும் சத்தமும் நாமெப்போதுங் கண் டதில்லையே! நம்மினத்தினில் ஒருவனாகிய தக்ஷகன் வைதிக நிலையில் ஒழு கும் அந்தணனைச்செய்த வஞ்சனையே இவ்வாறு நேர்ந்தது! நாம் என்ன செய்வோம்!ஐயோ தெய்வமேயென்றுகரைந்துகரைந்துருகி, யாவருமொ ருங்குகூடி தக்ஷகன் கவர்ந்த கம்மலை அவனைக்கொண்டே கொடுப்பித்த னர். அதனைப்பெற்றுப் பெருமகிழ்ச்சி யடைந்து, கெடுவாய்விட்டதேயெ ன்று கிலேசப்பட்ட உதங்கனைப்பார்த்து பிரமசரியநிலை வழுவாத அந்த ணனே! ஏன் வருந்துகின்றனை? என்று முன்தெய்வப்புரவிமேல் தோன்றி ய மஹாபுருஷன் மீண்டும் வந்துகேட்க; இறைவனே! இத்தனைநாளில் கொண்டுவந்து கொடுக்கிறேனென்று என்குருபத்தினிக்குச்சொல்லிவந்த கெடுவாய்விட்டதே, நானோ நாகலோகத்திலிருக்கின்றேன், எப்போது அந்த அன்னைக்கு இக்கம்மலைக் கொடுப்பேனென்று எண்ணிவருந்துகின் றேனென்ன; அம்மஹாபுருஷன் ஐயா! இக்குதிரையின்மேலேறு, ஒருக ணப்போதில் உன் குருபத்தினி யிருக்குமிடத்திற்கு விரைவிற் கொண்டு போய்விடுமென, அவ்வுதங்கன் அக்குதிரையிலேறியவுடனே அவனை அப் பயிலவமுனிவன் இருக்கைக்குக்கொண்டுவந்துவிட்டு மறைந்துபோய்விட் டது உதங்கன் தன் ஆசிரியன் இருக்கையையணுகித் தன்குருபத்தினிக் குக் கம்மலைக்கொடுத்துவிட்டு அஷ்டாங்கபஞ்சாங்கமாக நமஸ்கரித்தான். அவ்வன்னை அவனைநோக்கி நீ வெகுபிரயாசைப்பட்டுக்கொண்டு வந்தமை யால் உன்பத்திக்கு மெச்சினேனென்றுவாழ்த்த விடைபெற்றுத் தன்னாசி ரியனிடஞ்சென்று வணங்கிநின்றான். சகல சாஸ்திரபாரங்கதனும் கேவல நிலைமையுணர்ந்த உதங்கா! நீ பவுடியந்த மகாராசன்மனைவி காதிலிருக்கும் கம்மலைக் கொண்டுவர இத்தனைநாள் தாமசமென்ன? சொல்லென்றுகேட் க, அதற்கவன் அங்கேபோனதுமுதல் வந்தவரையிலும் நடந்தவரலாற் றை ஒளியாமற் கூறிப் பின்னுஞ்சொல்லுகின்றான்; தான்போகையில் வெள்ளையெருதிலேறி ஒருபுருஷன் மறித்ததும், அவன் அதன் கோமயம் புசியென்றதும், தக்ஷகன் கம்மலைக்கவர்ந்தபோது வெள்ளைக் குதிரையி லேறி ஒரு மகாபுருஷன் தன்னை நாகலோகங்கொண்டு சேர்த்ததும், அங் கே யிரண்டுமாதர் கறுப்புநூலையும், வெள்ளைநூலையும் சுற்றிக்கொண்டு இருந்ததும், மற்றொருபுறத்து அறுகோணபீடமும், கோணத்திற்கிரண்டி தழும், ஆறுகுமாரருமிருந்தமையும் விளக்கமாகத் தெரிவிக்கவேண்டுமெ

ன்ன? அதற்குப் பயிலவமுனிவர் சொல்லுகின்றார். உதங்கா! வெள்ளையெருதிலேறி மறித்தவன் இந்திரன், அவ்வெள்ளையெருது ஐராவதம், கோமயம் அமுது; நாகலோகத்தில் கறுப்புநூலையும் வெள்ளைநூலையும் சுற்றிக்கொண்டிருந்தமாதரில் ஒருத்திபெயர் தாதை, மற்றொருத்திபெயர் விதாதை, கறுப்புநூல் இரவு, வெள்ளைநூல் பகல். அறுகோணபீடம் பூமி, கோணங்கடோறு மிரண்டிதழ்கள் பன்னிருமாதம், ஆறுகுமாரர், ஆறு இருதுக்கள்; குதிரையோடு தோன்றிய மஹாபுருஷன் வருணன், அக்குதிரை அக்கினிபகவான், நீ குருபக்தியுடையவனுகையால் இவர்களெல்லாம் உனக்குச் சகாயம்செய்ய வந்தனர். உனக்கு ஒப்பானவரை யிந்தவுலகத்திற் கண்டறியேன்! மகனேயென்று வாரித்தழுவி விடையளிக்க விடைபெற்றுத் தான்தவச்சாலையணுகிச் சிலநாள் தவஞ்செய்துகொண்டிருந்து பின்னொருநாள் தனக்குக் கம்மலைக்கொண்டுவருங்காலத்தில் தனக்குக் கேடுநினைந்த தக்ஷகனுக்குக் கெடுதிசெய்யவேண்டுமென்று எண்ணிச் சந்திரகுலோத்துங்கனுகிய ஜெனமேஜய மகாராஜன் அத்தாணிமண்டபமே போய்ச்சேர்ந்தான். அம்முனிவனைக் கண்டவுடன் திடீரென்று தன்னுசனத்தை விட்டெழுந்து எதிர்கொண்டழைத்துப்போய் அழகியஆசனமொன்றிட்டு அதன்மேலெழுந்தருளப்பண்ணி யோகக்ஷேமங்களை விசாரித்துத் தேவரீர் இவ்விடத்திற்கெழுந்தருள என்ன தவஞ்செய்தேனே! என்று வணங்கிக்கேட்ப, அதற்கு அந்த உதங்கமுனிவன் அரசர்பிரானே! நான் உம்மைநாடிவந்தது யாதெனின் நான் கல்விபயின்ற பயிலவமுனிவனுக்குக் குருதக்ஷிணையாகப் பவுடியந்த மகாராஜன் மனைவிகாதி லணிந்திருந்த கம்மலைக் கொண்டுவருஞ்சமயத்தில் வழியில் தக்ஷகன் அதற்குக்கேடு நினைந்தான். அவனையும், அவன் இனத்தாரையும் தண்டிக்கவேண்டி நான் சர்ப்பயாகஞ்செய்யவேண்டுமென்பதேயென்ன, அதற்கு அரசன் ஐயனே! 'நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றியொழுகப்படும்.' என்றபடி அவன் குற்றத்தைப் பொறுத்தருள்வது தேவரீருக்குப் பொருத்த கடமையென்றும், அவன் குற்றம்செய்ய அவனைத் தண்டிக்காமல் அவன் குலத்தவரையும் தண்டித்தல் முறைமையன்றென்றும் சொல்ல, அதைக்கேட்ட முனிபுங்கவன் ஒருவன்ஒருகுலத்திற் சிறப்படைந்தானுயின் அக்குலமுழுவது மடையும், ஒருவன் பிழைசெய்யின் அதுவுமவ்வாறே யக்குலமுழுவது மடையுமென்று எடுத்துக்கூற அதற்குத் திருஷ்டாந்தமாக ஒருகதையும்சொல்லுகின்றேன் கேளும் என்று பின்வருமாறு கூறுகின்றார்.

பிருகுமுனிவன் கதை.

அரசர் பெருமானே! ஒருகாட்டில் பிருகுமுனி தன்மனைவி புலோமிசையொடு அன்றில்போலக் கூடியிருந்தான். இங்ஙனம் நடந்துவருநகையில் புலோமிசைகருவுற்றாள். அதனையறிந்த முனிவர்பிரான் வழக்கப்படி ஔபாசனுக்கினியைத்தானே வளர்த்துவந்தான். ஒருநாள்சூரியாஸ்தமா

ன சமையத்தில் தன்காதலியாகிய புலோமிசையை யழைத்து நான்வருமளவும் இவ்வக்கினியை வளர்த்துவாவெனக்கட்டளையிட்டுத் தான்சந்தியாவந்தனஞ் செய்யச்சென்றான். அவ்வன்னை பூரணகர்ப்பவதியாயினும் கற்புடையாட்குக்கணவன்சொற்படிநடப்பதுகடனாகலின் அக்கட்டளையைத் தன்சிரமேற்கொண்டு அவ்வோமத்தை நடத்திவந்தாள். அத்தருணத்தில் அவ்வக்கினியும் பிரசன்னமாய் அவ்வன்னையளிக்கும் ஆகுதியையேற்று அக்குண்டத்தின்மத்தியில்விளங்கினான். அப்போது அவ்வனம்புகுந்துஅரக்கனொருவன் இவ்வோமவெளிச்சங்கண்டு ஒமஞ்செய்யுமுனிபத்தினியைக் கண்டு துராசார முடையவனாகலின் கெடுநினைவை யெண்ணி அக்குண்டத்தில்விளங்கும் அக்கினியை நோக்கி இப்பெண்மணியார்? நீயறிவையோ வென்றான். இவன் யாரோ கொடியவரக்கனுமென மதித்து இவ்வன்னை பிருகுமுனிவன் காதன்மனைவியென்றுள்ளவாறு கூறினன். அதற்கு அரக்கன் பிருகுமுனிக்கு மனைவியேது நான் சிறுகாலே இவளை மணம்புணர்ந்தேன். அவளை இம்முனிவன் கவர்ந்து தான் மணம்புணர்ந்தானல்லது வேறன்று. இவளைத் தேடித்தேடி மெய்சோர்ந்தேன். இப்போதுதான் இவளைக் கண்டு களித்தேன். இவளை விடுவேனில்லையென்று அதிகவேகமாய்ச்சென்று அவ்வன்னையைத் தூக்கிக்கொண்டு சென்றான். அதைக் கண்டு பூரணகர்ப்பவதியாகிய அவ்வன்னை 'பூனைவாய்ப்பட்ட கிளிபோல் நடுக்குற்று,' இனியென்செய்வதென்றேங்கி நிற்கையில் அவ்வரக்கன்தோளிலேயே இளஞ்சூரியனைப்போலும் ஓர்புத்திரனையீன்றாள். அம்மைந்தன் ஞானசிகாமணியாய்த் தன் தாய்க்குக் கேடுநினைந்த துராசாரமுடையானைச் சீறி நோக்கினான். அந்நோக்கி லிரண்டு தீப்பொறி தோன்றி அவ்வரக்கனை நீறாக்கிவிட்டன. உடனே இருடிபத்தினி தன் சிறுகுழவியை யெடுத்துக்கொண்டு தன் ஆசிரமமே போய்ச்சேர்ந்து முனிவனும் வரவே முனிவனிடத்து நடந்ததை யொன்று மொழியாமல் எடுத்துச்சொல்லி நின்றனள். கேட்ட முனிவரன் கிலேசித்து அக்கினிபகவான் சும்மா இருந்தனனோவென, அவன் இன்னார் மனைவியென்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே என்னைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டுபோயினனென்றனள். சீற்றங்கொண்டு முனிவன் அக்கினியைக் கூவிக்கேட்க அவனு நடந்தவண்ணம் சொல்லவும் இன்றுமுதல் நற்கந்தம் புசிக்கின்ற நீயினித் துர்க்கந்தமும் புசிக்கவெனக் கடுஞ்சாபமிட்டான். நான் சாட்சியாகலின் உண்மையாகக் கூறினேன், அந்தணனாகலின் நீயிட்ட சாபத்தையும் பொறுத்தேனென்றுகூறி தன்னமிசமுழுதுங் கவர்ந்தே ஓரிடத்திற் பதுங்கியிருந்தான். பின்பு அக்கினியில்லாமையால் உலகத்தில் யாகாதி சற்கருமங்களும் மற்றைக் கருமங்களு நடவாதொழிந்தன, அதனால் யாவரும் இந்திரனிடம் முறையிட, அவனும் சகலபுவனங்களையும் படைத்த நான்முகனிடஞ்சென்று சொல்ல, பதுமபீடத்தவனாகிய அந்நான்முகனும் அக்கினிபகவான் மறைந்திருந்த இடமடைந்து நான் பிருகுமுனிவனிட்ட சாபத்திற்குப்பிரதிசாபமளிக்கின்றேன்; நீ துர்க்கந்தம் புசிக்கினும் அதனானு

ண்டாய குற்றமுன்னை யணுகாதிருக்கவேண்டும் இன்னும் நீவிருத்தியடையவேண்டும் என்று கூறி நீ யினி யுலகத்தில் விளங்கக்கடவாயென்று கட்டளையிட்டுப் பின்னர் அம்முனிவன்மனைவி யழுதகண்ணீர் வீணாகாதபடி யொரு நதியாக்கி அதற்குவதூசரையென்றும் பெயரிட்டுத் தான் சத்தியலோகமே போய்ச்சேர்ந்தான் பின்னர் பிருகுமுனிவன் தன் மகனுக்குச் சவுனகனெனப் பெயரிட்டு அவனுக்குநான்குவேதமும், ஆறுசாத்திரமும் அறுபத்துநான்கு கலைகளும் ஐயந்திரிபறக் கற்பிக்க அச்சவுனகனும் மஹாநிபுணனாய்த் தவஞ்செய்யச்செல்லவே யவனைப் புற்றுச் சூழ்ந்துகொண்டது. இப்படியிருக்க, சூரியவமிசத்தரசனாகிய யயாதி யென்னும் அரசன் வேட்டையாடத்துணிந்து தன் மந்திரி, பிரதானி முதலிய, பரிவாரத்தோடும், தன்னருமந்த மகளாகிய சுகன்னியென்பாளோடும் புறப்பட்டு அக்காட்டிற்றங்கினான். இராஜகுமாரியாகிய சுகன்னியோ தன் பாங்கியரோடும் அக்காட்டிலுள்ள விநோதங்களைப் பார்த்துக்கொண்டு வருகையில் அம்முனிவனைச் சூழ்ந்தபுற்றில் அம்முனிவன் கண்ணினொளி யப்புற்றினிடையே தோன்றக்கண்டு இதென்ன! இப்புற்றின்கண் இரண்டு கண்ணொளி விளங்குகின்றன எனத்தானொரு சுப்பலெடுத்துக் குத்தினாள். முனிவனுக்கு அக்குத்தினால் சினமுண்டாய் முனிவரிருக்குமிடத்தில் ஒருவரும் வருதற்குத் தகுதியேயன்று; ஆயினும் இவ்வாறு கொடிய செய்கைசெய்வது தகுதியாயென்று அரசனும் மந்திரியும் ஒழிந்தபரிவார முழுவதும் கண்ணொளியிழக்க எனச்சபித்தனர். யாவரும் கண்ணொளி யிழந்து கலங்க அரசன் மந்திரியைநோக்கி இதென்ன புதுமை! ஜனங்கள் வருந்துகின்றனர்; இவ்வாறு நேரிடக் காரணமென்னவென. மந்திரியும் அரசே! இதுவோ முனிவர்வாசமெனத் தோன்றுகின்றது, நமதுசேனையில் யாராலோ ஒரு தீமை நேர்ந்திருக்கக்கூடும், அதனாலே இவ்வாறு நடந்ததென்றான்: அரசன் திடுக்கிட்டு நாம் யாதுசெய்வது என்று நடுநடுங்கித்திடுக்கிட்டு யாவரேனும் துர்ச்செய்கை செய்திருக்கின் தெரிவிக்கவேண்டுமென்று வள்ளுவனைக்கொண்டு பரையரிவித்தான். அப்பரையோசையைக்கேட்ட சுகன்னியென்னும் பெயருள்ள இராசகுமாரி தேனில் விழுந்த ஈயைப்போலவருந்தி முகம்புலர்ந்து தன் தந்தையிடமே நடந்தவண்ணந் தெரிவித்தாள். அதுகேட்டு யயாதிமகாராஜன் தன்னருந்தவக்கொழுந்தாகிய மகளை யழைத்துக்கொண்டுவந்து அம்முனிவரைப் பலவாறுதுதித்து வணங்கி என்மகள் செய்தபிழையைச் 'சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே' என்றபடி பொறுத்தருளவேண்டுமென்று இரந்து வேண்டவே அம்முனிவன் பொறுத்தருளி அச்சாபத்தைத் தவிர்த்து ஆசிர்வாதஞ் செய்தருளினர். அரசனோ வியப்படைந்து இச்சுகன்னியோ என்புத்திரி! இவளைத் தெய்வமணம் புணரும் எனவேண்ட அவர் அதற்கிசையவே அக்காட்டில் ஒரு கல்யாணமண்டபத்தினை யியற்றி அம்முனிவர்பிரானுக்குப் பாணிக்கிரகணஞ் செய்வித்துத் தன்னகரமே போய்ச்சேர்ந்தான்.

பின்பு அச்சுகன்னியை அம்முனிபுங்கவன் குற்றேவல்செய்யவைத்துக் கொண்டான், இவ்வாறு சிலநாள்நடக்கையில் ஒருநாள்சுகன்னியென்னுங் கன்னி தன்கணவனுக்கு நித்தியபூஜனைக்குச் சலந்திரட்டிவரச்சென்றாள் அச்சமயத்தில் அச்சுவினிதேவரென்னும்தெய்வமருத்துவரும், அக்கன்னி யின் நன்னயக்கற்பினிலையையறிய ஒருவசனஞ்சொல்வாராயினர். மங்கை யர்க்கரசியே! நீயார்? உன்பெயரென்ன! உன்கணவன்யார்! நீயோமிகவும் இளமைப் பருவமுடையவளாயிருந்து, தக்ககணவனை மணம்புணராது வயோதிகப் பருவமுடையானை வரித்தனை! அதனாற்கண்ட பலன்யாது? ஒன்றுமில்லையே! ஆதலின் எம்மிருவரில் யார்மேல் இச்சையோ அவரை மணம்புணர்ந்து நீபெற்ற கட்டழகினுக்கமைந்த நலமடைவாயென்றனர். சுகன்னியோ மறுவுத்தரமொன்றுஞ் சொல்லாமற் சித்திரத்திற்றீட்டிய பதுமைபோல மௌனமாகத்திரும்பித் தன்கணவனை யடைந்து நடந்த வாறு வணங்கிக்கூறினாள். இதனைத் தமது ஞானதிருஷ்டியாலுணர்ந்த முனிவர்பெருமான் பெண்ணருங்கலமே! நீயவர்களிடஞ்சென்று உங்களி லொருவருக்கு மனைவியாவதற்குத்தடையேயின்று, நீங்களேற்படுங்களெ ன்று சொல், பின்னர் அவ்விருவருக்குந் தீராவழக்குநேர்ந்து என்னையே நாடிவருவர்; பின்னே பேசிக்கொள்கின்றேனென்று கூற அச்சுகன்னியும் அவ்வாறே அவர்கட்குச்சென்று கூறினள்; முனிவன்கூறியவண்ணம் வழ க்குநேர்ந்து தீராமல் அச்சவுனக முனிவனிடமேவந்து தங்கள் வழக்கை யெடுத்துரைத்தனர். அம்முனிவனும் யான் அப்பெண்ணுக்குரியவனாக லின் உம்மைப்போல் எனக்கும் வழக்குண்டு. நாம் மூவரும் வேறோரிடத் திற்றான் தீர்த்துக்கொண்டு; பின்னர் மணம்புரிவோமென்று நடக்கையில் வழியில் ஒருசுனையைக்கண்டு அம்மூவரும் ஒருசங்கேதஞ்செய்துகொண்டு அம்மாதை நோக்கி நாங்கள் இச்சுனையில் மூழ்கிவருவோம், எங்களில் உனக்கிஷ்டமானவனை மணம்புணரென்றுகூறி மூழ்கி அவ்வச்சுவனிதேவ ரெவ்வுருவங்கொண்டு வந்தனரோ அவ்வுருவத்தோடும் அச்சவுனகரும் அச்சுனையினின்றும் அவருடன் தோன்றினர். கற்பிலருந்ததியும், கட்டழ கிற்றிருமகளும் போன்ற சுகன்னியும், யான் கற்பினிலை தவறாத விரதங் கொண்டிருப்பது மெய்ப்மையேயாயின், என்கணவனையே யான் பரிசிக் கக்கடவேனென்று தன் இஷ்டதெய்வத்தை வணங்கித்தொடவே அவன் தன் கணவனாகவேயிருப்பது நோக்கி மகிழ்ச்சியென்னும் கடலிலமிழ்ந்தி னாள். அவ்விருவரும் இச்சுகன்னி கற்பினணங்கென்று வாழ்த்தித் தமமி ருக்கையைச் சேர்ந்தனர். சுகன்னியொடு சவுனகரும் அன்றில் விழை போக மனுபவித்துச் சனகனென்னு முனிவனைப்பெற்று வாழ்ந்திருந்த னர். அச்சனகனும் சகலகலாபாரங்கதனாய் ஒரு அருந்தவன் மகளை மணா ந்து உருவனைப்பெற்றான். அவன் ஓரருந்தவர் பெருமான்மகளை வதுவை செய்து இணைபிரியாமல் வாழ்ந்துவருகையில் ஒருநாள் சந்தியாவந்தனஞ் செய்யச்சென்றான். சென்று முடித்து மீள்வதற்குள் இருடிபத்தினியை ஓரரவந்தீண்டி விஷந்தலைக்கேறி மரணாவஸ்தையடைந்து நிற்பதை முனி வன்கண்டு ஏதேதோ தகுந்த சிகிச்சைசெய்து முடியாமல் ஏங்கியேங்கி இடிவிழுந்த மரம்போல் சிறிதுந்தோன்றாமல் திப்பிரமைகொண்டிருக்கை யில் மரணமடைந்தாள். அப்போது உருரவன் மரணமூர்ச்சை யடைந்து பின்னரெழுந்து துக்கங்கொண்டு பூவின்மணம்போலவும், பாலினீர்போல வும் பிரியாதிருந்தோமே! இன்று பிரியநேரிட்டதே! உன்னைப்பிரிந்தும் உயிர்தரிப்பேனோ! என்று புலம்பி உயிர்விடத்துணிந்தான். அதுகண்டு

ஆகாயவாணி உரூரவா! நீ இப்படியுஞ் செய்யத்துணிவது தருமமா! என்
று சொல்லக்கேட்டு நாற்றிசையும் பார்த்தும் ஒருவருமில்லாமையால்
இது ஆகாயவாணியொலியேயாமென்று துணிந்து வணங்கி நிற்க, அவ
னுக்கு ஒருவசனஞ்சொல்லுகின்றாள் உரூரவா! உலகில் விதியைக்கடப்ப
தருமை. 'ஊழிற் பெருவலியாவுளமற்றொன்றுது, சூழினுந் தான்முந்துறு
ம்.' என்று பெரியோர் சொன்னபடியே உன்மனைவி விதியாலிறந்தாள்.
அதைச்சிந்தித்தாவதென்ன நீ உயிர்விடத் துணியலாமா? உன் ஆயுளிற்
பாதிதத்தஞ்செய்வையாயின் உன்மனைவியுயிர்பெற்று எழுவாளென்பதிற்
சற்றேனுமையமில்லையென, அப்படியே அவன் செய்ய, நித்திரைவிட்டெ
ழுவார்போலெழுந்தாள் உடனே உரூரவன் ஆனந்தசமுத்திரத்தில் அமி
ழ்ந்திக் கரைகாணாது அவளைவாரித்தழுவி முத்தமிட்டு நடந்தவண்ணமெ
டுத்துச்சொல்லி இவ்வளவு துன்பத்தையும் நமக்கு விளைத்தது பாம்பல்ல
வாவென்று கடுங்கோபங்கொண்டு கண்டகண்ட விடங்களிற் பாம்பினைக்
கொல்லும பெரியவிரதமேற்கொண்டான்.

இவ்வாறு மேற்கொண்டு பல்லாயிரம் பாம்புகளைக் கொன்றுவருஞ்
சமயத்தில் ஒருநாள் புற்றடியிற் பெரும்பாம்பொன்றிருக்கக்கண்டான்.
உரூரவன் அதைக்கண்டவுடன் மிகவிரைவாயோடித் தன்கைப்பற்றியிரு
ந்த தண்டாலதைக் கொல்லவோச்சவே, அது அரிகரி! கோவிந்தா! பரந்
தாமா! சர்ப்பசயனா என்றோலமிட்டது. அதைக்கண்டு அதிசயமடைந்து,
நாகமே! நீயேன் நாகசயனனை நினைந்தாயென, அதற்கு அப்பாம்பு சொ
லலுகின்றது அருமறைவல்ல அந்தணர்கட்கிறையே! யானோ ஒருகுற்ற
மும் செய்திலேன்! என்னையும் காரணமில்லாமலுங் கொல்லவந்தீர்! அவ்வ
டிக்குத் தப்பிப்பிழைக்க என்னாற்கூடிய தந்திரஞ்செய்தும் முற்றுப்பெற
வில்லை! ஆகையால இத்தருணத்தில்எல்லாமாயல்லவுமான இறைவனைநினை
ந்தேன் என்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றது ஐயா! 'நீர் தவஞ்
செய்வார்தங் கருமஞ்செய்வார்' என்றபடி தவமேற்கொள்ளாமல் கொலை
மேற்கொண்ட காரணமென்ன! என அதற்கு அம்முனிவன் கூறுகின்றா
ன். என்மனைவியை ஒருநாகங்கொன்றது அதுபற்றி ஒருகுலத்திலொரு
வன் குற்றஞ்செய்தால் அக்குற்ற மக்குலமுழுதுமேற்கு மென்பதுகொ
ண்டு இவ்வாறு செய்துவருகின்றேனென்றான். அத்தருணத்தில் பாம்பு
தன்னுருவநீங்கி காவி, காம்பர, தண்டு, கமண்டலதாரியாய் எதிரே ஒரு
முனிவன்போல் தோன்றிற்று. அதனை உரூரவன்கண்டு அதிசயமடைந்
து நிற்க, அம்முனிவன் உரூரவனை வணங்கினான். உரூரவனும் அம்முனி
வனை வணங்கிப் பின்பொருவரையொருவர் தழுவிக்கொண்டு நின்றார்கள்
பின்னர் உரூரவன் அம்முனிவனை நோக்கித் தற்செயலாய் இங்குவந்த நீர்
யாவர்? உமது வரலாற்றை யெடுத்துச்சொல்லுமென முனிவன் கூறுகின்
றான். உரூரவரே! நானோ மறைகள் எடுத்துக்கூறிய நாற்குலத்து மேற்கு
லத்துப் பிறந்துள்ளேன். எனக்கு ஆபிரபாதனென்றுபெயர். நான் ஒரு
காட்டையணுகி அங்கு அருந்தவஞ் செய்திருந்த முனிவரொருவரைக்
கிட்டி ஒரு துரும்பைக்கிள்ளி அவர்மேலெறிந்து பாமபு! பாம்பு! என்
று அவரைப் பரிகாசஞ்செய்தேன்! அவர் 'குணமென்னுங் குன்றேறி
நின்றார் வெகுளி, கணமேயுங் காத்தலரிது? என்றபடி என்னைச் சினந்து
நீயப்பாம்பாகுகவெனக் கடுஞ்சாபங் கொண்டேன், அவரை வணங்கி
எந்தாய்! என்பிழை பொறுமென்று விண்டேன், அதுநின் தரிசனமாத்
திரத்தால் நீங்குமென்றதனால் உன்னைக்கண்டேன், அதனையின்று விண்

டேன், இதுதான் என் வாலாரென்றுங் கூறி மீண்டுங் கூறுகின்றான். இது நினக்குரிய ஒழுக்கமேயன்று, அதனைவிட்டு இக்கொலைமேற்கொண் டாலும பாம்பினமோ இம்மூவுலகங்களிலும் பரம்பியிருக்கின்றன அவற் றைக்கொல்ல உம்மால் முற்றுப்பெறமாட்டா; பாம்பினங்கட்கே அவற் றைப் பெற்ற தாயாகிய கத்துருவென்பவள் சந்திரவமிசத்தில்தோன்றும் ஜெனமேஜெயனென்னும் அரசர் பெருமான் செய்யும் சர்பயாகத்திலவி றக்கச் சாபமிட்டிருக்கின்றாள் அதற்குள் நீரேன் வீண்வருந்த மேற்கொ ண்டீரென உரூரவருந் தன்மனைவியோடு விடைபெற்றுத் தன் ஆச்சிரமமே போய்ச் சேர்ந்தான். இவ்வாறே ஒரு குலத்தில் ஒருவன் தீங்குசெய்சால் அக்குலமுழுதுஞ் சாருமென உதங்கன் சொல்லி முடித்தான். இதுநிற்க; ஜெனமேஜெய மகாராஜன் எவ்வாறு பாம்பினங்கட்குப் பெற்றதாயில் சாபமுண்டாயிற்று எனக்கேட்க வைசம்பாயனர் சொல்லுகின்றார்.

கருடன்கதை.

நிலவுலகைப் புரக்கு நிருபனே! தவஞ்செய்தாரிற்சிறந்த காசிபமுனி வனுக்கு மனைவியர் பதின்மூவருண்டு அருள்விநதையென்றும், கத்துருவெ ன்றும்பெயருள்ள இருவரும் "மக்கட்பேற்றிற் பெரும்பேறில்லை" என்ற படி மக்களைப் பெறுவான்முயன்று தங்கணவனைநோக்கி யருந்தவஞ்செய் தனர். அவர்கள் அவ்வாறு தவஞ்செய்வதை உணர்ந்த காசிப முனிவர் அவ்விருவருக்குத் தோன்றி உங்கள்கருத்தென்ன வென்று வினவ, அவ ருள் விநதையென்பவள் வணங்கி, இறைவனே! ஒருவராலும் வெல்லற்கரி தாகிய வல்லமைமிக்க இரண்டுகுமாரரை யான்பெற்றுச் சிறக்கவரந்தரு வையெனக் கேட்டனள்; கத்துருவும் அவ்வாறே எனக்கும் சிறந்த வல்ல மையுள்ள நூற்றுநான்கு புத்திரரையும், ஒருபுத்திரியையு பெறவேண்டு கின்றேனென இவ்விருவர் கருத்தையும் முற்றுவிக்க வெண்ணிப் புத்திர காமேட்டியென்னும் யாகஞ்செய்து அதிற்கிடைத்தபிண்டத்தை அவ்விரு வருக்கும் கொடுத்துத் தான் முன்போலவே அக்கந்தமதனவரையிற் றவ ஞ்செய்திருந்தனர். இதுநிற்க:—அம்மாதரிருவரும் கருக்கொண்டு தாங் கள் எண்ணிக்கேட்டபடி விநதை என்பவள் வெகுகாலமானபின்னர் இர ண்டு முட்டைகளையும், கத்துரு என்பவள் நூற்றைந்து முட்டைகளையும் பெற்றனர். இவற்றில் கத்துரு வீன்றமுட்டைகள் ஐந்நூறுவருஷம் சென் றபின்னர் தாமேவிரிந்து அவைகளினின்றும் ஆதிசேஷன், வாசுகி, தக்ஷ கன், கார்க்கோடகன் முதலிய நாகராசர் நூற்றுநால்வரும், சலர்க்காரை யென்னும் ஒருமாதுந் தோன்றினர். இவர்களைக் கண்ணும் மனமு மகிழ வளர்த்துவந்தாள் கத்துருவையென்னுங் காமர்வல்லிக்கொடிபோல்வாள். அம்மைந்தர் சகல கலாபாரங்கதராயு மிக்கவல்லமையுடையராயு மிருப்ப தை விநதையென்பவள் கண்ணுற்று மனம்பொறாது தானீன்ற முட்டை கள் இருந்தவண்ணமே யிருக்கக்கண்டு; இதென்ன அதிசயம்! வைத்தவண் ணமே இவைகள் இருக்கின்றனவேயென்று பொறாமி யொன்றை யுடைத் தாள். அம்முட்டையில் எல்லா வுறுப்புங்கூடிக் காலொன்றுங் கூடாமல் ஒருமைந்தன் தோன்றினன், அவ்வாறு தோன்றினோன் தன்தாயை மும்

முறைவணங்கி அன்னாய்! உறுப்பெல்லாங் கூடிவருகின்றசமயத்தில் ஆத்தி
ரமாய்முட்டையை யுடைத்துவிட்டாய். ஐயோ! யான்மிக்க ஆற்றலுடைய
வனாயிருந்தும் பிறரால் நிந்திக்கப்படும் முடத்தன்மையுடையவனானேன்;
ஆதலின் நீ உனக்கிளையவளுக்குக் குற்றேவல்செல்பவளாதி யெனக்கடுஞ்
சாபமிட்டான், இச்சாபமேற்ற விநதையென்பாள் சஞ்சலப்பட்டு வருத்
தமுற்று புத்திராபேக்ஷைக்கு வருந்தி 'ஆத்திரக்காரருக்குப் புத்திமட்டு'
என்றபடி நம்பால்பிரத்தியக்ஷமாயிற்றேயென்று தன்னைத்தான்நிந்தித்துக்
கொண்டு நின்றதாயை நோக்கி அம்மே! நீயஞ்சாதை, என்னைப்பின்னப்
படுத்தினமைநோக்கிக் கோபத்தாற் கடுஞ்சாபமிட்டேன். இச்சாப நீங்க
மறுசாபங் கொடுக்கின்றேன். அஃதென்னவெனின் இதோவிருக்கிறமுட்
டையில் எனக்கிளையவனிருக்கின்றான். அவனே போராற்றலையுடையவனா
யிருப்பான். அவனால் நின்சாபம் நீங்கப்பெற்று மகிழ்சிறந்தவளாதியென
மறுசாபங்கூறி; என்னைச்செய்தவாறு அம்முட்டையையும் செய்யாதை
யென வற்புறுத்தினான் பின்னர் விநதையென்பவள் அருணனெனத் தன்
மகனுக்குப் பேரிட்டு நாளொருமேனியும், பொழுதொருவண்ணமுமாக
வளர்த்துவந்தாள். கிரகங்களிற் சிறந்த பரிதியங்கடவுளாகிய சூரியபக
வான் இவன் அசுவவிநதய முணருந் தகைமையிற் சிறந்திருப்பதைக் கே
ள்விப்பட்டு இவனையணுகி அருணா! நீ என் ஒற்றையுருளையும், சப்தா
என்னும் குதிரையும் பூண்ட தேரைச்செலுத்தவல்லபாகனாகவேண்டுமெ
ன்ன, அதற்கு அவனும் அமைந்துபோயினான். பின்னர் விநதையும் தன்
மூத்தமைந்தன் சொன்ன வண்ணம் மறுமுட்டையைக் காத்துவந்தாள்.
இங்ஙனமாக தேவருலகில் கற்பகதரு நிழலில் இருந்து அரசுரிமை மேற்
கொண்ட வச்சிரப்படையுடைய இந்திரன் நரை, திரை, மூப்பு, என்னுமி
வைகள் இடையுறாதிருக்கக்கருதி முப்பத்துமுக்கோடி தேவரும், நாற்பத்
தெண்ணாயிர முனிவரும், மற்றைப்பரிசனங்களும் தம்மைச் சூழ்ந்துவர
வைகுந்தமடைந்து சுதரிசனமென்னும் சக்கரம்,பாஞ்சசன்னியமென்னும்
சங்குசார்ங்கமென்னும் வில், கௌமோதகி என்னும்கதை,நாந்தகம் என்
னும் வாள் ஆகிய ஐம்படையையுமுடைய இறைவனைக்கண்டு அன்பர்க்
கெளியாய்! அருட்பெருங் கடலேயெனத் துதித்துநிற்க, நெடுமால் மிக்க
அன்புகூர்ந்து நீவிர்வந்த வெண்ணமென்னவென்று கேட்க, இறைவனே
நரை, திரை, மூப்பு முதலியன நாங்கள் எய்தாவண்ணம் கருணைசெய்ய
வேண்டுமெனக் கேட்கவே, இந்திரனை நோக்கி உபேந்திரனாகிய திருமால்
கூறுவாராயினர். நீ மேற்கொண்ட கருத்திற்குத்திருப்பாற்கடலைக்கடைந்
தால் அமுதமெழும், அவ்வமுதமும் புசித்தால் நரை, திரை, மூப்பென்று
கூறப்படுபவை எவ்வளவும் அணுகமாட்டா; அதற்கு உங்களில் யாவரே
னும் மந்தரகிரியைக் கொண்டுவந்தால் அதனை மத்தாகக்கொண்டு திருப்
பாற்கடலைக் கடையலாமென்று திருவாய்மலர்ந்தருளினர்இந்திரன்முதலா
னோரிதைச்செவியுற்றுமந்தரகிரியோசிறிதேயன்று,மிகப்பெரிதாமன்றோ,
அதைக்கொண்டுவரவல்லார் யாவரிருக்கின்றனரென மனக்கலக்கமுற்றிரு

ப்பதைக் கத்துரு மக்களிற்சிறந்தானும், கல்விகேள்விகளில் வல்லானும், 'சென்றூற் குடையாமிருந்தாற் சிங்காதனமாம்' எனப்பெரியார் அருளிச் செயல்வண்ணம், திருப்பாயலாயும் குடையாயும் ஆதனமாயும் இறைவனை, உலகுண்டகரவனை, பிறவிப்பிணியில் வருந்துவாருக்குமறவனை, ஆலடைகிடந்த அறவனை, அருமறைதுணிந்த ஒருவனைப்பிரியாமற் குற்றேவல் செய்யு மறிவாளனுமாகிய ஆதிசேடன் மாகந்தொழும் ஆகண்டலனைநோக்கி நானே விரைவிற்சென்று அம்மலையைக் கொணரவல்லேன், வருந்துதலொழியென அவ்விந்திரனிடத்து விடைகொண்டேகி அம்மந்தரகிரியை வேரோடும் பறித்துக் கொண்டுவந்தான்.

இதைக்கண்ட இந்திரன்முதலிய இறையவர்யாவரும் ஆதிசேடன் புயவலியைநோக்கிக் கழிபேருவகைஎய்தி உலகமுண்டபெருவாயனை, ஆழ்கடலிற் கண்வளருமாயனை, அன்பர்கட்கென்றும் சகாயனைப் பலதரம் பரவிப் பணிந்து அடியோங்கட்கு அமுதம்பாலியும் என்று வேண்டிக்கொண்டனர்.

உடனே அருமறை துணிந்த பரம்பொருளாகிய மாயோன் திருப்பாற்கடலை யணைந்து மந்தரகிரியை மத்தாக்கி, ஆதிசேடனுக்கிளவலாகிய வாசுகியைத்தாம்பாகப்பிணித்து ஒருபுறத்தேயசுரரும், ஒருபுறத்தேதேவருமாக அத்தாம்பைப்பற்றிக் கடையக் கட்டளையிட்டனன். அக்கட்டளையை மேற்கொண்டு அவ்வாறு இருதிறத்தாருங் கடையவே தாம்பாகப் பிணிக்கப்பட்ட வாசுகிவருந்தி விஷங்கான்றூன். அவ்விஷம்வடவைத் தீப்போற்சீறி யாவரையும் நீறுக்கத்தோன்றிற்று. அதனைக்கண்ணுற்ற இந்திரன்முதலிய தேவர்சள் நடுநடுங்கிப் பதைபதைத்து உடல்வெயர்த்து நாமினிச்செய்வது என்னென்று ஏங்கி இக்காலை பாலத்திருக்கழலையுடைய பரம்பொருளல்லது நமக்குப் புகலிடம் வேறில்லையெனத் துணிந்து அரகர சிவசிவ என்னு முழக்கொடு கருணைக்கடலாகிய பரமசிவனைத் துதித்து நிற்க, அடியார்க்கெளியானுகிய சிவபிரான் அவ்வாலவிடமுண்டு அமரர்கள் இடுக்கண்தவிர்த்துத் தமதிருக்கையாகிய திருக்கயிலைக்கெழுந்தருளினர்.

பின்னர் தேவர்கள் ஆனந்தக்கடலிலழுந்தி முன்போலக்கடையவே, சங்கநிதி, பதுமநிதி, காமதேனு, கற்பகம், அயிராவதம், உச்சைசிரவம், சிந்தாமணி, மதிக்கடவுள், கவுத்துவமணி, அபிராணி, இலக்குமி, இரதி, அகலிகை, அறுபதினுயிரம் அரமகளிர், இன்னனமுதலிய எல்லாப்பொருளுந்தோன்றின; அதன்பின்னர் அமுதமும் தோன்றிற்று. அமுதங்கண்டவுடன் தேவர்கள் அனைவரும்பெருமகிழ்ச்சியடைந்து திருமாலைவணங்கித் துதித்து நின்றனர். திருமால் பாற்கடலில்தோன்றிய பொருள்கள் அனைத்தையு நோக்கி இரதியை மன்மதனுக்கும், சங்கநிதி, பதுமநிதி, காமதேனு, கற்பகம், அயிராவதம், உச்சைசிரவம், அயிராணி, அரமகளிர், சிந்தாமணி இப்பொருள்களை இந்திரனுக்கும், அகலிகையைக் கவுதமனுக்கும் கொடுத்து, இலக்குமியையும், கவுத்துவமணியையும் தனக்குரியனவாகக் கொண்டு அவ்வமுதம் பகிர்ந்துகொடுக்கக்கருதித் தமக்குள் ஒரு சூழ்ச்சியை நினைக்கலாயினர்.

அஃதியாதெனின் அசுரரோ இயற்கையிலேயே கொடுஞ் செய்கையும், பேராற்றலுமுடையவர் நரை, திரை, மூப்பு, சாக்காடு இவற்றைத் தவிர்ப்பதாகிய அமுதமுமுண்பாராயின் தீயின்கண் நெய்பெய்தாற்போன்று மிக்கதூர்ச்செய்கை செய்வதிலே பின்வாங்கார். உலகம்பெருந்துயர் அடையும் என்பதிற் சந்தேகமென்பதேயில்லையென்று நீர்க்காலோசனை செய்து தமது அமிசத்தினின்றும்மோகினியுண்டாக நினைத்தாரென்பதே.

இவ்வாறுதோன்ற நினைத்தவுடனே அவள் சுராசுரரிடையே வரக்கண்டு இதென்ன? மண், விண், பாதலமென்னும் மூவுலகத்திலும் இவ்வகைப்பட்டதோருருவமும் ஒருநாளுங்கண்டதில்லையே! அழகென்பது ஓர் வடிவங்கொண்டு படிமிசைவந்தாற்போலிருக்கின்றதே; அம்ம! அம்ம! என்று அதிசயமிக்கெய்தித் திப்பிரமையடைந்து நின்றனர். இவருள் தேவர்கள் இதுகாவற்றெழிற் கடவுளாகிய மாயோன்மாயமேயாம். இனியொரு கணப்போழ்தில் அனைத்தும் வெட்டவெளியாமென்று தமதுநெஞ்சினைக் காமநெறிபொழுகாவண்ணம் அடக்கிநின்றனர். யானைகண்ட குருடரேபோல தாம்தாம் எவ்வெவ்வவயவங்கண்டு நின்றனரோ அவ்வவ்வவயவங்கண்டு நின்று ஆங்குச்சித்திரப் பிரதிமைபேபோல அசுரர் நின்றிருந்தனர்.

அப்போது கபடநாடகனுகிய பரமபுருஷன் தேவாசுரரைக் கண்ணுற்று அமிழ்தம்பகிர்ந்தளிக்க ஒருவர்வேண்டுமே! இந்நின்றமாதைப்பசிர்ந்தளிக்கக் கட்டளையிடுகின்றேன், உண்ணுங்கோளென்று வள்ளமொன்றும் கரண்டியொன்றுங்கொடுத்து இவ்வமுதினையாவருக்கும் வழங்குகவென்று கட்டளையிட்டனர். அவள் அக்கட்டளையை மேற்கொண்டு தேவர்களுக்கு அமுதம்பகிர்ந்து கொடுத்தும் அசுரரைத் தன்மாயாவிலாச மயக்கத்தில் ஆழச்செய்தும் நின்றாள். இவ்வண்ணஞ்செய்கையில் ஆதிசேடன்பின் வந்தோருள் இருவர் பந்தியில் வஞ்சனைசெய்வதுமுண்டா! நியாயவாயிலாக யாவரும் அரிதின்முயன்று தேடியபொருள் யாவருமன்றே அனுபவிக்க வேண்டும். அவ்வாறு பயன்படாமல் விரல்நீக்கி மோர்குடிப்பார்போல வருந்திக்கடைந்த நம்மையும், அசுரரையும் விலக்கித் தேவர்கள்மாத்திரம் அமிழ்தமுண்பானேன் என்று தம்முள் நினைந்து இனி நாம் சும்மா இருப்பது தகுதியன்றென்று தேவர்களைப்போல வடிவங்கொண்டு தேவர்கள் வரிசையில் ஓர்புறம் சென்றிருந்தனர்.

இம்மோகினியோ இவரையும் தேவரேயாமென்று கருதி அமிழ்தம் பகிர்ந்து அளித்தாள். உடனே அவர்கள் அசுசியாய் அதனையுட்கொண்டனர். அதை யருகிலிருந்த சூரியசந்திரர் இருவருங்கண்டு திப்பிரமை கொண்டு இவர்கள் உருவத்தால் தேவரேயாகத்தோன்றினும், செயலால் அசுரரேபோலத் தோன்றுகின்றனர் என்று சைகைசெய்துநின்றனர். அதைக் கண்ட மோகினித்தெரிவை தன்கையிற் பிடித்திருந்த கரண்டியால் மண்டையிரண்டாக்கப் புடைத்துத் தேவர் கூட்டத்திற்குப் பகிர்ந்து கொடுத்தாள். தேவர்களோ திருவெட்டெழுத்தே வடிவாகவுடைய புருஷோத்தமனைத் தியானித்து அவ்வமுதை யுட்கொண்டனராகிப் பேரானந்தக்கடலில் அழு

ந்தினர். இதுநிற்க; மாறுவடிவங்கொண்டு அமுதநுகர்ந்த இருவரும் சூரிய சந்திரராலன்றோ நமக்கு இக்கேடு நேர்ந்தது; இவர்களை இலேசில்விடப்படாதெனத்துணிந்து, ஒன்றுயுலகனைத்துமான பரமசிவனைநோக்கி அருந்தவஞ்செய்து அவனருளால் ஒருவன் சூரியனையும், மற்றொருவன் சந்திரனையும் பற்றிவிழுங்குவதும் கான்றுவருவதுமாகிய செய்கையைச் செய்துவருவாராயினர். அச்செயலைத்தான் இன்றுவரையும் சூரியகிரகணமென்றும்; சந்திரகிரகணமென்றும் உலகிற்சொல்லப்பட்டு வருகின்றது. அம்மாறுவேடம்பூண்ட இருவருமே இராகு, கேதுக்களென்று சொல்லப்படுபவர். பின்னர் எஞ்சியவமுதத்தை ஒருபொற்குடத்தில் இட்டுத் தேவலோகத்திலே வைத்துத்திவ்யாஸ்திரங்களையும், தேவர்களையும் அதற்குக் காவலாக்கித் திருமால் அமுதமுண்டதேவரைத் தமதிருக்கைக்குச் செல்லக் கட்டளையிட்டுத்தாமும் தமதிருக்கையினைநாடினர். மோகினி தன்னுருவமுங்கரந்தாள்.

இனி அசுரரோ 'வாய்த்தவிடும்போய் அடுப்பு நெருப்பும்போய்விட்டது' என்றபழமொழிப்படி அமுதையுமிழந்து மோகினியைநோக்கி இளித்தவாயினையுடையாராய் யாதொருபயனு மெய்தாமல் ஏமாந்து அடடா! மோசமெய்தினோமே. திருமால் முதலிய தேவர்கள் நம்மை மயக்கி அமுதங்கொடாமற் போய்விட்டனரே என்று மிகச்சினங்கொண்டு ஒருங்குதிரண்டு தேவர்கள்மேற் படைபெடுங்கோளென்று பொன்னுலகை யடர்ந்து யுத்தஞ்செய்பத் தொடர்ந்தனர்.

இதைத்திருமாலும் பிரமனு முணர்ந்து கடுகியடர்ந்து அசுரநாசஞ்செய்யவே இறந்தவரொழிய எஞ்சிய அசுரரும்பயந்து இனியிருந்தால் நமக்கும் கேடுவருவது திண்ணமென்று பாதாளலோகமேசென்று ஒடுங்கியிருந்தனர். இவ்வாறிருக்க, திருமறுமார்பன் கருணையால் திருப்பாற்கடலினின்றுந்தோன்றி இந்திரனையடைந்துள்ள அயிராவதம், உச்சைசிரவமென்பவற்றுள் உச்சைசிரவமென்னும் வெள்ளை குதிரை ஒருநாள் கடலோரமாக வந்திருந்தது. அதுபோழ்து ஆதிசேஷன் முதலாகிய சருப்பராசர்களையீன்ற கத்துருவும், அருணனையீன்ற விநதையும் வேடிக்கை பார்க்க வந்து அக்குதிரையைக்கண்டார்கள். கண்ட இருவருள் விநதையென்பவள் தங்காய்! புண்ணியம் பழுத்தோர் புகழேபோல இக்குதிரை வெள்ளை வெளேலென்றிருக்கின்றதேயென்றனள். கத்துருவோ இக்குதிரைக்கு வாற்புறத்திற்மாத்திரஞ் சற்றுக்கருப்புளதென்றனள். விநதையோ இன்மையை யுண்மைபோலேன் சொல்லுகின்றனை! நன்றாகப் பாரென்று சொல்லவே கத்துருவை தமக்கையைநோக்கி அவ்வாறுகறுப்புளதேல் நீஎனக்கு அடிமையாதி யென்றும், கறுப்பிலதேல் யானுனக்கடிமை யாகின்றேன் என்றும் சம்மதித்துக்கொண்டு அக்குதிரையைப்பார்ப்போம் வாவென்று ஒருவரையொருவர் அழைக்கப்போய்ச்சென்று காணும் சமையத்தில் கத்துருவை தமக்காய்! நாம்வந்து நெடும்போதாயிற்று, நாளைவந்து பார்ப்போமென்று கூறவே இருவரும் தமதிருக்கையை நாடிச்சென்றனர்.

இவ்விருவருள் கத்துருதன்மனைக்குச் சென்றவுடனே தன்மக்களைக் கூவி என்மக்களே! நானும் என்தமக்கையும் சபதஞ்செய்துகொண்டோம். அது உச்சைசிரவமென்னும் வெள்ளைக்குதிரைக்கு வாற்புறத்திற்கறுப்புண்டென்பதே! என்வார்த்தை பழுதாகாவண்ணம் நீவிர் அக்குதிரையின் வாற்புறத்திற் சற்றுக்கருப்புண்டாக்குங்கோள். அவ்வாறு செய்விரேல் என்தமக்கை என்தொழுத்தையாவளென ஆதிசேடன்முதலியோர் எங்களையீன்ற பெருங்கற்புத்தெய்வமே, அக்குதிரையோ பாற்கடலிற்றோன்றியது, அதற்குச்சிறிதேனு மறுவுண்டென்பதே கூறவொண்ணாது, அதற்கு மறுவுளதாக்கின் நாங்கள் பெருங்கேடு அடைவோம். பின்னரும் பெற்ற தாயினிடத்தோ கற்றவித்தையைக் காட்டுவது என்பதாகும். இவ்வகைப்பட்ட செயற்குடன் படோமென்றனர்.

அதுகேட்டுக் கத்துருசினங்கொண்டு நீவிர்எல்லாம் இனிச்சந்திரகுலத்தரசனாகிய ஜெனமேஜெயமகாராசன் செய்யும் சர்ப்பயாகத்தில் மடியக்கடவீரெனக் கடுஞ்சாபமிட்டனள். இதைக்கேட்ட அவள் மக்களுள் ஒருவன் அக்குதிரையின் வாற்புறத்திற் சற்றேகறுப்புத்தோன்ற ஒன்றியிருந்தான். மறுநாள் கத்துருவும் விநதையும் கடலோரத்திலிருந்த அக்குதிரையினைக்கண்டனர். கண்டாங்கு அக்குதிரையின் வாற்புறத்திற் சற்றேகறுப்பிருக்கக்கண்டு சங்கேதப்படி தன்தங்கைக்குத்தொழுத்தையாகிஅவளிட்ட குற்றேவலைச் செய்தொழுகுவாளாயினள்.

இவ்வாறொழுகிவருஞான்று விநதை யுயிர்த்தமுட்டையில்அருணனையொழிந்த மற்றொன்று பருவம்நேர்ந்துவிரிந்தது. விரிந்தாங்கு அதினின்றும் அழகின்மிக்கசிறகினையும், பேராற்றலையும், இளஞாயிறுபோன்ற மேனியையும் எய்திய இரணியனறைந்த தூணின்கண் அவனைக்கொல்லத்தோன்றிய அழகிய சிங்கன்போல ஒருமைந்தன் தோன்றினான். அம்மைந்தன் தோன்றினவுடன் வானிற்பறந்து தன்தாயையை யோடோடியும்வந்து வணங்கிநிற்கவே தாயாகிய விநதையும் இன்றன்றோ பெண்பிறப்பெய்திய பயன்பெற்றேனென்று கண்ணுமனமுங்களிப்பெய்த ஆனந்தக்கடலிலாழ்ந்தாள். கத்துருவோ இம்மைந்தன் பேராற்றலையும் அழகினையுங்கண்டு மக்கட்செல்வம்பெற்றால் இவ்வாறன்றோ பெறவேண்டும். 'பன்றிபலகுட்டி பயந்ததனாலேதுபயன்' என்றபடி நாம்பலமைந்தரைப் பெற்றதனாலென்ன பயன்! என்று மனநொந்து அம்மைந்தனைநோக்கி ஒருமொழிகூறுகின்றாள். கலுழா நீஎன்தொழுத்தை மகனாதலின் என்மைந்தர்க்குங் குற்றேவல்செய்தொழுகென அதற்குஅவனேர்ந்து அவ்வாறு ஒழுகுவானாயினான்.

இவன்செய்யுங் குற்றேவல்யாதெனின் ஆதிசேடன்முதலிய நூற்றுநால்வரையும், தீவாந்திரங்களில் எடுத்துச்சென்று ஆங்குள்ள விநோதக்காட்சிகளையும், இமயமலை, மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், கந்தமாதனம், நீலகிரி முதலாயமலையலங்காரங்களையும் காட்டிவருவதுவே. இவ்வாறு தன்தாயிடம் வந்துவணங்கி அம்மே! என்ன யான் எஞ்ஞான்றும் ஆதிசேஷன் முதலானோரைச் சுமந்துவருவதனால் காலங்கழிவதாயிருக்கின்றது. என்னுடைய பேராற்றல் உலகமுண்ட பெருவாயானாகிய உலப்பில் சீர்த்தியம்மானாகிய இறைவன் ஒருவனேயறிவான், மற்றொருவராலுமுணரவொண்ணாது.

அத்துணையாற்றலையடைந்தும் "அவையஞ்சிமெய்விதிர்ப்பார் கல்வியும்கல்லார், அவையஞ்சா வாகுலச்சொல்லும், நவையஞ்சி-யீந்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தாரின்னலமும், பூக்தலிற்பூவாமைநன்று" என்றபடி எனக்குக் குற்றேவல் செய்யத் தக்காரிடத்தே யான் குற்றேவல் செய்பவனாகி மற்போராற் காய்ப்பேறுந்தோளில் ஆதிசேஷன் முதலானோரைச் சுமந்து காய்ப்பேறலாயிற்றே. இதைச்சிந்திக்குந்தோறும் என்மனம் புழுங்குகின்றதே! என்செய்வேன்! யாரிடத்திற்போய் முறையிடுவேன். இதுவும் அயன் என்தலையிலெழுதிய எழுத்தோ, இதுநிற்க; நீபடுகின்றதுயரம் பார்த்தாலும் என்மனம்பகீரென்கின்றதே, அக்கத்துருவுக்கு நீஇயல்பாக அடிமையாயினையோ அல்லது வேறொருகாரணத்தால் ஆயினையோ உள்ளவாறு விரித்துரைக்கவேண்டுமென்று வேண்டிக்கேட்ட மகனை நோக்கி அழலிடைப்பட்டமெழுகுபோன் மனமுருகிச் சொல்வாளாயினள்.

அடாகுழந்தாய்! தக்கப்பிரசாபதி புதல்வியர் பதின்மூவரும் காசிபருக்கு மனைவியராயினர். அவருள் இக்கத்துருவுக்கு நான்தமக்கை; உன்தமையனாகிய அருணனிட்டசாபத்தினால் இவட்குத் தொழுத்தையாயினேன்; அது அவ்வருணன் இருந்த முட்டையைப் பருவமாகாத முன்னரே யுடைத்தேன், அப்போது உன்தமையனுக்கு எல்லாவுறுப்புங்கூடிக்கான் மாத்திரம்கூடாமலிருந்தது, அதனால்அவன்சினந்து என்தங்கைக்குத்தொழுத்தையாகெனச் சாபமிட்டான். அச்சாபத்திற்கு வருந்தாமல் அவயவப் பழுதைநோக்கிக் கலுழந்தேன். அதனைநோக்கி இச்சாபம் என்னிளையவனால் நீங்குமென்று பிரதிசாபமிட்டுத் தான் சூரியனுக்கு இரதசாரதியானான். இதுதான் என்வரலாறு என்று விளங்கக்கூறினாள். அவ்வாறுகூறக் கேட்டு விடைபெற்று முன்போன்று ஆதிசேடன்முதலானோர்க்குக் குற்றேவல்செய்தொழுகுகையில் ஒருநாள் அவர்கள் கலுழா! மாலியமலை மிக அதிசயமுடைத்தெனக்கேள்வி. ஆதலால் பார்க்க அவாவுளதுஎன, அதற்குக்கலுழனும், நன்று! வாருங்கள் காண்பிப்பேன் என்று கொணர்ந்து சென்றுகாட்டி அவர் அவாவைவீட்டித் தான் அவர்களைவிட்டு அம்மலைச் செறிவில் ஒருபுறத்தேநின்று இதென்னவிதிவசம்' கத்துருவோ அடிக்கடி சற்றேனும் இரக்கமென்பது அணுத்துணையுமின்றி வேலையிடுகின்றனளே! அஃதிருக்கட்டும், அவள்மக்களாகிய காத்திரவேயரோ மிக்கஅறிவுடையார்கள்; அவருள் ஆதிசேடனோமிகப் பண்டிதசிரோமணியன்றோ! உலகில் அவனுடன் சரிவரக்கற்றோர் பிறரில்லையே. அவ்வாறிருந்தும் நிரம்பக்கடுரமான குற்றேவல் செய்விக்கின்றனனே. அல்லது நமதுபேராற்றலால் வெற்றிகொள்வோமெனின் தாய்சொல் குறைவடைகின்றதே. உலகமோ 'தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லை' என்றதனால் தாய்சொல்லைத்திரஸ்கரிக்கப்படாதே! இதற்கென்னை செய்கேன், யார்பாற் சென்று முறையிடுவேன் என்றுதனக்குள்ளேதான் அழலிடைப்பட்டமெழுகதுபோல்வாடி அருட்பெருங்கடலைநாடி அவன் ஆயிரநாமம்பாடி அவன்திருவடித்துணையே தஞ்சமென்று கூடிநின்றான். அத்தருணத்தில் நாரதபகவான் எழுந்தருளினார். அதுகண்டு இவர் யாரோ மகானுபாவரென்று வணங்க, அவர்

அப்பா உன்னைத்தெரிசிப்பவருக்கே துன்பமென்பது அணுத்துணையுநே ராதே! நீவருந்துவானேன் என்றனர். அதற்குக் கலுழன் தன்மாதாவுக் குத் தன்தமையனிட்ட சாபமும், அந்தச்சாப நேர்ந்தவாறுங்கூறிப் பின் னுங் கூறுகின்றான்.

ஐயா! உச்சைசிரவமென்னும் குதிரைக்கு வாற்புறத்திற் கறுப்புண் டோ சொல்லுமென்றனன் நாரதமுனிவர் அக்குதிரைவெறும் வெண்மை நிறமே யுள்ளது. அதன்வாற்புறத்துக் கறுப்புண்டானது உன்சிற்றன்னை செய்தசதியல்லது இத்ததியில்வேறுகாணேன் என்று அதனைவிரிவாயெடு த்துப்பேசி மறைந்தருளினர். இவ்வாறு நிகழ்கையில் விநோதம்பார்க்கச் சென்ற கத்துருமக்களாகிய காத்தவேயரும் மீண்டனர் இவர்களை முன் போலவே யெடுத்துவந்து இருப்பிடத்திற்சேர்த்தான். இவ்வாறு நிகழ்கை யில் கலுழனும் இவர்கள் செய்யும் கொடுந்தொழிலைக் கண்ணுற்று நமது போராற்றலைக்காட்டினல் அல்லது நம்பால்பயந்து குற்றேவல்இட அஞ்சா ரென்பதுணர்ந்து அதற்குக்காலம் பார்த்துக்கொண்டேயிருந்தான். ஒரு நாள் காத்தவேயராகிய ஆதிசேடன்முதலானோர் கடல்புடைசூழ்ந்த காசி னிமுழுதுங்கண்டோம். இனிவானின்கணுள்ள வாயுமண்டலம், சந்திர மண்டலம், அக்கினிமண்டலம், சூரியமண்டல முதலியவைகளைப் பார்க்க வேண்டும், எங்களுக்குக் காட்டுவென்று வேண்ட அவ்வாறே காட்டுகின் றேனென்று கேசரிமார்க்கத்தில் அவர்களைக்கொண்டுசென்று ஒவ்வொரு மண்டலமாகக்காட்டிப் பரிதிமண்டலந்தாவினான். தாவவே ஆதிசேடன் முதலானோர் அச்சூரியமண்டலத்தின் அழற்சியை ஆற்றாய்ச் சீர முழு துங்கன்றி முகங்குன்றி நெட்டுயிர்ப்பொன்றி யானைதன் தலையில்தானே மண்பொட்டுக் கொள்ளுகின்றதுபோல நம்மால்நாமே இத்துன்பந்தேடிக் கொண்டோமே என்று கலுழனைநோக்கி இனிஎங்களால்பொறுக்கமுடியா து, எங்களையிருப்பிடங்கொண்டு செல்கென்று வேண்டினர். அதைக்கலு ழன்கேட்டு இவ்வளவேயோ நமதாற்றல் என்று பின்னரும் அவர்களைச் சிறிதுதூரம் கொண்டுசென்று மீட்டும்அவரையிருக்கையிற் சேர்த்தனன்.

இங்கே வந்துசேர்ந்த ஆதிசேடன் முதலானோர் படுந்துயரநோக்கிய கத்துரு கலுழா! என்மக்களை இவ்வாறுவருத்தினையே என அம்ம! நானெ ன்செய்தேன், அவர்கள் வானிலுள்ள மண்டலங்களையுங் காணவேண்டுமெ ன்றனர். நானும் அவர்கள் கட்டளையின்படி சென்று காட்டினேனென் றான். கத்துருகேட்டு மனம்வருந்தி வருணமந்திரஞ் சபித்துநின்றாள். உட னே மழைபெய்தது. பெய்யவே ஆதிசேடன்முதலானோர் தமக்குச் சூரிய மண்டலத்திற்சென்றதனாலுண்டாகிய அழற்சி நீங்கிப்பழையபடிநின்றனர் அதுமுதல் கலுழனைக்கண்டால் சற்று அஞ்சி நடப்பர். இவ்வாறு நிகழ் கையில் ஒருநாள் கலுழன் கத்துருவை நோக்கி அம்ம இதுஞான்று என் தாயும் நானும் உனக்குக் குற்றேவல்செய்து ஒழுகும் கடைப்பாடு பூண்டு ஒழுகுகின்றோம். இதனை நீக்கிக்கொள்ளக்கருதுகின்றேன். இதற்கு என்ன அருமையான பொருளைக்கேட்பினும் கொணர்ந்து தருகின்றேன். உமது கட்டளையாதென்றான்.

அப்பா! உன் கருத்தின்படி செய்விக்கிறேன்; என்மக்கள் சுகமெய்த நீ விரைவிற்சென்று தேவாமிர்தங் கொண்டுவா போவென்றனள்; அது கேட்டுக்கலுழன் மிகவுமகிழ்ச்சியடைந்து தன்தாயினிடஞ்சென்று ஒடோடியும் வந்து வணங்கி, அம்மா நான் கத்துருவினிடத்திற் குற்றேவல்செய்வதினின்றும் நீங்க அமுதங்கொணரப்போகின்றேன், கட்டளை யாதென, தாயும் அவ்வாறே போய்வாவென உச்சிமோந்து முத்தமிட்டுக் கண்ணினின்றும் ஆனந்தக்கண்ணீர்புரள ஆசிர்வதித்தனுப்பவேமீண்டும்வணங்கி தாயே! என்தந்தையிருக்கின்ற இடமும், என்பசிநோய் நீங்கும் வகையும் எடுத்துச்சொல்லுமென்றான்.

அதற்குத்தாய் மகனே! உன் தாதையாகிய காசிபமுனிவர்இருக்கை கந்தமாதனவரையேயாகும் நீகொண்ட பசிக்குணவு வடகிழ்த்திசைக்கடலின் மூலையில் ஒரு சிறுதீவுண்டு. அத்தீவில் ஆறலைக்கும் வேடர் அநேகருளர். அவரோ மாபாதகர், அவர்களை அருந்து. அவருள் ஓர் அந்தணன் இருக்கின்றனன். அவனைமாத்திரம் அருந்தாதையென்று வழியுங்கூறியனுப்பினள். அதனைக்கேட்ட கலுழன் அம்மா! நான் அவ்வந்தணனை யெவ்வாறு அறிந்துகொள்வது கட்டளையிடவேண்டுமென்று இரந்து வேண்டினன். அவ்வாறறிந்து கேட்ட மகனைநோக்கி அப்பா! நீ விழுங்கும்போது நெஞ்சில் அழற்சியுண்டாகும். அதனையுணர்ந்து நீக்குகஎன மகனும் மகாபாக்கியமென்றுவிடைபெற்று அந்தரமார்க்கத்தில் எழும்பிச்சென்றுஅவ்வேடரனைவரையும் ஒருங்கே வாழைக்கனிபோல் அருந்த இடையே அன்னைசொன்னவண்ணம் நெஞ்சில் அழற்சியுண்டாகக்கண்டு 'தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை' என்றபடி அவனை வெளியே வரக்கூவினன், அவ்வந்தணன் வெளிவந்தபின் அவன் என்மனைவியையும்வரக் கட்டளையிடுமென க் கலுழனும் அவ்வாறே வருகவெனக் கான்று அவருக்கு நன்மொழி புகன்று கந்தமாதனஞ் சேர்ந்தான்.

கந்தமாதனச்சருக்கம்.

கற்பகமுதலிய ஐந்தருவையு மளாவிய சந்தனம், அகில், பாதிரி, மகிழ், கோங்கு முதலிய விருட்சங்களும், முல்லை, இருவாட்சி, மல்லிகை, செவ்வந்தி, காந்தள் முதலிய கொடிகளும், சிங்கம், யானை, புலி, மான் முதலிய மிருகங்களும், மயில், அசுணம், சக்கரவாகம், கழுகுமுதலிய பறவைகளும் அடர்ந்து பரமசிவன் சடைக்கற்றையினின்று இழியும் கங்கைபோல் அருவியாறொழுகப்பெற்று, எல்லாத்தருமங்களுக்கும் பிறப்பிடமாகிய முனிவருக்கிருக்கையாகிவிளங்குங் கந்தமாதனமென்னும்மலையொன்றுண்டு. அம்மலையின் சிறப்பனைத்தும் பார்த்துக்கொண்டேவந்து பல முனிவர்கள் ஆசிரமத்தையும்கண்டு களிப்புற்றுத் தன் பிதாவாகிய காசிபமுனிவர் தவஞ்செய்யுஞ் சூழலையணுகினன். அணுகி அம்முனிவர் பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்து தவஞ்செயக்கண்டு தலைமுதலிய எட்டுறுப்பு நிலமுறப்பணிந்து நின்றான். உடனே மகன்வரவைக்கண்ட மாதவவரசு கண்ணுமனமுங் களிப்பெய்த வாரித்தழுவியுச்சிமோந்து முத்தமிட்டு மகனே நீ யென்னிடத்தில் வந்த வரலாறென்னென்று வினவினன்.

அதற்குக் கருழன் தன் வரலாற்றை முற்றுமொழியாமற்கூறித்தான் அமுதங்கொணரவுங், குற்றேவற்றொழில் நீங்கவும், தன்பசி விட்டொழிய அருளவேண்டுமென்று வணங்கினின்றான். காசிபமுனிவர் அப்பா நீ அமிதமான வாற்றலையடைந்து அமுதங் கொண்டுவரக்கடவை, இனி உன் பசிப்பிணிநீங்கவும் கூறுகின்றேன். அதாவது, அளகாபுரியென்றொரு நகருண்டு: அந்நகரத்தில் நாற்குலத்து மேற்குலமாகிய அந்தணர்குலத்தில் சுக்கிரன், நதிபன் என்னும் இருவர் தோன்றினர். ஒருநாள்அவருள் நதிபன் தன் முன்னோனாகிய சுக்கிரனைத் தன் தாயபாகமளிக்க வேண்டுமென்று வேண்டினன். அவன் கொடுக்க மனமியையாமையால் நதிபனை வைது கொடுமொழிகூறினன். அவருள் சுக்கிரன் நதிபனைநோக்கி அடா! கொடியாய் என்னை முன்னோன் என்று சிறிது மெண்ணாமல் வைதமையால் ஆறுயோசனை யகலமும், பன்னிரண்டுயோசனை நீளமுமான காட்டியானை யாதியெனச் சாபமிட்டான், நதிபனோ என்னாற்பெறக்கடவதாகிய தாய் பாகம்வழங்காமல் காட்டியானை யாதியென நியாயமின்றிச் சபித்தமையால் மூன்றுயோசனை யுயரமும், ஆறுயோசனை யகலமுமான ஆமையாதியெனச்சாபமிட்டான். அவ்வாறே யொருவர்க்கொருவர் அச்சாபங்களை யேற்று இன்றுவரையும் வடமேற்கடல் மூலையில் என்றும் இடைவிடாமல் நெடும்போர்செய்து வருகின்றனர். அவரால் பல்லுயிர்க்கும் பெருந்துயர் நேர்கின்றது. அவ்விருவரையும் நீ சென்று அருந்துக என்று கட்டளையிடவே, அதனைத் தலைமேற்கொண்டு வடமேற்கடன்மூலையை நோக்குங்கால் அவ்வாறே யானையும் ஆமையும் போர்செய்வது தோன்றக்கண்டு அவற்றைத் தன்காலில் ஒடுக்கிக்கொண்டு ஓரிடத்தில்வைத்து அருந்தலாமென்றெண்ணி நான்குதிசையு நோக்கினான்.

அங்ஙனநோக்க நூறுயோசனை யகலமாய் பல கப்பும் கிளைகளுடன் ஆலமரந்தோன்ற அம்மரத்தைக்கண்டு அதன்கிளையில் வந்திறங்கினான். இறங்கவே அக்கிளைபாரம் பொறுக்கமுடியாமல் சடசடவென்னு மொலியோடு முறிந்தது. அதில் அங்குட்டளவு வடிவமுடையவராய் வாலகில்லியரென்னு முனிவர்கள் இலக்கொருவராகத் தங்கித் தவஞ்செய்தலை யுணர்ந்து இதென்னமோசம் நேர்ந்ததே! காக்கைபேறப் பனம்பழம் விழ்ந்தது என்பதுபோலத் தன்பத்துக்குள்ளானோமே, இனி இக்கிளையுடன் நமது தாதையை யடைந்தாலல்லது நம் துயரகலாதென்று கடைப்பிடித்து அவ்விருவரோடும் அக்கிளையையும் விழாமல் காலில் ஒடுக்கிக்கொண்டு காசிப முனிவனை வந்து வணங்கினான். அம்முனிவனோ அப்பா மகனே நீவந்த காரணமென்னவென்றான். கருழனோ ஐயா! நான் தாங்கூறியபடியே அவ் யானை யாமைகளைகாலினெற்றியருந்தவெண்ணி ஓராலமரத்தின் கிளையிலிறங்கினேன், அக்கிளையில் இலக்கொருவராகத் தங்கி அங்குட்டவளவு வடிவமுள்ள இருடிகள் தவஞ்செய்கின்றனர். நானோ அறியாமல் இறங்கவே, அக்கிளைமுறிந்து நிலத்தில் விழுவதையறிந்து அதை விழவொட்டாமல் அம்முனிவருடன் கொணர்ந்தேன். அவர்களைப் பூமியில் விடுத்தால் என்னசாபங் கொடுப்பாரோவென்றேங்கி உம்மைத் தரிசித்

தேன். இதுதான் என் விண்ணப்பமென்று வணங்கவே முனிவர் பெருமான் அம்முனிவரைநோக்கி, தபோநிதிகளே! நீங்களிருந்து தவஞ்செய்த மரக்கிளையை முறித்தவன் உங்கள் பெருங்கருணையால் புத்திரகாமேஷ்டியென்னும் வேள்வியிற்றோன்றிய கலுழனே யாகும். அவன் நீங்கள் தவஞ்செய்யும் மரமென்று தெரியாமல் வெற்றுமரமென்றெண்ணி இக்காரியஞ்செய்துவிட்டான். நீங்கள் செற்றத்தால் சாபமிடாமல் காக்கவேண்டுகின்றேன் என அத் தபோதனர்கள் காசிபமுனிவனை நோக்கி ஐயா, முனிவர்பெருமானே! உன்மகன் எங்களை மெல்ல நிலத்தில் விடுவானாயின் எங்கள் கருத்துக் கியைந்தவிடம் செல்வோமென வாலகில்லியர் கூறினார்கள்.

காசிபனே தன் மகனைக்கூவி மெல்ல அவர்களை நிலத்தில் விடுவாயென்று கட்டளையிட, அவ்வாறே கலுழனும் செய்துமுடித்தான். உடனே வாலகில்லியர் காசிபமுனிவனையும், கலுழனையும் வாழ்த்திப்போயினர். பின்னர்க் கலுழனும் பிதாவைவணங்கி இக்கிளையை யெங்கே யெறிவேன், இவற்றை எங்கே புசிப்பேன் கட்டளையிடவேண்டுமென் றிரந்துகேட்ப, முனிவர்பிரான் கூறுகின்றான். அப்பா, கலுழா! நீ இமயமலைக் கருகிலுள்ள நரமேதவரைபிற்சென்று இக்கிளையை யெறிந்துவிட்டு, இமயமலையில் இருந்துகொண்டு இவ்விரண்டினையும் அருந்திப் பசிநீங்கிப்போய் அமுதங்கொணர்ந்து குற்றேவலினின்று நீங்கி வாழ்தியென்று சொல்லக்கலுழனும் காசிபனைவணங்கி விடைபெற்றுத் 'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை' என்றபடி அவ்விரண்டையும் அருந்திப் பின்னர் அவர்கூறியவண்ணம் அம்மரக்கிளையை நரமேதவரையில் எறிந்துவிட்டு அமுதநாடிக்கொணர ஆராய்வானாயினன்.

அமுதங் கொணர்ந்த சருக்கம்.

—*—

கலுழன் அமுதங் கொணரக்கருதி 'அன்னையும்பிதாவும் முன்னறிதெய்வம்' என்றபடி அன்னை தந்தைய ரிருவரையும் மனத்தில் தியானித்து உயரவெழும்பி அமுதமிருக்கு நாட்டினைநாடி விரைந்து தன் சிறகின் காற்றினால் மேகங்களெல்லாமோடி இவ்வகையான யுகாந்தக் காற்றைப்போல் ஒருநாளுங் கண்டதில்லையே யென்றுவாடி நெட்டுயிர்ப்புநீடி அண்டருலகத்தே யெய்தின. மலைகளெல்லாம் வேரற்றன. காற்றுக்கடவுளும் இத்துணைவேகமான காற்றேது? இது ஊழிகாற்றோ என்று மருண்டான். இவ்வாறு கலுழனும் மிக்க வேகமாகக் கடுகிவர இந்திரன் நால்வேறியற்கைப் பதினொரு மூவரோடு ஒன்பதிற்றிரட்டி யுயர்நிலைபெற்ற அமரரும், அருந்தவக்கொள்கைப் பன்னிரு நான்காயிரந் திருந்திய மனச்செம்மையினையுடைய முனிவரும் சூழ்ந்திருந்து கொலுவீற்றிருக்க என்றுந்தோன்றாத துர்நிமித்தங்கள் தோன்றின. அங்ஙன நிகழ்வதனைநோக்கி இதென்ன புதுமை! நாமென்றுங்காணாத துர்நிமித்தங்கள் தோன்றுகின்றனவே. இதனால் யாதுவிளையுமோ! என்றெண்ணி திடீரென்று தன்னாசனத்தை விட்டிறங்கித் தன்னாசிரியராகிய வியாழபகவானைக் கண்டிறைஞ்சி விண்ணப்பஞ் செய்தான்

வியாழபகவான் திரிகாலவுணர்ச்சி யுடையராதலால் அதனைத் தமது ஞானதிருஷ்டியாலுணர்ந்து மூவுலகமும் புரக்கும் ஆகண்டலனே! இயதுர்மித்தத்தின் காரணம் வேறொன்றன்று. காசிபமுனிவருக்கு விநதையிடத்திற்றோன்றிய கலுழன் தன் தாய் அடைந்த குற்றேவற்றொழில் நீங்க உன்னிடத்துள்ள அமுதத்தைக் கைக்கொண்டு செல்ல வருகின்றனன். அதனால் இத் துர்நிமித்தங்கள் தோன்றின என்று கூறினன். இந்திரன் ஐயே! ஒருபறவையும் என்னிடத்திலுள்ள அமுதங் கொண்டுபோமா! யானும் அத்துணைப்பேதையா? என்பால் குலிசப்படைமுதலிய தெய்வப்படைகளில்லையா! இதென்ன புதுமையென்று பேசினன். அதற்கு வியாழபகவான் நீயென்ன மெய்மறந்து பேசுகின்றனை! முன்னே உன்பிதாவாகிய காசிபமுனிவர் புத்திரகாமேஷ்டி யென்னும் யாகஞ்செய்தனர். அங்கு நாமனைவரும் சென்றிருந்தோம். அப்போது வாலகில்லியரென்னு முனிவர்கள் தம்மாற்சுமக்க முடியாத ஓமத்திரவியங் கொடுவந்தனர். நீ அவர்கள் அங்குட்டவளவு வடிவமுடையராயிருப்பது கருதி யிகழ்ந்தனை! அவர்கள் சினந்து உனக்கித்தனைச் செருக்காவென்றும், இப்புத்திர காமேஷ்டியில் பிறப்போன் இந்திரனுக்கிந்திரனாகுக வென்றும், இந்திரமந்திரஞ் செபித்தனர். அதுகண்டு நீ நடுநடுங்கி அவர்களை வணங்கி வேண்டினை, அவர்கள் சினந்தவிர்ந்து பறவைகட் கிந்திரனாகுக என்று அம்மந்திரத்தையே வேறொருவகையாகச் சபித்தனர். அதிற்றோன்றியோன்தான் இக்கலுழன். அவர்கள் அவ்விந்திர மந்திரத்தையே செபித்திருப்பார்களாகில் உனக்கு இந்திர பட்டமேது! அத்துணையாற்றலையுடைய உன்னிடத்துள்ள அமுதத்தைக் கொண்டுபோக வருகின்றான். அவன் எவ்வகையாலேனும் அமுதங்கொண்டு செல்வான்; அதற்குச் சிறிதும் சந்தேகமே யில்லை என்றான். அதற்கு இந்திரனும் அவ்வளவு காவலோடுள்ள அமுதத்தினை எவ்வாறு கொண்டுபோவான், பார்ப்போமென்று தன்னாசிரியராகிய வியாழபகவானை வணங்கி விடைபெற்றுத் தன் சுதர்மமென்னுஞ் சபைக்கு மீண்டான். மீண்டுத் தன் பரிவாரமாகிய அமரர்களனைவரையுங் கூவி வரவழைத்துக் கலுழன் அமுதங் கைக்கொண்டு செல்லவருகின்றன, நீங்கள் முனைந்துநின்று காவல்கொண் டிருங்கோளென்று சொல்லி யனுப்பித் தானும் போர்க்கோலங் கொண்டிருந்தான்.

இதுநிற்க, கலுழனும் கடையுக முடிவில் தோன்றும் ஊழி காற்றே போலக் கடுகி விண்ணுலகமேங்கத் தன்சிறகிற்காற்று மிகுதியுமோங்க, கண்டவரெல்லாஞ் சித்திரப்பிரதிமைபோலத் திகைத்துவாடத் தான் அமுதமிருக்குமிடம் நாடிவந்தான். வரவே இந்திரன் கட்டளையிட்டருளியபடி அனலன் முதலிய அட்டவசுக்களும், மற்றைத் தேவர்கூட்டங்களும் ஒருங்குசேர்ந்து வில், வேல், வாள் முதலிய ஆயுதபாணிகளாக எதிர்த்தனர் அவர்களையெல்லாம் தன் சிறகிலெழும் காற்றினால் சிதற அடித்துத் துரத்தினன். அதனால் தேவர்கூட்டங்கள் ஒருவர் போனவழி யொருவர் போகாமல் வெருண்டனர். அதனைநோக்கி அவருள் அனலன்முதலிய வசுக்கள் எண்மரும் தங்கள் கையிலிருந்த வில்லைவளைத்துக் கார்காலத்துமேகம்போ

லச் சரமழைபொழிந்தனர். கலுழனே அவற்றைத் தன்சிறகிலெழுங் காற்றினால் வந்தவழி போனவழி தெரியாமல் அழிக்க, அவர்களும் பின்னிடாமல் தாம் அருந்தவஞ் செய்துபெற்ற தெய்வப்படைகளனைத்து முறையே தொடுத்து விடுத்தனர். அவற்றைக்கண்ட கலுழன் ஆலடைமேலறிதுயிலமர்ந்த ஆதியஞ்சோதியுருவை, யன்பினின் நாடி யவன் புகழ்பாடி நின்று சாகசத்தினால் ஒரு வகையாகத் தான் விடுபட்டு அவர்களைத் தன் காலாற்புடைத்துத்தள்ளினான். அவர்களும் மரணமூர்ச்சை யடைந்தனர்.

இதுநிற்க, கலுழனே மீறி அமுதகலசத்தருகில்வந்தான். வரவே வடவைத்தீயைப்போல அக்கினி காவலாக இருக்கக்கண்டு தானுயர எழும்பி ஆகாயகங்கையைச் சிறகினிலேந்தி யவ்வக்கினியை யவித்தான். உடனே அது அவியக்கண்டு பின்னருஞ் செல்கையில் ஒருசக்கரஞ் சுழன்றுவரக் கண்டான். விரைவில் தான் உடலைச்சுருக்கி யச்சக்கரத்தையுந் தவிர்ந்து அமுதகலசத்தை யெடுத்தான். அக்கலசத்தைப் பின்னிக்கொண்டு நின்ற நாகங்களிரண்டுஞ் சீறி யெழுந்தன. அந்நாகங்களிரண்டனையும் தன்காலினது உகிரால் ஓரறைபறைந்து உடலைப்பிளந்து அக்கலசத்தையு மிக்க மகிழ்ச்சியுட னெடுத்துத் திரும்பினான். இதனைத் தன் ஒற்றரானுணர்ந்த ஆகண்டலன் விரைவினடர்ந்து வயிரப் படைகைக்கொண்டு அவன்மேல்விட்டெறிந்தான் அது கலுழன் சிறகிற்பட்டு ஓரிறகைப் பறித்துச்சென்றது. அதுகாலை இந்திரனைநோக்கி அமரர்கட்கிறையே! நீயார்? நானார்! வேறன்றே, நாமிருவரும் காசிபமுனிவன் மக்களேயன்றோ! நீயோ காசிபமுனிவனுக்கு அதிதிவயிற்றிற்றோன்றினை! யானே விநதை வயிற்றிற்றோன்றினேன். என்தாய் நின்தாயேயன்றோ, என்தாய் ஒருவருக்குக் குற்றேவல் செய்து ஒழுகுவது நினக்குமுறையாமோ! நீயோ என்முன்னோன், நீயே எதிர்த்துப்போர்செய்தமையால் நின்படை பழுதாகாவண்ணம் அதற்கோரிறகு கொடுத்தேன். இனி நீயென்னை வெற்றியெய்தி நிற்பையெனக் கருத வேண்டாம் என்று கூறி அமுதகலசத்தை யெடுத்துக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்றான். இந்திரனே இனி நம்மால் இவனை வெல்லவே முடியாது, நமக்காதரவான இவ்வமுதை நமக்களித்த அருட்பெருங்கடலாகிய மாயனையல்லது உபாயம் வேறொன்றறியேனெனத் துணிந்து பகவானை நினைந்து மாய, மலர்மகணேச, அன்பர் சகாய, அகிலமுண்ட செவ்வாய என்று அவனது ஆயிரநாமஞ் சொல்லித்துதித்தான். எள்ளினெய்போ லெங்குநிறைந்த கமலக்கண்ணன், காயாம்பூவண்ணன் கடுகிபணுகிக் கலுழன்முன் பாஞ்சசன்னியம், சுதரிசனம், சார்ங்கம், கௌமோதகி, நாந்தகம் என்னு மைம்படையொடு தோன்றினான். தோன்றவே கலுழன் தன்முன் ஐம்படையோடு தோன்றிய ஆதியஞ்சோதி யுருவைக்கண்டு உயர்வற வுயர்நல முடையானே! மயர்வற மதிநல மருளுமாண்பே! அயர்வறு மமரர்கட்கிறையே! துயர்வறு சுடரடித்தோன்றால்! என்று இன்னனவாகச் சூழ்விசும்பிறையைத் தோத்திரம்புகன்று நின்று அடியளாந்தான் சிந்துபூமகிழுஞ்சேவடியை வணங்கினான். புண்டரீகக் கட்புயன்போன்ற மேனிப்பிரான் கலுழா! நீ யருளுடைமை; அன்புடைமை, வலியுடைமை,

முதலிய நற்குணங்க ளனைத்துங் கோட்டிகொண்டுடையாய்! ஆகலின் நின்னைக்காண யான் வந்தேன்; நீ வேண்டிய வரங்களொன்றுங் குறையாமற் பெறுதியென்றியம்ப, கலுழன் ஆராவமுதாழ்வானைக் கண்டு களிகூர்ந்து புகழ்ந்து அண்டர் பெருமானே! அடியார்பருகுஞ் செந்தேனே! புண்டரீகை மகிழுங்கோனே! யான் வேண்டுவது தீயொழுக்க நெறியொழுகாச் சிந்தையும், திருவுறை மார்பனாகிய நின்பாற் றிண்ணிய வன்பும், அயர்வறுமமரர்கள்போல என்று நித்திய சூரியாக வாழுந்திறனு மளிக்கவேண்டுகின்றேனென்று விண்ணப்பஞ் செய்தான்

கவுத்துவமணிந்த கருணைநெடுங்கடல் அவ்வாறே வரங்கொடுத்தருளிப் பின்னரும் கலுழனைநோக்கி எமக்கு நீ வாகனமாகவும், துவசமாகவும் இருக்கவென்று கூறலும், அதற்கிறப்ப மகிழ்வெய்தி அவ்வாறே ஆனேனென்று கூறக்கேட்டு அருமறைதுணிந்த அரும்பரன் முக்காலமில்லாத திருமாமணிமண்டபத்திற் கெழுந்தருளினன். அச்சமயநோக்கி ஐராவதமென்னும் யானையின்மேலேறிப் பவனிவரும் இந்திரன் கலுழா! நீயும் நானும் வேறோ! நீயும் நானும் ஒருவருக்கொருவர் சகோதரரே யாமன்றோ! ஆதலின் எமக்காதரவாயுள்ள அமுதங்கொண்டுபோதல் நலமாமோ, நீ யளித்தால் உன்னாற் சுகப்படுவதே யாகுமென்று பலவாறு வருந்திக் கேட்பக் கலுழன் கூறுகின்றான்; என்தாய் ஒருவருக்குக் குற்றேவல்செய்வது உன் மனத்துக்கு இசைந்ததாமா, அதை நீக்கக்கொண்டு போகின்றேன்; நீயேன் மறிக்கின்றனை யென, இந்திரனும் கவலைகொண்டு மீண்டுங் கூறுகின்றான்; நீ கொண்டுசெல்வதனால் ஒரு குற்றமேயில்லை; ஆயினும் எனக்கு ஒருதவிசெய்ய வேண்டுகின்றேன், அதாவது இதைக்கொண்டுசென்று கத்துருவிடத்திற்சேர்த்து எங்கள் குற்றேவற்றொழில் நீங்கிற்றுவெனக்கேட்டு உன் தாயுநீயும் வெளிப்படுங்கள்; அப்போது ஆதிசேஷன் முதலான நாகராசர் இவ்வமுதகலசத்தைத் வந்து மொய்த்துக்கொள்வர், அப்போது இதுவோ தேவாமுதம்! இதனை யசுசியாக அருந்தல் பொருந்துமா? நீங்கள் நீராடி யருந்துங்கள் என்று கூறுவதாகிய வாக்குச்சகாயஞ் செய்யவேண்டும். அக்காலையில் என்மாயையால் அதனைக் கவர்ந்து கொள்கின்றேன் என அதற்கிணங்கிய பின்னர் கலுழன் இந்திரனைநோக்கி எனக்கொரு வரந்தரவேண்டும், அதாவது என்னைச் சகோதரனென்று மதியாமல் என்பால் தகாக் குற்றேவல்களையிட்ட ஆதிசேடன் முதலானோரையான் உணவாக அருந்துவதே யென்றான். இந்திரனும் அவ்வாறே யாகுகவென வரமளித்துத் தானும் மாயையால் அவன்பின் தொடர்ந்து சென்றான். கலுழனும் கத்துருவிடத்து அவ்வமுதகலசத்தைச் சேர்த்து, இதோ தாயே கொணர்ந்துகொடுத்தேன், நாங்கள் இனிக் குற்றேவல் செய்வோரல்லோம் என்று நீக்கிக்கொண்டு விடைபெற்றுத் தாயுடன் சென்றான். கத்துருவும் கலுழனைநோக்கி நீயும் நின்றாயும் என்குற்றேவலினின்றும் நீங்கலாயினிர், இனி உமக்கு இஷ்டமான இடத்திற் போங்களெனக் கலுழனும் தானும் தன்தாயும் விடைபெற்றுப்போயினர். அப்போது ஆதிசேடன் முதலானோர் அவ்வமுதகலசத்தை யாவரும் கருப்

பஞ்சாற்றை ஈக்கள் மொய்த்துக்கொள்வதுபோல் மொய்த்துக்கொண்டனர். அதுகண்டு கலுழன், காத்தவேயரே ஈதென்ன புதுமை! இஃது அமுதகலசமன்று! இவ்வண்ணமும் அருந்தலாமா! நீங்கள் அசுசியாயிருக்கின்றீர்களே, நீரந்டியன்று புசிக்கவேண்டுமென, அவ்வாறேசெய்கின்றோமென்று அவர்கள் சொல்லக்கேட்டுத் தான் தன்தாயிடம் விடைபெற்று அயர்வறு மமரர்கட் கதிபதியாகிய ஆதிபகவன் இனிது எழுந்தருளியிருக்கும் முக்காலமில்லாப் பரமபதமே சென்று நித்திய சூரிகளிலொருவனாயினன்.

இதுநிற்க, ஆதிசேடன்முதலிய காத்தவேயரும் கலுழன் கூறியவாறு சுசியாய் அருந்துவதே நலமாமென்று கருதி யாவரும் நீராடச்சென்றனர். அச்சமயத்தில் இந்திரன் மாயவேடங் கொண்டுவந்து அவர்களில்லாமையறிந்து அவ்வமுதத்தைக் கவர்ந்து சென்றான். சென்று முன்னினும் அதற்கு அதிக காவல்களமைத்துத் தன் சுதர்மமென்னும் சபையை யணுகினன். காத்தவேயரோ நீராடிவந்து அவ்வமுதம் வைத்திருந்த இடத்திற் காணாது அலைந்து தாயை வணங்கி, தாயே அமுதகலச மெங்கேயென்று கேட்க, அவளும் கையை நெரித்துக்கொண்டு மக்களே! நீங்கள் பாக்கியவீனர், 'கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற்' போயிற்றென்னும் பழமொழிப்படி யாயிற்று. மேலும் இனி எவ்வாறு பெறுவீர். 'கலையுமப்பைக் கண்டு கட்டியிருந்தவிதையை வட்டிக்குவிட்டா' ளென்பதுபோல் ஆயிற்றேயென்று வருந்தி தன் மனைக்குச்சென்றாள். அவர்களோ நாம் பேராற்றலையுடைய கலுழனாற் பெறுதற்கருமையான அமுதம்பெற்றும் புசிக்கும் பாக்கியம் பெறாமற் போயினோமே என்று மனநொந்து அவ்வமுதகலசம் வைத்திருந்த தருப்பைப்புல் மணக்கக்கண்டு அதில் அவ்வமுதம் சிந்தியதாகக் கருதி யாவருமொருங்குகூடி அத்தருப்பையை நாவால் நக்கினர். உடனே அவர்கட்கு நா இருபிளவாயின. அதனால் அவர்கள் வறிதேயேங்கி யிருந்தனர். இதுநிற்க.

எல்லாக் கலைகளையும் ஐயந்திரி பறவுணர்ந்த ஆதிசேடனே தன்னந்தனியேயிருந்தும் கலுழன் கரியவன், அருமறைகட் கரியவன், யார்க்கும் பெரியவன் எப்பொருட்கு முரியவனாகிய பரம்பொருட்கு வாகனமாயும், துவசமாயும் கொண்டவரத்தையும், அவனுரத்தையுங்கண்டு, இனி அவனுக்கு நாமிரையாவது திண்ணம், நாமுய்வதே யில்லையென்றெண்ணிப் பின்னும் போகின்றான். அந்தோ நமது பின்தோன்றிய ஏனைய நாகராசரோ மிகக்கொடியார். அவரைநீங்கி நாம் வாழ்வதே நலமென்று ஒரு வனத்தையணுகிப் பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்து உந்திவந்த ஒருவனை, உலகையுதவும் பரமனை, நாமடந்தைமகிழும் பெரியனை, நான்மறையோதுமுரியனை, மாதவர்பரசும் பிரமனை நாடித் தவஞ்செய்திருந்தான்; அவ்வாறு தவஞ்செயக்கண்டு பிரமன் விரைவில்வந்து காட்சிதந்து உனக்கென்னவரம் வேண்டுமோ அதைக்கொடுத்தேனென்ன, அப்பிரமனை வேதமந்திரங்களால் துதித்து இனிச் சந்திரகுலோத்துங்கனாகிய ஜெனமேஜெய மகாராஜன்செய்யும் சர்ப்பயாகத்தில் மடிய எனக்கு நேரிட்டிருக்கிற சாப

மொழியவும், கனுழனல் துன்பமடையாதிருக்க ஒருவழியும், என் சகோதாருடன் கூடியிருக்கும் பழியு நீங்கவும்வேண்டுமென்று வணங்கிநின்றான்.

அதற்கு அன்னவாகனனாகிய பிரமன் கூறுகின்றான்; அப்பா வருந்தாதை! உன் சகோதரிவயிற்றில் ஒரு சற்புத்திரன் உதிப்பான், அவனால் சர்ப்பயாகத்தின் துயரநீங்கும். நீயோ பாதலத்திற்சென்று அங்குள்ள நாகங்கட்கெல்லாம் தலைவனாகி இவ்வுலகைப் பொறுத்திரு, உனக்குக் கனுழனல் நேரிடும் துன்பும், உன் சகோதரர்கள் நண்புமகலும் என்று கட்டளையிட்டுத் தான் சத்தியலோகமேபோய்ச் சேர்ந்தான். ஆதிசேஷனே மறைமுதல்யோகி யிட்ட கட்டளைப்படி பாதலஞ்சென்று இவ்வுலகத்தைப் பொறுத்து அங்குள்ள நாகங்கட்கெல்லாந் தலைவனாயினன். இதுநிற்க, அத் தக்ஷகன் முதலானோர் தம் முன்னோன் வரலாற்றைக் கேள்விப்பட்டு மிக்க வருத்தமுற்றுத் தாயிட்ட சாபத்தை நினைத்து என்னசெய்வோமென்று வாடியிருந்தனர்.

சலர்க்காரமுனிவன் கதை.

இவ்வாறு இவர்கள் தாயிட்ட சாபத்தை யெண்ணிப் பரதவித்திருக்கையில் நாற்குலத்து மேற்குலமாகிய அந்தணர் மரபில் சலர்க்காரனென்னும் ஒரு முனிவனிருந்தான். அவன் இளமை நிலையாமை, செல்வ நிலையாமை, யாக்கைநிலையாமை யுணர்ந்து இளமையிலே; 'நரைவருமென்றெண்ணி கல்லறிவாளர் - குழவியிடத்தே துறந்தார்.' என்றபடி இல்லந்துறந்து பிரமசரிய ஒழுக்கநெறி யிகவாமல் தனக்கிசைந்த வனங்களில் வசித்துவந்தான். அவன் ஒருநாள் வானமளாவி யுயர்ந்த முதுமரமொன்று கண்டு அம் மரத்தினருகேசென்று பார்க்கையில் அறக்கடவுளாகிய யமன் கட்டளையால் இருபத்தொரு மகாபுருடர் தலைகீழாக வௌவால்போல் நான்றுகொண்டு துயருறுவதைக்கண்டு இவ்வாறு தவஞ்செய்வதை நாம் எங்குங்கண்டதில்லையே, இதென்ன விபரீதமென்று அவர்களை வணங்கி நின்று இவ்வாறு தவஞ்செய்யக் காரணமென்னமென்று வினவினான். அதற்கவர்கள் அப்பா! இங்கே நாங்கள் தலைகீழாகத் தொங்குவதொழியத் தவஞ்செய்வோரன்று; எங்கள் மரபில் சலர்க்காரன் என்று ஒருவன் பிறந்தான், அவன் இளமையிலேயே துறந்து பிரமசரியமே மேற்கொண்டு நின்றான். அதனால் எங்கள் மரபு விளங்காமை கருதி அறக்கடவுள் எங்களை இவ்வாறு செய்தானெனச் சலர்க்காரன்கேட்டுத் திடுக்கிட்டு இதனைக் கூறுவானாயினன்.

ஐயன்மீர்! சலர்க்காரனென்னும் பெயரையுடையான் யானே; சினங்கொள்ளாதீர்; துறந்தார்க்குத் துப்புரவுவேண்டி மலந்தார்கொல்-மற்றையவர்கள் தவம்' என்பது கருதி இல்லிற்சிறந்தது அன்றெனத் துறவறமேற்கொண்டேன். ஆயின் எனக்கொரு வரம்வேண்டுகின்றேன். அதாவது என்பெயருள்ளமாதையான் மணம்புரியக் கட்டளையிடவேண்டுமென்றிரந்துகேட்ப, அவ்வாறே அவர்கள் வரந்தரவேற்றுத் தன் பெயருள்ள

மாதைநாடி யெங்குந்தேடி முகம்வாடி தெய்வகதியாய்க் கத்துருவிருக்கு மிட மோடிவந்தான். கத்துருவும் முனிவன் வரவைத்த மதுமக்களாகிய தக்ஷகன் முதலானோருடன் ஏற்று எதிர்கொண்டு ஆசனமளித்து அதிலிருக்கச்செய்து வணங்கினள் சலர்க்காரையென்னும் கன்னிகையும் வந்து வணங்கினள். சலர்க்காரனென்னு முனிவர் பெருமானும் அவர்கட்குப் பல ஆசிகள் வழங்கி நரககுமாரரே! இதோ நிற்கின்ற பெண்மணியார்! அவள் பெயரென்ன! இவளை யார்க்கேனும் விவாகஞ்செய்து கொடுத்தீரா வென்று கேட்ப, அதற்குத் தக்ஷகன் ஐயா! இப்பெண்மணி எங்களுடன் றோன்றினள். இவள்பெயரோ சலர்க்காரை யென்பர். இவள் இன்னும் மணஞ்செயப்பெற்றில ளென்றான். அதுகேட்டு மனமகிழ்ந்து இவளை எனக்கு மணஞ்செய்விக்கவேண்டுமென்னவே, தக்ஷகன் முதலானோர் தேனில் விழுந்த ஈயைப்போலத்திடுக்கிட்டு இது என்னபுதுமை! நமது தங்கையை இம்முனிவர் மணஞ்செய்விக்கக் கேட்கின்றனர்; நாம் மறுக்கில் முன்னே தாயிட்ட சாபத்தால் மனந்தளர்வதே பெரிதாயிருக்கின்றதே! இப்போது இவரால் யாது நேரிடுமோ என்று மனந்திகைத்து ஒருவர்முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டு நின்றனர். அப்போது நாகராசனொருவன் சொல்லுகின்றான். ஐயன்மீர்! நீங்களேன் மயங்குகின்றனீர்! சில நாள்முன் நான் நமது தாயிட்ட சாபத்தி னுரத்தையும், கலுழன் வரத்தையும் நினைத்து நித்திரை செய்கின்றபோது ஒரு கனவுகண்டேன். அக்கனவில் நான் கண்டதாவது ஜெனமேஜெய மகாராஜன் சர்ப்பயாகஞ்செய்யவும், அவ்யாகத்தில் நம்மவரிறக்கத் தேவர்கள் சென்று பிரமதேவனிடத்து முறையிடவும், பிரமதேவன் அத்தேவர்களை நோக்கி ஏன் வருந்துகின்றீர்கள்! அத் தக்ஷகன் முதலானோருடன் ஒரு பெண்கொடி பிறந்திருக்கின்றனள். அவளை ஒருமுனிவன் மணமாலைசூட்டுவான். அவன் அருளால் ஒரு புத்திரன் தோன்றுவான். அதனால் நாகங்களுக்கு நேரிடுந் துன்பமும் நீங்கும் எனக் கனவுகண்டேன்; அக்கனவுநனவாகப்பலித்தது; நீங்களேன்மயங்குகின்றீர்கள், இம்முனிவன் கருத்தின்வண்ணம் நமது தங்கையைப்பாணிக்கிரகணஞ்செய்து கொடுப்பதே நலம், இனி நமக்கு அவலமில்லை யென்றனன். அவ்வாறே அவர்களெல்லாரும் அதற்கிசைந்து அம்முனிவர் பெருமானுக்குத் தம் தங்கையைப் பாணிக்கிரகணஞ் செய்துகொடுத்தனர். அம்முனிவனே அம்மாதைப் பாணிக்கிரகணஞ் செய்துகொண்டு ஒரு வனத்தினை யணுகிப் பன்னகசாலையொன்றியற்றி அதில் வசித்துத் தன்மனைவி குற்றேவல்செய்ய விருந்தான். இவ்வாறு சிலகாலஞ் சென்றபின்னர் ஒருநாள் தன் மனைக்கிழத்தியாகிய சலர்க்காரையை அழைத்துப் பெண்கொடியே! உன்னை மணம்புரிந்ததுமுதல் இதுகாறும் நீ செய்துவந்த குற்றேவலுக்கு மிகவு மகிழ்ந்தேன். இனி இருவரும் மதனுமிரதியும் என மருவியிருப்போம். ஆயின் ஒன்றுசொல்கின்றேன்; கேள்! எனக்கு என்று நீ ஓர் குற்றஞ்செய்வாயோ அன்றே உனக்கு என் தொடர்பு நீங்கும், இதுதான் உறுதிமொழியென்று அவளொடு இனிமையாக வாழ்ந்திருந்தான். இங்ஙன நிகழ்கையில் ஒருநாள் அந்திவேளையில் சலர்க்காரமுனிவன் நித்திரை செய்தான். அதைநோக்கிச் சலர்க்காரை ,இதுவே அஸ்தமனகாலமாயிருக்கின்றது. முக்குற்றங்கடிந்த முனிவரர்கள் சந்தியா னுஷ்டானஞ்செய்கின்றனர். நமது கணவனோ துயில்கின்றனன். இச்சமயத்தில் நமது கொழுநனைத் துயிலினின்று மெழுப்பாவிடினும் குற்றம். எழுப்பினும் சினந்து கொள்வன். இதற்கென்செய்வதென்று நினைத்து 'தெய்வச்செயலின்படி நடக்கும்' என்பது துணிந்து கணவனுடைய பாதங்களை வருடுவதுபோல் பற்றினள். உடனே சலர்க்காரமுனிவன் நித்திரை தெளிந்தெழுந்து சினந்

கொண்டு நீ என் நித்திராபங்கம் செய்தமையால் இன்றுமுதல் எனக்கும், உனக்கும் இனித் தொடர்பொன்று மில்லை என்று சொல்லிவிட்டுத் தன் கருத்துக்கிசைந்தவிடஞ் செல்லத் துணிந்தான்.

அதுபோழ்து சலர்க்காரையோ அம்முனிவன் கழலைவணங்கி சந்தியாநுஷ்டான காலமாதலின் நீர் துயில்வது சமையமன்று எனத்துணிந்து எழுப்பினேன்; வேண்டாப்பெண்டிர் கைப்பட்டாற் குற்றம், கால்பட்டாற் குற்றமென்பதுபோலக் குற்றமில்லாததனையும் குற்றமாகக்கருதி என்னைப் பிரியத்துணிந்தீர். யான் உய்யும்வகை யாதென்று ஆராவன்புடன் வணங்கிக் கேட்டனள். நீயேன் வருந்துகின்றனை; பெண்கொடியே! உன் வயிற்றில் ஒரு சற்புத்திரன் பிறப்பன் அவனால் உனக்கும் உன் சுற்றத்தாருக்கும் நலமுண்டாம். இனிச் சற்றுந் தாமதமின்றி நின் பிறந்தகஞ் செல்லென்று முனிவர் தவஞ்செய்யப் போய்விட்டனர். பின்னர் சலர்க்காரையோ தன் பிறந்தகமே சென்று தன் தாய்க்கும், தன் முன்னோருக்கும் இதனைச்சொல்லவே அவர்கள் மிகவருத்தமடைந்து இனி நாமென்ன செய்வதென்று கருதிச் சலர்க்காரையை ஆதரித்து வந்தனர் சிலநாள் சென்றபின்னர் சலர்க்காரை நாகரத்தினம்போல ஒரு மைந்தனையீன்றாள் அவன் சலர்க்கார முனிவன்வழித் தோன்றலாதலால் 'மகனறிவு தந்தையறிவு' என்றபடி ஞானமே ஒரு திருமேனியுடையானும், பல நூற்கடல் கடந்து கேள்வித்துறை வல்லானுமா யிருந்தான்.

இதுநிற்க, ஜனமேஜய மகாராஜனே! நீரேன் ஐயப்படுகின்றீர், விரைவிற் சர்ப்பயாகத்தை நிறைவேற்றுமென, அரசனோ தேவரீர் சொன்ன அனைத்துஞ்சரியே! எனக்கு அத்தக்ஷகன் ஒரு குற்றமுஞ் செய்தானில்லையே! அவ்வாறிருக்க நானெவ்வாறு செய்யத்துணிவதென, உதங்க முனிவன் அரசே! எனக்கு அத்தக்ஷகன் செய்த குற்றமே பெரிதன்று; உமக்குச்செய்த குற்றந்தான் கடலினும் பெரிதென்றனர்; அதற்கு அரசர் பெருமான் அதன்வரலாற்றை நன்கு விளக்கவேண்டுமென் றிரந்துகேட்ப முனிவர்பெருமான் கூறுகின்றான்.

ஜனமேஜய மகாராஜனே! குருகுலத்தரசனாகிய நின்தாதை பரீட்சித்து மகாராசன் அத்தினபுரத்துக் கதிபதியாகி ஐம்பத்தாறு தேசங்களையும் தன்னொரு குடைக்கீழ் ஆண்டுவருங்கால் ஒருநாள் வேட்டையாடக் கருதித் தன்னமைச்சர் முதலானோருடன் தன் நால்வகைப் படைசூழ வேட்டையாடச் சென்றான். சென்று சிங்கம், யானை, புலி, கரடி, செந்நாய் முதலிய மிருகங்களை வேட்டையாடி வருகையில் ஒரு வேங்கை வேடர்கள் இட்டவலையைக் கடந்து சென்றது. அதுகண்டு வேடர்கள் ஓடோடியும் வந்து வணங்கி அரசனுக்குக்கூற அரசன் கேட்டுச் சினந்து வலையைக் கடந்துஞ் சென்றதா? எதோ அந்த வேங்கையென்று ஆகுலித்து வாயு கதியென்று கூறத்தக்க வேகமுடைய பரியின்மேலேறித் தேடப்புறப்பட்டான். அந்த வேங்கை மிகவேகமாய்க் காடு, மலை, முத

லியவை கடந்து சென்றது. அரசனும் விடாமற் பின்சென்று வேங்கை யைத்துறத்துகையில் வேங்கை ஒரு மரச்செறிவினையணுகி மறைந்துவிட் டது. அதுமறையவே அரசனும் நாற்றிசையும் சுற்றிச்சுற்றிப் பார்த்தும் யாண்டுங் காணுனுய் மிக்கஉக்கிரமாக அம்மலையினின்றும்இழிந்து வருங் கால் இடையே பயிரவனென் னும்முனிவர்பிரான் அவ்வழியில் ஒரிடத்தில் விழித்தகண்ணோடு தவஞ்செய்திருந்தனன். அரசர்பெருமானே அம்முனி வனைக்கண்டுவணங்கி நின்று முனிவர்பிரானே! இவ்வழி ஓர் வேங்கை யெய்தக் கண்டனையோவெனக்கழற அவனோ தவஞ்செய்து நின்றமை யான் மௌனமாயிருந்தனன்.

பின்னர் அரசர்பெருமானே நாம் பன்முறைவணங்கிக்கேட்டும் சும் மாவிருக்கின்றனனெனச் சினந்து ஆங்கிறந்துகிடக்கும் அரவு ஒன்றினை அவன்கழுத்தில் மாலைபோன்று சுற்றிமீட்டும்-வேங்கையைத்தேடித் தன் சேனையோடும் தன் அத்தினநகரமடைந்து அரசாண்டுவந்தான். நிந்தா னை அப்பயிரவமுனிவன் கழுத்தில் அரவினைமாலையாகச் சுற்றிச்செல் கையில் அம்முனிவன் அருகில்தவஞ்செய்துகொண்டிருந்த ஓராருந்தவர் அதைக்கண்டிருந்தனர். அவரோ அச்செய்தியை அம்முனிவன் மைந்த னுக்கு வெளியிட்டனர். அதை அம்முனிவன் மகனாகிய சிருங்கிமுனிவன் கேட்டுக் கோபித்துநின்று, என்தாதைகழுத்தில் இறந்தபாம்பினை மாலை யாகச்சுற்றிச்சென்ற அரசன் இன்றைக்கேழாநாள் தக்ஷகனென்னும் நாக ராஜனால்மரணமடைகவென்றுகடுஞ்சாபமிட்டுத் தன்தந்தைதவஞ்செய்யு மிடம்போந்து கழுத்தினைச்சுற்றிக் கிடந்த பாம்பினை யெறிந்துவிட்டு வணங்கிநின்றான். அப்போது அம்முனிவர்பிரான் தவத்தினின்றும் விழி த்து நோக்கி, மகனே இங்கடைந்ததென்ன காரணம்! எனக்கொன்று மொளியாமற் கூறெனச் சிருங்கிமுனிவனும் நடந்தசெய்தி முழுவதும் ஒன்று மொழியாமற்கூறினன். முனிவர்பிரானும் முக்காலமும் உணர்ந் தாராதலின் வந்தவன் இன்னவனென்றும், அவனுக்குந் தன்மைந்தனிட்ட சொடுஞ்சாபமும் உணர்ந்து இருசெவியும் பொத்திக்கொண்டு கூறுகின் றான்.

மகனே! உற்றநோய்நோன்றல் லுயிர்க்குறுகண் செய்யாமை யற்றே தவத்திற்குரு' எனத் தேவர்கூறியவண்ணம் இவ்விரண்டுமன்றோ தவத் திற்குருவமாகும். இதனையுணர்ந்திருந்தும் மன்பதையனைத்தும் தன்னுயி ரெனக்கருது மகாராசனாகிய பரீட்சித்தை யாதுநினைந்து யாதுசெய்தனை! அவன் அரசுசெய்து வருவதனாலன்றோதருமதேவதை நான்குபாதங்களா லும் நடக்கின்றது. அவ்வரசர் பெருமான் இறந்துவிடுவானேல் இனி யெவன் அரசாளவருவனோ! இனிஉலகமும் எவ்வாறுமோ! 'நீரின்றமை யாதுலகெனின் யார்யார்க்கும்வானின்றமையா தொழுக்கு' எனப்பொய் யாமொழியார்புகன்றவண்ணம், உலகினுள்ளார்யாவரும் மழையினாலே தான் எங்கலனுமனுபவிக்க வேண்டும் 'மழையின்றி மாநிலத்தார்க்கில்லை மழையுந்-தவமிலாரில் வழியில்லை தவமும், அரசாள்வாரில் வழியில்லை' எனப்பெரியோர்கூறியபடி நமக்கெல்லாம் நிர்ப்பயமுண்டாம்வண்ணம்

ஒற்றைத்திகிரியுருட்டி வருகின்றான். அப்படிப்பட்ட அரசர்பெருமானுக்கு நீ சிறிதுமுன்பின் எண்ணாமற் கடுஞ்சாபமிட்டனை! இவ்வாறு கடுஞ்சாப மிடவும்போமா! இது முறையன்றே, என்று மிகவுமாகுலித்து நின்றனர். அதுகேட்டுச் சிருங்கிமுனிவனும் இறைவனே! நானும் சிறிதேனும் இன்னது நேருமென்பதைக் கருதாமலே இத்துணைக்கொடுஞ்சாபமிட்டுவிட்டேன், யான் சாபந்தர வல்லுநனேன் அன்றி மறுசாபங்கொடுக்க வலியில்லேன், இதற்கென்செயக்கடவேன் என்று தன் தாதையிடம் முறையிட்டான் பிரமமுனிவன் தன்னருகிலிருந்தவரைக்கூவி முனிவர்களே! நீங்கள் பரீட்சித்துமகாராஜனிடஞ் சென்றிடைச் செய்தியொன்றுமொழியாமல் அறிவிக்கவேண்டும் ஏழுநாள்மாத்திரம் பாம்புவராதவிடமாகக் கண்டு வசிக்க அறிவியுமென்றனன். அவர்களும் அம்முனிவன் கட்டளையை பெற்று முனிவனுரைத்தவண்ணம் போய் நின்தந்தையிடங்கூறிப்போயினர். அவர்கள்போகவே நின்தந்தையும் தன் அமைச்சர், புரோகிதர் முதலானோரை நோக்கி இதனைக் கூறியாராய்ந்து அவர்கள்சொன்ன சூழ்ச்சியினால் கடலில் ஒரு பெரியதூண் நட்டு, அதன்மேல் ஓர்மணி மண்டபமியற்றி அதில் உன்தந்தைக்கு அரவின் விஷத்தினைப்போக்கும் மருத்துவர், மந்திரவாதிகள், இவருடன் பலகாவலையு மமைத்து அதில் ஆறுநாள்வரையும் சிறிதும் குறைவென்பதில்லாமல் இனிதுவசித்திருந்தான்.

சிருங்கிமுனிவனிட்ட சாபத்தை நிறைவேற்றவெண்ணிப் பாதாளலோகத்தினின்றுங்கடந்து இவ்வுலகத்தையடைந்த தக்ஷகன் இங்கே உன்தந்தையிருக்கும் காவலை யாங்கணுங் கூறுவதுகேட்டுக் கப்புங்கிலையுமாகத் தழைத்த ஓராலின்நிழலில் வந்து நின்று இவ்வகைக் காவலுடனிருக்கின்ற அரசனை யெவ்வாறு கொல்வது! இப்பெரியவழியொடு செல்வேனுமேன் ஒரு வீரனை என்னைக் கொல்லுமாச்செய்வன். அவ்வாறன்றென்று அரசனை விட்டுப்போவேனெனின் என்தலை பாபிஞ்சக்கலாமே! இதற்கென்செய்வேனென்று ஆராயுங்காலை ஒரு பார்ப்பான் மிகவேகமாய் ஓடிவருவதுகண்டான் அவ்வந்தணன் சேர வருதன் முன்னரே தானுமோர் அந்தணவேடங்கொண்டு அவ்வந்தணனை நோக்கி யாண்டிருந்து வருகின்றீர், யாண்டுச் செல்லுகின்றீர், உள்ளவாறு கூறுமென வந்த அந்தணன் கூறுகின்றான். ஐயா நான் பரீட்சித்து மகாராசனை அரவம் தீண்டச் சாபமிட்டிருப்பதனால், அதற்கு மந்திரவாதிகளையும், மருத்துவரையும் வருவித்திருக்கின்றமைகருதி யான்சென்று என்மந்திரவாற்றலைக் காட்டி என்னை வருத்த மிடிமையைப்போக்கவந்தேன். அந்தணனும் இதுபோதல் வல்லையிற்போக வேண்டுமெனத் தக்ஷகனாகிய அந்தணவேடங்கொண்டோன் அந்த அரசனைக் கொல்லவருகின்ற நாகமென்னை இலேசா! நாகராஜனின் தலைமைபான நாகமாயிற்றே. அதுவும் முனிவனிட்ட சாபத்தை நிறைவேற்ற வருவமதன்றியே ஜென்றன்றே, அவ்வரவின் விடமோ சந்திரசேகரனாகிய பரசிவனையல்லது மற்றெவராற் சாத்தியமாமோ? அதை விடத்துவதாகச்சொல்லித் தணிக்கத் 'வருமை மினின்று நகில்லை' யென்பதையொக்குமன்றேயன்றி மந்திரவாற்றலுடையானென்பதுதோன்றுகின்றதேயன்று உன்வலே, அதற்கு

அந்தணன்கூறுகின்றான். உமக்கென்னமதியீனம், ஆதிசேஷன், அனந்தன் வாசுகி, கார்க்கோடகன், தக்ஷகன்முதலிய நாகராஜர்ஒருங்குகூடி யொருவனைத்தீண்டினும் ஏயென்னுமாத்திரையில் அவ்விடத்தினை யிருந்தவிடந் தோன்றாமற் போக்கிக் குணப்படுத்துவேனென்று உறுதிமொழிகூறத் தக்ஷகன்கூறுகின்றான். ஐயா நானே தக்ஷகனென்பவன் இவ்வாலவிருக்ஷத்தினை என்விஷத்தீயால் நீறாக்கிவிடுகின்றேன். உன்மந்திரசத்தியால் பட்டமரத்தினை முன்போல் தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கப்புகளோடு தழைத்திருக்கச்செய்யும் பார்ப்போமென்று தன் சுயவடிவத்தினையடைந்து அம்மரத்தினைத்தீண்டி விஷந்தான்றான். அவ்வாலமரம் கணப்போதில்வெந்து சாம்பராயிற்று. உடனே அந்தணன் ஸ்ரீபஞ்சாக்கரத்தொடு கலந்த சஞ்சீவி மந்திரத்தினை யொருதரமுச்சரித்தான் அங்ஙனம் பட்டமரம் தளிர்த்துப் பூத்துக்காய்த்துக் கப்புவிட்டுத் தழைத்துப் பழையபடியே நின்றது. அதுகண்டு திப்பிரமைகொண்டு மோசம் வந்துவிட்டதே! இம்மகாபுருஷன் அரசன்பாற் செல்வானானால் நாம் கடித்ததனாலே யாது பயன்! இம்மகாத்துமாவை அங்குச் செல்லாதிருக்கும் வகைசெய்ய வேண்டுமென்று துணிந்து, அந்தணர்பெருமானே! நீர் இத்துணைத்தூரம் வரமனந் துணிந்தமை செம்பொற்குவியல் பெறுவதற்கல்லது வேறன்றே! உமது அவாவறச் செம்பொற்குவியலைத் தருகின்றேன், வறுமையை யோட்டுகின்றேன்; வந்தவழியே நாடிச்செல்லுமெனத் தக்ஷகன் கூறவே, அவ்வந்தணனு மதற்கு இயைந்து அந்தக்ஷகன்கொடுத்தஅபரிமிதமான செம்பொற்குவியலை பேற்றுந்தக்ஷகன் விடைகொடுப்பத் தன் நகரமே சென்றணைந்து குபேரசம்பந்துடனிருந்தான்.

இச்செய்தி அவ்வந்தணனும், தக்ஷகனு மறிந்ததன்றிப் பிறரொருவருமறிந்திலரென்று. ஆயின், இது எங்கும் பரந்ததையுமுண்டு! அஃதியாதெனின் தக்ஷகன் அம்மரத்தினைத் தீண்டியபோழ்து அந்தணர் குமரர்இருவர்? அம்மரக்கிளையொன்றில் இலைபறித்துக்கொண்டு நின்றனர்! அம்மரம்பட்டவழிபட்டுந் தழைத்தவழி அதனோடுயிர்த்து வந்தனர். அவரால் இச்செய்தியெங்கும் பரவிற்று. இதுகிடக்க, தக்ஷகனே விரைந்து நாமெப்படிசென்றெய்துவது! இவ்வடிவங்கொண்டணைந்தால் இக்கட்டுக் காவல் கடந்து சாபமொழி நிறைவேற்ற வொண்ணாதே! என்செய்வோம்! என்றொருவாறு துணிந்து நாமினி வேற்றுருக்கொண்டு செல்வதே நலமென்று ஒருவேதியனாக உருக்கொண்டு சென்று தன் விஷத்தினை ஓர் எலுமிச்சங்கனி யாக்கிக்கொண்டு கையிலேந்திக் கடலருகே வந்து அரசன் வைத்திருக்கின்ற காவலைக்கண்டுவியந்து அம்மண்டபத்திற் சென்றான். அங்கிருந்த காவற்காரர் இவனோர் அந்தணனெனத் துணிந்துவிட விரைந்துசென்று அரசனிருக்கையை யணுகினான். உடனே உன் தாதையாகிய பரீட்சித்து ஓடோடியும்வந்து அழைத்துக்கொண்டுபோய் ஒரு அழகிய பொற்பீடமளித்து அதிலெழுந்தருளியிருக்கச்செய்து உபசரித்தான். வந்தவேதியன் அரசனுக்கு ஆசிகூறி அப்போதேனும் சற்றுமிரக்கமென்பதேயில்லாமல் அரசன்கையில் அவ்வெலுமிச்சங்கனி கொடுத்தான்

கபடவேடங்கொண்டுவந்த தக்ஷகன் எனுமிச்சங்கினியை' மகாப்பிரசாதமென் றெண்ணி அதுமிகமணங் கமழ்வதைநோக்கி அக்கனியை மோந்தான்! மோக்கவே தான்கொண்ட வேதிபவடிவங்கரந்து பூநாகத்துருக்கொண்டு உன்தாதைமூக்கினைக் கவ்விமலறந்தான். அக்கணமே உன் தாதை பரமபதஞ்சேர்ந்தான்.

இச்செய்தியை புணர்ந்த மந்திரிமார்முதலிய பரிவாரங்கள் அறிந்து வந்துஅரசனுக்குச் செய்யவேண்டிய சரமகாரியநடத்திப் பின்னர் அத்தினபுரியையடைந்து உனக்குப்பட்டாபிஷேகஞ்செய்து முடியரசனுக்கினர். மாபாதகனுகிய தக்ஷகன் செய்தகுற்றம் என்னிடத்திலும், உன்னிடத்தில் இவ்வளவென்று சொல்லத்தக்கதோ! முடிவேந்தர் சிகாமணியேயென்று உதங்கமுனிவன் கூறுகின்றுன். "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட்டதனுெடுநேர்' என்றபடி இத்தகு கொடும்பாதகனையும், அவனுெடு சம்பந்தப்பட்ட நாகராஜரையும் கொலைசெய்வதிற் குற்றமுண்டாமா? நீதடையில்லாமல்சர்ப்பயாகஞ்செய்வதே மிகவுநலமென்றனன். அதுகேட்டு ஜெனமேஜெயமகாராஜன் கடுங்கோபங்கொண்டு அத்தக்ஷகனையும், அவனோடு சம்பந்தப்பட்டவரையும், அவனோடு சம்பந்தப்பட்டவரையும் இக்கணத்தே நாசமாக்குகின்றேன். அதற்கு யாதுவேண்டுமென உதங்கமுனிவன் கூறுகின்றுன்.

சர்ப்பயாகச்சருக்கம்.

வேதவேதாந்தங்களில் வல்லோராகிய அந்தணரையும், ஐம்பொறியடக்கிய மாதவரையும் வருவிக்கவேண்டும், அவ்வேள்வியைச் செய்தற்கு விசாலமான இடமேற்படுத்தவேண்டும் அவ்வேள்விக்குவே டும் ஓமத்திரவியம், சமித்துமுதலியவைபகைப்பிக்கவேண்டும் என்றுகூறக்கேட்டு, ஜெனமேஜெய்மகாராஜன் தன்னமைச்சர்க்குக் கட்டளையிட்டான். அவ்வாறே கட்டளையைபெற்ற அமைச்சரும்முனிவர்கட்குநிருபங்களையனுப்பி பின்னர் அங்க, வங்க, கலிங்க, காம்போஜ, மிலேச்ச, மலையாள முதலிய தேசராஜர்களுக்கு முடக்கோலையனுப்பியபோது தூதுவர்அரசன்கட்டளைப்படி மலை, வனம், ஆறு, தேசமுதலியவை கடந்து அவ்வத்தேசராஜர்கட்கும் கொடுத்துத்திரும்பினர். கொடுத்தபத்திரங்களைக்கண்டமன்னரும் தம்பரிவாரங்களோடு தாமதமின்றி வந்து தந்தமக்கு விட்டிருந்தவிடுதிகளிற் சேர்ந்தனர். முனிவரும் கண்டவுடன் தம்மாணுக்கருடன் அரசனென்றுசெய்ய முனைந்து நம்மைவருவித்தால் போகத்தான்வேண்டுமெனத்துணிந்துதிரண்டுவந்தனர். அரசனுல்அவர்கள் எதிர்சென்றழைத்துஅர்க்கியபாத்ய முதலிய சோடசோபசாரங்கள் செய்யப்பெற்றுத்தாம் அவவிட்ட பொற்பீடத்தில் எழுந்தருளியிருந்தனர்.

இவ்வாறு எழுந்தருளியிருந்தமுனிவர் அரசனைநோக்கி மகாராஜனே! என்னதாமசம்! இனித்தாமசமொன்றுஞ் செய்யாமல்குறித்தசர்ப்பயாகத்தை நிறைவேற்றென்று கட்டளையிட, அரசர்பெருமான் வசிட்டபகவானையும்,கலைக்கோட்டுமுனிவரையும்வியாசமுனிவரையும்ஆசிரியராகக்கொண்டு தன்மனைவியோடுசென்றுமிராடி யாகதீக்ஷைசெய்துகொண்டு அழகியபீடத்திலிருந்துகொண்டு வேதவேதியர் மந்திரவுருச்செபிக்க யாகஞ்செய்யவே, மண்விண்பாதலமென்னு மூவுலகங்களிலுமுள்ள நாகங்களெல்லாந்திரண்டு

திரண்டுவந்து வேள்வித்தீயில் விழுந்து மடிந்தன. கத்துருமக்களின் சந்ததிமடிந்துசாம்பராயினது மல்லாமல் கத்துருமக்களாகிய காத்தவேயரும் மந்திரவலியால் உடல்தளர்ந்து கழிபெருந்துன்பமடைந்தனர். அவருள் ஆதிசேடன், தக்ஷகன், அனந்தன், வாசுகிஒழியஏனையோர் வந்துவிழுந்து மாண்டுபோயினர் அரசர்பெருமான் வியாசபகவானைநோக்கி இன்னும் தக்ஷகன்முதலானோர் வரக்காணோமே! வாராமையாதுகாரணம்? அவர்களையும் வருவிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். வியாசமுனிவரும் மந்திரதேவதைகளைத்தூண்டவே, அவர்களோடோடியும் விரைந்து வந்து ஆதிசேடன்முதலானோரைச் சுற்றிக்கொண்டிழுக்கத்தொடங்கினர். அதனால் அவர்கள் நெஞ்சங்கலங்கித் தாயிட்டசாபங்கருதித் துன்பத்திற் குள்ளாயினர்.

இவருள் தக்ஷகன் இந்திரனுலகமடைந்து ஆகண்டலனைவணங்கி உம்மைப்புகலடைந்தேன் என்னை ஜனமேஜயமகாராஜன் செய்யும் சர்ப்பயாகத்தில் விழ்ந்து மடியாமற் காக்கவேண்டுமென்று முறையிட்டான். இயல்பாக உலகில் அரசராவார் தம்மைப்புகலடைந்தாரைக் காக்கின்றனர். நாமோதிரிவித வுலகத்தையும் ஆளும் உரிமைபூண்டிருக்கின்றோம், நாம் ஒரு நாகராஜனைக் காவாதொழிந்தால் நமது மாட்சிமையாதென்று நினைந்து நீ ஒன்றுக்கும் அஞ்சாதை! நினக்குக்கேடு சூழாவண்ணம் காக்கின்றேன் என்று உறுதிமொழிபுகலத் தக்ஷகன் இந்திரன் சார்பிலேயிருந்தனன். பின்னர் இரண்டாயிரயோசனையுயரமான மந்தரகிரியை இரண்டாயிரஞ்சுற்றுச்சுற்றிக் கொண்டுவந்து தேவர்களுக்கு உதவிய ஆதிசேஷன் மந்திரதேவதைகளின் வருத்தந்தட்டப்பட்டு நாமெவ்வாறுய்வோம்! என்று மனமாழ்கித் தன்னையின்றுளாகிய கத்துருவையடைந்து, அன்னே! 'ஆய்ந்தாய்ந்து பாராதான் தான்சாகக்கடவன்' என்னும் பழமொழிப்படி நீ சிறிதும் முன்பின் ஆய்ந்துபாராமல் இக்கொடுஞ்சாபமளித்தனை! என்னோடு நால்வரேயொழிய மற்றையுடன்பிறந்தாரும், சந்ததியோடுமாண்டனர். இதோ நானும் மாளப்போகின்றேன் என, அதைக்கேட்ட கத்துருவும் ஈன்ற வயிறெரியக்கோவென்று கதறியழுதாள், சலர்க்கரையாகிய தங்கையையும் புலம்பினள். ஆதிசேஷனே தன்றங்கையைநோக்கித் தங்காய்! இனிச்செய்யலாவதொன்றில்லை மிகுதியாய்நின்ற நாங்கள் உய்யவேண்டுமென்று கருதினால் உன்மகனாகிய அத்திகனையனுப்பி ஜனமேஜயமகாராஜன் இயற்றும் சர்ப்பயாகத்தை நிறுத்தக் கேட்டுக்கொள் என்றான். சலர்க்காரையும்மகனிடமடைந்து அப்பா! மகனே! உன்மாதுலரொருவரொழியாமே சர்ப்பயாகத்தில் மடிகின்றனர், நீசென்று சர்ப்பயாகத்தை நிறுத்தக்கேட்டுக்கொள் என்றாள் அவ்வாறேசெய்கின்றேன் என்று தன்தாயை மும்முறை வணங்கி விடைபெற்று அத்தினபுரியையடைந்து, தன்வரவைத்தூதுவரால், அரசனுக்கறிவித்துக் கட்டளையால் யாகமண்டபமணுகி அங்குள்ளமுனிவரையெல்லாம் வணங்கினின்றான். அரசனே இவர் பெருந்தவமுடையாரென்று விரைந்துசென்று வணங்கிப் பொற்பீடமளிக்க அதன்மேல் அத்திகமுனிவனெழுந்தருளி அரசனைநோக்கிக் கூறுவானாயினன்.

அரசர்பெருமானே! போரில் வெற்றிகோடற்கும், புகழ்க்கும், வாய்மைக்கும், அருட்கும், தானத்துக்கும், வேள்விக்கும், அரசுக்கும், செல்வத்துக்கும், அழகுக்கும், ஆண்மைக்கும், நீயொருவனேயல்லது நின்னிற் பிறரில்லையென்பது இவ்வுலகமே கூறும். திருமாலினவதாரமாகிய வேதவியாசபகவானே ஆசிரியராக வமைந்திருக்கையில் நினக்கென்ன குறை! நீயிம்மூவுலகத்தையும் அழிக்கக்கருதினுஞ் செய்தேமுடிப்பை; அத்தனை ஆற்றலையுடைய நீ நின்பிதாவைக்கொன்ற தக்ஷகனைக்கொல்லக் கருதியேனை நாகராஜரையெல்லாம் சாகச்செய்தனை! நினக்கொப்பாவார் யாவரிருக்கின்றனர்! உன் முன்னோரில் விஜயன் அபிமன்னுவைக்கொன்ற சயிந்தவனைக்கொல்கின்றேன் என்றுறுதிகூறிமறுநாள் அந்திப்போதிற் கொன்றான் நீயும் அவ்வாறே செய்தனை உன்னைப்போலும் பேராற்றலுடையார்பிறரில்லையாகலின் யான் ஒருகாரியமாய்வந்தேன் என; அரசன் இவ்வாறு கூறுவது நோக்கி இவர்யாரோ மகானுபாவர்; என்பால்வந்த காரியம் இன்னதென்றுணர்த்தினால் என்னுயிரைக் கேட்பினுந் தாமதமின்றித் தருவேன் எனக்கூற, அதுகேட்டு அத்திகமுனிவன் கூறுகின்றான். பரீட்சித்துதவியபாலனே! பல்கலையுணர்ந்த சீலனே! இப்போது நீ கொண்டிருக்கும் யாகதீக்ஷையை மேற்கொண்ட கோலமொழியவேண்டுமென்றே யான்நாடிவந்தேன், இதுதான் என்வேண்டுகோளென அரசர்பெருமான்யாகமண்டபத்திலிருக்கும் அருந்தவக்கொள்கைத்திருந்திய மனத்து முனிவரை நோக்கினான் அதுகண்ட முனிவரும் இம்முனிவர் கருதியவண்ணம் வேள்வியை நிறுத்துவதே நலம், இவரோ சலர்க்காரமுனிவர்மைந்தர் தேவரும் பரவும் சிறப்பினையுடையார், இவர் வாக்குக்கெதிர்வாக்கே கூறவேண்டாமென, அரசர்பெருமானும் அத்திகமுனிவனை வணங்கி நின்று, தங்கள் கருத்தின்வண்ணம் வேள்வியை நிறுத்துகின்றேன் என்று சொல்லிவிட்டு வேதவேதாங்கமுணர்ந்த முனிவரைநோக்கி யாகபூர்த்தி செய்யுங்கோளென்றிறைஞ்சாநிற்க, மந்திரதேவதைகள் இந்திரனைப் புகலடைந்த தக்ஷகனை அவனுடன் இந்திரனையும் பிணித்துக்கொண்டு அந்தரத்தில் வந்தன. யாகபூர்த்திசெய்யவே மந்திரதேவதைகள் தக்ஷகனையும் அவனுக்குப்புகலிடந்தந்த இந்திரனையும் விடுத்தன. உடனே இந்திரனும் தக்ஷகனுந் தத்தம் இருக்கையிற்சென்றடைந்தனர். இதுகிடக்க,

பரீட்சித்துமகாராஜன் மைந்தனாகிய ஜனமேஜயமகாராஜன் யாகபூர்த்திசெய்து நான்மறை யுணர்ந்த வேதியருக்கெல்லாம் வரையின்றிப் பொருள் கொடுத்ததுமல்லாமல் சோடசமகாதானங்களும் வழங்கி அவர்களிருக்கைக் கெழுந்தருளச் செய்வித்து, அருந்தவமுடைய முனிவரையெல்லாம் உபசரித்து வணங்கி விடைகொடுத்து அவரவர் ஆச்சிரமஞ்சென்றபின்னர், வேந்தர்கட்கு அவரவர்களுக்கியைந்தவண்ணம் மரியாதை செய்து அவரவர் நாட்டிற்செலுத்தினான். அதுகண்டு அத்திகமுனிவன் சொல்லுகின்றான். மகாராஜனே எனக்கு நீகொடுத்த வரமொன்றே இவ்வகைத்தென்று இயம்பும் பகுதியதன்று, ஊழிதோறூழி யுயர்ந்த உமையொருபாகன் அணிகலன் பெற்றதும், மருநிடையே தவழ்ந்த கள்ள

மாமாயன் பாயல்பெற்றதும், உந்திவந்தவொருவன் பெருமையுற்றதும், வயிரவேதிகையையுடைய வலாரியுயிர்பெற்றதும், மற்றையமரர்தாமும் தமக்குமருந்துதவுந் தாம்பினைப்பெற்றதும் அவ்வாரத்தினாலேயேயன்றோ? உலகமும் களிப்புடன் இருக்கப்பெற்றதும் இதனாலேயேயென்று துணியவேண்டும் மண்டலேசனே! உன்புகழ்க்கினியாவர் நிகராவார்? ஒப்பொருவரில்லாவுச்சமனே யென்றுவாழ்த்தி, அரசன்பால் விடைசொண்டேகித் தன் தாயாகிய சலர்க்காரையை வணங்கி அவட்கு நடந்தவாலாற்றினை முற்றுமுரைத்துத் தான் தவஞ்செய்யச்சென்றான். இதுகிடக்க.

புரவலர்பெருமான் என்காதைபாகியவின்டோதன் இவ்வாறுநாளும் யாதுசெய்துகொண்டிருந்தனனென அதற்கு உதங்கமுனிவன் கூறுகின்றான். சந்திரகுலமணிவிளக்கே! நின்பிதாவாகிய பரீட்சித்து அவ்வாறு நாளும் சராசரங்களெல்லாமொன்றுரைக்கநின்ற பெருந்தவச் சுகமுனிவன் புராணச்சினமாகிய ஸ்ரீமகாபாகவதபுராணங்கூறக் கேட்டிருந்தனன் எனக்கூறக்கேட்டு மகிழ்ந்து அவ்வுதங்கமுனிவனை வணங்கிவிடைகொடுத்தனுப்பினன். பின்னர் புரவலர்பெருமான் அறநூல்கூறியவண்ணம் பழிக்கஞ்சிப் பாத்தூணல்கிப் பார்புரந்துவந்தான். இவ்வாறு புரந்துவருநாளில் ஒருநாள் ஜைமுனிவர், சுமந்துமுனிவர், பயிலவமுனிவர், தேவலமுனிவர், நாரதமுனிவர்என்னுமாணாக்கருடனும் பரந்தாமன்திருவவதாரமெனப்படும் வியாசபகவானெழுந்தருளிவந்ததை ஒற்றராலுணர்ந்த இறைமகன்அவரைச்சென்றழைத்து அழகிய பொற்பீடத்திருத்தி, கைந்நீர் அடிநீர் முக்குடிநீருதவி நீராட்டி ஆடைசாத்தி முப்புரிநூலுதவி தேய்வைபூசி மலர்புனைந்து மஞ்சளரிசிதூவி நறும்புகைகாட்டி விளக்குக்காட்டி ஆரத்தியெடுத்து அமுதமேந்தித் தாம்பூலமுதவி மந்திரமலரா லருச்சித்து நின்றுஒருமொழிகூறுகின்றான் பரந்தாமன் வடிவமாகிய அமலனே! தேவரீர் வமிசோத்தாரகராயும் குலகுருவாயும் விளங்குவதனுன் ஈரைம்பதின்மரும் ஐவரும் பகைத்துப்போர்செய்தமையும்அவருள் ஐவர்வென்றமையும் உலகமறியுமே! ஐவரேர சத்தியவான்களெனப்படுகின்றனரே! சுயோதனதிபர் உமது சொற்கேளாரேனும் பாண்டவர் கேட்டிருப்பரே, நீர் 'தெருச்சண்டை கண்ணுக்கின்பம்' என்னும் பழமொழிக் கிணங்க உபேட்சையா யிருந்துவிட்டீரென வியாசமுனிவர் கூறுகின்றார்.

தராதிபனே! நீ சொன்னதனாலெனக்கோர் குற்றமேயில்லை, நீயோ சிறுகுழந்தை! ஆகலால் இம்மொழியெடுத்துக்கூறினை! இன்றுபத்தாநாள் உனக்கோர்பிரமகத்திதோடம்வரும்! அதனைத்தவிரற்பாலையோ! ஊழாற்றேன்றுவதற்கென்செயக்கடவோம்! என்னை நொந்தாவதென்னென்று தானும் தன்மாணாக்கரோடும் விடைபெற்றுச்சென்றனர் பின்னர் அரசர்பெருமான் எக்கலையு முணர்ந்தஅந்தணரைவருவித்தெனக்கின்று பத்தாவதுநாள் ஒருபிரமகத்தி நேர்வதாயிருக்கின்றது, அதுவாராதிருக்கச் சூழ்ச்சியொன்றுகூறுங்கோளென்றனன். அதற்கு அம்மறையோரும் ஓமங்களாலும் வேள்வியாலும் எவ்வகைப்பட்டபாவமும் நிவர்த்தியெய்தும், நீர்அல்லும்பகலும்ஒழியாமேமந்திரமுச்சரித்து ஓமஞ்செய்வீரேல் அப்

பிரமகத்தியணுகாதென்றனர். அரசனே அவ்வாறு சுரைந்துநாளும் ஊனு
றக்கமிகந்து செய்யவல்லாருளரேல் வாருங்கோளெனப்பறையறைவித்
தனன். அதுகேட்டியாவரும் சும்மாவிருந்தனர். வறுமையால் மிகவருந்து
கின்ற விருத்தவேதியனொருவன் நமது வறுமை யருமையாகுமென்றுகருதி
அரசனுக்காசிகூறிப் பத்துநாளுமிருந்து யானே அவ்வோமத்தைமுடிப்
பிக்கின்றேனென்றான். அரசன்மகிழ்ச்சிபெய்தி அவ்வேதியனைக்குருவா
கக்கொண்டு ஓமமண்டபத்திற்சென்று வேதியன்மந்திரமுச்சரிப்ப ஒன்
பதுநாள்வரையும் வேள்விசெய்துவந்தான். பத்தாநாளிரவில்ஓமத்தை
நடத்தும்வேதியன் முதுமையடைந்த உடம்பினனாகலின் ஒன்பதுநாளும்
இரவினும் பகலினும் கண்விழித்திருந்தமையானும், மிக்கதளர்ச்சியுடை
மையானும், வலியின்மையானும், மந்திரமுச்சரித்துக்கொண்டே நித்
திரித்தான். அந்நித்திரையில்அவ்வேதியன் தானொருபெருங்காட்டிற்
சென்றதாகவும், ஆண்டொருபுலி தன்மேற்பாய்ந்துகொல்லத்துணிந்த
தாகவும் கனவுகண்டுகொண்டிருந்தான் அப்போது அரசர்பெருமான்
இதென்ன மந்திரமுச்சரித்துக்கொண்டே வேதியன் நித்திரிக்கின்றான்
என்றுதன்கையிலுள்ளதருப்பையினு லவ்வேதியனைத்தொட்டான்.

வேதியனே மிகப்பயந்து ஓமத்தீயில்விழவே சாம்பராயினன். அர
சனுக்கு வியாசபகவான்சொற்படிகுறித்தகாலந் தவறாமல்பிரமகத்திவந்து
நேர்ந்தது. அரசனேமபக்கமுற்று, இதென்னநாம்வேதியனைத் தருப்பை
யால்தொடவும்அவன் வேள்வித்தீயில்இறக்கவும்நேர்ந்ததேபாதுசெய்வது
இதனாலன்றோ 'வினைப்பயனைவெல்வதற்கு வேதமுதலா மனைத்தாய நூலக
த்துமில்லை' எனப்பெரியோருங் றுகின்றனர். நங்குலகுருவாகிய வியாசப
கவான் உரைத்ததே பிரமாணமெனத்தகும். இனி நமக்குநேர்ந்த பிரமக
த்தியை நமது குலகுருவாகிய வியாசபகவானாலேயே நீக்கிக்கொள்ளவே
ண்டும் என்று எண்ணி வியாசமுனிவரைப் பலவாறு துதித்தான். துதித்
தாங்கு அரசர் பெருமானுக்கு நேர்ந்த பிரமகத்தி துடைப்பதுபோன்று
உலகிருள்நீங்கப் பரிதியங்கடவுளும் பசுங்கடலிற் றோன்றினன். வியாசப
கவான் தம் மாணாக்கருடன் எழுந்தருளவே அரசர் பெருமான் விரைந்து
எதிர்கொண்டு அழைத்துச்சென்று ஒருபொற்பீடமளித்து அதிலெழுந்த
ருளியிருக்கச்செய்து சோடசோபசாரஞ்செய்து கைகட்டி வாய்புதைத்து
நின்று ஒரு வசனம் கூறுகின்றான்.

பராசரன்மைந்தனாகிய பாற்கரனே! பரிபவந்தொலைக்கு மெம்பர
னே! உமது மகிமையையுணராமல் என்னறிவின்மையால் சொன்னபிழை
அத்தனையும் பொறுக்க வேண்டுகின்றேன். நானறியாமலே யிருக்கப்
பிரமகத்தி நேர்ந்தது மிகவு மதிசயமே! அது வந்தவகையும் அதற்குக்
கழுவாயும் யாதென்று அரசர் பெருமான் கேட்டனன். அதற்கு வியா
சபகவான் மதிகுல வரோதயனே! உனக்கு ஓமஞ்செய்வித்த கிழவேதி
யன் பெருங்கானில் அடைந்து புலி துறத்தக் கனவுகண்டான். நீ மந்
திரத்தை வாயால் உச்சரித்துக்கொண்டே தூங்குகின்றானெனத் தரு
ப்பையால் தொட்டனை, அவன் புலிபாயத்தொடங்கக் கனவு கண்டு
கொண்டிருந்தமையால் மிகப் பயந்து தீயில் வீழ்ந்து மாண்டான். அதற்

குப்பிராயச்சித்தமும் சொல்லுகின்றேன். அதாவது நீ உன்முன்னோர் சரித்திரமாகிய பாரதகதையைக் கேட்கவேண்டும். அதுவேதத்தோடொருபுடையொத்திருப்பதனால் மகாபாரதமெனப்படும். பரதராசன் வமிசத்தரசர் சரித்திரமென்றே கருதிக்கேவலமாக நினையாதொழி! முனிவரெல்லாம் துரியோதனன்பால்தூதுசென்ற கண்ணபிரான் ஏற்றமும், அவன் பார்த்தனுக்குக் கீதாசாரியனாகி இருந்து கீதையருளிச்செய்தமையும், அதனோடு உத்தரகீதையும்இருப்பதுபற்றி இதனை மகாவென்றே அடைகொடுத்தார் இவ்வகைப்பட்ட பாரமான பொருளிருப்பதனால் மகாபாரதமெனவும், கேட்போர்க்குஎவ்வகைப்பட்டதுன்பமும் போக்குந்தன்மையால் ஸ்ரீமகாபாரதமெனவுங்கூறுவர். இதனைக்கேட்பதனால் பிரமகத்திநீங்குவதன்றி உன் முன்னோருடைய வரலாறும் நன்குவிளங்கும். இதனதுசிறப்பையான்சொல்வதோ அரிது எல்லாமாயல்லவுமாயிருந்த கல்லாநிழன்மலை வில்லாருளிய கருணைமதம்பொழியுந் தயமுகத்திறைவன்மா மேருவோ யேடாகப்பிடித்துக் கயமுகவசுரனைக்கொன்ற ஓர் சிறந்தகோட்டாலெழுதியதெனின் அதன்சிறப்பினை என்னொருநாவாலெடுத்துச்சொல்லவல்லதோ! அதைக்கேட்போர் பெறும்பயனையும் இவ்வளவினதென அளவிடவும்போமோ! என்று கூறக்கேட்டு அரசன் தங்கள்கட்டளையின்படி அவ்வாறே கேட்கின்றேனென்றான்

வியாசமுனிவர் தன்னருகிலிருந்த வைசம்பாயனரை நோக்கி நமது ஜனமேஜயன் கேட்டுச் செந்நெறிபடர ஸ்ரீமகா பாரதத்தை நன்குவிளக்குகவென்று கட்டளையிட்டுத் தாம்விடைபெற்றுப் பதரிகாச்சிரமமே நோக்கிச்சென்றனர். பின்னர்வைசம்பாயனரும்அவர்கட்டளையையேற்று அரசர்பிரானையும் அவர்மனைவியையும் நீராடி நறுந்துகிலுடுத்துவரக்கட்டளையிட்டுச்சுசியான இடத்தில் இருந்துகொண்டு அரசன்செய்த வந்தனை வழிபாடுகளையேற்றுப் பல ஆசிகள் வழங்கி ஸ்ரீமகாபாரதத்தைச் சொல்லத்தொடங்கினர். அரசனும் மாபாக்கியமென்று கேட்கக் கொலை, களவு கள், காமம், பொய் என்னும் ஐம் பெரும்பாதகங்களையும் முற்றுமழிக்கவல்ல இம்மாபாரதத்தைச் சொல்லுகின்றேனென்று நைமிசாரணியத்துள்ள சௌனகர்முதலிய முற்றத்துறந்த முனிவர்களுக்குச் சூதமுனிவர் சொல்ல, அவர்களும் அவர்கேட்டவண்ணம் எங்களுக்கு விளங்கச்சொல்லவேண்டுமெனச் சூதமுனிவர் கூறுவாராயினர்.

வரலாறு முற்றுப்பெற்றது.

ஸ்ரீ கிருஷ்ணசகாயம்.

ஸ்ரீ

கிருஷ்ணசகாயம்.

ஸ்ரீமகாபாரதவசனம்.

ஆதிபர்வம்.

—*—

கலிவிருத்தம்

கய்யி லாழி யெடுத்தருள் கண்ணனை
மய்யு லாமழை வண்ணனைப் பாண்டவ
ருய்ய வந்தத யஞ்செய்த பானுவை
வய்ய முண்டசெவ் வாயனை வாழ்த்துவாம்.

வியாசபகவானை மனமொழிமெய்களால் வணங்கி்நின்று சூதமுனிவர் நைமிசவனத்து முற்றத்துறந்த முனிவர்களாகிய சவுனகர்முதலானோரை நோக்கி, வபுஷ்டாதேவியுடன் ஜெனமேஜெயமகாராஜன் நீராடிச்சுத்தமான ஆடையுடுத்துச் சுத்தமான இடத்தில் வைசம்பாயனமுனிவரை ஒரமுகிபபீடத்திலெழுந்தருளச்செய்து ஸ்ரீமகாபாரதத்தைச் சொல்லுமெனக் கேட்ப வைசம்பாயனர் சொல்லுகின்றார். ஸ்ரீமகாபாரதமென்பது பதினெட்டுப்பருவம் உடையது. ஆதிபருவம், சபாபருவம், ஆரணியபருவம், விராடபருவம், உத்தியோகபருவம் இவ்வைந்தனையும் ஆதிபஞ்சகமென்ப. வீட்டுமபருவம், துரோணபருவம், கர்ணபருவம், சல்லியபருவம், சௌத்திகபருவம் இவ்வைந்தனையும் உயுத்தபஞ்சகமென்ப ஸ்ரீபருவம், சாந்திபருவம், அநுசாசனிகபருவம் இம்மூன்றனையும் சாந்தித்திரையமென்ப. அசுவமேதபருவம், ஆச்சிரமவாசபருவம், மவுசலபருவம், மகாப்பிரத்தானிகபருவம், சொர்க்காரோகணபருவம் இவ்வைந்தனையும் முத்திபஞ்சகமென்ப. சுயோதனாதியர், பாண்டவரென்னும் இவ்விருதிறத்தர் சேனையளவோ பதினெட்டக்குரோணி யெனப்படும் ஒரு அக்குரோணிசேனையளவோ எடுத்துக்கூறுகின்றோம். தேர்-௧, யானை-௧, குதிரை ௩, காலாள் ௫, இங்ஙனஞ்சேர்ந்த பிரிவைப் பங்கியென்பர். அதுமூன்றுகொண்டது சேனாமுகம், இதுமூன்றுகொண்டது குமுதம், இதுமூன்றுகொண்டது கணகம், இதுமூன்றுகொண்டது வாகினி, இது மூன்றுகொண்டது புலுதம், இது மூன்றுகொண்டது சமுத்திரம், அது பத்துக்கொண்டது அக்குரோணி. இதனையே அக்ஷௌஹிணி என்றுங் கூறுவர். ஒரு அக்குரோணிக்குத்தேர்இருபதினாயிரத்துஎண்ணூற்றெழுபது யானையும் அவ்வளவினதேயாம்குதிரையோ அறுபத்தையாயிரத்துஅறுநூற்றைம்பது, காலாட்படையோபத்தொன்பதினாயிரத்தமுந்நூற்றைம்பது இதுஎழுகொண்டதுபண்டவர்சேனை! பதினொரக்குரோணிசுயோதனாதியர் சேனைஇவர்கள்போர்க்

கோலங்கொண்டு போர்செய்தநாட்கள் பதினெட்டு, பாண்டவருக்கு முதனாளில் சுவேதன்சேனாதிபதியாயிருந்தான். மறுநாள்முதல் பதினெட்டாநாள்வரையும் திஷ்டத்தும்மன் சேனாதிபதியாயிருந்தனன். சுயோதனனுக்கும் பத்துநாள் வீட்டுமனும், ஐந்துநாள் துரோணனும், மூன்றுநாள் கன்னனும், மற்றையொருநாள் பதினைந்துநாழிகைவரையும் சல்லியனும், மற்றைப்பதினைந்து நாழிகைவரையும் தானும் சேனாதிபதிகளாயிருந்து போர்செய்யவேபாண்டவர் அறவாழியந்தணன்கருணையால் வெற்றிகொண்டு ஆழிசூழ்புவியனைத்தும் அரசாண்டு அயர்வறும் அமரர்கட்கிறைவன் ஈறிலின்பம் நல்குந்திருநாட்டை யடைந்தனர்.

இம்மகாபாரதத்தை வடமொழியில் எமதுகுருவாகிய ஸ்ரீவியாசபகவான் நூற்றிருபத்தையாயிரம் கிரந்தமாகவெளிப்படுத்தினர். அவரது திருவவதாரத்தை முன்னேயெடுத்துரைக்கின்றேன். கடல்புடைசூழ்ந்த காசினிபதனில் நீர்வளம், நிலவளம் குடிவளமிக்க எந்நாட்டினுஞ் சீர்த்ததாய்ச் சேதிநாடென் றோர்நாடுண்டு. அந்நாட்டில் உலகமுழுதுந்தன்னடிநிழலிலொதுங்கமனுமரபில் வசுவென்னும் அரசன் ஆழியொருகடன்கைக்கொண்டு செங்கோல் செலுத்திவந்தான். அவன் தன்மந்திமார்முதலிய பரிவாரஞ்சூழக் காட்டிற் புகுந்து வேட்டையாடி விடாய்கொண்டு முற்றத்துறந்தமுனிவர்தவஞ்செய்புஞ்சூழலை யணுகினான். அந்தத்தவஞ்செய்கின்ற முனிவரொழுங்கநோக்கித்தவத்தினுஞ் சிறந்ததோர் பொருளைக்கண்டிலோம் ஆதலின் தவஞ்செய்வதேயுசிதமெனத்துணிந்து தன்மந்திரிமாரைக்கூவி, இனித்தவஞ்செய்வதினுஞ் சிறந்ததோர்பொருள் இன்றெனத்துணிந்து தவஞ்செயத்துணிந்தேன். நீவிர்என்சொற் கடவாமல் யார்க்குஞ் சிறிதேனுங்குறைவெய்தாவண்ணம் அரசாண்டு வாருங்கோள் என்று தன்முத்திரைமோதிரமுங் கொடுத்தனுப்பினான் மந்திரிமார் முதலானோரும் அரசன்குறிப்பினைக்கண்டு இனித்தடுப்பதோ முறையன்று என்பது துணிந்து தாம் தமதுநாட்டினையணுகி அரசன்கட்டளையின் அரசாண்டுவந்தனர். வசு அரசனோ முனிவர்பாற்சென்று வணங்கி அன்னோரின்னருள் பெற்றுத்தவநிலைசேர்ந்து தவஞ்செய்து இருந்தான். இவ்வாறு அரியதவஞ்செய்வதைநோக்கிப் புரந்தரன் பூவுலகினணுகி வசுவென்னு மன்னரேறே! உலகிலுள்ள அரசருளெல்லாம் மனுகுலத்திற்பிறந்த மனுநெறிவழாது ஒழுகுகின்ற நீ இக்கானில் அருந்தவஞ் செய்வானேனென வசுராசன்சொல்லுகின்றான்.

கற்பகநாட்டிற்கரசே! 'ஒன்னார்த்தெறலுமுவந்தாரைப்பாக்கலும் எண்ணிற்றவத்தான்வரும்' என்றபடி தவமே எல்லாச்சிறப்புந்தருமென்பது கருதி யான்தவஞ் செயப்புகுந்தேனென்று கூற, புலோமிசைகேள்வன் நீதவத்தினுஞ் சிறந்தபொருள் வேறொன்றில்லையென்றனை, அஃதுண்மையே! 'அத்தவமும் அரசிலாரில் வழியில்லை,' என்றும் மேலோர்கூறினமையான் அத்தவத்தினும் அரசாள்வதே சிறந்தது. அவ்வரசினை மனுநெறிவழுவாமல் காத்தோம்பலேதவத்தினுஞ் சிறந்ததாகும். ஆதலின் நீ அரசுசெய்தே பெறலரும்பயன்துய்ப்பாயென்று கூறி, பின்னரும் நீ யாது வரம்வேண்

டினும் தருகின்றேன், தவநிலைவிட்டெழுக என்றனன். அதுகண்டு வசு ராசன் ஆகண்டலனைவணங்கி யான் எவ்வுலகங்காண விழைகின்றேனே அவ்வவ்வுலகைச்சென்று காணவேண்டுமென்றிரந்து கேட்ப, அவ்வாறே பெறுதியென்று அரசன்கருத்தின்வண்ணம் ஒருதெய்வ விமானமுமுதவி, பகைவரை வெற்றிகொள்ள ஓர்காலதண்டமும், கமலமலர்மாலையும்பொன் னிறமும் அளித்துத் தன்னிருக்கையாகிய அமராவதிக்கெழுந்தருளினன்

வசுராசன் அவ்வாறு இந்திரனிடத்துப் பலவரங்களையு மேற்றுத்தவ நிலை விட்டெழுந்து தவக்கோலம் ஒழிந்து தன்னாட்டிற்குமீண்டும் வந்து கங்கைமுதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடி முடிபுனைந்து அரசனு யினன். தான் அரசாளுங் காலத்திலே தனக்குப் பெறலரும் வரங்கொடுத்த இந்திரனுக்கு திருவிழாக்களையும் நடத்தி வந்தான். அந்நாடு நீர்வளம், நிலவளமிக்கதாய் எந்நாட்டினுஞ்சிறந்திருந்தது. இதனையுணர்ந்த மற்றை நாட்டரசர் இந்திரனுக்குக் கழிபேருவகை பபகசுத் திருவிழா நடத்தி வந் தனர். அவ்வாறே இவர்கள் நாடும் நீர்வளம் நிலவளம் குறையாமல் மி கன. இவ்வசுரராசன் இந்திரனுதவிய விமானத்திலேறித் தான் எண்ணிய உலகமெல்லாஞ் சென்று திரிந்து ஆங்குள்ள அதிசயமெல்லாங் கண்டு அரசுசெய்து வருநாளில் ஒருநாள்மந்திரி முதலானோர் புடைசூழ விநோ தங்காண வெளிப்பட்டுச் சுத்தமதியென்னும் ஆற்றின் பக்கமே வந்து ஆங் கும் அவ்வாறே பார்த்துத் தன்புயவலியை மந்திரிமாருணரக் கோலாகல மென்னும் மலையைத் தன்காலினலெற்றி அம்மலையினருகிருக்கும் அவ் வாற்றில் அதனையெறிந்து போயினன். சுத்தமதியென்னும் நதியோ தன் னில் வீழ்ந்த கோலாகல மென்னும் மலையினை விழைந்து நின்று தான் பெண்ணுருக்கொண்டு அம்மலைத்தெய்வத்துடன் அன்றில் விழைபோக மயர்ந்து வசுபதத்தனென்னும் புத்திரனையும், கிரிகையென்னும் பெண் மணியையும் ஈன்று நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவ்விரு மக்களையும் வளர்த்து வந்தது. இவருள் கிரிகையோ பேதை பெதும்பைகடந்து மங்கைப்பருவ முடையாளாய், அந்நதிக் கரையில் தனியே விளையாடிக்கொண்டிருந்தாள். வசுராசனும்தான் ஒருநாள்வேடிக் கையாகப் புறப்பட்டு அந்நதிக்கரையை விரைந்து அணுகி அப்பெண்மணி தன்னந்தனியே விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டு, இப்பெண்மணி யார்! தன்னந்தனியே திரிகின்றனள், மாரனும்மயல்கொள்ளும்பேரழ கினள். திருவளர்தாமரைமலரும், சீர்விளங்குகாவிமலரும், பூங்குமிழும், கோங்கும், பைங்காந்தளுமாகிய ஐந்திணைமலராலாய ஓர் பொன் மாலை கொண்டோங்கியதெய்வதவடிவாய் என்கண்ணுக்குத்தோன்றுகின்றனள். இவள் நீரரமகளோ! வரைமகளோ! செந்தாமரைத்தவிசி லுறைபவளோ! பாரணங்கோ? யாரோ அறியேனென்று நாடிமனம்வாடி நெட்டுயிர்ப்பு நீடி நின்றான். இதனை மந்திரிமார் குறிப்பினுணர்ந்து நமதிறைவன் இப் பெண்மணிமேல் கண்வைத்தனன் என்று துணிந்து அம்மங் கையிடஞ் சங்கையின்றிச் சென்று அம்ம! நீயார்! நீ யிங்குத்தன்னந்தனியே திரியும் காரணமென்னவென, அதற்கு நான் இந்நதியின் மகள், என்பெயர்

கிரிகையென்று சொல்லுவர், நான்விநோதமாக விளையாட வந்தேனென்று கூறினள். மந்திரிமாரு மீண்டும் அரசனுக்கிதனை யுணர்த்தவே, அரசனும் அந்நதியருகிற்சென்று பலவாறாக அந்நதியைத் துதித்து உலகுக் கன்னையாக இருக்கின்ற நீ இக்கன்னிகையை எனக்குதவவேண்டுமென்று வேண்டினான். அதையறிந்த அந்நதி ஒரு பெண்ணுநக்கொண்டு வந்து அவ்விரு மக்களையும் அவ்வரையனிடம் கையடையாகக்கொடுத்து இந்நங்கையை மணந்து நம்பியை நின்சேனைத்தலைவனாகக் கொள்ளென்று கூறி மறைந்தது.

அரசனே ஐம்பத்தாறுதேசத்தரசருக்குமணவோலை போக்கி அவர்களைவருவித்து அவர்கள்முன்பாக வேதவேதியர்ஆசிகூற, கிரிகையையென்னும் நங்கையை மணஞ்செய்துகொண்டு, வசுபதத்தனைத்தன்சேனைக்கதிபனாக்கினான். வசுராசனே கிரிகையுடன் மன்றலயர்ந்து அன்றில்விழைபோக மனுபவித்துவருநாளில் கிரிகையோ கருக்கொண்டாள். அவட்கு நல்ல மாமிசவுணவைத் தான் வேட்டையாடிக் கொணரக்கருதி மந்திரிமுதலானோருடன் புறப்பட்டுச் சிங்கம், யானை, கரடி, புலிமுதலிய கொடிய மிருகங்களை யெல்லாம் வனதத்துப் பின்னர் நல்ல சுவையுள்ள ஊனுணவைத்தரும் மிருகவேட்டையாடி அவற்றின் ஊனையெல்லாம் அரண்மனைக்கனுப்பிவிட்டுப் பின்னர் தன்சேனையுடன் விநோதமாக ஒரு சோலையிலிறங்கினான். இறங்கவே மந்திரிமார் முதலிய பரிவாரங்கள் அரசன் தங்குவதற்கு மாளிகை போன்று கூடார மியற்றி அதிற் சப்பிரகூடாஞ்சமிட்டு வைத்திருக்க மாலைக்காலத்திற் செய்யவேண்டிய கருமங்களை யெல்லாஞ் செய்து முடித்துப் பண்டுபலாதிகள்உண்டு சந்திரோதயமாகவே தன்னந்தனியே கிரிகையை நினைத்துத் தனித்துறங்கினான். அவ்வாறு நித்திரை செய்கையில் தன் காதலியாகிய கிரிகையை யணைந்ததாகக் கனவு காணச் சுக்கிலங் கழிதமாயிற்று அரசன் அந்தோ? நாம் கிரிகையை நினைத்து வருந்தித் துயின்ற மயால் இவ்வாறு நேர்ந்தது. இதனை வீணாக்கிற்பெருங்குற்றமாமேயென்று வருந்திச் சற்றுநேரஞ் சிந்தித்துத் தான் வளர்க்கின்ற வல்லூரைக்கூவிச் சைகைசெய்து பறவையரசே! இதனை என் மனைவியாகிய கிரிகை யிடங்கொடுவென்று அதனை இலைபறித்து வட்டிலாகத்தைத்து அதில் அச்சுக்கிலத்தை யமைத்து அனுப்பினான்.

அரசன் கட்டளைப்படியே அவ்வல்லூரும் தன் மூக்கினால் அவ்விலை வட்டிலைக் கவ்விக்கொண்டு யமுனையாற்றங்கரைவரையு மணுகிற்று. அவ்வாறுவருங் காலத்தில் அவ்வாற்றங் கரையில் ஒரு இராசாளி மிகப்பசியால் வருந்தி ஓராலின்கிளையிற் றங்கியிருந்தது. அதுஇவ்வல்லூருகொண்டு செல்லும் இலைவட்டிலைக்கண்டு இதென்ன! வல்லூரு இரைகொண்டு செல்கின்றது. இதனை வழிமறிப்போமாயின் நமக்குணவு கிடைக்கும் எனச் சிந்தித்து, தான்வழிமறிக்கலாயிற்று. வல்லூருஎன்னையேன்மறிக்கின்றனை நான் அரசனுக்கினையிற் செல்கின்றேன். நீயோ மீளாவருத்தத்திற் கிடஞ்செய்துகொள்ளுவானேன்! என்னைவிட்டுவிடென அது நானேஉன்னைவிடுவது! உன்மூக்கிற்பிடித்திருக்கும் இரையை யருந்தாமல் போகேன் என்

றெழுந்து பறந்தடித்தது அதுகண்டு வல்லூரு நீஎனக் கெம்மாத்திரம் உன்னை வெல்வதும் அரிதாமா! நீ பொருபொருளென் றெவர் நினைப்பார் என்று அதனை மிகவிகழ்ந்து போராடிற்று இவ்வாறு நேர்கையில் இராசாளியின் மூக்கினால் அவ்விலைவட்டில் கிழிந்து அதிலிருந்த சுக்கிலம் இருதுளியாக யமுனையாற்றில் வீழ்ந்தது. அதுகண்டு வல்லூரு மிகப்பயந்து வந்து நடந்த செய்தியனைத்தும் உள்ளவாறு அரசனுக்குத் தெரிவித்தது. அரசனோ மறுநாட்காலையில் தன்னகரஞ் சேர்ந்து தன்மனைவியைக் கண்டு களித்து முன்போல் அரசாண்டு வந்தான்.

அந்த யமுனையாற்றில் விழுந்தஇரண்டு துளியாகிய சுக்கிலத்தை அவ்வாற்றில் மீனொன்று அருந்திக்கருக்கொண்டது. அம்மீனோ அரம்பையருளொருத்தி, தாமரைப்பீடத்துச் சதுமுகனால் மீனாகச்சாபமெய்தியவள். அம்மீன் பிரசவகாலம் அணுகியகாலத்தில் ஒருவலைஞன் வலைபெறிய அதில் அகப்பட்டது. அவ்வலையனோ இம்மீன் மிகப்பெரிதாயிருக்கின்றது இதன்வயிறு மிகமோட்டுருவுடைத்து, இதை நம்மரசனிடத்தில் சேர்க்கவேவேண்டும் என்று துணிந்து தாசராசனிடத்துச்சேர்க்க அவன் அதன்வயிற்றைப் பக்குவமாய்ச்சேதித்தான். அவ்வாறு சேதித்துப்பார்க்கையில் ஒருபுத்திரியும், ஒருபுத்திரனும் இருந்தனர். 'மக்கட்பேற்றிற் பெறும்பேறில்லை' என்றபடி மக்கட்பேறில்லாமல் மனம்வருந்திய தாசராசன் பேரானந்தமெய்தி விழித்தகண்விழித்தவாறு பார்த்துக்கொண்டிருக்குஞ் சமையத்தில் மீனமாயிருந்த அரமகள் ஒருதெய்வவிமானமேறித் தாசராசனைக்கூவி அதோநின்னருகிலிருக்கிறமின்வடிவுநானே! இவர்களோ உலகமுழுதாண்ட வசுராசன் சுக்கிலத்தால் தோன்றினோர் என்று அம்மக்கள் வரலாற்றையுங்கூறிப் பின் தன்வரலாற்றைக்கூறுகின்றாள். நான் தெய்வலோகத்திலிருக்கும் அரமகளிருளொருத்தி, நானோ பிரமதேவனிடத்துப் பூசைக்குரிய பணிப்பெண்ணாயிருந்தேன். ஒருநாள் பூசைக்குச் சலந்திரட்ட யமுனையாற்றுக்குவந்து அவ்வாற்றிலிருக்கும் மீன்களின் விநோதத்தைப்பார்த்தேன். அதனால்பூசைவேளை தப்பிப்போயிற்று. பிரமதேவனோ என்பாற்சினங்கொண்டு என்பூசனைக்குரிய வேளையைத்தவறி வரநீயாது செய்துகொண்டிருந்தனை யென்றுகேட்டனன். நான் ஒன்று மொழியாமல் உள்ளவாறுகூறினேன் அவர் என்னைநோக்கி நீ மீனாகுக வென்றனர். நான் நடுநடுங்கி அவரை எந்நாளிச் சாபநீங்குமென்றுகேட்டேன். அதற்கவர் வசுராசன் சுக்கிலமருந்திக் கருக்கொள்வை! உன்னை வலைஞன் பிடித்துவந்து தன்னரசனாகிய தாசராசனிடம்சேர்ப்பான்! தாசராசனோ உன்வயிற்றைச் சேதிப்பான்! அப்போது உன் சாபநீங்கிப் பழையபடியே இவ்விடம்வந்து சேருவையென்றனர் என்று கூறி அவ்வரமகள் பிரமலோகமேபோய்ச் சேர்ந்தாள்.

தாசராசனோ இவ்விருவரும் நமதரசன்மக்களாதலின்நாமவரை அரசனினிடத்தொப்புவிக்கவேண்டுமென்றுஎண்ணி அவ்விரண்டுமக்களையும்வசுராசனிடம்சேர்த்து அம்மக்கள்வரலாற்றையுங்கூறினான் அரசனோபெண்குழந்தையை அத்தாசராசனுக்குக் கொடுத்துவிட்டு ஆண்மகவையெடுத்துவளர்த்துத் தக்கபருவம் வந்துழிச்சேனாதிபதியாகத் தன்சேனையிலமைத்தனன்

பின்னர் தாசரான் சத்தியவதியென்றும், மச்சகந்தியென்றுஞ்சொல்லப்பட்ட அப்பெண்மணியை அன்புடன் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தான் வளர்த்துவருகையில் பேதைப்பருவங் கடந்து பெதும்பைப்பருவநேரவேதான் தந்தையைவணங்கி எனக்கொரு படகுகொடுத்தால் நமது குலத்தொழிலுக்கிணங்க யமுனையாற்றிலிருந்து வரும் பெரியார்க்குப் படகுவிட்டுக்கொண்டிருக்கின்றேனென்று விண்ணப்பிக்க, அவ்வாறே அவன்செய்துகொடுக்கத்தான் விட்டுக்கொண்டிருந்தனள், இவ்வாறு படகுவிட்டுக்கொண்டிருக்குநாளில் கரியகோலத் திருவுருப்பெரியோனாகிப் அறவாழியந்தணன் உந்திவந்தான் பிரமன், அவன்மகன் வசிஷ்டபகவான், வழித்தோன்றல் சத்தி, அவன்கான்முளைபராசரர் அப்பராசரமுனிவர் தம்மாலுலகுக்கு நன்மையுண்டாமாறு ஒருநன்மைத்தனைப் பெறுவான்கருதி, நக்ஷத்திர மிருபத்தேழில்ஒன்று உச்சமாம்அது உச்சமாகநேர்ந்துழி ஒரு மாதினை யணையவேண்டுமென்றுகருதித்தாம் அதுவரையும் தவத்திலிருந்தார்! அக்காலம் நேரவே அவர்தவநிலைவிட்டெழுந்து நகரத்துட்செல்ல மிகவிரைந்து வந்தனர். யமுனையோ மிகவுமலைகொந்தளித்துக்கொண்டிருந்தது. அவரோஅவ்வாற்றில் படகோடிருக்கும் சத்தியவதியைக்கண்டு நான் ஒருசங்கேதமாக நகரத்துக்குப் போகக்கருதிவந்தேன். வழியில் இவ்வாறேமிகவும் அலைகொந்தளிக்கின்றது இதனையெவ்வாறு கடப்பதென்று கவல்கின்றேனென்றார்; அதற்குச் சத்தியவதியும் உம்மைப்படகேற்றிக்கொண்டு செல்வேனாயின் தக்கபாரமில்லாமல் சங்கடநேரும், அதற்கென்செய்வதென்றாள் படகுக்கு எத்தனைபாரம் வேண்டுமோ அத்தனைபாரம் உண்டாக்குவேன்ஐயமின்றிப் படகுவிடென்று சொல்ல சத்தியவதியும் இவர் சிறந்ததவமுடையவராகத்தோன்றுகின்றது நாமோ தடுப்பது தக்கதன்று; நிறைமொழிமாந்தர் பெருமைநிலத்து மறைமொழிகாட்டிவிடும் என்றபடி இவர்சொல்லே இவரதுபெருமிதத்தை விளக்குகின்றதென்று துணிந்துபடகுவிடத்துணிந்தாள். பராசரமுனிவரோ படகிலேறி அப்படகுக்கு வேண்டுபாரந்தோன்றவிருக்கவே சத்தியவதியும் இவர்பெறலருந்திருப்பெற்றவரென்றுகருதி மிகப்பயந்து படகு விட்டுக்கொண்டு சென்றாள்.

பராசரமுனிவர் யமுனையில் படகிலேறிக்கொண்டு வானைநோக்கிக்கொண்டேசெல்கையில் தாம் கருதிவந்த நக்ஷத்திரம் உச்சமாக வரக்கண்டு மிகவருந்தி நாமென்செய்வது இப்படகைத்தள்ளும் பெண்ணையேனும் விழைந்து நன்மகவைப்பெறுவதுதான் தகுதியென்று துணிந்துசத்தியவதியைநோக்கி பெண்கொடியே இதோதோன்று நக்ஷத்திரம் உச்சமாகவரப்போகின்றது; இதைக்கருதியே இத்துணைவிரைந்துவந்தேன், காரியக்கேடாகாவண்ணம் நடக்கவேண்டுமென்றுகூறினார் அதற்குச்சத்தியவதியும் நீரோ முற்றத்துறந்த முனிவர்பெருமான்! நானோ மங்கைப் பருவம் நேராதமாது, இணைவிழைச்சினுக்குரியளாசாப்பருவமுடையேன், மேலும் உடல்முழுவதும் புலால்மணம்வீசப்பெற்றுள்ளேன், எவ்வாறுபொருந்துமென்றனள் முனிவர்பெருமான் உ.ன் உடல்முழுதும் பரிமளகந்தம்ஒரு

யோசனைவீசக்கடவது, இதனால் உனக்குப்பரிமளகந்தியெனப்பெயர்பெற்
றுவாழ்வை, உனக்குமங்கைப்பருவம் நோக்கடவது, பின்னர்முன்போலு
ம் பேதுமையாவையென்றுகூற சத்தியவதியும்மகிழ்ந்து ஆயினும் பகற்
காலமாயும் செவ்விநதியாயுமிருக்க நாம் என்செய்வதென ஆற்றினிடை
ஆற்றிடைக்குறையாகவும் சூரியனில் மூடுபனியுந்தோன்றி இராவுபோலா
கவுந் தோன்றின. சத்தியவதியும் இசைந்து ஆற்றிடைக்குறையில்அம்மு
னிவருடன் அன்றில்விழைவுபோகமயர்ந்தாள். உலகமுண்டபெருவாயனும்
உலகிற் சீர்த்தியம் நானு மாயகள்ளமாமாயன் திருவவதாரமெனப்படும்
வாதராயணன், எமது குருசிகாமணி, அனந்தவேதமெனப்பட்ட அனைத்
தையும் நான்காவகுத்த வியாசபகவான் மூன்றேமுக்கால் நாழிகைக்குள்
'நதிப்பிண்டம் இராத்தங்காது' என்றபடி. திருவவதரித்தான் பராசரமு
னிவரும் இவர் திருவவதரிப்பதற்கு முன்நடந்துசென்றனர். இவர் திருவ
வதரித்தவுடன் தாயை மும்முறைவணங்கி அன்னே! எந்தை யாண்டுசெ
ன்றுரென அதோ செல்கின்றனரென்றாள் பின் தாயைநோக்கி நீநினைத்த
காலத்தில்வருகின்றேனென அஞ்சாதையென்று தந்தையொடுஞ்சென்று தவ
ஞ்செய்திருந்தனர். சிலகாலஞ்சென்றபின்னர் வியாசபகவான் அனந்தமா
கவிருந்த வேதங்களையும் இருக்கு, எசுர், சாமம், அதர்வணமெனநான்கா
கவகுத்து மச்சியம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பா
கவதம், சைவம், இலிங்கம், பௌடிகம், நாரதீயம், காருடம், பிரமகைவர்
த்தம், காந்தம், மார்க்கண்டேயம், பிரமாண்டம், ஆக்கினேயம், பதுமம்
என்னும் பதினெண்புராணங்களையும் கூறி, உபநிடதப்பொருள்களையெல்
லாம் வேதாந்த சூத்திரமாக அருளிச்செய்து, இனிநடக்கும் ஸ்ரீமகாபார
தத்தையும் வடமொழியிற் செய்பவராய் தன் பிதாவுடன் கைலைக்குச்செ
ன்றனர். அநாதிமலமுத்த சித்துருவாகிய பரமசிவன் பராசரரைநோக்கி நீ
ன்னுடன் வந்தான் யாவனெனப் பராசரமுனிவர்கூறுகின்றார். அருமறை
த்தனிவைக்கல்லாலின்கண் தக்ஷிணாமூர்த்தமாக எழுந்தருளி உபதே
சித்த இறைவனே! என்னால் உலகின்கண் நலமுண்டாகக்கருதி இப்புத்தி
ரனைப்பெற்று மறைகளனந்தமாகக்கிடக்க நான்காகவகுத்தமையால்வியா
சனெனப் பெயரிட்டேன் என, விமலைபொருபங்குடைய வித்தகன் இவ
னால்உலகினுக்கென்ன நலமென இவன் வேதங்களைத் தொகுத்ததுமன்றி
அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பயனையுந் தொகுத்துக்கூறு
வதாய், இனிநடக்கும் பாரதப்போரைக் குறித்து மகாபாரதமென்னும் இ
திகாசத்தையும் செய்து உலகுய்யச்செய்வானென, ஆயின் இனிநடக்கும்
பாரதப்போரை முன்னே தான்குறித்துச் சொல்வானென்றமையால்உன்
மகனைச்சொல்லச்சொல்லும், நான் என் மைந்தனாகிய கஜானனமூர்த்தி
யை எழுதச்சொல்லுகிறேனென்று கூறினர்! பராசரமுனிவரும் வியாச
னைநோக்கினர் அவரும்தன் தாதையின் குறிப்புணர்ந்து பாரதத்தைக்கூற
த்தொடங்க ஐங்கரக்கடவுளுமேருவையே ஏடாகக்கொண்டு தன்னொசிந்த
கொம்பையேயெழுத்தாணியாகஎழுதிமுடித்தனர். பின் பாரதநடந்ததற்கும்
இவர்கூறியதற்கும் ஒத்திருந்தமையால் ஸ்ரீமகாபாரதமெனயாவருங்கூறலா

யினர். பின்னர் சபாதலட்சங் கிரந்தமாக்கி எனக்கும், நாரதருக்கும், சுகருக்கும், தேவலருக்கும், சுமந்தருக்கும் போதித்தனர். பின்னர் நாரதரை தேவருக்கும், சுகரை இயக்கருக்கும், தேவலரைத் தென்புலத்தாருக்கும், என்னை மண்ணுலகோருக்குங் கற்பிக்கக் கட்டளையிட்டு நீசெய்ததவப்பேற்றால் என்னையே உனக்கும் போதிக்கக்கட்டளையிட்டனர். இதனைவேதத்தோ டொப்பாகக்கூறுவானேனெனின் திருமால்முதலிய தேவர்களே பாரதவீரராகையால் இதனையே வேதத்தோடொப்பாகக் கூறுவதென்றனர். திருமால்முதலிய தேவர்களைப் பாரதவீரர்களாகிய எங்கள்முன்னோரென்றீர்! அதனை நன்குவிளக்கவேண்டுமென விரும்பிகேட்க வைசம்பாயனர் சொல்லுகின்றார்

முன்னே பிரவஞ்சத்தின் தோற்றங்கூறிப் பின்னர் பாரதவீரர்தோற்றங்கூறின் நன்றாகவிளங்கும், ஆகையால் பிரவஞ்சத்தின் தோற்றங்கூறுகின்றேன். திரேதாயுகத்தில் சூரியமரபின் அரசனாகிய கார்த்தவீரியார்ச்சுனன் என்பவன் சமதக்கினிமுனிவனைத் தலையரிந்தான். அதையுணர்ந்த இரேணுகை தன்கணவனைத் தலையரிந்தமைக்கு மனம்வருந்திக் கைந்நெறித்துக்கொண்டு மார்பில் இருபத்தொருமுறை யறைந்துகொண்டாள். தந்தையிறந்தமைகேட்ட பரசுராமன் அன்னாய்! நீ வருந்தாதை; நீ யடைந்த துன்பத்துக்கு மும்மடங்குதுயரம் அக்கார்த்தவீரியன் மரபினோரடையவும், நின்னையமங்கலமாக நாணிழக்கக்கண்ட நான் அவர் மனைவியரெல்லாம் மங்கலநாணிழக்கவும் செய்விக்கிறேனென்று, தாய்மார்பில் இருபத்தொருமுறை யடித்துக்கொண்டமையால் தானும் சூரிய வமிசத்தரசரை இருபத்தொருமுறை போர்க்கோலங்கொண்டு கொன்று அவர்களுதிரத்தைச் சிமந்தபஞ்சகமென்னுந் தடமாக்கி அவ்வுதிரமத்தியில் தன் தாதைக்கு உருமைக்கடனைச் செய்துமுடித்தான். தனக்குப் புரோகிதராயிருந்த காசிபமுனிவருக்கு உலகமெல்லாந் தக்ஷிணையாகக்கொடுத்துத் தவஞ்செய்யச்சென்றான். அதுகாரணமாகவே இவ்வுலகத்துக்குக் காசினியென்று பெயருண்டாயிற்று.

காசிபரோ தாம்பரசுராமர் இடத்தே குருதக்ஷிணையாகப்பெற்ற காசினிமுழுவதுங் கைப்பற்றி மனுநெறிதவறாமல் அரசுபுரியுங்காலத்தில் சூரியகுல அரசமனைவியரெல்லாம் துணுக்குற்று ஒருவர்க்கு வாழ்க்கைத்துணைவியாதற்குமுன் பிறந்தகமும், மனைவியரானபின் புக்கஇடமும் கணவனுக்குப்பின் மைந்தரும் காக்கவேண்டுதலான் ஒருவாறேனும் சுதந்தரமின்மையால், நாம்கணவனையும், மக்களையும் பெற்றிலோம்; பிறந்தகமோவெனின் அங்கும் அவ்வாறாகவே யிருப்பதனால் என்செய்வதென்று வருந்திநின்று, இனி அக்கினிப்பிரவேசமாதலே நலமென்று அக்கினிவளர்த்தி அதில் விழத்துணிந்து நின்றனர் அவ்வாறு அம்மாதர் அக்கினிப்பிரவேசமாதலே நலமென்று துணிந்ததையுணர்ந்த காசிபமுனிவர் மோசம்வந்துவிட்டதே! இனி அவர்களைத்தடுப்பதற்கு வகை இதென்று அம்மாதரை நோக்கி; நீங்கள் இவ்வாறு செய்யத்துணிவானேன்! நான் உங்களுக்குச்

ரு சால்வதொன்றுண்டு. அது இம்மை, மறுமை, வீடென்னும் மூன்றனை யும் தரும். சற்று நில்லுங்கோள் எனமறுத்தனர்; அரசமாதர் யாங்களிரு ந்தென்பயன்! கணவன் என்று இறந்தனனே! அன்றே நாங்களுமிறக்கவே ண்டும். அதுதான் தருமநூல் துணிபு, எங்கள் கருத்தின்வண்ணம் கட்ட ளையிட்டால் நலமென்றனர். காசிபரோ உங்களுக்கு வேதத்துள் கூறிய உண்மையை யெடுத்துச்சொல்லுகின்றேன். 'சந்திக்கழகு வந்திசெய்யா மை' என்றபடி மாதர்க்கழகாவது புத்திரரைப்பெற்றுத் தங்கள் மரபை விருத்திசெய்வதேயாம்; நீங்களோ புத்திரப்பேறின்றி அக்கினியில் விழத் துணிந்தது ஏன்; அக்கினியில் வீழின் பைசாசபதம்பெற்று வருந்துவீர். ஆதலால் நீங்களெல்லாம் உங்கள் குலகுருவால் தருமசந்தானம்பெற்று உங்கள் குலத்துக்கு நீர்க்கடனியற்றும் புத்திரரையேனும் பெற்றுய்யுங் கோள் என்றனர்.

அதுகேட்ட அம்மாதரெல்லாம் இவர் இந்திரன்முதலிய தேவர்கட் கெல்லாம் தந்தையன்றோ? மேலும் கமலாசனனுக்கு மைந்தரன்றோ? இவ ரும் நமக்குறுதியாயினவற்றை அன்றி வேறுசொல்வாரா என்று துணி ந்து, அம்முனிவர் பெருமானைநோக்கி நாங்கள் அனைவரும் உமது வாக் கினை மறைவாக்கென்றே எண்ணித்துணிந்தோம். இங்கு அயல் ஒன்றும் எண்ணமாட்டோம், இனி எங்களுக்கு விடைகொடுமென்று அவரை இர ந்துகேட்டுத் தத்தமிருப்பிடஞ்சேர்ந்து அவரவர் தங்கள் குலகுருவை வருவித்து அவரிடத்துக் காசிபமுனிவர் கட்டளையிட்டதை யெடுத்துக் கூறி அவரால் தருமசந்தானம் பெற்றுக்கொண்டனர். ஒவ்வொரு மாத ரும் எவ்வெட்டுமைந்தரையும், இவ்விரண்டு குமாரிகளையும்பெற்று அவ ரால் சந்ததிபெருகிச் சூரியகுல அரசர் மரபுதழைத்தது. இதனைஅறிந்த காசிபமுனிவரோ தம்வசத்திருந்த பூவுலகமுற்றும் அவ்வரசிகள்பெற்ற மைந்தர்களுக்கே பகிர்ந்துகொடுத்து அரசாளக் கட்டளையிட்டனர். அவ ர்களோ முனிவன்சொல்லே மறைமொழியென்று துணிந்து மனுநெறி சிறிதும் வழுவாமல் தம்மாலும், தம்பரிசனத்தாலும், கள்வராலும், பிணியாலும் மன்னுயிர்க்கு இடையூறுவாராமற் காத்து, படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்என்னும் ஆறங்கமுடையவராய் யாவரும் தங்கடை த்தலைவந்து இறைப்பொருள் கொடுத்துவணங்க, தென்புலத்தார் தெய் வம் விருந்து ஒக்கல்தானென்னும் ஐந்தையும் மன்பதைபால் விடுத்து தானொரு கடமைகொண்டு அறச்செங்கோ லோச்சிவந்தனர்.

இவ்வாறு அறச்செங்கோலோச்சி வருகையினால் தருமதேவதை நான்கு பாதத்தாலும் நடந்தது; உலகம் பிரசாவிருத்தியடைந்தது. ஆதி சேடன் தன்னாயிரம் பணாமுடிகளாற் சுமக்கு நிலமடந்தையோ உலகப் பொறையாற்றாளாய் இனிநானென்செயக்கடவேன்! எனத்திரிமூர்த்திகள் ஒருங்குகூடியிருக்குஞ் சமையத்தல்லது தன்குறைகேட்பார் இலரென்று துணிந்து உபேந்திரன், பிரமாதிதேவர்கள் கூடியசபையில் வந்து நிலக்

கொடி தன்துயர் தீரவேண்டிநின்றாள். அம்மூவரும் இனி மூவர் காரிய முந்திருத்துமுதல்வன் முதலியதேவரும், அசுரரும் நிலவுலகத்தின் மானிடராகத் தோன்றுவர். உன்பாரநீங்கும். இனி வருந்துதலொழியென்று அப்பூமடந்தைக் குரைத்தனர். அப்பூமடந்தையும் தன்பாரமே நீங்கினதுபோற் களிபெருவகை அடைந்து தன் இருக்கைசேர்ந்தாள். இவ்வாறாக பிரமாதிதேவர்களும் நிலமகளை அனுப்பியபின்னர் கரியகோலத் திருவுருப்பிரானாகிய மூவர்காரியமுந் திருத்துமுதல்வன் ஆதியஞ்சோதியுருவையங்கு வைத்திங்குப்பிறந்து தேவர்களும் அசுரரும் மானிடராகத் தோன்ற, அவருடன் இப்பூபாரத்தையும் நீக்கியருளினானென்று வைசம்பாயனர் கூறவே, அவ்வரலாற்றினை எனக்கு நன்றாக விளக்கவேண்டுமென ஜனமேஜய மகாராசன் கேட்க வைசம்பாயனர் கூறத்தொடங்கினார்.

பிரவஞ்சோற்பத்திச் சருக்கம்.

புண்டரீகக் கட்புயல்போன் மேனிப்பிரானாகிய உலகமுண்ட பெருவாயன் திருநாபிக்கமலத்தின் பொகுட்டில் நான்முகனாகிய பிரமன் உதித்தான். பிரமன் உடலில் அத்திரி, மரீசி, புலத்தியன், கிரன், கிருத்து, புலகன் என்னும் அறுவரும், வலக்காற் பெருவிரலில் அப்பிரன், தக்கன்என்பவரும் தரணியென்னு மாதுந்தோன்றினர். வலக்காற் பெருவிரலில்தோன்றிய தக்கன் இடத்தாற் பெருவிரலில்தோன்றிய தரணியென்பவளால் ஆயிரமக்களை யீன்றான். அவர் பிரமசரியமேற்கொண்டுதபோநிதிகளாய் ஈறிலின்பந்துய்த்தற்கிடமாகிய பரமபதமெய்தினர். இதனையறிந்ததக்கன் பின்னும் தரணியென்பவளால் ஐம்பது மாதரைப்பெற்றான். அவருள் கிரத்தி, இலக்குமி, தருதி, மேதா, புஷ்டி, சிரத்தை, கிரியை, விருத்தி, இலச்சை, மதியென்னும் பதின்மரைத்தருமனென்னு மனுவுக்கு மணஞ்செய்துகொடுத்தபின்; அசுவனி, பரணி, கார்த்திகை, உரோகணி முதலிய இருபத்தேழுமக்களைச் சந்திரனுக்கு மணஞ்செய்வித்தான். அசுவனி முதலிய இருபத்தெழுவரே நக்ஷத்திரபத மெய்தியிருக்கின்றனர். பின்பு அதிதி, திதி, தனு, காலை, ஆயு, சிங்குகை, மநு, சுரபி, முனி, குரோதைவசை, அநுகை, விநதையென்னும் பதின்மூவராகிய தக்கன் மக்களைக் காசிபமுனிவன் மணந்தான், இவருள் அதிதிக்குப் பன்னிரு சூரியரும், இந்திரன்முதலிய தேவரும் உதித்தனர். திதிக்கு இரணியன், இரணியாக்கன் என்னும் அசுரரிருவர் பிறந்தனர். அவருள் இரணியனுக்குப் பிரகலாதன் பிறந்தான். பிரகலாதனுக்கு விரோசனன், கும்பன், நிருபனென்னு மூவர்பிறந்தனர். விரோசனனுக்கு மூவுலகாண்ட மாபலிதோன்றினான். அவனுக்கு வாணாசுரன் உதித்தான். தனுவென்றவளுக்கு விப்பிரசித்தி, நமுசாசி, சங்கவருணன், பலோமன், விலோமன்முதலிய நாற்பது மைந்தர் தோன்றினர். அந்நாற்பதின்மரால் சந்ததி விருத்தியடைந்து அசுரர் பெருக்கமடைந்தனர். காலையென்பவட்கு விநாசன், குரோதன்

முதலிய ஐம்பதின்மர் தோன்றி அபிவிருத்திசெய்தனர். ஆயுவுக்கு வியசன், விசுரன், வீரன், விருத்திரன் என்னு நான்குமக்கள் தோன்றிப்பெருகினர். சிங்கிகையென்பவளுக்கு இராகுத்தோன்றினன். மனுவென்பவளுக்கு வீமசேனன், உக்கிரசேனன் முதலிய பதினறுகந்திருவர் உதித்தனர். சுரபி என்பவளுக்கு மேனகைமுதலாகிய அப்ஸரஸமாதரும், தேவசுரபிகளுந்தோன்றின. முனியென்பவட்கு க்ஷணனென்பவன் பிறந்தான். குரோதவசைக்கு ஹணனென்பவன் உதித்தான். மதுகையென்பவட்குச் சித்தர்கள் தோன்றினர். விநதைக்கு அருணனும், கலுழனும் பிறந்தனர். அருணனுக்குச் சேதியென்பவளிடம் சம்பாதி, சடாயுஎன்னு மிருவர்பிறந்தனர். கத்துருவுக்கு ஆதிசேஷன், வாசுகி, தக்ஷகன்முதலிய நூற்றுநான்கு நாகராஜரும், சலர்க்காரையென்னு மொருமாதுந்தோன்றினர். இவரே காசிபருடைய சந்ததியாமென்பர்.

இனி ஆங்கிரசமுனிவர் சந்ததிகூறுகின்றேன். ஆங்கிரசனுக்கு வியாழபகவான்முதலிய மைந்தரும், யோகசித்தியென்னு மாதுந்தோன்றினர். அவருள் வியாழபகவானகிய பிருகஸ்பதி தேவகுருவாயினன். அத்திரி முனிவனுக்கு பிரமரிஷிகள் தோன்றினர். புலத்திய முனிவனுக்கு விச்சிரவசுவுக்கு இயக்கமாதினிடமாக வைச்சிரவணனுகிய குபேரனும், கேசினியிடமாக இராவணன், கும்பகர்ணன், விபீஷணன் என்னும் மைந்தரும், சூர்ப்பனகையென்னும் மாதும் தோன்றினர். இவரால் அரக்கர்வமிசம் பெருகிற்று. மேலும் புலத்தியனுக்குக் கின்னரர், கிம்புருடரும் பிறந்தனர். கிருதுமுனிவனுக்கு என்றுமழியா நிலைமையையுடைய நான்குமுனிவர்தோன்றினர். பிரமகுமாரராகிய தேவலருக்குப் பிரசாபதி தோன்றினர். அவருக்குத் தூமிரை, புத்தி, மனஸ்வனி, ரதை, சுசனை, சாண்டிலி, பிரபாசாலையென்னு மனைவியர் எழுவருண்டு. அவருள் தூமிரையினிடவருணனும், புத்தியினிடமாகத் துருவனும், மனஸ்வனியினிடமாகச்சோமனும், ரதையினிடமாக நகுஷனும், சுவசனையினிடமாக அஷலனும், சாண்டிலியினிடமாக அக்கினியும், பிரபசாலையினிடமாக அனலன், அனிலன், ஆபற்சைவன், சோமன், தரன், துருவன், பிரதித்தியூசன், பிரபாசனன்என்னும் வசுக்களெண்மரும் பிறந்தனர். அவருள் வருணன் என்னும் வசுவுக்குத் திரவணனும், துருவனென்னும் வசுவுக்கு காலனும், சோமனென்னும் வசுவுக்கு மனேகரமென்னு மங்கையிடமாகப் புரோசனன், வர்ச்சிகன், சிசிரன், பிராணன் வருணன் என்னு மக்களும் புரதையென்னுமாதும் தோன்றினர். புரதையென்பவளுக்குக் கந்தருவர் பதினெரு வருதித்தனர். நகுஷனென்னும் வசுவுக்குச்சோதி தோன்றினன். அனலனென்னும் வசுவுக்குப் புரோசனனும், அவிக்பாகமதியுந் தோன்றினர். அக்கினியென்னும் வசுவுக்கு மாரன்தோன்றினன். பிரத்யூஷனென்னும் வசுவுக்கு தேவலமுனிவன் பிறந்தான். பிரபாசனவசுவுக்கு வியாழபகவான் உடன்தோன்றிய யோகசித்தியிடமாக விசுவகர்மாவுதித்தான், தரனென்னும் வசுவுக்கு மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீல

லோகிதன், ஈசானன், விஜயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி,
சௌமியன் என்னும் பதினொரு உருத்திரர் பிறந்தனர். கமலசம்பவனு
கிய பிரமன் தருமனென்னு மனுத்தோன்றினன். அவனுக்குச் சமன், இ
ராமன், அருஷன் என்போர் உதித்தனர். அம்மூவரும் முறையே அப்பி
ராப்தி, நிருதி, நந்தியென்னுமாதரை மணந்து வாழ்ந்திருந்தனர்.

இனி சலித்து என்பவனுக்குத் துவஷ்டையென்பவளிடமாக அச்சு
வினிதேவர் வந்தனர். சகல சராசரங்களையும் விதித்தபிரமதேவன் மார்
பில் பிருகுமுனிவன் தோன்றினன். அவன் சுக்கிராசாரியனை ஈன்றான்.
அச்சுக்கிராசாரியனே அசுரகுருவாயினன். அவ்வசுரகுருவுக்குத் துவட்டி
ரன், தாத்திரி, பத்திரன், கண்ணன் என்னும் நான்கு மக்களுதித்தனர்.
அவர் அசுரருக்குப் புரோகிதராயினர். மேலும்பிருகுமுனிவனுக்குப்பிறந்
தசவுனகனுக்கும்யயாதியென்னுமனுபுத்திரி சுகன்னிக்கும் சகன் இருசிக
ன்முதலியநூற்றுவர்பிறந்தனர். இருசிகனுக்குச்சமதக்கினிதோன்றினன்.
சமதக்கினிக்கு இரேணுகையிடமாக நான்கு மக்கள்தோன்றினர். அவ
ருள் பரசுராமனைப்பற்றி முன்னேசொல்லியிருக்கின்றேனெனப் பின்னும்
கூறுகின்றான். ஜனமேஜயமகாராஜனே திருமாமகள் கொழுநன் திரு
வுந்தியிற்றோன்றிய பிரமதேவன் தாதை, விதாதை, அலக்குமியென்னு
மூன்றுமாதரைப் படைத்தான். அவருள் அலக்குபல மாதரையீன்றாள்.
வருணனென்பவன் ஜேஷ்டை யென்பவளிடமாக தருமனென்னுமோர்
மைந்தனையும், சுனநகையென்னுமோர் மாதையுமீன்றான். அத்தருமன்
நிருதியென்பவளிடமாக மகாபயன், பயன், மிரத்தீவுஎன்னும் மூவரையீ
ன்றான், மீட்டும் அவன் தாகி, சேனை, பாசினி, திருதராஷ்டிரை, சுகியெ
ன்னும் ஐந்துமாதரைப் பயந்தான். தாகி காக்கைகளையீன்றாள். சேனை
புறுக்களையீன்றாள். திருதராஷ்டிரை விச்சுளியை நல்கினள். பாசினி பரு
ந்துகளையும், ஆந்தைகளையும் ஈன்றாள் சுகி கிஞ்சுகம்போன்ற வாயையு
டைய சுகங்களையீன்றாள். முன்னே நாம்கூறிய காசிபமுனிவர் மனைவிய
ராகிய முனி, மிருகை, மந்தை, அரிளி, பத்திரமதி, மாதங்கி, சார்த்தூலி,
சுவேசை, சுரதையென்னும் எட்டுமாதரை யீன்றாள். அம்மாதருள் மிரு
கை வராகமுதலிய மிருகங்களைப் பயந்தாள். மந்தை உயிருள் பொருளா
கிய பலசரவுயிர்களை நல்கினள். அரணிகுரக்கினம்பெற்றாள். பத்திரமதி
யானைகளைப்பெற்றாள். மாதங்கி அவ்வாறே யானைகளையீன்றாள். சார்த்
தூலி சிங்கம், புலி இவைகளையீன்றாள். சுவேதை எட்டுத்திக்குக் கரிகளைப்
பெற்றாள். சுரதை உரோகணி, பத்திராங்கி, கந்திருவையென்னும் மூன்று
மாதரைப்பெற்றாள். உரோகணிக்கு மான்களுண்டாயின. பத்திராங்கிக்கு
மரம், கொடி, புதர் இவைகள்தோன்றின. கந்திருவை குதிரைகளைப் பெ
ற்றாள். இது பிரவஞ்சோற்பத்தியேயாகும். இனிப்பாரதவீரர் உற்பத்தி
யைக் கூறுகின்றேன்.

பாரதவீரர் உற்பவச் சருக்கம்.

மிகச்சிறந்த வரம்பெற்ற யதுகுலசிகாமணியாகிய வசுதேவருக்குத் தேவகியென்றும், உரோகணியென்றும் இரண்டு மனைவியருண்டு. அவ்விருமனைவியருள் தேவகிக்குக் கண்ணபிரானும், உரோகணிக்கு நம்பிமூத்த பிரானென்னும் பலராமரும் திருவவதரித்தனர். கண்ணபிரான் அயர்வறு மமரர்களதிபதியாகிய அறவாழியந்தணனென்னும் திருமாலினமிசமேயாம். நம்பிமூத்தபிரானாகிய பலபத்திரரோ அனந்தனாகிய ஆதிசேஷ அமிசமெனப்படும். உருப்பிணி, சத்தியபாமை, சாம்பவதி, மித்திரவிந்தை, சத்தியை, பத்திரை, இலக்கணை, காளிந்தி என்னும் எண்மரும் கண்ணபிரான் பட்டமஹிஷிகள். இவர்களோ அஷ்டலட்சுமிகள் அமிசத்தவர். அரமகளிரமிசத்தால் கோவியர் திருவவதரித்தனர். சனற்குமார பகவான் முதலிய மெய்யுணர்வுடையமுனிவர் அமிசத்தால் யாதவர் தோன்றினர். பிரபாசனவசுவாகிய எட்டாவது வசுவமிசத்தால் காங்கேயனென்னும் வீஷ்மன் தோன்றினன். அசுரர் குருவாகிய சுக்கிரபகவான் அமிசத்தால் வில்லாசிரியராகிய துரோணர்தோன்றினர். காமம், குரோதமுதலிய அறுபகையின் அமிசத்தால் வில்லாசிரியன் மகனாகிய அசுவத்தாமன் பிறந்தான். சூரியன் அமிசத்தால் அங்கதேசாதிபதியாகிய கர்ணன்தோன்றினன். துவாபரயுகபுருடன் அமிசத்தால் சகுனிபிறந்தான். கந்திருவருக்கு அரசனாகிய அமிசனென்பவன் அமிசத்தால் கண்ணிலாதவனாகிய திருதராஷ்டிரன் உதித்தான். பிரகலாதன் அமிசத்தால் சல்லியன் தோன்றினன். வசுமதியென்னும் தெய்வமாது அமிசத்தால் காந்தாரிதோன்றினள். கலியுகபுருடன் அமிசத்தால் துரியோதனன் உதித்தான். இரணியன் அமிசத்தால் சிசுபாலன்உதித்தான். பிரகலாதன் பின்றோன்றிய அநுகுலாதன் அமிசத்தால் துஷ்டகேது வந்துபிறந்தான். இவன் தம்பிமாராகிய துச்சாதனன், விகர்ணன்முதலியோர் விச்சிரவாகுவழியேவந்த அசுரர் அமிசத்தால் தோன்றினர். சிபிஅமிசத்தால் சுருதசேனன் உதித்தான். பாஸ்கலன் அமிசத்தால் பகதத்தனும், விப்பிரசித்தென்னும் அரக்கன் அமிசத்தால் நசுவசிரனும், சங்கனி, ககனமூர்த்தி, வேகவந்தன் முதலானோர் அமிசத்தால் கேகயராஜரும், சுவர்ப்பானு அமிசத்தால் உத்திரசேனனும், கங்கமன் அமிசத்தால் சோமகனும், அஸ்வனியமிசத்தால் கிருதவன்மாவும், உருஷபாவன் அமிசத்தால் தீர்க்கப்பிரக்யனும், நஜான் அமிசத்தால் மல்லனும், குக்குமன் அமிசத்தால் பிருகத்ருதுவும், துரு அமிசத்தால் சேனாபிந்துவும், விருபாக்ஷன் அமிசத்தால் சித்திரவன்மாவும், சகரன் அமிசத்தால் பாதிவிந்தியனும், பவுத்திரன் அமிசத்தால், கிருபனும், அசாங்கன் அமிசத்தால் பாக்லீகனும், சந்திரவக்கிரன் அமிசத்தால் பூரிசிராவும், நிகும்பன் அமிசத்தால் உருஷிகனும், மயூரன் அமிசத்தால் குரோத கீர்த்தியும் பிறந்தனர்.

அக்குரோதகீர்த்தியோ நந்தகன் கண்டகன், வேஷன், சித்தராத்த ஷேன், சுவீரியபாகு, மஹாவீரியன், குதரன், சித்திராதன், நீலன், வீரா தாமன், தந்தவக்த்ரன், துரஜெயன், ஜெனமேஜயன், ஏகவல்யன் என் னும் பல அரசரைப் பயந்தான். பக்தாஸ்தன், அமிசத்தால் நந்தகனும், தீர்க்கசிவகன் அமிசத்தால் காசிராஜனும், விசயன் அமிசத்தால் பசு மித்திரனும், சித்து எக்யவன் அமிசத்தால் பரசுராஷ்டிரனும், வீரன் அமிசத்தால் பவுண்ட்ரமச்சனும், உருத்திரன் அமிசத்தால் மணிமந்த னும், காலபுத்திரர் அமிசத்தால் சேதிபசேனனும், பராசிதனும், நாதி சந்து, நாதிகனும், மகோதனும், மத்திபனும், புரததனும், என்னும்எண் மர் தோன்றினர் குரோதவசை மைந்தனுகிய கணன் அமிசத்தால் கஜ புத்திரனும், அலியென்னும் அரக்கன் அமிசத்தால் சிகண்டியும், வியாழ பகவான் அமிசத்தால் புருஹகீர்த்தியும், மருத்துவர் அமிசத்தால் சாத் தகியாள்வான், பாஞ்சால விராடரும், திரிகுணன் அமிசத்தால் விதுராழ் வானும், இயக்கர்கோன் அமிசத்தால் பாண்டுராசனும், சித்தி, புத்தியெ ன்னும் தேவதைகள் அமிசத்தால் குந்திமாத்திரையிருவரும், இயமனல் தருமனும், வாயுவால் வீமசேனனும், இந்திரனல் அர்ச்சுனனும், அச்சு வினிதேவரால் நகுலசகாதேவராகிய இரட்டையரும், விஜலட்சுமி யமிசத் தால் திருஷ்டத்துய்மனும் தோன்றினர். இதுவே பாரதவீரருற்பத்தி யாம். இவர்கள் உலகிற்றோன்றிப் பெருக்கமடைந்து பின்னே போர்க் கோலங்கொண்டு பாரதயுத்தம் செய்து நிலப்பொறை தவிரவே தாம்தாம் தத்தமிருக்கையிற் சென்றனர்; இப்பாரத வீரருற்பத்தியைக் கேட்டால் பேருவகை தோன்றும் என்பதிற் சந்தேகமேயில்லை என்று வைசம்பா யயனர் கூற சந்திரவமிசத்தில் தோன்றிய ஜெனமேஜெய மகாராஜன் கேட்டு மிகக்களிப்பெய்தி யான் பாரதவீரருற்பத்தியைத் தேவரீர் கூறக்கேட்டு மகிழ்ந்தேன், ஆயினும் அந்தணர், அரசர், வசியர், சூத்திரர் என்னும் நாற்குலமுந் தோன்றிய வரலாற்று முறைமையை நன்குவிளக்க வேண்டுமென்றனன். அதற்கு வைசம்பாயனர் தக்கனென முன்னேயே கூறியிருக்கின்றேமன்றே, அத்தக்கன் திருமறுமார்பனுகிய ஆதிபகவனது உந்தியின்கண் தோன்றிய நான்முகக்கடவுள் வலக்காற் பெருவிரலில் வந் தோன். அவன் ஐம்பதின்மராகிய மகளிரை யீன்றான். அவருள் காசிபமு னிவனுக்கு அதிதி யெள்பவள் வயற்றில் பரிதியங்கடவுள் தோன்றினன். அவன் சாயாதேவியை மணந்து வைவசுதமனு, தென்புலத்தார் கோமா னுகிய இயமன், சனி, தமதி, யமுனையென்னும் ஐவரைப்பெற்றான். இனி யான் வரலாற்றுமுறையாக உன்மரபினை முற்றுமொழியாமல் விளங்கக் கூறுகின்றேனென்று பின்வருமாறு கூறுகின்றார்.

யயாதி மகாராஜன் சருக்கம்.

கலிநிலைத்துறை.

இணையி லாதவ னிறப்பொடு பிறப்பெனுங் கடற்கோர்
புணையு மானவன் புனிதர்கண் மனத்துறை புனிதன்
பணைகொ டிண்புயப் பாண்டவர்க் கெத்தினும் பாத்துந்
துணைய தானவன் றனைப்பத மெக்கினித் துணையே.

நெடிய ஆகாயத்தில் என்றும் அசுவனி முதலிய நாட்களை விழைகின்றவனும், அருமையர்கிய அமுதத்தைத் தேவர்கட்குத்தருபவனும் வட்டவடிவையுடைய நாகங்களின் பேருயிர்ப்பினால் மயங்கி மண்ணுலகம் கலப்பையினால் வருந்திய துயரநீங்கத் தன்மண்டலநிழலினால் அதனுடம்பு குளிரச்செய்தவனும், மந்தரகிரியைமத்தாகவாசுகியாகியவடம்பிணித்துக்கடையவே தான் தரியாயிருந்ததுமல்லாமல், அவ்விடந்தணியஅக்கடலிற்றோன்றினவனும், ஈரெண் பதினாறு கலைபுடையவனும், அவைகளைத்தேவர்க்குதவி மீளக் கவர்பவனும், அத்திரிமுனிவனிடத்தும், அக்கினிமுகத்திலும் பிறந்தவனுமாகிய சந்திரன் புதனைப்பெற்றான். புதன் புரூரவனைப்பெற்றான். அப்புரூரவன் நான்மறை, ஆறங்கம், பதினெண் ஸ்மிருதிகள், முதலியன பழுதறக்கற்றுப்பொதுக்கடிந்து உலகமுழுதும் தன்வெண்கொற்றக்குடைநிழலில் இருக்க அரசுசெய்து வந்தமையால் சக்கரவர்த்தியென்னும்பெயர் பெற்றான். இவ்வாறு அரசாண்டுவருநாளில் ஒருநாள் இந்திரனுக்கருகிலிருக்கும் அரமகளிரு ளொருத்தியாயும், திருமறுமார்பன் உந்தியிற்றோன்றிய நான்முகக்கடவுள் அருமையாகத் தன்தொடையிற் பயந்தவளுமாகிய ஊர்வசியென்பவள் மலர்கொய்து விளையாடப் பூம்பொழிலிற் சென்றாள். அம்மாதினை அரக்கர் மறித்துத்தடுத்து அவள் இன்னலங்கவரவெண்ணி அவளைத் தேரிலேற்றிக்கொண்டு சென்றனர். இவ்வாறு அக்கொடியோர் அவளைக்கைக்கொடு சென்றபோது அவள் பூனைவாய்ப்பட்ட கிளிபோற் பொருமிவிம்மி என்னைக்காப்பாரிலரோஎனக்கதறியோலிட்டழுதாள். அவ்வொலிகேட்டு இந்திரன் முதலிய அமரர்யாவரும் அவ்வரக்கர் பேராற்றலுக்கஞ்சினவர்களாயிருந்தனர். அதனைப் புரவலர் பெருமானாகிய புரூரவன்கண்டு அழலிடைப்பட்ட மெழுகுபோல் உருகி தன்சாரதியைக் கூவியழைத்துத் தெய்வப்புரவியைப்பூட்டித் தன்தேரைக்கொணரக்கட்டளையிட்டுத்தானேறி விரைந்துசென்று அவ்வசுரரைத்தடுத்து வில்லைவளைத்துச்சரமழைசொரிந்து அவர்களைக்கொன்று வெற்றிகொண்டு அப்பெண்மணியைமீட்டுத் தன்தேரிலேற்றிக்கொண்டு தன்தேரைசெலுத்தி அவள்மீதுமையல்மிஞ்சி அவளை இந்திரன் கொலுவீற்றிருக்குஞ் சுதர்மமென்னுஞ்சபையிற் கொணர்ந்துவணங்கி ஒருவசனம்கூறுகின்றான். திரிவிதவுலகத்துக்குமரசே! தேவர்களணையும்பரிசே! மீனகேதனனாகியஅனங்கன்கரும்பாகியவில்லைவளைத்துவண்டுகளாகிய நாண்பூட்டிமலரம்புதொடுத்துவருத்துகின்றான். கிளிபைவாகனமாகவுடைய

அவனுக்கோ மாதர்படை நெருங்கின. தென்றலோ தேராயிருக்கின்றது. அலைகடலாகியபேரிகையதிர்கின்றது. இரவாகிய யானையோபிளிறுகின்றது. மதிக்குடை கவித்து நிற்கின்றான். இத்தனைக் கோலாகலத்துடன் நிற்கின்ற மாரனோ போர் அரக்கரைவென்ற என்வல்லமையும் எண்ணான். என்னை அழலிடைப்பட்ட மெழுகுபோல இப்பெண்கொடியைநாடி அவள்இன்பநல மனுபவிக்கவருத்துகின்றனன், என்செயக்கடவேன்! உமது பொருளை உம் பால்சேர்த்தேன் என்றுள்ளட்டுறுப்பும் நிலமுறப்பணிந்து நின்றான். அது கண்டு கற்பகநிழலில் அரசுபுரியும் இந்திரனோ, புரவலர் பெருமானெனப்ப டும் புரூரவனே! அரக்கர் கைப்படாமுன்னம் இப்பெண்கொடியோ என் பொருளாயிருந்தனள். அவர்கள் கைப்பட்டவுடன் அவர்பொருளாயினள். புலிப்பொறை பொறுத்தபுரவலனே! நீ சென்று அவ்வரக்கரைப் பொருது வென்று கொணர்ந்தமையால் இவள்உன்பொருளேயாம். அதற்கோரையம் எள்ளளவுமின்றே! ஆதலால், இப்பெண்மணியைக் கைக்கொண்டு இவளொ டும் அன்றில்விழைபோக மயர்ந்திருவென்று கட்டளையிட்டுஊர்வசியைநோ க்கிக் கூறுகின்றான். மானைவென்றகண்ணாய்! இவ்வரசர்பெருமானுடன் நா னிலமடைந்து அன்றில்விழைபோகமயர்ந்து ஒருமகனை ஈன்றுமீண்டும் இச் சுதர்மமென்னுஞ் சபையை யடைவாயென்றனன். அம்மொழியைக்கேட்டு ஊர்வசியும் புரூரவனோடு நாளில மணந்து மலரும் மணமும்போலும், மார னும் இரதியும்போலும் அன்றில்விழைபோகமயர்ந்து ஆயுவென்னும் மைந் தனை யீன்றுதான் இந்திரலோகமே போய்ச்சேர்ந்தாள். அவ்வாயுஎன்னும் அரசர்பெருமான் தந்தையினும் எண்மடங்கு அதிகமாய் அறவொழுக்கங் குறைவின்றிச்செய்து மன்னுயிர் காத்துவந்தான்.

அவ்வாய்வுக்கு நகுஷன் தோன்றினான். அந்நகுஷனே முடிபுனைந்து மனுநெறிவழியொழுகி அசுவமேதங்கள் ஒருநூறும்செய்து இந்திரபதம்பெ ற்றுப் புலோமிசைமேற் காதல்கொண்டு அவளைஅழைத்துவரத்தேவர்களிற் சிலரையனுப்பினான். அதையறிந்தபுலோமிசைவியாழபகவானிடஞ்சென்று முறையிட்டாள், அதற்குவியாழபகவான் பூங்குயில்போன்றபுலோமிசையே நீ புலம்பவேண்டாம்; இந்திரனெவ்வாறு வருவானோ அவ்வாறே இந்நகுஷ னாகியபுதியஇந்திரனும் வருவானேல் தடையொன்றுமின்றென்றுகூறு; அவ னோ எழுமுனிவர்கள் சுமக்கும் மணிச்சிவிகையூர்ந்துவருவான். அவனிடை யே யாதேனுமொரு மொழி கூறுவான்; 'குணமென்னுங்குன்றேறி நின்றார் வெகுளிகணமேயுங்காத்தலரிது' என்றதேவர்மொழிக்கிசைய அம்முனிவர் கள்பொருது கடினசாபமொழி கூறுவர்; அதற்கு அவனிலக்காகுவான், போவென்றனன். புலோமிசையும் தேவகுருவின்சூழ்ச்சியையுள்ளத்தடைத் துத் தேவதூதரைநோக்கி, இப்போதுஅரசாகவந்திருக்கும் இந்திரனைக்கண் டு முன் இந்திரன் எவ்வாறாக வருவானோ அவ்வாறே வரச்சொன்மின் என் றாள், அவ்வாறே அத்தூதர்சென்று விரைந்து இந்திரனுக்கு இம்மொழியெ டுத்துப்புகன்றனர். அதுகேட்டுஇந்திரபதமடைந்த நகுஷனோ, அத்திரி, ஆங் கிரசன், அகத்தியன், கவுதமன், காசிபன், புலத்தியன் வசிட்டனென்னும் பெயருள்ள எழுமுனிவரையும் வருவித்து அவர்களைச் சிவிகையைக்கொண

ரக்கட்டளேபிட்டு, அவர்கள் தாங்கத் தானூர்ந்துசென்றுன். அவ்வாறுசெல்கையில் கெடுமதிகண்ணுக்குத்தோற்றுமல்விரைந்து என்னும்பொருள்தரும் 'சர்ப்ப' என்னும் வடமொழியால் அவர்களைக் கோபித்துக்கூறினுன். இம்மொழியைப்பொருது அகத்தியமுனிவன் எம்மைச்சிறிது மதிப்பின்றிச் 'சர்ப்ப' என்று கருதிக்கூறினமையால் மாசுணமாகெனக் கடுஞ்சாபமிட்டான். அப்புதியவிந்திரனேஅச்சாபமேற்று நடுநடுங்கி, என்னநினைந்துஎன் செய்துவிட்டோமென்று பொருமி அம்முனிவன்தாளில் அடியற்றபனைபோல்வீழ்ந்து வணங்கி என்றைக்கிச்சாபமொழியுமோவென வேண்டிநின்றுன். அதற்கு அகத்தியமுனிவன் மனமுருகிநின்று ஓ நகுஷனே! உன் மரபில் பஞ்சபாண்டவர் தோன்றுவர், அவர் ஒரு காரணத்தால்வனவாசம்வருவர். அவருள் வீமனை விழுங்குவை! அப்போது இந்நாளிட்ட இப்பெரும்பாம்புருவமாகுங் கொடுஞ் சாபம் ஒழியுமென்று கூறிப்போயினுன். இதுகிடக்க,

இந்நகுஷன் நிலவுலகிலிருக்கையில் இவனுக்கு யயாதி, சம்யாதி, பிரயாதி என மூவர் தோன்றினர். அம்மூவருள் யயாதிமுடிபுனைந்து ஒன்றும் பரம்பொருளை வனத்தினிறுத்தி இம்மை, மறுமை இரண்டையுமுணர்ந்து, இராசதம், தாமதம், சாத்துவிதமென்னு முக்குணங்களிற் சாத்துவித குணமேய்ந்து; அறம், பொருள், இன்பம், வீடென நூற்கள்துணிந்தநாற்பொருளுணர்ந்து மந்திரிமார், புரோகிதர், சேனைத்தலைவர், ஒற்றர், சாரணரென்னும் ஐந்தினையுமெய்தி, படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறங்கமுற்று; நாவல், இறல், குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு என்னும் ஏழு தீவையும் தன்னுணையினடக்கி; அரசு, மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், ஊர்தி, அடிமையென்னும் எண்வகைச் சம்பத்தினையும்பெற்று கீழ்விதேகம், மேல்விதேகம், தென்விதேகம், வடவிதேகம், வடரேபதம், தென்னிரேபதம், தென்பரதம், வடபரதம், மத்திமகண்டம் என்னும் ஒன்பதுகண்டங்கட்கு மண்டலாதிபதியாய் செங்கோல், மலை, ஆறு, நாடு, உளர்மாலை, புரவி, யானை, முரசு, கொடி என்னும் தசாங்கம் அடைந்து; கங்கை, காளிந்தி, சரச்சுவதி, நருமதை, பொன்னி, குமரி, கோதாவரி, சிந்து, பொருநை, துங்கபத்திரை கிருஷ்ணையென்னும் பதினொருநதிகளிலும் பலதானங்களும் வழங்கும் சத்திரம் அமைத்து; தருமதேவதையை நான்குபாதங்களாலும் நடக்கச்செய்து தன்னுயிர்போல மன்னுயிரையும் காத்துவந்தான். இவனை என்குரு சிகாமணியாகிய வியாசபகவானே புகழ்ந்தனனெனின் இவன் புகழினை என்னொருநாவாலெடுத்துச்சொல்லும் தன்மையாமோ! அத்தனைச்சிறந்த யயாதிமகாராசன் அசுரகுருவாகிய சுக்கிராசாரியின் மகளாகிய தெய்வயானையென்னும் பெண்கொடியை மணந்து இரண்டு மைந்தரையும், அசுரர்குலத்தரசனுகிய விடபன்மாவென்பவன் மகள் சன்மிட்டையென்பவளை மணந்து மூன்றுமைந்தரையும் பெற்றுனென்றுகூறவே, ஜெனமேஜெயமகாராஜன் வைசம்பாயனரை நோக்கிக் கூறுகின்றுன், உலகின்கண் அந்தணர், அரசர், வணிகர், சூத்திரரெனக் குலங்கள் நான்காம், அவருள் அந்தணர் முதலிய மூவரையும் இருபிறப்பாளரென்ப. அந்தணர் தங்குலக்

கன்னிகையையும், தனக்கிழந்த மற்றைமுக்குல மாதரையும் மணஞ்செய்ய வும், அரசர் தம்மரபினோடு ஏனையிருகுலமாதரையும்,வணிகர் தம்மரபினோடு சூத்திரமாதையும், சூத்திரர் தங்குலமாதரைமாத்திரமே மணஞ்செய்யவும் அறநூல்விதித்திருக்கின்றது. யயாதியை அறநூல்வழுவாமல் நடந்தோனெ னவும், அருட்பெருங்கடலாகிய வியாசபகவானே மிகப்புகழ்ந்திருக்கின்றன ரெனவுங்கூறினீர், அவன் அந்தணர்குலத்தரசராகிய சுக்கிர பகவான் மகளை எவ்வாறு மணம்புரிந்தான்? அசுரகுலப்பெருமானென்னும் விடபன்மா மக ளாகிய சன்மிட்டையிடமாக எவ்வாறு மூன்று மக்களைபெற்றான்? இதனை விளங்க முறைமையாக உரைக்கவேண்டுமென் றிரந்துகேட்க வைசம்பா யனர் கூறுகின்றார்.

முற்காலத்தின் விடபன்மா என்னும் அரக்கனொருவன் பேராற்றலை யுடையானாகி நிலவுலகாண்டு விண்ணுலகையுங்காக்கவெண்ணி இந்திரனொடு போர்செய்து வெல்லச்சென்றான். இந்திரனும் தன்பரிவாரங்களோடும் அவ னையெதிர்த்து, அவ்விடபன்மாவையொழிய அவன்சேனைமுற்றும் தன் கை யினுள்ள தெய்வப்படைகளால் சிதைத்து அவர்கள் வந்தவழி மீளாமலிருக் கப் போர்செய்துவென்றான். அதனையுணர்ந்த விடபன்மா தன்குலகுருவா கிய வெள்ளியையடைந்து தன்வரலாற்றை முற்றும் ஒழியாமற் சொல்லி, தம்மையொத்தபெரியோரை யான்பெற்றிருந்தும் அவலமாயினேனே!இது எனக்குவந்த மானக்கேடேயன்று, எவ்வாறேனும் எனக்குத் துணைசெய்ய வேண்டுமென்றிரந்து கேட்டனன். அதற்குச் சுக்கிரபகவானும் அவனை நோக்கி, நான் என்ன படைத்துணைக்கு வலியனோ, நின்கருத்திற்கிசைய படைத்தொழின் மேற்கொண்டேனாவல் எனக்குக்குருவென்னும் பட்ட மெங்ஙனம்? ஆயினும் என்னைவேண்டியடைந்தமையால் முன்படைபொரு து இறந்த சேனையையும், இனி இறக்குஞ் சேனையையும் எழுப்பவல்லேன்; இச்செயலொன்றேயான் செயதற்கிசையுமென்றுகூறினான்.அதுகேட்டவிட பன்மா இவ்வொன்றேபோதும், இத்தனையுதவிசெய்யின்யான்போர்செய்து இந்திரனைவென்றேனாவேன் என்று சொல்லச் சுக்கிரபகவானும் தான்கூறிய வண்ணம் இறந்த அசுரசேனைகளை யொன்றொழியாமல் மிருதசஞ்சீவிமந்திர வலியால் எழுப்பிவிட்டார். அவரும் நித்திரை தெளிந்தாரைப்போன்றெழு ந்து இந்திரனது பரிவாரமுழுதும் புறங்கொண்டோட எதிர்த்துப் போர் செய்துவென்று வாகைசூடினர். இந்திரன் இதனையுணர்ந்த சுக்கிரன் துணை வலியாலன்றோ இவ்விடபன்மா வெற்றிகொண்டான். இதனாலன்றோ 'தம் மிற்பெரியார் தமராவொழுகுதல் - வன்மையுளெல்லாந்தலை' என்றுங்கூறி யிருக்கின்றனர் என்றுதுணிந்து தன்னாசிரியனாகிய வியாழபகவானை வண ங்கி என்பகையாகிய விடபன்மா தன்னாசிரியனாகிய சுக்கிரனது மந்திரவலி யால் வெற்றிபெற்றான், உமையொருபாகத் தொருவனையொத்த தேவரீர் எனக்குக் குருவாயிருந்தும் நான் பகைவனாலலைப்புண்டேனெனின் எனக் குண்டாகிய தாழ்வியாருடையதாம் என்றான்.அதுகேட்டுவியாழபகவானும் சுக்கிரனேவடிவேறு திரிசூலத்தொரு பரம்பரனைநாடித் தவஞ்செய்து சஞ் சீவி மந்திரம்பெற்றான். அம்மந்திரவலியால் இறந்தாரையெல்லாம் எழுப்பி

விடுகின்றான். அம்மந்திரம் சுக்கிரபகவானொருவனேயன்றி விண், மண், பாதலமென்னும் இம்மூவுலகினும் ஒருவருமறியார், யான்என்செய்வேன், எனக்குப் போர்செய்யுமாற்றலுண்டோவென்றான். இந்திரன் சுக்கிரனையடைந்து அவன்பெற்றிருக்கும் மந்திரத்தைக் கிரகிக்கவல்லார், இவ்விண்ணுலகில் யாருமிலரோவென அங்கிருந்தவருள் வியாழபகவான் மைந்தன்கசனென்பவன் இந்திரனைநோக்கி நீ வருந்தவேண்டாம், அச்சுக்கிரனையடைந்து குற்றேவல்செய்து அப்பெரியோனுக் கின்னருள்வரங்கடந்துஅம்மந்திரம்பெற்றுவருகின்றேன் என்று உறுதிமொழிசொல்லி சுக்கிரனையடைந்து வணங்கி, உமக்குக் குற்றேவல்செய்கின்றேனுவேன். என்பால் என்று அன்புடையராவிரோ அன்றுநீர் அருந்தவஞ்செய்து காலத்தொடு கற்பனைகடந்த கருவூலத்துப் பழம்பாடற்கலைமாச்செல்வர் தேடிவைத்த கடவுட்பிரானாகியபரமசிவன்பாற்பெற்ற சஞ்சீவிமந்திரத்தை அடியேனுக் கருள்செய்யவேண்டுமென்றான்.

சுக்கிரபகவான் கேட்டுவருத்தமுற்று நாமோ எழுதாச்சொன்மழலை தும்புசுங்குதலைக் கோமளவல்லியிடப்பாகத்து அருமருந்தைநோக்கி அருந்தவஞ்செய்துபெற்றோம். அம்மந்திரவலியாலன்றோ நம்பால்அசுரர் அன்புடையவராயிருக்கின்றனர். அம்மந்திரத்தைச் சொன்னோமாயின் நமக்குப் பலியாது. அம்மந்திரத்தைச்சொல்லாதிருந்தாலும் எப்போதாயினும் குற்றேவல் செய்யவந்தானுக்கருள்செய்யவேண்டுமென்பதுவரும், இவனைக்குற்றேவல் செய்பவனாகக் கொள்ளாமலிருப்பதும் அறநூலுக்குவிருத்தம்; இனியென்செய்வதென்று தன்மனத்தி லாராய்ந்து ஒருவாறுதுணிந்து நீயோ சுரகுருமகன், நீயேகுற்றேவல் செய்பவனாகவந்தால் ஒப்பவேண்டியதே! நீயென்று எனக்கு மகிழ்ச்சியுண்டாக நடக்கின்றனையோ அன்று அம்மந்திரமுபதேசிக்கின்றேன், சிறிதுமஞ்சாமலிருவென்று உறுதிமொழி சொன்னான். அதுமுதல் கஜன் சுக்கிரபகவானுக்குக் குற்றேவல் செய்துவருவானாயினன் அவ்வாறு செய்துவருவதுமன்றி அச்சுக்கிரபகவான்மகளாகியதெய்வயானையோடும் வேதபாராயணஞ்செய்துவந்தான். அவளோ இப்படிசெய்துவருவதனாலும், பேரழகுடையவனாதலாலும் இவன்மீது காதலுடையவளாயிருந்தாள். இவ்வாறு சிலநாள் கழிந்தபின்னர், சுக்கிரபகவானிடத்துக் கஜனென்பவன் குற்றேவல்செய்பவனாய் இருப்பதைக்கேள்விப்பட்டு விடபன்மா என்னும் அரக்கருக்கரசன் தன்தூதுவரையழைத்து நமதுஆசிரியனாகிய சுக்கிரபகவான் கற்றிருக்கும் சஞ்சீவிமந்திரத்தைக் கற்றுக்கொள்ள வந்திருக்கும் கஜனென்பவனை நமது ஆசிரியனாகிய சுக்கிரபகவான்அறியாதவகைசென்று கொன்றுவிடுங்கோளென்று கட்டளையிட்டான். அவ்வாறேஅவர்கள் அவன்சொன்மேற்கொண்டு பதிவிருந்து ஒருநாள் தருப்பை, சமித்து முதலியவற்றைக் கொய்யச் சென்றதுகண்டு அவனைச் சூழ்ந்துசென்று அவன் கழுத்தை யரிந்துசென்றனர். பின்புமுறைப்படி கஜனென்பவன் வெகுநேரமாயும் வாராமையால் மிக்க வருத்தமுற்றுத் தெய்வயானை தன்தந்தையை வணங்கித் தங்களுக்குப் பணிவிடை செய்யுங்காலந் தவிர மற்றைக் காலமெல்லாம் என்னுடன் வேதபாராயணஞ் செய்துவருவான், அவனை

இன்று இத்தனைப் போதாயும் காணேன்; அவனை எங்கனுப்பினீர்; அவனை வருவிக்கவேண்டுமென்று பணிமொழியுடன் வேண்டவே, சுக்கிரபகவான் தன்ஞானதிருஷ்டியால் அவன் இறந்து இருப்பதனை யறிந்து சஞ்சீவிமந்திரத்தை யுச்சரித்து இறந்திருந்த கஜனையெழுந்துவரும்படி செய்தான். உடனேநித்திரைதெளிந்தெழுந்தவன்போல் விரைவிலெழுந்துநடந்து வந்து தன்ஆசிரியனாகிய சுக்கிரபகவானைவந்து வணங்கிநின்று பின்பு அவன் கட்டளைப்படிதெய்வயானையிருக்கும் இடத்திற்சென்றான். தெய்வயானையோ கஜனை நோக்கி வியாழபகவான் மைந்தனே! இன்று எங்குசென்றிருந்தனை; இத்தனைநேரமாயும்வராதிருந்தகாரணமென்ன? என்றுகேட்டபோது நான் காட்டிற்சென்று தருப்பைசமித்துமுதலியவற்றைக்கொய்தபின்னர் பெருந்துயில்கொண்டேன், அதுதான் தடையாயிற்றுஎன்றுவிண்டான்; பின்பு அக்கன்னிகை வேதபாராயணம் முறைப்படி செய்துவந்தாள்.

இதுநிற்க; இவ்வாறு சிலகாலம் நடந்துவர விடபன்மா கஜனென்பவன் உயிர்த்திருப்பதுகேட்டு முன்போல சில அசுரரையழைத்து முன்னே தூதுவரால் கொல்லப்பட்ட அக்கஜனென்பவன் நமதுஆசிரியனாகியசுக்கிரபகவானால் பிழைத்து உயிருடனிருக்கிறான். நீங்கள் இப்போதும்நமதுகுருவறியாமற்சென்று அவனைக்கொன்று மதுவுடன் சேர்த்து அம்மதுக்குடத்தைச் சுக்கிரபகவானுக்கு உண்பித்து வாருங்கோளென, அவர்களும் அவ்வாறே செய்துப்போயினர், முன்பின் எண்ணாமல் வாங்கி அம்மதுக்குடத்தை வழக்கப்படி மடமடவென்று சுக்கிரபகவான் குடித்துப் பெருங்களிப்படைந்திருந்தான். முன்போலக் கஜன் வராமையால் தன்தந்தையிடத்தில்வந்துவணங்கி அவனை யெங்கனுப்பினீர், விரைவில் தருவிக்கவேண்டுமென்றாள். "வஞ்சமுங்களவும் பொய்யுமயக்கமுமரபில் கோட்டும், தஞ்சமென்றுரை நீக்குந் தன்மையுஞ் சுளிப்புந்தாக்கும், கஞ்சமெல்லணங்குந் தீருங்கள்ளினை லருந்தினரை, நஞ்சமுங்கொல்வதல்லா னரகினை நல்காதன்றே" என்றபடி சுக்கிரபகவான் கள்ளுண்டு களித்திருந்தமையால் ஒன்றுந்தோன்றாது இத்தனைநேரமாயுங் கஜனெங்கேபோனானென்ற தன்மகளை நோக்கி, அம்மா! கஜனைப் பலமுறை கேட்பானேன்? போனவன் வருகின்றான். நீபோவென்று கடூரமாகச்சொன்னான். அதைக்கேட்டுச் சற்றுமனங்குழம்பி என்றுஞ்சொல்லாதவார்த்தையை இன்று நமது பிதாசொல்லக்கேட்டோமென்று துணிந்து தன்பிதாவைநோக்கி இன்றுசொன்னசொல் மிகப்புதுமையாயிருக்கின்றது; தேவரீரோ திரிமூர்த்திகளோடொன்றாக வைத்தெண்ணத்தக்க தகுதியுடையவர்; நீர் இவ்வாறு கூறுவது தகுதியல்ல; உலகினுள்ள எப்பொருளினும் மன்னுயிர் சிறந்தது, அதனினுஞ்சிறந்ததுநட்பு. இதனாலன்றோதிருவள்ளுவநாயனாரும் "செயற்கரியயாவுளநட்பினதுபோல்,வினைக்கரியயாவுளநட்பு." என்றுஞ் சொல்லியிருக்கின்றனர். அப்படிப்பட்ட நட்பினும் பாலியத்தில் பழகிய நட்பு மிகச்சிறந்தது; எனக்கு அவன் அதிபாலிய சிநேகனாகையால் நான் தங்களைக்கேட்டேனென்றாள். அதுகேட்டுச்சுக்கிரபகவான் கஜன் எங்குச்சென்றானென்று ஞானதிருஷ்டியால் நோக்கவே, விண்மண்பாதலமென்னு மூன்று உலகங்களினும் தோன்றாமல் பின்பு தன் சரீரத்தினை நோக்கி

ன். அங்கே கஜன் அடங்கியிருப்பதுநோக்கிக் கள்ளுண்டிருந்த களிப்பால் தனக்கே கேடுவருவதைநினையாமல் சஞ்சீவி மந்திரத்தையுச்சரித்தான். உச்சரிக்கவே கஜன்உயிர்பெற்றெழுந்தான். இதற்குள் சுக்கிரபகவானுக்குக்கள்வெறியுநீங்கிற்று. அக்கள்வெறி நீங்கவே, தன்வயிற்றில் கஜனிருப்பது கண்டு அடாமோசம் நேர்ந்ததே! நமது சிடனாகிய விடபன்மாதான் ஒன்றுநினைக்கப்போய் மற்றொன்று செய்துவிட்டானே! இதற்கென்செய்வது; அதுதனக்கே கெடுதியானதுமல்லாமல் நமக்குங்கெடுதியாக்கிவிட்டதே என்று எண்ணி, கஜனைப்பார்த்து அப்பா! நான்சஞ்சீவிமந்திரத்தைக் கற்பிக்கின்றேன்! எனக்கோருபகாரஞ்செய்யவேண்டும், அது நீயோ என்வயிற்றைக் கிழித்துக்கொண்டுவந்து பிறகு என்னையெழுப்பிவிடவேண்டுமென்பதேயென்றான்.

கஜனும் அவ்வாறே யொத்துக்கொண்டு அச்சஞ்சீவிமந்திரத்தைக் கற்றுக்கொண்டு அச்சுக்கிரபகவான் உடம்பைப் பிளந்துகொண்டுபுறப்பட்டுப் பின்புஅச்சுக்கிரபகவானையெழுப்பித் தெய்வயானையிருக்குமிடஞ்சென்றான். தெய்வயானையோ கஜனைநோக்கி எங்குப்போயிருந்தனை! என்றுகேட்க ஒரு போக்காகச் சொல்லிவிட்டுத் தான் தன்னாசிரியனுக்குக் குற்றேவல்செய்துகொண்டிருக்கவே, சிலகாலத்தின் பின்பு ஒருநாள் சுக்கிரபகவானை நோக்கி நான் வந்தகாரியஞ் சித்தியாயிற்று. ஆகையால் எனக்குப் போக வுத்தரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான், சுக்கிரபகவானும் அவனை ஆசிர்வதித்து அனுப்பிவிட்டான். அக்கஜனோ அவனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு தெய்வயானையிடத்தில்வந்து நான்வந்தகாரியம் சித்தியாயிற்று. நான்போக விடைகொடுக்கவேண்டுமென்றான். தெய்வயானையோ என்னசெய்வோம்! நமது கருத்து நிறைவேறாமற்போகின்றதே! நாம் நமதுகருத்தைத் தெரிவிக்கலாம் என்று துணிந்து கஜனே நீயோ சுரகுருமகன், நானோ அசுரகுருமகள், நாமிருவருமோ எவ்வகையினும் ஒப்பு. என்னைப் பாணிக்கிரகணஞ்செய்துகொண்டு சுகமாயிருந்துவிடும், உனக்குஒருவேளைஇவ்விடத்திலிருக்காமல் அவ்விடத்திலே யிருக்கலாமென்றுசொன்னாலும்வந்துவிடுகிறேனென்றுசொல்லிப் பின்னும் நீ உன்தந்தையைஅழைப்பித்து என்தந்தையின் இஷ்டப்படி என்னை மணம்புரிவதே தகுதியென்று வேண்டிக்கொண்டாள். கஜன் இச்சொல்லைக்கேட்டு இரண்டு கைகளாலும் இருசெவியும் பொத்திக்கொண்டு தாயே! நீயோ சகலவேத புராணங்களிலும் நல்ல உணர்ச்சியுடையளாய் என்னிலும் எண்மடங் கதிகமாகக் கல்விகேள்விகளிலும் சிறந்திருக்கின்றாய், நானோ உன்தந்தையிடத்திலேயே சகல வேதபுராண சாத்திரங்களையுங்கற்று வல்லவனானேன். மேலும்பெறுதற்கரியசஞ்சீவி மந்திரத்தையும் பெற்றேன். "தவமதுசெய்தேபெற்றெடுத்தவன்முதற்பிதா தனைவளர்த்தவனொருபிதா, தயவாக வித்தையைச் சாற்றினவனொருபிதா சார்ந்த சற்குருவொருபிதா, அவமறுத்தாள்கின்ற வரசொருபிதா நல்லவாபத்துவேளை தன்னில், அஞ்சலென்றரிய துயர்தீர்த்தவனுமொருபிதா வன்புடையவனுமொருபிதா, கவளமிடு மனைவியைப் பெற்றுளோனொருபிதா கலிதவிர்த்தவனொருபிதா, காசினியிலிவரை நித்தமுமேபிதாவென்று கருதுவதுநீதியாகும்." என்று நீதிநூலுங்கூறியிருக்கின்றதே, ஆதலால் உன்னை

மணம்புரிவது தகுதியல்லவே என்று மறுத்துக்கூறினள். அதுகேட்டுஇலவு காத்த கிளிபோல் ஏங்கிவாடி முகம்புலர்ந்து நீ என்கருத்திற் கிணங்காமல் விசுவாசகாதகஞ் செய்தமையால் நீ என் தந்தையிடத்திற்பெற்ற சஞ்சீவி மந்திரம் உனக்குப் பலிக்காதிருக்கக்கடவதென்று கடுஞ்சாபமிட்டாள். அதையுணர்ந்த கஜன் எனக்குப் பலியாவிடினும் என்னிடத்தில் கேட்டவர்க்கேனும் பலிக்குமல்லவா என்று சொல்லி, நீ சாஸ்திரவிருத்தமாகச் சபித்தமையால் நீ பிராமண மாதாயிருந்தும் நிலவுலகத்தரசனே மணம்புரிவாயென்று சாபமிட்டு கஜன் தந்தையிடம் அடைந்து அவருக்கு அம்மந்திரோபதேசஞ்செய்து அவரால் இந்திரனுக்கு வெற்றியுண்டாக்கினன்.

கஜன் போனபின்புதெய்வயானை அசுரகுலத்தரசன்மகளாகியசன்மிஷ்டையுடன் மிநட்புக்கொண்டு, பூக்கொய்தல், பந்தாடல், கழங்காடல்முதலியவற்றைச்செய்து ஒருபொழுதும் பிரியாமலிருந்தாள். ஒருநாள்தான்சுன்மிஷ்டையுடன் பூங்காவனத்திற்சென்று பூக்கொய்துவிளையாடி தடாகத்தில் நீராடிக்கொண்டிருக்குஞ் சமையத்தில் சூறுவளிவந்தடுத்து அவர்கள் கரையில்வைத்த ஆடைகளை யெல்லாம் ஒன்ருகக் கலக்கச்செய்துவிட்டது. அதனுல் இருதிறத்தார் பாங்கிமாரும் இன்னர் உடுத்த ஆடை யிதுவென்றறியாமல் தெய்வயானை ஆடையைச் சன்மிஷ்டைக்குக் கொடுக்கச் சன்மிஷ்டை அதை வாங்கியுடுத்தாள். தெய்வயானையினிடம் சன்மிஷ்டை ஆடையைக் கொணர்ந்து நீயுடுத்திருந்த ஆடையைத் தெய்வயானையுடுத்திக்கொண்டிருக்கிருளெனத் தெய்வயானையும் நாமென்னசெய்வது என்று சிந்தித்துச் சன்மிஷ்டையை நானுடுத்த ஆடையைக்கேட்டுவாருங்கோளென்று கட்டளையிட்டாள். அத்தாதிகளும் அவ்வாறேசென்று கேட்கையில் சன்மிஷ்டையும் தெய்வயானையிடத்தடைந்து நீயுடுத்திருந்த ஆடையோ மிகச்சொற்பமாயும் இருக்க, அதைவெறுத்து நான் உடுத்த ஆடையுடுக்கலாகாதா? ஏன்வெறுக்கின்றனை யென்றுசொல்ல, தெய்வயானையும் கேட்டுச் சோல்வாளாயினள். சன்மிஷ்டையே! எவ்வாறிருக்கினும் நானே அந்தணன்மகள், நீயோ அரசன்மகள், நீயுடுத்த அழுக்காடையை நான் உடுக்கத்தகுமோவென்ருள். இவ்வாறு சொல்லவே சன்மிஷ்டை சினங்கொண்டு "இருவேறுலகத்தியற்கை திருவேறு தெள்ளியராதலும்வேறு." எனத்தேவருமருளிச்செய்திருக்கின்றனர்; உன்தந்தை என்ன இன்றும் என்தந்தையிடம் கையேந்திவருகின்றனன். நீயோ இவ்வாறு இறுமாந்து கூறுவது தக்கதன்று என்றுகூறி, தெய்வயானையை அங்குள்ள பாழ்ங்கிணற்றில் தள்ளிவிட்டுத் தன்தாதியருடன் சென்ருள். தெய்வயானை கிணற்றில் வீழ்ந்ததே தெய்வகதியால் அங்குமுளைத்திருந்த ஓர் கொடியைப் பற்றிக்கொண்டு ஏறவகையறியாமல் உயிர்ச்சேதமின்றியிருந்தாள். அச்சமயத்தில்சந்திரவமிசத்தரசனுகிய யயாதிமகாராஜன் தன் பரிவாரங்களுடன் வேட்டையாடச்சென்று நீரபேட்சையால் இப்பாழ்ங்கிணற்றினைபடைந்தான். அடையவே பூரணசந்திரோதயமென்ன விளங்கும் முகத்தையுடைய ஓர்மாது கிணற்றில் தோன்றக்கண்டுநீயார்! இக்கிணற்றில் வீழ்ந்திருப்பானேன்? உன்வரலாற்றை யுள்ளவாறு சொல்லென்று கேட்டான். தெய்வயானையும் நான் அசுரகுருவாகிய சுக்கிரபகவான்மகள்!

என்பெயர் தெய்வயானை யென்பர் என்றுசொல்லிப் பின்பு தன்னை விடபன் மாமகளாகிய சன்மிஷ்டையென்பவள் கிணற்றில் வீழ்த்திச்சென்றாளென்ற தன்வரலாற்றைச் சொல்லாமல் மறைத்து என்னைக்கரையேற்றுமென்றுவேண்டினள் அரசனும் வியந்து இரவலர்க்குப் பொன்னைப் புயல்போற் பொழியும் தன்கையால் அத்தெய்வயானையின் தாமரை மலர்போன்றகையைப் பிடித்தெடுத்துவிடுத்தான். தெய்வயானை அரசனிடத்தில் விடைபெற்றுத் தான்தன்னந்தனியே தனக்குநேரிட்ட துன்பங்களையெல்லாம்நினைத்து இவ்வளவும் சுரகுருமகனாகிய கசனிட்ட சாபமேயென்றுஉள்ளங்கலங்கிநைந்து பெருமூச்சுவிட்டுத் தன்னை நிலவுலகம் புரக்கும் அரசன் கைப்பிடிக்க நேரிட்டதே என்றுருகுகின்றாள். அரசனும் தன்பரிவாரங்கள் சூழத் தெய்வயானையிடத்தே விடைபெற்றுத் தன்னகரமே சென்றடைந்தான்.

இவ்வாறிருக்கத் தெய்வயானையும் இனிநாமென்செய்வது செந்தமிழ்ப்புலோர் கூறும்புணர்ச்சியோ மூவகையாம். அவைபூத்தருபுணர்ச்சி, புனறருபுணர்ச்சி, களிறுதருபுணர்ச்சி யென்பர். அவற்றுள் நம்மைப் புனறருபுணர்ச்சியால் கிணற்றிலிருந் தெடுத்து கைதொட்டுப் போயினன் என்று நினைந்து ஒருமரத்தினிழலி லடைந்து இருந்தாள். அப்போது விடபன்மா தேர்ச்சாரதி யொருவன் தெய்வகதியால் அம்மரத்திநேரமாகச்செல்கின்றவன் தெய்வயானையைக்கண்டு வணங்கி அம்மா! நீ தன்னந்தனியே இங்கிருக்கவேண்டிய காரணமென்னவென்று வினவினன். தெய்வயானை அச்சாரதியை நோக்கி நானும் உன்னரசன் மகளாகிய சன்மிஷ்டையும் இப்பூங்காவிற்கு வந்தோம். என் ஆடையை உன்னரசன்மகளுடுத்தித் தன்னுடையை எனக்குக்கொடுத்தாள். நான் அது முறையல்லவென்றேன், அதற்கு சினங்கொண்டு என்னைவைது என்னைப் பாழ்ங்கிணற்றில் தள்ளிவிட்டுப்போயினாள். இச்சேதியை என்பிதாவினுக்கறிவிப்பையாயின் இப்போதுநான்அடைந்த துன்பத்தை நீக்கிய பலனாகும் என்று பலவாறு வேண்டிக்கூற, அதைச் சாரதிகேட்டு அவ்வாறே செய்கிறேனென்று சுக்கிராசாரியரிடஞ் சென்று வணங்கி தெய்வயானை சொன்னவற்றை முழுதும் கிரமமாகச்சொல்லி வணங்கிப்போனான். சுக்கிராசாரியும் தனக்குச் செய்வதொன்றுந் தோன்றாமல் நமதுமகளாகிய தெய்வயானையைச் சன்மிஷ்டை இப்படியும் செய்துவிட்டாளே! நமக்கு அவள் பெருந்தவத்தாற்பிறந்த பெண்ணாயிற்றே! இவளுக்கே இப்படி வருமென்றால் அதிசயமாக இருக்கின்றதேயென்று எண்ணித் தன்மகளிருக்கும் பூஞ்சோலையை யடைந்து மிகுந்த ஆசையுடன் தழுவிக்கொண்டு அம்மா! உனக்கும் இப்படிப்பட்ட துன்பம்வருமா! இத்தனைநாளும் சன்மிஷ்டையுடன் விளையாடி வருகின்றவளாதலால் இன்றும் அப்படியே வருவாயென்றிருந்துவிட்டேனல்லாமல் வேறல்ல. என்மேற் கோபங்கொள்ளவேண்டாமென்று இங்கிதவார்த்தைசொல்லுகின்றான். தெய்வயானையும் தன்பிதாவாகிய சுக்கிராசாரியர் பாதங்களில் அடியற்றபனைபோல விழுந்து கோவென்றுபுலம்பிநீசனாகிய அரக்கன்மகள் என்னுடையையுடுத்திக்கொண்டதுமல்லாமல் என்னையும் கிணற்றில் தள்ளிவிட்டுப்போனாள். இனி நமது

பிழைப்பென்ன இருக்கின்றது! மிகவும் அற்பர்களிடத்திலும், நமது அருமைபெருமை தெரியாதவர்களிடத்திலும்கோடிசம்பாதித்தும் பிரயோசனமில்லை. மதியாதார்வாசல்வழி மிதிக்கவேண்டாமென்றுஞ் சொல்லியிருக்கின்றார்கள். இப்படிப்பட்டவரிடத்தில் நாம் சீவிப்பதைப்பார்க்கிலும் நமது அருமை பெருமையறிந்த விவேகிகளிடத்திற் சொற்பசீவனம்செய்து வாழ்வதே உத்தமமென்று சொல்லிவிட்டு இனி விடபன்மாவிடத்தில் அரைக்கணமும் போகப்படாதென்று வேண்டிநின்றாள். அதற்குச் சுக்கிராசாரியும் தெய்வயானையைப் பார்த்துச் சொல்லுகின்றார். என்னருமைமகளே! நீயுஞ் சிறுகுழந்தை! சன்மிஷ்டையுஞ் சிறுகுழந்தை, பெண்களை நோக்கி 'பேதைமை யென்பது மாதர்க்கணிகலம்' என்று நீதிநூலும் முறையிடுகின்றது. அதிலும் நீங்களும்வயதுவந்தவர்களல்ல, இதனால் அந்தச்சன்மிஷ்டையைப் பெற்றெடுத்த விடபன்மாவை நோவது தகுதியல்ல. ஆயினும் உன்மனக் கருத்தின்படி இப்பூஞ்சோலையிலேயே ஒரு பர்ணசாலையைக் கட்டிக்கொண்டு தன்மகளாகிய தெய்வயானையுடன் வாசஞ்செய்துவந்தார். இப்படியிரண்டொருநாள் கடந்தபின்புசுக்கிரபகவானில்லாத அவ்விடபன்மாவினுடைய சபைதாமரையில்லாத தடாகம்போலவும், சூரியனில்லாத பகல்போலவும், அரசிழந்த நகரம்போலவும், சந்திரனில்லாதஇரவுபோலவும் தோன்றியது. விடபன்மா தன் மந்திரிமாரை நோக்கி நமது குலகுருவாகிய சுக்கிரபகவானை நமது சபையில் இரண்டுமூன்றுநாளாகக் காணாமலிருக்கின்றோம். அவர் வராமைக்குக் காரணம்யாது? விசாரித்தறியுங்களென்றான்.

அவ்வாறு கட்டளையிடவே மந்திரிமாரும் தூதுவரையனுப்பிச்சுக்கிராசாரியரைத் தேடச்சொல்லினர். அத்தூதுவர்போய்த்தேடிக்காணாமல் மீட்டும் மந்திரிமாரிடத்தில் சொல்ல, அவர்களும் அரசனிடத்தில் இதனை விண்ணப்பித்தனர். அரசனும் இதென்னபுதுமை! நமது குருசிகாமணியோ நம்மையன்றி ஒருவரையும் அனுசரிக்கமாட்டார். எங்கேபோய்விட்டாரென்று சிந்தைகலங்கி நொந்து இனி ஒரு முகூர்த்தகாலத்துக்குள்தெரிவிக்கவேண்டுமென்று கொடிய ஆக்கினை செய்துவிட்டான். அதுகண்டு மந்திரிமார் சிந்தை நைந்து செய்வதொன்றுந் தோன்றாமல் திப்பிரமைகொண்டு மனம் சூறைக்காற்றைப்போல் சுழலநின்று மறுமொழியொன்றுஞ்சொல்லாமல் அரசன் கட்டளைப்படி திரிந்து தேடத்தலைப்பட்டார்கள். இப்படி தேடித்திரிவதைப் பார்த்தவிடபன்மா சாரதி அவர்களை வணங்கிச் சுக்கிராசாரியிருக்கும் இடத்தை உங்களுக்குக் காட்டுகின்றேன் என்று அரசனிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் நடந்தவரலாற்றைச்சொல்லுகின்றான் .மகாராசாவே! ஒருநாள் நமது குருமகளாகிய தெய்வயானையும், தங்கள் மகளாகிய சன்மிஷ்டையுமாக ஒரு பூஞ்சோலைக்குச்சென்று மலர்கொய்து விளையாடி பின்னே ஒரு வாவியிலிறங்கி நீராடினர். ஒரு சுழற்காற்றடித்து அவர்கள் கரையில் வைத்துப்போன ஆடையைக் கலக்கிவிட்டது. நமது குருமகளாகிய தெய்வயானையுடைய ஆடையைச் சன்மிஷ்டை கட்டிக்கொண்டாள். தெய்வயானையோ தன்னுடையைக் கேட்க அதற்குச் சன்மிஷ்டை தெய்வயானையை பலகொடுஞ்சொற்களால் வைது கிணற்றில் தள்ளிவிட்டுப் போ

ளுள். பின்பு தெய்வகதியாக வேட்டையாடவந்த பூலோகத்தரசனொருவன் அக்கிணற்றில் வீழ்ந்திருந்த தெய்வயானையைக்கரையேற்றிப்போனுன் என்று எனக்குத் தெய்வயானை சொல்லி, என்பிதாவுக்கு மாத்திரம் இச்சேதியைத் தெரிவியென்று சொல்ல, நானப்படியே சுக்கிராசாரியிடத்திலேதெரிவித்தேன்; சுக்கிராசாரியரோ தன் மகள் இருக்கிற அப்பூஞ்சோலையிலேயேயிருக்கிறுர். இதுதான் நடந்தசமாச்சாரம்; என்னேடு வந்தால் நான் சுக்கிராசாரியர் இருக்குமிடம் காட்டுகின்றேனென்று வணங்கிச் சொன்னுன். அவ்வாறு அவன் சொல்லக்கேட்டு ஆனந்தக்கடலிலழுந்தி அவனைத்தொடர்ந்து சென்று முன்கண்ட அச்சோலையிற்காணுமல் சுற்றித்திரிந்துபின்பு ஒரு பர்ணசாலையில் தன் மகளாகிய தெய்வயானை தந்தைக்குரிய பணிவிடைசெய்துவரச் சுக்கிராசாரி தவஞ்செய்திருப்பதுகண்டு ஓடோடியும்வந்து வணங்கி அடியற்ற பனைமரம்போல் வீழ்ந்து துதித்து வாய்புதைத்துக் கைகட்டிக் கொண்டு மிகுந்த பயபக்தியோடு நின்று 'சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் - பெரியோராயிற் பொறுப்பதுகடனே' என்றபடி தங்கள் விஷயத்தில் அபராதஞ்செய்தவளோ மிகவும் இளமைப்பருவமுடைய பெண்குழந்தை, இதனையறிந்திருந்தும் இவ்வாறு தேவரீர் கோபங்கொண்டிருப்பது தகுதியாமா? அப்படியே என்மகள் அக்கொடிய குற்றஞ்செய்தாளென்று அடியேனுக்கு அறிவித்தால் நான் தண்டியாமலு மிருப்பேனு? அரசனுக்கு அயலார், பகைவர், உறவினரெனவுமுண்டா? இதனைத் தேவரீர் அறியாமலு மிருப்பதா? என்று சொல்லிப் பின்னுஞ்சொல்லுகின்றுன்.

தாங்கள் என்னைவெறுத்தால் என் அரசாட்சியும் நிலைபெற்றிருக்குமா? எனக்குப்பகைவராகிய தேவர்கள்என்னைநாசப்படுத்தமாட்டார்களா? என் செல்வமும், ஆண்மையும், கல்வியும், பெருமையும், வெற்றியும் உம்முடையனவேயன்றே ? என்குருசிகாமணியே என்னகரத்திற் கெழுந்தருளிவந்து என்னைக்குலத்தொடுங் காக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அச் சுக்கிராசாரியோ தன்மாணுக்கனுகிய விடபன்மாவினது வேண்டுகோளுக் கிசைந்து தன்மகளாகிய தெய்வயானை அனுமதியால்தான் வரவேண்டுமென்று குறிப்பித்தான். அதுகண்டு விடபன்மாவும் குருபுத்திரியாகையால்தெய்வயானைபாதத்தில் வீழ்ந்து வணங்கி சன்மிஷ்டையோ மிகவுஞ் சிறுபெண். அவளறியாமற்செய்த பிழையத்தனையும் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். தெய்வயானையோவிடபன்மாவைப்பார்த்துக் கண்களில் நெருப்புப்பொரிபறக்க உன்மகள்செய்தகுற்றத்திற்குக் கொலைசெய்தேயிருக்கவேண்டும், நீமிகவும் அரியதவஞ்செய்துபெற்ற பெண்ணுகையால் மனம்பொறுத்தேன், நீயேவந்து வேண்டிக்கொண்டமையால் ஒரு தண்டனை விதிக்கின்றேன்; அத்தண்டனையாவதுஉன்மகளும், உன்மகளுக்குரிய தோழிகளும் எனக்குக் குற்றேவல் செய்பவராயிருக்கவேண்டும், அவ்வாறு செய்து வருவாரேயாயின் அதுவே உயிர்க்கொலை செய்யுந் தண்டனையைப் பார்க்கிலும் என்மட்டங்கதிகமென் றெண்ணவேண்டுமென, அவ்வாறே செய்விக்கின்றேன் என்னகரத்துக்கெழுந்தருள வேண்டுமென்று

வேண்டிக்கொண்டு நின்றான். தெய்வயானை அதற்கிசைந்து தன்பிதாவுடன் முன்போலவே விடபன்மாவினுடைய நகரமே போய்ச்சேர்ந்தாள்.

விடபன்மா தன்மகளையழைத்து நீ குருபுத்திரியென்றுசிறிதுமெண்ணாமல் பாழ்ங்கிணற்றில் தள்ளிவிட்டு வந்தமையால் நீ யக்குற்றத்தின்பொருட்டு பணிப்பெண்ணாயிருக்கவேண்டுமெனக் கட்டளையிட்டு அவள் தோழியருடனனுப்பினான். சன்மிஷ்டையும் தன்தோழியருடன் அவ்வாறே வந்து தெய்வயானையை வணங்கிப் பணிப்பெண்ணாயினாள். இவ்வாறு சிலகாலஞ் சென்றபின் ஒருநாள்தெய்வயானையும்தன்பணிப்பெண்ணாகிய சன்மிஷ்டையுடனும், அவள் தோழிமாருடனும் புறப்பட்டு ஒருபூஞ்சோலையைக்கண்டு மலர்பறித்து விளையாடிக்கொண்டிருந்தனர். அச்சோலையின் சிறப்பினையும், பரிமள சுகந்த வாடைவீசுவதையுங்கண்டு யயாதிமகாராசன் இதென்ன விநோதமான காட்சியுடைத்தா யிருக்கின்றதென்று அதனைமுழுதுஞ் சுற்றிப்பார்த்துக்கொண்டுவந்தான். அப்படி வருகிறபோது தெய்வயானையையும், சன்மிஷ்டையையுங் கண்டான். அவர்களில் தெய்வயானையைத்தான் பாழ்ங்கிணற்றிலிருந்து எடுத்துவிட்ட பெண்ணென்பதனையு முணராமல் இவர் நீராமகளோ, மலையில் வசிக்குந்தெய்வமோ, திருமகள் அமிசாவதாரமோ பார்மகள் அமிசாவதாரமோ, இந்திராணியின் அமிசாவதாரமோ, என்று நினைத்து இப்படிப்பட்ட மாதரை யொருநாளுங் கண்டதில்லையேயெனத் திகைத்து நீங்கள் யாரென்று வினவினான். முன்னமே இந்த யயாதிமகாராசனையே மணஞ்செய்துகொள்ளவேண்டுமென்று கருணைக்கடலாகிய கிரிராசகன்னிகையை நோக்கி நோன்பு நோற்பதினால் விரைவிலெழுந்துவந்து அரசனுக்கு ஓராசனமளித்து அதிலிருக்கச்சொல்லி, அர்க்கிய, பாத்திய முதலிய சோடசோபசாரமுஞ்செய்து அரசனை நோக்கி என்னை யறியீரோஎன்றாள்; அதைக்கேட்டு அரசன் புன்னகையுடனின்றான். அதற்குத் தெய்வயானையும் நின்புயலனைய கையால் பாழ்ங்கிணற்றினின்று மெடுத்தவரல்லீரோ! அரசருக்கித்தனை மறதியு முண்டோ! நான் சுக்கிரபகவான்மகள்; இதோநிற்கின்றவள் விடபன்மா என்னும் அரசன்மகள்; இவள் இப்போது எனக்குப்பணிப்பெண்ணாயினாள்; இவளையும் என்னையும் மணஞ்செய்துகொள்ளுமென்று வேண்டினாள். அரசன் இச்சொல்லைக்கேட்டுத் திப்பிரமைகொண்டு அரசன் அந்தணர்மாதை மணம்புரியலாகாதென்று அறநூல் கூறுகின்றது; நான் அறநூல் விருத்தமாக நடக்கக்கூடாதென்று மறுத்தான். தெய்வயானையும் எவ்வாறேனும் நீர் மணம்செய்து கொள்ளவேண்டுமென்றுவேண்டயயாதி மகாராசனும் சற்றுநேரஞ்சிந்தித்து உன்தந்தை அக்கட்டளையிட்டால் மறுக்கேன், அவரிசைந்தால் செய்துகொள்வேனென்றான். தெய்வயானையும்சுக்கிரபகவானை வருவித்து அவருக்குச் சோடசோபசாரஞ்செய்து ஆசனமொன்றி லிருக்கச்செய்து என்னைக்கிணற்றிலிருந்து தன்கையாலெடுத்த மகாபுருடன் இவ்வாசனேயாகும்! இவ்வரசனையே நாடி நான்கவுரிவிரத நோன்பை நோற்றேன். இவரை மணஞ்செய்வியுமென்று வேண்டச் சுக்கிரபகவானும், யயாதியை நோக்கி அரசன் அந்தணர்மாதை மணம்புரியலாகாது

அயினும் என்மகளுக்கு வியாழபகவான் மகனாகிய கஜனிட்ட சாபமொன் றிருக்கின்றது. அது அரசனையே விவாகஞ்செய்துகொள்ள வேண்டுமென்பதே. ஆகையால் இவளைமணஞ்செய்துகொள்ளுமென்று அவ்விடத்திலேயே சகல வஸ்துக்களையுமழைப்பித்துப் பச்சைப்பந்தரிட்டு விடபன்மாவையும் வருவித்து நல்ல சுபமுகூர்த்தத்தில் மணஞ்செய்வித்துப் பின்பு சன்மிஷ்டையையும் அவ்வரசனுக்கே மணஞ்செய்வித்தான். அரசனும் தன் மனைவியர் இருவருடன் சுக்கிரபகவானை வணங்க, சுக்கிரபகவான் அசுனைநோக்கி என் மகள் அந்தணர் மாதாகையால் நீயிவளைவிழைந்திருக்கலாமேயன்றிமற்றொருவரையும் விழையலாகாது. இச்சன்மிஷ்டையிடத்தே இன்பமகற்றி மற்ற போகங்களை யனுபவிக்கலாமென்று கட்டளையிட்டு இவர்களோடு சுகசீவியாய் வாழ்கவென்று ஆசிர்வதித்தனுப்பினான். யயாதிமகாராசன் சுக்கிரபகவானிடத்தும், விடபன்மாவிடத்தும் விடைபெற்றுச்சென்று தன்னகரஞ்சேர்ந்து நகரமாந்தர்களுக்கு விருந்தளித்து அந்தப்புரத்தில் சன்மிஷ்மைக்குத் தனிவீடொன்றமைத்து அதிலிருத்தித் தான் தெய்வயானையோடு அன்றில் விழைபோக மயர்ந்தான். இவ்வாறு நடந்துவருநாளில் தெய்வயானையும் தானும் கொஞ்சிக்குலாவி விளையாடிக்கொண்டிருக்கையில் தெய்வயானையோ நித்திரை செய்துவிட்டாள். அரசனோ நித்திரைவாராமல் வருந்தித் தான்வாழுஞ் சிங்கார மாளிகையிலுள்ள பூங்காவை நோக்கிச்சென்றுலாவி வருகையில் அப்பூங்காவில் மல்லிகை, முல்லை, இருவாட்சி, சண்பகம் முதலிய பூங்கொடிகள் மலர்சொரிந்து மணம்பரப்பவும்; இளந்தென்றல் வீசவும், பூரணசந்திரோதயத்தால் சந்திரிகை பாற்கடலின் அலைபோல் விளங்கவுங் கண்டு அன்றிரவுமுழுதும் விநோதமாக உலாவிவருவதே நலமெனத்துணிந்து உலாவிவருவானாயினான்.

இப்படி அரசன் உலாவிவருந்தருணத்தில் சன்மிஷ்டையோ அரசன் தன்னை எவ்வளவு சுகத்திலிருக்கினும் புருஷசுகமொன் றில்லாமையால் நெஞ்சநொந்து இதற்குக்காரணம் தெய்வயானையைக்கிணற்றில்தள்ளினமையே, இதுவோநமதுபிழையேயன்றி வேறல்லவென்பதையும்எண்ணிநமக்கு சகல பாக்கியமிருந்தும் பயனென்னவென்று நைந்துநைந்து நெக்குருகி நமக்குநாயகன் அருகிலிருந்தால்சுகமனுபவிக்கலாமேயென்று வருந்துகையில், ஆரவங்கண்டு இவ்விடத்தில் அரசனொருவனேயன்றி வேறொருவரும்வரக்கூடாதே, அப்படிப்பட்ட இவ்வந்தப்புரத்தில் அரசன்வரக்காரணமென்ன! நாம்கொண்டகாமவெறியோ! அல்லது அரசனே உண்மையாக வந்தானோ! அறிவோமென்றுபுறப்பட்டுப்பார்க்கையில்அரசனைகவேயிருக்கக்கண்டுவணங்கி, நானோ அசுரகுலத்தரசன்மகள்! நான்பரம்பரையில்பணிப்பெண்ணல்ல, உமக்கு நான்மனைவியே, காலகதியால் தெய்வயானைக்குப்பணிப்பெண்ணாக என் கொடிய வினையே செய்ததுஎன்றுசொல்லிக் கலவிக்குறிப்புணர்த்தி வருத்த, அரசன் உன்னைப்புருஷபோகமொன்று ஒழித்து மற்றெல்லாச்சுகமனுபவிக்கக் கட்டளையிட்டிருக்கின்றார். 'மூத்தோர்சொல் வார்த்தை யமிர்தம்' என்றபடி நான் மறுப்பது தகுதியேயல்ல, என்அரசாட்சிக்குப்பழுது

வரும் என்று மறுத்துக்கூறிவினன்; அதற்குச் சன்மிஷ்டையோ அரசனை நோக்கி அந்தணர் முன்னிலையினும், பசுவின்முன்னிலையினும், ஒருயிர்க்கிடையூறுவந்தபோதும் கட்டுரை தவறினல் குற்றமில்லையென அறநூல்விதித்திருக்கின்றதே, ஆகையால் என்னைக் கலந்துபோமெனவேண்டினள்; அரசன் அவ்வளவுசொல்லியும் கேளாமல்மௌனமாகவேயிருந்தான். சன்மிஷ்டை அரசன்குறிப்பறிந்து அரசனைநோக்கி எனக்கொருவரந்தரவேண்டும், அதாவது என் உயிரையொத்த நட்பினையுடைய தெய்வயானை புத்திரபாக்கியம் பெற்றிருக்கின்றாள்; அவ்வாறே எனக்குமுண்டாம்வண்ணம் பாலியுமென்று வேண்டினள். அதற்கு அரசன் சிந்தைநொந்து மோசம் நேர்ந்ததே! இனி என்செய்வதென்று சிந்தித்து நாம் இவள்கேட்டதற்கு மறுத்தால் தருமவிரோதமாகின்றது, அல்லது கொள்வோமென்றாலும் பெரியாரைப் பிழைத்தமையுமுண்டாகும், எவ்வாறேனும்பெரியாரெனப்படுவோர் தம்மைபடுத்தவரைக்காப்பதே விரதமெனக்கொண்டுவாழ்கின்றனர். நாம் இவளைக்கூடிப் புத்திரபாக்கியம் உண்டாக்குவதே நலமென்று துணிந்து அவளை அச்சோலையிலுள்ள சந்திரகாந்தக்கல்லினல் அமைத்தமாளிகையிற் கொண்டுசென்று கூடிக்கலந்து பின்புதெய்வயானை படுத்திருந்த அறையில் படுத்துத்தூங்கி இவ்வாறு சிலகாலம் நடந்துவந்தான். 'அறைவீட்டுக்கதை அம்பலத்திலிழுத்துவிடும்' என்ற பழமொழிபோல அரசன் இவ்வாறு களவில்செய்துவரும் கலவிப்புணர்ச்சியை வெளிப்படுத்த சன்மிஷ்டையோ கருக்கொண்டாள். இதனையுணர்ந்த அரசனேபயந்து இனிஎன்னசெய்வோம்! யாரிடத்திற்சென்று முறையிடுவோம்! வரவேண்டியது வந்தேதீரும், நமது மனைவியறிந்தால் தன் பிதாவாகிய சுக்கிரபகவானுக்கறிவிப்பாள். அவர் ஏது சாபமிடுவரோஎன்று பயந்திருந்தான். சன்மிஷ்டையோ நல்லசுபமுகூர்த்தத்தில் ஒரு புத்திரனைப்பெற்றாள். தெய்வயானையோ அதனைமகோற்சவமாகக்கொண்டாடினள். ஒருநாள்தெய்வயானை நமதுபணிப்பெண்ணாகிய சன்மிஷ்டையோ கற்புடையவளாயிற்றே! இவ்வளவுகாவலுள்ள இவ்விடத்திலிருந்துகொண்டு எவ்வாறு மைந்தனைப்பெற்றாளென்று எண்ணி நாம் நேரேபோய் அறிவோமென்று துணிந்து சன்மிஷ்டையிருக்கும் இடத்தையடைந்து சன்மிஷ்டையே நீஎவ்வாறு மைந்தனைப்பெற்றாய்! உள்ளது உள்ளபடி சொல்லவேண்டுமென்று கேட்கச் சன்மிஷ்டையும்நடந்தவரலாற்றை உள்ளவாறுசொன்னல் அரசனுக்குத் தீமைவருமென்றெண்ணி ஒருபோக்காகச் சொல்லிவிடுவதே நலமென்று அன்னாய்! இவ்விளமரச்சோலையில் நான்வெளிப்பட்டுவந்தேன், அப்போது ஒருமுனிவர்பெருமான் எழுந்தருளிவந்தனர். அவரைவணங்கி ஐயனே! எனக்குப் புத்திரபாக்கியமுண்டாகவேண்டும் என்று வேண்டினேன், அவர் என்கையில் திருநீற்றையளிங்கொடுத்து இதனையுட்கொண்டால் உனக்குப் புத்திரபாக்கியமுண்டாமென்று சொல்லிப்போயினர், நான் அவ்வாறே உட்கொண்டுகருக்கொண்டேன், இதுதான் வரலாறென்று பட்டமஹிஷியாகியதெய்வயானைக்குஅறிவித்தாள், தெய்வயானையும் தன்மக்களைப்போலச் சன்மிஷ்டை மகனையும் சீராட்டிவரக்கட்டளையிட்டாள். இதுநிற்க,

அரசனே சன்மிஷ்டையை விடாமல் முன்போலவே இன்பமனுவித்துக்கொண்டுவர அவளும் இரண்டுமக்களை மீட்டும்பெற்றாள். தெய்வயானை இதுகாரணமென்னவென்று வினவ, சன்மிஷ்டைமுன்போலவேசொல்லக் கேட்டுத் திரும்பிப்போனாள். இவ்வாறுபோயினபின்பு ஒருநாள்இம்மூவரும் வீதியில் விளையாடிவர உப்பரிகையின்மேலிருக்கும் தெய்வயானை இவர்கள்மிகச் சுந்தரவடிவுடையாய் அரசனதுவடிவத்தை ஒத்திருக்கக்கண்டு அவர்களை வரவழைத்து நீங்கள்யார்! உங்கள்தாயார்! தந்தையார்! உள்ளவாறு சொல்லுமென்றுகூற, அச்சிறுவரும் தங்களுடையதாய்சன்மிஷ்டையென்றும், தந்தை இம்மகாராஜனென்றும் மறையாமற் கூறிநின்றனர். அரசனுந் திகைத்துநின்றான். தெய்வயானை இம்மொழிகேட்டு வருந்தி தன்னருகிருந்தவரால் சிவிகைகொண்டுவரச்சொல்லித்தன்பிதாவிடத்திற் சென்று நடந்த வரலாற்றையுஞ் சொல்லி முறையிட்டாள். சுக்கிரபகவானும் திடுக்கிட்டு என்செய்வதென்று வருந்தி அரசனிடத்தில் அதிகவேகமாகப் புறப்பட்டுவந்து அரசனைக்கண்டு நீ என் கட்டளையைமீறி நடக்கலாமோஎன்று கடுமொழிகூறினான். அதற்கு அரசனும் நடந்த வரலாற்றை ஒன்றுமொழியாமல் சொல்லி வணங்கி நின்றான். சுக்கிரபகவானும் கோபங்கொண்டு நீ இன்றுமுதல் வார்த்திகதசையை யடையக்கடவையென்று முன்பின்யோசியாமல் சபித்தான். பின்பு சுக்கிரபகவானை அரசன்பலமுறை வணங்கிவேண்டக் கோபந்தணிந்து நான்கொடுத்த சாபத்தை யனுபவித்துத்தான்தீரவேண்டும்; ஆயினும் இதற்கென்செய்வதென்றுநினைத்து நீவேண்டிக்கொண்டமையால் உன்மக்கள் யௌவனதசை யடையும்பரியந்த மனுபவித்திரும், அதன்பின்பு உன்மக்களுள் ஒருவனுக்கிந்த வார்த்திகதசையை யொப்பித்துச் சுகமனுபவித்து, எந்தமகனிடத்து உமதுவார்த்தினிசையையொப்பித்தீரோ அவனுக்கே யௌவனதிசையையுங் கொடுத்துவிடுவதுமன்றி உம்மரசையுங்கொடுத்துத் தவஞ்செய்யச்சென்று ஈறிலின்பமடையுமென்றுசொல்லி, பின்புதெய்வானையை நோக்கி நீ சிறிதும்பொறுக்காமல் என்னிடத்தேவந்து முறையிட்டமையால் நான் முன்பின்யோசிக்காமல் இக்கொடிய சாபமிட நேர்ந்ததுஎன்றுசொல்லித் தன்மகளைவெறுத்துக்கொண்டு தன்னிருப்பிடஞ்சென்றான்.

இங்கே அரசனே தனக்குச் சுக்கிராசாரியனிட்ட சாபத்தினால் உடல்முழுதுந் தளர்ந்துநரைதிரை நேர்ந்து மூப்படைந்துஇருமிஒழுகியகோழையுடையவனாய்த் தனக்குவாலிபம் நேர்வதே இதற்கு ஔடதமெனத் துணிந்து வெகுநாள் வருத்தமடைந்து தன்மக்கள் யௌவனதசை யடைவதெப்போதோஎன்று பேங்கியிருந்தான்.

இப்படி சிலகாலஞ்சென்றபிறகு சன்மிஷ்டைமக்களும், தெய்வயானைமக்களும் யௌவனதசையை யடைந்தனர். யயாதிமகாராசன்தெய்வயானைமக்களைநோக்கி உங்கள் யௌவனதசையை எனக்குக்கொடுத்து என்வார்த்திகதசையைச் சிலகாலம் பெற்றிருங்கோள், யானே சிலகாலஞ் சென்ற

பின்பு மீண்டும் உங்களுக்கு யௌவனதசையைக் கொடுத்துவிட்டு வார்த்திகதசையை யேற்றுத்தவஞ்செய்யச் செல்வேனென்றனன், அதுகேட்டு அம்மக்கள் இருவரும் ஒருவர்முகத்தை ஒருவர்நோக்கிஇதென்னவிபரீதம், விந்தையினும் விந்தையாயிருக்கின்றது! அரசனிடத்து வார்த்திசமேற்றுத் துன்பத்தை யனுபவித்தும் அரசனிடம் சாபமேற்று இன்புறுதலே நலமெனத்துணிந்து, அவரைநோக்கி நீர் சகலபாக்கியங்களையும் அனுபவித்திருக்கிறீர், நாங்களோ பால்மணம்மாறாச்சிறுவர்கள்; இன்னும் யாதொரு சுகத்தையும் அறியமாட்டோம், ஆகையால் எங்கள்விஷயத்தில் மன்னிக்கவேண்டுமென்றனர். 'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை' என்றபடி தந்தைசொல் கடவாதிருப்பதே புத்திரராவார்க்கு உரியகடமை என்றுசொல்லிக் கோபங்கொண்டு, நீங்கள் அரசரிற்பிறந்திருந்தும் அரசரில் வளர்ந்திருந்தும் அரசர்க்குரிய குணமில்லாமையால் வேடராவீரெனக் கடுஞ்சாபமிட்டான். அவர்கள் அவ்வாறே அச்சாபமேற்று வனத்திற்சென்று வனத்தில் வசிக்கும் வேடர்கட்குத் தலைவராய் வாழ்ந்திருந்தனர். அரசனோ சன்மிஷ்டையினிடமாகத் தோன்றியமக்கள் மூவரையும்கூவியழைத்து உங்களிலொருவர்என்னுடைய வார்த்திகதசையை ஏற்று உம்முடைய யௌவனதசையை எனக்குக் கொடுமெனக்கேட்டனன். புரூரவன்என்னும் மூத்தகுமாரனொழியமற்றை இருவரும் ஒப்பாமல் மறுத்தனர். அரசன் அவர்களில் ஒருவனைக் கள்விற்போனாகவும், மற்றவனை மீன் விற்போனாகவும் ஆகவெனச் சபித்தனன் அவ்விருவரும் அவ்வாறே ஆயினர்.

மூத்தமகனோ தந்தையை வணங்கிநின்று நாம் தந்தைசொற்படி நடப்பதே கடனெனத்துணிந்து நம்மைப்பெற்றுச் சீராட்டிவளர்த்ததற்கு இதுதானோ பேருதவியென்று எண்ணித் தந்தையின் வார்த்திகத்தை யேற்றுத் தன்யௌவனதிசையை யுதவினான். அரசனோ அவ்வாறு அவனிடத்தே யௌவனமேற்றுத் தான் இன்பநலம் அனுபவித்துச்சிலநாள்சென்றபின்பு அவனையழைத்து அவனுடையயௌவனதசையையுங் கொடுத்ததுமன்றித் தன் அரசையுங்கொடுத்து நான் தவஞ்செய்து மறுமையின்பமடையக் காட்டில் செல்கின்றேனென்று விடைபெற்று தெய்வயானையையும், சன்மிஷ்டையையும் மகன்பா லிருத்திவிட்டுப் பாதுகாக்கவமைத்து, தான் மரவுரி தரித்துக்கொண்டு, காட்டிற்சென்று முனிவர்கள் அருள்கொண்டு அவர்களும் நம்மாலும் இவ்வளவுகொடிய தவஞ்செய்வதரிதென்று சொல்லும்படி தவஞ்செய்து நின்றான். இவ்வாறு அரசன்தவஞ்செய்வதையறிந்த பிரமதேவன் அவனைக்கிட்டி உனக்கென்னவேண்டுமோ அவ்வரந் தருகின்றேனென்றுசொல்ல, அரசனோபிரமனைவணங்கி நின்றுதாமரைபீடத்தொருவனே! சலசநாபன்சிறுவனே! யென்று துதித்து நான் எவ்வுலகுஞ்செல்ல நினைக்கின்றேனோ அவ்வுலகத்துக்கெல்லாஞ்சென்று அங்குள்ளவினோதக் காட்சிகளைக் காணவும், உமது சத்தியலோகத்திலே என்றுமிருக்கவும், வேண்டுமென்று கேட்டனன. பிரமதேவனோ அவ்வாறு அளிக்கப்பெற்று சத்தியலோகஞ்சென்று அங்குள்ள இன்பமனுபவித்திருந்தான். இவ்வாறிருக்குநாளில் ஒருநாள் தான் இந்திரலோகஞ்செல்லக்கருதி, இந்திரலோகத்துக்குத்

தான்பிரமதேவன் வரத்தாற்பெற்ற விமானமேறிச்சென்றான். தவத்திற்சிறந்த யயாதிமகாராசன் வருவதுகண்டு இந்திரனோ நாமிவனுக்குத் தக்கமரியாதைசெய்யவேண்டுமென்று பத்தடிதூரஞ்சென்று அழைத்து வந்து தான் வீற்றிருந்த சிங்காதனத்தையொத்த ஆசனமொன்றிடுவித்து, அரசனே உமது கருத்திற்கிசைந்த காலமெல்லாம் இவ்வுலகத்திலிருக்கலாமென்று சொல்ல, அரசனும் அவ்வாறே இந்திரலோகத்திலிருந்தான். ஒருநாள் அரசன் கருத்தைச் சோதிக்க நினைத்து அரசனே! நீயோ மண்ணுலகத்திலிருக்கிறகாலத்தில் அசுரகுருவாகிய சுக்கிரபகவான் மகளையும், அசுரகுலமன்னவனாகிய விடபன்மா மகளாகிய சன்மிஷ்டையையும் மணஞ்செய்து இன்பநலமனுபவித்துப் பின்பு படைத்தற்றொழில் கருத்தாவாகிய பிரமதேவனைநோக்கித் தவஞ்செய்து எவ்வுலகங்களையும் அனுபவிக்கும் பெருந்திருவடையப்பெற்றாய், நின்போற்சிறந்தவர் யாவரென்று வியந்துசொல்லி, தவமென்பது உன்னிடத்தேதான் காணலாமென அரசனோ "தமரேயுந்தம்மைப் புகழ்ந்திருக்கும் போழ்தில்-அமராததனை யகற்றலே வேண்டும் - அமையாரும் வெற்ப வணியாரே தம்மைத்-தமவேனுங் கொள்ளாக் கலம்," என்ற கருத்தறியாது இந்திரனைநோக்கி, என்போல்தவஞ்செய்தாரை இம்மூவுலகங்களில் எங்கும் காணப்பெற்றிலேன், இருந்தால் காட்டும் என்பதைக்கேட்ட இந்திரன் கோபங்கொண்டு தன்னைத்தான் ஒருவன்புகழவொண்ணாது, அவ்வாறு புகழ்ந்தால் அவன்செய்த தவமெல்லாங்குறையுமென்று அறநூல் விதித்திருக்கின்றது; அதையறிந்தும் உன்னை நீயே மதித்துப் பேசிமகிழ்ந்தாய், அதனால் உன் தவம் குறைந்துவிட்டது; நீ வேண்டிக்கொண்டபடியே அந்தரலோகத்திலிரு என்று கட்டளையிட்டான். அவ்வாறாகத் தேவதூதர்வந்து நெருங்கி அரசனைஅந்தரலோகத்திற்குக் கொண்டுபோய்விட 'வால்கொழுப்புச் சிலையால்வடிந்தது' என்றபடியே தன்னையே நிந்தித்துக்கொண்டு தூதரோடும் அந்தரலோகத்தை யடைந்தான்.

அந்தரலோகஞ்சென்ற யயாதி அந்தஉலகின்காட்சிகளையெல்லாம்பார்த்துவருகையால் ஓர்பால்இரண்டுமகாபுருஷரைக்கண்டு நீங்கள்யார்?என்ன தவஞ்செய்து இவ்வுலகத்தையடைந்தீர் உங்கள்வரலாற்றைஎனக்குச்சொல்லவேண்டுமென்றுவினவினான். அதற்கவர்கள், நாங்கள்சந்திரகுலவரோதயனாகிய யயாதிமகாராஜன் தௌகித்திரர், எங்களுக்குத் தபதிமக்கள் என்று பெயர்; நாங்கள் ஆத்மலாபத்தின் பொருட்டே அருந்தவஞ் செய்தோம், எங்களுக்கிவ்வுலகம் கிடைத்ததென்றனர். அதுகேட்டுஅரசனும் நானே யயாதிமகாராஜன், உங்களைக்காணப்பெற்றது என் தவப்பயனேயாகும் என்று தன்வரலாறுசொல்லி அவர்களைவாரித்தழுவி உச்சமோந்து முத்தமிட்டு ஆதரணைசெய்தனன். தபதிமக்களோ அரசனைநோக்கிநீரோ தவஞ்செய்யவனத்திற்சென்றீர், இதுவரையிலும் எந்தவுலகத்திலிருந்தீர், அந்தவரலாற்றைச் சொல்லவேண்டுமென்றுவருந்திக்கேட்டனர். யயாதிமகாராசன்தான்தவஞ்செய்ததுமுதல் அந்தரலோகமடைந்ததுபரியந்தமாகிய தன்வரலாற்றை முழுதும்சொல்லத்தபதிமக்கள்கேட்டு எல்லாம் இறைவன்செயலென்று கூறித் தங்களுக்குப் புண்ணியம், பாவம், நால்வகை யாச்சிரமங்களின் இலக்கணம்

இவைகளை நன்றாகவிளக்கவேண்டுமென்றனர். அதற்குயயாதிமகாராசனும் கூறுகின்றான்.

புண்ணியமாவது பொய், கடுஞ்சொல், பொறாமை, கோபம் என்னும் நாற்குணங்களையுமொழித்துத் தம்மாலியன்றவரையும் பிறர்க்குபகரிப்பது. அவ்வாறு உபகரிப்பதனைத் தாமே செய்ததாகக்கொண்டால் பிறவிநேரும். பாவமென்பது அந்நாற்குணங்களையுமுடையராய்த் தம்மையடுத்தவர்க்கொன்றும் ஈயாமையும், தன்னூண்பெருக்கத்தான்பிறிதொருவூனுடம்பைவருத்தித்தின்னலும், குடிப்பிறப்பி னொழுக்கங்குன்ற நடத்தலுமுதலியவாம். நால்வகை யாச்சிரமமாவன:—பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பனவாம். பிரமசரியம்:—ஐந்தாண்டில் வேதவிதிப்படிமுப்புரிநூலணிந்து சற்குருவை வழிபட்டு வேதாகமங்களைக்கற்று பதினாறு வயது வரையிலும் அக்குருபரம்பரையிற் பிச்சையேற்றுண்டு அடைகாய்முதலியவற்றை யருந்தாமல் காலையுமாலையும் சூரியனையும், அக்கினியையும்,குருவையும் அன்பொடுபணிந்து மாதரைக் கனவிலும் நினையாமல் கருத்தைச் செவ்வையாக வைத்திருப்பது. கிருகஸ்தமாவது:—பதினாறு வயதின்மேல் தன் குலத்தின் வேறு கோத்திரப்பெண்ணை வேதாகமவிதிப்படி மணஞ்செய்து கொண்டு, அமாவாசை, பூரணை, மாதப்பிறப்புமுதலிய புண்ணியகாலத்தில் போகந்தவிர்ந்து அறத்தின்வழியே தேடியபொருளைத் தென்புலத்தார்,தெய்வம், விருந்து, சுற்றம், துறந்தார், துவ்வாதார், இறந்தார், பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசியென்னும் பதின்மருக்கும் பகிர்ந்தளித்து; விருந்தோம்பல், இன்சொல், அன்புடைமை, அருளுடைமை, புறங்கூறாமை,பொறையுடைமை, பிறனில்விழையாமை முதலியகுணமுடையராய்ப் பிறர்பொருளை யெட்டிக்காயென்றெண்ணி உலகநடையில்நடத்தல். வானப்பிரஸ்தமாவது மனைவியோடேனும், அல்லது மனைவியை மைந்தனிடத்திருத்தியேனும் விட்டு காட்டிற்சென்று மெய், வாய், கண், மூக்கு, செவிஎன்னும்ஐவாயின் வழியேவரும் ஐந்தாசைகளையுமொடுக்கி மனத்தை இந்திரியங்களின் வழியே செலுத்தாமல் கோபமுதலிய குணங்களை யொழித்திருப்பது. சந்நியாசமென்பது:—முற்றத்துறத்தல். அதுவானப்பிரஸ்தவொழுக்கமுழுவதுமடைந்து இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி என்னும் எண்வகையோகவுறுப்பினையுடையராயும், வாய்மையும் மனந்தூய்மையுமுடையராயும் ஆசையைநீக்கி இரும்புண்டநீர்போல் திரும்பாத வீடுபேறடைய முயலுதல் என்று இவற்றின் இயல்புகளையெல்லாம் நன்றாகவிளக்கினான். அதுகேட்டுத் தபதிமக்களும்இவைகளையெல்லாம் கேட்டு மகிழ்ந்தோம். கருவுற்பத்தியை நன்றாக விளக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அதற்கு அரசனும் கருவுற்பத்தியாவது மாதர் ருதுஸ்ஜ்வலையாகும் நாலாநாள் ஸ்நானம்செய்து அன்றிரவில் நாயகனைவிழைவது, அன்றுமுதல் ஏழுநாளில் ஒருநாள் கருத்தரிக்கும். அக்கருவுக்குத்தாய் உயிரானவாயு இலவலேசங்கலந்து உருவைவளர்க்கும். அதுதாயுண்ட அன்னபானாதிகளின் இரசத்தால் உயிர்த்திருக்கும். பிரகுதசவாயு

முரித்துத்தள்ளுவதனால் அக்கருவெளிவரும். அதுவெளிவந்தபின்பு பொறியைந்தினாலும் உலகவிவகாரம் மேற்கொள்ளும். இதுதான்கருவுற்பத்தியின் வரலாறு என்றனன். அருமையினுமருமையிருந்தள்ளது தறவறநெறி.இதனலன்றே தேவரும் 'தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார் மற்றவர்-அவஞ்செய்வா ராசையுட்பட்டு' எனவும் கூறியிருக்கின்றனர். இனி எங்களுக்குத் தறவறநெறி கிடைக்குமோவென்று வினவினர்கள். அதற்கு அரசன் உயிர்க்கொரு திங்குநேரினும் தாழாமல் மனத்தளர்ச்சியின்றித் தறவறநெறியினை மேற்கொண்டு சற்கருமஞ்செய்து வருவீராயின் கொண்டகருத்து நிறைவேறும்; பெறுதற்கரிய பேறும்கிடைக்கும். நீங்களேயல்லது உங்கள் முன்னோரும் ஈடேறுவர் என்றான். அதுகேட்டுத் தபதிமக்களும்மூதாதை சொற்படி கேட்டுச் சிந்தைதளராமல் தங்கள் கண்முன் எவ்வகைப்பட்ட மேலான விநோதங்கள் தோன்றினும் அவைகளை ஒருபொருளாக நினையாமலும் கலங்காமலும் அரிய முயற்சியில் இருந்தனர்.

இவர்கள் இவ்வாறு இருக்கையில் இதையறிந்த இந்திரன் தன் தூதவரைநோக்கி நீங்கள் அந்தரலோகத்திலிருக்கின்ற சந்திரவமிசத்தவர்களாகிய தபதிமக்களை யழைத்துவாருங்கோளென, அவர்களும் அவ்வாறே சென்றழைத்தனர். தபதிபுத்திரர்கள் எங்கள் மூதாதையாகிய யயாதிமகாராசன் வந்தாலல்லதுவர இசையோமெனமறுத்தனர். தூதுவரும் இச்செய்தியை இந்திரனுக்கறிவித்தனர். இந்திரனும் அவ்வாறே அழைத்துவரக்கட்டளையிட்டான். அவர்களுடன் யயாதியுடன் தபதிமக்களிருவரையும்விமானத்தில் ஏற்றிச் சுவர்க்கலோகஞ் சேர்த்தனர். இதனாலே உலகில் ஒருகுலத்தில் ஒரு சற்புத்திரன் தோன்றுவானாயின் அவனால் அக்குலத்தவரெல்லாம் நன்மையடைவாரென்பதனை விளக்கிற்று என்று வைசம்பாயனர் சொல்ல ஜெனமேஜெயமகாராஜன் மகிழ்ந்து இனி எனக்கு யயாதிக்குப்பின்வந்த சந்திரகுலத்தரசர் சரித்திரத்தைச் சொல்லவேண்டுமென்றனன். அதற்கு வைசம்பாயனர் யயாதிக்கு ஜன்மிஷ்டையினிடமாகத் தோன்றிய புரூரவன் செங்கோல் கொண்டு மனுநெறிதவறாமல் அரசாண்டு ஜெனமேஜெயனைப்பெற்றான்.அவன்பிராஜினனைப்பெற்றான். பிராஜினன் சையாதியைப்பெற்றான். சையாதி சார்வபூமனைப்பெற்றான். சார்வபூமன் ஜெயசேனனைப்பெற்றான். ஜெயசேனன் நயுதனைப்பெற்றான். நயுதன் குரோதனைப் பெற்றான். குரோதன் தேவாபியைப்பெற்றான், தேவாபி உருசகனைப்பெற்றான். உருசகன் அருசகனைப்பெற்றான், அரிசகன் மதவானைப்பெற்றான். மதிவான் சோடசமகாதானங்களையுஞ்செய்து தருமதேவதை யென்றுசொல்ல அரசாண்டுவருகையில் சரஸ்வதியென்னும் நதி பெண்ணுருவங்கொண்டு அவன்மேல் மையல்கொண்டு திடனென்னும் புத்திரனைப்பெற்றுப்போயினள். அத்திடன் காளிந்தியைமணந்து நீலனைப்பெற்றான். அவன் துஷ்டியந்தனைப்பெற்றான். அத்துஷ்டியந்தன் செங்கோல் ஓச்சித் தருமதேவதை நான்குபாதத்தாலும் நடக்க அரசாண்டுவந்தான்.

யயாதிமகாராஜன் சருக்கம் முற்றிற்று.

துஷ்டியந்தச் சருக்கம்.

துஷ்டியந்தமகாராசன் இளமையிலேயே விளைநிலத்திலிருந்த மலைகளை யெல்லாம் பறித்துப்பந்தாடித்திரிவான். குடிகளைப் பாதுகாக்குந் தன்மை யில் தாயினுஞ் சிறந்தவனுயிருப்பான். இப்படிப்பட்ட அரசன்தான்மகுடா பிஷேகம் கொண்டபின்பு முன்னிலும் ஆயிரமடங்கதிகமாய் மனுநெறிதவ றாமல் அரசுசெய்துவருநாளில் பதினெண்ணாயிரம் மந்திரிமாரும், ஆறுலட் சத் தறுபத்தாறாயிரம் பட்டவர்த்தனரும், முன்றுலட்சத்து முப்பத்திராயி ரம் மகுடவர்த்தனரும், மற்றுமுதியோரும், புரோகிதரும் புடைசூழ நவ மணிபதித்த சிங்காசனத்தில் கொலுவீற்றிருந்தான். அத்தருணத்தில்வாயிற் காவலாளிகள் அரசன்கொலுமுகத்தில்வந்து அரண்மனைவாயிலில் குடிகளெ ல்லாம் யாதோ ஒரு குறைகண்டு திரண்டுவந்திருக்கின்றார்களென்று அறி வித்தார்கள். அரசன் அவர்களை வருவிக்கக்கட்டளையிட அவர்களும்அரசன் சமுகத்தில் திரண்டுவந்து சேர்ந்தனர். வந்து சேர்ந்த குடிகளை அரசன் மரி யாதைசெய்து யோகக்ஷேமங்களை வினவினன். அதற்குக்குடிகளும் "குலம கட்குத்தெய்வங் கொழுநனேமன்ற - புதல்வர்க்குத் தந்தைதாயும் - அற வோர்க், கடிகளேதெய்வ மனைவோர்க்குந் தெய்வம் - இலைமுகப்பைம்பூ ணிறை" என்று நீதிநூல் கூறியிருப்பதனல் எங்களுக்கு உம்மையன்றிக் கதிகிடையாது. மேலும் அரசன் கடமையாவது 'மாநிலங்காவலனவான் மன்னுயிர்காக்குங்காலைத்-தானதனுக்கிடையூறு தன்னாற்றன்பரிசனத்தால்- ஊனமிகுபகைத்திறத்தாற் கள்வராலுயிர்தம்மால்- ஆனபயமைந்துந்தீர்த்த றங்காப்பனல்லனே.' எனப்பெரியோர் சொல்லியிருக்கின்றனர். நமதுநாட் டிலோ இக்காலத்தில் காட்டுப்பன்றிமுதலிய மிருகங்களால் விளைநிலங்கள் பயனழிந்தன. நாங்கள் உம்மைவந்து அடைந்து எங்கள் குறைசொல்லிக் கேட்டுக்கொள்ளவந்தோம், இதுதான் எங்கள் மனக்குறையென்றனர். உங் களுக்கு மிருகபயமில்லாதிருக்க இதோகாட்டிற்சென்று வேட்டையாடிவரு கின்றேன் போங்கோள் என்று அவர்களுக்கு உபசாரஞ்செய்தனுப்பினன். குடிகளும் அரசனிடத்தே உத்திரவுபெற்றுத் தம்மிருப்பிடஞ்சென்றனர்.

குடிகள் போனபின்பு அரசனுந் தன்மந்திரி, பிரதானி, சேனபதிமுத லியோரை அழைத்து நாம் வேட்டையாடிவருவோம்; வேடர், வலையர்முத லியோரை வருவிக்கவேண்டுமென்று கட்டளையிட்டுத்தான் அந்தப்புரஞ்செ ன்று வேட்டைமகுடமணிந்து பல ஆபரணம்புனைந்து வில், அம்பு, வாள், கதை, பிண்டி, பாலம், தோமரம், மழுமுதலிய ஆயுதங்களைத்தாங்கி வாயு வேகம், மனோவேகம் என்பன பின்னிடத்தக்க குதிரையேறிக் கோட்டை வாயிலைக்கடந்து புறப்பட்டான். இதற்குள் மந்திரிமார்முதலியோர் வேடர் வலையர்களையுமழைத்துக்கொண்டு தேர், யானை, குதிரை, காலாள் என்னும் நாற்படையும் சூழ அரசனோடுவந்து சேர்ந்து, பேரிகை, முரசு, டங்கா, மத் தளம், மிருதங்கம், டமரகம், எக்காளம், காளம், துத்தாரி, சின்னமுதலிய

வாத்தியங்கள் கடலோசை குறையும்படி முழக்கிக்கொண்டு மிகுந்தகளிப்பு
டன் பிரயாணப்பட்டுக் காட்டிற்சென்றனர். வேடர்களோமுன்னேசென்று
வலைகட்டி அக்காட்டிலிருக்கும் மிருகங்களை ஒரேமுகமாய் வரச்செய்தனர்.
அவ்வாறுவரும் சிங்கம், புலி, கரடி, செந்நாய், மான், பன்றி முதலியமிருக
ங்களைப்பார்த்து தங்கள் கையில்பிடித்திருக்கும் வில்லைவளைத்துநாணேற்றிக்
குணத்தொனிசெய்து அர்த்தசந்திரபாணம், முள்ளம்பு முதலியவற்றைத்
தொடுத்தெய்து கண்ட துண்டஞ்செய்துவந்து யானை, வரையாடு,முட்பன்றி
இவற்றை பல்லியத்தால் விழச்செய்து கண்டபேரண்டம் முதலிய பக்ஷிகளை
யும் சிரத்தை யறுத்துத் தள்ளியும் கால்மாடு தலைமாடாக்கி அழித்தனர்.
இவ்வாறு வேட்டையாடி வருகையில் அரசன்கையில் இறந்த மிருகங்களோ
எண்ணிறந்தவை. அவற்றில் ஒருமானானது அரசன்கையினின்றும்விடுபட்ட
அம்பினின்றும் இலக்குக்குத்தப்பி ஓடக்கண்டு அரசனும்தன்மந்திரிமாருட
னும் அதைத்துரத்தினான். அதுவோ மலை, வனம், வனாந்தரங்கடந்து ஒரு
பாலைவனத்தை யடைந்து அதையுங் கடந்து மறைந்தது. அரசன்பாலை
நிலத்தில் வரவே அந்நிலத்தின் வெப்பத்தால் உடன்முழுதும் வெயர்
த்து நீர்வேட்கையுடையவனாய் தன்னருகிலிருக்கும் மந்திரிமாரைப்பார்த்து
இந்நிலமோ எலிகட்குப் பாம்பின் படநிழலன்றி, வேறுகிடையாது,இப்படி
ப்பட்ட வனத்தில்வந்து அகப்பட்டுக்கொண்டோம், நமக்கோ தாகமிகுதி
யாயிருக்கின்றது, என்னசெய்வோமென்று சுற்றித்திரிந்து பார்க்கையில்
ஒரு புறத்தில் குளிர்ந்தகாற்று வீசக்கண்டான். அதனால் இவ்விடத்தில் ஒரு
தடாகமிருக்கலாமென்று துணிந்து அக்காற்று வந்தவழியே செல்ல, கங்கா
நதி தீரத்தைக்கண்டு அக்கங்காநதியிற் படிந்து இளைப்பாறி இருவினைப்பற்
றொழிந்தவர்போல் ஆனந்தக்கடலிலாழ்ந்து மந்திரியும் அரசனும் உலாவிக்
கொண்டிருந்தனர். இவ்வாறு உலாவிவருகையில் ஒரு மாந்தோப்பைக்கண்
டு பிரமானந்தங்கொண்டு இது முனிவர்வாசமாயிருக்கலாமென்று எண்ணி
க்கொண்டு போகையில் சிலமுனிவர் வரக்கண்டனர். அம்முனிவரை வண
ங்கி இது யாருடைய ஆச்சிரமமென்று அரசன் வினவினான் முனிவர்களோ
இது முற்றுந்துறந்த கண்ணுவ ரிருக்கையாகும். நீ நேராகச்செல்வீராயின்
அம்முனிவரைக்காணலாமென்றனர். அதைஅரசன்கேட்டு மந்திரியை நோ
க்கி யான் கண்ணுவரைத் தரிசித்துவருகிறேன், இவ்விடத்திலேயே யிருமெ
ன்று சொல்லிவிட்டுப்போனான்.

அப்படியே அரசன் சொல்லிவிட்டுப்போய்க்கண்ணுவர்ஆச்சிரமத்தை
யடைந்து முனிவரைவிசாரிக்கமுனிவர் ஒருகாரியமாகச்சென்றிருப்பதாய்க்
கேள்விப்பட்டுச் சற்றுநிற்கையில் திருமகள்போல் அழகிய திருமேனியை
யுடையாளைக்கண்டு நீர் யாரென்று வினவினான். அப்பெண்என்னைக்கண்ணு
வர்புத்திரியெனச்சொல்வர், சகுந்தலையென்றுபெயர் என்றனள். அதற்கரச
ன் கண்ணுவர் பிரமசரிய ஒழுக்கமுடையவராயிற்றே யென்றுகேட்க, அத
ற்குஅப்பெண்ணரசியும் இவ்வரசன்சிறப்பையும்,அழகின்திறத்தையும் சொ
ல்லக்கேட்டிருக்கின்றேம். அத்துஷ்யந்தமகாராசனே யாகுமென்றுவந்த

அரசனுக்கு ஓர் அழகிய பீடமளித்து அதிலிருக்கச்செய்து தான்மறைவில் நாணமாய் நின்றுகொண்டிருந்தாள். அரசன் அப்பெண்ணரசியைக்கண்டு காதல்கொண்டு அதனைத் தனக்குள்ள நல்லகேள்விச்செல்வத்தா லடக்கிக் கொண்டு அப்பெண்ணரசியை நோக்கிக் கண்ணுவர் புத்திரியாவது எவ்வா றென்று வினவினன். அதற்குஅப்பெண்ணரசியோ சிலநாள்முன் சதானந்த முனிவர் என்தந்தையாகிய கண்ணுவருக்கு என்வரலாறு சொல்லிக்கொண் டிருக்கையில் கேட்டுக்கொண்டிருந்தேன். அதாவது, கௌசிகனெனஉலகங் கூறும் விசுவாமித்திரமுனிவர் இமயமலையில் பெருந்தவஞ் செய்திருந்தனர், அத்தவத்தினல் இந்திரலோகம்முதலிய எவ்வுலகங்களும் தகிக்கப்பட்டுநிலை தடுமாறின. அதனை யறிந்த இந்திரன் மேனகையைப்பார்த்துநீசென்று விசுவாமித்திரனை யடைந்து உன் கண்வலையைவீசி அம்முனிவன் மனப்பறவையைப் படுக்கவேண்டும்; அதற்கு முயலவேண்டுகின்றேன்என்றான். அதற்கு மேனகையும் பிரமசிருஷ்ட்டிக்கு எதிராக வேறு விதிப்பேனென்று சொல்லும் அம்முனிவரை எவ்வாறு இசைவிப்பேன். அவர்கோபத்தின்வழியால் கரிந்துபொரிந்துபோவனே யல்லது வேறில்லை. யான் அபராத மேதுசெய்தேனே அறியேன். அதுபற்றி என்னை யனுப்புவதாகத் துணிந்தீர்போலும் என்று வணங்கி நின்றாள். இந்திரனே 'சிறுதுரும்பும் பல்லுக்குத்தவும்.' என்ற பழமொழிப்படி நீயேபோய் அந்தக் காரியத்தை முடிப்பையானல் யாவரும் சுகப்படுவர் என்று மறுபடியும் வேண்டி நின்றான்.

அதற்கு மேனகை இசைந்து தான் தன்வீட்டைச்சேர்ந்து நீராடி நல்ல ஆடையாபரண மணிந்து அம்முனிவன் தவஞ்செய்யும் இமயமலைச்சாரலை யடைந்து தென்றற்காற்றுவாடையில் நின்றாள். இவள் நிற்பதையறிந்துமன் மதன் இதுதான் நல்லசமயமென்று எண்ணித் தன்கையிலிருந்த கரும்புவில்லை வளைத்து வண்டாகிய நாணேற்றி முல்லை, அசோகு, நீலம், மா, தாமரை யென்னும் ஐவகையாகிய மலரம்புகளில் தாமரைமலரைத் தொடுத்து காம விச்சையை விளைவித்து நின்றான். விசுவாமித்திரமுனிவனே அப்பாணத்தால் மெய்சோர்ந்து தேள் கொட்டினவரைப்போல அயர்ந்துசித்தம்பிரமித்து தவநிலை யொழிந்து மேனகையணிந்த பரிமள நறுமலர்வாடை விசுவதுகண்டு அதன்மேல் கருத்தைச் செலுத்தினன். மன்மதனும் அதையறிந்து மிக்க காமத்தை விளைவிக்கும் மாம்பூவைத்தொடுத்தான். அதனல் பின்னும் அறிவழிந்து அப்பரிமளவாடை வீசும்வழியாகவே அம்மேனகையிருக்கும் இடத்தை யடைய, 'இந்தப்பூனையும் பால்குடிக்குமா' என்னும் பழமொழிபோல அம்முனிவனுடைய வரவைக்கண்டும் 'பாம்பிற்கொருதலைகாட்டி யொருதலை தேம்படுதெண்கயத்து மீன்காட்டும்' விலாங்குமீன்போலத் தன்நோக்கை விசுவாமித்திரமுனிவன்மேல் வைத்துப் பராமுகமாயிருந்தாள். அதுகண்டு பிரமன்படைப்பை யொழித்து வேறுபடைப்புண்டாக்குவேனென்று படைக்கத்துணிந்த விசுவாமித்திரமுனிவனும் 'உதவிவரைத்தன்றுதவியுதவி செய்யப்பட்டார் சால்பின்வரைத்து., என்று தேவர் சொல்லியிருக்கிறபடியால் இந்தவேளை யான் படுந் துன்பத்தையொழிப்பாயாயின் உனக்குச்சுகி

ர்தமுண்டாம், நானும் துன்பந்தவிர்வேனென்றான். அதைக்கேட்டு மேனகையும் நாம்வந்தகாரியம் பலித்ததென்று சிந்தைமகிழ்ந்து அம்முனிவன் கொண்ட விரகநோயை மாற்றினாள், உடனே நான் மேனகையினிடமாகத் தோன்றினேன். மேனகையும் அரமகளாகையால் என்னைவிட்டு மனம்துணிந்து போயினாள், விசுவாமித்திர முனிவரும் முற்றத்துறந்த முனிவராதலால் என்னிடத்தில் அன்பில்லாமல் தனக்கிசைந்தவிடத்தில் தவஞ்செய்யச் சென்றனர். என்னைச் சகுந்தலைப்பறவைகள் சூரியனொளிபடாமல் இறகினால் பந்தரிட்டுக் காத்துவந்தன. அவ்வழியில் நானழுதுகொண்டிருப்பதை நோக்கிக் கண்ணுவமுனிவரெடுத்து வளர்த்துவந்தனர். இதுதானென்வரலாறென்று சொல்ல, துஷ்டியந்த மகாராசனும் மிகவும் மனமகிழ்ந்து இவளோ கௌசிகராசனாகிய விசுவாமித்திரமுனிவருக்கும், அரமகளாகிய மேனகைக்கும் பிறந்தவளாகையால் நாம்கொண்ட கருத்துக்கிணங்கத்தகுமென்று துணிந்து சகுந்தலையைப்பார்த்துப் பெண்கள் நாயகமே! நீகௌசிகராசனாகிய விசுவாமித்திரமுனிவர் மகளாகையால் என்னைக் கூடத்தகுமென்று வேண்டினான்.

அதற்குச்சகுந்தலையும் அரசனைநோக்கி இதுவோ முனிவர்வாசம்; என்னைக் கூடுமென்று சொல்வதும் உமக்குத்தகுதியேயல்ல; அப்படி கூடுவோமென்று நினைத்தாலும் என்னையருமையாகச் சிராட்டி வளர்த்த கண்ணுவமுனிவருக்கு அருவருப்புண்டாகும் என்று சொல்லி நாணங்கொண்டு முகத்தை வளைத்து காலால் நிலத்தைக்கிளறிக்கொண்டு நின்றாள். அரசனே நீ ஏன் ஐயப்படுகின்றாய்; உலகத்தில் பெண்ணாகப் பிறந்திருந்தால் அவளுக்கு முன்னமே ஒரு கணவன் பிறந்திருக்கவேண்டுமென்பதேநியதம். பெண்ணைப்பெற்றவர்களும் பெண்ணைப் பெற்றுவளர்த்துத் தங்கள் வீட்டில் வைத்துக்கொண்டேயிருப்பாரைக்காணோம். கண்ணுவமுனிவரோ பிரமசரிய வொழுக்கத்திற் சிறந்தவர். அவரிடத்தில் வருபவர்களோ கேவலம்பிரமநிஷ்டர்கள். ஆகையால், உன்னை எந்த அரசனுக்காயினும் விவாகஞ்செய்துகொடுப்பரேயல்லாமல் சும்மாவைத்திருக்கமாட்டார். மேலும் நானோ இவ்வுலகமுழுதாளும் அரசர்பெருமான். 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கேவந்தது' போல எதிர்ப்பட்டேன் என் விரகநோயைத் தீர்த்தால் கண்ணுவமுனிவர் மனமகிழ்வரேயல்லது வேறன்று. இச்சமயத்தில் என்னை ஆதரிக்கவேண்டுமென்று வேண்டினான். அதற்குச் சகுந்தலையும் உலகத்தில் பெண்கள் மணஞ்செய்யாமல் கூடுவதும் மரபன்று. நீரோ மனுநூல் வரம்புகண்டவர். உமக்குத்தெரியாததொன்றுமில்லை, என்தந்தையாகிய கண்ணுவமுனிவர் வந்தவுடன் என்னை விவாகஞ்செய்வித்துக்கொண்டு என்னைக் கலந்து சுகமனுபவியுமென்றனள். அரசனே சகுந்தலையை நோக்கி நீ சொல்லியதும்சரியே. அறநூல்எண்வகைமணம் விதித்திருக்கின்றன. அவை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாச மென்பனவாம். அவற்றுள் காந்தருவமென்பது கொடுப்பாரும் கேட்பாருமின்றித் தலைவனும் தலைவியுமாகிய இருவரும் தனித்த இடத்தெதிர்ப்பட்டுக் கூடுவது. இக்காந்தருவமணங்கொண்டு இருவரும் அன்றில் விழைபோகம் அயர்வோம், இதற்கென்ன கட்டளை யென்றான். சகுந்தலையும் மெய்தான்

இப்போது கொண்ட காமநோய்தணிய இவ்வாறு பசப்பிக் கூடச்சொல்லு கின்றீர். பின்புஉன்னையார்கண்டவனென்றுசொல்லுவீரே! அப்போதுஎன் வயிற்றிற்பிறக்கும் மகன் அவந்தனுவானே இதற்கென்ன செய்வதென்று சொல்ல, உலகத்தில் அரசருக்கு வெற்றியைத்தருவது வாய்மையல்லதுவே றன்று வாய்மையை மறந்தாராயின் அவர்கள் இறைவர் மூவரையுநோக்கித் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம்,நாராயணாஸ்திரம், பிரமாஸ்திரம் என்னும் அருமையான தெய்வாஸ்திரங்களைப் பெற்றாலும் பயனில்லாமற்போம். நா னேவாய்மையிற் பிறழாமல் அரசர்களுக்கு அரசனாகி இவ்வுலகமெல்லாம் காக்கின்றேன். ஆயின்உனக்கோருறுதி சொல்லுகின்றேன். அதாவதுநீயே என்பட்டமஹிஷி, உன்வயிற்றிற்பிறக்கும் புத்திரனே என்னரசுக்குரிய மக னென்று துணிந்துகொள்; இதற்கு ஆகாயவாணியும், பூமிதேவியுமேசாக்ஷி யாம். இனிஐயமின்றி என்னைக் கலந்தின்பசுகமளிப்பாயென்று வேண்டினு ன். அதற்கு 'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என் னபயனுமில்' என்றபடி தன்குறிப்பினாற் காட்டி அவனையணைந்தாள். பின்பு அரசனும் அவளைப்பார்த்து பெண்ணருங்கலமே! நானே வேட்டையாடவ ந்தேன்; வந்தவிடத்தி லுன்னைக்கண்டேன், கருத்திற்கிசைந்த உன்னைக் கல ந்தேன், என் சேனையுடன் சேர்ந்து என்னகரஞ்சேர்கின்றேன், சிலநாளைக் குள் மந்திரிகளைக்கொண்டு உன்னை அரண்மனைக்கு அழைப்பிக்கின்றேன், விடைகொடென்று வேண்டினான். அதற்குச் சகுந்தலையும் பிரிவென்றுசொ ல்லும் அச்சொல் ஒன்றினுக்கஞ்சிக் கனவருத்தமடைந்து 'பெண்டிற்கழகெ திர் மறுத்துக் கூறுவது தகுதியேயல்ல, ஆகையால் உமதிஷ்டப்படிநடந்து கொள்ளும், ஆயினும் என்னைமட்டும் மறவாதிருக்க வேண்டுகின்றேன் என் று குதலைச்சொல் மாழ்கப்பேசினாள். அதுகேட்டு அரசன் விடைபெற்றுத் தன் மந்திரிமாரோடும் சேனைகளோடுங்கலந்து தன்நகரஞ்சென்றுமுன்போ ல் அரசாண்டுவந்தான். இதுகிடக்க;

சகுந்தலையோ அரசன் பிரிந்த வருத்தத்தால் மெய்ஞ்ஞான சொரூபி யாகிய கண்ணுவருக்கு நாம்யாதுசொல்வோம்! கற்றறிவில்லாதமாதர்களுக் கே கலவிக்குறிகள் நன்றாகவிளங்குமெனின் சகலகலாபாரங்கதராகிய கண் ணுவமுனிவருக்கு எப்படி விளங்காமற்போகும், நாம்என்னநினைத்து என் னசெய்துவிட்டோம், காமிகள்ஒன்றுக்கு மஞ்சமாட்டார்கள். இதுவே நம க்குத் திருஷ்டாந்தம் என்று விளக்கிற்று. எனநினைந்து அறிவுசோர்ந்திருக் கும் சமயத்தில் கண்ணுவமுனிவர் வந்தார். அவரைக்கண்டவுடன் நாண மேற்கொண்டு அவரது பாதகமலங்களில் வீழ்ந்திறைஞ்சி நடந்த வரலாற் றையுஞ் சொல்லி என்பிழையைப் பொறுக்கவேண்டுமென்றாள். அதற்குக் கண்ணுவர் திரிகாலஞான முடையவராதலால் வந்து காந்தர்வமணமாகக் கலந்துசென்றவன் துஷ்டியந்தனென்றும், இவள் கருப்பத்தி லிருப்பவன் சந்திரகுலத்தை விளக்கவரும் வரோதயனென்றும்அறிந்துகொண்டு அம்ம! என்னகுற்றஞ் செய்துவிட்டாய் ஒன்றுமில்லையே! நானே தேடிச்செய்யவே ண்டிய காரியத்தை நீயேதேடிக்கொண்டனை குற்றமில்லை. உனக்கு நல்ல ஊழேகூட்டிவிட்டது. ஊழினும் வலியுள்ளதுயாது? நீ விசுவாமித்திரமுனி

வனுடைய மரபிற்குரிய காரியத்தையே செய்தாய்! அவர் தவமேபலித்தது நியந்தப்புரத்திற்போயிரு அம்மணியென்றுவாழ்த்தினர். சகுந்தலையும் அவ்வாறே அந்தப்புரமடைந்து இருந்தனள். சகுந்தலையோகருமுதிர்ந்து பத்து மாதம் நிறைந்தவுடன் பூரணசந்திரன்போல் விளங்கும் புத்திரரத்தினத்தைப்பெற்றாள். கண்ணுவமுனிவரும் சகுந்தலைபுத்திரனையீன்றதையறிந்து மிகவும் ஆசிர்வதித்துஅப்புத்திரனுக்குப் பரதனென்றுநாமகரணஞ்செய்தனர். அப்பரதனும் வளர்பிறைபோல வளர்ந்து ஐந்துவயதாகவே வேதாகமபுராணங்களையும், ஆறுசாஸ்திரங்களையும், அறுபத்துநான்கு கலைகளையும் ஐயந்திரிபறக்கற்றுத்தேர்ந்து வில்வித்தை முதலிய தனுர்வேதத்தையும் அறிந்து, யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றில் பழகிப் பன்னிரண்டுவயதாக, கண்ணுவர் சகுந்தலையை நோக்கி அம்மா! உன் கணவன் வசிக்கும் குருநாட்டை யடைந்து உன்கணவனோடு சுகித்திரு! உன்னை மந்திரிகளைக்கொண்டு அழைப்பிக்கின்றேன் என்று சொல்லிப்போன அரசன் இன்னமும் உன்னை ஏனோ அழைப்பிக்கவில்லை, தான் இராச்சிய சம்பத்தினால் மறந்ததுபோலத் தோன்றுகின்றது. இதோ நமது மாணாக்கருள்சிலரையனுப்புகிறேன், அவர்களுடன் சென்று அத்தினபுரத்திற்குப் போய்வாவென்று கட்டளையிட்டார்.

அவ்வாறே சகுந்தலையும் 'மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்' என்றபடி கண்ணுவமுனிவரைத் திருவடிதொழுது இதுவரையும்என்னைப்பறவை தன்சிறகிலிட்டுக் காப்பதுபோலக் காத்தீர். என்தாயும்,தந்தையும்; குருவும் தெய்வமும் நீரேயல்லது வேறறியேன், சாதாரணமாக மாதர்களுக்குப் புக்கவிடஞ் சதமேயல்லது பிறந்தகம் சதமன்று. நானும் பெண்ஆதலால் தங்கள் கட்டளைதவறாமல்போய்வருகிறேன். இதுவரையிலும்கருணைவைத்தபடி என்றும் கருணைவைக்கவேண்டுமென்று இரங்கிக்கேட்டாள். கண்ணுவரும் மிகவுங்கனிந்து கருத்துமகிழ விடைகொடுக்கப்பெற்றாள். பரதனும் கண்ணுவமுனிவரை வணங்க அவரும் ஆசிர்வதித்து அனுப்பினர். இவ்வாறு சகுந்தலையும் தன்பிள்ளையாகிய பரதனும் இன்னும் கண்ணுவமுனிவர் சீஷரிற் சிலரும் கூடவரத் துஷ்டியந்தன் அரசுசெய்யும் இராசதானியை யடைந்து இராசவீதியாக நடந்து சென்றனர். நகரமாந்தர் சகுந்தலையையும், இராசசிங்கமாகிய பரதனையும் பாதசாரிகளாக நடந்து செல்லக்கண்டு அதிசயப்பட்டு, இவ்வன்னையைப் பார்த்தால் திருமகள்போல் விளங்குகின்றது. இச்சிறுவனைக் காண்போமாயின் மன்மதனே யோருருவங்கொண்டு வந்ததுபோல் தோன்றுகின்றது. இவ்வளவு அழகுடையவர்கள் பாதசாரிகளாய் இந்நகரத்தின இராசவீதியில் நடக்கக்காரணமென்ன? என்று சொல்லச் சகுந்தலையும் வந்த சீடரை யனுப்பிவிட்டு அரண்மனை வாயிலை யடைந்தாள். அரசன் கொலுமுகத்தி லிருக்கையில் வருகின்றவள் சகுந்தலையென்பதும், அவளருகே யிருக்கிற மைந்தன் தன்மகனே யென்பதும் அறிந்திருந்தும் இராசசபையில் மந்திரிமார் முதலியோர் தனக்குப்பின்பு இம்மகனுக்குப்பட்டங்கட்டியாளச்செய்யாரே! இதற்கென்னசெய்வதென்றுதுணிந்து எண்ணியிருக்கையில்சகுந்தலையும்பரதனுடன் இராசசபையில்வந்துசேர்ந்து

என்னதீங்குசெய்தனரோ! இவர்கள் இராசசபையில் வந்துவிட்டனரென்று எண்ணினர். சகுந்தலையும் திடீரென்றுவந்து தன்கணவனாகிய துஷ்டியந்த மகாராசனது பாதங்களில்வீழ்ந்துவணங்கி நின்றாள்.

அம்மகாராசனும் நாம் என்னசெய்வது! இவளைமனைவியல்லவென்று தடுப்போமாயின் அப்போதுநமக்குச் சாக்ஷியாக இருந்தஆகாயவாணியும்பூமிதேவியும் உண்மையை யெடுத்துச்சொல்வர். அப்போது எல்லாம் பட்டம்பகல் வெட்டவெளிச்சமாகும். நமது துன்பமும் நீங்குமென்று எண்ணிச்சகுந்தலையைப்பார்த்துபெண்ணரசே! நீயார்! உன்பெயரென்ன! உன்னருகிலிருக்கிற பிள்ளையின்பெயர் என்ன! உன்னிருப்பிடம்எது! நீ இங்குவரவேண்டிய காரணமென்ன! தெரியச்சொல்லவேண்டுமென்று அரசன்கேட்கச் சகுந்தலைசொல்லுகின்றாள். பூவுலகமுழுதுமாளும்புரவலனே! நான் விசுவாமித்திரமுனிவனுக்கும் மேனகைக்கும் பிறந்தவள். என்னைச் சகுந்தலையென்றுசொல்வார்கள் இச்சிறுவனே உமதுகுமாரன், இவனுக்குப்பரதனென்றுபெயர். நீர் ஒருகாலத்தில்வேட்டையாடப் புறப்பட்டுக்கண்ணுவமுனிவர் ஆச்சிரமத்துக்கு வந்தீர். நான் என்னை வளர்த்தும்வரும் கண்ணுவமுனிவர் ஆச்சிரமத்தில் தனித்திருந்தேன், அவ்வாறிருக்கையில் என்னைக்காந்தருவ மணஞ்செய்து கலந்துசென்றீர். எனக்கு இப்புத்திரன் தோன்றினன். என்னைக் காந்தருவமணஞ்செய்கையில் ஆகாயவாணியையும் பூமிதேவியையும்சாக்ஷிவைத்துப்போனீர் போனகாலையில்சிலநாளைக்குள் என்மந்திரிகளைக்கொண்டு அரண்மனைக்குவரவழைத்துக்கொள்ளுகின்றேனென்றீர். இதுவரையிலும்காணேம். இப்புத்திரன் பிறந்தகாலத்தில்இவன்தந்தையைவிடப்பதின்மடங்கு தருமதேவதை நான்குபாதத்திலும்நடக்கஅரசுபுரிவானென்றுஆகாயத்தில்அசரீரியுரைத்தாள். அதனாலிவனுக்குப் பரதனெனக்கண்ணுவமுனிவர்நாமகரணஞ்செய்தனர் என்றனள்.

அதுகேட்டு மகாராசனும் சிந்தைநொந்து புத்திரனையும், மனைவியையும்கண்டு மகிழ்ந்தசந்தோஷத்தைக் கோபக்குறிப்பாகக்காட்டி, இதென்ன! விந்தையினும் விந்தையாயிருக்கின்றது. இவள் என்மனைவியாம்! இச்சிறுவன் என்பட்டணத்தையாளவந்த புத்திரனும் இந்த இராசசபையில் நன்றாக நெஞ்சுரப்பக்கொண்டு சொல்லுகின்றாள், இவள்முழுநீலி! முழுப்பூசினிக்காயைச்சோற்றில் மறைப்பவள்போலக் காணுகின்றதே என்று கோபவார்த்தையாக அவள் அரைக்கணமேனும் இந்தராஜசபையில் நிற்கக்கூடாதென்று அதட்டினன். அதற்குச் சகுந்தலையும் ஆதியில் இவ்வரசனைக்கண்டபோது நாம்பெற்றபேறு ஆர்பெறுவாரென்றகமகிழ்ந்திருந்தேனே! அவ்வளவுமகிழ்ச்சியையும் ஆற்றிற்கரைத்த புளியாக்கிவிட்டாரே! இதற்கென்னசெய்வேன், ஆதெய்வமே! தெய்வமே! என்று மனம் வாடிஇன்னும் சற்றுநேரமிருந்தாலென்குறையை எடுத்துச்சொல்வேனானால் அரசனுடைய காவலாளிகள் ஓடோடியும்வந்து நெருங்கிப்பிடர்பிடித்துத் தள்ளுவரே! உலகத்தில் குடிகள் கொலை, களவுகள், காமம், பொய் என்ப

வற்றைச்செய்தால் அரசர்கள் தக்க தண்டனை செய்வார்கள். அரசன்செய்தால் அவ்வரசனைத் தண்டிப்பாரெவர். 'அரசன் அன்றுகொன்றால் தெய்வம்நின்றுகொல்லும்', என்றபழமொழிப்படி எனக்குத்தெய்வமும் சகாயம் செய்யாமற்போயிற்றே! என்று புலம்பி வேலி பயிருக்காதாரம்; வேலிபயிரைமேய்ந்தால்பயிரெப்படித்தான்விளையும்! தான்என்னைக்கண்டகாலத்தில் இன்சொல்சொல்லி என்னைக்கலந்துசென்றபின்பு இவ்வளவு கரவடமுங்கற்றுக் கன்னெஞ்சும்படைப்பாரென் றறியாமற்போனேனே! உடலும்உயிரும்போலும், மணமும்மலரும்போலும், மணியும்ஒளியும்போலும் கணவனைப்பிரியாமல் பெண்பிறப்பெடுத்தோர் மகிழ்வடைகின்றார்கள். நான்பெண்ணாகப்பிறந்த கொடுமைஎழுதிமுடியாதே! எட்டிலடங்காதே! கற்புடையமாதருக்கு வழிபடுகடவுள் தன்கணவனேயென வேதவிதியிருக்க அப்படிப்பட்டபெண்களை மனநோகச்செய்வது அரசனுக்கழிவோ! நீதியோ! அறமோ! உலகத்தில்புத்திரகாமேஷ்டி, தவம், தானங்களைச்செய்து புத்திரனைப்பெறுவர். அரசன் முன்செய்தவத்தால் சகலலோகங்களையும்தனியரசாளும் புத்திரனைப்பெற்றும் அப்படி பெற்றமகனை நீயாரென்று கேட்பதாயிற்றே! நெருப்பிற்கொளுத்தியநெருப்பும், கண்ணாடியிற்காட்டியபொருளைக்காட்டு நிழலும் வேறுவேறுபெயரைப் பெற்றிருந்தாலும் ஒரேபொருளல்லதுவேறல்ல, ஆதலால் வேதநூல் தந்தையே புத்திரரென்று சொல்வதையறிந்து நீதிநூலாரும் 'மகனறிவு தந்தையறிவு' என்றனர். நூறுவாவிகள் தோண்டியபலன் துரவொன்றெடுத்தால்வரும். நூறுதுரவெடுத்தபலன் ஒரு தடாகம்வெட்டினாற் கிடைக்கும் நூறுதடாகம்வெட்டியபலன் ஒருயாகஞ்செய்தால்வரும். நூறுயாகஞ்செய்தபலன் ஒருசற்புத்திரனுதயத்தாலுண்டாகும். நூறுசற்புத்திரர் வாய்த்தபலன்ஒருமெய்மொழிக்குச்சரியாகும் என்றனர். இதுபற்றியே தேவரும் 'புறந்தூய்மைநீரா னமையுமகந்தூய்மை-வாய்மையாற்காணப்படும்.' என்றுஞ் சொல்லியிருக்கின்றனர். ஆகையால் நீர் என்னையும் உமதுபுத்திரனையும் ஆதரியுமென்றனள். மகாராசனும் முன்சொன்னபடியே சொல்லி வேறுவேலையிலிருப்பவன்போல் இருந்து மனம்வருந்தியிருந்தான்.

அதுகேட்டுச் சகுந்தலையும் பின்னுந் துன்பக்கடற்கோர் துறைகாணுதவளாய்என்னசெய்வது 'எவ்வுயிருங்காக்கவோரீசனுண்டோ இல்லையோ' என்றதனால்இறைவன்விட்டபடி நடக்குமென்று துணிந்துமகனையழைத்துக்கொண்டு பத்தடிதூரஞ்சென்றாள். அரசனேமோசம்வந்துவிட்டதே! என்னசெய்வேன், கண்ணுவமுனிவர்கேட்டால் ஏதுவிளையுமோ! நமது அரசுக்கோ பழுதுவரும்என்று எண்ணிஇச்சகுந்தலையை நாம் மறுத்தபடியினாலேதான் ஆகாயவாணியும் சொல்லவில்லை என்று கனவருத்த மடைந்தான். அப்போது ஆகாயவாணியும் அச்சபையில் இருந்தயாவரையும்பார்த்து அரசன்வேட்டையாடச்சென்றதும், சகுந்தலையைக் காந்தருவ

மணஞ்செய்ததும், தன்னை அதற்குச்சாக்ஷியாகவைத்ததும், பின்பு இப்புத்திரன்பிறந்ததும் ஒன்றுமொளியாமற் சொல்லிஅரசனேஇச்சகுந் தலையைக்கைபற்றி சிலநாள்வாழ்ந்து பிறகு இப்பரதனுக்கே இப்பூவுலக முழுதும் அரசுபுரிய முடிசூட்டென்று கட்டளையிட்டாள். அது கேட்டு அரசன்மகிழ்ந்து தன்மனைவியைத்தடுத்து அவள்கையைப் பற்றி மகனைவாரித்தழுவிமுத்தமிட்டுச் சபையாரை நோக்கி நடந்த வரலாற்றை முழுதும்சொல்லிஇதுவரையிலுந்தாமசமாயிருந்தது ஆகாய வாணிசாக்ஷிசொல்லாமலிருந்தனளே, சொல்லாவிட்டால் இம்மகனுக்கு மரியாதைத்தாழ்வுவருமென்றெண்ணியே யென்றுசொல்லிவிட்டு இவனை என்னைப்போல அங்கீகரியுங்களென்று சொன்னான். மந்திரிமாரும் சபை யாரும் திடுக்கென்றெழுந்து சகுந்தலையைவணங்கி நாங்களறியாமற்செய்த பிழையத்தனையும் பொறுத்தருளுமென்று வேண்டினர். அவ்வாறு வணங்கினமந்திரிமுதலானவர்களுக்குச் சகுந்தலைசொல்லுகின்றாள். மந் திரிமார்களே நீரோட்டத்தில் அகப்பட்டதெப்பமும், அரசன்வழிப்பட் டாரும் ஒன்றேயாதலால் அரசன்ஒன்றை இகழ்ந்தால் ஒக்கஇகழவேண் டும். அவ்வாறே ஒன்றைப்புகழ்வானாயினன் ஒக்கவேபுகழவேண்டும்அவ் வாறிருந்தும் என்னொடு கூடித்தருக்கித்த அரசனோடுகூடி யாதொன்றும் கூறாமல் ‘உள்ளக்கருத்து வள்ளலறியும்’ என்றபடி, பெருத்தயோசனை யுடன் நீங்கள் எல்லாஞ் சும்மாஇருந்தபோதே நீங்கள் அதிவிவேகசிரோ மணிகளென விளங்குகின்றது. அதற்குச் சிறிதேனும் ஐயப்பாடு என்ப தில்லை. இனி உங்களுக்குச் சிறிதேனும் குறைவொன்றுமில்லையென்று ஆதரவாகப்பேசினள். பின்பு அரசனே சகுந்தலையோடும் பரதனோடும் அந்தப்புரமேசென்று அவளுடன் இரதியும் மன்மதனும்போலச் சுக மனுபவித்துவருங்காலத்தில் ஒருநாள் இம்மைப்பயனை வெறுத்து மறு மைப்பயனைவிரும்பி அப்பயன் தவஞ்செய்தாலல்லது கிட்டாதென்றது துணிந்து தன்மகனாகிய பரதனையழைத்து வேதவேதியர் ஆசீர்வதிக்க, பட்டவர்த்தனரும், மகுடவர்த்தனரும், மண்டலாதிபதிகளும் மிகவும் கொண்டாடமகுடஞ்சூட்டி, தான்தன்மனைவியுடன் காட்டிற்சென்றுஅருந் தவஞ்செய்து பரலோகமடைந்தனர்.

அரசன்போனபின்பு மனுநூல்வரம்புகண்டவர் இவன்போல் யாரெ ன்றுஅறிவுடையோர்சொல்ல, வேதவேதியர், முனிவர்கள், ஆசீர்வதிக் கப் புலியும்பசுவும் ஓர்தடாகத்தில் தண்ணீரருந்தவும், பாம்பும் கீரியும் பரிந்துவிளையாடவும், சகலராசர்களும் தன்னைச்சேவித்துப் பகுதிப் பொருள்கட்டவும் பொதுக்கடிந்து அரசாண்டுவந்தான். அதுமுதல் அவன்வழிவந்தோருக்குப் பாரதவமிசத்தரென்றும்; அம்மரபின் அரசர் கதைக்கும் பாரதமென்றும்பெயராயிற்று. இப்படி சந்திர வமிசத்தைத் தன்பேரால் விளங்கவைத்த பரதன் சுனந்தை யென்பவளை மணஞ்செய் யப் பவுமன் என்பவன்தோன்றினன். அவன்விஜையைவிவாகஞ்செய்து சுகோத்திரனைத்தந்தான். அச்சுகோத்திரன் சுவுசலையைக்கடிமணஞ்செய்

துகொண்டு அஸ்தனைப்பெற்றான். அஸ்தன் சந்தனவதியை மணம்புரிந்து தன் இராசதானியைப் புதுக்கிச் செங்கோல்செலுத்திவந்தான். அதனால் அந்நகரத்துக்கு அஸ்தினாபுரமென்று பெயராயிற்று.

அஸ்தனுக்கு நிகும்பன்தோன்றினான். நிகும்பன்சுதேவியைமணந்து அரசர்மீளியைப்பெற்றான். அரசர்மீளி உருக்கை, விசாலை, கவுசலைஎன்னு மூவரை மணந்து நூற்றிருபத்துநான்கு மக்களைப்பெற்றான். அவருள் சவ்வருணன் என்பவனுக்குத் தன்னரசைத்தந்து தான்பரமபதமடைந்தான்.

துஷ்டியர்தமகாராசன் சருக்கம் - முற்றிற்று.

சவ்வருணன் சருக்கம்.

சவ்வருணன் அரசர்பெருமானாய் அரசாண்டுவருகையில் ஒருநாள் காட்டில்வேட்டையாடச்சென்று யானை, சிங்கம், கரடி, புலி முதலிய மிருகங்களைவதைத்துவருகையில் விடாய்த்துஒருதடாகத்தில் நீர்வேட்கையுடையவனாய்த்தண்ணீரருந்தி, அக்காட்டில் உள்ள விநோதங்களைப்பார்த்துவந்தான். அப்படிப்பார்த்துவருகையில் சூரியன்மகள் தபதியென்பவள் அக்காட்டில்தானும் விநோதங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் பேரழகுடையவளாயிருப்பதை அரசன்கண்டு மையல்கொண்டு அவளருகிற்சென்று ஓபெண்ணே! நீயோ மிக்க அழகுடையவளாயிருக்கின்றாய்? எனக்கு உன்மேல்மனஞ்செல்கின்றது என்னைமணஞ்செய்துகொள்ளென்றுகூற, அத்தபதியும் புன்னகைசெய்துமறைந்தாள். அதனால் அரசன் திப்பிரமைகொண்டு காடுஞ்செடியுமவளாகத் தோன்றுமென்றபடி காமலாகிரிகொண்டு அக்காடுமுழுதும் சுற்றித்திரிகையில் தபதிமனமிரங்கி அவன்கட்புலனாகத்தோன்றி நீ என்வருந்துகின்றீர்! நான் சூரியன் மகள், தபதியென்றுபெயர். என்தந்தை கட்டளையால் என்னைமணஞ்செய்துகொள்ளுமென்று சொல்லிவிட்டுமறைந்துபோனாள் அன்றுமுதல் அரசன் ஊணுறக்கமில்லாமல் அவளேக்கமேமிகுந்து வருந்துகையில் சூரியவமிசந்தரசருக்குக் குலகுருவாகிய வசிஷ்டமுனிவர் இவ்வரசனுக்குங்குருவாகையால் அவ்வரசனைப்பார்த்துப் போகவந்தார். அதுகண்டு அரசன்பத்தடிதூரஞ்சென்று எதிர்கொண்டு அழைத்து அழகியபீடத்திலிருத்திச்சோடசோபசாரமுஞ்செய்து கைகட்டிவாய்புதைத்துக்கொண்டு நின்றான் அவன் கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரனைப்போல ஒளிகுன்றிவாடியிருப்பதைஅம்முனிவர் ஞானதிருஷ்டியால்பார்த்துச் சூரியன்மகளாகிய தபதியைக்கண்டுமையல்கொண்டு வாடியிருக்கின்றான். இவன்கொண்ட கருத்தைத் தணியாதிருந்தால் நாம் குருவாயிருந்தும் பயனில்லையென்று துணிந்து ஆசனத்தினின்றும் திடீரென்றெழுந்தார். அதை அவ்வரசன் கண்டு அவர்பாதங்களைத்தாழ்ந்து வணங்கித் தேவரீர் என்விஷயத்தில் வெறுப்புற்றிருப்பதாகத் தோன்றுகின்றது. தங்கள் கருத்தைவெளியிட்டால் செவ்வையாக நடந்துகொள்வேனென்று வேண்டிக்கொண்டான்.

அதற்கு அம்முனிவர்நீ சூரியன்மகளாகிய தபதியைக்கண்டுமையல்
கொண்டுஊணுறக்கமின்றிக்கிடக்கின்ருய்! அதற்காக நான்சூரியனிடஞ்
செல்கின்றேன். நீயஞ்சவேண்டாமென்று சொல்லிவிட்டு ஒருகணப்
போதில் இலட்சத்திருபத்தையாயிரம் யோசனைதூரஞ்செல்லும் சப்தா
வென்னும் பச்சைக்குதிரைகள்பூட்டி யொற்றையுருளையுடையதாய்அருண
ஞல் செலுத்தப்பட்டதேரையுடைய சூரியபகவானைநோக்கி வேகமாய்வர
அவரைசூரியன்கண்டு எதிர்கொண்டழைத்துஎளியேன்மேல் கருணைவைத்
துஇவ்வளவுதூரம்வருவானேன்!தெரிவிக்கவேண்டும்என அதற்குவசிஷ்டர்
நான்வந்தகாரியம் சவ்வருணனுக்கு உன்மகள்தபதியை மணஞ்செய்விக்க
வேண்டுமென, சூரியன்மிகமகிழ்ந்துதாங்கள்அச்சவ்வருணன்மிகச்சிலாக்கி
யன் என்றதனுல் வேறொரு திருஷ்டாந்தம்வேண்டாம் ஆயினும் என்
தொழிலையும்நன்ருயறிவீர். அதனுல் யான்வருவதற்காகாது தாங்களே
என்மகளையழைத்துக்கொண்டுபோய் அச்சவ்வருணனுக்கு மணஞ்செய்
வியும் என்று வணங்கிவிடைபெற்றுப்போக வசிஷ்டரும் தபதியினிடத்
திற்குவந்தார். தபதி வசிஷ்டரைக்கண்டவுடன்ஓடோடியும்வந்துவணங்கி
அன்பாய்ச்செய்தபூசையைக்கைக்கொண்டு நடந்தவரலாற்றைச் சொல்லி
அவளையழைத்துக்கொண்டுபோய் ஐம்பத்தாறு தேசமன்னரும், மகுட
வர்த்தனரும், பட்டவர்த்தனரும், நகரமாந்தரும்,வேதவேதியரும், அறிய
மணஞ்செய்வித்தார். அச்சவ்வருணன் தபதியுடன் அன்றில்விழைபோக
மனுபவித்து ஒருமகனைப்பெற்று, அவன் தன்குருவாற் கிடைக்கப்பட்ட
மையால்குருவென்றுபெயரிட்டான். அவன் தந்தையினும் பதின்மடங்கு
குடிகளிடத்தில்ஆறிலொருகடமைகொண்டு அரசாண்டுவந்தான். அதனுல்
அந்நாட்டிற்குக் குருநாடென்றபெயர்வந்தது. அவன் மகததேசத்தரசன்
மகளாகியசுவாலையைமணந்து யாகாதிகிருதுக்களைச்செய்ததனுல் அதற்கு
குருக்ஷேத்திரமென்று பெயராயிற்று. அத்தனைப் பிரபலமுடையகுருஎன்
னும் அரசர்பெருமான் பரிச்சித்தென்னும் மைந்தனைப்பெற்ருன். அவன்
கேகயதேசத்தரசன்மகளாகிய சுபத்திரையைமணந்துபிரதீபனைப் பெற்
ருன். அவன் சுனந்தையை மணந்து தேவாபி, சந்தனு என்னும் இரண்டு
மக்களைப்பெற்ருன். அவருள் தேவாபி இளமையிலேயே 'நரைவருமென்
றெண்ணி நல்லறிவாளர்-குழவியிடத்தேதுறந்தார்' என்றபடிதுறவற
வொழுக்கமுடையானுய்க் காட்டிற்சென்று தவஞ்செய்திருந்தான்சந்தனு
வோ அரசாபெருமானுய் மணிமுடிபுனைந்து தன்னுயிரைப்போல் மன்னு
யிரைக்காத்துவருநாளில் கங்கையைமணந்து அவளிடமாகக் காங்கே
யனைப்பெற்று, எமதுகுருசுவாமி திருவவதரிப்பதற் கிடமாகிய மணிவயிற்
றினையுடைய பரிமளகந்தியென்னும் சத்தியவதியைமணந்துசித்திராங்
கதன், விசித்திரவீரியன் என்னும் இரண்டு மக்களைப் பெற்ருன். இவருள்
சித்திராங்கதன் என்பவன் தன்பேருடையகந்தருவராசனுல் கொலையுண்டு
இறந்தான். விசித்திரவீரியனே காசிராசன்மக்களாகிய அம்பாலிகை,
அம்பிகைஎன்னும்இருவரையும் மணந்து சந்ததியில்லாமல் இறந்தான்,
அம்மாதரால் திரிதராஷ்டிரன், பாண்டுராசன் என்பவரையும், மற்ருெரு

பென்றால் விதுரனையும் எமது குருசுவாமியாகிய வியாசபகவானால் அருளப்பட்டுக் குருகுலம் விருத்தியாயிற்று. இவருள் மூத்தோனாகிய திருதராஷ்டிரன் காந்தாரியை மணந்து துரியோதனன் முதலிய நூற்றுவரைப்பெற்றான். பாண்டுவோ குந்தி, மாத்திரையென்னும் இருவரையும் மணந்து குந்தியிடமாய்த் தருமராசன், வீமன், அர்ச்சுனன் என்னு மூவரையும், மாத்திரையிடமாய் நகுலசகதேவரென்னுமிருவரையும்பெற்றான். இவ்வைவருக்கும் பாஞ்சாலி பூர்வபுண்ணியவசத்தால்மனைவியாயினள் இப்பாஞ்சாலிக்குத் தருமனிடமாய்ப் பிரதிவிந்தனும், வீமனுக்குப் பிரதிசனும், அர்ச்சுனனுக்குச் சுருதகீர்த்தியும், நகுலனுக்குச் சதானிகனும், சகதேவனுக்குச் சுருதசேனனும் தோன்றினர்.

இவ்வாறு துரோபதையையன்றிப் பாண்டவரைவரும் தனித்தனியே மணம்புரிந்து மக்களைப்பெற்றதுண்டு. அப்பாண்டவருள் தருமராசன் மாளவதேசத்தரசன் மகளாகிய வேதிகையைமணந்து மிக்க சாந்தகுணசீலனாகிய சாதேயனைப்பெற்றான். வீமன் சலதரையைமணந்து சுகுணனைப்பெற்றான். பின்னும் இடும்பியென்னும்அரக்கியைமணந்துகடோற்கஜனைப்பெற்றான். அர்ச்சுனன் வாசுதேவன் தங்கையாகிய சுபத்திரையை மணந்துஅபிமன்னுவையும், உலூபி என்னும் நாககன்னியால் அரவானையும், பாண்டியன்மகளாகிய சித்திராங்கதையால் பப்புருவாகனையும் பெற்றான். நகுலன் இலகிர்மதியென்னும் இராசகுமாரியை மணந்து சுகுணனையும், சகாதேவன் விஜையைமணந்து வேத்திரனையும்பெற்றான். இவ்வாறு பாண்டவர்க்குப் பிறந்த புத்திரருள் அர்ச்சுனன் மகனாகிய அபிமன்னு விராடராசன்மகளாகிய உத்தரையைமணந்து பரீட்சித்து மகாராசனைப்பெற்றான். அவன்மாத்திரை யென்னும் மாதைமணந்து ஜெனமேஜெயனென்னும் உன்னைப்பெற்றான். நீ கற்பிற்கரசியாகிய வபுஷ்டையை மணந்து சதாநிகனைப்பெற்றாய், சதாநிகன் வைதேகியைமணந்து அஸ்வமேதனைப்பெறுவான். இனி அஸ்வமேதனுக்கு யார்பிறப்பரோ தெரியாது. இதுதான் சந்திரவமிசபரம்பரை. சந்திரன் மகனாகிய புதன்முதல் அஸ்வமேதன்வரையிலும் நாற்பத்தாறு தலைமுறையாகும். சந்திரவமிசத்தின்பரம்பரையை விஸ்தரித்துச்சொல்ல யாராலேதான்முடிவுபெறும். இவ்வளவும் திருமாலினமிசாவதாரமாகிய வாதராயணமுனிவனுடைய பேருளால்சொல்லிமுடித்தேனல்லது வேறல்லவென்று திக்குநோக்கி வியாசபகவானை வணங்கி நின்றார். இவற்றையெல்லாம் ஜெனமேஜெய மகாராஜன் கேட்டு மிக்கமகிழ்ச்சி யடைந்து, வைசம்பாயனரைநோக்கி எனக்குச் சந்தனு கங்கையைமணந்து காங்கேயனைப்பெற்றதும், வியாசபகவானால் திருதராஷ்டிரன்முதலிய என்மூதாதைகள் பிறந்தமையும் விளங்கவுரைக்கவேண்டுமென்று வேண்டினன். அதுகேட்டு வைசம்பாயனரும் மகிழ்ந்து முன்பு சந்தனு கங்கையைமணந்ததைச்சொல்லுகின்றேன் கேளென்று சொல்லத்தொடங்கினர்.

சவ்வருணன் சருக்கம் முற்றிற்று.

சந்தனுச் சருக்கம்.

பிரதீபன் மக்களிருவரில் தேவாபி இளமையிலே துறவறநெறிபூண்டு காட்டில் தவஞ்செய்யச் சென்றபின்பு, சந்தனுதந்தையின் செங்கோலைத் தன்கையிலேகொண்டு அரசாண்டுவந்தான்; இவன் இளமைப்பருவத் திலேயேநான்குவேதம், ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம், மிருதி நூல் பதினெட்டு இவைகளை நன்றாகக்கற்று யானையேற்றம், குதிரையேற் றம், தேரேறுதல் முதலியவற்றில் சமர்த்தனாய், வில்வித்தையில் சீராம பிரானேயென்று சொல்லச்சிறந்து விளங்கிநின்றதைக்கேட்டுத் தந்தை யாகிய பிரதீபன் சகலவேதபாரங்கதராயிருக்கின்ற அந்தணர்களைத் தன் அரசசபையில்வருவித்துத் தன் மகனாகிய சந்தனுவுக்கு மகுடம்புனைந்து தான் ஈறிலின்பந்தரும் பரமபதமடைந்தான்.

சந்தனு செங்கோல்கைக்கொண்டுடலயாகாதிகளைச்செய்து தன்னு யிரைப்போல மன்னுயிரைக் காத்துவருநாளில் ஒருநாள் வேட்டையாடக் காட்டிற்சென்றான். தன்னுடன்தொடர்ந்த மந்திரி, பிரதானிகளைப்பிரிந்து தான்தன்னந்தனியனாய்க் கங்கைக் கரையோரமாகச்செல்கையில் கங்கை மானிடப்பெண்ணுருவங்கொண்டு அரசன்கட்புலனுக்குத் தோன்றினாள். அரசனோ கங்கையில் நீராடி விடாய்தவிர்ந்து சந்தனமரநிழலினருகில் இருக்கின்ற பெண்ணுருவங்கொண்ட கங்கையின் அழகைக்கண்டு திப் பிரமைகொண்டுவிரகமேற்கொண்டு இவரின்பக்கடலிலாழ்வதுநலமென்று நினைந்து இவர்பாரணங்கோ! திருப்பாற்கடலீன்ற பங்கேருகத்தோ ரணங்கோ! வெற்புறை யணங்கோ! இன்னாரென் றறியேனென்றேங்கி வாடி, பின்பு கண்ணிமைத்தலாலும், அவர் அணிந்திருந்த பூமாலை வாடு வதனாலும், கான்மலர் பூமியிற் பொருந்துவதனாலும் மானிடப்பெண் ணென்றே துணிந்து இக்காட்டில் நீர்தனித்திருக்கின்ற காரணமென்ன வென்றுகேட்க, கங்கையும் நான் திருமால்மகள், பிரமதேவன் இட்ட சாபத்தால் இங்குவந்தேனென்று சொல்லினாள். அரசன் அவர்வரலாற் றைத் தீரவிசாரியாமல் விரகமிகுதியால் பெண்ணரசே! நான் சந்திர குலத்து அரசன், என்னிற்சிறந்த அரசர் ஒருவருமில்லை. எனக்கும் பட் டமஹிஷிகளில்லை. நீரும் பிரமதேவன்சாபத்தால் தனியேவந்திருக்கின் றீர்; ஆகையால் என்னைமணஞ்செய்துகொண்டு எனக்குப்பட்டமஹி ஷியா யிருமென்றுவேண்டினான். அரசன் இவ்வாறு சொல்லக்கேட்ட கங் கையும் அரசனை நோக்கி உமக்கு ஒருஉறுதிசொல்கின்றேன். என்னை மணந்து புத்திரருண்டாகையில் புத்திரர்களை எல்லாம் பார்ப்பவர் குலை நடுங்கும்படி கொலைசெய்துவருவேன். அதற்குத் தடைசொல்லாமலிருப் பதுவேயென்று சொல்லிமுடித்தாள். அரசனும் மிக்க விரகவேதனையால் வருந்துகின்றவனாதலால் அக்கொடுஞ்செய்கைக்கு இசைந்து அவரைச் சிவிகையிலேற்றிக்கொண்டு தன் இராசதானியிற்சேர்த்து சகல ராஜராஜ ரும் அறியமணவோலை போக்கிச்சகலவேதியருக்குமுன்பு அக்கினிசாக்ஷி

யாக மணஞ்செய்து இரதியும் மதனனும்போலக் கூடிவாழ்ந்திருந்தான். உடனே கருப்பந்தரித்துப் பத்துமாதமு நிறைவுறவே ஒரு ஆண்சிசு தோன்றியது அதனைத்தன்தோழிகள் உள்ளநடுங்கக் கங்கையில் எறிந்து விட்டாள். இவ்வாறு ஏழுமைந்தர்வரையிலும் கொலைசெய்துவர எட்டா வது கருப்பந்தரித்தாள். இவள் செய்துவரும் கொடுஞ்செய்கையைக் கண்டவர் அரசன் சொற்பிசகா நீதிவந்தன் ஆயினும் இவள்செய்கைக் கிணங்கி வருகின்றனனேயென்று நகரமாந்தர் நிந்திக்கலாயினர். இச் செய்தி அரசன்காதிற்கேட்டும் கேளாதவன்போலிருந்து எட்டாவது கருப்பத்தில் எப்போது புத்திரனைப்பெறுவளோ என்று எண்ணி மிக்க ஜாக்கிரதையாய்க் காலத்தினை நோக்கியிருந்தான். இப்படி யிருக்கையில் எட்டாம் கருப்பம் பத்துமாதமும்நிறைந்து பிரசவவேதனைப்படுவதைத் தோழிமாரால் அறிந்து பாகீரதியைக்கிட்டி சூதிகாக்கிருகத்தின் நேரே யடைந்து அம்மைந்தனைக் கையிலெடுத்துக்கொண்டு அவளைவணங்கி நின்று இதைச்சொல்லத்தொடங்கினன்.

உலகத்தைப் பாவங்கழுவும் பரமபாவனையாகிய பாகீரதியே! என்னால் இச்சந்திரவமிசம் விளக்கவேண்டுமென்றால் இவ்விளஞ்சூரியனைப் போலும் தோன்றும் குழந்தையைக் கொல்லாதிருக்கவேண்டும், இது தான்என்னுடைய வேண்டுகோளென்று சொல்லிநின்றான். அதுகேட்டுப் பாகீரதியும் கடுகடுத்து மிக்கவுக்கிரமாக நோக்கி உமக்கும்எனக்கும் உண்டான ஏற்பாடு இன்றோடே கட்டவிழ்ந்தது. நீர்சொன்ன உறுதி மொழியையுமறந்தீர்! என்று பக்கதூரஞ்செல்கையில் அரசன் பின்றொடர்ந்து பெண்ணமுதே நான் சங்கேதப்படிசொன்னசொல் பிசகின வனேயல்லன். புத்திரபிக்ஷைகேட்டால்உனக்கு மனவருத்தம் வரலாமா! நீயெங்கேசென்றாலும் உனக்குக் குற்றேவல் செய்பவனாயிருப்பேன் என்று தடுக்கப் பாகீரதியும் மறுபடியும் அரசனைநோக்கி நான் உம்மை மணஞ்செய்துகொண்டதும், உமக்கு எட்டுப்புத்திரரைப்பெற்றதும், முன்னைவினை. வினையைக்கடப்பவர் உலகத்தில் யாவருளர். இனி நீர் என்னை நம்பவேண்டாம் முன்னை நான் உம்மைக்கண்டபோது பிரமன் சாபத்தினால் இங்குவந்திருக்கின்றேன் என்றதும், நீரும் வினைவசத்தால் இங்கேபிறந்ததும்,யாவும் வினைப்பயனென்றேதுணியும் என்று சாந்தமாய்சொல்லக்கேட்டு அரசன்திடுக்கிட்டு என் சவிஸ்தாரமும், உன்சவிஸ்தாரமும்,இம்மக்கள் வரலாறும் விசிதமாக விவரித்துச்சொல்லவேண்டும். முன்னே நீ பிரமன்சாபத்தால்வந்திருக்கின்றேனென்றபோது நான் காம வெறியால் மயங்கி அதைத்திரவிசாரித்துத்தெரிந்துகொள்ளாமற்போனே னென்று அரசன்சொல்லப் பாகீரதிசொல்லலாயினள்.

முன்னொருகாலத்தில்சத்தியலோகத்தில்பிரமதேவனுடையசபையில் கமலமலர்மேலெழுந்தருளியபிரமதேவன்கொலுவீற்றிருக்கையில்இந்திரன் முதலியஇறைவர் எண்மரும், முப்பத்துமுக்கோடிதேவரும்நாற்பத்தெண் ணாயிரமுனிவரும்,கருடர்,கந்திருவர்,சித்தர்,வித்தியாதரர், கின்னர்கிம்புருடர் முதலியதேவசாதியாரும்சபைகூடியிருந்தனர்.அச்சபையில்திரிபதகையாகிய கங்கையும் போயிருந்தாள். அங்கேயொருகாற்றுண்டாகிக் கங்கை

யணிந்திருந்த ஆடையைவிலக்கிற்று. அதனால் கங்கையின் அவயவம் நன்ருக விளங்கவே அச்சபையில் உள்ளார் யாவரும் பரமபாவனையாகிய கங்கைக்கு மானக்கேடு வந்துவிட்டதேயென்று எண்ணி மிக்கவருத்தமடைந்து அவர்களெல்லாம் கங்கையின் அவயவத்தைப் பார்க்கப்படாதென்று நினைத்து இருந்தவிடத்திலேயே இரண்டு கைகளாலும் இரண்டு கண்களையு மூடிக்கொண்டனர். அச்சபையில் வந்திருந்த இந்திரன் முதலிய இறைவர் எண்மரில் மேற்றிசைக் காவற்கடவுளாகிய வருணன் அக்கங்கையின் அவயவத்தைக்கண்ணுற் பார்த்துக்கொண்டிருந்தான். அவனைப் பிரமதேவன் சினங்கொண்டு நீயென்ன! தேவருள் சிறந்த பீடத்தில் வீற்றிருப்பவனாயிருந்தும் மாசிடரைப்போலப் பரமபாவனையாகிய கங்கையின் அவயவத்தை உற்றுப்பார்த்தாய்; எப்போது உற்றுப்பார்த்தையோ அதன்வழியாய்க்காதல்பெருகியதாகும். அதனால் நீ பிறப்படைவதுசித்தம்; நீயும் சந்திரவமிச சிகாமணியாகிய பிரதீபனுக்குச் சந்தனுவென்னும் பெயருடன் தோன்றி வெகுகாலம் அக்கங்கையை அணைந்து அநேகம் புத்திரரைப்பெற்றுச் சில காலம் தனி அரசுசெய்து முன்போல் மேற்றிசைக்கடவுளாவையெனச்சபித்தான். இவ்வாறு வருணனுக்குச் சாபங்கொடுத்தபிறகு கங்கையை நோக்கி நீ மண்ணுலகிற்சென்று மானுடப்பெண்ணாய் அவ்வருணனைக்கூடிச் சில காலம் சுகமனுபவித்து மீட்டும் நதியுருவமடைவாயென்று சாபங்கொடுத்தான். அவ்வருணன்தான் நீர், அக்கங்கைதான் நான்; அச்சாபத்தை யானேற்றுப் பூமியை நோக்கி வரும்போது வழியில் வசுக்களெண்மரைக்கண்டேன், அவர்கள் வருந்திய நெஞ்சமுடையவராயும் வாடிய முகமுடையவராயும் என்னையெதிர்ந்து வணங்கிநின்றனர். அவர்களை வாழ்த்தி நீங்கள் வருந்தும் காரணமென்னவென்றுகேட்டேன். அவர்கள் தங்களுக்கு வசிட்டமுனிவரால் உண்டான சாபத்தை யெடுத்துச்சொல்லினர். யானும் பிரமன் சாபத்தால் கலங்கியிருக்கின்ற காரணத்தைச் சொல்லவே, அவர்களும் என்னைவணங்கி ‘தேடிப்போனமருந்து தெருவிலகப்பட்டதுபோல’ தங்களுக்கு வசிஷ்டமுனிவரால் நேர்ந்த சாபவரலாற்றை விளங்கக்கூறினர்.

அதாவது, நாங்கள் வசிஷ்டமுனிவர் ஆச்சிரமத்திற்கு ஒருநாள் போனோம்; அவர் எங்களை யாதரவாய் அழைத்து உபசரித்து எமதாச்சிரமத்தில் இன்றுதங்கி அன்னம் புசித்துப்போமென வேண்டினர்; அவ்வாறே நாங்கள் அதற்கிசைந்தோம், வசிஷ்டமுனிவர் கட்டளையால் ‘ஆவிற்கருமுனியா’ எனச்சிறப்பித்துக் கூறப்பட்ட காமதேனு முப்பழமும்சருக்கரையுமாய் வேண்டிய பொரிக்கறி, சிற்றுண்டியோடு அன்னமிட்டுச் சந்தனபுட்பதாம்பூலங்களால் உபசரணைசெய்தது. நாங்களும் இருப்பிடஞ் சென்றோம், எங்களில் பிரபாசனவசுதன் மனைவியிடத்து வசிஷ்டமுனிவர் ஆச்சிரமத்திற்சென்றதையும், அங்கே தனக்குக் காமதேனு விருந்துபசரித்ததையும்விரித்துச் சொல்லினன். அவன்மனைவி அதை கொணர்ந்து கொடுத்தால் அல்லாமல் இணங்கேன் எனப்பிணங்கி நின்றாள். அவன் எங்களிடத்திலே வந்து எங்களையுந்துணையாக வரக்கேட்டான். நாங்கள் வசிஷ்டமுனிவருடைய மகிமாதிசயங்களையெடுத்துச் சொல்லியும் கேளாமல் போய்விட்டான். நா

ங்களும் வினைவழியே மனஞ்செல்வதனல் அதற்கிசைந்து அம்முனிவர் ஆச்சிரமத்திற் சென்றோம். இவன் தனியே சென்று காமதேனுவை வலிதிற் பிடித்துக்கொண்டு தன் மனையாள் கையில் கொடுத்தான். இதுநிற்க, முனிவர்கள் எப்போதும் வசிஷ்டர் ஆச்சிரமத்திற்சென்று காமதேனுவிடம் தருப்பை, சமித்து முதலியவற்றைப் பெற்றுப்போவது வழக்கமாகையால் அம்முனிவர்கள் காமதேனு எங்கே சென்றதென்று கேட்டனர். வசிஷ்ட முனிவர் அதிசயமடைந்து அசுரரும் கொண்டுபோக யத்தனிப்பதசாத்தியம், மண்ணுலகத்தவருக்கு மவ்வாறே அரிது, மற்றைத் தேவர்கள் முதலியோர் மனத்தாலும் நினைக்கவேமாட்டார்கள். இயற்கையிலே காமதேனுவோ மிக்க வலியையுடையது, எங்கே போய்விட்டதென்று சிந்தித்து பின்பு தமது ஞானதிருஷ்டியால் காமதேனு சென்றிருக்குமிடத்தை யறிந்து அஷ்டவசுக்கள், திக்குப்பாலகரோ டொத்தவராயிருந்தும் களவுசெய்தனரேயென்று கோபங்கொண்டு ஒருமந்திரத்தை யுச்சரித்தார், அம்மந்திரதேவதைகள் ஓடோடியும் வந்து எங்களைப்பிடித்து அவர் சந்நிதானத்தில்விட்டன. நாங்கள் மனங்கலங்கி வசிஷ்டமுனிவரை வணங்கி நின்றதை யறிந்து என்னையும் என்றுமல் என் காமதேனுவையுங் களவுகொண்டு சென்றீர், ஆகையால் நீங்கள் மானிடயோனியிற் பிறப்பீரெனக் கடுஞ்சாபமிட்டனர் நாங்கள் நடந்ததை நடந்தபடிசொல்லி வணங்க முனிவரிரங்கி நான்சொன்னபடியே உங்களில் எழுவர் உடனே கங்கையிலெறியப்பட்டுப் பழையபடியே வசுக்களாவீர், பிரபாசன்மாத்திரம் பெண்பேச்சைக்கேட்டு இவ்வளவு செய்துவிட்டமையால் எண்ணூற்று எண்பத்தாறுவயது மனைவியின்றி மற்றைச் சுகங்களெல்லா மனுபவித்திருக்கக்கடவன் என்று பிரதிசாபங்கொடுத்தார். நாங்கள் நம்மைப்பெற்றவுடன் கொலைசெய்பவர் யாவரென் றெண்ணியிருந்தோம், உம்மைக்கண்டோம், எங்கள் கவலையும் விண்டோமென்றனர். நானும் பூலோகத்தில் பிரமன் சாபத்தால் மானிடப் பெண்ணுவேன், அப்போது உங்கள் கருத்தின்படி செய்வேனென்றே சொல்லியிருந்தேன். அவ்வாறே நான்மண்ணுலகில் கங்கைக்கரையினருகில் இருந்தேன். நீஎன்னைக்கண்டு விரகங்கொண்டீர், நானே ஒரு போக்காக மக்கள்பிறந்தவுடன் கொலைசெய்வேன்; அதற்குச் சம்மதியானல் என்னை மனஞ்செய்துகொள்ளுமென்றேன், நீர் அவ்வாறே இசைந்தீர். என்னிடத்தில் அவ்வாறே வசுக்களெண்மரும் மைந்தராகத் தோன்றினர். அவருள் எழுவர்பழையபடியே வசுப்பதம்பெற்றனர். இவ்வொருவன் எண்ணூற்றெண்பத்தாறு வருடம் இம்மண்ணுலகில் மனைவியின்பமொன்றுமாத்திரம் அனுபவிப்பதின்றி மற்றை யின்பமெல்லாமனுபவித்து அரசர்பெருமானுய் தன்னைப்பார்க்கினும் இதுவரையும் அரசர் ஒருவரும் வில்வித்தையிலும் கல்விகேள்விகளிலும் வல்லவரில்லையெனச்சொல்ல விளங்குவன்; இதுதான் நடந்த வரலாறென்றனள்.

அதுகேட்டுச் சந்தனுமகாராஜன் இச்சிறுவன் மனைவியின்றி இருப்பானென்றதனல் இவனோடும் இச்சந்திரகுலமழியுமே! என்னொடும் இவ்வுலகவின்பமனுபவித்துச் சந்ததிதழையச்செய்து நாமிருவரும் பின் நமக்குரிய

இடத்துக்குப் போவோமென்றனன். கங்கையும் மாதருக்குப் புருஷவின்ப மொன்றேயல்லது வேறொன்றி லிச்சையிராது. ஆடவருக்குமாதரேயல்லது மற்றையின்பமுமுண்டு. ஆதலின் நீர் ஆடவராகத் தோன்றினமையால்உம க்கு மண்ணுலகபோகம் வெறுக்கவேயில்லை, இன்னும் சிறிதுபோது அரசு செய்துவரவேண்டும். அப்போது என்போலும் உருவும் அழகுமுள்ள ஓர் மாதை மணஞ்செய்துகொள்வீர். அவளால் உமது சந்ததி தழையும், நீர் யாதுக்கு மஞ்சவேண்டாமென்று சொல்லியபின் அரசனை நோக்கி இம்மை ந்தனை எடுத்துக்கொண்டு போகின்றேன். இவன் இங்கு இருந்தால் பெருங் கவலையையடைவீர், பதினாறு ஆண்டுவரையும் உலகம் புகழும்படி என்னால் வளர்க்கப்பட்ட முருகக்கடவுளை யொத்துவிளங்குவான், இவனைநான்வளர் த்துக் கல்விகேள்விகளிற் சிறந்தவனாக்கி வருகின்றேன்; நீர் பதினாறு ஆண் டாகவே கங்கைக்கரைக்கு வாரும்; உமது புத்திரனை யும்மிடத்தில் ஒப்பிக் கின்றேன் என்று மகனையழைத்துக்கொண்டு பத்தடிதூரஞ்சென்று மறைந் துபோய்விட்டான், அரசனோ திப்பிரமைகொண்டு ஓவியரையழைத்துக்கங் கையைப்போல் உருவந்தீட்டி அதனையே பார்த்துக்கொண்டிருந்தனன்.

இப்படி பதினாறு ஆண்டாகவே மந்திரிமாரையழைத்து நான் வேட் டைபாடவிருப்பங்கொண்டிருக்கின்றேன், நீங்களும் சேனையுடன் புறப்படு ங்கோளென்று உத்தரவளித்துத் தானும் அந்தப்புரஞ்சென்று உண்டுவேட் டைமுடிதரித்து ஒரு புரவியின்மேலேறிக்கொண்டு கோட்டை வாயிலைக் கடந்து மந்திரிமாருடன் ரதகஜதுரக பதாதிகளாகிய நால்வகைச் சேனை யும் புடைசூழக் காட்டிற்சென்று வேட்டையாடி வருகையில் மந்திரிகளைப் பிரிந்து விடாய்த்துக் கங்கைக்கரையோரமாக வந்து முன் கங்கையைக்க ண்ட சந்தனமரத்தி னிழலையடைந்தான். அப்போது வில்லும் கையுமாக விநோதமாய்த் திரிந்துகொண்டிருந்த சிறுவனைக்கண்டு இவன்நமக்குக்கங் கையினிடமாகத்தோன்றிய மைந்தனோவென்று எண்ணிக்கங்கையின்மேல் முன்னைநினைவுண்டாக மோகங்கொண்டு கலங்கினின்றான். அப்போது கங் காபுத்திரன் தன்கையில் இருந்த வில்லினின்றும் மோகனாஸ்திரமொன்றை த்தொடுத்துத் தன்தந்தைமார்பே இலக்காகவெய்தான். அதனால் அரசன் அறிவுசோர்ந்துவிழவே பயந்து தன் தாயினிடத்தில் விரைவாகச்சென்று ஒன்றுஞ் சொல்லாமலிருந்தான்; 'அகத்தினழகு முகத்திற்றெரியும்' என்ற படி தன்மகன் முகக்குறியைக்கண்டு தான் தன் ஞானதிருஷ்டியால் அரச ன்வந்ததையறிந்து மகனையும் அழைத்துக்கொண்டு விரைந்துசென்று அர சனை வாரியெடுத்து மடிமேலிருத்தி அழலிடுமெழுகுபோல் மனம் பதைத் துருகி மிக்க ஆருமையால் அரசனைச் சயித்தியோபசாரத்தால் தேற்றிச்சற் றுத் தெளிந்து வருவதைக்கண்டு அரசனைக்கூவியழைத்தாள்.

அரசனோ இது கங்கையின் குரலேயாமென்று திடீரென்றெழுந்திருந் ததைக்கண்டு அவ்வரசனை முகத்தோடுமுகமணைய அணைத்து முத்தமிட்டு இன்னும் உலகவாஞ்சையை யொழிந்தாயில்லை, இப்படி வருந்துவதனால் முன்போல் உம்மையணையக்கூடுமோ! இப்புத்திரனால் நல்லபேரும் புகழும் பெற்றுவாழ்வீர். இவனை வசிஷ்டமுனிவரிடமனுப்பிச் சகலசாஸ்திர பாரங்

கதனுகவும், பரசுராமரிடம் அனுப்பி வில்வித்தையில்சிறந்தவனுகவும் ,அருட்கொடியாகிய உமாதேவியை யொருபாலுடைய இறைவனையொத்த சனகாதிமுனிவரிட மனுப்பிக் கேள்வியிற் சிறந்தவனுகவும் செய்வித்தேன். இவனைப் பெண்ணின்கையிற்சிக்கிய சிறுவனென்றெண்ணுதிரும். முன்னே நான்கொடுத்த வாக்கின்படி இவனைக்கைக்கொள்ளும், இவனுல் சந்திரகுலம் சிறக்கும். இவன் என்னிடம் பிறந்தமையாலும், என்னுல் வளர்க்கப்பட்டமையாலும் இவனுக்குக்காங்கேயனென்று பெயரிடும் என்று தன் அருகிலிருந்த மகனையழைத்து அருமையான புத்திர ரத்தினமே! இவ்வரசனே நின்னைப்பெற்றெடுத்த பெருந்தகையென்று சொல்ல, காங்கேயனும் தன் பிதாவாகிய சந்தனுமகாராஜன் பாதங்களில் வீழ்ந்து வணங்கி யான்செய்த சிறு பிழையைப் பொறுத்தருளவேண்டுமென்று வணங்கினின்றுன். புத்திரனில்லாமல் வருந்துகின்ற அரசன் நித்தியதரித்திரனுக்குத் தனக்குப்பை கிடைத்ததுபோல மகிழ்ந்து இருகைகளாலும் வாரியெடுத்து உச்சிமோந்து முத்தமிட்டுக் கங்கையை நோக்கினுன், கங்கையும் இனி என்னை எண்ணி வருந்தவேண்டாம், எனக்கு விடைகொடுமென விடைபெற்றுக்கொண்டு கங்கையில் மறைந்தாள். பிறகு சிந்தைத்துபரந்தீர்ந்துநின்று அரசன் புத்திரனை அழைத்துக்கொண்டு மந்திரிமாருடன் சேர்ந்து நால்வகைச் சேனைகளும் புடைசூழ்ந்துவரத் தானும் தன்மகனும் சந்திரனும்புதனும்போலவிளங்க ஒரு திவ்ய ரதத்தின்மேலேறிக்கொண்டு அத்தினுபுரமே வந்து சேர்ந்தான்.

அரசன் வந்து சேர்ந்து நல்ல சுபமுகூர்த்தத்திலே நகரமாந்தரையும் மந்திரிமாரையும் அழைப்பித்து தன்மகனுகிய காங்கேயனுக்கு இளவரசுமுடிசூட்டி யாவரும் அவனுணையினடங்கிநடக்கக்கட்டளையிட்டான். அவ்வாறே நகரமாந்தரும் பிறரும் இளவரசாகிய காங்கேயன் கட்டளையின்படிநடக்கலாயினர். இப்படி வெகுகாலம் தந்தையினும் நூறுமடங்கு குடிகள்மன மகிழ அரசாண்டுவந்தான். அரசனும் நமது அரசபாரமுழுதும் நமது மகனிடம் ஒப்பித்துவிட்டோம், நமக்கு யாதுகுறையென்றுமனக்குறையின்றியிருந்தான். இவ்வாறு இருக்கையில் ஒருநாள்அரசன் தேர், யானை,குதிரை காலாட்படையென்னும் நாற்படையும் தன்னைச் சூழ்ந்துவரவேட்டையாடச்சென்று யமுனையாற்றங்கரையோரமாகச சென்றுன். வனத்தில் வசிக்கும் மிருகங்கள் பலவற்றையுங் கொன்றமையால் விடாய்ப்பட்டு அவ்வாற்றில் இறங்கித் தண்ணீரருந்தி அங்குள்ள விநோதங்களைப் பார்த்துக்கொண்டே வருகையில் ஒரு நலமான பரிமளவாடை விசக்கண்டு, இதென்ன புதுமை! இப்படிப்பட்ட பரிமளவாடையொருக்காலும் நாம்கண்டதில்லையே! என்று மிகுதியும்வியப்படைந்து தன்தேர்ச்சாரதியைநோக்கி இக்காட்டில் உள்ள மலர்மணமுமல்லாமல் ஒரு நவமான பரிமளவாடை வீசுகின்றதே,நமதுதேரைமேற்றிசை வழியாகச் செலுத்தென்று கட்டளையிட்டான். அவ்வாறுஅவன் தேரைச் செலுத்தச் சிறிதுதூரஞ் சென்றபின்பு யமுனையாற்றங் கரையிற் பராசர முனிவரால் பரிமளகந்தம் விசப்பெற்ற சத்தியவதியைக் கண்டார்கள். அரசன் அச்சத்தியவதியைக் கண்டு மிகுதியும் திப்பிரமை

கொண்டு இவ்வளவு மிகுந்த பேரழகினையுடைய மாதரை நாம் எங்கும் கண்டதில்லையே! இவர்யார்! போதோ! விசும்போ! புனலோ! பணிக ளார்பதியோ! யாதென்றுசொல்லுவது! நம்மாற்சிறிதுங்கணிப்பதரிது! ய மன் விடுத்த தூதேயோ! அனங்கன் துணையேயோ! தெய்வமேயோ! என் று ஐயமடைந்து பின்பு கண்கள் இரண்டும் எதிர்ந்தாரை முன்னம் நோய் படச்செய்து பின்பு அழைத்து மருந்துதவுதல்போலத் தோன்றுகின்றமை யால் மாநடமாதரேயெனத்துணிந்து அவரைக்கிட்டி நீர்தனியே இவ்வாற் றினருகேயிருப்பதற்கென்ன காரணமென்று வினவினன்.

சத்தியவதியும் அரசனைக்கண்ணுற்றுநாணி பயபத்தியாய் அஞ்சலிசெ ய்து பூவரசே! காவரசே! பராசர்பரவும் கோவரசே! நாவலர்புகழும் வே லரசே! நான் நெய்தனிலத்தரசனாகிய தாசராசன்மகள், என்பெயர் சத்திய வதியென்பர், என்குலத்தொழுக்கின்படி இவ்வாற்றினைக் கடந்துபோகவ ரும் அருந்தவமுடைய முனிவருக்கு ஓடம்விட்டுவருகிறேன், நல்ல பகற் போதாகையால் இம்மரத்தினிழலில் வெய்யிற்கொதுங்கியிருக்கின்றேன், இ துதான் என்வரலாறென்றனள் அரசன்கேட்டு இவர்தமது தந்தைமனத்தி ற்கிசைவில்லாமல் நம்மைமணஞ்செய்யாரென்பது துணிந்து தாசராசன்நக ரத்திற்குத் தேர்விட உத்தரவளித்தான். அவ்வாறே சாரதியும் தாசராசன் நகரத்திற்குத் தன்தேர்ப்பரிகளைத் தூண்டினன். தேர் தாசராசன் நகரத்தி ற்கு வந்துசேரவே அரசன் தன் சாரதியால் தாசராசனுக்கு தன்வரவை ய றிவித்தான். அரசன் வரவைத் தேர்சாரதியால் அறிந்த தாசராசன் நம்மை அரசன் அழைக்கவேண்டியகாரணமென்ன? இந்தஉலகமுழுதும்ஒருகுடை யில் அரசாண்டுவரும் அரசன் நம்மை ஒருபொருளாக மதித்து அழைத்த தனால் நாம்போய்க் கேட்டுவருவோமென்று துணிந்து அரசனுக்கு வேண் டிய காணிக்கைகளை யெடுத்துக்கொண்டு வெளிப்பட்டு அரசனை யடைந்து அடியேனை யொருபொருளாக மதித்தழைத்த காரணமென்னவென்று மிகு தியும் பணிவாகக்கேட்டான். அரசன் தாசராசன் கொணர்ந்த காணிக்கை களையேற்றுச் சாரதியையெச்சரித்தான். சாரதியும் தாசராசனைநோக்கி நம தரசனுக்கு உமதருந்தவப்புத்திரியாகிய சத்தியவதியை மணஞ்செய்வியும், அதன்பொருட்டே அரசன் இங்கே எழுந்தருளினரென்று சொல்ல, தாச ராசனும் பேரானந்தமடைந்து இப்போது அரசன் கூறிய சொல்லுக்கிரண் டில்லை. ஆயினும் நமதரசனே சங்கார கருத்தாவாய் எல்லாக்கிருத்திய கரு த்தாக்களுக்கு மிடமாய் பசுத்திரளனைத்தும் ஆட்டுவிப்பாராய்பாசங்கடந்த பரஞ்சோதியாய் நின்ற பரம்பரன் முடியில் விளங்குகின்ற சந்திரனது மர பிற்றோன்றி எங்களுக்கெல்லாம் அரசராவாரெல்லாம் திறைப்பொருள் செ லுத்த அரசுசெலுத்தும் மகாராசன். அவர் என்குல விழிவினையும் சிறிதும் நோக்காமல் என்மகளை மணஞ்செய்து கொள்ளுகிறேன் என்றசொற்கேட் டமாத்திரம் மகிழ்ச்சியடைகின்றேன், ஆயினும்ஒருகுறைகண்டுகவலையடை கின்றேன். அதாவது என்மகள்வயிற்றிற் பிறக்கும்மகனுக்கு மகுடாபிஷே கஞ் செய்வாராயின் நமது சந்திரகுலத்தரசரும் பிறரும் ஒப்பார்கள், என் மகள் வயிற்றிற் பிறக்கும் மக்களும் அவலமாவரே, ஆகையால்இதற்கேதே

னும் நியாயமுண்டாக்கி என்மகளை மணஞ்செய்விக்கலாமென்று சொல்லி முடித்தான். இதற்கு நம்மாலொன்றுஞ்சொல்ல வல்லமையேயில்லை. நாம் நிராசையாகச்செல்வதே நலமென்று கருதித் தாசராசனுக்கொன்றுஞ்சொல்லாமல் தன்தேரை அத்தினபுரத்துக்கே செலுத்தக் கட்டளையிட்டு, அது முதல் தாசராசன்மகள் என்று வாய்ப்பாளோவென்று ஏக்கங்கொண்டு அன்னமுந் தண்ணீரும் வெறுத்து உடன்மெலிந்து ஒருவரோடும்ஒன்று முரையாடாமல் அந்தப்புரத்திலேயே கந்தப்பகழி காமன்செலுத்த வருந்தியிருந்தான் இவ்வாறு அரசன் கொலுமுகத்திற்கே வராமல் இருப்பதை மந்திரிமார்கள்கண்டு மனம்விண்டு யாதொரு குறைவுமின்றி இதுவரையும் கொலுவீற்றிருந்த நீர்யாதோ ஒரு மனோவியாதி கொண்டு வெளியில் வராமலும், அதனை வெளியிடாமலும் இருப்பதழகோ! அதனைஎங்களுக்கறிவித்தால் அதற்குத் தகுந்தபடி முயல்வோமென அவ்வுண்மையை வெளியிடாமல் அவர்களைச்சினந்து நோக்கி என்னையேன் வருத்துகின்றீர்கள். "நீரிற்குமிழியிளமை நிறைசெல்வ-நீரிற்சுருட்டுநெடுந்திரைகள்-நீரிலெழுத்தாகும் யாக்கை" என மேலோருங்கூறியிருக்கின்றனர். இப்படிப்பட்ட சரீரத்தில் வியாதிதோன்றுவது சகசம்; இதைக்குறித்து யோசிப்பதென்னவென்று கடுகடுத்துக்கூறினன். அதைக்கேட்டு மந்திரிமார் மிகப்பயந்து இளவரசாகிய காங்கேயனுக்குத்தெரிவித்தனர். காங்கேயனும் மந்திரிமுதலானோரிடத்துத் தமது கருத்தை விளக்காததந்தை குழந்தையாகிய என்னிடத்தே விளக்குவாரோ விளக்காரென்பது எண்ணி அன்று தேரைச் செலுத்திய சாரதியார்? அவனை அழைத்துவரச்செய்யுங்கோளென்முன். அவ்வாறே இளவரசன் சொற்படி தூதுவர்போயழைக்க அச்சாரதிவந்து வணங்கி நின்முன். அவனைநோக்கிக் காங்கேயன் என்தந்தை காட்டிற்சென்றுவேட்டையாடி வந்தநாள்முதலாகக் கொலுமுகத்துக்கே வருவதில்லை, மனோவியாதி மேலிட்டிருக்கிறார்; அவரன்று ஏதாவது அதிசயங் கண்டதுண்டோ? உள்ளது உள்ளவாறு மறைக்காமல் சொல்லிவிடு என்றுகேட்க, சாரதிவணங்கி கைகட்டிக்கொண்டு சொல்லுகின்முன். நான் தேரைச் செலுத்திக்கொண்டு போக அரசனும் பலமிருகங்களையும் வேட்டையாடி விடாய்கொண்டு யமுனையாற்றங் கரைக்குப்போனர். அங்கே புதுமையான பரிமளவாடை வீசியது. அப்பரிமளவாடையைச்சுண்டு அரசன் இதைக்கண்டறியவேண்டும் தேர்விடு என்றனர். நானும் அவ்வாறே தேரைச்செலுத்தினேன், முடிவில் ஒருமரநிழலிலே அவ்வாற்றில் ஓடம்விடும் தாசராசன் மகளைக்கண்டனர். அவளைக்கொண்டு தானின்னரெனவும்தந்தையின்னரெனவும் அறிந்துகொண்டு பின்பு அத்தாசராஜனைப் பெண்கேட்டோம், அவன் தான் இழிகுலமாகையால் தன்மகள்வயிற்றிற் பிறக்கும் புத்திரனுக்கு மணிமுடி சூட்டுவதானல் தன்மகளைக் கொடுப்பதாகச்சொல்லினன். அதுகேட்டுஅரசன்ஒன்றுஞ்சொல்லாமல் தன் இராஜதானிக்குத் திரும்பினர். இதுதான் அன்று நடந்தசெய்தியென்று சொல்லிமுடித்தான். காங்கேயன் உடனேமந்திரிமாரையழைத்துத் தன்தந்தைமனோவியாதிதீர மருந்து அறிந்துகொண்டேனென்று அவர்களை நால்வகைச்சேனையுடன் தன்னைச்சூழ்ந்துவரக்கட்டளையிட்

டுதான் தாசராசன் நகரமேசென்று சேர்ந்தான். தாசராசன்காங்கேயனைக்க ண்டுவணங்கிஇவ்வளவுதூரம்வர என்னபாக்கியம்செய்தேனென்று சொல்லி னன். காங்கேயன் தாசராசனை நோக்கி என்பிதாவுக்கு உமது மகளை மணஞ்செய்வியுமென்று கேட்க, அதற்குத் தாசராசனும் நாங்கள் இழிகுல மாதலால் எங்கள் பெண்ணின் வயிற்றிற் பிறக்கின்ற மக்கள் பெருமையிற் சிறவாமல் அவலமாவரே! ஆகையால் அப்பிள்ளைகட்கு மணிமுடிசூட்டுவ தாயிருந்தால் என்மகள் உமது பிதாவை மணமாலைசூடுவள், அதற்கென்ன முடிவென்று சொல்லினன். 'வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமி ல்லை என்று பெரியோருரைத்திருக்கின்றனர். ஆகையால், உலகின்கண்வித் தே சிறந்தது. எந்த ஜாதிப்பெண்ணாயினுமாகட்டும், அரசர்க்குத் தோன் றினவனாயின் அவனே சிறப்படைவான். இனி என் காலத்தில் அல்லாமல் என் பிள்ளைகாலத்தில் யாதேனும் ஒருசச்சரவுண்டாகுமாதலின் நானென் றும் மணஞ்செய்துகொள்வதில்லையென்றும், நான் அப்படி தவறுவேனாயின் தந்தைதாயாரைப் போற்றாதவரும், தன்னையடுத்தாருக் கிடையூறுசெய்தா ரும், நீரில் ஆடையின்றி யிறங்கினாரும், பெரியாரைப் பிழைத்தொழுகினா ரும், ஈவதை விலக்கினாரும், ஐயமிட்டுண்ணாதாரும் பெறும்கதி யாதோ அ தைப்பெறக்கடவேனென்றும், சகலதேவருமறிய உறுதிமொழி கூறினான். அதைக்கேட்ட தேவர்கள் ஆகாயமார்க்கமாய் இவனுக்கு இன்றுமுதல்வீட் டுமனென்று பெயர் வழங்கக்கடவதென்று ஒரு சாமவரையும் பூமாரிபொ ழிந்தனர். இவ்வாறு சபதஞ்செய்யலாமா? புத்திரனில்லாதாருக்குப் புண் ணியலோகமில்லையென முறையிடுகின்றதே, இதற்கென்ன செய்வதென்று மந்திரிமுதலானோர் கேட்க, இத்தேகம் தந்தை காரணமாக வந்தமையாலு ம் இது தந்தை கருத்துக்கு வருத்தம் நேரிடாதபடி செய்த செய்கையேயா தலாலும், புண்ணியலோகங் கிடைக்குமென்பதில்லையமில்லை யென்றனன். அதுகேட்டு மந்திரி முதலானோரும், தாசராசன் முதலானோரும் தந்தை பொருட்டு மணந்துறந்த தயாநிதியேயென்று வாழ்த்திக் காங்கேயனை வீட் டுமனென்று பெருமுழக்கமாக அழைக்கத்தொடங்கினர். பின்பு வீட்டுமர் உமது புத்திரியாரை இனி மணஞ்செய்விப்பதில் என்னதடை? ஒன்றுமில் லையே? நீர் என்தாமதஞ்செய்கின்றீர், எமது தந்தைக்கு மணஞ்செய்விக்க உமதுமகளை அழைப்பியுமென்றனன். உடனே சில தூதுவரால் தம்புத்திரி யாரை யழைத்து நீராடச்செய்து நல்ல ஆடையாபரணங்களை யணிவித்துத் தானும் தன்சுற்றமும் பின்தொடர வீட்டுமரை வணங்கிநின்றான். வீட்டும ரும் பரிமளவாடைவீசக்கண்டு வியப்படைந்து தானும் தன்மந்திரிமார் பு டைசூழச் சிற்றன்னையைச் சிவிகையிலேற்றித் தன் அத்தினாபுரமேவந்துசே ர்ந்து தந்தையை வணங்கி நீர்கொண்ட கருத்தை நிறைவேற்றினேன். நீர் அக்கன்னிகையைமணந்து மனக்கிலேசந்தீருமென்றுவேண்ட அரசன் அம் மொழிகேட்டு மகிழ்ந்து மகனை வாரித்தழுவி உச்சிமோந்து முத்தமிட்டு நான் கொண்ட கருத்தை யெவ்வா றறிந்தனை யென்றான். வீட்டுமனும்பிதா வை நோக்கி யான் அன்று தேரூர்ந்த சாரதியைக் கொண்டறிந்து கொண் டு தாசராசனிடஞ் சென்று அவன் சொன்னதற்குத் தக்கபடிசெய்து அவ்

வன்னையைக் கொணர்ந்தேன். நல்ல சுப முகூர்த்தத்தில் மணஞ்செய்து கொள்ளும் என்றதை அரசன் கேட்டு மந்திரி முதலாயினோரை அழைப்பித்து என்மகனெவ்வாறு சமாதானஞ் சொல்லி இக்காரியம் நடப்பித்தான் என்றனன். அதற்கு மந்திரிமார் முதலானோர் அத்தாசராசன்கேட்டதற்கு உன்மகனாகிய காங்கேயன் சகல தேவர்களும் அறியத் தான் உலகின்கணுள்ளவரையும் மணஞ்செய்து கொள்வதில்லையென்று பீஷ்மித்துக்கொண்டான் நாங்கள் மணஞ்செய்துகொள்ளாவிட்டால் புத்திரப்பேறுண்டாகாதே; புத்திரப்பேறில்லாவிட்டால் புண்ணியலோகமில்லையே; உமது புத்திரவர்க்கத்துக்குப் பட்டம் இல்லையென்று சொல்லிக்கொண்டாலும்கொள்ளலாம்; இப்படிசெய்துவிடலாமாவென்று தடுத்தோம்; அதற்கு உமதுமகன் இத்தேகம் தந்தைசம்பந்தத்தால் வந்ததாகையால் தந்தைக்கு மனமகிழ்ச்சியுண்டாகச்செய்வதே புண்ணியலோகப்பிராப்தியென்று சொல்லி மறுமொழி கூறினன். தேவர்களும் ஒருசாமபரியந்தம் புஷ்பவருஷம் பொழிந்து இன்றுமுதல் காங்கேயனைப் பீஷ்மனென்று அழையுங்கோளென்று ஒரேமுகமாகநின்று பெருமகிழ்ச்சியாய் ஆகாயமார்க்கத்தில் அழைத்தார்கள். இப்படி நடந்ததைக்கண்டு தாசராசன்பயந்து தன்மகளைக்கொடுக்கத் தீர்மானித்தான். உடனே காங்கேயன் தாசராசனோடும்புறப்பட்டு அவன் மகளைச் சிவிகையிலேற்றிக்கொண்டு அத்தினபுரமே வந்துசேர்ந்து உமக்கு மணஞ்செய்விக்க உத்தேசித்திருக்கிறான்; இதுதான் நடந்தவரலாறென்று சொல்லி முடித்தனர். அதுகேட்டு மந்திரிமார் முதலானோரை யனுப்பிவிட்டுத் தன்மகனை யழைப்பித்து அவன் இப்பெருங்காரியஞ் செய்துகொண்டதற்கு மகிழ்ச்சியும். அவன் வழியில் புத்திரசந்தானந்தவிர்ந்ததே யென்பதற்குத் துக்கமுங்கொண்டு மகனைப்பார்த்து, நீயோ தந்தைக்கு மக்கள் செய்யவேண்டிய கடமைக்குப் பதின்மடங்கதிகமாகச் செய்துவிட்டனை! இனி என்பொருட்டுப் புண்ணியலோகத்திற் கேதுவாகிய மக்கட்பேற்றையும் இழந்துவிட்டாயாகையால் என்னால் கொடுக்கப்படும் இரண்டு வரங்களைப்பெற்றுக்கொள். அவ்வரங்கள் யாவையெனின்! உனக்குப் புண்ணியலோகம் சித்திக்கக்கடவதென்றும் நீ யெப்போது உயிர்விட நினைக்கின்றனையோ அப்போது யமவாதனையன்றி உயிர்நீங்கக் கடவதென்றுமே என, காங்கேயனும் தன் தந்தையை வணங்கினின்றான். தந்தையும் பஞ்சணையைவிட்டிழிந்து நீராடி நல்ல வஸ்திராபரணமணிந்து மணக்கோலமாய்ச் சகலராசர்களையும் வருவித்து அவர்கள் முன்னிலையில் வேதவேதியர்கள் ஆசீர்வதிக்கச் சத்தியவதியைத் தாசராசன் நீரால் தாரைவார்த்துக்கொடுக்க மணஞ்செய்துகொண்டான். அப்போது தாசராசன் அம்மணப்பந்தலில் நின்றுகொண்டு இச்சத்தியவதியின் பிறப்பையெடுத்து விளங்கச்சொல்லி முடித்தான். வந்தசனங்களுக்கும் இராஜாராஜர்களுக்குந் தகுந்த உபசரணையும் மரியாதையும் காங்கேயனும் மந்திரிமாரும்செய்ய, அவர்கள்சந்தோஷமாய்ச் சிலநாள் அத்தினபுரத்தே தங்கியிருந்துபிறகு தங்கள் தங்கள் தேசம்போய்ச் சேர்ந்தனர்.

நகரமாந்தரு மிகவுமகிழ்ச்சியடைந்தனர். அரசனோ சத்தியவதியுடன் இரதிமதனெனுமெனக்கூடிவாழ்ந்துவருகையில் சூரியசந்திரரென்னச் சித்திராங்கதன்விசித்திரவீரியனென்னஇரண்டுமக்களைப்பெற்று, அவர்களுக்குநான்குவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்துநான்குகலைகள்,ஸ்மிருதிகள் முதலியவற்றைக்கற்பித்துவந்தான்.அவர்கள்பதினாறுவயதடைந்தகாலத்துதந்தை

க்குரிய நீர்க்கடன்முதலியவற்றை வீஷ்டுமனும் அவ்விருமக்களுஞ் செய்த னர். பின்பு வீஷ்டுமன் தன்வாக்கின்படி சித்திராங்கதனுக்கு ஐம்பத்தாறு தேசத்து அரசருமறியத் தனக்குரியமணிமுடியைச் சிறியதாய்பெற்ற மக் களுள் மூத்தவனாகிய சித்திராங்கதனுக்குச் சூட்டினான். இச்சித்திராங்கத னே தன்தந்தையாகிய சந்தனுவினும் மதின்மடங்கதிகமாக சோடச மகா தானங்களையும் வழுவாமல்செய்து தன்னுயிர்போல மன்னுயிரைக் காத்து வருகையில் கந்தருவர்க்கெல்லாம் அரசனாகிய சித்திராங்கதனென்பவன் தன்பேர்கொண்டு மண்ணுலகில் நரன். அரசாள்வதடுக்குமாவென்று என் னிநேரேபொருதுவெல்ல வீஷ்டுமனிருக்குமளவு முடியாதேயென்றுகவலை கொண்டு வீஷ்டுமன் இல்லாத சமயநோக்கிக்கொண்டேயிருந்து ஒருநாளிர வில் விநோதமாகத் தனித்து ஒர் இடத்திலிருப்பதுநோக்கி இதுதான் சம யமென்று அவன்தலையைக்கொய்து சென்றான். அச்செய்தியறிந்த சத்திய வதி தன் மூத்தமகனாகிய வீஷ்டுமனுக்கு அறிவிக்க வீஷ்டுமனும் கந்தருவ னே தனக்கஞ்சி வஞ்சமாகக்கொன்றுபோனான் என்பதையறிந்து அவனோ டு போர்செய்வது தகுதியல்லவென்று துணிந்து அவனுக்கிளைய சித்திரவீர னுக்கு மணிமுடிசூட்டினான். சித்திரவீரனே தருமதேவதை நாற்பாதத்தா லும் நடந்துசெல்லச்செங்கோல்செலுத்திவருகையில் சித்திரவீரனுக்கு இரு பதாண்டாயிற்று. இவனுக்கு மணஞ்செய்விக்கும் பருவம் நேர்ந்ததே என் செய்வோமென்று தன்தாயாகிய சத்தியவதி கவலைகொண்டிருப்பதையறி ந்த வீஷ்டுமன் எந்தஅரசன்மகளை மணஞ்செய்விக்கலாமென்று யோசிக்கை யில் காசிநகரத்தரசன் தன் அருந்தவப்பேறாகிய புத்திரிகள்மூவரையும் சுய ம்வரம்செய்விக்க உத்தேசித்துச் சகலதேசத்தரசர்களுக்கு மணவோலைபோ க்கினான் எனத்தூதர்சொல்லக்கேட்டுத் தன்னை அவ்வரசன் தாசராசனிட த்துச்சம்பந்த நேர்ந்தமைக்கு மதியாது தனக்கு மணவோலையும் போக்கா மையும்கண்டு இனி நாம் போர்க்கோலங்கொண்டு அவ்வரசனது காசிநகர த்தையணைந்து சித்திரவீரனையும் முன்னேநிறுத்தித் தான்பின்னே யிருந் தான். இதுகண்ட காசிநகரத்தரசன் வீஷ்டுமன் வந்த செய்தியைக்கேள்விப் பட்டு இனி நாம் என்செய்வது வீஷ்டுமன் வந்துவிட்டானேயென்றுபயந்து அவனுக்குத் தக்கமரியாதைகள் செய்தான். அரசர்கள் யாவரும் வீஷ்டும னைக்கண்டவுடன் பகலைக்கண்ட செவ்வல்லிபோலவும் இரவைக்கண்ட தா மரைபோலவும், வாடியிருந்தனர். காசிராசன் தன் புத்திரிகளாகிய அம் பை, அம்பிகை, அம்பாலிகை யென்னும் மூவரையும் ஆடையணிகளால் அலங்கரிப்பித்துச் சுயம்வரமண்டபத்தில்வருவித்தான். அவர்களோ தமது சேடியருடன் சுயம்வரமண்டபத்திற்கு வந்துசேர்ந்தனர். சேடியரோ அம் மூவருக்கும் அம்மண்டபத்தில் வந்த அரசர்களின்னமரபினரெனவும், இ ன்னகுடிப்பிறப்பினரெனவும் சொல்லிக்கொண்டே சித்திரவீரனிருக்குமிட த்தை வந்தடைந்தனர். சேடியரோ இவன் சந்திரகுலசிகாமணியாகிய சந்த னுகுமாரன், தாசராசன் மகளாகிய சத்தியவதி மகன் என்று சொல்லவே அம்மாதர் மூவரும் சித்திரவீரனுடைய அழகுமுதலியவற்றைக்கண்டு அவ் வரசனுக்கு மணமாலைசூட்ட முயன்ற சமயத்தில் இவனோ இழிகுலத்தவன்

இவனுக்கு மணமாலைசூட்டுவதுந் தகுதியாவென்று வந்திருந்த மன்னவர் சொல்லி வாயைமூடுமுன் வீஷ்டுமனுடைய வில்லினது நாணோசைஅச்சயம் வர மண்டபமுழுதும் அதிரும்படிகேட்டது. உடனே சித்திரவீரனும் தானும் தன் வில்லைவளைத்து நின்றான். இவ்வாறு இருவரும் குகையிலிருந்து வீராவேசங்கொண்டு புறப்பட்ட இரண்டு சிங்கக்குருளைகளைப்போலப்போர்செய்யத்துணிந்து அரசர்களைநோக்கிச் சிறந்த குலத்திற்பிறந்த அரசரே! நீங்கள் உங்கள் புயவலியைக்காட்டி யெங்களையோட்டி இப்பெண்களை மணமாலைசூட்டி உங்கள் ஜெயக்கொடிநாட்டி விடுங்கோள் பார்ப்போமென்று சாரதிகளைநோக்கி இரதம்கொண்டுவரக் கட்டளையிட்டு அதன்மேல் ஏறிப் பராக்கிரமம்விறி நின்றனர், அரசர்களோ அவர்கள்கொண்ட போர்க்கோல நெறிப்பினையும் வில்லின் செறிவையும்கண்டு மானந்தலைக்கொண்டு தாமும் போர்க்கோலங்கொண்டு தங்கள் வெற்றிச்சங்கை வாயில்வைத்தூதித் தங்கள் தேர்களையும் செலுத்தினர். இவ்வாறு சொல்லவே வில்லாளிகளுடன் வில்லாளிகளும் எதிர்ந்து வாள், தோமரம், பிண்டிபாலம், பரசு, பல்லயம், ஈட்டி, எறியீட்டி முதலிய படைகளையெறிந்தும் வீசியும் குத்தியும்தள்ளியும் இவ்விதமாக இருதிறச்சேனையும் யுத்தஞ்செய்கையில் பகைத்த அரசர்கள் சேனைகள் சின்னபின்னமாகக் கண்டிக்கப்படுவதையறிந்து மிகவும் பெருஞ்சினங்கொண்டு நாம் தனித்தனியாகப்போரிட்டால் அன்றி அவ்விருவரை வெல்லமுடியாதென்று துணிந்து இராமலக்ஷ்மணர்களை வளைந்த அரக்கர் சேனைபோல வளைந்துகொண்டார்கள். வீஷ்டுமனும் சித்திரவீரனும் அவ்வரசர்களை ஆலவிடம்போலெதிர்த்து வில்லைமுறித்து தேரை உடைத்து சாரதிகளையுங் குதிரைகளையுங் கொன்று முடியையுடைத்து மார்பைப்பிளந்து மதயானைகள் பொய்கையிற்சென்று அங்கே பூத்திருக்குஞ் செந்தாமரைமலர்களைக் கலக்குவதுபோலக்கலக்கவே அவர்கள் வந்தவழிதெரியாமல் முதுகிட்டோடத்தலைப்பட்டனர். வீஷ்டுமனே வெற்றிச்சங்கை வாயில்வைத்தூதிச் செயபேரிகை யறைவித்தான். அதுகண்டு ஓரரசரும் நேரில்வந்து போராடத்துணியாததுகண்டு அம்மூன்றுமாதரையும் முத்துச்சிவிகையி லேற்றிக்கொண்டு தன்னகரமாகிய அத்தினபுரியை நோக்கிச் சென்றான். அம்மூவரில் மூத்தவளாகிய அம்பையென்பவள்தன் உயிர்ப்பாங்கியை யழைத்து நான்சாளுவதேசத்துஅரசன்மீதுமையல்கொண்டிருக்கின்றேன், நீ இதை வீஷ்டுமருக்கறிவிக்கவேண்டுமென அவளப்படியேஅறிவிக்க, வீஷ்டுமனும் அப்படியே நன்றென்றுமதித்துச் சாளுவதேசத்திற்குக் கொண்டுபோய்விடத் தன்காவலாளருள் சிலரையனுப்பி அம்பையை விட்டுவரக்கட்டளையிட்டான். அக்கட்டளையேற்ற காவலாளர் அவ்வம்பையைஅவ்வாறே முத்துச்சிவிகையிலேற்றி அழைத்துக்கொண்டுபோயினர். வீஷ்டுமனும்அம்பையொழிந்த இரண்டு கன்னியரையு மழைத்துக்கொண்டு நல்ல சுபமுகூர்த்தத்தில் சித்திரவீரனுக்கு மணஞ்செய்வித்து வேதவேதாங்கமுணர்ந்த அந்தணர்களுக்குச் சொர்னதானமுதலிய சோடசமகாதானங்களையும் வழங்கி அந்நகரமாந்தருக்கும் வந்த அரசர்களுக்கும் விருந்து முதலியன உபசரித்துச சிறப்புநடத்தினன். சித்திரவீரனே மலர்மகளையும் நிலமகளையும் மரு

வும் திருமால்போல அம்பிகை அம்பாலிகையென்னும் இருமனைவியருடன் கூடிக்கலந்து இன்பக்கடலில் அழுந்தியிருந்தான். வீஷ்டுமனுடன்விடைபெற்றுச்சென்ற அம்பையோ சாளுவதேசமடைந்து அவ்வரசனைக் கண்டு அரசர்பெருமானே! நானோ உன்மேலேயே காதல்கொண்டிருக்கிறேன். என்னைவீஷ்டுமர் அழைத்துக்கொண்டு சென்றனர் என்று எண்ணவேண்டாம். நானோ என் கருத்தை வெளியிட்டேன். அவர் அதற்கியைந்தஎன்னைத்தங்களிடமே யனுப்பினர். தடையில்லாமல் மணம்புரியுமென்று வேண்டி நின்றாள். சாளுவராசனோ நகைத்து என்னநினைத்து என்ன சொல்லவந்தாய், வீஷ்டுமன்கையிற் சிறையுண்ட உன்னை மணஞ்செய்துகொள்வேனாயின்என்னோடொத்த அரசர்கள் என்னை என்னசொல்வார்கள். ஒருவர்கையிற்சிறையுண்ட உன்னைமணம்புரிவதுந் தருமமா! நீ எவ்வாறு வருந்தினும் மணம்புரியேன், மீண்டும் அத்தினபுரமே செல்லென்று அனுப்பிவிட்டான். அம்பையோ அத்தினபுரம் சேர்ந்து வீஷ்டுமனைக்கண்டு தான் சாளுவனைக்கண்டதும், அவன் மறுத்ததும்சொல்லி என்னை நீரேனும் உமது தம்பியேனும் மணம்புரியவேண்டுகிறேனென்று நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கையும்விட்டுக்கூறினாள். வீஷ்டுமனோ சிரித்து நீஎன்ன அரசர்குடியில் வளர்ந்தும் அரசர்மரபிற்குரிய குணங்களில்லாமல் அற்பசாதி மடவாரைப் போலப் பேசுகின்றனை? முன்னே சாளுவராசன்மேல் மையல்கொண்டேன் என்று உயிர்ப்பாங்கிமூலமாகத்தெரிவித்தாய்; அதற்கிசைந்து உன்னை விடுத்து அவ்விருவரையும் என் தம்பிக்கு மணஞ்செய்வித்தேன். உன்னைச் சாளுவராசன் மணம்புரியேன் என்று சொன்னதனால் என்னிடத்தில் முறையிடுகின்றாய்! நானோ மணம்புரிவதில்லையென்று தேவர்களறியப் பிதாவின் பொருட்டுச் சபதஞ்செய்துகொண்டேன், அதனால் வீஷ்டுமனென்னும் பெயர்கொண்டிருப்பதும் அறியாமற்பேசுகின்றனை! நீயோ அரசன்மகள், எப்போது காதல்கொண்டனையோ அப்போதே அவனைமணந்தவளாகின்றாய், அவனே உன் கணவனாகின்றான்! நீயோ வேறொரு நாயகனைத் தேடுவதுந் தகுதியன்று, ஆகையால் உன்னிச்சையான இடஞ்செல்லென்று அனுப்பினான். அதுகேட்டு இடியோசை கேட்ட நாகம்போல வருந்தித் தன் பிதாவினது நகரமாகிய காசிநகரத்தை யடைந்து நடந்தசெய்தி முற்றும் தன் பிதாவிற் கறிவித்தாள். காசிராசனோ தன்மகளை நோக்கி நீயஞ்ச வேண்டாம், வீஷ்டுமன் உன்னை மணஞ் செய்துகொள்ள, தக்க பெரியோரைக்கொண்டு சொல்விக்கின்றேன். அவன் ஒத்துக்கொள்ளாவிட்டால் உன் தலைவிதிப்படி நடக்குமென்று தக்க பெரியோரைக்கொண்டுஞ் சொல்விக்க மறுத்துவிட்டான். அதையறிந்து அவன் யார்சொல்லைத் தடுப்பதரிதென்று விசாரிக்கையில் பரசுராமரையன்றி மற்றொருவரையும் சிலாக்கியமாகக் கொள்ளானென்றும் அவனே அவனுக்கு வில்லாசிரியனென்றுஞ் சொல்லக்கேட்டுச் சிலசேடியரைக் கூட்டித் தன்மகளாகிய அம்பையுடன் அனுப்பிப் பரராமர் ஆச்சிரமத்தினை யடைவித்தான். அவ்வாறே அவர் ஆச்சிரமத்துக்கு வழிகேட்டுக் கொண்டே வருகையில் வழியில் ஒரு முனிவரை வணங்கி நின்று தன்பெயர், தன் தந்தை

பெயர், தன் நகரத்தின் பெயர் இவைகளை யெடுத்துச் சொல்லித் தன் வரலாற்றையுஞ் சொல்லி முடித்தாள்.

அம்முனிவர் கேட்டு வியப்புற்று நானே உன் பிதாவோடுடன் பிறந்தவள் மைந்தன், நீ இவ்வழியே சென்றால் இவ்வழி கந்தமாதன மலையிற் கொண்டுபோய்விடும், அம்மலையிற் பரசுராமமூர்த்தி வீற்றிருக்கின்றனர், அவரைக் காணின் உன்குறை நீங்கும், வேறொருவரால் நிறைவேறுவதன்று என விளக்கிச் சென்றனர். பின்பு அம்பை அவ்வாறே சென்று முத்துச் சிவிகையினின்றும் இழிந்து பரசுராம மூர்த்தியின் ஆசிரமத்தைத் தேடிக்கண்டு அதன் வாயிற்படியினுள்ள அவர் மாணாக்கர்க்குத் தன் வருகையை யறிவித்து அவரிடத்தே விண்ணப்பிக்கவேண்டி நின்றாள். அவர்களும் அவ்வாறே அவரிடத்தே விண்ணப்பிக்க அவர்வியந்து உள்ளேவரக் கட்டளையிட்டனர். அம்பையும் அக்கட்டளையின்படி சென்று மங்கையொருபாகத்து மணிகண்டன்போலப் பரசேந்தி நின்ற பெருந்தகையைக் கண்டு எட்டுறுப்பு நிலமுறப்பணிந்து வணங்கி நின்றாள். அவரும் ஆசீர்வதித்து நீயார்? நீயிங்குவரக்காரண மென்ன? ஒன்று மொளியாமற் கூறென்று சொல்ல, அம்பையும் நான் காசிராசன்மகள்; என்னை அம்பை என்று சொல்வர், நானும் என் உடன் பிறந்தவர் இருவரும் மங்கைப் பருவ மடைந்ததை யறிந்து என்தந்தை சுயம்வரஞ் சாற்றினன், அச்சுயம்வரத்தில் சர்திரவமிச சிகாமணியாகிய வீட்டுமன் வெற்றிகொண்டு என்னொடு மூவரையும் தன் தம்பிக்கு மணஞ்செய்விக்கக் கொண்டு சென்றனன், நான் இடையில் சாளுவன்மீது மையல் கொண்டேனென்று உயிர்ப்பாங்கியைக் கொண்டறிவித்தேன், வீஷ்டுமனே சிறிதும் தடைசொல்லாமல் என்னைச் சாளுவனிடத்திற் கனுப்பினான். அவனிடத்திற் சென்று நான் கொண்ட தணியாத காம வேட்கையைச் சொல்லி மணஞ்செய்வித்துக் கொள்ளுமென விண்டேன், அவன் ஒருவன்கையிற் சிறையுண்ட உன்னைமணம் புரிந்தால் என்னை உலகம் பழியாதா! நான் மணம்புரியேனென்றுமறுத்தான்; மீண்டும் அத்தினபுரஞ் சென்று என்னை நீரேனும் உமது தம்பியேனும் மணம்புரிய வேண்டுமென்று வேண்டினேன், வீஷ்டுமனே மறுத்து விட்டான்; நான் தங்களிடத்தில் முறையிட்டுக் கொண்டால் அது முடிவு பெறுமென்று தங்கள் ஆசிரமத்தை யடைந்தேன், இனி என்குறையை விண்டேன் என்று தெரிவித்தாள். அதுகேட்டுப் பரசுராமரும் அப்படியேயாகட்டும் சிறிதும் அஞ்சவேண்டாமென்று அபயாஸ்தங் கொடுத்து இமைக்குள் தன் இரதத்தைக் கொண்டுவரக் கட்டளையிட்டனர், ஏவலாளரும் அவ்வாறே கொண்டுவந்து சேர்த்தனர், பரசுராமரும் அம்பையுடன் விரைவாய் இரதமேறிப் பத்தாநாள் அத்தினபுரத்தை யடைந்து வீஷ்டுமனுக்குத் தான் வந்த செய்தியை யறிவித்தார். இதைக்கேட்டு வீஷ்மரும் திடுக்கென்றெழுந்து தன் ஆசிரியரை எதிர்கொள்ளவேண்டிய காணிக்கை, கப்பணங்களையும் எடுப்பித்துக்கொண்டு பூசர்திரவியம் கையிற்கொண்டு அவரை மும்முறை வலம்வந்துபணிந்து தேவரீர் எழுந்தருளஎன்ன பாக்கியஞ் செய்தேன் யான்செய்த பெருந்தவமோ! என்முன்னோர்செய்த பெருந்

தவமோ! இங்கே தேவரீர் எழுந்தருளப் பெற்றதென்று எட்டுறுப்பும் நிலமுறப்பணிந்து பலவிதமாகத்துதித்தான். பரசுராமர் மகிழ்வடைந்து ஆசீர்வதித்து வீஷ்டுமனை நோக்கி அப்பா! வீஷ்டுமா! நீ சந்திரவமிசசிகாமணியாயிருந்தும் மணந்தவிர்ந்திருப்பதுமரபன்று; இதோநிற்கின்றஅம்பையை மணஞ்செய்துகொண்டு இம்மை மறுமை இன்பம் துய்ப்பதுநலம், ஆகையாய் என்சொற்கடவாமல்செய் என்று கட்டளையிட, வீஷ்டுமனும் இரண்டு செவிகளையும் கைகளாற் பொத்திக்கொண்டு நாம் செய்துகொண்ட சபதம் நமது குருசிகாமணிக்குத்தெரியாது; ஆயினும் நாம்தெரிவிப்பது நலமென்றுதுணிந்து தந்தையின்பொருட்டுத் தேவர்களறியத்தான்செய்துகொண்ட சபதத்தை ஆதியோடந்தமாக வறிவித்தான்; அதுகேட்டுப் பரசுராமரும் நாம்சொன்ன சொல்லையும் தடுத்தானே! என்று ஆலவிடம்பொற் கொதித்து என்சொல்லை இறைவர் மூவரும் தடுத்திலர்; நீயோதடுப்பது, நீ இவ்வம்பையை மணம்புரிந்தாலாயிற்று இல்லாவிட்டால் வில்லெடுத்துக்கொண்டு போர்க்குநில்லென்று சொன்னதன்றிச் சூரியவமிசத்து அரசர்களைச்செய்ததுபோல உன்தலையையுஞ் சிதைக்கின்றேன் என்றும் போர்க்கழைத்தார். வீஷ்டுமனோ தேவர்களறியக்கூறிய சபதத்தைச்சிதைப்பினும் நமதுகுருசந்நிதானத்தில் இறக்கத்துணிவதே நலமென்று துணிந்து எமது தெய்வமே! உமது வில்வணங்கினால் விண், மண், பாதலமென்னும் மூன்றுலகமும் வணங்கும், யானொருவன் வணங்காதிருப்பேனோ! ஆயினும் யான் கொண்டவிரதமொன்றும் பழுதாகாவண்ணந்தடுப்பேன், அதன்பொருட்டென்னுயிரை விடவும் துணிவேன், அப்புறம்தங்கள்சித்தம் என்பாக்கியமென்றான். அதுகேட்டுப் பரசுராமரும் சினந்து ஆலவிடம்போற்கொதித்து நெருப்புப்பொறி கண்ணினின்றுமெழ அடா வீஷ்டுமா! 'வளர்த்தகடா கையிற்பாய்ந்தது' என்னும் பழமொழிபோல நீகற்றகல்வியனைத்தும் என்னிடத்திலேயே ஓத வந்தாயே; நன்றாயிருக்கின்றது, இனிச்சிறிதேனுந்தாமசஞ்செய்யாமல்போர்க்கோலங்கொள்ளென்றுசொல்ல வீஷ்டுமனும் இரதமுதலிய நால்வகைப் படைகளையும் நீக்கித் தானும் தன்னாசிரியராகிய பரசுராமர்போல ஒரேதேர்க்காரனாகிப் போர்க்கோலங்கொண்டு யுத்தபூமியைநோக்கிநடந்தான். பரசுராமரும் தன்சாரதியை யுத்தபூமிக்குத் தேரைநடத்தக்கட்டளையிட்டு யுத்தபூமியை வந்தடைந்து வீஷ்டுமனை நோக்கி இனியென்னதாமசம்! எடுவில்லை தொடு அம்பையென்று சொல்ல வீஷ்டுமனும் தேரினின்றபடியே ஆசிரியனைப் பலவாறுதுதித்து நானோமுன்னே பாணந்தொடுப்பது முறையல்லவே; தாங்களே முன்பாணந்தொடுக்கலாமென்று வருந்திக்கேட்டுக்கொண்டான். பரசுராமரும் இருபத்தொருமுறை பரிதிகுலத்துப் பார்த்திபரையெல்லாம் படுசூரணஞ்செய்ததுபோலச் செயகிறேன் பாரென்று கோபநகைஈகைத்துத் தன்வில்லைவளைத்து நாணேறிட்டு விண்ணுலகமும்செவிடுபட்டுப் போகக் குணத்தொனிசெய்து அண்டங்கள் வெடிக்கச் சங்கத்தொனிமுழக்கிப் பிறைமுகக்கணைகளை தொடுத்துச் சாரதியையும்குதிரைகளையும் இரண்டுபாணத்தால் வருத்தி மூன்றுபாணத்தால் வீஷ்மனை இளைக்கச்செய்தனர். வீஷ்டுமனோ அவ்வைந்து கணைகளையுமேற்றுத் தன்வில்லைவளைத்து நாணே

றிட்டுக் குணத்தொனிசெய்தான். அதுகண்டுபரசுராமரும் பின்கிலையில்கழு கிறகுபூண்டு நாராசம்போன்றதாய்ப் பளீர்பளீரென்று மின்னுகின்ற நூறு கணைகளைப் பின்னுந்தூண்டினர். அதற்கு வீஷ்டுமனே சற்றுஞ்சலியாமல் அக்கணைகள் புறப்படுவதற்குமுன் சிலபாணங்களையேவிப் பொடிபடுத்தின ன். பரசுராமரோ வீஷ்டுமனுடைய கரசரவேகத்தைக்கண்டு வெகுண்டு மிக் கவல்லமைகொண்டுள்ள முள்ளம்பு கூரம்பு முதலியவற்றைத் தொடுத்துவி ட்டார். வீஷ்டுமனே பரசுராமர் எத்தனைகணைகள்தொடுத்தாரோ அத்தனை கணைகளைத்தொடுத்து அறுத்துத்தள்ளினன். பரசுராமரோ இனி நாம் இவ னுடன் சாதாரணமாகநின்று போராடுவது தகுதியன்று, வெகுசாக்கிரதை யாகநின்று போராடவேண்டுமென்று துணிந்து பின்னும் யோசிக்கின்றார். விளக்கில் தீவர்த்தி உண்டாவது சகசமல்லவா! ஆயினுந்தீவர்த்தியினதுசெ யகையோ மிகச்சிறந்தது. இவன் நமது மாணுக்கனென்றே எண்ணப்படா து இவனே நம்மைப்பார்க்கிலும்பதின்மடங்கதிகமாகக்கரசரவேகம் பெற் றிருக்கின்றான். நாம் சாதாரணமாக எண்ணிப் போர்செய்வது தகுதியன் றென்று! புங்கானுபுங்கமாகத் தொடுத்து வீட்டுமனை அசையவொட்டாமல் சரக்கூடம் வளைத்தார். வீட்டுமனே அதைக்கண்டு சிறிதும்அஞ்சாமல் தன் வில்லிற் சில பாணங்களை தொடுத்தெய்து சரத்கூடத்தை அதமாக்கிப் பரசு ராமரையே அவ்வாறு அசையவொட்டாமல் திப்பிரமைகொள்ளத் தா னும் சரக்கூடம் வளைத்தான், பரசுராமரும் கோபாவேசங்கொண்டு வேல், வாள், தோமரம், கப்பணம், பிண்டிபாலம், ஈட்டி, எறியீட்டி, தண்டு முதலியவைகளைப் பிரயோகித்து வருத்தியதன்றிதிவ்யாஸ்திரங்களையும் கா ர்காலத்துமழைபோற்சொரிந்தார். வீட்டுமனும் தன்மேல் வரும் வேல்முத லியவற்றைக்கொண்டே தடுத்துப் பரசுராமரையும்போர்க்களம்விட்டோட வருத்தினன். பரசுராமருக்குக் கோபாவேசமுண்டாய் வீட்டுமனை மார்புபி ளந்துவருந்தப் பலபாணங்களைத் தொடுக்கவே, விஷ்டுமனும் சற்றுநேரம் மூர்ச்சையாகி மூர்ச்சைதெளிந்து பரசுராமர் தேர்க்குதிரைகளை வருத்திச் சாரதியையும் சல்லடைக்கண்களாகத்தொளைத்துப்பரசுராமர்தேகத்தையும் அவ்வாறே வருத்தினன். இவ்வாறு ஒருவர்க்கொருவர் பின்வாங்காமல் ஊணுறக்கமின்றி ஈரைந்துநாள் வரையும் இடைவிடாமற்போர்செய்தனர் இவ்வாறுபோர்செய்கையில் வீட்டுமன் கைமிஞ்சி பரசுராமர் கைவில்லை மு றித்து கவசத்தைப்பிளந்து கொடியை யறுத்துத்தள்ளிக்குதிரைகளைக்கொ ன்று தேரைச் சின்னபின்னமாக்கிப் போர்க்களம்விட்டோடச்செய்தான். அதுகண்டு பரசுராமரோ இனி மானஞ்சிதையுமென்றெண்ணிதேரினின்று மிழிந்து இனி அரசருக்கு வில்வித்தை கற்பிப்பதில்லையென்றேசபதஞ்செய் துகொண்டு பாதசாரியாகவே ஓடிப்போயினர். வீட்டுமனும் ஜெயசங்கமுழ க்கித் தேவர்கள் வாழ்த்தத் தன்னகரமே போய்ச்சேர்ந்தான்.

வீட்டுமனை மணம்புரியலாமென்று வந்த அம்பை பரசுராமர்பட்டபா டுகண்டு மிக்கவருத்தமெய்தி நாம் நமது சகோதரிகளுடன்செல்லும்போது நமது கருத்தைத் தெரிவிக்காமலிருந்தால் இத்துணைக்கேடும் வந்திராதே!

'சும்மாவிருந்தசங்கையூதிக்கெடுத்தது' போல நமது வாயினல் நாம்பெருந் திருவிழந்து போனேமே. நாம் வருத்தமடைந்ததன்றிப் பரசுராமரையும் வருத்தமடையச்செய்தோமே என்றேங்கிப் பின்னும் ஒருவாறு துணிந்து இவ்வளவுக்கும் காரணம் வீட்டுமனையன்றி வேறில்லே, ஆகையால் அவனைக் கொல்ல ஒருகுமரனைப் பிறக்கவேண்டுமென்று தன்றுருவமறைத்துத் தவவுருவங்கொண்டு வனத்திற்சென்று அநேககாலம் பதுமாசனத்திலிருந்து தவஞ்செய்தும் ஒற்றைக்காலில் நின்றுகொண்டும், ஒற்றைத்தாளை மடக்கி நின்றும், இரண்டுகைகளையும் உயரவெடுத்து கூப்பியவண்ணமிருந்து விழித்தகண் விழித்தபடியே காளியை நோக்கி அருந்தவஞ்செய்தான். காளி வெளிவந்து அம்பையைநோக்கி நீயாதுவேண்டி இவ்வாறு அருந்தவஞ்செய்கின்றனை, உள்ளவாறு சொல்லவேண்டுமென்றுகேட்க; அம்பையும் காளியைப் பலவிதமாகத் தோத்திரஞ்செய்து என்னை யாதொருபலனு மடையாதிருக்கச்செய்த வீட்டுமனைக்கொல்ல வரந்தரவேண்டுமென்று வணங்கினின்றுள். காளியும் மகிழ்ந்து இப்பிறப்பில் என்ன பாடுபட்டாலும் முடிவுபெருது. இனிஇவ்வுடம்பு நீங்கி யாதசேனனிடத்தில் அலியாகப்பிறப்படைவை, அவன் உன்னைப்பிள்ளையாகப்பாவித்து மணமுதலியவற்றைச்செய்வான், பின்பு பாரதப்போர் நடக்கும், அப்பாரதப்போருக்கு நீயும்செல்வை அக்காலத்தில் உன்னல் வீட்டுமனிறப்பான், இதுமெய்யென்றுசொல்லிக்காளிமறைந்துபோயினள். அம்பையோ தீக்குழிவளர்த்து அத்தீயை மும்முறைவலம் வந்து நான் வீட்டுமனையே கொல்லவே வேண்டுமென்றுசொல்லி அத்தீயில் வீழ்ந்து பெண்ணுருவொழிந்து யாகசேனன் செய்யும்தவத்தில் அலியாகப் பிறந்து வளர்ந்துவந்தாள்.

இவ்விடத்தில் சித்திரவீரனே அம்பிகை, அம்பாலிகையென்னும் இருவரையும் இணைபிரியாவன்றிலேபோல இணைவிழைச்சு செய்துகொண்டு காலங்கழித்து வந்ததன்றித் தன்சொல்லால் பரராசர்களையெல்லாம் பயநடுங்கச்செய்து மிக்க சிறப்புடன் செங்கோல்கைக்கொண்டு அகப்பகையொன்றையே காக்க அறியானுய் மற்றைச் செல்வமெல்லாம் துய்த்தும் காமப்பெருக்கால் தொழுநோய் அடைந்து வருந்திக் காலகதியால் உம்பருலகும்புகுந்தான். வீட்டுமனே தன்தம்பிக்கு அன்னை சுற்றத்தார் மந்திரத்தவர் நகரமாந்தர் கோவென்றலற தன்கைகளால் நீர்க்கடன் முதலியவற்றைச்செய்து தன்னை தானுய்த் தேற்றித் தான்தனியே இருந்துகொண்டு இச்சந்திரவமிசமோ புதன்முதல் நமதுபிதாவாகிய சந்தனுவரையிலும் வாழையடிவாழையாகவந்ததே! என்னேடற்றுப்போகின்றதே! நானேதந்தையின்பொருட்டு மணஞ்செய்துகொள்ளேன் என்று தேவர்களறியவும்சபதஞ்செய்துகொண்டேனே! இனி என்னசெய்வதென்று தன்னைநொந்து தாமரையிலேயில் தண்ணீர்போற் கலங்கியிருந்தான்.

சந்தனுச் சருக்கம்.

முற்றிற்று.

சம்பவச்சருக்கம்.

சந்தனுமகாராசன் மனைவியாகிய சத்தியவதியோ தன்மைந்தரிருவரும் பரமபதமடைந்தபின்பு மிக்கவருத்தமடைந்திருப்பதன்றிக் குலவிர்த்தியில்லாதொழிந்ததேயென்ற ஏக்கமுங்கொண்டு தன்மனத்துள் ஒன்றைநினைத்து மூத்தமைந்தனாகிய வீட்டுமனிடத்தில்வந்தாள். வீட்டுமனோசிற்றன்னையைக் கண்டவுடன் அவள் பாதங்களை வணங்கி நின்றான். சிற்றன்னையாகியசத்தியவதியும் தன்மகனாகிய வீட்டுமனை நோக்கி அப்பா வீட்டுமா! அரசராவார் புத்திரரில்லாவிட்டால் தருமசந்தானம் பெற்றுக்கொள்வது முறைமை; அப்படியாயினும் நீயொருபெண்ணை மணம்புணராவிட்டாலும் உன்தம்பிமனைவியரையேனும் விழைந்து மக்களைத்தருவதுதகுதி. நீயோ பட்டத்திற்குரியவனாகியுமிருக்கின்றனை, அதனால் தோஷமில்லையென்று சொல்லவே வீட்டுமனும் திடுக்கிட்டு மிகுந்த மனக்கிலேசமுடையானாய்த்தாயைநோக்கி அம்மா! தருமசந்தானம்பெற்றுக்கொள்வதென்பதுசகசமே,நான்மணம்புரியேனென்று தேவர்களறியச் சபதஞ்செய்திருக்கின்றேன். அதனைத் தேவரீர் அறியாததல்ல, அந்தவேதவிதியைக்கொண்டு முன் பரசுராமரால் சீரணமான சூரியவமிசத்து அரசர்மனைவியர் தமது குருக்கள்மாரைவிழைந்து புத்திரரைப்பெற்றுச் சூரியகுலத்தை வாழவைத்தனர். மேலும் இரவிகுலத்தரசனாகிய பலிச்சக்கிரவர்த்தி தனக்குப் புத்திரசந்தானமில்லாமையால் மந்திரிமாரை நோக்கி நான் தருமதேவதை நாலுபாதநடக்க அரசுபுரிந்தும் சகல யாகங்களைச்செய்தும், சகல வேள்விகளைச்செய்தும் புத்திரப்பேறின்றி வருந்தினேன், உலகில் மனிதருக்குப் புத்திரப்பேறில்லாவிட்டால் புண்ணியலோகமில்லையென்பது வேதவிதி ஆகையால் எல்லாப்பாக்கியம்பெற்றும் புத்திரப்பேறில்லாமையால் தவஞ்செய்யச்செல்கின்றேன், புத்திரப்பேறுகிடைத்தால் வருகிறேன்; இல்லாவிட்டால் பரமபதமடைகின்றேன். நானிருந்து அரசாண்டுவந்ததுபோல அரசாண்டு வாருங்கோளென்று முத்திரைமோதிரத்தைக்கொடுத்து நகரம்விட்டுக் கங்கைக்கரையையடைந்தான். வந்தபோது தெப்பத்திற்கட்டுப்பட்டுவேதபாராயணஞ் செய்துகொண்டிருந்த தீர்க்கதமுனிவரைக்கண்டு இவரோ காணுங்கால் பெருந்தவமுடையாரே போலத் தோன்றுகின்றனர். மேலும் கண்ணிரண்டுமில்லாதவராகவு மிருக்கின்றனரென்று தன்பெயரைத் தெரிவித்து அவருக்கு வந்தனங்களைச்செய்து தங்கள்வரலாறென்னவென்று கேட்க, முனிவர்பெருமானும் அரசனை ஆசீர்வதித்துத் தன்வரலாற்றையெல்லாஞ் சொல்லிமுடித்தான். அரசனோ தனக்கு நேர்ந்திருக்கும் துன்பத்தை யெடுத்து விரித்து இச்சூரியகுலத்தை விருத்திசெய்து புண்ணியலோகமடையக்கருதிப் புறப்பட்டேன், நீர் என்மேற் கருணைசெய்து என்மனைவியிடமாகத் தருமசந்தானமாக நல்லபுத்திரனைத்தரவேண்டுமென பிரார்த்தித்தான். அவ்வாறே தீர்க்கதமமுனிவரொப்புக்கொண்டு அரசன் வேண்டுகோளால் அரசன் அரண்மனையில்எழுந்தருளியிருந்தார்.

அரசன் தன்மனைவியினிடஞ்சென்று சகலநீதிகளையும்போதித்து முன்னாளில் இவ்வாறே பரசுராமரால் சூரியகுலம் மாண்டகாலத்தில் அரசர்

மனைவியர் தமது ஆசிரியரால் தருமசந்தானம் பெற்றுக்கொண்டனர். நீயும் அவ்வாறே செய்துகொள்ள வேண்டுமென அரசன் மனையாளோ நாணித் தன்சேடியைத் தன்னுடையணி முதலியவற்றால் ஒப்பனைசெய்து தீர்க்கதம முனிவன்படுத்திருந்த படுக்கையறையில் அனுப்பினள். அம்முனிவரோவந் தவள்சேடிசென்றறிந்தும் நமக்கென்ன அரசன் வேண்டுகோட்கிணைந்தபடி அவளைத் தழுவி பதினொருமக்களைப்பெற்று நின்றனர். அரசனோஇச்செய்தி யுணர்ந்து வருந்தி மனைவியைக்கிட்டி, பெண்கொடியே என்னநினைந்து என் னசெய்துவிட்டனை! அவள் வயிற்றில் எத்தனைமக்கள்பிறந்தாலும் நீர்க்கடன் முதலியவற்றைச்செய்ய உரிமையில்லையே! அவ்விரண்டிற்கு முரிமையாக நீயே அம்முனிவரிடஞ்சென்று கூடென்று சிலநீதிகளையும் எடுத்து விரித்து த் தீர்க்கதமமுனிவரிடமடைந்து தான்மீண்டும் விண்ணப்பித்தான். தீர்க்க தமமுனிவரும் அதற்கிசைந்து தான் படுக்கையறையிற் சென்றிருந்தனர். அரசன் மனைவியோ நன்னீராடி உண்டு கலவைச்சாந்தணிந்து அம்முனிவர் சயனித்துக்கொண்டு இருந்தவிடத்தில் தான் அணுகிக்கலவிசெய்து நிற்பது கண்டு அம்மாதை நோக்கி வலம்புரிச்சங்கு பொலம்புரிமுத்தைப்பெறுவது போல உனக்கு ஒரேபுத்திரன் தோன்றுவான் என்றுகூறி உடனேமறைந்த னர். அரசனோ அம்முனிவர் இருந்தவிடந்தேடியும் அவரைக்காணாமல் அவ ரெங்குற்றனரோவென்று திகைத்தனன். அரசன் மனைவியும் நல்லசுபமுகூர் த்தத்தில் கோடிசூரியப்பிரகாசம்போலும் ஒரு மகனைப்பெற்றாள். அம்மக னுக்கு அரசன் அங்கராசனென்று பேரிட்டு வயதுவந்தகாலையில் அவனுக்கு த் தன் பொன்முடிசூட்டிச் சூரியவமிசத்தைப் பரிபாலித்தான். இவ்வாறே சூரியவமிசத்து அரசர்களெல்லாம் பரசுராமரால் மாண்டுபோனமையால் காசிபமுனிவர் ஏவலால் தத்தம் ஆசிரியரை அவ்வவ்வரசமாதர்கூடித் தரும சந்தானம்பெற்று அம்மரபை வளர்த்துவந்தனர் இதுகிடக்க, கன்மாடபா தனென்னும் அரசர்பெருமான் தன்மனைவியாகிய மதயந்தியைக்கூடாதசாப முடையவனாகையால் வசிட்டமுனிவரைக்கொண்டு கர்ப்பாதானஞ்செய்வித் துத் தனது பொன்முடிசூட்டினன், இதுவே வேதவிதி, அதுவே எனக்குஞ் சம்மதியென்று வீட்டுமன் சொல்லத் தாயாகிய சத்தியவதி அப்பா! வீட்டு மா! நான் கன்னிகையாக விருக்குங்காலத்தில் என்னை வளர்த்த பிதாவின் குலாசாரப்படி பெரியோர்களுக்கு யமுனையிற்படகுவிட்டுக்கொண்டிருந்தே ன், அப்போது வசிட்டமுனிவர் பேரராகிய பராசரமுனிவர் அங்கேவந்து படகுவிடச்சொல்லினர். நான் அவரொருவரையே படகிலேற்றிக்கொண்டு செல்கையில் அவரது அற்புதங்களைக்கண்டு பயந்து படகுவிட்டுக்கொண்டே போகையில் அவர்வானை நோக்கி என்முகத்தையும்நோக்கி மாதுசிரோமணி யே! நான்நாடிவந்த நக்ஷத்திரம் உச்சியில்வந்தது; நானோ அது உச்சியில்வ ந்தால் ஒருமாதைக் கூடவேண்டுமென்று விரதங்கொண்டுவந்தேன். நீயேனு ம் என்னைக்கூடினால் சூரியசந்திரர் உள்ளவரையும் பெரும்புகழு முடையவ ளாய் வாழ்ந்திருப்பை என்றார். அதற்கு நான் நாணமேற்கொண்டுமங்கைப் பருவமுடைய எல்லாமையாலும், மச்சகந்தமுடையவளாகையாலும், அவர் கருத்துக்கு எவ்வாறிசைவதெனமறுத்தேன். அவர் எனக்கு இப்பரிமள கந்

த்தையும் கொடுத்து என்னை மங்கைப்பருவ முடையவளாக்கித் தன்மேல் அணிந்த விபூதியைத்தூவிப் பகலைமறைத்து அவ்வாற்றினடுவில்ஆற்றிடைக் குறையுண்டாக்கி என்னைக்கூடி மீண்டும்கன்னிகையாயிருக்க ஆசிர்வதித்தார். உடனே காவிகாம்பர தண்டு கமண்டல தாரியாய் வேதத்தைக்கையிலேந்திய வண்ணம் ஒருபுத்திரன் என்னிடமாகத்தோன்றினான். அப்புத்திரனுக்கு வேதவியாசனென்றுபெயர். அப்புத்திரன் என்னைவிட்டுப் பிரியும்போது நீ எப்போது நினைக்கின்றனையோ அப்போதே வருகின்றேனென்று சொல்லிப்போயினான். அவனாலே அம்பிகை அம்பாலிகை யென்னும் இருவர் இடமாகப் புத்திரரைப்பெற்று இச்சந்திரகுலத்தை விருத்திசெய்யலாமென்று நினைக்கின்றேன் உன்கருத்தென்ன சொல்லென்றுகேட்க, வீட்டுமன் அளவில்லாத மகிழ்வெய்திப் 'பொங்கியும் பால்புறத்தேசெல்லாமற்போய்விட்டது' என்ற பழமொழிபோல அம்மைதன் மூத்தகுமாரனாக இருக்கின்றமையால், அது எனக்கேயன்றியாருக்கும் சம்மதமாகுமென்றுவிடைகொடுக்கப்பெற்று அம்பிகை, அம்பாலிகை யென்னும் இருவருக்கும் வேண்டிய நீதிமொழிகளைச்சொல்லி அவர்களிசையும்படிசெய்து தான்தனியிடத்திற்சென்று எமது குருசிகாமணியாகிய வேதவியாசபகவானை வரும்படி நினைத்தாள். அவர் தன்னைத்தன்தாய்நினைந்ததையறிந்து சத்தியவதியாகிய தன்தாயிருக்கும் இடத்தையடைந்து தன்நெற்றியில்இருக்கும்திருநீற்றினால் அவ்வன்னையின் பாதத்தைவிளக்கி, தன்கண்ணினின்று பெருகும்ஆனந்தக் கண்ணீரால் சுத்திசெய்துமந்திரபுட்பாட்சதைகளால் அர்ச்சனைசெய்துவணங்கி அடியேனை எண்ணியகருத்துஇதுவெனக் கட்டளையிடவேண்டுமென்று வாய்பொத்திக் கைகட்டிக்கொண்டு எட்டுறுப்பும் நிலந்தோயவணங்கி நின்றார். புத்திரனைவாரியெடுத்துத்தழுவிக்கொண்டு உன்னைப்பெற்றபின்பு நான் சந்திரவமிசத்தரசனாகிய சந்தனுமகாராசனுக்கு மனைவியானேன். அவ்வரசனுக்குச் சித்திராங்கதனென்றும், விசித்திரவீரனென்றும் சொல்லப்பட்ட இரண்டுமக்களைப்பெற்றேன். அவருள் மூத்தவன் தன்பெயருள்ள கந்தருவ ராசனால் கொலையுண்டிறந்தான். இளையவனோ அம்பிகைஅம்பாலிகையென்னும் இரண்டுமனைவியருடன் கூடிக்கழிபெருந்தொழுநோய்கொண்டுகாமாந்தகனாயிறந்தான். பிறகுசந்திரவமிசம் பனிபெய்யுமேகம்போற்பசையற்றது; இனி அக்குலம்விருத்தியடையவும் எனக்குஇழிவுவராமலிருக்கவும் அவ்விரண்டுமாதராலும்தருமசந்தானந்தரவேண்டுகிறேன். இதுதான்என்கருத்தென்றுசத்தியவதிகூறக்கேட்டுத் 'தாய்சொற்றுறந்தால்வாசகமில்லை.' என்றபடி அன்னைகருத்துக்கிசைந்து தன்மருமக்களை எச்சரிக்கையாயிருக்கக்கட்டளையிட்டுவியாசபகவானைஅந்தப்புரத்திற்கனுப்பினாள். வியாசர்வருவதைக்கண்ட அம்பிகை அவர் தவவேடத்திற்குப்பயந்துகண்மூடிக்கொண்டுபுணர்ந்தாள். வியாசரும்அன்னையைவணங்கிஅம்மா! அம்பிகைவயிற்றிற்பிறக்கும்குமாரனோ சகலராசராசரும் பணியும்படி அரசுசெய்பவனாயிருந்தாலும்கண்ணிரண்டு மில்லாதவனாயிருப்பான், இதற்குக்காரணம்அவளையீன்ற அன்னையின் குற்றமேயென்று சொல்லினர். பின்னும்சத்தியவதிவியாசரைநோக்கிக் கண்ணில்லாவிட்டால்யோக்கியதையில்லை ஆகையால், அம்பாலிகையால்நல்லபுத்

திரனைத் தரவேண்டுமென்றுவேண்டினாள். அதற்கு எமதுகுருசிகாமணியும் இசைந்து அம்பாலிகையிடத்திற் சென்றார். அம்பாலிகையோ எதிர்சென்று வணங்கி அவரை மஞ்சத்திருத்தி அவரையணைவதற்கஞ்சி யுடம்புவெயர்க்க நடுங்கி வெள்ளாடை போர்த்துக்கொண்டு மருவினாள். வியாசபகவானும் தாயைவந்துவணங்கி உலகுக்கெல்லாந்தாயீர்! அம்பாலிகை வயிற்றிற்பிறக்கும்புத்திரன் மன்னர்மன்னவனாகவிருந்தாலும் வியாதியாற்பீடிக்கப்படுவானென்றுசொல்லிவிட்டுத் தன்னிருக்கையைப்போய்ச்சேர்ந்தனர்.

இங்கே அம்பிகைபெற்ற புத்திரனுக்குத் திரிதராட்டிரனென்றும், அம்பாலிகைபெற்ற புத்திரனுக்குப் பாண்டுவென்றும் பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்துவருங்காலத்தில் சத்தியவதி ஒருவன்பகைவர்கட்கு அந்தகனாயிருந்தாலும் பார்ப்பதற்கு அந்தகனாயும், மற்றொருவன் அதிவிற்பன்னனாயிருந்தாலும் வியாதியால்வருந்துபவனாயுமிருக்கின்றனர் என்றுதுணிந்து, இனி நல்லதொருமைந்தனைப் பெறவேண்டுமென்றுஎண்ணி அம்பாலிகையையழைத்து முன்னேவந்தமுனிவரை மற்றொருமுறையனுப்புகின்றேன். மாதர்க்குரிய நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்னும் நான்கையும்விட்டு அவரையணைந்து நல்லதொருமைந்தனைப் பெறுகவென்று கட்டளையிட்டுத்தான் தனியிடஞ்சென்று தன்மகனாகிய வியாசபகவானை வரும்படிச் சிந்திக்கவே அவரோடோடியும்வந்து தாயைவந்து வணங்கி என்னை நினைத்தபடியாது? கட்டளையிடவேண்டுமென்று கேட்கச் சத்தியவதியும்அப்பாமகனே! முன்னேதந்த இருமக்களும் மிகுந்தபேராற்றலை யுடையவராயிருந்தாலும் அரசுக்குரிய விலக்கணமுடையவரா யிருக்கின்றாரில்லை. ஆகையால், நன்மகனொருவனைத் தரவேண்டுமென்று அம்பாலிகையிடத்திற் கனுப்பினாள். அவள் தன்தாயினும் பரிவுடைய ஒருதோழியை ஆடையாபரணம்புனைவித்து அம்முனிவரைச் சேர்ந்துவாவென்று அனுப்பினாள். அத்தோழிவியாசபகவானை மதன்கலை விதிப்படிச் சரசசல்லாப மனுபவித்தாள். அம்முனிவர்மகிழ்ந்து தாயை வந்துவணங்கி இப்போதுபிறக்கும்புத்திரன் தென்றிசைக்கடவுள் அமிசமாகவிருப்பான். கல்விக்கோருறையுள்; மிக்கபேராற்றலை யுடையான், முனிவர்களும்வந்து வினவும் கேள்விச்செல்வமுமுடையான், ஆயினும் இடப்பேதமாயிற்று, என்று தாயை மும்முறைவணங்கி என்னை இனி இவ்வகையானவேலைக்கிலக்காக்கவேண்டாமென்று விடைபெற்றுக்கொண்டு தன்னிருக்கையைப்போய்ச்சேர்ந்தனர். பின்பு தோழியோ நல்லசுபமுகூர்த்தத்தில் புத்திரசிகாமணியைத் தென்றிசைக்கடவுளமிசத்தால் ஈன்று விதுரனென்று பெயரிட்டு வளர்த்துவந்தாளென்று வைசம்பாயனர் சொல்லவே ஜெனமேஜெயமகாராசன் தென்றிசைக்கடவுளமிசம் பூமியில்வரக்காரணமென்ன? விளங்கவுரைக்கவேண்டுமென்று வினவ வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

முன்னாளில் மாண்டவியமுனிவர் தீர்த்தயாத்திரை செய்துவந்துதவஞ்செய்யவேண்டுமென்று எண்ணிச் சாளுவதேசமடைந்து அங்கேயோர்வனத்தில் அருந்தவஞ்செய்துகொண்டிருக்கப் பன்னகசாலையொன்றியற்றி அதில்

மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐவாயவேட்கையையும் ஒழித்து விழித்தகண் விழித்தவாறு தவஞ்செய்திருந்தனர். சிலதிருடர் ஓரிடத்திற் கூடி இனி அரசச்செல்வத்திற்றிருடி நம்மையடிமையாகக் கொண்டிருக்கும் வறுமையை வெறுமையாக்கிக்கொள்வதே நலமென்று சிந்தித்துச் சாளுவராசன்அரண்மனையிற்சென்று களவுசெய்வதாகத்துணிந்து அவர்களில் உயிர்மேல்ஆசைவைத்தாரொழிய மற்றையோர் அரசனுடைய அரண்மனை புகுந்துகாவலாளருக்குக் கண்ணிற்பொடிதூவி உட்புகுந்து பண்டாரத்தைக் கொள்ளையிட்டுப் பொருள்கவர்ந்து செல்வாராயினர். அரசன்யாதோ சொப்பனமொன்றுகண்டு விழித்துக்கொண்டு பண்டாரத்தில் ஆளரவமாகத் தோன்றுகின்றது; போய்ப்பார்த்து வாருங்கோளென்று தன் அருகிலிருந்தவரையேவினன். அவர்களும் போய்ப்பார்த்துவந்து அரசனுக்குப் பண்டாரந் திறக்கப்பட்டுப்பொருள் கவர்ந்துபோயிருப்பதாய்த் தோன்றுகின்றதென்று சொல்லினர். அரசனே நாம் கள்ளர்பயமில்லாமல் அரசுசெய்து வருகின்றோமென்றுகளித்திருந்தோமே. நமது அரண்மனையிலேயே கள்ளர்கவர்ந்துபோவாரெனின் குடிகளைக்குறித்துச் சொல்லவேண்டியதில்லையேயென்று துணிந்து காவலாளரை வருவித்துக்கள்ளரைப்பிடித்துக் கொண்டுவரக் கடுமையான கட்டளையிட்டான். காலடியை நோக்கிக் கொண்டேதொடர்ந்து கள்ளர்போனவழியிற்செல்லவே கள்ளர்மனம் நடுங்கி இனிக்ககாவலாளிகள் நம்மைப்பிடித்துவிடுவர். இப்பன்னசாலையிற் சிறிதுநேரம் ஒளித்திருந்துபோவோமென்று ஒளித்திருந்தனர். காவலாளர் தேடிக்கொண்டே இமைத்தகண்மூடாமல் தவத்திலிருக்கின்ற முனிவரைக் கண்டு வணங்கி கள்ளரைப்பற்றி விசாரிக்க அவர் ஒன்றும்பேசாதிருக்க அப்பன்னசாலையைத் துருவித்தேடினர். அவ்வாறு தேடவே கள்ளர்கள் தாங்கள் கொண்டுவந்த திரவியத்தோடும் அகப்பட்டுக்கொண்டனர். பின்பு காவலாளர் முனிவரை இவன் கள்ளருக்கு எல்லாம் பெருங்கள்ளனென்று ட்கொண்டு அக்கள்ளருடன் பிணித்துக்கட்டி அரசன்சபையில்விட்டனர்.

அரசனேகள்ளரையெல்லாம்தலைவாங்கக்கட்டளையிட்டுமாண்டவியரை நோக்கி இவரோ அருந்தவராகத்தோன்றுகின்றது; பிணிப்பை யவிழ்த்து விடுங்கோளென்றுசொல்ல, காவலாளரும் இவனேகள்ளருக்கெல்லாஞ்சிறந்தவன், இவனைவிட்டுவிட்டால்நமதுநகரத்திற்கே கேடுண்டாம், இவனைத்தண்டிப்பதே நலமென்றுசொல்ல, அரசனும் மதிமயங்கிமுனிவரைக்கழுவிலேற்றக்கட்டளையிட்டு அக்கழுமரத்தடியில் யாரேனும் கள்ளர்வந்துபார்ப்பர்; பதிவிருங்கோளென்றுகட்டளையிட்டான். முனிவரோமுன்செய்த தீவினையேயல்லதுவேறன்றென்று எண்ணித்தாம் முன்தவஞ்செய்துகொண்டிருந்தபடியே கழுமரத்தினும்அசைவறத் தவஞ்செய்திருந்தார். அங்கேதவஞ்செய்துவரும் மாண்டவியர் கழுமரத்தில் வருந்துவதைக்கண்டு தேவர்கள்வருந்திஇவ்வரசனென்ன மூடனோ! 'கண்ணுக்கணி கலங்கண்ணோட்டமஃ தின்றேற்-புண்ணென்றுணரப்படும்.' என்றுதேவர்கூறியபடி இம்முனிவர்தவவேடத்தைக் கண்டும் வருத்தத்திற்குள்ளாக்கினனே ! அவன்உயிரோடுமிருக்கின்றனனே என்று ஆருத்துயரத்தால் வானிடத்திற் பேசுவதையறிந்த மாண்டவியமுனி

வர் 'விதியினலன்றி வேதத்தோர் தங்கள்-மதியினலாவதொன்றில்லை' எனப்பெரியோருங் கூறியிருக்கின்றனர், என்னசெய்வதென்று சொல்லித் தவஞ் செய்து கொண்டேயிருந்தனர். இதையறிந்ததூதுவர் அரசனிடத்து ஓடோடியும்வந்து வணங்கி நடந்த விருத்தாந்தங்களையொன்றுமொழியாமல் அரசனுக்குத் தெரிவித்தனர். அரசனேநடுநடுங்கி கழுமரத்தருகில்வந்து முனிவரையடைந்து எங்கள் களைகண்ணே! யானறியாமற்செய்தபிழை அத்தனையும் பொறுத்தருளவேண்டுகின்றேனென்று வணங்க, முனிவரும் அரசனைநோக்கிப் பழவினையை நோக்கிவருந்தவேண்டுமல்லதுஉன்னலொரு பிழையுமில்லைஎனக்சொல்லினர். அரசன் கம்மியரைக் கழுமுள்ளைபராவிப் பொடியாக்கிவிடவும் கழுவாணி நெஞ்சில் தங்கிவிட்டது, ஆதலால் அன்று முதல் அவருக்கு ஆணி மாண்டவியரென்று காரணப்பெயராயிற்று. இவ்வாறு யோகத்திலிருந்து ஒரு நாள் தனக்கிப்படி வரவேண்டியதென்னவென்று யமபுரத்துக்குச்சென்றூர். யமன் அம்முனிவர் வரவே எதிர்கொண்டழைத்துச் சென்று ஒராசனமளித்து அதிலிருக்கச் செய்தான். முனிவரும் யமனைநோக்கியான் கழுவால்வருந்தக் காரணமென்ன? விளக்கவேண்டுமென்றூர். நீர்வாலைப்பருவமுடையவராயிருக்கையில் தும்பிகளைப்பிடித்துஅவற்றின்வால்களில் முட்களைக்குத்தி வருத்தினீர்; அவ்வினைதான் இவ்வாறுநேரிட்டதென்றான். முனிவரும் அவ்வகைப்பட்ட பாவஞ்செய்திருந்தாலும்யான் வேதமோதினேன், வேதவிதிப்படி துறவறநிலையை மேற்கொண்டேன், அருந்தவமுஞ் செய்திருக்கின்றேன், அதனல் விளக்கொளிமுன் இருள்மாய்வதுபோலத் தருமமேலிட்டவிடத்துப் பாவஞ் சிதைந்து போகவேண்டுமே!இவ்வாறிருக்கச் சகிக்கமுடியாத பெருந்துயர் விளைவிக்கவேண்டுமோவென்றூர். அதற்கு யமன் முனிவரை நோக்கி மிக்க செல்வமுடையவரும், அரசச்செல்வம் பெற்றவரும் கர்விகளாகவேயிருப்பர். அதனல் உயிர்க்குக் கேடுநேரிடும். அது நீங்கப் பெருஞ்செல்வ முடையாருக்கும் பெரியோரும், அரசச்செல்வமுடையாருக்கு அப்பெரியோருடன் மந்திரிமாரும் விதிதவறுங்காலத்துத்தக்க புத்திமதிசொல்லி வரவேண்டும். எனக்கு எப்பொருட்குமிறைவராகியபரம்பொருள்ஒருகட்டளையிட்டிருக்கின்றது. அது பெரியாருக்குப்பதிலாகமலையையும், மந்திரிமாருக்குப்பதிலாக அக்கினியாற்றையும்வைத்து நீதிதவறிணையாயின் மலைதலையில்விழுமென்றும் அப்பால் நீயக்கினியாற்றிற்புகுவாயென்றும் சொல்லியதேயாம். நன்றாகப் பாரும், ஒருமயிரிற் பெரியமலையொன் தொங்குகின்றது மன்றி அதன்கீழ்ச் சிங்காதனமிட்டு அச்சிங்காதனத்தின்கீழ் அக்கினியாறு மிருக்கின்றது. யான் சிறிது பிழை செய்வனயின் சிங்காதனத்தொடும் அக்கினியாற்றிற் புகுவேன், தங்களுக்கு நேர்ந்த இடுக்கண் நீதியல்லாதிருந்தால் தேவரீர் என்னைக்காண்பதுமுண்டோ! தேவரீர் வருமுன்னரே யக்கினியாற்றிற் புகுந்து மாண்டிருப்பேனென்றான். முனிவரோ மிகச்சினங்கொண்டு ஒவ்வொருவரும் பதின்மூன்று வயது வரையும் செய்த பாவபுண்ணியங்களைப்பற்றி நிமித்தமே யில்லையாகும். அதனைப்பாவமென்று யார்நின்று சொல்லுவரோ அவரையே சாரும். இன்றுமுதல் நீஇவ்வாறு நடக்கவேண்டிய நீதி

யைத்தவறி வேறுவிதமாக நடக்கவேண்டாமென்றுகட்டளையிட்டு யானறியாத பருவத்திற்செய்த குற்றத்தைக்குறித்துச் செய்தமையால் பூமியில் சந்திரவமிசத்தரசமாதர் தாதிமகனைத்தோன்றக்கடவையெனச் சாபமிட்டுப் போயினர். அச்சாபத்தால் விதுரமகாராசனைகப் பிறந்தானென்று சொல்ல மகிழ்ந்து பின்பு என் மூதாதைகளின் சரித்திரத்தைச் சவிஸ்தாரமாகச் சொல்லுமென வேண்டினன். அதுகேட்டு வைசம்பாயனர் வீட்டுமனும் சத்தியவதியும் திருதராட்டிரன் பாண்டு விதுரனென்னு மூவரையும் முச்சுடர்போல மதித்துக் காத்துவந்தனர். இவர்களுக்குள் அம்பிகை மகனுக்கு சந்திரவமிசத்தினரசர்க்கு ஆதிக்கம் மூன்றுதேசமாகையால் அக்காரணம் பற்றி அம்பிகை மகனைத் திருதராட்டிரனென்றும், பண்புப்பற்றி அம்பாலிகை மகனைப் பாண்டுவென்றும், தாதியிடமாகப் பிறந்தாலும் மிக்க ஞான முடையவனயிருப்பதுபற்றி விதுரனென்னும் பெயரிட்டனர். இவர்கள்நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து ஐந்துவயது ஆனவுடன் உபநயனச் சடங்குசெய்யப்பட்டு நான்குவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்து நான்குகலை மநுமுதலிய மிருதிநூல் முதலியவற்றையும் வீட்டுமர் போதிக்க நன்றாகக்கற்றுத்தேர்ந்து வில்வித்தை யானையேற்றம் குதிரையேற்றம் முதலிய வற்றையும் பழகி வந்தனர்.

இம்மூவரும் பருவம் வந்தகாலையில் சத்தியவதியும் வீட்டுமரும் பட்டம் பாண்டுராசனுக்கென்றே சொல்லிவரப் பாண்டுராசன் அதைத்தடுத்துக்கொண்டே வந்தான். ஒருநாள் வீட்டுமர் மந்திரிமார், புரோகிதர், சேனைத்தலைவர் யூகத்தலைவர் மகுடவர்த்தனர் பட்டவர்த்தனர் நகரமாந்தர் முதலியோர் புடைசூழ்ந்திருக்கையில் இதைக் குறித்து யோசிக்கும்போது யாவரும் ஒரே முகமாய்த் திருதராட்டிரனுக்கே பட்டங்கட்ட வேண்டுமென்று சொல்ல அதகேட்டு வீட்டுமர் சகலராசராசர்களுக்கும் ஓலை போக்கி அவர்களை வரவழைத்து திருதராட்டிரன் முதலிய மூவரையும் அபிஷேகஞ் செய்வித்து வேத வேதியர் ஆசீர்வதிக்க அத்தினபுரத்துக் கதிபதியாக முடிசூட்டிப் பாண்டுராசனை இளவரசாக்கி விதுரனைப் பிரதான மந்திரியாக்கி வந்தவர்களுக்குச் சந்தன புட்ப தாம்பூல மளித்து விருந்துபசரித்து அனுப்பினர். பாண்டு ராசனே தான் அயலரசர்மேற் சென்று பகைப் புலம்வென்று பல தேசங்களையும் தமையன் வசப்படுத்தினன். விதுரனும் இன்னகாலத்தில் இப்படி நடக்க வேண்டுமென்று மதி மந்திரிகளில் சிறந்தவனயிருந்தான். இவ்வாறிருக்கையில் வீட்டுமர் பாண்டுவுக்கும் விதுரனுக்கும்பெண்கிடைக்கும், திருதராட்டிரனுக்கும் பெண்கொடுக்க மாட்டாரே! என்னசெய்வோம்! 'அகத்திற் பெண்டுகள் நானென்று சொன்னலழையேற் போ குருடாவெனத் தரியேன் - முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்வேன்.' என்று சிவமேயான பரஞானச்செல்வருஞ் சொல்லியிருக்கின்றனரே! என்றேங்கிப் பின்னும் 'கைந்நிறைந்த பொருளைக்காட்டிலும் கண்ணிறைந்த புருஷனே வேண்டும்.' என்றும் பழமொழி வழங்கிவருகின்றபடியால் பெண்ணே அழகையே நோக்குவாளென்று சிந்தித்து, உலகத்தில் பெண் பெற்றதாய் செல்வத்தை நோக்குவாள், பிதாகுணத்தை நாடு

வான் என்றால் பெண்நாடியபடி அழகும், தாய் நாடியபடி செல்வமும் நிலையில்லனவாம். தந்தைநாடியபடி குணமேபிரதானம், இதை யறிந்தவன் தான் பெண் கொடுக்க வேண்டுமென்றும், இல்லாமற்போய்விடின் வலியச் சென்று போர்செய்துதான் பெறவேண்டும் என்று எண்ணி, சிலதூதரைக் கூவியழைத்து எந்தெந்தத் தேசத்தரசர்கட்குப் பெண்ணிருக்கின்றதோ அந்தத் தேசத்தையும் அவ்வரசன் பெயரையு மவ்வரசன் புத்திரியின் திறத்தையுமறிந்து வம்மினெனக் கட்டளையிட்டனர். தூதரும் அவ்வாறே விரைந்துசென்று காந்தார தேசமடைந்து சுவேதராசன்புத்திரி குணதிசயங்களை யுணர்ந்து வீட்டுமரிடம் வந்துவணங்கி மண்டலாதிபதியே! தாங்ளிட்டகட்டளையின்படியே எல்லாத்தேசங்களிலும் சென்று திரிந்து காந்தார தேசஞ்சேர்ந்தோம். அவ்வரசனுக்கோர் மகளுண்டு, அவளோ திருமகளினும் உருவும் நலனும் அருந்ததிபோலுங் கற்பும் பெற்றிருக்கின்றனள் என்று சொல்லினர். வீட்டுமர் இதைக்கேட்டுச் சாம பேத தான தண்டமென்னும்நால்வகை யுபாயங்களாலும் நன்காராய்ந்து சிலமந்திரிமாரையும் அந்தணரையும்அழைத்து தூதுவரோடு கூட்டிக் காந்தார தேசத்துக்கனுப்பினர். மந்திரிமார் முதலியோர் வீட்டுமர் கட்டளையின்படி சென்று தங்கள் வரவைக் காவலாளருக்கறிவிக்க அரசன் அவர்களை வருவித்து தக்கமரியாதைகளைச் செய்து சிறந்த ஆசனத்திலிருத்தித் தாங்கள் இவ்வளவுதூரம் என்னைநாடி வந்த காரணமென்ன வென்று வேண்டிக் கேட்டுக்கொண்டான். மந்திரிமார் முதலியோர் எங்களைச் சந்தனு மகாராசன் மூத்த குமாராகிய வீட்டுமரனுப்பினர். அவர் சகோதரன் மனைவிகளில் அம்பிகையிடமாகத் தோன்றி இவ்வு கத்தை யொரு குடைநிழலின்கீழரசாண்டுவரும் திருதராட்டிர மகாராசனுக்கு விவாகஞ் செய்விக்கத் தங்கள் புத்திரியைக் கேட்டு வரும்படிக் கட்டளையிட்டனுப்பினர் என்றனர். சுவேத மகாராசனே இச்செய்தியைக் கேட்டு மகிழ்ந்து பழநழுவிப்பாலில் விழுந்தாற்போலும் என் மகளை அத்திருதராட்டிர மகாராசனுக்குக் கொடுப்பதிற் சநதேகமேயில்லை யென்றனன். அருகிருந்த மந்திரிமாரோ எல்லா இலக்கணங்களிலும் குறைவில்லை. ஆனல் கண்ணிரண்டு மில்லாதவன்; அப்படிப்பட்டவனுக்கு நமது அரும்பெறுகிய பெண்ணைக்கொடுப்பது முறையோவென்று தடுக்கவே வீட்டுமரால் அனுப்பப்பட்ட மந்திரிமார் முதலியோர் அரசனைப் பார்த்து 'எண்ணித்துணிக கருமந்துணிந்தபின்-எண்ணுவதென்பதிழுக்கு.' என்று தேவர் சொல்லியபடிமுன்னே தக்க பெரியோரைக் கொண்டாராய்ந்து பின் சொல்லத்தக்க வார்த்தையை யோசனையே யில்லாமற் சொல்லிவிட்டீர்; சொன்னபடியே நடத்தாவிட்டால் செங்கோல் செலுத்தும் அரசனுக்கென்னபுகழ்? சிறிய காரியமேனும் பெரியாரோடு யோசித்தேதான் பின்புசெய்யவேண்டும். தகுதியில்லாததா யிருந்தால் கிணற்றிலிட்டகல்லைப்போலிருக்கவேண்டும். அதுவேதான் இராசதருமமெனப்படும். நீரோ அவ்விதியைக்கைவிட்டு முன்னேஎங்கள் கருத்திற்கிணங்கிப் பின்வேறுபடுவது உமதுசொற்குப்பழுதாவதல்லது இதனை எமது அரசனுக்குத்தெரிவித்தால்ஆக்கக்கேடுமுண்டாகும். பின்ஜெயாபஜெயமெப்படியோ. உலகத்

தில் திர்க்காலோனே செய்யுமிடத்து உலகைப்படைத்தபிரமனுக்கும் தலைக்குறையுண்டு; திருமகள்நாயகனாகிய விஷ்ணுவுக்கும் விஷதோஷத்தால் கருநிறமுண்டு, சர்வசங்கார கருத்தாவாகிய பரமசிவனுக்கும் வாதக்காலுண்டு, இந்திரனுக்கும் உடம்மெல்லாங் கண்ணுண்டு, சூரியனுக்கும் பல்லில்லை, சந்திரனுக்குங் களங்கமுண்டு, அனந்தனுக்கும்விடமுண்டு; இப்படியே இறைவர் மூவர் முதலியோர்க்கும் பழுதென்பதில்லாமலில்லை. ஆதலால் மந்திரிகள் முதலானோர் துர்ப்போதனைக் குள்ளாகாமல் உமதுமகளை எமதாசனுக்கு மணம் புரிவிப்பதே தக்ககாரியம். அப்பால் நாங்கள் சொல்லக்கடவதொன்றுமில்லை யென்றனர். அரசனே தேனில்விழுந்த ஈயைப்போல் நெடுநேரமனங்கலங்கிச் சற்றேமோனமாயிருந்து பின்அத்தினபுரத்திலிருந்துவந்தமந்திரிமார் முதலியோரைப்பார்த்து எனக்கு யாதுவந்தாலும் வரட்டும்; நான் மாத்திரம் பெண்கொடுப்பதே யில்லையென்று மறுத்துவிட்டான்.

அதைக்கேட்ட மந்திரிமார் முதலானோர் காந்தாரதேசமகன்று அத்தினபுரமேவந்து சேர்ந்து வீட்டுமருக்குத் தெரிவித்தனர். வீட்டுமரோ சினமேற்கொண்டு பின்பு நமது குமாரன் எவ்வகைப்பட்ட வலியுடையானாயினும் கண்ணில்லாதவனாய் இருப்பதனால் யார்தான் பெண்ணைக் கொடுக்க இசைவர். நாம் நயத்தில் காரியத்தை நடத்த முயல வேண்டுமென்று துணிந்து சும்மாயிருந்தனர். இது கிடக்க; காந்தார தேசத்தில் அவ்வரசன் அத்தினபுரத்திலிருந்து வந்திருந்த மந்திரிமாருக்கு இவ்வாறு சொல்லியனுப்பியதை அரசன் மகளாகிய காந்தாரிதன் தோழியரால் அறிந்து தன்பிதாவை வருவித்து உமது வாக்கால் ஒரு நாயகனை வரித்து அவனுக்குக் கண்ணில்லையென்று பின்னே நீக்குவது தகுதியேயல்ல. ஒருவேளை கண்ணில்லாதவனென்பீராயின் அதற்கு ஞாயமுஞ் சொல்லுகின்றேன். உலகத்தில் மாதர்கள் அவயவப்பழுதில்லாமல் அழகின் மிகுந்தவரையே மணஞ்செய்ய எண்ணுவர். அவர்கள் மத்திமப்பெண்களென்றே யெண்ணவேண்டும். அதனை விட்டுக் குணத்தையே விரும்பி மணம்புரிவர் உத்தமப் பெண்களென்றே எண்ணவேண்டும். நானே அரசரிற்பிறந்து அரசரில் வளர்ந்தேன். அவ்வரசனையன்றி மணஞ்செய்து கொள்ளேனென்று பிடிவாதமாகச் சொல்லினள். அரசன் அதை அறிந்து நாம் என்னசொல்லினும் கேளாள். மகட்கொடை நேரவேவேண்டும். இனி அத்தினபுரத்தரசனுக்கு வாழ்கைத்துணையாகப் போகின்றவள் இவளே யெனின் நம்மால் தடுக்குங்காரியமல்லவென்று துணிந்து மந்திரிமாரிடத்தே இக்காரியத்தைச்சொல்லிஅவர்களை யானை, தேர், குதிரை காலாள் என்னும்நால்வகைப்படைகளையும்அத்தினபுரத்திற்குப் பயணமாகப்பயனபேரிகையறையும்படி கட்டளையிட்டுத் தானொருதேரில ஏறிக்கொண்டு தன்மந்திரிமார், புரோகிதர், நகரமாந்தர் முதலியோர் சூழ்ந்துவரத் தன்மகளை யோர்முத்துச்சிவிகையிலெழுந்தருளச்செய்துஅவரைச்சிலபாங்கியர்சூழக் கட்டளையிட்டு அத்தினபுரத்துக்கு வந்துசேர்ந்து ஒற்றால் தன்வருகையை அறிவித்து எதிர்கொண் டழைக்கப்பெற்றான். அவ்வரசனால் வீட்டுமனும் சகலசேதியு முணர்ந்து தன்சிற்றன்னையாகியசத்தியவதிக்குத் தன் மகனதுவிவாக சுபமுகூர்த்தத்தை விரித்துரைத்துத் தன் மந்திரிமாருக்கு நகரலங்காரஞ்செய்யக் கட்டளையிட்டுஐம்பத்தாறுதேயத்து

அரசருக்கும் மணவோலை போக்கிவிட, அவ்வாறே ஐம்பத்தாறுதேச அரசரும்வேதபாரங்கதரான வேதியரும் கலியாணமண்டபத்தில்வந்து நிறைந்தனர். வீட்டுமர் மந்திரிமாருட்சிறந்த விதுரனைக்கொண்டு திரிதராட்டிர மகாராசனை யழைத்துவாவெனக் கட்டளையிடவிதுரனும்அவ்வாறேசென்று கங்கைமுதலிய புண்ணியதீர்த்தங்களினல் மங்கலஸ்நானஞ்செய்வித்து மணவரையிலிருத்தினன். பின்புசுவேதம்காராசனும் தன்மகளைப் பாங்கிமாரால் மங்கலஸ்நானமும் அலங்காரமும் செய்வித்து மணவறையிற் சேர்த்தான். வீட்டுமரோ வேதியரைநோக்கி இனிப்பாணிக்கிரகணஞ்செய்விக்கலாமென அவர்களும் வேதாகமமுறையால் வேதமந்திரத்தையுச்சரித்து சுபவோரையில் திரிதராட்டிரனைக்கொண்டு காந்தாரிக்கு மாங்கல்ய சூத்திரந் தரிப்பித்தனர். வீட்டுமர் விதுரனல் வேதியர்களுக்குக் கோதானம், பூதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், அன்னதானமுதலிய சோடசமகாதானங்களுஞ்செய்வித்து ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்குந் தகுந்த மரியாதைகளைச்செய்து நகரமாந்தருக்கும் விருந்துபசரிக்க, அவர்கள் யாவருமதத்தமிருக்கையைச் சேர்ந்தபின்பு திரிதராட்டிரனும் காந்தாரியும் அந்தப்புரமடைந்து மதனும் இரதியுமென விழைந்திருந்தனர்.

பாண்டுராசன் இளவரசுபட்டம்பெற்று மனுநெறிபிசகாமல் நடந்துவருகையில் குந்திபோசன் வமிசத்திற்பிறந்த சூரசேனனென்பவனுக்கு ஒரு மகளுண்டு; அவள் அருந்ததிபோலுங் கற்பும், திருமகள்போலும் அழகும், கலைமகள்போலும் கல்வியும் பெற்றுடையாளாய்ப் பிரதையென்றும், குந்தியென்று மழைக்கப்பட்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்க்கப்பட்டுவந்தாள். அவ்வாறு வளர்ந்துவருகையில் ஒருநாள் அத்திரிமுனிவர்புத்திரரும் கோபமே யுருக்கொண்டவருமாகிய தூருவாசமுனிவர் அவ்விராசசபையையடைந்தார். அவருக்குவேண்டிய சோடசோபசாரஞ்செய்து அழகியபொற்பீடத்திலிருத்தி தேவரீர்வர இந்நகர்செய்தபுண்ணியம் யாதோவென்று அரசன்சொல்லத் தூருவாசமுனிவரும் எனக்குநான்கு மாதவிரதமுண்டு, யான் சிலநாள் இந்நகரத்தில் தங்கியிருக்க எண்ணங்கொண்டிருக்கின்றேன், எனக்குக்குற்றேவல்செய்ய இங்கோராளமைக்க வேண்டுமென்று சொல்ல, அதைக்கேட்டு அரசனும் மகிழ்வடைந்து தங்கள்குற்றேவலுக்குரிய ஆள் என்மகளொருத்தியே யல்லது பிறர் தக்கவராகாரென்றுசொல்லித் தன்மகளாகிய குந்திதேவியைத்தூருவாசமுனிவருக்குக் குற்றேவல்செய்ய அமைத்தனன். முனிவர்அக்குந்திதேவியைத் தன் குற்றேவலிலமர்த்தி இரண்டு மூன்றுநாள் ஆன்மசுகந்தருஞ்சிவபூசைசெய்து வந்தார். அப்படிசெய்துவருகையில் குந்திதேவி வெகுசாக்கிரதையாகக் குற்றேவல்செய்துவந்தமையால் அதிகமாயதிசயித்து இதென்ன! நம்மிடத்தில் குற்றேவல்செய்வதற்கு ஒருவரும் துணியார், இப்பெண்ணேமிகுந்த சாக்கிரதையாகச் செய்துவருகின்ருள், இன்னும் பார்ப்போமென்று துணிந்திருக்க, நாளுக்குநாள் நீராடல், பூக்கொய்தல், கழங்காடல்முதலிய விளையாட்டினையொழித்து முனிவருக்குக் குற்றேவல்செய்வதே பெருங்கடனைக்கொண்டு நடந்துவருகையில், முனிவரும் கழிபெருமகிழ்ச்சியடைந்து இவ்

வுலகத்தில் நமக்குக் குற்றேவல்செய்துவந்தவர்கள் சாபமடைந்தாரன்றி இடையூறில்லாமற் செய்துவந்தார் உன்னைப்போலில்லை, ஆகையால் உனக்குச்சிலமந்திரங்களை யுபதேசிக்கின்றேன்; அம்மந்திரங்களில் ஒன்றை யுருச்சபிப்பையாயின் அம்மந்திரதேவதை யுன்னைக் கூடிக்கலந்து புத்திரசந்தானம் பாலித்துப்போம். இதனைப்பத்திரமாக மனத்தில் நினைத்திருவென்று ஐந்துமந்திரங்களை உபதேசித்துத் தமது ஆச்சிரமத்துக்குப்போயினர்.

அம்மந்திரம் ஐந்தையும்பெற்றுக்கொண்டு தன்கன்னிமாடத்தில்குந்திதேவி வாழ்ந்துகொண்டிருக்கையில் ஒருநாள்சந்திரோதயகாலத்தில்பளிங்குமாமணிமேடையில் உலாவிக்கொண்டிருக்க அப்போது தான்பெதும்பைப் பருவமாக இருப்பதைச் சிறிதுஞ் சிந்தியாமல் சூரியமந்திரத்தை யுச்சரித்தாள்; அதற்குரியமந்திரதேவதை ஒடிச்சென்று சூரியனைக்கிட்டிகுந்திதேவி உம்மையழைக்கின்றனள் வாவென்றழைக்கவே, சூரியனும் திடுக்கிட்டுபூமியில் நம்மையழைத்த இராசகன்னிகையார்? நம்மையழைக்கக் காரணமென்ன? அவளுக்குஅம்மந்திரம்அகப்படவரலாறென்னவென்றுசிந்தித்தறிந்து இனிநாம்போகாவிட்டால்தூருவாசமுனிவர்சாபம்பலித்துவிடும். ஊழ்கூட்டிவைத்தால் நாம்என்செய்வது! நாம்போய்தான் ஆகவேண்டுமென்றெண்ணி, இச்சமயம் நமது தோற்றத்தோடு சென்றால் யாவருமறிவர், நாம் உருக்கரந்தே செல்லவேண்டுமென்று மறையோ ருருக்கொண்டு மந்திரதேவதையுடன் குந்திதேவியிருக்கும் கன்னிமாடத்தையணுகினன். குந்திதேவியோ கண்டு திடுக்கிட்டு உள்ளமயர்ந்து நடுநடுங்கிப்பின்பு நாம் இருக்குங் கன்னிமாடத்தில்ஆண்பறவையும் பறக்கக்கூடாதெனின்சூரியப்பிரகாசம்போலும் ஒளிவீசும் ஒருமகாபுருடர் இவ்விடத்தில்வருவதன்றி நம்மையேநோக்கிவருகின்றார், இவர் யார்? பூவுலகத்தாரெனின் நமதுதந்தைவைத்திருக்கும்காவலைக்கடப்பதருமை! சொர்க்கலோகத்தாரெனின்நானிலத்துப்பெண்ணைநாடுவதும் அசாத்தியம்! ஆதலால்வருபவராரென்றுஐயுற்றுநிற்கையில்சூரியபகவான் எதிர்வந்துநின்று யானே இரவுக்குப்பகையாயிருப்பவன் ஆகையால் எனக்குப்பகலவன்என்றுபெயர்நீஎன்னையழைக்கவேண்டியகாரணமென்ன என்றுவினவ அதுகேட்டுக்குந்திதேவியும் வணங்கிநின்றுநான் சிறியவளாயிருந்த காலத்தில் தூருவாசமுனிவருக்குக் குற்றேவல்செய்துவந்தேன், அம்முனிவர் எனக்கு ஐந்துமந்திரங்களை யுபதேசித்தருளினர். அவற்றுள் ஒருமந்திரத்தை யுச்சரித்துப்பார்த்தேன், தேவரீர் எழுந்தருளினீர் என்று பதறிப்பயந்து சொல்லிமுடித்தாள்.

ஓபெண்கள் நாயகமே! நீஇம்மந்திரத்தைப்பெற்றபோதேதேவலோகத்திலிருக்கும் திதியின்கிலைமைபெற்றவளாவாய்! உனக்குநல்லகாலம் ஆகையால் என்னைக்கூடென்றுசொல்லக் குந்திதேவி திடுக்கிட்டு இதென்ன அதிசயம்! நாமோ பெதும்பைப்பருவமுடையவளா யிருக்கிறோம், இவரோ தேவருள் சிறப்புடைய சூரியபகவான், அவர் நம்மையேபார்த்து என்னைக்கூடென்றுரைக்கின்றார். மந்திரவலிமையால் அவரைக்கூடாவிட்டால் முனிவர்சாபமும்வந்துநேரும், கூடுவோமேல் கற்புடைமைக்குங் கேடுவரும், கற்

புடைமையும் நிந்தையுமெண்ணுமல் இவரைக் கூடுவோமென்றால் நமக்கு மங்கைப்பருவமும் இன்னும்வரவில்லை, இதற்கென்னசெய்வதென்று சிந்தித்துக் காலமல்லாதகாலத்தில் மந்திரத்தை யுச்சரித்ததனால் வந்தநயநஷ்டத்திற்கு நாமேயுரிமையுடையோமென்று துணிந்து சூரியபகவானைநோக்கிஇப்போதுஉம்மைக்கூடுவதற்குப் பருவமுடையவளல்லாதவளாயிருக்கின்றேன் இதற்கென்ன செய்வதென, சூரியபகவானும் கலவிநலத்திற்குரிய பருவமுடையவளாக்குகின்றோம் அஞ்சவேண்டாமென்று சொல்ல, அதற்குக் குந்திதேவியும் என்னை மங்கைப்பருவமுடையவளாக்கினீர், இனித்தடை சொல்லவொண்ணாது, அவ்வாறுதடைசொல்லாமல் கூடுவேனாயின்கற்பழிந்தவளென்று சொல்லாவண்ணஞ் செய்யவேண்டுமென்றுசொல்ல, அவருக்கு மகிழ்ச்சியுண்டாகிபெண்ணே நீ யென்னைக்கலந்து ஒருபுத்திரனைப்பெற்று மிதவைப்பெட்டியில்வைத்துக்கங்கையில் விடுவாயாயின் அக்கங்கைகாத்துக் கரைசேர்ப்பாள், உனக்கு நேர்ந்திருக்கின்ற மங்கைப்பருவமும்போய் பழையபடியே பெதும்பைப்பருவமும் வந்துசேரும், நீ சிறிதும் அஞ்சவேண்டாமென்றுசொல்லவே, குந்திதேவியும் அதற்கிசைந்து ஒருபொன்மயமான பஞ்சசயனத்தில் அழைத்துக்கொண்டு ஐந்துவிதமாகிய ஆலிங்கனஞ்செய்து மனமொத்துக் கலவிநலந்தரவே ஒருபுத்திரனை ஒருமுகூர்த்த நேரத்திற்குள் பெற்றாள். அதுகண்டு குந்திதேவியும் பொழுதுவிடிந்தால் பலரும் அறிவர், நமக்கும் பழிவந்துநேருமென்று துணிந்து, அம்மைந்தனை மிதவைப்பெட்டியில் தன்னுடையில் ஒன்றைவிரித்து வைத்துச் சூரியபகவான் கட்டளையின்படி பலதேவதைகளையுஞ் சிந்தித்து இவனைக்காக்கவென்று கங்கையில்விடுத்தனள். சூரியபகவானும் குந்திதேவியினிடம் விடைபெற்றுச்சென்றான். குந்திதேவியும் பழையபடியேபெதும்பைப் பருவமுமடைந்தனள்.

இங்கே மிதவைப்பெட்டியில்வைத்துவிடப்பட்ட சிறுவனைக்கங்கைதன் அலையாகிய கையினால் ஏந்திக்கொண்டே அத்தினபுரத்தின் துறையருகே விட்டது. உதயகாலத்தில் திரிதராட்டிர மகாராசனுக்குச் சாரதியாகிய இராதையனும் அவன் மனைவியும் ஸ்நானஞ்செய்யக் கங்கைக்கரையில்வந்து நிற்கையில் மிதவைப்பெட்டிவர அதையெடுத்துத் திறந்துபார்க்க கோடி-சூரியப்பிரகாசமான ஒருபுத்திரனைக்கண்டு, புத்திரப்பேறில்லாத சாரதியும் சாரதிமனைவியும் இவன் பிள்ளைகலிதீர்க்கவந்த பெருமானென்று அக்குழந்தையைப் பேழையுடனெடுத்துக்கொண்டு இதுநமக்குக் கங்கைமகிழ்ந்து கொடுத்தபெருஞ்செல்வமே யென்றெண்ணி நாமகரணஞ் செய்யத்துணிந்து அநேக வேதியர்களுக்குத்தானம் வழங்கிநிற்கையில்-சூரியபகவானும் ஆகாயவாணியை யழைத்து நீ அசரீரிவாக்கால் இராதையனென்னும் தேர்ப்பாகனும் மற்றுள்ளாரும் அறிய என்வீரிய விருத்தியாலுண்டான அச்சிறுவனைக் கர்ணன் என்று அழைக்கச்செய்யென்றவுடனே, அவ்வாறே ஆகாயவாணியும் அசரீரியாய் இவனைக் கர்ணனென்று அழையுங்கோளென்று சொல்ல அசரீரி வழங்கிய பெயரே அச்சிறுவனுக்கிட்டுவழங்கினன். அத்தேர்ப்பாகன் நான்குவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்துநான்கு கலைகள் முதலிய

வற்றைக் கற்பிக்கக் கற்று உணர்ந்ததுவுமல்லாமல் வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்ற முதலிய கற்பிக்க உணர்ந்து திரிதராட்டிரமகாராசனுக்கு வீட்டுமர் வில்வித்தை கற்பித்திருந்ததனால் நாம் அவ்வீட்டுமருக்கு ஆசிரியராகிய பரசுராமரிடம் வில்வித்தை கற்கவேண்டுமென்பதைக் கடைப்பிடித்து பரசுராமரிடஞ்சென்று எனக்கு வில்வித்தை கற்பிக்கவேண்டுமென்று வணங்கிநின்றான். பரசுராமரும் தாம் பீஷ்மர்முன்னிலையில் அரசர்களுக்கு வில்வித்தை கற்பிப்பதில்லையென்று சபதஞ்செய்துகொண்டிருப்பவராதலால் நீபிராமணனாவென்று கேட்டார்; அவன் ஆமென்று சொல்லி அவரிடத்தில் வரலாற்று முறைமையாகவில்வித்தைமுழுதும் ஐயந்திரிபறக் கற்றுச் சமர்த்தனானான். இவ்வாறு நடக்கையில் ஒருநாள் கர்ணனைக்கூவியழைத்து அவன்தொடைமேல் தன்தலைவைத்துப் படுத்துறங்குகையில், தெய்வகதியால் இரத்தவாரியென்கிற ஒருபுழு கர்ணனுடையதொடையைத் தொளைத்து உபத்திரவஞ்செய்யக்கண்டு குருவாகிய பரசுராமர் நித்திரைபங்கஞ் செய்யப்படாதென்றறிந்து தொடையை யசைக்காம லிருந்துவிட்டான். அப்புழு தொளைத்ததனால் இரத்தவாரியென்ற அதன்பெயர்க்கேற்பஅவன்தொடையினின்றும் இரத்தம் வாரியாகப் பெருக்கிட்டுப் பரசுராமர்தேகத்தைநனைத்தது பரசுராமர்நித்திரைதெளிந்தெழுந்திருந்துஅவன் தொடையையும்இரத்தவெள்ளத்தையும் கண்ணுற்று, இந்த இரத்தத்திற்கஞ்சாமலிருக்கின்றகுறிப்பையும்அறிந்துஐயங்கொண்டு,இவன்பிராமணனாயின் இவ்வளவுஅஞ்சாநெஞ்சுபடைத்திருக்கமாட்டான், உதிரங்கண்டவுடன்குலைநடுக்கமடைவான்; இவன் உள்ளபடி பிராமணனேயல்லவென்று துணிந்து கர்ணனைநோக்கி நான் பீஷ்மரிடத்திற் செய்துகொண்ட சங்கேதத்தைத் தவிர்த்தமையால் நீகற்றவில்வித்தை நல்லயுத்தமுகத்தில் உதவாமற்போகக்கடவதென்று சபித்தார். கர்ணனும் அச்சாபத்தையேற்றுத் தான்மிகுந்த வருத்தமுற்றுத் தன் அரண்மனைசேர்ந்து வாழ்ந்திருந்தான். இதுகிடக்க;

குந்திபோசன்பெற்ற குந்திதேவி சூரசேனனால் வளர்க்கப்பட்டு மங்கைப்பருவமடைந்தபோது தன்பெண்ணைக்குறித்துச் சுயம்வரஞ்சாற்றி ஐம்பத்தாறுதேசத்தரசர்களுக்கும் திருமுகமெழுதியனுப்பினான். அத்திருமுகமேற்றதூதுவர்பலதேசங்களிலுஞ்சென்றுஅத்திருமுகத்தைத்தெரிவித்தனர் அத்திருமுகங்கண்ட பலஅரசரும் திரண்டு தமது நால்வகைச்சேனைசூழசூரசேனமகாராசனதுநகரமேவந்துசேர்ந்தனர் சூரசேனனும்வந்தஅரசர்களுக்கெல்லாம் தகுந்தவிடுதிகளைவிட்டு மிகவும்மரியாதைசெய்தான் வீட்டுமனும் திருமுகங்கண்டவுடன் பாண்டுராசனுக்குப் புண்ணியதீர்த்தங்களினால்ஸ்நானஞ்செய்வித்துஅங்கேயேமணக்கோலங்கொண்டுபுறப்படச்செய்துசூரசேனனதுபட்டணத்துக்குத்தன்நாற்படையுடனேபாண்டுராசனும்தொடர்ந்துவர அடைந்தான். சூரசேனனும் தன்மகளை நல்லசுபமுகூர்த்தத்தில் வஸ்திராபரண அலங்காரஞ்செய்வித்துசுயம்வரமண்டபத்தில்வருவித்துதோழிமாரால் இன்னின்ன அரசரென்று வந்தஅரசர் ஊர்பெயர் முதலியவற்றைத்தெரிவித்தான். அவர்களும் அவ்வாறேகுந்திதேவிக்கு அவ்வரசர்ஊர்பெயர்முதலிய

வற்றைத் தெரிவித்துக்கொண்டு பாண்டுராசனைக்கிட்டி, இவ்வரசன் சந்திர குலோத்துங்கன், அத்தினாபுரத்துக்கதிபதி, பாண்டுராசனென்பார்களென்று சொல்லவே, குந்திதேவியும் அவ்வரசனுக்கேமணமாலைசூட்டினாள், அதைக் கண்ட சூரசேனனும் மணவறையிலிருத்தித் தன்மகளைப் பாண்டுராசனுக்கு மணஞ்செய்வித்தான். இவ்வாறுபாண்டுராசனுக்குக்கலியாணநிறைவேறவே அங்குவந்திருந்த அரசருள் மத்திரதேசாதிபதியெழுந்து என்னருந்தவப்பே றாகிய மாத்திரையென்னும் அருமருந்தன்னாளை இப்பாண்டுராசனுக்கே ம ணஞ்செய்விக்கின்றேன்; நீங்கள் இக்கலியாணத்தையும் நிறைவேற்றிப்போ கவேண்டுமென்று வந்த அரசர்களையெல்லாம் வேண்டிக்கொண்டான். அர சர்களெல்லாரும் அவ்வாறேசெய்வது சர்வோத்தமமென்றுசொல்லினர். அவ்வரசன் சூரசேனமகாராசனது நகரத்திலேயேமாத்திரையையும் பாண் டுராசனுக்கு கலியாணஞ்செய்துமுடித்து விருந்துபசரித்தான். அரசர்களெ ல்லாம் பாண்ராசனுக்குநடந்த இரண்டு கலியாணத்தையும் நிறைவேற்றி விடைபெற்றுத் தத்தம் நகரத்திற்குச்சென்றனர். பாண்டுராசனும் வீட்டும ருடன் தன்மனைவியரிருவருடனே அத்தினாபுரத்துக்குவந்துநகர்வலங்கொ ண்டுநால்வகைப்படையுடனேநகரத்துக்குட்பிரவேசித்து படை. குடி மகிழ் வெய்த விருந்துபசரித்து பூமகள், புவிமகள் கணவனாகிய புருடோத்தமன் போலச்சுகமாய்வாழ்ந்திருந்தான். அப்படிவாழ்ந்துவருநாளில்ஒருநாள்வே ட்டையாடத்துணிந்து மந்திரிமாரையும், மற்றைநால்வகைப்படையையும், வேடர்வலையர்முதலியோரையும் அழைத்துக்கொண்டு, வீட்டுமரையும் திரு தராட்டிரனையும்சத்தியவதியையும் தாய்மாரிருவரைவும் காந்தாரியையும் வ ணங்கி விடைபெற்று, பின்பு தன்மனைவியராகிய குந்திதேவிமத்திராதேவிக ளுக்குத்தான்வேட்டையாடவனத்திற்செல்வதைத் தெரிவிக்க, அவர்களும் எங்களுக்கும் வனவிநோதம்பார்க்கஆசையாயிருக்கின்றமையால் எங்களை யும் அழைத்துப்போகவேண்டுமென்றுகேட்க அவ்வாறே யதற்கிசைந்து, தம்பியாகிய விதுரனையழைத்துதி ருதராட்டிரமகாராசனையும், வீட்டுமரை யும்பிரியாமல் நகர்ப்பாதுகாவல் செய்துகொண்டிருக்கக் கட்டளையிட்டுத்த ன்மனைவியர் இருவருடனே தேரேறி நகர்ப்புறத்திலேவந்திருக்கும் மந்திரி மார் முதலிய சேனைகளையடைந்து காட்டிற்சென்று சிங்கம், யானை, கரடி, புலிமுதலிய வனமிருகங்களை வேட்டையாடிவருகையில்காண்டாமிருகமொ ன்று அரசன்கண்ணுக்குத்தோன்றி மறைந்தது. அதைவதைசெய்யவேண் டிப் பின்றொடர்ந்துவெகுதூரந்தேடிவரும்போது அமுதந்தியென்னும்முனி வன்வெகுநாள் தவத்திலிருந்தமையால் காமத்திலிருந்தமையால் காமத்திற் கருத்தைச்செலுத்தித்தன்மனைவியையழைக்க, அதுபகற்போதாதலின் கன வருத்த மடைந்துகணவனைநோக்கிஎந்தமிருகம் காமமிக்கது தெரிவிக்கவே ண்டுமென்ன முனிவனும் மானுருவங்கொள்வதே நலமென்றுமானுருவங் கொண்டிருக்க அவர்மனைவியும் மானுருவங்கொண்டு புணருவதையறியா மல்சாதாரணமானென்றுஅதன்மீதுபாணப்பிரயோகஞ் செய்துவிட்டான். முன்மான்வடிவங்கொண்ட. முனிவன் தன்சுயவடிவங்கொண்டுபாண்டுராச னைக்கூவியழைத்து நீசந்திரவமிசத்தரசனாயிருந்தும் கெடுமதி 'கண்ணுக்குத்

தோன்றும்' தென்றபடியே கெடுதிதேடிக்கொண்டாய். அற்றாலோஎதிர்ப்பட்டமிருகங்களைக்கொல்ல விதித்திருக்கிறதல்லாமல் புணர்ச்சிசெய்கின்ற மிருகங்களைக்கொல்லவிதித்திருக்கவில்லை, அதையறிந்திருந்தும் புணர்ச்சியிலிருந்த என்னுயிரைக் கொள்ளைகொண்டபடியால், நீயும் உன்மனைவியொடு புணருங்காலத்தில் உன்னுயிர் நீங்கக்கடவதென்று சபித்து தன்னுயிர் நீங்கினர். மான்வடிவங்கொண்டிருந்த முனிபத்தினியும்உடனே ஆவிநீங்கினள். இதைக்கண்ட பாண்டுராசனும் அடடா மோசம்வந்துவிட்டதே 'ஒன்று நினைக்கினது வொழிந்திட் டொன்றாகும்' என்றபடியே இவ்வாறுமுடிந்துவிட்டதே நாம்என்செய்வது இனிநாம் ஆளும்அரசு என்னஅரசு என்று துணிந்து மந்திரிமாருக்கு இச்செய்தியறிவித்து, தன் பெரியதந்தை, தமையன், தம்பி, தாய்மார்களுக்குத்தெரிவிக்கக்கட்டளையிட்டு, தன்மனைவியரையழைத்து இதனைத்தெரிவித்து உங்கள்தாய்வீடேனும், மாமிவீடேனும் போய்ச் சேருங்கோ ளென்று சொல்ல, நாங்கள் உமக்குக் பணிப்பெண்களாக இருக்கிறோம், நாங்கள் நகரவாசஞ்செய்யோமென்றுமறுத்துவிட்டனர். அங்கே சென்ற மந்திரிமார் முதலியோர் பாண்டுராசன்சொன்னதை வீட்டுமர், திருதராட்டிர மகாராசன், விதுரராசன், சத்தியவதி, தாய்மார் இருவருக்குந் தெரிவிக்கவேஅவர்கள் சிந்தைகலங்கியொன்றுந்தோன்றாமல் இருந்தனர். இதுகிடக்க;

பாண்டுராசனும் தன் அரசகோலத்தை நீக்கித்தவவுருவங்கொண்டு அங்கே தவஞ்செய்திருக்கும் முற்றத்துறந்த முனிவரிடத்தே உபதேசங்கள் பெற்று தவத்தாலடையுஞ் செல்வமே பெரிதெனத்துணிந்து நீரிலிருந்தும், ஒருகாலூன்றி நின்றும், பஞ்சாக்கினிமத்தியிலிருந்தும் இப்படி பலகாலந்தவஞ்செய்திருந்தான். இவ்வாறு தன்சித்தத்தைச் சிவன்பாலிருத்தித் தவஞ் செய்திருப்பது கண்டு முற்றத்துறந்த முனிவர்களெல்லாம் பாண்டுராசனுக்கு வேத சிவாகமத்தினுட்பொருளை விளங்கவுரைத்தனர். நாளுக்குநாள் பாண்டுராசனும் தவத்தில் மிகச்சிறந்தவனாய் மனப்பகையைவென்று தனிமுதலாகியபேரறிவின் மையமாகநின்றான். ஒருநாள் வடபுறத்தேயிருந்த சிருங்கிவனத்துக்குச் செல்லக்கருதி மனைவியரிருவரையும் அவர்பாங்கியரோடு நிறுத்தி விட்டு தனியேசென்று அங்கிருந்த சதானந்தர்முதலிய முனிவர்களைத் தெரிசித்து வணங்கிநின்றான். சதானந்தமுனிவர் முதலிய முனிவர்களெல்லாம் பாண்டுராசனாகிய ராஜரிஷியைக்கண்டு மகிழ்வெய்தி வேதசிவாகமங்களி னுட்பத்தையும் மகாமந்திரங்களின் இரகசியத்தையும்போதிக்கப் பெற்று மறுபடியும் முன்போலவே தவஞ்செய்துகொண்டிருந்தான்

இவ்வாறு சிலகாலஞ் சென்றபின்பு ஒருநாள் சதானந்தர், வசிட்டர், விசுவாமித்திரமுனிவர் கயிலாயதரிசனஞ் செய்யக்கருதி செல்கின்றவர்பாண்டுராசன் தவஞ்செய்யும் வனத்தையடைந்து பாண்டுராஜனையுங்கண்டு தாங்கள்போகும் கருத்தைத்தெரிவிக்க, அதைக்கேட்ட பாண்டுராசனும்நானுங் கயிலையினனுக்கமாகச்சென்று பாண்டுராசனைநோக்கி உனக்குப் புத்திர பாக்கியமில்லாமையால் நீ கயிலையைத் தரிசிக்கப் பாத்திரவானல்லன். ஆயி

னும் நீ செய்த அருந்தவத்தால் இவ்வளவுதூரமும்வந்தாய், இனிவருவது சரியல்லவென்று மறுத்தனர். அரசனும் நான்மனைவியரைக்கூடினல் மரணமடையச் சாபம் பெற்றிருக்கின்றேனென்றனன். அதற்கு முனிவர்கள் நாங்களே வேதவிதியைக்கடப்போமாயின் எளியோர்க்கு ஆசைவசனஞ்சொல்லிப்பின் கைவிரித்தவன்என்னகதியடைவானே அக்கதிநாங்கள்பெறக்கடவோம்ஆகையால் வேதவிதியைக்கடப்பது சரியன்று. நீர்கூடி மைந்தனைப்பெறுவிட்டாலும் தேவராலேனும் முனிவராலேனும் தருமசந்தானம்பெற்றுவாழுமென்றுசொல்லிமுனிவர்மறைந்துசென்றனர். பாண்டுராசனும் தன்மனைவியரையடைந்து தன்கருத்தைத்தெரிவிக்க அவர்கள் மறுத்துரைத்தனர். பின்னும் பாண்டுராசனும் 'பெறுமவற்றுள்யாமறிவதில்லையறிவறிந்தி-மக்கட்பேறல்லபிற.' எனப்பெரியோருங் கூறியிருக்கின்றனரே. புத்திரனில்லாதவீடு இடுகாடொக்கும். முன்னொரு காலத்தில் சூரியவமிசம் பரசுராமரால் மாண்டபொழுது அவ்வரச மாதரெல்லாம் காசிபமுனிவருத்தரவினல் தத்தம் ஆசிரியரைப்புணர்ந்துதருமசந்தானம்பெற்றுவிருத்திசெய்தனர். பலிச்சக்கரவர்த்தி யென்னுமரசனும் தீர்க்கதமமுனிவனல் தருமசந்தானமாக அங்கராசனைப்பெற்று வீடுபேறடைந்தான். கேகயதேசாதிபதியாகியசுரதனும் அவன்மனைவிசுரதசேனையும் புத்திரப்பேறில்லாமற் பெரியோர்களைக்கொண்டு தருமசந்தானம் பெற்றுக்கொண்டனர். சூரியவமிசத்தில் மிகக்கீர்த்திபெற்ற கன்மாடபாதனென்னும் மகாராசன் தன்மனைவியோடுகூடினல் இறப்பானென்றிருந்த சாபத்தைப்பற்றித் தமது குலகுருவாகிய வசிட்டபகவானல் தருமசந்தானம்பெற்றுச் சிறப்படைந்தனன். நாங்களும் விசித்திரவீரிய மகாராசன் மக்களேயல்ல; நானும் எனது தமையனுகிய திருதராட்டிரமகாராசனும், என்தம்பி விதுரனும் வியாசபகவானுக்குத் தருமசந்தானமாகப் பிறந்தோம். இது வேதவிதியாகிய தருமசந்தானம்பெறுவது கொண்டு நடந்ததாகும். நான் பூமியிற்பிறந்தும் பிறவாதவனுனேன் 'பெண்டிர்க்கழகெதிர் பேசாதிருத்தல்.' என்பது கொண்டு நீங்கள் என்சொற்கடவாது நடப்பதே தகுதியான்றுயென்று சொல்ல, குந்திதேவியும் முடித்தாலும்நல்லமல்லரையே முடிக்கவேண்டும்.' இனியாரைச்சேர்ந்தணையலாமென்று சிந்தித்து அப்போது தூருவாசர் உபதேசித்த மந்திரம் ஞாபகமுண்டாகித் தன்கணவனைவணங்கி என்னுயிர்த்துணைவனே! என் விண்ணப்பத்தைக்கேட்டருளும். அது உத்தமமாயிருந்தால் அவ்வாறே செய்கின்றேன். நான் சிறியவளாயிருந்தபோது தூருவாசருக்குக்குற்றேவல் செய்திருந்தேன். அப்போது அவர்என்குற்றேவலுக்கு மகிழ்ந்து ஐந்துமந்திரங்களை யுபதேசித்தனர். அம்மந்திரத்தின்சிறப்பென்னவென்றால் நான்எந்தமந்திரத்தையுச்சரிக்கின்றேனே அந்தத்தெய்வம் என்னைக்கலந்து புத்திரபாக்கியமளிக்கும். அது தங்கள்சம்மதியாவென்று தெரிவிக்கப் பாண்டுராசனும் நீ சொன்னது 'சர்க்கரைப் பந்தலிற் றேன்மாரிபெய்தாற்போலிருக்கின்றது.' அது என்சம்மதிதானென்று எடுத்துச்சொல்லக்குந்திதேவி அதற்கிசைந்து பன்னகசாலையிற்புகுந்து அதை அரசரூ அரண்மனைபோலச்சிங்காரித்து தூருவாசரைத்தியானித்து வணங்கியமனைநினைந்து உச்சரித்தாள்.

அவ்வாறு உச்சரித்தவுடனே மந்திரதேவதைகள்ஓடோடியுஞ்சென்று தென்றிசைக் கிறைவனாகிய யமனையணைந்து ஒருராசகன்னிகை உம்மைய ழைக்கின்றனளென்று பற்றிக்கொண்டுவந்து குந்திதேவியிடத்தேவிடுத்தது. குந்திதேவியும் அவரையெதிர்கொண்டழைத்துச்சென்று மஞ்சத்திருத்தித் தன்னிரு தனங்களும் யமனதுமார்பிலூடுருவக்கட்டி யணைத்துப்புல்லினள். யமனே சற்றுநிதானித்து யாராயிருந்தாலும் மாதர்வலிய அணைய உத்தே சித்தால் தடைசொல்லப்படாதென்பதனால் மகிழ்வொடுங்குந்திதேவியையி றுகத்தழுவியணைந்தான். உடனே யமனதுவீரியவிருத்தியினால் குந்திதேவி வயிற்றில் கருவுண்டாகிக் குருவாரத்திலே நவக்கிரகங்களும் நல்லநிலையிலி ருக்கிற சமயத்திலே ஒருகுடைநிழலிலே உலகமுழுதாளும் புத்திரன் உதய ஞ்செய்தான். அக்குழந்தைதோன்றினவுடனே தேவர்களெல்லாம் கற்பக மலர் சொரிந்தனர், தேவதுந்துமி முழங்கிற்று, அரம்பை திலோத்தமை முதலிய தேவமாதர் நடித்தனர். முனிவரெல்லாம் இனி தருமதேவதை நா ன்குபாதங்களினும் நடக்குமென்று ஆசீர்வதித்தனர். பாண்டுராசனும் பிள் ளைகலிதீர்க்கவந்த பெருமானேயென்றுதன்மகனையெடுத்து உச்சிமோந்துநின் று இவனுக்கு என்னபெயரிடலாமென்றுசிந்தித்திருக்கையில், அசரீரிதரும ராசனென்றுஇவனைப்பெயரிட்டழைக்கலாமென்றுசொல்லிற்று. பாண்டுரா சனும் அவ்வாறே தருமராசனென்று பெயரிட்டழைத்து அங்குள்ளபெரி யோர்களுக்குத் தன்னாலாகிய பேருதவிகளைச்செய்தான்.

இவ்வாறிருக்க, நாரதர் அஸ்தினாபுரத்துக்குச்சென்றுவிட்டுமர், திருத ராட்டிரன், விதுரன் முதலியோர் கூடியிருந்தசபைக்குச்சென்று அவரால் உபசரிக்கப்பட்டு தருமராசன் பிறந்ததைஅறிவித்தார். இதைக்கேட்டஅவ் வரசர் மூவரும் மிகவுஞ்சந்தோஷமடைந்திருந்தனர் இதைக்கேள்விப்பட்ட காந்தாரி நாம்பட்டத்தரசியாயும் மூத்தவளாயுமிருந்தும் நமக்குமுன் நமது மைத்துனன் மனைவி பிள்ளையைப் பெற்று விட்டனளேயென்று பொறாமை மேற்கொண்டு தான்கருக்கொண்டிருப்பதனையு மெண்ணாமல் குழவிக்கல்லை யெடுத்து அடிவயிற்றிலடித்துக்கொண்டாள். அப்போது காந்தாரிகருக் கொண்டுமுப்பத்தாறுதிங்களாயின;கல்லாற்குத்திக்கொள்ளவேகருக்கலங்கி இரத்தவெள்ளம் பெருகிற்று. இதைக்கண்ட பாங்கியர்களெல்லாரும்திப்பி ரமைகொண்டு ஒன்றுஞ்சொல்ல அறியாராய்ச் சத்தியவதியினிடத்தே யறி வித்தனர். சத்தியவதியும் விட்டுமர், திருதராட்டிரன், விதுரன் என்னும் மூன்றரசருக்குந்தெரிவித்தனள். அவர்களும் ஒன்றுந்தோன்றாமல் பிரேதம் போல் நின்றுவிட்டனர். சத்தியவதியும் இவர்களும் ஒன்றுஞ் சொல்ல வகை யறியாமல் நிற்பதையறிந்து எமது குலதெய்வமாயும், தன் மூத்த குமாரனாயும் விளங்கும் வியாசபகவானை நினைந்தனள். அவர் உடனே வந்து தாயை மும்முறை வலம்வந்து அடிபணிந்து நடந்த செய்தியை யறிந்துஅங்குள்ளாரால்சிலபாத்திரங்களைவருவித்துக்காந்தாரியைத் தூறிப் பெரிய பானையில் அவ்வுதிரத்தை யேந்தி, எஞ்சிய உதிரத்தை தொன் னூற்றொன்பது சிறுபதலைகளில் நிறைத்து, காந்தாரியைக்கூவி நீபொறா மை யென்னும் பெரும்பொருளைச் சேமித்து வைத்திருக்கின்றாய், உன்

ளுலே இவ்வுலகமுழுதும் ஒரு குடைநிழலில் அரசாளுஞ் சிறந்தபேராற்றலை யுடையமகப்பேறிழந்தாய்! இனிப்பொறுமையைவிட்டுவிடு. இதுநோக்கியே 'ஔவியம்பேசேல்' என்று பெரியோருஞ்சொல்லியிருக்கின்றனர். இனியா யினும் இப்பாண்டத்தில் அமைத்த கருவை நெய் தேன் பால் இம்மூன்றை யும் அறுகினுல் தோய்த்துப் பதலைகளின் பக்கங்களில் ஈரம் உலராமல் ஒற் றிக்கொண்டுவருவையேல் கருவுருவாகிக் காதலரைப்பெறுவை; நீயஞ்சவே ண்டாமென்று சிலமந்திரங்களைப்போதித்துத் தன்தாயைவணங்கித் தன்னு ச்சிரமஞ்சென்று சேர்ந்தார். காந்தாரியும் வியாசபகவான் கூறியபடி அப்ப தலைகளைப் பாதுகாத்துவந்தனர். அவ்வாறுகாத்துவருகையில் பெரும்பதலை யினின்றும் அந்திப்பொழுதில் அசுரவேளையில் இனிப்பூமிதேவி பாரந்தாங் கவொண்ணுதென்றேங்க ஒருமகன் தோன்றினுன். மற்றைப்பதலைகளினின் றும் ஒவ்வொரு நாளில் ஒவ்வொரு புத்திரருதயமாயினர். இதுகிடக்க;

நாரதர் இச்செய்தியை வனத்திலிருக்கும் பாண்டுராசனுக்கு அறிவிக்க பாண்டுராசன் எதிர்கொண்டுவந்து செய்தவந்தனை வழிபாடுகளை யேற்று பாண்டுராசனே! உமக்குப் புத்திரன்பிறந்தானென்பதனைக்கேட்டுக் காந்தா ரி குழவிக்கல்லாற் குத்திக்கொண்டாள். அதனுல்அஸ்தினபுரங் கலங்கியதை யறிந்து வியாசபகவான் எழுந்தருளிவந்து அவ்வுதிரங்களை நூறுபதலைகளில் அமைத்து வைத்தார். அது கருவுருவாய்த்திரண்டு இன்று ஒருபுத்திரனுண் டானுன். இனி மற்றைப் பதலைகளிலிருந்தும் நாளொன்றுக்கு ஒருபுத்திரரா கத் தோன்றுவர், இதுதான் நடந்த செய்தியென்று சொல்லிவிட்டுப்போயி னர். பாண்டுராசன் குந்திதேவியை யழைத்து நடந்தசெய்தியைத் தெரிவித் து நீயேன்பெற்றமந்திரங்களைவிணுக்குகின்றுய், நீவாயுதேவனைநினைத்துஒரு புத்திரனைப் பெறுகவென்றுசொல்லவே, குந்திதேவியும் நீராடி யாடையாப ரணமணிந்து வாயுமந்திரத்தை யுச்சரித்து பலரணையிட்டு நின்றுள். மந்திர தேவதைகளும் ஓடோடியுஞ்சென்று வாயுதேவனை யழைத்துவந்துவிட்டது. குந்திதேவியும் வாயுதேவனை யழைத்துக்கொண்டு மலரணையிலிருத்தி அவன் மனமகிழக் காமநூற்படிபுல்லி அன்றில்விழைபோகமயர்ந்தாள். உடனே வாயுபகவான் வீரியவிருத்தியால் கருக்கொண்டுகரியமேகம்போலும் நிறத் தையுடைய ஒருமைந்தனை யீன்றுள். அவன் பெரும்பதலையினின்றும் பிறந் தபுத்திரனுக்கு ஒருநாளிளையவனுயினும் அப்பதலையினின்றுந்தோன்றியம க்களனைவரினுமிகுந்த பேராற்றலையுடையவனுயுமிருந்தான். இவனுக்குஎன் ன பெயரிடலாமென்று பாண்டுராசன்நினைக்கையில் ஆகாயவாணி இவனுக் கு வீமனென்று பெயரிடென்றுசொல்ல, அவ்வாறே வீமனென்று பெயரிட் டனன். வீமன்பிறக்கையில் ஏரிகுளங்களிலெல்லாம் சங்கங்கள் வாய்திறந்தா ர்த்தன. அங்கே அத்தினுபுரத்தில் புத்திரோச்சவ தினத்தில் இரத்தமழை பொழிந்தது; வெள்ளெலும்பும் செம்மலருஞ் ஆகாயத்தினின்றும்விழுந்தன; ஓரியும் நாயும் ஒருங்கேகூவின; இவ்வாறு பல துர்நிமித்தங்களெல்லாந்தோ ன்றின. இந்நிமித்த முதலியனகண்டு வீட்டுமர் முதலியோர் இம்மக்களால் என்னவிபரீதம் நடக்குமோவென் றுள்ளங்கலங்கினர். பின்பு இவர்களுக்கு என்னபெயரிடலாமென்று சிந்தித்துப் பெரியோரைக்கொண்டு அப்புத்தி

ரர்களுக்குத் துரியோதனன், துர்ச்சாதனன், துர்த்தபுருஷன், துன்முகன், சலந்தன், சகன், சமன், விந்தன், அனுவிந்தன், துருவாகன், சுபாகு, துஷ்பதருஷணன், துஷ்டந்தன், சித்திரயோதி, துஷ்கிரமன், விமசதி, விகருணன், சலசந்தி, சுலோசனன், சித்திரன், சித்திரஸேனன், சாருசித்ரன், சாரஸன், துன்மருஷணன், விலீஷன், விகடஸமன், பூரணநாபன், சுநாபன், நந்தன், உபநந்தன், சேனபதி, சுசேக்ஷணன், குண்டோதரன், மகோதரன், சித்ரத்வம்ஸன், சித்திரதன், சித்திரவாகு, அமித்திரசித்து, சித்திரபாணன், சித்திரவன்மி, சுவன்மி, துர்விமோகன், சித்திரசேனன், சித்திரகண்டன், சுசித்திரன், சித்திரவன்மதரன், அபராசிகன், பண்டிதன், விசாலாக்ஷன், மார்பரன், அசிதன், சயந்தன், சுவேச்சை, துர்ச்சயன், துருடாஸ்தன், சுகஸ்தன், பாதவேகன், சுவரசேனன், ஆதித்தகேதன், பகாசி, நாகதந்தன், உக்கிரசாயி, கவசி, ருஷங்கி, பாசி, தண்டதரன், தனுக்கிரகன், பீமரதன், பீமவேகன், பீமவாகு, அலோலகன், பீமகருமன், சுபாகன், பிவிக்ராந்தன், அமயன், இருடிகருமன், துருடிரதன், அநாதிருஷியன், குண்டபேதி, விராவி, தீர்க்கலோசனன், தீர்க்கவசன், தீர்க்கபுசன், அதீர்க்கன், தீர்க்கன், தீர்க்கபாகன், மகாபாகு, வியூடோரஸ்கரன், கனகத்துவசன், மகரகுண்டன், குண்டன், குண்டசன், அன்சுவன், சித்திரகன், நக்கிராயுதன் பாலகீர்த்தி, கந்தாயு, விரோசன், சகுண்டலன், விகரன் என்று நூறுபுத்திரரும், துர்ச்சலையென்னும் ஒருபுத்திரியும் தோன்றினார்கள். இவ்வாறு அஸ்தினபுரத்திலிருக்க அங்கேபாண்டுராசன் மனைவி குந்திதேவி இன்னும்இண்டு மந்திரமிருக்கின்றனவென்று சொல்ல பான்டுராசன் இந்திரனைநாடி ஒருமந்திரத்தையுச்சரியென்றுசொல்லவே உடனே குந்திதேவியும் இந்திரனைநாடி ஒருமந்திரத்தையுச்சரித்தாள். உடனே இந்திரனது வீரியவிருத்தியால் கருத்தரித்துப் பங்குனிமாதத்து உத்திரநக்ஷத்திரத்தில் பூரணசந்திரோதயகாலத்தில் அருமையான நன்னிமித்தந்தோன்றிநிற்க ஒருபுத்திரனுதயமானான். அப்புத்திரன் மன்மதன்போல் வடிவழகும் திருமால்போல் பேராற்றலும் உடையானாய்த்தோன்றவே, அப்புத்திரனை வாரித்தழுவி யெடுத்துவந்து தன் காதலனாகிய பாண்டுராசனிடத்தே கொடுத்தாள். பாண்டுராசனே அப்புத்திரனதுபேரழகையும்பேராற்றலையும் இராச அம்சத்தையும்கண்டு என்னபெயரிடலாமென்று நினைக்கையில் ஆகாயவாணி பாண்டுராசனைநோக்கி இம்மகனைப் பற்குனன் என்றழையுமென்று சொல்ல அவ்வாறே பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வன்னணமுமாக வளர்த்துவந்தான்.

இவ்வாறு வளர்த்துவருகையில் ஒருநாள் மத்திராதேவியும் பாண்டுராசன் சனித்திருக்கையில் தன்கணவனை வணங்கிநின்று என் தமக்கையான குந்திதேவிவேறு, யான்வேறன்று, அவள்வயிற்றிற்பிறந்தபுத்திரர் என் புத்திரரேயாகும், என்வயிற்றிலும் இரண்டுமக்களைப்பெறஇச்சித்திருக்கின்றேன். தங்களுக்கோசாபம்நேர்ந்திருக்கின்றது நான்கொண்டகாதல்எவ்வாறுநீங்குமென்றுசொல்ல, நல்லதென்றுசொல்லிக் குந்திதேவிவந்தபிறகு இக்கருத்தைத் தெரிவித்தான். குந்திதேவியும்பாண்டுராசனைநோக்கி இக்கருத்து எனக்குமுண்டு அது அசுவனிதேவதைகள் மந்திரம், அந்த மந்திரத்தை யுபதேசிக்கின்

றேன்? இரட்டைப்பிள்ளைகள்தோன்றுவரென்று அம்மந்திரத்தைத் தன்தங்கையாகிய மத்திராதேவிக்குஉபதேசித்துஅதனையுச்சரிக்குமுறையையும் காட்டினாள். மத்திராதேவியும்அம்மந்திரத்தை யுபதேசிக்கப்பெற்று ஸ்நானஞ்செய்து நல்ல ஆடை ஆபரணங்களையணிந்து பள்ளசாலையை யலங்கரித்து மலரணையிட்டு மந்திரத்தை யுச்சரித்து நின்றாள். அம்மந்திரத்தை யுச்சரிக்கவே அச்சுவனிதேவரிருவரும் வந்து மந்திரியைக் கூடிக்கலந்துபோயினர். அச்சுவனிதேவ ரிருவராகையால் முன்னும் பின்னுமாக இரட்டையரைப் பெற்று எடுத்துக்கொண்டுவந்து தன்கணவன் கையிற்கொடுக்கவே அவர் வாரியெடுத்து உச்சிமோந்துஎன்னபெயரிடலாமென்று எண்ணியிருக்கையில், ஆகாயவாணி பாண்டுராசனைக் கூவியழைத்து இவருள் முன்பிறந்தோனை நகுலனென்றும், பின்பிறந்தோனைச் சகதேவனென்றும் பெயரிட்டழைக்க வேண்டுமென்றுசொல்ல, அவ்வாறே அம்மக்களிருவருக்கும் நகுலனென்றும் சகதேவனென்றும் பெயரிட்டழைத்தனர். இவ்வைவரும் பாண்டு மைந்தராதலால் பஞ்சபாண்டவரென்றுஞ் சொல்லப்பட்டுஅங்கங்குசென்று விளையாடியும், பெரியோரைக்கண்டு வணங்கியும், அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டும், யாவருக்கும் மகிழ்ச்சிபெருக நடந்துவந்தனர்.

இவ்வாறு நடக்கையில் முற்றத்துறந்த முனிவரெல்லோரும் இப்புத்திரர்கள் அறிவிற்சிறந்தாராதலைக்கண்டு அவர்களுக்குஉபநயனஞ்செய்வித்து நான்குவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்துநான்கு கலைகள், பதினெண் ஸ்மிருதிகள் முதலியவற்றைப்போதித்து அரசகுலதீபங்களாதலால்வில்வித்தையுங் கற்பித்தனர். இப்புத்திரரோ அழலிடும் கருப்பூரவுருண்டைபோல வெகுநுட்பமாய்க் கல்வியிற் றேர்ச்சியுடையராய் நல்லொழுக்கத்திற் சிறந்தவராய் வளர்ந்துவந்தனர். பின்னும் அவர்கள் மிக இளம்பருவமுடையராதலால் விளையாட்டிற் கருத்தைச்செலுத்தி விளையாடியும் வருவர். இவ்வைவருள் வீமனேஇயல்பாகவே சிங்கம், புலி, கரடி, யானை, யாளி முதலிய துஷ்டமிருகங்களை வாலைப்பிடித்துக்கொண்டுவந்து முனிவர்கள் ஆச்சிரமத்தில் அவர்கள் காண நிலத்திலுருட்டி விளையாடிவருவான். அதைக்கண்டு முனிவர்கள் வீமன்பேராற்றலைவியந்து விட்டுவிடக்கட்டளை யிடுவாராயின் அவர்கட்டளையைத் தலைமேற்கொண்டு அவற்றைவிட்டுவிடுவான். இவர்கள், விளையாடி வருவதைத் தந்தையாகிய பாண்டுராசனும் தாயரிருவருங்கண்டு கண்ணுங்கருத்து மகிழ்ச்சியடைவர். இவ்வாறிருக்கையில் சந்தனமும், சந்தனச்சேறும், பனிநீரும், பூவும், குளிர்ச்சிபொருந்திய சந்திரிகையும், தென்றற்காற்றும், ஒருயிர் இரண்டுடம்பாக உருகுவாருருகும்படி மன்மதனை மகுடஞ்சூட்ட வசந்தகாலந்தோன்றிற்று. சந்திரனால் நலம்பெறுஞ் சோலைகளெல்லாம் மெய்சிவக்க வண்டுகள்புதுமையாகப்பாடிச்சென்று மொய்க்க, புதிய மணஞ்சென்றுலாவ விரைவில் தலைநடுங்கக் கால்களுந்தடுமாறின, ஏனெனில் மதுவுண்டவருள் யாவரே மண்ணின்மேல் மயக்கமடையாதாரென்பதை விளக்கின்றது.

பரந்தெழுந்த மாந்தருக்குள் புட்பராகமணிபோல் நன்னிறமிகுதியும் பெற்றிருப்பது வலியமைந்த கருப்பஞ்சிலையையுடைய மன்மதனேவியு

மோகனச்சுண்ணம்போல் விளங்கவும், அசோகத்தளிர்கள் தழைத்துமலர்ந் திருப்பன யோகத்தைவிரும்பிய மெய்யறிவுடையார் புந்திகவரவிட்டதழற் கொப்புளிக்கும் கலைகள்போற்றுேன்றவும், தமதுதாளினுல் முன்னே பருகிய நீரையெல்லாம் செந்தழலாக்கிய யழகிய தண்ணிய கப்புங் கிளைகளாலும் காட்டுந்தன்மையால் முற்படப்பேசும் பகுதியையுடைய அசோகு மாமுதலிய தருக்களெல்லாம் இந்திரசாலவித்தைகற்றுேன் இயல்பினையுங் காட்டினதுபோலும் விளங்கின. வேனிற்பருவத்தின் விளைவினுலும் அப்பருவத்திற்குரிய மன்மதனுடைய விழவினுலும் மிக்க அழகுள்ள மத்திரையினது பேரழகினுலும் கெடுமதி கண்ணுக்குத்தோன்ருதென்னும் பழமொழிப்படி தான்சுகப்பெருக்கிலழுந்த எண்ணி, தானடைந்திருக்குஞ் சாபத்தையுஞ் சிறிது மெண்ணுதவனுய் நீலோற்பல மலர்போலுங் கண்ணையுடைய அம்மத்திரைமேற் காதல்கொண்டு, அருந்தளிரை விரும்பித் தந்துஅலகுடன் அலகுபொருந்தப்பொருந்துதற்குமுன்னமேஅவசரமாய்ப் போகத்தை விரும்பிய குயிலும் பெடையுமிருந்து உடலுருகும் அம்மலர்ச் சோலையில் இரதியும் மதனனும் என்றுசொல்லும்படி காதலால் வருத்தமுடையாராய் ஒரு மாதவிப்பந்தரையடைந்துசெம்பஞ்சூட்டிய பாதங்களையுடைய மத்திரையும் பாண்டுவும் துன்பமோட்ட நெஞ்சினை வருத்த மேலுமேலும் நேயமிகுந்துருகியாங்கு, இதுகாறும் என்னசெய்துவிட்டோமென் றெண்ணியெண்ணிமனம்நொந்து சாமவழியடைவாராய்ப்புஷ்பசயனத்தில் இருதனமும் புளகரும்பவும் கலவியின்பம் அனுபவிக்க வேண்டுமென்னுஞ் சிந்தைமுற்றிமத்திரைதன்கணவனதுமலைபோலும்மார்பின்மேல்அன்போடு ஒவியமென்றுசொல்லும்படிஅயர்ந்துவீழ்ந்தும், அரும்பியவிழியும் பூமுதஞ் சுரக்கும்பவளவாயும் சுரதலீலையையளிக்குங் குறிப்புமாய்ப்புல்லப் பெரும் படைமதனம்பினுல் பொன்றினுன்போல வாசனையுடையவண்டின மிரங்கி யாரவாரிக்கப் பாண்டுராசனுஞ் சோர்ந்துவிழ்ந்தான். நல்வினையால் நஞ்சமமுதாமென்றும், தீவினையால் அமுது நஞ்சாமென்றுஞ் சொல்லப்படுவதனுல் கொஞ்சுங்கிளியைப்போலுமொழியாள் ஆம்பல் மலர்போலும் இதழிலுள்ள அமுதால் அரசன் மாண்டனனென்ருல் இது அதிசயமாமோ! இவ்வாறு அரசன் கிடக்கக்கண்ட மத்திரை சித்திரை மதியில்வரும் வசந்தன் செவ்வியைக்கண்டு மகிழ்ந்து அயர்ந்து நித்திரைசெய்கின்றுனென்றுணர்ந்து பின் நெடுநேரந் தாழ்த்தாள். தம்மையெதிர்த்த பகைவர் ஆவியைக் கொள்ளைகொள்ளும்அரசனேஉயிர்ப்பில்லாதவனுய்விழித்தலுமின்றிக்கிடப்பதையறிந்து அழைத்துஒலமிட்டழுது இனிபரமபதஞ் சென்றனனென்பது துணிந்துபாண்டவரைவரும் குந்திதேவியும்வரஅறிந்துபுலம்பவேஇதென்ன அதிசயமென்று மாலையில்விளங்கும்தாமரைமலர்போலஒளிகுன்றினர். பின் நடந்ததைச்சொல்ல உணர்ந்துகலங்கிக் குந்திதேவிபெருங்குரல் பாய்ச்சியழுதாள். இவ்வாறு அழுகிற குரலோசைகேட்ட முனிவரெல்லாரும் ஒடிவந்து நடந்தசவிஸ்தாரமெல்லாஞ்சொல்லக்கேட்டுபாண்டுராசன் இறந்திருப்பதையுணர்ந்து பாண்டவர் ஐவரையுங்கொண்டு பாண்டுராசனுக்கு உரிமைக் கடன்செய்வித்தனர். இதற்குள் மத்திரையும் தீர்க்காலோசனைசெய்து

குந்திதேவியை வணங்கிநின்று இரட்டையரைப் பிடித்துக்கொடுத்து இவ்விருவரும் உமது பிள்ளைகளேயல்லது எமது பிள்ளைகளல்லர், இவர்களைப் பாதுகாப்பது உமது பாரம், இனி அரைக்கணமேனும் புருடனைக்கொன்ற பாவி பூமியிலிரேனென்று தன்னுயிர் நீங்கினாள். உடனே அவளுக்குரியஉரிமைக்கடன்மைகளெல்லாம் இரட்டையரைக்கொண்டேசெய்வித்தனள். இவ்வாறு நடக்கவே முனிவர்களெல்லாரும் அவர்களுக்குத் தேறுதலை சொல்லி அவர்கள் கொண்ட துக்கத்தை யொருவாறு ஆற்றினர். பின்பு ஒருநாள் குந்திதேவியை முனிவர்கள் நோக்கி உன்மக்களோ அரசகுமாரர்கள், அவர்கள் காட்டேகதியாய் வாழ்வதுஞ்சரியல்ல, அவர்கள் அரசர்களுக்குரிய சகலவிஷயங்களைக் கற்றுத்தேறவேண்டும், உனக்கோ சகலமான உறவின்முறையாரும் அத்தினபுரத்தேயிருக்கின்றனர், இவர்களோ எல்லாவுலகங்களையும் ஒருகுடை நிழலிலே அரசாளத்தக்க வல்லமையுடையவர், அவர்களைக் காட்டில் விட்டிருப்பது தகுதியன்று, இவர்களுடன் நீ அத்தினபுரத்துக்குப்போய்விடுவதே நலமென்றுசொல்ல, குந்திதேவியும் எனக்குவழிதெரியாதே யென்னசெய்வேனென்று சொல்ல, அதைக்கேட்டு முனிவரனைவரும் நாமே அவர்களைக் குருக்குலக்குரவரிடஞ் சேர்ப்பது தகுதியென்று அம்மக்களைவருடன் குந்திதேவியைப் பாங்கியர்சூழ அழைத்துக்கொண்டுபோய் வீட்டுமர், திரிதராட்டிரன், விதுரராசன் என்னும் அரசர் மூவரும் இருக்கிற இராசசபையில் விடுத்து இவர்கள் பாண்டுமக்களென்றும், பாண்டுராசன் காட்டிற்சென்றதுமுதல் நாளதுவரையும் நடந்த சவிஸ்தாரங்களை எடுத்துச் சொல்லி, இவர்கள் வெகு பராக்கிரமசாலிகள் இவர்களைப் பாதுகாப்பது உமது கடமையென வேண்டிய புத்திமதிகளை யெடுத்துச்சொல்லிப் போயினர்.

பின்பு வீஷ்மர், திரிதராட்டிரன், விதுரனுதியர் குந்திதேவியைஅந்தப்புரத்துக்கனுப்பிவிட்டுமக்களையெடுத்து மார்போடுபுல்லியிறுகத்தழுவி, குந்திதாய்வீடாகிய வசுதேவன், கண்ணன், பலராமன், சூரசேனன்முதலானோருக்கும், மத்திரதேசாதிபதிக்கும், காந்தாரதேசாதிபதிக்கும்திருமுகங்கள் போக்கி அவர்களையெல்லாம் வருவித்து நடந்த சவிஸ்தாரமெடுத்துச்சொல்ல, அவர்களெல்லோரும் இராசசபையில் ஒரேமுகமாய் இம்மக்கள் அந்த நூற்றுவருடனே சமபாகமாக எப்பொருளையும் கைக்கொண்டு அரசாண்டு வரவேண்டும், காலகதியால் யாதேனும் ஒரு குறையுண்டானால் நாங்களே அதற்கு முன்னின்று காரியம் நடத்துவோமென்று சொல்லிவிட்டு, பின்பு அந்தப்புரஞ்சென்று குந்திதேவிக்குத் தேறுதல்சொல்லி உமக்கு வீட்டுமர் முதலானோர் இருக்கையில் ஒருகுறைவு முண்டாகாது! இனிசொல்லவேண்டியதொன்றுமில்லையென்று சொல்லிப்பின்பு சிலநாள் அங்குத்தங்கியிருந்து தத்தந்தேசங்களுக்குச் சென்றனர். அவருள் ஸ்ரீவாசுதேவன் தருமராசனையழைத்துத்தனியே ஒரேகாந்தத்தானத்திலிருத்தி தாம் நல்லம்மான் மைந்தராயினும் தருமராசனுக்கு ஒருநாள் இளையவராதலால் அவரை வணங்கி நீர் அஞ்சவேண்டாம், உமக்கு ஒரு குறையுண்டாயின் எமக்குத்தெரிவியும் யான் பலபத்திரருடனேவந்து அக்குறைமுடித்துப் போவேனென்று சொ

ல்லித் தாம் மதுராபுரிக்குத் தமயன் முதலானோருடன்எழுந்தருளினர். காந்தாரிக்குத் தந்தையாகிய சுவேதராசனும் தன்மக்கள் நூற்றுவருடனே விடைபெற்றுப்போகையில் யாவருக்கும் இளையவனான சகுனி தன் தந்தையுடன் சொல்லாமல் துரியோதனனுக்குநல்லமமானுகையால் அவனுக்கு சாத்துணையாய் இருந்துவிட்டான். சிலநாளின்பின் சூரியகுமாரனாகிய கர்ணன் பரசுராமரிடம் வில்வித்தை கற்றுத் தேர்ப்பாகனாகிய இராதையன் வீட்டில் தற்செயலாய்த் துரியோதனனுக்கெதிர்ப்பட அவனைத் தமையன்முறைகொண்டு இறுகத்தழுவி இன்றுமுதல் வேறுபாடின்றி யிருக்கவேண்டும், இன்றுமுதல் என்னுடன் சமமாகவே போசனாதி சகலகாரியங்களுஞ் செய்துவரவேண்டுமென்று வேண்ட அன்றுமுதல் கர்னன் துரியோதனனுக்குப் பெருந் துணைவனாயமர்ந்தான். சகுனியந்து கூடுவதற்குமுன் பாலும்நீரும்போற் பிரியாதிருந்த நூற்றைவராகிய குருமக்களுக்குச் சகுனிசேர்ந்த பின்பு நடந்த சவிஸ்தாரஞ் சொல்லுகின்றேன்.

சம்பவச்சருக்கம்-முற்றிற்று.

வாரணாவதச்சருக்கம்.

கௌரவர் நூற்றுவரும் பாண்டவர் ஐவரும் ஆகிய நூற்றைவருங் கலந்து ஒருதாய் வயிற்று மக்களைப்போன்றும் கற்றுணர்ந்த அறிஞர் நட்பேபோன்றும் ஆராயுந்தோறும் நூலினயம்போன்றும் ஒருமைபாராட்டிப் பின்னை விளையாட்டயர்ந்து வருகையில், வீமன் விளையாட்டுத் தொழிலின் விரைவால் துரியோதனன் ஒழிந்த நூற்றுவருள் சிலர் விழுவர், சிலர்கண்சுழல்மிட வருந்துவர், சிலர் களைப்பர், சிலர் இளைப்பர், இவ்வாறு படுகையில் வீமன்விழுந்தாரையெடுத்தும், வருந்துவோரை யாதரித்தும்,இளைப்பாரைபாற்றியும் வருவதைக்கண்டு வீட்டுமர் முதலிய பேரரசரும் மந்திரி பிரதானி சேனாதிபதி முதலானோரும் இவன் கருடன்போல்வானென்றும், மலைபோல்வானென்றும் சொல்லிக்கொள்வதைத் துரியோதனன்கேட்டு, ‘பற்றுள்ளமென்னு மிவறன்மை யெற்றுள்ளும் மெண்ணப்படுவதொன்றன்று.' எனத் தேவர் கூறியபடி பொறாமை மேற்கொண்டு மனம் வருந்துவானாயினான். இவ்வாறு நிகழ்கையில் ஒருநாள் துரியோதனன் கர்ணனையும்சகுனியையும் ஒரு சிங்காரவனத்தில் அழைத்துக்கொண்டுபோய் அரசர்களோ ‘புறப்பகை கோடியின் மிக்குறினுமஞ்சார், அகப்பகையொன்றஞ்சிக்காப்பர்,நிறைகயத்-தாழ்நீர்மடுவிற் றவளைகுதிப்பினும், ஆனைநிழல்காண்பதரிது’ என்றுற்போல உட்பகைக் கஞ்சுவதன்றிப் புறப்பகைக்கஞ்சவே யஞ்சார்; நானே அத்தின புரத்தின் பெரியஅரசன், சிலநாள் சென்றால் எனக்குத்தான் பட்டம், என்தம்பிமார்கள் என்சொற்பிழையார்கள், வீமனொழிந்த நால்வரும் சும்மாயிருந்துவிடுவர், வீமனே பேராற்றலுடையான், எதிர்த்துப் பேசுவான், அப்போது பெருஞ்சண்டை விளையும், அதைப்பற்றியவனைத் தண்டிக்க வேண்டிவரும், அப்போது நம்மையெல்லாம் யமலோகத்துக் கனுப்பிவிடுவான் ஆகையால், சாமபேத தானதண்டம்என்னும் நால்வகையானும்

அவனைக்கொலைசெய்யச் சூழ்வதே தக்கசூழ்ச்சியென்றுசொன்னான். சகுனி துரியோதனனை நோக்கி நீயேன் வருந்துகின்றாய், இன்று நாம் ஒன்றுசேர்ந்து விளையாடிக்கொண்டிருந்தால் ஐவரும் வந்துசேர்ந்து விளையாடுவர், நாமங்கு படுத்துக்கொண்டால் ஐவரும் படுத்துறங்குவர். நாம்நள்ளிரவிலெழுந்து கும்பகர்ணனைப்போலக் கொட்டாவிவிட்டுப் படுத்துறங்கும் வீமனையூனங்கொடியிற்பிணித்துக் கைகால்களைக்கட்டிக் கங்கையிலெறிந்துவிட்டால் நீகொண்டதுயரமொழியும், நீ சுகமேயிருக்கலாமென்று சொல்ல, அதைக்கேட்ட கர்ணன் இது சரியான யுக்தியென்றுகூறக்கேட்ட துரியோதனன் வெளியில்வந்து தன்னையொழிந்த தொண்ணூற்றென்பதின்மரையும் வருவித்துக் கெங்கைக்கரையிலிருக்கும் சிங்காரவனத்திற்குப்போயினர். அதையறிந்த பாண்டவரைவரும் கள்ளங்கபடறியாமல் தாமுங்கூடி விளையாடினர். பொழுதுபட்டதே யாவருமொருங்குகூடி இன்றிரவு இங்கேயே தங்கியிருப்போமென்று தீர்மானித்து அரண்மனையினின்றும் போசன முதலியவற்றை வருவித்துத் தானும் கர்ணனும் சகுனியும் மற்றை நூற்றுநால்வரும் அங்கேயே புசித்துப்படுத்துறங்கினர்.

இவ்வாறு யாவரும்படுத்துறங்குகையில் கர்ணன்சகுனிதுரியோதனன் என்னுமூவரும் நித்திரையின்றியிருந்து நள்ளிரவிலெழுந்து வீமன் படுத்திருக்குமிடத்தையடைந்து அவன்சுவாசத்துக்குநேராகச்சென்றால் துன்பமுண்டாமென்பதுதுணிந்து ஒருபக்கமாய்நின்றுஇந்திரசித்து இளையபெருமாளை நாகபாசத்தாற் பிணித்தாற்போலும் தேவர்கள் மந்தரகிரியை வாசுகியாற் பிணித்தாற்போலுங் கட்டிக்கங்கையிலெறிந்துவிட்டனர். அப்படிவீமன்கங்கையிலெறியப்படவே தேகம்நீரில்அழுந்தியமையால் நித்திரைதெளிந்தெழுந்து ஊனங்கொடியாற் பிணிக்கப்பட்டமையால் நீரில்தூக்கத்தினால்புரண்டுருண்டுவந்தோமோவென்றும் ஊனங்கொடிசுற்றிக்கொண்டதோவென்றும் உள்ளத்தேகொண்டு கைகால்களையுதறி இந்திரனுக்குப்பயந்தொளிந்திருந்த மைநாகமலை அக்கடலினின்றும் இருசிகரமும் மேலெழும்ப வெளியேபுறப்பட்டு, நமக்கு ஒருபகையுமில்லையே நாம் கங்கையில்விழுந்திருக்கவேண்டிய காரணமென்னவென்றுசிந்தித்துக்கொண்டே தன்தமயன்முதலியோர்படுத்துறங்குமிடத்தே தானும்வந்துபடுத்துறங்கினான். இவ்வாறிருக்கப்பொழுது விடியவே யாவரும்ஒருங்குகூடி விளையாடவந்தனர். அவருள்வீமனும் விளையாடக்கண்டுஅதிசயமடைந்துநாம்கட்டியகட்டைத்தவிர்ந்துவந்ததினால்நாம் கட்டியபிணிப்பு தக்கதாயிருந்திலது, அதனால் உய்ந்தனனென்று மனத்தே சிந்தித்துக் கிணற்றிலிட்டகல்லைப்போல மூவருமௌனமாயிருந்தனர். இப்படிச்சிலநாள்சென்றபின்துரியோதனனும் சகுனி கர்ணன் இவர்களை வேறிருத்திவைத்துக்கொண்டு முன்னே கங்கையிற்கட்டியெறிந்தோம் அதையும் தவிர்ந்து பிழைத்துக்கொண்டான், இவனை உயிரோடு வைத்திருந்தால் என்னகதி நேருமோவென்று பேசியிருக்க, சகுனியும் இனி நீ கிலேசப்படவேண்டாம், இதோ அவனைக் கொல்லும் உபாயஞ் சொல்லுகின்றேனென்று துரியோதனனை நோக்கி, தம்பி நமது நகரத்தில் உள்ள பிடாரரைக்கூவியழைத்து வீமன்தனித்துறங்கு மிடத்தை யடைந்து

விடநாகங்களாற் கடிப்பிக்க, அக்கடி தன்னை மசகங் கடித்ததுபோலிருக்க அவன் மீளவும் வாயுகுமாரனுகையால் விடமேறும லெழுந்திருந்தான். இதனுலும் வீமன் மரணமடையாததுகண்டு பின்னுஞ் சிலநாளொழிந்து இதென்ன எந்தவிதத்தாலும் சாகாதவனுயிருக்கிறுன், இவன் தெய்வபிண்டமாக வேண்டும், இதனுலேதான் நமது பெரியோரும் இவனைச்சிலாகிக்கின்றனர், இவனை எந்தத்தந்திரத்தாலும் கொல்லமுடியவில்லை, இவனைக்கொல்லத்தக்க உபாயஞ்செய்யவேண்டுமென்ன, சகுனியும் மீளவும் நீளநினைந்து கங்கைத் துறையில்எழுக்களினுலும்இரும்புகளினுலும் செம்மரங்களினுலும் வசிநாட்டச்செய்து பின்புவீமனையடைந்து தம்பிவீமா! நாம்போய்க்கங்கையில்விளையாடலாம்இப்போதுகாலமோ அதிகவெப்பமாயிருக்கின்றது,நீநீர்விளையாட்டிற்சிறந்தவனுயிற்றே, நாம்நீரில்விளையாடலாமென்று அழைத்துக்கொண்டு கங்கைக்கரையிற்சென்று இக்கரையிலிருந்து அக்கரையிற் குதிக்கின்றையா பார்ப்போமென, சற்றும் நெஞ்சிற் கரவடமில்லாத வீமன் கங்கையின் அக்கரையைநோக்குகையில் தெய்வகதியால்வண்டுகள் உட்கார்ந்திருக்கக்கண்டு இதென்ன நீரோட்டத்தில் வண்டுகள் உட்கார்ந்திருக்கின்றனவே யென்று உய்த்து நோக்கும்போது மூன்றங்குலத்தின்கீழ் வசிகள்நாட்டியிருக்கப்பார்த்து தன் சங்கேதப்படி வசிநாட்டியிராத இடம்நோக்கிக்குதித்து அக்கரை யேறிமீண்டான். துரியோதனனும் வீமன்வசிக்குந்தப்பினுனேயென்றுமெச்சிவீமனேடு கலந்து பேசிக்கொண்டே அரண்மனைவந்துசேர்ந்தான்.

பின்பு துரியோதனனும் சகுனி கர்ணனென்னுமிருவரையும் அந்தரங்கமாயழைத்து எவ்விதமாக முயன்றுலும் தப்புகின்றுனே! என்செய்வதென்று சொல்ல நீஎன்ன வீமனைக்கொல்வதுமொருபெரிதா? இதோ கொல்விக்கின்றேன் பாரென்றுசொல்லி, வேலைக்காரரையழைத்து இன்று விருந்து சமைக்கவேண்டுமென்றுசொல்லி, வீமனையும்அழைத்துக்கொண்டு துரியோதனன் கர்ணன் சகுனி யென்னு மூவருஞ்சென்றனர். சகுனி மூவருக்கு மாத்திரம் வசனுபிகலவாமலிருக்கும்படி கட்டளையிட்டு வீமனுக்குவசனுபி கலந்துள்ள உணவை அளிக்கக் கட்டளையிட்டான். வேலைக்காரரும் அவ்வாறேசெய்தனர். வீமன் நன்றுகப்புசித்துத் தாகமேலிட்டு உண்ணீர்வேண்டுமென்றுன், அதையும் வசனுபிகலந்து கொடுக்கக்கட்டளையிட்டான். வீமனே அறிவுகலங்கி மயக்கமேலிட்டுமரணமூர்ச்சையடைந்திருந்தான். இதைக்கண்ட துரியோதனன் சகுனிகர்ணனென்னுமூவரும் நம்பெரியோர்அறிந்தால் நமக்கு ஆனிவருமென்றெண்ணி வீமனை கட்டித்தூக்கிக்கொண்டு கங்கையிலெறிந்து விட்டனர். ஆயினும் கங்கையிலேவீமனையெறிந்தவிடம் பிலமாயிருந்தமையால் அப்பிலத்துவாரத்தின் வழியேசென்று அதலம்,விதலம்,சுதலம்,தராதலம் இரசாதலம், மகாதல மென்னுங்கீழாறுலகங்களையுங்கடந்துஅப்பாலுலகமாகிய பாதலத்திற்கொண்டுசேர்த்தது. அங்குவிழுந்துகிடக்கிற வீமனைமகாநாகங்களெல்லாம் ஏது நரமனிதன் இவ்வளவுதூரம்வந்துவிட்டானென்று காளி, காளாத்திரி,யமன்,யமதூதைஎன்னும்நான்குபற்களாலுங்கடித்தன. அவைக்கடிக்கவே வீமனுக்கு வசனுபியாலுண்டான மயக்கந்தீர்ந்து விடாய்கொண்டு

தண்ணீர் தண்ணீரென்று கைச்சமிக்கை செய்தான். அம்மகாநாகங்களெல்லாம் வாசுகியிடஞ்சென்று நடந்தசவிஸ்தாரத்தைச்சொல்ல வாசுகியும் உம்முடைய பற்களால் அவனைக்கடிக்கவும் சாகாதிருந்தமையால் அவன் வாயு அமிசமாயிருக்கவேண்டும். ஆயினும் இதோ இருக்கும் விஷாமிர்தகலசங்களைக்கொண்டு கொடுங்கோள். அவற்றையெல்லாம் புசித்தும் வலியனுயிருப்பானுயின் உடனே எனக்குத்தெரிவிக்கவேண்டுமென்றுன். அவ்வாறே அம்மகாநாகங்கள் அவற்றைக்கொண்டு கொடுக்கவும் ஒன்றுமொழியாமற் குடித்துவிட்டுத் தாகந்தணிந்து முன்னிலும் அதிக பலமுடையவனுய் விளங்கினுன். அதைக்கண்ட அம்மகாநாகங்கள் வாசுகிக்குச்சென்றறிவித்தனர். வாசுகியெழுந்துவந்து வீமனை நோக்கி நீயார்? இவ்விடத்தில் வரக் காரணமென்ன? என்றுகேட்க, வீமன் வாசுகியைவணங்கிச் சொல்லுகின்றுன். நான் சந்திரகுலோத்துங்கனுன சந்தனுமகாராசன் பேரன் பாண்டுமைந்தன். என்பெரிய பிதாவாகிய திருதராட்டிரபூபதியினுடைய மூத்தகுமாரனுகிய துரியோதனன் சிங்காரவனத்தில் விருந்து செய்தான், இங்குவந்திருக்கின்றேன், இதுதான் தெரியும் என்று சொல்லவே, வாசுகி தன்ஞானதிருட்டியால் அவனது பூர்வோத்தரமெல்லாமறிந்து தன் அரண்மனைக்கழைத்துக்கொண்டுபோய் அவனுக்கு விருந்துபசரித்து சந்தனதாம்பூலமளித்துத் தன்னெப்பாக வைத்துக்கொண்டிருந்தான். இங்கே வீமனைக் கங்கையிலெறிந்து திரும்பிய துரியோதனன் முதலிய மூவரும் மனேசஞ்சலம் நீங்கிக் கைகால்களைச் சுத்திசெய்துகொண்டு சந்தனதாம்பூலமணிந்து வேடிக்கையாய் வெளியே புறப்பட்டு அரண்மனையை யடைந்து வீஷ்மரையும் திருதராட்டிரனையும் வணங்கி நாங்கள் பெருநாள்கொண்டாட விரும்பியிருக்கின்றேம், எங்களுக்கு விடைகொடுக்கவேண்டுமென்று கட்டளைபெற்றுத் தன்தம்பிமாரோடும்சிநேகரோடும்பெருநாள்கொண்டாட முயன்றுன். இதையறிந்த நகரமாந்தரும் தத்தம் வீடுகளையும் வீதிகளையும் ஒப்பனைசெய்தனர். இதுகிடக்க;

வீமனெழிந்த தருமன்முதலியநால்வரும் வீமனைக்காணுதவராய்மனம் வருந்திஅந்நகரமுழுதுந் தேடியுங்காணுது தன்பக்கண்ணீர்விட்டிறைத்துப் புலம்பிச்சென்று தாயாகிய குந்திதேவிக்கறிவித்தனர். அதைக்கேட்டகுந்திதேவி மரணமூர்ச்சையடைந்து நான் உங்களை யறியாமல் வீமனுக்கு வேலையிடுவனு? உங்கள் பாட்டனர் வீமனுக்குவேலையிட்டாரோ என்னவோகேட்டறிவோமென்று வீஷ்மரிடஞ்சென்று வணங்கி உம்முடைய பேரனுகியவீமனைக்காணேம், எங்கேனும்வேலையாக அனுப்பினீரோவென்றுகேட்க;சொல்லாமலேயறிபவன் விவேகி.' என்றபடியால் துரியோதனன் நமது வீமனது பராக்கிரமத்தைநோக்கிப்பொறுமைமேற்கொண்டுஏதோகிருத்திருமஞ்செய்திருக்கவேண்டும்என்பதையுணர்ந்து துரியோதனன்பெருநாள்கொண்டாடுகின்றமையால்அங்கேயொருவேளையிருந்தாலும்இருப்பானென்றுசொல்லித் தூதுவரைக்கொண்டுதேடுவிக்க, அவர்களும் வீமராசனைக் காணேமென்று தெரிவித்தனர். அதைக்கேட்டுக்குந்திதேவியும் வருந்திநிற்பதுகண்டு 'பதறுதகாரியம் சிதறுது முடியும். 'என்பதனல் மனங்கலங்கவேண்டாம். அவன்

உயிர்த்திருப்பதும்இறந்திருப்பதும்அறிந்துசொல்லுகின்றேனென்று தான் சோதிடநூலில் மிகத்தேர்ச்சியுடையாராதலால் வீமன் உயிர்பிழைத்திருக்கின்றான், இங்கிரண்டொருதினத்தில் வந்துசேருவானென்று சொல்லியனுப்பினர்.

அங்கே வீமன்எட்டுநாள்வரையும் பாதலவுலகத்தில் வாசுகியால்விருந்துபசரிக்கப்பட்டு விருந்துண்டிருக்கையில் தன் சகோதரரைக்காண ஆசைகொண்டு வாசுகியைக்கேட்க, வாசுகியும் வீமனை நோக்கி வீமராஜனே! நீ இங்கேவந்தமையால் மிக்க நலம்பெற்றதன்றித் தாகங்கேட்டபோது அறுபத்துநான்குவிஷாமிர்தகலசமுமனுப்பினேன், அவற்றையெல்லாம் அருந்திச் சீரணஞ்செய்துகொண்டாய், இனிஉன்னைப்போலும் பலவான் திரிவிதவுலகத்திலுமில்லை, ஆகையால் என்மகளை விவாகஞ்செய்துகொண்டு உனது நகரத்துக்குப்போய்வாவென்றுவேண்ட, வீமனும்வாசுகியைவணங்கிநின்று உமதுகட்டளையைமறுக்கமாட்டேன், ஆயினும் ஓர் தடையுண்டு, அதாவது எனக்கு மூத்தவராகியதருமராசனுக்கு இன்னும் விவாகமென்பதில்லை. இதனாலேதான் தடையுண்டாயிருக்கின்றது. ஆதலால் என்விஷயத்திற் கோபியாமல் என்சகோதரர்களைக்காணக்கருணைசெய்யவேண்டுமென்று வேண்ட, வாசுகியும் வீமனுக்குவேண்டிய நவமணிபதித்த முடிகள், ஆடையாபரணங்கள், வாகுவலயங்கள் முதலியவற்றையெல்லா முதவித் தன்வேவுகாரர்களாகிய மகாநாகங்களால் இம்மகாபுருஷனையழைத்துக்கொண்டு பழையபடியே பிலத்துவாரத்துவழியாய்அத்தினபுரத்திற்கருகே விட்டுவாருங்கோளென்று விடைகொடுத்தனுப்ப விடைபெற்றுக்கொண்டுபோய் அத்தினபுரத்துக் கருகே வருகையில் அந்நகரமாந்தர் எல்லாரும் வீமனைக்கண்டு மகிழ்ச்சிகொண்டு இதோ வீமசேனன் வந்துவிட்டான்! இதோ வீமசேனன் வந்துவிட்டான்! என்று ஆரவாரித்தனர். அவ்வோசையோ கடலினும் மும்மடி மிகச்சிறந்திருந்தது. அவ்வோசையைக்கேட்ட தருமனாதியர் மிக்க ஆறுமையோடும் மார்பிறுகக் கட்டிக்கொண்டு இதுகாறும் எங்கே சென்றிருந்தனையென்று வினவி அரண்மனைக்குக் கொண்டுசென்றனர். வீமனோ விஷ்மர் திருதராட்டிர மகாராசன் விதுரராசன் முதலிய பெரியோரை வணங்கிக் காந்தாரி குந்திமுதலிய தாயரையும் பணிந்துநின்றான். அவர்களெல்லாரும் தனித்தனியே யாசீர்வதிக்க அவர்கள் ஆசீர்வாதம் பெற்றுத் திரும்பினான்.

இவருள் விஷ்மர் வீமனைமந்தணமாயழைத்து இவ்வெட்டுநாள்வரையும் எங்குற்றாய்? உள்ளவாறுசொல்லென்றுவினவ, வீமனும்பிதாமகனுக்குச்சமானமான தன்பிதாமகனைவணங்கி நின்றுவாய்பொத்திக் கைகட்டிக்கொண்டு என்தமையனாகிய சுயோதனன்சிங்காரவனத்தில் விருந்துசெய்வதாகஎன்னையும்அழைத்துக்கொண்டுபோகநானும் அவனுடன்சென்றுவிருந்துண்டேன்; விருந்துண்டபின்னர் பாதலவுலகஞ்சென்று சேர்ந்து நாகராசனாகிய வாசுகியின் கருணையால் இங்குவரப்பெற்றேன். இதுதான் நடந்தசெய்தி என்று சொல்லிவிட்டுத் தன்னைக் கேட்டவர்கட்கெல்லாம் இதையே யெடுத்துப் பேசினான். விஷ்மரோ அதிவிவேக சிரோமணியாகையால் இங்கே ஏதோ வேறுபாடு நடந்திருக்கின்றதென்று தன்சிந்தையினேர்ந்து முனையிற்றானே

இவ்வளவுகேட்டுக்குக் காரணமாயிருக்கின்றமையால் வரவரவிருத்தியைக் கூறுவதிலென்னுகும். இனிநாம் சும்மாவிருப்பது தகுதியன்று. அரசர்க்குரிய வில்வித்தை முதலியவற்றைக் கற்பிக்கவேண்டும். நாமே கற்பிக்கப்புகுந்தால் சிறுவரெல்லாம் சிறந்த புத்திசாலிகளாயுமிருந்திலர். அவரவர் அறிவு எவ்வளவோ அவ்வளவுக்கே கல்விசிறக்கும், பின்பு நமக்குப் பழியும் வரும். நம் சிறுவருள் ஒருவருக்கு நன்ருகக் கற்பித்தனனென்றும் ஒருவருக்கு நன்ருகக் கற்பிக்கவில்லையென்றுஞ் சொல்ல நேரும். அப்படிக்கஞ்சாமல் நாமே கற்பித்தால் நமது மூதாதைதானென்றே அலட்சியமாக நினைப்பர், பயபக்தியாகக் கல்வியும் பயின்றிலர், ஆகையால் வேறொரு வில்லாசிரியனைக் கொண்டேதான் கல்விபயிற்றவேண்டுமென்று சிந்தித்து நமது சிறுவருக்கு நன்ருக வில்வத்தை கற்பிக்கவல்ல வில்லாசிரியர் எங்குளர்?என்று தன் சபையினருள் முதியாரை வினவ, அதற்கு அச்சபையினருள் ஒருமுதியார் சொல்லத்தொடங்கினர்.

முன்னுளில் நான்முகக்கடவுள் வழிவந்த சரத்துவந்த முனிவர் ஒருவனத்திலடைந்து அருந்தவஞ்செய்யலாயினர். அத்தவத்தையழிக்கவெண்ணங்கொண்டு வச்சிரபாணி தன் நாடகக்கணிகையருள் அரம்பையை நாடி நீ சென்று சரத்துவந்தமுனிவர் தவத்தையழித்துவருதியெனத்தூண்ட, அரம்பையும் அதற்கியைந்து தன் மனையையடைந்து நறுநீராடிநல்லணபுனைந்து கலவைமுதலிய வணிந்து மலர்மாலைசூடி வெளியில்வரவே, அவ்வரம்பையைக் கண்டமாத்திரத்தில் ஐவரை யகத்திலடக்கிய அருந்தவர் எவ்வாறு அவள் பரிசநாடிப் பின்ருெடர்வரோ அவ்வாறே மயில்களும், ஓசையினுல் குயில்களும், நடையால் அன்னங்களும் பின்ருெடரச் சரத்துவந்த முனிவர் தவச்சாலையையடைந்து அவர் கண்ணுக்குதன்மேற் பாயும்படியான இடத்தைத் தேடிநின்ருள். சரத்துவந்தரோ கண்விழித்து நோக்கி இவ்வளவு உருவுநலனுங்கூடிய பெண்பாவையை நாம்எங்கும் கண்டதில்லையேயென்று 'சிற்றின்பம்வேண்டியறனல்லசெய்யாரே-மற்றின்பம் வேண்டுபவர்.' எனப் பெரியோர் பணித்திருந்தும் தன்சித்தத்தைக் காமத்தின் வழியேசெலுத்தி விரகமெய்திநிற்க அனந்தரம் அவருக்கிரேதசு வெளிப்பட்டு இரண்டுதுளிகளாக அவரிருந்த தருப்பாசனத்தில் விழுந்தது. இதையுணர்ந்த அரம்பை இனி நின்ருேமேல் சாபம் நேருமென்றெண்ணித் தன்னுருமாறி விண்ணுலகமேயடைந்தாள். சரத்துவந்தரோ இரேதசு வெளிப்பட்டதற்கு மனம்சிறிது வருந்தி இனி மிஞ்சிப்போன காரியத்திற்காகச் சிந்தித்தாவதென்ன! என்று தேறித் தன் கையிலிருந்த வில்லையும், திவ்வியாஸ்திரங்களடங்கிய அம்புக்கூட்டையும் அத்தருப்பாசனத்திலேயே வைத்துவிட்டு வேறொருவனஞ் சேர்ந்து தவஞ்செய்வாராயினர், இதுகிடக்க;

இங்கே தருப்பாசயனத்தில் விழுந்த இரண்டு துளிகளும் முனிவர் வீரியமாகையால் பழுதாகாமல் ஒன்று ஆண்குழந்தையும் மற்ருென்று பெண் குழந்தையுமாய்த்தோன்றி அழுதுக்கொண்டிருந்தன. இவ்வாறிருக்கையில் உமது பிதாவாகிய சந்தனுமகாராசன் வேட்டையாடத்துணிந்து வேட்டையாடிவருபவர் தெய்வகதியாய் அவ்விருகுழந்தைகளும் அழுதுகொண்டிருக்

கும் வனத்தை அடைந்தனர். அவ்விருகுழந்தைகளும் மிகச்சிறந்த அழகு டையராகத் தோன்றுவதுகண்டு வியந்து இம்மக்களைநோக்குமிடத்து அழகே ஆணும்பெண்ணுமாக வடிவங்கொண்டதென் றெண்ணவேண்டுவதல்லது வேறன்றென்று துணிந்து பின் இம்மக்களை யீன்ற தாய்தந்தையர் எங்கேனும் அயலிடத்தேயிருக்கவேண்டும் என்றே சிந்தித்துத் தன் தூதரைத் தேடிவரக்கட்டளையிட்டனர். அவர்களும் அவ்வாறே தேடிப்பார்த்து வன முழுவதும் முற்றுந்துறந்த முனிவரேயல்லது வேறில்லாமையையெடுத்துக் கூறினர். அரசனோ மந்திரிமார்களை நோக்கி அரசனெனப்படுவோன் உலகினுள்ளார்க்கு யாதொரு குறைவு நேராது பாதுகாக்கவேண்டுமென்பது அறநூல் விதியல்லவா? தனக்குப் பகைவராயிருப்பினும் காட்டினின்றுபரதவித்தால் காப்பது அரசனது கடமையேயாகும். அவ்வாறிருக்க இவர்களோ பான்மணமருதபச்சைக் குழந்தைகள்; இவர்கள் அழுகுரலைக் கேட்டும் நமதுநகரத்துக்குச்செல்வது நமக்குப்புகழ்ச்சியானகாரியமன்று. நாம் எடுத்துக்கொண்டுபோய் வளர்ப்போமாயின் இவ்விளஞ் சிறுகுழந்தைக்கு உரியார் வந்துகேட்கிற் கொடுத்துவிடுவோமென்று வில்லையும் அம்பையும் உடன் எடுப்பித்துக்கொண்டு அம்மக்களுடன் அத்தினபுரம் வந்துசேர்ந்து அம்மக்களைச் செம்மையாக வளர்த்துக்கொண்டு வந்தனர்.

இப்படி வளர்த்துவருகையில் ஒருநாள் சரத்துவந்தரும் நமது வீரியம் எவ்வாறாயிற்றோ பார்த்துவருவோமென்றெண்ணித் தான் தவஞ்செய்திருந்த இடத்தைநோக்கி வருகையில் வில்லும் அம்புக்கூடும் இல்லாமையைக் கண்டு நமது வீரியம் உருக்கொண்டு மக்களாகத்தோன்றியிருக்கவேண்டும். அம்மக்களைக் கைப்பற்றிச் சென்றோரே அவ்வில்லையும் அம்புக்கூட்டையுங் கொண்டுபோயிருக்கவேண்டுமென்று மதித்துப் பின்பு ஞானதிருஷ்டியால் உமதுதந்தையாகிய சந்தனுமகாராசன் எடுத்துச்சென்றதாயுணர்ந்து இந்நகரமேவந்துசேர்ந்து அரசர்பெருமானுக்குத் தமதுவருகையைத்தெரிவிக்க அரசர்பெருமானும் எதிர்சென்று வணங்கி யழைத்துக்கொண்டு வந்து அவரை ஒரழகிய ஆசனத்திலெழுந்தருளச்செய்து சோடசோபசாரமுஞ்செய்து தேவரீர் எனது சபைக்கெழுந்தருள யான் என்னதவஞ்செய்தேனோவென்று சாஷ்டாங்க தெண்டனிட்டெழுந்து நிற்கையில், சரத்துவந்தரும் அரசனுக்குப் பலஆசிகள் வழங்கி நீ காட்டிற்புகுந்து வேட்டையாடி முனிவர்கள் தவஞ்செய்யும் தபோவனத்தில் வந்தபொழுது என் வீரியத்தாலுண்டாகிய ஒரு புத்திரனையும் ஒரு புத்திரியையுங்கண்டு எடுத்துவந்தனை, அக்குழந்தைகளைக்காண நான் பேரவாக்கொண்டிருக்கின்றேன் எனத் தமது கருத்தை வெளியிட்டனர். அதை யுணர்ந்த அரசனும் தன் மந்திரிகளுக்குத் தன்குறிப்புணர்த்தவே அவர்கள் அம்மக்களிருவரையும் சரத்துவந்த முனிவரிடத்தே யொப்புவித்துத் தமது உடைமையைத்தம்மிடத்திலேயே யொப்பித்துவிட்டேனென்று வணங்கினின்றான். சரத்துவந்தரும் அம்மன்னனிடத்தினின்றும் அவ்விருமக்களையும் பெற்றுக்கொண்டு பெண்மகவைக் கிருபியென்றும் ஆண்மகவைக் கிருபனென்றும் பெயரிட்டு வளர்த்துவந்து பின்பு பெண்ணுக்கு மங்கைப்பருவம் நேர்ந்தவுடனே பரத்துவாசமகாமுனிவர்

புத்திரராகிய துரோணாசாரியாருக்கு அம்மாதை மணஞ்செய்வித்துத் தன்மகனுக்கு நான்குவேதம், ஆறுசாத்திரம், அறுபத்துநான்கு கலைகள் முதலியவற்றையும் ஐயந்திரிபறவுணர்த்தி வில்வித்தையும்அதன்மருமத்தையும் பூரணமாகப்போதித்தனர், அவரோ வில்லாளியெனச்சிறந்து சகலராசராஜரும் துதிக்க நமது இராஜசபையிலேயேஎழுந்தருளியிருக்கின்றனர். அவரைக்கொண்டு கற்பித்தல் உசிதமென்றுணர்த்தினர். வீஷ்மரும் சபையாரும் பெரியோராயிருப்பவருடைய சொல்லைத் தலைமேற்கொண்டுகிருபாசாரியரையழைத்து அரசுக்குரியோராகிய துரியோதனாதியர் நூற்றுவருக்கும் பாண்டவரைவருக்கும் வில்வித்தையைக்கற்பித்து இக்குலத்தாருக்கு வில்லாசிரியராயிருக்கவேண்டும்; உமது கருத்தென்னவென்றுவேண்ட, கிருபாசாரியும் அக்கருத்திற்கிசைந்து நல்ல சுபமுகூர்த்தத்தில் அந்நூற்றைவரையும் வருவித்து வில்வித்தை கற்பித்துவந்தார். இவ்வாறு கற்பித்துவருகையில் வீஷ்மர் இவர்களுக்கு இன்னுஞ்சிறந்தாரைக்கொண்டே வில்வித்தை கற்பிக்கவேண்டுமென வெண்ணியிருந்தனர். இதுகிடக்க,

பரத்துவாசமுனிவரென்பவர் ஒருவனத்திற்சென்று துரோணகும்பத்தில் மந்திராக்ஷதைகளாற் பூசித்துத் தவஞ்செய்துவந்தனர். பாகசாதனனாகிய இந்திரனே அவர்செய்யுந் தவத்தையழிக்கச் சிந்தைகொண்டு மேநகையை யழைத்து நீ பூவுலகிற்சென்று பரத்துவாசர்செய்யும் தவத்தினையழித்து வருதியெனக் கட்டளையிடவே, அவளும் பொன் மண் பாதலமென்னும் மூவுலகத்திற்கு மதிபதியாயிருக்கிற தேவரீர் ஒரு கட்டளையிட்டால் யான் மறுக்கத்தகுமா? ஆகையால் நானேசென்று அவர்தவத்தை யழித்துவருகிறேனென்று விடைபெற்றுத் தன்மனையிற்சென்றுநீராடிஆடையணிந்துநறுமலர்மாலைசூடி நறுங்கலவைச் சேறுபூசினந்து தவத்தின்மேம்பட்டாருந்தன்னைக்கண்டு காமலாகிரிமேற்கொள்ளப் பூவுலகிற் பரத்துவாசர் தவஞ்செய்யும் தபோவனத்திற் சென்று பரத்துவாசர்செய்யுந் தவத்தினது உறுதியை நோக்கி மிகப்பயந்து நமது பரிமளவாடை அவர்மேற்பட நாம் காற்றுவீசும் வழியே நிற்போம் நடப்பது நடக்கட்டுமென்று ஒரு சந்தனமரத்தினிழவில் தங்கியிருந்தனள். மேநகை யணிந்திருந்த பரிமளவாடை தன்மேற்படவே பரத்துவாசமுனிவர் சித்தங்கலங்கிச்சித்தசனுக்குள்ளாகி இப்படிப்பட்ட பரிமளவாடை யாதென்று சிந்தையில் நினைந்திருக்கும்போது மேநகை தோன்றக்கண்டு அவள்மேற் காதல்கொள்ளவே அவருக்கு வீரியம்வெளிப்பட்டு எதிரிலிருக்கும் துரோண கும்பத்தில் வீழ்ந்தது. பரத்துவாசரும்வீரியம் வெளிப்பட்டதற்கு மிகவும் மனம்வருந்தியிருக்கையில் மேநகை நமது எண்ணம் பலித்தது, இனிநாமிருந்தால் சாபநேரிடுமென்றஞ்சி இந்திரனுலகஞ்சென்றடைந்தனள். துரோணகும்பத்தில் வீழ்ந்த வீரியம் பழுதாகாமல் ஒரு முகூர்த்தநேரத்திற்குள்ளாகக் கருவுருவாகித் துரோணகும்பத்தினை விரித்துக்கொண்டு ஒருபுத்திரனுதயமாயினன். அப்புத்திரனுக்குத் துரோணனென்று பெயரிட்டு ஐந்துவயதானவுடன் உபநயனஞ்செய்து வேதாகமபுராண இதிகாசங்களையுங் கற்பித்து வில்வித்தையும் போதித்தார். பின்னும் வில்வித்தைபோதாமல் பரசுராமரைக்கொண்டும் சாங்கோபாங்கமாகக் கற்

பித்தும் போதாமல் பிரமன் மால் உருத்திரனென்னும் மூர்த்திகள்மூவரினு மிவனைச்சிறந்தவனாகக்கருதிஅக்கினிகோத்திர மூனிவரிடத்தில்தன்புத்திரனை அழைத்துக்கொண்டு போய்விட்டனர். அக்கினிகோத்திர முனிவரும் துரோணாசாரியாருடைய புத்திநுட்பத்தையறிந்து தான்கற்றிருந்ததேவாஸ்திரப்பிரயோக மந்திரங்களையுங்கற்பித்தார். துரோணாசாரியரும் வில்வித்தையிற் சிறந்தவராதலால் பாஞ்சாலராசகுமாரனாகிய துருபதன் அவ்வக்கினிகோத்திரமுனிவரிடத்தில் வில்வித்தையைக்கற்றுக்கொள்பவன் இவரிடத்திலும் சாங்கோபாங்கமாகக் கற்றுவருவானாயினன். அக்காலத்தில்துருபதன் துரோணாசாரியரை வணங்கி என் தந்தை பட்டணம் வந்துசேரக் கட்டளையிட்டமையாற் போகத்துணிந்தேன், எனக்கு அரசுகைவருமாயின் என்னரசிற் பாதி தேவரீருக்கே பங்கிட்டுக்கொடுப்பேன், இதனினுஞ்சிறந்ததோருறுதியில்லையென்று சொல்லி முடித்து உத்தரவுபெற்றுக்கொண்டு தன்நகரையே நோக்கிச்சென்றான். அவன் தந்தையாகிய சோமகன் தன்செங்கோலைத் துருபதன் கையிற்கொடுத்து மணிமுடிசூட்டித் தான் தவஞ்செய்தற்குக் காட்டிற்சென்றான். துருபதனே ஏகசக்கரேசனைப்போல அரசுசெலுத்தி வந்தான். துரோணாசாரியும் சாலகலாபாரங்கதனாய் பரத்துவாசராகிய தந்தையைவணங்க, அவரும் நீதவஞ்செய்வதற்கு இதுதருணமல்ல, நீகிருகாச்சிரமமடைந்து கிரகாச்சிரமநிலை வழுவாமலிருந்து பின்அவ்வொழுக்கங்கடந்து தவஞ்செய்வதே நலமென்று அத்துரோணருக்குணர்த்திக் கிருபாசாரியன் தங்கையாகிய கிருபியை மணஞ்செய்வித்தனர்.

துரோணாசாரியார் கிருபியென்னு மாதுடன் இல்லற நடத்தி வருகையில் அவளது நற்குணநற்செய்கையும் பேரழகும் கற்புடைமையும் நாரதமுனிவர் கண்டு திருக்கயிலாயமடைந்து நந்திபெருமானது விடைபெற்று நவமணிபதித்த மண்டபத்தின் நடுவில் கோடிசூரியப்பிரகாசமாய் விளங்கும் ஆசனத்திலெழுந்தருளியிருக்கும் பரமசிவனை வணங்கி நிற்க அருட்கடலாகிய பரமசிவன் நாரதரையிருக்கக் கட்டளையிட்டு நீர்திரிலோக சஞ்சாரியாகையால் ஏதேனும் அதிசயமிருந்தால் சொல்லுமென்று வினவ அதைக்கேட்டு நாரதரும் பாரத்துவாசமுனிவன் புத்திரனாகிய துரோணாசாரிவாழ்க்கைத்துணைவியாகிய கிருபியென்பவள் திருமகளினுஞ் சிறந்த பேரழகும் அருந்ததியினுஞ்சிறந்த கற்புடையவளாயுமிருக்கின்றனள், அவள்கற்புடைமைக்கு ஒப்பாக ஒருவரையு மெடுத்தோதுவதரிதென்றுதெரிவித்து விடைபெற்றுப்போயினர்.

அக்கிருபியினது கற்புடைமையையறிய எண்ணங்கொண்டுதாம்கயிலைவரையை யகன்று துரோணாசாரியிருக்கும்வனத்தையடைந்து ஓர் துறவிபோல்உருவங்கொண்டுசென்றார் துரோணரும்வந்ததுறவியைக்கண்டு இவர் எழுந்தருள நான்முன்னைப்பிறவியில் யாதுமுதுதவஞ்செய்தேனோவென்று சொல்லிக்கொண்டே அவ்வருந்தவரைக்கிட்டித் தேவரீர் ஈண்டெழுந்தருளுவதற்கென்னகாரணமென வினவினர். அதற்குத்துறவியாக வடிவங்கொண்டெழுந்தருளிய பண்ணவர்பெருமான் யான்பசிப்பிணியுற்றுப் பரதவிக்கின்

றேன் எனக்கு அன்னம் வேண்டுமென்றனர். அதற்குத் துரோணரும் ஐம்பொறியடக்கிய அருந்தவராலும் அடக்கக்கூடாதது பசிநோய். அப்பசிநோயை நீக்குவதே! இப்பெரியோ ராற்றலினும்மிகச்சிறந்தது; இதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் "ஆற்றுவாராற்றல் பசியாற்றலப்பசியை-மாற்றுவா ராற்றலின் பின்." என்றே யருளிச்செய்திருக்கின்றனர். நம்மாற்கூடியவரையிலும் அன்னமிடுவதே தகுதியென்று இயைந்து அன்னமறியாத முடியையும் அன்னமறியாத பாதத்தையும் அன்னமிடங்கொண்டபாதத்தையுமுடைய பெருந்தகையை நோக்கி அன்னமளிக்கின்றேன் புசித்துப்போம் என்று சொல்லித் தன் மனைவியையழைத்து நமது ஆச்சிரமத்தில் அருந்தவர் ஒருவர் பசிப்பிணியால் வருந்துகின்றனர். அவருக்கு அன்னம் படை; யான் நீராடிவருகின்றேனென்று சொல்லிவிட்டுப்போயினர். கிருபியும் துறவியுருக்கொண்ட பரமசிவனை யடைந்து நீர் நெடுநேரம் பசிப்பிணியால் வருந்துகின்றீர், எளியேன்மேற் கருணைகூர்ந்துள்ள வாருமென்று வேண்ட, எப்பொருட்கு மிறைவனாகியபரமசிவனும் அத்துரோணாசாரிபத்தினியாருடன் உள்ளறையிற்சென்று அங்கே யிட்டிருந்த பீடத்தின்மேல் வீற்றிருந்தனர். கிருபியும் நாயகன் கட்டளையிட்டிருந்தபடி ஒருபொன்வள்ளத்தில் அறுசுவையோடுகூடிய உணவையேந்திவந்து ஐயரேஉண்ணுமென்றுபசரிக்க, எனக்கன்னம் படைப்பதாயின் நீ நிருவாணியாகவேயிருந்து உண்பிக்கவேண்டும்; அவ்வாறுசெய்யாவிடின்நான் அன்னம்புசியேனென்று மறுக்க, கிருபியும் இதென்னவிந்தை! நாம் நிருவாணியாயிருந்து அன்னம் படைப்போமாயின் கற்புக்கழிவுவருமே! அல்லது அவ்வாறு செய்யாது நின்றேமெனிற் கணவன்சொல்லைக்கடந்த பழியும்வருமே! இதற்கென்ன செய்வதென்றுஒருவாறு துணிந்து "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை.' என்றமையால் இதில் கணவன் சொல்லைக் கடவாதிருப்பதே பரமபாதிவிரத்யமென்று தன்கூந்தலைவிரித்து உடம்புமுழுதும் போர்த்துக்கொண்டு உடுக்குமாடையின்றிவந்தாள். துறவிகண்டு கற்புடைமைக்குமகிழ்ந்து அவளது அழகியவடிவத்தைநோக்கினர். நோக்கவே வீரியங்கலிதமாகிக் கிருபிகைப்பிடித்திருந்த அன்னத்தட்டில் விழுந்தது, துறவியும் தன்னுருக்கரந்தனன். அவளும் அவ்வன்னத்தட்டைப் பிடித்தவண்ணமே நாயகன் வருமளவும்நின்றாள். நாயகனாகிய துரோணர் வந்தவுடனே நடந்தசெய்தி முழுதும் விரிவாக எடுத்துக்கூறினள். துரோணரும் துறவியாக வந்தவருக்கு இந்தஎண்ணமேது? ஒருபோதுசீதைமேற்காதல்வைத்து இராவணன் துறவியுருவங்கொண்டதுபோல யாரேனும் நமது மனையாட்டிமீதுகாதல்வைத்து வந்தனரோவென்று சந்தேகித்து தன்ஞானதிருஷ்டியால் தானுவே கற்புடைமையைச் சோதித்தறிய வந்தனனென்பதுணர்ந்து மனைவியை நோக்கி இவ்வீரியம் பழுதாவது தகுதியன்று, நீயே யிவ்வன்னம்புசியென்று கட்டளையிட்டனர். கிருபி தான் அவ்வன்னத்தைப்புசியாமல் தன்கணவன் வாகனமாகிய பெட்டைக்குதிரைக்கு வைத்தனள். அப்பெண்குதிரை யவ்வன்னத்தையருந்தி ஆயிரம் இளஞ்சூரியர் உதயமானாற்போலும் ஒருமைந்தனை ஒருமுகூர்த்தநேரத்திற்குள் ஈன்றது, துரோணருங் கிருபியும் அம்மைந்தனுக்கு என்னபெயரிட்டு வளர்க்கலாமென்றெண்ணிவருந்தியகாலையில் இது

சிவசம்பந்தமான புத்திரனாகையால் இவனை அச்சுவத்தாமனென்றழையு மென்று ஆகாயவாணியுங்கூறவே அம்மைந்தனுக்கு அச்சுவத்தாமனென்று நாமகரணஞ்செய்தனர். இதுநிற்க;

துரோணரும் கிருபியும் அச்சுவத்தாமன் என்னும் புத்திரனை வளர்க்கக்கருதி புல்லரிசிப் பால்முதலியவற்றால் வளர்த்துவருவதன்றிப் பின்னும் தருமத்துக்குப் பால்வாங்கியும்வளர்த்துவருவாராயினர். அவ்வாறுவளர்த்துவந்தும் குழந்தை இளைத்துப்போவதுகண்டு கிருபி துரோணரைநோக்கி உமக்கு அநேகம்பேர் மாணாக்கரிருக்கின்றனரே! அவர்கள்பாற் சென்று கேட்போமாயின் ஒருபசுகிடைப்பது துர்லபமா? என்று கேட்கத் துரோணருக்குப் பாஞ்சாலன்மேல் நினைவுதோன்றி எனக்குப்பாலியசிநேகனும் என்பால் வில்வித்தையிற் சிலஅரியவித்தை கற்றவனுமாகிய பாஞ்சாலனிடத்துச் செல்வோமெனின் வேண்டியபாக்கியம்பெறுவோமென்று துணிந்து பாஞ்சாலதேசத்திற்குத் தன்மனைவியாகிய கிருபியுடன்சென்றுமனைவியைக் குழந்தையுடன் அப்பாஞ்சால நகரத்துக்கருகி லிருத்திவிட்டுத் தனியே அத்தாணிமண்டபஞ்சென்று பாஞ்சாலனைக்காணப்பாஞ்சாலனும் இவரைப்பார்த்தும் முன்கொடுத்திருந்த உறுதிமொழியை நினைத்துக்கொண்டு அதனை நிறைவேற்றச் சிறிதுஎண்ணமில்லாதவனாய்ப் பாராதவன்போலிருந்தனன். துரோணரும் அவன் இராசகாரியத்தில் இருந்ததனால் நம்மைநோக்கினானில்லை, இன்னஞ் சிறிதுநேரஞ் சென்றபின்னர் விசாரிப்பனென்றெண்ணி அங்கோரிடத்திலிருந்தனர். அரசனோ இராசகாரியநீங்கிக் கொலுமண்டபத்தைவிட்டுத் தன்மந்திரி முதலானோருக்கு அவரவர் இருப்பிடஞ் செல்லக் கட்டளையிட்டதையறிந்து துரோணரும் இராஜனைக்கிட்டிவர அப்போதேனும் வந்தனை வழிபாடு செய்யாதவனாய் நீர் யார்? இங்குவரக் காரணமென்ன? என்று முகமறியாதவன்போற் பேசினான். துரோணரும் நமக்கும் இவனுக்கும் சிநேகமாய் நெடுநாளாயிற்றே! ஞாபகஞ்சிறிதுமின்றி நம்மையாரோவென்று எண்ணியிருக்கின்றானென்று பொறுமையுடன் நாமிருவரும் அக்கினிகோத்திர முனிவரிடத்தில் வில்வித்தை கற்றிருந்ததறியீரோ என்று சொல்ல, அப்போதாயினும் வந்தனைவழிபாடுசெய்யாதவனாய் என்னகாணும்வேதியரே! நான்உம்மை ஒருநாளும் அங்குக்கண்டேனில்லையே, நீரேன் பொய்மை கூறுகிறீர்? என்றுசொல்லினான். அதுகேட்டுத் துரோணரும் நீரென்னமிகுதியுமறதியுடையவராயிருக்கின்றீர்! என்னிடத்திலும் சிலஅபூர்வமான வில்வித்தைகற்றதில்லையோ? அதையேனும் ஞாபகம் வையும் என்றனர். அரசன் குலுங்கநகைத்து மந்திரிமாரை நோக்கி இவ்வந்தணன் முன் நாமிருவரும் ஒன்றாகக் கற்றுக்கொண்டோமென்றும், பின் தன்னிடத்தும் சில அபூர்வமான வித்தைகளைக் கற்றுக்கொண்டேனென்றும் வெறும் வாயை மெல்லுகின்றான், இப்போது பேசுஞ்சொல் எவ்வாறிருக்கின்றது? என்று சொல்லத் துரோணாசாரியாருக்கு மிகுந்த கோபமுண்டாகிக் கொதித்துப் பாஞ்சாலராசனே! நீ என்னைப் புகலடைந்து வில்வித்தை கற்றுக்கொள்ளும்போது எனக்குப் பட்டமானவுடனே உனக்குப் பாதி யரசு கொடுப்பேனென்று சொல்லவில்லையா? என்றனர்.

அரசன் அதைக்கேட்டுப் பின்னும்நகைத்து இப்போது பாதியரசுக்குரியவ னென்றுசொல்லுவ தெவ்வாறிருக்கின்றதென் றுகடுகடுத்துப்பேசினன். மந் திரிமார் சேவகரைக்கொண்டுஇராசசபைக்கு அப்புறப்படுத்தக்கருதுவதை யுணர்ந்து என்னிடத்தே வில்வித்தைகற்றும் என்னை அவமதித்தனை? அது கிடக்கட்டும், எனக்கொரு மைந்தனுண்டு, அம்மைந்தனுக்குப்பாலில்லை, ஒருபசுவையேனும் கொடுவென்றுகேட்க அரசன்நகைத்து முன்னமேபசு வேண்டுமென்று சொல்லியிருந்தாற் கொடுத்தேயிருப்பேன்; எனக்குச் சிநேகனென்றும் ஆசிரியனென்றும். என்னரசிற்பாதிக்குரியானென்றும் சொல்லிநின்றதன்றி இப்போது பெண்களும்நகைக்கப்பேசிநின்றீர் எனப் பரிகாசவார்த்தை சொன்னன். அதைக்கேட்டதுரோணர் ஆலவிடம்போற் கொதித்துப் பாஞ்சாலராசனை நோக்கி உன்னைஇதோ இருக்கின்ற என்கை வில்லுக்கே பலியிடுவேன்; உன்னைஎதிர்ப்பதுந்தகுதியல்ல, உன்னேடொத்த இராசகுமாரனுக்கே என்வில்வித்தையைக்கற்பித்து அவனல் உன்கொர்வத் தையடக்கி மடலொடுமடல்விரியத் தேர்க்காலிற்கட்டி இராசசபையில் உன் னைப்பங்கப்படுத்தி உன்னரசுமுழுதுங் கொள்ளாவிட்டால் என்கையிலிருப் பதும் வில்லல்ல, என் பெயரும் துரோணனல்ல, யானும்பிராமணனல்ல வென்று சபதஞ்செய்துகொண்டு இராசசபையைவிட்டு மனைவியும் குழந் தையு மிருந்தவிடத்தேயடைந்து நடந்தசெய்தியை விரித்துச் சொல்லினர். அவ்வாறு கணவன்சொல்லக்கேட்டகிருபியும் குழந்தையைக்குறித்துவருத் தப்படுவானேன்! எனக்கு முன்னவராகிய கிருபாசாரியார் அத்தினபுரத் திற் குருகுலவேந்தர்மக்களுக்கு வில்வித்தை கற்பிக்கின்றனர், அவரிடத்தே செல்வோம் வாருமென்றழைக்க, அதற்கிசைந்து அத்தினபுரத்துக்குப் போவதாயினர்.

இவ்வாறு செல்கையில் நகரத்தருகிலே குருகுலமக்கள் நூற்றைவரும் இருபிரிவாகப்பிரிந்து பந்தாடிக்கொண்டிருந்தனர். அவ்விளையாட்டின்கண் வீமனே பந்தெடுத்து விசிறியெறிய அதுதுரியோதனன் முதலானோர்கைக் குத்தப்பிக்கிணற்றில்விழுந்தது. அதுகண்டுதுரியோதனன்வீமனைநீயெறிந்த பந்து கிணற்றில்விழுந்தது, நீதானெடுத்துக் கொடுக்கவேண்டுமென்றனன். வீமசேனனும் நானெறிந்தபந்தை நீங்கள் பிடியாமையால் அது கிணற்றில் விழுந்தது, அதை எடுப்பது எனதுகடமையேயல்லவென்று மறுத்தான். இவ்வாறுஇருதிறத்தாரும் பேசிக்கொண்டே கிணற்றைச் சூழ்ந்துகொண்ட னர். துரோணர் இவர்கள் அருகிற்சென்று நீங்கள் யாருடையமக்கள்! இக் கிணற்றைச் சூழ்ந்திருப்பானேன்! என்று கேட்க, அவருள் பற்குனன் துரோணரைநோக்கி நாங்கள்இந்நகரத்தரசன்மக்கள்பந்துவிளையாடினேம், அப்பந்து கிணற்றில் விழுந்தது; அப்பந்தைக்குறித்து நானெடு நீயெடு என்று கிணற்றைச்சூழ்ந்திருக்கின்றேமென்று சொல்ல, துரோணர் நகை த்துஉமக்கு வில்வித்தைகற்றுக்கொடுக்கும் வில்லாசிரியர் 'பந்தைக்கிணற்றி லிருந்து எடுத்துவிடக் கற்பிக்கவில்லையா என்று தன்வில்லைப் பற்குனன் கையில் அளித்து ஒருசுப்பலையெடுத்துக்கொடுத்து அவன்செவியில் ஒரு சிறுமந்திரத்தையோதி அச்சுப்பலைத்தொடுக்கச்சொல்லினர். பற்குனனும்

அவ்வாறே சுப்பலெடுத்து வில்லிற்றொடுத்துவிட்டான். அச்சுப்பனும்பந்தில் தைத்துக்கொண்டது; பின்னர் சுப்பலோடுசுப்பலொவ்வொன்றாகப்பொருந்த அம்மந்திரத்தையே யுச்சரித்துப் பந்தைக் கிணற்றினின்றும் எடுத்து விட்டான்; பாண்டவரும் கௌரவரும் பெருமகிழ்ச்சி யடைந்தனர். துரோணரும் அம்மக்களைநோக்கிக் கிருபாசாரியர்வீடெது! என்றுகேட்க, அவர்களும் கிருபாசாரியர்வீட்டினைக்குறிப்பாகத்தெரிவிக்கத் தன்மனைவியொடும் குழந்தையொடும் கிருபாசாரியர் வீட்டினை யடைந்தனர். இவர் வரவினை யறிந்த கிருபாசாரியரும் எதிர்கொண்டுசென்றழைத்துத்தன் தங்கையாகிய கிருபியை ஆதரித்துத் தன் மைத்துனராகிய துரோணரையும் இங்கேயே யிருந்துவிடவேண்டுமென்று விருந்துபசரித்தனர். இதுகிடக்க;

துரோணரிடத்து விடைபெற்றுச்சென்ற குருகுலேசர் நூற்றைவரும் வீஷ்மரைவணங்கி நடந்தவிருத்தாந்த மெடுத்துச்சொல்லி நமது நகரத்தில் ஒரு வில்லாசிரியர் வந்திருக்கின்றனர், அவர்திறத்தை எங்களாற்கூறும்படியன்று என்று சொல்லினர். வீஷ்மர் கிருபாசாரியரை வருவிக்கக் கிருபாசாரியர்வருவதைக்கண்டு எதிர்சென் றழைத்துக்கொண்டுபோய் ஓரழகிய ஆசனத்தில் இருத்திச் சோடசோபசாரமுஞ்செய்து வணங்கி உமது திருமாளிகையில்யார்வந்திருப்பது! சொல்லவேண்டுமென்றுகேட்டனர். அதற்குக்கிருபரும் கிருபைபாய் என்தங்கையாகிய கிருபிக்குக்கணவரும், பரத்துவாசர்புத்திரருமாகிய துரோணர் வந்திருக்கின்றனரென்றனர். வீஷ்மர் அகமிகமகிழ்ந்து சிலபெரியோரை விடுத்துத் துரோணாசாரியரை வருவிக்க, அப்பெரியோருடன் துரோணரும்வரக்கண்டு துரோணரை யெதிர்கொண்டழைத்து ஓராசனத்திலிருத்திச் சோடசோபசாரமுஞ்செய்து வணங்கினின்றார். துரோணாசாரியரும் பாஞ்சாலன்சபையில் தான்சொன்னசபதம் எவ்வாறு நிறைவேறப்போகின்றதென்ற கருத்துடையரா யிருப்பினும் வந்தனைவழிபாடுசெய்த வீஷ்மரை யாசீர்வதித்து இருக்கச்சொல்லினர். வீஷ்மர் சிங்காதனத்தி லிருந்துகொண்டே வாடினமுகத்துடன் துரோணர் நின்ற நிலையையுணர்ந்து பிரமகுலசிரேஷ்டராயும் தவசிரோமணியாயும் வில்வித்தையருமையிற்சிவபிரானுக்கொத்தவராயும் இருக்கின்றநீர் வாடின முகத்துடனிருக்கக் காரணமென்னவென்றுகேட்கத் தான் தந்தையிடத்து வில்வித்தைகற்றுக்கொண்டதும் போதாமல் பரசுராமரிடத்தும் அக்கினி கோத்திரமுனிவரிடத்துங் கற்றுக்கொண்டதும், அக்கினி கோத்திரமுனிவரிடத்திற் கற்றுவருகையில் பாஞ்சாலன் தன்னிடத்தில் சில அரியவித்தைகளைக் கற்றுக்கொண்டதும், அவன்தனக்கு அரசுண்டானகாலத்திற் பாதியரசுதருவேனென்றதும், அவனைப்போய்க்கண்டகாலத்தில் அவன் மறுத்துப்பேசினதும், தான்செய்துகொண்ட சபதமும் உள்ளவாறெடுத்துச் சொல்லினர். அதைக்கேட்டவீஷ்மர்அரசராவார்தம்மையடுத்தவருக்குஒரு குறைவுநேரிட்டால்தங்கள் உடம்பின்மேல்இச்சையின்றிப் புகழுடம்பைப் பெறமனம்வாக்குக்காயங்களாலும்உதவிசெய்வர். இப்போதுதேவரீர்கூறிய குறைக்குநானுதவிசெய்யத்துணிவது எனக்குப்பிரயோசனமாகத்தானிருக்கின்றது. அதற்குஎன்விண்ணப்பமேற்று தேவரீர்குறைதீர்த்துக்கொள்ளும்.

அதாவது குருகுலமக்கள் நூற்றைவருக்கும் வில்வித்தைகற்பித்து அவரால் அப்பாஞ்சலனைப் பங்கப்படுத்துவதேயென்றதன்றி உமதுயிருள்ளவரையி லும் இந்த ஆதீனத்தைவிட்டுப்பிரியாமல் எங்களைப்போல மகரகுண்டலஆர கேயூர கடககங்கணமுதலிய அரசர்க்குரிய அணிகளையணிந்து ஆலோசனைக் கர்த்தரிலொருவராக இருக்கவேண்டுமென்றுசொல்லி, கிருபாசாரியருக்கும் அவ்வாறேசொல்லிவிட்டு அக்கணமே இராசபூடணங்களைக் கொணர்வித்து இருவருக்கும் கொடுப்பித்து இடம் பொருள் ஏவல் மூன்றனையுமளித்தனர். இதுநிற்க;

பாண்டவரைவரும், கௌரவர் நூற்றுவரும் அத்தாணிமண்டபத்தை யடைந்தனர். அவர்களைநோக்கி நீங்கள் நூற்றைவரும் இத்துரோணச்சாரி யரிடத்திலே வில்வித்தை கற்றுக்கொள்ளுங்கோளென்று வீஷ்மர் சொல்ல, அவர்களும் அத்துரோணாசாரியரை வணங்கினின்றனர். துரோணச்சாரியரு ம் அவர்களை யாசீர்வதித்தனர். வீஷ்மர் துரோணரிடத்திலே இந்நூற்றைவ ரையும் ஒப்பித்து உமக்கே இவர்களை வில்லிற்சிறந்தவராகச்செய்வது அவசி யமாதலின் யான்வேறாக எடுத்துச்சொல்வது அநாவசியமென்றுசொல்லி வணங்கினின்றனர். துரோணர் வீஷ்மரை ஆசீர்வதித்து அவர்அமைத்தவிடு தியைச்சென்று சேர்ந்தனர். பின்னர் சுபவேளையில் ஒருநாள் குருகுலமக் கள் நூற்றைவரையும் வருவித்துச் சிலம்பக்கூட்டத்திற்குவந்து தேவதாரா தனைசெய்து வில்வித்தை கற்பித்துவந்தனர். தாம் பாஞ்சால ராஜசபையில் பேசிய சபதத்தை நிறைவேற்ற எண்ணங்கொண்டிருப்பவராகையால் அவர் களைப் போதிப்பதிற் சிரத்தையுடையராயிருந்து யானையேற்றம்,குதிரையே ற்றம் முதலியவற்றைக் கற்பித்ததல்லது தேரிலிருந்தேயுத்தஞ்செய்யும்வகை யும், தேர்ப்பாகனில்லாத சமயத்தில் பாகன்றொழிலைச் செய்துகொண்டே யுத்தஞ்செய்யும்வகையும் ஒரேபாணம் பத்து நூறு ஆயிரமெனப் புங்கானு புங்கமாக விருத்தியடையும் விதமும், வாள் கதை தோமரம் வேல் எறிவே ல் பிண்டி பாலம் சூலம் முதலிய ஆயுதவித்தைகளும் பயிற்றி, அஸ்திரப்பிர யோகமும் அவ்வவ்வஸ்திரங்கட்குத் தக்க மந்திரோபதேசமும் பூசாவிதியு ம் தெளிவாக உணர்த்தி வருகையில் அந்நூற்றைவருள் பற்குனன் மனோத ருமத்தினால் பதின்மடங்கதிகமாக வில்விநோதஞ்செய்துவருவதைத் துரோ ணர்கண்டு முன் வில்லுக்குத் தாசரதி யென்பர் மேலோர், இனிவில்லுக்குப் பற்குனனென்றேசொல்லும்படி இவன் விளங்குகின்றானென்று அவனிடத் தே மிகுதியுமன்புவைத்து வில்வித்தையில் மிகச்சாதுரியமான வித்தையெல் லாம் பழக்கினர்.

இவ்வாறு நடந்துவருகையில் ஒருநாள் துரோணர் பற்குனனையழைத் து இன்று ஒரு வித்தையை உபதேசிக்கின்றேன், அது எனக்கும் என்குரு வாகிய அக்கினிகோத்திரமுனிவருக்குமேயல்லதுபிறரறிவதரிது அதையுன க்குபதேசிக்கிறேன், அது ஒரு பாணத்தையெடுத்துத்தூண்டினால் நாலாகி நாற்றிசைப்புறமாயுஞ் சென்று பாயுமென்று அக்கணைக்குரிய மந்திரோப தேசமேயன்றி மற்றையருமையான வித்தைகளையும் போதித்து வருவாரா யினர். பற்குனனுக்குபதேசித்த அவ்வில்விநோதவித்தைதவிர மற்றையனை

த்தும் அந்நூற்றுநால்வருக்கும் போதித்துவந்தார். இவ்வாறு கற்பித்துவரு கையில் குருகுலமக்கள் நூற்றைவரும் போசனஞ்செய்யச்சென்றனர். அத் தருணத்தில் குறிஞ்சிநிலத்துக்குரிய வேடராசன்மகன் ஏகலைவனென்பான் இளமையிற் கல்வியினைப்பாராட்டாமல் கொன்னே இளமைகழிந்ததற்கிரங் கி அவ்வில்வித்தையில் மிகுதியும் பரிவுடையவனாய் அவரைவந்தடைந்துவண ங்கித் தன்கருத்தைத் தெரிவித்தனன். துரோணரும் குருகுலமக்கள் நூற் றைவருக்கும் வில்வித்தை கற்பிப்பதனால் எனக்கொழிவில்லையேயென்று மறுமொழிகூறினர். அவரைவணங்கிஉம்மால்வில்வித்தைகற்பிக்காமலொழி த்துவிட்டாலும் உமதுதிவ்யானுக்கிரகபலத்தாலே கற்றுக்கொள்ளுகின்றே ன் என்று தன்னிருக்கையையடைந்து ஒருசிலம்பக்கூடங்கட்டித் துரோண ரைப்போல் மேடைமேல் உருவத்தைநிறுத்தி தான்முன்வந்துநின்று இவ் வாறுதானா விற்பிடிக்கிறது? இப்படிதானா சரந்தொடுக்கிறது? இந்த அஸ்தி ரத்திற்குத் தகுந்த மந்திரம் இதுதானா? என்று எல்லாந்தானே சொல்லிக் கொண்டே இவ்வாறுசெய்துவந்தான். இவனுக்குத்துரோணரிடத்திலிருந்த நம்பிக்கையே குருவாகவிருந்து வித்தைகளையெல்லாம் கிரமமாகக் கற்பித் துவிட்டதுமன்றித் துரோணரிடத்திலுள்ள அதிரகசியமான வில்விநோதங் களையுங் கற்பித்துவிட்டது.

இவ்வாறு ஏகலைவன் வில்வித்தை கற்றுவருகையில் குருகுலேசர் நூற் றைவரும் வேட்டையாடத்துணிந்து வேடர் வலையர்முதலானோருடன்காட் டினையடைந்து அவரவரும் தனித்தனியே கருத்திற்கிசைந்தபடி யானைகரடி சிங்கம் பன்றி மான் காண்டாமிருக முதலியவற்றை வெட்டியும் குத்தியும் கொன்றும் வேட்டையாடிவருகையில் பற்குனன் ஒருவனத்தினையடைந்து கொடியவிலங்குகளை அதஞ்செய்துநின்றான். இப்படி அதஞ்செய்கையில் அவன் அன்பாகவளர்த்துவரும் நாயானது ஒருவிலங்கைத்துரத்திக்கொண் டேபோய் அதுதன்விழிக்குத் தோன்றாமல் மறைய அதைத்தொடர்ந்தஅந் நாயானது ஏகலைவனது சிலம்புக்கூடமேசென்று துரோணரைப்போற் செ ய்திருக்கும் திருவுருவத்தின்மேற் சலஸ்பரிசஞ்செய்தது. அதைக்கண்டஏக லைவன் அந்நாயானது செய்ததுபொறாது தன்வில்லில் ஒரு பாணத்தைத் தொடுக்க அது நாலுதிசையிலுஞ்சென்று அந்நாயின்மேற்பாய்ந்தது. உட னே நாயானது ஓடியலறிக்கொண்டே யோலமிட்டது. பற்குனன் நாயை நோக்கி முகத்தில் நான்குசரம் பட்டிருப்பதறிந்து இவ்வண்ணமாகச் சரந் தொடுக்கத் துரோணர் தனக்கும் அக்கினிகோத்திர முனிவருக்கும் தெரியு மல்லது உனக்குமாத்திரந்தெரிவித்தோமென்றேசொல்லியிருந்தனரே; இச் சுணங்கன்மீது இவ்வாறு பாணப்பிரயோகஞ் செய்தாரெவர்? அவரை நாம் பார்க்கவேவேண்டுமென்று கருதி அச்சுணங்கனோடுஞ் சென்றான். சுணங்க னும் ஏகலைவன் சிலம்பக்கூடமேபோய் நின்றது. பற்குனன் அச்சிலம்பக் கூடஞ்சென்றதுங் கண்ட ஏகலைவன் திடுக்கிட்டு இத்தேசத்தை யாளும் குருகுல சிகாமணியாகிய பற்குனன் இங்குவரக் காரணமென்ன? என்று மனதில் திப்பிரமைகொண்டு அதிதீவிரமாக ஓடோடியும் வந்து எட்டுறுப் பும் நிலமுறப்பணிந்து யான்செய்த மாதவமோ! இவ்வனஞ்செய்தபுண்ணிய

மேயோ! எங்கள்குலஞ்செய்தநல்வினையோ! தேவரீர் எழுந்தருளப்பெற்றே னென்று பலவாறு துதித்துநின்றனன். அவ்வாறு துதித்துநின்ற வேடனை யாதரித்து இந்நாயையெய்தார்யாவர்? உள்ளவாறுசொல்லெனவினவ வேடனும் தங்கள் சுணங்கனென்று நான் அறியேன், இது என் குருவினது திருவுருவ மிருக்குமேடையிற்சிறுநீர்விட்டது, அதைப்பார்த்துமனம்பொறாமல் நாயை எய்தேனென்றான். அதற்குப்பற்குனன் உன்குருயாரென்றுவினவத் தான்துரோணரையடுத்ததும், அவர்மறுத்ததும், அவரைப்போல் திருவுருவமைத்துத்தான்வில்வித்தைகற்றுக்கொண்டதுஞ்சிறிதுமொளியாமல்உள்ளதுள்ளபடியெடுத்துச்சொன்னான். பற்குனனும் இவன்சொல்லியதெல்லாங் கேட்டு மிகவியப்புற்று நமது குருவாகிய துரோணர் இவ்வேகலைவனுக்குங் குருவாகஇருக்கின்றனர், அது நமக்குத்தெரியப்படாதென்றே இவன் மாறுபாடாகச்சொல்லுகின்றனன். அதுஇருக்கட்டும் ஒருவில்விநோதங்கற்பித்து இது யானும்என் குருவும் நீயுமல்லதுபிறரறியாரென்றனரே! இவ்வேடனே அவ்விநோதஞ் செய்தானே!எல்லாங்குருவைக்கண்டு அவர்கருத்தைத்தெளியவேண்டுமென்று மனத்திலே நினைத்துக்கொண்டு அவனிடத்தே விடைபெற்றுச் சென்றபின்பு வேட்டைபாடிச் சிலவிலங்குகளை வதைத்துப் பின்பு தமையன்தம்பிமாரையடைந்து அவரோடுநகரத்தினைச்சேர்ந்து நீராடி யுண்டுடுத்துச் சிலம்பக்கூடமேசேர்ந்து வில்வித்தைகற்று அரண்மனைக்குச் செல்கையில் யாவரும் நன்றாகவிடைபெற்றுப்போவர், பற்குனன்மாத்திரம் தூரநின்று கொண்டே விடைபெற்றுப்போவானாயினான்.

துரோணரும் பற்குனன் நடத்துமரியாதையைக்கண்டு மனத்தில் கனவருத்தமெய்திஇவனாலேயன்றோ நமதுமனக்குறையைமுடிக்கஎண்ணியிருக்கின்றோம்,இவன்இன்றுமாத்திரம்தூரத்தேநின்று அஞ்சலிசெய்துபோகவேண்டியகாரணமென்ன? அதையறிந்துகொள்ளவேண்டுமென்று எண்ணியிருந்தார். இவ்வாறிருக்கையில் ஒருநாள்பற்குனனைத் துரோணர்சந்தித்து நான் உனக்கு வெறுப்புண்டாகச்செய்த காரியமென்ன? அதைச்சொல்லவேண்டுமென்றுசொல்லப் பற்குனனும் தான் காட்டிற்சென்று வேட்டையாடினது முதல் அங்குநடந்த சவிஸ்தாரமுழுதுமொன்றுமொளியாமல் எடுத்துச்சொல்லினான். அதைக்கேட்ட துரோணர் அந்தவனவேடனை எனக்குக்காட்டுகிறையா பார்ப்போமென்று இருவருங்கூடிக்கொண்டுஏகலைவனிருக்கிறவனத்தைச் சென்றடைந்தனர். ஏகலைவனே இவ்விருவர்வரவையுங் கண்ணுற்று எட்டுறுப்பு நிலமுறப்பணிந்து சிலம்பக்கூடத்திற்கழைத்துச்சென்று சோடசோபசாரமுஞ்செய்துஇருவிழியினும் ஆனந்தக்கண்ணீர்மொகுமொகெனப் பொழிய இருகரத்தையுந்தலைமேற்கொண்டு பலவாறுதுதித்துநாயேன்மேற் கிருபைகூர்ந்து தேவரீரிருவரும் வரக்காரணமென்னவென்று வினவினான். துரோணர்தன்னைவணங்கியஏகலைவனை ஆசீர்வதித்துஉன்வில்லாசிரியன்யார்? அதிகவிநோதமான வில்வித்தையெல்லாம்செய்கின்றையாம்? பார்ப்போமென்று வந்தோமென்றுசொல்ல, வேடனும்சிலகாலத்தின்முன்புதங்களிடத்து வில்வித்தை கற்கவந்தபோது எனக்கொழிவில்லையென்று மறுத்துவிட்டீர். நான் சிலம்பக்கூடங்கட்டித் தங்களைப்போலத் திருவுருவத்தை மேடைமே

விருத்திச் சகல வில்விநோதங்களையுங்கற்றுக்கொண்டேன். இதோநான்கற்ற வில்விநோதத்தையெல்லாங் காட்டுகின்றேன்பாருமென்று ஆசாரியவணக்க முதலிய சம்பிரதாயப்பிரகாரம் ஆவலாகக்காட்டினன். துரோணர் அவனது குருவிசுவாசத்துக்கு மெச்சி ஏகலைவனை வாழ்த்திக் குருவிசுவாசம் யாருக்குண்டோ அவர்கட்குத்தெய்வானுகூலமுண்டாகும். அஃதுண்டானகாலத்தே எவ்வகைத்திறமையுமுண்டாம் அதற்குத் திருஷ்டாந்தம் இவ்வேகலைவனேயன்றி வேறல்லரென்று விளக்கிக்காட்டினர். அதையறிந்த பற்குனன் குருவிசுவாசத்தினல் இத்துணையுமிவன் சித்திபெற்றான். இதையறியாமல் நமது குருவின்மேல் வெறுப்புற்றதுதக்கதன்றென்று தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு துரோணருக்கு வந்தனை வழிபாடுகளைச்செய்து நின்றான். பின்பு அந்த ஏகலைவனும் துரோணரைநோக்கி இத்தனைதூர மெழுந்தருளிவந்தீர். என்கல்வியனைத்தும் உமதுபேரருளேயல்லது வேறன்று, ஆகலின் என்னால் ஏதேனும் குருதக்ஷிணைபெறவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அதைக்கேட்ட துரோணரும் எத்தனையும் வேண்டாமெனமறுத்தும் மீட்டும் அம்முறையே குருதக்ஷிணை பெறுமற்போவது உமக்குக் கடனல்லவென வேண்டத் துரோணரும்பற்குனனுக்குமகிழ்ச்சியுண்டாகவேமேலோர் முன்னுளில் குருவிசுவாசத்தில்உதங்கன்என்பர், இந்நாளில்நீதான்குருபத்தியிற்சிறந்தவனாகின்றனை. இனி உனக்கு ஏகவல்லியனென்றுபெயருண்டாகவென்று அவ்வேடனது வலக்கைப்பெருவிரலைக் குருதக்ஷிணையாகவேண்ட அவன் சிறிது மறுக்காமற்தன்வலக்கைப்பெருவிரலைக்குருதக்ஷிணையாகக்கொடுத்துவிடவே அவனிடத்தினின்றும் விடைபெற்றுப் பற்குனனோடு துரோணரும் அத்தினபுரம் வந்துசேர்ந்தனர்.

பற்குனன் அன்றுமுதல் துரோணரிடத்துச்சிறிதும் முகவாட்டமின்றி முன்போன்று பேரன்புடையானாயிருந்தான். இவ்வாறு குருகுலேசர் நூற்றைவரும் துரோணரிடத்தே வில்வித்தை கற்றுவருகையில் பாண்டவரைவரும் யாவரும் கொண்டாடும் வண்ணம் சுக்லபக்ஷத்துச் சந்திரனைப்போன்று நாளுக்குநாள் விருத்தியடைந்து வருவதைக்கண்டும் கேட்டும் பொறாமையுடையானாய்த் துரியோதனன் தன்பிதாவிடத்தும் தன்மூதாதையிடத்தும் சென்று பாண்டவருக்கு ஒருவகையாகவும் எங்களுக்கெல்லாம் ஒருவகையாகவும் கற்பிக்கின்றனர். எங்களுக்குச்சிரத்தையாகநின்றுபோதிக்கின்றிலரென்றனன். அதைக்கேட்ட வீஷ்மரும் திருதராட்டிரனும் துரோணரை யழைப்பித்துக் குருகுலேசருக்குஒருவகையாக வில்வித்தைகற்பியாமல் ஒருவருக்கு ஒருவிதமாகவும் மற்றவருக்கொருவிதமாகவுங் கற்பிப்பதாகக்கேள்விப்படுகின்றோம், இவ்வாறு செய்வது தங்களுக்குத் தகுதியோவென்று வினவ, அதற்குத் துரோணரும் உங்கள்மைந்தர் நூற்றைவரையும் ஒருகண்மணிபோலவெண்ணிக் கல்விகற்பித்துவருகின்றோம். ஆயின் அவரவர்விவேகத்தைநோக்கிக்கல்விசிறப்படையும், அதற்குயான்செய்யத்தக்கதயாதென்று மறுமொழிகூறி விடைபெற்றுச் சிலம்பக்கூடஞ்சென்று நூற்றைவரையும் அழைத்து நாம் கங்கைக்குப் போய்வருவோம் வாருமென்றவுடன், அவர்கள் ஒருங்கு திரண்டுவந்து சேர்ந்தனர். துரோணர் தம்பால் அன்புள்ள பற்குனனை

இடைநடுவேயழைத்து ஸ்நானஞ்செய்ய நீராடவேண்டும், நமது மாளிகைசென்று எண்ணெய்க்கலசத்தையும் நலங்கு வட்டிலையும் வாங்கிக்கொண்டு, அதையெங்கும் இடைநடுவில் பூமியில்வையாமலே கொண்டுவரவேண்டுமென்றுகூறப் பற்குனனும் அதற்கிசைந்து ஆசிரியர் அரண்மனைநோக்கிச் சென்றான். துரோணர் மற்றை நூற்றுநால்வரையு மழைத்துக்கொண்டு கங்கையை நோக்கிச் சென்றனர். அவ்வாறு செல்கையில் துரியோதனனை நோக்கித் துரோணர் இதோநிற்கின்ற ஆலமரத்தினிலையெல்லாம் ஒரேகணையால் தொளையெய்த ஒருவில்விநோதங்காட்டுகின்றேன் கற்றுக்கொள்ளென்று அருகிலழைத்து பூமியில்ஒருசக்கரமெழுதி அச்சக்கரத்திற் பீசாக்கரமமைத்து அம்மந்திரத்தை அவன்காதிலுபதேசித்து வில்லைவளைத்து பாணந்தொடுவெனக்கட்டளையிட்டனர், அவன் அப்படியேசெய்ய அப்பாணஞ்சென்று அம்மரத்தினிலையெல்லாம் ஒன்றொழியாமல் ஒவ்வொருஇலையும் ஒவ்வொருதொளையெய்தச் செய்தது. துரியோதனனே மகிழ்ச்சியடைந்து தன்னாசிரியரைப் பலவாறு புகழ்ந்துதுதித்தான். பின்பு துரோணரும் அங்கெழுதியசக்கரத்தைக்கலைக்காமல் நூற்றுநால்வரையுமழைத்துக்கொண்டு கங்கையை நோக்கிச் சென்றனர்,

இங்கேகுருவாகிய துரோணரிடத்து விடைபெற்றபற்குனன் துரோணரது திருமாளிகையிற்சென்றுசேர்ந்து குருபத்தினியாராகியகிருபியார்எண்ணெய்க்கலசத்தையும் நலங்குவட்டிலையுங்கொடுக்கப்பெற்றுத் தன்னாசிரியர் சென்றவழிநோக்குகையில் ஒராலினிழலில் தன்னாசிரியர்அடிச்சுவடும், தன் தம்பிமார் தமையன்மார் அடிச்சுவடும் சிறிதுநேரந்தங்கியிருந்த தாகத்தோன்றி ஆங்குச்சோதிக்க, அங்கோரெந்திரமெழுதிமூலமந்திரம் வரையப்பட்டிருக்கக்கண்டு வியந்து ஆலமரத்தினை நோக்குகையில் அம்மரத்தினிலையொன்றேனுமொழியாமல்ஒருதொளையிடப்பட்டிருந்ததுகண்டுநமதுஆசிரியர் நம்மைவஞ்சித்து இங்கோர் வில்விநோதங்காட்டி யிருக்கின்றனரென்பதறிந்து அம்மூலமந்திரத்தைச் சிந்தித்து எந்திரத்தையு மனத்திலிருத்தித் தன்கையிலிருந்த கலசத்தினையும் வட்டிலையும் ஆசிரியர்கட்டளைபிறழாமல் ஆகாயமார்க்கத்தில் எறிந்துவிட்டு வில்லைவளைத்து நாணேறிட்டு அம்மனுவைநினைத்து ஒ ரம்பைத்தொடுக்க, அவ்வம்பு அவ்வாறே ஒரிலையையும் தவறாமல் தொளையெய்தப்பண்ணியதறிந்து அவ் வெந்திரத்தோடு மூல மந்திரமெழுதியிருந்ததைக் கலைத்துவிட்டு தன்னாலெறியப்பட்ட கலசமும் வட்டிலும் பூமியில்வந்துவிழாமல் கைப்பற்றிக்கொண்டு கங்கையை நோக்கிச்சென்று குருவைக்கண்டு வணங்கி அவருக்கு எண்ணெயிட்டு நலங்கு தேய்த்துத் தான் தமையன் தம்பிமார் விளையாடும் துறையை யடைந்து நீராடிக்கொண்டிருந்தான். துரோணர் கங்கைத்துறையில் இறங்கி நீராடுகையில் முதலையொன்று அவர்காலைப் பற்றிக்கொண்டிழுத்தது. அதனால் மிகவும் வருந்தித் தன்சத்தியளவும் தன்காலை யுதறியும் 'முதலையும் மூர்க்கனும்கொண்டதுவிடா.' என்றதுபோல அது விடாமற்பற்றமூலமேஎன்று வருந்திய கயேந்திரன்போலக் கூவியழைத்தார். இவ்வாறு அவர் கூவியழைத்தமை நீர் விளையாட்டயரும் குருகுலமக்கள் காதிற்படவில்லை

வழிப்போக்கரிடத்தே தான்படுந்துன்பத்தைச்சொல்லியனுப்பவே அவர்க ளொடோடியுங்குருகுலமக்களே யடைந்துஉங்களாசிரியரை முதலைபற்றியிழுக் கின்றது இந்நேரம் பிராணன் இருக்குமோபோமோ தெரியாதென்றுசொ ல்லிப்போயினர். துரியோதனனும் தன்தம்பிமாருடன்கல்லுங்கட்டியுமெடு த்தோட்ட அம்முதலைமுன்னையினும் அதிகமாக நீரிலிழுக்கத்தொடங்கிற்று அதற்குள் பற்குனன் தன்வில்லைவளைத்து நாணேறிட்டு ஒரு பாணத்தைத் தொடுத்து அதன்கழுத்தும் உடலுந்துண்டமாகத்துண்டித்தான். அதுமூல மேயென்ற யானைபடுந்துயருக்கு ஆழிவண்ணன் ஆழிவிடுத்ததுபோலிருந்த து. பிறகுதுரோணர்கங்கையினின்றும்அநாயாசமாகக்கரையேறினர். அது அவ்வானைமுதலினின்றும் விடுவித்தகாலத்திலுண்டாகியஆனந்தம்போலிரு ந்தது. துரோணரும் பற்குனனை மார்பொடுமார்புறத்தழுவி எனக்கு உயிரு தவிசெய்த உத்தமனே! நீயெனக்குப்பிராணதாரமாயிருந்தனை? உனக்குநா ன்செய்யும் உதவியாதிருக்கின்றது? நீயே கசேந்திரவரதனென்று பலவாறு புகழ்ந்துஆடையாபரணமணிந்து நூற்றைவரையுமழைத்து முன்வந்தவழி யையே நோக்கிநடந்தனர்.

இவ்வாறுநடந்து துரோணர்முன் தாம் துரியோதனனுக்குபதேசித்து அவன்வில்லினின்றுந்தொடுக்கப்பட்டுத்தொளையெய்தியஆலமரத்தைநோக் கி ஒவ்வோரிலையுமிரண்டுதொளையெய்தியிருக்கக்கண்டு இதையார்செய்தது? என்றுவினவினர். பற்குனனும் குருவினைமும்முறைவணங்கி இதுஅடியேன் செய்த செய்கையென்று விடைகொடுக்க, துரோணரும் நீயெவ்வாறு செய் தனையோ! அவ்வாறேசெய்துகாட்டினாலன்றிஎனக்குத்திருப்தியாகாதெனப் பற்குனனும் அவ்வாறே செய்துகாட்டக்கண்டு மகிழ்ச்சியெய்தினர். துரி யோதனன்மாத்திரம் மகிழ்ச்சியடையாமற் பொறாமைமேற்கொண்டு முக மாறுபட்டிருந்தனன் மற்றைக்குருகுலமக்கள் பற்குனனைப் புகழ்ந்தனர். துரோணர் துரியோதனனைப்பார்த்து பற்குனன் நாய்கற்பிக்காதவிஷயத் தைத் தானே யறிந்துகொண்டான். அவன் விவேகத்தைப் பார்த்தையா வென்று சொல்லி உனக்குச் சொல்லிக்கொடுத்திருந்தேனே இப்போது அதைச்செய் பார்ப்போமென்றனர். துரியோதனன் அதை "மறப்பெனும் பகைஞன் வாரிக்கொண்டனன்." என்றதொத்து மறந்துவிட்டு அம்மரத் தொடு மரமாயிருந்தனன். அதையறிந்ததுரோணர் துரியோதனனைநோக்கி அவரவர்களுக்கும் கல்விமுதலியன தாம்பூர்வத்திற்செய்துகொண்ட பூசா பலத்தளவேவரும், அதைநோக்காமல் எனக்கு நன்றாகக் கற்பிக்கவில்லை யென்று உன்மூதாதைபிடத்தே சொல்லிக்கொள்வது சரியேயன்று, இதற் காக யாரைநோவதென்று யாவரையுமழைத்துக்கொண்டு நகரத்தையடை ந்து குருகுலமக்களைப் போசனஞ்செய்துவரக் கட்டளையிட்டுத் தாமும் தமது மாளிகையையடைந்தார். குருகுலமக்களும் ஆசிரியர்கட்டளைப்படி யுண்டு பசிதீர்ந்து சிலம்பக்கூடமேவந்துசேர்ந்தனர். இவ்வாறு சிலகாலஞ் செல்ல வில் விநோதத்திலும் மற்றை ஆயுதவித்தையிலும் பாண்டவரே சிறப்படைந்து யாவராலும்புகழப்படுவாராயினர். துரியோதனனோமிகுந்த பொறாமை யுடையானாய்த் தான் தந்தை மூதாதையரிடஞ்சென்று நாங்கள்

யாவரும் துரோணரிடத்தே பாண்டவரைப்போலவே வில்வித்தை முதலிய ஆயுதப்பயிற்சி செய்துவரினும் துரோணர் பாண்டவர்மேல்வைத்த அன்புக்கு அளவேயில்லை. இவ்வாறிருக்க, துரியோதனன் எங்களுக்கு ஒருவிதமாகவும் அவர்களுக்கொரு விதமாகவும் கற்பிக்கின்றனரென்று முறையிட்டனன். வீஷ்மர், திருதராட்டிரன், விதுரன் என்னும் மூன்றரசரும் தீர்க்காலோசனைசெய்து, துரோணரையே வருவித்துக் கேட்கவேண்டுமென்று துணிந்து தூதுவரால் அவரைவருவித்து அவருக்கு வந்தனை வழிபாடுகள் செய்து அழகிய பீடத்திலிருத்திக் குருகுலமக்கள் நூற்றைவரையும் ஒரே விதமாக எண்ணிக்கற்பிக்காமல் ஒருவரை யொருவிதமாகவும் மற்றொருவரை யொருவிதமாகவும் எண்ணிக்கற்பிப்பது தகுதியன்றேயென்று வருந்திக்கேட்க, துரோணர் பெரிய அரசர்களைநோக்கி நீங்களறியாததொன்றுமில்லை, நமக்குக் கைவிரல்களெல்லாம் ஒன்றுக்கொன்று குறையாமலிருக்கின்றனவோ இல்லையே? அதுபோல மக்கள் புத்தி யுத்தி எவ்வளவோ அவ்வளவும் வித்தையேறுமென்று சொல்லி அவரவர் புத்தியுத்தியைப் பரீக்ஷித்தறியவேண்டுமென்று போய்விட்டனர்.

வீஷ்மர், திருதராட்டிரன், விதுரனென்னும் மூன்றரசருங்கூடி குருகுலமக்களை வருவித்து அவருள் துரியோதனாதியர்கையிற் கொஞ்சந் திரவியங்கொடுத்து வீடுநிறைந்த பதார்த்தம் வாங்கி வைத்திருக்கக் கட்டளையிட்டு, பின்பு அவரறியாமல் பாண்டவரைவரையும் அழைப்பித்து அவ்வாறே கட்டளையிட்டனர். துரியோதனாதியர் நூற்றுவரும் ஒரிடத்திற்கூடி சகுனியையும் கர்ணனையும் வருவித்து எமது மூதாதைமுதலியோர் வீடு நிறைந்த பதார்த்தம் வாங்கிவைக்கச் சிலதிரவியங்கொடுத்தனர். அவர்மனங்களிக்கச்செய்ய அப்பதார்த்தம் யாதென்றுகேட்க, கொடுத்ததிரவியமோ கொஞ்சமாகையால் வீடு நிறைந்த பதார்த்தமாவது வரகுவைக்கோலேயென்ன, அதைக்கேட்ட துரியோதனன் ஆம் ஆம் அதுவேசரி இந்தயுத்தி பாண்டவர்களறியமாட்டார்களென்று அகமிகமகிழ்ந்து வரகுவைக்கோலை வாங்கி வடவீதியிலுள்ள வீட்டில்நிறைத்து, இதையாரேனும் அறிந்து பாண்டவர்களுக்குச் சொல்லிவிடப் போகின்றனரெனக் கபாடபந்தனமுஞ் செய்து, தெருத்திண்ணையில் சகுனி, கர்ணனோடு துரியோதனாதியர் நூற்றுவரும் உட்கார்ந்திருந்தனர். பாண்டவர்களோ தாங்கள்பெற்ற சிறுதொகையைக்கொண்டு திரும்பினர். இவருள் தருமராசன் தம்பிமாரையழைத்து, நமதுமூதாதை முதலியோர் வீடுநிறைந்த பதார்த்தம் வாங்கிவைக்க உத்தரவளித்தனர். நாம் அதற்குச் செயற்பாலனசெய்தல் வேண்டுமெனத் துணிந்து தருமராசன் வீமனைநோக்கி நீ ஒருபொன்னை யெடுத்துக்கொண்டு சென்று பாகமுறையிற் வல்லவனாகையாற் சமையல்செய்யென்றும், அர்ச்சுனனைநோக்கி நீ ஒரு பொன்னுக்குச் சந்தன புட்ப தாம்பூலம் சேகரித்து வையென்றும், நகுலனைநோக்கி நீ ஒரு பொன்னுக்கு விளக்குநெய் வாங்கி வந்து வீடெங்குந் திருவிளக்கிடென்றும், சகாதேவனை நோக்கி நீமிகுந்திருந்த பொன்னுக்குத் திண்டு தலையணை பாய்முதலியவற்றை வாங்கிவையென்றுங் கட்டளையிட, அவ்வாறே செய்துவிட்டுத் தமையனாகிய தருமராச

ளோடு நால்வரும் நீராடி நல்ல ஆடையணிந்து தலைவாயலில் வந்து நின்று பெரியோர்வரவுக் கெதிர்பார்த்திருந்தனர்.

வீஷ்மர், திருதராட்டிரன், விதுரன் என்னுமூவரும் இருதிறத்தார்திற மையும் அறிய வடவீதியில் இருந்த துரியோதனனிடஞ் சென்றனர். துரி யோதனன் சகுனி கர்னனுடன், துச்சாதனன் முதலிய தம்பிமார் தொண் ணூற்றென்பதின்மருடனும் எதிர்கொண்டழைத்து உங்கள் உள்ளம்பூரிக் கக்கருதி வீடுநிறைந்த பதார்த்தம் வாங்கிவைத்திருக்கின்றேனென்று மேம் பாடு பாராட்டவே, திருதராட்டிரனும் தன் மகனை அன்பாய்ப் பார்த்து என்ன பதார்த்தம் வாங்கினாய்? உள்ளபடி சொல்லென்று கேட்க, வீடு நிறைந்தபதார்த்தம் வரகுவைக்கோலாகையால் நான்வரகுவைக்கோலை வா ங்கிவைத்திருக்கின்றேனென; திருதராட்டிரனும் உள்ளேபோய்ப் பார்க்க இடம்பெறாமையினால் வெறுப்படைந்து பாண்டவரிருக்குந்தெற்குவீதியை நோக்கிச்சென்றனர். இப்பெரியோர் வருகையையறிந்தபாண்டவரைவரும் அவர்களை அழைத்துக்கொண்டுபோய்த் திருவிளக்கிட்டுச் சிங்காரித்திருக் கின்ற மாளிகையைக் காட்டினர். அவருள் தருமராசனே மூதாதையையும் தந்தைகளையும் வணங்கி இங்கே இருந்து அருந்திப் போகவேண்டுமென்று வருந்திக்கேட்டுக் கைகால்கழுவ நீர் தரக் கைகால் சுத்திசெய்துகொண்ட வுடனே, வீமன் வீமபாகமாகிய அறுசுவையோடுகூடிய இனிய வுணவைப் படைக்க உண்டு கைகால்கழுவி ஆசனத்தில் வந்துட்கார்ந்தனர். பற்குன னே சந்தன புட்ப தாம்பூல முதலியவற்றைக்கொண்டுவந்து கொடுக்க, ஐவ ரையும் நோக்கி அகமிகமகிழ்ந்து மக்களே! உங்களை நாங்கள் வீடுநிறைந்த பதார்த்தம் வாங்கிவைக்கக் கட்டளையிட்டோமே! வீடு நிறைந்த பதார்த்த மாவது யாது? என்று வினவ, தருமராசன் அம்மூவரையும வணங்கி வீடு நிறைந்த பதார்த்தமாவது திருவிளக்கேயல்லாமல் வேறல்லவெனச் சொல் லித் திருவிளக்கிட்டோம். பின்பு நீங்கள் இங்குவந்து சும்மாபோவதுதகுதி யல்லவென்று துணிந்து எங்களாற் கூடியமட்டுஞ் சமையலுஞ்செய்துவைத் தோமென்றனர். பெரிய அரசர்கள் மகிழ்ந்து அவர்களை மார்புறத்தழுவி முகத்தொடுமுகம்பொருந்த முத்தமிட்டு உச்சிமோந்து சீராட்டி அவர்க ளுடன் அரண்மனை வந்துசேர்ந்தனர். பின்பு இருதிறத்தாரும் முன்போல வே வில்வித்தை பயின்றுவந்தனர். அன்றுமுதல் துரியோதனன் சொல் லுங்கோள் சொல்லாமலிருந்தது. இவ்வாறு சிலநாள் செல்லத் துரோண ரும் பெரிய அரசர்கள் சபையைஅடைந்து அவர்கள்செய்த பூசையையேற் றுக்கொண்டு யான் கற்றிருக்கும் வில்வித்தையனைத்தும் நூற்றைவருக்கும் சம்பூரணமாகக் கற்பித்திருக்கின்றேன், நல்லசுபவேளையில் அரசரும் முனி வருமறிய அரங்கேற்றவேண்டுமென்று சொல்லிவிட்டுத் தமதுமாளிகைக் கு விடைபெற்றுச் சென்றார். பெரிய அரசரும் அத்துரோணர் சொல்லிய தற்கிசைந்து ஒரு நல்ல சுபதினத்தை நியமித்து அத்தினத்தில் விற்பிடித்த வர் எவரொருவரோ அவரெல்லாம் வந்துசேரவேண்டுமென்று கட்டளையி ட்டுத் தூதர்கையில்திருமுகமெழுதிக்கொடுத்தனுப்பினர். அவ்வாறேஅவர் களும் அரசரும் அந்தணருமாகிய இருதிறத்தார்க்கும் சென்று கொடுத்

தனர். அத்திருமுகங்கண்ட அரசரும் அந்தணரும் மிகுந்த ஆவலுடன்அத் தினபுரத்தை யடைந்தனர். வீஷ்மரும் திருதராட்டிரனும் வந்த அரசர்க் கும் அந்தணருக்கும் தகுந்த விடுதிமுதலியவைவிட்டு மிக்க உபசாரஞ்செய் தனர். அவர்களும் தங்களுக்குவிட்ட விடுதிகளையடைந்து நறுநீராடியுண்டு பசிதீர்ந்திருந்தனர். இதுகிடக்க;

வீஷ்மரோ நகர்ப்புறத்தில் இடமகன்ற காவணமொன்றியற்றி அதில் வந்திருப்பவரெல்லாமிருக்க ஆசனங்களிட்டுத் தாமும் திருதராட்டிரன், விதுரன் முதலியோருடன் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் தம்மைச் சூழ்ந்துவர அத்தாணிமண்டபமகன்று, வந்திருக்கும் வேதவேதியரும்விற் பிடித்த முடிமன்னரும் குறுநிலமன்னரும் அக்காவணத்தில்வர அவரவர் களுக்குரித்தக்க மரியாதைகள் செய்தனர். அத்தருணத்தில் சொர்க்கலோக த்தவரும் இவ்வதிசயங்காணத் தாமும் அந்தரமார்க்கத்தில் வந்திருந்தனர். வீஷ்மர் துரோணரை யழைத்து குருகுலமக்களை அழைத்துவரக் கட்டளை யிட்டனர். அதையறிந்த துரோணரும் தமது மாணுக்கர்களாகிய குருகு லேசர் நூற்றைவருடன் அக்காவணமே வந்துசேர்ந்தனர். அதைக்கண்ட வீஷ்மர் துரோணரை எதிர்கொண்டழைத்துவந்து அழகிய பொற்பீடத்தி லிருத்திச் சோடசோபசாரமுஞ்செய்து துதித்தனர், துரோணர் அரசரை யெல்லாம் ஆசீர்வதித்து முற்றத்துறந்த முனிவரையெல்லாம் வணங்கிப் பின்பு அரசர்களைநோக்கி இது சுபகாலமாதலால் வில்லரங்கேற்றத்தக்க அமையமென்று சொல்ல, வீஷ்மர் படைக்கலச்சாலைத் தலைவரை நோக்கிப் படைக்கலப்பேழையைக் கொணரக் கட்டளையிட்டனர். அவர்களும் கொ ணர்ந்து வீஷ்மரிடத்தறிவிக்க வீஷ்மர் துரோணரை நோக்கிப் படைக்கலப் பேழைகள் வந்திருக்கின்றன இனிச்சிறிதுந் தாமதியாமல் நமதுகுருகுலே சர் கற்றிருக்கும் வில்வித்தையைக் காட்டலாமென்றனர். துரோணர் குரு குலேசரை நோக்கி இது அமர்க்களமன்று. நீங்கள் நூழிலாட்டயர்தல்தகா து. பரீக்ஷைசெய்யு மிடமாகைக்கால் சிறிதும்பகையின்றி யாவருங்கண்டுமகி ழ்வெய்தப் பேழையைத்திறந்து அவரவர்க்கிசைந்த படைக்கலங்களை யெடு த்து விளையாடுங்கோளென்றனர். குருகுலேசரும் தத்தமக்கிசைந்த படைக் கலங்களையெடுத்து ஒருவர்க்கொருவர் பகைபாராட்டாமல் வில் வேல்வாள் கதை தோமரம் பிண்டி பாலம் சத்தி முசலம் முதலிய படைக்கலங்களைக் கொண்டெதிர்த்து விளையாடினர். இவருள் துரியோதனனும் வீமனும்எதி ர்ந்து பலவகைப் படைக்கலப் பிரயோகஞ்செய்து ஒருவரோடொருவர் இளைக்காமற் போராடினர். இவ்வாறாகத் துரியோதனன் வீமனொடு போர் செய்வதிற் சிறிதுமிளைக்காமல் நிற்பதையறிந்து பொறாமை மேற்கொண்டு தான் வயிரம்பற்றிய நெஞ்சமுடையானாகையால் இத்தருணத்தில் விளையா ட்டுப்போலவே கதைகொண்டோச்சி வீட்டிவிடின் நமதுகுறையுமுடிவுறும் மேல்சபையோர் கேட்கின் சாத்திரப்படி விளையாடினேம்,அவன்பிழையே யென்று சொல்லிமுடிப்போமென்று மிகச்சினந்து தன்கையிற் கதையேந்தி வீமனுங்கதையேந்தி அவனேடெதிர்ந்து கதாயுதவகையெல்லாங்காட்டுகை யில் துரியோதனன் வீமன் உயிர்நிலையினை நோக்கியேயடித்தான்; வீமன்

இச்செயலையறிந்து இவனென்ன அடடா! நம்மைப்பகைபாராட்டியேபோர்செய்கின்றான். நாமும் சோர்வின்றியே நிற்கவேண்டுமென்று சிந்தித்து அவனோடு பழையபடியே விளையாடிவந்தான். இவ்வாறு இருவரும்விளையாடிவருகையில் துரியோதனன் பகைமேற்கொண்டே விளையாடுவதையறிந்த வீமன் வீராவேசங்கொண்டு முட்டியும் மோதியுங் குத்தியும் வெட்டியும் எற்றியும் எதிர்த்துப் போராடினான். அச்சபையிலிருந்த பெரிய அரசரும் இதென்ன விபரீதம்! 'விளையாட்டு வினையாக முடிந்தது' என்பதுபோலநடக்கிறதென்று சொல்லிக்கொண்டிருக்கையில் துரோணகுமாரராகிய அசுவத்தாமா அவ்விருவர் நடுவினின்று உங்கள்போரை நிறுத்திவிடுங்கோள், இது போர்க்களமன்றென்றதட்டவே, இடியோசைகேட்டவிடநாகம்போல்ஆசாரிய புத்திரன்மொழிகேட்டு அடங்கிவிட்டனர்.

பின்பு பற்குனன்வந்து வீஷ்மர்முதலிய பெரியோரையும்தன் குருவாகிய துரோணரையும் வணங்கித்துதித்து, தன் வில்லைவளைத்துநாணேறிட்டு முதுகிற்கட்டியிருக்கும் தூணியிற்கையிட்டுச் சிலபாணங்களை யெடுத்து மானதபூசையாய்த் தூபதீபநைவேத்தியஞ்செய்து மந்திரோபதேசத்தோடுந் தொடுத்துவிடுத்தான். அந்தப்பாணங்கள் வானிற்சென்று மின்னுமுழக்கு முதலியவற்றோடுகூடிய மேகங்களையுங் காற்றையும் மலையையும் படைத்துப் பலரும்வியக்கவிநோதங்களைக்காட்டிநின்றன. பின்னர் பற்குனன்தன் வில்லைவளைத்து ஒரே பாணத்தைத் தொடுக்க, அது பத்து நூறு ஆயிரம் பதினாயிரம் இலக்கம் பத்துலக்கம் கோடிமுதலிய எண்ணிறந்தனவாய் புங்கானு புங்கமாகத் தோன்றின. மேலும் அவன் கஜாஸ்திரந்தொடுத்து எங்கும் யானைமயமாகவேகாட்டி அதன்பகையாகிய கேசரியாஸ்திரந்தொடுத்து அவ்வியானைமயத்தைப்போக்கி, நாகாஸ்திரந்தொடுத்து அதன்வயிரியாகிய கருடாஸ்திரத்தால் அதனைப்போக்கி, இருட்கணைவிடுத்துப் பரிதிக்கணையால் அவ்விருளைத்தொலைத்து, அசுரக்கணையைத்தொடுத்துக் கந்தருவக்கணையால் அதனை நீக்கி, இவ்வாறு தேவதாஸ்திரங்களாலுந் தன்னாற்றலைக் காட்டிநின்றான். அங்குவந்திருந்தவரெல்லாம் மிகவியந்து பேசிநின்றனர். இதுநிற்க, பரசுராமரிடம் வில்வித்தை கற்று இராதயனென்னுந்தேர்ப்பாகனிடமாக வளர்ந்து அரசர்குலத்திற் பிறந்திருந்து நீறுபூத்த நெருப்பேபோல விளங்கும் கர்ணன் எழுந்திருந்து சபையாரைநோக்கி 'ஆலையில்லாவூரில் இலுப்பைப்பூசருப்பங்கட்டி' என்னும்பழமொழிபோல, இவன் விற்றிறங்கண்டு மகிழ்ந்து பேசினீர். யான்கற்றவிற்றிறத்தையும் காட்டுகின்றேன் பாருங்கோளென்று தன்குருவாகிய பரசுராமரை வணங்கித்தன்வில்லைவளைத்து நாணேற்றிப் பற்குனன் ஏதேது வில்விநோதஞ்செய்து நின்றானோ அதற்குப் பதின்மடங்காகத் தன்னையாவரும்புகழ வில்விநோதங் காட்டிநின்றான். துரியோதனன் அகமகிழ்ந்திருந்தான். பற்குனன்மாத்திரம் 'தன்னினுங்கற்றாரை நோக்கிக்கருத்தழிக' என்றபடி சிறிது நாணங்கொண்டிருந்தான். அத்தருணத்தில் கர்ணன் பற்குனனைநோக்கி விற்பனனேயின் என்னோடு போர்செய்யவா? உன் வித்தையைப் பார்ப்போமென்றழைக்க பற்குனன் பொறுமையாய்க் கர்ணனை நோக்கி நீ எங்கள் தேர்ப்பாகனுக்

கபிமானபுத்திரன் நானே இவ்வுலகாளும் அரசர்பெருமான் மகனாகையால்
உன்னொடு போர்செய்ய உடன்படுவது தகுதியன்றென்றான். அதைக்கேட்
ட கர்ணன் வெகுண்டு அடா பற்குனா! என்னசொற்சொல்லினாய், உலகின்
கண் சாதியென்பது கன்மத்தாலல்லது சன்மத்தாலல்லவே; நீசிறுவனாகை
யாலென்ன அறிவாய்? நீயரசன்மகனென்பதும், வில்லொடு கணைதொடு மப்
போது நான் தேர்ப்பாகன்மகனென்பதும் தெரியும். என்னைப் பழுதுசொ
ன்னபடியால் உன்தாமரைபோன்ற முகத்தைக்கொய்து நானரங்குபூசை
செய்கின்றேனென வில்லைவளைத்து நாணேறிட்டு அங்குள்ள அரசர்மனந்திடு
க்கெய்தக் குணத்தொனிசெய்தான். அதைக்கேட்ட பற்குனன் கடுஞ்சினங்
கொண்டு என்முகத்தாமரையைக்கொய்தா? நீயரங்குபூசை செய்யப்போகி
ன்றனை! நல்லது அதுவரையிலும் நீயிருந்தாலன்றோ செய்வை. இதோ என்
கைக்கணையால் உன்தலையைப் பூமியில் உருட்டிவிடுவேன். இத்தருணந்தப்பி
னும் இனி எத்தருணத்தேனும் உன்தலையைக்கொய்யாவிட்டால் நானெடுத்
ததும் வில்லன்று, நானும் அரசகுமாரனன்றென்று பலருமறியச்சபதஞ்செ
ய்து தன்வில்லை வளைத்து அந்தரத்திலிருந்த தேவரும் நிலத்தேவரும் அரச
ருமருண்டு பார்க்க நாணோசைகாட்டி நின்றான். இதைக்கண்டவீஷ்மர் முத
லிய பெரியோரும் இதென்ன அதிசயம்! இவ்விருவருங் கடுஞ்சினமேற்கொ
ண்டடுந்தொழில் கைக்கொண்டனர். இதற்கென்செய்வதென்று வருத்தப்ப
டுஞ்சமயத்தில் முதிர்ந்த யாக்கையுடையாரும் தவத்திற் சிறந்தாருமாகிய
கௌதமரெழுந்து சென்று இருவரையும் நோக்கி வில்நாணியைத்தளர்த்தக்
கட்டளையிட்டனர். இருவரும் 'மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்.' என்ற
படி தத்தம் வில்நாணியைத் தளர்த்திநின்றனர், வீஷ்மர் கடுஞ்சினங்கொண்
டு துரோணர் தமது மாணாக்கராகிய குருகுலேசர் நூற்றைவரையும் அரங்
கேற்றத்துணிந்து நடத்த நடுவேவந்த தேர்ப்பாகன்மகன் கர்ணன் தான்
சும்மாயிராமல். தான்கற்ற வித்தையைக் காட்ட, வித்தையென்பது யார்க்
கும் பொதுவாதலால் ஒப்புக்கொண்டு காட்டக் கட்டளையிட்டோம். வில்
வித்தை காட்டிய அக்கர்ணன் வில்லிற் சிறந்தவனென்பதிற் சந்தேகமேயில்
லை. இவ்வாதீனத்துக்குரிய அரசகுமாரருள்பற்குனனைப்போர்க்கழைப்பது
தகுமா? இது தகுதியல்லவென்று சொல்லிப் பற்குனனைத் தலைகொய்து அ
ரங்குபூசைசெய்கின்றேனென்பதும் சரியாமா? என்று சபையாரை வினவி
னர். அதைக்கேட்ட சபையினரெல்லாரும் நீரோட்டத்திற் செல்லும் மித
வையைப்போல, வீஷ்மர் கருத்தின்சார்பாய் இன்மொழியையே பேசிநின்
றனர். கிருபர் எழுந்துநின்று நெருப்பில் நெய்விட்டதுபோற் கொதித்து,
இக்கர்ணன் நடுக்கமில்லாமல் இச்சபதஞ்செய்பலாமா! மனுநீதிமுதலியவற்
றினும் சாதி குலம் வரன்முறை அடிமைமுதலியவற்றைக்கற்பித்திருப்பது
அறியாமல் தன்சின்னபுத்தியால் பெரியசந்ததியை இழிவுபேசினனென்ற
னர். இம்மொழி கேட்டுச் சபையிலுள்ளார்பலரும் நடுக்கமெய்தினர். அச்
சமையத்தில் துரியோதனன்மாத்திரஞ் சினங்கொண்டு கர்ணனைப்பேசியது
தகுதியோ? 'அத்திப்பழத்தைப்பிட்டால்அத்தனையுஞ்சொத்தை.' என்பது
போல இவ்வுலகமும் அப்படியேயன்றோ? நீர் சாஸ்திரவிசாரணையில் மிகத்
தேர்ச்சியுள்ளவரென்பது விபரீதமாகவே முடிந்தது, நன்று நன்று. திருமா

மகள் கொழுநன் கற்றானிற் பிறந்தான். கற்றைவார்சடைக்கண்ணுதற்பெருமான் வேயிற்றோன்றினன். சண்முகத்தமலன்தருப்பையிற்றோன்றினன். இத்துரோணாரும் கருங்கடலையகட்டிற்பெய்த தமிழாசிரியரும் கும்பத்திலுதித்தனர். தாங்களெங்கே தோன்றினீர். தாம்தோன்றியஇடமே தாமறியாதிருக்கப் பிறரைக் குறைகூறுவதனற் பயனென்ன? இவ்வாறு தோன்றினோர் சிறப்படைந்தனரேயன்றி இழிவடைந்தாரல்லர். எவன் பேராற்றலையுடையானே அவனே பெருந்திறலாளனும் பேரரசனுமாவன். நீர் கர்ணனைக்குறித்துப் பேசுவது தகுதியன்றென்று சொல்லி, அக்கணமே அரசனில்லாதிருந்த அங்கதேசத்துக்கரசனாக மகுடஞ்சூட்டிச் செங்கோல் ஆழிமுதலியவற்றைக்கொடுத்து இரதகசதுரக பதாதிகளையு மளித்தனன். அதைக் கண்டபலரும் ஆனந்தக்கடலிலழுந்தினர். மற்றைப்பாண்டவரும் மகிழ்வெய்தினர். சபையிலிருந்த அரசரும் அந்தணரும் விடைபெற்றுத் தத்தமிருப்பிடம் போய்ச்சேர்ந்தனர். பின்பு வீஷ்மர் முதலிய பெரியவரசரும் கல்விப் பயிற்சியைப்பற்றித் துரோணரைப்பலவாறுபுகழ்ந்து அக்காவணத்தைவிட்டுத் தத்தமரண்மனையை யடைந்தனர்.

இங்கே துரியோதனனும் கர்ணனும் தையலோர்பங்குடைச் சங்கரனும், அவன்தோழனாகியஇருநிதிக்கிழவனும்போல மிகநட்புடையாராய் யாவருங்கண்டுகளிக்க வாழ்ந்திருந்தனர். இவ்வாறிருக்கையில் துரோணர் நாம் பாஞ்சாலன் சபையிற் செய்துகொண்ட சபதநிறைவேற்றுவிட்டால் என்ன பலன்! நமது மாணாக்கரோ விற்போர் வாட்போர் முதலியவற்றிலு மிகத் திறமை யுடையவராயிருக்கின்றனர். இவர்களைக்கொண்டேதான் நிறைவேற்றவேண்டுமென்று துணிந்து குருகுலேசரையழைத்து ஆசீர்வதித்து என்னிடத்தில் வில்வித்தை கற்றுக்கொண்டதனல் நீங்கள் குருதக்ஷிணை கொடுக்க எத்தனித்திருக்கின்றீர்கள்? அவ்வாறு செய்வதிற் பயனில்லை எனக்கென்றுங் குறையென்பதே யில்லாதிருக்க உமது பெரியோர்கள் ஆதரித்து வருகின்றனர். யான்கேட்கும் வன்மை நீங்கள் நடந்துகொண்டால் அதுவே யான்பெறும் குருதக்ஷிணையென்றனர். குருகுலேசரும் அதென்னவென்று வினவத்துரோணரும் பாஞ்சாலன் என்பால்வித்தைகளைக்கற்றபோது எனக்குப் பாதியரசுதருவேனென்று வாக்களித்து நான் அவன்சபையிற் சென்றபோது பராமுகமாயிருந்ததுமன்றித் தானென்னைப் பங்கப்படப்பேசினன். நான் என் மாணாக்கரால் புறங்கண்டு உன்னை மடலொடு மடல்விரியத் தேர்க்காலிற் பிணித்துக்கொண்டுவரும்படிசெய்வேனென்று சொல்லியிருந்தேன். அவ்வாறு செய்வதுவே யான்பெறுங் குருதக்ஷிணையென்று சொல்லினர், அதைக்கேட்ட நூற்றைவருள் துரியோதனன் முதலிய நூற்றுவரும் எங்களுக்கு விடைகொடுத்தால் நாங்களேபோய்ச்செயங்கொண்டுவருவோமென்று விடைபெற்றுத் தேரேறி இரதகசதுரகபதாதிகளாகியநால்வகைச் சேனையுஞ் சூழப் பாஞ்சாலதேசஞ்சென்று துருபதராசன் கோட்டையை வளைந்து போர்க்குரிய சங்கத்தொனி முழக்கினர்.

அதைக்கண்ட கோட்டைக்காவலாளர் பயந்து ஒடிவந்து பாஞ்சாலனை வணங்கிக் கைகட்டி வாய்புதைத்துநின்று அத்தினபுரத்தரசகுமாரர்கள்

நமது கோட்டையின் நாற்புரத்திலும் வளைந்து பாணப்பிரயோகஞ் செய்ய லாயினரென்று விண்ணப்பித்தனர். பாஞ்சாலனே இதென்ன அதிசயம்! நமது நாட்டை யாரும் வளைந்துகொள்ளப்பயப்படுவர். அத்தினபுரத்ததிப திகள் எதிர்க்கக்காரணமென்ன! ஒருவேளை விஷ்மர் எதிர்க்கினுங்கூடும். அவரோ முறைபிறழவுடன்படார். இப்போது எதிர்க்கவந்தவர்யார்! இன் னுரென்றுணராமற் போராடுவதுந் தகுதியன்றென்று விசாரித்துவரக் கட் டளையிட்டான். அத்தூதர் சென்று விசாரித்துத்தெரிந்து அரசனுக் கறிவித்தனர். அரசனுங் கோபநகை நகைத்துப் பலயுத்தங்களிலுங் கைதேர்ந்த சோமகேயாதியரைக் கூவியழைத்துச் சிலநாள்முன் ஒருபார்ப் பான் நமதுச்சபையில்வந்துசபதஞ்செய்துபோனுன். அந்தச்சபதத்தைநிறை வேற்றத் திருதராட்டிரன்மக்கள் நூற்றுவரும் நமது கோட்டையை வளை ந்துகொண்டனர். இனி நீங்கள் தாமதிக்காமல் அவர்களையும் அவர்களைச் சூழ்ந்த நாற்படையையுஞ் செயங்கொண்டு வாருங்கோளென்று அனுப்பி னுன். அவர்கள் அவ்வாறே சென்று துரியோதனன் முதலிய நூற்றுவரை யும் வில்லைமுறித்து நாணியறுத்துக்குதிரைகளைக்கொன்று சாரதியைவெட் டிக் கிரீடத்தைப் பொடியாக்கிச் சுவசத்தைக்கிழித்து, அவர்கள்உடல்முழு தும் உதிரப்பிரவாகம் பெருக்கோடச்செய்து நாற்படைகளையும் அதமாக் கிப் படுகளத்தினை விட்டோடிப்போவதே நல்லதென்று சொல்லும்படி செ ய்தனர். துரியோதனன் முதலிய நூற்றுவரும்யுத்தமுகங்கண்டறியாதவரா தலால்திரும்பிப்பாராமலே புறங்காட்டிக்கொண்டே அத்தினபுரத்திற்போ ய்த் திரும்பிப்பார்த்தனர். இச்செய்திவயயறிந்த துரோணர் மிக்கவருத்த முற்று பாண்டவரை நோக்கித் தன்குறையை யெடுத்து விளக்கினர்; அவ ருள் பற்குனனெழுந்து தன்னுசிரியரை மும்முறை வலம்வந்து பணிந்து நீங்களேன் வருந்துகின்றீர்! என்பெரியபிதாமக்கள் நாங்களேபோய்வென் றுவருகிறோமென்றதனுல் நான் சும்மாவிருக்க நேரிட்டது. நானொருவனே போய் அப்பாஞ்சாலனைக் கொண்டுவருகிறேன் பாருமென்ன, துரோணர் பற்குனனை வாழ்த்தி நீ இவ்வொருகாரியஞ் செய்துவருவையேல்செய்தநன் றிகுன்றுதவனுதியென்று ஆசீர்வாதஞ்செய்து விடைகொடுத்தனுப்பினர். பற்குனன் விடைபெற்றுத் தன்பிதாமகனுகிய விஷ்மரைவணங்கிஅவருரும் இரதத்தைப்பெற்று அத்தேரை நடத்தத் தனக்கிளையவனுகிய நகுலனைய மைத்து அதிலேறித் தன்னைச் சூழச் சில இரதகச துரக பதாதிகளொடு சென்றுன். இவ்வாறு பிரயாணப்படுகையில் தருமராசன் வீமனை நோக்கித் தம்பியாகிய பற்குனன் தனியே போகின்றுன். நீ அவனுக்குப் படைத்து ணையாகச் செல்லென்றனுப்ப, அவன் தன் சிறியபிதாவாகிய விதுராசன் தேரைப்பெற்றுச்சிலசேனையோடுந்தம்பியாகியபற்குனனுடன் சேர்ந்தான்.

இவர்கள் இவ்வாறு கூடிச்சென்றது வடவைத்தீயும் ஊழிக்காற்றுங்க லந்ததுபோலிருந்தது. பின்பு இவர்கள் பாஞ்சாலதேசஞ்சென்று பாஞ்சா லன் கோட்டையையடைந்து குடதிசையிற் பற்குனனும் குணதிசையில் வீ மனும்வளைந்து வில்லைவளைத்து நாணேறிட்டு நகரமாந்தர்திப்பிரமைகொள் ளக் குணத்தொனிசெய்து நின்றனர். இதைக்கேட்ட காவலாளர் விரைந் தோடிவந்து இந்திரநீலம்போலுந் திருமேனியையுடைய ஒருமகாபுருடன்

குடதிசையிலும், காத்திரதேகமுடையனுய்க் கூற்றுவனே இங்குவந்தானெனத்தகும் வேறொரு மகாபுருடன் குணதிசையிலுமாகக் கோட்டையைவளைத்துக்கொண்டனரென்று விண்ணப்பித்தனர். அதைக்கேட்ட பாஞ்சாலன் முன்னேவந்தவர் திருதராட்டிரன்மக்கள்; இப்போது வந்தவரோ பாண்டவர்கள்; இவர்கள் தேவாமிசமுடையாரார்கையால் இலேசாகவேவெல்லமுடியாது. குடவாயிலில்வந்திருக்கும் பற்குனனேடு நீங்கள் போர்செய்யுங்கோள், இதோவருகிறேனென்று சோமகேயாதிகளைப்பார்த்து விடைகொடுத்தனுப்பி மந்திரிமாரைப்பார்த்துக் குணதிசைவாயிலில்வந்திருப்பவன்வீமன், அவனெடு நீங்கள்போர்செய்யுங்கோளென்று கட்டளையிட்டு, தான் அந்தப்புரஞ்சென்றுநீராடி சந்தியாவந்தன முதலியவை முடித்து அரசர்க்குரிய ஆடையாபரணங்களையெல்லாந்தரித்து முதுகில் அம்புறுத்தூணி கட்டிக்கொண்டு போர்க்களத்தினைக்குறுகினுன். இவ்வாறிருக்க, சோமகேயாதிகள் அரசன் கட்டளைப்படி தேரேறிச்சென்று குடவாயிலையடைந்து அங்கு நிற்கும் பற்குனனைப்பார்க்கையில் அவனது திருமேனியினழகையும், அவன் நிற்கும் நிலையையுங்கண்டு வியந்து பின்பு வில்லைவளைத்து குணத்தொனிசெய்து நாணேறிட்டுப் பாணவருஷங்களைக் கார்காலத்து மேகம்போற்சொரிந்து ஆரவாரித்தனர். அவைகளையெல்லாம் நடுவதுபாதிபிலேயேயறுத்துத் தள்ளி அவர்களைப்பின்னும் அநேகபாணங்களைவிடுத்து வருத்தினுன். சோமகேயாதிகள் மிகவும் வருந்தி நாம் அநேகம் போர்முகங்களிற் கைகண்டிருக்கின்றோம், நாமிப்படி எவ்விடத்துங் கண்டதில்லையே. இவனது கரசரவேகமோ சிறிதும் அறியப்படவில்லை. ஆகையால், இவனிடத்தே நாம் தப்பித்துக்கொள்வதே வெகுஇலேசன்றென்று கருதிப் போர்செய்யத்தொடங்கினர். பற்குனனே வில்லையொடித்துத் தேரைப்பிளந்து கொடியையறுத்துக் குடையைமுறித்துக் குதிரைகளைக்கொன்றுசாரதியைவானுலகேற்றிக் கவசத்தைப்பிளந்து பார்பைத்தொளைத்து உடன்முழுதும் முருக்கம்பூ நிறமாக்கி அவர்களைச் சூழ்ந்துவந்த யானை தேர் குதிரை காலாள் என்னும் நால்வகைப்படையையுங் கலக்கினுன்.

இவ்வாறு செய்யவே சோமகேயாதிகளிற் சிலர் வில்வித்தை முதலிய ஆயுதங்களை யெடுத்துப் பிரயோகிக்காமலே அயர்ந்துநின்றனர். சிலர் போர்முகத்தில் வளைக்கும் கார்முகத்தை விட்டுப் புறங்கொண்டனர். சிலர் அரசன் வரவையே நோக்கியிருந்தனர். இவ்வாறிருக்கையில் பாஞ்சாலனும் யுத்தகளத்தை நாடி குடவாயிலை யடைந்தான். அவன் வருவதைக்கண்ட பற்குனன் குருத்துரோகி வந்துவிட்டான், இனி இவனைச் சித்திரவதை செய்தாலல்லது நமது சிந்தைநோய் தீராது, ஆயினும் நமது குருவாக்கோ இவனைத் தேர்க்காலின் மடலொடு மடல்விரியக் கட்டிக்கொணரவேயல்லது வேறன்றாகையால் இவனை மரணமூர்ச்சை யடையும்படி யுத்தஞ்செய்து நமது கருத்தை முடிக்கவேண்டும். இவனை இலேசாக விடுவது தகுதியன்று. இவன் ஒடிப்போயினும் போய்விடுவன். நாம் எச்சரிக்கையாகவேயிருந்து போராடவேண்டுமென்றெண்ணிப்புங்கானுபுங்கமாகப்பாணவருஷம்பொழிந்து அவன்தேர்அசையவொட்டாமல் சரக்கூடங்கட்டினுன்.

பாஞ்சாலனேதான் அக்கினிகோத்திரமுனிவரிடத்தும் துரோணரிடத்தும் பயின்று பலஅமர்க்களத்தும் கைகண்டிருக்கின்றவில்லைவளைத்துநாணியேறிட்டுக் குணத்தொனிசெய்து அர்த்தசந்திரபாணங்களால் தன்தேரை மூடியிருந்த சரக்கூடம்பங்கப்படும்படிமுயன்றான். அதையறிந்த பற்குனன் அவன்பிரயோகித்த அர்த்தசந்திர பாணங்களையெல்லாம் நடுவதுபாதியிலேயேகண்டித்துத் தள்ளிப்பலபாணங்களைத்தொடுத்து அவனையும் வருத்தவே வருந்திப்பற்குனன்மேல் பலகணைகளைமட்டின்றிப்பொழிந்தான். அவ்வாறு விடுத்த பாணமழையால் பற்குனன் வருத்தமுறுவானென்றெண்ணியிருக்கையில் அவைகளையெல்லாம் நடுவதிபாதியிலேயே கண்டித்துவிட்டு இப்பாஞ்சாலனேடுஇங்நேரமாபோர்செய்வதென்று அவன்வில்லையொடித்துத்தேரைக்குடையைக்கொடியைப் பின்னப்படுத்திக்குதிரையைக்கொன்று சாரதியைத்தலையையறுத்து அவனையும் மயிர்க்காலுக்கு 'மயிர்க்கால்வருந்தும்படி செய்தான் இதனல் பாஞ்சாலன் திப்பிரமைகொண்டு சிறிதுந்தோன்றுமல் சித்திரம்போல் அசைவற்றிருக்கையில் பற்குனன் தன்தேரை அவனருகிற் செலுத்தி அவன் தேரிற்குதித்துத் தன்வில்லினது நாணியால் அவனை மடலொடு மடல்விரியக்கட்டித்தன்தேர்க்காலிற்பிணித்து வெற்றிச்சங்குமெடுத்துமுழக்கினன். வீமன் குணவாயிலில் தன்னெடுபோர்செய்த வீரரையெல்லாம் புறங்காட்டியோடும்படிசெய்து நால்வகைப்படையையும் படுசூரணமாக்கித் தன்தம்பியைச்சேர்ந்தான். இருவரும் வெகுவேகமாய் அத்தினபுரத்தைநோக்கி வருவதையறிந்த துரோணரும் வீஷ்மர்கிருபர்முதலியபெரியோரையெல்லாம் சிலம்பக்கூடத்திலே வரவழைத்துக்கொண்டு தாம் பற்குனன் வருகையை எதிர்பார்த்திருந்தனர்.

பற்குனன் பாஞ்சாலனைத் தன்தேரிற்பிணித்தகட்டடனே ஆசிரியர்மாளிகையைநாடிச் சிலம்பக்கூடத்தையடைந்து தன்னுசிரியனைப் பாஞ்சாலனையும் வணங்கச்செய்து தானும் வணங்கிநின்றான். சபையிலிருந்த பெரியஅரசரும் பிறரும் பற்குனனைப் புகழ்ந்து கொண்டாடினர்கள். துரோணர் தம்மை வணங்கிய பற்குனனை வாரித்தழுவி மடிமீதிருத்தி யாசீர்வதித்து நான் கங்கைக்கரையில் முதலைவாயிலகப்பட்டகாலத்தில் உயிருதவிசெய்தாய், இப்போது என்சபதம் பொய்யாகாவண்ணமும் காத்துதவினை. உன்போலும் எனக்குத் துணையாவாரொருவருமிலரென்று. சொல்லிவிட்டுப் பாஞ்சாலனை நோக்கி, நீயென்னெடு அக்கினிகோத்திரமுனிவரிடத்து வில்வித்தைகற்கையில் என்னிடத்தும் சில அருமையானவித்தைகளைக் கற்றுக்கொண்டு நான் பட்டாபிஷேகம்பெற்றரசாளுங்காலத்தில் எனக்குப் பாதியரசு தருகின்றேனென்றுஞ்சொல்லிப்பிரதிஞைசெய்தாய்; நான்அதைக்கேளாமல்எனக்கொருபசுவேண்டும்என்மகன்பொருட்டென்றுகெஞ்சிக்கேட்டகாலத்தில், தொன்மைமறவேல்.' என்பதைச் சிறிதுமெண்ணுமல் அஞ்சாநெஞ்சுபடைத்து என்னையே உதாசீனமாய் இராசசபையிற் பேசினுய். நான் வெகுண்டு என் மாணுக்கனல் உன்னைத்தேர்க்காலில் மடலொடுமடல்விரியக்கட்டி என்சபையிற்கொண்டுவரச்செய்யாவிடில் நான்கற்றதும் வில்வித்தையல்ல, நான்பிடி

த்ததும்மில்லல்ல, நானும்பிராமணனல்லவென்று சபதஞ்செய்திருந்தேனல்லவா? அதுஇன்றுநிறைவேறியேவிட்டது. நீசொன்னபாதியரசும் உன்சுவாதீனவரசும் எனக்கேயுரித்தாயின. ஆயினும் உன்சுவாதீனவரசு நீயேபெற்றிரு, என்பாதியரசை நீயேகைக்கொண்டு இறைகொடுத்துவாவென்று கட்டளையிட்டு பற்குனனைநோக்கிநீபாஞ்சாலனைக் கட்டியகட்டையவிழ்த்துவிடென்றுசொல்ல, அக்கட்டளையை மேற்கொண்டு அவ்வாறே அவிழ்த்துவிட்டான்.

பாஞ்சாலன் இராகுவின் பிணிப்பினின்று நீங்கிய இரசாபதியாகியசந்திரனைப்போலப் பிணிப்பினின்றுநீங்கி இராசசபையையும் துரோணரையும் பார்க்க நாணியகுறிப்புணர்ந்த வீஷ்மர்பாஞ்சாலனைநோக்கி உலகத்தில் அரசர்ஒருவராலொருவர் இழிவடைந்தால் அவ்வாறு செய்தானை வெற்றிகொள்ளமுயல்வதுநியதம் ஆதலால், நாம்சிறுவனாற் கட்டுப்பட்டோமேயென்று மனமவருந்தாமல் இனி செய்யத்தக்க முயற்சியெதுவோ அதைச்செய்வதே யுசிதமென்றனர். உடனே பாஞ்சாலன் சபையாரைநோக்கி இத்துரோணர் என்குற்றம்பொறுக்காமல் என்னைமானபங்கஞ்செய்தமையால் இவராருயிர் கவர ஒருமைந்தனையும், என்னோடெதிர்ந்து போர்முகத்திற் கார்முகத்தை வளைத்து என்னைத் தேரிற்பிணித்த பற்குனனைத் தன்தோளிற்பிணிக்க ஒரு மகளையும் பெறுகின்றேனென்று சபதஞ்செய்துசென்றான். இங்கே பாண்டவரைவரும் துரியோதனனாதியர் நூற்றுவரும் பெரிய அரசரும் துரோணரை வணங்கி விடைபெற்றுத்தத்தம்இருக்கையிற்சென்றுசேர்ந்தனர். இதுநிற்க;

பாஞ்சாலன் தன்னகரஞ்சென்றுமந்திரிமுதலானோரை யழைத்துத்தன் முத்திரை மோதிரங்கொடுத்து நானும்என்மனைவியும் வனஞ்சென்று தவஞ்செய்துவருவோம். நீங்கள்நான் அரசுசெய்தவண்ணங் காத்துவருமினெனக் கட்டளையிட்டுத் தன்மனைவியொடுகாட்டிற்சென்றுமந்திரோபதேசம்பெற்று தவஞ்செய்து நாம்கருதியதை முடிக்கவேண்டுமென்றெண்ணித் தேடித்திரிய யாசன் உபையாசன் என்னும் பெருந்தவரிருவரைக்கண்டு தன்கருத்தைத் தெரிவித்தான். அவர்கள்நீகொண்டகருத்தபுத்திரகாமேட்டிசெய்தாலல்லது நிறைவேறுவதரிதென்றுசொல்ல, அரசனுந் தூதுவரைக்கொண்டு மந்திரிகளால்அந்தயாகத்திற்குறிய பொருள்களையெல்லாம்வருவித்துத்தான் விசாலமான இடத்தைத்தெரிந்து தன்ஏவலாளரால் யாககுண்டம்வெட்டிவேதிகைபோட்டுவேதவிதியால் யாகசாலையையமைத்துநல்லவேளையிற் பாஞ்சாலனையும் அவன் காதலியையும் நீராடச்செய்து யாகசாலையிலுட்காருவித்து யாகதிக்ஷைசெய்து யாகத்தைச் செய்யத் தோடங்கி வேதமந்திரமுச்சரித்து அக்கினியை வளர்த்தி வேதவிதிப்படியே ஓமஞ்செய்வித்து அரசனால்நெய்யைச் சொரிவித்துத் தூபதீபநைவேத்தியஞ்செய்வித்து யாகத்தை நடத்திவருகையில், அந்த ஓமகுண்டத்தின் அக்கினிச்சுவாலையின்கண் பிண்டத்தோடு ஒரு சுவணத்தட்டுதோன்றிற்று. அவ்வாறுதோன்றியபிண்டத்தையாசன்,உபையாசன்என்னும் இரண்டுமுனிவருமெடுத்துஅரசன்மனைவியையழைத்துஅவள்கரத்திற்கொடுக்குஞ்சமயத்தில் பூப்பாயினமைகண்டு அரசன் மனவருத்த

மெய்தி நின்றான். அதை முனிவரிருவருங்கண்டு அரசனை நீ சிறிதுமஞ்ச வேண்டாம், இப்பிண்டம் பழுதாகாது, அதனை இவ்வக்கினியிலேயே இடுகிறோம், நீவேண்டியவண்ணம் ஒரு புத்திரனும் புத்திரியும் உதயஞ்செய்வரென்று வேறொருமந்திரத்தைச் செபித்து அப்பிண்டத்தினை அந்த ஓமகுண்டத்திலேயேயிட்டனர். அவ்வாறிடவே அதினின்றும் அரசர்க்குரிய மகர குண்டல ஆரகேயூர கடககங்கணமுதலாகிய அணிகளையணிந்து விற்பிடித்த கையும், முடிபொறுத்தசிரமும், வச்சிரகவசமணிந்தமார்பும்விளங்கப்பொற்றேரில்சிங்கக்குருளைபோலஒருசிறுவன்தோன்றினன். அங்ஙனந்தோன்றவே இளஞ்சூரியனைக்கண்டபதுமம்போலஅங்கிருந்தார்அகமுமனமும்மகிழ்வெய்தினர். இதுவரையிலும் புத்திரச்செல்வமின்றிவருந்தியிருந்தேன். என்னைப் பங்கஞ்செய்த துரோணரைக்கொல்லப் புத்திரனுதயஞ்செய்தான். இனி நீங்கள்நமதுநகரைஅலங்கரித்துப்பெருநாள்கொண்டாடுங்கோளென்றுகட்டளையிட, அவர்களும் அவ்வாறேசென்றுநகரையலங்கரித்துப் பெருநாள்கொண்டாடினர். இங்கே யாசன் உபையாசன் என்னும் இருமுனிவரும் மற்றைப் பிண்டத்தையும் அந்த யாகத்திலேயிட்டனர். அந்த வேள்வித்தீயினின்றும் தாமரையில் வசிக்குந் திருமாமகளேபோல ஒருபெண் தோன்றினள். இப்பெண் தோன்றியபோது ஆகாயத்தில் அசரீரி முன்னே அரக்கர் குலத்தை யழிக்கச் சீதையென்றொருபெண் நிலத்தினிடமாகத் தோன்றினள். இன்று இவ்வேள்வியினிடமாக இவள் அரசர்குலத்தை யழிக்கத்தோன்றினளென்றதுமன்றி, இம்மகனுக்குத் திஷ்டத்துய்மனென்றும், பெண்ணுக்குத்துரோபதையென்றும் பெயரிடவுஞ்சொல்லிற்று. அவ்வாறே பாஞ்சாலனுந் தன் மகனது வடிவழகையும் மகளதுவடிவழகையுங்கண்டு இவர்களைப்பெறத் தவஞ்செய்வதே தவமென்று மிகவுமதித்துத் தனக்குப் புத்திரப்பேறளித்த முனிவர்களை மும்முறை வணங்கி விடைபெற்றுத் தன்மக்கள் மனைவி மந்திரிமாருடன் நால்வகைச்சேனையுஞ்சூழ தன்னகரஞ்சென்று வலம்வந்து இராசவீதியிற் பிரவேசித்து அரண்மனைசேர்ந்தான். ஐந்துவயதாகவே தன் மகனுக்கு உபநயனச் சடங்கு முடித்து நான்குவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநான்கு கலைமுதலியவற்றையுங் கற்பித்தான். திஷ்டத்துய்மன் தன் குலவித்தையாகிய வில்வித்தைகற்கவிரும்பித் தன் தந்தையாகிய பாஞ்சால ராசனை மும்முறை வலம்வந்து பணிந்து எனக்கு வில்வித்தை கற்பிப்பார் துரோணரேயல்லது வேறொருவரடாது. ஆகையால் எனக்கு உத்தரவளிக்க வேண்டுமென்றுவேண்ட, பாஞ்சாலனும் மகனைநோக்கி உன்னையான் பெற்றது துரோணரைக்கொல்லவேண்டியன்றி வேறன்று, ஆகையால் நீசென்று கேட்டால் எவ்வாறு கற்பிப்பரென்று சொல்ல, திஷ்டத்துய்மன் நான் துரோணரிடஞ்சென்று அவர்க்கு என்மேல் அருள்வரச்செய்து வில்வித்தை கற்றுக்கொள்கின்றேனென்று விடைபெற்றுச்சென்று அத்தினபுரியையடைந்து துரோணரது திருமாளிகை சேர்ந்து தன்பெயரும் ஊரும் தன்தந்தை பெயரும் தெரிவித்துத்தனக்கு வில்வித்தைகற்றுக்கொடுக்கவேண்டுமென்று வேண்டினன். அதைக்கேட்ட துரோணரும் நாம் இவனுக்கு வில்வித்தை கற்றுக்கொடாவிட்டால் பயந்து கற்றுக்கொடுக்காம லிருந்தானென்ற அப

வாதம்வரும்; ஆனாலும் தெய்வகதியைக்கடக்கவும் ஒருவராலுமுடியாது. இவனுக்குவில்வித்தையைக் கற்பித்தேகொடுக்கவேண்டுமென்று திருஷ்டத்தாய்மனுக்கு ஐயந்திரியின்றிக் கற்பிக்கக்கற்று அவரிடத்திலே விடைபெற்றுத் தன்னகரமேபோய்ச்சேர்ந்து இளவரசுபட்டம்பெற்று வாழ்ந்துகொண்டிருந்தான். இதுகிடக்க;

இங்கே திருதராட்டிரன்மக்கள்நூற்றுவரும் பாண்டுமக்களைவரும்சகலராசருமதிக்கப் பேராற்றலையுடையராய் வாழ்கின்றகாலத்தில்எமதுகுருசிகாமணியாகிய வியாசபகவான் அத்தினபுரிக்கெழுந்தருளி இனி பாண்டவரும் துரியோதனாதியரும் ஒருவருக்கொருவர் மச்சரத்தாற் கலகம் விளைப்பாரென்று முக்காலச்செய்தியுமுணரும் தன்மையுடையராதலால் நாம் சும்மாவிருப்பது தகுதியன்றென்றுணர்ந்து நமதன்னைசொல்லைப் பாண்டவர்கேட்டொழுகினும்துரியோதனாதியர் கேளாரென்பதுபற்றி அன்னையையடைந்து மும்முறைவலம்வந்துபணிந்து இவ்வுலகின்கண் எத்தனைகால மிருந்தாலும் இவ்வுடல் மண்ணுக்கிரையாவதுசகசமாகையால் 'வாழ்வாவதுமாயம் மிது மண்ணாவதுதிண்ணம்' எனப்பெரியோரு மருளிச்செய்திருக்கின்றனர். தேகாபிமானத்தைவிடுத்துஆன்மலாபம்பெறுவதேயுசிதம், இனி அதைப்பெறுவதற்குரியமுயற்சியாவது தவவேடங்கொண்டுதவஞ்செய்வதேயாம், இனிச்சிலநாளைக்குள் பாண்டுமக்களும் தார்த்தராட்டிரரும் போரிடப்போகின்றனர், அதைத்தேவரீர் பார்த்துக்கொண்டிருப்பதுதகுதியன்று. இச்சந்திரவமிசம் யயாதிமுதல் சந்தனுவரைக்கும் மநுநீதிகுன்றாமல் நடந்துவந்தது, அம்மனுசாத்திரம் துரியோதனன் க்ஷாத்திரத்துக்குமுன் அசகசாந்தரமாகும், தாங்கள் இனிஆன்மலாபம்பெறுவதே தகுதியான முயற்சிஎன்று சொல்ல, சத்தியவதியும் தன்மகனை வாரியெடுத்து மார்புறத்தழுவி யுச்சிமோந்துமுத்தமிட்டுமகனையாசீர்வதித்துத் தான்அக்கருத்திற்கிசைந்ததைத் தெரிவித்தாள். வியாசபகவானும் அன்னைக்குச்சிலமந்திரங்களை யுபதேசித்துத் தவத்துக்குச்செல்லும்படி யனுப்பித் தமதிருப்பிடமாகிய வதரிகாச்சிரமமடைந்தனர். சத்தியவதியும்தன்மருமக்கண்மாராகிய அம்பிகை அம்பாலிகை என்னுமிருவரையு மழைத்துத் தவஞ்செய்து மறுமைப்பயனடையக் கருதியிருக்கின்றேன், உங்கள் கருத்தென்னவென்று கேட்க, தம் மாமியைவணங்கிக் கணவன்இறந்துபடவேயாங்களும் உடன்மாளத்துணிந்தோம், தங்களால் இதுவரையும் இவ்வுடம்பைப்பொறுத்தோம். தாங்களே தவஞ்செய்யச்செல்வதனால் நாங்களும்நிழல்போலத்தொடர்கின்றோமென்று பின்றொடர்ந்தனர். சத்தியவதியும் மருமக்கண்மாரையும் அழைத்துக்கொண்டுவீஷ்மர், திருதராட்டிரன், விதுரனென்னுமூவரிடத்தும் விடைபெற்றுக்காட்டையடைந்து பஞ்சாக்கினிமத்தியில் நின்று தவஞ்செய்து ஈறிலின்பந்தரும் பரமபதமேசென்றடைந்தனர். இதுநிற்க;

பாண்டவரும் கௌரவரும் சுக்கிலபக்ஷத்துச்சந்திரன்போல வளர்ந்து வருகையில் இவருள்தருமராசன் அன்புடைமை, ஒழுக்கமுடைமை, இனியவைகூறல், நடுவுநிலைமை, பொறையுடைமை, அருளுடைமை, அறிவுடைமை

முதலிய சுகுணங்களெல்லாங் கோட்டிகொண்டுநடக்க, சினம், அழுக்காறு,
கடுஞ்சொல், பொய்முதலிய துர்க்குணங்களெல்லாம் நீங்கி எவரும் புகழும்
படி நன்னெறியிலொழுகி யாவருங்கொண்டாட மேம்பட்டிருந்தான். தன்
னரசிளங் குமரனாகிய தருமராசனே இளவரசுபட்டம்பெற்று வாழும்பருவ
முடையனாய் இருப்பதைத் திருதராட்டிரனறிந்திருந்தும் நாமேபட்டங்கட்
டினோமாயின் நமதுகுமாரனாகிய துரியோதனன் மனம்புழுங்குவானென்று
எண்ணியிருந்தான். பின்னொருநாள்சபைகூட்டிநகரமாந்தரையும்தன்மந்திரி
பிரதானிசேனாதிபதிமுதலானோரையும்வருவித்துத் திருதராட்டிரன்கொலு
வீற்றிருக்கையில் ஆறுலக்ஷத்தறுபத்தாறாயிரம் பட்டவர்த்தனரும் மூன்று
லக்ஷத்து முப்பத்தீராயிரம் மகுடவர்த்தனரும்பதினெட்டுமண்டலாதிபரும்
விதுரர் துரோணர் கிருபர் அசுவத்தாமா முதலானோரும் ஒருங்குதிரண்டு
வந்திருந்தனர். அவர்களைநோக்கித் திருதராட்டிரன் தன்மக்களாகிய நூற்
றைவருள் யாருக்குஇளவரசுபட்டங்கொடுக்கலாம் சொல்லவேண்டுமென்று
தன் சபையாரைக்கேட்க, அவர்களெல்லோரும் ஒரேமனதாய்ச் சந்திரவமி
சத்தில் யயாதிமுதல் திருதராட்டிரன்வரையிலுங்குணத்திலெப்படியிருந்தா
லும் வயதிலுயர்ந்தாருக்கே இளவரசுபட்டங்கொடுப்பதெனச்சொல்லினர்.
இப்போதுபாண்டவருள் தருமராசனே இந்நூற்றைவருள்வயதுமுதிர்ந்தவ
னாயிருப்பதனால் இளவரசுபட்டம் பெறுதற்குத் தகுதியானவனாயிருக்கின்
றான், அதுதான் எங்கள் சம்மதியென்றனர். இச்சொல்லைக்கேட்டு வீஷ்மர்
துரோணர் விதுரர் கிருபர் அசுவத்தாமாமுதலானோருங்கேட்டுப்பெருமகி
ழ்ச்சியிற்சிறந்தனர். அதைக்கேட்ட திருதராட்டிரன் நான்பட்டம்பெற்ற
தொன்றேயல்லது பட்டத்துக்குரிய செய்கையாதொன்றுஞ்செய்தறியேன்.
பாண்டுராசனே பட்டத்துக்குரியசெய்கைகளையெல்லாஞ்செய்வானாய்ப் பல
தேசங்களிலுஞ்சென்று போராடிப் பலதேசங்களையுங்கைக்கொண்டுபலதே
சத்தரசர் திறைகொணர்ந்து செலுத்தப் போர்செய்துவென்று என்கைவச
மாக்கினான். இந்தப்பாக்கியமெல்லாம் பாண்டுராசனுக்கே யுரியதல்லது வே
றன்று. அப்படியாகையால் தருமராசனுக்கு இளவரசுபட்டங்கொடுப்பதில்
யாதொருசந்தேகமேயில்லையென்றுசொல்லி யாவருமறிய இளவரசுபட்டங்
கொடுங்கோளென்று பரிவாய்ச்சொல்ல, வீஷ்மர்முதலிய பெரியஅரசர்கள்
அகமகிழ்வெய்தித் தருமராசனை வருவித்துச் சகலபுண்ணிய தீர்த்தங்களால்
ஸ்நானஞ்செய்வித்துப் பலதானங்களையும் அருமறையுணர்ந்த அந்தணர்க்
கும் உதவி, சகலமங்களவாத்தியமுழங்க மங்கலப்பெண்கள்மங்களம்பாடத்
தருமராசனை இளவரசனாக முடிசூட்டினர். அந்தரத்தில்வந்திருந்த அமரரெ
ல்லாம் கற்பகநறு மலர்பொழிந்தனர். அந்தரதுந்துமிமுழங்கின, மேனகை,
யரம்பை யாடினர், ஊர்வசி திலோத்தமைபாடினர். இனிப் பூவுலகின்கண்
தருமதேவதை நான்குபாதங்களாலும் நடக்கக்காண்போமென்று ஆனந்த
க்கூத்தாடித்தேவர்கள், கந்தருவர் சித்தர் வித்தியாதரர் கருடர் கின்னரர்
முதலிய தேவசாதியர் தத்தம் இருப்பிடஞ்சேர்ந்தனர். இதுகிடக்க;

இங்கேவீஷ்மர் சபையில் வந்தவர்களுக்கெல்லாந்தகுந்தமரியாதைகளை
ச்செய்து அந்தணர்களுக்கெல்லாந் தானதருமம் வழங்கத் திருதராட்டிரன்

முத்திரைமோதிரத்தைக்கழற்றிக்கொடுத்து இன்றுமுதல் தருமராசன் கட்டளைப்படி நடந்துகொள்ளுங்கோளென்று உறுதிபுகன்று விடைகொடுத்தனுப்பினன். அன்றுமுதல்தருமராசன் தன்பெரியபிதாவாகிய திருதராட்டிரமகாராசன்பரித்தவுலகைத்தான்பரித்துத் துரியோதனன்முதலிய நூற்றுவரையும் தன்சகோதரரினும் பதின்மடங்கதிகமாகப்பாவித்துத் துரியோதனனைத் தன்சிங்காதனத்தில் வைத்துக்கொண்டு அவர்முன்னிலையில் எல்லாக்காரியங்களையும் நடப்பித்துச் செங்கோல் செலுத்திவந்தான். அப்போது கள்ளர்பயம், விஷபயம், நோய்பயம், சத்துருபயமுதலியவைநீங்கிமாதமும் மும்மழைபொழிய உலகமுழுதும் வசுராசன்காலத் தெப்படியிருந்ததோ அப்படியேயிருக்க அரசுசெலுத்திவந்தான். அதைக்கண்டகுடிகள்மிகவும்புகழத்தலைப்பட்டனர். பெரியோரெல்லாந்தருமராசன்நடத்திவருஞ்செங்கோலையியந்து துதிக்கலாயினர். பெரியஅரசர்களாகிய வீஷ்மருந்திருதராட்டிரரும்பெருங்களிசிறந்தனர். மந்திரிமார்கட்கெல்லாந் தலைமையானவிதுரராசனும் ஆண்டிலிளையனுயினும் அறிவின்முதியனுயிருப்பது கருதி அவன்மொழியைக்குருமொழியெனக்கொண்டு நடந்துவருவாராயினர். இவ்வாறு நடக்கையில் துரியோதனன் பொறாமைமேற்கொண்டு ஒருநாளிரவில் ஓர் தனியிடத்தேசென்று கர்ணன் சகுனிதுச்சாதனன் முதலானவரை வருவித்துச் சொல்லலாயினன்.

ஆருயிரன்னதோழன்மீர்! நெடுநாளாக என்கருத்திலொன்றைவைத்திருக்கின்றேன், உம்மைப்பார்க்கிலும் எமக்கன்பர்களில்லையாதலால் ஒளியாமல் அதனைவெளியிடத்துணிந்தேன், அதைக்கேட்டு இதுதகுதி இதுதகுதியன்றென்பிரேல் அவ்வாறுஒழுகக்காத்திருக்கின்றேன் அஃதியாதெனின், என்சிறியபிதாவாகியபாண்டுராசனுயிரோடிருக்குங்காலத்தில்வேட்டையாடத்துணிந்து வனத்திற்சென்றுமிருகவேட்டையாடி ஒருமானை யெய்தான், அப்போது மானுருவமாயிருந்த அமுதந்திமுனிவர் தன்மனைவியுடன்மானுருவமெய்திப் புணர்ந்துகொண்டிருக்க அவர்மேல் அவ்வம்புபட என்சிறியபிதாவைநோக்கி நீயும் இவ்வாறு நாயகியைப் புணருங்கால் மரணமெய்துவையெனக் கடுஞ்சாபமிட்டனர், அச்சாபமேற்று அக்கணமே நீங்கித் தவவேடமெய்தி இறந்தான். அவனது மனைவியாகிய குந்திதேவிபெற்ற தருமராசன் இளவரசுபெற்றிருப்பதும், அவன் தந்தையாகிய பாண்டுராசன் உயிரோடிருந்த காலத்தும். இறந்தகாலத்தும் பின்னும் அரசாண்டிருந்த பெரியஅரசன் குமாரனுகியநான் அரசுக்குரியனுயிராமையும், அவனுக்குக் குற்றேவல்செய்வதும், உமக்குத் தகுதியாமோவென்றான். அதைக்கேட்ட சகுனி உன்தந்தைக்குக் கண்ணில்லாதிருந்தும் பலசாஸ்திரமுணர்ந்த பெரியர்பாற் பலகேள்வியுடையனுயும் பலவரசரும்புகழ அரசாண்டுவருபவனுயுமிருந்து மதிகெட்டவன்னைஞ்செய்து முடித்தான். இங்கே பாண்டவர்மேல் மிகுந்த அன்புடைய விஷ்மர் கருத்தின்படி உன்தந்தை மதிமருண்டான். மந்திரிமாருக்கெல்லாம் சிறந்தவராகியவிதுரனும் வில்லாசிரியராகிய துரோணரும், கிருபரும், அப்பாண்டவர்மேல் அன்புடையராதலால் அவ்வீஷ்மர் சொல்லுக் கிசைந்தனர். அதனல் பாண்டவர் ஐவரும் பகரச்சிறந்

தனர். எப்போதுந்தாயத்தாரோ சன்மப்பகையாளிகளென்பதற் கனுத்து ணையேனு மையமென்பதேயில்லை. இதனால்தருமராசன்உனக்குப்பெருஞ்சத் துருவாகின்றான். நீதருமராசனுக்குக் குற்றேவல்செய்துவருவதனால் என்ன விருக்கின்றது, அறிவிலாருக்குஆள்வினையுடைமை,வலியுடைமை, பொருளு டைமை, வீரம், முயற்சி,மேன்மை, சுற்றம்,நீதி, நட்புமுதலியஎவைகளிருந் துமென்னபயன்? அதற்குதிருஷ்டாந்தம் நீயேயல்லதுபிறரில்லையெனக்கூறி னின்றான். பின்புதுச்சாதனன்எழுந்திருந்துதன்தமையனாகியதுரியோதனனை மும்முறைவணங்கி அண்ணா தேவரீர் மொழிந்த வாசகம் தகுதியேயென்று ரைக்க என்னாலெழவில்லை. ஏனெனின் நமதுபிதாவாகிய திருதராட்டிரமகா ராசன் நமதுதாயத்தாராகிய பாண்டவர்கட்கே இளவரசுபட்டங்கட்டிவிட் டார், அதனால்நாம்பூமியிலிருந்தென்னபயன்? உம்மோடுபிறந்த தொண்ணூ ற்றொன்பதின்மரும் விழலரென்றே சொல்லவேண்டிவரும். நமக்குப்புரைக ழலுண்டாயின் அறுத்தெறிவோமல்லது வைத்திரோம்; அதுபோல நமது பகைவராகிய பாண்டவரைவரையும் போரிட்டு வீரிட்டோடச்செய்யாமல் சும்மாபார்த்திருப்பது உசிதமன்று, நீங்களே அதற்குத்தக்க சூழ்ச்சியை யாலோசியாதிருந்தால் நாங்களென்செய்வதென்று சொல்லிமுடித்தான்.

பின்பு கர்னன் துரியோதனனைநோக்கித் தம்பிதுரியோதனா! நீஎன்ன காரியமாகமுன்பின்சிறிதும்யோசிக்கிறாய்? மானிடசன்மமெடுத்ததனால்இம் மைமறுமைப்பயன் அடைவதேதகுதி அதுதான் உடம்பெடுத்ததனாலாயப யன். உலகத்தில் இன்பமடையவேண்டுமெனின் சாமதானபேத தண்ட மென்னும்நால்வகையுபாயங்களில்எவற்றாற்பகைவரைவெல்லவேண்டுமோ, அவ்வாறு முயன்றுவெல்வதே யுசிதம், உங்களுக்கும் பாண்டவர்களுக்கும் இவ்வத்தினபுரம் சுவாதீனமாயிருக்கினும், நீ பெரிய அரசன் மைந்தனாகை யால் உனக்கே இவ்வரசு சுதந்திரமாகும், இதைச்சிறிதும் நோக்காமல் பெரிய அரசராவார் தருமனுக்கே இளவரசுபட்டங்கட்டிவிட்டனர், அத னால் பாண்டவர்கள் மீறிப்போயினர். இப்போதுபாண்டவர்களுக்கு அரசு ரிமை தகாதெனில் அவர்கள் அரசை விட்டுவிடவேண்டும். அவர்கள் விட மாட்டோமென்றாரேல் எனக்குக் கட்டளையிட்டால் இமையோரை அவ ருடன்பொருதுவென்று உனக்கேபட்டாபிஷேகஞ் செய்விக்கிறேன், என் ஆற்றலை வில்லரங்கேற்றுங்காலத்தில் அறிந்திருக்கின்றாயன்றோ? யான்பே ராற்றலைப்பெற்றிருப்பது காட்டிலெரித்த நிலாவையும் ஆற்றிற்கரைத்தபுளி யையுமொக்குமன்றோ! என்று சொல்லினன்.

துரியோதனனும் கர்னனைநோக்கி உமதுஎண்ணப்படியே ஐவரையும் போரிட்டு வீரிட்டோடும்படிசெய்வது அநாயாசமேயாகும், ஆயின்ஒருசங் கடமுண்டு. நமக்குப் பெரியோர்கள் இருப்பதனால் நாமொன்றுஞ் செய்ய லாகாது, ஆனாலும் அவர்களைச் சூழ்ச்சியாலே நீக்கவேண்டுவதல்லது பகை கொண்டு நீக்குவதுபழிப்பிற்கிடமாகும், அதற்குயாதேனும்தந்திரஞ்சொல் லுங்கோளென்று வேண்டினான். அதற்குச்சகுனி நீவருந்துவது தகுதியான காரியமன்று, ஆயினும் ஐவரைவெற்றிக்கொள்வது நமக்கருமையேயன்று, நாம் ஐவரையும்சூழ்ச்சியால்வெளிப்படுத்துவோமெனின் உலகம்உன்காற்

கிழொதிங்கும் அதன்பின் ஐவருக்கும் ஒன்றுமுடியாது, அதற்குநான் ஒரு தந்திரம்சொல்லுகின்றேன். அதாவது வேதத்திற்கூறியவேள்விகளைத்தும் செய்வதற்கும், பிதுர்க்கருமஞ் செய்வதற்கும், இன்னும் கருத்திநினைந்த பொருளை முடிப்பதற்கும், பெருந்தவத்தைமுடிப்பதற்கும் தகுதியாயிருப்பது கங்கைக்கரையிலிருக்கின்ற வாரணாவதமென்னும் ஸ்ரீகாசிக்ஷேத்திரத்திரமென்றெயென்னு: அவர்களை வாரணாவதத்தை யடையும்படி உன் தந்தை சொல்லக்கேட்டுக்கொள்வையேல் அவர்கள் அந்நகரத்தைப்போயடைவர், அதன்பின் உன்கருத்தின்படியே யிருப்பதற்கொன்றுங் குறைவில்லை, அப்போதும் மீறுவாராயின் போரிட்டேனும் வெற்றிக்கொள்ளலாமென்றான். இவ்வாறு சொன்னவுடனே துரியோதனனும் கர்ணனையும் துச்சாதனனையும் சகுனியையும் நோக்கிச்சொல்லுவானாயினன். நாமிப்போது கொண்டகருத்தே தக்கதென்றுசொல்லவே, உடனே துரியோதனனும், கர்ணன், சகுனி, துச்சாதனன் என்னும் மூவருடனெழுந்து தத்தமிருக்கையிற் சென்றடைந்தனர்.

இவ்வாறு சிலநாள் சென்றபின்னர் துரியோதனன் சமயம்பார்த்துக் கொண்டேயிருந்து தன்தாதையாகிய திருதராட்டிரமகாராசன்தனியேயிருக்குஞ்சமயமறிந்து தன்தந்தையைமும்முறைவலம்வந்துபணிந்து நின்றான். கண்ணில்லாக்குருடனாகையால் ஆளரவமறிந்து யாரென்றுவினவ, உமது மூத்தகுமாரனாகிய துரியோதனனென்று சொல்ல, திருதராட்டிரனும்தருமராசனோடு நீ கொலுவீற்றிருப்பவனாயிற்றே! இப்போது இங்கேவரக்காரணமென்னவென்றுகேட்க, எனக்கு ஒருகுறையுண்டாதலால் அதைத்தீர்த்துக்கொள்ள இங்கேவந்தடைந்தேனென்றான். அதற்குத்திருதராட்டிரன் நீஐம்பத்தாறு தேசத்துக்கும்பதினெண்பூமிமன்னருக்கும்அரசனாகையால்உனக்கென்னகுறையுண்டென்றான். துரியோதனன்பிதாவைநோக்கி 'காக்கைக்குத்தன் குஞ்சுபொன்குஞ்சு' என்பர். ஆகையால், பிள்ளையைப்பெற்றோர் தன்மகன் எவ்வனாயினும் அவனையிகழாமேயாதரித்துவருவர். 'புதல்வர்க்குத்தந்தையே' கைப்பட்டகொடியதெய்வமென்பதிருந்தும்எம்மையிழித்து எமக்குத்தாயத்தாராகியபாண்டவரிடத்தேயன்புவைத்து அவர்க்கே இளவரசுபட்டங்கட்டினீர். இவ்வநியாயத்தைஉம்மிடத்திலே முறையிடவந்தேனென்றான். இதைக்கேட்ட திருதராட்டிரன்மனந்திடுக்கிட்டு இருசெவியினையும் இருகைபாற்பொத்திக்கொண்டுவருத்தமேற்கொண்டு ஒகோ! மோசம்வந்துவிட்டது. இச்சந்திரவமிசமோயயாதிமுதல் இதுகாறுஞ் சத்தியந்தவறாமல் செங்கோல்நடந்துவந்தது. இனிநமதுமக்களால்சத்தியமுங்கெடய்த வந்ததன்றி நமதுமரபும் இழிவடைய நேரிட்டது. தருமராசன் இளவரசுபட்டம்பெற்றதற்காகநமதுமைந்தன்பொறாமைமேற்கொண்டபோதே இனியென்ன இருக்கின்றது. இயற்கையிலே நமதுமைந்தன் பேரறிவுடையானல்லன், இவனோடுசேர்ந்துள்ளாரும் நல்லறிவுடையாரல்லர். அவர்கள் துராலோசனையாலேயே இவனுக்குக்குணக்கேடுண்டாயதென்றுதுணிந்து தன்மகனைநோக்கி யிதுசொல்வானாயினன்.

அப்பா துரியோதனா! நான் தருமராசனுக்குஇளவரசுபட்டங்கொடுத்தது தகுதியானகாரியமேயல்லது வேறன்று; இச்சந்திரவமிசத்தில் யயாதிமுதல்

இதுவரையிலும் யார் வயதில் முதிர்ந்தவரோ அவர் எவ்வகைப்பட்ட அவயவப்பழுதுடையரோனும் இளவரசுபட்டம்பெற்று வருவதுவழக்கம். அதற்குத் திருஷ்டாந்தம், என்தம்பியாகிய பாண்டுராசன் பலதேசங்களையும் வென்று புகழ்கொண்டு கண்ணில்லாத என்னையே யரசனுக்கி எனக்குக் குற்றேவல் செய்துவந்தான். இப்போதிருக்கின்ற பாக்கியமனைத்தும் அவன்தேடியதே யன்றி வேறன்று. பாண்டுராசன் என்னை முடிமன்னனுக்கித் தான் எல்லாக்காரியங்களையும்நடத்திவந்ததுபோல் நீயும் உன்தமையனுகிய தருமராசனேடிருந்து சகலசம்பத்தையு மனுபவித்து வரவேண்டுகின்றேன், இதுதான் நான் சொல்ல வேண்டியகடமை, நீ சும்மா நீதிவிரோதமாகநடக்கவேண்டாம், எல்லாக் காரியங்களையும் தருமராசன்முன்னிலையில் நடத்திவந்தால் நலமாகத் தோன்றுகின்றது. அவனைப்போல் குணத்திலும் ஒழுக்கத்திலும் ஒருவருமேகிடையாது, மேலும் அத்தருமராசன் இளவரசுபட்டம்பெற்றபின்பு உன்னைவிட்டுக் கொலுமுகத்திற்கே வருவதில்லை. இராசசமுகத்தில் பலபேர் பலவிதமாகவசனிப்பர். அவ்வார்த்தைகளைக்கேட்டு நல்லகாரியத்தை நல்லதாகவும் தீயகாரியத்தைத் தீயதாகவும் மனத்தில்மதிக்கவேண்டுவதன்றி நல்லதைச்சொன்னுரைப்புகழ்ந்தும் தீயதைச்சொன்னுரை இகழ்ந்தும் வெறுக்கலாகாது. அங்ஙனம் வெறுக்கின் பகையுண்டாம்; பகையுண்டாங்கால் இராசாங்கத்தி னிரகசியம் வெளிவரும், அரசனே அவரவர்திறமறிந்துநீதிக்குமாறுபடாமல் காரியத்தை நடத்த வேண்டும். சில அமைச்சர் 'காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க் கொலை - சால்புடைத் தென்பாரு முண்டு.' என்பா ராகலின், அவற்றை யெல்லாம் தங்கல்வியறிவாலுணர்ந்து மறுத்தாராயின், இன்னவை செயற்கையாலென்பர். ஆகையால், நீ மரபுக்கும் நீதிக்கும் வழுவாமல் நடப்பதையே கருத்திற் கொள்ளவேண்டு மென்பதன்றித் துராலோசனை சொல்வோருரையைக் கேட்டுக் குணக்கேடனுகவேண்டாமென்று உறுதிமொழிகூறினன்.

அதைக்கேட்ட துரியோதனன் பரதராசன்முதல் அநேகந் தலைமுறையாகத் தத்தம்மைந்தருக்கே கடைமுறை மகுடாபிஷேகஞ் செய்திருக்கத் தேவரீர் பாண்டவர்கள்மேலேயே அன்புவைத்திருக்கும் விதுரர், துரோணர், கிருபர், வீஷ்மர் முதலியோர் சொல்லைக்கேட்டுத் தருமராசனுக்கே இளவரசுபட்டங் கட்டிவைத்தீர். அப்படியுஞ் செய்யலாமாவென்று நான் கேட்டதற்கு எல்லாம் தருமராசன் தந்தையாகிய பாண்டுராசன்தேடிய சம்பாத்தியமேயல்லது வேறல்லவென்றுஞ் சொல்லிவிட்டீர். இப்படிக் கைசோரவிடுவதனுல் எனக்கும் என்னுடன்பிறந்த தொண்ணூற்றென்பதின்மருக்கும் என்னவேலையிருக்கின்றது. தாங்கள் கட்டளையிட்டால் வனஞ்சென்று தவம்புரிந்து இனியொரு பிறவியிலேனும் இம்மையின்பம் அனுபவிக்கிறேமென்று கண்ணீர்விட்டுக் கதறியழுதான். இதைத் திருதராட்டிரன்கேட்டு மனம்வேறுபட்டுக் காலகதியால் துரியோதனன் சொல்லுக்கு உடன்பட்டுத் துரியோதனனைநோக்கிச் சொல்வானுயினன். இதுவரையிலும் ஐம்பத்தாறு தேசத்தரசரும் பதினெண் மண்டலேசரும் திறைகொடுத்துவணங்க அரசுசெலுத்தி

நீதிமானென்றுசொல்லப் பேரோடுத்திருந்தேன். இப்போது தருமராசனுக்குக் கொடுத்திருக்கின்ற இளவரசுபட்டத்தை யுனக்குக்கொடுத்தால் என்னையாவரும் நகையாடுவதன்றி என்வாய்மைக்கும் இழிவுவரும். அப்படிவாராவண்ணம் ஒரு தந்திரஞ்சொன்னால் செய்கின்றேனென்றான். அதை யப்படியே செய்வதற்குத்தக்க சூழ்ச்சியாவது யாதெனின், தருமராசன் பிதாவாகிய பாண்டுராசனுக்குத் திதிநேரிடுங்காலத்தே தருமராசனையழைத்து உன் தந்தைக்குத் திதிவருகின்றதனால் நீ வாரணாவதஞ்சென்று பிண்டமுதலிய தான கருமங்களைச் செய்வாயாயின் சாபத்தாலிறந்த பாண்டுராசனாகிய என் தம்பி நல்லகதிபெறுவானென்று கட்டளையிட்டு அனுப்புவீரேல் 'சட்டிசுட்டதுங் கைவிட்டதும்.' என்றபடி அவர்களங்கேசென்ற பின்னர் நாம் அழையாதிருந்தால் அங்ஙனேயிருந்துவிடுவர். இங்கே நானிளவரசுபட்டம்பெற்று என்விவேகத்தால் உலகமுழுதும் ஒருகுடைநிழலில் ஆண்டுவருவேன். விஷ்மர், துரோணர், விதுரர், கிருபர், அசுவத்தாமா இவர்கள் நமது ஆதீனத்தைவிட்டே பிரிவரென்றெண்ணவேண்டாம். விஷ்மர் இவ்வாதீனத்தைவிட்டு நீங்கவேமாட்டார். விதுரரும் விஷ்மரைவிட்டு நீங்கார். கிருபரும் விஷ்மரைவிட்டு நீங்கிலர். துரோணரும் கிருபரைப்பிரியமாட்டார். அசுவத்தாமா துரோணரைவிட்டு நீங்கிலர். ஆகையால், தருமராசனையழைத்து யான்சொன்னவண்ணஞ் செய்விபுமென்றுவேண்டினான். அதைக்கேட்டதிருதராட்டிரன் தன்மகன்சொன்ன தந்திரத்துக்கு உண்மகிழ்ந்து துரியோதனா! உன்கருத்தின்படி தருமராசனை வாரணாவதத்துக் கனுப்புகின்றேன், நீ சிறிதும் அஞ்சாதிருப்பதன்றி இங்கு நிகழ்ந்தவண்ணம் வெளிப்படுத்தவும்வேண்டாமென்று திட்டஞ்செய்து மகனை யனுப்பினான். துரியோதனனோ நமதெண்ணம்பலித்ததென் றகமகிழ்வெய்தித் தந்தையை மும்முறைவலம்வந்துபணிந்து விடைபெற்றுச் சகுனி கர்ணன்முதலாயினாரை யடைந்து தன் கருத்து முற்றுப்பெற்ற விதத்தையுந் தெரிவித்து மகிழ்வோடிருந்தான்.

இவ்வண்ணம் சிலகாலங்கழிந்தபின்னர் திருதராட்டிரன் ஒருநாள்கொலுமுகநோக்கிவர, அதைக்கண்ட மந்திரிமார் பிரதானிகள் தண்டத் தலைவர் சேனைத்தலைவர் மகுடவர்த்தனர் பட்டவர்த்தனர் குடிகள் யாவருமெழுந்து வந்தனைவழிபாடுசெய்தனர். இளவரசுபட்டம்பெற்று அரசிளஞ்சிங்கம்போல் விளங்கும் தருமராசன்தம்பியர் நால்வருடனெழுந்து தன்மூத்தபிதாவை மும்முறைவலம்வந்து எட்டுறுப்பு நிலமுறப்பணிந்து நின்றான்; அவர்களை யாசீர்வதித்துத் திருதராட்டிரன் தன்பெரியபிதாவாகிய விஷ்மரையுங் கிருபாசாரி துரோணாசாரி என்னும் ஆஸ்தானகுரவரையும் வணங்கிப் பொன்னாற்செய்யப்பட்டு நவமணிபதித்துவிளங்கும் சிங்காதனத்திலமர்ந்து உலகவிசாரணைநடத்திவரும் நுட்பங்களையுணர்ந்த சபையாரறிய விஷ்மர், துரோணர், கிருபர், விதுரர் இவர்களையருகிலழைத்து என்னைப்போல்பாக்கியம்பெற்றார் அந்தணர் அரசர் வணிகர் சூத்திரரென்னும் நாற்குலத்தாரில் ஒருவரேனும் இவ்வுலகிலில்லை. ஏனெனின், யானோ கட்புலனில்லாக் குருடனாயினேன், என்தம்பியாகிய பாண்டுவோ என்போலிராமலும் சகலகலைஞானத்தினும் வல்லமையுடையானாயும்

பெருந்திறல் படைத்தவனுயுமிருந்த கண்ணில்லாவென்னைச் சிங்காதனத்தி லிருத்தி ஐம்பத்தாறு தேசத்தரசரும் பதினெண்மண்டலத் ததிபரும் வணங்க இந்திர திருவமெய்துவித்துத் தான் ஒருகுற்றேவல்செய்பவன்போ லொழுகி வந்தான். இனி அவன்போலு முடன்பிறந்த ஒருவனை எந்தக்காலம்காண்பே னென் றிருகண்ணினின்றும் தொடுமணற்கேணிபோல் நீர்சொரியக்கலுழ்ந் தான். வீஷ்மர்முதலானோர்திருதராட்டிரன்கொண்ட கபடநெஞ்சக்கருத்தினை யறியாதவராய் உண்மையாகவே யழுவதாகத்துணிந்து இன்சொலா லவனைத் தேற்றி இவ்வுலகமோ நிலையாமைமேற்கொண்டது. இது அழியுங்காலத்திலே உயர்திணை, அஃறிணையென்னு மிருதிணைப்பொருளு மழியாதிருக்கக் கண்டா ரொருவருமிலர். சித்துணர்ந்த தீர்த்தராகிய பெரியோரும் 'உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி - விழிப்பது போலும் பிறப்பு.' என்றுங்கூறியிருக் கின்றனர்; ஆகையால், இறந்தானுக்குவருந்துவது தகுதியேயன்றெனத் திருஷ் டாந்த பூர்வகமாகக்காட்டினர். திருதராட்டிரனே அழுவதைநிறுத்தித் தரும ராசனைநோக்கித் சொல்லுகின்றனன். அப்பா மகனே! உன் தந்தையாகிய பாண்டுராசன் தான்உலகபாரம் பொறுத்து என்னைச்சுகமாக வைத்திருந்தது போல நீயுமென்னைச் சுகமாகவேவைத்திருக்கின்றனை. உன்னல் என் தம்பி இறந்த துன்பந் தவிர்ந்தேன். ஆயினும் அவனுக்கு நற்கதிகிடைக்க நன்மக்களே தோன்றினீர். உன்தந்தை நலமெய்த ஓரெண்ணம் என்கருத்தில் நிகழ்கின் றது, அதனை வெளியிடுகின்றேன், அவ்வண்ணம் நடப்பதே உன் கடமை யென்றனன். அதைக்கேட்ட தருமராசன் எனக்குத்தேவரீர் கொண்டிருக் குங் கருத்தினை வெளியிடவேண்டுகின்றேனென்று வணங்கிக்கேட்கத் திருத ராட்டிரன் சொல்லலாயினன்.

உலகின்கண் பிதுர்க்கருமஞ்செய்தலே சிறந்தகாரியம். இதுபற்றியன்றோ தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் 'தென்புலத்தாரை' முதற்கட்கூறியிருக் கின்றனர். பிதுர்த்தினங்களிலும் மற்றைப் புண்ணியகாலங்களிலும் கங்கா தீரத்திலுள்ள திவ்யக்ஷேத்திரங்களில் சங்கற்ப தருப்பணமும், யாகமுதலிய வற்றையும்செய்யின் மிகநலமென்றே ஆப்தகலைகளாகிய வேதமுதலிய நூல்கள் முறையிடுகின்றன. நீ யெனக்கும் நன்மையேசெய்துவந்தனை, அதுபோலவே என் தம்பியாகிய பாண்டுவுக்கும் நன்மையுண்டாகக் கங்கைக் கரையருகிலிருக் கின்ற வாரணவதஞ்சென்று உன்பிதுர்க்கருமஞ்செய்யின் எனக்கு மிகமகிழ்ச் சியையுண்டாக்கும். அதற்கு உன்கருத்தென்ன சொல்லவேண்டுமென்னத் தருமராசன் வணங்கிக் கூறுவானாயினன். உலகிலுள்ளார் புண்ணியலோகம் பெறக்கருதியே புத்திரப்பேறுபெறுவது. இப்பெற்றிநோக்கியே தெய்வப் புல வரும் 'புதல்வர்ப்பேறு.' என்றதோரதிகாரம் வகுத்தனர். அதையறிந்தும் இதுவரையும் என்பிதாவினுக்குரிய கடமையைச் செலுத்தாதொழிந்தேன். இன்றுஉம்மால் என்தந்தைக்குருமைக்கடமையைச் செய்யும்கருத்துண்டாகப் பெற்றேன். இனி அரைக்கணமேனும் இங்கேயிருந்து காலங்கழிக்காமல் தாங் கள் கட்டளையிட்ட வண்ணம் வாரணவதஞ் சென்று அதனருகி லிருக்கும் கங்கையாற்றில் எந்தைக்குரிய நீர்க்கடன் முதலியவற்றைச்செய்து முடிக்கின்

றென் விடைதம்மினென்று விடைகேட்டனன். அதற்குத் திருதராட்டிரன் தருமராசனைநோக்கி அவ்வாரணாவதம் எப்படிப்பட்டதெனின், வேதாகம கோஷ்டமும் சிவாலயவிஷ்ணுவாலயங்களும் நிரம்பியுள்ளது, உன் தந்தைக்கும் விருப்பமாயிருப்பது, வேதாகம முணர்ந்த அறிஞராவாரெல்லாம் தாயெனக் கருதும்தன்மையையுடையது. அன்னபூரணியோர்பாகத்தமர்ந்த அமலனனந்தனும், அருங்கடற்றுயின்ற அமரர்பெருமானும், அங்கமலமேய புங்கவனும் மிக மகிழ்ச்சியோ டெழுந்தருளி யிருக்கும் பரிசினை வாய்ந்தது. மாடமாளிகைகூட கோபுரங்களைநெருங்கி அரசுபுரிதற்கே தகுதியாயிருப்பது. ஆதலால், இங்கே செலுத்திய இராச்சிய பட்டாபிஷேகத்தை யங்கிருந்தே செலுத்திவருதற் கேற்றதென்றதாய்ப் பலமந்திரிமாருள்ளும் சிறந்த புரோசன னென்பவனை யழைத்து நீ தருமராசனுக்கு மந்திரியாகி அவனிழல்போற் பிரியாமலிருந்து இவனுக்கு யாதொருகுறைவும் வாராவண்ணம் இடம்பொருளேவ லமைத்து நமது கெடிஸ்தல வதிகாரஞ் செல்லவேண்டிய வகையெல்லாம் கிள்ளாக்கு விட்டு நடத்திவாவென்று கட்டளையிட்டான். தருமராசனும் தன்தம்பியர் நால்வருடன் குந்திதேவி யாகிய அன்னையை அழைத்துக்கொண்டு மந்திரியாகிய புரோசனன் தொடர்ந்துவர வீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமா, விதுரர் முதலிய பெரியோரை யடைந்து அவர்களை வணங்கி விடைபெற்று அரண்மனையைவிட்டு வெளிப்பட்டனர். அதைக்கண்ட வீஷ்மர் துரோணர் முதலியபெரியோரும் பெருஞ்செல்வரும் கண்டு இது துரியோதனனால் நிகழ்ந்த தீங்கேயென் றுள்ளங்கவன்றுருகி, இக்கேடு துரியோதனனால் நேரிட்டதெனின், துரியோதனன் முதலியோர் மண்ணுலகவாழ்க்கையைவிடுத்து விண்ணுலகவாழ்க்கையை யெய்தற்கணுகிய காலமிகச்சமீபத்தி லிருக்கின்றதுபோலுமெனக் கலங்கினர். மற்றை நகரமாந்தரும் இனித் தருமமே யொருவடிவமாகிய தருமராசனைப்போல் எந்த அரசனைக்காண்போமென்றும், இனி இந்நகரத்துக் கிப்படிப்பட்ட அரசன் வருவதுண்டோவென்றும் பலவாறுவருந்தி, ஐயோ என்செய்வோம்! திருமாலேபோ லிரக்கமும், உருத்திர மூர்த்திபோற் பேராற்றலும் உடையாராகிய இவர்கள் இவ்வத்தினபுரத்தைவிட்டு நீங்குவதென்னகாரணம்? ஒன்றுமறியத்தகாதா யிருக்கின்றது. இதென்ன விந்தையினும் விந்தையா யிருக்கின்றது! இவர் போதலைக்கண்ட வீஷ்மர் துரோணாதிகள் கண்ணையுங் கருத்தையும் அவர்மேல்வைத்துச் சித்திரப்பதுமைபோல் அசைவற்றிருந்தனர். துரியோதனன்தருமராசனைவணங்கி நான் கொடியேன், உம்மிடத்தில்வைத்த அன்பினை தந்தையோ என்பால் வைத்திலர்; ஏனெனின் 'வாழ்வாவது மாயம் மிது மண்ணாவது திண்ணம்.' எனப்பெரியாரும் அருளிச்செய்திருக்கின்றமையால், எத்தனைநாள் உலகின்கண்வாழ்ந்தாலும் அதுவாழ்வென்று சொல்லுவதமையாது. மக்கட்பிறப்பெடுத்ததனாலாய பயனாவது தீர்த்தயாத்திரை செய்தலும், சிவாலய விஷ்ணுவாலய தெரிசனஞ்செய்தலும், சிவார்ச்சனைமுதலிய செய்தலுமேயன்றோ? அப்படிப்பட்ட கட்டளையை உமக்குக்கொடுத்தனரேயல்லது எனக்குக்கொடுத்திலரே. எனக்குக் கட்டளையிட்டிருப்பரேல் உம்மோடு வருவதற்குத் தடை

சிறிதுமிருந்திராதே, எவ்வாறுஉம்மைப்பிரிந்துதனியிருப்பேனென்றனன். தருமராசனும் துரியோதனனைநோக்கி அப்பா துரியோதனா! நீதிநூலாரும் 'தந்தை சொன்மிக்க மந்திரமில்லை.' என்றதறியாயா? ஆகையால் தந்தைசொன்மேற்கொண்டு நான்வாரணாவதஞ் செல்கின்றேன். நீ தந்தைசொற்படி அரசகாரியத்தை நடத்திவரவேண்டுகின்றேன். நானும்போய் நீயும்வரின் அரசகாரியம் செலுத்துபவர்யாவர்? நீயிங்கேயே யிருவென்றுசொல்லி விடைகொண்டுநடந்தனன். துரியோதனன் அன்புடையானைப்போலக் காட்டிப் புரோசனனைத் தனியேயழைத்து நீ இவ்வாதீனத்திற் காத்திருந்தும் 'இலவுகாத்திருந்தகிள்ளை போற் பயன்பெறுதொழிந்தனை.' இப்போது பாண்டுமக்களோடு மிகவன்புடையார்போலக்காட்டி யான் கட்டளையிடுவதுபோல் நடந்துவருதியேல் உன்னைப் பற்றிய வறுமைப்பிணியு மொழிவதன்றிச் சகலமேன்மையுஞ் சித்திக்கும். இது உனக்குநல்லகாலமென்றே எண்ணிவிடென்றுசொல்ல, அதைக்கேட்ட புரோசனனும் இனி நமக்குநல்லகாலஞ் சித்தித்துவிட்டதென்றெண்ணித் துரியோதனனை நோக்கி, நீர் காலாலிட்டவேலையைத் தலையாற் செய்துவருவதன்றிப் பாண்டவருக்கென்போதும் நல்லதோழர் பிறரில்லை. பாம்படிசொல்ல நடந்துவருவேனென்றான். துரியோதனன் புரோசனனைப்பார்த்து நீ அவர்கள் நம்பும்படி நடந்துகொண்டு அரக்கு, பஞ்சு, மெழுக்கு, குங்குலியம், அழிஞ்சில், எண்ணெய் இவற்றைக்கொண்டு ஒருகோட்டையியற்றி அதில் அப்பாண்டவரையும் குடியேற்றி அவர்கள் நித்திரைசெய்கையில் கழுதுகண்படுக்கும் இரவில் நெருப்பிட்டுக்கொல்ல வேண்டுகின்றேன். உனக்குத் தயிரியமுண்டோவென்ன 'பேராசைக்காரனுக்குப் புத்திமட்டு.' என்றபடி நித்தியதரித்திரனாகிய புரோசனன் துரியோதனன் கருத்திற்கிசைந்து அப்பாண்டவருடன் போயினன். இவ்வாறாகப் புரோசனனைத் துரியோதனனழைத்ததும் பின் அவன் தருமராசனைப்போய்ச் சேர்ந்ததும் பார்த்திருந்த விதுரமகாராசன் விரைவாகத் தருமராசனையடைந்து துரியோதனன் என்ன மோசஞ்செய்யவோ காத்திருக்கின்றனன். புரோசனனை நம்பவேண்டாமென்று சொல்லிப் போயினன். தருமராசனோ தம்பியர் நால்வரும் அன்னையாகிய குந்திதேவியும் மந்திரி புரோசனனுஞ்சூழ்ந்துவர அத்தினபுரத்தைக்கடந்து காடு மலை வனம் முதலியவைகளையுங்கடந்து வாரணாவதத்தை நெருங்கினர். இவர்கள் வருகிற செய்தியை அந்நகரமாந்தர்கேட்டுப் பேரானந்தக் கடலின்மூழ்கிப் பூரணகலசமெடுப்பித்துக்கொண்டு மங்கலப்பெண்கள் மங்கலம்பாட, மங்கலவாத்திய முழங்க எதிர்கொண்டழைத்துச் சென்றனர். மந்திரியாகிய புரோசனனும் அந்நகரத்தில் சந்திரவமிசத் தரசருக்கென்றேகட்டப்பட்டிருக்கின்ற பழைய அரண்மனையிற் சகல பதார்த்தங்களையுஞ் சேகரித்து அவ்வரண்மனையில் அவர்களை வசிக்கச்செய்தான்.

இப்படி பாண்டவர்கள் வாரணாவதத்திலிருக்கையில் அத்தினபுரத்திலே துரியோதனனும் சகுனி துர்ச்சாதனன் கர்ணனென்பவருடனே தீர்க்காலோசனைசெய்து அரக்குமாளிகைகட்டத் தீர்மானித்துவிண்ணுலகிலிருக்கும் விச்சுவகர்மாவும் நாணங்கொள்ளச் சிற்பநூல்வல்ல கனகனென்னும் பெயர்

கொண்டு தன்னாதீனத்திலிருக்கும் சிற்பியை வேவுகாரரால்வருவித்து, அவனை யரக்குமாளிகை கட்டிக்கொடுக்க இசைவித்து, வாரணாவதத்துக் கனுப்பி அதற்குவேண்டும்பொருள்களை மந்தணமாகவருவித்துச் செலுத்திப் பெரிய அரசன்கட்டளையால் கட்டுவதென்று யாவருமறியக் கல் சுண்ண முதலிய பொருள்களை வெளிப்படையிற் றருவித்துவிடுத்து, புரோசனன் கழிபெரு வகைபெய்த வச்சிரப்பதக்கம், மதாணிப்பதக்க முதலிய ஆபரணங்களைக் கொடுத்தனுப்பி விரைவின்முடிக்கும்படி இன்சொற்கூறியனுப்பினான். புரோசனன் கனகனென்னுஞ் சிற்பியைக்கொண்டு வாரணாவதத்திற்கருகே விஸ்தீரணமான நிலம் ஏற்படுத்தி அங்குக் குங்கிலியம், அழிஞ்சில், எண்ணெய், அரக்குமுதலியவற்றால் கடைக்காலெழுப்பி முன்னே சுற்றுமதிலை வகைப்படுத்தி விண் மண் பாதலமென்னு மூவுலகத்தவரும் இம்மாளிகை இந்திரனது சபையாகிய சுதர்மமென்றேதான் சொல்லத்தகுமென்றுசொல்லச் சமையற்கட்டு, பள்ளியறை, அத்தாணிமண்டபம், போசனசாலை, திருமஞ்சனச்சாலை, நாடகசாலை, சிங்காரமண்டபம், பரிசனமண்டபம், கழகமண்டபம், பாடல் மண்டபம், வேற்றரசர் மண்டபம், உலாவியன்மண்டபம் முதலியவைகளைப் பொன்னாலியற்றி மணியிற்குயிற்றி மூன்றேமுக்கால் நாழிகைக்குள் வளைந்திருக்கின்ற உண்மதின்முழுதும்வெந்து சாம்பராக அம்மாளிகையின் தென்கீழ்த்திசையில் வர்த்திவைத்து நாற்புறமும் குபீலென்றுபற்றியெழ மருந்துகள்நிரப்பி எல்லாவேலைகளையுமுடித்துச் சிறிது வேலைதீராதிருக்கையில் மந்திரிபுரோசனன் மாளாவகைசிந்தித்து நடுவாயிலில் ஐங்கான் மண்டபமொன்றியற்றி அதினடுக்காலினை யந்தரமாகச்செய்து பார்ப்பவருக்கு நான்குகாலின் மேலும் பளுவிருப்பதாகத் தோன்றச்செய்து அக்காலின்கீழ் இடும்பாவனம் வரையும்போகச் சுரங்கஞ்செய்து மந்திரியாகிய புரோசனனுக் கறிவித்து அவனிடத்தே விடைபெற்று அத்தினபுரத்தையடைந்து அரக்குமாளிகையைக் கட்டிமுடித்த செய்தியனைத்தும் துரியோதனனுக்குணர்த்தித்தன்வீட்டிற்குத் திரும்பினான்.

இச்சிற்பி தன்வீட்டிற்குத் திரும்புகையில் விதுரராசன்கண்டு அப்பா கனகா! நீ வாரணாவதத்தி லென்னவேலை செய்கின்றனை! சிறிதுமொளியாமற் செப்பென்றுகேட்க, கனகனென்னுஞ்சிற்பி இவரோ சத்தியவிரதம்பூண்டவர், இவ்வாதீனத்துக் கதிபதி; இவருக்கு நாம் செய்தவேலையை யொளிப்போமெனின் துரோகமாகமுடியும்; வெளிப்படின் தலைபோவதாய் முடிவதுமன்றி நமது குடும்பத்துடன் வேர்களைந்துவிடநேரும். இதுநிற்க; துரியோதனனே நாம்செய்தவேலையை பிறரறியாதிருக்கவேண்டுமென்றுங் கட்டளையிட்டுமிருக்கின்றனன். நாம் அரசன்கட்டளைப்படி செய்தவேலையில்வரும் பாவபுண்ணியங்கள் அரசனைச்சேருமென்றேயெண்ணிச் செய்துவிட்டோம். பாண்டவர்களோ வெகுசூரர், சத்தியமே ஆபரணமாகப்பூண்டவர், அவர்கள் பொருட்டேனும் மெய்ம்மைகூறாதொழியின் நமக்குப்பாவம்சித்திக்குமென்றுதுணிந்து தன்னைக்கொண்டு துரியோதனன் செய்வித்த வேலைகளையெல்லாம் ஒன்றுமொளியாம லெடுத்துக்கூறினான். அதைக்கேட்ட விதுரராசன் இருசெவி

களையும் பொத்திக்கொண்டு திப்பிரமைகொண்டு அசைவறக்கிடந்து சிறிது நேரஞ்சென்று தன்னறிவுதோன்றி ஐயோ! இதென்னவிந்தையினும்விந்தையாயிருக்கின்றது. புதன்முதல் இதுவரையிலும் புகழ்பூத்தமர்ந்த புண்ணியமரபினை யாவரும்நகைக்கக் காலநேர்ந்துவிட்டதே! பாண்டுமக்கள் இளம்பருவத்திலேயே தந்தையைப்பறிகொடுத்து இங்கேவந்திளவரசுபொறுத்துவாரணாவதஞ் சேர்ந்தும் அங்கேயுமவர்கள் உயிர்க் குலைவைத்திருக்கின்றானே! என்னசெய்வோம்'இதென்னதீவினை!தெய்வமே! தெய்வமே! யென்று கதறி நெட்டுயிர்ப்பெறிந்து இதுதீவினைசெய்ததவமேயல்லது வேறல்லவெனத்துணிந்து அச்சிற்பியினது காலிரண்டினையும்பற்றி வேண்டிக் கோடற்குப்பதிலாக அவனது கரங்களிரண்டினையும் பற்றிக்கொண்டு முகமன்கூறி அவனை இறுகத்தழுவிக்கொண்டு உலகின்கண் ஐங்குரவராவார் ஈன்றெடுத்தோனும், இடர்களைந்தோனும், போதகாசிரியனும், உபதேசஞ்செய்தோனும், தனக்குமூத்தோனுமென் றித்திறத்தர். நீயோ பாண்டவரைவருக்கும் உயிர்க்கிடர்வராமலும், துரியோதனன் கட்டளைக்கு மழிவுவராமலும் ஒருசூழ்ச்சிசெய்வையாயின் அப்பாண்டவர்களுக்கு நாங்களெல்லாம் பிதாக்களன்று, அவர்களை இடரினின்றுங்காக்கு நீயே பிதாவென்று சொல்லப்படுவை. இறந்துபோன பாண்டுராசனும் நீயே பாதியென்று வேண்டிக்கொள்வானாயினான்.

அதைக்கண்ட கனகன் தான்பிறப்பிற் சிற்பியேயாயினும் பெருங்கல்விகேள்வியமைந்தானும் பாண்டவர்பாற் பேரன்புடையனுயு மிருந்தமையால் மனங்கனிந்து விதுரமகாராசனை வணங்கிநின்று நீர் சிறிதுமஞ்சவேண்டாம், நான் துரியோதனன்கட்டளைப்படி அரக்குமாளிகைசெய்தேன். அம்மாளிகை நடுவில் ஐங்கான் மண்டபமியற்றி அம்மண்டபத்தை நாற்காலில் நிறுத்தி நடுக்காலில் நிர்மானுஷ்யமான இடும்பாவனம்வரையிலும்போக ஒருசுரங்கமுஞ் செய்திருக்கின்றேன்; அவ்வரக்குமாளிகை தீப்படுங்காலத்தே வீமராசனுக்கு மாத்திரம் இவ்வுளவுதெரிந்திருக்குமாயின் தப்பியுயிர்பிழைப்பர். இக்கருத்தை நான் வீமராசனுக்குமாத்திரந் தெரிவித்துவிடுகிறேனென்று சொல்ல, விதுரராசன் கேட்டு நடுக்கடலில் திசைதப்பிச் செல்லு மாலுமிக்குத் துறைமுகமொன்று தோன்றினாற்போலக் களிபேருவகையடைந்து அக்கனகனென்னுஞ் சிற்பிக்குவேண்டிய பொருள்களை வெகுமானமாகக் கொடுத்துதவி இவ் விஷயத்தைஒருவரிடத்தேனும் வெளிப்படுத்தா திருக்கவேண்டுமென்று வேண்ட, அவனும் அவ்வாறதற்கிசைந்து விதுரராசனிடத்தே விடைபெற்றுத் தன் வீட்டிற்போய்ச் சேர்ந்தான்.

வாரணாவதத்தில் புரோசனன் தருமராசனிடத்தே பொய்யன்புபாராட்டிப் பேருதவிசெய்வான்போ னடித்துவருவான். தருமராசனோ பிதாவாலனுப்பப் பட்டவனாகையால் பிதாவைப்போலவேபாவித்து அவன் கருத்தின்படி நடப்பதன்றி மற்றைத்தம்பிமார் நால்வரையு மவ்வாறு நடந்துவரவும் கட்டளையிட்டிருந்தனன்.இவ்வாறிருக்கையில் ஒருநாள்புரோசனன் தருமராசனிடத்தே வந்து தாங்கள்வசிப்பதற்கே விநோதமாளிகையொன்று கட்டிவைத்திருக்கின்

றேன், அதிற் சுபகாலத்திற் கிருகப்பிரவேசஞ்செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அதைக்கேட்ட தருமராசன் தன்சபையிலிருக்கும் அருமறையுணர்ந்த அந்தணரைநோக்கிக் கிருகப்பிரவேசத்திற்கோர் சுபதினம் நியமிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அவர்களும் நல்ல சுபமுகூர்த்தமொன்று நியமித்துச்சொல்லினர். அம்முகூர்த்தவேளையில் தருமராசன்முதலிய பாண்டவரைவரும் தாயும் கங்கைநீராடிக் கடவுளர்பெருமானாகிய விச்சுவநாதனையும் அன்னபூரணியையும் அடிவணங்கிப் புதுமாளிகையைப் புண்ணியாவசனஞ்செய்வித்து வேதவேதியர்களுக்குவேண்டியவேண்டியாங்குதவி அதிற் குடிபுகுந்தனர். தருமராசனே அப்புதுமாளிகையின் புதுமையனைத்துங்கண்டு மகிழ்ந்து களிப்பென்னுங் கடலிற்நீளைத்தாடினன். அன்றுமுதற் பாண்டவரைவரும் விருந்தயர்ந் தினிது வீற்றிருந்தனர். புரோசனன் பாண்டவரைவரும் அம்மாளிகையிற் குடிபுகுந்திருப்பதை ஒற்றரால் துரியோதனனுக் கறிவித்தான். துரியோதனனும் கர்னன், சகுனி, துர்ச்சாதனன், சிற்பியாகிய கனகன் இந்நால்வரையும் வருவித்து, தனியிடத்தழைத்துச்சென்று ஐவரும் அரக்குமாளிகையிற் குடிபுகுந்தனராம்! இனி அனலிடுவதற் கேற்றசமயமென்ன? இக்கிருஷ்ணபட்சத் சதுர்த்தசிப்பிரவே யதற்குத்தக்ககாலம், அன்று நள்ளிரவிற் பதினைந்துநாழிகையில் அனலிடுவதே தக்கதென் றிசைந்தனர்; புரோசனன் சதுர்த்தசியை யெதிர்பார்த்திருந்தான். சிற்பநூலில் வல்ல கனகனென்பான் ஒருநாளிரவில் தன்னுருக்கரந்து வறுமையாளர் வடிவங்கொண்டெய்தி வாரணவதத்திலுள்ள அரக்குமாளிகையிற்சென்று வீமனைக்கண்டு வணங்கி நிற்க, அதற்கு வீமராசன் என்னைவணங்கியகாரண மென்னவென்றுவினவ, சிற்பியும் நான் இம்மாளிகைகட்டிய சிற்பியேயாகும், உம்மிடத்தில் ஓர்விண்ணப்பஞ் செய்துகொள்ளவந்தேன். அதாவது, இம்மாளிகையோ அரக்கு, அழிஞ்சில், பஞ்சு, எண்ணெய், மெழுக்கு இவற்றாற் சமைக்கப்பட்டுள்ளது. இதுவோ உங்களைத் துரியோதனன் கொல்லக்குறித்துச்செய்த கபடம். இம்மாளிகையில் நீங்கள் கண்வளர்கையில் இதன்கீழ்த்திசையில்சரவர்த்திவைத்து கிருஷ்ணபட்சத் சதுர்த்தசி நள்ளிரவிற் பதினைந்துநாழிகையிற் றீமூட்டக் காலம் நிச்சயஞ்செய்திருக்கின்றது. உம்பால் பேரன்புடையான்போல் நடிக்கும் மந்திரியாகிய புரோசனன் உயிர்தப்பிப்பிழைக்கத் துரியோதனன் கட்டளையால் ஒரு தந்திரஞ்செய்துவைத்தேன். அதை மனத்திலெண்ணிச்சதுர்த்தசி நள்ளிரவில் அவன் தீயிடுவதற்கு முன்னமே நீங்கள் தப்பித்துக் கொள்ளவேண்டும். உமது பள்ளியறைக்கு நடுவாயலில் ஐங்கான் மண்டபங் கட்டியிருக்கின்றேன். அதினடுக்கால் மிக அந்தரமாயிருக்கும்; அதனை நீருமது மந்தரகிரியன்ன தோளாற்றலாற் பெயர்த்து அக்கம்பமிருந்த பாறையைப் புரட்டிவிடின் அதிற்சுரங்கந்தோன்றும், அதன்வழியேசென்றால் இடும்பாவனம்போய்விடும், நான் விதுரமகாராசன் கட்டளையிட்டபடி சொல்லிவிட்டேன். நான் உமக்குச்சொன்னதை விதுரமகாராசனுக் கறிவிக்கவேண்டுமென்று விடைகேட்க, அக்கனகனை நோக்கித் தங்களுருவரையும் பிழைக்கவெண்ணிச்சொல்லிய பெருங்கருணையைவியந்து, வீமன் பாண்டுராசன் மக்களென்று சொல்

லார்கள். இன்றுமுதல் உமது மக்களேயாமென்று பலவாறு புகழ்ந்து உயிருதவிசெய்த உத்தமனே நான் பூண்டிருக்கின்ற ஆடையாபரணமெல்லாம் கழற்றிக்கொடுக்கின்றேன், பெற்றுக்கொள்ளென்று விடைகொடுத்தனுப்பிவிட்டுக் கனகன் செய்துவைத்திருந்த சூழ்ச்சியை மந்தரமாகப்பரீட்சித்தறிந்து, தன்தாயை அம்மண்டபத்திற்படுக்க நிச்சயித்து இதனைத் தன்தமையன் தம்பியரோடு முறையாமற் புரோசனன்பால் இலக்காகவேயிருந்தான். சதுர்த்தசியும் வந்தது. சதுர்த்தசி என்று வருமென் றெண்ணி மனமகிழ்ச்சியோடிருந்த புரோசனன் விடியற்காலத்திலெழுந்து நீராடி நல்ல ஆடையாபரணமணிந்து தருமராசனையடைந்து மும்முறை வலம்வந்துபணிந்து பேரன்புடையான்போ னடித்து எனக்கு யாதேனுங் கட்டளையிடுவதாயின் விடைதர வேண்டுமென்று வேண்டினான். தருமராசனும்காலகதியால் நாமிந்நகரத்துக்கு வந்தநாள்முதலாக நாட்டைப்பார்த் திருந்தோமேயல்லது காட்டைப்பார்த்தறியோ மாகையால், நாம்காட்டிற்சென்று வேட்டையாடிவரவேண்டுமென்று சொல்லப் புரோசனனும் அக்கணமே வேட்டையாடுவதற்காக முயற்சிபல செய்துமுடித்தான் ஐவருங் காட்டிற்சென்று பெரியவிலங்குகளையெல்லாம் எறிபீட்டி, ஈட்டிமுதலிய படைகளைக்கொண்டு வேட்டையாடிக் கொன்று குவித்து நகரத்துக்குத் திரும்பித் தமதுமாளிகையையடைந்து நீராடி நல்ல ஆபரணமணிந் துண்டுடுத்துப் புரோசனனைநோக்கி நாங்கள்வேட்டையாடியுடன்மெலிந்தோம், நீயிங்கிருந்து காவலைச்செய்தி, நாங்கள் கண்வளர்கின்றோமென்று தருமராசன் சொல்லிவிட்டு தானும் தம்பியரும் பள்ளியறையிற் சென்று துயில்வாராயினர். புரோசனனும் கண்ணுறங்காமற் காவல்செய்து பின்புஅயர்ந்து தூங்கிவிட்டான். வீமன்மாத்திரம்கனகனென்னும்சிற்பி கூறிய கருத்தைநாடிச் சிந்தித்துக் கண்ணுறங்காமல் தீயிடுங்காலம் நெருங்கியதென் றெண்ணியிருந்து புரோசனனைவந்துபார்க்கையில் புரோசனனுக்கு இவ்வுலக வாழ்க்கை நீங்கவேண்டியிருப்பதனால் தான்கிடந்த இடத்தே கண்ணுறங்கினான். அதைக்கண்ட வீமராசன் உள்ளனும் கள்ளனுமாயிருந்து நம்மைச் சதிசெய்யநினைத்திருந்தான்; 'தானொன்றுநினைத்தாற் றெய்வமொன்றுநினைக்கும்' என்றபழமொழிப்படி இவனேதான் தூங்குகின்றான். நாமே சரவர்த்திக்குத் தீயிடுவோமெனத் துணிந்து அட்டிற்சாலையிற்சென்று ஞெகிழிகைக்கொண்டு தென்கீழ்த்திசையில் வைத்திருக்கும் சரவர்த்திக்குத்தீயிட் டோடோடியும் வந்து தருமராசனை பொருபுயத்தினும் தாயை முதுகினும், பற்குனனையொருபுயத்தினும், இருதம்பியரையு மிருகையினுமேந்திக்கொண்டு ஐங்கான்மண்டபத்தி னடுக்காலை யுதைத்துத்தள்ளி, அதனடியிலிருக்கும் பாறையையெடுத்துவிட்டு உட்புகுந்து முன்னேபோலப்பாறையை மூடிவிட்டு விரைவாய் அச்சுரங்கத்தின்வழியே இடும்பாவனஞ்சென்று, அங்கேமூடிய பாறையைத் தலையான் முட்டிக்கிளப்பி, ஐவரையுந்தாங்கிக்கொண்டு வெளியேயடைந்து, சமபூமியிற் றழைகளைப்பரப்பி, அவர்க்கு நித்திரைபங்கம்வராமற் படுக்கவைத்து ஆங்கு வனவிலங்குகள் விசேடமாகையால் தான் கண்ணுறங்கானாய்க் காவல்கொண்டேயிருந்தான். குந்தியும் மற்றைநால்வரும் அயர்ந்து தூங்குகையால் இவ்வளவும் கனவுபோலிருந்தது. இதுநிற்க ;

இங்கே சரவர்த்தியிற் றீயிட்டமாத்திரையானே தீ நெருங்கிச்சூழ்ந்து அம்மாளிகை முழுதும் வளைந்து நீறாக்கிவிட்டது. தன்னைமறந்து தூங்கிய புரோசனனும், துரியோதனன் கட்டளையால் விஷங்கலந்த தேனைக்கொணர்ந்த வனவேடனைவரும், அவனையீன்ற தாயும் துஞ்சினர். வாரணாவதத்திலுள்ளார் யாவருமெழுந்து அம்மாளிகை யெரிவதைக்கண்டு மும்மையாலுலகம்காக்கும் மூவரும் மதிக்குந் திறலினையுடைய ஐவருந் தாயும் ஆவிபோயினரோ! இனி யாமென்செய்வதென் றேங்கியிருந்தனர். சிலர் புரண்டழுதனர். சிலர் திப்பிரமைகொண்டனர். இவ்வாறு துன்பக்கடலிலழுந்தி வைகறையாகவே அத்தினாபுரத்துக் கிச்செய்தியை யறிவிக்கத் தூதரைப்போக்கினர். தூதர்சென்று வீஷ்மர் முதலானோர் புடைசூழக் கொலுவீற்றிருக்குங் கோமகனாகிய துரியோதனனைக்கண்டு அவன்காலில்விழுந்து நிகழ்ந்தசெய்தியை யுணர்த்தினர். அச்சபையிலுள்ளார் பலரும் இச்செய்தியைக்கேட்டு பொருமி மெய்ந்நடுங்கி யுள்ளநெக்குருகிக் கதறினர். இவருடன் துரியோதனனும் சகுனியும் கர்ணனும் பெருங்களியெய்தியிருப்பவரேயாயினும் ஊரொக்க அழத்தொடங்கினர். அவ்வொலி கடலொலியினும் மும்மடங்கதிகமாயிருந்தது. வீஷ்மர், துரோணர், விதுரர், கிருபர், அசுவத்தாமா என்னுமிவர்கள் வீமன் வாயுவம்சத்திற்றோன்றினவனாயிற்றேகனற்கடவுள்காற்றுக்கடவுள்நண்பனாயிருந்தும்பராமுகமாயிருந்தனனே! பற்குனன் சுத்தவீரரிற் சிறந்தானாயும் மிக்கதிறலும்யுத்தியுமுடையானாயிற்றே வில்லெடுக்கக் காலமில்லாவிடினும் ஒருதுரும்பெடுத்தேனும் வருணமந்திரத்தை யுச்சரித்து அக்கனலை யவிக்கவொண்ணாதோ! எனத்தத்தமிற் சொல்லிக்கொண்டனர். வீஷ்மர் இது துரியோதனனால் நிகழ்ந்த சூழ்ச்சியேயல்லது வேறன்று, அதனால் ஐவரைத் துறந்தோமென் றுள்ளவாறுதுணிந்து நிற்ப, விதுரனும் சிற்பிகூறியிருந்த வுறுதிமொழி யுட்கொண்டுள்ளந்தேறியிருந்தனன். பின்னர் யாவருமொருங்கு வாரணாவதஞ்சென்றடைந்து அரக்குமாளிகையைச்சோதிக்கையில் வனவேடனைவென்பையும் அவனையீன்ற வன்னையென்பையும் கண்ணுற்று விதுரன் முன்கொண்டதுணிவிழந்தே வருந்தினன். வீஷ்மர் முதலானோருங் கலங்கினர். துரியோதனன் முதலானோர் காரியம் பலித்தது, நமது சொற்செல்லும் காலநேர்ந்தேவிட்டதென்று அவ் வைவருக்கும் அவனையீன்ற தாய்க்கும் நீர்க்கடன் முதலியனசெய்து நிரப்பி அத்தினாபுரமேவந்துசேர்ந்தனர். துரியோதனன் இனி வருவதுணராமல் அரசுசெய்து வந்தான்.

வாரணாவதச் சருக்கம்

முற்றிற்று.

வேத்திரகீயச்சருக்கம்.

இடும்பாவனத்திலே தமையனும் தம்பியரும் தாயுடன் கண்வளர்ந்திருக்க
வீமன்காவல்கொண்டிருக்கையில், அவ்வனம் இடும்பாசுரனென்னு மரக்கனும்
அவன்தங்கை இடும்பியும் வாழுமிடமாகலின் இடும்பன்இவர்கள் எய்தியதைக்
காற்றுவாடையாற்கண்டு நமது கொடும்பசிக்குத்தக்க வுணவுகிடைத்ததென்று
விரைந்துசென்றான். அவ்வாறுசெல்லுந் தன்முன்னோனையடிபணிந்து யாண்
டிவ்வளவுவிரைந்து செல்வதென்றுவினவ, நமக்கு நெடுநாளாக நரமாமிசங்
கிடைக்கவில்லை, இன்றோ நம்வனத்தின்மானிடருற்றனராகக் காற்றுவாடையா
லுணர்ந்தேன் ; ஆதலால் அங்குச்செல்கின்றே னென்று சொல்ல அதைக்
கேட்ட இடும்பியும் அந்நரமாமிசத்தின்மேல் யானும் விருப்பங்கொண்டேன்,
நீ யிச்சைதவிர்கவென்று தடுத்துத் தான்சென்று வீமன் அதிகநெறிப்பாகக்
காவல்கொண்டிருக்குந் தன்மையையறிந்து, வீமனைக்கண் டாங்கு நாண மட
மச்சம் பயிர்ப்பென்னும் மாதர்க்குரிய நாற்குணமு மொழிந்துகிட்டி யானிவ்
வனங்காக்கும் இடும்பன்தங்கை, என்பே ரிடும்பியென்பர், உமதுபேராற்றலைக்
கண்டு நான் கணவனாகவரித்துக்கொள்ளத் துணிந்தேன், நீர்யார்? உமதூரெது?
பேரெது? இங்குவரக் காரணமென்ன? என்று தேனைப்பழித்த சொற்கொடு
குதலைமொழிபகர, வீமன் அஞ்சாநெஞ்சு படைத்துள்ளானாகலின் சிறிதுமச்ச
மின்றி நீயார்? நீ கங்குற்போதில் தனிவரக்காரணமென்ன? என்றதட்டினான்.
இடும்பியும் இதேது? நாம் வினவியதிற் கெதிர்மொழிபகராது நம்மையேயெதிர்
த்து வினவுகின்றனன். நமது காரியமுடிவதே வீரியம், வீரியங்காட்டத்துணி
யின் நாங்கொண்டகருத் தெத்துணையுமுற்றிலது ; ஆதலின், நாமே விடைபகர்
வதுநலமென்றுசொல்கின்றாள். இலங்காநகருக் கரசனையொப்பானாகியஇடும்பா
சுரனென்போன்இவ்வனங்காப்போன், நான் அவன்தங்கையேயாகும். என்பே
ரும் இடும்பியே, அவன்காற்றுவாடையால் உமதுவரவறிந்துதின்னத் துணிந்து
வந்தனன், நான் அதைத்தடுத்துவந்தேன், உமது பேராற்றலைக்கண்டு மையற்
பிணிகொண்டேன், பையவெனையணைந்து கருத்துமுற்றச் செய்யவேண்டு
மென்றனள். வீமன் அவளைக்கண்டு புன்னகைகொண்டு உன்னாற்றலை நீயே
புகழாநின்றனை, உனக்கு முன்றோன்றிய இடும்பனை இலங்காபுரத்தரசனாகிய
இராவணனுக்கொப்பென்றனை! அவனும் ஓர் நரனாலன்றே யுயிர்துறந்தான்.
ஆதலால், இவனும் அவ்வாறே யென்னால் மரணமெய்துவனென்பதற்கு யாது
தடை! ஆயினும் என்னைமணம்புணரக்கருதுகின்றனை! யானோ மானிடகணம்,
நீயோ அசுரகணமாகையால் கணப்பொருத்தஞ் சிறிதேனுமொவ்வாதே, இக்
கணம் இங்குநின்று மகன்றுவிடு, அன்றேல் உன்னாற்றலைக்காட்ட வெண்ணங்
கொள்வாயெனின் போர்செய்யத்துணியென்று கூறினான்.

இடும்பியும் இதென்ன! நமது கருத்து முற்றுப்பெறுவதாகத் தோன்ற
வில்லையே! என்செய்வதென்றுநாற்றிசையுநோக்கிவருந்த ஓர்பால்குந்தியுடன்
தருமன் முதலியவர்கள் படுத்துறங்குவதைக்கண்டு, இவரொருவரோ யென்

திருந்தோம், இவர் மிகப்பேராற்ற லுடையாராதலின்இவர்கள் இவரைக்காவ லாகக்கொண்டு தாம்அயர்ந்துறங்குகின்றனர். இவர்களைக்கொண்டேனும்நமது கருத்து முற்றுப்பெறுவிப்போமென்று கருதிக்கொண்டிருக்கையில், இடும்பா சுரனே தன்தங்கையாகியஇடும்பிசென்றுவெகுநேரமாயும்வராதிருப்பதுகண்டு விரைந்துவந்து இடும்பி நாணமேற்கொண் டொதுங்கிக்கிடப்பதும் வீமன் மத யானைபோல் இருடார்ந்திருப்பதுங்கண்டு இம்மானிடன் நமது தங்கையைக் கை வசப்படுத்திக்கொள்ளப் பார்க்கின்றனனென்றுகருதி அடடா! நீயென்ன? உன் னூற்றலென்ன? ஏனென்தங்கையைக் கைவசப்படுத்திக்கொள்ளத்துணிந்தனையே! நீயெனக்குப் பலியாவதுபோய்க் கலியாணகாரியமாமுடித்துக்கொள்ளப்போகி ன்றனை, இன்றே விதிகிழிந்ததென் றேங்கிப் புடைத்தான். அதைக்கண்ட வீமன் இவனை விடக்கூடாதென்று தன்கையால் அவ்விடும்பன் பல்லுதிரும் படி யடிக்கவே இடும்பன் வடவைத்தீப்போற்கொதித்து வீமனொடு மற்போர் செய்யத்தொடங்கி யொருவரையொருவர் வாரியெறிவதும்மோதுவதுமாயிருக் கையில், ஐவரும் விழித்துக்கொண்டு நகரத்திற்படுத்திருந்த ஞாபகமேயுடைய ராதலால் திடுக்குற்று மனநடுங்கிநாம் இக்கொடியகானில்வரக் காரணமென்ன? வந்தாங்குவீமன் கூற்றுவனென்னத்தகும் ஒரு வீரனோடு போர்செய்வானே னென்று கனவுபோல எண்ணுகையில் போர்செய்யு மிருவருள் வீமன்மிஞ்சி இத்தனைநேரமா இவ்வரக்கனோடமராவேது? என்றுஇடும்பனைத்தூக்கிகிலத்தி லறைந்து காலைப்பற்றி யிருபிளவாகக் கிழித்தெறிந்து இன்னுமரக்கருளரோ வென்று ஆரவாரித்தான். இடும்பி தன்தமையனிறந்ததைச் சிறிதுமெண்ணு தாளாய் வீமன் பேராற்றலைக்கண்டு வியந்து முன்கொண்ட விரகத்தினும் பதின்மடங் கதிகமாகக்கொண்டு குந்திதேவி பாதத்தை வந்துவணங்கி நின்று தன்கருத்தைத்தெரிவித்து, என்னை அவர் மணப்புணராரேல் நான் தற்கொலை புரியத் துணிவேனென்றாள்.

அதைக்கண்ட குந்திதேவி தருமராசனைநோக்கி இவளை யேற்றுக்கொள் ளத் தம்பி வீமனுக்குக் கட்டளையிடென்றுரைக்க, தருமராசனும் இடும்பி யைப்பார்த்து நீ அசுரச்சாதி அவனோ மானிடன், உங்களிருவருக்குமெவ்வாறு பொருத்தமுண்டாமென்று புகலக்கேட்க, இடும்பியும் நீர் சந்திரவம்மிச சிகா மணியாயிருந்தும் உங்கள் வரலாற்றை யறியாதிருக்கின்றீர். முன்னாளில் உங் கள் மூதாதையாகிய யயாதிமகாராசன் விடபன்மாவென்னும் அசுரராசன்மக ளாகிய சன்மிஷ்டையைக்காந்தருவமணங்கொண்டு பூருவென்னுமரசனைப்பெற் றன்றோ உங்கள் குலவிருத்திசெய்தனன். அசுரருக்கும் மானிடருக்கும் தேக பேதமொன்றேயன்றிச் சுக்கில சுரோணிதபேதம் சிறிதுமின்று. நானே என் னூற்றலைக் கூறுதல் தகுதியல்லவாயினும் யான் திரிகாலமு முணரு முணர்ச்சி யுடையா ளென்பதைத் தெரிவிக்கின்றேன். துரியோதனன் ஐவரையும் அத்தினாபுரத்தினின்றும் வாரணாவதத்திற் கனுப்பியதுமுதல் இடும்பாசுர னிறந்தவரையும் நிகழ்ந்தசெய்தியனைத்து மெடுத்துக்கூறி இனிஎதிர்காலத்தில் நானைவைகறையில் வியாசபகவானையுங் காண்பதாகமுடித்தாள். தன்கருத்தை முற்றுப்பெறுவிக்க வேண்டுமென்று மவள் பெண்ணொன்று பிறந்தாற் கற்

புடைமையுடையராயிருக்கவேண்டும், இப்பெற்றிநோக்கியன்றோ தெய்வப்புல மைத் திருவள்ளுவனாரும் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந் - திண்மையுண் டாகப் பெறின்.' என்றுங்கூறினர் ஆதலால் என்னையெவ்வாறே னும் அவருக்குமணம்புணர்த்தல்நலமென்றுசொல்லிமுடித்தாள் பின்பு அதை யறிந்த தருமராசனும் நீ இக்கற்புடையாளை மணம்புரிவதே நலமென்றுகூற மற் றைத்தம்பியரும் அதுவேகூறிமுடிக்க வீமன் அவ்வாறே 'மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்' என்றபடி தமையன்சொல்லை வேதவாக்கியமாகக்கொண்டு அங்கீகரித்தனன். வைகறையாகவே குந்திதேவியும் தருமராசன்முதலியபாண் டவ ரைவரும் நித்தியகருமமுடிக்க நீர்தேடிப் புறப்பட்டு அங்கோர் சிறந்தநதி தோன்றக்கண்டு அதில்யாவருமிறங்கினர். அந்நதிவியாசபகவானால் நியமிக்கப் பட்டதாகையாலும், அந்நதியிற்கால்வைத்தபோதினும் அவர்கட்கு வியாசபக வான் தரிசனமாவதாக வரந்தந்திருக்கின்றமையாலும், அந்நதியிற் கால்வைத்த மாத்திரத்தே இடும்பிசொல்லியிருந்தபடியே வியாசபகவான் தோன்றினர். உடனே பாண்டவரைவரும் குந்திதேவியும் ஓடோடியும் வந்து அவர்க்குக் கொன்றைத்தழைமுதலியவற்றால்ஆசனம்பரப்பிஅதிலிருக்கவமைத்து சோட சோபசாரஞ்செய்து மும்முறை வலம்வந்து எட்டுறுப்பு நிலமுறப் பணிந்து நின்றனர். வியாசபகவானே பாண்டவரைவருக்கும் ஆசிகூறி குந்திதேவியை யாதரித்துத் தருமராசனைநோக்கி இதுசொல்லலாயினர். அப்பா தருமா! நீவிர் சிறிதுந்துன்பமின்றி யாவரும் அதோவிருக்கும் சாலிகோத்திரமுனிவன் ஆச் சிரமத்தில் சிலநாள்வசித்திருங்கோள், இங்கே நிற்கின்ற இடும்பி மிக்ககற்புடை யாள், அவள் ஒருநாள் இவ்வாற்றினீராடினள். இதுபார்வந்து நீராடினும் அவர் க்கு வேண்டிய வேண்டியாங்குதவ உறுதிமொழி புகன்றிருந்தேம். இவள் நீரா டவே யான் தெரிசனமாக என்னைக்கண்டுவணங்கி நின்றதனால்மிக்கபேராற்ற லும் அவள்வேண்டிய வேண்டியாங்குதவியும் நின்றோம். இடும்பனிலு மிவள் பேராற்றலுடையாளேனும் வீமனைநாடி மயல்கொண்டாள். நீங்கள் மாறுபடா மல் வீமனைக்காந்தருவமணஞ்செய்துகொள்ள நியமித்தலே நலம். இச்சாலி கோத்திர முனிவனாச்சிரமத்தில் சிலநாள்வசித்த பின்னர்வேத்திரகீயத்தில்வசி யுங்கோள், இன்னும் நாமொருமந்திர முபதேசிக்கின்றோம், அம்மந்திரபலத் தால் மறைபவ ருருவமெய்துவிர், எக்காலையில் அது நீங்கக் கருதுவிரோ அப்போது நீங்குமென்று விடைபெற்றுச்சென்றனர். அம்மந்திரோபதேசம் பெற்றபாண்டவரைவரும், குந்தியும் சாலிகோத்திரமுனிவர்ஆச்சிரமஞ்சென்று பன்னகசாலையொன்றியற்றி அதில்வசித்தனர். பின்பு வீமனும் தாய் தமைய னிட்டகட்டளைப்படி இடும்பியைக் காந்தருவமணம்புரிந்து அவளோடு தேன் கனி கிழங்கு முதலியவற்றைத் தாய்க்கும் தமையன் தம்பிமார்களுக்குங் கொடுத்து இரவில் மிக்கநெறிப்புடன் காவல்செய்துகொண்டுவந்தான். இவ் வாறு காத்துவருநாளிற் குந்திதேவி வீமனையழைத்து உன்னைநாடிவந்த இடும் பிக்குக் கருத்து மகிழ்வுறச்செய்யாமல் எங்கள் பாதுகாப்பிலேயே காலங் கழிக்கின்றனை, ஆதலால் இற்றை நாண்முதல் இரவில் காவல்கொண்டு பகலில் இவளுட னின்பநுகர்ந்திருவென்று கட்டளையிட்டாள். அவ்வாறே செய்கின்

றேனென்று அவ்விடும்பியோடு அன்றில்விழைபோகமயர அவள் ஓர் மகனை யீன்றாள். அம்மகனுக்கு கடோர்க்கசனென்று பெயரிடவேண்டுமென்று அசரீரி கூற அவ்வாறே பெயரிட்டு ஆதரித்துவந்தனர். அவன் அரக்கி வயிற்றிற் பிறந்தவனாதலால் பிறந்தவுடனே சிசு பேசும்படி பிரமன் கொடுத்த வரத்தால் தந்தையையும் மற்றைத்தாதையரையும் பிதாமரையும் வணங்கி எனக்கும் என் தாய்க்கும் விடைகொடுங்கள், நாங்கள் இடும்பாவனமேசென்று அம்மான்காணி பாழாயிருப்பதனால் அதனை யரசுசெய்துவருகின்றேன், எந்தக் காலத்தில் என்னை நினைப்பிரோ அப்போதே வருவேனென்றுசொல்ல, அதற்கிசைந்து அவ்விருவருக்கும் விடைகொடுத்தனுப்பிப்பாண்டவரைவரும் குந்திதேவியும் வேதமருமங்களையும் சில மந்திரங்களையும் சாலிகோத்திர முனிவரிடத்தே பெற்றுக்கொண்டு அவரிடத்தில் விடைபெற்று வியாசபகவான் கூறிய மந்திரமுச்சரித்து அந்தணர்வடிவங்கொண்டு வேத்திரகீயத்திற் சென்றனர்.

அவ்வக்கிராரத்தி லிருக்கும் அந்தணர் அதிதியரைக்காணின் ஒப்புயர்விகந்த அருட்பெருங்கடலேபோலக் கருதுமியல்பினராதலின், பாண்டவரைவரையும் அவர் தாயையும் அன்போடெதிர்ந் துபசரிக்க அவர்கள் அவ்வக்கிராரத்திற் குடிபுகுந்திருந்தனர். அதில் முதிர்ந்தவயதுடையராயும் வேதாகமங்களில் மிகத் தேர்ச்சியுடையராயும் ஓரே புத்திரப்பேறுடையவராயு மிருந்த அந்தணரொருவர் இவர்களைத் தமதில்லத்திருத்தி அவர்களைப் பாதுகாத்துவந்தனர். பாண்டவரும் அவரைத் தந்தைபோற் கருதி, அவரில்லத்திற்புக் கினிதிருந்தனர். இவ்வாறிருக்கையில் அந்நகரத்து அந்தணரெல்லாரும் ஏகசக்கர வனத்திலிருக்கும் பகாசுரனுக்கு ஐம்பதேர் கட்டிய வண்டியில் நிறையச் சோறும், அதற்குத்தக்க காய்கறிகளும், நெய், தயிர், பால் முதலியவும், பலகாரவகைகளும் அனுப்புவதன்றி ஒரு சிறுவனையும் அனுப்ப, அப்பகாசுரன் அச்சோறு முதலியவற்றை யுண்டு அம்மகனையு மருந்துவதுவழக்கம். அம்முறை இவர்களைப் பாதுகாக்கு மந்தணருக்குவந்தது. அவ்வந்தணனோ ஓரேமைந்தனையுடையான். அவன் மனைவி நமது மகனைப் பகனுக்குப் பலிகொடுக்கப்போகின்றோமே! யாது செய்வதென்று கண்ணீர்விட்டுக் கதறியழுதாள். அவ்வழுகுரலோசையைக் கேட்ட குந்திதேவி அப்பார்ப்பினிபாற் சென்று வார்த்தை சொல்லி வருவோமென்றுட்புகுந்து நாங்கள் வந்தநாள்முதலாக நீங்கள் இவ்வாறு வருந்தக்கண்டதில்லையே! இன்று வருந்துங் காரணமென்ன? சிறிது மொளியாமற் கூறவேண்டுமென்ன, அதற் கப்பார்ப்பினி தன் விருத்தாந்த முழுது முரைத்தனள். அதைக்கேட்ட குந்திதேவி இப்பார்ப்பினிசொல்லிய துயரம்போல் எங்குங்கேட்டதில்லையே. நாம்கேட்டும் உபகாரஞ்செய்யாமற் போவோமெனின் நன்மையுமன்றென்று துணிந்து அப்பார்ப்பினியை நோக்கி அன்னாய்! எனக்கோ ஐவர்மக்களுளர், அவருளொருவனை யனுப்புகின்றேன், நீ கவலைப்படவேண்டாம், நீவழக்கப்படி அப்பகனுக்கு உணவுமுதலியவை சமைக்க முயலென்றனள். அதற் கப்பார்ப்பனி நீ என்மகன்பொருட்டு உன் மகனைத்தருகின்றேனென்பது தகுதியோ, எத்தனை மக்கட்பேறு பெற்றிருந்தும் பின்னும் பெறவேண்டுமென்றன்றோ உலகத்தார் விரும்புவர். அதை

யொழித்து எனக்கு மகனை யுதவுகின்றேனென்றனையே இதுவுந்தக்க கருமமா? என்றனள். அதைக்கேட்ட குந்திதேவி நீசிறிதுங் கவலையெய்தாதொழி. நான் என்மக்கள்ஐவருள் கருநிறத்தொடு பேராற்றலையுடைய மைந்தனையனுப்புகின்றேன், அவனால் அப்பகன்இறந்துபடுவான், இது திண்ணமென்றனள். அவனிறந்துபடானேல் இது காலகதியாமென் றுள்ளந்துணிவே னென்றனள். அப்பார்ப்பினி குந்திதேவியின் மனத்துணிவை 'அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சிற் - கடுத்தது காட்டு முகம்.' என்றபடி முகக்குறியாலுணர்ந்து அவ்வாறே யனுப்புகவென்றிசைந்து, சமையல்செய்யத் தன்சுற்றத்தவரை வருவித்தாள். அவர்களும்வந்துசேர்ந்து அட்டிற்சாலைபுகுந்து சோறுகறி முதலியவற்றைச்சமைத்தனர். இதற்குள் நீராடச்சென்ற கணவன்வர அவ்வந்தணனிடத்தே தான் அழுததும் அவ்வழுகுரலோசையைக்கேட்டுக் குந்திதேவி வந்ததும் அவள்சொன்னது முதலியவனைத்து மொன்றுமொழியாமற்சொல்ல, அதைக்கேட்ட அந்தணன் நல்லது நடக்கின்றபடியே நடக்கட்டுமென்று சொல்லியிருந்தான்.

இப்பால் குந்தி பார்ப்பினியிடத்துச்சொல்லிவிடைபெற்றுத்தன்மக்கள்பாற் சென்று தருமராசனைநோக்கி நம்மையாதரித்துவரும் அந்தணன்வீட்டிற்சென்றேன்; அவ்வந்தணன்மனைவி அவ்வழுகுரலோசைகேட்டு நீபழக்காரணமென்னவென்றேன். அதற்கவள் இவ்வக்கிராரத்துள்ள அந்தணர் முந்நூறுவீட்டுக்காரர்; அவர்கள் வசிப்பதனால் இதற்கு முந்நூற்று மங்கலமென்று பெயர் கூறுவர். இவ்வேத்திரகீயத்திலுள்ளா ரனைவரையும் இதையடுத்த ஏகசக்கிரவனத்திலுள்ள பகனென்னும் அசுரனொருவனுக்கு தினந்தோறும் ஒருநரபலியும் ஐம்பதுவண்டி உணவும் அதற்குத்தக்க காய்கறிகளும் உண்ண அனுப்புவது வழக்கம், இன்றைறு எங்கள்முறையென்றனள். நானோ நீவருந்தாதொழி, என் மகனை யனுப்புகின்றேனென்று சொல்லிவந்தேன், என்வாக்குப்பழுதாகாவண்ணம் உன் தம்பி வீமனை யனுப்பவேண்டுமென்று கூறினாள். அதைக்கேட்ட தருமராசன் அம்மா நீ வாக்குத்தத்தஞ்செய்தது தகுதியே, அதற்கு வீமனை யனுப்பென்று சொல்வதுமாத்திர மெனக்கு நாவெழவில்லை. ஏனெனின் நம்மைக்கொல்ல வெத்தனித்துத் துரியோதனன் அரக்குமாளிகை கட்டி நம்மை நீறுக்கத்துணிந்ததையறிந்து தான் அதினின்றும் விடுவித்து நம்மைக்காத்த போது கூற்றுவன்போலும் இடும்பன்வந்தான், அவனையுங்கொன்று கூற்றுவனுலகஞ்சேர்த்து நமக்குயிருதவிசெய்த உத்தமனை நாமே கொலைக்களத்திற் கனுப்புவது தகுதியல்லவே! என்று மனமுருகிக்கூறினார். அதற்குத் தாயாகிய குந்தியும் நீயோ ஒன்றரைவருஷத்துக் குழந்தையாயிருக்கையில் தம்பி வீமன் அரைவருஷத்துக் குழந்தையா யிருந்தான். நானும் உன்தந்தையும் உன் சிறியதாயாகிய மத்திரியும் காட்டில் வசித்திருந்தோம். அப்படி வசிக்கையில் ஒருநாள் நாங்கள் மலையேறிப்போகையில் ஒருசிங்கம் இடிமுழக்கமாறும்படி கர்ச்சித்துக்கொண் டெதிரேவந்தது. உன்தந்தையும் நானும் பயந்தோம். என்கையில் தம்பி வீமன்மாத்திரமிருந்தான். நான்கண்டு நடுக்கங்கொண்டமையால், தம்பி வீமன் என்கையினின்றுந் தவறிவீழ்ந்தான். விழுந்த

விடத்தில் ஒரு பெருங் கற்பாறையிருந்தது, அப்பாறை இவன் பாரம்பொறுக்காமல் பிளந்து நொய்யாய் நொறுங்கிற்று. இவன் விழுந்த சத்தத்தினால் அச்சிங்கம் நடுநடுங்கி விரிட்டோடிப்போய்விட்டது. நானும் உன் தந்தையும் கைநெறித்துக்கொண்டு மஞ்சனிறந்தானேவென்றெண்ணி யோடிவந்துபார்த்தோம். இவனே தொட்டிலில் விளையாடிக்கொண்டிருப்பதுபோற் கைகாலசைத்து விளையாடிக்கொண்டிருந்தான். உடனே நாங்கள் வாரியெடுத்து இறுகத்தழுவி முகத்தோடு முகமணைத்து முத்தமிட்டோம். ஆதலால், உன் தம்பி பலவானென்பதிற் சிறிதேனுமையமில்லை. அன்று இடும்பனுக்கு நடந்த கதியைப்பார்த்தும் இன்னுஞ்சிந்திக்கவேண்டிய தென்னவிருக்கின்றது.வீமனை யனுப்பு, பகனைக்கொன்றே வருவானென்றனள். தருமராசனே மனந்தேறி வீமனைப்பார்க்க, வீமன் எப்போது தமையன் வாக்கினின்றும் கட்டளைபிறக்கப்போகின்றதென்று காத்திருந்தவனாகையால் விரைந்து தருமராசனை வணங்கினன். அதைக்கண்ட தருமராசன் வீமனைநோக்கி நீசென்று பகனைக்கொன்று புகழ்கொண்டுவருதியென்றனன்.வீமனே தாய் தமையன் தம்பியரை அகன்று அந்தணரை வணங்கி நின்று பகாசுரனுக்கு விருந்திடுவதின்றுதானே! இன்னந் தாமசமென்ன? எனக்குச் சோறிட்டு விரைந்தனுப்புங்களென்று சொல்ல, அதைக்கண்ட அவ்வந்தணன் இக்கருநிறத்துச் சிறுவன் அப்பகனுக்கெமனுவானெனத் துணிந்து ஆசிர்வதித்துநீராட்டி நறுமலர்மாலை ஆடை ஆபரணம் புனைவித்து மனமகிழப் பலகாரவகையுடன் அறுசுவையுண்டியுண்பித்துச் சந்தனம் கர்ப்பூரம் புனுகு கஸ்தூரி சவாதுமுதலியசுகந்தமளித்தான், வீமன் அணிந்து அடைகாய் கொடுக்கப்பெற்று ஐம்பதுஏர் எருமைக்கடாக்களைப்பூட்டிச் சோறு கறிகாய்கள் தயிர்க்குடங்கள் நெய்க்குடங்கள் நிரப்பிய வண்டியி லேறிக்கொண்டு தாய் தமையன் தம்பியர் அந்தணன் முதலானோரிடத்தே மிகமகிழ்ச்சியாக விடைபெற்றுச்சென்றான். இவன்செல்கையில் அந்நகரத்தந்தணர் சிறுபறைமுழக்குவித்து வீமனைச்சூழச் சென்று நகர்ப்புறம் வரையிலும் வழிவிட்டுத் திரும்பிப்போயினர்.

வீமனே அவ்வண்டியை யோட்டிக்கொண்டு ஒருமலைபடிவாரத்தில்வந்து நமக்கோ பசிமேலிடுகின்றது, வெண்ணெயைவைத்துக்கொண்டு நெய்க்கழுவானேன்? உதவிபற்றஅரக்கனுக்கு நாமாசோறுகொண்டுசெல்வது? இவ்வண்டியிலுள்ளசோறோ அமுதம்போல் நன்றாயிருக்கின்றது. நாமேஇனிதுநுகர்ந்து பின்னர் அப்பகனெங்கே யிருக்கின்றானோ ஒருகை பார்ப்போமென்று துணிந்து வண்டியினின்றிமிலேறிப்பார்க்க, அப்பகனிருப்பதற்கோரோசனையிருக்கக்கண்டு நாம்இனித்தாமசிக்கக்கூடாதென்று நினைத்து,இவனமக்கெவ்வளவென்று அவ்வைம்பதேர் எருமைக்கடாக்களையும் துரத்திவிட்டு,ஆற்றங்காலோரமாக வண்டியை யிழுத்துத்தள்ளி அவ்வண்டியிலுள்ள சோறு கறிகாய் பதார்த்தங்களையும் மூன்றுண்டையாக்கி இரண்டுண்டைகளையுண்டு எஞ்சிய உண்டையை புண்ணத்தொடங்கினன். அச்சமையத்தில் இன்று இத்தனைநேரமாயும் நமக்கு உணவு வரவில்லையேயென்று வழிபார்த்துக்கொண்டிருக்கும் பகாசுரன் அன்னம் வாராமையைநோக்கி ஐயுற்று வண்டிவரும் வழியைநோக்கிவருகையில்,

தனக்கு உணவுவரும் வண்டியில் ஒன்றுமில்லாம லிருக்கக்கண்டு இதென்ன விந்தையென்று நாற்றிசையும் பார்க்க ஒருதிசையில் தனக்குவந்த சோற்றை விழுங்கிக்கொண்டிருந்த வீமனைக்கண்டு நமது பேரைக்கேட்டால் நமனும் நாணிக்கொண்டிறந்துபடுவனே ! அவ்வாறிருக்க இவ்வந்தணச்சிறுவனோ சிறிது நெஞ்சந்துளங்காமல் நமக்குக்கொணர்ந்த உணவைச் சாப்பிடுகின்றான். இவனுக்கு விதிகிழிந்ததென்று துணிந்து கோபங்கொண்டு தன்கையாலோங்கி யோரறையறைந்தான்.பகனுக்குக் கொணர்ந்த வுணவை யுண்டுகொண்டிருந்த வீமனோ சிறிதுமஞ்சாமல் அவ்வன்னம் அத்தனையும் நுகர்ந்து நீரருந்தி வாய் கை பூசிக்கொண் டிறுமாப்போடும் அவனெதிரே சென்றான். அதைக்கண்ட பகனோ இவன் பார்ப்பானாயின் நாமறைந்த அறைக்கு மண்ணைக்கவ்விக்கொண் டிறப்பனே ! இவன் பார்ப்பானேயன்று. நாமறைந்தும் சிறிதும் அஞ்சாநெஞ்சு படைத்துநிற்கின்றான்.இவனைமென்று தின்றுவிடுவோமென் றுருக்கிப்பார்த்து, புலிக்குரிய உணவைப் பூனையும் புசிக்கப்போமா? புசித்தாலுமடுக்குமா? என்னைச் சிறிதேனும் மதிக்காமல் இவ்வாறு செய்துவிட்டனையே ! சிச்சீ ! உன்னை இமையளவிலே இரையாக்கிக் கொள்வேனென்று தோளொடு தோள்தட்டி யார்த்தான்.

அதற்கு வீமன் சிறிதேனும் நெஞ்சந்துளங்கானாய் அடா பகனே ? நீ இடும்பனென்பவனை யறிந்திராயா ! அவன்பேராற்றலையு மறிந்திருப்பாயன்றோ! ஒரு முகூர்த்தகாலத்தில் அவனை வைவசுவத நகரத்துக்கனுப்பினேன், ஆதலால் சாதாரண மானிடனென்று அலட்சியமாகக் கொள்ளாமலிரு. உனக்கு வந்தவுணவை நானொருவனே யுண்டு,இன்னம் பசிப்பிணியால் வருந்துவதனால் என்னைச்சாதாரண மானிடனாகக் கொள்ளப்போமா ? இன்னும் ஒரு நீதியான மொழியைச்சொல்வேன். அதாவது நீ இன்றுமுதல் இவ்வந்தணருண்டிக் கெதிர் நோக்குவதுவிட்டு எங்கேயேனும் வனசஞ்சாரியா யிருந்துவிடுவதற்காக இங்கு நின் றோடிப்போய்விடு. அப்படியன்றேல் என்னுடன் ஒரு கைபாரென்று தோளொடுதோள்தட்டி யாரவாரித்து எதிர்நின்றுசொல்ல,பகனும் மிக்கசினங் கொண்டு கண்கள் வடவைத்தீப்போற் கனல்சொரிய மரம் மலை முதலியவற்றைப் பிடுங்கிப் போர்செய்தான். வீமனும் பின்வாங்காமல் அவனோடு மரமலைகளைப் பிடுங்கிப்போர்செய்து முடிவில் மற்போர் புரிந்து தனக்கு வெற்றி வருங் காலநேர்ந்தமையாலும், நாகலோகத்தில் விஷாமிர்தமுண்ட வல்லமையாலும், அப்பகனைத்தேவரும் நாணுக்கொள்ளவார்த்து அவனுயிரை வானுலகேற்றி யுடலை யங்கிருந்த வண்டியிலேற்றி அவ்வண்டியை மயானத்திலிழுத்து வந்து உலர்ந்த மரங்களை அப்பிணத்தின்மேலடுக்கி நெருப்பிட்டு நீறாக்கித்தான் ஆற்றிற்சென்று மஞ்சனமாடித் திரும்பினான். இங்கே அக்கிராரத்திலுள்ளாரனைவரும், முன்னமோ ஐம்பதேருமைக்கடாக்களும் வந்துவிட்டன, இத்தனைநாளும் அவ்வாறு வந்தில, இங்குநின்றும்போன மறையோன் எங்கேயோ தூங்குகின்றான்போலும் ; அல்லது பகாசுரனைக்கண்டு நடுங்கி மாட்டையவிழ்த்து வண்டியைக்காட்டகத்தே விடுத்து எங்கே யோடியொளித்தானோ ! இனி அரைக்கணமேனுந் தாமசியாமல் பகன்வந்துவிடுவனே என்செய்வோமென்

றேங்கிக் கைகொரித்துக்கொண்டு இது சொல்வாராயினர். இதென்னவிந்தை! யார்தான் பிறர்பொருட்டுத் தன்னுயிர்விடத்துணிவர். இனி வேத்திரகீயம் பாழாக்கத்துணிந்தே இவ்வந்தண னிவ்வாறு செய்துவிட்டானென்று கோட்டி கொண்டழுதனர்.

இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கிற சமயத்தில் வீமன் தான் அவனைக் கொன்றதற்காக மலரோடையின் மூழ்க சூரியனும் தானும் அரக்கனைத்தடிந்து மேற்கடலிலாழ்ந்தான். பின்பு வாசமுள்ள நெய்விளக்கும் மணிவிளக்கு மெடுக்கத் தாங்கள் வசிக்கும் மனையினுட்புகுந்து உமையும் ஈசனுமென்ன மெய்த்தவம் புரியும் அந்தணுளனையும் பார்ப்பினியையும் வணங்கித் தன் தாயையும் தமையனையும் மும்முறை வணங்கிநிற்க, தன்னை வணங்குகின்ற தம்பியர் மூவரையும் தழுவினன். அதுகாலையில் மனமகிழ்ந்து முனிவன் ஆசீர் வசனஞ்செய்யவும், தாயாகிய குந்திதேவி பொருந்த நல்லுரைசொல்லவும், முகமலர்ந்து தம்பியரும் தமையனும் அவனது வெற்றியை யெடுத்துச்சொல்ல வும்,மற்றை அந்தணரெல்லாம் சகம்பூத்த திருவுந்தியையுடைய திருமாலேகா ணிவனென்று நீரோடையின்கண் யாவருங்கூடிக் கூறவுமிருந்தான்.

வேத்திரகீயச்சருக்கம்

முற்றிற்று.

துரோபதியை மாலையிட்டசருக்கம்.

இங்கே பாண்டவரைவரும் குந்திதேவியுடன் அவ்வேத்திரகீயத்தில்வசித் துக்கொண் டிருக்கையில், அழகிய இடமகன்ற உலகமெல்லாம் அரக்கு மாளிகையில் குற்றமற்ற குணத்தான்மிகுந்த பாண்டவரைவரும் மாண்டன ரென்று யாவருஞ் சொல்லப் பாஞ்சாலராசனே தன் மகளாகிய பாஞ்சாலி வரத்தாற் பிறந்தமையும்,அசரீரியும் நெடுமொழிகூறியமையும்,தலையால்வணங் கிக்கேட்கத் தன்குருவாகிய உலூகமுனிவன் சொன்னவிதமும், மிக்கபேராற் றலையுடைய பாண்டவரைவரும் கெடாதவிதமும் அறிந்து, இன்னும்தன்மகள் வில்லிற்சிறந்த பற்குனனுக்கே யுரியாளென்று வண்டுக ளிசைபாடுகின்ற மலர் மாலையணிந்த அரசர்களுக்கெல்லாம் மணவோலைபோக்கிநிற்ப, மான்போலும் மருண்ட பார்வையையுடைய துரோபதிக்கு நியமித்த விவாக தினத்தை நினைத்து, மலரும் பூவொன்றை வண்டுகள்வந்து மொய்த்தாற்போலும் பாஞ் சாலராசனது நகரத்தை அரசர்சேனை திரண்டுமொய்த்தன. இவ்வாறு அரச ரெல்லாம் வந்து நெருங்கியகாலத்தில்,இச்செய்தியை அந்தணர்பெருமா னொரு வன் பாண்டவரைவருக்கு மறிவிக்க அதையறிந்த பாண்டவரைவரும் தாயும் கேட்டுத்தம்பால்பேரன்புடையாராகி அப்பதியில்வாழ்கின்ற பார்ப்பாருடன் காடுமலை வனம் வனந்தரங்கடந்து செல்லுகையில், நான்கு வேதங்களையும் பாரதத்தோ டைந்தாகத் திருவாய்மலர்ந்து நாரதபகவானே டொப்புமை கூறப்பட்ட வாதராயணராகிய வியாசபகவான் இவர்கள் செல்லுமார்க்கத்தில்

எதிர்தோன்றவே, உடனே அவனை துதித்து வணங்கினின்றனர். அதைக் கண்ட வியாசபகவான் அவர்களை யாசீர்வதித்து வாழ்வெய்துவீர்; உங்களைட் புப்பெறவேண்டியே யாகசேனனுகிய பாஞ்சாலன் பல நற்றவஞ்செய்து யாகத் தில் துரோபதியைப்பெற்றான். அம்மாதரசோ உங்களையே மணமாலைசூட்டு வள். ஆதலால் இப்பகலுமிரவும் எங்குந்தங்காமலே அங்கடைந்துஅவளை மன் றல்பெறுதல் ஆண்மையென்றுசொல்லி மறைந்துபோகப் பாண்டவரும் பற் குனன்கையிற்பிடித்துச்செல்லும் அரணிகடைந்த தீவிளக்கினெறியே கடைப் பிடித்துச்சென்றனர். அவர்கள் கங்கைப்பூந்துறையில் அன்றிரவில் வழிநடக் கையில் வித்தியாதரர்க் கரசனுகிய சித்திரசேனன் மூவுலகினையும் வெற்றி கொண்டு தான் சிங்காரவனமொன்று அக்கங்கைக்கரையி லமைத்துத் தன் மனைவியரோடும் அக்கங்கையில் சலக்கிரீடை செய்துகொண் டிருந்தான். அச்சிங்காரவனத்தைத்தேவர்களும் பூவுலகிலுள்ள அரசரும்பார்க்க அஞ்சு வர். அப்படிப்பட்ட சிங்காரவனம் அக்கங்கைக்கரையி லிருக்கப் பாண்டவ ரைவரும் தாயும் காணுராகி யிரவில் நடந்தனர். இவ்வாறு நடக்கையில் தனஞ் செயன் முன்செல்பவ னுதலால் அவன் தன்கண்முன் ஒருவேலி தோன்றக் கண்டு, இதனைக்கடந்தாலும் நியாய விரோதம், இவ்வேலிக்கு முதலுங் கடை யுந்தோன்றவில்லை, தருமநூலில் தண்ணீர்ப்பந்தல் சத்திரம் கோயில் திருக் குளம் நதி இவைகள் ஒருவராதீனமே யன்று, அதிலும் இது சிறந்தநதி; இந் நதியைச் சேர்த்தோ வேலியிட்டிருக்கின்றது, இதுவோ நீதிக்கு விரோதம், யாரோ கர்வங்கொண்டு வேலியிட்டிருக்கின்றனர்; இதைக்கடப்பதோ சிறிதுங் குற்றமில்லையென்று அவ்வேலியைத் தாண்டவே ஐவருந் தாண்டிச்சென் றனர். அவன் மனைவியர் மனிதரரவங்கண்டு திடுக்கிட்டுத் தம்மாடையை யுடுத்திக்கொண்டனர். சித்திரசேனனே மிக்க சினங்கொண்டு கணையேவிப் போர்க்கோலங்கொண்டு சிறிதும்பயமின்றி என்வனத்தில் நடப்பவன் ஆரென் றதட்டி, நீங்கள் பார்ப்பாராதலால் பின்புத்தியால் வந்தீர்கள். உங்களுக் கின் றோடே விதிகழிந்ததென்று சொல்ல, தருமராசன் முதலியோர் பேசாதிருந்த னர். தனஞ்செயனுகிய அர்ச்சுனன் அவனைநோக்கிநீ தருமவிரோதஞ் செய் தமையால் தண்டிக்கவேண்டுமென்று போர்செய்யத் தொடங்கி தன்கையி லிருந்த தீக்கடைக்கோலையே பாணமாகக் கொண்டு அச்சித்திரசேனனை இமைப்போதையிற் சின்னபின்னமாக்கவே, அவன் தோற்று விசயனை நட்புக் கொண்டு அவன் துணையாய்வரக் கடக்கரிதாகிய ஆறு மலை வனமுதலிய வற்றைக் கடந்துசென்று, கசதீரத்தில் தௌமியாசாரியரைக்கண்டு வணங்கி, அவரைப் புரோகிதராகக் கொண்டு சென்றனர். அவ்வாறு செல்கையில் பகலவனுல் மலர்ந்த கமலமலரொன்றைப் பாங்கரிருந்து பலவண்டினம்பாடிச் சூழ,ஒருவண்டு உட்சென்று அம்மலர்த்தேனைக் கொண்டுண்டு களிபெருமகிழ் வெய்திச் சிறத்தலைக்கண்டு இது நல்லதோர் நிமித்தமாமென்று தெரிந்தும், ஒருபுறத்தே அத்துறையின் பாங்கர் ஒருதேமாவின் கனிவீழ, அப்பொய்கையி லுள்ள மீன்களெல்லாம் அதைத்தத்தமக் கிரையாமென்றடைய,விண்கிழியச் சென்றோடிய வாளைமீனென்று அக்கனியைத் தன்வாயிற்பெய்து கொண்டு

நின்றகுறிப்பைத் தமக்கு நல்லசகுனமென்றும் எண்ணினர். ஒரு புறத்தே பாஞ்சாலியின் திருமணத்தழகுகாண உரலேபோலு மடியையுடைய யானை யைச் சேனையாகவுடைய அரசரெல்லாம் திரண்டுமொய்த்தனர், நீங்களும் விரைவாக வம்மினென் றழைப்பதுபோலக் குயில்கள் கூவவும், இனிக் காலநீட்டிப்பது தகுதியன்று பாஞ்சாலி இவரை மணம்புரிவது திண்ணம், அர சரோ குறைபொறுக்காமல் ஓட்டெடுப்பது மெய்மையென்று தோகைகள் ஓகையாய் நடனஞ்செய்யவும் பார்த்துக்கொண்டே சிருட்டியிற்றோன்றியும், திதியில்வளர்ந்தும்மடங்கியகாலத்தேமீளச்செல்லும்,நிலையியற்பொருளும்நிலை யில்பொருளுமாகிய எல்லாப்பொருள்களும் திருமாமகள் கணவன் வாயிற் புகுந்தடங்கிய திருவயிறேபோலத் தோன்றும் அந்தப் பாஞ்சால நகரத்தைக் கண்டனர். அந்நகரத்திலிருக்கும் வீதிகளே காதளவோடிய கயற்கண்ணையும் புன்னகையையும் கொவ்வைக்கனிபோலும் செவ்வாயையும் பூணணிந்த தன பாரத்தையுமுடைய பாஞ்சாலிக் கின்றுதான்வதுவைநாளென அழகியகொடிக ளாகிய கைகளை யுயரநீட்டிக்காட்டி வாருங்கோளென் றழைப்பனபோன்று விளங்கப் பாண்டவரைவரும் தாயும் செல்வங்குடிகொண்ட அரசர்வீதியிற் செல்லாது சிங்கம் பசுவின்றோல்போர்த்த கொள்கையேபோலக் குலால னொருவனது வீட்டிற்சென்று சேர்ந்து தாயை அங்கே நிறுத்திவிட்டுத் தாம் முன்னே தமக்குத் துணையாக வந்த அந்தணரோடும் பலஅரசர் திரண்டு மொய்த்துக்கொண்டிருக்கும்அத்தாணிமண்டபமே யடைந்தனர். இதுகிடக்க;

பாஞ்சாலியோ ஆதியில் குந்திமக்களாகிய பாண்டவரைவர்க்கு முரியவ ளென்றே சொல்லும் விதியால் மனமாழ்காமல் மகிழ்ச்சியுடையாளாயினும், அவர்கள் அரக்குமாளிகையில் இறந்துபட்டனரென்று சொல்லும் வதந்திகேட் டுத்தளரதன்னுயிர்ப் பாங்கிமார் சோதிடம் பொய்யாது இனிப்பாண்டவரைவ ரும் வெளிப்படுவரென்று தேற்றவிருந்தனள். பின்னும் பாஞ்சாலி தான்வேள் வித்தீயிற்பிறந்தபோது யன்பினாலே என்தந்தையாகிய பாஞ்சாலன் இன்னா ருக்கே இவள் மனைவாழ்க்கைக் குரியாளென்று நியமித்த அரசிளங்குமரன் இவ்வரசவையிற்றோன்றி என்னைத்தீமுன்னர் மன்றலயரானெனின் மீண்டும் யான்தோன்றிய தீயிலேயே புகுவேனென்னும் சிந்தையுடையாளாயிருக்க, அவளைஉயிர்ப்பாங்கியர் பலருங்கூடி கங்கைமுதலிய புண்ணியதீர்த்தங்களால் மங்கலநீரா மரபினாட்டி யாடையையுடுத்தி ஆபரணங்களைப் பூட்டி அரசவை யிற்கொணர்ந்தனர். அவ்வாறு கொணரக்கண்ட பாஞ்சாலியைவீரக்கழலைத்தரி த்த பாதங்களையும் படையேந்திய கையையுமுடைய அரசரெல்லாந்திரண்டு கண்டு,கரும்புவில்லினையுடையமன்மதனுடைய பஞ்சபாணங்களால் வருந்தித் தீயிற்பட்ட இழுதேபோலச் சிந்தைநைந் துருகி,மனத்தின்கண் கடுங்காதல் விம்மவும் மலர்மாலையணிந்த தோள்கள்வாடவும் ஒருபொருளையெனக்கெனக் கென்று தனியே கருதுவார்போன்று எனக்கெனக்கென்று தனியே கருதி யேமாந்திருந்த அரசவையைப்பார்த்து அங்குநின்றிருந்த பாஞ்சாலராசகுமா ரனாகிய திஷ்டத்துய்மன் நினைக்கவு மரிதாகிய ஒரு காரியத்தைச் சொல்வா னாயினன். அரசர்களே! வில்லிது,பாணங்களிவை;இடைவிடாமற் சுழல்கின்ற

யந்திரத்திகிரியிது, இப்படிசலத்திற் றேன்றுங் குறியைப்பார்த்துச் சுழல்கின்ற யந்திரத்திகிரியின் வழியாய்ப் பாணங்களைச்செலுத்தி முன்னே மச்சத்தை யறுத்து பின்பு சக்கரத்தைக்கொய்து இரண்டையும் நிலத்தேவிழாமற் பாண ங்களாலேந்திக் கைக்கொண்டு வருபவர் யாவரோ அவரையே என்தங்கை யாகிய துரோபதி மணமாலை சூட்டுவளென்றுசொல்ல, அச்சொல்லைத் தமது காதில் இடியேற்றேசைகேட்ட நாகமேபோல வருந்தும் அரசரெல்லாம் கச் சைப்பொருதுபுடைபரந்து கதித்துப் பணைத்து முத்துவடமணிந்து குரும்பை யைவென்ற தனத்தினையுடைய பாஞ்சாலிமேற்கொண்ட காதலைப் பிரிப்பா ராயினர். அப்படியிருந்த இராசசபையிற் செவிலியர் துரோபதியைஅழைத்துக் கொண்டுவந்து அவளுக்கு இவரின்ன அரசர் இவரின்ன அரசரென்று சொல லத்துணிந்து வேறொன்று முரையாடாமல் இவ்வலிய போர்க்குரிய வில்லை நோக்கி மனத்திற் கோபம்வருத்தப் பொய்யேமலர்ந்த திருமுகமுடையவனும் மேன்மையிற் பிறரில்லாதவனென்று சொல்லத் தோற்றம்படைத்தவனுமாகிய அத்தினபுரத்தரசனைச்சுட்டிக்காட்டி இவன் துரியோதன மகாராசனென்றும், மணியின் கிரணவெயிலெறிப்ப உலகமுழுதும் தாங்கும் அனந்தன்சுடிகையின் பாங்கர் பலதலைகளும் நிரைத்தாற்போல விளங்கும் துரியோதனன் தம்பிமா ராகிய துச்சாதனன் முதலியோரையும், தக்கோராடச் சூதுபொருது நிலைத்த வஞ்சனைக்குப் பிறரிவ்வுலகி லொப்பாவா ரொருவருமிலையென் றுரைக்க விள ங்குகின்ற சகுனி யிவனென்றும்; இவர் பேரறிவாலும் போர்வலியாலும் பிறப் பாலும் பலபடையாலும் திண்புயவலியாலும் சிறந்த துரோணசாரியரென்றும் காட்டினர். இவர் அவர்குமாரராகிய அசுவத்தாமா, தனக்கொப்பாவார்தேவரிலு மொருவருமில்லையென்று சொல்லப்பட்டுத்தன்க்கு ஒருவாறு பரமசிவனையே யொப்பென்று சொல்லச்சிறந்தவர், இவர் பெரிய வுலகின்கண் உண்மை யிலும் வலியிலும் உறவிலும் உரையிலும் திண்மையிலும் நெறியிலும் கீர்த்தியி லும்வில்லிலும்சிறந்தவனென்றுசொல்லப்படும் அங்கதேசாதிபதியாகிய கன்ன ராசன். இவரோ யதுகுலமாகிய பாற்கடலிற் சந்திரன்போல் விளங்குகின்றவர், பலராமனென்னும் திருநாமமுடையவர், வசுதேவருக்கும் உரோகணிக்கும் மக னாகத்தோன்றினவர், யமுனை நதியைத் தன் கையிலுள்ள கலப்பைப்படை யால் இழுத்த பேராற்றலையுடையவர், திருமாமகள் கொழுநனாகிய பகவானது சர்கருஷ்ணவதார மானவர். இவர்யதுகுலத்துக்குத் திலகமெனும்படி தோன் றிப் பொதுவருடன் வளர்ந்த கள்ளமாமாயப்பிரான், இளம்பருவத்திலேயே தம் மைப் பகைகொண்டிருந்த கஞ்சனை முடித்தவர். இவருக்குப் பின்னே நிற்பவர் இவருக்கிளையவர், சாத்தகியென்று சொல்லப்பட்டவர், போசகுலத்தவ ரெல் லாம் சூழும்படி யிருக்கின்றார். அதோ இருப்பவர் இக்கண்ணபிரானுக் கத்தை புத்திரர், அவரிடத்தே பகைபாராட்டி யிருப்பவர் சிசுபாலனென்னும் பெய ருள்ளவர். சேதிநகரத்தரசராய்அதோ இருப்பவர் சராசந்தனென்னும் பெய ருடையவர், போர்க்களத்திற் கொடிய பாணங்களாற் பகையரசரை வெற்றி கொண் டன்றிப் போகாத பேராற்றலுடையவர், இக் கண்ணபிரானைப் பல முறை போரில் வென்றுவிட அவர் மதுரையைக் கைவிட்டுப்போய்க் கடலி

னடுவேயுள்ள துவார கையை யடையச்செய்தவர். அதோ இருப்பவர் பக தத்தனென்னும் பெயருடையவர், தனக்குத்தானே ஒப்பானவர். அதோ இருப்பவர் தம்மை எதிர்த்தவரைத் தேவராக்கு நீலமகாராசர். அவர் பனை போலுங் கையையும் வெண்பிறைபோலும் கோட்டையுமுடைய ஐராவதமே போலச் சிறந்த சுப்பிரதீப மென்னும் யானையை வாகனமாக வுடையபகதத்த ராசர். இவர் பகை யரசரைப் புறங்கண்ட சூரர், சல்லியமகாராசனென்னும் பெயருடையவர், பாண்டவருள் இரட்டையருக்கு நல்லம்மான். இவர் சந்திர குலசிகாமணியாகிய வழுதியர் பெருமான். இவர் சூரியவமிச சிகாமணியாகிய சோழராசர். இவர் அக்கினிவமிச சிகாமணியாகிப் பதினுன் குலகத்தையுங் காக்கும் சேரர்பெருமான். மேலும் வில்லாண்மையாற் கரும்புவில்லையுடைய மன்மதனுக்கொப்பானவராய்ப் புலவராலும் புகழப்படும் பதினெண்புவிக்கும் பதிகளாகிய எல்லாவரசரும் உன்பொருட்டே இங்கே திரண்டு வந்திருக்கின்ற னர். இவருள் எந்தஅரசன் தன்தோள்வலியால் சிங்கவேறுபோலெழுந்திருந்து மச்சயந்திரத்தைக்கொய்து உன்னைமணமாலை சூட்டுவானோ அவனேஉனக்குக் கணவனுவானென்று சொல்லினர். இவ்வாறு அருகேயிருந்த பாங்கியர் துரோ பதிக்கு இன்னார் இன்னவரசரென்று சுட்டிக் காட்டி யுரைத்தவளவில் சில அரசர் சித்திரப்பதுமைபோ லசையாமல் அறிவற் றயர்ந்திருந்தனர். எத் தனையோ அரசர் அவ்வில்லின் பெருமையையும் இலக்கத்தின் அருமையை யும் பாராமல் தமதாண்மையெடுத்துக் கூறியெழுந்தனர். இவ்வாறிருக்க, வாசு தேவனுகிய கண்ணபிரான் அலாயுதராகியபலராமனை நோக்கிப் பார்ப்பன மாக்களடுவே அவரையொத்த வுருவங் கொண்டு வந்திருக்கும் பாண்டவ ரைவரையும் சைகையாகக் காட்டியருளினர்; அரசர் பலர் மேரு மலையை யொத்த வில்லைக்கண்டு மீண்டனர், பலரு மொருசேரத் திரண்டுவந்தெடுத் தாலு மெடுக்கக்கூடாத வில்லின் பருமையைக்கண்டு சிலர் மனநாணினர். சிலர் மலர்போன்ற கையாலெடுத்துப் பெயர்க்கமுடியாதென்று பயந்துநின்ற னர். இவ்வாறு அரசரெல்லாந் திரண்டுவருந்தப் புலியேறுபோ லெழுந்து சென்று அவ்வில்லைத் தன்னிருகையாலு மெடுத்து எதிரேநிறுத்தி நாணேற்ற முடியாமல் மத்திரதேசாதிபதியாகிய சல்லியனே சல்லியமடைந்தான். வில் லாளிகளிற் சிறந்தவனுகவெடுத்துச் சொல்லப்பட்டுப் பலராசரையும் வெற் றிகொள்ளும் மகததேசாதிபதியாகிய சராசந்தனும் தனுர்வேதத்திற்சொல்லிய படியேவில்லையெடுத்து நிறுத்தி நாணியைத் தோளளவும் வாங்கிவிடுத்து மெய் சோர்ந்தான். நீலனும் வலிமையுடையானென்று அரசவை துதிக்கச்சென்று நாணொருசாணெனக் கொணர்ந்தான். நந்தியாவட்டமாலையணிந்த துரியோதன னும்நாணொரு நான்குவிரற்கடையென்று சொல்லக்கொணர்ந்து மெய்தளர்ந் தான். இறைவனிருந்த வடகயிலையை வருத்தமறவெடுத்த தென்னிலங்கேச னென்றுசொல்லச்சிறந்த அங்கதேசாதிபதியாகிய கன்னனும் ஒருமயிர்க்கடை தூரம் இலக்கத்திற்குத்தவறி நாணத்தோடு சாய்ந்தான். இவ்வாறு சர்ப்பக்கொ டிபடைத்த துரியோதனனே முதலாயுள்ள அரசரெல்லாம் ஒருவில்லுக்காற்று தவராய் மனவருத்தத்தோடு மெலியக்கண்டு, பார்ப்பனமாக்கள் நடுவே அவ

ருருக்கொண்டு மறைந்திருந்த பார்த்தன் சீராமனேபோல வெழுந்துநின்று துரோபதிக்குத் தமையனாகிய திஷ்டத்துய்மனைப்பார்த்து உமது தங்கையான வள் அரசர்குலத்திற்பிறந் திரண்டுதோள்வலியாலு மிவ்வுலகமுழுதாளும் அர சரையேயன்றி அதன்மேற்குலமாகிய அந்தணர்குலத்திற் பிறந்தார் இவ்வில க்கை வீழ்த்தாராயின் அவரைமணமாலை சூட்டுவளோ சொல்லுமென்றுகேட் க, அதைப்பாஞ்சாலன் மகன்கேட்டு இந்தவிலக்கை யாரெய்துவிழச்செய்கின் றனரோ அவரையே என்தங்கை மணமாலைசூட்டுவளென்றுசொல்ல, பார்த்த னும்அரசர்நாணங்களெல்லாம்கீழாகத் தனிநெடுநாணேற்றிப்பாணந்தொடுத்துத் தனுர்வேத முறையிற்பயின்றோரெல்லாம்வில்லாசிரியனிவனேயென்றுசொல்ல அவ்விலக்கை மூபன்றுவிழச்செய்யவே, முனிவர்களெல்லாம் ஆசீர்வாதஞ் செய்தனர், தேவர்கள்புட்பமாரி சொரிந்தனர். பிறரால்வளைத்தற்கரிய வில்லை வளைத்து இலக்கையும் விழச்செய்தானென்று அரசர்முகங் கருக, வில்லொடு அந்தணர்வடிவங்கொண்டுநின்ற பார்த்தனை நெருங்கித் தேன்றுளிக்கும் செங்க ழுநீர்மலர்மாலைசூட்ட ஆகாயதுந்துபி முழங்கின, சங்கத்தொனிமுழக்கின,வசு தேவகுமாரன்முதலிய அரசர்திரண்டசபையைமதியாமல் அர்ச்சுனன் தன்னை மாலையிட்ட துரோபதியுடன் சந்திரனும் உரோகணியுமென்னத் தான் வளைத்த வில்லைத் தன்கையிலேந்திக்கொண்டு தன்னிருபுறமும் மற்றைப்பாண்டவர்வரச் சென்றான். அப்போது கண்ணில்லாத திருதராட்டிர மகாராசன் மகனாகிய சுயோதனன்ஒருபார்ப்பான் வந்து பலகோடி யரசரை யொருசேரப் பரிபவஞ் செய்து பாஞ்சால குமாரியைத் தன்வலியாற் கவர்ந்துசெல்கின்றனனென்று கண்சிவந்துசொல்ல, அதைக்கேட்ட அரசவை யுகாந்தகாலத்திலே கடலேழு மாரவாரிப்பதுபோலாரவாரஞ்செய்யக்கண்டு,பார்த்தன் பாஞ்சாலியைத் தரும ராசன்பின் னிறுத்திவிட்டுத் தானும் வீமனும் போர்க்கோலங் கொண்டனர்.

அந்தணர்களெல்லாரும் கோபித்து வாய்மடித்தெழுந்து கோகுதட்டிட் டுப் பலாசதண்டத்தை யூன்றிப் பகைத்தவரசர் சிந்தையெல்லாம் பயங்கொள் ளத் தங் கைவலிகாட்டினர். இவ்வாறு அந்தணரெல்லாம் போர்செய்யநின்ற உறுதியைக்கண்டு புன்னகைசெய்து என்முன் நமனே வந்தெதிர்த்தபோதி லும் அவனைக்கொல்ல விற்கொண்டு சமைந்துநின்றேனென்று கையமர்த்தி நிறு த்த அவனைக் கன்னன் இவன்பார்ப்பானென்றவமதித்துவில்லைவளைத்துப்போர் செய்து வீறிட்டோடினன். வீமன்மேல் சல்லியன்சென்று சல்லியமடைந்து மனமாழ்கப் புறங்காட்டிச்சென்று நாம் அவரோடு போரிட்டு வென்றாலும் தோற்றாலும் நமக்குவசையேபயக்குமென்று மீண்டான். இவரோ அந்தணரல் லர், வீமார்ச்சுனரோ யாமென்று மற்றையரசரையெல்லாம் கண்ணன் விலக்க, அவரோ தஞ்சிந்தைவேறாகித் தத்தம்பதி சென்றடைந்தனர். அன்றிலக்கை யெய்த பார்த்தனும் மற்றைப் பாண்டவரும் போர்வென்று விசையைபோல் பவளாகிய பாஞ்சாலியுடன் வேட்கோவர் மனைக்குச்சென்று அன்னையைக் கூவி அன்னாய்! யாமோ ரையங்கொணர்ந்தோம், இதனை யாதுசெய்வதென்ற னர். மனையிலுள்ளிருந்த தாயாகிய குந்தியும் மக்கள்சொல்லைக்கேட்டு ஒரு சேர நீவிரெல்லா மருந்துமினென்று சொல்லிவிட்டு வெளியே மின்னற்கொடி

போன்றபாஞ்சாலி தன்மக்களருகேயிருக்கக்கண்டு யாதுகினைந்து யாதுசொன்னேன், என்னகாரியஞ் செய்துவிட்டேனென்று மனம்வாடியிருந்தனள்; 'தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை' என்றபடி நின்சொல்லே வேதமொழியொக்கும், இது நின்கருத்தேயல்ல; எங்களுக்கும் அங்ஙனேவு உண்டென்று தருமராசன் சொல்ல, அப்படியானால் இது விதிவழியாகுமென்று துணிந்து அற்றைஇரவில் தன்மக்கள் கட்டுரைகேட்டு மகிழ்ந்திருந்தாள். பாஞ்சாலனோ அவ்வீரர் பெருமிதமெல்லாம் ஒற்றராலறிந்து மனத்தி லுவகையுடன் ஐயப்பாடு சிறிதுமின்றி மறுநாள் தமது அரண்மனைக் கழைத்துக்கொண்டு சென்று அவர்முன் பல பொருளும்வைக்க அவர்கள் ஆயுதமன்றி வேறொன்றையு மெடுக்காமையால் இவர்கள் அந்தணரேயல்லர்; பாண்டவரேயெனத் துணிந்து இலக்கைவிழச் செய்த தோன்றலாகிய பார்த்தனுக்கே நமது கன்னிகையை மணஞ்செய்விப்போமென்று சொல்லினன். பாண்டவ ரைவருள் தருமராசன் நாங்களைவரும் இப்பாஞ்சாலியை மணஞ்செய்துகொள்வோமென்று சொல்லிக்கொண்டிருக்கையில், பாஞ்சாலராசன் தன்மனத்திற்கொண்ட சந்தேகத்தை நிவர்த்தி செய்ய அவ்விடத்தில் வேதத்தை நான்காக வகுத்த வியாசபகவானெழுந்தருள, அவரைக்கண்டு தன்னிருக்கைவிட் டிழிந்து பத்தடிதூரஞ்சென் றழைத்துவந்து ஒரு அழகிய பொற்பீடமளித்து அதிலிருத்திச் சோடசோபசாரஞ் செய்தான். அவன் வந்தனை வழிபாடுகளைக் கைக்கொண்டு பாண்டவரைவரையும் பாஞ்சாலிகணவராகப்பெற்ற முறைமையைச் சொல்லுகிறேன்கேளென்று சொல்லத்தொடங்கினர்.

இப்பிறப்பில் வேள்வித்தீயிற்பிறந்த இவள்முற்பிறப்பில் நளாயனியென்று பெயர்கொண்ட மாதுசிரோமணி, இவளை மவுற்கல்லியனென்னு முனிவன் மணஞ்செய்துகொண்டான், காதளவோடிய கண்ணையுடைய அம்மாதுகற்பினையும் அன்பினையும் சோதிக்கத்துணிந்து என்றும்நீங்காத தொழுநோயும் கோபமும் மூப்புநீங்காதவனு யுருக்கொண்டு அவளோடு இல்வாழ்க்கைசெய்து வருவானாயினன். அவளோகணவன் உண்டமிச்சிலைவிரும்பி அதில்விரல்களழுகிவிழுந்திருக்கவும் சிந்தைநாணுமலுண்டு மனக்கோட்டமின்றி யிருக்கக் கண்டுமகிழ்ந்து தொழுநோயால் வருந்தும் வடிவமாறிக் கோடிமன்மதரும் நாணும் அழகிய வடிவங்கொண்டு பெண்ணே உனக்கு யாதுவரம் வேண்டும் தருவேனென்று சொல்ல அதைக்கேட்ட நளாயினியும் உன்னையமொன்றே விட்டேகுதலில்லாத இன்பநலமடையவரந்தரவேண்டுமென்றனள். அப்படியே யாகுகவென்று அம்முனிவனும் அப்பெண்கொடியும் குன்றுநதியும் மரமும் பைங்கொடியும்போல் பலயோனிகடோறும் அடைந்து நின்றும் சரித்தும் பெரும்போக மெய்தினர். இப்பிறப்பில் இவள் இன்னலமடைந்து நின்றும், அவளை மறுபிறப்பில் இந்திரசேனையாகி அம்முனிவனே கணவனாகவரம்பெற்றுக் காமநலமுழந்து பின் அவன் இல்வாழ்வைத் துறந்து தவஞ்செய்யச் சென்றனன். அவன் இவ்வாறு நீங்கிப்போக அவள் காதல்மிகுந்து இனியென் செயத்தக்கதென்று தன்னெருபால் இமயமலையிலிடங்கொண்டு ஈசானம், தற்புருடம், அகோரம், வாமனம், சத்தியோசாதம் என்னும் ஐந்து திருமுகங்களை

யுடைய இறைவனைக்குறித்துத் தவஞ்செய்தாள்; இறைவன் தெரிசனமாகி யாதுவரம் வேண்டுமென்ன, மவுற்கல்லியனை ஐவராகவுருக்கொண்டு தன்னை விரும்பக்கேட்டதுபோல, ஐம்முறை அவள் கணவனைத்தரவேண்டுமென்று இரந்துகேட்டனள். அதற்கிறைவனும் ஐம்முறையுமப்படியே தருவோம்,நீ இப்போது கங்கையிற்சென்றுமூழ்கி யாரைக்காண்கிறாயோ அவனை யழைத்துக் கொண்டுவாவென்று அவளுக்குக்கட்டளையிட்டனர். அவளுமவ்வாறு சென்று மூழ்கி இறைவனைக்காணமல் தனியே நின்றழுதாள்; அவள்கண்ணீர் பொற்றாமரையாகத் தோன்றிய புதுமைகண்டு இந்திரனும் இதென்னவென்று விம்மிதமுற்று நீயார்! நீ அழக்காரணமென்ன வென்று கேட்டான்; அதற்கு இந்திரசேனை நானின்னவளென்றும், நானின்னகாரியத்துக்கு வந்தேனென்றும், நீரே விவரமாகத் தெரிந்துகொள்வீர், என்பின்னே வாருமென் றழைத்துக்கொண்டுபோயினள். அவ்விந்திரனும் சிவபிரானைச் சிறிதுமறியாமல் எதிர்சென்று இவனுக்கு என்ன மேன்மை யிருந்தவாறென்று இறைவனைச்சினங்கொண்டு பகைத்துப் படைக்கலமிருந்தும் அவை பயன்படாமல் வீழ்ந்தான். அவனைப் பார்த்துமால்விடையுயர்த்தமணிமிடற்றிறைவன் என்னை அவமதித்தமையால் இவ்வாறு நேர்ந்ததென்று சொல்லி, அதற்குமுன் ஒரு பிலத்திலடைத்திருந்த நான்கிந்திரரையும் காட்ட, பாதலத்திலிருந்துவந்த நான்கிந்திரருடன் வானின்றும்வந்த இந்திரனும் தன்னைவணங்கக்கண்டு, அவர்களைநோக்கிநீங்கள் ஐவரும் இவ்விந்திரசேனைக்குக் கணவராகவென அவ்வாறே பூமியில்வந்தனர். மற்றைப் பாண்டவர் நால்வரும் தருமன் வாயு அச்சுவினி தேவதைகளாகிய இவர்கள் இடத்தேதோன்றினர். இவ்வில்லாளியாகிய அர்ச்சுனனே தேவர்கட்கெல்லாம் பெருமானுகிய திருமாமகள்கணவனது அமிசமாகியநராமிசமேயாகும்,முன்னே பெருந்தவஞ்செய்த அவ்விந்திரசேனையே யிவளென்று ஞானசட்சுவைக்கொடுத்து அவனுக்குக்காட்டி யருளினர்; அதனல் ஐயப்பாடுதீர்ந்த பாஞ்சாலனும் வியாசபகவான் சொல்லைத் தலைமேற்கொண்டு தன்மகண்மேற்கொண்ட பரிவினுக்கும் பாண்டவர் பெருமைக்கும் ஆற்றலுக்கு மீடாகத் தெய்வமணஞ் செய்விக்க நேர்ந்து, நல்ல சுபமுகூர்த்தத்தில் அந்தணரும் அரசரும் திரண்டு மொய்த்து அருகேசூழ அத்தாணிமண்டப மெய்துவித்து, பலகோடி சங்கந் தழங்க மற்றைமங்கலவாத்தியங்களு முழங்கத் தருமராசனை செம்பொன்னுற் செய்த வேதியருகே யிட்டிருக்கும் ஆசனத்திலிருத்தி அவன்வலப்புறத்தில் பாஞ்சாலியைவைத்தனன். தௌமியரும் வேதமுறைப்படி மூட்டிய வேள்வித் தீயின்முன்னர் கலியாணச்சடங்கு நிறைவேற்றித் தீவலஞ்செய்வித்துப் பொரிசிந்தி யம்மிமிதிப்பித்து, மறுநாட்களில் முறையாகவே மற்றைநால்வருக்கும் விவாகஞ்செய்வித்து, தினந்தோறும் நடத்தவேண்டிய அவுபாசனுதிகளையும் நிறைவேற்றினர். பாஞ்சாலராசனும் பாண்டவர்களுக்குத் தேர், பரி, யானை, சேனை முதலியவற்றைச் சீதனமாக வழங்கினன். பாஞ்சாலியை மணஞ் செய்துகொண்டு பாண்டவரிருக்கின்றனரென்றசொல் எங்கும்போய்ப்பரவவே, துரியோதனன் முதலிய நூற்றுவரும் ஆற்றுமல் சகுனிமுதலியோர் துர்ப்போதனையால் போர்க்கோலங்கொண்டு புறப்பட்டனர். இவ்வாறுவந்த துரியோ

தனன் சேனையைக்கண்ட திஷ்டத்தூய்மன் தன்சேனையோடுசென்று போர் செய்து அத்துரியோதனனுடைய நால்வகைப் படையையும் புறங்கொண் டோடச்செய்தான். பார்த்தனே துரியோதனனைத் தன்பாணங்களால் வருத்தி னன். கன்னனை நகுலனும், சகுனியைச் சகாதேவனும், துரியோதனனை யொழிந்த மற்றைத்தம்பியரை வீமனும்போர்செய்து புறமுதுகிட் டோடச் செய்தனர். இவ்வாறு தோல்வியெய்தக்கண்டு சகுனி, கன்னன், துரியோத னன், துச்சாதனன் இவர்கள்நால்வரும் ஒளியிழந்து புரோசனனென்னும் மந் திரியை நிந்தித்துக்கொண்டு அத்தினபுரமேசென்று சேர்ந்தனர். பாண்டவ ரைவரும் கண்ணபிரானொடும் பாஞ்சாலராசனொடும் பாஞ்சால நகரத்தில் வசித்திருந்தனர்.

இங்கே அத்தினபுரத்தில் துரியோதனன் அபசயப்பட்டுப் புறந்தந்தோடி வந்தபிறகு திருதராட்டிரன் தன்தம்பியாகிய பாண்டுராசனுடைய பாதிராச் சியத்தைப் பாண்டவர்கட்கேதரத் தன்மந்திரிமாருடனும் வீஷ்மர்முதலிய பெரியோருடனும் எண்ணி, அவரைப் பாஞ்சால நகரத்தினின்றும் ஒற்றரால் வருவித்து, வீஷ்மர் விதுரருக்கும் மற்றைப் பெரியோர்கட்கும் ஏற்குமாறு கொடுக்க அவர்களும்பெற்றுச் சிலகாலம் வாழ்ந்திருந்தனர்.

துரோபதியை மாலையிட்டசருக்கம்

முற்றிற்று.

இந்திரப்பிரஸ்தச்சருக்கம்.

அத்தினபுரத்திலே பாண்டவரைவரும் துரியோதனுதியர் நூற்றுவரும் இரண்டறத் தம்மிலொத்த அன்புடையராய் மருவியிருத்தலால் பகையரசர் கண்டு உளம்வெருவிநிற்க வாழ்ந்து வருநாளில், பாண்டவர்சகாயன் முதலிய சகலபந்துவர்க்கங்களையும் மந்திரி பிரதானிகளையும் வருவித்து, இத்தினம் சுப தினமென்று துணிந்து திருதராட்டிரமகாராசன் தருமராசனுக்கு மகுடா பிஷேகஞ் செய்யலாமென் றெண்ணி நகரத்தை யலங்கரிக்கக் கட்டளையிட்டு, அத்தாணிமண்டபத்தி லிருத்தி பேரிகைமுதலிய வாத்தியமதிர மங்கலச்சங்க முழங்க,அந்தணர்கள் திரண்டுமொய்க்கச்சிங்காதனத்தில் எழுந்தருளச்செய்து, கங்கைமுதலியபுண்ணியதீர்த்தங்களால் ஸ்நானஞ்செய்வித்து,வியாசபகவான் தௌமியர் முதலியோர் புண்ணியதீர்த்தஞ் சொரியப் பலகோடியரசர் திரண்டு வந்து தம்முடிவணங்க நிறைவேற்றியபின்பு,மங்கலப்பெண்கள் இருகையாலும் நீராலத்தியெடுத்துச் சுழற்றினர். அப்போது வலம்புரிச் சங்கமுழங்கச் சந்திர வட்டக்குடைகவிக்க அரசரெல்லாம் முன்னும் பின்னுமாகிய இருபக்கமும் போதர மங்கலமாதர் பொரியிறைத்து வாழ்த்தெடுக்க இன்றுதான் நாம் கண் களாற் கண்டகாட்சி நல்லதென்று யாவருமகிழ்ந்தனர். ஏழுறப்புயர்ந்த பட் டத்து யானைமேல் தருமராசன் மற்றைத்தம்பியர் நால்வரும்புடைசூழ நகர் வலம்வந்து இராச மாளிகையிற் புகுந்தவுடனே, வீஷ்மாசாரியர் துரோண

சாரியர் கிருபர் அசுவத்தாமா திருதராட்டிரமகாராசன் விதுரமகாராசன்முத லியபெரியோரைவணங்கி வாழ்ந்திருந்தான். அப்போது ஒருநாள் திருதராட்டிர மகாராசன் தருமராசனையழைப்பித்து பேய்நகரமென்றுருமாறிய காண்டவப் பிரத்தமென்றொரு நகரங்காடாகப்போயிருக்கின்றது. அதனைக்கைக்கொண்டு அரசாளுமென்று சொல்லிவிடுக்க அக்கட்டளையையேற்று தனக்கு உலக முழுதுங் கொடுத்தற்பொருட்டு ஆயர்பாடியிலவதரித்த கண்ணபிரான் முத லாகிய பந்துவர்க்கங்களும் நாற்படையும் சூழும்படி சர்ப்பக்கொடிபடைத்த துரியோதனனுடைய கருத்து எவ்விடத்தேயும் வெளிப்பட்டுத்தோன்றத் தம்பியர் நால்வரும் புடைசூழக் காண்டவப்பிரத்தத்தை யடைந்தான்.

இவ்வா றடைந்தபின்புகருங்கடலும் காயாம்பூவும் கரியமேகமும்போலுந் திருமேனியையுடைய கண்ணபிரான் இப்பாண்டவரைவரும் இங்கே எவ்வாறு வசிப்பதென்றெண்ணி இந்திரனை நினைக்கவே, இந்திரனும் விச்சுவகர்மாவை யழைத்து முன்னே உன்னாலேபடைத்த எல்லா நகரங்களினு மெழுமடங்கு சிறந்ததாயிருக்க இக்காண்டவப் பிரத்தத்தை ஒரு நகரமாகப் புதுக்கவேண்டு மென்று கட்டளையிட்டான். விச்சுவகர்மாவும் மரகதம், கோமேதகம், பவளம், வச்சிரம், வைடூரியம், நீலம், மாணிக்கம், புட்பராகமென்னும் நவமணிகளுக் குப் பிறப்பிடமீதென்றுசொல்ல இந்திரன் முதலிய தேவரும் புகழவும் மலை களையெல்லாம் மாடமாளிகை கூடகோபுரங்க ளடங்கிய நகரமாக்கினனோ வென்று தபதியரெல்லாம் வியக்கவும் அந்நகரத்தைப் புதுக்கினான். இந்திரன் என் அமராவதியழகுகுலைந்ததென்றெண்ணி வெறுக்க, குபேரன் என் அளகா புரி அழகு சிதைந்ததென்று சொல்ல, மற்றைத்தேவர்கள் தமது நகரங்க ளெல்லாம் அழகழிந்தனவென்று பேசிக்கொள்ள, திருமாமகள் கணவன் பூமி யின்மேல் சகலலட்சணங்களோடுங் கூடிய நகரத்தையே படைத்தானென்று வியக்க, அந்நகரத்தின் அலங்காரமான வீதிகள் மாளிகைகள் கூடகோபுரங் களின் அழகைக்கண்டு அதற்கு இந்திரப்பிரஸ்தமென்று பெயரிட்டு அவர்க ளிடத்தே விடைபெற்றுச் சென்றான். பின்பு தருமராசனும் கண்ணபிரான் முதலிய சுற்றத்தவருடன் மற்றைத் தம்பியரும் படை குடி அமைச்சு நட்பு முதலியோரும் புடைசூழச்சென்று நகர்வலம்வந்து இராசமாளிகையிற் புகுந் தான். மற்றையாரும் தத்தமக்கென்றே யமைக்கப்பட்ட மாளிகையிற்சென்று சேர்ந்தனர். கண்ணபிரானும் இந்திரனும் விடைபெற்றுத் துவாரகைக்கும் அமராவதிக்குஞ் சென்றனர். தருமராசன் ஆக்கினைசக்கரநடத்தி யுலகை யர சாண்டு வந்தான். இவ்வாறு அரசாண்டு வருங்காலத்தில் மகதியென்னும் யாழினையுடைய நாரதபகவான் தருமராசனுடைய அத்தாணிமண்டபத்தை நோக்கிவந்தார். அவரைக்கண்டு சிங்காதனத்தைவிட் டிழிந்து பத்தடிதூரஞ் சென்றழைத்துவந்து ஆசனத்தி லெழுந்தருளச்செய்து சோடசோபசாரமு மியற்றிநிற்கையில் அவர்களைநோக்கிப் பின்வருமாறு சொல்வாராயினர்.

முன்னாளில் நான்முகத்தொருவனையும் கற்றையஞ்சடைக் கண்ணுதற் பெருமானையும் கார்வண்ணத் தமலனையுநோக்கி யருந்தவஞ்செய்து பெறலருந் திருவம் சுந்தோப சுந்தரென் றிரண்டு தானவர் பெற்றனர். அவ்வாறுபெற்ற

திருவினுற்களித்துத் தேவர்களை வருத்தப் பொருது இந்திரனேவலால் அனுப்பப்பட்ட திலோர்த்தமையைக் கண்டு அவள்மேல்வைத்த அளப்பரும் காதலால் நெஞ்சமுழந்துவருந்தி அவ்விருவரும் விரும்பி அவளின்னலமொருவனை யடையப் போர்புரிந்து மாண்டுபோயினரென்ற சொல் உலகமுழுதும் அறியும் அல்லவோ ? நீங்களைவரும் விதிப்படி மணஞ்செய்துகொண்ட நேயமுண்டாயினும் இத்துரோபதியை யோராண்டுக் கொருவராக அனுபவித்துக் கொண்டு வாருங்கோள், ஒருவர் காலத்தில் மற்றொருவர் அவளைக் கண்ணாலேனும் பார்க்கப்படாது. அவ்வாறு பார்ப்பரேல் ஆறிருதுவளவிலும் வேடமாறிப் புண்ணியதீர்த்தங்களிற்சென்று நீராடுவதே தகுதியென்று உறுதிமொழி கூறி விடைபெற்றுச் சென்றார். அன்றுமுதல் பாண்டவரைவரும் தேவர்கள் நாளையே யெல்லையாகக்கொண்டு முறையே பாஞ்சாலியை மருவிவந்தனர்.

இந்திரப்பிரஸ்தச்சருக்கம்
முற்றிற்று.

அர்ச்சுனன் தீர்த்தயாத்திரைச்சருக்கம்.

துன்பம் பயம் வறுமை நோய் பகை களவு கொலையடையாது இன்பம் செல்வம் தருமமுதலியன தழைத்தோங்கித் தன்குடையின்கீழ் பிறதேயத்தாரும் வந்து குடிபுகுந்துவாழப் பகையென்பதின்றி யரசுசெய்து வருங்காலத்தில்,ஒருநாள் அயலரசரும் திறையளந்து கொடுக்கும் கடைவாயிலின் முன்றிலில் வைதிகப் பிராமணனொருவன் முறையோ முறையோவென்று தன்னிரு கையையு முயரவெடுப்பிக்கூவ வாயிற்காவலர் அதையறிந்து பார்த்தனுக்குத் தெரிவித்தனர். பார்த்தனும் விரைந்து அவ்வந்தணனைக்கிட்டி யாதுதீங்கடுத்தது சொல்லுமென்றனன். அதற்கவன் வில்லைக்கையிலேகொண்ட சிலவேடர்கள் என்பசுநிரையைக் கவர்ந்துசென்றனர். அதனால் துயரமெய்தி யீண்டு தெரிவித்தேனென்ன, பார்த்தனும் நீர் சிறிதும்கவலற்க, இதோ நானேசென்று பொருது அவ்வானிரையை மீட்டுத்தருகிறேனென்று தன் வில்லும் அம்பும் புட்டிலு மெடுக்கச்சென்றனன். அப்போது அந்தப்புரத்தில் தருமராசனுடன் பாஞ்சாலி யிருக்கக்கண்டு உடனடங்கி யொளிகருகி மனம்நாணி விரைந்து பாணங்களையும் வில்லையுங்கைக்கொண்டு வெகுதூரஞ்சென்று அவ்வேடரைச் சிறிப்பொருது வெற்றிகொண்டு ஒருகணப்போதில் அவ்வானிரைமீட்டு அவ்வந்தணனுக்குக் கொடுத்து அவனை மகிழ்வுபெருகச்செய்து போக்கி மறுநாட்காலையில் நாரதபகவான் சொல்லிய உறுதிப்படி பரிசுத்தமான கங்கைமுதலிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்யச் தருமராசனைச்சென்று பணிந்து கட்டளை பெறவேண்டினன். அவனிசைவு பெற்றுக்கொண்டு புண்ணிய தீர்த்தங்களிற் சென்று ஸ்நானஞ்செய்யும் மறையோருடன் தானுஞ்சேர்ந்து கங்காநதியில் ஸ்நானஞ்செய்கையில், நாகலோகத்தில் இருக்கும் நாகராசகன்னியரிற் பலர் அப்புண்ணியநதியில் ஸ்நானஞ்செய்ய எதிரேசென்றனர். அவருள் உலூபியென்னும் பெயரினையுடையவள் பார்த்தன்மேல் மையல்கொண்டு நின்று

அவ்வழியேசென்றனள்; இவனும் அவள் பின்னேதொடர்ந்து சென்று அவளை மணம்புரிந்து அவளொடு இன்பநுகர்ந்து இராவானென்னும் புத்திரனைப்பெற்று அவனது பேரழகைக்கண்டு மகிழ்ந்து விடைபெற்று, மீளவும் அக்கங்கையின் வழியாகவந்து இமயமலையி னருகேயுள்ள புண்ணிய தீர்த்தங்களிலெல்லாம் சென்று நீராடிக் கீழ்த்திசையே நோக்கிச்சென்ருன்.

பின்னர் கண்ணபிரானது கரியதிருமேனிபோலும் விளங்கும் காளிந்தி முதலாகிய பலதீர்த்தங்களிலும் அவ்வந்தணர்களுடன் ஸ்நானஞ்செய்து சித்திக்கு ஒருவித்தாகிய தென்னாட்டினைச்சென் றணுகி, அருவி தாவிச்சொரியும் திருவேங்கட மலையையடைந்து அங்கு இறைவனைத்தெரிசித்து இச்சைப்படி முப்பத்திரண்டு தருமங்களை வளர்க்கும் மரகதவல்லி இடப்பாகனத்தினையுடைய பரம்பரனை பாகங்கொண்டபிராட்டி வசிக்கும் காஞ்சிநகரத்தைத்தரிசித்து, அத்தலத்தே பிரமன்இயற்றிய யாகசாலையையும் அத்திகிரியில் மயனல் விதிக்கப்பட்ட கசேந்திரவிமானத்தையும் வேதவடிவாகிய மாநிழலிலமர்ந்த எண்டோளிறைவன் திருவேகம்பத்தையும் உள்ளன்புடனே துதித்து வணங்கி, பாலாற்றினீராடி அதனைக்கடந்து எல்லாவுலகங்களையு மீன்ற உமையம்மையோடு சோமசூரியாக்கினி யென்னும் முக்கண்கொண்ட முழுமுதற்கடவுள் விரும்பியதாய் அவனையே பற்ருக மற்றொன்றினும் பற்றிலாது மெய்யுணர்ச்சியுடைய கற்றவர்தொழுகின்ற திருவருணசலத்தை யன்பொடுகைதொழுது, ஆளுடைய நம்பிகளை வலியவந்தாட்கொள்ளப் பொய்யாவண வோலையைக் காட்டிய திருவெண்ணெய் நல்லூரைவணங்கித் திருவதிகை வீரட்டானேசரைத் திருவடிதொழுது, திருவகீந்தரபுரத்தையும் பணிந்து அன்னவயல்சூழும் திருத்தில்லையில் அம்பலவாணனைத் தெரிசித்து, விபீஷணனென்றும் வணங்கக் காவிரியிருபாலும்வரச் சர்ப்பப்பரியங்கத்தில் கண்வளர்ந்தருளிய நம்பெருமாளெழுந்தருளிய திருவரங்கத்திருப்பதியை வணங்கி, சோழநாட்டிலுள்ள எல்லாப்பதிகளையும் முறையேதொழுதுநின்று, முன்னே திருஞான சம்பந்தசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருநெறித் தமிழ்மறை யெழுதிய திருவேடெதிரேறியவைகையாறு சூழ்ந்த பாண்டிவளநாட்டை யெய்தி நான்மாடக் கூடற்பதியையடைந்தான்.

அவ்வாறு கூடலையடைந்து வடகாற்று வீசும்பொழுதெல்லாம் மலர்ந்த கொன்றை மலர்நாறவும், தென்றற்காற்று வீசும்பொழுதெல்லாம் சந்தனமரக் காற்று வீசவும், செய்ந்நன்றி மறவாதார் எழுந்தருளி யிருக்கும் அந்நான் மாடக்கூடலை யரசாளும்பாண்டியராசனைப் பாண்டுகுமாரன்கண்டு யாத்திரையாகவந்த வந்தணருடன் இவனுமவனுக்காசிகூறி நிற்ப, அதற்கப்பாண்டியராசன் எங்கிலத்தீர்? எப்பதியினுள்ளீர்? எத்திசைக்குச் செல்கின்றீர்? என்று கேட்பக் கன்னியைக் கண்ணுற்ருட வந்தனமென்று சொல்லினர். சித்திரவாகனன் என்னும் பாண்டியராசனும் உக்கிரப்பெருவழுதி முன்னுளில் இந்திரன் முடிமீதுவளையெறிந்து மீண்டகாலத்தில் அரமகளிர் கொய்து மலர் தொலையாத பஞ்சதருக்க ளொருகோடிகொணர்ந்து தன் னரண்மனையின் ஒருபுறத்தே வைத்த பூங்காவில்தங்கிப் போசனஞ்செய்து அருந்துதற்குஇடங்

கற்பிக்கவந்த வேதியருடனுண் டிளைப்பாறியிருந்தான். அச்சமயத்தில்மின்னற் கூட்டமேபோலத் தாதியரும்சேடியருந்தன்னைச்சூழ்ந்துவர மன்மதன் எனக்குக் கட்டளையாதென்று சேவித்துநிற்கக் காற்சிலம் பொலிக்கத் துணைநெடுங் கண் செவியையளப்பத் தொடியையணிந்த தோளைவீசித் திருமாமகளே போலும்விளங்கும் இராசகுமாரி பூக்கொய்ய அப்பூங்காவனமெய்தினள். அவளைக்கண்டவுடனேமையல்கொண்டு மனந்தளர்ந்து 'உள்ளக்களித்தலும்காண மகிழ்தலுங் கள்ளுக்கில்காமத்திற்குண்டு.' என்றபடியே வருந்திப் பித்தன்போலாயினன். 'மக்கட்பேற்றிற் பெறும்பேறில்லை.' என்றபடி புத்திரப்பேறில்லாமல் சித்திரவாகன் அருந்தவஞ் செய்துபெற்ற சித்திராங்கதை தன்னுருப்போல விளங்கும்பத்திரமும் மலருங்கொய்து தன்னுயிர்ப் பாங்கியருடன் ஒரு செய்குன்றை யடைந்தாள். அச்சமையத்தில் பார்த்தன் மிக்க மயல் கொண்டு தன்னுடைய முன்னுருவங்கொண்டு சாமனினும் காமனினும் மிக்க பேரழகுடையானாய் அக்காவிலுள்ள சண்பகமரத்தி னறுநிழலில் அப்பெண் மணி கண்மணி களிக்கநின்றான். அதைக்கண்ட சித்திராங்கதை தன்கொடிக் கயலைப்புறங்கொண்ட கண்ணினால் நோக்கி அவனொடு மனமொத்து 'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்வாய்ச்சொற்க - ளென்னபயனுமில' என்றபடி உறவாடி உருவந்தீவிழியா லெரிக்கப்பட்ட மன்மதன் மீளவும் வந்து இரதியுடன்மேவுவதுபோல் அருமறைமன்ற லெட்டனுள் கொடுப்பாருங் கொள்வாருமின்றித் தலைவனுந் தலைவியும் பான்மைவழியோடி யோராவிற் கிரு கோடுதோன்றினாற்போல ஒத்தவன்புடையராய்க் கூடும் கந்தருவமணத்தாற் கலந்துநின்றபின்பு, தன்வரலாற்றை வரலாற்றுமுறையாற்கூறித் தான் அர்ச்சுனன் என்பதனையுஞ் சொல்லிக் காலநீட்டித்ததென்று பாங்கியரெல்லாம் ஐயுறுவர் நீபோவென் றனுப்பிவிட்டான். அவள்சென்று தோழியர்களுக்கு நடந்த விஷயமெல்லாம் சொல்லினள்.அவர்கள் அப்பாண்டியராசகுமாரியைக் கொண்டுபோய்க்கன்னிமாடத்திலுள்ள மணிமயமான பரியங்கத்தினையுடைய பஞ்சசயனத்திலேற்றினர். அவளோ மன்மத பாணத்தால் மயலுழந்து கண்ணுறங்காமல் காணாறமல் தவிர்க்க வென்றுந்தவிராத தோர்விரகக்கடலிலழுந்தினள். தன்பொதியமலைச் சந்தனத்தைத் தழற்குழம்போவென்பாள், தங்கடலிற்பிறந்த முத்துகளைத் தன்கண்ணினின்றும் பொழிகின்ற நீரால்நீறுக்குவாள், தங்கள் தமிழ்க்குழலினிசையைத் தன் காதுக்கு விடம்போலிருக்கிறதென்று கரைவாள், தங்குலச்சந்திரனைச் சூரியனென்றுவருந்திக் கூறுவாள்; இவ்வாறு தனியே யிருப்பதனால் அவள்பட்டபாட்டை யிப்படியென்று சொல்லமுடியாது. இப்படி வருந்துவதைக்கண்ட பாங்கியர் இருபுறத்தும் சூழவிருந்து ஆற்றவுஞ் சகியாதாளா யிருந்தனள்; சூரியனும் உதயமாயினன். ஆகவே, செவிலித்தாயர் பாண்டியராசன் சமுகஞ்சென்று நடந்த செய்தியெல்லாம் ஒன்றுமொழியாமற் கூறக்கேட்ட பாண்டியராசன் பாண்டுகுமாரன் அன்பாய் இவ்வளவுதூரம் பலதீர்த்தங்களையும் ஆடுவதற்குவந்ததும் நமது தவப்பயனேயாமென்றெண்ணி யிருந்தான். அப்போது இரவெல்லாம் சித்திராங்கதை யின்மையால் மனம்வாடி வருந்திய தனஞ்செயன் தன்மனமும் வடிவம் உரு

மாறிப்பொழுது விடிந்தவுடனே மறையவருடனெழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு பாண்டியராசன் சபைக்குவந்தான். அவனைப் பாண்டுகுமாரனென்றறிந்து மதுராபுரிக்கரசனாகிய சித்திரவாகன் தழுவிக்கொண்டு யான் பெற்ற பெண்ணமுது உன் மனைக்குரியவளேயாம், அஞ்சவேண்டாம் ; ஆயின் ஒருகுறையுற்றுக் கவல்கின்றேன். முன்னொருநாள் நம்குலத்தரசனொருவன் பரமசிவனைநோக்கிப் புத்திரப்பேறு பெறக்கருதித் தவஞ்செய்தான். அவன் தவத்திற்கிரங்கி நீ மக்கட்பேற்றைக்குறித்து தவஞ்செய்தனை, இனி உன்குலத்தரசரெல்லாம் ஒரே யாண்மகனைப்பெறுவர், அஞ்சவேண்டாம் போவென்று சொல்லினர்,அவ்வாறே நமது மரபினரெல்லாரும் ஒவ்வொரு மகவைப் பெற்று வந்தனர். யானோ ஆண்மகனைப்பெறாமல் பெண்மகவைப்பெற்றேன். எனக்குப் பின் இப்பார்புரக்க உன்னாற் பெறப்பட்ட மைந்தனைத் தரவேண்டுகின்றேன் என்றுகேட்க அதற்கிசைந்து நின்றனன் ; பாண்டியராசனும் சேரசோழராசரையும்மற்றை யரசரையும்திருமணங்காண வருவித்தனன். அவர்களும் வரவே அர்ச்சுனனை யலங்காரஞ்செய்வித்துக் கலியாணமண்டபத்தில் இருத்தி அவன் வலப்புறமாகச் சித்திராங்கதையை உட்காரச்செய்து அக்கினிசாட்சியாக இந்திரனும் சசியும், பரமசிவனும் பார்வதியாரும், திருமாலும் திருமகளும், மன்மதனும் இரதியும், என்றுசொல்லும்படி அவர்களை வேதவேதியர்கள் சடங்கியற்றத்துந்துபியின் கூட்டமுழங்கவும் சங்கத்தொனி யார்க்கவும் திருமணஞ் செய்வித்தான்.

அவர்கள் மணஞ்செய்துகொண்டு பலநாள் போகமயரப் பப்புருவாகன் என்னும் மகனைப்பெற்றாள். அக்குழந்தையை யெடுத்துப் பாண்டியராசனிடத்தே யுவகையுடன்கொடுக்க,அவன் பெற்றுக்கழிபெரு மகிழ்வுதலைசிறந்து உன்னாலேயன்றோ என்மரபு நிலைபெற்றதென்று சொல்ல, அர்ச்சுனன் சித்திராங்கதையைத் தன் பிறந்தகத்தேவிட்டுத் தீர்த்தயாத்திரைசெய்ய விடைபெற்று, அப்பாண்டி நாட்டிலுள்ள தீர்த்தங்களிலெல்லாம் ஸ்நானஞ்செய்து பொதியமலையையுந் தரிசித்து, சீராமபிரான் எழுபதுவெள்ளஞ் சேனையுடனும் தம்பியுடனும் சென்றவழியிலே இன்றளவும் துளவமணங் கமழுஞ் சேதுதரிசனஞ்செய்து, திரிகோணமலையை வணங்கி,கன்னியாகுமரியையும், பொருநையாற்றையும், பாபநாசத் தீர்த்தத்தையுங்கண்டு நீராடிச் சேரநாடடைந்து, அந்நாட்டிலுள்ள திருப்பதிகளையுங்கண்டு தீர்த்தங்களிலும் நீராடிமேற்கடலைத் தரிசித்து, அந்த நெடுந்திசையிலுள்ள தீர்த்தங்களில் நீராடுங்காலத்திலே இந்திரனது சாபத்தினால் அரமடந்தையர் ஐவர் முதலைகளாகச் சபிக்கப்பட்டு ஐந்து தடாகங்களிலிருக்க அவர்களுக்குப் பழயவுருக்கொடுத்து, பாம்புமதியும் பகைதீர்த்தாண்ட பரமசிவன் அடியார்க்கருள்செய்யத் திருக்கோவில்கொண்டிருக்கும் கோகன்னத்தைக்கண்டு தரிசித்து, தம்முடன் வந்தவரை அங்ஙனே யிருத்தித் தான் முக்கோற் பகவனுருக்கொண்டு சுபத்திரையை மணஞ்செய்துகொள்ள விரும்பித் துவாரகாபுரியை யடைந்து, அதற்கடுத்த இரைவதகபருவதத்தைச் சேர்ந்திருந்து தான் கருதிவந்ததைச்செய்து முடியார் பலராமனே புள்ளிட்ட யாதவகுலத்தோரென் றெண்ணிக் கண்ணபிரானைச்சிந்திக்க, அப்

பரம்பரனும் தன் தேர்ப்பாகனோடுசென்று, அவனினைத்தபடியே செய்வே மென்றிசைந்து, நாளைக்காலை வருவோமெனத் துவாரகையை யடைந்தனன்.

சூரியோதயத்தின்முன் மற்றைநாட்காலையில் கண்ணபிரா னேவலால் துவாரகை நகரமாந்தரெல்லாம்அவ்விரைவதகபருவதத்தில் மழைக்காலத்தில் இந்திரன்பொருட்டுச் செய்யும் திருவிழாவை நடத்தவந்தனர். யாதவரிலும் போசரிலும் பல அரசர் சூழ்ந்துவரப் பலராமன் வந்தான். அப்போது தோழியர் பலர்சூழச் சுபத்திரையும் வந்து சேர்ந்தாள். திரிதண்டமும் காவியும் கமண்டலமும் முந்நூலும் சிகையுமாய் விருத்த வேதியனாகக் கோலங்கொண்ட பார்த்தனைக்கண்டு அனைவருந்தொழுது விடைகொண்டுசென்ற பின்பு, தன்னை மனவணக்கஞ்செய்கின்ற அர்ச்சுனனைத் தானும்வணங்கி இருவருமொருப்பட்டிருந்தபோது, சுபத்திரை அம்மலையினோர்புறத்தே தோன்றப் பார்த்து அடிகள்திருவுள்ளக்கருத்தை எம்மவர் அறிந்தால் இசையார்கள் ; அவரறியாவண்ணம் மன்றலயர்ந்து உமது பதிக்குக்கொண் டேகுவதே அரசர்க்குரிய கடமையென்று சொல்லிவிட்டு, சுபத்திரையைத்தருவித்து இருபருவம் வரையிலும் இவ்விருத்த வந்தணனுக்குக் குற்றேவல் செய்திருவென்று கட்டளையிட்டுப் போனான்.

இவ்வாறு கட்டளையிட்டுச்செல்ல, உள்ளடங்கிய காமக்கனல் புறந்தோடிக் கொள்ளைகொண் டேலமறைத்ததென்று சொல்ல, தன் மனையில் வந்திருக்கும் கள்ளவஞ்ச வேடமுடைய அர்ச்சுனனை யறியாமல் இருந்தாள். இவளுடைய மனையில் நாம் வந்திருப்பது நாம் செய்தபெருந்தவமென்றெண்ணி யம்மனையி னொருபுறத்தே அவ்வருந்தவ வேடத்தினையுடைய அர்ச்சுனன் கண்வளர்ந்தான். மற்றோரறையில் சுபத்திரையும் தன்தோழியர் தன் பாங்கேபுடைசூழக் கண்வளர்ந்திருந்தாள். அர்ச்சுனனோ தனக்குச் சுபத்திரைபாற் காதல்மிகுவதனால் நித்திரைபெறாது ஒற்றையன்றிலைப்போலவருத்தமுற்றிருந்தான். சுபத்திரையும் அவ்வருச்சுனனை நோக்கி யையங்கொண்டு அவன் மலரடிதொழுது எங்குஞ்சென்று தீர்த்தயாத்திரை செய்தீராயினும் நீர் தங்கியிருக்கும் நகரம் யாதென்று கேட்க, அத்தனஞ்செயன் எமது நகரம் இந்திரப்பிரஸ்தமென்பார்கள் என்றான். அதைக்கேட்டுச் சுபத்திரை அர்ச்சுனனையொழிந்த பாண்டவரது யோகக்ஷேமங்களைவினவ, தனஞ்செயனும் அர்ச்சுனனை மாத்திரம் மறந்துவிட்டு மற்றை நால்வரை மாத்திரம் விசாரிப்பதேன் என்றுசொல்ல, அருகேயிருந்த தோழியர் எங்கள் நாயகியாகிய சுபத்திரை உளமுறையின் மன்றற்குரியளா யிருப்பவளென்று சொல்லி முடித்தாள். அதற்குப் பார்த்தனே தீர்த்தயாத்திரைசெய்யச்சென்றா னென்றனன் ; தோழியோ, இது மழைகாலமாகையால் அவர் எங்கிருப்பார்? தங்களுக்குத் தெரியுமோ சொல்லுமென்னத் தனஞ்செயனும், பலதிசைகளிலுஞ் சென்று தீர்த்தங்களில் நீராடி உங்கள்நாயகியாகிய சுபத்திரையின்மேல் மையல்கொண்டு அவள் வீட்டிலேயே சுகமாயிருக்கின்றானென்றான். அச்சொற் கேட்டவுடன் சுபத்திரை முகம்வெயர்த்தது, குமுதவாய் துடித்தது, கச்சணிந்த கொங்கை புளகரும்பின, இவ்வாறு அங்கே அப்பெண்கொடி பரவசமெய்தி நின்றாள்.

அப்போது அர்ச்சுனன் தோழியரை நீங்கி ஒருமாதவிச்சோலையிற் புகுந்தான். தன்னையொழிந்தோர் அர்ச்சுனனுக்குச் சுபத்திரையைக்கொடுக்க மனங்கொள்ளாமையால், இச்செய்தியெல்லாமறிந்த கண்ணபிரான் நம்பி மூத்தபிரான், அக்குரூரர், வசுதேவர், சாத்தகியாழ்வான்முதலிய வடமதுரையிலுள்ளயாதவர் யாவரையும் ஒருதீவில் எம்மையாளுடைய கங்கைவார் சடைக்குழகனுக்கு மகோற்சவ நடத்துவதாக அழைத்துக்கொண்டுபோயினன். இப்படியிரவிலே யாவரும்போனமையையறிந்த தனஞ்செயன் தன்னையீன்ற இந்திரனைவரநினைத்தான்; அப்போது இந்திரனும் திக்குப்பாலகர்முதலிய தேவர்கள் வசிட்டாதி முனிவர்கள்புடைசூழ ஐராவதமூர்ந்து துவரையை யடைந்தான். சுபத்திரையும் தன்னுடன்பிறந்த கண்ணபிரானைநினைத்தனள். அப்போது கண்ணபிரான் உருக்குமணி, சத்தியபாமை, சாம்பவதி முதலிய மனைவியருடனும், வசுதேவர் அக்குரூரர் தேவகி உரோகணி சாத்தகிமுதலானோருடனும், பலராமர் தூங்கிக்கொண்டிருக்கையில் அவரறியாமற் புறப்பட்டுவந்து, வசிட்டர் முதலியோர் ஆசீர்வதிக்க முரசமுழங்கச் சங்கத்தொனி தழங்க அக்கினி சாக்ஷியாகத் திருமணஞ்செய்வித்து, அர்ச்சுனனைத் தழுவிக்கொண்டு, மாதர் பொருட்டாக நீ யின்னமென்னென்ன மாதவவுருக்கொள்வையோவென்று பரிகாசவார்த்தை சொல்லி, இனிச் சீக்கிரம் இந்திரப்பிரஸ்தமேபோய்ச்சேரென்று விடைகொடுத்துத் தங்கையையும் ஆசிர்வதித்தனுப்ப, அர்ச்சுனனும் சுபத்திரையே தனக்குத்தேர்ச்சாரதியாய் முட்கோல்கைக்கொண்டுஇரதத்தைச்செலுத்த இந்திரப்பிரஸ்தம் நோக்கிச்சென்றான். இங்கே கண்ணபிரான் பலராமனுக்குத் துவாரகையிலுள்ள வெற்றியையுடைய யாதவவீரரையெல்லாஞ் செயித்து இந்திரனுடைய குமாரனாகிய அர்ச்சுனன் நமது சுபத்திரையைக்கொண்டு போயினனென்றுசொல்லி வாய்மூடுமுன்னமே, சிவபெருமானும் அஞ்சும் பெருந்திறலையுடைய அர்ச்சுனனைநெருங்கிப் போர்செய்யவேண்டுமென்று பலராமன் முதலிய யாதவவீரரெல்லாம் தேர் யானை பரி காலாள் என்னும் நால்வகைப் படையுடனேசெல்லநினைந்தனர். வழியில் இரைவைதகமென்னும் மலைச்சாரலில் துவாரகையைக்காக்க வைத்திருந்த யாதவவீரனாகிய விபுருது என்பவன் அர்ச்சுனன் சுபத்திரையைக் கொண்டுபோவதையும், நகரமாந்தர் இரைச்சலிட்டு வருவதையுங்கண்டு அர்ச்சுனனுடனே போராடிப் புறந்தந்தோடினான்.

அர்ச்சுனன் அவனையோட்டி மடையிலுள்ள வாளைமீன் அகில்மணங்கமழும் மருதநிலஞ்சூழ்ந்த பலநாடுகளையுங்கடந்து, தங்கள் இந்திரப்பிரஸ்த நகரையடைந்து, சுபத்திரையைநோக்கி நீ இடைமாதுபோலுருக்கொண்டு பாஞ்சாலியைக் காணவேண்டும், அவள் முன்சொன்னசொற் பிசகாளென்று, அங்கிடையர்களையழைத்து உமது மாதருடன் இப்பெண்ணையனுப்புங்கோளென; அவர்கள் தங்கள் மாதரையனுப்ப, அவருடன் சுபத்திரை பாஞ்சாலிமாளிகையடைந்துவணங்கிநின்றாள். அவளைக்கண்டவுடன் நீ நல்ல கணவனுடன்வாழ்ந்து புத்திரபாக்கியம் பெறுவாயென்றாசிர்வதித்தனள். பிறகு சுபத்திரை சற்றுத்தாமதமாயிருக்கவே இவளிடைச்சியல்லள், சுபத்திரையேயாகும், இது நமது கண்ணபிரான்செய்த நன்மையேயாமென்று சிந்தித்திருந்தனள். இங்கேசுபத்திரையை

யனுப்பிவிட்டுத் தானும் நகரத்துட் பிரவேசித்துத் தன்வரவைத் தருமராசன் முதலியபேருக்குத் தெரிவித்தான். ஒற்றர்கள் தருமராசனுக்குத் தனஞ்செயன் வரவைத் தெரிவிக்கவே, அவர்கள் எதிர்கொண்டுவந்து அர்ச்சுனனைத் தங்கள் இந்திரப்பிரஸ்தத்திற் கழைத்துச்சென்றனர். அங்கே துவாரகையினின்றும் கண்ணனுடன்சிவார்ச்சனையைநடத்தத்தீவிற்குப்போயிருந்தபலராமர்முதலிய வீரர்கள்துவாரகையில் தங்களுக்கேதேனும்அபாயம்வரின் அதைத்தெரிவிக்க விருந்தபேரிகை யறைபடுவதைக்கேட்டு இதென்ன! என்றும் நடவாத செய்கையா யிருக்கின்றதென்று அர்ச்சனைமுதலிய பூசனைநடத்திக் களியாட்டயர்ந் திருந்ததொழிந்து தாங்கள்அங்கு வைத்தது வைத்தபடியேயிருக்க,தங்கள்நகரத்துக்குவந்துசேர்ந்தவுடன் அவர்களைக்கண்டு அர்ச்சுனன்வலிதில் நமது சுபத்திரையை யெடுத்துக்கொண்டுபோய் வழியில் தன்னோடெதிர்த்த விபுருதுவையும் செவ்வையாகப் புறங்கொடுத் தோடச்செய்து தான் இந்திரப்பிரஸ்தம் போய்ச் சேர்ந்தனன், இதுதான் நடந்தசெய்தியென நகரமாந்த ரறிவித்தனர்.

அதைக்கேட்ட பலராமன் இது என்ன புதுமை! அர்ச்சுனன் நமது தங்கையை யெடுத்துக்கொண்டு போயினனும், இனி அவனைப் பூமியில் உயிருடன் வைப்பதாவென்று தீயிலெநெய்விட்டாற்போலக் கோபமூண்டனன். அதைக்கண்ட கண்ணபிரான் நல்லது! நாமே வலிய மணஞ்செய்விக்கத்தக்க விடயத்தைத்தவிர்ந்து நாம் மிகவும் பொருள்கொடுப்போர்க்கே பெண்கொடுப்போமென் றஞ்சிப் பெண்ணைத் தூக்கிக்கொண்டுபோய் நமதுகுல தருமங் காட்டினன். இப்போதோ அவன் மிகுந்த பராக்கிரமசாலியாகவும் விளங்குகின்றான், அவனை வெற்றிகொள்வதே அரிதென்று சொல்லியருள, பலராமர் முதலியோர் மனமிரங்கிக் கோபந்தவிர்ந்து நாமே நமதுபெண்ணுக்குச் சீதன முதலியவற்றைக் கொடுத்தல் கடனாகுமென்றுகருதி சும்மாயிருந்தனர்.

இங்கே அர்ச்சுனன் சுபத்திரையுடன் இரதியும் மதனனுமென்றுசொல்ல வாழ்ந்துகொண்டிருந்தனன். பலராமர், கண்ணபிரான்முதலியோர் இந்திரப்பிரஸ்தம் வந்து பாண்டவரைக்கண்டு துரோபதியையும் சுபத்திரையையும் ஆசீர்வதித்துக் குந்திதேவியை வணங்கிப் பிறகு சுபத்திரையை யழைத்துக் கொண்டு துரோபதியினிடம்விடுத்து, இவளைக்காப்பதுஉன்கடமை, யாங்கள் வேறென் சொல்வதென்று சொல்லத் துரோபதியும் அதற்கிசைந்து நிற்க, சுபத்திரைக்குவேண்டிய சிதனங்களெல்லாங் கொடுத்துத் துவாரகாபுரிக்குப் போக விடைபெற்றுச் சென்றனர்.

பலராமனை யுள்ளிட்ட யாதவவீரர் கண்ணபிரானுடன் துவாரகைக்குச் சென்றபின்பு, அர்ச்சுனனுடன் சுபத்திரை இன்பமயர்ந்துகொண்டு நல்ல சுப முகூர்த்தத்தில் அபிமன்னுவை வலம்புரிசங்கமாமுத்தம் பயப்பதேபோலப் பெற்றாள். பின்பு துரோபதியினிடமாகத் தருமராசனாற் பிரதிவிந்தியனும், வீமனாற் சுருதசோமனும், அர்ச்சுனனாற் சுருதகீர்த்தியும், நகுலனாற் சதானிகனும், சகதேவனாற் சுருதசேனனும் பிறந்தனர். இவரையே இளம்பஞ்ச பாண்டவரென்பர். இப்பெயர்கள்வந்த காரணமுஞ் சொல்லுகின்றேன். தரும

ராசனைப்போலச் சாந்தகுணம்பெற்றுப் பகைவரைவெல்லு மாற்றலினூற் பிரதி விந்தியனென்றும், பலகோடிசந்திர ருதயமானாற்போல் விளங்குவதனாற் சுருத சோமனென்றும், அர்ச்சுனன் பகைவரைவென்றானென்ற புகழைக்கேட்குஞ் சமயத்திற் பிறந்தமையாற் சுருதகீர்த்தியென்றும், இச்சந்திர வமிசத்தில் முன் னிருந்த சதானீகனென்னு மரசன்போல் ஆற்றல்படைத்தமையால் சதானீக னென்றும், கிருத்திகைநாளிற் பிறந்தமையாற் சுருதசேனனென்றும் சொல் லப்பட்டனர். அபிமன்னுயுவோ கண்ணபிரானாகிய மாமனும், அர்ச்சுனன்முத லிய தாதையரும், சுபத்திரைமுதலிய தாயரும் மகிழும்படி பிரதிவிந்தியன் முதலிய இளம்பஞ்சபாண்டவரைப்போல வளர்ந்து வந்தனன். பிரதிவிந்தியன் முதலிய ஐவரும் பூதமைந்திற் குணமைந்தும் விளங்கியவாறுபோலத்தோன்ற வளர்ந்தனர். இவ்வாறு அருமையாகத்தோன்றிய மக்களறுவருள் அபிமன் னுயுவு பருவமாறிலும் இளவேனிற் பருவமேபோல வெம்போர் விருதுக் கொருவனிவனென்னவிளங்கி நின்றான். இவ்வாறுமக்கட் செல்வமும் பெற்றுப் பாண்டவர் அரசுசெய்துவருகையில் சிவபெருமான் விழியாலழிந்து அங்க மொழிந்த அனங்கனாகிய மன்மதனுடன் வசந்தகாலம் நண்புறநெருங்கிற்று.

அர்ச்சுனன் தீர்த்தயாத்திரைச்சருக்கம்

முற்றிற்று.

காண்டவதகனச்சருக்கம்.

இப்படி வசந்தகாலமானது வந்தவுடனே கிருஷ்ணார்ச்சுன ரிருவரும் தருமராசனிடத்தே விடைபெற்று, தத்தம் நாயகிமாருடன் ஊர்திகளிவர்ந்து பரிவாரம்புடைசூழ யமுனையாற்றங்கரைசேர்ந்து, அங்கங்கேயுள்ள புனிதத் தடங்களும், அவற்றிற் புள்ளினங்கள் மருவி விளையாடுவதும், நீரோடைகளில் வனசமலர்கள்மேல் வண்டினங்கள் கானம்பாடுவதும், விநோதமாய்ப் பார்த்துக் கொண்டே காண்டவவனமென்னும் பெரிய வனத்தினுட்புகுந்து அதில் நீர் விளையாட்டயர்ந்து, மாதர்கள் பூக்கொய்து விளையாடக்கண்டு மகிழ்ந்து, மீண் டும் யமுனையாற்றங் கரையி னோர்சார் படுத்துக்கொண்டிருந்தனர். இவ்வா றிருக்கையில் இனிய பாலைமுகந்தொழுகிய வொழுக்கேபோல விளங்கும் முப் புரிநூலும், தன்சிகையின் கொழுந்தேபோலப் புறத்தே சூழ்ந்த செஞ்சடைக் காடும், பரிசுத்தமான வெண்புகைமருங்கே சுற்றிக்கொண்டதென்றுசொல்லப் புனைந்த ஆடையுமாய் அந்தணருருக்கொண்டு அவர்களெதிரே அக்கினிதேவன் வர, இருவரும் எதிர்சென்றுவணங்கித் தஞ்சிந்தையிற் பெருகிய அன்புடன் வேதிகைபோல விளங்கும் பொன்னாலாகிய ஆசனத்திலிருத்த, அவ்வந்தண னும் பெரும்பசி நோயால் வருந்துகின்றேன், எனக்கோதனமளிக்கவேண்டு மென்று வேண்டினான். அரியவாயினும், வழங்குதற் கேற்றனவல்லவாயினும், தம்மிற் பெரியவாயினும், அதிதிகள்வந் தேற்றனவற்றைப்பெரியோர்மறுக்காது

வழங்குத லியல்பாகலின், கரியமேனியையுடைய அவ்விருவரும் செம்பொன் போன்றமேனியையுடைய அம்முனிவனை நோக்கி நீருண்ணுதற்குரியவோத னம் இக்கணத்தே யிடுகின்றோமென்று மகிழ்வொடுசெப்பினர். அவ்வாறுஅவ் விருவருமளிப்போமென்றசொற்கேட்டு ஆங்கேபெற்றவன்போன் மனமகிழ்ச்சி யுடையானாய் யான் அந்தணனல்லேன், என்னுருக்கரந்துவந்தேன், என்பெயரோ உதாசனனெனப்படும் அனற்கடவுள், எனக்குணவாவது இக்காண்டவவனமே யாம், இது மேகவாகனனாகிய இந்திரனது காவலில் இருப்பதாகலின் அவன் யான்சூழ்ந்து உண்ணுதற் கிடங்கொடாம லிருக்கின்றனன். இக்கானமோ நால் வகையோனிகளும், பலவகைமலைகளும் நெருங்கித் தானவர் அரக்கர் உரகர் இவர்கட்கிருப்பிடமாய்ச் சிங்கம் முதலாகிய தீயவிலங்குகள் மிகுந்து கடைந்த கூரிய பல்லினையுடைய நாகராசர் வாழ்கின்ற இடமாம். நான்சென்று முகம் வைப்பேனெனின் ஏழுமேகங்களையு மனுப்பி ஊழிகாலமேபோல மழைபொழி வித்து என்னையவிக்கின்றனன். முன்னைநாளில் இக்கமலக்கண்ணன் ஆனிரை புரந்தாற்போல ஒருமுனைபடவிலக்கி என்மிகுந்தசோகத்தையும் எண்ணத்தை யுந்தவிர்க்கவேண்டுகின்றேன், இதுதான் என்கருத்தென்று சொல்ல, அதைக் கேட்ட தனஞ்சயன் உன்னிச்சையின்படி நீவேண்டிய உணவைத் தந்தேன், இமைப்போதிற்சென்று கொள்ளென்றுசொல்ல, சிந்தையின் மகிழ்ச்சிசிறந்து மணிநிறத்துக் கள்ளமாமாயனருளினால் கணை சிறிதுமாயாத அக்ஷயதூணிர மும், காண்டீவமென்னும் வில்லும், வானரக்கொடி கட்டியதும் சுவேதவாம் புரவிபூட்டியதுமான தேரும் கொடுக்கப்பெற்று நின்று, கண்ணபிரானோடு கவசமணிந்து, கையிற் காண்டீவமென்னும் வில்லேந்தி, எடுக்க எடுக்கப் பின் னும் வளரும் அம்புக்கோல்கள் அடரப்பொதிந்த அக்ஷயதூணிரத்தை முது கிற்கட்டிக்கொண்டு, வானரப்பதாகை நிற்க, நான்கு சுவேதவாம்புரவிபூட்டிய தேரிலேறி வில்லைவளைத்து நாணேறிட்டு, அதை விரல்நுனியால் இழுத்து மீட்டி, சங்கத்தொனிமுழக்கிக் காடெங்கும் எதிரொலி உண்டாகவும், அக் காட்டில் உள்ள சமஸ்த சீவராசிகளும் மனம்வெருவவும், அசரங்களனைத்தும் கிடுகிடென்று நடுங்கவும், பெருத்த அம்பொன்றையெடுத்துத் தொடுத்து அக் கினிபகவானைப்பார்த்து சுவாமிகாள்! நீங்கள் இனிமேல் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டுவதில்லை, வனத்திற் பிரவேசியும் என்று சொல்லினான். அத் தேவன், எக்கணம் நமக்குச்சமயம் வாய்க்குமோவென் றெதிர்பார்த்துக்கொண் டிருந்தவனாகையால், அவனுடைய வாயினின்றும் அவ்வுரைதோன்றுமுன்னே பிறவிக்குருடன்கண்வக்தெய்தின் மட்டற்றமனமகிழ்ச்சியெய்துவதையொத்து, தலைகால்தெரியாதானாய்ப் பேருடலைக்கொண்டு, கடலில் என்றுங் குடிகொண் டிருக்கும் வடவையின் முகத்திற்றோன்றிய பெருங்கனலோவென்னவும், பதி னான்கு உலகங்களையும் யுகாந்தகாலத்துச் சாம்பராக்க ஓங்கியெழும் ஊழித் தீயோவென்னவும், உருத்தெழுந்து நின்று, அர்ச்சுனராசனே! உன்னுடைய கையும் உன்னுடையசிலையும் என்றும் நிலைபெறக்கடவதென்று பேராதரத் துடன்வாழ்த்தி, அக்காடெங்கும் கரங்களைநீட்டிச் சகலமான சராசரங்களையும் கொண்டான். வாயுபகவானும்இவனுக்குத் துணையாகவே வனமெங்கும் சுடர்

மூடிச்சுட மூங்கில்கள் சட படவென்று வெடித்தன, இலைகள் கரிந்தன, கிளை கள்பட்டன, அடிமரம் பிளந்தன, கட்டைகள் சிதும்பின, எங்கும்புகைமூடியது. மரம்விட்டு மரம் சரசரவெனப்பற்றும் பல்லாயிரங் கரங்களின் காய்ச்சலுக்கு மிகப்பருத்தவேரும் அப்பெருவனத்தை முற்றும் மூடிய அப்புகையினம், சில சிவந்தும் சிலகறுத்தும் சில வெளுத்தும் சில குடைகளைப்போலும் சில கொடிகளைப்போலும், கருடப்பறவையின் கனத்தகூட்டமோ, கறுத்த கழுத் துடை அன்னத்திரளோ, இடையிடை எழுந்த புறாக்களின் இனமோ என்ன யாவரும் மயங்க, கொண்டல் கொண்டலாய்வானைமுட்டி முட்டிக்கிளம்பி, இந்திரன்வாகனம் தன்குடர்தீயப்பரந்துநிறைந்தன. அக்காலத்தில்அவ்வக்கினி தேவனுக்குண்டான வொளியும், அவ்விறுமாப்பால் அவன்செய்த அக்கிரமங் களும் அளவற்றவையாயின. புற்பூண்டருதபெரும்புதர்களுள் உதடுகளில் காட்டீக்கள் மொய்க்க, குறேக்கையிட்டுநின்ற பெரும்புலிகள் தேடித்தேடி வரும் அக்கினிக்கொழுந்துகளுக்கு விழித்துக்கொண்டு, நெருங்கிய புகைக்குக் கண்தெரியாதுபோகவே திகைதப்பிப்பாய்ந்து தலைசோர கால்சோர உடல்கள் மல்லார்ந்தன; பெரிய யானைகள் வீறிட்டுருண்டன; அகன்ற மார்பு பிளக் கக் கர்ச்சனையிட்ட பெருஞ்சிங்கங்கள் வீழ்ந்துவீழ்ந்து புரண்டன; தேவர் கள் பறந்தனர்; இயக்கர் ஓடினர்; கின்னரர் பாறினர்; கந்திருவர் அகன்றனர்; வேடர்கள் இறந்தனர்; பெண்டுகள் பலர், பிள்ளைகள் பலர், சாக்குரலிட்டனர்; விலங்குகள் தீந்தன; பறவைகள் பொசுங்கின; தடாகங்கள் வற்றின; மீன்கள் சாம்பராயின; புழுக்கள் கரிந்தன; தாவரமெல்லாம் புழுதியாயின.

இவ்வாறுசொல்லிவரும் வைசம்பாயன மகாமுனியை நோக்கி ஜெனமே ஜெயமகாராசன் சுவாமி! அக்கினிபகவானுக்கு இவ்வனத்தின்மேல் இவ்வளவு ஆவலென்ன? இத்தனைச் சீவராசிகளையும் ஏன் அழிக்கப்புகுந்தனன்? எனக் குக்காரணம் செவ்வேவிளங்க அருள்புரியவேண்டுமென்று கேட்கவே, அவர் இதுகேட்கவேண்டிய கேள்விதான். நாம் இதற்கு மறுமொழி கூறுகின்றன மென்றுசொல்லி அருளிச்செய்வதாயினர். முன்னொருகாலத்தில் சுவேதகி என்பவன், இவ்வுலகை யரசாண்டுவந்தனன். அவன் எப்பொழுதும் தருமஞ் செய்வதில் மன ஊக்கமுடையானாய், நாடோறும் வேதமோதலும், வேள்வி யியற்றலும், இரந்தோர்க்கீதலுமே தொழிலாயிருந்தனன். இவன் ஒருநாள் நூறுவருஷகாலம் விடாதுசெய்யும் ஒரு யாகத்தைச் செய்துமுடிக்கவேண்டு மென்று எண்ணங்கொண்டனன். முன்னமே உடல்வருந்தி அருந்தவமியற்றும் அறுதொழிலாளருள் ஓரோவேலையாய் இரவும் பகலும் நித்திரையின்றி நூறு வருஷகாலம் உட்காரவேண்டுமென்றால் எவர்தான் சம்மதிப்பர்? அவர்கள் யாவரும் இச்சுவேத ராசனைக் காணும்பொழுதெல்லாம் கூற்றுவனைக்கண்ட தொத்தனர். சுவாமிகளே! நான் இயற்ற மேற்கொண்ட வேள்வியை நிறை வேற்ற உங்களுக்கு எப்பொழுதுதான் மனம்வருமோ! நான்என்ன பாவியா! என்னை அப்படியிருந்தால் சாதியிலிருந்தேனும் தள்ளிவிடுங்கோள்! என்று பல வாறுபணிந்து சொல்லிக்கொள்ளும் அரசர்பெருமானைப்பார்த்து, அப்பா, நீ

பாவியன்று, உன்னுடைய நியமமோ, மேலானதே! நீ எடுத்த காரியத்தை முடிக்க எங்களால் முடியாதென்பதுதான் எங்கள் அபிப்பிராயம்; நீ அதை எப்படியேனுஞ் செய்துமுடிக்கவேண்டுமென்னும் நல்லெண்ணங்கொண்டவ னாகளெங்கள் மனத்திற்புலப்படுவதால் நாங்கள் உனக்கோருறுதிமொழிசொல்லு கிறோம்; அதாவது, நீ எவர்களையும் நம்பாமல் பேசாமற்போய்ப் பரமசிவனைக் குறித்துவெள்ளிமலையில் தவமுயல்வாய்.உனக்கிஷ்டமானநலமத்தனையும் அவ ரருள்வர்; வாளாபொழுது போக்காதை யென்றனர். இதைக்கேட்டு அரசன் மனமுவந்து அவர்களைவந்தித்து அவர்களாசிகளைப்பெற்று வேறொன்றுங் கரு தானுய் நேரே வடதிசை நோக்கினன்; வெள்ளிமலைகிட்டிற்று. அவ்வெள்ளி மலையில் இமயப்பொருப்பின் அருந்தவக்கன்னி இளநகைபுரிந்து ஒருபாகத் துறையும் நெற்றிக்கண் ணிமலனை நினைந்துநினைந்து, கனியும் காயும், இலையும் சருகும், நீரும்காற்றுமேபுரிப யுணவாகக்கொண்டு, விருப்பு வெறுப்பிகந்து உடற்பற்றையொழித்து யானெனதெனன்பதவிர்ந்து ஐம்பொறியடக்கி, அகங் காரத்தைச் சித்தத்தும்,சித்தத்தைப் புத்தியிலும்,புத்தியை மனத்துமொடுக்கி, மனத்தைச் சிவனடி நிறுத்தவே, அன்பர்க்கெளியனும், அம்பலத்தாடுமிறையு மாகிய அப்பரமேசன் வெள்விடையிவாந்து தெரிசனங்கொடுத்து யாதுகருது கின்றாய்? சுவேதகி! தவத்தை நிறுத்து, வேண்டியதைக் கேளென்னவே, கண்ணிரண்டிலும் ஆனந்தபாஷ்பம் தாரை தாரையாய்ப்பெருக எனக்கொரு வேள்விமுடிக்க ஆசை இருக்கின்றது. அவ்வேள்வி நூறாண்டு விடாமல் நடக்கவேண்டும். அவ்வாறு முடியுமாறு தயைபுரியவேண்டுமென்று பணிந்த னன். அதற்கவர், அன்பனே! இதற்கு நீ முன்னேசெய்யவேண்டிய தொன் றுண்டு, பன்னிரண்டு ஆண்டு அக்கினிதேவனை யானைத்துதிக்கையளவு நெய் த்தாரை சொரிந்து திருப்தியாக்கவேண்டுமென்று மறைந்தார். அவ்வண்ணம் அவன்செய்யவே, மறுபடியும்பரமசிவன்தோன்றி, என்னமிசமாகத் துருவாசன் என்னும்முனிவன் இருக்கின்றனன், அவனைக்கொண்டு உன்கருத்தை முடித் துக்கொள்ளென்று கட்டளையிட்டு, அவனைப்பின்னும் மகிழுமாறு அம்முனி வனையே கூப்பிட்டு, இதை நிறைவேற்றுதியென்றுறுதிமொழி பணித்து மறைந் தனர். அந்த வேள்வியினாலும் முன்னே வாளாபன்னிரண்டு ஆண்டும்அருந்திய நெய்யினாலும் அக்கினி மந்தித்து சீரணவலிமைகுன்றி உடன்மெலிந்து தேசிழ ந்து,அக்கினிபகவான் பிரமனிடத்தோடினன். அவர் இவனை இக்காண்டவவன த்தைப்புசித்துவிடென்றேவினர். அதுதான் இவன்இப்படி தொடங்கியதற்குக் காரணம். அதுவுமல்லாமல் அநேக துஷ்டசெந்துக்கள் அதிலடைந்திருந்தன. அவைகளையொழித்தற்கே கிருஷ்ணார்ச்சுனர் துணையாவதற்கு ஒப்புக்கொண் டது. அப்படி பிரமனாலேவப்பட்ட தழற்கடவுள் தன்னேய்தீரத்தக்க வுபாய மிதுவென்று அகமகிழ்வெய்திப்புறப்பட்டு கானகமுழுதும் சூழ்ந்துகொண்டு அண்டமெட்டும் பேருருக்கொண்டு கொளுத்தவே, அதற்குடைந்த அகில சராசரங்களையும் இந்திரன்கண்டு சீற்றம்பொங்கவெழுந்து எழுகடனீரையும் முகந்துகொட்டுகவென்று சத்தமேகங்களையும் ஆஞ்ஞாபிக்க அப்படிசொரிந்த மழையொழித்தற் காற்றாதவனுய் எழுமுறைமுயன்றுந்தோற்று, வன்னங்குலை

ந்து முன்வைத்தகாலைப் பின்வைத்தேகி,மீண்டும் பிரமனைப்பாடித் துதிக்கவே தாமரைப்புத்தேள் தயைகூர்ந்துஇப்பொழுது,நரநாராயண ரமிசமாய்க் கிருஷ்ணார்ச்சுனர்கள் உலகி லவதரித்திருக்கின்றனர்; அவர்களை யாசிப்பாயாயின் உன்காரியம் முடிவுறுமென்றனன். இச்சரிதத்தை நான் உனக்கு முன்னமே சொல்லியிருக்கின்றே னன்று, பின்னடந்த விருத்தாந்தத்தைக் கேட்பாயாக வென்று வைசம்பாயனர் சொல்லுவாராயினர்.

இவ்வாறாக, எங்கிருக்கும் நிருதரும் உரகரு முதலாக சகலசீவராசிகளும், காய்ந்து வீங்கி உலர்ந்து கரியாய்ச் சாம்பராய்ப்போகவே,மேன்மேலும் மூண்டெழும்பசியுடனோங்கியெழும் அக்கினிபகவானையும், அவனுக்குத்துணையாய் வந்துநிற்குந் தன்னுடைய தம்பியாகிய கண்ணபிரானையும்,குமாரனாகிய அர்ச்சுனனையும், அடங்காச்சினத்துடன் உற்றுற்றுப்பார்த்து, என்னதைரியம் இது! என்றுமூக்கின்மேல் விரல்வைத்து அங்கமெங்கும் ஆத்திரம்பொங்கி நம்முடையநந்தவனத்துக்கே உலைவைத்துவிட்டார்களே! என்று வெகுண்டு சத்தமேகங்களையுங் கூப்பிட்டு கனத்த மழைகாலத் துருவங்கொண்டு சத்த சாகரத்து நீரையுஞ்சொரிந்து வருவென்று கட்டளையிட்டுப் பாகனைநோக்க மதித்த மத்தகமும், சிறுத்தகண்களும், நீண்டதந்தமுமாய், துதிக்கையைத் தூக்கிக்கொண்டு, காதையடித்துக்கொண்டு, வாலைவீசிக்கொண்டு வெள்ளை வெளேலென்றிருந்த ஐராவதம் எதிர்வந்து பணிந்தது. இந்திரன் அதன்பிடர் மிசை இவர்ந்து துந்துபிமுழங்க, வானவர்சூழ வெள்ளித்தடிக்காரர் உங்காரஞ் செய்ய வந்தியர்புகழ மாகதர்வாழ்த்த அதற்குள் அவ்வனத்துக்குநேராக ஆகாயமார்க்கத்தில் நெருங்கினன். மேகவரிசைசென்று நெருங்கிப் படர்ந்து மழையைப்பொழிந்து,கோவர்த்தனகிரியைக்கண்ணபிரான்எடுத்தவனாயிற்றே! யென்றும், அர்ச்சுனன் பகழி ஆகாயத்தைப் போர்க்கவல்லதே யென்றுஞ் சிறிதும் பயப்படாது, எங்கும்கவிந்த அக்கினிதேவன் மனந்திடுக்கிடும்படியிடித்து, அவனுடலினொளி தூரப்போம்படி மின்னி, கடல் நீரினை ஆகாய மென்னும் பன்னடையில் ஊற்றப்பெருகிற்றோவென்னத் தரையிலிறங்கவும், கூட்டங் கூட்டமாய்த் தேவர்கள்சூழ்ந்துநிற்க, இந்திரன் அதற்குத்துணையாய் வந்துநிற்கவும்கண்ணுற்ற அருச்சுனன் மிக்ககோபத்துடன் பொங்கியெழுந்து வில்லைவளைத்து, அம்புகளைப் புங்கானுபுங்கமாகக்கோத்து, ஒன்றோடொன்று பின்னிப்பிணைய, அக்காண்டவவனம் முற்றும்போர்க்கும் சரக்கூடமொன்று மண்ணையும் விண்ணையும் கவிக்கும் வண்ணம் கட்டிவிட்டனன். காட்டை விட்டு வெளிக்குப்போக எவ்வுயிர்க்கும் முடியாமற்போய்விட்டது. இந்திரனுக்கெழுந்த ஆத்திரமோ எல்லைகடந்துவிட்டது. நான் ஏவியேவிவரும்பகழியீட்டங்களையுந் தறித்தானே! என்னம்பினமும் அக்காட்டை யண்டாது மறைத்தனனே! என்பது அவனுக்காச்சரியங்கொடுத்தது. இருடிகளுக்கும்இது ஒருவிந்தையாயது. இச்சமயத்தில் நாகராஜனாகியதக்ஷகனென்போன் இந்திரனுக்கு உயிர்த்தோழனானவன், குருக்ஷேத்திரம் போயிருந்தனன். இவனுடைய மனைவியும் அசுவசேனனென்னும்குமரனும்இவ்வாறு எழுந்தகொடுதீயில் அகப்பட்டுக்கொண்டனர். இந்திரனுக்கு அவர்களைப்பிழைப்பிக்க வேண்டுமென்

னும்கருத்திருந்தும்சாத்தியமில்லாமலேமுடிந்தது. அதன்மேலவன் குட்டியைத் தூக்கிக்கொண்டு சரக்கூடத்தைவிட்டு ஓடோடிவரும் நாககன்னியைப்போக வொட்டாமல் தடுக்கும் அர்ச்சுனனுடையவாளியையோர் அம்பையெய்துதறிக்க வே, சரசரவென்று கணக்கற்றபாணங்கள் இந்திரனைப்போர்த்தூடுருவின. இருவரும் கைகலந்தனர், புற்றிலிருந்து ஈசெல் புறப்பட்டாற்போல் விண் ணெங்கும் வாளிகள்பாய்ந்தன. வருணாஸ்திரம்வந்தது,வாய்வாஸ்திரம்வந்தது, அக்கினியும் முன்னுக்கதிகமாய் ஓங்கினன். சத்தமேகங்களும் தடித்திடித்து மின்னிப்பொழிந்தன. அர்ச்சுனன் தேவர்கள் மேலும், கண்ணபிரான் இராக் கதர்கள் மேலுமாய்த் திரும்பினர். இந்திரன் வச்சிராயுதமெடுத்தான், இயமன் காலதண்டங்கொண்டான்,குபேரன் சிவிகையிலேறி வாள்ஓச்சினன்,வருணன் பாசத்தை வீசினன், ஈசானன் வில்லை வளைத்தான். இவ்வாறாக முப்பத்து முக்கோடி தேவர்களும் தத்தம் ஆயுதங்களை ஏந்திக்கொண்டு கிருஷ்ணார்ச் சுனர்மேல் கைகலக்கவே, அவர்களுடைய சக்கரமும் வில்லும் கரகரவென்று சுழன்றன. முனிவர்களுக்கெல்லாம் ஆச்சரியம் அதிகமானது. இதென்னயுத்த மென்று இந்திரனை யாவரும் நோக்கினர்கள். அசரீரிக்கு மனம்பொறாமல் இனிமேல் சும்மாயிருந்தால் எழுங்கனலுக்குச் சகல ஆன்மாக்களும்சிர்குலையு மென்று நினைத்து, இந்திரனைப்பார்த்து உலகமுழுதையும் படைத்தும் காத் தும் அழிக்கும் பரமபுருஷனாகிய ஸ்ரீமந்நாராயணனே இக்கண்ணபிரான், பக்கத்திலிருக்கும் அர்ச்சுனராசன் அப்பகவானைப் பிரியாதிருக்கும் நரனென் றறிதி யென்னவே, தேவர்களெல்லோரும் அப்படியானால்நம்மால் இவர் களைச்செயிக்க முடியாதென்றனர். மறுபடியும் இந்திரனுக்குமனம் ஒருவகைப் பட்டிருக்க, ஆகாயவாணி வானவர்க் கரசனைச் சமாதானப் படுத்துவதற்கு உன்னுடையசிநேகனான தக்ஷகன் இதில் அழியவில்லை,குருக்ஷேத்திரத்துக்குப் போயிருக்கிறான். மேலும் பிரமதேவனுடைய வசனப்படியே இந்தக்காண் டவவனம் புழுதியாயது. ஆதலால் இதற்காக நீயேன் கவலைப்படுகின்றனை? என்று சொல்ல, இந்திரன் போரைநிறுத்தினன். கிருஷ்ணார்ச்சுனர் சக்கரத் தையும் தனுவையும் சுழற்றலையும் வளைத்தலையும் தவிர்த்தனர். சங்கம் பூரித் தனர், திரிலோகமும் அதிர்ச்சிகொண்டன, அக்கினிக்குப்பின்னும் ஆரவாரம் அதிகப்பட்டது. இத்தருணத்தில் மயனென்னும் அசுரனொருவன் தக்ஷக னுடைய வீட்டைவிட்டு தப்பித்துக்கொள்ளச் சித்தமாயிருந்து நெருப்புக்கொ ழுந்துக் ககப்படாமல் தப்பித்துக்கொள்ளச் சமயம்பார்த்து ஓடவே, இதைக் கண்டகண்ணபிரான் சக்கரத்தை ஏவினன். உடனே மயன் அர்ச்சுனா! சரண மென்றான். அவனும் கண்ணபிரானுக்குக் கண்சைகைசெய்தான். அதனால் அவன் தப்பித்துக்கொண்டான். அசுவசேனன் ஒருவனைப்பற்றி முன்னமே சொன்னேன். இன்னும்நால்வர் உயிர்பிழைத்தனர். அவர்களுடைய பெயர் சார்ங்கிகர். இவைகள் வானம்பாடிப் பறவைகள் என்னவே, ஜனமேஜயன் இவர் கள் உயிர்பிழைத்ததற்குக் காரணமென்னவென, வைசம்பாயனர் சொல் லுவாராயினர்.

வேதபுராணங்க ளறிந்தாருட்சிறந்து இந்தியமவித்துக் காண்டவவனத்தில் மந்தபாலமுனிவர் தவஞ்செய்து வந்தனர். அவர் உலகவாழ்க்கையை வெறுத்து மாதர்முகம்பாராமல் பிரமசரியமேற்கொண்டு நெடுங்காலமிருந்து மனிதயாக்கையை விடுத்துத் தம் தவமகிமையால் பிதுருலகமெய்திச்சென்று ஆங்குத் தன்றவமேன்மையாலெய்துஞ் சிறப்பொன்றையுங் காணுமே, அங்கு நின்றும் இந்திரலோகம் வருணலோகம் வாயுலோகமுதலிய உலகங்களைத்தெரிசித்துப்போந்து அவ்வுலகினுந் தாம்பெறற்குரிய வின்பந்துய்க்காமல் தென்புலத்தார் கோமானையெய்தி அவரயலினின்ற தேவர்களைக்கண்ணுற்று யானெங்கே போயினும் எனக்கோர்பயனுஞ் சித்தித்திலது. அதற்குக் காரணமென்னை? என்றுவினவ, தேவர்கள் சொல்வாராயினர். அந்தணர்முதலிய நால்வருணத்தாரும் உலகத்தில்பிறந்ததுணையானே மூன்றுகடன்களையும் கழிக்கவேண்டும். அவை பிதிர்க்கடன், தேவர்கடன் முனிவர்கடனென்பனவாம். அவற்றுள் பிதிர்க்கடன் புதல்வரைப்பெறுதலானும், தேவர்கடன் வேள்வியானும், முனிவர்கடன் வேதமோதுதலானுமென்பர். நான்குவருணத்தாருக்கும் பிதிர்க்கடன் சிறத்தலானும் மூவருக்குமுரிய ஏனையிரண்டனையும் ஒழித்துப் புதல்வரைப்பெறுதலைத் தேவரும் சிறப்பாகக்கொண்டனர். நீரோ நால்வருக்குமுரிய பிதிர்க்கடனைச் செய்திரல்லீர். அக்கடனைத்தீராமை பெரும்பாவமாகலின் நீர் சென்றவிடத்தில் இன்பந்துய்த்தீரல்லீர். 'சந்ததிக்கழகு வந்திசெய்யாமை.' என்றாராகலின், நீர் எவ்விதத்தேனும் சந்ததிவிருத்திசெய்யவேண்டும். போம் என்றுவிடுக்க, அதைக்கேட்டமந்தபாலமுனிவர் நால்வகையோனியில் எதனுற் பிள்ளைப்பேறு வாய்க்கப்பெறுமென்று சிந்தித்துக்கொண்டிருந்தனர். அத்தருணத்தே சார்ங்ககம் என்னும் ஆண்பறவை யிறந்துபட்டுச் சரிதையென்னும் பெண்பறவை பறந்து வீழ்ந்தழக்கண்டு தாம் அவ்வாண்பறவையி னுடலிற் புகுந்து அப்பேட்டைக்கலந்து நான்குமுட்டைகளையீன்று பின்னர் லபிதையென்னும் மற்றொரு பெண்பறவையைக்கலந்து சரிதையையும் அதன்முட்டைகளையும் அக்காண்டவவனத்தேவிட்டு அதனுடன்சென்றனர். அஃதிங்ஙனமாக, சரிதையென்னும் பேடோ முட்டைகளைவைத்துக் காத்துக்கொண்டு பார்ப்பினங்கள்வெளிப்பட்டவுடன் பிரமதேசசு விளங்கஅப்பார்ப்பினங்களைக்கண்டு மகிழ்வெய்தி அவற்றிற்குவேண்டு முணவுகளைக்கொடுத்துவந்தது. இதுநிற்க; மந்தபாலமுனிவன் சார்ங்ககமென்னும் ஆண்பறவையாக நின்று லபிதையுடன் செல்கையில் வழியிற் காண்டவவனத்தை யெரிக்கவரும் அக்கினிபகவானைக் கண்டு அவன் கருத்தையறிந்து அவனை மும்முறை வலம்வந்துபணிந்து நீர் தேவர்கள் முகமாயிருந்து அவர்களுக்கு ஆகுதியீகின்றீர்; எல்லாவுயிரினு மந்தரான்மாவைப்போலுந் தோன்றுகின்றீர், நீர்சிருட்டிமுதலிய தொழிலையுஞ் செய்கின்றீர், நீரில்லாவிடின் உலகம் பிழைக்கரிது. வேதியர் யாவரும் உம்மையே வழிபட்டு எக்கருமமும் நிறைவேற்றிக் கொள்கின்றனர். உம்மாலேயன்றோ ஆண்டுகளும் மாதங்களும் நாட்களுந்தோன்றி மனித ராயுளைக்கவர்கின்றன. இம்மை மறுமைப்பயன்களில் எதைப்பெறவேண்டினும் வேதவிதிப்படி உம்மாலேயே பெறவேண்டுவதாகத் தோன்றுகின்றது. ஆகாயத்தில் தோன்றும்

கிரகங்களும் விண்மீன்களும் உமதுருவமேயன்றி வேறன்று. யாண்டும் நீரே நிறைந்திருக்கின்றீர். ஆதலால் எவ்வாற்றானும் தேவருட்சிறந்தார் நீரேயன்றி வேறின்று. வேதியர் வழிபடுந்தெய்வ நீரேயாதலால் என்பால் அருள்செய்ய வேண்டுமென் றிறைஞ்சினர். நீர் விரும்பி என்னைப்புகழ்ந்தமைக் குளமகிழ்ந் தேன், என்னாலாய வரம் வேண்டுமேல் தருகின்றேனென்ன, அதற்கு அம் முனிவர் அக்கினிபகவானை வணங்கி என்பார்ப்பினங்களை நீர் காண்டவ வனத்தை யெரிக்கையில் அவைகட்கொருதீங்கெய்தாவண்ணங் காக்கவேண்டு மென்றுவேண்ட, அவ்வாறே யாகுகவென்று வரமளித்துச்சென்றனன். அதனா லன்றே அக்கினிபகவான் அச்சார்ங்ககங்களை அவ்வெரியினின்றுங் காத்தனன் என்று பின்னுஞ் சொல்வாராயினர்.

இவ்வாறு அக்கினிபகவான் அவ்வனத்தைச் சூழ்ந்தெரிக்கையில் அதி லிருந்த சரிதை யென்னும் பேடு தான் கதியொன்றுங் காணகிலாதயர்ந்து அம்ம! என்செயக்கடவேன்! என்வயிற்றி லிப்பார்ப்பினமேன் தோன்றின! இவை இன்னும் உறுப்புக்கள் தோன்றாதனவன்றோ! இவ்வக்கினிக் கெம்மாத் திரம்! நான் மகானுபாவனுக்கு வாழ்க்கைத்துணைவி யாயினேனென்று மகிழ்ந் திருந்தேனே, அம்மகிழ்ச்சிக் கிடிவிழுந்துவிட்டதே! நானொரு வண்ணமெண்ணி யிருந்தால் தெய்வமொன்றொன்ன மெண்ணிவிட்டதே! நீங்கள் இவ்வக்கினியாற் கரிந்து பொரிந்து போவீர்களே! என்னுயிரை யானிரையாக்கிவிட்டாலும் சந் தோஷமாயிருப்பேனே, என்னுயிர்க்குயிர்கிய உங்களையிழந்து வருத்தப்படு வேனே! அக்கினிபகவானே உன்னைவணங்குகின்றேன். என்னை எரித்தே னும் என்பார்ப்பினத்தைக் காப்பாற்றவேண்டுகின்றேன். இவ்வளவு உதவி செய்யலாகாதா! பெரியோர் "தம்பொருளென்பதம்மக்கள்." என்றாராகலின் உங்களையிங்கேவிட்டுவிட்டு உமது தந்தை லபிதையுடனே போய்விட்டாரே! நானுங்களை யெவ்வாறு காக்கவல்லேன்! எப்படி உங்களைத் தனியேவிட்டுத் துணிந்துபோவேன், உங்களுடன் உயிர்விடுவதேதகுதியென்றுஇவ்வாறேங்கிய தாயைப்பார்த்து அப்பார்ப்பினங்கள்சொல்லலாயின, நீர்சிறிதும் அஞ்சாதபோ தே என்பிதாவிடத்தேபோய்ச்சேருவதே உமக்குத்தகுதி.நாங்களிறந்துபட்டா லும் நீர் எமது பிதாவிடத்தேசென்றுசேர்வீராயின் எம்மைப்போல் பலமக் களைப்பெறலாம். நீர் இறந்துபட்டால் எங்கள்குலமே யழிந்துவிடும். சந்ததி விருத்திபாதற்பொருட்டன்றோ எமது பிதா உம்மைக்கலந்து எங்களை யீன்ற னர். எங்களைக்காக்க வலியற்று நீரும் இத்தீயின் மாண்டுபோவதனால் ஒரு பயனுமின்றென்றுசொல்ல, அதற்குத் தாய்ப்பறவை மக்காள்! எனக்கொரு சூழ்ச்சிதோன்றுகின்றது. அது நீங்கள் இதோதோன்றும் எலிவளையிற்புகுங் கோள். நானதனை மண்ணான் மூடிவிடுகின்றேன். இக்கனலவிந்துவிட்டபின்பு வந்து திறந்துவிடுகின்றேனென்று சொல்லிற்று. அம்முனிவன்மக்கள் தாயை வணங்கி தாயே! நீயேன் வினையப்பேசுகின்றனை! நாங்கள் இறகு முளையா விளம்பார்ப்பினம். இதில் நாங்கள் புகுவோமெனின் எங்களை வாழைப்பழம் போல் இதில் உள்ள எலி விழுங்கி யேப்பமிடுமே, என்செய்வோம்! நாங்கள்

இவ்வெலிவாயிற் புகுந்திறப்பதினும் இவ்வக்கினிக் கிரையாவதனுற் புண்ணிய முண்டாமே, ஆதலான் நாங்களெப்படிப் புகுவதெனமறுத்துரையாட,அதற்கு அப்பேடிமக்காள்? நீங்கள் நான்சொல்வதைக் கேண்மின்,இதிலுள்ளவெலியைப் பருந்தொன்று காலிற் கொண்டு போயிற்றென்றது. அதற் கப்பார்ப்பினம் எலிபோயினும் வேறேதேனுங் குடியிருக்கலாகாதோ,இதிற் புகுந்தால் இறப்பது திண்ணம். இங்கேயிருக்கினும் எங்களையெரிக்காமல் விட்டுவிடுவன். நீர்சொல் வதைத் தடுக்கின்றேமென் றெண்ணவேண்டா மென்று மறுத்துக்கூறின. அதற்குப்பேடு நான் கண்ணுற்பார்த்ததைச்சொல்லியுங் கேளாதிருக்கின்றீர்க ளென்று பலமுறையுஞ்சொல்ல, அதற்கப்பார்ப்பினம் 'எவ்வுயிருங்காக்கவோ ரீசனுண்டோவில்லையோ-அவ்வுயிரில் யானொருவ னல்லையோ-செவ்வி - யருகு வதுகொண்டிங் கலேவதேனன்னே - வருகுவது தானேவரும்.' என்ற பெரி யோர்சொல்லறியாயோ! நீர்எங்களுக்காக விரங்கவேண்டாம், நீர்எம்மைகாக்க வேண்டுவ துமதுகடமையேயன்று, நாங்க ளிப்படிப்பட்டவொன்று உமக்குத் தெரிந்திலது, நாங்கள் அக்கினிக்கிரையாயினும் ஆவோம், அன்றிக் காக்கப்படி னும்காக்கப்படுவோம், நீர் எமது பிதாவிடஞ்செல்லுமென்றன. தாய்ப்பறவை நடக்கவேண்டியது நடந்தேவிடுமென்று தீர்மானித்து அவற்றை அவ்வனத்தே விடுத்துத் தான் ஆகாயத்திலெழும்பிப் போயிற்று.

தாய்ப்பறவை சென்றபின்னர்இப்பார்ப்பினங்கள் அவ்வனத்திலேயேயிருந் தன. அக்கினிபகவானே தன் னெழுநாவையு முயரநீட்டி அவ்வனத்தினை மிகவு மழிக்கத்தொடங்கினன். அதனல் தீச்சுடர் தம்மைவெதுப்ப அப்பார்ப்பினங் களில் முதற்குஞ்சு தம்பியரைநோக்கி உலகின்கண் 'அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா - ரென்னுடைய ரேனுமிலர்' என்றமையான் அறிவுடை யான் துன்பம்வருவதறிந்து முன்னரோ அதுவராமை முயலவேண்டும். அவ் வாறு முயல்பவனே அதுநேரினும் அதனுற்றுன்பமெய்தான். ஒருவன் தனக்கு நல்லகாலமெப்போத மிருக்குமென்றே யெண்ணவொண்ணுது; அவ்வா றெண்ணியிருப்பனேல் துன்பமெய்துவதுதிண்ணம். நாம் துன்பம்வருவதாகத் துணிந்திருந்தமையால் நாம் துயர்தல் தகுதியன்றென்று கூறிற்று. அதைக் கேட்ட இரண்டாவது பார்ப்பு தன் முன்னேனைநோக்கி நீர்மிகுதியும் அறி வுடையாராதலின்நமக்குநேர்ந்தவிபத்தை யெவ்வாறு கடக்கற்பாலதோஅதைக் குறித்தெண்ணித் தீர்க்கவேண்டும்; ஒருகுலத்தி லொருவனன்றே அறிவிற் சிறந்தவனுயிருப்பானென்றது. மூன்ரும்பார்ப்புதந்தையில்லாதார்க்குத்தந்தை போல்வான், தனக்கு மூத்தவனென்றன்றே அறநூல் முறையிடுகின்றன; உமக்கே எம்மை விபத்தினின்றுங் காக்கக்கடமை. உமக்கே உபாயமொன்றுந் தோன்ருதாயின்யாமென்செயக்கடவோமென்றது. நான்காவது பார்ப்புஎன்ன கொடுமை! நாமிருக்குமிடத்தையே வந்து கனலெரிக்கின்றது, அக்கினிபக வானே வேள்வித்தீயில் அவியுண்ணும் பொருளன்றே! நம்மைக்காய்வது மவர்க்குத் தகுதியோவென்றது.

இவ்வாறு ஏனை மூவருஞ் சொல்லக்கேட்ட முதற்பார்ப்பு அக்கினிபக வானைக் கைகூப்பிவணங்கிக் கூறுகின்றது. அக்கினிபகவானே! நீயே வாயு

வுக்கான்மாவாயிருக்கின்றனே ; சஞ்சீவிமுதலிய புற்பூண்டுகட் குடம்பாயிருக்கின்றனே. நீர்க்குப்பிறப்பிடமாகின்றனே ; அதனேடும் பிறந்தவனுகவு மிருக்கின்றனே. இந்நிலவுலகமாயுந் தோன்றுகின்றனே. உன்பேருருவத்தையும் எழுநாவையும் காட்டாதொடுக்கி யருளவேண்டும். உம்மையன்றி யெமக்குப் புகலிடம்வேறின்று. நீயேகருணையொடுங் காக்கவேண்டுமென்றது. இரண்டாம் பார்ப்பு:—நீயேஎப்பொருட்கு மாதாரமாகலின், இந்நிலவுலகமுழுது முன்வசமென்பதற்கு வேறுகூறுவானேன்? நீ யெம்மைகாக்கவேண்டுமென்று வேதாந்தமந்திரத்தாற்றுதித்தது. மூன்றாம்பார்ப்பு:—நீயேயவியாயும்; அவியுண்ணும் பொருளாயும் ; விளங்குகின்றனே ! ஆன்றோரனைவரும் உன்னை யொன்றாயும் பலவாயுங்கருதி வேள்விசெய்கின்றனர். நீ உடலுயிரைவதைத்துச் சங்கார காலத்திலழிக்கின்றது மல்லாமல் ஆதாரமு மாதேயமு மாகின்றனே. எங்களைக் காப்ப துன்பாரமென்றது. நான்காம்பார்ப்பு :—உலகத்துக்குக் காரணமாவானே ! நீயாவர்வயிற்றினுமிருந்து அவருண்ணும் உணவையெல்லாஞ் சீரணவளர்க்கின்றனே ! பரிதியங்கடவுளாயிருந்து பூமியிலுள்ள நீரைக்கவர்ந்து மீண்டும் முகிலாய்ப்பரந்து அவற்றை யுதவுகின்றனே. ஓஷதிகளும் குளங்களும் கேணிகளும் ஆறுகளும் கடல்களும், உன்னாற்றோன்றுகின்றன வென்பதிற் சிறிதேனும் ஐயமில்லை. புனற்கடவுளும் பெருமிதமெய்தி இக்கடலின்கண் வசிக்கின்றனன். நீர் பொன்போலும் விழியும் சிவந்தகழுத்தும் கறுத்த சிகையுமுடையானுய் விளங்குகின்றனே ! நீ எம்பாற்பரிந்திரங்கிக்காப்ப துன்பெருங்கடனென்று வேண்டுகின்றது.

இவ்வாறு நால்வருஞ்சொல்ல அவற்றுள் நான்காம் பார்ப்பினைநோக்கி நீ மகரிஷியாகலின் உன்நாவில் வேதமணம் வீசுகின்றது. உனக்குச்சிறிதேனும் அச்சமின்று. உன்தந்தை இங்குநின்றும் போகையில் என்பால் உம்மைக் காக்க வரம்பெற்றுச்சென்றனர். அதுவுமல்லது நீங்கள்செய்த தோத்திரத்திற்கு மனமுவந்தேன், உங்கள்துதிக்காக யான்செயற்பால தியாதென்று அக்கினிபகவான்கேட்க அந்நான்கு பார்ப்பினமுங் கூறலாயின. எம்மைப் பூனை இனங்கள் வருத்துகின்றன வாகலின் அவற்றின் றுயரினின்றும் காக்கவேண்டுகின்றோம். இதுதான் யாங்கள்பெறவேண்டும் வரமென்றன. அதைக்கேட்ட அக்கினிபகவானும் அவ்வாறே யாகுகவென்று அவற்றை யொன்றொழியாமற் புகிக்கவே அவ்வனங்கரிந்து பொரியாய்விட்டது. இதுநிற்க, மந்தபாலமுனிவன் சார்ங்ககமென்ற பறவையுருவமாய் லபிதையென்னும் பேட்டினுடன் கலந்து மருவியிருக்கையில் காண்டவவனத்தை அக்கினிதேவன்யழித்துவிடப்போகின்றனனே, அக்கினிபகவானிடத்தே தான் வரம்பெற்றிருக்கினும் புத்திரவாஞ்சைமிகுந்து ‘கடந்து ளோர்களும் விடுவரோ மக்கள்மேற்காதல்’ என்றபடி வருந்தி, என்னுமோ வென்றுதுயருற்று சரிதையைநினைந்து அடிபெண்ணரசே ! நீயிளம்பாவையாயிற்றே என்செய்வை யென்றும் ; மக்களை நினைந்து மக்காள் ? நீரென்செய்வீரென் றேங்கித்துடித்தும், நான்தவஞ்செய்து பெற்றவை இறகுமுளையாதனவன்றோ அவைசாம்பராயினவோ வென்றும், வாடி முகம்புலர்ந்து நான்விட்டுவந்த அவற்றை மீட்டுங்காண்பேனோ வென்றும்

வருந்துவதை, லபிதைநோக்கி நீர்முற்றத்துறந்தமுனிவரன்றே நீரிவ்வாறு மக்கட்பேற்றைநோக்கி வருந்துவதுதகுதியோ! உமதுமக்கட்குத் தீப்பயம்சிறிதும் நேர்வதரிது. நீர்வருகையில் தீக்கடவுளிடத்தே வரம்பெற்றுவந்தீரோ! அக்கடவுள் தாம் சொன்னசொற் றவறிழைப்பரோ! நீரறியாததொன்றுமில்லையே, நீர் அதைக்குறித்துக் கவலுவதொழியும், நீர்மக்களை நோக்கி கவன்றீரல்லீர், என்மாற்றாளைநோக்கியே வருந்துவதன்றி வேறன்று, அவள்பால் எத்துணைக் காதலுடையீரோ அதிற்பத்திலோர்பங்குமென்பாலன்புவைத்தறியீர், இப்படிப்பட்ட உம்மொடுகூட்புற்றிருப்பதேதகுதியன்றென்று கூறிற்று. அதற்கு அவர் யான் கழிபெருங் காமவேட்கையானயர்கின்றேனென் றெண்ணுதலொழி. சந்ததிநோக்கி வருந்துவதல்லது வேறொன்றுமன்று! ஒருவன் கையின்கண் உள்ள கனியையெறிந்துவிட்டு வேறொன்றுதாவுவதுபோலும், பெற்றமக்களை நெருப்பிற் கிரையாக்கி வேறுமக்களைப் பெறுவதுநோக்கி மகிழ்வது. இனி அவ்வாறு நினைப்பவன் வெள்ளறிவனவன். அக்கினிதேவன்பால் வரம்பெற்றிருப்பினும் அக்காண்டவவனம் எரியுங்காலத்தே இவர்கள் இளங்குஞ்சுகளாதலால் அச்சுடர்தாக்கியே மரிப்பரோ, அப்பார்ப்பினங்களை விட்டிருப்பதற்கென்மனந்துணியுமோ! நீயென்ன அறியாதகாரியம் பேசுகின்றனை! லபிதாய்! 'பேதைமையென்பது மாதர்க்கணிகலம்' என்றது உன்பொருட்டே தோன்றிற்றென்றுகூறிவிட் டென்னுடன்வாவென் றுறுதிமொழிசொல்லித் தம்மக்களிருக்குங் காண்டவவனத்தை நோக்கிச்சென்றனர். இதுகிடக்க;

மந்தபால முனிவர் வரக்கண்ட அப்பார்ப்பினம்நான்கும் தந்தையை மும்முறை யடிவணங்கி நிற்பதறிந்து கழிபெரு மகிழ்வெய்தி யவர்களைத்தழுவி முகத்தொடுமுகம் வைத்துச்சிமோந்து ஆராவன்பாற் சீராட்டி யவற்றினயலிற்கிடந்த சரிதையைநோக்கி இவற்றுள் எதுபெரிது எதுசிறிது என்றியம்ப,அதற்கொன்றுமுரையாடாமல் சித்திரப்பாவைபோ னிற்பதறிந்துவருந்த, அதற்கு மனங்கலுழ்கின்றன ரென்பதுணர்ந்த சரிதை, எப்பார்ப்பாயினு மென்ன? நீரதைக் கேட்பதனா லென்னபயன்? இப்படிப்பட்ட தருணத்திலெங்களைக் கைவிட்டு மாற்றாளை நாடிச்செல்வதுமக்கழகாமோ? யார்பாற் காதல்கொண்டு நீரிதுவரையிலும் மனந்துடிக்காம லிருந்தீரோ, அவள்பாற் செல்லுமென்று கடுகடுத்துப் பேசிற்று. அதற்கு மந்தபாலமுனிவரும் சரிதாய்! நீ மனத்திற் சினங்கொள்ளாதொழி! நீ மிக்க கற்புடையாளாதலாலும் குழந்தையின் பாதுகாப்பிலேயே கருத்துடையாளாயு மிருப்பதனால் என்னைக்குறித்து இவ்வாறு ஐயப்படுவது நலமோ, இவ்வாறேமுன்னாளில் அருந்ததி சத்தமுனிவர் நடுவில் விளங்கிக்கொண்டிருந்து, மிக்க தவச்சிறப்பினையுடையராய் வசிட்டமுனிவர்பால் சங்கையெய்தி அக்குறிப்பினை யாவருக்குங் காட்டினள். அதை நோக்கி அவ்வருந்ததிமேற் சினங்கொண்டுசபித்த மாத்திரையானே ஆகாயத்திற்கருநிறங்கலந்த பொன்மைநிறமுள்ள விண்மீனாய் யாவருடைய கண்களுக்குந் தோன்ற நின்றனள். இதனை நீயறியாததன்றே, நீமிக்க கற்புடையளாயிருந்தும் என் கருத்தைச் சிறிதேனு முணராமலையப்படுவது தகுதியேயன்று. நானோ

சந்ததிபொன்றையே கருதி விழைகின்றவன். பெண்போக மொன்றனையே விழைந்தவனல்லேன். பேதையர்பாற் காதல்வைத் தழிவது பெருங்குற்ற மென்றேதுணி. நீநற்கதியடையக் கருதுவையேல் என் சொற்படி நடவென்ன, நாம் என்னகாரியஞ் செய்துவிட்டோ மென்றேங்கி மனந்துடித்து நடுக்க முற்றது. பார்ப்பினம் நான்குந்தாதையை மும்முறையடிபணிந்து நின்று எம் தாயின்பாற்கொண்ட கோபந்தணிய வேண்டுமென்றன. அப்பார்ப்பினங் களின் நற்குணநோக்கிக் கொண்டாடி நான் அக்கினி தேவனிடத்தே உங்க ளுக்குக் கெடுதிசெய்யாவண்ணம் வரம்பெற்றிருந்தேன்; அக்கடவுள் தன் வாக்கிற் றவறிழையாரென்றும், உம்முடைய தாய் கற்புடையாளாதலின் அக் கினி பயமுண்டாகாதென்றும் துணிந்து, இத்துணையுந் தாழ்த்தே னென்று சொல்லிவிட்டு; பின்பு அவர்களை நோக்கி நாம்இங்கேயிருப்பது தகுதியன்று, வேற்றிடஞ்செல்வதே தகுதியென்றுகூறித் தன் பெடையுடன் பார்ப்புஞ் சூழ்ந்துவர வேற்றிடஞ் செல்வதாயினர். இது நிற்க;

இவ்வாறாகச் சார்ங்ககர் மயன் அச்சுவசேனன் என்பாரொழிய மற்றைப் பூதராதிப் பிரவஞ்சப்பொருளையும் அக்கினிதேவன் கரிந்து பொரிந்து சாம்ப ராக்கிக் கிருஷ்ணார்ச்சுனரைக் கண்டு உமது பெருந்துணை வலியால் என் கருத்து நிறைவேறிற்றென்று புகழ்ந்துகொண் டிருந்தனர். அப்போது ஐரா வதமிவர்ந்து இந்திரன் பலதேவகணம் புடைசூழவந்து கிருஷ்ணார்ச்சுனரைக் கண்டு நீங்கள் அறவொழுக்கத்தைநிறுத்த அவதரித்தீராகலின்தேவாசுரரையும் வென்றீர். உங்கள் நற்குணங்களை யறியும் பொருட்டே யான் சோதித்தே னன்றி வேறன்று. நீங்கள் வேண்டியவரங்களைக் கேளுங்கள் தருவேனென்ன அதற்கு அர்ச்சுனன் எனக்குப் பாசுபதப் படையையும் பிற சிறந்த படைக் கலங்களையும் அளிக்கவேண்டுமென்று வணங்கி நின்றனன். அதற்கு இந்திரன் அர்ச்சுனனைநோக்கிக் கழிபெருமகிழ்வெய்தி,மகனே! உனக்குப்பாசுபதப்படை தரவல்லார் பசுபதியாகிய பரம்பொருளேயன்றிவேறல்லர்; அவரைக்குறித்துத் தவஞ்செய்து தவத்திற் சிறந்தானாய் உமையம்மை தவழுந் திருமேனியாற் பரி சிக்கப்படும் பெரும் பேற்றையடைவாய். அப்போது இந்திராஸ்திர முதலிய சிறந்தகணைகளை நானேவலியவந்து கொடுப்பேன், விடைகொடென்று விடை பெற்றுக் கண்ணனைநோக்க; கண்ணபிரான்எனக்கு இவ்வர்ச்சுனனோடு பிரியா நட்புதவவேண்டுமென்றுகூற,அவ்வாறேயாகுகவென்றுவிடைபெற்று,அக்கினி பகவானை நீ நல்லதுணை வலிபெற்றனை! எனக்குன்பால் பகைமையின்றென்று விடைபெற்றுத் தேவர்கள் புடைசூழப் பொன்னுலக நோக்கி நடந்தான். அக் கினிபகவானும் இருபத்தொருநாள் அக்காண்டவவனத்தை யழித்த பெருங் களிப்பால் அர்ச்சுனனை நோக்கி இக்காண்டீவமென்னும் வில்லாலும் அக்ஷய தூணியாலும் குரக்குக் கொடிபடைத்து நான்கு வெள்ளைக்குதிரை பூட்டிய தேரினாலும் பல பகைவரையும் வென்று வாழ்வெய்துவையென்று சொல்லி; கண்ணபிரானிடத்தும் அர்ச்சுனனிடத்தும் விடைபெற்றுத் தன்னுலகமே நோக்கி நடந்தான். இவ்வாறு கிருஷ்ணார்ச்சுனரிருவரும் அக்கினிபகவானுக்கு

விடைகொடுத்தனுப்பியபின்னர் மயனையுமழைத்துக்கொண்டு தங்கள் மேனியி னிறம்பட்டு நீலநிறம்போலும் விளங்கித் தாமரைமலரையும் குவளைமலரையும் ஆம்பல்மலரையும் பூத்திருக்கின்றமையால் படைத்தல் காத்தல் அழித்தல் என்னு முத்தொழிலையுமுடைய திருமாமகள் கணவன்போலுந் தோன்றியும் பலவகைமலர்களால் விளக்கமுறுவதனல் பூமிதேவியின் குழற்கற்றைபோலும் விளங்கும் காளிந்திநதியின் கரையெல்லாந் துருவிச்சென்று அந்நதியின் கரை யோரத்தின் காவையெல்லாஞ் சூழ்ந்து அரம்பையர் பூக்கொய்தலும் நீராடு தலும் கண்டு மகிழ்ந்து அதன் கரையிலிறங்கி நீராடும் அரமகளிர் முலைத் தடத்தின் பச்சைக் கருப்பூரச்சுண்ணம் அவ்வாற்றி னலைகளாற் கரைத்து ஒதுக்கப்பட்டனவோ வென்று கருதுமாறு தகுதியாயும் நுண்மையாயும் வெண்மையாயுமுள்ள மணற்குன்றுகளாகி அதன்கண் விளையாடா நிற்கும் மாதரார் மெய்ப்பரிசத்தால் நறுமணங் கமழ்ந்துதோன்றும் சிறுமேடுகளில் உட்கார்ந்தருகிலிருக்குஞ் சோலைகளிலுலாவிவரும் பசுஞ் சிறு தென்றல், தன் ருேழனகிய கனற்கடவுளுக்குப் பெரும்பசி தவிர்த்த பெருங்கருணையாள ரென்றெண்ணி மகிழ்ந்து விடாய்தணிப்பக்கருதி, தேன்றுளியையும் மலரை யுந் தளிரையும் வீசப்பெற்றும்; அன்றிற்பறவை சக்கரவாகப்புள் அன்னமுத லிய நீர்வாழ்பறவைகளின் உடம்பினிறத்தினை அவ்வாற்றின் வெள்ளமெனக் கருதியும், தாம் நகைக்கும் நகையொளியை அத்தாமரை நாளமென்றெண்ணி அன்னங்கள் மூக்கினுற் கோதவும், அருகினின்ற மயில்கள் கிருஷ்ணார்ச்சுன ரிருவரையும் கார்காலத்துமேகமென்றெண்ணிச் சிறைவிரித்தாடவும், அதனல் வானமெங்கும் வெண்டாமரை பூத்ததென்று விளங்கவும் கண்டு மகிழ்வெய்தி பின்னர் நீர்ப்பரவைமுதலியன விளையாட்டயர்வதையும் பார்த்துக்கொண்டே இந்திரப்பிரத்த மடைந்து தருமராசனைக்கண்டு வணங்கி, தாங்கள் யமுனை யாற்றங் கரையிற்சென்றதும், அக்கினிபகவானேற்றதும், அவன்கருத்தின் வண்ணம் காண்டவவனத்தை யிரையாக வளித்ததும், தேவர்களோடிந்திரன் போர்க்கெய்தியதும், அவர்களை வெற்றிபெற்றதும், அக்கினிதேவன்பால் தாங் கள் பரிசுபெற்றதும், மயனைக் காத்ததும்சொல்லிமுடித்தனர்.

ஆ தி ப ர் வ ம்

முற்றிற்று.

உ

கடவுடுணை.

சபாபர்வம்.

இராசசூயச்சருக்கம்.

கண்ணன்துதி.

பாண்டவர்கள் புரிந்ததவப் பயனாகி யவதரித்துப் பகைத்து மேன்மேல்
மூண்டவினை முழுவதுவு முனைதோறு முரண்முருக்கி முகில்பு காமல்
காண்டவமுங் கனல்வயிற்றிற் கனறணிய நுகருவித்துக் காக்கு மாறே
பூண்டருளெம் பெருமானைப் போற்றுவா ரொழுபிறப்பு மாற்று வாரோ.

சபாமண்டபம் நிருமித்தல்.

ஜெனமேஜெயமகாராசன் பாண்டவர்கள் இந்திரப்பிரத்தத்தி லரசாண்ட வகையிலுங்கேட்டுச் சந்தோஷித்துப் பின்னும் அவர்கள்செயலை விளங்கச் சொல்லவேண்டுமென்ன வைசம்பாயனர் சொல்லுகின்றனர். அப்பாண்டவர் களும் கண்ணபிரானும் மனமும் இந்தியமும்போலக் கலந்து மகிழ்ச்சியெய்தி யிருந்தபோது கண்ணபிரானையும் அர்ச்சுனனையும் கைகூப்பிவணங்கித் தெண் டனிட்டெழுந்து மயன் ஒன்றுசொல்லத்தொடங்கினான். அர்ச்சுனராசனே! யான்செய்த முன்னை நல்வினைப்பயனால் காண்டவவனத்தினின்றுந் தீயிற் பிழைத்துத் தப்பித்துப்போக நான் வழிபார்க்கையில் அக்கினி பகவான் விடாமல் கண்ணபிரானைநோக்கிக் கண்சைகைகாட்ட அவர் சக்கரப்படையை யேவினார். அப்போது நீரன்றோ முன்னின்றுயிர்காத்தீர். இவ்வாறு உயி ருதவிசெய்த உமக்கு யான்செயற்பாலதியாது? 'நன்றிமறப்பது நன்றன்று நன் றல்ல - தன்றேமறப்பது நன்று' என்றும் பெரியோர்சொல்லியிருக்கின்றனரோ! என்றுசொல்ல, அதைக்கேட்ட தனஞ்செயன் உமதுநட்பாலே பெறலருநலந் துய்த்தேனானேன். இற்றைநா ளன்புவைத்திருப்பதுபோலென்றும் எம்பால் அன்புவைத்திருப்பதே சிறந்தது. நீர் இருப்பிடஞ்சென்று சுகமாய் வாழ்ந்திரு மென்றான்.

மயனே இவ்வாறு கூறுவது உமதுபெருந்தகைமைக்குச் சிறந்ததே யாயி னும் தேவர்கட்கு விச்சுவகர்மாவைப்போல் அசுரர்கட்கு யான்சிற்பி, யானே பல சிற்பநூலினுங் கைதேர்ந்தவன், உம்பாலுண்டான அன்பாலே ஏதேனு மென்னாலான குற்றேவலைச்செய்துகொடுக்கக் கருதியிருக்கின்றேன். உங்கள் கருத்தை விளக்கவேண்டுமென்றனன். அதற்கு, பற்குனன் நீர் எவ்வாறு

பிராணபத்தினின்றுங் காத்ததாகவெண்ணுகின்றீரோ அவ்வாறே, உம்பால் ஒருகுற்றேவலையுஞ் செய்வித்துக் கொள்ளலாகாதென்றே கருதுகின்றேன், ஆயினும் உமது சங்கற்பத்தை விணாக்கவு மெண்ணங்கொள்ளாதிருக்கின்றேன், இக்கண்ணபிரான் உள்ளமகிழ்வானசெயலே எமக்கிறப்பமகிழ்ச்சியென்றனன். மயனே, யான்யாவரு மிறும்பூதுகொள்ளத்தக்கவாறு எல்லாச் சிற்பநூலினும் வல்லவனாகையால் நீ யொரு சபாமண்டப மொன்று கட்டித்தரவேண்டு மென்றுசொல்ல, அவ்வாறே அச்சபாமண்டபத்தைக் கட்டித்தருவதே தக்க தென்று கருதிநிற்க, கண்ணபிரான் இச்செய்தியைத்தருமராசனுக்கும் அறிவித் தனன். அவரும் அவ்வாறே செய்யலாமென்ன மயனுஞ் சொல்வானாயினன்.

முன்னாளில் விருஷபர்வானெனன்னும் அசுரராசனிருந்தான். அவன் தன் தோள்வலியால் பலஅரசரையும் போர்செய்து வெற்றிகொண்டு அவர்கள்திறை யளிக்கப்பெற்ற மணிக்கூட்டங்கள் விந்துவென்னும் தடாகத்திலிருக்கின்றன. அவையனைத்தும் இச்சபைக்குரியனவென்றுகூறி அவற்றையெல்லாம் தரு வித்துச் சோதிடநூற்படி பெரியோர் கணித்த நல்ல சுபமுகூர்த்தத்தில் சபா மண்டபத்தைச்செய்ய முகூர்த்தங்கொண்டு, பசும்பொன் சுவர்செய்து, ஏழடு க்கு மாடமமைத்து மரகதத்தால் தூண்கள்நாட்டி, பவளத்தாலுத்திரம்பரப்பி, மாணிக்கத்தாற் கொடுங்கைசெய்து, கோமேதகம் நீலம் புட்பராகத்தினால் கதவுகளும் வாசற்படிகளும்பண்ணி, வைடூரியத்தால் சாளரங்கள் நிருமித்து, தெய்வவிமானமென்று சொல்ல ஆகாய மளாவும்படி தேவேந்திரனுடைய சுதர்மமென்னும் சபையினும் இதுவே சிறந்ததென்று சொல்லச் சிருட்டித்து, படிகத்தாற் றளவரிசைபண்ணி நீரில்லாவிடத்தில் நீரோடுவதுபோலவும்,நீரிருப் பதாகத் தோன்றுமிடத்தில் நீரில்லாததுபோலவும் பலவிசித்திரமமைத்து, பல வாயில்களும் சாலைகளும் சோலைகளும் தடாகங்களும் ஆஸ்தானமும் அறைக ளும் உண்டாக்கி, எங்குசென்று பார்த்தாலும் அவ்விடமெல்லாந் திப்பிரமை கொள்ளச்செய்து போனவழி தெரியாமலாக்கி சில பள்ளமானவிடங்களை நோக்க மேடுகளாகவும், மேடானவிடங்களை நோக்கப் பள்ளமுள்ளவிடங்க ளாகவும், சோலையில்லாவிடங்களிற் சோலைகளாகவும், சோலைகளுள்ளவிடங் களிற் சோலைகளாகவும் பலருங்கண்டு வியக்கத்திருமாமகளுக்காடரங்கென்று சொல்லச் செய்துமுடித்தான். அது மனத்தா னிருமிக்கப்பட்டமையாலும் வேதமந்திரப்பொலிவினாலும் பிரமசிருட்டிபோன்ற சாதுரியத்தாலும் அளக்க லாகாவுயர்வும் அழகும் சிறப்புமுடையதாய்க் கொடிகள்முதலிய அலங்கார மமைந்துகிடந்து பதினான்குமாதமளவுங்கட்டிக் கண்ணபிரானுக்கும் பாண்டவ ரைவருக்கும் காட்டினான். அதைக்கண்டு அவர்கள் பெருங்களிப்பென்னுங் கடலிலமிழ்ந்தனர். அப்போது மயனும் வீமனுக்கு மிகச்சிறப்பமைந்த தண் டாயுதமும், அர்ச்சுனனுக்குத் தேவதத்தமென்னுஞ் சிறந்த சங்கமுங்கொடுத் தான். இது நிற்க; தருமராசன்முதலிய பாண்டவரைவரும் பாஞ்சாலி முதலி யவரோடும் கண்ணபிரான் கட்டளையின்படி சுபமுகூர்த்தத்தில் சகல வேத பாரங்கதராகிய அந்தணர் மந்திராட்சதையெறியப் பலவாத்தியமுழங்க உருத்

திரகணிகையர் நடிக்க நாற்படையும் புடைசூழ நகர்வலம்வந்து, அந்தணர்க்குத் தானம்வழங்கி அவர்கள் ஆசீர்வசனம்பெற்று இஷ்டதெய்வத்தைப் பூசனை செய்து யாவருக்கும் விருந்துபசரித்து மயனுக்கும் பரிசுகளுதவி வாழ்ந்து கொண்டிருந்தனர்.

இவ்வாறு சிலகாலம் கழிந்தபின்னர் கண்ணபிரான் இந்திரப்பிரத்தமெய்திப் பலநாளானமையால் தமது தாதையாகிய வசுதேவர் முதலானோரைப் பார்க்கத் துவாரகைக்குச் செல்லக்கருதித் தருமராசனுக்கறிவித்து குந்திதேவியையடிவணங்கித் தெரிவித்து விடைபெற்று, பாண்டவ ரைவரிடத்தும் பாஞ்சாலியிடத்தும் சுபத்திரையிடத்தும் விடையேற்று, தௌமியர்முதலிய பெரியோரது ஆசிர்வாதம்பெற்று, அந்தணர்களுக்குப் பலதானம்வழங்கி, அரண்மனையைவிட்டு, நான்கு குதிரைபூட்டிய தேரிலேறித் தாருகன் முட்கோல் கொள்ளவெழுந்தருள, அதைக்கண்ட தருமராசன் தாருகனைக் கீழேயிறக்கித் தான் முட்கோல் கைக்கொண்டு குதிரைகளைநடத்தினன். அர்ச்சுனனே சாமரை யிரட்டினன். வீமராசனும் நகுல சகதேவர்களும் தேரின் பின்புறஞ் சென்றனர். இவ்வாறு பாண்டவரும் பிறரும் வெகுதூரஞ்சூழ்ந்துவர, கண்ணபிரான் அரைக்காவதூரம் சென்று தருமராசனுக்கு வேண்டிய சமாதான மொழிகளைச்சொல்லி அவரையும் வீமனையும் வணங்கி, அர்ச்சுனனைக் கட்டித் தழுவி, நகுல சகதேவர்களால்வணங்கப்பட்டு விடைபெற்று, தருமராசன்கண்களில் நீர்ததும்ப என்னை மறத்தியோ, என்றும் மறவாதையென்று வருத்தத்துடன் விடைகொடுக்க மற்றைநால்வரிடத்தும் விடைபெற்றுத் திரும்பினர். இவருள்அர்ச்சுனன்பின்னும் பத்தடிதூரஞ்சென்று கண்ணபிரானே! எனக்கு உயிரு முணர்வும் வலியும் நீயேயாதலால் எவ்வாறு பிரிந்திருப்பேனென்று சொல்ல, நான் எங்கேயிருக்கினும் சமயத்தில்வருவேனென்று அவனுக்குப்பிரிய மொழிபுகன்று விடைபெற்றுத் தேரிலேறி விரைந்துசென்று துவாரகையை யடைந்து, தந்தை தாயர் அண்ணன் முதலானோரைவணங்கித் தம்பிமார் மக்கள் முதலானோரை யாசீர்வதித்திருந்தனர்.

நாரதர் வருதல்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் அச்சபாமண்டபத்தில் தருமராசன் தன் தம்பியர் முதலானோருடன் கொலுவிருக்கையில் பலமுனிவரும் பலதேயத்தரசரும் பலஅந்தணரும் பலதேசமாந்தரும் சூழ்ந்திருந்தனர். அச்சமயத்தில் அச்சபைக்கு, சகலநீதியும் சத்தியமுந்தவறாத தருமராசனைக் காணவேண்டுமென்று கருதி அருந்தவமே வடிவாயுள்ள நாரதமுனிவர் ஆகாயத்தினின்று மிறங்கி அச்சபாமண்டபத்தினருகே வருதலைக்கண்டு எதிர்கொண்டழைத்து வந்து சோடசோபசாரமுஞ்செய்து அவரெதிரிற் கைகட்டி வாய்பொத்திக் கொண்டுநின்றனர். அதைக்கண்டநாரதமுனிவர் இராசகாரியஞ் செவ்வையாக நடைபெறுகின்றதோ? தருமங்குறைவின்றி நடக்கின்றதோ? சொல்ல வேண்டுமென்று கேட்க, தருமபுனும்பற்றுச் சிறியேனை யொருபொருளாகக் கருதி, தேவரீரோ இங்கெழுந்தருளி யிருக்கின்றமையால் அடியேனுக்கென்ன

குறையுள்ளது, சிறிதுங் குறைவில்லாமல் நடந்துவருகின்றனவென்றும், தேவரீர் வரப்பெற்றமையால் யான்பெற்றபேறு எவர்பெற்றனரென்றுங்கண்ணினின்றுந்தொடுமணற்கேணியிற் சுரந்தூறும்நீர்போல நெக்குருகக்கூறினன். நீர் நீதியுந்தருமமும் நிறைந்து,பாற்கடலில் அறிதுயிலமர்ந்த அருட்கடலாகிய கண்ணபிரானது பெருங்கருணையும் பெற்றிருக்கின்றீர். நீர் பெற்றபேறு யார்பெற்றிருக்கின்றனரென்றனர். இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் தருமராசன் நாரதமுனிவரைப்பார்த்துத் தேவரீர் திரிலோகசஞ்சாரி யாகையால் இச்சபையைப் போன்ற சபையை யெங்கேனுங்கண்டதுண்டோ? சொல்லவேண்டுமென்ன, நாரதமுனிவரும் மண்ணுலகில் இதையொத்த சபையை யெங்குங்கண்டறியேன்; ஆயினும் விண்ணுலகில் இந்திரன், இயமன், வருணன், குபேரன் என்போர் சபைகளையும் பார்த்திருக்கின்றேன். எம்மையீன்ற பிரமதேவருடைய சபையையும் பார்த்திருக்கின்றேன். அவைகளின் சிறப்பைக்கேட்க வெண்ணமுண்டேல் அச்சபைகளின் அருமைபெருமைகளையெல்லாம் எடுத்து விரித்துச் சொல்லுகின்றேனென்ன, தருமராசனும் அவைகளை நன்றாகவிளங்கச் சொல்லவேண்டுமென்ன நாரதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

இந்திரசபைச்சிறப்பு.

சுவர்க்கலோகத்தில் அமராவதியில் இந்திரனுடைய சபையொன்றுண்டு. அதற்குச் சுதர்ம மென்றுபெயர். அது நூறுயோசனை அகலமும் நூற்றைம்பதுயோசனை நீளமும் ஐந்துயோசனை உயரமுமுள்ளது. ஆயிரங்கதிருடைய இளஞ்சூரியனைப்போலும் பிரகாசமிகுந்துவிளங்கும். அது இந்திரன் எங்கே போகவேண்டினும் அவ்விடமெல்லாம் போகத்தக்க வலிமையுடையதாய் நல்வினையே செய்தாரொழியத்தீவினைசெய்தா ரெய்தற்கரிதாகி விளங்கும். அதிற் பல ஆசனமிட்டு நடுவில் அரியணையொன்றுண்டு. அதிலுள்ள விநோதங்களை யிவ்வளவென் றெடுத்துரைக்க வொண்ணாது. அதன்நடுவிலிருக்கும் சிங்கஞ் சுமந்த அணையில் சசியுடன் சதமகன் கொலுவீற்றிருப்பன். அக்கொலுவில் சத்தமருத்துக்கள், பதினொரு உருத்திரர், பன்னிரு சூரியர், விச்சுவதேவர், அச்சுவினிதேவதைகள்,சத்தரிஷிகள், பிருகற்பதிபகவான்முதலியவேதியரும், கருடர், கந்தருவர், சித்தர், வித்தியாதரர் முதலிய தேவகணங்களும், துருவாசர், யாஞ்ஞவற்கியர், உத்தாரகர், பராசரர், வால்மீகர் முதலிய முனிவரும், இன்னும் நல்வினைசெய்தாரும் அரிச்சந்திர மகாராசனும், இந்திரன்மகனாகிய சயந்தனும் அச்சபையி லிருப்பர். ஒருபுறத்தே அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, மேனகை முதலிய நாடகமகளிர் நடிப்பர். ஒருபுறத்தே விச்சுவாவசு,சித்திரசேனன்முதலிய கந்திருவர் யாழிசைத்துப்பாடுவர். ஒருபுறத்தே முனிவர்க ளெல்லாம் ஆசிர்வதிப்பர். ஒருபுறத்தே யோகியர் வேதாந்தக் கருத்துகளையெல்லாம் எடுத்து விரித்துரைப்பர். சத்தமேகங்களும் ஒருபுறத்தே யாங்கள் செய்யும் பணியாதெனக்கேட்டுநிற்கும். சிரத்தை மேதையென்னும் தேவதைகளும் கன்ம தேவதைகளும் போற்றிசெய்து நிற்கும். அச்சபை மிகுதியும் மனக்களிப்புடன் விளங்கும். அச்சபையிலிருப்பார்க்கு நரை திரை

மூப்பு சோகம் மோகம் ஒன்றுங் கிடையா. அங்குள்ளார் பலமணிகளிழைத்த பொன்னுபரணம்புனேந்து சந்தனம் மலர்மாலையணிந்து அலங்காரமாக விருப்பர். அச்சபையோ மண்ணுலகிற் பெரும்புண்ணியஞ்செய்தார் எய்தப் பெறுவதல்லது பிறராலெய்துதற்கரிது. இது நிற்க;

இயமன்சபைச்சிறப்பு.

இச்சபை நூறுயோசனை நீளமும் அதற்குத்தக்க அகலமும் உயரமும் உடையதாய் நாற்புறத்தும் பரந்த ஒளியுள்ளதாய் மிக்ககுளிர்ச்சியும் உஷ்ணமுமின்றி மிதமாய் விச்சுவகர்மாவினுல் சிருட்டிக்கப்பட்டுள்ளது. அச்சபையிலுள்ளார்க்குப் பசி பிணி மூப்பு முதலியன வொன்றுங்கிடையா. எல்லாச்செல்வமும் நிரம்பியிருக்கும். அச்சபையில் எமன் கொலுவிருப்பன். அக்கொலுவில் யயாதி, நகுஷன், சோமகன், உரகன், கிருதவீரியன், சுருதசிரவன், திரிசதச்யு, கிருதவேகன், கிருமி, நிமி, பிரதர்த்தனன், சிபி, மச்சியன், சதசுவன், அம்பரீஷன், பகீரதன், வியசுவன், நளன், நிஷதன், பாகிலீகன், பிரத்யும்நன், திரிகர்த்தன் முதலிய இராசரிஷிகளும், நூறுமச்சராசரும், எண்பது ஜனமேஜெயரும், நூறு திருதராட்டிரரும், நூறுநீபரும், நூறுவீமரும், நூறு பிரததத்தரும், நூறுநாகரும், நூறு அயரும், நூறுபராசரும் சூழ்ந்துகொண்டிருப்பர். உஷத்தகன், சயத்திரதன், சந்தனு, உமது பிதாவாகிய பாண்டு இவர்கள் ஓர் புறத்திலிருப்பர். பல அஸ்வமேதஞ் செய்தாராய சதபிந்துவின்மக்களும், தன்மந்திரிமாருடன் பிருஷதச்சுவமகாராசனும் அச்சபையினோர்புறத்திலிருக்கின்றனர். அகத்தியர், மதங்கர், காலன், மிருத்தியு முதலானேருடன் யாகஞ்செய்தார் ஓர்புறத்தும், தானஞ்செய்தார் ஓர்புறத்தும், நீதிமான்களோர்புறத்தும், தருமத்தில் விருப்பமுடையார் ஓர்புறத்தும் சூழ்ந்திருப்பர். மேலும் சித்தர், யோகர், அயனதேவதைகள்முதலானேர், காலசோதனைசெய்யும் கிங்கரர் அக்கடவுளைப் பரவிநிற்பர். இத்தனையோர்க்கும் அச்சபை இடமுதவிக்கொண்டுநிற்கும். அச்சபையிலிருப்பாரை எண்ணிமுடியா எட்டிலடங்கா. அச்சபைநடுவில் நாகரத்தினமிழைத்து மரகதத்தூண்கள் நாட்டி வச்சிரத்தால் உத்தரமமைத்துப் பூரணச்சந்திரன்போலொளிவீசும் முத்துப்பந்தரினிழலிற் சிங்கஞ்சுமந்த ஓராசனத்தின்மேல் பயங்கரவடிவமாய்ப் புண்ணியஞ்செய்தாரைத் தன்னருகிலிருத்தியும் பாவஞ்செய்தாரைக் கும்பிபாக முதலியநரகங்களிற் புகச்செய்தும் கொலுவாய் தருமதேவதை சித்திரகுத்தன் காலன்முதலானேர்தனக்குக்குற்றேவல்செய்ய வீற்றிருப்பன். இது நிற்க;

வருணன்சபைச்சிறப்பு

இச்சபை இயமன் சபைக்குச்சரியான பரிமாணமுடையதாய் உயரமான மதிலாலும் கோபுரங்களாலுஞ் சூழப்பட்டு நவமணிகளிழைத்து எப்போதும் இளவெயில் பரப்பிக்கொண்டு நீருக்குள் மிக்க அதிசயமாக விச்சுவகர்மாவினுற் செய்யப்பட்டுள்ளது. அதைச்சூழ்ந்து என்றும் பூப்பதும் காய்ப்பதும் பழுப்பதுமாகிய பலவகை மரச்சோலைகளிருக்கும். அச்சோலைகளில் பல

வகைப்பறவைகள் கீதம்பாடி யுலாவும். அதில் மற்றோரதிசயமுண்டு ; அது நவமணிகளாற் செய்யப்பட்டிருக்கினும் பரிசிக்கையில் மலர்போலு மெல்லியதாயும் தண்ணியதாயுமிருக்கும். இச்சபையிற் புனற்கரசனாகிய வருணன் பாசமேந்தி விலையிடற்கரிய முத்தாலமைந்த முடிபுனைந்து வெண்கொற்றக் குடைநிழலில் சிங்கஞ்சுமந்த அணையில் வெண்பூவைச்சூடிவெண்சாந்தணிந்து வீற்றிருப்பன். பலதேவரும் பல ஆபரணமணிந்து அச்சபையில் அக்கடவுளை யுபாசிப்பர். தக்ஷகன், வாசுகி, ஐராவதன், லோகிதன், கிருஷ்ணன், பதுமன்முதலிய நாகராசர்பலரும் பலிச்சக்கரவர்த்தி,நரகாசுரன்,பிரகலாதன், விப்பிரசித்தி, காலகேயர்,மகாபாரிசுவன், விகடாபன், திரிதசாம்பரன்முதலிய தைத்தியர் தானவரென்னும் இருவகை அசுரரும் புடைசூழ்ந்திருப்பர். கடல்களும், கங்கைமுதலிய நதிகளும், தடாகங்கள், குட்டைகள், கிணறுகள் முதலிய புண்ணிய தீர்த்தங்களும், மலைகளும் எண்டிசைகளும், பிறவும் உருவங்கொண்டு குற்றேவல் செய்யாநிற்கும். இப்படிப்பட்ட சபையில் கந்தருவர் யாழிசைபாட அரமகளிர் நடிக்கச் சுநாபனென்னும் அமைச்சனும் தன்மக்களும் தன்னருகேயிருக்கப் பலகதைகளைப் பேசிக்கொண்டு வாருணிதேவியாகிய தன் இல்லக்கிழத்தியுடன் வருணன் கொலுவீற்றிருப்பன். இது நிற்க ;

குபேரசபைச்சிறப்பு.

இச்சபை அளகாபுரியில் நூறுயோசனை நிகளமும் எழுபதுயோசனை அகலமுமுள்ளதாகி ஆகாயமளாவிக் காண்பார்க்கு ஒருசுடர்போன்றுவிளங்கி நாற்புறத்தேயும் சந்திரிகை வீசிக்கொண்டு மணிமயமாய் குய்யகரென்பவர்களாற் சுமக்கப்பட்டு விளங்கும். அது குபேரனது பெருந்தவத்தாற் செய்யப்பட்டது. அது பத்துமாற்றுப் பசும்பொன்மயமாகிய மரங்களும் மணிமயமான கிளைகளும், பவளமயமான அரும்புகளும் நறியமலரும் இனியசுவைக்கனியும் பெற்றுப்பலபறவைகட்குமிருக்கையாக விளங்கும். அச்சபையில் இன்பம்விளைவிக்கும் பல இடங்களும், அவரவர் யோக்கியதைகட்குத் தக்க ஆசனங்களுமிட்டிருக்கும். இவ்வகைச் சிறப்பினையுடைய சபையில் இருநிதிக்கிழவனாகிய குபேரன் விசித்திரமான உடையணியணிந்து பல மாதர்கள்சூழ இளவெயில் பரப்பும் ஆதனங்களிரண்டிலும்தன்கால்களைவைத்துக்கொண்டுசிங்காசனத்தி லெழுந்தருளியிருப்பன். அச்சபையருகே மந்தார மலர்ச்சோலையின் மணமும் சந்தனச்சோலையின் மணமும் இளந்தென்றல்வீசி இன்பமுண்டாக்கும்; பல தேவர்களும் அச்சபையில்வந்து அவனுடன் பேசிக்கொண்டிருப்பர். அரம்பை, சித்திரசேனை, மேனகை, பிரமவோசை, ஊர்வசி, இளைமுதலிய நாடக மாதர்கள் நடனஞ்செய்வர். யாழ்முதலிய இசை கோட்டிகொண்டிருக்கும்படி நரர் கின்னரர் என்னும் கந்தருவரும், மணிபத்திரன், சுவேதபத்திரன், கண்டகன், பிரத்தியோதன் முதலிய இயக்கரும் ; விசுவாவசு, தும்புரு, விசாலகன், பலபக்ஷன், பிங்கலன் முதலானோரும் சங்கீதம்பாடி மகிழ்வர். உலகமாதாவாகிய திருமகளும் அச்சபையில் விளங்கியிருப்பாள். யானும் என்போன்ற தேவருஷிகளும் பிரமருஷிகளும் ஆசிர்வதித்துக்கொண்டேயிருப்போம். பல

அரக்கரும் பிசாசரும் அச்சபையில் அக்குபேரனையுபாசிப்பர். ஆகா ஊகூ வென்னும் கந்தருவரும் பாடுவர். விந்தியம் ஏமகூடம் நிடதம் பாரியாத் திரம் கந்தமாதனமுதலிய மலைகளும், தெய்வவுருக்கொண்டுவணங்கும். குபே ரன் மகனாகிய நளகூபரனென்பான் ஒருபுறத்தே சூழ்ந்திருப்பன். விபீஷணன் என்னுமரக்கர் கோமான் தன்பரிவாரத்துடன் தனக்கு முன்னவனாகிய குபே ரனை வணங்கிக்கொண் டிருப்பன். நவநிதிகளும் இருபுறத்தும் குற்றேவல் யாதோவென்று கேட்டுநிற்கும். இவ்வகையாகிய சபையில் குபேரன் அருட் பெருங்கடலாகிய பரமசிவனை வணங்கிப் பின் கொலுவீற்றிருப்பன். இந்நில வுலகத்திற் பாத்திரமறிந்து தானஞ்செய்தாரும் புண்ணியவடிவம்பெற்று அச் சபையிலிருப்பர். இது நிற்க;

பிரமசபைச் சிறப்பு.

தாமரைமலரில் வதியும் நான்முகக்கடவுள் வீற்றிருக்கும் சபையோ எவ்வகை யருந்தவஞ்செய்தாராலும் இப்படிப்பட்டதென்றறிந்து சொல்ல வொண்ணாது. அவர் மனத்தாலே சிருட்டிப்பட்டது. முற்காலத்தில் ஆயிரங் கதிரையுடைய பரிதியங்கடவுள் எனக்கு அச்சபையின் மேன்மையை எடுத் துக்கூறினர். அத்தனையும் யான்கூறும் வலியுடையேனல்லேன். யானோ அக் கடவுளை நோக்கி அச்சபையைச்சென்றுகாண அவாவுடையேன், என்செய வல்லேன், அதற்காகச் சூழ்ச்சியொன்று சொல்லவேண்டுமென்று இரந்துகேட் கையில் என்னை அவரோ ஆயிரவருஷம் வரையும் கமலமலரே தவிசாக வுடைய நான்முகப் பிரானைக்குறித்து இமயமலைச்சாரலில் தவஞ்செய்யச் சொல்லினர். அவ்வாறே செய்ய அத்தவமகிமையாலும் அக்கடவுள் கட்டளை யாலும் அச்சபையைநோக்கிச்சென்று கண்டேன். கண்டவுடன் அவசமாய் நின்றேன். அதனுருவ மிப்படிப்பட்டதென்று உவமானமெடுத்துச்சொல்வது மரிது. அதற்குவமானமான பொருளொன்றுமில்லை. அதிற்கண்ட சிலவிஷய மாத்திரஞ்சொல்கின்றேன். அதுசீதோட்டினமில்லாதது. அதுவேண்டுங்காலங் களில் சவுக்கியத்திற் கேதுவாகத்தோன்றும், பசிதாகமுதலியன கிடையா, சூரியன் முதலிய கிரகங்களின்சுடர்கள் அங்கே காண்பதரிது; என்றும்சோதி மயமாகவே யிருக்கின்றது. அதிலுள்ள சுவர்கள் மதில்கள் மாடங்கள் மேடை கள், கதவுகள் நவமணிகளாற் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் அதன் சிறப்பினை யென்னவென் றெடுத்துச்சொல்வேன். இரண்டாயிர நாவுடைய அனந்தனாலும் அதன் சிறப்பினையெடுத்துக் கூறுவதரிது. அதுகாணும்போது ஒருவகையாகக் காணப்படாமல் ஒருருவுமின்றி வெறுஞ் சுடர்மயமாகவே தோன்றும்; ஒருகாலத்தில் தூண் மாடமேடைமுதலிய வுறுப்புகளோடுங் கூடியிலங்கும்; ஒருகாலத்தில் வெறுவெளிபோலவுந் தோன்றும்; ஒருகாலத் திலே ஆதாரமில்லதாகவும், ஒருகாலத்தே யஃதுள்ளதாகவும் இன்னதன்மைய தென்று எடுத்துச்சொல்ல வரிதாய்விளங்கும்.

இவ்வகைப்பட்ட சிறப்பினைவாய்ந்த சபையில் உலகமுண்ட பெருவாய னும் உலப்பில் சீர்த்திமாமாயனுமாகிய இறைவனது உந்திக்கமலத்தே தோன்

றிய நான்முகக்கடவுள் நால்வகை யோனி எழுவகைத்தோற்றம் எண்பத்து நான்கிலக்கஞ் சிவபேதங்களையும் படைத்துக் கொண்டிருப்பர். அப்போது தக்ஷன், பிரசேதன், புலகன், மரீசி, காசிபன், பிருகு, அத்திரி, வசிட்டன், கவுதமன் என்னும் நவப்பிரமாக்களும், வாலகில்லியர் முதலிய மகாருஷிகளும் சூழ்ந்திருப்பர். பகுதி விகுதி முதலிய காரணப்பொருள்களும், சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம்முதலிய விஷயங்களும் உருக்கொண்டு வணங்கி நிற்கும். அகத்தியர், மார்க்கண்டேயர், சமதக்கினி, சம்வர்த்தர், சியவனர், இருசியசிருங்கர், சனகர், சனந்தனர், சனற்குமாரர், சனற்சுசாதர், வியாசர், அசிதர், தேவலர், ருக்வரியர், சிதசத்துரு முதலிய முனிவரரும் ஒருபுறத்தேயிருப்பர். ஆயுள்வேதம், நீதிநூல், சங்கீதநூல், இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னுநான்மறைகள், வேதாந்தங்களாகிய உபநிடதங்கள், தருமநூல்கள், பதினெண்புராணங்கள், வேள்விகள், க்ஷணம், முகூர்த்தம், இரவு, பகல், பக்ஷம், மாதம், இருது, வருஷம், யுகம், காலசக்கரம், தருமசக்கரம் இவைதெய்வவுருவங்கொண்டு சூழ்ந்திருக்கும். தேவமாதரும், அசுரமாதரும், நாகமாதரும், சகலலோகபாலகரும், மனுமுதலிய மகாராசரும் அப்பிரமனைச் சூழ்ந்திருப்பர். மேலும் கந்தருவர், விச்சாதரர், கின்னரர், நரர், கிம்புருடர் முதலியோர் ஆடிப்பாடி மகிழ்சிறப்பர். நிலவுலகத்தின்கண் விரதமாக வேதமோதியவர்களும், தவஞ்செய்தாரும், பெரும்புண்ணியஞ் செய்தாரும் அச்சபையில் வாழ்ந்திருப்பர். இவ்வகைச் சிறப்பினையுடைய சபையின்கண் காயத்திரி, சாயத்திரி, சரசுவதியென்னு மனைவியர்மூவருடன் பிரமன் எழுந்தருளியிருப்பன். அச்சபை தேஜோமயமாயும் வேதகோஷ்டமயமாயும் விளங்கும். இப்படிப்பட்ட பல்தேவசபைகளையும் பார்த்திருக்கின்றேன். ஆயின் மண்ணுலகின்கண் இவ்வகைப்பட்ட சபையினையெங்குங்கண்டறியேன். இதைப்போன்றதும் எக்காலத்துங் கிடையவேகிடையாது. இதனுல் உமக்கு அனேக விசேஷமுண்டாமென்று சொல்லிமுடித்தனர்.

இதைக்கேட்ட தருமராசன் நாரதமுனிவனைநோக்கித் தேவருலகிலுள்ள இந்திரசபைமுதலிய சபையின்சிறப்பை வரலாற்று முறையாக வெடுத்துக் கூறினீர். அவற்றில் வருணசபையின் சிறப்பும் வாசுகிமுதலிய நாகராசர் அசுரராசர் கடல்கள் நதிகள் முதலியவை மருவியிருப்பதையும், குபேரசபையில் இயக்கர், கந்தருவர், கின்னரர், நரர், விபீஷணர், நளகூபரன் முதலானோர் இருப்பதையும், பிரமசபையும் அதில் பிரமருஷிகள், தேவருஷிகள் முதலானோரிருப்பதையும், இந்திரசபையில் முப்பத்துமுக்கோடி தேவரும் நாற்பத்தெண்ணுயிர முனிவரும், அரமகளிர் முதலானோரும் இருப்பதையும் கூறினீர். அச்சபையில் நிலவுலகாண்ட அரிச்சந்திரமகாராசன் எந்தப்புண்ணியவிசேஷத்தால் அவ்விந்திரசபையில் வசிக்கின்றனன். அவன்செய்த புண்ணியம் எப்படிப்பட்டது? எந்தப் புண்ணியவிசேடத்தால் இந்திரனுடனிருக்கும் பேறடைந்திருக்கின்றனன். நீர் எமசபையிற் சென்றபோது என்பிதாவாகிய பாண்டுமகாராசனைக்கண்டு யாது பேசினீர்? அவர் சொன்னதென்ன? அடியேனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று வேண்ட நாரதர் சொல்வாராயினர்.

சூரியகுலத்தில் இட்சுவாகுமகாராசன் வழியில் திரிசங்கு என்னும் அரசர்பெருமான் ஒருவனிருந்தான். அவன் கேகயராசன் மகளாகிய சத்தியவதியை மணந்து அரிச்சந்திரனைப் பெற்றான். அவனே இந்நிலவுலகத்தை ஒருகுடை நிழலில் அரசாண்ட சக்கரவர்த்தி, மெய்ம்மொழி கூறுதலே விரதமாகவுடையான், அவன் ஆணையின்படி நடவாத அரசர் ஒருவருமிலர். அவன் ஒருவனே உலகமுழுதும் வெற்றிகொண்டு நெடிய கடல்புடைசூழ்ந்த காசினிமுழுதும் பகையென்னும் பெயரின்றி யரசாண்டான், வேள்விகளில் மிகச்சிறந்த இராசசூயமுஞ் செய்துமுடித்தான். அவ்வேள்விக்குஅரசர்களெல்லாந் திரண்டுவந்து காணிக்கைகள் கொண்டுவந்து வணங்கி, அங்கே வந்திருக்கும் நாற்குலத்தின் மேற்குலமாகிய அந்தணர்கட்கெல்லாம் விருந்துபசரித்தனர். இவ்வாறாகிய வேள்வியைச் செய்துமுடித்துச் சாம்பிராச்சிய பட்டாபிஷேகமுடையானாய்ச் சம்ராட்டென்னும் பெயரைப்பெற்றான். அப்போது வேள்விசெய்வித்த அந்தணர்கட்கும் ஏனையோருக்கும் பலவகை ஆடையாபரணங்கள் சுவணம் நவமணிகள் கோதானம் பூதானம் தேர் குதிரை முதலியன வளித்து, வேள்விதொடங்கிய நாண்முதலாக அவ்வேள்விமுடியுமளவும் அறுசுவையுண்டியைவெறுப்பநல்கினான். இவ்வாறுசெய்த அவ்வரிச்சந்திரமகாராசனை அவ்வந்தணரெல்லாம் சகலசெல்வங்களு முண்டாகக்கடவன வென்றும்; கீர்த்தி யெங்கும் பரம்பக்கடவதென்றும், யாவராலும் வெற்றிகொள்ளத்தக்கபெருக்கமுண்டாகக் கடவதென்றும்,யாவரினுமேம்பாடுடையனாக விருக்கக்கடவதென்றும் வாழ்த்திப்போயினர். இவ்வாறு மிகச்சிறப்பால் அவ்விராசசூயஞ்செய்து முடித்தமையான் இந்திரனாற்பூசிக்கப்பட்டுச் சிறப்பெய்தி வாழ்ந்திருக்கின்றனன். எவரெவர் அவ்விராசசூயஞ் செய்து முடிக்கின்றனரோ,அவர் அவ்விந்திரனாற் பூசிக்கப்பட்டு வாழ்வெய்தியிருப்பர். மேலும் போர்க்களத்திற் குறுகி முன்வைத்த காலைப் பின்வாங்காமற் போர்செய்து உயிர்விடுவாரும் பெருந்தவஞ்செய்தாரும் அவ்விந்திரசபையை யடைவார்கள். நான் எமசபையிற்சென்றபோது உமது பிதாவாகிய பாண்டுராசன் அரிச்சந்திரமகாராசன் போலத் தானும் இந்திரசபையிலிருக்க ஆசைகொண்டு உம்மை அவ்விராசசூயஞ் செய்துமுடித்துத் தன்னை இந்திரசபையிற் சேர்ப்பிக்கச்சொல்லினர். அரிச்சந்திரமகாராசனுடைய பெருமையும் சிறப்புங்கண்டு அவ்வாறு தாமும் பெறவேண்டி உம்மைச்செய்யக் கேட்டுக்கொண்டமையால் உமது பிதாவின் கருத்தை முற்றுப்பெறச்செய்யவேண்டும். அப்படிப்பட்ட யாகத்தைச்செய்ய முடியுமோவென்று கருதவேண்டாம். உமக்குத்துணையாகத் திக்குப்பாலகர் போன்றதம்பியர் நால்வரிருக்கின்றனர், ஆயினும் அது செய்துமுடிக்க வெகு சங்கடமாயுமிருக்கும்,இடையூறும் பலவுண்டாம்,பிரமராக்கதர் குற்றம்நாடியே யிருப்பர், அதனை மிகக்கருத்துடனே நிறைவேற்றவேண்டும். நீர் வினவியவை யனைத்துஞ்சொன்னேன். எப்படி உசிதமோ அப்படி நடத்தும். நீர் அந்தணர் அரசர் வணிகர் சூத்திரர் என்கின்ற நால்வருணத்தாரையும், பிரமசாரி, கிருகத்தன், வானப்பிரத்தன், சந்நியாசி என்னும் நான்காச்சிரமத்தாரையும் தத்தம் விதியில்வழுவின்றிக் காக்கவேண்டும். நீர்உலகத்தில் யாவரிடத்தும் அன்

பும் தெய்வத்தின்பாற் பத்திமையும் பெரியோர்பால் வணக்கமுமுடையானுய்ப் பகைவரை வெற்றிகொண்டு வாழவேண்டும். யான் துவாரகைக்குப் போக வேண்டும் விடைகொடுமென்று விடைபெற்றுத் துவாரகையை நோக்கிச் சென்றனர். பின்னர்த் தருமராசன் நாரதமுனிவர் சொல்லிய இராசசூயமென்னும் யாகத்தைக்குறித்துப் பல பல சிந்தையினுடி வருந்தி இதனை யெவ்வாறு செய்துமுடிப்பேனென்றும், எவ்வரசரும் இப்பெருவேள்வி செய்தற்கு இயலாமற்போயினரோ, சூறவளியிற்பட்ட துரும்பேபோன்ற நான் செய்துமுடிக்கக்கூடுமோ, என்னசெய்யலாம்? உலகத்தில் 'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை' என்றபடியேசெய்யாமற்போயினும் தவறுண்டாமே! அவ்வாறு செய்யாத புத்திரன் தோன்றினதாற் பயனென்னை? அஃதிருக்கட்டும், இந்நிலவுலகத்தரசரை யெல்லாம் எவ்வாறு வெல்வது; கட்டசாத்தியமாமே? என்று பெருமூச்செறிந்து உன்மத்தங்கொண்டார்போன்று ஒருவருடனும் பேசாமல் அரசாட்சிக்கினிய காரியங்களையே நடத்திக்கொண்டு அந்தணர்களுக்கெல்லாம் வேண்டியவா றுதவிவரும்படி கட்டளையிட்டனன். இது நிற்க;

இவ்வாறாக நடந்துவரும் தருமராசனைநோக்கி அந்தணரெல்லாம் நீர் இவ்வுலகமுழுதும் அரசாண்டுவரவேண்டும், உமக்கெல்லாப் பாக்கியங்களு முண்டாகவேண்டும், நீர்கொண்ட கருத்தை நிறைவேற்றவேண்டும், உமது பகைவரெல்லாம் அடங்கி யொடுங்கி உமதாணையைத் தமது சிரசாக வகிக்கவேண்டுமென்றனர். இவ்வாறு யாவராலும் புகழப்பட்டுத் தருமராசன் அரசாண்டு வருகையில் ஒருவருக்கும் அக்காலத்தே மரணபய முண்டாகாமலிருந்தது. யாவர்பொருட்டும் தம்பிதாவினிடத்து மில்லாததலையளி இவர்பாலிருந்தது. மாதமும்மாரி பெய்துவந்தது. அவருக்குப் பெரும்பாலும் பகைவரின்மையால் அசாத சத்துருவென்னும் பெயருண்டாயது. வீமனும் அர்ச்சுனனும் பகையரசரைப்போய் அடக்குவதனாலும், நகுலன் சேனைகளுக்கும் பிறருக்கும் குறைவின்றி நடத்திவருகையினாலும், சகதேவனும் நியாயவழுவின்றி நடத்திவருகையினாலும், தருமராசன் அன்பு பொறை வாய்மை இரக்கம் முதலிய நற்குணங்கள் எல்லாம் கோட்டிகொண்டிருக்க அரசாண்டுவருகையாலும், அப்பெயர் தருமராசனுக்குப் பொருந்தியிருந்தது. அந்நாடு மிக்கமழையும் மழைபெய்யாமையுமின்றிக் காலமழைபெய்தும் தன்னாலும் பரிசனத்தாலும் பகைவராலும் கள்ளராலும் துன்பமில்லாம லிருந்தது. அரசன் ஆறிலொருகடமை வாங்கிவந்தாலும் தருமநெறியில் செலவிடுகையால் பண்டார மென்றுமே நிறைந்திருந்தது.

யாகத்தைக்குறித் தாராய்ச்சி.

இவ்வாறு தருமராசன் நாளுக்குநாள் செல்வத்தில் இளம்பிறைபோல் வளர்ந்துவருகையில் ஒருநாள் தம்பியரும் மந்திரிமாரும் பிறரும் கூடிய சபையில் நாரதமுனிவர் சொல்லிப்போன இராசசூயயாகத்தைக் குறித்துச் சிந்திக்கத்தொடங்கினன். எவ்வரசனுக்கு நாற்கடல்சூழ்ந்த உலகம் வசப்பட்டுள்ளதோ, எந்தவரசன் சத்திமுதலிய அறுகுணமுடையானு யிருக்கின்றானோ,

எவன் இன்பத்துன்பங்களை அசட்டையாக மதித்துப் பொறுப்பானோ, எவன் நான்குவேதம் ஆறுசாஸ்திரம் மனுமுதலிய நூல்களை வல்லானோ, எவன் ஆன்றோரெல்லாம் மதிக்கத்தக்கவனா யிருக்கின்றானோ, அவ்வரசன் இராசசூயஞ் செய்யப் பேராற்றலுடையனா யிருப்பன். அதற்குமந்திரிமார் இவ்விலக்கணங்களையுடைய அரசன் உன்னையன்றிப்பிறரில்லை. ஆகையால் நீர் இராசசூயஞ்செய்யத்தொடங்கின் சாத்தியப்படாமற் போகாது. எல்லா வுலகங்களையும் தங்கள் வசப்படுத்தவல்ல தம்பியர் நால்வரும் நாங்களும் பிறரும் உன்னாணைக்குள் அடங்கியிருக்கின்றோம். எத்துணைப்பொருள்வேண்டினும் சாத்தியமாம். எவ்வரசன் எந்த உசிதமான பொருள் வைத்துக்கொண்டிருக்கின்றானோ அப்பொருளும்மதென்றே சிந்திக்கவேண்டும். நீர் சிறிதும் எண்ணாமல் இராசசூயயாகஞ் செய்யத்துணிவதே நலமென்றனர். அதுகேட்டு தருமராசன் கழிபெருமகிழ்வெய்தி மற்றைநாள் அத்தாணிமண்டபத்தில் தம்பியர்நால்வரும் இளம்பஞ்ச பாண்டவரும், அபிமன்னுயுவும், விராடராசனும், துருவதேய மகாராசனும், வியாசர், தௌமியர் முதலிய பெரியோரும் கூடியிருக்கையில் நீங்கள் என்கருத்தைக்கேட்டு மறுமொழி கூறவேண்டும். யாகங்கட்கெல்லாஞ் சிறந்த இராசசூயஞ்செய்ய எனக்குக்காதலிருக்கின்றது. அது முடிவுபெறுமா? நன்றாகத் தெரிவிக்கவேண்டுமென்றனன். அதைக்கேட்ட யாவரும் உம்மையன்றி இராசசூயயாகஞ்செய்வதற்கு எவர்க்குத்தான்யோக்கியதையுள்ளது.நீர் எண்ணியது எளிதின் முற்றுப்பெறும், உமது புத்தியும் யுத்தியும் தருமமும் ஒழுக்கமும் எவர்க்குண்டு. நீரே இராசசூயயாகஞ் செய்யத்தகுந்தவர், ஆயினும் கிருஷ்ண சகாயமின்றி எக்காரியமு முடிவுபெறாதெனத் தருமராசன் அக்கடவுட்பெருமானை மனமொழிமெய்களாற்சிந்தித்து அவனையழைத்துவரத் துவாரகைக்கு இந்திரசேனனென்பவனை யனுப்பினர். அவனுந் தேரேறி விரைந்து சென்று துவாரகையையடைந்து வாக்கு மனாதீதனும் கருணைப் பெருங்கடலாயும் பத்தரக்ஷகனும் பரம்பொருளாயுமிருக்கின்ற கண்ணபிரான் திருமாளிகையில் தான்தேரைவிட்டிழிந்து அவனை மும்முறைவலம்வந்து பணிந்து உம்மைத் தருமராசன் அழைத்துவரச் சொல்லினர், நீர் அன்பாயெழுந்தருளி அவர்கொண்ட கருத்தை நிறைவேற்ற வேண்டுமென்றான். அத்தூதன் சொல்லியசொல்லைக்கேட்டருளிப் பாண்டவர்பாற் செல்ல மனமுடையானாய் வசுதேவரிடத்தும் நம்பிமூத்தபிரானிடத்தும் விடைபெற்றுத்தாய்மாரைவணங்கி, தம்பியருக்கும் பிரியமொழிகூறி, தேரேறி இந்திரப்பிரத்த மடைந்து, தருமராசனையும் வீமனையும் குந்திதேவியையும் வணங்கி அர்ச்சுனனை யாலிங்கனஞ் செய்துகொண்டு நகுல சகதேவரை யாசிர்வதித்து விருந்துண்டு இளைப்பாறியிருக்கையில், தருமராசன் தாங்கொண்ட கருத்தைத் தெரிவிக்கலானார். துவாரகைக்கதிபனே! யான்இராசசூயயாகஞ்செய்துசம்ராட்டென்னும்பெயர் பெறவேண்டுமென்று கருதியிருக்கின்றேன். நமது ஆப்தர்களை யெல்லாங் கேட்டேன், அவர்களெல்லாம் செய்துமுடிக்கலாமென்றனர். நீரோ மகானுபாவனும் எங்கள் குலதெய்வமாயு மிருப்பதுபற்றி உம்மோடாராய்ந்து பின்னர்த் தெளியவேண்டுமென்றே வருவித்தேன்,அவ்வேள்வி யெவ்வாறு முடிவு

பெறுமோ, அதை அறிவிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். கண்ண பிரான் தருமராசனை நோக்கி நீர் அறியாதது ஒன்றுமில்லை, ஆன்றோர்பா லடைந்து அருங்கேள்விபல கேட்டுள்ளீர். அவர்கள் தக்கதேசொல்லியிருப்பர், என்பால் உமக்குண்டான தலையளியால் என்னையும் கேட்கத்தொடங்கினீர், எனக்குத் தெரிந்தமாத்திரம் சொல்கின்றேனென்று சொல்லத்தொடங்கினர்.

இந்த இராசூயமென்பது எல்லாவேள்விகளுக்கும் புருடரிற் றிருமால் போலவும், பூவினுட் பதுமம் போலவும், நகரத்துள் காஞ்சிநகரம்போலவும், மாதரில் அரம்பைபோலவும் சிறந்தது; அதைச்செய்து முடிக்கும் அரசன் சாம்ராச்சிய பட்டாபிஷேகம் பெற்றுச் சம்ராட்டென்று சொல்லப்பட்டு விளங்குவான். இந்த இராசசூயயாகத்தைச் செய்வதற்குத் தக்க குலம் நலம் ஒழுக்கம் முதலியன உம்மையே கோட்டிகொண் டிருக்கின்றன வென்பதற்கு ஐயமேயில்லை, நீர் சிறிதுந்தடையின்றிச் செய்தல்கூடும். ஆயின் அதைநடத்த வேண்டுமெனின் மிக்க கட்ட சாத்தியமாகும். எல்லா அரசரையும் வெற்றி கொண்டு வெகுபொருளைக் கொணரவேண்டும், அப்போது மன்னரெல்லாம் நீர் சொல்லுங் குற்றேவலைச் செய்யவேண்டும். அத்தனை சுவாதீனத்தில் அர சர்களை யெல்லாங் கொணர்ந்து வருவதெளிதன்று. முன்னுளில் உலகமுழு தும் அரசகுடும்பமாகவே யிருந்தது. பரசுராமன் மிக்க சினங்கொண்டு அரச குடும்பத்தையெல்லாம் நாசமாக்கினன். அதிற் றவறியுய்ந்த இரண்டொருவ ரால் இவ்வரசகுடும்ப மீளவுந்தோன்றிற்று. இப்போதோ அரசர்கள் மிகுதியு மின்று. இவர்களையே வெற்றிகொள்வது கட்டசாத்தியமாம். முற்காலத்திலும் இவ்விராசசூயத்தைச் செய்தார் சிலரோ. அவருள் அரிச்சந்திரனொருவனே இதை முற்றுப்பெறச் செய்தவன். அவன்மரபில் புரூரவசு என்பவன் இதைச் செய்யத்தொடங்கி முற்றுப்பெறுமற் போயிற்று, அதுஉமது தம்பிமார் பேராற் றலாற்செய்து முடிக்கக்கூடும். நீர் இராசசூயத்திற்குத் தொடங்கியகாரியம் இராசநாசமென்றே யெண்ணற்பாலது, பேராற்றலையுடைய அரசர் பலரிருக் கின்றனர், அவர்கள் எளிதில் வசப்படுதல்சாத்தியமன்று; அதன் பொருட்டுப் பல அக்குரோணி சேனையுடன் செல்லவேண்டும்.

ச ர ா ச ந் த ன் க தை.

நாம் வெற்றிகொள்ளத்தக்க அரசர் பலரிருப்பினும் அவருள் சராசந்த னென்பவன் மிகச்சிறப்புடையான். அவனுளுவது நீர்வளம் நிலவளம் குடி வளமிகுந்த மகததேசமென்னப்படும், அதில் கிரிவிரிசமென்னு நகரத்திலிருந் தரசாள்கின்றுன். அது மலைகளாற் சூழப்பட்டோர் கோட்டையைப்போல் இருக்கின்றது. அம்மகததேச முழுவதும் தான் ஒருவனுகவே யரசாண்டு வருகின்றுன். அவன் மிக்க தருமமுடையானும் உதாரகுணமுடையானும் பேராற்றலுடையானும் சேனைவலியும் படைக்கல வலியு முடையனுவான். அவனுக்குப் படைத்துணையோ மிகுதியுமுள்ளது. உம்மைப்போல எனக்கு அத்தைமகனுகிய சிசுபாலனை நீரறிவீரன்றே; அவன் அச்சராசந்தனுக்குச் சேனுதிபதியாயிருக்கின்றுன், இதனுலே மற்றையரசர்களை யசட்டைசெய்து

வருகின்ருன். கருசதேசாதிபதியாகிய தந்தவக்கிர னென்பவனும் அச்சராசந்த னுக்குக் குற்றேவல்செய்பவனு யொழுகுகின்றனன். இவனும் அச்சிசுபாலனே டொத்த பேராற்றலையுடையான் ; வெகுமாயமும் வல்லவன், அமிசன் டிபிகன் என்போர் மிக்க மாயாவிகள், இவர்களும் அம்மகதநாட்டரசன் நட்பிருந்தாற் போதுமென்று அவனுடன்நட்புகொண்டிருக்கின்றனர். மேகவாகனனென்ருே ரரசனுண்டு ; அவன் தலைமேல் இரத்தினமுளதாகையால் அவனே அற்புத மணியென்று சொல்லப்படுகின்ருன் ; இவனும் மிக்க பேராற்றலையுடை யான், காலயவனனென்ற வேருேரரசனுண்டு,அவன் துருக்கதேசமாகிய யவனதேசத் தரசன், மிக்க பேராற்றலுடையான், மாயைகளும் வஞ்சனையும் ஒருவரு மறியாத முரனென்ற ஓரசுரராசனுண்டு ; இவனைச் சேனுதிபதியாக வைத் துக்கொண்டிருப்பவன் நரகாசுரனென்பவன். இவன் மேற்குச் சமுத்திரநடுவி லுள்ளமாகிஷ்மதீயென்னு நகரத்திற்கரசன் ; இவனேபடைவலியும்துணைவலியு முடையான். இவனுடைய மகன் பகதத்தனென்பவன், இவன் தந்தையினும் பேராற்றலையுடையான். இவர்களெல்லாம் தந்தையிடத்தின் மைந்தனும் ஆசி ரியரிடத்தில் மாணுக்கனும் அரசனிடத்தில் குடிகளும்போல அடங்கி யொடு ங்கி யிருப்பர். பவுண்டரகனென்ற அரசனெருவனுண்டு. இவன் மிகவும் கொடியவன் ; இவன் என்னிடத்தே பொருமைமிகுதியுமுடையானுய் என் போலும் வாசுதேவனென்ற பேரைவைத்துக்கொண்டு, தன் மாயாபலத்தால் நான்குகைகளை யுண்டாக்கிக்கொண்டு எஃகினல் சக்கரமும் கதையும் வாளும் சங்கமும்வில்லுமுடையானுய்அவைகட்குச் சுதரிசனம் கௌமோதகிநாந்தகம் பாஞ்சசன்னியம் சார்ங்கமென்று பெயரிட்டு மாயையினுலெங்குந் திரிந்து கொண்டு இந்திரதிருவமுடையானு யிருக்கின்ருன். அவன் தம்பி இரிதியென் பான் மிகவும் பேராற்றலையுடையான். என்னுடைய மாமனுராகிய பீஷ்மக னும், என் மைத்துனனுகிய உருக்கிமியும் மிக்க பேராற்றலையுடையா ரென் பது நீரறிந்திருக்கலாமே ; இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒருகுடும்பம் போல அச்சராசந்தனுடன் சேர்ந்திருக்கின்றனர். இச்சராசந்தனுடைய பேரா ற்றலுக்கு அஞ்சிச் சூரசேனரும் பத்திரமுகரும் சாளவரும் மச்சநாடரும் தென் பாஞ்சாலத்தாரும் மாளவரும் குளிந்தரும் குந்திதேசத்தாரும் ஓட் டெடுத்துக் காட்டிற் கரந்துறைகின்றனர். இவரிற் பலர் நமது துவாரகையின் அருகேயுள்ள காடுகளில் வசிக்கின்றனர். இப்போதிருக்குமன்னருள் அச்சரா சந்தனை வெல்வாரொருவருமிலர். இதுநிற்க ; போசவமிசத்தானும் உமக்குஅம் மானுமாகிய புருசித்துதென்னுட்டையும் மேனுட்டையும் பரிபாலித்துவருகின். றனன் ; அவனும் பேராற்றலுடையா னென்பதிற்கையமேயில்லை. அவனெரு வனே உமதுநட்பையுடையான். இப்படி அரசர்களெல்லாம் அச்சராசந்தனுக் குத் துணையாயிருப்பதனுல் அவனே சிறந்த அரசனுகத் தோன்றுகின்றது. எவ்வாறு இராசசூய நடக்குமென்று கருதுகின்றேன். சிறியவலியுடையாரும் அவன் பக்கமேசேர்வர். உமக்கு மிக்க செல்வமும் மிக்கவலிபெற்றுடைய தம்பியருமிருக்கின்றனர். யாகத்தைத்தொடங்கியபின்னரோ மிக்ககலகநேரும். அதற்குமுன்னரோ நாம்முயற்சியோடிருக்கவேண்டும், அச்சராசந்தனை நினைக்

குந்தோறுந் துனுக்குறுகின்றது. உக்கிரசேனன் மகனுகியகஞ்சனையறியாதார் ஒருவருமிலர். அவன் அச்சராசந்தன் புதல்விய ரிருவரைமணந்து தன்தந்தையைச் சிறையிலிட்டுப் போசர் விருஷ்ணி அந்தகர்முதலிய உறவினரை வருத்தி வந்தான். இதனுல் அவர்கள் அவனைக்கண்டு நடுக்குற்று இன்னவிடமென்றுரைக்க முடியாத இடங்களிலெல்லாஞ் சென்றுமறைந்தனர். இவனுலே என் பிதாவாகியவசுதேவரும் என் தாயாகிய தேவகியாரும் சிறையிடப்பட்டமை நீரறிந்ததே! இவன் தன்உறவினராகிய யாதவரையும் வருத்தினுன். நான் ஆயர்பாடியைவிட்டு வடமதுரைக்குச் சென்றபோது என்னைக் கொல்லக் குவாலயபீட்மென்னும் யானை, மல்லர் முதலியோரையும் விடுத்து முடியாமல் கடைசியில் கஞ்சன் என்னுற் கொல்லப்பட்டான். என்னண்ணனுகிய பலராமர் அவன் தம்பியாகிய சுதர்மாவைக் கொன்றனர். கஞ்சனிறந்தமையைக்கண்ட அவனீன்ற மடந்தையரிருவரும் தம் பிதாவாகிய சராசந்தன்பாற்சென்று முறையிட்டனர். சராசந்தன் அவர்கள் வைதவிய மடைந்தமை பொருது பெருஞ்சினங்கொண்டு பெருங்கடல்போன்ற தன்சேனையோடு என்னுடன்பதினெட்டு முறை படையெடுத்துவந்து போர்செய்தனன். நானும் பலராமரும் மதுரா பட்டணத்தை விட்டு வெளியேவந்து பலமுறை அவன் சேனையை நாசஞ் செய்தோம். இவ்வாறிருக்க இவனுக்கு நண்பனுகிய காலயவனன் பகைத்துப் போர்செய்யவந்தான். அவனைச் சூழ்ச்சியாற்கொன்றேன். அம்சடிபிகரும் போர் செய்யவரவே அவரையும்அவ்வாறே கொன்றேன். இவர்களோ டிரவும் பகலுமின்றி மூன்று வருஷகாலமாகப் போர்செய்வதே ஆகாரமாயிருப்பதறிந்து இனிச் சுகமாயிருக்கலாமென்று மதுரையைப் பாழாக்கிக் கடலினடுவே விச்சுவகர்மாவினுல் துவாரகையைக் கட்டிக்கொண்டு யாருக்குந் தெரியாமல் உறவினரோடுங்குடியேறி உக்கிரசேனன் மக்கள்நூற்றுவரையும் நடுவினிறுத்தி சத்தியபாமை மக்களை யோரிடத்திலேயே யிருத்தி, சாத்தகி கிருதவர்மா பிரத்தியுமனன் அனிருத்தன் வசுதேவன் உக்கிரசேனன் முதலானேரும் நானும் பலராமரும் காத்துக்கொண்டு வருகின்றேம். அவனுற்புடைப்புண்டு வருந்தி யிருக்கின்றமையால் அவன் பேராற்றலை யெடுத்துச் சொல்லிமுடித்தேன். உமக்குப் பேராற்றலையுடைய தம்பியரிருக்கின்றனர். இப்போதேனும் உம்மால் என் சத்துருபயநீக்கி இன்பெய்தி வாழலாமென்று கருதுகின்றேன். அவனை உயிரோடு வைத்து நாம் இராசசூயயாகஞ் செய்வது தகுதியான காரியமேயன்று, எனக்குமிக ஆப்தராகையாலும் என்னையே மிகுதியு நாடிக் கேட்டமையாலும் எனக்குத் தெரிந்ததைச் சொல்லி முடித்தேன். மேலும் எனக்குச் சராசந்த னிருக்கிறவரையும் இராசசூய மெத்துணையு நிறைவேற மாட்டாதென்பதே கருத்து. மேலும் நம்மவரிலே வீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமா, விதுரன், துரியோதனன், சகுனி, துச்சாதனன், கர்ணன் முதலானேரிருக்கின்றனர். ஏகலைவன், சிசுபாலன் உருக்குமி முதலானேரு மிருக்கின்றனர். இவரையெல்லாம் வெற்றிகொள்ளாமல் எவ்வாறு வேள்விசெய்யத்தொடங்குவது. ஒருக்கால் வீஷ்மர், துரோணர், அசுவத்தாமா, விதுரன் உம்பால் அன்புடையரா யிருந்தாலும் துரியோதனன், சகுனி, துச்சாதனன்

இவர்கள் சும்மா யிரார், போர்செய்யவே துணிவர், அப்போது வேள்விக்கிடையூ றுண்டாமே! அக்கர்ணனோ மிக்க பேராற்றலுடையானா யிருக்கின்றனனே! அவனை எளிதில் வெல்லப்போமோ? இவ்வாறு பேராற்றலுடைய வரசர்பலரிருக்க வேள்வி செய்யத்தொடங்குவ தெவ்வாறு? யாவரையும் வெல்வதற்குமுன்னரோ நாம் சராசந்தனோடுபோர்புரிந்து வெல்வது இன்றியமையாதகாரியம், இவன்பேராற்றலைச் சொல்லுகின்றேன். அதாவது,— இவனோ உலகமுழுதும் சென்று தன்பாற்றோற்ற அரசரையெல்லாம் தன்னகரத்திற்கு மதில்போன்றிருக்கும் மலைக்குகையில் சிறையிட்டு இன்னும் சிலநாளையில் அவரையெல்லாம் பலியிட்டு யாகஞ்செய்ய வெண்ணி யிருக்கின்றனன். அது செய்வனாயின் அவனை அமரராலும் வெற்றிகொள்வதரிது. அவ்வாறு செய்வதற்குமுன்னரோ அவனொடும் போர்செய்து வெற்றிகோடல் வேண்டும். அவ்வாறு வெற்றி கொண்டு அவனாற் சிறையிடப்பட்ட அரசரையெல்லாம் விடுவிக்கவேண்டும். நம்மையவர்கள் வணங்கிப் பலவுதவியுஞ்செய்வர். நமக்கும் புண்ணியஞ் சித்திக்கும். பின்னர் பலமன்னரையும் இலேசாக வெற்றிகோடலமையும், இவ்வாறு அரசர்பலரையும் வெற்றிகொள்வீரேல் அவ்வேள்விசெய்தற்கு முடியும். உமது கருத்து எவ்வாறோ அறியேன், கட்டளையிடவேண்டுமென்றனன்.

இதைக்கேட்ட தருமராசன் கண்ணபிரானைநோக்கி நீர் சொன்ன ஒவ்வொருமொழியும் விலையிடற்கரியனவே, யானோ அவற்றைக்கேட்டுக் கழிபேருவகையெய்தினேன். இவ்வாறு சொல்லத்தக்கவரொருவருளர். உலகில் ஒவ்வோரரசரும் சம்ராட்டென்னும் பெயரடைவதே கருத்து. அதை விட்டிருப்பது கட்டசாத்தியமென்றல்லது வேறன்று. நீர் சொன்னவாறு வலிமையானும் குணத்தானும் அறிவானும் ஒழுக்கத்தானும் உலகமுழுதும் வெற்றிகொண்டவனே அப்படி அப்பெயரடைதலமையும், அவனே சம்ராட்டென்னும் சாம்பிராச்சிய பட்டாபிஷேக முடையானாவான். முன்னாளில் இவ்வாறு ஐம்பத்தாறு தேசத்தரசரையும் வெற்றிகொண்டாரில் மாந்தாதாவென்னும் அரசர் பெருமான் நற்குண நற்செயலையுடையானாய்த் தன்னைப் பலமன்னரும் வணங்க அரசாண்டுவருகையில் அவனைநோக்கி நீர் சாம்பிராச்சிய பட்டாபிஷேக முடையராய்ச் சம்ராட்டென்னும் பட்டம்பெற்றிருப்பதற் குரியராயிருக்கின்றீர், நாங்களோர் இடையூறுமெய்தாவண்ணம் நடக்கின்றோமென்றனர். குடிகளும் அவ்வாறே நடந்துகொள்ளுகின்றோம், இராசசூயமென்னும் பெருவேள்வி செய்யவேண்டினர். இவ்வாறு வேண்டிக்கொள்ள அவ்வரசன் இப்பெருவேள்வி செய்து சம்ராட்டென்னும் பெயர்கொண்டு விளங்கினான். கார்த்தவீரியார்ச்சுனனென்னும் அரசன் பலகால் தத்தாத்திரேயரென்னும் முற்றத்துறந்த முனிவரருள்பெற்றுத் தன்முன் ஒருவர் வில்லெடுக்காவண்ணம் வில்லிற் சிறந்தானாய் உலகமுழுதும் வெற்றிகொண்டு இப்பெருவேள்விசெய்து புகழ்பெற்று விளங்கினான். உங்கள் மரபில் துஷ்டியந்தமகாராசன் மகனாகிய பரதமகாராசனென்போன் தோளாற்றலாலும் நல்லுணர்ச்சியாலும் பகையரசரில்லாமல் உலகமுழுதும்வென்று சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் பெற்றான். மருத்தனென்கிற அரசர்பெருமான் மிகப் பெரும்புகழ்வாய்ந்தனன். அவன்

செய்த தானப்பொருள் அபரிமிதம். மிகத் தருமகுணமுடையான்; அவன் தருமகுணத்தாலே உலகமுழுதும் ஒரு குடைநிழலில் அரசாண்டு இப்பெருவேள்விசெய்து சாம்பிராச்சிய மடைந்தான். மேலும் இட்சுவாகு மரபில் அரிச்சந்திரனென்பானோ வாய்மையே நோன்பாக வுடையான். அவனைப்பற்றி யறியாதா ரொருவருமிலர். அவன் இப்பெருவேள்விசெய்து சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் பெற்றான். அரசனுகப்பிறக்கின்மேன்மையான காரியத்தையே முயலவேண்டும். அவ்வாறு செய்யாதொழிவானுயின் செல்லால்பாதுகாவாத புற்றைப்போல நாசமெய்துவனென்று அறநூல் சொல்லுகின்றது. ஆகையால் ஆப்தராயுள்ளாரை யெல்லாம் நாடிக்கேட்டேனல்லது வேறன்றெனச்சொல்லி முடித்தனர்.

அச்சபையிலிருந்த வீமசேனன் தருமராசனைவணங்கி நீர் சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் பெற்றுக்கொள்ள விரும்புவது ஒருபெரிதன்று. இச்சபையிற் பாண்டவர் சகாயனென்று பேர்வைத்துக்கொண்டு நம்மைக்காக்க இக்கண்ணபிரானிருக்கையில் நமக்கோரிடையூறும் வந்திலது. வில்லுக்கர்ச்சுனனென்று சொல்லத்தக்க தம்பியும் நானும் நீர் காலாலிட்ட குற்றேவலைத் தலையாற்செய்யக் காத்திருக்கின்றோம்; ஆகையால் சராசந்தனே யாகட்டும், வேறெந்த அரசனுகட்டும் எங்களோடு பொர கில்லையார்கள். அவ்வாறு பொரகினைந்தால் ஸ்ரீகிருஷ்ணசகாய மிருக்கையில் எங்கள்முன் னிறந்துபடுவர். நீர்சிந்திக்கவேண்டாம்; நானும் தம்பியும் கண்ணபிரானுமாகச்சென்று அச்சராசந்தனைவென்று வருகின்றோம்; விடைகொடுமென்று வேண்டிநின்றான் கண்ணபிரானைநோக்கி நீர் எங்களைக்காக்கவே துவசங்கட்டிக்கொண்டிருக்கையில், அச்சராசந்தன்று னெம்மாத்திரம், அவனை வெற்றிக்கொள்வது மொருபொருட்டன்றே, வேள்விக்குரிய தொழின் முயற்சியைநாடுவதே நமக்குக்கடமையென்று சொல்லி நின்றான். இவ்வாறு வீமசேனன் சொல்லியதைக்கேட்ட கண்ணபிரான் தருமராசனை நோக்கி உலகின்கண் ஒருபொருண் மேற்கொண்டிருப்பனேல் அவன் அப்பொருளிலிருக்குங் குணக்குற்றங்களைச் சிறிதேனு மாராய்ச்சிசெய்திலன். நாமும் சாம்பிராச்சியத்தில் அவாக் கொண்டிருப்பதனல் மாற்றார் வலிமுதலியனவெண்ணித் துணியவேண்டும். சராசந்தனுடைய பேராற்றலோ யாவருக்குந் தெரிந்தேயிருக்கின்றது. இச்சராசந்தன் திக்குவிசயஞ்செய்யத்துணிந்த காலையில் தன்னோடெதிர்த்துப் போராடமுடியாமல் தோற்றோடிப்போகும் அரசரையெல்லாம் பிடித்துச் சிறையிலிட்டிருக்கின்றனன். அப்படிப்பிடிக்க மன்னவர் நூற்றிற் கதிகப்படுமன்றிக் குறைந்திலது. இவர்களை யெல்லாம் சிறிதுகாலையில் தன் குலதெய்வமாகிய சரையென்னும் பசாசினுக்குப் பலியிட்டுத் தான் இராசசூயஞ்செய்து சம்ராட்டென்னும் பட்டம்பெறக் கருதியிருக்கின்றான், அவனுக்கு அது இலேசாகவே முடிவுபெறும். தனக்கு அரசரெல்லார் திரண்டு சார்பாயிருக்கவும், தனக்குவேண்டிய பொருள் நிறைந்திருக்கவும் அதற்கு முயலாமலு மிருக்கின்றனன். அச் சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் பெறக்கருதி யிருக்கும் சராசந்தனிடத்தில் வீமராசன் சொல்லிய வண்ணம் நாங்கள் மூவருஞ்சென்று போர்செய்து வெற்றிகொண்டுவருவோம்.

நாமே போர்செய்யத் துணியேமாயின் அவனை வெல்லத்தக்காரொவரிருக்கின்ற னர். அரசனாகப் பிறந்தால் போர்செய்து வெற்றியடைய வேண்டும், அற்றேல் போர்செய்து மாண்டாயினும் வீரசொர்க்க மெய்தவேண்டும், அதனாற் புகழுமுண்டு, ஆதலால் 'ஆறிலும்சாவு நூறிலுஞ்சாவு' என்றபடி நாங்கள் மூவரும் செல்ல விடைகொடுமென்றனன். அதைக்கேட்ட தருமராசன் கண்ணபிரானைநோக்கி 'உவப்ப தன்கண் குற்றமுந் தோன்றாக்கெடும்' என்றபடி நான் அறிவின்மையால் மேற்கொண்ட கருமத்தினிற் குணக் குற்றங்களை யாராயாது சம்ராட்டென்னும்பெயர் புனைய அவாக்கொண்டவிடத்து அதிற் சம்மதியாதபக்ஷத்தில் நான் உம்மை யெவ்வாறு போர்க்கனுப்பத் துணிவேன். வீமார்ச்சுன ரிருவரும் எமக்குக் கண்களாகவும் நீர் மனமாகவு மிருக்கின்றீர். எவ்வாறு கண்ணையு மனத்தையுநீங்கி யொருவன் வாழ்வெய்தப்பெறானோ அவ்வாறே உங்கள் மூவரையும்விட் டென்ன செய்வேனென்று தோன்றுகின்றது. அச்சராசந்தனோ ஒருவராலும் வெல்லுதற்கரிய பேராற்றலையுடையான். உங்களைத் துணையின்றி எவ்வாறனுப்புவது, இராசசூயத்தை நினைந்து கொண்டிருப்பது வெறும்வாயைமெல்வதோ டொக்கின்றது, அதை நினைக்க நினைக்கத் துயரமேயல்லது இன்பமென்ப தொருஞான்றுமின்று, சும்மாவிருப்பதே சுகமென நினைக்கின்றேனென்றனன்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த அர்ச்சுனன் தருமராசனைநோக்கி நீரிப்போது சொல்லிய சொற்களெல்லாம் உயர்குலத்திற்றோன்றி யாவுமுணர்ந்து பேராற்றல் பெற்றுடையானுக் குரியதேயன்று; உமக்கே னித்தனை மனத்தளர்ச்சி, காண்டவமென்னும் வில்லேந்தி வெள்ளைக்குதிரைபூண்டு குரக்குக் கொடிகட்டிய தேரிலேறி அக்ஷயதூணீரத்தை முதுகிற்றூங்கிப் போர்க்குச் செல்வேனாயின் இந்திரதிருவமேயெனினும் வேண்டிற் கொடுக்கக்காத்திருக்கின்றேன். உமக்கு இச்சாம்ராச்சிய மொருபொருளா? உலகின்கண் பலவானொருவனும் தருமவானொருவனு மிருப்பாராயின் பலவானே தருமவானினும் சாலச் சிறப்படைவன், பலவானோ பகைவரைவென்று பெருஞ்செல்வம் பெறுவன், செல்வம் பெற்றபின்னர் எல்லாத் தருமங்களுந் தனக்குத்தானே யரிதிற் கிடைக்கும். அவ்வாறன்றித் தருமத்தை யனுட்டித்து வருபவனுக்கு ஒரு கருமங்கிடையாது, பலமின்மையான் எதிர்புகுந்தாலும் அச்சமுண்டாம்; ஆகலின் குணதோஷங்களையும் தருமாதருமங்களையும் ஆராய்வதினும் துணிவொடும் தன்பேராற்றலைச் செலுத்துவதேநலம். அவ்வாறே செய்யின் எல்லாக் காரியமுஞ் சித்தித்தலே நலம், வெற்றிகோடற்கேதுவாவது அஞ்சாமை யொன்றேயன்றி வேறன்று. அரசனுக் கச்சமென்பது பெருங்குற்றமன்றோ! சராசந்தனுடன் போர்செய்துவென்று அவன் சிறையிலிட்ட அரசர்களையெல்லாம் விடுவித்து இராசசூயஞ் செய்யத்தொடங்கிச் செல்வமும் பெருமையும் புகழும் பெறவேண்டுமேல்லது சும்மா காலங்கழிப்பதுதகுதியன்று. 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்றபடி படை குடி கூழ் அமைச்சு நட்பரணென்னும் யாவுமமைந்திருக்கையிலே பெருமிதமெய்த முயலாமற் கால

நீட்டித்தல் தகுதியோ? இனி நானும் வீமராசனும் கண்ணபிரானுமாகச் சராசந்தனோடு போர்செய்து வென்றுவரக் கட்டளையிடவேண்டுமென்று வேண்டினன்.

அதைக்கேட்ட கண்ணபிரான் அர்ச்சுனன் சொன்னசொல் மிகுதியு நன்று. தான் கையினிடத்தே காண்டீபத்தையும் அக்ஷயதூணீரத்தையும் வெள்ளைக் குதிரைகட்டிக் குரக்குக்கொடியசைகின்ற தெய்வத்தேரினையும் பெற்று தன் பரிவாரத்தொடும்வந்து போர்செய்த திரிலோகாதிபதியாகிய இந்திரனைப் புறங்கண்டு அக்கினிபகவானுக்குக் காண்டவவனத்தை பசிநீங்கக் கொடுத்த சேவகத்தையே விளக்குகின்றது. மனிதப்பிறவி யெடுத்தபோதே மரணமு முடனுண்டென்றே மதிக்கவேண்டும். இதனாலன்றோ பெரியோரும் 'இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது-பின்றையேநின்றது கூற்றம்.' என்றுஞ்சொல்லியிருக்கின்றனர். மரணத்துக்கே யஞ்சிப் பெருமிதம்பயக்குங் கருமஞ்செய்யாதிருப்பது தகுதியன்றென்று தன்கருத்தை விளக்கியிருக்கின்றான். 'வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந் - துணைவலியுந் தூக்கிச் செயல்.' என்றதனால் ஆய்ந்துபாராமற் போர்செய்யவுந் தொடங்கலாகாது, செவ்வையாக வாராய்ந்தே போர்க்கெழுவேண்டும், அற்பபலமுடையானும் போரிற் பகைவனைச் சூழ்ச்சியால் வெல்லக்கூடும். இப்பெற்றிநோக்கியே பெரியாரும் 'பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும் - வேந்தர்க்கு வேண்டும் பொழுது.' என்றுஞ் சொல்லியிருக்கின்றனர். நாங்கள் சூழ்ச்சியாற் சராசந்தனை யெதிர்த்துப் போரில்வெல்வோம். இதிற் சிறிதும் ஐயமேவேண்டுவதில்லை. 'நகத்தாற்கிள்ளியெறிவதைக் கோடாரியால் வெட்டும்படியாக்குவது' வெள்ளறிவன் செய்கையாகும். சமமான வலிபெற்றுடையார் போர்செய்வதி லிருவரிலொருவர் வெற்றிகொள்வதென்பதே சரதம், இனித் தாமதியாமல் எங்களுக்கு விடைகொடுமென்றனர். அதைக்கேட்ட தருமராசன் நாமிதுவரையிலும் பேசுகின்ற சராசந்தன் யார்மகன்? அவன் வரலாற்றை வரலாற்று முறையாற் சொல்லவேண்டுமெனக் கண்ணபிரான் சொல்லத் தொடங்கினர்.

சராசந்தன் வரலாறு.

மகததேசத்தை யாண்டுவந்த குலம் நலம் கல்வி முதலியன கோட்டிகொண்டொழுகும் பிருகத்திரதனென்னு மோரரசன் காசிராசன் பயந்த இரட்டைப்பெண்க ளிருவரையு மணந்து அவர்கள் வேண்டியவற்றைச் சிறிதுந் தாழாமல் வழங்கி அவர்கள் இந்நலமனுபவித்து வாழ்ந்துவந்தான். அவனெல்லாப் பேறும் பெற்றுடையானாயினும் இருமைக்குங் காரணமாயுள்ள மக்கட்பேறின்றி மனமாழ்ந்து கோதானம் பூதானம் கன்னியாதானம் அன்னதானம் வஸ்திரதான முதலிய சோடச தானங்களையுஞ் செய்தும் வெறுத்து தன் மனைவியருடனே நாடுதுறந்து அரசை மந்திரிகள்வசத்தி லொப்பித்து காடு சென்றான். அவன்பாலுண்டான அன்பா லவனைப்பிரியாத நகரமாந்தரிற்சிலர் பின் சென்றனர். இவ்வாறரசன் காட்டிலிருக்கையில் அரசனுடன்சென்ற நகரமாந்தர் இவ்வனத்திற் கருகில் கவுதம கோத்திரத்திற் றோன்றிய கக்ஷிவான்

என்னு முனிவர்குமாரன் சண்டகவுசிக னென்னும் அருந்தவர் வசிக்கின்றனர்; அம்முனிவர்பிரானை இக்காட்டி லிருக்குந்தனையும் நாடோறுஞ்சென்று தெரி சித்துவரின் உமக்கு நலமுண்டாமென்றனர். அதைக்கேட்ட அரசன் 'கரும்பு தின்னக் கூலியா' என்றபடி நாடோறும்சென்று அம்முனிவரனைத் தரிசித்து வந்தனன். இவ்வாறிருக்கையில் ஒருநாள் அம்முனிவன் மனமகிழ்ந்து நீர் நாடு துறந்து காடடைந்திருக்குங் காரணமென்ன? தெரியச் சொல்லவேண்டு மென்று வினவ, அரசனும் எந்தச் சம்பத்திலுங் குறைவில்லை; புத்திரசம்பத் 'தொன் றில்லாமல் மனம் வெறுத்து நாடுதுறந்து காடெய்தி என்னுடைய முன்னை நல்வினைப்பயனால் தேவரீர்க்குக் குற்றேவல்செய்யும் பெரும்பேறு பெற்றேன். என்னையோ மூப்புவந்து தொடர்ந்துகொண்டது, இருமைப்பேறும் பெறாப் பாவியானேன்! என்செய்யக்கடவேனென்றனன். முனிவர்பிரானும் தானப்போது நின்றுகொண்டிருந்த மாமரநிழலினிடத்தி லுட்கார்ந்து கட வுளைத்தியானஞ் செய்கையில் எல்லாமுடைய இறைவனருளால் ஒருமாங்கனி அவர் மடிமேல் வீழ்ந்தது. அதையெடுத்து அரசன்கையிற் கொடுத்து இனி உமக்குப் புத்திரபாக்கியங் கிடைக்கும் அஞ்சவேண்டாம் போவென்றனர். அரசனும் சண்டகவுசிக முனிவனை மும்முறைவலம்வந்து பணிந்து விடை பெற்றுத் தன் கிரிவிரச நகரைச் சேர்ந்து தன்மனைவிய ரிருவர்க்கும் அக்க னியைப் பகிர்ந்துகொடுத்தான். அம்மாதரிருவரும் கருவாய்த்துப் பத்துமாதம் நிரம்பவே ஒருகண் ஒருகாது ஒருகை ஒருகால் பாதிதலை பாதியுடலமைந்த ஒருபிரேதவுருவ மொருத்தியும்; மற்றைப்பாதியுருவை மற்றொருத்தியும் பெற, சூசிகாக் கிருகத்திலிருந்த மாதர்கள் கண்டு அதனை அரசனுக்கறிவித்துப் புற த்தி லெறிந்துவிட்டனர். அரசன் மனைவியரோ 'கைக்கெட்டியது வாய்க்கெட் டாமற் போயிற்றே' என்றபடி நமக்குமுனிவ ரனுக்கிரகத்தாற் றோன்றியும் பாழாயிற்றேயென்று புலம்பி நைந்தனர். மேகத்தைக்கண்டு சாதகப்புள் காப் பதுபோலக் காத்திருந்த அரசன் 'கோடைக்காலத்தில் வாடியபயிருக்கு மழை பொழிந்ததுபோல' தோன்றிய மக்கட்பேறு பாழாயிற்றே யென்று பொருமி விம்மினன். இது நகரமாந்தருக் கொருவருக்குந் தெரியாது. இவ்வாறு நிகழ் கையில் அந்நகரத்தைக் காத்துவரும் சரையென்னும் பைசாசத் தேவதை அது நள்ளிரவாதலால் தான் நகர் முழுதுஞ் சுற்றித்திரிகையில் ஓர் புறத்திற் கிடக்கும் இருபாதியுடலையுங்கண்டு நாம் நல்ல ஊனுணவு வாய்க்கப்பெற்றோ மென்றெண்ணி அவை உயிரோடிருக்கக்கண்டு, இது சாலவழகிது ஆயினும் நல்ல மகாபுருடனாகவும் தோன்றுகின்றதென்று சிந்தித்து நமதரசனுக்கு உதவியாகுகவென்று இரண்டனையு மொன்றாகக்கூட்டிற்று. அவ்விருபாதியு மொன்றாயிசைந்து மிக்க அழகுடன் மேகமுழக்கம்போலப் பெருங்குரலிட்டுக் குழந்தை யழுதது. அக்குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு மானிடப் பெண்ணுருக்கொண்டுவந்து அரசன் கையிற்கொடுத்து நீர்வருந்துவதொழியும், நீர் முனிவர் சொல்லுக்குமாறாக அம்மாங்கனியைப் பகிர்ந்து கொடுத்தமை யால் இவ்வாறு நேரிட்டது; நான் உம்பால்வைத்த அன்பினால் அவ்விரண் டடலையு மொன்றாகக் கூட்டினேன். கூட்டவே இறைவனருளாலும் முனிவ

ரனுக்கிரகத்தாலும் அவ்விருபாதியும் குழந்தைவடிவ மெய்தியதனுல் நீ கவலை யொழியும் என்றுசொல்ல அதைக்கேட்ட அரசன் அப்பெண்ணைக்கண்டு நீர் நாகருலகப் பெண்ணோ! அசுரமாதோ! இயக்கர்குலக் கன்னிகையோ! அரமகளோ! யாரோ அறிகின்றிலேன்; நீர்செய்யு,முதவிக் கென்னகைம்மாறு செய்வேன் 'செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்-வானகமு மாற்றலரிது' என்றபடி யான்யாதுசெய்வேனென்ன, அதற்கு அந்தச் சரையென்னும் பைசாசதேவதை, நான் உன் நகரத்தைக் காக்குந்தேவதை, நீ எனக்குச்செய்து வரும் சிறப்பைநோக்கி என்ன கைம்மாறு செய்வதென்று காத்திருந்தேன். தருணத்தில் இவ்விருபாதியையுங் கூட்டியொரு குழந்தையாக்கிக் கொடுத்தேன் பாதுகாத்துவாருமென்று சொல்லி மறைந்தனள்.

அப்பைசாசதேவதை அக்குழந்தையைக் கொடுத்து மறைந்துபோகவே, அம்மகதராசனுகிய பிருகத்திரதன் தன் மகவை மிகக் களிப்பாகக் கைக்கொண் டந்தப்புரஞ்சென்று இச்செய்தியைத் தன் மனைவிய ரிருவருக்கு முணர்த்தித் தம்புரோகிதரையுமற்றைப் பலவந்தணரையும் வருவித்து அவர்க்குப் பலதானங்கள் வழங்கி மைந்தனைச் சரையென்னும் பைசாசதேவதை கூட்டியபடியால் சராசந்தனென்று நாமகரணஞ் செய்வித்து அச்சரை யென்னும் பைசாசதேவதைக்கும் விசேடமாகச் சிறப்புச்செய்து திருவிழா நடத்தி வருஷோற்சவம் மாசோற்சவம் பக்ஷோற்சவ முதலியவற்றை நடத்தக் கட்டளையிட்டு அக்குழந்தையை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்துவந்தான். இவன் வளர்ந்துவருங்காலத்தில் தற்செயலாய்ச் சண்டகவுசிமுனிவர் அக்கிரிவிரச நகரமடைந்ததைக் கேள்விப்பட்டு மகதராசன் பெருமகிழ்ச்சி சிறந்து அவரை யெதிர்கொண்டழைத்து வந்து அவரை யொரு சிறந்த ஆசனத்திலெழுந்தருளச் செய்து கைகட்டி வாய் பொத்திக்கொண்டு மும்முறை வலம்வந்து பணிந் தெதிர்நின்று தன் மனைவியரையும் மகனையும் வருவிக்க அவர்களும் அம்முனிவரை வணங்கி நிற்கையில், அரசன் முனிவரை நோக்கி நீர் என் நாட்டிற் கெழுந்தருள நானென்ன புண்ணியஞ் செய்தேன். என் நல்வினைப்பயனே தேவரீ ரெழுந்தருளச் செய்ததன்றி வேறன்று. தேவரீருக்குத் தவமுதலிய சற்கருமங்கள் இடையூறின்றி நடக்கின்றனவா? நமதாச்சிரமத்தில் விலங்கொடுங் கொடியவர் தீங்கிழையாம லிருக்கின்றனரோ? அடியேன் செய்த பாக்கியமே பாக்கியம், இன்றுதான் என் நல்வினையீடேறிற்றென்று சொல்ல, முனிவர் பெருமான் அரசனையும் இராசபத்தினிகளையும் குழந்தையையு மாசிர்வதித்து அரசனைநோக்கிச் சொல்வாராயினர்.

அரசனே! நீர் வருந்தியிருந்தமையால் அருட்பெருங்கடலின் பெருங்கருணையால் ஒரு மாங்கனி கொடுத்தேன். அதை உமது வெள்ளறிவால் நீர் பகிர்ந்து மனைவியரிருவருக்கும் கொடுத்தீர். அதனுலே குழந்தை யிருபாதியாகத்தோன்றின. அப்பாதியிரண்டையும் சராதேவி தற்செயலாய்க் கூட்டினமையால் இக்குமரன் ஆயினன். இவையனைத்தும் நான் ஞானநோக்காலறிந்தேன். எவ்வாறேனும் தெய்வானுகூலத்தால் உமக்குப் புத்திரசந்தான முண்டானது பெரிய விசேஷம். இவனே பேராற்றலையுடையானுய் எல்லா

அரசர்களின் முடிமேலும் விளங்குபவனுவான். இவன் தன்னையடுத்தாருக்குக் குற்றேவலாளிபோன்றும் அடையாதாருக் கிடியேறுபோன்றுந் தோன்றிப் பெறலருஞ் செல்வந்துய்த்து விளங்குவான். இவன் பலதேசங்களைக்கவர்ந்து சூறையாடி அறவொழுக்கங் கடவாமற் காத்துப் புகழெய்துவான். இவனுல் உமது மரபு மிகப்புகழெய்தும். எவ்வளவு மழைபெய்யினும் மலை சலியாது நிற்பதுபோன்று தேவர் அசுரர் மனிதர் முதலியவர்கள் எவ்வகைப்படைக்கலங் களை யெய்தாலும் இவனை யொன்றுஞ் செய்திலது. இவன் மகா பாக்கியவானுவான். பரம்பொருளாகிய சிவபிரானது பெருங்கருணைக்குப் பாத்திரமாவான். இவன் பெருமித மிவ்வளவென் றெடுத்துச் சொல்லவொண்ணுதென்றுகூறி விடைபெற்றுப்போயினர். அரசனே தன்மகனுக்கு யானையேற்றம், குதிரையேற்றம், தேர் செலுத்தல், வில்வித்தை முதலிய ஆயுதப் பயிற்சிகளையெல்லாங் கற்பிக்கப் பேராற்றலை யுடையவனுய் யாவரும் மதிக்கத்தக்கவனுனன். அரசனே அவனுக்கு யுவராச்சிய பட்டாபிஷேகஞ்செய்து இராச காரியங்களை நடத்திவரச்செய்து தான் இம்மைப்பயனை யடையக்கருதித் தன்னரசபாரமுழுதும் தன்மகனது தோளிற்சுமத்தித் தான்மனைவியருடன்வனஞ் சென்று தவஞ்செய்து சுவர்க்கலோகமடைந்தான். சராசந்தனே செங்கோல் கைக்கொண்டு தன் தந்தையினும் ஆயிரமடங்கு சிறந்தானென்றுசொல்ல அரசைச்செலுத்திப் பகைவரையொடுக்கிப் பல நாடுகளைக்கவர்ந்து பலவரசரும் தன்காற்கீழொதுங்கிடக்க அரசாண்டுவந்தான். இவ்வரசனைப்பலராசர் நண்பு கொண்டுவருகின்றனர். அவன் நண்பரில் அமிசன் டிபிகன் என்பவரை மிகச் சூழ்ச்சியாற் பொருது கொன்றேன். அவ்வாறே காலயவனனென்பவனை வீர சொர்க்கத்துக் கனுப்பினேன். அவன் மருமகனுகிய கஞ்சனை நான் கொன்ற நாள்முதலாக என்னெடு வயிரங்கொண்டு பதினெட்டுமுறை படையெடுத்து வந்தான். ஒருநாள் தன்னகரத்தில் அவனுடைய மக்களிருவரும்சென்று தம் நாயகனிறந்தமைக்கு ஆற்றாது துடித்தழப்பொறுது தன்கையிலிருந்த தண்டொன்றை யங்கிருந்தபடியே வடமதுரையே யிலக்காகச் சுழற்றியெறிந்தான். அதன்வேகத்திற் காற்ருது வடமதுரையிற் பாதியழிந்து நாசமாய்விட்டது. அதனை யறிந்த நான் யாதவரையெல்லாம் அழைத்துக்கொண்டு நடுக்கடலில் விச்சுவகர்மாவினுல் துவாரகாபுரியுண்டாக்கி அதிற்குடியேறினேன், போனது போக இன்னும் பல அரசர் அவனைச் சூழ்ந்திருக்கின்றனர், ஆயினும் அவனைச் சூழ்ச்சியாலன்றி வேறுவகையாற் கொல்லவொண்ணுது. சேனையுடன்சென்று அவனைப் போர்க்களத்தில் வெல்ல, தேவர்களாலு மசாத்தியமாகும். அவனை மற்போரிலே வெல்லவேண்டும், மற்போரில் அவனைவெல்லத்தக்கான் வீமராசனன்றிப் பிறரால் முடியாது, அர்ச்சுனனும் நானும் துணையாகச்செல்கின்றேம். நாங்களிருவரும் வீமராசனுக்குத்துணையாயிருக்க அவ்வீமனை யாவர் வெல்லவல்லார், நாங்கள் மூவரும் செல்லவேண்டும் விடைகொடுமென்று கண்ணபிரான் கேட்டருளவே; தருமராசன் அக்கண்ணபிரானை நோக்கி பஞ்ச பாண்டவராகிய இந்தியங்களுக்கு மனம்போன்ற நீர் எங்களைக்காப்பதற்கே துவசங்கட்டிக்கொண் டிருக்கையில் இவ்வாறு சொல்வது நியாயமாமோ!

உலகங்களையெல்லாங் காக்க நீரிருக்கையில் எங்களுக்கொரு குறையும் நேர்ந் திலது! எங்களுக்கு எதுதான் காரியசாதகமாகாது, இக்கருத்து எனக்குப் பூரணமாகவுண்டு; ஆகையால் இப்போதே சராசந்தன் கொல்லப்பட்டான். அவனால் சிறையிடப்பட்ட அரசரெல்லாம் இன்றே சிறையினின்றே நீங்கினர். எங்களுக் கெல்லாவரசருங் கீழ்ப்பட்டனர். இராசசூயஞ்செய்தேனானேன்; சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் பெற்றுடையானாய்ச் சம்ராட்டென்னும் பட்ட மெய்தினேனானேன். உம்முடைய கருத்தின்படி அர்ச்சுனனையும் வீமனையும் அழைத்துக்கொண்டு சாரசந்தனை வெற்றிகொண்டு வாருமென்று அவ்விரு வரையும் கண்ணபிரானிடத்தே கையடையாகக் கொடுத்து நானிதுகாறுஞ் சிந்தித்தமை உங்களைப் பிரிந்திராமையின் பொருட்டென்றே துணியவேண் டும். உம்மைப் பிரிந்திருப்பது ஒரு யுகம்போலத் தோன்றுகின்றதென்று சொல்லி ஆசிர்வதித்தனுப்ப, வீமார்ச்சுனருடன் கண்ணபிரான் தருமராசனை வணங்கி விடைபெற்றுக் கிரிவிரசத்தை நோக்கிநடந்தனர். இது நிற்க;

கிரீவிரசமடைதல்.

கண்ணபிரானே தருமராசனை உமது தம்பியரிருவரையும் யானேகாத்து உம்பால் விடுக்கிறேனென்றுசொல்ல அதைக்கேட்டு விடைகொடுக்கப்பெற்று மூவரும் பிரமசரிய முடையார்போல வேடங்கொண்டு அவனுடைய நகர மடைந்து மாளிகையி லெளிதில் அணுகலாமெனத் துணிந்து குருஜாங்கல மென்னும் நாட்டைக்கடந்து பதுமசரசென்னும் ஓடையைத்தாண்டிக் காளி கூடமென்னும் இடமெய்தி கோசலநாட்டிற்புகுந்து அயோத்திநகரை நோக்கிக் கொண்டே சென்று கண்டகீநதியைப் பார்த்துக்கொண்டேபோய் மிதிலை யைக்கண்டு உண்டு இளைப்பாறி நித்திரை தவிர்ந்து நடந்து கங்கையையும் சோணநகரத்தையும் அப்பாற்பட்டு கீழ்க்கரையோரமாகவேபோய்க் கிரிவிரச நகரைக் கண்டனர். அந்நகரின் பசுக்களை மேய்க்குமிடத்தே நின்று வீமார்ச் சுன ரிருவருக்கும் அந்நகர்வளத்தைக்காட்டி இதுதான் 'கிரிவிரசமென்பது' நன்றாகப் பாருங்கோள், அளகாபுரிபோற் செல்வத்திற் சிறப்பிடமாக விளங்கு கின்றது. நீர்வளமும் நிலவளமு மிகுந்திருப்பதனால் இந்நகரிலுள்ளார்க்குப் பிணியென்பதே சிறிதுங்கிடையாது; இதைச்சூழ்ந்து பல மரச்சோலைகளிருக் கின்றன, இவை யென்றுமொன்றுந் தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனியுதவிக் கொண்டு காண்பார்க்கு மிக்கமகிழ்ச்சியைத் தருவதாயிருக்கின்றன. இந்நகரத் தைச்சூழ்ந்து ஐந்து மலைகள் தோன்றுகின்றனவே அவைகட்கு முறையே வைகாரம், விமலம், வராகம், விருஷபம், சைத்தியகம் என்றுபெயர். இவை கட்கு நடுவே யிருக்கின்றமையான் இந்நகரத்திற்குக் கிரிவிரசமென்றுபெயர். இம்மலைகளி னடர்ந்த மரச்செறிவுகளிருக்கின்றன. அந்நிழலால் அந்நகரமெங் கும் குளிர்ந்து இன்பமாயிருக்கும். இவற்றி னடிவாரத்தே முன்னாளில் ஒரு செய்தி நிகழ்ந்திருக்கின்றது சொல்லுகின்றேன் கேளுங்கோளென்று கண்ண பிரான் சொல்வானாயினான்.

தீர்க்கதமன் கதை.

முன்னாளில் தேவகுருவாகிய வியாழபகவான் முன்னோன் உசத்தியன் என்னும் முனிவர்பிரான் இம்மலைச்செறிவில் ஓர் ஆச்சிரமத்திலிருந்தனன். அவன் மனைவி கருவாய்த்திருந்தாள். எக்காலத்தும் எவ்வகைப்பட்டவர்க்கேனும் கெடுமதி கண்ணுக்குத் தோன்றிலதென்பது உலகியற்கையாகலின் காமாந்தகாரமென்னுங் கள்ளுண்டு களித்து வியாழபகவான் கருவாய்த்திருந்த தன்முன்னோன் காதலியைப் புணரக்கருதினன். அவ்வாறு கருதத்துணிகையில் அவள் அகட்டிலிருந்த அப்பசுங்குழவி வியாழபகவானைநோக்கி நீர் இணைவிழைச்சைக் கருதியதுதகுதியன்று. நீர் என்னன்னையை யணைவிரோல் உமது வீரியம் வீணாகாமே யொருமகவுயிர்க்கும். நானொருவனிருப்பதே என்னன்னை அகடுவசதியானஇடமின்றி யிருக்கின்றதன்றி யானே வெளிவரத்துணிவனேல் தக்ககாலமுமமைந்திலது; நீர் புணர்ச்சிதவிருமென்றுசொல்ல வியாழபகவான் சினங்கொண்டு என் காமநுகர்ச்சிக் கிடையூறு செய்தமையான் நீபிறவிக்குருடனாகத் தோன்றுதி யென்ன, அக்குழந்தையும் அச்சாபமேற்றுப் பிறவிக்குருடனாகத் தோன்றினன். அவன் அவள் வயிற்றினின்றும் தோன்றியவழிப் பிறவிக்குருடனாகத் தோன்றித் தந்தையால் தீர்க்கதமன் என்று பெயரிட்டனன். அவன் இளம்பிறைபோல் வளர்ந்து சகலசாஸ்திரபாரங்கதராயு மெய்யுணர்ச்சியுடையராயும் இங்கே ஓராச்சிரமத்தில் வதிந்தனர். இவ்வா றிருக்கையில் இவருக்கோர் முனிவன் தன் மகட்கொடை நேர்ந்தான். அவளை இம்முனிவன் மணந்து அவளொடு தவஞ்செய்து வருவாராயினர். அவருக்குச் சிலபுத்திரர் தோன்றினர்; இவ்வாறு நெடுநாள்செல்ல அம்முனிவன் மனைவி போகத்திலிச்சை தவிர்ந்திருந்தனள். அம்முனிவனே மையலுழந்து தன்மனைவிபாற் செல்ல அம்மாது தான் காமவிச்சை தணிந்திருந்தாளாகலின் அம்முனிவனொடு மகிழ்வெய்தாதிருந்தமையின் நின் கருத்தினிகழ்ந்தது யாது? என்றுவினவ அம்முனிவன் மனைவி உன்னை மணம்புரிந்து குற்றேவலைச் செய்தேகாலங்கழித்தேனல்லது இன்பநலந்துய்த்தறியேன், இற்றைமுதல் என்னைவிட்டகலென்று கடுகடுத்துக்கூறிநிற்க அதைக்கேட்ட முனிவன் 'அரிசிபகையும் அகமுடையானுறவும் வெகுதூரமன்றென்பரோ' இவளிவ்வாறு கூறுவானேனென்று உள்ளத்தே நினைத்து மாதர் குலம் குணம் பருவம் செல்வமெய்திருக்கினும் நாயகனில்லாதவழி யவை யிருந்தென்னபயன்? ஆதலான் என்னையே வெறுக்கையில் என்னாற்கட்டப்பட்ட மங்கல சூத்திரத்தாலாய பயனென்ன? என்றுகூற, அதைக்கேட்ட அம்மாது தன் மக்களைக்கூவியழைத்து இக்குருட்டுக்கிழவனை யெங்கேனுங் கொண்டுசென் றெறிந்துவிடுங்கோளென்றுசொல்ல, அம்மக்களும் 'தாய்போலிருக்குந் தம்மக்கள்' என்றபடி காட்டுமரங்களாற் றெப்பமொன்றியற்றி அம்முனிவனை யதிற்பிணித்து ஆற்றில் விடுத்துச் சென்றனர். இவ்வாறு அப்பாதகி மைந்தர் விடுத்துச்சென்றபின்னர் தீர்க்கதமமுனிவர் சினங்கொண்டு இதுகாறும் மாதர்பொதுவென்றும் மணம்புரிந்த கணவன் தலைவனென்று மிருப்பதனாலன்றோ இவ்வகைத்தாய கொடுஞ்செய்கைக் கிடமுண்டாயது; இனி மணம்புரிந்த கணவன் உருவு நலனு முடையனேனும்

இல்லானேனும் அம்மடவரல் அவளைவிட்டுப்பிரிதலடாது; இகழ்ச்சிசெய்தலு மமையாது, அவ்வாறு செய்தாள் நரகமெய்தக்கடவளென்று சபித்தனர்; அன்றுதொட்டு இந்நல்லொழுக்க முலகின்கண் வழங்கலாயிற்று.

இவர் தெப்பத்திற் செல்கையில் அவ்வாற்றின்கரையில் வந்திருந்த உசீநரனென்னும் அரசன் தன் பரிசனங்களைக் கூவியழைத்து அத்தெப்பத்தைக் கரைப்படுத்தி அம்முனிவரை அத்தெப்பத்தினின்றும் கட்டவிழ்த்து மும்முறை வலம்வந்துபணிந்து தேவரீர்யார்? நீரிங்குவரவேண்டிய காரணமென்ன? சொல்லவேண்டுமென்ன, தீர்க்கதமமுனிவன் தன் குலம் பெயர்முதலியவற்றை வரலாற்று முறைமையாற்கூறித் தன் மனைவியாலெய்திய இடையூற்றையும் வரலாற்றுமுறையாற்கூற அரசன்கேட்டு மகிழ்ச்சியடைந்து அவரைத் தன் தேரிலேற்றிக்கொண்டு தன் நகரையடைந்து இராசமாளிகையி னுட்புகுந்து தீர்க்கதமமுனிவனைப் பூசித்துவந்தனன். இவ்வாறுபூசித்துவருகையில் அரசன் ஒருநாள் தீர்க்கதமுனிவனை யடைந்து வணங்கி எனக்கெலலாச்செல்வ மிருந்தும் புத்திரச்செல்வ மொன்றில்லாக்குறை பெருங்குறையா யிருக்கின்றது. நீர் என்மனைவியினிடமாகக் கர்ப்பதான மளிக்கவேண்டுமென் றிரந்துகேட்டனன். அதற்கு அம்முனிவரிணங்கி அரசனை நோக்கி அவ்வாறே யாகட்டுமென்ன அரசன் தன்மனைவியின்பாற்சென்று தன்கருத்தையறிவிக்க அவளோ மங்கலஸ்நானஞ்செய்து நல்ல ஆடையாபரணமணிந்து கணவன் கட்டளையின் படி முனிவரிருக்குமிடஞ்சென்று தான்பேரழகுடையா ளாதலாலும் இளம் பருவமுடையா ளாதலாலும் அம்முனிவனைக்கண்டு இவரோ அந்தணர், மேலும் கிழப்பருவமுடையார் இவ்வாறிருப்பதன்றிக் கண்ணிலாதார், இவரோ டெவ்வாறு நாம் பொருந்துவது; பிள்ளையில்லாவிடினு மாகுகவென்று சிந்தித்து அரசன் ஆக்கினையை யசட்டைசெய்துவிட்டுத் தன் றோழியரி லொருத்தியைத் தன்னுடை யணிகளை யணிவித்து அம்முனிவரிடத்தே யனுப்பினள். அத்தோழியோ மதனுகமப்படி கலவிசெய்ய அம்முனிவனிடம் வந்து நின்றாள். அதைக்கண்ட முனிவர் அவளைக்கலந்து நூறுமக்களையீன்றனர். அரசன் தன்மனையாளீன்ற மக்களென்றுகருதியவர்களுக்கு நாமகரணஞ்செய்யத் துணிகையில் முனிவர் இவர்கள் சூத்திரசாதிப் பெண்வயிற்றிற் றோன்றினோர், ஆயினும் பிரமதேசுடையராயிருப்பரெனக்கூறி நிற்க, அரசன்சாலவருந்துகையில் நீர் வருந்தவேண்டாம்,உமது மனைவியையழைத்துக்கொண்டுவாருமென அவள்தன்னைக்கண்டு இணங்காமையா யிருந்தமையால் அவளுடம்பைப் சித்து மந்திரபூர்வகமாகச் சிந்தித்தனர். அவ்விராசகன்னிகை யுடனே கருவாய்த்துக் கோடியிளஞ்சூரிய ருதயமானாற்போலும் விளங்கும் ஒருமகனையீன்றாள். அவள் அம்முனிவன் இராசகன்னிகை யங்கத்தைப் பரிசித்தமையால் அவன் அங்கராசனென் றழைக்கப்பட்டான். அவனாண்ட நாட்டை அங்கதேசமென்பர், அந்நாட்டிலுள்ளார் சிலர் பிரிந்து வங்கரெனப்பட்டனர்; அவ்விருதிறத்தவரும் தீர்க்கதமமுனிவனையே வழிபடு கடவுளாகக் கருதி வழிபட்டுவந்தனர். அவ்வருந்தவமுடைய தீர்க்கதம முனிவர் இவ்விடத்திலே தான் ஆச்சிரமமொன்றிபற்றி வாழ்ந்துவந்தாரென்று வீமனுக்கும் அர்ச்சுனனுக்கு மறிவித்து அவ்விருவருடனே அந்நகரத்துக்குட் புகுந்தனர்.

இவர்கள் அர்த்தராத்திரியில் நகரத்துக்குட்புகுந்து அந்நகரத்துநேரான வாயிலின்வழியாகப் புகாமல் வேறுவழியாகப் புகுந்து அதனருகேயிருக்கும் மலையிலேறி அதிற்கட்டியிருந்த அழகிய உப்பரிகையைக்கண்டு அதிற்சென்று முன்னுளில் இடபவடிவாய் மாமிசாத னென்னும் அரக்கன் உலகுயிரை வருத்த அவனைப் பிரகிருகத்திரதராசன் கொன்று அவன் தோலாற் செய்து வைத்திருந்த மூன்றுபேரிகைகளையும் ஏககாலத்தி லடித்துக்கிழித்து அவ்வுப்பரிகையைத் தகர்த்துவிட்டு இராசவீதியிற் சென்றனர். இவ்வாறிருக்க ஆபத்தானபொழுது அடிக்கும்படி வைத்திருந்த பேரிகைஅகாலத்தி லொலிக்கக்கண்டு சராசந்தனே தன் மந்திரிமாருடன் திடுக்கிட்டெழுந்திருந்து நூறு யோசனை கேட்கவைத்திருந்த இடத்தைப்பார்க்கையில், ஒருவரும் அகப்படாமல் அவை யழிந்திருப்பதையும், உப்பரிகை யிடிந்திருப்பதையுங் கண்டு இதென்ன! உற்பாதம்போ லிருக்கின்றதே யென்றுமிகச்சிந்தித்துப் புரோகிதரை யப்போதே வருவித்து சாந்திச்செயல்களை முடித்தனன். வீமராசனும் அர்ச்சுனனும் கண்ணபிரானும் அரசர்க்குரிய மணிமுடி ஆர கேயூர கடககங்கண முதலிய ஆபரணமில்லாமலும் வில்முதலிய ஆயுதமில்லாமலும் அந்தணருருக்கொண்டு அரையிலோர் ஆடைபுனைந்து மேலே ஓர்உத்தரீய மணிந்து மதயானைக் கன்றேபோல விளையாடித் திரிந்து ஆவணவீதிவழியே சென்று அங்கோர் பூமாலைவிற்கும் இடத்தையணுகிக் கவர்ந்தணிந்து கலவைச்சாந்து புனைந்து மான்கூட்டத்திற்புக்க சிங்கமேபோல, களிப்புடன் அரண்மனைநோக்கி நடந்து சிறிதும் அஞ்சுதலின்றி மதிலேறித் தாண்டிக் குதித்து, கட்டுகள் மூன்றையுங் கடந்து அரண்மனை வாயிலி லிருக்கும் மனிதரும் அஞ்சச்சென்று அப்பாற் சராசந்தனைக்கண்டு ஆங்கோர் திரைமறைவில் நின்று உமது மனைக்கு அதிதிகள் மூவர் வந்திருக்கின்றே மென்று சாலக்களிப்புடன் கூற, எக்காலத்தேனும் எவ்வகை ஆச்சிரமத்தாரேனும் அந்தணரெனின் அவரை வழிபடுதலே தனக்குக் கடன்மையாக வுடையானுகலின் மிகவிரைந்து எதிர்கொண்டழைத்து முக்குடிநீர் அடிநீர் கைந்நீரளித்து ஆசனத்தெழுந்தருளச்செய்து மும்முறை வலம்வந்துபணிந்துகைகட்டி வாய்பொத்திக்கொண் டெதிர்நிற்ப அப்பூசனையை மதியாராய் அசட்டைசெய்தனர். அதைக்கண்ட சராசந்தன் மனந்திகைத்து இது சாலவழகிதா யிருக்கின்றது! இவர்கள் அந்தணராயின் இவ்வண்ணஞ்செய்திலரே! இவர்யாரென்று உற்றுநோக்கியவழித் தன் மனத்தே அந்தண ரல்லரென்றே யெண்ணித் துணிந்து, நீவிர் யார்? உங்களை யாராயுங்கால் அந்தணரல்லீரென விளக்குகின்றது, அந்தணரே யாமாயின் பிரமசரிய நெறியினர்போற் றேன்றியும் மலர்மாலை சாந்த முதலியன அணிந்திருக்கின்றீர்! உங்கள் மார்பிற் கவசமணிந்த வடுத்தோன்றுகின்றது! கைகளோ உருண்டு திரண்டு நீண்டு மதயானையின் புழைக்கையேபோலத் தோன்றி மிக்க வலியவையாய்க் காய்ப்படைந்து விளங்குகின்றன, நீவிர் வருங்காலை இந்நகரத் தாவணவீதியிற் கொள்ளையடித்தீர்கள்! இம்மாளிகையினுட் புகுங்காலையில் இராசமார்க்கமாக வாராமலே மதிலேறிக் குதித்துவந்தீர்! இத்தனையு மாராயுங்கால் உப்பரிகையைத் தகர்த்

தாரும், கிழிபடாப் பேரிகையைக் கிழித்தாரும் நீரோ! வேறொருவரல்லரென் பது பசுமரத்தாணிபோற் பதிந்து நாட்டப்பட்டது. இவ்வகையான கொடுஞ் செயலால் நீர் அந்தணர்மரபினரல்லிர், அவரொழுக்கம் உங்களுக்கெத்துணையு மெய்தாது! நீர் அரசர் மரபினரென்றே கொள்ளக்கிடந்தது! உள்ளவா றுரைமினெனக்கேட்க, அம்மூவருள் கண்ணபிரான் கூறுவானாயினன்.

மகததேசத்தரசனே! நீரோ யாவுந் தெரிந்தார்போற் கூறுகின்றீர், சாத் திரங்களி னுட்பஞ் சிறிதேனு மறிந்தீரல்லீர். நான்கு வருணத்தும் பிரம சரிய வொழுக்கமுடையான் ஓரொவகையாகவேனும், வேறுவகையாகவேனும் இருக்கக்கூடும். பூமாலை சாந்து முதலியவை புனைவதிற்குற்றமேயின்று; அவற் றைப் புனைவதனாற் சிறப்பு மங்கலமுமேயன்றி வேறன்றாம்; ஆகலின் நாங்க ளும் அவ்வாறே யவற்றைப்புனைந்தோம்; இதனையறியாமே எங்களை யிகழ்ந் தனை, இதனை வாயாற் பேசுவதனாலாய பயனென்னை? நாங்கள் அரசர் மர பினரெனத் தோன்றுமேல் உமது தோளாற்றலைக்காட்டி எமதாற்றலை யுணர வேண்டும். உலகின்கண் நட்பினரில்லின்கண் வருவதாயின் வாயிலான் வர வேண்டும்; பகைவரில்லின் வருவதாயின் வேறுவகையாக வரவேண்டுமாத லான் மதிலையித்தாண்டிவந்தோம், நாங்களோ வந்தசெயலைமுடித்தல்வேண்டு மல்லது உமது பூசனையால் எங்கட்காம்பயனென்னை? என்று கூற, அதற்குச் சராசந்தன் சொல்லுகின்றான். அறம் பெருகும்அந்தணரே! உமக்கு மென க்குமென்றும் பகையென்பதின்றே? அவ்வாறிருக்க யாதுகூறினீர்? நாமுண ராது எவ்வாறு பகைமைதோன்றும்? நீர் வடிவிலேதான் அந்தணராகத்தோன் றிச் சொல்லால் அரசராகத் தோன்றுகின்றீர், நியாயமின்றி யாரையேனும் பகைகொண்டு செருக்காற்பாராட்டினேனாயின் இம்மை மறுமைகளில் இழிவே யன்றிப் புகழுண்டாவதன்று, காரணமின்றி யெம்மைப் பகைவனென்று கரு திப் பேசுகின்றீர்களென; கண்ணபிரான் சொல்வாராயினர். இக்காலத்தில் உலகமுழுதும் அரசாண்டுவரும் தருமராசன் அறவொழுக்கம் குன்றாமல் அர சாண்டுவருவது யாவருமறிந்ததேயன்றோ? இவராளுகையில் ஒருவரும் அக் கிரமமென்ப தெத்தனையுஞ் செய்தலடாது, அவ்வாறிருக்க நீர் அக்கிரமஞ் செய்வதனையுணர்ந்து அவர் எம்மை யனுப்பினர். நான் ஓரக்கிரமஞ் செய்தே னில்லையெனின் நீர் பல அரசரையும் போர்செய்து கொணர்ந்து அவரை யெல்லாஞ் சிறையிலிட்டிருக்கின்றீர்; அது அறவொழுக்கமாமா? அவரை யெல்லாம் மனநோவச்செய்வதுபோன்ற செய்கையைப் பிறரிடத்துங்கண்டுங் கேட்டு மறியேம், அவர்களை யெல்லாம் இவ்வாறு வருத்துவதனினும் பழி பாவம் பிறவுண்டோ? இதனால் உமக்கு நரகமேயன்றி வேறின்று. இனி உம் மைப் பாவத்தினின்று மெடுத்துப் புனிதராக்கக்கருதியே உம்மொடு போர் செய்து வெல்லவந்திருக்கின்றோம். படைவலியுந் துணைவலியு முடைமைபற் றிப் பல அரசரையும் பொருதுவென்று செருக்கெய்தினீர்! கார்த்தவீரியன் பரசுராமனாற் செருக்கொழிந்தான், இவனைப்போன்ற அரசர் பலரும் செருக் கெய்தினமையாற் கொல்லப்பட்டனர். நீரோ விரைவிற்கொல்லப்பட்டு வீர சொர்க்கமடையுங் காலம் நேர்ந்திருக்கின்றது, நீர் நாங்கள் சொல்வதனைக்

கேட்டா லுய்திபெறுவிர்,அதாவது உன்னால் சிறையிடப்பட்ட அரசரையெல்லாம் சிறையினின்றும் விடுவித்து அவரவர் நாடுபுகச் செய்யவேண்டும்; இல்லையேல் எம்மொடு பொருது வீரசொர்க்கஞ் சேரவேண்டும், நாங்களோ உம்பாலேற்கவந்த அந்தணரல்லேம்! வசுதேவன்மகனாகிய கண்ணனே யான், இவர்களோபாண்டு குமாரராகிய வீமார்ச்சுனர்களென்று சொல்லிமுடித்தனன்.

இதைக்கேட்ட சராசந்தன் கோபமூண்டு கொவ்வைக்கனிபோற் கண்கள் சிவக்க அடா மடைப்பயலே! நீயா தெரிந்தது! வாயில்வந்தவாறெல்லாம் பிதற்றுகின்றனை? என்னை உன் வஞ்சனைக்குள் அகப்பட்ட க்ஷத்திரியப் பூச்சிகளென்றோ கருதினை? எல்லா அரசர்கள் முடிமேல் விளங்குஞ் சராசந்தனென்றே யெண்ணு; என்னைக் கஞ்சன், பிரலம்பன், வாணன், சாணூரன், முஷ்டிகன்,இந்திரதபனன்,கேசி,பூதனை,காலயவனனென்றோ நினைக்கின்றனை; இவர்களில் நீ என்னையும் ஒருவனாக வெண்ணிநின்றாய்போலும்! அச்செருக்கிங்கே செல்லமாட்டாது. நீயா என்னை வெற்றிகொள்ளவல்லன். நீ அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்துச் சிறுவனே யன்றோ! உனக்கும் சண்டைக்குமெவ்வளவு தூரம்? நீ எனக்குப்பயந்து பதினெட்டுமுறை தோற்றோடி, கடைசியில் கடல்நடுவிலே யொருநகரைக் கட்டிக்கொண்டு வசிக்கின்றனையே! இச்சிறுவரோ மிகவற்பர். இவர்களிடத்தே எனக்கு மதிப்பே யின்று. உன்னைக் கொன்றபின்னர் இவ்விருவரையுங்கொன்று கோபந்தணிப்பேன் பொறுத்திருவென்று சொல்ல, நீரோ உம்மையேவியந்து பேசிக்கொள்கின்றீர் 'வியவாமையன்றே வியப்பாவது' என்று பெரியோரும் சொல்லியிருக்கின்றனரோ. உம்மைநானே கொல்லவேண்டுவதில்லை, இவ்வருவரில் ஒருவனே உம்மைக் கொல்லக்குறுகிய கூற்றுவனென் றெண்ணித் துணியுமென்று கண்ணபிரான் எடுத்துச்சொல்ல, சராசந்தன் கண்ணபிரானைநோக்கி என்ஆற்றலை நீயறிவாயல்லையோ! உங்களி லொருவரோனும் இருவரோனும் அன்றி மூவரோனுமொருங்குபோர்புரியினும் சமர்செயற்கொருப்படுவேன், உங்களிஷ்டப்படி செய்யலாமென்றுசொல்லிவிட்டு, தன் அமைச்சராகிய கவுசிகன் சித்திரசேனன் என்பாரையழைத்துத் தன் மகனாகிய சகதேவனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்யக் கட்டளையிட்டுப் போர்செய்யச் சித்தமாயிருந்தான். இவ்வாறு சொல்லிவந்த வைசம்பாயனரை நோக்கிச் ஜெனமேஜெயமகாராசன் கஞ்சனென்பான் யார்? அவனுக்கும் கண்ணபிரானுக்கும் பகைமைவருவானேன்? இதை நன்றாக விளக்கவேண்டுமென்ன வைசம்பாயனர் சொல்வாராயினர்.

கஞ்சன்கதை.

அச்சரித்திரமோ மிகச்சுருக்கமுடையதன்று; ஆயினுஞ் சுருங்கச்சொல்கின்றேன், யதுகுலத்தில் உக்கிரசேனனென்று ஓரரசர்பெருமா னிருந்தான். அவனே விருஷ்ணிபோஜர் அந்தகர் முதலானோருக் கரசனாயிருந்தான். அவனுக்கு நூறுபுதல்வருளர். அவருள் முதற் புதல்வன் கஞ்சனென்பான். அம்முதற்குமரனே மிக்கபோராற்றலை யுடையனாய்ச் சராசந்தன் பயந்தபுதல்வியரிருவரையும் மணம்புணர்ந்தான். இவ்வாறிருக்க அவ்வுக்கிரசேனனுக்கு வசு

தேவன் அமைச்சனுயிருந்தான். அவன் நற்குண நற்செயலை யுடையனுயிருந் தமையான் தேவகி யென்னும் பெயரினையுடைய மகளை மணஞ்செய்து யானை குதிரை தேர் காலாளாகிய நாற்படைகளிற் சிலவற்றை யுதவி அவ்வசு தேவ னில்லுக்கனுப்ப, கஞ்சனே தன் தங்கைபால்வைத்த ஆராக்காதலால் அவ்விருவருவரையும் தேரொன்றிலேற்றித் தானே அக்குதிரைகளின் கடி வாளங்களைக் கைப்பற்றிக்கொண்டு சாரதியாகவிருந்து மிகக் களிப்புடன் இராசவீதியாய் வலம்வருகையில் வானினின்றும் அசரீரி 'நீயாரை மிகக்களிப் புடன் தேரிலேற்றிக்கொண்டு சாரதியாயிருக்கின்றனையோ ? அவள் வயிற்றிற் றோன்றும் எட்டாவதுமகப்பேற்றால் உனக்குக்கேடெய்தும்' என்றது; அதைக் கேட்ட கஞ்சன் நெட்டுயிர்ப்பெய்தி அவசமாய் இவளைக் கொன்றுவிடுவதே நலமென்று துணிந்து தமோகுணம் விஞ்சிக் கையில் வாளேந்தி யோடிவந் தான். அதைக்கண்ட வசுதேவன் பொறு பொறு! நீயோ பேரறிவாளன் ? நீ யறியாததொன்றுமில்லையே! யென்று புன்னகையுடன் அசரீரி கூறியவாறு இவளால் ஏதேனுங் குற்றமுளதோ, இவளகட்டிற் றோன்றும் எட்டாவது மகப்பேற்றாலன்றோ கேடுவருமென்றது. பேதையாகிய உன் தங்கையைக் கொல்வதனாலாற் பயனென்ன? நீ உன் சுற்றத்தாரை யெல்லாங் காத்துப் போஜகுலத்துக்கு ஒருநிறைமதிபோலும் விளங்குகின்றனையன்றோ ? இவளைக் கொல்வது நலமாகத்தோன்றுகின்றதோ! தன்னைக் கொடுத்தேனுந்தருமத்தை நிறுத்தவேண்டுமென்பது அறநூ லொழுக்கன்றோ! இப்போது தன்னைக் கொல்லவந்த பசுவையும் கொல்லலாமென்ற தருமத்தை மேற்கொண்டனை! நான் வேறுசொல்வதென்ன! ஆயினும் யான் சொல்லும் சூழ்ச்சியைச் சற்றே கேட்கவேண்டும். இவளகட்டில் மக்கள் தோன்றியபோதே நானேகொணர்ந்து உன்கையிற் கொடுத்துவருகின்றேன். இவ்வாறு செய்த்துணிவது உன்பெருந் தகைமைக்குத் தகுதியோவென்றனன். கஞ்சனே அங்ஙனமே ஆகுகவென்று அக்கொடிய செயலினின்றுந் தவிர்ந்தான். வசுதேவனே தன் மனைவி கரு வுயிர்த்தபோதே அம்மகனைக் கைக்கொடுவந்து கஞ்சன்பால் நல்கி நிற்க, இத னால்நமக்கொரு கேடுசூழ்வதில்லையென்றுதுணிந்து, நீயேகொடுபோதியென்று அனுப்ப வசுதேவனும் அம்மகனைக் கைக்கொடுசென்றான். இதுகிடக்க ;

நாரதமுனிவர் அங்கெழுந்தருளி இவர்கள் பிறப்பின் வரலாற்றை யறி வித்ததனால் கஞ்சன் தன்னியற்கையை நினைந்து யாதவரிடத் தொருங்கு பகைமைமேற்கொண்டு வசுதேவன்பால் கொடுத்தமகனை மீளவும்வருவித்துக் கொன்றுவிட்டுத் தன்னொழுத்திற் றிறம்பினாைச் சிதறச்செய்து தன்றுதை யாகிய உக்கிரசேனனை நீக்கித் தானே சிங்காதனமேற்கொண்டு கொடுங்கோ லோச்சிநல்லோரையெல்லாம் வருத்தித்தீங்கிழைத்து,தேவகிவசுதேவரையுஞ் சிறையிலிருத்தினன். பின்னர் மக்களறுவரை வயிறுவாய்ப்ப அவற்றைப்பிறந்த ஞான்றே தந்தை கொடுபோய்க் கஞ்சன்பால் வழங்க அவற்றை யுயரவெறிந்து வாளேந்திக் கொன்றான். இது கிடக்க;

பாவமோங்கிப் புண்ணியங் குறைந்தமையால் நிலமடந்தை பாரஞ்சுமக்க மாட்டாளாய் மூவாகாரியமுந் திருத்தும் முதல்வனிடத்தேசென்று விண்ணப்

பிக்க, அதைக்கேட்டு இறைவன் ஆதியஞ்சோதி யுருவை யங்குவைத் திங்குப் பிறப்போமென்று திருவாய்மலர்ந்து தேவர்களையு மனுப்பிவிட்டு, தாம் சென் ளுற்குடை யாயிருந்தாற் சிங்காதனமாய் நின்ற திருவனந்தாழ்வானை நம்பி மூத்தபிரானாகத் திருவவதரிக்கச்செய்து,இவ்வேழாவது கருப்பம்வாய்த்த சில நாளில்தேவகி வயிற்றிலிருந்த கருப்பத்தைத் திருவாயர்பாடியிலிருந்த மூத்த மனைவியாகிய உரோகணிதேவி யிடஞ்சிறுவித் தம்விசுவமாய்கையையழைத்துக் கோகுலத்தில் நந்தகோபன் மனைவியாகிய அசோதைப்பிராட்டி மகளாகத் தோன்றக்கட்டளையிட்டு எல்லா மேன்மையையு முண்டாம்படி பணித்துநிற்க, தற்செயலாய்த் தேவகியின் கருக்குலைந்து போயதென்று வதந்தியுண்டாகவே, அயர்வறு மமரர்கட் கிறைவன் தானே எட்டாவது கருப்பமாக அவதரிக்க, அச்செய்தியைக்கேட்ட கஞ்சன் மிக்க காவல்களையமைத்து எங்கேபார்க்கி னும் அங்கெல்லாந் திருமாலாகத்தோன்றக்கண்டு வெருவி யச்சுற்றிருந்தான். இதுகிடக்க;

திருமாமகள் கொழுநனே ஆவணிமாதம் கிருஷ்ணபக்ஷத் தஷ்டமிதினத் தில் உரோகணிகூடிய சுபதினத்து நள்ளிரவில் அவதரித்துத் தம்மைக்கூர் வேற்கொடுந்தொழில் நந்தகோபன் கிருகத்தில் விட்டுவரச்சொல்லித் தன் மாயையினால் காவற்காரரும்பிறரும் அறியாவண்ணம் மயக்கிநிற்ப,வசுதேவன் தன்குழந்தையை யெடுத்துக்கொண்டு காளிந்தி வழிவிடச்சென்றெய்தி, அங் கியாவருந் திகைத்து நிற்ப வைத்துவிட்டு,அசோதையீன்றபெண்குழந்தையை யெடுத்துக்கொண்டு தேவகியிருந்த சூசிகாக்கிருகமே நாடிவந்தான். இங்கே பகவான் அப்பிராகிருத சிசுப்போலாது மிக்க தேஜோராசியாய் ஏரார்ந்த கோதை யசோதை யிளஞ்சிங்கமென்று சொல்ல விளங்கினான். இங்கே வசு தேவன் கைக்கொடுவந்த பெண்குழந்தை தேவகியிருந்த சூசிகாக்கிருகத்தை யடைந்து கூகூவென்றழுது வீறிட, யாவரும் விழித்துக்கொண்டு கஞ்சனுக் கிச்செய்தி யறிவித்தனர். துவ்வுற்றிருந்த கஞ்சன் தலைவிரிகோலமாய் ஓடி வந்து அப்பெண்குழந்தையை ஆகாயமார்க்கமாய் விட்டெறிந்து வாளையோச் சுகையில் அக்குழந்தையோ ஆகாயமார்க்கமாய் நின்று உன்னைக் கொல்லப் பிறந்தவன் கோகுலத்தில் வளர்கின்றனனென்று சொல்லிவிட் டுருக்கரந் தது. அதைக்கேட்டுக் கஞ்சன் ஐயமும் துயருமெய்தி நின்று, உரோகணி மகனாகிய நம்பி மூத்தபிரானும் அசோதை யிளஞ்சிங்கமாகிய மனத்துக்கினி யானெனப்படுங் கண்ணபிரானும் வளர்ந்துவரும் திருவாயர்பாடியில் பூதனை, சகடாசுரன், திருணாவர்த்தன், தேனுகன், வற்சன், அசுராசுரன், பகன், கேசி, பிரலம்பன் முதலியோரைவிடுத்துக் கொல்ல ஏவினான். எள்ளினெய்போன்று எங்கும் வியாபியாயிருப்பா னொருவனென்றறியாது அவனைக்கொல்ல வகை தேடியதனால் யாவரும் தாங்களே மரணமெய்த வகைதேடிக்கொண்டனர். பின்னர் பகவான் மருதிடைதவழ்ந்து கண்ணிநுண்சிறுத் தாம்பினாற்கட்டுண்டு அம்மரங்களாக விருந்த நளகூபரமணிக்கிரீவருக்குச் சாபந்தவிர்த்து காளிய னென்னும் பாம்பின்மேல் நடித்து அப்பாம்பின் செருக்ககற்றிக் கோபாலரை விழுங்கவந்த காட்டுத்தீயையும் வெண்ணெயையும் மண்ணை நுங்கிய வாறு

போல் விழுங்கி, நான்முகத்தொருவன் பசுநிரையையும் பசுவின்கன்றுகளையும் அவற்றை மேய்க்கும் இளஞ்சிறாரையுங் கரப்பத் தாமவ்வவ்வுருக்கொண்டு நின்று கோவர்த்தன மலையிலாவிர்ப்பவித்து ஆயரிடும் பொங்கலை யுண்ண, அதனைப்பொறாத இந்திரன் எழுமுகிலும் பெய்யவிடுப்ப அக்குன்றைப்பிடித்துக் காத்து, கருமவொழுக்கமே சிறந்ததென்று கருதிச் செருக்குடனிருந்த வைதிகருக்கு ஞானம்வருவித்து, தன் பேரழகாலும் அகடிதகடனா சாமர்த்தியத்தாலும் கோபியரைக் காளிந்திநதியின் புளினத்தடத்தும் சோலையிடத்தும் மருவித் திருவிளையாடல் பலசெய்துகாட்டித் தருக்கிலாளாகித் தானே தீங்குநினைந்திருந்தகஞ்சனுக்கு நெருப்பன்ன கூற்றுவனெனநின்று அவனிரவும் பகலுங் கண்டுயிலானாகச் செய்திருந்தனன். கஞ்சனே விற்பெருவிழவொன் றியற்றத்தொடங்கிஅக்குரூரனை திருவாயர்பாடிக்குவிடுப்ப அவன் நம்பி மூத்தபிரானையும் கண்ணபிரானையும் அழைத்துக்கொண்டு மதுரையை யணுகச் சார்ங்கவிற்சேவகன் அவ்விற்பெருவிழவைவீழ்த்திக் காவலாளரைக்கொன்று குவாலய பீடமென்னும் மதகளிற்றைக் கொம்பை யொடித்து வதைத்து அதன்பாகனையும் உயிர்நீக்கிச் சாணூரன் முட்டிகனென்னும் மல்லரிருவரையும் மலைந்து மாய்த்துக் கஞ்சனை வானுலகிலேற்றி அவன் தம்பியரை யெல்லாம் கொன்று நீக்கி,அவன் துயர்செய்யவருந்திய யாதவர் விருஷ்ணி போஜர் அந்தகர் முதலானோரையும் காத்து, தந்தைதாயரிருவரையும் சிறையினின்றும் விடுவித்து, தன்மாதமகனாகிய உக்கிரசேனனைச் சிங்காதனத்திலேற்றி அறவொழுக்கத்தைநிறுத்தினன். கஞ்சனிறந்த பின்னர் அவன் மனைவியரிருவரும் தம்பிதாவாகிய சராசந்தனை யடைந்து தங்குறை கூறுகையால் பதினெட்டு முறை போர்புரிந்தான். இதுதான் கஞ்சனுக்கும் கண்ணபிரானுக்கும்நேர்ந்த பகைக்குக்காரணமென்று பின்னுஞ் சொல்வாராயினர்.

சராசந்தன்வதை.

முன்சொன்னவாறு சராசந்தன் தன்மகனாகிய சகதேவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்விக்கக் கட்டளையிட்டுப் போர்செய்யத் துணிந்திருக்கையில், கண்ணபிரான் சராசந்தனை நோக்கி எவ்வாறு போர்செய்ய மனமென்று சொல்ல, சராசந்தனே நீங்கள் படைக்கலமொன்றும் பெற்றிராமையால் நான் வேண்டிய படைக்கல முதவுகின்றேன் போர்செய்மினென, கண்ணபிரான் நீ எங்களுக்கொன்று முதவவேண்டாம், இவ்விருவரி லொருவரோடு மற்போர்செய்யவேண்டும் யாருடன் செய்கின்றனை யென்று வினவ, அச்சராசந்தன் அர்ச்சுனனைச் சிறுபிள்ளையென் றசட்டைசெய்து வீமனோடு போர்செய்கின்றே னென்றனன். கண்ணபிரான் வீமனைநோக்கி நீ போர்செய்ய முயலென்றேவ, வீமராசனும் அவ்வாறே யாயத்தமானான். இவ்வாறிருவரும் போர்க்கு முயன்று கைகளாகிய கதாயுதங்களோடு வெளிப்பட்டுச் சமர்க்களம் புக்கனர். அப்போது வீமராசனைச் சராசந்தன், அறத்தைநோக்கி நின்னொடும் போர்க்குவந்தேன் எச்சரிக்கையாய்ப் போர்செய்யென்று சொல்ல, வீமராசனும் நானு மவ்வாறே யென்றுசொல்லிமுடித்தான். இவ்வாறிருவரும் போரத்

தொடங்கி யொருவர்மே லொருவர் பாய்ந்து மதயானைகள் போலும் வலமிட மாகச்சுழன்று மோதுவதும் குத்துவதும் உயரவெறிவதும் கையைப்பற்றி யிழுத்துச் சுற்றுவதும், கைகளாற் குத்துவதும் காலா லுதைப்பதுமாக நெடு நேரம் போர்செய்தனர். இவர்கள் காலாற்புடையுண்ட பூமியினின்றும் எழுந்த தூளியோ ஆகாயமூடிக்கொண்டு இருட்படலமாயிற்று. இவர்கள் செய்யும் ஆரவாரவொலியால் மலைக்குகையிலிருக்கும் சிங்கங்கள் வீறிட்டோடின. ஆகாயமதிர்ந்து உகாந்தகாலமென்று சொல்லக்கிடந்தது. இது முற்காலத்தே விருத்திராசுரனுக்கும் இந்திரனுக்கும் நடந்தபோரினும் சிறந்ததென்றெண்ணி, வானில் தேவர்கள், சித்தர், சாரணர், கந்தருவர், கின்னரர், கிம்புருடர் முதலானோர் வேடிக்கைபார்த்து நின்றனர்.

இவ்விருவரும் யாவரு மதிசயிக்குமாறு கார்த்திகை மாதத்துக் கிருஷ்ண பக்ஷப் பிரதமையன்று தொடங்கிப் பதினைந்துநாள் வரையிலும் சிறிதுபோழ்தும் ஓயாமல் போர்செய்து வருகையில், ஒருநாள் சாராசந்தன் வீமனைத் தருணநோக்கிச் சுற்றித்தள்ளிக் கோடைகாலத் திடியேபோல அவன் மார்பிலோர் குத்தைக் குத்தினன். அக்குத்தை யேற்ற வீமனும் கணப்போது சோர்ந்துவிழுந்து மீளவுஞ் சிறிதுஞ் சலியாமல் குகைக்குளிருந்த சிங்கம் குஞ்சரத்தைத்தேடிச் சினத்தோ டெழுதல்போலச் சராசந்தன்மேல் வீழ்ந்து இலாகவத்தால் அவனைக் கீழேதள்ளி மார்பி லொருகுத்தைக்குத்தினன். அதனால் வயிரப்படையால் அடியுண்ட மலையேபோலச் சிதையுண்டு கணப்போ தயர்ந்து பெருமூச்செறிந்து இடிபோ லாரவாரித்து இக்கணமே உன்னைக் கொல்கின்றேனென் றுருத்தெழுந்து வீமனைக் காலைப்பற்றிச் சுழற்றியெறிந்தான். வீமனும் ஆகாயத்திற் சுழன்று லாகவமாய் அவன் தலைக்குநேராக வீழ்ந்து மயிரைப்பிடித்திழுத்துத் தள்ளிக்கொண்டே தானும்நிலத்திற்பாய்ந்து அவனைக் கற கறவென்று சுழற்றி யெறியவே, அருகேயிருந்த மலையடிவாரங்களில்வீழ்ந்து மொத்துண்டு காயமெய்தி யுடம்புமுழுதும் குருதிநீர்பெருக ஓடிவந்து புலிபோற் பாய்ந்து வீமனுடைய மிடற்றைப் பிடித்துத் தள்ளினன். அதனால் நாலைந்து குட்டிக்கரணம் போட்டுக்கொண்டு வீழ்ந்து கைகால்களிலறைபட்டும் அசட்டைசெய்யானாய் நீ வெகுசமர்த்தன்! வெகுநேர்த்தியாகப் போர்செய்கின்றனை! இன்றே யுன்னை வீரசொர்க்கஞ் சேர்க்கின்றேன், எச்சரிக்கையாக விருவென்று வீமராசன் வீரவாதம் பேசினன். இவ்வாறிருவரும் நாடோறும் ஒருவருக்கொருவர் தம் பெருமிதத்தையுஞ் சிறப்பையும் பேசிக்கொண்டு தத்தம் பேராற்றலைக்காட்டித் தருணநோக்கிக் கொல்ல நாடியிருந்தனர்.

இவ்வாறு பதினைந்துநாள் வரையிலும் இராப்பகலென்பனவின்றிப் போர் செய்து தோல்வியும் வெற்றியுஞ் சிறிதும் தோன்றுமலிருப்பதை உணர்ந்து வீமராசன் அபார்ந்து கண்ணபிரானைநோக்க,அச்சைகையையறிந்த கண்ணபிரான் இதுதான் நல்ல சமையம்! அவனோ ஆற்றலொடுங்கி நிற்கின்றான். நீயோ சிறிது மஞ்சாமல் ஊக்கமிருந்து போர்செய்யவேண்டும், இவனுக் குன்னையல்லது காலமிருத்தியுவும் வேறுகிடையாது, இவனுக்கு மெங்களுக்கும் பலமுறை

போர்நடந்த போது நானும் நம்பிமூத்தபிரானும் கோமந்தவரையிலேறவே, இவன் நாங்களேறிய அம்மலையைக் கொளுத்தினன். அப்போது நாங்களிருவரும் இவன் சேனையினடுவே குதித்து நாசமெய்தச்செய்யவே, அவன் ஆறுச்சினங்கொண்டெங்கள்மேற்பாய்ந்தான். என் அண்ணனாகிய நம்பிமூத்தபிரான் மிகச்சினந்து கலப்பையை இவன் கழுத்தின் மாட்டி யுலக்கையாலடிக்கத் துணிகையில் வானினின்றும் 'அசரீரி நீர் இவனைக்கொல்லாதீர், இவனுக்கு வீமனாலே மரணமுண்டாம்' என்றது. அதனால் அவர் கொல்லாமலே விடுத்தனர். ஆகையால் இவன் உன்னாலேயன்றிப் பிறரால் சாக்காடெய்தான். நீ சிறிது மஞ்சாமலே போர்செய்யவேண்டும், இப்போது உன்தந்தையாகிய வாயுபகவானை நினைத்துக்கொள், உனக்கிளைப்பென்பது நீங்கி வலிபெருகி ஊக்கமிகும்; ஊக்கத்தைக்கைவிட்டால் மேற்கொண்டகாரியஞ் சித்தியெய்திலது; இதனாலன்றோ 'ஊக்கமது கைவிடேல்' என்று பெரியோருங்கூறினரெனக்குறிப்பாகவுணர்த்தவே, வீமனும் ஊக்கமிகுந்து வாயுபகவானை மனத்தில் தியானித்துக் கண்ணபிரானையும் மனத்தில் துதித்து தோளிரண்டையுந் தட்டி யார்த்துப்பாய்ந்து வருகையில், சராசந்தனுக்குக் காலங்குறுகினமையால் அவன் சாலப்பயமடைந்து ஆற்றலொழிந்து நின்றான். அவனை வீமன் லாகவத்தால் இரண்டு கால்களையும்பற்றிப்பிடித்துச் சுற்றிச்சுற்றித் தன்முழங்காலில்வைத்து முறித்துக் காலாலுதைத்துத் துவைத்துக்கிழித்தான்.

இவ்வாறு இரண்டு மூன்றுமுறை வீமராசனாற் கிழித்தெறிந்த வுடல் ஒன்றாகச்சேர்ந்துவந்து பெரும்போர் புரியக்கண்டு,இதென்ன வதிசயமெனக்கருதி இளைத்தயர்ந்து கண்ணனை நோக்க,அர்ச்சுனனும் கண்ணனைநோக்கி ஏது? என்னண்ணனுக்குத் துன்பம் நேர்வதாகத் தோன்றுகின்றதென்று முறையிட்டனன். அதைக்கண்ட கண்ணபிரானும் அர்ச்சுனனுடன் பேசிக்கொண்டே, ஒரு துரும்பையெடுத்து இரண்டாகக்கிழித்துத் தலைமாற்றிப்போட, அக்குறிப்பையுணர்ந்து தான் கோபாவேசங்கொண்டு சராசந்தனைப் பம்பரம்போலாட்டிக் கிழித்துத் தலைமாற்றி யெறிந்தான். சராசந்தனே வாயினாலும் மூக்கினாலுங் குருதி கக்கிக்கொண்டு கோவெனக்கதறி யிறந்தான். இவன் பிராணன் விடுகையிற் கதறிய வோசையாலும்,வீமன் செய்த ஆரவாரமுழக்கத்தாலும், உகாந்தகாலத்து மேகமுழக்கமென்ன உலகமுழுதும் நடுங்கிச் செவிடுபட்டது. பின்னர்ப் பிணமாய்க்கிடந்த சராசந்த னுடம்பை யிழுத்துக்கொண்டு அரண்மனையிற்போட்டுக் களிறுபோலநடந்து அரண்மனையி னுட்புகுந்து சராசந்தன் தேரைக் கொணரக்கட்டளையிட்டு அதில் மூவரு மேறிக்கொண்டு அரசர்களைச் சிறையிட்டிருக்கும் சிறைச்சாலையி னுட்புகுந்து அவர்களைக் கண்ணபிரான் கட்டளையால் விடுவித்து வேண்டிய நயமொழிகளைக்கூறினன். அவர்கள் யாங்கள் பெற்றபேறு யார்பெற்றனரென்று சொல்லி அவர்களைப்பூசனை செய்து அவர்களுடன்சூழ்ந்துசென்றனர். இவ்வாறுசூழ்ந்துவர இராசவீதியாய் நடந்துசெல்ல, அந்நகரமாந்தரனைவரும் கைபிற்காணிக்கை எடுத்துக்கொண்டு அம்மூவரையும் தேரிற்கண்டு அந்தோ! இவர்வடிவழகையும் கல்விநலத்தினையுமதிசயித்து அம்மூவரையும் பலவாறு புகழ்வாராயினர்;

சராசந்தனால் சிறையிடப்பட்ட அரசரோ சராசந்தனை வெல்ல இந்திரன் முதலியஇறைவரெண்மரா லுமுடியாதெனின்சாதாரணமாக இந்நிலவுலகத்தை யாண்டுவரும் அரசரால் கொல்லமுடியுமா? உலகமுண்ட பெருவாயனும உலப்பில் சீர்த்திமாமாயனும் அயர்வருமமர்க ளதிபதியுமாகிய பகவானது திருவவதாரமாகிய கண்ணபிரானொடும் தேவாமிசமுடைய நீங்களே வந்து போர்செய்தமையாற் கொல்லப்பட்டான். இக்கண்ணன் ஆன்மாவும்நீங்கள் இருவரும் கண்ணேபோல விளங்குகின்றீர்கள். நீங்கள் செய்த வுதவிக்குக் கைம்மாறு காணேம்! உலகின்கண் பருவகால முகில் மழைபெய்வதற்குப் பாரின்கணுள்ளார் செய்யும் கைம்மாறு யாது! நாங்களேதேனும் எங்களாற் கூடியவளாயிலும் உதவிசெய்கின்றேமென்று சொல்ல, கண்ணபிரானும் நீங்களொன்றுஞ் செய்யவேண்டாம். உங்கள்சொல்லே யெங்களுக்குப் பேருதவி செய்ததாக விளங்கும். ஆயினும் உங்கள் மனநிறைவிற் கொன்றுசொல்கின்றேன். அறிவிலும் குணத்திலும் கல்வியிலும் பொறையிலும் ஈகையிலும் சிறந்த தருமராசன் இராசசூயஞ்செய்யக் கருதியிருக்கின்றனர். அவ்வரசர் பெருமான் கருத்தை நான்கு திசைப்பாலகரேபோல விளங்கும் தம்பியரோ முற்றுவிப்பர். அவர்களுடன் நீங்களும் நீங்காது துணையாக யிருக்கவேண்டிய தென்று கூறினர்.

அத்தருணத்தில் சராசந்தன்மகனாகிய சகதேவன் வேண்டியபொன்னாபரணங்களையு நவரத்தினாபரணங்களைஉலுப்பைப்பொருளாகவெடுத்துக்கொண்டு மந்திரிகள் புரோகிதர், பிரதானிகள் தண்டத்தலைவர் புடைசூழக் கண்ணனும் வீமார்ச்சுன ரிருக்குமிடத் தணைந்து கண்ணபிரானை நோக்கி நீரோ ஆதியஞ் சோதி யுருவை யங்குவைத்து இங்குப்பிறந்த கடவுளென்றே அருந்தவத்து மாமுனிவரெல்லாங் கூறியிருக்கின்றனர். 'முன்னவனே முன்னின்றான் முடியாத பொருளுளதோ' என்றபடி உம்மாலாகாத கருமமொன்றுமின்றே. தேவரீர் செய்யத்தொடங்கிய கருமத்துக்குத் துணையாகத் தோன்றுகின்றமையாலன்றோ பாண்டவவீரர் எமது பிதாவைக் கொன்றனர். பாண்டவரோ தருமமே வடிவாகவுடையார். அவர்கள் அறவொழுக்கத்தை நிலைநிறுத்த எம் பொருட்டவதரித் திருப்பவராகின்றனர். தருமராசனோ சாலத்தருமவான், அவருக்கு எல்லாமேன்மையு முண்டாகவேண்டுவ தவசியந்தான். இவ்வீமார்ச்சுனரோ மிக்க பேராற்றலையுடையார்; தருமமே வடிவானோர். என் பிதாவைக் கொன்றனரென்றே குரோதஞ் சிறிதேனு மில்லேன். நானோசிறியேன், உம்மையே யடைக்கலம் புகுந்தேன், என்னைப் பாதுகாப்பது உமது கடனென்றனன். அதைக் கேட்ட கண்ணபிரான் நீ இனிச்சிறிதுங் கவலைப்படவேண்டாம், நீ நற்குண நற்செயலையுடையை யாதலின் உன்னொடு நட்புக் கொண்டோம், நீ உன்தந்தைக் குரிமைக்கடன் செய்யப்போவென்று கட்டளையிட்டனர். சகதேவனும் சராசந்தனாகிய தன்பிதாவின் உடம்பை மங்கலநீராட்டி மணியணி முதலியவற்றைப் புனைந்து பொற்சிவிகையிலேற்றிப் பிணப்பறையறையச் சங்கந்தழங்க ஈமத்திற்கொணர்ந்துஉரிமைக்கடன்செய்து முடித்து எல்லாக் கருமமுமுடிந்த பின்னர் அத்தாணிமண்டப மடைந்து தன்

பரிவாரஞ்சூழக் கண்ணபிரானையும் வீமார்ச்சுனரையும் கண்டு எனக்கியைந்த வளவு திரவியங்கொணர்ந்தேன். இதைத் தருமராசன் செய்யும் இராசசூயத் துக்குபயோகஞ் செய்துகொள்ளலாமென்று வணங்க, அவனைப் பரிவுட னெக்கித் தன் கிரிவிரச நகரமெய்தக் கட்டளையிட்டுச் சிறையினின்றும் விடு விக்கப்பட்ட அரசரை நோக்கி, நாங்கள் இந்திரப்பிரத்த மெய்துகின்றேம், நீங்கள் உமது நகரஞ்சென்று இராசசூயாடக்கையில் வம்மினென்றுரைக்க, அவ்வரசரெல்லாம் நாங்கள் இந்திரப்பிரத்தமடைந்து தருமராசனைக்கண்டு வணங்கிப் பின்னே யெங்கள் நாட்டுக்குச் செல்லுகின்றேமென்றனர்; ஆயின் வம்மினெனக் கண்ணபிரான் வீமார்ச்சுனருடன் இந்திரப்பிரத்தமெய்தித் தருமராசனைக்கண்டு வணங்கி உமதனுக்கிரக பலத்தால் வீமராசன் சராசந்த னைக் கொன்று அவனுற் சிறையிடப்பட்ட அரசரையெல்லாம் விடுவித்து,பெரு நிதி கொணர்ந்திருக்கின்றனன். நாங்களிருவரும் அவனுக்குத் துணையாகச் சென்று ஒரு தீங்குமெய்தாவண்ணங் காத்துவந்தோமென்றனர். தருமராசன் கண்ணு! மணிவண்ணு! உன் பெருங்கருணை யெய்தப்பெற்ற ஒரு சிறுதுரும் பும் பெறலருஞ் சிறப்பெய்துமெனின் இவ்வீமன் அச்சராசந்தனை வெற்றி கொண்டது மோரதிசயமெனப்படுமோ! என் பெருமையும் சிறப்பும் செல்வ மும் யாவுமுன்னருட் பரிசிலன்றி வேறன்றே! உன் பெருமையை மறை களுங்கூற வறியாதெனின் யானேகூறவல்லேன் என்றனர். இவ்வாறு சொல் லிக்கொண்டிருக்கையில் சராசந்தனுற் சிறையிடப்பட்டிருந்த அரசரெல்லாம் திரண்டுவந்து தருமராசனை வந்து கண்டனர். அவர்களுக்கு வேண்டிய மரி யாதைகளைச் செய்து தத்தம் நாடுகளையடையக் கட்டளையிட்டனுப்பினர். பின்பு கண்ணபிரான் சராசந்தன் மகனுகிய சகதேவன் கொடுத்த பரிசைக் காட்ட அவற்றைக்கண்டு சாலமகிழ்சிறந்து சர்ராசந்தனுடைய தேரைக் கண் ணபிரானுக்கே கொடுத்தருளினர். கண்ணபிரானே அத்தேரை வாங்கிக் கொண்டு குந்திதேவியை வணங்கித் துரோபதை சுபத்திரை முதலானேரிடத் தில் விடைபெற்று யாவருமகிழ்சிறப்ப அத்தேரிலேறித் துவாரகைநோக்கிச் சென்றனர். பாண்டவரைவரும் சிறிதுதூரஞ் சென்று வழிவிட்டுத்திரும்பினர்.

தருமராசன் ஆலோசனை.

கண்ணபிரான் துவாரகைக்கு எழுந்தருளிய பின்னர் ஒருநாள் இந்திரப் பிரத்தத்தில் தருமராசன் தம்பியர் நால்வரும் வியாசர் முதலிய முனிவரும் கூடியிருக்கையில் நாரதர் சொல்லிப்போன இராசசூயத்தைக்குறித்து அப் பெருவேள்வி என்னுல் எவ்வாறு முடிக்கக்கூடுமென்று தன்மனத்தே மிகக் கிலேசங்கொண்டு சிந்திக்கையில் அர்ச்சுனன் தருமராசனை மும்முறை வலம் வந்துபணிந்து நீரேன் வருந்துகின்றீர்! சராசந்தன் மாண்டமையான் பகைவர் ஒருங்கே யழிந்தனரென் றெண்ணும். இனி மற்றையரசரைச் வெல்வதோ வொருபொருளன்று; நானே அக்கினிபகவானுல் ஒருவராலும் வெல்லக் கூடாத தேரும் அவ்வகைப்பட்ட காண்டீபமென்னும் வில்லும் அக்ஷயதூணிர மும் கைக்கொண்டிருக்கின்றேன்; ஆகையால் இனி அரசர்களை யெல்லாம்

பொருதுவென்று திறைப்பொருள் கொணர்ந்து பண்டாரத்தை நிரப்புகின்றேன். ஏன் கவலையெய்தி வருந்துகின்றீர்! நீரோ அப்பெருவேள்வியை முற்றுப்பெறச்செய்து சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் பெற்றுச் சம்ராட்டென்னும் பெயர்பூணலாம்; நானும் வீமராசனும் நகுல சகதேவருமிருக்க உமக்குக் குறை என்னவென்று சொல்கையில், தருமராசன் மிகக்களிப்புடன் தம்பியாகிய அர்ச்சுனன் திக்குவிஜயஞ் செய்யக்கேட்டதற் குண்மகிழ்ந்திருந்தனர். இவ்வாறு அர்ச்சுனன் சொன்னதைக்கேட்டு வியாசபகவான் அர்ச்சுனனை நோக்கி உன் குலத்தின்பெருமைக்கும் நீ கற்றிருக்கும் வில்வித்தைக்கும் தருமராசன் தகுதிக்கும் மற்றை வீமன் முதலினோர் திறத்துக்கும் தக்கதே கூறினை! உன்னால் எல்லாவரசரையும் வெற்றிகோடற்கோ ரையமேயில்லை, உன்தயவலியாலும் ஸ்ரீகிருஷ்ணன் சகாயத்தாலும் தன் தருமநினைவாலும் தருமராசன் மிக்க செல்வக்குவாலுடன் விளங்குவான். நீ இப்போது வடதிசைசென்று பல அரசரையும் வெற்றிகொண்டுவா, வடதிசையிலே பலதேசங்களிருக்கின்றன; பேராற்றலும் பெருஞ்செல்வமுமுடைய வரசர் பலருளர், நீயே அத்திசைக்குச் செல்லவேண்டும். கீழ்த்திசைக்கு வீமனும் மேற்றிசைக்கு நகுலனும் தென்றிசைக்குச் சகதேவனும் செல்லவேண்டும். இவ்வாறு நீங்கள் சென்று வெற்றிகொண் டெய்திய பின்னர், அப்பெருவேள்வி முற்றுப்பெறச் செய்யலாமென்று சொல்ல, அவ்வாறே செய்கின்றேமென்று அவரையும் தவுமியர் முதலிய அந்தணர் முதலியோரையும் வணங்கி, திக்குவிஜயஞ்செய்யத் துணிந்தனர். இது நிற்க; அப்போது தருமராசன் வேதவேதியரை வருவித்து அவர்களுக்குப் பல தானங்கள் வழங்கி அவர்கள் ஆசிர்வாதம்பெற்று நல்ல சுபமுகூர்த்தத்தில் அந்நான்கு தம்பியரையும் பயணப்படுத்தி யனுப்பினர். அப்பாற் பாண்டவர் நால்வரும் நாற்படையுடன் தத்தமக்குக் குறித்த திசைக்குச் செல்வாராயினர்.

அர்ச்சுனன் திக்குவிஜயம்.

அர்ச்சுனனே வடதிசை நோக்கிச் செல்கையில் பல அரசர் திரண்டு போரிட்டு விரிட்டோடினர், சிலர் போரிற் றோற்றுப் பல பொருட்குவியலைக் கொணர்ந்து திறைகொடுத்துச் சென்றனர். இவ்வாறு மணிப்படலத்தைச் சூரியன் சிதறச்செய்வதுபோல அவ்வரசர் படைகளை யெல்லாஞ் சின்னபின்னப் படுத்தி மிக்க பொருட்குவியலைக் கைக்கொண்டு அவர்களையு மழைத்துக் கொண்டு சென்று குளிந்ததேசஞ் சென்று அவ்வரசனை யொருகணத்திற் புறங் கொண் டோடச்செய்யவே அவன் தன்னை வணங்க அவனொடு நட்பெய்திக் காசிதேசஞ்சென்று அந்நகரத்துக் கரசனாகிய அநாபனென்னுங் கொடியோனை யெதிர்ந்து அவனைக் குற்றேவல் செய்பவனாக்கிக்கொண்டு அவனுக்குட்பட்ட பல அரசரையும் வென்று அவருள் பிரதிவிந்தியனென்னு மரசனைக்கீழ்ப்படுத்தி அதன் பின்னர் சகரர் வேள்விக் குதிரைநாடித்தொட்ட கடலின் வடக்கே யுள்ள எழுதீவிலுள்ளாரையும் வெற்றிகொண்டு அவர்களிடத்தே மிக்கபொருளைக்கவர்ந்து காம்போசதேசமெய்தி அத்தேசத்தரசனையும், இருஷிகதேசத்தரசனையும் பொருதுவென்று,கடனடுவே யிருக்கும் பிராச்சோதிஷ நகரத்திற்

குச்சென்று அங்கரத்துக் கரசனும் நரகாசூரன்மகனுமாகிய பகதத்தனென்பானுடன் போர்செய்யத்தொடங்கினன். அவனே சுப்பிரதீபமென்னும் வெள்ளையானை யிவர்ந்து நால்வகைச்சேனைசூழப் போர்க்களத்திற் குறுகி எட்டுநாள்வரையும் ஓயாமற் போர்புரியவே ; இருவர் சேனையிலும் யானைப்பிணம், குதிரைப்பிணம், காலாட்பிணமாகக் குவிய இரத்தவெள்ளமோடத்தலைப்பட்டது. குதிரைகளோ அக்குருதிக்கடலில் உடைகப்பல்போல் தோன்றின. மானிடயாக்கை தேர்கள்போல் விளங்கின ; அவ்வுதிர வாற்றில் கழுகுகள் நடனஞ்செய்தன ; கொடிய நாற்றம் வீசத்தலைப்பட்டது ; அப்போர்க்களமோ மிக்க அச்சம் விளைத்தது. இப்பகதத்தனுக்குப் படைத்துணையாகக் கிராத தேசத்தாரும், சீனரும் இன்னும் பல தீவிலிருப்போரும் வந்துதவினர். அவர்களையெல்லாம் அர்ச்சுனன் கோடைமழைபோலப் பாணங்களைச்சொரிந்து கால்வேறு கைவேறு தலைவேறு உடல்வேறாகக் கணடந் துண்டமாய்த் துண்டிக்க, காற்றிலகப்பட்ட மேகம்போல வாற்றாராய்த் தலைவிரி கோலமா யோடச்செய்தான்.

இவ்வாறோடக்கண்ட பகதத்தன் தன் படையெல்லாம் ஓடாமனிறுத்தி கோபமாய்த் தன் தேரை விரைவிற்செலுத்தி வில்லைவளைத்து நாணேறிட்டு நாணோசையால் அண்டமுகடு வெடித்ததென்று சொல்லச்செய்து அர்ச்சுனனுடைய தேரை யழிக்கத்துணிந்தான். அச்செயலான் அர்ச்சுனன் சினங்கொண்டு ஒருவாளியாற் பகதத்தன் வில்லை முறித்து ஒருவாளியால் துவசத்தைக் கிழித்து ஈரம்பினல் சுப்பிரதீபமென்னும் வெள்ளையானையின் துதிக்கையி லடிக்க, அவ்வானையோ பதைபதைத் தோடக்கண்டு அர்ச்சுனன் தன்தேவதத்தமென்னும் சங்கத்தை வாயில்வைத்தூதினன். அதைக்கண்டு பகதத்தன்மனம் நாணி இவனைப்பொரநினைவதே யாகாதெனத்துணிந்து இதுகாறும் என்னுடன் போர்செய்தாரை யுலகிற் காணேன் ; நீ யொருவனே யென்னுடன் அஞ்சாமற் போர்செய்தனை ! உன் விற்றிறலும் பேராற்றலும் புகழத்தக்கனவே யன்றி வேறல்ல ; பாண்டுராசனே மிகப் பாக்கியவானென்று கருதவேண்டும். உன் குல மின்றுதான் சிறப்பெய்தியது. எட்டுநாள்வரையும் இவ்வளவு போர்செய்தும் சிறிது மிளைப்பின்றி யிருக்கின்றனை ! உன்னுட னினிப்பொர வெனக்கு மனமில்லை. இதற்கின்றி யமையாத காரணமென்னவெனின் நானே உலக பாலகருள் இந்திரனுக்கு நண்பன், ஆகையால் உன்னுடன் பொரக்கருதுவதே தகுதியன்று, இதுகாறும் யான் போர்செய்யத் தொடங்கிய தென்னவெனின் உன் போர்த்திறலை யறிவதன்பொருட்டேன்றே துணியென்றான். அதைக் கேட்ட அர்ச்சுனன் காண்டீபத்தை வைத்துவிட்டு இருகையுங்கூப்பி வணங்கி என் தாதைக்குத் தோழராயிருக்கின்ற நீர் மகிழ்வெய்தியது சாலமகிழ்ச்சிக்கிடமேயாம். யானே என் தமையனாகிய தருமராசன் இராசசூயஞ் செய்ய உத்தேசித்திருப்பதனால் இவ்வடதிசையிலுள்ள அரசர்பாற் றிறைப்பொருள் கொள்ளவந்தேன். நீரோ என் பிதாவாகிய இந்திரனுக்குத் துணைவராதலால் இக்காரியத்தை நிறைவேற்றவேண்டுமென்று ஏற்கின்றேனென்றான். பகதத்தனே அர்ச்சுனனை நோக்கி உமக்கேயன்றி நமக்கும் நிறைவேற்றுவிக்கவேண்டுமென்றே மனமகிழ்ச்சி. வேறு யோசிக்கவேண்டாமென்று தன் மாளிகைக்கு

அழைத்துக்கொண்டு ஒரு மாதவரையில் விருந்துபசரித்து அங்கிருந்துகொண்டே அதற்கீசானத்திருந்த பல தீவின் அரசரையும்வென்று திறைப்பொருள்கவர்ந்து பகதத்த னிடத்திலேயே வைத்துவிட்டு அங்ககரநீங்கிக் காமபுரமென்னும் பட்டணமெய்தி அவ்வரசனையும்வெற்றிகொண்டு இமயமலையையும் அதன்சார்பாகிய புவனகிரியையுங்கடந்து ஆண்டிருந்த அநாவிலனென்னும் அரசனெடு பொருது வென்று அவன்கொடுத்த திறைப்பொருள் கைக்கொண்டு அவன் பாலே யிருத்தி, அங்கிருந்தும் வடதிசையை நோக்கியே செல்கையில் அசந்தர நாடடைந்து அவ்வரசன் வலிதிற் கொணர்ந்த நிதிகளையும் நவரத்தின ராசிகளையுங் கைக்கொண்டு பகிரி உபகிரி யென்னும் மலைகளையடைந்து அங்கு வசிக்கும் வேடர்களை யொருங்குவென்று அவர்களையுந் தன்னெடுவரச்செய்து குலூதநாடடைந்து அவ்வரசன் தன்னெடுபோர்செய்ய தேவாசுரயுத்த மென்னும்படி அவ்வரசனெடு பெரும்போர்புரிந்து அவன் சேனையைவீறிட்டோடச் செய்து அவன் கொடுத்த யானைகளைக் கைக்கொண்டு அங்கே யிருத்திச் சேருபிந்துவென்னும் அரசனுடைய நாட்டை யடைந்து அவன் வணங்கி யடையாமையால் அவன் நகரத்தைக் கொள்ளையாடி அதற்குத்தக்க அரசனை வேறு நியமித்து வாமதேவமென்னுந் தேசமடைந்து சுநாமா வென்னும் வெற்பினை யகன்று உத்தரகுலூத தேசஞ்சேர்ந்து அதற் கருகிலிருந்த அப்பிரசித்தமான ஐந்து தேசங்களுக்குந் தூதனை யனுப்பித் திறைப்பொருள் தருவித்துச் சேனபிந்துவென்னும் அரசன் நகரத்தில் தன் சேனைகளை யிளைப்பாறவிடுத்துத் தானு மிளைப்பாறி அவ்வரசனு லுபசரிக்கப்பட்டு அங்கு நின்று மகன்று விச்சுவகச்சுவ னென்னும் அரசன் நாட்டை யணுகி அவனெடும் சமர பூமியிற் பொருதுவென்று வாகைசூடி அவன் நகரத்தைக் கொள்ளையடித்து, பருவத தேசத் தரசனுகிய ஒருவனை யதற் கரசனுக்கி உச்சவ சங்கேதமென்ற எழுவகைக்கூட்டத் தரசரையும் வெற்றிகொண்டு காசுமீர நாடடைந்து அதனை யரசாண்டுவந்த பத்துக் கூட்டத்தாராகிய அரசரையும் வென்று உலகமெல்லாம் புகழும் அந்நாட்டுப் பல பொருள்களையுங் கைக்கொண்டு திரிகர்த்ததேசம் கொங்கணதேசம் இவற்றைவென்று உயர்ந்த முத்துகளைப்பெற்று அபிசாரஞ் சென்று பல் பொருள்பெற்றுக் கருசதேசமடைந்து அந்நாட்டிற் கரசனுகிய உரோசமானைப் புறங்கண்டு சிங்கபுரமெய்தி அவ்வரசனைக்கொன்று அவ்வரசன் மகனுக்கு மகுடாபிஷேகஞ்செய்து அவன்கொடுத்த பெருநிதிகளைக் கைக்கொண்டு வங்கதேசமடைந்து அவன் கொடுத்த திறைப்பொருளை வாங்கிக்கொண்டு பாகிலீகதேசஞ்சென்று அவ்வரசன் போருக்கழைக்க அவனெடும் போர்புரிந்து அவனை வெற்றிகொண்டு அவன் விருந்துபசரிக்க வுண்டு அவன் கொடுத்த திறைப்பொருளைக் கைக்கொண்டு காம்போசதேசமுதலிய தேசங்களைவென்றுமிகுபொருள் கவர்ந்து துருக்கர் நாட்டினையடைந்து அவர் கொடுத்தகப்பங்களையேற்று அவர்களைச் செவ்வையாய் அரசாண்டுவரக் கட்டளையிட்டு அதற்கருகே யிருந்த கிராததேசஞ்சென்று அவ்வரசர் போர்தொடுக்க அவரொடு போர்செய்து சேனைகளையெல்லாங் கொன்று அவர்கள் பண்டாரங்களை எல்லாங்கவர்ந்து சூறையாடி அங்கிருந்தசமுத்திரக் கரையிலிருக்குமோர்

மிலேச்சநாடடைந்து அதற்கரசனாகிய ரிஷீகனென்பான் பெரும்படையுடன் போர அவனை வெற்றிகொண்டு அவனோடு நட்பெய்தி அவனளித்த கிளியின் வயிற்றைப்போன்ற பசுநிறப்புரவிகளைக் கைக்கொண்டு இமயமலையையடைந்து தான் தேடிய பொருளையெல்லாம் அங்கே யிருத்திக் காவல்வைத்து விட்டுச் சில சேனைகளைக் கூட்டிக்கொண்டுசென்று சுவேதவெற்படைந்து அங்குள்ள பல அரசரையு மரிதில் வெற்றிகொண்டு கிம்புருடவரையணுகி அதனையாண்ட இட்சுவாகு மரபி னரசனோடும் கொடும்போர் புரிந்து அவனளித்த பெரும் பொருள் கைக்கொண்டு ஆடகதேச மடைந்து அவ்விடத்திருந்த குய்யகரென் கின்ற தேவசாதியாருடன் நெடுங்காலம் போர்புரிந்து நயமொழியால் அவரை வென்று அவர்கள்கொடுத்த திறைப்பொருள் கைக்கொண்டு மானசமென் னுந் தெய்வ மடுவின் கரையையணுகி அங்குள்ளாரை வென்று கப்பம்வாங்கிக் கொண்டு கந்தருவ நாடடைந்து பெரும்போர் புரிந்து அவரளித்த பெரும் பொருளையுந் தித்திரியென்னும் பறவை நிறம்பெற்றுத் தவளையின்கண் போன்ற பல குதிரைகளைப்பெற்று ஏமகூடமென்னும் வெற்பினையடைந்து அங்கே தன் சேனையை யிறுத்தி இளைப்பாறி அரிவருஷமடைந்து அதில் அதி சயம் பயக்கும் மடுக்கள் ஏரிகள் குளங்கள் முதலியவற்றைப் பார்த்துக் கொண்டே, அங்குள்ளாரை நயமொழியால் வென்று பெரும்பொருள் கைக் கொண்டு இளாவிருத கண்டமடைந்து அங்கே மிருதசஞ்சீவினி சல்லிய கரிணி முதலிய ஒடதிகளால் விளங்கித் தேவர் கந்தருவர் கருடர் முதலிய தேவசாதி யாருக் கிருக்கையாய் சூரியனும் சந்திரனும் வலம்வரச் சமைந்து எப்பொருட்கு மிறைவன் கையில் வில்லாக வளைக்கப்பட்ட மாமேருமலையையடைந்து அதன் சிகரத்திலுள்ள நாவன்மரக்கனிகளாற்பெருகிவரும் சாம்பூநத நதியைக் கண்டு அதன் பாங்கரெல்லாம் பொன்மயமா யிருப்பதையும் பார்த்து மனமகிழ்ந்து மந்தரகிரியை யடைந்து அதிற் பெருகிவரும் சைலோதை யென்னும் நதியின் கரையிலுள்ள மூங்கிற்காட்டையணுகி அங்குள்ள பல சாதியாரையும் வென்று பெரும்பொருள் கவர்ந்து மாலியவரை நீலவரை சுவேதவரை முதலியவற் றைக்கண்டு அங்குள்ளாரையும் வெற்றிகொண்டு சிருங்கி யென்னும் வரையைத் தாண்டி குருவருஷம் புகுந்து அங்குவதியும்,கந்தருவர் கின்னரர் முதலானோர் அளித்த பொன்மயமான மான்றோல் முதலிய பொருள்களைப்பெற்றுக்கொண் டப்பாலுஞ்செல்ல மனமுடையானா யிருக்கையில், சுவர்க்க லோகத்துக்குக் காவலாளராகிய தூதர்கள் கண்டு இனி யப்பாற் செல்லவொண்ணாது. எது வரையும் மானிட ரிருக்கின்றனரோ அதுவரையுமே வருவது கட்டசாத்தியம், இதுவோ தேவர்கள்வசிக்கும் போகபூமி; மானிடர்வசிக்கும் பூமியைச் சார்ந்து கந்தருவர் கின்னரரிருக்கும் பூமியையுங் கடந்துவந்தனை! அதுவோ நீ முன் செய்த தவமாகும்; இப்போது இதைக்கடந்து செல்வையேல் பாழ்தோன் றுமேயல்லது வேறு தோன்றிலது, போகவேண்டாமென்று தடுத்து உன்பால் எமக்கு மிகுதியு மன்புதோன்றுகின்றது, நீ வேண்டியது எதுவேனுந் தருவோ மென்றனர்; அதைக்கேட்ட அர்ச்சுனன் என் தமையனாகிய தருமராசன் இராசசூயஞ் செய்ய உத்தேசித்திருப்பதனால் நான் வடதிசையிலுள்ள தேசங்

களைவென்று பெரும்பொருள் கைக்கொண்டு போகவந்தேன், நீங்களும் தயை செய்து ஏதேனும் அரிய பொருள்கொடுக்கவேண்டுமென் றிரப்ப, அதைக் கேட்டு மகிழ்ந்து அவர்கள் கொடுத்த பெரும்பொருள் கைக்கொண்டு மீண்டும் தெற்கே திரும்பித் தேவபூமி யெல்லாங் கடந்து தான் வெற்றிகொள்ளாம லிருந்த புளிந்தர் முதலியோரை வென்று பெரும்பொருள் திறையாகப்பெற்று இவ்வாறே வருடந்தோறும் கட்டிவரவேண்டுமெனக் கட்டளையிட்டுத் தான் வெற்றிகொண்ட பல அரசருக்குந் துள்ளுச்சீட்டனுப்பி அவ்வாறாகவே திறை யளித்துவரக் கட்டளையிட்டுத் தான் அங்கங்கே வைத்துப்போன பொருள் களை யெல்லாம் மீட்டும்பெற்று இமயமலையை யடைந்து பொன் மணிமுதலிய பொருள்களை யெல்லாம் எடுப்பித்துக்கொண்டு பரிசாகவந்த யானை குதிரை முதலியவற்றையும் அழைத்துக்கொண்டு தன்னைப் பல அரசருஞ்சூழ இந்திரப் பிரத்தமடைந்து தருமராசனை வணங்கித் தான் கொணர்ந்தவற்றைக் காட்டி மகிழ்வெய்தி யிருந்தான். இது கிடக்க;

வீமராசன் திக்குவிஜயம்.

இங்கே வீமராசன் அர்ச்சுனனென்றுவடதிசைநோக்கிப் புறப்பட்டானே அன்றேபுறப்பட்டு ஓரக்குரோணி சேனைபுடைசூழக் கிழக்குநோக்கிச்சென்று வழியில் காடுகள் மலை, ஆறு இவைகளைக்கடந்து கோசமானனைவென்று அவன் கொடுத்த நிதிக்குவியலைக்கொண்டு பாஞ்சாலதேச மடைந்து அதை யாண்டுவரும் தன்மாமனாகிய துருபதேயனைக்கண்டுவணங்கி வந்தகாரியந்தெரி விக்க, அவனியைந்தபோதும் ஏனைப்பாஞ்சாலர் மனமியையாமையால் மிக்க நயபயத்தால் அவர்களை மனமியையச்செய்து பெரும்பொருள் கைக்கொண்டு விதேகதேசஞ்சென்றுபோர்ப்பறையறைய அந்நாட்டிற்கரசனாகிய மிதுலேசன் வீமனோடுநட்புக்கொண்டுவேண்டும்பொருள்கொடுக்கப்பெற்றுதசார்ணவதேச மடைந்தான். அவ்வரசனாகிய சுவர்மன் வீமராசன் வருவதைக் கேள்விப் பட்டுத் தன் ஓரக்குரோணி சேனையுடன் போர்க்களம்வந்து பொரத்துணிய இருவர் சேனையும் போர்செய்யத் தொடங்கின; அவ்விருபடைச் சேனைத்தலை வரும் ஒருவரோடொருவர் மாய்ந்தனர். அவருள் தசார்ணவநாட்டுச் சேனைத் தலைவனே பாண்டவசேனையைப் பெருங்காற்று மரத்தைமுறித்துத்தள்ளுவது போலத் தள்ளப்பார்த்ததுகண்டு பாண்டவர் சேனைத்தலைவனுக்குச் சினமிகு ந்து தன்னிரதத்தை முன்னே செலுத்திச் சங்கத்தொனிமுழக்கி வில்லை வளைத்து நாணேற்றிட்டு நாணோசைகொண்டு பத்துவாளிகளைப் பூட்டி யொரு வாளியால் நாணியறுத்து இரண்டு வாளிகளாற் சாரதியை மூர்ச்சையடை வித்து மூன்று வாளிகளாற் குதிரைகளைச் சல்லடைக்கண்ணாகத் தொளைத்து நான்குவாளிகளால் அத்தசார்ணவநாட்டுச்சேனைத்தலைவனையும்வருத்தினான். அதைக்கண்ட அச்சேனைத்தலைவன் தன் தேரைப் பின்னே செலுத்தித் தன் பாகனை மூர்ச்சை தெளிவித்து வேறு நாணியை வில்லிற்பூட்டிப் பாண்டவர் சேனைத்தலைவன் தேர்க்குதிரைகளைக் கொன்று சாரதியை மார்பைப்பிளந்து அவன் வில்லையொடித்து ஆரவாரித்தான். அதனால் தசார்ணவநாட்டுச்சேனை

யிற் களிப்பும் பாண்டவர் சேனையிற் குழப்பமுமுண்டாயின ; அதைக்கண்ட பாண்டவர் சேனைத்தலைவன் வெகுண்டு தன்கையில் வாளையேந்திக்கொண்டு தேரைவிட்டிழிந்து அச்சேனாபதியின் தேரிற்பாய்ந்து சாரதிகுதிரைகளையும் கொன்று தேர்ச்சிகரங்களைத் துணித்து வில்லையொடித்து அச்சேனைத்தலைவன்மேற் பாயவருகையில் அவனுக்குத் துணையாகவந்தோர் ஒரு கணத்தே வேறு தேரைக் கொணர்ந்து சேனைத்தலைவனை யதிலேற்றித் தாங்கள் சூழ நின்று பாண்டவசேனைத்தலைவனை வளைத்துக்கொண்டு அவன் வாளைப்பிடுங்கி அவனையுங் கைப்பிடியாகப் பிடிக்கத்துணிகையில் அதற்கவன் சிறிது மனத் தளர்ச்சியின்றி அங்கே சூழ்ந்துகிடந்த தேரினிரிசியைச் சுழற்றிச் சூழவிருந் தாரைத் துரத்த இதைச் சேய்மையிலிருந்த வீமராசன் கண்டு நமது சேனைத் தலைவன் அபாயத்தில் அகப்பட்டுக்கொண்டான் என்செய்வதென அவனைக் காக்கும்பொருட்டுச் சில வீரரையனுப்ப அவர்கள் தங்கள் சேனைத்தலைவனை வேறு தேரிலேற்றவே இருபடையும் மீண்டும் போர்செய்யத் தொடங்கின ; தசார்ணவசேனாதிபதியோ துணைவந்தாரையும் கொன்று பாண்டவ சேனாதி பதியின் தேர் குதிரை பாகனையும்கொன்று இருபது வாளிகளால் அவன் மார் பைப் பிளந்து ஒரு முகூர்த்தம்வரையும் மூர்ச்சையடைவிக்கத்தெளிந்து மீண் டுங் கையில் வாளையேந்தி தசார்ணவநாட்டின் சேனைத்தலைவன் தேரையும் குதிரையும் சாரதியும் அழியப் போர்செய்ய, பாண்டவர் சேனைத்தலைவனே தசார்ணவநாட்டின் சேனைத்தலைவன் றலையையறுத்தான். இது நிற்க ;

அதனால் தசார்ணவநாட்டுச் சேனைகள் துயருறுவதையும் பாண்டவர் சேனை களித்திருப்பதையுங் கண்டு தன் சேனைத்தலைவன் இறந்துபட்டமை நோக்கி மனத்திற் றுயரும் சினமு மிகுதியுங்கிளர அத்தசார்ணவ நாட்டரசன் வீமராசன் செய்துகொண்டிருந்த போரை விடுத்துச் சூழ்ச்சியால் பாண்ட வர் சேனைத்தலைவன்மேற் பாய்ந்து தன் படைகளை யழிக்குமிடத்திற்கு வந்து நின்று பத்து வாளிகளைத் தொடுத்தெய்து அவனை வெறுங்கையனாக்கி,தரையி னிறுத்த அச்சேனைத்தலைவன் பொறாது கதையொன்றேந்திவந்தான். அதைக் கண்ட தசார்ணவராசன் அவனது கதையேந்திய கையைத் துணித்தான் ; துணிக்கவுஞ் சிறிது மஞ்சாமல் வேறொரு கையால் அக்கதையை யேந்திப் பொரத்துணிந்தான் ; தசார்ணராசனே அக்கையையுந் துணிக்கவே சேனைத் தலைவன் தரையில் வீழ்ந்தயர்ந்தான். இதை யறிந்த வீமராசனே இவன் சூழ்ச்சியைப் பொறாது தன் சேனைக்கு வேறுசேனைத் தலைவனை நியமித்து அவனைப் பாசறையிற் காயங்கட்டவிடுத்துத் தன் வில்லைவளைத்து நாணே றிட்டுப் பலவாளிகளையுந் தொடுத்துப் பகைவன் சேனைக் கடலைக்கலக்கி, தசார்ணவராசனை யெதிர்த்தான். தசார்ணவராசனே வீமராசனேடு மற்போர் புரியக் கருதியதனால் இருவரும் மற்போர் புரியத்தொடங்கி,பலநாள் தோல்வி வெற்றியென்பன தெரியாதிருப்பதனால் வீமராசன் பகைவன் ஆற்றலைக்கண்டு மதித்து அவனேடும் பின்னிடாமற் போர்புரிந்து வந்தான். இவ்வா றிருக்கை யில் அச்சுவர்மன் வீமராசனைத் தண்டாற் சுழற்றி யடிக்கவந்தான். அதை லாகவத்தால் தன்தண்டினாற் விழச்செய்தனன் ; அதனாற் றளர்ந்து வேறொரு

தேரிலேறி வந்தான். அதற்குள் வீமராசன் தன் தண்டாகிய மந்தரகிரியால் பகைவர் சேனையென்னும் பெருங் கடலைக்கலக்கித் தானும் வேறொரு தேரிலேறிப் போர்செய்யத் தொடங்க, அதைக்கண்ட சுவர்மன் இனி நாம் இவனுடன் போர்செய்வதோ முடியாத காரியம்! என்றுள்ளத்தே நினைத்து வீமராசனை நட்புக்கொள்ளக் கருதி அவனை நோக்கி நீ பெருஞ் சூரனாதலால் உன்னோடு நட்புக்கொண்டிருக்க விழைகின்றேன், விடைகொடுமென்று கேட்டனன்; வீமனும் அவ்வாறே நட்புக்கொண்டு அவனது மதுமதீ நகரமெய்தி, அவனாற் கொண்டாடப்பட்டு அவன் கொடுத்த திறைப்பொருளை வாங்கிக் கொண்டு அவனைத் தன் சேனைகட்குத் தலைவனாக விருக்கச்செய்து அவனுடன் கீழ்த்திசைநோக்கி நடந்தான். இது நிற்க;

அங்கே அபரரோசமானென்னும் வேந்தனை யெளிதில்வென்று புளிந்த நகரஞ்சென்று அந்நகரத்திற் கரசராகிய சுகுமாரன் சுமித்திரனென்பாரை வென்று சேதிநகரஞ்சென்று அந்நகரத்துக் கரசனும் தன் சிறியதாய் குமாரனுமாகிய சிசுபாலனுக்குத் தான் வந்தசேதியை யறிவிக்க, சிசுபாலனும் வீமனைத் தன் நகரத்திற் கழைத்துக்கொண்டுபோய் ஒரு திங்கள்வரையும் விருந்துபசரிக்க உண்டு மகிழ்ந்திருந்து, அவன் கொடுத்த பெருநிதிக் குப்பையை வாங்கிக்கொண்டு விடைபெற்று, தென்கோசலமும் வடகோசலமு மணைந்து பெரும்போர்செய்து வென்று பெருநிதித் திரள்கவர்ந்து குந்தளதேசமணைந்து குக்ஷிமானென்னும் வரையில் வசிக்குஞ் சிலவரசரைப் புறங்கண்டு பெரும் பொருள்பெற்று அந்நாட்டிற் கருகிலிருந்த சுபந்து வென்னும் அரசர்பிரானொடும் போர்செய்து அவனிடத்தே திறைப்பொருள் கவர்ந்து மாளவ தேசமும் கயாவையுமெய்தி அங்கும் பெருநிதிக் குவியலைப்பெற்று அங்குள்ள ஆரணியங்களி லிருந்த வேடர்களை யெல்லாம் பொருதுவென்று வேண்டிய பொருளேற்று அருகே யிருந்த சில தீவுகளில்வசிக்கும் கிராதருக்குத் தூதனை யனுப்பிச் செல்வக் குவியலடைந்து சமட்சமுதலிய நாடுகளி லிருந்த அரசர்களிடஞ் செல்வக் குவாலடைந்து கிரிவிரச நகரமணைந்தான். அந்நகர மணைந்தவுடன் அந்நகரத்திற் கரசனாகிய சராசந்தன் மகன் சகதேவன் வீமராசனை யழைத்துக்கொண்டுபோய் விருந்துபசரிக்க வுண்டு அவனளித்தபரிசுகளனைத்தும்பெற்று அங்கதேசமடைந்து அதற் கரசனாகிய கர்ணனுக்குத் தான் வந்த சேதியையறிவித்தான்.

இவ்வாறு சேதியனுப்பக் கர்ணனோ திறைப்பொருள் கொடுக்க மனமின்றிப் போர்செய்யப் போர்க்களங்குறுகவே, வீமராசனும் தன் சேனையுடன் போர்க்களத்தை யடைந்தான். இருவருக்கும் முன்னாளில் வலனுக்கும் இந்திரனுக்கும் நேர்ந்த பெரும் போர்போ லிருந்தது. இவ்வகைப்பட்ட பெரும் போர் நாமொருநாளுங் கண்டதில்லையே யென்று தேவர்கள், கந்திருவர், கின்னரர், கிம்புருடர், விச்சாதரர் முதலியோர் ஆகாயவீதியில் வேடிக்கைபார்த்திருந்தனர். அரமகளிரோ இப்போரில் நமக்கு நல்ல கணவன் கிடைப்பனென்றெண்ணி மந்தார மாலையைக் கையிற் பிடித்துக்கொண் டிருந்தனர். நாரதரும்

மது கண்களுக்கு நல்விழா வின்றுதான் நேர்ந்ததென்று மகிழ்ந்து யாழிசை பாடிக் கொண்டிருந்தனர். சூரியபகவானும் வாயுபகவானும் தத்தம் மக்களுக்கு நன்மையுண்டாகுக வென்று ஆசீர்வதித்துக்கொண் டிருந்தனர். வீமராசனும் கர்ணராசனும் இதுகாறும் கற்ற வில்வித்தையைப் பரீக்ஷிப்பார்போல நெடு நாள் போராடியுமிளைப்பின்றி வாயுபகவான் மைந்தனாகிய வீமராசன் கர்ணனுடைய சேனையில் பதினாயிரம் யானைகளையும் இருபதினாயிரம் குதிரைகளையும் நாலாயிரந் தேர்களையும் இலக்கம் காலாட்படையையும் மூன்றுநாளிற் கொன்றான். சூரியபகவான் மகனாகிய கர்ணராசனோ தன்தந்தைபோலுங் கொடிய வாளிகளாற் பாண்டவர் சேனையிற் பலரை மாய்த்தான். ஆயினும் வீமராசனுடைய தோளாற்றலால் கர்ணராசனுடைய சேனைக்கே சேதமுண்டாயது, இவ்வாறு தன் சேனைக்கே நேர்ந்த சேத நோக்கி ஆலவிடம்போற் கொதித்து தன் காலவிருடமென்னும் வில்லினின்றும் பல வாளிகளைத் தொடுத்து இது குதிரை யானை தேர் காலாளெனத் தெரியவொட்டா வண்ணம் சரக்கூடங் கட்டினான். வீமனும் தன் பாணங்களால் அவற்றையெல்லாம் பிளந்து தன் கதிர்களால் சூரியன் விளங்கிக் கடலைப்பிளந்துகொண்டு பசும்புரவி யேழுபூண்ட தேரிற் புறப்படுவதுபோலத் தோன்ற, தாமரையே போலப் பாண்டவர்சேனை முகமலர்ந்தன.

இங்ஙனஞ் சரக்கூட்டி னின்றும் வீமராசன் நீங்கிய பின்னர் கர்ணன் மீண்டும் பல பாணங்களைத் தொடுத்து உகாந்த காலத்து மேகம்போற் பெய்தான். அதனால் சேனைகள் வருந்திக் கண்ணொடு கண்ணிமையாமலும் உயிர்க்காமலும் பதை பதைத்துத் திப்பிரமையெய்தி நிற்ப, தேர் குதிரைகள் பின்விடுவதைக்கண்டு வாயுகுமாரனாகிய வீமன் கதையைக் கையிலேந்தித் தேரினின்றுங் குதித்து அங்கராசனாகிய கர்ணனது தேரின் கீழணுகி,தன்கதையை யத்தேரினச்சிற் கொடுத்துப் பந்தேபோலெறிந்தான். அத்தேரோ இந்திரன் சிறகை யரியாமுன்னர் மலைகள் பறந்தனபோற் றோன்றின. வானவரெல்லாம் அதிசயமெய்தினர். அத்தேரிற்கட்டிய பொற்பட்டங்களிற் பதித்திருக்கும் இரத்தினங்கள் பளிச்சு பளிச்சென்று மின்னுவதனால் பாதலத்தினின்றும் அக்கினி தான் பிளந்தெழுந்து வந்ததோவெனச் சாரணர் சந்தேகங்கொண்டனர். அத்தேரினின்றும் கீழ்விழுஞ் செந்நிறக்கொடிகள் ஆகாயத்தினின்றும் குறைக்கொள்ளி வீழ்வனபோலத் தோன்றவே,அதைக்கண்ட யானைகள் தீக்கடைக்கோலென்றெண்ணி மதக்களிறுகள் பிளிறியோடின, மனிதரோ இது சருவப்பிழை யென்றெண்ணிச் சங்கையெய்தினர். தேவர்கள் பயந்தோட வெண்ணி அவர்களேறி யிருந்த விமானங்களொன்றோடொன்று முட்டிநிற்பதனால்ஆகாயத்தில்ஆயிரம்பறவையினம் மூலைக்குமூலை யோடின ; சேனைகளெல்லாம் மழைகாலத்துப் பெருங்காற்றெடுத்து ஆற்றுவெள்ள முடைப்பெடுத்துக் கொண்டு சிதறியோடுவதுபோலு மிருந்தது. இப்படி வானில் தேரெழும்புகையில் கர்ணனோ தன்போராற்றலினால் மணிமுடியொருபுறத்தும் உத்தரியமொரு புறத்தும் படைக்கல மொருபுறத்தும் வீழ ஒருவரும் அறியாவண்ணம் லாகவத்தாற் பையக்குதித்து மணிமுடி முதலியவற்றை முன்போன் றணிந்து

கொண்டு போராற்றலால் வீமன் முன்னின்றான். இவ்வளவறிந்த வீமன் கர்ணனை நோக்கி, கர்ணா! நீயோ மிக்க போராற்றலையுடையானென்றேசவே, அதனால் கர்ணன் உள்ளநாணிநொந்து ஆகாயத்தினின்றும் தேரொன்றும், குதிரையென்றும், இரிசென்றும், நுகத்தடியென்றும், கொடுங்கையென்றும், குத்துக்காலென்றும், கொடியென்றும், சாரதியென்றும் உருத்தெரியாமல் பொடிப்பொடியாகவிழுந்தது. அப்போது வீமசேனனே தோள்தட்டி யாரவாரித்தான். இது வீமசேனன் செய்கையென்று சிலரதிசயமெய்தினர். சிலர் பொறாமையெய்தினர். சிலர் மகிழ்ச்சியெய்தினர். இவ்வாறாய பின்னர் பாண்டவர் சேனையின் மகிழ்ச்சியும் அங்கசேனையில் மனக்குழப்பமு முண்டாயின. கர்ணனே மிகவும் மனநாணமெய்தி முரட்டுத்தனத்தின்முன் வில்வித்தையுதவமாட்டாதென்று துணிந்து வேறொரு தேரிலேறிக்கொண்டு கர்ணன் வரவே அமரர்கள் புட்பமழை பொழிந்தனர். அதுகண்டு கர்ணனே ஒன்றுஞ் சொல்ல வகையறியாமல் பலகோடி பொன்னைக் கொண்டுவந்து திறைப்பொருளாக வுதவினான். வீமசேனனே விடைபெற்றுப் பலகோடி சேனைகள் சூழ்ந்துவர வீராவேசத்துடன் அங்காட்டிற் கருகேயிருந்த பல வீரரையும் அவர்கட் கரசனாகிய மகோசசுவென்பானையும் சிரங்கொய்து அவர்கள் செல்வக்குவியலை யெல்லாங் கவர்ந்து பவுண்டரகதேசஞ் சென்றான். அந்நாட்டிற் கரசனே பவுண்டரகவாசுதேவ னென்பவன், அவன் கண்ணபிரான்பாற் பேரன்புடையாரைப் பகைமைபாராட்டுபவன், அவன் வீமராசனது திக்குவிசயத்தைநோக்கிப் பொறாமைகொண்டு தான் ஓரக்குரோணி சேனையுடன் போர்க்களங்குறுகினான். இருவர் சேனையும் போர்செய்யத் தொடங்கின. வீமனே பவுண்டரகனுட னெதிர்த்துப் போராடி அவன் சேனைகளையும் சின்னாபின்னப்படுத்தித் தேரையுடைத்துக் குதிரைகளைக்கொன்று சாரதியைத் தலையறுத்துப் பதாதியாக்கினான். பவுண்டரகனே தான் வேறொரு தேரிலேறிக்கொண்டு சரமாரியெய்து வீமன் சேனையை வருத்தினான். அச்சேனையோ பவுண்டரகனுடைய பாணமழையால் வருந்திக் கான்மாடு தலைமாடாய் விழுந்தன. அதைக்கண்ட வீமராசன் சினங்கொண்டு பவுண்டரகனுடைய வில்லைமுறித்துவிட்டான், பவுண்டரகனே வேறொரு வில்லையெடுக்க எத்தனை வில்லெடுத்தாலும் அத்தனைவில்லையு முறித்துக்கொண்டேவந்தான். பவுண்டரகனும் வீராவேசங்கொண்டு சத்தியென்னும் படையையும் கதையையும் எடுத்துச் சுழற்றியெறிந்தான். அச்சத்தி வீமனேறியிருந்த தேர்ச்சாரதியைக்கொன்றது. அக்கதையோ வீமன் தேர்க்குதிரைகளைக் கொன்றுவிட்டன. இவ்வாறாகவே வீமன் மிகச்சினந்து மலைக்குகையினின்றும் சிங்கமானது குஞ்சரவேட்டையாடத் தேடிப்புறப்படுவதுபோலத் தேரினின்றுமெழும்பிப் பவுண்டரகனது தேரிற்பாய்ந்து அத்தேரிலிருந்த வேற்படையைக் கொண்டுதாக்கவே பவுண்டரகன் மெய்சோர மூர்ச்சையடைந்தான். அவன் தேர்ச்சாரதியோ பவுண்டரகனுடைய தேரைப் பின்னுக்குச் செலுத்திக் கொண்டுசென்று அவனுக்குச் சீதோபசாரஞ் செய்தான். இதைக்கண்ட வீமராசன் தன் சங்கத்தொனிமுழக்கி யாரவாரித்தான். பவுண்டரகனே

இன்று நாம் பிழைத்தது புனர்ச்சனனமென்றே சொல்லத்தகுமென்றெண்ணித்துணிந்துபலகோடி திரவியங்களைத்திறைப்பொருளாகக்கொடுத்துவீமனை விடைகொடுத்தனுப்பினான். வீமனே பவுண்டரகன் கொடுத்ததிரவியம் பெற்றுக்கொண்டு அப்பவுண்டரகன் றோழனாகிய கவுசிகனென்னும் வேந்தனை வெற்றிகொண்டு வங்கதேசத்தரசனையும் கலிங்கராசனையும் புறங்கண்டோடச் செய்து சிங்களஞ்சென்றான். அத்தீவிற்சென்று அதையாண்டுவந்த அரசனையும் இன்னுங் கீழ்ச்சமுத்திரத்திலுள்ள மிலேச்சர் பதினெண்வகையாரையும் வெற்றிகொண்டு மிக்க திரவியங் கைக்கொண்டு புருஷாதனென்னும் அசுரரிருக்குந் தீவிற்சென்று பல பேரைக்கொன்று வெற்றிமாலைபுனைந்து அவரிடத்தே அரிய பொருள்களைக் கவர்ந்து லோகத்தியமென்னு நாட்டையணைந்து அதையாண்டுவரு மிலேச்ச னொருவனுக்குத் தான் வந்த சேதியை யறிவித்து அவன் அன்போடுகொணர்ந்த பொன் வெள்ளி முதலியவற்றையும் பச்சைக்கருப்பூரம் குங்குமப்பூ முதலிய வாசனைத்திரவியத்தையுங் கைக்கொண்டு யாவரையுங் கீழ்ப்படுத்தி ஆண்டுதோறும் திறைப்பொருள் கொடுத்துவரக் கட்டளையிட்டு இந்திரப்பிரத்த மடைந்து தருமராசனை வணங்கித் தன் வெற்றிச்செய்தியை யறிவித்துத் தான் கொணர்ந்த பொருளாற் பண்டாரத்தை நிரப்பினான். இது நிற்க;

சகதேவன் திக்குவிஜயம்.

தென்றிசையிற் சென்ற சகதேவன் சூரசேன தேசஞ்சென்று அத்தேசத்தரசரை யெல்லாம் வெற்றிகொண்டு மகததேசஞ்சென்று பொருதுவென்று கருதேசஞ்சென்று தந்தவக்கிரனென்பானோடு நெடும்போர் புரிந்து பெரும் பொருள் கவர்ந்து அபரமச்சிய தேசமணைந்து அந்நாட்டில் வசிக்கும் படச்சரரென்னுஞ் சாதியாரையும் அவர்கட்குத் தலைவனாகிய துப்பரனென்பானையும் பொருது வென்று பெருநிதிபெற்றுக் கோசிருங்கமென்னும் மலைக்கதிபதியையும் நவராட்டிர தேசாதிபதியையும் வெற்றிகொண்டு குந்திபோஜன் ஆண்டுவருஞ் சிந்நாட்டை யடைந்தான். அவ்வரசனே தன் தௌகித்திரனாகிய சகதேவன் வருகையைக்கேட்டு மகிழ்வெய்தி அவனை தன் நகரத்திற் கழைத்துச்சென்று விருந்துபசரிக்க வுண்டு மகிழ்ந்து தன் பாட்டன் மாமன் முதலானோரையும் வணங்கி விடைபெற்று அவர்கள் கொடுத்த திரவியத்தை யேற்று சர்மவதி நதிக்கரையி லரசாண்டு வரும் சம்பகனென்னும் அரசனைத் தன்வசமாக்கிப் பரமபோக மென்னும் நாட்டைக்கடந்து நருமதியாற்றங் கரையிலுள்ள அவந்திதேசமடைந்து அந்நாட்டிற் கரசராகிய விந்தன் அநுவிந்த னென்பாரோடும் போர்புரிந்தான். அவ்விருவருடன் சகதேவன் வில்லைத்தொடுப்பதும் பாணப்பிரயோகஞ் செய்வதும் இன்னபடியென் றொருவரு மறியாதவண்ணம் போர்செய்துவந்தான். இவ்வதிசயங் காணத் தேவர்களெல்லாம் ஆகாயவீதியில் வேடிக்கை பார்த்திருந்தனர். இவ்வாறு சகதேவன்பொழிந்த அம்புகளை விந்தானுவிந்த ரிருவரும் தங்கள் கதைகளைக்கொண்டு படுசூரணமாக்கி விரைந்து அச்சகதேவன் மீதெறித்

தள்ளினர்; அத்தேர் தடமோறி வீழ்ந்தது. அதனல் தேர்த்தட்டு வேறு, கொடுங்கைவேறு, இரிசுவேறு, கொடிஞ்சிவேறு என்ருகியதல்லது குதிரைகளும் சாரதியும் கைகால் முறிந்து வருந்தக்கண்டு சகதேவன் முன்னமே லாகவத்தாற் குதித்து இரண்டு கண்ணுஞ் சிவக்கச் சுழன்ற உதடு துடிக்க அவர்களை நோக்கி உங்களுக் கிறுதிக்காலம் நேர்ந்தது பயப்படா திருங்கோளென்று விரவாதஞ் செய்துகொண்டு கூற்றுவன் பற்களென்று சொல்லத் தக்க பன்னிரண்டு பாணங்களை வில்லிற்ருெடுத்து அவ்வவந்தி நாட்டரசரிருவருடைய தேரைச் சாரதி குதிரைகளுடன் நாசமாக்கவே, பாண்டவர் சேனை மிக மகிழ்ச்சியெய்திப் பகைவர் சேனையைப் பாழாக்கமுயன்றன. அவ்விருவரும் சகதேவன் பாணத்தால் நெடும்போது மூர்ச்சையடைந்து இனி சண்டை செய்வேமா! அல்லது திறைப்பொருள் கொடுத்து நட்புக்கொள்வேமா! சகதேவனுக்கோ தருமராசனுடைய தருமபலத்தாலும் ஸ்ரீகிருஷ்ண சகாயத்தாலும் வர வரப் பலம் அதிகப்படுகின்றது. இனி யென்னசெய்வோமென்று கருதி, சகதேவனை நோக்கித் தருமராசனைப்பற்றிப் பாடுபடுவதிற் பின்வாங்காமற் போர்செய்கின்றீர்; உமக்கேயன்றி எமக்கு மக்கடமையுள்ளதாகலின் நாங்களும் அவ்விஷயத்தில் வேண்டிய உதவிசெய்யக் காத்திருக்கின்ருேமென்று வேண்டிய திறைப்பொருள் கொடுத்து நட்புக்கொண்டனர். சகதேவனும் அவர்களிடத்தே அங்கிதிக்குவியலை யடைந்து விடைபெற்று விதர்ப்பதேசமடைந்து உருக்குமியென்றுசொல்லப்படுபவனுக்குத் தான்வந்த சேதியை யறிவித்தான். அவ் வுருக்குமி யென்பவன் உருக்குமணிப்பிராட்டிக்குடன்பிறந்தான், கண்ணபிரானுடைய மைத்துனன். அவனே சகதேவனது திக்குவிஜயத்தை நோக்கிப் பொருமைமேற்கொண்டு தன்சேனையை யாயத்தப்படுத்திப் போர்க்களங் குறுகவே, சகதேவனும் தன் சேனையுடன் போர்க்களங் குறுகினன். இருதிறப்படையும் வாள்-பிண்டிபாலம் - எறிதடி - சூலம் வேல் முதலிய படைகளால் ஒருவருக்கொருவர்சமர்செய்தனர். சேனைத்தலைவரும் அணியணியாய் நின்று தத்தமிற்போர்செய்யத் தொடங்கினர். அவருள் விதர்ப்பதேசத்துச் சேனதிபதி வலிமிகுந்து பாண்டவ சேனைத்தலைவனைக் கொன்றதன்றி அவனுக்குடற் பாதுகாப்பாய் வந்திருந்த பன்னிரண்டு தேராளிகளையுங் கொன்றனன். பாண்டவர் சேனை தமக்குத் தலைவனில்லாமையால் முறிக்கப்பட்டுக் கால்வேறு கைவேறு உடல்வேருகச் சிதைக்கப்பட்டன. சகதேவனும் தனக்குத் துணைவருவா ரொருவருமின்றி யொற்றைத் தேராளியாய் நின்றதைநோக்கி உருக்குமி நீயேன் வீணுக உயிர்விடுகின்றனை! ஓடிப்போய் பிழையென்று சொல்லிக் கொடிய கணைமழை பொழிந்து வருத்த, சகதேவனும் 'ஊக்கமதுகைவிடேல்' என்றபடி சிறிதும் ஊக்கங்கெடாமல ஊழித்தீப்போற் படர்ந்து போர்செய்தனன். உருக்குமியும் மிஞ்சிச் சகதேவனைக் கையிற் படைக்கலமுதலிய வொன்றுமில்லாதபடி தனியே நிறுத்த, சகதேவன் தான் கையிலோர் வாளையேந்தித் தன் தமையனுகிய தருமராசனையும் ஸ்ரீகண்ணபிரானையும் மனத்தேசிந்தித்து உருக்கிமியைநோக்கி அடா! நீயெந்த மகானுபாவனல் தேர்க்காலிற் பிணிக்கப்பட்டு ஐந்து குடிமையைத்து முன்

டனஞ்செய்யப்பட்டனையோ அம்மகானுபாவன் இங்கே இல்லையென்றென்றனை! என்று அவனருகே குதித்து, தேரிற்பூட்டிய குதிரையையும் சாரதியையுங் கொன்று வில்லைத் துணித்து அவன் சேனைகளிற் பாய்ந்து நாசஞ் செய்யத் தொடங்கினன். பாண்டவசேனை இனிப் பாண்டவர் நால்வராவார் என்றெண்ணிய தொழிந்து விரைந்து பகைவன் சேனையுட் புகுந்து நாசஞ் செய்யத்தொடங்கின. சகதேவன் உருக்குமியைப் பார்த்து இப்போதென்ன நினைக்கின்றாயென்று வேறுதேரிலேறி உன்னைக் கொன்றுவிடுவேன், ஆயினும் எங்கள் குலதெய்வமாகிய கண்ணபிரானுக்கு மைத்துன னாகையாலும் உருக்குமணிப் பிராட்டிக்குத் தமையனாகையாலும், உன்னைக்கொல்ல மனமில்லாம லிருக்கின்றேனென்றான். உருக்குமியோ தேர் முதலிய இழந்து பதாதியாய் வேறொரு தேரிலேறுவதற்குள்ளாக, சகதேவன் புலிபோற் பாய்ந்து அவனைப் பிடித்துக்கொண்டு தன் சங்கத்தொனி முழக்கினன். உருக்கிமியும் வேண்டிய திறைப்பொருள் கொடுத்து,தன்னைவிடுவித்துக்கொண்டு தன்சேனைகளிற் குறைந்த சேனைகளுக்காக அவ்வுருக்குமி சேனையுட் சில சேனையைப் பெற்றுக்கொண்டு குண்டின நகரஞ்சென்று ஸ்ரீகண்ணபிரான் மாமனாகிய பீஷ்மகராசனைக் கண்டு வேண்டிய நிதிக்குவியலை யடைந்து பிராக்கேடக காட்டை வெற்றிகொண்டு நமித்திரர் பாலகம்பர் முதலிய சாதியாரை வென்று பொருட் குவியலைப் பெற்று,கரந்தனென்னும் அரசர்பெருமானைக் கீழ்ப்படுத்திக் காடு மலை ஆறு பல கடந்து இருசிய மூகமலையைக்கண்டு அதனருகே யுள்ள பம்பைசரத்தைக்கண்டு தான் இராமகாதையை நினைந்துருகி, கிஷ்கிந்தையையடைந்து தன் சேனையை யிறுத்தித் தான் அக்கிஷ்கிந்தையை யாண்டு வந்த மைந்தன் துமிந்த னென்னும் வானரத்தலைவ ரிருவரும் சகதேவன் போர்க்குவந்திருப்பதை யறிந்து தங்கள் சேனைகளைச் சித்தப்படுத்திப் போர்க்களங் குறுகிக் கையில் கன் மர முதலியவற்றைக்கொண்டெதிர்த்து நிற்பதைக் கண்டு சிராமபிரானுக்குத் துணையாக இராவணனோடு இவர்கள் போர்புரிந்தாலும் நாமும் தருமராசன்செய்யும் வேள்விகாரணமாகப் போர்செய்து உயிரிழப்பதே நலமெனத் துணிந்து தன் கையிலிருந்த வில்லைவளைத்துப் போர் செய்யத்தொடங்கினன். அச்சகதேவன்விற்றிறத்தையும்நேசிப்பினையுங்கண்டு இது தருமபலத்தால் முடிகிறபடியால் நாம்போர்செய்வது தகுதியல்லவென்று அவ்வானரத் தலைவ ரிருவருங் கருதிச் சகதேவனை நோக்கி நீர் யாதுகாரணமாய்ப் போர்செய்பவர்நீர் சொல்லுமென்று கேட்கச் சகதேவன் நடந்தவிருத்தாந்தஞ் சொல்லக்கேட்டு மகிழ்ந்து மானிட யாக்கையிலும் மிருக யாக்கை தாழ்வானதென் றறியிரா! நீர் தருமகாரியமாகப் போர்செய்யத் தொடங்குவதனால் நாங்களும் அக்காரியத்தின் முன்னிட்டு எங்களால் இயன்றபொருளைத் தருவோம் போய்வாருமென்று வேண்டிய பொருளைக் கொடுத்து, தேன் கனி முதலியவை கொடுத்துபசரிக்க அக்கிஷ்கிந்தையை விட்டு எல்லாச் செய்புகட்கு மிருக்கையாய்த் திருமாமகளுக் காடரங்காயிருக்கும் மாகிஷ்மதி நகரஞ் சென்றான்.

அங்கராத்தரசனாகிய நீலனென்பவன் குருகுலமக்கள் சேனையின் பெருக்கத்தையும் அதிற் றலைவனாகச் சகதேவன் வரும் நெறிப்பினையுங்கண்டு தானு மட்டற்ற சேனைக் கடல்புடைசூழப் போர்க்களங்குறுகினான். சகதேவனும் நீலனு மெதிர்ந்தனர். குதிரைப்படையுடன் குதிரைப்படையும் தேருடன் தேரும் யானையுடன் யானையும் காலாளோடு காலாளுமாகப் போர்செய்கையில் சகதேவன் கைம்மிஞ்சி நீலனைப் பாணப்பிரயோகஞ் செய்யவொட்டாமலும் வில்லெடுக்க வொட்டாமலுஞ்செய்து வருத்தியதன்றிச் சேனைக்கடலையுங் கலக்கினான். அதனால் சேனைகள் நொந்து விவிட்டோட அச்சேனைகள் ஓடிப்போகாவண்ணந் தடுத்துச் சமாதானம் பேசித் தான் வில்லையெடுத்துக் குணத்தொனிசெய்து பல வாளிகளைத் தொடுத்து எய்ததுமன்றி அக்கினி பகவானையும் நினைத்து வருந்தினான். அதுகண்டு அக்கினிபகவானும் விரைந்து வந்து எழுநாவாகிய தன்சுடரால் பாண்டவ சேனையுட் புகுந்து காடுபோற் பற்றியெரிக்கவே பலர்மாண்டனர், பலர் கரிந்து பொரிந்து போயினர், பலர் நலிக்கொண்டலறி வோட்டெடுத்தனர்; சகதேவனோ சற்றும் பின்வாங்காமல் முன்னின்று வில்லையெடுத்து வளைத்துக் கண்ணபிரானது பாதகமலங்களைத் தியானித்து வருணாஸ்திரமெடுத்து அபிமந்திரித்து வில்லிற்றொடுத்து விடுத்தான். அதனாற் சிறிதுவிந்தும் புகைமூடிப் பெருஞ்சேனையைக் கொல்லச் சமைவதைக்கண்டு செய்வது ஒன்றுந் தோன்றாமல் வருந்திநின்றான். இவ்வாறு அக்கினி பகவான்பாண்டவர் சேனையுட் புகுந்து வருத்துகின்றானென்று வைசம்பாயனர் சொல்லிவருகையில் ஜெனமேஜெய மகாராசன் இதென்ன வியப்பு! பாண்டவர்களாற் காண்டவவனமளிக்கப் பெற்றுய்ந்த உதவியைச் சிறிதுமெண்ணாய் அக்கினிபகவான் அவர்கள்சேனையை வருத்தத் தொடங்கியகாரணமென்ன? விளங்கச் சொல்லவேண்டுமென வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

அந்த மாகிஷ்மதீ நகரத்தரசனாகிய நீலனென்பவன் மிக்க தருமசிந்தை குடிகொண்டவன், வேதங்களிற் கூறப்பட்ட யாகங்கள் அவன் செய்யாதன வொன்றுமில்லை. அவனுக்குச் சுதரிசனை யென்றொரு மகளுண்டு. அவளோ அழகிற் சிறந்தாள். அவளழகைக்கண்டு அரமகளிரும் கந்தருவமாதரும் இயக்கமாதரும் நாககன்னிபரும் நமக்குப் பேரழகுவாய்க்கவில்லையே யென்று வருந்துவர். இவ்வகைப்பட்ட பேரழகுடைய மாதை அக்கினிபகவான் தான் வதுவைசெய்து கொள்ளக் காதல் கொண்டிருந்தான். அவ்வரசன் காலை மாலைகளிற் செய்யும் அக்கினிஹோத்திர மெவ்வளவு வளர்த்தாலும் அது வளர்வதில்லை, அப்பெண்கள் நாயகம் வளர்த்தால் மிகவும் விளங்குவது மன்றித் தன் சுவாலையாகிய கையாற் பரிசிப்பது. இத்தகைச் சேட்டைகளைக் கண்டு அவ்வரசன் பொருது அக்கினிபகவானை சபிக்கக் கருதினான். அதையறிந்த அக்கினிபகவான் அவ்வரசன்முன் அந்தணருருக்கொண் டெதிர்தோன்றி ஆசிர்வதித்து உமது காதற் புத்திரியை யக்கினிபகவான் காதல்கொண்டிருக்கின்றனன். பெண்ணாகப் பிறவியெடுத்த ஞான்று ஒருவனுக்கு வாழ்க்கைத்துணையாக்காமற் போவதில்லை. ஆதலால் அவனுக்கு மணஞ்செய்விப்பதே நல

மென்றுசொல்லி மறைந்தனன். அதைக்கண்ட நீலனென்னு மரசன் இங்கே வந்து சொல்லிப்போனுர் அந்தணரன்று, அக்கடவுளேயாமெனக் கருதி அக்கடவுளை மீண்டுங் கருத அக்கடவுள் முன்போன்று அந்தணருருக்கொண்டு அவ்வரசன்முன் தோன்றவே, அவ்வக்கினிதேவனுக்குத் தன் காதற் புதல்வியை மணஞ்செய்வித்தான். அதைக்கண்ட அக்கினிபகவான் அவ்வரசனை நோக்கிச் சாலக்களிப்பெய்தி உமக்கென்னவரம் வேண்டுந் தருவேனென அவ்வரசனே நீர் என்னகரத்தின்கணிருந்துகொண்டு இந்நகரினைப் பகைவர் நோக்காமற் காத்துவரவேண்டுகின்றேனென, அவ்வாறே வரந்தந்து அந்நகரத்தைக் காத்துவந்தான். அதையறிந்த அரசர்கள் அந்நகரத்தில் எடுத்தடி வைக்காமலிருந்தனர். இம்மந்தண மறியாத சகதேவன் அந்நகரத்திற் புக்கமையால் அக்கினிபகவான் அவ்வரசனுக்கு வரங்கொடுத்தபடியே சகதேவன் சேனையை வருத்தினுன். இதுதான் நடந்த செய்தியென்று பின்னுஞ் சொல்வாராயினர்.

சகதேவன் சேனை அக்கினிபகவானுல் எரிந்து பொரிந்து போவதைக் கண்டு திகைத்து என்செய்வதென்று இறப்பக்கருதிக் கைகால் கழுவிக்கொண்டு தருப்பாசனத்திலிருந்து அக்கினிபகவானைச் சிந்தித்து உம்மை வேதம் பலபடம் துதிக்கின்றன, எவ்வகைப்பட்ட வேள்விகளும் உருவமாகையால் நீரெச்சமூர்த்தியேயெனப் படுகின்ற நீர் எல்லாத் தேவர்களுக்கு மவி பெறுதற்கிடமாயிருத்தலால் உம்மை அவர்களுக்கு முகமென்று சொல்லப் படுகின்ற நீர் எப்பொருளையுந் தூய்மைசெய்வதனுற் பகவானென்று சொலலப் படுகின்றீர். எவ்வகைப்பட்ட வேள்விகளையும் செய்ய வேதம் விதிப்பதனுல் ஜாதவோனென்ற பெயரெய்தினீர். தேவருக்குள் இன்னின்னபங்கு இன்னருக்கெனப் பகிர்ந்தளிப்பதனுல் ஜாதவேதனென் றழைக்கப்பட்டீர். அவ்வாறிடப்ப உமக்குரிய பூசனையாகிய இராசசூயஞ் செய்யத்துணிந்து திக்குவிஜயஞ்செய்யவந்தபோது நீரே யெங்களுக்குத் துணையிருப்பதொழிந்துபகைமை பூண்டீர். இனி யெங்களுக்குத்துணை யும்மையல்ல தெவர். எங்கள் சேனைக்குட்புகுந்து நாசஞ்செய்வது மரபேயன்று; இனியேனும் எமக் குதவிசெய்வதே கடமையென்று விளங்குகின்றுன். அக்கினிதேவனே சேனைகளை எரிப்பதுவிடுத்து தெய்வ வுருவத்தொடுந் தோன்றி நீரோன் கிலேசப்படுகின்றீர். அதையொழியும், நானே நீலனென்னு மரசனுக்கு வரங்கொடுத் திருந்தமையால் இவ்வாறு முடிந்தது. தருமராசன் முயன்ற காரியமோ தேவகாரிய மல்லது வேறன்று. அதற்கு விரோதஞ்செய்வது மெத்துணையுமடாது. அவர்க்குக் கொடுத்திருந்த வரத்தைப் பாழாக்காமலும் உம்மைச்சோதிக்கவு மமது சேனையைப் பொரிந்து கரிந்து போகச்செய்தேன். நீர் செய்த தோத்திரங்களுக் குள்ளங்களித்து மிக்க களிப்பெய்தினேன். உங்களுக்குத் துணையாயிருந்துகொண்டு பாண்டவர் சகாயனெனப்படும் அயர்வரு மமரர்கட் கதிபதியும் உலகமுண்ட பெருவாயனும் உலப்பில் சீர்த்திமாமாயனுமாகிய கண்ணபிரான் இராசசூயஞ் செய்விக்கத்துணிந்தபோது வேறெவராலேதான் முடியுமென்றனர்.

பிறகு சகதேவன் தன் சேனையைப் போர்க்குச் சித்தப்படுத்தவே, அக்கினிதேவன் நீலனுக்குச் சகலசெய்திகளையு மறிவித்தான். நீலனும் மகிழ்வெய்திச் சகதேவனுக் கெல்லாவுபசாரமுஞ் செய்து அளவில்லாப் பொருட்குவை கப்பமாகக் கொடுத்தான். அவற்றைப் பெற்றுச் சகதேவன் அப்பட்டணம்நீங்கிப் புறப்பட்டு அவாசிக்கண்சென்று திரைபுரமென்னும் நகரமடைந்து அமிதேசனென்னும் அரசர்பெருமானை வென்று போதனராசனையும், கைசிகராசனையும், சுராட்டிரராசனையும், திமிங்கில னென்பானையும், கடல் நடுவிலிருக்கும் ஒற்றைக்காலனையும், ஒட்டைமுகத்தானையும், சஞ்சயந்திராசனையும், விபுண்டரகவாட மென்னும் நாட்டினனையும் பாரிசலர், குலதர், அசுமகர், தார்த்தரர், மூலகர் முதலானோரையும், போர் பொருது வென்று மிக்க பொருட்குவியல் பெற்று, ஒட்டரம், தெலுங்கு, தக்ஷிணமகாராட்டிரம், கர்னாடகம் முதலிய தேசங்களையடைந்து அங்குள்ள அரசரை யெல்லாம் வென்று தென்கொங்கண மென்னும் கொங்குநாட்டை யடைந்து வெற்றிகொண்டு சோணாடடைந்து இருபுறத்தும் பல மரச்சோலைகள் சூழ்ந்த காவேரியாற்றைக்கண்டு அக்காவிரியாற்றி னீராடிச்சபதபங்கள்செய்து வேதபடனம் செய்யும் அந்தணரையுங்கண்டு களிகொண்டு சேனைகளைக் காவேரியாற்றங் கரையிலிருத்தி அங்கே பல விநோதக்காட்சிகளைப் பார்த்துக்கொண்டேயிருக்கையில் அந்நாட்டவர் சகதேவன் வந்திருக்கின்றனனென்ற செய்திகேட்டு அவனைப்பார்க்கக் காதல்கொண்டு கரையிடலரியபெருங்களிப்பென்னுங் கடலிலழுந்தினர். அந்நாட்டரசனாகிய சோழனும் சகதேவனனுப்பிய ஒற்றரால் யாவுந்தெரிந்து பெரும் பொருட்குவியலை யெடுப்பித்துக்கொண்டு சகதேவனுக்குத் திறையாகக் கொடுத்தான். சகதேவன் அதைப்பெற்றுக் காவிரிமுழுதும் பார்த்துக்கொண்டே மந்திரிகளை நோக்கிப் 'பொன்னியைப் பொருவும் கங்கையா றென்கின்றனரோ' இப்பொன்னியாறு மிகத்தூய்மையும் அழகும் அமைந்து கங்கையை நிகர்த்திருக்கின்றது. ஆதலின் இங்கேயே பத்துநாள் வசித்துப் போவோமென்று அங்கேயே வசித்திருந்து அவ்விடம்விட்டுப் புறப்பட்டுப் பாண்டிநாட்டிற்சென்று சேதுவைக்கண்டு தெரிசித்து மணலூர்ப்பட்டணமேநோக்கிச் சென்றான். இவன்வந்த செய்தியையறிந்தசித்திரவாகனென்னும் பாண்டியர்பெருமான் தன் பரிவாரத்தொடுஞ் சென்று எதிர்கொண்டழைத்து விருந்திட்டுப் பரிவினாற் பாண்டவர் சுபச்செய்திகளை வினவினான். இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அர்ச்சுனன் மனைவியரி லொருத்தியும் சித்திரவாகன் மகளுமாகிய சித்திராங்கதையைக்கண்டு மும்முறை வலம்வந்து பணிந்துக்ஷேமங்களை வினவி, அவளாலும் உபசரிக்கப்பட்டுப்பப்புருவாகனென்னுங் காதலனைக்கண்டு அவனை யெடுத்து உச்சிமோந்து முத்தமிட்டு வேண்டிய ஆபரணங்களை யெல்லாம் வழங்கி அவளுக்கும் வேண்டிய அணிகலமெல்லா மளித்துப் பாண்டியனால் முத்துமாலைகளும் பெரும்பொருட் குவியலுங் கொடுக்கப்பெற்று அவ்வரசனிடத்தும் சித்திராங்கதை யிடத்தும் பப்புருவாகனிடத்தும் விடைபெற்றுக் கேரளமென்னும் மலைநாடடைந்து அவ்வரசனைப் புறங்கண்டு திறைகொண்டு மீண்டு தென்சமுத்திரக்கரையை யணுகி

அந்நிலத்தி னழகும் கடலி னழகும்பார்த்து அதிகமகிழ்வடைந்து மந்திரிமாருடன் ஆலோசித்துக் கடோற்கசனை வரநினைந்தான். நினைக்கவே கடோற்கசன் மிக்க வொளிபரப்பும் கிரீட கவசகுண்டலங்களைப் புனைந்து நீலமலைபோல் விளங்கித் தேரேறிவந்து தன் சிறிய தாதையைப் பணிந்துநின்றான். சகதேவனும் கடோற்கசனை வாரியெடுத் துச்சிமோந்து முத்தமிட்டு அடா குழந்தாய்! உன் பெரியபிதாவாகிய தருமராசன் இராசசூயஞ்செய்து சம்ராட்டென்னும் பட்டம்பெற முயன்று எங்கள் நால்வரையும் நாற்றிசையினு மனுப்பினர். அவருள் நான் தென்றிசை நோக்கி வந்து பல அரசரையும் வென்று திறைகொண்டேன். நானே இலங்கையி லிருக்கும் விபீஷணரிடஞ் செல்ல எங்களா லசாத்தியமான காரியமாதலின் நீயேசென்று இச்செய்தியை யெல்லா மறிவித்து இது ஸ்ரீகிருஷ்ணசகாயத்தாலும் நடப்பதாகத்தெரிவித்து அவர்கொடுக்கும் திறைகளைப் பெற்று மீளென்று சொன்னான்.

கடோற்கசனே தன் சிறியதாதையைவணங்கிவிடைபெற்று முன்மாருதி கடலைத்தாவியதுபோற் றாவிக்கடந்து இலங்கையை யடைந்து அங்குள்ள பேராற்றலுடைய அரக்கர்களெல்லாம் ஆயுதபாணிகளாகக் கூட்டங் கூட்டமாகத் திரண்டிருக்கச் சிறிது மஞ்சாமற்சென்று அரண்மனை வாயிலிற்புகுந்து காவலருக்குச் சந்திரவமிச சிகாமணியாகிய தருமராசனனுப்பிய தூதன் வந்திருப்பதாகத் தெரிவிக்கச் சொல்ல,அவர்களும் விபீஷணருக்குத் தெரிவித்தனர். அவர் வரக்கட்டளையிடச் சென்று அளவில்லாப் பொருட்குவியலைக் கண்டு மகிழ்வெய்தி அத்தாணிமண்டப மடைந்து பல அரக்கர் உபசாரஞ் செய்ய,பல நக்ஷத்திரக் கூட்டத்தினடுவில் பூரணசந்திரன்போல் பல அமைச்சர்கூட்டத்தினடுவில்விளங்கும் விபீஷணரைக்கண்டுவணங்கி,அடியேன் தருமராசனுடைய தூதன், கடோற்கசனென்னும் பெயரையுடையேன், அவ்வரசனால்அனுப்பப்பட்டு ஒருசெய்திசொல்ல வந்தேன்,கட்டளையிட்டாற் சொல்லுகின்றேனென்றனன். விபீஷணன் இவன் வடிவழகையும் புத்தி நுட்பத்தையும் பேராற்றலையுங்கண்டு மகிழ்ந்து நீயார்? அத்தருமராசன் யார்? நீ தூதனானதெவ்வாறு? நீவந்தகாரியம் யாது? விளங்க வுரைக்கவேண்டுமென்று சொல்ல, கடோற்கசன் சொல்லத்தொடங்கினான்.

குருநாட்டுக் கரசனாகிய பாண்டுராசன் மக்களில் மூத்தோர் தருமராசரென்று சொல்லப்படுபவர். தம்பெயருக்குத் தக்கவாறு தருமமே யுருவமானவர். நிலமகள்போல் பொறுமையும், மேருபோல் கலங்காமையும், தென்றிசைக் கடவுள்போல் நீதியும்,வியாழபகவான்போல் புத்தி நுட்பமும், அரிச்சந்திரன்போல் வாய்மையும், சூரியன்போல் தூய்மையுமுடையார். குருநாட்டுக்கதிபதியாய் எல்லாவரசரும் தன்னுணை முடிமேற்றாங்க அரசுசெய்பவர். அவருக்கிளையவர் வீமசேனமகாராசர், அவர் கதையைக் கையிலெடுத்தால் எதிரேநிற்கக் காலனுமஞ்சுவன்,அவர்பதினாயிரம்யானைபலமுடையவர்,இடிம்பனென்னும் அசுரனைக்கொன்று அவன்றங்கைஇடிம்பியையமணந்தனர். அவ்விடிம்பி வயிற்றில் யான் பிறந்தேன். அவர்க்கிளையவர் அர்ச்சுனனெனப்படுவர். அவர் வில்லிற் சிறந்தவர், நராமிசத்தாற் றோன்றினவர், ஸ்ரீமந்நாராயண னவ

தாரமாகிய கண்ணபிரானுக்குத் தோழர், அவர் தங்கையாகிய சுபத்திரையை மணந்தவர். அக்கண்ணபிரா னருளால் காண்டவ வனத்தை யழித்து இந்திரனைப்புறங்கண்டு அக்கினிபகவானுக் கவ்வனத்தை யுதவி அத்தேவனால் வெள்ளைக்குதிரைபூண்டு வானரத்துவசங்கட்டிய தேரையும் அக்ஷய தூணிரத்தையும் காண்டிவமென்னும் வில்லையுங் கைக்கொண்டவர். அவர்க்கிளையவர் இரட்டையரெனப்படும் நகுல சகதேவர், அவர்களும் அவ்விருவரைப்போலும் மிக்க பேராற்றலையுடையவர். என்பிதாவாகிய வீமசேனன் சராசந்தனென்றுலககண்டகனுயிருந்த அரசனைக் கண்ணபிரா னருளால் வெற்றிகொண்டனர். மூத்தவராகிய தருமராசன் தம்பியர் நால்வர் துணையாலும் கண்ணபிரான் சகாயத்தாலும் இராசசூயஞ் செய்யத்தொடங்கிச் சம்ராட்டென்னும் பட்டமும்சாம்பிராச்சிய பட்டாபிஷேகம்பெறக் கருதியிருக்கின்றனர். அவர்தம்பியர் நால்வரையும் நாற்றிசைக்கனுப்ப அவருள் சகதேவர் தென்றிசை நாடிவந்தனர், என்னைத் தங்களிடந் தூதனுப்பி இச்செய்தி யறிவிக்கச்சொல்லினர். நான் தங்களை வணங்கி இச்செய்தியையறிவித்தேன், தங்கள் சித்த மென்பாக்கிய மென்றனன். அதைக்கேட்ட விபீஷணர் உள்ளமகிழ்ந்து நீ நம்முடையவனனபடியாலும், அவர்கள் தருமவான்களென்று சொல்லியதனாலும், ஆரம்பித்தகாரியமோ மிகச்சிறந்ததாகையாலும், ஸ்ரீகிருஷ்ணசகாயமிருப்பதனாலும், நான் திறைகொடுக்கத் துணிந்தேன். நீ பெற்றுக்கொண்டுபோவென்று பொன் வெள்ளி முதலியவற்றாற் செய்த அணிகலன், பொற்பாத்திரங்கள், வெள்ளிப் பாத்திரங்கள், ஆசனங்கள், யானைத் தந்தங்களாலாகிய பொருள்கள், ஆடைகள், கம்பளங்கள், பொற்பனைகள் பதினான்கு, இவைகளைக்கொண்டு சேர்க்க எண்பத்துநான்கு அரக்கரையுங் கடோற்கசனுடன்கூட்டி அவர் தலைமீதேற்றியனுப்ப, கடோற்கஜனும் விபீஷணரை வணங்கி விடைபெற்று, அவருடன் சகதேவனிருக்கும் தென்கடற்கரையை யணுகி, தன் சிறியபிதாவை வணங்கி அப்பொருள்களை யெல்லாங் கொடுத்து நிற்க, சகதேவனும் அவ்விராக்கதர் எண்பத்து நால்வரையு முபசரித் தனுப்பிவிட்டுக் கடோற்கசனையும் ஆசிர்வதித்தனுப்பித் தென்மொழிக்கடலையும், வடமொழிக்கடலையும், கருங்கடலையும், சிவஞானக்கடலையு முழுதுமயின்று மலயமலையில் வீற்றிருக்கும் அருந்தவக்கொள்கைத் திருந்திய தெய்வக் குறுமுனிவனைக்கண்டு வணங்கி, அவரிடத்தில் விடைபெற்றுச் சையகிரியையடைந்து அவ்விடத்திலிருந்த வேடர்களை வெற்றிகொண்டு தன்னொடும் வந்த தமிழரை யெல்லாம் உபசரித்து வெகுமானமளித்தனுப்பிவிட்டுத் தன்சேனைகள் புடைசூழப் பேரிகை டங்கா முதலிய வாத்தியங்க ளொலிக்க வந்தியர் புகழத் தருமராசன் அரசுசெலுத்தும் இந்திரப்பிரத்த மடைந்து மகாராசனைப் பணிந்து தான்கொணர்ந்த பொருள்களையும் விபீஷணர்கொடுத்த பொற்பனை முதலியவற்றையுங் காட்ட, அவற்றை யெல்லாந்தருமராசன்கண்டு மகிழ்ந்து தன்கண்களில் ஆனந்த பாஷ்பம் பொழிய நின்றனன்.

நகுலன் திக்குவிஜயம்.

நகுலராசனே மேற்றிசைக்குச்சென்று அங்கே வடிவேற் கரத்து மணி விளக்காகிய சண்முகத்தொருவன் இனிதா யெழுந்தருளி யிருக்கும் உரோ கிதக்கிரமமென்னும் இடத்தையடைந்து அங்குள்ள மயூரகனென்னும் ஒரு வகை அரசசாதியாருடன் போர்செய்து திறைபெற்று, அங்குநின்று மகன்று மருவென்றும் தானியகமென்றும் பெயருள்ள தேசங்களுக்குச்சென்று சைரி கர், வைரமகனென்பாரையும் பொருதுவென்று லீலந்தானர், வடதானனென் னும் தேசவாசிகளோடும் தேவாசுரனெனப் போர்புரிந்து சிபி திரிகர்த்தம், அம்பஷ்டம், மாளவம், கர்ப்படம் என்னும் ஐந்துதேசத்தாரையும், மத்திய மிகாயர், அவுபலிருதர் என்னும் கூட்டத்தாரையும் புட்கராரணியமென்னும் இடத்திலுள்ள வேடராசரையும் போர்க்கோலங்கொண்டு சிலரைக்கொன்றும் சிலரை முதுகுகாட்டி யோடச்செய்தும் சிலரைப்பேய் நாய் நரி கூகை இவை கட்கு பிண விருந்திட்டும் அங்கு நின்றும் புறப்பட்டுச் சென்று சிந்துதேச மடைந்து அவ்வரசனிடத்தில் திறைப்பொருள்பெற்றுக் குச்சரதேசமணைந்து அங்குள்ளாரைப் பொருதுவென்று அந்நாட்டின்மலைப்பக்கத்துள்ள சாதியாரை யும் போரிற் புறங்காட்டி யோடச்செய்து சரச்சுவதிநதியின் கரையையெய்தி, அங்கே கூட்டமாயிருந்த சூத்திரர், ஆபிரர், பார்வதேயர் என்பாரைத் திறை கொடுக்கச்செய்து பஞ்சநதம் மித்திரயோகம் சிங்கநதம் அபரபந்தனமென்னு மிடங்களிற்சென்று அந்நாடுகளைச் தன் சுவாதீனமாக்கி உத்தரச்சுயோதிஷ மென்னு நாட்டரசனைக் கீழ்ப்படுத்திப் பெரும்பொருள் கைக்கொண்டு இர மணனென்னும் அரசசாதியாரையும் சமுத்திரமத்தியிலிருக்கும் தீவிலுள்ள சில மிலேச்சரையும் போரில் விரிட்டோடச்செய்து அப்பாலுள்ள ஊணதேசநாடி அவர்களுடன் பெரும்போர்விளைக்க அவர்கள்போரில் அபசயப்பட்டு வண ங்கிக் காணிக்கையளிக்கப்பெற்று அப்பாலிருந்த தீவிலுள்ளாரிடத்தும் தூ தனுப்பிக் கப்பம்பெற்று மீண்டும் கடற்கரையடைந்து ஆனர்த்ததேசத்திற் கண்ணபிரானுடைய அதிகாரிகளோடுங் கலந்துபேசித் துவாரகைக்குத் தூத னுப்பினன். அத்தூதர் துவாரகையையடைந்து கண்ணபிரானுடன்சென்று விண்ணப்பிக்க, கண்ணபிரானும் தன் தமையனாகிய பலராமருக்கும் உக்கிர சேனமகாராசனுக்குந் தெரிவித்துத் திறைப்பொருள்கொடுக்கச்சித்தப்படுத்தி; பொன்,வெள்ளி,நவமணிகள்,அணிகலன்,ஆடைகள்,வாசனைத்திரவிய முதலிய வைகளைக் கொண்டுவந்து தாமே பரிசனங்களோடும்வந்து நகுலனைக்கண்டு மகிழ்ந்து கொடுத்தருள நகுலன் அவைகளை யேற்றுக்கொண்டு நின்றான். நகு லனைநோக்கிக் கண்ணபிரான் உமக்கு எங்கேசென்றாலும் அபசயமுண்டா காது! தருமராசனையொழிய இராசூயஞ்செய்ய வல்லாரெவருளர்? நான்கு திக்குப் பாலகர்போன்ற தம்பிமா ரிருக்கையில் அவருக் கென்னகுறைவு? நானேதோ சிறிதுபொருள்கொடுத்தேன்; அதைப் பெரிதாகக்கொண்டு அங்கீ கரிக்கவேண்டுமென்ன, நகுலனும் உமது சகாயமல்லது எங்களுக்குத் துணை யாவதேது? எங்கள் செல்வமும் ஆண்மையும் வெற்றியும் ஆற்றலும் நீரல்லது வேறியாவர்? தருமராசன் இவ்வேள்விசெய்யத்தொடங்கியதும் உமது பலமே

யல்லது வேறென்ன? நீரோன்னைச்சியம் பேசுகின்றீர்! நீரோ இவ்வேள்வியை நிறைவேற்றவேண்டும், விரைவில் இந்திரப்பிரத்தம் வரவேண்டுகின்றேனென்று வணங்கிநின்றான். கண்ணபிரானும் நகுலனை விரைவாய் இந்திரப்பிரஸ்தம் போய்விடு; நானும்வருகிறேனென்று சொல்ல, நகுலனும் விடைபெற்று மத்திரதேசமடைந்து தன் நல்லம்மானாகிய சல்லியராசனைக்கண்டு வணங்கித் தான்வந்தசெய்தியையறிவிக்க, அவன்கொடுத்ததிறைப்பொருள்கைக்கொண்டு அவன்செய்த விருந்துண் டிளைப்பாறிக் காந்தாரதேசஞ்சென்று திருதராட்டிர மகாராசாவுக்கு மாமனாகிய சௌபலனைக்கண்டு வணங்கித் தான் வந்த சேதியையறிவிக்க, அவனும் நகுலனுக்கு விருந்துபசரித்து வேண்டியபொருள் கொடுக்கப்பெற்று அங்குநின்றும் சமுத்திர தீரத்திலிருந்த சாக்குவர் பப்பரரென்னும் சாதியாரிடத்தும் பெரும்பொருள் கைக்கொண்டு, லாடதேசம் கவுடதேசமடைந்து அத்தேசத்தரசருடன்போர்புரிய அவர்கள் நகுலனுடைய ஆற்றலுக்கஞ்சி நட்பாகக் குறிப்பித்துநிற்ப அவர்கள்கொடுத்த பொருளையும் கைக்கொண்டு பலசேனைகளும்சூழ இந்திரப்பிரத்தமடைந்து தருமராசனை வணங்கிநின்றான்.

யாகமுறை.

இவ்வாறு தருமராசன் தம்பியர் நால்வரும் நாற்றிசைகளையும் வெற்றிகொண்டு கொணர்ந்த திரவியங்களும் யானை குதிரை முதலிய ஊர்திகளும் அளவிறந்தனவாய் உறையிடப்போகாப் பெரும்பொருள் கைக்கொண்டு அவைகள் பொக்கிஷ வீடுகளும் பிடியாமற்போதலையும், உலகமெங்கும் புகழ்பரந்திருப்பதையுங்கண்டு மகிழ்சிறந்து திக்குவிசயத்திற்குப் போயிருந்த சேனைகளுக்கும் சேனைத்தலைவர்களுக்கும் வேண்டியவெகுமதிகள்செய்து யாசகருக்கும் அந்தணருக்கும் தானதருமஞ்செய்து மன்னுயிரைத் தன்னுயிராகக் கருதி யரசாண்டு நாடெங்கும் மாத மும்மாரிபெய்து அதிவிருட்டி அனுவிருட்டியில்லாமலும், தீப்பயம் காற்றுப்பயம் கள்வர்பயம் நோய்ப்பயம் இவைகள்சிறிதுமில்லாமலும்நிலத்திற்பயிர்செழிக்கவிருத்தியடைந்திருந்தது மாந்தர்களெல்லாம் தத்தம் வருணாச்சிரமதருமம் பிறழாமலுஞ் சகல தருமமு மனுஷ்டித்துதருமராசனைப்பிதாவைப்போலவேகருதிவசித்துவந்தனர். அக்காலையில் பொய்புரைவழங்காமையால் மெய்மையில்லாதிருந்தது; பலகேள்விமேவலால் வெண்மையில்லாதிருந்தது. யாவரும் வழங்குத லொழியாமையால் வண்மையில்லாதிருந்தது. தேவாலயம் விஷ்ணுவாலயம் சிவாலயம் பிரமாலயமெங்கும் நித்தியநைமித்தியங்கள் குறைவின்றி நடந்தன. இவ்வாறு கிருதயுகம்போலச் சகலதருமம் குறைவின்றி நடந்தன. தருமராசன் இவ்வகையாக அரசுபுரிந்து வருகையில் மந்திரிமாரும் சுற்றத்தாரும் நகரமாந்தரும் ஒருங்குசேர்ந்து நீர் நெடுநாள் நினைத்துக்கொண்டிருக்கின்ற வேள்வியை நிறைவேற்றத்தக்க காலமிதுதான், இப்போதோ அரசரெல்லாரும் உமது கைவசப்பட்டிருக்கின்றனர். நாடோமிகச் சுபிக்ஷமாயிருக்கின்றது. இருநிதிக்கிழவனினும் பெருஞ்செல்வ நிறைந்திருக்கின்றது. இவ்வாறு இடம் பொருள் ஏவல்அமைந்திருக்கின்றமையால் நீர் தடையின்றி இராசசூயஞ்செய்யத் தகுமென்றுசொல்ல, அப்படியாயின் செய்யலாமென்று முயன்றனர்.

அச்சமயத்தில் மூவராயும் மூவர்க்கு முதல்வராயும் தேவராயும் தேவர்க்குந் தெரியாத வொளியுருவாயு மிருக்கின்ற கண்ணபிரான் இந்திரப்பிரத்தத்திற் கெழுந்தருளினுரென்ற சொற்கேட்டுப் பாண்டவரும் விரைந்துசென்று பஞ்சவர் சகாயனுகிய பகவானையெதிர்கொண் டழைத்துவந்தனர். கண்ணபிரானும் பெரியோராலும் அந்தணராலும் ஆசிர்வதிக்கப் பெற்றுக் குந்திதேவியைவணங்கி துரோபதை சுபத்திரைமுதலானேரைச் சுபச்செய்திவினவி அப்பாண்டவராற் கொண்டாடப்பட்டு கழிமகிழ்சிறந்தனர். தருமராசன் கண்ணபிரானைநோக்கி நீர் பரிபூரண கிருபைவைத்திருப்பதனுற் பலவரசரு மெளிதிற் கீழமைந்தனர். எல்லாநாடுகளும் நமது சுவாதீனத்திலேயே யிருக்கின்றன. மேன்மையும் புகழும்நிரம்பின. இனி இராசசூயஞ்செய்து பெரும்பொருட்குவியலை அந்தணர்களுக்கெல்லாம் வினி யோகிக்கவேண்டும். எனக்குக் கட்டளையிட்டு என் தம்பியருடன் இப்பெருவேள்வி முற்றுவிக்கவேண்டுகிறே னென்று விண்ணப்பிக்க, கண்ணபிரானும் நீர் நன்னெறிபற்றியொழுகலால் சகல செல்வமும் மேன்மையும் புகழுநிரம்பின. உம்மையன்றி அவ்வேள்விசெய்யத்தக்கவரொவரிருக்கின்றனர். நீரே அவசியமாக இவ்வேள்வியைச் செய்யவேண்டும்; உமக்கொரு குறையும் நேர்ந்திலது; நீரென்ன கட்டளையிட்டாலும் தலைமேற்கொண்டு செய்கின்றேன், உமக்குவரும் மேன்மையெல்லாம் எமக்குரியமேன்மையே! நீர் இவ்வேள்வி செய்தபின்னரோ தான் நாங்கள் கிருதார்த்தராவோ மென்று சொல்லத் தருமராசனும் நீர் சொல்லியவார்த்தையைக்கேட்டுச் சாலக்கழிமகிழ்சிறந்தேன், நீர் வேள்வியை நிறைவேற்ற வேண்டுகின்றேன் என்று தம்பியரை யழைத்து வேள்விக்குரியகாரியங்களைச் சித்தஞ்செய்யக் கட்டளையிட்டனன். அப்போது தமையனிட்ட கட்டளையைத் தலைமேற்கொண்டு சகதேவன் வேள்விக்குவரும் அந்தணர்முதலிய நால்வருணத்தாருக்கும் வேண்டிய உணவுப்பொருள்களைச் சித்தஞ்செய்து பாகஞ்செய்வோரை விசாரிக்கத் தங்கள் சாரதிகளுக்குக் கட்டளையிட்டுத் தவுமியாசாரியர் கட்டளையின்படி நல்ல பூமியில் விசாலமாகவும் அழகாகவும் பலமாகவும் சாத்திரவிதிக் கொத்ததாகவும் யாகசாலை நிருமித்து வருகின்றவருக்கு வசதியாகப் பலவிடுகளையுமமைத்தான்.

இவ்வாறிருக்கையில் வியாசபகவான் அவ்விடத்திற் கெழுந்தருளினர்; அவரை யெதிர்கொண் டழைத்துவந்து பொற்பீடத்திலிருத்தித் தங்கள் கருணையாலும் கண்ணன் சகாயத்தாலும் பல அரசரையும் வெற்றிகொண்டு பெரும்பொருட்குவியல் கொணர்ந்து வேள்விசெய்யத் தொடங்கச் சித்தமாயிருக்கின்றேன், தேவரீர் அதை எவ்வாறு நடத்தவேண்டுமோ அவ்வாறு நடத்தலாமென்று சொல்ல, அவ்வாறே செய்கின்றேமென் றங்கிகரித்து வேள்விக்குரிய ருத்துவிக்குகளை யேற்படுத்தினர். எவ்வாறெனின் சுகாமாவென்னு முனிவரை உத்காதாவாகவும், பயிலவரையும் தவுமியரையும் ஹோதாக்களாகவும், யாக்கியவல்லியரை அத்துவரியுவாகவும், சைப்பியரைப் பிரமாவாகவும், இருக்க நியமித்துத் தாமும் பிரமாகவிருக்க வொப்புக்கொண்டு அவ்விருஷிமக்கள் பௌத்திரர்களை அந்நான்கு ருத்துவிக்குகளுக்கும் கணமாகவு நியம

மித்தனர். இவ்வாறு வியாசபகவான் தமது சிஷ்யபரம்பரையோடு வைதிகச் சடங்குகளைச் செய்யச் சித்தமாயிருந்தனர். தருமராசன் கட்டளையால் சகதேவன் எல்லாதேசத் தரசரையும் அழைத்துவரத்தக்க தூதரையனுப்பியதன்றிச் சகல ஆசிர்மங்களிலு முள்ள அந்தணர் முனிவர்களை யெல்லாம் அழைத்துவரவு மனுப்பினன்.

இவ்வாறாகச் செய்யத்தக்க காரியங்களைச் சித்தப்படுத்தித் தன் தமையனிடத்தேசென்று தேவரீர் கட்டளையின்படி சகலமும் சித்தமாயினதென்று சகதேவன்சொல்ல,தருமராசன்தவுமியாசாரியரையும் வியாசபாகவான்முதலியரையும் வணங்கிநின்று வேள்விக்குச் செய்யவேண்டுவனவாகிய வேதவிதிகளைக் கட்டளையிடவேண்டு மென்றனன். அதுகேட்டு வேதங்களே வடிவாகக்கொண்ட முனிவர்கள் புண்ணியாவசனஞ்செய்து வேள்விச்சாலையைச் சுத்திசெய்து இனி நீர் தீக்ஷையிற் பிரவேசிக்கலாமென்று சொல்லத் தருமராசன் நகுலனைநோக்கி நீ அத்தினபுரஞ்சென்று நமது பாட்டனராகிய வீட்டுமர், ஆசிரியர்களாகிய துரோணர், கிருபர், ஆசாரியகுமாரராகிய அஸ்வத்தாமா, பிதாக்களாகிய திருதராட்டிரமகாராஜா விதுரமகாராஜா, தம்பிமாராகிய துரியோதனாதிகள் முதலியோரை யழைத்துவரக் கட்டளையிட்டு முனிவரைநோக்கிச் சித்தமாயிருக்கின்றனனென, அவர்களும் கேட்டைநாளில் நான்காம்பாதம் சேர்ந்த சுபமுகூர்த்தத்தில் தருமராசனுக்கு மான்றோல் போர்த்து மான்கொம்பினை இரட்சாபந்தனமாகக்கட்டி வேதவிதிப்படி தீக்ஷை செய்வித்தனர். அவ்வரசனும் அவர்களால் தீக்ஷைபெற்று வேதவித்துக்களாகிய அந்தணர் சுவத்திவாசனஞ்சொல்லிச்சூழ யாகசாலையிற் பிரவேசித்தனன். வீமார்ச்சுன ரிருவரும் அமைச்சருடன் பல தானம் வழங்கினர். இவ்வாறிருக்கப் பலநாட்டிலிருந்தும் அந்தணர் திரள்திரளாகச் சூழ்ந்துவரத்தலைப்பட்டனர். அத்தினபுரத்திலிருந்து துரியோதனன் துர்ச்சாதனன்முதலிய தம்பியருடன் வெகுகாணிக்கைகள் கொணர்ந்தான். வீஷ்மர், துரோணர், கிருபர், அஸ்வத்தாமா, திருதராட்டிரன், விதுரன், பாக்லீகன், சோமதத்தன் பூரிசிரவா முதலானோரும் உசிதமான பல பொருள் கொணர்ந்தனர். இவரை யெல்லாம் வீமார்ச்சுனர் கண்ணபிரான் முதலானோருடன் சேர்ந்து எதிர்கொண் டழைத்துவந்து தக்கமரியாதைசெய்ய ; அவர்களும் தருமராசனைக் கண்டு வேள்விக்குரியவற்றைச் சுதந்தரமாய்ச்செய்து கொண்டுவந்தனர். இவரோ யன்றிக் கர்ணன், சல்லியன், சகுனி, நம்பிமுத்தபிரான், துருபதன் முதலானோரும் தத்தம் உறவினருடன் வந்து சேர்ந்தனர். பாண்டியராசனாகிய சித்திராங்கதனும் சித்திராங்கதை பப்புருவாகன் இவருடன் வந்து சேர்ந்தனன்.இவ்வாறு வந்த அரசர்கட்கெல்லாம் சகதேவன் தக்கமரியாதைகளைச்செய்து விடுதிகள் விடுத்தான். அப்போது அவ்விந்திரப்பிரத்த நகரம் யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நால்வகைப்படையால் நிரம்பி கடல்போன்று ஒல்லென் றொலித்து ஒலிமிக்கது. இதுவே திருமால் வயிற்றில் எல்லா வுலகமு மடங்கி யிருப்பதுபோல் விளங்கிற்று. வந்த அரசர்களெல்லாம்பல ரத்தினங்களைக் காணிக்கைகளாகக் கொணர்ந்து கொடுத்துத் தருமராசனைக்

கண்டு பெருமகிழ்சிறந்தனர். அத்தருமராசனே பலராலும் சூழப்பட்டு வானி லுள்ள பல ராசிகள் நெருங்கியிருக்கும் பூரணசந்திரன்போல் விளங்கினன். அவ்யாகசாலையி னோர்புறத்தே வேதகோஷ்டமும் மற்றொரு புறத்தே வித்வ சனங்களின் பிரசங்ககோஷ்டமும்,ஒருபுறத்தே வந்தியர் பாடுமோசையும்,ஒரு புறத்தே பஞ்சக்கருவிகளாகிய மிடற்றுக்கருவிமுதலியவற்றினோசையும்,யாண் டும் நெருங்கித்தோன்றிற்று,இப்படியான வேள்வி இராசசபையில் தருமராசன் விதுரனைநோக்கி, நீர்ரசவர்க்கங்களும் சகல வஸ்துகளு மெடுத்துக்கொடுத்து வாருமென்றும், அஸ்வத்தாமாவையும், சஞ்சயனையும் வந்த அந்தணரை விசா ரித்துவரவும், சாத்தகியையும், யுயிச்சாவென்பனையும்,வீமசேனனையும்மடைப் பள்ளியில் உணவுக்குரிய பொருளை விசாரிக்கவும், வீஷ்மத்துரோணரைமேல் விசாரணைசெய்யவும், துச்சாதனனைப் பந்தி விசாரிக்கவும், கிருபரை வரிசை யாக வரும்பொருளை வாங்கிவைக்கவும், சகுனி வேள்விக்குரிய நெய் முதலிய பொருளைக்கொடுக்கவும் கட்டளையிட்டனர். அவரவரும் தத்தமக்கிட்ட காரி யங்களை ஊக்கமொடு செய்துவந்தனர். குந்தி சுபத்திரை துரோபதைமுதலிய மாதர்கள் வேள்விக்குவந்த அந்தணர்,அரசர் வைசியர் சூத்திரரென்னும் நாற் குலமாதருக்கும் வேண்டிய உபசாரஞ் செய்துவந்தனர். கண்ணபிரான் அந் தணரைப்பூசிப்பதைத் தன்றொழிலாகவேற்றுக்கொண்டனன். நகுலன் அடை காய்முதலிய பொருளைக் கொடுத்துவந்தனன். இதனால் எவ்விடத்தும் இவ் வாறு நடந்ததில்லை யென்று சொல்ல விளங்கிற்று; அவ்வடிசிற் சாலையிற் கொடுங்கோள் கொடுங்கோள் என்றும், உண்ணுங்கோள் உண்ணுங்கோள் என்றுஞ்சொல்லும் பேரொலியே யெங்கும்பரந்தது.

இவ்வாறு இராசசூயம் நடக்கையில் இருத்துவிக்குகள், காருகபத்தியம், ஆகவனீயம், பக்ஷாக்கினி, சப்தியாக்கினி, ஆவசதாக்கினி, தாரியாகி யென் னும் அறுவகை அக்கினியையும் வளர்த்து ஆகுதி செய்துவந்தனர், அந்தணர் களிற் சிலர் வேதபாராயணஞ் செய்துவந்தனர். இவ்வேள்வியால் சுரரும் பூசுரரும் பெருங்களி சிறந்தனர். இவ்வாறிருக்கச் சுத்தியையென்னும் ஒரு வகையாகச் சடங்குசெய்ய நாள் வந்துவிட்டது. அப்போது நாரதர் வியாசர் முதலிய முற்றத்துறந்த முனிவரும் அந்தணரும் அரசரும் பலரும் நிறைந் திருந்தனர். அச்சபையில் நாரதர் இவ்வகைப்பட்ட சபையை உலகிலெங்குங் கண்டதில்லை இச்சபையில் பூபாரந் தீர்க்கவந்த பெருந்தகையாகிய கண்ண பிரானும் துஷ்டநிக்கிரகமேன் இன்னுஞ் செய்யாதிருக்கின்றனனென்று நினைக் கக் கண்ணபிரானும் அக்கருத்தறிந்து தான் புன்முறுவல் செய்தனன். இவ்வா றெழுந்தருளியிருக்கும் கண்ணபிரானை நோக்கிக் கடவுட் டன்மையுடையா னென்பதிவற்கே சாலுமெனச் சிலர் சொல்லலாயினர். தருமராசனும் கண்ண பிரானது பெருங்கருணைததும்புந் திருமுகங்கண்டு தாம்மேற்கொண்டசெயலை மகிழ்ந்து களிப்பென்னுங் கரையிலாக் கடலிலாழ்ந்தனர். கண்ணபிரானும் அவரவர் எண்ணியாங்கு கடைக்கண்ணாற் பார்த்துக்கொண்டிருந்தனர். இது கிடக்க;

சிசுபாலவதம்.

இச்சபையில் அன்று சுத்தியையென்னும் வேள்விச் சடங்குசெய்கையில் பிராதச்சவனம் மாத்தியச்சவனமென்னு மிருகாலச்சடங்குகளு முற்றுப் பெற்றுச் சாயங்காலச் சவனமென்னுஞ் சடங்குதொடங்குகையில் தீக்ஷிதராயுள்ள தருமராசனைநோக்கி வீட்டுமர் இப்போது சபையில் அவ்வவ்வருணத்தாரையும் பூசிக்கவேண்டியதனுல் நீஅர்க்கபாத்திய முதலியவற்றைக்கொண்டுவந்து நடத்துகவென்று கட்டளையிட, தருமராசனும் பூசாவஸ்துக்களைக் கொணர்ந்துகோட்டியினெய்தி வீட்டுமனைநோக்கிகுருகுல பிதாமகனே! நான் யாருக்கு அக்கிரபூசை செய்யவேண்டும் கட்டளையிடுகவென்றனன். வீட்டுமரும் எவன் அநேககோடி நக்ஷத்திரங்களுக்கு நடுவில் சோடசகலையையுடைய பூரணசந்திரன்போலவும்,நவக்கிரகங்களுக்கு நடுவில் ஆயிரங்கதிர்பரப்புஞ் சூரியன்போலவும் விளங்குகின்றவனே; எவன் ஆற்றல் கல்வி அறிவுமுதலியவற்றுற் சிறப்புற்றிருக்கின்றவனே; எவன் எல்லா நற்குணங்களுக்குமிருப்பிடமானவனே; எவன் துணையால் இப்பெருவேள்வி அனுயாசமாய் நடத்தப்பட்டதோ அப்படிப்பட்ட வாசுதேவனுக்கே அக்கிரபூசை நடத்தவேண்டுமென்றனர். அதைக்கேட்ட வியாசபகவானும் 'வார்த்தை பதினுயிரத்தொருவர்' என்றபடி, இவ்வீட்டுமர் சொன்னசொல்லே மேம்பாடுடையதென்று அவருக்குச் சார்பாகச்சொல்லினர். தருமராசனும் சகதேவனை யழைத்துப் பூசாதிரவியங் கொணரக் கட்டளையிட்டு அக்கண்ணபிரானிடஞ்சென்று அவர் பாதபுண்டரிகத்தை ஓரழகிய பொற்பீடத்திலிருத்தித் தூய நீராலாட்டி வாசங்கமழும் மலர்மாலைபுனைந்து தூப தீப நைவேத்தியஞ்செய்து கண்களில் ஆனந்தபாஷ்பம் பொழிய நின்றனன். அதைக்கண்ட முனிவரும் அந்தணரும் சாலக் கழிமகிழ்சிறந்து வீட்டுமனையும் தருமராசனையும் புகழ்ந்தனர். துர்க்குணமே குடிகொண்ட அரசரிற் சிலர் பொறாமை மேற்கொண்டு உள்ளம் வெதும்பி யொன்றும் உரையாடாமற் பதுமைபோல் நின்றனர். சகதேவனே கண்ணபிரானுக்கு அக்கிரபூசை செய்ததைநோக்கிப் பொறாமை கொண்டாரைக் குறிப்பினுணர்ந்து நீவிரோன் பொறாமை மேற்கொண்டீ ரென்றனன். அதைக்கேட்ட சிசுபாலன் பிறந்தது தொடங்கிக் கண்ணபிரானிடத்தே நெடும்பகை பூண்டோனுதலால் மனங்கன்றி முகங்கறுத்துக் கண்சிவந்து உதடுதுடிப்பச் சபையினை நோக்கி அரசவையில் அக்கிரபூசைக் குரியவனுவான் பொதுவர் மனையில் வளர்ந்தவனே; உருவளர் காமன்போலு மொண்டிற லமைந்த அரசரில் ஒருவருமிலரோ! இச்சபையிற் பல அரசர் திரண்டுவந் திருக்கின்றனரோ, ஏதேனுங் குறையுளதோ வென்கின்றீர்! குறையேயுளது; இவ்வேள்வி செய்யத் தக்கார் நல்ல அரசர்குலத்திற் பிறந்தோரே யாகவேண்டும். இத்தருமராசனே பாண்டுராசன் மனைவியாகிய குந்திதேவிக்கு விபசாரத்திற் பிறந்தவன்; இவனே யாககர்த்தாவாகச் சமைந்தான். இவனுக்குத் தருமமுபதேசித்தவனே தன் குலதருமமாகிய இராச்சியாதி பத்தியமொழிந்து தான் பிரமசாரியாகவிருந்து துரியோதனன் கையின் கீழ்ச்சோற்றிற்காகக்காத்திருப்.

பவன்; காசிநாட்டரசன் மகளை வாழவொட்டாமற் கெடுத்த மாபாவி, தன் குருவாகிய பரசுராமர் சொல்லைக் கேளாமல் அவரொடும் போர்செய்த குருத் துரோகி; இவன் தாயோ அரசர் குலப்பெண்ணுமல்லள், சாபத்தினாற் பிறந் தவள், பிள்ளைகளைப் பெற்றவழி அப்பிள்ளைகளையெல்லாம் பிறந்தபொழுதே கொன்ற பெருநீலி; இவன் தந்தையோ, எது எப்படியாயினு மாகுக, நமக்குப் போகமே பொருளென்று கருதிப் புந்திவைத்த பொல்லாக்காமி; இவனோ முழுப்பூசனிக்காயை சோற்றொடு மறைத்தாற்போல வேடங்கொண்ட ஆசாமி; இதைச் சரியென்று சார்பாகப் பேசினவனோ் வலைய னீன்ற மாதுசிரோன்மணி மைந்தன்; அக்கிரபூசையை யேற்றுக்கொண்டவனோ வெண்ணெய் தயிர் பால் களவி லருந்திக் கரவால் ஆயர்மாதரைப் புணர்ந்த கள்வன்; இப்படிப்பட்டவர் சேர்ந்த சபையில் எவ்வாறு அரசர்களுக்கு அக்கிரபூசை கிடைக்கும்? என் றும் சொல்லி வீட்டுமனைநோக்கி, நீ அரசர்பெருமா னென்றும் மிக்க மேதாவி யென்றுஞ் சொல்லப்பட்டிருந்தும் அக்கிரபூசைக்குத் தகாதானை அக்கிரம மாக நியமித்தனை; இதுவரையும் மேதாவியென்று நினைத்திருந்தேன். இப் போதோ உன்னறியாமை வெளிப்பட்டுவிட்டது, உன்னைப்போலு மறிவில்லா தானை நானெங்கும் கண்டதுமில்லை கேட்டதுமில்லை, ஆயினும் மூப்பு மேலிட்டமையால், புத்திமாறிப் போய்விட்டதுபோலும். இவ்விடையனுக்கு அக்கிரபூசை வாய்த்தது அதிர்ஷ்டவசந்தான். நீதான் மதிமயங்கிக்கூறினும் இச் சபையிலிருந்த அறிஞரும் ஊமைபோ லிருந்துவிட்டனரோ; அவர்களுக்கும் மதிமயக்கமுண்டாயிற்றோ! அன்றி அவ்விடையன்தான் மதிமயக்கிவிட்டானோ என்றுசொல்லிவிட்டுப்பின்பு தருமராசனைநோக்கி நீஇச்சபையையுற்று நோக்க வில்லைபோலத்தோன்றுகின்றது, அப்படியாயின்சோமசூரியராக்கினியென்னும் முக்குலத்தரசர் முதலியோரைப் பார்த்திருப்பையே; பார்த்திருப்பையேல் இவ்விடையனைப் பூசிப்பையா? எப்படிப்பட்ட புத்திமான்களெல்லாம் நிறைந் திருக்கும் இச்சபையில் ஒரு மூடக்கிழவன் பேச்சைக்கேட்டுக் கூத்தாடு வையா! இவ்வள வரசரையெல்லா மவமானம்பண்ணுவையா? இது தகுமா? நீ அறிவிற் சிறந்தவனென்று பெயர்பெற்றது இன்றுதான் அடியோடே போய் விட்டது. நீ பூசித்ததனால் அவன் குலத்திலுயர்ந்தனனா! குணத்திலுயர்ந்த னனா! செல்வத்தி லுயர்ந்தனனா! சிறப்பி லுயர்ந்தனனா! எதிலுயர்ந்தனன். உனக் கொருவகையிலும் உயர்வில்லாத ஒரு அற்பன்விஷயத்தில் 'மதிப்புண் டானதெப்படி? மன்னர் மகுடவர்த்தனர் பட்டவர்த்தன ரெல்லாருமிருக்க இராச்சிய பட்டாபிஷேகமில்லாமல் திரிகிறவனுக்கு வெகுமானம்வந்தது கால சுபாவமென்றே தோன்றுகின்றது. வயதிற் பெருமைநோக்கினால் அவன் தகப் பன்வசுதேவ னிருக்கின்றான். ஆப்தபந்துவைநோக்கினாற் பாஞ்சால னிருக்கின் றான். ஆசிரியரைநோக்கினால் துரோண ரிருக்கின்றனர். முனிவரைநோக்கினால் வியாசமுனிவ ரிருக்கின்றனர். குலவிருத்தனைநோக்கினால் வீட்டும னிருக்கின் றனன். போராற்றலைநோக்கினால் அசுவத்தாமா விருக்கின்றனன். இன்னும் ஏக லைவன், பகதத்தன், செயசேனன், பிருகற்பலன் முதலானோர் இருக்கின்றனர். நீ என்னகாரணத்தால் இக்கன்னங்கரியனைப் பூசித்தாய்! இன்னும் உறவினரா

யுள்ள பாண்டியன், சல்லியன், பாக்லிகன் முதனுலோரும் இருக்கின்றனரே! கர்ணனை மதியாமைக்கு என்னகாரணம்? எனக்கவனிடத்திலிஷ்டம் அவனையேபூசிப்பேனென்பையேல் அதற் கிவ்வாறு பல தேசத்தரசரை வருவித்துச் சபையில் அவமானஞ்செய்வானேன்? நீயோ, யாவரும்பயந்து திறைப்பொருள் கொடுத்ததாகச் செருக்குற்றிருக்கின்றனே! அவ்வாறு நினைக்கவேண்டாம். நீயோ தருமநெறி பிறழாமைபற்றித் திறைகொடுத்தனர். அன்றேல் இங்கேவந்த அரசருக்கு நீ யெம்மாத்திரம்! இவனுல் நீ அரசரிடத்தி லெல்லாம் பெரும்பகை தேடிக்கொண்டனை! இவ்வாறு செய்வதனுல் உனக்கு மிகவிரைவிற் கேடுவரும். உன் குலத்திற்கேற்ற புத்தியையே தேடிக்கொண்டனை! ஒருகுணமு மில்லாத அற்பனைப் பூசித்ததனுற் றக்கபயன் விரைவிற் கிடைக்கு மென்றனன்.

பின்பு கண்ணபிரானைநோக்கி அடாகிருஷ்ணு! நீ இப்படிப்பட்ட மகாராசர்கள் கூடியிருக்கிற சபையில் அச்சமின்றியும் உன்குலம் ஒழுக்கமுதலியவற்றைச் சிறிதுமெண்ணுமலும் அக்கிரபூசனை யேற்றுக்கொள்ளலாமா! உலகத்தில் ஒருவன் தனக்குத் தகாதவற்றை யடைவதனுல் அவனுக்கு அவமானமேயல்லது வேறின்றே! நீ அக்கிரபூசை பெறுவது நகைக்கிடமென்றே யறியாமற் போயினையே! துரியோதனன் முதலியோர் விலாப்புடைக்க நகைக்கின்றனரே! இச்சபையானது பாண்டவரும் வீட்டுமரும் நீயுமிருக்கத்தக்கதல்லது வேறு அரசரிருக்கத் தக்கதல்லவே, என்று சொல்லிவிட்டு மற்றையரசரைப்பார்த்து நீங்கள் இச்சபையிலிருப்பது தகுதியல்லவென்று தான் திடீரென்றெழுந்து ஆசனத்தைவிட்டுச் சபைக்குப் புறம்பேசென்றான். அப்போது தருமராசன் அவனைப் பின்றொடர்ந்துசென்று இறுகப் பிடித்தணைத்து அப்பா! நீ கோபிப்பது தகுதியன்றே! பொருமையாலும் அறியாமையாலும் செருக்காலும் வாயில்வந்தபடி பேசுவது அறிவுடையோர்க் கழகன்றே! நீ நிந்தித்தபடி, மற்றையோர் இவ்வாறு வியாசபகவானையும் வீட்டுமரையும் பல்லைத்திறந்துவைதுகூறுவரோ! எங்கேனும் அவர்களை அறியாதவனொருவருஞ் சொல்லத்துணியார். நீ யாராரைப் பெரியோரென்றும் அறிஞரென்றும் நினைத்துப் பேசினையோ அவரெல்லாம் வீட்டுமரும் வியாசபகவானும் சொன்னது சரியென்றும் கண்ணபிரானே அக்கிரபூசைக் குரியா னென்றும்சொல்லுவர். உனக்கு மாத்திரமேன் வீண்கோப முண்டாயிற்று. நமது புத்திக்குத் தக்கதாக அவர்கள் சொன்ன ஞாயம் சரியாகாமற்போயினுல் நம்முடைய வாயைமூடிக்கொண் டிருக்கவேண்டும். ஆகையால் வேள்வி முடிகிறவரையும் சும்மாவிருந்து பின்பு களிப்புடன் உன்னுட்டுக்குச் செல்லென்றனன்.

இவ்வாறிருக்கையில் வீட்டுமர், தருமராசனைநோக்கி நீ இவனுக் குபதேசஞ்செய்வதிற் பயனென்ன! செவிடன்காதிற்குச் சங்கோசை யென்ன பயன்? திருமகள் கேள்வனுகிய கண்ணபிரானுக்குச்செய்த அக்கிரபூசையை நோக்கிப் பொருமை மேற்கொண்டு கொதிக்கின்றானே! உலகத்தில் அரசருக்குத் தக்க தருமமொன்றுண்டு. எவன் போரில்வென்று ஒருவனைப் பிராண

னேடு விட்டுவிடுகின்ருனே அவனுக் கவன் குருவாகின்ருன். இப்புவியில் இக் கண்ணபிரானுல் வெல்லப்படாதார் ஒருவருமிலர். இச்சிசுபாலனும் உருப் பிணி திருமணத்தில் வெல்லப்பட்டவனேயன்ருே! அதையும் சிறிதும் நினை யாமல் குதிக்கின்ற இம்மூடசிரோமணிக்கு இதோபதேச முதவாது. இவனே குருத்துரோகி யாகின்ருன், யான் கண்ணனுக்கு அக்கிரபூசை செய்யலா மென்பதை எல்லாவரசரு மொப்புக்கொண்டனர். இக்கண்ணனைச் சாதா ரணமாகச் சிறந்தவனென்று சொல்லிவிட்டேன். இனி இவன் மண்ணுலகத் திற்கு மாத்திரமேயன்று எல்லாவுலகத்திற்கு முழுமுதற்பொருளென்பது வேத வொழுக்கமென்றே யெடுத்துக்காட்டுவேன். இவன் புகழை யெடுத்துச் சொல்ல அனந்தனுலும் முடியாதே. இவனுடம்பிலேதான் சகல சராசரங் களு மடங்கியிருக்கின்றன. இவனிடத்திலேதான் யாவுந் தோன்றுகின்றன. எல்லாப்பொருளின் சத்தியும் அதிசயமும் இவனுடையவே! இவன் பெரியோ ராசாரம் பாதுகாவாமல் நிலத்தில்வீழ்ந்த நெல்லிக்கனிபோற் குதிக்கின்ருனே! இவ்வாறிருக்க இவனுக்கு நீ சமாதானமுஞ் சொல்லவேண்டுமோ! நான் மெய் யறிவுடைய பலதவசிகளுக்குக் குற்றேவல்செய்து கேட்டபோது என்பாலிரங் கித் தத்துவஞானம் போதிக்கையில் அத்தத்துவப் பொருளிவனே யென்றும், இவன் தன் சங்கற்பத்தால் அறவொழுக்கம் உலகி னிலைநிறுத்தப் பிறந்தா னென்றும் சொல்லினர். அவர்களிடங் கேட்டிருந்தவ னுகையால் சொன்னே னல்லது தயைதாக்ஷிணியம் பயம் சிநேகம் இவற்றைநோக்கிச் சொன்னேனல் லேன். அஃதிருக்கட்டும்; சாதாரணமாய்ப் பார்த்தாலும் கண்ணனே சிறந்த வன். அந்தணருள் எவன் ஞானத்திற் சிறந்தானே அவனே பெரியோன். அரச ருள்எவன் பேராற்றலுட்சிறந்தானே அவனே பெரியோன். இக்கண்ணபிரானே அறிவுடைமையாலும் பேராற்றலாலும் சிறந்தவனேயாக விளங்குகின்றனன். அதை இச்சபையிலுள்ளார் ஞானத்தையும் வில்வித்தையும்பரிக்ஷித்தால்நன்கு புலப்படும். நாமோ தருமமாகவே கண்ணபிரானைப் பூசித்திருக்க இக்கொடி யோன் நிந்திப்பானேன்? இவன் குலகுருவா! ஆசிரியனு! அறிவுடையோனு! கர்ப்பூரவாசனை கழுதையறிய வல்லதோ! இப்பிறவிக் குருடனுக்குச் சுத்த ஞானியி னிலக்கணம் விளங்குமோ! மண் நீர் அனல் கால் வான் என்னும் பஞ்சபூதங்களும் தன் மாத்திரைகளும் மூலப்பகுதி, மான், அகங்காரம், இந் தியம், அந்தக்கரணம், இவையனைத்தும் இக்கண்ணபிரானுலேயே படைத்துக் காத்தழிக்கப்படுகின்றன. சிருட்டி திதி சங்கார மென்னும் முத்தொழில் செய் யும் மூவராயும் அம்மூவர்க்கு முதல்வனுயு மிருப்பவன் இக்கண்ணபிரானே! இவனை யல்லதுபரம்பொருள் வேறில்லை. சகல வேத வேதாந்தங்களும் இவன் புகழினையேபேசுகின்றன. வேதியர்யாவரும் இவனை நினைந்தே வேள்வியாவுஞ் செய்கின்றனர். யோகிகளும் ஞானிகளும் இவனையேதொழுகின்றனர். இச்சிசு பாலனே அறியாமையால் இக்கண்ணபிரானிடத்தே யபசாரப்பட்டனன். இப் போதேனும் மெய்மையை யுணர்ந்து அவனைத் தொழுதுவேண்டினுல் உய்தல் கூடும். நாமோ சர்வலோக நாயகனுகிய கண்ணபிரானுக்குச் செய்த அக்கிர பூசை அக்கிரமமேயன்று. இக்கொடிய சிசுபாலன் இவ்வயர்வரு மமரர்கட்

கிறைவன் சிறப்பையறிவனோ! இனி நாமென்செய்யலாம், இவ்வன் மற்றை அரசர்போல் நியாயவழி நின்று நடந்தால் நடக்கட்டும், அதற்காகச் சமாதானம் செய்தலால் என்னபயன் என்று சொல்லிமுடித்தார்.

அதைக்கேட்ட சிசுபாலன் காற்றினாலெழும்பப்பட்ட கனல்போல் கோபித்தான். அப்போது சகதேவனே சிசுபாலனை நோக்கிக் குணதோஷங்களைச் சிறிது மாராயாமல் வாளா கோபிப்பதிற் பயனென்ன? எல்லா வரசரும் முற்றத்துறந்த முனிவரும் அறிவிற்பெரியாரும் நீயும் நானும் பிறரும் நன்மையெய்த, இக்கண்ணபிரானுக்கு அக்கிரபூசை செய்யலாயிற்று. நீயோ அறியாமையாலும் பொறாமையாலும் பெரியார்ப்பிழைத்தல் இழிசனர் செய்கையெனத்துணி. மேலும், "பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற் - பேரா விடும்பை தரும்." எனப் பெரியார் பணித்தமை நீ யறியாய்போலும். நீ கண்ணபிரானது பெருமிதத்தைச் சிறிது மறியாமற் போயினும் உலகத்திலுள்ள அரசர்க்கெல்லாம் மிகுந்த பேராற்றலுடையா னென்பதனை நீ யேன் சிந்தித்தாயில்லை. நான் இப்போதொன்று சொல்லுகின்றேன். இக்கண்ணபிரானுக்கு அக்கிரபூசைசெய்தது அக்கிரமமென்பார் யாரோ அவர்கள் வில்லேந்தி யென்னொடு போர்செய்யவரட்டும். அவர்கள் தலைமேல் இன்றே என் இடக்காலைத்தூக்கி வைக்கின்றே னென்றான். இவ்வாறு சகதேவன் யாவருங் கேட்கத் தன்னிடக்காலைத்தூக்கிக் காட்ட, ஒருவரும் உரையாடாமலோவியம்போல்நின்றனர். அதைக்கண்ட மன்னர்பலர்மகிழ்சிறந்தனர். சிலர் மனவருத்தமெய்தினர். வானவர் மலர்மாரிபெய்தனர். இவ்வாறு நிகழ்வதைப் பார்த்த சிசுபாலன், கோபமூண்டு கண்கள் உதிரக்குமிழிபோற் செவந்தான். உதடுகள் பட படவென்று துடித்தன. உடலெல்லாம் வெயர்வரும்பின. தானே பிரளயகாலத்து உருத்திரன்போல விளங்கினான். அப்போது வீட்டுமர் அவ்விராசசபையை நோக்கிச் சகதேவன் சொல்லிய சொல்லோ நியாயவிருத்த மில்லாததாயும் உண்மைக்கிடமாயு மிருக்கின்றது. இதன்மேல் யாருக்கேனும் யாதேனுங் குற்றஞ்சொல்லத் துணிவிருக்குமாயினும்,அன்றித் தமது பேராற்றலைக்காட்ட மனமிருக்குமாயினும் காட்டத்தகுமென்றனர். அதற்கங்கிருந்த அரசரின் முதியோரெல்லாம் 'இது சரி இது சரியென் றுரைத்துக் கொண்டு' மகிழ்வெய்தினர். இவ்வாறிருக்கையில் தருமராசன் வீட்டுமரை வணங்கி இக்கண்ணபிரான் சரிதமும் பெருமிதமும் பலவுள வென்றீர். எனக்கவற்றை நன்கு விளக்கவேண்டுமென்று வேண்ட வீட்டுமரும் 'நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்-புல்லுக்கு மாங்கே புசியுமாம்,' என்றபடி உம்பொருட்டே பலரறிய, விளங்கச் சொல்லுகிறே னென்று சொல்லலாயினர்.

இங்கே நீருண்டமேகம்போல் விளங்கும் கண்ணபிரான் தான் வேதவேதாந்தங்களினாற் பிரதிபாதிக்கப்பட்ட பரம்பொருளென்றே துணி. அவனைத்தான், வேதசிரமாகிய உபநிடதங்கள் அவ்வியத்தமென்றும் அக்ஷரமென்றும் பராற்பரமென்றும் பிரமமென்றும் காரணமென்றும் காரியமென்றும் காரியகாரணாதீதமென்றுஞ் சொல்லாநின்றன. அவனது சொருபவிலக்கணமும்

செயலும் மனவாக்கிற்கெட்டாதன. முன்னுளில் இப்பரம்பொருள் காலாயிரம் முடியாயிரம் கையாயிரம் கண்ணுபிரமாகிய வடிவங்கொண்டு சகல பிரமாண் டங்களும் தன் மயிர்க்காலில்தோன்ற விளங்கினுன். இதனுலன்றே 'காலாயிர முடி யாயிமாயிரங்கையன்' என்முர் பெரியாரும். அக்கடவுள் சொரூபம் ஒரு வேளேயிருந்தபடி யொருவேளேயிராது. விசித்திரமாக விருக்கும். அவனுக்கு முதலிடை கடையென்பன கிடையா. அவன் எப்பொருளுக்கு மாதியாயிருப் பான். மூலப்பகுதியென்றும் மாயையென்றும் சொல்லப்பட்ட பொருளுக் கப் பாற்பட்டவன். அம்மூலப்பகுதியும்அவனிடத்தேதான் உண்டு. ஆயினும்அதிற் பற்றற்றவன். அவன் உலகைப்படைக்க நினைத்து முன்னே நீரையுண்டாக்கி அதன்மேற் கண்வளர்ந்திருந்தனன். அதனுல் அவனுக்கு நாராயணனென்ற பெயருண்டாயிற்று. இவ்வாறு அறிதுயிலமர்ந்து தன் நாபியிற் பிரமனேயும் பிற வுயிரையும் படைத்தனன். பிரளயகாலத்திலோ அவற்றை யெல்லாம் உட் கொண்டு தானெருவனுகவே யொரு சிறுபாலகனுக ஆலிலேயிற் கிடப்பன். அவ னெருவடிவாய்த் தோன்றுகையில் பாதம் புவனம், பவனம் உயிர்ப்பு, அச்சு வினிதேவர்செவி,சூரிய சந்திரர்கள்கண்,இந்திராக்கினிகள் முகம் இவ்வாறு ஒவ் வொருகடவுளரும் சராசரமும் ஒவ்வோருறுப்பாக விளங்குவர். இங்ஙனம் எல் லாந் தானேயாயும், எப்பொருளினும் உறைபவனுயும்,நின்று நாராயணனென் னும் பெயர்பெற்று முழுதும் பேரிருட்பிழம்பாக நிற்பது கண்டு தனது சங்கற் பத்தினுல் எல்லா வுலகங்களேயும் அவற்றின் வரன்முறைகளேயும் படைத்து எப்பொருட்கு மிறைவனு யிருப்பன். சனகாதிகளும் சப்தருஷிகளுமே அப் பரம்பொருளி னுண்மை யறியவல்லவர். எப்பொருளும் அவனுலே சிருட்டிக் கப்பட்டன. இவ்வாறு எத்தனையோபிரபஞ்சங்கள் அவனுலே படைக்கப்பட் டன. எத்தனையோ பிரளயங்களுமாயின. சகடக்காலேபோல பிரபஞ்ச சிரு ட்டி மாறி மாறி வரும். ஆயினும் தானே பிரமனுகிப் படைத்தும் மாலாகிக் காத்தும் உருத்திரனுகிச் சங்கரித்துவருவான். அதனுலே அரியென்று சொல் லக்கிடந்தான். அவன் எதைஎவ்வாறுசெய்யவேண்டுமென்றுசங்கற்பிப்பானே அவ்வாறே செய்துவிடுவான். யாவும் அவன் சங்கற்பமாத்திரமே நிற்குமென்று நினை. அவன் எடுத்த அவதாரங்களோ அளப்பில. அவற்றை முற்று முணர யாராலேதான் முடிவுபெறும். இவ்விறைவன் முன்னே நீரையுண்டாக்கி அதி லண்டத்தைப் படைத்தானென்றேனே! அது கோழிமுட்டையினைப்போன்று நீரின் மிதந்து நீரானிறைந்தது. அதில் தான் பிரவேசித்து ஆலிலையின்கண் அறிதுயிலமர்ந்து தன்னுபியில் ஒரு தாமரை மலரையும் அதில் நான்முகக் கட வுளேயும் படைத்துப் பின்னர் அதில் அனுப்பிரவேசித்துப் பதினறு பிரசாதி பதிகளேயும், சத்தரிஷிகளேயும், கபிலமுனிவரையும், பதினெரு உருத்திரரை யும், பன்னிரு சூரியரையும், பதினன்கு மனுக்களேயும், சனகாதி முனிவரை யும், சத்தமருத்துகளேயும், அட்டவசுக்களேயும், இந்திரன் முதலிய இறைவ ரெண்மரையும், மற்றைத் தேவரையும் படைத்தனன். அன்றியும் மூலப்பகுதி யின் கல்மிஷாமிசத்தால் காதுகளினின்றும் மதுகயிடவரென்பாராகிய அசுர ரிருவரைச் சிருட்டித்தனன். அவர்கள் பேராற்றலின் மிகுதியால் செருக்குற்

றுப் போர்செய்தனர். அவர்களுடன் போர்செய்கையில் அவர்கள் கேட்ட வரத்தின்படி பொருது வென்று அவர்கள் உடலினின்றும் பெருகும் மேத சென்னும் கொழுப்பினல் மேதினியென்னும் பெயரோடுகூடிய இப்பூமியை நிலைநிறுத்தினன்.

பின்பொருகால் இவ்வுலகம் பாதலத்துள் ஆழ்ந்துபோவதுகண்டு வராக வுருக்கொண்டு தன்கோட்டினல் நிலைநிறுத்தான். அதற்கு எக்கிய வராகாவ தாரமென்றுபெயர். அவனுக்கு எக்கிய வுறுப்புகளே வடிவமாயிருந்தன. அவ் வேள்வி யுறுப்புகள் எவையெனின் நான்கு வேதங்களே நான்கு பாதங்களாக வும், யூபஸ்தம்பமே கோடுகளாகவும், வேள்விக்குண்டமே முகமாகவும், வேள் வித்தீயே நாவாகவும், இராப்பகலே விழிகளாகவும், நெய்யின் தாரையே நாசி யாகவும், சுருவையே வாயாகவும், சாமவேதகானமே சத்தமாகவும், மெய்மை யும் அறமும் சொருபமாகவும், யாகமந்திரமே என்பாகவும், பசுக்கள் முழந்தா ளாகவும், யாகசாலையே வடிவாகவும், தக்ஷிணையே இதயமாகவு மிருந்தன. இப் படிப்பட்ட வடிவத்தைக்கண்ணுற்று மார்க்கண்டேயர் சாலமகிழ்ச்சியெய்திட, சுவேதவராக வடிவெடுத்து பூமியினைத் தன்கோட்டினலேந்திப் பிறைதாங்கிய சுவேதமலைபோல் விளங்கினன். இவ்வவதாரத்தை முற்றத்துறந்த முனிவரும் தேவருந் துதித்தனர். பெரியோரும் முறைபிறழாது வேள்விகளைச்செய்தனர். இவ்வாறு காத்துப் பிரமனை இடரினின்று நீக்கியமையால் இதற்குச் சுவேத வராக கற்பமென்றுபெயர். இதற்கு முன்கற்பம் பாத்தும கற்பமென்றுபெயர். இதுபோல் பலகற்பங்கள் நிகழ்ந்தன. இப்பகவான் நரமடங்கலாகத் திருவவ தரித்ததைச் சொல்லுகின்றேன். இரணியனென்னு மசுரனெருவனிருந்தான். அவன் ஒருகால் பெருவனமடைந்து வெயில் காற்று மழை பனி இவற்றைப் பொறுத்துப் பிரமனைநோக்கிப் பதினுயிரத் தஞ்ஞூறுண் டருந்தவம்புரிந்தான். அவன் செய்யுந் தவத்தை நோக்கி மிகக்களித்து நான்முகக்கடவுள் இந்திரன் முதலிய விறைவரும் மற்றைத்தேவரும்புடைசூழ வெழுந்தருளி 'அருந்தவஞ் செய்வதொழி' 'நீ செய்யுந் தவத்தைக்கண்டு மகிழ்ந்தாம்' என, இரணியன் அப்பிரமனை மும்முறை வலம்வந்து பணிந்துநின்ருன். அவனை நோக்கி 'நீயாது வரம் வேண்டினை தருவேம்' என, அவனே தேவர், முற்றத்துறந்த முனிவர், கருடர், கந்தருவர், சித்தர், வித்தியாதரர், இயக்கர், கின்னரர், கிம்புருடர், குய்யகர், மக்கள், அசுரர், தானவர், இராக்கதர், நாகர், சிங்கம், புலி, கரடி, யானை முதலிய சேதன சேதனப்பொருளாலும், எவ்வகைப்படைகளாலும், யானிறுதி யடையாவண்ணம் அருள்செய்யவேண்டுமென்ருன். அதற்கு நான் முகக்கடவுள் நீ கேட்டவரமோ மிகக்கடினமானது, ஆயினும் 'நீ கேட்டவண் ணமே தந்தேம்' என்று விடைபெற்றுச் சென்ருன். இரணியனும் அவ்வரம் பெற்றுத் தன் பதிபுகுந்தான். அவ்வாறு வரங்கொடுத்த பிரமனை நோக்கித் தேவர்களனைவரும் இவ்வாறு அவனுக்கு வரமுங் கொடுக்கலாமா வென்று வினவினர். அதற்குப்பிரமனும் நாமென்செய்வது! தவத்திற்குத் தக்க பயன் தானே யமையவேண்டுமாதலிற் கொடுத்தேன், அதற்கும் பகவானிருக்கின்ற னன், அதற்குபாயம் அவனுக்குத் தான்தெரியும் போங்களென்றனன். தேவர்

களும்போய்விட்டனர். இப்பால் இரணியனேதான் இயல்பாற்தேவர்களுக்குப் பகைமை யுடையானுயிருந்தும் தான்பெற்ற வரத்தின் செருக்கால்தேவர்களை யும் முற்றத்துறந்த முனிவரையும் அரசரையும் பிறரையும் வருத்தத்தொடங்கி யாரையும் தன்வசமாக்கிக்கொண்டு தானே யாவருக்கும் வழிபடுகடவுளா யிருக்கவெண்ணி அவ்வத்தேவரை அவரவர் அதிகாரங்களி னின்று நீக்கித் தானே பலவுருவமெடுத்து அவ்வதிகாரங்களைச் செலுத்தித் தன்னை யாவரும் தியானப்பொருளாகக் கருதச்செய்து வேள்விமுதலிய சற்கருமஞ் செய்கை யில் அவ்வேள்விக்குரிய அவிர்ப்பாகங்களை அசுரரைத் தானே பெறச்செய்து ஒருதேவருக்கும் சிறப்புச்செய்யாதிருக்கக் கட்டளையிட்டு அவ்வாறுசெய்வ ரேல் அங்ஙனங் கண்டவிடத்தே தனக்கறிவிக்க நியமித்து வைதிகச்சடங்கு முதலியவும் தன்னைக்குறித்தே செய்ய ஆணைநடத்திவந்தான். இவ்வாறு நிர்ப் பந்திப்பதைத் தேவர்களும் முற்றத்துறந்த முனிவரும் பொறுக்க முடியாமல் ஓடியொளித்தாலும் அவர்களைத்தொடர்ந்து சென்று அசுரர்கள் அவனுணை யால் வருத்தத்தொடங்கினர்.

இவ்வாறுசெய்வதனுல் தேவர்கள்சென்று சத்தியலோகம்சென்று முறை யிட்டுக்கொண்டனர். பிரமனும் நீங்கள் அஞ்சாதொழிமின். காலம்நேரு மென்று சமாதானஞ் செய்தனுப்பினர். தேவர்களும் பிறரும் தன் கட்டளை யேற்றுத் தேவோபசாரஞ்செய்யத் தனக்கொருவரு மீடு மெடுப்பின்றி ஐந்து கோடியே அறுபத்தொருலக்ஷத் தறுபதினுயிர வருடம் வாழ்ந்துவந்தான். இனித் தேவர் முதலியவர் எவ்வாறு சிறுமை யடைந்தனரோ அவ்வாறே அறம், மெய்ம்மை முதலியன சிறுமையெய்தின, மறம் பொய்ம்மை முதலியன தலையெடுத்தன. இவ்வாறு இரணியன் செய்வதை நோக்கிப் பொருது பிர மனை முன்னிட்டுக்கொண்டு தேவர்க ளனைவரும் திருப்பாற்கடலை யெய்தி அசுரர் முதலிய தீயோர் பெருக்கமடைவதும் அமரர் முதலியோர் சுருக்க மடைவதும் முறையோவென்று வேண்டினர். அதற்கு இறைவன் தான் அறி துயில்விட்டுக் கருமுகிலானது தாமரைக்காடுபூத்து இருசுடரையும் இருபுறத் தேந்தி யேடவிழ்கின்ற தாமரைமலரி லெழுந்தருளியிருக்கும் திருவொடும் பொலிவெய்த ஓர் செம்பொற்குன்றின்மேல் வருவதுபோல் கருடவாகன மேறி அத்தேவர்கள் முறையிடுமிடத்தை யடைந்து அக்கருடனை விட்டிறங்கி நின்றனன். தேவர்களோ அச்சுத பரந்தாம அரிமுகுந்த வாசுதேவ மணி வண்ண கண்ண மாதவவென அவனுயிர நாமத்தையுந் துதித்து இறைவனே! உன்னையன்றிப் புகலறியோம்! எம்மைக் காத்தருளவேண்டுமென்று வணங் கித் தங்குறையை யெடுத்துக்கூறினர். அதற் கிறைவன் நீங்கள் வந்தகாரியம் தெரியும், இரணியன் செய்யும் தீமைகளோ அளவில, அவனை நாமே கொல்ல வகைதேடுகின்றேம், நீங்கள் போங்களென்று சொல்லத் தேவர்களும் அவ் விறைவனிடத்தே விடைபெற்றுச் சென்றனர். இது நிற்க ;

இனி அவ்விரணியனுக்குப் பிரகலாதனென்னும் பெருந்தகை மகனுகப் பிறந்தான் ; அவன் பிறந்தது முதல் எப்போதும் இறைவன் பாதத்தைச்

சிந்திப்பதும் பூசிப்பதுமாக விருந்தனன். அவனுக் கைந்து வயதாகவே சுக்கிர பகவான் பெற்ற சண்டமார்க்கரைக் கொண்டு கல்வி கற்பிப்பானுயினுன். அவனே இரணியன் ஆணையின்படி அவனையே பரம்பொருளென் றெடுத்துச் சொல்லப் பிரகலாதன் அவன் சொல்லிய சொற்களைப் பூருவோத்தர விருத்த மெனக் கண்டித்து அமலனுதிப்பிரானே பரம்பொருளென்று சித்தாந்தஞ் செய்து காட்டித் தன்னெடு கல்விபயிலுஞ் சிறுவரையும் தன்னேடொப்பச் செய்துவிட்டான். அதை யறிந்த போதகாசிரியன் 'கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன்,' நாம் நிகழ்வதை அரசனுக்குத் தெரிவிப்போமென்று பிரகலாதன்செய்தி யனைத்தும் இரணியனுக் கறிவித்தான். இரணியனே பிரகலாதனுக்கு இன்சொல்லாகவே அவ்வாறு சொல்லாதை! உனக் கவ்வாறு கற்பித்தார்யார்? என்று வற்புறுத்திக்கேட்க, பிரகலாதன் சிறிது மஞ்சாமல் ஆலிலையி லறிதுயிலமர்ந்த அமலனுதிப்பிரானே பரம்பொருளென்று சித்தாந் தஞ்செய்ய, இரணியன் பொறுமல் தன் போர்ச்சேவகரை நோக்கி இவனைக் கொலைசெய்து விடுங்கோளென் றனுப்ப, அவர்கள் பாம்பைவிட்டுக் கடிப் பிடித்தும், யானையின்காலி லிடரச்செய்தும் பின்னும் வேண்டுங் கொடிய செயல்களைச்செய்தும் சாகாமையைக்கண்டு, அதிசயமடைந்து தமதரசனுக் கறிவித்தனர்.

இரணியனே மகனைக் கூவியழைத்து, அடா பிதுர்த்துரோகி! பிஞ்சிற் பழுத்தாற்போற் பேசுகின்றனையே! 'நீ சொல்லும்அவன் எங்கிருக்கின்றான்' காட்டு என்றுசொல்ல 'அவனே,சர்வவியாபி, சர்வவியாபகன்' அணுவினைச் சதகூறிட்டு அங்குபார்க்கையிலும் அங்குமிருப்பன்என்றுசொல்ல,ஆயின் 'இத் தூணிலுமிருப்பனே' என, ஆலவிடம்போற் கொதித்துத் தன்காலாலருகிருந்த தூணையுதைத்தான். அப்போது இறைவன் அழகிய சிங்கனுகத்தோன்றிப் பிறை போன்ற பற்களும், பேழைபோன்ற வாயும், பரந்தமுகமும், அனலைச் சொரி யும் விழியுமாக வெளிப்பட்டுத் தன்னைத் துதித்துநிற்கும் அன்பனை நீ யஞ்ச வேண்டாமென் றபயமளித்து நிற்க, இரணியனே வாள் கைக்கொண்டு போர் செய்ய வந்தான். அவனெடு போர்செய்துகொண்டே காலஞ்சமீபித்ததென்று பகலிரவுக் கிடையாகிய அந்திப்போதில் வீட்டிற்கு வெளியாகிய வாயிற்படி யில் அவனை யீர்த்துக்கொண்டு வந்து தன் தொடைமேற் கிடத்தித் தன் நகங் களால் அவனுடம்பைப் பீறிக்கொன்று பிரகலாதனுக் கசுரராச்சிய மளித்து இந்திரன் முதலிய தேவர்களுக்கும் அவரவர் பதங்களைக்கொடுத்து எல்லா வுலகத்திற்கு மிருந்த துன்பந்தவிர்த்து அறத்தினை நிலைநாட்டினுன்.

இனி இப்பிரகலாதன் மகன் விரோசனன் என்பவன் ஒருவனிருந்தான். அவனுக்கு மாபலியென் ெறுருவன் பிறந்தான். அவன் மகாசூரன்; கற்பக மூர்த்தனக்கு நானுங்கையை யுடையவன். அப்படிப்பட்ட அசுரன் தன் பரி வாரத்தொடுகூடி சுவர்க்கலோகஞ்சென்று போர்செய்து இந்திரனைப் புறங் கண்டு அவனைத் தன்னரசினின்றுந் துறத்திவிட்டனன். அவனல் இந்திரன் முதலிய தேவர்கள் வருத்தமெய்திப் பிரமனையழைத்துக்கொண்டு பாற்கடலை

யடைந்து இறைவனைத் துதிசெய்து நின்றனர். அவர்களுக்கு இறைவன் பொன்னிறப்புள்ளிவர்ந்து தோன்றி நீங்களொன்றுக்கு மஞ்சாதீர். நாம் காசிபருக்கு அதிதிவயிற்றில் இந்திரனுக்குத் திருத்தம்பியாகிய உபேந்திரனாய்ச் சிறுகுறளாகத்தோன்றி மாபலியைவென்று உங்களைக் காக்கின்றோமென் றுறுதிமொழி கூறிமறைந்தனன். தேவர்கள் தத்தம் பதமடைந்தனர். நான்முகக்கடவுளும் சத்தியலோகஞ் சென்றனன். மாபலியோ மூவிதவுலகமுஞ் செயங்கொண்டு யாவரையும் தன்னடிக்கீழ்க் குற்றேவல் செய்யச் செய்துகொண்டு சக்கரவர்த்தியென்று சொல்லப்பெற்று அசுவமேதஞ்செய்ய முயன்று அவ்வேள்விசெய்யத்தொடங்கினான்.

இறைவனோ காசிபருக்கு அதிதிவயிற்றில் உபேந்திரனாகி ஆலமர்வித்தினருங்குறளாய்த்தோன்றி முப்புரிநூலும் முஞ்சியுமுடையானாய் வேதமோதிக்கொண்டுஅனலேந்திய கையுடையனாயும் அற்புதப்படிவமுடையனாயும் அற்புதராகிய யோகியர் அறியும் தன் சிற்பதமாகிய பரஞானமொப்பதோர் படிவங்கொண்டு அம்மாபலியினது வேள்விச்சாலையை யடைந்தான். அவன் வந்ததையுணர்ந்த மாபலி வியந்து எதிர்கொண்டு அழைத்துச்சென்று இருக்கையுதவி நின்னினும் சிறந்த அந்தணரில்லை என்னினு முயர்ந்தார் யாவரொன்று முகமன் கூறிநின்றான். அவனைநோக்கி வேண்டினார் வேண்டியாங்குதவி நீண்டகையையுடையானே! நின்பாலடைந்தவரே மாண்புடையரன்றி யேனையோர் மாண்பிலரல்லரொன, மாபலி சிந்தைமகிழ்ந்துயான் செயத்தக்கது யாது? சொல்லவேண்டுமென் றிரந்துவேண்ட,அதைக்கேட்ட நீலநிறத்துச் சிறுகுறளாய்வந்த நெடுந்தகை எனக்கு மூவடிமண்ணருளவேண்டும், அவ்வாறு அருளுவதுண்டேல் அதுதான் யான் பெறவேண்டுவதென்று வாய்திறந்து சொல்லாமுன்னமே, தந்தேனென்று சொல்லிநின்றான். அதை யருகிலிருந்துகேட்ட வெள்ளியாகிய சுக்கிரபகவான் 'ஈவதுவிலக்கேல்.' என்னும் நீதிமொழி யறிந்திருந்தும் சிறிதுமறியாது நின்று அரசனைத்தடுத்து இதை நோக்குமிடத்து இது கைதவமல்லது மெய்யன்று, இவன் சாதாரணமாகச் சிறுகுறளென்று எண்ணவேண்டாம், அண்டமு முற்றுமகண்டமு மேலொளி லுண்ட நீலநிறத்து நெடுந்தகையே யாகும். நினக்கில்லா வகையென்பது நிமிரவந்து தனக்கியலா வகைதாழ்வது என்றுந் தாழ்வில்லாத கன்னங்கரிய கருமுகில் வண்ணத்துப் பரம்பொருளாகிய ஆதிபகவனது கைத்தலமே யாயின் எனக்கு இதனினு மேலாகிய நலம்பெற்றுள்ளவர் யாவர்! நூலோர் வகுத்தவகை இவர் பகைவரொன்றும் இவர் நட்பினரொன்றும் சொன்னாரிலர்; தன் முன்வந்தேற்றவர் உயர்ந்தாரே யாயினும் தானம்வாங்க விரும்பினோர் கொள்ளவேண்டும், உயர்ந்தவர் கொள்ளவேண்டுமென்ற பக்ஷத்தில் இவனளவு மேலோராவார் யாவரிருக்கின்றனர். நீ வெள்ளியென்னும்பெயர்கொண்டும்வெள்ளறிவுடையனாகிய தன்மையால் இவ்வாறு சொல்லலாயினை! மேலோர் வள்ளியராக வழங்குவதே யல்லது எள்ளத்தக்கது யாது! இனிய உயிரையே யாயினும் ஒருவன் 'ஏற்பதிகழ்ச்சி.' என்றபடி ஏற்பதுவே தீது, 'இயல்வதுகரவேல்.' என்றபடி இயல்வதை யளிப்பதே நல்லது, உலகத்தில் மாண்டவர்கள் என்று சொல்லப்

படுவோர் மாண்டவரேயல்லர், மாயாமல் ஏந்திய கைகொண் டிறந்தவரே மாய்ந்தவராவர்; ஏற்போர்க்கு இல்லை யென்னுமற் கொடுத்தவரே மாயாதார், கொடாதவரே மாய்ந்தோராவர்; அடுத்துநின் றரும்பழி செய்தவருமல்லர், கொடுப்பவர் முன்புசென்று கொடுக்கவேண்டா மென்று தடுப்பவரெவரோ அவரே பகைவரெனப்படுவர். அவரே தம்மைக்கெடுப்பவரை யொப்பாவர், அதனினும் பெரியதோர் தீங்குசெய்வார் பிறரில்லை. வேதமுதலிய ஆப்தகலை களில் தம்மிடத்திற் செல்வமுண்டான காலத்திலே தம்மிடத்திலுள்ளதை யேற்போர்க்கு இட்டு இசையெய்த முயன்றவர் எவரோ அவருக்குப் பகையாய் நிற்பது உலோபமென்று சொல்லுவர், அதையே மேலோர் விட்டுவிடவேண் டுமென விலக்கியிருக்கின்றனர்; ஆகையால் தன் கையிலுள்ள பொருளை யெடுத்துஒருவருக்கு ஈய வுத்தேசிப்பதற்கு முன்னமே தடுப்பது உனக் கழகா குமோ !பெருமையில்லாத வெள்ளியென்னும் பெயரையுடைய சுக்கிரனே! கொடுப்பதை விலக்குங் கொடியவனே! "கொடுப்ப, தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ முண்பதூஉ மின்றிக்கெடும்."—எனப் பெரியோர் கூறுதலால் நின்சுற்றத்தார் உடுப்பதுவும் உண்பனவு மற்றுப்போவாரே யாய்விடுவரென்று இவ்வாறெல்லாம் எடுத்துச்சொல்லி அவன் சொன்னதைச் சிறிதுங்கேளாமல் மூவடி நிலத்தை யளந்து கொள்ளென்று சொல்ல இறைவனே தன் குறிய கையினீரை வார்த்தான்.

அத் தாரைநீரேற்ற பெருந்தகை உலகமெல்லாந் தன்னுள்ளடியி லடக்கி வானையு மோரடியாலளந்து மற்றோரடியால் மாபலியைப் பாதலத்திற் போக்கி இந்திரனுக்கு அவனிழந்த பத மீட்டுங்கொடுத்துத் தான் பாற்கடலி லறிதுயி லமர்ந்தான். இறைவன் வானத்தில் தன் தாளைநீட்டிய காலத்தில் அண்டச் சுவர் பிளந்து அதைச்சூழ்ந்திருந்த நீர் அப்பிளப்பின்வழியே யொழுகிச் சத் தியலோகத்தி லிழிய அதைநான்முகக்கடவுள் முதலானோர் பாததீர்த்தமாகக் கொள்ள அது பின்னும் பெருகிச் சுவர்க்கலோகத்திற் சென்று பாய்ந்து சுரநதி யென்றும் மந்தாகினி யென்றும் சொல்லக்கிடந்தது. இவ்வாறு இறைவன் மூவடியால் உலகத்தை யளந்தமையால் திரிவிக்கிரமனென்று சொல்லப்பட்ட னன். இது கிடக்க;

பின்னொருநாள் வேதங்களும் வைதிகச் சடங்குகளும் வேள்விகளும் மெய்மை கருணை பொறுமை தானம் தவம் முதலியவையும் தலையெடுக்காமல், அதருமந் தலையெடுத்து அதனால், உலகம் வருந்தியகாலத்தில் இவ்விறைவன் அத்திரி முனிவனுக்குக் குமாரனாய்த் தத்தாத்திரேயனெனத் திருவவதரித்துத் தலையெடுக்காதிருந்த வைதிகச் சடங்குகளை யெல்லாம் நிலை நாட்டினான். இத் தத்தாத்திரேய ரிடத்தே. கேகயதேசத் தரசனாகிய கார்த்தவீரியன் பல நாள் குற்றேவல்செய்து வந்தான். அதற்கு அம்முனிவர் மகிழ்சிறந்து உனக் கென்னவரம் வேண்டுமென்ன அவன் எனக்காயிரங்கைக ளுண்டாகவேண்டு மென்றும், மனிதர் முதலாகிய சேதனா சேதனப் பொருள்களும் என்னாணை யில் நடக்கவேண்டுமென்றும், அந்தணர்களெல்லாம் மகிழ யான் வேள்வி பல செய்து வரவேண்டுமென்றும், மூவித வுலகத்தினும் என்னினுமிக்கானெவனோ

அவனுற் கொல்லப்படவேண்டு மென்றும் வேண்டினன். அவர் அவ்வாறே யனுக்கிரகிக்கக் காத்தவீரியன், அவ்வரம்பெற்று மிக்க சிறப்பையடைந்து இந் நாவலந்தீவேயன்றி யெல்லாத்தீவுகளேயும்வென்று,யாரும் அறநெறியினின்றும் கடவாமற்செய்து நான்குருவெடுத்து ஒன்றால் அரசாண்டும்; மற்றொன்றால் சேனைகளைக்காத்தும், இவ்வாறே,ஒன்றால் வேள்வி முதலியவைதிகச் சடங்குகளை நடத்தியும்,பிறிதொன்றால் தான் அந்தப்புரத்தே மாதர்போக மனுபவித் தும்வந்தான். இவன் அரசாண்டு வருகையில் தன்னாலும், பரிசனத்தாலும்,கள்வராலும், விலங்குகளாலும், பயமில்லாதிருந்தன. இவ்வாறு சகலசம்பத்துகளை யும் தத்தாத்திரேயரது பெருங்கருணையாற்பெற்று பத்துலக்ஷம் ஆண்டு மாகிஷ் மதிநகரத்திலிருந்துஅரசாண்டுவந்தான். இவனே பெருஞ்சிறப்பெல்லா மடைந் திருந்தான். அவற்றி லொன்று சொல்லுகின்றேன் இக்காத்த வீரியன் கடலில் நடந்து செல்வானாயின் அவன் எவ்வளவுதூரஞ் சென்றாலும் அக்கடல்பயந்து முழங்காலளவாகவே யிருக்கும். இப்படி யரசாண்டுவருங்காலத்தில் இவ்விறைவன் பிருகுமுனிவர் வமிசத்தில் சமதக்கினி முனிவனுக்கு இராமனென்ன என்குருமூர்த்தியாக அவதரித்தான். அவன் மழுவைத்தரித்தமையால் பரசுராமனென்று சொல்லப்பட்டான். அப்பரசுராமன் தந்தையாகிய சமதக்கினி தவஞ்செய்துகொண் டிருந்தான். அச் சமதக்கினி தவஞ்செய்துகொண்டிருக் கையில் இக்காத்தவீரியன் வேட்டையாட வந்து அச் சமதக்கினி முனிவ னிடத்தே காமதேனுவை யொத்த வொரு பசுவிருக்க அதைக்கேட்டான். அதைக் கொடாமையால் அவனைக்கொன்று சென்றான். அவன் மனைவி இரேணுகைகண் டுள்ளம்பொறுமல் இருபத்தொருமுறை மார்பிலடித்துக்கொண் டாள். அதைக்கேட்ட பரசுராமன் இருபத்தொருமுறை அரசர் பூண்டு நில வுலகத்தி லில்லாத வண்ணம் கொன்றதன்றிக் காத்தவீரியனோடு போர் செய்து அவனது ஆயிரங்கைகளையுந் துணித்து அவனையுங் கொன்று அவன் மக்க ளிருந்தவிடந்தெரியாம லோட்டி யரசரொன்போர் உலகிவில்லாம லாக்கித் தன் தந்தைக்கு அவ்வரசரைக்கொன்ற உதிரத்தாலாகிய சிமந்த பஞ்சக மடுவில் திலதர்ப்பணஞ்செய்து பலஅசுவமேதமும் நரமேதமுஞ்செய்து தனக்குப் புரோகிதராயிருந்த காசிபருக்கு இந்நிலவுலகமுழுதும் தக்ஷிணைகொடுத்துத் தான் மேற்றிசைக்கடலையடைந்து தன் கையிலிருந்த மழுவையெறிந்து அது வீழ்ந்த அளவும் நிலமாகக் கட்டளையிட்டுத் தான் தவஞ்செய்திருந்தனன். இதுநிற்க;

இப்பெருந்தகை வைவசுதமனு வந்தரத்தில் இட்சுவாகு மரபில் தசரத மகாராசன் பலநாள் புத்திரரில்லாமல் வருந்தி அவர் கலைக்கோட்டுமுனி வரைக்கொண்டு புத்திரகாமேஷ்டிசெய்ய இராவணன் முதலிய கொடிய அரக்கரைக்கொல்லச் சிராமன் பரதன் இலக்குமணன் சத்துருக்கன் எனத்தோன் றினன். அவருள் கோசலை சீராமனையும், கைகேசி பரதனையும், சுமித்திரை இலட்சுமணன் சத்துருக்கனென்னு மிருவரையு மீன்றனள். இவ்வாறு தோன் றிய நால்வரும் நான்மறைபோல் வளர்ந்து வந்தனர். இவ்வாறு வளர்ந்து பதி னறுபிராயம் நிரம்பியகாலத்தில் ஒருநாள் விசுவாமித்திர முனிவன் அத்தசரத

மகாராசனிடஞ்சென்று நின்மக்க ளுல்வரில் கரியகோலப் பெருந்தகையாகிய அருமறைக் கொழுந்தென யாவருஞ் சொல்லக்கிடந்த அருமணியை சீராமன் என்னும் என்கண்ணிற் கருமணியை என் தவவேள்விக்காக விடுக்கவேண்டு மென்ன, அதைக்கேட்ட அவ்வரசன் யானே அக்கொடியவர்செய்யும் இடை யூற்றுக்கிடையூருக நின்று காக்கின்றேன்,இன்னும் என்மகன்பதினுறுண்டுநிரம் பாதவனுயிற்றே! நிசாசரர் போருக்கழைப்பதனுல்அவ்விராமன் தாமரைக்கண் ணனுதலால்உறங்கிவிழுவனேயென்றுசொல்ல,நானறிவேன்அவன்பெருந்தகை மையை நீ யறியாயென்று கொல்லுங் கொடுங்கூற்றுப்போலுமேய ஆலவிடம் போற்கொதித்துரைக்க, வசிட்டமுனிவர் தசரதனே நோக்கி உன் மகனுக்குப் பெருவாழ் வுண்டாகுங்காலம் நேரிட்டது, நீ தடுக்கவேண்டாமென்ன அவ் விசுவாமித்திரனுட னனுப்பினுன். அவ்விசுவாமித்திரன் சீராமனேயும் அவ னுடம்பிரியாதநிழல்போன்ற இலக்குமணனேயுமழைத்துக்கொண்டு தாடகை யெதிர்ந்துவர நான் சொல்லி யழைத்துக்கொண்டு வந்த கொடியவளிவள் தான், நீ ஐயப்படவேண்டாமெனச் சீராமன் இவள் பெண்ணுயிற்றே யென்ப தைத் தெரிவிக்கவே, விசுவாமித்திரமுனிவர் பல தருமங்களையு மெடுத்துச் சொல்லினர். சீராமனும் அத்தாடகையை இராவணனேக்கொல்ல முகூர்த் தங்கொண்டாற்போற் கொன்று விசுவாமித்திரரைத் தவவேள்வி செய்ய வேண்ட,அவர் செய்யுங்காலத்தில் தாடகையைக் கொன்றதை மேற்கொண்டு அவ்வேள்வியைச் சுபாகு மாரீசனென்னும் அவன் மக்கள் அழிக்கத்தொடங் கினர். சீராமன் சுபாகுவைக்கொன்று மாரீசனேத் தென்கடலில் விட்டெறி யச் செய்து அவ்வேள்வியைக் காத்தனன். விசுவாமித்திரனே அவ்வேள்வி யைக்காத்த சீராமனுக்கு வேண்டிய தெய்வப்படைகளெல்லாங் கொடுத்த னன் ; அவைகளோ அச்சீராமனுக்குப் புறத்தொழில் செய்துவந்தன. பின்பு விசுவாமித்திரன் சீராம லக்குமணர்களேச் சனகன் வேள்விச்சாலேக் கழைத் துப்போக வெண்ணி வழியில் கல்லாக்கிடந்த அகலிகையைக் காற்பொடியாற் பெண்ணுகக் கண்டு மகிழ்ந்து மிதிலேயை யடைந்தான். சீராமனே முழுமுத லாகிய பரமசிவனது பினுகமென்னும் வில்லேயொடிக்கச் சீதையை மணஞ் செய்து பின்பு இலக்குமணனுக்குத் தன்மகளாகிய ஊர்மிளேயையும், பரத னுக்கும், சத்துருக்கனுக்கும், முறையே தன் தம்பியாகிய குசத்துவசன் பெற்ற மாண்டவி சுருதகீர்த்தி என்பாரையும் சனகராசன் தசரதனே வரு வித்து மணஞ்செய்வித்தான். விசுவாமித்திரனே சீராமனுக்குத் துவாத சாக்ஷர மந்திரத்தை யுபதேசித்து விடைபெற்றுப்போனுன்.

தசரதமகாராசன் சிலநாள் மிதுலேயில் தங்கியிருந்து சனகனிடத்தே விடைபெற்று தன் மனேவிமார் மக்கள் மருமக்கண்மாருடன் நால்வகைச் சேனேயும் புடைசூழ அயோத்திக்குச் செல்கையில் ஈசனது சோத்தைவில் லொடித்தனேயே! இவ்வில்லே வளேப்பையோ என்ற பரசுராமனே நோக்கி அவன் கொடுத்த வில்லேக் கையிலேந்தி வளேத்து இடையே சிராமன் விட்ட பாணம் பழுதாகா தாகையால் அதற்கு இலக்காக அப்பரசுராமன் தவத்தைக் கொண்டு மீண்டு அவனே யனுப்பிவிட்டுப் பரசுராமனுல் என்ன கேடெய்து

மோவென்று வருந்தியிருந்த தன் பிதாவாகிய தசரதனைத்தேற்றி அயோத்தியை யடைந்தான். இவ்வாறு இருக்கையில் பரதனையும் சத்துருக்கனையும் தசரதன் கேகயநாட்டிற் கனுப்பி யொருநாள் சீராமனை நோக்கி இனி அரசபாரம் நீயே பொறுக்கவேண்டுமென்ன அதைக்கேட்ட கைகேசி தசரதனைத் தடுத்துத் தன் மகனை நாடாளவும், சீராமன் காடாளவும் வரம்பெற்றுச் சீராமனை இலக்குமணனுடன் காட்டிற் கனுப்பினுள். தயரதனோ புத்திரசோபத்தால் மரணமடைந்தான். சீராமனோ கங்கைக்கரையை யடைந்து குகனென்னும் வேடராசனை நட்பாகக்கொண்டு கங்கையைத் தாண்டி அவனை அவனூராகிய சிருங்குபேரபுரத்திற் கனுப்பித் தான் சித்திரகூடமடைந்தான். இது நிற்க; பரத சத்துருக்கர் தசரத னிறந்தமைகேட்டு அயோத்தியடைந்து தமது பிதாவுக்குரிய வுருமைக்கடன்செய்து தன்தமையனாகிய சீராமபிரானை யழைத்துவரத் துணிந்து கங்கைக்கரையைக் கடந்து சித்திரகூடமடைந்து தன் பிதா விறந்தசெய்தியைத் தெரிவிக்கச் சீராமனும் வருந்தி நின்றனன். வசிட்டமுனிவரோ சீராமனைத் தேற்றப் பரதன் சீராமனை நோக்கி நமது தந்தை இறந்தமையால் இனி அரசபாரம் நீயேபொறுக்கவேண்டுமென்று கேட்கச் சீராமபிரானோ தான் பதினுன்கு வருடங் காட்டிற் சஞ்சரித்தன்றி மீளேனென்று தன் பாதுகமிரண்டையுங் கொடுத்தனுப்பப் பரதன் அயோத்திக்கருகேயுள்ள நந்திக்கிராமத்தி லிருந்துகொண்டு பாதுகத்திற்குப் பட்டாபிஷேகஞ் செய்து தன் தமையனையே தியானித்துக்கொண் டிருந்தான். இது நிற்க;

சீராமன் தான் சித்திரகூடத்திலிருந்தால் அடிக்கடி அயோத்திநகரத்தவர்வந்து வருத்துவரென்று அதனைவிடுத்து தம்பியும் சீதையுந் தொடரத் தென்றிசைநோக்கி நடக்க, வழியில் விராதனைக்கொன்று சரபங்கர் ஆச்சிரமமடைந்து அவர்க்குச் சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய அந்தமிலின்பந்தந்து தண்டகாரணிய மடைந்து அங்குள்ள முனிவருடன் பத்து வருடம் . தங்கியிருந்து அவர்கள் அரக்கரைக்கொன்று தங்களைக் காக்கவேண்டுமென்ன அபயமளித்து அவர்களிடத்தே விடைபெற்றுச் செந்தமிழ் முனிவராகிய அகத்தியமுனிவரைத் தரிசித்து அவர் வில்லும் அம்புப்புட்டிலும் பாணங்களுங்கொடுக்கப்பெற்று அவர் சொன்னபடி பஞ்சவடியிற் செல்லும்படி சொல்ல அடைந்தனன். இவன்செல்லுகையில் சடாயுவைக்கண்டு அவரொடும் நண்புகொண்டுஅப்பஞ்சவடியில்வசிப்பானுயினன். இவ்வாறுவசிக்குங்காலையில் இலங்கையர்கோமானுகிய இராவணனுக்குப் பின் பிறந்த சூர்ப்பனகை சீராமபிரானதுவடிவழகைக்கண்டு மோகங்கொண்டு சீதையிருக்குமளவிலும்மக்கு அவளின்பம் எய்தாதென்று துணிந்து சீராமபிரான் அற்றநோக்கியும் இளையவன்காவல் செய்திருப்பது மறியாது சீதையைத் தூக்கிச்செல்ல முயல்கையில்இளையவன் அவளுடைய மூக்கு முலையும் செவியும் கொய்துவிட அவள் சீராமபிரானது சந்நிதியிற்சென்று முறையிட்டனள். அவள் விண்ணப்பத்தைச் செவியேற்ற சீராமபிரான் தம்பியால் அவன்செய்த கொடுஞ்செயலையறிந்து இங்குநின்றும் போய்விடென்று சொல்ல,அவள் திடீரென்று சனஸ்தானஞ்

சென்று கரனிடம் விண்ணப்பஞ்செய்யவே, கரனும் ஆலவிடம்போற் கொதித்துப்போர்க்கெழ பதினன்குசேனைத்தலைவரும் எமக்குஇப்பணியளிக்கவேண்டுமென்று விடைபெற்றுச் சூர்ப்பனகையோடுசென்று சிராமபிரானெடு போர்செய்ய அவனாற் கொல்லப்பட்டு மாண்டனர். பின் சூர்ப்பனகையோ கரனிடமீட்டும்சென்று அச்சிராமனெருவனுலே அச்சேனைத்தலைவர்களோ நீறுபட்டொழிந்தனளென்றனள். கரன்நெருப்பில் நெய்விட்டாற்போற் சினத்தெழுந்து திரிசிரன் தூடணன் முதலியவருடன் தன் னல்வகைச் சேனையுமுடன்செல்லச் சென்று சேர்ந்து போர்செய்ய ஒரு முகூர்த்தத்தில் அக்கரதூஷண திரிசிரர் முதலானேரையும் கொன்று வீழ்த்த,அதையறிந்த சூர்ப்பனகை இலங்கையைநோக்கிச் சென்றனள்.

சூர்ப்பனகையோ தான் பஞ்சவடியிற் சிராமன் முதலானேரைக் கண்டதும், அவருட னிருந்த பெண்ணரசியாகிய சிதையைக்கண்டு சிராமலக்ஷ்மண ரற்றம் பார்த்து எடுக்கத்துணிய இளையவன் தன்னை இவ்வாறு செய்யாதவண்ணஞ் செய்துவிட்டனனென்று சொல்லினள். அதைக்கேட்ட மாத்திரத்தே இராவணன் கெடுமதி கண்ணுக்குத் தோற்றுமல் சிதைமேற் காதல்கொண்டு சிறிதும் தரியாமல் மாரீசனிடஞ்சென்று தான் கொண்ட கருத்தைத் தெரிவிக்க, மாரீசனும் நம்மாலாகிற காரியமல்ல, சிராமனை இளம்வயதிலேயே நான் பார்த்திருக்கின்றேன். அவன்பேரின் முதலெழுத்தை யுச்சரிக்கையிலேயே குடல் நடுங்குகின்றதே ; பச்சையுருவங்கண்டால் மனம் பதைப்புறுகின்றேன், நீ அந்த ஆசையை மறந்துவிடு, சிதையை விரும்பாதேஎன்று தெரிவித்தான். இதைக்கேட்டஇராவணன் நீயென்சொற் கேளாவிடின் உன்னை வாள்கொண்டு துணிப்பே னென்றுன். மாரீசனே இவன்கையால் மாள்வதைக் காட்டிலும் சிராமன் கைவாளியா லிறப்பதே நலமெனத் துணிந்து மானுருக்கொண்டு சிதைக்கு முன்தோன்ற அப்பிராட்டி சிராமபிரானைப் பிடித்துத் தரவேண்டி நிற்ப, சிராமபிரா னதனைத் தொடர்ந்துசென்று அது மாயமானென் றறிந்து கொல்ல, அது இளையவனே யபயமென்று இறந்து பட்டது. சிதையோ இளையவன் தடுக்கவும் போய்ப் பார்த்துவாவென் றனுப்ப, இளையவன் போனதை யறிந்து இராவணன் தவசிவடிவங்கொண்டு சிதையைக்கண்டு நிலத்தொடு கீண்டெடுத்துத் தன் தேரிலேற்றிக் கொண்டு செல்லச் சிதைபுலம்புவதை யறிந்து சடாயு வெதிர்ந்து போர்செய்ய, இராவணன் தன்கைவாளா லோச்சச் சிதையும் சிராமபிரான் வருந்தனையும் உயிரோடிருக்க வரமளிக்க,இராவணன் சிதையொடும் இலங்கைக்குச்சென்றுசிஞ்சுபவனத்தில் உலகமாதாவாகிய அச்சிதையைப் பல அரக்கிமார் நடுவிற் சிறையிட்டான்.

சிராமபிரானைத் தேடிப்போன இளையவன் சிராமபிரானைக்கண்டு நடந்த செய்தியை யறிவிக்கச் சிராமபிரானும் விரைந்துவந்து சிதையைக் காணுமல் திகைத்துத் தேடிக்கொண்டேவந்து சடாயுவைக்கண்டு வணங்கி அவரால் சிதை சென்ற செய்தியையறிந்து உடனே அவர் உயிர் நீத்ததைக்கண்டு தானே யவர்க்குரிய உருமைக்கடன் செய்து மீண்டுஞ் சிதையைத் தேடிக்

கொண்டே நீர்வேட்கையெய்தித் தம்பியை நீர்கொணரவேண்ட அவர் அயோமுகியென்பாளைக்கண்டனன். அவள் இவன்மேல்மையல்கொண்டு நின்றுவருத்தச் சூர்ப்பனகையைச்செய்ததுபோற் கொய்துமீண்டு சிராமபிரானையடைந்து கவந்தவனைக்கொன்று அவனுக்கு முத்தியளித்து அவன்சொன்னவழியே சவரியைக்கண்டு அவளால் உபசரிக்கப்பட்டு அச்சவரிக்கு முத்தியையளித்து அவள் சொன்னபடியே இரிசிகசிருங்கமலையிற் சுக்கிரீவ னிருப்பதை யறிந்து பம்பையாம் பொய்கை யடைந்தனன். இது நிற்க;

பம்பையென்னு மடுவின்கரையிலே தங்கி அங்குள்ள விநோதங்களைப் பார்த்துச் சீதையின் யரிவைநோக்கி வருந்தி அவளைத்தேடப்புறப்பட்டுஇரிசிகசிருங்கமலையை நாடிவருகையில் அம்மலையில் வசித்திருந்த சுக்கிரீவன் இவர்களைப் பார்த்து இவர்கள் வாலி யனுப்ப வந்தவர்களென் றெண்ணியதறிந்து அநுமான், இவர்கள் அன்னரல்லர், இவர்கள் யாதோ ஒரு பொருளிழந்து வருந்துகின்றனரென்று 'மதிநுட்ப நூலோ டுடையார்க்கதிநுட்பம்-யாவுள முன்னிற்பவை.' என்றபடி, உணர்ந்துகூறிப் பெருமானையு மிளையவனையுங் கண்டு சுக்கிரீவன் செய்தியனைத்து மவர்கட் கறிவித்து அவர்களைச் சுக்கிரீவனுக்கு நட்பாக்கப் பெருமாள் சுக்கிரீவனை நோக்கி நீயஞ்சவேண்டாம் உன் பகையாளியாகிய வாலியைச் செயிக்கின்றேனென்று சொல்ல, சுக்கிரீவன் வாலியை வெல்வாருளரோவென் றையுற்று மராமரங்களை யெய்ய வேண்ட, அவ்வாறே மராமரமெய்து நின்றனன். இளையவனும் துந்துபியின் எற்புச்சட்டகமாகிய மலையைக் காலாலெற்றினன். சுக்கிரீவனே வாலி காலனைத்தேடினேமென்று வாலியைப் போருக்கழைக்க வாலி மற்போர்செய்யத்தொடங்கி சுக்கிரீவனை வருத்துகையில் பெருமாள் வாளியொன்று தொட்டு வாலியைப் படுத்து அவன் தம்பியாகிய சுக்கிரீவனுக் கரசளித்து அங்கதனுக்கிளவரசுமளித்துச் சீதையைத் தேடிவரத் தென்றிசைக் கநுமானையும், சேனாதிபதியாகிய நீலனையும்,சாம்புவந்தனையும்,இரண்டுவெள்ளஞ் சேனையையுமனுப்ப, அவர்கள் அவ்வாறே தென்றிசையை நாடிச்சென்று சீதையைக் காணமல் தென்கடற் கரையில் வருந்துங்காலையில் சடாயுவின் தமையனாகிய சம்பாதி இவர்களை நோக்கிச் சடாயுவைப்போல் சிராமகாரியத்தி லிறந்துபடுவதே நலமென்றீர், சடாயு விறந்துபட்டனனோ வென்று கேட்டு வருந்தி அவர்களுக்குச் சீதையிருக்குமிடஞ்சொல்லி இக்கடல்தாண்டி இலங்கையிற் சென்றாற் காணலாமென விடைபெற்றுப்போகச் சாம்புவந்தன் அநுமானை நோக்கி நீயல்லது பிறராலிக் கருங்கடல் கடப்பதரிது, நீயே சிராமபிரானால் சீதைக்குக் காட்டக் கணையாழியைப் பெற்றனை, நீயே சென்று அறிந்துவாவென்று வேண்ட அவ்வாறே அநுமான் சாம்புவந்தன் நீலன் அங்கதன் முதலானோரை நிறுத்தித் தான் கடல் தாவிச்சென்றான். அவ்வாறுகடல்தாவிச்சென்று இலங்கையையடைந்து இராவணன் முதலானோ ரிருக்கு மாளிகையிலுஞ் சீதையைக் காணமற் றிகைத்து வருந்திச் சிஞ்சுபவனமாகிய அசோகவனந் தோன்றத் தனக்கு நல்லதோர் நிமித்தந் தோன்றியது. அதைக்கண்ட அநுமான் அவ்வனமடைந்து சீதையைக்கண்டு தன் னிறைவனளித்த ஆழியை யளித்துச் சூடா

மணியை இறைவனுக்குக் காட்ட அடையாளமும் விடையும் பெற்று அசோக வனத்தை யழிக்க இராவணன் கிங்கரரையனுப்ப அவர்களை வதைத்து வீரா வேசங்கொண்டிருக்கையில் சம்புமாலியையனுப்பினன். அநுமானே சம்புமாலி யைக் கொல்ல இதென்ன ! ஒரு குரங்கு இப்படியுஞ் செய்வதாவென்று பஞ்ச சேனாதிபதிகளையனுப்பினன். அவர்களையும் வந்தவழி போனவழிதெரியாமை செய்யக்கண்டு வெகுண்டு தன் இளங்குமாரனாகிய அக்ஷனையனுப்ப அவனைத் தோரணகம்பத்திலிருந்தே பார்த்து இவன் வெகு சூரனென்று துணிந்து அவ னைக்கொல்ல இராவணன் புத்திரசோபத்தால் வருந்துவதுகண்ட இந்திரசித்து தாதையையவணங்கி நானே அக்குரங்கைக் கொன்றுவருகிறேனென்று புறப்பட் டுத் தன் சேனையுடன் சென்று அநுமானோடு போர்செய்து அவனைப் பிரமாத் திரத்தாற் பிணித்துக்கொண்டு தன்தந்தைமுன்விடுத்தான். இராவணன் நீயார்? இங்குவரக் காரணமென்னவென அநுமானும் 'நான் சிராமன் விடுத்த தூதன்' சீதையை நாடிவந்தேன், சீதையை விடுத்துச் சரணமடைந்தால் உய்வை, உன்னை வாலிற் கட்டிக்கொணர்ந்த வாலியும் அவன் கைக்கோலால் மாண் டான், நீ விரைந்து சீதையை விட்டுவிடென்று வேண்டியநீதிமொழிகளைக்கூற இராவணன் வெகுண்டுகொல்லத்துணிகையில் விபீஷணன் 'தூதனைக் கொல் லுவதுதீது' என்றுதடுக்க, இராவணன் வாலில் நெருப்பிட்டுக்கொளுத்தினன். அநுமான் இலங்கா நகரமுழுதுங் கொளுத்த, சீதை அநுமானைக் காக்கவேண்டு மென்று அக்கினிதேவனை வேண்டினள். பிராட்டியிருந்த மரமொழிய இல ங்கை முழுதுஞ் சுட்டெரித்து மீண்டுங் கடலைக்கடந்து சாம்புவந்தன் நீலன் அங்கதன் முதலானோருக்குப் பிராட்டியினது சுபசரிதங்கூறி வடதிசைநோக் கிப்புறப்பட்டுக் கிஷ்கிந்தையைக்கிட்டிமதுவனமழித்துக் 'கண்டேன் சீதையை யிலங்கையிலென்று' அநுமான் தான்கொணர்ந்த சூடாமணியை யடையாள மாக வளித்து நின்றான். சிராமபிரானே இளையவனுடன் மகாராசாவும், அவ னது வானரப்படையும் சூழக் கிஷ்கிந்தையைவிட்டு அவாசியை நோக்கி அக் கடற்கரையினைப் பன்னிரண்டுநாளிற் சென்றடைந்தான்.

இராவணன் இலங்கை யெரியூட்டப்பட்டமைநோக்கி ஏழுநாள்பரியந்தம் அரக்கர்களை யெல்லாம் புட்பக விமானத்தி லேற்றி, ஆகாயமார்க்கத்தி லிருந் தான். கனல் தணிந்தவுடன் விசுவகர்மாவைக்கொண்டு இலங்கையைப் புதுக் கித் தன் மந்திரத்தவரை நோக்கி இப்போதேசென்று வானரப்படையையும் இராம லக்குமணரையுங் கொல்லவேண்டுமென்ன அரக்கரெல்லாந் தீயில் நெய் விட்டாற்போலும் கொதித்துக்கூற, விபீஷணன் இராவணனை நோக்கி அரிந் தமனாகிய சிராமனை மனிதனென் றெண்ணுதை? இவனே சிவனு மல்லன், திருமாலு மல்லன், அயனு மல்லன், மூலமுதற்பொருளென நான்மறையெடுத் துக்கூறும் நம்பியென்றறி, அதற்குச் சந்தேகமில்லை, அவன் பெருமை யாரறி வர்,முன்னாளில் இரணியன்முதலானோர் செருக்கினா லழிந்தனரன்றி பிறன்மரு நச்சினத்தாற் செத்தாரல்லர். சீதையோ உலகமாதாவென்று துணியவேண் டும். உனக்கு வேதவதி சாபமிருக்கின்றதே, அந்த வேதவதிதான் நமது இலங்கையிற் பிறந்து சனகனால் வளர்க்கப்பட்டு நமக்குக் காலங்குறுகச் சிராம

னுக்கு மனைவியாகிக் 'கெடுமதி கண்ணுக்குத் தோற்றாது' என்றபடி, உனக்குக்கேடுபிறப்பிக்க இங்கிருக்கின்றனள், இவளைக்கொண்டு சென்று சிராமனிடத்தில் விடுத்துப் புகலென்றடைந்தால் உய்வாயென்று சொல்ல, இராவணன் கோபங்கொண்டு நீ மனிசனையே வியந்து பேசினை! என்னை யவன் கொன்றபின்னர் இவ்விலங்காதி பத்தியம் பெற்று வாழ்வடைவாய் போலும், இங்கு நில்லாதை,என் கண்முன்விட் டகன்றுபோவென்று சொல்ல,விபீஷணனும் தன் மந்திரிமாராகிய அனலன் அனிலன் சம்பரன் சம்பாதி யென்னும் நால்வருடன் இலங்கையை விட்டுத் தென்கடற்கரையை யணுகி வானரப் படை முன்பு சிராமா அபயம்! கோசலேசா அபயம்! தாசரதீ அபயம்! சீதாநாதா அபயம்! காகுத்தா அபயம்! என்று சொல்லி நிற்க,வானரங்கள் இவன் யாரோ நிருதனாக விருக்கின்றான், இவனொடு பொரவேண்டுமென்று துணிய; அங்கிருந்த வானரப்படைக்குத் தலைவன் விபீஷணன் செய்தியெல்லாங்கேட்டறிந்து சுக்கிரீவன், அங்கதன், சாம்புவந்தன்,நீலன்,இளையவன் இவருடனே பேசிக்கொண்டிருக்கும் இரகுநாயகனைக் கண்டு நடந்த செய்தியெல்லாந் தெரிவிக்கச் சுக்கிரீவன் முதலியோர் அவனுக் கபயமளிப்பது தகாதென்றுவிரித்துச் சொல்ல, அநுமான் நான் இலங்கையிற் சென்றபோது இவன் வீடொன்றே அந்தணர் வீடுபோலும் வேதபடனம், ஊனுண்ணாமை, புலான்மறுத்தல், கள்ளுண்ணாமை முதலிய வேதவொழுக்கம் நிரம்பியிருந்தது; இராவணன் என்னைக் கொல்லத் துணிந்தகாலத்தில் தூதுவந்தாரைக்கொல்லுவதற்கு ஸ்மிருதியொப்பாதே! சும்மா விட்டுவிடுவதே நலமென்று சொல்லி எனக்குப் பிராணபிக்ஷை கொடுத்தான். என் தாயாகிய சீதைக்கு உயிர்ப்பாங்கிபோலிருந்து இதோபதேசஞ் செய்கின்றவளும் இவன் பெற்ற திரிசடையென்னு மாதுசிரோமணியே; அவள் தேற்றவல்லவா என் தாய் உயிரோ டிருக்கின்றாள், இல்லாவிட்டால் செத்தவிடம் புல்லு முளைத்துப்போமே,இவன் என் தாயை விட்டுவிடென்று சொல்லி யிருப்பன், அவன் இங்கிருக்கவேண்டாமென்று சொல்லியிருப்பான்,ஆதலால் நம்மைப் புகலடைந்தான், இவனைக் காப்பது தான் நமக்குப் பேரறமென்ன,இரகுநாயகன் நான் கொண்ட கருத்தே மாருதிகருத்தாம், என்னைத் தீமைசெய்தார் புகலடைந்தாலும் காப்பதே யான்கொண்ட விரதமென்று விபீஷணனை யழைப்பித்து அவனுக் கிலங்காதிபத்தியங் கொடுத்து வருணனைத் தருப்பசயனத்திலேழுநாள் விரதமிருந்து அவன் வாராமையால் வில்லைவளைத்து ஒரு பாணந்தொடுத்து அவனுக்கடைக்கல நல்கி நளனாற் சேதுபந்தனஞ்செய்து சுவேலமலையில் வசித்திருந்தனன். இராவணனோ சுகசாரணையனுப்பி வேவுபார்த்துவரவிட அவர்கள்கண்டுசென்று அவர்கள் போராற்றலை யெடுத்துக்கூறச் சிராமன் அங்கதனைத் தூதனுப்பி யுத்தஞ்செய்யவேண்டுமா? சீதையை விட்டுவிடவேண்டுமா? அறிந்துவாவென, அவன்போரத் துணிந்திருக்கின்றானென்ன, முதனாளில் இராவணன் தன்சேனையுடன்வர, அவனைத் தனிமையாக்கி நிராயுதனாய் நிலங்கிளறச்செய்து இப்போதேனும் சீதையைவிட்டுவிடு இல்லாவிட்டால் இன்றுபோய் நாளைவாவென்றான். அவன் சென்று தன்பாட்டனாகிய மாலியவானுக்கு இரகுநாயகன்முதலானோர் ஆற்றல்

முதலியவற்றை யெடுத்துக்கூறிப்போனென்பது நாம் அவன்முன் செய்யத்துணி வதுளத்துணையு மொவ்வாது! சீதையை விட்டுவிடுவதே நலமென்று சொல்லிக் கொண்டிருக்கையில் அவனுக்கு அட்டமச்சனிபோல மகோதரன்வந்து திரி லோககண்டகனென்று பெயரெடுத்த நீ மனிசனுக் கடங்கி யொடுங்கி நடப் பதோ! வென்று தடுத்து உன் தம்பியாகிய கும்பகர்ணனை விடுத்துக் கொல் லென்றுசொல்ல அவன் கும்பகர்ணனைத் துயினின்றெழுப்பிப் போர்செய்ய வனுப்பக் கும்பகர்ணனைக் கோதண்டத்தை வளைத்துக் கொன்றனன். இளைய வனே அதிகாயனைக்கொன்று இந்திரசித்தொடு போர்செய்ய அவன் நாகபாசத் தாற்பிணிப்ப அதனைக் கருடனால் விலக்கப்படவே மீண்டும் அவன் பிரமாத் திரங்கொண்டு போர்செய்து இளையவனை ஆவி சோரச்செய்ய, அநுமானே மருந்துகொணர்ந்து அவ்வத்திரத்தின் வேகத்தை யடக்கிப் போர்க்கெழ அவ் விந்திரசித்து போர்பொரமுடியாது நிகும்பலைசெய்ய அதனையழித்து அவனைக் கொன்று திரும்பினான். இராவணனே தன் தம்பியும் மக்களு மிறந்தமைக் காற்றாது தன் மூலப்படையை வருவித்துப் போர்க்குச் சிராமபிரானே டனுப்ப, அம்மூலப்படை யெதிர்ந்தமைநோக்கிவானரப்படை அச்சங்கொண்ட தறிந்து சிராமபிரான் அவர்களைக்காக்கத் தம்பியையும் சுக்கிரீவனையும் இளைய வனையும் அனுப்பித் தானொருவனே பனிமுன் பரிதிபோற் சென்றடைந்து அம்மூலப்படையை யழித்து நிற்க, இராவணனே வானரப்படை யிருந்த விடஞ்சென்று இளையவனே டெதிர்ந்து போர்செய்து அவன் வில்லுக்காற் றாமல் வருந்தித் தன் தம்பியாகிய விபீஷணனைக்கொல்ல வேல்விட இளைய வன் தானே சென்றேற்று மருந்தினால் உயிருதவப்பட்டு நிற்க, இராவணன் திரும்பிச்சென்றான். சிராமபிரான் போர்க்கள மகன்று தன் தம்பிசெய்தியை யறிந்து கழிமகிழ்சிறந்து மூலப்படை வெற்றிகொண்டமை யறிவித்துநிற்க, இராவணன் மூலப்படையின் களங்கண்டு வருந்தித் தான் போர்க்குச்செல லத் தேரேறினான்.

இந்திரன் பாதசாரியாகச் சிராமபிரான் போர்க்குச் செல்லுகின்றனனே! இராவணன் மாத்திரந் தேரேறி வருவதாவென்று தன் தேரை மாதலிகொண ரச்செய் தனுப்பச் சிராமபிரான் அத்தேரிலேறி இராவணனேடு போர்செய்து அவனைக்கொன்று வீழ்த்தினன். இராவணன் இறந்தமைகண்ட விபீஷணன் மிக வருந்திநிற்ப, அவ்விராவணன் மனைவியாகிய வண்டோதரி அவனிறந் தமைகேட்டு அவனிறந்த களத்தில்வந் துயிர்மாண்டாள். சிராமபிரானே தேவர் கள் புட்பமாரிபெய்யத் தேவதுந்துபி யாரவாரிக்கக் களமகன்று தன் தம்பி முதலானே ரிருக்குமிடம் நடந்தனன். சீராபிரான் விபீஷணனைக்கொண்டு இராவணன் முதலானேருக் குருமைக்கடன் செய்வித்தான். விபீஷணனே அவை யனைத்துஞ்செய்து பட்டாபிஷேக முடையானுய்ச் சிராமபிரானை யடைந்து சீதையைத் தருவிக்கவேண்டச் சிராமபிரான் அநுமானைக்கொண்டு தான் விசயஞ்செய்தமையை யறிவிக்கச் சீதையும் தீவளர்த்தி அதினின்று மெழ இரகுநாயகன் அத்தருணத்தும் சீதை கருத்துப் பிழைத்தனளென்று கருதியதை யறிந்து பிரமன் முதலிய தேவர்கள் எல்லாம் அவள் கருத்துப்

பிழைத்தாளல்லளென் றறிவிக்க அதனையும் சிறிதுங் கருதாதிருந்த இரகு விரனைத் துறக்கத்தி லிருக்கும் தசரதனைக்கொண் டறிவிக்கத் துணிந்து தயரதனை வருவிக்க, தசரதன் சிராமனிடத் தடைந்து மகனே! உன்னால் யான் பெறலரும் பேறடைந்தேன்! என்செயக் கடவேன்! சிதையை அவ்வாறு கருதுவது தகுதியன் றென்றுகூறச் சிராமனும் தந்தைசொல்லைப் பாணியாது யானிரண்டுவரம் வேண்டுகின்றேன், ஒன்று பரதன் உன் மகனல்லனென்பதையும் ஒன்று கைகேசி உன் தாரமல்லளென்பதையும் நீக்கவேண்டுமென்றுகேட்டு அவ்வாறே பெற்று அவனை யனுப்பிவிட்டு சிதையொடு தம்பியாகிய இலக்குமணன், சுக்கிரிவன், விபிஷணன், அங்கதன், அநுமான், நீலன் முதலான வானரவீரரும் அரக்கரும் புடைசூழப் புட்பகவிமானத்திலேறிக் கடல்கடந்து வழியில் பரத்துவாசமுனிவ ராச்சிரமத்தில் இறங்கித்தன் வருகையைத் தன் தம்பியாகிய பரதனுக்கும் அயோத்தியா நகரத்தார்க்கும் குகனுக்கும் தெரிவிக்க அநுமானை யனுப்பி யெழுந்தருளினன். அநுமான் அடையவே அவன் போதற்குமுன்னமே சிராமபிரான் இன்றோடே பதினான்காண்டு கழிந்தும் இன்னும் வாராமைக்குக் காரணமென்ன வென்று தீயை வளர்த்தித் தான் அக்கினிப் பிரவேசமாகத் துணிய அதைக்கண்ட சத்துருக்கனும் தாய்மார் மூவரும் அண்ணன் வருவான் என்று சொல்லித் தேற்றவும் தரியாது அத்தியினை மும்முறை வலம்வந்து விழத்துணிந்தான். அத்தருணத்தே அநுமான் 'இதோ வந்தான் வந்தான் சிராமனென்று' பெருமுழக்கோடும் வந்து தீயையவித்துச் சிராமசரித்திரத்தைச் சித்திரக்கூடத்திலிருந்து பரத்துவாச முனிவ ராச்சிரமத்திற்கு வந்தவரையிலு மெடுத்துச்சொல்லி அவர்களை யெல்லாம் பரத்துவாசமுனிவ ராச்சிரமத்திற் கழைத்துக்கொண்டுவந்தான்.

இங்கே சிராமபிரானே தன்னொடுவந்த யாவரையும் விருந்து நுகர்விக்க முயல்கையில் பரத சத்துருக்கரோடும் அயோத்தி நகரத்தாரும் வரக்கண்டு அவர்களுடைய செய்திகளைக்கேட்டு மகிழ்ந்து அவ்விடம்விட்டுப் புறப்பட்டு அயோத்தியை யடைந்து பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு அசுவமேதஞ் செய்து விபிஷணனுக்கு இட்சுவாகுவாற் கொணரப்பட்ட ஆயிரமோலி யமலனுதிப்பிரா னெழுந்தருளிய பிரணவ விமானமளித்துச் சுக்கிரீவன் முதலியோர்க்கு வேண்டிய பூடணங்களையுங் கொடுத்து அநுமானையுந் துணையாக அனுப்பி, அங்கதன் நிலன் சாம்புவந்தன் முதலிய சேனைத்தலைவரையு முபசரித்துக் குகப்பெருமாளுக்கும் வேண்டுவன நல்கிப்போக்கித் தன் புத்திரவர்க்கங்களுக்குமரசளித்துத் தம்பியருடனே தன்னடிச்சோதிக்கெழுந்தருளினன். சிதையும்இறைவனருளால் பூமியின்முன்னரோ மறைந்தாள். இதுநிற்க;

இப்படி இறைவன் தன்னடிச்சோதிக் கெழுந்தருளித் திருப்பாற்கடலிற் சர்ப்பப்பரியங்கத்தில் அறிதுயில் செய்தான். துவாபர யுகாந்தத்தில் தேவர்கள் திருப்பள்ளி யெழுப்ப வெழுந்திருந்தான். தேவர்கள் க்ஷேமத்தை யெல்லாம் வினவிநிற்கையில் பூமிதேவி தான் பாரம்பொறுக்காமல் வருந்துவதைத் தெரிவிக்க நினைந்து இறைவனது பொன்னடியை வணங்கிக் காலநேமி முதலா

ஞோர் பூமியில் அரசராகப் பிறந்திருக்கின்றனர். தருமமோ தலையெடுக்காமல் அதருமமோ தலையெடுத்திருக்கின்றது. அதனால் எனக்குப் பாரஞ்சுமக்க முடியாமலிருக்கின்றது, நின்னையன்றி யெமக்குப் புகலிடமாவார் யாரிருக்கின்றனரென்று வேண்டினாள். அதைக்கேட்ட பகவான் நீ யொன்றுக்கு மஞ்ச வேண்டாம்; நாமே கண்ணனாகத் திருவவதரித்துப் பூபாரந் தீர்க்கின்றோமென்று சொல்லி இக்கண்ணனாகப் பிறந்தான். இனிக் கலியின்கடையிற் கற்கியுருவெடுத்துத் தருமத்தை நிலைநாட்டுவான். காலநேமி முதலிய வசுரர்கள் எல்லாம் கஞ்சன் முதலிய அரசராகப் பிறந்திருந்தனர். அவர்களை யநாயாசமாகவே கொன்று பூபாரம் தீர்த்துவருகின்றனன். இன்னும் தீர்க்கப் போகின்றனனென்று சொல்ல, தருமராசன் எனக்கு அவன் திவ்வியசரித்திரத்தை நன்றாக விளக்கவேண்டுமென்று வேண்ட வீஷ்மர் சொல்லலாயினர்.

அப்பகவான் நல்ல சுபகாலத்தில் தேவர்கள் பூமழைபொழியத் துந்துபியார்ப்ப யயாதிகுலத் தரசனும் உன் நல்லம்மானு மாகிய வசுதேவனுக்குத் தேவகியார் வயிற்றில் இக்கண்ணனாக உரோகணிகூடிய கிருஷ்ணபக்ஷத் தட்டமியில் சுபக்கிரகங்கள் தக்க விடங்களில் உச்சமாயிருக்கத் திருவவதாரஞ் செய்தனன். தேவர்களும் அரமகளிரும் யாதவகுலத்தவராகத் தோன்றினர். இறைவன் பிறந்தவுடனே ஆயர்பாடியிலே வளர்ந்துவந்தான். அதையறிந்த கஞ்சன் அவனை யெவ்வகையேனுங் கொல்லத்துணிந்து பல சூழ்ச்சிகளையு நாடினான். ஒருமுறை குழந்தைப்பருவத்திலே பூதகியென்பவளை யனுப்பி முலைப்பாலைக் கொடுக்கச்செய்ய இறைவன் அவள் முலையுண்பதுபோலவே அவளுயிரை வாங்கினான். மற்றொருகாலத்தில் சகடாசுரனை யனுப்பிக் கொல்ல முயன்றான். அவனை இவன் தொட்டிலி லிருந்தவண்ணமே காலாலுதைத்துக் கொன்றான். இவ்வாறு யாவரு மதிசயிப்ப வெழுந்தருளியிருக்கையில் பலராமனொடுகூடித் தவழ்ந்துகொண்டே தயிர் பால் வெண்ணெய் முதலியவற்றைக் களவிலருந்தினான். அச்செயலை யறிந்த தாய் நீயா செய்தனையென்று பயமுறுத்தி யங்குள்ள உரலிற் பிணித்துக்கட்ட அவ்வுரலை யிழுத்துக்கொண்டே மருதமரங்களிற் சென்று அம்மரங்களை யுதைத்துத்தள்ள முறிந்துபோயின. முறிந்த அம்மரங்கள் நளகூபர மணிக்கிரீவராக இறைவனை வணங்கித் தம் பதிக்குச் சென்றனர். அதனை யறிந்த தாய் பயந்து வந்து தன் மகனாகிய கண்ணனுக்கு நீராலத்தி யெடுத்தனள். மற்றொருநாள் கண்ணபிரானோ களவில் வெண்ணெய் தயிர்பா லருந்துவதைக்கேட்டு மகனே இவ்வாறு செய்யலாமா வென்ன, இறைவனோ வாயைத்திறந்துகாட்டினான். அவன் வாயில் 'வைய மேழுங்கண்டாள் பிள்ளை வாயுளே' என்றபடி, எல்லா வுலகமுங் காட்டினன். அதைக்கண்டு பெருமகிழ்ச்சி யடைந்து நின்று இது பகவதமிசமே யென்று வியந்தனள். இவ்வாறு பாலிய லீலைகள் பலவுண்டு. ஒவ்வொன்று மிக அதிசயமே பயக்கும். இறைவன் காலேய மேய்க்கும் பருவம் வந்தபோதுதான் அரசனைப்போலிருக்க மற்றைச்சிறுவருடனேவிளையாடுவன். இவ்வாறு விளையாடி வருகையில் ஒருநாள் யமுனையாற்றிலுள்ள ஓர்மடுவில் தான் விளையாடிக்கொண்டிருந்து காளியனிருக்கு மடுவிற் குதித்து அவனைப்

பிடித்து அவன் தலைமேற் காலையிருத்தி விளையாடினான். அதனால் அக்காளி யன் தன்பேராற்றலெல்லா மொழிந்துபோய் விடங்கான்று வருந்தினான். அதை யறிந்த நாககன்னியர் எங்களுக்கு மாங்கலியபிட்சை கொடுக்கவேண்டு மென்று வேண்டினர். அவர்களுக் கபயமளித்து அக்காளியனை இனி அங் கிருக்கவொட்டாம லோட்டித் தான் ஆயர்பாடிக்குச் சென்றான். ஒரு காலத் தில் இந்திரனுக்கு இடையர்கள் பொங்கலிடும் வழக்கம்போல் பொங்கலிடத் துணிய, கண்ணபிரான் கோவர்த்தனமலையை நோக்கி இம்மலையன்றோ நமது பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் வேண்டுவன நல்குகின்றன ; நீங்கள் ஒன்றுஞ் சிந்திக்காமல் செய்யுங்க ளென்றனன் ; அவர்கள் அப்படியே செய்ய இறைவன் அம்மலையில் ஆவிர்ப்பவித்து அவர்களிடும் பொங்கலை யெல்லாம் தானேயுண் டான். அதைக்கண்ட இந்திரன் சிறிதும் பொறாது தத்த மேகங்களையும் விடுத்து ஏழுநாள்வரையு மழை பொழிவித்தான். அதனால் கன்றுகளும் காலி களும் இடையரும் இடையப்பெண்களும்கதறிவருந்த இறைவன் அக்கோவர்த் தனமலையைக் குடையாகப் பிடித்துக் காத்தருளி மழையைத் தடுக்கவே,இந் திரன் அவ்விறைவனை வணங்கித் தன் னபராதம் பொறுக்கவேண்டிச் சென் றான். பின்னொரு நாள் குதிரையாய்வந்த கேசியையும், கன்றாய்வந்த தேனு கனையுங் கொன்றான். இவ்வாறு இறைவன் விசயங்கேட்டுப் பொறாது கஞ்சன் அக்குரூரனை யனுப்பிப் பலராமனையும் கண்ணபிரானையு மழைத்துவரக் கட் டளையிட்டான். அக்குரூரன் ஆயர்பாடிசென்று அழைத்துவரக் கஞ்ச னேவலி னாற் குவாலயபீடம் என்னும் யானையை யனுப்ப அந்த யானையைக்கொம் பைப் பிடுங்கிக்கொன்றான். சாணூரன்முட்டி யென்னும் மல்ல ரிருவரையு மனுப்ப அவ்விருவரையும் தானும் பலராமனும் மற்போர்புரிந்து கொன்றான். பின்பு அவன் மலையிற்புகுந்து கஞ்சனைக்கொன்று அவன் தம்பியரையும் எளி தில்வென்று தன் தந்தை தாயராகிய வசுதேவனையும் தேவகியையும் வணங்கித் தன் மாதாமகனாகிய உக்கிரசேனனுக்கு மகுடாபிஷேகஞ்செய்து தான் உப நயனஞ் செய்துகொண்டு அவந்திநாடடைந்து சந்திபனென்னு மந்தணனிடஞ் சென்று அறுபத்துநான்கு கலைகளையும் பயின்று முடிந்த பின்னர் குருவை வணங்கிநின்றான். அதைக்கண்ட சந்திப னென்பவன் வேறு தக்ஷிணைவேண் டாம், வெருநாள் முன் கடலில்விழுந் திறந்துபோன தன் மகனைக் கொண்டு வரவேண்டுமென்று வேண்டினான். அப்படியே இறைவன் அவ்விறந்தமகனைக் கொண்டுவந்து குருதக்ஷிணையாகக் கொடுத்தான். அதனால் அவ்வந்தணன் இவன் நாராயணனே யென்று மகிழ்ந்து விடைகொடுத் தனுப்பினான். இவ் வாறு பல அற்புதச்செயல் செய்துவருகையில் சராசந்தன் தன் மருமகனாகிய கஞ்சனைக் கொன்றதனால் தன் புத்திரிமா ரிருவரும் படுந்துயரம் பொறாமல் பதினெட்டுமுறை படையெடுத்துப் போர்செய்து ஒரு காரணநோக்கிக் கடலி னடுவில் துவாரகையை இந்திரலோகமு நாணும்படித் தெய்வத்தச்சனால் நிரு மித்து எழுந்தருளி யிருக்கின்றான். இன்னும் சிலநாளில் அத்திருநகரத்தை யும் அழிக்க நினைத்திருக்கின்றனன். இன்னும் பல அதிசயமுள ; ஒருகாலத் தில் வேறொரு அற்புதப் போர்புரிந்தான். கடலி னடுவில் பிராக்சோதிஷ

மென்னும் பட்டணமுண்டு. அப்பட்டணத்திற் கரசன் நரகாசுரனென்பவன் அவன் இறைவனது சுவேத வராகாவதாரத்தில் இவனுல் பூமிதேவனுக்கு மகனுகப் பிறந்தவன், அவன் தனக் கொப்பில்லாப் பேராற்றலையுடையான்; அவனுக்கு அயக்கிரீவன், பஞ்சசனன், நிசும்பன், முரனென்னும் அமைச்சர் நால்வருளர். ஒவ்வொருவரும் ஏழுலகங்களையும் வாயில் விழுங்கவல்லார். இப்படிப்பட்ட பேராற்றலையுடைய நரகாசுரன் அருந்தவஞ்செய்யும் பெரியோரை யெல்லாம் வருத்தி அவர்கள் செய்யும் யாகங்களை யழித்தும் ஓமாக்கினியை யவித்தும் தீச்செயலுக் கிடமாயினன். இவன் சுவர்க்கலோகஞ்சென்று துவஷ்டா வென்பவன் மகள் கசேரு வென்பவள் பேரழகுடையாளா யிருந்தாள். அவளை மதயானை யுருக்கொண்டு சென்று தூக்கிக்கொண்டுவந்து மூவித வுலகத்திலுள்ள அரியவஸ்துகளை யெல்லாம் கொணர்ந்து தருவேனென்று பிரதிஞ்ஞை செய்து அவளை மணம்புரிந்தான். அதன்பொருட்டு உலகங்களை யெல்லாங் கொள்ளையடித்தான். அன்றியும் பல அரசமாதர், இயக்கமாதர், அரமகளிர், வித்தியாதரமாதர், நாககன்னியர், பதினுயிரத்தொருநூறு பேரை வலிதிற்கொணர்ந்து இந்திரனது மணிகூட மென்னும் பருவதத்தை அனாயாசமாய்க் கவர்ந்து அதில் அவர்களை சிறையிட்டுத் தன் மந்திரியாகிய முரன் மக்களைக் காவல்வைத்தான். ஒருகாலத்தில் சுவர்க்கலோகஞ்சென்று இந்திரனைப்பெற்ற அதிதி காதிலணிந்திருந்த குண்டலங்களைப் பிடுங்கிக்கொண்டு போனன். இப்படிப்பட்ட அக்கிரமங்களைப் பொறுது இந்திரன் நாரதரிடத்தே சொல்லியனுப்பினன். நாரதபகவானுங் கண்ணபிரானை யடைந்து சொல்ல, அதைக்கேட்ட கண்ணபிரான் நாம் அவனைக்கொன்று அறத்தை நிலைநிறுத்த வேண்டுமென்று கருதித் தன்பின்னே நம்பி மூத்தபிரான் சாத்தகியாழ்வான் முதலானேரை வரக்கட்டளையிட்டுத் தாம்முன்னேபைஞ்சிறைக்கருளன்மேற் சத்தியபாமையோடுமெழுந்தருளி அவன் நகரத்துக் கணித்தாகச்சென்றிறங்கி அந்நகரை முழுதும் நெறிப்புடன் முரனென்பவன் சக்கரங்களாற் பின்னலைப்போற் காக்கப்பட்ட வகையை யறிந்து தன் சுதரிசனப்படையால் அவற்றை யெல்லா மொழித்து முரனையுங் கொன்று உட்புகுந்து அப்பாலிருந்த மலைக்கோட்டையை யடைந்து தங்கௌமோதகி யென்னும் தண்டால் அதனைத் தகர்த்து அதன் உள்ளிருந்த நிசும்பனென்பானையும் அவன் பெருஞ்சேனையு மழித்துப் பின்னர் பஞ்சனன் அயக்கிரீவன் விருபாக்கன் முதலிய அரக்கரைக்கொன்று பாதலத்தி னுட்புகுந்து நரகாசுரனைக்கண்டு அவனொடும் போர்செய்யக் கருதி அவனுடனிருந்த கழிபேராற்றலையுடைய எட்டிலக்கம் அசுரரையுங்கொன்று அந்நரகாசுரனையும் பல போர்வகை புரிந்து சக்கரப் படையாற்கொன்று களைந்தனன்.

இவ்வாறு உலககண்டகனு யிருந்த நரகாசுரனைக் கொல்லவே யமரர்கள் பூமழை பொழிந்தனர். தேவதுந்துபி முழங்கின. உடனே நிலமகளெதிர்ந்து அதிதியணிந்திருந்த குண்டலங்களைக் கொடுத்து இறைவனைப்பணிந்து நின்று நின்னருளால் வந்தானை நீயே கொல்வது நீதியோவென்று சொல்ல, இறைவன் புன்முறுவல் செய்தருளி நின்னருளால்வந்தானை நீயே கொல்வது நீதியோ

வெனின் நீயே யென்னைப் புகலடைந்து பூபாரம் சுமக்கமுடியாதென்றதறிந்து நான் கொன்றதல்லது வேறன்றே! இவனே உலககண்டகனுயிருந்ததை அறியாயோ! ஆகையாற் கொன்று களைந்தேனென்று தக்க சமாதானம் புகன்று நிற்கையில் இந்திரனெதிர்ந்து தன்பரிவாரத்தொடும் இப்பெருமானைத் துதித்து நிற்க இறைவன் அவன்கையில் அக்குண்டலங்களைக்கொடுத்து அதிதிக்களிக்கக் கட்டளையிட அவற்றை யடைந்து இறைவனுடன் போயினன். கண்ணன் அங்கரகாசுரன் மாளிகையினுட்புகுந்து அதிலிருந்த நவரத்தின ராசிகளையும் நிதியையுங்கண்டு இவ்வாறு இருநிதிக்கிழவன் அளகையினுங் காண்கிலேன் என்று வியப்பெய்தி இவ்வகை யாண்டுங் கண்டதில்லையே! யென்று வியந்துரைக்க இந்திரன் இறைவனை வணங்கி நின்று இவனைக்கொல்லுதல் இறைவனுகிய உம்பாலலது பிறராற் கொல்வதரிது! இவன்பெற்ற பெருஞ்செல்வம் துவாரகையி லிருக்கத்தக்க தல்லது வேறிடத்திலிருப்பது தக்கதன்று, ஆதலின் இதனைத் துவாரகைக்குக் கொண்டுபோவதே நலமென்ன அவற்றையெல்லாம் கருளன்மேலேற்றித் தானும் சத்தியபாமையும் மணிகூடமென்னு மலையுட னெழுந்தருளினன். இத்தனையும் தாங்கிச் செல்லுகின்ற கருடப்புள் மனிசனேறிவரத்தக்கதோ! இறைவனே யாதலாற் கருடவாகனமுடையனுயிருக்கின்றனன். இவ்வாறு அச்செல்வக்குவியலுடன் தானும் சத்தியபாமையுமாக வெழுந்தருளி அச்செல்வங்களை யெல்லாம் உக்கிரசேனனுக்களித்து அம்மணிகூடமென்னு மலையை உருப்பிணி மனையி னுட்செறிக்கக் கருடனுக்குக் கட்டளையிட்டுத் தான் அவ்வுருப்பிணியுடன் அம்மணிகூடவரையிலேறிப் பார்த்து அதிலொருபுறத்திற் சிறையிலிருந்த பதினுயிரத்தொரு கன்னியரைக் கண்டான். அவர்களெல்லாம் சிறையிலிருந்து வருந்தி யிருந்தாராகலின் இறைவனை யெதிர்ந்து நாயகன்செய்த பெருந்தவத்தால் எம்மை யிவ்வருஞ்சிறையினின்றும் விடுவித்தீர்! நாங்கள் உமதுதெரிசனங் காண்பதற்கு முன்னரே எங்கள் வருத்தத்தைக்கண்டு இறைவன் முரன் முதலானோைக் கொன்று உங்களை மன்றலயர்க் தின்புறுவானென்று சொல்லியிருந்தனர். அவ்வாறே வாய்க்கப்பெற்றதென்று வேண்டிநின்றனர். அவ்வாறே இறைவன் அம்மாதரை யெல்லாம் மன்றலயர்ந் தின்புற்றிருந்தனன்.

இவ்வகை சொல்லக்கேட்ட தருமராசன் யானை குதிரை முதலிய நாற்படைகளையும் நவரத்தின ராசிகளும் பிறவும் அக்கருடன்மே லேந்திய தன்றி அம்மணிகூடவரையிற் சிறையிட்டிருந்த அம்மாதரையு மேன்கொணர்ந்தார். நன்ருக விளக்கவேண்டுமென்று வணங்கி நிற்க வீட்டுமர் சொல்லலாயினர். இறைவனே அங்கரகாசுரன் மாளிகையிலிருந்த செல்வக்குவிய லனைத்தும் யானைகளின்மேலும் ஒட்டகங்களின்மேலும் துவாரகைக்கு நம்பி மூத்தபிரான் முதலானோர் வசமாக அனுப்பித் தம்மை அம்மாதரெல்லாம் மணமகனுகத் தம்மைவரித்தமையால் அவ்விறைவனுக்குக் காதலிகளாகும் பெரும் பேறுடையராதலின் அவரைச் சுமந்தனன். ஆயினும் அவரையெல்லாம் இறைவன் மன்றலயரக் காரணஞ் சொல்லுகின்றேன். அங்கரகாசுரன் இவர்களையெல்லாம் மணஞ்செய்யாதிருந்தமை அவர்கள் மனச்சம்மதி வேண்டியே;

அவர்களும் நாரதபகவான் சொன்னவாறு கண்ணபிரான் வருங்காலநோக்கி யிருந்தனர். இறைவன் அவர்களையெல்லாம் விவாகஞ்செய்தனனே யன்றி வேறன்று,அவ்விறைவன் சுவர்க்கலோகஞ்சென்று அதிதியைக்கண்டு வணங்கி அவளால் ஆசிகள்கூறப்பட்டான். சத்தியபாமையும் வணங்கினாள். அவளை யென்றும் நீமூப்படையாதிருக்கவென்று வாழ்த்தினாள். கண்ணபிரான் சத்திய பாமை முதலானவருடன் துவாரகையை யடைந்து அத்துவாரகையின் சிற ப்பை நோக்கி விச்சுவகர்மாவைப்புகழ்ந்து தன்னுடன்வந்த இந்திரன் முதலிய தேவர்களை யெல்லாந் தத்தம்பதங்களை யடைய விடைகொடுத்துத் தான் மணம்புணர்ந்த பதினாயிரத்தொருநூறு மாதருக்கும் தனித்தனி விடுதிகளமை த்துச் சிறப்புடனிருந்தனன். மற்றொருகாலத்தில் நாரதபகவான் இறைவனைக் காணவந்து அப்பெருந்தகைகையில் ஒருபாரிசாதமலர்கொடுக்க அதைவாங்கிச் சத்தியபாமைக்குக்காட்ட அதைவேண்டி நிற்க, பகவான் இவ்வொருமலரோ வேண்டும், அம்மலரையுடைய தருவையே கொணர்ந்து வைக்கிறேனென்று கருடன்மீதேறித் தேவலோகஞ்சென்று தாம் பாரிசாததருவை யெடுக்க முயல அதையறிந்த தேவர்கள் இறைவனோடு போர்செய்யமுயன்றனர்,இறை வன் தனது பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கைச் செவ்வாயில்வைத்து முழக்கி அத்தேவரையெல்லாம் மூர்ச்சையெழச் செய்து அத்தருவைப்பெயர்த்துத் துவாரகையில் சத்தியபாமையினது திருமாளிகையில் நாட்டினான். இதுநிற்க ;

பிறிதொருகாலத்தில் பாணாசுரனையும் வெற்றிபெற்றனன். அப்பாணா சுரனோ முன்னே நான் சொல்லியிருந்த பிரகலாதனுடைய மகனாகிய விரோ சனனுக்குப் பேரன், மாபலிக்கு மகன். இவன் உருத்திரமூர்த்தியை நோக் கித் தவஞ்செய்து அக்கடவுளைத் தன்னகரஞ்சூழ அக்கினிக்கோட்டை காவ லாயிருக்க வேண்டிக்கொண்டதன்றி அவர் துணைவலியால் நிர்ப்பயமாய் அசுர ராச்சியத்தை யரசாண்டுவந்தான். அவனுக்கு உஷையென்றொரு மகளிருந் தாள். அப்பெண் மங்கைப்பருவமடைந்து தனக்கு நாயகனாவான் எப்படிப்பட் டவனோவென்று சிந்தித்திருந்தாள். அவள் ஒருநாள் தூங்கிக்கொண்டிருக்கை யில் அவள் கனவின்கண் கண்ணபிரானுடைய திருப்பேரனும் பிரத்யுமனன் திருக்குமாரனுமாகிய அனிருத்திரனைக்கண்டு தனக்கு நாயக னவனேயாக வெண்ணி விழித்துக்கொண்டு தன்னுயிர்ப்பாங்கியாகிய சித்திரலேகைக்குத் தான்கண்ட கனாத்திறனையுணர்த்தினாள். அவள்அதிகமாயாவியாகையால்உலகி லுள்ள அரசிளங் குமரரையெல்லாம் படத்தி லெழுதிக்காட்டினாள். அப்பெண் கள்நாயகமோ அவருள்அனிருத்திரனையேதன்கனவினெதிர்ந்த காதலனெனக் காட்ட, அச்சித்திரலேகை தன் மாயையால் மாளிகையிற் றூங்கிக்கொண்டிரு ந்த அனிருத்தனைக் கட்டிலொடுந் தூக்கிக்கொண்டுவந்து உஷையினிடத்தே வைத்தாள். அவள் கரவி லொருவருமறியாவண்ணம் அவ் வனிருத்தனோடு கலவித்தொழில்புரிந்து கருக்கொண்டாள். அதைக்கேள்விப்பட்ட பாணன் ஒருநாள் அவ்வுஷையினது மாளிகையையெல்லாஞ் சோதித்து அங்கேயிருந்த யாதவ விளஞ்சிங்கத்தைக்கண்டு அருஞ்சிறையிட்டான். இதை நாரதபகவா னாற் கேள்விப்பட்ட கண்ணபிரான் தன் பரிவாரத்தொடும் நம்பி மூத்தபிரான்

முதலானுரோடும் புறப்பட்டு அப்பாணனுடைய இராசதானியாகிய சோணித புரஞ்சென்று தன் வருகையைத் தெரிவித்து அப்பாணனுடைய கோட்டையை வளைந்திருந்த அக்கினியைச் சின்னபின்னமாக்கி அவனுக்குச் சார்பாக விருந்த உருத்திரகணங்களையெல்லாம் புறமுதுகிட்டோடச்செய்தான். உருத்திரமூர்த்தியே தன்னடியவனைக்காக்க வெண்ணங்கொண்டு தன் வில்லையெடுத்துப் போர்செய்ய அவரையும் தன் கைப்பாணங்களால் வெற்றிகொண்டு நிற்ப, அதையறிந்த பாணன் ஆலவிடம்போற் கொதித்துப் போர்க்கெழ இறைவன் அவனுடைய ஆயிரந்தோளையும் இந்திரன் மலைகளின் சிறகைக்கொய்தாற் போல்தடிந்து அவனையிரண்டுகையுடனிறுத்திக்காத்துப் பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கமுழக்கி உஷையையும் அனிருத்திரனையுமழைத்துக்கொண்டு துவாரகையில் வீற்றிருந்தருளினன். இவனே எத்தனைவீரரையெல்லாம் வெற்றிகொண்டிருக்கின்றான். அவர் யாரெனின் சயிப்பியன்,சத்தனுவா,இந்திரத்துய்மன், கசேருமான், சாலுவன், தியுமச்சேனன், ஹேமந்தமலையில் வசிப்பவராகிய பலசூரர்; இவர்களையெல்லாம் அனுயாசமாகவேபோரில்வெற்றிகொண்டான். இச்சூரனுகிய சிசுபாலனே தான் பிரமசரிய நிலையொழிந்து உருப்பிணியாரை மணஞ்செய்துகொள்ளமுயல்கையில் இக்கண்ணபிரான் அவ்வுருப்பிணியாரை இராசசபையையடைந்துதூக்கிக்கொண்டு தன்தேரிலேற்றிப்போனன். இவன் மானத்திற்காகச்சிறிதுநேரம் போர்செய்ய இவனை இக்கண்ணன்வெற்றிகொண்டுபோயினமை யறியாதார் யார்? இது நிற்க;

ஒருகாலத்தில் நமது அருச்சுனனும், வீமனும், துரியோதனனும், கர்ணனும்,துரோணசாரியாரும், அசுவத்தாமாவும் இக்கண்ணனுடைய போராற்றலையறிய அவனுடன் விளையாட்டுப் போர்விளைக்க அவர்களை யெல்லாம் தான் ஒருவனுகவே போர்செய்து தோல்வியெய்துவித்தமை யாவருமறிவர். தருமராசனே இவனதுமகிமாதிசயங்களும் அளப்பில; மறைகளே எடுத்துச்சொல்லமாட்டாவெனின் நான் எவ்வா றெடுத்துச்சொல்வேன்; சகதேவனே இறைவனது பெருமிதமுழுதுங்கேட்டுக் கழிமகிழ்சிறந்தானுகி,இக்கண்ணபிரான் பரம்பொருளின் அம்சபூதனுகையாலும் சவுசலியாதிகுணமுடையவனுதலினுலும் இவனையே நோக்கி அக்கிரபூசனைசெய்தோம், அது யாவருக்குஞ் சம்மதமாயிற்று; அப்படி சம்மதமாயிராததாயின் அவர் என்னெடு போர்செய்யலாமென் றெடுத்துச்சொல்ல, அதைக்கேட்ட முற்றத்துறந்த முனிவர்யாவருங் களித்தனர். நாரதபகவானே இச்சிசுபாலனுக்கு முடிவுகாலமென்று தன்மகதியாழை மீட்டிக்கொண்டு நின்றனன். அச்சிசுபாலனே வீட்டுமரும் வியாசபகவானுஞ் சொல்லுஞ் சொற்கேட்டுப் பொறுது கோபங்கொண்டுநின்றனன். அவனைச்சார்ந்த அரசரும் முகங்கன்றி ஒருவர்முக மொருவர்பார்த்தே நின்றனர். இவ்வகை நின்ற அரசரையெல்லாம் சிசுபாலன்கண்டு தான் போர்செய்யத்துணிந்த குறிப்பினையுணர்த்தினன்,அவர்களும் கண்ணனேடு போர்செய்வதாகத் தங்கருத்தை யுணர்த்தினர். அதையுணர்ந்த கடனிறத்துக் கள்ளமாமாயன் சும்மாவிருந்தான். அப்போது சகதேவனே நான்பின்னே அந்தணர் அரசர் முதலானேரைப் பூசிக்கவே வந்தேனென்று கூறக்கேட்ட சிசுபாலன்

பொறுமைமேற்கொண்டு தனக்கிணங்கிய அரசரையெல்லாம் பார்த்து நீங்க ளஞ்சக் காரணமேன்? நீங்களோ மிக்க பேராற்றலையுடையீர்! உங்களுக்குச் சேனைத்தலைவனுகச் சமைந்தேன். நம்மையெல்லா மவமதித்த பாண்டவரை நாம் இக்கணமே பலியிட்டு யாகபூர்த்தி செய்வோமென்றுகூறினன். அவ்வரச ரெல்லாம் அதற்குடன்பட்டு நின்றனர். தருமராசனே இவர்கள்போர்செயத் துணிந்தமைகண்டு இதென்னவிபரீதம்! நமதுவேள்விக்கு விக்கினநேரிட்டதே யென்று மனக்கலக்கமெய்தி வீட்டுமரைநோக்கி இப்போது அரசர்கூட்ட மோ போர்செய்யத்துணிந்தது; இதுகேட்டிற்கே மூலமெனத்துணிகின்றேன், என்செய்வதென்று வணங்கிக்கேட்க, வீட்டுமரும் நீ சிறிதும் அஞ்சவேண் டாம், இவ்வளவு ஆரவாரத்துக்கும் சிறிதும் கண்ணெடுத்துப்பாராமல் அல க்ஷியமாகவே புன்னகை செய்துகொண்டிருக்கும் கண்ணபிரான் ஒருகணப் போதில் அவரையெல்லாம் வெயில்முன்பனிபோல் தன்வல்லமையால் வெற்றி கொள்வான். நீயேன் கலங்குகின்றனையென்று சொல்லிக்கொண்டிருந்தனர்.

அப்போது வீட்டுமரை நோக்கிச் சிசுபாலன் நீ நரைத்தகிழவனுயினதே யன்றி அறிவுங்கெட்டனையே! உன்னையிதுகாறும் பேரறிவாளனென்றெண்ணி யிருந்தேனே; உனக்கேன் பயித்தியம்பிடித்தது. உன்பிழைப்பேன் வீணுயிற்று, உன்பால் இதோபதேசங்களைக்கேட்ட பாண்டவரும் அவ்வாறேயாயினரோ. அஃதிருக்கட்டும், பாண்டவருள் மிகச்சிறியவனுகிய இச்சகதேவன் தன்னை மறந்து சிறிதும் அரசர்களை மதியாமற்சொன்ன சொல் இச்சபையிலிருப்பாரி லறியாதாரொருவருமிலர். இப்பாண்டவர்களெனக்கெம்மாத்திரம்! அவருக்குத் துணையாவாரு மெனக்கெம்மாத்திரம்? நீங்களெல்லாம் எவ்வாறு தவறிப் பிழைப்பீர்கள். உன்னுற்புகழப்பட்ட இக்கண்ணன் பிறப்பு முதலியவற்றை யறியாதா ரொருவருமில்லையே, உன்செருக்கினுலும் மதிமயக்கத்தாலும் அறி யாது வியந்துபேசினை! இவனே மிகக்கொடியவனென்றும் அற்பனென்றும் உனக்குத் தெரிந்தே யிருக்கலாம். நீ யெடுத்துச்சொல்லிய சரிதங்களத்தனை யும் வெறும்பொய்யே கலந்திருக்கின்றன, அவற்றுல் அவனடைந்த பெருமித மொன்றுங்காண்கில்லேன். இவன் சிறுவனுயிருக்கையில் வெண்ணெய் தயிர் பால் முதலியவற்றைக் களவிலருந்திக் கட்டுண்டு தாம்பினுல் மொத்துண்டு கோவியர்முன் கூத்தாடி ஆயர் மனைவிமாராகிய கோவியரைக் களவிற்புணர் ந்து அவராடையை மரத்திலேறி யொளித்துக் காமுகனுகத்திரிந்து இடைச் சிறுவரோடு விளையாடித்திரிந்ததையும் பொத்தல் வண்டியையுதைத்துச் சொத் தைமரத்தை முறித்ததையும் திருவிளையாடலென்றுபுகழ்ந்தனையே! மரத்தை முறித்ததும் வண்டியை முறித்ததும் யாதாயினு மொருகாரணம்பற்றியே நிகழ் ந்தனவாயிருக்கும். இவன் கன்றைக்கொன்றது கோகத்தியென்றே கொள்ளத் தக்கது. தாய்போல்வந்து முலைகொடுத்தவளைக் கொன்றுனே அது பெண் வதையின் பாலதன்றே! தன் வருக்கத்தாரையெல்லாங் காத்த கஞ்சனை வதைத்தானே அது பெரும்பாவமென் றெண்ணத்தக்கதன்றே! அக்கஞ்சன் மாண்டதைக்கண்டு பொறுது தன்னேடு போர்செய்யவந்த சராசந்தனுக்குத் தோற்றேடிக் கடலில் ஒளித்தானே அது சுத்தவீரனுக் கியல்போ! ஒரு

மிலேச்சனுக்குத் தோற்றோடிய செய்தியுமுண்டு, அப்படிப்பட்ட தன்மையு முடையானும் அரசவையில் வரத்தகுதியோ! இவன் அச்சராசந்தனிடத் தில்வைத்த மனவைரத்தால் அந்தணர் வடிவங்கொண்டதன்றி,தன்னொடு இவ் வீமனையும் அர்ச்சுனனையு மழைத்துக்கொண்டுபோய் அவ்விருவராலுங்கொல் வித்தனனே! இவனையும் பெரியதோர் வலிமையுடையானென்று சொல்லத் தகுமா? இவர்கள் அவ்வரசர்பெருமானை வஞ்சித்துக்கொன்றதும் ஒரு வெற்றி யென்றுசொல்லப்போமோ! இவன்செய்த ஒவ்வொருகாரியமும் மனிதரொண் ணிக்கையிற்கொண்டு நடவாத காரியமேயாம். இவனைப்புகழ்ந்துபேசினின்றனை! பாண்டவர்களோ மிக்க சாந்தகுணமும் கபடமின்மையு முடையராதலால் உன்சொற்கேட்டு மதிமோசமாயினர். உன்னைமுன்கொன்றே பின்பு இவ்வரசர் கூட்டத்தை யெல்லாம் அவமதித்த பாண்டவரையும் இடையனையும் கொல் கின்றேனென்று கோபித்துக்கூறினன். அதைக்கேட்டுப் பொறாது கண்க ளிரண்டுஞ் சிவப்பெழக் கையிலே கதையை யேந்திக்கொண்டு தன் ஆசனத்தி னின்று மெழுந்து வீமசேன னெழுந்ததைக்கண்டு வீட்டுமர் விரைந்துசென்று நீ அச்சிசுபாலனை நோக்கிக் கோபிப்பதனாற் பயனென்னை! அவனுக் கிறுதிக் காலமாகையால் அவன் வாயில் இவ்வளவு கொடுஞ்சொற்கடோன்றுகின்றன; நீ சும்மாவிருவென்று சொல்லினர்.

அதைக்கேட்டு இடுநீற்றுற்பையவிந்த நாகம்போல் ஒடுங்கி நின்றான். அதைக்கண்ட சிசுபாலனே வீட்டுமனை நோக்கி வீமன்செய்கை நன்று நன்று! நான் அவன்கையிலேந்திய கதையாலும் உயரமா யிருப்பதனாலும் அஞ்சு வேனோ! பனங்காட்டு நரி சலசலப்புக்குச்சிங்கமு மஞ்சாநிற்குமோ! வீமன் நீ தடுக்க அடங்கினனே அதற்கு நான் அச்சங்கொள்வேனோ! ஆயினும் ஒரு குறைவுமின்று, உன்செய்கையும் அவன் செய்கையையு மெடுத்துச்சொன்ன மையாலன்றோ இவ்வீமனது கோபத்திற் கிலக்கானேன்! ஆயினும் ஒருகுறை யுங் காணேன்! அவ் வீமனுக்குப் படைத்துணையாக நீயேவரினும் ஒருகை பார்க்கிறேனென்று சொல்லிமுடித்தான்.

சிசுபாலன் வரலாறு.

இவ்வாறு நிகழ்கையில் தருமராசனையும் வீமனையும் நோக்கி வீட்டுமர் இவன் வரலாற்றைச் சொல்லுகின்றேன். இவன் சேதிநகரத்துக் கரசனாகிய தமகோஷன் மகன். இவன் உங்களைப்போல் இக்கண்ணனுக்கு நல்லத்தை மகனேயாம். இவன் பிறந்தவுடன் மூன்றுகண்களும் நான்குகைகளுமுடையவ னாகப் பிறந்தான். இவ்விகாரவடிவங்கொண்டு பிறந்தமையால் அவன் இராச சபையிலிருந்த மந்திரிமார் முதலியோர் இவ்வாறு பிறப்பது நமது இராச்சியத் திற்குகே கேடென்றுரைத்தனர். அவ்வாறு செய்யத்துணிகையில் 'அசரீரி' இக் குழந்தையை யெறியவேண்டாம்,இவனே உன்குலத்தைவிளக்கவந்தவனாகும்; மிக்கபெரியவலிமை யுடையனுவானென்றுசொல்லியதன்றி எவன் இவனுக்கு மிருத்துவோ அவன் கையினாலெடுத்து மடிமேல்வைத்துவிளையாடா நிற்ப எஞ்சியகண்ணும் கரங்களுமாகிய இவ்விகாரவடிவம் மறைவுறும்,இதற்கையமே

யில்லையென்றது. இவ்விகாரவடிவத்தோடு பிறந்த மகனைக்காணப் பல அரசரும் திரண்டு சூழ்ந்துவந்து வேண்டிய வரிசை முதலியனவற்றைத் தந்துபோயினர். யாதவரும் வந்துகாண அவர்கள் மடிமீதிலேறி விளையாட்டயரா இவன் விகாரவடிவ மெத்தனையு மாறவேயில்லை. இக்கண்ணனெடுத்து மடிமீதிருத்தி விளையாடும்போது எஞ்சியகண்ணும் கரங்களும்மறைந்தன, அதைக்கண்ணுற்ற சாத்துவதி யென்பவள் இக் கண்ணபிரானை நோக்கிக் கண்ணா! தெய்வகதியால் என்மகனுக்குமிருத்துயுவாக நீயேசமைந்தனை! நீ நாளொன்றுக்கு நூறுபிழை என் மகன்செய்யப் பொறுக்கவேண்டுகின்றேன். இவ்வரமொன்றே வழங்க வேண்டுமென்று வேண்டிநின்றாள். அதற்குடனேர்ந்து தன் நல்லத்தையாகிய சாத்துவதியைவணங்கி விடைபெற்றுச்சென்றான். இவனுக்கெவராலும் மரணமில்லை; இவன் கண்ணனாலேதான் மரணமடையவேண்டும்; அப்பயமின்மை மேற்கொண்டே யாவரையும் போருக்கழைக்கின்றான். நாம் இதிற்பிரவேசிப்பதனாற் பயனில்லை; இனி யொருமுகூர்த்தகாலத்திற்குள் இவனேஇக்கண்ணனால் இறந்துபோவான், ஐயப்படவேண்டா மென்றனர். இவ்வாறு சொல்லிய வீட்டுமனை நோக்கி நரைத்தலை முதியோனே! நீஇடையனைத்தானா புகழ்ந்து பெருமிதமடையவேண்டும். உன்வாழ்வைக் கெடுத்துக்கொண்டாயே! இத்தனைநேரம் நீபிழைத்திருந்தமைநாங்கள் பொறுத்திருந்ததனா லென்பதை உன் உள்ளத்தே திடமாகக் கொள்ளக்கடவை! உன் வல்லமையினாற் பிழைத்தனை யென்றெண்ணவேண்டாமென்று சொல்ல, வீட்டுமர் மிகவுஞ் சிறுநகைபுரிந்து சிசுபாலனையும், அவனைச்சார்ந்தாரையும் நோக்கி, நான் இச்சபையில் யார் சுத்த வீரராகத் தம்மை மதிப்பரோ அவரை யெல்லாம் துரும்பாகவே நினைக்கின்றேன், என்னொடு போர்செய்யத்துணிவரேல் அவரை யெல்லாம் தென்றிசையிற்சேர்க்க வலியுள்ளேன். இக்கண்ணன் கொல்லச்சமைந்திருப்பதனால் நான் இத்தனையுந் தாழ்த்தேனென்று விரித்துக்கூறினார். பின்னர் சிசுபாலனே கண்ணனை நோக்கி தந்தையுடன்தோன்றிய அத்தையைப் புணர்ந்த கள்வா! இடையா! குலகாலா! சண்டைக்குப் புறப்பட்டுவா, பார்க்கலா மொருகை யென்றுசொல்ல, கண்ணபிரான் சிறுபுன்னகைசெய்து தாருகனென்னும் தன் சாரதியையழைத்துத் தன் தேர்கொண்டுவரச்செய்து பாண்டவர்கள் மனங் களிப்பெய்த, வீட்டுமர் வாழ்த்த, தேரின்மே லாரோகணித்துப் போர்செய்தற்குரிய இடநோக்கிச் சென்றனன். சிசுபாலனேதன்னொடுநேர்ந்த அரசர்கள் சூழ நால்வகைச்சேனை யாரவாரிக்கப் போர்க்களங்குறுகினான்.

இதைக்கண்ட அரசரெல்லாம் இக்கண்ணன் திருமறு மார்பனாகிய கமலக்கண்ணனென்பதிற் சந்தேகமேயில்லை; இச்சிசுபாலன் மரணமடைவதுதிண்ணமென்றே சொல்லிக்கொண்டனர். பகைவரும் அவ்வாறே யெண்ணி மனக்கலக்கமுற்றனர். கண்ணபிரானே அரசரையெல்லாம் நோக்கி நாங்களிருவரும் செய்யும் போர்த்தொழிலின் விநோதம்பார்க்க வேண்டுகிறேன். நீங்கள் நெருங்கி யிருக்கவேண்டாம். இவன் இயற்கையிலே எனக்குப்பகைவன். எனக்கு நண்பாயுள்ளாரை வருத்துபவன். நான் நரகாசுரனைக் கொல்லச்சென்றபோது தன்சேனையொடுவந்துதுவாரகையைநெருப்பிட்டோடிச்சென்றான். மற்றொரு

காலத்தில் யாதவரெல்லாம் இரைவதகமலையில் வேடிக்கையாகத் திரியுங் காலத்தில் அங்கேசென்று அவரையெல்லா மிறுகப்பிடித்துக் கட்டியடித்துக் காவலிலிட்டான். ஒருகாலத்தில் என்பிதாவாகிய வசுதேவர் அசுவமேதஞ் செய்யத்தொடங்கித் தக்க காவலொடுங் குதிரையைவிட்டிருக்க, அவ்வேள்வியைக் கெடுக்கத்துணிந்து அக்குதிரையைப் பிடித்துக்கட்டினான். எனக்குக் கஞ்சனையன்றி மற்றோ ரம்மானுண்டு. அவனுக்கு நியமித்திருந்தவளை மாயையாற் கரந்துசென்று தந்தவக்கிரனுக்கு மணநேர்ந்தான். இவன் நான் இல்லாத தருணத்தில் என்னுறவினரை வருத்தியதைச்சொல்ல எண்ணிமுடியா,எட்டிலடங்கா. இவன் சராசந்தனோடு சேர்ந்து எனக்குச்செய்தபிழைக ளெத்தனையோ! அவையனைத்தும் என்னத்தையாகிய சாத்துவதிபொருட்டே பொறுத்தேன். என்னைக்குறித்துச்செய்த பிழைகளைக் கணக்கிடவோ உரையிடப் போகா,ஆயினும்உலகத்திற்றருமவிரோதமாய்என்னைச்சேர்ந்தவருக்கேசெய்த பிழையனைத்தையும் எண்ணக் கணக்கிலவாயின; இனிப்பொறுப்பது தகுதியன்று; அவன் இன்றுசெய்தபிழைகளில் முக்கியமானவை பாண்டவரையும், வீட்டுமரையும் தகாதவன்னஞ் சொல்லி இகழ்ந்தமையே; இவைகாரணமாகவே இவனைக்கொல்லச்சமைந்து போர்க்களங் குறுகினேனென்றுதிருவாய் மலர்ந்தருள,சிசுபாலனோ சிறிதும் அஞ்சாமல் குகையிலிருந்த சிங்கம் யானைக்கூட்டத்தினைத் தேடிப்புறப்பட்டதுபோல் எழுந்தருளி யிருக்கும் கண்ணபிரான் திருமுன்புசென்று பலவகைப்படைகளும் நிறைந்துள்ள தேரிலேறிக் கொண்டு யுத்தசன்னத்தனாய்த் தன்கையிற்கொண்டிருக்கிற சங்கமுழக்கி நின்றான். தருமராசனோ இவர்கள்போர்க்கு முனைந்திருப்பதுகண்டு நாரதபகவானை வணங்கி அரசர்களுக்குக்கேடுவருவதாயின் விண்ணிலும் மண்ணிலும் நிகழ்வதாகிய உற்பாதங்களை விளக்கவேண்டுமென்றுவேண்ட,அதற்கு நாரதபகவான் சொல்லலாயினன்.

அரசர்கள் போர்செய்யச் செல்கையில் சூரியன் சந்திரன் முதலிய கிரக நிலையையும், வழியையும், அதனியைபினையும் உச்சநீசங்களையும் ஒளியுடனிருப்பதனையும் ஒளிகுன்றி யிருப்பதையும் உதயாத்தமானங்களையும், அவை காட்சிக்குத்தோன்றும் நிலைமையையும் தோன்றாத நிலைமையையும் நன்றாகக் கணிதநூற் புலவரைக்கொண் டாராய்ந்தறிந்து நன்மை தீமைகளை நிச்சயித்தறியவேண்டும். அக்கிரகங்களின் வக்கிர முதலிய நிலைமைகளினால் உற்பாதங்கள் தோன்றுகின்றன. அவற்றில் மண்ணிற் றோன்றும் உற்பாதங்களெவையெனின் வெயிலினடக்கும் மனிதர் நிழலும் மர முதலியவற்றி னிழலும் காணாமற்போ யொழியும். கோவில்களிலும் நதிக்கரையிலும் வைக்கப்பட்ட மரங்களிருந்தாற்போ லிருந்து பட்டுப்போம்; தீப்பற்றியெரியும், முறிந்துபோம், இலையுதிர்ந்துவிடும். நாட்டினிடத்தே மரம், கொடி,செடி முதலியவற்றில் ஏதேனும் பூவொடு பூ பூத்தாலேனும், காயொடுகாய் ஒட்டிக்கொண்டு காய்த்தாலேனும்,தத்தமக்குரிய காலத்திற்பூக்காமலும் காய்க்காமலு மிருந்து பூத்தாலேனும்,காய்த்தாலேனும், அவ்வரசனுக்குக் கேடுவது காட்டுங்குறியையறிவிக்கும்,அங்ஙனமே யாலேனும் காற்றாலேனும் நாசமடையும். இதுசிற்க;

கடவுளருக்குத் திருவிழா நடக்கையில் கடவுள ருருவங்கள் தவறிக் கீழே விழுந்தாலேனும்,குடைகள்முறிந்து கீழேவிழுந்தாலேனும், மண்டபங்கள்தேர் கள்முதலியன காரணமின்றி நாசமடைந்தாலேனும், அவ்வரசனுக்குத் தீமை உண்டாம். மலைகள் நடுக்கமுற்றாலேனும், பிரதிமைகள் சிரித்தாலேனும்,அழு தாலேனும், அவற்றிற்கு வியர்வுண்டாயினேனும், படைக்கலச் சாலையிலே னும், வாகனச் சாலையிலேனும், பண்டாரச் சாலையிலேனும், நீதிச்சாலையிலே னும்,அரசனது அந்தப்புரத்திலேனும், அத்தாணி மண்டபத்திலேனும், தேன் கூண்டுகட்டினாலேனும், கனிகளைத்தரு மரங்களிலிருந்தேனும்,யானைத்தந்தம் மாட்டின்கொம்பு முதலியவற்றிலிருந்தேனும், உதிரம்பெருகுமாயின் அவ்வரச னுக்குக்கெடுவதுகாட்டுங் குறியென் றுணரவேண்டும். அரசனுடைய கவிகை முதலியன முறிந்து வீழ்ந்தாலும் அல்லது தவறினாலும்அவ்வரசன் கேடடை வான். பூமியானது காரணமேயின்றி யிரண்டாய்ப் பிளந்தாலேனும், அதில் ஓசைபிறந்தாலேனும், கம்பித்தாலேனும், தவளைகள் பாம்புகளை விழுங்கினா லேனும் அடுப்பின்கண் ஒருசாமநேரம் வெந்தும் சோறுபதமாகாமற் போனா லேனும், கிணற்றுநீர் பொங்கினாலேனும்,கண் கை கால் முதலிய விகாரமுடை யனவாகப் பிறக்குமக்களை மாதர் பெறுவாரேனும், அவ்வரசனே மிருதியுங் கேடடைவான்.

இனி விண்ணிற்றோன்றும் உற்பாதங்களோ அளவில ; அவை இரவின் கண் இந்திரவில்தோன்றுவதும், பகலில் விண்மீன்தோன்றுவதும், அகாலத் தில் கிரகணமுண்டாவதும், சூரியனே ஒளியிழந்திருப்பதுமாம். இவ்வகை யாகிய கெடுவதுகாட்டுங் குறிகளைக் கணிதநூல்வல்லாரைக்கொண்டு கோட் களினடையினா லறியவேண்டும். இத்தனைக்கு நியாமகமாயிருக்கும் கண்ண பிரானே மூலகாரணமா யிருக்கின்றனன். எவர்க்கும் மேன்மையும் அஃதின் மையும் தன் கருத்தின்வண்ணமே நடத்துகின்றனன். ஆதலால் தீமையறிவ தற்கு முன்னரோ அக்கெடுவதுகாட்டுங் குறிகளைத் தோன்றச்செய்கின்றான். இதனாலன்றோ தீமையும் நன்மையும் நல்லோரும் தீயோரும்பெற விளக்கினா னெனக்கூறிச் சும்மாவிருந்தனன். இவ்வாறிருக்கையில் சிசுபாலனுக்குக் கெடு வதுகாட்டுங் குறிகள் பலதோன்றின ; கொள்ளிவாய் நரிகள் அவனைச்சூழ்ந்து திரிந்தூளையிட்டன, பூமிநடுக்குற்றது, எதிர்முகமாகவே பெருங்காற்று வீசி ற்று, பூமியின்கண் பயங்கரமாகிய ஓசையொன்றுண்டாயிற்று,காரணமின்றியே இடியிடித்தது,பூரணைநாளின்றியேசந்திரகிரகண முண்டாயிற்று,அவன்தேரின் சிகரத்தின்மேல் கழுகுகள்வந்துட்கார்ந்தன ; இன்னும்ஊனையுண்ணும் பறவை யினங்களெல்லாம் அவன் தேரைச்சூழ்ந்துலாவின, இவ்வண்ணங் கெடுவது காட்டுங் குறிகள் பலதோன்றக்கண்டுஞ் சிறிதுமதியாமல் கவசமுதலியவற் றைப்பூண்டு கையில் வில்லேந்தி வீராவேசத்தோடுங் கர்ச்சனைசெய்துகின் றான் ; வீட்டுமர் முதலிய சாதுக்கள் இவற்றைக் கண்களாற்கண்டு கழிபெரு மகிழ்வடைந்தனர். மற்றுஞ் சிலர் பயமெய்தினர்,இவ்வாறிருக்கச் சிசுபாலனே உதடுதுடிப்பக் கண்ணபிரானை நோக்கி எனக்கு நீயொருவனே பிரதானமான பகைவன், உன்னைக்கொன்று நாற்கடல்சூழ்ந்த உலகமுழுதும் சத்துருபயஞ்

சிறிதுமின்றி ஆளவேண்டுமென்றே பல நாளாக அபிப்பிராயப் பட்டிருந்தேன், அது இன்றேதான் முற்றுப்பெறுவதாகத் தெய்வகதியால் நேர்ந்தது ; இப்போதே நீ யெங்குமோடாமனின்று போர்செய்ய வேண்டுகின்றேன், அவ்வாறு போர்செய்வையேல் உன்னைக்கொன்று அப்பால் வீட்டுமனையும் பாண்டவரையும் கொன்று என்கருத்து முடியப்பெறுவேனென்று சொல்லிவிட்டுத் தன் வில்லைவளைத்து நாணேற்றி நாணோசைகொண்டு கூர்மையுள்ளனவும், கணுக்குறுகியனவும், பொற்பட்டங் கட்டினவும், மிக்கவொளியொடுங்கூடியனவுமாகியபாணங்களைத்தொடுத்துக்கரசரவேகந்தோன்றாமற் கண்ணபிரான் மேல் நீலமுகில் கோடைமழை சொரிவதுபோல அம்புமழை பொழிந்தான். அதைக்கண்ட கண்ணபிரான் தன் கையிலுள்ள சார்ங்கவில்லில் அவ்வாறே பல பாணங்களைத்தொடுத்துச் சிசுபாலனை நோக்கி நீ யென்மேற்பாணங்களைப் பொழிந்ததைக்கண்டேன், என்னால் விடப்படும் பாணவேகங்களைப்பாரென்று தானும் புங்கானு புங்கமாகப் பொழிந்தான். அவைகளோ இடிவிழுந்தாற்போலச் சிசுபாலன்மேல் வீழ்ந்து மார்பைவருத்தவே, அவன் மனவலிகெட்டுடைந்து இதழைக்கவ்விக்கொண்டு பலபாணங்களைமிதமின்றிப் பொழிந்தான். அவைகண்ணபிரான்மேற்பட, கண்ணபிரான் பொறாது அவற்றையெல்லாம் துண்டமாக்கி நூறுபாணங்களைப் பிரயோகஞ்செய்தான். அவைகள் தன்னையணுகாவண்ணம் ஒழித்துச் சிசுபாலன் ஆறுபாணங்களை விடுக்க, அதனாற் சினங்கொண்டு ஆக்கிநேயாத்திரம்,வாயுவாத்திரமுதலிய பாணங்களால்கண்ணபிரானவனை வருத்தினான். அவ்வவற்றிற் கவ்வவற்றையே விடுத்தொழித்து கண்ணன் தேர் குதிரை சாரதி முதலியன தெரியாவண்ணம் சரக்கூடங் கட்டினாற்போல பாணங்களைச்சொரிந்து கண்ணனைநோக்கி உன்னைத் தென்றிசைக்கு இதோ என்பாணத்தால் அனுப்பிவிடுகிறேன் பாரென்று தானொரு பாணத்தை விடுத்தான். அது கண்ணபிரானுடைய மார்பைப்பிளந்து வருத்தியது ; சிசுபாலனோ உன்னைத்தப்பாமல் கஞ்சன்,சராசந்தன்,நரகன்முதலானவரைக் கொன்ற பழிக்குப் பழி வாங்குகின்றேனென்று பின்னும் வேறொரு நாராசபாணத்தைப் பிரயோகஞ்செய்து இந்திரசித்தேபோலத் தன்றேரோடு மாகாயத்தின் மறைந்து கையோயாமற் சரமாரி பொழிந்தான். கண்ணபிரானும் அந்நாராசபாணத்தையும் அவன் தொடுத்த அளவில்லாத பாணங்களையும் அறுத்துத்தள்ளிச் சேதிபதியாகிய சிசுபாலனைநோக்கி நீ குணவானாகையாற் கஞ்சன் சராசந்தன் நரகன் முதலானவரைக் கொன்ற பழிக்குப் பழி வாங்கப் புறப்பட்டாய்! சிறிதுமஞ்சவேண்டாமென்று தானும் மாயையினால் தேரோடுமறைந்து போர்செய்துவந்தான்.

இவ்வாறிருவரும் போர்செய்கையில் இருவரையும் காணாமல் இருவர் விடும் பாணங்கள் மேலேழுவதும் போவதுங் கண்டு வியப்படைந்தனர். இமையா நாட்டமுடைய தேவர்களோ இவ்வகையான போரை நாமெங்குங் கண்டோமில்லையே, தோல்வியும் வெற்றியு மிருக்கட்டும், நாம் போரைப் பார்க்கவந்தோமே, அதுவுமன்றோ காணற்கரிதா யிருக்கின்றதென்று தாமும் மாயையினாற் கரந்து காண முயன்றனர். பின்பு சிசுபாலனோ தேவாஸ்திரங்

களாற் போர்செய்ய முயன்று ஆக்கிநேயாஸ்திரம், வாயுவாஸ்திரம், குபேராஸ் திரம், வருணஸ்திரம் முதலிய அஸ்திரங்களைப் புங்கானு புங்கமாகப் பிரயோ கஞ் செய்தான். இறைவனும் சலியாமல் அவ்வவற்றிற் கவ்வவற்றையே விடுத் துச் சிசுபாலனை மெய்சோரச் செய்தான். இவ்வாறு போர்செய்து சிசுபாலன் செய்யு மாயையெல்லாம் விலக்கி நிற்கச் சிசுபாலன் இராகுவாற் பிடிக்கப் பட்ட சந்திரனேபோலத் தன் மாயையெல்லா மொழிந்து நின்றான்.

பின்பு சிசுபாலன் தான் கற்ற மாயாவிஞ்சை யனைத்தும் பாழாகவே தன் கையில் வில்லேந்திக்கொண்டே போர்செய்யவந்து கண்ணன்மேல் மீண் டும் பல பாணங்களைப் பொழிந்து வைது சல்லடைக்கண்ணேபோலக் கண்ண பிரான் மேனியைத் தொளைத்துத் தேரொன்றும் குதிரையென்றும் சாரதி யென்றுந் தெரியவொட்டாமற் செய்து அம்பு மாரியாகவே யெங்குந் தூர்த் தான். அதனால் இறைவன் மெய் சோர்ந்து தேர்த் தட்டின்மேற் கம்பத்தைக் கைகளாற் பிடித்துக்கொண்டுநின்றான். அதைக்கண்ட ஆப்தர்கள்மனங்கலங்கி நின்றனர். சாரதியாகிய தாரகனே அன்பர் பரிவையும் அடையலானாகிய சிசு பாலன் மனப்பொலிவையுங்கண்டு இறைவனைநோக்கி இவனைக் கொல்லாமலே யுபேக்ஷையாகவிருப்பதுமுமக்குத்தகுமோ; உமதருளாலன்றோநானுங்குதிரை யும் உயிர் வைத்துக்கொண் டிருக்கின்றோம்; பல போர்களையும் கண்டிருக் கின்றேன்,இவன் செய்வதுபோலுங் கண்டதில்லையே, இனி இவனைக் கொல் வதே நலமென்று பரிவொடுங் கூறினன்; இறைவனே தாரகனைநோக்கி நான் உபேக்ஷையா யிருக்கவில்லை, இதுவுமொரு லீலையன்று, இவனுக்குமுடிவு காலத்தைநோக்கியே எதிர்பார்க்கின்றேன். இவனின்னா னென்று நீ யறிந்தா யில்லை, நமது வைகுந்தவளநகரில் ஜயவிஜயரென்போ ரிருவருண்டு; அவர்கள் துருவாசமுனிவனாற் சாபமெய்திப் பகைத்திறங்கொண்டு மூன்றுபிறப்பினையும் அவ்வாறின்றிப் பல பிறப்பினையு மடையுமாறு வரம்பெற்று நமக்கே பகைவ ராய்க் கிருதயுகத்தில் இரணியன் இரணியாக்கனாகத் தோன்றினர், நாம் ஆதி வராக நாரசிங்கங்களாகத்தோன்றி அவர்களைக் கொன்றேம்,திரேதாயுகத்தில் இராவண கும்பகர்ணர்களாகத் தோன்றினர், நாம் தசரதனுக்குக் கோசலை வயிற்றிற் சீராமனாகத்தோன்றி அவர்களைக்கொன்று களைந்தேம்; இத்துவாபர யுகத்திற் சிசுபால தந்தவக்கிரர்களாகத் தோன்றினர், நாம் வசுதேவனுக்குத் தேவகிவயிற்றில் இவ்வுருவங்கொண்டு தந்தவக்கிரனைக் களைந்தேம்; இச்சிசு பாலனையும் இனி யொருகணத்திற் களைவேம்; ஆதலால் இவனுக் கித்தனை வலிமையும் பெருமிதமுமமைந்தன. இவனே மூன்று சனனத்தினும் நமக்குப் பகைவனாகவே தோன்றினன், இனி முன்போல அப்பதம் பெறுவானென்று சொல்லிவிட்டுத் தேர்த்தட்டிற் குகைக்குளிருந்த சிங்கங் குஞ்சரத்தைத்தேடி வருவதேபோற் பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கத்தினையெடுத்துத் தமதுசெவ் வாயில்வைத்துப் பூரித்தான். அம்முழக்கங்கேட்ட வீட்டுமரும் பாண்டவர் முதலாகிய ஆப்தர்களும் மனக்களிப்பெய்திக் கண்ணபிரானை நோக்கி வாழ்த் துக்கூறினின்றனர்.

கண்ணபிரானே தமது ஆப்தர்கள் களிப்பினை நோக்கிக் கழிமகிழ்சிறந்து சுதரிசனமென்னும் சக்கரத்தாழ்வானைக் கையிலெடுத்து அச்சிசுபாலன்மேற் பிரயோகஞ்செய்தான். ஆயிரம் இளஞ்சூரியர்களேபோன் றொளிபரப்பிக் கொண்டு திசையெட்டினு மிருளைக்கிழிக்கொண்டு தேவர்முதலியோர் வாழ்த் தெடுப்பத்தோன்றிவரச் சிசுபாலன் சிறிதும் நெஞ்சுகலங்காமல் தன்வலிமுழு துங்கொண்டு பலபடைகளையும் அம்புராசிகளையும் பொழிய,அவையனைத்தும் தீயிற் சுவறிய நீர்த்துளியேபோலச் சுவறிப்போயின. இவ்வாறு வரும் சக்கரப் படைமுன் தன் முயற்சியனைத்தும் பயனின்முயற்சியேயாய் நிற்க,அப்படைக் கலவரசாகிய சக்கரப்படை அச்சிசுபாலனது மணிமகுடமணிந்த சிரத்தைக் கொய்து சென்றது, பகைவர் கண்ணிரு மாறுய்ப் பெருக்கெடுத்தோடியது, ஆசிரிதர்களுடைய கண்பார்வையும் தேவர்கள் சொரியும் கற்பகப்பூமழையும் இறைவன்மேல் விழ்ந்தன ; இமையாநாட்டத்தவரும் முற்றத்துறந்த முனிவ ருந் துதித்தனர் ; தேவதுந்துபி முழங்கின ; அரமகளி ராடினர் ;கந்தருவர் வித் தியாதரர் முதலானோர் பாடினர் ; பாண்டவர்முதலிய ஆப்தர்கள் பல்லாண்டு கூறினர், பகைவர் உள்ளநாணி நடுக்கமெய்தினர். இவ்வாறு நிகழ்கையில் அவ னுடம்பினின்றும் ஒருசோதிதோன்றி யாவரும் அதிசயித்துக்காணக் கார்மேக வண்ணனை, கமலக்கண்ணனை, கமலநாபனை, கதியுதவும்பாதனை மும்முறை வலம்வந்து அவனது உலகளந்த சிபாத புண்டரீகமலரின் மறைந்தது.

அதைக்கண்ட பலரும் பெருவியப்பெய்திக் 'கண்ணனல்லாற் றெய்வ மில்லை.' என்றபடி,வீட்டுமர்சொல்லிய அனைத்தையும்ஒன்றுமொழியாமற்சரியா கவேநிகழ்ந்தன. இவர் 'முனியே நான்முகனே முக்கணப்பா வென்பொல்லாக்- கனிவாய்த் தாமரைக்கட் கருமாணிக்கமே என்கள்வா.' என்றபடி, சேதன சேனங்களை யெல்லாம் படைத்தளித்தழிக்கு மூவர் முதற்பொருளாகிய பரம் பொருளேயென்றுதுணிந்து கண்ணபிரானை வணங்கி வீட்டுமர்முதலானோரைத் துதித்தனர். பரமேகாந்திகளும் முற்றத்துறந்த முனிவரும் வேதங்களினாலே இறைவனைத் துதித்தனர். கின்னரர் கிம்புருடர் கருடர் கந்தருவர் விருதுகூறி னர். தருமராசனே கண்ணபிரானைக்கண்டு ஆனந்தபாஷ்பத்துடன் துதித்து வணங்கி நின்றான். அவன் முகக்குறிப்பினால் தன் தம்பியாகிய சகதேவனை நோக்கிச் சிசுபாலனுக்குச் செய்யவேண்டிய பிரேத சம்ஸ்காரங்களைச் செவ் வையாக நடத்தக் கட்டளையிட்டான். அவ்வாறே அச்சகதேவனும் வீமார்ச் சுன நகுல சகதேவரும் அச்சிசுபாலனுக்கு அவன் மகனாகிய திருட்டகேது வைக்கொண்டு உருமைக்கடன்களை எல்லாம் வெகுசிறப்பாக நடத்தினர். பின்பு கண்ணபிரானும் பாண்டவரைவரும் திருட்டகேதுவுக்குச் சேதிராச்சிய பட்டாபிஷேகஞ் செய்வித்தனர்.

யாகபூர்த்தி.

இங்கே சிசுபாலன் இறந்தபின்பு, தருமராசன் முற்றத்துறந்த முனிவர் நான்மறைபுணர்ந்த அந்தணர் முடிமன்னர் முதலானோருடன் வேள்வியை முடித்துக் கண்ணபிரானுக்கு அக்கிரபூசைசெய்து முடித்துப் பின்னே நாரதர்

வியாசர் பைலவர் வைசம்பாயனர் சுமந்து ஜைமினிமுதலான அறிஞருக்கும், தக்கவண்ணம்பூசைசெய்து பாகிலீகன்,சோமதத்தன் முதலான அரசருக்கும், வைசியருக்கும், சூத்திரருக்கும் பல தானங்களும் தக்ஷிணைகளு மளித்து; எவ்வகை வருணத்தோருக்கு மறுசுவையுண்டியுதவி ; நெய் பால் தயிர் முதலியதை வெறுப்பக் கொடுத்து, மனமகிழ்ந் திருந்தனன். அவ்வேள்விக்கு வந்தவ ரெல்லாம் கல்வியுடையாரும், செல்வமுடையாரும், யோகிகளும், ஞானவான்களுமாகவே யிருந்தனர். அந்தணரெல்லாம் இருக்கு, எசுர், சாமம், அதர்வணமென்னும் நான்கு வேதங்களையும் நன்ருக வறிந்தவரும் ; மந்திரம் தருக்கம் மீமாமிசம் வியாகரணம் சந்தோபிசிதம் நிருத்தம் என்னும் ஆறங்கங்களையு நன்குணர்ந்தவருமாக ஒருவரோ டொருவர் தாங்கற்ற நூல்களிலாக்ஷேப சமாதானங்களைப் பேசிக்கொண்டு மிருந்தனர். மேலும் அவ்வேள்வியில் இலட்சம் அந்தணர் உண்பாராயின் அதற் கடையாளமாக ஒருமுறை சங்கமுழக்குவார்கள் ; அவ்வாறு சங்கமுழக்குவதோ உறையிடப் போதாமலிருந்தது. மணிமுடி யணிந்த அரசர்களெல்லாம் நாணமின்றித் தாமே அவ்வேள்வி காணவந்தார்க் கெல்லாம் நாணமின்றி உணவு முதலியவற்றை யுபசரித்தனர். அவ்வேள்வி காணவந்தவ ரெல்லாம் ஆடையணிகளை நன்ருக வணிந்து மிக வலங்காரமாக விளங்கினமையால் அவ்வேள்விச் சாலையோ விண்ணுலகமென்று சொல்லச் சிறந்தது. அவ்வேள்விச் சாலையின் கண் எந்தக்காரியத்திற்கும் வெள்ளிப் பாத்திரமே யல்லது வேறுபாத்திர முபயோகத்தி லிருந்ததன்று. யூபத்தம்பமும், வேதிகைகளும், பிறவும் பொன்னுலும் மணியாலும் வனையப்பட்டிருந்தன. அவ்வேள்விச் சாலையைச்சுற்றி இலங்கையினின்றும் கொண்டுவந்த பொற்பனைகளைநாட்டி அவற்றில் முத்துத் தோரணங்களும் பவளத் தோரணங்களுங் கட்டப்பட்டிருந்தன. தானஞ் செய்வதற்கென்றே காமதேனுவென்று சொல்லத்தக்க உத்தமசாதிப் பசுக்களின் மந்தைகள் பலவும், திரவியங்களின் குவியலும் விசேஷித்திருந்தன. இவ்வகையான சிறப்புடன் அவ்வேள்வியை ஐந்து நாள்வரையும் இருத்துவிக்குகள் நடத்திவந்தனர். பின்புதருமராசனே கண்ணபிரான்முதலானேருக்குப் பூசைகள்செய்து பதினெட்டு வாத்தியங்களு முழங்க, கந்தருவர் வித்தியாதரர் கின்னரர் முதலானேர்பாட, அரமகளிர் நடனஞ்செய்ய, வந்தியர் புகழ, மங்கலப்பெண்கள் மங்கலப்பொருள்களை யேந்திவர, கொடி குடை முதலியவற்றையேந்தி நால்வகைச் சேனையும் புடைசூழ்ந்துவரத் தன் மனைவியாகிய பாஞ்சாலியுடனே அவ்வேள்விச் சாலையினின்றும் புறப்பட்டுப் பரிசுத்தமாகிய தீர்த்தத்தில் அவபிருத ஸ்நானஞ்செய்து அன்னதானம் சுவர்ண தானம் கோதானம் பூதானம் கன்னிகாதானம் வஸ்திரதானம்முதலிய சோடசமகாதானங்களும் வழங்கி யாரும் இனி இவ்வரசன் சம்ராட்டென்னும் சாம்ராச்சிய பட்டாபிஷேகங் கொள்வானென்று சொல்லத்தோன்றினர்.

இவ்வாறு அவ்விராசசூய மென்னும் பெருங்கடலினைக் கண்ணபிரானென்னு மரக்கலத்தாற் கடந்து அறமும் புகழுமாகிய பொருளைத்தேடி மிக்க சிறப்பெய்திய தருமராசன் யாவரையும் பார்த்து உங்களாலன்றே இவ்வகை

யென்று யெடுத்துச்சொல்லுத லருமையான சிறப்படைந்தேனென் றுபசார வார்த்தைகளைச் சொல்லி அவரவர்கட்கு வேண்டியவற்றைக் கொடுத்தனுப்பி விட்டு ; பின்பு வீட்டுமர், துரோணர், கிருபர், அசுவத்தாமா, சல்லியன், துரி யோதனன், துச்சாதனனே முதலிய அவன் தம்பியர், பாகிலீகன், சோமதத் தன், திருதராட்டிரன், விதுரன், சகுனி, கர்னன் முதலானோரை யெல்லாம் பூசித்துக் கொண்டாடி உபசரித்து அவர்களுக்கு யானை குதிரை தேர் முத லியவும் ஆடையாபரணங்களும் வெறுப்பக்கொடுத்து அனுப்பினன். பின் னும் நம்பி மூத்தபிரான்,வசுதேவன், அக்குரூரன், பிரத்தியுமனன், அனிருத் தன், சாம்பன், சாத்தகிமுதலிய யாதவர்களையும், துருபதன், திஷ்டத்துய் மன்,சிகண்டி, பாண்டியன், பகதத்தன், விராடன், சகதேவன், திஷ்டகேது முதலானோரையும் உபசரித்து அவர்களை யெல்லாம் தம் தம்பியரால் வழி விட்டுவரக் கட்டளையிட் டனுப்பினன். அக்கட்டளையை யேற்ற வீமன் முதலிய நால்வரும் அவ்வாறே அவர்களை யெல்லாம் பலகாவதம் வழிச் சென்று அனுப்பினர். இது நிற்க ; தருமராசனே நாரதர், சயமுனி, பயிலவர், தவுமியர் முதலானோரையும் தானே பூசித்து வழிவிட்டனுப்பினன்.

இவ்வாறுகத் தான் யாவரையு மனுப்பிவிட்டுப் பல தேசங்களினின்றும் திக்குவிசயஞ்செய்து கொண்டுவந்த உலுப்பைப் பொருள்களையும் பண்டா ரத்திலிருந்த பொருள்களையும் இராசசூயத்திற்கே செலவிட்டுத் தான் கண்ண பிரானோடும் இந்திரப்பிரத்தத்தைவீதிவலம்வந்து மாளிகைசேர்ந்து களிப்போ டிருந்தனன். இங்ஙன நிகழ்கையில் ஒருநாள் கண்ணபிரான் தருமராசனை நோக்கி நான்வந்து வெகுநாளாயின. வேள்வி விழாவைக் கண்களாரக்கண்டு களித்தேன் ; துவாரகைக்குப்போக விடைதரவேண்டு மென்று கேட்க, தரும ராசனும் கண்ணபிரானை நோக்கிப் பரமபுருஷா ! உன்னை யல்லது எனக் கேனும் என்தம்பியர்க்கேனும் மற்றஎவர்க்கேனும் வல்லமையும் பெருமிதமும் பிறவும் ஏது ! நீ சூத்திரதாரி ! நீ யசைக்கவசையும் பாவையே யாங்கள், எமக் கும்மை யல்லது புகலிடமேது? உமது புகழை யெடுத்துச்சொல்ல அபௌ ருஷேயமான மறைகளே மாட்டாவெனின் நாங்களோ சொல்லவல்லோம் ! உம்மைப் பிரிந்து எவ்வாறிருக்கத் தரிப்பேம் என்றுமறுக்க, அவரிடத்தில் அரி தில்விடைபெற்று அவரையும் குந்திதேவியையும் வணங்கி, வீமனையும் அர்ச் சுனனையும் தன் மார்புறத்தழுவி, நகுல சகதேவரால் வணங்கப்பெற்று, பாஞ் சாலி சுபத்திரைமுதலியோரால் உபசரிக்கப்பட்டு,யாதவவீரர்சூழத்தேரேறிச் சென்று தன்னைவழிவிடவந்த தருமராசனை நோக்கிச் செவ்வையாகவே அர் சாண்டுவாருமென்று சொல்லிவிட்டுத் துவாரகையை நோக்கிச் சென்றான். தருமராசனும் தன் தம்பியருடன் இந்திரப்பிரத்தத்தை யடைந்தான்.

இவ்வா றிருக்கையில் வியாசபகவான் தருமராசனைநோக்கி அரசிருக்கை மண்டபத்தை யடைந்தார். அவரைக் கண்டவுடன் பத்தடிதூரஞ் சென் றழைத்து மும்முறை வலம்வந்து பணிந்து அடிநீர் முக்குடிநீர் கைந்நீர் முத லிய வளித்து அழகிய பொற்பீடத்தி லிருத்தி வந்தித்துப் பூசனைசெய்து கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு நின்றான். அத்தருமராசனை வியாசபக

வான் அப்பா! ஒருவராலுஞ் செய்தற்கரிய இராசசூயமோ தெய்வாதீனமாய் நிறைவேறியேவிட்டது. பலரும் கொண்டாடச் சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் பெற்றுச் சம்ராட்டென்னும் பெயரடைந்தாய். இனிப் பெறுவதென்னவிருக்கின்றது. இப்படிப்பட்ட பெருமிதத்தொடு மிருக்கின்ற உன்னைக் கண்டேன் கழிமகிழ்சிறந்தேன்! உம்மால் பலவாறுகவும் பூசிக்கப்பெற்றேன். இனி நான்வதரிகாச்சிரமஞ் செல்ல விடைகொடென்று சொல்ல, அவரை மும்முறை வலம்வந்து பணிந்து என் பிதாமகனே! அடியேனுக்குச் சிலநாளாக எப்போதும் என் மனத்தின்கண் ஓரையநிகழ்கின்றது; அது நாரதபகவான் விண்ணிலும் மண்ணிலும் அரசர்கட்குக்கேடுவருமாயின் அவைகட்குறிகுறியாகச் சில உற்பாதங்கள் தோன்றுமென்றனன். அப்படியே இப்போது மண்ணிலும் விண்ணிலும் உற்பாதங்கள் தோன்றுகின்றன. அது சிசுபாலன் மரித்ததுட னொழியவில்லை; இன்னும் ஏதேனும் நிகழுமோ விளக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ள வியாசமுனிவர் சொல்லலாயினர்.

இப்போது கண்ட உற்பாதங்களோ இன்றே டொழியாது, இன்னும் பதினாலு வருஷம்வரையிலும் நிகழ்ந்துகொண்டே யிருக்கும். இந்நாவலந் தீவிலுள்ள அங்கம்,வங்கம், கலிங்கம்,காசுமீரம்,காம்போசம், மிலேச்சம், மலையாளம், பாஞ்சாலம், சீனம்,கொங்கணம், மகதம், மச்சம், பாண்டி, சோழ, கேள, மாராடம், கொங்கணம்,கன்னடம், நேபாளம்,சிந்து, காந்தார முதலிய நாட்டினரசரும் அவர்களுடைய தேர் குதிரை யானை காலாள் என்னும் நால்வகைச் சேனைகளும் ஒருங்கே அழியப் போகின்றன. அத்தனைபேரும் அதற்குக் காரணம் நீயேயாயிருக்கின்றனை! அவர்க ளெல்லாம் உன் தம்பிமாராலேயே கொல்லப்படுவர். துரியோதனனோ 'நட்புப்பிரித்தல் பகை நட்டலொற் றிகழ்தல் - பக்கத்தார் யாரையு மையுறுதல் - தக்கார்-நெடுமொழிகோறல் குணம் பிறிதாதல் - கெடுவது காட்டுங்குறி.' என்ற பெரியோர் சொற்கிலக்காகிக் கெடுநினைவுகொண் டழிவான். அப்படி அரசர்க ளெல்லாம் அழிவதற்கு முன்னே நீ யொரு சொப்பனங்காண்பை, அது உமையொருபாதத் தம்பர்பிரான் பூதப்பிரேத பைசாசகணங்களுடன் அவாசியைநோக்கி நடப்பதுவே. அப்போதே அரசர்களுக் கெல்லாம் கேடுவந்ததென்றே துணியவேண்டும், என்ன நாம் இவைகட் கெல்லாம் காரணமாயிருக்கிறோமேவென்று நீ நினைக்க வேண்டாம் எய்தவனிருக்கவே அம்பை நினைந்தாவதென்ன! ஒவ்வொன்றும் ஊழின்படி நடக்கும், இதனாலன்றோ பெரியாரும் 'ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று - சூழினுந் தான்முந்துறும்.' என்று சொல்லி யிருக்கின்றனர். நடக்கவேண்டிய தெல்லாம் நடந்தே தீரும். அப்படி யெல்லாம் காரண மிருந்தேதா னமையும். ஆதலால் நீ கழிமகிழ்சிறந்து அரசாண்டுவர வேண்டுகிறேன். எனக்கு விடைகொடென்று விடைபெற்றுத் தமது மாணாக்கர்கள் சூழத் தமதாச்சிரமமடைந்தனர்.

பின்பு தருமராசன் வியாசபகவான் சொல்லிய சொற்களைக் கேட்டு நாம் என்செய்வதென்று மனக்கிலேச மடைந்து "சிவன் செயலாலே யாதும் வரும்" எனத் தேர்ந்து மனுநெறிதவறாது புலியும் பசுவும் ஒரு துறையினீ

ாருந்த அரசாண்டு வேதியர் தன் சபையில் தான் பயபத்தியோடு வேதசாஸ்திரங்களையும் நீதிநூல்களையும் நன்றாகக் கற்றறிந்துள்ள வேதியரை யெல்லாம் வருவித்து அவர்களைத் தன்னோடிருக்கச்செய்து அவர்கள் கட்டளையின்படி ஆறிலொரு கடமைகொண்டு தன்னுயிர்போல் மன்னுயிரைப் புரந்து வந்தனன். அப்படி யரசாண்டுவருங் காலத்தில் எங்கும் அனாவிருஷ்டி அதிவிருஷ்டியின்றி மிதவிருஷ்டியாயிருந்தது. யாவரும் தத்தம் வருணாச்சிரமநெறி குறைவடையாமல் நடந்துவந்தனர். இவ்வாறு கிருதயுக தருமமே தழைக்கும்படி தருமராசனும், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகதேவன் என்னும் தன் தம்பியர் நால்வரும் தன் பணிகேட்டு நடக்க மிக்க சிறப்பொடு அரசாண்டு வந்தனன்.

இராசசூய சருக்கம்.

முற்றிற்று.

சூதுபோர்ச்சருக்கம்.

ஞான மாகிய பரம்பர வமிழ்தமாய் நவிலிரு மயக்காகி
வான மாயுடன் வாயுவாய்த் தேயுவாய் வனமுமாய் மண்ணாகித்
தான மாமறை முறைமையிற் பற்பல சராசரங் களுமாகி
ஏன மாயிவை யனைத்தையு மருப்பினு லேந்தின னெனையாண்டான்.

துரியோதனன் சகுனியிட முறையிடல்.

தருமராசன் யாவரும்வியக்க இராசசூயஞ்செய்தபின்னர் துரியோதனன் தன்னகரமாகிய அத்தினாபுரத்தை யடைவதன்முன் தான் அத்தருமராசனது அத்தாணிமண்டபத்தைக் காணச்சென்று அதன் சிறப்பனைத்தும் பார்த்து வருகையில் நீரில்லாவிடம் நீருள்ளதாகவும், நீருள்ளவிடம் நீரில்லாததாகவும், மதிற்சுவருள்ளவிடம் அஃதில்லாததாகவும், மதிற்சுவரில்லாதவிடம் அஃதுள்ளதாகவு மிருக்கக் காணாய் நீரில்லாவிடமென நினைத்து நடந்து நீருக்க அந்நீரிலமிழ்ந்தி வருந்தினன். அதைக்கண்ட தருமராசன் ஓடிச்சென்று வேறு ஆடையை யுதவி யீரவாடையைப் புலர்த்தியதுகண்டு அச்சபையிலுள்ள வீமன் முதலிய நால்வரும் பாஞ்சாலியும் நகைத்தனர். மீண்டுந் துரியோதனன் வேறுவழியாகச் செல்கையில் ஆங்கொரு படிகக்கற் படுத்திருந்த நிலத்தைக்கண்டு அது நீருள்ள தடாகம்போல தோன்ற, தன்னுடையைத்தூக்கிக் கொண்டு நடந்தான். அதைக்கண்டும் பாண்டவர்கள் நால்வரும் பாஞ்சாலியும் நகைத்தனர். இவ்வாறு நகைப்பதைக்கண்ட துரியோதனன் பொறாமையும் கோபமு முன்னெழ விடைபெற்றுத் தன் னத்தினாபுரத்திற்குச் சகுனி முதலியவருடன் சென்றான். அன்றுமுதல் துரியோதனன் தருமராசன்பெற்ற சிறப்பினையும் செல்வத்தினையுங்கண்டு பொறாமைகொண்டு உன்மத்தம் பிடித்தார்போன் றொருவருடனும் பேசாமல் தவித்துக்கொண்டிருந்தான். அதைக் கண்ட சகுனி துரியோதனனை நோக்கி நீ யிவ்வாறிருக்கக் காரணம்யாது! நீ யாதுகாரணத்தால் ஊணு முறக்கமு மில்லாமல் இவ்வாறிருக்கின்றனை!

நீகொண்டகருத் தியாதென்றுகேட்க, துரியோதனன் சொல்வானுயினன். ஒரு தேரிலேறியே அர்ச்சுனன் உலகமுழுதுஞ் செயங்கொண்டு உத்தரகுருவரையும் சென்று தனங்கொண்டு தனஞ்செயனென்னும் பெயரைப்பெற்ருன். அவனுல் செயிக்கப்பட்டமையால் அரசர்பலரும் அவன் தமையனுகிய தருமராசனுக்குத் திரைகொண்டுவந்து கொடுக்கின்றனர். கண்ணன் என்பக்கமும் அவர்பக்கமும் சரிவரவிராமல் ஒருபக்கமாகவேயிருந்து பாண்டவர் சகாயன் ன்று சொல்லச்சிறந்து அவர்களுக்குவேண்டியகாரியங்களை நிறைவேற்றிவருவதும், எல்லாநாட்டினரும் அப்பாண்டவர்களுக்கே மங்கலமுண்டாகவென்று வாழ்த்துவதும், யாவரும் அவர்களுக்கே கீழமைந்து அவர்காலாலிட்டவேலையைத்தலையாற்செய்து நடப்பதும்,சகலசெல்வங்களும் அவர்களே பெற்றிருப்பதுங்கண்டு பெரிதும் பொறாமைகொண்டேன். எவ்வாறு அதைக்கண்டுசகித்து நிற்பேன். யானை குதிரை முதலியன விற்கவருவோரும் நானழைக்க வராமல் அவர்களிடமே போவதனுல் நான்படும் வயிற்றெரிவு சொல்லவும்போதுமோ! இவ்வாறே நவரத்தினங்களை விற்கவருவோரும் என்னைத் துகளாகவே நினைத்துப் போய்விடுகின்றனரோ! நான் வாங்கத்தகாதவனென்றன்றோ நினைக்கின்றனர். இக்குருவமிசத்தில் நானும்பிறந்தேன், அவர்களும் பிறந்தனர். நானே மூத்தவருடைய மகன்; அவரோ இளையவன் மக்கள்; எல்லாச்சிறப்பு மென்னையே யடையவேண்டும். அவ்வாறில்லாமல் எல்லாவரசரும் இந்திரப்பிரத்தத்திற்கே காணிக்கை கப்பங்களை யெல்லாம் எடுத்துக்கொண்டுபோய் அவர்கள் தலைவாயிலிலேயே காத்திருக்கின்றனர், எல்லாச்சிறப்பு மெனக்குச் சரிவரவாராமற் போவானேன்! எங்கேபார்த்தாலும் பாண்டவர்கள் புகழே நிரம்பியிருக்கின்றது. அத்தருமராசன் இராசசூயயாகத்தில் செலவிட்டபொருளைக் கணக்கிட அனந்தனுலுமே முடியாதே! அவ்வாறு செலவிட்டு இன்னும் அவர்கள் பண்டாரச்சாலையிற் பெரும் பொருட்குவியல் நிரம்பியிருக்கின்றது. அதை நினைக்குந்தோறும் என்மனம் வருந்துகின்றது. நம்மில் மிகச்சிறந்தவ ரெல்லாமிருக்கின்றனர். வீட்டுமத் துரோணுதியர்களோ இலேசானவரல்லர்; நீரும் நானும் கர்ணனுமிருக்கவே பிறவரசரெல்லாம் திரண்டிருக்க நமதுசிநேகனுகிய சிசுபாலனை அக்கண்ணனே அலட்சியமாகவே கொன்றுகுவித்தானே! அக்கண்ணனே அவர்கள் குற்றேவல் செய்பவன்போற் காத்திருக்கின்ருனே! இவைகளையெல்லாம் கண்ணாரக்கண்டும் நானெவ்வாறு பொறுத்திருப்பேன். அக்குலத்திலேயே பிறந்தும் அவர்கள்போற் சிறப்படையாம லிருப்பதுந் தகுதியோ, நான் தீயிற்குதித்தேனும், தண்ணீரில் வீழ்ந்தேனும், விஷத்தை யுண்டேனும், இறப்பதே நலம். நானிப்போது பிழைத்திருப்பதாகவே நினைக்கவேண்டாம். என்னையும் உன்னையும் என் தம்பியரையும் ஒரு வேலைக்காரன்போ லெண்ணி வேலை யிட்டானே! மேலும் அச்சபையோ தெய்வலோகத்திலுள்ள சுதர்மையென்னுஞ் சபையினுஞ்சிறந்ததென்று சொல்லுகின் றார்களே! நானினி உயிரைவைத்திருப்பேனே! நானிறப்பதற்கே யுடன்பட்டிருக்கின்றேன். திருதராட்டிர மகாராசனுக்கும் இச்செய்தி யனைத்துந் தெரிவிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான்.

அதைக்கேட்ட சகுனி துரியோதனனைப் பார்த்து தருமராசன்செய்த நல்வினைப் பயனாலேயே அவனுக் கிவ்வளவு பெருஞ்செல்வமுங் கிடைத்தது. இது இயற்கையென் றறிந்தும் நீ யேன் மனக்கவலை யடைகின்றனை! நீ ஆதி முதல் அவர்களினு மேம்பாடடைய வேண்டுமென் றெண்ணியே முயன்றனை, அவை யனைத்தும் பயனின் முயற்சியாயின. அதற்குத் தானென்செய்வது. நீ பாஞ்சாலியை மணஞ்செய்ய முயன்றனையே அதுசித்திக்காமற்போய்விட்ட தன்றோ. தெய்வகதியாகவே அவர்களை அவளைமணம்புரிந்ததனால் பாஞ்சாலன் முதலானோர் அவர்களுக்குத் துணையாயினர். அக்கண்ணனோ அவர்களுக் கம் மான்மகனாகையாலும் அவர்கள் அனுசரிப்பு மிகுதியு மிருப்பதனாலும் அவர் களுக்கே துணையாயினன். அவனோ மிக்க அறிவும் பெருவலியும் புகழு முடையவன். தேவர் தானவரை யெல்லாம் மிக்க சுலபமாய் வெல்லவல்ல வன், அவனை யொருவராலும் வெற்றிகொள்வதரிது. அவன் துணையா யிருப் பதனால் சகல சம்பத்துகளும் கீர்த்தியும் பெற்றுவிளங்குகின்றனர். அதற்கு நாமென்செய்வது. அவர்களோ அநியாயமாய்ப் பிறர்நாட்டைக்கவர்ந்தாரல்லர். யாவருக்கும் நன்மையாகவே நடந்துவருகின்றனர். நாம் கொடுத்த காடுபாய்ந்த பாழான இந்திரப்பிரத்தத்தை நகரமாகப் புதுக்கி எவ்வுலகினும் புகழும் சுதர்மையென்னுஞ் சபையினும் சிறந்த சபைகட்டி வாழ்ந்து வருகின்றனர். அவருள் அர்ச்சுனனோ காண்டவவனத்தை அக்கினி தேவனுக்கு விருந் தளித்து அத்தேவனால் அழியாத தேரும் வில்லும் அற்புதக் குதிரையும் பெற் றதனாலன்றோ உத்தரகுருவரையுஞ் சென்று போர்செய்து பொருள்பெற்றுத் தனஞ்செயனென்று சொல்லச் சிறந்து விளங்கினன். இவை எல்லாம் அவர்க ளுடைய அதிஷ்டமே யல்லது வேறன்று. உனக்கும் வீஷ்மர் துரோணர் அசுவத்தாமா கர்ணன் முதலிய வீரரெல்லாம் துணையாகவே யிருக்கின்றனர், இருந்தும் தெய்வ பலமொன் றில்லாமையால் சிறிதும் பலிக்கவில்லை; ஆத லால் பிறர் செல்வத்தைக்கண்டு அழுக்காறடைவதிலும் கிடைத்தமட்டில் திருப்தியாக நினைப்பதே நலம். ஆயினும் நீ அவர்கள்பெற்ற பெருஞ்செல் வத்தை யடையவேண்டுவையேல் வீட்டுமர் முதலானோரால் பெறலாம். அப் படி பெறுவதும் அசாத்தியமாகவே தோன்றும். நானொருவகையால் அவர் செல்வமெல்லாம் கவரவல்லேன், அவ்வாறு நடக்க உனக்கு மனமிருக்கு மானால்செய்யவல்லேன் உன் கருத் தியாதென்று கேட்கத் துரியோதனன் சொல்வானாயினன்.

நான் பாண்டவர்களை யெளிதில்வென்று அவர்கள் பெற்ற செல்வமெல் லாம் ஒரு நொடிப்போதில் தருவதாகச் சொன்னீரே! நம்மி லொருவரும் வருந்தாவண்ணம் அவர்கள் செல்வத்தைப் பறிப்பது எவ்வாறு சொல்ல வேண்டுமென்று கேட்கச் சகுனி துரியோதனனை நோக்கித் தருமராசனுக் குச் சூதாடுவதில் மிகப் பிரியமுண்டு; அதனை நன்றாயாடவும் வகையறியான், எனக்கதில் மிகவும் வல்லமையுண்டு; அத்தருமராசனோ சூதாட வழைத்தால் வராமலிரான். நானவனுடன் சூதாடி அவன் பெற்ற செல்வமெல்லாம் கைக் கொண் டுனக்கே கொடுக்கின்றேன். அதைப்பற்றி உன் தந்தையாகிய திருத

ராட்டிர மகாராசாவின் சம்மதி யிருக்கவேண்டும். அதை நீ சென்று உன் தந்தையை யிசையச்செய்விப்பாயேல் அச்செல்வ முனக்கே வருவது அசாத்தியமன்றென்று சொல்லத் துரியோதனன் சகுனியை நீரோசென்று இக்கருத்தை வெளிப்படுத்தி அவரிசையச் செய்யவேண்டுமென்று வேண்டினன்.

சூதாடற் காலோசனை.

தருமநெறியில் வழுவாதொழுகும் தருமராசன்பெற்ற செல்வங்கண்டு பொறாமைமேற்கொண்டு துரியோதனன் மனம்வருந்திக்கிடக்கச் சித்தசமாதானமுண்டாகச்செய்து வேறுவகையால்வெல்லுதல் அமையாது,சூதாடலே அவனைவெல்லும் வகையென விளக்கித் திருதராட்டிரனிடஞ் சென்றான். அவ்வாறு செல்வது துரியோதனன் முதலானோரும் மற்ற அரசர் பலரும் தத்தம் பரிவாரங்களோடு மடிவதற்கு நிமித்தங்கூறிச் செல்பவன்போ லிருந்தது. அவ்வாறு சென்று திருதராட்டிரனை மும்முறைவணங்கி நின்று தான் வந்தமையையறிவித்தான். திருதராட்டிரனும் என்னைநாடிவந்த காரணமென்னவென்றுகேட்க,சகுனியும் உமது மூத்தமகனாகிய துரியோதனன் தான் இராசசூயத்திற்குச்சென்று அத்தினபுரத்திலிருந்துவந்த நாள்முதலாக ஊணுறக்கமில்லாமல் உடம்புமெலிந்து நாளாவட்டத்தில் அபாயநிலையி லிருக்கின்றான். இவ்வாறிருப்பதனால் அவன்கொண்ட மனோவியாதி யாதென்றுகேட்டு நீக்காமலிருப்பது நியாயமான காரியமா? என்றுசொல்ல; அதைக்கேட்ட திருதராட்டிரன் துரியோதனன் அவ்வா றிருப்பதற்குக் காரணமென்னவென்று சகுனியைக் கொண்டு துரியோதனனை வருவித்து அவனுடன் சொல்லலாயினன். அப்பா! சகலராச்சிய மூன்னதேயாக நீயுடம்புமெலிந்து வருந்துவதற்குக் காரணமென்ன? உன் தம்பியரெல்லாம் உன் சொற்கேட்டு நடக்கின்றனரோ! நால்வகைச்சேனையும் நிரம்பியிருக்கின்றனவே. நானும் உன்தாயும் நீகொடுத்த வுணவுகொண்டே யுயிர்வாழ்கின்றோமே. அரமகளிருக்கொப்பாகிய மாதர் பலரிருக்கின்றனரோ. இவ்வாறு உனக்குச் செல்வத்தினும் போகத்தினும் ஒருசிறிதேனுங் குறைவில்லையே உன்னுணையை மறுப்பா ரொருவருமிலரோ. நீயோ எண்வகையிலக்கணங்களையு மோதியுணர்ந்து யாவரும் புலவர் பெருமானென்று சொல்லச்சிறந்து விளங்குகின்றனை! இதுவுமன்றித் துரோணர், கிருபர், பலராமர் இவர்களிடத்தே மிகவும் வருந்தித் தனுர்வேதங்கற்று யாவரினு மேம்பாடுடையவனாகத் தோன்றுகின்றனை! உன்னையாவரும்பூலோக தேவேந்திரனென்றும், இராசாதி ராசனென்றும், வணங்காமுடியானென்றும், நந்தியாவட்டமாலையணிந்த அரசர்மீளியென்றும், சர்ப்பகேதனனென்றும் சொல்லிப் புகழுகின்றனரோ. உனக் கிவ்வகையான மனத்தளர்ச்சிவரக் காரணமென்ன சொல்லென்று அன்பாய்க்கேட்க, அதற்குத் துரியோதனன் சொல்வானாயினான்.

ஐயா! உண்பது முடுப்பதும் யாருக்குத்தான் கிடைக்கமாட்டா, அவையனைத்தும் பெருமகிழ்ச்சிக் கேதுவாகுந் தன்மையுள்ளனவா? நீர் சொல்லியவாறு யானே பெருஞ்செல்வமடைந்திருந்தும் எனக்கப்பஞ்சைகளாகிய பஞ்ச

வருக்கிருக்கு மவ்வளவில்லையே! எனக்குப் பாண்டவர் படைத்த செல்வத்தினைப் பார்த்ததனுல் பொறுமையேயுண்டாகிப் பித்தம்பிடித்துத் தவிக்கின்றவன்போலு மிருக்கின்றேன். அவர்கள்படைத்த செல்வத்திற்குமுன் நாம் பெற்ற செல்வமனைத்தும் செல்வமாகுமா? யார் செல்வங்கண்டால் எனக்குப் பொறுமைநிகழுமோ அவர்கௌர்வத்தினை யுடனே சென்று போர்செய்து பறித்துக்கொள்வதே தகுதி. இதுதான் அரசர்க்குரிய இயல்பு. அவ்வாறின்றிப் பகைவன் செல்வத்தைக்கண்டு பொறுமைகொண் டிருப்பவனுயிருந்தும் அதைக்கவர வலியில்லாதவ னெவனே,அவனே செத்தவனேடொப்பாவான். நானே நாடோறும் இவ்வருத்தத்தால் வருந்தி உயிர்வாழ்வது வாழ்வென்று சொல்லப்படுமோ! ஒருவராலும் செய்தற்கரிய இராசசூயமென்னும் யாகஞ் செய்து முடித்தாரே! இதை எவர்தான் செய்துமுடிக்கவல்லவர். தருமராசன் நாடோறும் எண்பத்தெண்ணுயிரம் அந்தணர் குடும்பங்கட்கும் பதினுயிரம் முற்றத்துறந்தாருக்கும் அறுசுவைகூடிய உணவளித்து வருகின்றுன்; அதனுல் அவன் அடையும் புகழை யெடுத்துச்சொல்வ தடங்குமோ! இதுவுமன்றி அவர்கட்குப் பரிசாரகர்களோ அக்குடும்ப மொவ்வொன்றினுக்கும் முப்பதின்ம ரிருக்கின்றனர். இது கிடக்க; காம்போச தேசாதிபதியாகிய சுதக்ஷிண மகாராசன் விசித்திரமாயினவும்யாவரும் வியக்கத்தக்கனவும் மேன்மையும் பளபளப்பு முடையனவுமாகிய மான்தோல்களில் பல்லாயிர மளித்தான்; அதுவுமன்றிக் கம்பளங்களே பல்லாயிரங்கொண் டுதவினுன். பொன்னுபரணமணிந்து நான்கு குதிரைகள்பூட்டிய தேர்கள் பலவாயிரமும், அப்போதுதான் கன்றுபோட்ட பசுக்களும், இவையன்றிச் சிந்து சவுராட்டிர முதலிய நாடுகளிற் பிறந்து மிக்கவேகத்துடன்கூடிய பதினுயிரங் குதிரைகளும்,அழகும் ஒழுக்கமு மமைந்த பதினுலாயிரம் மாதரும், பல்லாயிரம் ஒட்டகங்களின் மேல் நவமணிகளும் ஆபரணங்களும் பல அரசரும் கொடுத்தனர். அவ்வேள்விக்குவந்த பொருள்கள் அவ்விருநிதிக்கிழவனுகிய குபேரனிடத்தும் கிடைக்க மாட்டாவே. யான் சொல்வதிலே ஐயமிருந்தால் உமது மந்திரியாகிய சஞ்சயனைக் கேட்டறிந் துண்மை யுணரலாகும்.

அவ்வேள்விக்குவந்த அந்தணர்கட்கு வேண்டிய நவமணிகளும் ஆடைகளும் பசுக்களும் பிறவும் கொடுக்க மகிழ்ந்து போயினர்; சுவர்க்கலோகத்திலும் இவரைப்போல யாகஞ்செய்தாரைக் கண்டதில்லை யென்று நாரதர் முதலிய முனிவர்கள் யாவருஞ் சொல்லிக்கொள்ளுகின்றனர். சில அரசர்கள் ஒட்டகங்களில் பொருட்பொதிகளை யேற்றிக்கொண்டு தருமராசனைக் காணச் சமையங் கிடைக்காமல் அரண்மனைவாயிலில் காத்திருந்தனர். சாம்பிராச்சிய பட்டாபிஷேகஞ் செய்யும்நிமித்தம் சமுத்திரங்களி னின்றும் தீர்த்தம் வர வேண்டுமென் றெண்ணிப் புரோகிதர்கள் சொன்னமாத்திரத்தில் அரக்கர்கட்கரசராகிய சில வீரர்கள் நவமணிக ளிழைத்த பாத்திரங்களில் ஆகாயமார்க்கத்தில் கணப்போதில் எல்லாக் கடல்களினீரையுங் கொண்டுவந்து கொடுத்தனர். மனிதரைத் தின்னும் அரக்கரும் அடிமையைப்போலக் காத்திருப்பாராயின் அவர்களுக் குண்டான சிறப்பைச் சொல்லவேண்டுமா? அப்பாண்டவர்

களுக்கு மயனென்பவன் ஒரு சபைகட்டிக் கொடுத்திருக்கின்றான். அது பொன்னாலும் மணியாலும் செய்திருப்பதே யல்லாமல் விநோதத்திற் கிருப்பிடமாகச் சொல்லத்தக்கது. நான் படிகத்தாற் செய்யப்பட்ட விடத்தைக் கண்டு நீருள்ளதென்று ஆடையைத் தூக்கிக்கொண்டு சென்று நீரிருக்கிற இடத்தில் வெற்றுந்தரையா யிருக்க நீரிலமிழ்ந்தி வருந்தினேன். அப்போது என்னைப் பார்த்துக் காவலாளிகளுஞ் சிரித்தனர். அதைக்கண்டு தருமராசன் எனக் காடைகொடுத் துதவினான். அதனால் யான் செத்தவனே டொத்தே னல்லது வேறல்லேன். மற்றோரிடத்தில் ஆளைச்சுவரில்லாமல் வெளியாகத் தோன்ற யான்சென்று முட்டிக்கொண்டு வெருகாயம் நேர்ந்தன. அப்போது வீமன் என்னைப்பார்த்து இதுதான் நேர்வழி இப்படி செல்லென்று கூவி யழைத்துக்கொண்டு போனான். அச்சொல் எனக்குக் கழுத்தைத் துணிப் பதுபோ விருந்தது. பாஞ்சாலியு மென்னைக்கண்டு நகைத்தாள். இன்னமுஞ் சிலவிடங்களில் தூண்களில்லா விடங்கள் தூண்களாயும், தூண்களிருக்குமிடங்கள் தூண்களில்லாமையாயு மிருந்தன ; இவ்வாறிருக்கக்கண்டு நான் மனங்கலங்கியபோது எனக்கு அவர்கள் வேலைக்காரர்வந்து வழிகாட்டிப் போயினர். அவர்கள் இராசசூயத்தின் வேள்விச்சாலையில் ஒரு சங்கமிருக்கக் கண்டேன். அது இலட்சம் அந்தணர்புசிப்பாராயின் ஒருமுறை யொலிக்கும், அச்சங்கம் அங்கே பலமுறை யொலிக்கக்கண்டேன். அங்கே அந்தணருண்ணும்போது முடிமன்னரும் பரிசாரகரொன்னகின் றுபசரித்தனர். நாம் கேட்டறியாத பலவரசருங் காத்திருந்தனர். அவ் வந்தண ருண்ணக்கண்டு எனக்கும் பரவசமுண்டாயிற்று. அமரர் கின்னரர் சித்தர் வித்தியாதரர் கந்தருவர் முதலிய தேவசாதியரும் அச்சபையில்வந்திருந்தனர். நான் அவருளொருவனாகவே யிருந்தேனல்லது வேறன்று. நான் அவர்களோடெதிர்த்துப் போர் செய்து வெற்றிகொண்டால் அச்செல்வம்பெற் றனுபவிப்பவனாவேன் ; அல்லதிறக்கினு மிறக்கின்றேன். நான் சும்மாவிருப்பேனாயின் யான்கொண்ட பெருந்துயர் நீங்காதென்றான்.

இவ்வாறு சொல்லிய துரியோதனனை நோக்கிச் சகுனி நீ அப்பாண்டவரை வெற்றிகொள்வேனென்பது துல்லபம் ; அவர்களோ வல்லமையுடையவர்கள். நீ யவர்களுக்கிப்போது அசகசாந்தரம் ; அவர்கள் செல்வத்தைக்கண்டு பொறாமைப்படுவது தகுதியன்று. இப்போது சிருட்டிகர்த்தா முதலிய தேவர்கள் ஒன்றுகூடி யெதிர்ப்பினும் அவர்களை வெற்றிகொள்வதரிது. அச்செல்வத்தைப் பறிக்கமுயல்வது 'முடவன் கொம்புத்தேனுக் காசைப்படுவ தொக்கும்' ஆயினும் அச்செல்வத்தைக் கவர ஒரு சூழ்ச்சி சொல்லுகின்றேன். யானே சூதாடுவதில் கைதேர்ந்தவன். அக்ஷவிருதயமென்னும் வித்தை கற்றிருக்கின்றேன். ஆகையால் எந்தச்சமயத்தில் எவ்வாறு வெல்லவல்லேனோ அவ்வாறே வெல்லவல்லேன், எந்தப்பந்தயம் விழவேண்டுவேனோ அந்தப்பந்தயம் விழச்செய்வேன், எனக்கு நிகராக அச் சூதுபோரில் வல்லா ரொருவருமிலர். தருமராசனுக்கு அச் சூதின் மிகப்பிரியமுண்டு ; ஆயினும் அவனுக்கு அதிகமாகத் தேர்ச்சியில்லை ; ஆடத்தெரியாதெனினும் வரமாட்டேனென்று

சொல்லவுமறிபான். அவனை வரவழைத்துச் சூதாடினால் அவன் செல்வமெல்லாங் கவரலாம். உனக்கு எண்ணமிருந்தால் அதற்கு முயலலாமென்றான். அதைக்கேட்ட துரியோதனன் தந்தையைப்பார்த்துச் சகுனி சொன்னதைக் கேட்டாயாதலால் அதற்குன் கருத்தென்னவென்று சொல்ல, மகனே! நீ சொன்னகாரியத்தைக் குறித்துச் சிந்திக்கவேண்டும். நானிதைப்பற்றி விதுரனை யழைப்பித்து அவனொடு தீர்க்கமாக விசாரித்துப் பிறகு விடைகொடுக்கின்றேன். அவனே மகாபுத்திசாலி. எல்லா நீதிகளும் அறிந்தவன். பாண்டவரிடத்திலேயும் உங்களிடத்தேயும் நிஷ்பக்ஷபாதமாயிருந்தே நன்மையை யாராய்பவன். அவனைக்கேட்டுச் சொல்லுகின்றேனென்றான். துரியோதனன் அதைக்கேட்டுத் தன்பிதாவைநோக்கி நீர் விதுரரை வரவழைத்துக்கேட்டால் அவர் 'சூதுவிரும்பேல்.' என்றபடி, இக்காரியத்தைச் செய்யலாகாதென்றே தடுப்பார். அதற்கெவ்வளவுஞ் சந்தேகமேயில்லை. சூதாடுவது கெட்டதேயென்பதன்றிப் பாண்டவர் படைத்த செல்வத்தைப் பறிப்பதுதகுதியன்றென்றுஞ்சொல்லிவிடுவான்; அதுவே உமக்குச்சரியாகத்தோன்றும், அதைக் கேட்டவுடன் உயிர்விடத்துணிவேன். நானிறந்தபின்னே நீரும் விதுரனும் சுகமாயிருக்கலாமென்றதன்றி நாமொருவன் சாதல் நலமேயாகுமென்றான். அதைக்கேட்ட திருதராட்டிரனும் சிறிது தன் மகன்மேல் இரக்கங்கொண்டு தன்மந்திரிமாரை நோக்கி இந்திரனது சுதர்மையென்னுஞ் சபையினுஞ் சிறந்ததொருசபையைக்கட்ட முயலவேண்டும்,அதைக்கட்டி முடித்தவுடன் எனக்குத்தெரிவிக்கவேண்டுமென்று கட்டளையிட்டுத் தன் மகனை யனுப்பிவிட்டுத் தான் விதுரராசனை வருவிக்கவேண்டுமென் றெண்ணித் தூதரையனுப்பினான். தூதரும் விதுரனிடத்தேசென்று கண்ணில்லாவரசன் அழைத்தசெய்தியை யறிவித்தனர். விதுரனும் நம்மையழைத்த காரணமென்னவென்று சிந்தித்துத் தான் விரைந்துசென்று தன்வருகையை யறிவித்து மும்முறை வலம் வந்து பணிந்து நின்று, தன் தமையனைநோக்கி நீர் அழைத்த காரியத்தை யறிந்துகொண்டேன், உலகத்தில் பெரியோர் எடுத்துச்சொல்லி மறுத்த தீய காரியங்களில் சூதாடுவது மிகக் கொடியது. அதனாலன்றோ பெரியோரும் 'சூதுவிரும்பேல்' என்று சொல்லியிருக்கின்றனர். "இருமனப் பெண்டிருங் கள்ளுங்கவறுந்-திருநீக்கப் பட்டார் தொடர்பு." என்றமையால் ஒருவனுக்கு இம்மூன்றினும் புகழையும் பெருமையுஞ் செல்வத்தையும் கெடுக்குங்கொடுமை பற்றிப்பெரியோர் சூதாடுவதாகிய கொடுந்தொழிலைக் கடையிற் கூறினர். மேலும் "காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல் - ஈதன்மறுத்த விவைகண்டாய் - போதிற் - சினையாமை வைகுந் திருநாடா செம்மை - நினையாமை பூண்டார் நெறி." என்றும்; "அறத்தைவேர் கெல்லு மருநெறியிற் சேர்க்கும்-திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும் - மறத்தையே - பூண்டு விரோதஞ் செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்-தீண்டுவரோ வென்றார் தெரிந்து."என்றும்; வடித்துவடித்து பெரியோர்கள் சொல்லிய தருமநூல்கள் சூதாடவேண்டாமென்று முறையிடுகின்றன. சூதாடுஞ்செய்கை இழிவாகிய செய்கையேயாகும்; அது கலகமென்னுஞ் செடிக்கு முளையாயிருக்கின்றது.

அச்செய்கையினல் நமக்கும்பாண்டவர்களுக்கும் மிகவிரோதமுண்டாகி யாவருக்குந் தீங்குநேரிடும். பூமியிலுள்ள அரசர்படையெல்லாம் அழிவதற்கு இதுவேகாலமென் றெண்ணவேண்டும். இதனை யாராய்ந்தே சொல்லுகிறேன்; நாளை நீர் வருத்தமடைவீர்; நீர் கொண்ட புத்திரவாற்சலியத்துக்குப் பின் கெடுதிநேரும். இப்போதே தக்கபடி பரிகாரஞ்செய்யலாம், கெடுமதி கண்ணுக்குத் தோற்ருது, பின் நீரோ துக்கமுறவேண்டி வருமென்று பல நியாயங்களின் வாயிலாக எடுத்துக்கூறி; இன்னும் இது இராச வமிசத்திற்கே விநாசகாலமாதலால் என்சொல்லைத் தடுத்து என்னிடத்தே இவ்வா றெல்லாம் சொல்லிமுடித்தீர்; இச்செய்கை உன் மகனளவு போவதன்று, இச்சமஸ்தானத்திலுள்ளாரு மல்லது இவ்வுலகத்திலுள்ள அரசர் பலரும் இறப்பதற்குக் காலமென்றே யெண்ணவேண்டும். இப்படி தெய்வச்செயலால் முடியவேண்டிய காரியத்தை யார்தடுத் தென்செய்யலாம். நான்சொல்லித் தடுத்தால் தான் தடுக்கப்படுமோவென்று விரைந்துசென்று வீட்டுமர் திருமாளிகையையடைந்து வீட்டுமருக்குத் திருதராட்டிரன் கொண்டிருக்குங்கருத்தையெல்லாந் தெரிவித்தான். இது கிடக்க;

திருதராட்டிரன் விதுரன் தன்கருத்திற்கிணங்காமற் போய்விடக்கண்டு துரியோதனனைத் தனியிடத்திருத்தி என் சொல்லைக்கேட்டு நடக்கவேண்டுகின்றேன். எப்போதும்மனிதனுகப்பிறந்தால் நன்மைக்குரிய காரியங்களையே செய்ய முயலவேண்டும். சூதாடுவது கெட்டதென்பதே என் தம்பி விதுரன் கருத்து; என் தம்பி விதுரன் இலேசானவனே யல்லன்; இந்திரனுக்குப் பிருகஸ்பதிபோல எனக்கு எல்லா நுட்பங்களையும் இராசதந்திரமு மறிவிக்க வல்லவன், அவன் அறியாத தொன்றுமில்லை. அவன் உத்தவன் யாதவர்களுக்கு நன்மை நினைத்துக்கொண் டிருப்பதுபோல நமதுசமஸ்தானத்திற்குநன்மையே நினைத்துக்கொண் டிருப்பவன். அவன் சொல்லுக்குப் பலதிருட்டாந்தங்களு மனுபவங்களுமுண்டு. எனக்கு முன்னரே உன்னல் அநேக விபரீதங்கள் எல்லாம் நடக்குமென்று சொல்லியேயிருந்தான்; அப்படியே இப்போதுவாய்க்கப்பெற்றேன். உனக்குவேண்டிய செல்வமெல்லாம் நிரம்பியிருக்கின்றன. உனக்குச் சொந்தபுத்தியுங் கிடையாது, அல்லது தக்கவர்கள் அறிவித்தாலும் அதனை யேற்றுக்கொள்ளவுமாட்டாய், பிடிவாதமாத்திர மிருந்தென்னபயன்! நீயோ நமது வழியில்வந்த பூர்விகராச்சியத்தைக் கைக்கொண்டிருக்கின்ருய்! நீயும் பல கல்வி கேள்விகளில் வல்லவன்! துராலோசனையால் பெருக்கத் தவித்துப் பேதையாயினுய்! உனக்கு நான்சொல்வதில் ஐயமிருந்தால் விதுரனைக் கேட்டறிந்துகொள், விதுரன்சொல்லை விழுமிய வேதப்பொருளென்றே துணிய வேண்டுகின்றேன். நீயோ துயரங்கொள்ளுதல் தகுதியற்றது; நீ அவன் சொல்லைக்கேட்டு நடந்தால் இம்மை மறுமை வீடுபேறு என்னும் மூன்றுங்கிடைக்கும் என்று சொல்லிமுடித்தான். அதைத் துரியோதனன் கேட்டு மனங்கலங்கி உலகத்தில் நாயும் வயிறுவளர்ப்பதைக் கண்டிருக்கிறேன், மானத்தோ டொருவன் பிழைக்கும் பிழைப்பே பிழைப்பு! அதனிலும் சூர

ருகவு மானியாகவு மிருப்பவன் தன்பகைவன் பெருமை யடைந்திருப்ப தகண்டு நாணத்தா லுயிர்துறப்பான். நீர் கொடுத்திருக்கின்ற செல்வத்திரளும் அவர்கள்பெற்ற செல்வத்தை நோக்க அசகசாந்தரமென்றே யெண்ணவேண்டும். அதனால் நீர்கொடுத்திருக்கிற செல்வத்தைச் செல்வமாகவே யெண்ணி யிருப்பவனல்லேன்! அவர்கள்பெற்ற செல்வத்தை வருணித்துச் சொல்ல அனந்தனுலு முடியாதென்றால் நானொரு நாவாற் சொல்ல வல்லேனோ! அவர்க்குவந்த பொருட்குவியல் பல பண்டாரச் சாலைகளில் நிரப்பியும், இடம் போதாமல் புறத்திலும் ஆலாங்கட்டிகள்போல் நிறைந்திருக்கக் கண்டேன், இந்திரன் குபேரன் முதலிய தேவர்களும் பொறாமைப்பட்டே யிருப்பர்; அவர்கள்பெற்ற இருநிதியினும் பாண்டவர்பெற்றது பெருநிதி யென்றே சொல்லவேண்டும். இதுகிடக்க;

ஒருநாள் ஓரந்தணன் இமயமலையிற்பிறந்த சங்கமொன்று கொண்டுவந்து தருமராசனுக்குக் கொடுத்தான். அத்தருமராசன் அதைத் தன்தம்பியாகிய அர்ச்சுனன் கையிற்கொடுக்க அவன் வாங்கி யூதினான்; அம்முழக்கங் கேட்டபோது கண்ணனும், சாத்தகியும், திருஷ்டத்துய்மனும், பாண்டவ ரைவரு மொழிந்த யாவரும் மூர்ச்சையடைந்தனர். நானும் மூர்ச்சையடைந்தேன், என்னைக்கண்டு வீமசேனன் கைகொட்டி நகைத்தான். அச்சங்கத்தின் பெருமையும் அதினழகையும் என்னொரு நாவா லெடுத்துச்சொல்லுந் தகுதியுடையதன்று. அவ்வந்தணனுக்கு ஐந்நூறு எருத்துமாடுகளையும் மிக்க பொருட்குவியலையுங் கொடுத்துதவினான். பல அரசர்கள் யானை குதிரை தேர் முதலியவும் பிறவுங் கொண்டுவந்து காத்திருந்து சமையத்தைநாடி வருந்தியிருந்தனர். சித்திரசேனனென்னும் கந்தருவன் பல வர்ணமுள்ள உத்தம அசுவங்களும், சாம்பூநதமென்னும் பொற்கட்டியுங் கொண்டுவந்ததுமன்றிப் பஞ்சவர்ணக் குதிரைகள் நூறும் கொடுத்தான். இப்போது தருமராசனுக்கு நூறுகோடி திரவியத்திற் கதிகமாயிருக்குமென் றெண்ணுகின்றேன். தருமராசன் வந்த அந்தணர்களுக்குக்கொடுத்த பொன் இவ்வளவென்றே சொல்லி யுறையிடப் போகாது. ஒவ்வொருவனும் இந்திரனையும் குபேரனையு மதியாமற் போயினர். நானே அவ்விடத்தில் அலட்சியமாகவே யிருந்தேன். இதைப்பார்க்கிலுந் துன்பம் வேறுவேண்டுமோ,நான் அரசர்மரபிற்சிறந்ததாகிய குருகுலத்திற்றோன்றி இவ்வரசுக்கு முதன்மையாயுள்ள உமக்கு மகனாயிருந்தும் பலவகையாலும் மேன்மைக்கிடமாகவே யிருக்கின்றேன். இப்படிப்பட்ட நான் பிரயோசன மற்றவன்போ லிருக்கவும், இக்குடும்பத்திற் பிறந்தும் அரசடையாமற் காட்டில் வாசஞ்செய்துகொண்டிருந்த பாண்டுவுக்கு மகனாகியும் காட்டிலே யுயிர் வாழ்ந்து திரிந்து பிச்சையேற்றிருந்தவர் பெருக்கமடையவுமாயிற்றே! இது தலைகீழாயன்றோ இருக்கின்றது. இவ்வகையாக அவர்கள் பெருஞ்செல்வம் பெற்றமையால் உத்தமபாத்திரத்தில் தருமதானங்கள் வழங்கினர். அதை நோக்கி அவர்கள் இப்பாண்டவர்களைச் சத்துருசெயம் பெறுவீரென்றும் சாம்பிராச்சியம் பெறுவீரென்றும் வாழ்த்தினர். அவர்கள் செல்வம் புகழ்முதலியவற்றைப் பெரிதுமடைந்தனர். ஆதலால் எவற்றிற்கு மூலகாரணம் செல்வ

மெனவே விளங்குகின்றது. அவர்கள் அறத்தைச்செய்தமையாலே சிறப்புற் ருர்கள். இதனுலன்ருே 'அறத்தினூங் காக்கமு மில்லையதனை - மறத்தலினூங் கில்லை கேடு.' என்றும் பெரியோர்கள் கூறியிருக்கிருர்கள். அவர்களுக்கு நட ந்த வேருெருமேன்மையைச் சொல்லுகின்றேன். வேள்விமுடிந்து அவப்பிரத மான பின்புநாரதர், வசிட்டர், பராசரர், வியாசர், தவுமியர் முதலானேரும், தனுர்வேதத்திற் சிறந்து மிகத்திறலடைந்து பல வேள்விகளைச்செய்து நல் லொழுக்க முடையாராகிய அரசர் பலரும் சேர்ந்து தருமராசனுக்குச் சாம் ராச்சிய பட்டாபிஷேகஞ் செய்யத்துணிந்து வடதிசையொழிந்த மற்றத் திசைக்கடலினின்றும் பல மகாநதிகளினின்றும் தீர்த்தங்களை வருவித்து அழ கிய பீடத்திலிருத்திப் பதினெண்வாத்திய முழங்க நாற்பத்தெண்ணுயிரமுனி வர்கூட்டம் சுவஸ்திவாசனஞ்சொல்ல அபிஷேகஞ் செய்வித்தனர். அப்போது கொடுத்த தானத்தினை யெவ்வளவென் றெடுத்துச் சொல்லுவேன். இது கிடக்க;

அத்தருமராசன் வீதிவலம் வருகையில் பாக்லிகராசன் வாகனசாலையி னின்றும் தானே நவரத்தின மயமான தேரைக்கொண்டுவந்தான். சுதக்ஷிண மகாராசன் அத்தேரில் நான்கு புரவிகளைப்பூட்டினுன். சுநீதன் அத்தரும ராசன் தேரிலேறக் கைலாகுகொடுத்தான். சேதிபனே துவசம்பிடித்துச் சென்ருன். சுதக்ஷணியென்பவனே கவசத்தைக் கொண்டுவந்து பூட்டினுன். மகததேசத்தரசனே மணிமுடியைப்புனைந்து பூமாலை சூட்டினுன். வசுதான னென்பவனே பட்டத்துயானையைக் கொண்டுவந்து நிறுத்தினுன். விராடனே குதிரையைப்பிடித்துக்கொண்டு நின்ருன். ஏகலைவனே மணிகள்பதித்த பாது கையை அவர்பாதத்திற் பூட்டிநின்ருன். அவந்திநாட்டரசனே பூரணகலச மெடுத்துவந்தான். சேதிதானன் அம்புப் புட்டிலை எடுத்துவந்தான். காசி ராசன் வில்லெடுத்துக்கொண்டு வந்தான். சல்லியனே உடைவாளேந்திவந் தான். இவ்வாறு குற்றேவல்செய்யத் தருமராசன் தேரிலேறி சாத்தகி வெண் கொற்றக்குடை நிழலைச்செய்ய, வீமன் ஆலவட்டம்வீச, அர்ச்சுனனும் இரட் டையரும் சாமரையிரட்டப் பவனிவந்தான்.

இத்தனை ஆடம்பரத்துடனே தருமராசன் பூலோக தேவேந்திரனுக விள ங்கினுன். முன்னே அந்தணனெருவன் மகாசங்கமொன்று கொடுத்தானென்று சொன்னேனே அம்மகாசங்கத்தை அர்ச்சுனன் வாயில்வைத் தூதினுன். அம் மகாசங்கத்தின் வரலாற்றைச் சொல்கின்றேன். அது பூர்வத்தில் நான்முகத் தொருவனுகிய பிரமன் வசிக்கும் சத்தியலோகத்தி லிருந்தது. அதை அக் கடவுளர் பெருமான் ஆகண்டலனுகிய இந்திரனுக் குதவினுன். அக்கடவுளர் கோமான் வருணனுக்குக் கொடுத்திருந்தான். அக்கடவுளிடத்தி லிருந்து இந்திரன் வாங்கித் தருமராசனது சாம்பிராச்சிய பட்டாபிஷேக மகோற்சவத் திற்கென்றே அவ்வந்தணன்கையிற் கொடுத்தனுப்பினுன். அக்குறிப் புணர்ந்த தருமராசன் அவ்வந்தணனுக்கு வேண்டியவற்றை யுதவி அதைஅர்ச்சுனன் கையிற்கொடுத்தான். இவ்வாறு சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் நடந்தது. மனு மாந்தாதா பிருது அரிச்சந்திரன் முதலிய அரசர்களும் இவ்வாறுசெய்யவே

யில்லையென்று பெரியோரெல்லாம் சொல்லிக்கொண்டனர். எனக்கன்று முதலாக நித்திரை பிடிக்கவேயில்லை,என் வயிறுங் குடலும் பற்றியெறிகின்றன, மனங்கலங்குகின்றது. நானுயிர்வைத்திருக்கச் சிறிதேனு மனமுடையேனல்லேன்; என்செய்வதென்று சொல்லி நெட்டுயிர்ப் பெறிந்துநின்ருன்.

அதைக்கண்ட திருதராட்டிரன் துரியோதனனைப் பார்த்து உன் கருத்தோ பிறழ்ந்திருக்கின்றது. நீ எல்லா நூலிலுங் கைதேர்ந்தவன்; நீயறியாத தொன்றுமில்லை, உலகவொழுக்கத்தையும் செவ்வையாக அறிந்துள்ளவன்; நற்குண நற்செய்கைகளையு முடையவன்; எல்லாக் குணங்களினு மேம்பாடுடையவனுக விருந்தும், உன் தாயத்தாரும் உனக்கு நன்மையே நாடுகின்றவருமாகிய பாண்டவர்மேல் மச்சரங்கொள்வது தரும நீதியோ! அவர்களைப்பகைப்பதற்கு வேறுகாரணமில்லையே! உனக்குத் தீங்குநினைக்கக்கண்டதில்லையே! அவர்களை அநியாயமாகப் பகைகொள்வதனுற் பயனென்ன? நீ பொறுமை மேற்கொண்டே பகைக்கின்ருய் யல்லது வேறுகாணேமே! நீ பகைப்பதனுல் ஏதேனும் பயனுண்டா? எவ்வளவும் இன்பமுண்டாகாதே; நீ பகை தேடிக்கொள்வதனுல் இப்போது பெற்றுள்ள செல்வத்தையு மிழந்து பழிபாவங்களை யடைவாயே; நல்வழியிலே நடந்தால் உனக்குச் செல்வந்தானேவளரும். அதற் கவர்களே திருட்டாந்தம்; வேருெருவரும் வேண்டாம். 'மூத்தோர்சொல் வார்த்தை யமிர்தம்.' "தந்தைசொன் மிக்க மந்திரமில்லை," என்றபடி, என்சொல்லைக் கேட்டுப்பிழை. அவர்கள் வேள்வியைச் செய்தார்க ளென்ருல் நீயும் வேள்விகளைச்செய்து சிறப்படையவேண்டும்; அவர்களுக்கு அரசரெல்லாம் கப்பணமுதலியவற்றைப் பயந்து கொடுத்திருந்தால் உனக்கு நயந்து கொடுப்பார்கள். இதிற் சிறிதேனும் ஐயமேயில்லை. அவர்களுக்குச் சுதர்மையினுஞ் சிறந்த சபையிருக்கின்றதென்றனே; உனக்குமவ்வாறே சிறந்த சபைகட்டிமுடிக்கக் கட்டளையிட்டிருக்கின்றேன், கட்டிமுடிந்திருக்கின்றது. இப்பூமியோ அரசர்களுக்கு மனைவியையொக்கும், இதனைப் பெருவலியில்லாதான் அனுபவிக்கமாட்டா,நீயோ பெருவலியுடையான், உனக்கிப்பூமி வெகுபயனைக் கொடுக்கும். உன்னையும் யாவரும் அதிக குணசாலியென்றே சொல்லிக்கொள்கின்ருர்கள். நீயும் புயவலியால் உலகமுழுதும் வென்று பெரும்பொருள்தேடி இஷ்டப்படி செய்யலாம், அவ்வா றல்லாமல் அயலார் பெருக்கத்தைக்கண்டு பேய்போல் தவிப்பது நல்லகாரியமல்ல; அதனுல் உனக்குப் பழிபாவ முண்டாகுமென்ருன்.

துரியோதனனே தந்தைசொல்லிய சொற்கேட்டுப் பொருமல் இவ்வாறு சொல்வதனுல் எங்களுக்கு நல்கால முண்டானதாகத் தோன்றவில்லை; நீர் பாண்டவர்கட்கே இதஞ்செய்யும் விதுரன் பேச்சினைக்கேட்டு இப்படிசொல்ல வந்தீர், அவன் பேச்சைக்கேட்டு எனக்குப் புத்திசொல்ல வந்தால் நானெப்படி பிழைப்பேன். நான் முழுமூட சிரோமணியா! நீர் அதிக புத்திமானென்றே சொல்லவேண்டும், இப்போது தவறியிருக்கிறீர். அது தரும விரோதமா யிருக்கின்றது. நீரோ இராச தந்திரமாகப் பிருகஸ்பதிசொல்லிய

தருமசாத்திரத்தைப் பார்க்கவேண்டும். அதிலுள்ள தருமவிருத்தம் அந்தணர் முதலியவருக்கே யல்லது பிறருக்கல்ல. அரசனாகப் பிறந்தால் பகைவர்பொருளைக் கவருவதே தருமசாத்திர சம்மதம். அவ்வாறு செய்யாவிட்டால் பெருங் குற்றமாகமுடியும். சத்துரு வென்பவன் தனக்கு ஒப்பானவனாயினும் அதிகமானவனாயினும் இருக்கலாம். யாவரினு முயர்ந்தவனாக ஆகவேண்டுமென் றெண்ணுவதே அரசர்க்குரியகடமை, அரசனே இவ்வளவுதான் செல்வத்திற் சிறந்திருக்கவேண்டுமென் றெண்ணப்போகாது. முற்காலத்தில் இந்திரன் பிருகஸ்பதிசொன்ன நீதிகளைக்கேளாமல் தருமமாகவே நடந்துவந்தான். அக்காலத்தில் அச்சுவர்க்கலோகத்தை நமுசியென்னும்பெயருள்ள அரக்கன் கவரவெண்ணினான். அதையறிந்த இந்திரன் அவனோடு நட்பாயிருந்தே அவனைச் சமயம்பார்த்துக் கொன்றான். இவ்வாறு நாம் நடக்கவேண்டிய ஒழுங்கை நடத்திக் காட்டியிருக்க நாம் அதைப்பற்றிச் சிந்திப்பானேன். நான் பகைவர் பொருளைக் கவர்ந் தனுபவிக்கவேண்டும், அல்லாவிட்டால் அவர்களாலே சண்டையினாலாவது சாகவேண்டும். இந்த இரண்டுமில்லாமல் அவர்கள் பெருக்கத்தைப் பார்த்துக்கொண் டிருக்கமாட்டேன், இது உண்மையான செய்தி யென்று சொல்லிமுடித்தான். அதற்குச் சகுனி துரியோதனனைப் பார்த்து முன்சொன்னபடியே அவனுக்குச் சார்பாகப் பேசிமுடித்தான்.

துரியோதனனே திருதராட்டிரனை நோக்கி இனிக்காரியஞ் சாதகமாவது துர்லபமல்ல, சகுனி மாமன் எப்படியாயினுஞ் செயித்துக் கொடுப்பான். அதற் கையமேயில்லை, எனக்கு மேம்பாடுண்டாகிற வழியில் நீர் முயலாதிருப்பது தருமமா? வென்று வற்புறுத்திச்சொல்ல; திருதராட்டிரன் நான் என்ன சொன்னாலும் கேளேனென்கிறாய்! இது தகாதகாரியமென்று மறுக்க, துரியோதனன் உலகத்தில் வியாசரைப்போலவும் கண்ணபிரானைப் போலவும் விதுராசன் மகாஞானசிலனாயினும் இதைமாத்திரம் அவன் காதுகொடுத்துக் கேளான். தருமத்தையே யெடுத்துவிவகரிப்பன். அதுஇராசதந்திரத்திற்கிணங்காது. சூதென்ப துண்டாகக் காரணமேன்? சூதில் நாம் அவர்கள் பெற்ற செல்வத்தை யெல்லாம் கவருவதிற் சந்தேகமிராது, இது சண்டையல்லவே, விளையாட்டாகவே வெல்லப்படுமே! இதற்குத் தடைசொல்வது நியாயமல்லவே யென்று தந்தையை வேண்டுகின்றான். தம்பிசொன்னபடியே நடக்கவேண்டியது நடந்துதான் தீரும், நாம் சொல்லித்தான் முடிவதாவென்று துரியோதனனை யனுப்பிவிட்டுத் தம்பியாகிய விதுராசனை யழைத்துவரத் தூதுவரையனுப்பினான். தூதுவர் விரைந்து சென்று விதுரமகாராசன் மாளிகையை யடைந்து அரசன் அழைத்துவரச் சொன்னதாகத் தெரிவித்தனர். அதைக்கேட்டு விபரீதம் வந்துவிட்டதே, இனி நாம் செய்வதனாலென்ன வென்று துணிந்து தமையனையடைந்து மும்முறை வலம்வந்து பணிந்து தான் வந்தசெய்தியை யறிவித்தான். திருதராட்டிரனே விதுரனைப்பார்த்து நீ இந்திரப்பிரத்த மடைந்து தருமராசனைக்கண்டு நமது அத்தினாபுரத்தில் ஒரு புதிய சபை யுண்டாக்கியதாகத் தெரிவித்து நானழைத்துவரச் சொன்னதாக அழைத்துவரவேண்டு மென்று திருமுகமெழுதிக் கொடுத்தான். அதைக்

கண்டு விதுரமகாராசன் 'கேடுவருவதற்கு முன்னே மதிகெட்டுவரும்' என்ற தற் கிலக்காக உமக்கு இப்போது மதிகெட்டுப் போவானேன்? நீர் மனமறிய மோசஞ்செய்யத் துணிந்தீர்! இதை உமது மனமிணங்கியதற்கு வருத்தப் படுகின்றேன். நீரோ அவர்கள் செல்வத்தைக்கண்டு பொறாமைமேற்கொண்ட உமது மகன் பேச்சைக்கேட்டு நீதிவிரோதமாக நடக்கத் துணிந்தீர்! இதனுல் உமது மக்களுக்கும் அவர்களுக்கும் பகைநேரும். அவர்களோ நல்லொழுக்க மும் நற்செய்கையு முடையாரா யிருப்பதன்றித் தெய்வகடாட்சமும் பெரிய வலிமையுமுடையவரா யிருக்கின்றனர். பின்னே உமது மக்களுக்குக் கெடுதி யுண்டானுல் நீர் புத்திரசோபத்தாற் பெருக்கத் தவிக்கவேண்டும். இது இப் போதே யாகாமற்போனுலும் இன்னுஞ் சிலநாள் பொறுத்தாவது நடக்கும், நானென்னசொல்லியும் கேளாமற் போகிறீரென்றுன்.

அதற்குத் திருதராட்டிரன் விதுரனைநோக்கி நாம் அவ்விருவரையும் போர்செய்ய நியமிக்கவில்லையே! நாமும் வீட்டுமர் முதலானோரும் பக்கத்தி லிருப்போ மல்லவா! தெய்வானுகூல மிருக்கையில் ஒரு கேடும்வராது. அது அநுகூலமாகாத பக்ஷத்தில் கேடுண்டானுல் யாரால் தடுக்கக்கூடும். நம்மா லாவது யாதிருக்கின்றது. நீ தேரேறி விரைவாக இந்திரப்பிரத்தஞ்சென்று தருமராசனை யழைத்துக்கொண்டுவா வென்று சொல்லியனுப்பினுன். விது ரனே மனங்கலங்கி முகங்கறுத்து தெய்வபத்தியுள்ள நமது மக்களுக்கு இப் படியும் கெட்டஎண்ணம் நினைத்தார்களே! நாம் என்செய்வதென்று வருத் தப்பட்டுக்கொண்டே இந்திரப்பிரத்தஞ்சென்று தருமராசனுக்குத் தான்வந்த செய்தியை யறிவித்தான். தருமராசனே தன் சிறிய தந்தையினை யெதிர் கொண்டு அழைத்துவந்து மும்முறை வலம்வந்து பணிந்து கைந்நீர் அடிநீர் முக்குடிநீரளித்து அழகிய பொற்பீடத்தி லிருத்திச் சோட சோபசார முஞ் செய்துநின்று திருதராட்டிரன், வீட்டுமர், துரோணர், அசுவத்தாமா, கிருபர், துரியோதனுதியர்களுடைய க்ஷேமத்தை யெல்லாங் கேட்டுநின்றுன். அவ்வாறு கேட்ட தருமராசனை நோக்கி விதுரமகாராசன் உமது பிதாவும் என்தமையனுமாகிய திருதராட்டிரமகாராசன், வீட்டுமர், துரோணர், கிரு பர், அசுவத்தாமா, துரியோதனன் முதலிய நூற்றுவர், சகுனி முதலிய உற வினர் யாவரும் க்ஷேமமாகவே யிருக்கின்றனர். நமது மகாராசாதான் உங்கள் க்ஷேமத்தை வினவியறியவும் உமது சபைக்குச்சரியாக அத்தினுபுரத்திற் கட் டப்பட்ட சபையைப்பார்க்கவும் அழைத்துவரச்சொன்னுர். நீர் வீமன் முத லிய தம்பிமாரோடும் பாஞ்சாலி முதலிய மாதரோடும் மற்றும் நால்வகைப் படையோடும் அத்தினுபுரத்திற்கு வரக் கட்டளையிட் டிருக்கின்றனர். அச் சபையிலோ சூதாட்டில் மிக்கவல்லமை பெற்றவர்கள் நிறைந்திருக்கின்றனர். உன்னை யழைப்பதும் சூதாடிச் செல்வத்தையெல்லாம் பறிப்பதற்கே யெண் ணங் கொண்டிருப்பதாகத் துணியவேண்டும். நீர் வருவதுதான் குறையா யிருக்கின்றது, இதுதான் அவ்விடத்தில் நடக்குஞ் செய்தியென்றுவிளக்க, அதைக்கேட்ட தருமராசன் சிறியபிதாவை நோக்கி என்னை என்பிதாவே வரக்கட்டளையிட்டால் அவர்சொல்லுக் கிரண்டிரா, ஆயினுஞ் சூதாடச்சொன்

ஞல் எனக்கும் அவர்களுக்கும் பகையுண்டாகிக் கேடுநேருமே! இதற்கென் செய்வது, அதை எவ்வாருடத் துணிவேன், தந்தைசொன்னவண்ணம் செய்ய வேண்டியதன்ருே மக்களுக்குரிய கடமை, நீர் சொல்லுமென்று விண்ணப்பித்தான். நமதரசனுக்கு சூதாடுவது எவ்வகையான பாவங்களுக்கு மூலமென்றும், பெருங்கேட்டை விளைவிக்குமென்றும், துரியோதனன் முதலானேர் விநாசகாலத்தால் இவ்வெண்ணங் கொண்டாரென்றும், இம்மை மறுமை வீடு மூன்றினையும் கெடுக்குமென்றும், எக்காலமும் பழிபாவங்கள் நிலைத்திருக்குமென்றும், நமது மரபு மாசுண்ணுமென்றும், கெடுமதி கண்ணுக்குத் தோற்றுமல் துரியோதனன் இவ்வெண்ணங்கொண்டது தகுதியல்லவென்றும், அதற்குச்சார்பாக நீரிருப்பது உமது பெருந்தன்மைக் கடாதென்றும், வடித்து வடித்துச் சொல்லினேன். அவர் மகனது துராலோசனைக்கிணங்கி உன்னை யழைத்துவரச் சொன்னர். அதைக்கேட்ட தருமராசன் விதுரமகாராசனை நோக்கி அச்சபையில் சூதாட்டத்தில் வல்லவர் யார் யார்வந்திருக்கின்றனர், என்னுடன் ஆடத்துணிந்திருப்பவர் யாவர்? அவற்றையெல்லாம் விளங்கச் சொல்லவேண்டுமென்று வேண்ட, விதுரமகாராசன் சொல்வானுயினன்.

தருமராசாவே! அச்சபையிலே துரியோதனனுக்கு நல்லம்மானும், காந்தாரதேசத்தரசனுமாகிய சகுனிதான் உன்னெடு ஆடத்துணிந்திருக்கின்ருன். அவனே என்னவிருத்தம் போடவேண்டுமென்று நினைக்கின்ருனே அதையே போட்டாடிச் செயிக்கவல்லவன்; அவனுக்கொப்பானவர் பிறரில்லை, அவனே தான் அச்சூதாட்டத்தில் தலைவனுயிருப்பவன். அல்லாமலும் விவிம்சதி, சித்திரசேனன், சத்திரவிரதன், புருமித்திரன், ஜயனென்னும் வேறைவருமிருக்கின்ருர்கள். இவர்களும் அச்சூதாட்டத்தில் கைதேர்ந்தவர்கள்; இவரை யொழிந்தபிறரெல்லாம் சூதாட்டத்தைப் பார்க்கவந்திருப்பவர், இதுதான் அங்குள்ள செய்தியென்று சொல்ல, தருமராசன் விதுரமகாராசனைப் பார்த்துச் சொல்வானுயினன். நீர் எடுத்துச்சொல்லிய பேர்களெல்லாம் வஞ்சகமே யுருக்கொண்டாற்போன்றவர்கள். வஞ்சமாகவே சூதாடி மோசஞ்செய்வார்களே; அவர்களுடன் சூதாடுவது தகாதகாரியமன்ருே! ஆயினும் எமது பிதாவாகிய திருதராட்டிரமகாராசன் நாங்கள் மக்களாகையால் எங்கள்பொருட்டுக் கெடுதி நினைக்கமாட்டாரோ! அவரோ சூதாடநியமித்தால் எவ்வாறு தடுப்பது; அவர் ஆணையைமீறி நடப்பதும் தகுதியான காரியமன்று, யாதாயினுமாகட்டும்; நான் அவர்கட்டளையிட்டதனுல் வந்தேதீரவேண்டும்; அவர்கள் ஆடச்சொன்னுல் ஆடத்தான்வேண்டும், நானே சகுனியுடனுடமனச்சம்மதிகொள்ளேன், ஆடவழைத்தால் தடுப்பதென் விரதமுமல்ல, எப்போதும் "வருகுவது தானே வரும்." என்றபடி, ஏதை யனுபவிக்கவேண்டுமோ அதை யனுபவித்தே தீரவேண்டும்; நானென்செய்வேன், என்னவரினும் வரட்டுமென்று சொல்லித் தன் தம்பிமாரை நோக்கி நாம் அத்தினபுரத்துக்குப் போகவேண்டும், யானை தேர் குதிரை காலாளென்னும் நால்வகைப்படைகளையும் பயணப்படக் கட்டளையிடவேண்டுமென்று சொன்னன்; அவ்வாறே கட்டளையிட யாவரும் பயணமாயினர்.

பாண்டவர்கள் அத்தினபுரஞ்செல்வது.

பின்பு தருமராசன் அந்தணர்களை யெல்லாம்பணிந்து அவர்களால் ஆசிர்வதிக்கப்பட்டுக் கவச குண்டல கிரீட முதலியவற்றை யணிந்து அரண்மனை வாயிலில் வந்து தனக்குப் பாகிலிகதேசத் தரசன் இராசசூயத்திற்கொண்டு வந்து கொடுத்த தேரிலேறித் தன் தம்பிமார் புடைசூழ நால்வகைச்சேனையுடனும் விதுரமகாராசனுடனும் வழிக்கொண்டு காடு மலை யாறு முதலியவற்றைக்கடந்து அத்தினபுரத்திற்கு அடுத்த சமபூமியில் நீர்வளம் நிலவள மிகுந்த ஓரிடத்தில் தன் சேனையை யிறுத்தான். அப்போது தருமராசனது கபடமற்ற சிந்தையைநோக்கி விதுரமகாராசன் சொல்வானாயினன். அப்பா தருமராசனே ! உன்னைத்திருதராட்டிரமகாராச னழைப்பதுஉன்செல்வத்தையெல்லாம்சகுனியைக்கொண்டு சூதாடுவித்துத் துரியோதனனுக்குக் கொடுப்பதற்கென்றேயெண்ணு, இந்த வெண்ணங்கொண்டே உன்னைத் திருதராட்டிரன் வரவழைக்கின்றான் ; இனித் தெய்வச்செய லெப்படியோ வென்றுசொல்ல, அதற்குத் தருமராசன் இவ்வளவு கபடத்தை நினைத்துத் தந்தையார் வருவித்தால் யான் செய்பத்தக்கது, உலகத்தின்கண் ஒவ்வொருவர் கருத்தோ வெவ்வேறாகவே யிருக்கின்றது, அதற்கு நாமென்செய்யலாம், என்னை அரசன் வரவழைத்தால் போகத்தான்வேண்டும், போகாமற்போனால் வலிமை யொன்றுஞ் செய்யமாட்டாரோ ! அப்படிப் போனாலுஞ் சூதாடாமற்போனால் என்னசெய்யலாம் ; சூதாட அழைத்தால் வரமாட்டேனென்கிற விரதமுமெனக் கிருக்கின்றது ; இல்லாவிட்டால் தீங்கு விளைவிக்கும் தகுதியுள்ள சூதாடவே நான் வரமாட்டேன் ; இனி நான் ஆடித்தான் தீரவேண்டும், அதில் நன்மைவருவதாயினும் தீமைவருவதாயினும் வரட்டும், எதற்குந் தெய்வச்செயலன்றோ ஒன்றிருக்கின்றது. ஆயினும் குடிகளையும் அந்தணர்களையும் கோக்களையும் பாதுகாக்கவேண்டுமென்கிற விரதமொன்று என்னை வருத்துகின்றது, அதற்கென்னசெய்வேனென்று சொல்லிக்கொண்டே பொழுதுவிடிந்தபின்பு புறப்பட்டு அத்தினபுரஞ்சென்று அரண்மனைவாயிலை யடைந்து வீட்டுமர், துரோணர், கிருபர், அசுவத்தாமா முதலானோரை வணங்கித் திருதராட்டிரனையும் பணிந்து தான் வந்தசெய்தியை யறிவித்தான். மற்றபாண்டவர்நால்வரும் அவ்வாறே வணங்கினர். அப்போதுபாஞ்சாலியும் காந்தாரியைச்சென்று வணங்கின்று துரியோதனன் மனைவிமுதலியவர்களைச்சென்று கண்டு அவர்களா லுபசரிக்கப்பட்டு இருந்தனள் ; அம்மாதர்கள் பாஞ்சாலி பெற்ற செல்வப்பெருக்கைக்கண்டு பெருக்கத்தவித்துநின்றார்கள். இதுகிடக்க;

சொக்கட்டானுடுகை.

தருமராசன் பொழுதுவிடிந்தவுடன் காலைக்குரிய கடன்களையெல்லா முடித்துத் தன் விடுதியடைந்தனன் ; மற்றபாண்டவர் நால்வரும் அவ்வாறே வந்து சேர்ந்தனர். துரியோதனனும் அவன் தம்பிமாரும் கர்ணனும் வீட்டுமரும் விதுரனும் அசுவத்தாமாவும், துரோணரும் மற்ற அரசர் பலரும் இராசசபைக்கு வந்துசேர்ந்தனர். துரியோதனன் பிராதிகாமியென்னுந் தூதுவனைக்

கூவிப் பாண்டவ ரைவரையும் அழைத்துவரக்கட்டளையிட்டான். அவன் கட்டளையையேற்று தருமராசன் விடுதியையடைந்து எங்கள் துரியோதனமகாராசன் தான்கட்டிய சபையைக்காண வழைத்துவரச்சொன்னர், தங்கள் கருத்தென்னவென்று தெரிவிக்க; தருமராசன் பாஞ்சாலியைப்பார்த்து என் தாயுடன் நீ காந்தாரியன்னை மனையிற்போயிருக்கவேண்டுமென்று கட்டளையிட்டுத் தம்பியருடன் இராசசபையையடைந்து தான் அவரவரை வணங்கத்தக்க முறையாக வணங்கி அம்மண்டபமுழுதும் பார்த்துக்கொண்டே இதைப்போலும் தேவருலகத்திலுமில்லையென்றுசொல்லி அச்சபாமண்டபத்திலிருந்த ஓர் ஆசனத்தி லுட்கார்ந்துகொண்டிருந்தனன். மற்ற நால்வரும் அவ்வாறே அவ்விடத்திலுள்ள ஆசனங்களி லுட்கார்ந்தனர். அப்போது துரியோதனன் தருமராசனைநோக்கி மாயமொன்றுமில்லாதமனத்தையுடைய சகுனிமாமனும் நீரும் போசனத்துக்குப் போகிறவரையிலும் பொழுதுபோக்காகச் சூதாடவேண்டுகிறேன்; இதற் குமதுசம்மதி யாதென்றுகேட்க, தருமராசனும் அத் துரியோதனனைநோக்கி அப்பா துரியோதன! சூதாடுவதே தருமமார்க்கத்துக்குரிய செய்கையல்ல! பெரியோர்கள் 'சூதுவிரும்பேல்' என்றேசொல்லியிருக்கின்றனர். நீ சொல்வது தகுதியல்லவென்று தடுத்தான். துரியோதனன் நாம் விளையாட்டாக ஆடுவதனாற் குற்றமில்லை யென்றுசொல்ல, அதற்குத்தருமராசனே விளையாட்டாக ஆடுவதுந் தருமசாத்திர விரோதமாயிற்றே! வஞ்சனையாக விளையாடுவதோ உங்களியற்கை! என்னைவஞ்சிப்பதும் உமக்குத்தருமமேயன்று என; சகுனியோ உலகின்கண் நண்பரால் இலாபம் உலோபம் நேரிட்டாலும் நட்பையே பரிபாலனஞ் செய்யவேண்டும்; அப்படிப்பட்டவரோ ஒருவரோடொருவர் சூதாடவேண்டும்; நீர்சொல்வதை நோக்குமிடத்து நாங்கள் வஞ்சகராக நினைத்துச் சொல்வதாயிருக்கின்றது. எங்களோடு சூதாடினால் உமது செல்வமனைத்தும் பறித்துக்கொள்வோமென் றெண்ணுகின்றீர், அவ்வாறிருந்தால் நீர் ஆடவேண்டாம்; ஆடவந்தால் பந்தயம்வைத்தே யாடவேண்டும், சும்மா ஆடுவதுந் தகுதியன்று, தோல்வியும் வெற்றியும் ஒருவர்பக்கத்தல்ல, உமக்குத்துணிவிருந்தால் ஆடலாம், அல்லாதபக்ஷத்தில் ஆடவேண்டாமென்றான்; தருமராசன் சகுனியைநோக்கி, அசிதரும் தேவலரும் அரசனைப்பற்றிச் சொல்லியிருக்கின்ற நீதிகள் சிலவுண்டு; அது அரசன் தருமமாகவே போரிற் பகையரசனைவென்று இராச்சியமடைந்து ஆளவேண்டுமென்பதுவே; அதருமமாய் ஒருவன் அரசைப்பிடுங்கி யாண்டுவருவதுந் தகுதியானகாரியமல்ல, நாம் தருமமாய் இராச்சியத்தைப் பரிபாலனஞ்செய்து அந்தணர்களையும் கோக்களையும் குடிகளையும் பாதுகாப்பதே பரமதருமம், இதுவன்றிப் பிறர்செல்வத்தைக்கவரவோ எனக்கிஷ்டமில்லை, இப்படிப்பட்ட என்னுடன் நீ வஞ்சனை மேற்கொண்டு சூதாடுவது தகுதியல்ல, உனக்கிருக்கிறபடி பிறர்செல்வத்தைக் கவர எனக்கு மனமேயில்லை என, சகுனி உலகத்தின்கண் யோக்கியன் அயோக்கியனோடு விவாதஞ்செய்யக் கண்டதில்லையா! கல்வி கேள்விகளிற் சிறந்த வித்துவசிரோமணி முழுமூடனோடும் வாதிக்கக் கண்டிருக்கிறோமே! நன்றாகச் சூதாடத்தெரியாதவனும் தெரிந்தவனோடும் ஆடக்கூடும். பந்தயம்

வைத்து வெல்லவுங்கூடும். அதனுல் அதை வஞ்சனேயென்றுசொல்லப்படுமோ! இருவர்சேர்ந்து ஒருகாரியஞ் செய்கையில் ஒருவன் வலிமையுடையனுகவும், ஒருவன் வலிமையில்லாதவனுகவும் இருக்கக்கூடும். அதனுல் வஞ்சனேசெய்தானென்று சொல்லலாமா; நீர் பயப்படுகிறதனுலும் பொருள் போய்விடுமென்று எண்ணுகிறதனுலும் சூதாடவேண்டாம், நீரோ பழையலோபி! நான் அறிவேன், சும்மாவிருமென்ருன். தருமராசன்நான்சூதாடவழைத்தால் வரமாட்டேனென்று சொல்லேன், சூதாடினுல் என்னவருமோ அதை யனுபவிக்கிறேன்,எதற்குந்தெய்வச்செயலிருக்கிறதென,துரியோதனன்நவரத்தினமுதலியன என்னிடத்திலிருக்கின்றன, நா னுடுவதற்குப் பதிலாக உம்மொடு சகுனி மாமா ஆடுவார் என, தருமராசன் நீயொருவருக்குப் பந்தயம்வைத்தாடுவது தகுதியல்ல, நீயே என்னுடனுடலாம், ஒருவராடுவ தென்னவென்றுசொல்ல, துரியோதனன்ஒன்றுஞ்சொல்லாமலிருந்தான். அச்சபையில் திருதராட்டிரன், விதுரன்,விட்டுமர்,துரோணர்,அசுவத்தாமா,கிருபர் முதலானேர் முகப்பொலிவில்லாமலிருந்தனர். அச்சபையோ முற்றக்கற்ற பெரியோராற் சூழப்பட்டிருந்தமையால் இந்திரனது சுதர்மையென்னுஞ் சபைபோல் விளங்கிக்கிடந்தது.

இவ்வாறு யாவருஞ் சேர்ந்திருக்கையில் தருமராசன் துரியோதனனேப் பார்த்து நவமணிராசிகளும் திரவியங்களும் ஏராளமாயிருக்கின்றன; அவைகளேப் பந்தயமாக வைக்கின்றேன் என, துரியோதனனும் பொருட்செல்வமுடையவரில் என்னேயே சிறந்தவனென்று யாவருஞ்சொல்லிக்கொள்ளுகின்றனர்; நானே வேண்டியபொருட்குவியலே வைக்கின்றேன்,எனக்காகச் சகுனி மாமா ஆடிவருவர் என, தருமராசன் அப்படியே யாகட்டுமென்று சம்மதிப்பட்டான். இப்படி இருவரும் பந்தயம்வைத்தாடத்தொடங்க,சகுனி கையிற் பாய்ச்சிகை யெடுத்துக்கொண்டு சபையிலிருப்பாரைப்பார்த்து நான் சொல்வதை யாவருங் கேளுங்கள்; துரியோதனனுக்காக நானுடுகின்றேன், என்னுடன் தருமராசன் ஆடுகின்ருன். இருவராலும் பந்தயங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. என்கையில்உள்ள பாய்ச்சிகையில் என்னவிருத்தம் வேண்டுவேனென்பேனே அந்த விருத்தம் போடுவேன்,அந்தப்படி செயிப்பேனுயின் வைத்த பந்தயஞ் செயிப்பேனுவேன். இந்த ஏற்பாட்டை யாவரும் அறிந்திருக்க வேண்டுகிறேன் என்றுசொல்லித் தன்கையிலிருக்கும் பாய்ச்சிகையை யுருட்டினுன். அவன் எந்தவிதமாகப் பாய்ச்சிகையிற் சொல்லிப் பாய்ச்சிகையை யுருட்டுவானே அவ்வாறே யுருட்டி அந்தப் பந்தயத்தைக் கைக்கொண்டான். இவ்வாறு செயித்துத் தருமராசனேப்பார்த்து உமதுபந்தயத்தையாடிச் செயித்துக் கைக்கொண்டேன் என, தருமராசன் நான்வைத்த பந்தயத்தை யாடிச் செயித்துக்கொண்டா யாதலின் என்னிடத்தே பொற்பாத்திரங்களும் வெள்ளிப்பாத்திரங்களு மிருக்கின்றன, அவற்றைப் பந்தயப்பொருளாக வைத்தேன் ஆடுமென்று சொல்ல, அவ்வாறே ஆடி இதோ நானுடிச் செயித்தேன் என்று வாயினுற் பந்தயஞ்சொல்லிச் சொன்னபடியே ஆடிச்செயித்துத் தான் பந்தயப்பொருளேக் கைக்கொண்டான்.

பிறகு தருமராசன் மலைக்கொப்பாகியும் எவ்வகைப்பட்ட ஆயுதங்களை யும் இலட்சியஞ்செய்யப் படாதனவாயும், நுகத்தடிபோன்ற தந்தங்களையுடை யனவாயும், அருவிபோலும் மதசலம்பொழிவனவாயும், பெரிய சுத்தவீரர்கள் ஏறத்தக்கனவாயும், பட்டினாற்செய்யப்பட்ட மேற்போர்வை போர்த்தனவாயு முள்ள களிற்றியானைக ளாயிரமும், பிடியானைக ளாயிரமும், பந்தயப்பொரு ளாகவைக்கச் சகுனி அவற்றையும் தான் சொன்ன விருத்தமே பாய்ச்சிகை விழச்செய்து ஆடிக்கெலித்தான்; பின்பு தருமராசன் தீயஊழினால் பேய்பிடி யுண்டவர்போல் அச்சூதி லாவேசமாய் இலட்சம் தாசிசனங்களையும் வைக்க, அவர்களையும் சகுனி பாய்ச்சிகை யுருட்டிக்கெலிக்க, பல்லாயிரந் தேர்களை அவற்றிற்பூட்டப்பட்ட குதிரைகளுடன் பந்தயமாக வைக்க, அவற்றையுஞ் சகுனி பாய்ச்சிகை யுருட்டிக்கெலிக்க, பின்னும் சித்திராங்கதன் அர்ச்சுன னுக்குத் தித்திரிப்பக்ஷிபோன்ற பலவகை நிறமுள்ள நூறுகுதிரைகளைப் பந் தயமாக வைக்க, அவற்றை யெல்லாம் ஆடிக்கெலிக்க, பின்னும் தீயஊழால் தருமராசன் தன்னிடத்திலுள்ள தேர்கள், குதிரைகள், சிவிகை முதலியவற் றைப் பந்தயமாக வைக்க, அவற்றையு மாடித்தோற்பிக்க, பின்னும் நானூறு கடாரங்களில் தன்னிடத்துள்ள பொருள்களையும் தருமராசன் வைத்தாட, அவற்றையும் சகுனி கெலிக்க,இவ்வாறு தருமராசன் தன்பொருளையெல்லாம் சூதில் இழப்பதுகண்டு பொறாது விதுரராசன் திருதராட்டிரனை நோக்கிச் சொல்வானாயினன். தேகமுதிர்ந்து இறக்கப்போவானுக்கு எவ்வகையான நன்மருந்து தரினும் அவன் அதனையுட்கொள்ளான். வலிதில் அவன்வாயிலிடி னும் அதையு மிழந்துவிடுவான், அதுபோல் உமக்கெவ்வகையான நற்புத்தி போதகம் புகட்டினும் அதை யேற்றுக்கொள்ளாம லிருக்கின்றீர்! நான் உம் பால்வைத்த பரிவினால் இத்தனையும் சொல்லிவிடுகிறேன். நீர் அதை என்பால் அன்புவைத் தேற்றுக்கொள்ளவேண்டும். உமது மகன் துரியோதனன் பிறந்த வன்றே நரிபோலுங் கூவினனன்றோ! அதனால் நான் அவனைக் காட்டிலெறி ந்துவிடவேண்டு மென்றும்,அவனிருந்தால் பல அனர்த்தங்களுக்கிடனாயிருக்கு மென்றும், குலநாசமுண்டாமென்றுஞ் சொல்லியிருந்தேனன்றோ! அதைச் சிறிதும் செவிமடுத்துக் கேளாமலிருந்தீரோ! பின்பு பருவம்வந்தகாலத்தில் அவனை இராச்சியத்திற்குச் சுதந்தரனாக்கவும் வேண்டாமென்று தடுத்தேன், அதனையு மேற்றுக்கொள்ளாம லிருந்தீர்! நேற்று என்னிடத்தில் நீர்பேசிய போதுஞ் சூதாடவேண்டாமென் றுறுதிமொழிகூறினேன் அதனையுமசட்டை பண்ணினீர்! இனி நீர் அவனைமகனென் றுள்ளத்தேகொண்டிருப்பது உமக்கு மாறாத துயரமுண்டாக்கும், அவனை இராச்சியத்திற்கு முதன்மையாக்கின மையால் இராச்சியத்திற்கு நலமென்றே சிந்திக்கவேண்டாம், குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பென்றே யெண்ணும், நீர் பேரறிவுடையராயிரு ந்தாலும் அவன் சொல்லைக்கேட்டுப் பெருமையிழக்கின்றீர். நீர் நீதிநூலறிந் திருந்தும் பிறர்செல்வத்திற் பொறாமைகொண்ட துரியோதனன் பேச்சைக் கேட்டுப் புகழும் திருவுமிழப்பீர். துரியோதனனே பாண்டவர்செல்வத்தைப் பறித்துக்கொண்டும் அரசாண்டேவருவானென் றெண்ணவேண்டாம். வினைவி

வழிவான். நீதிநூலிற் சொல்லியபடி போர்செய்து வெற்றிகொண்டு பகைவர்நாட்டைக் கைக்கொள்ளவேண்டும். வஞ்சமாக ஒருவர் நாட்டைப் பறிப்பதனுல் இழிவும் நரகமுமுண்டாகும். இவ்வகையான பயனின் முயற்சியை விட்டுவிடும். இவனை நம்பவேண்டாமெனப் பலவாறு சொல்ல, அதைக்கேட்டிருந்த துரியோதனன் விதுரராசனை நோக்கி நீரோ் பாண்டவரையே புகழ்ந்து பேசுகின்றீர், நான் சிறதையச் சிறிதேனு முமக்கு மனமில்லை. நீர் என்பால் எப்போதும் பகைமை பாராட்டுகின்றீர்! அவமதிக்கின்றீர்! உமக்கு வேறு வேலையில்லைபோலும் பகைவர்பாலுறவாடும் உம்மை இங்குவைத்திருப்பதனுல் பொல்லாங்கே நேர்ந்துவிடும். நீரெப்போதும் பாரபக்ஷமே நடக்கின்றீரென்று கடுகடுத்துச் சொல்லினுன். அதற்கு விதுரராசன் பொறுமையாய் விநாசகாலமாகையால் விபரீதமாக நடக்கின்றனை. 'மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடா.' என்றபடி நான் சொல்வது உனக்கேற்கவில்லை, நீ நலமடையச்சொல்லிய என்சொல் பின்னே பயன்பெறும் என, துரியோதனன் இதுவரையிலும் 'பசு புலித்தோல் போர்த்து வயலகத்தே திரிந்தது.' போல இதுவரையிலும் வெளிவராமல் உள்ளனுங் கள்ளனுமாயிருந்தீர், இப்போது வெளியரங்கமாக வந்துவிட்டீர்; என்செய்வது! உம்மைநொந் தாவதென்ன! என, விதுரராசன் என் தமையனுகிய திருதராட்டிரமகாராசனுக்கு வரும் நன்மை தின்மைக ளென்னுடையனவே, ஆதலால்இதந்தருவனவற்றை எனக்குத் தீமைநேரினு மெடுத்துச்சொல்வது முறைமை; இத்தனையும் அவர் பொருட்டே யெடுத்துப்பேசினேன் என, அதைச் சிறிதும் மதியாமல் துரியோதனன் தருமராசனை நோக்கி உமக்கு இராசசூயத்தில் யாவரும் இருநிதிக்கிழவனிலும் பெருஞ்செல்வனென்றனரோ! உமக்கிதுதானே செல்வப்பொருள், உமக்கு வைத்தாடவே மனமில்லைபோலுமெனப் பரிகாசமாகச்சொல்லத் தருமராசனும் காலகதியால் சகுனியிடத்தே மறுபடியும் தன்னிடத்திலுள்ள பல திரவியங்களையும்வைத்துச் சூதாடித்தோற்றுப் பின்பு தம்பியர் நால்வரையும் தனித்தனிவைத்தாடித் தோற்றுந் தன்னையும் பந்தயமாக வைத்தாடித் தோற்றுநின்றனன். பின்பு சகுனி நீருந்தோற்றுப்போயும் வேறொரு பொருளுமிருக்கின்றதே! அப்பாஞ்சாலியைவைத்தாடாமல் நீரோ் தோற்றீரென, அவ்வன்னையையுங் காலகதியால் வைத்தாடித்தோற்றனன். அவ்விராசசபையோ ஒருபாற் களிப்பும் ஒருபால் துன்பமாயுமிருந்தது. சகுனி துரியோதனன் கர்ணன் முதலானோர் மிகவும் இன்பக்கடலி லமிழ்ந்திருந்தனர். வீட்டுமர், துரோணர், கிருபர், அசுவத்தாமா, விதுரர் முதலானோரெல்லாம் இதென்ன காலகதி! இப்படியும் ஊழிருக்குமா! தருமராசன் வெகு தருமவானுயிற்றே! அவன் செய்த புண்ணியபந்தா னிப்போது உதவலாகாதா? 'தருமந் தலைகாக்கும்' என்ற பழமொழிப்படி இவரைக்காவாதொழிந்த தென்னகாரணமோ வென்று தங்களுக்குள்ளே தாங்கள் மனநொந்து வருந்தியிருந்தனர். சகுனியானவன் பாஞ்சாலியையும் வைத்துத் தோற்றுவிற்றெனவே துரியோதனன் அடைந்த பெருங்களிப்புக் கெல்லையில்லாதிருந்தது.

துகிலுரிதல்.

அச்சபையிலுள்ளோர் குருகுலத்தரசனாகிய துரியோதனன் கொடியவனாயினனென்பார்கள், சிலர் இச்சகுனி அவன் உயிர்க் குலைவைத்திருந்தானென்பார்கள், தருமராசன் இத்தனை நாளும் செய்துவந்த தருமமும் பொய்யாய்விட்டதோ வென்பார்கள். சிலர் வீமன் கோபித்து இனி என்ன செய்துவிடுவானோ வென்று சொல்லிக்கொள்வர். சர்ப்பக்கொடிபடைத்த துரியோதனன் தானுயர்த்த கொடிபோலு முறவுபாராட்டவில்லையே யென்று சொல்லிக்கொள்வார்கள். இக்காலத்தில் மனுநீதியும் தருமமும் குன்றிப்போயினவேயென்பார்கள். சிலர் இந்திரன்மகனாகிய அர்ச்சுனனுக்குக்கண்ணிரண்டுஞ்சிவந்தால் யாதாய்முடியுமோ வென்பார்கள். சிலர் இச்சபையில் இவ்வனியாயநிகழக்கண்டும் தந்தையாகிய திருதராட்டிரன் ஒன்றுஞ்சொல்லாம லிருக்கின்றானே யென்பார்கள். இவனுக்கிரண்டு கண்ணுங்கெட்டதுபோல் அறிவுங்கெட்டதே யென்பார்கள். சிலர் இவனால் இவன் மக்களுஞ் செல்வமழிந்துபோவார்களே யென்பார்கள்.சிலர் இப்பழிசொல்லிக் கொள்ள எக்காலத்திலுநிலைபெற்றிருக்க வகையையுண்டாக்கிவிட்டானே யென்பார்கள். இவ்வகையாக அவ்விராசசபையிலுள்ளவர்களெல்லாஞ் சொல்லிக்கொள்ளத் துரியோதனனோ, சகுனி, துச்சாதனன், கர்ணன் என்னு மூவருடனும் ஆலோசித்து அச்சபையிலுள்ள யாவருநடுங்க வீட்டுமனைநோக்கிச் சொல்லுகின்றான். இது தருமராசன்செய்த பாவந்தானோ? சகுனிசெய்த புண்ணியமோ! ஐவருக்கும் பொதுவாகிய பாஞ்சாலி யாகசாலையை யடைந்த தவறோ! மற்ற நால்வர்கள் எண்ணிய எண்ணப்பிழையோ! இவ்வாறு சூதாட்டத்தில் தோற்றுவிட்டார்களென; அதைநோக்கித் தவத்தினாலுயர்ந்த விதுரராசன் அப்பாதுரியோதனா! இந்தக் கொடுஞ்செய்கை நமது மரபிற்கியற்கையானதேயல்ல, நம்மைநாமே புன்சொல் சொல்லிக்கொள்வது தருமாவென,அதைக்கேட்ட துரியோதனன் எனக்குத்தோற்ற தருமராசன் யானை குதிரை தேர் முதலியவற்றைச்சென்று கொண்டுவந் தடைக்கக் கட்டளையிடவேண்டும். பழமையான நகரும் நாடும் மகரதோரணமிட் டலங்கரிக்கச் சொல்லவேண்டும். அவர்களுடைய அளவற்ற திரவியங்களை யெல்லாம் மனிதர்களைக்கொண் டெடுத்துக்கொண்டுவரச் சொல்லவேண்டும். அழகிய மாதர்களை யெல்லாம் நமது அத்தினாபுரத்துக்கு வரக் கட்டளை பிறப்பிக்கவேண்டும். வீமசேனன் முதலிய இளையவர் நால்வருங் குற்றேவல்செய்ய வருவிக்கவேண்டும், இவர்களுடைய மனைவியாகிய பாஞ்சாலியை இராசசபையில் வரவழைத்து அவளுடைய ஆடையை யுரியக் கட்டளையிடவேண்டுமென, அதற்கு விதுரராசன் சொல்லுகின்றான்; நீயோ தருமராசனை அதருமமாக மாயச்சூதாடி அவனை நாடுநகரமே யல்லாமல் அவனையும் அவன் தம்பிமாரையுஞ்சூதால் வெற்றிகொண்டாயானாலும் இக்குற்றமற்ற இராசசபையிலே சொல்லத்தகாதவை அப்பாஞ்சாலியைப்பற்றிச் சொல்வது முறையல்ல, அப்பாஞ்சாலியோ தெய்வத்தன்மை பொருந்திய கற்பிற் கருந்ததியை நிகரென்று சொல்லத்தக்கதன்றி இம்மண்ணுலகத்தி

லுள்ள மாதர்களை ஒப்பென்று சொல்லத்தக்கதல்ல வென்று மனம்வருந்திப் பின்னும் சொல்லுகின்றான். எனக்கொரு சங்கேத மனத்திலிருக்கின்றது. அது பூர்வத்தில் கடலிற் றுயில்கொண்ட கள்ளமாமாயன் கையால் மாண்ட காலநேமி முதலிய அசுரரெல்லாம் மீண்டும் இக்காலத்தில் மனிதராகப் பிறந்தனர். அதனால் பூமிதேவி மனம்பொறாமல் தான் பாரஞ்சுமக்க வருந்திப் பிரமதேவனிடத்திற் சென்று முறையிட்டாள். அதைக்கேட்ட பிரமன் எல்லாத்தேவருடனும் பூமிதேவியையும் அழைத்துக்கொண்டு திருமாமகள் நாயகனாகிய கள்ளமாமாயனிடத்திலே சென் றறிவித்தான். அதைக்கேட்ட கள்ளமாமாயன் தான் சிறுமாமனிசனாகப் பிறந்தே அப்பூபாரந் தொலைக்க நம்மிலொருவனாகப் பிறந்திருக்கிறானென்று பெரியோரெல்லாஞ் சொல்லிக்கொள்ளுகின்றனர். அக்கடவுட்பெருமான் எந்த வகையால் எவ்வாறுமுடிப்பானோ வென்று மனநொந்துவருந்துகின்றேன். இது நிற்க;

இவ்வுலகமுழுதும்பற்றி நீங்களிருவரும்மாறுபட்டமனத்தையுடையவரானால் எல்லாவரசரும் கூட்டமாக முழுது மிறப்பதற்கே இடந்தருவதாகத் தோன்றுகின்றதென்று விதுரரொடுத்துரைத்த நீதிகளையெல்லாந் தன்செவியில் கேட்டு நாராசங்காய்ச்சி யூற்றினதுபோல் கண்கள் சிவக்க விதுரரைநோக்கி, விதுரரே இவ்வகைச்சொற்களை யிங்கெடுத்துக்கூறுதல் வேண்டாம், நீர் எப்போது மவர் சார்பாகவே பேசுவதல்லாமல் எம்பா லெப்போதும் பகைமையைப் பாராட்டுதல் உமக்கியற்கையாயுள்ளன. இனி இக்காரியத்தில் நீர் பிரவேசிக்கக் கூடாதென்று தடுத்துத் தன் சாரதியாகிய பிராதிகாமியைக் கொண்டு பாஞ்சாலியைச் சபைக்கழைத்து வரும்படி கற்பித்தான். அவன் அப்படியே அந்தப்புரத்துட்சென்று பாஞ்சாலியைக்கண்டு வணங்கி,அன்னாய்! உன் கணவராகிய தருமராசன் சூதாடத்தொடங்கிக் காலகதியாற் பிடிவாதந் தலைக்கேறி இராச்சியமுதலிய சகல பொருள்களையும் பந்தயமாகவைத்துத் தோற்று உடன்பிறந்தோர் நால்வரையும் முறை முறையேதோற்றுத் தன்னையுந்தோற்றுப் பின்னுன்னையுந்தோற்றார். யாவரையுந் துரியோதனனே ஜயித்தானாயினன்; ஆதலால் நீரும் அவரால் வெல்லப்பட்டமையால் உம்மைச் சபைக்கழைத்துவரும்படி யெனக்குக்கட்டளையிட்டனுப்பினார். யான்பணிசெய்வோனாதலால் கட்டளையைமறுக்காமல் வந்தேனென்று சொல்லினான். அதைக் கேட்ட துரௌபதை உலகில் பெண்டாட்டியையும் பந்தயம்வைத் தாடுவாருண்டோ, மகாபுத்திமானாகிய யுதிட்டிரர் என்னைப்பந்தயமாய்வைத்தாடினது மிகவுமாச்சரியமே! அப்பா சாரதி, நீ தருமராசரிடஞ்சென்று தன்னைமுந்திப் பந்தயம்வைத்துத் தோற்றபின்னர் என்னைத்தோற்றாரோ,அல்லாமல் முன்னமேயோவென் றறிந்துவாவென்ன, அப்பிராதிகாமியாகிய சாரதிசபைக்குவந்து பாஞ்சாலி கேட்டகேள்வியைத் தருமரிடத்திற் சொல்ல,அவர் தலைகுனிந்து மௌனமுற்றிருத்தலைக்கண்ட துரியோதனன்இன்னமும் அவளுக்கு அந்தப்புரமா? அவள்பாதாயினுங் கேட்கவேண்டியிருந்தால்இங்குவந்தேகேட்கலாம்; அவளைச் சீக்கிரத்தி லிங்கழைத்தோடிவாவெனப் பிராதிகாமிக்குக் கண்டிப்பாகக்கட்டளையிட்டான். சாரதியுமவ்வாறே துரியோதனன்கட்டளையைப் பாஞ்

சாலிக்குத் தெரிவித்தான். அவள் மனம்வருந்தி, சூதென்பதிலும் தருமா தருமமில்லையா, அதில் யாவர் தருமத்தைக் கைவிடாமற் காப்பவரோ அவரே யென்னைக் காப்பாரென்று கண்களில் நீர்தளும்ப மனங்குன்றி நின்றபோது, தருமராசன் பாஞ்சாலியைச் சபைக்கு வரும்படிதன்னிஷ்டனொருவனை யனுப்பிவைத்தனர். பாஞ்சாலியிச்செய்தியறிந்துநெட்டுயிர்ப்பெய்தித்தேகமெல்லா நடுக்கமுற, பூப்பாயிருந்தமையா லொற்றைத்துகிலொடு நாணத்தால் அங்கமெல்லாம் மயிர்க்குச்செறியப்புலம்பிக்கொண்டு மாமனாராகிய திரிதராட்டிரன் முதலியோ ருட்கார்ந்திருக்குமிடத்தில் வந்துநின்றாள். அதுகண்ட துரியோதனன் சாரதியைநோக்கி அவளங்கே யொதுங்கிநிற்பதென்ன? அவளை யென் பக்கமா யிழுத்துவா, இப்போதவள்கேட்கவேண்டிய கேள்விகளெல்லாம் இங்கு யாவருமறியக் கேட்கலாம், தருமராசனும் இங்குவந்தே விடைதரவேண்டுமென்று சொல்ல, சாரதி பாஞ்சாலியைத் தொட்டிழுக்கப் பயந்து நின்றான். துரியோதனன் தன்தம்பி துச்சாதனனைநோக்கிமதுசாரதியும் வீமனுக்கஞ்சி பேதையா யிருக்கின்றான்! நீ வெகுசமர்த்தனாகையால் அஞ்சாமல் அவளை யிங்கிழுத்துவாவென்ன, மகாபாவியாகிய துச்சாதனன் பாஞ்சாலியையணுகி அடீபாஞ்சாலீ, என்னைக்கண்டுவெட்கங்கொள்ளவேண்டாம்! எம்மாலுன்னைச் சயிக்கப்பட்டமையால் நீ யெங்களுக்குத் தாதியானாய்! துரியோதனமகாராசனைக்கண்டு வணங்கு, அவர் உன்னை யருகிலழைக்கின்றார், இக்கவுரவரில் யாரிடத் துனக்கிஷ்டமோ அவர்களைச்சேரலாம், வாவென் றவள் கையைப் பிடித்திழுத்தான். அப்போ தந்தப்பாஞ்சாலி மனநொந்து கண்ணினின்றும் முத்து முத்தாய் நீர்வடிய, நாணத்தால்முகங்கன்றி ஓவென்றாரவாரித்துப்புலம்பிக்கொண்டு, தன் மாமியாரிருக்கும் அந்தப்புரமேநோக்கிச்செல்கையில், கொடியசெய்கைக்கோர்விதையாயுள்ள துச்சாதனன் விடாமற் பின்றொடர்ந்தோடிநின்று ஐவரைப்புணரும் அவிசாரி, உனக்கு மானமேது, உன் புருஷர்களுக்கு வீரமிருக்குமானால் உன்னை யிப்படி அவமானஞ்செய்ய அவர்கள் பார்த்திருப்பார்களா! இது தெரியாமலோடுகின்றனையே, போகவேண்டாம் நில்லென்று பல கடுஞ்சொற்களைக்கூறி, கருமுகில்போற் கறுத்து மயிற்றோகைபோல்நீண்டு மின்னலைப்போற் சாயலையுடையனவாய் முனைபிளவாமல் படிப்படியாய்வளைந்துவிளங்குகின்ற கூந்தலைப்பற்றியிழுத்தான். இராசசூயமானபின்னே சாம்பிராச்சிய பட்டாபிஷேகத்திற் சகல புண்ணிய தீர்த்தங்களைக்கொண்டுவந்து திவ்யஔஷதிரசங்களோடு சேர்ந்து அபிமந்திரிக்கப்பட்ட மகாதீர்த்தங்களைப் பெரியோர் எந்தக்கூந்தலின்மேல்புரோக்ஷித்தார்களோ அப்படிப்பட்டகூந்தலை அக்கொடியோன் கைகூசாமற் பற்றியிழுக்கும்போது, அங்குள்ளமாதர்களெல்லாம் ஐயையோ! ஈதென்ன அனியாயம், இங்கு யாரும் பெரியோர்களில்லையோ! அறிஞரில்லையோ! இவ்வகைக் கொடியசெய்கைகளைச்செய்யத் தெய்வமும்பொறுக்குமா இதுஅனியாய மனியாயமென் றாரவாரித்தனர். வீட்டுமர் முதலானோர் மனத்திற்கோபங்கொண்டு இதென்னவிபரீதகாலமென்று பேசிக்கொண்டிருக்கையில், பாஞ்சாலியின் வஸ்திரம் விலகக் கோவெனக்கதறியழுதுகொண்டு துச்சாதனனை நோக்கி, அடாபாவீ என்னை இழுக்கவேண்டாம்,

யான் பூப்பா யிருக்கின்றமையால் ஒற்றை ஆடை தரித்திருக்கின்றேன் அநியாயஞ்செய்யவேண்டாம் இக்கொடுமை உங்கள் ஈரேழுதலைமுறைக்கும் விடாமற் பற்றும், அடா துச்சாதனா 'கெடுமதி கண்ணுக்குத்தோற்ரு' தென்பதையறிந்தாயில்லை, தருமத்தையே செல்வமாகக்கொண்ட என்னுயகனை அலட்சியஞ்செய்து என்னை யிப்படி அலங்கோலஞ்செய்வது நன்மையேயல்ல, ஆ! பாவீ, சிறிதேனும் தாயையொத்தவளென்னும்யோக்கியதையைப்பாராட்டாமல் இக்கொடுமைசெய்யத்துணிந்தனையே என்று சொல்லும்போதே, நீ பூப்பாயிருந்தாலென்ன ஒற்றை யாடையோ டிருந்தால்தா னென்ன 'செங்கோலுக்குமுன் சங்கிதஞ் செல்லுமா' நாங்க ளரசர்களாயிருக்க எங்களைத் தடுப்பவரெவர், இப்போது கண்ணனையும், வியாசபகவானையும் வீமார்ச்சுனர்களையுங் கூவி உன்னைக் காப்பாற்றச்சொல்லுபார்ப்போம், தாசியாகிய நீ துரியோதனன் இஷ்டப்படி நடந்துகொள்ளவேண்டும், உன்னை நிர்வாணமாய் நிறுத்திப்பார்க்க அவருக்கு மனமிருந்தால் நீயும்அப்படியே நிற்கவேண்டுமென்று சகலவகையாலும் பூசிக்கத்தக்க இராஜபத்தினியை மேலு மேலு மிழுக்க, ஒருபுறம் ஆடை அவிழ்ந்தும் கூந்தலொருபுறம் சிக்குண்டு மிருப்பதைத் தன்கைகளா லணைத்துக்கொண்டு, காத்தாரியாகிய மாமியைக்கூவி யழைத்தும் வாராமையால் அங்குள்ள சபையாரை நோக்கி இச்சபையி லிருக்கிறவர்கள் வேதசாத்திரமறிந்தவர்களும்பெரியோர்களுமா யிருந்தும், இப்படிப்பட்டவர்முன்பாக இந்தப்பாதகன் என்னை அநியாயஞ்செய்கிருனே, இவ்வநியாயத்தை யொருவருந் தடுப்பவரில்லையோ, இது வீண்போகுமா! இவர்களுக்கு இந்திரன் சகாயமாய்வரினும், பாண்டவர்கடத்தினின்றும் இவன் மீளப்படவே மாட்டான். அவர்கள் ஆயுதத்திற் கிரையாகவேபோவான், இதற்கையமே யில்லை. இப்போது அவர்கள் தருமமென்னுங் கயிற்றினுற் கட்டுண்டிருக்கின்றனர். தருமத்தின் சூக்ஷியை அவர்களறிந்தாரென்பதை இச்சபையிலுள்ள பெரியோர்களறிந்த விஷயமே, இவர்கள் சும்மாயிருந்தாலும் தெய்வமுஞ் சும்மாயிருக்காது. இவ்வகைக் கஷ்டத்தை நானடைவதற்கு ஊழின் சம்பந்தமேயன்றி மற்றவரை நோவதிற்பயனில்லை. ஐயோ, பரதகுலத்தில் நிலைபெற்றிருந்த சத்தியம் இன்றுதான் நாசமடைந்தது. இராசதருமமும் பாழாயிற்று. குலதருமமென்னுங் கடலுங் குன்றினதால் மகானுபாவராகிய வீட்மேருந்துரோணரும் உண்மையைபெடுந் துரையாமலிருக்கின்ருர்களெனவே, வீட்மர் பாஞ்சாலியை நோக்கி சௌபாக்கியவதியாகிய பெண்ணமுதே, நீ இப்போது கேட்டகேள்விக்கு ஒன்றும்பேசக்கூடாதவர்களாயிருக்கின்ரேம். ஏனெனில் மாதானவள் கணவனுக்கு சுதந்தரமாகையால், அவனைச் சயிக்கப்பட்டபோதே அவளும் சயிக்கப்பட்டவள்தான், இதிலோர் சூக்ஷியிருக்கின்றது அஃதெனக்குத் தெரியவேயில்லை, அதனுலொன்றும் பேசாமலிருக்கின்றேனென்ருர். அதற்குப் பாஞ்சாலி சொல்வாளாயினுள்.

சபையோர்களே! தருமராசர் தானே வலியவந்து சூதாடவில்லை, அவர்கள் செல்வத்தைக்கவர வஞ்சகமாக வலியவரவழைத்து சூதிற்சமர்த்தரல்லாதவரைச் சூதிலேயே பழகித்தேர்ந்தவர்கள் தோற்கச்செய்தார்கள். இப்படி

எத்தன்மையாலும் பொருத்தமில்லாமலிருக்க அவருடனே இவர்கள் சூதாடு வது நியாயமாமா? இராச்சியத்தையும் பொருள்களேயுங் கவர்ந்ததுபோதாமல் என்னேயுமிவ்வகையனியாயமுஞ்செய்கின்ருர்களே,இதுதருமமாதலெங்ஙனம் தருமமறிந்தவரிங்கொருவருமில்லேயா? இச்சபையில்நியாயவநியாயந்தோன்ரு விட்டால் மற்றெங்கேதான்தோன்றும்,இவர்கள்இல்வாழ்க்கையிலிருந்துஎல்லா நன்மைதீமைகளேயு மறிந்தவர்களாயிருந்தால்என்கேள்விக்குச்சரியான விடை கொடுக்கவேண்டும்,இல்லாவிட்டால் இங்குள்ளோர்க்குப்பெரும்பாவம் சித்திக் கும் ஏனெனின், எந்தச்சபையில் அறிஞரில்லேயோ அது சபையேயல்ல,எவர் உண்மையை எடுத்துரையார்களோ அவர்களறிஞரல்லர். எதிற் சத்தியமில் லேயோ அதுதருமமன்று. ஆதலால் இக்கேள்விக்குவிடைகொடுக்காவிட்டால் இதுசபையுமல்ல,இவர்கள் நடத்துவதுசத்தியமுமல்ல என்றுசொல்லிக்கொண் டேகடைக்கண்ணினுல் கணவர்களேநோக்கினுள். இதற்குள் கொடியவனுகிய துச்சாதனன்அவளேத் துர்ப்பாஷையாய் வைது இழுத்தலு மடித்தலுமான கொடுமைகளேச்செய்தான். இதைக்கண்ட வீமன் சகிக்கக்கூடாத துக்கத்தை யடைந்து சினங்கொண்டு தமையனேப்பார்த்து நீர் எல்லா நியாயமுந் தெரிந் தவராயிருந்தும் மூடனுஞ்செய்யாத காரியத்தைச்செய்தீர். உலகில் சூதாடு வோர்பலபேருண்டு. அவர்கள் தம்பொருள்களேவைத்தாடுவார்களேயல்லாமல் தம் பொதுமாதையும் பந்தயமாகவைத் தாடார்கள். அவர்களுக்குத் தாசிக ளிடத்திலிருக்கிற அபிமானமும் நமக்குப் பாணிக்கிரஹணஞ் செய்துகொ ண்ட பத்தினியிடத்தி லில்லாமற் போயிற்றே, மனேவியைப் பந்தயம்வைத் தாடினவரைப் பார்த்ததுமில்லே கேட்டதுமில்லே.நமக்கெதிரில் அவர்கள் செய் யும் அவமானத்தைப் பார்த்துக்கொண்டிருக்குந் துக்கத்திலும் வேறுகொடிய துக்கமுண்டோ? நீர் மகாராசன் எந்தச்சொத்தை யெப்படிசெய்தாலும் தடுப் பவ ரொருவருமேயில்லே. வேள்விக்குரிய நல்லபசுவைக் கோவதைசெய்யுஞ் சண்டாளனிடத்தில் ஒப்பிவைத்தது மிகவும் அதர்மமே. பாஞ்சாலியைக் கண்ணெடுத்துப்பார்த்த அப்பொழுதே அப்பாதகனே என் கதாயுதத்தினுல் நிர்மூலப்படுத்துவேன், என்னேயும் பராதீனமாக்கி என்கோபத்தையும் வல்ல மையையும் பாழாக்கினீர். என்னுற் சகிக்கமுடியவில்லேயே, இப்போதென்ன செய்யவேண்டுமென்ருல், நீர் எந்தக்கையினுல்பாய்ச்சிகையை யுருட்டினீரோ அக்கையைத் தீயினுற் கொளுத்திச் சாம்பராக்கவேண்டும். அடா சகதேவா நெருப்புக்கொண்டுவாவென்றுதிரஸ்காரமாய்ச்சொன்னபோது,அருச்சுனனும் அண்ணு! நீ சிறிதேனும் எண்ணுமல் நமக்குமூத்தவராகிய தருமராசனை ஏன் இப்படிக் கொடுமையாய்ப் பேசுகின்றனே, ஆனுலுன்மீதிற்குற்றமில்லே நம்பகை வர்செய்யுங் கொடுமையால் நேரிட்டன, அவர்களிஷ்டம் நிறைவேறும்போற் காணுகின்றது,ஆயினும் நீ பதறிச் சத்துருக்களெண்ணத்துக்கிடங்கொடாதை, மகானுபாவராகிய தமையனுரை நீ திரஸ்காரஞ்செய்யாதை,இவர் தருமத்தை யுஞ் சத்தியத்தையும் பெரிதாயெண்ணிப் பதருமலிருக்கின்றனர். 'பதருத காரியஞ் சிதருது'; இதனுல் இவர்க்கு நல்லகீர்த்தி யுண்டாகப்போகின்றது, நாமும் இவர்வழிக் கொத்திருத்தல்வேண்டும் என்ருன். அதுகேட் டமர்ந்திருந் தான். இதுநிற்க;

திருதராட்டிரன் புத்திரரில் விகர்ணனென்பவன்மனேவியாகுலமடைந்து அச்சபையிலுள்ள வீட்டுமர்முதலாயினேரைநோக்கி நீங்கள்பாஞ்சாலிகேட்ட வினவிற்கு ஏன் ஊமரைப்போல் விடைபகராம லிருக்கின்றீர்கள். தாட்சண்யத்தினல் நீங்கள் விடைகொடாதிருந்தால் நானு முங்களைப்போலிருப்பது நியாயமல்ல, உடனே நரகஞ்சித்திக்குமன்றே, வீட்டுமரும், திரிதராட்டிரரும், புத்தியிற் சிறந்தவராகிய விதுரரும், மற்ற கவுரவரும், ஒன்றும்பேசாமலிருப்பதென்ன? பிராமணேத்தமரும் ஆசாரியருமாகிய துரோணரும் கிருபரும் எந்தத் தாட்சண்ணியத்தினல் வாயை மூடிக்கொண் டிருக்கின்றரோ தெரியவேயில்லை. அவர்களல்லாமலும், பல தேசத்தரசர்களு மேன் சும்மாயிருக்கின்றனர். இனியாயினும் அச்சம் அபிமானம் குரோதம் முதலியவைகளை யொழித்துத் தத்தம் மனத்திலுள்ள கருத்தை வெளியிடுங்கோளென்று பலமுறைசொல்லியும் யாருமுரையாடாமல் ஊமரைப்போலிருப்பதைக்கண்டு, மிக்க கோபங்கொண்டு கையோடுகையை மோதியறைந்து சபையை நோக்கி மறுபடியுங் கூறுவானுயினன்.

சபையோர்களே, நியாய மநியாய மெவர்பாலுள்ளனவோ அதை யெடுத்துக்கூறும்படி பலமுறைகேட்டும் நீங்கள் உன்மத்தரைப்போ லிருக்கையால் எனக்குத் தெரிந்த விவகாரத்தை எடுத்துக்கூறுகின்றேன். சற்றுச்செவி கொடுத்துக் கேட்கவேண்டும். அதாவது, உலகத்தில் அரசருக்கு நான்கு பெரியகுற்றங்க ளுள்ளன. அவை ஓயாமற் கட்குடித்தல், வேட்டையாடல், சூதாடல், மங்கையரைப் புணர்தல் இவைகளி லொன்றுக் குடன்பட்டவன் தருமத்தைக் கைவிழந்து கொடுமையையேவிடாது கைக்கொள்வான். "அரசனெவ்வழி யவ்வழிகுடிகள்" என்பதேபோல நாட்டாரும் அச்சார்பாகவே நடப்பர். இச்சகுனியோ சூதாடுந்தொழிலில் மிகத்தேர்ச்சியுடைய பண்டிதன். இதனினும் வேறுதொழில் அறியானுதலால் இப்படிப்பட்டவன், தருமமென்பதைக் கேட்டுமறியாதவன் பாண்டவரை வலியச்சூதாட வழைத்து அவர்கள் செல்வங்களையெல்லாங் கைக்கொண்டு அவர்களையுஞ் சயித்ததாகப் பிரபலப்படுத்திவிட்டான். அம்மட்டே நிற்காமல் பாஞ்சாலியையும் ஓர்பந்தயமாய்வைத்தாடத் தருமராசருக்குக்கற்பித்து அவளையும் சயித்ததாகப்பாவித்தான். பாஞ்சாலியைப் பந்தயமாய்வைத்தாட அவருக்கு நியாயமேயில்லை. அவளைச்சயித்தோ மென்பது சத்தியமும்மல்ல, தருமமுமல்ல வென்றுகூறுகின்றான். சபையார் விகர்ணன் சொல்லியதே உண்மையானதென்று புகழ்ந்து சகுனியை யிகழ்ந்தார்கள். இவைகளைக்கேட்டிருந்த கர்ணன் சினங்கொண்டு, விகர்ணனை நோக்கி அடா விகர்ண! உனக்கு எப்போது மிவ்வெறி பிடித்தகுணமுள்ள துசகசந்தானே,இன்றைக்குப்புதிதல்லவே, தேகத்திலுள்ள நோய் தன் ஆன்மாவுக்குத் துன்பமுண்டாக்குவதுபோல்,நீ உடன்பிறந்த துரியோதனனுக்குக் கேடுநினைக்கின்றுய்,உனதுகெட்டசுபாவத்தையே கையாடிவருகின்றனை; வீட்டுமர், கிருபர், துரோணர், அசுவத்தாமா,பாகலீகன்,சோமதத்தன்,பூரி, பூரிசிரவன்,விதுரர்,திரிதராட்டிரர்முதலிய தருமவான்களிருக்க, அவர்களறியாத தருமத்தினும் நீதியினும் உன்நீதி விசேஷித்ததா? அவர்

களுக்கெல்லாமில்லாத நற்செய்கை யுனக்குத்தான் நிறைந்துள்ளதோ? அவர்களையன்றோ பாஞ்சாலி வினவினள். அதற்கவர்களே விடைகொடாமலிருக்க, நீயேன்கேட்கவந்தாய் அவளெம்மால் சயிக்கப்பட்டவளென்றுதெரிந்துகொண்டமையால்தான் அவர்கள் உரையாடாம லிருக்கின்றனர். ஈதறியாமற்பித்தங்கொண்டவனைப்போல் பிதற்றவேண்டாம், நீயோ சிறுவன் "இளங்கன்றுபயமறியா" தென்பதுபோல், இப்படிப்பட்டபெரியோர்களிருக்கு மிச்சபையிலே, அச்சமின்றி திடீரென யோசியாமல் நியாயத்தை அநியாயமென்றனை, மேலும் ஒற்றையாடையோடிருப்பவளைச் சபையிலிழுத்து அவமானஞ்செய்வதனியாயமென்றாய், அது அனியாயமாகாது எப்படியெனின்? கடவுள்பெண்ணுக்குக்கணவனே தெய்வமென்றும், ஒருபெண்ணுக் கொருபுருடனையே நியமித்திருப்பதுமன்றி மற்றொருபுருடனை மனத்திலிச்சிப்பளேல் அவள் கற்புகுலையுமென்றால், இவள் நினைப்பதல்லாமல். ஐவரையும் அஞ்சாமற்கூடி மிவளைச் சபையில் வரவழைத்தல் குற்றமன்று. பொதுமாதுக்குச் சமானமான இவள் ஒருவஸ்திரந்தரித்திருந்தாலுஞ்சரி, அல்லாமல் இவள் நிருவாணமாய்நின்றாலுஞ்சரியேயென்று துச்சாதனனை நோக்கி அப்பா துச்சாதனா இவ்விகர்ணன் என்றைக்குமிப்படிப் பிதற்றி பிரயோசனமில்லாமற்போகின்றவனே யல்லாமல் இவன் சொன்னசொல்லைக் கேட்பாரில்லை, நீபாண்டவர்களும், பாஞ்சாலியுமுடுத்திக்கொண்டிருக்கும் வஸ்திரத்தையும் பறியென்றான், அவனப்படிச்சொல்லி வாய்மூடாமுன்னம், தாங்களணிந்திருந்த உத்தரீயமுதல் உடுத்தியிருந்த ஆடையையுமீந்தார்கள். அதைப்பெற்றுக்கொண்டு அருகிலிருந்த பாஞ்சாலியின் வஸ்திரத்தை யஞ்சாமலிழுக்கத்துணிந்தபோது, கண்களினின்றும்புனல்சோர, ஓர்புர மளகஞ்சோர, மற்றோர்புறந் துகில்சோர, கைசோர, மெய்சோர மற்றொன்றுநினையாமல் அம்மகாபதிவிரதையாகிய திரௌபதை, தாமரைபோன்ற தன்னிருகைகளையுஞ் சிரத்தின்மேற்கூப்பி, திருமகள் கணவனாகிய கண்ணபிரானையும் மனத்திலுன்னி, ஆபத்ரக்ஷகா கோவிந்தா நாராயணா செந்தாமரைக்கண்ணா முகில்வண்ணா புவனரக்ஷகா அன்று முதலைவாயிற்பட்டயானை ஆதிமூலமேயென்றழ முன்வந் திடர்தொலைத்து நீலமேகம்போல் நின்றோனே வேலைநடுவிற்றுயிலும் வித்தகனே யென் றிவ்வாறாக, அருமறைகளெடுத்துக்கூறும் நாமமாயிரமு முரைத்து இக்காலத்தில் உன்னையல்லால் புகலிடம் வேறுகாணேன் கருணைவள்ளலே என்றிவ்வாறாக மனோவாக்குக் காயங்களொருமித்துக் கூவியழைக்கும் ஓசை, திருமலர்ச்செஞ்சிறடியோன் செவியிற்புகுதலும், அடியார்க்கெளியானாகிய முகில்வண்ணன், மெய்சோர்ந்து மனநடுங்கிக்கொண்டிருக்கும் பாஞ்சாலியின் மனத்திடந்தங்கி, தமது கருணையென்னுங் கடலி னலைபோன்ற துகிலை அவளிடையில் நிருமித்தனன். இச்சூழ்ச்சிதெரிந்த பாஞ்சாலி தன்கைகளாற் பற்றியிருந்த ஆடையைத் திடீரெனவிட்டுப் பாற்கடலிற் கண்வளரும் பெம்மான் இப்போததன்னைத்துயரினின்று மீள்வித்தனனென்று தன்னாவி லமிழ்தூற உடல்புளகித் துள்ளமுருகித் தோத்திரஞ் செய்துநின்றனள். இதைக்கண்டதுச்சாதனன் இனி எளிதில் இவள்துகிலையுரியலாமென்னுஞ்செருக்குற்று வளைத்திழுக்க, அத்துகிலினுள்மற்றோர்துகிலிருக்

கக்கண்டு அதையுமுரிய மற்ருென்று புலப்பட, அதையு மவிழ்க்க இப்படி இழுக்குந்தோறும் பலவன்னமான ஆடைகள்இடையிற் றெடுத்திருக்கக்கண்டு, கோடியோனுகிய துச்சாதனன் ஓய்வில்லாமல் வளந்த ஆடைகளையுரிந்து மலை போற்குவித்துக் கைசோர்ந்துபெருமூச்செறிந்து மனம்வெட்கி முகங்கன்றி சித்திரம்போல நின்றனன். அச்சபையிலிருந்த யாவரும், பாஞ்சாலிகற்புக்கு மிகவும் வியந்து துரியோதனனைப் பலவாறு யிகழ்ந்தார்கள். இது கிடக்க ;

இவ்வாருகத் துரியோதனுதியர் செய்த அக்கிரமத்தைக் கண்டு மிக்க கோபங்கொண்ட வீமசேனன் உதடுதுடிக்க பற்களைக்கடித்து அண்டங்கள திரும்படி கொக்கரித்து அங்குள்ள சபையோர்களை நோக்கிச் சொல்வானுயி னன். வண்டாருங்குழலையுடைய பாஞ்சாலியை இப்படிப்பட்ட அனியாயஞ் செய்த இக்கொடியவ னுடலைப்பிளந்து அதிலுண்டாகும் உதிரத்தை யள்ளி யுண்டு என்தாக நீக்கிக்கொள்வதல்லாமல், என் கரத்தால் புனலுண்ணேன். ஒருக்கால் உண்ணவேண்டியிருந்தால், என்கையிலுள்ள இத்தண்டால் நீரை மோதியடித்து அதனுல் சிதறும் நீரையருந்தி உய்வேன், இச்சொற் றவறுவ னேல் இக்குலத்துதித்த மஹாபுருடரடைந்த புண்ணியலோகத்தை யடை யாமல், நரகத்தில் வீழ்வது சத்தியமென்ருன். இதைக்கேட்ட சபையோர்க ளெல்லாம் சபாசு நன்ருகச்சொல்லினன், சொல்லியகாரியத்தைப் பழுதாகா மல் முடிக்கும் புருஷன்தான், இதற்கையமே யில்லையெனப் புகழ்ந்து கொண் டாடினுர்கள்.

விதுரரானவர் சபையோரை அமைதல்செய்து ஒருவசனஞ் சொல்வா ராயினர். நமக்கெல்லாம் கட்டளையிடத்தக்கவளாகிய இப்பாஞ்சாலி இச்சபை யில் சிலபுத்திமான்களும் பெரியோர்களு மிருக்கின்றனர்களென்றும்,பட்சபாத மின்றி நடுவுநிலை சொல்வார்களென் றெண்ணி ஒரு கேள்விகேட்டாள். அக் கேள்வி சொலிக்குந் தன்மையையுடைய அக்கினியென நினைக்கத்தக்கது. அது உங்களைத்தீண்டிநிற்க, உண்மையாகிய நீரைக்கொண்டு அவியாமற்போ வீர்களாயின்,நம்மைச்சமூலமாய்த் தும்சமாக்கிவிடும் ‘கைப்புண்ணிற்குக் கண் ணுடிவேண்டுமோ’ என்பதுபோல, எல்லாங் கண்ணிஞற் கண்டதுதானே இதைக்குலத்திற் பிறந்தோருங் கூறுவராதலால் நீங்கள் அவரவர்களுக்குத் தெரிந்த மாத்திரம் உண்மையை யெடுத்துரைக்காமல் உன்மத்தரைப்போ லிருந்தால் உம்மை அறிவிற்சிறந்த பெரியோரென் றெப்படிச்சொல்லலாம். மனுசொல்லியவாறு தருமமறிந்த பெரியோர்களை ஒருவன் தருமசந்தேகங் கேட்க அதற்கவர்கள் தக்க விடைதராதிருந்தால், பொய்சொல்லினவனுக் குண்டாகும் பாவத்திற் பாதிபடைவார்கள். உண்மையைச் சொல்லாமற் போவாராகில் முழுப்பாவத்தையுங் கைக்கொள்வர் என்பதை யறிந்த விகர் ணன் தன்புத்தியில் தோன்றிபடி உண்மையைக்கூறினன். அவ்வாறே நீங்க ளும் மவரவர்க்குத் தோற்றிபடி தருமத்தையுஞ் சத்தியத்தையும் பட்சபாத மின்றி சொல்லவேண்டும் ; இவ்விஷயமாய் முற்காலத்தில், பிரகலாதனன் புத் திரர் விரோசனுக்குஞ் சுதனுவாவென்பவனுக்கும் நடந்த சம்வாதத்தைப் பற்றிய சரித்திரமொன்றுண்டென்று பெரியோர்சொல்லக் கேட்டிருக்கின்றே னென்று சொல்லலாயினர்.

உபகதை.

விரோசனனுக்கும் சுதனுவா என்னும் பிராமணனுக்கும், ஒருபெண் நிமித்தம் நீ பெரியோனா நான்பெரியோனா வென்றொருவர்க் கொருவர் விவாத முண்டாய் நமக்குள் யார்பெரியவனோ அவனுக்கு மற்றவன் தன்னுயிரைக்கொடுத்துவிட வேண்டுவதென்று சபதஞ்செய்துகொண்டு இதைப்பற்றி யாரை வினவுவோமென்றுதற்கு சுதனுவாவென்பான் பிரகலாதனைக் கேட்போம், அவர் சத்தியசந்தர் அவர் சொல்வதே நம்மிருவருக்கு மொப்பென்றான். விரோசனனதற்கு சம்மதித்து இருவரும் பிரகலாதரிடத்திற்குச் சென்று நமஸ்கரித்து எங்களிருவரில் பெரியவனைத்தெரிந்து சொல்லவேண்டுமென்ன, அதைக்கேட்ட பிரகலாதர் பயமடைந்து,சுதனுவாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர். சுதனுவா பிரகலாதரோ, நீரிப்போது பக்ஷபாதஞ் சொன்னாலும் அல்லது ஒன்றுஞ்சொல்லாமல் மௌனமாயிருந்தாலும் உமது சிரம் ஆயிரஞ் சுக்கலாய் வெடிக்குமென்றான். அவ ரிவ்வார்த்தையைக் கேட்டு பெருங்காற்றி லலைப்புண்ணும் அரசிலைபோல் தேக நடுக்குற்று இக் கொடுமைக்கென்செய்வோ மென்றேங்கி, அங்குள்ள காசிப முனிவரிடஞ் சென்று சுவாமீ, அடியேற்குள்ள ஓர் சந்தேகந் தெளிதற்பொருட்டாய்த் தங்களை நாடிவந்தேன். அதாவது, ஒருவன் விரும்பிக் கேட்குங் கேள்விக்கு விடை பகராமலும், மௌனமுற்று மிருப்பானேல் அவனுக்கென்ன தண்டனை கிடைக்கும், அதை விளங்கச் சொல்ல வேண்டு மென்று பிரார்த்திக்க ஞானவானாகிய காசிபர் பிரகலாதனை நோக்கி நியாய சபையிலாவது மற்றெவ்விடத்திலாவது தருமத்தின்பாகுபாட்டைத் தெரிவிக்கக்கேட்டவருக்கு எவன் தருமவிதியைக் கூறாமலிருக்கின்றனனோ அவன் வருணபாசத்தால் தன்னுக்கையைப் பிணிக்கப்படுவன். பயம் பட்சபாதமென்னு மிவ்வித காரணத்தால் உண்மையை உள்ளவாறு கூறாமலிருந்தால் யமபாசத்தாற் கட்டுண்டேதீரவேண்டும்,ஆனால் அவைகளை நிவர்த்தித்துக்கொள்ள வேண்டுவோர்க்கு நூலோர் ஒருவிதி யேற்படுத்தியிருக்கின்றனர் அஃதென்னெனின், கோகரண சிதிலமென் றொருவிரதமுண்டு அதை யொருவருட மனுட்டித்தால் அப்பாசங்களிலொன்று நீங்கும்; அவ்விதமாகஆயிரவருட மனுட்டிக்கவேண்டும். உண்மையைக் கூறாமற்போனவிதற்கிரட்டிப்பான துன்பத்தி லலைப்புண்டு கிடப்பர்; உண்மையை விரும்பி அதன்கருத்தைக் கேட்கும்போது தக்கவாறு கூறாமற்போனால், அப்பாவத்திற்பாதி அரசனையும், காற்பங்கு சபையாரையும், மற்ற காற்பங்கு செய்தவனையும்பற்றும். அந்நியாயா நியாயங்களைச் சீர்தூக்கி எவ்வெவர்க் கென்னென்ன தண்டனைவிதிக்க வேண்டுமோ அதை நடுவுநிலைமையாகச் செய்யின் சபையார்க்கும் அரசருக்கும் பாவமில்லை, என்றிவ்வாறாக காசிபமுனிவர் சொல்லக் கேட்ட பிரகலாதர், விரோசனனுஞ் சுதனுவாவுமிருக்கு மிடத்திற்கு வந்து தமது புதல்வனாகிய விரோசனனைநோக்கி, மகனே உன்னைப்பார்க்கிலும் சுதனுவாவே உயர்ந்தவன், என்னைப்பார்க்கிலும் அவன் பிதாவுயர்ந்தவன், உன் னன்னையைப்பார்க்கிலும் அவனன்னை யுயர்ந்தவள் இது உண்மை. ஆகையா

னுன்னுடையபிராணன் சுதனுவாவினுடையதேளன்றனர். இப்படிப்புத்திரனே ன்னும் பட்சபாதமின்றிச் சொன்னதைக்கேட்ட சுதனுவா மிகவுங் களிகூர்ந் து,பிரகலாதரே,நீர்பட்சபாதமின்றி உண்மையையெடுத்துக் கூறினமையால், உமது புத்திரனைக் கொடுத்தேனென்று சொல்லிப்போனான். ஆதலால் சபை யோரே பாஞ்சாலி வினாவிற்குத் தருமத்தை நோக்கி தக்கவிடை சொல்ல வேண்டுமென்று விதுரர் கூறியும் மௌனமுற்றிருந்தனர்கள். இது நிற்க;

கர்ணன் துச்சாதனனைநோக்கி இத்தாசியாகியபாஞ்சாலியை மனைக்கழை த்துப்போவென்றான். அவனுமவளைப் பிடித்திழுத்துத் துன்பப்படுத்துகையில், பாஞ்சாலி யங்குள்ள பெரியோர்க்கு வந்தனஞ்செய்து கேளுங் கவுரவகுலத் தரசரே, குருக்களே முன்சுயம்வர மண்டபத்தில் என்னை யாவரும் பார்த்திரு ப்பார்களேயல்லது மற்றகாலத்திற் சூரியனும், வாயுவுங் கண்டறியாதவளாகிய என்னை இச்சேவகர் முதல் யாவருஞ் சாதாரணமாய்ப் பார்க்க நேரிட்டது இதுவும் வினைப்பயனே, அந்தப்புரத்திருந்த என்னை சபையிலிழுத்தபின், அரசருக்குத் தருமமென்பதெங்குளது. இராசசூயஞ்செய்து சாம்பராச்சிய பட்டாபிஷேகம் பெற்ற மகாராஜன் பத்தினியாகிய என்னை ராதையென்னும் பெயருடைய தேர்ப்பாகச் சாதிப்பெண்ணின் வளர்ப்புமகனாகிய இக்கர்ணன் வெள்ளாட்டி யென்றென்னை யுதாசிக்கின்றானே, யான் வெள்ளாட்டிதானோ! இதை யேனுந்தெரியச் சொல்வீரோ லதைப்போல் நடந்து கொள்வேனென் பதைக்கேட்ட வீஷ்மர் பெண்ணருங்கலமே, நீ முன்வினவியதற் கிது தரும சூக்ஷ்மமென்றுரைத்தேனே இப்போதெம்மைக் கேட்ட கேள்வியை யுன்கண வனாகிய தருமராசனைக் கேட்பையாகில் அவனே சொல்லுவானென்றார். துரி யோதனன் நகைத்து உன்கணவர்கள் உன்னை எனக்கடிமை யல்லவென்பா ராகில் பணிசெய்யாதிரு,அடிமைதா னென்பரேல் பணிசெயல்வேண்டும்; இவ் விஷயத்தைச் சபையார் விரித்துரைப்பார்களானாற் பாண்டவர்கட்கே தீங்கு நேரிடுமென்று மௌனமுற் றிருக்கிறார்களென்றான். வீமன், இம்மகாராச ராகிய தருமராசா எங்கள் தேகத்துக்கும் பிராணனுக்குமுரியவர், அவரைச் சயிக்கப்பட்டபோதே எங்களையுஞ் சயிக்கப்பட்டவர்களானீர்; இல்லாவிடில் திரௌபதை குழலைக் கையினாற் பரிசித்தவன் இன்னமும் தென்திசையைப் பாராதிருப்பனோவென்று கர்ச்சிக்கையில் வீஷ்மர் முதலியோர் அவன் கோப த்தைத் தவிர்த்துச் சமாதானஞ்செய்தனர்.

உலகத்திற் சுவாதீனமற்றவர்கள் மூவருண்டு; அவரியாவரோனின் அடி மைகள், மாணாக்கர், மாதர்கள். இவர்களில் அடிமையின் சொத்துக்களியா வும் யசமான னுடையதேயாகும், இங்கு பாண்டவ ரடிமையானமையால் அவர்கட்குச் சுவதந்திரியான நீயுமெங்களுக்கடிமை யென்பதிலையமே யில்லை; ஆதலால் இங்குள்ள கவுரவர்களி லுனக் காரிஷ்டமோ அவர்களைக் கூடிச் சுகித்திரு, இனி யிங்குநிற்பதிற்பயனில்லை, துரியோதனனரண்மனையிற்சென்று பணித்தொழி லேற்பாயென்று கர்ணன் கூறியதைக் கேட்ட வீமசேனன் கோபத்திபறக்கச் சினந்து, அண்ணா யுதிட்டிரரோ என்னகாரியஞ் செய்தீர், அந்

பசொல்லா மிப்படி இகழ்ச்சியாய்ப் பேசவும், நான் சும்மா பார்த்துக்கொண்டிரு க்கவு மாயிற்றே, உம்மைவைத் தாடம விருந்தா லொருதுன்பமு மில்லையே யென்று, இவ்வகையாய்த் தருமரிடஞ் சொல்லி வியசனப் பட்டதற்குப் பரி காசஞ்செய்து துச்சாதனனை நோக்கி, அங்கு ஓவியம்போ லசைவற நிற்கும் பாஞ்சாலியைக் கொண்டுவந்தென்தொடையின்மீ துட்காரச்செய் யென்றான், அதைக்கண்ட வீமன் வெகுண்டு இத்துரியோதனன் எந்தத் தொடையைக் காட்டிப் பாஞ்சாலியை யுட்காரச் சொன்னானோ அத்தொடையை யுத்தகால த்தி லென்கதையினாற் சின்னபின்னமாய்ப் பிளப்பேன்; அப்படிச் செய்யா மற் போவேனேயாகில் இக்குருகுலத்தோரடையும் புண்யலோக மடையாமல் நரகத்தில் விழக்கடவேனென்றான். அப்போது சபையோரைப் பார்த்து விது ரர் சொல்லுகின்றார், பூர்வத்திற் பலிச்சக்கரவர்த்திக்கு மகாவிஷ்ணுவின் ஆக் கினையால் வருணபாச நேரிட்டதுபோல், இவ்வீமசேனனா லுமக்கு யமபாச நேரிட்டதென்று நினையுங்கள். நீங்களெல்லோரும் பாஞ்சாலியைச் சயித்த தாய் நினைத்திருப்ப தெப்படி யிருக்கிறதென்றால், கனவிற்கண்ட பொருளை யொருபேதை தனதென்று நம்பிக் களிப்பதுபோலேயாம். எப்படி எனின் தருமபுத்திரர் முன் தம்மைத்தோற்றுப் பராதீனரானபின் பாஞ்சாலியை வைத்தாட நியாயமேயில்லாதவரா யிருக்கின்றார்; அப்படிப்பட்டவர்செய்த செய்கையைக்கொண்டு நீங்கள் அவளைச் சயித்ததாகச் சொல்வதுசத்திய மல்ல, இவையெல்லாஞ் சகுனிசெய்த மோசமென்று சொன்னதைக்கேட்ட துரியோதனன், நீர் சொல்லிபபடி வீமன் முதலிய நால்வருஞ் சொல்வாரேல் ஒப்புவேனென்றான்.

தருமபுத்திரர் எங்களுக்கு யசமான னென்பதற் கையமில்லை, அவரெங் களைப் பந்தயம்வைத்தாடியது நியாயந்தான். அவர் தம்மைத் தோற்றுப் பரா தீனரானபின் பாஞ்சாலியைவைத்தாட உரியவரா? அதை நீங்களே சொல் லுங்கோளென்று அர்ச்சுனன்கேட்டதை யுணர்ந்த கர்ணன், துச்சாதனனை நோக்கி நாம் பாண்டவரைச் சயித்தபின் அவர்களோடு வழக்கிடுவதிற் பய னென்ன? இவளை யிழுத்துக்கொண்டுபோய் அரண்மனையிற் பணிசெய்யச் சொல் என்றான். அவனுமப்படியே அஞ்சாம லிழுக்க ஐயகோ! என்செய்வே னென்றழுதாள், இக்கொடுமையைக்கண்ட விதுரர் துக்கசாகரத்தில் மூழ்கின வராய், கற்பிலருந்ததியே! நானென்ன செய்வேன், யான் சொன்னவார்த்தை யைத் துரியோதனன் திரிதராட்டிரர் முதலியோர் கேட்கவில்லை. அவர்கள் செவிடன் காதின் சங்கொலிபோ லிருக்கின்றார்களே, நீ கேட்டகேள்விக்கும் உன் கணவர்கள் ஒன்றுஞ் சொல்லவில்லையே, நீ சற்றுத் துக்கத்தைப்பொறு த்திரு கடவுளுன்மேற் கருணைகூர்வர் அனியாயஞ் செய்தவர்களைத் தண் டிப்பாரென்று தேறுதல் செய்து, அப்பா துரியோதனா! அநியாயத்திற் குடன்படாதை, நல்வழியில்செல், "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்பதை யோசித்து நடவென்று திருதராட்டிரனை நோக்கி, அரசே! நீர் உமது புத்திரர்களுடன் சார்பாக கொடுமைகளைச் செய்வதனால் பின்பு துன்பநேரிடு மாதலால் நற்புத்திகொண் டும் புத்திரர்க்குத்தெரியச் சொ

ல்லவேண்டுமென்று கூறியதைக்கேட்டும் அந்தகன் ஊமைபோ லிருந்தான். துரியோதனன் மறுபடியுந் தன் தொடையைக் காண்பித்து அதிலவளையுட்கா ரும்படி யழைத்தான்,கற்புக்கோர் வித்தாயுள்ள பாஞ்சாலியை இவ்வகையாய் அடிக்கடி கொடிய சொற்களைக்கூறும் துரியோதனனை நோக்கி அடாமகாபா தகா, நீ யெந்தத் தொடையைக்காட்டி என்னை யுட்காரச் சொன்னாயோ அந் தத் தொடையைப் பல கழுக்கள்கொத்த அதனால் வருத்தமுற்று சாகக்கட வாய் என்று சபையோர் நடுக்குறும்படிச் சாபமிட்டுப் பின்னுஞ் சொல் வாள், பலவரசர்கள் நிறைந்த இச்சபையி லென்னைக்கொண்டுவந்து தகாத கொடுஞ் சொற்களைக்கூறி மனநோகச் செய்தவர்களையும் என்னுடையைப் பற்றுக் கூந்தலைப்பிடித்திழுத் தலங்கோலஞ் செய்தவர்களையும், யுத்தஞ் செய்யும் சமர்க்களத்தில் புலால் நாற்றத்தையுடைய வெவ்விய இரத்தமொழுக இவர்கள் சிரத்தைத் துணித்து வெற்றிமுரசறையும்போது இக்குழலைமுடிப்பே னென்று கொடுஞ்சபதஞ்செய்து நின்றாள்.

வீமன் முன்போலவே, இவ்வரசசபையில் பாஞ்சாலியைப் பழுதுரைத் தோனுடலையும் இவர்கள் துணைவரையும் எனது படையாகிய மேழியால் செந்நீர் சொரியக் கொன்று இத் துரியோதனன் தலையை என் காலா லுதைத்துத் தள்ளுவேன். படுபாவியாகிய துச்சாதனன் மார்பைப் பிளந்து அவ்வுடலிலொழுகும் உதிரத்தைக் குடிப்பேனென்று கூவியோய்ந்தான்.

அர்ச்சுனன் கெம்பீரமாயோர்வார்த்தைசொல்கின்றான்,—அண்ணா வீம சேனா இவர்களில் ஒருவருந் தப்பிப் பிழைக்கமாட்டார்கள். மேலும் உமது கோபத்துக்கு நேர்பட்டபோதே நசித்தவர்களென்றே நினைக்கவேண்டும், இவர்கள் யுத்தத்தின் பெருமையை யறிந்தவர்களே யல்ல, நீர் பிரதிக்கினை செய்ததைக் கேட்டிருந்தும் அஞ்சாம லிருக்கின்றார்கள்,இவ்வகங்காரமுடைய கர்ணனையும் அவனைச் சார்ந்தவர்களையும் நான் துணிப்பேன், சூரிய சந்திரர் நிலைமை மாறினாலும் யான் சொல்லியசபதம் வீண்போகாதென்று கர்ச்சித்து நின்றான்.

சகதேவன் சொல்கின்றான்,—தாசிகள் தங்கண்களால் வெருட்டிப்பணம் பறிப்பதுபோல் இச்சகுனி சூதாட்டத்தினால் மயக்கிப் பறிப்பவன், இவன் திரு டருக்குச் சமானமானவன் பாச்சிகையைக் கையிலெடுத்துக் கர்ச்சிக்கத்தெரி யுமேயல்லது, அம்பென்றால் வம்பென் றோடுவேன்,இப்படிப்பட்ட வஞ்சகனைச் சமரிலே,கூரிய அம்புகளாற்றாக்கி நரகக்குழியிற் போடுவேன், அப்படிச் செய் யாமற்போனால் வீரசொர்க்கத்தை யடையாமற் போவேனென்று பிரதிக்கினை செய்தான்.

நகுலன் சொல்கின்றான்,—பாஞ்லியை யுதாசித்த துரியோதனனுடைய தம்பியர்களையும் இச் சூதாடும் வஞ்சகன் புத்திரனாகிய உலூகனையுஞ் சங்கரிப் பேன், அப்படிச் செய்யாவிட்டால் என்னண்ணன்மா ரடையுங்கதியை யடை யாமற் போகேனென்றான்.

பாஞ்சாலியு மிவர்கள் நாசமடைவார்க ளென்று கூறினாள். ஆகாயத்தி னின்றும் புஷ்பங்கள் வருஷித்தன, யாவரு மாச்சரியப்பட்டுப் பாஞ்சாலி யைப் புகழ்ந்து துரியோதனனை நிந்தித்தார்கள். அர்ச்சுனனுக்குக் கோபந் தணியாமல் பிரளயகால ருத்திரனைப்போல யாவரையும் சங்கரிப்பதாகக் கண் களில் நெருப்புப்பொறிபறக்க வில்லையுந் தமையன் முகத்தையும் பார்த்துக்கொ ண்டு நிற்கையில், சபையிலுள்ளவர் மிக்க நடுக்கங்கொண்டு தருமராசா என்ன உத்திரவுசெய்துவிடுவரோ தெரியவில்லையே யென்றேங்கி யிருக்கின்றபோது, தருமர் சொல்கின்றார் குழந்தாய், அர்ச்சுனா உன்போலொத்தவர் இப்படிப் பதறமாட்டார்கள், நீயேன் கீர்த்தியை வீணாக்குகின்றனை, எல்லாந் தெரிந்த நீ பாலனைப்போல் கோபத்திற் கிடங்கொடுக்கலாமா, நான் நினைத்தால் இப் பாவிகளை யொரு நொடியில் யமபுரத்திற் கனுப்பிவிடேனா? தெய்வச்செய லாய் அவர்கட்கு விநாசகாலம் வரட்டுமென்று பொறுத்திருக்கின்றேன். அது போல் நீயும் பொறுத்திருவென்றதைக்கேட் டமர்ந்தான். அதுகண்ட சபை யோர்களும் களித்தனர். இது நிற்க ;

மேகங்கள் வழங்காமலும், விண்ணதிர்ந்திடவும் ஊர்கோள் வெயிலைச் சூழ்ந்துகொள்ளவும் பூகம்பம்பிறந்து பகலிற்றானே நட்சத்திரங்கள் வீழவும், யாகஞ்செய்கின்ற விசாலமாகிய சாலையினிடத்து நரிகள்வந் தூளையிடுதலு மாகிய உற்பாதங்கள் நேர்ந்ததைக் கண்ணுற்றவர் இவ்வுற்பாதம் பெரிதென நெஞ்சுருகுவாரும் இவ்வூறொன்றுமோ வென்றஞ்சி நிற்பாரும், சிலர் போம் வழியில் தானே நினைவாருமாகி இவைகளை விதுரரும் காந்தாரியும் திருதராட் டிரனுக்குச் சொல்லவே, செருக்குண்டிருந்த மனம் திடுக்கிட்டுத் துரியோதன னைப்பார்த்து அப்பாமகனே, உனக்குக் கேடுசம்பவிக்க வேண்டி பாண்டவர் தருமபத்தினியைச் சபையி லிழுத்துப் பலவித அவமானஞ்செய்தாய், இப்பா ஞ்சாலி சகலகுணங்களிலுஞ் சிறந்தவள்,நெருப்பிற் றோன்றியவள் இவளை இவ் வகை யநியாயஞ் செய்தமையால் நீங்கள் மரித்தவர்களென்றே நினைக்கின் றேன். இனியாகிலுஞ் சும்மாயிருங்களென்று சொல்லிப் பாஞ்சாலியைநோக்கி, யான் செய்தகுற்றமெல்லாம் பொறுத்தருள்கவென் றிறைஞ்சிப் பணிந்து உத் தமமாகிய குலத்திற்பிறந்த மயிற்சாயைபோல்வாளே என்மைந்தர் உன் பெரு மையறியாமல் உனக்கு மைத்துனராகிய முறையால் இவ் வழகல்லாதனவற் றைச்செய்தார், புத்தியில்லாத இச்சிறுவர் உனக்கெவ்வள இழிவான காரியத் தைச் செய்திருப்பினும் அவைகளை யுன்மனத்திற் குற்றமாய்ப் பாராட்டாமல் பயித்தியம்பிடித்தோர் பிதற்றியதெனக் கருதி அவர் செய்த குற்றங்களை யெல்லாமின்றே மறந்துவிடு, நீயெனக்கு முந்தியமருமகள், எல்லாவற்றிலுஞ் சிறந்தவள், என்னாலே மிகவுங் கொண்டாடத் தக்கவளா யிருக்கின்றாய், இச்சிறுவர் உற்சாகத்தா லும்மிடம் விளையாடுகின்றார்க ளென்றிருந்தேனே யல்லது இப்படிச் சம்பவிக்குமென் றெனக்குத் தெரியாது,யாரு மென்னிடஞ் சொல்லவுமில்லை, தங்களுக்குள் முதலில் நடந்த சங்கதியொன்றுந் தெரியா தென்று பல தேறுதல்சொல்லிக் கண்ணில்லான் ஐவரையுந் தன் இதமாகிய சொற்களால் அவர் கொண்டிருக்குங் கோபத்தை யொருவாறு தணியச்

செய்து ஒவ்வொருவனையும் கட்டித்தழுவி யாலிங்கனஞ்செய்து பாஞ்சாலியை நோக்கிப் பெண்ணருங்கலமே,யுனக்கு வேண்டியவைகளை யச்சமின்றிக் கேள் தருகின்றேனென்ன பாஞ்சாலியும், என் மாமனாராகிய வரசரே யான் விரும்பிக் கேட்பதைக் கொடுக்கவேண்டுமென்னுஞ் சித்தமிருந்தால் எல்லா வரசர்க்கு மோர்பூஷணமாயுள்ள தருமராசனையும், அவருடைய ஒப்பற்ற குமாரனாகிய பிரதிவிந்தனையும் அவர்கள் அடிமைத்தொழிலி னின்றும் நீக்கித்தர வேண்டு மென்றாள். குருடனு மப்படியே தந்தேன் இன்னுமேதேனு முன் மனத்தி லிருந்தால் கேளென்னலும்; வீமசேனர் முதலிய நால்வரையும் அவர்களின் புத்திரரையும் அவரவர் ஆயுதங்களோடு சுதந்தரர்க ளாகும்படி யொருவரந் தரவேண்டு மென்றாள். அதையுந்தந்தேன் இன்னுமேதேனும் விருப்பமிருந்தால் கேளென்றான். அதற்குப் பாஞ்சாலி மகாமண்டலேஸ்வரரே தாங்களிப்போ தெனக்குக் கொடுத்தவையே போதும்; அதிக இச்சைப்படலாகாது, வைசியர் ஒருவரத்தையும், க்ஷத்திரியர் இரண்டுவரங்களையும், வேதியர் நூறு வரங்களையுங்கேட்கலா மாதலால் அடியாள் மூன்றுவரம்பெறுவது தகுதியல்லவென்று சொன்னாள். அப்போது கர்ணன் துரியோதனனைநோக்கி உலகத்தில் அநேகம் பெண்களுடைய திறமைகளைக் கண்டுங் கேட்டுமிருக்கின்றோம்; ஆயினும் இவளுக்குள்ள திறமை ஒருவர்க்கு முண்டாகாது. நம்மால் தோல்வியடைந்த பாண்டவரை, இப்பாஞ்சாலிகிழவனைஏமாற்றிவரம்பெற்றுத் துக்கக்கடலில் வீழ்ந்து திகைப்புண்டிருக்குந் தங்கணவர்களுக்கு ஓர் வங்கமானாள்; இப்படிப்பட்ட சாமர்த்தியமுள்ள பெண்ணை யடைந்திருத்தலினால்தான் இவ்வாபத்தி னின்றும் மீண்டார்கள். என்று சொல்வதைக்கேட்ட வீமன் அர்ச்சுனனைநோக்கித் தேர்ப்பாகன்மகன் நமக்குப் பெண்டாட்டியினாற்கதியுண்டாயிற்றென்று பிதற்றிய நாவைத்துணிக்க வேண்டும். மனிதர்களுக்கு முக்கியமாய் மூன்று சவுரியமிருத்தல்வேண்டும் அவை, போரின்முன்சென்று முதுகுகாட்டாமல் யுத்தஞ்செய்தலும், ஒருவீரன் சமர்க்கழைத்தாற் சந்தோஷமாய்ப் போதலும்,தன்பத்தினியை அயலான் தீண்டில் அவனைதண்டித்தலுமே. இம்மூன்றிலும் கடையிற்சொன்னவீரம் அற்பருக்கும்உள்ளது,அதையும் நாம் செய்யாதிருக்கும்படி நமது மஹாராஜா சுவாதீனமில்லாமற்செய்துவிட்டாரென்று மிக்க கோபத்தோடு சொல்லுகையில், கர்ணன் சுபாவத்திலேயே மிக்க துட்டன் நம்மாற்றலர் நம்மைச் சயித்து, நாம் தோல்வியடைந்தால் நமக்கிகழ்ச்சி, அப்படி யொன்றுமில்லை துட்டப் பூச்சிகளைநசுக்குவதோர் பெரியகாரிய மல்லவென்று பலவாறாய் வீமனைச் சமாதானஞ்செய்துங் கேளாமல், இவ்வஞ்சநெஞ்சினர்க்குச் சத்தியமுமுள்ளதோ வென்று தன் கதையை நோக்குகையில் அர்ச்சுனன் இத்துரியோதனாதியர் இன்றைக்கேமாள்வார்போற் காண்கின்றது. ஆனால் இப்போதே இவர்கட்கிக்கதி நேரிட்டால் நம்சபதம் வீணாய்விடுமென்று வீமனைநோக்கி அண்ணா வீமசேனா! நானெவ்வளவு சொல்லியுங் கேளாதிருக்கின்றாய்! நம் சபதம் வீணாய்விடும் வேண்டாம், இப்போது கோபியாதேயும் நம்மண்ணனுக்கு வருத்தம்நேரிடும்,பொறுத்தோர் புகழ்பெறுவர் என்று பல சமாதானமொழிகளைக் கூறி வீமனது கோபத்தைத்தணித்

துத் திருதராட்டிர னிருக்குமிடத்திற் றருமராசன்போய்த் தன்வரவைத் தெரிவித்துப் பணிந்து நின்றதை யறிந்து தான் இவர்பாற்செய்த கொடுமை யையினைத்து வெட்கி மௌனமா யிருந்ததைக் கண்டு அண்ணு தேவரீர் கட்டளைப்படி அடியேனிங்குவந்து செய்யவேண்டியவைகளைச் செய்தேன், இன்னு மேதேனுஞ் செய்யவேண்டி யிருந்தால் சுகமாய்க் கட்டளையிடலா மென் றுரைத்தார். அதைக்கேட்ட குருட்டரசன் குழந்தாய், உனக்கெல்லா நன்மைகளு முண்டாகுக. நீசூதிற்றோற்ற ராச்சியமுதலிய சொத்துக்களெல்லா முனக்குத் தந்தேன் நீ தம்பிகளோடும் பத்தினியோடும் உமது இராச்சியத்திற் சென்று சுகமாய்ப் பரிபாலித்துக்கொண்டிரும், என்பிள்ளைகளோ துட்டர், அவர்கள் செய்த அபசாரத்தைப் பொறுத்து உன் தம்பியர்மேற் கருணைவை த்து யாதொரு குறைவும் நேரிடாமற் காப்பாற்றுவாயாக. அப்பா தருமராசா வே ! உன்பதிக்குச் சுகமாய்ச் செல்லலாமென்று பிதாசொல்லியதைக்கேட்ட தருமராசன் யான் உமது கட்டளையை மீறி நடப்போனல்லேன் என்று அவ ரிடம் விடைபெற்றுத் தன் பரிவாரங்களோடும் இந்திரப்பிரத்தத்துக்குப்போ கச் சித்தமானுர்கள்.

இவ்வாறுகூறிய சூதமுனிவரை நோக்கிச் சுவாமீ வைசம்பாயனரே திரு தராட்டிரர் பாண்டவர்களை விடுதலைசெய்து விடையுங்கொடுத் தனுப்பிய பின்னர் துரியோதனுதியர் சித்த மெப்படி யிருந்தது, பின் பென்னசெய்தன ரென்று ஜனமேஜயன் கேட்க வைசம்பாயனர் கூறுகின்றுர்.

பாண்டவர்களுந் திரௌபதையும் சகல சன்னுகத்துடனே புறப்பட்டுப் போதலைக் கண்ட துச்சாதனன், மனம்பொருனுய் துரியோதனனை நோக்கி அண்ணு நமது தந்தைசெய்த கொடுமையைப் பார்த்தீரா, நம் கனவினும் சயித்தற்கரிய பாண்டவரை நமது புத்திநுட்பத்தால் அவரது ஒப்பற்ற பராக் கிரமத்தைப் பயன்படாமற்படி தருமமென்றொரு எல்லையேற்படுத்தி அதிலவர் களைச் சிக்குணச்செய்து, அவர்களையும் அவர்களுடைய பொருளின்பெருக் கையு மொன்றுவிடாமற் கவர்ந்தும் பிரயோசன மில்லாமற்போயினவே, அவ ர்களுடைய தேகத்தையே அவர்க்குச் சுவதந்திர மில்லாமற் செய்த நம்மை தங்கள் தேகம் தமக்குச் சுவதந்திரமானுற் போதுமென் றிருந்தவர்க்கு இக் குருட்டுக்கிழவன் எல்லாமவர்க் குரித்தாக்கியிட்டானே இனி என்செயலாம், 'குயவனுக்குப் பலனுள்வேலை தடிகாரனுக் கொருநாள்வேலை'' என்பதுபோற் செய்துவிட்டான் இனி நமக்கும் நமது குலத்தாருக்கும் கொடிய விபத்தைத் தேடுவார்கள். நாம் அவர்களைச்செய்த கொடுமைக்கு நம்மை அவரென்ன செய்தாற் றகாது, இனி நாம் பிழைப்ப தொருக்காலுமில்லை. நாளைக்கே வந்துபுகுந்து கொல்லினும் கொல்வரென்று முறையிட்டான், இவையெல்லாஞ் செவியுறக்கேட்ட துரியோதனன், சகுனி கர்ணன் துச்சாதன னிவர்களுட னுலோசித்துத் தந்தையிடஞ் சென்று, அண்ணு ! என்னகாரியஞ் செய்தீர் நம் சத்துருக்கள் மேன்மையடையப் பார்க்கலாமா ? எங்கள் சன்மப்பகையாளி களை நாங்க ளுபாயத்திற் சயித்திருந்தும் முன்பின் ஆலோசியாமற் செய்துவிட்

டீரோ, தாங்கள் அரசநீதி யெவ்வளவும் அறிந்தவ ரல்ல, சாம தான பேத தண்டமென்னு நான்குபாயங்களி லொன்றினல் சத்துருவைத் தாழ்த்தவேண் டுவது அரசர்க்குரிய கடனென்று பிருகஸ்பதி யறிவித்திருப்பதை நீரறிந்திருந் தால் இக்காரியத்திற் குட்படமாட்டீர், எவ்வகையாலேனும் திரவியத்தைச் சம்பாதித்தல் வேண்டும் இதனலன்றோ பெரியோரும் "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்றனர், எவ்வகையினலாவது பாண்டவரின் ராச்சியத்தைக் கவர்ந்து அவரை நம் சுயாதீனராக்கிக்கொண்டு அரசரையெல்லாஞ் சயங்கொ ண்டு நாம் ஏகச் சக்ராதிபதியாய் ஆளலாமென் றெண்ணிச்செய்த காரியம் கைகூடிவந்தும் கெடுத்தீரோ,ஐயோ தன்மக்களுக்குங் கேடுகிளைப்பாருண்டா? உம்மைப்போல் புத்தியீனரு முலகிலுண்டா? நம் பகைவர் இனிச் சும்மாவிடா ரோ, இதற் கென்செய்வோம்? யார் சும்மாயிருப்பினும் காண்டிபங் கையிற் கொண்ட அர்ச்சுனன் சும்மாயிரானே, அவன் சுபாவத்திலேயே பாகுபல முள் ளவன் மிக்க ஆற்றலுடையான்,ஆயுதவித்தையில் அவனுக் கவனே யொப்பல் லது மற்றொருவரையு மொப்பிடுதல்கூடாதே. அவனே வெல்லக்கூடாததேர், குதிரை, கொடி, வில், அம்புப்புட்டில் முதலிய கருவிகள் விசேடமாய் நிறைந் துள்ளவன்,ஆயிரங்கைகளையுடைய கார்த்தவீரியார்ச்சுனன் செய்யுஞ்செய்கை யைத் தன் இரண்டுகைகளினுற் செய்பவன், நம்மிடத்துள்ள வீஷ்மர்முதல் யாவரும் ஒரேகாலத்தில் அவனை யெதிர்த்துச் சமர்புரியினும் அவனை வெல்ல மாட்டார்கள். அப்படிப்பட்ட பெருந் தீயி லெங்களை வீழ்த்தினீரோ என்று கூறிய மகனுடைய வார்த்தையைக்கேட்டு அப்பா குழந்தாய் துரியோதன! ஆயிரங் கைகளையுடைய கார்த்தவீரியார்ச்சுனன் எத்தன்மையானவன் அதை ச்சொல்லவேண்டுமென்று கேட்கச் சொல்வானுயினன்.

மகாவிஷ்ணுவின் உந்திக் கமலத்துதித்த நான்முகனுக்கு அத்திரி மகா ரிஷியென்றொரு புத்திரருண்டு அவருக்குச் சந்திரன் பிறந்தான, அச்சந்திர னுக்குப் புதனும், புதனுக்குப் புரூரவனும், புரூரவனுக்கு ஆயுவும், ஆயுவுக்கு நகுஷன், அவனுக்கு யயாதி, யயாதிக்கு மூத்தவன் யதுமகாராசன், அவன் குமாரன் சகசிரோசன், அவன் புதல்வன் சக்கிரதாசன்,அவனிடத்தினின்றும் தருமன், அவனுக்குக் கார்த்தன், அவனுக்குக் கிருதவீரியன், அவன் மகன் அர்ச்சனன் என்னும் கார்த்தவீரியார்ச்சுனன், தத்தாத்திரேயனென்னும் முனி வரைநோக்கிப் பதினயிரத் தைந்நூறுவருடம் கொடிய தவஞ்செய்து அவரநுக் கிரகத்தால் ஆயிரங்கைகளையும் பல வரங்களையு மடைந்து இவ்வண்டமுழுதுந் தன்னெனர் குடைநிழலிலாண்டு வருகையில் ஒருநாளிவன் நருமதைநதியில் சில மாதர்களோடு ஜலக்கிரீடை செய்யும்போது, இலங்காதிபதியாகிய இராவணன் இவனுடன் யுத்தஞ்செய்ய, அவ்விராவணனை இவனது வில்லின் நாணியாற் பிணித்துக் கட்டிக் கடுஞ்சிறையிலிருத்தினன். இராவணனுக்குப் பாட்டன ராகிய புலத்தியர்வந்து இராவணனைச் சிறையினின்றும் விடுவிக்கும்படிக் கேட்டுக்கொண்டதனுல் விடுதலைசெய்தான். மேலும் அக்கார்த்தவீரியார்ச் சுனன் முன்னொரு காலத்தில் சமுத்திரராசனுடன் யுத்தஞ்செய்ய அவன் மிக்க வருத்தமடைந்து தன்னுருக்கரந்து மானிடவடிவாய் வந்து பணிந்து

உன்னுடனெதிர்க்க எனக்கு வல்லமையில்லையென்று சொல்லலும், இக்கார்த்தவீரியன்,என்னுட னெதிர்க்கத்தக்க புருடனைக் காட்டென்றான். ஜமதக்னி குமாரர் பரசுராமரென்பவர் உன்னுடன் போர்செய்ய வல்லவரென்று மறைந்தான், உடனே அவன் பரசுராமரிடஞ் சென்று யுத்தஞ்செய்யவே அவனை அவர் சங்கரித்தார். இக் கார்த்தவீரியார்ச்சுனன் தன் னாயிரங் கைகளால் எத்தனை வில்லைக்குனித்து அம்பெய்வனோ அத்தனையும் இவ்வர்ச்சுனன் தன்னிரண்டு கைகளால் விடத்தக்க வல்லமையுடையவன். இன்னும் இவ்வர்ச்சுனனுடைய வல்லமைக் கூறுகிறேன்,ஆதியிற் குருதக்ஷிணையாகப் பாஞ்சாலனைச் சயித்துத் தன்தேரிற் கட்டினான். பின்பு பாஞ்சாலி சுயம்வரத்தில் ஒருவராலுங் குனிக்கக்கூடாத வில்லை விளையாட்டாய்க் குனித்துப் பாஞ்சாலியை யடைந்தான். அப்பால் தீர்த்தயாத்திரை செய்தபோது கண்ணபிரானுடைய தங்கை சுபத்திரையை ஏகாந்தத்தில் விவாகஞ் செய்துகொண்டதற்காக எதிர்த்துவந்த சாம்பன் முதலிய யாதவவீரரை யடித்துச் சயித்தான். பின்பு இந்திரனுடைய காண்டவ வனத்தை ஸ்ரீகிருஷ்ணசகாயத்தால் அக்கினிபகவானுக் கிரையாக்கி அதனால் திவ்யமானதேரையும் பல அஸ்திரங்களையுமடைந்தான். மயனை அவ்வக்கினியிலின்றுங் காத்துச் சிறந்த சபாமண்டபத்தை அவனால் நிருமிக்கப் பெற்றான். திக்குவிஜயஞ்செய்கையில், இப்பாரத வருஷமேயல்லாத கிம்புருஷ பத்திராச்சுவ கேதுமால ஆரமியக ஹரிகுரு இளாவிருத வருஷங்களென்னும் தேசங்களை யெல்லாஞ் சயித்துக் கப்பம் வாங்கினான். இப்படிப்பட்ட வல்லமையுடைய இவனை நினைத்தாலும் என்னித்யம் நடுக்கமுறுகின்றதே. தூக்கத்திலு மவனைக்கண் டலறுகிறேனாதலால் இனி நாங்களொருவரும் அவனினின்றுந் தப்பிப் பிழைக்கப்போவதேயில்லை. இனி நீர் சுகமாய் அரசாளுமென்றதைக் கேட்ட குருடன், நீ அவன்வல்லமைமுழுதுமறிந்திருந்தும் அவனுடனேன் பகைத்தனை? இதுவாயில் நீ அவர்களுக்குச்செய்த பெருந்தீங்குக்காக உன்னை அவர்கள் ஒன்றுஞ் செய்யாதிருக்க அவர்களை யான் வேண்டிக்கொள்ளுகின்றேன், இனியாயினு மவரிடம்பகைமைபாராட்டாமல் சினேகித்திருவென்று சொல்லியும் துரியோதனன் கேளாமல் இன்னு மவர்களை வஞ்சனையாலேயே செல்வத்தைக் கவர வெண்ணி அண்ணா, அவர்களை மறுபடியும் வரவழைத்து அவரது இராச்சியமுதலாயுள்ள சொத்துக்கள் யாவையும் சூதாட்டத்தாற் கவர்ந்துகொண்டு அவர்களைப் பன்னிரண்டு வருடம் வனவாசத்திலும் ஒருவருடம் அஞ்ஞாதவாசத்திலுந் துறத்திவிட்டால் நமது மனோபீஷ்டம் நிறைவேறும்; இதுவேநல்லயோசனை; விடைதாருமென்ற துரியோதனனுக்கு இரண்டுகண்ணு மில்லாதான் உடன்பட்டுப் பாண்டவரை அழைத்துவரும்படித் தூதுவரையேவினன்.

இவைகளையெல்லா மொன்றுமொழியாமற் கேட்டிருந்த காந்தாரி இத்துரியோதனன் பிறந்தபோதே கொள்ளிவாய் நரிபோல் ஊளையிட்டதைக் கண்டு மகா புத்திமானாகிய விதுரர் இவனை யுயிரோடே வைத்திருக்க லாகாதென்றார். அவர்சொல்லியதை அப்போது கேளாமற் போனோமாதலால் இப்போ நித்துட்டன் மொழியைக்கேட்டுப் பழிப்புக்கிடமான சொக்கட்டா

ளுட்டத்தையாடி வெகு அனர்த்தங்களை யுண்டாக்கிக்கொண்டீர் ; இவ்வளவு கொடுமை பாராட்டியதும் போதாதென்று இன்னமும் அவ்விஷயத்தில் விடா முயற்சியிலிருக்கின்றீர், நீங்களவர்க்குச் செய்தகொடுமைகளையெல்லாஞ் சகித் திருக்கின்றார்கள் ; அவர்களுக்குத் துரோகஞ் செய்வதைப்பார்க்கிலும் வேறு பாதகமில்லை, நீர் சகலசாத்திரங்களையுணர்ந்தும் பெரியோரிடத்திற் கேள்விச் செல்வங்களைப்பெற்றும், வயதில் முதிர்ந்தவராயிருந்தும் நீரே வஞ்சகத்தொழிற் காரம்பித்தால் உமக்கு யார்தான் புத்திகூறுவர், இங்கு நீர் ஒருவருடைய தன் டனைக் குட்படாமற்போயினும் யமதண்டனை விடாதே. உமது புத்திரனென் றும், பாண்டுபுத்திரனென்று மெண்ணிப் பட்சபாதஞ் செய்யவேண்டாம், நான் சொல்வதற்குக் கோபமும் வேண்டாம், இதுவரையில் இத் துரியோதனனைக் கொடியவனென்று இங்குள்ளோரெல்லாங் கூறினார்கள், இனி இம்மொழி உம் மையுந் தொடர்ந்து பற்றுமென்று கூறிய காந்தாரியைத் திருதராட்டிரன் நோ க்கி நீ சொன்னதெல்லாஞ் சரியே, அந்தகனாகிய நான் என்செய்யலாம், உன் மகன் வெகுவாய்க்கோபித்து நிர்ப்பந்தஞ்செய்கிறானே, அதனால் நன்மையோ தீமையோ வருவது வந்தேதீரும், நானு மனுபவித்தே யொழிக்கவேண்டும். அதனால் இக்குலம் நசித்தாலுஞ் சரியே, சூதாட வேண்டுமென்பதை நான் தடுக்கவேமாட்டேனென்று வாய்பேசாதிருந்தான். இதுநிற்க ;

திருதராட்டிரனனுப்பிய தூதுவர் வெகுதூரஞ்சென்ற பாண்டவர்களைக் கண்டு தகப்பன் கட்டளையைத் தெரிவிக்கவே, காலகதியாய் நடக்கவேண்டி யிருப்பதை நாம் தடுத்தாலொழியாதே, பிதாவின்சொல்லை மறுத்தேகல் குற் றம், போய்த்தான் தீரவேண்டுமென்று தன்தம்பியருடன் அத்தினபுரத்திற்கு வந்து சபையிற்பிரவேசித்தார். அப்போ தவர்களைக் கண்டு விதுரர் முதல் மற்ற பெரியோர்களெல்லாம் துக்கமென்னுங்கடலிலாழ்ந்து ஒன்றுந்தெரியா திருந்தனர். நாசகாலனாகிய சகுனி தருமனைநோக்கி நான் சூதாடிக் கெலித்த சகல சொத்துக்களையும் திருதராட்டிர ருமக்குக் கொடுத்துவிட்டமையால் இனிச் சொத்துக்களைவைத் தாடவேண்டுவதில்லை. இப்போது பந்தயமெப்படி யெனின், தோற்றவர் இராச்சியத்தைவிட்டுத் தவசிகளைப்போல் மரவுரி மான் றோல் தரித்துப் பன்னிரண்டு வருடம் வனமே கதியாய்ச் சென்று, பின்பு ஒருவருடம் இன்னவிடத்தி லின்னபடி யிருக்கின்றார்க ளென்பது தெரி யாமல், அஞ்ஞாதவாசஞ் செய்யவேண்டும். இதுவே பந்தயம், உமக்குச் சம்மதியானால் ஆடலாமென்றுசொல்ல தருமபுத்திரர், சகுனியை நோக்கி நானோ, சூதாடவழைத்தால் வருவேனென்கிற விரதியாதலால் பின்னிடை யாம லுன்னுடன் ஆடுகிறேன், பின்பு நீ நாசமடையாவண்ணம் உன்க்ஷேமத் தைக்கருதி யாடென்றார். அப்போது தருமர்மேற் கலிபுருடன் பிரவேசித்தத னால் மதிமயக்குண்டு வீஷ்மர், துரோணாதிய ரெல்லாம் ஆடவேண்டாமென்று பலதரந் தடுத்துங்கேளாமல் ஆடத்தொடங்கிச் சகுனி பாய்ச்சிகையைக் கையி லெடுத்துத் தான் சொல்லியதுபோலவே விருத்தங்கள்போட்டுப் பாரும் யுதி ட்டிரரே இதோ மறுபடியு மும்மைச் சயித்தேனென்று கர்ச்சித்தான், துரியோ தனாதியர் கைகொட்டி ஆரவாரித்து நகைத்தார்கள். மற்றவர் கண்ணீருதிர்த்

தார்கள். பாண்டவர்கள் முகம் மழைகாணுப் பயிர்போல் வாடித் தாமணிந்
திருந்த ஆடையாபரணங்களைக் கழற்றிவிட்டு மரவுரி மான்றோல்களை யணிந்து
காட்டுக்குச் செல்ல நினைத்து நிற்கையில், துச்சாதனன் மிக்க இறுமாப்பு
டன் அங்குள்ள சேவகரைநோக்கி இங்கே குறும்பாடுகளைப்போல் தலைசாய்
த்து நிற்கும் பாண்டவர்களுக்கு மரவுரிகளைக்கொடுத்து காடே கதியெனப்
போகச் சொல்லுங்கள், இன்றுதான் துரியோதனன் ஏகச்சக்ராதிபதியானுன்,
இனிப் பாண்டவர்கள் நெடுநாள் துக்கத்தை யனுபவித்து நசிக்கப்போகின்றார்
கள் என்று கூறிப் பின் பாஞ்சாலியைநோக்கி அடீ பெண்கள்நாயகமே! உன்
கணவர்கள் உனக்கு நேரிட்ட அவமானத்தைச் சகித்து ஆடுகளைப்போல்
தலைகுனிந் திருக்கின்றார்கள். இவர்களுடனே காட்டிற்சென்றால் நீ மிகத்
துன்பத்தை யனுபவிக்க நேருமாதலால், ஏகச்சக்ராதிபதியாகிய இத்துரியோ
தன மகாராஜனைக் கூடுவையானால் மிக்க சுகத்திலிருப்பை என்று கூற;
அப்பாதகன் மொழியைக்கேட்ட வீமசேனன் தன்னுற்றலெல்லாம் பிரயோ
சனப்படாம லிருப்பதை நினைந்து மனங்கன்றி, துச்சாதனனைநோக்கிச் சொல்
கின்றான். அடா மசகமே நீ யெனக்கொரு பொருட்டோ? இப்போ தென்னண்
ணன் உங்களைக் கொல்ல உத்திரவளித்தால் ஒரு கைந்நொடிப்பொழுதி லுங்
களை யெல்லாம் வைவஸ்வதநகருக் கனுப்பிவிடுவேன். சொற்பதராதை "துள்
ளுகிறமாடு பொதிசுமக்கா" தென்பதை நீயும் கேட்டிருப்பை, அம்மொழி யுன்
னிடத்தேயுள்ளது என்று சொல்லியதைக்கேட்ட துச்சாதனன் ஏளனமாய்,
அண்ணா இதோவொரு சபைக்கூடி நிற்கிறது பார்த்தையா, இதற்குச் சத்துவங்
கிடையாது, இதை வீமசேனன் என்பது வீணேயாம், மற்றென்னெனின்,
இரண்டு கான்மாடென்று சொல்லவேண்டுமென்றான். துரியோதனனும் பரி
காசமாக அடா வீமா நீ மிகவுஞ் சூரனே, ஆதலாற்றான் இப்பெரியசபைநடு
வில் கொண்டபெண்சாதியை அரசராகிய நாங்கள் மானபங்கஞ்செய்யவும்;
சூரனுகிய நீ கண்ணுற்றிருந்தது மிக்க நகையைத் தரத்தக்கதே, சபாசு உன்
சூரத்துவம் பெரிது பெரிது! இன்னமுமேன் சௌரியம் பேசுகின்றனை, நீசொல்
லிய தொன்றும் நடவாது. நான் உன் சகோதரர்களைக் கொன்று உன்னையும்
பாரியாய்த் தவிக்கச் செய்வேன், இதுதான் நிறைவேறும், நீ பித்தன்போற்
பிதற்றவேண்டாம் நடவென்றான். இது நிற்க;

பின்பு தருமர் தன் தம்பியரோடு பெரிய தகப்பனிடம்வந்து வணங்கி
உமது கட்டளைப்படி வனமேகச் சித்தமாயிருக்கின்றேனென்று தெரிவித்து
விடைபெற்றுக்கொண்டு பின்பு வீஷ்மர் முதலியவர்களிடத்தும் விடைபெற்
றுப் பிரயாணத்துக்குச் சித்தமானார், ஒருவரு மொன்று முரையாடாமல் தத்
தம்மனத்தில்பாண்டவர்க்குச் சுபமுண்டாகுகவென்று கடவுளைத்தியானித்து
நின்றனர். அப்போது விதுரர் மகாராசாவாகிய தருமராசனே நீதருமத்தையே
செல்வமாக நினைப்பவனாதலால் தம்பியரோடும் மனைவியோடும் வனத்திற்குச்
செல்வது நியாயந்தான். இக்குந்திதேவி பிறந்ததுமுதல் இது பரியந்தம் செல்
வத்தையே யனுபவித்திருந்தவ ளாதலால், இவள் உங்களுடன் வந்து கஷ்ட
மனுபவிக்கமாட்டாள். என் மனையிற் சுகமாயிருக்கட்டும், நானே வேண்டிய

பசாரங்களைச் செய்கிறேன். நீங்கள் இப்பதின்மூன்று வருடமுங்கழித்துவந்து மேன்மையை யடைவீர்கள். தருமரகசியங்களை நன்றாயறிவீர், சத்துரு சங்காரஞ்செய்யும் இரகசியத்தை வீமனறிவன். யுத்தத்தின்நுட்பம் அர்ச்சுனனறிந்தவன். பொருள் தேடுமுபாயத்தை நகுலன் அறிவான், தத்துவ நிச்சயத்தைச் சகதேவன் அறிந்தவன், புரோகிதராகிய தௌமியரோ எல்லாமறிந்தவர், உமது மனைவிபாஞ்சாலி மிக்க புத்திசாலி, கற்பில் அருந்ததிக்குச் சமமானவள்; இப்படிப்பட்ட விசேடணமெல்லா முங்களுக்கே நிறைந்திருக்கின்றமையால் உங்களுக்கென்னகுறையுளது? உமக்கொருதாழ்வும்நேரிடமாட்டா. இமாசலத்திலே மேருசாவர்ணி யென்பவர் உமக்கு தருமத்தையும் நீதியையும் உபதேசித்திருக்கிறார், வாரணாவதத்தில் வியாசரும் வெகு விஷயங்களைச் சொல்லியிருக்கின்றார். பிரபுசந்தமென்னு மிடத்திற் பரசுராமர் பல தருமசூக்ஷமங்களை யறிவித்தார். திருஷத்துவ நதிக்கரையில் கற்றைச்சடையோனாகிய உமாமகேசர் சகல தத்துவங்களை யுமக் குபதேசித்தருளினார், அகிதரும் அப்படியே அனுக்கிரகித்தார். இப்படி அனேகரால் உபதேசம்பெற்ற உனக்கு என்ன குறையுள்ளது; மேலும் நாரதரிடத்தில் அனேக தருமரகசியங்களையும் கேட்டிருக்கின்றாய். நீ ஒன்றுக்கும் வியசனப்படவேவேண்டாம், இப்பூமிமுழுதும் நீ நினைத்தமாத்திரத்திற் கிடைக்கும், இப்படி எல்லாமுணர்ந்த உனக்கு எதிற்சுகம், எதிற்றுக்கம். புத்தி, சத்தி, தருமம், நிஷ்டை, இந்திரியநிக்கிரகம், கொடை, ஆளுகைத்திறம், பொறுமை முதலிய சகல நற்குணமும்நிறைந்திருக்கிறாய்; ஆகையால் அஞ்சாமற் போய்வாவென்று விதுரர் ஆசிர்வதிக்கச் சந்தோஷித்து நாட்டைவிட்டு காடுசெல்லப் புறப்பட்டார்.

இவ்வகையாய், பெருமிதம்பெற்ற வலியையுடைய பாண்டவர் துரியோதனதிபரிடம் தஞ் செல்வங்களைத்தோற்றார்கள். பொறுமைக்கடலாகிய தருமரும், அக்கினியிற் பிறந்த பாஞ்சாலியும் மற்றைய நால்வரும் காடே வீடாகக் கொண்டு வருவதை அந்நகரத்திலுள்ள சனங்கள் யாவருங் காண மிக்க ஆவலோடு கோபுரங்கள் மாளிகைகள் முதலிய உன்னதத்தானங்களிலேறிக் கொண்டு அவர்கள் வருமார்க்கத்தை எதிர்நோக்கி யிருந்தார்கள். திவ்யாபரணங்க ளணிந்திருந்த பாண்டவர்கள், அதற்குப் பதிலாக மரவுரிதரித்து மான் தோல்பூண்டு பாதசாரியாய்ப் பாஞ்சாலியுடன் வீதியில் வரும்போது அவர்களைத் தரிசிக்க நின்றிருந்த சனங்கள் யாவரும் மிக்க வருத்தமுற்று அழுது நாமெல்லாரும் மகாபாவிகளாதலால் உலகத்திற்குத் தாயிற்சிறந்த தயாநிதிகளாகுமிவர்க ளிவ்வாறு செல்லப்பார்த்தும் உயிர் நீங்காதிருக்கின்றோமே, நாம் என்னசெய்யலாம். அருள், பொறை, நன்றியறிதல், பெரியோரை ஆச்சிரயித்தல், கல்வி, அறிவு சவுரியம் சத்தியம் முதலியவைகளில் ஒன்றுங் குறைவில்லாமல் நிறைந்துள்ள இம்மகானுபாவரைத் திருதராட்டிரன் முதலிய பாதகர் வஞ்சித்துக் காட்டுக் கனுப்பினார்களே இனி நாமெல்லோருஞ் சுகமிழந்தவரானோம், இக்கொடிய அரசனது நாட்டில் நாம் உயிர்வாழ்தல் தகுதியன்று "கோடுங்கோன்மன்னன் வாழுநாட்டிற்-கடும்புலிவாழுங் காநன்று" எனப் பெரியோர் கூறலால் பாண்டவர் போகுமிடத்திற்கே நாமெல்லோரும் போகவேண்டும்.

இத்தருமபுருடர் வாசஞ்செய்யும் காடு நாடாகட்டும், இந்நகரங் காடாகட்டு மென்று துரியோதனுதியரை இகழ்ந்து நால்வகை வருணத்தவரும் சகுடும்ப மாய் பாண்டவர் பின் சென்றனர்கள். பாஞ்சாலி ஒற்றை யாடையோடு காலால்நடந்து வருவதைக்கண்ட பெண்கள் ஐயோ! இதென்னகொடுமை கடவுள் இப்படிச்செய்வதும் தகுதியோ என்று மார்பிலடித்துக்கொண்டு துரியோதனுதியர்களை வைதார்கள். குந்திதேவியோ பாஞ்சாலியைப் பார்த்துக் கண்ணீருதிர்த்து நீ சகலதருமங்களையுமுணர்ந்தவள்,புத்திநுட்முள்ளவள்,கணவர்களையே தெய்வமாகக்கருதி அவர்களுடனிருந்துபணிவிடைசெய்வதே தருமமுஞ் சுகமுமென்று நினைத்துத் துக்கப்படாதிரு, உனக்குக் குறைவென்பது சற்றுமில்லை. நீ வெகு பொறுமையுள்ளவள், கற்பிலருந்ததியை யொத்தவள், யானிப்போ தெடுத்துக்கூறிய குணங்கள்யாவு முனக்குடன் பிறந்தவையே யாம், அத்துராத்மாக்கள் செய்த கொடுமைக்கு அப்போதே யவர்களைச் சாம்பராக்குவை, பொறுமையென்னுங்கட லுன்னிடத்திருந்ததால் அவரப்படி யாகாவண்ணம் பிழைத்தனர். சகதேவன் என்னுல் மிகவும் அன்பாய்வளர்க்கப் பட்டவன், சிறுபிள்ளை, அவனை நீ யன்பாய்ப் போஷிக்கவேண்டுமென்று கூறி நீங்கமனமில்லாமல் பின்றொடர்ந்து தன் புத்திரரைநோக்கி தருமந் தவறுமல் நடக்குங் குணவான்களாகிய நீங்கள் இவ்வகைத் தாழ்வடையவுந் தருமத்தைப் பகைக்குந் துட்டர்கள் மேன்மையடையவு மாயிற்றே, எனக்கிக்கதி வருமென்று முன்னமே தெரிந்திருந்தால் அக்காட்டைவிட் டிந்நாட்டில் வந்திருக்கேனே,என்னருமைப் புதல்வர்காள் உம்மைவிட் டெங்ஙனந் தரித்திருப்பேன், யானுங்கூடவருகிறேன். அல்லது சகதேவனையாவது என்னுடனிருத்துங்கள்என்று மூர்ச்சித்துப் பூமியில் வீழ்ந்தாள்.

இவ்வாறு பாதையில் மூர்ச்சித்த தாயைப் பாண்டவர்கள் சயித்தியோபசாரத்தால் மூர்ச்சைதெளிவித்து தாய்க்கு வேண்டிய சமாதானஞ்சொல்லி அம்மா நீ ரொன்றுக்கு மஞ்சவேவேண்டாம், இப்பதின்மூன்று வருடத்தையும் பதின்மூன்று நாளாகக்கழித்து வருகின்றோம். தாங்கள் சுகமாய் விதுரரிடத் திருமென்று சமாதானங் கூறிநின்றனர். அப்போதங்கு விதுரர்வந்து பாண்டவரையும் குந்தியம்மனையும் சமாதானஞ்செய்து குந்தியை மிக்க வுபசாரத்துடன் தன் வீட்டுக் கனுப்பிவைத்துத் தானும் தருமரிடம் விடைபெற்றுத் தம்மிடம் போய்ச்சேர்ந்தார். பின்பு பாண்டவர்கள் காடேநோக்கிச் செல்கையில், ஸ்திரீக ளொருபுறமும், புருட ரொருபுறமுமாய்க் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்து பாண்டவர்களை விடாமற் பின்றொடர்ந்து சென்றபோது தருமர் மிக்க வியசனமுற்று அவர்களைத்தத்தம்மிடஞ் செல்லும்படி வெகுவாய் ஆறுதல்செய்துங் கேளாமல் அவர்களைப் பின்றொடர்ந்து வர்த்தமானமென்னும் பட்டணத்திற் கருகிற் சென்றனர். அவ்விடத்துள்ள பெரியோர்கள் இவர் தருமகுணத்திற்கு மகிழ்வெய்தி அவர்களு மிவர்களுடன் றொடர்ந்து செல்கையில் சிலர் தருமருடைய நற்குணங்களையும், வீமனுடைய வல்லமையையும், அர்ச்சுனனுடைய சாமர்த்தியத்தையும், நகுலனுடைய நற்புத்தியையும், சகதேவனுடைய விவேகத்தையும்,பாஞ்சாலியினுடைய கற்பையும்புகழ்ந்து பேசி

கண்டு நாமெப்படி இவர்களைவிட்டுப் பிரிவோமென் றழுதார்கள். மறுப டியுந் தருமபூபதி தன்னைப் பின்றொடருஞ் சனங்களுக்குப் பலசமாதான மொழிகளைக்கூறி, தன் பிதாவின் கட்டளைப்படி பன்னிரண்டு வருடம் வன வாசமும் ஒருவருடம் அஞ்ஞாத வாசமுந் தொலைத்து புனிதனாகி இவ்வி டம்வந்து உங்களைக் காணுகின்றேன், நீங்க ளழவேண்டாம் எங்களுக்கு நன்மையுண்டாகும்படி வாழ்த்தி விடைபெற்று எங்களை வலமாய்ச் சுற்றிவந்து உங்களூருக்குப் போங்கோளென்று கூறினர். இவ்விதமாய்ப் பாண்டவர் கள் காடே கதியாய்ச் செல்லுதலைக்கண்ட துரியோதனாதியர்கள் நகைத்து ஆரவாரித்தனர். வீஷ்மர் முதலியபெரியோர்கள் தாட்யண்ணியத்தாலொன்று முரையாமலிருந்தனர். வேதியரோ வெனின், துரியோதனனுடைய துர்ச் செய்கையையும், கர்ணன், சகுனி, துச்சாதனன் முதலியோருடைய கெடு மதியையும் நோக்கிப் பயமின்றி அவர்கள்செய்த கொடுமைகளை யெல்லாமொ ன்று விடாம லெடுத்துப்பேசி இனி இவர்கள் சேர்க்கையாகாதென் றெண்ணி அவ்விடம்விட் டகன்று யுதிட்டிரரிடஞ் செல்ல, அவர் அவ்வேதியர்க்கு வந்த னஞ்செய்து பரிவுடனே அவர்களையும் மற்றையோரையும் அவரவர் பதிக்குச் செல்ல விடைகொடுத்துக் கானகத்தை நாடிச்சென்றனர். இது நிற்க ;

இங்குத் திரிதராட்டிரன், பாண்டவர்கள் மகிமையையும் அவர்கள் செ ய்த பிரதிக்கினையையும் நினைத்துப் பயமுற்றுப் பரதவித்து விதுரரை யழைத் துவரச்செய்து வினவுகின்றான்,வனவாசஞ்செய்யப்போகும் பாண்டவர்களும், துரௌபதையும் தௌமியரும் என்ன சொன்னார்கள், என்ன பேசிக்கொள் கிறார்கள், அவைகளைத் தெரியக்கூறுமென்ன, விதுரர், மகாராசாவே ! யுதிட் டிரர் கிருஷ்ணாசனத்தினால் முகத்தை மறைத்துக்கொண்டு மனக்களிப்புடன் சென்றனர், ஏனெனின் தனது அருட்கண்களால் பாவத்தொழிலையேவிடாமற் செய்யும் உமது புத்திரரைநோக்கினால் நசிப்பரோயென்றுன்னி அவர்கள் செய்த கொடுமையை மனத்தே நினையாமற் சென்றார். வீமசேனனோ மிக்கவல்ல மையுடைய தன்னிருகரங்களையு நாலவிட்டு அவைகளைப் பார்த்துக்கொண்டே சென்றான். அதன் கருத்தென்னெனின் ? தருமராசருக்குக் குற்றஞ்செய்த கொடியவரை தன்கையிற் பிடித்திருக்குந் தண்டால் வீசிக்கொல்லவேண்டு மென்னுங் கருத்தாம். அருச்சுனனோ தன் காலால் மணலை இறைத்துக்கொ ண்டேகினான். அஃதேனெனின், அம்மணல் எவ்வாறு சிதறுகின்றனவோ அதுபோலவே திருதராட்டிரன் புத்திரர்கள் மேலும் அவர்சேனையின் மேலும் சரங்களிறைப்பே னென்னுங் கருத்தாம். நகுலனோ தன் னுடம்பெல்லாம் புழுதியினால் மறைத்து உருமாறிச்சென்றான். அதன் கருத்தென்னெனின் மங்கையர்கள் அவன் வடிவைப்பார்க்கக் கூடாதென்பதாம். சகதேவன் கைக ளால் முகத்தை மூடிப்போனான். அதேனெனின் அவன் முகத்திற் சொலிக் கும் கோபாக்கினி வெளியிற் பரவாமலிருக்கும் காரணமேயாம். பாஞ்சாலி புட்பிணியாதலா லொற்றையாடையோடு தலைமயிரை விரித்துக்கொண்டேகி னாள். அவள் கருத்தென்னோவெனின்,இதற்குப் பதினான்காம் வருடத்தில் துரி யோதனாதியர் மனைவிகள் தங்கணவர் யுத்தத்தில் மடிய அவரவர்கள் கணவர்

மேல் விழுந்துபுலம்பி அவர்களுதிரம் ஆடையிற்படத் தலைவிரிகோலமாய் மயிரை விரித்துக்கொண்டு துயரப்படுவார்களென்பதே. புரோகிதராகிய தௌமியர், தருப்பையைக் கையிலேந்திச் சாமவேதத்தை யுச்சரித்துக்கொண்டு இதற்குப்பதினான்காவ தாண்டில் இறக்கும்அரசர்க்குச்சரமக்கிரியை செய்து திருதராட்டிரன் தன்சந்ததியை யிழப்பன் என்றுரைத்துக்கொண்டே சென்றொன்றார். இவைகளைக்கேட்ட திருதராட்டிரன் அஞ்சி விதுரரே! பிரசைகளென்ன சொன்னார்களென்று வினவ, இராசாவே! சனங்களெல்லாம் பாண்டவர்கள் வனம்போதற்கு மனந்தாளாமல் சகுடும்பத்தோடு வெகுதூரம்போய், பாண்டவர்களால் வெகுவாய்ச்சமாதானஞ்செய்யப்பட்டு பசுவைப்பிரிந்த கன்றைப்போற் கதறிக்கொண்டு தங்கள் தங்கள் பதிவந்துசேர்ந்து உம்மையும் உமது புத்திரருடைய துர்க்குணங்களையுமிகழ்ந்து பாண்டவருடைய நற்குணங்களைப் புகழ்ந்து மிக்க விசனமடைந்து உமது இராச்சியத்தில் வசிக்கமனமில்லாதவர்களாயிருக்கின்றார்கள். மேலும் உமது நாட்டில் அனேக துர்ச்சகுனங் காண்கின்றனவென்று கூறினர். இவ்வாறிருக்க, நாரதமுனிவர் அனேக முனிவர் குழாங்களோடு திருதராட்டிரனிடத்திற்குவந்து குருடனைநோக்கி உமது துர்க்குணத்தினாலும் உன் புத்திரருடைய கொடுஞ்செய்கைகளாலும் இதற்குப் பதினான்காமாண்டில் உமது வமிசம்வேரோடு நசித்துப் போமென்று சொல்லி உருக்கரந்தனர்.

இவைகளையெல்லாங் கேட்டிருந்த துரியோதனன் கவலையுற்று, துச்சாதனன், கர்ணன், சகுனி இவர்களோடு துரோணாசாரியரிடம்வந்து தண்டனிட்டுக் கைகூப்பி அடியேனையும் இராச்சியத்தையுந் தேவரீர் திருவடிகளில் சமர்ப்பித்தேன்; இவ்விரண்டும் பகைவரிட மகப்படாமல் காத்தருளவேண்டுமென்று அஞ்சலிசெய்து நிற்கையில் அப்பா துரியோதனா! பாண்டவர்களை ஒருவராலும் சயிக்கமுடியாது, என்னாலுமாகாது,நீ யென்னை அடைக்கலம் புகுந்தபடியால் என்னுயிருள்ளவளவாயில் உன்னைச் சத்துருக்கள் கையி லகப்படாவண்ணங் காப்பாற்றுவேன் எனக்கோ முடிவுகாலமாயின எப்படியெனின் திஷ்டத்துய்மனாகிய பகைவன் பிறந்திருக்கின்றான். அவன் ஜன்மிக்கும்போதே கவசகுண்டலங்களோடும், வில்லோடும் அக்கினியில் பிறந்தவன், அவனோ பாண்டவர்கள் சார்பாகவே யிருப்பவன்; அவனால் கொல்லப்படுவேன், உங்களுக்குங் காலங்குறுகிற்று; பதின்மூன்று வருடங்களையும், பதின்மூன்று தினமாகக்கழித்துப் பாண்டவர்கள் உங்களை இராச்சியம் கேட்பார்கள். நீங்கள் அதற் கொப்பமாட்டீர்கள். அதனால் யுத்தமுண்டாம் அவர்கள் செய்த பிரதிக்கினைப்படி தடையின்றி நிறைவேற்றுவார்கள். இதற்கையமேயில்லை யெனக் கூறினர். இவ்விதமாய்ச் சொல்லக்கேட்ட திருதராட்டிரன் தன் புத்திரனைப் பார்த்து அடா துரியோதனா! நீஇப்போதே விதுரரை யனுப்பிப் பாண்டவர்கள் வனம்போகாம லிங்குவரும்படிச்செய், நீ செய்தகொடுமையை நினைத்து வராவிட்டால், அனேக திரவியங்கள் இரத்னங்கள் ரதகஜதுரகபதாதிகளையாவது கொடுத்து அவரைச் சம்மதிப்படும்படிச் செய்யச்சொல்லென்றார். பின்பு சஞ்சயன் திருதராட்டிரரிடம்வந்து பணிந்து அரசரே, நீங்கள் பாண்டவரை வஞ்

சனேயாய் சூதாடச்செய்து, பலவிதமாய் அவமானஞ் செய்து, அவர்கள் செல்வங்களையும் அபகரித்துக்கொண்டு காட்டிற் றுரத்திவிட்டீரோ, நெடுநாள் மனத்திருந்த கோரிக்கை நிறைவேறிற்றே, இன்ன மேன் வியசனப்படுகிறீ ரென்று சொல்ல, சஞ்சயா யுத்தத்தில் வல்லவர்களாகி மிக்க சம்பத்தோடுங்கூடிய பாண்டவரோடு பேதைகளாகிய என் மக்களுக்கு பகைநேரிட்டிருக்க நானெப்படி சிந்திக்காம லிருப்பேனென்றான். பாண்டுமக்களுடன் வீண்கலகம் வைத்துக் கொள்ளவேண்டாமென்று வீஷ்மர்முதலானோர் கூறியுங்கேளாமல் கற்புடைய பாஞ்சாலியை உமது துட்டப்பிள்ளைகள் சபையிலிழுத்து அவமானஞ் செய்தார்களே, அப்போது உமக் கவர்களிடத்தில் பகைவைத்துக்கொள்ளப் பிரியமில்லாதிருந்தால் விதுரர் சொல்லிய நல்வார்த்தையைக்கேட்டீரா? வீணு ஏன் சிந்திக்கின்றீர்; அரசே! உமதுமக்களுக்குத் துன்பம்வந்துவிட்டது,இனி செய்யத்தக்க தொன்றுமில்லை,நடக்கவேண்டுவது நடந்தேதீருமாதலால் உமக்கும்புத்திசபலமாயிற்று,கர்னன் சகுனியோடு சேர்ந்து கற்புடைய பாஞ்சாலியை மனத்திலும் கருதத்தகாத சொற்களைப் பலவரச ரறியச்சொல்லி அவமானஞ் செய்வார்களா? அரசர்க் கரசராகிய பாண்டவரை, அடிமைகளென்றும், நபுஞ்சகரென்றும், பலவாறு நிந்திப்பார்களா? அவர்கள் தருமத்துக்குக் கட்டுப்பட்டு உமதுகட்டளையைத் தவறாமல் காட்டிற் சென்றார்களென்று சொல்ல, திருதராட்டிரன் மிகவும் நடுக்குற்று சஞ்சயா! நானென்செய்வேன், துருபதராசன் கண்ணபிரான் முதலானவர்கள் நமக்குப்பகைவரானார்கள். இனி துருபதராசனும், துரோணருக்குச் சத்துருவாகிய திருஷ்டத்தியுமனன் முதலிய துருபதன்புத்திரரும்,விருஷிணிகர், அந்தகர், போசர்,குகுரர், தாசரதர், சாத்துவதர்,யாதவர் முதலானவர்கள் புடைசூழ இந்திரதனுசுக் கொப்பாகிய காண்டீவத்தை வளைத்துநாணேற்றிட்டு குணத்தொனிசெய்து அர்ச்சுனன் வருவானே, காலதண்டம்போன்ற கதையைக் கையிலேந்தி வீமன்வருவானே, இச்சூரர் முன்னின்று யார்தான் தடுக்கக்கூடும்! அரசர்க்குள் சிங்கம்போன்ற சராசந்தனை இவ்வீமன் தன்கையால் முடித்தானே, இவைகளையெல்லாம் விதுரன் எனக்குப் பலதரம் எடுத்தெடுத்துச் சொல்லியும் யான் அறிவின்மையாற் கேளாமற் போனேனே, இப்போதாபத்தை விளைவித்துக்கொண்டேனே யென்று திருதராட்டிரன் சஞ்சயனோடு சொல்லி வருத்தப்பட்டானென்று வைசம்பாயன முனிவர் ஜனமேஜெயனுக்குச் சொல்லினு னென்று சூதமுனிவர் நைமிசாரணியவாசிகளுக்குச் சொல்லியருளினர்.

துகிலுரிதல் முற்றும்.

சபாபர்வம்

முற்றிற்று.

= ITIHASA MANJARI SERIES =

உ

கணபதிதுணை.

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

ஸ்ரீ மகாபாரதம்.

(இரண்டாவது வால்யம்)



இஃது,
திருமயிலை வித்வான்
சண்முகம்பிள்ளையவர்களால்
வசனரூபமாக எழுதுவித்து
ப. மு. செல்வராஜமுதலியாரவர்களால்

தமது
அமரிக்கன் அச்சுக்கூடத்தில்
பதிப்பித்துப்பிரசுரிக்கப்பட்டது.

சென்னை:

1890.

Sivakami Vilasam Press, Choolai Madras.

கடவுடுணை.

ஆரணியபர்வம்.

வனம்புகுசருக்கம்.

முருகார் மலர்த்தாம முடியோனை யடியார் முயற்சித்திறந்
திருகாமல் வினைவிக்கு மதயானை வதனச் செழுங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து முக்கோடி புத்தேளிரு
மொருகோடி பூதேவ ருங்கைதொ ழுங்கோவை யுறவுன்னுவாம்.

ஜெனமேஜெயமகாராசன் மிக்ககளிப்படைந்து சூதமுனிவரை மனவழி மெய்களால் துதித்து சுவாமீ தங்கள் திருவாக்கினாற்கேட்ட சபாபர்வம் சிங்காரம், வீரம், பெருநகை, கருணை, இரவுத்திரம், குற்சை, சாந்தம், அற்புதம், பயம் என்னும் நவரசங்களும் பெற்றுடையதாய் எங்கள் மனத்தைக் களிக்கச் செய்ததாதலால் மூன்றாவது பருவத்தின் வரலாற்றையுந் திருவுளங்கனிந்து கூறுவேண்டுமென்ன வைசம்பாயனர் சொல்லுகின்றார்.

அக்ஷயபாத்திரம் பெறுதல்.

பாண்டுமக்கள் நாட்டைவிட் டகன்று நீர்வளம் நிலவளம் குடிவள மிக்க சவுனகமுனி வனமடைந்தனர். இவர்கள் காடடைந்த செய்தியைக் குடிகள் கேட்டு வருந்தி எல்லாரு மொரோகாலத்தில் ஐவரிருக்குமிடமே சென்று அவர்களைக்கண்டு புலம்பிவேரற்ற மரம்போல் வீழ்ந்தனர். தருமராசன்தங்குடிகள் பரிதபித்தலைக்கண்டு மனம்வருந்தி அவர்களுக்குத் தக்கமொழிகளைப் புகன்றும்கேளாமல், அரசரேறே! பொறை வீரம் நீதியில்லா வரசனிடமிருந்து அஷ்டைசுவரிய மனுபவிப்பதைப் பார்க்கிலும் சாந்தம் வீரம் அருளென்னுமிவைகளைப்பெற்றுள்ள மன்னனிடமிருந்து மிக்க தரித்திரத்தை யநுபவிப்பதே நலமாம். இதுபற்றியன்றோ பெரியோரும் "கொலைமேற் கொண்டாரிற் கொடியதே யலைமேற்கொண் - டல்லவை செய்தொழுகும் வேந்து." என்பதனால் அந்நாட்டில்வாழ மனமில்லாமல், "குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னனடிதழீஇ நிற்குமுலகு."என்பதுபோல் இந்நாள்வரையு மெங்களுக்குயாதொரு குறைவுமின்றி அன்புடன் காத்துவந்த தங்களைவிட் டெவ்வா றகல்வோமென்றுகூற,அவர்களுக்குப் பெரியோர்கட்டளைப்படி பதின்மூன்றுவருடமும் வனத்திருந்து வருகின்றோம், அதுவரையில் எங்கள் புத்திரர்களாகிய பிரதிவிந்தன் சுருதசோமன் சுருதகீர்த்தி சதானிகன் சுகுணன் அபிமன்னன் அரவான் மித்திரன் வேத்திரன் ஆகிய இவர்களை எங்களைப்போற் பாவித்து

அவர்கள் கட்டளைப்படி நடந்துவாருங்கோளென்று கூற, அக் கட்டளையைச் சிரமேற்கொண்டு அவர்கள் நாடுபோய்ச் சேர்ந்தார்கள். தருமராசனை யிடைவிடாம லண்டியிருந்த பன்னீராயிரம் வேதியர்கள் இச்செய்தியையறிந்து சவுனகமுனி வனத்துட் பிரவேசித்தபோது, தருமராசன் தம்பியருட னெதிர்சென் றழைத்துவந் துட்காரச்செய்து தங்களுக்கு நேரிட்டவைகளையெல்லாம் ஆதியோ டந்தமாகக்கூறக்கேட்டு, தருமராசனைநோக்கி எல்லாந்தெரிந்த உமக்கு யாங்க ளென்னசொல்லக் கூடும், ஒருவனுக்குப் பெருமையுஞ் சிறுமையு மொருவழி நில்லா தென்பது நோக்கிப் பெரியோரும் 'குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர் நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்' என்றும், 'அறத்திடுபிச்சை கூவி யிரப்போர்-அரசோடிருந்தர சாளினு மாளுவர்" என்றும் பணித்திருப்பதால் இவைகளெல்லாம் தெய்வச்செயலா யமைவதேயல்லது மனிதருடைய செய்கையா லாவதல்ல, வருவதை யனுபவித்தே தீரவேண்டும், ஆனால் நல்லோர்க்குற்ற தீங்கு நெடுநாள் வருத்தாது, உங்களுக்கு நேர்ந்த துன்பத்தை நாங்களு மனுபவித்திருக்கின்றோ மென்றார்கள். அவர்கள் கொண்ட கருத்தை சிறிதுந் தட்டாமல் தங்களுடன் வசிக்கச் சம்மதித்துத் தமக்கு நேரிட்டிருக்கும் துன்பத்திற்கே கரையில்லாதிருந்தும் இவர்களைக் காப்பாற்றவேண்டியதைக் குறித்து வெயிலி லகப்பட்ட புழுப்போல் மனந்தளர்ந்துநிற்கையில், அவ்வனத்துவசிக்குஞ் சவுனக முனிவர் பாண்டவர்கள் தமது வனத்தில் வந்திருப்பதை யறிந்து அவர்க ளிருக்குமிடத்தை நோக்கிவந்தார். அதைக்கண்ட தருமன்முதலிய ஐவரு மெதிர்சென்று போய்த் துதித்து அவரது தாமரைபோன்ற பாதத்தைக் கண்ணினுஞ் சென்னியினு மொற்றிக்கொண்டு மனங்களித்துத் தமக்கு நேரிட்ட துன்பத்தை அவரிடந் தெரிவித்தனர். அதற்கவர் தருமராசனே! நல்லொழுக்க முடையார்க்கு நாட்டைவிடக் காடே சிறந்தது, அஃதெப்படியெனின்? மறுமைப்பயனை யடைவதற்கு தக்க இடம் காடேயாமென்று பெரியோர் கொண்டிருப்பது மல்லாமல் உனக்குமக்கருத்திருந்தும் யாதோ ஓர் துன்பமுன்னை வருத்துகின்ற தென்றனையென; அதற்குத் தருமராசனும் உலகில் அத்திமுத லெறும்பீறாயுள்ள உயிர்களைக்காக்க இறைவன் முதல்வனாயிருப்பினும், ஒருவனால் பலர்க்கும் பலராலொருவனுக்கும் சீவனம் நடந்துவருகின்றன. என்னொருவனால் சகோதரர்கள் நால்வரும் நெருப்பிற்பிறந்த பாஞ்சாலியும் சுகமிழந்ததெனக்கு வருத்தமன்று. என்னையடுத்திருக்கும் பன்னீராயிரம் வேதியர்களும் பசிப்பிணியால் வருந்துகின்றார்கள். அதற்கொருவகையுந் தெரியாமல் அரவின்வாய்ப்பட்ட தேரைபோல் வருந்து மெனக்கு வானோக்கிய பயிர்க்கு மழைவந் துதவியதுபோல் தேவரீர் இங்கெழுந்தருளியதால், அவருய்யுமார்க்கங் காட்டவேண்டுமென் றிறைஞ்சினர். அத் தருமனை நோக்கி, உம்மைப்போன்றவர்க்குற்ற வறுமை நீடு நில்லா. உமக்கொரு மந்திரத்தை யுபதேசிக்கின்றேன், நீர் ஆதித்தனைநோக்கி மூன்றே முக்கால்நாழிகை தவமிருந்தால் உமது மனோரதம் நிறைவேறுமென்று அம் மந்திரத்தைப் புகன்று விடைபெற்றேகினர்.

தருமராசன் முனிவருரைத்தவாறு மந்திரத்தைச் செபிக்கவே ஆதித்தன் ஒரு வேதியனுருக்கொண்டு தருமராசனிடந் தோன்றித் தன்னை வருந்திய காரணங்கேட்க, என்னைவந்தடைந்த பன்னீராயிரம் வேதியர்க்கும் பசிப்பிணி வருந்தாதிருக்கக் கிருபைபுரியவேண்டுமென்ன, சூரியன் மகிழ்ந்து அதிமாதுரியம்பொருந்திய திவ்யான்னங்களை நினைத்தபோதுதவும் ஒரு பாத்திரத்தைத் தருமராசனுக்குதவி,இப்பாத்திரம் நினைத்தபடி உணவிடும்,நீங்கள்வனத்திலிருக்குமளவும் வைத்திருந்து நகரத்திற்கேகும்போ தெம்மிடத்திற் சொடுத்துவிடு மென்று கூறிப்போனர். தருமராசன் அந்தப்பாத்திரத்தை வேதியர் கையிற் கொடுத்து, இப்பாத்திரமோ நினைத்தபடி உமக்கு வேண்டுமுணவை யளிக்கும், இதைப்பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு சீவனஞ்செய்து வாருங்கோளென்றுகூறித் தாங்களைவரும் தவவேடத்திற் குரிய கந்தமூலபலாதிகளைப் புசித்து அன்றிரவு தங்கி, மறுநாளுதயத்தில் அவ்வனத்தைவிட் டகன்று காடுமலைகளைத் தாண்டி வெயிலுக்கொதுங்கிச் சற்றிளைப்பாறி அதைநீங்கி யப்புறம்போகையிற் சூரியனும் மேற்கடலாழ்ந்தான். இதுநிற்க,

கிம்மீரணன்வதை.

அன்றிரவி லொருவனத்திற் றங்கினர்கள், அக்காடு பகாசுரன்றம்பி கிம்மீரணனுடையது, அவன் மனித ரரவங்கண் டடனே யங்கு வந்திருப்பவர்களைப் பார்க்கும்போது, ஐவர்களையும் பாஞ்சாலியையும் பாண்டவர்களென்றே நிச்சயித்துத் தன் தமையனுகிய பகாசுரனைக்கொன்ற வீமனைப் பழிவாங்கத் துணிந்து தான் கொண்டிருந்த கருத்து இன்றுதான் நிறைவேறிற்றென்று சந்தோஷித்து, யுத்தத்திற் காரம்பித்தால் சபமுமபசயமு மொருவர்பங்கல்ல, முந்தி இவ்வழகிய இரதிபோன்ற பெண்ணைக் கூடிச் சுகித்தபின்னர்ப் போர் செய்யலாமென் றாலோசித்து, அன்றிரவி லுண்டாயிருந்த இருளைத் தன் மாயையால் மிக்க காரிருளாக்கிப் பாஞ்சாலியைத் தன் விசாலமாகிய பருத்த தோண்மேற்றூங்கிக்கொண்டு ஓட, பாஞ்சாலி அபயமிட்டசத்தம் வீமன் செவியிற்புகுதாமுன்னமே கிம்மீரணன்மேற் பாய்ந்து மார்பில் ஒருதையுதைத்தான். அவ்வுதை நன்றாய்த் தாக்கவே பாஞ்சாலியைக் கீழே தள்ளிவிட்டுந் தானும் மூர்ச்சித்து வீழ்ந்தான். பூமியில் வீழ்த்திய பாஞ்சாலியை அர்ச்சுனன் தன் கைகளாற்றூங்கிக் கீழே இறக்கிவிட்டான். கிம்மீரணன் மூர்ச்சை தெளிந்தெழுந்து வீமனுடன் நெடும்போர் புரிகையில்,வீமன் தன்மனத்திலிவ னொரு பொருட்டோவென் றலட்சியஞ்செய்து கிம்மீரணன் சிரத்தைத் திருகி எறிந்துவிட்டு, அவன் சரீரத்தை இருபிளவாக்கி முன்னும் பின்னுமாய் மாற்றி எறிந்தான். இதுகண்ட தருமராசனும் வேதியர்களும் தவமியரும் வீமனை வாழ்த்திப் புகழ்ந்தனர்.

உறவினர்வருகை.

மறுநாட் காலையில் பருதிவனம்வந்து சற்றிளைப்பாறி அதைவிட்டகன்று, தைதவனஞ்சென்று அங்கு நீர்வள நிலவள மிகுந்திருக்கக்கண்டு நித்தியகரும முடித்துக்கொண்டு காமியவனஞ்சென்று அன்றைப் பகற்போது வேதியர்தமக்

குக்கிடைத்தபாத்திரத்தாற் போசனஞ்செய்தார்கள். ஐவரும் பாஞ்சாலியும் நீராடிப் பலாதிகளைப்புசித்துச் சுகித்திருந்தார்கள். இங்கிவ்வாறிருக்கையில், பாண்டவர்கள் வனம்புகுந்தசெய்தி உலகெல்லாம் பரவவே,இவர்களுக் கிஷ்டமான அனேக வரசரும், கண்ணபிரானும் பாஞ்சாலராசனும் பாண்டியனும்புத்தசன் னுத்தாராய் இரதகச துரக பதாதிகளோடு காமியவனமடைந்து, பாண்டுபுத்திரரையும் பாஞ்சாலியையுங் கண்டு வியாகுலித்துத் தருமராசனுல் நடந்தசெய்தி யனைத்து மறிந்தனர். பாஞ்சாலனே தருமராசனைநோக்கி,அரசர்கள் ஜயத்தைக் கருதினுல் யுத்தஞ்செய்து வெல்லவேண்டும்,அவ்வாறு செய்ய வலியில்லாவிட்டால் வேற்றரசரைத் தமக் குதவியாகக் கொண்டு வெல்லவேண்டும். அப்படியு மில்லாவிட்டால்,விஷம் சூதாடல் முதலிய மோசகிருத்தியங்களால் சயிக்கவேண்டும், மூன்ருவது கிருத்தியமாகிய சூதாட்டத்தைக் கொண்டு உங்களைச் சயித்தது ஒருபால் நியாயமுள்ளதேயாயினும்,அந்தப்புரத்திருந்த பாஞ்சாலியைத் துரியோதனன் துச்சாதனன் கர்னன் இவர்கள் சபையில் அவமானஞ்செய்தது தருமவிரோத மாதலால் அவருடன் சமர் புரிய எங்களுக் குத்தர வளித்தால் இக்கணமே அப்பாவிகளை வேரோடுங் கெல்லிவிடுகிறோ மென்றுகேட்கத் தருமராசன் தவிர மற்றநால்வரும் அக்கருத்துக்கிசைந்ததை யறிந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி தாமுங் கோபங்கொண்டவர் போல்வெளிக்கு நடித்துப் பாஞ்சாலன் முதலியவரசரைநோக்கி இத்தருமரோ நீதிக்குட்பட்டவர், மிக்க ஆற்றலுடைய நாலு தம்பியரும் இவர்சொல்லைக்கடவாதவர். ஆதலாற்றான் இத்துன்ப நேர்ந்தன. ஆயினு மிவர் புகழேபெறுவர். நீங்க ளிப்போது போரிடத் தொடங்குவது நியாயவிரோதமாய்முடியும், எப்படியெனின் துரோணுசாரியர்தீர்ப்பின்படி பதின்மூன்று வருடமுங் கானிற் கழிக்கச் சம்மதித்து அந்நாளாகாமுன்னமே அவருடன் சமர்க்கேகல் நியாய வழுவேயாம். அப்பதின்மூன்று வருடத்தையுங் கழித்து நாட்டிற்சென்றபின் அவர்கள் இவர்க்குரிய இராச்சியத்தைத் தராவிட்டால் நீங்க ளிப்போது கொண்டிருக்குங் கோபத்தை அவர்மேற் செல்லவிடுத்து இவர்கள் இராச்சியத்தையடையும்படி செய்யுங்கோளென்று கூறி, தருமராசனை நோக்கி நீர் பதின்மூன்று வருடம் வனவாசஞ்செய்யுமளவும் இளம்பஞ்சபாண்டவர்களைப் பாஞ்சாலனிடத்தும், அபிமன்னுவையும் சுபத்திரையையும் பலராமரிடத்தும், சித்திராங்கதையை அவள் தகப்பன் பாண்டியனிடத்தும் அனுப்பிவிட்டு நீங்கள் வனத்திலிருங்களென்று கூற அவர் கட்டளைப்படியே செய்தனர். அரசர்கள் யாவருந் தத்தம் பதிபோய்ச்சேர்ந்தார்கள்.

விதுரர்வரவு.

இங்கு துரியோதனுதியர்கள்; பாண்டவர்கள் ஏழைகளாகி வனத்திற் சென்றவுடனே துரியோதனன் தனக் கினிவருங்கேட்டை யுணராமல் சபா மண்டபத்தில் வீஷ்மர் துரோணர் கிருபர் விதுரர் முதலிய பெரியோரையும், மந்திரிகளையும் ஒருங்குவரச்செய்து,அவர்களைநோக்கி,என் கருத்தின்படி பாண்டவர்களைக் காட்டிற்கனுப்பிவிட்டேன், இனி அவர்கள் நாட்டை நாம்

ஆளவேண்டியதாகையால், இந்திரப்பிரத்தம் அதற்குத்தக்கதானஇடம், மய னால் நிருமித்த சபாமண்டபம்,மிக்க வுன்னதமா யிருக்கின்றது. நானவ்விடத் திற்போய் அந்நாட்டையாள யோசித்திருக்கின்றேன். நீங்களென்ன சொல்கின் றீர்களென்று கேட்க, அவர்கள் இவனோ அசுராமிசை,பாண்டவர்களோ தே வாமிசை,இவன் அங்குசெல்வதற்குத்தக்கவனல்லன்,இவனை அங்குபோகவிடா மற்கெடுக்கவேண்டுமென்றுன்னி, துரியோதனா! இவ்வத்தினபுர முண்டான கா லமுதல் இதையாண்ட அரசர்களெல்லா மிங்கிருந்தே காலங்கழித்திருக்க, மகாமண்டலேசுவரனாகிய உனக்குப் புராதனமாகிய இச்சமஸ்தானமே தகுந் தது,நீ இங்கேயேயிருக்கவேண்டும்,துரோணாசாரியனைஇந்திரப்பிரத்தத்திற்கனு ப்பி அரசகாரியங்களை நடத்தினால் நலமென்று கூறினர். துரியோதனனு மதற் கிசைந்து துரோணாசாரியனை இந்திரப்பிரத்தத்துக் கனுப்பிவைத்தான். திருத ராட்டிரன் ஐவர்கள் கூறிச்சென்றமொழியை நினைந்து நினைந்து துக்கித்து நமது புத்திரரெல்லாம் உயிர்நீங்கக் காலநேரிட்டதே! என்செய்வோமென் றேங்கி விதுரரைவரவழைத்து, காட்டிற்சென்ற பாண்டவர்கள் பதின்மூன்று வருடமுங்கழித்து நாட்டிற்குவருவார்களா? அல்லது அஷ்டைஸ்வரியத்திரு ந்து சகலபோகபாக்கியங்களையு மனுபவித்திருந்தவர்கள் காட்டிற்படும் துன்ப த்தால்தேகமெலிந்து மரித்துப்போவார்களா? அல்லது மறுமைக்குச் சாதன மாகிய வீட்டையிலிருந்துவிடுவார்களா? என்னகதியையடைவார்கள்; இதனுண் மையை எனக்கெடுத்துரைக்க வேண்டுமென்றான். அதற்கு விதுரர் முகத்தி லிரண்டு புண்ணையுடைய இக்கொடியேனுக் கிவ்வளவு அழுக்காறிருந்தால் மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை தானம் தவம் வலிமை பொறுமை அருள் முதலிய இக்குணங்களெல்லாம் சாலவமைந்த அம் மகா புருடர்க்கு யாவரை நிகர்சொல்லலாம், அவர் கோபித்திருந்தால் துரியோத னுதியர் பூண்டற்றுவிடுமே யென்று மனத்திலுன்னி,தருமமே மூர்த்திகரமாய் விளங்கும் யுதிட்டிரர் காட்டிலனுகினும் அஃது நாடேயாகும். மேலும் தெய்வ சகாயமுமிருப்பதால் தேகோபாதிகளுமுண்டாகா. பதின்மூன்று வருடத்தை யும் பதின்மூன்று நாளாகக்கழித்து உமதிடம்வந்து தம் மிராச்சியத்தைக் கேட் பார்கள்,துர்ப்புத்தியுள்ள உமது புத்திரனாகிய துரியோதனன் ஒப்பான். வீமன் செய்த சபதப்படி துரியோதனன் முதலிய உமது நூறு புதல்வர்களையும் கொல்வான்,அர்ச்சுனன் கர்ணனையும், நகுலன் சவுபலனையும், சகதேவன் சகுனியையு முடித்து பாஞ்சாலியின் கூந்தலைமுடிக்கச் செய்வார்களென்றார். இதைக்கேட்ட திருதராட்டிரன் எம்மக்களுக் கிவ்வகையானகெடுதி நேரிடா திருக்கு முபாயங் கூறென்றுகேட்க, பாண்டவரை வரவழைத்து அவர்கள் நாடுநகரங்களை அவரிடமொப்புவித்தால் உமக்கும் உமது புத்திரருக்குஞ் சுக முண்டாம் என்ன, ஆதியில் என் புத்திரர்க் கெவ்வளவா யெடுத்தோதியும் கேளாமல் அலட்சியஞ்செய்தது உனக்குத் தெரிந்ததுதானே, வேறேதேனு முபாயமுண்டானால் சொல்லென்றான். விதுரர் உமது குலத்துக்கு வேர்ப் புழுவான துரியோதனனைக் கொன்றுவிட்டால் மற்ற பிள்ளைகளும் நீரும் க்ஷேமமடைவீர்கள். இதுதானெனக்குத் தோன்றிய நல்லுபாயமென்றார்.

இம்மொழியைக்கேட்ட திருதராட்டிரன் கோபங்கொண்டு அடாபாவி! பெற்ற பிள்ளையையுங் கொல்வாருண்டா? துரோகி என்னமொழி யுரைத்தாய், உன்னைப் புத்திசாலியென்று கேட்டதற்கு யாவரும் நிந்திக்கத்தக்க வார்த்தையைக் கூறினையே, நீ மகாதுட்டன், இச் சமூகத்திராதையென்று கடுஞ்சொல கூறவே, விதுரர் யான் உள்ளதை உள்ளபடியாகக் கூறியும் காரணமில்லாமற் கோபங்கொண் டென்னைத் தூஷித்தலுந் தகுதியோ "இனத்தாற்றியெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச் - சீறிற் சிறுகுந் திரு." எனப் பெரியோர் பணித்தமையறியாமற் பேசினதால் இனிவருங்கெடுதியை நீரோ அனுபவிப்பீர் என்று அவ்விராசசமூகத்தைவிட்டுத் தன்னில்லிற்குவந்து பிரயாணத்துக்கு வேண்டிய முயற்சிசெய்துகொண்டு ஐவரிருக்கும் காமியவனம் வந்துசேர்ந்தான்.

விதுரரைக்கண்ட ஐவரும் எதிர்கொண் டழைத்துவந் துபசரித்த பின்னர், விதுரர் தனக்கும் திருதராட்டிரருக்கும் நடந்த சம்பாஷணைகளைத் தெரிவித்து அங்கிருப்பதைவிடக் காட்டில்வசிப்பதே நலமென்றெண்ணி வந்தேனென்றார். தருமரோ தம் பெரியதகப்பன்மீது விதுரருக்குண்டாயிருக்குங் கோபத்தைத் தணிக்கும்பொருட்டுச் சில நீதிவசனங்களை யுரைத்துச் சமாதானஞ்செய்து தங்களிடம் வைத்துக்கொண்டார். இவ்வாறிருக்கையில் அங்கே அத்தினபுரத்தில் திருதராட்டிரனுக்கு விதுரர்பாலிருந்த கோபந்தணிந்து அவர் சொன்ன மொழிகளைச் சிந்தித்து அஞ்சி, தன்னால் நேரிட்டவருத்தத்தையொழிக்கும்பொருட்டு அவரையழைத்துவரத் தூதுவரை ஏவினான். விதுரர் காமியவனஞ்சென்றதைத் தூதுவராலறிந்து உடனே தன்னுஸ்தானமந்திரிகளில் சஞ்சயரையழைத்து விதுரனை எவ்வகையாலேனும் சமாதானப்படுத்தி இங்கழைத்துவரவேண்டு மென்றான். அங்ஙனமே சஞ்சயன் காமியவனஞ்சென்று ஐவரால் உபசரிக்கப்பட்டுத் தருமராசனையும் விதுரரையும் நோக்கிச் சந்திரகுலத் தரசனாகிய திருதராட்டிரனுக்கு விதுரர் முதன்மந்திரியாயிருக்க, அரசன் ஒருவேளை கோபித்தால் அதையொரு நிபமாகக்கொண்டு அரசனைப் பிரிவது தகுதியா? நீங்களே யோசியுங்கள், மகாராசர் விதுரருடைய வரவிற் கெதிர்பார்த்திருக்கின்றார். அவர்மனம் மகிழும்வகையை நாடுங்களென்றுகூற, தருமராசன் விதுரருக்குச் சில பிரியவசனங்களைக்கூறி அரசனிடஞ் செல்லுமென்றார். விதுரரு மதற்கிசைந்து சஞ்சயனுடன் அத்தினபுரத்துக்குவந்து திருதராட்டிர மகாராசனைக்கண்டு வணங்கித் தன் பெயரைத் தெரிவித்தார். சஞ்சயனை யுபசரித்தனுப்பிவிட்டு விதுரரைத் தன்னருகில் உட்காரச்செய்து அரசருக்கு உயிர்த்துணை மந்திரிகள், மந்திரிகள் அரசனுக் கிடுக்கண் வந்த காலத்தும் அவன் வேர்வைசிந்தினவிடத்துந் தங்களுதிரத்தைச் சிந்திச்சமயோசிதம்போல் நீதிகளையெடுத்தோதி அரசனை நல்வழியிற் கொணரவேண்டும், அரசன் மந்திரிசொல்லைமீறிக் கடுஞ்சின மடைவானாகில் மந்திரி அக் கோபத்திற்குள்ளாகித் தன்னுயிரை அரசனுக்குத் தத்தஞ்செய்வானே யன்றி அரசனைவிட்டுப் பிரியான்; நீ இச்சமஸ்தானத்திலிருக்கும் மந்திரிகளுக்குத் தலைவனாகவும் இவ்வரசுக்குரிய எனக்குச் சகோதரனாகவும் இருக்க, கோபத்தால் நான் உன்னை யிகழ்ந்தால், அதற்காக என்னையும் இழந்து நகரத்தையும் வெறு

த்து ஐவரிடத்திற் சென்றனையே! எல்லாந் தெரிந்த உனக்கு நான் சொல்ல வேண்டியதென்னோ வென்றபோது விதுரருக்குத் தன் தமையன் மீதிருந்த கோபந்தணிந்து அதுமுதல் அவனைவிட் டகலாதிருந்தனர். இது கிடக்க ;

துரியோதனன் சபை.

விதுரர் திருதராட்டிரனை வெறுத்து ஐவரிருக்குங் காமியவனஞ்சென்று திரும்பிவந்த செய்தியைத் துரியோதனனறிந்துகடுஞ்சினமடைந்து,மறுநாளுதயத்தில் பீஷ்மாச்சாரி, கிருபாச்சாரி முதலிய பெரியோர்களைச் சபைகூட்டுவித்து, விதுரனுக்கும் தன் பிதாவுக்கும் நடந்த விஷயங்களையும் விதுரன் ஐவரிடஞ்சென்று பின்பு தன்தகப்பனால் இங்குவந்ததையு முரைத்து, இல்வாஸ்தானத்தின் செல்வங்களை யனுபவித்தும், பகைவராகிய ஐவர்பட்சமாய் இருக்கிற விதுரர் செய்கையைப்பற்றி என்ன தீர்ப்புச்சொல்லுகிறீர்களென்று கேட்டான். இதைக்கேட்ட சபையார், மனம்வருந்தித் தேனில் விழுந்த ஈயைப் போல மயங்கியிருக்கையில் தற்செயலாய்ச் தவசிரேஷ்டராகிய அமித்திரிய முனிவர் தமது யாத்திரையின் மார்க்கத்தில் ஐவர்வனவாசம் புகுந்ததைக் கேள்வியுற்று அதற்குக் காரணம் துரியோதனனே யென்றுணர்ந்து, அவனைச் சமாதானப்படுத்தி முன்போல் பாண்டவர்களையும் கவுரவர்களையுஞ் சிநேகஞ் செய்விக்கக் கருதித் துரியோதனன் சபைக்கு எழுந்தருளினர். துரியோதனன் அவரை யுபசரித்து,வந்தகாரியத்தைவினவ அமித்திரியமுனிவர் துரியோதனனுக்குப் பலஆசிகள்கூறி,யான் பல திவ்வியக்ஷேத்திரங்களிற் சஞ்சரித்துக் காமியவனத்தில் உன் சிறியதகப்பன் பிள்ளைகள் பஞ்சைகளாகி வனவாசஞ்செய்வதையறிந்து விசாரித்தபோது, அவர்கள் காடுறைந்ததற்குக் காரணம் நீயாக என் புத்தியிற்பட்டு இவ்விடம்வந்தேன், நான்சொல்வதை நன்றாய்க்கேள்,உலகம் அநித்தியமாகுங்காலத்தில் சீவன் நித்தியமாகா, அதிலும் காயம்நீர்மேற்குமிழி,மானிடதேக மெடுத்தவர் புகழையே சம்பாதித்தல்வேண்டும், நீதருமராசனுக்கு விரோதியல்ல,சகோதரன். பாண்டவரைப் பகைப்பார் ஒருவருமிலர்,யாவரேனும் பகைப்பாரானால் அவரது நன்னடக்கையே அப்பகையைவெல்லும். அவர்கள் எதிர்க்கும் பட்சத்தில் அவரது வல்லமையை யாரா லளவிடக்கூடும். அவர்கள் மானிடச்சட்டை தரித்திருப்பினும் தேவ அம்சமாவார். சத்தியத்திற்கு மாறுபடாமல் பெரியோர் கட்டளைப்படி காட்டிலுறைகின்றனர்; நீ இனி அவர்களை வஞ்சியாமல் இங்குவரவழைத்து அவர்கள்சொத்துக்களைக் கொடுத்துவிட்டு உனக் குரிய இராச்சியத்திற் செங்கோல்செலுத்தென்று பல நியாயங்களையும் எடுத்தோதினர்.

இம்மொழியைக்கேட்ட துரியோதனன் கோபமடைந்து, சபையிலுள்ள பெரியோர்களே! இம் முற்றத்துறந்த பெரியவர், உலகத்தார் எக்கெதிகெட்டால் நமக்கென்னென்றிராமல் ஐவரையும் என்னையும் உறவுசெய்விக்க முயல்வதென்னை? நாங்களிருவரும் சமாதானமானால் இவர்க்கதனாற் பயனென்னை, இவர் சொல்லியதை யோசித்தால் விதுரர் பாண்டவர்களிடஞ் சென்றபோது யாதேனு மொரு யுக்திசெய்து வைத்திருப்பான்போற் காண்கின்றது, அதை

நம்பிப் பாண்டவர் இம்முனிவரைத் தூதனுப்பினார்கள், இராசராசாக்கள் சொல்லிப்புங்கேளாத நான் இம்முனிவாக்கியத்துக் குட்படுவேனோ? என்று முனிவரைநோக்கி, உமது காவிகாம்பர தண்டுகமண்டலத்தைக்கண்டு நான் பூசித்தழைத்தேன்,உம்மை ஐவரதுதூதுவரென்றறிந்திருந்தால் இங்குட்காரச் செய்பேன் இதைவிட்டெழுந்திருமென்ன,அமித்திரியர் சினங்கொண்டு அடா பாவி துரியோதனா,கல்விச்செல்வமும் பொருட்செல்வமும் வீரச்செல்வமு முடைய ஒருவனுக்குஅடக்கமுடைமைவேண்டும்,அஃதில்லாவிட்டால்எந்தச் செல்வங்களும்பயன்படமாட்டா. உனக்கிம்மூன்று செல்வங்களுமிருக்கின்றன வென்று மமதைகொண்டிருக்கின்றாய்! அஃதுன் னுயிருக்கு வாளாமுடியும்; நீ என்னையொரு துரும்பாகப் பாவித்து இகழ்ந்தாய், " துறவிக்கு வேந்தன் துரு மபு" என்னுமொழியை யறியாயோ? நியாயத்தை யெடுத்துக்கூறிய என்னை இகழ்ந்தமையால் உமக்கு நேரிடப்போகும் யுத்தத்தின் முடிவில் வீமனால் உன் தொடைமுறிந்துசாகக்கடவாய் எனச்சாபங்கூறி தக்ஷணஞ் சபையை விட் டகன்றார்.

தவத்திற் சிறந்த அம்முனிவரால் நேர்ந்த சாபத்துக் கஞ்சாமல், பாண்டவர்க ளேழைகளாகி வனத்திற்சென்றும் அவர்கள் துர்க்குணத்தைவிடாமல் முனிவனையனுப்பி என்னைச் சாபத்திற் குள்ளாக்கினர். அவ்வைவரையும் இனி யோர் நொடிப்போதும் உயிரோடிருக்கப்பாரேன்,பெரியோராகிய நீங்க ளென்னைத் தடுக்காதிருக்கப் பிரார்த்திக்கிறேனென்று கூறி, துச்சாதனன் கர்ணன் சகுனி இம்மூவரையும் படைத்துணையாகக் கொண்டு யுத்தசன்னுத்தனுய்ப் பாண்டவர்மீது போர்க்கெழுந்து போம்வழியில் தவத்திற் சிறந்த வேதவியாசர் துரியோதனனெதிர் கண்களுக்குப்புலப்பட்டார். உடனேஇரதத்தைவிட்டிறங்கிக் கைகூப்பிநின்றான்; அவனை ஆசீர்வதித்துத்துரியோதனா! நீ சகலகலை வல்லவனாயிருந்தும் பூரியோர்போற் சினங்கொண்டு காலமல்லாக் காலத்திற் போர்க்கெழுதல் உன்போன்ற வீரனுக்குத் தகுதியாமா? அரசர்களுன்னை மதிப்பார்களா! வீடுமபோசித்துப்பார், துரோணாச்சாரி தீர்ப்பின்படி பதின் மூன்று வருடத்தையுந் தொலைத்துவரட்டும், அதன்பின்பு உன் கருத்தின்படி நடவென்று தடுக்க, வம்ச கர்த்தாவும் குலகுருவுமாகிய வியாசர் கூறியதைக் கேட்டவுடனே அமித்திரியமுனிவரால் நேர்ந்த சாபத்தை நினைந்து, இவர் சொல்லையுங் கடந்தால் இவராலும் சாபநேரிடுமெனவஞ்சி வியாசர் கட்டளைப் படியே சேனைகளைத் திருப்பிக்கொண்டு அத்தினபுரமேவந்து சேர்ந்தான். பின்பு வியாசர் காமியவனத்திற்குச்சென்று ஐவராலும் பாஞ்சாலியாலும் பூசிக்கப்பட்டு அவர்கட்குப் பல ஆசிகள்கூறி நின்றார். அப்படி நின்றவரைத் தருமராசன் நோக்கி இந்திரப்பிரத்தத்திருந்த எங்களை அத்தினபுரத்துக்கழைப்பித்துச் சகுனியுடன் சூதாடச்செய்து பின்பு வனமேக உத்திரவளித்தனர் கள். என்னொருவனால் சகோதரரும் பாஞ்சாலியும் மிக்க வருத்தமடைகிறார்க ளென்றுசொல்ல, தருமநந்தனா, சென்றதை நினைத்து வருந்துவோனும்,இனி வருவதைக்கருதி மகிழ்வோனும் மனிதருட் பதராவார். தற்கால மனுபவிப்பது சஞ்சலமாயிருந்தாலும் அதனையே நன்மையெனச்சகித்திருக்கவேண்டும்.

அவனையே புருடரத்தினமென்பர். அவனையே மனிதருள் தேவனென மதிக்கப்படுவார்கள். உனக்குத் தெரியாத நியாயமொன்றுமேயில்லை, முற்காலத்தில் சக்கரவர்த்திகளில் ஒருவனாகிய நளச்சக்கரவர்த்தி புஷ்கரனுடனே சூதாடித் தன் அரசிழந்து காட்டிற்சென்ற கதையை நீ கேட்டிலையோவென்று கூறிப் பின்னுஞ் சொல்லுகிறார். இச் சந்திரவமிசத்தில் உங்கள் தலைமுறை வரையில் கொலை களவு காமம் சூது முதலிய அக்கிரமங்கள் கிடையாது, இத் துரியோதனன் காலத்திலோ முற்கூறியகெடுதிகள் ஆதித்தன்போல் விளங்கி வருகின்றன. இனி நடக்கும் விபரீதங்களைத் தெரிவிக்கின்றேன். நீங்கள் சுகப்படவேண்டினால் என் சொற்கொண்டொழுகின் உங்கள் பகைவரைமுடித்து முன்போற் சுகித்திருப்பீரென்று கூற, தற்காலத்தில் தெய்வாதீனத்தை நம்பியிருக்கு மெங்களுக்குக் குலதெய்வமாகிய தங்கள் திருவாக்கை மீறுவோமா? தாங்கள் கிருபைகொண்டு இனிச் சம்பவிப்பவைகளையும் அதற்கு நாங்கள் எச்சரிக்கையாய் நடக்கவேண்டியவைகளையும் திருவுளம் பற்றவேண்டுமென்றிறைஞ்ச, வியாசரும் சொல்லலாயினர்.

துரியோதனனே அசத்தியன், துரோணாசாரியர் தீர்ப்பின்படி பதின்மூன்று வருடமுங் கழிந்தபின் உங்கள் நாட்டைக்கேட்டால் கொடான். போர்முனையில் தன்னுயிரை இழப்பான். அவனுக்குச் சுயபலமிருப்பதனோடு சேர்க்கைப் பலமு மிருக்கின்றது, அவனைச் சாமானியனென் றெண்ணப்போகாது. நீங்கள் வெற்றிகொள்ளவேண்டினால் மலையைச் சிலையாக வளைத்த சாம்பவமூர்த்தியின் திருக்கரத்தி லிருக்கும் பாசுபதாஸ்திரத்தைப் பெறவேண்டும். அதைப்பெற்றால் துரியோதனாதியரை இலேசாய் வெல்லலாம். அதைப் பெறத்தக்கவன் அர்ச்சுனனே. அவனே தவத்திற்குச்செல்லவேண்டுமென்றார். அருகிலிருந்த அர்ச்சுனன் வியாசரைவணங்கி, சுவாமீ தங்கள் திருவாக்கினால் என்னைத் தவத்திற்கு யோக்கியனென்று சொல்லப்பெற்ற பாக்கியமே பாக்கியம் என்று வணங்கி நின்றான். வியாசர் அர்ச்சுனனை நீராடிவரச்செய்து ஒரு மந்திரத்தை யுபதேசித்து வெள்ளியங் கிரிப்புரமெய்தி தேவதேவனை மனனஞ்செய்து பாசுபதாஸ்திரம் பெறக்கடவாயென் றாசிகூறி, தருமராசனை நோக்கி உனக்கு நேர்ந்த துன்பத்தை யாவரிடத்துஞ் சொல்லிக்கொள்வது அரசர்க்கிழுக்கெனக் கூறிச் சென்றார்.

பின்பு தருமராசன் முதல் யாவரும் மனக்களிப்புற்று அர்ச்சுனனைச் சிலாகித்துப் புகழ்ந்து, குரவனுக்கினைப்படி பரமனருள்கொண்டு பாசுபதாஸ்திரம் பெற்று வருவாயென்று கூறினர். அர்ச்சுனன் தவத்திற் குரியவைகளைப் பூண்டு, அம்புப்புட்டிலை முதுகிற்றூங்கி, காண்டீபங் கைக்கொண்டு, தமயன்மாரிருவரையும் வணங்கி, தம்பியர்க்குப் பிரியவசனஞ்சொல்லி, நல்ல சுபமுகூர்த்தத்தில் விடைபெற்றுக் காமியவனத்தைவிட் டகன்று, காடு மலைகளைக் கடந்து வடதிசையே நோக்கிச் சென்று இரவென்றும் பகலென்றுங் குறிக்கக் கூடாத வனத்திற்போய் அதைவிட்டு நீங்கிப் பிரம விஷ்ணுக்க ளிருப்பிடமாகிய மகாமேருவையும் வைகுண்டத்தையுந் தரிசித்து, அதைவிட் டகன்று

உத்தரமுடிவைக்கண்டான். அத்திசையிலுள்ள இமாசல மென்னு மரசவெற் பையடைந்து பார்வதியைப் பெற்ற குன்றென்று மிக்க பத்தியோடு போற்றி அங்குலவு மிருகத்தின் நற்குணங்களையுந் தேவகன்னியர் மிக்ககளிப்புடன் விளையாடித் திரிவதையுங் கண்டு மகிழ்ந்து ஆகவனீயம், தக்ஷணாக்கினி, காருக பத்தியம் என்னு முத்தழலைவளர்த்து யாகஞ்செய்யும்முனிவரது அழகிய தாம ரைபோன்ற பாதங்களைத் தன் சிரமேற்கொண்டு வணங்கி மீண்டு எவ்வுயிர்க்கும் இறைவனாகிய பரமசிவ னுறையுங் கயிலையையணுகி நாற்றிசையு நோக்கிச் சாம்பவமூர்த்தியின் திருவுருவத்தை மனத்திடங்கொண்டு அங்கு பல நிலைகளில் நின்று தவம்புரிவாரைத் தரிசித்து கயிலையின் தென்றிசைப்புறத்தே அர்ச்சுனன் தவநிலையொன் றியற்றி அங்குள்ள திவ்ய நதியில் நீராடி வேத விதி பிசகாமல் சகல வினைகளைப் போக்கும் திருநீற்றை, உச்சி நெற்றி மார்பு உந்தி முழந்தாள் இருதோள் இருமுழங்கை இருகனுக்கை இருசெவி ஆகிய இவ்வுறுப்புக்களில் அததற்குரிய மந்திரங்களை யுச்சரித்தணிந்து பஞ்சாக்கினி வளர்த்தி, அதன் மத்தியில் ஒரு பாதத்தைப் பூமியிலூன்றி மற்றொரு பாதத்தை யதன்மீது மடித்துவைத்துச் சூரியனைக் கவர்வான்போல் தன்னிரண்டு கரங்களையும் நீட்டி இமையா நாட்டங்கொண்டு காண்டீவமும் அம்புப் புட்டிலும் தோளிற் றொங்கும்படி நிலைத்து நின்று கயிலைக் கிறைவனைத் தன் மனத் திருத்தி அரகர சிவவென்று அவர் திருநாமங்களை யெடுத்தோதி ஓலமிட்டுச் சித்திரப்பர்வையேபோ லசைவற நின்றான்.

இவ்வாறு அர்ச்சுனன் தவ வலியையும் பெருமையையும் அவன் சிந்தையின் நிலைமையையும் ஆயிர நாவுடைய ஆதிசேடனாலுஞ் சொல்லுதற் கருமையென்றால் என்னாற் சொல்லத்தக்கதோ? அவனைச் சூழ்ந்திருந்த பஞ்சாக்கினியின் வெப்பத்தால் மரம் செடி கொடிகளெல்லாம் கருகிப்போயின வென்றால் அவனுடல் எவ்வகையாயிருக்கவேண்டும். அதை நீரே யோசியும், முக்கட்பெருமா னருளாலோ! அல்லது தீக்கடவுளுக்குக் காண்டவவனத்தை பசிக் களித்தவ னென்னும் கிருபையினாலோ அவ்வக்கினி சுடப்பெறாமல் சலக்கோடைமத்தியி லிருப்பதுபோல் அசைவற நின்று பரமசிவத்தின் அள விறந்த குணங்களைத் தியானித்துக்கொடிய தவத்திருந்தான். இதுகிடக்க;

அர்ச்சுனன் தவ நிலைமையை
இந்திரன் சோதித்தல்.

தேவேந்திரன் தனது சாரணர்களால் அர்ச்சுனன் தவஞ்செய்தலை யறிந்து அதைப் பரிசோதிக்கக் கருதி வியாழபகவானிடந் தெரிவிக்க, அவர் அர்ச்சுனன் மானிடச்சட்டை தரித்தவனாயினும் ருத்ராம்சமானதால் அவன் தவத்தை யழிக்க உன்னாலும் மற்றியாவராலு மாகாது, ஆயினு மொருகை பாரென்றார். இந்திரனும் மேனகை ஊர்வசி அரம்பை திலோத்தமை என்னும் நான்கு தேவப்பெண்களை யழைத்து நீங்கள் அர்ச்சுனன் தவஞ்செய்யு மிடமேசென்று உங்களுக்குள்ள சமர்த்தால் அவன் மனத்தைக் கொள்ளை

கொண்டுஅவன்கொண்டிருக்கும்நிலையையழித்து வாருங்கோளென்றேவினன். அவர்களு மப்படியே அர்ச்சுனனிடம்வந்து காமனை நினைந்தார்கள். அவன் தன க்குரிய மலர்க்கணையைக் கைக்கொண்டு சேனையுடன் புறப்பட்டு வந்து சேர் ந்தான். கந்தனைப்பெற்ற கன்னியையோர் பாகத்துடைய கண்ணுதற் கெதிரே செந்தமி ழுரைத்த குறுமுனியிருக்கும் மலையிடத்திருந்து தென்றற் காற்று வீசின. சந்தனங் கமழ்ந்தன. வண்டுகள் நறிய மலரிலுள்ள மதுவை யருந்திச் செவிக்கின்பத்தைத் தரும் நல்ல இசைகளைப் பாடின. குயில்க ளிசைத்தன. இவ்வித காமத்தைப்பயக்கும் வசந்த காலத்தில் தேவப்பெண்கள் அர்ச்சுனன் முன்னின்று பந்தடிப்பர், அம்மானை யெறிவர், கழங்காடுவர், இவர்கள் குயி லேபோற் கூவுதலைக்கண்ட குயிலினங்களெல்லாம் ஒருங்குசேர்ந்து வந்து காணுமல் ஏமாப்புண் டேகும். பைங்கிள்ளைகளையு மழைப்பர், மயிலினம் நடிக்க, தாங்களும் வண் கலாப மணியணியினது ஒலியெழ நடிப்பர். கச்சா லிறுகப்பிணித்த பூரணச் சந்திரனைப்போல் வட்டவடிவாய்ப் பிரகாசிக்கும் தங்கொங்கையை நெகிழவிட்டுப் பின் துகிலால் மறைப்பர். கரிய குழலை யவிழ்த்து நாலவிட்டுப் பின்பு முடிப்பர். உத்தரீயத்தைக் கழற்றி ஆகாயத்தி லெறிந்து கீழேவிழாமற் பிடித்துப் பின் தரித்துக்கொள்வர். அவர்கள் துகில் நனையும்படி நறுஞ்சுனையிற்படிந்து அர்ச்சுனன் முன்வந்து அங்கங்கள் தெரிய நடிப்பர். மிக்க மணமுடைய புழுகு சந்தனம் பனிநீர் முதலியவைகளைக் கொண் டவன்மீதெறிவர். மைதீட்டிய புருவத்தையுடைய வாள்போன்ற கண்களா லவனை மருட்டுவர். பண்ணென்னு மிராகத்தை இன்னிசைவழி யே பாடி வீணையை மீட்டுவர், புள்ளாங்குழ லூதுவர். நறியமலர்களைச் சோ னைமாரிபோற் பொழிவர். இவ்வாறு கண்டவர் மனத்தைக் கவரும் தெய்வப் பெண்கள் கோடிவிதஞ்செய்தும் சித்தத்தைச் சிவன்பால்வைத்த அர்ச்சுனன் தம் வலையிற் சிக்குணுதிருத்தலைக் கண்ட இரதிகேள்வன், தனது வெவ்விய கணையில் ஐந்து பூக்களைத் தொடுத்து அவன் மார்பிலும் உள்ளத்திலும் தைக் கச் செய்தும், கூற்றுவனையுதைத்த அழகிய பாதத்தை யுடையானும், மிக்க வலியமைந்த நாகத்தி னுரியைத் தரித்து, விபூதியைத் தேகமெங்கு முத்தூள னஞ் செய்து ஒற்றைப்பிறையை யணிந்து அனலுமிழ்கின்ற கண்களை யுடை யானும் ஒள்ளிய நுதலையுடையானும் கொன்றைமாலையை யணிந்த நீண்ட சடைக்கற்றையையுடையானுமாகிய நீலகண்டப்பெருமானையல்லதுவேறுவிட யத்திலே தன்புத்தியைச் செல்லவிடாம லோவியம்போலசைவற நிற்பதையறி ந்த தேவகன்னியரும் இரதிகேள்வனும் இவ்வகையான மகானுபாவனை நாமின் னும் சேட்டைசெய்திருந்தால் என்னகெடுதி விளையுமோவென்றஞ்சி, நாண முற்றுஉடல்குன்றி யாவரும் இந்திரனிடமேசென்று அம்மகானுபாவனது தவ நிலையைக்குலைக்க எங்களாலொருக்காலு முடியாதென்றூர்கள். இதைக்கேட்ட வானவர்பெருமான், தன் புதல்வனதுகருத் தின்னதென்றுணருமாறு அவன் தவமியற்று மிடத்தேவந்து தன்னுருங்கரந்து விருத்தத் தன்மையையுடைய முனிவர்வேடங்கொண்டு விசயனை நோக்கி நீ எதுவேண்டி யாரைநோக்கித் தவம்புரிகின்றனை யென்னலும், அதற்கு இச் சூதறியாமல் முனிவனை

நோக்கி குற்றமில்லாத மனத்தையுடையானும் கருணையொழுகும் முகத்தையுடைய பார்வதியம்மையை இடப்பாகங்கொண்டானுமாகிய ஈசன் என்னிடம் வருமளவும் இத்தவம்புரிவேனென்னலும், விருத்தமுனிவன் நகைத்து, அருமறைகளும்முற்றத்துறந்தபெரியோரும் ஞானிகளுங்காணவொண்ணாத அப்பரமனை அரசனாகிய நீகாணவல்லதோ! "கிட்டாதாயின் வெட்டனமற." என்னுமொழியை நீ யோர்ந்தாயில்லை! அந்தோ! அனிச்சம் பூப்போன்ற உன்னுக்கையை இத்தீயிடைவைகி மெலிந்துமுடிவில் அவலமாய்ப்போவையே யல்லது பயனடைவோமென் றெண்ணவேண்டாமென்று கூறிய விருத்தனை நோக்கி யான் நாடிவந்ததுகிறைவேறுதமுன்னம் இதைவிட்டகலேன், காயம் அநித்தியமென்பிரோல் காயத்துக் கநித்தியம்வந் தழியு மளவும் இம்முயற்சியிலேதானிருப்பேன். நீர் வயது முதிர்ந்த பெரியோரா யிருந்தும் எம்போன்ற சிறுவரிடம் பயனில்லாச் சொற்களைச் சொல்லுதலும் நீதியோ? இதுபற்றி ஆன்றோரும் "நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர் - பயனில சொல்லாமை நன்று" எனக் கூறியிருப்ப தறிந்தும் இப்படிச்சொல்லுவ தழகோவென்றான். இவ்வாறு சொல்வதைக் கேட்ட வேதியனாகிய இந்திரன் மனத்திற் களிப்புற்று வேதியவுருக்கரந்து தன் பழய படிவங்கொண்டு காட்டி அர்ச்சுனனைப் பலவாறு புகழ்ந்து நீ சாம்பவமூர்த்தியைக் கண்டு தரிசித்து உன்னிஷ்டப்படி பாசுபதாஸ்திரத்தைப் பெறக்கடவாயென் றாசிகூறித் தன்னிருப்பிடஞ் சென்றான். அர்ச்சுனனும் முன்னிருந்த நெறியிலேதானே நின்றனன். இதுநிற்க;

துரியோதனன் சபை.

கொடுஞ் செய்கைக்கென்றே யவதரித்த துரியோதனன், மந்திரி பிரதானி தண்டத்தலைவர் யூகத்தலைவர் குருக்கள் முதலிய பெரியோர்கள் நிறைந்திருக்கும் சபையினிடத்து முக்காலமுமறிந்த நாரதமுனிவ ரெழுந்தருளினர். அவரைத் துரியோதனன் எதிர்கொண்டுசென் றுபசரித்து சுவாமீ! தங்களைப் போன்ற சிறந்த முனிவர்கட் கெல்லாம் ஓர் பூஷணம்போன்ற பாண்டுமக்கள் இந்திரப்பிரத்தத்தைவிட் டிங்கேவந்து என் நல்லம்மானாகிய சகுனியோடு வலியச் சூதாடி நாடுநகரமுதலியவையெல்லாந் தோற்று, பெரியோருடைய அநுக்கிரகத்தைப் பெற்றிருந்தும்ஐயோ அவர்கள் ஏழையராய் வனத்திற்கேகினார்களே! அவரிப்போதடைந்திருக்கும் க்ஷேமமேதேனும் தங்களுக்குத்தெரிந்திருந்தால் அடியேனுக்குத் தெரியச்சொல்ல வேண்டுமென்றான். அதைச் செவியுற்ற நாரதமுனிவர் சற்றாலோசித்து இவன் கொடிய துன்மார்க்கன், நம்மைச் சூசனைபாக இகழ்ந்து பேசினானென் றுணர்ந்து இத்தருணத்தில் உண்மையை வெளிப்படுத்தினால் இவன்கொண்டிருக்குஞ் செருக்கடங்குவதல்லாமல் இவனுக்குத் துணைவனும் தேவகண்டகனுமாயுள்ள மூகாசுரனும் நாசமடைவானென்றெண்ணி துரியோதனனைநோக்கிச் சொல்கின்றார். அப்பா துரியோதனா, பாண்டுமக்களைவருள் தருமன் வீமன் நகுலன் சகதேவன் பாஞ்சாலி யாகிய இவர்கள்செய்தி எனக்குத் தெரியாது. நடுப்பிறந்தோனாகிய அர்ச்சுனன் தன்பகைவரை வெற்றிகொள்ளும்பொருட்டு கயிலைமலைச் சாரலில்

பாசுபதாஸ்திரம்பெறப் பரமனை நோக்கித் தவஞ்செய்கின்றானென்னும் செய்திமாத்திரம் எனக்குத் தெரியும்,இதைக்குறித்து நீசாக்கிரதையா யிருக்கும்படி அறிவிக்கவந்தேனென்று கூறி அவனிடம் விடைபெற்றுச் சென்றார்.

துரியோதனன் நாரதர் சொன்னதைக் கேட்ட மாத்திரத்தில் இடியேறுண்டவன்போல் நடுநடுங்கி சபைகலைந்த பின்னர் அந்தப்புரஞ்சென்று தான் பூர்வசன்மத்தி லசுரராசனாகையால் மூகாசுரனென்னு மோரசுரனைவர நினைத்தான். அவ்வசுரனு மக்கணமே இவனெதிரேதோன்றிவணங்கிநின்றான். அவனை நோக்கி என் பழையநண்பனே! பகைவனாகிய அர்ச்சுனன் என்னைக் கொல்லுதற்பொருட்டாய்ப்பாசுபதாஸ்திரம்பெறப் பரமனைநோக்கித் தவஞ்செய்கின்றானெனக் கேள்விப்பட்டேன், அப்படியவன் பெறுமுன்னமே உன்னுருக்கரந்தோர் பன்றிரூபங்கொண்டு கயிலையிற் சென்று எவ்விதத்தினாலேனும் அர்ச்சுனனைக் கொன்றுவாவென்றான். தனக்குக் கேடுவிளைவ தறியாத மூகாசுரன் ஏன உருக்கொண்டான். அவ்வேனத்தின் பெருமையை ஆயிரம் பணாமுடிகளையுடைய ஆதிசேடனாலும் சொல்லுதற் கரிதென்றால் என்னாற் கூறுதலமையுமோ? ஆயினு மொருவாறு கூறுகின்றேன், அவ்வேனத்தின் தேகவொளி சுவர்னத்தைப் பழிக்கும், நகங்கள் வெள்ளிநிறமேயாம், கண்டம் உயர்ந்த புஷ்பராகம்போலும், கால்கள் பவளம்போலும், கண்கள் செம்மணியேபோலும், முகம் பச்சையும், செவி நீலமும்போலிருக்கும், தேககாத்திரமோ பர்வதாகாரம். அது வீசி நடக்கும்போது அட்டகுலவெற்பும், திக்கசங்களும் அசையும்,சுவாசத்தை வெளிவிடும்போது மிருகக்கூட்டங்களெல்லாம் உயிரிழக்கும், தன்னொரு கொம்பினால் ஈரேழுலகத்தையும் தாங்கிய சுவேதவராகம்போலும், விசுவாமித்திரர் தவத்தைக் கெடுக்கு நிமித்தம் சிருட்டித்த பன்றிபோலு மிருக்கும். அவன் இடிபோலுருமிக் காற்றேபோ லுலாவிக் காடுமலைகளெல்லாங் கடந்து வெள்ளியங்கிரியை யணுகி நடந்துவந்த உபாதியால் ஒரு பெரும்புதரிற் றங்கி இருந்தனன்.

சாம்பவமூர்த்தி வேடுவ உருக்கொடு வருதல்.

இங்கே அர்ச்சுனன் பஞ்சாக்கினி மத்தியில் ஐம்புலன்களையு மொடுக்கிப் பரமசிவனையே தியானித்துக்கொண் டிருக்கையில், நீலகண்டத்தையுடைய முக்கட்பெருமான் அர்ச்சுனன் தவத்துறுதியைக்கண்டும் காணாதான்போலிருந்தனன். பார்வதியம்மை பணிப்பெண்களால் அர்ச்சுனன் தவநிலையை யறிந்து தங்கொழுநனை மனவழிமெய்களால் வணங்கி, சுவாமீ! அத்திமுத லெறும்பீறாயுள்ளவுயிர்கட்கு தேசிகனாயிருந்து அவரவர் சித்தமகிழ்விக்கும்தேவரீர், கயிலையைவிட்டகன்று அடுத்தவரை யாதரியாதிருப்பது நியாயமோ! உமதடிக்குத்தொண்டுபூண்டொழுகு மர்ச்சுனன் தவத்தின்பெருமையைத் தமதுசித்த மறியாததோ? கிருபைகூர்ந்து அவனுக்குத் தரிசனம் பாலிக்கவேண்டுமென்றனள். ஆலமுண் டிருண்ட கண்டத்தையுடைய நிர்மலிவேணியன் அம்மையை நோக்கிக் குறுநகைகொண்டு கிளிவளைச்செங்கையையுடைய பெண்ணமுதே!

நீ இப்போ தெடுத்துக்கூறிய அவன், ஞாலமுண்டவனுக்கு உயிரெனச் சிறந்த தோழன், நரனென்னும் நாமத்தைப் படைத்தோன், அவன் திருதராட்டிரமக்களுடன் சூதாடி அதனால் நாடும் செல்வங்களையுந் தோற்றுத் தம் பகைவரை வெல்லுதற்பொருட்டு மானுட வருடத்தின்படி ஐந்துவருடமாய் நெருப்பிடை நின்று பருகுநீர் துறந்தும், கந்தமூலங்களை யருந்துத லொழிந்தும் காற்றினும் வெய்யிலினு மிக்க துன்பமடைந்தும் அவன் சித்தத்தை நம்மிடமே செலுத்தியிருப்பதை முன்னமே யறிவோம். மேனகை முதலிய நான்கு பெண்களும் இந்திரனும் யாவரையு மொருநொடியில் தன்வசமாக்கும் இரதிகேள்வனும் அவன்கொண்ட கோலத்தை யழிக்கமுயன்று அவலமாய் வெட்கிச் சென்றனர்கள். இவன்போலும் தவத்திற் சிறந்தாரொருவரு மில்லையெனப் புகழ்ந்து ஏகமாய் நின்ற தத்துவ மறைகட்கு மெட்டுதற்கரிய தன்வடிவி லோர் பாகமாய் விளங்கும் கொடிபோன்ற இடையையுடைய பார்வதியுடன் பின்னுஞ் சொல்வாராயினர். கிளிமொழியாளே! இப்போது துரியோதனன் அர்ச்சுனனைக் கொல்ல மூகாசுரனென்னு மரக்கனை ஏனவடிவுகொண்டேகும்படி கட்டளையிட, அவனு மவ்வுருக்கொண்டு நமது கயிலைக் கருகில் ஒரு புதரிற் றங்கி இளைப்பாறுகின்றான், இனி நாம் உபேட்சையா யிருக்கலாகாது, நீ வேடிச்சி யுருவங்கொள்ளென் றருளி, நந்தியெம்பெருமானைநோக்கி நாமின்று வேட்டையாடுதல்வேண்டும் கணங்களையெல்லா மிக்கணமே வேடவ ருருக்கொளச் செய்து, நீயு மவ்வுருக்கொண்டு வாவென் றாஞ்ஞைசெய்து தன் நீண்ட சடைக் கற்றையைப் பின்னி, பின்புறத்திற் றொங்கவிட்டு, ஒள்ளிய நுதலில் விளங்கும் அருட்கண்ணை மயிலிறகு முதலியவற்றால் மறைத்து மலைபோன்ற சிலையைக் கையிலேந்தி, அம்புப் புட்டிலை முதுகிற்றூங்கி, பூரணச்சந்திரனேபோல விளங்கு முகத்தையும், கோடிசூரிய ரொருங்கு சேர்தலையொத்த காந்திவிட்டொளிரும் தன் தேகத்தையும் காரிருளேபோற் செய்து, முன் திருமால் ஏன உருக்கொண்டு அடிதேடி வருகின்றேனென்று செருக்குற்று அவனியெலாமிடந்தும் காணவொண்ணாப் பரம்பொருள், தன் அன்பனைக் கொல்ல வந்திருக்கும் மூகாசுரனென்னும் பன்றியை முடிக்க இக்கோலங்கொண்டு சென்றார். உமையவளும் தன் கரிய குழலைக் கோதி முடித்து, குறிஞ்சி நிலத்துக்குரிய கோட்டுப்பூச் சூடி, தந்தக் குழைகளைக் காதிலணிந்து சுத்தமான பலகரைமாலையைக் கழுத்திற் புனைந்து, கச்சணிந்த முலைமேல் குன்றியாரம் நாலச் செங்கையினிடத்து சிற்றையுடைய சங்குவளையலை யணிந்து புலிப் பினெயிற்றாற்செய்த மங்கலப் பூணுமணிந்து கிளைகிளையாய் வேடவமாதர் சிற்பச் சூரபதுமன் முதலிய அசுரர் குலத்தை வேரறுத்த வேலாயுதக்கடவுளை இளமகவாக்கித் தன் திருக்கரத்தேந்தி அவர்பின் றொடர்ந்து செல்லக் கணங்களும் வேடவரேபோ லுருக்கொண்டு பின்சென்றார்கள்.

இவ்வா றிவர்கள் காட்டைநோக்கிச் சென்று பன்றியைத் தேடிவருகையில் இவ்வரவமறிந்த அக்கள்ளப்பன்றி மனந்திடுக்கிட்டு வேடவக்கூட்டத்தைக் கண்டு, இவரால் நம்முயிர்நீத்தற்கு முன்னமே அர்ச்சுன னுயிரைப்போக்கி

பின் நம்முயிர்நீங்கினல் துரியோதனன் மகிழ்வெய்துவானென் றுன்னி,தவத்தி லிருக்கு மர்ச்சுனன்மே லுருமிச்சென்றனன்,இதைக்கண்ட அர்ச்சுனன், தவத்திற் கிடையூறு நேரிடாவண்ணம் தான் நிற்குமிடத்திருந்தே காண்டீவத்தில் நாணேற்றிவச்சிராயுதத்துக் கொப்பாகிய ஓர் கணையை யெய்தான். நெற்றிமேலொற்றைநாட்டமுடைய பரமசிவனும்ஓர்கணையைவில்லிற்றொடுத்தெய்தான். அர்ச்சுனனெய்த கணை ஏனத்தின் நெற்றியில் நன்ருய்த்தாக்கிப் பின்புறத் துருவியது. பரமசிவனெய்த கணையோ வெனின் பின்புறத்திற் ருக்கி யுருவி வந்துமுகத்தைப்பிளந் தெறிந்தது. ஏனம் உயிர்நீங்கியதைக் கண்ட அர்ச்சுனன் தவத்திலிருக்க முயல்கையில், வேடுவக்கூட்டங்கள் தம்மரசனுடனெருங்குசேர்ந்துவந்து அர்ச்சுனனைச் சூழ்ந்துகொண்டு,எங்களேசமான் கணைதொடுத்த அப்பன்றியின்மீது நீ கணைஎய்யலாமோ? .இது வில்லாளிகட்கு இலக்கணமல்லவே என்று பலவிதமாய் இகழ்ந்து பேசுவதைக்கேட்டு என் தவத்தைக் கெடுக்க முயன்றதால் யான் முன்பு கணை தொடுத்தேன், அக்குறி இதோ இங்குள்ளது பாருங்கள், பின்பு நீங்கள் தொடுத்தகணை இக் குறியேயாமென்று தன் கையாற் சுட்டிக்காட்டி இதை நீங்களே எடுத்தேகுங்கள்; சருகு மருந்தாமற் றவம்புரியு மெனக்கிது வேண்டாம். நீங்க ளின்னமும் யான்செய்யுந் தவத்துக் கிடையூறு செய்விரேல் உங்கள்மேற் கணைகளைத் தொடுத்துத் திசைதொறுந் தலைசிதறச் செய்வேனென்றான். இதைக்கேட்ட வேடுவவரசன் காண்டீபனை நோக்கி, இப்பன்றியா லின்றுன்னுயிரை யிழப்பையென்று பயந்தனைபோலும், உண்மையிற் பஞ்சாக்கினி மத்தியினின்று தவம்புரிவார்க்குத் தாங்கள்கொண்ட கருத்தையேயல்லது புறத்தே நிகழ்வதன்மேற் புந்தி செல்லுமோ? நீ பசுத்தோல் போர்த்து புலிப்பாய்ச்சல் பாய்ந்தா லொக்குமோ? அறிவிலாதாய்! நீ வேதியனோ, அல்லது ஓர் குடைக்கீழ் வையங்காக்கு மன்னவனோ, வைசியனோ அல்லது உருக்கரந்து பொறையுடனே தவம்புரியும் அவுணனோ, அல்லது தேவர்களி லொருவனோ, ஆதித்தன்போற் பிரகாசிக்கு நின் வடிவம் நாளுக்குநாள் பிறைபோற்றேய்ந்து நெடுநாளாய்த் தீயிடையிருந்து வருந்துகின்றனையே! உனக்கியாதுவேண்டி இத்தவம்புரிகின்றனை? உன் வரலாற்றைத் தெரியச்சொல்லென்று வினவ, அர்ச்சுனனும் சந்திரன்முதல் தன் பிதா பாண்டுவளாயிலுமுள்ள முப்பத்தினான்குதலைமுறைகளையும் வரிசைக்கிரமமாய் எடுத்துக் கூறி, பாண்டுராசனுக்குத் தருமராசன் முதலைவர் பிறந்ததையும் தன்பெயர் அர்ச்சுனனென்றும் எடுத்துரைத்தான். இதைக்கேட்ட வேடுவவரசன், இன்றன்றோ உன்னாற்றல் வெளிப்பட்டது, திரௌபதையைத் துரியோதனுதியர்சபையிலிழுத்து அவமானஞ்செய்கையில் நெடுமரம்போல் நின்ற உன்னுடன் போர்புரிதலெனக்குப் பெருமையல்லவாயினும் எங்கள் குலதிலக னாகிய ஏகலைவன் துரோணச்சாரி விக்கிரகத்தை முன்னிட்டு வில்வித்தை கற்றுக்கொண்டதை நீயறிந்து, துரோணச்சாரியைக் கொண்டு அவன்பெருவிரலை நறுக்கிக்கொடுக்கும்படி செய்தாய், அதனாலவனிறந்தான். துருபதனைத் தேரிற் பிணித்துக்கட்டினை, மேலும் ஓர் வேதியனுக்காக எங்குமுள்ள வேடுவக் கூட்டங்களையெல்லாங் கொன்றனை, இதன்

நிமித்தம் நெடுநாளாய் உன்னைப் பழிக்குப்பழிவாங்க நினைத்திருந்த என்மனோரதம் இன்றுதான் நிறைவேறிற்று. நீ வில்லிற் சமர்த்தனெனக் கர்வித்திருக்கும் உன் விற்றிறத்தை என்னிடங் காட்டென்று யுத்தத்திற் கழைக்கவே, அர்ச்சுனன் தன் தவநிலையைவிட் டகலாமல் வில்லைக்குனித்து அம்பு தொடுத்து வேடராசனாகவந்த பரமசிவன்மே லொருகணையை விடுத்தான். பரமசிவனும் ஒருகணையைவிட் டக்கணையை நடுவதுபாதியிற் றுண்டித்து தமது திருக்கரத்திலிருந்தஇரண்டுகணைகளை ஏவினார். அஃதர்ச்சுனன் மார்பிற்றாக்கி யுருவிற்று. அர்ச்சுனன் அதற் கஞ்சாமல் மறுபடியுஞ் சில அஸ்திரங்களைத் தொடுத்தான். அதையும் இறைவன் கண்டித்துவிடவே அர்ச்சுனன்சினங்கொண்டு இவ்வேடுவன் மிக்க சமர்த்தனென்றுணர்ந்து வில்வித்தையிற் கைதேர்ந்தவ னாகையால் ஒன்று பத்து நூறாகும் பாணங்களை விட்டு அதைத் துண்டிக்குமுன்னமே வெவ்வேறு பாணங்களை விடுத்து பரமன்கையிலிருந்த பீலிமுடியையுடைத்து அவர் தேகத்திலும் பாணங்கள் தைத்துருவச் செய்தான். யாவரையுங் காக்க வல்ல முழுமுதற் கடவுளாகையால் அவன் விடுத்த அக்கொடிய கணைகளெல்லாம்பயன்படாமற்போயின. மானிடராயிருந்தால் ஒருகணைக்கே இறப்பர்கள். கற்றைவார்சடையான் அர்ச்சுனனைச் சோதிக்கக் கருதிச் சில அஸ்திரங்களை அவன்மேற் பிரயோகித்தான். அக்கணை அர்ச்சுனன்மேற் றாக்கவே கலங்காச் சிந்தையன் திப்பிரமைகொண்டு தன்சித்தத்துறையும் சிவனிடத் தபயமிட்டு அறிவாற் புலம்பி இருதொடையும் நடுக்குற மடித்தகாலைத் தரையிலூன்றி தவநிலையைவிட் டப்புற மகன்று துன்பத்தழுந்தி நின்றான். உமையவள் அவன்மேற் கிருபைகூர்ந்து, தங்கொழுநனை நோக்கி ஆதியஞ்சோதி இத்தருணத் தடியவன்மேற் கிருபைபுரிய வேண்டுமென்னலும், கண்ணுதற்கடவுளும் அவனுக்கு மிக்க ஆற்ற லுண்டாகச் செய்தனன். அர்ச்சுனனும் திடசித்தங்கொண்டு யானையைக் கண்ட சிங்கம்போல் கர்ச்சித்து வேடுவராசன்மேல் அநேக பாணங்களை யெய்தான். அடா தவக்கோலங்கொண்ட சிறுபிள்ளாய், அறாத நாணிருக்கிறதென்று கர்வித்து இந்நேர மென்னுடன் யுத்தஞ் செய்கிறாய்! இதோ அந்நாணை அறுத்தெறிகிறேன் பாரென்று ஒரு கணையை விட்டுக் கையிலிருந்த நாணை யறுத்தெறிந்தார். ஆக்க லழித்த லளித்தலாகிய முத்தொழிற்கும் வல்லான் சொல்லியவாறு நாண்அறுந்து வில் நிமிர்ந்துநிற்பதைக்கண்ட அர்ச்சுனன் வீராவேசங்கொண்டு இறைவன்மேற் புலிபோற்பாய்ந்து அவ்விற்கொம்பை ஓச்சி வேடராசன் முடிமேற் புடைத்தான். அவ்வடி ஈறிலான்மேற் றாக்கவே பாற்கடலில் விழிதுயிலும் மாதவனுக்கும் இந்திரன் முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் தாக்கித் தழும்புண்டு திடுக்கிட்டலறினர், அத்திமுத லெறும்பீறாயுள்ள உயிர்களுக்கும், ஓரறிவுள்ள மரங்கள் முதலியவைகளுக்கும் தாக்கின. எப்புவன சராசரங்களும் அசைந்தன. இறைவன் முடியிலிருந்த கங்கை வாய்விட்டழுது வானிற் சென்றனள். வேடராசன்வெகுண்டதை யறிந்த பார்வதியம்மை அவனைக்கோபியாதிருக்க வேண்டினள். வேடுவராசன் அர்ச்சுனனைநோக்கி இப்போதுனக்கு வில் பயன்படாதாதலால் இருவரும் மல்யுத்தம் புரிவோம் வாவென் றழைக்க, அர்ச்சுன

னதற்கிசைந்து அவருடன் மல்யுத்தத்துக் காரம்பித்து இருவரும் நெடுநேரம் மல்யுத்தஞ்செய்து முடிவில் பரவசிவன் தன் அழகிய பெருவிரலா லெற்றிவிட்டனர். எற்றிய விசையால் அர்ச்சுனன் ஆகாயத்தில் வெகுதூர மெழும்பவே நமக் கெந்நாளும் தொண்டுபூண்டொழுகும் அர்ச்சுனனைக் காப்பாற்றுமென் றுமையவ ளிறைஞ்ச, இறைவனும் அவனுக்குக் கெடுதி நேராமல் பூமியில் விழச்செய்தார். மீண்டும் அர்ச்சுனன் திடங்கொண் டெழுந்து நோக்குகையில் தன்னோடு யுத்தஞ் செய்தோனையும் அசுரரை வென்ற சுப்பிரமணியக் கடவுளைக் கரத்தேந்தி நின்ற வேடுவச்சியையும் மற்றவேடுவக் கூட்டங்களையும் காணாமல் திகைத்து நிற்கையில், முப்பத்து முக்கோடி தேவர்களும் புடைசூழ இடபவாகனரூடராய் அர்ச்சுனனுக்குத் தரிசனந் தந்தார். இவ்வற்புதத்தைக் கண்ட அர்ச்சுனன் புளகாங்கிதங்கொண்டு தான்கொண்ட இன்பத்துக் கெல்லையில்லாமல் ஆனந்தக் கூத்தாடி சிரிப்பன், கீழேவீழ்ந்து புரள்வன், கைகொட்டிக்கொண் டாடி நடிப்பன். பின்னும் ஆதியே! அண்டமு மனைத்து மாயொளிர்கின்ற சோதியே! கொன்றைமாலையணிந்த சடாடவியுடையானே! பையரா வணிமணிப் பவளமேனியனே! செய்யவாய் மரகதச்செல்வி பாகனே! ஐயனே! சேவடியடைந்த வர்க்கெலா மெய்யனே! எங்குமாய் விளங்குஞ் சோதியே! மூன்று கண்களு நிலவெழ முகிழ்த்த குறுமூரலும் வட்டமாகிய வதனமும் விளங்கும் வேணியும் கயல்போலும் கண்களையுமுடைய மரகத வல்லிவாழ்வுறுஞ் செக்கர்மெய் வடிவமும்சிறந்து வாழ்கவெனப் பரவசங்கொண்டு துதித்து என்மே லன்புகொண்டிருக்கும் தருமராசனுக்கு இன்றுதான் உடன்பிறந்தோனானேன்; பரம்பொருளா முமக்கு நண்பனுமாயினேன், பொன் புனைமேனியாய் உன்னைப்போற்றி நின்றேன், யான்பெற்ற இப்பெரும்பேறு யாவர்பெற்றார்களென்று தன்சிரமேல் கைகூப்பி ஆநந்தபரவசங்கொண்டாடும் அர்ச்சுனனைக் கிரீசன் தன் அழகிய கைகளாற் பரிசித்து மார்புறத் தழுவி அர்ச்சுனா! உன்னொடு பகைத்ததுரியோதனன்,நீ எம்மைநோக்கித் தவஞ்செய்திருக்கையில் உன்னைக் கொல்லும்பொருட்டு மூகனென்னு மசுரனைப் பன்றியுருக்கொள்ளச்செய்து இங்கனுப்பினன். யான் அவனுயிரைக்கவரும்பொருட்டு வேடுவுருக்கொண்டுவந்து அப்பன்றியினுயிரைக் கவர்ந்து உன்னை சோதிக்க வெண்ணி விற்போர் புரிந்து வில்லினால் மொத்துண்டேன். பின்பு மல்யுத்தஞ் செய்கையில் உன் காலா லுதைப்பட்டேன்! என்று கூறும் கருணைக்கடலை நோக்கி ஈறிலாமுதலே! உம்பர்கட்கரசே! அடியேன் இத்தனையும் அறியாமற் செய்த பிழையே யல்லது தெரிந்துசெய்தே னல்லேன், ஆயினும் உமக்கு இவ்வகை அபசாரஞ்செய்தபாவியேன் ஆக்கையைமண்ணிடைவைத்திரோ னென்றதைக்கேட்ட முழுமுதற் கடவுள் வாழ்கவென் றுரைகூறி, நீ வழங்கிய தூர்ப்பாஷைகளெல்லாமெமக்கு சாமவேதமேயாம், நீ விட்டகணைகளோ நறியபூக்கள், உன் வில்லடி வில்வமாலை, உன்போலும் திடச்சித்தன் இவ்வுலகிலில்லை என்று திருவாய்மலர்ந்தருளலும், ஆப்தரட்சகா! உனைவிடப் புகலிடம்வேறறியாதிருந்த நாயேற்கு நிதரிசனமாக உமது உபயசாரணார விந்தங்களை கண்ணினாற்கண்டும் மற்றொருபொருளை இச்சிப்பனோ! என்றிறைஞ்சி நிற்கும் அர்ச்சுனனை

நோக்கி உனக்கு யாதுவரம்வேண்டும் கேளென்னலும், மூவாமுதலே! உமது திருக்கரத்துள்ள பாசுபதாஸ்திரத்தைத்தந்தருளவேண்டுகின்றே னென்றதைக் கேட்டுள்ளமகிழ்ந்து அவனுக்கு மிக்கவலியமைந்த ஒடியாத வில் அறாத நாண் மாளாத அம்புப் புட்டில் வச்சிரமுடி பாசுபதாஸ்திரம் முதலியவைகளைக் கொடுத்து, மந்திரோபதேசமுஞ்செய்து, அர்ச்சுனா, இப் பாசுபதாஸ்திரத்தை அற்ப மானிடர்மேல்விடாதை, யானிப்போதுனக்குக் கற்பித்த மந்திரத்தைச் செபித்துதேவர் அசுரர்முதலியவலியுள்ளார்மேல் விட்டுச்சயங்கொண்டுவாழ்க வென் றாசிர்வதித்துக் கணங்கள் புடைசூழக் கயிலையை நோக்கிச் சென்றான்.

இந்திரன் அர்ச்சுனனைத் தன்னுலகத்திற் கழைத்தேகல்.

பரமசிவன் கயிலைக் கெழுந்தருளிய பின்னர் தேவர்க்கரசனாகிய இந்திரன் முப்பத்து முக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம்இருடிகளும்மற்றுமுள் ளோரும் புடைசூழ, அர்ச்சுனனிருக்குமிடத்திற்கு வந்து அவன்செய்த வந் தனை வழிபாடுகளை ஏற்று, வேணியரனாரிடம் பாசுபதாஸ்திரம் பெற்ற சிறப் பைப் புகழ்ந்து பேசி தேவர்கள்போற்ற புதல்வனை விமானத்தேற்றி இந்திர லோகத்திற் செல்லுமார்க்கத்திலுள்ள அநேக அந்தரலோகங்களைக் கடந்து, பொன்னுலகணுகி, தேவர்கள் முனிவர்கள் கின்னர கிம்புருடர் முதலியோர் புடைசூழ்ந் திருக்கும் கொலுமண்டபத்திலுள்ள நவரத்தின சிங்காதனத்தில் சாமரையிரட்ட அர்ச்சுனனும் இந்திரனுமாக வீற்றிருந்தனர். தேவதூதர் இந் திரன்மனைவியாகிய புலோமிசைக்கு அர்ச்சுனன் வரவைத் தெரிவிக்க,அவளு மவனைப்பார்க்க விரும்பி தாதிகள்புடைசூழ முத்துச்சிவிகையிலூர்ந்து கொலு மண்டபத்தில்வந் திறங்கினாள். அர்ச்சுனன் அவளிரு பாதங்களிலும் தன் சென்னியுறப்பணிந்து நின்றான். அவ ளவனை வாழ்த்தித் தன் இருகரத்தாலு மூறத் தழுவித் தன் அந்தப்புரஞ் சென்றாள். முன்போல் அர்ச்சுனன் வீற்றி ருக்க, ஓர்புறம் வேதகோஷ்ட முழங்க, மற்றோர்புறம் செவிக்கின்பந்தரும் வீணைவாசிக்க, தேவப்பெண்கள் நடிக்க, கின்னரர் கிம்புருடர் மத்தளங்கொட் டக் களிப்புடன் இந்திரன் கொலுவீற்றிருந்தான்.

அர்ச்சுனனுக்குப் பேடிருபம் நேர்தல்.

இந்திரன் கொலுக்கலைந்த பின்னர் தானும் தன் புதல்வனும் அரண்மனை க்குட்சென்று வான நதியில் நீராடி பூசை முடித்து அறுசுவையோடு விருந் துண்டு அடைகாய் முதலியவருந்தி சுகித்திருந்தனர்கள். சூரியனும் அத்தி கிரியடையவே சந்திரனுதயமானான். இந்திரன் தன்னேவலாளிகளால் அர்ச்சு னனுக்குத் தக்க பள்ளியறையொன் றமைக்கச்செய்து புதல்வனைப் பள்ளிய றைக் கனுப்பிவிட்டுத் தான் இந்திராணியோடு கூடிச் சுகித்திருந்தான். அர்ச் சுனனும் நவரத்தினம் பதித்த மஞ்சத்தின்மேற் சயனித் திருக்கையில், இவன் மேல் மிக்க காதல்கொண்ட ஊர்வசிநல்ல ஆடையாபரணங்களால் தன்னை யலங்கரித்துக்கொண்டு மிக்க மணமுள்ள புழுகு சந்தனம் பனிநீர்முதலியவை களைத் தேகத்திற்பூசி மைதீட்டி, கண்டவர் மனத்தைக் கவர்வாள்போல் அன்

னத்தைப் பழிக்கும் நடையையுடையாளாய் மெல்லெனநடந்து அவ்வர்ச்சுனன் சயனித்திருக்கும் பள்ளியறையிற் சென்றாள். இவள் பூண்டிருக்கும் ஆபரணத் தொனியால் அர்ச்சுனன் விழித் தெழுந்து அவளடியில் விழுந்தெழுந்து கைகூப்பி வணங்கி, என்னம்மணீ எனக்கு மூதாதையாகிய ஆயுவுமகாராசனுக்கு மனைவியாகிய நீஇந்நடுச்சாமத்தில் இங்கு யாதுகருதிவந்தனை என்றான். இம்மொழியைக்கேட்ட ஊர்வசி தானெண்ணிய வெண்ணம் அவலமாயினதென்று வருத்தமுற்று,நெருப்பிலிட்ட நெய்போற் கனைந்துருகிய அவள் கடுஞ்சினங்கொண்டு உன்பால் யான்மிக்க காமப்பித்தேறி வந்தேன். என்னை தாய்முறைகொண்டு மறுத்தமையால் நீஇன்றுமுதல் பேடியுருவாகக்கடவாயென்று சபித்துத் தன்னிருப்பிடஞ்சென்றாள். உடனே அர்ச்சுனனை நபுஞ்சத்வம்வந்து பற்றியது. அதைக்கண்டுவருத்தமுற்று ஆயினும்நம்மைஇஃதென்னசெய்யுமென்றலக்ஷியஞ்செய்து வெண்மையாகிய துகிலைப்போர்த்து நித்திரை செய்தான்.

மறுநாளுதயத்தில் இந்திரன் தன்னியமங்களை முடித்துக்கொண்டு கொலுமுகம்வந் துட்கார்ந்து அர்ச்சுனனை யழைத்துவரும்படித் தூதுவனை யனுப்ப அவனங்குசென்று திரும்பிவந்து அர்ச்சுனனுக்கு நேரிட்டிருக்கும் பேடியுருவத்தின் செய்தியை யறிவித்தான். இந்திரன் மிக்க வருத்தமுற்று சத்த ரிஷிகளையும் தன்னுட னழைத்துக்கொண்டு அர்ச்சுனன்பள்ளியறைக்குட்சென்று அவ்வுரு நேர்ந்ததற்குக் காரணந் தெரிந்துகொண்டு, ஊர்வசியையழைப்பித்து அவளுக்குப் பல சமாதானமொழிகளைக் கூறிக் களிக்கச்செய்து அர்ச்சுனன் நினைத்தபோது இவ்வுருவம்வந் தடையவும் மற்ற காலத்தி லிஃதணுகாதிருக்கவும் அவளைக்கொண்டே அனுக்கிரகிக்கும்படிச் செய்தான். அர்ச்சுனன் மகிழ்வெய்தி இந்திரனுடன் சிங்காதனத்தி லுட்கார்ந்தான். இந்திரனுக்குத் தன் புதல்வன்மேலுள்ள அன்பின்பெருக்கால், பிரமனால் தனக்குக்கிடைத்த முடியைச் சூட்டவெண்ணி அங்குள்ள ரிஷிகள் சம்மதம்பெற்று அர்ச்சுனனைத் திவ்யநீராலாட்டி மரகதம் பச்சை மாணிக்க முதலிய கற்களிழைத்துக் கோடிசூரிய ரொருங்கிருப்பதேபோல் ஒளிவிட்டெறிக்கும் அவ்வழகிய கிரீடத்தை அவன் சிரமேற் சூட்டி கிரீடி கிரீடி கிரீடி யென்று மூன்றுதரங் கூறினான். தேவர்களும் முனிவர்களும் இந்திரனுக்குரிய மரியாதைகள்யாவும் அர்ச்சுனனுக்குச் செய்து மகிழ்ந்தார்கள். இந்திரனும் தான்கொண்ட களிப்புக் கெல்லையில்லா திருந்தான். பின்பு அங்குள்ளாருக்குத் தக்க மரியாதைசெய்தனுப்பிவிட்டு தானும் தன் புதல்வனும், அரண்மனைக்கேகி அறுசுவையோடு ஒரே பாத்திரத்துண்டார்கள். இதைக்கண்டு மனம்பொறாத இந்திராணி தன் கொழுநனை நோக்கி தேவர்களாயுள்ள நாம் அசேதனனாகிய நரனுடன் புசிப்பதுந் தகுதியோ? என்று வினவ, அதற் கிந்திரன் இவ்வர்ச்சுனனை உருவத்தால் நரனாக நினைக்கவேண்டுமே யல்லது செய்கையால் அப்படி நினைக்கப்போகாது. நமக்குச் செய்கைபெரிதேயல்லாமல் குலம் பெரிதல்ல, இவனோ பாற்கடலிற்றுயிலும் மாதவனுக்குமைத்துன்,நாமெல்லாம் வழிபட்டொழுகும் கைலாயபதியிடம் போர்செய்து பாசுபதாஸ்திரம் பெற்ற சமர்த்தன், எனக்குப் புத்திரன், வேதவிதி வழுவாமல் நடப்போன் எனப் பலவாறு புகழ்ந்து

இராணிக்குச் சமாதானஞ்சொல்ல; அவளும் புன்முறுவல் செய்து உள்ளங் களித்தாள். இதைக் கேட்ட அர்ச்சுனன், ஐயா தாங்களோ தேவர்க்கரசர்; நானோ நரன், நாமிருவரும் ஓராசனத் திருப்பதும், ஓர் பாத்திரத்துண்பதும் எனக்குத் தக்கதோவென்ன, இந்திரன் குழந்தாய்! கிரீடி! சுவர்க்க மத்திய பாதலமென்னு முப்புவனங்களிலும் உன்போலும் ஆற்றலுடையானு முண்டோ? காணற்கரிய சாம்பவமூர்த்தியோ டெதிர்த்து யுத்தஞ்செய்த உன்னுடன் சரியொத்திருப்பது இழிவாகாதென்று புத்திரனைக் களிக்கச்செய்தான். இது நிற்க;

நிவாதகவசர் காலகேயர் வதைச்சருக்கம்.

இந்திரனைப் பகைத்து நெடுநாளாய்த் துன்பஞ்செய்து வரும் சன்மப் பகைவராகிய நிவாதகவசர்களை அர்ச்சுனனைக்கொண்டு ஒருங்கு முடிக்கக் கருதி தன் புத்திரனைநோக்கி என் கண்போன்ற அர்ச்சுனா, "கற்றவர் கலைகள் யாவும் கசடறக் கற்பித்தோர்கள் பெற்றிடக் கொடுக்குஞ் செல்வமுண்டு" எனப் பெரியோர் சொல்வராதலால் உனக்கு யான் குருவே யாயினும் உன்னால் யான் பெருஞ்செல்வ மடையவேண்டி யிருக்கின்றேன் நீ மனமகிழ்ந்து எனக்கோர் வரந்தரவேண்டுமென்று கேட்க, தந்தைசொல் மகிழ்ந்து கேட்டு ஒப்பற்ற வில்லைக் கையிலேந்திய அர்ச்சுனன், தேவர்களுக்கு மானிடராலாகுங் காரியமு முள்ளதோ! தங்களுக் கென்னாலாகுங் காரிய மிருந்தால் சுகமாய்ச் சொல்லுங்களென்னலும், இந்திரன் சொல்லலாயினன்.

என் செல்வப்புதல்வனே! ஈறில்லாதபரமனும் திருமூர்த்திகளும் ஒருக் காலழியினும் தாங்க ளழியாதவர்களாக நினைத்து மூவுலகோரும் கோழிக் கொடியோனும் ஒருங்குசேர்ந்து சமர்புரியினும் ஓர் நொடிப்போதில் விரிட்டோடச்செய்யும் திறலுடையாரும்,எக்காலமும் விவாதமே விளைத்துத்தேவர் கட்குக் கெடுதிசெய்புந் தொழிலையே கைக்கொண்டு அழுக்காறுடைய மனத்தராய்கெடாதகவசத்தைப்பெற்றிருக்கும்நிவாதகவசர்களென்னும் நாமத்தை யுடைய மூன்றுகோடி அவுணரிருக்கின்றனர். அவர்க ளெனக்குச் சென்மப் பகை யாளிகள்,அவர்களென்னை ஓர் துரும்பென மதித்திருக்கின்றனர். அக் கொடியார்உன் கையம்பாலன்றி மற்றவர் கணைகளுக்கு மடியார்கள். நீ என் மீது அன்புவைத்து நான் பெருஞ்செல்வமடைய அம்மூன்றுகோடி அசுரரைக் கொன்றுஎன் மனத்தைக் களிக்கச்செய்யுமிந்தவரமே எனக்குத் தரவேண்டுமென்றான். போரென்முற்பூரிக்கும் புயத்தையுடைய அர்ச்சுனன்களித்து இந்திரனைநோக்கி ஐயனே தங்கள்கிருபாகடாட்சம்பெற்ற என்னைநிவாதகவசர்மேல் மாத்திரமல்ல,தங்களுக்கின்னுமுள்ள பகைவர்மேல் இப்போதே விடுப்பீராயின் அவர்களையெல்லாம் ஒரேகணத்தில் முடிப்பேன். தங்கள் கருத்துக் கிசைந்தேன் இனித் தாமதிக்கவேண்டாமென்ன, இந்திரன் நிவாதகவசராற் பட்ட துன்பம் இன்றோடொழிந்ததென்று மிக்க பரவசனாய்த் தன் னருகிருந்த மாதலியைநோக்கி பதினாயிரங் குதிரைபூட்டிய தன் தேரைக் கொண்டுவரும்படி ஆஞ்ஞைசெய்தான். அர்ச்சுனனோ இந்திரன்முதலிய தேவர்களை வலமாகவந்து

வணங்கி அவர்களால் ஆசீர்வதிக்கப்பெற்று ஒள்ளிய மரகதங்க ளிழைத்த கவசமணிந்து அம்புப்புட்டிலேமுதுகிற்றூங்கி வில்லேக்கையிலேந்திப்போர்க்கோலங்கொண்டு சுபலக்கினத்தில் ஆயிரந்தட்டுடைய தேரின்மேதேறி யுட்கார்ந்து இரதத்தை நடத்தென்று தேர்ப்பாகனுகிய மாதலிக்குச் சொன்னுன். சாரதி ஐயா! நிவாதகவசர்கள் மேற்றிசைக் கடலருகில் தோயமாபுரமென்னும் நகரத்திருக்கின்ருர்கள் ; நாம் தன்னந்தனியே சென்ருல் போர்க்கு வருஞ் செய்தி அவர்களுக்குத் தெரிவதெப்படி? சித்திரசேனனேயாவது கூட்டிக்கொண்டுபோனுல் நலமென்றுகூற,அர்ச்சுனனு மதற்குச் சம்மதித்துச் சித்திரசேனனேத் தன் பக்கத்தி லுட்காரச்செய்து, இரதத்தைச் செலுத்தென்ருன். அங்குநின்ற தேவர்களிற்சிலர் இவனேபூதலமனிதன், மிக்க வலியுள்ள நிவாதகவசர்களாகிய மூன்றுகோடி அவுணருடன் எவ்வகைப் போர்புரிவன் என்பர், சிலர் மூன்றுகோடி அவுணருடன் போர்செய்ய ஒற்றைத்தேரோடுசெல்லுமிவன் ஆற்றலுக்களவில்லேயே என்பர். சிலர் அர்ச்சுனனேநோக்கி எங்களுக்கு நெடுநாளாய்த்துன்பஞ்செய்துவரும் அக் கொடியாரைக்கொன்று வருவாயென்ருசிகூறினர். இங்கிவ்வாறுகூறத் தேரைச்செலுத்து மார்க்கத்தில், இந்திரன் இரதத்திற்போகிற மானிடன் யாரென்று தேவதைகள்வினவ, அர்ச்சுனனுடைய பராக்கிரம கீர்த்திப் பிரதாபத்தை மாதலி சவிஸ்தாரமாய் அவர்கட்குத் தெரியச்சொல்லினுன்.

என் பிதாவாகிய இந்திரனுக்குச் சாரத்தியஞ்செய்வதுபோல், தேரை விரைவில் நடத்தென்று தேவசாரதிக்கு அர்ச்சுனன்சொல்ல,அப்படியே செய்கின்றேனென்று வெகுதுரிதமாய் இரதத்தைச்செலுத்தி மேற்றிசைக் கடலருகிற்கொண்டுபோய் நிறுத்தினுன். கடலின்மத்தியிற் சூரியனேப்போல் பிரகாசித்துக்கொண் டிருக்கின்ற அந் நகரத்தின் பெருமையை யெடுத்துக் கூறென்று அர்ச்சுனன் கேட்க, இதைத்தான் தோயமாபுரம் என்பர். இதிலேதான் நிவாதகவசரிருக்கின்ருர்கள். அவர்கள் வல்லமையை யாராலும் அளவிடுதற்கரிது, எனக்குத் தெரிந்தமாத்திரம் சொல்லுகின்றேன். இந்நகரத்தில் மூன்றுகோடி அசுரர்களுண்டு, இவர்கள் தென்றிசைக் கிறைவனே நோக்கி அநேக கற்பகாலம் அருமையான தவஞ்செய்து யாவராலும் பெறுதற்கரிய அசாத்தியமான வரங்களேப் பெற்றுக்கொண்டு தங்களுக்குப் பகைவராகிய தேவர்களே எப்போது மெதிர்த்து அவர்கள் பாணுக்கினியால் தகிப்பார்கள். தேவர்கோ னெதிர்த்தால் அவனேப் புறங்காட்டி யோடச்செய்வார்கள். தேவர்களெல்லாம் ஒரேகாலத்தி லொருங்குசேர்ந்து கணேதொடுக்கினும் தாங்களணிந்திருக்குங்கவசத்தின்மகிமையால் தங்களுடலில் தைத்துருகாவண்ணஞ்செய்து கொள்வார்கள். மகாதுட்டர்கள், இவர்களேப்போலும் கொடியவர்கள் எந்த நாட்டினு மிரார்.பஞ்சபூதங்களேயு மொருநொடியிற் கொள்ளேகொள்வர். சப்த சமுத்திரமும் ஒன்ருய்த் திரண்டுவருவதுபோல் வருஞ் சேனுசமுத்திரத்தை அகத்தியர்போல் அரைநொடியில் நாசப்படுத்துபவர்கள் என்றிவ்வாறு அவர்களாற்றலேக்கூறி ஓய்ந்தான். இவைகளெல்லாஞ் செவியுறக்கேட்ட அர்ச்சுனன் குறுநகைகொண்டு சித்திரசேனனேநோக்கி நாம் நிவாதகவசர்மேல் போர்

புரிய வந்தசெய்தியை அவர்கட் கறிவித்துவாவென் றனுப்பிவிட்டு ஆகாயத்தில் செல்லும் இரதத்தைப் பூமியிலிறக்கித் தோயமாபுரத்திற் கணுகித் தன் கையிலிருக்கும் காண்டீபத்தைக் குனித்து நாணேறிட்டு அட்டதிக்குஞ் செவிடுபட டங்காரத்தொனி செய்தான். இத் தொனி அத்தோயமாபுரத்து அவுணர் செவியிற்பட்டுச் சிலர் திடுக்கிட்டனர், சிலர் மூர்ச்சையாயினர், சிலர் இதென்ன ஆச்சரியமென்றுபேசினர்; அவர்களிவ்வா றிருக்கையில்தூது சென்றசித்திரசேனன் அம்முக்கோடி அசுரர்முன்சென்று நிவாதகவசம் பூண்டவர்களே, பூலோகமண்டலாதிபதிகளுக்கெல்லாம் சிறந்த குருகுலபதியாகிய அர்ச்சுனனுடைய தூதுவன் யான்; என்பேர் சித்திரசேனன், திக்குவிசயஞ் செய்து யாவராலும் நிறைவேறாத இராஜசூயயாகத்தை நிறைவேற்றித் தேவருக்குரிய காண்டவவனத்தை அக்கினிபகவானுக்கு தத்தஞ்செய்து யாவராலும் பெறுதற்கரிய பாசுபதாஸ்திர முதலிய அநேக அஸ்திரங்களைப்பெற்றுத் தனக் கொப்பில்லாமல் விளங்கும் ஏகசக்ராதிபதியாகிய அர்ச்சுனன் நீங்கள் தேவர்களுக்குத் துன்பஞ்செய்ததைக் கேள்விப்பட்டு உங்களை வைவஸ்வத நகருக் கனுப்பவேண்டிச் சமர்புரிய வந்திருக்கின்றான். இச்செய்தியை உங்களுக் கறிவிக்கும்பொருட்டு என்னை யனுப்பினனென்று சித்திரசேனன் கூறியதைக் கேட்ட நிவாதகவசர்கள் காலாக்கினி உருத்திரனைப்போற் சீறிச் சொல்லுகின்றார்.

சித்திரசேனா, ஒரு சிறு பூனையானது மிக்க வலியமைந்த புலிக் கூட்டத்தில் பிரவேசித்து யாவரையும் கொல்வேனென்று சொல்வதுபோல் நரனாகிய ஒருவன், தேவர்களாலும் அவனுக் கரசனாகிய இந்திரனாலும் வெல்லக் கூடாத எங்களை வெல்வேனென்றுவந்தது எப்படியெனின், ஒருவன் கடலைக் கடப்பேனென்று சொல்வதுபோலாம். மண்ணுலகாதிபதியாகிய மசகமோ எங்களை வெல்வன்! இங்கு போர்புரியவந்தவன்; விற்றிறமுடையானுயின்துரியோதனன்செய்த அக்கிரமத்துக்குபுத்தஞ்செய்து சயிக்கச்சக்தியில்லாமல்தன்னுடை நகரங்களைக் கொடுத்துவிட்டு மூடவனைப்போ லிருந்தானே; அவனோ எங்களை யெதிர்ப்பவனென்று இகழ்ந்து சித்திரசேனா நீ தூதுவனாதலால் உன்னை உயிரோடும்விட்டோம், நீ சீக்கிரம்போய் அம்மசகத்தை நொடிப்போதில் யுத்தத்திற்கு ஆயத்தமாகும்படிச் சொல்லென் றனுப்பிவிட்டார்கள். பின்பு அம்முக்கோடி அவுணரும் தஞ்சேனைகளை ஒருங்கு சேர்த்துக்கொண்டு யுத்தசன்னத்தராய்ப் போர்புரியுங் களத்தில்வந்துகின்றனர். இதைக்கண்ட அர்ச்சுனன் தன் தேரை அவர்கள் நடுவிற் செலுத்தச்செய்து காண்டீவத்தில் திவ்விய பாணங்களைத்தொடுத்து சிங்கநாதம் அட்டகாசஞ்செய்து அவர்கள்மே லேவினன். அவைகளைஅவர்கள் துண்டித்துவிட்டுதாங்களநேகஅஸ்திரங்களை அர்ச்சுனன் மேல்தொடுத்தார்கள். அவன் அவைகளையெல்லாம்நடுவே பாதியிற் றகர்த்துப் பிரமாஸ்திரத்தை அவர்கள்மீது விடவே; அது கோடிசூரியப் பிரகாசம்போல் ஜோலித்து அவர்கள்மேற் பாய்ந்து ஒருகோடி யவுணரை தும்சஞ்செய்தது. மற்ற இரண்டுகோடி அவுணரும் உயிர்நீங்கிய ஒருகோடி யவுணரையும்,உயிர்த் தெழுப்பிக்கொண்டு, உகாந்த காலத்தில் ஊழிமேகம் வருஷிப்பதுபோல்.

அர்ச்சுனன்மேற் கணைகளைச் சொரிந்து அவனை நாற்புறமும் வளைந்துகொண் டெதிர்க்கவே ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரங்களாகும் பாணங்களை விட்டு அவர்கள் கைபிற்பிடித்திருந்த ஆயுதங்களையும், பாணங்களையும், காண் டீவத்தாற் பொடிப்பொடியாக்கி சேனைகளும் சேனாதிபதிகளும் கைவேறு கால்வேறு உடல்வேறாகும்படிச் சின்னாபின்னஞ் செய்தான். அவுணர்களும் புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல் வருவதைக்கண்ட அர்ச்சுனன், இக் கணைகளினால் பிரயோசனமில்லை யென்று யோசித்து நாராயணாஸ்திரத்தை எடுத்து மானதபூசைசெய்து அவர்கள்மே லேவினான். அது அர்ச்சுனன் கையினின்றும் விடுபட்டவுடனே வாமனரூபமாய்த்தோன்றிப் பின்பு அண் டம்வரையிற் பரம்பி ஒருபக்கம் பர்வதம் ஒருபக்கம் இடி ஒருபக்க மிருள் ஒரு பக்கம் அக்கினியாகி அவுணர்சேனைகளிற் புகுந்து கோடி யவுணர்களை முடி த்து மறுபடியும் அம்புப்புட்டிலில்வந் தடங்கிற்று. இறந்த அவுணர்களை மறுபடி யும் உயிர்ப்பித்துக்கொண்டு போரிடத்தொடங்கினார்கள். அர்ச்சுனன் மகே ந்திராஸ்திரம், பர்வதாஸ்திரம் முதலிய திவ்வியாஸ்திரங்களை விட்டும் இராட் சதக்கூட்டங்க ளொழியாமல் மேலுமேலும் விருத்தியடைவதைக் கண்ட அர்ச்சுனன் இறந்தவர்களெல்லாம் மறுபடியும் பிழைத்துக்கொண்டே வரு வார்களாகில் நாமிவர்களை எவ்விதமாய் வெல்வதென்று மனக்கலக்கங்கொண் டிருக்கையில் அசரீரி "இவர்களுடன் நீ நெடுங்காலம் போர்புரியினும் வெற்றி கொள்வது பிரயாசை;இவர்களுடன் கடும்போர்புரிந்து அவர்கள் வாயுங் கையு மொன்றாயிருக்கும்படி செய்து, அச் சமயத்தில் பாசுபதாஸ்திரத்தைப் பிர யோகித்தால் இவர்கள் பூண்டற்று நாசமடைவார்கள்" என்று உபதேசித்தாள்.

இவ்வகை யுபாயத்தைக்கேட்டு மகிழ்ந்து சாரதியைநோக்கி யான் கடும் போர் செய்யப்போகின்றேன், அத்தருணத்தில் நீ தேரை முன்னுக்குச் செலு த்துவதுபோற் காட்டிப் பின்னிடச்செய்யென்று கற்பித்து அர்ச்சுனன் அவ் வவுணருடன் கடும்போர் செய்கையில்,மாதலியானவன் தேரைப் பின்னுக்குச் செலுத்தினான். இதைக்கண்ட நிவாதகவசர், எல்லோரையும் அரைக்கணத் தில் சயிப்பேனென்று வாய்வாதம்பேசி நம்முடைய வெவ்விய கணைக்குப் பயந்து முனைமுகத்தில் நில்லாமல் முதுகுகாட்டி யோடுகிறானென்று எல் லோரும் அசைவற நிற்கும்போது அர்ச்சுனன் பாசுபதாஸ்திரத்தைக் கையி லேந்தி நீறணிகடவுளை நினைந்து மந்திரோச்சாடனஞ் செய்து தூபதீப நைவே த்தியந் தன் மனத்தாற்செய்து அக்கொடியார்மேல் விடுத்தான். அது பரம சிவனா லளிக்கப்பட்டமையால் கோடி உருத்திரராய்ப்போற்சீறி அண்டசராசர ங்களும் அதிரும்படி எழும்பி நிவாதகவசர் கூட்டத்திற் பாய்ந்து ஒருவரும் தப்பிப்பிழைக்கா வண்ணம் அவர்களுடைய சிரங்களையும் அறுத்தெறிந்து, அங்குள்ள நதியில் நீராடி அர்ச்சுனனிடமேவந்து சேர்ந்தது. இவ்வகையாய்த் தான் வெற்றிகொண்டபின், நிவாதகவசர்களுடைய மங்கையர்கள் உப்பரிகை யின் மேலேறிப் பார்க்கையில் அர்ச்சுனனுடைய ஒற்றைத்தேர்தவிர மற்றொன் றுங் காணாமல் படுசூரணமாகி மடிந்துகிடப்பதைக் கண்டமாத்திரத்தில் தலை விரிகோலமாய்க் கண்ணீர்விட்டழுது தேகமெங்கும் புழுதிபடப்புரண்டு செத்

துக்கிடக்குந் தங்கள் தங்கள் புருடர்மேற் புறண்டு கோவெனக்கதறியழுது தத்தம் புருடருடனே தாமுமுயிரையிழந்தனர். பின்பு அர்ச்சுனன் தன்னுடு போர்புரிவோரைக்காணுமல்வீராவேசங்கொண்டு மாதலியை நோக்கித் தேவர் ளுக் கிடுக்கண்செய்யும் அசுரர்கள் இன்ன மிருந்தால் காண்பிப்பாயாகவென் ருன். அவனும் அக்கருத்துக்கிசைந்து அர்ச்சுனன் திறலை மனத்திற் புகழ்ந்து இரதத்தை அந்தரலோகமே செலுத்திவருகையில் பொன்போன்ற ஓர் நகரம் அர்ச்சுனுக்குத் தோன்றின உடனே தேரைநிறுத்திக்கொண்டு இதோகாண்கிற சுவர்ணமயமான பட்டணமியாதெனச் சொல்லலாயினன். திதியென்றும் அதி தியென்றும் இரண்டுபெண்களுண்டு, இவருள் திதியென்பவள் முப்பத்து முக் கோடி தேவரைப்பெற்ருள்; அதிதியென்பவள் தேவர்க் கிடுக்கண்செய்யும் அசுரர்களைப்பெற்றதுமன்றி,காளகை யென்னும் பெயருடைய ஓர் பெண்ணை யும்பெற்ருள்;அவள்புலோமன் என்னும்அசுரனைமணந்து நெடுநாள்தவமிருந்து, அறுபதினுயிரம் புத்திரர்களைப்பெற்ருள். காளகையும் புலோமனும் தங்கள் புத் திரர்களுக்கு இடையூறு நேரிடாவண்ணம் பிரமனை நோக்கி அநேகநாள் தவஞ் செய்து தேவராலும் மற்றைமூவராலும் பின்னையாவராலும் துன்பமுண்டாகா திருக்கவரம் பெற்று,திவ்யாஸ்திரங்களையும் நினைத்தவிடஞ் செல்லத்தக்க இச் சுவர்ணநகரத்தையும் பெற்றுப் புதல்வரை அதிற்குடியேற்றினுர்கள். அப் பிள் ளைகளுக்குக் காலகேயரென்றுபெயர்விளங்கிற்று; தாய்தந்தையரால் சம்பாதித் துக்கொடுத்த திவ்யாஸ்திரங்களே யல்லாமல் காலகேயர்களும் கடுந்தவ மிரு ந்துபெறுதற்கரிய அஸ்திரங்களைப் பிரமனிடம் பெற்றுத் தேவர்களையும் வேதி யர்களையும் இடுக்கண் செய்துகொண்டு அவர்கள் நாமத்தைச்சொன்னமாத்திர த்தில் யாவரும் நடுக்குறும்படி கொடுங்கோல் செலுத்துகின்ருர்கள். இவர்கள் பொன்போன்ற தேகமுடையவர்க ளென்று மாதலி தெரிவித்தபோது, நிவாத கவசர்களை வெற்றிகொண்டதோ பெரியகாரியமல்ல,தேவர்களுக்கும் வேதியர் களுக்கும் துன்பத்தைச் செய்துவரும் இவ்வறுபதினுயிர மசுரர்களையும்முந்திக் கொல்லவேண்டும். ஆனுல் என்தந்தையாகிய இந்திரன் இவ்வரக்கர்செய்தியை த்தெரிவித்தாரில்லை, ஆயினும் இவர்களை முடிக்காமல் இந்திரலோகஞ் செல் லே னென்று கூறி, அவர்கள் நகரத்தின்மேல் தேரைச் செலுத்தென்று கூற, மாதலியும் மிக்க களிப்புடன் இவனுடைய ஆற்றலை எவர்க்கொப்பிடலாமென மதித்துத்தேரைச்செலுத்தினன். அர்ச்சுனன்காண்டீவத்தைக்கையிற்பிடித்து நாணைநிட்டு குணத்தொனிசெய்து தன்வரவை அவர்களறியும்பொருட்டு டங் காரவோசைசெய்தான்.என்றுங்கேளாத இவ்வோசையைக்கேட்ட காலகேயர் மிகவும் அதிசயித்து நிவாதகவசரைச் சயித்தவன் நம்மேலும் யுத்தத்திற் கெழு ந்தானே வென்றெண்ணி எல்லோரு மலங்கோலப்பட்டு யுத்தசன்னத்தராகி நகர்ப்புறத்தில்வந்து தங்கள் சேனுதிபதிகளைக்கொண்டு அர்ச்சுனன் வந்திருக் கும் காரணத்தை விசாரித்துவரச்சொன்னுர்கள். தூதுவர் வந்துபார்த்துத் திரு ம்பிச்சென்று யாரோ ஒருவன் ஒற்றைத்தேரோடு வந்திருக்கின்ருன். அத் தே ரையுஞ்சாரதியையும் பார்த்தால் இந்திரனுடையதாயிருக்கின்றது. அவன்தான் குணத்தொனி செய்தவனென்றுகூற, யாவருந் திரண்டு அர்ச்சுனன் நிற்குந்

திசையில் நெருங்கிச்சென்றுவளைந்துகொண்டார்கள். அர்ச்சுனன் இவ்வசுரனை ப்பார்த்து மிக்க அழகுவாய்ந் திருக்கின்ற இவர்களை எப்படிக்கொல்லுவது, இந்திரனும்நம்மிடம் இவர்செய்தியைத் தெரிவிக்கவேயில்லை. ஆயினும் இவர்கள் வேதியனைக் கொலைசெய்வதால், துட்டநிக்கிரகஞ்செய்வது பெருந்தருமமாத லால் இவர்களைப் போரிற்கொல்வது நியாயமேயாமென்று நினைத்து வில்லில் பாணங்களைத் தொடுத்தேவினன். அவர்களும் அநேக பாணங்களை இவன்மே லெய்தார்கள். அர்ச்சுனன் சினமடைந்து ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயி ரமாகப் பாணங்களைத் தொடுத்து அக் காலகேயர்மேல் விட்டான், அக்கணை சேனையுட் புகுந்து, யானை தேர் குதிரை முதலியவைகளை எல்லாம் நாசமா க்கவே, தஞ் சேனைகள் வீறிட்டோடுவதைக் கண்ட அறுபதினாயிரம் காலகே யரும் மிக்ககோபமடைந்து, அர்ச்சுனனைப்பார்த்துஉன்னை இலேசாய் விடோம் விடோம் பதராதை, உன்போல் பதினாயிரம்வீரர்கள் வரினும் ஒரு நொடிப்போ தில் தும்சம்செய்து தென்றிசைக்கே யனுப்பிவிடுவோம் என்று அட்டகாசஞ் செய்து, எல்லோரு மொருங்குகூடி ஒரேகாலத்தில் அர்ச்சுனன்மேலும் அவன் சாரதிமேலும் மாரிபோற் கணையை எய்தார்கள். அப்போது அட்ட வசுக்க ளும் தேவர்களும் தனக்கு விருப்பத்தோடளித்த சிறந்த கணைகளை அர்ச் சுனன்விட, அவைக ளாகாயத்தெழும்பிக் கோடையிடிபோ லிடித்துப் பல ஆயுதங்களைச்சொரிந்து அவுணர்களையும் அவரது பரிவாரங்களையும் அதமாக் கின. இவனாற்றலைக்கண்ட அரக்கரிற்பலர் ஆகாயத்திலெழும்பி மேகத்தின் மறைந்து மாயா சம்பந்தமான பாணங்களை அர்ச்சுனன்மேல் விடாமற் பொழி ந்தார்கள். அர்ச்சுன னவைகளை லக்ஷியஞ்செய்யாது அததற்குத்தக்ககணை களைவிட்டு அவைகள் தலையெடாவண்ணம் நடுவது பாதியி லொடித்து, இனி இவர்களை இலேசில் விடப்படாதெனக்கருதி, நின்மலனை மனத்தெண்ணி பாசு பதாஸ்திரத்தை அபிமந்திரித்துப்பிரயோகித்தான். அவ்வஸ்திரம் அவன் கையி னின்றும் விடுபட்டு, மலைகளின் சிறகுகளைக்கொய்த இந்திரன் வச்சிராயுதத் துக் கொப்பாகிய அநேக ஆயுதங்களாகி வானெங்கும் பரம்பி அவுணர்களை வளைந்துகொண்டு கண்டதுண்டமாக்கி பூமியில் வீழ்த்திவிட்டு அவுணருயி ரைத் தென்றிசைக் கோனிடமொப்புவித்து வானநதியில் மூழ்கி அர்ச்சுனன் அம்புப்புட்டிலில் வந்தடைந்தது. பின்பு இவ்வவுணர்கள் வசித்திருந்தசொர்ண புரியானது மாயமாய் மறைந்து பிரமனிடம்போய்ச் சேர்ந்தது. பூமியில் விழு ந்த அவுணர்களுடைய உதிரவெள்ளம் பெரிய ஆறாகப் பெருகியோடிச் சமுத் திரத்திற் கலந்தது. நரிகளும் பூத பிசாசங்களும் அப்பிணக்குவியலை மிக்க களிப்போடுண்டு அர்ச்சுனனைப் புகழ்ந்து, இம்மகா புருடனால் இன்று நமக்கு நல்லுணவகப்பட்டதென்று மிக்க களிப்படைந்து கூத்தாடித் தின்றன. அர்ச் சுனன் இவ்வாறு யாவரையும் வெற்றிகொண்டபின் சாரதியைநோக்கி இன்னு மென் தந்தைக்குப் பகைவருளரோ வென்ன, விசயப்பிரதாபா! அப்பகைவர் யாவரு முன்கையா லின்றுதான் மடிந்தனர்கள் என்றதைக்கேட்டுத் தன் கோபந்தணிந்து கையிற்பிடித்திருக்கும் வில்லில் நாணைத்தளர்த்தித் தேரின் மீது வைத்து இளைப்பாறினன்.

சித்திரசேனன் இரதத்தைவிட் டிறங்கி இந்திரனிடஞ்சென்று அர்ச்சுனனுடைய ஆற்றல் முழுது மெடுத்துரைக்கக்கேட்டுத் தான்கொண்ட களிப்புக்கெல்லையில்லாமல், முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் முதலிய யாவரு மொருங்குசூழ, இந்திர னெதிர்கொண்டுசெல்ல விசயன் இவர்களைக்கண்டுஇரதத்தைவிட் டிறங்கித்துதித்துநின்றான். இந்திரன் அவனை மார்புறத்தழுவிப் பலஆசிகள்கூறி உபசரித்து இந்திரலோகத்துட் புகா முன்னமே, தேவராசன் கட்டளைப்படி வெள்ளையானையை அலங்கரித்துக் கொண்டு வந்தார்கள். முனிவர்க ளனுமதியால் அர்ச்சுனனை அதன்மே லுட்காரச்செய்து வெள்ளைக்குதிரைமே லிந்திரன் ஏறிக்கொண்டு நகரை வலம்வருகையில் கல்விகேள்விகளிற் சிறந்த விஞ்சையரி லொருவனாகிய அக்ஷயனென்பான், இந்திரனைநோக்கி பூதலத்தில் வாழும் இம்மானிடனுக்கு இவ்வகையான மரியாதைசெய்த லமையுமோ வென்றான். இம்மொழி அவன்செவியிற்புகுதலும் கண்ணிற் புகையெழ காலாக்கினி உருத்திரன்போற் சீறி அறிவில்லா மனத்தாய்! நீ தேவரிலொருவனாய் இருக்கின்றனையே யல்லாமல் புத்தியில் அசேதனராகிய மானிடரை யொத்தவனேயாவை. இவனே துளவமாலையணிந்த மாயோனுக்கு மைத்துனன். பூபாரம் நீக்குதற் பொருட்டாகநரநாராயணரில் அந்நரனே மீண்டும் அர்ச்சுனனா யவதரித் திருக்கின்றான். தேவராலும் மற்ற யாவராலும் சயிக்கக்கூடாத வீரர்களை ஓர் நொடிப்போதில் சயிக்குமிவனைக் கற்றறிந்த நாவலர் நரனென் றிகழவேமாட்டார்கள். நீ நரனென்று சொல்லப்போமா? இனி உன் மனத்திலும் இப்படிக்கருதாதை என்றுவற்புறுத்திச்சொன்னான். இதைக்கேட்ட அவன் வாய் பேசாதிருந்தான். பின்பு அர்ச்சுனனும் தேவராசனும், தேவர்கள் புட்பம்வருஷிக்க அறுதொழிலோர் வேதகோஷ்டமுழக்க நகர்வலம்வந்து குற்றமில்லாத இந்திரன் தன் அரண்மனைக்கழைத்துச்சென்று ககனபீடத்தின்மீது அர்ச்சுனனை யிருத்தி தேவர்கள் இருமருங்கு மிருப்ப, தேர்ப்பாகனாகிய மாதலியைநோக்கி என்னன்புக்குரிய புத்திரசிகாமணி போரின் திறத்தைச் சொல்லுகவென்றான்.

மாதலி, இந்திரனைத்தொழுது போற்றி, அர்ச்சுனன் போர்த்திறலை என்னாற் சொல்லவல்லதோ! முன்னே சிராமபிரானுக்குச் சாரத்தியஞ்செய்தநான் இவ் வர்ச்சுனனுக்கு செய்வதோ பெரிதென் றெண்ணிச்சென்ற என் மனம் திடுக்கிட எதிர்த்துவந்த மூன்றுகோடி அசுரரையும் தன் வெவ்விய கணையால் சிலரை மாயச்செய்து பின்பொரு கணப்போதில், சிவனருளாற் பெற்ற பாசுபதாஸ்திரத்தைவிட்டு இரணியபுரத்துள்ள முக்கோடி அவுணரையும் தென்றிசைக் கனுப்பிய இம் மகாபுருடனுடைய ஆற்றலை என்னொருநாவாற் சொல்லவல்லனோ? வென்று அங்கு நிகழ்ந்தவற்றை யெல்லாம் புகழ்ந்து பேசினான். இதைக்கேட்ட இந்திரனும் மற்றுமுள்ள தேவர்களும் களிகூர்ந்து தாங்களிநிற்பெற்ற சிறந்தகலைகளை அர்ச்சுனனுக்குக் கொடுத்து மகிழ்வுற்றார். பின்பு அர்ச்சுனன் தன் தந்தை தாளில்வீழ்ந்தெழுந்து ஐயா, நான் என் சகோதரரைப் பிரிந்து நெடுநாளாயிற் றாதலால் எனக்கு இன்று சகோதரரிடஞ்செல்ல விடைகொடுமென்று இறைஞ்சிநின்றபுதல்வனைநோக்கி,

மிக்க திறலையுடைய அர்ச்சுனா! உன்னைவிட்டுப் பிரிய எனக்கெவ்வளவும் மன மேயில்லை. ஆனால்நீஉன் தமையன் தம்பிமார்களைப் பார்க்கவேண்டுமென்பதைத் தடுக்கவுமொண்ணாது, ஆயினும் உனக்குப்பின்னால் பிரயோசனத்தைக் கொடுக் கும் காரிய மொன்றுள்ளது அதை ஒருநாளிருநாளில் பெறத்தக்கதல்ல, சிலநா ளிருந்தே கற்றுக்கொள்ளவேண்டும்; அஃதென்னெனின் நீங்கள் பன்னிரண்டு வருடம் வனவாசஞ்செய்தபின் ஒருவருடம் அஞ்ஞாதவாசத்தையும் நிறை வேற்றவேண்டு மாதலால் நீங்க ளைவரும் வேற்றுருக் கொள்ளவேண்டும். அக்காலத்தி லுனக்கு ஊர்வசியால் நேர்ந்த பேடிரூபத்தை அடையப்போகி றாய், அப்படி அடைந்தபின் அதற்குத் தகுந்த செய்கையும் வேண்டியிருப்ப தனால் பரதசாஸ்திரங்கற்று அதனைப்பிறருக்குக் கற்பிக்கவேண்டும். அதைநார தரிடம் சந்தேகமறக் கற்றுக்கொள், உன் தமையன்தம்பிமார்களுக்கு நீ அடை ந்தபுகழை யெல்லாம் உரோமசன்மரால் தெரிவிக்கின்றேனென்று கூறி, அர்ச் சுனனுக்கு ஐயாயிரம் போகமாதரையும் தனி யரண்மனையையுங் கொடுத் தான். அர்ச்சுனன் இந்திர னளித்த போகமாதரைத் தன் தாய்போற் பாவி த்து முனிவர் கற்பிக்கும் பரதநூலிற் கருத்தைச் செலுத்தியிருந்தான். இந்தி ரன் உரோமசன்மரை யழைத்து, அர்ச்சுனன் தவம்புரிந்து பார்வதியை இடப் பாகங்கொண்ட பரமசிவனால் அடைந்த பாசுபதாஸ்திரத்தின் சிறப்பையும், பின்பு என் பகைவரை வெற்றிகொண்ட விசேடத்தையும், பூலோகத்திலுள்ள தருமராசனுக் குரைத்து அவர்கொண்டிருக்கும் வருத்தத்தை ஒருவாறுதணி யச்செய்து வாருமென்று விடைகொடுத் தனுப்பினான்.

உரோமசன்மர் இந்திரனிட்ட பணியையேற்று மண்ணுலகிற்சென்று தரு மராசன் முதலியோரைக்கண்டுஅவர்களா லுபசரிக்கப்பெற்று அர்ச்சுனன்தவத் திற்குச் சென்றதுமுதல் நிவாதகவசர் காலகேயர்களை வெற்றிகொண்டு இப் போது இந்திர னுலகத்தில் தேவர்களும் முனிவர்களும் மற்றையோரும் வாழ் த்த சுகித்திருப்பதுவரையிலுஞ் சவிஸ்தாரமாய் அவர்களுக்கறிவித்தார். அதை க்கேட்ட அனைவரும் சந்தோஷசாகரத்தில்மூழ்கி உரோமசன்மரைப் போற்றிப் புகழ்ந்து, அர்ச்சுனனைவிட்டுப் பிரிந்திருக்கும் விசனமே எம்மை வருத்துகின்ற தென்று முறையிட, உரோமசன்மர் அவர்களுக்குப் பல தேறுதலான வார்த் தைகளைச்சொல்லி அர்ச்சுனனடைந்த சிறப்பை உங்களுக் கறிவிக்கும்படி இந் திரன் கட்டளையிட் டிங்கென்னை யனுப்பினான். ஆதலால் நீங்களொன்றுக்கு மஞ்சவேவேண்டா மென்று அவர்களுக்குச்சொல்லி அங்கே அவர்களுடன் சுகித்திருந்தார்.

நளன் சரித்திரம்.

ஓர் நாள் தருமராசனுடைய செந்தாமரைபோன்ற முகம் செழிப்பில்லா மல் வாடியிருக்கக்கண்ட உரோமசன்மர், தருமராசனை நோக்கி உமது முகம் சந்திரனைக்கண்ட தாமரையேபோல் வாடியிருக்கக் காரண மென்னவென்று கேட்க, சுவாமி! ஒருவன் விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில்விழுந்த துபோல் "சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின் - வறுமை தருவதொன்

தில்.'' என, சூதாடுவதனுல் தீமையே வருமென்று தெரிந்திருந்தும் யோசியர் மற் சூதாடிச் செல்வத்தையிழந்து இப்படிப்பட்ட துன்பத்தை யனுபவிப்பதை எண்ணினுல் என் மனம் புண்ணுகின்றதேயென்றுகூறியதைக்கேட்ட உரோமசன்மர் குறுநகைகொண்டு நீர் சூதாடியது பெருங்குற்றமென்று கொள்வது வியக்கத்தக்கதேயாம். எப்படியெனின் உலகிற் சூதினுல் தம் வாழ்க்கையை இழந்துவிடுவது மனிதர்க்குள் சகசமானகாரியம்;அதற்குச்சந்திரகுலத் தரசனுகிய நளனே போதுமான சாக்ஷியா யிருக்கின்ருன் என்ருர். அதற்குத் தருமராசன் அவன் சரித்திரத்தை விளங்கச் சொல்லவேண்டுமென்று கேட்க உரோமசன்மர் கூறத்தொடங்கினர்.

நீர்வளம் நிலவளம் குடிவளமிக்க நிடதமென்னு மொரு மலையுண்டு, அம் மலையின் வளப்பத்தால் அதைச் சூழ்ந்த நாட்டிற்கு நிடதநாடென்று பெயர். அந் நாட்டில் மாவிந்தம் என்னுமோ ரிராசதானி யுண்டு, அதிற் பொய் சூது கொலை களவு என்னு மிவ்வகைத் துர்ச்செய்கைகள் தலையெடாவண்ணம் வீரசேனன்மகனுகிய நளச்சக்கரவர்த்தி நீதியோ டரசாண்டு வருநாளில், ஓர் நாள் தன் சிங்காரத்தோட்டத்தில்வந்து தென்றற்காற்றினுல் இளைப்பாறி வனத்தின் செழிப்பைக் கண்டுகளித்து, ஆழியேபோலுள்ள அவ் வனத்தின் தடாகத்தில் அனேக அன்னங்கள் கூட்டங் கூட்டமாய்த் திரிந்து விளையாடிக் கொண்டிருப்பது மல்லாமல் மிக்க அழகுள்ள இரண்டு அன்னப்பறவைகள் ஓர் தாமரைமலரின்மேல் நின்று இளைப்பாறுவதைக் கண்டு அதன்மே லிச்சை கொண்டு இவ் விரண் டன்னங்களில் ஒன்றையேனும் கைக்கொண்டு செல்லவேண்டுமென் றெண்ணி அருகிருந்த வீரரிடம் அதைப் பிடித்துத்தரும்படி கட்டளையிட்டான். அவரு மப்படியே யாகுகவென்று மெல்லச்சென்று அதிலொன்றைப் பிடித்துவந்து அரசன்கையிற் கொடுத்தார்கள். அவனதைப் பெற்று உற்றுநோக்குகையில், அது தன்னுயி ரிழந்ததுபோல் நடித்தது. அதைக்கண்ட அரசன் பரிதபித்துக் கண்ணீர்விட்டான். அந்நீர் அவ்வன்னத்தின்மேல் விழுந்தவுடனே தன்னை நீராற் சயித்தியோபசாரம்செய்தாற்போற் பாவித்து தலைநிமிர்ந்தது. அரசன் இன்னுமிதை நம்கையிற்பிடித்திருந்தால் இறக்குமென் றெண்ணி மெல்லக் கீழேவிடுத்தான். அப்படி விடுத்தவுடன் விரைந்தெழுந்து முன்னிருந்த இடத்திற்போ யுட்கார்ந்து, நாம் இவ் வரசன் கையிற் சிக்குண்டும் நம்மைக் கொலைசெய்யாது விடுத்தமையால் இவ்வரசனுக்குத்தக்க கைம்மாறு செய்யவேவேண்டுமெனக்கருதி அங்கிருந்துவிரைந்தெழும்பி அரசன் கரத்தில்வந் துட்கார்ந்தது. அரசன் மிக்க களிப்படைந்து அதை யொருகையாற்றுங்கி மற்றொரு கையால் தழுவி ஆதரித்து அவ்வனத்திலுள்ள தன் அழகிய மண்டபத்தில் ஏகாந்தமா யுட்கார்ந்தான். அரசன் தனித்திருப்பதைக்கண்ட அவ்வன்னம், அருட்செல்வமே ஒருருக்கொண்டநீஎன்னைப்பிடித்தும் என்னுயிரைப் போக்காமல் என்மேற் கருணைகூர்ந்து விடுத்தமையால் அதற்கேற்ற பிரதி உபகாரம் உனக்குச் செய்யக்கருதி மீண்டு முன்னிடம் வந்தேனென்று சொல்லத்தொடங்கிற்று.

சிறப்புற்றோங்கிய விதர்ப்பதேசத்தை அரசாண்டுவரும் வீமராசனுக்குப் புத்திரப்பேறில்லாமல் தானும் தன்மனைவியும் துறவறம்பூண்டு தவத்திற் சிறந்த தமனமுனிவருக்கு நெடுநாள் தொண்டுபூண்டொழுகி அவர் மனத்தைக் களிக்கச்செய்தனர். பின்பொருநாள் அம் முனிவர் இவ்விருவரையும் நோக்கி நீங்கள் யாதுகருதி எமக்குத் தொண்டுசெய்கின்றீரென்று வினவினர். அவ்வாறு வினவிய முனிவர்தாளிற் பணிந்தெழுந்து சுவாமீ! நான் விதர்ப்பதேசாதிபதி,என்பேர் வீமன்,நெடுநாள் புத்திரப்பே றில்லாமல் மனம்வருந்தி உம்மைவந் தடைந்தேன்; தாங்க ளனுக்கிரகிக்க வேண்டுமென் றிறைஞ்சிநின்றான். தமனமுனிவர் உள்ளமகிழ்ந்து, வீமன் களிப்புறச்சுகுணமுள்ள ஒரு புத்திரனும்,அவன் மனைவிகளிக்க ஒருபுத்திரியும் பிறக்கும்படிஅநுக்கிரகித்தார்.முனிவர் கட்டளைப்படியே அவள் வயிறுவாய்த்து முன்னம் ஒருபுத்திரனையும்பின்பு ஓர்புத்திரியையுமீன்றாள். அப்புத்திரனுக்குத் தமநாசனென்றும் பெண்ணுக்கு தமயந்தி என்றும்நாமகரணஞ்செய்துநாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்துவருகின்றார்கள். அப்பெண்ணுக்கு இன்னும் விவாக மாகவேயில்லை நீரும் விவாகமில்லாதிருக்கின்றீர். உமது நற்குண நற்செய்கைக்கும்,வடிவிற்கும் தக்கவள் அப்பெண்ணே யல்லாமல் வேறு தக்கபெண்ணில்லை.அப்பெண்ணின் ரூபலாவண்ணியத்தைக் கூறுதற்குத் தேவராலும் மற்றியாவராலும் ஆகாதென்றால் சிறிய வுருவையுடைய என்னால் சொல்லக்கூடுமோ? ஆயினும் தெரிந்தவரையிற் சொல்லுகின்றேனென்று அக் கன்னிகையி னழகை பாதாதி கேசம் வரையிலு முள்ள ஒவ்வொரு அவயவங்களின் அழகையும் உள்ளதுபோ லெடுத்துப் பேசியதுமன்றி, கல்விச்செல்வத்தில் வாணியையும் கற்பில் அருந்ததியையும் வடிவத்தில் இலட்சுமியையும் ஒத்தவள் ஆதலால் உம்மிருவரையும் ஒன்று சேர்க்கக் கருதி இருக்கின்றேனென்று சொல்லிப் புகழ்கையில், நளமகாராசன் அனலிலிட்ட மெழுகேபோல் மனமுருகி அன்னத்தைநோக்கி மிக்க அழகுவாய்ந்த அன்னமே! என் குடும்பத்திற் பெரியாரில்லை,என்கட்டளைக் குட்பட்டவர்கள் அநேகரிருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு இவ்விஷயத்தைக் கூறுதலும் தகுதியன்று. நான் அம்மாதையடைய அவள் தகப்பனைக்கேட்டால் என் சொல்லைத்தட்டான். நானோ ஒருவனையும் ஒன்று வேண்டுமென்று இச்சித்துக் கேட்போனல்லேன், நீயே இருவரையும் கூட்டிவைக்கவேண்டும். இவ்வளவு உபகாரஞ் செய்வையேயானால் தாயினுஞ் சிறந்த தயையையுடையையென்று என் னுயிருள்ளளவும் போற்றுவேன்; நீயும் இப்போதிருக்கும் சுகத்தைவிடப் பதின்மடங் கதிக சுகத்திலிருப்பையென்று புகழ்ந்துபேசுவதை முற்றுங்கேட்டு அன்னம் களிப்புற்று, உன்னிஷ்டப்படியே நடத்துவிப்பேனென்று வாக்களித்து அவன் கையினின்று மெழும்பி ஆகாயத்திற் பறந்து விதர்ப்பதேசத்தை யடைந்து தமயந்திவசிக்கும் உப்பரிகையில் வந்திறங்கியது.

அச்சமயத்தில் தமயந்திகன்னிமாடத்திலில்லாமல் தன் அழகியசிங்காரத் தோட்டத்தில் தாதிகள் புடைசூழப் பலவகைப் பூக்களைக் கொய்துவிளையாடிக்கொண் டிருந்தாள். இதைக்கண்ட அன்னம் இது நல்லசமயமென் றெண்

ணித் தன் நடையைப்பழிக்கும் தமயந்தி முன்பாசப் பறந்துசென்று ஓர் மணற் குன்றின்மே லுட்கார்ந்தது. தமயந்தி அவ்வன்னத்தி னழகையும் அது நடிக்கும் அற்புதத்தையுங் கண்டு மிக்க ஆவலோடும் அதைப் பிடிக்கப் பாதசாரியாய் வெகுதூரம் நடந்தும் தன் கைக் ககப்படாமலிருந்தும் தான்கொண்ட இச்சையின் மிகுதியால் விடாமற் றொடர்ந்துபோகையில் ஒரு சிறு புதருக்குள் ஒதுங்கி யுட்கார்ந்து தன்னை விரும்பிவந்த தமயந்தியைநோக்கி மாதசிரோன்மணி! நான் இக்காட்டிலிருக்கும்வெள்ளையன்னத்தின் சாதியேயல்ல; பொன்னுலகத்தி லிருக்கும் அன்னத்தின் இனமாவேன். என் மேல் நீ இச்சை கொண்டு பிடித்தேகலாமென்று உன் தாமரைபோன்ற பாதம் வருந்த இவ்வளவுதூரம் நடந்துவந்தனை. அந்தோ! உன்பே ரென்னையென்று வினவ, தமயந்தி மிக்க ஆச்சரியப்பட்டுச் சொல்லுகின்றாள்.

அன்னமே! நான் விதர்ப்பதேசத்தை நீதியொடு அரசாளும் வீமராசன் மகள். என்பேர் தமயந்தி. வசந்தகாலத்தில் இங்குவந்து மலர்கொய்து விளையாடவந்தேன்; அப்படிவந்தவிடத்தில் உன்னைக்கண்டு பின்றொடர்ந்து வந்தேனென்ன, அன்னம் குறுநகைகொண்டு பெண்ணருங்கலமே! கமலாசனக்கடவுள்கரத்திலும் இம் மண்ணுலகத்தில் நளச்சக்கரவர்த்தி கரத்திலும் யானிருப்பதேயன்றி மற்றவர்கள்கையில் அகப்படேனென்று அன்னஞ்சொல்ல, கமலாசனக்கடவுளுக் கொப்பாக நளனை நீ புகழ்ந்துபேசினதால் அவருடைய பெருமையை நீ நன்றாய் அறிந்திருக்கிறாய்போற் காணுகின்றது. அதை விரித்துக் கூறென்று தமயந்தி கேட்க, அன்னம் நகைத்துப் பெண்மணியே! முப்பத்துமுக்கோடி தேவர்களும் இந்திரனும் நளனதுபேரைச்சொன்னால் அத்தேவரும் மூவரும் மகிழ்வரெனின் மண்ணுலகத்தில் மகிழாதார் யாவர்? ஓர்நாள் நான் இந்திரலோகம் சென்றிருந்தபோது நளனுடைய பெருமையைச் சொல்லும்படி இந்திரன்கேட்க, அவனழகையும், கொடையின் பெருமையையும், பகைவரை நாசஞ்செய்யும் திறத்தையும், அவன் சம்பத்தையும், நற்குண நற்செய்கைகளையும், குடிகளின்மேலுள்ள கருணையையும், உள்ளதை உள்ளவாறு எடுத்தோதினேன். அதைக்கேட்ட இந்திரனும் அருகிருந்த புலோமிசையும் உள்ளங்களித்துப் பூரித்தார்கள். இவ்வகையாய் நளமகாராசனுடைய கீர்த்திப்பிரதாபத்தைக்கேட்ட இந்திரன் பூலோகத்தில் இவனுக்கு யார் மனைவியாவாரென்று பிரமனைக் கேட்கையில், உன்பேரைச் சொன்னது போல் என் செவியிற்பட்டது,ஆனால் யான் தூரத்திருந்தமையால் அம்மொழியைச் சரியாய் அறியக்கூடாமற்போயினேன். ஒருவேளை அவர் உன்பேரைச் ச்சொல்லி யிருப்பாராயின் மிக்க புகழையுடைய நளமகாராசனுக்கு நீமனைவாட்டியாவது நிச்சயம், உன்னுடன் பிறந்தோருக்கும் பெருமையேயாம் என்று கூறும்போதே அவள் முகக்குறிப்பை யுற்றுப்பார்த்து நளமகாராசனது யோக்கியதையை முற்றுமறிந்தே தமயந்தி அவன்மேல் மிக்க மையல்கொண் டிருப்பதாக அன்னமறிந்துகொண்டு, இன்னமும் நளனைக்குறித்து ஏதேனும் கேட்கவேண்டியிருந்தால் கேளென்றது. தமயந்தி மகிழ்ந்து,அன்னத்தைநோக்கி இயல்பாகவே நளமகாராசனுடைய குணநிசயங்களைக் குறித்து என் பிதாவின்

சமீபத்திலிருக்கும் பெரியோரால் கேட்டுக் களிப்புற்றதுமன்றி, இன்று நீ சொன்னதையுங் கேட்டு மிக்க களிப்படைந்தேன். பெண்களில் தனக்குக் கணவன்வேண்டுமென்று வலியவேகூறுர், என் முகக்குறிப்பால் யான்கொண் டிருக்கும் கருத்தைத் தெரிந்துக்கொள்ளென்றுள். பெண்ணரசே! நீ நளன்மீது கொண்டிருக்குங் காதலை அச்சமின்றி என்னிடத்திற்சொல்லென்ன,அன்னமே நீ யுரைத்த நிடததேசாதிபதி என்னை மாலையிடுவாரென்று கருதியே நான் இதுவரையினும் இவ் வுடலைச் சுமந்திருக்கின்றேனென்றுள். அதற்கன்னமும் எல்லா விஷயத்திலும் மிக்க கீர்த்தியையுடைய நளமகாராசனிடத்தில் யான் போய் உன்மேல் ஒரு இராசகன்னிகை இச்சைகொண்டிருக்கிறு ளென்று சொல்வது தகுதியல்லவே, ஆயினும் உன் மனேபீஷ்டப்படியே சொல்லி அவ்வரசன் கருத்தை உன்பால் திருப்பினபின்பு, தந்தை தாய் சுவாதீனத் திலிருக்குமுன்னே அவர்கள் வேறே யாருக்காவது மணஞ்செய்வித்தால்யான் கூறியது பொய்த்துவிடுமே, நீ யெனக்கு உறுதிமொழி சொல்லுவையாகில் அதற்குத் தக்க முயற்சிசெய்வேனென்று அன்னஞ் சொல்லிற்று.

மங்கையரையும் மற்றியாவரையும் மயக்கும் நடையையுடைய அன்னமே! குமுதமலருக்குச் சந்திரனும் தாமரைக்குச் சூரியனுமே யல்லாமல் வேறு நாயகரில்லை. அதுபோல் நான் நிடததேசாதிபதியையே என் மனத்திற் கணவனுகக் கொண்டிருக்கின்றேன். உலகத்தில், புத்திரர்கள் தாய் தந்தையர் கருத்தைப்போலும், தாய் தந்தையர் பெண்ணின் கருத்தைப்போலும் நடக்கவேண்டும்; யான்விரும்பியிருப்பது நிடதராசனேயென்றறி; அவ்வரசனைத்தவிர வேறுபுருடனை இச்சியேன். நானெண்ணிய வெண்ணம் கைகூடாவிடில், அக்கினிப் பிரவேசமாய் என் னுவியைவிட்டு உனக்குச்செய்த உடன்பாட்டை நிறைவேற்றுவேன்; நீ தயைகூர்ந்து என் கருத்துக் கிடையூறு நேரிடா வண்ணம் நிறைவேற்றி வைப்பது உன் கடனேனென் றிறைஞ்சி நற்றவஞ்செய்து பொன்னுலகத்திற் பிறந்த அன்னமே! புத்தியிற் சிறந்த உனக்கு அறிவிலாதவள்சொல்வ தொன்றுண்டு, இராசசமுகத்திற்குத் தூதுசெல்வோர் அரசன் ஏகாந்தத்தி லுட்கார்ந்து சந்தோஷமா யிருக்கும்போது சென்று தாம் சொல்லும் வாக்கியம் அவன் மனத்துக்கின்பப்பட்டு நாளுக்கு நாள் அது விருத்தியாகும்படிச் செய்வதுதான் தூதருடைய சாமர்த்தியமென்று பெரியோர்சொல்லக் கேட்டிருக்கின்றேன் என்றுள். இவளுக் குண்டாயிருக்கும் திடசித்தத்தை அன்னம் அறிந்து பெண்ணருங்கலமே! உன்னுடைய நற்குண நற்செய்கைகளையும், ரூபலாவண்ணியத்தையும் பலரால்முன்னமேநளச்சக்கரவர்த்தி கேள்விப்பட்டு அனலிலிட்டமெழுகேபோல்மனமுருகி எப்போதும் உன்னையே நினைந்து உன்னுடன் பேசுவதுபோலும், பிணங்குவதுபோலும் உன் நினைவுகொண்டே தூக்கமின்றி வாடுகின்றுன். யார் யார் என்னென்னசொல்லியும் காதுகொடானுய்த் தமயந்தி நம்மை மணம்புரிவாளோ? நமது மனம்போல் அவள்மனம் நம்மை நாடியிருக்குமோ? நம்மையொரு பொருட்டாக மதிப்பாளோ? அவள் உள்ளக் கருத்தென்னமோ! வென்று சோர்ந்திருக்கிறுன். நளமகாராசன் உன்மேற்கொண்டிருக்கும் காதலுக்குஅள

வேயில்லே; அதனை எடுத்துரைப்பாரும் இவ்வுலகிலில்லே யாதலால் உன் மன உறுதியை அறிந்துபோகவந்தேன். இப்போதே நளனிடஞ்சென்று இங்கு நடந்த விஷயங்களையெல்லாம் எடுத்தோதி வருகின்றேன்; நீ உன் தாதியரோடிருவென்றுகூறி விடைபெற்றுவிரைந்துசென் றாகாயத்தி லெழும்பி மறைந்தது. தமயந்தி அன்னஞ்சென்ற வழியேநோக்கிச் சித்திரப்பாவையேபோலத்தகவடங்கி நின்றாள். தூதுசென்ற அன்னப்பறவை தான் தமயந்தியைக்கண்டு முடிவு செய்து வந்தசெய்தியை நளனுக்கறிவித்துத் தன்னிருப்பிடஞ் சென்றது. இது கிடக்க;

முன் விளையாட்டிற்பிரிந்த தாதிமார் தங்கள் தலைவியை நெடுநேரங் காணாமல் வருந்தித் தேடிவரும்போது அசைவின்றி நின்றிருக்கும் தமயந்தியைக்கண்டு ஐயமுற்று இவளேதையோகண்டு பயந்திருக்கின்றாளென்று நினைத்துச் சயித்தியோபசாரத்தாற் றெளிவித்து அவளை அரண்மனைக்கழைத்துச் சென்றனர். அவள் அதுமுதல் நளன்மேற்காதல்கொண் டுண்டி முதலியவற்றைத்துறந்து மஞ்சத்தின்மேல்சயனித்திருந்தாள்; தமயந்திநளன்மேற் காதல் கொண்டிருக்கின்றா ளென்று தன் தாய் தெரிந்துகொண்டு நமது புத்திரிக்கு விரைவில் விவாகஞ் செய்துவிடவேண்டுமென்று தன் கொழுநனிடம் தெரிவிக்க அவனு மதற்கிசைந்து அழகிய மண்டபமொன் றியற்றுவித்து நளராசன் முதல் எல்லாவரசருக்கும் மணவோலை யனுப்பினன். வீமராசனது தூதவரால் மணவோலையைப்பெற்ற நளமகாராசன் தான்கொண்ட களிப்புக்கெல்லையில்லாமல் தன் இரதகசதுரகபதாதிகளோடு குண்டினபுரத்தை நோக்கிவருகையில் வீமராசனல் எதிர்கொண்டழைத்து உபசரிக்கப்பட்ட பின்னர்தனது பரிவாரங்கள் தங்கியிருக்கும்நகர்ப்புறத்தில்வந்திருந்தான். தமயந்தி நளனையே விரும்பியிருப்பதையும் அவளுக்கு விவாகம் நடக்கப்போகும் நாளையும் நாரதர் இந்திரன் அக்கினி வாயு யமன் ஆகிய இந்நான்கு கடவுளர்க்குந் தெரிவித்தான். அவர்களும் தமயந்திமேல் மிக்க காதல்கொண்டு நால்வரும் மண்ணுலகத்தைவந்தடைந்துநளமகாராசனிருக்குமிடத்திற்குச்சென்று அந்நளமகாராசனைக்கண்டார்கள். அவர்களைக் கண்டவுடனெழுந்து அவர்களுக்குத் தக்க மரியாதைசெய்து நிற்கையில் நால்வரும் மகிழ்ந்து பல ஆசிகள்கூறி ஓரா ஆசனத்திலிருந்து நளராசனைநோக்கி எங்களுக் காகவேண்டும் முக்கியமான காரியத்தை நீ நிறைவேற்ற வேண்டுமென்று இந்திரன்கேட்க; அப்படியே செய்வேனென்று நளமகாராசன் வாக்களித்து உங்கள் கருத்தென்னவென்றுகேட்கையில்தமயந்தியினதுபருவத்தையும்அவளழகையுங்கேட்டுக் காதல்கொண்டு இம் மண்ணுலகில்வந்தோம்; நீ எங்களுக்குத் தூதுவனாகச்சென்று தமயந்திக்கு எங்கள்பெருமையை முற்றுமெடுத்துக்கூறி எங்களில்யாரையாவது மாலைசூட்டும்படிச் செய்யவேண்டுமென்றுகூற, அதைக்கேட்டு மனந்திடுக்கிட்டு என் கருத்தை யறிந்த இத்தேவர்கள் அறியாதவர்போல் என்னைத் தூதனுப்ப இசைந்தமையால் அதைச் செய்தே தீரவேண்டுமென்று நினைத்து விடைகேட்கையில் இந்திரன் ஒரு மறைப்பு மையைக்கொடுத்தான். நளமகாராசன் அதை நெற்றியிலிட்டு தமயந்திவசிக்கும் உப்பரிகையிற்சென்றபோது அங்குளராச

னைப்போலெழுதியபடத்தைத்தாதியர் தமயந்திக்குக்காட்டி அவனழகைச்சிலா கித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். நளமகாராசன் தன்னெற்றியிலிருந்தமறை ப்புமையைக் கலைத்தவுடனே, அவனுருவம் தமயந்திக்குந் தாதியருக்குந்தெரிந் தது. இவ்வாறு நளன் தன் னருகிலிருப்பதைக் கண்டும் தமயந்திக்குச் சந்தே கத்திற் கிடமுண்டாய் இத்தனைநேரம் படத்தில் நளனைக்கண்டமையால் அத் தோற்றமே நமக்கிப்படித் தெரிகிறதென்று நிதானித்து உற்றுநோக்குகையில் உண்மையிற்றானே நின்றிருப்பதையறிந்து நாணங்கொண்டு தாதியரைநோக்கி இவரானென்றுவினவ, தாதியர் நளமகாராசனைநோக்கி இச்சமஸ்தானத்தி லுள்ள காவலெல்லாங்கடந்து புருடரணுகாத இவ்வுப்பரிகையின்மேல் நீயெப்படிவந் தாய்? நீயார்? உன் பேரென்ன ? யாதுகாரியமாய் இங்குவந்தனை ? என்றுவினவ, தாதியரே! நான்நிடதேசாதிபதியாகிய நளமகாராசன், தேவலோகத்திலுள்ள இந்திரன் வாயு அக்கினி எமன் என்னுமிந்நால்வரும் உங்கள்யசமானியாகியதம யந்தியின்மீது மிக்ககாதல்கொண்டு என்னைத் தூதாக அனுப்பினார்கள்; அவர் கள் கொடுத்த அஞ்சனமையால் காவலைக்கடந்துவந்தேனென்றறிவித்துப்பின் அந்நால்வருடைய சிறப்பையும் ஒவ்வொன்றாய் முற்றுங்கூறிநின்றான். தமயந்தி நளன் முகத்தையுற்றுநோக்கிக் காமக்கட்லிலாழ்ந்து சற்றுநேரந் தன்னைமறந் தசைவற நின்று தெளிந்து நாணங்கொண்டு அருகிருக்குஞ் சேடியரைநோக் கிச் சிறைப்புறமாகச் சொல்வாள்போல் இவ்வாறு சொல்வாளாயினாள்.

அரசரேறே! கற்புடைய மங்கையொருத்தி தான் விரும்பினவனையேயல் லது கனவிலும் மற்றவரை இச்சிப்பளோ? அவன் தேவனேயாயினும் விரும் பாள். ஒருக்கால் தானிச்சித்த புருடன் இசையானாயின் உடனே அக்கினிப் பிரவேசமாவாளே யல்லது வேறுவகைசெய்யாள். சகலகலைகளையும் ஐயமறக் கற்றறிந்த உமக்குப்பேதையேன் என்சொல்லவல்லேனோ! வென்று கூறினாள். அதற்கு நளமகாராசன் உள்ளங்களித்து மகிழ்வெய்திப் புன்முறுவல்செய்து நீ கூறியவாக்கியம் நன்று நன்று! நெருப்பில் விழுந்தால் தீக்கடவுளைக் கூடியது போலாம். நீரில்விழுந்தால் வருணனைக் கூடியதுபோலாம். ஆனால்நீமுன் கூறிய மொழி பழுதாகுமென்று வேடிக்கையாகவே பேச, அதைக்கேட்ட தமயந்தி அதற்குத் தக்க பிரதியுத்தரஞ் சொல்லத் தெரியாமல் வருத்தமுற்றவள் போற் பிணங்கி, இந் நளமகாராசன் உண்மையில் நம்பாற் காதல்கொண்டிரு ப்பவனானால் இவ்வகை வார்த்தையைக் கூறுவனோ கூறானெனத் தன்மனத் தெண்ணிக் கலக்கங்கொண்டு சித்திரப்பாவைபோ லத்தகவடங்கியசைவற நிற் கையில், முன்னந் தூதுசென்ற அன்னம் அச்சமயத்தி லங்குவந்தணுகி தூது செல்வார் தங்கள்விதிக்கு மாறுபடாமல் நடப்பதே நன்னெறியா மாதலால் நள மகாராசன் தாக்ஷிணியமின்றிப் பேசியதைப்பற்றி நீ ஐயப்படவேண்டாமென்று தமயந்திக்குத் தேறுதல்சொல்லி, நளமகாராசனைநோக்கிச் சகலகலைகளையு முணர்ந்த நாவலரும் உமதுகேள்விக் குத்தரங்கூறானொன்றால் இப்பேதை உதக ரிப்பளோ! இங்கு நிகழ்ந்த நிச்சயத்தை உம்மைத் தூதனுப்பினார்க்குச்சொல்லி விடுவதே நலமென்றுகூறித் தன்னிருக்கைக்குச்சென்றது. அன்னஞ் சொல்

வியதைக்கேட்ட நளமகாராசன், தூதுபொருந்தாமைக்கு மிக்க வருத்தமுற்று மறைப்புமையை முன்போல் நெற்றியிலிட்டு அந்நால்வரிருக்கு மிடத்தை நோக்கிச்சென்றான்.

நளமகாராசன் தூதுக்கு வெளிப்பட்டபோது இந் நால்வரும் வண்டுருக் கொண்டு தமயந்தியின் அந்தப்புரத்துட் சென்று நளமகாராசனுக்கும் தமயந் திக்கும் நடந்த வாக்குவாதத்தையும் பின்பு அன்னஞ் சொல்லியதையுங் கேட்டு உள்ளமகிழ்ந்து இவன் நன்னெறி யுடையானென்றே புகழ்ந்து மீண்டும் தமது சுயவடிவங்கொண்டு நளனுக்குமுன்னம் தாமிருந்த இடத்திற் போயிருந் தார்கள். நளமகாராசன் அவர்களைக்கண்டு தான் தூதுசென்ற காரியம் அவல மாய்ப்போனதை அறிவித்தான். அதற்கிந்திரன் மகிழ்ந்து பல அரியகணைக ளைக் கொடுத் தாசிர்வதித்தான். நெருப்புக்கடவுளும் தீயில்லாமல் சமைக்கும் வகையைக்கற்பித்து அதற்கு நளபாக மென்னும் பெயர்பெற்று விளங்க வரங்கொடுத்தான். காற்றுக்கடவுள் அசுவமந்திரமொன்றைக் கற்பித்தான். தென்றிசைக்கோன் ஓர் கதாயுதத்தையளித் தாசிர்வதித்தான். பின்பு ஆதி த்தனும் அத்தமானகிரியை யடையச் சந்திரனுதயமானான். அன்றிரவில் அறு சுவையோடுண்டு சயனித்தார்கள். இது நிற்க ;

மறுநாட்காலையில் எல்லாவரசர்களும் இரதகசதுரகபதாதிகளோடு சுயம் வரமண்டபத்தில்வந் திறங்கினார்கள். வீமராசனும் அவரவர்க்குத்தக்க ஆசன மளித் துபசரித் துட்காரச்செய்தான். பின்னர் தமயந்தியை நல்ல நீராலாட்டி ஆபரணங்களைப் பூட்டி, நெற்றிக்கு மை தீட்டி, கண்டவர் மனத்தை வாட்டி ஏழையர்க்குப் பொருளீட்டி, இரதிதேவியு மிவளுக் கிணையல்லவென்னுஞ் சொல்லைநாட்டி அன்னத்தைப் பழிக்கும் நடையையுடைய அத்தமயந்தியைத் தாதியர் புடைசூழ சுயம்வர மண்டபத்தி லழைத்துவந்து நிறுத்தி அங்கு வந் திருக்கும் அரசர்களின் ஆற்றலையும் கீர்த்திப் பிரதாபத்தையும் புத்திநுட் பத்தையும் நீதியோடு செங்கோ லோச்சும் திறத்தையும் முறையேகாட்டிப் பின்பு நளமகாராசனிருக்குந் திசையை நோக்கிப் பார்க்கையில் அவன்போலு மைந்துபேரிருக்கக்கண்டு திகைத்து இஃதென்ன வதிசயமென் றேங்கி இது தேவர்களின் செய்கையேயென்றுன்னி இச்சூழ்ச்சியைத் தாதியர்கள் தமயந் திக் கறிவித்தார்கள். இதைக்கேட்ட தமயந்தி நளமகாராசனால் முன்னமே இவ ர்கள் செய்தியை யறிந்திருப்பவளாதலால் மனங் கலங்காமல் திடசித்தங் கொண்டு இவர்க ளாண்மையை யழிக்கக் கருதி, தன்சிரமேற் கைகூப்பி நான் இச்சித்த நளமகாராசரே எனக்குக் கணவராவார், மற்றவர் என்னை யீன்ற தந்தையேயாவரென்று முக்கட்பெருமானை மனத்தெண்ணித் துதித்து, கண் ணிமைத்தலாலும் மார்பிலணிந்த மலர்மாலையில் வண்டுமொய்த்துப் பாடிப் போதலாலும் காலடி பூமியிற்பொருந்துவதனாலும் தன் கையிலுள்ள மாலையை நளமகாராசன் கழுத்திலிட்டாள். அதைக்கண்ட மற்ற வரசர்கள் இரதியைப் பழிக்கும் கயல்போன்ற கண்ணையுடைய தமயந்திக்குத் தக்க புருட னிவனே யென்று கூறிப்புகழ்ந்தனர். தேவர்கள் ஆகாயத்தினின்றும் புட்பமாரி பெய்த னர். பின்பு வீமராசன் நல்ல சுபலக்கினத்தில் சாத்திரவிதிப்படி நளமகாராச

னைக்கொண்டு தமயந்திக்குத் திருமங்கலியந் தரிப்பித்தான். நளமகாராசனே சிறிது நாள் அங்கிருந்து பின்பு தன்மாமனாரிடம் விடைபெற்று நால்வகைப் படைகள்சூழத் தமயந்தியுடன் தன் னிடதநாட்டிற்கு வந்து சுகித்திருந்தனன். இதுகிடக்க;

இந்திரன் முதலிய நால்வரும் தங்களுலகுக் கேகும் மார்க்கத்தில், இவர்களுக் கெதிரோ ஓட்டெடுத்து வரும் சனிபகவானை நோக்கி நீ இப்படி விரைந்தோடுவானேனென்று கேட்க, அதற்குச் சனிபகவான் தமயந்தியை விரும்பிச் செல்கின்றே னென்றான். அதைக்கேட்ட இந்திரன்முதலிய நால்வரும் அவள்நளமகாராசனுக்கு மனைவியாயினாளென்றார்கள். அம்மொழியைக் கேட்டுக் கண்களிற் புகையெழ மிக்க கோபங்கொண்டு அந்நளமகாராசனிடம் என் முழுவல்லமையுங்காட்டி அவன் செல்வத்தைக்குலைத்துப்பராரியாக்கி அவனை மீளாத்துன்பத்தாழ்த்துகின்றேனென்றுசபதஞ்செய்துநிடதநாட்டிற்குச்சென்று நளமகாராசனைப்பற்றுதற்கு யாதொருகுற்றமுங்காணாமையால் நாம்செய்து வந்த சபதம் பொய்த்துவிடும்போ லிருக்கின்றதே! அந்தோ! இவ்வளவுநீதியொ டரசாண்டுவரு மிப்பற்றிலாப் புருடனை எவ்வகையிற் றீண்டுவோமென் றேங்கி நளமகாராசனரண்மனையி லிருக்கும் ஓர் தான்றிமரத்தின்மே லேறிச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். நளமகாராசன் நெடுநாள் நீதியோ டரசாண்டுவர தெய்வச்செயலால் தமயந்தி வயிறுவாய்த்து ஒரு புத்திரனையும் புத்திரியையும் ஈன்று சுகமே வாழ்ந்துவந்தாள். ஒருநாள் நளமகாராசன் பாகியத்துக்குப் போய்க் கால்கழுவித் திரும்புகையில் புறங்காலில் எள்ளளவு நனையாம லிருக்கக்கண்டு, அதையோர் நிபமெனக்கொண்டு அவனை அக்கணமே சனிபகவான் தீண்டினான். அதுமுதல் நளமகாராசனுக்குப் புத்திமாறிநீதியைக் கைவிட்டுச் செல்வங்குன்றி வருங்காலத்தில் இவனுக்குக் கப்பங்கட்டும் புஷ்கரனிடத்தில் சனிபகவான் தன்னுருக்கரந்து வேதியருருக்கொண்டு சென்று நளமகாராசனுடன் சூதாடும்படி அவனுக்குக் கற்பித்து அவனை மாவிந்தபுரத்திற் கேவினான். அவ்வாறேபுஷ்கரனும் சூதாடலை வெற்றிக்கொடியாகப் பிடித்து மாவிந்தநகரத்துட்சென்று, நளமகாராசனைக்கண்டு சூதாட வழைக்கையில் வினைவயத்தாற் புந்தி தடுமாறி மந்திரிமுதலானோர்கள் எவ்வளவாய்ச் சொல்லியுங் கேளாமல் சூதாட ஆரம்பித்துத் தன்னாடு நகர முதலியவற்றையெல்லாந் தோற்று, நிற்க நிழலில்லாமல் தானும் தன் மனைவியும் தம்குழந்தைகளைக் கையிலேந்திக்காட்டை நோக்கி நடக்கையில் அந்நாட்டி லுள்ள குடிகளெல்லாம் ஒன்றாய்த் திரண்டு கோவெனக் கதறியழுது, அந்தோ! அட்ட லட்சுமிகளும் ஒன்று கூடி வாழ்ந்திருக்க அவர்கள் இன்றுதான் இந்நகரத்தைவிட் டகன்றனர்போலும். அந்தோ! நீதியிற்சிறந்த இந்நாட்டிற்கு இப்படிப்பட்ட துன்பமும் வரலாமோ,ஐயோ தாயினுஞ்சிறந்த தண்ணளியையுடைய இவ்வன்னை பாதசாரியாய் நடந்தேகுவது யார்செய்த கொடுமையோ, "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி - தொகுத்தார்க்குந் துய்த்த லரிது." என்று பெரியார் பணித்தமைபோல விதிவசத்தை யார்தான் வெல்லுதல் கூடும். முத்துச் சிவிகையிலூர்ந்துதாதியர்கள்புடைசூழச் செல்லும் இவ்வன்னையினுடைய தாமரைமலர் போன்ற பாதங்கள் வருந்தச்செல்வதை நாம்கண்ணாற்பார்த்தும் உயிர்வாழ்

கின்றேமேயென்றுபுலம்பிஇந்நாள்வரையும் நம்மைஅன்புடன் காத்துவந்தஇவர்களைவிட் டகலலாகாதென்றெண்ணி எல்லோரும் அரசனைவந்தனுகிக் கோவெனக்கதறியழுதனர். அவ்வாறுயிற்கும்குடிகளைப் பலசமாதானமொழிகளைக் கூறிநீங்கள் நாட்டிற்குச் செல்லுங்கோளென்று விடைகொடுத் தனுப்பிவிட்டுக் காட்டை நோக்கிச்சென்றார்கள். இவ்வகைத் துன்பத்திற்குள்ளான நளச்சக்கரவர்த்திமுகம் வாடாமலும் சித்தங் கலங்காமலும் இருந்தானென்று உரோமசன்மர்கூற,தருமராசன் உள்ளமகிழ்ந்து நளமகாராசனுடைய மற்ற சரித்திரத்தையும் திருவாய்மலர்ந் தருளவேண்டுமென்ன உரோமசன்மர் சொல்லுகின்றார்.

கேளுந் தருமராசனே, நளச்சக்கரவர்த்தியும் தமயந்தியும் இரண்டு குழந்தைகளையு மழைத்துக்கொண்டு நெடுந்தூரம் கானிற் செல்லுகையில், விதர்ப்பதேசத்திற்குத் தன்புரோகிதர்மகனாகிய ஓர் வேதியனிடத்தில் தன்னிரண்டு மக்களையு மொப்புவித்து அம்மக்களை விமராசனிடம் சேர்க்கும்படி அனுப்பிவிட்டு, தமயந்தியும் தானும் சிலநாள் காட்டில்வசித்துக் காய் கனிகளையருந்திக் காலங்கழித்துவந்தனர். இப்படியிருக்கையில் ஓர் நாள் அரசன் தமயந்தியைநோக்கி பெண்கள்நாயகமே! நீ என்னுடனிருந்து இவ்வகைத் துன்பத்தை யனுபவிப்பதைப்பார்க்கிலும் உன் தாய்வீடுசென்று சுகித்திரு,நான் இன்னுஞ் சிலநாளில் வந்துசேருகின்றேனென்றுசொல்ல, கற்பிலருந்ததியையொத்த தமயந்தி கணவனடியில் விழ்ந்துபுலம்பி நான் தேவரீரிடமிருந்து காலங்கழிப்பதே யல்லாமல் என் தாய்வீடுபோகேன். தேவரீர் இப்படிப்பட்ட வார்த்தையை இன்னொருமுறை சொல்லாதிருக்கப் பிரார்த்திக்கிறேனென்று வணங்கினாள். அரசனும் மறுமொழிகூறாமல் அவளிஷ்டப்படிக் கிசைந்து அக்காட்டைவிட்டு மற்றோர் காட்டிற்செல்லுகையில், சனிபகவான் இவர்கள் உடுத்திருக்கும் ஒற்றைத் துகிலையும் கவரவெண்ணி, சில அன்னங்களைச் சிருட்டித்து அவைகளை அரசனிருக்குமிடமே யனுப்பித் தான் முன்னந் தூதாகவந்த அன்னமேபோலுருக்கொண்டு இருவருக்குமுன்னேசென்று உலாவினான். இதைக்கண்ட தமயந்தி அவ்வன்னத்திலொன்றைத் தனக்குப் பிடித்துத்தரும்படி வேண்டினாள். அரசனதற் கிசைந்து தானுடுத்திருந்த ஒற்றைத்துகிலைக் களைந்து அவ்வன்னங்களின்மேல் வீசி எறிந்தான். அவைகள் அத்துகிலைக் காலா லெற்றிக்கொண்டு விரைவாய் ஆகாயத்தினெழும்பிச் செல்லுகையில், உன்னுடையைக் கவர்ந்துகொள்ளும்படி சனிபகவானெங்களை ஏவினனாதலால் இத்துகில் மீண்டு முனக் ககப்படாதென்று மறைந்துபோயின. தானணிந்திருந்த ஒற்றைத் துகிலையு மிழந்து வேறே தரித்துக் கொள்ளவகையுமில்லாமல் தமயந்தி உடுத்திருக்கும் ஆடையிற் பாதி கிழித்துத் தானுடுத்திக்கொண்டு அன்றிரவில் ஓர் கூரையில்லா வீட்டில் இருவரும் சயனித்தார்கள். தமயந்தி காட்டிற் றிரிந்ததனால் இளைப்புற்றுக் கண்ணுறங்கினாள். நளமகாராசனோவெனின், தமயந்தியைத் தன் தாய்வீட்டுக்குச் செல்லும்படி எவ்வளவாய்ச் சொல்லியுங் கேளாமல் தன்னுடனிருந்து இப்படிப்பட்ட துன்பத்தை யனுபவித்திருத்தலைநமது கண்களாற் பார்த்திருப்பதைவிட அவளைவிட்டுப் பிரிந்தால் சீக்கிரத்திலே தன் தாய்வீடுபோய்ச்சேர்ந்துசுகித்தி

ருப்பாளென்றுதனக்குள்ளாலோசித்துஅவ்விடத்தைவிட்டு மெல்லவெழுந்து பத்தடிதூரஞ்சென்று தமயந்தியைவிட்டுப் பிரிய மனமில்லாமல் மீண்டு மவளிடம்வந்து வருந்தி மனந்துணிந்து அவளைத் தனியாக்கி விட்டுப் பிரிந்து காட்டைநோக்கிச் செல்கையில் ஆதித்தனுமுதயமானான். அக்கானில் காலைக்கடனை முடித்துக்கொண்டு வெயிலுக்கொதுங்கி அவ்விடம்விட் டகன்றுகாட்டை நோக்கிச் செல்லுகையில் சனிபகவான் கட்டளையால் கார்க்கோடகன் மூங்கிற்காடொன்று பற்றியெரிய அவ்வக்கினிக்கிரையாகும் ஓரரவமாய் நளமகாராசனைக்கண்டு ஓலமிட்டழுது என்னைத் தசவென் றெண்ணிக்கொண்டு இத்தீயினின்றும் பிழைக்கவிட வேண்டுமென்று சொல்ல,நளமகாராசன் அதன்மேற் கருணைகூர்ந்துஓர்விறகுகொண்டுதூக்கி அவ்வாறே தசவென்றுசொல்லிவெளியேவிட்டான். அவ்வரவம் தன்செய்கையை விடாமல் தச வென்பதற்குப் பத்தென்றும், கடி யென்றும் பொருள்படலால் உடனே நளராசனுடைய காற்பெருவிரலைக்கடித்தது. அப்படிக் கடித்தவுடன் அவனுடலெங்கும் விடமேறிக் கருநிறமாயின.நளமகாராசன் தன்னுருவமாறியதைக்கண்டுஅரவத்தைநோக்கி, நானுனக்குச்செய்த உபகாரத்துக்கு நீ செய்த பிரதியுபகாரம் மிகவும் விந்தையாயிருக்கின்றதென்ன, அதற்கு அது உன்வடிவத்தோடு செல்வையேயானால் ஒருவரிடத்தே நெருங்குதற்குஅச்சப்படுவையாதலால் உன் சுயவடிவம் வேண்டுஞ் சமயத்தில் உன்னுடம்பிலேறிய விடத்தை மீண்டும் இறக்கிக்கொள்ளுவேனென்று சொல்லி மறைந்துபோயிற்று.

பின்பு நளமகாராசன் அவ்விடம்விட்டகன்று அயோத்திமா நகரத்திற்குச் சென்று இருதுபர்ணமகாராசனிடமடைந்து,சாரதித்தொழிலையும் சுயம்பாகித் தொழிலையு மேற்றுத் தமயந்தியை நினைத்து வருந்தியிருந்தான். இங்கே தமயந்தி துயில்நீங்கி விழித்து தன் பக்கத்தில் புருடனைக் காணாதேங்கி நம்மைச் சோதிக்கவேண்டி இங்கெங்கேனும் பதுங்கியிருக்கின்றனரோ வென்றெண்ணி அவ்வனமெங்கும் சுற்றித்தேடியும் காணாமல் வருந்தித் துயரமேலிட்டு மூர்ச்சையடைந்து கீழேவிழ்ந்து தெய்வகதியாய் மூர்ச்சை தெளிந்தெழுந்து தனியளாய்க் காடெங்குந்திரிந்து தன் தாய்வீடுசெல்ல வழிதெரியாமல் திகைத்திருக்குஞ் சமயத்தில் ஓர்வேடன் கற்பின்மிக்க தமயந்தியை யணுகிச் சில பரிகாச வார்த்தையாடி அவ்வழகிய கையைப்பிடிக்க ஆரம்பித்தான், தமயந்தி மிக்க சினங்கொண்டு நீ சாம்பராகக்கடவை யென்று சபித்தனள். அவ்வாறே அக்கொடியோன் இறந்துபட்டனன், பின்பு அவ்விடத்தைவிட்டகன்று சேதிதேசத்துக் கேகும் வர்த்தகர் பின்சென்று அந்நகரத்திற் பிரவேசித்து தன் பெரிய தாயார்வீதிவழியாகப் புலம்பிச்சென்றாள்.

இவ்வகையாய்ப் புலம்பிச்செல்லும் தமயந்தியை அந்நாட்டரசன் மனைவி உப்பரிகையின்மே லிருந்துகண்டு அந்தோ! இப் பெண்கொடியின் நடை அன்னத்தைப் பழிக்கின்றதுவே! இவள் தேகவொளியை நோக்குமிடத்து மானிடப்பெண்ணல்லளென்று ஐயமுற்றுத் தன்னருகிருந்த தாதிப்பெண்களையேவி அப்பெண்ணை அழைத்துவரும்படி உத்திரவுசெய்தாள். தாதிகள் தமயந்தி

மிடஞ்சென்று அம்மணி! இந்நாட்டைப் பரிபாலித்துவரும் அரசன் மனைவி உன்னை அழைத்துவரும்படி ஆஞ்ஞாபித்தாள்; எங்களுடன் வாவென்று அழைத்துக்கொண்டுபோய் அரசியிடம் விட்டார்கள். அவள் தமயந்திக்கோர் ஆசனமளித் துபசரித்து நீயார்? உன் வரலாறென்னவென்று வினவ, உள்ளதைச் சொல்லாமல் மாறாகக் கற்பித்துப்பேசினாள். அவ்வரசி இவளைத் தன் மருமகள் சுனந்தையினது பாதுகாவலில் இருத்தினாள், அவள் இவளைத் தன் சகோதரிபோற் பாவித்து எல்லா நன்மைகளையும் செய்துவந்தாள்.

முன்னே வேதியனுட னனுப்பப்பட்ட பிள்ளைகளை வீமராசனிடம் சேர்த்து நளமகாராசனுக்கு நேர்ந்த விபத்தை யெல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்லக்கேட்டு மிக்க வருத்தமுற்று தன்னிடமிருக்கும் பண்டிதர்களில் சாமுத்திரிகா லட்சணமறிந்த வேதியனை யழைத்துத் தமயந்தியைக்கண்டு வரும்படி ஏவினன். அவ்வேதியன் தன்னிடம்விட்டுப் பெயர்ந்து தேசமெங்கும் திரிந்தும் எங்குங் காணாமல் வருத்தப்பட்டுக் கடைசியில் சேதிநாட்டை யணுகிச் சுவாகுராசன் அந்தப்புரத்துட் செல்ல விடைபெற்றுப்போய் அங்குள்ள இராசகன்னிகைகள் கைகளைப் பார்த்துக்கொண்டே வருகையில் சமீபத்திருந்த தமயந்தியினது கையையும் பார்த்தபோது, முன் தான் பார்த்திருந்த அடையாளமெல்லாம் அவள் கையிலிருப்பதைக்கண்டு துயரமேலிட்டு மூர்ச்சையடைந்து கீழேவிழுந்தான். அப்படி மூர்ச்சையடைந்துவீழ்ந்த அவ்வேதியனைத் தமயந்தியும்அங்கிருப்போரும் சயித்தியோபசாரத்தால் மூர்ச்சை தெளிவித்தெழுப்பியபின் அங்குள்ளோர் நீரிப்படி யாதற்குக் காரணமென்னவென்றுவினவ, தான் நாடிவந்ததையும் இப்பெண் தமயந்தி யென்பதையும் ஆதியோடந்தமாகத் தெரிவித்தான். இதையறிந்த அந்நாட்டரசன் தமயந்தியிருக்கும் அந்தப்புரத்திற்குவந்து தமயந்தி வாய்மொழிகளைக் கேட் டறிந்து வருத்தப்பட்டுஉன்னைப் பணிப்பெண்ணென்றேநினைத்திருந்தஎங்கள்அபசாரத்தைப்பொறுத்தருளவேண்டுமென்று பல சமாதானமொழிகளைக்கூறி உடனே சிவிகையிலேற்றி வீமராசனிடத்தி லனுப்பிவிட்டான். தமயந்திதன் தகப்பன் வீடுபோய்ச் சேர்ந்தபோது வீமராசனும் அவன் மனைவியும்தமயந்தியைக் கண்டு கோவெனக் கதறியழுது புத்திரியைக் கட்டித்தழுவிமார்போடணைத்து என் அருமைப்புத்திரியே! உனக்கும் உன் கணவருக்கும் இப்படிப்பட்ட துன்பம் வந்தபோது எங்களுக்கறிவித்திருந்தால் இவ்வகைத்துன்பம் உங்களையணுகாதேயென்று மிக்க வருத்தமுற்றுத் தமயந்தியை அந்தப்புரமழைத்துப்போயினர். வீமராசன், தமயந்தியைத் தெரிந் தழைத்துவந்த வேதியனை மீண்டுமழைத்து நீ வெகுசமர்த்தன்! என் அருமைப் புதல்வியைத் தேடிக்கொணர்ந்ததுபோல் என் மருகனாகிய நளமகாராசனையுந்தேடி இங்கழைத்துவர வேண்டுமென்றுஅவனுக்குவேண்டிய திரவியத்தையுதவி யனுப்பினன். அவ்வேதியனும் பல இடங்களிலுந் திரிந்தலைந்து விடாய்த்துக் கடைசியில் அயோத்தியிற்சென்று அந்நாட்டைப் பரிபாலித்துவரும் இருதுபர்ணராசன் சமுகத்தை யணுகினன். அரசன் இவனுக்கு மரியாதைசெய்து நீ இங்குவந்தகாரணமென்னவென்று வினவ, வேதியன் சொல்லுகின்றான். அரசரேறே! நிடத

தேசத்தைப் பரிபாலித்துவந்த நளராசன் காலகதியாய்புஷ்கரனுடன்சூதாடித் தன் செல்வமெல்லா மிழந்து தமயந்தியும் தானுமாய் காட்டையணுகி, சில தின மங்குவசித்துப் பின் பேதைமைத்தன்மையுடைய தமயந்தியைத் தனியாய் அக்காட்டில்விட்டுப் போனனும், இவ்வகைக் கொடுமையைக் கொலைபாதகரும்செய்யாரோ! இச்செய்கைவிடத்தினுங் கொடிதே யன்றோ! அவன் முடிமன்னனெனப் பெயர்வாய்ந்திருந்தானே யல்லது அவன்போலும் புத்தியீனர் இவ்வுலகிலிரார். அந்தோ! பெண்பால் விஷயத்தில் இப்படிச்செய்வாருமுளரோ? "பெண்ணென்றால் பேயுமிரங்கும்." என்னும் பழமொழி இவனிடம் பொய்த்ததே என்று நளமகாராசனைப் பலவாறிகழ்ந்து பேசினன். இருதுபர்ணன் இவைகளையெல்லாங்கேட்டு மனவருத்தமடைந்து ஓவியம்போலசைவறநின்றிருக்கையில், சமீபத்திருந்தசாரதியாகியநளமகாராசன் மனத்திற் கோபங்கொண்டு வேதியனைநோக்கி கல்வியில் வாணியையும், புத்தியில் ஆதித்தனையு மொத்திருப்பினும், ஊழின்திறத்தை வெல்லவல்லாருமுளரோ? கலைகளை முற்றுமுணர்ந்த நீர் இதை யுணராமல் பெருமைவாய்ந்த நளச்சக்கரவர்த்தியை இவ்வாறு இகழ்ந்துபேசுவது தக்கதல்லவேயென்று சொல்லியதைக் கேட்டு, இவன் நளமகாராசனேயென்று தன் புத்திநுட்பத்தா லறிந்துகொண்டு அதற்குப் பதிலொன்று முரையாமல் அரசனிடம்விடைபெற்று வீமராசனிடம் வந்து நடந்ததைத்தெரிவிக்க, அரசன் நளமகாராசனை சீக்கிரத்தில் கண்டுபிடிக்கக்கருதி தமயந்திக்கு மறுபடியும் சுயம்வரம் நாட்டினேமென்று பொய்யோலையொன் றேற்படுத்தி, வேதியனிட மதைக்கொடுத்து இருதுபர்ணனிட மனுப்பினன். அவனு மதைக் கைக்கொண்டு அரசனிடஞ்சென்று அவனைக்கண்டு மணவோலையைக் கையிற் கொடுத்து அரசனே! தமயந்தியைவிட்டுப் பிரிந்த நளனை நெடுநாளாய்க் காணமையால் கானகத்தில் எம்மிருகத்தின்வாய்ப்பட்டானேவென் றையமுற்று வீமராசன் மீண்டும்தன்செல்வப் புதல்விக்குமணஞ் செய்விக்கக் கருதி அரசர்க்கெல்லாம் மணவோலையை யனுப்பிவித்தா னென்றறிவித்து அரசனிடம் விடைபெற்றுச்சென்றான். இருதுபர்ணன் தன் பக்கத்திருந்த சாரதியாகிய நளனைநோக்கி அவ்வீமன்பட்டணத்திற்கு ஒருதினத்திற்போக முடியுமோவென்ன, நளமகாராசன் ஒரேநாளையில்தங்களை அந்நாட்டிற்குக்கொண்டுசெல்வே னென்றான். இதைக்கேட்ட அரசன் களிப்படைந்து தன் அழகியதேரிலேறி நளனைத் துரிதத்திற் செலுத்தென்றான்; அவ்வாறே நளன் காற்றேபோல் தேரைச்செலுத்தி மறுநா ளுதையத்தில் வீமராசன் நாட்டைச்சேர்ந்தார்கள். இவர்கள்வரவையறிந்த வீமன் எதிர்கொண்டுசென்று உபசரித்து, நீரிங்குவந்த காரண மென்னவென்றுகேட்க, இருதுபர்ணன் மனந்திடுக்கிட்டுத் தான்வந்த காரணத்தைக் கூறாமல், உம்மைப்பார்த்துப் போகும்படி வந்தேனென்றான். வீமராசன் அவனுக்குத் தக்கவிடுதியொன்றமைத்துக் கொடுத்தான்.

நளமகாரர்சன் வரவைத்தெரிந்த தமயந்தி ஐயமறத் தெரிந்துகொள்ளும் பொருட்டுச்சம்பாவரிசி முதலிய சாமக்கிரியைகளைத் தன் தகப்பனைக்கொண்டு இருதுபர்ணன் சாலைக்கு அனுப்பச்செய்து அவ்விடத்தில் நடக்கும்விந்தையை

அப்போதைக்கப்போது தனக்குத் தெரிவிக்கும்படி ஓர் தூதுவனை அவ்விடத்திற் கனுப்பினள். சாமக்கிரியைகளை ஒப்புக்கொண்ட நளன் நெருப்பில்லாமலே பாண்டத்தை வெற்றடுப்பின்மேல் வைத்து நல்ல பாகத்தோடுசமைத்து தன் னரசனுக்கிட்டு தானுமுண்டான். இதைக்கண்ட தூதுவன் தமயந்திக்குத் தெரிவிக்க அவள் இது நமக்குச் சரியான திருஷ்டாந்த மல்லவென்று தன் புதல்வனையும் புதல்வியையு மலங்கரித்து சாரதியாகிய நளனிருக்குமிடத்திற்குக்கொண்டுபோகும்படி தாதிகளுக்குக் கற்பித்து அனுப்பினள். அவர்களுமப்படியேநளமகாராசனிருக்குமிடத்தை யணுகினர்கள். நளமகாராசன் தன் மக்களைக்கண்டவுடன் மிக்க ஆவலோடு தன் கையாலிறுகத்தழுவி முத்தமிட்டுத் தனக்கு நேரிட்டவிபத்தையெண்ணி கண்ணீருகுத்தான். இதைக்கண்ட தாதிகள்நளமகாராசனைநோக்கி ஐயா எங்களரசன் புத்திரியாகியதமயந்திமக்களாகிய இச்சிறுவரை நீர்கட்டித்தழுவி முத்தமிட்டுக் கண்ணீருகுக்கக் காரணமென்னவென்று வினவினர். நளன் அத்தாதிப்பெண்களைநோக்கி,இம்மக்களைப்போல்,எனக்கு ஒருபிள்ளையும்பெண்ணுமுண்டு. அதைநான் ஊரில்விட்டுப்பிரிந்து நெடுநாளாயின,ஆதலால் அவ்வன்பின்பெருக்கால் இப்படிச்செய்து அப்பிள்ளைகளைப்பார்க்க இன்னு மெத்தனைநாள் செல்லுமோவென்று கண்ணீருகுத்தே னென்றான். தாதிப்பெண்கள் அதற்கொன்றுமுரையாமல் தமயந்தியிடம்வந்து நிகழ்ந்தவற்றைக் கூறினர்கள். தமயந்தி தன் தந்தையிடஞ்சென்று தானெண்ணியவெண்ண மீடேறின. இருதுபர்ணராசனிடம் சாரதித்தொழில் செய்பவர் உமது மருகர்தான்; இதிற் சந்தேகமேயில்லை, ஆனல் தாங்கள் அவ்வரசனைக்கொண்டு உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கோ ளென்றாள். வீமராசன் தன் புதல்வியின் விருப்பத்தின்படி இருதுபர்ணராசனை அழைத்து வரும்படி ஓர் தூதுவனை யனுப்ப, அவ்வரசனும் வீமராசனிடம்வந்து தன்னை யழைத்தகாரண மென்னவென்று கேட்டான். வீமராசன் இருதுபர்ணனை நோக்கித் தங்களிடத்தில் சாரதித்தொழில் செய்பவனது வரலாற்றையறிந்து சொல்லவேண்டுமென் றழைப்பித்தே னென்றான். அவனுமப்படியே யர்குக வென்று தன்னிருக்கைசென்று தன் சாரதியைநோக்கி நாம் வீமராச னனுப்பிய மணவோலையைக்கண்டு இங்குவந்தோம், வந்த இடத்தில் அப்படிப்பட்ட குறியொன்று மில்லாமல் வீமராசன் உன்மேல் சந்தேகங்கொண்டு அடிக்கடி இங்கு தூதுவரை யனுப்ப அவர்களென்னிடம்வந்து உன் வரலாற்றை தெரிவிக்கும்படி விசாரிக்கின்றார்களே; அஃதென்னகாரணம்? நானும் இப்போதுன்மேல் சந்தேகங்கொள்கின்றேன். உன் வரலாற்றை உண்மையாகக் கூறென்றான். நளமகாராசன் இனி உண்மையைக்கூறுவதே தகுதியென்றெண்ணி தான் இன்னனென்றும் தனக்கு ஊழின்வயத்தால்நேரிட்டிருப்பதையும் எடுத்துக்கூறினன். இதைக்கேட்ட இருதுபர்ணன் மிக்க வருத்தமடைந்து இந்நாள் வரையு மும்மைச்சாரதியாய்ப்பாவித்திருந்த என்குற்றத்தைப் பொறுத்தருளவேண்டுமென்ன அதற்கு நளமகாராசன், பெற்றோர் இடர்தீர்த்தோர் அன்னமிட்டோர்ஓதுவித்தோர், உபதேசித்தோர் இவரை ஐம்பெருங் குரவரென்பர், இந்நாள்வரையுமெனக் கன்னமிட்டுப் பாதுகாத்த உமக்கு ஊழியஞ்செய்வ திழி

வாகா. இதைக்குறித்துத் தாங்கள் மனம் வருந்தவேண்டாம், இன்னுமொரு முகூர்த்தத்துக்குள் என்வேடம் வெளிப்படும் அதுவரையில் தாங்கள் வெளிப்படுத்தாதிருக்கக் கோருகின்றேனென்று வார்த்தை யாடிக்கொண்டிருக்கையில் இருதுபர்ணனுந்தனக்கெதிரிலிருந்தவொர்தான்றிமரத்தின் இலைகாய்பூக்களை இத்தனையென்று கணக்கிட்டு இது சரியாயிருக்கிறதா பார்த்தறியுமென்று நளமகாராசனுக் குரைக்க,அவனும் அம்மரத்தின்மேலேறிச் சரிபார்த்துத்திரும்புகையில் சனிபகவான், நளமகாராசன் முன்தோன்றிஎன்னைக் கோபியாதிருக்கவேண்டுகின்றேன். உமது பெருமையை யறியாமல் நான் உமக்கு வெகு துன்பத்தைத் தந்தேன்,இன்றே உம்மைவிட்டகன்றேன் இனிக் கற்பிலருந்ததியை யொத்த தமயந்தியைக் கூடிச் சுகித்திருமென்று ஆசிகூறியதன்றி இனிநீரென்னாலடைந்த இன்பதுன்பத்தைப் பத்தியோடு கேட்டானந்தித்தோரை அணுகேன் இதுவுஞ்சத்தியம் சத்தியமென்று மும்முறைகூறி நளமகாராசனிடம் விடைபெற்று அத்தான்றிமரத்தின்வழியேசென்றுமறைந்தான். பின்பு நளமகாராசன் தனக்குத்தெரிந்த அசுவமந்திரமொன்றை அவ்வரசனுக்குக்கற்பித்து, அவனிடத்திருக்கும் மரத்தின் இலைகளைக் கணக்கிடும் வித்தையைக் கற்றுக்கொண்டான்.

இங்கு நடந்த விசேடங்களை யெல்லாம் தூதுவரா லறிந்த தமயந்தி தாதிகளைக்கொண்டுநளமகாராசனைத்தன்னிடம்வரவழைத்து,அவனைக்கட்டித்தழுவிக்கதறியழுதுஅவனதழகியபாதத்தில் தன்சென்னியுறப்பணிந்தெழுந்துதேவரீர் உரு மாறியிருக்கக் காரண மென்னென, நளமகாராசன் தனக்குக் கானில் நேர்ந்த விபத்தையெல்லாம் முற்றுங் கூறி இவ்வடிவம் நான் நினைத்தமாத்திரத்தில் என்னைவிட்டொழியும். இதைப்பற்றி நீ ரையப்படவேவேண்டாம், ஆயினும் உன்தந்தை உனக்குமறுவிவாகஞ்செய்விப்பதாய் இருதுபர்ணனுக்குமணவோலையனுப்பக்காரணமென்னவென்றான். அதற்குத்தமயந்தி,தேவரீர் இருதுபர்ணனிட மிருப்பதாய் ஓர் தூதுவனாலறிந்து அதைச் சந்தேகமறத் தெளியும் பொருட்டு அப்படிச் செய்ததே யல்லாமல் வேறொன்று மல்லவென வணங்கி நின்று அடியேன் கண்டு களிக்க தேவரீர்க் கிப்போதுள்ள உருவை நீக்கி வேளைப் பழிக்கும் உமது அழகிய திருமேனியைக் காட்டவேண்டுமென்றாள். அவ்வாறே நளமகாராசன் அவ்வரவத்தை நினைத்துத் துதித்து நின்றான். அவ்வரவமும் நளமகாராசனிடத்தேவந்து முன்கடித்த விடத்திற்றானே மீண்டுங்கடித்து அவ்விடத்தைக் கவர்ந்து மறைந்தது. நளமகாராசன் தன் பழய உருக்கொண்டு விளங்கினான். தமயந்தி கயல்போன்ற தன்னிரு கண்களாலும் கணவனைப்பார்த்து ஆநந்தக்கடலில் மூழ்கி உடல் பூரித்து நின்றாள். இதை யறிந்த வீமராசன் மிகத் துரிதமாய் அரசிருக்கையைவிட் டகன்று வந்து நளமகாராசனைக் கண்டு தான்கொண்ட களிப்புக் கெல்லையில்லா திருந்தான். பின்பு இருதுபர்ணனுக் கிச்செய்தியை யறிவிக்க அவனும் நளமகாராசனை வந்து பார்த்து மிக்க களிப்படைந்து நளமகாராசனிடத்தே விடைபெற்றுத் தன்னூடு சென்றடைந்தான். தேவர்கள் ஆகாயத்திலிருந்துகொண்டு புட்பமாரி பெய்தனர். இதுநிற்க;

பின்னர் நளமகாராசன் சிலநாளங்கிருந்து தன் மாமனாரிடத்தே விடைபெற்றுத் தானும் தமயந்தியும் தம்மக்களும்சூழ நால்வகைப் படைகளோடும் புறப்பட்டுநிடதநாடடைந்து இராசசமுகத்திற்பிரவேசித்து புஷ்கரனைக்கண்டு, என்னுடன் நீ வலிதிற் சூதாடி என் செல்வங்களையெல்லாங் கவர்ந்தனை யாதலால் இப்போதென்மனைவியைப் பந்தயமாகவைத்தாட எண்ணியே வந்தேன், நீ முன்போற் சயித்தால் என் மனைவியைவிட்டுச் செல்கின்றேன், நீ தோற்பையேயானால்என்னிடங் கவர்ந்த பொருள்கள்யாவும் தருவதுமன்றி உன்னுடை முதற் பொருள்கள்யாவும் எனக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று பந்தயங் கூறி, முன் தமயந்தியைப் பந்தயமாகவைத் தாடினன். நளமகாராசனே சரியானவிருத்தங்களைப்போட்டுவெற்றியடைந்து,புஷ்கரனைக்கர்வபங்கஞ்செய்து பின்பு அவன் நாடுநகரங்களையெல்லாமவனுக்கேகொடுத்துவிட்டுத் தனக்குப் பகுதிகட்டிவரும்படி ஆஞ்ஞைசெய்தனுப்பிவிட்டுத் தான்சிங்காசனாதிபதியாய் நீதியொடரசாண்டுவந்தான் என்று உரோமசன்மர் தருமராசனுக்குச்சொல்லி, இந்நளமகாராசன் அநுபவித்த துன்பத்தையும், நீரிப்போ தடைந்திருக்கும் வறுமையையும் யோசித்துப் பார்த்தால் அதிற் காற்பங்காயினு மகாதென்றே சொல்லவேண்டும். மேலும் வினைவயத்தால் நேர்வதை யாவரோ தடுக்க வல்லார்? இதுபற்றியே ஆன்றோரும் "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி-தொகுத்தார்க்குந் துய்த்த லரிது." என்றும், "நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன் - னுண்மை யறிவே மிகும்." என்றும் பணித்திருக்கின்றனர். ஊழ் ஒருவர் வயப்பட்டதல்ல,ஆதலால் நீர் மனம்வருந்தாதிருமென்று உரோமசன்மர்கூற, தருமராசன் முதலியநால்வரும் பாஞ்சாலியும் அவரை மும்முறை வலம்வந்து பணிந்து வாழ்ந்திருந்தனர்.

தீர்த்தயாத்திரை.

பின்னர் ஓர்நாள் எல்லோரும் மிக்க களிப்புடன் வீற்றிருக்குஞ் சமயத்தில் மகதியாழ் வல்லோராகிய நாரதமுனிவர் பொறை யறிவு நிறைந்த தருமராசனிருக்கு மிடத்திற் கெழுந்தருளினர். அவரைக் கண்டவுடன் தருமராசனும் தம்பியரும், இன்னு மற்றுமுள்ளோரும் வணங்கி நின்றனர். அப்படி நின்றோர்க்குப் பல ஆசிகள்கூறி அவருடன் வீற்றிருந்தனர். தருமராசன் நாரதமுனிவரைநோக்கி சுவாமீ! தேவரீரிடத்தில் தீர்த்தமகிமையையும் அதனாலடையும் பெரும்பலனையும் நானறிந்துகொள்ளவேண்டுமென்று நெடுநாளாகத் தங்கள்வரவைஎதிர்பார்த்திருந்தேன்,"தேடிச்சென்றபொருள்காலிற்சிக்கியது" போலத்தேவரீரிங்கெழுந்தருளியதுயான்செய்தமாதவமோ! அல்லதுஎன்முன்னோர்செய்தபெரும் புண்ணியமோ! என்று பலவாறு புகழ்ந்துபேசி கிருபை கூர்ந்து தீர்த்தவிசேடத்தை அடியேற்குத் தெளியச்சொல்ல வேண்டுமென்று இறைஞ்சிநிற்க, நாரதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

எழுவகைப்பிறப்பினுள்ளும்மக்கட்பிறவியே சிறந்தது. இப்பிறப்பில்மானிடர்களாவார் கூன் குருடு செவிடு முடமில்லாமற் கல்வியை யுடையாராய்,

விளங்கி,நற்குணநற்செய்கையால்கீர்த்தியைவகித்துச்செல்வப்பொருளடைந்து தானமீட்டி நற்றவங் கைக்கொண்டு வாழ்வது மிக்க அருமை. இவற்றுள் சில வற்றையுடையவராய்ச் சில இல்லாதார்க்குச் சுகிர்தமுண்டாகும்படி, தீர்த் தம் மூர்த்தி தலம் என்னும் இம்மூன்றும் ஏற்பட் டிருக்கின்றன. ஐம்புலன் வழியே அறிவைச் செலுத்தித் துன்பந்தரும் வழியிற் பிரவேசியாமல், இல் லற தருமம் வழுவாதுநின்று சுகதுக்கங்களைச் சமமாகக்கருதி உண்மையைக் கைவிடாது சித்தத்தைச் சிவன்பாற் சேர்த்துள்ளவரெவரோ அவர் உலகிற் சிறந்திருப்பார். மேற்கூறிய நல் லொழுக்கங்களைக் கைவிட்டுள்ளார் தங்கள் முன்வினைப் பயனினின்றும் நீங்குதற்கு நல்ல நதிகளில் விதிப்படி மூழ்கி மூர்த்தி தலங்கட்குச் சென்று மனவழிமெய்களால் துதித்து வழிபாடு செய்து பத்தியோடு பூசித்துவருவார்களானல், அவ்வினையினின்றும் நீங்கு வர். நதிகளிற் படியாமலும் மூர்த்தி தலங்களைச் சென்று தெரிசியாமலும் கர்வித்துத் திரிவோர் பசிப்பிணியால் மிக்க வருத்தப்பட்டு எவ்வளவும் சுக மடையாமல்,என்றும் வறுமைக்குள்ளாகி நசிப்பதுவுமன்றி இகபர சவுக்கியத் தையு மிழப்பர். உடல்வருந்திப் பொன்னைத்தேடி அநேக யாகங்களைச் செய்து பெறும்பேறனைத்தும்ஓர் தீர்த்தம்தருமெனின் அதனல் ஒருவனிங்கேயிருந்து பெறும்பேற்றை யாவர் சொல்லவல்லார். முன்னேபுலத்திய ர்திருவாக்கினல் மூன்றுகோடி தீர்த்த விசேடங்களை மொழிந்தருளினர். அவற்றுள், அகத்திய வடம்,ஆரணியதீர்த்தம், கங்கை, காவேரி, சிமந்தபஞ்சகம், பிரயாகை, வான் மீகம்,வாகினி, சானவி முதலாயுள்ள நூறு தீர்த்தங்கள் உனக்குச் சொல்லக் கூடியவைகள். இந்நதிகளில் நீராடியபே ரடையும் பேற்றுக் களவேயில்லை, ஆயி னும் என்னல் இயன்றவளவு எடுத்துக்கூறுகின்றேன். அவற்றில் மூழ்குவோர் சங்கநிதிமுதலியசெல்வப்பொருள்களை அடைவர். புத்திரபாக்கியமும்பெறுவர். தேவர் கூட்டங்களிற் போய்ச்சேர்வர். இந்திரலோக மடைவர். கூன் குருடு செவிடு நீங்கப்பெறுவர். இன்னும் மிக்க பாவத்தொழிலையேகைவிடாமற்செய்து வந்தபாவிகளும் இந் நதிகளிற்சென்று மூழ்கினல் சாந்தி,விசாரம், சந்தோஷம், சாதுசங்க மென்னும் நான்கினையு மடைந்து மகத்துக்களாவர். இல்லற தரும முணராத அஞ்ஞானிகள் சென்று மூழ்கினல் அப்போதே இல்லறப்பயனையு மடைவர். இன்னு மெடுத்தெடுத்துக்கூறுவானேன். தீர்த்தவிசேடத்தால் ஆக மங்கள் கூறும் பரமார்த்தங்களெல்லா மெய்தும்,மண்ணீரைத் தெளியச்செய் யுந் தேற்றான் கொட்டையேபோற் சுத்தமுடனாயும் சகலமும் வல்லவராய்ச் செய்யும் பிரமயாகம் தெய்வயாகம் பூதயாகம் மானிடயாகம் முதலிய யாகங் களா லுண்டாகும் பலன்களும் ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு முத லிய முப்பத்திரண்டு தருமங்களா லுண்டாகும் பலன்களியாவும் பெறலா மென்று மெய்யறிவுடையாராகிய நாரதமுனிவர் கூறக்கேட்டுத் தருமராசன் முதலியநால்வரும் பாஞ்சாலியும் மிக்க களிப்படைந்து அவனைத்துதித்துநிற்க அவ ரவர்க்குப் பல ஆசிகள்கூறி தருமராசனிடம் விடைபெற்றுச்சென்றார்.

பின்பு தருமராசன் உரோமசன்மனை வணங்கிச் சொல்கின்றார். சுவாமீ! மானிடப்பிறவி நற்கதியையடைய வேண்டினல் தானதருமஞ் செய்தல்வேண்

டும், அதற்கோ பொருள் வேண்டும், எனக்கிப்போ தஃது நீங்கலாயிருக்கின்றது. நாயேன் நற்கதியடையும் வண்ணம் நாரதர் திருவாய்மலர்ந்தருளியபடி நற்றீர்த்தங்களிற் சென்று நானமாடி நற்கதியை யடையலாமென்று எண்ணுகின்றேன். தேவரீரும் எழுந்தருள வேண்டுமென்று வேண்ட, உரோமசன்மர் உள்ளமகிழ்ந்து சொல்கின்றார். தருமராசனே நானும் உன்னைத் தீர்த்தங்களிற் கொண்டுசெல்லவே வந்தேன், நீ யதற்கஞ்சற்க, இப்போது முன்கருத்துக் கிசைந்தேன் வாவென் றழைக்க, தௌமியரும் வேதியரும் முன்னே நடக்க, தருமராசனும் தம்பியரும் பாஞ்சாலியும் உரோமசன்மருடன் பின் சென்றார்கள்.

அகத்தியர் கதை.

இவ்வாறு எல்லோரும் தாமிருந்த காட்டைவிட் டகன்று மிக்க மனக்களிப்போடு செல்கையில் ஓருன்னதச் சோலையைக் கண்டார்கள். தருமராசன் உரோமசன்மரைநோக்கி இச் சோலை யாருடையதென்று வினவ, இது மெய்யுணர்ச்சியுடையாராகிய அகத்தியமுனிவர் வசித்தவிடமென்றுசொல்ல, அகத்தியமுனிவர் இங்கேவசிக்கக் காரணமியாதென உரோமசன்மர் கூறுகின்றார். அங்குட்ட வடிவாயுள்ள குறுமுனிவர் இல்லற நீத்துப் பிரமசரிய மேற்கொண்டு தவஞ்செய்துவருநாளில், அடர்ந்த கானில் ஓராலவிருக்ஷத்திற் சிலர் தலைகீழாய் வவ்வால்போல நாலக்கிடந்ததைக்கண்டு இப்படியு மோர்தவ முண்டோவென்றேங்கி ஐயமுற்று அவர்களைநோக்கித்தவத்திற் சிறந்த இருடிகளே! நீங்கள் அதோமுகமாய்த் தொங்கிக்கொண்டு தவஞ்செய்வானேன்? இப்படியு மோர்விதியுள்ளதோ? இது எந்நூலின் முறையோ அதைத்தெரியச் சொல்ல வேண்டுமென்று வேண்டிநிற்க, அதற் கவர்கள் ஐயா இது நூலின் முறையுமன்று தவமுமன்று நாங்கள் தென்றிசையில் வசிக்கும் பிதுர்த்தேவதைகள் தருமராசனால் எங்களுக் கித்தண்டனை நேரிட்டது எங்கள் குலத்தில் அகத்தியனென் றொருவன் பிறந்திருக்கின்றானும், அவன் இல்லறத்தை விட்டு பிரமசரிய நிலைமேற்கொண்டு திரிகின்றமையாற் சந்ததி விளங்காமற்போயிற்று. இக் குற்றங்கொண்டு எமதருமன் எங்களை இக்கதிக் குள்ளாக்கினனென்று கூறினார்கள். அதைக்கேட்ட அகத்தியமுனிவர் மிக்க பயங்கொண்டு உள்ளநடுங்கித் தேகமெங்கும் வியர்வால்நனைந்துகைகூப்பி சுவாமீ! என்மேற்கோபங்கொள்ள வேண்டாம். அகத்தியனென்னும் பெயரையுடைய பிதுர்த்துரோகி நானே, இல்லறம் பெரும்பயன் தரத்தக்கதல்லவென்று துறவறமேற்கொண்டேன். இனி இல்லற மேற்கொண்டு ஓர் கன்னிகையை மணந்து சந்ததியை விளக்குகின்றேன். நீங்கள் முன்போற் புண்ணியலோகஞ்சென்று சுகித்திருமென்று கூற, பிதுர்க்கள் அகத்தியரை வாழ்த்தி உள்ளங்களித்து அவரிடம் விடைபெற்றுத் தங்கள் நற்பதவியை யடைந்தனர்.

பின்பு அகத்தியர் துறவறநீத்து நாடுநகரங்களிற்சென்று நங்கருத்திற் கிசைந்த கன்னிகை எங்ஙனங் கிடைப்பளென்று தேடிவரும்போது விதர்ப்ப தேசத் தரசன் யாகமுன்னிலையில் உலோபாமுத்திரை யென்னு மோர் பெண்

கொடியைப்பெற்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்துவருஞ் செய்தியையறிந்து, அவனிடஞ்சென்று பெண்கேட்க அவ்வரசன் மனமகிழ்ந்து, தன் குமாரத்தியாகிய உலோபாமுத்திரையைநல்ல சுபமுகூர்த்தத்தில் வேதியர்களாசிகூற ஓமகுண்டம்வளர்த்தி அவ்வக்கினிசாட்சியாக அவருக்குக் கன்னிகாதானமாகச்செய்துகொடுத்தான். பின்பு சிலநா ளங்கிருந்து அரசனிடம் விடைபெற்று உலோபாமுத்திரையுடன் வனத்துட்சென்று பன்னசாலை யொன்றுபுதுக்கி அதில் மனைவியை வசிக்கச்செய்து அவள் செய்யும் பணியையேற்றுத் தான் தவத்திருந்து வருநாளில் ஓர்நாள், உலோபாமுத்திரைமேற் காதல்கொண்டு அவள்மேல் தன் காமநோக்கைச் செலுத்தினார், இராசகன்னிகை அவர் பார்வையின் குறிப்புணர்ந்து அவரருகிற் சென்று வணங்கி சுவாமீ! தேவரீர் கொண்டிருக்கும் கருத்தை உமது பார்வையால் யான் தெரிந்துகொண்டேன், நாமிருவோரும் இணைவிழைச்சி யடைதற்கு இவ்விடம் தக்கதன்று, இடம் பொருளேவல் ஆகிய இம்மூன்று மிருந்தால் இச்செய்கை சிறக்கும்; இல்லாவிடி லஃது மிருகப்புணர்ச்சியே யாகுமென்று சொல்லி வணங்கி நின்றாள். புணர்ச்சியின்பத்திற் குதவியானவை யாவை? அதை யுரைப்பாயாகில் யானதைத் தேடமுயல்வேனென்று அகத்தியமுனிவர் கேட்க, கற்பிற்சிறந்த உலோபாமுத்திரை நல்ல நறுமலர்ச்சோலையின் மத்தியில் இன்பந்தருந் தென்றற்காற்று வீசும் சாளரங்களுடைய அரண்மனை யொன் றுண்டாயிருக்கவேண்டும், நாம் பணிக்கும் பணியைச் சிரமேற்கொண்டொழுகும் பணியாளரிருக்கவேண்டும், உயர்ந்த ஆடையாபரணங்க ளிருக்கவேண்டும், மணங்கமழும் களப கஸ்தூரி புழுகு முதலியவைகள் குறைவின்றியிருத்தல் வேண்டும், இவை யெல்லாங் குறைவின்றிக் கிடக்குமாயின் நாமிருவரும் அமிசதூளிகாமஞ்சத்திற் சயனித்து இரதியு மதனும்போற் கூடிக் குலாவிப் போகவிழைச்சியை முற்று மனுபவித்தலமையும்; இதுவே மானிடர்க்குரிய இன்பமாம். இவ்வகை இன்பமடைதற்குப் பொருள்வேண்டும், அஃதுண்டானால் எல்லா முண்டாமென்றாள். இவ்வாறு கூறிய உலோபாமுத்திரை சொற்கேட்டு இவ்வற்பமான சிற்றின் பத்தைவிரும்பித் தவத்தையே கைவிடலாமோவென் றாலோசித்து இப்பெண்கொண்ட விச்சையையும் தவிர்க்கலாகாதென்றெண்ணி பொருளை அரசர்பாற் பெறவிரும்பி மனைவியை ஆச்சிரமத்திலேவிட்டுப்பிரிந்துதனியே கிருதபவராசனிடஞ்சென்று அவ்வரசனைக்கண்டு உனக் கொருவருடத்துக்கு வேண்டிய பொருளை வைத்துக்கொண்டு மற்றதை எனக்குத் தரவேண்டுமென்றான். அதற் கவ்வரசனும் தன் முதன்மந்திரியை யழைத்து உத்திரவுசெய்தான். அவனும் பொக்கிஷத்திலுள்ள திரவியத்தைக் கணக்கிட்டுப்பார்த்து ஓர் வருடத்தின் செலவுக்கே குறைவதைக்கண் டரசனிடத்தேதெரிவிக்க, அரசன் முனிவரிடத் தெரிவித்தான். முனிவர் அவனிடம் விடைபெற்று வதுராசன் சமுகத்திற்குச்சென்றார், அவ னவரை எதிர்கொண்டழைத் துபசரித்து வந்தகாரியத்தை முனிவராற் றெரிந்துகொண்டு பொருளைக்கணக்கிட்டுமேற்சொன்னகிருதபவராசன்போற்சொல்லிவிட்டான். முனிவர் அதைவிட் டகன்று திராவிட ராசனிடஞ் சென்றார். அவ்வரச னவர்

க்குத் தக்க மரியாதைகள்செய்து முனிவர் நாடிவந்ததையறிந்து இங்கு மவ் வண்ணமேயென் றறிவித்தான். முனிவ ரவ்விடம்விட்டகன்று வில்வலன் வாதாவியிருக்கும் காட்டையே நோக்கிச்சென்று அவ் வனத்தில் வெய்யலுக் கொதுங்கிஓர் விசாலமுள்ள மர நிழலிற் றங்கியிருந்தார்.

வில்வலன் வாதாவி வதை.

காசிபருக்கும் ஓரசுரப்பெண்ணுக்கும் பிறந்த சூரபன்மன் சிங்கமுகாசுரன் தாருகாசுரன் அசமுகி யென்னு நால்வருள் அசமுகியென்பவள் ஒருவன் மனைவியென்று சொல்லப்படாமல் கற்புடைமை யின்றி முனிவர்கள் செய்யும் யாகங்களையெல்லாங் கெடுத்துக்கொண்டு காளையரை வலிதிற் புணர்ந்து திரிந்துகொண் டிருந்தாள். இவ்வாறிருக்கையில் துருவாசமுனிவ ரெதிர்ப்பட அவரைக்கூடிப் புதல்வரைப்பெறவெண்ணி அவரிடமணுக அவர் மறுக்கவும் வலிதிற் புணர்ந்து வில்வலன் வாதாவி யென்னு மக்களைப்பெற்றாள். அப்பிள்ளைகள் தோன்றியவுடன் தமது பிதாவாகிய துருவாசமுனிவரை வணங்கி நிற்ப,அவர் நீங்கள் வேண்டிய பொருள் யாதென்றுகேட்க,அவர்கள் நீர்செய்த அருந்தவமெல்லா மெங்களுக்குத் தரவேண்டுமென்று வேண்ட; அதற் கவர் தவமல்லாத வேறுபொருள் வேண்டினுல் தருவேனென்று சொல்ல; அவர்களதற்குச் சம்மதியாமல் அம்முனிவரைக் கொல்லத்துணிய, அம்முனிவர் சீற்றங்கொண்டு நீங்கள் முனிவர்களுக்கே தீராவிடும்பைசெய்து வருவீர்கள், முனிபுங்கவராகிய அகத்தியமுனிவரால் உங்களாவி நீங்கக் கடவீர்களென்று சபித்துத் தாம் அவ்விடம்விட் டகன்று அவர்கள் கண்ணுக்குப் புலப்படாமல் தம்மூருக்கரந்தார். பின்பு அச்சிறுவர்கள் தந்தையைக் காணுமல் தாயிடத்தே விடைபெற்று மற்றோர் வனமடைந்து முனிவர்களைக்கொல்லவே யெண்ணங் கொண்டு பிரமனை நோக்கிப் பஞ்சாக்கினிமத்தியினின்றும் அருந்தவஞ் செய்தார்கள். அவ்வாறனேகநாள் செய்தும் பிரமன் வாராமையைக்கண்டுவில்வலன் தன் தம்பியாகிய வாதாவியைத் தன் கூரிய வாளால் வெட்டி அவ னுதிரத்தையு மாமிசத்தையும் நெய்யு மவியுமாகக்கொண்டு நெருப்பிலிட்டுப் பிரமனது மூலமந்திரத்தைச் சபித்துவேள்வியோடு தவமுஞ்செய்துவர; அப்போது பிரமன் அவன்முன்னே பிரசன்னமாய்த் தோன்றி நீயாதுவேண்டி என்னைநோக்கித் தவஞ்செய்தாயென்றுகேட்க,வில்வலன் என் தம்பி உயிர்த்துவர வேண்டுமென்று வேண்ட; அவனும் வாதாவியை யெழுப்பித்தர,அதற் கதிசயமுடையானுய்ப் புல்லைத்தின்னும் ஆடேபோற் றோன்றும் வாதாவி இனி யுடல் துணிபடுவானுயின் னானழைக்க மீண்டு முயிர்த்துவர வேண்டுகின்றேன். இவ் வரந்தர வேண்டுமென்று வேண்ட, அப்படியே யாகுகவென்று வரமளித்துத் தன்னிருக்கைசென்றான். இது நிற்க;

இவ்வாறு பிரமனிடம் வரத்தைப் பெற்று மிக்க செருக்கடைந்த மனத்தானுய்த் தம்பியாகிய வாதாவியுடன் நாற்சந்திகூடுமோரிடத்தைத் தமக்கிருப்பிடமாகக்கொண்டு அங்கோராச்சிரமங் கட்டிக்கொண்டு எவ்வெவரு மிச்சிக்கு மெல்லாப்பொருளுங் குறைவின்றி யதிலமைத்து முனிவர்க ளுயிர்வாங்க

வெண்ணி, இளையவன் ஆட்டுருவங் கொண்டு நிற்க; வில்வலன் முனிவருருவங் கொண்டு அவ்வழியே வரும் முனிவர்களை வலிய வெதிர்சென் றுபசரித்துத் தன்னிருக்கைக் கழைத்துவந்து நல்விருந் துண்டுபோக வேண்டுமென்று வேண்டிப் பலவகை யுணவுகளைச் சமைத்து ஆட்டுருவமாகிய தம்பியைக் கறி சமைத்து அவர்களுக்கிட்டு அவர்களுண்டபிறகு தம்பியைக் கூவியழைக்க, அக்கொடியோன் அம்முனிவன் வயிற்றைப்பிளந்துகொண்டுவர; இருவரும் அம்முனிவரை யுண்டு பசிதீர்ந்து மிக்க களிப்புடன் தமையனிருக்க முன்போல் இளையவன் ஆட்டுருவமாகத் திரிந்துகொண் டிருப்பான்.

இவ்வகைக் கொலைப்பாதகர்வசிக்கும் கானையடைந்த அகத்திய முனிவரை வில்வலன்கண்டு இவனோ முதிர்ந்ததவவலியுடையான் அரக்கர் பலரையுங் கொன்றவன் கடலை முன்னாள் குடித்துமிழ்ந்த இவனுயிரைக் கவர்ந் துண்ண வேண்டுமென் றெண்ணி, வில்வலன் முனிவனேபோ லுருக்கொண்டு மேலே கட்டிவிட்ட சடையும் தேகமெங்கும்விபூதியணிந்துகொண்டு அகத்தியமுனிவரெதிரில்வந்தான். வெளியே தவம்பழுத்த வேடமும் உள்ளே வஞ்சநெஞ்சினனாய் அவ்வில்வலன் தமிழாசிரியராகிய அகத்திய முனிவரை மும்முறை வலம் வந்துபணிந்து அஞ்சலிசெய்து நின்றுகொண்டு தேவரீரிங்கெழுந்தருளப்பெற்ற இப் பெரும்பேறு யாவர்பெற்றார்களென்று நயவஞ்சனையாய்ப்பேசி அடியேனிருக்குமிடமிது அது புனிதமாகும் வண்ணம் தேவரீர் அவ்விடத்திற்கெழுந்தருளவேண்டுமென்று பலமுறை வணங்கிநின்றான். அப்படி நின்ற அக்கொடியோனது துணிவையறியாத அகத்தியமுனிவர் அவன்பால் அன்புமிகுந்துஉன்னிருக்கைஎங்குளது வருகின்றேனென்றுசொல்லஅவரைஅழைத்துக்கொண்டு இதுஅடியேனிருக்குமிடமென்று சொல்லிக் காட்டினான். தானே முடியும்படி வந்த வில்வலன் தமிழ்முனிவரைத் தன்னிருக்கைக்குக்கொண்டுசென்றுஅவரை வணங்கி எந்தையேயானும் என் குலத்தாரும் பிழைக்கவந்தாய்போலும், இவ்வேழைக்குடிசையிலெழுந்தருளியிருந்து வெந்த கூழேனு முண்டு சேடமளித்துப்போக வேண்டுகிறேனென்று வேண்டிக்கொள்ள, முனிவரு மவ்வாறே யாகுகவென்று சம்மதிக்க, வில்வலன் அங்குள்ளஓர் தடாகத்திலே நீராடிச் சுத்தனாய்ச் சமையற்சாலையிற்சென்று பூமிதிருத்திக் கோலமிட்டுப் பால்போன்ற வெண்மையான சம்பாவரிசியை மும்முறை நீர்வார்த்துக்கழுவி அழகிய பாத்திரத்தில்வைத்து நெருப்பின்மாட்டி யுலைப்பெய்து பதமாகச்சமைத்து பயறுவகைகளைச் சித்தஞ்செய்து பால் முதலியவற்றை அமைத்து ஆட்டுருவங் கொண்டு முனிவர்களையே கொல்லுதல் விரதமாகவுடைய வாதாவியை வலிதிற்பற்றிக் கோடாலியா லிரண்டுதுண்டாக்கித் தோலை நீக்கி அவனுறுப்பமையச் சமைத்து வேண்டும் பழவர்க்கங்களைக் கொண்டுவந்து திருத்தி அகத்திய முனிவரை உணவுகொள்ள வேண்டினான். அவன்கருத்துக் கிசைந்துதமிழாசிரியராகிய அகத்தியமுனிவரெழுந்தருள அவரைச் சமையற்சாலைக்குக்கொண்டு போய் தான் சமைத்த அறுசுவையோடு கூடிய உணவைப் படைத்தான். அதை யன்பாகவுண்டு பசிதீர்ந்து கைகாற் சுத்திசெய்து அடைகாய் முதலிய வருந்தி அங்கே எழுந்தருளியிருந்தார். வில்வலனோ பிரமனளித்த வரத்தை

யெண்ணி அங்கேவீற்றிருக்கும் அகத்தியமுனிவ ராவிபோக்கவெண்ணி வாதாவியைக் கூவி யழைத்தான். அவனும் தன் செய்கையைவிடாமல் இவ்வருந் தவ முனிவனைப் புசிக்க ருசிக்குமென்று மிக்க விரைவோடு வயிற்றினின்று மெழும்ப அதை அகத்தியமுனிவரறிந்து இது கொடியோராகிய அவுணர்கள் செய்த சூழ்ச்சியென்றறிந்து ஈசனை மனத்தெண்ணி வாதாவி முடியவேண்டு மென்று சிந்தித்துத் தமது கையா லொருமுறை வாதாவி சீர்ணுபவவென்று தடவவே அவ்வாதாவி இறந்துபட்டான். அவன் உயிர்நீங்கிய தறிந்த வில்வலன் தன்னையுங் கொல்வானென்று மிக்க பயங்கொண்டு தேக நடுக்குற தமிழாசிரியராகிய அகத்தியமுனிவர் பொன்போன்ற பாதங்களில் விழ்ந்து பணிந்து யான் தேவரீர்பெருமையை யறியாது செய்த குற்றத்தைப் பொறுத்தருள்கவென் றிறைஞ்சி நின்றான். நாம் நாடிவந்த பொருள் இன்னு நமக்ககப்படா திருக்கின்றமையால் இவ்வரக்கனிடம் அப் பொருட் குவியலைப்பெற்றுப் பின்பிவனை முடித்தால் நமக்கிவன்செய்த நயவஞ்சனைக்குத் தக்க தண்டனையாமென்று சிந்தித்து வில்வலனைநோக்கி அடா துராத்மாவாகிய அரக்கனே! என் செய்தி யறியாய்போலும் வானிலுறும் இந்திரன் முதலிய தேவரும் மற்றியாவரும் என்னைகண் டஞ்சுவரென்றால் மசகத்தையொத்த வலியையுடைய நீயோ என்னைக் கொல்லவல்லவன், நீ முனிவர்வேடந்தரித்து எனக் கன்னமிட்டுக்கொலைசெய்யநினைந்த இப்பழி உன்னைவருத்தாதுவிடுமோ? உன்னுடன் பிறந்தா னடைந்த கதியை நீயுமடைந்திருப்பை, என்னைப் பணிந்தமைகண்டு விட்டேன் இப்போதெனக்குவேண்டும் பொருளைத் தருவையேயானால் உன்னுயிர்பிழைக்கச் செய்வேனென்று முனிவர் கூற, வில்வலன் பணிந்தெழுந்து தேவரீர் வேண்டுவதைத் தெரிவித்தால் தடைசெயா திக்கணமே யளிப்பேனென்றான். அம்மொழிகேட்ட முனிவர்பெருமான் எனக்கு அறுபதினயிர மணங்கு நிறையுள்ள பொன்வேண்டுமென்றார்; அவனு மவ்வாறே கொண்டுவந்து கொடுத்தான். அகத்தியர் அதைப்பெற்றுக்கொண்டு, யாது காரணமுமில்லாமல் நம்மைக் கொலைசெய்யத்துணிந்த பாதகனை நாம் கொலைசெய்தால் குற்றமாகாதென் றெண்ணித் தருப்பையொன்றினைக் கையி லேந்தி அதையே சிவாஸ்திரமாகப் பாவித்து அபிமந்திரித்துவிட அது வில்வலன் சிரத்தைக் கவர்ந்து செல்ல பூமியில்விழுந் திறந்தான். பின்பு அகத்தியமுனிவர் அக்காட்டிலுள்ள யானையொன்றைத்தன் வயமடக்கிக்கொணர்ந்து அரக்கனுற்பெற்ற பொருளனைத்தும் அந்த யானையின்மே லேற்றி, கொலைப்பாதகர் வாசஞ்செய்திருந்த அக்காட்டைவிட்டகன்று தமதிருப்பிடம்வந்துசேர்ந்து தன் மனைவியைக்கண்டு அவரிடத்தேதான் யானைமேலேற்றிவந்த அவ்வளவிலாப்பொன்னையுங்கொடுத்து இனி உன் கருத்தின்படி நடந்து கொள்ளென்று சொல்லி யானையைக் காட்டிற்றுறத்திவிட்டார்.

அவ்வாறளித்தபொன்னை உலோபாமுத்திரைபெற்று அவ்வனத்திற்றானே தேவருங்கண் டதிசயிக்கும்படியான மாளிகையொன் றியற்றி இல்லறத்துக்கு வேண்டும் யாவும் சித்தப்படுத்திக் கணவன் பாதங்களில் வீழ்ந்துவணங்கி சுவாமீ! தேவரீர் என்னிஷ்டம்போல் இடம்பொரு ளேவல்களை அளித்தருளி

னீர், இனித் தங்கள் சித்த மகிழுமாறு அடியேன்பணிசெயத் தங்கள்கிருபைக் கெதிர்பார்த் திருக்கின்றே னென்றாள். அகத்தியமுனிவரும் மனமகிழ்வெய்தி மனைவியுடன் இரதியும்மதனும்போற்கூடி,அன்றிற் பறவைபோல் இணைபிரியா திருந்து இல்லறதருமம் எவ்வளவும் பிசகாமல் அனுட்டித்து வருநாளில் ஓர் நாள் உலோபாமுத்திரையை நோக்கிப் பெண்கள் நாயகமே! உனக்கு யாது வரம்வேண்டுமோ அதை என்னிடம் பெற்றுக்கொளென்றுசொல்ல,கற்பிற் சிறந்த அவ்வன்னை கணவனைப் பணிந்தெழுந்து மனைக்கழகு மக்கள் என்பது போலத் தென்புலத்தார் தெய்வம் விருந்து சுற்றத்தார் தரித்திரர் பிரமசாரி வானப்பிரத்தன் சந்நியாசி ஆகிய இன்னோர்க்கு உதவியாயிருந்து இல்லறதருமம் வழுவாது நடத்த நமக்கோர் புத்திரன் வேண்டுமாதலால் அவ்வரத்தைத் தந்தருள வேண்டுகின்றே னென்றாள், அவ்வாறே அகத்தியமுனிவர் உலோபாமுத்திரையை விழைந்து ஒரு புத்திரனை யளித்தார், அப்பிள்ளைக்குத் திரிதசீ யென்று பெயர். அத்திரிதசியென்னும் ரிஷிக்கு சன்னுதனென்னுமோர் புதல்வன் பிறந்தான். இவ்வாறு புத்திர பவுத்திர பாக்கியத்தைப் பெற்றுக் கண்டு களித் துள்ளமகிழ்ந்து அகத்தியமுனிவரும் உலோபாமுத்திரையும் வேறுவேறு வனங்களிற்சென்று சஞ்சரித்திருக்கின்றார்கள்.இவ்வனமோவெனின் கிருகத்த நிலையிலிருந்த விடமென்று உரோமசன்மர் கூற தருமராசனும் தம்பியரும் ஏனையோருங் கேட்டு மிக்க களிப்படைந்து தருமராசன் உரோமசன்மரைத் தொழுது தாங்களிப்போது கூறிய அகத்தியர் சரிதை யென் மனத்தைக் களிக்கச்செய்தன, இன்னு மவர் சரிதையைக் கேட்க மிக்க ஆவல்கொண் டிருக்கின்றேனென்ன உரோமசன்மர் கூறத்தொடங்கினர்.

எழுகடலையும் தன்னழகிய கரத்திலேந்தியுண்ட அகத்தியர் பெருமையை என்னொருநாவாற் சொல்லவல்லேனோ,ஆயினும் ஒருவாறுசொல்லுகின்றேன். முன்னொருகாலத்தில் தேவர்கோனாகிய இந்திரன் தன்னழகிய சிங்காதனத்திற் கொலுவிற் றிருக்கையில் வியாழபகவான் அங்கெழுந்தருளினர். இந்திரனோ ஊர்வசி மேனகை அரம்பை திலோத்தமையாகிய இவர்கள் செய்யும் பரதநாட்டிய சங்கீதங்களில் மனத்தைச்செலுத்தி தானிருக்கு மிடத்தையும் தன்னையும் மறந்துநின்றான். இதையறிந்த வியாழபகவான் சினங்கொண்டு அவ்விடம்விட் டகன்றுபோயினர், உடனே இந்திரனுக்கு போகபாக்கியங்கள் குறைந்துபோயின. இந்திரன், குரவனை லக்ஷியஞ்செய்யாதிருந்த குற்றமென்றே யெண்ணி மனம்வருந்தி பிரமனிடஞ்சென்று முறையிட, உன் குருவாகிய வியாழபகவான் வருமளவும் துவட்டாவின் புதல்வனாகிய முத்தலை விச்சுவரூபனைக் குருவாகவகித்திருவென்றான். அவ்வாறே மூன்று சிரத்தையுடைய விச்சுவனை இந்திரன் தன்பொன்னுலகத்திற்குக்கொண்டுசென்று குருவாகவே யெண்ணி தக்க மரியாதையோ டுபசரித்து வருகையில், இந்திரன் விச்சுவனை வணங்கி யான் உய்யும்வண்ணம் ஓர் யாகஞ்செய்யவேண்டுமென்று வேண்டினன். விச்சுவனு மவ்வாறே யாகுகவென்று வஞ்சமனத்தனாய் தேவர்கள் நாஸ்தியென்று உள்ளத்தில் நினைத்து வெளிக்கு வேறொரு மந்திரமுச்சரித்து வந்தான். இச் சூழ்ச்சியையறிந்த இந்திரன் தன் கையிலுள்ள வச்சிரப்படை

யால் அவன் மூன்று சிரங்களும் அறுந்துவிழும்படி வீசினான். அவன் மூன்று தலைகளும் வெட்டுண்டு கீழேவிழுந்து மூன்று பறவைகளாய் வானிற் பறந்து சென்றது. விச்சுவனும் பூமியில் விழுந் திறந்தான். குருவைக் கொன்ற பிரமஹத்திதோஷம் இந்திரனைப்பற்றிப் பித்தம் பிடித்தவன்போல மதிமயங்கி அறிவிழந்து கிடந்தான். உலகத்துக்கு நன்மையை விரும்பிச்செய்த நம தரசனுக்கே இத் தீங்குநேரிட்டதே யென்று தேவர்களறிவாற் புலம்பி அப் பிரமஹத்தி தோடத்தை நாலுபங்காக்கி, மாதருக்கும், நீருக்கும், ஓரறிவுள்ள மரங்களுக்கும், பூமிக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். உடனேபிரமஹத்தி நீங்கி இந்திரன் மாசு நீங்கிய மணியேபோல் விளங்கினான். பழியேற்ற நால்வரும் எங்கள் கதியெப்படி யாவதென்று தேவர்களிடத்தே முறையிட, கருத்தரித் தபின் புருடனைவிழையாத மாதருக்குக் கருவயிற்றிலிருப்பினும் கணவனைக் கூடும்படி ஒருவரம்,பழியோ பூப்பாகக் கடவதென்றும் ; இறைக்கச் சுரக்காத நீர் சுரக்கும்படி ஒருவரம்,பழியோ நுரையாய்க் கழியக்கடவதென்றும்; வெட் டத் துளிர்க்காத மரங்களுக்குத் துளிர்க்கும்படி யொருவரம், பழியோபிசினை யக் கழியக்கடவதென்றும் ; வெட்டுவாய் மூடாத பூமிக்கு வாய்மூட ஒரு வரம்,பழியோ உவர் மண்ணாகக்கடவதென்றும் கூறி ஆசீர்வதித் தனுப்பினர்.

பிரமஹத்தி நீங்கிச் சுகித்திருக்கும் இந்திரனைக் கொல்ல விச்சுவன் பிதா வாகிய துவட்டாவென்பவன், தன் மகனைக்கொன்ற பழிக்குப் பழிவாங்குவே னென்று ஓர் யாகஞ்செய்தான்; அந்த யாகத்தினின்று கோரரூபத்தைப்பெற்ற விருத்திராசுர னென்றொரு அசுரன் தோன்றினான். அவனைநோக்கி நீபோய் இந்திரனைக் கொன்று வாவென் றேவினான். அவ்வரக்கன் பெருத்து வளர் ந்து காரிருளேபோல் உடலைப்பெற்று மேருமலையேபோலுள்ள ஓர் தேரிலேறி அரக்கர் பலர் தன்னை யொருங்குசூழ்ந்துவர இந்திரனை யெதிர்த்துப் போர் புரிகையில் இந்திரன் தன்னாற்றல்முழுது மவன்மேற்காட்டியும்பயனடையாதது கண்டு மிக்க கூர்வாய்ந்த தன் வச்சிரப்படையையோச்சி அவன்மேற் புடைக்க அது பஞ்சுப்பொதிமேல் வீழ்ந்த வாளேபோற் பயன்படாமற்போயிற்று விருத் திராசுரன் தன் கையிற் பிடித்திருந்த கதாயுதத்தால் இந்திரன் புயத்தின் மேற் றாக்கினான். அவ்வடி இந்திரன்மேல் நன்றாய்த் தாக்கவே மூர்ச்சை யடைந்து பூமியில்வீழ்ந்து சற்றுநேரத்தின் மூர்ச்சைதெளிந் தெழுந்து முது கிட்டோடினான். பின்பு விருத்திராசுரன் மூப்புவனங்களிலுஞ்சென்று வெற்றி யடைந்து தன் னாணையைச் செலுத்திவந்தான்.

இவ்வாறு இந்திரன் விருத்திராசுரனுக்குப் பயந்து ஓடி யொளித்துப் பிரமனிடஞ் சென்று முறையிட்டான். பிரமன் இவனை யழைத்துக்கொண்டு இருவரும் வைகுண்டத்திற் பிரவேசித்துத் திருமாலைக்கண்டு வணங்கி விருத் திராசுரனுடைய ஆற்றலையும் மூப்புவனத்திலுந் தன் னாண்மையைச் செலு த்திந் தனக்கு யாவரும் நிகரில்லாமற் றிரியும் அவ னாற்றல்முழுது மெடுத் துச்சொல்லி வணங்கி நிற்க, திருமால் தேவர்க் கரசனை நோக்கி உன் வயி ரப்படை கூர்மழுங்கி யிருப்பதனால் அது பயன்படா திருக்கின்றது. திருப்

பாற்கடலைக்கடைந்தகாலத்தில் தேவர்முதலியயாவரும் வந்திருந்தார்கள், அப்போதங்கு யான்கொண்டுசென்றகூரிய ஆயுதங்களை அங்கு யுத்தநேரிடாவண்ணந் ததீசிமுனிவரிடத்திற் கொடுத்திருக்கின்றேன்; அவரதைத் தமதுதவவல்லமையால் வாயாலுண்டு தமது முதுகெலும்பிற் சேர்த்துவைத் திருக்கின்றார் நீ அம்முனிவரை யடுத்து அவர்மனங் களிக்கச்செய்து முதுகைப்பிளந்து அப்படையைக்கைக்கொண்டு செல்வையாளுல்விருத்திராசுரனை எளிதில்வெல்வையென்றவனுக்கனுக்கிரகித்தார். இந்திரன் மாதவனைத்துதித்து அவரிடம்விடைபெற்றுச் சென்று முனிவரைக்கண்டு வணங்கி சுவாமீ! முப்புவனமும் இப்போதடைந்திருக்குந் துன்பம் தேவரீரால் அவர்களைவிட்டு நீங்கவேண்டியிருப்பதால் தங்களை நாடிவந்தேன். தேவரீர் அருள்செய்ய வேண்டுமென் றிறைஞ்சி நின்றான். அப்படி இறைஞ்சிநிற்கும் இந்திரனைத் ததீசிமுனிவர் நோக்கி, தேவர்க்கரசே! என்னுலாகுமோர் சிறிய உதவியினுல் முப்புவனத்துமுள்ள உயிர்கள் பிழைப்ப துண்மையாயின் இப்போதே அதை யுதவுவேனென்றார். அதற்கிந்திரன் சுவாமீ! நான் நாடிவந்த பொருள் தேவரீர் முதுகெலும்பாகிய திவ்விய வச்சிராயுதமேயாம்; அதை யனுக்கிரகித்தால் கருணையென்பதுசிறிதுமில்லாமல் உயிர்களையே வருத்திவரும் விருத்திராசுரனை ஓர் கணப்போதிற் கொன்று உயிர்கள்படுந் துன்பத்தைப்போக்கி யானு முய்வேனென்று வேண்டிநின்றான். முனிவர் அகமகிழ்ந்து தேவர் பெருமானே! முப்புவனத் துள்ள உயிர்களும் என் னொருவனுல் உய்தலையடையுமெனின் நாய்க்கும் பேய்க்கும் வறுமைக்கும் பிணிக்கும் பசிக்கும் காலனுக்கும் இரையாகும்; இந்நாற்றச் சடலத்தைச்சுமந்துதிரிவேனோ! உன்கருத்தின்படி கொண்டுசெல்லென்றுஉடனே சமாதிநிசையிலிருந்து சதாசிவத்தின் அழகிய பாதாம்புயத்தை யடைந்தனர். இந்திரன் அம்முனிவனது முதுகெலும்பைத் தேவதச்சனைக்கொண்டு வயிரப்படையாகச்செய்துகைக்கொண்டுசென்றுவிருத்திராசுரனை யெதிர்த்துப் போர்புரிகையில், அவன் இப்படை எவ்விதத்திலும் நம்மைக் கொல்லுமென் றறிந்து முதுகிட்டோடி கடலிற் புகுந்தொளித்தான். இவ்வரக்க னுயிரை இக்கணமே கவராது விடுவமாயின் இவனின்னும் தவத்திலிருந்து அனேக வரங்களைப் பெற்று மிக்க ஆற்றலுடையா னுவனென் றெண்ணி இந்திரன்சகல புவன இரட்சகராகிய நாராயணமூர்த்தியினிடஞ் சென்று முறையிட, அவர் கடல் நீர் வற்றினுலல்லது அவன் கண்ணுக்குத்தோன்றுனதலால் நீ அகத்திய முனிவரிடத்திற் சென்று முறையிட்டால் அவர் அக்கடல் நீரை யுண்ணுவர், பின்பு அக்கொடியோ னுனக்கெதிரே தோன்றுவான் என்றார். இந்திரனு மவ்வாறே பொதியமலையிற் சென்று அகத்தியனைக்கண்டு போற்றித்துதித்து அரக்கன் செய்யும் கொடுமையை யெடுத்துக்கூறி, இக்கணமே யான் அக்கொடியோனுயிரைப்போக்கும்படி தேவரீர் கடல்நீரை வற்றச்செய்யவேண்டு மென்று வருந்திக்கேட்டுக்கொண்டான். அகத்தியரும் அப்படியே யாகுகவென்று கடலருகிற் சென்று விராட்புருடனை மனத்தெண்ணித்துதித்து அவ்விராட்புருடனுடைய மூலமந்திரத்தை யுச்சரித்துக் கரயேந்தி நின்றார். கடல் நீரெல்லாம் ஓருழுந்தளவாய்த் திரண்டு அகத்தியர் கரத்தில்வந் தமர்ந்தது,

அதைத் தன் வாயாலுண்டு சென்றார். இந்திரனே கடல்வற்றியதைக்கண்டு களிப்படைந்து புதிய படையாகிய வச்சிரப்படையைக்கையிலேந்திக் கடலுட் புகுந்தபோது முன் சுப்பிரமணியர்மேல்போர்க்கெழுந்த சூரபதுமனைப்போற் சீறிவந்தவிருத்திராசுரனை அக்கூரியவச்சிரப்படையாலோச்சிக்கொன்று அவ்வி டம்விட்டகன்று அகத்தியரிடம் வந்து சுவாமி! அடியேனும் முப்புவனங்களிலு முள்ள வுயிர்கள்யாவு முய்யும்படித் தேவரீ ருண்டகடலை யுமிழவேண்டுகிறே னென்று துதித்து நின்றான். அதைக்கேட்ட தமிழாசிரியர் நானுண்டநீர்உதராக் கினியிற்சென்று கலப்புண்டு வற்றிப்போயின வாதலால் அது மீண்டும் வாரா தென்றார். அதைக்கேட்ட இந்திரன் சித்தங்கலங்கி மெய்சோர்ந்து திகைத்துப் பிரமனிடஞ் சென்று நடந்தசெய்தியை முற்றுங் கூறி நின்றான். அதற்கவன் பூலோகத்திற் சகரசக்கரவர்த்தி யென்பான் நீதியொடரசாண்டு வருகின்றான் அவன் சந்ததியில் ஒரு புத்திரனுதிக்கப்போகின்றான். அவனால் அக்கடல் நிறையுமென்று அவனுக்குத் தேறுதல்சொல்லி யனுப்பினானென்று உரோ மசமுனிவர் கூற, தருமராசன் உரோமசன்மரைப் போற்றி, அக்கடல்நிறை ந்த சரித்திரத்தையும் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்ன, முனிவர் கூறுகின்றார்.

சகரசக்கரவர்த்தி கதை.

நீர்வள நிலவளமுடையதும் மிக்க வளப்பமுடையதுமான கோசலநாட் டில் அயோத்தியாநகரத்தை நீதியோடரசாண்டுவந்த சூரியகுலத் தரசனா கிய சகரசக்கரவர்த்தி யென்பான் சற்றும் அழுக்கா றென்பதில்லாமல் குடிக ளிடத்தில் ஆறிலொருகடமைபெற்று யாவருமகிழ வரசாண்டு வந்தான். அவ னுக்குப் புத்திரப்பேறில்லாமல் மனம்வருந்தி அரசை மந்திரிவச மொப்புவித் துத் தானும் தன் மனைவியும் காட்டிற்சென்று பரமசிவனைநோக்கி அருந்தவஞ் செய்துவருநாளில் இறைவன் கருணைகூர்ந்து அவன்முன் தோன்றி உனக் கியாதுவேண்டி இவ்வருந்தவஞ் செய்கின்றனையென்று வினவ, அரசனும் மனைவியும் இறைவன் அழகிய பாதத்தில் தமது சென்னியுறப்பணிந்து நின்று ஈறிலாமுதலே! உம்பர்கட் கரசே! அடியேன் புத்திரப்பேற்றை விரும்பியே இத்தவஞ்செய்கின்றேன். அதை நானடையும் வண்ணம் கருணைபாலிக்கவே ண்டுமென் றிறைஞ்சிநின்றான். பரமசிவனும் அவனுக்கோர் புத்திரனைப்பாலித் தருளினர். அரசன் மீண்டு மிறைவனை வணங்கி மூவாமுதலே! நாயேற்கு மனை வியரிருவரிருக்கின்றார்கள். அவருளொருத்தியின்றால் மற்றவள் மனம்வருந்து வாளே; அவளுக்கு மோர் புத்திர னுண்டாகும் வண்ணம் கருணைசெய்யவே ண்டுமென் றிறைஞ்சி நின்றான். இறைவன் புன்முறுவல்செய்து அங்ஙனமே மற்றவளும் அறுபதினாயிரம் புதல்வரைப் பெறுவள், அம்மக்களோ அழுக்கா றுடையமனத்தராய்த் தேவர்கட்கே துன்பஞ்செய்து ஈற்றிலனைவரும் ஓர் முனிவன்கோபத்தால் நீறுவார்கள், முன்னே பாலித்த பிள்ளையின் சந்ததியில் ஓர் புத்திரனுதிப்பான், அவனால்இப்போது நீர்வற்றியகடல் நிறையுமென்றுகூறி மறைந்துபோனார். சகரசக்கரவர்த்தியோ வெனின் தன் னாட்டிற்குத் திரும்பி

வந்து மனைவியைக்கூடி மூத்தமனைவியினிடத்தில் ஒரு புத்திரனையும், இளையாளிடத்தில் அறுபதினாயிரம் புத்திரரையும் பெற்று மனமகிழ்ந்திருந்தான். அவ்வறுபதினாயிரம் புதல்வரும் மிக்க அழுக்காறுடைய மனத்தராய்த் தேவர்கட் கிடுக்கண்செய்து வருத்திவந்தார்கள். மூத்தவள்பெற்ற நன்னெறியையுடைய புதல்வனோவெனின் இளவரசுபட்டம்பொறுத்துத்தந்தையினும் என்மடங் கதிகமாக நீதியொடரசாண்டு தன் மனைவியுடன்கூடி ஓர் சுகுணமுள்ள புத்திரனையீன்றான். இவ்வாறு சந்ததியின் பெருக்கத்தைக்கண்ட சகரசக்கரவர்த்தி அசுவமேதமொன்று செய்யக்கருதி அழகிய அசுவமொன்றை யலங்கரித்துப் பூப்பிரதக்ஷணஞ்செய்வித்து எல்லாவரசரையும் வெற்றிகொண்டுவருகையில், இதையறிந்த இந்திரன் இவர்களைச் சூழ்ச்சியா லொருங்கு முடிக்கக் கருதி, அக்குதிரையை ஈசானதிசைக் கடலருகில் பாதாளத்தில் தவஞ்செய்யுங் கபிலமுனிவர் வனத்திற் செல்லும்படிச்செய்தான். கொடுஞ் செய்கையையுடைய மிக்க வலிபெற்ற அறுபதினாயிரவரும் அசுவத்தைக் காணாதேங்கி முன் ஆதியுமந்தமுமில்லாப் பரமனது அடியைக் காணவேண்டி நீண்டகடலில் விழிதுயிலும் மாதவன் ஏனவடிவங்கொண்டு பூமியெங்கு மிடந்ததுபோல் பாதாளம் வரையிலும் இடந்து உட்சென்றபோது அங்கே சோலைகளையுடைய ஓர் வனந்தோன்ற அவ்வழியேசென்று அங்கேதவஞ்செய்துகொண் டிருக்கும் கபிலமுனிவரைக்கண்டு அவர்மே லனைவரு மெதிர்த்தார்கள்.

காரண மில்லாமலே தன்னைக் கொல்ல நினைந்த அக் கொலைப்பாதகரை முதிய தவத்தையுடைய அம்முனிபுங்கவர் வெகுண்டு கோப நகை நகைத்து நோக்கலும்,அவர் கண்ணினின்றும் தீப்பொறிபிறந்து முன் முக்கட்பெருமான் நகையிற்பட்ட முப்புரமேபோல் ஒருவரையேனும் விடாமல் இமையோரையில் நீறுக்கிவிட்டது. இதைக்கண்ட தேவர்பெருமான்மிக்களிப்படைந்தான். இதுநிற்க ; முனிவரால் தன் புதல்வர்களுக்கு நேர்ந்தவிபத்தை யறிந்த சகரசக்கரவர்த்தி மனம்வருந்தி முனிவரிடம் வந்துவணங்கி சுவாமீ ! நெடுநாளாகப் புத்திரப்பேறின்றி மனம்வருந்தி அரிய தவஞ்செய்து பெற்ற மக்கள்மேல் தவமேபெரிதென வெண்ணி வாழும் தேவரீர் சிற்றங்கொண்டு கருணையென்பது சிறிதுமில்லாம லிவ்வகையான கொடுமையைச்செய்துவிட்டீரோ! இனி என்னுக்கையை இம்மண்ணிடைச் சுமந்து திரிவேனோ ? அந்தோ "சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோ ராயிற் பொறுப்பது கடனே." என்பதையு நோக்காமற் செய்தீரோ ! இனிஎன்னுலாகுங் காரியமியாதென்று கீழே வீழ்ந்து மூர்ச்சை யடைந்து, பின்பு சற்று நேரத்திற்குள் முனிவ ரருளால் மூர்ச்சை தெளிந் தெழுந்து நின்றான். முனிவர் அவன் வருந்துதலுக் கிரங்கி, அரசனே உன் மக்களோகொடியவர், யானவர்க்கு யாதொரு தீங்கிழையாதிருந்தும் என்னைக் கொல்ல நினைந்தமையால் என் கோபத்திற் குள்ளாகி ஊழின் திறத்தால் விக்கதியடைந்தனர்,இனிச்சென்றதைஎண்ணி மனம் வருந்துவதிற்பயனில்லை. உன்குதிரை இவ்வனத்தில் வந்ததை யானறியேன், நீ அவ்வசுவத்தைப் பிடித்துச்சென்று யாகத்தைக் குறைவின்றி நிறைவேற்றிச் சுகித்திருவென்று அவனுக்குப்பலஆசிகூறினர். அரசனோவெனின் இனி இம்முனிவனைக்கடுஞ்சொற்

கூறினால் நமக்கு மிக்கதியே வாய்க்குமென் றெண்ணி "கிட்டாதாயின் வெட்டனமற." என்பதுபோல் இனித் துக்கித் தாகுங்காரியமில்லையென்று துணிந்து அசுவத்தைப் பிடித்துச்சென்று யாகத்தை நிறைவேற்றிப் பவுத்திரனுக்கு முடிசூட்டிக் கண்குளிரப்பார்த்து மனமகிழ்ந்து தன் மக்க ளறுபதினாயிரவரும் ஒரேகாலத்தில் மடிந்ததை அச்சிறுவனுக் கறிவித்து அவர்கள் நற்கதியடையும் வண்ணம் செய்யவேண்டுமென்று நற்புத்திகூறிச் சிலநாள் வாழ்ந்திருந்து நற்பதவியை யடைந்தான்.

அவ்வா றுயிர்நீத்த தன் மூதாதையை யடக்கஞ்செய்து அவர்க்குரிய கடனைச் செய்துமுடித்துக் குடிகள்மே லிரக்கங்கொண்டு செங்கோலோச்சித் திலீபனென்னுமோர் புதல்வனைப்பெற்று நெடுநாள் நீதியொடரசாண்டு தான் வீற்றிருந் தரசாண்டுவந்த சிங்காதனத்தின்மேல் திலீபனையிருத்தி முறைப்படி முடிபுனைவித்து அவனிடம் பிதுர்க்கள் புண்ணியலோக மடையாதிருப்பதைக் கூறிப் பரமபத மடைந்தான். திலீபனும் நெடுநாளரசுபுரிந்து பகீரதனைப் பெற்று அப்புதல்வனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து, அரசர்க்குரிய சிலம்புவித்தைக ளியாவும் கற்பித்து, நான்கு வேதங்களையும் ஐயந்திரிபறக் கற்பித்தார். இவ்வாறு பகீரதன் யாவுங் கற்றுக் கேள்விச் செல்வமுமடைந்து விளங்கினான், திலீபன் தன்னொப்பற்ற புதல்வனுக்கு பிதுர்க்களின் செய்தியை யறிவித்துப் பரகதியடைந்தான். பகீரதன் தந்தைசொன் மேற்கொண்டு, வசிட்டமுனிவரை யடைந்து அவரழகிய பாதங்களில் வீழ்ந்துவணங்கிப் பிரமனை நோக்கித் தவஞ்செய்யவேண்டி அவர்பாற் பிரமனது மூலமந்திரத்தைப்பெற்றுப் பதினாயிரவருட மரியதவத்திருக்கையில் பிரமனவனிடம் வந்து பகீரதனைநோக்கி இவ்வாறு சொல்வானாயினன். உன்பிதுர்க்கள் நற்கதியை யடையவேண்டினால் ஒப்பற்ற ஆகாயகங்கையை இப்பூமியில்வந்து பெருகச்செய்யவேண்டும் அப்படிச்செய்வையேயாயின் செத்துக் கிடக்கும் உன்முன்னோர்களுடைய என்புகள் அக்கங்கைநீரால் நனையப்பெற்று இரவு பகலில்லாத முத்தியெய்துவர். அவ்வளவில்லாத கங்கை இப்பூமியில் வீழ்ந்து பெருகினால் அப்பெரும்பாரத்தை நிலமகள் தாங்கப்பொறாள். ஒற்றைப்பிறையையணிந்த நீண்ட சடைக்கற்றையை யுடையானும், நெற்றியிலொற்றைநாட்ட முடையானும், யாங்க ளெந்நாளும் வணங்கித் தொழுதேத்தும் இறைவனுமாகிய சாம்பவமூர்த்தியே அக்கங்கையைத் தாங்கவல்லான். அப்பரம்பரனை நோக்கித் தவஞ்செய்வையேயானால் நீயெண்ணிய வெண்ணங் கைகூடுமென்றுசொல்லி மறைந்தான்.

அவ்வாறு சதுமுகன் கூறியதைக்கேட்டு மனமகிழ்ந்து இறைவனை நோக்கிப் பதினாயிர வருடம் அரியதவத்திருக்கையில் பரமன் பகீரதன் தவத்திற்கிரங்கி அவனிடம்வந்து உன்போலும் தவத்திற் சிறந்தாரு முண்டோ. உன் தவத்திற் கிரங்கினேனென்று புகழ்ந்து, நீ கங்கையை நோக்கித் தவஞ்செய் யென்றுசொல்லிமறைந்தார். அவனு மச்சொல்லைப் பத்தியொடுகேட்டுணர்ந்து கங்கையைநோக்கி ஐயாயிரவருட மரியதவத்திருந்து கங்கையைக் கண்டு தெரிசித்து ஆனந்தித்தான். கங்கை நீ எம்மைநோக்கிப் பத்தியொடுபுரிந்த தவத்

திற் கிரங்கினேம், இனி யுன் மனோபீஷ்டம் நிறைவேறும், என்னைத்தாங்கு மிறைவனைக் குறித்துத் தவஞ்செய்யென்று பணித்துச் சென்றாள். அரசன் முக்கட்பெருமானை மனத்திலெண்ணி சிறிதுநாள் தவத்திலிருக்க, சிவபெருமான் பத்தனுக்கிரங்கி நந்திகணங்களும் சிவகணங்களும் தன்னை நெருங்கிப் புடைசூழப் பகீரதன்முன் தோன்றி கங்கையை யழைத்தருளினார், கங்கையும் அண்ட கடாகங்களும் பிளந்துகொண்டு மகமேரு முதலிய வரைகளையும் திக்கசங்களையும் கீழ்மேலாகப் புரளும்படி யடித்துக்கொண்டுவந்து பெருகவே:, இந்திரன் முதலியதேவர்களும், பாற்கடலிற் கண்வளரு மாதவனும் அவ்வோசையைக்கேட்டு உள்ளநடுங்கி நமக் கிறுதிக்காலமே நேர்ந்ததென்றேங்கி நின்றார்களென்றால் அக்கங்கையின் பெருமையை என்னொரு நாவால் முற்றுஞ்சொல்லவமையுமோ? அப்படிப் பெருகிய கங்கையை நீலகண்டப்பெருமான் செவ்வானமேபோ லுள்ள சடைக்கற்றையி னிடத்து அதனை யணுவென மதித்துத் தாங்கி, பகீரதனை நோக்கி நீ யுன் மூதாதைகள் செத்துக்கிடக்குமிடத்திற் கேகென்றனுப்பிவிட்டுத் தன் முடியிற்றாங்கிய கங்கைநீரில் ஓரணுவளவு பூமியிற் சிந்தினார். அது பிரளயகாலத்திற் பெருக்கெடுத்து வரும் ஆழி நீரே போல எங்கும்பரம்பி முனிவரான் முடிந்த அவ்வறுபதினாயிரவர் என்பின்மேற் பாய்ந்து அதைத் திசைதொறுஞ் சிதறச்செய்து அகத்தியர் முன்னுண்டு சென்ற ஆழியையும் நிரம்பச் செய்தது. பகீரதனுடைய பிதுர்க்கள் கங்கை தீண்டிய அப்பொழுதே தாங்கள் செய்திருந்த கொடிய பாதகங்களெல்லாம் நீங்கிப்புனிதராய்முத்திவீடெய்திப்பகீரதனைப்புகழ்ந்துவாழ்த்தினார்கள். கங்கை அரசனை நோக்கி உன்னால் யான் இப்பூதலத்துக்கு வந்தமையால் உன்பேரெனக்கும் வழங்கவேண்டும், என்னைப் பகீரதியென் றழையென்றாள். அவ்வாறே மும்முறை கூவி யழைத்தான், பூமியைச் சகரர் இடந்து அவ்வழியே கங்கையோடிச் சென்றமையால் கடலுக்குச் சாகரமென்று பெயர்வாய்ந்தது. இறைவன் கங்கையைத் தாங்கிய சிறப்பை என்னாற் கூறவல்லதோவென்று உரோமசன்மர் சொல்ல அனைவரும் மகிழ்ந்து சென்று கவுசிக நதிக்கரையைக் கண்டு அதில் யாவருந் தீர்த்த மாடிக் கந்தமூல பலாதிகளைப் புசித்து மகிழ்ந்து கருணையே யோருருக்கொடு வந்த யுதிட்டிரர் உரோமசன்மரை நோக்கி சுவாமீ! எல்லாவுலக மழியினும் தமக்கோர் துன்பமில்லாமற் பல கோடி கற்பகாலத்தைக் கண்டு கழித்து மாசில்லாமல் விளங்கும் தேவரீரை யாங்க ளடையப்பெற்ற பாக்கியத்தினும் உலகத்தில் வேறு சிறந்தபொருளுமொன் றுளதோ வென்று பலபலவாறு துதித்து இதோ நமக்கு நேரே தெரிகிற ஆச்சிரமம் யாருடையது? அதை அடியேனுக் கெடுத்துரைக்க வேண்டுமென்றுவேண்ட, முனிவரும் இது கலைக்கோட்டு முனிவருடையது, அவர் சரித்திரத்தைச் சொல்லுகின்றேன் கேளுமென்று சொல்லத்தொடங்கினார்.

கலைக்கோட்டு முனிவர்கதை.

தவத்திற்சிறந்த காசிபமுனிவர் புத்திரன் விபாண்டக னென்பவர் தவத்திருந்தும் நற்றீர்த்தங்களிற் சென்றும் நானமாடிவருநாளில் ஓர்நாள் மிக்க பெருமைவாய்ந்த நதியிற் றீர்த்தமாடும்போது அங்கோர் தெய்வப்பெண்வந்து அந்நதிக்கரையில் நீராடிக்கொண் டிருந்தலைக்கண்டு அப் பெண்மேல் மிக்க காமங்கொண்டு அவள்மீது புத்தியைச் செலுத்திநிற்கையில் முனிவர்வீரியம் கலிதமாய் நீரில்வீழ்ந்தது, பின்பு முனிபுங்கவர் காமவிச்சை தவிர்ந்து அந்நதிக்கரையில்வந் துட்கார்ந்தார், அங்குள்ள ஓரழகியமான் அந்நதியில் வந்து நீர்பருக, விபாண்டகர் வீரியம் நீரின்வழியாக அம் மானவயிற்றிற் சென்றது, அது அக்கணமே கருவாகி ஓர் முகூர்த்தத்தில் அம்மானவயிற்றினின்றும் சிரத்திலோர் கொம்புடனே ஆதித்தன்போ லொளிகொண்டு தோன்ற அச் சிசு சனித்தவுடனே எழுந்து (அந்நதிதீரத்தில் வீற்றிருக்கும் பிதாவை ஞானநோக்கத்தாற்கண்டு வணங்கிநிற்க, விபாண்டகர் தனது புதல்வனை கட்டித் தழுவி முத்தமிட்டு ஆசிர்வதித்து சகல ஞானமும் தனக்குத் தானே யுதிக்கும்படி கடாக்ஷித்தருளினர். சிரத்திலோர் மான்கொம்புகொண்டு பிறந்தமையாற் கலைக்கோட்டுமுனிவனென அவருக்குப் பெயரிட்டுத் தவநிலையில் நிறுத்திச் சென்றார். கலைக்கோட்டு முனிவரோவெனிற் சுத்தவைதிகராய் ஆண் பெண் ணென்னும் பேத மறியாமல் நெடுநாளாய் தவத்தி லிருக்கும்போது, அங்கதேசத் தரசனாகிய உரோமபாதன் வேதியனை மதியாமற் கர்வித்துக் கொடுங்கோ லோச்சி வந்தான். ஓர்நாள் வேதியரொருவர் இவ்வரசனிடம்வரச் சற்றும் மதியாதிருப்பதைக்கண்டு உன் நாட்டில் மாரிவழங்காமற் பஞ்சநேரக்கடவதென்று சபித்துச் சென்றனர். அன்றுமுதல் வானத்தினின்றும் ஓர் திவலையளவேனும் தன்னாட்டிற் பெய்யாமல் க்ஷாமமுண்டாய்க் குடிகள் படுந்துக்கத்தைப் பார்க்கச் சகியாமல் மனவருத்தமுற்றுத் தன் குலகுருவாகிய வேதியனை யழைத்து அவர் பாதங்களில்வீழ்ந்து வணங்கிநின்று, இந்நாட்டில் வெகுகாலமாய் வானம்வழங்காமல் எந்நாட்டிலுமில்லாப் பஞ்சம் இந்நாட்டில்வந்து குடிகளைவருத்துகின்றதே! இப்பஞ்சமொழியத் தக்க உபாயமொன்று சொல்லவேண்டுமென் றிறைஞ்சி நின்றான். அதற் கக்குரவர்கள் தவத்திற் சிறந்த கலைக்கோட்டு முனிபுங்கவர் இந்நாட்டிற் கெழுந்தருளினல், இந்நாட்டையடைந்த பஞ்சம் நீங்கி வானமும் வழங்குமென்றார்கள். இச் சூழ்ச்சியை யறிந்த அரசன், கலைக்கோட்டுமுனிவனை இந்நாட்டுக் கழைத்துவருவார்க்கு அளவிலாப் பொன்தருவதாய்ப் பறையறைவித்தான். அந்நாட்டிலுள்ள கணிகைமாதருள் இருவர் முனிவனை இந்நாட்டிற்குக் கொண்டுவரவேண்டுமென்றெண்ணி மனேதிடங்கொண்டு அவரிருக்குந் திசையே நோக்கி மலைகளும் மரங்களும் ஆறுகளும் சோலைகளுங் கடந்து முனிவரர்ச்சிரமத்தையணுகி, அவரிருக்கைக்கு சற்றுத்தூலைவில் தங்களுக்கோ ராச்சிரமமேற்படுத்திக்கொண்டு அதில் தாங்களும் தவஞ்செய்யும் முனிவரேபோல் வேடங்கொண்டு கலைக்கோட்டுமுனிவனை நேசங்கொண்டு அவருக்கு மிக்க உருசி

யுள்ள கனிவர்க்கங்களைக் கொண்டுபோய்க் கொடுத்து புசிக்கச்செய்து வருநாளில் கலைக்கோட்டு முனிவர் பொய்வேடந் தரித்திருக்கு மக்கணிகையரை நோக்கித் தாங்களெழுந்தருளி யிருக்கும் இடமெதுவென்று வினவ, சுவாமீ! அடியோங்க ளாச்சிரமம் சமீபத்திற்ற னுள்ளது அது புனிதமாகும்வண்ணம் தேவரீ ரெழுந்தருளல் வேண்டுமென்று அவ்விடத்திற் கழைத்துச்சென்று அவர்க்குப்பணிவிடைசெய்து மிக்க உருசியுள்ள கனிகளைப் புசிக்கத் தந்தனர். முனிவர் அக்கனிகளைப் புசித் தானந்தங்கொண்டு இக்கனிமிக்க இனிப்பா யிருக்கின்றது,இதுஎங்குள்ளதென்று வினவ,அக்கணிகையர் இதுவே நல்லசமயம்"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்." ஆதலால் இதைவிட வேறுசமயங் கிட்டாதென்று கலைக்கோட்டு முனிவரை வணங்கி சுவாமீ, இக்கனி யுள்ளவிடம் சமீபத்திற்றானேயிருக்கின்றது தேவரீரெழுந்தருளினால் அவ்விடத்திற்குக் கொண்டுசெல்கின்றோ மென்ன, முனிபுங்கவர் சம்மதிக்கவும் அவரை அழைத்துக்கொண்டு காட்டைக் கடந்து அங்கதேசத்தை வந்தடைந்தனர். கலைக்கோட்டு முனிவருடைய பொன்போன்ற பாதங்க ளிரண்டும் அந்நாட்டினெல்லையிற்படவும், கருகிய மரங்களெல்லாம் செழித்தோங்கின, அந்நாடெங்கும் மல்லிகை முல்லை இருவாட்சி சண்பக மென்னு மலர்களெல்லாம் தளிர்ந்து நல்ல வாசங் கமழ்ந்தன. முன் வேதியனால் நேர்ந்த சாபந்தொலைந்து சப்தமேகங்களும் ஒன்றுகூடிப்பெய்தன. பாலைவனமேபோற் கிடந்த அந்நாடு கண்டார் அதிசயிக்கும்படிச் செழித்தோங்கின. இஃதிவ்வாறிருக்க, கலைக்கோட்டு முனிவர் வந்திருக்கும் செய்தியை அந்நாட்டரச னறிந்து,மந்திரிபிரதானி தண்டத்தலைவர் யூகத்தலைவர் சாமந்தரென்னு மிவர்கள் புடைசூழச்சென்று முனிவரைக்கண்டு மும்முறை வலம்வந்து பணிந்து சுவாமீ! தேவரீ ரிங்கெழுந்தருளியது அடியேன்செய்த மாதவமோ! அல்லது எமது முன்னோர் செய்த அறத்தின்வலியோ! இந்நாடுசெய்த சுகிர்தமோ வென்று பலவாறு புகழ்ந்து பேசி, தேவரீ ரிங்கெழுந்தருளியதற்கு இக்கணிகையரோ காரணம், இவர்கள் பொய்வேடங் கொண்டு நடித்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென் றிறைஞ்சி நின்றான்.

அவ்வாறிறைஞ்சிநின்ற அரசனுக்குப்பல ஆசி கூறி, அக் குற்றத்தைப் பொறுத்தருளினர். அரசன் மீண்டும் முனிவர்தாளில் வீழ்ந்து வணங்கி அடியேன் குடிசைக்கெழுந்தருள வேண்டுமென்று வேண்டி, முனிவரைத் தன் இரதத்திலேற்றிக்கொண்டு நகரத்தை வலமாகச்சுற்றி வந்து அரசன் மனைக் கழைத்துச்சென்று அவர்க்கு வேண்டுங் கனிவர்க்கங்களைக்கொணர்ந்து கொடுத்து உபசரித்து வந்தான். முனிவருஞ் சிலநாளங்கிருந்து அரசனிடம் விடைபெற்றுத் தன்னிருக்கை சென்றானென்றுகூற,தருமர் முதலியயாவரும் கேட்டு மிக்க களிப்படைந்து அங்குள்ள ஓர்திவ்யநதியில் நானமாடி அவ்வனத்தை விட்டகன்று செல்கையில் ஓராச்சிரமம் தோன்ற,தருமர் இவ்வாச்சிரமம் யாருடையது? அதைத்தெரியச் சொன்னால் அவரைக்கண்டு தெரிசிக்கலாமென்ன,' உரோமசமுனிவர் இது பரசுராமருடையது, இப்போது பூர்வபக்ஷமாகையால் நாளையுதயத்திற்கு இந்நதியிற்றீர்த்தமாட வருவார், அப்போ தவரைக் காண

லாம்; இன்றையப்பொழுதை இங்கிருந்தே போக்கலாமென்று யாவரும் பரசுராமர் ஆச்சிரமத்திற் றங்கினார்கள். சூரியனும் அத்தகிரியடையச் சந்திரனுதயமானான்.

பரசுராமர் கதை.

இன்றிராப்பொழுது வீணே கழியாதிருக்கப் பரசுராமர் சரித்திரத்தைச் சொல்லவேண்டுமென்ன உரோமசன்மர் கூறத் தொடங்கினார். பிருகு முனிவரானவர் ஓர் அரசனுடைய இரண்டு குமாரத்திகளில் மூத்தவளை மணஞ்செய்து கொண்டு வனத்திற்சென்று அவள்பணிவிடைசெய்யத் தான் தவத்திலிருந்தார். இவ்வாறு நெடுநாளாய் அப்பெண் மனங் கோணாது புருடனுக்கு வேண்டும் பணிவிடைசெய்து வருநாளில், முனிவர் உள்ளங்களித்து, பெண்கள் நாயகமே! உனக்குவேண்டும்வரத்தை யென்னிடம்பெற்றுக்கொள்ளென்று சொல்ல, அப்பெண் தன் கொழுநனைப் பணிந்தெழுந்து, எனக்கும் காசிராசனை மணந்த என்தங்கைக்கும் புத்திரப்பேறில்லாமையால் இருவரும் அப்புத்திரப்பேறடைய வரந்தர வேண்டுமென்று வேண்டினாள். அவ்வாறே பிருகு முனிவரும் இருவருக்கும் வரமளித்து அங்குள்ள ஓர் திவ்ய நதியொன்றைக்காட்டி அதிலிருவரும் பூரணை சோமவாரத்தில் ஸ்நானமாடி, நீ அரசமரத்தையும், உன் தங்கை முருக்க மரத்தையுந் தழுவுங்கள், உனக்கு வேதியப்புதல்வனும் உன்தங்கைக்கரசபுதல்வனு முண்டாவார்களென்று பல ஆசிகூறியனுப்பினர். அவ்வரத்தைமேற்கொண்டொழுகி இருவரும் இரண்டுபுதல்வரைப்பெற்றனர். காசிராசன் மனைவிதானீன்ற பிள்ளைக்கு கௌசிகனெனப் பெயரிட்டு வளர்த்து வந்தனள். அவன்பருவகால மடைந்தபின் ஓர்நாள்வேட்டையாடவேண்டி காட்டிற்புகுந்து வசிட்டராச்சிரமத்தில் தனக்குந் தன்சேனைகட்கும் அன்னமிட்ட காமதேனுவைப் பிடிக்கப்போய்ப் பங்கப்பட்டுத்தவமே பெரிதெனக்கொண்டு தவத்திலிருந்து சாபானுக்கிரக சாமர்த்தியனாகி விசுவாமித்திரனெனப் பெயர்பெற்றிருந்தனர். பிருகுமுனிவர் தன்மனைவியீன்றபுதல்வனுக்கு சமதக்கினி யெனநாமகரணஞ் சூட்டி அன்புடன் வளர்த்து, நான்கு வேதங்களையும் ஐயமறக் கற்பித்து தவத்துக்குரிய மந்திரங்களையு மறிவித்தார். அச்சமதக்கினி முனிவர் தவமேற்கொண்டு இவ்வனத்தில் சிலநாள் தவத்திலிருந்து பின் ரேணுகையென்னு மிராச கன்னிகையை மணந்து வாழ்ந்துவருநாளில்,இறைவனருளால் அப்பெண்வயிறுவாய்த்துத் தன்னுவன் அநுவன் விச்சுவாவசுஇராமன் என்னு நான்கு புதல்வரைப்பெற்று அவர்க்கு வேண்டும் கல்விகளைக்கற்பித்து வளர்த்து வந்தார். அந்நால்வருள் இராமனென்பான், மலையைச்சிலையாய் வளைத்தவனும், மிக்க வலியமைந்த யானைத்தோலையுரித்துப் போர்த்தவனும், விரிந்த சடையினிடத்து நிலவைத்தாங்கினவனும், எள்ளி லெண்ணெய்போ லொத்திருந்து எண்ணில் பல்கோடியுயிர்களையுங் காப்பவனுமாகியபரமசிவனை நோக்கி அருந்தவம்புரிந்து, அவனால் பரசு என்னு மாயுதத்தைப் பெற்று யாவரும் பரசுராமனென் றழைக்கப்பெற்று இனிது வாழ்ந்திருந்தான். இது கிடக்க;

ஓர்நாள் இரேணுகை தன்கணவனுகிய சமதக்கினி முனிவர் பூசைக்குச் சலந்திரட்ட நதியினையடைந்தபோது, ஆகாயத்திற்செல்லுமோர் கந்தருவ புருடன்சாயலை நீரிற்கண்டு அவனழகை மதித்து வியந்து கொண்டே சலத்தைத் திரட்டினுள். கற்புடைய ஒருத்தி தன்புருடனையல்லாமல் வேறு புருடனை நோக்கி அவனழகைத் தன்மனத்தே புகழினும், அவள் கற்பு குலையுமென்று மனுநீதி முறையிடுவதால், இரேணுகைக்குச் சலந் திரளாமன் மனம்வருந்தி முனிவரிடம் வந்து சித்திரப்பாவையேபோ லத்தகவடங்கி நின்ருள். முக்காலமு முணர்ந்த சமதக்கினி முனிவர் தன்மனைவியின் குற்றத்தை யறிந்து தன்னருகிருந்த புதல்வர் மூவரையும் நோக்கி, உம்மையீன்றுளை வெட்டி எறியுங்களென்ருர். அப்பிள்ளைகள் தந்தை சொற்கடந்து, தாயைக் கொல்ல மனமில்லாமல் நின்ருர்கள். முனிவர் கோபங்கொண்டு, "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை." என்பதறியாமல் என்சொற்கடந்து நின்றமையால் நீங்கள் மூவரும் பிராமணத்துவத்தை யிழந்து பட்டிமை யொழுக்க முடைய வேடராகி மிருகங்களையே வதைத்துத்தின்னக் கடவீரென்று சபித்துவிட்டுப் பரசுராமரைக் கூவியழைத்து இதோ நின்றிருக்கும் உன் தாயைக் கொன்றுபோ டென்ருன். அவ்வாறே அக்கட்டளையை மேற்கொண்டு, தாயின் கையைப் பிடித்திழுத்துச் சற்றுத்தூரத்திற்சென்று தன்கையிலுள்ள உடைவாளையோச்சி அவளைக்கொன்று விட்டுத் தந்தையிடம்வந்து வணங்கி நின்ருன். முனிவர் உள்ளமகிழ்ந்து, அருமைப்புதல்வனே! நீ என்சொற் கடவாமலே தாயென்றும் பாராமற்செய்த நீஎவ்வுலகமும் போற்றவாழ்வை; உனக்கு வேண்டும் வரத்தைக் கேளென்ருர். பரசுராமர் தந்தையை மும்முறைவலம் வந்து பணிந்துபட்டிமை யொழுக்கத்தைப் பூண்டொழுகும் வேடராம்படிசபித்த என்தமையன்மார் மூவரும்மீண்டும் மாதவர்களாக வரவும்; கற்பழிந் திறந்துபோன என்தாய்கற்புடையாளாகி உயிர்த்தெழுந்து முன்போல் தங்களுக் கூழியஞ் செய்திருக்கவும், என்தாயைக்கொன்ற பாவம் என்னைவிட்டகலவும் வரந்தர வேண்டுமென்று கேட்க, முனிவர் அகமகிழ்ந்து தன்புத்திரன் கருத்துக்கிசைந்து அவ்வரத்தை யவனுக்களித்து முன்போல்வாழ்ந்திருந்தார்கள். பரசுராமரோவெனின் வேறொரு வனத்திற்சென்றுவாழ்ந்திருந்தனர்.

இவ்வாறிவர்கள் சுகமே வாழ்ந்துகொண்டிருக்கையில் கார்த்த வீரியார்ச்சுனன் என்னும் சூரியகுலத்தரசன் தவமுனிவர்கள்வசிக்கும் ஆச்சிரமங்களிற் சென்று முனிவர்களையும் அவர்கட்குத் தொண்டுபூண் டொழுகுவாரையும் காரணமின்றிக் கொன்று சோலைகளையழித்து எங்கு நோக்கினும் முனிவர் சிரங்களே யுருண்டுகிடக்கும்படிச் செய்துவருநாளில் தனக்கு இறுதிக்காலம் நேர்ந்தமையால் தன்சேனைகளுடன் சமதக்கினி முனிவர் தவஞ்செய்யுங் கானிற் சென்று அங்குள்ள சோலைகளெல்லா மழித்தான். இதைக்கண்ட அம் முனிவர் புத்திரர்மூவரும் அக்கார்த்த வீரியார்ச்சுனனை யெதிர்த்து அபசய மடைந்தனர். அதையறிந்த பரசுராமர் சினங்கொண்டு மிக்க வலியுள்ள வில்லைத் தன்கையிற்றாங்கி கார்த்த வீரியார்ச்சுனனை யெதிர்ந்துபொருதுவென்று அவன் இரதகஜதுரக பதாதிகளை யெல்லாம் சூறுவளியி. லகப்பட்ட துரும்பே

பேர்ற் பறக்கடித்தான். இவ்வாறு யாவரும் மடிந்தபின்னர், கார்த்த வீரியார்ச் சுனன் புதல்வனுக்கு முடிசூட்டினர். அவனோ தன்தந்தையைக் கொன்ற வனை நான் எவ்வகையிலும் கொல்லாமல் விடேனென்று செருக்குற்று, ஓர் நாள்தனியே உடைவாளொன்றேந்திவந்து பரசுராமரில்லாத சமயம்பார்த்துச் சமதக்கினி முனிவரை உடைவாள்கொண்டோச்சிக் கொன்று சென்றான்.

அவ்வா றவன் கொன்று சென்றதைக் கண்ட இரேணுகை யம்மை கோவென் றலறி யழுது மார்பிலடித்து பிரமித்து நின்றாள். தன்தாய்க்குர லோசையை யறிந்த பரசுராமர் அக்கணமே யோடோடியும் வந்து தந்தை முடிந்ததையு நோக்காமல் தாயைத்தேற்றி நீ யழுதகண்ணீர் வீணே போகா மல் சூரியகுலத்தரசரை ஏழுதலைமுறையளவும் தலையெடாவண்ண மழிக்கக் கடவேனென்று சபதங்கூறிப் பின்பு தந்தையுடலை யெடுத்தடக்கஞ்செய்து தாய்க்குத் தேறுதலான வார்த்தையைக் கூறி அக்கணமே போர்க்கோலங் கொண்டு வெளிப்பட்டு, கார்த்த வீரியார்ச்சுனன் புதல்வனை யணுகி அவனை யொருகணத்தே முடித்து அதைவிட்டகன்று எங்குமுள்ள சூரியகுலத்தரச ரையும் அவ்வரசர் புத்திரர்களையும் கருணையென்ப தெவ்வளவுமின்றி ஒருங்கு முடித்து அவர்களுதிரத்தை யோர்நதியாகப் பெருகச்செய்து தன் தந்தைக் குரியகடனை அந்நதியிற்றானே செய்துமுடித்து, முடிந்த அரசர்களின் நாட் டைக் காசிபமுனிவருக் குரித்தாக்கி மகேந்திரகிரிக்குச் சென்றுதவத்திலிருக் கின்றார். சூரியோதய மானவுடனே இங்கெழுந் தருளுவரென்று உரோமசமுனி வர் கூற, தருமமெவ்வளவும் பழுதாகாவண்ணம் காத்துவரும் யுதிட்டிரர் பரசுராமரைக் காணவேண்டி யிருப்பதை யறிந்து துரிதத்திற்காட்ட வேண்டி வருவான்போல் வெயிலோனு முதயமானன். பரசுராமரும் நீராட வெழுந் தருளினர்.

இவ்வாறு பரசுராமர் வரவைக்கண்ட தருமராசனும் தம்பியரும் எதிர் சென்று வணங்கி, தாமின்னாரென் றறிவித்தார். அதைக்கேட்டுமனமகிழ்ந்து பல ஆசி கூறி தரும நந்தன! நீயோ நீதியையே செல்வமாக வெண்ணி யிருப்பவன், உனக்குயாவரென்ன தீங்கு செய்தாலும் அஃதுன்னை வருத் தாமல் மாசுதீர்ந்த மணியேபோல் விளங்குவை, உன்னைப்பற்றிய துன்பம் நீடு நில்லா. இன்னுஞ் சிலநாளில் உன் இராச்சியபார மெய்துவை. என்று ஆசீர் வதித்து அந்நதியில் மூழ்கி தருமராசனிடம் விடைபெற்றுச் சென்றார். பின்பு யுதிட்டிரர் முதலிய யாவரும் அந்நதியில் நீராடி அதைவிட்டகன்று கோதாவிரி நதிதீரம்வந்து அந்நதிக்கரையில் யாகசாலையொன் றேற்படுத்தி யாகஞ்செய்து கொண் டிருக்கையில், துவாரகைக் கிறைவனாகிய கண்ணபிரான்தன்மைத் துனரைப் பார்க்கவேண்டி சாத்தகியாழ்வாருடனும் பரிசனங்களுடன் வந்து தருமராசன் முதல் யாவரையுங்கண்டு களித்து சிறிதுநேர மங்கிருந்து தரும ராசனிடம் விடைபெற்று தமது நகரஞ் சென்றார். பின்பு பாண்டவர் அவ் விடம்விட்டகன்று யயாதிமகாராசன் யாகஞ்செய்திருந்த காட்டையடைந்து அங்கோராச்சிரம மிருக்கக்கண்டு இவ்வாச்சிரமமாருடையது? இங்கே யாக

வேதிகைவிளங்கவேண்டிய காரணம் யாது? என்று உரோமச முனிவரைக் கேட்க அவர் கூறுகின்றார்.

சவுனகமுனிவர் கதை.

ஓர்நாள் சையாதி மகாராசன் தன் மருகனாகிய சவுனக முனிவரைக் காணவேண்டி வந்து அவ ரடைந்திருக்கும் பாலப்பருவத்தைக்கண் டதிசயித்து, அவரால் அப்பருவமடைந்ததையுமறிந்து சுவாமீ! நான் இந்நாள்வரையும் அரசபாரம் பொறுத்து இம்மையி லெல்லாச் செல்வங்களையுங் குறைவின்றி யனுபவித்தேன். இனி மறுமைப் பயனை யடைய வெண்ணி அரசைத் துறந்து வந்தேன், தேவரீர் திருவுளங்கனிந்து நாயேன் மறுமைப் பயனை யடையும் வகையைத் தெரிவிக்கவேண்டுமென்று வேண்டினான். அதற் கம்முனிவர் மிக்க புகழ்பெற்ற சையாதிமகாராசனே! மறுமைப்பயனை யடையவேண்டின் பல யாகங்களை முறைபிறழாது நடத்தினால் அதனால் மறுமைப்பயனெய்தலாம், அதற்குப் பெருமிதமான பொன்னும் சாமக்கிரியைகளும் வேண்டும், அவையாவுஞ் சேகரித்துக்கொணர்ந்தால் யான் முன்னின்று யாகத்தை நிறைவேற்றித் தருகின்றேனென்று சொல்ல, அம்மொழிகேட் டரச னகமகிழ்ந்து அக்கணமே வேண்டும் பொன்னையும் சாமக் கிரியைகளையுஞ் சேகரித்துக் கொணர்ந்து முனிவரிடங் கொடுத்தான். அதைக்கண்ட சவுனக முனிவரும் இந்த யாகவேதிகைகளை யியற்றி அரசனுக்கு மவன் மனைவிக்கும் முறைப்படி யாகதீக்ஷை செய்வித்து யாகத்தை நிறைவேற்றுகையில் அசுவனி தேவதைகளை மனத்தில் நினைந்து அவர்க்குரிய அவிர்ப்பாகங் கொடுக்கயத்தனித்தனர். அதுகண்ட இந்திரன் மிக்க சினங்கொண்டு யாககுண்டத்தை யணுகி அவிர்ப்பாகத்துக்கு யானுரியவனா யிருக்க இம்முனிவன் அசுவனி தேவதைகளுக்குக் கொடுப்பது நியாய விரோதமன்றோ வென்று தன் கூரிய வச்சிரப் படையால் முனிவரைக் கொல்ல எத்தனித்தான். இந்திரன் கருத்தை அறிந்த முனிபுங்கவர் மிக்க சீற்றங்கொண்டு யாகத்தினின்று மோர் மந்திரத்தை யுச்சரித்து அவனிரண்டு கரத்தையுந் தம்பிக்கச்செய்தனர். அவ்வாறே இந்திரனுடைய ஒப்பற்ற கரங்க ளிரண்டும் தூணேபோல் நீளக்கிடந்தன. பின்பு சவுனகமுனிவர் இந்திரன் செருக்கை யடக்கவெண்ணி, மீண்டுமோர் மந்திரத்தை யுச்சரித்து யாககுண்டத்தினின்றும் மிக்கவலியமைந்த ஓர்பூதத்தையுண்டாக்கி நீஇந்திரனிடஞ்சென்று அவனைமுடித்துவாவென்று கட்டளையிட்டனர். இதை யறிந்த இந்திரன் கோவெனக்கதறியழுது சவுனகமுனிவரை நோக்கி, என்னைக் கொல்லா துயிர்ப்பிச்சைதர வேண்டுமென்றுவேண்டி அடைக்கலம்புகுந்தான். முனிவர் திருவுளங்கனிந்து, தம்பித்து நின்ற அவன்கரத்தை நன்றாகச்செய்து, உயிர் நீங்காவண்ணம் அவனுக் குயிர்ப்பிச்சையையுங் கொடுத்தனுப்பிவிட்டு, யாகத்தைப் பூர்த்திசெய்து, அசுவனி தேவதைகளுக் கவிர்ப்பாகங்கொடுத்து சையாதி மகாராசனும் அவன்மனைவியும் மறுமைப் பயனையடையும்படிச்செய்தனர். அவ்விடந்தானிதுவென்று முனிவர்சொல்ல யாவருங்கேட் டானந்தங் கொண்டு அவ்விடம்விட்டகன்று யமுனாதீரத்தையடைந்து அதில் முறைப்படி

கிராடி அதைவிட்டகன்று வடதிசையே நோக்கிச் செல்லுகையில், அடர்ந்த சோலையொன்றைக்கண்டு இவ்வனமாருடையதென்று கேட்க முனிவர் கூறுகின்றார்.

அசுவமகாராசன் கதை.

முற்காலத்தில் அசுவமகாராசனென்றொரு பார்த்திபனிருந்தான், அவனுக்கு நெடுநாளாய்ப் புத்திரபாக்கிய மில்லாமல் மனம்வருந்தித் தானுந்தன் மனைவியுமாக மரவுரிதரித்துக் காட்டிற்சென்று அங்குள்ள மாதவர்களைத் தரிசித்து வருகையில் தவத்திற்சிறந்த பிருகு முனிவரைக்கண்டு தெரிசித்து அவரழகிய பாதத்தில்வீழ்ந்து சென்னியுறப்பணிந்து கைகூப்பி நிற்கையில் அம்முனிவர் அரசனைக்கண்டு நீ யாதுகருதி எம்மைப்பணிந்து நின்றனை யென்றுவினவ அரசன்மீண்டு மவர்தாளில்விழ்ந்தெழுந்து சுவாமீ! நாயேற்குநெடுநாளாய் மக்கட்பேறில்லாமல் மனம்வருந்தி இராச்சியத்தின்மேல் மனமில்லாமல் வெறுத்துவந்தேன். அடியேற்குத் தேவரீர் அவ்வரத்தை யளிக்கவேண்டுகின்றேனென்றிறைஞ்சிநின்றான். முனிவர் அரசனைநோக்கி நீபுத்திர காமேட்டியாகஞ் செய்வையேல் மக்களைப்பெற்று வாழ்வையென்று கூறினர். அரசன் முனிவர் கருத்துக்கிசைந்து, அந்த யாகத்துக்கு வேண்டியவைகளைக் குறைவென்பதில்லாமல் சேகரித்துக்கொணர்ந்து பிருகு முனிவரைவணங்கிநின்று சுவாமீ! தேவரீர் யானுய்யுமாறு யாகத்தைச் செய்து புனிதனுகும் வண்ணஞ் செய்து காக்கவேண்டுமென்று தன் னிருகரங்களையுஞ் சென்னிமேற் கூப்பித்துதித்தான். முனிவர் அரசன் வருந்துதலுக் கிரங்கித் தவத்தினின்று மெழுந்து முறைப்படி ஏழுநாளளவும் யாகஞ்செய்து தேவர்கட் கவிர்ப்பாகங்கொடுத்து யாகத்திலுண்டான நீரை ஓர் கலசத்திலேந்தித் தருப்பையா லதைமூடி அன்றிரவிலெல்லோருஞ் சயனித்தார்கள்.

அவ்வாறு யாவரும் சயனித்து நித்திரைசெய்தபின்பு நடுநேரத்தில் அரசனுக்குநாவறண்டு தாகமெடுத்து நெடுநேரம்நீரில்லாதுவருந்திக் கலசத்திலிருந்த சலத்தை இன்னதென்றறியா தெடுத்தருந்தி விடாய்தீர்ந்தபின் கலசத்திருந்த நீரையே நாமருந்தினேமென்று தெரிந்துகொண்டு உள்ளநடுங்கி யாதாய் முடியுமோ முனிவர் என்னசாபங் கூறுவரோ வென்று மனம்வருந்தி நித்திரையென்பது சற்றுமில்லாமல் விழித்திருக்க, சூரியனும் இவன்செய்த குற்றத்தைத் தெரிவிக்கும்படி வருவதுபோல் உதயமானான். பிருகு முனிவர் காலைக் கடனை முடித்துக்கொண்டு யாககுண்டத்தினிடம் வந்து, தாம் கலசத்தில் வைத்த சலத்தைக் காணுதேங்கி அரசனைக் கூவியழைத்து தான்கண்டதை அவனிடஞ்சொல்ல, அரசன் நாம் நெடுநாள் வருந்தியிருந்த காரியம் கைகூடிவந்த சமயத்தில் அறிவின்மையால் தீய காரியத்தையே செய்துவிட்டுப் புத்திரப் பேற்றையு மடைந்தோமில்லை. இனி முனிவர் சாபத்துக்கு முள்ளாகவேண்டி வந்ததேயென்று மனம் வருந்தி ஆயினும் உண்மையையே கூறவேண்டு மென்றெண்ணி முனிவர் தாளில் வீழ்ந்து சுவாமீ! நடுச்சாமத்தில் என்னுவறண்டு மிக்க தாகங்கொண்டு நெடுநேரம் நீரகப்படாது வருந்தி

என்னாற் பொறுக்க முடியாமல் என் அறிவிழந்து கலசத்திலுள்ள சலத்தைப் புசித்து சற்றுநேரத்துக்குள் என்னறிவு சுவாதீனப்பட்ட பின்பு நான் செய்த குற்றத்தை யெண்ணி மனம் வருந்துகின்றேன் ; இஃதுண்மை யென்று கூறிநின்றான். அதைக்கேட்ட முனிவர் வியாகுலித்து அந்தோ ! நாம் ஏழுநாளாகத் தேகம் வருந்தி யாகத்தினின்றும் கிடைத்த அவிர்ப்பாகத்தை நாசஞ் செய்தானே ஆயினும் இவன் தெரியாமற்செய்த குற்றத்திற்கு இறந்துபடுவனென்றெண்ணி அரசனை நோக்கி இவ்வாறு கூறலாயினர்.

குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந்து நீதியொடு செங்கோலோச்சுமரசனே! காமியற்றிய யாககுண்டத்தி னின்றும் கிடைத்த அந்நீரோ நீபுத்திரப் பேறடைதற்கு உன்மனைவிக்குத் தரும் அவிர்ப்பாகமாம், அதை நீ யறியாது புசித்தமையால் அது உன்வயிற்றில் நூறாண்டிருந்து, கருவாகி உன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளிப்படும் ; அப்போதுன்னுயிர் நீங்குவையே யென்று சொல்ல, அதற்கவன் சுவாமீ ! என்னுயிர் நீங்கினு மஞ்சேன், எவ்விதத்தினாலாயினும் புத்திரனுற்பவித்து அவனால் யான் மறுமைப்பயனை யடைவதே என் னபீஷ்ட மென்றான். பிருகு முனிவர் அவனுக்குப் பல ஆசிகள்கூறி விடைகொடுத் தனுப்பினர். பின்னர் முனிவர் சொன்னவாறே நூறாண்டுங் கழிந்தபின் அவன் வயிற்றைப் பீறிக்கொண்டு வெளிவந்த புதல்வனைக்கண்டு சொர்க்கலோக மடைந்தான். தேவப்பெண்கள் அப்பிள்ளையை அன்புடன் வளர்த்து அப்பிள்ளைக்கு மாந்தாதாவென்று பெயரிட்டு ஆதரித்துவந்தார்கள். அப்பிள்ளை யௌவனகால மடைந்தபின்மந்திரிகள் அவ்வரசைப் பட்டங்கட்டினார்கள். அவ்வாறு முடிசூட்டியபின் குடிகளிடத்தில் மிக்க அன்புடையவனாய்ச் சற்றும் நீதிதவறாமற் செங்கோலோச்சிவருநாளில் ஓர்காலத்தில்தன்நாட்டில்மழையில்லாமல் குடிகள்மிக்கவருத்த மடைவதைக்கண்டு பொறாமல், மேகங்களுக்கெல்லாந் தலைவனாகிய இந்திரனுடன் போர்செய்து வெற்றிகொண்டு சப்தமேகங்களும் ஒன்றுகூடிப் பெய்யச்செய்தான். இவ்வாறு தன்னாட்டில் வறுமையென்ப தில்லாமல் நெடுநா ளரசாண்டு, பின்பிக் காட்டையடைந்து அநேக யாகங்களைச் செய்து முத்திவீ டெய்தினனென்று உரோமசமுனிவர் கூறக்கேட்டு சரஸ்வதி தீரத்தை யடைந்து அதில் விதிப்படி யாவரும் மூழ்கி அங்கோராச்சிரம மிருக்கக்கண்டு தருமராசன் முனிவரைக் கேட்க அவர் கூறத் தொடங்கினர்.

சோமமகாராசன் கதை.

சோமமகாராச னென்பான் சிற்றுயிர்க்கும் தன்னாலோர் துன்பமணுகா வண்ணம் நீதியோடரசாண்டு தன்தரும பத்தினிகளாகிய நூற்றுவரையும் கூடிப் புத்திரப்பேறில்லாமல் நெடுநாள் மனம்வருந்தியிருக்கத் தெய்வகதியாய் மூத்தமனைவி வயிறுவாய்த்து,கண்டவர் மனஞ்சலிக்கத் தேகமெங்கும் குட்டநோய்நிறைந்துள்ள ஓர்முடப்புதல்வனை யீன்றாள். அவ்வாறீன்றபுதல்வனை அரசன்கண்டு முன்னினும் மிக்கமனம் வருந்தி அரசை மந்திரிவச மொப்புவித்து நான்வருபளவும் குடிகளுக்கு யாதொரு குறைவென்பது மில்லாமல் பாது

காத்து வரவேண்டுமென்று பலநீதிகளை யவனுக்குப் போதித்துத் தன்மனைவியர் நூற்றுவரையும் மூத்தாளீன்ற அப்பிள்ளையையுமேந்தி அந்நாட்டை விட்டகன்று காட்டைநோக்கி வருகையில் இவன்முன் செல்லுமோர் முனிவர் பெருமானைக்கண்டு அவர்பாதங்களில் வீழ்ந்து தன்குறையாவு மவரிடங் கூறிநின்றான். அம்முனிவர் நம்மை யடைக்கலமென்று புகுந்த இவ்வரசன் குறையைப் போக்குவதே தருமமென்று அரசனை நோக்கி வேத விதிப்படி யான் கூறுவதுபோற் கேட்டு மனங்கோணாது செய்வையேயாயின் உன் நூறு மனைவியர்களும் சுகமே ஒவ்வொரு புதல்வரையும் பெற்றுச் சுகிப்பரென்று கூற, அரசன் தேவரீர் கட்டளைப்படியே கேட்டொழுகுவேனென்று உறுதிமொழி கூறலும் முனிவர் மகிழ்ந்து கூறுகின்றார்.

நீவிரும்பியது கைகூடவேண்டின் புத்திரகாமேட்டியாகமொன் றியற்றவேண்டும்; அந்தயாகத்தில் உன்மூத்தமனைவியீன்றஇம்முடப்பிள்ளையை இருகூறாக வாள்கொண்டு வகிர்ந்து உதிரத்தை அதிலிட்டு தேவர்களுக் கவிர்ப்பாகங்கொடுத்து மகிழச்செய்தால், உன்மனைவிமார் நூற்றுவரும் நூறுபுதல்வர்களைப்பெற்று வாழ்வார்களென்றார். இவ்வாறு கூறிய முனிவர் சொற்கேட்ட அரசன் “மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்” என்பதுபோ லிவர் சொற்கொண்டொழுகினல் நன்மை தீமை யவர்பா லாகு மென்றெண்ணி, இந்தயாககுண்ட மியற்றி தருப்பை முதலியவைகளைக்கொணர்ந்து தீயிட்டெரித்து அப்பிள்ளையை யாவருமனமொத்து வாள்கொண்டரிந்து அதை நெய்யுமவியுமாகக்கொண்டு விதிப்படி யாகத்தைச்செய்ய அதினின்று மோர்பொற்கிண்ணமுண்டாய் அதனுள் தூயதாகிய அன்னமிருக்கக்கண்டு அதைமுனிவர் நூற்றுவருக்கும் பகிர்ந்தளித்தார். சோமமகாராசன் மனைவியர் நூற்றுவரும் அதையேந்திப் புசித்து அரசன்முதல் யாவரும் முனிவர்தாளிற் பணிந்தெழுந்து அவரிடம் விடைபெற்று அவர்கள் நாடுபோய்ச்சேர்ந்தனர்.

இவ்வாறு முனிவர் அளித்த அவ்வன்னத்தை யுண்டபின் நூற்றுவரும் வயிறுவாய்த்து, நூறுபுத்திரரை யீன்றனர். அரசனும் தான் கொண்டகளிப்புக் கெல்லையில்லா திருந்தான். இவ்வாறு அரசன் நெடுநாள் நீதியொடரசாண்டு தனக்கிறுதிக்காலம் சம்பவித்ததை யறிந்து தன்னூறு புதல்வர்களையுமழைத்து அவர்களுக்கு நற்புத்திகூறித் தென்றிசையடைந்தான். அரசனங்கு செல்லலும் எமதரும னவனைக்கண்டு நீயுன் மைந்தனைக் கொலை செய்தமையால் நீ சற்றுநேரம் நிரயத்தைத் தரிசிக்கவேண்டு மென் றுஞ்ஞாபித்தான். அவ்வாறேயவன் பாவத்தொழிலையே விரதமாகக் கொண்டு திரிந்தோரும், தன்னுயிர்போல் மன்னுயிரை பேணாது பிறர் வருந்தக்கண்டு அவர்க்கே தீங்கிழைத்தோரும், கைம்பெண்ணைப் புணர்ந்தோரையும், அடைக்கல மடைந்தாரையாதரியாதாரையும், ஏழையர் பொருளையபகரித் துண்டோரையும், பெரியோரைமதியா தவமதித்தோரையும், பெண்ணோரஞ் சொன்னவரையும், இன்னும்பலவிதக் கொடுமைசெய்தவர்களையும், கணவனை யெந்நாளு மிகழ்ந்து திரிந்தவளையும், கணவனைவஞ்சித்து வேறுபுருடனை யணைந்தவளையும், புருடனுக்கு

முன்னுண்டு களித்தவளுமாகிய இன்னேரையும், இன்னு மனேகமுறையல்லா தனவற்றைச் செய்து துன்பப்படுபவர்களேயு முறையே பார்த்து வருகையில், தனக்கு முன் புத்திரப்பேற்றைத் தந்தருளிய முனிபுங்கவர் ஓர் நிரயத்தினின் றும் மனம் வருந்துதலேக்கண்ட அரசன் அம்முனிவரை நோக்கி நீரித்துன்ப மனுபவிக்கக் காரண மென்னவென்று வினவ, அவர் நானுன்பாற்கருணைவைத் திரங்கி உன் புதல்வனைக் கொல்லச் செய்ததனுல் இக்கதியை யுடைந்தேன், என்னே இதினின்றும் நீக்க நீ கருதுவையேயாயின் யான்பெருப்பேறொன்று மில்லே, அதுஉன்னுலாகுங்காரியமேயென்ருர். அரசனவர்பாலிரக்கங்கொண்டு அவர் தனக்குச்செய்த நன்றியைச் சாலநினைத்து அதைவிட்டகன்று தென் றிசைக் கோனிடஞ்சென்று வணங்கி,தருமராசனே! யான்செய்த.புண்ணியத் திற்பாதிஇம்முனிவருக்காகத் தத்தஞ்செய்கின்றேன்;அவரை அந்நிரயத்தினின் றுமீட்கச்செய்யவேண்டுமென்றுவருந்திக்கேட்டான். தருமன் அவன்காருண்ய குணத்துக் கிரங்கி அவ்வாறே யருள்புரிந்தோமென்று சொல்ல, அரசனும் அம்முனிவரும் சுவர்க்கபதமடைந்தனர். அம்முனிவர் வசித்த ஆச்சிரம மிது வென்று உரோமச முனிவர்சொல்லி மீண்டுஞ் சொல்லத்தொடங்கினுர்.

அடர்ந்த சோலேகளேயுடைய இக்காட்டில் பிரமன் நெடுநாள் தவஞ்செய் திருந்தான், இத்தீர்த்தமோவெனின், சாமானிய மானதன்று; முன்னெரு காலத்தில் பரதனென்னுமோ ரரசன் இந்நதியின் மூழ்கி ஆகாயத்தை யண் ணுந்து நோக்குகையில், அவன் கட்புலனுக்கு மேலே ழுலகங்களுந் தோன் றக்கண்டு தெரிசித்தான். இத்தீர்த்தத்தின் பெருமை அளவிறந்தன,நீங்களுமப் படிக் காணவேண்டினுல் இந்நதியில் மூழ்கிப் பார்க்கலாமென்ருர். அவ்வாறே தருமன்முதலிய யாவரும் அம்மாநதியிலாடி வானத்தை நோக்குகையில் கண் ணுடியிற்காணுஞ் சாயையேபோல் மேலேழுலகங்களேயும் கண்ணுரவேகண்டு, சுவர்க்கத்துக்கு மேலாகிய பதவியிற் பாண்டு மகாராசன் வீற்றிருப்பதையும், தேவர்பெருமான் வீற்றிருக்குஞ் சிங்காசனத்திற் சிங்கவேறுபோல் அர்ச்சு னன் வீற்றிருப்பதையுங்கண்டு, தாங்களடைந்த களிப்புக் கெல்லேயில்லாமல் சந்தோஷமென்னுஞ் சாகரத்திற்படிந்துகிடந்தனர். இவ்வாறுநெடுநேர மந்நதியி லிருந்து பின்பு அதைக் கடந்து செல்கையில் உரோமச முனிவர் சரஸ் வதிநதியையும் அதின்பற்பலஇறங்குந்துறைகளேயுங்காட்டிவடதிசையை நோக் கிச் செல்கையில் இதுதக்ஷப் பிரஜாபதியினது யாகசாலேயென்றும், இது குரு க்ஷேத்திரத்திற்கு வடக்கெல்லே முடிவென்றும்,இவ்வெல்லே முடிவிற் றெரிவது யயாதிமகாராசன் செய்த யாகசாலே யென்றும் முறையேகாட்டிப் பின் நர நாராயணர்கள்செய்த வேதிகையையும்,தெய்வப் பிறவியை வேண்டும் மானி டர்கள் முழுகித் தம்தேகத்தைவிட்டால் தேவர்களாகப் பிறக்கும் பிரமவேதி யென்னும் மகாதீர்த்தத்தையுங் காட்டி, அதைக்கடந்து அப்பாற் சிந்துநதியை யும் அதன்கரையிற் சமதக்கினி குமாரன் பரசுராமன் இறைவனேநோக்கித் தவஞ்செய்து மழுவாயுதமும் பரசுராமனென்னும் பெயரையும் பெற்ற இடத் தையுங் காட்டி, அதைக்கடந்து சென்று மாதவத்தையுடைய வசிட்ட ராச்சிர மத்தையும், அடர்ந்த சோலேகள் மிக்கவுன்னதமுமா யுள்ளதாகிய சிபிச் சக்கர

வர்த்தி தவஞ்செய்திருந்த ஆச்சிரமத்தையுங் காட்டினர். இவ்வாறு முறையே காட்டிவரும் உரோமச முனிவரைத் துதித்து சிபிச்சக்கரவர்த்தியினது சரித்திரத்தைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்னக் கூறத்தொடங்கினர்.

சிபிச்சக்கரவர்த்தி கதை.

சிபியென்னு மரசன் தன்னுயிர்போல் மன்னுயிரையு மெண்ணி நெடுநாள் நீதியோடரசுபுரிந்து, மறுமைப்பயனை யடையக்கருதி அரசைத் துறந்து தன்னந்தனியே இக்கானில்வந்து இறைவனை நோக்கி அருந் தவம்புரிந்து, சருகு முதலியவையு மருந்தாமலும் வேறுவிடயத்தில் தன் புந்தியைச் செலுத்தாமலும் கொடிய தவத்திருக்குநாளில் பிரமன் அவன் மனவன்மையை யறியவெண்ணித் தான்வேடருருக்கொண்டு நெருப்புக்கடவுளை புறுவுருக்கொள ஆஞ்ஞைசெய்து இருவருமிக்கானில்வந்து கிராதவடிவங்கொண்டபிரமன்,புறுவை வாளிகொண் டெய்ய அது சிறகுகளை விசிக்கொண்டு துடிதுடித்துக் கீழே விழுந்து மீண்டும் பறந்து சிபிச்சக்கரவர்த்தி னடியில்வந்து விழ்ந்து அபய மபயம் என்னைக் காத்தருளவேண்டு மென்று நடித்துப் பரதபித்தது. அதைக் கண்ட அரசன் மனம்வருந்தி நின்று தன்னழகிய கரத்தேந்தி அபயத்தமளித்து நீசற்றும்மனங்கலங்காதை,உன்னுயிரைக்காப்பேனென் றுறுதிமொழிகூறினன். வேடனே வெனின் அரசனிடம்வந்து யான் வாளிகொண்டெய்த புறுவைக்கொடும் யானும் என் பெண்டு பிள்ளைகளும் பசிப்பிணியால் வருந்துகின்றோமென்று கேட்டான். அரசன் வேடனைநோக்கி, இச்சிறிய வுருவையுடைய இப்புறு உன் பெண்டு பிள்ளைகளின் பசியை யாற்றுமோ! மேலும் இப்புள் என்னைச்சரண்புகுந்து உயிர்ப்பிச்சைதரவேண்டுமென்றதுயானதற்குக்காப்பேனென் றுறுதிமொழி யளித்திருக்கின்றேன். இப்புறுவை நீகைக்கொண்டு செல்லக்கொடேன்,நீயுமுன் பெண்டுபிள்ளைகளும் பசிப்பிணியகலநவநவமான மாமிசங்களைக் கொடுக்கின்றேன் நீ பெற்றுச்செல்லென்றான். இவ்வாறு கூறியதைக் கேட்ட வேடுவன், நான் நெடுநாளாய் இப்புறுவைக் கொன்றுதின்னவே கருதி கண்ணிவைத்திருந்தேன் என்கைக்ககப்படாமலே திரிந்தது ; இன்றுதானென் வாளியிற்பட்டது. என்னுழைப்பு வீணேபோகாமல் அதையேதரவேண்டும்நீர் தரும் நவநவமான மாமிசங்களையும்விரும்பேன்,நீரதன்மேற் கனிவுகொண்டிருப்பதால் உமது சரீரத்திலிருக்கும் மாமிசத்தை புறுவி னெடைக்கெடைதந்தால் கொண்டுசெல்வேன்,இதுவே என்னிஷ்டமல்லாமல் வேறுமாமிசம்வேண்டேனென்றான். அதைக்கேட்டரச னுள்ளமகிழ்ந்து அச்சிற்றுயிர்மேற் கருணைகொண்டு தன்னழகிய சரீரத்திற் சிறிது தசையையும் ஓரொன்பையுங் கொய்வைத்து அதைத்தராசாக்கித் தன்னிடதுகையிற்றூங்கி ஒருதட்டிற் புறுவை வைத்து மற்றொன்றில் அப்புறுவினெடைக்குத்தக்கதுபோல் தன் தசையை வாள்கொண்டு கொய்துவைத்தும் புறுவினெடைக்குக் குறைவதைக்கண்டு மீண்டுங் கொய்துவைத்தான். அதுவுங் குறைவதைக் கண்டு தன் மனத்திற் கவலையென்பது சிறிதுமில்லாமல் வேடனை நோக்கி இத்தராசை நீ தாங்கிக் கொள், புறுவினெடைக்குக் குறைவாயுள்ள தசைக்கு மீந்துள்ள என்னென்

புக்கூட்டுடன் நீபிடித்திருக்குந் தராசி லேறினல் எடைக்கெடை சரியாகு மென்று கூறி தராசிலேறி நின்ருன். அவ்வாறு சிபிச்சக்கரவர்த்தி தராசி லேறிநின்றமாத்திரத்தில் புருவினெடைக்குக் குறைவுபடாமல் சரியெடையா யிருப்பதைக்கண்ட அரசன் என்னைக்கொண்டுசென்று நீயுமுன்பெண்டுபிள்ளை களும் சுகமேபுசித்துப் பசியாறுமென்று சொன்னன். இவ்வாறெவ்வளவும் தன் னுக்கைமீ திச்சைவையாது ஓர் சிற்றுயிர்க்காகத் தன்தசையையெல்லா மறுத் தெறிந்தஇவ்வரசன்மனவுறுதியை யாவரறியவல்லார். இவனன்பின்பெருக்குக் களவேயில்லை. மனிதருள் இவனே சிறந்தவனென்று மதித்து பொய்வேடந்தரி த்துவந்த இருவரும் தமது தேவவடிவங்கொண்டு என்புக் கூட்டுடன்நிற்கும் அரசன்முன்தோன்றி அவனறுத்தெறிந்த தசையையெல்லாம் மீண்டு மவனுட லிற்முனே பொட்டும்படிச்செய்து அவனுக்கு வேண்டும் வரங்களையுந்தந்து தாங்கள் சோதிக்கவந்ததையு மவனுக்குத் தெரிவித்து உன்போலும் அருளின் மிக்கார் வானுலகினுமில்லை யென்று பலவாறு புகழ்ந்து அவனுக்குப் பல ஆசிகூறிச்சென்ருர்களென்று முனிவர்கூறி அக்காட்டிலுள்ள தீர்த்தங்களில் நீராடிக் கந்தமூலபலாதிகளை யருந்தி நீருண்டு வெயிலுக்கொதுங்கி அவ்விடம் விட்டகன்று செல்லும்வழியில் முதியதவத்தையுடைய பல முனிவர்களைக் கண்டு வணங்கி அவர்களால் பல ஆசிகள்கூறப்பெற்று யாவருங் கங்காநதிக் கரையைவந் தடைந்தார்கள்.

இவ்வாறு யாவரும் கங்கையைவந்தடைந்து அதில்முறைப்படி நானமாடி உரோமசமுனிவர் காண்பித்த நதிகளி லெல்லாம் மூழ்கியும் மூர்த்திதல ங்களைத் தரிசித்தும் இந்திரநீலசயில மென்னும் பர்வதம்வந் தடைந்தனர். அங்குமுத்தழல்வளர்த்து யாகஞ்செய்யும் முனிவர்களைக்கண்டு தரிசித்து அங்குள்ள நறும்புனலாடி அதைவிட்டகன்று, மிக்க புகழையும் ஆற்றலை யும் பெற்றும் நிவாதகவசர் காலகேயர்களால் நெடுநாள் துன்பக்கடலிற் படிந்து கரையேறுவதற்குத் தெப்பமில்லாமல் திகைத்திருக்க அத்தேவர்பெரு மானுக்கு ஓர் தெப்பமேபோல்வந்து அக்கொடிய வரக்கர் பலரையு மொரு நொடிப்போதில் முடித்துக் கரைசேர்த்தவனும் உன்னுடன் பிறந்தோனு மாகிய அர்ச்சுனன் தவம்புரிந்தவிட மிதுதானென்று முனிவர் தருமராசனுக் குக்கூறலும், தருமன்முதலியயாவரும் மனக்களிப்படைந்துவிஜயனைப்பிரத்தி யட்சத்திற் கண்டாற்போற் பரவசத்தராய்நின்று பின்பு அதைவிட் டகன்று முதியதவத்தையுடைய தசாங்கனென்னும்முனிவரிருக்கும்வனத்தையடைந்து அங்குள்ளதபோதனர்க ளடிதொழுது அவர்கூறு மாசிபெற்று அப்புறஞ்செ ன்று,முன்னே பாற்கடலைக்கடந்து வானோர்க்கெல்லாம் மருந்து விருந்தளித்த மந்தரகிரியைத் தரிசித்துப் பின்னர் கங்கைததும்பி அருவி சொரிகின்ற சிக ரத்தையுடைய கந்தர்ப்பமென்னும் வரையைக்கண்டு அச் சாரல்தோறுந் தவஞ்செய்யும் முனிவர்களைத்தரிசித்து, இவ்வனத்திற்கு நூறுயோசனைதூர த்தில் என்னையாளும் பரமசிவ னெழுந்தருளியிருக்கின்ற கயிலைமலை யுள்ள தென்று முனிவர்கூறக்கேட்டு யாவருமகிழ்ந்து சிறிதுதூரஞ்சென்று வேதங் கள் நான்கையுமையந்திரிபறக்கற்ற ஞானசொரூபியாகிய சுப்பிரமணியருடைய

ஆலயத்தைக் கண்டு தெரிசித்தபின்னர் உரோமசமுனிவர் இக்கந்தர்ப்பகிரியில் நாம் ஓராண்டளவுமிருந்து காலங்கழிப்போமென்றுகூற, தருமன்முதலிய யாவருஞ் சம்மதித்து அங்கிருந்து இலையுங் காயு மினிய கனிகளுமருந்திமனங் களித்து யாவருஞ் சுகமே வாழ்ந்திருந்தனர்.

புட்பயாத்திரைச் சருக்கம்.

இவ்வாறு யாவரும் இனிதுவீற்றிருக்குநாளில் பொன்னுலகில்வாழும் இந்திரனுடைய கனகமுடிமேலிருந்த அழகிய தாமரை மலரொன்று அக்கினியிற் பிறந்த மயிற் சாயலையுடைய பாஞ்சாலிமுன் விழ அதைத் தன் செய்யகண்களால் நோக்கித் தன்னழகிய கரத்திலெடுத்துச் சிந்திக்கலானாள். இம்மலரோமிக்க அழகுள்ளதும் இதழ்கள் நிரம்பியுள்ளதுமா யிருக்கின்றது! எம்மலருமிதன்முன் கருகிப்போம்படி மிக்க வாசங்கொண்டு கமழ்கின்றது! இது எண்ணில்பல்கோடி உயிர்களைச்சிருட்டிக்கும் தன்மையையுடைய பிரமனது நாட்டிலுள்ளதோ! ஆயிரங்கலைகொண்டுவீசும் சூரியமண்டலத்திலிருப்பதோ! அல்லது திருப்பாற்கடல் கடைந்தபோது அவ்வமுதிற்பிறந்த மகாலட்சுமி யமர்ந்துறையும் மலரோ! எங்கு மிதன்நாற்றமே கமழ்கின்றதேயென்று வியந்து,இஃதிருக்குமிடமெதுவோவென் றேங்கி வாயுமைந்தனாகிய வீமனிடங்கொடுத்து இம்மலருக்கு ஒருமலரும் இவ்வவனியிலிராது, இவ்வாயிர விதழைப்பெற்ற இவ்வழகியமலரையொத்த மலரையெனக்குக்கொண்டுவந்துதரவேண்டுமென்று வேண்டினாள். மந்தரகிரியேபோல் திரண்டுருண்ட தோள்களையுடைய வீமன் அவள் கருத்துக்கிசைந்து இம்மலரேழுபாதலங்களிலெங்கிருப்பினும் கொண்டுவந்துதருவேனென்றுசொல்லி, அம்மலரை உரோமசமுனிவர்முன் வைத்து வணங்கிநின்று சுவாமீ! இவ்வழகிய மலரிருக்குமிடத்தை நாயேற்குத் தெரிவிக்கவேண்டுகின்றேனென்றான். இவ்வாறு கூறியதைக்கேட்ட முனிபுங்கவர் புன்முறுவல்செய்து, மிக்க வலிபெற்ற புயத்தையுடைய வீமசேனா! இருநிதிக்கிழவனது அளகையிலும், இந்திரன் நாடாகிய பொன்னாட்டிலுமுள்ள தென்றால் இதன்பெருமையைச் சொல்லவல்லதோ? முன்னே கண்ணபிரான் இம்மலர்வேண்டி உம்பர்நாட்டிற்சென்று அதைத்தருவோடுங் கைக்கொண்டு சத்தியபாமைக்குக் கொடுத்தான். அப்போ தவன்பட்டபாடு மெத்தவுண்டு. அவனே அவ்வளவு துன்பத்திற் குள்ளானானென்றால் உன்போன்றவர்க்கு இதுகோடற் கெளிதாமோவென்று கூறினர்.

இவ்வாறு முனிபுங்கவராகிய உரோமசமுனிவர் கூறியதை இன்புறக்கேட்டு மிக்கவலியமைந்தவில்லுங்கதையுங் கையிலேந்தித் தன்னந்தனியேபோகத் துணிந்து பாஞ்சாலியை நோக்கி இயக்கர்கோமா னுலகிற்சென்று ஓர்நொடிப்போதில் இவ்வழகிய மணமுள்ள மலரைக்கொண்டுவந்து தருகிறேனென்றுறுதிமொழிகூறி அவள்மனத்தைக் களிக்கச்செய்து அவ்விடம்விட்டகன்று காற்றினும் மிக்கவேகத்தோடு ஒப்பற்ற தன்னிரண்டுகைகளையும் வீசிக்கொண்டு, பெருத்து வளர்ந்தோங்கியிருக்கும் மலையானது நடந்துவருவதேபோற் செல்லும்போது நிலமும் வரைகளு மசைந்தன, வனத்திலுள்ள நெடுந்தருக்

ள்யாவும் வேருடன் பட்டுவீழ்ந்தன. விலங்கினமும் புள்ளினமு மவன்மேற் ருக்கி மெய்ந்நடுங்கித் தமொழி உள்ளம் வெம்பிவீழ்ந்திறந்தன. எதிர்ப்பட்ட அரக்கர் பலர் அவன் நடையின் வேகத்திற்பட்டு உயிர்நீத்தனர். முன்னே சிராம பிரானுடைய தூதுவனாகிய அநுமான் இலங்கையைநோக்கிச் சீதாபிராட்டியா ரைத் தேடிச்செல்லும்போது பல பர்வதங்களையும் அரக்கர்குலங்களையும் அத மாக்கினதுபோல் தனக் கெதிர்ப்பட்ட எல்லா வுயிர்களையுஞ் சாகச்செய்து காஞ்சனவனத்தைக்கடந்து அப்பால் வடதிசையை நோக்கி நடக்கையில் ஓர் கதலிவனத்தைக்கண்டான். அக்கதலிவனத்தைக் காவல்காக்கு மரக்கர் பலர் வீமன் மிக்கசெருக்குடன் நடந்துபோவதைக்கண்டு சினங்கொண்டு அவரவ ராயுதங்களைக்கைக்கொண்டு நில்லுநில்லென்றதட்டி வீமனைச்சூழ்ந்துகொண்டு அட்டகாசஞ்செய்தனர். அதைக்கண்டவீமன் அவர்களோடுகடும்போர்செய்து ஒருங்குமுடித்து விண்குடியேற்றி அவர்க ளுதிரத்தை யோர்வெள்ளமாக்கி, ஈரேழுலகமும் நடுங்கும்படிக் கர்ச்சித்து அட்டகாசஞ்செய்து அதைவிட்டக ன்று மீண்டும் வடதிசையே நோக்கி நான்குதிசைகளுஞ் செவிடுபடவும் நாக ருந்தேவரும் தூயமனத்தையுடைய தபோதனரும் வரைகளும் வனங்களும் விலங்கினங்களும் கலங்கவும் நடந்துசென்றான்.

அநுமான் கதை.

இவ்வாறு வீமன்செல்கையில் அவ்வனத்திற் றவம்புரியும் மந்தரமலையே போலுள்ளதோளையுடைய அநுமான் வீமனுடையபேரொலியைக்கேட்டு,பூமி யும் பிளக்கும்படி ஆரவாரஞ்செய்து வருபவனாரென் றதிசயித்து ஓர் பர்வதத் தின்மேலேறிப் பார்க்கையில்,விந்தகிரியையொத்ததோள்களையுடையவீமனைக் கண்டு அவனெதிரேசென்று அவன்வரும்வழியில் முன்வேலையைக்கடந்த தன் னீண்டகாலை இரண்டுவரைமீதுநீட்டிஒப்பற்ற துணைக்கரங்க ளிரண்டையு மற் றோர் வரைமேல் நிறுத்தி இருசெவியிலுங் குண்டல மிலங்கக் கிடந்தான். வீமனோ வெனின் காற்றேபோல் நடந்துவந்து அநுமானைக் கண்டு உள்ள நடுங்கிப் பெருமூச் செறிந்து அயர்ந்து நின்றான். அவ்வாறு நின்ற வீமனை நோக்கி அநுமான் தேவர்களுந் தானவர்களும் அரக்கர்களும் இன்னும் மற்றுமுள்ளோரும் இவ்வனத்தில்வர மனத்திலுங் கருதாரென்றால் எட்டுத்தி சைகளு மதிரும்படி ஆரவாரித்துவரக்கண்டு இவ்வனத்துள் அஞ்சாநெஞ்சங் கொண்டுவரும் மானிடனாரடாவென் றுருத்துக்கேட்டான். அவ்வாறு இடி போற் கர்ச்சித்துக்கூறிய வார்த்தையைக்கேட்ட வீமன் யான் வரும்வழியில் மிக்க இறுமாப்புடனுட்கார்ந்திருக்கும் நீயாரடாவென்றான். அதற்கநுமான் அடா மானுடப்பயலே! உன்கரத்தில் வில்லுங் கதையு மிருக்கின்றதென்னு மாண்மையாலோ அல்லது தோள்வலியின் செருக்கினாலோ என்னை யாரடா வென்றுகேட்கத்துணிந்த நீயாரடா? உன்னிலைமையை சற்றுமறியாமற் பிதற் றுகின்றனையே, அற்பமாகிய மானுடச்சட்டைதரித்த மனிதனே! என்னை நீ யாரென்றெண்ணிப்பேசினை. இங்குவீழ்ந்துகிடக்கும் என்வாலைக்கடந்துபோக வல்லையோவென்று சொல்லக்கேட்ட வீமன் புன்னகைகொண்டுகொக்கரித்து

அளவிலா வரத்தைப்பெற்று இராகவனுக்கு முன்தூது சென்று ஆழியைக்கடந்து இலங்காநகரத்தைத் தீயாலெரித்து எண்ணில் பல்கோடி அரக்கரைக்கொன்று சீதாபிராட்டியைக்கண்ட என் தமையனுடையவாலையன்றி அற்பமாகிய குரங்கின்வாலையொத்த இதனைக்கடப்பது அரிதாமோவென்றான். அதற்கனுமான் நகைத்து நன்று நன்று நீகூறியவார்த்தைமிக்க விந்தையேயாம்! வில்லைக் கையிலேந்தி மானுடச்சட்டைதரித்த மனிதனைத் தோள்வருந்தச் சுமந்துதிரிந்தவலியில்லா அவ்வற்பகுரங்கையோ என்னிலும் அதிகமென்றுபுகழ்ந்து பேசுகின்றனை என்றான். வீமன் தன்னைப்பற்ற புயங்கள் குலுங்கநகைத்து அரக்கர்நாயகனாகிய இராவணனுடைய இலங்கையை ஓர் நொடிப்போதில் நீண்டு பருத்திருக்கும் தன்வாலினால் சுட்டெரித்தவனும், இவ்வுலகத்தைக்காக்கும் ஸ்ரீராமனைத் தாங்கினவனும் அநேகவரங்களைப் பெற்றவனுமாகிய அவ்வநுமானை அற்பக்குரங்காகிய நீயோ இகழ்ந்துபேச வல்லவனென் றதட்டி நின்று பின்னும் நீண்ட சிலையைத்தாங்கிய இராகவன்பெருமையையும்,மிக்க ஆற்றலையும் வலியையுமுடைய தன் பெருமையையுங் கூறக்கேட்ட அநுமான் உள்ளத்தில் மகிழ்சிறந்து வீமனை நோக்கி நீயார் இங்கு யாது கருதி வந்தனையென்றுவினவ, வீமன் இவ்வாறு விளம்பலுற்றான்.

கடல்சூழ்ந்த இவ்வுலகத்தையெல்லா மோர் குடைநிழலில் நீதியோடரசாண்டுவரும் தருமராசனுக்கிளையவன் காண்டீவத்தைத் தாங்கினவனும்,இந்திரன்துயர்தீர்த்து நிவாதகவச காலகேயர்களைமுடித்தவனும், காண்டவவனத்தையெரித்தவனும் கற்றவரும் புகழத்தக்க மிக்க பெருமையமைந்தவனுமாகிய அர்ச்சுனனுக்குத் தமையன்,வாயுவுக்குமைந்தன் என்பேர்வீமன் என்றுயாவுங் கூறிநின்றான். வீமன்சொன்னவாறு யாவுங்கேட்டு சிந்தைகளித்து, ஸ்ரீராமபிரானுடையஆற்றலையுங்கீர்த்திப்பிரதாபத்தையு முன்னுற்கேட்டுக்களித்தேன்; அதைஉனக்கார் சொன்னார்களென்று வினவ, வீமன் வரத்தின்மிக்க சகல கலைகளையுமையந்திரிபறக்கற்ற பரத்துவாசமுனிவர்கூறக்கேட்டேனென்றான். இவ்வாறு குந்திபுதல்வன் கூறியதைக்கேட்ட அஞ்சனாதேவி புதல்வனாகிய அநுமான் கூறுவானாயினன். நீண்ட சிலையைத் தாங்கினவனும் திண்ணிய தோளையுடையானும் கருணையையுடையானும் யாவரையுங் காப்பவனுமாகிய ஸ்ரீராமபிரானுக்கு எந்நாளுந் தொண்டுபூண்டொழுகுபவனும், எக்காலு மவனிருபொற்பாதத்தையே துதிப்பவனுமாகிய இத்தகைய வாழ்வையுடைய அநுமானென்பவன் யானேயென்று கூறக்கேட்ட, வீமன் மனத்திலுவகை கொண்டு ஆனந்தக்கூத்தாடிக் கண்களில் நீர்ததும்ப நீண்ட கடலைக்கடந்த ஒப்பற்ற வலியமைந்த அவனிருபொற்பாதங்களிலும் வீழ்ந்து தன் சென்னியுறப்பணிந்து கண்ணீரா லவன்காலைக்கழுவி யான் உன்னைக்காணப்பெற்றபாக்கியத்தினும் சிறந்ததொன்றுள்ளதோவென்று புகழ்ந்து நாயேன் உம்மையறியாதுகூறியபுன்சொற்களையுங்குற்றமாகக்கருதாமல் என்பிழையைப் பொறுத்தருள வேண்டுகின்றேனென்றான். அவ்வாறுகூறிய தம்பியைத் தன்துணைக் கரத்தாலெடுத்து விசாலமாகிய தன் மார்புறத்தழுவி செந்தழலையுடையஇக் கானில் உன்செவ்வியபாதங்கள் சிவக்கத் தன்னந்தனியனாய்வரக்காரணமென்

னவென்றுகேட்டான். அவ்வாறு வினவிய தன் தமையனைநோக்கி அண்ணா! அழுக்காறுடைய துரியோதனனும், வஞ்ச நெஞ்சம்பெற்ற சகுனியும், துச்சாதனன் முதலிய நூற்றுவரும் தருமராசனை வலியவழைத்து மாயச்சூதாடி எங்கள் நாட்டைக்கைக்கொண்டு எங்களைக்காட்டிற்றுரத்திவிட்டார்களென்று அனைத்துஞ்சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றான். அவ்வாறே நாங்கள் காட்டில்வசித்திருக்கையில் திகந்தமெட்டினு மிக்கமணத்தைக் கமழச்செய்யும் ஓர் அழகிய தாமரை மலரொன்று யாங்களிருக்கும் வனத்தில்வந்து வீழ்ந்தது, அதையக்கினியிற்பிறந்த பாஞ்சாலிகண்டுகையிலெடுத்து இதுபோன்றமலரைத் தனக்குக் கொணர்ந்துகொடுக்கவேண்டுமென்றுவேண்டினாள். அதைக்கொண்டு செல்லவேஇங்கு வந்தேனென்றான். அதைக்கேட்டஅருட்டன்மையையுடைய அநுமான் இவ்வாறு சொல்லலாயினான். குபேரனுடைய அளகைமாநகரில் மணங்கமழ்கின்ற நீண்ட மஞ்சனவாவியின்கரையில் தருக்கள்நிறைந்த சோலைகள் சூழப்பெற்றிருக்குமிடத்தில் அம்மலரிருக்கின்றதே. அதுவோதேவர்களுக்குங்கிடைப்பதரிதாகுமே; அவ்வனத்தில் கெடாத மிக்கவலியமைந்த பலவரக்கரு மியக்கரு மங்கிருந்து காவல்புரிவர். தவத்திற்சிறந்த முனிவர்களும் யோகிகளும் அம்மலரிருக்கும் வனத்தையுமணுகார்; ஆனால் அறிவும் வாய்மையும் தூய்மையும் அன்பும் இனிமையும் அருளும் பொறையும் ஞானமும் கல்வியுஞ் செய்தற்கரியதவமும் நன்னெறியும் மானமும் வீரமும் உனக்கியற்கையாயுள்ளன, ஆதலினால் அஃதொருவாறு உனக்குக்கிடைக்குமென்று கூறக்கேட்ட வீமன் சொல்கின்றான். அண்ணாவே! உம்முடைய தண்ணிய அருளிருக்குமாயின் யான்பெற்றுச் செல்வதரிதாமோவென்று பின்னுஞ்சொல்லுகின்றான்.

வானிலுள்ள தேவரோ காக்கினும்,தயித்தியரோ காக்கினும்,அல்லது சிறந்த மூவரோ காக்கினும் மற்றியாவர் காக்கினும் அஞ்சேன். இக்கணத்தே அவ்வியக்கரையொய்தி அவ்வழகியவாவியிலுள்ளமலரைக்கொண்டேசெல்வேனென்றான். இவ்வாறு கூறிய வீமன்சொற்கேட்ட அநுமான் மகிழ்வெய்தி அவனுக்குப் பல வாசிகூறி உனக்கு வேண்டும் வரத்தைக் கேளென்றான். வீமன் அவனைப்பற்ற தாளிலவீழ்ந் தெழுந்து இப்போது நாங்களடைந்திருக்குங் காட்டைவிட் டகன்றபின் எம்முடன் சூதாடி நாட்டைக் கவர்ந்தும்,கொடிய செய்கைகளெல்லா மெங்கள் முன்னமே நிகழ்த்திக் காட்டியு மிக்க செருக்கேயுடைய துரியோதனுதியருடன் போர்புரியச் சமர்க்கள மெய்துநாளில் தேவரீர் அங்கெழுந்தருளி எனக்குப் பின்வந்த அர்ச்சுனன் தேர்க்கொடியின்மேலிருந்து யாங்கள் மகிழுமாறு வெற்றியடையச் செய்யவேண்டுமென்று வேண்டினான். அநுமானு மவ்வாறே யவ்வரத்தை யீந்தேனென் றுறுதிமொழிகூற, வீமன் மீண்டுமோர் வரம் வேண்டுமென்று வேண்டி முன் இலங்காபுரத்தைத் தேவரீர் தீயாற் சுட்டெரித்த அந்நாளிற்கொண்ட மோட்டுருவத்தைக் காட்டவேண்டுமென்றான். அவ்வாறவன் சொல்லி வாய்மூடுமுன்னமே தன் விச்சுவரூபத்தையெடுத்து முன் வாமனவ தாரத்தில் மூன்றடிகேட்டு ஈரடியா லுலகேழுமளந்த கள்ளமா மாயனேபோல் அண்டமுகட்டளவு முயர்ந்து தன்னைப்பற்றபாதத்தால் பூமியையெல்லாமறைத்து நிமிர்ந்துதன்னீண்ட

வாலைச்சுருட்டி மந்தரகிரி யுயரமெழுப்பி மிக்கவலியமைந்த கையால் எங்குமுள்ள மலைகளையெல்லாமறைத்து எங்கு நோக்கினுந் தன்னுருவமே யல்லாது வேறென்றுந் தோன்றாதிருக்கச்செய்து நின்றான். இவ்வாறு நின்ற அநுமானுருவத்தினைப் பாதத்தளவுகண்டு உள்ள நடுங்கி மெய்சோர்ந்து பேசவு நாவெழாமலுங் கண்ணிமைத்த லின்றிச் சற்றுநேர மொன்றுந்தோன்றாம லடங்கிநின்று பூமியைக் கவ்விக் கவர்ந்துகொண்டு அண்ணா அறப்பெருங்கடலே! இவ்வளவே சாலும், உமது மோட்டுருவத்தைச்சுருங்கச் செய்யுமென்றுவேண்டினான். நமதுதம்பிமனங்கலக்குற்றானென்றெண்ணி இந்திரசால மியற்றுகின்றவர்போல் வீமன் வியக்கும்படிக் கணத்திற் றன் றேகத்தைச் சுருக்கிப்பழையவுருக்கொடுவிளங்கினான். வீம னவனைக்கண்டு களித்து மனமொழி மெய்களாற் றுதித்து அவன் பாதத்தில்வீழ்ந்து சென்னியுறப்பணிந்தெழுந்துநாயேன் நும்பாற்செய்த குற்றத்தைப் புந்தியில் வையாமற் பொறுத்தருள வேண்டுமென் றிறைஞ்சி நின்றான்.

அவ்வாறு வீமன் பயந்துசொல்லும் வார்த்தையைக்கேட்டு தன்னைப் பற்றகையால் அவனைத்தூக்கியெடுத்து நீஅஞ்சற்கவென்று திடங்கூறி அவனை நோக்கி அறிவிற்சிறந்த வீமா! நீ நாடிவந்தகாரியத்தைத் துரிதத்திற்சென்று அதைக்கைப்பற்றிச் செல்லென்றான். அதற்கு வீமன் அண்ணா! உமதருளுள்ளளவு மடியேற்கு யாதுகுறை நேரிடப்போகின்றது! நான் சந்தேகமில்லாமல் குபேரனதுநாட்டையடைய நல்லவழி காட்டவேண்டுமென்றான். அதற்கநுமான், இதற்கோ ரிருநூறுயோசனை தூரங்கடந்து செல்வையேயானால் அங்கோர் வாவிதோன்றும், அங்கப்பொழிலை யநேக வரக்கர் காவல் கொண்டிருப்பர். அவ்வரக்கரோ மிக்கவலியுடையாரே யல்லது நீண்டபற்களையும் கோரரூபத்தையும் பெற்றுள்ளவர். மாயவித்தையிலும்வல்லவர். அக்கொடிய வரக்கரைஉன்தோள்வலியால் தொலைத்தாலேயல்லாமல் நீநாடியபொருள் உனக்ககப்படாது. நீயவர்களையெவ்வளவு மஞ்சாமற்கொன்று அவ்வழகியபுட்பத்தைக் கொண்டேபோதல்வேண்டும், நீ எண்ணியகாரியமும் பழுதாகுமோவென்று புகழ்ந்து அவனுக்குப் பலவாசிகூறினான். இவ்வாறுகூறிய அநுமானைத்தொழுது அவனிடம் விடைபெற்று அளகையைநோக்கி மிக்கவிரைவுடன் ஊழிகாற்றேபோற்சென்று சக்கரமலைச்சாரலையடைந்து அங்குமறையவரியற்றும் வேள்வியைக்கண்டு துதித்து அதைவிட்டகன்று நொடிப்போதில் நூறு யோசனை தூரங் கடந்துசென்று எதிர்ப்பட்ட அரக்கப் புழுக்களையெல்லாங்கொன்று எண்டிசையு நடுங்கும்படிக் கொக்கரித்துச் சென்றான். இது நிற்க;

எண்டிசையிலுள்ளோரையுந் தன்வயமாக்கி யாவருடனும் போர்புரிந்து அவரவர்கள் செல்வங்களையெல்லாங் கவர்ந்து தேவரையும் மற்றியாவரையும் துரும்பெனமதித்து நிற்க; இருளடைந்த மனத்தையுடைய புண்டரிகனென்னும் பெயர்வாய்ந்த அரக்கன்வீமன் ஆரவாரித்துவருதலைக்கண்டான். வீமனே வெனின் அவ்வரக்கன்வசிக்குமிடத்தை யணுகினன். அரக்கனவன்மேற்

சீறிக் கண்களிலக்கினிப்பொறி சிதறப்பார்த்து அடா அற்பமனிதனே! தேவர்களும் நானிருக்குந்திசையை நோக்கவும் மனத்திலெண்ணவு மஞ்சுவரென்றால் அற்பமனிதனாகிய நீயோ அஞ்சாநெஞ்சுபடைத்துச் சற்றும்மனத்தினிடத்தில் யோசியாமல் ஆர்ப்பரித்துவருவது! அந்தோ இன்று என்பசிப்பிணியைநீக்க வந்தாய்போலுமென்று கையிலோர்தண்டேந்தி வீமனைக்கிட்டினான். அரக்கன் கூறியதைக்கேட்டு நின்று மந்தரகிரியையொத்த தன்னொப்பற்ற புயங்கள் குலுங்க நகைத்து,அடா அற்பவரக்கனே ! நீயோஎன்னை இகழ்ந்துபேசுபவன்! உன்னைத்தென்றிசைக்கனுப்பவேண்டியே இவ்வளவு தூரம்நாடிவந்தேனென்று இடும்பனைக்கொன்றவன் கூறலும், அரக்கன் தன்னீண்ட பற்களைக்கடித்துத் தன்கையிலுள்ள கதையையோச்சி வீமனைப்புடைத்தான். வீமன்அதை லக்ஷியஞ்செய்யாமலே தன்னொப்பற்ற கதையைக்கொண் டவன்மேற்றாக்கி கையிற் பிடித்திடித்து ஆகாயத்தெறிந்தான். அவ்வரக்கனோவெனின் பூமி பிளவுபடக் கீழேவீழ்ந்து சற்றுமஞ்சாமலெழுந்து வீமனைத்தாக்கினான். இவ்வாறு குன்றுடன் குன்று யுத்தஞ்செய்வதுபோல் நெடுநேரம் யுத்தஞ்செய்திருக்கையில் அவ்வரக்கனுக்கு முன்னோர் முனிவரால் நேர்ந்த சாபம்வந்து பிணித்தலால் அசரீரிஆகாயத்தினின்றும் வீமசேனா! நீ ஓர்கற்பகாலமளவு மிவனுடன் போர்புரியினும் அவனைச்சயிப்பதேயரிது; விசாலமுள்ள அவன்றோள்மேல் உன்கதையை நன்றாய்த் தாக்குவையேயானால் அப்போ திவனிறப்பானென்றது. இச்சூழ்ச்சியையறிந்த வீமன் பரந்துநீண்டிருக்கும்ஒப்பற்றதன்கையிற் கதையைத்தாங்கி உருத்திரனேபோற்சீறி அவன் தோண்மேற் புடைத்தான். அவ்வடி நன்றாய்த்தாக்கவே மனநொந்து உடல்நடுங்க மேருமலை சாய்ந்ததுபோற் பூமியிற்சாய்ந்திறந்தான். அவ்வாறிறந்த அரக்கனைத் தன்காலாலுதைத்துத் தள்ளிவிட்டு அவ்விடம்விட்டகன்று வானுறையும் அமரர்களுந் துதிக்கின்ற இந்துமால்வரையைக் கடந்து அளவிலாப் பொற்குவியலைப்பெற்றுள்ள குபேரனுடைடைந்தான்.

புட்பவனக் காவலாளர்கதை.

இவ்வாறு வீமசேனன் அளகாபுரத்தை யடைந்து அநுமான் சொல்லிய நெறி பற்றிச்சென்று தென்பாலுள்ள வாசனைகமழ்கின்ற மஞ்சனவாவியையும் அதிலுள்ள மலரையுங்கண்டு அவ்வாவியைக் காவல்கொண் டிருக்கும் கோரரூபத்தையுடைய பலகோடி அரக்கரையுங் கண்டான். அவ்வரக்கர்களோவெனின் பரந்தமார்பையும்,கோரப்பற்களையும், வரையையொத்த புயத்தையும், ஆயிரங்கரங்களையும்,ஆயிரங்கால்களையும்,ஆயிரஞ் சிரங்களையும், ஆயிரஞ் செவிகளையும், பிலத்தினுமகன்ற வாயையும், நீண்ட மூக்கையும் பெற்று அறத்தைப்பகைத்துயாவர்க்கு மிடுக்கண்செய்தேவரும் கொடியவர்கள்; முன் திருப்பாற் கடலில் அமுதெழக்கடைந்த மிக்க வாற்றலுடையவர் ; அரிய தவத்தைச்செய்து அநேக வரங்களையும் பெற்றுடையவர், எக்காலத்துமே சோராமல் தங்கள்கையில் வாள் வேல் சூலம் சக்கர முதலிய வாயுதங்களைப் பெற்றிருப்பவராகிய வரக்கர் வீமனைக்கண்டு இடியேறுபோற் கர்ச்சித்து, யாவருமொருங்குசேர்ந்து சிற்சிலர் சூலங்கொண் டெறிவோமென்பாரும், சிற்

சிலர் பற்றித்தின்போமென்பாரும், சிலர் அவனுவியைப் பறிக்கவே வேண்டு மென்பாரும்,சிலர் அவன் சென்னியை இருபிளவாகத்துணிக்கவேண்டுமென் பாருமாய் ஆந்நூறுயிரவரக்கரும் வீமனைக்கிட்டிவந்து இவ்வாறுகூறலாயினர். அடா அற்பமனிதனே ! நீயோ மசகத்தினு மற்பமானவன், தேவர்களுமணுகா இவ்வனத்தை யணுகப்போமா ? அறிவிலாப்பேதாய் ! உன்னுயி ரிழக்காமுன் னமே இங்குவந்த காரியத்தைக் கூறென்றார்கள். சற்றும் அருளிலா வரக்கர் இவ்வாறு கர்வித்துக் கூறுவதைக்கேட்ட வீமன் பிலங்குலுங்கநகைத்து அவர் சொல்லும் புன்சொல்லையு மதியாது முன் காமனை நகைத்த கண்ணுதற்கட வுளேபோல் அஞ்சாநெஞ்சுபடைத்து அவர்களை நோக்கி அற்பராகிய அரக் கர்களே ! உங்களுயிர்களைப்போக்கி யமபுரஞ்சேர்த்து நரய்க்கும் பேய்க்குங் கழுகுக்கு மிரையாக்கி இவ்வழகிய தடாகத்திலிருக்கும் மிக்கமணமுள்ள புட் பத்தைக் கொய்துபோகவந்தேன், என்னை மனிதனென்று லக்ஷியஞ்செய்யா மற்பிதற்றிநிற்கின்றீர்கள். இருளிலா மனத்தையுடைய மிக்கவலிபெற்ற சிராம பிரானே முன் உமதுமரபினராகிய அரக்கர்பலரையும் எங்குமில்லாமல் முடித் தவன் ; அவன்மனிதனோ அல்லதுவானுளானோ ! அறிவிலா மனத்தீர் ! அதை மறந்தீர்போலுமென்று பல இழிவாகியசொற்களைப் பேசிநின்றான்.

இவ்வாறு வீமன் கூறியதைக்கேட்ட அரக்கர் யாவரு மொருங்குகூடி அற்பமனித னிவ்வாறுகூறக்கேட்டும் இன்னுமவனை முடிக்காதிருக்கப்போமா வென்று கண்களில் தீப்பிழம்பெழும்ப அடா அற்பமனிதனே ! நீயோபுட்பத் தைக்கொய்துபோக வல்லவனென்று புயத்தொடு புயந்தட்டி வீமன்மேற்பாய் ந்து கூரியபடைகளைக்கைக்கொண்டு அவன்மே லெறிந்தார்கள். சிலர் சூலத் தைச்சுழற்றிஎறிந்தனர். சிலரிட்டிகொண்டெறிந்தனர்.சிற்சிலர் பூமியதிரும்படி ஆர்ப்பரித்துப் பிண்டிபாலமென்னும் படையை யெறிந்தனர். இவ்வாறிவர்கள் விடு மாயுதங்களை யெல்லாம் வீமன் தன்னீண்ட கதையால் வெறும் பொடிப் பொடியாக்கிப் புன்னகை செய்து அவ்வரக்கர் கூட்டத்திற் பாய்ந்து எண் டிசைகளும் வானமும் பூமியு மதிரும்படிக் கொக்கரித் தாரவாரித்துத் தன் னொப்பற்ற தண்டினு லவ்வரக்கர் கூட்டங்களையெல்லாம் தாக்கினன். அவர் களு மஞ்சாமல், வாள் வேல் சூலம் பிண்டிபாலம் என்னு மிவ்வகை யாயுதங் களைக்கொண் டெறிந்தார்கள். வீமனும் புயத்தைத்தட்டிச் சிங்கவேறுபோற் பாய்ந்து சிலரைத் தண்டாற்றாக்கியும், சிலரைத் தடக்கையா லெற்றிப்பிடித் தாகாயத்தெறிந்தும், சிற்சிலரைக் கையினற்பிசைந்தும், சிலரைக் காலினற் றேய்த்தும்,சிற்சிலரைக்கூரிய வாள்வேல்களினற்சிதைத்தும்,சிற்சிலரைச்சிரங் களைத்திருகி ஆகாயத்தெறிந்தும்,இவ்வாறுஅநேக வரக்கர்களைக்கொன்று ஆர வாரித்து நின்றான். இவ்வாறு தன்னையெதிர்த்த வரக்கரை யெல்லா மிமை யோரையில்தொலைத்துநின்ற வீமனுற்றலை நோக்கி மீண்டும் வரைபோன்றபுய த்தையுடைய நூறுயிரவரக்கர் தங்கைகளிற் பலபடைகளை யேந்தி கொடிப் வில் நாணேற்றி வீமனை வளைந்துகொண்டு அலைகடல்போ லாரவாரித்து வில் போதில்வந்து அம்புதொடுத்து வீமன்மேல் விட்டார்கள். வீமனேவெனின் தன்கையிலுள்ள தண்டைக் கீழேயெறிந்துவிட்டு வில்லைவளைத்துநாணேறிட்டு

அண்டங்களதிரும்படி குணத்தொனிசெய்தான். அவ்வோசையால் நாகங்களெட்டும் நடுநடுங்கிவிடத்தைக்கான்றன. பிலத்தைத்தாங்குகின்ற நாகர்க்கரசனாகியபன்னகாதிபனும்உள்ளம்பதைபதைத்துவெவ்வியபடங்கள்சோர்ந்தான். எண்டிக்குமசைந்தன. தேவர்கள் மூர்ச்சையடைந்தனர். பலவரக்கருயிரிழந்தனர். இவ்வாறு வீமனுந்தன் ஒப்பற்ற வில்லில் தன்னையெதிர்ந்த அவ்வரக்கருடலிற்பட் டுருவிப்போம்படி சிலகணைகளைத் தொடுத்துவிட்டு மீண்டும்அவ்வரக்கர் சிரங்களிலுந் தோள்களிலும் மார்பிலும் கண்ணிலும்பட்டுருவிச்செல்லும்படி சிலபாணங்களைத் தொடுத்துவிடுத்தான். அக்கணைகளவ்வரக்கர்கூட்டத்திற்புகுந்துஅவர்களுடலைச் சல்லடைக்கண்ணேபோற்றுளைத்தன,அதனாலவ்வரக்கர் பலரும்மிக்கவருத்தங்கொண்டுவீமன்மேற்பாய்ந்து அடாவற்பமனிதனே! நீயோ எங்களை யெதிர்ப்பவன், சற்று நில்லு நில்லென்று ஆயிரமாயிரமாகப் பாணங்களைத்தொடுத்துச் சக்கரம், சூலம், பாசம், தண்டம், வேல், வாள் முதலிய படைகளைக் கையிலேந்தி வீமன் சிரமே யிலக்காகவிடுத்து அகங்கரித்தாரவாரித்தனர். இவ்வாறவர்கள்விட்டகணைகளையுங் கூர்மையான படைகளையும் அனேக பாணங்களைத்தொடுத்துப் பொடிப் பொடியாக்கி, மீண்டு மனேகபாணங்களைத்தொடுத்து அவ்வரக்கர்சிரங்களையும் கரங்களையும் வெவ்வேறாய்த்துணித்து மலைபோற்குவித்து எஞ்சிநின்ற அரக்கர்பிடித்திருக்கும் வில்லினுணியையும் ஓர் பிறைமுகக்கணைதொடுத் தறுத்துக் கையிற்றண்டேந்தி உயிர்கொண்டேகுங் காலனேபோல நின்று புன்னகைசெய்தான்.

இவ்வா றப்பொழிலைக்காக்குங் காவலாளரோடு மனநொந்து நெட்டுயிர்ப்பெய்திநின்றஅரக்கரிற்பலருமொருங்குசேர்ந்துஇயக்கர்பெருமானிடஞ்சென்று உள்ளநடுங்க மழைத்தாரையேபோல் வியர்வரும்ப நின்று எம்பெருமானே! இந்நாள்வரையு நமது நாட்டிற் பகைவுரொன்பதில்லாமற் சுகமேவாழ்ந்திருந்தோம். இப்போ தெவனோ ஓர்மனிசன் நமது சோலையிற்புகுந்து மான் கூட்டத்திற்புகுந்த புலியேபோல் நமது அளவிலாச்சேனைக ளனைத்தையும் ஓர் கணப்போதில் முடித்து எங்களையு மிக்கதிசெய்தனனென்று தமது கரங்கள் சிதைவுண்டிருப்பதைக் காட்டிப் புலம்பிநின்றார்கள். அங்கேநிகழ்ந்ததொன்றுமொழியாமற்கேட்ட குபேரன் தன்னெப்பற்றபுயங்குலுங்க நகைத்துவீமனாற்றலை யுரைத்த அரக்கரை நோக்கி வலியிலாவற்பரோ! உங்களாற்ற லிவ்வளவேயோவென் றதட்டி, தன்னருகிருந்த சங்கோடணனென்னும் படைத்தலைவனைநோக்கி இந்நாள் நமதுநகரில் பகைவர்வந்து தலையெடாவண்ண மரசாண்டிருந்தோம்,இன்று அற்பவலியையுடைய ஓர் மானிடன் நமது காவிற்புகுந்து நமதுசயினியத்தை நாசமடையச் செய்தானென்றால் இது சாலவியக்கத்தக்கதே! அவனேமிக்கசமர்த்தனாகவே யிருக்கவேண்டும். ஆயினும்உன்னாற்றலுக்கவன் ஓர் துரும்பேயாவான்,நமது திரளற்ற சயினியங்களுடன் சென்று அம்மானுடனுயிரைப்போக்காமல் அவன்தோள் இணைபிணித்து இப்போதேயிங்கு கொண்டுவாவென் றாஞ்ஞாபித்தான். அவ்வாறேசங்கோடணனு மவன்பாதத்தில்வீழ்ந்து வணங்கிநின்று அவனிடம்விடைபெற்று அளவிலாச்சேனைகள்தன்னைப்புடைசூழத் துந்துபி முதலிய பல வாத்தியமுழக்கத்துடன் தன்காவடை

ந்து குருகுலத்தரசனாகியவீமனைச்சூழ்ந்து பேரிடிபோற்கர்ச்சித்து சத்தமேகம் ஒன்றுகூடி வருஷித்தாற்போலவும சத்தசாகரம்போலவும் பொங்கி வளைந்து கொண்டார்கள். யானைக்கூட்டங்களை வளைத்துக்கொல்லும் யாளிபோன்ற வீமன் அரக்கரைக்கண்டு நாம் பல்கோடி அரக்கரை விண்குடியேற்றி அவர் செந்நீரிங்கு பெருகிக்கொண்டிருந்தும் அஞ்சாம லிவர்களு மின்று நம்மால் முடியவந்தனர்போலுமென்று நகைத்து நின்றான். அவ்வாறு வீமன் நகைத் ததைக்கண்ட அரக்கர் வில்லைவளைத்து எண்ணிலாக் கணைகளைத் தொடுத்து விட்டனர். வீமனோவெனின் அக்கணைகள் தன்னைவந் தணுகாமுன்னம் தன் னுடைப்பற்றவில்லில் அனேகவடிக்கணைகளைத்தொடுத்துவிட்டான். அக்கணைக ளரக்கர்விட்ட கணைகளை யறத்தடிந்து, தோளினும் மார்பினுந் துருவிச்சென் றன, அதனால் அரக்கர் பலர் சிதைந்திறந்தனர். வீமனோ அம்மட்டிலிராமல் உயிரைக்கவரும் தன்னுடைப்பற்ற தண்டைக் கையிலேந்தி அளகை நாயகன் சேனைத்தலைவனாகிய சங்கோடணன் மார்பிற்றன்னடையாளமுறத் தண்டாற் றாக்கினான். இது நிற்க;

இவ்வாறு வீமன் கதையான் மொத்துண்ட சங்கோடணன் உள்ளநடுங்கி மெய்சோர்ந்து யாதுந்தோன்றாமற் சற்றுநேரம் நிலத்தைநோக்கி நின்று தெளி ந்து இனி இங் கிமைப்போதிருந்தால் நம்முயிரையுங் கொள்ளைகொள்வானென் றுன்னித் தன்னெதிர் நின்ற சேனைகளைக்காணாமல் மின்னைக்கண்ட நாகமே போல்வெருக்கொண்டு அளகையைநோக்கிக்கடுகிச்சென்று அவ்வளகேசனைக் கண்டு அவன் பாதத்தைத் தன் சென்னிமேற்பொறுத்து இவ்வாறு சொல் வானாயினான். என்னை யாளுமிறைவனே! நமதுமஞ்சனவாவியில்வந்து எண் ணிறந்தசேனைகளை யோர்நொடிப்போதில்முடித்து விண்குடியேற்றிய அம்மனி சனைச்சாமானியனென்றேநினைக்கப்போமோ! உருத்திரனேஇவ்வடிவங்கொண் டுவந்தானென்றே யெண்ணவேண்டும்; அவன் போர்புரியுந்திறத்தை ஆயிர நாவுடையஆதிசேடனுஞ் சொல்லவஞ்சுவனே. இக்கணமவனை நண்புகொண்டு எதிர்சென்றழைத்துவந்து வேண்டும்நிதிகள் பலவுங்கொடுத்துதவாவிடின்,முப் புரம்பொடித்த முழுமுதற் கடவுளேபோ லிவன் இப்புரத்தையும் விண்புகச் செய்வானென்று கூறக்கேட்ட இயக்கர்பிரான் வியந்து அருகேயிருந்த தன் புதல்வனாகிய உருத்திரசேனனை நோக்கி மாதர்கள் வசிக்கும் மஞ்சனவாவிக் கரையில் வந்திருக்கும் மனிசனுடைய வரலாற்றை யறிந்துவாவென் றனுப்பி னான். அவனுமவ்வாறே வாவிக்கரையிற்சென்று வீமனைக்கண்டு வண்டுக்கூட் டங்களும்பயிலாத இக்காவலில் நீ வந்து எமது சேனைகளையெல்லாம் வீணே நாசப்படுத்துகின்றனை! நீயார்? நீ இங்கு யாதுகருதிவந்தனை! தெரியச்சொல் லென்றான். அதற்கு வீமன் முன் அளகாபதியி னரசமைந்தர் சாபமடைந்து மருதவிருக்ஷமாகக்கிடக்கஅவரை அச்சாபத்தினின்றும் நீக்கியருளிய கண்ண பிரானுக்குமைத்துனன். எந்நாடும்போற்றும் தருமராசனுக்குத் தம்பி,வாயுவுக் குப் புத்திரன் என்பேர் வீமன்,திரௌபதை இங்குள்ள வனசமலரைவேண்டி னள், அதன்பொருட்டே இங்குவந்தேன்; என,தன்வரலாற்றை முற்றுங்கூறி னான்.அவ்வாறுகூறக்கேட்ட உருத்திரசேனன் புந்திமகிழ்ந்து அவ்வழகியதடா

கத்திலுள்ள நறியமலரைக்கொய்து கொடுத்துப் பல இனியவார்த்தைகள்கூறி வீமனைப் போகவென்றருளி அவனிடம் விடைபெற்றுத் தந்தையிடஞ்சென்று நிகழ்ந்தவை யாவுங்கூறினன். இது நிற்க;

உருத்திரசேனனால் அம்மலரைப் பெற்றபின்னர் அச்சோலையிலுள்ளதண்ணிய பொய்கையிற்படிந்து நீரருந்தி, தான்முடித்த எண்ணில் பல்கோடி அரக்கரையும் கழுகுக்கூட்டங்கள் மொய்த்துத் தின்பதைப் பார்த்துக்கொண்டே இளைப்பாறி இருந்தான். இது நிற்க; வீமன் அளகைக்குச்சென்றதையறியாத தருமராசன் நெடுநேரம் வீமனைக் காணாதேங்கி அவ்வனமெங்குந் தேடித் திரிந்துங் காணாமல் பாஞ்சாலிமுன் வந்து வீமனெங்கு சென்றனனோவென்று வினவ, அவள் வானினின்றும் மின்போன்ற ஓர் மலர் தன்முன்வீழ்ந்ததையும், தான் அச்செவ்விய மலரை எனக்கு நாடிச்சென்று கொடுக்கவேண்டுமென் றிச்சித்துக் கேட்டதையும், அவ்வாறே அதைக் கொண்டுவந்து தருவே னென்று தன்னந்தனியாய் அளகாபுரத்திற்குச் சென்றதையுங்கூறினாள். அதைக்கேட்ட தருமராசன் நெருப்பிலிட்ட இழுதேபோல் மனங்குழைந்து முன் தன்னைவிட்டகன்ற அருச்சுனன் இன்னும் தன்னிடம் வராமலிருப்பதை நினைத்தே அல்லும்பகலும் வியாகுலித்துக் கொண்டிருப்பதன்றி வீமனும் தன்னை விட்டுத் தன்னந்தனியேசென்றதையுமெண்ணி மனம்வருந்தி 'வருவது வந்தே தீரும்' என்பதுபோல் இதெல்லாமிறைவன் செயலேயல்லாமல் நம்மாலாவதொன்றுமில்லையேயெனத் துணிந்து இடும்பிபுதல்வனைத் தன்னிடம்வரவெண்ணிமனனஞ்செய்தான். அவனு மவ்வாறே ஓரழகிய தேரிலேறிக் ககனமார்க்கமாய்வந்து தருமராசனிருக்குமிடத்திற்கு நேரேவந்திழிந்துஅவரழகிய தாளில் வீழ்ந்து வணங்கி நின்றான். அவ்வாறு நின்றவனை நீதியே யோருருக்கொடு வந்து ஈரேழுலகத்தினுந் தன்கீர்த்தியை நிலைநாட்டிய தருமராச னவனைநோக்கித்தன்னகன்ற மார்புறத்தழுவிஉன்தாதைஇன்றென்னுடன்யாதுஞ்சொல்லாமலே மிக்கமணமுள்ள வனசமலரொன்றைக் கொணரும்பொருட்டுத் தன்னந்தனியாய் குபேரனது நகராகிய அளகாபுரத்திற்குச்சென்றனனாம்!என்று மனநொந்து வீமன்மேலுள்ள அன்பின் பெருக்கால் பின்னு மிவ்வாறு சொல்வானயினன். எம்பிக்கோ ரிடையூறுவந் தெய்தாமுன்னம் நாமிருவரு மியக்கர் பெருமானூரெய்தி அங்குள்ள மஞ்சனவாவியிற்புகுந்து வீமனைக்கண் டழைத்துக்கொண்டு நொடிப்போதிலிங்குவரலாமென்று கூறி,நகுல சகதேவர்களையும் நோக்கி,சற்றுநேரம் பாஞ்சாலியைக் காவல்பூண்டிருங்கள்,வீமனைக்கண் டழைத்துக்கொண்டு விரைவி லிங்குவந்து சேருகிறேமென்று சொல்லிவிட்டு அரக்கன்றேரிலேறி கானெல்லைசெல்லாக் கதிரோனுடைய தேர்போல்வானெல்லையுறச்சென்று ஒருநாழிகைக்குள் குபேரனுடைய அளகாபுரத்தைவந்தடைந்து அங்கு வரைபோற்குவிந்திருக்கும் பிணக்குவியலையும், அவருடலிற் சிந்திய செந்நீர் ஆறேபோற் பெருகிவருவதையும், வீமன் அங்குள்ள நறும்புனலாடி மிக்க களிப்போடிருப்பதையுங் கண்ட தருமராசன் தான்கொண்ட தளர்வு நீங்கி ஆனந்த பரவசங்கொண்டான். கடோற்கஜன் விரைவில் தேரைவிட்டிழிந்து தன் தந்தையாகிய வீமன்றாளிற்பணிந்து நின்றான். வீமனேவெளின்

தன்கையிலுள்ள எண்டிசையு மணம்வீசுகின்ற வனசமலரைத் தருமராசன் கழலில்வைத்து முக்காலும் வலம்வந்து முறையோடு தொழுதுநின்றான். அவ்வாறு நின்ற வீமனை நோக்கி,எந்நாளும் நாவியைந்து கோபித்துக்கூறாத தருமராசன் இவ்வாறு சொல்லலாயினர். இன்று என்னனுமதிபெறாமலே இமையோருமெய்தாத இக்காவில் ஓர்மின்னேவலே விரகத்தினலேற்றுவந்து,வீணே எண்ணில் பல்கோடி அரக்கரை யெல்லாம்இப்படி நாசஞ்செய்த துனக்கோர் மேன்மையோ! நீ இவ்வாறு என்சொற்படிநடவாமல் உன்மனம்போன போக்கெல்லாம்போவையேயானல் உன்பின்வந்தோர்மூவரும் உன்சொற்கேட்டொழுகுவரோ? இதையோசித்தாயில்லையே யென்றுசொல்லி வீமனையழைத்துச் சென்று அங்குள்ள மஞ்சனவாவியிற் படிந்து நறுமலர் மாலைசூடி அவ்விடம் விட்டகன்று இமைப்போதில் மூவருந்தேரின்மேலேறிக்கொடிபோன்ற இடையையுடைய பாஞ்சாலியும் இளையோரும் உறைகின்ற காட்டைவந்தடைந்து வீமன் கொணர்ந்த அவ்வழகிய மலரை உரோமசமுனிவ ரொப்பற்றதாளிற் சொரிந்து யாவரும் மும்முறை வலம்வந்து பணிந்து, கயல்போன்ற கண்ணையுஞ் செவ்விய விதழையுமுடைய பாஞ்சாலி களிகூற அம்மலரை யளித்துப் பின்கடோற்கசனுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு,அக்கினியிற்பிறந்த கற்பின் மிக்க பாஞ்சாலியும் ஐவர்களுஞ் சற்றுந்துன்பமென்பதில்லாமல் நாடொறுந் தோகைபாகனுடைய பெருமிதம்பெற்ற குணங்களைக்கேட்டு அவனதுபாதங்களைப்போற்றி மனக்களிகூர்ந்து சுகமே வாழ்ந்திருந்தனர்.

சடாசுரன்வதைச் சருக்கம்.

ஆக்க லழித்தல் காத்தலென்னு முத்தொழிலையு மியற்றி அத்திமுதலெறும்பீறுபுள்ள உயிர்களனைத்திற்கு மூலகாரணனாய் ஞாலமாய்விண்ணாய் எழுதொணுமறைகட்கு மெட்டாத படிவத்தையுடைய இறைவனது குணங்களை உரோமச முனிவராற்கேட் டானந்தங்கொண்டு அழுதும் பரவசங்கொண்டு கூத்தாடியும் விழுந்தும் பின்னெழுந்து துதித்தும் எல்லையில்லா வானந்தங்கொண் டிருக்குநாளில், அவ்வனச்சாரல்தோறு மருந்தவமியற்று முனிவர்பலரும் தந்தி புலி சிங்கமுதலிய மிருகக்கூட்டத்தின் கொடுமையால் தமது தவத்திற் கிடையூறு நேர்வதைக்கண்டு மனநொந்து யாவருமொருங்கு சூழ்ந்துதருமராசனிருக்குமிடத்திற்குவந்து இறையே! உனக்கபயம் எங்களைக் காத்தருள்கவென்று வேண்டினர்கள். அருந்தவமுனிவ ரிவ்வாறு அபயமபயமென் றரற்றுநிலைக்கேட்ட தருமராசன் அம்முனிவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கி உமக்கு யாதுகுறை நேர்ந்ததென்று கேட்க,அம்முனிவர் பலரும் தமக்கு மிருகக்கூட்டத்தால் நேர்ந்த துன்பத்தை முற்றுங்கூறி அத்துன்பத்தினின்று மெங்களைக்காக்கவேண்டு மென்றார்கள். அவ்வாறே தருமராசனும் நீங்களஞ்சற்கவென்று அவர்கட்குத் திடங்கூறிப்போரென்றாற் பூரிக்கும் புயத்தையுடைய வீமனைக் கூவியழைத்து இங்கிருக்குந் தவத்திற் சிறந்த முனிவர்கள் நெடுநாள் மிருகக்கூட்டத்தின் கொடுமையால் மனநொந் திங்கு வந்திருக்கின்றனர். இவர்களை அத்துன்பத்தினின்றும் நீக்கி வருவாயென்று கட்டளையிட,அக்கணமே வீம னகமகிழ்ந்து காட்டிற்சென்றான். இதுநிற்க;

முனிவர்கள் துயரத்தைப் போக்குவதற்கு வீமன் காட்டிற்குச் சென்ற பின் மைநாக பர்வதமேபோல் திரண்டுருண்டதோள்களையும்நீண்டகோரப்பற்களையும் மேகம்போன்ற சாயையுமுடைய சடாசுரனென்னு மரக்கன் அறத்தைப்பகைத்து வஞ்சநெஞ்சங் கொண்டு யாவர்க்கு மிடுக்கணேசெய்தலையே யோர்விரதமாகக்கொண்டு திரியுஞ் சழக்கன் தனக்குநேரும்பழியையுணராமல் வேதியருருக்கொண்டு, இலங்கையை யரசுபுரிந்த இராவணனேபோற் செந்தழலிற்பிறந்த மயிற்சாயையுடைய பாஞ்சாலி வசிக்கும் பன்னசாலையெய்தி கோள்மறைபிதற்றித் தன்மாயையா லரசுஅறியாவண்ணமே சிற்றிடையாளைத் தூக்கிக்கொண்டு விரைவாய் ஆகாயத்தி லெழும்பிச்சென்றான். கற்பின்மிக்க அருந்ததியையொத்த அக்கொடியிடையாள் அபயமபயமென்றோலமிட்டாள். அவ்வாறு பாஞ்சாலி ஓலமிட்ட குரலோசையைக்கேட்ட மாத்திரை புதல்வராகிய நகுல சகதேவர்களிருவரும் நீண்டசிலையைக்கரத்தேந்தி யானைகணடுங்கக் கொக்கரித்தெழும்பி அவ்வரக்கனை இருபுறமும் வளைந்துகொண்டு கொண்டல்போற்கர்ச்சித்து அடாவற்பவரக்கனே! நீபிறர்தாரத்தை இச்சித்துச்சற்று மருளென்பதில்லாமல் மறையவர் வடிவங்கொண்டே வஞ்சனையாகக்கொண்டு செல்வதும் பெருமையோ! பித்தா! உன்குலத்து ளொருவனாகிய இராவணன் முறையலாதனவற்றைச்செய்யவெண்ணியே சீதாபிராட்டியைத் தூக்கிச்சென்றுஅதனா லவன்முடிந்ததை நீயறியாயோ! உனக்குமக்கதிநேர்ந்தே இவ்வகைக் கொடுமையை எண்ணுமற்செய்யத் துணிந்தனையென்று தமது கையிலுள்ள வில்லினுணேற்றிக் குணத்தொனிசெய்து சிலவடிக்கணைதொடுத்துவிட்டு அவ்வரக்கனுடல்நோகச்செய்தார்கள். அரக்கனுவெனின் மிக்க சினங்கொண்டு அண்டங்களதிரும்படி யார்ப்பரித்து அவ்விருவரையுமெதிர்க்கும்போது, முனிவர்கள்துயரத்தைத் தீர்க்கச்சென்ற வீமன் அக்காட்டில் மிக்கமதங்கொண்ட யானை சிங்கம் புலி முதலிய மிருகக்கூட்டங்களில் ஒன்றுந் தப்பிப்பிழையாவண்ணங்கொன்று மலைபோற்குவித்துத்திரும்புகையில் சடாசுரன் தன்தோள் மேற் பாஞ்சாலியை வைத்திருப்பதையும், அவள் அபயக்குரலிட் டரற்றுவதையும், தம்பியரிருவரும் அவன்மேல் வடிக்கணைதொடுப்பதையும் விசும்பிடைக் கண்ட வீமன் இரண்டுகண்களில்தீப்பிழம்பெழ உருத்திரனேபோற்சீறித் தன் கண்களிலெழுந்த தீயால் எண்டிசையையு மழிப்பான்போற் கனன்று அவன் மேற்பாய்ந்து அடா வரக்கா! இன்னு முன்னுயிர் தரித்திருக்கின்றனையோ! என்று பற்களைக்கடித் துதட்டைக்கவ்விக்கொண்டு சிறிதும்வலியிலாவரக்கா! என்னாற்றலையேனும் சற்றுமறிந்தாயில்லையே! முன் பகாசுரனையும் இடிம்பனையும் புண்டரீகனென்னு மரக்கனையுங்கொன்று, அளகேசன் நகரிற்சென்று அங்குள்ள பல்கோடியரக்கரையும் இத்தண்டால் ஓர்நொடிப்போதில் முடித்ததை யறிந்தாயில்லை! அவ்வாறே உன்னையு நொடிப்போதில் தென்றிசைக் கனுப்புகின்றேனென்று தன்னெப்பற்ற தண்டையோச்சிப்புடைத்து அங்குள்ள ஓர் மராமரத்தை வேருடன்பிடுங்கி அவன்மேற் சுழற்றியெறிந்தான். அவ்வடி அரக்கன்மேல் நன்றாய்த்தாக்கலும்மனநொந்து கீழேவந்திழிந்து தன்தோளின் மேற் சுமந்திருக்கும் பாஞ்சாலியைவிட்டுவிட்டு அங்குள்ள ஓர்வரையைத்தன்

ளுப்பற்றகையிற்பிடுங்கியெறிந்து,எண்டிக்குமசையும்படி கர்ச்சித்துநின்ருன். வீமன்அவ்வரையைத்தன்கையிலுள்ளதண்டாற்ருக்கிப்பொடிபடச்செய்துபுய த்தைத்தட்டி யார்ப்பரித்துகிமிர்ந்துநின்ருன். அவ்வரக்கன்இவனுற்றலுக்கஞ்சி விரைவி லாகாயத்திலெழும்பினன். வீமனும் அவனைவிடாமற் பின்ருெடர்ந்து தன்தண்டால் அவன் ருேள்முறியவடித்து மலைபோன்ற தன்ளுெப்பற்ற புயத் தாலவனை யிடித்துக்கீழேதள்ளி அவன்மேல்விழுந்து முன்னம் பரமசிவனுறை யும் வெள்ளிமலையைக் கல்லவெண்ணிய இராவணனைக் கோபித்தழுத்திய வெள்ளிமால்வரையேபோல, பொன்மலைபோன்ற தன்ளுெப்பற்ற புயத்தால் அவனுடலிற் றழும்பெழ வழுத்திக் கன்னமும் பிலத்தினு மகன்றவாயும் நெ ரியத் தன் கரங்களா லிறுகவழுத்தி, கழுத்தை முதுகின்புறத்திற்றிருப்பி அவ ஞெப்பற்ற தோளுந்தாளும் அவனெஞ்சும் சுளியத் தன் ருளினுற்றுகைத் தான். இவ்வாறுவிமனவனை நோகச்செய்தலும்,அறத்தைப்பகைக்கு மவ்வரக் கன்விமனைக் கீழேதள்ளி யெழுந்துநின்று தோள்கொட்டியார்த்தழன்று நிற்க, வீமனவன்மேற்பாய்ந்து முன் கஞ்சன்விட்ட யானையின் கொம்பையொசித்த கள்ளமாமாயனேபோல்அவ்வரக்கனது வெண்ணிலவுபோன்றவெயிறிரண்டை யும்பிடுங்கியெறிந்து அவனகன்ற மார்பில் தன்தண்டால்மோதிப்புடைத்தான். அவ்வடியால் மூர்ச்சையடைந்து கீழேவிழ்ந்து மீண்டு மோர்கணப்போதி லெழுந்து அண்டமதிரும்படி யார்ப்பரித்துத் தன் னிருகரங்களையுங்கொண்டு வீமன் மார்புறப்புடைத்தான். வீமனதை லக்ஷியஞ்செய்யாமல் மீண்டு மவன் மேற்பாய்ந்து குன்றிரண்டும் யுத்தஞ்செய்வதேபோ லிருவரும் நெடுநேரம் மல் யுத்தஞ்செய்தும் அரக்கனுயிர் நீங்காதிருப்பதைக்கண்ட வீமன் மிக்க சினங் கொண்டு இவ்வற்ப வரக்கன் நமக்கோர் பொருட்டோவென் றுள்ளத்தில் நினைத்து,அவ்வரக்கன் புயமொடியப்பிடித்துத் தன்னிருமுழந்தாளினிடையே இறுக்கி அவ னுறுப்பெல்லாஞ் சுருங்கச்செய்து முன் இராகவன் என்பு மலையைத் தன் ளுெப்பற்ற விரலினுலெடுத் தெறிந்ததேபோல விசும்பிடை யெறிந்தான். அரக்கனுெவெனின் விசும்பின தெல்லையளவும்போய் உடல் நடுங்க ஓர்வரை சாய்ந்ததேபோற் பார்மிசைவிழுந்து அங்கங்குலைந்து ஆவி நீத்து நொடிப்போதி லியமனுலகடைந்தான். இவ்வாறு எந்நாளும் அறத்தைப் பகைத்து அடாத காரியத்தைச் செய்துவந்தால் உலகில் யாவரோ துன்பத்திற் குள்ளாகாதிருப்பர். இராகு கேதுக்களினுற் பிடிபட்ட சந்திரனேபோல் அக் கொடிய அரக்கனிடமகப்பட்டுச்சற்றுநேரந் துன்பத்துக்குள்ளாகி அவன்கையி னின்றும் விடுபட்ட பாஞ்சாலியும் அவனையு முடித்தபின்னர் நகுல சகதேவ ரும் தருமராசனிருக்கும்பன்னசாலையையடைந்து உரோமசமுனிவர் தாளில் அன்பாய்விழ்ந்துவணங்கி நடந்தவற்றையெல்லாம் தருமர்முதலியயாவருக்குங் கூற வேதியரும் உரோமசமுனிவரும் தருமராசனும்தம்பியரும் பாஞ்சாலியும் அவ்விடமவிட் டகன்றுசென்று தபதிகாரனருடைய ஆச்சிரமத்தைக்கண்டு அவரைத் தரிசித்து அவர்கூறும் பல ஆசிபெற்று அதைவிட்டகன்று பற்பல முனிவ ராச்சிரமத்திற் சென்று சிலநாள்கழித்தபின்பு பற்பல வனங்களில் வாசஞ்செய்து அவைகளையுங்கடந்து தேவர்களும் புகழத்தக்க அஷ்டகோண

மாமுனிவராச்சிரமத்தைக்கண்டு அம்மாமுனிவனைத் தரிசித்து அங்கவருடன் யாவரும் நெடுநாள் வீற்றிருந்து அவரால் பல சரித்திரங்களையுங் கேட்டு அக மகிழ்ந்து ஒன்பதா மாண்டையுங் கழித்துச் சுகமேவீற்றிருக்குநாளில் பின்பங் குநிகழ்ந்தவற்றைக் கூறுகின்றேனென்று சூதமுனிவர் நைமிசாரணிய வாசி களுக்குச் சொல்லத்தொடங்கினர்.

மணிமான்வதைச் சருக்கம்.

இவ்வாறு பாண்டவர்கள் அட்டகோணமாமுனிவ ராச்சிரமத்தில் வீற் றிருக்குநாளில் அந்நாட்டிலுள்ள ஓர்நதி பெருக்கெடுத்துப் புதுப்புனல் பெருகி வரப் பல அன்னங்கள்திரண்டுவந்து அந்நீரிற்பாய்ந்து விளையாடுவதையும் குயி லினங்கள் பாடுவதையும் கயல்போன்றகண்களையுடையபாஞ்சாலிகண்டு மிக்க களிகூர்ந்து அந் நறும்புனலாட வெண்ணிப் பல ரிஷி பத்தினிமார்களுடன் சென்று அந்நறும்புனலிற்படிந்து விளையாடிக்கொண் டிருக்கையில் அந்நீரில் மிக்கவாசங்கொண்டு கமழ்கின்றபாரிசாதமலரொன்று மிதந்துவரக்கண்டு தன் னழகிய கரத்திலேந்தி இருகண்களிலு மொத்திக்கொண்டு அதன்மணத்தை மதித்து அவ்விடம்விட் டகன்று ஓர்கணப்போதில் வீமனிருக்கு மிடத்திற்கு வந்து அவ்வழகிய மலரை அவனிடங்கொடுத்து முன் னெனக்குக் கொண்டு வந்துகொடுத்த அவ்வனசமலரைப்பார்க்கிலும் இம்மலர் மிகச்சிறந்ததே! இது போன்ற மலர் எங்கிருப்பினுங் கொணர்ந்துகொடுக்கவேண்டுமென் றிறைஞ்சி னின்றாள். வீமனும் அம்மலரைக் கைக்கொண்டு புன்னகைபுரிந்து பெண்கள் நாயகமே! முன் னியக்கரூரொய்தி அங்குள்ள பலவரக்கரையு முடித்து உன் மனோபீஷ்டப்படி வண்டுகள்மொய்க்கு முன்னழகிய கூந்தலில் அம்மலரைக் கொண்டுவந்து தரிப்பித்ததுபோல் இன் றிம்மலர் உம்பர்நாட்டி லிருப்பினும் நொடிப்போதிற் சென்று கொண்டுவந்து தருகின்றேன், நீ அஞ்சாதையென்று திடங்கூறிப் பின்னுஞ் சொல்லுகின்றான். பெண்ணருங்கலமே! நீ விரும்பிய இவ்வழகியமலரை யானுனக்குக்கொண்டுவந்து கொடேனேயானல் நம்மாற்றல ரெனப்படும் திருதராட்டிரன் கான் முளைகளாகிய துரியோதனாதியர்களைக் கொல்வேனென் றவ்வரசசபையிற்கூறிய சபதத்தை நிறைவேற்றுவேனே! நீ சற்றுமையப்படாதை, இதோ இமையோரையிற் கொண்டே வருகிறேனென்று ஒப்பற்ற வில்லுங்கதையுமேந்தித் தருமராசன்முதலிய யாவரிடத்திலுஞ்சொல் லாமலே புறப்பட்டு இரண்டுவரைபோன்ற புயத்தையுடைய வீமன் முன் வன சமலர்கொண்டுவந்த வழியேயோடிப் பல யோசனை தூரங்கடந்து சென்று இரத் தினகிரியை யடைந்தான். அங்கு மரகதங்களாலிழைத்த மாளிகைக ளொரு சாரும்,அரிய மாணிக்கக்கற்களாலிழைத்துச் சிற்பநூற்படி யமைத்த உன்னத ஆலயங்க ளொருசாரும், பச்சைக்கற்களிழைத்த நீண்ட மாளிகைகளொரு புறமும், கின்னரர்க ளொருசார் நின்று சுர லய பேதமின்றி வீணைமீட்டுத லொருபுறமும்,மின்னையொத்த பாவையரொருசாரும்,விஞ்சையரொருசாரும் அன்னத்தைப்பழிக்கும்நடையையுடைய மாதர்களொருசாரும்,இயக்கர் மடந் தைய ரொருசாரும் நின் றிருப்பதையும்,சூலுடைய மந்திக்கூட்டங்க ளயர்வற்

நுத்திரிவதையும்,வண்டினங்கள் தேனைக்கவர்ந்து சென்று தன் மகவுக்களித்திடுவதையும்,மதசலம்பொழிந்து ஆரவாரித்து நிற்கும் யானைக்கூட்டங்களொருசாரும், உழுவை யாளிமுதலிய மிருகக்கூட்டங்களொருசாருமாய் எண்டிசைபு மொளிவிட்டெறிக்கும் இரத்னமலையையும் அதன் மற்றுமுள்ள விநோதங்களையுங்கண்டானந்தங்கொண்டு அவ்விரத்தினகிரியைவிட் டகன்றுசென்று குபேரநாடாகிய அளகையின் மேற்றிசைவாயிலை யடைந்து, மேகத்திலுள்ள தாரகைகணங்கள் சிதறி வீழவும், யானைக் கூட்டங்கள் உள்ள நடுநடுங்கித்திசைதொறு மோட்டெடுப்பவும், எட்டுத்திசைகளும் அதிரும்படி சங்கத்தொனி செய்தான். இவ்வாறு வீமன்செய்த சங்கத்தொனியால் அவ்வளகையிலுள்ள அரக்கரிற் பலர் மூர்ச்சையடைந்தனர். சிலர் ஓவியம்போ லசைவறநின்றனர், சிற்சிலர் முன் தென்றிசையில்வந்து எண்ணில் பல்கோடி அரக்கரை ஓர் நொடிப்போதில் முடித்து வனசமலரைக் கைக்கொண்டுபோன அக்காலனே மீண்டும் எஞ்சி நின்ற நம துயிரையுங்கொள்ளைகொண் டேகவந்தானென்பர், சிலர் இவ்வளகையிற் போர்புரிய வந்தவனுந் தப்பித் துயிர் பிழைப்பனோ! என்றிவ்வாறு கலக்கங்கொண்டு வார்த்தையாடிக்கொண்டிருக்கையில் மிக்க வலியமைந்தமாயையில்வல்ல விஞ்சையனொருவன் அஞ்சாநெஞ்சங்கொண்டு உயிர் கொண்டேகுங் காலனைப்போல் ஓர்கரத்திற் கதையும் மற்றோர் கரத்தில் வில்லையு மேந்தி அட்டகாசஞ்செய்து யானொருவனே அவனைக் கொல்ல வல்லேனென்று விரைந்து சென்று மந்தரமலைபோன்ற தோள்களையுடையானும் முன் னிடிம்பனைக் கொன்றவனுமாகிய வீமனைக்கண்டு நெட்டுயிர்ப்பெய்திச் சித்திரப்பாவையேபோ லத்தகவடங்கி நின்று, முன்னே வனச மலர் வேண்டித் தென்றிசையிலுள்ள காவிற்புகுந்து அங்கே காவல்கொண்டிருந்த எண்ணில் பல்கோடி யரக்கரை விண்குடியேற்றிய வீர னிவனேயாமென் றெண்ணிச் சிங்கத்தைக்கண்ட யானையேபோல் உள்ள நடுநடுங்கி அவ்விடம்விட் டகன்று விரைந்துசென்று தன்சேனைத்தலைவனாகிய மணிமானைக்கண்டு இவ்வாறுசொல்வானாயினன்.

மேனாளில் வனசமலர்வேண்டி இந்நாடடைந்து தென்பாலுள்ள அரக்கர் பலரையும் ஓர் கணப்போதில் தென்றிசைக்கோ னுலகுக் கனுப்பி அம்மலரைக் கைக்கொண்டு சென்ற அவ்வீரனே மீண்டும் எஞ்சிநின்ற நம்மையும் முடிக்கவென்றே வந்திருக்கின்றானென்றுசொல்லிப் பின்னுஞ்சொல்லுகின்றான். முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாமும் ஒருங்குசேர்ந்து ஓரேகாலத்தில் அவனுடன் போர்புரியினும் இரு வரைபோன்ற புயத்தையுடைய அச்சூரன் யாவரையும் தன்னொப்பற்ற கரத்திலுள்ள ஓர் தண்டினாலேயே இமைப்போதில் முடித்தே செல்வான். அவன் போர்க்கெழாமுன்னமே வேண்டும் பொற்குவியலைக்கொடுத்து நல்வார்த்தைகூறியனுப்புவதே நலமாம்,அவ்வகை செய்யாமல் யுத்தத்திற்குச் சென்றால் இந்நாட்டை வெறுநில மாக்குவனென்றுசொல்லி யுடலில்வியர்வரும்ப நின்றான். இவ்வாறு விஞ்சையனுரைக் கக்கேட்டமணிமானென்னுஞ் சேனைத்தலைவன் கண்களிலக்கினி சிதறவிழித்து நோக்கி விஞ்சையா! நீ கூறியவார்த்தை விந்தையினும் விந்தையே! உன்

போன்ற வீரனன்றோ அவ்வற்பமனிதனுக் கஞ்சவேண்டும்! ஆக்க லழித்தல் காத்தலென்னு முத்தொழிலும் வல்ல இறைவனுக்கு நண்பனாகிய எப் புவன மூந்தொழும் குபேரனுடையநகராகிய அளகாநகரில் அற்ப வலியுள்ள ஓர்நரன் வந்து யாவரையுந் துன்பத்திற்குள்ளாக்குகின்றானென்றால் கேட்போர் நகைப்பரன்றோ! மிகச்சினந்து அவ்வற்பனெனக்கோர் பொருட்டோ வென்று எண்ணில் பல்கோடி கரி பரி தேர் முதலியவைகளையும் திரண்ட காலாட்களையும், படைத்தலைவராகிய எண்ணாயிர மியக்கர்களையும் மிக்கவலிபெற்ற சாலேந்திரன் முதலியவர்களையு மழைத்துக்கொண்டு இருநிதிக்கிழவனாகிய குபேரனுக் கிச்செய்தி தெரிவிக்காமலே நம்திறத்தைச் சற்றுமறியாமல் போர்க்கெழுந்த அக்கொடியோனை முடித்து அச்செய்தியை நமதரசனுக்குத் தெரிவிப்போமென்று ஆரவாரித்து விண்ணோரும்வெருக்கொளவீமனிருக்குந் திசையைநோக்கிச் சென்றனன். இவ்வாறு திரைகடனடுவில் நின்றிருக்கும் மந்தர மலையேபோலுள்ள வீமனை அக்கினிசொரிகின்ற கண்ணையுடைய எண்ணாயிர வரக்கரும் ஓராயிரம் பரிதிகளொன்றுகூடி யிருத்தலையொத்த தேககாந்தி பெற்ற அமரிற்றொலையாத விச்சாதரவெள்ளங்களும் சூழ்ந்துகொண்டார்கள். அவ்வாறு தன்னைச்சூழ்ந்து நிற்கு மரக்கர் முதலிய யாவரையுநோக்கிப் புன்னகைசெய்து "பனங்காட்டுநரி சலசலப்புக்கஞ்சுமோ" அற்பராமுங்களை வெற்றியடைதலு மெனக்கோர்பொருட்டோ வென்று தன்னொப்பற்ற கையிலுள்ள வில்லைவளைத்து நாணேற்றிட்டு அதிற் சிலகணைகளைத்தொடுத்து அண்டங்களதிர்ப்பக் குணத்தொனிசெய்து தன்முன்னின்ற விச்சாதரர்மேல் விடுத்தான். அக்கணையால் பலர் மனநொந்தனர். அச்சேனைக் கதிபனாகிய மிக்க திறலமைந்த சாலேந்திரனென்பான் தன்சேனைமேற் சற்றுமஞ்சாமற்கணை தொடுத்தானேயென்று கோபித்து ஓர் தேர்மேலேறி வீமன்முன் விரைந்து சென்று இவ்வாறு வினவலாயினன்.

தேவர்பெருமானும் எமதரச னனுமதியின்றி இந்நாட்டை யணுகானென்றால் உருவிற் சிறிய நீ இங்குவந்த காரணமென்ன? நீயார்? சிவனோ திசைமுகனோ பாற்கடலிற் கண்வளரு மாயவனோ அல்லவெனின் கூரிய வேலைக் காத்தேந்திய வேலவனோ! உன்னுயிர்சிந்தாமுன்னமே உன்வரலாற்றைச்சொல்லென்றுவினவ, வீமனு மவன்கூறியதைக்கேட்டுப் புன்னகைகொண்டு, முன்னாளோர் வனசமலர்வேண்டி இங்குவந்து என்னையெதிர்த்த பல வரக்கர் கூட்டங்களையு முடித்து ஓர் நொடிப்போதில் வைவஸ்வத நகருக்கனுப்பிய மிக்க திறலையுடைய வீமனென்றறி! இன்று மம்மலர்போன்றபாரிசாதமலர்விரும்பியே இங்குவந்தேன், அம்மலரைத் தடைசெய்யாது கொடுவந்து தருவையேல்உன்னுருயிரைக்கவராதுவிடுவேன், அல்லது உன்னூழின்வலியால்மமதைகொண்டு என்னுடன் போர்புரிவையேல் உன்னுருயிரை இக்கணமே தென்றிசைக்கிழவனிட மனுப்புவேன்; இத்திரண்டசேனைக்குமஞ்சேனென்றுநிமிர்ந்து நின்றான். இவ்வாறு மாருதியிசைத்தமொழி யாவுங்கேட்ட வாகைமாலைசூடிய விஞ்சையர்பிரான் தன்னொப்பற்ற புயங்குலுங்க நகைத்து மனங்கொதித்து

வெகுண்டு இருகண்களிலும் நெருப்புப்பொறிபறக்க வீமனைநோக்கிச் சிற்றுயிர் பெற்ற மனிசா! தேவர்களும் அத்தேன்சொரிகின்ற மலரை இந்நாள்வரையிற் சூட்டியறியாரென்றால் மானுடச்சட்டைதரித்த நீயோ இதைக்கொண்டு செல்லவல்லவன்; சற்று மறிவிலாதவனே! நீகூறியவார்த்தை நன்று நன்று; காட்டில்வாழ்கின்ற உன்னுயிரைப் போர்க்களத்தில் என்கையிலுள்ள இவ்வாளிகட்குணவாக்குவேனென்றுஆரவாரித்தான். அதைக்கண்டசேனைகள்திரண்டு சாலேந்திரன்முன் வர அச்சேனைகளை யணியணியாக வகுக்க அவர்கள் தமது வில்லிற் பலகணைகளைத்தொடுத்து வீமன்மேல்விட்டு அட்டகாசஞ் செய்தார்கள். பின்பு சேனைக்கதிபனாகிய விஞ்சையன் சேனைகளைநோக்கி அம்மனிதனை விரைந்துபற்றுங்கள் அவன்தோள்களைப்பிணித்துக்கட்டுங்களென்றான். தலைவனவ்வாறு கூறலும் அரக்கர்பலரும் வீமனை நெருங்கிச்சென்று அவரவர்படைகளை யோச்சி வீமன்மேற் புடைக்க வாரம்பித்தார்கள். அதைக்கண்ட வீமன் புன்முறுவல்செய்து வில்லைவளைத்து அதிற் பல வடிக்கணைகளைத் தொடுத்து அவ்வரக்கர்மேல்விட்டு ஓர்கரத்தில் தண்டேந்தி அவ்வரக்கர்கூட்டத்திற் புகுந்து அவ ரென்புநொருங்கப்புடைத்துயாவரையு மோரிமையோரையிற்படுத்து, பற்றலர் புரம்பொடிபடுத்திய முக்கட் பெருமானேபோல் விளங்கி நின்றான். இவ்வாறு விஞ்சையர் பலரையு முடித்ததைக்கண்டு எஞ்சிநின்ற வித்தியாதர சேனைகளில் அவரவ ரொப்பற்ற வில்லையேந்தி இரதத்திலேறி வீமன்முன் சென்று பற்பலகணைகளைத் தொடுத்தார்கள். அவைகளையெல்லாம் தன்வில்லினின்றும் பலகணைகளைத் தொடுத்து அவைகளைத் துணித்து அவர்கள் மணிமார்பிலும்தோளிலும் சிரத்திலும்பட்டுருவிச்செல்லும்படி அநேககணைகளைத் தொடுத்துவிட்டான், அக்கணைக ளவ்விஞ்சையர் கூட்டத்திற்சென்று யாவரையு மொருங்கு முடித்தது.

மிக்க ஆற்றலோடுசென்ற விஞ்சையர்கூட்ட மனைத்தும் ஒருங்குமுடிந்ததைக்கண்ட சாரணர்கள் கறங்கனைய தேர்மேலேறி அலைகடல்போ லாரவாரித்துத் தண்டைக் கையிலேந்தித் தண்டதரனாகிய வீமனோடெதிர்த்தார்கள். வீமனோவெனின் தன்கரத்திருந்த வில்லைக் கீழே எறிந்துவிட்டுக் காலனேபோல் தண்டைக் கையிலேந்தி சாரணர்படையிற்புகுந்து அவர் கரத்திலுள்ள தண்டைப் பொடிப்பொடியாக்க, அதனாலெழுந்தீயும் அவர்களை நெருங்கிப் புடைத்தலால் முடிகளோடு முடிகள்தாக்கி அதனாலெழுந் தீப்பொறியும், திண்ணிய தோள்களையுமுடைய அச்சாரணர்கள் கோபத்தால் அவர்கள் கண்களினின்று மெழுந்தீயும், அண்டமுழுதும் பொதிந்து அண்டமுகடளவும் புகுந்தன. இவ்வாறு வீமன் அச்சாரணர்களிற் பலரைச் சிரத்தையுங் கரத்தையும் முழந்தாளையும் நெற்றியையும் பிளந்தெறிந்தான். வீமனாற்பட்டவர் போக எஞ்சிநின்றசாரணர்கள் அஞ்சாநெஞ்சங்கொண்டு வீமனை யெதிர்ந்தார்கள். அவர்கள் துணைக்கரங்களையும் வரைபோன்ற புயத்தையும் சிரத்தையும் பதத்தையுமொடித்து கண்டவர் கலங்கும்படி காலாலெற்றி ஆகாயத்தெறிந்துகதையாற்புடைத்துக் கொன்று கூற்றுவனுலகிற் கனுப்பிவிட்டுக் கதையைக் கையிலேந்தி இன்னு மிதற்குப் பலியாவாருளரோவென்று குணத்தொனிசெய்து

நின்றான். அவ்வாறு குணத்தொனிசெய்து நிற்கும் வீமனிலைமையைக்கண்ட அரக்கரும் இயக்கரும் சூழ்ந்து வீமனை வளைந்துகொண்டு வெவ்வியபடைகளை யோச்சிப்புடைத்து எண்டிசையு மதிரும்படி யார்ப்பரித்துப் பரிகள்பூட்டிய தேர்மேலேறி வில்லில்நாணேறிட்டுப்பெருஞ்சமர்செய்தனர். வீமனோவெனின் அவர்கள் எறிந்தபடைகளை யெல்லாம் தண்டுகொண் டுடைத்துச்சிங்கநாதஞ் செய்தான். அரக்கரும் இயக்கரும் வளைந்துகொண்டு தேர்மேலிருந்து வேல் வாள் சூலம் சக்கரம் கதை முதலிய வாயுதங்களை யோச்சி வீமனை நோகச் செய்தார்கள். வீம னதை யோர்பொருட்டா யெண்ணாமல் கையிற் றண் டேந்தி வானிற்பறக்கும் கறங்கேபோ லவர்கள் மத்தியினின்றுஞ் சுழன்றுமான் கூட்டத்திற் பாய்ந்த உழுவையேபோ லாரவாரித்துச் சினங்கொண்டு மலை மிசைவீசும் மாருதம்போலும் நிலமிசையோடு நெடுந்திரைபோலும் ஆர வாரித்து உருத்திரனே இப் படிவங்கொண்டு வந்தானெனவே சொல்லும்படி தேர்மே லிருந்த இயக்க வீரரையும் காலாட்களையும் தண்டுகொண்டோச்சி அவர்கள் நீண்ட கரங்களுஞ் சிரங்களுந் தோளும் தாளும் அறத்தடிந்து நிலமி சை வீழ்த்தினான். அவர்க ளுடலினின்று மொழுகுஞ் செந்நீர்ஆறேபோற் பெருக்கெடுத்தோடிற்று, எஞ்சிநின்றவர்கள் ஐயகோவென்றலறித்தேரினின்று மிழிந்து ஓட்டெடுத்து சேனைத் தலைவனாகிய மணிமானென்னும்பெயர்வாய்ந்த அரக்கனிடஞ்சென்று கோவெனக் கதறியழுது வீமனால் தாங்களடைந்த துன் பத்தையும் அவனாற்றலையுங் கூறி நின்றார்கள்.

வானிலுள்ள தேவர்களையெல்லாம் பொருதுவென்று வாகைமாலை புனை ந்த மணிமான்புலம்பி நிற்கும் தன்சேனைகளைச் சினந்து அற்பவலியையுடைய ஓர் மனிதன்மேற் போர்க்குச்சென்று அவனை முடிக்கவறியாமல் பேடிபோ லென்முன்வந்து புலம்பும் அற்பவலியீர் ! உமக்கு வீரமென்பது மில்லையோ ! வென்று பலவாறிகழ்ந்துபேசி தன்னொப்பற்ற துணைக்கரங்களுந் துடிதுடி ப்பப் புருவ நெற்றிமேலேற பிரளயகாலத் துருத்திரனேபோ லுருத்துச்சீறி அமர்க்களத்திற்சென்று போர்புரியும்ஒப்பற்றமதச்சுவட்டையுடைய யானைமே லேறித் திரண்டகாலாட்களும் பரிகள் பூட்டிய தேர்களும் தன்னைப்புடைசூழ் ந்துவர வீமனெதிர் சென்றான். வீமனோவெனின் தன்னை யெதிர்த்து வரும் சேனைகளைக்கண்டு கோபநகை நகைத்துத் தன்னிரண்டுகண்களிலுங் கனலுக நின்றான். அரக்கர் சேனைகள் வீமனை வளைந்துகொண்டு ஆரவாரித்தனர். வீமன்தன்னொப்பற்ற கையிற்றண்டேந்திக் குலாலன்திகிரியேபோற் சுழன்று தன்னைவளைந்துகொண்டிருக்கும் அரக்கருடைய உறுப்புகள் சரிந்து விழும்படி சாடினான். அரக்கர்பலரும் உடல்சரிந்தும் கரங்களற்றும்மார்புபிளந்தும் இமை யோரையில் தென்றிசை யடைந்தனர். சிலர் அவனாற்றலைக்கண்டஞ்சிப் பயந் தோடினர் சிலர் அவனடியைப் பொறுக்கமுடியாம லோட்டெடுத்தனர். இவ் வாறுசேனைகள் வீறிட்டோடுவதைக்கண்ட மணிமான்சிங்கவேறுபோல்வீமன் முன்கடுகிச்சென்று பலசரங்களையும் வில்விற்றொடுத்தெய்தான். வாயுகுமார னும் புலிபோற்பாய்ந்து மணிமான் மார்புபிளவுபடும்படி தன்தண்டாலோச்சிப் புடைத்தான், அவ்வடியால் மணிமான் சிந்தைநொந்து மனத்தளர்வுகொண்டு

பரிகள்பூட்டிய தேர்மேலேறி இவனைவஞ்சனைசெய்தே முடிக்கவேண்டுமென் றெண்ணித் தன் மாயை வல்லமையால் இரதத்துடன் ஆகாயத்தி லெழும்பி மண்ணையும் விண்ணையும் புகைகப்பும்படிச்செய்து நெருப்புப்பொறி சிதற யாரிபோ லெண்ணிலாக் கணைகளை வில்லிற் றொடுத்துவிட்டான். வீமனோ வெனின் தன்னைப் புகைவந்து மூடுவதனால் சற்றுநேர மொன்றுந் தோன்றாம லசைவறநின்று பின்பு விண்ணினின்றும் ஆயிரமாயிரமாக வருங் கணைகளைக் கண்டு இவன் மாயையா லிவ்வகையானகாரியத்தைச் செய்கின்றானென்றெண் ணிஅம் மாயைகெட்டொழிய சூரியாஸ்திரத்தைப் பிரயோகித்து அவ்விருளை நீக்கலும், அசைகின்ற மணிகள்பூட்டிய தேருடன் வீமனுக் கெதிரே தோன்றி னான். வீமன் மிக்க சினங்கொண்டு அவன்மேற் சில வடிக்கணைகளைத்தொடு த்தான். மணிமான் விசும்பிடைநின்று அரிய பல கணைகளைத் தொடுத்து வீமனெய்த கணைகளை நடுவதுபாதியிற் றகர்த்து மீண்டு மைந்து தேவதாஸ்திர ங்களைத் தொடுத் தெய்தான். வீமனு மதற்குத் தக்க கணைகளைவிட்டழித் தான். அரக்கனோ மிக்க சினங்கொண்டு பர்வதாஸ்திரத்தைத் தொடுத்து வீமன் சிரமே இலக்காக விடுத்தான். அது இடிபோற் கர்ச்சித்து அண்டங்க ளதிரும்படி யாரவாரித்துவர வீமனு மோர் பர்வதாஸ்திரத்தை விட்டு அதைப் பொடிபடச்செய்து எண்டிக்குஞ் செவிடுபடக் குணத்தொனிசெய்து பிரளய கால உருத்திரனைபோற்பொங்கித் தன்வலியமைந்த வில்லி லோர் நாகாஸ்திர த்தைத்தொடுத் தபிமந்திரித்து விடுத்தான். அக்கணை விடத்தைச் சிந்தும் நாகமேபோல் விரைந்துசென்று அவ்வரக்கன் புயத்திற்பட் டுருவிச்சென்றது. இவ்வா றிருவரும் முன் வார்சிலையைத் தாங்கிய இராகவனுக் கிளையோனாகிய இலட்சுமணனும் இந்திரசித்தும் செய்த யுத்தமேபோல் நெடுநேரம் விசும் பிடைநிற்கு மரக்கனுடன் போர்புரிய இருளடைந்த மனத்தையுடைய அவ் வரக்கன் சீற்றங்கொண்டு தன் மாயையை யொழித்து நிலமிசையிழிந்து விந்த கிரியைபொத்த தோள்களை யுடைய வீமன்மேற் சந்திரனைப் பற்றுமரவே போற் பாய்ந்து தன் கரத்திலுள்ள சூலத்தைச் சுழற்றி யெறிந்தான். வீமனோ வெனின் பங்கயத்தில் வீற்றிருக்கும் பிரமனிடத்திற்பெற்ற ஒப்பற்ற கணையை வில்லிற்றொடுத் தபிமந்தரித்து மணிமான் சிரமே இலக்காக விடுத்தான். அவ் வாறு விட்ட பிரமனது வெவ்விய சரம் மணிமான்மேற் பாய்ந்து அவனுயிரைக் கவர்ந்துசென்று அங்குள்ள நறும்புனலிற் படிந்து வீமன் கரத்தில்வந் தமர்ந் தது. அரக்கனோவெனின் கருமுகில் வீழ்ந்ததேபோல் நிலமிசைவிழுந்து தென்றிசை யடைந்தான். வீமன் உள்ளமகிழ்ந்து இன்னு நம்முடன் பொரு வோ ரிருக்கின்றனரோவென்று கூவித் திரிந்துகொண் டிருந்தான். இதுநிற்க;

தருமராசன் வீமனைக்காணுமல் மனம்வருந்துதல்.

இங்கு அருட் டன்மையையுடைய தருமராசன் உரோமசமுனிவரும் தௌமியரும் வேதியர்களும் புடைசூழ வீற்றிருந்து நல்லறத்திற் புந்தியைச் செலுத்திச் சுகமே யிருக்கையில் தன்னுடன் வீற்றிருந்த வீமனைக் காணு மல் கயல்போன்ற கண்களையுடைய பாஞ்சாலியை நோக்கிப் பெண்ணருங்

கலமே! இப்போ தென்பக்கலி லிருந்த வீம னெங்குச்சென்றன னென்று வினவ, அதற்குப் பாஞ்சாலி இங்குள்ள நதியினின்றும் பெருக்கெடுத்து வந்தபுதுப்புனலிற்படிந்தேன்; அந்நீரிலோர் நறுமலர் மிதந்துவரக்கண்டு அதை என் கரத்தேந்தி வந்து இதுபோலு மலரெனக்கு வேண்டுமென்று வேண்டினேன், அவ்வாறே கொண்டுவந்து தருவேனென்று அளகைமா நகரத்துக்குச் சென்றனனென்றாள். அதைக்கேட்ட தருமராசன் அரவின் வாய்பட்ட தேரையேபோல் உள்ளமெலிந்து பாஞ்சாலியைக் கடுஞ்சொற்கூறிப் புலம்பி ஐயகோ என்செய்வே னென்று பிரிவாற்றாமையாற் படிமிசைவிழுந்து மூர்ச்சையடைந்தான். அவ்வாறான தருமராசனை பாஞ்சாலிமுதலிய யாவரும் சயித்தியோபசாரத்தாற் றெளிவித்தனர். பின்புஅரசனும் மூர்ச்சைதெளிந் தெழுந்து உரோமசமுனிவர்தாளில் வீழ்ந்துவணங்கி எந்தையே! இப்பாஞ்சாலியால்முன்னொருதரம் அளகாபுரிக்குச்சென்று வீணே எண்ணிலா வரக்கர்களைமுடித்து வனசமலரைக் கொணர்ந்தான்; அதுதேவரீர்சித்தமறிந்ததுதானே, இன்றுமிப்பேதை சொற்கேட்டு யாவரோடுஞ்சொல்லாமலே தன்னந்தனியேசென்றான். இவனே அரவ கேதனனாகிய துரியோதனன் என்பாற்செய்த சர்ப்பனைக்கு அன்று அவ்வரசவையில் துரியோதனனைத் தன் தண்டால் மோதிப்புடைத்து அதனுலெழும் உதிரத்தை யருந்தாமுன்னம் தன் கரத்தாற் புனலுண்ணேனென்று கொடுஞ் சபதஞ்செய்திருக்கின்றானே, அதையு மவனெண்ணுமலேதனித்துச் செல்வதும் தகுதியாமோ? அளகைவேந்தன் சாமானியனன்றே! முக்கட்பெருமானுக்குத்தோழனும் மிக்கவலிபெற்ற அளவிலா அரக்கர்சேனைகளையும் பொற்குவியலும் பெற்றுடையானுமாயிற்றே! ஊழின்திறத்தால் வீமனுக் கென்ன விபத்து நேரிடுமோ வறியேனே, யான்முன்செய்த தீவினையாலோ அல்லது நல்வினையாலோ கற்றவர்புகழும் விசயன் நெடுநாளாய் என்னைவிட் டகன்றிருக்கின்றான், அத்துயரமே என்னை அல்லும்பகலும் வருத்திநிற்க பொன்முடிதரித்த இவ்வீமனு மிவ்வா றென்னை வருந்தச் செய்தால் என்னுயிர் நீடிநிற்குமோ! இனி யென்செய்வேன் " தம்பியுடையான் படைக்கஞ்சான் " என்பதுபோல் இக்கா ளிவனென்னைவிட் டகலாதிருப்பதை யெண்ணியே என்னுக்கையை இன்னு மிம்மண்ணிடைச் சுமந்திருக்கின்றேனே யல்லது வேறல்லவே! அந்நாள்தம்பிமார்செய்த சபதமும் பொய்த்துவிடுமோவென்றேங்கி முக்காலமுமுணர்ந்த உரோமசமுனிவருடையபொற்றாளில்வீழ்ந்து கண்ணீருகுத்தான்.

அறிவும் வாய்மையும் தூய்மையும் அன்பும் இன்னருளும் பொறையும் ஞானமும் கல்வியுமுடைய தருமராசன் துயரமென்னு முவர்க்கடலிற்படிந்து கிடப்பதையறிந்த உரோமசமுனிவர் தருமராசனுக்குப் பல இனியசொற் புகன்று தேற்றி அடியில்வருமாறு கூறலாயினர். அரசர்க்கரசே! நீசற்றும் மனம் வருந்தாதை, மிக்கதிறலையுடைய வீமன் விஞ்சையரோடு வெவ்விய போர் புரிந்து, யாவரையு மொருங்குமுடித்து முதற்சேனாதிபதியாகிய மணிமானுயிரையுந் தென்றிசைக்கனுப்பிவிட்டுத் தன்னந்தனியே தன்னுருயிர்க்கோர்துன்பமில்லாதிருக்கின்றான். இனிபவனங்குத்தனியேயிருந்தால் துன்பமுறுவன். அத்துன்பமவ னடையா முன்னமே நீநவநிதிகளைப்பெற்ற குபேர னூட்டிற்குச்

செல்லவேண்டுமாதலால் கடோற்கஜன் இங்குவர நினைக்கவேண்டுமென்றார். அவ்வாறே தருமராசனும் கடோற்கஜனைத் தன்னிடம்வர நினைந்தான். கடோற்கஜசனும் ஓராயிர மலகைபூட்டிய தேரிலேறி விரைவோடு தருமரிருக்கு மிடத்திற்குவந்து தேரைவிட் டிழிந்து அவரழகிய பொற்றாளில் வீழ்ந்துவணங்கி எந்தையே! எனக்கியாதுபணியென்று பத்தியோடுகேட் டிறைஞ்சி நின்றான். அவ்வாறு நின்ற கடோற்கஜனுக்குப் பல வாசிகூறி உன் தந்தையாகிய வீமன் மீண்டு மென்னைச் சந்திசெய் தேகினனென்று யாவுங் கூறினான். அதைக் கேட்ட கடோற்கஜன் விரைந் தெழுமெழுமென்று தருமன் முதலியோரைத் தேரிலேற்றிக்கொண்டு இரதத்தை விண்ணிற்செலுத்தி ஓர் கணப்போதில் வீமன் நெடும்போர்செய்த விடத்தை யணுகி யாவரும் வீமனைக்கண்டார்கள். கடோற்கஜன் தேரைவிட்டிழிந்து தந்தை தாளில் வீழ்ந்து வணங்கினான். பின்பு வீமன் தருமராச னழகிய தாளில் நறுமலர்பொழிந்து மும்முறை வலம் வந்துபணிந்துநின்றான். அவ்வாறுபணிந்துநின்ற வீமனைநோக்காமல் நிலத்தை நோக்கி இவ்வாறு கூறலுற்றார். நீயோ என்னைச் சற்று மதியாமலும் என்னனுமதி யில்லாமலு முன்னோர்தாம் இங்குவந்து வீணே எண்ணிலாவரக்கரை முடித்தாய்! இன்று மவ்வாறே பேதைசொற் கேட்டு வந்து அரக்கர் கூட்டங்களை யொருங்குமுடித்த தல்லாமல் எவ்வுயிரையுங் காப்பானும் வெண்ணிலவணிந்தானும் கங்கையை முடியிற் றாங்கினவனும் அரவைக் கச்சாகவணிந்தவனும் தேவர்கட் குயிர்ப்பிச்சை தந்தவனுமாகிய இறைவனுக்கு நண்பனான குபேரனது சேனைத்தலைவனாகிய மணிமானையு முடித்தனையே! இனி இருநிதிக் கிழவனாகிய அக்குபேரன் தன்னளவற்றசேனைகளுடன் உன்மேற்போர்க்கெழுந்து முன் நீ செய்த கொடுமையையும் இன்றுசெய்த வஞ்சனையையும் நினைந்து உன்னை முடிக்கவே வருவானே! இனி யோசித்தாவதென்ன! பேதைசொற் கேட் டொழுகுபவர் புருடருட் பதராவரென்பதை நீ சற்று மறிந்தாயில்லையே! என்மனம் வருந்தவுஞ் செய்தனையேயென்று கூறி நின்றான். இதுநிற்க;

வீமனால்முடிந்த அரக்கரிலொருவன் உயிர் பிழைத்துக் குபேரனிடத்திற் சென்று கண்டு கண்ணீருகுத்து எந்தையே! இன்று மேற்றிசையில் ஓர் மனிசன்வந்து நமது சேனைகளியாவு முடித்து, எமக்குத் தலைவனாகிய மணிமானையு முடித்தானென்று சிறிது மொழியாமற்கூறி வீமனுடைய திறலையு மெடுத்துக்கூறினான். அவ்வாறுகூறிய அரக்கன் சொற்கேட்ட குபேரன் புன்னகைகொண்டு ஓ ரற்பமனிசனோ நமது சேனைகளையும் சேனைத் தலைவனையும் கொல்லவல்லவன்! நன்று நன்று! நீ கூறியமொழி வியக்கத்தக்கதேயாமென்று வரைபோன்ற தன் இருபுயமுங் குலுங்க ஆரவாரித் தெழுந்து தன்னளவிலாச் சேனைகளை யழைத்துக்கொண்டு யுத்தசன்னத்தனாய்ப் புறப்பட்டான். இவ்வாறிவன் போர்க்கெழுதலையறிந்த உருத்திரசேனன் தந்தை தாளில்வீழ்ந்து வணங்கிஎந்தையே! நீர்போர்க்கெழவேண்டாமென்றுதடுத்து இவ்வாறு சொல்லலாயினான். நமது நாட்டில்வந்து பொருதுவென்ற வீமனைச் சிற்பவுருவையுடைய மனிசனென் றெண்ணற்க; அரசர்க்கரசனாகிய தருமராசனுக்குத் தம்பி. முப்புரம்பொடித்த மூர்த்தியினருளாற் பூமிபாரந் தொலைத்

தற்பொருட்டே ஐவர் அவதரித் திருக்கின்றனர்கள், இவருள் திண்ணியசிலை யைத்தாங்கிய அருச்சுனனென்பான் இந்திரபுரஞ்சென்று காலகேய நிவாத கவசர்களைமுடித்து இந்திரன் அவர்களால் நெடுநாள்வருந்திய துயரத்தை யொழித்து இன்னும் அவனுடன் வீற்றிருக்கின்முன். இவர்க ளுருவத்தால் மானிடர்களே யல்லது செய்கையால் மானிடர்களல்லர். அவர்கள் கோபித் தெழுந்தால் அவர் ஆற்றலின் பெருமையை யறியப்போமோ! முன் ஒரு சிறு குறட் படிவங்கொண்ட கண்ணன் அண்ட முகடளவும் நிமிர்ந்துநின்றதை யறியீரோ! உருவிற் சிறியரோயாயினு மதியாதிருக்கப்போமோ? இதுபற்றியே பெரியோரும் "உருவுகண் டெள்ளாமைவேண்டும் உருள்பெருந் தேர்க் - கச் சாணி யன்ன ருடைத்து." எனப் பணித்திருக்கின்றனர். எந்தையே! கற்றை யஞ்சடையவ னுறையும் கயிலையங்கிரியை யெடுத்த இராவணனைச் செற் றவன் மனிசனே அல்லது தேவனே! நமது சேனைத்தலைவனுகிய மணிமா னிறந்ததற்கு நீர் மனம்வருந்தவேண்டாம். முன்னோர் முனிவர் வார்சிலையைத் தாங்கியமனிசனுல் உன்னுயிர் நீங்கக்கடவையென்று சபித்தனர்; அதனுலவ னின்று இறந்துபட்டான், அவனுக்காக தேவரீர் மனமிரங்கிப் போர்க்கெழுந் தால் அபசயப்படுவீரோயல்லது வெற்றியடையவேமாட்டீர். போர்க்கெழுந்து அபசயப்பட்டால் அவ்வசை எந்நாளு நம்மைவிட்டொழியாதே. அருச்சுன னேமிக்க ஆற்றலுடையான், பரமசிவனிடத்தே யுத்தஞ்செய்து பாசுபதாஸ் திரம்பெற்றவன், காண்டவவனத்தை நெருப்புக் கடவுளுக் குணவளித்தவன், அவன்திறத்தை என்னொரு நாவாற்சொல்லவல்லே னல்லேன். எந்தையே என்சொற்கிரங்க வேண்டுமென் றிறைஞ்சி நின்றுன்.

இருநிதிக்கிழவனுகிய குபேரனேவெனின் செவிடன்செவிச் சங்கொலி யேபோல் தன் புதல்வன்சொன்னதைக் கேளாமலே வெகுண்டு என் நண்ப னுகிய மணிமானைக்கொன்றவனை யான்கொல்லாமல் விடேனென்று யுத்தசன் னுத்தனய் ஓரழகிய புட்பவிமானத்திலேறி வீமனிருக்குந் திசையையேநோக் கிச்சென்றுன். எண்ணிலா இரதங்களையும்யானைக்கூட்டங்களையும் பரிகள்பூட் டிய விமானங்களையும் பலகோடி இயக்கர்சேனைகளையும் விபுதர்கூட்டங்களை யுங்கண்ட தருமராசன்மனந்தளர்வுற்றுஇன்னுமென்ன கெடுதிநேரிடுமோவென் றுள்ளம்பதைத்து அரசர்க்கரசனுகியதருமராசன் அவன்எதிர்நோக்கிச்சென்று வணங்கி அனகனே! பரிசுத்தனே! அளகைக்கிறைவனே! சங்கரனுக்குச்சகா யனே! புனிதனே! இருநிதிக்கிறைவனே! புலத்தியன் குலத்துதித்த சென கனே! செல்வனே! இச்சிறுவனுமது பெருமையையறியாது செய்தபிழையைப் பொறுத்தருளவேண்டும். புலவரிற் பெரியோய்! வீமன்செய்த பிழைபெரி தேயாயினும் கோபியாது பொறுத்தருள்வது உமது பெருமைக் கழகாம், புனிதமூர்த்தியே! என் றிவ்வாறு துதித்துநிற்க, குபேரன் வீமனை முடிக்க வென்றே யெண்ணிவந்ததைத் தவிர்ந்து தேரினின்றிழிந்து தருமராசனைத்தன் மார்புறத்தழுவி நன்னெறியையுடைய தருமராசனே! இன்று யான்கொண்ட கோபத்துக் களவேயில்லை, இப்போ துன்தண்ணிய முகநோக்கியே இவ்வீம னைக் கோபியாதுவிடுத்தேன் என்றுகூறி,தன்னழகிய புட்பவிமானத்தில் தரு

டர்முதல் யாவரையுமேற்றிக்கொண்டு தனது சிறப்பையும் செல்வத்தையும் கற்பகவனத்தையும் வாவியையும் மாணிக்கங்களிழைத்த கோயில்களையும் மணிக்குப்பைகளையும் யாவருங்கண்டு களிக்கும்படிக்காண்பித்துத் தன்கடைக் கட்கருணைநீராலாட்டி பொற்கலத்தமுதேந்தி யன்புடனூட்டி உபசரித்துத் தன் செங்கையால் அபூர்வமானவிலையேறப்பெற்ற பலநவமணிமாலைகளையும் ஆடையாபரணங்களையுங் கொடுத்து அத்தினபுரத்துக்கதிபனும் என்னைய கன்பனாகிய இறைவனையு மொத்த நீ இந்நகர்க்குவர யானென்ன பாக்கியஞ் செய்தேனென்று புகழ்ந்து பின்னுஞ் சொல்லுகின்றான்.

கருணையே யோருருக்கொடுவந்த அரசர்க்கரசனாகிய தருமராசனே ! யானோர்நாள் இந்திரபுரத்திற்குச் சென்றிருந்தபோது அங்கவனுடன் அழகிய சிங்காசனத்தில் வீற்றிருக்கும் விசயனை இன்னானென்றறியாமல் இவ்வழகிய செம்மல் யாவனென்று இந்திரனைக்கேட்டேன் ; அதற்கத்தேவர்பெருமானும் மனங்களித்து அவன் செயலையும் வெற்றியையும் அவனடைந்த கீர்த்தியையும் அவன்குருகுலத்தரசனென்பதையும் உனக்கிளையோனென்பதையுங்கூறினான் அத்தகைய ஆற்றலுடையானைத் துணைவனாகப்பெற்றஉன்னினுஞ் சிறந்தவர் யாவரிருக்கின்றனர் ! நீசெய்த தவத்தினுஞ்சிறந்த தொன்றில்லை ! நீ மகிழ்வெய்து மாறுநாளைத்தினம் தேவர்பெருமானும் தேவர்களும் அருச்சுனனைப் புடைசூழ்ந்து நீயிருக்குமிடத்திற்குவருவார்கள். அப்பேராற்றலுடைய அருச்சுனனால் மண்ணுலகியாவுமுன்னதேயாகும். நீ எவ்வளவும் மனம்வருந்தாதையென்று திடங்கூறி யாவருக்கும் போக விடைகொடுத்தான். அவ்வாறு குபேரன் விடைதந்தபின் வீமன் அவன்பாதத்தில்வீழ்ந்து தன் சென்னியுறப் பணிந்து நின்று அளகைநகர்க்கிறைவனே ! உன்பெருமையை யறியாது சிறுவனாகிய யான் சற்றுமுறைபலாதனவற்றைச் செய்துவிட்டேனாதலால் யான் அறியாமற்செய்தபிழையையோர்கிபமாகக்கொள்ளாம லிருக்கவேண்டுகின்றேனென்றான். அவ்வாறு பணிந்துகூறிய வீமனை அளகைக்கிறைவன் ஆலிங்கனஞ்செய்துமிக்கதிறலையுடைய வீமசேனா ! வருகுவது தானேவரும்,நீ செய்தகுற்றத்தை எவ்வளவும் மனத்திலெண்ணேன், நீ மனங் கவலற்கவென்று பல ஆசிகூறி திவ்யகதைகளையும் அம்புப்பட்டிலையுங்கொடுத்துதவி முஷ்டிநிலையையுங்கற்பித்தான். பின்பு தம்பியிருவரும் குபேரனடியில் வீழ்ந்து வணங்கி பலஆசிகூறப்பெற்றனர். பாஞ்சாலியோவெனின் குபேரன் மனைவிதாளில் வீழ்ந்துவணங்கி அவளால் பல ஆசிகூறப்பெற்றதுமல்லாமல் பல அணிமணிப் பணிகளும் ஆடையாபரணங்களும் பெற்றாள். பின்பு கடோற்கஜன் குபேரன்தாளில் வீழ்ந்துவணங்கி அவனா லரக்கரணியும் கடக கங்கண முதலியவைகளையு மாசியையும் பெற்றான்.

இவ்வாறு யாவராலும் புகழப்பெற்ற குபேரனிடம் விடைபெற்றபின் பாண்டுபுத்திரர் நால்வரும் கொடிபோன்ற சிற்றிடையையுடைய பாஞ்சாலியும், கடோற்கஜனது அலகைபூட்டிய தேரிலேறி ஆகாயத்திலெழும்பிச் செல்கையில் வழியிலுள்ள வீமனால்முடிந்த பலகோடி யரக்கரையும் அவர்களுடலினின் றெழுகிய குருதிநீர் ஆறுபோற் பெருகுவதையுங் கண்ட தருமராச

னும் மற்றையோரும் மனநொந்து அதைவிட்டகன்று அளகையா நகரத்தின் செழிப்பையும் அண்டமுகட்டை யளாவிநிற்கும் கோபுரச் சிகரங்களையும் சோலைகளையும் சாலைகளையுங்கண்டு களித்து அவைகளையுங் கடந்துசென்று நந்திசேனனென்னும் முனிவராச்சிரமத்தைக்கண்டு தேரைப்பூமியிலிறக்கி அம்முனிவர்பெருமானைக்கண்டு யாவருமவர்செய்யதாளில் விழ்ந்துவணங்கி நிற்க, அம்முனிவர் பல ஆசிகூறித் தருமராசனை நோக்கி நீங்கள் யாவரு மிங்குவந்த காரணமென்னவென்று வினவினர். அதற்குத் தருமராசன், வீமன் தன்னனுமதியில்லாமலே குபேரனாட்டிற்குச்சென்று பல்கோடி யரக்கரை முடித்ததையும் தானதற்காகத்தேடிச்சென்று அங்கழைத்துவந்ததையும்முற்றுங்கூறி வீமனுற்றலையுங்கூறினன். நந்திசேனமுனிவர் வீமனைநோக்கி நீயேடுழிவாழக்கடவை; பெரியோர் சொற்கேட்டொழுகுவதேசிறியோர்கடமை; அதுஎன்றும் நன்மையேபயக்கும்; நீஉன்தமையன்சொற்கேட் டொழுகாமல் உன்மனம்போல் நடப்பதென்றுமடாதகாரியம். காரணமில்லாமலே நல்லோரைப் பகைத்துநிற்பது என்றும் கேட்டைத்தருமே யல்லது நன்மையைப்பயக்காது. உன் தமையன் மனம்வருந்த ஓர் பேதைசொற்கேட்டு, எண்ணிலாச் சேனைகளையும் பொற்குவியலையும்பெற்றதன்றி இறைவனுக்குநண்பனுமான அளகேசன்திருநாட்டில் தன்னந்தனியனாய்ச்சென்று போர்செய்வதுந் தகுதியோ; இனியேனும் இவ்வகைக்குணங்களை யொழித்துவிடென்று புத்திகூறிபலநீதிகளையுமெடுத்துக்கூறினர். இது நிற்க; பின்பு தருமராசன் கடோற்கஜனை நோக்கி நீயோ முன் கராவின்வாய்ப்பட்ட யானை ஆதிமூலமேயென் றரற்றியபோது பொங்கராவணை துறந்துவந்து காத்தருளிய புனிதனேபோல் இன்று உன்னை நான் நினைத்தபோதே என்முன்வந்து உன்தந்தையுயிரைக் காத்தனையே! புத்திரரில் நீயே சிறந்தவன் என்று பலவாறுபுகழ்ந்து தனக்குக் குபேரனுதவிய மதிபோன்ற முத்துக்கள்பதித்த வெண்குடையையும் நவமணிகளையும் துகிலையும் என்றும் அமரில்வெற்றியடைகின்ற படைகளையுங்கொடுத் துதவி பலஆசியுங்கூறி மிக்க அன்பொடு விடைகொடுத்தனுப்பினன். கடோற்கஜன் ஐவரையும் வலம் வந்துபணிந்து தன் னலகைபூட்டிய தேரின்மேலேறி ஓர்கணத்தே இடும்பாவனமெய்தினன்.

அருச்சுனன் பூலோகத்துக்கு வருதல்.

இவ்வா றிவர்களிருக்கையில், இந்திரனுலகிலிருக்கும் அருச்சுனன் பரத நூலில் மிகத்தேர்ச்சியடைந்தபின் சகோதரர்களைப் பார்க்கவேண்டுமென் றெண்ணி இந்திரனைப்பணிந்து விடைகேட்க, அவனு மவ்வாறே யாகுகவென்று மிக்க மனக்களிப்புடன் தேர்ப்பாகனாகிய மாதலியையழைத்து ஆயிரம் பரிகள்பூட்டி இரதத்தைக்கொண்டுவரும்படியாஞ்ஞைசெய்துதான் ஆடையாலங்கிருதனாய் நான்குதந்தத்தையுடைய மிக்கவெண்மையான யானைமேலெழுந்தருளினன். அருச்சுனனோவெனின் இந்திராணி தாளில்விழ்ந்துவணங்கிவிடைபெற்றுத் தேவர்கூட்டங்கள் தன்னைப்புடைசூழ இரதத்திலேறி மாதலியைத் தேரை விரைவாக நடத்தச்செய்து யாவரும் இமைப்போதிற் பாண்டவரிருக்

கும் ஈத்திசேனமுனிவ ராச்சிரமமடைந்து தருமர் முதலிய யாவரையுங் கண்டார்கள். அருச்சுனன் தேரைவிட்டிழிந்து தருமருடைய அழகிய தாளில் வீழ்ந்துவணங்கினன். தருமராசனேவெனின் தான்கொண்டகளிப்புக்கெல்லையில்லாமல் அருச்சுனனைத் தனது துணைக்கரத்தாலெடுத்துத் தன்னகன்ற மார்புறத்தழுவிமுகத்துடன் முகம்வைத்தணைத்து முத்தமிட்டுப் பல ஆசியுங்கூறி இந்திரன் முதலிய தேவர்கள் நின்றிருப்பதைக்கண்டு ஆனந்தங்கொண்டு இந்திரன் பொற்றாளில்வீழ்ந்து வணங்கினன். அவ்வாறு வணங்கிய யுதிட்டிரனைத்தன்கரத்தாற்பற்றியெடுத்துத் தன்மார்புறத்தழுவித் தேவமொழியால் பலவாசியுங்கூறி அருச்சுனனல் தானடைந்த நன்மைகளையெல்லாமெடுத்துக் கூறினன். பின்புதருமராசன் தேவர்களைப்பணிந்துநிற்க, தேவர்கள் யாவரும் வாழ்த்தினர்கள். தருமராசன் இந்திரனை நோக்கித் தேவர்பெருமானே! என்னன்புக்குமுயிர்க்குமுரிய இவ்வர்ச்சுனன் இந்நாள்வரையும் தங்களிடத்திலிருக்கப்பெற்ற பாக்கியத்தினும் சிறந்ததொன்றில்லையே! இவனேநெடுநாளென்னை விட்டுப்பிரிந்திருந்தமையாற் சேதாவைநீத்த கன்றேபோற்றுக்கித்திருந்தேன்; இன்றுஅத்துயரினின்றுமீண்டேன், இவ்வருச்சுனனல்யாராலும்காணப்பெறாத உங்களையும் காணப்பெற்றேன்! யான்செய்த பாக்கியத்தினுஞ்சிறந்ததொன்றில்லை. தேவர்கட்கரசே! யென்று இந்திரனைப்பலவாறுபுகழ்ந்துநின்றான். இந்திரன் தருமராசனைநோக்கி கடல்புடைசூழ்ந்தகாசினியெங்கும் சத்தியத்தை நிலைநாட்டிய அரசர்க்கரசனே! இன்னுஞ் சிலநாளி லுமது மாற்றலரைப் பொருது வென்றுமண்ணாளப் பெறுவீர்கள். அதற்கருச்சுனனேருவனே சாலுமென்று கூறி, பாஞ்சாலியையும் நகுல சகதேவர்களையும் வீமனையும்வாழ்த்தி தவசிகாமணியாகிய உரோமசமுனிவரை யழைத்துக்கொண்டுயாவரிடத்தும்விடைபெற்றுப்பொன்னுலகடைந்தான். பின்பு யுதிட்டிரர் அருச்சுனனைநோக்கி கற்றவர் புகழு மருச்சுனா! நீ என்னைவிட்டுப்பிரிந்து தவத்திற்குச்சென்று இறைவனிடத்திற் பாசுபதாஸ்திரம் பெற்றதையும் பின்பு அமராவதி சென்று இந்நாளளவுமிருந்து வந்ததற்குக் காரணமும் விரிவா யெடுத்துரைக்க வேண்டுமென்று கேட்க, அருச்சுனனும் ஆதியோடந்தமா யெடுத்துக்கூற யாவருங்கேட்டு ஆனந்தசாகரத்திற் படிந்துகிடந்தார்கள். இது நிற்க;

தெய்வலோகமாண்ட நகுஷனென்பான் பாம்பாகவிருந்து வீமனைவிழுங்கிச் சாபநீங்கிய கதை.

அருச்சுனனுடைய வரலாற்றையெல்லாங்கேட்டுயாவரும் ஆனந்தங்கொண்டுதங்களை மறந்திருக்குஞ் சமயத்தில்வீமன்முன்போல்யாவருடனுஞ்சொல்லாமலே வனத்திற்சென்று அங்குள்ள மிருகக்கூட்டங்களை யெல்லாம் வதைத்து வரைபோற்குவித்து மிக்க களிப்போடு விளையாடிக்கொண் டிருக்கையில் வரைபோ லுடல்பெருத்து ஓர்யோசனையளவு நீண்டுள்ள நகுஷனென்னு மரவம், வீமனது ஒப்பற்ற கரத்தையும் பதத்தையும் பிணித்து விழுங்கத் தொடங்குகையில் வீமனுள்ள நடுநடுங்கி மெய்சோர்ந்து அவ்வரவத்தின் பிணிப்பை நீக்கிக்கொள்வதற்குச் சக்தியில்லாமலே அசக்தனுய் நமதுவலிமை இவ்

வரவத்தினிடத்திற் பயன்படவில்லையேயென்றேங்கிச் சற்றுலோசித்து மனே திடங்கொண்டு அவ்வரவத்தை நோக்கி நீயார்? நான் உனக்கெக்காலத்தும் தீங்குசெய்தறியேனே! வீணே என்னை இவ்வாறு வருத்துகின்றதுந் தகுதி யோவென்று வேண்டிகின்றான். அவ்வரவம் வீமனை நோக்கி அடாசிறுவனே! இன்னு மோர்கணத்தி லுயிரிழக்கும் நீ என்னை யாரென்றுகேட்கும் நீயார்? உன்பெயரென்னை? கூறென்று கேட்க, வீமன் நற்குணமுடைய அரவமே, நானே சந்திரவமிசத்திலுதித்த பாண்டுபூபதியின் புதல்வர்களிற் சிரேட்டராகிய தருமராசனுக் கிளையோன், வாயுவின் புத்திரன், என்பேர்வீமன்; துரியோதனனதி யர்செய்த கொடுமையால் காட்டேகதியாக வந்திருக்கின்றேம்என்று வணக்கத் துடன்கூறலும்; அரவம் நகைத்து மிக்ககோபத்துடன்தன் சிரத்தையசைத்து 'தேடிச்சென்றபொருள் காலிலகப்பட்டதுபோல' நெடுநாள் உன்னை விழுங்க வென்றெண்ணியிருந்த என் விரதம் இன்றுதான் நிறைவேறிற்று. உனக் கிளை யோனாகிய அர்ச்சுனனெங்கே? அவனும் என்வாய்க்கே யிரையாகப்போகின்றா னென்றுருத்துப்பின்னு மிவ்வாறுசொல்லத்தொடங்கிற்று. ஆதியிலுன் தந்தை யாகிய வாயுதேவன் என்தந்தையாகிய ஆதிசேஷனை மகாமேருவில் வளைந்து கொண்டுநெடும்போர்புரிந்து அவமானஞ்செய்தான். விசயன்காண்டவதகனஞ் செய்யும்போது எமதுகூட்டத்தாரி லொருவரையும் விடாமல் அக்கினிக்கிரை யாக்கினான். அம்மட்டேயோ! தக்ஷகன் பெண்சாதியையும் தலையையறுத்து அவள்புத்திரனாகிய அச்சுவசேன னென்பானுடலையுந் துணித்துவருத்தினான். உங்கள் வமிசத்தலைவனாகிய சந்திரன் முற்காலத்தில் எமதுமுன்னோர் அமுத முண்ண விச்சித்து தேவரோபோ லுருக்கொண்டு செல்ல அச்சூழ்ச்சியை யறிந்த தான் ஆலிலைமேற் கண்வளரும் அருமாதவனுக் கறிவிக்க அதனா லவ் விஷ்ணுமூர்த்தி மிக்க கோபங்கொண்டு அவர்களுடைய சிரங்கள் பிளவுபடும் படி சட்டுவத்தாற் புடைத்தான். அப்பகை இன்றளவுந் தீரவே யில்லை. துரியோதனனோ வெனின் எமக்குநண்பன்; அவனுக்கு வேண்டு முதவிசெய் வோம்! அவன் முடியிலுங் கொடியிலும் இடைவிடாமல் வீற்றிருக்கும்படி எங்களை வேண்டிக்கொண்டமையால் அவ்வாறே வீற்றிருக்கின்றேம்! இது பற்றியே அவனும் அரவக் கொடியோனெனப் பெயர்வாய்ந் திருக்கின்றான். எனக்கும் உனது நண்பர்களுக்கும் நீங்கள் பகைவராதலால் இப்போதுன்னை விழுங்கிப் பின்னவ் வருச்சுனனையும் விழுங்கி என் பகை தீர்வேனென்று சொல்ல வீமன் மெய்ந்நடுங்கித் தன்னை மறந்து இறைவனைச் சிந்தித் திருந் தான். இது கிடக்க;

இங்கு தருமராசன் நந்திசேன ராச்சிரமத்திலிருந்து அர்ச்சுனன் நிவாத கவச காலகேயர்களை வெற்றிகொண்ட திறத்தைக்கேட் டானந்தங்கொண்டு தன் பக்கலிலிருந்த வீமனைக் காணாமல் தன்முன் நின்றிருப்பவர்களை நோக்கி வீம னெங்குசென்றனனென்று வினவ, அவர்க ளவன் இக்காட்டைநோக்கிச் சென்றனனென்று கூறலும் மனந்திடுக்கிட்டு வீமனது நீண்ட அடிச்சுவட் டைப் பற்றியேசென்று அடர்ந்த காட்டினுட்புகுந்து நான்குதிக்கும் நோக்கிப் பார்த்தும் வீமனைக்காணாமல் மிக்கமனம்வருந்தி வீம வீமவென்றுகூவித்தேடி

தந்திரிகையில் ஓர் புறத்தில் மந்தரகிரியை யொத்த பருமனுடைய அரவின் வாயிற் பட்டிருக்கும் வீமனைக்கண்டு துயரமென்னு மூவர்க்கடலிற்படிந்து மெய்சோர்ந்து இறைவனை நினைத்துப்புலம்பி இனி என்செய்வேன்! என் னரியதம்பி இவ்வரவத்தின் வாயிற்பட்டிட வுயிர்நீத்தாற் பின்னுமென்னுயிர் பெற்றிருப்பேனோ! முக்கட்பெருமானே! முழுமுதற்பரமே! உமையொருபாகா! உம்பர்கட்கரசே! நீலமேனியனே! நின்மலமூர்த்தி! இதுவு முன்பெருமைக் கழகாமோ! இவ்வரவத்தினின்றுங்காத்தருளவேண்டும், காலனைக்காய்ந்தானே! கண்மூன்றுடையானே! என்றிவ்வாறு துதித்து அரவத்தைக்கிட்டி அதைமும் முறை வலம்வந்து நாகர்க்கரசே! இன்று நீவிழுங்கு மச்சிறுவன் பிழைபொறுத் தவனுயிர் பிழைக்கச்செய்யவேண்டும்; அப்படிச்செய்வையேயாயின் அவனால் காடோறு முனக்குநல்லுணவளிக்கச்செய்வேன்; ஈதுண்மையுண்மையென்று மும்முறைகூறிப் பலவா றவ்வரவத்தைத் துதித்து நின்றான். அரவமோ வெனின் அரசன்மேல் மிக்க கோபங்கொண்டுநோக்கி என்னைவருத்தும் பசிப் பிணிக்கிரையா மிவன்மேல் உனக்கிவ்வளவு பிரிவாற்றாமைவரக் காரணமென் ன? நீ யாவன்? உன் வரலாற்றைக் கூறென்றது. அதற்குத் தருமராசன், நான் குருகுலத்தரசன், என்பேர் தருமராசன், உன்வாயிற்சிக்கியுள்ளவன் என்னுட ன்பிறந்தோன், அவன்பேர் வீமன், துரியோதனன் எம்பாற்செய்த சர்ப்பனைக் கிக்கதியடைந் திக்காட்டில்வாழ்கின்றோமென்று கூறினான். அதைக்கேட்ட அவ்வரவம் கோவெனக் கதறியழுது கண்ணிருகுத்து அவிவிற்சிறந்த தரும பூபதியே! யென்றுபுகழ்ந்துதான் அரியயாகஞ்செய்து தேவேந்திரபட்டம்பொ றுத்திருந்ததையும் தான்செய்த குற்றத்தால் அகத்தியமுனிவரால் தனக்கிச் சாபம் நேர்ந்ததையுங்கூறி நீசொல்லும் நீதிமொழிகளைக்கேட்டு உன்னால் இச் சாபநீங்குமென்றுமுனிவர்கூறினரென்று தன்வரலாற்றைமுற்றுங்கூறி என்னை இச்சாபத்தினின்று நீக்கியருளி உன்தம்பியையு மழைத்தேகென்றது. அதைக் கேட்ட தருமராசன், உன்காலவழிவந்த சிற்றறிவுடைய நாயேன் நீதியினள வித்திறத்ததென் றெடுத்துக்கூறவல்லேனோ! ஆயினுமென் சிற்றறிவுக்கெட்டின வளவிற் சொல்லுகின்றேன் கேளென்றான். அதற்கு நகுஷனாகிய அரவம் கடல்புடை சூழ்ந்த இக்காசினியி லுற்பவிக்கும் பிறவியிற் சிறந்தது எது? என்றதற்கு, தருமராசன் அந்நிமுத லெரும்பீறுயுள்ள சிவராசிகளுள் மானி டப்பிறவியே சிறந்ததென்றான். அதைக்கேட்ட அரவம் அதிலு மிக்கதுயாது? என, தருமன் பிராமணனென ; அவன் எத்தொழில் பூண்டிருக்கவேண்டுமெ ன்ன? ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் ஆகிய அறு தொழிலும், சத்தியம், சௌசம், நன்னெறி, பொறுமை, நற்றவமுதலிய இக்கு ணங்களு முடையனா யிருக்கவேண்டுமென்றான் அதற் கரவம் அவன் எப்பொ ருளைப் பெறவேண்டுமென்ன, காமம் குரோத லோப மோக மத மாச்சரியம் ஆகிய இக்குணங்களை நீக்கி நடப்பதே அவன்பெறும் பொருளென்று தரும ராசன்கூற, அரவம் மேற்சொல்லிய குணங்களிலொன்று குறைவுபடுவானேயா னால் அவனை என்னவென்று மதிக்கலாமென்றது. அதற் கரசன் அக்குணங் களி லொன்றுகுறைந்தாலும் அவனதுபிராமணத்வமிழந்து சூத்திரத்வமடை

வனென்றான். இக்குணங்கள் யாவுங்குறைவின்றி சூத்திரனிடத்திருக்குமாறல் அவனைப் பிராமணனென்று சொல்லலாமோவென்று அரவம்வினவ, அதற்குக் குருகுலத்தரசன் ஏந்தலே! முன்னே வருணாச்சிரமமில்லாமலிருந்தன; பின்பு சூரியகுலத்தில்மனுவென்னுமரசனுதித்துச்சகலகலைகல்லவனாய் வேதவிதியை யனுசரித்து "விஞ்ஞானேஸ்வரியம்" என்றோர் நூல்விதித்தான்; அதனுள்ளடங்கியவை ஒழுக்கம், சத்தியம், சௌசம், நற்குணம், அருள், தருமம் ஆகிய இக்குணங்கள் யாவும் சூத்திரனிடத்தி லுண்டாயிருக்குமானால் அவனைச் சற்சூத்திரனென்பதே யல்லாமல் பிராமணனென்று சொல்லத்தகாதென்று கூறுகின்றது என்றான். அதைக்கேட்ட அரவம் மனங்களித்து அரசர்க்கரசனே? இப்போது நீயெடுத்துக்கூறிய குணங்கள்யாவும் சூத்திரனுக் கமைந்தேயிருந்தால் பேரின்ப வீடடைவனோவென்றது, அதற்கரசன் அக்குணங்கள் யாவும் பெற்றிருப்பனேல் அவனுக்கு நற்பதவியே யல்லது முத்திவீடில்லையே யென்றான். அதற் கரவம் பதவியாவதியாது? அதை விளங்கச்சொல்லவேண்டு மென்றது. அதற்குத் தருமராசன் இந்திரபதவி, குபேரபதவி, சந்திரபதவி, யமபதவி என்று சொல்லு மிப்பதவிகளி லவரவர்கள்செய்யும் நற்கருமங்களுக்குத் தக்கவாறடைவர். அந்நெறியில்இலேசமுங்குறையாமலிருந்துஅப்பிறவிநீத்துப்பின்பு வைசிய குலத்துதித்து அதிலுமேம்பட்டு க்ஷத்திரியகுலத்துதித்து நெறிபிறழாதிருப்பனேல் பின்பு பிராமணனாகப்பிறந்து அதிலும் மறைநெறி பிறழாதிருப்பனேயாயின் முத்திவீடடைவான், எப்பிறப்பிலாயினும் மேற்சொல்லிய அளவிற்குக் குறைந்தால் முன்னைய நிலைமைக்கும் தாழ்வான கதியிற் கொண்டு போய்ச்சேர்க்கும் என்றான். அதற் கவ்வரவம் நற்குணமுடையசூத்திரனுக்கு மோக்ஷங்கிடைக்கும் விதத்தையறிந்தேன், பிராமணனிடத்திலக்குணங்குன்றுமானால் சூத்திரனாவானென்றனையே! அவன்போகுங்கதியென்னவென்று வினவியது. பிராமணன் முறைபிறழ்ந்து சூத்திரனானால் அப்பிறவியிலேயே நன்னெறிகொண்டொழுகிப் பின்பு பிராமணத்வத்தைப்பெற்று முத்திவீடெய்துவனென்று கூறினர். இவ்வா றரவம் தருமராசனால் தன் சந்தேகமறத்தெளிந்து வீமனை விடுத்துச் சாபநீங்கி முன்னைய வடிவங்கொண்டுவிளங்கி தருமராசனையும் வீமனையும் தன் மார்புறத்தழுவி ஓர்குலத்தில் சற்புத்திரன்பிறந்தால் அவனால் ஈரேழு தலைமுறையு மீடேறுமென்று பெரியோர் சொல்வர், அதை யுன்னிடத்தே கண்டேன், உலகவரிகழும் படிவங்கொண்டிருந்த என்னை அச்சாபத்தினின்றும் நீக்கியருளிய தாதாவே! உனக்கு யானென்ன கைம்மாறு செய்வேன் என்று தருமராசனைப் பலவாறு புகழ்ந்து வீமனைநோக்கி நீநெடிது வாழக்கடவையென்று பல ஆசிகூறி யான் அரவாயிருந்தபோதுள்ள வலிமை யாவு முன்னைச்சேரக்கடவது, உமது பகைவராகிய துரியோதனாதியர் நூற்றுவரு முன்னால் முடிவரென்றுகூறி நகுஷன் தேவலோகஞ்சென்றான். பின்பு தருமராசன் வீமனை யழைத்துக்கொண்டு நந்திசேனராச்சிரமமடைந்து நகுஷன் சாபநீங்கியதைக்கூறிச் சுகமேவியிருந்தனர்.

மார்க்கண்டேயமுனிவர் தருமராசனிடம் வருதல்.

இவ்வாறு பாண்டவர்கள் நந்திசேன ராச்சிரமத்தில் நெடுநாளிருந்து பதினான்மூமாண்டின் தொடக்கத்தில் அவ்விடம்விட்டகன்று மீண்டுங்காட்டிற் புகுந்து அங்குள்ள தண்ணிய சோலைகளிற்சிறிதுநாள்வசித்து நறும்புனலாடிக் கந்தமூல பலாதிகளைப் புசித்துப் பின்பு சரஸ்வதிதீரத்தை யடைந்து அம்மா நதியில் யாவரும்படிந்து அதைவிட்டகன்று முன்வசித்திருந்த காமியவன மடைந்து அவ்வனத்தில் வசித்திருக்குநாளில் கள்ளமா மாயப்பிரான் சத்திய பாமை சமேதராய்த் தருமராசனிருக்கு மிடத்திற் கெழுந்தருளினர். அவர் வரவைக்கண்ட தருமர் முதலிய யாவரும் எதிர்சென்றழைத்துவந்து அவனைப் பலவாறுதுதித்து உபசரித்தார்கள். பாஞ்சாலி சத்தியபாமையின் கரத்தைப் பிடித்தழைத்துத் தன் பன்னசாலையிற் கொண்டுசென்று உபசரித்தாள். தருமராசன் கண்ணபிரானுக்குக் காட்டில்நடந்த செய்தி யாவுங்கூறினன். இதைக் கேட்ட ஜநார்த்தனன் மனங்களித்துத் தன் மைத்துனனாகிய விசயனைத் தன் மார்புறத்தழுவிப் புகழ்ந்தான்.

இவர்க ளிவ்வாறிருக்க எந்நாளு மீறிலாவரம்பெற்ற மார்க்கண்டேயர் என்னிலா முனிவர் குழாங்களுடனே ஐவரிருக்குமிடமேவந்தார். அவர் வரவைக்கண்ட தருமர் முதலிய யாவரு மெதிர்சென்று மிக்க பத்தியோடழைத்துவந் துபசரித் தாசனமளித்தார்கள். அவர்கள் இறைவனை யெளிதிற்கண்ட மார்க்கண்டேயராலும்அவருடன்வந்தமுனிவர்களாலும்பலஆசிகூறப்பெற்றார்கள். தருமராசன் மார்க்கண்டேயரைநோக்கி அரிய மறைகளும் காணுதற்கரிய முழுமுதற்கடவுளைத் தேவரீர் எளிதிற்கண்டு என்று மீறிலாவரத்தைப்பெற்ற உமதுமலரினு மெல்லியதிருவடிசிவப்பநாய்க்குங்கடையேனான அடியேனிருக்குந்திசையைநோக்கி எழுந்தருளியதற்கு நாயேன் என்னமாதவஞ்செய்தேன்! இன்னும் யான்பெறும்பே றென்றுளதோவென்று புளகாங்கிதங்கொண்டு கண்களில் நீரரும்ப நின்றான். அவ்வாறு நின்ற தருமராசனைச் சொல்லுதற்கரிய பத்தியிற்சிறந்த மார்க்கண்டேயர் நோக்கி இவ்வாறு சொல்லலாயினர். நற்குணம் நன்னெறி வன்மை அறிவுடைமை தானம் தவம் முதலியவைகளிற் சிறந்த அரசர்க்கரசனான தருமபூபதியே! ஊழ்வலியால் உனக் கிவ்வகைத் துன்பம் நேரிட்டதையறிந்து உன்னையும் தம்பிமார்களையும் அருந்ததியை யொத்த கற்பிற்சிறந்த துரௌபதியையும் காணவேண்டியே யிங்குவந்தேன்; ஒருவனுக்குக் கல்விச்செல்வமும் கேள்விச்செல்வமும் மேம்பட்டிருப்பினும் ஊழ்வந்தடைந்தால் அவை அதன்முன் நிற்பதேயரிது. இது பற்றியன்றோ பெரியாரும் "நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்த-னுண்மை யறிவே மிகும்." என்றும்; "நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு - நல்லவாஞ் செல்வஞ் செயற்கு." எனவும் பணித்திருக்கின்றனர். ஊழின்திறத்தை யாவரோ வெல்ல வல்லார். ஒருவனுக்குப் பெருமையுஞ் சிறுமையு மொருவழிநில்லா தாதலால், உற்றதையனுபவித்தே தீரவேண்டுமேயல்லது அதை எண்ணியெண்ணி வருந்துவதிற் பயனில்லை யென்று இனியசொற் கூறிப் பின்னுஞ் சொல்லுகின்றார்.

யாவும்வல்ல இக்கண்ணபிரான்உங்களுக்குக்கரதலாமலகம்போல்கிடைத்திருக்க மாற்றலர் கொடுஞ்செய்கையும் உம்மை நோகச்செய்யுமோ ? செயற்கரியவெல்லாஞ் செய்யவல்லானும் உமக்கு மைத்துனனுவா னுயிற்றே. அவனினுஞ் சிறந்த பொருளொன்றுள்ளதோ? அண்டினவரை யாதரிக்கும் இக்கண்ணன் பெருமையை யாவரோ கூறவல்லாரென்று சொல்ல,யுதிட்டிரர்அவர் செய்யதாளில் வீழ்ந்து எட்டுறுப்புநிலமுறப்பணிந்து நின்று சுவாமி நீருண்ட கார்மேகம்போன்ற படிவத்தையுடைய கண்ணபிரானருளும், என்று மீறிலா வரத்தையும்பெற்ற தேவரீர் கிருபையுமிருக்க எமக்கியாது குறைநேரும்,எனக் கோதுரியோதனுதியர்மேற்பகையென்பதேயில்லை. அவன்சற்றுமெண்ணுமலே பெண்பாலைச் சபையிலிழுத்துப் பலவாறு துன்பித்தனன் ; அதனு லவன்மேற் றம்பியர் மிக்க சினங்கொண்டேயிருக்கின்றனர். யானதைச் சற்று மனத்திற் கருதவேயில்லை. ஏனெனின், நான் நகரத்திற்றுனே வசித்திருப்பனேயானுல் காணவொண்ணுத் தேவரீரையும்,தவத்திற்சிறந்த முனிவர்களுடையதெரிசனத்தையுங் காணப்பெறுவனே ! இவ்வளவேயன்றே,ஆழ்கடலிற் கண்வளருமாமாயனும், பங்கயத்தில் வீற்றிருக்கும் பிரமனும், காணவொண்ணுப்பரமனை அருச்சுனன் கண்டு பாசுபதாஸ்திரம்பெற்றுப் பின் எந்நாளும் பெறுதற்கரிய இந்திரனுலகிற்சென்று அவனடைந்த சிறப்பையுஞ் சொல்லவல்லதோ ! இஃதெல்லாம் அத்துரியோதனன் செய்கையாலன்றே காணப்பெற்றேன் ; ஆதலாலவன் மேலெனக்கெவ்வளவும் கோபமே யில்லை,ஆயினும்இம்மொழியைத் தம்பியரிடத்துரையேனென்றுன். அதைக்கேட்ட மார்க்கண்டேயர் புன்னகை புரிந்துநீகூறியது மொருவா றேற்றுக்கொள்ளத்தக்கதே, ஆயினு முன்போற் குணத்திற்சிறந்தா ரிவ்வகிலத்திராரென்றே புகழ்ந்து பல வாசிகூறினர். கருணைக்கடலாகிய தருமராசன் மீண்டு மவரடியில்வீழ்ந்து பணிந்து அடியேனுய்யுமாறு யாதேனு மோர்சரித்திரந் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென் றிறைஞ்சி நின்றுன்.

இவர்களிவ்வா றிருக்கையில் அவ்வனத் துறையுந் தவத்திற் சிறந்த தௌமிய முனிவர் மார்க்கண்டேயரைக்கண்டு மும்முறை வலம்வந்துபணிந்து ஈறிலா வாழ்வைப்பெற்ற வெந்தையே ! தேவரீர் கருணைகரக் கடவுளருள் பெற்றபின் எத்தனை கற்பகாலத்தைக் கண்டிருப்பீர், அதை அடியேனுமுய்யுமாறு திருவாய் மலர்ந்தருளக் கோருகிறேனென்றுர். அக்காலையில் தவத்திற் சிறந்த மாமுனிவராகிய நாரதரு மங்கெழுந்தருளினர். அவரையும் யாவருமெதிர் சென்றழைத் துபசரித் தாசனமளித்தனர். அம்முனிவர் தருமராசனை நோக்கி இவ்வாறு சொல்வாராயினர். அரசர்க் கரசனே ! நீ செய்த தவத்தினுஞ் சிறந்த தொன்றில்லை. ஆணவத்தை யறத்தடிந்து நன்னெறி பற்றியொழுகி உண்மைப் பொருளைக்கண்டு தெளிந்து, வேறுவிடயத்திற் சிந்தை செல்லா வண்ணம் மிக்க பத்தியோடிருந்து எண்டிசையு மதிரும்படி நெருங்கியகாலனுக்கு மஞ்சாமற் காணுதற்கரிய எம்மையாளும் பரமசிவத்தைத் தரிசனமாகக்கண்டு இறத்தலென்னுமிகழ்சொலகற்றி என்று மழியாவரம்பெற்ற மார்க்கண்டேய மாமுனிவரையும், தேவர்பெருமானும் தவத்திற்சிறந்த முனி

வர்களும் தேவர்களும் யோகியரும் எந்நாளும் போற்றத்தக்க எல்லாம்வல்ல கண்ணபிரானையும் காணப்பெற்றேன் ; இப்பாக்கியத்தினுஞ் சிறந்ததொன்றுளதோ! அக்கண்ணபிரான் பெருமையை யென்னொரு நாவாற் சொல்ல வல்லேனோ! ஓர்நாளிவரைக் காணவேண்டித் துவாரகைக்குச்சென்று மிக்க உன்னதமான அரண்மனைகளையும் கைதேர்ந்தசிற்பிகள் தீட்டிய ஓவியத்தி னழகையும் முறையேபார்த்து அவ்வரண்மனை யெங்குந்தேடியுங் காணாமல் அதைவிட்டகன்று அந்நாடெங்குந் தேடிக்காணாமல் மனம்வருந்திச் செல்கையில் ஓரரண்மனையி லிருப்பதைக்கண்டு மிக்க வானந்தங்கொண்டு தேடித்திரிந்த வருத்தந்தீர இவருடன் நெடுநேரம் வார்த்தை யாடிக்கொண்டிருந்து பின்பு விடைபெற்றகன்று நெடுந்தூரஞ் செல்கையில் மீண்டுமிவ ரென்முன் வரக்கண்டு இப்போதங்கு நாமிருவரும் வார்த்தை யாடிக்கொண்டிருந்து உம்மைவிட்டகன்று நெடுந்தூரம் வந்தேனே ; நீரிங்கெப்படி வந்தீரென்று வினவினேன். அதற்கிவ ரிங்குமிருக்கின்றேனென்றார். பின்பிவரை விட்டுப்பிரிந்து நெடுந்தூரஞ்செல்கையில் அங்கோரிடத்தில் தவத்திற்சிறந்த இம்மார்க்கண்டேயருட னிருக்கக்கண் டதிசயங்கொண்டு வணங்கி எங்கு நிறைந்துள்ள உத்தமனென்றே கொண்டாடினேன். இத்தகைய வாழ்வையுடைய ஜனார்த்தனனை நண்பனாகப் பெற்றுள்ள உமக்கு யாதுகுறையுள்ளதென்று புகழ்ந்து, யாவரிடத்தும் விடைபெற்றுச் சென்றார்.

பின்பு தருமராசன் மார்க்கண்டேயமுனிவரை நோக்கி சுவாமீ! தருமத்தின் பாகுபாட்டையும், உண்மையா மொழுக்கத்தாலடையும் பயனையும், வேதியர் கடைப்பிடித் தொழுகவேண்டிய முறைமையையும், க்ஷத்திரிய ரொழுகவேண்டிய கடன்மையையும் அறத்தாலடையும் பயனையும் நாயேற்கு சந்தேகமறத் தெரிவிக்கவேண்டுமென் றிறைஞ்சி நிற்க, மார்க்கண்டேயரும் இவ்வாறுசொல்லத்தொடங்கினர். எவ்வருணத்திற் பிறந்தாலும் காலம்வந்தழிந்து மீண்டு மீண்டு முற்பவித்தே வரும், இது தூலபூத சம்பந்த தேகவியற்கை. இத்தேகமெத்தனைவிதமாய் மாறினும் இருவினைப்பற்று நீங்கா, நல்வினை தீவினைகட்குத்தக்கவாறு அவ்வப்பயனை யனுபவித்தே தீரவேண்டும். இஃதல்லாமற் கருமத்தினாற் சாதிபேதமே யல்லது சனனத்தாற் சாதிபேதமில்லை. நற்குணம் நன்னெறி சாந்தம் இன்சொல் கருணை ஆகிய இவைகளை இயற்கையாகப் பெற்றுடையானெவனோ அவனே தேவருட் சிறந்தவனாவான். மேற்கூறிய வொழுக்கங்களிலும் சிறந்து பிரமஞானமும் பெற்றுடையானே வேதியன் ; அவனே இராப்பகலில்லா முத்திவீடடைவன். அந்நெறியிற் சிறிது தவறுவனேயானால் இழிகுலத்தோர்க்குங் கடைப்பட்டு நெடுநாள் நிரயத்துட்கிடந்து வருந்துவான். அவன் வசிக்கு நாடும் செழிப்பில்லாதிருக்கும். இதுபற்றியே பெரியாரும் "இந்திரன் பதங்கள் குன்று மிறையவர் பதங்கள் மாறு, மந்திர நிலைகள் பேரு மலிகடல் வறுமையாகும், சந்திரன் கதிரோன் சாயுந் தரணியிற் றேயமாளும், அந்தணர் கருமங் குன்றில் யாவரோ வாழ்வர் மண்ணில்." என்றார். மறையிற்கூறும் உண்மைநெறிபற்றி அவ்வழியே திரவியந்தேடி ஆதுலர்முதலிய சற்பாத்திரர்க்குதவி இகத்தில் நற்கீர்த்தியடைவோன் பரத்திலும்

நற்பதவியை யடைவான். இம்மையிற் பொய் கொலே களவு கட் காம முதலிய வைகளிலேயே புத்தியைச்செலுத்தி யாவராலு மிகழப்பட்டுப் பெரியோரை மதியாம லவமதித்துத்திரியும் கயவர்கள் மறுமையிற்கூறவொண்ணு நிரயத்தில் வீழ்ந்து வருந்துவர். இதற்கு நீயே போதுமான சான்ருயிருக்கின்றனே ! அஃதெப்படியெனின், உன் மனம்வருந்தச்செய்து இக்கதிக்குள்ளாக்கிய துரி யோதனுதியர்களைத் தவத்திற்சிறந்த முனிவர்களும், அவ னுட்டுள்ள குடிகள் முதலிய யாவரும் அக்கொடியோனே இகழ்கின்றனரென்பது யாவருக்குந் தெரிந்தவிஷயமே! குணமென்னுங் குன்றேறி நின்ற உன்னையோ வெனின் மறைநெறிவழாத வேதியர்களும் தவமேபெரிதெனவெண்ணிவாழும் முனிவர் களும் ஞானிகளும் மனிதருட்சிறந்த பூதேவர்களும்தேவர்பெருமானும் இன்னு மற்றுமுள்ளோரும் உன் னெறியைப்புகழ்ந்து போற்றுகின்றனரென்பதும் யாவ ருக்குக்குந் தெரிந்த விஷயமே யன்ருே! இதல்லாமல் அருந்தவ வுருவத் துரோமசமுனிவரும்நெடுநாள் உன்னைவிட்டகலாதிருந்து உன் மனங்கவலேயுரு வண்ணம் பற்பல நற்சரித்திரங்களேயுங் கூறிச்சென்றனரோ ! இம்மட்டே யன் றே ! எல்லாம் வல்லகள்ளமாமாயப்பிரானும் உன்னைவிட் டகலாதிருக்கின்ற னரோ, இங்கிப்போதுன்னே யாவரும் புகழ்வதுபோல மறுமையி லிதனினு மெண்மடங் கதிகமான புகழும்பெறுவை. ஆணவமலத்தாற் சிக்குண்டிருக்கும் துரியோதனனேவெனின் இப்போது யாவரு மிகழ்வதேபோல மறுமையிலும் நிரயத்துட்பட்டு நெடுநாள் துன்பத்தையே யனுபவிப்பான் ; சுருதியினெழுக் கத்தைக் கைவிடாது நடப்போர் எந்நாளுந்துன்பமில்லாமலே வாழ்வர் ; அவ் வுண்மைநிலேயைக் கடைப்பிடித் தொழுகுதலா லடையும் பயனைக் கூறு கின்றேனென்று சொல்லத்தொடங்கினர்.

முன்னுளில் மண்ணுண்ட அரசர்களில் மிகச்சிறந்த அயனென்னு மரசன் மறைநெறி பிசகாமல் நீதிநெறிநின்று அரசாண்டு வருநுளில் அவ்வரசனுக்கு துந்து என்னுமோர் சற்புத்திரனுதித்தான், அவன் யௌவன திசையடைந்து அரசமுறைப்படி கானிற்சென்று வேட்டையாட வெண்ணி வில்லியருடன் அடர்ந்த கானிற்சென்று மிருகக்கூட்டங்களேயெல்லாம் வதைத்துத் தன் நாட்டை நோக்கி வரும்வழியில் ஓராலமரநீழலில் தவசிரேட்டராகிய முனிவ ரொருவர் புள்ளிமான் ருேல்போர்த்து நிட்டையிலிருக்கையில் துந்து வென் னுமரசமைந்தன் அம்முனிவரைக்காட்டிற்றிரியுமானெனக்கருதித் தன் கரத்தி லுள்ள வில்லி லோர் கணையைத்தொடுத்து விடுத்தான். அக்கணை மிக்கவேக மாய்ச்சென்று முனிவருயிரைக் கவர்ந்தது, முனிவர் படிமிசைவிழுந்து இறை வனைக்கூவி யுயிர்நீத்தார், பின்பு அரசமைந்தன் முனிவரருகிற்சென்றுநோக்கி மானல்லாதிருக்கக்கண்டு உடல் நடுநடுங்கியுள்ளஞ்சோர்ந்து பிரமகத்திக்காளா னேனே ! இனியென்செய்வேனென்று கோவெனக்கதறியழுது மண்ணிற்சாய் ந்து மூர்ச்சையடைந்து பின்போர் கணப்போதிற் றெளிந்தெழுந்து இடியே றுண்டவன்போற் றிகைத்து ஒன்றுந் தோன்றுமல் பாதசாரியாய் நாட்டை நோக்கி யோட்டெடுத்துச் சென்று அரசனைக்கண்டு அவன் தாளில்வீழ்ந்து என்னை யீன்ற தந்தையே ! அறிவிலியாமென்னு லீரெழு தலைமுறையளவும்

பிரமகத்திதோடம் வாய்த்ததே! நானும் தெரிந்துசெய்தே னல்லேனென்று முற்றுங்கூறி நின்றான். அதைக்கேட்ட அரசனு முள்ளநடுங்கி நெட்டுயிர்ப் பெய்தி அக்கணமே புதல்வனை யழைத்துக்கொண்டு முனிவரிருக்கு மிடத்தி ற்குச்சென்று மடிந்துகிடப்பதைக்கண்டு மனம்வருந்தி ஐயகோவென்றழுது யான் இந்நாள் செய்த தவமு நன்மையும் அவமாயினவே! இப்பெரும்பழிக்கு மிலக்கானேனே! இது நமதறத்தையழித்துச் செல்வத்தையும் போக்கி நம்மை யும் நிரயத்திற் படுத்தாதிருக்குமோ வென்று பலவாறு சிந்தித்து வருந்தி நின்றான்.

அவ்வாறு தந்தை வருந்துவதைக்கண்ட புதல்வன் மனம் வருந்தி இனி நம்யாக்கையை இம்மண்ணிடைச் சுமந்து திரிவது வீணேயாமென்று கருதித் தன்னுயிர்விடத்துணிந்தான். அதையறிந்த அரசன் அவனுக்குச்சில இனியவார் த்தைகளைக் கூறி அவனெண்ணிய வெண்ணத்தைத்தவிர்த்து நாட்டை வெறு த்துக் காடே கதியெனச்செல்லும் வழியில் தாக்கமுனிவ ராச்சிரமமிருக்கக் கண்டு அம்முனிவ ரருகிற்சென்று அவர்நிட்டையிலிருப்பதைக்கண்டு அவரை மும்முறை வலம்வந்துபணிந்து எந்தையே! எம்மைக் காத்தருள வேண்டு மென்றிறைஞ்சிநின்றான். இவ்வாறரற்றியவோசையால் முனிவர்விழித்துப்பார் த்து அவனுக்குப் பலவாசிகூறி அவன் நாடிவந்திருக்கும் செய்தியையுமறிந்து கொண்டு யாது மறியார்போல் நடித்து அரசனை நோக்கி நீ யிங்கு யாதுகருதி வந்தனையென்று வினவ, அரசன் தன் புதல்வனால் நேர்ந்த யாவுங் கூறினான். அதைக்கேட்ட தாக்கமுனிவர் தன் புதல்வனைக் கூவியழைத்து இங்கு நின் றிருக்கு மரசனுக்குற்ற விபத்தைத் தவிர்த்துவாவென் றாஞ்ஞை செய்தார். அவ்வாறே புதல்வன் தந்தைதாளில் வீழ்ந்துவணங்கி விடைபெற்று அரசனு டன்சென்று உயிர்நீத்திருக்கு முனிவரைக்கண்டு தன் கமண்டலத்திலுள்ள நீரைத் தன் கரத்தால்வாங்கி அம்முனிவர்மேலிறைத்து மந்திரோச்சாடனஞ் செய்தார். முனிவரும் உறங்கிவிழித்ததேபோல் உயிர்த்தெழுந்தார். அரசனே வெனின் அம்முனிவர் செய்யதாளில் வீழ்ந்துவணங்கி நின்று புனிதமூர்த்தி! என் புத்திரனு மிச்சிறுவன் தேவர் மான்றோல்போர்த்து நிட்டையிலிருப்ப தையறியாமற்காட்டில்வாழு மானெனக்கருதிக் கணைதொடுத்துத்தேவரீரைக் கொன்றான். பின்பு தங்களைக்கண்டு உள்ளநடுங்கி அவன் முயற்சியினாலேயே இம்முனிவரை யழைத்துவந்துமதுயிர்பிழைக்கச்செய்தான்; அறியாமற்செய்த இச்சிறுவன் பிழைபொறுத் தருளவேண்டுமென்று மீண்டு மவர்தாளில் வீழ் ந்துவணங்க முனிவ ரவன்மேற் கருணைகூர்ந்து பல வாசிகூறினர்.

பின்பு அரசன் அவரிடம் விடைபெற்றுத் தானும் புதல்வனும் தாக்க முனிவன் குமாரனும் கானை நோக்கிச்சென்று தாக்கரிஷியைக் கண்டு அர சன் அம்முனிவர்செய்ய தாளைத் தன்சிரமேற் பொறுத்து எந்நாளு நீங்காப் பழியை நீக்கிப் புனிதனாக்கிய எங்குல தெய்வமேயென்று பலவாறு துதித்து முனிவர் பெருமானே! உண்மையிலென் புதல்வனால் இறந்த அம்முனிவரை மீண்டு முயிர்பிழைக்கச் செய்ததன்மை எதனாலுண்டாயினவோ! அதைத் தேவரீர் நாயேற் கெடுத்துரைக்க வேண்டுகின்றே னென்றிசைஞ்சி நிற்க;

முனிவரும் கூறத் தொடங்கினர். மண்ணுளு மரசனே! யாவனொருவன் சுருதி யிற் கூறும் வண்ணம் தவறாது நடந்துஉயிர்களின்மேற்கருணைவைத்துத் தன் னுயிர்போல் மன்னுயிரையுங் கருதியாவருடனும் வெட்டெனப் பேசாமற் பகைவனுடனு மினிய வார்த்தைகளாடி ஆசைதவிர்ந்து கண்டவர் கற்பிலருந் ததியென்று சொல்லத்தக்க மனைவியுடனிருந்து இல்வாழ்க்கையி லெவ்வளவும் பிசகாம விருப்பவ னெவனோ அவனுக்கு இப்போது யான் நிகழ்த்திக்காட்டிய வையேயல்லாமல் பெரிய காரியங்களும் சித்தியாமென்று அரிய வேதங்களே முறையிடுகின்றன. இதல்லாமல் முன்னிவ்வனத்தில் அனேக முனிவர்களும் நானும் மிக்க சுத்த சிலராய்த் தவஞ்செய் திருக்கையில், எங்கு நிறைந் துள்ள முக்கட் பெருமானாகிய இறைவன் எங்களன்பின் மிகுதிக்கிரங்கிவந்து யாவருக்கும் அன்பாய்த் தெரிசனைதந்து மிக்க பத்தியொ டிவ்வனத்து றையு முங்களுக்கென்றும் பிணிமூப்புச் சாக்காடின்மையையும் நினைத்ததைச் செய்து முடிக்க வல்லமையுமாகக் கடவதென்று வரமளித்துச் சென்றார். ஆதலால் அவரருளால்தான் அம்முனிவருயிர்த்தனர், என்னாலாகுங் காரிய மொன்றுமேயில்லையென்று கூறக்கேட்டு மிக்க ஆனந்தங்கொணடு இருவரு மவரைப்பணிந்து விடைபெற்றுத் தம்மரண்மனைக்குவந்து முன்னிலும் பதின் மடங்கதிகமான நன்னெறியை யனுட்டித்து வந்தார். இத்தகைய நற்குணங் களும் சுருதிநெறிக்குமாறுபடாத ஒழுக்கமுமுடைத்தா யிருந்தமையால் அப் பெருமானிடத்தினின்று முண்டான இவ்வகைக்குணங்கள்பிராமணனுக்கிருக்க வேண்டுமெனக் கூறிப் பின்னு ஞ்சொல்லத்தொடங்கினர்.

அரசர்க்கரசனாகிய தருமராசனே! இனிஅந்தணர் தருமங்களைக் கூறுகின் றேன், அத்திரியென்றொரு பிராமணன் சகலகலைவல்லவனாய் யாவு மையந்திரி பறக்கற்று அழகில் லக்ஷுமியையொத்த கற்பிற்சிறந்த ஓர்பெண்ணை வேத விதிப்படி மணந்து இல்லறதரும மெவ்வளவும் வழுவாது நடந்துவருநாளில் ஓர்நாள் தன்மனைவியைநோக்கிப் பெண்ணருங்கலமே யான் ! மறுமைப்பயனை யடையவேண்டி இன்னுஞ் சிலநாள்கழித்துத் தவத்திற்கேகுவேன்; அப்பொழு து நீயுன்புத்திரருடனிருந்து சுகமேவாழ்ந்திருப்பையோ அல்லது கானின்கட் சென்று தேகமெலிந்து வருந்து மென்னுடன் வருவையோ அதைத் தெரி விக்கவேண்டுமென்றான். அதற்கவன் மனைவி சுவாமி! அடியாள் தேவரீரை விட்டுஅரைக்கணமேனும் பிரிந்திருப்பேனோ! கணவனினுஞ்சிறந்ததோர்பொரு ளுமுண்டோ ! தேவரீரை யன்றி யானுய்யும்வகையும் வேறுண்டோ ! தேவ ரீரைத் தெய்வமாக நம்பியிருக்கு மென்னை இப்படியுஞ் சோதிக்கலாமோ ! " கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்விருப்புற்றமுதளிக் கும்" இறைவனிருக்க நானிங்கிருந் தென்செய்யவல்லேன் ; இனி இப்படிப் பட்ட வெண்ணத்தைத்தங்கள் புந்தியில் கொள்ளாதிருப்பீர்களென்று பிரார்த் திக் கின்றேனென்று பின்னுஞ் சொல்லுகிறாள். சுவாமீ ! நம்மை நாட் டவர் ஏசாவண்ணம் நமதுபிள்ளைகளுக்குப்பின்பு உதவியாம்படி சிறிது பொ ருள் சேகரித்து வைத்துவிட்டு நாம் தவத்திற்குச் சென்றால் நன்மையாயிருக் கும் ; நமது மக்களும் நம்மை நிந்தியாதிருப்பார்கள். நமது தவமுமீடேறு

மென்று சொன்னாள். அதற்கவள் நாயகன் பெண்மணியே ! நீ சொல்வதுண் மையேயாயினும் நம்மிடத்துப் பொருளில்லையே யென்றான். அதற்கவள் சுவாமீ இந்நாட்டில் கேட்டவர்க்கில்லை யென்னுதுதவும் தைரிய மகாராசன் அசுவமேத யாகஞ்செய்வது தங்கள்சித்த மறிந்ததுதானே, அங்கு தேவரீர் சென்று அரசனைக்கண்டு கேட்டால் அவர்வேண்டுந் திரவியமுதவுவர் என் றாள். வேதியனு மதற்கிசைந்து அங்குசென்று அரசனைக்கண்டு தைவதாதேக மென்று வேதமொழியா லரசனைப்புகழ்ந்து வாழ்த்தினன். யாகசாலையில் அனந்த முனிவர்களுட னிருக்குங்கௌதமரென்பவர் அவ்வேதியன்மேற் கோ பித்து அவனைநோக்கி மானுடனைத்தேவனாக வெண்ணித்துதிக்கலாமோவென் றார். அதற்கவ் வேதியன், 'பிருதிவீபதே விஷ்ணு' வென்னும் வாக்கியத்தை மறந்து பேசுகின்றீர் போலுமென்று நெடுநேர மிருவரும் வாதித்து அவரு ளவ்வழக்குத் தீராமல் யாவரு மொருங்குசேர்ந்து முன்கல்லாலின் கீழெழுந் தருளிய தக்ஷிணாமூர்த்தியி னிடத்தி லுபதேசம்பெற்ற நால்வரில் சனற்குமார ரென்பாரிடத்திற்சென்று வணங்கி யாவுமவரிடத்தெடுத்துரைத்து இதிற்பிழை யுள்ளதைத் தெரிவிக்க வேண்டுமென்று வேண்டினார்கள். அதற்கம்முனிவர் பெருமான் இவ்வாறு சொல்ல லாயினர்.

உலகில்வாழு மனிதர்களுக்குக் கண்ணுங் கருத்தும் பிராணாதாரமும் காவலும் நீதியும் நெறியும் இன்பமுங் கதியும் அரசனாலாக வேண்டியதே. தேவாலயங்கள், யாகாதி கிருத்தியங்கள், இல்வாழ்க்கை, வருணாசிரமதருமம், பதிவிரதாதர்மம் ஆகிய இவைகளெல்லாம் வேந்தனாலன்றி வேறில்லை, துட்ட நிக்கிரக சிட்டபரிபாலனமும் மன்னுயிரெல்லாந் தன்னுயிர்போற் காத்தலும் அரசனே யாதலால் விஷ்ணுவின் பெருமைக் கொத்தவன் அரசனே யாவ னென்று சனற்குமாரர் அத்திரி முனிவரது வாக்கியத்தையே தாபித்தார். அதைக்கேட்ட யாவரும் மனங்களித்தனர். கௌதமரோ வெனின் அத்திரி முனிவரைப் போற்றி என்பிழை பொறுத்தருள்கவென்று வேண்டிக்கொண்ட னர். பின்புயாவரும் சனற்குமாரரிடத்தில் விடைபெற்று தைரியமகாராசன் யாகசாலையிற்சென்று அந்த யாகத்தைப் பூர்த்திசெய்தனர். பின்பு அரசன் அத்திரி முனிவனுக்கு வேண்டுந் திரவியமளித்து விடைகொடுத் தனுப்பினர். வேதியரதைப் பெற்றுக்கொண்டு தன்னரண்மனைக்கு வந்து மனைவியிட மப் பொருளை யொப்புவித்தார். அதைக் கற்பிற்சிறந்த அப்பெண் புத்திரர்வச மொப்புவித்து சில புத்திமதிகளைக்கூறி இல்லற நீத்து துறவறம்பூண்டு கானை நோக்கிச்சென்று அரிய தவத்திருந்தனரென்று பின்னுஞ் சொல்லத்தொடங் கினர்.

அம்முனிவர் பெருமான் நெடுநாள்சருகுமுதலியது மருந்தாமல் அரிய தவத்திருக்கையில், ஆகாயவாணி அவர்முன்தோன்றி நின்றாள். முனிவர் அத் தேவதையின் தாளில்வீழ்ந்து வணங்கி ஒருவன் அறஞ்செய்தலால் என்ன பிரயோசனத்தை யடைவன், அதை நாயேற்குவிரித்துக் கூறவேண்டுமென்று வேண்டினன். அதற்கத்தேவதை முனிவனை நோக்கி சுத்த வெண்மையான

கறவைப் பசுவும் கன்றும் தக்ஷிணையுடன் வேதபண்டிதனுகி அவாவற்ற சற்குணமுடைய வேதியனுக்குப் பத்தியோடு கொடுத்தவினல் தம்புத்திர மித்திர களத்திராதிகளுடன் தேவபதவி யடைந்து நெடுநாள் வாழ்ந்திருப்பார்கள். வெண்மையான எருதைமேற்சொன்ன குணமுடைய வேதியனுக்களித்தால் அவனு மப்பதவியிற்சென்று அதனினு மெண்மடங் கதிகமான சுகத்திலிருப்பன். இதல்லாமல் இரசிததானஞ் செய்தவர்கள் சந்திரபதவியையும், சுவர்ணதானஞ் செய்தவர் குபேர பதவியையுமடைவர், கன்னிகாதானஞ் செய்பவரோவெனின் தம்பதி சமேதராய் கற்பக நீழலை யடைந்து சொல்லற்கரிய போக பாக்கியங்களைப் பெற்றிருப்பர். மறைநெறி தவருமல் யாகமியற்றி தேவர் கட்கவிர்ப்பாக முதலியவை யளிப்போர் சத்திய லோகத்திற்சென்று நித்தியராயிருப்பர். பூதானஞ் செய்தோர் வருண பதவியையும்; வஸ்திர தானமும் வித்யாதானமுஞ் செய்தவர்கள் ஆதித்தன்பதவியையு மடைவர். இவற்றினுஞ் சிறந்ததொன்றுள்ளது. அவை யாவையெனின்? அரசமுறைப்படி யாவரையும் வெற்றிகொண்டு உண்மையைக் கடைப்பிடித்தொழுகி மநுமுறை தவருத வேதியரைக்கொண்டு இலேசமும் குற்றமென்ப தில்லாமல் அசுவமேத மியற்றித் தேவர்கட் கவிர்ப்பாகங் கொடுத்து ஏழைகட்கில்லையென்னுமற் பொருளளித்து வேதியர்மனத்தையுங் களிக்கச்செய்துயாவராலுந் தக்கோனெனப் புகழப்படுவனேல் அவன் பரமபத மடைவான். அப்படிப்பட்டயாகம் ஒருநூறு செய்வனேயானல் எண்ணிய வெல்லாம் தடையில்லாமற்பெறுவர். அப்படிநூறுயாகங்கள் செய்தவர்கள்தான் வைவசுவதபெரியோர்களென் றறியென்று கூறிமறைந்தாள். முனிவரும் மனமகிழ்ந்து தவத்திலிருந்தார் என்று குற்றமில்லா மனத்தையுடைய மார்க்கண்டேயர்கூற, கருணைக்கடலாகிய தருமராசன் தாமரைமலர்போன்றஅவர்மெல்லிய பாதத்துவீழ்ந்து வணங்கி சுவாமீ! தேவரீ ரிப்போது கூறிய மனுவின் சரிதையைவிரித்துக் கூறவேண்டு மென்று வேண்ட மார்க்கண்டேயரும் சொல்லத் தொடங்கினர்.

ஆதித்தனுக்கும் சாயா தேவிக்கும் இரண்டு பிள்ளைகளும் மூன்று பெண்களும் பிறந்தனர். அவருள் மூத்தவன் மனு. மற்றொருவன் சனிபகவான், மற்றொருவன் யமன். மனுவென்பான் பதினயிர வருடமரிய தவத்திருந்து பின்பு நூறுயிரவருடம் இராச்சியபாரம் பொறுத்து நீதியோ டரசுபுரிந்து மீண்டுந் தவஞ்செய்ய வெண்ணிக் கானைநோக்கிச் செல்கையில் ஒரு தடாகத்தில் ஸ்நானமாடிக் கரைமேல்வந்து நிற்கையில் அத்தடாகத்திலுள்ள ஓர் சிறியமீன் நீரைவிட்டுக்குதித்து அவன்முன்வந்து வீழ்ந்தது. அதை மனுவென்பான் மனத்தி லுவகைகொண்டு உற்று நோக்குகையில் அக்கயல் வாய் விட்டலறியழுது மன்னவா! எனக்குயிர்ப்பிச்சை தரவேண்டும். இத்தடாகத்தில் உருவிற்பெரிய மீன்களனேக மிருக்கின்றன; அவைகளினின்று மித்தனைநா ளென்னுயிர் தப்பி யிருந்தேன். இனி இங்கிருந்தால் என்னுயிரிழப்பேன்; என்னை வேறிடத்திற் கொண்டுபோய்விட வேண்டுகின்றேன்; இப்போதெனக் கிவ்வளவு உதவிசெய்தால் இதற்குத்தக்க பிரதியுபகாரமு முமக்குச்செய்வேன். என்னை நீரில்வாழும் அற்பஜெந்துவென் றலக்ஷியஞ் செய்ய

வேண்டாமென்றது. மனு அதன் சொற்கிரங்கித் தன்கையி லேந்திச்சென்று ஓர் விசாலமுள்ள நீர் நிரம்பிய கிணற்றில்விட்டு நாள்தோறு மக்கிணற்றிடஞ் சென்று அதனுடன் வார்த்தை யாடிக்கொண்டு வருநாளில் ஓர்நாள் அம்மீன் மனுவினை நோக்கி என்னுயிர் பிழைக்கச் செய்த ஏந்தலே! இக்கிணறெனக் குப் பற்றவில்லை என்னுடல் மிகப்பெருத்திருக்கின்றது ஆதலால் என்னைவே றிடஞ் சேர்ப்பிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டது. அவ்வாறே அதைப் பிடித்துச் சென்று கங்கையில்விட்டு முன்போலங்குஞ் சென்று பார்த்து வருகையில், சிலநாள் சென்றபின் தேகம் அளவிலாமற் பெருத்து அக்கங்கையும் பற்றுமல் மனுவினிடம் முறையிட மீண்டுமதனை ஆழ்கடலிற் கொண்டுபோய் விடுத்தான். அப்போதக்கயல் மனுவரசனை நோக்கி என்னை யாளுடையரசே! எனக்காக நீர் மிக்க பிரயாசைப் பட்டமையான் அதற்குத் தக்க கைம்மாறென்று செய்யக் கருதினேன்; அஃது யாதெனின்? இன் னுஞ் சிறிதுநாளில் இவ்வெழுகடலும் பெருக்கெடுத்துப் பதினுலுலகமு மதி லுள்ள ஆன்மகோடிகளு மழியப்போகின்றன. அப்படி யாகாமுன்னமே ஓர் பேழையைப் புதுக்கி அதில் உணவுக்கு வேண்டும் சாமக்கிரியைகளைச் சேக ரித்து வைத்துக்கொண்டு சப்தரிஷிகளுடன் இவ்விடம்வந்தால் கருமுடிவைத் தரும் அக்கற்ப காலத்தினின்று முயிர்பிழைக்கச் செய்வேன்; இஃதுண்மை யுண்மையுண்மையென்று மும்முறைகூறி நீரிலே மறைந்தது. அதைக்கேட்ட மனுவர சன் தான்கொண்ட களிப்புக் கெல்லையில்லாம லவ்விடம்விட் டகன்று தன் னிருப்பிடஞ் சென்று கைதேர்ந்த ஓர் தச்சனுற் பேழை யொன்றைச்செய்து அதில் சத்தரிஷிகளையு மேற்றிக்கொண்டு கடற்கரையில் வந்து நின்று அக் கயலை நினைந்தான்; அதுவுமக்கணமே கரையில் வந்தது. மனுவரசனும் பேழை யுட் சென்ருன். கயலோவெனின் பேழையிற்கட்டிய கயிற்றை தன்வாயிற் கவ்வி நீரிலிர்த்துக்கொண்டது.

அவ்வா றம்மீனீர்த்துக் கொண்டபின் கடல் பெருக்கெடுத்து அண்ட முகட்டளவு மெழும்பி எண்ணிலா உயிர்களையும் உலகத்தையும் பாழாக்கி வெறுநிலமாக்கியது; அவ்வாறு சிறிதுநாள் சென்றபின் நீரெல்லாம் வற்றிப் போயிற்று. அப்போது மீண்டுமம்மீன் தான்முன்னீர்த்துச்சென்ற அப்பெரும் பேழையைக் கடற்கரையிற் கொண்டுவந்து சேர்த்து அப்பேழையி னுள்ளிருக் கும் மனுவையும் மற்ற இருடிகளையும் நோக்கி, கற்பகாலத்தா லுலகமழிந்த தைக் கண்டீரன்றே. இதற்குத்தான் ஓர் மனுவந்தரமென்று பெயர்; இவ்வா றிரண்டு மநுவந்தரமுங்களைக் காப்பாற்றினேன். உமக்காகவே இக்கயற்படி வங்கொண்டு இரட்சித்தேன், என்னைப் பிரமனென் றறியுமென்று சொல்லி மறைந்து போயினுன். பின்பிவர்கள் நெடுநாள் அரியதவத்திருந்து ஒருநாள் கண் விழித்துப்பார்க்கையில் வெறுநிலமா யிருப்பதைக்கண்டு இறைவனை நோக்கி மீண்டுஞ் சிலநாள் தவத்திருக்கையில் இறைவன் அவர்கள் தவத்துக் கிரங்கி அவர்முன்தோன்றி உமது தவத்துக்கிரங்கினேம். நீங்கள் பிரமனை நோக்கித் தவஞ்செய்து அவன்துணைகொண்டு உலகத்தைச் சிருட்டிக்கச் செய்து நீடுழிவாழ்ந்திருங்களென்று ஆசிர்வதித்து மறைந்தனர். அவ்வாறே

பிரமனை நோக்கித் தவத்திலிருந்து அவனருள்கொண்டு ஈரேழுலகமுஞ் சிருட்டிக்கப்பட்டு நெடுநாள் வாழ்ந்திருந்தனர் என்று மார்க்கண்டேயர்கூற, தருமர் அவர் தாளில் விழுந்து வணங்கி என்னை யுய்விக்கவந்த எந்தையே! காலகற்பமிவ்வகையதென்றும், உயிர்களின் லயத்தையும், மீண்டும் புனர்விருத்தி யடைவதையும் விரித்துக் கூறவேண்டுமென்று மிறைஞ்சி நிற்க, மார்க்கண்டேயர் சொல்லத்தொடங்கினர்.

குணமென்னுங் குன்றேறி நின்ற தருமராசனே! கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகிய இந்நான்குங்கூடியது ஓர் மகாயுகம். இம் மகாயுக மிரண்டாயிரமானால் பிரமனுக்கோர்நாள்; அவ்வொருநாளில் அரைநாட்பகலும் அரைநாளிரவுமாகும்; ஒரு பகலுக்கு ஆயிரம் சதுர்யுகம், அவ் வாயிரஞ் சதுர்யுகத்துள் பதினலு தேவேந்திரப்பட்ட மழிந்துபோய் பிரமனுக்கோர் பகற்பொழுது நீங்கும், பின்பாயிரஞ் சதுர்யுகம் ஓரிராப்பொழுதாகும். அந்நாளிற் பிரமதேவன் ஓர் தாமரைமலரி லுறைந் துறங்குவன், அவ்வேளையிற் சப்தமேகங்களு மொன்றுசேர்ந்து யானைத்துதிக்கையளவு நீர்த்தாரைகளைச்சொரிந்து அண்டங்களெல்லாம்பிளந்துவீழும்படி இடியிடித்து நீர்ப்பெருக்கெடுத்து அண்டமுகட்டினளவும் பாய்ந்துவரைகளையுஞ் சிகரங்களையுங்குன்றுகளையு மழித்து இருட்கூட்டங்கள்கப்பும், இவ்வாறு சராசரங்களெல்லா மழிந்து மண்ணென்றும் விண்ணென்றும் அறிதற்கரிதா மந்நாளில், அனுதிமல முத்தனுகிய பரமசிவ னருள்பெற்ற நான் ஒருவனே மாமேருவின் சிகரத்தைப்பற்றிக்கொண்டு அலையிலலைப்புண்டு மிக்க கவலைகொண்டிருக்கையில் இவ்வுலகம் விரிந்தாற்போன்ற ஓராலிலைமேல் வானைநோக்கிச் சயனித்திருக்கும் ஓர் இளங்குழந்தை என்னருகில்வரக் கண்டு நாமு மவ்வாலிலைமேற் பாய்ந்து வீற்றிருக்கலாமோவென் றெண்ணியபோது அம்மகவென்னைக் கூவியழைத்து நீ யஞ்சாமல்வந் தென்வாய்வழி புகுந்து வயிற்றிற்சென்று சுகமே வீற்றிருக்கலாமென்றது. யானு மக்கணமே மனேதிடங்கொண்டு நீரிற்குதித்து அம்மகவின் வாய்வழிபுகுந்து வயிற்றிற்சென்று நோக்குகையில் ஈரேழு பதினலுலகமும் சூரியசந்திராதிகளும் கோள்களும்தேவதைகளும் எண்ணிலாதஉயிர்களுமிருக்கக்கண்டு நெடுநாள் அவர்வயிற்றி லுயிர்வாழ்ந்திருந்தேன். பின்பொருநாள் அச்சிசுஎன்பேரிட்டழைத்து வெளியேவரக் கற்பித்தது, யானுமவ்வாறே வெளிவந்து குறுகியிருக்கும் நீரிற்குதிக்க நிலைகொள்ளாமல் ஆலிலையைத் தொடர்ந்துபற்றி அக்குழவி முகநோக்கி கருமுடி வைத்தருகின்ற இக்கற்பகாலத்தில் நாயேன்மேற் கருணைவைத்து அன்னைபோலாதரித்த வையனே! தேவரீர் யாவரோ; அடியேற்கு விளங்கக் கூறவேண்டுமென்று வேண்டிநின்றேன்; அப்போதம்மக வென்முகநோக்கிப் புன்னகைபுரிந்து இவ்வாறு கூறினதென்று சொல்லத் தொடங்கினர்.

என்னன்புக்குரிய மார்க்கண்டேயனே! யாரும் என்னைத்தான் இரட்சகனென்றும் வைகுந்த நிவாசனென்றுஞ் சொல்லுவார்கள். இது கற்பகாலமாதலால் எமக்குன்மேலிருந்த கருணையால் இரட்சித்தேன். இனிவரும்கற்பகாலங்

களில் உனக்கெங்கிருக்க மனமோ அங்கிருந்தால் யானங்குவந்தே இரட்சிக்கின்றேன், இன்னுஞ் சிலநாளி லிவ்வுலகம் விகசிக்கும். நீ இவ்விடமேயிருவென்றுசொல்லக்கேட்ட யான் மிக்கபரவசத்தனய் என்னையாளுடைய கடவுளே! உமது நீண்ட கருப்பத்திற் சென்று வசித்திருந்தபோது, மும்மூர்த்திகளும் நான்குவேதங்களும் அறுமதம் எழுகடல் எண்மலை நவக்கிரகம் பத்துத்திசை பதினெரு உருத்திரர் பன்னிரண்டு சூரியர் முதலிய யாவுங் கண்டேன்; இனியவைகளெல்லாம் எவ்வா றிவ்வுலகிலுற்பவிக்கும், பிரமன் நித்திரைசெய்வதையும் சலம்பெருக்கெடுத்து இருட்கூட்டங்களெங்குஞ் சூழ்ந்திருக்குங் காரணத்தையும் தேவரீர் நாயேனுக்குத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று வேண்டினேன், அதற்கவர் பிரளயகாலத்தில் இப்பிரபஞ்சத்தை என்கருப்பத் தடக்கிக் காக்குந்தன்மையால் எனக்கு நாராயணனென்று பெயர். இதல்லாமல் பிரமனாகவிருந்து ஆக்கலும், உருத்திரனாகவிருந் தழித்தலும், உபேந்திரனாகவிருந்து காத்தலுமாகிய இம்முத்தொழிலு மியற்றி, இவ்வகண்ட பூமியைப் பாதமாகவும், ஆகாயத்தைச் சிரமாகவும்,பிரமன் முதலிய தேவர்களை அவயவங்களாகவும், அண்டத்தை முகமாகவும், சூரிய சந்திரர்களிருவரு மெனக்கிரண்டு கண்களாகவும் பெற்றிருக்கும் விராட்புருடனாகிய என்னையேயன்றி எவ்வுயிரு மெத்தொழிலு மியங்கா. இம்மட்டே யல்லாமல் மிக்கவலிபெற்ற ஆதிவராகவடிவங்கொண்டுபாதலத்திற்சென்று பாவசம்பவர்களைக்கொன்று தேவர் முதலிய யாவரையுங் காப்பேன். பாற்கடலைக்கடைந்து தேவர்கட் கமுதமளிப்பேன். கூர்மாவதாரங்கொண்டு மந்தரகிரியைத் தாங்குவேன். ஆயிரம் பணாமுடிகளையுடைய ஆதிசேடனாகி இப்பெரும்பாரைச் சுமப்பேன். இப்போதுண்டான பிரளயமும் உயிர்களி னெடுக்கமும் இனிவிருத்தியடையப்போவதும் என் விளையாட்டென்றே யறிதி, துட்டநிக்கிரக சிட்டபரிபாலனஞ் செய்தற்கு யுகங்கள்தோறும் பிறந்துவருபவன் யானே, கிரேதாயுகத்தில் வெண்ணிறமாகவும், திரேதாயுகத்தில் செந்நிறமாகவும், துவாபரயுகத்தில் நீல நிறமாகவும், கலியுகத்தில் பச்சைநிறமாகவும், படிவங்கொண்டு அறக்கடவுள்போல் விளங்கியிருப்பேன். பிரமதேவனை என்னுந்தியினின்றும் பிறப்பித்து இப்புவனத்தைச் சிருட்டிக்கச்செய்வேன். இக்கற்பகாலத்திற் பிரமன் நித்திரைசெய்யு நாளாதலால் சகலபுவன சராசரங்களையும் என்கருப்பத்தடக்கிக்காத்தேன். நீ குற்றமில்லா மனத்தையுடையானும் எமக்குத்தொழும்பனுமா யுள்ளவனாதலால் இரகசியத்தைச்சொன்னேனென்று கூறிப் பிரமனுறங்குமிடத்திற்குப்போவென்றருளினர்.அவ்வாறே யானுமவரைப் பலவாறுதுதித்து சதுமுகனிடஞ்சென்று அவர் நித்திரைசெய்வதைக்கண்டு நெடுநா ளங்குவசித்திருந்தேன். ஆயிரஞ் சதுர்யுகமுஞ் சென்றன ; நான்முகனும் நித்திரைதெளிந்தெழுந்தான். முன்னெங்கும்பரவியுள்ள நீரும்வற்றி சூரியசந்திரர்களு முதித்தனர், கோள்களு நாள்களு முண்டாயின, சிருட்டி திதி சங்காரமுதலியகிருத்தியங்களும் குறைவின்றிநடந்தேறிவந்தன. இப்போதுமக் கெடுத்துரைத்த கற்பகாலத்தின்செய்தி யான் பரம்பரனாகிய முழுமுதற்கடவுளைக்கண் டெந்நாளுமழியாவரத்தைப்பெற்ற முன்னோநாளிற்கண்டது. பின்புண்டான கற்பத்துக்

களவேயில்லை என்றுகூறிப்பின்னுஞ்சொல்லுகின்றார். இப்படிப்பட்ட திருவிளை யாட்டைச்செய்துவரும் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே இப்போது உலகபாரநீக்கு தற்காகக் கண்ணபிரானாக அவதரித்துஉமக்கு நண்பனாயும் மைத்துனனாயுமிரு க்க நீங்கள் பெறும்பேறு மொன்றுளதோ! என்றுகூறினார். இவையாவுங்கேட் டுப் புன்னகையொடிருக்கும் கண்ணபிரானை யாவரும் தொழுதுநின்றார்கள்.

பின்பு தருமராசன் மார்க்கண்டேயனை மனத்தானும் வாக்கானும்போற் றித்துதித்து குற்றமில்லா மனத்தையுடைய எந்தையே! தேவரீர் சொல்லிய சரிதையைக்கேட்டுப் புனிதனானேன். இனிவருங் கலியுகத்தில் தருமம் ஒழுக் கம் நீதிமுதலிய சற்கருமங்கள் குன்றி அநீதிமேலிட்டுத் தருமதேவதை ஒரே பாதத்தால் நடக்குமென்று பலநூல்முறையிடுகின்றனவே. அஃது உண்மையே யோ? தெரிவிக்கவேண்டுமென் றிறைஞ்சிநின்றான். அவ்வாறிறைஞ்சிநின்ற தருமராசனை வாழ்த்திப் பின்பிவ்வாறு சொல்லத்தொடங்கினார். ஈரேழுலகி லுள்ள யாவராலும் துதிக்கப்பெற்ற கருணைக்கடலாகிய தருமராசனே! தரும தேவதை யென்பது மிக்கவெண்மையான வெள்ளையெருதின் வடிவமாக நான் குபாதமும் இரண்டுகொம்பும் எடுப்பானமுசுப்பும் பூமியைத் தொடுகின்ற வாலுமுடைத்தாயிருக்கும். அது கிரேதாயுகத்தில் நான்கு பாதத்தாலும், திரேதாயுகத்தில் மூன்றுபாதத்தாலும் துவாபரயுகத்தில் இரண்டுபாதத்தா லும், கலியுகத்தில் ஒரேபாதத்தாலும்நடக்கும். கலியில், தேகத்திற் றூசிபடி வதேபோல் பாவசம்பந்தமான வினைமேலிட்டு மாந்தர்நல்லொழுக்கந்தவிர்ந்து தீய வொழுக்கத்திற்சென்று அதையே கடைப்பிடித்தொழுகுவர். வேதிய ர்கள் நடக்கவேண்டிய ஒழுக்கத்தைத் தவிர்ந்து பொருள்மேல் மிக்க அவாக் கொண்டு காலைக்கடன் தேவதாபத்தி மறைமொழிபயிலல் முதலிய வொழு க்கமியாவு மறவேகைவிட்டு அழுக்காறுடைய மனத்தராய் பிறர்பொருள் மேல் இச்சைவைத்துத் தம்மைத்தொழுவாரைத் தாம் தொழுது தமக்கு முறையல்லாதனவற்றை யெல்லாமியற்றி வீணேகாலத்தைக்கழித்து வாழ்வர். க்ஷத்திரியரோவெனின் மனுநெறி பிறழ்ந்து சற்றும் தெய்வபத்தியின்றி தமக் குரிய நீதிவழியை யெவ்வளவு மெண்ணாமலே கொடுங்கோலோச்சிக் குடிகளை வருத்தித் திரிவார்கள். அதனால் வானம் வழங்குதலில்லாமல் க்ஷாமமுண் டாய் உயிர்கள் மனம் வருந்தி மிக்க துன்ப மடைவர். பிணியால் வருந்துவர், காலமல்லாக் காலத்திறப்பர்,செயற்பாலவல்லாத கொலை களவு கட் காம முத லியவை மிகும், இதனால் வேள்வி முதலியவை யியற்று முனிவர்களும் வருந் துவர், மேற்குலத்தோ ரிழிதொழிலையும் இழிகுலத்தோர் உயர்தொழிலையும் செய்வர், தெய்வதூடணமிகும். விரதம் நோன்பு பிதிர்க்கரும முதலியவை வீணேயென்பர். யாவனேனும் மறுமையிற்செய்த புண்ணியத்தால் தெய்வ பத்திகொண் டொழுகினால் அவனைப்பித்தனென்றே தீர்மானித் தேசுவார்கள். ஆயுள் குன்றும், சிற்றுருவடைவார்கள்; இவ்வாறு யாவுங்குன்றி வருணபேத மெவ்வளவுமில்லாமல் பற்பல வருணத்தவர் ஒன்றுசேர்ந்து பேதமில்லாமல் வாழ்கையில் கலியுகமும் கடைநாளாகும்; அந்நாளில் சர்வலோகசரண்யனாகிய விராட்புருடன் தீங்கேசெய்துவரும் கயவர்களைமுடித்து சற்சனரை நிலைநிறு

த்திக் குருமூர்த்தமாய் நின்று காயத்திரி முதலிய மந்திரங்களைக் கற்பித்து வருணாசிரம தருமங்களையெடுத்துக்காட்டி யருள்வர்; அவ்வாறேயாவரும் அவ்வக் நிலையில் நின்றொழுகுவர், பின்பு அறக்கடவுளும் நான்குபாதத்தாலும் நடக்கும். இவ்வாறு சுருதிமுறைப்படி யொழுகுங்காலம் கிரேதாயுகம் திரேதாயுகம் துவாபரயுகமேயாகும். கடையாகவருங் கலியுகத்தில் உண்மைகுன்றும், மேற்கூறிய யாவும் மறைமுறையேயாகுமென்று கூற, தருமராசன் மிக்க களிப்படைந்து இன்னும் மறையவர் பெருமையைக் கூறவேண்டுமென்று வேண்ட, மார்க்கண்டேயரும் சொல்லத்தொடங்கினர்.

அயோத்திமா நகரத்தை நீதியொடு பரிபாலித்துவந்த பரிச்சித்தென்பான் வேட்டையாட வெண்ணித் தன்னந்தனியே செல்லக்கருதி தன்னெப்பற்ற கரத்தில் வில்லைத்தாங்கிக் கானைநோக்கி நெடுந்தூரஞ்செல்கையில் நாவறண்டு தாகமிகுந்து மனம்வருந்தி எங்குநீரில்லாததைக்கண்டு மீண்டுஞ்சற்றுத்தூரஞ் செல்கையில் ஓர் தடாகமிருக்கக்கண்டு மிக்க பரவசங்கொண்டு தடாகத்தருகிற்சென்று நீரருந்தி இளைப்புற்றிருக்கையில் இரதியைப்பழிக்கு மழகுவாய்ந்த நூல்போன்றசிற்றிடையையுடைய ஓர்பெண்தன்முன் நின்றிருக்கக்கண்டு அவள்பால் தன்புந்தியைச்செலுத்தி அவளுடன் சில இங்கிதவார்த்தை யாடினன். மதனைப்பழிக்கும் அழகுவாய்ந்த அரசன்மேல் அப்பெண்ணும் மிக்க காதல்கொண்டு இவ்வழகிய புருடன் நாம்கொண்ட காதலைத் தணிப்பனோ அல்லது தவிர்ப்பனோவென் றையமுற்று அவளும் பல சரசவார்த்தைகளாடி இவ்வாறு சொல்வாளாயினள். யாவரையுங் காமத்துட்படுத்தும் தொழிலில் வல்ல மாரனைப்பழிக்கும் அழகுவாய்ந்த அரசர்பெருமானே! நானே அயுத மகாராசனுடைய அருந்தவத்துதித்த புதல்வி என்பேர்சோபனை; இன்றும் மைக் கூடவேண்டுமென் றெண்ணியே இங்குவந்தேன், என்னிச்சையைத் தவிர்க்காமல் என்மனத்தைக் களிக்கச்செய்யவேண்டுமென்று அரசன் தன் மைதிட்டிய கண்வலையிற்சிக்கும் வண்ண மிரட்டி அமுதம்போன்ற இனிய சொற்களால் அரசனைத் தன்வயமாக்கிக்கொண்டு அரசரேறே! எந்நாளும் என்னுடன் கூடிவாழத் தேவரீருக்கு மனமிருக்குமானால் என்னை நீரில் விடாதிருக்கவேண்டும்; என்னை நீரிற்செல்லவிடுத்தால் அக்கணமே உம்மைவிட்டகல்வேன் என்றுகூறிய அப்பெண்மொழியைக்கேட்ட அரசன் சம்மதித்து எண்வகை மணத்துள் காந்தருவமணம் புரிந்து அன்றில் விழைபோகத்தயர்ந்து அவ்விடம்விட்டகன்று அயோத்திமாநகரம்வந் தடைந்து நெடுநாள்சுகமே வாழ்ந்திருந்தனர். இவ்வாறிருக்கு நாளில் ஓர்நாள் கும்பமுனிவர் வீற்றிருக்கும் பொதியமலையினின்றெழும்தென்றற்காற்றினல் அரசன் பரவசங்கொண்டு சோபனையை யழைத்துக்கொண்டு தன் னழகிய தண்காவிற்சென்று அங்குள்ள நறியமலர்களில் வண்டுகள்மொய்த்து மதுவையுண்டு பாடுமொலியையும், குயிலினங்கள் தம்மினங்களைக்கூவி யழைத்துக் கூடிவிளையாடுவதையுங் கண்டுகளித்துமுன்னுளிற்கூறிய சோபனைவார்த்தையை மறந்துசந்தனமணங் கமழ்கின்ற அச்சோலையிலுள்ள நறியமலர்ப் பொய்கையில் இருவரு மிறங்கினர்கள். அக்கணமே சோபனை அரசனைவிட்டுப்பிரிந்தாள். அரசனேவெனின்

தன்முன் நின்றிருந்த தன்னன்புக்கு முயிர்க்குமுரிய சோபனையைக் காணு தேங்கிச் சற்றுநேரம் ஓவியம்போ லசைவறநின்று பின்புதெளிந்து அப்பொய் கையெங்குந் தேடியுங்காணுமல் வியந்தும் துக்கித்தும் அப்பொய்கை நீரெல் லாமிறைத்து வற்றச்செய்தும் அதிலுள்ள தவளைக்கூட்டங்களை யல்லது மற் றென்றையுங் காணுமல் சோபனைமேலுள்ள அன்பின் பெருக்கால் நமது மனைவியை இத்தவளைகளே விழுங்கிவிட்டதென்றெண்ணி மிக்க சினங்கொ ண்டு அத்தவளைக்கூட்டங்களை யெங்குமில்லாமற் கொன்றுன். இவ னிவ் வாறு பெண்ணிச்சையால் வீணேதவளைக் கூட்டங்களை யெல்லாங்கொன்று வருவதைக்கண்ட தவளைக்கிறைவனுகிய மண்டூகாதன்வேதியருருக்கொண்டு அரசன்முன் தோன்றி இவ்வாறு சொல்வானுயினன். சூரிய குலத்துதித்த வள்ளலே! சிற்றுயிர்பெற்றிருக்கும் தவளைக்கூட்டங்களை வீணே இவ்வாறு கொல்வதும் நீதியோ! உமதுபெருமைக் கிதுதக்கதன்றே! உமக்கு இவை யாதுகுற்றஞ்செய்தனவோ அதை யான் தெரிந்தேனில்லையே! அதைநாயேற் கெடுத்துரைக்கவேண்டுமென்று வேண்ட, அதற் கரசன் விருத்த வேதியனே! சிற்றுயிர்பெற்ற இத்தவளைக்கூட்டங்களைக் காரணமில்லாமற் கொன்றேனல் லேன் என்னன்புக்கு முயிர்க்கு முரிய சோபனையை ஓர்கணப்போதில் இத் தவளைகள் நீரிலீர்த்துக்கொன்று தின்றுவிட்டன; அதுபற்றியே என்மனம்வரு ந்தி இவ்வகைக் கொலைத்தொழிலை மேற்கொண்டேனென்றுன். அதற்கு மண் டுகாதனுகிய வேதியன் புன்னகைசெய்து வேந்தே! யாவு மையந்திரிபறக்கற்ற உமக்குச் சற்றுமறிவிலாத யான் என்சொலவல்லேன்! பெண்கள் ஓர்புருடன் மேலிச்சித்தால் அதை எவ்விதத்திலேனும் அனுபவித்தே தீர்வார்கள். அவர் கட் கிச்சையில்லாத புருடனைச் சேரவேண்டுமென் றீசன்சொன்னுலும் கே ளார்கள். "பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்." என்ருலும்,அவர் மன வன்மையை யாவரே யறியவல்லார்? இதுபற்றிப் பெரியோர் கூறியதையு மோர்ந்தீரல்லீரோ! "அத்தியின் மலரும்வெள்ளை யாக்கைகொள் காக்கை தானும் - பித்தர்த மனமுநீரிற் பிறந்தமீன் பாதந்தானும் - அத்தன்மால் பிரம தேவ ருளளவிடப்பட் டாலுஞ் - சித்திரவிழியார் நெஞ்சந் தெரிந்தவ ரில்லை கண்டீர்." என்று கூறியிருப்பதையும் சற்றுமெண்ணுமலே அவள்பொருட்டிக் கொலைத்தொழிலை மேற்கொண்டீரோ! 'கருந்தாதை எலிதின்ற' தென்பதுபோல ஓர்பெண்ணைச்சிற்றுருத்தவளையும் விழுங்குமோ! நீர்சொன்னசொல் விந்தையி னும் விந்தையே! ஆயினும் இப்போ தென்புதல்வியைக் கொணர்ந் தென்னிட மொப்பியும், நீர் கள்ளத்தனமாய் என்னருமைப் புதல்வியைக் குளக்கரையி னின்றுமழைத்துவந்ததாய்க் கேள்விப்பட்டே இங்குவந்தேன். என்சொல்கின் றீர் என்றுருத்துக்கேட்டான், அதற்கரசன் உள்ளநடுங்கி மெய்சோர்ந்து இதற் கென்செய்வதென்று ஒன்றுந்தோன்றுமல் சித்திரப்பாவையேபோ லத்தகவட ங்கி நின்றுன். அரசன் நெடுநேரம் மறுமொழி கூருதிருப்பதைக்கண்ட மண்டூக நாதன் அவன் பயந்திருக்கின்றனனென் றறிந்து குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந்து நீதியோடரசாளும் வேந்தே! அஞ்சற்க, நீர் என் புதல்வியைக்கண்ட அந்நாளில் அவள் கூறிய மொழியை மறந்து நீரி லிறங்கியதனலன்றே உம்மை

விட்டுப்பிரிந்தாள். நானோ வேதியனல்லேன், தவளைக் குலங்கட்கெல்லா மரசன் என்பேர் அபுதன், நீரிப்போது துறந்துநின்ற அப்பெண் என்னருமைப் புதல்வியாமென்று யாவுங்கூறி நின்றான். இவ்வாறு கூறியதைக்கேட்ட அரசன் புந்திமகிழ்ந்து அவனைப் பலவாறு போற்றித்துதித்து யான் செய்த தவப் பயனா லின்று உம்மைக் காணப்பெற்றேன், என்னன்புக்கு முயிர்க்கு முரிய உமது புத்திரியை இக்கணமே வருவித்துத்தரவேண்டும் ; அவ்வாறு செய்யா விட்டால் இப்போதென்னுயிர் நீங்குமென்று அவள்மேலுள்ள பிரிவாற்றாமையால் வேண்டிநின்றான். மண்டுகநாதனும் அரசன் வருந்துதலுக்கிரங்கி அங்கு நின்றே தன் புதல்வியைக் கூவி யழைத்தான். சோபனையும் முன் அரசனைவிட்டுப் பிரிந்தபோது தானணிந்திருந்த உடைமுதலிய அணிமணிப்பணிகளுடன் வந்து தன் தந்தைதாளில் விழ்ந்து வணங்கி நின்றாள். அவ்வாறு நின்ற புதல்வியை நோக்கி பேதைமைகுணமுடைய பெண்ணே ! நீ இரகுகுலோத்தமனை உலகம்பழிக்கப் பாவமேற்றிவைத்தனை, உன்னால்வெகு தவளைகள் மாண்டன ; இப்பழி உன்னைச் சேருமேயல்லது அரசனைச் சேராதாதலால் இனி உன் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகள் அழுக்காறுடைய மனத்தராய் யாவருக்கு மிடுக்கணைசெய்து அதனாற் பலதுன்பத்தை யடையக்கடவொன்று சபித்துத் தனக்கு மருகனாகிய அரசனை நோக்கி இனி நீ சுகமே வாழக்கடவையென்று பல ஆசிகூறி விடைகொடுத்தனுப்ப அரசனும் சோபனையும் அவனிடம் விடை பெற்று அரண்மனை நோக்கிச் சென்றார்கள். பின்பு தவளைகட்கரசன் செத்துக்கிடக்கும் தவளைக் கூட்டங்களைக் கடவுளருளா லுயிர்பெறச் செய்து தானும் நீரிற்பாய்ந்து மறைந்தான்.

பின்பு நெடுநாள் பரிச்சித்தரசனும் சோபனையும் மதனு மிரதியும்போல் கூடிக்குலாவி இருக்குநாளில் இறைவனருளால் சோபனை வயிறுவாய்த்து ஆதித்தனைப்போல் சலன், நலன், வலன் என்னு மூன்று புதல்வரை யீன்றாள். அப்பிள்ளைகளை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து சலனென்னு மூத்தபுதல்வனுக்குப் பட்டங்கட்டி அரசன் தவத்துக்கேகினான். சலன் நெடுநா ளரசாண்டு வருகையில் ஓர்நாள் வேட்டையாடவெண்ணி அழகிய இரதத்திலேறிக்கானைநோக்கிச்சென்று இரதத்தைவிட்டிழிந்து அநேக மிருகக்கூட்டங்களை வதைத்து வருகையில் தன்முன் ஓரழகிய மான்வரக் கண்டு அதன்மேல் மிக்க அவாக்கொண்டு அதைப்பிடிக்கச்செல்கையில் அது ஓட்டெடுப்ப, அரசன் இரதத்திலேறி சாரதியாகிய சூதனென்பானை நோக்கி அதோ விரைந்துசெல்லு மான்முன் தேரைச் செலுத்தென்றான். சூதன் அரசனைநோக்கி நமது பரிகள் காட்டைவிட்டு நெடுந்தூரம்வந்தமையால் அயர்ந்து வாடியிருக்கின்றன,அவற்றைத்தேரிற்கட்டி நடத்தினால் விரைவாகச் செல்லா; ஆதலால் இவ்வனத்துறையும் தவசிரேட்டராகிய வாமதேவ மாமுனிவனிடத்தில் சிறந்த அசுவங்களனேகமிருக்கின்றன ; அங்குசென்று முனிவருத்தரவு பெற்றுபரிகளைக்கொணர்ந்து நமது இரதத்திற்பூட்டிச்செலுத்தினால் விரைவிற் செல்லலாமென்றுகூறினான். அரசனு மதற்குச்சம்மதித்து வாமதேவ ராச்சிரமத்திற்சென் றம்முனிவரைக்கண்டு மும்முறை வலம்வந்து பணிந்து தன்வர

லாற்றை முற்றுங்கூறி சுவாமீ! எனக்கு சிலபரிகள் வேண்டியிருக்கின்றன; அவற்றையடியேனுக்கு இச்சமயத்துதவினல்வேட்டையாடி இவ்வழியேவந்து தேவரீரது பரியை யொப்புவித்துச் செல்கின்றேனென்று கூற, முனிவர்பெருமானு மவன்கருத்துக்கிசைந்து அவனுக்குவேண்டும் பரிகளையுதவினர். அரசனப்பரிகளை யவரிடம் பெற்றுவந்து தன்னழகிய தேரிற்பூட்டிச் சூதனை விரைவாகத்தேரை நடத்தச்செய்து முன்னே தன்முன் தோன்றிய மானைக்கண்டு அதையோர் கணையால் மாய்த்து மீண்டு மனேக மிருகக் கூட்டங்களையு மழித்து வேறுமார்க்கமாய்த் தேரைச் செலுத்தித் தன் நாட்டிற்குச் சென்றான்.

இவ்வாறு சலமகாராசன் முனிவரிடத்திற்பெற்ற பரிகளை அவரிட மொப்பிக்காமற் சென்றதை முனிவரறிந்து மிக்க கோபங்கொண்டு தம்மிடத்துள்ள சீடரிற் சிலரை யழைத்து நம்மிடத்துள்ள பரிகளில்மிக்க வேகமாய்ச் செல்லும் பரிகளை அயோத்தியரசன் இரவலாகப்பெற்றுச் சென்றுநெடுநாளாயின; ஆதலால் நீங்க ளங்குசென்று அரசனைக்கண்டு எவ்வளவும் தாக்ஷணியமின்றிக் கேட்டுக் கொண்டுவாருங்கோளென் றாஞ்ஞைசெய்து யாவருக்கும் விடையுங்கொடுத் தனுப்பினர். அவர்களு மவரிடம் விடைபெற்றுக் கானை விட்டகன்று மலைகளையும் குன்றுகளையும் கான்யாறுகளையும் கற்பாறைகளையுங்கடந்து அயோத்திமா நகரத்தைக்கண்டு யாவருமொருங்குசேர்ந்து அரண்மனைவாயிலைக்கடந் துட்சென்று அரசன் கொலு மண்டபத்தில் மந்திரிபிரதானி தண்டத்தலைவர் யூகத்தலைவர் வேதியர்முதலிய யாவரும் புடைசூழ்ந் திருக்கக் கொலுவிற்றிருக்கு மரசனைக்கண்டு தமதுவரவைத் தெரிவித்தார்கள். மிக்க அழுக்காறமைந்த மனத்தையுடைய அச் சலனென்னுமரசன் "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்னும் பழமொழியேபோல்தனக்குவருங்கெடுதியை யறியாமலே அச்சீடர்மேற்கோபங்கொண்டு அவர்களைப் பலவாறுவைது பரியைக் கொடேனென்று கூறினன். அதைக்கேட்ட சீடர்கள் அவனுடன் மறுமொழி யாடாமல் யாவரு மரசசபையைவிட் டகன்று காட்டை நோக்கிச்சென்று குரவனைக்கண்டு வணங்கி நிகழ்ந்தவை யாவுங் கூறினர். அதைக்கேட்ட வாமதேவ முனிவர் மிக்க கோபங்கொண்டு பலமுனிவர் குழாங்களுடன் அயோத்திமா நகரம் வந்து அரசனைக்கண்டு நல்லொழுக்கமுடைய குலத்துதித்த அரசனே! என்னிடமிரவலாகப் பெற்ற பரிகளைக் கொடேனென்று கூறும் வழக்கியாதென்று வினவினர். அதற்கரசன் முனிவர் பெருமானே! யான் உம்மிடத்திருந்தபரிகளிற் சிலவற்றைப்பெற்ற துண்மையேயாயினும் மீண்டு மவற்றைக்கொடேன், வேறு பரிகளைக் கொடுக்கின்றேன் பெற்றுச் செல்லென்றான். முனிவரதற்குடன்படாமல் மறுக்க யாவர்க்கு மிடுக்கண் செய்தலையே யோர் விரதமாகப் பூண்டொழுகும் சலன் கோபித்து ஓர்வீரனைக் கூவியழைத்து எங்காட்டரசரு மதிக்கு மென்சொல்லை இம்முனிவன் மறுத்துக் கூறுவதனு லிவனை யுன் கூரியவாளால் இரண்டு துண்டாக வீசியெறியென் றாஞ்ஞை செய்தான். வீரனு மவன்பணித்த பணியை மேற்கொண்டு உடைவாளை யோச்சி முனிவர்மேற் புடைத்தான். அது பஞ்சுப் பொதிமேற்பட்ட படையேபோற் பயனற்

றது. பின்பு தவத்திற்சிறந்த முனிவர் பெருமான் வெகுண்டு அக்கணமே மந்திரோச்சாடனஞ் செய்து கோரப் பற்களையும் நீண்ட நாசியையும் வரை போன்ற புயத்தையும் பிலத்தினுமகன்ற வாயையு முடைய ஓர் பூதத்தைச் சிருட்டித்து அதைநோக்கி என்னிடத்திருந்த அழகிய பரிகளைப் பிடித்துச்சென்றது மல்லாமல் என்பா லடாதகாரியத்தைச் செய்யத்துணிந்த இக்கொடியோனை முன்னே கொன்று அவன்பணித்த பணியையேற்று என்னை உடைவாள்கொண்டு புடைத்த இவ்வீரனையும் முடித்தேகென்றார். அவ்வாறு முனிவர் பெருமான் சொல்லி வாய்மூடு முன்னமே இருவர் சிரத்தையும் திருகி எறிந்துவிட்டு முனிவர் தாளில்விழ்ந்து வணங்கி அவரிடம் விடைபெற்று மறைந்தது. பின்பு வாமதேவ முனிவரும் முனிவர் குழாங்களுடன் காட்டையேநோக்கிச்சென்று தத்த மாச்சிரமத்திற்போய்ச் சேர்ந்தார்கள்.

பின்பு சிலநாள் சென்றபின்னர் ஓர்நாளில், நலனென்பானுக்கு இளவரசுபட்டஞ் சூட்டினார்கள். அவனு மம்முடிபொறுத்து நெடுநாளரசாண்டு வருநாளில் வாமதேவ முனிவர் மீண்டு மயோத்திமா நகரத்துக்குச்சென்று அரண்மனை வாயிலைக்கடந்து சென்று சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் நலனென்னு மரசனைக்கண்டு பலவாசி கூறினார். நலன் தன்னுள்ளத்தில் முனிவரை மதியாதிருந்தான். முனிவர் பெருமான் அவன் செருக்குற்றிருப்பதையறிந்து கொண்டு இவ்வாறு சொல்வாராயினார். நலனென்னும் பெயர் வாய்ந்த அரசனே! உன்தமையன் ஓர்நாள் யான்வசிக்கும் காவில்வந்து எம்மிடத்துள்ள பரிகளில் மிக்க வேகமாய்ச் செல்லும் சிலபரிகளை இரவலாகப்பெற்றுச் சென்று மீண்டுமவற்றை யென்னிடஞ் சேர்க்காமலே போனான். யானோநெடுநாள் மவம் பொறுத்திருந்து ஓர்நாள் இங்காட்டிற்குவந்து உன்தமையனைக் கண்டு கேட்டேன், அதற்கவன் என்னிடம்பெற்ற பரிகளைக்கொடுக்க மனமில்லாமலே ஓர் வீரனைக்கூவியழைத்து என்னைக்கொலைசெய்ய வாஞ்ஞை செய்தான். பின்ன ரென்கோபத்துட்பட்டு உன் தமையனு மவ்வீரனு முயிர்நீத்தார்கள் என்றுமுற்றுங்கூறி நீயுமக்கதியையடையாமுன்னம் என்பரிகளைக் கொடுத்துவிடென்றார். இவ்வாறு முனிவரால் முற்றுங்கூறக்கேட்ட அரசன் நெருப்பிலிட்ட இழுதேபோல் மனமுருகி என்தமையனைக்கொன்ற கொலைப்பாதகன் நீயேயோவென்று கனன்று கண்களில் தீப்பொறிசிதற ஆரவாரித்து வில்லைக்கையிலேந்தி அதிலோர் கணையைத்தொடுத்து முனிவர்மேல்விடுத்தான். அக்கணை முனிவர்மேற் செல்லாமுன்னமே முனிவர் புன்னகைசெய்து அடா அறத்தைப் பகைத்துநிற்கும் நலனே! நீ சற்றுமஞ்சாம லென்மேல் விடுத்த கணை உன்னருமைப் புதல்வனாகிய இளவரசனை முடிக்கக்கடவதென்று சபித்தார். அவ்வாறே அக்கணை நலனது மூத்தபுதல்வனை முடித்துச்சென்றது. மங்கையர் யாவரும் கோவெனக் கதறியழுதார்கள். அதைக் கண்ட நலன் மிக்க சினங்கொண்டு மீண்டு முனிவர்மேற் பலகணைகளைவிடுத்தான். முனிவரோவெனின் நலனது செருக்கை யடக்கவெண்ணிச் சற்று மதியிலாநலனே! இன்னுமென்பெருமையை யறிந்தாயில்லை! உன்னிருகரமும் தம்பிக்கக்கடவதென்று சபித்தார். அவ்வாறே இருகரமும் தூணேபோல் நீண்டு

கிடந்தன. இதையறிந்த அந்தப்புரத்துள்ள நலனது மனைவி விரித்தகூந்தலும் சிந்தியமூக்குடன் கோவெனக் கதறியழுது முனிவர் தாளில்வந்துவீழ்ந்து மாங்கல்யபிச்சை தரவேண்டுமென்று வேண்டினாள். முனிவர் பெருமான் அவள்மேற்கருணைகூர்ந்து அரசனதுமூத்தபுதல்வனை உயிர்ப்பித்தெழுப்பி நலனது தம்பித்த கரத்தையும் செம்மையாக்கி இனிஇவ்வகையானதுர்க்குணங்களையொழித்துநற்குணம்பூண்டொழுகித்தக்கோனெனப்பெயர்பெற்றுவாழ்வையேல் மறுமையிலு நற்கதியை யடைவையென்று சில புத்திமதிகளைக்கூறி வாழ்த்தினர். நலன் அவர் சொன்மேற்கொண்டு அவர்தாளில் வீழ்ந்து வணங்கித் தன்தமையன்கொணர்ந்தகுதிரைகளை அவரிடமொப்பித்து, கைகூப்பித்துதித்துநின்று சிறியேன் தேவரீர்பெருமையையறியாதுசெய்த குற்றத்தைப் புந்தியில் வையாமல் நாயே னுய்யுமாறு கருணைபாலிக்க வேண்டுமென்றான். முனிவரும் அவனுக்குப்பல ஆசிகூறி அவனிடம் விடைபெற்றுத் தமதிருப்பிடம்போய்ச்சேர்ந்தார். வேதியர்கள்சுருதிமுறைப்படி யொழுகினால்இவ்வகைப் பெருமிதம்பெற்ற வல்லமைகளெல்லாம் பெறுவார்கள் என்று மார்க்கண்டேயர்கூற, தருமராசன் தேகமெங்கும் மயிர்க்குச்செறிய பரவசத்தனாய் அவர் செய்யதாளில் வீழ்ந்து வணங்கி இவ்வாறு வினவலாயினான்.

நாயே னுய்யும்வண்ண மிங்கெழுந்தருளிய எந்தையே! உம்மினுமுதியோரிப்படிமிசை யுளரோ! அதை அடியேற் கெடுத்துரைக்கவேண்டுமென்று வேண்டிநின்றான். அவ்வாறு வினவிய தருமராசனை நோக்கி, கற்றோர்போற்றுந் தருமபூபதீ! முன்னாளிற் சந்திரவமிசத்துதித்த இந்திரத்தூய்ம னென்பான் நெடுநாள் நீதியோடரசாண்டு யாவராலுந் தக்கோனெனப் புகழப்பெற்று ஏழைகட் கில்லையென்னுமற் பொருளுதவிசெய்தும், பல யாகங்களைச்செய்தும் கோதானம் பூதானம் வஸ்திரதான முதலியவைகளை யாவருக்கும் குறைவில்லா துதவியும் தேவபதவியை யடைந்தும் தேவவருடத்தில் நூறுநூறாண்டிருந்திறந்துபோன பல இந்திரர்களைக் கண்டும் தானிறவாமலே தப்பித்துயிர்பிழைத்திருந்தான். இவ்வா றிருக்குநாளில் ஓர்நாள் தேவர்களெல்லாமொருங்குகூடி இந்திரத்தூய்மனிடம்வந்து நன்னெறிபூண்டொழுகு மரசனே! நின்புகழ் படிமிசை யழிந்துபோயினவாதலால் நீ மீண்டும் பூலோகத்திற் சென்று உன்புகழை நிலைநிறுத்தினால் இப்பதவியைப் பெறலாமென்று கூறியனுப்பினர்கள். அவ்வாறே அரசன் பூமியில்வந்திழிந்து என்னிடம்வந்துவணங்கித் தன் வரலாற்றை முற்றுங்கூறித் தன்புகழ் அழிந்ததோ இல்லையோவென்று வினவினான். அதற்கு யான் சிவபெருமா னருள்பெற்றுக் காலனைவென்று என்றுமிறவாவரம்பெற்ற நாள்முதல் அவ்வரசன் என்னைக்கண்டுவினவிய நாள்வரையிற் கணக்கிட்டுப்பார்த்து நூற்றெண்பத்தேழு பிரமகற்பமாயின வென்றும், இப்போ தரசாளும் பிரமனுக்குத் தேவவருடப்படி எழுபத்தாறுண்டாயின வென்றும்,இன்னு மவன் இருபத்துநாலாண் டரசாளுவன்,இக்காலவன்ஆயறையில்நீயரசாண்டதைக் கண்டேனில்லை, நீயரசாண்டநாள் இதற்குமுன்னுமிருக்கலாமென்றுங் கூறினேன். அதற்கவ்வரசன் உம்மைவிடப்பெரியாருமுண்டோவென்று வினவ, அதற்கியான் இமயமலையில் ஓர் கோட்டான் இறைவனை

நோக்கி அரியதவத்திலிருப்பதாய் இறவாவரம்பெற்ற அந்நாளிற் கேள்விப்பட்டேன். நீர் அதனிடஞ்சென்று விசாரித்தாற் றெரியுமென் றுரைத்தேன். அதைக்கேட்ட அரசன் அக்கணமே வெண்மையான பரியுருக்கொண்டு என்னைத் தன்மேலேற்றிக்கொண்டு நொடிப்போதில் இமயமலையி னருகிற்சென்று தன்னுருக்கொண்டு அங்குள்ள ஓர்குகைக்குள் அரியதவத்திருக்கும் கோட்டானைக்கண்டு வணங்கிப் பலவாறு துதித்துநின்று தன் வரலாற்றையும் தான் வந்தகாரணத்தையு முற்றுங்கூறிநின்றான். அதைக்கேட்ட அக்கோட்டான் புன்னகைபுரிந்து யானோ அற்பவயசுடைய சிறியேன்! இதுவரையில் இருநூற்றிருபத்துநான்கு பிரமகற்பங்கண்டேன். இந்நாட்களில் நீரரசாண்டதனை யறியேன். இது அதற்குமுன் னிருக்கலாம்; சரஸ்வதிதீரத்தில் குராண்டதேவரென்பார் தவத்திலிருக்கின்றனர், அவர் எனக்கு மூத்தோராயாவர், நீரவரிடஞ்சென்றுகேட்டால்தெரியு மென்றுகூற,மீண்டும்பரியுருக்கொண்டுகோட்டானையு மென்னையுந் தன்மேலேற்றிக்கொண்டு மிக்க விரைவாகச்சென்று சரஸ்வதி நதியைக்கண்டு குராண்டதேவரைக் கூவியழைக்க அக்கொக்கும் வெளியில்வரக்கண்டு அரசன் தான்வந்ததை யறிவித்தான். அதற்கப்பறவை இருநூற்றைம்பது பிரமகற்பத்தைக்கண்டேன்; அந்நாட்களில் நீ ரரசபாரம் பொறுத்திருந்ததை யானறியேன் என்ன, அரசன் உம்மினும் பெரியோரு முண்டோவென்று வினவ, அதற்கப் பறவை என்னினும் மூத்த கூர்மதேவர் கோபஞ்சகத்திற் றவமியற்றுகின்றனர், அவரிடஞ்சென்று கேட்டால் தெரியு மென்ன, அதையு மரசன் தன்மேலேற்றிக்கொண்டு விரைந்துசென்று கோபஞ்சகதீரத்தை யணுகி அங்கு தவத்திலிருக்கும் ஆமையைக்கண்டு வணங்கித் தன்வரலாற்றை முற்றுங்கூறிநின்றான்.

அவ்வாறு அரசன் வரலாற்றைக் கூறக்கேட்ட ஆமை மிக்க பரவசங்கொண்டு சற்று மழுக்காறென்பதில்லாமல் செங்கோலோச்சி யாவர்க்குந் துன்பமென்பதில்லாமல் நீதியோ டரசுபுரிந்த அரசர்க்கரசனே! உன்னை யானறிவேன்; நீ நீதிநெறி வழாது செங்கோலோச்சியநாளில் எனக்கோர் பகைவனால் துன்பநேர்ந்த சமையத்தில் மிக்க மனம் வருந்தி இந்திரத்துய்மன்செய்யுங் கொடுங்கோன்மையாலன்றோ? இத்துட்டனால் நாம் இத்துன்பத்தை யனுபவிக்கநேர்ந்தது; அவன்செங்கோலோச்சினால் நெருப்பிற்பட்ட சருகேபோல் நமது மாற்றலன் முடிந்தே யிருப்பானன்றோவென் றெண்ணுமுன்னமே உன்னுந் திருசக்கரம் மிக்க விரைவோடுவந் தென்மாற்றலனை முடித்து என்மனங்களிக்கச்செய்தது. அந்நன்றியை நான் என்னுயிருள்ளளவும் மறவேனென்றுபற்பலவா றவ்வரசனைப்புகழ்ந்து உம்முடன்வந்திருப்பவர்களாரென்று ஆமைகேட்க அரசனதற் கெங்களைத் தெரிவித்தான். பின்பம் மண்டூகம் அறிவிற்சிறந்த மார்க்கண்டேயனே! நீயோ மிகச்சிறுவனேயாயினும் புத்தியிற்பெரியோன்; மறைகளாலு மறிதற்கரிய முழுமுதற்பொருளை எளிதிற்கண்டு என்று மிறவா வரம் பெற்றனை. "எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண் - மெய்ப்பொருள் காண்பதறிவு." என்பதுபோல் உண்மையைக்கண்டுத் தெளிந்தனை! உன்னினு மறிவின்மிக்கா ரில்லையென்று பற்பலவாறு புகழ்ந்தன. யானுமதைப்

போற்றித் துதித்து எல்லாமுன்னுடைய அருளேயென்றுகூறிப் பணிந்து நின்றேன். மீண்டு மவ்வாமை யென்னை நோக்கி இந்திரத்துய்மனென்னும் பெயர் பெற்று விளங்கும் இவ்வரசன் நீதியோடரசுபுரிந்த திறத்தை யென்னொரு நாவாற் சொல்லவல்லே னல்லேன். எண்ணிலா யாகங்களைச்செய்து தேவர்கள் ஆனந்தபரவசங்கொண்டு போற்றும்படி அவிர்ப்பாகங்கொடுத்து எங்காளு மேழைகட் கில்லையென்னுது தவி வேதியர்க்கு முறைப்படி சொர்ணதானம் வஸ்திரதானம் பூதானம் கோதானம் கன்னிகாதானம் முதலிய யாவுங்கொடுத்து அவர்சாலுஞ் சாலுமென்று சொல்லும்படி யுதவி தேவர்களும் புகழ நீதியோ டரசாண்டிருந்தான். வேதியர்க் கக்காளளித்த பசுக்கள் மிதித்த குளம்படிகளே இவ்வளவு பள்ளமாயிருக்கின்றன. இத்தீர்த்தமோ வெனின் அந்நாளில் நீர்வார்த்துத் தத்தஞ்செய்ததென் றறிதி. அதனு லிந்நதிக்குக் "கோபஞ்சக" மென்றுபெயர். இந்நீரிலிருந்தே நெடுநாள் இறைவனை நோக்கித் தவஞ்செய் திருக்கின்றேனென்று கூறி நின்றது.

பின்பு யானதை நோக்கி உமக்கு வயதென்னவென்று வினவ, அதற்கவ்வாமை மூந்நூற் றறுபத்தொரு பிரமகற்பங் கண்டேனென்றது. இவ்வாறு நாங்கள் மிக்க களிப்போடு வார்த்தையாடிக்கொண் டிருக்கையில் தேவலோகத்திருந்து ஓர்புட்பவிமானம் எங்கள்முன் வந்திறங்கிற்று, அதனுடன் சில தேவர்களும்வந்து இந்திரத்துய்மனை நோக்கி நன்னெறிபூண்ட அரசர்க்கரசனே! இப் படிமிசை யுன்கீர்த்தி விசேடமாய் விளங்கவேண்டுமென் றெண்ணியே யனுப்பினேம். அவ்வாறே உன்புகழ்கெடாதிருக்கின்றது, இக்கீர்த்தியுள்ளளவும் தேவபதவியை யடைவையென்றுகூறி அரசனை விமானத்தேறும்படி ஆஞ்ஞைசெய்தனர்; அரசனோவெனின் அத்தேவர்களைநோக்கிநாயேற்காக மிக்கபிரயாசையோ டிவ்வளவு தூரம்வந்த இவர்களை அவரவ ரிருப்பிடத்திற் சேர்த்துவிட்டு ஓர் நொடிப்போதில்வந்து சேருகின்றேனென்று அவரிடம் விடைபெற்று முன்போற் பரியுருக்கொண்டு எங்கள் மூவரையும் தன்மேலேற்றிக்கொண்டு அவ்விருவரையு மவரவரிடம்விடுத்து என்னையும் யான் முன்னிருந்த இடத்திற்சேர்த்துவிட்டு என்னிடம்விடைபெற்றுத் தானும்தேவலோகஞ்சென்றுன். பின் பிந்நாள்வரையி லெத்தனையோ இந்திரர்களழிந்தனர். இந்திரத்துய்மனோவெனின் இன்னும்சுகமே வீற்றிருக்கின்றுன். ஒருவன்அன்னச்சாவடி தண்ணீர்ப்பந்தல் கோயில் தடாகமுதலியவைகளைக் கட்டிவைத்து நல்லொழுக்கத்தை விரும்பி அங்கிலையினின்று தன்னுயிர்போல் மன்னுயிரையுமெண்ணிக் காத்துவருவனேல் அவனே நற்பதவியை யடைவான். பூவுலகில் அவன் தன்கீர்த்தியுள்ளளவும் அப்பதவியிற்றுனே யிருப்பான். இவ்வாறே நற்புதல்வரை யீன்றிறந்தவர்கள் தம்புதல்வர்களாற்செய்யு நீர்க்கடன்முதலியவைகளால் அவர்கள் தேவருலகத்தில் நீடுவாழ்ந் திருப்பரென்று யாவுங்கூறினர். அவ்வாறு கூறிய மார்க்கண்டேயரை யுதிட்டிரர் பலவாறு துதித்து சுவாமீ! சூரியகுலத்துதித்த இக்ஷுவாகு வென்பான் கால்வழிவந்த ஓரிராசகுமாரனுக்குத் துந்துமாலனென அரக்கர்பெயர்வரக் காரணமென்ன? அதை அடியேற் கெடுத்துரைக்கவேண்டுமென்ன, மார்க்கண்டேயரும் சொல்லத்தொடங்கினர்.

உதங்கமுனிவரென்பார் சினமென்ப தெவ்வளவுமில்லாமல் மிக்கபத்தியோடு தவமியற்றுநாளில் பரந்தாமன் கருடனை யூர்ந்து அம்முனிவர்முன் தோன்றிநிற்க, அவரை மும்முறை வலம்வந்து பணிந்து முத்திவீடளிக்குமுதலே! ஆணவமலத்தாற் சிக்குண் டெந்நாளும் பிறந்திறந்தழியு மெனக்குத் தேவரீர் உமது திருவடி நீழலளித் திரக்ஷிக்கவேண்டுமென்று அவர்செய்யதாளில் வீழ்ந்து எட்டுறுப்பு நிலமுறப்பணிந்து நின்றார். அவ்வாறு பணிந்துநின்ற முனிவரை நோக்கி உனது மனோபீட்டப்படி அநுக்கிரகித்தோம். இனி எம்மை எந்நாளுந் துதித்து வாழ்ந்திருக்கக்கடவை. உன்னால் தேவர்களுக் கோர் நன்மையாகவேண்டி யிருக்கின்றது. அதுபற்றியே உமக்கிவ்வரந் தந்தோமென்று மறைந்துபோயினார். பின்பு முனிவர்பெருமான் முன்போல்தவத்திருந்தனர்: நீரெம்மைவினவிய இக்ஷுவாகுவின் குமாரன் பதுமகாராசன், அவன் சுதன் காகுத்தன, அவன் மகன் பிரசேனன், அவன் மைந்தன் பிருது, அவன் பிள்ளை புத்திரிகன், அவன்புதல்வன் யாத்தான், அவனுக்கு ஆசு, அவனுக்குச் சாபத்திரன், அவன்சேய் பிருகுதச்சுவன், அவனுக்குக் குவலையார்ச்சுனன், அக்குவலையார்ச்சுனன் இருபத்தோராயிரம் பிள்ளைகளைப் பெற்று அரசாண்டுவருகையில் உதங்கமுனிவர் அவ்வரசனிடம்வந்து அவனுக்குப் பல ஆசிகூறினார். அவனும் மிக்க பத்தியோடு அவர்க் காசனமளித் துபசரித்துத் தேவரீ ரிங்கெழுந்தருளப்பெற்ற பாக்கியத்தினுஞ்சிறந்த தொன்றுளதோ! என்று புகழ்ந்து இவ்வாறு வினவலாயினான். சுவாமீ! யானோ நெடுநாள் இவ்வுலகாசையிற்சிக்கி யுழன்று வாணாளை வீணே கழித்தேன், இனி மறுமைப்பயனைவேண்டி தவத்திற்கேக வெண்ணுகின்றேன், தேவரீ ரபீஷ்டத்தைத் தெரிவிக்கக் கோருகின்றேனென்று. வேண்டினான். அதற்கம்முனிவர் நீதியோடரசுபுரியும் வேந்தே! இல்லநீத்துத் துறவுபூண்டு கானிற்சென்று சருகுமுதலிய வருந்தித் தேகமெலிந்து வாடித்திரிவதைப் பார்க்கிலும் இல்லத்திருந்து நீதிகுன்றாமல் செங்கோலோச்சிக் குடிகளையும் விருந்தினரையும்காத்து யாவராலும் புகழப்பெற்று வாழ்வதே மிகச்சிறந்தது. இப்படி செங்கோலோச்சும் பயனினும் சிறந்ததொன்றில்லை. இதுபற்றியே ஆன்றோரும் "அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியா - நின்றது மன்னவன் கோல்." என்றார். ஆதலால் நீதியொடு அரசுபுரிவதே சிறந்ததென்றுகூறிப் பின்னுஞ் சொல்லத் தொடங்கினார். வேந்தே! உலோகோபகாரமாய் உன்னிடம் வந்தேன். அஃதென்னெனின்? ஸ்ரீமந்நாராயணன் பாற்கடலிற் கண்வளருங் காலையில் அவர் உயிர்ப்பினின்றும் மது கைடவர் என்னுமரக்கர் பிறந்து தேவர்முதலியயாவர்க்குமிடுக்கண்செய்து பின்பு தந்தையா மப்பரந்தாமனையும் வருத்தினர். அவர் மிக்க சினங்கொண்டு பஞ்சாயுதத்துட னவர்கள்மேலெதிர்ந்து நெடுநாள் போர்செய்தும் தன்னாற்றல்அவர்முன் பயன்படாமல் சோட்டுயிர்ப்பெய்தி நின்றுஇவர்களைச் சூழ்ச்சியால் வெல்லவேண்டுமெனக்கருதி அவர்களைநோக்கி உமதாற்றலுக்கு மகிழ்ந்தேன். உமக்கு யாதுவரம்வேண்டுமோ அதைப்பெற்றுச் செல்லுங்களென்று சொல்ல, அதற் கக்கொடியரா மரக்கர் அண்டங்க ளதிரும்படி. நகைத்து நன்று நன்று! நீ கூறியவார்த்தை நகைதரத்தக்கதே!

அற்பவலியையுடைய நீவீரனேபோல் எம்முடனெதிர்த்து யுத்தஞ்செய்து தோல்வியடைந்தாய்,நீயோஎமக்குவரந்தரத்தக்கவன். நீவேண்டில்யாமே அவ் வரத்தைத் தருவோமென்று தமக்குவருங் கேட்டையறியாமல் மிக்கசெருக் குடன்கூற,பரந்தாமன் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டு" மென் பதுபோல் இதுவேதக்கசமயமென்றெண்ணிச்சொற்றவறுமற் றருவீரோ் என க்குவேண்டும் வரத்தைக் கேட்கின்றேனென்ன, அரக்கரு மதற்குச் சம்மதித் தனர். பரந்தாமன் என்னல் நீங்களிறக்கும் வரத்தைத் தரவேண்டுமென்று கேட்டனன். அவ்வரக்கர் வெகுண்டு அடா அழுக்காறுடையமனத்தனே!உன் னென்ன மிவ்வகையதோ! ஆயினும் யாங்கள்சொன்னசொற்றவறுமலே நீகே ட்டவாறளித்தோம், ஆனல் நீரிலாவிடத் தெங்களைக்கொல்லென்றுகூற, அக் கணமேபரந்தாமன் தன்னிருதொடையிலுள்ள குருதியையும் நீரையும் நீக்கி முழந்தாளினடுவி லவ்விருவரையு மிறுக்கித் தேய்த்துக்கொன்றான்.

இவ்வா றக்கொடியவர்களிறந்தபின் வானத்திலுள்ள தேவர்கள்யாவரும் பூமழைபெய்து போற்றித் துதித்தனர். மேற்கூறிய அரக்கரி லொருவன்புதல் வனாகிய துந்துவென்பான் தன் தந்தையிறந்ததை யறிந்து ஒருவன் கடலைக் கடப்பேனென்று சொல்வதேபோல் மிக்கசினங்கொண்டு எவ்விதத்திலேனும் என்தந்தையைக் கொன்றவனை யான் கொல்லாமல் விடேனென்று ஆரவாரித் தெழுந்து கானைநோக்கிச்சென்று பிரமனை நோக்கி நெடுநாள் அரியதவத்திருந் தான். சதுமுகனும் அவன்முன்தோன்றி நீ யாதுகருதி எம்மைநோக்கித் தவம் புரிகின்றனையென்று வினவ, அரக்கன் அவனழகிய தாளில்வீழ்ந்து வணங்கி என்னையாளுடைய கடவுளே! என்தந்தையைக் கொன்றவனை யான்கொல்ல வரந்தரவேண்டுமென்று வேண்டினன். பிரமனேவெனின் நீ இன்னுநெடுநாள் அரியதவத்திருந்து பின்பு யுத்தத்திற்குச் செல்லென்றான். அதைக்கேட்ட அரக்கன் எங்கிருந் தெவ்வாறு தவம்புரியவேண்டுமென்று வினவினன். திரை கடலிற்சென்று வானைநோக்கிச் சயனித்துத் தவமியற்றவேண்டும் ; அவ்வா றியற்றினல் வருடத்தொருமுறை உயிர்ப்புண்டாம், அவ்வாறு சிலவருடமிரு ந்து பின்பு யுத்தத்துக்கேகென்றுகூறி மறைந்தான். அரக்கனு மவ்வாறே நீண்ட கடலிற்சென்று வானைநோக்கிச் சயனித்து அரியதவத்திருந்தான். பிர மன்கூறியதேபோல் வருடத்துக்கொருமுறை இவனுசியினின் றெழுமுயிர்ப் பால் மரமுதலியவும் தீந்து கரிந்தெரிந்துபோயின. அரியதவத்திருந்த முனி வர்களும்ஏனையோரும் ஓட்டெடுத்தனர்,யானேசருகானேனென்றுகூறிப் பின் னுஞ்சொல்லுகின்றார். மிக்க ஆற்றலுடைய அரசனே! இப்படிப்பட்ட துன் பத்திற்குள்ளாகு மென்போல்வார்க்கு உன்போன்ற அரசிருந்தே அத்துன் பத்தை நீக்கவேண்டும், இது வேந்தர்க்குரிய கடனேயா மர்தலால் அக்கொடி யோன்மேல் போர்க்கெழுந்து அவனை முடிக்கவேண்டுமென்றார். அவ்வா றர சனு மதற்குச் சம்மதித்து, எண்ணிலாச் சேனைகளையும் தன் இருபத்தோரா யிரம் புத்திரர்களையு மழைத்துக்கொண்டு கடலருகிற்சென்று அவ்வரக்கனைக் கண்டுஅண்டங்களதிரும்படியாரவாரிக்க,அரக்கனும்விழித்தெழுந்தான். அவன் மேற் பிண்டிபாலம், தோமரம், வேல், வாள், சூலம், கதை முதலியவைகளை

பெறிபவு மிறவாதிருப்பதைக்கண்ட அரசன் மிக்ககோபங்கொண்டு தன்வில்லி லோர் பிரமாத்திரத்தைத் தொடுத்து விடுத்தான். அக்கணை அரக்கன்மேற் பாய்ந்துஅவன் சிரத்தைக் கவர்ந்துசென்றது, மேகம்போன்ற சாயையுடைய அரக்கன் படிமிசைவீழ்ந்திறந்தான். இதைக்கண்ட உதங்கமுனிவர் மிக்ககளிப் படைந்து அவனுக்குத் துந்துமாலனென்று பெயர்கொடுத்துவாழ்த்திச் சில இரகசியார்த்தங்களையு மவனுக் குபதேசித்தருளி அவனிடம் விடைபெற்றுத் தன்னகரமேபோய்ச் சேர்ந்தார். இவ்வரசனுக்குப் பூர்வத்தில் குவலயாச் சுவனென்று பெயர்.* துந்து வென்னுமரக்கனைக் கொன்றதனால் துந்துமால னென்று பெயர் வாய்ந்தது. இவ்வாறு துட்டநிக்கிரக சிட்டபரிபாலனஞ் செய்துவரும் அந்நாராயணனே கண்ணபிரானாக அவதரித் திருக்கின்றனன். இவ்வகைப் பெருமிதம் பெற்றவாழ்வையுடைய இக்கண்ணபிரான் உமக்கு நண்பனாகவும் மைத்துனனாகவு மிருக்க நீர் பெறும்பேறு மொன் றுள்ளதோ வென்ன; அதைக்கேட்டயாவரும் மிக்க களிப்படைந்து மார்க்கண்டேயமுனி வரைப்போற்றிப் பணிந்தனரென்று வைசம்பாயனர்சொல்ல, ஜனமேஜயனும் வபுஷ்டாதேவியும் அகமகிழ்ந் திருந்தனரென்று சூதமுனிவர்நைமிசாரணிய வாசிகளுக்குச் சொல்லியருளினர்.

கௌசிகச் சருக்கம்.

இவ்வாறு மார்க்கண்டேயமுனிவர் கூறிய பலநீதிகளைக் கேட்டானந்தங் கொண்ட யுதிட்டிரன் முப்புரம்பொடித்த முழுமுதற் பொருளினருள் பெற்ற வேந்தையே! இன்னுமெனக்குள்ள சந்தேகார்த்தங்களைத் திருவாய் மலர்ந் தருள வேண்டுமென்று வேண்டி இவ்வாறு வினவலாயினர். நெருப்பிற் பிறந்த பாஞ்சாலன் புத்திரியாகிய இத்திரௌபதையை யாங்களைவருமடைந்தபின் அவளால் துன்பமென்ப தில்லாமல் எமக்குக் களிப்பையே யுண்டாக்கி வரு கின்றாள். இவளைக் கற்பின் மிக்கவளென்றே யெண்ணுகின்றேன். அவ்வா றெண்ணுதல் இவள் பெருமைக்குத் தக்கதாமோ? புருடனைத் தெய்வமென் றெண்ணி யொழுகுபவ ளிவளே! இவளினு மிக்காரில்லையென்றே யெண்ணி யிருக்கின்றேன். இவ்வாறு யானெண்ணிய வெண்ணம் பழுதாகுமோ? முக்காலமு முணர்ந்த வேந்தையே! மேற்கூறிய சந்தேகத்தையும், பெண்களை யீன்று அவர்களை யொருவனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தபின் தாய் தந் தையர்க்கு முன்னைய சுதந்திரமில்லாமற் போவதும், அரியதவத்திருந்து மூந் நூறுநாட் சுமந்துபெறும் வருத்தம் இன்னவரைச் சேருமென்பதையும் தீய கருமத்தால் வரும் தீமையையும் அடியேற்குச் சந்தேகமற விளக்க வேண்டு மென்றுவேண்ட இறத்தற்றன்மையை யறியாத மார்க்கண்டேயமுனிவர் இவ் வாறு சொல்லலாயினர்.

அறக்கடவு ளன்னவரசே! பெண்களுக்கு மூன்று காவலுண்டு; அவை யாவையெனின்? பெற்று வளர்த்தல் தாய்தந்தையரின் கடமை, விவாகமான பின் புருடன் கடமை, பின் புத்திரன் கடமை எனப்படும். பெண்கள் தத் தங் கணவரிடத்து வாழ்நாளில் கற்பு, அன்பு, நாணம், மடம், அச்சம், பயிர்

ப்பு, நற்குணம், விருந்தோம்பல் முதலிய குணங்களியற்கையாகவே யிருத்தல் வேண்டும்; கொழுநன் தன்னாலோர் துன்பமடையா வண்ணம் காத்து அவன்மனங் களிக்குமாறு கூடி போகவிழைச்சியைத்தந்து மக்கட்பேற்றையடைய வேண்டும், புருடனையே தெய்வமாகவெண்ணி அவன்சொற்கு மாறுபடாதொழுகி யெந்நாளுந்தொழுது வாழ்பவளையே கற்பிற் சிறந்தாளென்று சொல்லப்படும்; மேற்கூறிய நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித் தொழுகிப் புருடனால் தக்காளெனப்புகழ்பெற்று வாழ்பவள் மறுமையில் நற்பதவியையடைவாள். தந்தையானவன் அறநெறியிற் பொருள் சம்பாதித்து செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்முதலிய சற்பாத்திரங்கட்குதவி மக்களையீன்று சாதகன்மம் அக்ஷராப்பியாச முதலியவைகளைச் செய்து வைக்குந் தந்தைக்கும்; மூன்றுறு நாட்சுமந்து பெறும் தாய்க்கும் உள்ளவருத்தம் சமமேயாகும். அவ்வாறுற்பவித்த புதல்வன் நல்லொழுக்கத்தில் நின்று கல்விபயின்று கண்டோர் இப்புதல்வனைப் பெற்ற தாய்தந்தையர் என்ன தவஞ் செய்தனரோ வென்று புகழும்படி நின்று தன்மனையாளுடன்கூடி தன் தாய் தந்தையரைப்போற்றி அவர்மனம் நோகாவண்ண நடந்து அவர்க் குரியகடன் முதலியவைகளைச் செய்து வாழ்பவனே சற்புத்திரன், அவனால் அவனையீன்ற தாய்தந்தையர்கள் நற்பதவியை யடைந்து வாழ்வார்கள். இவ்வாறன்றிப்பெண்ணாயின், தன்கற்புக் கழிவுவராவண்ணம் காத்து உண்டி முதலியவற்றால் புருடனை யுபசரித்து உலகமகிழ வாழ்வதே தாய்தந்தையர் பெறும் பிரயோசனம், மேற்கூறிய ஒழுக்கத்தைத் தவிர்ந்து தீய நெறியிற்சென்று பெரியோரை மதியாதவமதித்துக் கயவரோபோற் றிரிந்து தன்னைத் தானே புகழ்ந்து திரிபவர் மீளா நிரயத்துட்பட்டு வருந்துவரொன்று கூறிப்பின்னுஞ் சொல்லுகின்றார்.

வசிட்டபுரமென்னு நகரில் கௌசிகனென்னுமோர் வேதியன் வசிட்டரிடத்திற் கல்விகற்று வருநாளில் ஓர்நாள் வெயிலுக் கொதுங்கி ஓராலமரத்தினீழலில் நின்றான். அங் கம்மரத்தின்மேலிருந்த கொக்கானது எச்சமிட்டது. அவ்வெச்சம் இவ்வேதியன் சிரத்திற்பட வெகுண்டு மரத்தின் மேலுள்ள பறவையை யுருத்து நோக்கவும் அது நீறாய் விட்டது. அதைக்கண்ட வேதியன் நம்மைவிடப் பெரியாரில்லை யெனமதித்து செருக்குற்ற மனத்தனாய் அதை விட்டகன்று அந்நகரத்துட்சென்று அங்குள்ள ஓரக்கிராரத்திற்சென்று உணவிரந்தான். இதை யறிந்த அவ்வக்கிராரத்திலுள்ள கற்பிற் சிறந்த பெண்மணி தன் புருடனுக்கு வேண்டும் பணிவிடைசெய்து அவனைக் கண் வளரச் செய்து பின்பு தன்கையி லன்ன மேந்தி மிக்கபத்தியோடுவர அவள் தன்மையறியாமலக்கயவன் மிக்கசினங்கொண்டு அதிதிக்குச்செய்யுமுபசாரத்தைவிடப்புருடனுக்குச் செய்யும்பணி மிகச்சிறந்ததாமோ! இதையறியாம லென்னை மதியாதிருந்தனையன்றோ! என்று தன் கண்களிற்றீயெழ உருத்துநோக்கினான். அதைக்கண்ட கற்பிற்சிறந்த அப்பெண்மணி புன்னகை புரிந்து என்னையும் கொக்கென நினைந்தாய்போலும்! நீ இலேசமும்அறநெறி யறியாய்! பக்குவப்படா முன்னமே செருக்குற்றனையே! உன்வேடத்திற்கேற்ற ஒழுக்கத்தைத்

தேடிக்கொண்டாயில்லை. இக்கெடுமதி உன்னையே கெடுக்கும். தன்னைத்தானே புகழ்ந்துசெருக்கடைவோரடையும் தீமையை நீ யெவ்வளவும் அறிந்தாயில்லை! உன்குற்றத்தை யறியாமலே என்னைக் கோபித்தனை! மனித யாக்கையைச் சுமந்தபோதே நல்லொழுக்க மிருக்கவேண்டும், யாவருடனும் வெட்டெனப் பேசுதலையொழித்துப் பகைவனே யாயினும் இன்சொல் புகன்று நம்மால் யாவரும் துன்பமடையாவண்ணம் அறநெறியிற் புத்தியைச் செலுத்தி நிற்கவேண்டும், மேற்கூறிய யாவும் பெறவேண்டின் கல்வி பயின்றும் சாது சங்கப் பழக்கமும் கேள்விச் செல்வமும் பெறவேண்டும்; அஃதுனக் கின்மையால் தீயவழிபற்றி நிற்கின்றனையே யல்லாமல் வேறில்லை. பெண்களுக் கறநெறியிற் கூறிநிற்பன தன்னைக்காத்தலும்தலைவனைப் பூசித்தலும், ஔவியமொழித் ததிதியர்க் கிட்டுண்ணலும், நோன்பு நோற்றலு மாகிய சற்கருமமேயாம். கணவனினுஞ் சிறந்த தெய்வமில்லை. யான் என்கணவனுக்குப் பணிவிடை செய்திருக்குங் காலையில் அத்திமுத லெறும்பீறுயுள்ள உயிர்கள் யாவையும் காக்குந் தன்மையையுடைய இறைவன் வரினும் அப்பணியை விட்டகன்று காணக்கருதேன், ஆதலால் நீ இம்முறை யறியாதென்னைக் கோபிக்கத்துணிந்தது உன் குற்றமே யல்லாம லென்குற்றமாகாது! எனப்பல நீதிமொழிகளைக் கூற, கௌசிகன் உள்ள நடுநடுங்கிக் கற்பிற்சிறந்த அப்பெண்மணியை மனத்தாற் றுதித்து யான் அறிவின்மையால் உன் பெருமையை யறியாமலேகோபித்தேன், தாயே! எனக்கறநெறியைப் போதிக்க வேண்டு மென்று வேண்டி நின்றான். அவ்வாறுவேண்டிநின்ற அவ்வேதியன்சொற்கிரங்கிப் பின்வருமாறு சொல்லலாயினாள்.

யாவராலும் புகழப்பெற்ற குலத்துதித்த வேதியனே! மிதிலாநகரத்தில் தருமவியாதனென்னு மோர் வேடுவனிருக்கின்றான். அவனிருக்கு மிடத்திற்குச் சென்று உமக்குள்ள தருமசந்தேகத்தைக் கேட்டால் விரிவா யெடுத்துரைப்பானென்று கூற, வேதியன் மிக்க பரவசங்கொண்டு தாயே! உன்பால் யானெவ்வளவு மெண்ணுமற்செய்த பிழையைப் பொறுத்தருளவேண்டுமென்றுவேண்டி அவளிடம் விடைபெற்று அந்நாட்டைவிட்டகன்று நெடுந்தூரஞ் சென்று மிதிலை நகரைக்கண்டு வேடுவனிருக்குமிடத்தை யறிந்து சென்று ஊனைவிற்கும் அவ்வேடனைக்கண்டு மனத்தில் அருவருப்பைகொண்டு நெடுநேரம் தொலைவினின்றிருந்தான். வேடுவனோவெனின் வேதியனருகில்வந்துசுவாமீ! தேவரீர் வசிட்டபுரத்தோ ரக்கிராரத்துவசிக்கும் கற்பிற்சிறந்த அன்னை அறிவிலா நாயேனை யோர்பொருட்டா யெண்ணி மதித்துக்கூற, தேவரீர் அடிகள்வருந்த இத்தொலைதூரம் வந்தீரோ யென்று நிதரிசனமாகக் கண்டவர் போற் கூறுமொழியைக்கேட்டு இவன் தேவனோ! அல்லது சித்தரிலொருவனோ! மனிதனேயாயின் நம்மிருவரையன்றி யொருவருமறியாமல் நிகழ்ந்ததையுங் கூறுவனோ! இவன் தேவனேயாயின் இழிதொழில் பூண்டிருப்பனோ! இவன் மனிதருட் சிறந்தவனே யாவன், இவன் முக்காலமு முணர்ந்துரைப்பான் போலும்; இவ்வகைப் பெருமிதம் பெற்ற சிறப்பினையுடைய இவ்வேடுவன் தன்னை மதியாமலே இகழ்ந்து கூறினன். நாமோ கொக்கிறந்தபோதே

எல்லாம் வல்லவனேனென்றெண்ணி செருக்குற்றிருந்தோமே யென்று தன்னுள் நாணங்கொண்டு தன்னைத்தானே நிந்தித்து நின்றான். வேடுவன் வேதியனைத்தன்னரண்மனைக் கழைத்தேகி ஓராசனமளித்துபசரித்து இவனுக்குள்ள சந்தேகங்களை நிவர்த்திக்கவேண்டுமென்று தன்னுளாலோசித் திருக்கையில் வேதியன் அவனை நோக்கி நீர்யாவும் தெரிந்து சொல்லும் வல்லவராயிருந்தும் இழிதொழிலை மேற்கொண்டிருக்கின்றீரே! அஃதுமதுபெருமைக்கழகாமோ! வென்றான். அதற்கு வேடுவனாகிய தருமவியாதன் இவ்வாறு சொல்வானாயினன்.

வேதியர்க்குரிய கடன்யாவையெனின்? ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல்,ஈதல் ஏற்றல் ஆகிய அறுதொழிலுமல்லது கருணை சாந்தம் நன்னெறி நற்றவம் தேவதாபத்தி முதலிய நல்லொழுக்கங்களை இயற்கையாகவே பெற்றிருத்தல் வேண்டும்; அரசர், நற்றவம் விரதம் செங்கோலோச்சல் தன்னுயிர்போல் பிறவுயிரைக் காத்தல் துட்ட நிக்கிரக சிட்டபரிபாலனஞ் செய்தல் பெரியாரைப்பேணல் ஆகிய குணங்களேயன்றி தன் நாட்டிலுள்ள எவ்வுயிரும் வருந்தா வண்ணம் அறநெறி பிறழாமல் நீதியோ டரசாளவேண்டும். வைசியர், உழுது பயிர்செய்தல் பசுக்காத்தல் பொருளீட்டல், விருந்தினரைக்காத்தல் இறைவழிநிற்றல் பெரியோரைப் பூசித்தலாகிய நல்லொழுக்க முதலிய குணங்களைப் பெற்றிருக்கவேண்டும். சூத்திரரோவெனின், மேற்கூறிய மூவருக்கும் ஏவற்றொழில்புரிந்து உண்மையைக் கைவிடாமல் நன்னெறிபூண்டொழுகிவரவேண்டும்.இதுகிடக்க;நாயேன்.வேடுவகுலத்துதித்தோனாதலால் எனக்குரிய தொழிலைக்கைவிடாமல்பறவைகளையும் மிருகங்களையும் விற்றுச் சீவனஞ் செய்கின்றேன். யான் முறையலாதனவற்றைச் செய்தேனில்லை,அவரவர் குலத்துக்குரியதொழிலைச்செய்யாவிடில் இம்மிதிலைக்கிறைவனாகிய ஜனகமகாராசன்கொடியதண்டனைவிதிப்பான்.நானேகொலைத்தொழில் செய்யாமல் ஊனைவிலைக்குவாங்கி அதைஇலாபத்துடன்விற்று அதில்வருமிலாபத்தைமூன்றுபங்காக்கி ஒருபங்குதருமத்திற்கும் மற்றொருபங்கு சுற்றத்தார்க்கும் ஈந்து மற்றொருபங்கை நானேற்று என் தாய்தந்தையரும் பெண்டுபிள்ளைகளும் புசித்து தாய்தந்தையரைப்பூசித்துப் பிறர்பொருளை இச்சியாமல் நல்லொழுக்கத்திருந்து பெரியோரை மதித்துத் தொழுதுவருகின்றேன், குரவனருள்பெற்று அவனுபதேசிக்கப்பட்ட உண்மைப்பொருளையேற்று அந்நெறியினின்று விவாகமின்றி தன்னந்தனியே நிற்கும்பிரமசரியனுக்கும், இல்லநீத்துத் துறவறம்பூண்டு கானிற்சென் றரியதவத்திருக்கும் வானப்பிரத்தனுக்கும் முற்றுந்துறந்த சன்னியாசிக்கும், இல்வாழ்வோனே துணையாவான். இதுபற்றியன்றோ மெய்யறிவுடையாரும் "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கு - மில்வாழ்வா னென்பான் றுணை." என்றார், ஆதலால் இல்லறத்தினுமிக்கதோன்றில்லையென்று அதனற்பெறும்பயனை விரிவாயெடுத்துக்கூறினன். மீண்டும் வேதியனே தனக்குள்ள சந்தேகங்கள் யாவுமவனாற் கேட்டறிந்து வேடுவனை மதித்து இவ்வாறு வினவலாயினன்.

யாவும்ஐயந்திரிபறக்கற்ற தருமவியாதனே! உன்னால் இல்லறமே பெரிதெனத் தெளிந்தேன். நீ வேடுவகுலத் துதித்தும் இத்தகைய விசேடகுணங்களெல்லாம் எதனாலுண்டாயினவோ அதை அறிவிக்கவேண்டுமென்று வேண்டினான். அதற்கு வேடுவன் நற்குலத்துதித்த வேதியரே! நான் பூர்வசன்மத்தில் வேதியர்குலத்துதித்து அக்குலத்துக்குரிய தொழிலைக்கற்காமல் தனுர்வேதமுதலியயாவுமையந்திரிபறக்கற்றுஓரிராசகுமாரனைச்சினேகித்திருந்தேன் அவன் ஓர்நாள் வேட்டையாடவெண்ணி யென்னை யழைக்க நானவனுடன் கூடிச் சென்று வேட்டையாடிக்கொண் டிருக்கையில் ஓர் முனிவர்பெருமான் மான்றோல் போர்த்து நிட்டையிலிருப்பதை யறியாமல் காட்டில்வாழு மானெனக்கருதி ஓர்கணைதொடுத்தேன், அது அவர்மேற்பட சிவசிவவென் றரற்றிப் படிமிசைவிழுந்தார். அதைக்கண்ட யான் உள்ள நடுநடுங்கி அவர்மேற்றைத்த கணையை மெல்லப்பிடுங்கிச் சயித்தியோபசாரத்தாற் றெளிவித்து பலவாறு துதித்து சிறியே னறியாமற்செய்த பிழையைப் பொறுத்தருள்க வென்று வேண்டிநின்றேன். அம்முனிவர் மிக்க கோபங்கொண்டு நீவேதியகுலத்திற் பிறந்தும் எம்பால் இவ்விதக்கொடுமை செய்தமையால் கிராதகுலத் துதிக்கக் கடவையென்று சபித்தனர். அதைக்கேட்ட யான்அவரடியில்விழ்ந்து யானுய்யும்வகை யாதென் றிறைஞ்சிநின்றேன். அதற்கவர் என்சொற்கிரங்கி அறிவிலாச் சிறுவனே! உன்மரபுக்கேற்ற தொழிலைப்புரியாமல் அரசர்தொழிலை ஏற்றமையாமல் உனக்கிக்கதிவாய்த்தது; ஆயினும் யான் கூறியசொற் பழுதாகாது. நீ வேடுவகுலத்துதிப்பினும் பிரமஞானமபெற்று நல்லொழுக்கத்திருந்து அப்பிறவிநீத்து மீண்டுமிப்பிறவியையே யடையக்கடவையென் றாசிர்வதித்தனர். யானு மவ்வாறே இவ்வேடுவகுலத் துதித்தேன் என்றுகூற;வேதியன்வேடுவனைநோக்கி என்னைப்பிணித்திருந்த ஆணவமலத்தையகற்றிஞானச்சுடரை என்னுள்ளத்தேற்றிய குரவனே! என்று பலவாறு புகழ்ந்து அவனிடம்விடைபெற்று அவ்விடம்விட் டகன்று வசிட்டபுரம்வந்தடைந்து முன்தனக்குப்பணித்த வேதியப்பெண்ணைக்கண்டு தாயே! அன்னையினுஞ் சிறந்த கருணையையுடைய உன்னால் நாயேன் கடைத்தேறினே னென்று புகழ்ந்து நின்றான். அப்பெண்யாவு மிறைவன் செயலே, என்னாலாவது மழிவதுமில்லை, இனிநீர் இல்லறத்திருந்து நன்மனைவியைக்கூடி வாழ்ந்திருமென்றாள். வேதியனு மப்பெண்ணிடம் விடைபெற்றுச் சென்று ஓர்பெண்ணை வேதவிதிப்படி மணந்து இல்லற தரும மெவ்வளவும் பிறழாமல் வாழ்ந்திருந்தான். மேற்கூறிய கற்புநலனியாவும் நெருப்பிற்பிறந்த பாஞ்சால னருமைப்புதல்வியாகிய இத்திரௌபதிக் கியற்கையாயுள்ளன வாதலால் உமக்கிலேசமும் துன்பம் வராவண்ணம் காத்து மனமகிழச்செய்கின்றாள். இவள் கற்பின் றிறத்தை யாவரு மித்தன்மைத்தென்று கூறவறியார். இவளால் எல்லாநன்மையு மடைவீர்கள் என்றுகூற, தருமன் முதலிய யாவரும் ஆனந்தபரவசங்கொண்டு சிரமேற் கரங்கூப்பி மார்க்கண்டேய முனிவரைத்தொழுது நின்றனர்.

சத்தியபாமைச் சருக்கம்.

இவர்க ளிவ்வாறிருக்க, முன் கள்ளமா மாயப்பிரானுடன் வந்த சத்திய பாமை வசிட்டன் மனைவியையொத்த பாஞ்சாலியை நோக்கி எனதன்புக் குரிய அண்ணீ! இவ்வுலகத்தி லுற்பவித்த பெண்கள் தத்தங்கொழுநர் மனப் படி நடந்து அவர்களைத் தம்வயமாக்கிக்கொள்ளுதல் மிக்க பிரயாசையாகவே யிருக்கின்றது. பத்தியொடு நடந்து அவர்க்குச்செய்யவேண்டு முபசாரங்க ளைக் குறைவின்றிச் செய்யினும் அவளைவிட் டகன்று வேறுபெண்களை இச் சித்து காமாதுரந்தரராகத் திரிகின்றார்கள். தேவரீரோ ஐவரையும் உமதுவய மாக்கிக்கொண்டு வேறுபெண்களை இச்சியாவண்ணஞ் செய்துகொண்டிரு க்கும் திறம் யாதோ! செய்கையின் திறமோ! அவிழ்தபலமோ! அல்லது மந் திரத்தாலாகுங் குணமோ! செய்தவமோ! அதை யானறியும்வண்ண மெடுத் துக் கூறவேண்டும். யானோ இக்கண்ணபிரானுக்குச் செய்யவேண்டு முப சாரமெவ்வளவு செய்யினும் சற்று மென்மே லிச்சைவையாமலே எந்நாளும் வேறுபெண்களையே யிச்சித்துக்கூடி என்வயப்படாமற் றிரிகின்றார். அவர் என்வயமாகு முபாயத்தைக் கூறினால் யானுய்வே னென்று வேண்டி நின் றாள். கற்பே யோர்படிவங்கொண்டு வந்த திரௌபதை இவ்வாறு சொல்ல லாயினள். ஈரேழுலகமுந் துதிக்கும் பெருமானை நீசெய்த தவப்பேற்றால் புருடனாகப்பெற்றனையாயினும் பேதைமைத்தன்மையாலிவ்வாறுகூறினை.பாவ சம்பந்தமே பெண்ணுருவாகப் பிறத்தல், அவ்வாறு பிறந்தபின் கணவனே தெய்வமென்பதனினும் சிறந்தபொருளில்லை யென்றுமதித்து அவனையே முப் பொழுதும் பூசித்துத் தன்னைக்காத்து அறவழியேநின்று காலமறிந்து உண்டி முதலியவற்றால் புருடனைக் களிக்கச்செய்து அவனுரைதட்டாமல் நடந்தால் இப்பிறப்பினுஞ் சிறந்ததொன்றில்லை. மறுமைப்பயனையும் அடைவர். மேற் கூறிய யாவுந்தவிர்ந்து தீயவழியிற்சென்றால் எல்லா நன்மைகளையு மகன்று நிரயத்துட்பட்டுவருந்துவர். நீ இல்லொழுக்கத்தை எவ்வளவு மறியாமல் அற்ப குணமுடைய பெண்களைப்போல் போகவிழைவையே விரும்பி நின்றனை. தேவர்களு முனிவர்களு மறிதற்கரிய மாமாயனைக்கூடி அவன் மனைவியென்று சொல்லப்படும் வாக்கியமே பெரும்பாக்கியமா யிருந்தும் மருந்தையும் மந்திரத் தையும் விரும்பினை. இவ்வித அற்பவெண்ணங்கொண்டு புருடனை வயப்படு த்த நினைக்கும் பெண்ணை மாதரிற் சிறந்தவளென் றெண்ணப்போகாதே. புன் மையான வேசியென்றே யெண்ணவேண்டும் என்றுகூறிப்பின்னுஞ்சொல்லு கின்றாள்.

கள்ளமாமாயனைக் கணவனாகப்பெற்ற கற்பிற்சிறந்தசத்தியபாமா! யானோ ஐவர்களையும் ஐந்துகர்த்தர்க ளென்றும் அவரையன்றி வேறுதெய்வமில்லை யென்றுமெண்ணித் திரிகரணசுத்தியாய் எவ்விதத்திலு மவர்மனங்கோணுவண் ணம் காலமறிந்து உபசரித்து வருகின்றேன். அவர்கள் என்னையல்லாதுவேறு பெண்ணை இச்சித்தால் அதற்கு யானு முடனிருந்து அவரிச்சையைத் தவிர்ப் பதன்றி வேறுசெய்யேன். யான் முறைப்படி பள்ளியறைக்குச் செல்லுங்

காலத்தில் அணிமணிப்பணிகளைப்பூண்டு அவர்மனங் களிக்குமாறு போக விழைவைத்தந்து களிக்கச்செய்வேன். மற்றகாலத்தில் என்னை யின்னுளென்றறிந்துகொள்ளா வண்ணம் ஓர் பணிப்பெண்ணேபோல் அவருக்குரிய பணிகளைச்செய்துவருவேன். இவ்வகைக்குணங்க ளென்னிடத்திருப்பதால் அவர்களென்மேல் அன்புவைத் திருக்கின்றனரோ யல்லாமல் வேறில்லை. இவ்வாறிருக்க நீ சற்றுமெண்ணுமல் அற்பமதியால் என்னைமருந்தால் மயக்குபவளென்று கேட்கத்துணிந்தது உன்னறிவின்மையேயென்று புன்னகையோடுகூற அதற்குச் சத்தியபாமை மனம்வருந்தி கற்பிற்சிறந்த நீ என்பிழை பொறுத்தருள வேண்டுமென்ருள்.

அவ்வா றிறைஞ்சி நிற்பதைக்கண்ட திரௌபதை பெண்மணியே! யான் உனக்குக் கற்பித்தவாறு நடப்பையேயானல் தண்டாமரைத்தா ளண்ணலாகிய புண்டரிகாக்ஷன் உன்மேற்கொள்ளுமோகத்தை என்னிடத்தே சொல்லிக்கொள்ளப்போகிருய் என்று இருவரும் மிக்ககளிப்போடு வார்த்தையாடிக் கொண்டிருக்கையில் எல்லாம்வல்ல கண்ணபிரான் சத்தியபாமையை யழைத்துக்கொண்டு யாவரிடத்தும் விடைபெற்று அழகியதேரூர்ந்து துவாரகை நோக்கிச் செல்கையில் சத்தியபாமையை நோக்கிப் பெண்ணருங்கலமே! கற்பின்மிக்க திரௌபதையுடன் இதுவரையிலும் யாதுபேசிக்கொண்டிருந்தனையென்ன,நிகழ்ந்ததைக்கூருமல் விசேடமொன்றுமில்லையென்ருள். யாவரிடத்தினும் அணுவுருவாய்நின்று எல்லாமறியவல்ல கள்ளமாமாயப்பிரான் புன்னகைபுரிந்து புருடருக்கு மருந்துவைத்து வசப்படுத்தும்படி யெண்ணிப்பேசிக்கொண்டிருந்ததை யானறியப்படாதோ வென்ன,சத்தியபாமை மிக்க நாணங்கொண்டு எல்லாமறிந்து சொல்லவல்லவனென்று மதித்து நடந்தவிசேடங்களையெல்லா மொன்று மொளியாம லெடுத்துக்கூறினுள். அதற்குக் கண்ணபிரான் கற்பின்மிக்க அத்திரௌபதை கூறிய யாவும் நியாயமேயென்று இங்கிதவார்த்தையா லவள்மனங்களிக்கச்செய்து துவாரகையை யடைந்தார்கள். பின்புபிறவாவரம்பெற்ற பெம்மானுகிய மார்க்கண்டேயர் தருமனைத்தாம்போக விடைகேட்க யாவரும் அவரழகிய தாளில்வீழ்ந்து வணங்கி விடைகொடுத்தனுப்பினுர்கள். அவரும் தமதாசிரமமேபோய்ச் சேர்ந்தார்.

சித்திரசேனன் சருக்கம்.

இவ்வாறு பாண்டவர்கள் முனிவர் முதலிய தவசிரேட்டரால் வாழ்த்தப்பெற்று இனிது வீற்றிருக்குநாளில், அத்தினபுரத்திருக்கும் வேதியனொருவன் பாண்டவர்கள் வசிக்கும் வனத்திற்குவந்து அன்னத்தைப் பழிக்கு நடையையும் மயிற்சாயலேயுமுடைய கற்பிற்சிறந்தபாஞ்சாலியையும்பாண்டுபுத்திரர்களையுங்கண்டு கண்ணிருகுத்து நின்றுன். அவ்வாறு நிற்கும் வேதியனைக்கண்டு நீர் யாதுகருதி கவல்கின்றீரென் றுதிட்டிரன் வினவ, பொய்யாமொழிபெற்ற அரசர்க் கரசனே! யாவர்க்கும் தீமைசெய்த லகற்றி நன்மைசெய்தலையே கடைப்பிடித்தொழுகு மும்க் கிக்கதியும் வாய்க்கலாமோ, "என்பி லதனை

வெயில்போலக் காயுமே - அன்பிலதனை யறம்." என்பதுபோல் சுற்றத்தார் முதலிய யாவர்பேரிலும் இலேசமும் அன்பென்பதில்லாமற் கொடுமையையே செய்துவரும் துட்டர்களாகிய துரியோதனுதியர் செழிப்புற்றிருப்பதும், அற நெறிவழுவாது அத்திமுத லெறும்பீருயுள்ள உயிர்கள்மீது அன்புவைத்து இன்னும் கைவிடாமற்காக்கும் உமக்கிக்கதி வந்ததென்றால் மேற்கூறிய சுருதி மொழியும் பொய்த்ததென்றன்றோ கொள்ளவேண்டும். உம்பால் அறநெறி யும் பொய்த்ததேயென்று வருத்தமுறுகின்றேன். நானோ அறக்கடவுளன்ன உம்மை இக்கதிக்குள்ளாக்கிய அக்கொலைப்பாதகர் நாட்டில் வசிப்பவனென்று கூறினன். அவ்வாறு கூறிய வேதியனை யுதிட்டிரர்நோக்கி நீர் மனம்வருந்த வேண்டாம். "அழுக்கா றெனவொரு பாவிதிருச்செற்றுத் - தீயுழி யுய்த்து விடும்." என்பதை யறிந்தும் நீர் கவலுவதால் யாதுபயன்? பெரியோராராய்ந் தெடுத்துக்கூறும்நீதிமொழியென் றுங்குன்றாது. ஒருவனுக்குப்பின்னேகேடுவரு வதானுல் அதற்குமுன்னே மதிகெடும் என்று பல இனியமொழிகூற, வேதிய னவர்க்குப் பலவாசிகூறி அவரிடம்விடைபெற்று அத்தினபுரத்தை நோக்கிச் சென்றுதிரிதராட்டிர மகாராசனைக்கண்டு வாழ்த்தி அரசே! பாண்டுமைந்தர்க ளாகிய குற்றமில்லா மனத்தையுடைய யுதிட்டிரனும், தம்பியரும் சருகுமுத லியவருந்தி மிக்க வருத்தமுறுகின்றார்கள், அம்சதூளி மஞ்சத்தின்மேல் நறு மலர்களைப்பரப்பி சயனித்திருந்த மிக்க அழகுவாய்ந்த செவ்விதழை யுடைய கற்பி லருந்ததியையொத்த பாஞ்சாலன் செல்வப் புதல்வியாகிய திரௌ பதை விரித்த கூந்தலுடன் புழுதியிற் சயனித்திருக்கின்றாள். நான் அவர்க ளவ்வாறிருக்குங் கோலத்தைக்கண்டு மனம்வருந்தி தங்களிட மறிவிக்கவந்தே னென்று கூறக்கேட்ட குருடன், உள்ளம் வருந்ினவனேபோல் நடித்து வேதி யரோ நானென்செய்வேன்? பாண்டு மைந்தர்கள் படுந் துன்பச்செய்தியைக் கேட் டென்னுக்கையை இம்மண்ணிடைச் சுமந்திருப்பதைவிட இறத்தலே நலமென்றுகூற, வேதியன் எவ்விதத்தாலேனும் பாண்டவர்க ளுய்யும்வகை யைத்தேடவேண்டும்; அவ்வாறு செய்தால் உமது பெருமைக் கழகாம், இல்லையாயின் உமது பிள்ளைகளுக்குத் துன்பநேரும், அவ்வாறுகாவண்ணம் காத்துக்கொள்ளுதல் நலமாமென்று கூறி அவனிடம் விடைபெற்றுத் தன் மாளிகைபோய்ச் சேர்ந்தான்.

பின்பு திருதராட்டிரன் விதுரனை யழைத்துவரும்படி யோர்தூதுவனை யனுப்பினன். அவ்வாறே அத்தூதுவன் விதுரரிடஞ்சென் றறிவிக்க,அவனும் குருடனைவந்து கண்டு என்னையழைத்தகாரண மென்னவென்று வினவினர். திரிதராட்டிரன் எனதன்புக்குரிய விதுரனே! நீ நீடூழிவாழக்கடவை, பாண்டு புத்திரர்கள் சருகுமுதலியவருந்தி தேகமெலிந்து அவர்கட்கு நியமித்தநாளைக் கணக்கிட்டு வருகின்றார்களாம், பன்னிரண்டாண்டும் சென்றனபோலும், இன் னுமோராண்டையுங்கழித்து நமது நகரத்துட்புகுந்து என்னரிய புதல்வர்களை ப்பிடித்து கழுங்கெறிவதேபோ லெறிந்தும் வாள்கொண்டறுத்தும் படைகளா லோச்சிப்புடைத்தும், உள்ளநடுங்கக் கொல்வார்களே, நாரதமுனிவரு மிங்கு வந்து கொடுஞ்சாபங்கூறிப் போயினரே, அறிவிற்சிறந்த நீயு மவர்பா லன்பு

கொண் டிருக்கின்றனையே, இனியேனு மவர்களை யழைத்துவந்து பல இனிய மொழிகளைக்கூறி அவர் நாடுமுதலிய யாவுங்கொடுத் துதவி யுத்தநேரிடாவண் ணஞ்செய்தால் நன்மையாமன்றோ ? அறிவின்மிக்கோய் ! எனக் குன்னினுஞ் சிறந்தா ரொருவருமில்லை, ஆதலால் நன்மையானவைகளை யெடுத்துக்கூறென் றான். இவ்வாறு சொல்லக்கேட்ட விதுரர் யாவுமுணர்ந்த அரசர்பெருமானே ! இனியொருக்காற் பாண்டவர்கள் அவர்களுக்கு நியமித்த நாளையொழிக்காமல் இந்நாட்டிற் புகாரொன் றுறுதியாகவெண்ணும் ; இறைவனரு ளெப்படியோ அதையாவரறியவல்லார் ; "வருவது வந்தேதீரும்" என்பதெண்ணி யெண்ணி மனம்வருந்துவதிற் பயனில்லை. உமது புத்திரர்கள்குண முமக்குத் தெரிந் திருந்தும் நீர் பலயோசனை செய்வதிற் பயன் யாது. முன்னமே இக்குணமிருந் தால் இனிவருந்துன்பத்திற்கே இலக்காகா துயிர்வாழலாமன்றோ வென்றான். இவ்வா றிங்குநடந்த செய்தியாவும் கேட்டிருந்த ஓர் சாரணன் வன்னெஞ்ச முடைய துரியோதனனிடத்திற்சென் றறிவித்தான். அழுக்காறமைந்த மனத் தையுடைய துரியோதனனே வெனின் விதுரர்மேல் மிக்கசினங்கொண்டு பா ண்டவர்களைக் காட்டிற்செல்லவிடுத்த சகுனியையுங் கர்ணனையுந் துச்சாதன னையுமழைத்துக்கொண்டு அரசனிடம்வந்து இவ்வாறு சொல்வானாயினான்.

என்னையீன்ற தந்தையே ! யான் துரியோதனன், தாமரைமலர்போன்ற தேவரீர் முகம் இன்று வாடியிருக்கக் காரணம்யாதோ தெரியவில்லை. அற்ப வலியையுடைய பாண்டவரைமிக்க ஆற்றலுடையாரொன்றெண்ணியே வருந்து வதாய்த்தோற்றுகின்றது. தேவரீருக்கு அக்கவலையைவிட வேறொன் றுமில்லை யென் றெனக்குத் தெரியும். மசகத்தையொத்த பாண்டவர்கள் ஈறிலாப்பரம னருளும், இந்திரன் முதலிய தேவர்கள் துணையும் பெற்றிருக்கின்றா ரொன் றெண்ணி மனம் வருந்துகின்றீர், ஔவியமுதலிய அழுக்காறமைந்த குணங் கள் மனிதர்க்கேயன்றி எல்லாவுயிர்களையு மோரேதன்மைத்தாய்க் காத்தழித் தளிக்கும் இறைவனுக்கு நம்பால் கோபமுண்டோ ! யாமு மவனைத் துதித்து வழிபடா திருக்கின்றோமோ ! ஒருக்கால் அவர்களும் பாண்டவர்களுக்குத் துணைவராய் வரினும் நம தளவிலாச் சேனைகளைக்கொண்டியா னொருவனே முன்னமுகத்துநின்று அவர்களைப் பொருதுவெல்வேன். இந்திரன்முதலியதேவர் களும் போர்செய்யும் வகையையு மறிவரோ ! அற்பவலியையுடைய அரக்கரு டன் போர்செய்ய வறியாமல் தமதுருக்கரந்தோடியொளிக்கும் இயற்கை யுடையவரன்றோ ! யானவர்களை வெற்றியடைதலு மருமையாமோ ! யானு மற்பவலி யுடையேனோ ! என்னாற்றலைத் தேவரீ ரெவ்வளவு மறிந்திலிர் ! எமதாற்ற லிவ்வளவேயோ ; தனுர்வேதமியாவும் ஐயந்திரிபறக்கற்ற மிக்க ஆற்றலுடைய கர்ணன் சினந்து போர்க்கெழுந்தால் இவ் வகிலத்துள்ளோ ரவன்முன்னின்று போர்புரியவும் வல்லரோ ! எம்மளவிலா வாற்றலையறியா மலே கவல்கின்றீரோ, பிணி சரீரத்திருந்தே கொல்லுமென்பதுபோல் நம தர சாங்கத்திருந்து நாம் கொடுக்கப்பெறும் பொருளைக்கொண் டுண் டுயிர்வாழ் பவர்களும் நமக்கே கேடுநினைக்கின்றார்களே. அக்கெடுமதியவர்களையே கெடுக் கும். இக்கடல்புடைசூழ்ந்த காசினியிலுள்ள யாவரும் என்னாணையி லடங்கி

நிற்கின்றனர். பாண்டவர்க்கோவெனின் சருகுமுதலிய சத்திலா வுணவுண்டு திரியும் வலியிலா இருடிகளே அவர்க்குத் துணைவராவார்கள்! அவர்களோ முனைமுகத்து நிற்கவறியார். பாண்டவர்கள் நாம் பணித்த பணியைமேற்கொண்டுகாட்டிற்சென்று சருகுமுதலியவருந்தி வலியற்று ஆற்றல்குன்றி யிருக்கின்றனர். நாமோயாவராலும் புகழப்பெற்று எல்லா நலனையுந் துய்த்துக் குறைவின்றி மிக்கவலிபெற்று வாழ்கின்றோம். பூனை புலிபாய்ச்சல் பாய்ந்தாலும் புலியை வெல்லவல்லதோ! எம்மாற்றலைச் சற்றுமறியாக் கயவர்சொற்கேட்டு தேவரீர் மனங்கவல வேண்டாம். பாண்டுமக்கள் நாம் பணித்த பதின்மூன்றாண்டையுங் கழித் திறவா திங்குவந்தால் ஓரிமையோனாயி லவர்களைச் சூறுவளியி லகப்பட்ட சருகேபோற் பறக்கடித்துத் துறந்திவிடுவேன். இதற்கையமேயில்லை. நீர் சற்று மனங்கவலவேண்டாமென்று மிக்க செருக்குற்ற மனத்தையுடைய துரியோதனன் கூறக்கேட்ட அறிவிலா வந்தகனாகிய திரிதராட்டிரன், ஐயமேற்றுண்டுயிர்வாழு மேழையர்க்குப் பொற்குவியுலகப்பட்டதேபோல் அகமகிழ்ந்து நம்மாற்றலுடைய புதல்வனா மித்துரியோதனன் எவ்விதத்திலும் பாண்டுமக்களை வெற்றியடைவனென் றெண்ணி அவனை யருகிலழைத்துத் தன் மார்புறத்தழுவி முத்தமிட்டு நீ நீடூழி வாழக்கடவையென்றாசிகூறி அரண்மனைக் கேகென்று விடைகொடுத்தனுப்பினான். இதுகிடக்க;

இவ்வாறு திரிதராட்டிரனிடம் விடைபெற்றுக் குடிகேடனாகிய சகுனியும் கர்ணனும் துரியோதனனு மொன்றுகூடி நறுமலர்ப் பொய்கையுடைய பூங்காவனத்துட் சென்று துரியோதனன் தனக்கு வரும் கேட்டை யுணராமல் சகுனிமாமனையும் கர்ணனையும் நோக்கி இவ்வாறு வினவலாயினான். விதுரன் எங்ஙனும் பாண்டவர்களின் சார்பாகவே நின்று அவர்களாற்றலையே பெரிதெனத் திரிதராட்டிரனிடம் புகழ்ந்துகூறிவருவதால் தந்தை யுள்ளமெலிகின்றான். இவ்வா றவ்விதுரன் பாண்டுபுத்திரர்களாற்றலை அரசனுக் கென்றென்று மெடுத்துக்கூறுவண்ணம் நமது தெளிந்த அறிவால் ஓர் யோசனைசெய்யவேண்டும்! நாம் மூவரு மொன்றுகூடி யோசித் தோர்காரியஞ் செய்தாலதற்குப் பழுதுநேருமோ? வென்று தம்மையே புகழ்ந்து நின்றான். இதைக் கேட்ட கர்ணன் ஈரேழுலகத்து மும தாணையைச் செலுத்து மரசே! குந்தி புதல்வர் காட்டிற்றிரிந்து நல்லுணவகன்று சருகுமுதலியவருந்தி நிற்க நிழலில்லாமல் உள்ளமெலிந்து முகம்வாடித் தாம் முன்னிருந்த சிறப்பை எண்ணியெண்ணி நமக்கிக்கதி வாய்த்ததேயென்று துயரமென்னு முவர்க்கடலிற் படிந்து இக்காட்டிற்குச் சமீபத்திலுள்ள காட்டில்வந்திருப்பதாய்ச் சிலர்சொல்லக் கேட்டேன். அளகைக் கிறைவனாகிய குபேரனது செல்வத்தினு மெண்மடங்கதிகமாகப் பெற்றுத் தேவர்முதலிய யாவரும் வியக்க போகபாக்கியத்தைத் துய்த்திருக்கு நீர் குணத்திற்சிறந்த உமதழகிய பத்தினிமார்களுடன் ஏழையராகிய பாண்டுபுத்திரர்கள் வசிக்கும் வனத்துட்சென்று அவர்முன் னுலாவினால் நீரடைந்திருக்கும் பெருமிதம்பெற்ற செல்வத்தைக்கண்டு நாணி இறப்பர், ஒருவாறவர்கள் மனைதிடங்கொண் டிருப்பினும், திரௌபதை உமது பத்தினிமார்க ளணிந்திருக்கும் அணிமணிப்பணிகளையும் பீதாம்பர உடைகளையுங்

கண்டு உடல் குன்றி நாணங்கொண்டு ஐவரையும் நிந்திப்பாள், அதனாலேனு மவருயிரைப் போக்கிக்கொள்வர். திரௌபதை நமக்குள்ள பொருண்மே லிச்சித்து உம்முடன் கூடியேனும் வந்துவிடுவாள். அல்ல தக்கானைவிட் டகன்றுபோய்விடுவர். இதிலேதேனுமொன்று நமதிட்டப்படியானால் விதுரன் அவராற்றலைப் புகழ்ந்துகூறுவ தொழிவானென்று இவ்வகைத் துர்ப்போதனையைக் கூற, துரியோதனன் உள்ளமகிழ்ந்து நீ இப்போதெடுத்துக் கூறிய யோசனை மிகச்சிறந்ததேயாயினும், திரிதராட்டிரன் இக்கருத்துக் கிசையானே! இதற்கென்செய்யலாமென்று கூற,சகுனி இவ்வாறுகூறலாயினான். அரசனிடம் விடைபெற்றேகல் ஒருபெரிதான காரியமல்லவே! நமதளவிலாப் பசுக்கூட்டங்களை மேய்க்கும் ஆயர்தலைவனை யழைத்து காட்டிலுள்ள புலிக்கூட்டத்தால் அளவிலாப் பசுக்கள் இறந்துபோயினவென்று அரசனிடஞ் சென்றறிவிக்கும்படி கற்பித்து நாளையத்தின மரசனிடம்வந் தறிவிக்கச் செய்தால் அச்சமயத்து யானங்கிருந்து அரசனிடம் நீர் காட்டுக்கேகும்வண்ணம் விடை பெறுகின்றேனென்று சொல்ல, துரியோதனன் தான்கொண்ட களிப்புக் கெல்லையில்லாமல் இருவரையும் ஆலிங்கனஞ் செய்துகொண்டு நம்மினு மறிவின்மிக்கா ரில்லையென்று தம்முள் தாமே புகழ்ந்துகொண்டு அரண்மனை போய்ச் சேர்ந்தனர்.

இவ்வா றரண்மனைபோய்ச்சேர்ந்து உண்டாட்டயர்ந்து அடைகாய் முதலியவருந்தி மீண்டு மூவருமொன்றுகூடி ஓர் தூதுவனை யழைத்து ஆயர்கூட்டத் தலைவனை யழைத்துவரும்படி ஆஞ்ஞைசெய்தனர். அவ்வாறே தூதுவன் சென்று ஆயர்தலைவனை யழைத்துவந் தவர்முன்விட்டான். துரியோதனன் சகுனிகற்பித்தவாறே அவனுக்குக்கற்பித்து நாளைத்தினம் நீயும் இன்னு மெமது ஆக்களைமேய்க்கும் ஆயர்களையு மழைத்துக்கொண்டு அரசனிடம் வந்து முறையிடுங்கோளென் றாஞ்ஞைசெய் தனுப்பிவிட்டு அன்றிராப்பொழுதை யோருகமாக வெண்ணிக் கழித்து மறுநாட் காலையில் மஞ்சம்விட்டெழுந்திருந்து காலக்கடனைமுடித்துக்கொண்டு மூவரும் அரசனைக்காணவேண்டி வந்தவரேபோல் திரிதராட்டிரனிடஞ்சென்று தங்கள் வரவைத் தெரிவித்து நின்றார்கள். அவனு மவர்க் காசிகூறினான். இது நிற்க; ஆயர்கோனும் ஆயர்களு மொருங்குகூடி துரியோதனனுக்கு வருங்கெடுதியை யறிவிப்பார்போல கண்ணிலானிருக்கும் ஆசாரவாசலில் வந்து கோவெனவார்த்து எம்மையாளு மரசரேறே! காட்டிலுள்ள பெருமிதம்பெற்ற உழுவைக்கூட்டங்களால் நமது எண்ணிலாப் பசுக்களி லனேக மிறந்துபோயின. இன்று யாங்கள் பசுக்களைக் காட்டிற் றுறத்தாதிருக்கின்றோ மையனே! என் றறிவித்தனர். இதைக் கேட்ட அரசன்சற்றாலோசித்து சகுனியைத் தன்னருகிலழைத்து நமதுமாற்றலராகிய பாண்டுபுத்திரர்கள் அவ்வனத்திலிருப்பதாக ஓர்வேதியன்சொல்லக் கேள்விப்பட்டேன், நீங்க ளிப்போ தங்கு சென்றால் மிக்க வாற்றலுடைய வீமன் உம்மேற் சினங்கொண்டு அவன் கரத்திலுள்ள தண்டாலோச்சிப் புடைத்துக் கொல்வானாதலால் சுயோதனன் தவிர மற்றவர்கள் சென்று வேட்டையாடி புலிக்கூட்டங்களைக் கொன்று பாண்டவரைப் பகையாமல் வாருங்கோ

ளென்றான். அந்தக னிவ்வாறு சொல்லக்கேட்ட சகுனி, அரசர்க்கரசனே! பாண்டு புதல்வ ருறையும்வனம் வேறு, நமது பசுக்களிருக்கும் வனம்வேறு, திரிவித வுலகத்தும் தன்னாணையைச் செலுத்துஞ் சுயோதன னில்லாமல் மற்றவர்செல்வது தகுதியேயல்ல,நீர்பாண்டவராற்றலையெண்ணியே இவ்வாறு சொல்லத்துணிந்தீர், அவர்க ளொருக்கால் துரியோதனனைக் காண்பரேயாயி னும் நீதியைத் தவிர்ந்து நடக்கமாட்டார்கள், நாம் பணித்த பதின்மூன்று வருடத்தையுந் தொலைத்தே இங்கு வருவர், அவ்வா றவர்கள் வருநாளில் அவர்க்குரிய நாட்டைக் கொடுத்துவிட்டால் நமக்கு யுத்த நேரிடாது, கொடாவிட்டால் யுத்த நேருவதுண்மை. பொறுமையிற் கடலினுஞ் சிறந் தவர். அதற்கோர் பேழைபோல்பவர், நீ ரொன்றுக்கு மஞ்சவேண்டாம். சுயோதனன் வேட்டைக்குச்செல்ல விடைதரலாமென்று குருடன் களிக்கு மாறு தனக்குவரும் கேட்டையறியாமலே நயமாகப்பேசி நடித்தான். அதற் கரசன்மகிழ்ந்து நீஇப்போதெடுத்துக்கூறியன அனைத்துமுண்மையே! நீசுயோ தனனுடன் செல்லவில்லையோ வென்ன,மிக்க வாற்றலுடைய தம்பிசெல்லும் போதுயானேன் செல்லவேண்டு மென்றான்;நீயுந்தம்பியருடன் சென்றுவேட் டையாடி வாருங்கோளென் றாஞ்ஞைசெய்து விடைகொடுத் தனுப்பினான்.

இவ்வா றரசன் விடைகொடுத்தபின் யாவரும் மனங்களித்து அரண்மனை யிற்சென்று தத்த மனைவியர்களை அணி மணிப் பணிகளா லலங்கரித்துக் கொள்ளும்படி ஆஞ்ஞைசெய்து தாமு மாடையாலங்கிரதர்களாய் இரதகஜ துரகபதாதிகளுடன் தேரிலூர்ந்து காட்டையே நோக்கிச்சென்று நீர்வள நில வளமுள்ள இடத்தில் சேனைகளை நிறுத்தி சற்றுநேரம் வேடிக்கையாகவே அக்காட்டிலுள்ள மிருகக்கூட்டங்களைக் கொன்று இளைப்புற்று வெயிலுக் கொதுங்கி அங்குள்ள தடாகத்தில் யாவரு நீருண்டு அதைவிட் டகன்று தன் சேனைக ளிருக்குமிடத்திற்கு வந்து உண்டு களித்து அன்றிராப்பொழு தை அங்கிருந்தே கழித்து மறுநாட் காலையில் யாவரு நித்திரை தெளிந்தெழு ந்திருந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு பலகாரவகைகளைப் புசித்துநீரரு ந்தி விலையேறப்பெற்ற ஆடைகளை யுடுத்திக்கொண்டு அகமகிழ்ந் திரதத்தினை யூர்ந்து பாண்டவருறையும் வனத்திற்குவந்து இரதத்தைவிட்டிழிந்து பாத சாரியாய்த் தத்த மனைவிமார் கரத்தைப் பற்றிப் பாண்டவர்முன் னுலாவித் திரிந்தனர். இவ்வாறு சற்றுநேர முலாவி வெயிலோனது வெப்பத்தால் காவறண்டு தாக மிகுந்து அங்குள்ள தடாகத்தில் நீருண்டு அந்நிலமிக்க செழிப்புற் றிருக்கக்கண்டு ஏவலாளிகளை யழைத்து அங்கு பாசறை சமைக் கும்படி யுத்திரவுசெய்து சுயோதனன் முதலிய யாவரும் வேறுவனத்திற்சென் றுலாவித் திரிந் திருந்தனர். அரசன் கட்டளைப்படி ஏவலாளர் அந்நிலத்திற் பாசறை விரைந்துசமைத்தனர். அவ்வனத்திலுள்ள தடாகத்தில் கந்தருவர் ஜலக்கிரீடை செய்வதாதலால் அதற்குக்காவலாயுள்ள காந்தருவர் பாசறை வேய்ந்திருப்பதைக் கண்டு வெகுண்டு ஏவலாளரை யடித்துத் துரத்திவிட்ட னர், அவ்வீரர்க ளையகோவென் றலறி உள்ள நடுநடுங்கி ஓட்டெடுத்துத் துரி யோதனனிடஞ்சென் றறிவித்தனர். இது நிற்க;

ஏவலாளர் நடந்தவற்றை யெல்லாம் துரியோதனனுக் கறிவிக்க, அவனவர்களை உள்ளத்தில் மதியாம லவமதித்து மிக்க செருக்குற்ற மனத்தனாய் தம்பிமார்களையழைத்து நமது சேனைகளிற் சிலரை யழைத்துக்கொண்டு நம தாற்றலைச் சற்றுமறியாமல் நமது ஏவலாளரை யடித்துத் துரத்திய அக் கந்தருவரிருக்கு மிடத்திற்குச் சென்று அவர்களை ஒரிமையோரையில் முடித்து நமது ஆற்றலைக் காட்டி வாருங்கோளென்று ஆஞ்ஞைசெய்தான். அவர்களு மவ்வாறே அம்பறாத் தூணியை முதுகிற்றூங்கி வில்லைக் கையிலேந்தி வாள் வேல் முதலிய படைகளைத் தாங்கி யுத்தசன்னுத்தராய்த் தேரூர்ந்து கந்தருவக் காவலாளரிடஞ் சென் றவர்களை நோக்கி அடா அற்பராகிய கந்தருவக் காவலாளர்களே! எம தாற்றலைச் சற்று மறியாமலே குற்றேவல்செய்வாரை யடித்துத்துரத்தினீர்கள், நீரோ போர்செய்யும் வகையைச் சற்று மறிந்திலீர்! உமக்கு இறுதிக்காலஞ் சம்பவித்தே இப்படிச் செய்யத் துணிந்தீரென்று துன்முகன்சலந்தன் சகன் சமன்முதலிய துரியோதனன் தம்பிமார்கள்வாய்வாதம் பேசிவில்லிற் சிலகணைகளைத் தொடுத்து அக்காவலாளர்மேல் விடுத்தார்கள். கந்தருவரோவெனின் கண்களில்தீப்பொறி சிதறக்கோபநகைநகைத்து தமது வில்லி லநேக பாணங்களைத் தொடுத்து தம்மைச் சூழ்ந்துகொண்ட சேனைகளின்மேல் விடுத்து அவர்களை நோகச்செய்து மீண்டுஞ் சில பாணங்களைத் தொடுத்து அரசர்மேல் விடுத்தார்கள். அக்கணையின் வேகத்தைக்கண்டஞ்சி அதைத் தகர்க்கும் வகையையறியாமல் யாவருமுதுகுகாட்டி யோட்டெடுத்துத் துரியோதனனிடஞ் சென்று கந்தருவரி னாற்றலைப் புகழ்ந்துகூறி அவர்களைப் போரில் வெல்ல முடியாதென்றார்கள். அதைக்கேட்ட அரவக்கொடியோன் புயங்குலுங்க நகைத்து அக்காவலாளரை யோர் பொருட்டாயெண்ணி அவர்களை முடிக்க வகையறியாமல் அவராற்றல் மிக்கதென் றென்முன் னின்று சற்றும் நாணமென்ப தில்லாமற் புகழ்ந்து கூறுகின்றீரே! உமதாற்றல் நன்று நன்று! எனக் கோபித்தெழுந்து அவர்களை ஒரிமையோரையில் விண்குடி புகச்செய்வேனென் றாரவாரித்து தன் னளவிலாச் சேனைகளையும் தம்பிமார் முதலிய யாவரையு மழைத்துக்கொண்டு தேரிலேறிக் கந்தருவரிடஞ்சென்று அங்குக் காவல்புரியும் கந்தருவரைக்கண்டு உமக்குப் பிரமன் விதித்த ஆயுள் இன்றுடன் முடிந்ததென் றறியுங்கள், நீ ராற்றலுடையவரானால் என்முன் னின்று யுத்தஞ் செய்யுங்களென்று தன் வில்லை வளைத்து நாணேறிட்டு அதிற் சில கணைகளைத் தொடுத்து விட்டுக் குணத்தொனிசெய்து நின்றான். அதனாற் சில கந்தருவர் மாண்டனர். இதைக்கண்ட கந்தருவராசன் மிக்க சினங்கொண்டு தன் னழகிய மனைவிமாரை ஓரிரதத்திலிருத்தி அதற்குச் சிலரைக் காவலாக வைத்துவிட்டுத் தானே ரழகிய தேரிலேறித் துரியோத னனியரை யெதிர்த்துத் தன் வில்லி லெண்ணிலாக் கணைகளைத் தொடுத்து மாரி போற் பொழிந்தான். அவ்வாறவன்விட்ட கணையால் துரியோதனனியர்சேனைகளிற் சிலர் மாண்டனர், சிலர் கைக ளற்றனர், சிலர் தலைகளற்றனர், சிலர் கால்களற்றனர், பல தேர்களழிந்தன, குதிரைக ளழிந்தன. இவ்வாறு கந்தருவராசனாகிய சித்திரசேனன் வருத்தக்கண்ட அரவக்கொடியோன் உருத்திரனே

போற் சினந்து சித்திரசேனனை நோக்கி நீ வில்லிற் சமர்த்தனேயாயின் நான் விடு மிக்கணையைக் காத்துக்கொள்ளென்று ஓர் வடிக்கணையைத் தொடுத்து விடுத்தான். சித்திரசேனனோர்கணையைவிடுத்து அதனை நடுவதுபாதியிற்றகர்த்து மற்றோர்கணையை விடுத்துத் துரியோதனனையுநோகச்செய்தான். அரவக் கொடியோன் அக்கணையால் உள்ளமெலிந்து சற்றுநேர மசைவற நின்று பின் போர் பிறைமுகக்கணையைத் தொடுத்துச் சித்திரசேனன் சிரமே யிலக்காக விடுத்தான், கந்தருவராசன் அக்கணை தன்மேற் படாமுன்னமே ஓர் கணையை விட்டுப் பொடிப்பொடியாக்கி மீண்டுமோர் கணையை வில்லிற் றொடுத்து துரியோதனனுடைய வரைபோன்ற புயமே இலக்காக விடுத்து வானத்துள்ள தேவர்கள்முதலிய யாவரும் மனங்கலங்கும்படி குணத்தொனி செய்து நின்றான். சித்திரசேனன் விட்டகணை அரவக்கொடியோன் புயத்தில் நன்றாய்த் தாக்கி யுருவிச்செல்லச் சாரதி இரதத்தைப்பின்னுக்குச் செலுத்தினான்; துரியோதனனும் தேரின்மேற் சாய்ந்து மூர்ச்சையடைந்தான். இது கிடக்க;

இவ்வாறு துரியோதனன் தேரின்மேற் சாய்ந்ததைக் கண்ட கர்ணன் உருத்திரனேபோற் கோபித்துத் தன் தேரைச் சித்திரசேனன்முன் செலுத்தி என்னொடு போர்செய்ய வல்லையோவென்று ஓர் வெவ்விய கணையைத்தொடுத்துவிடுத்தான். அதுமின்போலொளிவிட் டெரிந்துகொண்டு சேனையிற்பாய்ந்து பலகந்தருவ ருயிரைக்கவர்ந்துசென்றது. இதைக்கண்ட கர்ணன் மீண்டுஞ் சிலவெவ்விய கணைகளைத் தொடுத்து விடுச் சேனைகளையுந் தேர்களையும் பரிகளையும் மதம் பொழிகின்ற யானைகளையு மழித்து வெற்றியடைந்தோமென்றெண்ணி ஆரவாரித்து மற்றோர்கணையைத் தொடுத்து சித்திரசேனன் சிரமே இலக்காக விடுத்து நின்றான். சித்திரசேனனே புரம் பொடிபடுத்த புண்ணியனேபோல் வெகுண்டு அவன் விட்ட கணையை ஓர் கணையாற் றகர்த்துப் பின்பு தன் தேரை கர்ணனுக்கருகிற் செலுத்தி உன்னை யான் வெற்றியடைவதுமோர்பொருட்டோ? நீ என்திறத்தைக்கண்டாயில்லையே! யென்று தன் னம்புட்டியில் வெவ்விய கணையைத் தெரிந்தெடுத்து வில்லிற் றொடுத்து காலாள் தேர் கரி பரி முதலிய யாவு மழித்துக் கர்ணன் தேகமுழுதும் தொளைபடச் செய்தான், அதனால் கர்ணனுமயர்ந்தான். சித்திரசேனனே அம்மட்டிலிராமல் மாயாஸ்திரமொன்றைப் பிரயோகித்துத் தன் சேனைகளைத் துரியோதனாதியர்களின்மேலேவி தானும்தேரைவிட்டிழிந்து துரியோதனன் முதலிய யாவரையும் மடலொடு மடலொடியப் பிடித்துப் பிணித்து வடத்தாற் கட்டி அவர்கள் மனைவியரையும் தேடிப் பிடித்துவந்து தேரின் கொடிச்சீலையாற் பிணித்துக் கட்டி, முதுகிட்டோடும் சேனைகளையும் துரியோதனன் தம்பிமாரையும் பிடித்துக் கரத்தாலிடித்தும் காலாலுதைத்தும் வில்லாற் புடைத்தும் ஐயகோவென்று வாய்விட்டலறும்படி புயத்தொடுபுயத்தையொடித்துக் கயிற்றாற் பிணித்துக்கட்டி வெண்ணிலவுபோன்ற வெயிற்றையுடைய கந்தருவப் பெண்கள் நகைக்கவும் இராசபத்தினியார்கள் வாய்விட் டலறியழவும் சங்கம் பூரித்து யாவரையு மீர்த்துச் சென்றான். உலகில் அழுக்காறமைந்த குணக்கேடர்க்கும் துன்ப மணுகா திருக்குமோ? அவர் பாண்டுமைந்தர்பாற்

செய்தகொடுமை சிறிதல்லவே, சித்திரசேனன் இவ்வாறு யாவரையும் பிணித்துக்கட்டிச் செல்லும்போது துரியோதனன் செருக்கடங்கி நாணமகன்று தான் எண்ணியவெண்ணம் ஈடேருமற் போனதை யெண்ணி யெண்ணிக் கண்ணீர் சிந்திக் கதறியழுதான். துரியோதனுதியர் மனைவிமார்கள் ஆடைவிலகியும் கூந்தல் புழுதியிற் புரண்டும் மாந்தளிர்போன்ற மெல்லிய மேனியெங்கும் செந்நீ ரொழுகும்படி வடத்தாற் பிணிக்கப்பட்டிருப்பதையு மெண்ணிக் கணவரடைந்த துன்பத்தையுமெண்ணுமல் அவரையே சிந்தித்து உயிர்ப்பு நீங்கினவரேபோற் கிடந்தனர். சேனைகளோ கரமொடிந்தும், சிரம்பிளந்தும், காலற்றும்,முகம் தேய்ந்தும், உடலிற் செந்நீரொழுகத் தேரிற் பிணிக்கப்பட்டுக் கிடந்தன. சித்திரசேனன் தன்சேனை விரைவாகச் செலுத்த அதனால் ஒருவர்மேலொருவர் தாக்கப்பட்டு உடல்வருந்திக் கற்பகாலத்திற் சத்திக்கும் கடலொலியேபோற் கூவி யழுதனர். இது நிற்க;

"தானென்றுநினைக்கத் தெய்வமொன்று நினைத்தது" என்பதேபோல், அடாதகாரியத்தைச் செய்யத்துணிந்த துரியோதனுதியரைக் கைக்கொண்டு செல்லுகையில் அரவக்கொடியோன் சேனையில் சித்திரசேனனுடைய கைக்ககப்படாமல் தப்பியொளித்திருந்த ஓர்வீரன் பாண்டவரிருக்கும் வனத்தை நோக்கிச்சென்று யுதிட்டிரனைக் கண்டு அவன் தாளில் வீழ்ந்துவணங்கிக் கைகூப்பிநின்று இவ்வாறுசொல்வானுயினன். குணத்திற் குன்றுபோலும்,ஈதலிற் கற்பகம்போலும், அருளுக் கிருப்பிடம்போலும், பிறவற்று லோர் நன்மையையடையாமலே யுதவும் மேகம்போன்ற தன்மையையும் யாவரிடத்தும் பகைமை பாராட்டாம லீரேழுலகத்தும் உமது புகழையே நிலைநாட்டிய அரசர்க்கரசனுகிய என்னையாளு மிறைவ! தமக்கு வரும் கேட்டை யுணராமலே தேவரீரை இத்துன்பத்திற் குள்ளாக்கிய துரியோதனுதியர் இன்றும் உமது பெருமையை யழிக்கவேண்டுமென்றே இங்குவந்து சித்திரசேனனல் மொத்துண்டு அவன் தேரிற் பிணிக்கப்பட்டு அழுதகண்ணும் சிந்திய மூக்குமாய்ச் செல்கின்றனர். அவனு லநேக சேனைகளு மடிந்தன,யானே அவன்கையினின்றும்பிழைத் திங்குவந்தேன், 'சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பதுகடனே' என்றபடி,சிறியோ ரெத்தனை பிழை செய்தனரேனும் தேவரீரைப்போன்றபெரியோர் அதைக்குற்றமாகவே கருதார், ஆதலால் இன்று அவர்களைப் பிழைக்கச்செய்தால் உமது பெருமைக் கழகாம். ஒருவன் தான் கெடவேண்டியே ஒருவருக்குக் கேடுநினைப்பான் எனப் பெரியோர் சொல்வர். உம்பால்பகைமைபாராட்டுவோர்தீயிற்பட்டசருகேபோல் அழிந்தேபோவர். ஆயினும் உமதுறவினரை அன்னியன் இவ்வாறு செய்யத் தேவரீர் பார்த்திருந்தால் உலகத்தார் உம்மையே நிந்திப்பார்கள், உம்மை யல்லால் அவரை மீட்கும் வகையறியேனென் றிறைஞ்சி நின்றான்.

இவ்வாறு கூறக்கேட்ட கருணைக்கடலாகிய தருமராசன் மாற்றலர்மேற் கருணைகூர்ந்து தன் சமீபத்திருந்த வீமனைநோக்கி என்னன்புக்குரிய வீமசேனு! அந்தணர், விருத்தர், பிணியாளர், கற்றறிந்த நாவலர், பெண்கள், தரித்திரர், சிறுவர், படையிலிழந்தோர், அடைக்கலம் புகுந்தோர் ஆகிய

இவர்களைக் காக்கவேண்டுமென்று விதியிருக்கின்றமையால் நமது தம்பிமாரை நீபோய் மீட்டுவாவென்று சொல்ல, வீமன் உருத்திரனேபோற் சினந்து பூமி பிளவுபடும்படி உதைத்தெழும்பி அண்ணா! நீரிப்போதுகூறியது நன்றுநன்று, இன்னுமவர்மே லிரக்கங்கொண் டெனக்குப் பணித்த பணி அழகாயிருக்கின்றதே! அவர் நம்பாற்செய்த கொடுமையை மறந்தீர்போலும், அடாதகாரியஞ் செய்தால் யாவர்தான் துன்பத்திற் குள்ளாகாதிருப்பர். அவர்கள் இன்று நம்பால் சதிசெய்யவெண்ணியன்றோ இங்குவந்தனர். அதையும் யோசித்தீரில்லையே! உமக்குள்ள பொறுமையால்நமதுமாற்றலராகிய துரியோதனனுதியரால்துன்பத்தையே யனுபவிக்கவேண்டிவரும், நீரவனைக் கோபியாது விடுத்தாலும் தெய்வத்தாலாகுங் காரியத்தை நாமேன் தடுக்கவேண்டும்? துட்டனாகிய துரியோதனன் என்பாற்செய்த கொடுமைகள் தேவரீர் சித்தமறியாததோ? அன்னத்தில் விடத்தைக்கலந்தும்,கங்கையி லெறிந்தும், அரவத்தாற் றீண்டச்செய்ததுமல்லாமல் இத்துன்பத்திற் குள்ளாக்கினனே! அந்தோ! நம்மையெல்லாம் ஓரோரிரவில் நெருப்பிட்டுக்கொல்ல நினைந்தானே! அதையும் மறந்தீரோ! அன்றே நாமிறந்திருந்தால் இன்று யார்காப்பாற்றவல்லவர்? அக்கொடியோன் செய்தனவெல்லாம் அறநெறியாமோ? உமது பொறுமையாலன்றோ இத்துன்பத்திற்குள்ளானோம், இராசகுலத்திற் பிறந்தவர் இவ்வளவு பொறுமையும் பெற்றிருக்கலாமோவென்று கண்களிற் றீயெழக் கூவியோய்ந்தான். அவ்வாறுகூறிய வீமனை நோக்கி யுதிட்டிரன் மிக்கவாற்றலுடைய வீமா! நீ சிறுவனாதலால் யோசியாமற் பேசுகின்றனை! நீஅன்று இராசசபையிற்கூறிய சபதத்தையும் மறந்தனைபோலும்! இன்று துரியோதனன் சித்திரசேனனால் மடிந்தால் உன்சபதம் அவலமாய்விடுமென்றோ! அதனா லுமக்கோர் இழிசொல் நேருமன்றோ! அவ்வா றாகாமுன்னமே அத்துரியோதனனுயிர் நீங்காவண்ணங் காத்தால் உமது மனப்படி அவரவர்செய்த சபதத்தை நிறைவேற்றலாமென்றார். இதைக்கேட்ட வீமன் முதலிய யாவரும் நமது தமையன்கூறிய சொல் உண்மையேயென்று மனத்திலெண்ணி கால்வரும்தத்தங் கையில் வில்லையேந்தி அம்புப்புட்டிலை முதுகிற்றாங்கி வடதிசை நோக்கி விரைந்துசென்று சித்திரசேனனைக்கண்டு மான்கூட்டத்தைவளைந்த சிங்கமேபோல் அவர்களை வளைந்துகொண்டு அண்டங்க ளதிரும்படி யாரவாரித்து வில்லிற் கணைகளைத் தொடுத்து சித்திரசேனன் சேனைகள்மேல் விடுத்துச் சிரங்களும் கரங்களும் தோள்களுந் தாள்களும் அற்றுவிழும்படிச்செய்து மீண்டுஞ் சிலகணைகளைச் சித்திரசேனன்மேல் விடுத்து நோகச்செய்தனர். சித்திரசேனனோ இரதத்தை விட் டிழிந்து பாண்டவர்களை நோக்கி இவ்வாறு சொல்வானாயினன்.

பாம்புக்குப் பால்வார்த்து வளர்த்து அதனுடன் நெடுநாள் பழகியிருந்தாலும் அதன் செய்கையைவிடாம லவனுக்குத் துன்பத்தைத் தருமென்பதேபோல் உம்பால்அன்றுபலவரசரறியக் கற்பி லருந்ததியையொத்த திரௌபதியம்மையை சபையிலிழுத்துவந்த கொலைபாதகனும், செய்யத்துணியாத செய்கையை உம்முன் நிகழ்த்திக்காட்டினவனும், இன்று தாமணிந்துவந்த ஆடையாபரணங்களைக் கண்டு நாணி இறப்பீர்களென்றெண்ணி துர்மந்திரிக

ளாகிய சகுனி கர்ணன் சொற்கேட்டு வந்தவனுமாகிய அழுக்காறுடைய அத்துரியோதனன்மேற் கருணை கூர்ந்து மீட்கவந்த உமது பொறுமைக்கடலை அளவிடவல்லேனோ! இத்துட்டர்களுக்குத் தீங்கைபேசெய்யவேண்டுமேல்லது நன்மையுஞ்செய்யலாமோ!நானோ இவர்களுடன் போர்புரியவந்தேனல்லேன். உம்பாலின்று சதிசெய்யவந்ததை யறிந்த தேவர்பெருமான் துரியோதனனை மடலோடு மடலோடியப் பிணித்துக்கட்டித் தன்னருகிற் கொண்டுவரும்படி ஆஞ்ஞைசெய்தார். அவ்வாறே யானுமப்பணியை யேற்றேஇவ்வாறு செய்யலானேனென்று கூறினன். அதற் கர்ச்சுனன் அவனைத்தன்னகன்ற மார்புறத்தழுவி கந்தர்வராசனே! தன்மானம் பிறர்மானமென்பதில்லாமல் வாழும் வாழ்க்கை நல்வாழ்க்கையேயன்று! இவ்வறிவில்லாத துரியோதனன் எம்பாற்செய்தன வஞ்சனையேயாயினும் அவன்பிறரால் துன்பப்படப்பார்த்திருக்கப்போமா?இப்போதிவர்களை மீட்காவிட்டால் எம்மையும் உலகம்பழிக்குமே! எமது தமையனுராகியதருமராசனது நன்னெறியோ உன் சித்தமறியாதா! துரியோதனனுக் கித்துன்ப மணுகினதென்றறிந்தும் மனம்பொறுத் திருப்பரோ? அரவக் கொடியோன் உம்மால் பிணிக்கப்பட்டானென்றே, ஓரொற்றனல் அறிந்து மனம்வருந்தி இவர்களைமீட்டுவரும்படி வீமசேனனுக்குக்கற்பிக்க அவர்வெகுண்டு அரவக்கொடியோன்செய்த கொடுமைகளை யெல்லா மெடுத்துக்காட்டியுங்கேளாமல் அவர்களை இன்று மீட்டுவந்தாலேயல்லது நீரு மருந்தேனென்று சபதஞ்செய்துகொண்டார், ஆதலால் என் தமையனை யழைத்துக்கொண்டு துரியோதனுதியரை மீட்டுப்போக வந்தேன். உனது சேனைவீரும்எமதுமேற் கணைதொடுத்தனர், யானுங்கணைதொடுத்தேன். இனித் துரியோதனுதியரைக் கட்டவிழ்த்து விடவேண்டுமென்றான். அதற்குச் சித்திரசேனன்சம்மதித்துத் தருமபூபதியை நான் காணவேண்டுமென்றான்; அவ்வாறே காணலாமென்று தருமராசனிருக்கும் திசையையே நோக்கித் தேரைச்செலுத்திச் சமீபத்திற் சென்று தேரைவிட் டிழிந்து பாதசாரியாய் நடந்தான். அவ்வாறு சித்திரசேனன்வருவதைக்கண்ட தருமராசன்எதிர்கொண் டழைத்துமிக்கஅன்புடன் உபசாரவார்த்தைகளாடி ஓராசனமளித் துட்காரச்செய்தான். சித்திரசேனன் தான் இந்திரன் பணியை யேற்றுவந்ததைத்தெரிவித்து யாவரிடத்தும் விடைபெற்றுத் துரியோதனுதியர்களை விடுத்து இந்திரலோகஞ் சென்றான்.

இவ்வாறு சித்திரசேனனும் யாவரிடத்தும் விடைபெற்றுச் சென்றபின் குறும்பாடேபோற் றலைசாய்த்து நிற்கும்துரியோதனுதியர்களைக்கண்ட தருமராசன் உள்ளம் வருந்திக் கண்ணீருகுத்துத் தம்பியை யழைத்து வடத்தாற் பிணிக்கப்பட்டிருப்பதை யவிழ்த்துவிடும்படி ஆஞ்ஞைசெய்தார். அவ்வாறே தம்பிமாரும் எந்நாளுஞ்செருக்குள்ளமனத்தையுடையதுரியோதனன் முதலிய யாவரையும் கட்டவிழ்த்துவிட்டார்கள். தருமராசன் துரியோதனுதியர் மனைவியரைப் பாஞ்சாலியிட மனுப்பிவிட்டு மற்றவரைத் தன்னிடமிருத்திக்கொண்டார். அவர்களைக்கண்ட திரௌபதை சினமென்பதேயில்லாமல் அவர்க்குற்றதையெண்ணி மனம்வருந்தி அவர்கள்மேற்படிந்திருக்கும் புழுதியைத்துடைத்துச் சிக்குப்பட்டிருக்கும் கூந்தலைக் கோதிமுடித்து அவர்களணிந்திருந்த

பீதாம்பரவாடைகளெல்லாங் கிழிந்துகிடப்பதைக்கண்டு களைந்துவிட்டு முன் தனக்குக் குபேரனளித்த விலையேறப்பெற்றபட்டாலடைகளையளித்து உபசரித்தாள். இது கிடக்க; பின்பு அறக்கடவுளன்ன தருமராசன் அரவக்கொடியோனாகிய துரியோதனனைநோக்கி இவ்வாறுசொல்வாராயினர். தம்பீ! இராசயோகத்திலிருந்த உனக்கும்இக்கதிநேர்ந்ததே! பெரியோரைமதியாதிருந்ததனாலன்றோ இன்றித்துன்பத்திற் குள்ளாயினை? நற்குணமுடைய பெரியோரை அடுத்தவர்க்கும் துன்பநேருமோ? "பாலினீர் தீயனுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து, மேலுநீர் கண்டமையு மேன்மைபோல் - நூலினெறி, யுற்றோரிடுக்க ணுயிர்கொடுத்து மாற்றுவரோ, மற்றோர் புகல மதித்து." என்பதையும் யோசித்தாயில்லை. மிக்க புகழ்பெற்ற சந்திர குலத்தி லுதித்தும் வசைமேற்கொண்டனை, யாவராலும் புகழப்பெற்ற உன்கீர்த்தியும் இன்று கெட்டொழிந்தது, நீயுந் துன்பத்திற்குள்ளாயினை,இம்மட்டே யல்லாமல் காண்டற்கருமையானமழலைச்சொற்களைப் பேசித்திரியும் சிறுமிகளாகிய பெண்பிள்ளைகளையுமழைத்துவந்து சித்திரசேனனால் கட்டுண்ணச்செய்தனை, நீ நற்குணமுடையவனேயாயினும் வன்னெஞ்சர்கூறும் புன்மையான சொல்லை உண்மையென நம்பிமோசம்போகின்றனையே யல்லாமல் அதனால் யாதொருபயனுமடைந்தாயில்லை. அதுஉன்சித்தமேயறியும்; இன்னு மவர்சொற்கேட் டொழுகினால்துன்பமே பயப்பிக்கும். "ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை - தான்சாந் துயரந் தரும்." என்பதையும் சிந்தியாமல் நல்லொழுக்க முடையாரோடு நேசியாமலும் குணக்கேடர் நேசங்கொண்டதனாலன்றோ இத்துன்பத்திற் கிலக்காயினை, அந்தோ!சித்திரசேனன் பேதைப்பெண்களையும்வருத்தினானே என்று துயரங்கொண்டு சகுனிமாமனை நோக்கி யாவுந்தெரிந்த நீர்இச்சிறுவனாகிய துரியோதனனைவிட் டகலாதிருந்தும் அவனுக்கு இவ்வகைத்துன்பம் வரப் பார்த்திருக்கலாமோ? அவன் நன்மையல்லாதனசெய்ய முயன்றாலும் உம்மைப்போன்ற பெரியோர்கள் தடுத்து நன்மார்க்கத்திற்செல்ல விடுக்கவேண்டும். நீரோ யுத்தத்தின்பெருமையை யறியமாட்டீர்; நீரும் சித்திரசேனனால் பிணிக்கப்பட்டுவருந்தினீரோ! இனியேனும் இவ்வகைத்துன்பத்தையடையாவண்ணம் சுகமேவாழ்ந்திருங்களென்று யாவருக்கும் விடைகொடுத்தனுப்பினன்.

இவ்வாறு தருமராசனிடத்தில் யாவரும் விடைபெற்று அவ்விடம்விட்டகன்று தையித்தியவனத்தை யடைந்து அவருள் அரவக்கொடியோனே இவ்வாறுஎண்ணிவருந்தலாயினன். ஐயோ! நாமொன்றெண்ணினால் தெய்வமொன்றெண்ணியதே, நாமோ பாண்டவர்களைப் பழிக்கவேண்டுமென் றெண்ணிவந்தோமே, அது நம்மனப்படியாகாமல் இழிவையே தேடிக்கொடுத்ததே. நமது சேனைகளும் சித்திரசேனனால் மாண்டனரே. நாமும் துன்பத்திற் குள்ளானேமே, ஆயினும் அது இழிவாகாது. அரசர்க்கு ஜெயாபஜெயம் நேரிடுவது சகஜமே. அதற்கு நான் மனம்வருந்தவேயில்லை. நமது மாற்றலராகிய பாண்டவர்கள் சித்திரசேனனிடத்திருந்து என்னை மீட்டுவிட்டனரொன்னும்வதந்திஏற்பட்டமையால் அது என்னுயிருள்ளளவு நீங்காதே, இதற்கே யான் மனம்வருந்து

கின்றேன். பாண்டவராற் பிழைத்தேனென்னுஞ் சொல்லை ஒருவர் சொல்லக் கேட்காமுன்னமே என்னுயிரைப் போக்கிக்கொள்வதே நன்மையாகும்,இதை விட வேறுயோசனை செய்யப்போகாதென்று கண்ணீர்பெருக்கி நின்றான். அவ்வாறு புலம்பி நின்ற துரியோதனனைச் சகுனி நோக்கி ஏழைகளாகிய பாண்மக்கள் நம்மை மீட்டதால் அவர்களென்னபலனை யடைந்தனர்.யுதிட்டிரன் உரிமைக்காரனேபோல சில நீதிகளை யெடுத்துக்கூறித் தன்பெருமையைப்பேசி மனத்திருந்த வருத்தங்களையெல்லா மெடுத்துச்சொல்லிச் சுடாததுபோற் சுட்டிப்பேசினான். அதனாலவனுக்குப் பெருமையுண்டோ? தான் தோற்ற செல்வத்தையும்பெறுவானோ? அவன்கூறிய சொற்கு நாம்மதிமயங்கி அவனரசைக் கொடுத்துவிடுவோமோ? திருவும் படைத்துணையும் விசேடமாகப்பெற்றுள்ள நம்மை ஏழைகளாகிய பாண்டவர் மீட்டன ரென்றால்யாரோ யுண்மையென்று நினைப்பார்கள்; இதையோசியாமலே கவல்கின்றனை! உன்னாணையோ ஈரேழுலகத்தும் செல்கின்றது. உன்னாணையைக்கடந்து நடப்பவர் ஒருவருமில்லை. எல்லாப்புகழையும் நீயேபெற்றிருக்கின்றாய், நீ சற்றுங் கவலவேண்டாம்,யானதற்குத்தக்க சூழ்ச்சிசெய்கின்றேன்; யாவரும் நமதுநாட்டிற்குச் செல்லலாம் வாருங்கோளென்று சொல்லிக்கொண்டிருக்கையில் கர்ணன் இரதத்துடன் துரியோதனன்முன் வந்து இரதத்தைவிட் டிழிந்து அவனை நோக்கி இவ்வாறு சொல்வானாயினான்.

நான் கந்தர்வனுடன் போர்செய்கையில் அவ னிரதத்தின்மேல் என்னிரதந்தாக்கி நானேறியிருந்தஇரதம் உடைந்துபோயிற்று,பின்புவிகர்ணனதுதேரிலேறிச்செல்கையில் அத்தேர் சேற்றிலழுந்திவிட்டது. அதை உடனேநடத்தி யுத்தத்திற்குச் செல்லச் சரிப்படாமல் அச்சேற்றினின்றும்வர இத்தனைநேரஞ் சென்றது. உங்கள் கதி யென்னமாய்முடிந்தது என்றுகேட்டு உள்ளநொந்து கோவெனக்கதறியழுது நிலத்தைநோக்கி நின்று பின்னுஞ்சொல்லுகின்றான். நாம் எண்ணிவந்த காரியத்திற்கிடையூறோ நேர்ந்துவிட்டதே, அவ்வற்பனாகிய சித்திரசேனனையும் கொல்லாது விடுத்தோமே; என்தேர் சேற்றி லழுந்தாதிருந்தால் அவனைமுன்னமே விண்குடி சேர்த்திருப்பேன். நாமிவ்வகை வசையடையவேண்டியிருக்க அது நம்மைவிட் டகலுமோ? இக்கணமே என்னை அவன்மேல் போர்க்குச்செல்ல விடுத்தால்'என்னோர் கைக்கணையால்முடிப்பேன்; அல்லது அவனை என்தேர்க்காலிற் பிணித்துக்கட்டிக் கொண்டேனும் வருகின்றேன். அவ்வாறு செய்தால் உன்னிடம் தேவர்கள்வந்து வணங்கிச் சித்திரசேனனை விட்டுவிடும்படி வேண்டிக்கொள்வர். அதனால் நமக்கிப்போதுற்ற இழிசொல்நீங்கும் என்று கூறியோய்ந்தான். அதற்குத் துரியோதனன் இது "முற்கோணல் முற்றுங்கோணல்" என்னும்பழமொழிபோல் முடியும்,என்றால் உங்களுக்கு வருத்தம்வேண்டாம். நானோ இனி நாட்டிற்குவருவேனென்றெண்ணவேண்டாம். நீங்கள் நமது பெண்களை யழைத்துக்கொண்டு சுகமே நாட்டிற்குச்சென்று தாய்தந்தையரை யுபசரித்து அவர்மனம் வருந்தாவண்ணம் காப்பாற்றுங்கள், என்வார்த்தையைத் தடுக்கவேண்டாம், என்னை நினைத்து வருந்தவும் வேண்டாம் என்று கண்ணீர்பெருக அங்கே சமைத்திருக்கும்

பாசறையுட் சென்று இராஜயோகஞ் செய்வார்போல் உயிர்ப்பை யடக்கி நிட்டைகோலங்கொண் டிருந்தான். வெளியேநின்ற யாவரும் கோவெனக் கதறியழுது உள்ளேபோகவஞ்சி நின்றனர். இது நிடக்க;

இவ்வாறு அழுக்காறமைந்த துரியோதனன் நிட்டை செய்வார்போ லிருக்கையில்,இவனெண்ணமறிந்த பாதலத்துள்ள அரக்கர் தாங்களெந்நாளுந் தொண்டுசெய்து போற்றித்துதிக்கும் சத்தியையழைத்துப் பூவுலகில் துரியோ தனனென்பான் உயிர்ப்படக்கித் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளவெண்ணி யிருக்கின்றான். நீ அவனிடஞ்சென்று அக்கோலத்துடனே விரைவிலிங்கே கொண்டுவரவேண்டுமென் றாஞ்ஞைசெய்தனர். அவ்வாறே அத்தேவதையும் துரியோதனனைத் தூக்கிக்கொண்டு சென்று அரக்கர்தலைவனிடம் விட்டது. அரக்கரிற்சிலர் துரியோதனனுக்குச் சயித்தியோபசாரஞ்செய்து தெளிவித்த னர். பின்பு அரக்கர்தலைவன் ஈரேழுலகத்து மாணையைச்செலுத்தும் துரியோ தனமகாராசனே! சின்னாண்முன் இப்பாதலத்தை யரசாண்டுவந்த எம தரச னும்நாங்களும் தேவரைப்பகைத்து அவருடன் போர்புரிகையில் எம்மிற் சில அரக்கரும் அரசனு மத்தேவரால் மடிந்தனர்,அத்தேவர்களிலுஞ் சிலர்மாண் டனர். எஞ்சிநின்ற நாங்கள் இறந்தவர்களை எழுப்பித்தரும்படி பரமசிவனை நோக்கிநெடுநாள் தவத்திருந்தோம்,முன்தேவர்களைமுடிக்கவென்றே பாற்கட லிற்றோன்றிய ஆல விடத்தையருந்தி அவர்களைக் காத்தருளிய நீலகண்டப் பெருமான் எமது தவத்துக்கிரங்கிவந்து உமதரசனு மரக்கரும் பூலோகத்தி லுள்ள திரிதராட்டிரனுக்குங்காந்தாரிக்கும்புத்திரர்களாகப்பிறந்து அரசாண்டு வருகின்றார்கள். இன்னுஞ் சிலர் சிந்துதேசாதிபதி, சகுனி, கர்ணன், சோம தத்தன்,பகதத்த னென்பாராயும்பிறந்திருக்கின்றனர். இவர்கள்சுயோதனனுக் குரிமைநண்பர்களாக விருப்பர். இந்திரர் முதலியவர்கள் பாண்டவர்களாகவும்; தேவரிற் சிலர் வீஷ்மர், துரோணர், கிருபர்களாகவும் அவதரித்திருக்கின்றனர். அவர்கள்ஒருகாரணத்தினால் துரியோதனுதியர்க்குத் துணைவராயிருப்பர். மற்ற வர்கள்பாண்டவர்க்குச் சகாயமாவார்கள் என்று திருவாய்மலர்ந்தருளிமறைந் தனர்.ஆதலால்,இன்னுஞ்சிலநாளில்பாண்டவர்களுக்குமுனக்குங்கொடியயுத்த நேரிடப்போகின்றது. அக்காலத்தில் நாங்க ளுனக்குப் படைத்துணையாய் வந்து காப்பாற்றுவோம், நீசற்றுமஞ்சவேவேண்டாம். உம்மிருவருக்கும் யுத்த நேருங்காலத்தில் உனது படைகளெல்லாம் மாண்டுபோய் நீதனித்து நிற்க நேர்ந்தாலும் அச்சமயத்தில் இறந்த வீரர்முதலிய யாவரையும் உயிர்த்தெழும் படிச்செய்வதற்கு மிருத்தியுசஞ்சீவி மந்திரத்தை உனக் குபதேசிக்கின்றேன். இம்மந்திரமொன்றே போதுமான படைத்துணை யாகும்; நீ அப்பாண்டவர்க்கு எவ்வளவு மஞ்சவேவேண்டாம் என்று திடங்கூறி மந்திரத்தை யுபதேசித்து சிலகணைகளையுங்கொடுத் துதவிப் பின்னுஞ் சொல்கின்றான். மிக்க ஆற்ற லுடைய துரியோதனா! கர்ணன்தேரைச் சேற்றிலழுத்தி உமக்குக் கேட்டை விளைவித்தவனேஇந்திரன். இன்னுஞ் சிறிதுநாளில் கர்ணனுடைய கவசகுண்ட லங்களையுந் தானமாகப்பெற்றுக்கொண்டு அவன் உனக்குக்கேட்டையேவிளைப்

பான்.பாண்டவர்க்கோவெனின் நன்மையையேதந் திரட்சிப்பான். இதை என்ணிநீகவலவேண்டாம். உன்னுயிரையும் நீக்கிக்கொள்ளாதை, உனக் குபதேசித்த இம்மந்திரத்தை மற்றவர்க்குக்கற்பிக்கவேண்டாம். எம்மைக்கண்டதையும்பிறரதியச்சொல்லாமல் உன்னாட்டிற்சென்று சுகமே வாழ்ந்திருவென்று பல வாசிகூறி தேவதையைக் கூவியழைத்துத் துரியோதனனை முன்னிருந்த விடத்திற்கொண்டு போய்விடும்படிப் பணித்தனன். அவ்வாறே அத்தேவதையும் துரியோதனனையேந்தி விரைந்து சென்று முன்னிருந்த பாசறையிற் கிடத்திச்சென்றது. பின்பு துரியோதனன் துயின்றெழுவாரேபோலவிழித்தெழுந்து பாசறையைவிட்டு வெளியேவந்து கர்ணன் முதலியயாவரு மிருக்கக்கண்டு முன்னைத் துயர்நீங்கி பாண்டவரை யெளிதில் முடிக்கும் வகையை யறிந்தோமென்று மனத்திலுவகைகொண்டு அவர்களுடன் சந்தோட வார்த்தைகளாடி யாவரு மொருங்குசேர்ந்து அத்தினபுரத்தை நோக்கிச்சென்றனர்.

அரவக்கொடியோன் தனக்குநேர்ந்த இழிவை யெண்ணி ஆவியைநீக்கிக்கொள்வே னென்று பாசறையிற் சென்றான்; அவன் முகமோ பகலோனைக் கண்டதாமரையேபோல் மலர்ந்து நம்முடன் மிக்க களிப்போடுவருகிறான். இவன்எண்ணம்யாதோ? பாண்டவரைமதியாதவமதித்தேவருகின்றான்போலுமென்று குடிகேடராகிய சகுனி கர்ணன் முதலிய யாவரும் மனத்தில் நினைந்து சற்றும் நாணமென்பதில்லாமல் வேட்டையாடி வந்தவரேபோல் அத்தினபுரத்தையடைந்து அரசனையும் சபாமண்டபத்திற் சென்று கண்டு கர்ணன் இவ்வாறு சொல்வானாயினன். ஈரேழுலகத்துந் தன்னாணையைச் செலுத்தி நீதியோடு அரசுபுரியுந் துரியோதனனைப் புதல்வனாகப்பெற்ற அரசரேறே! நானோ கர்ணன். தேவரீர் பணித்த பணியை யேற்றுச்சென்று நமது ஆக்களையழித்த கொடிய உழுவை முதலிய மிருகக்கூட்டங்களை யழித்து வந்தேன். இனி நம தாக்களுக்குத் துன்பமென்ப தென்றுமணுகாதென்று கூறிநின்றான். இதைக்கேட்ட திரிதராட்டிரன் உள்ள மகிழ்ந்து யாவர்க்கும் ஆசிகூறினான். இவை அனைத்துங்கேட்டிருந்த வீட்டுமர் பேரப்பிள்ளையாகிய துரியோதனனை நோக்கி கற்றவர்போற்றும் பாண்டவரிருக்கும் வனத்திற்சென்று நீனே யாவரும் சித்திரசேனனால் கட்டுண்டீரோ! இங்கிருந்தால் அத்துன்பமும்மைவந்தணுகாதே! பாண்டவர்பால் நீ எண்ணுமற்செய்த கொடுமையை உன்மனமேயறியுமன்றோ! அவ்வகைக்கொடுமைசெய்தும்உண்மையைக்கடைப்பிடித்தொழுகும் சற்குணமுடைய பாண்டவரிருந்தன்றோ உம்மைமீட்டனர்! அவர்க ளவ்வாறு செய்யாவிட்டால் சித்திரசேனன் கையினின்றும் தப்பித்து இத்திசையையுங் காணவல்லீரோ? இதனாற் பாண்டவர்கள் நன்னடையுடையாரென்று இங்குள்ள யாவருக்குந் தெற்றெனவிளங்கும். அஃதெப்படியெனின் நீங்கள் யாவரும் சித்திரசேனன் தேரிற் பிணிக்கப்பட்டதை யறிந்து அவனுடன் போர்செய்து உம்மைமீட்டருளிய அப்போதே அவர்கள் நன்னெறியைத் துறந்து வினைமேற்கொண் டிருந்தால் உம்மை வாள்கொண் டரிந்தேயிருப்பர். அவர்க் கவ்வழுக்காறென்பது தினையளவுமில்லாமையாலன்றோ நீங்கள் யாவரும் உயிர்பிழைத்துவந்தீர்கள் !இனியேனும் அவர்களை நேசித்து

வாழ்விரேல் நன்மையாம். அதனினும் நீங்களடையப்பெறும் புகழ் வேறொன்றுமில்லையென்று கூறினர். இதைக்கேட்ட கொலைப்பாதகராகிய துரியோதனன்சகுனி கர்ணன் முதலியோர் ஒருவர்முகத்தை யொருவர் நோக்கி நகைத்தனர். அதைக்கண்ட கங்காபுத்திரராகிய காங்கேயர் நம்மை பரிகசிக்கின்றனரென் றறிந்துகொண்டு அவ்விடம்விட் டகன்று சென்றனர். பின்பு துரோணாசாரியரும் விட்டுமர் சொல்லியவாறே சில நீதிகளையெடுத்துக் கூறிச்சென்றனர். இஃது கிடக்க ;

பின்பு, கர்ணன் முதலியயாவரும் அரண்மனையிற் சென்று நீராடிஉண்டு களித்து அடைகாய் முதலியவருந்தி பள்ளியறையுட் சென்றுசயனித்தனர். அரவக்கொடியோனோவெனின் தனக்குநேர்ந்த இகழ்ச்சியாகியசொல்லை நினைந்து மனம்வருந்தி இவ்வாறுநினைக்கலாயினன். நாமோபாண்டவர்களை அவமானஞ் செய்வதற்குச்சென்று அவரால் உயிர்பிழைத்துவந்தே இன்னும் பிழைத்திருக்கின்றோம்; வீட்டுமன்சொன்னதுபோல்பாண்டவரில்லாவிட்டால்சித்திரசேனன் கொன்றேயிருப்பான்,நாமடைந்த துன்பமேயல்லாமல் நமதுபெண்களும்துயரத்திற்குள்ளானார்கள். இதெல்லாம்தேவர்கோனாகியஇந்திரனால்நேர்ந்ததென்று அரக்கர்க்கரசனும் நமக்கறிவித்தான். அதை உண்மையென்றே எண்ணவேண்டுமாதலால் நாமோர் இராசசூயயாகஞ்செய்து அவிர்ப்பாகங் கொடுக்கும்போது அவ்விந்திரனை அவமானஞ்செய்யவேண்டுமென் றெண்ணி அன்றிரவைக் கண்ணுறங்காமற் கழித்து மறுநாளுதயத்தில் மஞ்சம்விட் டெழுந்து காலக்கடனை முடித்துக்கொண்டு கொலுமண்டபத்திற்சென்று மாணிக்கக் கற்களிழைத்த கிரீடமணிந்து நவரத்தினம்பதித்து ஒளிவிட் டெறிக்கும் சிங்காசனத்திலமர்ந்து அரசமுறைப்படி யாவும் விசாரித்து அந்தணர் முதலிய யாவர்க்கும் செல்லவிடைகொடுத் தனுப்பிவிட்டுச் சகுனி கர்ணன் துச்சாதனன் முதலியவர்களை நோக்கி இவ்வாறு சொல்வானாயினன். எனதன்புக்குமுயிர்க்குமுரிய உங்களையன்றிச் சிறந்தார் யாவர்? நாமெண்ணிச்சென்ற காரியத்தைத் தவிர்த்து நம்மை சித்திரசேனனால் கட்டுண்ணச்செய்து துன்பத்திற்படுத்தினவன் இந்திரனே, அவன் செருக்கையடக்க யான் ஓரெண்ணங்கொண் டிருக்கின்றேன். அஃது யாதெனின்? பாண்டு புத்திரர் செய்த இராசசூயம்போன்ற யாகத்தை நாமியற்றி இந்திரனுக் கவிர்ப்பாகங் கொடாமல் அவமதித்தால் அவன் நம்மேற்சினந்து போர்க்கெழுவான். அச்சமயத்தில் நாமியாவரு மொருங்குசேர்ந்து நமதாற்றலால் அவனைமுடித்து விடலாம், இதுதான் நானெண்ணியிருக்கின்றதென்றான். அதைக்கேட்ட சகுனி முதலிய யாவரும் நீ கூறியவார்த்தை நன்று நன்று! இதுவே நல்ல யோசனை, இதைவிட வேறுயோசனை செய்யப்போகாது, இந்திரனுக்கு நாசகாலநேர்ந்தே உமக்கிந்த யோசனையு முதித்தது. நமதாற்றலை யெவ்வளவுமெண்ணாமலே நம்மைத் துன்பத்திற் குள்ளாக்கியவனை நாமும் அப்படியே செய்ய வேண்டும். இதுவே அரசர்க்குரியகடன் என்றுயாவருங் கூறி அரவக்கொடியோனுடன் மனத்தி னுவகைகொண்டு யாவரும் தத்த மரண்மனைக்குச் சென்றனர்.

இவ்வாறு யாவரு மரண்மனைக்குச்சென்று புழுகு சந்தன முதலிய வாசனைத்திரவியங்களை யணிந்துகொண்டு தத்த மனைவியரைக்கூடி அயர்ந்து நித்திரைசெய்து மறுநாட்காலையி லெழுந்திருந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு பலகாரவகைகளைப் புசித்து மனத்திலுவகைகொண்டு விலையேறப்பெற்ற பீதாம்பரத்துகிலால் தம்மை யலங்கரித்துக்கொண்டு துரியோதனன் சகுனி துச்சாதனன் முதலிய யாவரும் திரிதராட்டிரனிருக்கும் அழகிய மண்டபத்திற் சென்றனர். அவருள் துரியோதனன் தந்தையிடஞ்சென்று வணங்கி என்னையின்ற தந்தையே! நான் துரியோதனன் என்றான். அதைக்கேட்ட அந்தகன் அறிவிற்சிறந்த என்னன்புக்குரிய புத்திரசிகாமணியே! நீ நீடூழிவாழக்கடவாய், நீ யாதுகருதி இங்குவந்தனை யென்றான். துரியோதனன்எந்தையே! பாண்டவர் முன்னியற்றிய இராசசூயயாகத்தை யானு மியற்றக்கருதி தேவரீரிடத்தி லறிவிக்கவந்தேன், உமதுகருத் தென்னவென்று வினவினன். அதற்குத் திரிதராட்டிரன் சற்றுநேர மவுனமுற்றிருந்து பின்போர் தூதுவனைவருவித்து விட்டும துரோண கிருப அசுவத்தாம விதுரர்களை அழைத்துவரும்படி ஆஞ்ஞைசெய்தான். அவ்வாறே அவ்வேவலாளன் விரைந்துசென்று அவர்க்கறிவித்தான். அவர்களும் அத்திரிதராட்டிரனிடம் தாம் வந்திருப்பதை யறிவித்தனர். அவர்கள் வரவையறிந்த அந்தகன் துரியோதனன் கூறிய யாவுமெடுத்துக்கூறி இது உங்களுக்குச் சம்மதியோவென்றான். அதற்கவர்களில் விதுரர் அரசர்பெருமானே! இராசசூயஞ் செய்யமுயல்வது அசாத்தியமானகாரியம். இராசசூயஞ் செய்வதனாலுண்டாகும் பயனனைத்தையும் தரத்தக்க வைணவ யாகத்தைச்செய்தால் நன்மையாம் என்று கூறினர். அவ்வாறு கூறக்கேட்ட யாவரும் சம்மதித்து நேபாளம் கன்னடம் முதலிய ஐம்பத்தாறு தேசத்தரசர்கட் கெல்லாம் தூதுவரிடத்தில் பத்திரிகையைக் கொடுத்தனுப்பிவிட்டு யாகத்தைச்செய்ய ஆரம்பித்தனர்.

அவ்வா றவ்வைணவ யாகத்தைச்செய்ய வாரம்பித்து வேதத்தை நன் காராய்ந்த வேதியரைக்கொண்டு அவர்க்குவேண்டும் சாமக்கிரியைகளைக் குறைவென்பதில்லாமற்கொடுத்து யாககுண்டமொன்றியற்றி அதிற் றருப்பை முதலியவைகளை யிட்டுத் தீயிட்டெரித்துக் கடலொலிபோல வேதபாராயண நிகழ்த்தி ஏழைகட்கு வேண்டும்பொருளை யீந்தனர். பல வரசர்களும் அங்குவந்துசேர்ந்தனர். இஃதிவ்வாறிருக்க, திரிதராட்டிரன் விட்டுமர் துரோணர் முதலிய யாவரும் ஒன்றுகூடி பாண்டவர்க்கு மிச்செய்தி யறிவிக்க வேண்டுமென்றுயோசித்து ஓர்வேதியனையழைத்துத் துரியோதன மகாராசன் செய்யும் யாகத்துக்கு உங்களைவரச்சொன்னானென் றறிவித்துவாருமென்றனுப்பினர். அவ்வாறே அவ்வேதியன் பாண்டுபுத்திரருறையும் வனத்தை நோக்கிச் சென்று ஐவரையுங்கண்டு தான்வந்தசெய்தியை யறிவித்து நின்றான். அவ்வாறு கூறிநின்ற வேதியனையுதிட்டிரன்நோக்கி அன்றுஎன்தந்தை யெனக்குப்பணித்த பதின்மூன்று வருடத்தையுங் கழித்து அந்நாட்டிற்கு வருவதே யல்லாமல் இதற்குமுன்னம் வர மனத்திலுங் கருதேன், அவ்வாறு வருவனேயானால் என்தந்தைசொற் றவிர்த்தவனாவேன், இதை என் தந்தைக்கறிவியு

மென்றான். கடலினும் பெரியபொறுமையுடைய யுதிட்டிரன் இவ்வாறு சொல்லக்கேட்ட வீமன் துரியோதனன் தன்பாற்செய்த கொடுமைகளை மனத்திலெண்ணி மிக்க சினங்கொண்டு வேதியனை நோக்கி இவ்வாறு சொல்வானாயினன். குருக்ஷேத்திரமென்னும் யாகசாலையில் சுயோதனாதிகளென்னும் ஒரு நூறு பசுக்களையும் யாககுண்டத்தேற்றி திரௌபதியின் கோபாக்கினியை மூட்டி வீமசேனன் கதையினாற் புடைத்துச் சபதமென்னுமிழுதைச்சொரிந்து ஊழ்வினை யென்னுங் காற்றடிக்கப் பாண்டவர்பகையென்னும் சமித்துக்களையிட்டுக் கடுமொழியென்னு மந்திரத்தை யுச்சரித்துத் திரிதராட்டிரன் காந்தாரி முதலியோர் கண்ணீரென்னுந் தண்ணீரிறைத்து யமனென்னுந் தேவனுக்கு அவிர்ப்பாகங்கொடுக்க யாகத்தைச்செய்யுநாளை நியமித்துக்கொண் டிருக்கின்றேனென்று அப்பசுக்களுக்குத் தெரியச்சொல்லுமென்றான். அவ்வாறு கூறக்கேட்ட வேதியன் யுதிட்டிரன் முதலியயாவரிடத்தும்விடைபெற்று அவ்விடம்விட்டகன்று அத்தினபுரத்தைவந்தடைந்து யாவரும் யாகசாலையிலிருக்கக்கண்டு தருமன் சொல்லிய தன்மையையும் வீமன்சொல்லிய வன்மையையும் யாவரும்கேட்கும்படி யறிவித்துநின்றான். இதைக்கேட்ட யாவரும் இடியோசையைக்கேட்ட நாகமேபோல்மெய்நடுநடுங்கினர். திரிதராட்டிரன்மெய் சோர்ந்து படிமிசைவீழ்ந்து கண்டோர் உயிர்ப்புண்டோ வில்லையோவென்று சொல்லும்படிக்கிடந்தான். துரியோதனனோ வெனின் வேதியன்சொன்ன சொல்லை மதியாமலும் தந்தைவீழ்ந்து கிடப்பதையும் பாராமல் யாகத்தை நிறைவேற்றி வந்த அரசர்களுடனே மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தான். பின்பு அரசர்கள் துரியோதனனிடம் விடைபெற்றுத் தத்தம் பதியேபோய்ச் சேர்ந்தனர். இது கிடக்க ;

வேதவியாசர்கூறிய
மோர்க்கரய மகாரிஷியின்கதை.

பாண்டவர்கள் நெடுநாள் காமியவனத்தி லினிது வீற்றிருக்குநாளில் ஓர்நா ளிரவில் யுதிட்டிரன் அயர்ந்து நித்திரை செய்யும்போது அவ்வனத்திலுள்ள மிருகங்கள் யாவு மொன்றுகூடிவந்து நீங்க ளிங்குவருவதற்குமுன்னே சுகமே துன்பமில்லாமல் வீற்றிருந்தோம், இப்போது தங்களால் துன்பமனுபவித் திருக்கின்றோம், ஆதலால் நீங்கள் எம்மேற் கருணைகூர்ந்து இவ்வனத்தைவிட்டு வேறுவனத்திற் செல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகச் சொப்பனங்கண்டு விழித்து அன்றிரவிற்றானே தௌமியரிருக்கும் ஆச்சிரமத்திற்சென்று அவரைக்கண்டு சொப்பனத்திற் கண்டதைக் கூறி இவ்வனத்தை விட் டகலுகின்றோமென்று அவரிடம் விடைபெற்றுக் காமியவனத்தைவிட்டகன்று தைமித்தியவனத்தை யடைந்து அங்கு வீமனாற் சமைக்கப்பட்ட பன்னசாலையில் சுகமேவீற்றிருந்தனர். இவ்வா றிருக்கையில் தேவர் முதலிய யாவரும் போற்றத்தக்க மிக்கபெருமைவாய்ந்த வேதவியாசர் பாண்டவருறையும் பன்னசாலைக் கெழுந்தருளினர். அவர் வரவைக்கண்ட தருமர் முதலிய யாவரும் எதிர்கொண்டுசென்று அழைத்துவந்து ஆசனமளித் துபசரித்து

அவரழகிய தாளில்வீழ்ந்து வணங்கினர். அவர்களுக் கவரும் பலஆசிகூறினர். பின்பு தருமராசன் அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம்பெற்றதும் ; பின்பு இந்திர னுலகிற்சென் றினிது வீற்றிருந்து பின்பு வந்த யாவு மெடுத்துக்கூறினன். அதைக்கேட்ட வேதவியாசர், மிக்க களிப்படைந்து நன்னெறிபூண்டொழு கும் அரசர்பெருமானே! மறைகளும்மாதவனும் பிரமன் முதலியதேவர்களு மறிதற்கரிய அனாதிமலமுத்தனுகிய பரம்பொருளையும் காணப்பெற்ற பின்னும் நீங்களடையாப்பேறு மொன்றுண்டோ? ஆராயுமிடத்து அவனினுஞ் சிறந்த பொருளுமுண்டோ? இனி ஈரேழுலகமு நீயேயாளப்பெறுவை. இவ்வளவே யல்லாமல் நீர்செய்யும் அன்னதானமொன்றே கேடிலாமுத்திவீட்டைத்தரும், நீர்எண்ணியவெல்லாம்கைகூடும். இதனினுஞ் சிறந்ததானமொன்றேனுமில்லை. உன்னினுஞ் சிறந்தவ ரிப்படிமிசைகாணேன் ; என்று யுதிட்டிரனைப்பலவாறு புகழ்ந்துபேசினர். இவ்வாறு கூறக்கேட்ட யுதிட்டிரன் மீண்டும்அவரடியில்எட் டுறுப்பு நிலமுறப்பணிந்துவீழ்ந்து நின்று எல்லா மையக்திரிபறக் கற்றுணர்ந்த தேவரீர் அறிவினனுகிய என்னையும்புகழ்ந்து கூறலாமோ! யான்செய்த வூழ் வினையாலன்றோ இக்கானில் வந்து வருத்தப்பட் டுழல்கின்றேன். நாயேன் கற்றவமு நல்லறமுஞ் செய்திருந்தால் இத்துன்பத்திற் குள்ளாவேனோ! இத் துன்பத்தை யானொருவனே யனுபவிக்காமல் தம்பியர் நால்வரும் அங்கியிற் பிறந்தபாஞ்சாலியும் வருந்தப் பார்த்திருக்கின்றேனே! என்னினுங்கொடியா ருலகினுண்டோ? வேதியருண்ணு முணவு என் சுயார்ச்சித சொத்தன்றே, இறைவனருளாலன்றோ பெற்றேன், இத்தகைய வாழ்வையுடைய என்னையும் தானஞ்செய்பவனென்று புகழப்படுமோ? என்றான். அதற்கு வேதவியாசர் புன்னகைபுரிந்து தருமபூபதி! ஒருவன்தன்னாலறஞ் செய்தற்கியலாவிடினும் பலர்பாலிரந்தேனும் சற்பாத்திரத்திலுதவினல் அப்பயன் அவனையுஞ்சேரா மற்போகுமோ? அறத்தின்பெருமையைநீயேயறிவை. தன்னைத்தான்புகழ்ந்து கூறிக்கொள்வது அறிவுடையோர் செய்கையன்று, அது பூரியோர் செய் கையேயாகும்; ஆதலால்யாவுமறிந்த நீஉன்னை யவமதித்துப்பேசினை! இதுவே அறிவிற்சிறந்தோர் கொள்கையாம் என்று சொல்லிப் பின்னுஞ்சொல்லத் தொடங்கினர்.

நான்கு வேதங்களையு மையமற திரிபறக்கற்ற மோர்க்காயனென்னு முனி வன் தன் தாயின் கருப்பாசயத்தினின்று முதித்தநாள்முதல்தான் பரிபக்குவ தசையை யடைந்தநாள் வரையும் பொருட்செல்வ மென்பதே யில்லாமல் மிக்க மிடியையே யனுபவித்துத் தான் கற்றநூலிற்கூறும் தானத்தில் அன்ன தானமே சிறந்ததென் றுணர்ந்து அதனுல் வரும் பெரும்பயனைத் தானடைய வேண்டுமென் றெண்ணி, பொருளில்லாமையால் மனம்வருந்தி நாமித்தானஞ் செய்யவேண்டினல் திரண்டபொருள்வேண்டுமே,நமக்கஃ தென்றுமில்லையே, வேறெவ்விதத்தா லிவ்விரதத்தை யேற்கலாமென்று யோசித்துப் பிறர்பொரு ண்மே லிச்சைவையாமல் கழனிகளி லுதிர்ந்துகிடக்கும் நெற்களைக் கொண்டு வந்து அதை அமாவாசையன்று அமுதாக்கி மிக்க ஆசாரத்தோடு சமை த்து, காட்டிலுள்ள மிக்க உசிசையான கிழங்கு வகைகளைக் கொண்டு

வந்து சமைத்து அதை நான்கு. பாகமாக்கி ஒன்று ஔபாச அக்கினிக்கும் ஒன்று பிதிர்க்களுக்கும்,மற்றொன்று அதிதிகளுக்குமிட்டுக் கடைப்பாகத்தைத் தான் புசித்து மறுநாட்டொடங்கி அவ்வாறே சென்று உதிர்ந்துகிடக்கும் நெற்களைச் சேகரித்துக் கொண்டுவந்து பௌர்ணமியினன்று அதைத் தண் டுலமாச்செய்து மேற்கூறியவாறு பகிர்ந்திட்டுத் தானுமுண்டு நெடுநாள் உயிர் வாழ்ந்திருந்தான். இவ்வா றிருக்கையில் ஓர்நாள் அம்முனிவனிடத்து கோபத் தினுந் தவத்தினு மிக்க துருவாசமுனிவர் சென்று முனிவனே! யான் பசிப் பிணியால் நெடுநேரம் வருந்துகின்றேன், இனிச் சற்றும் பொறுத்திரேன்; வேறிடத்திற் செல்லவும் காலெழவில்லை; ஆதலால் இக்கணமே என் பசிப் பிணியை யகற்றவேண்டுமென்றார். அன்று பௌர்ணமியாதலால் அதிதிக் குப் பகிர்ந்துவைத்திருந்த பாகத்தை மிக்க அன்போடு அவருக்கிட்டனன். அதைத் துருவாசர் புசித்து முனிவனை நோக்கி நீ எனக்கிட்ட உணவால் பசி அதிகரித்ததே யல்லாமல் தணியவேயில்லை, இன்னு மிருந்தா லிடுவென் றார். முனிவனேவெனின் உள்ளன்போடு தன்பாகத்தையும் இட்டு அவர் பசியை யாற்றி நீருமருந்தச்செய்தான். பின்புதுருவாசர்வாய்நீர் பூசி அவனுக் குப் பல ஆசிகூறிச் சென்றனர். பின்புமோர்க்கரய முனிவனும் அவ்விரதத் தைக்கைவிடாது செய்துவந்தனன். துருவாசரோவெனின் மீண்டும் முனிவ னிலைமையையறியவெண்ணி அமாவாசை பௌர்ணமியினன்று இரண்டுதரமும் வந்து உணவுகேட்டுண்டு அவன் மனவன்மையைக் கண்டு வியந்து மதித்து மோர்க்கரயனை நோக்கி நீ உனக்கு வைத்திருந்த வுணவையும் மூன்றுதர மெனக்கிட்டு என்பசியைத் தணித்தனை! தானத்திற் சிறந்த இத்தானத்தைத் தெரிந்தேற்றனையாயினும் நீ யுண்ணுமுணவையு மெனக் களித்துவிட்டனையே நீயாது புசிப்பை? உன்னையுங் காத்துக்கொண்டாலன்றோ எம்போலியர் பசி ப்பிணியை யகற்றுவை, அவ்வாறு செய்யாம லிப்படிச்செய்யக்காரணம் யாது யென்று வினவலும் மோர்க்கரயன் அவரடியில் வீழ்ந்துபணிந்து என்னைக்காத் துக்கொள்வது முறையேயாயினும் தேவரீர் களித்துண்டபோதே யானும் உண்டதன்மையைப் பெற்றேன் என்றான். அதற்குத் துருவாசர் அகமகிழ்ந்து நீயே அறத்தினெல்லையை யறிந்தனை, உன்னினுஞ் சிறந்தாரை யானெங்குங் கண்டேனில்லை. நீ நற் பதவியைப் பெறக்கடவை யென்று வரமளித் தாசிர் வதித்துச் சென்றார்.

இவ்வாறு தவத்தின்மிக்க துருவாசமுனிவர் வரமளித்துச் சென்றபின் மோர்க்கரய முனிவன் மேற்கூறியவாறே நெடுநாள் தான்மேற்கொண்ட தான த்தைச் செய்துவருநாளில் துருவாசரளித்தவரத்தால் தேவலோகத்தினின்று விமானம்வந்திறங்கிற்று, முனிவனே தன்முன் விமானம்வந் திறங்கியதைக் கண்டு திகைத்து நின்றான். அவ்வாறு நின்ற முனிவனைத் தேவதூதர்நோக்கி அறத்தின் மிக்க முனிவரனே! நாங்கள் தேவலோகத்துள்ளவர்கள், எம்மரச னுக்கினைப்படி உம்மைக் கொண்டுசெல்லவே வந்தோம்; நாங்கள் கொடுவந்த இவ்விமானத் தேறுமென்றார்கள். அதற் கம்முனிவ னவரைநோக்கி நீவிர்

தேவலோகத்துள்ளவரோ யாயின் இப்போதெனக் கப்பதவி யாதினால் கிடைத்தது? யானங்குவரின் யாதுபயனைப் பெறுவேன்? அதை எனக்கு விளங்கச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அதற்கத் தூதுவர் நீர் மிக்க பத்தியோடு செய்த அன்னதான விசேடத்தால் கிடைத்தற்கரிய தேவபதவியைப் பெறலாயினீர். இப் பூவுலகில் நீர் செய்த அன்னதானத்தின் கீர்த்தி யுள்ளளவும் தேவபதவியி லினிது வீற்றிருந்து வேண்டியவேண்டியாங் கனுபவிப்பீர், அப்புக ழழிந்தால் மீண்டுமோர் கருக்குழி புக்கு வெளிப்பட்டு பெருமிதம்பெற்ற போக பாக்கியத்தைத் துய்த்து வாழ்வீர், இதுவே நீ ரடையும் பயனென்றார்கள். அவ்வாறு கூறக்கேட்ட முனிவன் புன்னகை செய்து இவ்வாறு சொல்லலாயினன். நீவி ரிப்போதெடுத்துக்கூறிய பதவியையோ அடைதற் கரியபதவியென்றீர்! நன்று நன்று! அற்ப வாழ்வைத்தரும் அத்தேவ பதவியை அரியதென்று நாவெழுந்து கூறியது சால வியக்கத்தக்கதே! இராப்பக லென்ப தில்லாமல் எந்நாளும் ஓர் தன்மைத்தாய் அழிவின்றி விளங்கும் முத்திவீ டடைதற்கு ஏதுவாகிய அரிதா மிந்த மானிடயாக்கை வாய்க்கப்பெற்றும் மீண்டும் மாயையிற் சிக்கி மங்கையர் மூலத்தடந்தோய்ந்து பிறவியையே யிச்சித்துழலும் அவ்வற்பமாகிய பதவியை சொப்பனத்தும் விரும்பேன். இனி பிறக்குந் தன்மையை நீக்கவேண்டு மென்பதே எனதிட்டம். இப்பிறவியி லவ்வாறு கிடைக்கப்பெறேனே யாயினும் மீண்டும் இம்மானிடப்பிறவி யடையும் வகையைத் தேடி அப்பிறவியினுங் கேடிலா அம் முத்திவீட்டையே விரும்பி யடைவனே யல்லாமல் தோன்றி நின் றழியும் நீர்க்குமிழிபோன்ற உமது வாழ்வை மனத்தினுங் கருதேன்; நீர் சுகமே உம திருப்பிடம்போய்ச் சேருமென்று விடைகொடுத் தனுப்பிவிட்டு முன்னினுமெண்மடங் கதிகமாக நெடுநாள் தன்னறத்துக் கழிவுவராமற் செய்துவந்தான். இவ்வா றவன்செய்யும் நல்லறத்துக்கிறைவ னவன்மேற்கருணைகூர்ந்து அவன் முன் ஓர் விருத்த வேதியனேபோற் றோன்றி முனிவரனே! நீ செய்யு மிவ் வன்னதானத்தால் யாது பயனை யடைவை யென்றார். முனிவன் எல்லா வுயிரையு மோரே தன்மைத்தாகக் காத்தளித்தழிக்கு மிறைவனுகிய வேதியனை நோக்கி சுவாமீ! அன்னதானஞ் செய்பவர் என்று மழிவிலா முத்திவீடடைவரென்று சுருதி கூறுவதனால் இதை அடியேனேற்றேன், ஆனால் இக் காரியம் என்னால் நிறைவேறுவதன்று எல்லாமிறைவன் செயலே யென்றான். இறைவன் அவன் நன்னெறிக்கு உள்ளமகிழ்ந்து தன் ஒள்ளியவடிவைக் காட்டியருளி என்றுங் கேடிலா முத்திவீட்டைத் தந்தருளினார். ஆதலால் தானத்திலன்னதானமே சிறந்தது என்று கூற யுதிட்டிரன் முதலிய ஐவரும் கற்பின் மிக்க பாஞ்சாலியும் பன்னீராயிரம் வேதியர்களும் மற்றையோரும் சாலப் புளகாங்கிதங்கொண்டு அவரடியில் வீழ்ந்துவணங்கிநின்று சிரமேற் கைகூப்பி வேதங்களனைத்தும் விரிவாயெடுத்துக்கூறிய பெருமானே! என்று துதித்து நின்றனர். அவ்வோசை கருமுகிலைத்தருங் கற்பகாலத்தி லிறையும் கடலொலிபோலிருந்தது. வேதவியாசர் யாவர்க்கு மாசி கூறி விடைபெற்றுச் சென்றனர்.

சயிந்தவ சருக்கம்.

இவ்வாறு பாண்டவர்கள் தைதவனத்தில் இனிது வீற்றிருக்கையில் அங்கு இறைவனை நோக்கி அரியதவத்திருக்கும் முனிவர்கள் காட்டிலுள்ள தந்தி உழுவை யாளி முதலியமிருகக்கூட்டத்தின் கொடுமையால் தந்தவத்துக் கிடையூறு செய்வதைக் கண்டு யாவரு மொருங்குசேர்ந்து பாண்டவரிடத்தில் வந்து தமது தவத்துக் கிடையூறு செய்வதை யறிவித்தனர். யுதிட்டிரனே அவர்களைத் தொழுது உமக்குற்ற துன்பத்தை கொடிப்போதி லகற்றுகின் றேன் நீவிர் சற்றுமஞ்சவேவேண்டாமென்று திடங்கூறி முனிவர்கட்கு விடை கொடுத் தனுப்பிவிட்டு ஐவரும் வில்லைக் கையிலேந்திப் பாஞ்சாலியைத் தன்னந் தனியே விட்டுவிட்டு மிருகங்கள் வாழும் காட்டிற் புகுந்து சில மிரு கங்களைக் கொன்று நெடுந்தூரந் துறத்திச் சென்றனர். இது நிற்க ; கௌட தேசத் திராசகுமாரி சுயம்வரத்திற்கு வந்திருந்த காசிதேசாதிபன் சிந்து தேசமன்னன் முதலிய அரசர்கள் தத்தநாட்டிற்குச்செல்லப் புறப்பட்டு முப் பத்திரண்டு வாத்தியமுழக்கத்துடன் பாண்டவ ருறையும் காட்டின் வழியே சென்றனர். அவ்வாத்தியமுழக்கத்தைக் கேட்ட பாஞ்சாலிமுன்னே சித்திர சேனனால் அவமானமடைந்து சென்ற துரியோதனன் மீண்டும்வருகின்றானே வென்றெண்ணிப் பன்னசாலையைவிட்டு வெளியேவந்துபார்த்திருந்தாள். இவ ளிவ்வாறிருக்க, யானையூர்ந்துசெல்லும் சயிந்தவராசன் பாஞ்சாலியைக்கண்டு தனக்குவருங் கேட்டையுணரானாய் முறைபிறழ்ந்து அவள்மேற் காதல்கொ ண்டு தன் யானைப்பாகரி லொருவனை யழைத்துச் சந்திரன்போலும் வட்ட மாகிய வதனமும் ஓராயிரஞ் சூரியர்க ளொன்றுகூடி யிருத்தலை யொத்த காந்தியும், மந்திரகிரியேபோலும் குவிந்திருக்கும் கொங்கையும்பெற்று நின்றி ருக்கும் அப்பெண்ணினிடஞ்சென்று அவளின்னவளென்றும் அவள் நாமதேய மின்னதென்றும் கேட்டறிந்து வருவாயாக, அன்றியான் கூறியவாறில்லாமல் கைதேர்ந்த சிற்பநூலை ஐயமறக்கற்றவரால் தீட்டப்பட்ட ஓவியமேயாயின் விரைந்துவந் தெனக் கறிவிப்பாயாகவென் றனுப்பினான். அவ்வாறே யானைப் பாகனும் அப்பணியையேற்று விரைந்து சென்று பாஞ்சாலியைக்கண்டு தன் வரவை யறிவித்து உமது நாமதேயத்தை யறிவிக்கவேண்டுமென்றான். அதற் கவள் யானேபாஞ்சாலராசகுமாரி,என்பேர்திரௌபதைஎன்பார்களென்றாள். யானைப்பாகனும் அரசனிடம்விரைந்துசென்று பாஞ்சாலிகூறியவாறு அறிவித் தான். அதைக்கேட்ட சயிந்தவன் தானெண்ணியவெண்ணமே யீடேறிவிட்ட தென்று மனத்திலுவகைகொண்டு யானையைவிட்டிழிந்து ஓரழகிய தேரூர்ந்து தான்துன்பமுறவேண்டிப் பாஞ்சாலி நின்றிருக்குந்திசையைநாடிச் சென்றான்.

இவ்வாறு வசிட்டன் மனைவியையொத்த பாஞ்சாலி தன்கற்பையறியா மலடைந்த அப்பாதகனை மிக்க அன்போடழைத்து இவ்வாறு கூறலுற்றாள். என்னருமை அண்ணாவே ! எமக்குற்ற இவ்விபத்தை அறியீரோ ? துரியோத ன்னஎமக்கிவ்விதமானகொடுமையை விளைவித்தான். அவனும் இதைவிடஎண் மடங் கதிகமானதுன்பத்தையே யனுபவிப்பான். உமது மைத்துனர் இவ்வன

த்திலுள்ள முனிவர்கள் மிருகத்தாற்படுந் துன்பத்தையறிவித்து தங்களை அத் துன்பத்தினின்றுங் காத்தருளும்படிவேண்டினார்கள் ; அதனால் ஐவரும் வேட்டையாடச்சென்றனர். அவரிங்குவருமளவும் தேவரீ ரிங்கிருந்து உலவுகளித்துச்செல்லவேண்டுமென்றுவேண்டுகின்றாள். கற்புக்கோராபரணம்போல்வாள் அவ்வாறுகூறியதை அக்கொடியோனுசிய சயிந்தவன் செவிகொடுத்துக்கேளாமற் காமநோயாற் பிணிப்புண்டு மதிமயங்கி அப்பெண்மணியை நோக்கி புன்முறுவல்செய்து பாஞ்சாலியே! நீயோ அழகில் இரதியையும் திருமகளையும் வென்றனை! உன்னளகமோ கரியமேகத்தைத் தோற்கச்செய்கின்றது. இது நிற்க ; வட்டவடிவாயுள்ள மிக்கவெண்மையான சந்திரனுக்குமோர்களங்கம் உண்டு, அஃதுன்முகத்திற் காணேன்! குற்றநீங்கிய தாமரைமலர்போன்ற கண்ணையும், வில்லையொத்த நெற்றியையும், முத்தையொத்த பற்களையும், பவளம் போன்ற இதழையும், விம்மிப்புடைத்திறுமாந்த தனத்தையும், நீண்டவிரல்களையும், பஞ்சினு மெல்லிய பாதத்தையும், பெற்றிருக்கின்றனை! நீயோ அற்பவலியுடைய ஐவரையு மோர்பொருட்டாயெண்ணி உன் பருவத்தை வாளா கழிக்கின்றனையே! சந்தனந் திமிருந் தனத்தாளே! அவர்கள் வலியுள்ளவரேயானால் அந்நாளில் மாந்தளிர்போன்ற உன்னழகிய மேனி வருந்த அரசவையிலிழுத்துத் துன்பத்திற் குள்ளாக்கிய அத் துரியோதனனுடியவரை முடிக்காதிருப்பார்களோ! அவர்க்காற்றலில்லாமையாலன்றோ பாவைபோலிருந்தனர். அந்தோ! சற்று மறிவில்லா மனத்தராகிய அத்துரியோதனனுதியர் துகிலுரிந்த அந்நாளில் மாற்றுயர்ந்த பொன்போன்ற உன்மேனி என்னபாடு பட்டதோ! பெண்மணியே! பூமகளே! நான் இன்றே அக்கொடியவரை முடிக்க வெண்ணுகின்றேன். சாதாரண மனிசர்களும் தமக்குரிய பத்தினிமார்களை அன்னியன் கைப்பற்றுவனேயாயின் அதனைப்பார்த்தும் அவனைத்துன்பப்படுத்தாமல் விடுவரோ ; விடாரென்றால், இராசகுலத்துதித்தும் சற்றும் சவுரியமென்பதில்லாமல் இருந்தனரென்றால் அவரை என்னென்று கருதவேண்டும் ; பெண்ணிற் சிறந்த தெள்ளமுத மொழியை யுடையாளே! அதை நீயே யோசித்துப்பார். பூங்கொடிபோலும் நடையையுடைய பெண்மணியே! வேலையும் வாளையும் வென்ற உன்மையுண்டகண் என் ஐம்புலனையுங் கருந்தாதை யீர்க்குங் காந்தமேபோற் கொள்ளைகொண்டது. நானோ அளகைவேந்தினும் எண்மடங் கதிகமானசெல்வத்தைப் பெற்றிருக்கின்றேன். நீ என்னுடன்வந்தால் நாமிருவரும் நாட்டிற்சென்று அன்றில் விழைபோகமயர்ந்து எந்நாளும் குறைவிலா வாழ்வைப்பெற்றிருக்கலாம். நான் உன்சொற்கடவாமல் நீ பணிக்கும்பணியையேற்று நடப்பேன்; இது உண்மை. இறைவனருளால் உன்வயிற்றிற்புத்திரனுதித்தால் அவனே என்னரசுக் குரியனாவான். என்னுடைய அளவிலாப் பொருள்களும் இன்னு மற்றுமுள்ள யாவும் உன்னதேயாகும் ; தேனினும் பாகினுமினிய பவளம்போன்ற உன்வாய்திறந்து என்னுடன்பேசாமல் மௌனமுற்றிருக்கின்றனையே! உன் வலியிலாப் புருடர் வராமுன்னமே இத் தேரிலேறு! மயிற் சாயலையுடையாளே! அன்னநடையு முன்னடைக் கினைசொல்லப்போமா! சித்தசனோ பஞ்சபாணங்களை நூறுபிரமாகத்தூவுகின்றானே! இனிச்சகிக்கவச

மல்லவே! என்கண்ணுக்கினிய கனிரசமே! என்னைப்பார் யாழ்மொழியாளே! வார்பொருங் கொங்கையாளே! உன்னைத் துன்பத்திலகப்படுத்திய அத்துரியோதனுதியரை உன் கண்களிக்குமாறு நானே பொருதுமுடித்து அந்நாட்டிற்கும் உன்னையே உரியளாக்குவேன்; யாது மெண்ணுமல் என்பின்வா, கனிரசமே! யென்ருன். இவ்வாறு சயிந்தவன் காமப்பித்தேறித் தன்னைச்சிறிதுமறியாமலும் தான்நின்றிருக்குமிட மிவ்விடமென்றும் அறியானுய் தன்னிரண்டு கண்ணுகிய புண்ணைப் பாஞ்சாலிமேற் செலுத்திச் சித்திரப்பாவையேபோ லத்தகவடங்கி நின்ருன். கற்புங்கோர் பேழைபோன்ற பாஞ்சாலியோவெனின் தன்னழகிய இருகரங்களாலும் இருசெவியையும் பொத்திக்கொண்டு; அடா அற்பகுணமுடைய சயிந்தவனே! உன்னை நான் துச்சலையின் கணவனென்றும், எனக்குத் தமையனென்றும் எண்ணியே உன்னையழைத்து உபசரித்தேன்; இவ்வகையற்பகுணமுடையவனென் றறிந்திருப்பனேயானுல் உன்முகத்தையும் நோக்கேனே பாவி! சற்றுமெண்ணுமலே என்னை யுனக்கு பெண்டாம்படி யழைத்தனையே; உனக்கிதுவுமழகாமோ? யான்உன்னை அண்ணுவென்றழைத்ததையும் யோசித்தாயில்லையே; இவ்வீரேழுலகத்துள்ளோர் யாவரும் ஒருங்குகூடி போர்க்கெழினும் ஓர்கணப்போதில் வெற்றியடையும் மிக்கதிறலையுடைய என் கணவரிருந்தால் முறைபிறழ்ந்து துணிந்துகூறிய உன்னுவைவாள்கொண்டரிந்திருப்பரே! அவரில்லாமையா லன்ருே நீயும் இவ்வாறு துணிந்து கூறினை! இன்னுமோ ரிமைப்போதில் என்பத்தாக்கள் வந்துவிடுவர்; உன்னுயிர் பிழைக்கும்வகையைத்தேடி யெங்கேனுமோடி யொளித்துக்கொள்; அவ்வாறு செய்யாவிடி னின்றுன்னுயிரை இழந்தேபோவை, நீ சவுரியமுள்ள வீரனேயாயின் பிறர்தாரத்தைச் சொப்பனத்துமே விரும்பாய், உன்னை மனிதசன்மமென்றே நினைத்து உபசரித்தேன், நானெண்ணிய வெண்ணத்திற்குப் பழுதுநேர்ந்தன. நீ மிருகத்தினும் அற்பகுணமுடையவனுயினையே "பூரியோர்க்கில்லை சீரியவொழுக்க" மென்பதேபோல், உனக்கு நன்னடக்கை யென்ப தணுவளவுமில்லையே; என்முன்னிற்காமல் பிழைக்கும்வகையைத் தேடிக்கொள்ளென்று அவ்விடம்விட்டுப் பெயர்ந்து சற்றுத்தூரஞ் சென்று மறைந்துநின்றிருந்தாள். சயிந்தவனே அவள் சொல்லிய வார்த்தையைக்கேளாமல் காமவிடந் தலைக்கேறிப்பாஞ்சாலி அவ்விடம்விட்டகன்றதையு மறியாமல் பித்துப்பிடித்தவனே போல நின்று மீண்டு மிவ்வாறு கூறினன்.'

பேரழகுவாய்ந்த பெண்மணியே! பூங்கொடியே! உன்னழகைச் சிற்பத் தொழிலில் வல்லவனும் எழுதவரியானே! நானுன்னழகை எவ்வாறெடுத்துக் கூறவல்லேன்! போரில்வல்ல வேளணியும் வண்ணமுடியொக்கு மென்தனமென்ருலும் ஒவ்வாவே! அம்முடி குளிர்ச்சியும் வெப்பமும் தராதே! சக்கரவாளத்தைச் சொல்லலாமென்ருல் அதுநீண்ட சிறகைப் பெற்றிருக்கின்றதே! இன்னு மெதைத்தான் சொல்லப்பொருந்தும், வேருென்றையு முனக்குவமிக்கப்படாதே உனக்குநீயேநிகரன்ருே; பெண்மணியே! மன்மதனெண்ணிலாக் கணைகளைத் தூவி என்னைவருத்துகின்ருனே; இனிச்சகிக்கவசமன்றே! அப்பயல்காணங்கொள்ளும்படி நாமிருவருங்கூடிச் சுகிக்கலாம் வாவென்று பிதற்றி

உற்றுநோக்குகையில் முன்னின்றிருந்தவிடத்திற்பாஞ்சாலியைக்காணாமல்மதி மயங்கி, என்னுயிரைக் கொள்ளைகொண்ட பாவையைக் காணேனே யென்று அவள்நீண்ட அடிச்சுவட்டைப் பற்றிச்சென்று நின்றிருப்பதுகண்டு என்னைச் சோதிக்கவேண்டி இவ்வாறொளித்துக் கொண்டனையோ ; உன்னைவிட்டுப்பிரிந்தும் என்னுயிரைப் பெரிதெனவெண்ணிக்காப்பேனோ! பந்தையொத்த தனத்தாளே ! நீ யவ்வாறு கருதவேண்டாம்; உன்னைவிட்டுப்பிரியு மக்கணமே என்னுயிரும் நீங்கும், தேமல்படர்ந்த தனத்தாளே ! இன்னு மென்னவாவை தணித்தாயில்லையேயென்று கற்புக்கோர் வித்தெனக்கூறும் பாஞ்சாலியினது கரத்தைப்பற்ற வெத்தனித்தான். அதைக்கண்ட பாஞ்சாலி உள்ளநடுநடுங்கி பன்னீராயிரம் வேதியர்களுறையு மாச்சிரமத்தை நோக்கிக் கடுகிச்சென்றாள். சயிந்தவனோ விடாமற்பின்தொடர்ந்து சென்று முன் சீதாபிராட்டியாரைத் தூக்கிச்சென்ற இராவணனைப்போல் அவள்மாந்தளிர்போன்ற மெல்லியமேனி வாடும்படிப் பற்றித் தூக்கித்தன்றேரிலிருத்தி மிக்க விரைவாகத் தேரைச் செலுத்தினான். பாஞ்சாலியோ அபயமபயமென் றரற்றினாள். அவ்வா றரற்று மோசையைக் கேட்ட பன்னீராயிர வேதியரும் இது பாஞ்சாலியின் குரலோசையேயென்றறிந்து யாவரும்விரைந்துவந்துபார்க்கையில் சயிந்தவன் தேரில்நின்றரற்றும் பாஞ்சாலியைக்கண்டு தேரைவிடாமற்பின்சென்றுசயிந்தவா! இது உன்பெருமைக்கழகேயன்று பிறர்தாரத்தை விரும்புவதனால் தீவினையும் பழியுமே யடைவை ; அதை உள்ளத்திற்கருதாமலே உன்னுயிரைப் போக்கிக்கொள்வதற் கித்தொழிலை ஏற்றனையேயல்லாமல் வேறல்ல, இடும்பனையும் பகாசுரனையுங்கொன்று பின்பு பாரிசாதமலர் வேண்டி பரமசிவனுக்கு நண்பனாகியகுபேரன்வசிக்கும்அளகைக்குச்சென்று என்றும் போரிலழியாதபடைத் தலைவனாகிய மணிமான் முதலிய அரக்கர்யாவரையுங்கொன்று தனக்கெதிரில்லாமல் வாழும் மிக்க திறலையுடைய வீமன் காணுமுன்னமே விட்டுவிடுவையேயானால் நீபிழைத்தவனாவை; அவ்வாறு செய்யாவிட்டால் இன்னுமோரிமைப்போதிற் றென்றிசைக்கோ னுலகடைவை இது திண்ணமென் றறிதி. வீணே என் உயிரிழக்கின்றனை நெருப்பின்மே லீயுமொய்ப்ப துண்டோவென்று பலநீதிகளை யெடுத்துக்கூறியுங் கேளானாய், தேரைமுடுக்கி மிக்க விரைவாய்ச்செலுத்தினான். வேதியரோ அவனைத் தொடர்ந்துசெல்லத் திறனற்று களைத்து இனி யென்செய்வோமென் றேங்கி நின்றுவிட்டனர். இதுகிடக்க ; முனிவர்க்குற்ற துன்பத்தை யகற்றச் சென்ற ஐவரும் வேட்டையாடி எண்ணிலா மிருகக்கூட்டங்களைக்கொன்று தமதாச்சிரமம்வந்து பாஞ்சாலியைக்காணாமல் திகைத்துநின்றனர், அவருள் வீமனோமனங்கொதித்து நான்கு திக்கினு நோக்கிக்காணாமல் பூமியில்தேர்ச்சக்கரம் பதிந்திருப்பதையும், பாஞ்சாலியின் காற்சுவட்டையுங்கண்டு நம்மை லக்ஷியஞ்செய்யாமல் விபாஞ்சாலியைக் கைப்பற்றிச்சென்றவ னெவனென்றெண்ணித் தேரினடிச்சுவட்டையே பற்றிச்சென்றான். வில்வல்லோனாகிய பார்த்தனும் மற்றைமூவரும்பின்தொடர்ந்தனர். வீமன்சென்ற வேகத்தால் மராமரங்களும் வேரற்றுவீழ்ந்தன ; பல சோலைகளழிந்தன. இவ்வாறு வேகமாகச்சென்று சயிந்தவக்கூட்டங்களையும்

பாஞ்சாலியையுங் கண்டு மரமொன்றைப்பிடுங்கி அவன் படைமேலெறிந்
தான் அதனால் அநேககாலாட்களும் கரிபரி முதலிய மிருகங்களுமாண்டன.
இதைக்கண்ட காசிராஜனும் வீமன் தனித்திருப்பதைக்கண் டெதிர்ந்தான்.
அவ்வாறெதிர்ந்த அரசனையும் அவன் சேனைகளையும் சில வெவ்விய கணைக
ளால் நோகச்செய்தான். காசிராஜன் மிக்கசினங்கொண்டு தன் வில்லிற் சில
கணைகளைத்தொடுத்து வீமன்பிடித்திருக்கும் வின்னாணை இலக்காக விடுத்து
ஆரவாரித்தான். வீமனோவெனின் ஐந்துபாணங்களைத் தொடுத்து அவன்
விட்ட கணையைத் தகர்த்து வில்லைக் கீழே எறிந்துவிட்டுக் கையிற் றண்டே
ந்தி காலனேபோலெதிர்ந்து சேனையுட்பாய்ந்து குலாலன் திகிரியேபோற் சுழ
ன்று பல வீரருடலைச் சிதைத்து அவனென்புகள்திசைதொறுஞ் சிதறவடித்துங்
கொன்று தன் நீண்டகதையைக் காசிராஜன் தோண்மேலோச்சிப் புடைத்து
அவன் தேரையுமழித்தான். அரசன் அவன் திறலைக்கண்டு முதுகிட்டோடி
னான். அதைக்கண்ட அயோத்திக் கரசனும் போர்செய்யா தொழிந்தான்.
இவ்வாறு யாவரும் வீமனெதிர் நிற்காம லோட் டெடுத்தனர். இனி நாம்
பிழைப்ப தருமையேயென்றெண்ணி யிருக்குஞ் சயிந்தவனையும் அவன்சேனை
களையும் வளைந்துகொண்டு தன் னொப்பற்ற வில்லி லெண்ணிலாக் கணைகளைத்
தொடுத்து நோகச்செய்து மீண்டும் ஒன்று பத்துநூறு ஆயிரமாகக் கணைக
ளைத்தொடுத்து சயிந்தவனையு நோகச்செய்தான். இவ்வா றிவன் தொடுத்து
விட்ட கணைகளால் காலாட்களிற் சிலர் கரமற்றனர், சிலர் சிரம்பிளந்தனர்,
சிலர் காலற்றனர், சில ருயிர்நீங்கினர். யானைகள் திசைதொறும் வீறிட்டோ
டின, சயிந்தவனோ வீமன் கணையால் உள்ள மெலிந்து பாஞ்சாலியை விட்டு
முதுகிட் டோடினான். சேனைகளுந் திசைக்கொருவராய் ஓட்டெடுத்தனர்.

இவ்வாறு யாவரும் முதுகிட்டோடினபின் திரௌபதியை யல்லாமல்
மற்றவரைக் காணாத வீமன் பாஞ்சாலியின்கரத்தைத் தன்னொப்பற்ற கரத்
தாற்பற்றிக்கொண்டு பல இனிய மொழிகளைக்கூறி அவள்மனந் தேறும் வகை
செய்துகொண் டிருந்தான். இதற்குள் அருச்சுனன் முதலிய நால்வரும்
அங்கு வந்து சேர்ந்து பாஞ்சாலியைக் கண்டு களித்து வீமனால் மாண்ட
வீரர்களின் செந்நீர் ஆறேபோ லோடுவதையுங்கண்டு இங் கிவ்வுதிரம் பெரு
கக் காரண மென்னவென்று வீமனைக் கேட்க நிகழ்ந்ததை யாவு மெடுத்
துக் கூறினான். யுதிட்டிரன் அறிவிற்சிறந்த அன்ன நடையாளே! நீ இத்
துன்பத்துக் கிலக்காயின விதமெப்படி என்றான். யானோ தாங்கள் வேட்டை
யாடச் சென்றபின் முப்பத்திரண்டு வாத்தியமு முழங்கக்கேட்டு மீண்டுந் துரி
யோதனன் நம்மிடம் வருகின்றானோவென் றையங்கொண்டு ஆச்சிரமத்தை
விட்டு வெளியேவந்து பார்த்துக்கொண்டிருந்தேன்; ஓர் மனித னென்முன்
வந்து சயிந்தவராசனுடைய பெருமிதம் பெற்ற யானைகட்குத் தான் பாக
னென்றும் அவர் உமது நாமத்தை யறிந்துவரச் சொன்னாரென்றுங்கூறினான்.
“பெண்புத்தி பின்புத்தி” என்பதேபோல் அக்கொடிய பாதகன் செய்கை
யை யறியாமல், துச்சலை நாயகனும் நமக்குத் தமையனாயிற்றே யென்று
கருதி என்பெயரைச் சொல்லி அவனை யனுப்பினேன்; பின்புசயிந்தவன் ஓர்

தேருர்ந்து என் முன்வரக்கண்டு உபசரித்தேன். அவ னதையுஞ் சற்று மென் ணுமலே என்னைத் தனக்குப் பெண்டாகும் வகையை யெடுத்துப் பேசினன்; யானே அவ னெண்ணத்தை யறிந்து அவ்விட மகன்று சென்றேன், அப் பாதகனென்னை விடாமற் றொடர்ந்து வந்து என்கரத்தைப்பற்ற எத்தனித் தான். அச்சமயத்தில் வேதிய ருறையு மாச்சிரமத்தை நோக்கிச் சென்றேன் பின்பு நடந்தவற்றைச் சொல்ல நாவெழவில்லையே வீரர்களே! அவனையும் கொல்லாது விடுத்தீர்களே! பின்பென்னைத் தன்கரத்தாற் பற்றி யெடுத்துத் தேரிலிருத்திச்சென்றான், நானு மரற்றினேன் அவ்வோசையைக்கேட்ட வேதி யரும் வந்து பல நீதிகளை யெடுத்தோதியும் கேளாமல் தேரை விரைவாகச் செலுத்தினன் அவ னென்னைப் பற்றிய கரத்தையும் துணியாது விடுத்து நீரு மோர் வீரனைப்போற் பேசுகின்றீரே! அவன் கூறிய புன்சொல்லோ சிறிதல் லவே! அவன்நாவையும் கொய்யாதுவிடுத்தீரே! உம்மையும் பலவாறிகழ்ந்து கூறினனே! யென்று கோவெனக் கதறியழுதாள்.

இவ்வாறவள் கூற முன்னமே வீமன் வில்லுங் கதையுங் கையிலேந்திப் பிரளயகால உருத்திரனைப்போல் வெகுண்டு நீகவலவேண்டாம் உன்னிட்டப் படியே உன்னை வருத்தினவ னுடலைக் கணப்போதிற் சிதைத்து வருகின்றே னென்று புறப்பட்டான். அதைக்கண்ட கருணைக் கடலாகிய தருமராசன் வீமா! சிறியோர் செய்த பிழையை பெரியோராவார் பொறுத்தருள்வது கடனும், சென்றதை யெண்ணி வருந்துபவனும் இனிவருவதையெண்ணிமகிழ் பவனும் மனிதருட் பதராவான். சயிந்தவன் செய்தது கொடுமையே யாயி னும் இனி அவனைக் கொல்வதனால் யாது பயனையடைவை? தெய்வத்தாலா குங் காரியத்தை.யாவரே தடுக்க வல்லார் என்றான். அவ்வாறு கூறியதைக் கேட்ட வீமன்கண்களிற்றீயெழநிற்ப யுதிட்டிரன் வீமன்முகக்குறியைக்கண்டு வரம்பிலாக் கோபமடைந்தானென் றறிந்து வீமசேனா! நீ சயிந்தவனிடஞ் சென்று அவனைக் கொல்லாமல் இங்கழைத்துவா வென் றாஞ்ஞை செய்தான். அவ்வாறுசொல்லி வாய்மூடுமுன்னமே வாயுவேகத்தினும் மனோவேகத்தினும் விரைவாகச்சென்றான். பின்பு யுதிட்டிரன் பார்த்தனை நோக்கிச் சயிந்தவ னுயிர்நீங்காவண்ணம் இங்கழைத்தே வருவதே உன் கடமையாமென் றனுப்பி னார். அவனு மவ்வாறே வீம னடிச்சுவட்டைப் பற்றிச்சென்றான்.

அவ்வாறு சென்ற வீமன், சயிந்தவன்தேர் நெடுந்தூரத் திருக்கக் கண்டு, வானத்திலுள்ள உடுக்கணங்கள் சிந்தவும் திக்கயங்க ளோட்டெடுப்பவும், வானத்துறையுந் தேவர்கள் மெய்சோர்ந்துவிழவும், கர்ச்சித்து அடாசயிந்தவா! நீஎன் கையினின்றுந்தப்பித்துயிர் பிழைப்பையோ? சற்றுநில்லடாநில் என்று ஆரவாரித்தான். இதைக் கேட்ட சயிந்தவன் மெய் சோர்ந்து நம்மைப் பிழைக்கவிட்டுச் சென்ற வீமன் மீண்டும் நம்மைத் துரத்தி வருகின்றானே! இனிநாம் பிழைப்ப தரிதேயாகும். இது பேரழகுவாய்ந்த பாஞ்சாலிநாம் செய்த கொடுமையை விரிவா யெடுத்துக் கூறினள் போலுமென்று நினைக்கு முன்னமே வீமன் உயிர்கொண்டேகுங் காலனைப்போல் வரக்கண்டு தேரை விட்டிழிந்து ஓர்புதரிற்போ யொளித்தான். வீமனு இரதத்தைக் கண்டு

அதிர்சயிந்தவ னில்லாமற் சாரதியைக்கண்டு அவனைத் தன்னொப்பற்ற கரத்தாலோரிடி யிடித்தான், அதனாலவன் வாய்பிளந்து பூமியில் விழுந்து கோவெனக் கதறி யழுதான். அவ்வாறு கதறியழுபவனைத் தன் கரத்தாற்பற்றி யெடுத்து சயிந்தவனெங்கே யென்று இடியோசைபோற் கர்ச்சித்துக் கேட்டான். அத்தேர்ப்பாகனோ வாய் பிளவுபட் டிருப்பதால் பேச நா வெழாமல் உன்மத்தனைப்போல் நின்றான். வீமன், பாகனே உன்னரசன் சென்றொளித்த விடத்தைத் தெரிவியாவிட்டால் இன்னொரு கையறையா லிறந்தே போவை; அவ்வாறு நேரா முன்னமே விரைந்து கூறென்றான். பாகன், இறைவனே தேவரீ ரறற்றிய வோசையைக் கேட்டுத் தேரைவிட் டிழிந்து இக்காட்டிற் புகுந்தோடினா னென்றான். அதைக்கேட்ட வீமன் காலனைப்போல் கதையைக் கையிற்றாங்கிக் காட்டிற்புகுந்து மராமரங்களையும் சோலைகளையும் தண்டுகொண்டோச்சிப் புடைத் தொழித் தழித்துங் காணாமல் மிக்க கோபங்கொண்டு வரைகளையு மழித்துங் குகைகள்தோறும் புகுந்து பார்த்துத்திரிந்து கொண்டிருக்கையில் வில்லில் வல்ல அர்ச்சுனனும் வீமனை வந்து கண்டான். பின்பு இருவரும் பரிசோதித்து வருகையில் ஒரு புதரிருக்கக்கண்டு வீமன் அதைத்தன் கையிலுள்ள தண்டாலோச்சிப் புடைத்தான். அப்புதரி லொளித்திருந்த சயிந்தவன் அவ்வடியைப் பொறுக்க முடியாமல் வெளியேவந்து பல்லைக்காட்டிக் கெஞ்சி நின்றான். கற்புக்கோர் வங்கம்போன்ற பாஞ்சாலியை வேசியைப்போ லெண்ணிப் பிதற்றிய வஞ்ச நெஞ்சமுடைய அக்கொடியோனுடைய சிகையைப்பற்றி காலனை யுதைத்த கண்ணுதற் கடவுளேபோல் தன்வலியகாலால் ஒருதை யுதைத்தான். அதனால் என்புகள் நெக்கு விட்டது. அம்மட்டில் விடாமல் பிண்டமர்த்தனஞ் செய்ய வேண்டு மென்றெண்ணி முன்பகாசுரனை முடித்த தன்கரத்தை மேலே கிளப்பக்கண்ட அர்ச்சுனன் அவனடியில் வீழ்ந்து வணங்கி அண்ணா! இவ்வற்பனைக் கொல்லவெண்ணுவதுமோர் பெரியகாரியமாமோ? இவனைஇங்கே கொல்லாமலே நமது தமையனாரிடத்திற் கொண்டு போய் விடலாம்; பின்பவர் செய்யு மாஞ்ஞையை யேற்றுச்செய்யலாம், அவர்சொற்கடந்து நடக்கவும்போமா? அவர்மனத்திற்கு நாமே துன்பத்தைத்தேடித்தருவ தழகல்லவேயென்றான். வீமன் அர்ச்சுனா! இனி இவனுயிரைப் போக்கக் கருதேன், உன்னாலிவன் பிழைத்தவனேயானான். ஆயினும் இவனை யாதேனு மொருவகையான துன்பத்திற் படுத்தவே வேண்டுமென்று கண்களிற்றீயெழவும், வரைபோன்ற புயங்கள் துடிதுடிக்கவு நின்றான். அர்ச்சுனனோ அரசிலைபோன்ற அக்கினிக்கணையினால் சயிந்தவன் தலைமயிரை ஐந்துபிரிவாக்கிப் பட்டைபட்டையாய் விளங்கும்படிக்கொளுத்தி முகமுதலிய அவயவங்களைக் கருக்கித் தலையிற் றழைகளைக்கட்டி முகத்திற் கரும்புள்ளி செம்புள்ளியிட்டு அண்ணா! இவன்செய்கைக்குத் தக்க வேடந் தரிப்பித்தேனென்றுநகைத்தான். வீமனோஅவ்வஞ்சகன்தோள்மேற்கதையாற் புடைத்து சயிந்தவா! நீ பிழைக்கவேண்டினால் நானிடும்பேரைவகித்துக்கொள்; உனக்குப் “பாண்டவதாசன்” எனவேபெயர்தந்தேன்; அதை நீ மும்முறை கூறென்றான். அதற் கவன் யானறியாமற் செய்த பிழை யத்தனையும்பொறுத்

தருளவேண்டுகின்றேன்! என்று தன்கிட்டபெயரைமும்முறை உரத்துக்கூவி
னான். முறையல்லாதனவற்றையே செய்துதிரியும் மூர்க்கா இங்கு நானிட்ட
பெயரைக் கூறியவாறே கருணையையே செல்வமாகப் பெற்றிருக்கும் எமது
தமையனாகிய யுதிட்டிரர்முன்னின்றும் கூறவேண்டும். உனக்குநேர்ந்த துன்
பத்தாலதைமறந்துவிடப்படாது, அப்படி யங்கேசொல்லாவிடின் அவர்முன்பே
உன்னைக்கொன்றே விடுவேன் என்று வற்புறுத்தித் தேர்க்காலிற் பிணித்துக்
கட்டி இருவருந் தேரூர்ந்து யுதிட்டிரரிருக்கும் வனத்தை நாடிச் சென்று
கண்டு அவனைக்கட்டவிழ்த்துவிட்டு தருமராசன்முன் நிறுத்தி வீமன் உன்
பெயரென்னவென்று வினவினான். அவ்வா றவன்சொல்லி வாய்மூடுமுன்
னமே, இறைவ என்பெயர் "பாண்டவதாசன்" என்று மும்முறைகூறினான்.
அதைக்கேட்ட பாஞ்சாலியும் வேதியர்களும் நகைத்தனர். யுதிட்டிரன் இவ
னுக்குக் கன்னைச்சுற்றி நாமமிட்டிருக்கக்காரணமென்னவென்றுவினவினான்.
அதற்கு வீமன் அண்ணா! நின்னையிற் றுயிலுந் தாதனுக்குக் கன்னைச்சுற்றி
நாமமிருக்குமென்றான். இவன் மீசையெங்கே யென்ன, மீசையுள்ள வீரனே
யானால் தங்கையென் றெண்ணாமல் முறை தப்பி நடப்பனோ என்றான்.
இவன் தலைமயிர் ஐந்துபிரிவாகவேண்டிய தென்னென்றான். இவன் குலத்துக்
கிழிவுதேடுங் கொடியோ னாதலால் ஐங்குடுமித் தலைய னானென்றான்.
இவ்வாறு அவனுற்றகோலத்தை ஒவ்வொன்றாகக்கேட்டு புன்முறுவல்செய்து
சயிந்தவா! நீ நற்குலத்துதித்தும் நன்னெறிபூண்டொழுகாமல் புல்லறிவாளரோ
போல் தங்கையென்றும் பாராமல் இவ்வகையாகிய கொடுமைசெய்யத்துணிந்
தனையே! இது உன் திருவை யழிக்குமன்றோ! இதுவும் அரசர்க்குரிய நன்
னடக்கையாமோ! உனக்கும் காட்டில்வாழு மிருகத்திற்கும் பேதமுமுண்
டோ? எல்லாத்திருவும்பெற்றிருந்தும் சிற்றின்பத்தையே கருதி இக்கதிக்குள்
ளாயினையே! இனி யுன்னை யாவரோ மதிப்பர். இவ்வாறு அறத்தைப்பகைத்து
நிற்பையேயானால் என்றும் கேட்டையேபயப்பிக்கும் இனியேனும்இவ்வகைத்
தூர்க்குணங்களை யொழித்து நற்குணங்கொண் டொழுகி யாவருந் தக்கா
னெனப் புகழும்படி வாழென்று நல்லறிவுச் சுடர்கொளுத்தி விடைகொடுத்
தனுப்பினான். பின்பு சயிந்தவராசனோ காலபாசத் தகப்பட்டு மீண்டவனே
போல் வீமனிடமிருந்து மீண்டு அவ்விடம் விட்டுக் காட்டைநோக்கி நெடுந்
தூரஞ்சென்று ஓர் மராமரத்தின் நீழலிற்றங்கி இவ்வாறெண்ணலாயினான்.

நாமோ திருவும் படைத்துணையும் பெருமிதமாகப்பெற்றிருந்தும்கயவரோ
போல் ஊழ்வலியால் சிற்றின்பத்தைக்கருதி இக்கதிக்குள்ளாயினோம். நம்
முடன்வந்த அரசர்களிற் காசிராசன்நமக்குச்சகாயமாய் வந்தான். அவனையும்
அடித்துத் துரத்திவிட்டான், மற்ற அரசரும் நமக்குற்ற இழிவைக்கண்டு சென்
றனர். இக்கோலத்துடனே நமது நாட்டிற்குச் செல்லப்படாது. நம்மைத்
துன்பத்திற்குள்ளாக்கினவர் இருவரே யாயினும் அவருடன் பிறந்தோரையு
முடிக்கவேவேண்டும். அவ்வாறு செய்யாது விடுத்தால் நமக்கென்னாளும் இழி
சொல் நேருவதுடன் ஐவரும் நம்மைச் சிறிதேனும் மதியார்கள். இறைவனை
நோக்கித் தவத்திருந்து அவனருள்பெற்றே நமதுநாட்டிற்குச் செல்லவேண்டு

மென்று யோசித்து அவ்விடம்விட்டு நெடுந்தூரம் காட்டிற்சென்று தயாசாந்த ரென்னு முனிவரைக்கண்டு அவரடியில் வீழ்ந்து வணங்கி நின்று முனிவர் பெருமானே! நாயேன் இறைவனை நோக்கித் தவஞ்செய்ய எண்ணிவந்தே னாதலால் நானுய்யுமாறு மந்திரோபதேசஞ் செய்யவேண்டுமென் றிறைஞ்சி நின்றான். அவ்வாறு நின்ற சயிந்தவனை நோக்கி உனக்கிக்கோல நேரிடக் காரணமென்னவென்று வினவ, அதற்கவன் தானெண்ணாமற் செய்த குற்றத் தைத் தெரிவியாமல் என்மாற்றலரால் இக்கதிக் குள்ளாயினே னென்று ஓர் போக்காகச் சொல்லிமுடித்தான். முனிவரோ அவன்மேற்கருணைகூர்ந்துமந்தி ரோபதேசஞ்செய்தனர். சயிந்தவனோ மீண்டு மவரைப்பணிந்து அவரிடம் விடைபெற்றுச்சென்று அக்காட்டில் தனக்கோர் நல்லிடந்தேடிக்கொண்டு சருகுமுதலியனவு மருந்தாமலே நெடுநாள் அருந்தவத்திருந்தான். மெய்யன் போடு பச்சிலையிட்டுப்பதந்தொழுவோர்க்கு முத்திவீடளிக்கும் முதல்வனாகிய சிவபிரான் அவ னருந்தவத்துக்கிரங்கி அவன்முன் ஓர் விருத்த வேதியனே போற்றோன்றி நீ யாதுகருதி சருகு முதலியன்வுமருந்தாமல் அருந்தவஞ் செய் கின்றனையென்றுவினவ, சயிந்தவன் வேதியனேபோ லுருக்கரந்துவந்த இவர் காலனையுதைத்து மார்க்கண்டர்க்கென்று மிறவாவரந் தந்தருளிய கண்ணுதற் பெருமானே யாமென்றாகையாலறிந்து அவரடியில் எட்டுறுப்பு நிலமுறப் பணிந்து நின்று உமையொருபங்கா! உம்பர்கட்கரசே! பிரணவசொரூபா! நின்மலமூர்த்தி! ஈறிலாமுதலே! பாண்டுமைந்தராகிய ஐவரையும் நான்முடிக் கும் வரத்தைத்தந்தருளவேண்டும், கற்றையஞ்சடையோய்! என்று துதித்துப் பணிந்துநின்றான். அதற்கிறைவன் நாம் முன்னமே அருச்சுனனுக்குப் பாசு பதாஸ்திரமும் என்றுங் கெடாத கணைகளும் விரும்பிக்கேட்ட வரத்தையு மளித்திருக்கின்றோ மாதலால் அவனைத்தவிர மற்றநால்வரையும் இனி அவர் க்கு நேரிடும் பாரதயுத்தத்தில் ஒருநாள் சயிக்கக்கடவை, இவ்வரமும் நீசெய்த அருந்தவத்தா லளித்தோமென்று மறைந்தருளினார். பின்பு சயிந்தவன் தான் கொண்டகளிப்புக் கெல்லையில்லாமல் அக்காட்டைவிட் டகன்று தன்னாடு போய்ச்சேர்ந்தான்.

ஸ்ரீராமருற்பவ சருக்கம்.

இவ்வாறு சயிந்தவனுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டு வாளை வீணா ளாகப் போக்காமல் இறைவனைத் துதித்தும்தம்மை நாடிவருகின்ற தவத்திற் சிறந்த முனிவர் முதலியவர்களைத் தொழுது அவர்மனங் கோணாவண்ணம் நடந்தும் பாண்டவர்இனிது வாழ்ந்திருக்கையில், எண்ணிலாதகற்பகாலத்தைக் கண்டுகளித்து மாசுதீர்ந்த மணியேபோல்விளங்கும் மார்க்கண்டேய முனிவர் மீண்டும்பாண்டவரைக்காணவேண்டி எழுந்தருளினார். அவ்வாறெழுந்தருளிய அம்முனிவரைக்கண்ட பாண்டுமைந்தர் எதிர்சென் றழைத்துவந் தாசனமளித் துபசரித்தனர். மார்க்கண்டேயரும் அவர்க்குப்பல ஆசி கூறித் தருமராசனை நோக்கி நானும்மைக்கண்டு நெடுநாளாயின, மீண்டுமும்மைக் காணவேண்டியே வந்தேனென்றார். யுதிட்டிரர் நாயினுங் கடையேனாகிய என்பால் அன்பு

கொண்டே தேவரீர் இங்கு வந்தபின்னும் நான் பெறும்பேறுமொன் றுண்டோ? நான் செய்ததவம் நற்றவமே! யாமென்று புகழ்ந்துகூறி சயிந்தவன் பாஞ்சாலியைக்கவர்ந்து சென்றதும் பின்பு நடந்தயாவுங் கூறி மனம் வருந்தி முத்தேபோற் கண்ணீருகுத்து நின்றான்.

அதைக்கண்ட மார்க்கண்டேயர் இவன் மனத் துயரை யகற்றவேண்டுமென்றுகருதிப் புன்னகை செய்து, அரசர் பெருமானே! யாவு மறிந்த நீரோ இவ்வாறு கவன்றால் சிறியோர் கவலாதிருப்பரோ! கருணையிலாமனத்தனாகிய அச்சயிந்தவன் கற்பிற்சிறந்த பாஞ்சாலியைக் கைப்பற்றிச் சென்றதனால் இழிவாமோ? காத்தளித்தழிக்கு முத்தொழிலை யுடையானும்,சகல வேதங்களும் உபநிடதங்களும் துணிந்துகூறும் பரமசிவனை அறிவிலியா மொருவன் பழிப்பனேயானால் அதனாலவன் துன்பமடைவனே யல்லது இறைவனுக்கோரிழிவென்று கொள்ளப்படுமோ? உமக்கு மைத்துனனென்னு முறையையும் பாராமல் அச்சயிந்தவனைத் துன்பத்திற் குள்ளாக்கி யனுப்பினதற்கு என்மனமுவகைகொண்டது! முறையல்லாதனவற்றையே எண்ணுமற்செய்யுந் துட்டர்களைத் தண்டிப்பது நீதியேயாகும். அவனை அவ்வாறுசெய்ததனால் இனியவனுக்கது நற்புத்தியையேயுண்டாக்கும், இதனால் பாஞ்சாலிக்கோரிழிவென்று கொள்ள வேண்டாமென்று பின்னுஞ் சொல்லத் தொடங்கினார்.

திருவயோத்தியை மிக்க நீதியோடு அரசாண்டுவந்த அயனென்னுமரசன் புதல்வனாகிய தயரத மகாராசன் புத்திர பாக்கிய மில்லாமல் நெடுநாள் மனம் வருந்தி பின்பு வசிட்டரருள் பெற்று கலைக்கோட்டு மகரிஷியைக் கொண்டு விதிப்படி புத்திர காமேட்டி யாகஞ்செய்து அதிற்கிடைத்த அமுதத்தை நான்குபங்காக்கி அதிலொன்று கௌசலைக்கிட்டு மற்றப்பாகத்தில் இரண்டைச் சுமித்திரைக்கும் ஒன்றைக் கைகேசிக்குங் கொடுத்தனன். அவ்வாறு மனைவியர் மூவருக்கும் கொடுத்தபின் இறைவனருளால் மூவரும் வயிறு வாய்த்து, கௌசலைக்குச் சீராமனும், சுமித்திரைக்கு இலட்சுமணனும் சத்துருக்கனுங், கைகேசிக்குப் பரதனு முதித்தனர். இவ்வாறு அருந்தவத்தாலுதித்த அப்புதல்வரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகவளர்த்து சிலம்புவித்தை முதலியனவுங் கற்பித்து பிற கலைகளும் கற்பித்து வைத்தனர். இராச குமாரரோ நான்கு மறைகளையு மையந்திரிபறக் கற்று வருநாளில் மெய்யறிவுடைய விசுவாமித்திர முனிவர் திருவயோத்திக் கெழுந்தருளி தயரத மகாராசனைக்கண்டு அரசரேறே! அரக்கர் கொடுமையால் யானியற்றுந் தவத்துக் கிடையூறுநேர்வதனால் உமது அருந்தவத்துதித்த புதல்வராகிய அறிவிற் சிறந்த இராமலட்சுமணரை என்னுட னனுப்பவேண்டுகின்றேன். அவ்வாறு செய்விரேல் உமது புதல்வருக்குச் சிலம்பு வித்தை முற்றுங்கற்பிக்கின்றேனென்றார். அதைக்கேட்ட தயரதன் புளகாங்கிதங்கொண்டு முனிவர் பெருமானே! நாயினுங் கடைப்பட்ட என்னையுமோர் பொருட்படுத்தி இங்குவந்து கேட்கவும் வேண்டுமோ? உம திட்டப்படியே செய்யலாமென்றான். முனிவர் அவனுக்குப்பல ஆசிகூறி இராமலட்சுமணரை யழை

த்துக்கொண்டு அவனிடம் விடைபெற்று தன்னுச்சிரமத்திற்குச் சென்று இருவரையும் மிக்க அன்புடன் பாதுகாத்து தனுர்வேத முதலியயாவுமவர்க்கையந் திரிபறக் கற்பித்து அவ்விருவரையும் தனக்குப் பாதுகாவலாக யாகசாலையினோர் புறத்திருத்திச் சற்றுமச்ச மென்பதின்றி முறைப்படி யாகஞ்செய்து வந்தனர். இவ்வாறு திரிசங்கு வென்னும் அரசனை விண்குடி யேற்றிய விசுவாமித்திரர் செய்யும் யாகத்தைக் கெடுக்க வேண்டிவந்த தாடகையை இருவரு முடித்தனர். இச்செய்தியையறிந்த தாடகையின் புதல்வர்களாகிய சுவாகு மாரீசன் என்னு மிருவரும் மவரையெதிர்த்துப் போர்புரிந்து வெற்றி யடைய வலியில்லாராய் பல மாயைகளைச்செய்து கொண்டு கொல்ல நினைந்தனர். இச்சூழ்ச்சியையறிந்த சீராமபிரான் அவ்விருவரையு முடித்து யாகத்தைப்பூர்த்தி செய்தனர். இது நிடக்க;

பின்பு விசுவாமித்திரர், இராம லட்சுமணர்களை யழைத்துக்கொண்டு மிதிலாபுரியை நோக்கிச் செல்கையில் மார்க்கத்தில் கல்லாய்ச் சமைந்திருந்த அகலிகைமேல் சீராமர்பாதம்படவும் அக்கணமேபெண்ணுருக்கொண்டு நிற்ப அதிசயித்து விசுவாமித்திர முனிவரை வணங்கி இப்புதுமை யாதென வினவ இவள் கௌதமர்மனைவி இவள்பேர் அகலிகை,இவளை இந்திரன் கூடினதினால் கௌதமரிட்ட சாபத்தால் இக்கல்லுருக் கொண்டாளென்றவர்க் கறிவித்து அவளை யழைத்துச் சென்று கௌதமரிடத்தில் கொண்டுபோய் விட்டு விட்டு அவ்விடம் விட்டகன்று சனகமகாராசனிடம் போய்ச் சேர்ந்து பின் அவ்வரசசபையில் பரீட்சிக்க வைத்திருக்கும் வில்லை சீராமபிரான் எடுத்து நிறுத்தி யோரிமையோரையிற் குனித்தொடித்து சீதாபிராட்டியை மணந்து, தம்பியர்க்கும் மணம்புரிவித்து அந்நகரைவிட்டகன்று வரும்வழியில் பரசுராமரொதிர்க்க அவரை வெற்றி யடைந்து அவர் பிடித்திருந்த ஒப்பற்ற வில்லையுங் கவர்ந்து அதை வருணனிடத் தொப்புவித்துத் திருவயோத்தியை யடைந்தனர். அப்போது பரதசத்துருக்கனர் தமது பாட்டனராகிய கேகய மகாராசனிடஞ் சென்றிருந்தனர். இதுநிற்க;

இவ்வாறு திருவயோத்தியை யடைந்து இனிது வீற்றிருக்கையில் சீராமனுக்கு பட்டங்கட்ட வேண்டுமென் றெண்ணி சோதிட வல்லோரையழைத்து நன்னாளொன்றை நியமித்துக் கொண்டு பட்டங்கட்ட எத்தனிக்கையில் மந்தரையின் துர்ப்போதனையினால் கைகேசி தன்புதல்வனாகிய பரதனுக்குப் பட்டங் கட்டும்படி தசரதனைப் பலமுறை கேட்க அவன் அப்படிச் செய்வது முறையல்லவென்று பல விதத்தாற் சமாதானப் படுத்தியும் கேளாமல்,தசரத மகாராசன் முன் தனக்குக் கொடுத்திருந்த இரண்டு வரங்களையும் நினைத்துத் தாங்கள் எனக்கு முன்னளித்த இரண்டு வரத்தையும் இப்போதே தரவேண்டுமென்றாள். அவ்வாறே அரசன் ஆகுக வென்றான். கைகேசியோ வென்னின், சீராமனைக்காட்டுக்கனுப்புவதொருவரமும்பரதனுக்குப்பட்டங் கட்டுவதொரு வரமுங்கொடுக்க வேண்டுமென்றாள். அதைக்கேட்ட அரசன் படிமிசை விழுந்து மூர்ச்சையடைந்து உயிர்ப்பு நீங்கினவனேபோற் கிடந்தான். இஃதிவ்வா

திருக்க, மறுநாட் காலையில் சிராமனை நல்லதீர்த்தங்களா லாட்டுவித்து விலையேறப்பெற்ற ஆடையாபரணங்களை யுடுத் தணிந்து அரசவையி லழைத்துவரும்போது அவ்வழியில் நின்றிருந்த கைகேசி சிராமனைநோக்கி நீ பதினான்கு வருடம் காடுறைந்து வரக்கடவாய், உன்தம்பி பரதனே இந்நாட்டை யாளுவானென்றாள். அம்மொழியைக்கேட்ட சிராமபிரான், தாயே! நீ சொல்லிய சொல்லே வேதவாக்கியம்; அவ்வாறே செல்கின்றேனென்று உள்ள மகிழ்ந்து துதித்து அவளடி வீழ்ந்து வணங்கித் தன்னரண்மனைக்குச் சென்று தானணிந்திருந்த ஆடையாபரணங்களைக் களைந்தெறிந்து மரவுரி யுடுத்து தாய்மாரிடத்தில் விடைபெற்று சிதையையும் இலக்ஷ்மணனையுமழைத்துக்கொண்டு கங்கையைக்கடந்து குகப்பெருமானை நேசித்து சித்திரகூடம் போய்ச் சேர்ந்தனன். இது நிற்க; தயரதன் பின்பு மூர்ச்சை தெளிந் தெழுந்து மனம் வருந்தி யிருந்தான். அவ்வாறிருக்கையில் தன்பிரதான மந்திரியாகிய சுமந்திரனால் நிகழ்ந்த யாவுங் கேட்டு தன்னுயிரை நீத்தான். வசிட்டர் அனுப்பிய திருமுகத்தைக் கண்ட பரத சத்துருக்க ரிருவரும் விரைவில் திருவயோத்திக்குவந்து அரசன் இறந்தமையும் தமையனுந்தம்பியும்வனம்புகுந்தமையு மறிந்துதன்தாய் கைகேசியை நொந்து தாமும் தவவேட மேற்கொண்டு காட்டுக்குச்செல்ல தாய்மாருஞ் சேனைகளும்பின்தொடர்ந்துவரக் குகப்பெருமானைச் கண்டு நேசித்துச்சித்திரகூடம் போய்ச்சேர்ந்து சிராமனைக்கண்டு அவன்மலரடி தொழுது நின்று தந்தை இறந்த செய்தியை யறிவித்தனர். சிராமனும் மிக்க மனம் வருந்தி தந்தைக்குரிய நீர்க்கடன் முதலிய யாவுமியற்றி பரதனை நோக்கித் "தாய்சொற் றுறந்தால் வாசக மில்லை." என்பதனால், என்தாய் எனக்குப் பணித்த பதினான்கு வருடத்தையும் காட்டிலிருந்தே கழித்து பதினைந்தாமாண்டின் தொடக்கத்தில்வந்து சேருகின்றேன். அதுவரையிலுநீயே அரசாண்டிருவென்று கட்டளையிட்டார். அதற்குப் பரதன் தேவரீரிருக்க யான் அரசாள்வது முறையாமோ வென்ன, சிராமன் பலநீதிகளையு மவனுக் கெடுத்துக்கூறி அவன்மனத்தைக் களிக்கச் செய்தனன். பரதனே சிராமனுடைய பாதுகையைப் பெற்று திருவயோத்தியை நோக்கிச்சென்று அப்பாதுகையைச் சிங்காசனத்தில் வைத்து அதற்கு மகுடஞ்சூட்டித் தான்மேற்கொண்ட தவவேடத்தோடும் அரசாண்டு வந்தான். இதுகிடக்க;

சிராமபிரானே சானகியாரை இளைய பெருமாளிடம்விட்டுவிட்டுத் தன்னந்தனியே காட்டிற் புகுந்து நெடுந்தூரஞ் சென்றான். அறத்தையே பகைத்துநிற்கும் கோரரூபமுடைய விராதனென்னு மரக்கன் கற்பிற்சிறந்த சீதாபிராட்டியைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தி லெழும்பிச் சென்றான். இவ்வா றவன் செல்ல சானகியார் கோவெனக்கதறி யழுதார். அவ்வா றாற்றிய ஓசையைக் கேட்ட சிராமபிரானும் இலட்சுமணனும் அவனை வளைந்துகொண்டு அநேக சரங்களைத்தொடுத் தவன்மேல்விட்டு நோகச் செய்தனர். அரக்கனவர்மேற் சினந்து சானகியாரைப் பூமியில்விடுத்து கர்ச்சித்தெழும்பியெதிர்ந்து நீவிரின்று என்கையால் முடிவீரோ யல்லது வேறில்லையென்று வாய்வாதம் பேசி இரு

வரையும் பற்றித் தூக்கினன். யானையைக் கொல்லுஞ் சிங்கம்போல் இருவருமவன் கையினின்றும் விடுபட்டு அவனிரு புயங்களையும் வாள்கொண்டரிந்து அவன்சிரத்தை இருபிளவாக்கிக் கொன்றனர். இவ்வாறவ்வரக்கனைக் கொன்றபின் அவ்விடம் விட்டகன்று நெடுந்தூரஞ் சென்று சரபங்கருடைய ஆச்சிரமத்தைக்கண்டு அங்குள்ள முனிவர்களைப் பணிந்து அவராசி கூறப்பெற்று அவ்விடம் விட்டகன்று கோதாவிரி தீரத்தில் இளையபெருமாள் சமைத்த பன்னசாலையி லினிது வீற்றிருந்தனர். இவ்வாறங்கு நெடுநாள் வீற்றிருக்கையி லோர்நாள் இராவணனென்பான் சீதாதேவியைப்பற்றிச் சென்றான் என்று மார்க்கண்டேய முனிவர் கூற, யுதிட்டிரன் அவரடியில் வீழ்ந்து வணங்கி இராவண னுற்பவமும் அவன் சீதையைக் கவர்ந்துசென்ற விவரத்தையும் நாயேற் கறிவிக்கவேண்டுமென் றிறைஞ்சி நிற்க மார்கண்டேயரும் சொல்லத் தொடங்கினர்.

இராவண னுற்பவம்.

பிரமதேவன் புதல்வனாகிய புலத்திய பிரமன் குபேரனைப்பெற்றான். அப்புதல்வன் இலங்காபுரியில் வாழ்ந்துவருநாளில் தகப்பனாகிய புலத்தியருக்குப் புதல்வன்மேல் வெறுப்புண்டாகி அவனுக்குச் சத்துருவை யேற்படுத்த வேண்டுமென்று கருதி தனது சரீரத்தி னிடதுபாகத்தை நோக்க அதினின்றுமோர் புதல்வனுதித்துத் தந்தையைப்பணிந்து நின்றான். தந்தை அவனுக்காசிகூறி வச்சிரவாகு வென்று பெயரிட்டு தவத்துக்கேகும்படி யனுப்பினர். அவனு மவ்வாறே காட்டிற்சென்று அருந்தவத்திருந்தான். இச்செய்தியை யறிந்த குபேரன் வச்சிரவாகுவினிடஞ் சென்று நேசித்து மிக்க அழகுவாய்ந்த மூன்றிராக்கதப்பெண்களை அவர்பணிவிடையேற்றுச் செய்யவிடுத்தான். அவ்வரக்கப்பெண்கள் செய்யும் பணிவிடைக்கு வியந்து அவர்களிட்டப்படி மூவரையுங்கூடி அவருள் மூத்தவளாகிய புற்கலையென்பவளுக்கு தசக்கிரீவன் கும்பகர்ண னென்பாரும்; மாலினியென்பவளுக்கு விபீஷணனும், வாகையென்பவளுக்கு மூக்காசுரனும் சூர்ப்பநகையு முதித்தார்கள். இவ்வாறுதித்த புதல்வர்நால்வரும் பிரமனைநோக்கி ஆயிரவருடம் தவத்திருந்தும் பிரமன் பிரசன்ன மாகாமையைக்கண்டு தசக்கிரீவன் தன் சிரத்திலொன்றை அறுத்தக்கினியி லாகுதிகொடுத்தும் தன்னெண்ண மீடேறாமல் ஆயிரவருடத்துக்கொருதரம் ஒவ்வொரு சிரசாக ஒன்பது சிரசையும் அறுத்து ஓமத்தீயிலிட்டுப் பத்தாவது சிரசையு மறுக்க வெத்தனிக்குஞ் சமையத்தில் தாமரைத்தவிசில் வீற்றிருக்கும் பிரமன் அவன்முன் தோன்றி அறுப்புண்ட சிரங்களொன்பதையும் முளைக்கச்செய்து அவனை நோக்கி நீ செய்யு மருந்தவத்துக் கிரங்கினோம், உன் சிரம் வெட்டுண்ணுந்தோறும் மீண்டுமீண்டு முளைக்கக்கடவது, உனக்காயுளோ மூன்றரைக்கோடி வருடம் தந்தோம் தேவர் முதலிய யாவராலும் பயமில்லாமல் வாழக்கடவை யென்று வரமளித்தான். இதைக்கண்ட கும்பகர்ணன் பிரமன் தாளில் வீழ்ந்து, வேதமுதல்வனே! விதிக்குந்தொழிலில் வல்ல விண்ணவனே யென்று தொழுது நித்தியதத்துவனா யிருக்க வேண்டு

மென்று கேட்பதற்குப்பதிலாக "நித்திரை தத்துவனுகவேண்டும்" என்று கேட்க அவ்வாறே தந்தோமென்றுன். விபீஷணனே வெனின் என்று மிறவா வரமருளவேண்டுமென்று கேட்க, அவ்வாறே தந்தோமென்று அந்தரத்தியான மாய் மறைந்துசென்றுன். இது கிடக்க;

இவ்வாறு அவர்கள் வரம்பெற்றபின் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து தம் மரண்மனைவந்து சேர்ந்தனர். அவருள் தசக்கிரீவனென்னும் இராவணன் இலங்காபுரியை யாண்டிருந்த குபேரன்மேலெதிர்ந்து அவனைப்பலவாறு துன் பஞ்செய்து அந்நாட்டைவிட் டகற்றி அதைத் தன்னுளுகைக்குட் படுத்திக் கொண்டு வண்டோதரியை மணந்து தேவர்முதலியயாவரையும் ஓர் துரசென மதித்து இடுக்கணைசெய்துவந்தான். இவனிவ்வாறு தேவர்களுக் கிடுக்கண் செய்து வருவதை யறிந்த குபேரன் ஓர் வீரனையழைத்து நீ இராவணனிடஞ் சென்று கண்டு தேவர்களை வீணே துன்பத்திற் படுத்துவது நன்னடக்கை யன்று, அதனுல் துன்பமும் பழியுமேசாருமென்று அவனுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்திவாவென்று சில நீதிகளையு மெடுத்தோதும்படி யறிவித் தனுப்பி ஞன். அவ்வீரனே நாமின்று இராவணனுல் மாண்டேபோவ மென்று அவ்வி டம்விட் டகன்று இலங்கையை நோக்கிச் சென்று இராவணனைக்கண்டுவணங் கித் தான் குபேரனனுப்பிய தூதனென் றறிவித்து அவன் சொல்லியனுப் பியதையு மெடுத்துக்கூறினுன். அவ்வா றவன்கூறியதைக் கேட்ட கரிய மேகம்போன்ற தேகத்தையுடைய இராவணன் கனன்றெழுந்து நீயோ சற்று மாற்றலென்ப தில்லாத குபேர னனுப்பப்பட்ட தூதனென்று முன்னமே நீ எனக்கறிவித்தமையால் மீண்டுமுன்னுட்டை யடைய உனக்குயிர்ப்பிச்சை தந்தேன், முன்னமே நீ தூதனென்னுஞ் செய்தியை யறிவியாதிருப்பையே யானுல் இறந்தேபோய்விடுவை; இனி யென்முன்னிற்காம லுன்னுயிர் பிழைக் கும்வகையைத் தேடிக்கொள்ளென்று சினந்து கண்களிற் றீயெழ நின்றுன். தூதவனே யாம் இன்னும் பிழைத்தோமில்லையென்று மெல்ல அவ்விடம் விட்டுப்பெயர்ந்து குபேரனிடஞ் சென்று நிகழ்ந்தவற்றை யெடுத்துக்கூறி ஞன். இதைக்கேட்ட குபேரன் இனி இராவணன் நம்மேற் போர்க்கெழுவ னென்றுன்னி, சேனைத்தலைவர்களை யழைத்துப் பத்துத்தலையையுடைய இரா வணன் நம்மீது போர்க்கெழுவானே, நீங்கள் அதற்குத்தக்க ஜாக்கிரதையோ டிருங்களென்று கட்டளையிட்டான். இது நிற்க; இராவணனே நம்மைச்சற்று மதியாமல் அற்பவாழ்வையுடைய தேவர்களுக்காகப் பரிந்து நம்மிடந் தூது வனையனுப்பித் தேவர்களைத் துன்பஞ் செய்வதனுல் நமக்குத் துன்பமே வரு மென்று அஞ்சாநெஞ்சங்கொண் டறிவிக்கச்செய்த அவ்வற்ப வலியையுடைய குபேரனை முடிக்கவே வேண்டுமென்று சினங்கொண்டு திரண்ட சேனைகளு டன் அளகையை நோக்கிச்சென்று குபேரனைக்கண் டெதிர்த்து அவன் சேனை களை யெல்லாம் திசைதோறும் ஓட்டெடுக்க வடித்துத் துறத்திவிட்டுக் குபே ரனையும் துன்பத்திற்குள்ளாக்கினுன். குபேரனே அவனுற்றலைக்கண் டஞ்சி முதுகிட்டோடினுன். அதைக்கண்ட இராவணன் சங்கம்பூரித் தாரவாரித்து

அவனுயுதசாலையிற் புகுந்து தனக்கு வேண்டு மாயுதங்களைக் கைக்கொண்டு அங்கிருந்த புட்பகவிமானத்தேறித் திரிவிதவுலகத்துஞ் சென்று தனக்கொரு வரும் பகையென்பதில்லாமல் வாழ்ந்து வருநாளில் ஓர்நாள் புட்பகவிமானத் தேறிஆகாயமார்க்கமாகச்செலுத்திச் சற்றும்பயமென்பதேயில்லாமல் வருகை யில் தானூர்ந்துவந்த விமானம் அசைவற நிற்கக்கண்டு இது வென்னபுதுமை யென்று நான்குதிக்கிலு நோக்குகையில் நந்தியம்பெருமான் அவன்முன் தோன்றி இவ்வாறு கூறலாயினன்.

இதுவோ சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகம் ஆகிய ஐந் தொழிலையும் புரிந்துவரும் கற்றையஞ் சடையோனாகிய கண்ணுதற்கடவு ளுறையும் கயிலைமலையேயாகும். நீயு மிதையறியாமலே வந்துவிட்டனை உன் விமானம் இவ்வழியே செல்லாது வீண்யோசனை செய்யாமல் வந்தவழியே நோக்கிச்செல்லென்று கூறினன். அதைக்கேட்ட இராவணன் சினமேற்கொ ண்டு திரிவிதவுலகத்துள்ளோர் என்னாணையைக்கடந்தேகடவாரென்றால் சிறிய குரங்குமுகங்கொண்ட நீதானோசற்று மஞ்சாநெஞ்சம்படைத் தென்முன்னின் றுசற்று மென்னாற்றலை யறியாமலே இவ்வாறு துணிந்துகூறவந்தனை நீயார்? உன்பெயரென்னை? யென் றுருத்துக்கேட்டான். அதற்கு முதற்றலைவாயிற் காவல்கொண்டொழுகும் நந்தியம்பெருமான் புன்னகைபுரிந்து, அட்ாகயவ னே! சற்றுமறியாமலே உன்வாயாற்கூறிய அக்குரங்கினத்தாலே உன் திருவும் படைத்துணையும்நாடும் நீயும் அழியக்கடவையென்று சாபங்கூறிச்சென்றான். இராவணனோ விமானம்விட் டிழிந்து இக்கயிலைமலை நமக்கோர் பெரிதாமோ வென்று தன்னுட்கருதி அக்கயிலைமலைக் கருகிற்சென்று புன்னகைசெய்து இம் மலையைவேருடன் களைந்தெறிவேனென்று தன்னைப்பற்ற கரத்தாற் றீண்டி யசைத்தான். இவன் செருக்குற்றிருப்பதை யறிந்த சிவபெருமான் தன் இடக் காற்பெருவிரலால் அழுத்தவே கல்லினுட்டேரைபோல் அக்கிரியின்கீழ் அகப் பட்டான்; எல்லாவுயிர்களையு மொரேதன்மைத்தாய்க் காக்கும் இறைவனுக் குத் துன்பஞ்செய்யவெண்ணினால் அவ்வஞ்சநெஞ்சே துன்பத்திற்குள்ளாக்கு மன்றோ! இவ்வா றிராவணன் நெடுநாள் பகலோனால் வருந்தும் புழுப்போலே அக் கயிலைமலையின்கீழ்ச் சிக்கி ஆறாத் துயர்கொண் டரற்றி யழுதுகொண் டிருந்தான். மெய்யறிவுடைய நாரதமுனிவன் எண்குணமுடைய நவந்தரு பேதத்து நாதனைநாடி கயிலைமலைக்கெழுந்தருளிப்பெருமானைத்துதித்து ஆனந் தக்கண்ணீர் சொரிந்து நின்று மலையைப் பிரதக்கணமாகச் சுற்றிவரும்போது இராவணன் அம்முனிவனைக்கண்டு கூவியழைத்து முனிவர்பெருமானே எனக் குற்ற இம்மிடியினின்றும் காத்தருளவேண்டுமென்று வேண்டினன். அதற் கம்முனிவனவன்மேற்கருணைகூர்ந்து "ஆய்ந்தாய்ந்துகொள்ளாதான் கேண்மை கடைமுறை - தான்சாந் துயரந் தரும்." என்பதேபோல் நீ சற்று மிறைவன் பெருமிதம்பெற்ற திறலை உன்னறிவிலா மனத்தாற் கருதாமலே உன்னினு மிக் கார் திரிவித வுலகத்து மில்லையென்றே செருக்குற்றமையா லன்றோ இக்கதிக் குள்ளாயினை. ஓராயிர மிருட்கூட்டமொன்று சேர்ந்திருப்பதையொத்த தேக

த்தையுடைய இராவணனே! நீ பிழைக்கவேண்டினால் சாமவேதத்தால் இறைவனை மிக்கபத்தியோடு துதிப்பையேயானால் விரைவில் நீ பிழைக்கும வகையை இறைவ னருள்செய்வாரென் றருளிச்செய்தேகினான். இராவணன் அம்மொழியை யுபதேசமாகக்கொண்டு தன் சிரத்திலொன்றும் கரத்திலொன்றுந் தகர்த்தெடுத்து அதை யோர்வீணையாகச்செய்து இறைவனை மனத்திருத்தி ஐம்புலனையும் வேறுவழி செல்லவொட்டாமல் நிறுத்தி வீணையைமீட்டி சாமவேதத்தை சுரபேதத்தொடும் பாடினான். அவ்வினிய ஓசையால் குயிலினங்கள் செவிகொடுத்துக்கேட்டு இரைதேடச்செல்லாமல் அயர்ந்து நித்திரை செய்தன. கடலு மொலியாதிருந்தன, ஓரறிவுள்ள மரங்கள் முதலிய யாவும் அவ்வினிய ஓசையைக்கேட்டு இருந்தவிடத் தசைவற் றிருந்தனவென்றால் எண்குணமுடைய இறைவன் அவ்வோசைக் கிரங்கினனென்பதுமோர் வியப்பாமோ? இவ்வா றவன் மிக்கபத்தியோடு பாடுமோசையை இறைவன் நெடுநேரஞ் செவிகொடுத்துக் கேட்டு மிக்க பேரன்புடனே அவ்விராவணன்முன் தோன்றி உனக்கு யாதுவரம்வேண்டும். நீ இசைக்கும் பாடல் என்மனத்தைக் களிக்கச்செய்தது என்றான். அவ்வாறு தனக்கு தரிசனமாகத் தோன்றிய இறைவனைப் பலவாறு துதித்து வேண்டும் வரங்கள் யாவுங் குறைவில்லாமற் பெற்று இலங்கையை நோக்கிச் சென்றான்.

இவ்வாறு இறைவனிடத்தில் வரம்பெற்றபின் தனக்கெதிரொருவருமில்லாமல் நெடுநாளரசுபுரிந்து தன்னாற்றலை யெண்ணி யெண்ணி மகிழ்ந்து பான்மதியணிந்தபரமனிடத்தும் வேதனிடத்தும் பெற்ற வரத்தையும் நினைத்து உவகைகொண்டு உடல்பூரித்து திக்குவிசயஞ்செய்து யாவரும் நமக்குப்பகுதி கட்டும்படி செய்துகொள்ளவேண்டுமென்று கருதி கரன் தூஷணன் திரிசிரன் என்பவர்களைச் சனஸ்தானத்தைப் பாதுகாக்கும்படி யாஞ்ஞைசெய்து, தம்பிமார்களையும் பிள்ளைகளையும் இலங்கையில்விட்டு திரண்ட சேனைவீரர்களுடன் புட்பகவிமானத்தேறி பாஞ்சாலம், நேபாளம், பப்பரம், பாண்டியம், புலிந்தம், மராடம், மலையாளமுதலிய நாட்டிற்குச்சென்று யாவரையுங் கீழ்ப்படுத்தினான். இது நிற்க; தேவர்கள் இவன் செய்யும் கொடுமையைக் கண்டு இவனை நாணப்படுத்தவேண்டுமென்று கருதி இராவணனில்லாச்சமயத்தில் தேவர்காள் யாவருமொருங்கு சேர்ந்து இலங்கைக்குட்சென்று மாடமாளிகைகளை யழித்து அரக்கரின் மனைவிமாரையும் சிறைபிடித்து தேவலோகம்போய்ச் சேர்ந்தனர். திக்குவிஜயத்துக்குச் சென்ற மிக்க வலியமைந்த இராவணன் எல்லாவரசரையும் வெற்றிகொண்டு அவரவர்கள் கொடுக்கப்பெற்ற பொன்காறும் நவரத்தினங்களும் பெருமிதமாகப்பெற்று அவையாவும் கரி பரி முதலிய மிருகங்களின்மே லேற்றிக்கொண்டு இலங்காபுரிவந்து சேர்ந்தான். அவனைக் கண்ட விபீஷணன் முதலிய தம்பிமார்கள் அண்ணா! தேவரீர் திக்குவிஜயஞ் செய்யச்சென்றபின் யாமும் தவத்துக்குச்சென்றிருந்தோம். அச்சமயம்பார்த்திருந்து போர்செய்யவறியாத அற்பவலியையுடைய தேவர்கள் நம்மைச் சற்று மதியாமலே இங்குவந்து நமதுநாட்டை யழித்துச் சென்றனரே! அம்மட்டே

யன்றே! நமது பெண்களையும் அஞ்சாநெஞ்சங்கொண்டு கைப்பற்றிச் சென்றனரோ! இனி அவர் உன்கணைக்குத்தப்பி யுயிரும் பிழைப்பரோ! இக்கணமே அத்தேவர்களை முடித்து அவர்கள் மனைவிமார்களையும் சிறைபிடித்தேவைக்க வேண்டும்என்றான்.இராவணனே அதைக்கேட்டுச் சகியானாய் தன்னைப்பற்ற புயங்குலுங்க நகைத்து,தமக்குவருங்கேட்டையறியாமலே பெண்களைச் சிறைபற்றிப்போன அத்தேவர்களும் பெண்டன்மையை யொத்தவர்களென்றே யெண்ணவேண்டும். இனி நானு மொருவீரனேபோல் அத்தேவர்களை முடிக்காமல் இவ்விலங்கையினின்று மரசுபுரிவேனோ! அவ்வாறு செய்யாவிட்டால், பத்துத்தலையும்இருபதுதோள்களும்வீணேயன்றோ? வென்றுகண்களிற்றீயெழ நோக்கி அப்போதே ஆயுதசாலையிற்சென்று வீரபட்டந்தரித்துஅம்பறாத்தூணியைமுதுகிற்றாங்கி கும்பகர்ணனை யழைத்துக்கொண்டு ஆகாயத்திற் செல்லுந் தேரூர்ந்து ஓர்கணப்போதில் தேவலோகத்தை யடைந்தான். இவ்வாறவன் வரவைக்கண்ட தேவர்களிற் சிலர் நமக்கோ பரமசிவனளித்த ஆயுள் செல்லு மளவும் நாமுயிர்வாழ்வ தரிதேயாகும். இனியோ ரிமையோரையில் இவ்வுலகைதீயிட் டெரித்தே விடுவனே! இவன்பெற்ற வரம் சிறிதல்லவே? என்பர். சிலர் இவ்விராவணனாற்றலை ஆயிர நாவுடைய ஆதிசேடனும் இவ்வளவென்று அளவிட்டுக் கூறவறியானென்றால் மற்றியாவரோ இவ னாற்றலைக் கூறவல்லார். இவனொருவனே திரிவிதவுலகத்தையு மழிப்பனென்றால் இவனுக்குத் துணையாகக் கும்பகர்ணனும் வந்திருக்கின்றானே, அவனுஞ் சாமானிய னல்லவே, இன்றே இவ்வுலக மழிந்தே போய்விடுமே,இனி நம்முயிர்பிழைக்கும் வகையைத்தேடிக்கொள்ளவேவேண்டுமென்று யோசித்திருக்கையில் கற்பகாலத்தில் தனியேநின்றரற்றும் உருத்திரனேபோல் ஆரவாரித்துச் சங்கம் பூரித்தான், அதனால் திக்கயங்களுமுள்ளநடுங்கித்திசைதொறு மோட்டெடுத்தன. தேவர்களிற் சிலர் மூர்ச்சையடைந்து வேரற்றபனைபோல்வீழ்ந்தனர். சிலர் ஓட்டெடுக்கவஞ்சிச் சித்திரப் பாவைபோல் நின்றனர். இவர்களிவ்வா றிருக்கையில் இராவணன் தேவர்களிருக்குமிடத்திற்கு விமானத்தைச்செலுத்தி வலிதிலவர்கள்மேற்சரந்தொடுத்துச் சிலரை மாய்த்தான், சிங்கத்தைக்கண் டஞ்சிநிற்கும் யானையேபோல் நின்றிருக்குந் தேவர்களிற்சிலரைப்பிடித்துவடத்தாற் பிணித்துக்கட்டினான், சிலர் உயிர்பிழைக்கும் வகையைத்தேடி யோடி மறைந்தனர். இராவணனே தன்னெதிர்நின்று போர்புரிவாரைக் காணானாய் வெற்றிமுரசறைந்து தேவர்கள் சிறைபிடித்துச்சென்ற பெண்களையு மழைத்துக்கொண்டு வடத்தாற் பிணித்துக்கட்டியதேவர்களையுந் தன்தேர்க்காலிற் கட்டிக்கொண்டு ஆகாயமார்க்கமாகத் தேரைச்செலுத்தித் தன்னாடுபோய்ச் சேர்ந்தான். இது கிடக்க;

இவ்வாறு இராவணன் தன் நகராகிய இலங்கையை யடைந்தபின் இவன் கையினின்றும் தப்பித் தோடிப்பிழைத்த தேவர்கள் ஒருங்குசேர்ந்து வேதனிடத்திற் சென்று தமக்கு நேர்ந்த துன்பத்தை யறிவித்து வருந்தி நின்றனர், பிரமனே தேவர்களை நோக்கி இவ்வாறு சொல்வானாயினான். எம்மிடத்தில்

வரத்தைப்பெற்ற அவ்விராவணனால் யாமும் துன்பத்தையே யனுபவிக்கின்றோம்! அவனோ சற்றுங் கருணையென்ப தில்லாமல் யாவரையும் துன்பத்திற் படுத்துவதை யாம் முன்னமே யறிவோம், அவ்வரக்கன் இன்னுஞ் சிறிது நாளில் தென்றிசையிற் குடிபுகப்போகின்றான், நீர் சற்றும் கவலவே வேண்டாம். க்ஷீராப்தி நாயகனாகிய திருமால் தயரதமகா ராசனுக்குப் புத்திரராகத் திருவவதாரஞ் செய்திருக்கின்றனர். தேவர்களிற் சிலர் நந்திதேவர் சாபத்தால் குரக்கினங்களாகவும், மந்தரை யென்பவள் கூனி யென்னும் பெயர் கொண்டும் பிறந்திருக்கின்றார்கள், அக்கூனிபோதனையால் ஸ்ரீராமன் நாயகியுடனே காட்டிற்சென்று சிறிதுநாள் காட்டி லுறைவன், அந்நாளில் இராவணனும் அவன் சுற்றத்தாரும் ஸ்ரீராமனால் அழிந்தேபோவர், அதை நீரும் கண்டு களிப்பீரென்று அவர்க்குப் பல இன்சொற்கூறி விடைகொடுத்தனுப்பினான். தேவர்களோ பிரமன்கூறிய மொழியைக்கேட்டு ஆநந்த பரவசங்கொண்டு இராவணன் வினைவி லிறக்கும்படி இறைவனை மனத்தெண்ணித் துதித்துத் தேவலோகம்போய்ச் சேர்ந்தார்கள். பின்பு நடந்தவற்றையுங் கூறுகின்றேனென்று சொல்லத்தொடங்கினர்.

இராமர் படையெடுத்த சருக்கம்.

அறமே யுருக்கொண்ட யுதிட்டிரரே! ஸ்ரீராமபிரானும் சானகியாரும் இளையபெருமாளும் காட்டிலுறையு மந்நாளில், இராவணன் தங்கையாகிய சூர்ப்பநகை காரணமில்லாமலே ஸ்ரீராமபிரானிருக்குங் கானிற்சென்று அப்பெருமானது பரந்த மார்பைபுந் திரண்டு நீண்ட மந்தரமலையேபோன்ற புயத்தையும் தாமரை யிதழ்போன்ற அருட்டிருக்கண்ணையும் சூற்கொண்ட மேகத்தின் படிவம்போன்ற திருமேனியையும்கொண்டு அழகில் தனக்குத்தானே ஒப்பாக விளங்கும் ஸ்ரீராமபிரானைக்கண்டு மையல்கொண்டு இவ்வகைப் பெருமிதம் பெற்ற அழகுடையபுருடனையன்றோ நாமணையவேண்டும்; இவனன்றோ நமக்கேற்றபுருடன், இப்படிமிசை இவனழகையொத்த வழகுடையா ரிரா ரென்றே எண்ணவேண்டுமேயல்லாமல் இருப்பரென் றெண்ணுவது மதியிலார் செய்கையையேயொக்குமென்றெண்ணிச் ஸ்ரீராமனருகிற்சென்று ஐய! நீவிர் யார்? சடைமுடியும் மரவுரியுந் தரித்து தவக்கோலங்கொண் டிருப்பதே யல்லாமல் அரசரேபோல் நீண்ட வில்லைக் கையிற்றாங்கி இல்லாளோடு இவ்விராக்காலத்தில் அரக்கர்வசிக்கும் இப்பெரிய கானில் வந்து சஞ்சரிக்கக் காரணமென்ன? உண்மையையெடுத்துக் கூறவேண்டுமென்றாள். அதைக்கேட்ட இரகுநாயகனோ கரியகங்குல்போன்ற படிவத்தையும் பெருவயிற்றையும் விரூபமாகிய கண்ணையும், செம்பட்டமயிரையும் பிலத்தினு மகன்ற வாயையுமுடைய அவ்வரக்கியை நோக்கி நானோ தயரதமகாராசனுக்குப் புத்திரன் என்பேர் இராமனென்பர், என்னண்டையிலிருக்கு மிவ னெனக்குத் தம்பி, இலக்ஷ்மணனென்னும் பெயருடையான், இவள் என் மனைவி, விதேகராசனுடைய புத்திரி, சீதையென்னு நாமமுடையாள், நான் அன்னைசொற்படி இங்கு வந்தேனென்று கூறி

என்னை யாரென்று வினவிய நீயார்? உன் பெயரென்னை? நீயோ அரக்கியே போற் சிறிது நாணமென்பதில்லாமல் உன் கோரரூபத்தில் ஆடைபொருந்தா மல் இங்கு யாது கருதி வந்தனை? என்று வினவ, அமுதம்போன்ற அவ்வழகிய சொற்கேட்ட அரக்கி காமமென்னு மாழ்கடலிற்படிந்து தன் பிலத்தினு மக ன்ற வாய்திறந்து அரக்கர்க்கரசனும் திரிவித வுலகத்துந் தன்னுணையைச்செலு த்தி யாவருந் தனக்கொப்புவமை யில்லாமல் இருபது கைகளையும் பத்துத் தலைகளையுமுடைய இராவணனென்னும் பெயர்வாய்ந்த இலங்காதிபனுக்குத் தங்கை, என்பேர் சூர்ப்பநகை; யானே நினைத்தவாறு படிவமெடுக்கும் வல்ல மையுடையவள் என்று தன் வரலாற்றை முற்றுங்கூறிப் பேரழகு வாய்ந்த ஸ்ரீராமனே! நான் அரக்கியேயாயினும் உமதுபேரழகுக்கேற்ற படிவங்கொண்டு உமது மனங்களிக்குமாறு போகத்தைத் தருவேன், என்னை அரக்கியென் றெண்ணி யசட்டையேசெய்யவேண்டாம், என்குணத்திற்குஞ் செய்கைக்கும் ஒத்த கணவர் நீரே! இனி உம்மைவிட்டுப் பிறரைக்கூட விரும்பேன், இச் சீதையோ உமக்கேற்றவளே யல்லள், அவள் கோரரூபத்தை நோக்கவுங் கண்கூசுகின்றதே! உமக்குள்ள வலியில் காற்கூறுமில்லாதவள்; நானே மிக்க வலிபெற்றிருக்கின்றேன், கைந்நொடிப்போதில் உமது மனைவியாகிய இச்சீதை யையும் உமது தம்பியையும் மென்று தின்று விடுவேன், வேளைப்பழிக்கும் வில் வல்லானே! நீ காணவேண்டினால் இப்போதே செய்து காட்டுகின்றேன் என்று தன்னாற்றல்முழுது மெடுத்துப் பேசினாள். இது நிற்க;

யாக்கையின்மேற் சிறிதும் இரக்கமில்லாமல் மனிதர்களையு மிருகங்க ளையு முண் டுயிர்வாழும் அரக்கியாகிய சூர்ப்பநகை இவ்வாறு கூறக்கேட்ட ஸ்ரீராமபிரான் தாமரைமலர்போன்ற தன்னருட்கண்ணைச் சானகியார்மேற்செ லுத்திப் புன்னகைகொண்டு அரக்கியை நோக்கி இவ்வாறு சொல்லலாயினர். பெண்மணியே! நீ கூறிய யாவு முண்மையே, உன் னழகிற் கொருவரையும் ஒப்புரைக்கப்படாது, உனக்கு நீயேநிகர் ஆயினும் இச்சீதையை முன்னமே விவாகஞ் செய்துகொண்டமையால் இப்போ துன்னைவிரும்ப வஞ்சுகின்றேன். ஏனெனின் இப்போதுன்னை மணந்தால் எக்காலத்து மும்மிருவருக்கும் சக் களத்திப் போராட்டமுண்டாம். அதனால் துன்பத்தைப் பயப்பிக்குமே யல் லது இன்பத்தைத் தராது, ஆதலால் என்னினு மிக்க தேககாந்தியையும் வலி யையும் பெற்று நான்கு வேதங்களையு மையந் திரிபறக்கற்றுப் போரில்வல்ல வனாகிய என்தம்பியிடஞ்சென்று உன்னை வருத்துங் காமத்தை அவனைக் கூடி ஆற்றிக்கொள், அவனுன்காமவிச்சையைத் தவிர்ப்பனே என்றார். இதைக் கேட்ட சூர்ப்பநகை மனத்திற் களிகூர்ந்து இளையபெருமானை நோக்கி வன் னெஞ்சுடைய மன்மதன் ஐந்துகணைகளையும் என் மார்பே இலக்காக விடுத்து வருத்துகின்றானே, நீ அவனாற்ற லென்முன் செல்லாவண்ணம் உன்னழகிய கர த்தா லென்னைப் பற்றித்தழுவி யணைய வேண்டுகின்றேன். என்னைக் காமத்தீச் சுடாமுன்னமே யணைய வேண்டுகின்றேன், அவ்வாறு செய்யாவிட்டால் என் னுயிர் நீங்கும், அவ்வாறாயின் அப்பழி உம்மையே சாருமன்றோ! பழிசாரு

முன்னமே என்னைக் கூடினால் நன்மை யுண்டாம்; இதனினு மிக்கதோ ரின்பம் வேறொன்றில்லை, என் கண்ணுக்கினிய புருடரத்தினமே! என்று பித்துப்பிடித்தவளேபோற் பலவாறு பிதற்றி நின்றாள். இவ்வா றரக்கிசொற் கேட்ட இளையபெருமாள் இவளோ துட்டவரக்கி மனிதரைப்பக்ஷித்து இன்புற்றுவாழ்பவள் காமத்தாற் பிணிப்புண்டு வருந்துகின்றனள், இவளை அவமானஞ்செய்தே விடவேண்டுமென் றெண்ணி அடி பெண்கொடியே! யானோ அழகில் வேளையொத்தாரும் மிக்க ஆற்றலுடையாருமாகிய ஸ்ரீராமனுக்கு எக்காலுங் குற்றேவல்செய் துயிர்வாழ்வோனுமாகிய என்னை விரும்பிவந்தடைவையேயானால் அவருக்குப் பணிப்பெண்ணாகவேவேண்டும், அதனா லுனக்கோர் பெருமையு மில்லையாதலால் நீ அச்சிராமனையே விரும்பி யடைவையேயானால் உனக் கெல்லாப்பெருமையு நலனுமுண்டாம், அவருக்குக் கோரரூபமுடைய சீதையிருக்கின்றா ளென்றால் அவருக் கவள் பழய மனைவியாயும் உன்போன்ற பேரழகவள் பெற்றில்லாமையினாலும் உன்னையே இச்சித்துக் கூடுவர், உனக்குத் தக்க புருட ரவரே,நீ யவரிடஞ்சென்றே யணையென் றனுப்பிவிட்டனன்.

அரக்கியோ சிறிது நாண்மென்பதில்லாமல் இவன் கூறுவதுமேற்கத்தக்கதேயென்று சிராமனிடமணுகி ஸ்ரீராமபிரானே! உமதுமனைவியாகிய கோரரூபமுடைய இச்சீதை குணத்தினு மழகினுஞ் சிறந்தவளே யல்லள்,உமதுநற்குணத்திற்கு மழகிற்கும் நானே ஒத்தவள், இவ்வழகிலாப் பெண்ணாலன்றோ நீரென்னையணைய வஞ்சுகின்றீர், இப்போதே இவளை விழுங்கிவிடுகின்றேன், அப்படிச் செய்தாலல்லது என் காமநோய் தணியாதென்று கயல்போன்ற கண்ணையுடைய சானகியாரைத் தீக்கடைக்கோலன்ன கண்களையுடைய அரக்கி பற்றி விழுங்க வெண்ணிப் புலிபாய்வதேபோற் பாய்ந்தாள், அவ்வாறு பாய்ந்ததைக் கண்ட ஸ்ரீராமபிரான் மிக்க சினங்கொண் டவளைத் தடுத்து இளைய பெருமாளை நோக்கித் தம்பி இலக்ஷ்மணா! அறிவிலா மனத்தாரோடும் ஆய்ந்தோய்ந்து பாராமலே ஒரு காரியத்தைச் செய்யத்துணியும் பேதையரோடும் பரிகசிப்பது என்றுங் கேட்டையே பயப்பிக்கும்,நாமிவ்வரக்கியைப் பரிகசித்ததனாலன்றோ சீதைக் கிவ்வகை ஆபத்துக் கிடமுண்டாயது, நானிவளைத் தடுக்காவிட்டால் அஞ்சா நெஞ்சம்படைத்த இவ்வரக்கி கொன்றுவிட் டிருப்பாளே, இக்கொலைப்பாதகியை அங்கப்பழுதாக்கி விடென்று கோபித்துச் சொல்லி வாய்மூடுமுன்னமே இளையபெருமான் கூரியவாளைக் கரத்தில் வாங்கி நீண்ட மூக்கையும் மந்தரமலையேபோன்ற அவள் கொங்கையையும் கொய்து விடுத்தான். சூர்ப்பநகையோ தேவர்களும் முனிவர்களும் திக்கயங்களும் அட்டதிக்குப் பாலகரும் உள்ள நடுநடுங்கும்படி பெருங்குரலிட்டழுதாள், உதிரவெள்ள மெங்கும் பாயியது, அரக்கி இவ்வாறு புலம்பிக்கொண்டே அவ்விடம்விட் டகன்று எண்ணிலாவரக்கர் கூட்டங்களுடன் வீற்றிருக்குந் தன்னுடன்பிறந்தோராகிய கரனிருக்கும் சனஸ்தானத்தினையே நோக்கிச் சென்றாள்.

இவ்வாறு சூர்ப்பநகை உதிரவெள்ளம் பெருகக் கரனைக்கண்டு வெட்டிச் சாய்த்த மரமேபோற் பூமியில்வீழ்ந்து மூர்ச்சையடைந்தாள். இது நிற்க; தங்கையாகிய சூர்ப்பநகை விழுந்ததைக் கண்ட கரனே நமது தங்கைக் கிவ் வகை விபத்தைத் தேடிச்செய்தவர் யார்? இது தேவர்செய்த செய்கையே யன்று, ஒருக்கால் துணிந்து செய்திருப்பரோயாயின் இனி அத்தேவலோகம் வெறுநிலமாதற் கையமுமின்றே? திரிவித வுலகத்தும் நம்மை மதியா தவ மதித்து நிற்பா ரொருவருமின்றென்றால் இதைத் துணிந்து செய்தவர் யார்? இது நம்மாற்ற லறியாத மனிசர் செய்ததாகவே யிருக்கவேண்டும். மனிசர் செய்ததென்றால் மிக்க வலியமைந்த நமது தங்கையை இப்படிச் செய்யுந் திறனுமுண்டோ? என்று கோபித்துப் புருவவில் நெற்றிமீதேறவும் தேகமெங்கு மயிர்க்குச் செறியவும் கண்களில் தீப்பொரிசிதறவும் விழித்து நோக்கித் தங்காய்! சூர்ப்பநகையே! நீ அஞ்சற்க,சோகத்தைத்தவிர்த்தெழுந்திரு,உன்னை இவ்வகையான அங்கவீனஞ் செய்தாரை விரைவி லறிவி, அவர் தேவரோயாயினும் கற்பகநிழலில் வீற்றிருக்கு மிந்திரனேயாயினும் உருத்திரனே யாயினும் ஓரிமையோரையில் என் கைக்கணையாற் படுத்து உன் மனத்தைக் களிக்கச் செய்வேன், நீ சற்று மஞ்சாமற் சொல்லென்று கோபித்து பூமி பிளவுபடும்படி ஒருதையுதைத் துருத்திரனேபோல நின்றான். தேகமெங்கும் உதிரத்தாற் றோய்ந்துகிடக்குஞ் சூர்ப்பநகை மூர்ச்சைதெளிந் தெழுந்து தன்னருளிலாக்கண்ணினின்று மழைத்தாரைபோற் கண்ணீர் சிந்திஎன்னருமை யண்ணா! யான் பட்ட துன்பத்தை இவ்வளவென் றளவிட்டுக் கூறவும்போமோ? யானே வேடிக்கையாகவே வனத்திற்சென் றுலாவிக்கொண் டிருந்தேன், அங்கு சீராமனென்றும் இலக்ஷ்மணனென்று மிருவ ரிருக்கின்றார்கள், அவர்கள் தேககாந்தியை இத்தகையதெனச் சொல்ல வறியேன், அவர்கள் புயங்களோ மந்தரகிரியேபோல் திரண்டுநீண்டிருக்கின்றன, மிக்க வலிமையும் பெற்றிருக்கின்றார்கள், மரவுரியு மான்றோலு மணிந்திருக்கின்றனர், நல்லுண வருந்தாமலே காய் கனிகளைத்தின் றுயிர்வாழ்ந் திருக்கின்றனர், மெய்யறிவுடைய தவமுனிவரோபோல் இந்திரிய நிக்கிரகஞ் செய்தவர்கள், அறநெறி பிறழாதவர்கள், உன்னாற்றலையுஞ் சிறிது மதியாதவர்கள், அவர்களைத் தேவரென்றும் மனிசரென்றுமறிந்து கூறுதலருமையாகும்; யோசித்துப் பார்க்குமிடத்தில் கந்திருவர்களென்றே எண்ணவேண்டும், அவ்விருவருடனே சீதையென்னும் பெயர் வாய்ந்த ஓர் பெண்மணி இருக்கின்றனள்,அவளழகை ஆதிசேடனுங் கூறவரியானென்றால் யானெவ்வாறு கூறவல்லேன், அவ்வாடவரினு மெண்மடங்கதிக வழகுடைத்தாயிருக்கின்றாள். அவளோ சீராமனுக்கு மனைவியாம், அவளால் என்னை யித்துன்பத்திற் குள்ளாக்கினர். அண்ணா! சிறிது முன் னாற்றலை யறியாமலே பெண்ணென்றும் பாராமல் என்னை இத்துன்பத்திலகப்படுத்திய கொலைப்பாதகரினு மிக்க வன்னெஞ்சுபடைத்த அக்கொடியவளைக் கொன்று அவர்களுதிரத்தை யானருந்தச் செய்யவேண்டும்; இவ்வாறுசெய்யாவிட்டால் இப்போதே என்னுயிரை மாய்த்துக்கொள்வேன், என்னெண்ண மீடேறச் செய்யவேண்டும், அண்ணா! உன்னையல்லது மற்றவ ரவர்களை வெற்றியடைதல் கூடாதென்று அவன் பாதத்தில் வீழ்ந்து கோவெனக் கதறியழுதாள்,

இவ்வாறரக்கிசொற்கேட்ட கரன் கோபமூண்டு உன்னை இக்கதிக்குள்ளாக்கினவரைக் காட்டென் றெழுந்தான். அதைக்கண்ட பதினான்கு சேனா வீரர்கள் அற்பராகிய மனிசர் மீது நீர் போர்புரியச் செல்வ தழகன்று, அதை நாங்க ளேற்றுச்செய்யக் கட்டளையிடவேண்டுமென்றார்கள். கரனோ அச்சிறுவர்மேல் யான் போர்க்கெழுந்தா லுலகவரிகழ்வர், நீரே சூர்ப்பநகையுடன் சென்று அவர்களைக் கொன்று அவருதிரத்தைக் குடித்து வெற்றிகொண்டு வாருங்கோளென்று சொல்லினான். அவ்வாறு சொன்ன கரனடியில் வீழ்ந்து பணிந்து விடைபெற்று யமதூதரேபோல் சூர்ப்பநகைதங்களைத் தொடர்ந்துவர வாயுவேகத்தினு மனோவேகத்திலும் விரைந்து சென்று தாமரைமலர் போன்ற அருட்டிருக் கண்ணையுடைய ஸ்ரீராமபிரான் சானகியாருடன் வீற்றிருப்பதைக் காட்டி நின்றாள். இவ்வாறு அவளைச் சேய்மையிற் கண்ட அரக்கர் பிடியுங்கோள் கட்டுங்கோ ளடியுங்கோளென் றாரவாரித்துச் சூழ்ந்தார்கள். இதைக்கண்டஸ்ரீராமபிரான் தன் பக்கலிருக்கும் இளையபெருமாளை நோக்கித் தம்பி இலக்ஷ்மணா! நீ சீதையை ஒரு முகூர்த்தநேரம் காத்துக்கொண்டிரு நீயங்கவீனஞ் செய்தனுப்பிய அரக்கிக்குத் துணைவராய் வந்த இவ் வரக்கர்களைக் கொன்று களைகின்றேனென்று இளையபெருமாளைப் பன்னசாலையி லிருத்தி விட்டுப் பொற்கட்டுக்களா லலங்கரித்திருக்கும் நீண்ட வில்லைக் கையிலேந்திக் குனித்து அதி லம்பைத்தொடுத்து அடா! அறத்தைப் பகைத்து உயிர்களையே வருத்தித் தின்னு மரக்கர்களே! நாங்களோ தயரத மகாராசன்மைந்தர்கள், இக்காட்டில் தவஞ்செய்யு முனிவர்களை நீங்கள் துன்பப்படுத்துவதாயறிந்து உங்களை முடிக்கவே இங்கு வந்திருக்கின்றோம், நீங்க ளுயிர்பிழைக்க வேண்டின் இவ்விடம்விட் டகன்று செல்லுங்கள், உயிரிழக்க வேண்டின் என் முன்னின்று யுத்தஞ்செய்யுங்கோ ளென்றனன்.

அவ்வாறு கூறக்கேட்ட அரக்கர்கள் சினந்து நீ வாய்வாதம்பேசுவதனால் யாங்க ளஞ்சிப் போய்விடோம்! உம்முயிரைக் கவர்ந்தே செல்வோமென்று குணத்தொனிசெய்து தமது வில்லிற் சில கணைகளைத்தொடுத்து யாவரும் போற்றித்தொழுஞ் ஸ்ரீராமபிரான்மேல் விடுத்தனர். எல்லாம் வல்ல ஸ்ரீராமபிரானோவெனின் சிலகணைகளைத்தொடுத்து அவர்விட்ட கணைகளைத்தகர்த்து மீண்டுஞ் சில வெவ்விய கணைகளைவிடுத்து அவர்கள் விற்பிடித்த கரத்தையும் வெட்டிச் சாய்த்தனன். அரக்கர்க ளதற்கஞ்சாமலே பின்னுங் கணைகளைத் தொடுத்துவிடவே சக்ரவர்த்தித் திருமகனார் கோபங்கொண்டு ஓர் கணையைத் தொடுத்து அப்பதினாலரக்கருடைய தோள்களையும் வெட்டிச் சாய்த்தனன். இவ்வாறு மராமரங்கள் வேரற்று வீழ்ந்தாற்போல அரக்கர் தோளற்று வீழவும் வாள் வேல் சூல முதலிய படைகளை யெறிந்தனர். இரகுநாயகன் மற்றோர் கணையைவிட அது நெருப்பைச் சொரிந்து கொண்டு அரக்க ராகங்களைத் தொளைத் துட்சென் றுதிரத்திற்படிந்து மீண்டும் வெளியே வந்து தலையையு மறுத்தெறிந்து சென்றது, அரக்கரோ வேரற்ற பனைபோல் வீழ்ந்திறந்தனர்.

இவையாவுங் கண்ட சூர்ப்பநகை இரகுநாயகனாற்றலைக்கண்டு வியந்து அவ்விடம்விட்டகன்று கரனிடம் விரைந்துசென்று கண்டு முகத்திலறைந்து கொண்டு அண்ணா! நீ யனுப்பிய அரக்கர் பதினால்வரையும் ஒரு கணப்போதிற் கொன்றானே, அவனாற்றலை என்னொரு நாவாற் சொல்லவல்ல தல்லவே! யென்று நிகழ்ந்த யாவுங்கூறி வாய்விட்டழுதாள். இதைக்கேட்ட கரன் அற்பவலியுள்ள அவனாற்றலையோர் பொருட்டாக வெண்ணி நீ மனங்கலங்க வேண்டாம், பிரம னவனுக்கமைத்த ஆயுளுங்குன்றிய தென்று அளவிலாக் கோபங் கொண்டு தன்னைச் சூழ்ந்துள்ள அரக்கரைச் சினந்து சேனைத் தலைவனாகிய தூடணனைக் கூவியழைத்துத் தூடணா! சீராமனென்னும் பேர்படைத்த மானிடனொருவனிருக்கின்றானும், அவனுக் கிளையவனொருவ னிருக்கின்றானும், இவ்விருவரும் அஞ்சாநெஞ்சங்கொண்டு நமது சனஸ்தானத்தில் வந்து என்னுடன்பிறந்தாளாகிய சூர்ப்பநகையை அங்கப்பழுதாக்கினதுமல்லாமல் மிக்க ஆற்றலுடைய நமது வீரர் பதினால்வரையுங் கொன்றாராம், இன்றவ் வீரரைக் காணவேண்டும்,நானே றுந்தேரைக்கொண்டுவருவதன்றிச்சேனைகளையும் போர்க்கெழ ஆயத்தப்படுத்தி வெற்றிமுரசறையச்செய் யென்றான்.

கரன் அவ்வாறு சொல்லுமுன்னமே பேரிகையோசைமுழக்கினர், சேனாவீரர்களும் யானை வீரர்களும் குதிரைவீரர்களும் காலாட்களும் செல்லுகைகையில் யானைகளாரவாரித்தன, காடுநெருங்கி விண்மூடிக் கொண்டாற்போல எங்கும் படர்ந்தோங்கிய கொடிகள் எங்கள்பசிப்பிணி தீர்ந்ததென்று சந்தோஷித்தெழுந்து துள்ளியாடிக்கொண்டிருக்கிற அலகைகளேபோல ஆடின,கரிய மேனியை யுடைய அரக்கர்கள் தங்கள் கையிலுள்ள வாளோடு வாள்தேய்க்க அதில் தீப்பொறியுண்டாகிக் காடெங்குஞ் சிதறின, பல வாத்தியங்கள் முழக்கினர், ஆதிசேடனும் அச்சேனைகளின் பாரத்தைச் சுமக்க முடியாமல் தலை நெளித்துக் கொண்டனன். இவ்வாறு பல பதினாயிரஞ் சேனாவீரர்கள்செல்லத் தீயைப்போலும் விழிக்கும் கண்ணையுடையாரும் பிலத்தினு மகன்ற வாயையுடையாருமாகிய பதினான்கு சேனைத்தலைவர்கள் புறப்பட்டனர். தூஷணன் திரிசிரன் முதலிய வீரர்களும் வந்து கலந்தனர். அச்சேனாசமுத்திரத்தின் மத்தியில் கரன் சிங்கவேறுபோல் தேரூர்ந்து சென்றான். அச்சேனைகள் நெருங்கிச்செல்வதனால் மலைகள் துகளாயின, தூசியெங்கும் படர்ந்து மேகத்தை மறைத்துவிட்டது, காட்டில்வாழும் யானை புலி யாளி முதலிய மிருகங்கள் ஒன்றோடொன்று போர்செய்து விழுந்து புரண்டோடின. இவ்வகை யாடம்பரத்துடன் வருவதைக் கண்ட இரகுநாயகன் இச்சேனையோ கரன் சேனையேயாமென்றறிந்து இளையபெருமாளை நோக்கி நீ சீதையைக் காத்துக் கொண்டிரு நானவருடன் போர்செய்ய வருந்தாதை! நீயொருவனே இச்சேனையை வெற்றியடைவைஎன்பதை யானேயறிவேன், ஆயினும் நானே இன்றிவருடன் யுத்தஞ்செய்ய வெண்ணுகின்றேனென்று அம்புப்புட்டிலைக் கொண்டு வில்லையேந்திக் கவசமணிந்து நின்றனன். இளையபெருமாளோ இப்போரை யெனக்குக்கொடுத்துவிடுமென்று கேட்டால் அவராணையைக்கடந்தவராவோ மென்றெண்ணி யஞ்சி சீதையிருக்குமிடத்தி லிருந்தான்.

இங்கே, தன்னுணவுக்கு யானையைத் தேடித்திரியும் சிங்கவேறுபோல் கரனது சேனையைக் கொல்லத் தேடிக்கொண்டிருக்கும் இரகுநாயக னிரு க்குமிடத்திற்குக் கரன் தன் சேனைகளைப் பறிகொடுத்துத் தானும் மாண்டு போகவேண்டி விரைவாக வந்து சேர்ந்தான். சூர்ப்பநகையும் சானகியாருட னிருக்கும் இரகுநந்தனனைக் காட்டிச் செருக்கமைந்த மனத்தை யுடைய இச்சிராமன்தான் என்னை இத்துன்பத்திற் குள்ளாக்கினவனென்று இன்பநல னுபவிக்கும் தன் மூக்குமுலையுங் கொய்ததையெண்ணி வருந்தி இவ னுருயி ரை விரைவிற்போக்குங்கோள், என் கண்முன்னே யீட்டிகொண் டெறியுங்கள், அவனுதிரத்தை யானருந்தச் செய்யுங்களென்று கூவியோய்ந்தாள். சிராம பிரானேவெனின் சிங்கவேறுபோல் நின்று பிதற்றுமல் யுத்தஞ்செய்யுங்கள்! இன்னுஞ் சிறிதுபொழுதி லென்வல்லமையைக் காண்பீ ரென்று கோபித்து நின்றனன். கரனே என்கைக்கணுவினுஞ் சிறிய இவனை என்னேர் கைக்கணை யாலேயே கொல்வனென்று சவுரியம்பேசினன். இதற்குள் அகம்பனென்னும் பெயர்வாய்ந்த அரக்கன் நமக்குச் சகுனமோ நன்மையாகக்காணப்படவில்லை, பகலில் சூரியனைப் பரிவேடஞ் சூழ்ந்திருக்கின்றது. உன் தேர்க்கொடிமேற் காக்கைகள் போரிட்டு விழுகின்றன. உதிரமழையோ மேகங்கள் குமுறிப் பெய்கின்றன, வானத்தி லிடியிடிக்கின்றது. பகலிற்றனே மின்மினிபோல் நக்ஷத்திரங்கள் தோற்றுகின்றன, நரிகள் ஊளையிடுகின்றன, நமது வீரர்களின் இடப்புயந் துடிக்கின்றன, மரத்திலுள்ள காய்கனிகளெல்லாம் உதிர்ந்தேபோ கின்றன,இவ்வித உற்பாதங்களெல்லாம் காணப்படுகின்றமையால் யோசித்தே போர்செய்யவேண்டு மென்றான். அவ்வாறுகூறிய அகம்பனைக் கரன் உரு த்து நோக்கிமேகத்திடிபோற் கர்ச்சனைசெய்து அகம்பா! நீ என்னாற்றல்முழுது மறிந்திருந்தும் அறியாதார்போல் பேசுவதுஞ் சரியாமோ? சிறிய உருவையு டைய இவனை வெற்றியடைவது மெனக்கோர் பெரிதாமோ? இனி நீ இவ்வகை ப்புன்சொற் கூறவேண்டாமென்று சினந் தவனைத் துரத்திவிட்டான். சேனை கள் சிராமனை வளைந்துகொண்டு சக்கரம், வேல், வாள், சூலம், பிண்டிபாலம், மழு,தோமரம்,கதைமுதலியவைகளைச் சிராமன்மேலெறிந்தார்கள். கரன்தன் வில்லைக் கையிலேந்திச் சாரதியை நோக்கி கோதண்டத்தைக் கரத்திலேந்தித் தன்னந்தனியே நின்றிருக்கும் சிராமனிடத்தில் தேரை விரைவாகச் செலுத் தென்றான். சாரதியு மவ்வாறே சிராமனருகில் தேரைச் செலுத்திநின்றான். கரன் பல நக்ஷத்திரக் கூட்டங்களில் ஓர் சூரியனுதித்ததேபோல் அவ்வரக்கர் கூட்டத்தினடுவில் விளங்கினன். கர னிவ்வாறு சிராம னெதிர்சென்று தன் வில்லில் ஓராயிரங் கணைகளைத்தொடுத் திராமன்மேல்விடுத் தாரவாரித்தான். மேகம்போன்ற படிவத்தையும் நீண்ட கரத்தையுங் கால்களையும் இடிபோன்ற தொனியையுமுடைய அரக்கவெள்ளங்கள் மலைபோன்ற தேர் கரி பரி முத லியவைகளை யூர்ந்து சிராமபிரானை வளைந்துகொண்டு இருப்புத்தடி எறிமீட்டி தண்டு கோடரி சூலம் வாள் முதலிய படைகளைக் கையிலேந்தி மலைமேன் மேகங்கள் மழைத்தாரையைச் சொரிவதேபோல் ஓச்சி யெறிந்தனர். சிலர் கணைகளை மாரிபோற் பெய்தனர், சிலர் மராமரங்களை வேருடன் கெல்லி

எதிர்ந்தனர். இரகுநாயகனே யானையைத்தேடும்சிங்கம்போற் கரன்சேனையைக்
கொல்லத் தேடிக்கொண்டிருக்க, தன்சேனையைத் தானே பறிகொடுத்துத்
தானுமாளக் கரனேவிரைவாக சிராமனிருக்கும் பன்னசாலையைவந்தடைந்
தான். சூர்ப்பநகையும் சானகியாருடனிருக்கும் இரகுநந்தனனைக்காட்டியே
இச்செருக்குற்ற இவ்விராமன்தான் என்னைத் துன்பப்படுத்தினவன், இவனுயி
ரைவிரைவிற் கொன்றுவிடென்றாள்.சிராமன் சிங்கவேறுபோலநின்று பின்
வாங்காமல் யுத்தஞ்செய்யுங்கள், இன்னுஞ் சிறிதுபொழுதில் என்வல்லமையை
ப்பாருமென்றுகோபித்தான், கரனே மசகத்தையொத்த இவனை யானொருவ
னேகொல்வேனென்றான். இதற்குள் அப்படையிலொருவனாகிய அகம்பன் நம
க்குச் சகுனமோ நன்மையாகக் காணப்படவில்லை. பகலிலேயே ‘ஊர்கோள்
வட்டமிடுகின்றது.’ உன்தேர்க்கொடிமீது காக்கைகள் போரிட்டு விழுகின்
றன, உதிரமழையை மேகங்கள் குமுறிப்பெய்கின்றன. வானத்திலிடியிடிக்கின்
றது, பகலிற்றானே மின்மினிபோல் நக்ஷத்திரங்கள் தோன்றுகின்றன, நரிகள்
ஊளையிடுகின்றன, நமது வீரர்களின் இடப்புயந்துடிக்கின்றது, பூமியசைகின்
றது, மரத்திலுள்ள காய்கனிகளெல்லாம் உதிர்ந்துபோகின்றன. இவ்வகை
உற்பாதங்கள் காணப்படுகின்றமையால் யோசித்தே போர்செய்யவேண்டும்
என்றான். அவ்வாறுகூறிய அகம்பனைக் கரன் உருத்துமேகத்திடிபோற் கர்ச்
சித்து அகம்பா! நீயென்னாற்றல் முழுதுமறிந்திருந்தும் அறியாதார்போற்
பேசுவதுஞ் சரியாமோ? சிறிய உருவையுடைய இவனை வெற்றியடைவது
மெனக்கோர் பொருட்டோ? இனி நீ இவ்வகைப்புன்சொற் கூறவேண்டா
மென் றுருத்துச்சினந்து துரத்திவிட்டான். சேனைகள் சிராமனைவளைந்து
கொண்டு சக்கரம், வேல், வாள், சூலம், பிண்டிபாலம், மழு, தோமரம், கதை
முதலியவைகளை இடைவிடாம லெறிந்தார்கள். கரன் வில்லைக்கையிலேந்திச்
சாரதியை நோக்கி கோதண்டங்கையிலேந்தி தனியே நிற்கும் சிராமனிடத்தில்
என் தேரை விரைவாகச்செலுத்தென்றான். சாரதியு மவ்வாறே சிராமனருகில்
தேரைச்செலுத்தினான். கரன் பலநக்ஷத்திரக்கூட்டங்களில் ஓர்சூரியனுதித்த
தேபோல் விளங்கித் தன்வில்லில் ஓராயிரங்கணைகளைத்தொடுத்துத் தன்னந்த
னியேநிற்கும் சிராமபிரான்மேல் விடுத்தான்.கரியதாகிய மேகம்போன்ற வடிவ
த்தையும் இடிபோன்ற குரலையுமுடைய அரக்கர்வெள்ளங்கள் மலைபோன்
றதேர் கரி பரி முதலியவைகளையூர்ந்து சிராமபிரானை வளைந்துகொண்டு இருப்
புத்தடி எறியீட்டி மழு கோடரி சூலம் வாள்முதலிய படைகளைக்கையிலேந்தி
மலையின்மேல் மேகம்மழைத்தாரையைச் சிந்துவதேபோல் இடைவிடாமல்
எறிந்தார்கள். சிலர் கணைகளைச்சொரிந்து போர்செய்தார்கள். சிலர் மரா
மரங்களை வேருடன் கல்லியெறிந்தார்கள். இவ்வாறாக அரக்கர் நாற்புறமும்
சூழ்ந்துகொண்டு போர்புரிய பூதகணங்களாற்சூழப்பட்ட சிவபெருமான்போல்
அவ்வரக்கர்கூட்டத்தின் நடுவிலிருக்கும் இரகுநந்தனன் கோபநகைநகைத்துக்
கடலானது ஆற்றுவெள்ளங்களை யேற்றுத்தன்னுள்ளடக்கிக்கொள்வதேபோல்
வில்லைவளைத்து அதிற்சில சரங்களைத்தொடுத்துவிட்டு அரக்கர்விட்ட கணைக
ளத்தனையும் அக்கணைக்குள் வயப்படச்செய்து தகர்த்து மாலைக்காலத்தில்

மேகங்களால் மறைக்கப்படும் சூரியனேபோல்விளங்கி மீண்டும் வில்லைக்குண்டலம்போல் வளைத்து யாவராலும் தகையப்படாதனவாய்க் காலதண்டம் போன்று கழுகிறகுகள்கட்டியிருக்கும் பலவகையம்புகளைத் தொடுத்துவிடுத்தான். அது ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரங்களாகவெழுந்து மான்கூட்டத்திற்பாய்ந்த புலியேபோற்சென்று தேர் கரி பரிமுதலியவைகளை யழித்து வீரருடைய துவசங்களையும் கவசங்களையும்போக்கித் தோள்வளைகளணிந்து ஆயுதம்பிடித்தகைகளையும் யானைத்துதிக்கைபோன்ற தொடைகளையும் கிரீட குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்டசிரங்களையும் மார்பையும்பிளந்து அவர்களாருயிரையுங் குடித்துச்சென்றது. இவ்வாறிராமன் விளையாட்டாகவேவிட்ட கணைபால் எண்ணிலாத சேனைகள்மடிந்து உதிரவெள்ளமெங்கும் பரவுவதைக்கண்ட அரக்கர் வெகுண்டு வெவ்வியகணைகளை மாரிபோற்பொழிந்து ஆரவாரித்தனர். சிராமனே ஐந்து கணைகளைத்தொடுத்து அவர்விட்ட கணைகளை யெங்குமில்லாமற்செய்து மீண்டுஞ் சிலகணைகளைத்தொடுத்து அரக்கர் சிரமே இலக்காக விடுத்தான். அக்கணையோ ஊழிகாலத்தி விடிக்குமிடிபோ லிடித்து சேனைகளிற்பாய்ந்து இரண்டாயிரமரக்கர் சிரங்களைப் பிளந்துசென்றன. அரக்கர் கணையின்வேகத்தைக்கண்டஞ்சி முதுகுகாட்டி யோட்டெடுத்துக் கரனிடஞ்சென்று இனியாங்கள் பிழைப்பதே யருமைபோலும், எங்களை அவ்விராமன் போர்க்குச்செல்லவிடாதிருக்கவேண்டுமென்றுவேண்டிக்கொண்டனர்.

இவ்வாறு காற்றிலெழுந்தூசியேபோல் அரக்கர் திசைதொறுமோட்டெடுக்கக்கண்ட தூஷணன் அவர்கட்குச் சமாதான மொழிகளைச்சொல்லி யாவரையுமழைத்துக்கொண்டு, தன்னந்தனியே நின்றிருக்குஞ் சிராமன்மேல் யாவரு மொரோகாலத்திற் கற்பகாலத்திற்பொழியு மேகம்போல் வில்லிற்சரங்களைத்தொடுத்துப் பொழிந்தார்கள். அவ்வாறரக்கர்விட்ட கணையிலொன்றேனும் தன்மேற்படாமல் ஆயிரமாயிரமாகச் சரங்களைவிட்டுத் தகர்த்து மீண்டுமோர்கந்திருவாஸ்திரத்தைப் பிரயோகித்தான். அக்கணை தாமேமுடியவேண்டிவந்த அரக்கரத்தனைபேரையும் முடிப்பதேபோல் இடிமின்னுடன் விடத்தைச் சொரிந்துகொண்டு அரக்கன் சேனையிற்பாய்ந்தது, அதனால் சிலர் தாமணிந்திருந்த கிரீடகுண்டலங்களுடன் தலையற்று வீழ்ந்தனர், சிலர் தோள்வளைகளோடு புயமற்றனர், சிலர் தொடைமுறிந்து வீழ்ந்தனர், சிலர் பற்களற்றனர், சிலர் பரந்த ஆகம்பிளந்து செந்நீரொழுக வீழ்ந்தனர், குதிரைகள் இருதுண்டமாக வீழ்ந்திறந்தன, போரில் யுத்தஞ்செய்யும் யானைகள் வீறிட்டு வீழ்ந்தன, சில துதிக்கையற்றன, சில மத்தகம்பிளந்தன, தேர்கள் பொடிப்பொடியாயின, துவசபதாகங்களும் திசைதொறு மிறைந்துகிடந்தன, இவ்வாறு நன்னெறியுடையானும் மிக்க ஆற்றலுடையானும், அண்டினபேரையாதரிக்கு மியற்கையுடையானுமாகிய இரகுநந்தனன்விட்ட ஓர்கணையால் எண்ணிலாதவரக்கர்மாண்டனர். இதைக்கண்ட தூஷணன் பொருமற் கோபங்கொண்டு திரிவிதவுலகத்தையும் ஓர்கணப்போதி லழிக்குமாற்றலுடையானும், உயிர்களையே வருத்தித்தின்று யாவர்க்கு மெந்நாளும் கொடுமைகளைச்

செய்யு மியற்கையுடையாரும், நீண்ட கரமும் அகன்ற மார்பும் மந்தரமலை போன்ற புயமும் கண்டவர் மனங்கலங்கும் வடிவமுமுடையாராகிய ஐயாயிர வரக்கரைத் தேவர்கள்போற்றுஞ்சிராமபிரான்மேலேவினன். அவர்களவனாணை யின்படியே தத்தங் கைகளிற்படைகளையேந்தித் தேரொன்றுமில்லாமற் பாத சாரியாய்த் தன்னந்தனியேநின்றிருக்கும் இரகுநந்தனன்முன் உயிர்கொண்டே குங்காவலாளரேபோல் நின்று படைகளையோச்சி எறிந்தனர். சிராமபிரானோ அவராற்றலை நொடிப்போதிலழித்துத் தமது வல்லமையைக்காட்ட வேண்டு மென்று கருதிச் சினந்து நிசாசரப்புழுக்களே! இக்கணையின் தன்மையைப் பாருங்கோளென்று தன் நீண்ட வில்லில் ஐந்துகணைகளைத்தொடுத்து விடுத் தான், அதுஅவர்கள்விடுத்தபடைகளைப்பொடிப்பொடியாக்கிஅவர்தேகங்களை யும்பிளந்தெறிந்தன. சிலர் மராமரங்களை வேருடன்பற்றிப்பிடுங்கி எறிந்தனர். அவைகளையும் ஓர்கணையாற்றகர்த்து மீண்டு மோரைந்துகணைகளைத் தொடு த்து அரக்கர்சிரமே இலக்காகவிடுத்தான். அவை வில்லினின்றும் வெளிப்பட்டு அண்டமுகடதிரும்படி இரைந்துகொண்டுவந்து அரக்கர் சிரங்களையும் தடி ந்து சிலர் தேர்களையுமழித்துச்சென்றன. எங்கேநோக்கினும் பிணக்காடாகவே காணப்பட்டது. உதிரவெள்ளம் ஆழ்கடல்போல் இரைந்து பெருகிற்று, இவ்வா றரக்கர் மடிவதைக்கண்ட தூஷணன் அஞ்சாநெஞ்சங்கொண்டு தேரைச் சிரா மன்முன் செலுத்திக் கணைகளை மாரிபோற் றொடுத்துவிட்டான். அப்படி விட்டஅவ்வெவ்வியகணைகள் சிராமன்மேற்பட்டுக்கூர்மழுங்கிவிழுந்தன. தாச ரதியோ தான் உருத்திரனேபோற்கோபித்து ஓர்வாளையெடுத்துதூஷணன்மே லெறிந்து அவன்பிடித்திருந்த வில்லினாணைக்கொய்து,நான்குகணையால்நான்கு குதிரைகளைவீழ்த்தி, ஓரர்த்த சந்திரபாணத்தாற் சாரதியின் தலையைவெட்டி, மூன்றுகணையால் தூஷணனுடம்பையும் பிளந்து மற்றோர்கணையால் அவ னூர்ந்ததேரையும் குதிரையையும் உடைத்தழித்தான். தூஷணனோதேருடை யவே கீழேவீழ்ந்தும் அஞ்சாதெழுந்துநின்று பெருமிதம்பெற்ற தேவர்களைக் கண்ணிமைப்போதில் அழிக்கத்தக்கதும் எஃகினாற்செய்ததுமாகிய முட்கர மென்னுமம்பைத்தொடுத்துவிடுத்தான். அது நெருப்பைச்சொரிந்துகொண்டு வருவதைக்கண்ட சிராமபிரான் ஓர்கணையால் அதைத்தகர்த்து மீண்டு மிரண்டு கணைகளைவிடுத்து அவனிரண்டு கரத்தையுந்துணித்து மற்றோர்கணை யால் அவன் சிரத்தையு மறுத்துத்தள்ளினன். இதைக்கண்ட தேவர்கள்யாவ ரும் நன்றுநன்றென்று புகழ்ந்தனர். தூஷணனோ மதங்கொண்டயானை வீழ்ந் த்தேபோற் கீழேவீழ்ந்திறந்தான்.

போரில்வல்ல துஷணன் இவ்வாறிறந்தபின், மகாசயிலன், தூலாக்ஷன் பிரமாதி என்னுஞ் சேனாவீரர்களாகிய மூவரும் காலபாசத்திற் கட்டுண்டிறக்க வேண்டி சூலம்கோடரி வாள்முதலியவைகளையேந்தி இரகுநாயகன்மேலெதிர் ந்துதங்கரத்திலுள்ளபடைகளை யோச்சியெறிந்தனர். இரகுநந்தனனோ கூர்மை யான ஓரம்பினால் அவ்வாயுதங்களைப் பொடிப்பொடியாக்கிஇரண்டுகணையால மகாசயிலனது இரத்தைத்துணித்து, சிலகணைகளைவிடுத்துத் தூலாக்ஷனை யும் பிரமாதியையும் கொன்றான். அம்மூவரும் மலைவீழ்ந்ததேபோற் படிமிசை

விழ்ந்திறந்தனர். இவ்வாறு தூஷணனுக்குத் துணையாய்வந்த ஐயாயிரவரக்க ரையுமுடித்துச்சிங்கவேறுபோல்நின்றுவில்லைக்குணத்தொனிசெய்துநின்றான். கரனே தன்சேனையிற்பாதி மடிந்ததைக்கண்டு மனம்வருந்தி இரகுநந்தனனற் றலைமதித்து பன்னிருசேனநாயகரைக் கூவியழைத்து, வீரர்களே! நமது தூஷணனும் சேனைகளுடன் ஓரற்பமனிசனால் ஓரிமையோரையில்மடிந்தனன். இனி அம்மனிசனை உயிருடன் விடவும்போமோ? நீங்கள் நமது சேனைக ளுடன்சென்று அவனை விரைவின் முடித்துவாருங்கோ ளென்றாஞ்ஞைசெய் தான். அவ்வாறவன் சொல்லுமுன்னமே, சியேனசாமி, பிருதுக்கிரீவன், யாகசத்துரு, விகங்கமன், துர்ச்சயன், கரவிராக்ஷன், பருஷன், காலகார் முகன், மேகமாலி, மகாமாலி, சர்ப்பாசியன், ருதிராசனன் என்னும் பன்னிரு வரும் புயத்தைத்தட்டி அஞ்சாநெஞ்சம் படைத்துநமது சேனைகளைக்கொன்ற அம்மனிசனை அலகைகட்கிரையாக்கி வருகின்றேமென்று விடைபெற்றுச் சேனைகளை யழைத்துக்கொண்டு இரகுநந்தனன் தன்மையையறியாம லவனை வளைந்துகொண்டு ஊழிகாலத்திற் சத்தமேகங்களு மொன்றுகூடிப் பெய்வ தேபோன் மழைக்கணைபொழிந்தனர். நிசாசரரை முடிக்கவேண்டியே திரு வவதாரஞ்செய்த ஸ்ரீராமபிரான் கோபநகைநகைத்து இவ்வரக்கப்புழுக்களை யோர் பெரிதெனவெண்ணி இன்னுமிவருடன் யுத்தஞ்செய்யவேண்டுமோவெ ன்று தன்மனத்தில் மதியாமல்கோதண்டத்திற் சிலகணைகளைத்தொடுத்துக் காதளவு மிழுத்துவிடுத்தான். அக்கணை கோதண்டத்தினின்றும்வெளிப்பட்டு வரக்கண்டு வானத்துள்ள தேவர்கள் நின்றவிடம்விட்டகன்றனர். அண்ட முகடதிர்ந்தன. திக்கயங்களுந் திசைதொறு மோட்டெடுத்தன. அரக்கரிற் சிலர் செவிடுபட்டு வீழ்ந்தனர். சிலரக்கணையின் மின்னு முழக்கைக்கண் டஞ்சி வீழ்ந்தனர். அண்டமுகட்டிலும் புகைமூடிக்கொண்டது. சிலவரக் கர் இக்கணையால் நமதாவிசிந்துமென்றே உள்ளநடுநடுங்கி அழுதனர். இவ்வா றிவர்களிருக்க, ஸ்ரீராமபிரான் தெரிந்துவிட்ட அக்கணையோ அரக்கர்கூட் டத்திற்பாய்ந்து தீயிற்பட்ட சருகழிவதேபோல் ஒருவரையும் விடாமற்கொன் றது. கரி பரி தேர்முதலியவைகளு மழிந்தன, எங்கே நோக்கினும் அரக்கர் பிணங்களே மலைமலையாய்க்கிடந்தன, கழுகுகளும் நாய்களும் நரிகளும் அரு ளிலாத அவ்வரக்கருடலைப் பிடுங்கித்தின்று பசியாறிக்குதித்தன. இவ்வாறந்த யுத்தகளம் இசைகள்பரப்பிய யாகவேதிகையேபோலும் தென்றிசையி நிரயம் போலும் விளங்கிற்று. இதுகிடக்க;

சூர்ப்பநகையின் தமையனாகிய கரனும், படைத்தலைவனாகிய திரிசிரனுந் தவிர மற்றபதினாயிர வரக்கரு மடிந்தனர். கரன் தன் சேனையுளொருவரை யுங்காணாய் மதிமயங்கித் திப்பிரமைகொண்டு மனத்திற் கோபமும் விசன முங்கொண்டு வில்லைக்கையிலேந்தி தேரூர்ந்து இந்திரன் வச்சிராயுதத்தைக் கையிற்றாங்கி வருவதேபோல் தோன்றிச் ஸ்ரீராமபிரானை யெதிர்க்க வாரம்பித் தான், இதைக்கண்ட திரிசிரனென்னு மரக்கன் அவனைநோக்கி யானொருவ னுயிருடனிருக்க நீர் யுத்தத்திற்கேகுதல் முறையன்று! யானே அவனுடன் போர்செய்து வெற்றியடைந்து வருகின்றேன்; என்றுதலைப்பாரும்; நமது

பதினுயிரம் சேனைகள் மடிந்ததெண்ணி வருந்தவேண்டாமென்று ஊழ்வலி யாலிறக்கவேண்டி அவனிடம் விடைபெற்றுப் பலபரிகள்பூட்டிய தேரூர்ந்து சென்று இரகுநந்தனனை யெதிர்த்துஆயிரமாயிரமாகப் பாணவருஷம் பொழிந்துநின்றுபேரிகையிஞெலிபோற் கேட்போர் வெருக்கொளும்படி சிங்காதஞ் செய்தான். இரகுநந்தனனே அவன்விடுங்கணைக ளாயிரத்துக் காயிரமாகவே விட்டுத் தகர்த்து நின்று நெடுநேரம் போர்செய்தனர். திரிசிரனே மூன்று வெவ்விய கணையை சீராமபிரான் நெற்றியே இலக்காகவிடுத்தான். அக்கணை நெற்றியிற்றுக்கலும் உருத்திரனேபோற் கோபித்து இவ்வரக்கனே வில்லில் வல்லவனென்றேயெண்ணவேண்டும், இவன்செருக்கை இமைப்போதில் அழிக்கவேவேண்டுமென்று அடாஅரக்கனே! நீ வில்லில்வல்லவனேயாயின் இதோ நான்விடு மிக்கணைகளைக் காத்துக்கொள்ளென்று பதினன்குகணைகளைத்தொடுத்து அவன்மார்பே யிலக்காகவிடுக்க, அவை அவன்மார்பில் நன்றுய்த்தாக்கி யுருவிச்சென்றன, தாசரதி அவனை அம்மட்டிலேவிடாமல் மீண்டும் நான்கு பாணங்களைப் பிரயோகித்துத் தேரிற்பூட்டியிருந்த நான்கு குதிரைகளையுங் கொன்று எட்டுக்கணையினுல் தேர்ச்சாரதியைத் தேரடியில் வீழ்த்தி ஓர்கணையால் துவசத்தையு மறுத்துத்தள்ளினுன். திரிசிரனே மிக்க கோபங்கொண்டு தன் கரத்தோர்வாளேந்தித் தேரினின்றும் சாகசத்தாற் சீராமன்மேற் பாய்ந்தான், அவ்வாறுபாய்ந்த அரக்கனைத்தாசரதிமிகக்கடிந்துமூன்றுவெவ்வியகணைகளை அவன் சிரமே இலக்காகவிட்டு அவன் சிரத்தையு மறுத்துத்தள்ளினுன். அவ்வாறுதுணித்த சிரம் பூமியில் விழாமுன்னமே அவனும் வீழ்ந்திறந்தான். ஒப்பிலாத வாற்றலுடைய திரிசிரன் இறந்ததைக்கண்ட கரன் மனத்திற்றுயரமும் கோபமுங்கொண்டு தன்னந்தனியே நின்று பதினுயிரவரக்கரையு முடித்த இரகுநந்தனனே தான்தன்னந்தனியனுய் நிற்கத் தன்தேரை யவன்முன்செலுத்தி, நமுசியென்னு மசுரன் தேவேந்திரனை யெதிர்த்ததேபோ லெதிர்த்து கடும்போர்செய்தான். சீராமபிரானே அவனுற்றலை நன்றெனமதித்து நாராச பாணங்களை ஆயிரமாயிரமாகப் பிரயோகித்துக் கரனை நோகச்செய்தான். கரனே அனல்சொரிகின்ற நாளீகம், விகர்ணி யென்னும் பாணங்களைப்பிரயோகித்து அவனுடலிற்பட்டுருவிப்போம்படி விடுத்தான். அதனுல் சீராமன் மனம்வருந்திச் சற்றுநேர மசைவறநின்று திடசித்தங்கொண்டு இவனை விரைவில் முடிக்கவேண்டுமென்று கருதி இருவருஞ் சமமாக யுத்தஞ்செய்து வருகையில் சீராமன் அளவிலாக்கோபங்கொண்டு ஓர்கூரியபாணத்தைத் தெரிந்தெடுத்து வில்லிற்பூட்டிஅடாஅருளிலாதவரக்கனே! இக்கணையைக் காத்துக்கொள்வையேயாயின் நீ வீரனேயாவையென்றுவிடுத்துக் குணத்தொனிசெய்தான்.அக்கணைகோடைக்காலத்துப்பேரிடிபோல் முழங்கி கரனது மார்பிற்றுக்கலும் திருக்கடவூரில் உருத்திரமூர்த்தியால் உதைக்கப்பட்டயமனேபோல் வீழ்ந்திறந்தான். தேவர்களாகாயத்தினின்றும் பூமழைபெய்தார்கள், தவத்திற் சிறந்த முனிவர்களும் இராசரிஷிகளும் சீராமபிரானிடம்வந்து பலஆசிகூறி சீராமபிரானே!உன்னுற்றலுக் கொருவரையுமொப்புமைசொல்லவும்போமோ? பதினுறுயிரவரக்கரையும் ஒன்றரை முகூர்த்தத்தில் முடித்ததேயல்லாமல்,

கரதூஷணுதியரையும் திரிசிரன்முதலிய வீரர்களையும் கொன்றுகளைந்த உன்னுற்றலுக்களவு சொல்லவும்போமோ! இனியாங்கள் அரக்கரிடுக்கணினின்றும் பிழைத்தோம், உமதுகைக்கணையால் அரக்கர்மாண்டமையால் இனியாங்களுய்ந்தோ முய்ந்தோமென்று பரவசமாகக்கொண்டாடி அவன்புகழைப்பாடி யாடுதலொழிந்து அவரை நாடிச்சென்றனர். இவ்வாறு நிசாசரரைமுடித்தபின்னர் முனிவர்குழாங்கள் இரகுநந்தனனைப்புடைசூழ சானகியாரும் இலக்ஷ்மணனும் வீற்றிருக்கும் பன்னசாலையை நோக்கிச்சென்று இருவருமிருக்கக்கண்டு பரவசங்கொண்டு நின்றுன். இளையபெருமாளோ தமையன் வரவையறிந்து அவனை மும்முறைவலம்வந்து பணிந்து நின்று சென்னிமேற் கைகூப்பித்தொழுதான். சானகியாரும் முனிவரிடுக்கணைக் களைந்ததற்கு எல்லையில்லாத வானந்தங்கொண்டு ஆலிங்கனஞ்செய்துகொண்டார், முனிவர்களும் பல ஆசிகூற இனிதுவீற்றிருந்தனன். இதுநிற்க;

இரகுநந்தனன்கணைக் கிலக்காகாததோடத்தா லொளித்திருந்த அகம்பனென்னும் பெயர்வாய்ந்த அரக்கன் சனஸ்தானத்தை விட்டகன்று இலங்கையை நோக்கி விரைந்துசென்று இராவணனைக்கண்டு நடந்தவற்றையொன்றுமொழியாமற்கூறி யானுமக்கிச்செய்தியை யறிவிக்கவேண்டுமென்றெண்ணி அவன் கையினின்றுந் தப்பித்தே பிழைத்துவந்தேனென்றுன். யாவுங்கூறக்கேட்ட இலங்காதிபன் தன் இருபதுதோள்களும் குலுங்க நகைத்து அடா அகம்பா, நீ இப்போது தொகுத்துக்கூறியது விந்தையினும் விந்தையே! கற்பக நீழலில் வதியும் இந்திரனும் மற்றைத்தேவர்களும் சிவபெருமானுக்குத்தோழனுமாகிய அளகைவேந்தனும் யமனும் வாயுவும் அங்கியும் வருணனும் திக்குப்பாலகரும் மற்றையோரும் என்னுணையைக்கடந்து நடவாரென்றுற் சாமானியமான மனிசனெருவனல் இவ்வகைத் துன்பத்துக் கிடமுண்டாயின தென்றனையே, இதுவியக்கத்தக்கதே! அடா அகம்பா! அவனின்னவனென் றெனக்கு விரைவிலறிவியென்று கண்களிற்கனல்சொரிய விழித்துச் சினந்தான். அகம்பன் உள்ள நடுநடுங்கி சிராமன்கையினின் றுயிர்பிழைத்திங்கு இறக்கவேண்டியே வந்தேனென்று மொழிதடுமாற உயிர்ப்பிச்சை தரவேண்டுமென வேண்டினன். இராவணனவ்வாறே தந்தேன் விளங்கத்தெரிவியென்றுன், அவ்வாறிதங்கூறிய இராவணனை நோக்கி இவ்வாறு சொல்வானுயினன். அரக்கர் பெருமானே! தசரதமகாராசன் புதல்வனுகிய இராமனென்னும் பெயர் பெற்ற ஒருவன் நமது சனஸ்தானத்தில் வந்திருக்கின்றுன், அவன் தோள்களோ மந்தரமலையேபோல் திரண்டுருண்டிருக்கின்றன, பரந்தமார்பும் வேளினுமிக்க வழகும் பெற்றிருக்கின்றுனென்றிது சொல்லுமுன்னமே இராவணன் பெருமூச்செறிந்து அகம்பா! அவ்விராமனென்பவனுக்கு இந்திரன்முதலிய தேவர்களெல்லாம் துணையாய் வந்திருக்கின்றனரோ அல்லது தன்னந்தனியே இருக்கின்றுனேவென்றுன். அதற்ககம்பன் இலங்காதிபனே! அவன் ஒருவர் துணையையும் விரும்பாதவன்; அவனையல்லது தேவர்களை யான் கண்டேனில்லை, அவனைப்பொருதுவெல்வது யாவருக்கும் அசாத்தியமான காரியமாம், திரிவிதவுலகத்தையும் ஓரிமையோரையிலழிக்கு மாற்றலுடையவன்;

விற்பிடித்து யுத்தஞ்செய்யும்வகையை அவனே கனாகண்டவன். எம்மிறை வனே! யான் சொல்வதை மனம்பொறுத்துக்கேட்டருள வேண்டுகின்றேன். அவன் வில்லிற் கணைதொடுப்பதும் விடுப்பதும் காண்பதருமையாகும்! மற் றெதுகாணலாமென்றால் அவன்விடுங்கணையால் உள்ளநொந்துயிரிழந்துவீழ்ந் திறக்கும் பிணத்தையே காணலாம். அவனாற்றலை விரித்துக்கூற ஆதிசேடனு மஞ்சுவன், சுருக்கிச்சொல்லுமிடத்து அவன்விட்ட கணைகளெல்லாம் ஐந்தலை நாகங்களாகி நமது பதினாயிரவரக்கரையு முடித்தனவென்றே சொல்லவேண் டும், எங்கேநோக்கினும் சிராமனாகவே காணப்பட்டானென்று சொல்லக் கேட்ட இராவணன், உருத்திரனேபோற் சினந்தெழுந்து அகம்பா! அம்மா னிட மசகத்தையோ வல்லவனென் றென்முன் புகழ்ந்து கூறிநின்றனை! அவன் வாழ்நாளும் முடிந்ததனாலன்றோ என்னைப்பகைத்து நின்றான், கயிலை மலையைக்கல்லிய என்தோளாற்றலால் அவனை முடிக்கின்றேன்; நீ அஞ்சாதை யென்றுகூற, அகம்பன் இலங்கைவேந்தே! அவ்விராமனைச் சாதாரணமனிச னென்றே நினைக்கவேண்டாம், அவன் கோபங்கொள்ளுஞ்சமயத்தில் அவனை யொத்து நோக்கும் வல்லமையுடையா ரிவ்வுலகிலில்லையென்றேயெண்ணவே ண்டும், தேவகங்கைப்பிரவாக வேகத்தை ஓரம்பினாலேயும் தகைவான், ஆழ் கடலையும் வற்றச்செய்வான் திரிவிதவுலகத்தையு மோரிமையோரையிலழித்து மீண்டும் படைப்பான். அவன் பெருமையை அளவிட்டுக்கூறுதல் இயை யாதே, அரசே! உமதாற்றலையு மளவிடப்போகாது; நமது சேனைகள்யாவும் ஒரேகாலத்தி லவனையெதிர்த்துப் போர்புரியினும் நாம் வெற்றியடைவதருமை யாகவேமுடியும், இவ்விராமனுக்கிளையவ னொருவனிருக்கின்றான். அவனே கனலுடன்சேர்ந்த காற்றேபோல் மிக்க ஆற்றலையுடையவன்; அழகில் அவ் விராமனிலும் எண்மடங்கதிகமானவன். கற்பிற்சிறந்த சீதையென்னும் பெய ருடைய ஒருபெண்ணிருக்கின்றாள், அவளுக்கு இலக்ஷ்மியையும் இரதியையும் ஒப்பிடவேபோகாது. இவ்வகை அழகுவாய்ந்த அப்பெண்மணியோ சிராம னுக்குமனைவி, அவளைச்சூழ்ச்சியால் நீ கவர்ந்துகொண்டுவருவையேல் அவள் மேலுள்ளபாசத்தால் அவ்விராமன் இறந்தேபோவான். இதுவே தக்கசூழ்ச்சி யாம். இவ்வாறு செய்யாமல் அவனுடனெதிர்த்துப் போர்செய்தால் பயனில் லாமற் போகவேண்டுமேயல்லது வேறில்லையென்றுசொல்லி முடித்தான். இவ்வாறகம்பன் கூறியதைக்கேட்ட இராவணன் அவன்சொல்லை யங்கீகரித்து அகம்பனைநோக்கி நீ எடுத்துக்கூறிய சூழ்ச்சியை அங்கீகரித்தேன், நாளையே சென்று அப்பெண்மணியைக் கவர்ந்துவருகின்றேனென்று அன்றிரவைக் கழித்து மறுநாளுதயத்தெழுந்துதேர்ச்சாரதியையழைத்துத்தேரைக்கொண்டு வரும்படி ஆஞ்ஞைசெய்தான். அவனும் கொண்டுவர இராவணனதிலேறி ஆகாயமார்க்கமே தேரைச்செலுத்தித் தாடகை குமாரனாகிய மாரீசனாச் சிரமத்திற்குச்சென்றான். இவன் வரவைக்கண்ட மாரீசன் உபசரித்தழைத் துட்காரச்செய்தான், இராவணன் மாரீசனைநோக்கி நமது சனஸ்தானத்தே சிராமனென்னும் பெயர்வாய்ந்த ஒருவன்வந்து கரன் திரிசிரன் முதலியவர் களுடன் பதினாறாயிரவரக்கரையும் கொன்றானாம்! அவனுக்குச்சீதையென்னு

மனைவியிருக்கின்றாளாம்! அவளைக்கவர்ந்து கொண்டுவரவே இங்குவந்தேன், நீயு மெனக்கோர் சகாயஞ்செய்யவேண்டு மென்றான். அதைக்கேட்ட மாரீசனோ இராவணேசுவரனே! நீ விரைவில் முடியவேண்டியே இவ்வகையெண்ணங்கொண்டனையே யல்லது வேறில்லை, உனக்குக்கேட்டைத்தரும் இவ்வகைத் துர்ப்போதனையைக் கற்பித்தவர்யார்? இலங்காதிபனே! அழுக்காறமைந்தமனத்தர்யாரோ உன்னைக்கொல்லாமற் கொல்லும்வகையைத் தேடிக் கொடுத்தனரோ யல்லது வேறில்லை. நீ அவ்விராமனோ டெதிர்த்துப் போர் செய்வையேயானால் அரவத்தின்வாய்ப்பட்ட தேரையேபோல் அழிந்தே விடுவையல்லது அவன்கையினின்றும் பிழைக்கவேமாட்டாய், யான்சொல்வதுண்மை, நீ சுகமாகவே உன்னாட்டுக்குச்சென்று வாழ்ந்திருவென்று சிராமபிரானாற்றல் யாவுமெடுத்துக்கூறினன். அதைக்கேட்ட இராவணனோ அவ்வாறேயாகுகவென்றங்கீகரித்து இலங்காபுரிவந்தடைந்தான். இதுகிடக்க;

சூர்ப்பநகையோ கரதூஷண திரிசிரர்முதலிய வீரர்கள் சிராமன்கைக்கணையால் முடிந்ததைக்கண்டு மனம்வருந்தி தன்னெண்ண மீடேறவில்லையேயென்று கோவெனக்கதறியழுது அவ்விடம்விட்டுப்பெயர்ந்து ஒளிவிட்டெறிக்கும் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் இராவணன் கொலுமுகமேவந்து அவனைக்கண்டு அண்டமுகடு செவிடுபடக்கூவியழுது இவ்வாறுசொல்வாளாயினள். என்னரிய அண்ணாவே! என்னை இக்கதிக்குள்ளாக்கிய வன்னெஞ்சப்பாதகனை நீ இன்னுமறியாதிருக்கின்றனையே! நீயோ மங்கையர்பால் மோகங்கொண்டு அரசகாரியத்தை முறைப்படி பாராமல் வீரனேபோற் பத்துத்தலைகளும் இருபதுதோள்களும் பெற்றிருக்கின்றனையேயல்லது வேறில்லையே! நீ சுத்தவீரனாயிருப்ப துண்மையேயானால் என்னை இத்துன்பத்திற்குள்ளாக்கியவனை இன்னு முடிக்காமலிருப்பையோ! தேவர்களைச்சிறையிட்ட அண்ணாவே! நமதுசனஸ்தானமோ இராமனென்றும் இலக்ஷ்மணனென்றும் பெயரியஇருவரால் நிர்ச்சனஸ்தானமாயது. மந்திரமேபோன்ற தோள்களையுடைய அவ்விராமனென்பவனுக்குச் சிதையென்னுமோர் மனைவியிருக்கின்றாள். அவளழகையென்னொருநாவால் சொல்வதரிது. ஆதிசேடனும் சொல்லவஞ்சுவான். அப்பெண்மணியை உனக்கு மனைவியாக்கவெண்ணியே அவளைப்பற்றிவரச்சென்றேன். கயிலைமலையெடுத்த அண்ணாவே! அவ்வாறுசெய்யத்துணிந்த என்னை அவ்விராமன் கட்டளையால் அவன் தம்பியாகிய இலக்ஷ்மணன் இக்கதிக்குள்ளாக்கினான் என்றுஅறுப்புண்ட தன் மூக்குமுலையையுங்காட்டி யானைத்துதிக்கையேபோலத் திக்கடைக்கோலன்ன தன் கண்ணினின்றும் நீர்த்தாரையைச் சொரிந்து அழுதுநின்றாள். அவ்வாறவள் சொல்லக்கேட்ட இராவணன் முப்புரமும்பொடித்த முதல்வனேபோல் அளவிலாத கோபங்கொண்டு தங்காய்! சூர்ப்பநகையே! என்னாற்றலையறியாத அம்மானிடமசகம் ஆயுள்முடிந்ததனால் உன்னை இத்துன்பத்திற்குள்ளாக்கினான், இனிஎன்கையினின்றும் தப்பித்துயிர்பிழையான், இன்றே என்கைக்கணையால் முடிந்தவனேயாயினான், உன்னை இத்துன்பத்திற் கிலக்காக்கியபோது நமது சனஸ்தானத்திருந்த கரன் திரிசிரன்முதலிய சேனாவீரர்கள் அவனைக்கொலைசெய்யாமல் விடுத்தார்களோ?

என்றுவினவினன். சூர்ப்பநகையோ! திரிவிதவுலகத்துள்ளாரையும் உன்னாணையிற்செலுத்தும் அண்ணாவே! என்னை இத்துன்பத்திற்குள்ளாக்கியபின் கரனிடஞ்சென்றே முறையிட்டேன், அவனும் பதினாயிரம் சேனைகளுடனும் தான் தூஷணன் திரிசிரன்முதலிய சேனாவீரருடனும் அவ்விராமனையெதிர்த்தனன்: என்னருமையான அண்ணாவே! அத்தனைசேனையையும் தன்கைக்கணையால் தனியேநின்று ஒன்றரைமுகூர்த்தத்தில் முடித்தான். அம்மட்டேயல்லாமல் கரன் தூஷணன் திரிசிரன்முதலியவீரர்களையும் இலேசிலேமுடித்துவிட்டான். அவனாற்றலை என்னொருநாவாலுஞ் சொல்லவல்லேனல்லேனென்று நிகழ்ந்தனயாவும் கூறினாள்.

இவ்வாறு சூர்ப்பநகை சொற்கேட்ட இராவணன் அவ்விராமனை எவ்விதத்தாலேனு முடிக்கவேண்டு மென்றெண்ணிச் சாரதியை வரவழைத்துத் தேரைக் கொண்டுவரும்படி ஆஞ்ஞை செய்தான். அவ்வாறு சொல்லு முன்னமே பொற்றகட்டினால் மூடப்பட்டதும் இடிபோன்ற முழக்க முள்ளதும் நினைத்த விடமெல்லாஞ் செல்லவல்லதுமாகிய தேரில் அலகையன்ன முகத்தையுடையதாய்ப் பொற்பணிகளா லலங்கரிக்கப்பட்ட கோவேறு கழுதைகளைப்பூட்டி விரைவிற்கொண்டுவந்து அவன் முன்னேநிறுத்தினன் வவ்விராவணனே ஆடையாலங்கிருதனாய்த் தேரின்மேலேறிப்பரிசாரகர் வெண்கொற்றக்குடைபிடித்து வெண்சாமரைகள்வீசக் கடற்புறமாகவே தேரைச்செலுத்தி அங்கே பூத்தும் பழுத்துமிருக்கின்ற பலவகைமராமரங்களாற்சூழப்பட்டதும், தன்பாலடைந்தார்க்கு நீர்வேட்கையைத் தவிர்ப்பதாகிய நீருள்ளநதியும் வாழைதெங்கு கமுகு பனைமுதலியவைகளுஞ் சூழப்பெற்றதுமாகிய ஆச்சிரமங்களும், காமத்தை அறக்கடிந்த சித்தர்கள், அஜர், வைகானசர், வாலகில்லியர், மரீசிமுதலிய மாவிரதசீலர்கள் தவஞ்செய்து கொண்டுவாழ்ந்திருக்கப் பெற்றதும், நாகர், கருடர், கந்திருவர், கின்னரர், சாரணர்முதலியோர், போகவகைகளையறிந்து சரசமாடுகின்ற அரம்பையர்கள், அமுதமுண்ணும் தேவர்கள் சஞ்சரிக்கப்பெற்றதும், அன்னங்கள் கிரவுஞ்சமுதலிய நீர்ப்பறவைகள் ஆடிப்பாடிக் களித்துத்திரிவதுமாகிய சமுத்திரத்தைக் கண்டான்.

இவ்வாறங்குள்ள புதுமைகளைப்பார்த்து அதைவிட்டகன்று சிறிதுதூரஞ் சென்று சுபத்திரம் என்னும் ஆலமரத்தைக்கண்டு உவகைகொண்டு கடலினக்கரைசென்றுசோலைகள்சூழப்பெற்றஓராச்சிரமத்தைக்கண்டு அதிற்பிரவேசித்து மரவுரியின்றோல் பூண்டு சடைமுடியுடைய மாரீசனென்னுமரக்கனைக்கண்டான். மாரீசனே எதிர்சென்றுபசரித் தாசனமளித்துட்காரச்செய்து இலங்காதிபனே! இவ்வேழைக் குடிசைக்கு இத்தனைவருத்தத்துடன் வரக்காரணமென்ன? என்றான். இவ்வாறு வினவிய மாரீசனைநோக்கி மாரீசனே! முன் நமது சனஸ்தானத்திருந்த அரக்கரை ஓர் மனிசனாகிய இராமனென்பான் கொன்றானென்றே உனக்குத் தெரிவித்திருந்தேனே. அவன்செய்தன அவ்வளவேயல்ல, என் தங்கையாகிய சூர்ப்பநகையையும் அங்கவீனஞ்செய்தானும், ஆதலால் அவனை ஒருவகையான துன்பத்திற்குள்ளாக்கவேவேண்டும், நீ எனக்

குத்துணையாகவரவேண்டுமென்றான். மாரீசன் ஸ்ரீராமபிரானது பெருமையை முற்று மெடுத்துக்கூறியும் கேளாமல் அவன்மேற்சினந்துஅறிவிலா மாரீசனே! நீ என்கட்டளைப்படி நடந்து கொள்ளுவதே உன் கடமை, என்னுஞ்ஞையைக் கடந்துநடந்தால் உன்னை இப்போதேகொன்றுவிடுவேன், நீ என்னுடன்வரவே வேண்டுமென்று அவனைத் தன் தேரிலேற்றிக்கொண்டு ஆறு வனம் நாடு நகர் முதலியவற்றைக் கடந்து, சனஸ்தானத்தைக்கண்டு அங்கு ஸ்ரீராமபிரானிருக்கும் ஆச்சிரமத்தையுங் கண்டார்கள். மாரீசனோ இன்று நாம் ஸ்ரீராமன்கைக் கணையால் மாண்டுபோவதேதிண்ணமென்று முகவாட்டத்துடன் தேரைவிட்டிழிந்தான். அவ்வாறிழிந்த மாரீசன் கரத்தை இருபது தோளையுடையானுய்த் திரிவித வுலகத்தையும் வெற்றிகொண்டு தனக்கொருவரும் பகையென்பதில்லாமல் மிக்கவலிபெற்றுவாழு மிராவணன் அவனைப்பற்றிக்கொண்டு என்னன் புக்கு முயிர்க்குமுரிய தோழன் நீயே! உன்னிலுஞ்சிறந்த நண்பரெனக்கொருவருமிலரோ; ஆதலால் நீ தேவருலகத்தும் நாகலோகத்தும் மற்றெவ்வுலகத்தும் கிடைத்தற்கரிய சானகியினது மனத்தைக்கவரும்படியான அழகிய ஓர் மான் வடிவங்கொண்டு அவள் முன்னுலாவினுல் அவள் உன்னை பிடித்துத்தரும்படி ஸ்ரீராமனைக்கேட்பாள். அவனு முன்னைப்பற்றப் பின்றொடர்வான். நீ அவன் கைக்ககப்படாமலும்அகப்படுவதும்போலநடித்துக்காட்டி அவனைநெடுந்தூரங் கொண்டுபோய்விடு அவனு முன்னைவிடாமலே தொடர்ந்துவருவான். அச்சமயத்தில் நீ "ஹாசீதேலக்ஷ்மண" என்று ஸ்ரீராமன் குரலோசையேபோற்கூவிப் பின் உன்னிட்டப்படி எங்கேனும்செல், சானகியோ தன்நாயகனுக்கு விபத்து நேரிட்டதாகவெண்ணி இளையவனை யனுப்புவாள், அவ்வேளையிலே தன்னந் தனியே இருக்கும் சானகியை யான் கவர்ந்துசெல்கின்றேன். அவ்வாறு யான் பற்றிச்செல்கையில் அவளுக்காகத் தேவர்களேனும் இந்திரனேனும் பிரமனேனும் மற்றயாவரேனு மெதிர்த்துவருவரேல் என்கைக்கணையால் அவரைமுடிப்பேன், பின்னு லெனக்குவரும் நன்மை தின்மைகளை யோசிக்கவேண்டாம். என்னுருயிர்போன்ற நண்பனே! விரைவில் என் மனங்களிக்குமாறுசெய்ய வேண்டுமுதவியிது, இதனுல் நீ நன்மையையடைவையேயல்லாமல்வேறில்லை, என்னுட்டில் உனக்கு அரைப்பாகங்கொடுத்தே விடுகின்றேன். நீ விரைவாகச் சென்று யான் கூறியவாறே நடவென்றான். இதுகிடக்க;

சற்றுமருளென்பதேயில்லாத இராவணன் இவ்வாறு கூறக்கேட்ட மாரீசன்வருத்தமுற்று இனி இவனைப் பகைத்துக்கொண்டால் இக்கணமே நம்முயிரைப் போக்குவான், வருவது வந்தேதீரும், நம்மாலாகுங் காரியமொன்றுமேயில்லையன்றோ வென்று துணிந்து அக்கணமே ஓர்மான் வடிவு கொண்டான். மாயையில்வல்ல மாரீசன் கொண்ட அம்மான் வடிவத்தினழகைச் சொல்லுந் திற மெனக் கெவ்வளவுமில்லையே! ஆதிசேடனுஞ்சொல்ல அஞ்சுவனே! மாற்றுயர்ந்த பொன்போன்ற மேனியும், ஒளிவிட்டெறிக்கும் நீல மணிபோன்ற இரண்டுகொம்புகளும், கருமையும் வெண்மையுங்கலந்த முகமும், செங்கழுநீர் மலர்போன்ற வாயும், கரு நெய்தல்போன்ற செவியும், சற்றுயர்ந்த மிடறும், ஒருபுறம் இந்திரநீலமணிபோலும் மற்றோர்புறம் சந்திரன்போலும் தோன்று

றிறவயிறும், வைடூரியம்நிகர்த்த பக்கமும், சிறுத்து நீண்டகணைக்கால்களும், மேனோக்கி விளங்கும் வாலுமுடையதாய் கண்டவர் மனத்தைக்கவருவதாகத் தான் முடியவேண்டியதாகையால் மெல்ல நடந்து கற்பிற்சிறந்த சானகியி முன்சென்றுலாவித் திரிந்தான். அவ்வனத்திலுள்ள மானினங்கள் இம்மானி னழகைக்கண்டு அதிசயித்து அருகில்வந்து மோந்து நாற்றம் வேறுபாடாக விருக்கக்கண்டு ஓட்டெடுத்தன, சானகியார்மனத்தைக் கவரவெண்ணிவந்த மாரீசனென்னு மான் தன்முழு வல்லமையையுங்காட்டி அவர் மனத்தையுங் கவர்ந்து கொண்டது. சானகியாரோ மானினழகையும் அதன் நடையழகை யுங்கண்டு பரவசங்கொண்டு ஸ்ரீராமபிரானைநோக்கிக் கிடைத்தற்கரிய இவ்வழ கிய மானை எனக்கெவ்விதத்தினாலேனும் பிடித்துத் தரவேண்டும். தேவரீர் கைக்ககப்படாவிட்டால் அதன் தோலையேனு மெனக்குக் கொணர்ந்துகொடு த்து என் மனத்தைக் களிக்கச்செய்ய வேண்டுமென்றே பலமுறையிறைஞ்சி நின்றார். ஸ்ரீராமனும் அதற்குச் சம்மதித்துக் கையில்வில்லேந்தி இளையபெரு மாளைநோக்கித் தம்பி இலக்ஷ்மணா! நீ சீதை யிடத்திரு, யானிம்மானைக் கொண்டுவருகின்றேனென்று அவரை யவ்விடத்தேயிருத்தி மானைப்பிடிக்க வாரம்பித்தான். இதையறிந்த மாரீசன் இனியாம் பிழைப்பதருமையென் றெண்ணியே சற்றணித்தாகவந்து மறைந்தனன். அதைக்கண்ட ஸ்ரீராமபிரா னும் விடாமற்றொடர்ந்து செல்ல மீண்டு மணித்தாய் வருவதேபோல்வந்து நெடுந்தூரஞ்சென்றுமறைந்தான். இவ்வாறு பலமுறைமறைவதும் எதிரேவரு வதுமாகக்கண்ட ஸ்ரீராமபிரான் இதுவரக்கர்செய்கையேயாமென்று கோபித்து வில்லில் நாணேற்றியோர்கணையைவிடுத்தான். அக்கணையோ நெருப்பைச் சொரிந்துகொண்டு மாயமான்மார்பைப் பிளந்துசென்றது; மாரீசனோ இரா வணன் சொல்லியதேபோல் "ஹாசீதாலக்ஷ்மணா" என்றுரத்துக்கூவிமானுரு நீங்கித் தன்பழைய அரக்கருருக்கொண்டுவிழுந்திறந்தான். ஸ்ரீராமபிரானோ அவ் வுருவைக்கண்டுவியந்து அவனை மாரீசனென்றறிந்துகொண்டே இவன்நம்மை யாதுகொடுமைசெய்யவெண்ணியே இவ்வுருக்கொண்டானோ, இவனரற்றியதா லென்ன துன்பநேரிடுமோ! என்று வேறொருமானைப்பிடித்துக்கொய்து அதன் தசையையெடுத்துக்கொண்டு சானகியாரிருக்கு மாச்சிரமத்தைநோக்கி எழுந் தருளினன். இதுநிற்க;

மாரீசனரற்றிய ஓசையைக்கேட்ட சானகியார் திகைத்துச் ஸ்ரீராமனுக்கு அரக்கரால் யாதோ துன்பநேர்ந்துவிட்டதென்றெண்ணி அருகிருக்கு மிளைய பெருமாளைநோக்கி அப்பா! உனது தமையனாருக்கு அரக்கரால் துன்பநேர்ந்த தேபோற்காணப்படுகின்றது! அவரரற்றியதை நீ கேட்கவில்லையோ! அந்தோ! இன்னுமவரைக்காணச்செல்லாமல் அசைவற்றிருக்கும் வகையையறியேனே! அவரா லாற்றக்கூடாத துன்பஞ் சம்பவித்ததனாலன்றோ நமது பெயரைச் சொல்லிக்கூவினார், அவர் குரலோசையை யான்கேட்டேனே! அவர்க்கு நேர்ந்ததுன்பமின்னதென்றறியேனே! யானோ பெண்பால், என்செய்யமாட்டு வேன், நீ விரைவிற்சென்று உனது தமையனுக்குற்ற துன்பத்தைத்தவிர்த்து வரவேண்டுமென்று கையைநெரித்துக்கொண்டு புலம்பினார். அவ்வாறு புலம்

புவதைக்கண்ட இளையபெருமாள் அவள் சோகத்தை நீக்கவேண்டுமென்று கருதி விதேகராஜன் அரியதவத்துதித்த மகளாகிய அன்னாய்! நீர் வீணே மனங்கவலவேண்டாம், யானைக்கூட்டத்தையொத்த அரக்கராற் சிங்கவேறனைய என்தமையனாருக்குத்தினையளவும் துன்பநேராதே, அவராற்றலை நானறிவேனே, இந்திரன்முதலியதேவர்களும் திக்குப்பாலகரும் ஓரோகாலத்தில் அவருடன்போர்புரியினும் அவர் வெவ்வியகைக்கணையால் முடிந்தேவிடுவரன்றோ! நீர் அஞ்சவேண்டாம் என்றுகூறியதைக்கேட்ட சானகியார், பேரிடியுண்டநாகம்போல் வெருக்கொண்டு ஐய, நீ யிப்போதெடுத்துக்கூறியது நியாயமன்றே! "யானைக்குமடிசரக்கும்" என்னும் பழமொழியேபோல் யாவரும் இன்பத்துன்பமிரண்டினையுமனுபவிப்பது இயற்கையே! அதை நீ யெவ்வளவுமெண்ணாமலே இன்னுமிங்கிருப்பது மழகாமோ? என்னைக்கவரவேண்டியே நீயென்னை விட்டகலாதிருக்கின்றனையல்லதுவேறல்லவே, உனது தமையனாரிறந்தாலும் உன்னையான்·கருதுவனோ, வன்னெஞ்சனே, நீ இவ்வளவுகடினசித்தனேயோ! அந்தோ! அந்தோ! யான் எவ்வளவாய் எடுத்துரைத்தாலும் கேளாமலே இங்கிருப்பதைநோக்கினால் அருளிலாவரக்கரால் உனதுதமையனாரிறந்தால்எல்லாமுன் கைவசப்படுத்திக்கொள்ளலா மென்றெண்ணி யிருப்பதாகவேதோன்றுகின்றதே, நீ உண்மையாய் உனது தமையனார்மேலன்புகொண்டு திருவயோத்தியை விட்டிங்கு வந்தவனேயானால் உனது தமையனுக் காபத்துநேரிட்ட காலத்திலிவ்வாறிருப்பையோ! உலகவர்புகழத்தமையனார்மேற்பிரிவாற்றாமையுடையவனேபோலநடித்திங்கு வந்தாயேயல்லாமல் வேறில்லையென்று உனது செய்கையால் தெற்றெனவிளங்குகின்றதே, அந்தோ! என் கணவருக்கென்ன விபத்துநேரிட்டதோ அறியேனே! என்று தன் அழகிய கயல்போன்றகண்ணினின்று முத்தேபோல் நீருகுத்துக்கோவெனக்கதறியழுது நின்றார். இளைய பெருமாளோ தன்னழகியகரத்தைச் சென்னிமேற்கூப்பி இதோ, நீரிவ்வாறு கூறுவதழகன்று, என்தமையன்கட்டளைப்படி உம்மைக்காவல்புரிந்திருந்தேன், அவராற்றலையறியாத நீர் மனம்வருந்தவேண்டுமேயல்லாமல் நான்ஒருக்காலும் மனம் வருந்தேன்; பெண்புத்தியையேற்று நடக்குமாடவர் அறிவிற் சிறந்தாரேயல்லர்; ஆயினும், நீர் கூறத்தகாத ஒருமொழிகூறியே பழிசுமத்தினீராதலால் இப்போதே சிராமபிரானைத் தேடிச்செல்கின்றேன்; உம்மை விட்டகன்றால் உயிர்களையே வருத்தித்தின்னு மரக்கரால் யாதேனுந்துன்ப நேருமென்றே எண்ணிப் பழிச்சொற் சுமந்தேனென்று கரத்தில்வில்லைத்தாங்கிச் சிராமபிரானைத்தேட நடந்தான்.

இவ்வாறு இளையபெருமாள் சென்றதைக்கண்ட இராவணன் மனங்களித்து சன்யாசிவேடந்தரித்து காவியுடையுடுத்தி, தலையிற்குடுமியுங் கையிற்குடையும், காலிற்பாதரக்ஷையும்பூண்டு இடதுதோளிற்றிரிதண்டமும், கமண்டலமும்விளங்கச் சானகியாரிருக்கும் பன்னசாலையிற்சென்று சானகியாரைக் கண்டுவியந்து இவரழகுக் கெவரைத்தானொப்பிடலாமென்றேமதித்து நான் மறையோதிச் சானகியார் பாதாதிகேசவரையிலுமுள்ள அங்கங்களின் இலக்கணத்தையுமுற்றுநோக்கிக் காமப்பித்தேறி இவரை விரைவிற்பற்றிச்செல்ல

வேண்டும்; நாம் அவ்வாறுசெய்யாமலிவருடன் சரசவார்த்தைகளாடிக்கொண் டிருந்தால் இவர் கணவன்வந்துவிடுவான், பின் நாம்கொண்ட காமநோய் விரைவில் தணியாதென்றுகருதி மிக்கவலியமைந்த பத்துக்கைகள்படைத்த பேராதரவான்மாந்தளிர்போன்ற சானகியாரது மெல்லியதேகம்வாட இடது கரத்தால் தேனுண்ணும் வண்டுகள்மொய்க்கின்ற குழலைப்பற்றி வாழைத்தண் டின் குருத்தையொத்த தொடையை வலதுகையாற்பற்றியெடுத்துத் தனக்கு வரும்கேட்டையுணராமலே தேரிலிருத்தினன். இருபதுபுயமும் பத்துத்தலை யும் நீண்ட தந்தங்களும் கோரரூபமும் கண்டவர் இறக்குந்தன்மையுமுடைய இராவணன் செய்கையைக்கண்ட அவ்வன தேவதைகளும் உள்ள நடுநடுங்கி இவனையெதிர்த்தால் கொன்றேவிடுவனென்று திசைதொறுமோட்டெடுத்தன. சானகியாரோ அளவிலாததுயரங்கொண்டு தன்மனத்தில் யாரையுநினையாமல் தன் பத்தாவையே நினைத்து இராமராமவென்று பெருங்குரலிட்டழுதாள். அறத்தையே பகைத்துநிற்கு மிராவணனே காணுதற்கரிய இப்பெண்மணி நம் மிடமகப்பட்டுக்கொண்டாள், இனிகண்ணியிலகப்பட்டபறவை மீண்டும் அதி னின்று தப்பித்தோடாததுபோல் இப்பெண்ணாகிய வன்னம் நமதுவலையிற்சிக் கிக்கொண்டாள், இனிநமதுமனோபீஷ்டம் நிறைவேறினதென்றுவகைகொண்டு தன்தேரைமெல்லவேநடத்தினன். சானகியாரோ தன்னழகியகண்ணினின்றும் முத்தேபோல் நீரையுகுத்து, அடா வன்னெஞ்சுடைய இராவணா! நீயோமிக்க ஆற்றலுடைய என் கணவர்கைக்கு அற்பமாகிய புல்லேயாம், அவராற்றலை நீ நன்றாயறிந்தும் இறக்கவேண்டியே இவ்வற்பத்தொழிலை யேற்றனையேயல்லா மல்வேறல்ல, நீ யழிந்தேபோவையென்றுகடுமொழிகூறினர். அதைக்கேட்ட அரக்கன் புன்னகைசெய்து பெண்மணியே! உன் கணவனாற்றலையே யொரு பெரிதா யெண்ணிப் புகழ்ந்தனையே யல்லாமல் என்னாற்றலைக் கண்டாயில்லை யே! திரிவித வுலகத்துள்ளாரும் என்னைக்கண்டஞ்சுவரோ! நீ என்னையடை யப்பெற்ற பாக்கியத்தினுஞ் சிறந்த தொன்றில்லையென்றெண். என்கண்ணுக் கினியபெண்மணியே! இனி என்னால் நீ யடையப்போகும்பெரும்பாக்கியத்தை இன்னமும் யறிந்தாயில்லையே! என் கண்ணுக்கினியகனிரசமே! என் நாடும் பொக்கிஷமும் மற்ற பொருள்களும் உன்னதேயாகும், யானே உன்சொற் கடந்தே ஓர் காரியத்தையுஞ் செய்யத் துணியேன். அறிவிலாதவனும் வலி யிலாதவனுமாகிய உன்கணவனை நினைத்து நீயேன்வருந்துகின்றனை, உருத்தி ரனே மாலே யயனே இந்திரனே தேவர்களே மற்றயாவரேயாயினு மென்னை யெதிர்த்தாற் முப்புரம் பொடிபடுத்த முழுமுதற்கடவுளேபோல் என் கைக் கணையால் சாம்பராக்கிவிடுவேன். உன் கணவனுன்னை என்ன சுகத்தில்வைத் திருந்தான்? உண்ணு முணவு மில்லாமல் உன் பொன்போன்ற மேனிவாடக் காட்டில்விட்டுத் தனித்துச்சென்றானே! அக்கொடியவனை இன்னுநினைத்து வருந்தலாமோவென்று கூறுஞ் சொற்களைச் சானகியார் செவியிற்படப்பொரு மற் காட்டைநோக்கியே இவ்வாறு புலம்பலாயினர்.

தமையன்சொற்கடவாத போரில்வல்ல இளையவனே, இக்கொடியவரக் கனோ அஞ்சாநெஞ்சங்கொண் டென்னைப்பற்றிச்செல்வ ததியாதிருக்கின்றனை

யே, நீபறிந்திருந்தால் இவ்வரக்கன் சாம்பராய்விடுவானே, யானேகேட்டைத் தேடிக்கொண்டேனே! இனி என்செய்யவல்லேன், ஐயோ! இக்கொடியவரக் கன்கையினின்றும் எவ்வாறுயிர்பிழைப்பேன், இன்றன்றோகைகேசியெண்ண மீடேறிவிட்டது, குணக்கேடியெண்ணமே யீடேறிவிட்டதே! இவ்விருண்ட காட்டில் யாரையுங்காணேனே, இக்கொடிய அரக்கன் என்னைப்பற்றிச்செல் வதை என்கணவரெவ்வாறறிவர்? ஓ கோங்கமரங்களே! நீங்கள்சிராமபிரானைக் காணும்போதுஎன்னைக்கொடியஅரக்கனாகியஇராவணன்பற்றிச்சென்றானென் றறிவியுங்கோள். சோலைகள்சூழ்ந்த இவ்வனத்திலுள்ளதேவதைகளே! உமக்கு வந்தனஞ்செய்கின்றேன், எனக்குநேரிட்ட இவ்விபத்தை என்கணவருக்கறி விக்கவேண்டுகின்றேன். மதச்சுவட்டையுடைய யானைகாள்! புள்ளினங்காள்! நீங்களும் என் செய்தியை மறவாமற் சிராமபிரானுக்கறிவியுங்கள். அன்னங் களே! சாரசப்புட்களே! உமது இனியவோசையால் என்கணவருக்கு எனக்குற்ற விபத்தை யறிவிக்கவேண்டுகின்றேன். நீரவ்வாறு என்மேற்கிருபைகூர்ந்து என்னாசைக்கணவருக் கறிவிப்பிரேல் இவ்வரக்கனை ஓரிமையோளையில் முடி த்து என்னையுங்கைக்கொண்டுசெல்வாரென்று தன் கட்புலனுக்குத்தோற்றிய பல பறப்பன ஊர்வன நடப்பன தவழ்வனமுதலியவைகட்கெல்லாம்சொல்லி வாய்விட்டழுதுகொண்டிருக்கக்கொடிய அரக்கன் பெண்கள்நாயகமே, உனக் கியாதுகுறை நேரிட்டதென்றே கவலுகின்றனை, நீ யென்னையடையப்பெற்ற பாக்கியத்தினும் சிறந்ததொன்றுண்டோ? நீ சற்றும் வருந்தாமல் என்னுடன் இங்கிதவார்த்தையாடிக்கொண்டேஅஞ்சாமல்வாவென்றுபுன்முறுவல்செய்து தேரைச்சற்று விரைவாகச்செலுத்தினன். இவ்வாறவன் செலுத்துகையில் ஓர் மராமரத்திற் சடாயு சயனித்திருக்கக்கண்டு சானகியார் கோவெனக்கதறி யழுது சடாயுவே! வன்னெஞ்சனாகிய அரக்கன் என்னைப்பற்றிச்செல்கின் றானே! என்கணவரை நீரறியாதாரோ! ஐயோ இங்கும்மைவிட வேறு துணைவரையுங்காணேனே, உமது நீண்டசிறகாலும் மலைகளையும் பொடியாக்க வல்ல நீண்ட நாசியாலும் நகத்தாலும் இவ்வரக்கனைமுடித்து இவனிலிருந்து மென்னை மீட்க வேண்டுகின்றேன். அந்தோ! இவன் மிக்க வலிபெற்றவ னாயிற்றே, பத்துத்தலையும் இருபது தோள்களும்பெற்றவனா யிருக்கின்றானே! இவனை முடிக்க உம்மாலாகுங்காரியமல்லவே; என்செய்வேன்! என் புத்தி யீனத்தால் இளையபெருமாளையு மனுப்பிவிட்டுத் துன்பத்தையே தேடிக்கொ ண்டேனே யென்றரற்றுக்கூவினள். இவ்வாறு சானகியாரரற்றிய ஓசையைக் கேட்ட கழுகுகளுக்கரசனாகிய சடாயுதுயிலகன்று விழித்துத் தேர்செல்லக் கண்டு ஒப்பெனப்பறந்துவந்து இராவணன்தேரிற் சானகியாரிருக்கக்கண்டு திகைத்து நம்மிறைவன் பத்தினியை மோசமாக இவன்பற்றிச்செல்கின்றா னென்று கோபங்கொண்டு இராவணனைநோக்கி இராவணனே! இது உனக்கு நன்னடக்கையேயன்று, விட்டிற்பூச்சி விளக்கைவந்தடைந்து தன்னுயிர் நீப்பு தேபோலச் சிராமபிரானது வெவ்வியகணையால் நீ நீறாகவேண்டியே இவ்வ கைத்தொழிலையேற்றனை "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்னும் பழமொழியையும் எண்ணினையல்லை! உன் திருவும்படைகளத்தனையும்

நீயுமழிவதற்குக்காலநேர்ந்தது, நீ பிழைக்கவேண்டினல் கற்பிற்சிறந்தசீதையை விட்டுவிட்டோடிப்போய்விடு, இதுவே நீ பிழைக்குமார்க்கமென்று கூறிய தைக்கேட்டஇராவணன் கோபாகைகைத்துஅற்பவலியையுடையசடாயுவே! நீ கூறும் வார்த்தை மிக்க விந்தையினும் விந்தையே! எண்ணிலாக் காக்கைகள் கூடியிருப்பினும் ஓர் சிறியகல்லெறிந்தால் அக்கல்லுக்கஞ்சாமலும் பறவாமலுமிருக்குமோ? இதனலன்றோ பெரியாரும் "ஆயிரங்காக்கைக்கோர்கல்" என்றும் சொல்லியிருக்கிறார்கள்! நீயோ என்னுற்றலறியாய்போலும்! இந்திரனே பிரமனே தேவரோ மற்றயாவரோயாயினும் என்முன்னின்றேபோர்புரியாரென்றால் ஓர் மனிசனே என்னையெதிர்க்கவல்லவன். திரிவிதவுலகத்தவருமென்னை பொரோகாலத்தெதிர்த்தாலும்காக்கைக்கூட்டத்திற்கல்லெறிந்தால் அதுதிசைதோறுமோட்டெடுப்பதேபோல் என்கைக்கணையால் அத்தனைபேரையும் சிதறச்செய்வேனே, யான்யாவருக்கும் அஞ்சேன், இச்சீதையைக்கைக்கொண்டே செல்வேன், நீயுயிர்பிழைக்கும்வகையைத்தேடிச்செல் லென்று வெகுண்டுகூற, சானகியார் சடாயுவைநோக்கி ஐயா, சடாயுவே! இவனே வாணுளைப்போக்கிக் கொண்டவனே யாவான், நீர்விரைவிற்சென்றுஎன்கணவருக்கறிவியும், உம்மாலிவனை வெற்றியடைதல் சாத்தியமாகாதென்று முத்தேபோற் கண்ணீருகுத்துப் புலம்பினர்.

சடாயு கோபங்கொண்டு இராவணனே! பிறர்தாரத்தை விரும்புவது தகுதியேயல்ல! யானுனக்குத் தீமைசொல்வேனல்லேன், பின்னுல்வருங் கேட்டையோக்கிச் சீதையைவிடுத்துச்செல் என்றுகூற; இராவணன்கடுங் கோபங்கொண்டு சடாயுவை யெதிர்த்தான்; சடாயுவோ சற்றுமஞ்சாமலெதிர்த்துநிற்கக்கண்ட இராவணன்பலசாங்களையும்விடுத்துச் சானகியே! உனக்குத் துணையாகவந்த சடாயு மாண்டேபோனுனென்று ஆரவாரித்தான். கழுகுகட்கரசனுகிய சடாயுவோ அக்கணைகளைத் தன்னைப்பற்ற சிறகாற்றடுத்தொடித்துப் பின்னிடையாமல் தன்னிறகைவீசிக் காற்றையுண்டாக்கித் தன்விரலுகிராற்பீறி இரத்தவெள்ளமெங்கும் பெருகும்படிசெய்தான். அரக்கனதற்கஞ்சாமல் மீண்டும் நூறுகணைகளைத்தொடுத்துவிட அவைகளையும் தன்சிறகால் ஒடித்து மேலேஓய்யெனப்பறந்திழிந்து இராவணன்கவசகுண்டலங்களைச் சிறகாற்பொடித்துப்பொடிபடச்செய்து அவன்மனம்வருந்துமாறு குன்றைத்தகர்க்கும் நீண்ட வசிபோன்ற நாசியாற்குத்தி அவன் தேகமெங்கும் தொளையுண்டாக்கிச் சினங்கொண்டு அடாமூர்க்கா! இனியேனும் விட்டுவிடு, எமது சிராமபிரானறிந்தால் துன்பநேரும், நீபெற்ற வரமுங்குன்றும், நீபெற்ற ஆயுளுங்குறைந்துபோம், உன்கருத்துநிறைவேறவேமாட்டாது "மூடவன் கொம்புத்தேனுக் கிச்சிப்பதேபோல்" பயனடையாமற்போவையேயல்லது பயனடைவையென்பது கனவிற்களிப்பதையொக்குமென்று பல நீதிமொழிகளைச் சொல்லியுங் கேளானுய் வெவ்விய விடத்தைச்சொரிகின்ற கணையைப் பிரயோகித்தான். அக்கணை தன்மேல்வருமுன்னமே ஊழிகாலத்தடிக்கும் சூறுவளியேபோல் தன்னிறகால் காற்றையுண்டாக்கி யெதிர்நோக்கலும் கணைகள் பொடிப்பொடியாயின. சடாயுவும்அம்மட்டில்விடாமல் யானையூரும் மாவுத்தனேபோற் கரிய

நிறமுடைய இராவணன்மேல்நின்று அவனணிந்த மணிமுடியையும் குண்டலங்களையும் தன் நாசியால் பொடிப்பொடியாக்கிவில்லையுமொடித்துத்தேரையுமழித்து அரக்கனையும் படிமிசைவிழ்த்தினன். இராவணனோ சானகியாரை விடாமலிறுகப் பிடித்துக்கொண்டு இலாகவமாகக் கீழேயிழிந்து கையிலோர் கூரியவாளேந்திக்கொண் டெறிந்தான், அதனால் சடாயு சிறகுகளும் நீண்ட கால்களுந்துணிந்து வீழ்ந்தான். இதுகிடக்க;

குணத்திற்குன்றினும் பெரியதருமராசனே! பின்பு நடந்தவைகளை விரிவாயெடுத்துக்கூறப் பெருகுமாதலாற் சுருங்கச்சொல்லுகின்றேன். சடாயு அரக்கனாற் சிறகற்றுவிழ்ந்தபின், இராவணன் சானகியை விடாமற்பற்றி ஆகாயத்தெழும்பி இலங்கையைநோக்கிச்செல்கையில் சானகியாரணிந்திருந்த நறிய மலர்கள் உதிர்ந்தன, பல அணிகளும் கழன்றுவீழ்ந்தன. இராவணனும் விரைவிற் கூடவேண்டுமென்றேகருதி இலங்காபுரியையடைந்து அந்தப்புரஞ்சென்று ஒருன்னதமாளிகையிலிருத்தி அதற்குச் சிலவரக்கியரைக் காவலாகவைத்துவிட்டு அன்று உண்டாட்டயர்ந்து காமத்தீக்கொளுத்தத் தரியானாய்ச் சானகியிருக்கும் அந்தப்புரத்தில்வந்து அவளழகிய கரத்தைப்பற்றி யழைத்துக்கொண்டு மற்றோருன்னதச்சாலையிற்சென்று சீதா! உன்கணவனோ இனிஎன்னையெதிர்த்து வெற்றிபடைத்தேஉன்னைக்கொண்டுசெல்வானென்றெண்ணவேண்டாம்; எனக்கோ எண்ணிலடங்காச்சேனைவீரர்களிருக்கின்றார்கள். குபேரனினுமெண்மடங் கதிகமான செல்வத்தையும் பெற்றிருக்கின்றேன். உன் கணவனோ உண்ண வுணவில்லாமல் உடுக்க ஆடையில்லாமல் மரவுரியு மான்றோலுமுடுத்து மூப்புப் பருவத்தைப்பெற்று இவ்வகை உன்னதமான அரண்மனைகளில்லாமற் புல்லாற்சமைத்த குடிசையிற்றுயில்கின்றானே. நீயுமிந்நாள் வரையும் அத்துன்பத்தையே யனுபவித்துவந்தாயே! இன்று அத்துன்பத்தினின்றுமகன்று இந்திரனுமடைதற்கரிய போகபாக்கியத்தை யடையப்பெற்றனை; ஆதலால் இனி என்னைநினைக்கத்தடையென்ன? பெண்ணருங்கலமே! யானோ உன் கண்வலையிற்சிக்கினேன். என்சொற்கடவாமல் என்னைக்கூடிக்களிக்கச்செய்ய வேண்டுகிறேனென்று பல சரசவார்த்தைகளாடினான். சானகியாரோ அதற்கொன்றுமுரையாமல் தலைசாய்த்துக்கொண்டிருப்பதைக்கண்ட இராவணன் பஞ்சினுமெல்லிய பாதத்தையுடைய வஞ்சியே! என்னழகிய முகத்தைப் பார், என்னைச்சேரும் வகையைத்தேடு. என்னைச்சுடும் காமத்தீயை உன்பவளம்போன்றவாய்திறந்து நல்வார்த்தைகூறித் தணிப்பாயாகவென்று இவ்வகையானகொடுஞ்சொற்கூறியதைக்கேட்ட சானகியார்உள்ளநொந்துஇவன்நம்மை என்செய்ய வல்லான், இவனிட்டத்துக்கிணங்காவிட்டால் நம்முயிரைத்தானே போக்கப்போகின்றான், இவன் முகத்தை நோக்கி நாமொன்றும் வசனிக்கலாகாதென்று அங்குள்ள ஓர் துரும்பையெடுத்துத்தன்கரத்திற்பற்றி அதை நோக்கி இவ்வாறு சொல்வாராயினர். நீயோதயரத மகாராஜனுடையமூத்த குமாரனாகிய சிராமபிரானில்லாத சமயம்பார்த்தே என்னைக் கவர்ந்தனையே, இச்செய்கை விரருக்கடுத்ததோயன்றே, அவனிருக்குஞ் சமயத்திலென்னைப் பற்றுவையேயானால் அக்கணமே தென்றிசையிற் குடிபுகுந்தேயிருப்பை. ஆயி

னும் இன்னுமவன்கையினின்றும் பிழைத்தவனேயல்லனென்றறி என்றுசொல்லிவிட்டு அரக்கியரை இராவண னழைப்பித்து, அவர்களைநோக்கிநீங்கள் இப்பெண்மணியை நமது அசோகவனத்து நடுவிலிருத்திக் கொடியசொற்களால் இவள்மன மிணங்குமாறுசெய்து சதுர்விதஉபாயத்தாலே என்மேல் காமுறும்படிச் செய்யவேண்டுமென்று கட்டளையிட்டுத் தன்னிருக்கை சென்றான். இராவணன் பணித்தவாறே அரக்கியரும் சானகியாரை அழைத்துச்சென்று அசோகவனத்திருத்தினார்கள். இதுகிடக்க;

யாவும்வல்ல சிராமபிரான் மாயமானாகவந்த மாரீசனைமுடித்துச் சீதையிருக்கு மாச்சிரமத்தைநோக்கி வருகையில் ஓர் நரி தன்முன்வந்து ஊளையிடக்கண்ட காகுத்தவம்சோத்தரன் மாரீசனோ நமது கணையால்நொந்து உயிர்விடும்போதாற்றிய ஓசையைக்கேட்டு சீதை நமக்கு அரக்கரால் யாதோ விபத்து நேரிட்டதென்றெண்ணி நாடும்பொருட்டு இளையவனை யனுப்பிவிட்டுத் தன்னந்தனியே யிருப்பாளாகலின் அவளை அரக்கர்பற்றிச்சென்றனரோ, அல்லது மற்றேதேனும் சூழ்ச்சியால் இருவரையும் கொன்றனரோ? யாது மடியேனே, இத்துச்சகுனங்காணக் காரணமென்னோவென்று மனம்வருந்தி நின்று தன்னிருக்கைநோக்கிக் கடுகிவருகையில் இளையபெருமாளெதிர்ப்படக் கண்டு இலக்ஷ்மணா! அரக்கர் உனக்கென்னகேட்டை விளைத்தனர், விரைவிலறிவி, சகுனம் நன்றாகக்காணப்படவில்லையே யென்றுகேட்க, அதற்கிளையபெருமாள் அண்ணா! உமக்கு அரக்கரால் விபத்துநேரிட்டதென் றென்னை யனுப்பினார். அதற்கும்மைத் தேடிக்கொண்டு வந்தேனென்றான். சிராமபிரான் இது அரக்கர்செய்த சூழ்ச்சியேயென்று இளையபெருமாளுக்கறிவித்து இருவரும்சானகியாரிருக்கும் பன்னசாலையைவந்தடைந்துபார்க்க, அவரைக்காணாமல்வருந்தி பின்பு நாற்புறமும் தேடிச்செல்கையில் சடாயு விழுந்துகிடப்பதையும் தேர்களும் கணைகளும் தூணீரங்களும் ஒடிந்துகிடப்பதைக்கண்டு சிராமபிரான் தம்பீ இலக்ஷ்மணா! இங்கிருப்பதைப்பார்! யாரோ ஓரரக்கன் சீதையைப்பற்றிச்செல்கையில் நமதுபிதாவுக்கும்அவனுக்கும்யுத்தமுண்டாய்த்தேர்களும் படைகளும் ஒடிந்திருக்கின்றன. பின்னும் வரைபோன்ற தேகமுடைய அவ்வரக்கன் நமது தந்தையுடன் யுத்தஞ்செய்துகொண்டிருக்கின்றனன்போலும் என்று தேடிச்செல்கையில் அங்கே யிருந்த சடாயு சிராமபிரானுக்குச் சானகியாரை இராவணன்கைக்கொண்டு நடந்த விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாகத் தெரிவித்ததல்லாம லுனக்கறிவித்தபின் னிறக்கவேண்டுமென்றெண்ணியிருந்தேன் இறைவனருளால் என்னெண்ண மீடேறியது; இனியென்னுயிர் நீங்கும், நற்குணமு நன்னெறியுமுடைய சிராமபிரானே அவ்வரக்கன் சீதையைப்பற்றியமுகூர்த்தம் "விந்தம்" என்னும் பெயருடையது! அம்முகூர்த்தத்திற் சென்றபொருள் அகப்படும் அஞ்சவேண்டாம், அவ்வரக்கன் விச்சிரவசுமுனிவன்புதல்வன் குபேரனுக்குத் தம்பி என்றுகூறி சிராமராமவென்றுயிர்விட்டனன்.

இவ்வாறு சடாயு உயிர்நீத்தபின் இருவரும் அவன்மேல்வீழ்ந்தழுது தம்பீ நமது தாதையாகிய சடாயுவுக்குயிர்நீங்கியதே! நமக்காக இராவணனுடன்

நெடும்போர்புரிந்தானே! என்றுவருந்தி நாமிவனுக்குரிமைக்கடன் செய்ய வேண்டும், காட்டத்தாற் கொளுத்திவிடவே, காட்டத்தைச் சேகரியென்று ஆஞ்ஞைசெய்து இளையவன் சேகரித்த காட்டத்தில்வைத்து நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டு அதைவிட்டகன்று இருவரும் காட்டிற்புகுந்தார்கள்.

இவ்வாறு சடாயுவை யடக்கஞ்செய்தபின் வில்லுமம்புப்புட்டிலுந்தாங்கி மேற்குத்திசையையேநோக்கி இருண்ட காட்டிற்புகுந்துஅங்குள்ளஆச்சிரம மடைந்து அவ்வனமெங்குஞ் சானகியைத்தேடியுங்காணுமல் மனம்வருந்தி மூன்றுகுரோசதூரமாகிய அவ்வனத்தைக்கடந்துகிழக்குநோக்கியே மலைச்சிகரத்தில் இருள்சூழ்ந்துகொண்ட இரவில் இராமனே துயில்கொண்டனன். அவ்வாறுதுயில்கொண்ட இரகுநாயகன் இளையவனைநோக்கி நீர் வேட்கையுடையனுயிருக்கிறேன், நீர் வேண்டுமென்ன; இளையவன் கொணரச்செல்கையில் அயோமுகியென்னும் பெயருள்ள கொடியவரக்கியோ எதிர்ப்பட்டு இளையவனை மோகனமந்திரபலத்தால் கைக்கொண்டுசெல்ல, இளையவன் இவள் சூர்ப்பநகையோடொப்பானவளென்று மூக்கு முலையும் சுரிகைகொண்டரிந்தனர். இரகுவீரன் தம்பிசென்றுநெடுநேரமாகையால் வருந்தித்தேடியுங்காணுமலிளையவனைக்கூவியழைக்க, இதோவந்தேனென்று தம்பி தன்னைத்தொழத்தாசரதி தம்பியைக்கட்டித்தழுவிக்கொண்டு சானகியைத்தேடிக்கொண்டேகவந்தனைக் கண்டனர். கவந்தனே இவ்விருவரையும்தனக்குணவாகவெண்ணிக் கைப்பற்ற இராமபிரான் இளையவனைநோக்கி, இது என்ன? அவ்வரக்கன் வாழ்கின்ற கோட்டையோ! யாதோ! வென்றுசொல்லி நின்றுன், அதைக்கேட்ட இளைய பெருமாள் இதுபூதமேயல்லது வேறன்றென்றுன். சிராமபிரானே சானகியும் பிரிந்தாள், எந்தையுமிறந்துபட்டான், பழிசுமந்துறிரிய மனமில்லேன். இதற்குணவாவதே துணிவென்றுசொல்ல, அதைக்கேட்ட இளையபெருமாளோ என் தாயாகிய சுமித்திரை உனக்கேவலையேசெய்தொழுகவேண்டுமென்றும், உனக்குத்துன்பநேர்ந்ததாயின் உனக்குமுன்னே நான் முடியவேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கின்றுள். நீயோ சொல்லுமிடத்து எப்பொருளு முடிந்துபோய் வேதஞ்சொல்லும் தேவரும்முடியும்காலத்து முடியாதிருப்பவன், நீயா யானைகளைத்தின்றுபிழைக்கும் பூதத்தால்மாண்டுபோவாய், போரிலெதிர்ந்து சானகியார் வருந்தாவண்ணம் மீட்டானென்னும் கீர்த்தியையடையாமற் போரில் வெல்லமாட்டாமையால் இறந்தானென்றபின்னரும் மேலும் வசையுளதோ! இதைக்கொன்று விடுவதே சரியென்று எடுத்துச்சொல்ல, சிராமபிரானும் முந்தி அதன்வாய்ப்பெய்துவிடச்செய்தற்கு முந்த, இளையவனும் அவனுக்கு முந்தவே; தேவர்களும் இவர்கள் துன்பங்கண்டே யழுதனர். கவந்தன் தன் னருகேவந்தவரையும் அவர்களை நீங்கள் யாரென்றுசொல்ல, அதைக்கண்டுருத்துநின்றனர். இவர்களை விழுங்குவதாகத்துணிய வெழுந்த அவனிரண்டு தோள்களையும் இருவரும் தங்கள்கைவாளாலரிந்தனர்? அவர்கள் தீண்டியதற் பவித்திரனுகித் தெய்வவுருப்பெற்று நின்றுன். அவனைச் சிராமபிரான் இவன் யாரென்றுகேட்க, தன்வரலாற்றை முழுது முரைத்துத் தேவரீர்

இவ்வழியே சென்று சவரியைக்கண்டு அவள் சொன்னவழியே சென்று இரிசிய சிருங்கவரையை யணுகிச் சுக்கிரீவனை நட்புக்கொண்டு சானகியாரைத் தேடித் திரிவதே கடனென்று விடைபெற்றுச் சென்றான். அவ்வாறே இளைய பெருமாளுடன் சீராமபிரான் சவரியைக்கண்டனர். அவள்செய்த விருந்தைச் சீராமபிரானேற்றுத் தம்பியுடன் பம்பையைக்கண்டு வாயு புத்திரனாகிய அனுமானால் மகாராஜாவாகிய சுக்கிரீவனை நட்புக்கொண்டு மராமரமெய்து வாலியைக்கொன்று அங்கதனுக்கு இளவரசுபட்டமும் சுக்கிரீவனுக்கு அரசுங்கொடுத்து மாரிகாலமாகையால் தான்மதங்காச்சிரமத்தில் இனிதுவீற்றிருந்தனன், அது கழியவே தம்பியை யனுப்பிச் சுக்கிரீவனுடைய கருத்தையறிந்து வரக்கட்டளையிட அவனும் அவ்வாறே சென்றறிவித்தான். சுக்கிரீவனும் தன் சேனையுடன் சீராமனைக்கண்டு வணங்கி நாற்புறத்தும் சேனையைவிட்டு நாடக் கட்டளையிட்டான். அவ்வாறே சென்றவருள் தென்றிசைக்குச் சாம்புவந்தன், நீலன், அங்கதன், அனுமான்என்பவர் அனுப்பப்பட்டனர். இறைவனோ தென்றிசை நாடிச்செல்லும் அனுமானிடத்தே தான் சானகியாருக்கடையாளமாகத் திருவாழியை யளித்தான்; இவர்கள் காடு மலை வனம் வனாந்திரங்களைக்கடந்து தென்றிசைக்கடற்கரையை யடைந்து ஒவ்வொருவரும் ஆலோசிக்கலாயினர். நாம் என்செய்வது! இவ்வளவுதூரந்திரிந்துதேடியும் பிராட்டியைக்காணோமே! ஆகையால் சடாயுவைப்போல் இறப்பதே நலமென்று சொல்லிக்கொண்டிருக்க, அதைக்கேட்டு அச்சடாயுவுக்கு முன்னவனாகிய சம்பாதியும் அவர்களை அணுகிசடாயு இறந்தமையைக்கேட்டுவருந்தி அவர்களையெல்லாம் இராமநாம பாராயணஞ் செய்யக் கேட்டுக்கொள்ள, அவர்களு மவ்வாறே செய்தனர். அச்சம்பாதியினது இறகுகளும் வளர்ந்தோங்கின, பின்னர் சம்பாதி சானகியாரோ இலங்கையில் அசோகவனத்தில் பல அரக்கர் நடுவில் புலிக்கூட்டத்தினடுவே மானிருப்பதேபோலத் துன்புறும் யாக்கையுடன் எழுந்தருளியிருந்தார். அவரைக்கடல் கடந்துகண்டு செய்தியை இறைவனுக்குத்தெரிவியுங்கோள், நான் சடாயுமுன்பிறந்த சம்பாதியென்று தெரிவித்து விடைபெற்றுச் சென்றான்.

அதைக்கேட்ட வானரத்தலைவர் நால்வரும் நாமென்செய்வது? இக்கடலோ இலட்சம் யோசனை விஸ்தீரணமிருக்கின்றதே! இதை எப்படிகடப்பது, இது நம்மாலசாத்தியமான காரியமன்றோவென்று வருத்தப்பட்டுக்கொண்டு தம்மில் ஒருவரை யொருவர் வினவிய காலத்தில் நீலனோ நான்கடப்பதருமையென்றான், சாம்புவனோ நான் உலகமுண்டபெருவாயன் உலகமளந்த அக்காலத்தில் நான் என்வல்லபமிழந்தேன், என்னாற்கடப்பதாகாதென்றான். இளவரசாகிய அங்கதப்பெருமானோ நானிக்கடலைக் கடப்பேன், மீண்டும்வர வலி பெற்றிலேனென்றான். இவ்வாறு ஒருவர்க் கொருவர் சொல்லிக் கொள்கையில் அனுமானோ ஒன்றுஞ்சொல்லாமலே யிருந்தனன்.

பின்னும் சாம்புவந்தன் வாயுகுமாரனாகிய அனுமான் தானொன்றும்பேசாதிருப்பதுகண்டு அங்கதப்பெருமானையும் எழுபத்திரண்டுவெள்ளமாகியவானர

சேனைகட்குத்தலைவனாகிய நீலனையுநோக்கி இவ்வனுமானன்றோ இரகுநாயக
னால் சானகியார்கான அடையாளமாகத் திருவாழிபெற்றவன், பேராற்றல்
பெற்றுள்ளவன், பிறவிக்கடலுடனே யெழுகடலையும் கடக்கவல்லவன், மும்
மைப்பெருந்தேவரையு மொத்தவன், வாலியைக்கொல்ல வகைதேடினவன்,
சூரியனிடத்தே ஐந்திரமுணர்ந்த அருங்கடல் போன்றவன், இவனையல்லது
இக்கடல்கடந்து மீண்டு நமக்குச் சானகியார்செய்தி தெரிவிப்பாரிலரென்று
புகழ்ந்தனன். அனுமானே நும்பணியிதாயின்நான்உமதுபெருங்கருணையாலும்
இரகுவீரனது சேவடித்தியானபலத்தாலும் இக்கருங்கடலைக்கடந்து பிராட்டி
யாரது செய்தியை யறிந்துவருவேனென்று விடைபெற்று மகேந்திரமலையினி
ன்றுவாவ, மைநாகமலையெதிர்ந்துவந்தது. அதற்குநான்மீளுங்காலையில் விருந்
தாவேனென்று இன்னுரைகூறிச் சுரசையென்பவள் தன்வலிமையுணரத்தேவ
ரால்விரும்பிவிடுக்க, அவள்வாய்வழிபுகுந்து மீண்டு, அங்காரதாரையென்பவ
ளைக்கொன்றுசிதைத்து இலங்கணியையறைந்து கடந்தேயிலங்கைமுழுதுஞ்சுற்
றித்திரிந்துந் தேவியைக்காணாமல் அசோகவனமேநாடிவந்தான். அத்தருணத்
தேசானகியிருந்தசூழலைநோக்கி இராவணன்வர அவனைத்துரும்பேஅகலநில்ல
டாவென்றுரைத்ததைக் கேட்டு மகிழ்வெய்திநின்றான். சானகியார் வருந்து
வதையறிந்ததிரிசடையென்பவள்நானே உமதுநாயகன் தூதுவருமென்றுசொ
ல்லியிருந்தேனே! நீரினியஞ்சவேண்டாமென்று மனந்தேற்றவும் தெளியாராய்
வருந்திநின்றனர். அனுமானே அரக்கியரெல்லாம் துயில்கொள்ளும்படி மனு
வொன்றை யுச்சரித்து நிற்க, அவர்களெல்லாம் துஞ்சினரோபோலுறக்கங்
கொண்டனர். சானகியாரோ நாமிறந்துபடுதலே நன்றெனத்துணிந்து மாதவிப்
பொதும்பரையேநோக்கிநடந்தனர். அதைக்கண்டஅனுமான் இதுதான்தகுந்த
சமயமென்றே யெண்ணித் தனித்துயிர்விடத்துணிந்த பிராட்டியைவணங்கி
இராமராமவென்றுச்சரித்துக்கொண்டு அயோத்தியராண்டகையேவிய தூதன்
யான், என்பேரனுமானென்றான். அதைக்கேட்டசானகியோ வருந்திநான் என்
செய்வது, இது மாயையில்வல்ல வரக்கர்மாயமோ அல்லது யாதோவென்று
திகைத்து, யாரேனுமாக நம்முயிர் நீக்கவெண்ணிய தருணத்தில் நம் மாருயிர்க்
கன்பன் றிருநாமத்தைக்கூவிப்பிழைப்பித்தானாகையால் இவனையரக்கனாகவே
துணியத்தக்கதல்லவென்றெண்ணினார். அனுமானே அச்சானகியார் பிரிந்த
னர் நிகழ்ந்தசரிதமுழுது மெடுத்துச்சொல்லியதுவுமன்றி இறைவனது திரு
மேனியினழகனைத்துஞ்சொல்லி இராகவனது திருநாமமெழுதியதிருவாழியை
அவரது செந்தாமரைமலர்போன்றகையிற்கொடுத்தான். அதைவாங்கி இறை
வனையடைந்ததுபோற் களிப்பெய்தி நின்றதையறிந்து சானகியாருக்குத்தான்
சுக்கிரீவனோடு நட்புக்கொண்டு தன்னைப்போலும்பலவானரங்களைத் தூதனுப்
பியதும் பின் இறைவனிருந்தவிருப்புந்தெரிவித்தான். சானகியோ நீமிகச்சிறிய
வுருவை! இக்கருங்கடலை எப்படிதாண்டினாய்! எண்சித்திபெற்றோ தாண்டினா
யோ! தவத்தாலாயதோவென்றுகேட்க, அனுமான் தன்னுருக்காட்டப்பிராட்
டியோநாளஞ்சினேன்,இப்பேருருவையடக்குவாயென்றுகட்டளையிட்டுப் பின்
னும் அனுமானைநோக்கி இற்றைநாள்போலு மென்றுமிருத்தி யென்றுவாழ்த்தி

இரகுவீரனுக்கடையாளமாகத்தூசினற்பொதிந்திருந்தசூடாமணியைக்கொடுத்தார். அதைப்பெற்றுக்கொண்டுவிடைபெற்று அசோகவனமழிக்கத்தொடங்கி மரங்களை வேருடன்பிடுங்கியெறிய இராவணன்கிங்கரரையனுப்ப அவர்களைக்கொன்றுகளைந்தான், இதைக்கண்ட தசக்கிரீவன் சம்புமாலியைச் சேனையுடனனுப்ப அவர்களையுங்கொன்றான், பின்பு பஞ்சசேனாபதிகளையனுப்ப அவர்களையும்கொன்று குவித்தான்; அதைக்கேட்டுக்கோபங்கொண்டுநின்ற இராவணன் அட்சகுமாரனைப் போர்க்கனுப்ப அவனையுந் தோரணகம்பத்திருந்தே தேய்த்துக்கொன்றுநின்றான். அதைக்கண்ட தூதரோடி இராவணனுக்கறிவித்தனர். இராவணனே புத்திரசோகத்தால் வருந்துவதைக்கண்ட இந்திரசித்து நானவனைக்கொண்டுவருகிறேனென்று நால்வகைச்சேனையுடன்சென்று போர்செய்து பிரமாத்திரத்தாற் பிணித்துக்கொண்டுவந் தருகில்விட்டனன். இராவணனே கொல்லத்துணிந்துநின்றதைக்கண்டு தூதுவனைக்கொல்லுதல் மரபன்றென நீதிகள்கூறி விபீஷணாழ்வான் தடுக்க, இராவணனும் மந்திரத்தாற்றடையுண்ட நாகமேபோற்கோபமடங்கி அவன் வாலில் அந்நகரத்திலுள்ள ஆடைகளெல்லாம்சுற்றி யெண்ணெய்தோய்த்துத் தீக்கொளுத்தக்கட்டளையிட்டான், அங்கேநின்றஏவலாளரும் அவ்வாறேசெய்தனர், பின்பு அனுமான் அந்நகரத்தினெம்மருங்குஞ்சென்று தீமூட்டவே, அத்தீயெங்கும் பற்றிக்கொண்டது, அத்தீ சானகியிருந்த சூழலன்றி யெங்கும்பற்றிக்கொள்ளவே; அநேகர்மடிந்தனர். இராவணன் அவளைப் புட்பகவிமானத்திலேற்றிக்கொண்டு ஏழுநாள்வரையிலும் ஆகாயத்திலேயே யிருந்தான். பின்னர் தீயவிந்தபோதே விச்சுவகர்மாவைக்கொண்டு மீளவும் புதுக்கிக்கொண்டு நகரிற்பிரவேசித்தான். அனுமானே கடலை மீண்டுங் கடக்கத்துணிந்துசானகியாரிருந்ததிசையைநோக்கிவணங்கிக் கடல்கடந்து அங்கதப்பெருமான்முதலானோரையழைத்துக்கொண்டு தன்வருகையை நாடியிருந்த மகாராஜாவுக்கும் இராமலட்சுமணர்களுக்குந் தான்வந்தமையையறிவிக்குமாறு வானரருடன்ததிமுகன் வசத்திருந்த மதுவனத்தையழித்தனன்; அத்ததிமுகன் அனுமான்முதலானோர்வந்தசெய்தியையறிவிக்க சுக்ரீவன்கேட்டுக்கொண்டிருக்குஞ்சமையத்தில் கண்டேன்கண்டேன்சீதையை! என்று அனுமான் சானகியினது சூடாமணியைகாட்டி மனமகிழ்வித்தான்.

அதைச்சீராமபிரான் கரத்தில்வாங்கி ஆனந்தபரவசனாகி அநுமானுக்குப் பலவாசிகூறினன். சானகியாரிருக்கு மிடத்தையறிந்தசுக்கிரீவன் எண்ணிலா வானரசேனைகளை யழைத்துக்கொண்டுசீராமபிரானுடனும் இளையவனுடனும் மற்றையோரும் புறப்பட்டுவரத் தென்சமுத்திரக்கரையைவந்தடைந் திதைக்கடக்குமுபாய மியாதென்று சிந்தித்திருந்தனன். இதுகிடக்க; சானகியாரைவிடுத்துச் சுகித்துவாழும்படிநற்புத்திபோதித்த விபீஷணனை இராவணன்முடிக்கத் துணிகையில் அவன்கையினின்றும் தப்பித்துத் தன்மந்திரிமார்கள் நால்வரையு மழைத்துக்கொண்டு சீராமபிரானிருக்குமிடத்திற்குவந்து அவர்பாதங்களில் வீழ்ந்து சரணமடைந்தான். சீராமபிரானும் அவனுக்குப்பல ஆசிகூறி ஆதரித்தேன், நீசற்றுமஞ்சாதை இலங்காபுரிப்பட்டணமுன்னுடையதேயென்றுதன்னிடமிருத்திக்கொண்டான். பின்பு ஏழுநாள் புற்சயனத்திருந்தும் வரு

ணன்வாராமையைக்கண்ட சீராமபிரான் மிக்கசினங்கொண்டு ஆக்கினேயாஸ்திரமொன்றைத்தொடுக்க வருணன்ஓடோடியும்வந்து அவனைப்பணிந்துபோக இராகவன்கட்டளையின்படி வானரங்கள்தூக்கிவந்த கோடானுகோடிமராமரங்களையும் பர்வதங்களையும் சமுத்திரத்திலிடுவித்து நளன் அணையாகக்கட்டிமுடித்து இராமன்தாளில்வீழ்ந்து தேவரீர்கட்டளையின்படி அணைகட்டிமுடித்தேனென்றுசொல்ல அதைக்கேட்டபின்னர் வானரசேனைகளும் சீராமன்முதலிய யாவரும் இலங்காபுரியையடைந்தனர் ; வானரசேனைகளோ இராவணன் பூஞ்சோலைமுதலிய வனங்களை யழித்துக்கொண்டிருந்தன.

அரசர்க்கரசனாகிய யுதிட்டிரனே! வானரசேனை தன்னாட்டை யழிப்பதைக்கேட்ட இராவணன் சாரணரையேவி பார்த்துவரும்படியனுப்பஅவர்கள் வானரப்படைக்குட்பிரவேசித்த வகையையறிந்த விபீஷணன் அவர்களைப் பிடித்துவந்து சீராமனிடம்விட அவனோ இராவணன் பிழைக்கும்வகையைத் தேடிக்கொள்ளச்சொல்லுங்கோளென்றவர்க்கறிவித்து அனுப்பினான்,அவர்கள் பிழைத்தோமென்று இராவணனிடஞ்சென்று நிகழ்ந்தவற்றை யறிவித்தனர். இதைக்கேட்ட இராவணன் மனத்திற்சற்றுமதியாம லவமதித்தே யுத்தரகோபுரத்தின்மே லேறிக்கொண்டுபார்க்க, சுவேலமலைமேலேறி இலங்கையையும் இராவணனையும் பார்த்துக்கொண்டிருந்த சீராமலக்ஷ்மணர்களை இராவணனுக்குச் சாரணர்காட்டப் பார்த்துக்கொண்டிருக்கும்போது சூரிய குமாரனாகியசுக்கிரீவனுக்குவீராவேசந்தோன்றிஅவ்விடம்விட்டெழும்பி இராவணன்மேற்பாய்ந்து இருவரும் மல்யுத்தஞ்செய்து இராவணனணிந்திருந்த பத்துக்கிரீடங்களையும்பறித்துக்கொண்டு சுவேலமலையில்வந்துதோன்றிச் சீராமபிரானுடைய பாதங்களிலவைகளைவைத்து இராவணன்தலையை கொண்டுவந்தேனென்றான். அதைக்கேட்டயாவரும்நகைத்தனர். சுக்கிரீவன் தன்னந்தனியே சென்றதற்காக சீராமபிரான் சில ராசதர்மங்களை யவனுக்கெடுத்தோதி இவ்வாறுசெல்வது நீதியன்றென்று புத்திகூறினான். இதுகிடக்க; தயரததிருக்குமாரன் இராவணனிடத்தில் அங்கதனைத் தூதாகவனுப்ப அவ்வாறே அவன் சென்றறிவிக்க, அரக்கன்சினங்கொண்டு சீதையைவிடுவதில்லை; யுத்தத்திற்கு வரலாமென்று அவன்மேல் நூறுபிரவரக்கரைவிடுத்துக்கொலைசெய்யக்கற்பித்தான். அங்கதனோ அவர்களைநொடிப்போதி லோட்டெடுக்கும்படி யடித்துக் கொன்றுவிட்டு சீராமனிடத்தில்வந்தறிவித்தான். பின்பு இரகுகுலதிலகனும் இளையவனும் வில்லைவளைத்து குணத்தொனிசெய்து இலங்கைமதிலை இடித்தழிக்கும்படி வானரசேனைகட்குக்கற்பிக்க, வானரங்கள் இது எமக்கோர் பெருங்காரியமல்லவேயென்று மதின்மேற்பாய்ந்தழித்தன. இதைக்கண்ட இராவணன் தன்னைச்சூழ்ந்து ஆயுதபாணிகளாக இருநூறுவெள்ளஞ்சேனைகள்நெருங்கிவர, சீராமனோ இளையவன் சுக்கிரீவன் அனுமான் அங்கதன் விபீஷணன் சாம்புவந்தன் முதலியவர்களாகிய எழுபதுவெள்ளம் வானரப்படைகள் சூழ்ந்துநிற்க யுத்தஞ்செய்து இராக்கதர்சேனைகளை அதோகதி யாக்கினான். அரக்கர்களும் வானரப்படைகளிற்சிலவற்றை அதமாக்கினர். இவ்வாறு சேனைகள் நெடுநேரம் போர்செய்கையில் இராவணன்மேற் பாணவரு

ஷம்பொழிந்தான். இந்திரசித்து இளையவன்மேல் எண்ணிலாக் கணைகளைப் பொழிந்து குணத்தொனிசெய்தான்; இவ்வாறு இருதிறத்தார்க்கும் கொடியயுத்தநேர்ந்தது. வில்லில்வல்ல சீராமபிரான் இருநூறுவெள்ளஞ்சேனைகளையும் சூறுவளியிலகப்பட்ட சருகேபோற் பறக்கடித்து இராவணன்மேற் பாணவ்ருஷம்பொழிந்து நோகச்செய்தான். இராவணனே குறும்பாடேபோற்றலைசாய்த்துநின்றான்; அவனைத் தாசரதிநோக்கி முதனாள்யுத்தத்திலிக்கதியடைந்தனையே! இனியேனும் சீதையைக் கொண்டுவந்துவிட்டுப் பிழைக்குமார்க்கத்தைத்தேடிக்கொள் என்ன, இராவணனே நாளையுத்தத்திற்குவருகின்றேனென்றுசொல்ல நாவெழாமல் தன்னரண்மனைபோய்ச்சேர்ந்தான். இளையபெருமாளுடன்கடும்போர்செய்த இந்திரசித்தும் தேர்முதலியவைகளையிழந்து பாதசாரியாய்ப் பட்டணம்போய்ச்சேர்ந்தான். விபீஷணனே தன்மேலெதிர்த்த பிரகஸ்தனை இமையோரையில் முடித்தான். தூமக்கண்ணனென்பவனை அநுமான் கொன்றான். சீராமபிரானால் மொத்துண்ட இராவணன் பெருந்துயில்கொண்டிருக்கும் கும்பகர்ணனைவிழிக்கச்செய்து சீராமன்மேல் யுத்தத்துக்கேகென்றான். அதைக்கேட்ட கும்பகர்ணன் சீராமபிரானது ஆற்றல்முழுதுமெடுத்துக்கூறி நமது சுகத்தையிழக்கவேண்டினால் அவர்மேல் யுத்தத்துக்கேகவேண்டும்; அல்லாமற் சுகிக்கவேண்டின் சீதையைவிட்டுவிடுவதேநலமென்று பலவாறெடுத்துக்கூற, அதையுங்கேளாமல் யுத்தத்துக்கனுப்பினான். கும்பகர்ணனும்தேரோறியுத்தகளத்தில்வந்தான். விபீஷணன் இதோவருபவன் கும்பகர்ணனென்று இரவிகுலதிலகனுக்கறிவித்தான். அவ்விரவிகுலதிலகனே சீவகாருண்யத்தினாற் கும்பகர்ணனென்னைச்சரணடையச்சொல்லென்று விபீஷணனிடஞ்சொல்ல அவன் கும்பகர்ணனுக்கறிவிக்க அவனும் நான் என்னுயிருள்ளளவும் இராகவனைச்சரணடையேனென்றுவில்லைவளைத்துநாணேறிட்டுக் குணத்தொனிசெய்தான். வானரப்படைகள் அவன் தேர்மேலும் கொடிமேலுமேறி அதஞ்செய்தன. சுக்கிரீவனே கும்பகர்ணன்மேலெதிர்த்துச்சோனைமாரிபோற் பாணங்களைத்தொடுத்து அட்டகாசஞ்செய்தான்; கும்பகர்ணன்சினங்கொண்டு அவனைப்பிடித்துத் தன் தேர்க்காலிற் கட்டிக்கொண்டு சென்றான். அவ்வாறு செல்லும் மிக்கவாற்றலையுடைய கும்பகர்ணனை இளையபெருமாள் தன் கையிலுள்ளவில்லிற் சிலகணைகளைப்பூட்டிவிடுத்து அவன் தேரை அசையவொட்டாமற்செய்து மீண்டும் பத்துப்பாணங்களைப்பிரயோகித்தான், அக்கணை நன்றாய்த்தாக்கவும் திப்பிரமைகொண்டசைவற்றிருந்தான். அச்சமயத்திற் சுக்கிரீவன் கட்டையவிழ்த்துக்கொண்டு கும்பகர்ணன் செவியையும் நாசியையும் தன் பற்களால்கடித்துக்கவ்விக்கொண்டுவந்து சீராமனுக்கெதிரேயுமிழ்ந்துவணங்கிநின்றான். இரண்டுறுப்பும் பழுதுபட்ட கும்பகர்ணன் தன் நகர்க்குச்செல்லவெட்கி இளையவனுடன் நெடுநேரம்போர்செய்து அநேகமாயிரம் வானரசேனைகளைமாயவடித்தான். சேனைகள் மடியக்கண்ட சீராமபிரான் வில்லிற்பாணத்தைப்பிரயோகித்து அவனிரண்டுகால்களையு மறுத்துத்தள்ளினான். இவ்வாறு காலறுபடவே கீழேவீழ்ந்து குயவன் திகிரியேபோற்சுழன்று வானரப்படைகள் திசைதொறு மோட்டெடுக்கவடித்தான். சீராம

பிரான் அவனாற்றலுக்குமகிழ்ந்து ஓர் வெவ்வியகணையைவிடுத்து அவன் சிரத்தைக்கொய்தான்.

இவ்வாறு கும்பகர்ணன்முடிந்ததைச் சாரணராலறிந்த இராவணன் மூர்ச்சையடைந்தெழுந்து இந்திரசித்தைநோக்கி நீஉயிருடனிருந்தும் என்தம்பியையிழந்தேனேயென்றுகோவெனக் கதறியழுதான். இந்திரசித்து இராவணனுக்குத்தேறுதலானமொழிகளைச்சொல்லித் தானும் இராவணன் பிள்ளைகளையும் கும்பகர்ணன்பிள்ளைகளையும் எண்ணிலா அரக்கர்களையு மழைத்துக்கொண்டு யுத்தகளத்தில்வந்து இளையபெருமாளை எதிர்த்து அவர்விட்ட பிரமாஸ்திரத்துக்குப்பதில்நாகாஸ்திரத்தைவிடுத்து அதனால்அவரைக்கட்டினான், அவ்வாறு இளையவன்முதலியயாவரும் கட்டுப்பட்டுப் பூமியிற்கிடப்பதைக்கண்டு இந்திரசித்து இலங்கையைநோக்கி நடந்தான். இதையறிந்த கருடன் அப்போர்க்களமடைந்து தன்சிறகைவீச அதில் எழுந்தகாற்றினால் நாகபாசத்தாற்கட்டுண்டாரெல்லாருமெழுந்தனர். வானரசேனைகளாரவாரிக்க, இந்திரசித்து மறுநாள் போர்க்களங் குறுகி இளையவனோடெதிர்த்துப் போராடத் தான்போராடமுடியாமல்முடிவில் பிரமாத்திரத்தைவிட்டான். அதனால் இளையவன்முதலியோர் கட்டுண்டனர். உள்ளஞ்சோர்ந்துமெய்தடுமாறிய இந்திரசித்தோ இலங்கையைநோக்கிச்சென்றுநிகழ்ந்ததைத் தந்தைக்கறிவித்தான். இராவணன் சீதையிருக்குமசோகவனத்திற்சென்று சிராமனையும் இலக்ஷ்மணனையும்பிடித்துவந்ததேபோல் மாயையாற்காட்டவே, சானகியார் இனி என்னசெய்வதென்று கண்ணீர்விட்டுக்கதறியழுதுமூர்ச்சையடைந்தார். திரிசடையோ மூர்ச்சைதெளிவித்து உண்மையில் உன்கணவனைப்பிடித்துவந்ததல்லவென்றே தேற்றினாள். இதுநிற்க; அன்றிராத்திரி சாம்புவன்சொன்னசூழ்ச்சியால் அநுமான், சல்லியகரணி சந்தானகரணி இருக்குமலையைத் தூக்கிக்கொண்டுவந்துவைக்க, அதன் வேகத்தால் தேகத்திற்பட்ட காயங்களாறி மூர்ச்சைதெளியவே, அநுமான் அம்மலையை முன்னிருந்ததிசையிலெறிந்துவிட்டனன். மீண்டும் வானரசேனைகள் மனோதிடங்கொண்டுநெருங்கி இலங்கையைத் தகர்க்கத்தொடங்கினார்கள். இதையறிந்த இராவணன் மீண்டும்போர்செய்ய இந்திரசித்தையனுப்ப, அவன் வந்து சேனைகளையும் இளையபெருமாளையும் சரமழைபொழிந்து வருத்தினான். இளையபெருமாளும் அஞ்சாமல் திவ்யபாணங்களை அவன்மேற்றொடுக்க, அவன் கையிற்பிடித்திருந்த சூலாயுதமுதலிய படைகளையிழந்து, மேகத்தில்மறைந்து நிகும்பலையாகஞ் செய்துவருகையில், விபீஷணன் அச்சூழ்ச்சியையறிவிக்க அநுமான் முதலியோர்கள் ஆகாயமார்க்கத்திற்பாய்ந்து அந்தயாகத்தையழித்தார்கள். இந்திரசித்துமிக்ககோபங்கொண்டு இளையவன்மேலெதிர்த்து நெடுநேரங் கடும்போர்செய்து அவன்விட்டகணையால் சிரமறுப்புண்டிறந்தான்.

இந்திரசித்து தென்றிசை யடைந்ததறிந்த இராவணன் மிக்க துயர் கொண்டு சீதையை இன்றுகொன்றேவிடுவனென்று கரத்தில்வாளேந்திச்சானகியாரிருக்குந்திசையைநோக்கிச்சென்றான். இவனெண்ணத்தையறிந்த அவன் பாட்டனாகிய மாலியவான் அவனைத்தடுத்து யாவராலும்புகழப்பெற்ற ஆற்றலுடையானே! உன்னைப்போன்ற சூரர்பெண்களையுங்கொல்வரோ! அது நன்மை

யன்றென்றுமறுத்துவிட்டான். பின்பு மாயையால் சனகமகாராசனேபோல் நிருமித்து அவனைத் தேர்க்காலில்பிணித்துக்கட்டி சானகியாருக்குக்காட்ட, அச்சானகியார் கண்ணீர்விட்டழும்படி மாயையாற்சமைந்தவன் சானகியை நோக்கிமகளே! நீ இராவணன் கருத்துக்கிணங்குவையேயானல் பிழைப்பே னெனச் சானகியார்சினந்து அடாபாவி! நீ சாவதேநலமென்ருள். இராவணன் இவள் வன்னெஞ்ச முடையாளென்றே மனத்தில் நினைத்து அவ்விடம்விட்ட கன்று மருத்துவனைமாயையாற் சீதையைப்போலாக்கி அனுமானுக்குமுன்பா கக்கொண்டுபோய்நிறுத்தித் தலைமயிரைப்பிடித்தாட்டி இவளைவெட்டிச்சாய்க் கிறேனென்று வாளையோச்ச அம்மாருதியும் ஆறுத்துயர்கொண்டழமாயைக ளெல்லாம்நன்காராய்ந்தவிபீஷணன், இது இராவணன்மாயையாற்செய்தசூழ்ச் சியென்றறிவித்துத்தேற்றயாவருஞ்சோகந்தணிந்தனர். இராவணன்பலவகைத் தந்திரத்தாலும் அவர்கள் சாகாதிருப்பதுகண்டு ஆயிரவெள்ள மூலபலத்தை யனுப்பினன். அதைக்கண்ட சிராமபிரான் ஒருமோகனாஸ்த்திரத்தைப் பிர யோகிக்க, அவர்க ளொருவர்க்கொருவரே யுத்தஞ்செய்துகொண்டிறந்தனர். பின்பு இராவணனேர்தேர்மேலேறிவந்து சிராமபிரானையெதிர்த்தான், தேரில் லாமல் பாதசாரியாய் நின்று யுத்தஞ்செய்யு மிராமனேடு இராவணன் யுத் தஞ்செய்ய வந்ததைக்கண்ட இந்திரன் ஓர் தேரையனுப்பினன். அதில் இரகுநந்தனனேறி அரக்கன்விட்ட கணைகளத்தனையும் துணித்து அனேகம் பாணங்களை அவன்மேற்பொழிந்து அவன் மார்பிலுள்ள அமுத கலசத்தை விபீஷணன் சொற்படி கணையா லுடைத்துத்தள்ளி அவன்பத்துச்சிரத்தையு மொவ்வொன்று யறுத்துத் தள்ளினன். இராவணன் பத்துச்சிரங்களும் கீழே விழுமுன்னமேதானும் வீழ்ந்திறந்தான். தேவர்கள் பேருவகைகொ ண்டு புட்ப வருஷம் பெய்தார்கள். இதுநிற்க; இவ்வாறிராவணன் மாண்ட பின் விபீஷணன் முகத்தின் விசனக்குறிப்பையறிந்த இராகவபிரான் இராவ ணனை முறைப்படி தகனஞ்செய்யும்படி யாஞ்ஞைசெய்ய, விபீஷணனுமம் மொழியை யேற்று அவனை முத்துச்சிவிகையி லெடுப்பித்துக்கொண்டு கோ வெனப்புலம்பித் தன்சுற்றத்தாருடன் மயானத்திற்சென்று தகனகிரியைகளை எல்லாம் செய்து முடித்தான், வண்டோதரியுஞ்சககமனமானள்.

பின்பு சிராமபிரான் கட்டளைப்படி இளையபெருமாள் விபீஷணனை இலங் கைக்கழைத்துச்சென்று அவனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வித்தான். விபீஷ ணனே மீண்டும் இராமனைவந்து தெரிசித்துப்பணிந்து பக்கலில்நின்றான். சிராமபிரானவனுக்குப் பலநீதிகூறி அநுமான் அங்கதன் விபீஷணன் முதலிய வர்களைநோக்கிச் சீதையை யழைத்துவரும்படி யாஞ்ஞைசெய்ய, அவ்வாறே அவர்கள்சென்று சானகியாரைக்கண்டு இராவணன் முடிந்ததை யறிவித்துச் சுவாமி தெரிசனத்துக்கெழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். சானகியார் தான்கொண்ட களிப்புக்கெல்லையில்லாமல் ஆனந்த பரவசங் கொண்டு திரிசடையை யழைத்துக்கொண்டு சிராமபிரானிடம்வந்து அவனழ கிய தாளில்வீழ்ந்து வணங்கிநின்றாள். அவ்வாறுநின்ற சானகியாரைநோக்கி இவ்வாறு கூறுகின்றார். நீயோ அரக்கன்கைப்பட்டு அவனுல் சிறையிடப்பட்

டிருந்தனையாதலால் மீண்டுமுன்னையே யங்கீகரித்தால் நம்மரபோரிகழ்ச்சி செய்வரோ. இப்போதுன்னைக் காணவேண்டிவந்தேனில்லை, என்னுயிர்போன்ற சடாயுவைக்கொன்ற பழியைத் தீர்க்கவென்றேவந்து வெற்றிகொண்டேன். ஆதலால் நீ மாசற்றவளென்பதற்கோர் திருட்டாந்தங் காட்டினால் உன்னை யங்கீகரிப்பேன் என்றான். அங்ஙனம்கூறியதைக்கேட்ட சானகியார், சுவாமீ! அரக்கன் வஞ்சித்ததோஷத்தால் அவன் புத்திரமித்திரகளத்திராதிகளுடனே தேவரீருடைய பாணத்தாலிறந்தான். இப்போதென்னுயிரை விட்டுவிடுவதே சிறந்த தருமம், இனி யான்பிறந்தகுலத்துக்கும்புகுந்தகுலத்துக்கும்பெருமை யுண்டாகும்படி அக்கினிப்பிரவேசமாகின்றேன் என்று நமஸ்கரித்து அங்கதன், அநுமான், சுக்கிரீவன், விபீஷணன்முதலியவரையு மாசீர்வதித்து இளைய பெருமாளைநோக்கி என் வினைவசத்தாலுன்னை முன்னிகழ்ந்துகூறிய குற்றத்தைப்பாராட்டாமல் விரைவிலக்கினிவிருத்திசெய்யென்றுவேண்டத் தமையன்குறிப்பறிந்த இளையபெருமாள் விரைவிலக்கினியை வளர்த்தார். கற்பிற்சிறந்த சானகியார் அவ்வக்கினியைப் பிரதக்கணமாகவந்து நான் என்மனோவாக்குக்காயங்களால் அபசாரப்பட்டிருந்தேனேயாகில் என்னுக்கையைக் கொளுத்திச் சாம்பராக்கக்கடவாயென்று இரவிகுலதிலகனை மனத்திற்சிந்தித்து அன்னப்பட்சி தடாகத்திலிறங்குவதேபோல் அக்கினிகுண்டத்திற்பாய்ந்தாள். அக்கினிதேவனே சானகியாரைக் கரத்திலேந்திவந்து சீராமனிடத்தில்விடுத்துச் சுவாமீ! உலகிலுள்ள யாவற்றையும்சுடுகிறவென்னை இந்தக் கற்பின் சுவாலைசுடுகிறதென்று வணங்கினான். இராமலட்சுமணரிருவரும்மிக்க வுவகைகொண்டனர். அச்சமயத்தில் பிரமன் இந்திராதி தேவர்களுடனே சீராமபிரானிருக்கு மிடத்தில்வந்து கண்டு சானகியார் கற்பின்திறத்தைப் புகழ்ந்துகூறிப் பிதாவாகிய தயரதமகாராசனைத்தரிசிப்பித்துவாழ்த்தி உமக்கு வேண்டும் வரத்தைக்கேளுமென்ன, சீராமபிரான் என்னுடன் துணையாக வந்த எழுபதுவெள்ளம் வானரப்படைகளுடன் பதினெட்டுப்படைத்தலைவரு முன்போல் நிறைந்திருக்கவேண்டுமென்ன அவ்வாறே அளித்தோமென்று தத்தம் மிடம்போய்ச்சேர்ந்தனர்.

பின்பு சீராமபிரான், சானகியாரைத் தழுவிக்கொண்டு உன்கற்பின்திறத்தைக்காட்ட இவ்வாறு செய்தேனே யல்லாமல் வேறில்லையென்று பல இனியமொழிகூறி அவள் மனத்தைக்களிக்கச்செய்து அங்கிருந்தவண்ணமே விபீஷணனிடத்திருந்த புட்பக விமானத்தை யழைப்பித்து அதில் யாவரையு மேற்றிக்கொண்டு இலங்கையைச்சுற்றிக்கொண்டு திருவணையைக்கடந்து, கிட்கிந்தை பம்பை சடாயுஇறந்தவிடம் அகத்தியராச்சிரமம் பஞ்சவடிதீரமுதலிய வைகளைச் சானகியாருக்குக்காண்பித்தனர். பதினைந்தாவது வருஷாரம்பித்தில் தசமிதிதியில்வருவதாய்ப் பரதனுக்குச்சொல்லியனுப்பியநாள்வந்ததனால் பரதசத்துருக்குநருக்காகவே அநுமானையனுப்ப அவன் திருவயோத்தியை யடைந்து பரதசத்துருக்கனர்களைத் தீயில்விழாமல் தடுத்துக் குகப்பெருமானை கங்கைக்கரையில் சிருங்கிபேரத்து நிறுத்திமீண்டான், தாசரதி பரத்துவாசராச்சிரமத்துக்குவந்து முனிவரைக்கண்டு நடந்தயாவுங்கூறி அற்றைத்

தின மங்கேயேயிருந்துகழித்து மறுநாளுதயத்தெழுந்திருந்து புட்பகவிமானத்தேறி குகப்பெருமாளையழைத்துக்கொண்டு திருவயோத்தியையடைந்து பரத சத்துருக்கரும்கோசலகேகய தேசத்தரசர்களுவணங்கவும், வசிஷ்டாதிமுனிவர்களையும் தாய்மார்களையும் தானும் இலக்ஷ்மணனும் சீதையும் வணங்கி வனவாசத்தில் நிகழ்ந்தயாவுங்கூறினன். பின்னர் தாய்மார் தம்பிமார் மந்திரிமார்கள் முனிவர்கள்முதலியயாவரும் ஸ்ரீராமபிரானுக்கு மகுடாபிஷேகஞ்செய்ய இற்றைத்தினமே நன்றென்றுரைக்க, ஸ்ரீராமபிரான் தரித்திருந்த சடைமுடி மரவுரிகளைக் களைந்தெறிந்து புண்ணிய தீர்த்தங்களாலாட்டப்பெற்று சானகி சமேதராய்ச் சிங்காதனத்துவீற்றிருந்து வசிஷ்டமுனிவரால் மகுடாபிஷேகஞ் செய்துகொண்டு இனிதுவாழ்ந்திருந்தனன்.

இப்படிப்பட்ட இராகவனும்சானகியாரும் வெகுதுன்பப்பட்டிருக்க, இப்பாஞ்சாலிக்கு துரியோதனனாலும் சயிந்தவனாலும் நேரிட்ட அவமானங்களும் நீங்கள் நடந்தவனவாசமும் ஒருபெரிதாமா! இன்னுஞ் சிலநாளில் இராச்சியலக்ஷிமியையடையப்போகிறீர்களென்று மார்க்கண்டேயர் சொல்லியதன்றிச் சயிந்தவன் எடுத்துக்கொண்டுபோனதினால் இப்பாஞ்சாலிக்கு ஒருகுறைவேயில்லை; இவன் உயிரோடிருந்தும் செத்தபிணத்தோடொப்பானவனாகவே வீமசேனனாற் பட்டபாடு சொல்லிமுடியாதா! என்று தருமராசனுக்குச் சொல்ல தருமராசனவரை யெட்டுறுப்பு நிலமுறப் பணிந்து தேவரீர் அடியேனுக்குக் கற்புடையமனைவியால் பெருஞ்செல்வம் பெற்ற உத்தமிகள்சரித்திரத்தைச் சொல்லவேண்டுமென்றான். அதைக்கேட்டமார்க்கண்டேயர் சாவித்திரியென்னும் அருந்ததிபோல்வாள் தன்கணவனுக்குத் தீர்க்காயுளும் இராச்சியலக்ஷிமியும் பெறச்செய்தனள், அவள்கதையைச் சொல்லுகிறேன் கேளென்று சொல்லத்தொடங்கினர்.

சாவித்திரிகதை.

மத்திரதேசமென்னுந் தேசத்தில் அசுபதியென்னும் அரசன் மாளவியென்னும் மாதுடன்கூடி இல்லறவாழ்க்கைசெய்து கொண்டிருக்கையில் புத்திரப்பேறில்லாக்குறையால் வருந்தி அவ்விடமெழுந்தருளிய நாரதமுனிவரிடத்தே தன்மனக்குறையையறிவித்தான், அம்முனிவர் சாவித்திரி நோன்பியற்றும் மார்க்கத்தையறிவித்து அம்மந்திரத்தையும் உபதேசித்துச்சென்றார். அவ்விருவரும் அவ்வாறே அனுட்டிக்கையில் சாவித்திரியம்மை வெளிப்பட்டு வந்து அவர்கட்குக் கண்மணிபோன்ற பெண்மணிபிறக்குமென்றுசொல்ல, அவர்கள் பெண்ணால் துறக்கவின்பங்கிடையாதே! என்று வேண்ட அதற்கு மனமகிழ்ந்துஅப்பெண்மணியால் புத்திரப்பேறும்புகழும் செல்வப்பெருக்குங் கிடைக்குமென்றேசொல்லிமறைந்துபோயினள். அவ்வாறே அம்மாளவியோவயிறுவாய்த்து பத்துமாதநிரம்பி யொருபெண்மணியைப்பெற்றாள். அப்பெண்மணிதிருவைப்போலும் பேரழகு படைத்து வளரக்கண்டு அக்குழந்தைக்குச் சாவித்திரி யென்றே நாமகரணஞ்செய்து வளர்ந்துவருகையில் அச்சாவித்திரிக்கு மங்கைப்பருவம்வந்தது. அவளைப்பெற்றாரிருவரும் இவட்குத் தக்க மண

வாளன் வேண்டுமேயென்று சிந்தைத் துயரங்கொண்டிருந்தனர். இவ்வாறிருக்கையில் மீண்டும் நாரதமுனிவர் அவ்வரசனவைக்கெழுந்தருளினார், அரசனோ ஓடோடியும் வந்துவணங்கிச்சோடசோபசாரஞ்செய்து ஆசனத்திலெழுந்தருளப்பண்ணித்தன்மகளையும் வருவித்துவணங்கச்செய்து இவளுக்குத்தக்க கணவன்யாவனோ அமைவானென விண்ணப்பஞ்செய்தான், அதற்கு நாரதமுனிவர்"விதியினாலன்றி வேதத்தோர் தங்கள்மதியினாலாவதொன்றில்லை"என்னும் பெரியோருரைப்படி நடக்கப்போகிறது, இவட்குக்கணவன் இன்னானென்றே இவள்நெஞ்சி னினைத்துக்கொண்டிருக்கின்றாள்; அவனுக்கே நீ பெற்ற மடக்கொடியை மணஞ்செய்துகொடுப்பதே தகுமென்றுசொன்னார். அதைக் கேட்ட அரசன்தன்மகளை அழைத்து நீகருத்திலெண்ணியிருக்கிறகணவன்யாரென்றுவினவ; அதற்குச்சாவித்திரி நான் சிறுகாலையிற்பூஞ்சோலையில் ஆயக் கூட்டத்தோடுவிளையாடும்போது சாளுவதேசத்தரசன்மகனைக்கண்டு இச்சை கொண்டேன். அவனையல்லது மணம்புரியேன், என்னையவனுக்கே மணம் புரிவிக்க வேண்டுமென்றாள். அதை அரசன்கேட்டு நாரதமுனிவரை அவனின்னானென்றும் அவன்குணாதிசயங்க ளிப்படிப்பட்டனவென்றும் சொல்ல வேண்டுமென்றே விண்ணப்பித்தான். அதற் கம்முனிவர் அச்சாளுவதேசத்தரசன் மகன் பெயர் சத்தியவானென்பது, அவன் தந்தைதாயல்லது வேறு தெய்வங்களைக் கனவினுங்கருதாதவன்: ஆண்மையிற் சிறந்தவன், அழகில் மிகுந்தவன்,இன்னுமோராண்டிலிறந்து விடுவான் என்று சொல்லியருளினார், அதைக்கேட்டு மனத்தில் மிக்கதுயரங்கொண்டு தன்மகளைநோக்கி அம்மா! நாரதமுனிவர் சொன்னதைக்கேட்டாயோ! இப்படிப்பட்ட அற்பவாயுளினையுடைய இராசகுமாரனை வரிப்பது தகுதியன்றே! அவனையொழித்து வேறோரரசன்மகனை மனத்திற்சிந்தித்து மணஞ்செய்துகொள்வது மரபென்றான், அதற்கவளிணங்காமல் முகங்கருகி அவர் மாதாபிதாக்கள் கழிந்தமூப்பினையுடையராயினும், கண்ணில்லாதவரோயாயினும், அரசச்செல்வமிழந்து காட்டில் வசிப்பதாயினும் அவ்விராசகுமாரனைவேட்ப தென்மனத்துணிவென்றாள். எவ்வாறுசொல்லினும் தன்மனத்திற் கொள்ளாமல் மறுத்த மகளைநோக்கி அரசன்"விதியினான்மதியினைவெல்லவல்லமோ"என்றபடி நினைந்துவருந்தியது கண்டு நாரதமுனிவர் அவ்வரசனைத்தேற்றி யாவும் "அவனசையா தணுவுமசையாது" என்றபடி நடப்பதல்லது நம்மாலணுத்துணையுநடவாதே; அவள் கருத்தைத் தடுக்காமல்நடப்பதே நலம், வருவதுவந்தேதீரும், இவளோ மகா பதிவிரதை! அவனுக்கரசும் தீர்க்காயுளு முண்டானாலுமுண்டாகும், வேறு கருதுவதனா லென்னபயன், இவளைச் சாளுவன் மகனாகிய சத்தியவானுக்கே மணஞ்செய்து கொடுமென்று கட்டளையிட்டு விடைபெற்றுச்சென்றார்.

மத்திர தேசாதிபதியாகிய அசுபதி யரசனோ தன்மகளை யழைத்துக் கொண்டு சிவிகையிலேற்றித் தன்னுடைய நால்வகைச் சேனையும் மந்திரி பிரதானி முதலானோருந் தன்னைச் சூழ்ந்துவரச் சாளுவதேசத்தரசன் கரந்துறையும் காட்டையடைந்து உமதுமகன் சத்தியவானுக் கென்மகளை மணஞ்செய்விக்க இசைந்தே இத்தனை தூரநடந்துவந்தேன். எமதுசுற்றத்தாரும் வந்திருக்

கின்றனர். அதற்கிணங்க வேண்டுமென்றே வேண்டிக்கொண்டனன். சாளுவ
ராசனோ நகைத்து நாங்கள் தீய ஊழால் அரசிழந்தது மன்றிக்கண்ணுமிழந்து
காட்டிற் கரந்துறைகின்றோம், என்மகனுக்கு மணமொன்று தானோ குறைவு
என்று மிக்க வருத்தத்துடனே சொல்லிமுடித்தான். அசுபதியரசன் உலகத்
தில் இன்பத் துன்பங்களோ இயற்கை; பெரியாரும் "அகடுறயார் மாட்டு நில்
லாது செல்வம் சகடக்கால் போலவரும்" என்றுஞ்சொல்லியிருக்கின்றனரே!
இளைத்தவர் இளைத்தே யிரார், கிளைப்பதுமுண்டு, நீ ரதைக்கருதி மனந்தளர்
வதே சரியல்லவென்று சொல்லித்தடுத்து உமது மகனாகிய சத்தியவானுக்கு
இதை யறிவித்து என் மகளை மணஞ்செய்து கொள்ளக் கட்டளையிடவேண்டு
மென்று வேண்டிக்கொண்டான். பிறகு சத்தியவான் வரவே அவனுக்குந்
தன்வருகையும் தன்மகளை மணம்செய்து கொள்ளவேண்டியதும் தெரிவித்
தான். அச்சத்தியவானோ அசுபதி யரசனை நோக்கி நாடுநகரமிழந்து தாய் தந்
தையராகிய கழிந்தமூப்பினரைப் பாதுகாப்பதே விரதமாகப்பூண்டிருக்கின்ற
எனக்குக் கால்விலங்கு பூட்டிவிட்டு வருத்தத்துணிவது நலமோ! இம்மங்
கைப் பருவத்தையுடைய மாதை மணஞ்செய்து கொண்டால் அவளுக்கு
வேண்டிய உபசாரங்களைச்செய்ய இது காலமுமன்றே! 'பறப்பான் பயிரிழந்
தா'னென்ற பழமொழிக்கிணங்கியதாய் முடியுமே! ஒருபெண்ணை ஒருவனுக்கு
மணஞ்செய்து கொடுக்க நேர்ந்தால் தந்தையோ கல்வியுடையானைக் கருது
வான், தாயோ பாக்கியமுடையானைக் கருதுவாள், சுற்றத்தாரோ தமது பரம்
பரையைச்சேர்ந்தவனா வென்பதைக் கருதுவர், பெண்ணோ கட்டழகனைக்
கருதுவாள்; இவற்றில் ஒன்றுக்கும் பற்றாதஎன்னை விவாகத்துக்காகவரிப்பதே
தகுதியன்றென்று விளக்கி நின்றான். அதைக்கேட்ட அசுபதியரசன் சத்திய
வானைத்தேற்றி நல்ல சுபமுகூர்த்தத்தில்தன்மகளாகிய சாவித்திரியை மணஞ்
செய்வித்தான். மணஞ்செய்வித்த பின்னர் சிலநாள் அவ்வனத்தே தங்கியிரு
ந்து அவர்களைத் தன்னாட்டிற்கழைக்க அவர்கள் எங்களுக்குநல்லகாலம்வரும்
போது நகரவாசஞ்செய்யவருவோம், இப்போது வாரோமென்றேமறுத்தனர்.
அசுபதியரசனோ சாவித்திரியை அங்கேயேவிட்டுவிட்டு அவளைக் கணவனோடு
மன்மதனுமிரதியும்போல வாழ்ந்திருமென்று ஆசீர்வதித்து அவரிடத்தே தன்
னாட்டிற்கு விடைபெற்றுச்சென்றனன். இதுநிற்க; இப்பால் சாவித்திரியும் சத்
தியவானும் மதனுமிரதியும்போலவும் அன்றிலும் பேடையும் போலவுமிணை
பிரியாது வாழ்ந்துவருங்காலத்தில் சாவித்திரிவைகறைமுன்னெழுந்து நீராடித்
தன்கணவனையெழுப்பி அவன்பாதங்களை மலராலர்ச்சித்துவணங்கி அவனைத்
தன்மாமன்மாமிக்குணவாகக் கனிவர்க்கங்கள்கொண்டுவரக் கடிதனுப்பிவிட்டு
அம்மாமன் மாமிக்குந்நித்தியகருமங்கட்குத்துணைசெய்து அவர்களையும் பாத
வர்ச்சனைசெய்துஇரவிற் கொடுத் தெஞ்சியிருந்த கனிவர்க்கங்களை யுணவாகக்
கொடுத்துத் தருமகதைகளைப் பேசிக்கொண்டு நாடோறுமவன்வரும் வழியை
நாடிக்கொண்டிருப்பாள்; இவ்வாறு நாடிக்கொண்டிருக்கையில் கணவன்பத்து
நாழிகையாகவேவருவதுவழக்கம், அவன்வருந்தனையும் அவர்களுக்குக்கைகால்
களைபிடித்துக்கொண்டிருப்பாள். அவன்வரவேதானும் அவனும் அவர்களுக்

குக்கனிவர்க்கங்களை யுண்பித்துத் தன்கணவனுண்டபின் அம்மிச்சிலைப் புசிப்பாள்; அவ்வாறுஒருநாளுந் தவறாமலும் மனச் சலிப்பில்லாமலும் செய்துவருவதைமாமியுமாமனும் கண்டு இவள் உத்தமியே யாமென்று மிக்க அன்புபாராட்டிவந்தனர். அவ்வாறொழுகு நாளிற் சாவித்திரியோ நாரதமுனிவர்சொல்லைமறவியின்றிக் கணக்கிட்டுக்கொண்டேவந்தாள். அவ்வாறு கணக்கிட்டு வருவதில் மூந்நூற் றைம்பத்தாறுநாள் கழிந்துபோ யெஞ்சிய நாள்நான் கிருக்கக்கண்டு தான் கவுரிவிரத மிருக்கவேண்டுமென மாமிக்குமாமனுக்கும் அறிவித்து அவர்கள் கட்டளையின்படி அம்மூன்றுநாளும் உணவையகற்றி மோனமாயிருந்து பூசித்து நான்காநாள் வைகறை முன்னீராடித் தன் கணவனை நோக்கித் தேவரீருடன் நானும் காட்டிற்குவருகிறேன், என்னைத் தடைசொல்லாமலழைத்துக்கொண்டு போக வேண்டுமென்று வேண்டிக்கொண்டாள். சத்தியவானோ தன் மனைவிமேல்வைத்த அன்பினால் நீ மூன்றுநாள் உபவசித்திருந்து இன்று பாரணைசெய்யாமல் என்னோடு வருவது நன்றன்றே, இன்று பாரணை செய், நாளைக் கழைத்துக்கொண்டு போவேனென்றான். அதைக்கேட்ட சாவித்திரியோநாளையென்பது நம்முடையநாளோ நமனுடைய நாளோ அறியோம்; கவுரிநோன்பு நோற்பவர் மூன்றுநா ளுபவசித்திருந்து நாலா நாளிரவில் தீபதரிசனஞ் செய்துகொண்டு அப்பாற் பாரணைசெய்ய விதியுமிருக்கின்றது; ஆதலால் இற்றைப் பகற்போதைக் கழிக்கவேண்டியே காட்டிற்குவருகிறேன்; தடைசெய்ய வேண்டாமென்ன, அதற்குச் சத்தியவானும் உன் மாமியிடத்து மாமனிடத்தும் விடைபெற்று வாவென்று சொல்ல; அவளும்அவர்களிடத்தே உத்தரவு பெற்றுக்கொண்டு தன் னாயகனுடனே காட்டை நோக்கியே பின்றொடர்ந்து சென்றாள்.

அவ்வாறு சென்ற சாவித்திரியோ காட்டின் மிருகவினோதங்களையும் சோலையிலுள்ள புட்பவினோதங்களையும் பார்த்துக் கொண்டுவருகையில் கைகால்க ளயர்ந்து கண்கள் சுழன்று வருவதாகச் சாவித்திரிக்குத்தெரிவித்தான். அதைக்கேட்ட சாவித்திரியோ தன்கணவனைத் தன் மடிமீது படுக்கவைத்துக்கொண்டு நாற்றிசையையு நோக்கியேங்கியிருந்தாள். அப்பொழுது தென்றிசைக் கோமகனாகிய தருமராசன் தன்றூதுவரோடும் எருமைக்கடாவிலேறிக்கொண்டுவந்திறங்கிச்சாவித்திரியினது கற்புடைமைக்குப்பயந்துமெல்ல மெல்லவந்து அவனுயிரை யூசியைக் காந்தம் கிரகிப்பதுபோற் கிரகித்துக்கொண்டு தன்வாகனமேறிநடந்தான். அதைக்கண்டசாவித்திரி தன்மடியிலிருந்த பிரேதத்தின்றலையைப் பூமியின் மேல்வைத்து விட்டுத் தருமராசனைப்பின்றொடர்ந்துசென்றாள். அவனோ நீ யாரென்றுகேட்க, சாவித்திரி என்கணவனுயிரைக்கைக்கொண்டு செல்லும் நீர்யாரென்றாள். தருமராசன் சிறுநகைபுரிந்து யான்உயிர்களைக்கைக் கொள்ளுநமன்! உமதுகணவனுக்குஇற்றைப்பகற்பதினைந்து நாழிகையுடனே ஆயுள்சரியாய் விட்டது, எப்படிப்பட்டவரையும் இறக்கக்காண்பதே யன்றியிருக்கக்காண்பாரொருவருமிலர், பாவிகளையென்றூதுவரும் புண்ணியரையானும் கொண்டுபோவதுவழக்கம்; இச்சத்தியவானோ மிகவும் சத்தியவானாகையாலும் கற்பிலருந்ததிபோன்ற உமக்குக் கணவனாகை

யாலும் நானேவந்து கைக்கொண்டுசெல்கிறேன், நான் கடவுளாயினும் நீ உத்தமியாகையால் உன் கண்ணுக்குத்தோன்றினேன். இவ்விடத்திலேயே நின்றுவிடென்ன, நாங்களிருவரும் இம்மையில் உயிருமுடலும் போலிருக்க நீரதைப்பிரித்துக்கைக்கொண்டு செல்வது நியாயமோ! என்னையுங்கைக்கொண்டு போகவேண்டுமென்றாள். அதைக்கேட்ட நமன் உன்னுயுள் நீங்காமலே உன்னுயிர்கைக்கொண்டு செல்ல எனக்கதிகாரமேயில்லை! இங்கேயே நில்லென்று சொல்லி விட்டு, உன்கணவனைத்தவிர வேறே ஏதேனுங்கேட்டாலுங் தருகிறேனென்றான். என்மாமிக்கு மாமனுக்குங் கண்கள் செவ்வையாகத் தெரிய வரங்கொடுக்க வேண்டுமென்றாள், அவ்வாறே தந்தேனென்றுநடக்கையில் பின்னுந்தொடர்ந்துசென்றாள். அதைக்கண்ட நமன் இதுவோ புலி கரடி சிங்கமுதலிய மிருகங்கள் நிறைந்துள்ளகாடு, இதில் இவ்வாறு நடந்துவருவதோ தகுதியல்லவேயென்றான், அதைக்கேட்ட சாவித்திரி என்போலு மங்கைப் பருவத்துமாதர் தங்கணவனோடு காமுற்றிருக்க நான் மாத்திரங் கண்ணீர்விட்டுப்புலம்புவது நியாயமோ! இது உமக்கழகல்லவே! என்னையுமழைத்துக் கொண்டு போய்விடுமென்று கண்ணீர்விட்டுக்கதறியழுதாள். அவ்வாறழுஞ் சாவித்திரியை நோக்கி நமன் சிருஷ்டி திதி சங்காரமென்னு முத்தொழிலுமென்றுமாறவேமாட்டா! காலமுடிந்தால் யாருயிருந்திரும்பவே மாட்டாது; வேறென்ன வரம்வேண்டினும் தருவேனென்றான். அதற்குச் சாவித்திரியும் என் மாமனாகிய சாளுவராசனிழந்த அரசுரிமையை மீளவுந்தரவேண்டுமென்றுவேண்டினாள். அவ்வாறே கொடுத்தேனென்று பின்னுநடந்தான், பின்னும் சாவித்திரி விடாமல் தொடர்ந்து வரக்கண்ட நமன்இன்னுந்தொடர்ந்து வருகின்றனையே! உலகத்தில் தந்தைவயிற்றில் இரண்டு மாதமும் தாய்வயிற்றிற் பத்துமாதமுங் கருவிருந்து தோன்றுகின்றஇம்மானிடதேகமும்பிறவும்பிறந்த போதே இத்தனை நாளி லிறக்கவேண்டுமென்னு நியதியுண்டு; அது என் கணக்கில்வந்து விட்டபின்னே நான் காலம்பார்த்திருந்து எவர்கள் எப்படிவருத்தமடைந்தாலும் அவர்களாருயிர் கவர்ந்து நன்மைதீமைகட்குத் தக்கபடி நடத்திவருவேன். அவன் வந்தகாரியம்முடிந்ததனால் இங்கிருந்தென்னபயன்! நீயோ அதைமறந்து என்னைவாளாவருத்துவது நியாயவிரோதம்,நானும் கொண்டுபோக நாடிநீயுநாடுவதனாற் பயனில்லை யென்றுசொல்லினன். அதைக்கேட்ட சாவித்திரி மலையினுயரமலைக்கேதெரியாது என்பதற்கிணங்கத்தேவரீருடைய பெருமையைத் தேவரீரே யறியாமற்பேசுகின்றீர், நான் சிறியவளேயாயினும் என்தந்தையினிடத்து எக்காலமும்வரும் பெரியோரிடத்தே முத்தொழிலின்றன்மைகளைக் கேட்டுள்ளேன், சாத்துவிகம் இராசதம் தாமதமென்னுமுக்குணங்களாலும் சிருட்டிமுதலிய முத்தொழில்கள் நடந்துவருகின்றன, தமோகுணசம்பந்தத்தால் சங்காரத்தொழில் நடந்துவருகின்றது. அச்சங்காரத்தொழில் நீரோநடத்து கின்றீர்; உமக்குமேலாங் கடவுளோ இல்லை, நான் பெருஞ்செல்வப் பெருக்கைக்கேளாமல் மங்கிலியபிச்சை தரவேண்டுமென்று வேண்டினால் அதைக்கொடாதிருப்பது மரபல்லவென்றாள். அதைக்கேட்ட நமன் அன்னாய்! இவ்வொன்றொழிய வேறென்ன வரங்கேட்டாலுந் தருகின்

றேன் கேளென்ன; அதற்குச் சாவித்திரியும் "தனிமரமுந்தோப்பாமோதான்" என்றபடி என்தந்தை மரபுகிளைக்க எனக்குப் பின்னவராக நூறுமக்களைத் தரவேண்டுமென்றாள். அப்படியே யளித்தேனென்று சொல்லியந்தரமார்க்கத்தின் மறைந்துபோனான்.

அப்பால் சாவித்திரி மனங்கலங்கித் திசைதெரியாமல் வருந்தித் தென்திசைநாடி ஓடோடியும் வருவதையுணர்ந்த நமன் மனங்குழைந்து இவள் கட்புலனுக்குத் தோன்றினன். இவள் அந்நமனது தாளில் எட்டுறுப்பு நிலமுறப்பணிந்து நின்றாள், அதைக்கண்ட நமன் நீயேன் இன்னும் புலி கரடி முதலிய கொடிய விலங்குகள்வசிக்கும் காட்டிலே தன்னந்தனியேநடந்து திரிகின்றனை; அதிகஆசை அதிகஷ்டமென்பதறியாயா! நீ நில்லென்று கடிந்து சொன்னான். அதைக்கேட்ட சாவித்திரியும் நீர்சினங்கொள்ளாதவரையும் நான் உயிர்பிழைத்திருந்தேனுவேன், நீர் சினங்கொண்டமையால் நான் என் கணவனுடன்கூடி வாழ்வேனுனேன் என்றனள். அதைக்கேட்ட நமனே உன்னெண்ணந்தான் யாது? என்று கேட்டான். அதற்குச் சாவித்திரியும் தேவரீர் தரிசனையால் சகல பாவமுந்தீர்ந்து சுகமடைவார்களென்றே பெரியோர்கள் சொல்வதனால் எவர்களுக்கும் தரிசனமாகாத தேவரீர் எனக்குத் தெரிசனமாய்த்தோன்றி என்னுடன் உரையாடிய பின்னரும் நான் மங்கல நாணிழந்து வருந்துவதழகோ! எனக்கு மாங்கலியபிச்சைதரவேணடுமென்று வருந்திக்கேட்டாள். தென்றிசைக்கோமகனுகிய தருமராசனும் அருள்சுரந்து அன்னாய், நீயோ சிறந்த கற்புடையாய்; உன்னெண்ணம் பலிக்கச்செய்து கொண்டாய்! உன்கணவனுடன்கூடிப் புகழுடன்வாழ்ந்திரு போவென்று பல ஆசிகூறி யனுப்பி விடைபெற்றுச்சென்றான். சாவித்திரியோ உடனே திரும்பி வந்து தன்கணவனது உடலைக்கண்டெடுத்துத் தூக்கி மடிமேல்வைத்துத் திருமுகத்தைப்புற்று நோக்குகையில் துயில் கொண்டெழுந்தான்போல எழுந்து பொழுதுபட்டதேஏனித்தனைப்போதாயுமென்னையெழுப்பாதிருந்தனை! என்தந்தைதாயர்கள் கனிவர்க்கநாடிக்கொண்டேபசித்திருப்பரோ! அருந்ததிபோன்ற பெண்மணியே! என்னைத்திவ்யமானபுருஷனொருவன் பிடித்துச்செல்லவும், ஒரு மாதென்னைப்பிரிய வார்த்தைகூறி யழைத்துவரவும் கனவுகண்டேன் என்றான். அதைச் சாவித்திரிகேட்டு நகைத்து இது கனவேயன்று, நடந்தசெய்தியே, நாளையே யுமது அரசுபெற்றாளப்போகிறீர், எழுந்திரும் போவோமென்றாள். சத்தியவானே பசிப்பிணியால் வருந்தும் தாய்தந்தையரென்செய்வரோ என்று மனம்வருந்திக்கொண்டேவந்தான். இவர்களெதிரே அவ்விருவரும் தேடிவந்து இத்தனைப்போது தாமதிக்க வேதுவென்னவென்றுகேட்கச் சாவித்திரிசொல்லலாயினள்.

நான் சின்னஞ்சிறுவயதில் ஒருபூஞ்சோலையில் உலாவித்திரிகையில் குதிரையேறிவந்த உமது மகனைக்கண்டு இவரே என்கணவராவாரெனக் கருத்திலெண்ணினேன். ஒருநாள் என்தந்தையினது அவைக்களத்தே நாரதமுனிவர் வந்து இவருக்கு அற்பாயுளென்றும், இன்றைமுதல் முந்நூற்றறுபதாநாளில் இவர்மரணமடைவாரென்றுஞ் சொன்னார். நானேஒரே பிடிவாதமாய் இவரை

யேமணந்து நானெண்ணிக்கொண்டே யிருந்து முந்நூற்றைம்பத்தாறுநாள் கழியவே மூன்றுநாள் கவுரிநோன்புநோற்று நாலாநாளாகிய இத்தினம் பகற்போது பதினைந்துநாழிகைச்சமயம் இவர் மரணமடையப்போகிறபடியால் இவரைப் பின்றொடர்ந்தேசென்று வனத்தில் மிருகவினோதங்களையும் பூஞ்சோலைவினோதங்களையும் பார்த்துக்கொண்டே போனேன்; இவரோ தங்களுக்காகக் கனிகொணர வொருமரமேறுகையில் கால்கை யயர்ந்தும் கண் சுழன்றும் வருவதாகச்சொன்னார். நானிவரை என்மடிமீதுவைத் துபசரித்தேன்; அப்போது தென்றிசைக்கோமகனாகிய எமன் தோன்றி இவருயிரைக் கைக்கொண்டுசென்றான். அப்பெருமானிடத்தே உங்களிருவருக்கும் விழியுமரசும் என்தந்தைக்குப் புத்திரபாக்கியமும் எனக்கு மங்கலிய பிச்சையும் கேட்டுக்கொண்டு என்கணவனையழைத்துவர இத்தனைநேரஞ்சென்றது, நீங்கள்கோபிக்கவேண்டாமென்றாள். அவ்வாறு கேட்ட இருவரும் தங்கள் மருகியை மார்போடிறுகத்தழுவிக்கொண்டனர். அயலில்வசிக்கும் இருடிபத்தினிமார்களோ மிக நடுநடுங்கி இது மிகவற்புதமென்றே சொல்லிக்கொண்டதன்றி இப்படிப்பட்ட அருந்ததியொத்த கற்புடையமாதரு மிருக்கின்றனரோவென்று தம்மைத்தாமிகழ்ந்துகொண்டனர். சாளுவதேசத்தை வெற்றிகொண்ட அரசன் இறந்துபோய் அரசிழந்திருந்த அவ்விராசதானிக்குப் பழய மந்திரிமார் சாளுவதேசத்தரசனிருக்குங் காட்டில்வந்து அவ்வரசனைகண்டு யானையின்மேலேற்றிக்கொண்டு சென்று சிங்காசனத்திருத்தினர். இவ்வாறு சாளுவராசன் தன்மனைவியுடனும் மகன் மருகியுடனும் சகல சம்பத்தடைந்தரசாண்டுவருங் காலத்திலே மத்திரதேசாதிபதியாகிய அசுபதியரசன் தன்மகளாகிய சாவித்திரியை விசாரித்து அவர்கள் செல்வத்துடன் தங்கள் நாட்டைக்கைக்கொண்டரசாண்டுவருவதாய்க்கேள்விப்பட்டுத் தான்பெற்ற நூறுமக்களுடன் சாளுவநாட்டையடைந்து தன்மகள் முதலியோரைக்கண்டு மகிழ்ச்சியடைந்தான். அவனைச் சாளுவன்நோக்கி நாங்கள் கண்ணும் அரசும் மகனுயிரும் பெற்றமையும் நீர் நூறுபுத்திரபாக்கியம் பெற்றமையும் உமது தவப்புத்திரியார் நோற்ற நோன்பின்பலனேயல்லது வேறன்றென்று நடந்தசெய்தியனைத்தும் விரித்துச் சொன்னான். அசுபதியரசனோ பேரானந்தக்கடலிலழுந்தி அவர்களுடன் விருந்துண்டு சிலநாள்வதிந்து தன் மத்திரதேசமேநோக்கி நடந்தான். தருமராசனே! நல்ல குலத்திற்றோன்றி. நற்குண நற்செயலையுடையாளாய்த் தன்கணவனே தெய்வமெனக் கொள்ளும் உத்தமியால் தன்கணவனும் சுற்றமும்செல்வமுஞ் சீரும் பெற்றனரன்றோவெனக்கூறித் தம்மாச்சிரமத்திற் கெழுந்தருளினார்.

தூருவாசச்சருக்கம்.

பின்னடந்த கதைகளைச் சொல்லவேண்டுமென்று செனமேசெயமகாராசன்கேட்க வைசம்பாயனர் சொல்லுகின்றார். செனமேசெயமகாராசனே! மார்க்கண்டேயர் விடைபெற்றுச் சென்றபின்பு தருமராசனுடன் மற்ற நால்வரும் பாஞ்சாலியும் அவ்வனத்தில் வசித்துக்கொண்டிருக்கையில் முற்றத்துறந்தமுனிவர் பலருந் தம்மைச்சூழ்ந்துவரப் பகற் பதினைந்து நாழிகைக்கு

மேல் தூருவாசமுனிவர் எழுந்தருளினர். அவரெழுந்தருளக்கண்டு எதிர்சென் றழைத்துபசரித்து அவரை ஆசனத்திருத்தித் தேவரீரெழுந்தருள யாங்கள் செய்தமாதவ மெத்தன்மையதோ வென்றுகேட்க, அவர் தமக்கும் தம்மோடு வந்த முனிவர்களுக்கும் பசிப்பிணிநீங்க அன்னமளிக்கவேண்டுமென்று கேட் டனர். தருமராசனே அவர்களை நீராடிவருகவென்றுசொல்லி அனுப்பிவிட்டு இவர்களுக்குப் போசனஞ் சித்தஞ்செய்யும்படி பாஞ்சாலிக்குச்சொல்ல, பாஞ்சாலியும் இருகையையும் உச்சிமேற்கூப்பி யாதுசெய்வேன்! சூரியபக வான் அளித்த அட்சயபாத்திரம் பதினைந்துநாழிகைக்குமே லுதவாதே! இது தேவரீரறிந்திருந்தும் அதிதிகட் கன்னந்தருவோமென் றொப்புக்கொண் டது மமையுமாவென்று திகைத்து நின்றனள். அதைக்கேட்ட தருமராசனே நான் சிறிதும் ஞாபகமில்லாமலே ஒத்துக்கொண்டேனே! அவர்கட்கு மனம் நோகச்செய்தால் யாது தீங்குவருமோ! தெரியவில்லையே யென்று மனம் வருந்தி நின்றனன். அவ்வாறு வருந்தி நின்ற தருமராசனை வீமன் பணிந்து அண்ணா! கந்தமூலபலாதிகளால் அவர்களுக்குப் பசிப்பிணி போக்கலாமே யென்றான். அதற்குத் தருமராசன் அன்னமென்றே வந்தவர்களுக்குக் காய் கனி கிழங்கு முதலியவைகளால் திருத்திசெய்வ தழகல்லவே! என்று தவமியரிடத்தில் முறையிட்டுக்கொண்டான். அந்தச்சமையத்தில் சகதே வன் கிட்டிவந்து நமது தலைமேல் இடிவந்துவிழுந்தாலும் தாங்கவேவேண்டும், நாம் சலிக்கலாமோ, பாண்டவர் சகாயனென்று விருதுகட்டிக்கொண்டிருக் கின்ற கள்ளமாமாயப்பிரானை நினைத்தால் நம் கவலையொழியுமென்றான்.

தம்பியாகிய சகதேவன் சொன்னதைக்கேட்ட தருமராசன் தம்பிமா ருடனும் பாஞ்சாலியுடனும் ஒருமைமனமாய் அவனைச்சிந்தித்தான், அக் கள்ளமாமாயப்பிரானே குசலம்விசாரிக்க வருவான்போலத் துவாரகையி லிருந்தும் எழுந்தருளினன். தருமராசனும் வீமனும் தழுவிக்கொண்டனர், அருச்சுனநகுலசகதேவர் வணங்கினர்; பாஞ்சாலியும் வணங்கிநின்றாள், கண்ணபிரானே அவர்கள் க்ஷேமத்தை விசாரிக்க, அவர்கள் தூருவாசன் வந்ததும், அவன் அன்னம்புசிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதும், அதற்குத் தாங்கள் நீராடிவரச்சொன்னதும், அதற்கு அக்ஷயபாத்திரமுத வாததன்மையும் தெரியப்படுத்தினர். யாவருள்ளத்தும் எள்ளினெய்போல் விளங்கும் பகவான் சூரியனளித்திருக்கின்ற அக்ஷயபாத்திரத்தில் ஒருவிழுது அரைவிழுது அன்னமொட்டிக்கொண்டிருக்கிறதா ? பார்ப்போமென்று திரு வாய்மலர்ந்தருள, முழுதும் கழுவிவைத்துவிட்டிருக்கும் அக்ஷயபாத்திரத்தி லும் அன்னமொட்டிக்கொண்டிருக்குமா! என்றுசொல்லிப் பாஞ்சாலிபார்க் கையில் அதில் அரைவிழுதன்ன மொட்டிக்கொண்டிருக்கக்கண்டு அதை யெடுத்துக்கொண்டுவந்து பாண்டவர்சகாயனிடத்திலே கொடுத்தாள். அதை கையிலேவாங்கிக்கொண்டு வேதமணங்கமழும் நாவில்வைத்துச்சுவைத்தனன். அவன் சுவைக்கும் பெருமிதத்தால் நீராடிப் பொய்கையிற்சென்று சபஞ் செய்துகொண்டிருந்த தூருவாசமுனிவருக்கும் அவருடன்வந்த முனிவர்கட் கும் பசிப்பிணிதீர்ந்து அமுதுண்டாரேபோலத் தேக்கெறிந்துகொண்டு, இது

கள்ளமாமாயப்பிரான்செய்த விருந்தென்றே துணிந்து தூருவாசரும் தம்மொடுவந்த முனிவருடனே அவ்விடத்திற்கெழுந்தருளித் தருமராசனையும் கள்ளமாமாயப்பிரானையும் கண்டனர். தருமராசனோ வந்தமுனிவரை விருந்துண்ணவழைக்க, தூருவாசரும் மிகவஞ்சி உம்பொருட்டாக இந்திரன்முதலிய தேவரும் அருந்துதற்கரிய அமுதம்புசித்தாற்போலானேன். குசேலனளித்த அவற்பிடியுண் டகிலலோகத்தையு மனங்குளிரச்செய்த அமரர்பெருமானை ஊனக்கண்களாரக்காணும் பாக்கியமும் பெற்றேன். இப்பெருந்தகையைத்துணையாகப்பெற்ற உங்களுக்குத் துயரோயணுகமாட்டாது! என்று பின்னும் சொல்வாராயினர்.

நானொருநாள் அத்தினபுரம்போயிருந்தேன்; துரியோதனன் எனக்குவந்தனை வழிபாடுகள்செய்து அறுசுவையோடுங்கூடிய உணவை யளித்தான். அவன் அன்பாகச்செய்த விருந்துக்கு மனமகிழ்ந்து உனக்குவேண்டிய வரங்கேள்தருகிறேனென்றேன். அவன் என்தாயத்தராகிய பாண்டவரிடஞ்சென்று இவ்வகை விருந்துண்ணவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அதைப்பற்றியே முற்றத்துறந்த முனிவர்கள் பலர் என்னைப்புடைசூழ அபரானத்தில் வந்தேன். நாங்கள் உண்பதற்கரிய தேவருணவை யுண்டாற்போலானோம். அவன் நீ போசனமளிக்காயென்றே யெண்ணங்கொண்டனுப்பினான்போலும். எனக்கு நீயவ்விருந்துசெய்யாமற்போனால் நான் சபித்துவிடுவேன்; தான் இவ்வரசுமுழுது மாண்டுவரலாமென்றே கருதி யிப்படிசெய்தான். இப்படிப்பட்ட துஷ்டன் இனி இரண்டுவருஷத்திற்குள், தன்புத்திரமித்திரகளத்திராதிகளுடன் மாளவேண்டுமென்று சபித்து விடைகேட்டார். தருமராசனும் துருவாசமுனிவரை வணங்கி இனி இப்படிப்பட்ட கொடியவர் பேச்சுகேட்டு இவ்வாறு செய்வது தகுதியேயன்று; தேவரீர் இவ்வாறு துரியோதனனைப்போல் யாரேனும் வரங்கேட்டால் இவ்வாறு வரங்கொடுக்கவேண்டாமென்றும், யாவருக்கும் நாங்கள் இல்லையென்று சொல்லாதிருக்கவேண்டுமென்று கேட்கத் துருவாசமுனிவர் நீங்களோ தெய்வாமிசமடைந்திருப்பவர்கள், ஆகையால் ஒருக்காலமும் துன்பமடையமாட்டீர்களென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார், பாண்டவர்சகாயனாகிய கண்ணபிரானும் பாண்டவரிடத்தே விடைபெற்றுத் துவாரகையை யடைந்தனன்; பின்னர் பாண்டவர்களும் தவமியர் முதலிய வந்தணரும் மனமகிழ்வடைந்து கண்ணபிரான்து பெருங்கருணைத்திறத்தைப்பேசிப் புகழ்ந்தனர்; இதுநிற்க.

பழம்பொருந்து சருக்கம்.

பாண்டவர்கள் கண்ணபிரான் துவாரகைசென்றபின்பு அவன்பதியோசித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் மாலைப்பொழுதில் அர்ச்சுனனும் பாஞ்சாலியும் முனிவர்தவஞ்செய்தொழுகும் அடர்ந்த சோலையைக்கண்டு அதில் கண்டார் மனங்கவரும் ஒருநெல்லிக்கனிபழுத்திருக்கும் மரமொன்றைக்கண்டு பாஞ்சாலி இது யாவர்கண்ணையும் கவரத்தக்கதாயும் மிக்க மதுரமுள்ளதாயும் இருக்கிறது; இக்கனியைப் பறித்துத்தரவேண்டுமென்றனள், இவ்வாறு பாஞ்

சாவி சொல்லக்கேட்ட அர்ச்சுனன் அக்கனியைப் பறித்துப் பாஞ்சாலிகரத்திற்கொடுத்தான். அதைக்கண்ட முனிவர்கள் சிலர் அர்ச்சுனனை நோக்கி இது அருந்தவத்துப் பெருங்கடலாகிய மித்திரமகாமுனிவர் உண்ணச்சமைந்தது. 'தையல் சொற்கேளேல்' என்று பெரியோருரைத்திருக்கவும் அதைச் சிறிதேனும் சிந்தியாது இக்கனியைப் பறித்துவிட்டாயே! இம்மரமோ சிவசங்கற்பத்தா லுண்டானது. இது இரண்டாண்டு பூவாயிருந்து இரண்டாண்டு பிஞ்சாகி இரண்டாண்டு காயாகி இரண்டாண்டு செங்காயாகி, இரண்டாண்டு பழமாகி இரண்டாண்டு மதுப்பெருகிப் பன்னிரண்டாண்டு நிரம்பிய பின்னர் இம்மரத்தடியில் அம்முனிவர்வந்து தவஞ்செய்வர். அவர்கரத்தில் இப்பழம் தானேவந்துவிழும். அந்நாளோ நாளைத்தினமென்றேயறி. அதை அவர் தம்மைச் சூழ்ந்துநின்றவருக்கும் கொடுத்துத் தாமும்புசிப்பர். அப்படிப்பட்டவருமையான கனியை நீ பறித்துவிட்டுப் பழிக்காளாயினையே! என்றனர். அதைக்கேட்ட அர்ச்சுனன்பயந்து அக்கனியை அவர்களிடங்கொடுக்க அவர்கள் மறுத்தனர். அதைக்கண்ட அர்ச்சுனன்பயந்து மனநடுங்கி என் செய்வதென்றேங்கித் தருமராசனிடம் வந்து அழுதுபுலம்பினான் மாது சொற்கேட்டு மதிமயங்கி இக்கனியைப்பறித்துவிட்டுப் பழிதேடிக்கொண்டேன்; என்னசாபமிடுவாரோ அறியேன், குற்றவாளியாகிய நானன்றோ சாபமடையப்போகிறேனென்று வருந்தினான். தருமராசனோ அப்பாபார்த்தா! நீ மாத்திரம் சாபத்தினாலிறப்பது, நாங்கள் மாத்திரமுயிருடனிருப்பதா! நீ இறந்த பின்னரு நாங்களுமுயிருடனிருப்போமோ; யாவரும் ஒருங்குமாய்வதே தகுதி; ஐந்தலையையுடைய நாகமொன்று தலை யொன்றையிழந்தால் மற்ற தலையுடனுயிர் வாழக்கண்டதுண்டோ வென்று வருந்தினன். அவ்வாறு வருந்தக்கண்ட சகதேவன் தருமராசனைநோக்கி நீர் வருந்துவதனால் என்னபயன்! பாண்டவர் சகாயனென்று சொல்லும்படி கண்ணபிரானெழுந்தருளியிருக்கையில் நமக்கென்னகுறை! அவரில்லாவிட்டாலன்றோ நமக்குத் துன்பநேரும். அப்பெருந்தகை வரநாமொருங்கு சிந்தித்தால் நமது குறையகலுமென்றனன், பாண்டவரைவரும் ஒருமைமனமாய்க் கண்ணபிரானெழுந்தருள நினைத்தனர். கண்ணபிரானோ பாண்டவரைவரையும் பார்க்க வருவார்போற் சத்தியபாமையுடன் எழுந்தருளினான். அவனைக்கண்டுதாய்ப் பசுவைக்கண்ட கன்றேபோல மனங்கனிந்துருகி யெதிர்கொண்டழைத் துபசரித்துத் தங்கள் குறையைத் தெரிவித்தனர். அதைக்கேட்ட கண்ணபிரானோ மனமுருகி வருந்தி என்ன கொடியகாரியஞ் செய்துவிட்டீர்கள்! பெரியோர்சாபத்திற் குள்ளானீர்களே! என்னசெய்வேன்; நான் கடவுளுமல்லன், மந்திரவாதியுமல்லன், ஆயினும் பெரியோருரைத்த சொல்லொன்று என்மனத்தில் தோன்றுகின்றது, அந்தப் பழமொழியோ! 'உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்' என்றது. இது வேதமொழியோடொத்தது; ஆதலால் நீங்கள் ஐவிரும் அம்மரத்தடியிற் சென்று உங்கள் கருத்தையுள்ளவாறு வெளியிடுவீர்களாயின் இது ஒட்டிக்கொள்ளுமென்று அப்பாண்டவரைவரையும் பாஞ்சாலியுட னழைத்துச்சென்று அக்கனியைத் தருமராசன் கையிற்கொடுத்துன்கருத்தை வெளியிடென்றான்.

தருமராசனே தன்னிஷ்டதேவதையாகிய கண்ணபிரானை மனமொழிமெய்க ளால் வணங்கி அறமுமெய்மையும் பொறுமையும் இக்கண்ணபிரானுமே என் சிந்தையினினைக்கும் அரும்பொருள்கள், பழிபாவமுதலியன என் கருத்தி லெண்ணுவன வல்லவென்று சொல்ல, அக்கனியிரண்டுமுழ முயர்ந்தது. பின்பு வீமராசன் தன்கருத்தை வெளியிடத்துணிந்து பிறர்தாரத்தைத் தாய் போலவும் பிறர்பொருளை யெட்டிபோலவும், பிறர்வசையுரைப்பது பெருமை யன்றெனவும், பிறர்துயரை யென்றுயரெனவும், எனக்கு முடிவுநேர்ந்தாலு நினைப்பதென்று சொல்லவே அக்கனி பின்னுமிரண்டுமுழமுயர்ந்தது. கண் டவுடனே 'மயிர்நீப்பின் வாழாக்க வரிமாவன்னாருயிர்நீப்பர் மானம்வரின்' என் றாற்போலப் புழுமலிந்த புன்குரம்பையிலிருக்கும் உயிரினுமானமே சிறந்தது; மானத்தைப் புரப்பதேகடன், மானமே தோற்றமும் மரபு மென்று தன்கருத் தைவெளியிட்டான்; அக்கனியிரண்டு முழமுயர்ந்தது. நகுலன் தன்கருத் தைவெளியிடத்துணிந்து குலத்திற் சிறந்தாரேனும் அழகிற் சிறந்தாரேனும் செல்வத்திற் சிறந்தாரேனும் நல மிகவுடையாரேனும் கல்வியும் ஞானமும் சிறிது மில்லாதாரை முருக்கின் மணமிலாமலரேபோல் நினைப்பதென்கருத் தென்றான்; அக்கனியிரண்டு முழமுயர்ந்தது. பின்புசகதேவன் தன்கருத்தை வெளியிடத்தொடங்கி மெய்ம்மையேதாய், ஞானமே தந்தை, தருமமே துணை வன், கருணையேசிநேகன், சாந்தமே மனைவி, பொறுமையே மனைவி, இவ் வைவரையுமே யல்லது வேறுறவுண்டென்று நினைப்பதென் சிந்தையின் கருத் தேயல்லவென்றுசொல்ல; அக்கனியிரண்டு முழமுயர்ந்தது. பின்பு பாஞ்சாலி தன் சிந்தைக்கருத்தை வெளியிடத்தொடங்கி ஐம்புலன்கள்போற் பாண்ட வரைவரும் எனக்குக் கணவராயிருக்கவும் வேறொருவன் என்கணவனுமிருக் கவுமெண்ணு மென்னெஞ்சம், அழகிய உலகினிடத்தில் ஆடவரொன்ற பேரற் றிருந்தாலல்லது மாதரைக் கற்புடையாரென்று சொல்வதியற்கையோவென்று சொல்ல, அக்கனி அம்மரத்திலொட்டிக்கொண்டது. கண்ணபிரானே அதிசய மடைவான்போல மகிழ்வடைந்து 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்' என்றது மெய்ம்மையேயென்று சொல்லிவிட்டு அவரிடம் விடைபெற்றுத் தான் துவாரகைக்கெழுந்தருளினன்.

நச்சுப்பொய்கைச்சருக்கம்.

இவ்வாறு கண்ணபிரான் சத்தியபாமையுடன் துவாரகைக்கெழுந்தருளிய பின் பாண்டவர் ஐவரும் பாஞ்சாலியுடன் விண்டுசிந்தனென்னும்முனிவராச்சிர மத்தில் வாசஞ்செய்துவந்தனர். அப்பால் துரியோதனன் சகுனிதுச்சாதனன் கர்ணன்முதலானவருடன் பின்வருமாறாலோசிக்கத்தொடங்கினன். பாண்ட வர்களோ வனசஞ்சாரமாய்ப் பன்னிரண்டாண்டுமகழித்தனர்; இனிஅஞ்ஞாத வாசமுங்கழிக்கப்போகின்றனரே, அவர்கள் வனவாசங்கழிப்பதற்குள்ளாகவே இனிக் கொலைநேர்ந்தாலல்லது வெல்லமுடியாது, ஆகையால் நாம் ஏதேனும் அவரைக்கொல்ல உபாயம் தேடவேண்டுமெனத்துணிந்து காளமாமுனியென் னும் அருந்தவனையழைத்துவரத் தூளமாமுனியென்பவனையேவினன். அவ

ளும் அவரையழைத்து வந்துவிட்டனன். அத்துரியோதனன் இதுவரையிலும் எந்தமுனிவருக்கும் செய்யாத உபசாரங்களையெல்லாம் அவருக்குச்செய்து ஆசனத்திருத்தி நீர் செய்துவரும் அருந்தவத்தால் என் செங்கோல் இவ்வுலகமுழுதும் செல்லாநின்றது, என்னையிடேற்ற வேண்டுகின்றேனென்று அவர்பாதங்களில் வீழ்ந்துவணங்கிநின்றான். அதைக்கண்ட அம்முனிவர் துரியோதனனை நோக்கி இங்கே என்னை யழைப்பித்த காரியமென்ன? என்றுகேட்க, அருகேயிருந்த சகுனி உம்மையழைப்பித்தது தன் பகைகளைந்து வாழ்வதற்கென்றே எண்ணவேண்டும். பாண்டவரைவரும் உயிருடனிருந்தால் தங்கள்தாயபாகம் கேட்டுத்தொலைவர்; அப்பாண்டவரைவரையும் விண்புகச்செய்யும்படி ஒரு பெரியயாகஞ்செய்து அவரைக்களையவேண்டுமென்றான். கன்னன் இச்சொல்லைக்கேட்டவுடன் தன்னிரண்டுகண்ணும் சிவந்து தீப்பொறிசிதற நாகம்போற் சீறிநின்றான். அக்காளமாமுனியோ துரியோதனனைநோக்கி உன்னாணைசெல்லாத்திசை யெங்குமில்லையே, இம்மண்ணுலகமுழுதும் உன்தனிக்குடைநிழலில் இருக்கின்றதே, நான்அவர்களைக் கொல்லவே சமைந்தேனாயின் என்னை சுட்டழிக்கும். சிங்கவேறுபோன்ற அவர்கள் மேல் ஒன்றேனும் செல்லமுடியாதே. பாண்டவர் சகாயமாக உலகமுண்ட பெருவாயனெனப்படும் கண்ணபிரான் இருப்பதனால் அவர்களை யாரால் வெல்லமுடியும்! நானுன்னிச்சையின்படி செய்தாலும் எனக்கின்றேமுடிவுகாலமென்று சொல்லினான். அவ்வாறு சொன்னமுனிவரைத் துரியோதனன்முதலிய யாவரும்பணிந்து அவரை இசைவித்து அவர் யாகஞ்செய்வதற்குவேண்டிய பொருளனைத்தும்கொடுக்க, அவன் பெற்றுக்கொண்டு தன்னாச்சிரமமடைந்தான். துரியோதனனும் தன் இராசமாளிகைபோய்ச்சேர்ந்தான். அம்முனிவனோ தன்னாச்சிரமமடைந்து தன் தவச்சாலையினொருபுறத்தே மலைச்சாரலுக்கருகில்யாகசாலையையேற்படுத்திக்கொண்டு அதர்வணவேத சம்பந்தமான யாமளமந்திரமுச்சரித்துக்கொடும் பலிகொடுத்து நடத்தினான். இவ்வாறு நடத்துகையில் கண்களில் நெருப்புப் பொறிபறக்க இளநிலாவீசும் பற்களுடன் பிலம்போன்ற வாயுடன் கரியமலைபோலுமொருபூதந்தோன்றியது. அதைக்கண்டுமுனிவனும்பயந்துநடுங்கினான்.

இப்பால் விண்டுசித்த ராச்சிரமத்தில் பாண்டவரைவரும் பாஞ்சாலியுடன் அந்தணர்கள் தம்மைப் புடைசூழவாழ்ந்திருக்கையில் இவர்களைக் கெடுமதியெண்ணித் துரியோதனன் காளமாமுனியைக் கொண்டு அவர்களைப் பூதத்தாற் கொல்விக்க சமைந்திருப்பதையறிந்த தென்றிசைக்கோமானாகிய தருமராசன் கண்ணபிரானாலறிந்து அக்காட்டிலிருக்கிற முனிவன்மகனாகிய பிரமசாரியோலுருக்கொண்டுவந்து எனக்கின்னு முபநயனமாகவில்லையே, நானோர் அறிஞரையடுத்து உபநயனஞ்செய்து வைக்கக்கேட்டேன். அவர் நாற்கால் வெண்மையும் உடன்முழுதும் பரிசுத்தமுமாய்ப் பான்மறந்துள்ள மான்கன்றின்றோல் கொண்டுவருவையேல் செய்துவைக்கிறேனென்றனர். நானவ்வாறே யோராண்டுவரையும் ஓர்வேடனையடுத்துவந்தேன். அவன்என்பாலிரங்கிக்கொடுத்தான், நானதைப் பெற்றுத் திரும்புகையில் ஓர்மானோடிவந்து என் கையிலிருந்த அத்தோலைப்பிடுங்கிச்சென்றது. எனக்கு அதை மீண்டுந்தா

வேண்டுகின்றேனென்று வேண்டினன். அப்பிரமசாரியழுது புலம்பிய சொற் கேட்ட பாண்டவரைவரும் பாஞ்சாலியைத் தவமியரிடமொப்பித்துத் தங்கள் கையில் வில்லேந்திக்கொண்டு அக்காட்டிற் சென்றனர். அம்மானே அகப் பட்டதுபோல முன்னிற்கும், அருகேவருவதுபோல் காட்டிப் பாணவேகத் தினு மிக்கவேகமாயோடிப்போம், தோன்றாமல் வெளியிலொளிக்கும், மீண் டும்வெளிப்படும், இவ்வாறு அவர்கள் மெய்தளர்ந்துபோம்வரையிலும் ஓட்டெ டுப்பப் பாண்டவரைவரும் அது தங்கள் கைக்ககப்படாமையால் மிகவும் தளர் வடைந்து நாவறட்சியடைந்தனர். இவர்கள் நாவறண்டு நீர்வேட்கையினைமிகு தியுமுடையராயிருக்கையில் அத்தருமராசனும் அங்கேயொரு நச்சுப்பொய் கையும் அதன்கரையில் ஆலமரமாயுமிருந்தனன். இவ்வாறிருக்கையிற் பாண் டவரைவருள் யுதிட்டிரனே தம்பியாகிய சகதேவனைப்பார்த்து நீர் கொண்டு வரவேண்டுமென்றுசொல்ல, அவனு நீரைத்தேடி மிகவும்வருந்தி அங்கோர் ஆலமரத்தடியில் நிறைந்த நீர்ப்பொய்கையிருக்கக்கண்டு தண்ணீர்குடித்துக் கரையேறினவுடனே பூமியில்விழுந்து மாண்டான். பின்பு நகுலனையனுப்ப அவனுமவ்வாறே மாண்டான், அர்ச்சுனனையனுப்ப அவனும் மாண்டான்; பின்னு நீர்வேட்கையால் தரியாமல் இன்னுமென்செய்வது! போனதம்பியர் இன்னும் வந்தாரிலரே! என்றுவருந்தி யேங்கினன். வீமன் யுதிட்டிரனைத்தேற் றிச் சோகத்தோடு அக்காடெங்கும் திரிந்து அச்சுனையைக்கண்டு தம்பியர் மூவருமிறந்துபட்டிருப்பதுகண்டு மனந்தளர்ந்து நாமிருந்தென்செய்வது! வில் லாளியாகிய தம்பி விசயனும்பட்டான், மெய்ஞ்ஞானமேயுருக்கொண்ட சக தேவனோடு நகுலனும்பட்டான், தருமராசனும் இங்கேவந்தெய்தினும் அமை யும், நாமினியிருப்ப தடாதென்றுநினைந்து மணலில் இது நச்சுப்பொய்கை, இந் நீரையருந்தியே நாங்கள் மாய்ந்தோமென்றெழுதிவிட்டுத் தானுமந்நீரையருந்தி மாண்டான். இவ்வாறு கட்புலனுக்கு வேறொருவரையுங்காணாத அக்கொடுங் காட்டிற் பாண்டவர்கள் தலைவனாகிய யுதிட்டிரன் தன்னந்தனியேயிருந்து நீர்வேட்கையால் வருந்தியதுமல்லாமல் போன தம்பியரையுங்காணேமே! என்செய்வேன்! எங்கேபோய் வராதிருக்கின்றனர்! என்று மனமழிந்து தேடிச்சென்று சந்தனத்தருவினிழலிற்றளர்ந்துசாய்ந்தனன்.

இப்பால் காளமாமுனிவன் தருவித்த பூதம்அம்முனிவனைநோக்கிஎன்னை வருவித்த தென்ன காரணமென்று சொல்ல, அதற்குப் பாண்டவரைவரும் காட்டில் வசிக்கின்றனர்; அவர்களைக்கொன்றுவாவென்றான். அப்பூதமோ என்விழிக்கவர்கள் இலக்காகாவிட்டால் மீண்டுவந்துன்னையேகொன்றகல்வே னென்று விடைபெற்றுச் சந்தனமரநிழலிற் செத்தபிணத்தோடொத்த பிண மாய்ச் சாய்ந்துகிடக்கும் யுதிட்டிரனைப்பார்த்து இக்காட்டின் வெப்பத்திற் காற்றாமல் இவனே இறந்து பட்டானென்று கண்டு மற்றநால்வரையும் கட்புல னாற்காணாமற்சோர்ந்து, காளமாமுனிவன் யாகசாலையையே நோக்கி நடந்து அம்முனிவனைக்கொன்று யாகத்தீயின் மீண்டு மறைந்தது. அங்கேயிருந்த முனிவரெல்லாம் இவன் கேட்டைநாடிச் செய்தமையால் தானே மாண்டா னென் றிரங்கியேங்கினர். இது நிற்க.

தருமராசனே சந்தனமரநீழலில்தென்றல் வீசச்சிறிதுயிர்ப்பு நீங்கி இறைவன் திருநாமநினைந்து தன்னைப்பெற்ற தென்றிசைக்கோமானருளால் வினைப்பயனால்வருந்துயர மனைத்தையுங் களைந்து தனக்கு நீர்வேட்கை மிகத் தம்பியரைநாடி அங்கிருந்தெழுந்து அவர் காலடிச்சுவட்டைப்பற்றிக்கொண்டே நடந்துசென்று அவர்களிறந்திருக்கக்கண்டு ஒருபுறத்தே வீமன் மணலிலெழுதியிருக்கும் எழுத்தைப்பார்த்து இந்நீரருந்தியே மாண்டார்களென்றும் இது மீண்டும் நம்மோடு வனவாசமொழிந்தே போர்செய்ய வருவார்களென்றும் வஞ்சமாகத் துரியோதனன்செய்த தீச்செய்கையென்றேயறிந்து தானு மந்நீரையருந்தும்படி துணிந்து அப்பொய்கையருகேவந்து அந்நீரைத் தன்கையாலள்ளிக்குடிக்க நீரைமுகக்கையில்; அசரீரி யுதிட்டிரனே! இந்நீரை யுண்ணக் கருதவேண்டாம், இது நச்சுப்பொய்கை, இந்நீருண்டார் மாள்வாரென்ற என் சொற் கேளாமலே இவர்களெல்லா மிறந்துபட்டனர். உன்னை நான் கேட்கும் வினாக்களுக்கு விடைதந்தே இந்நீரையருந்தென்றுசொல்ல, யுதிட்டிரனும் தன் கையால்முகந்த அந்நீரை விடுத்து நீர் கேட்கும் கேள்விகளைக்கேளென்றனன். அதற்குத் தருமராசனும் தன்மகனாகிய யுதிட்டிரனைநோக்கித்தன்னுருக்கரந்துகொண்டே பின்வருமாறு வினவத்தொடங்கினன்.

தருமன்வினா.	யுதிட்டிரன்விடை.
நூல்களிலெல்லாம் சிறந்தநூலெது?	வேதம்.
இல்லறத்திற்குரியார் யாவர்?	கற்புடையமனைவி.
மலரிற்சிறந்த மணமுள்ள மலரெது?	மல்லிகைமலர்.
மாதவமெது?	தன்குலத்தொழுக்கங்குன்றாமை.
முனிவர்கள் வணங்கும் தெய்வமெது?	முகுந்தன்.
மாதர்க்குரிய குணங்களிற் சிறந்ததெது?	நாணம்.
இனிமையென்றுசொல்லத்தகுவதுயாது?	மழலைச்சொல்.
நிலைபெற்றிருப்பது எது?	கீர்த்தி.
கற்பதெது?	சாகாக்கல்வி.
அற்பமெனப்படுவதியாது?	பிறர்பாற்சென்றுயாசிப்பது.

இவ்வாறுசொல்லிய தன்மகன்விடைக்கு மனமிகமகிழ்ந்து தன்னுருக்கொண்டு உன் தம்பியர் பிழைக்க வகையுண்டென்றுசொல்லி யுனக்கன்புடையானை இம்மந்திரத்தால்எழுப்புகவென்று கற்பிக்கவே, யுதிட்டிரனும் நகுலனையெழுகவென்றுசொல்ல நகுலன் உயிர்பெற்றெழுந்தனன். அதைநோக்கித் தென்றிசைக்கோமான் மற்போரில்வல்லவீமனையும் விற்போர்வல்லஅர்ச்சுனனையும் சாத்திரங்களில்வல்ல சகதேவனையு மெழுப்பாமல் நகுலனை யெழுப்பியவித

மென்னவென்ருன். அதற்குயுதிட்டிரனும் குந்திதேவிக்கு நானொருமைந்தனும் மத்திரைக்கு இவனொருவனும்உள்ளானென்றுசொல்லச்செய்தேனென்ருன். அதற்குத் தென்றிசைக்கோமகன் சிறுநகைபுரிந்து தருமராசனுக்கு போரில் வெல்லும் அத்திரசத்திரங்களும் வித்தைகளும் உபதேசித்து மற்ற மூவரையு மெழுப்பித் துரியோதனன் காளமாமுனிவனைக்கொண்டு யாகஞ்செய்வித்த தும், பூதம்பிறந்ததும், அதைக்கொண்டு உங்களைக்கொல்லவேவியதும், அதை யறிந்து கானசுப்பொய்கைவைத்ததும், நால்வரிறந்ததும், நீர்வேட்கையால் நீ இறந்ததுபோலிருந்ததும், பூதமீண் டம்முனிவனைக்கொன்றதும் நன்ருயறி யென்றுசொல்லி இனி அஞ்ஞாதவாசம் செய்கையில் உருமாறியிருப்பதற்குத் தருமனுக்கொரு மந்திரமுபதேசித்து இதை மனத்தில் நினைத்துக்கொண்டு சபித்தால் உருவமாறி யிருப்பாயென்று சொல்லிவிட்டு விடைபெற்றுச்சென் ருன். பாண்டவரைவரும் நீர்குடித்து நீர்வேட்கைதீர்ந்து இச்செய்தியனைத் துந் தவுமியர் பாஞ்சாலி அந்தணர் முதலானோருக்கும் சொல்லிக்கொண் டிருந்தனர். இதுநிற்க;

நச்சுப்பொய்கைச்சருக்கம்

முற்றிற்று.

மூன்ருவது

ஆரணியபர்வம் - முற்றுப்பெற்றது.

உ

கணபதிதுணை.

நான்காவது

விராடபர்வம்.

கரந்துறை சருக்கம்.

கண்ணன் தோத்திரம்.

கருவிடையெய்தார் நரகிடைப்புகுதார் காலனைக் கனவிலுங்கருதார்
வெருவிருவிழிவேன் மடந்தையர்காம வேட்கையாம் வேலையினழுந்தார்
பொருமொருதிகிரி வலக்கரத்தணிந்த புண்ணியன் விண்ணவர்பெருமான்
திருமறுமார்பன் திருவடிக்கடிமை செயுமடி யவர்க்கடி யவரோ.

தன்னைப் பரிவாயடையும் பத்தர்களைக் காக்கும் கண்ணபிரானையும் ஸ்ரீவியாச பகவானையும் பணிந்து, பொன்னிறமாகிய சடைமுடி புனைந்த வைசம்பாயனர், இதுவரையிலுஞ் சொல்லிவந்த ஐந்தாம்வேதமென்னும் பரிசுத்த அமுதத்தை, கற்புடைமையோடு மனமாட்சியிலு மிக்குயர்ந்த பொற்பினையுடைய வபுஷ்டாதேவிக்குப் புருஷரத்தினமாகிய ஜெனமேஜெய மஹாராஜன், காதென்னும் வாய்வழியாலுண்டு அற்புதமடைந்து மற்புயம்வளர்ந்து மகிழ்ந்து, அறிஞர் பெருமானுகிய வைசம்பாயனரை நோக்கி, சுவாமீ! அப்பாலென்மூதாதைகளாகிய பாண்டவர்களுக்கு நேர்ந்த தன்மையைச் சொல்ல வேண்டுமென்று வணங்கிக்கேட்க, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

அரவக்கொடிபடைத்த துரியோதனனேவலால் பாண்டவரைவரும், பாஞ்சாலியும், தௌமியரும், பன்னீராயிரம்பிராமணர்களும், மிருகங்கள்திரியும் வனத்தில் வாசம்புரிந்து,பலவகைப்பழமும் வெகுவிதக்கிழங்குகளும்சருகாதிகளுந்தின்று, பகலும் இரவும் பனியும் மழையும் காற்றும் காடும் மேடும் கல்லும் புல்லும் கலந்த வனத்தில் பன்னிரண்டுவருடமுங் கழித்தபின்பு அஞ்ஞாதவாசஞ் செய்வதற்குச் சிந்திக்கவேண்டுமென்று தாங்கள்வசித்த வனத்தையகன்று அப்பாற்சென்று தருமதேவதையை வணங்கி; எந்தையே? யாம் எண்ணியகாரியந் தடையின்றி நிறைவேற நச்சுப்பொய்கையில் வரங்கொடுத்தவண்ணம், இப்போது கைகூடவேண்டுமென்றிரந்து மகிழ்ச்சியடைந்த யுதிட்டிரன் தம்முடனிருந்த அந்தணரைவணங்கி பிரமஞானமுடைய மேலோர்களே? இத்தனைநாளு மெம்முடன்பொருந்தி மிகவருந்தி வனத்தில் வசித்தே உபவாசமிருந்தீர்கள். இனிமேல் யாமொருவருடம் மறைந்திருக்க வேண்டியகாலம் நேர்ந்ததனுல் நீங்களனைவரும் ஆசீர்வதித்து எங்களுக்கு

விடைகொடுத்தருள வேண்டுகின்றோமென்று வணங்கிக்கேட்டனர். இவ்வாறாகத்தலைமேற்கரங்குவித்துக்கேட்டமுரசக்கொடியையுடையதருமராசனைப் பார்த்து அந்தணர்கூறலாயினர்.

பாண்டவர்கள் திலகனே? நீங்களெண்ணிய காரியமெல்லாம் திண்ணமாகவே கைகூடும், இனி யாதொருதாழ்ச்சியு முண்டாகாது, இன்னுஞ் சில போதில் நீங்கள் வெளிப்பட்டுப் பகைவரை வெற்றிகொண்டு சகல ராஜவைபவத்துடன் உலகை ஆளப்போகின்றீர்களென்று மங்களவாழ்த்துடன் ஆசீர்வதித்தனர். இவ்வாறு பல்லாண்டுகூறிய பெரியோர்களை நோக்கித் தருமராசன் சொல்லலாயினன்.

ஐயமார்களே? இப்போதெமக்கு நேர்ந்த துயர நீங்கி வெளிப்பட்டு உம்முடன் கலந்திருந்து உசிதவார்த்தைகள்பேசி நேசித்து விசுவசிக்கக்கூடுமோ? கூடாதோ? நான் தேடிய புண்ணியப்பயனெப்படியோ அறியமாட்டேனென்று கண்ணீர்பெருக உள்ளமுருகச்சோர்ந்து நின்றனன். அவ்வாறு சோர்ந்த தருமராசனைத் தம்பிமாரணைத்து உபசரித்து ஆயாச நீங்கத் தேற்றிப்போற்றினர். எவ்வாற்றாலுந் தேறுமல்மயங்கிய சத்தியசீலனைத் தௌமியர்கண்டு உதிஷ்டிரனே! சாந்தம், உதாரம், தருமமுதலிய நற்குணங்களிலும், சத்தியவிரதம் சாஸ்திரவிசாரணைகளிலும், சிறந்த நீதிநிறைந்த கருணைக்கடலாகிய நீரேகிலேசப்பட்டால் மற்றியார்தான்பொறுப்பர். முத்தொழிலியற்று மூவர்க்காயினும், பொன்னாட்டிலுறையும் தேவர்க்கானாலும், கேள்விமுதலிய தவத்தூற்றோர்க்காயினும் விபத்துவராமற்போகாது; அவ்வாறுவரின் அது அநுபவிக்காம லவரை விடமாட்டாது. இதற்குத் திருஷ்டாந்தஞ்சொல்லுகிறேன் கேளும்; தேவர்கட் கிறைவனாகிய இந்திரன் சூக்குமவடிவாய் ஒரு தாமரைத்தண்டினுள் ஒளித்து வெகுகாலந் தவஞ்செய்திருந்து தனக்கு நல்வினைப்பயன் நேர்ந்தபோது வல்லவனானான். உலகத்தைக்காக்கும் கள்ள மாமாயப்பிரானும் அதிதியின் கருப்பத்திலடங்கிக் குறள்வடிவாய்வந்து பலிச்சக்கரவர்த்தியினிடத்தில் நடந்துசென்று மூவடிமண் தானமாகக்கொண்டு வானமளாவிச் சேவடியாலளந்து தன்சிந்தையி லெண்ணியவாறே முடித்தருளினான். அக்கினிதேவனோ அவுரவமஹாமுனியின் மனைவி தொடையில் மறைந்து நெடுநாளிருந்து தீவினை தீர்ந்தபின்னர் வெளிப்பட்டனன். சூரியபகவானோ பசுவின் வயிற்றிலொளித்துப் பலநாள் கழித்து, விண்ணவர் யாவருங்கொண்டாட உதயகிரியிலுதயஞ் செய்தருளினான்.

இவ்வாறாக இன்னும் பலருமிப்படியே காலத்திற்குத்தக்க கோலங்கொண்டு ஞாலத்தில்வாழ்ந்து வாழ்நாளைக்கழித்தனர்; ஆதலால் தீவினையாலெய்துகின்ற ஆபத்தானது யாவரையுந் தீங்கின் வசப்படுத்தும், நீங்களும் அவ்வாறே அஞ்ஞாதவாசந்தொலைந்து முன்போல் அரசுசெய்யவருவீர்களென்று அன்புடனுரைத்தனன். அச்சொல்லை இன்பமாகக்கேட்டு மகிழ்ச்சியெய்தி எங்கள்வினை இனி யெப்படியாமோவென்றுவருந்தி நின்ற தருமராசனை; மிக்க பலசாலியாகிய வீமசேனன் நோக்கி முகம்வேர்த்து, அண்ணாவே! கதாதர

ணுகியயானும், காண்டீபனுகிய அர்ச்சுனனும், நகுலசகதேவராகிய இரட்டையரும், உமது கட்டளைக்கே கீழ்ப்படிந்து, நடந்துவரும்போது இப்போதும் இனியெப்போதும் உமக்கென்ன குறையுண்டு; தேவரீர் உள்ளங்கலங்கவேண்டிய காரியமென்னை? இன்னும் சற்றே கடைக்கண் நோக்குவீராயின் இதுவரையிலும் பற்பல துன்பங்களையே செய்துவந்த பகைவர்களை அடிவேரறுத்து முடிசாய வீழ்த்திப் படியையாளுமரசர்பலரு முடியால்வணங்கக் கெடித்தலாதிபனென்னுங் கீர்த்தி உமக்குண்டாக்கி வைப்போம், சீக்கிரத்தில் உத்தரவு கொடுத்தருளவேண்டும், எங்கள் வல்லமையைப் பாரும், தேவரீரசாளுகிற வேலையைமுன்னே முடித்துவிட்டு மற்றவேலைகளைப் பின்னேபார்க்கின்றோமென்று துடித்தெழுந்து சொல்லிய தம்பியைக் கையமர்த்தி, அப்பாவீமா! நாம்சத்திய நிலையைக்காத்துத் தருமமுறையைப்பார்த்து உத்தமமான கீர்த்திசேர்த்து உண்மைக்குறுதிநிறுத்தவேண்டும்; அதுவோ வெகுநாளில்லை; இன்னுஞ் சிலநாளிருக்கின்றன. இதற்குள் நீங்கள் ஆத்திரப்படுதல் தகுதியன்றென்று தம்பிமார்களுடன் சாந்தமாகச் சொல்லிக்கொண்டு இரண்டு நாழிகை வழிதூரங்கடந்துசென்று மேல்நடக்கவேண்டிய காரியத்தைக்குறித்து தௌமியர் முதலிய பெரியோருடன் ஆலோசனைசெய்யத் தொடங்கினர். கேளும் ஜனமேஜய மகாராஜனேயென்று வைசம்பாயனர் சொல்லி மேலுஞ்சொல்லத் தொடங்கினர்.

கரந்துறையும் ஆலோசனை.

சகல கலைஞானங்களையும், ஐயந்திரிபு அறியாமை யில்லாமற்கற்ற தருமராசன் வையம்புகழு மகாவீரராகிய தம்பிமாரை நோக்கி ஆ! என் சகோதரரே, கல்லும் புல்லு நிறைந்த காடுமேடுஞ் செறிந்த கருங்கல் மலையுயர்ந்த இடங்கள்தோறும் நமக்கிருப்பிடமாகப் பொருந்திப் பன்னிரண்டாண்டு பலருமறியக்காலங் கழித்தோமே, இனியொருவரு மறியாமே ஒருவருடன் தொலைக்க வேண்டியிருப்பதால் நாம் மறைந்திருப்பதற்குத் தகுதியான இடம் யாதோ; அதை முன்னமே யோசிக்க வேண்டுமென்று அன்புள்ள தமையன் கேட்க, இந்திரகுமாரனுகிய அருச்சுனனெழுந்து தாமரை மலர்போன்ற தாள் மேற்பணிந்து, அண்ணுவே! நமது குருதேசத்திற்குச்சமீபத்தில் பாஞ்சாலம், மச்சம், சாளவம், விதர்ப்பம், பாகுலிகம், விதேகம், தசார்ணவம், சூரசேனம், கலிங்கம், மகதம் இவைகளெல்லாம் மனக்களிப்பே தருவதாயிருப்பன. இந்நாட்டுக்குள் மிச்சமாகச்சிறந்தது மச்சம், அதேனெனில், நீதிநெறிநிறைந்து நிலவளம் நீர்வளமுயர்ந்து நிறையும் பொறையு மிகுந்து நிலைத்து மாதமும்மாரி பொழிந்து, தருமமும்நற்கருமமுந்தழைந்து சகலநிதிகளுஞ்செறிந்து, பழுதற்ற குடிகளும், படைகளும்புகழ்ந்து தொழுதுவணங்கச்செழித்து, மநுநீதிவழியே புரந்து, எட்டுத்திக்களவும் தன் ஆக்கினைசக்கரம்போக்கிச் செங்கோல்செலுத்தி, வேதவேள்வியையுடைய வேதியர் பலரும், வானவர் விற்பனர் மாதவர் சிலரும், மாதுர்ஸ்தானம்போற் பொருந்திவாழ்வைப் பெறும்படியாகியவிராடராசனுடைய மச்சநாடு ஐயா, இவ்வகையான நன்மைகட் கிருப்பிடமாகிய

பட்டணஞ்சேர்ந்து நமதுருவமறைத்துப் பயமின்றிக் காலங்கழிப்பதே வெற்றி தருவதாகும், நமக்கொருநாளுந் தீங்கேவராது, நாதனே! வேறொரு நாட்டை விரும்புவோமானல் நமது காரியங்கள் ஒருவேளை வெளிப்பட்டாலும் வெளிப் படும். இஃதன்றியும், துரியோதனனுடைய தூதர்களும் காரியத்தரும் மந் திரி சாமந்தரும், தினந்தோறும் போக்குவரத்தாயிருப்பர்; அப்படிப்பட்டகிரப் பந்தமாகிய வருத்தம் நமக்கிந்த விராடநகரத்திலிருக்கவே மாட்டாது. மே லும் இப்பட்டணத்து மச்சராஜன் நமக்குப் பூர்வசம்பந்தப் பொருத்தத்தி னுலும், மிகுந்த குணசாலி யாதலாலும், நாம்காட்டில் அநுபவித்த கஷ்டத் தை இம்மச்சநாட்டில் ஆற்றிக்கொள்ளும் வகையாயிருப்பதனுலும், அத்தின புரத்தைவிட்டு வனவாசஞ்செய்ய வரும்போது சோதிட நூலோருரைத்த ஆருடத்தாலும், நாமிந்தப்பேச்சைப் பேசும்போது நல்ல சகுனங் கிடைத் ததனுலும, அடியேனுக் கிந்நகரத்தின்மேல் ஆசையுண்டாவதனுல் என்புத்தி யில் தோன்றியதைச் சொன்னேன், கற்றவரு மற்றவரும் புகழ்ந்து பேசும் பொன்னுடும் பின்னிடத்தக்கது இந்நகரத்தின் பெருமை. தேவரீர் சித்தம் யாதோ? இதைவிட வேறோரிடமில்லை யென்று வணங்கினுன்.

இப்படி அருச்சுனன் சொன்னமொழியை அருளுக் காதாரமாயிருக்கும் தருமராசன் கேட்டு, மிகவுமாலோசித்து தம்மைக்காண வனத்தில் வந்திருக் கும் அரசர்க்கு இச்செய்தியைத்தெரியாமலடக்கிஅவரைநோக்கி அரசர்களே! இன்னமுமெம்மை வருத்தாநின்ற தீவினை தீரும்வழியைப் பார்க்கின்றோம்; நீங்களுங்கள் பட்டணமேபோய்ச் சேருங்களென்று சொல்லிவிட்டு, அந்தணர் களைநோக்கி ஐயன்மீர்! இனி எக்காலம் உம்மையாங்கள் காண்போமென்று இனிய வார்த்தைகளைச்சொல்லி, அவர்கள் மனங்கனிந்துரைத்த மொழிகளை யும் ஆசீர்வாதங்களையும் பெற்று மூக்காலும் வலம்வந்து எட்டுறுப்பு நிலமுற வணங்கி, எக்காலுமுங்கள் கிருபை எங்கள்மேல் இருக்கட்டுமென்று உப சரித்து, பிரிதற்கரிய வருத்தத்துடன் விடைகொடுத்தனுப்பி; அன்றிரவு முழுதும்நடந்து சூரியோதயத்திற்கு முன் செல்வத்தாற் சிறப்புற்றோங்கிய விராடநகரஞ்சேர்வோமென்று பாஞ்சாலியும் பாண்டவரைவரும், கலைஞான முணர்ந்த தௌமியரும், தொலைதூரம் வழியடர்ந்த கொடிபடர்ந்த மலை களும் காடுகளும் கடந்து, பருக்கைக் கற்களும் பாலைவனமும், வருக்கை, மா, முதலிய மரச்சோலையும், அருவிபெருகிய ஆறுகளும், குருவிமருவிய கூடும் ஏரி யெதுவாயுள்ள நாடும், பள்ளர்வாழும் வீடும், பரந்த மணல்மேடுங் கடந்து சென்று பற்பல தேசமன்னர் வந்தொதுங்குகின்ற வெண்கொற்றக் குடை யினையுடைய விராடராசனது மச்சநாட்டெல்லையை வந்தடைந்தனர். அப் போது பச்சைப்புரவி பூட்டி ஒற்றையுருளைத்தேரினை யோட்டிவருஞ் சூரி யனுங் கிழக்குத்திசையில் உதயமானுன்.

அன்றிரவுமுழுது நடந்த பாண்டவரைவரும் பாஞ்சாலியும் புரோகிதரும் இனிமேல் தங்களெண்ணம் பலித்ததென்றே களிப்படைந்து, மீன்கள் முதலை கள் நீரானைகள் நீர்க்குதிரைகள் பொருந்திய மடுக்களும், பசுக்கள், பறவைக

ளுலாவுகின்ற முல்லைக்காடும், பயிர்ப்புலங்கள் சூழ்ந்த நல்லநாடும், காவலமைந்த கோட்டையையும், கால்நடை நடக்கின்ற பாட்டையையும், மாடமாளிகையாகியவீட்டையும், மகரதோரணமுடையவாசற்பேட்டையும், மேகமளாவிய கோபுரங்களையுங்கண்டு,களிப்பெய்திப் பாதலம்வரையிலும் ஆழ்ந்து அகன்ற ஒரு தாமரைத் தடாகத்திலிறங்கி, நித்திய கரும முடித்துக்கொண்டு அருக்கியம் கொடுத்துச்சூரியநமஸ்காரமுஞ்செய்துவழிநடந்தவருத்தமெல்லா ந்தீர ஓர் மரத்தினிழலில் தங்கி அருளே குடிகொண்ட தௌமியரை நோக்கி, இருகரங் குவித்திறைஞ்சி வாழ்த்தி, இதுவரையிலும் பெருவாழ்வைப் பெற்ற நாங்கள் இனி நடக்கவேண்டிய முறைமையைக் கட்டளையிட்டருள வேண்டுகின்றோமென்று தருமராசன் கேட்க, நான்கு வேதமுமறிந்த தௌமியர் சொல்லத் தொடங்கினர்.

சந்திரகுலத்தரசனாகிய தருமராசனே! நீங்களறியாதகாரியமென்ன சொல்லவிருக்கின்றது, ஆயினும்நீங்கள் காட்டில்காலங்கழித்ததும் பெரிதன்று, நாட்டிலொருவருடம்மறைந்திருப்பதே பெருங்காரியம். கருங்கல்லேபோன்றதோளினையுடைய அரசர்களே, நீங்கள் உருவமறைந் திருக்குங்காலத்தில் உங்கள் வடிவத்தாலாவது வார்த்தையாலாவது செயலினாலாவது சிறிதேனுந் தெரியுமாயின்மீண்டும்பன்னிரண்டுவருடம்வனவாசஞ்செய்யநேரிடுமே. ஆகையால், உங்களை யாரும் அறியாவண்ணம் மாறுவேடம்பூண்டு பெயர்வேறுகொண்டு குலச்சிறப்பெய்திய விராடராசனிடஞ்சென்று உங்கட்குரிய தொழில் செய்து, அத்தொழிலுக்கிணங்கநடந்து காலங்கழிப்பதேயன்றி உறுதிவேறில்லையென்று தௌமியர்சொல்ல, அவருடையசொற்கேட்டதருமராசன் மகிழ்ச்சியெய்தி, இவ்வாறு நடத்துவதினும் இன்பம் வேறில்லையென்றுநேர்ந்தனர். அவ்வாறுநேர்ந்த தமையன்பாதத்தில் தம்பியர் வீழ்ந்து வணங்கி, மதிமயங்கி அண்ணா! நமது குலமுதலாகிய சந்திரனும், நம்மைப்பெற்ற பாண்டுராசனும் நீரேயன்றி வேறின்றென வணங்கி வாழ்த்துகின்றோம். எங்கட்கு முன் பிறந்தாராய் விளங்கிய தேவரீர் உமக்குக் கீழ்ப்பட்ட அரசனிடத்திற்சென்றடைந்து அவன் மனத்திற்கிணங்கி வேலைசெய்யத்தகுமோ! தௌமியரே! இவ்வகையான அநியாயத்திற் கென்செய்யக்கடவோம். இவ்வுலகத்தைப் பணமுடியால்தாங்கு மனந்தன்போலும், சப்தமேகம்பெய்யுந் தாரைபோலும், மெய்ம்மைப்பொருள் உணர்ந்து ஞானமுதலிய வேதக்கருத்துங்கடந்து, சத்துருக்களைச் செயம்கொண்டு வெற்றிமாலைவேய்ந்து எத்திசையிலுமுள்ள அரசர் பணியும் பெருமையையடைந்து பொதுக்கடிந்துதனியரசுநடாத்தும் தருமராசனே ஏழைகள்பாலடங்கி யொதுங்கி யிருக்கத்தகுமா! வினையே யென்று வாடி வாய்விட்டரற்றினர்.

இவ்வாறு வருந்தித் துன்பக்கடலிலழுந்திய தம்பியரைத் தருமராசன் பார்த்து என்னுள்ளமேபோன்ற தம்பியரே! நீங்களென்பொருட்டு வருந்த வேண்டாம், பின்னல் இப்படிநடக்குமென்றுமுன்னரே சாக்கிரதையாயிருக்கின்றேன். அதென்னையெனின், தென்றிசைக்கோமான் பக்குவமாக அனுக்

இரகித்த மந்திரத்தால் வேதவேதாங்கமறிந்த வேதியனாய் மச்சராச்சனது உச்சிதசபையிற்போந்து அவ்வரசன்முதலிய யாவரும் எனக்கெதிர்வந்துவணங்கவும், நான் அவனுக்கு ஆசிர்வசனஞ்சொல்லவும் பெற்றிருக்கின்றேன். இதன்றியும், உமக்கிருப்பிடம் யாது? உமது பெயரென்ன? நீரிவ்விடம்வந்ததற்குக்காரணமேதென்று கேட்பானாயின், நான் தருமராசனைவிட்டுப் பிரியா நண்பன், அவர் பன்னிரண்டு ஆண்டு வனவாசஞ்செய்யப்போன காலத்தில் நானுமவருடன்போயிருந்தேன்; இன்னுமோராண்டு கழிப்பதற்காகவே இங்கே வந்தேன்; என்பெயர் கங்கபட்டரென்றே சொல்வேன். இதன்றியும், பெரியோர்களாலியற்றப்பட்ட அக்கரவிலக்கணம் கணிதம் சங்கிராமலக்கணம் எழுத்திலக்கணம் வேதம் வேதாங்கம் புராணம் வியாகரணம் நீதிசாத்திரம் சோதிடசாத்திரம் தருமசாத்திரம் யோகசாத்திரம் போகசாத்திரம் மந்திரசாத்திரம் சகுனசாத்திரம் சிற்பசாத்திரம் வைத்தியசாத்திரம் சொரூபசாத்திரம் இதிகாசகாவியம் அலங்காரம் மதுரபாடனம் நாடகம் நிருத்தம் சத்தப்பிரமம் வீணை வேணு மிர்தங்கம் தாளம் அத்திரபரீட்சை இரத்தினபரீட்சை கனகபரீட்சை இரதபரீட்சை கஜபரீட்சை அச்சுவபரீட்சை ஆயுதபரீட்சை பூமிபரீட்சை மல்லயுத்தம் ஆக்ருஷணம் உச்சாடனம் வித்துவேஷணம் ஜாலாதிஜாலம் மோகனம் வசியம் இரசவாதம் மந்திரவாதம் காந்தருவவாதம் பைபீலவாதம் தாதுவாதம் காருடம் நட்டம் முட்டி ஆகாயப்பிரவேசம் பரகாயப்பிரவேசம் வானகமனம் அதிரிசியம் இந்திரசாலம் மகேந்திரசாலம் அக்கினித்தம்பனம் வாயுத்தம்பனம் திருட்டித்தம்பனம் வாக்குத்தம்பனம் சுக்கிலத்தம்பனம் சுவாசத்தம்பனம் கட்கத்தம்பனம் அத்திரப்பிரயோகமுதலிய, அறுபத்துநான்கு கலைகளுமறிவேன்; திக்கெட்டுங்கொண்டாடுஞ் சொக்கட்டானாடும் பக்குவமும் எனக்குத்தெரியும். ஓ! விராடராசனே! நீர் தயவுசெய்து உம்மிடத்தில் நானிருக்கச் செலவுகொடுத்தால் ஒருநாளைப்போல் ஓராண்டு இவ்விடம்விட்டு நீங்காமல் மகிழ்ச்சியாயிருப்பேனென்றுசொல்லி, அவ்வரசன் அருகிலிருந்து அவன் கருத்துக்கிசைந்த தேசவர்த்தமான காரியகாரணங்களை யாய்ந்தறிந்துபேசி, விநோதமான விக்தைகளை நிந்தையில்லாமற்சொல்லி, விசாரணையான அரசாட்சியைப் பெருமையாக நடத்தி அரசனுள்ள மகிழச்செய்து சுற்றிலுஞ்சூழ்ந்த வெற்றிவீரர்களும், கற்றவர்முதலிய சுற்றத்தவர்களும், தந்திரி மந்திரி சாமந்தர்களும் இவரே உத்தமரென்று கொண்டாட மிக்க மேன்மையாய்க்காலங்கழிப்பேன்; தம்பிமார்களேயென்று ஏழுலகத்திற் கோராழிசெலுத்துங் குருகுலக்கோமகனாகிய தருமராசன் தன்தம்பியர் நால்வருக்கும் அன்பாகவே எடுத்துச் சொல்ல, அதை வீமார்ச்சுனர் முதலிய தம்பியர் நால்வருங் கேட்டு நமதுதமயனுக்கு இத்தொழில் தகுந்ததுமென்றே அகமகிழ்ந்தனர்.

அத்தருணத்தில், பொறுமையையே ஆபரணமாகப்பூண்ட தருமராசன் வீமசேனனுடைய முகத்தைப்பார்த்து கருணைததும்பிக்கண்ணீர் சொரிந்து வல்லமை நிறைந்தற்கரியதாகிய வாயுபுத்திரனே! நீ அரக்குமாளிகை விட்

டெழுந்தபோது உரக்கக்கூவிக் கொடும்பகைகொண்டு எதிர்த்த இடும்பாசுரனைக்கொன்றும், வேத்திரகீயத்திருந்த வேதியர்கள் துன்பமகற்றப் பகாசுரனுயிரை வென்றும், கிம்மிராசுரனைக் கெடுத்தும், குபேரலோகம்புகுந்து மணிமாலனுயிரும் பொற்றாமரைமலரும் பறித்துவந்தும், சடாசுரனைத் தாக்கியும், போருக்கெதிர்ந்த பேரைப் போக்கியும், இரக்கமில்லாத கொடியோனாகிய துரியோதனன் அன்னத்தில் விடங்கலந்தூட்டி, அநேகங் கொடிகளாற் கட்டி ஆற்றுப் பெருக்கத்தில் இட்டகாலையில் நாகலோகம் சென்று, விடாமிர்தமுண்டிருந்த உன்னை நாங்கள் ஏழுநாள்வரையிலுந் தேடிப் பறவைபோற் பறந்து, பரதவித்தலைந்த துன்பத்தை எட்டாநாள்வந்து போக்கியும், வணங்காமுடியோன் செய்த வஞ்சனைகளெல்லாம் நீக்கியும், பெற்றதாயாகியகுந்திதேவியுடன் எங்களையுங் காத்துநின்றசதுரப் பாடுடையானே! நீயொருவனுடைய நகரமடைந்து,அவனைத்தாழ்ந்து, அவனுக்கிசைந்த குற்றேவல்செய்து காலமறிந்து நாம் கடக்கவேண்டிய நாளைக்கழிக்கவறியையோ? நீயொருவனிடத்திலடங்கி யேவற்பணி செய்துகொண்டிருக்கப்பாவியான என்னிருகண்ணும் பார்க்கத்தக்கதோ! என்னசெய்வேனென்றுபாதவித்துப்பெருமூச் செறிந்து தம்பி தம்பி,நமது காலபலமறிந்து,காலத்துக்குத் தகுந்த வேடம்போட்டு நாளைப்போக்கத் துணிந்ததும் ஒருவரைத்தாழ்ந்துவணங்கி இதவசனம்பேச அறியமாட்டாயே; அரசனது சமையந்தெரிந்து, நலமாக உறவாடி நேசம் பெற நினைக்கமாட்டாயே; எக்காலத்தில் எத்தொழில் செய்யவேண்டுமோ அக்காலத்தில்அவ்வேலைமுடித்து அரசனை மனமகிழச்செய்யும்படியான நெறிகற்றிலையே,ஐயோ! பரிசுத்த குலத்தானாகிய விராடன்புகழவும்,அவனைச்சேர்ந்த சபையோர் மனம்கிழவும்,நாமிவ்விடத்தில் மறைந்திருப்பதை மற்றவர்களறியாதிருக்கவும், அஞ்ஞாதவாச மகற்றவும் வேண்டுமே; நீ எவ்வாறிருக்கப் போகிறாய் என்றே மனந்தளர்ந்து இருந்தனன்.

இவ்வாறு தம்பியைக்குறித்து வெம்பிநின்ற அண்ணனை வீமன்வணங்கி, எமது தந்தை இறந்த தளர்ச்சி தோன்றாமலே காத்த அண்ணாவே! தித்திப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு கைப்பு என்னு மறுவகைச் சுவையுடன் ஐவித கச்சாயங்களும் பச்சடிகளும் நான்குவகைக்கறி மூன்றுவித ரசம் இரண்டுவகைக்குழம்பு ஒருவிதப் பாயசம் புளியோதனம் எள்ளோதனம் மிளகோதனம் ததியோதனம் பாலோதனம் சர்க்கரைப் பொங்கல் அக்கார வடிசில் முதலிய வகை வகையான அன்னங்களும், பலகார வகைகளும் நான் நன்றாகச் செய்யக் கற்றிருக்கின்றேன். இச்சுயம்பாகத் தொழிலால் உதிரக்கறை நீங்காத வேலாயுதந் தாங்கிய விராடனும், மற்றவர்களும் திருத்தியடைந்து, அமுதத்தை யிகழ்ந்து, நான் செய்யும் பாகத்தைப் புகழ்ந்து பாகசாத்திரங் கற்றுவல்ல பக்குவனென்றென்னை மனமகிழ்ந்து உபசரிக்க விருந்து, விருந்து முதலியன பரிந்து எக்காலத்திலும் ஏது வேண்டியதோ அக்காலத்தில் ஆயிற்றென்றுதவி, அடுக்களையுள் விறகு வேண்டுமானால் ஆகாய மளாவிய விருட்சங்களையும்கோட்டிபாற் பிளக்காமல் என்னிருகையாலு முறித்து ஏற்படுத்திக் கொள்வேன்; ஒருகாலத்தில் மலைபோன்ற திண்புயத்

தையுடைய மச்சராசன், மல்லர்களோடு சண்டைசெய்ய விடுப்பானாயின் மற்போர் வல்லாரைச் சொற்பமாயழித்துப் பற்பல வகையான பரிசும் அடைந்து அறிஞர்கள் மெச்சவும் பேரெடுப்பேன். இன்னும், யாளி, சிங்கம், புலி, கரடி, யானை முதலிய மிருகங்களைப் பிடித்து, அரசனுக்கு முன்னேவிடுத்து, அதிசயம் விளைவிக்கக் காட்டுவேன்; உன் பெயர் என்னவெனிற் பலாயனனென்பேன்; உன் நகரேதென்னின் தருமராசன் கீர்த்தியைப் புகழ்ந்துபேசும் புண்ணிய நகரமென்பேன், உன் குலகோத்திர மென்னெனின் அறப்பெருங் கடவுள் மகனாகிய முரசக்கொடியோனுக்கு அடிமைசெய்யு மடியேன், அறிவிலாச் சூத்திர னென்பேனென்றான். அவன் சொன்னசொல்லைத் தருமராசன் கேட்டு, இருபுயமும் பெருமலைபோலோங்கி, பசு கன்றின்மேல் வைக்கும் பட்சத்திலும் இலட்சம் பங்கதிகமாய்க் கருணைகூர்ந்து, தம்பி! இத்தொழில் உனக்குரியதுதான், என்றென்றைக்கும்அன்னத்திற்கு வற்கடமேயில்லை, அஞ்ஞாத வாசத்தை வெறுப்பில்லாமல் நிறைவேற்றலாமென்று வியந்து, இப்பால் தன்பக்கத்தில் பயந்து நிற்கின்ற பார்த்தன் முகத்தை நோக்கி மிக்க துயரத்தால் குழந்தாய்! தேவர்களாலும் வெல்லப்படாத காண்டவவனத்தையழித்து, அக்கினிதேவனுக்கு அவியாகவளித்துப் பசிதணித்தாயே! மேருமலைக்கப்பாலுஞ்சென்று வெற்றிபெற்று, விசயனென்று வெற்றிக்கொடிநாட்டி அரசர்களளித்த திறைகொண்டு, அடங்காத மறுமன்னரையும் வென்று செயத்துடன் மீண்டாயே! இஃதன்றியும், நான்கு வேதமும், நான்முகனும், நாரணனும், நாகலோகத்தார் முதலானவரும் அறிதற்கரிய தேவாதிதேவன், ஆதிபாண்டரங்கன், சேற்றடங்கட் சிவகாமியுடனே விடைமேலெழுந்தருளியபோது, உன்னிருவிழியுடன் உள்ளமுங்களித்து, ஆனந்தபாஷ்பத்துடன் தொழுது பழுதுபடாத இன்பமேபடைத்தனையே; மூலகாரணனாகிய கண்ணுதற்பெருமானளித்த பாசுபதமும் பெற்றனையே, பிரமனாலும் அட்டவசுக்களாலும், எட்டுத்திக்குப்பாலகராலும், துளபமாலையணிந்த நாரணனாலும், இந்திரனாலும், தேவர்களாலும், மந்திரக்கணைகளும் பெற்றனையே! கற்பகநாட்டாருக்கு நெடுநாட்பகைவராகிய காலகேயநிவாதகவசர்களை நொடியிற்பொடியாகமுடித்தனையே! மானாபரணமும், ஞானாபரணமுமணிந்த மிக்கபதிவிரதையான இந்திராணி உன்திறனறிந்து சாவாமருந்தாகிய தேவாமிர்தத்தை ஊட்ட இன்பமாயுண்டுஇந்திரனுடன் சிங்காதனமேறிச் சிறப்புற்றிருந்தனையே! அரவக்கொடிபடைத்த துரியோதனனையும், அவன் தம்பிமாரையும், அவர்கட்குரிய தருமபத்தினிகளையும் தாமணியாகக் கட்டிக்கொண்டுபோன சித்திரசேனனைக் கைப்பிடியாகக் கொண்டுவாவென்று நான்சொல்லி வாய்மூடுமுன்னமேசென்று, அவனைத் திருப்பிக்கொண்டுவந்து, என்முன்னேநிறுத்திக் கட்டுப்பட்ட துரியோதனனைக் கட்டவிழ்த்துவிட்டனையே! மேலும், தேசுடையவரில் அக்கினிதேவன்போலும், தேவராசர்களில் தேவேந்திரன்போலும், திசையானைகளில் ஐராவதம்போலும், மும்மைப்பெருந்தேவரில் விடையுடையிறையோன்போலு மிருக்கின்றனையே! அநுமக்கொடியும், அழியாச்சிலையும், அக்ஷயதூணியும், அழகியதேரும், சுவேதப்புரவியும் படைத்தனையே! விராட

ராசனுடைய பதியிற் புகுந்து, உன்னுருமாறி, கல்வியிற்சிறந்த உன்னுள்ள
மடங்கி, ஒருவருட மொடுங்கி எவ்வகையாகக் குற்றேவல் செய்வையோ?
வென்று புத்திமயங்கிக் கண்ணீர் ததும்ப மனம் வெதும்பிக் கரைந்து வருந்தி
னன். அவ்வாறு வருந்திய தருமராசனது உள்ளத் தளர்ச்சியும் பெருமித
மான நன் மனக்கிளர்ச்சியுஞ் சிறிதுநிதானித்து ஆராய்ந்தெண்ணிய சவ்விய
சாசி, அண்ணாவே! என்னைக்குறித்து எண்ணங்கொள்ளா திருக்கும்படி
சொல்லுகிறேன். தேவரீர் திருவுள்ள மகிழ்வீரென்று அர்ச்சுனன் சொல்லத்
தொடங்கினான்.

தருமக்கடலே! முன்னே யான் தெய்வலோகம் போயிருந்த காலத்தில்
வண்ணப் பெண்ணாகிய ஊர்வசி கருத்திற்கிசையாத என்னைப்பெண் தன்மை
யிலும், ஆண் தன்மையிலும் இழிந்த பேடித்தன்மையாகவெனச் சபித்தாள்.
அச்சாபத்தால் மனந்தளர்ந்துவருந்தியவாட்டத்தை ஆயிரநாட்டமுடையனா
கிய அயிராவதமுடைய இந்திரன் அறிந்து, அவ்வூர்வசியிடத்தில் சென்று என்
னடிபாவி! தேவர்கட் கநுகூலஞ் செய்யவந்த செஞ்சிலைச் சேவகனைப் பாவ
காரியான நீயிப்படியும் சபிக்கலாமா? இப்போது நீ யிட்டசாபத்தை விலக்கி
என் சஞ்சலத்தை நீக்கென்று வருந்திச் சொன்னான். அச்சொல்லைக்கேட்ட
ஊர்வசி நானிட்டசாபமும் பழுதுபடாது, இவர்வேண்டும்பொழுதுவந்து ஒரு
வருடமிருக்கவும், வேண்டா மென்றபோது அகன்றுபோகவுங் கடவதென்று
பிரதிசாபமுங் கொடுத்திருக்கின்றனள். அந்நாளையில்வந்தசாபம்தந்தையாகிய
இந்திரன் உபகாரமென்றெண்ணி வந்தேன். இப்போதந்த ஊர்வசியிட்ட சாபம்
நாம் நாடியவழி உபயோகப்பட்டு நன்மைசெய்வது போலாகும்.

நானப்படியே பேடியுருக்கொண்டு, இம்மச்சராசனிடத்தி லடுத்துப்
பெண்களுக்குப் பரதநாட்டியம் படிப்பிக்க வல்லவளென்று சொல்லி, அவ
னருள் பெற்று ஆடரங்கச் சாலையிலிருப்பேன்; உன் பெயரென்ன வென்
றால், பிரகநளை யென்பேன்; நீயிருந்த பட்டண மெதுவெனின், தீயிற்
பிறந்த பாஞ்சாலிக்கு நடனத்தொழில் செலுத்தினவ ளென்பேன்; நீயேதிப்
படி வந்ததெனில், பாண்டவர்களுடன் பாஞ்சாலியும் வனவாசஞ் செய்யப்
போன காலத்தில் நானும் போயிருந்து, ஒருவருடம் அஞ்ஞாதவாசஞ் செய்
வதற்கவர்சென்றதனால்உன்னிடத்தில்அடைந்தேனென்றுஇசைத்து அரசனை
மனமகிழச்செய்வதற்கு என்மனங் குவிந்திருக்கிறதென்றுபகர்ந்தான். அவன்
கருத்தை யறிந்த தருமராசன் இஃதுனக்குத் தக்கதேயென்று மகிழ்ந்து பக்
கத்தில்நின்ற நகுலனைப்பார்த்துப் பரதவிக்கத் தொடங்கினான்.

கொடிப்போது மென்னைவிட்டுப்பிரியாவிளஞ்சிங்கமே! நான் சொன்ன
வாறு கேட்டு நடக்கத் தக்கவனே யன்றி உன்சுயபுத்தியா லொன்றையுந்
தொடங்கிச்செய்யும் வல்லவனன்றே, மெய்வருந்தும் வேலையின் முயல
மாட்டாயே, வியர்வுண்டாக மேனிவருந்தாயே, முன் பின்னென்று முண
ராயே, அறியாச் சிறியவனாகிய நீ பகைவர் கண்ணுக் கெட்டாமல்

மச்சராசன் நாட்டில் உருமாறி, ஒருவருடமிருந்து எவ்வாறு காலங்கழித்து வருவையோவென்று தருமராசன் கேட்கச் சிவபெருமானுடன் விற்போரும், மற்போரும்புரிந்த சிலைவிசயன்பின் தோன்றலாகியநகுலராசன், தன் அண்ணனைப்பணிந்து கமலமலர்போல முகமலர்ந்து பின்வருமாறு சொல்லத் தொடங்கினன். .

தேவரீர் அடியேனுக்குப் படிப்பித்த சாத்திரங்களில் அச்சுவசாத்திரத்தை முக்கியமாநிந்துள்ளேன்; பரீட்சையுங் கைகண்டிருக்கிறேன். அதனால், குதிரைகளின் குலமும் குணமும் குரலும் நலமும் பலமும் நன்மையும் வன்மையும் திறலும் தீதும் தேசமும் வாசமும் சீரும் சிறப்பும் சித்தமும் உன்மத்தமும் பேதமும் அபேதமும் முகமும் கண்களும் சுழியும் சுத்தமும் துலக்கமும் விலக்கமும் வருணமும் ஆரோகணமும் அவரோகணமும், வட்டம் கோணம் வளைவு வையாளி சிறுநடை பெருநடை முதலியகதிகளும், குதிரைப்பிணிகளும், அவைகட்குக் கொடுக்கு மருந்தும், செவ்வையாகத் தெரிந்திருக்கின்றேன்; ஆகையால், அச்சுவசாத்திரத்தில் வல்லோனென்ன வேடம்கொண்டு மச்சராசனிடஞ்சென்று அவனிச்சையுண்டாம் வண்ணம் பச்சைப்புரவிதூண்டும் பாகனிலுமேலாயினவனாயிருப்பேன்; அவர் என்னூரையும் என்பேரையும் என்சீரையும் கேட்டாற் குருமரபிலுயர்ந்த தருமராசனுடைய நாட்டிற் குதிரை நடத்திவருபவன் யான். என்பெயர் தாமக்கிரந்தியென்றுரைத்து, கொடிய குதிரைகளையும் திருப்பிவிட்டுச் சமயத்திற்குத் தகுந்த சவாரியுங்கொடுத்து, அரசனை மகிழ்வடைவித்து, ஆடையாபரண முதலாகிய பரிசுகளும்பெற்றுக் குதிரைத்தலைவர்கள் கொண்டாடக் காலங் கழிப்பேனென்றான். தம்பிவார்த்தையைக்கேட்ட தருமராசன் மனக்களிப்பெய்திக் காலத்திற்குத் தக்க கோலமாய் நீ கொள்ளப்போந்தொழில் மிகவும் நன்றென்று உரைத்துசாத்திரவாராய்ச்சியிற்சிறந்த சகதேவனை நோக்கிச் சொல்லத் தொடங்கினன்.

தம்பீ! தந்தையாகிய பாண்டுமகாராஜன் மார்பிலும், என் தோளிலும், வேற்றரசர் தலையிலும் விளையாடிமிதித்து, நடைபழகி யுலாவிக்கொண்டிருந்த உன் மெல்லியபாதம் செம்பருக்கைக் கற்களுடன் சிவந்த தீப்பொறி கலந்த மலைச்சாரலிலும், வனங்களிலும் திரிந்து பன்னிரண்டாண்டுதொலைத்தும் இன்னுந்தீரவில்லையே! முன்செய்த தீவினையென்றேங்கிக் கன்னெஞ்சமுடைய அன்னவாகனனே! கார்செறிந்து நீர்சொரிந்த பார்புரந்து வந்த பாண்டுராசனுக்கு மைந்தனாகத்தோன்றியும், அருளிலாத எம்போல்வார்க்கும் தம்பியாகச்சிறந்தும், சாத்திரகலைஞானங்களையுணர்ந்தும், சூது சங்கப் பழக்கம்புணர்ந்தும்,பழவினையொழியாதுஅநுபவித்தனையே, என்செய்வேனோ என்னிரு கண்மணியே! புத்தியிற் பிருகற்பதியும், சுக்கிராசாரியரும் நிகரென்று சொல்லும்படிசிறந்து மந்திரசாத்திரமுழுதும் நீதிநூல்முதலியயாவுங் கற்றுணர்ந்த இளையோனே! நீ யெத்தொழில்செய்வாய்? எவ்வாறுகுற்றேவல் புரிவாய்? எவர்க்குந் தெரியாதிருக்க எவ்வேட மெடுப்பாய்? எப்படி காலங்

கழிப்பாய் ? தம்பி ! தம்பி ! என்று கண்ணீர்சொரிந் தேங்கியிருந்த [தருமராசனைத் திரிகாலமுந்தெரிந்த சகதேவன் வணங்கிப் பேசத்தொடங்கினான்.

வையகமாடுஞ் செய்ய கோலோச்சும் ஐயனே! தருமதேவதைக் கொப்பாகிய பசுவினங்களைக் காத்துவரும் கோபாலவேடங்கொண்டு விராடராசனிடத்திற்சென்று பசுக்கள் மேய்ப்போனாகவும், அப்பசுக்களுக்கு நேரிடும் கோமாரி அடைப்பன் தெறிப்பன் வெக்கை தொம்மை சூலை இசிவு வயிறுப்பல் பொருமல் செருமல் இருமல் வாய் அசைவுபோடாதிருத்தல்முதலிய நோய்களைப்போக்கவும், புல்லுள்ள புலத்தின் மேயவோட்டி, நீருள்ள இடத்தில் தண்ணீர்காட்டி, நிழலுள்ள தோப்பில் மந்தையைக்கூட்டி மடக்கவும், கறவாப்பசுக்களைக் கறக்கவும், கன்றை மறவாப்பசுக்களை மறக்கச்செய்யவும், ஆடிக்கறக்கும் பசு, அதட்டிக்கறக்கும் பசு, அணைத்துக்கறக்கும் பசு, பாடிக்கறக்கும் பசு, பழிச்சுக்கறக்கும் பசு இவைகளைத்தெரிந்துகொள்ளவும், இப்பசுக்களின் தேசம் வாசம்குணம்மணம் இவைமுதலியவற்றையு முணர்ந்து நடத்தவும் அறிவேன் ; உன்பெயரென்னவெனின், தந்திரபால னென்பேன் ; உன் னகரேதெனின், பாண்டவர்களாகியஆண்டவமாரிடத்தே பசுமேய்த்துக் காலங்கழித்தேன் ; (நந்தகோபாலன்) என்றன் மைத்துனனென்றுரைத்து அவ்வரசன் சிந்தை களிகூரச் செல்வமோ டிருப்பேனென்றே சகதேவன் சொல்லினன். அந்த வார்த்தையைக்கேட்ட தருமராசன் மகாதேவ சம்போவென்று பெருமூச்சுவிட்டு, நம்யாவரினுஞ் சிறந்தொழில் இவன் பெற்றானென்றிசைந்து கற்புக்கணியான பாஞ்சாலி மதிமுகத்தைநோக்கி, விதிர்விதிர்த்து விளம்பத் தொடங்கினான்.

அழகுக்காலயமான அன்னமே, பிறவிச் செல்வமுள்ளபேதையே! உனக்கு அநேகந் தாதியர் குற்றேவல்செய்யத்துன்பமில்லாமல் இன்பமடைந்த தோகைபோன்ற நீ எத்தொழிலியற்றிக் காலங்கழிப்பையோ? இளம்பிடியே! என்றேங்கி வருந்திய தருமராசனது மனக்கருத்தறிந்து, பெண்ணிற்சிறந்த பாஞ்சாலி கண்ணீருகுத்துச் சொல்லத்தொடங்கினாள்.

புண்ணிய மனமும் திண்ணிய பயமுமுள்ள வள்ளலே! நான் வண்ணப்பெண்ணென்னும் வடிவங்கொண்டு, மச்சராசனுடைய மனைவியிடஞ்சென்று ஆபரண அலங்காரஞ்செய்யவும், கண்ணுக்கு மைதீட்டவும், தனத்திற்குத் தொய்யிலெழுதவும், கோக்கவும், கொண்டையில் முடிக்கவும், இடையிற் சேலையுடுக்கவும், நெற்றியில் விபூதிரேகை யிடவும், செந்தூரத் திலதம் வைக்கவும், சாந்து சந்தனம் சவ்வாது கூட்டவும், கதம்பப்பொடி கலக்கவும், இன்னும் பலவகையான சின்னங்களுஞ் செய்ய அறிவேன்; உன்னிடத்தில் ஒருவருடமிருந்து காலங்கழிக்க வந்தேன், என்னைக்காதலித்த ஐந்து கந்தருவர் கணவராய்க்காவலிருக்கிறார்கள் ; அவர்களைப் பகைத்துப் போராடும் வல்லமை யுடையவர்களில்லை, எப்படிப்பட்டவர்களும் என்னைப்பார்த்துத் தப்பெண்ணங்கொள்ளப்போகாது; அப்படியே மாறான நினைப்புக்கொண்டால், நூறு நூறு கூறாய் வேறுவேறாய் மாய்வார்கள். இப்படிப்பட்ட

வல்லமையுடையவர்கட்கு இல்லாளாயே நீ வேலைசெய்ய வெளிப்படுவானே னென்று கேட்டால், என் குலத்திற்குரிய நல்லொழுக்கமும், நாணம் மடம் அச்சம் பயிர்ப்பும், குறைவுபடாமற் கீர்த்திபெற்ற பாஞ்சாலிக்குப் பணி செய்து மாங்குயில்போல்விசுவாசத்துடன் வாழ்ந்தேன்; அவ்விடம் விட்டிவ் விடம் வரும்படி அவசியம் என்னவெனில், நல்வினைப்பயன்பெற்ற மாதுசி ரோமணி தீவினைவசத்தால் வனவாசம் போனபோது, நானுமவருடன்போயி ருந்தேன்; அவர்கள் அஞ்ஞாதவாசஞ் செய்யப்போயினர், நான் அக்காட்டி லலைந்து, விசனமடைந்து, உன்னுட்டிற் சிலபகல்கழித்து அவர்கள் வெளிப் படும்போது நாம் போய்க்கூடிக்கொள்ளலாமென்றே யெண்ணிவந்தேன். என்னைச் சேர்த்தாதரிக்க இட்டமுண்டோவென்று இனியமொழிசொல்லி அவளன்புடனுரைக்க, ஆசையோடிருந்த சமயோசிதமானவசனங்கள் பேசி, முன்னிருந்த தாதியரெல்லாம் நாணப்பட என் வல்லமையைக்காட்டி, அச் சிமாட்டி இச்சைப்படும்படிக் கவின்மலர்சூட்டி, நாளுக்குநாள் அன்புண்டாக நடந்து அஞ்ஞாதவாசங் கழிப்பேனென்றுகற்புக்கொருபொக்கிஷமே போன்ற காதலிசொல்ல, அற்புப்பெருங்கடலாகிய தருமராசன்கேட்டு வெற்புக்கிணை யான சொர்க்கர்தங்கிய மின்னே! நீ சொன்ன நன்னயமொழியால் நற்பய னைப் பெறுவையென்றுரைத்து இன்னுஞ்சில சொல்லத் தொடங்கினர்.

அன்னம்போலுநடையும் மின்னல்போலிடையும் உடைய பாஞ்சால ராசன் வேள்வித்தீயிற்பிறந்த மடமானே, என் வார்த்தையைச் சற்றேகேட்க வேண்டுகிறேன். வேதியரொழுக்கமும், வேந்தர்நீதியும், மாதர்கள் கற்பும் பொ ருந்தி, மாதமும்மாரி பொழிவதென்றும், அம்மழையினால் கற்காடுகள் திருந் திப் புற்பூடுகள் பொருந்தி, செந்நெற்பயிர் நெருங்கி நானிலந்தழைத் தோங்கு மென்றும், புண்ணியவான்கள் தவம்புரிவரென்றும், பெரியோர் சொல்லியிருக் கின்ற நீதியைக்கேட்டு நெறிமுறைவழுவாமல்நடக்கும் நிலையினையுடையாள், நீ யாகையாலும்; ஒருகற்புடையாளை மணஞ் செய்துகொண்ட கணவனுக்கு விற்பன விவேகவேதசாத்திரங்களும் பற்பலசுகுணப்பயனும், அன்பும் இன்ப மும் அழகும் புகழும் வெற்றியும் புத்தியும் மெய்ம்மையும் பொறுமையும் செல்வமும் சிரும்திடமும் தீரமும் குறைவின்றிப் பெருகுமென்று மேலோர் கள் குறித்திருக்கின்றனர். மனைமாட்சியுடையாள் 'கற்பெனப்படுவது சொற் றிறம்பாமை' என்னுங் கருத்திற்கிணங்க நடக்கவேண்டும்; கணவன் கருத் திற்கு மாறுபடுவளாகில் அவட்குரிய கணவனுடைய மெய்த்தவத்தையும், செல்வத்தையும், ஆயுள் முதலிய யாவற்றையும் அழித்து, மீளாநரகத்திற் காளாக்கிவிடுமென்றே வேதமாதி ஆப்தகலைகள்முறையிடுகின்றன; பதிவிரதை யுடன்கூடி, இல்லற தருமமியற்றி நல்லமனத்துடன் வாழ்க்கைசெய்வோருக் குக் கீர்த்தியும், பொருளுங்கிடைக்குமென்று உண்மை ஞான முணர்ந்தோர் உரைத்திருக்கின்றனர். அதற்குத் திருட்டாந்த மென்னவெனின், சகன்மாதா வாகிய சானகியினுடைய பதிவிரதாதன்மத்தால் இராவணகும்பகர்ணுதியரை யழித்துத் தேவர்முதலிய தண்டகாரணிய ரிஷிகளுக்கு அபயங் கொடுத்தளி த்த சிராமனுடைய பட்டாபிடேகக் கீர்த்தியைப்பலமுறையுங் கேட்டிருக்கின்

றனே. இப்படியெல்லா மிருக்கினும், 'காவல்தானே பாவையர்க்கழகு' என்னுங் கருத்தின்படி முதற்காவல் தந்தை, இரண்டாவது காவல் கொழுநன், மூன்றாவது காவல் புத்திரன், இம்மூன்று காவலுக் குட்பட்டிருப்பவள் மிக்க பதிவிரதையாம்; அதுவே மாதர்கட்கழகாகும். நாம் அஞ்ஞாத வாசம் பண்ணவேண்டிய இத்தருணத்தில் உனக்கு யாதொரு காவலுமில்லை. ஆகையால், நான் சொல்லவேண்டுவ தென்னெனின், உன்புத்தியைப் பெருங்காவலாகக்கொண்டு, இஷ்ட தெய்வத்துணையை யிடைவிடாமல் நம்பி, நிறையாகிய அழிவின்மையை முறையாக நிறுத்தி இக்காலத்தைக் கழிக்கவேண்டும்; உன்னிட்டத்தைத் துட்டர்கள்கருதிக் கிட்டிவந்தாலும், அம்மூடர்களை நீ பார்த்தபோதிலும், அவர்கள் கண்ணுக்கெட்டாம லகன்று, அக்கொடியோருடைய துற்புத்திக்கும், உனது சத்துருவின் பார்வைக்கும் அகப்படாமலேயிருந்து, அரசன்மனைவிக்கு விரோதம்வராமல்நடந்து, நமக்கு நற்காலம்வரும் வரையிலும் இத்துற்காலத்தைத் தொலைத்துவிட வேண்டுமென்றுசொல்லி முடித்த தருமராசனுடைய சத்திய மொழியான தரும நீதிகளை உத்தமகுணசாலியாகிய பாஞ்சாலி வணங்கிக்கேட்டுப் புத்தி புத்தியென்று பேசத் தொடங்கினள். ஐயா! பொய்யாவிரதமுடைய புனிதனே! தேவரீருரைத்தசிலாக்கிய வாக்கியம் சென்மாந்திர பாக்கியமென்றும், வேதமொழியென்றும் என் தலைமேற்கொண்டேன்; தேவரீர்சொன்ன தெவ்வண்ணமோ அவ்வண்ணமே நடக்க விருக்கின்றேன்; எனக்காகச் சிந்திக்க வேண்டாம், சத்திய வத்துவின் தத்துவநிலையேயென்று வணங்கி நின்றாள். அப்பாஞ்சாலி சொல்லிய பாரமார்த்திகமான மொழியைப் பாண்டுமைந்தன் கேட்டு மகிழ்ந்து, தௌமியரை நோக்கிச் சுவாமி! அடியேங்களிழைத்த வினை யிப்படியாயிற்று. அரசாட்சி முதற் பெருமையும் போயிற்று. எம்மைப் பணிவாரை யாம்பணியக் காலம் வாய்த்தது. இனி யெப்படி கட்டளையோ அக்கட்டளைக்குக் கீழ்ப்பட்டிருந்து தமது கிருபையின்படி நடக்கக் காத்திருக்கின்றோமென்று தருமராசன் சொல்ல, தௌமியர் மனமகிழ்ந்து நீங்கள் அறுவரும் விராடராசனை யடுத்து, இச்சையின்படி திரியாமல், ஒருவர்க்குந் தெரியாமல், ஒருவரையொருவர் பிரியாமல் இப்போதிவ்விடத்தில் நிச்சயித்துக்கொண்டவாறு வேறுவேடம் பூண்டு அவரவர்க்குரிய தொழில்களை சோர்வில்லாமலும், அவசரப்படாமலுஞ் செய்யவேண்டும். அப்படிசெய்கிற விடயத்திற் களங்கமறக் கனவானாயினும், தனக்குமேற் புத்தியுடையோரிடத்தில் ஆலோசித்து நடக்கத்தக்கதென்று நீதிநூலோர் சொல்லியிருப்பதால், நீங்களறியாத நீதிநெறியில்லை. அப்படித் தெளிந்தாலும், நானறிந்திருப்பதையுங் கொஞ்சஞ் சொல்லுகிறேன் வெறுப்பின்றிக் கேட்டருளுங்களென்று சொல்லத்தொடங்கினன்.

ஆ! ஐவர்களே? செகமுழுதும் ஒருகுடையிலாளுந் தீரனாயினும், திகந்தவரையிலும் ஒரு நொடியில்வெற்றிகொள்ளும் வீரனாயினும், ஒருவரிடத்தில் சேவகஞ்செய்யப்புகுந்தால், தீரமும் வீரமுமொடுங்கிச் சேவகஞ்செய்ய வேண்டுமென்றே பாகவ நீதிசாத்திரமே வகுத்திருக்கின்றது; ஆகையால்,

நீங்களைவரும் வேற்றுருக்கொண்டு, விராடராசனிடஞ்சென்று தொழில் புரிகையில், உங்கள்பெருமையையும் புகழையும் பேசாமல் மறந்துவிடவேண்டும்; துளவமாலையணிந்த ஆண்டகை ஒவ்வொரு காரியங்களை நிறைவேற்றுவதற்காக எத்தனைபாடோ பட்டு அவதரித்துக் காரியசித்திகண்டு இந்திரன் முதலிய தேவர்களுக்கு அருள் செய்கின்றார் ; அதுபோல் நீங்களும் காலங்கருதி, உங்கள் சிறப்பை மறந்து, மச்சராசனிடமருவி, ஏவலாளரினும் எளியராயிருந்தே நாளைக்கழிப்பது நலம். ஒருவனிடத்தில் ஊழியஞ் செய்வதும் அரசருக்கடிமையாவதும், வேற்றுவேடங்கொண்டு வேலைக்கமர்வதும் கொடுமை கொடுமை ; இம்மூன்றில் அரசனிடத்தில் உத்தியோகஞ் செய்கின்ற முறைமையும், ஏவற்றொழில் கேட்குந் திறமையும், அரசன் தயவைச் சம்பாதிக்க வேண்டிய நன்மையும், கீர்த்திதேடுந் தன்மையும், உச்சித வார்த்தை சபைமெச்சப்பேசு முசிதமும், கசிதமும் நானறிந்தவண்ணம் சொல்கிறேன், பகைவருடலிற்பரவிய உதிரமாமிசத்தை முனைத்தலையிற்சுமந்த வேலாயுதந் தரித்த அரசன்சபைக்கு வருமுன்னமே, தனக்குத்தக்க இடத்தில் தான் வந்திருந்து, அரசன் வாக்கிலிருந்துவருஞ் சொல்லினுடைய பொருள் நுட்பமறிந்தே, அச்சொல்லின் சூட்சத்திற்குத் தகுதியாகப் பதிலுத்தரங் கொடுத்து, மரியாதையாயடுத்து, மனமகிழச் செய்தால், அவ்வரசனது பாக்கியங்களெல்லாம் அவனே பெறத்தக்கானுவான். உலக காவலனுகிய வேந்தனிடத்தில் நாம்வந்தடுத்த அந்நாள்முதலிந்நாள்வரையிலும் வீணுய்த் துன்பப்பட்டோம், இவனுல் என்னபலன் கண்டோமென்று பலருமறியத்தூறி மனவெறுப்போடொறுத்துக் கொள்ளுகின்ற அவசரப்புத்தியுடையவர்கள், இனிமேல் அரசனுல் கிடைக்கப்போகின்ற பெருமை புகழ் ஐசுவரியமுதலியசன்மானத்தைப் போக்கடித்துக் கொண்டவர்களென்று சொல்லலாம்.

இராசமாளிகைக்கு மேற்பட்டவீடும், அவன் சிறப்புக்கதிகமான சிறப்பும், அவன்நாகரிகத்திற்கதிகமான நாகரீகமும், அவனலங்காரத்திற்கு அதிகமான அலங்காரமும், அவனுபரணத்திற் குயர்ந்த ஆபரணமும், அவனது சுகந்த பரிமளத்திற்கு மிகுந்த வாசனையும், அவன்வஸ்திரத்திற் குயர்ந்த வஸ்திரமும், அவன் சொல்லிய நீதி போதிக்கப் பேசுகின்ற துட்டவார்த்தையும், மதிப்பில்லாத மரியாதையும், வணக்கமற்ற இணக்கமும் கூடாது ; இவைகளொருவேளை, அதிகப்பட்டிருந்தால், நல்லபாம்பின்விடத்தை நாடோறும் அருந்துவதுபோல் நன்மையைக் களைந்து உயிரழிக்குந் தீமையைவிளைக்கும். பூபதிக்குரிய புத்திரராயினும், அவர்களாசைக்குரிய மித்திரராயினும் அவர்களன்புமேற்கொண்ட பௌத்திரராயினும், இனவருக்கமாயினும் சனப்பெருக்கமாயினும், வெட்டிச்சயிக்கும் வீரமுள்ள சகோதரராயினும் அரசனது ஆணைமீறி நீதிவழுவி நடக்கலாகாது; அப்படி நடப்பார்களாயின், மிக்க கோபங்கொண்டு மனுநெறிக்கு மாறாக உயிர்வதைசெய்து விடுவார்கள். மன்னர்க்கு மகிழ்ச்சியைத்தருமைந்தரும், யுத்தமுனையில் வெற்றிபெறும் வல்லமையுடைய சுத்தவீரர்களும், செய்யத்துணிந்து பிரவேசித்த யாதொருகாரியங்களில் யாதாயினுங் காரியத்தாழ்வு நேரிட்டு அச்செய்தி அவ்விடத்தி

விருக்கின்ற மற்றையோருக்குத் தெரியுமேல், அதைவெளியிற் பிரசித்தப்படுத்தப்படாது.

திசை யானைகளைப்போன்ற திறம்பெற்றவராயினும் வேந்தனால் முடியாத காரியத்தை நானே முடிக்கிறேனென்று சொல்லப்படாது. அரசன் நமக்கு மிக்க நண்பனாயிருக்கிறானென்று அவனிடத்தில் தனக்கினிய காரியங்களைச் சொல்லி முடித்துக்கொள்ளுகிற அன்பு அவ்வரசனை அடுத்தசிலருக்குத்துன்பத்தை விளைக்குமாயின் அதுமிக்க கொடுமையென்றறிந்து அறிவுடையோர் என்று வெளிக்குக் கொண்டுவரப்படாது. தாம் நினைத்த காரியங்களில் யாதொரு பயனுமில்லாமலே இருக்குமானால், கல்வி யறிவுடையார் சபையில் அப்பயனில்லாச் சொல்லைக் கூறிப்பழிப்புக்கிடமாகிய இழிவெய்தப்போகாது. ஆராய்ச்சியி லுயர்ந்த பேரறிவாளர்கள் ஏழை யெளியோர்முதலிய யாவராயினும் அவர்களைக் கடிந்து, கறுவி, 'வெட்டெனப் பேசேல்' என்றபடிவெட்டெனப் பேசுதல் விட்டிடலென்று மேலோருரைத்த நீதியைநினைத்துக் கோபங்கொள்ளல் தகுதியென்று போற்றலையுடைய வேந்தனிடத்தில் உரிமையா யிருப்பாரைப் பகைத்துத் தன்னருமை பெருமை கொடுமைமுதலிய ஆணவப்பேச்சால்பகையுண்டாக்குமவ்தூறுனகடினமொழிகள்சொல்லப்படாது; அப்படி பகைப்பாராயின் யாவராலு மாற்றப்படாத கூற்றுவனாற் கொல்லுங் கொலைத்தொழிலை நாடோறும் விளைக்குமென்றே நன்றாயறிந்து, யாவருக்கு நல்லவராகவே நடந்து கொள்ளவேண்டும்.

அரசன் கொலுவிருக்குஞ்சபையில் தாராளமாய் எதிரில் நிற்கப்படாது; அரசனுக்குப் பின்புறத்தேயு நிற்கப்படாது. சிங்காசனத்திலிருக்கும் அரசனுக்கு இருமருங்கும் நெருங்கிநின்று, அவனுடைய கண்கள் யாரைப்பார்க்குமோ என்றும், அக்கண்ணினோக்கு கருணை நோக்கோ, கலக நோக்கோவென்றுங் கண்டறிந்து, காலமுமிடமுங்கருதி நடக்கவேண்டும். அவ்வரசனுடைய வாக்கிலிருந்து வரும்மொழியை கண்சிமிட்டாமற் பார்த்துக் காதுகொடுத்துக்கேட்டு எவர்களுக் கென்னசிறப்போ, ஏழைகளுக்கென்ன பாக்கியமோ, எதிரிகளுக்கென்ன அபாக்கியமோ என்றும்ஆராயவேண்டும். அரசன் அரண்மனையிலுள்ள நன்மை தீமைகளைத் தானறிந்தாயினும், ஒருவரால் கேள்விப்பட்டாயினும், அரசகாரியங்களெதுவாயினும், வேறொருவருடனுஞ் சொல்லாமல், மறைக்கவும் வேண்டும்; உடனே அதை மறக்கவும்வேண்டும். அயலார்முதலிய மன்னவரால்சண்டைசச்சரவுபொல்லாங்காகிய கட்டுவார்த்தைகள்நேரிட்டதாகக்கேள்விப்பட்டால்அதைக்கெட்டியாய்விசாரித்துத்தீர்க்காலோசனைசெய்து, உடனேதன் எசமானனுக்குத் தெரியப்படுத்திமேன்மையைப்பெற்று, அவ்வரசனுக்கு மெய்ப்படப்பொருந்தி யிருப்பதே அழகுக் கழகாகும். ஐம்புலங்களை அடியோடறுத்து, காமம் வெகுளிமயக்கங்களையும் வேர்களைந்து காட்டில் வாசஞ்செய்யும் அருந் தவத்தரையும், கலவைதிமிர்ந்த கலசமுலையார் கடைக்கண் மருட்டுமோயின் பஞ்சேந்திரியங்களுடன் நாட்டில் வாழுகிற நம்மை விட்டுவிடத் தக்கதோ? ஆதலால், அரச மாதர்களிருக்குமிடத்தில் தனித்துப் போகப்படாது; அவர்களுடன் சரசவார்த்தை

யும் பேசப்படாது. நாணம், மடம், அச்சம், பயிர்ப்பும், என்னும் இந்நான்கு மமைந்த மாதர்களிடத்திலும், குள்ளனிடத்திலும், கள்ளனிடத்திலும், சிறுவனிடத்திலும், ஈனசாதியானிடத்திலும், நட்புச் செய்யலாகாது ; சிநேகம்பண்ணினால், உடனேகலகம்நேர்ந்து அவமரியாதைக்குள்ளாகி உயிர்த்தண்டனைவரையிலுங் கொண்டுபோய் விட்டுவிடும். உலகமெல்லாந்தொழுவதற்குரிய உயர்ந்தோராயினும், சிங்காசனக் கொலுமுகநோக்கிச் செல்லின் அவ்வரசன் தனக்கு மரியாதை செய்திலனென்றும், வாகனங் கொடுத்தில னென்றும், பேசிலனென்றும், ஆசன மளித்தில னென்றும், போசன மருத்திலனென்றும், வண்மை மணியணிப்பணி தந்திலனென்றும், விசனமேற்கொண்டு குருரப்படலாகாது, ஒருவேளை அக்கொற்றவனாற் சகல வெகுமானமும் பெற்றால் உடல்பூரித்துத் தன்னைத்தானே மறந்து, மனமகிழ்ந்து கர்வங்கொள்ளப்படாது; மிக்க களிப்பே அதிகதுக்கந்தருமென்றுசாத்திரஞ் சொல்லுகின்றமையால், அவ்வரசனாலப்போதே அவமான நேரிட்டாலும் நேரிடும் ; அதைக்குறித்துச் சிந்தை வாடப்போகாது. அரசனால்வந்த நன்மை தீமைஇரண்டுஞ் சமமாக வெண்ணியவரோ சஞ்சலமில்லா திருந்தார்களென்று இயம்பத்தக்கவராம். அரசன் ஒருவன்மீது கோபங்கொண்டு அவன் செல்வங்களைக் கைக்கொள்ளக் கருதிய காரணத்தைத் தாங்களறிந்த துண்டானால், அந்தப் பேச்சை யாரிடத்தும் பேசலாகாது, அதைக்குறித் தரசனையு மேசலாகாது. கார்மேகங் கலந்து பொழிகின்ற மழையிலும், ஊர்வெந்து உலர்ந்து கரிந்துபோகக்காயும் வெயிலிலும், பைசாசு நித்திரைசெய்யும் பாதிராத்திரியிலும், விசிமோதுங் கடுங்காற்றிலும் வேந்தன் ஒருவேலையாக அனுப்புவானாயின் தன்னிடத்தில் சொல்லிய காரியமே கண்ணாரக்கொண்டு தான்போன அக்காரியத்தை முடித்துவரவேண்டு மல்லது வேறொன்று நினைக்கப்படாது. இராச காரியம் நிறைவேறுகின்ற வரையிலும் சோகம், சோம்பல், தேக வருத்தம், பசி, இளைப்பு, ஆயாசம், தாகம், மனத்தாபம், நித்திரை பெருமை, அருமை, சிறுமை, இவைமுதலிய ஒன்றையும் பொருளாய்க் கொள்ளாமல் மானத்தையும் மன்னன் சொன்ன தியானத்தையும் முக்கியமாய் நெஞ்சிற் கருதி முடிவுபெற நடத்திவரவேண்டும். கொலுமுகத்தினின்ற ஒருவனையழைத்துப்பகைவர்மேலனுப்பினால் அப்பகைவர் குடிகெடும்படிவென்று தங்களரசாட்சியைக் காக்கவேண்டும் ; அவ்வரசனைத் தத்தம் கண்மணிபோற் பார்க்கவேண்டும் ; எக்காலமும் அரசனைப் புகழ்ந்து பேசவேண்டு மல்லது எப்போது மிகழ்ந்து பேசலாகாது. உற்றதுணையாய்க் கொற்றவ னட்புப்பெற்றிருக்கினும், அரசனவனை உவர்போல் வைத்திருந்தாலும், அவனது பொன்னைப் பொருளைப் பூமியை நேமியைக் கன்னக்கோற் கள்வரைப்போல் கைப்பற்றக் கருதலாகாது ; கணக்குமுதலிய காரியங்களிலும் மறந்தும் வழுவலாகாது. ஒருகாலத்தேஅரசன்களிப்படைந்து பொன்னைப் பொருளைப் பூமியை மாளிகையை மனையைக் கொடுப்பனேயாயின் அன்புடன்அவைகளைப்பெறத் தக்கது ; மற்றோர்வகையாய்கிரகிக்க நினைப்பது ஆலவிடத்தை அமுதென்றே கருதிய ஆசைபோலாகுமென்று அறிவிலுயர்ந்தோர் மோசம் போய்விடா

மல், கிடைத்தமட்டுந் திர்த்தியடைந்துசத்தியந்தவறுதிருப்பர். இஃதன்றியும், 'காற்றுள்ளபோதேதூற்றிக்கொள்ளு' என்றபடி இக்காலத்திற்றேடாமல் இனி யெக்காலத்திற் றேடப்போகின்றோ மென்று கைகொண்டவனைக்குங் கொள்ளையடிப்பதற் குடன்படுவோர் கயவரென் றுரைக்கப்படுவர்; அவர்கள் முன்னுள்ள முதலுமிழந்து முனையுமிழந்து தேசப்பிரஷ்டத்துவ மடைவார்கள். கொலுவீற்றிருக்குங் கோமகனிடத்து பொய் புரட்டு பெருமோசம் டம்பம் சோம்பல் கொட்டாவி குறுகுறுத்தல் திமிர்விடுதல் முதலானவை செய்யக் கூடாது; ஒருகாலத்தே வருமாயின் அவ்விடத்தை விட்டு அப்பாற்போய்த் தீர்த்துக்கொண்டு வரவேண்டும். களிப்பாகச்செய்யுங் கயப்பாகிய வஸ்துக் களைக் கனவிலுங் கருதப்படாது; அதையுட்கொண்டு காவலன் சமுகமேறப் படாது. கண்ணாரக்கண்டதும் பொய்; காதாரக்கேட்டதும் பொய்; தீர விசாரிப்பது மெய்; இது முதியோர் மொழியாதலால் யாதொரு காரியத்தை யும் நாவடக்காமற் பதறிச்சொல்லப்படாது; அப்படிச் சொன்னவருக்குப் பெருந் துன்பத்தையும் மானிடப் பதரென்னும் பெயரையும் வருவிக்கும். அரசனால் நியமித்த குற்றவாளி முதலிய கொலை யாளருடன்கூடிக் கலந்து குலாவலாகாது; கூடினால், இவனும் அக்குற்றத்திற் குரியவனாவான். அரசன்கையெடுத் தழைத்தால் ஆநந்தமகிழ் வடையாமல், அந்த கனழைக்கு வந்தபோது, அவனைக்கண்டு நொந்தழுகின்ற அறிவில்லா ருயிர் போலொடுங்கி, அடங்கி, வாய்பொத்தி வணங்கிவரவேண்டும். அரசனழைக்க வரும் போது, பூமியதிரத்திடுதிடென்றுநடந்து அலட்சியமாய்ப் பதறிவரலாகாது. 'அடக்கம் அமரருளுய்க்கும்' எனப் பெரியோருரைத்தபடி மருவிச் சுகம் பெறவேண்டும். வெற்றிவேலேந்திய வேந்தன்பால் கட்டிக்காத்துப் பொருந்தி யிருப்பவர்கள் கொசுகு போன்ற சிற்றறிவுடை யாரானாலும், அவர்களோ டெதிர்த்துப் பகைத்துக் கொள்ளப்படாது; அவர்கள் பகையோ நல்ல தருணத்திற்கழுத்துக்குக் கத்தியாய்வந்து நேரும். இவ்வரசனிடத்தில் வெகுவாகிய செல்வமும் சுபமாகிய இன்பமும் பெறுகிறதற்காக வல்லவோ எக்காலமுங் கோள் குண்டுணிசொல்லி, நயிச்சியமாய் நடந்துகொண்டானென்று அரசனைச் சூழ்ந்திருப்பவர் யாவரும் இகழ்ச்சியாய்ப்பேசிக் கொள்ளும்படி இடங்கொடுத்துப் பலவகைவளங்கள் சுலபமாய்க் கிடைப்ப தானாலும் அறிவினை யுடையோர் அவ்வகைப் பழிச்சொல்லுக் காசையேவையார்கள். அரசன் கொண்டாடிப் புகழ்ந்த போதிலும், பேரறிவகன்ற பெருஞ்செல்வ முடைய பெரியோர் பலர் நம்மை மெச்சவேண்டுமென் றிச்சைகொண்டு, தம்மைத்தாம் மறந்து, ஆணவத்தாற் சிறந்து அகந்தை கொள்ளமாட்டார்கள். பரிசுத்தராகிய உத்தமர் இறைவனுகிய அரசனையும், உபதேசஞ்செய்தருளிய குருவையும், வித்தியாப்பியாசம் பண்ணியஉபாத்தியாயனையும், புத்தென்னு நரகநீங்குதற்குப்பெற்றதந்தையையும், பத்திசெலுத்துந் தெய்வத்தையும், தந்தையெனச்சிந்தித்துத், தினமுமேத்தித் தொழுது, வாழ்த்திப்போற்று வார்கள். ஆதலால், நீங்களைவரும் இவ்வகையான உலக விபற்கைகளை மனத்துட் கொண்டு, நாடோறுங் குற்றமகன்ற ஏவற்றொழிலை முடித்து, அகந்தை

யற்ற மனத்தினராய்ப் பெருமைபொருந்தி, இன்சொல்விளைத்து அஞ்ஞாத வாசம் ஒருவருஷமுங் கழிப்பீராயின், அது உம்மிலுண்டாகிய நல்லவினைப்புக்குத் துணைக்காரணமா யிருக்குமென்று தௌமியர்சொல்லினர். அப்போது, மலைபோலுங் குவிந்த தோளினையுடைய பாண்டவர்கள் வெற்றி கொண்டதைப்பார்க்கிலு மேலான விருப்பமுடையராய்ப் பௌரோகிதருடையமனமகிழச் சொல்லத்தொடங்கினர்.

வேதியர்பெருமானே! காவலனிடத்தில் ஏவல்செய்யு முறைமைகளை எங்களுக்கின்று கற்பித்தருளினீர், குறைவற்ற தவராசனாகிய தந்தையே! நீருரைத்த மொழிகளை வேதபாடங்கற்குஞ் சந்தைபோலுஞ் சிந்தையுட்கொண்டோம். இனிமேல் நாங்கள் மறைந்துறைந்து ஒருவருடந் தொலைக்கிறவரையிலும் தேவரீர் தவவேடம்பூண்டு, மாதவர்கள்வாழும் வனமடைந்து மருவத்தக்கதென்று, செந்தாமரை மலர்போன்ற அவரது திருவடியைத்தொழுது போற்றி, இதுவரையிலும் பத்தியுடன் பூசைபண்ணிக்கொண்டு வந்த நித்தியாக்கினியை நெறியோ டளித்தார்கள். விசுவாசமாய்ப் பூசித்துவந்த ஔபாசாக்கினியைத் தௌமியர், கைப்பற்றிக்கொண்டு பாண்டவர் ஐவரையும் பட்சமாய் நோக்கி, அருள்மலர்ந்தமுகத்தோடுஆசிர்வதித்து,அவ்விடம்விட்டெழுந்து, மாசகன்றமாதவர் நிறைந்தவனம்புகுந்து தவஞ்செய்திருந்தனர். இப்பால் பாண்டவர்களுக்கும், பாஞ்சாலிக்கும் ஏவல் செய்துவந்த பாங்கியர்களைப் பார்த்து நாங்கள் ஒருவருடம் ஒளித்திருக்குங்காலம் நேரிட்டமையால், அதுவரையிலும் நீங்களெல்லாம் வருந்தாமல் பாஞ்சால நாட்டிற் சேர்ந்திருங்களென்று அவர்களுக்குச் சொல்லியனுப்பிப், பெருமையிற் சிறந்த பாண்டவர்கள் பாஞ்சாலியுடன் சிலதூரம் போகையில், தருமராசன் தன் தம்பியரை நோக்கிச் சொல்லுகின்றனன். என்னருமைச் சகோதரர்களே! நாம் இவ்வரசன் சார்பிற்சாராது வேலைத்தொழில் நடத்துகையில் நமது கையிலிருக்கும் ஆயுதங்களை ஒருவருமறியாவண்ணம் ஒளித்துவைத்தால், நம்மைப்பகைவர் முதலாகிய யாவருங் கண்டுகொள்ள மாட்டார்க ளென்றனர். அந்தச் சொல்லைக்கேட்ட பார்த்தன் வணங்கி அண்ணாவே! தேவரீர் சொன்னது நியாயமேயென்று பெற்ற தாயைப்பிரியுங் கன்றேபோ லேங்கிப், பதைபதைத்து வெற்றிகொண்ட காண்டீவத்தையும், அத்திரநிறைந்த அக்ஷய தூணியையும், சந்திரமாகிய மற்ற ஆயுதங்களையுங் கழற்றிக் கொடுத்தான். வீமசேனனும் கடல்போற்பொங்கிக், கோபங்கொண்டு, மனச்சோர்வடைந்து, துன்பத்தால் நைந்து, வில்லையும், கதையையும், படையையும் அயர்ந்து மனமுருகிவைத்தான். நகுல சகாதேவரென்னும் இரட்டையரும் தமையனாகிய தருமராசனுரை தவறாதவராய்ப், பல்லோருங் கவலைகொள்ளும் வில்லும், வேலும், வாளும், தோமரமும், சூலமும், கேடயமும், அம்பறாத்தூணியும் அவிழ்த்துக் கொடுத்தனர். சாந்தகுணமுள்ள தயாளுவாகிய தருமராசன் தன்னுடைய ஆயுதங்களையுங்கழற்றிவைத்து,ஒருங்குசேர்த்துஇவற்றையொருவரும் உணராதிருக்கும் இடந்தேடி வைக்கவேண்டுமென்று சிந்தித்துச், செழுமையுடன் வளர்ந்து இருளுக் கிருப்பிடமாக வுயர்ந்து தழைந்து கவிந்

திருந்த ஒரு வன்னிமரத் தோப்பின் வளப்பத்தைக்கண்டு, மிக்கமகிழ்ச்சி கொண்டு அதில் ஓர் மரப்பொந்தில் இவ்வாயுதங்களை வைத்துப், பகைவர்முத லாகிய பலருக்குந் தோன்றாமலிருக்க வேண்டுமென்று மான்தோலால் மறை த்து, மூடிக்கட்டும்படி வீமசேனனுக்குக் கட்டளையிட்டுத் தருமசொரூபி யாகிய தருமராசன், தந்தையாகிய யமதருமராசன் திருவடியைச் சிந்தித்து, வந்தித்து சுவாமி! எங்களுக்கு வெற்றியையும் வீரத்தையுங் கொடுக்கின்ற ஆயுதங்க ளனைத்தையும் இவ்வன்னிமரத்தில் வைத்திருக்கின்றோம், இவற்றை நானாவது பார்த்தனாவது எடுக்கத்தக்கதேயன்றி மற்றியார்வந்தெடுத்தாலும், இம்மரத்தின் கிளையை யடுத்தாலும், பெரும் பாம்புருவமாய் ஆலவிடத்தை விசிக்கொண்டு மேல்விழக்கடவன வென்றுபேசிக், கட்டுரையாகிய உறுதி மொழியால் திடத்தவரத்தைப்பெற்று அவ்வரத்தைப் பரீட்சிக்கவேண்டி, வீமசேனனையழைத்து நீபத்திரப்படுத்திய படைகளைப் பாரென்றுரைத்தனர். அப்போதே வீமசேனன் அம்மரத்தின் கிளைமேற்சார்ந்து எட்டியெடுக்கக் கிட்டியபோது மட்டற்ற கொடுவிடத்தைக் குபீரென்றுகக்கி அழலால் தகித் துப் பெரும்பாம்புருவமாகித் தூரத்தக்கண்டு, பேச்சு மூச்சடங்கிப், பொறி புலன்கலங்கிப், புலம்பிப் பொன்போன்ற முகந்திரிந்து, இளைந்தகன்றிழிந்த இயற்கையைக்கண்டுதருமராசன்முதலிய யாவரும்முதலைவாயினீங்கியயானை போல் துயர் நீங்கி மகிழ்ந்து, துர்க்கையின் திருவடிதொழுது, அவ்விடம் விட்டு நீங்கிச் சில தூரஞ்சென்று அப்பாலுள்ள செந்தாமரைப் பொய்கை யடைந்து, நீராடி நீர்துவட்டி, நெடுமயிராற்றி, வேதவிதிப்படியேமாத்தியானக் கடன்முடித்துத் தந்தையின் பதத்துணையைச் சிரமேற்கொண்டு, திக்குநோக் கித் தெண்டனிட்டுத் தென்றிசைக் கடவுளாகிய தெய்வமே! நாங்களெடுக்க வேண்டிய வேடத்திற்குத்தக்க உபகரணப்பொருள்களெல்லாம்உதவிசெய்து, சுஜாதிகப் பிரகாசமுந் தரவேண்டுமென்று வருந்திக்கேட்ட தன்மகனாகிய தருமராசனிட்டப்படித் தென்றிசைக்கோமான் அநுக்கிரகஞ்செய்தருளினன்.

செங்கோற்கடவுளது திருவருட்பயனால் தருமபுத்திரன் ஒளிவிடும் பால சூரியன்போல் மறையவனுருவாய்த் தழைத்தபின் குடுமியும், செழித்த முப் புரிநூலும், கவித்தவெண்குடையும், பிடித்த தண்டுகமண்டலமும், உத்தரீய மும், காதிற்குண்டலமும், கையிற்பவித்திரமும், கண்டவர்மதிக்கும் புண்டர நுதலும், கரத்தேசெபமாலையும் கனிந்த மொழியாசியும், முனிவரிற்சிறந்த முகவிலாசமு முடையானானன். மற்போர் வல்லானாகியவீமன் மடைத்தொழி லாள ருருவெய்தி நுதற்கிசைந்த திலதமும், செவிக்கிசைந்த மணிநகையும், பாகசாத்திரப்பேச்சும், சந்தனபாளிதப்பூச்சும், தாழ்ந்தகைவீச்சும், சரிகை வேட்டிப்போர்வையு முடையானாய்ச் சிருஷ்டிகர்த்தாவினாலுஞ் செய்தற்கரிய நூதனவேடமடைந்தான். மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் போற்றி விரும்பும் பவளமலைபோன்ற பரமசிவமும் அப்பவளமலைமேற்படர்ந்தபச்சைப் பசுங்கொடிப் பர்வதவர்த்தனியும், ஆசைப்பெருக்கோடடுத்து முன்னின்று அருட்பார்வையளிக்கத் தன்னிலைதவறாமே தவத்திலிருந்து உன்னியவைக ளொருங்குடன்பெற்றுக் காட்சிகண்டருளிய காண்டீபனாகிய அர்ச்சுனன் கண்

னுதலுடன்கலந்து விளையாடிய தன்திருமேனிப் பிரகாசத்தைநீக்கி வாசனை தங்கு மலர்க்குழலும், கலகலவென்னுங்கைவளையும்உடலைமறைக்கும் அரைச் சட்டையும் கருங்குவளைபோன்றகண்களும் உடுக்கைக் கிணையாஞ் சிற்றிடையும் உயர்ந்தசரிகைப் பட்டுடையும் உலவுமன்னம் போலுநடையுஞ் செந்தூரப் பொட்டணி நுதலுந்தரளக் கோவை முதலிய சதங்கையும் உடையானுய்ப் பேடியரிலுயர்ந்த பேருருவமைந்தான். பின்னவரிருவரில் முன்னவனுகிய நகுலராசன் தலைப்புறத்துங் காதின்புறத்துஞ் சுருள்செய்து கத்தரித்து விட்ட மயிர்க்குச்சும், வன்னப்பிச்சமும், முறுக்குமீசையும், கனகமயச்சுருணை கலந்துகட்டிய வண்டிப்பாகையும் நெற்றிக்கோபியும் கஞ்சுகக்கவசமும், கலகல வென்னுங் குதிரைச்சம்மட்டியுங் கதிநடைபழக்குங் கயிறுங்கொண்டு குணமுங்குற்றமும் கோணமும் வட்டமும்வளைவுமாறலும் பிணிவருவிதமும் பிணி தீர்க்குமவுடதமு முணர்ந்த குதிரைப்பாகனைப்போற் குறைவிலா வடிவங்கொண்டான். மகாவிற்பன விவேக சகாதேவன் சிரத்தில் நிறைந்து பரந்த கொண்டையும் வளர்ந்த தாடியும் கிளர்ந்த மீசையும், செம்மண் வெண்மண் திலகக்காப்பும் கருங் கம்பளமுங் கச்சப்பையும், கயிறுங்கோலும் கன்றின் வாய்ப்பூட்டும் காதணிகுழையும் தாதுகுதழையும் கந்தைவேட்டியும், பெருங் குரல் தாட்டியு முடையானுய்ப் பலகோடி பசுக்களைப் பாதுகாக்குங் கோபாலனைப்போல் வடிவ மடைந்தான். வேலாயுதம் போன்ற கண்ணினளாகிய பாஞ்சாலி தலைசிவி வகிர்ந்து, கூந்தல்விட்டு முடிந்து நெற்றிக்குச் சுட்டிகட்டி நீலவிழிக்கு மைதீட்டி இரத்தினப் பணிகள்பூட்டி வாசக்கலவைப் பொடிகூட்டி தருமர் முதலிய ஐவருங்காண வண்ணமக ளுருவாமெனச் சமைந்தனள்.

இவ்வாறறுவருந்தாங்கள் எண்ணிக்கொண்டவண்ணம்வேறுவேடமெய்தி ஒருவரை யொருவர் பார்த்து, உற்சாகமடைந்து, மச்சராசனிடத்தி லொருவருடம் வாழலாமென்று இச்சை மேற்கொண்டு அச்சமில்லாதவர்களா யிருந்த போது,மறுவகன்றதருமராசன்மனமகிழ்ந்துபலவகையுபாயவளப்பமும் பேசித் திறமுடையவர்களே ஊன் நாறும் வேலோங்கிய விராடனிடத்தில் நான்போய்ச் சேர்ந்த பின்னர் நீங்களைவரும் முறையாகத் தனித்தனிவந்து சேருங்கள்; நானவ்விடத்திலிருப்பதால்என்னைநோக்கி,வணங்கியிணங்கி, போற்றுதற்கெளிதாயிருக்குமென்று விளம்பிக்கிளம்பிய அறக்கடமை என்பது நீங்காத அண்ணலைவாழ்த்தித்தம்பிமாரும் வேள்வியிற்பிறந்த பாஞ்சாலியும் பரதவித்துவாட்த் தேவர்முதலியயாவருங்கொண்டாட, அருமையானமாதவவேதியர்வடிவங்கொண்டதருமராசன் கங்கபட்டனென்னுந்திருநாமமும் உதயமான இளஞ்சூரியன் போற்பிரகாசமும்பாற்கடலலைபோல்முப்புரிநூலும்பரந்தமார்பும்உயர்ந்ததோளும் சுகந்தமலர்மாலையு முடையவராய் மதவாரணம்போற் சென்று மராடகர்நாடகன்னட கிராத மலைநாடர் வந்திறைஞ்சு மணிக்கதவமைந்த வாசலிற் போய்நின்று வெண்குடை நிழலில் நன்குடன்பொருந்தியவிராடராசனுக் கறிவிக்கச் சொல்லினுன். அவ்விடத்திற் காவலிருந்த தூதுவர்சென்று, வாய் மூடிக் கைகட்டிச் சுவாமி! பராக்கு, யாரோவொரு பெரியவர் நமது கொலு

முகவாசலில் வந்திருக்கின்றன ரென்றனர். அவர்கள் பேச்சைக்கேட்ட மச்சராசன் உடனே எதிரோடிச்சென்று ஐம்புலனொடுங்கப்பணிந்து, முகமலர்ந்து அகங்கனிந்து கையிரண்டையுங்குவித்துச் சிரத்திற்பொருத்திக் கருத்தில் துதித்துச் சேவித்துநின்றனன். உடனே கங்கபட்டர் ஆசீர்வதித்தருளினர். அவ்விராடராசன் சபையிலிருந்த யாவரும் வந்த வேதியர்பெருமானைக்கண்டு விந்தையென்றுட்கொண்டு தொழுதனர். அச்சமையத்தில் கங்கபட்டரால் மங்களாசனம்பெற்ற மச்சராசன் அவரை இச்சைமிகுந்த பட்சத்துட னழைத்துச்சென்று வைதிகர்களிருக்க வமைந்த ஆசனத்தில் எழுந்தருளப்பண்ணி அவருபயதிருவடிகளுக்கு மருக்கியபாத்தியம் ஆசமனியம்அபிடேகம்வத்திரம்புட்பம் அரிசந்தனம் அட்சதை தூபம் தீபம் நைவேத்தியம் இவைமுதலிய உபசாரங்கள்யாவும்புரிந்து பத்திசெலுத்திப்பரிந்தேத்திப்போற்றிவாய்பொத்திநின்று, சுவாமி! தேவரீர்யார்? எவ்விடமிருப்பது? இவ்விடத்திற்கெழுந்தருளியகாரணம் யாது? தங்களுடைய நாமமென்ன? என்றுகேட்டான். அதற்குக் கங்கபட்டர் சொல்லுகின்றனர், அதிதீவிரபக்குவமுள்ள அரசனே! இச்சக்கரவாளஞ்சூழ்ந்த பூமியை ஆக்கினைச் சக்கரஞ் செலுத்தியாண்ட தருமராசனுடன் பழகியிருந்தேன்; அவர் வனவாசம்பண்ணிய காலையிலும் கனநேசம்பண்ணிக் கலந்து திரிந்தேன்; என்னைவிட்டோராண்டு பிரிந்திருக்கவேண்டி வந்ததால், நான் உமிடத்திற் சிலநாள்கழிக்கலாமென்றே வந்தேனென வேள்வியினுலும் கேள்வியினுலும் மிக்கோனாகிய தக்கோனுரைக்க,மநுநீதிதவறாதமச்சராசன்கேட்டு, மதியால்மகிழ்ந்து துதியாற்புகழ்ந்துபரவசமெய்தித் தெளிவாகிய அறிவும் அன்பும் ஆசையும் உள்ளக்களிப்பும் ஒளிவிட்டிலங்க, என் ஆண்டவனே! தேவரீர் இப்பட்டணத்திற் கெழுந்தருளிய பயன் யான் எழுபிறப்பினுந் தேடிக்கொண்ட நல்வினையின் நலமேயல்லது வேறின்று. ஆதலால் முனிவராகிய தேவரீர் இவ்விடத்திலெத்தனைநாளைக்கிருக்க இட்டமோ அத்தனைநாளும் அதிபதியாயிருக்கலாமென்றே விராடராசன் எடுத்துச்சொன்னான். அவ்வாறே புனிதமாகிய சிங்காதனத்திருந்து வேதியர்முதலிய மாதவரும் பல சாதியரும் தொழப் பவளச்செபமாலைகரத்தினும் குவளைத்தொடைமாலை உரத்தினும் தரித்த தருமராசன் எழுந்தருளினன்.

பின்னுஞ்சிலநாள்சென்றபின்னர் விற்போருக்கும், மற்போருக்கும்இவன் தானென்னும் கதாபாணியாகிய வீமசேனன், தெளிந்ததேவாமுதத்திற்கொப்பாகச் சமையல்செய்யும் பக்குவத்தைக்குறித்தும், கல்வியின் திடத்தைக் குறித்தும், தெரிவிக்க ஏகபோகத்திற்கொருவனாகிய விராடராசன் சபையிற்புகுந்து, நாகரத்தினம்போல் நலம்பெற்றிருந்த தருமராசன் திருவடியில் தண்டனிட்டு இம்மண்டலத்தரசே! யான் மடைத்தொழிற்குரியேன்; கூட்டுக்கறி குழம்புக்கறி குழைக்கறி பொறிக்கறி பச்சடி முதலிய ஐந்துவகைக்கறிகளும், உண்ணல் தின்னல் நக்கல் பருகலுடன் அறுசுவையுண்டியும், குறைவறச் சமைப்பேன்; ஒருசமையத்தில் மல்லுங்கொடுப்பேன்; வில்லுமெடுப்பேன்; அல்லும்பகலும் நல்லவனாய் நடப்பேன்; பலாயனனென்னும் பெயர்பெற்றேன்; திரிபுவனத்திலுந்தேடிப்பார்த்தாலும், என்தொழிற்கொப்புரைக்க எத்

தொழிலுமில்லது; எனக்கீடாவார் யாவருமிலர்; சமயபேதத்தால் தருமராசனுக்கிளைய வீமனென்பவனைவிட்டு உம்மிடத்தி லொருவருட மிருக்கும்படி நினைந்துவந்தேனென்றான்.

இவ்வண்ணம் பேசிய பலாயனன்மேல் இட்டங்கொண்டு முகமலர்ந்த விராடராசன் அவன்தலைமேற் கைவைத்து பொன்னாரமும், பூவாரமும், இரத்தினபரணமும், முத்தாரமும், வச்சிரவாகுவலயமும், மரகதமதாணியும், மெல்லியவத்திரங்களும், யானை குதிரை பல்லக்குமுதலியவாகனங்களும் பெருமையாகக்கொடுத்து, சுயம்பாகி! அரசரிடத்திலிருக்கின்ற உத்தியோகங்களிற் சிறந்தது தாய்போலூட்டுகின்ற சுயம்பாகித்தொழிலே ஆதலால், நீ இன்றுமுதல் எனக்கும், என் சுற்றத்தவருக்கும், இனிமையுடன் உண்பிக்கும் உரிமையும், இங்குள்ளமடைத்தொழிலாளரனைவருக்குந் தலைமையாகிய அதிகாரமும், உனக்கே கொடுத்தோம். இவ்வேலையை உன் சொந்தவேலையாகவே பார்த்துச் சிந்தை வேறுபடாதிருக்க வேண்டுமென்றனுப்பி, விந்தைதங்கும் புயமுடைய விராடராசன் மிகக்களித்திருந்தனன்.

இப்பால், வாயுபுத்திரன் சேர்ந்து, மடைத்தொழிலில் தலைமைபூண்டிருந்தனன். பின்பு மறுநாட்காலையில் அறிவாலுயர்ந்த பிரகநளையென்னும் பேடி வட்டவெண்குடையும், மணிமகுடமுந்தரித்த மச்சராசனிருந்த உச்சிதசபை சிறக்கும்படிசென்று, முப்புரிநூலினையுடைய அந்தணராகிய கங்கபட்டனென்னும் முதல்வன் பாதத்தில் ஒருவகையாகவணங்கி, ஐயா! எண்டிசைகொண்டாடுங் காண்டீபபாணியாகிய அருச்சுனன் அரண்மனையிலிருக்கும் பேடிகள் அநேகரில் நானொருபேடி; நாதப்பிரமம் சத்தப்பிரமம் ஒலி ஒத்து தாளம் மேளமுதலியவைகளுங் கலந்து, சுரம் சுதி லயை குறையாமற்பாடவும், ஆடவும், நடனசாத்திரப் பிரசங்கஞ்செய்யுஞ் சபைக்கு யோக்கியமாகப் பேதைப்பருவப் பெண்களுக்குப் பரதங்கற்பிக்கவுங் கற்றிருக்கின்றேன்; பிரகநளையென்னும் பெயரினையுடையேன்; உமது செல்வநகரிலிருந்து, சிலநாள் கழிக்கும்பொருட்டு அடைந்தேன். என்னை நீர் ஆதரிப்பீராயின், வேதமும் வேள்வியுமுள்ள மேதினியில் உம்முடைய மரபு விருத்தியாமென்று பேடி வாழ்த்தினள். அவள் வாழ்த்தியதைச் சாத்திரமுணர்ந்த விராடராசன்கேட்டு, இத்தன்மையாளர்கள், கடல்புடைசூழ்ந்தகாசினியிற்கிடைப்பதே அருமையென்று பெருமையாய்ப்பேசி, வரிசைமுதலிய வர்க்கமுங்கொடுத்து இன்னுமுனக்கு வேண்டுவனவெல்லாந்தருவேன்; என்பெண்ணுக்கு உயிர்ப்பாங்கிபோற் கண்ணுக்குக்கண்ணாயிருந்து, பரதசாத்திரம் முழுதும் பயிற்றென்று உத்தரகுமாரத்தியிருக்கின்ற அந்தப்புரத்திற் கனுப்பினன்.

பின்னுஞ் சிலநாள் சென்றபின்பு அழகில் மன்மதனையும், அறிவிற் சுக்கிரனையும்பழிக்கச்செழிக்கும் நகுலன்போய்விராடராசனுடைய குதிரைச்சாலைக் கெதிராகநின்றான். அன்று சாயங்காலவேளையில், மின்னலோங்கிய வேல் தாங்கிய விராடராசன், வன்னக்குதிரையேறி, வையாளிவிட்டு வரும்போது கடிவாளமும், கம்பியும், கயிறும், கிலுகிலுக்கும், கட்டையும்; முட்கோலும் பிடித்துப் பார்த்தவரெல்லாரும் அச்சுவசாத்திரந்தெரிந்த விற்பனனென்றே

மதிக்கும்படியிருந்த பரிவல்லவனை இச்சைமேற்கொண்டு, பார்த்துக் கையை நீட்டிக்குதிரைச்சம்மட்டிகொண்டு நிற்கின்ற குதிரைப்பாகனே! நீ எங்கிருந்து வருகிறாய்? உன்பெயரென்ன! சொல்லென்றான். இவ்வாறுகேட்ட அம்மச்சு ராசனைக் குதிரைச்சேவகஞ்செய்யும் வேடங்கொண்ட கோமான், மிகக் குறுகித் தன்றெழிற்குத்தகுந்த மரியாதைசெய்து, அரசனே! அடியேன் விசயனுக்கிளைய நகுலனென்று பல திசையிலுமெழுதிய வெற்றிபெற்றவன். அவனது கீர்த்தியைச்சொல்ல வல்லவருமுண்டோ? அந்நகுலராசனுடைய குதிரைத்தளங்களுக்குத் தலைவர்களில் எளிமையாகத் தாழ்ந்துவாழ்ந்தவன்; தாமக்கிரந்தி யென்னும் நாமம்புனைந்தவன்! விரைவில் நடக்கும் பரியும், அரசர்களேறுங் குதிரையும், அவற்றின் மனமும், வடிவமும், சுழியும், சுத்தமும், நிறமும், திறமும், திடமும், குணமும், மணமும், குலமும், குரலும், வேகமும், கதியும், உற்பவதேசமும், வீரமும், ரோஷமும், மறுவும், பிறவுமுள்ள மார்க்கமுமறிவேன்; தீராக் குதிரைப்பிணிகளையுந்தீர்ப்பேன்; மண்டலம், கோணம், வளைவு, முன்னோட்டம், பின்னோட்டம், நேரோட்டம், நரி, கரி, அரி, வரிவேங்கை நடையுங்காட்டுவேன்; தேருக்குப் பூட்டுங் குதிரையும், போருக்கூட்டுங் குதிரையும், பட்டாபிடேகப்பரியும், கலியாணப்பரியும், யாகப்புரவியும், வாயுவேக மனோவேக சரவேக சர்ப்பவேகப் புரவியுந்தெரிந்து வகுப்பேன். சத்துவகுணசாந்தனே! அண்டினோரை யாதரிக்கும் பாண்டுமைந்தரைவரும், வனவாசஞ் செய்யபோனபின்பு உண்டியுமிழந்தேன்; உறுதியுமழிந்தேன்; உமது கீர்த்தியைக்கேட்டு இவ்விடம்வந்தேன். என்னை யாதரித்தருளுமென்றான். அப்புரவித்தலைவனது பொய்யாமொழியைக்கேட்டு, தன்னிநெருங்கியமன்னவர்யார்க்கும், பொன்னுலகோர்க்கும், மண்ணுலகோர்க்கும், புனிதஞானியர்க்கும், பூசுரருக்கும், விசுவாசமுள்ள மெய்யறிவோர்க்கும் உற்றகவலையை யொருங்குடன் தீர்க்கும் வித்தக விராடராசன், மெய்ப்புளகிதமுடையானாய்மந்திரிமார்முதலியயாவருங்கொண்டாடச் செந்திருகலைமகள் சேர்ந்துநின்றாடப் பொன்னின் குடநிறைந்த வாசலில்வந்திறங்கித் தன்னைவந்தடுத்தோருக்கும், சத்தியநெறிபெற்ற தருமராசன் தம்பிமாருக்குங்கொடுத்த வெகுமானத்திலும் மூன்றுபங் கதிகமாகக்கொடுத்துச்சன்மானஞ்செய்து தன்னுடைய குதிரைவல்லவருக்கெல்லாந்தலைவனென்னுமுதன்மையுங்கொடுத்தான்.

அதன்பின் ஒருநாள் அசுவங்களை அபிவிர்த்தியாக அளிக்கும்படிக் கமைந்த நகுலராசனுக்கிளைய சகாதேவன், நந்தகோபன் மைந்தன்போல் வேடங்கொண்டு, அசைந்தாடிய செவிகளுக்கிசையச்சூடிய பச்சிலையுடன், புள்ளாங்குழலிசைபாடுந் தடியும், துறட்டுக்கோலும், கன்றணைக்குங் கயிறும், மாடுகட்டுந் தும்பும், சிக்கக்கச்சமுந் தோள்மேற்கொண்டசைந்து கீர்த்தி தழைத்த விராடராசன் சபையைக்கிட்டினான். அவனைக்கண்ட அரசன் கருங்கம்பளப் போர்வையுடைய கானவனே! நீ யாரென்றுகேட்டான். அப்போது, தருமராசனுடன் சமமாயிருந்த விராடராசனைப்பணிந்தும் பணியாதவன்போற்பணிந்து ஓ! மகாராசனே! துரியோதனனுடன் சொக்கட்டா

ஞடி, இக்கட்டடைந்து, நாட்டைவிடுத்துக் காட்டையடுத்து வனவாசம்பண்ணிய பாண்டவர்களில் இளஞ்சிங்கமாகிய சகாதேவராசனுடைய பசுக்களைப் பார்த்து மேய்த்துக் காத்துவந்த கோபாலன்யான்! என்பெயர் தந்திரபாலனென்றான். அவன்சொல்லைக்கேட்டவிராடராசன், உள்ளமகிழ்ந்து அவனைத் தன்னருகழைத்து, வேண்டிய வெகுமானமுங்கொடுத்து, நமது பசுமந்தைகளை உன் சொந்தம்போற் காத்துக்கொண்டிருவென்றேயனுப்பிவிட்டுச் சந்தோடமுற்றிருந்தான்.

உடனே ஓமாக்கினியில் தோன்றிய பாஞ்சாலியும், வண்ணப்பெண்வடிவாகிவந்து, மருமலர்மாலைவேய்ந்த மச்சராசனது தோளணைந்த சுதக்கணை வாழும் அந்தப்புரமேநாடி, அவ்விடத்திற் காவலிருக்கும்பாங்கிமாரை நோக்கி யாரோவொருத்தி வந்திருக்கின்றனளென்று உங்கள் அரசிக்குச் சொல்லுமென்ன, அவர்களவ்வாறேகித் தங்களரசியைவணங்கி எங்களையாளும் அம்மணி! தேன் நிறைந்த செந்தாமரைமலரிற்பிறந்த செந்திருவு நாணுங் கண்மணிபோன்ற வோர் பெண்மணி இடையசைய விசையாய்நடந்து, நமது தலைவாயலைக்கடந்து வந்திருக்கின்றனள். தாயே! தங்கள் கட்டளைப்படி நடக்கக் காத்திருக்கின்றோமென்று உபசரித்தனர். அந்தப்பாங்கியருரைத்ததைக் கேட்டுப் பாரமார்த்தியமுள்ள சுதக்கணை மிகுந்த பட்சமுள்ளவளாய் அக்கணமே யழைத்துவரச்சொல்லினள். அந்நேரமே சேடியர்கள்பாடுங்குயில்போலோடி வாடிய மருங்குலையுடைய மயில்போல் வாசலில்நின்ற மங்கையைநாடி நூதனமான மாதனமே! வாரும்வாருமென்றேயன்போடழைத்தனர்; அவ்விடமிருந்த பெண்ணமுதாகிய வண்ணப்பெண் மகாபாக்கியமென்று வந்தனள். அம்மாதின் துடியிடைப் பிடிநடைச் சுந்தரங்கண்ட சுதக்கணை திடீரென்றெழுந்து, மலர்முகமலர்ந்து கைகொடுத்தணைத்துப் பக்கத்திலிருத்திக் குங்குமச்சாந்து சந்தன சுகந்த கதம்ப தாம்பூல மஞ்சள் புட்ப வத்திராபரணங்களினாற் பூசித்து அன்னையே! உன்னாடி யாது, யாதுகாரனமாயிவ்வளவுதூரமெழுந்தருளியது, உன்பெயரென்ன? அடியேன் அறியச்சொல்லுமென்று இன்னியம்போன்ற தன் மொழியால் நன்னயமாக்கேட்டாள். அப்படிக்கேட்ட சுதக்கணைக்கு உபசாரவார்த்தைசொல்லி அருட்கண்ணையுடைய ஆரணங்கே! இந்திரப்பிரத்த முதலிய எல்லாவற்றையும் சகுனியாடிய சூதால் தோற்றுக் காடே வீடாகவும் பறவை மிருகங்களே பந்துவாகவும் பன்னிரண்டாண்டு வனவாசம்பண்ணிய பாண்டவர் மருவிய மான்விழிமடந்தையைப் பிரியாதிருந்தேன்; என்பேரோ விரதசாரணி என்பர். சந்தனாதி சுகந்தகதம்பம் பூசுவதிலும், சேலை மாலை சேர்த்துக் கட்டுவதிலும், பூணாபரணங்கள் பூட்டுவதிலுங் கூந்தலைவகிர்ந்து முடித்துப் பின்னுவதிலும், மார்பில் தொய்யிலெழுதி யலங்கரிப்பதிலும், மைதீட்டுவதிலும் புகழ்பெற்றவள்; உமக்கிச்சையானபடி அழகுண்டாக்கி மனமகிழச்செய்ய வேண்டுமென் றெண்ணியே வந்தேன்; பெண்கள்சிந்தாமணியே! இன்னுமொருகாரிய மியம்பக்கேளும். யான் என் தாய்வீட்டிற் சஞ்சரித்துலவுங் கன்னிப்பருவத்தே கந்தருவர் காவலிலடங்கிக் கற்புடையாளாயினேன்; மற்ற மனிதரோ நோக்கப்படாது, மனிதர்

முகநோக்கி நான் மகிழவுமாட்டேன், நீ மாதவமுடையவளென்று உன் மாளிகை நோக்கியே வந்தேனென்றனள். இவ்வுண்மைகூறிய வண்ணப்பெண் வசனம்கேட்டுத் திடுக்கிட்டுப்பயந்து, திடத்துடனயந்து, மகிழ்ச்சியாய் விரும்பிப் புகழ்ச்சியாய்த் திரும்பிப் பூமகளேபோன்ற வண்ணமகளெனத் தெய்வப்பெண்போல்வந்தஉன்னைச் செவ்வையாகப்பார்த்துச் சிந்தைமகிழ்ந்தேன்;இன்றுமுதல் நீர்என்னிரு கண்ணுகவும்,எங்களோடொப்பாகவும், வண்ணப்பெண்ணுகவும், என்னுடனுமுயிரு முன்காவலாகக்காத்து, உற்ற தாயாகிய நீர் பெற்றதாய்போலப் பார்த்துப் புகழ்ப்படவாழ்ந்து, நன்மொழிபுகன்று, நலம் பெற நடத்துவது உன் கடனென்றுரைத்து, என்னைக் காத்தருளுமென்று உபசரித்தனள். இவ்வண்ணமுபசரித்த மிக்க புத்திசாலியாகிய சுதக்கனையைப் பாஞ்சாலிபார்த்து அப்படியே யாகட்டுமம்மா! என்று எந்தெந்த வேளைக் கெப்படி செய்யவேண்டியதோ அந்தந்தவேளைக்கான அலங்காரங்களை வெறுப்பின்றி விருப்பத்துடன் வகைவகையாகச்செய்து நாளுக்கு நாள் மிக்க விசுவாசமுண்டாக நடந்துகொண்டனள்.

இவ்வண்ணம், மைதீட்டிய வாள்போல் நீட்டிக்காட்டுங் கருங்கண்ணினையுடைய பாஞ்சாலியும்சந்திரகுலமைந்தராகிய பாண்டவரைவரும் உருவமறைந்து, அரசசின்னங்கள் யாவையுந்துறந்து, உல்லாசப்பேச்சுகைள் மறந்துஅஞ்ஞாதவாசத் தோராண்டுங்கழிக்கச்சிறந்துவருங்காலையில், மெய்ப்பயிர் விளைத்துப் பொய்க்களைகளைந்து தீவினைதீர்த்து நல்வினைசேர்த்து இராச்சியபரிபாலனஞ் செய்துவருகின்ற விராடராசனுடைய மச்சநாடானது, நித்திய சுப மங்கலப் பெருஞ்செல்வமும்,மாதமும்மாரியும், நன்செய் புன்செய் இஞ்சி மஞ்சள் இரத கச துரகபதாதிகளும் விஞ்சியும், நான்கு வருணத்தவருங் குலாவிக் கொஞ்சியும், குருநாட்டுக்கொப்பாகக் குறைவற வோங்கியும், பூவாமரம் பூத்தும், காயாமரங்காய்த்தும், பசுப்பாக்கியம் பால்பாக்கியம் மிகுந்தும், சுப சோபனங்களுடன் சந்தோடசம்பிரமங்கள் நிரம்பியுமிருந்தது. கேளும்! செனமேசெய மகாராசனேயென்று வைசம்பாயனர் சொல்லிவந்தனர்.

மற்போர்ச்சருக்கம்.

எவ்வகைவளமு நீங்காத செல்வச்சிறப்போங்கிய விராடபுரத்தில் பாஞ்சாலியும்பாண்டவரைவரும்போகபோக்கிய வினிமையிற் பூரணசந்திரன்போல் விளங்கினர். அவர்களறுவரும்களங்கரகிதராய்க்கலந்து, பேசுங்காலமறிந்து,ஒருவர் கண்ணிற்படாமல் திரிந்து, ஒருவரையொருவர் பிரியாமற் பொருந்தித் தாழ்வறவாழுங்காலத்தில், யானைபுலி கரடி சிங்கம் காட்டெருமை கலைமான் முதலிய மிருகங்களுடன் மல்லரைச்சண்டைவிட்டு, வகைவகை வேடிக்கைகளை இச்சையின்படிவிளைத்து மச்சராசனும் மற்றவர்களும் மகிழ்வுற்றிருந்தனர். அப்படிப்பட்ட சமையத்தில்,வேலாயுதத்திற்கு வேளென்றும் சூலாயுதத்திற்கு நமனென்றும், வில்லுக்கு இராமனென்றும், சொல்லுக்கு அகத்தியனென்றும்,மல்லுக்குநானேமகாதேவனென்றும், தேசமெல்லாந்திரிந்துசீர்பெற்றவாசவனென்னும்பெயருள்ள மல்லனொருவன், கொலுமுகவாசலில்வந்தான்.

அவன் எப்படிப்பட்டவனெனின், அண்டமுகட்டையளாவிய மெய்யான், எண்டிசைமட்டு மேந்தியகையான், வாகுவலயம் வணைந்ததோளான், வீர கண்டைபுனைந்த தாளான், வாடைக்காற்றைமறிக்கும் வலத்தான், ஓடத்தக்க யானையை யொடுக்கும் வலத்தான், சிவந்த மயிர்விரிந்த தலையான், தீரபராக் கிரமப்புயமலையான், அவனிழல்போ லாயிரமல்லர்களடுத்துவரும்படி எழுபுரவி பூட்டிய ஒற்றையாழித்தேரினையுடைய சூரியன்போல், உன்னதத்தேறி விருது, டால், கொடி, குடை, செயபேரி, டங்கா, பாங்கா, கொம்பு, தாரை, பூரி, வீரசின்னம், எக்காளமுதலிய வாத்தியமொலிக்கவும், கடல்சூழ்ந்த உல கத்தில் இவனுடன் சண்டைசெய்தவர்கள் யாருமில்லையேயென்று கட்டியக் காரர்எச்சரிக்கைசொல்லவும், பட்டவர்கள் கொண்டாடிக்கொக்கரிக்கவும், நவ மணிப்பணிமகுடஞ் சொலிக்கவும், நாகரத்தினத்தணிப்பட்டயமிலங்கவும், நவ மோகனமன்மதனிவனென்ன, இராசசிங்காதனத்திற் கொலுவீற்றிருந்த விரா டராசன் சமுகத்திற்கு வந்தான். இவ்வகையாடம்பரத்துடன் வாசவனென் னுமல்லன் தேசபூசிதராசனைப்பணிந்து மகாராசசிங்கமே! எழுகடல்வளைந்த உலகத்தில் என்னுடனெதிர்த்து மற்போரிடத்தக்க வல்லவரில்லை; நானே அநேகம் பட்டினங்களினுந் திரிந்து, அரசர் பலரையுங்கண்டு, என் சமர்த் தையுங்காட்டிப்பொன்பூடணவாகனாதி வரிசைகளையும் பெற்றிருக்கின்றேன்; இவ்விடத்திலுமதுமகாசபையைநோக்கிவந்தேன், என்வல்லமையைச் சொல் லுந்தரமன்றென் றுரைத்தனன். அந்த மற்போர்த்தொழில் முறைதெரிந்த விராடராசன் வந்த மல்லன்கூறிய வார்த்தையைக் கேட்டுத் தன் சபையி லிருந்த ஆத்தான மல்லர்களைநோக்கி, உதட்டைப்பிதுக்கித் தலையையசைத் துப் புதிதாகவந்த மல்லனுக்குக் கொடுக்கத்தக்க பரிசுகள் கொடுத்து நமது சபையில் நிர்வாகமுள்ள மல்லர்களில்லையோவென்று வாய்விட்டுச் சொல்ல மாட்டாமன் மனம் புழுங்கியிருந்தனன்.

அச்சமையத்தில், விராடராசனுடைய சொந்தமல்லர்களுக்கு மனம்பொ றாமல், கோபாவேசங்கொண்டு, வந்த மல்லனிவ்வளவு வரிசை பெற்றுப்போக வும், நாம் வல்லமை யற்றவர்களாகக் குந்தியிருக்கவும், மானக்கேடும் மரியா தைத் தாழ்வுமாயிற்றேயென் றெழுந்து, காரிடிபோற் பேரொலிகாட்டி, ஓரடி யாய் நடந்து, ஆக்கிரமித்துப் பராக்கிரமம்பேசிப் பதைத்துத் துடித்து, அத ட்டிப் புயந்தட்டி, மீசையை முறுக்கிக் கண்கள் சிவக்க வுறுக்கிவிழித்துப் பற் களைக்கடித்துப் புதுமல்லனை வளைத்து, இது நல்ல சமையமென்றிரைந்து எங் களுடன் சண்டைபோட வாவென்று மறித்து, அவன்பெற்ற ஆடையாபரண வெகுமானங்களைப் பறித்து மற்போர் நூலில் வகுத்தபடி விற்போர் வாட் போர் வகையெல்லாம் விளைத்து, வேந்தர்கள்முதலிய வெகுசனர் காணப் பாய்ந்தெதிரோடிச் சண்டைவிளைத்தனர். தனித்தனி யொருவன் சண்டை செய்யும்போது தானம்விட்டகலாமல் தத்தியும், ஒருவனை யொருவன் சுற்றி யும், உடலுடனுட லொத்தியும், தோளுடன் தோளடித்துப் பற்றியும், தலை யோடு தலைமோதியும் புயமலையோடு புயமலைமோதியும், இடசாரி வலசாரி யோடியும், இமைப்பெடுத் தொருபுறம்வாடியும், இடைந்து முன்பாய்ந்து கூத்

தாடியும், இடம்விட்டிடஞ் சாய்ந்து கூடியும், வச்சிரமுட்டியா லிடித்தும், வைரக்கையாலடித்தும், காலுடன் கால்மாட்டியும், கதாயுதத்தை நீட்டிக் காட்டியும், கருங்கற்பாறையுடன் கருங்கற்பாறை இடித்துக்கொள்ளுங் காட்சி போல், மார்புமார்புங் கலங்கிமோதி வாரிவாரியெடுத்துவீசி நெடுநேரம் வாது புரிந்து போராடும்போது பிரிந்து பார்ப்பவர்கள் கண்கள் பதறிக்கலங்க வேர்க்க விதிர்க்க மற்போர் புரியுங்காலையில் ஊர்திரிந்த மல்லன்கையால் விராடராசனூரிலிருந்தமல்லர்களெல்லாம் எமலோகஞ்சேர்ந்தனர். இவ்வகையாகத் தன்னுறுதியைச் சோரவிடாமல், போர்செய்து விராடபுரத்து மல்லர் ஒருசேர வீரசொர்க்கத்திற்கனுப்பியவாசவனென்னு மல்லனை நேசவிசுவாசத்துடன் மெச்சி நீ, மெத்தவுநல்லவன், கைமுடக்கிக்குத்தவும் வல்லவனென்று விராடராசன்புகழ்ந்து, உயர்ந்த வத்திராபரணங்களுமீந்து, விருதுமுடி குடை கொடியுடன் எவ்வகைச் சிறப்புஞ் செய்துவிட்டுப் போர் புரிந்திறந்த மல்லர்களைப் புதைக்கும்படி கட்டளையளித்துத் தானுஞ் சபையைவிட்டெழுந்து அரண்மனைக்குட்சென்று அன்றிரவு விடியுமளவும் நித்திரைபிடியாமல், மெத்தவும்வருந்திமறுநாட்காலையில் நித்தியவிதிமுடித்துக் கொலுக்கூடத்திற்குவந்து தனக்கு முன்னெழுந்தருளியிருந்த கங்கபட்டர் தாளில்வீழ்ந்து, அவரால் சுபமங்க ளாசீர் வசனம்பெற்று, மந்திரி சாமந்தர் முதலிய மன்னவருடன் துன்னியிருந்தனன். அந்தவேளை வாசவனுகிய மல்லன்வந்து பணிந்து, இராச போச மகாராச பூசாதுரந்தரனே! அடியேனுக்குச் செலவு கொடுத்தருளுமென்று கைதொழுது நின்றான். அவனைக்கண்ட மச்சராசன் நேற்றிறந்த தன்சொந்த மல்லர்கள் பரிதாபத்தைப் பாராட்டி, இவனை வெல்வதற்குத் தகுந்த மல்லர்கள் நம்மிடத்தி லில்லாமையால் இவ்விடத்திலுண்டான மல்லனையும் வாரிப் போர்கொடுத்து, ஆருக்கும் பயங்கரமுண்டாகப் பேரொடுத்து ஊருக்கும் போகப்போகின்றானென்று மனத்தாங்கலாகப் பேசினன். அந்தக் கருத்தை அண்டையிலிருந்த கங்கபட்டரறிந்து மாங்குயில்கூவும் வளநாட்டிறையாகிய மச்சராசனே! கேளும், அரசரிடத்தில்வரிசைபெற்றுஉரிசைகண்டஇவ்வாசவனுகிய மல்லனை வெல்லவாவது கொல்லவாவது வேண்டுமாயின், தகுந்த மல்லன் நமதுமடைப் பள்ளியிலிருக்கின்றானே; அவனேமெத்தவும்வல்லவன்; மகாசமர்த்துள்ள நல்லவன்; பூருவத்தில, தருமராசனுடைய தம்பி வீமசேனனிடமிருக்கும்போது, வெகுபேர்மல்லர்களைவென்றுபலாயனனெனப் பேருங்கொண்டு, வெற்றிமாலையும் வெகுமதியும் பெற்றிருக்கின்றனனே; அஞ்சாநெஞ்ச முற்றிருக்கின்றனன்; அசுரகுலகாலனென்னும் பலசாலி; அவனுலிவனையடக்கிப் போடலாமென்று நினைக்கின்றேனென்றனர். அதை அரசன் கேட்டு மகிழ்ந்து, அப்படியாயின், அந்த மடைத்தொழிலாளியை வருவியுங்களென்றான். உடனே தூதரையனுப்பி அழைத்துவரச் சொன்னார்கள். அவ்வாறு போயழைத்தவர்களைப் பலாயனன் கண்டு, அடாதூதர்களே! அரசன் அழைத்த காரண மென்னவென்று கேட்கத் தூதர்கள் ஐயா! யாரோவொரு மல்லன் நின்று நமது சில்லரை மல்லரை யெல்லாங்கொன்று, வெகுமானங் கொண்டு, நமக்கெல்லாம் அவமானங்கண்டனன். அதனுல் அவனெடு சண்

டை போடுவதற்கோ, அல்ல தும்மைக்கண்டு பேசுவதற்கோ நாங்களறியேம்; அன்றியும் உம்மைக் குறித்துக் கங்கபட்டர் செம்மையாகச் சொல்லியிருக் கின்றனர்; அதனு லழைப்பித்ததுபோலு மிருக்கின்றதென்றனர். அவர்கள் வார்த்தையைக்கேட்ட வீமசேனன் முகமலர்ந்து, அகமகிழ்ந்து, இதோ வந் தேன் வந்தேனென்று மகாமேருவைச் சக்கரவாளகிரி வளைந்ததுபோல இடுப் பிற் கச்சைவரிந்திறுக்கி, அண்டமுகட்டுக்கு முட்டுக்கொடுக்குந் தண்டமொரு கையிற்கொண்டு, விடாமிர்தம் புசித்த திடகாத்திர தீரனுய்ச் செயசிங்கம் போற் சீக்கிரம்வந்து, சிங்காசனத்திருந்த கங்கபட்டரைத் தொழுது சுவாமி! பராக்கென்று வந்து நின்றனன். அவ்வாறு நின்ற சுயம்பாகியை விராடராசன் கண்டு நீ இந்த மல்லனேடு யுத்தஞ்செய்ய வல்லையோ? என்ருன். ஐயா! ஏதோ, உமது அநுக்கிரகத்தாலும், இதோ, எழுந்தருளியிருக்கும் பெரியோர் களின் ஆசிர் வசனத்தினுலும் போர்புரிய மாட்டுவேன்; தேவரீர்! கால தா மதமில்லாமற் கட்டளையிட்டருளும்; இதோ ஒருநொடியில் இவனைத் தானப் பிரட்டத்துவமாக்கி நீராடி வருகின்றேனென்ருன். அந்தப் பாகசாத்திரப் பலாயனன்சொல்லை விராடராசன்கேட்டு, நகைமுகங்காட்டிப் புதுமல்லனை யழைத்து இவனுடன் யுத்தஞ்செய்வதற்கு உனக்கிட்டந் தானுவென்றனன். ஆகா! நீர் நல்லபுண்ணிய பூபாலன், உமதுசபையிலிருந்தமல்லர்களையெல்லாம் வீணுய் மடித்துவிட்டேன்; இவனுயினும், மல்லனென்னும் பேருக் கிருக்கட் டும்; இவனுமிறந்து போவானுயின் எனக்குமெத்த மனத்தாபமாயிருக்கும், உம்மைப்பற்றிஇவனை மருந்தும்பால்வைத்துவிடுகின்றேன்; அந்தோ! இவனது ஊழ்வினைப்பயனுல் நமனுக்கு விருந்தாக வந்திருக்கின்ருன் போலுமிருக்கின் றது; நீங்களும் இவனுயிருக்கு உலை வைத்திருக்கின்றீர்கள்; என்மேற் குற்றஞ் சொல்லவே வேண்டாம்; எமனுடனெதிர்த்த வுயிரும், சிங்கத்தைப்பகைத்த யானையும், என்னுடன் போராடவந்தாரும் பிழைக்கப்போவதேயில்லை. ஆகை யால், இவனின்றைக்கே இறந்துபோய்விடுவானே; இவனுக்காராவது பெண்டு பிள்ளை தந்தை தாய் அண்ணன் தம்பி மாமன் மைத்துனன் உற்ருர் உறவினர் களுண்டானுல் முன்னே சொல்லியனுப்பித் தலைமுழுகிப்போடப் பண்ணுங் கள்; உங்களுக்குஞ் சம்மதமானுல் என்னுடன் சண்டைக்கு வரச்சொல்லுங்க ளென்று, அண்டை அயலைப் பார்த்துக் கண்ணுருட்டிக் கறுத்து விழித்து, மீசையை முறுக்கித் திரித்துச் சிரித்து ஆர்ப்பரித்துக் கொக்கரித்து வீமனுக் கண்டையில் வந்தான். அவ்விடமிருந்த கங்கபட்டரொருவரோ ஒழிய மற்றவர் கட்கெல்லாம் பயமுண்டாகிப் பலாயனனிறந்து போவானென்று திண்ணமா யெண்ணங்கொண்டு தியங்கிமயங்கித் தத்தளித்து நின்றுவிட்டனர்.

இவ்வாறிருக்க, காமதகனனுக்கொப்பாகியவீமன், தன்னண்டையிற் சண் டைக்குவந்தவிரமல்லனைக்கிட்டி, உதயகிரி அத்தமானகிரிஇரண்டும் நெருங்கிப் போராடப்புகுந்தாற்போற்பொருந்தினன், அவ்விருவருந்தோளடித்து, பெருங் குரல்முழக்கி, இடித்துப் பிரதாபப்பேச்சுகள் படித்துக் கையாலுங்காலாலும் பின்னிப் போரிடத்தொடங்கி, ஒருவரையொருவரடித்தும், ஒருவரையொருவ ருதைத்தும், ஒருவரையொருவர் பற்றியும், ஒருவரையொருவர் சுற்றியும்,

ஒருவனையொருவ னெறிந்தும் ; ஒருவனையொருவர் செறிந்தும் ஒருவனை
விட்டொருவர் பிரிந்தும் ; ஒருவனையொருவர் பின்பறிந்தும்; மார்புடன்
மார்பழுந்த இறுக்கிக்கட்டி யணைத்துச் சுற்றியும் ; கையைமுடக்கி மார்புந்
தோளுந் தொளைபடக்குத்தியும் ; கால்மேலாகவிழ எற்றியும் ; புருவம் வாய்
மூக்குக்காதுமுதலியஉறுப்புகளழியச்சிதைத்தும்;பொருப்பென்னும்புயத்தொ
டுபுயமிடித்துப்பதைத்தும்;ஒருவனையொருவர் துரத்திப்பிடித்தனர்.ஓடி,வாடி,
நாடி நிலையில் மீண்டனர்,மேலும் ஒதுங்கிப் பதுங்கி,ஒடுங்கி,அடங்கிப்பாய்ந்து,
காய்ந்து, சாய்ந்து, மாய்ந்தார்போல் மயங்கிவாடினர். இத்தன்மையாக, இரு
வரும்போர் புரிந்துவருகையில் புதுமல்லன் கற்றவித்தைகளையும், சாகசங்களை
யும், கைலாகவத்தையும் வீமசேனன் கண்டுகொண்டு, இவ்வளவுதானிவனிடத்
திலிருக்கின்ற மகிமையென்றுதெரிந்துகொண்டு எதிரிக்கிடங்கொடுத்துஏழை
போல்நின்றிருந்துதனக்கு எதிரிலிருந்த புதுமல்லன் மேல் திடீரெனப் பூமி
யிற்குதித்து, குபீரெனப்பாய்ந்து, தொடையிற் கைதுறுத்துத் தூக்கித் தொப்
பென்று பூமியிற் குப்புறப்போட்டுத் தோள்மேலேறத் துணிந்தபோது, இடிம்
பாசுரனையும் பகாசுரனையு மெற்றிக்குத்தி நமலோகமனுப்பி இவ்வுலகத்திற்
பேருபகாரியெனப் பெயரெடுத்த வீமன் தன்னுடையசாகசசமர்த்தினால் வீரா
வேசங்கொண்டு, அம்மல்லன் கையினின்றும் நீங்கி நிலத்திற்பாய்ந்து,பதறி,நிமி
ர்ந்து குதித்து, நிதானமாய் மதித்து, நேருக்கு நேர்சென்று, ஒருகையை
நீட்டி, அவனுடலை நெருக்கிப்பிடித்து, மற்றொருகையாற் கழுத்தைமடக்கி
யொடித்து, நிலத்தினில் மோதி, ஓரேயமுக்கா யமுக்கிப் பழுத்த பாலைப்பழம்
போல், கொழுத்த கண்கள் பிதுங்கத்தக்கதாகக் கரசரணாதிகளை யொடித்து,
உயிரையுமடித்து, வெறுப்பில்லாமல் வீசியெறிந்து, எங்கே? இவன் பின்னால்
வந்த மல்லனென்று புயங்கொட்டி யார்த்துக் கண்கள் பொறியெழவிழித்து,
முகம்வியர்த்து, ஆர்ப்பரித்து, வீறிட்டெழுந்தான். இவ்வாறடங்காத் திடங்
கொண்டெதிர்ந்தசுயம்பாகியை விராடராசன்கண்டு,ஒப்புரைப்பதற்கிடமில்லா
மல், அப்பப்பா வென்றயர்ந்து, இப்பாலென்னமோவென்று பயந்து, உடனே
முகநயந்து, சகமகிழ்ந்திடவானேயென்று புகழ்ந்து, தன்னிருகரத்தாலு மணை
த்து, பொன்னரிமாலை பூடணங்கொடுத்து, இனிமேலென்னுடைய போர்முகத்
திற்கு உன்னையன்றிஉற்றதுணையில்லையென்றேயுபசரித்து, மன்னர்மதிக்க வா
னர்துதிக்க மனங்கதிக்க வரிசைகளளிக்க, முன்னவனென்னப் பொருந்திய
கங்கபட்டனைப் பூசித்துச் சுவாமி! உம்மா லெனக்கிவ்வளவு பெருமையுண்டா
யிற்றென்று உவந்து வாழ்த்தி, தன்னுடல் போலும் தன்னுயிர்போலும் தன்
பொருள்போலும் பக்கத்திலிருத்தி, இச்சுயம்பாகிக் கொப்பாகச் சீராமபிரா
னைத்தான் சொன்னாலும் என்காதுக் கினிமையாயிராதே ; அவனென்செய்த
னன்போவென்று தினந்தோறுஞ் சந்தோடமடைந்து சிறப்புற்றிருந்தனன்.

இப்பால் பாண்டவரைவரும் தத்தந் தொழில்களிற் குறைவின்றி அதிக
சாக்கிரதையாயிருந்து, விராடராசன் நடத்துமரியாதைகளினால் அன்னியதே
சத்திலிருக்கின்றோமென்னும் வெறுப்பின்றி, விசனமற்ற சுசனங்களுடன் இந்
திரப் பிரத்தத்திலிருந்து, அரசாண்ட செல்வம்போற் சுகமுற்றிருந்தனர். இப்

படியிருக்குங் காலத்தில், இந்தப்பட்டினத்திற் கதிபதியாகிய மச்சராசனுக்கு மைத்துனரும் சுதக்கணாதேவிக்குத் தம்பியருமான கீசகர்கள் ஆச்சரியப்பட்டுத்தேசங்கள்தோறுஞ் சிறப்படைந்துவந்த வாசவனென்னும் பெயருடைய மல்லனைத் தங்கள்வாசலிலிருந்த மடைத்தொழிற்குரிய மல்லன்நாசகாலயமன் போலெதிர்த்துக்கொன்றுவிட்டானென்றே கேட்டுச்சந்தோடங்கொண்டாடியும் நேற்றிறந்த பழையமல்லனைக்குறித்து இரக்கமடைந்துமிருந்தனர். அன்று முதலாகச் சுயம்பாகியாகிய பலாயனனைப் பார்க்குந்தோறும் அவ்வூரிலுள்ளாருக்கும், மற்றவர்களுக்கும், பயமும் வயிற்றிற்பெருநெருப்பு முண்டாயிருந்தது. கேளுஞ் செனமேசெய மகாராசனே! என்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

கீசகவதைச்சருக்கம்.

பஞ்சபாண்டவரும், பாஞ்சாலியும், வித்தியாசமேயின்றிப் பத்துமாதங் கழித்து மற்றநாளுந் தொலைக்கவேண்டுமென்றே, ஒருநாளை ஒருயுகம்போற் போக்கிச் சோர்வடையாமலுந் தேகசுகமும்பாராமலுந் தங்கள்வலிமையையும் காட்டாமல் ஒருவகையாய்க் காலங்கழித்தனர். அப்படி வருநாளையி லொருநாள் சுதக்கணையுடன்பிறந்த நூற்றுநாலுபேருக்குமூத்தவனும், விராடராசனுக்கு மைத்துனனும், அவன் படைக்கதிபதியுமாகிக் காமனைப்பழிக்குங் காந்தியும் அளவிடப்படாத ஆண்மையுமுடைய கீசகன் தன்னுடன்றோன்றிய சுதக்கணையைப் பார்க்கவேண்டுமென்றேவந்து, அந்தப்புரத்திற்புகுந்து, சிலம்புபுலம்புஞ் சிறடிபணிந்து, சிலநேரம்வரையிலும் பேசியிருந்து, தன் தமக்கையிடத்திற் செலவுபெற்றுச் சிங்காரவனத்தின் வழியாய்வந்தான். அவன் வரும்போது,பாண்டவர்கள் மனைவியாகிய விரதசாரணியென்பவள், தேவேந்திரனுடைய நந்தவனத்திற்கொப்பாகிய அந்தப்புரத் தோட்டத்திற் சுகந்த பரிமளமிகுந்த புட்பங்களைப்பறித்துச் சோடசகலைகணிறைந்த மதிமுகம்வெயர்த்துச் சொரூபவுல்லாசமும், புருவவிலாசமும், செந்தாமரை மொட்டேபோல் திரண்ட கொங்கையும், இரண்மலையைச் சுமக்கமாட்டாமல் துவண்டாடும் இடையும், அன்னநடையும், வன்னவுடையும், உடையாளாகிச் சாயல்கண்டு தோகைமயிலாடக் குரலோசை கேட்டுக் குயிலிசைபாட, அளிமொழிக்கிடைந்து கிளியினம்வாட, அடிப்புறவடிக்கு ஆமையொளிக்க, பசும் பொன்னொளி பார்த்து மின்னல்செளிக்க, இன்னெழில்பெற்ற கன்னிகையாவாள் பொன்னங்காவிற்பொலிந்தெதிர்ப்பட்டனள். செயற்கையழகின்றி இயற்கையழகுவாய்ந்த அப்பாவையைக் கீசகன் கண்டு, ஆசைமேற்கொண்டு, மோக சோக மூச்சுமேலிட்டுக் காமன்கணைபாற்கலக்கப்பட்டு ஒகோ கோ! இப்படிப்பட்ட பெண்ணையும் இதுவரையிலுங் கண்டிலேனே; இவருலகமயக்கவந்த மாயையோ? சும்மாயிருப்பவர் மேல்தொடுக்கு மோகனாத்திரமோ? திக்குப்பாலருக்குச் சொக்குப்பொடியோ?பிரமனமைத்தவிசித்திரமோ? கம்மியன் கையாற் சமைத்த சித்திரமோ? அம்மா!இதொன்றுமறிகிலேன்;தெய்வப்பெண்ணோ?இவராரோ?எவரோ? என்றையங்கொண்டு, அவளண்டையில்வந்து, இருகண்ணுமிமைக்குந் தன்மை

யால் மானிடமெனத் துணிந்து, காமுகனுகிவருந்தி, நைந்து, நினைந்து, மைய லால்வெந்து, வாடிமயங்கி, மானம்மகிழ்ச்சிபெருமைபுகழ்ச்சியாவுமறந்துறந்து ஐம்புலனும்புரண்டு, அறிவுமருண்டு மோகப்பயிர்விளைக்கு முதல்வினைரிட்டும் விரகதாகந்தீராத சங்கடமென்னே? ஆகா! நேசப்பெண்ணரசே! உன்சரித்திரத் தைக்கேளாத் தரித்திரனு யிருக்கின்றேனே. நீர் யாரோ! எவ்விடமிருப்பது! உன்னுயக னெங்கே! நீர் என்னகாரியமாய் இங்கே வந்தீர்? உமது பெய ரென்ன? என்மேல் தயைபுரிந்துசொல்லுமென்று பலவகையிலும்கேட்டான்.

அதற்கோ ருரையுஞ் சொல்லாமலிருந்த சித்திரப்பாவையைப் பார்த்து, நானுமக்குப் பொருளாகத்தோன்றவில்லையோ, என்சொல் லுமதுசெவிக்கேற வில்லையோ! நான்படுந்துயர நீரறியாததோ, உமதுமனமென்னகல்லோகடிதோ இரும்போ எழுகோ என்னுடன் வார்த்தையாடினுல் உமதுவாய்முத்தம் சிந்தி விடுமோ, ஆபத்துநீக்காவிட்டாற் பாபத்திற்கிடமன்றோ? என்மேற்கோபத்தை வைக்காதிரும், நான்கொண்ட சோபத்தைத்தீர்த்தருளும், சோலைக்கண்ணு றையும் வாலைப்பருவக்குயிலே! என்மனமிரங்கப்பேசிப் பக்கத்தில்தங்கிய பாங் கியனாநோக்கி அடி தாதியரே! இந்தப் பெண்மணியோயார்! இவருக்கென்ன பேர்! இவரெந்தவூர்! இதுவனையிலும் நானறியேனே, நீங்களாராகிலுஞ்சொல் லுங்களென்று கேட்டான். அவர்களவனுக்குப் பயந்து ஐயா! இந்த வண்ணம கள் உங்கள் தமக்கையிடத்திற் பத்துமாதமாய் வேலைக்கமர்ந் திருக்கின்றன ளென்றனர்; அந்த வாசகங்கேட்ட கீசகன் ஊழியஞ்செய்ய வந்தவள்தா னே யென்று இலேசாகவே நினைத்துக் காமத்தீப்பெருக்காற் கருகியுருகி, நாணங்கொண்டொடுங்கி முகங்கோணித் தன்முன்னின்ற விரதசாரணிபாதத் தில்வீழ்ந்து, என்னுவியே! நான்மகாபாவியே! என்னைக்கொல்வது உமதுஆசை வசனுவியே! நான் வசந்தகால வண்டைப்போல் உமது வாய்மலரிற் சுரக்குந் தேனையுண்டு, பிரமானந்தங்கொண்டேமேன்மைபெறவிரும்புகின்றேனே. உமக் குண்டாகிய வழகும், அந்தவழகுக்கேற்ற பருவமும், அப்பருவத்துக்குரிய வுருவமும், அவ்வுருவத்திற்கிசைந்த காந்தியும், அக்காந்திக்குத்தக்க சாந்தியு முண்டாயிருந்தும் உமக்குத்தகுந்த ஆசை நாயகனில்லாமையால்உமதுகாலம் அநியாயமா யகன்றுபோமன்றோ; ஐயோ! நானுமக்குடன்பாடாகிய கிரீட்டி, நீயெனக்கிசைந்த கண்ணாட்டியே! அடிசிமாட்டி! பெண்ணுகப் பிறந்தவர் உம்மழகைக்கண்டு பின்றொடரவேண்டுமே; அலங்காரமென்பன வெல்லாம் உமக்கலங்காரமாயமைந்த அடிமையே; இவ்வளவு நிறைவுற்றிருக்கு முமக்கு மெனக்கும் என்னகுறைவு? நாம்பேசிக்குலாவிக் கூடுவதேயுறவு. உமக்கு வேண்டிய நவரத்தினபரணங்களும் கட்டுவர்க்கங்களும் பட்டுவர்க்கங்களும் பொற்பாத்திரங்களும் பொருள்களுந்தருகிறேன்; எனக்கெவ்வளவு மோகங் கொடுப்பீரோ அவ்வளவு போகங் கொடுக்கிறேன்; நித்தியம் உமதுத்தரவின் படி நடக்கிறேன்; சத்தியம்பண்ணித் தருகிறேன். சற்றேனு மனமிரங்கு, வேண்டுமென்று எத்தனையோகோடி உபசாரவார்த்தைகள்சொன்னுன். அத் தனைமொழிகளுக்கும் எள்ளத்தனைப்பேச்சும் பேசாமல், ஓர்மரத்தினோமாய் மறைந்திருந்து ஆ, கீசகா! பாவமாகிய மூட்டையும், பழிப்பாகிய கேட்டை

யும் பாசப் பெருங்கோட்டையும் ஏன்கட்டித் தள்ளுகின்றனை? ஏழைப்பெண் பாவத்தைஏன்கொட்டிக்கொள்ளுகின்றனை; இம்மைப்பயனைவீணுயே னுழிக்கின்றனை; மறுமைப்பயனையழிக்கின்றனை; இம்மைமறுமையிரண்டையுநினைக்கவில்லையோ; ஏதோ, விபரீதமாய்நினைத்த வீண்நினைப்பையு மாற்றவில்லையே; நற்குடிப்பிறப்பையும் போற்றிலே; நாடாத காரியங்களையே நாடுகின்றனை; விறுதாவாகிய சொற்களையும் படிக்கின்றனை. அந்தோ! இந்தப்பேச்சு உன்னுடனற்றுப்போவதா யிருக்கவில்லையே. பல மன்னரும் வெகுவாகிய ஆன்மகோடிகளும் வந்தொதுங்குகின்ற சந்திரவட்டக் குடைநிழலையுடைய விராடராசனது பெருமைக்கும், அவனது புகழுக்கும், அழிவுதேட ஏற்பட்டாற்போலு மிருக்கின்றதே! முடிவுகாலத்தைத் தேடிக்கொண்ட மூர்க்கனே; விவேகமற்ற வெறியனே! மன்மதபாணமாகிய நெருப்புக்குப்பயந்து, மகாபதிவிரதைகள் வயிற்றெரிச்சலாகிய வடவாமுகாக்கினியில் விழ்ந்து, வாழ்நாளழிந்து மாளப்போகின்றனை, அடா பாவி! சிறந்த மரபிற் பிறந்தவர் தம்முடலழிந்தாலும், பிறர்மனை பிறர்பொருள் இவற்றைவிரும்பமாட்டார்களே; வாய்புழுக்கவசைமொழி சொல்லார்களே; நொய்யவுரையார்களே;நொந்தகண்ணுலும்பாரார்களே;அவர்களைத்தான் மிக்காரொன்று துதித்தும் தக்காரொன்று மதித்தும் சாத்திரங்களிற் பேசியிருப்பது. நீ இழிந்த பிறப்புள்ள ஈனனுகையால் துர்ப்பாஷைகளையேறக்குறையப் பேசினை. அவைகளையெல்லாஞ் சுதக்கணையைப்பற்றி மனம் பொறுத்தேன். அம்மட்டும் உன் துர்ப்புத்தியை விலக்கி நற்புத்தியைத் துலக்கினுல், தொல்லுலகி லின்னுஞ் சிலநாளிருந்துவாழ்வடையலாம், இல்லாவிட்டால் நமனுலகஞ்சேர்ந்து நரகத்திலாழ்வாய்; என்னை நீயாறென்றே நினைத்தாய்? தேவபுருடர்களாகிய ஐவருடைய காவலிலிருக்கின்றவள். அத்தேவர்களுக்கு முனக்கு மிருக்கிற பேதத்தையே யோசித்துப்பார். உன்னடக்கையை இதுவரையிலு மவர்களறியார்கள்போலு மிருக்கின்றது. அவர்களிலொருவனுகிய வீரபோசனென்னுமேலோ னறிந்தானுயின் கண்மூடித் திறப்பதற்கு முன் உன்னுடல மண்மூடிப் போய்விடும்; உன்னுயிரு மொழிவாய். அடா, காலாந்தகா! என்று காமவேதனை மேற்கொண்ட கயவனுக்கெதிரில் நாமம் வேறுகொண்ட நாயகி பேசிமுடித்தனள்.

அந்நாசகாலனுகிய கீசகனுக்கு ஆசைநோயதிகப்பட்டுக், கூசுதலற்று வண்ணப்பெண்ணைநோக்கி, உன்னைப்பார்த்தகண்ணுக்குமற்றொருபெண்ணைப் பார்க்க, எண்ண மில்லையே; என்னிரு கண்மணியே; அதற்கிசைந்த மணியே, அம்மணியினெளியே, ஒளியிடத்தின் வெளியே! இந்திர லோகத்திற்கொப்பாய்ச் சந்திரமண்டலத்திற்கப்பாலளாவிய என்மாளிகையைத் தருகின்றேன்; அம்மாளிகை நிறைந்த சாளிகை தருகிறேன்; சகல வநுபவ வதிகாரமுந்தருகிறேன்; நானுமுனக் கேவல்செய்யவருகின்றேன். என்னையும்நீட்ரேஞ்சொல்லலாமா! என்னிட்டதெய்வம் போலாண்டருள்; ஆரணங்கே! உன்னன்புள்ள கருணைப்பார்வையால் எனக்கு விபரீதத்தை விளைத்த காமப் பேயையோட்டிவிடு, என் கலக்க மயக்கத்தை மாற்றிவை, நான் கடைத்தேறத் தேற்றிவிடு; கலவியமளியை யேற்றிவிடு, உன்சிறுநகை நிலவினுல் என் புத்திம

ருண்ட மோகவிருளையும் பிரகாசிக்கப்பண்ணி மன்மதன் கணை துளைத்த என் மார்பிற்புண்ணுக்கு மதமேறியதனத்தாலொத்தடம்போடு, கரங்களிரண்டாற் கட்டியிறுக்கு, என்னுள்ளுக்கு மருந்தாய் உன்னிதழமுதமூட்டு, உயிர்போய் விடும், எனக்குன்னுறுதிமொழி சொல்லி மதப்பயல்சண்டைக்குவந்து முன் னில்லாமல் என்னைத்தடுத்தாட்கொள்ளும். சரணஞ்சரணம் பெண்களுக்குச் செல்வயே! என்றிவ்வகையாகவணங்கு மென்னை இன்றுனென்றறிந்துகொள்; இந்திரன்முதல்யாவரையுந்தந்திரத்தில்வெற்றிகொள்ளுஞ்சுந்தரமுடையனான், திரிபுவனஞ் சேர்ந்தெதிர்த்தாலும், அபசயமடையமாட்டேன்; இளமைப் பருவத்தில் மாரன், வளமைச்செல்வத்திற் குபேரன், கல்வியிற் சேடன், கல வியில் விசேடன், நன்மைக்குவந்தவன், நானுந் தன்மைக்குத் தகுந்தவ்ன், இந்த மச்சதேசத்தில் நான்வைத்தது பிச்சை. இந்நாட்டரசனாகிய விராட ராசனை மேன்மையாயெண்ணுதை; அவனென் தமக்கைப்புருடனாகையாலும், சிங்காதனத்திலேறி யிருப்பதற்கு எனக்குச் சாவகாச மில்லாமையாலும், இவனை இவ்விடத்திற்கு முடிசூட்டி நிலைநாட்டி ஆள்காட்டிபோல் வைத் திருக்கின்றேன். அவனால் ஒன்றுமில்லை; எல்லாமென்னாலிருக்கின்றது, என் பெயர்சொன்னால், மராடமுதலியகருநாடகமுநடுங்கும். ஆதலால், நானொரு வனைமதிப்பதுமில்லை, துதிப்பதுமில்லை; என்மகிமையை நீநன்றாகவிசாரிக்கவு மில்லை. உனக்கு எது வேண்டியிருந்தாலும், நீயெப்படி நடத்தவேண்டியிருந் தாலும், உனக்கேவல்செய்யப் பார்த்திருக்கிறேன். நீ வண்ணப்பெண்ணென் னுஞ் சின்னத் தொழிலை விடுத்து,என்னையடுத்தே மேன்மையாயிருக்கலாம். நீயெனக்கு வசப்படுவீரானால், இடபத்துவசனாகிய முக்கண்முதல்வனைப் பூசித்துப் பிரமோச்சவம் பண்ணிவைக்கிறேன்; யானிதுவரையிலும் பண் ணிய புண்ணியங்களை உமக்கே தத்தஞ்செய்கின்றேன்; உடல் பொருள் ஆவி மூன்றையுமுமக்கே யொப்பிக்கிறேன். உம்மாசையால் மோசம்போகின்றேன். நான்கொண்ட மோகலாகிரி தலைக்கேறியே விட்டது. இக்காம மயக்கத்தைத் தணியாவிட்டால் என்னுடலு முயிரு மொருங்கேபோய்விடும்; அதனாலுமக் கும் பாவஞ் சம்பவிக்கும். பருவரதியே! நான் மெத்தப் பெரியமனிசன்; மே ன்மையாக வாழ்ந்தேன்; காமக்குழியில் கால்தவறிவீழ்ந்தேன்; மோகக்கடலி லாழ்ந்தேன், ஆதரவற்றலைந்தேன், ஆசைவலையாலுலைந்தேன், ஐயோ! என்ன றிவுதொலைந்தேன். நீயென்னுயிர்க் குறுதியாகித் தெப்பம்போற் கைகொடுத் துக்கரையேற்றவேண்டும். கலாநிதியே, நிலாமதியே, சீவசஞ்சீவியே,தெய்வப் பிரசாதமே, கருணைப் பிரவாகமே, காந்திப்பிரவாளமே! உனக்கு மேலாகிய புண்ணியமுண்டாகும்,இனிநான்என்னசொல்லப்போகின்றேன்; தன்னந்தனி யனாகியநானென்னசெய்வேன்? உமதுசித்தமென்பாக்கியம். தருமத்தையெண் ணித்தயவுசெய் துஇனிஎன்னைக்காக்கவேண்டும்; என்மனமோபதைபதைக்கின் றது. என்னுடலோ துடிதுடித்துச்சோர்கின்றதே; என்பொறியொடுபுலன்கல ங்குகின்றதே; என்புத்திவிலங்குகின்றதே; பிராணனொடுங்குகின்றதே, நான்பி ழைத்தபிழைப்பெல்லாம்வீணாய்ப்போயிற்றே,பிறருக்குநகைப் புண்டாயிற்றே; உள்ளமுருகுகின்றதே; உடலங்கருகுகின்றதே, உயிருமுலைகின்றதே,உரையுந்

குழறுகின்றதே. ஆகா, பெண்ணமுதமே! உமதாரவிந்தபாத மலர்க்கடைக்கல மென்றே நம்பினேன் நம்பினேனென்று வெம்பிவீழ்ந்து; அவ்விரதசாரணியின் காலடிப்பொடியில் இவன் தலைமுடி படும்படி யாகத்தாழ்ந்துகண்டவண்ண மெல்லாம் பிதற்றினின்ருன்.

அப்பொழுது, வண்டுமொய்க்குங் கூந்தல்விரிந்த மாதரசி, கைநெரித்து முகத்திற் கடுமைகாட்டிஅடா, கொலைப்பாதகனே! ஆசாரமில்லாதவனே! உத்தமகுலத்திற்பிறந்தும், உயிர்வாழ்க்கையி லிருந்தும், சிறிதுமெண்ணுமற்போனுயே, பாத்திரமில்லாத சூத்திரசாதியாயும், அரசமாதருக்குப் பணிவிடைசெய்பவளாயும், தாழ்ந்த நிசையிலிருக்கின்ற என்மேலாசைப்பட்டுமோசம்போய்ப் பேசுவதும் உனக்கு நாசகாலமன்ருே? அடா கீசகா! ஏழையாகிய எனக்குக் கொடுக்கின்றேனென்ற செல்வங்களைஉன்குலத்துக்குரியபெண்களுக்குக்கொடுத்து, அக்கினி சான்ருக மணம்புரிந்துகொண்டு, கலந்துண்டு அழகாயிருக்கலாமே, கந்தருவர்கள் இன்பத்தைவிட்டுவிட்டுவயிறுவளர்க்கவந்துமாறுவேடங் கொண்டு, தலையும் பம்பை, இடையுங்கந்தை, இக்கோலமான என்னை விரும்பியேனுசை கொண்டாய், வானுசைகொண்ட மாபாதகனே! ஓமகுண்டத்தமுதென்றெண்ணுமற் கலங்குகின்ருயே, உயர்ந்த பொருளுக்குத் தளர்ந்தாசைப் படுகின்ருயே. அடா, துன்மார்க்கனே! புத்திமானுகிய வொருவன் தான் மணம்புரிந்த மனைவியைத் தனியேவிட்டு அன்னிய மாதர்களைநாடி, அவர்கள் காலடியில்வாடிக்கிடப்பதும் அழகன்றே; அக்கினிசான்ருகச்செய்த சத்தியந் தப்பினவர்களுக்கு இம்மையில் வாழ்வுமாறுமே, மறுமையில் நரகமீறுமே, எப்பிறப்பினும்பழிபாவம் அபகீர்த்திஇவைகளுமேறுமே; ஐயோ! நான் சொல்வதைக்கேள்; பரமாதர்மேல் மையல்கொள்வதும் அநியாயமே, அம்மையலால் விளைவதும் அபாயமே, இக்கருத்துநோக்கியே பெரியாரும், "புக்கவிடத்தச்சம்போதரும்போதச்சம்,துய்க்குமிடத்தச்சந்தோன்ருமற்-காப்பச்சம், எக்காலுமச்சந் தருமாலெவன் கொலோ, உட்கான் பிறனில் புகல்" என்றும் கூறியிருக்கின்றனர். ஆகையால் எக்காலமும் அச்சமும் துன்பமுமே சேரும், இதுவோ தொல்லை, இன்பமோ இல்லை; அன்றியும், அன்னியமாதர்கள் தங்களை விரும்பியநாயகனுடையஇன்பத்துன்பத்திற்கு உரியராகவேமாட்டார்கள். அதேனெனின், தங்களைச்சேர்ந்தசோரநாயகனிறந்தானுயின், அவனுக்குக்கருமக்கிரியை முதலாகிய சிரார்த்தங்கள்செய்ய அதிகாரமேயில்லை; அவள் கருப்பங்கொண்டுபெற்ற பிள்ளையும் தந்தைவழிக்கிசைந்த கருமச் சடங்குகளைச் செய்யவொண்ணுது; அப்பிள்ளையினுல் வமிசவிருத்தியுமாகாது; ஒருவேளை வமிசவிருத்தியாயினும் தந்தைகுலம்நசித்துப்போம்; அபிமானத்தால்வந்தஇம்மைந்தன் தலையெடுத்து மேம்பாடடையான், இவனெவ்வளவு செல்வம் பெற்றிருந்தாலும், எருமைச்சாணம்எக்கியத்திற்காகாதென்பதுபோற்பயனிலதாம்; குலத்திற்கொண்ட குரங்கானுலும், குறைசொல்வதற் கிடமேயிராது; வேத விதியும் நீதிமுறையும் பிசகமாட்டாது; திதிமுதலிய பிதுர்க்கடனுக்கும் அதிகாரியாவான். இவற்றையெல்லாம் ஓதியுணர்ந்த கோத்திரத்தானுகிய நீ,சாதியிலிழிந்தவர்போற் பேசுவதும், இட்டமாகத் தேடுவதும், உன்குலத்திற்குரிய

ஒழுக்கமன்றே; முடவனுக்குக் கொம்புத்தேன் எட்டுமோ? மூடனுக்கென் அன்புத்தான் கிட்டுமோ? ஓ மூர்க்கனே! நானொரு விரதம்பற்றி இவ்விடத்தில் வந்திருக்கின்றேன்; என்பேரோ விரதசாரணி; நீ தப்பு நினைப்புக்கொள்ளவேண்டாம்; சாகவே யெண்ணவேண்டாம், முன்னாளில் சீதையையெடுத்துச் சென்று சிறையில்வைத்து, உண்ணாமல் தின்னாமல், ஊருக்கவலமாய்ப், புத்திர மித்திர பௌத்திராதிகளோடு நிர்மூலமாய்ப்போன இராவணன் சரித்திரத்தையும் கேட்டறியாயோ? இந்நாட்டிலேயோ! உனக்குமதுவேகதி; உருள எண்ணியதே தலைவிதி, நீயென்னசெய்வாய், என்னைமணம்புணர்ந்த கந்திருவர் ஐவர்; அவரோ மிக்கபேராற்றலுடையவர், என்விடயத்தில் தீங்குசெய்பவர் தலையைப்பனங்காய்போல் உருண்டலைய, ஓங்கிய விற்பிடித்திருக்கின்றனர்; இவ்விரகசியத்தை நானுனக்குச் சொல்லவேண்டிய அவசியமேயில்லை. ஆயினும், விராடராசன் பத்தினியாகிய சுதக்கணையையடுத்து, அவளன்னம் புசித்தேவருகின்றமையினால் நன்றிகுன்றாமற்சொன்னேன். கெடுவான்கேடுநினைப்பானென்றால் இன்னமுங்கெடுவேன் பந்தயமென்ன வென்பதுபோல், என்னை விரும்பி அற்பவார்த்தைபேசுகின்றனை; துர்ப்புத்தியைவிட்டுவிடு. வாய்க்கடங்காப் பிடிபிடித்து மண்டையுடைந்து மடியவேண்டாம், என்னண்டையடைந்து துடியாதை, என்னுடன் பேசத்தான் அத்தெய்வலோகத்தாரும், திடுக்கிடுவார்கள். அப்படியிருக்க, நீ பயமில்லாமற் பேசினையே; பாவி! எனக்குரிய கந்திருவர் இப்பொழுது இந்நகரத்திலிருக்கின்றவரே; அவர்க்குப்பகைவரில்லை, சில சமயத்தில் பகைவர்கள் ஆகாயத்திற் பதுங்கினாலும், அலைகடல்மூழ்கியொதுங்கினாலும், பாதலத்தில் மறைந்தாலும், பூதலத்தி லுறைந்தாலும், திக்குப்பாலருடையபேருதவிபெற்றாலும், நவக்கிரகங்களின்நன்மையுற்றாலும் பிரமன்முதலிய மும்மைப்பெருந்தேவர் துணை நேர்ந்தாலும் அவருயிரையழிக்காமல் விடார்கள். ஆகையால், நீ என்பொருட்டு உன்னினத்தாருடன் மடியவேண்டாம்; காமபாசத்தினாற் கொழுத்து எமபாசத்தையிழுத்துக்கழுத்தில் மாட்டிக்கொள்ள வெண்ணுவானேன், அப்பால் கண்ணீர்சொரிந்து கலங்குவானேன், எரியுநெருப்பை யெடுத்து முடிவானேன், கரிய விடத்தைக் கண்டு குடிப்பானேன்? தன்வலியும் மாற்றான்வலியும் எண்ணாமல் தவிக்கின்றனையே. இதுபற்றியே "வினைவலியுந்தன்வலியு மாற்றான்வலியுந் துணைவலியுந் தூக்கிச்செயல்" என்று பெரியாருங்கூறியிருக்கின்றனர். அடா சண்டாளா! அப்பாலகன்றுபோடாவென்று கெட்டியாய்க் கூவி யெட்டிநடந்தாள்.

இவ்வாறு அட்டதிக்கும் வெற்றிக்கொடி நாட்டிய பட்டாபிடேகப் பாண்டவர்தேவி பாஞ்சாலி ஏசக்கேட்ட கீசகன் திடுக்கிட்டுச் சோர்ந்து அவளையடுத்துப்பின்சென்று, கையால்தடுத்து முன்னின்று, ஆகா! என்னாசைக் கனியே, உமக்குரிய கந்திருவரால் என்னுயிர்போனாலும் போகட்டும்; என்னெண்ணங் கைகூடினாலும் கூடட்டும்; உமது கருணைப்பார்வை யென்மேலிருக்கட்டும். நீர், வேண்டுமென்று நினைத்தால், எம்மையுங்காத்து உம்மையுமீத்துக்கொள்ளலாம்; அப்பாலுமதுசித்த மென்பாக்கியமென்று கீசகன் பேசினான். அப்போது கூரியவேற்கண்படைத்த வண்ணப்பெண்ணானை மலர்வாய்

வறண்டு, கோபங்கொண்டு, இனி இப்பாதகனுக்கெதிரில் நிற்கப்படாதென்று தூதுளங்கனிவாயும், முத்துப்போன்ற பல்வரிசையுமுடைய சுதக்கணை எதிரோடி, நடுங்கியதேகமுந் தேய்ந்தே ஒடுங்கியவுயிரும், நாணமும்மானமும் நாவறட்சியுங்கொண்டு, குருசந்திர யோகத்திற் பொழியு மழைபோல் கண்ணீர் விட்டுச், சித்திரப்பாவைபோல் அத்தகவடங்கித்திகைத்துத், தேம்பித்தேம்பி நின்று கடுங்கோபக் கண்ணையுடைய பட்டத்தியானைமேற் பவனிவரும் பார்த்திபன் பத்தினியாகிய தாயே! நமது பூந்தோட்டத்திற் பூப்பறித்துக்கொண்டு திரும்பிவரும்போது,வீரகண்டைதரித்தஉன்தம்பிசொல்லாதவார்த்தைகளைப் பலவாகவெடுத்துச்சொல்லிப் பொல்லாதஎண்ணங்கொண்டுதுரத்தினன். உன்னிடத்தில் நானூழியஞ்செய்ய வரும்போது, நான்கொண்டிருக்கும் விரதமும் கந்திருவரைவர்காவலும், என்னை இச்சித்தவர்களிறப்பார்களென்றும், உனக்குறுதிமொழிசொல்லியிருந்தேனே; இப்போது வீணாய்வாணாளழியவழிதேடிக் கொண்ட உன்னுடன் பிறந்தானுக்குப் புத்திமதிகள் போதித்துச், சரச சல்லாப சுரத லீலைகளைச்செய்யும் தாசிகளை யழைத்துவந்து, அவன் தலைக்கேறிய காமத்தைத் தணித்துவையும்; சத்தியந்தவறுமற்புத்தியாயிருக்கச்செய்யும்; உத்தமியாகிய நீர் முன்சாக்கிரதை படாமற்போனால், என்சாக்கிரதையில் நான் முந்தியிருப்பேன்; அதனாலவனுயிர் சிந்திப்போய்விடுமே; இச்சொல்லை யுண்மையாகவே நம்புமென்றனள்.

அத்தையலுரைத்த சங்கதியைக்கேட்ட சுதக்கணையோதன்னிருகையையுநெரித்து, வயிற்றைப்பிசைந்து, சந்திரபிம்ப முகமலர் தளர்ந்து, கேகயப்பறவைபோற்கொஞ்சிப் பேசுகின்ற சொல்லுங் குழறி, மயிலுக்கொப்பான சாயலுமாறி, அன்னம்போன்ற நடையுமயர்ந்து, கோடையிடியைக் கேட்ட பாம்பென்ன வொடுங்கி, வசலைக்கோடிபோல் வாடிவதங்கி, வெதும்பி, விம்மி, வியர்த்து, வண்ணமாமகளை யணைத்துக்,கண்ணீர் துடைத்து அம்மா! வாரும்; என்னருகேவந் துட்காரும்; அவன்கெட்டான் கொடியதுட்டன், உம்மைத் தொட்டானு? அதற்காக, நீர் பயப்படவேண்டாம்; அம்மட்டும் பாவிகையில் அகப்படாமல், தப்பிவந்துவிட்டதே நான்செய்தமகாபாக்கியமென்று அருமை பாராட்டி,அவ்வழகியசிமாட்டியுடன் பேசிக்கொண்டிருக்கும்போது,துரத்திக் கொண்டுவந்த காமாட்டியாகிய கீசகன், பணிப்பெண்ணாகிய அம்மடந்தையைப்பார்த்துச், சுதக்கணையைப் பணிந்து, அம்மா! உன்னிடத்திலிருக்கின்ற வண்ணப்பெண்ணால் என்உயிர்போவதேதிண்ணம்; எனக்குநேரிட்ட சோபத்தைநீக்கி, ஆபத்தைக்காத்து உன்கோபத்தை மாற்றவேண்டும்; அன்னையே! நமதுபூந்தோட்டத்தில் இவளைக்கண்டேன்; மோகங்கொண்டேன். மாஞ்சோலைக்குயில்கூவ, மன்மதன்கணைதாவ, அதனால்மனம்வேக இச்சிதேவிகாலில் வீழ்ந்தேன்; உடனேயென்னை ஆதரிக்காமல், சிச்சீமூதேவியென்று முகத்தாலடித்து விடவிடத்துப்பேசினள்; படபடத்தேசினள். வீணாயழியப்போகின்ற நான் இவளுடன்கூடி, இன்பநுகர்ந்து இவளுக்குச் சொந்தமானகந்திருவர்கையால் மாண்டுபோனாலுஞ் சுகிர்தமுண்டு. ஐயையோ! இவளைச்சேராவிட்டால், எப்படியும் நான் நமனுலகஞ்சேர்வேன். நீஎன்மாண்டால், உன்கணவனுடைய

அரசாட்சியும் பறக்கும்; பகைவர்கள் மேலிடுவர் என்றுசொல்லி மிகுந்த வணக்கமாகப் பணிந்துவேண்டிக்கொண்ட அக்கீசகன் முகத்தை நெருப்பைப் போற் பார்த்து, அவனுக் கிடங்கொடுக்காமலே அதட்டி ஆமடாவென்று கறுவி; அடாபாவீ; என்ன வார்த்தைபேசினுய் ஆ! கொடியாய்! அரிகரியென்று, இரண்டு காதையும் பொத்திக்கொண்டு, மானம் பெரிதென்று மதித்தவருக்கு பிராணன் துரும்பென்றே புத்திமான்க ளெண்ணுவார்களே. புத்தியீனர்கள் பிராணனைப்பொருளாக நினைத்து மானங்கெடவயிறுவளர்த்து, அப்பிராணனைச் சிலநாளில்இழந்துவிட்டு, மண்ணுள்ளவளவையிலும் வரிசையிலழிந்து, விண்ணுள்ளவளவைக்கு மிகுநரகிழிந்து, வேறுவேறு யோனியிற்பிறந்து, தாறுமாறுயலைந்து சங்கடப்படுவரோ! ஐயோ! துரோகி. இச்சைரந்திரியோ என்னிடத்தில் வரும்பொழுதே தனக்குமானக்கேடு வாராமல், பெற்றதாய்போற் காப்பாற்ற வேண்டுமென்றும், தன்னை யாரோனுஞ் சிந்தித்து நிந்திப்பாரானால், தனக்கு நாயகராகிய கந்திருவரால் அநத்தம் விளையுமென்றும், தானொருகாரணத்தின் பொருட்டுச் சிலநாள் கழிக்கவேண்டுமென்றும், உனக்கு நானடைக்கலமென்றுஞ்சொல்லியிருந்தனளேநானுமவ்வாறே வாக்குத்தத்தமும்பண்ணி, விராடராசன்முதலிய வேந்தர்களாலும் மற்ற மாந்தர்களாலும் பொல்லாங்கு வரவொட்டாமல்,பெண்பழி,பெண்தோடம் பேசவொட்டாமல்,என் கருப்பத்தில் வைத்துக் காப்பதுபோல் இதுவளவையிலும் கண்ணுண்டாய்க் காத்துவந்தேனே, அடாதுரோகி! நீ என்கட்டுக்காவலையுங்கடந்து, என் பெயரையுங் கெடுத்து நீ எங்களையு நடுத்தெருவிலிழுத்துவிடுத்து உன்னுயிரையு நமனுக்குக் கொடுத்து விராடராசனது செங்கோலையுங் கொடுங்கோலாக்கி, நிட்டூரத்தாற் கட்டப்படுமார்க்கத்தை இலேசாகத் தேடிக்கொண்டனையே, அடா தீவினையாளனே! இது உனக்கழகன்றே; அறிவன்றே; என்சொல்லைநம்பிப் பேசாமற்போய்விடடா,தம்பிஇப்பெண்ணணங்குக்குக் கண்ணுகியகந்திருவர்கள், கருடனுக்கும் காற்றுக்கும்மேலான வேகமுள்ளவர்களாமே; வருணனுக்கும் இந்திரனுக்கும் மேம்பட்டவல்லமையுள்ளவர்களாமே; அக்கினியையும், சூரியனையும்பழிக்குங்காந்தியுடையவர்களாமே, அவர்களுடைய கோபாவேசத்திற்கு மூன்றுலகமுந்தாங்கமாட்டாதாமே; இவ்விருத்தாந்தங்களை நான்முன்னேயறிந்திருக்கின்றேன். நீபிழைக்க மனமுள்ளவனுயின், இப்பெண்மேற்கொண்ட மோகத்தைக் கனவிலு நினையாமல் மறந்துவிடு. மறவாவிட்டால், வீணே கெட்டழிந்து போவை; ஆ! மிகுபழிகாராவென்று சுதக்கணைசொன்னுள்.

அம்மொழியைக்கேட்ட கீசகன் விந்தையாகச் சிரித்துச் சிந்தைநொந்துருத்து என்தங்கைக்கொப்பாகிய தமக்கையே என் ஆற்றலறிந்திருந்துந் தெரியாதவர்போற் பேசுகின்றீரே. அவ்வளவு ஆற்றலுடையவர்களாகிய கந்திருவர் பதினுயிரம்பேர் ஒன்ருகத் திரண்டுவந்தாலும், என்னேடெதிர்த்து என்னைப் பகைத்தும்வெல்வர்களோ? நானொருவருக்குப்பயந்தவனே? அவர்களைப் பஞ்சுபோலடித்துத் தென்றிசைநோக்கிப் பறக்கவிடுத்து இவளிதழைக்கடித்து இன்பரசங்குடித்து என்னெண்ணமுடித்து உன்னெதிரிலேநகைத்து உலாவிவிளையாடப் போகின்றனனே! யான்துன்பப்பட் டிறப்பேனென்று நீசொல்லியது

பேதைமதியோ பெரியவளென்னப்பெயர்வைத்துக்கொண்டனையே! போபோ வென்றுகொடித்து நல்லதம்மா! . அஃதப்படியே யிருக்கட்டும்; நீ பெண்ணாகப் பிறந்திருந்தும் எனக்குத் தமக்கையெனப் பேர்பெற்றிருந்தும் மனைவாழ்க் கையில் நன்றாய்ச்சிறந்தும் பெண்களுக்கு வேண்டிய சிறந்த காரியங்கள் ஒன் றாயினு முனக்குத் தெரியவில்லையே; உலகிலுள்ள பெண்களின் குணாதி சயத்தையும் அந்தரங்க ரகசியத்தையும் நீயறியாமற் பேசினையே; மாதர் களின் சுபாவகுணமென்னவென்றால், 'கைந்நிறைந்த பொன்னிலுங்கண்ணி றைந்த கணவனே போதும், என்றெண்ணுவர். அன்றியும் பெற்றவனானாலும், உடன்பிறந்தவனானாலும் தான்பெற்ற பிள்ளையானாலும் அழகுடையனாயிருந் தால், முறைபாராமலே அவனை அம்மாதர்கள்மோகங்கொள்வர்; அழகிலும்இன் சொற் சொல்வதிலும் பருவத்திலும் உருவத்திலும் சங்கீத சாகித்தியத்திலும் யாவராலு மதிக்கத்தக்க நாயகன் வாய்த்திருந்தாலும், அம்மான் பிள்ளை அத்தைபிள்ளையா யிருந்தாலும், அப்படிப்பட்டவர்கள்மே லாசையைவிட்டு அன்னிய புருடர்மே லிச்சைப்படுவது பெண்ணுருவாகத் தோன்றிய பேதை மையுடையோருக் கியற்கையென்றே பெரியோர்கள் பேசி யிருக்கின்றார்கள். இதுபற்றியே. "தந்தையாயினும் விழைவிற்றன்னுடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனும், மைந்தராயினு மிகவும்வனப்புடைய ரெனிலவர்மேன்மட கல்லார்தஞ், சிந்தைநடந்திடு மதனாற்சாம்பன் மலர்க்கணைவேளிற் செவ்வி வாய்த்தோன், பைந்தொடியாரினித மருமுவளகத்திற் றனிவருதல் பான்மை" என்றும். "ஏந்தெழின்மிக்கா னிளையானிசைவல்லான், காந்தையர்கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த, நயனுடையின்சொல்லான் கேளெனினுமாதர்க், கயலார்மேலாகுமனம்." என்றும் இன்னும் பலபெரியோருஞ் சொல்லிய வாற்றான் மாதர்கள் விவத்தையற்றவர்க ளென்றும்; மாதர்களை நம்பப் படாதென்றுஞ் செப்பி யிருக்கின்றனர். ஆகையால், நீ இவட்குப்போது மான புத்திமதியைப் போதித்து, என்னைக்கலந்து இன்புறச் செய்வது உனக்குரிய கடமையையென்றுங் கெஞ்சினான். இவ்வாறுகெஞ்சிய கீசகனைச் சுதக்கணை நோக்கிப் பஞ்சமாபாதகனே! சிறிதேனும் நாணமேயின்றி அயலி லிருக்கும் பாங்கிமாரையும் பாராமல், என்னிடத்தில் இப்பேச்சை பேச லாம் பேசப்படாதென்றும் எண்ணாமல் துணிந்து பேசினை யன்றோ? நீ என்னகதி யடைவையோ, என்னபாடுபடுவையோ? சைரந்திரிமேற்கொண்ட மோகாக்கினியில் தனக்குத்தானே வீழ்ந்திறக்கின்ற விட்டிற் பூச்சிபோலா வையோ? நீயுமுன்னைச்சார்ந்தவரும் எவ்வாறாவீரோ? பசிக்குப்பனம்பழந் தின்னப்பார்க்கவே வேண்டாம்; துட்டகாரியங்களைத் தொடங்கிக்கெட்டுப் போனவரோ கோடானுகோடியுண்டு; அடாமட்டி! என்னுடன் பிறந்தவர்கள் நூற்றைந்து பேரொன்னுங் கணக்கு இன்றைக்கே யொழிந்ததுபோலும்; குட்டாயிருந்தகட்டுந்தளர்ந்ததே; காவலழிந்ததே;போங்காலமாயிற்று;சாங்கா லம் வாய்த்ததே; இப்போது உன்னையு மிழந்தவளானேனே; இனிஎன்தலைவா மிதிக்கவேவேண்டாம். என்னெதிரிலு நிற்கவேண்டாம்,நீ செத்தாலும் நான் முகத்தில் விழியேன்; அப்பாற்போடாவென்றே யதட்டினாள். அப்போது

பாவபுண்ணிய மெண்ணிப்பாராத பாவியாகிய கீசகன் கோபமேலிட்டுக் கொதித்துச் சோபதாபத்துடன் தன் மாளிகையை நோக்கிச்சென்முன்.

போம்போதே சுரமும் குளிரும் சோம்பலும் தும்மலும் தேம்பலும் திகிலு முடையவனுய் ஆகா! பணிப்பெண்ணுகிய பாதகி என்னையுங்கெடுத் தாளே. பாம்பின்வாய்ப்பட்ட தேரையாக்கினளேயென்று பரிதாபப்பட்டு மூச்சுத்திணரிப் பதைபதைத்தான். அவ்வேளையில் மன்மதனே பிரவேசித்து இதுதான் நல்லதருணமென்றுநடுக்கொள்ளைக்காரனைப்போற் பஞ்சபாணத் தையெடுத்துக் கொஞ்சமேனும்நெஞ்சிரக்கமேயின்றித் தொடுத்தான். அதனுற் கீசகன் சிந்தையழிந்து, செயல் வேறுபட்டுத் தட்டுக்கெட்டுத்தடுமாறி மெத் தையின்மேற் பொத்தெனவிழுந்து, ஐயோவென்னும் அவச்சொல் மிகுந்து அரண்டுபுரண்டு அவத்தைப்படும்போது, தாதியர்கூடிச் சயித்தியோபசா ரஞ் செய்தனர். எத்தனைவித வுபசாரம்பண்ணியும் அத்தனையும் அவனுக்கு வெறுப்பாயிருந்ததனுல் ஐயோ! இம்மலரணை வெதுப்புகின்றதே! வாசப்பனி நீர் கொதிக்கின்றதே! சந்தனச்சேறு தழல்போல் தகிக்கின்றதே! அடிபாங்கி மாரே! நீங்களெல்லாரும் பெண்ணுகையால் ஒன்முகச்சேர்ந்துகொண்டு என் னைப் புண்ணுக்கவோ அன்றி மண்ணுக்கவோ பாலைநிலத்தின் நெருப்பை மெத்தையென்றே பரப்பி வைத்தீர்களே ? சிற்றாலவட்டம், பேராலவட்டம், பொன்னுலவட்டம், பூவாலவட்டமென்று வகைவகையாய்ச்சொல்லி வீசுகின் றீர்களே; இவ்வாலவட்டக்காற்றும் சாளரத்திற்புகுந்து பெரும்புலிபோற் பாய் ந்துவருகிறதென்றலும்கூடிவாசுகிமுதலாகிய பாம்புகளின்விடக்காற்றுப்போல் என்னுடலையு முயிரையும் வாட்டுகின்றனவே ; ஓசைப்பட் டொலிப்பதென்ன கடலோ, அக்கடலுக்கென்மேலென்ன அடலோ! இளஞ்சந்திரன் காய்கின்றதே, இதென்ன வடவைத்தீயின் வாதையோ? கோட்டைக்காய்ச்சலிற் சூரியவே தையோ, இம் மாலைப்பொழுது வந்ததென்ன காளவிடக்கறுப்போ, மகா தேவன் நெற்றிக்கண்ணெருப்போ, இரவுமுடி எத்தனைகால மாயிற்றே; பொழுது விடியாமலிருக்கும்படி பெண்கள்கூறிவிட்ட சாபப்பேச்சோ, வண் ணப்பெண் முகச்சாயல் வந்துபாய்கின்றதோ, மதிதானெழுந்து காய்கின்ற தோ, நித்திரைபிடியாதது சித்தப்பிரமையோ! ஏகமாய்வருவது மோகவா சனையோ, அல்லது அவள் தேகவாசனையோ! நான்கொண்ட காமவேதனை யோ! அவள் கடைக்கண் சோதனையோ ! அம்மம்மா ! அவள் குரலோ, குயில்போற்கூவி யேசுவது ; அவள் மொழியோ? கிளிபோலத் தூறிப்பேசு வது ; என்னை மோகப்பேய்பிடித்துத் தலைசுற்றியாட்டுகின்றது; காமச்சோக பாசங் காலனூருக்கோட்டுவது ; அடி தோஷிகளே! அங்கே பேசுவதாரடி? பஞ்சவன்னக்கிளியோ? கொஞ்சும்பணிப் பெண்ணளியோ? அவ்விடத்தி லசைந்து நடப்பது அன்னமோ? இவ்விடத்திலிசைந்த தலைவாயிலைக்கடப்பது விரதசாரணியாகிய சொன்னமோ? என்று அன்றிரவுமுழுதும் அவன்பட்ட பாடு மற்றியார்தான் படுவார்கள்? இவ்வகையாக விபரீதம்விளைந்த சமையத் தில், ஊழியப்பெண்கள்யாவருஞ் சேர்ந்து ஐயோ! ஈதென்ன அநியாய மென்று பயந்து சந்தனபாளித படீர குங்கும பங்கச பராகங்களைக்கலந்து,

அவன்தேகத்தில் தெளித்துத் தாமரைக்கொழுந்து முத்துச்சரம் வாழைக் குருத்து முதலிய சீதள வஸ்துகளினால் படுக்கையைவிரித்துப் பக்குவம் பண்ணினர். அத்தனையுமவனுக்கு ஒத்துக்கொள்ளாமல் மெத்தவருத்தப் பட்டு எரிகின்றதே! மேனிபொரிகின்றதே! கண்ணீர்சொரிகின்றதே! கைகால் கரிகின்றதே! கண்களிருளுகின்றதே! கருத்துமருளுகின்றதே! கட்டுவிட்டுப் போகின்றதே! நாவும் புலர்கின்றதே! நாபிவறள்கின்றதே! செவியுமடைக்கின் றதே! சிரமோவுடைகின்றதே! யென்றுகதறிக்கொண் டிருக்கும்போதே பேச் சடங்கிப்போயிற்று.

பக்கத்திலிருந்த பத்தினிமார்களும் பாங்கிமாரும்பார்த்து, ஆயிற்று ஆயி ற்று பெருமூச்சு வாய்த்தது வாய்த்தது பேச்சும்போயிற்று பிழைமோச மாயி ற்றென்று கதறி இனிமேல்நாம் சும்மாவிருப்பது காரியமல்லவென்று பத் திப் பாவிபடும்பாடு இவ்வண்ணமுடிந்ததே யென்று கண்ணீர்விட்டழுது, தெய்வத்தைத்தொழுது, இவனினைத்த நினைபோபழுது, இதுசொற்பமாகத் தக்கதன்றென்றே பலவாறுகப்பேசி, அப்பால்யாவரும் தங்கள் மேற்பழி சாராமல், எசமானிக்கறிக்கையிடவேண்டுமென்று கால்பதறவோடி அரசபத் தினியாகிய சுதக்கணையைப்பணிந்து குலக்கொடியே! தேவரீர் கோபித்துக் கொண்ட கடுமையினால் கூசாமற்சென்ற கீசகராசன் படுக்கைமேல்வீழ்ந்து, காமத்தீயாற்கருகி மோகக்காற்றால் மொத்துண்டு பித்தலும்பிதற்றலு முடை யானுய்ச் சிந்தைவாடிவருந்தித் தலையெடுக்கமாட்டாமல் தன்னையுமறந்து அர ட்டலும் புரட்டலுங்கொண்டு அயர்ந்துபோய்விட்டான். எங்களாற்கூடிய வுபசாரமெல்லாஞ்செய்தும் பார்த்தோம். ஏதேது தேறுவதாகக்காணோம். காமக்கடலூ டழுந்தியேபோனான்; இனிக்கரையேறுவா னென்று கனவிலும் நினைக்க வேண்டியதேயில்லை. ஆனால் உடன்பிறப்பென்னுங் கருணைபெருகி அதனால்உமதுள்ளமுருகியே சீவகாருணியஞ்செய்யஇரங்குவீராயின்,இன்னுஞ் சிலநாளைக்குக் கீசகராசனிருப்பானென்றே ஒருவாறெண்ணலாம். அவனுயிர் பெறுவானாயின், விராடநகர்ப் புரிசையும் நமதுவாழ்க்கையாம் வரிசையும் குறைவுபடாமற் கண்டுமகிழலாம். எங்களைப்போன்ற ஏழைக் குடும்பங்க ளுங் காலங்கழிக்கலாம். அப்படியிராவிட்டால், கீசகனுக்கு நேரிட்ட கெடுதி வெளிப்பட்டவுடனே பகைவர் மேலிடுவார்கள். பலவகையான விரோதங்க ளும் விளையும். அதனால், நமதுமச்சநாட்டின் வட்டமும் பச்சைக்கொடி நாட்டிய பட்டமும்போய்விடும். அப்பாலுங்களை யண்டிய நாங்களும் பிச்சை யெடுத்துப்பிழைக்கநேரிடும். கொச்சைமொழிமானே! இனிமேல் வினைச்செய லெவ்வண்ணமோ அறியோம்; தாயே! என்றுகையை நெரித்துக்கொண்டு,கண் ணீர்விடுத்துச் சுதக்கணை கால்மேற்படுத்துக் கதறிப்பதறியழுதனர். அப்படி கண்கலங்கிய பாங்கியரைப்பார்த்துச் சங்கதியென்னடியென்று கேட்டனள்.

அப்போது அவ்விடத்தேநின்ற பாங்கிமார் அம்மா! பின்னொன்றுமில்லை, கருங்குவளைக் கண்ணையுடைய வண்ணப் பெண்ணாகிய நுண்ணிடையாளை வசப்படுத்தி எப்பாடுபட்டாயினும் கீசகனிடத்திற் கனுப்புவீராயின் அவன்

கொண்ட வெறியும் கடுங்காதற்குறியுந் தனக்குத்தானே தணிந்துபோய் விடும்; போனபிராணனு மீளும்;அவன்மனைவிமார்களு மங்கிலியத்தோ டிருப் பர்; இப்படிப்பட்ட விபத்து எப்பொழுதும் வந்ததேயில்லை. இப்போதுநே ரிட்ட இத்தத்துக்குத்தப்பிப்பிழைக்கும்படி நீரோ சாந்திசெய்யவேண்டும் எம். மரசியே! இவ்வேளை நீ ரிரங்காமற்போனால், இப்போதோ? இன்னுஞ் சற்று நேரத்தோ? பொழுதுவிடியுங்காலத்தோ? கீசகனுயிர்நீங்கும், ஊழியராகிய எங் கள்மேற் குற்றஞ்சொல்லவேண்டாம். எங்களால் உபசரிக்க வேறுவழியுமில்லை யேயென்று பாங்கிமாருரைத்தனர். அப்பசப்புமொழியைச்சுதக்கணைகேட்டுத் தோழிமாரே! ஆசைப்பட்ட பாவியாவது, வேறுபெண்கள்மே லாசைப்படலா காதா? ஐயோ! மோசம்வந்துவிட்டதே. கந்திருவர் காவலிலடங்கிய தெய்வப் பெண்ணை நானெப்படி வசப்படுத்தியனுப்புவது; அப்படிச்செய்வதோ நன்மை யன்றே; ஒருவேளை யனுப்புவித்தால், மோகாந்தகனாகியபாவி மேல்விழுந்து தொந்தரை செய்வானுபின் இந்நாடும் நகரமும் குலமும் கோத்திரமும் குடி யும் படையும் குன்றிப்போய்விடுமே. நானென்னசெய்வேன்; சகிமாரே! கெடுவழியிற்பிரவேசிக்கலாகாது. என்மனத்திற்குச் சஞ்சலமென்னுந்தழலை மூட்டினீர்களேயென்று முகத்திலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு கலாப மயில்போ லசைந்து கலங்கினாள். அப்பொழுது வஞ்சகனாகிய கீசகனுடைய தாதிமார் அரசவஞ்சியைநோக்கி,அம்மா! நீரேன் அஞ்சுகின்றீர்? பெண்ணென் பதெல்லாமொன்றே; நாமெல்லாம் மாதரினமேயன்றி வேறன்று; மானமென் பது யாருக்குமுண்டு; கீர்த்தி அபகீர்த்தி எவர்கட்குமுள்ளதே. இவ்விட யத்தைக்குறித்து உமக்கும் உம்முடைய கணவனுக்கும் பொல்லாங்கு நேரிடு மாயின், எங்களுக்குத்துன்பமுந் துயருமில்லாமற் போமோ? நீங்கள் நன்மை யாயிருந்தாலன்றோ எங்களுக்கு மின்பமுண்டு. நாங்கள் நீங்காமல் கீசகன் பக் கத்தி லிருக்கும்போது வேறுவித்தியாசமும் விளையுமென்றே நினைக்கின்றீரா? அப்படிநினையாதீர். எங்களுயிரை விட்டாலும் விடுவோமேயொழிய அபகீர்த் திக் காளாக்கமாட்டோம்; அவனுடைய அக்கிரமத்திற் கிடங்கொடுக்க மாட் டோம். எங்கள்மொழியை நீர்உண்மையாய்நம்பும்; நாங்கள்செய்யப்போகின்ற தந்திரத்தைக்கேளும். இவ்விரதசாரணியை யழைத்துப்போய் அவன்முன் னே நிறுத்தி இவளைச்சுற்றிலும் நாங்கள் நின்றுகொண்டு இதோ வந்தாள் வண்ணமாதென்போம்,இச்சொல் அவன்செவியில் விழுந்தவுடனே மோகினி யைக் கண்டமுனிபோ லெழுந்து இவளுடைய காண்மேற்பணிந்து கண்ணே பெண்ணே யென்று புலம்பிக்கதறுவான்; காமவேட்கையாற் பதறுவான்; அண்டையிலிருக்கின்ற நாங்கள் அவனைத்தடுத்து, ஐயா! உமதுடம்பு வேறு பட்டிருப்பதனால் நீராடி சந்தனம் புழுகு சவ்வாது பனிநீர்சாந்து கதம்பக்கல வையுந் திமிர்ந்து, போசனமுண்டு, தாம்பூலந்தரித்து ஆபரண வலங்காரத் துடன் பழவருக்கங்களும் பட்டுப்பட்டாவளியும் புட்பச்செண்டுங்கொண்டு இப்பெண்ணுக்குக் கொடுத்து உல்லாசப்படுத்திச் சல்லாபமாய்ப்பேசுமெ ன்று அவ்வல்லாளன் புத்தியைமாற்றித் தேற்றி உடனே இச்சைரந்திரியை உம்மிடத்திற் கனுப்பிவிடுகிறோம்; அம்மா! பெருநெருப்பை ஈமொய்க்குமா?

இரும்பைச் செல்லரிக்குமா? எவ்வளவும் வித்தியாச மெண்ணவேண்டாமென் றுறுதியாகச் சொல்லினர்.

இவ்விடத்தில் உறுதியாய்ப்பேசிய சேடிமார்களைச் சுதக்கணைபார்த்து ஆமடி பெண்களே! நீங்கள் சொல்லுவதும் பக்குவந்தான். இவ்வாறுநடந்தால் எவருக்குந் தோடமில்லை; அவனுயிருக்கும் நாசமில்லை; ஒருவேளை கரைபுரண் டவெள்ளம் அணைகடந்துபோனாலெப்படி? நீங்கள்தா னென்னசெய்வீர்கள்? நான் பாவியாய்ப்பழிகாரியாய்விடுவேனே. அன்றியும் கட்குடியன் காமுகன் பொய்யன்பொறாமைக்காரன்புறங்கூறுபவன் கள்ளன் ஊராருடைமைக் குலை வைத்திருப்பவன் வறியன் மூடன் முதலிய இவர்களுக்குச் சத்தியம் சவுசம் ஆசாரம்சாந்தம் தன்மை உண்மைஆணையாக்கினையொன்றுமிராதே.இப்படிப் பட்டமூடர்கள் சற்றும் யோசிக்க மாட்டார்களே; மோகக்காற்றும்காமத்தீயும் மூடுகிவரும்போது, கைகொண்டு மறிக்கப்போமோ?.தடுக்கப்படுமோ?சொல் லுங்கள் தோழிமாரேயென்று, தருமந்தவறாத சுதக்கணை சொல்லும்போது, அக்கீசகனிடத்திலிருந்து வேறுதாதிமார்க ளோடிவந்து எப்படி என்செய் வோம்! மைப்படிந்தகண்ணுளாகிய மதனரதியே! உன்மேலாணைப்படி கீசகன் மூடியவேபோகின்றான்; காலங்கிட்டிவிட்டது. சாலம்பண்ணாமல் இச்சைரந் திரியை யனுப்பும், ஆபத்திற்குப்பாவமில்லை; இத்தருணத்தில் நீரவனைக்காக்க வேண்டும். இவ்வண்ணமகள்மேல் அவன்கைப்படவொட்டாமற் செய்து, இவள்பதிவிரதாதன்மத்தையுங்காப்பாற்றி உங்கள் சத்தியத்தையுங் கீர்த்தியை யுந்தழைக்கப்பார்க்கிறோம்; கிருபைசெய்யுமென்று பலவுங்காட்டிக்கெஞ்சினார் கள். அத்தாதிகள்பட்ட பரிதாபத்தைப் பார்த்த சுதக்கணை காலகதியாற் கரு த்துமயங்கி, ஊழ்வினைவசத்தா லுணர்வுமழிந்து அந்தோ, அடாபாபி, கீசகா! பாசகாரிகளாகிய ஐம்புலங்களின் சேட்டையறிந்து, கேட்டையொழிந்து, தெறித்தெளிந்த பாக்கியவான்களின் வாக்கியங்களைக் கற்றும், யோக்கியமா கக்கேட்டும் இன்னுந் தெளியாமற் போயினையே; மன்மதவேதமார்க்க மகி மையும் பார்த்திலையே; 'கேடுவரும்போது மதிகெட்டுவருமென்பது' போல் நாசம்வரும்போது ஞானமும்உண்மையுங்கெட்டு நன்மையும்விட்டுப்போமோ! மழைக்கா லிருட்டானாலும், கொம்புதவறிக் குரங்குபாயுமா? புலிபசித்தா லும் புல்லைத்தின்னுமா? சிங்கஞ்சிறுத்தாலும் பங்கப்படுமோ ; யானைமாமிச மன்றி வேறாகாரந் தீண்டுமோ என்றழுது 'தானாடாவிட்டாலும் தன்தசையா டும்'என்னும்பழமொழிக்கிணங்கச் சகோதரபாசத்தான் மனவருத்தமடைந்து, நெஞ்சுபுண்ணாய்க்கொட்டிய பஞ்சுபோற்படிந்து, கண்மாரிசொரிந்து தன்ன ருகில்வந்தபணிப்பெண்கால் மேல்வணங்கித்திருந்திய குலத்திற்பிறந்து அரு ந்ததியினுஞ் சிறந்ததேவியே! நீர், கண்ணருள் செய்வீராயின் எங்கள்செங்கோ லும் வாழ்வும் நீதிய நெறியும் சீருஞ் சிறப்புங் குறைவுபடமாட்டா. தேவரீர் கிருபைசெய்யாவிட்டால், எங்களரசுரிமையாவும் அழிந்துபோய்விடும்;எங்கள் தலைமேலிடிவிழாதிருப்பதற்கு உமதுவாய்மொழியைப் பார்த்துக்கொண்டிருக் கின்றோம்.நீர்ஆமென்றொப்புக்கொண்டால்நாங்கள்பிழைப்பதற்கிடமுண்டாம். நீர் ஒத்துக்கொள்ளாவிட்டால் நாங்களடியோ டழிந்துபோம்படிநேரிடும். நான்

பேசப்போகின்ற வசனத்தைப்பொறுமையாய்க் கேட்டருளுமென்று விராடராசன் பத்தினி சொல்லத்துணிந்தனள்.

என்னுயிருக் கொருதுணையே! எனக்குத் தம்பியென்று பிறந்த வம்பன் அறிவில்லாச் சிறுவனுகையால், மனவுறுதியில்லாமல் மதனவெறி யேறிப்போனானும்; மதிமயங்கிப் பிணமானானும்; இதுவரையிலும் உயிரிருக்கின்றதோ? இல்லையோவென்று தாதியரோடிவந்து செய்திசொல்லினர். காமம்வெகுளிமயக்கமென்னும்மூவாசையு மொழிந்தமுநியோரையும்பெண்ணாசையோவிடாது. பிரபஞ்ச மாயை யென்பதோ இதுதான். நான் மகாபாவியானேனே. நீரென்மேற் கோபியாதிரும். உமதுவிரதங்குறையாமல் தாதிமார் மெத்தப்பிரயாசப்படுவோமென்றே எனக்குச் சத்தியவசனமுஞ் சொன்னார்கள். அப்படி சொன்ன போதிலும், மகாபாதகனாகிய கீசகன் அடாதகாரியமாக உம்மைநாடியாசைப்பட்டதும் அநியாயம். ஆயினும், உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். இவ்வாபத்துக்காலத்திலிரங்கி அடியேன்முகத்தைப்பார்த்து என் மனத்துயரத்தையும் அவன்படுகின்ற துன்பத்தையும் போக்கும் வகையை நீர் எண்ணவேண்டும்; உமது கற்புக்கும்பழுதுவராமல், என்னையும் புனிதவதியாக்கி, அவனையும் பிழைக்கும்படி கிருபைசெய்தருளும். நீரிவ்வளவு சீவகாருண்யம் வைத்து எங்களைக் காப்பீராயின், உமது குலமும் கோத்திரமும் குணமும் நீர்கொண்டிருக்கின்ற நோன்பும் குறைவுறாமல் மேன்மேலும் விருத்தியாகும்; உலகுள்ளமட்டும் உமது மகத்துவமும் நிலைநிற்கும். எங்கள் நூற்றைந்து பேரையும் பெற்றுவளர்த்தாயென்றே நாங்கள் கொண்டாடுவதுமன்றி; உலகத்தாரும் புகழ்ந்து மகிழ்ந்து வாழ்த்துவர். தினமுந் திருவிளக்கேற்றிவைத்து, எங்கள்குலதெய்வமென்றே உம்மைக்கும்பிடுவேன்; மிகமேலாகிய உன்பத்தினித்தவத்திற்குப் பங்கம்வரும்படியாகப் பார்க்கமாட்டேன்; நானும்மை நம்பினேன்; எனக்கொருவருந் துணையேயில்லையென்று சொல்லிக் கதியில்லாத அடியேனுக்கு உன்னிரண்டுபாதமே கதியென்று பணிந்து, அவள் காலைப்பிடித்துக்கொண்டு, துணிந்துநானொருத்தி ஒன்றுநினைத்திருக்கின்றேன். அது உன் சித்தத்திற் கெப்படியிருக்குமோ? தெரிகிலேன்; சிறியேனாகிய என்மொழியைச் சிந்தையிற் கொண்டருளவேண்டும், நாசகால வழியைநாடி மோசம்போய்க் கிடக்கின்ற அக்கீசகனிடத்திற்குச்சென்று வாசமலர்மாலையுந் தேனும் உன் தமக்கை வரிசை யனுப்பினாளென்று கொடுத்து வருவீராயின், என்னிட்டம் உம்மைவிட் டெப்பொழுது மகலாதென்று மிக்கவருத்தத்தோடுரைத்தும், இவ்வுத்தமியை யனுப்புவதற்குச் சற்றுமனமேயில்லாதவளாய்க் கவலைகொண்டிருந்தனள்.

இத்தன்மையாகச்சொல்லிய விராடராசன்மனைவியை நோக்கிக் கற்புக்கணியாகிய பாஞ்சாலி என்னை ஆதரிக்கத்துணிந்த அன்னையே! உம்முடைய தம்பியாகிய கீசகன் அற்பவிடயத்திற் காசைப்பட்டுப் பூந்தோட்டத்திலிருந்த என்னைத் துரத்திவந்தபோது, நீர்கடுமையாகப்பேசியவார்த்தையாற் கொல்லத்தக்க பகைகொண்டுசென்றான். அவனுடையகருத்தோ உமக்குநன்றாய்த் தெரிந்தேயிருந்தும், அவ்விடத்திற்குப்போவென்றெவ்வாறு சொல்லுகின்றீர்;

அவன்பா லென்னையனுப்ப நினைப்பதும் உமது மேலானபுத்திக் கழகன்றே! நானும்மிடத்தில் வந்தடுத்தபோது, என்மேலொருவர் காதல் கொள்ளப்படா தென்றும்,கொண்டால்,உடனே உயிரிழக்கவே வேண்டுமென்றும் முன்னமே சொன்னேனே; அப்படியே குறைவுவாராமற்காக்கின்றேனென்றுவாக்களித்து அதமுத லிதுவரையிலுந் தளர்வின்றிக்காத்து இப்பொழு தச்சண்டாளனிட த்திற் கனுப்ப எப்படி உமது மனந்துணிந்ததோ? அறியேனே; அப்படியே யாகட்டுமென்று உமது வார்த்தையைத் தள்ளாமற்போவேனானால் அக்கொடி யோன் என்னைக் கண்டவுடனே காதல்மீறிக் காமமேறிக் கைகலக்கத் துணி வானே; அப்போது நான் கண்கலக்கப்படலாமா; அப்பால் விருதாவாய் அந த்தம் விளைந்துபோமே; 'மறந்து செத்தேன் பிராணனே வாவென்றால் வா ராதே' ஆகையால், அவனிடத்திற்கென்னையனுப்புவதைநிறுத்திவிட்டு,வேறெ ந்த வேலைக்கனுப்பினாலும், உமது சொல்லுக்குத் தடைசொல்லேன். இவ் வேளையிலென்னை விலக்கிவிடும்; என்னைப்போல் இன்னும் அநேக தாதிமாரிரு க்கிறார்கள்; அச்சௌந்தரியவதிகளிற் சிலரை யனுப்புவது உத்தமமாயிருக் கும்; என் மர்மத்தை யுமக்குச்சொல்லிவிட்டேன். அப்பா லுமதிட்டமென்று சைரந்திரிசொல்ல, அதற்குச் சுதக்கனை சொல்லுகின்றாள், விதரணைசாலி யே: உம்மைக்கண்டு, ஆசைப்பட்டு, உயிரொழியும்படியா யுறக்கங்கொண்டு படாதபாடும்படுகின்ற பதிதனுக்கு மற்றொருபெண்ணைக்கண்டுபேச இச்சையு முண்டாமோ, அப்படியன்றென்றனுப்பினாலும், உம்மேற்கொண்ட மோகம்மற் றொரு பெண்ணால் மாறுமோ? உமதுருக்கண்டாலும், உமது இன்சொற்கே ட்டாலும், இறக்க வழிபார்க்குங் கீசகன் எழுந்திருப்பானென்று சொல்லு கிறார்களே; என்னிட்டமே! நீர்பட்ட கட்டத்தோடுசென்று திரும்புவதே என் பாக்கியம்; நீடூழிவாழ்வீர் நீர் போய்வந்து, எங்களை நிலைபெறச் செய்வீ ரென்றாள். இவ்வகையாக வணங்கிப் போகத்தகாத காரியத்திற்குப் போகச் சொல்லிய சுதக்கனையைப் பேரறிவாலும்பிசகாமொழியாலும் பெருமையா லுமுயர்ந்த பாஞ்சாலி பார்த்து மேதினிபோற்று மாதரசே! கொடிய பாதக நிமித்தமாய்க்கொடியவார்த்தையைக்கூசாமற்சொன்னபடியால்,உமதுசொல் லைத்தள்ளக்கூடாததாட்சண்யத்தின்பொருட்டேசெல்கிறேன்.பின்னாலென்ன கெடுதிவிளையுமோ? அன்னமே! சொன்னேன்;என்னையும்வெறுக்கவேண்டாம்; இதுவரையும் தழைத்துவிளங்கிய சுற்றத்தாருக்கும் மற்றையோருக்கும் மெ த்தவருத்தமேமேலிடும்போலிருக்கின்றது. 'கெடுமதிகண்ணுக்குத்தோற்றாது' என்பதையெண்ணாமல் காலானுகூலத்திற்குத் தகுதியாய் நீருமிப்படி கட் டளையிட்டிருக்கிறீர். அப்படியேயானும்போய்வருகிறேனென்றுசொல்லி, வினை யின்பயனே பயனென்றெழுந்து, முத்துப்போல் கண்ணீர்வடித்து முகஞ் சோரவிட்டு, வாசமலர்மாலையுந் தேனுங்கைக்கொண்டு, அந்தப்புரவாயிலுக்கு வெளியே வந்து நின்று தேவேந்திரன் வாயுதேவன் எமதருமராசன் அச்சு வனிதேவர்கள் இவ்வைவரையுஞ்சிந்தித்து எசமானிபுத்தரவைக் கடக்கக் கூடாமையால், நாசகாலக் கீசகன் வாசத்தலத்தை நாடிச்சென்றாள் என்று வைசம்பாயனர்சொல்லினர், அதற்குச், சனமேசெயன்வைசம்பாயனராகிய

எமது சுவாமிகளே! பாஞ்சாலி விரதசாரணியெனவேடங்கொண்டு சுதக்கணையிடத்துக்கு வந்தபோது, கந்திருவரைவர் தனக்குக் கணவரென்றும், மற்றவர் தன்னைத் தீண்டப்படாதென்றும், கண்ணேறிட்டுப்பார்த்தவர்கள் வெண்ணீறாய்ப் போவரென்றும் ஒருதரத்திற்குப் பத்துத்தரமாக்ச் சொன்னதாகத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளினீர். அப்படியிருக்க, ஆசானு பாகுவாகிய மச்சராசன் மனைவி நீதிநெறிகெட்ட கீசகனிடத்திற்கு இவ்வன்னையை யனுப்பியவகை யென்ன? அச்சுதக்கணையை மெத்தவும் புத்திசாலி யென்றே கற்றவராகிய நீரும் புகழ்ந்து பேசிவந்தீரே; அவள் புத்திசாலித்தனம் எத்தன்மையாய்ப் போயிற்றென்று ஜெனமேஜய மகாராஜன்வினவ, அதற்குவைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர். சன்மாந்தர வினைவசத்தால் வந்த அநுபவத்தை யாவரு மநுபவித்தேயொழிக்கவேண்டும், அநுபவியாமல் வெல்லவல்லார் ஒருவருமில்லை. இன்னும் வீமன் கையால் அக்கீசகன்முடியவேண்டிய காரணமுமிருப்பதனால், பாஞ்சாலியைப்பார்த்து அவனுசைப்படவும் இளையவனிடத்திற் கனுப்பவும் சமயத்திற்குத் தக்கபடி தாதிமார் சொல்லவு நேரிட்டது. ஆதலால் மேல்நடந்த விர்த்தாந்தத்தைக் கேளென்று சொல்வாராயினர்.

இப்பால் பூமாலையுந்தேனுங்கொண்டு சென்ற பாஞ்சாலி முன்னே நினைத்துவந்த ஐந்து தேவருடன் சூரியன் குபேரன் வருணன் உருத்திரன் உருத்திரை மகாவிட்டுணு மகாலட்சுமி சண்முகன் பிரமன் நாமடந்தை இவர்களையுந் தனக்கு வழித்துணையாக வரும்படி வருந்தித் துதித்துச் சத்துரு சங்காரஞ் செய்யும்படி வந்தித்து வேடன் வீசியவலைக்குள் அகப்படப்போகின்ற மானேபோற் கண்களிரண்டு மிரண்டு வெருண்டு, நாற்புறமுந் தேடிப்பார்த்து இருட்டிலுண்டாகிய பயத்தினாலும் நாணத்தினாலும் விதிர்விதிர்த்து மெய்சிலிர்த்து, இராசவீதியாகச்சென்று அக்கீசக னரண்மனையிற்புகுந்து, மெய்ம்மறந்து தூக்கமும், ஊக்கமும்விட்டு, அன்னபானாதிகசந்து, அவத்தையா லுள்ளுடைந்து விரதசாரணியைப்போல் தனக்கெதிரில் உருவெளித் தோற்றங்கண்டு வாய்பிதற்றிக்கொண்டு நாவறண்டு புரண்டுருண்டு கிடக்கின்ற பேயனைக் கண்டனள். அப்பொழுது மோகத்தாற் சிதைந்து, மோசவுலையிற் புதைந்து கிடக்கின்ற கீசகன் எப்படியிருக்கின்றானெனின் தனக்கு அகால மிருத்துவாகப் பூங்காவில் நேரிட்ட மங்கையையே நினைத்துப் புன்னகை நகைத்து இதோ, என்மேற் பாசங்கொண்ட ஆசைப்பெண் வந்தாள்; என்னுன்மாவைக்காக்கும் அமுதசஞ்சீவிவந்தாள்; சீவகாருணிவந்தாள்; சீமூதமான அஞ்ஞான கேவலத்தைப்போக்கும் ஞானசொரூபி வந்தாள்; சித்தசன் தொடுங்கணையை வெற்றிகொள்ள வந்தாள்; ஆசைக்கடலுளழுந்தியநான் ஆதரவாகப்பற்றி நீந்திக் கரையேறுவதற்கே அமுதமயமான கொங்கைக்குடங்கொண்டு வந்தாள்; என்னை அடிமைகொண்டாளு மங்கைவந்தாள்; இருநிதிப் பொக்கிடச் செல்விவந்தாள்; பட்டாபிடேகத் தேவிவந்தாள்; என் சிமாட்டிவந்தாள்; என்கண்ணாட்டி வந்தாளென்று சரச சந்தோடச்

சைகை காட்டித் தலையாட்டி இன்றெனக்கு நல்லகாலம். என்னுடைய சிறுகுடிலில் நல்லவர்கள் திருவடிபெயர்த்தருளப் பெற்றேன். சைரந்திரியாகிய தனமே! தேவரீர் செங்கமல பாதமுஞ்சிவக்க நடந்ததோ! அடிசேடிமார்களே ஓடிவாருங்க ளோடிவாருங்கள். நான்பிறந்த பிறப்புஇன்றுதான் பயன்பட்டது, இதோ என்னெண்ணப்பெண் வந்தாள்; இவர் வந்தென்னேரமாகின்றது? ஒதுங்கி நிற்கவேண்டிய காரணமென்ன? உபசாரஞ்செய்து உள்ளேயழையுங்கள்; வாசங்கலந்தபனிநீர் கொண்டுவாருங்கள்; நீராடிவையுங்கள், பத்தரைமாற்றுப் பசும்பொன்னினாற் சித்திரித்த உத்தரியப்பட் டுடுத்துங்கள்; இந்திரவன்னப்பட்டு வெண்பட்டு செம்பட்டு இவைகளாலமைந்திருக்கிற பாவாடை இரவிக்கைகளைக் கும்பிட்டுக் கொடுங்கள்; முத்துமாலை மோகனமாலை ஆணிப்பொன்மாலை அலர்ந்தபூமாலை மாணிக்கமாலை வச்சிரமாலை மரகதமாலை இம்மாலைகளா லலங்கரியுங்கள்; புனுகு சவ்வாது கதம்ப கத்தூரி பனிநீர் அத்தர் சந்தனாதிகளைப் பூசுங்கள்; அறுவகைச்சுவையுணவும் கனிவர்க்கங்களும் இச்சையானமட்டுந் தின்னக்கொடுங்கள்; வழிநடந்துவந்த இளைப்பாற்றுங்கள் ஒகோ! விரதசாராணியென்னு மின்னே! என்மேலன்பு வைப்பதற்கு இத்தனைகாலமுஞ் சென்றதோ? வாரும்வாரும். என்மஞ்சத்திலுட்காரும், வாடிப்போன என்முகத்தைப்பாரும், உம்மை நாடிவந்த என்மோகத்தைத்தீரும். இதனாலுமக் கதிகபுண்ணியமுஞ்சேரும். இன்பரசமே! இனியசுகமே! எனப்புலம்பி, மூடியகண்ணை விழித்துப்பாராமல், முரணிக்கொண்டிருக்கின்ற மூர்க்கனைப் பாஞ்சாலிபார்த்து நம்மைக்கண்ணினாற்காணாதபோதே கண்டபாவனையாகப் பேசிக்கலங்கும் உலோபி நம்மை எதிரிற்கண்டால்; என்னசெய்வனோவென்று மனங்கலங்கிப் பெருமூச்செறிந்து இப்பாதிராத்திரியிலிவனைப் பார்ப்பதைப்பார்க்கிலும் பொழுது விடிந்தபின்பே காணலாமென்று அழகிய பூஞ்சோலை நெருங்கிய தடத்திற்புகுந்தாள். அச்சமயத்தில் ஒருகாலுள்ள தேரைக்கூட்டி மின்னற்கொடி நாட்டிப் பரிமாவேழும்பூட்டி இருகாலில்லாச் சாரதியோட்டி உதயகிரியி னுச்சியினீட்டிக் கதிர்க்கிரணங்களைக்காட்டி முக்காலும் அருக்கியமேற்குஞ் சூரியனை எக்காலுங் கொண்டுவருவதுபோல் வாராமல், அக்காலையி லவசரத்துடன் கிழக்குத்திசையில் அருணன் கொணர்ந்துவந்தான்.

முருக்கம்பூப்போன்ற சூரியோதயங் கண்டவுடனே செருக்கிவெழுந்த சேவலும் பட்சிகளும் தறிதலைக் கீசகன் பிதற்றிய சங்கதிகளைச் சகிக்கமாட்டாமல், சங்கடப்பட்டுப் பரதவித்துத், தியங்கித் திட்டுவதுபோல் சிறகுகளினால் வயிற்றிலடித்துக்கொண்டு கூவிப்பறந்தன; தடாகமென்னும் பெண் பாஞ்சாலி சஞ்சலத்தைப் பார்க்கமாட்டாமற் கண்ணீர் பெருக்கிக் கண்களைச்சுருக்கிக் கையை விரிப்பதுபோல், கருங்குவளை முதலிய பூக்கள் குவிந்து தாமரை மலர்கள் தேன்சொரிந்து விரிந்தன; மகாபாவியாகிய கீசகனையிகழ்ந்து பாடுவதுபோல் வண்டோலமிட்டது. இத்தன்மையாகிய காலத்தில் தேங்கு மா கோங்கு பலா கமுகு முதலிய மா

ங்களோங்கும் வனஞ்சூழ்ந்த ஒரு பொய்கையினிடத்தில் பாஞ்சாலி சேர்ந்து, கைகால்முகங் கழுவிக்கொண்டு நித்தியவிதி நிறைவேற்றிச் சூரியனுக்கு அருக்கியம் கொடுத்துவிட்டு இருகரத்தையுங்கூப்பி நின்று மந்திரஞ்செபித்து வணங்கினள். அஃதெவ்வாறெனில், உலகெலாம் விளக்குமொரு பெருஞ்சோதியாஞ் சர்வசாட்சியே! தனிப்பரம்பொருளே! பாவமும் புண்ணியமும் பரிகரிக்கும்பருதியே! புத்தியுஞ்சித்தியும் பொருத்துமாதவனே! சத்துருசெயந்தருமித்திரவெயிலோய்! உத்தமகுணமும் சுத்தமும்வீடும் வித்தகக்கல்வியும்மேம்பட்ட செல்வமும் பத்திசெய்வோர்கட்கித்தனைப்பேறும் பாலித்தருளும்பாபரகிதனே! எந்தையேபோற்றி இரவியேபோற்றி; சுந்தரச்செங்கதிர்ச் சுடரேபோற்றி; ஆயிரங்கிரணத் தலரியேபோற்றி; இருள்வலிகெடுக்கும் இனனேபோற்றி; தினகரவெய்யோய் தினமணிபோற்றி; பங்கயபதங்கப்பரிதியேபோற்றி; பனிப்பகைப்பானுப் பகலோய்போற்றி; மித்திரவிருச்சிகவிண்மணிபோற்றி; சித்திரபானுதிவாகரபோற்றி; அண்டயோனி அரியமால்போற்றி; அருக்கனளலி வருணனேபோற்றி என்று துதித்து நான் சுதக்கணை சொற்பிசகாமல், கீசகனிடத்தேபாற் கிட்டுகிறேன்; இவ்வேழைக்குத் துன்பமுங்கெடுதியுந் துயரமு மெய்தாமல் என்றும் இன்பங்கொடுத்தாளென்றாழொளியே! உன்னைத்தொழுவேற்குத் துன்பமென்பதில்லாமல், இந்நகர் மன்னனுக்கிடர் விளையாமல் விராடன்மனைவியும் விசனமுறாமல் என்குலதெய்வமா யென்றுமிருந்து தன்மங்காத்தருள் சத்தியமணியே! சரணஞ்சரணஞ் சவிதா சரணம். சான்றோய்சரணம் தரணிசரணம் தருணந்தருணமென்று பிரதக்கணஞ்செய்து வணங்கிப் பூமியைத்தொட்டு நெற்றியிற் பொட்டிட்டுச் ச்லம்புரோட்சித்துச் சங்கற்பமுஞ்சொல்லித், தற்சனியைவைத்துச் சற்றுநேரமிருந்து தடாகத்திலிறங்கி ஆசமன்ய முடித்துக்கொண்டு கரையேறிக் காமவிகாரத்தாற்கன்றிவருந்திய கீசகனிருந்த நெடுமனைகிட்டிநமனையெதிர்ந்த உயிர்போல் மெலிந்து ஐயா! உம்முடைய தமக்கையார்தந்த பூவுந்தேனும் இந்தாவென்று கொடுத்து அவன் மாறுத்தரஞ் சொல்லுமளவும் வேறோர் புறத்திலொதுங்கியிருந்தனள்.

அவ்வேளையில் கீசகன்கதி யெப்படியென்றால் ஆறாத மோகநெருப்பால் நீறாய்வெந்து வெதும்பித் தலைவிசிறி, நிலைதவறிமதிபதறி விதிகுறுகி மேனிகருகி மெலிந்து ஊனுமுருகியுலர்ந்து செந்தாமரைக் கொழுந்தும் இளவாழைக் குருத்தும் யானைத்தந்தப் பலகையும் அனிச்சந்தளிரும் அலர்ந்த மலரும் அணையாகப்பரப்பி அதன்மேற் படுத்திருந்தான். அஃதெப்படியிருந்ததென்னின், கட்டையுடன் முட்டை கலந்தடுக்கி அதன்மேற் சுட்டெரிக்க நீட்டிவைத்த பிணம்போலத் துலங்கினன். இதன்றியும் சிலர்சந்தனபாளித குங்குமம் பனிநீரைத்தெளிக்கின்றனர். அதெவ்வாறிருந்ததென்னில் சமயதீக்ஷை விடுவித்துக், கலசச் சலமிறைக்குங் காட்சிபோலிருந்தது. மேலும் அவனைச்சுற்றிலும் வாசனை வத்திகளைத் தாதிப்பெண்கள் வைக்கின்றனர். அஃதெவ்வண்ணமெனிற் கருமக்கிரியை செய்வதற்குப் புத்திரனில்லாதவர் பெண்கள்கையில் தர்ப்பையளித்துக் கொள்ளியைக் காட்டுங் கொள்ளைபோலிருந்தது. இவ்வாறு செய்த சயித்தியோபசாரத்தினாலுந்தணியாமல், ஐயையோவென்று ஓங்கியிரைந்

தேங்கிய கீசகனுக்குப்பாங்கிலிருந்த பாங்கியர்பலரும் ஆலவட்டம் தால வட்டம் மயில்விசிறி குயில்விசிறி குறுவேர்விசிறி சிவ்வேர்விசிறி பட்டு விசிறி வெட்டிவேர்விசிறிதந்தவிசிறிசந்தவிசிறி இவைகளாலுபசரித்தார் கள். அவர்கள் வீசிய விசிறிக்காற்றினல்கூசி மெய்குலைந்துதோழிகளே! ஈதென்ன ஊழித்தீக்காற்றோ! ஆழித்தீக்காற்றோ? என்னுயிரைக் கொள் ளையாடவந்த கூற்றோ? ஆகா! என்னென்மா அயர்கின்றதேயென்று அவ சத்தமிட்டனன். அப்பொழுதே அவ்விடமிருந்த பெண்கள் ஆத்திரப்பட் டுப் பூவாரம் பொன்னாரம் புதுகாரம் சந்தனாரம் சந்திராரம் விந்தாரம் முத்தாரங்கொண்டுத்தாரஞ்செய்தார்கள். அவைகளவன் சரீரத்திற் பட் டவுடனே பளபளபளபளவென்று பொரிந்து, நீறுநெருப்புமாய் வெந்து போனமையால் தளதளவென்று தக்காளிப்பழம்போற் கொப்புளமெழு ம்பக் குப்புறப்படுத்திருந்தனன்.

இஃதன்றியும் காமநோய் கலந்த கலக்கத்தால் சந்திரனைத் தூடித் தச் சமுத்திரகோடத்தைக் கோபித்துத் தென்றலைச் சீயென்றேசி வரிச் சிறைக்குயிலை இருபிறப்பென்றுபேசிக், கிள்ளைமொழியைக் கடிந்து கட கடவென்று புரண்டு கிடைகொடுக்காமல் உடையுடுக்காமல் உணவெடுக் காமல், கன்னியை விரும்பித் தன்னந்தனியனாய் வெதும்பி நான்குபுற மும் நன்றாகப்பார்த்து மெத்தைமேல்வீழ்ந்து தத்தளிக்கும் பாதகனுக் குச் சன்மார்க்கரஞ் செய்த தவங் கைகூடியதுபோலத் தாழ்ச்சியில்லாத வண்ணமடந்தை காட்சியாய் முன்னிற்கக்கண்டனன். அவளைக்கண்டு நான் பண்ணிய புண்ணியம் பலித்ததென்று கக்கட நகைத்துப் பக்கமா ய்ப்படுத்துத் திக்கென்றெழுந்து தீர்க்கமாய் வீழ்ந்து சரணஞ்சரணம், இது நல்ல தருணந்தருணம், என்மாதவம் வந்தது; என்வழித்துணை வந் தது; என்னிட்ட தெய்வம் வந்தது; நான் கும்பிட்ட தெய்வம் குறுக்கே வந்தது; என்பிராண சஞ்சீவி வந்தது; என்னுசையாகிய சோபம்போக் கும் அமுதமிதோவந்தது; பேசப்பிரசம் பெருகுங்குமுதம்வந்தது; என் தேகத்துணைவந்தது: என்னகத்துயிர்வந்தது; மோகவித்துவந்தது; போ கமுத்து வந்தது; என்கண்ணிற்பாவைவந்தது; என்முன் வண்ணப்பெண் வந்தது; என் ஆபத்திற்குதவு மணங்கேவாரும். என்தாகத்தைத் தணிக் குந் தயாரச்மேவாரும். என்னருகிலுட்காரும். வறண்டுபோனஎன்மண் டைக்குந் தொண்டைக்குஞ் சுருண்டுபோன நாக்குக்கும் மூக்குக்கும் பசையுண்டாம்படி மதுரவார்த்தையைப்பொழியும்; என்னை யிறுகக்கட் டிச்சேரும். கைப்பாகிய என்வாய்க்குக் கனிவாய் முத்தந்தாரும். என் துயரம்போக்கவந்த பதமே! என்னை விட்டுப்பிரியாதிருக்கவேண்டும் நிதமே. நானுமக்குச் சதமேயென்று நிலத்தில் தலைகுப்புறவிழுந்த கீச கன் நிமிர்ந்து எக்களிப்பிட்டெழுந்து முன்பின் பாராமல் விரதசாரணி யைத் தொட்டணைக்கக் கிட்டினான். மீளாநரகத்திற் காளாகும் கீசகன் காமவிகாரத்தினாற் பேய்போலோடிவருவதை அவ்விரதசாரணி கண்டு, அடா சண்டாளத்துரோகி! என்னைத் தொடவேண்டாம். என்னை யொ ருவருந் தீண்டப்படாது. வீணாசைகொண்டு வாணாளை நீயொழிக்கவேண் டாம் நெருப்பிலழுந்திய புழுப்போற் சாகவேண்டாம். விளக்கில் வீழும் விட்டிற் பூச்சிபோல் வேகவேண்டாம். மறுமாதர்மேலாசைப்பட வே ண்டாம். மையல் மோகத்தால் நாசப்படவேண்டாம். காமப்பேயாற் கண்கலங்க வேண்டாமென்று கடுஞ்சொற்களால் கண்டித்தனள். அவ் வாறு கண்டித்துந் தேறுதவனைத் தேடியமருந்து தன் கண்ணெதிரே

நேர்ந்ததுபோற் கிடைத்த தேவியே! என்னுவியே! நான்மகா பாவியேயாமென்றுமிக்க காமாக்கினியாலுருகி, வாடுகிறநான் நூறுபிரவர் தடுத்தாலும் உன்னை விடமாட்டேன். தூறட்டுக்கெட்டாப் பழம் வாய்க்கெட்டும்போது அப்பழத்தைச் சுவைக்காமல்விட்டுவிடு மூடனுமுலகிலுண்டோ? தோகையே! என்று தூத்தினன். அதனல் நீங்குதற்கரிய துன்பங்கொண்ட பாஞ்சாலிபயந்து உடல்வியர்த்துக் கொலைத்தொழின்மேற்கொண்ட வேடனைக்கண்ட கலைமானைபோற்சேலைகுலைய மாலையலையக் கமலமுகம்வாடக் கண்ணிரோடக் கருங்கூந்தலாடக் குடர்குலுங்க குலைநடுங்க துடியிடைமானன்னள் விடுவிடென்றோடினள். அவ்வாறோடிய பாஞ்சாலி நவமணியிழைத்தகதிர்முடிதரித்த விராடராசன் கொலுவில் தருமராசன் முதலிய யாவரும்பார்க்கும்படி அபயம் அபயமென்றலறி வாடியகொடிபோல் வந்துவீழ்ந்தழுதாள். அந்தவிராடபுரத்திற்கங்கபட்டர் வந்தநாள்முதல்உதயத்திற்சபைசேரும்படிவழக்கப்படுத்தியவகையேமகாசனர்களுடன்கூடியிருந்தமநுகுலத் தோன்றலாகியம்ச்சராசனும் மந்திரிமார் முதலிய சாமந்திரிகளும் தேம்பியழுகின்ற அத்தெரிவையைக்கண்டு கவலைமேற்கொண்டு கருத்து வேறுபட்டொன்றுந் தோன்றுமலிருந்தனர். அச்சமயத்தில் காமப்பிணியாற் கலங்கிவருந்திய கீசகன் மதிவதனத்துரோபதையைத் தொடர்ந்து பிடிக்கத் துணிந்தாங் கெய்தினன். அச்சமயத்தில் பூமகளேபோன்ற மாதரசியைப் பற்றுவதற்கு நீட்டிய கீசகன் கையிரண்டும் அப்பதிவிரதையின் மேற்படவொட்டாமல், சூரியபகவானநுக்கிரகத்தாற் சுழற்காற்றேபோல் தோன்றிய ஒரு கிங்கரன் கெடுங்காலக் கீசகன் கரத்தைப்பற்றிக் கிறுகிறெனச்சுழற்றி விறுவிறென விட்டெறிந்துபோயினன். அதனற் கைவீச்சோடு கடுகிய கீசகன் பெருமூச்செறிந்துநொந்துமன்னர்நகைக்கக்குப்புறவிழுந்துபின்னும்பிடிக்கவெழுந்தான். பின்னே அவன் தானிருக்கு மிடத்திற்கும் பாஞ்சாலியிருக்குமிடத்திற்கும் வெகுதூரமென்று கண்டு தலைகவிழ்ந்து உடல்குனிந்து வெட்கிச் சந்தடிகாட்டாமல் வந்தவழி நாடியேயோடிப்போனன். அவ்விடத்தில்நடந்த அதிசயத்தைக்கண்டார் யாவரும் ‘திக்கற்றவருக்குத்தெய்வமேதுணை’என்று சிந்தைநைந்துருகித்திகைத்திருந்தனா.

இப்பால் அச்சபையில் வந்து வீழ்ந்தழுத அவ்வேழைப் பெண்ணின் அலங்கோலத்தையும் தொட்டிழுத்த தன்மைத்துனன் துராக்கிருதத்தையும் அதனல் தனக்கு நேரிட்ட நிந்தையையும் விராடராசன் ஆராய்ந்து, அவ்விடமிருந்த பெரியோர்களையும் இராசராசர்களையும் மந்திரி பிரதானி முதலிய மதிவல்லோரையும் பார்த்து அறிவினை யுடையவர்களே! துர்ப்புத்தியையுடைய இக்கொடிய கீசகன் முறைதப்பி நடந்ததைப் பார்த்தீர்களா? என்று ஆத்திரப்பட்டு அவனுக்கு நற்புத்திசொல்லி அவன் செய்தவேலைக்குத்தகுந்த தண்டனை விதிக்கத் தன்னுற் கூடாமையால், அக்கீசகனுடைய திடதைரிய பராக்கிரம திக்குவிசயத்தைக் குறித்துப் பயந்து சிந்தித்திருந்தான்.

அக்காலத்தில் இராசசபையில் நின்ற விரதசாரணி ஐயோ! இதென்ன அநியாயம், தெய்வமேயென்று விசனப்பட்டனள். அப்பொழு தவ்விடத்

தில் மறைந்திருந்த வெகுசனர்களுள் தானுமொருவனாக வந்திருந்த வீமசேன னாகிய பலாயன னென்பவன் மனத்துயரத்தையடைந்து, அஞ்சிக் கெஞ்சிப் பஞ்சுபோற் பறந்து ஓடிவந்த பாஞ்சாலியையும் அவளைப் பிடிக்கவந்த கீசக னையும்பார்த்துப் பஞ்சேந்திரியமும் பதறத்துடித்து ஆசாரவாயல் முகப்பிலிரு க்கிறதொரு பெருந்தருவைப்பிடுங்கியொடித்துக்கீசகனையும்விராடராசனையுமொரு ங்கு முடித்து விடுவதற் கெண்ணினன். அப்பொழுது தம்பியாகிய வீமன் எங்கே பதறுகிறானோவென்று அதுவே நினைப்பாகப் பார்த்துக்கொண்டிருந்த தருமராசன் அவனதுகோபக் குறிப்பையும் எண்ணத்தையும் அறிந்துகொ ண்டு, அப்பா பலாயனா! நீ மடைப்பள்ளிக் கெசமானாகையால் காய்ந்தவிறகு எங்குண்டோவென்று உயர்ந்த மரங்களைக்கண் ணோட்டமிடுவது போலக் காண்கின்றது. நீ இப்பொழுது பார்க்கின்றமரம் அவசரத்திற்கு விறகாகமாட் டாதே. இதைக்காயவைத்துக் கொள்ளலாமென்று கருதினாலும் இன் னும் இரண்டுமாதஞ் செல்லாமல் உலராதே. முக்கியமாய் விறகுவேண்டி யிருந்தால் தக்கமனிதருடன் காட்டுக்குப்போய் நீ நினைத்தமரங்களை வெ ட்டி உன்னிட்டப்படி முடித்துக்கொள்ள வேண்டுமேயன்றி இவ்விராடராசன் சபையில் நிற்கக்கண்ட மரத்தை அவசரப்பட் டழிக்கக் கூடாதே; மிகுந்த பலசாலியாகிய உனக்கு எதுவும் இலட்சியமேயில்லை. ஆதலால் இந்நகரத் தின் புறம்பேசென்று வேண்டுமரங்களை வேருடன்கல்லி எளிதாக எரிக்க லாம். இங்கிருக்குந் தருவானது அநேகம் பறவைகட் காதாரமாயும் நமது வாழ்நாளுக் குதவியாயும் குளிர்ந்த நீழலைக்கொடுத்துக் கொலுமுகத்திற் கழ காயுமிருக்கின்றது. ஐயோ! இம்மரத்தைப் புத்திமான்கள் குறைக்க நினையார் கள். 'பச்சைமரத்தை வெட்டலாகாது' என்றும் பெரியோராற் சொல்லப்பட் டிருக்கின்றது. என்ன ஆபத்துநேர்ந்தாலும் பாவத்திற்குப் பயப்பட வேண்டு மென்று தமதுகாலாற் பூமியைத் தேய்த்தார். அவர் இங்ஙனே விறகின்மே லேற்றி வெளிப்படையாகச் சொல்லியவற்றின்பொருளைப் பரோபகாரியாகிய விராடராசனைக் கொல்லாமல் கீசகனைக் காட்டிற் கொண்டுபோய்க் கொல்ல வேண்டுமெனக் குறிப்பால் விளக்கிற்று.

அதை யறிந்துகொண்ட வீமசேனன் ஓகோகோ! இவரிங்குந் தடையா னாரேயென்று உடலெங்கும் பதற எழுந்த கோபாவேசத்தை யடக்கிப் பாஞ் சாலியைப் பார்த்தான். அந்தப்பார்வைக் குறிப்பை அறிந்துகொண்ட பாஞ் சாலி தனக்குநேரிலிருந்த விராடராசனை நோக்கி, மகாராசனே! நல்லொ ழுக்கத்தைமுழுதும்ஒழுகவிட்டகீசகன் துன்மார்க்கமாகவே என்னைத் தொ டர்ந்து தொட்டிழுக்க வந்தது நீதிதானோ? சாத்திரங்களைப் படித்தும் சாது சங்கத்தையடுத்தும்தன்னுயிர்போல்மன்னுயிரைக்காத்தும் பரதாரசோதரமெ னப் பார்த்தும் பாவபுண்ணிய மின்னவென்றறிந்தும் அடைக்கலம் புகுந்தா ரை யாதரித்தும் தெய்வபத்தி ஆசாரியபத்தி செலுத்தியும் குலமுறை பிழை யாமல் நடத்தியும் ஏழைகள்மன நோவாமலும் படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் இவ்வாறினையு முடையாராகியும் செங்கோல் செலுத்துஞ் சீமானாகிய நீர் உமது மைத்துனனுடைய துர்ப்புத்தியை விசாரித்து எனது

உள்ளக் கலக்கத்தைமாற்றி ஆறுதல் சொல்லி ஆதரியாதிருப்பது உமதரசாட்சிக்கழகாமோ? நீதியரசனே! நெறிமுறையறிந்தார்கள் தம்மைச்சரணுகவண்டினேனைத் தம்மக்களைப்போற் காக்க வேண்டுமென்று தரும சாத்திரமுஞ் சொல்லி யிருக்கின்றதன்ருே? தயாநிதியே! வலியவனுகியஒருவன்எளியவனை யடித்தாலும் ஒருவன்பொருளை யொருவன் அபகரித்தாலும் வம்புவார்த்தைகளை வழங்கினுலும் அவைகளை அரசன்விசாரித்தே துட்டநிக்கிரக சிட்டபரிபாலனம் செய்யவேண்டுவ துண்டோர்வில்லையோ? அவ்வாறு விசாரியாத கொடுங்கோலமன்னன் இருந்தென்ன? என்றுஉலகம் நிணக்குமே, இதனுலன்ருே நீதிநூலாரும் 'கொடுங்கோல்மன்னன் வாழுநாட்டிற் கடும்புலிவாழுங் காடு நன்றே' என்றுஞ் சொல்லியிருக்கின்றனர். உத்தமனே! உயர்ந்தோர்முதலிய சர்வசனங்களும் துர்ச்சோபம் துர்ப்பயங்கரம்துர்வியாதிமுதலிய பீடைகளடையாமல் சற்சிநேகம் சன்மார்க்கம் சற்குணம் சதாயுமுதலிய நன்மைகளைப் பெறும்படிக் கன்ருே அரசனுக்குச் சிங்காசனப் பட்டாபிடேகஞ் செய்வது,

அவ்வாறு பட்டங் கட்டிக்கொண்ட அரசனுக்கினியா லன்ருே வருண நான்கும் வரிசைமுறைபிறழாதிருப்பது. முன்னுளில் ஒருபாதம்சந்தனக்குழம்பிலும் மற்ருெருபாதம் அக்கினிப்பிழம்பிலும் நாட்டி அரசுபுரிந்துவந்த சக்கரவர்த்திகளுடையசரித்திரத்தையும்கேட்டறியீரோ? தருமபிரபுவே! உமது மனைவியாருக்குப் பணிவிடை செய்து பிழைக்கவந்த ஏழையாகிய வென்னை இக்காட்சி கண்ட சிங்கபலக் கீசகனைத் தீரவிசாரியர்மற் போவீராயின் எனக்கு வேறுகதியில்லை.உமதுதிடத்தைத் தெரிந்து கொண்ட இப்பாதகன் இனிமேல் என்னை யெங்கும் பிழைக்கவொட்டானே. எல்லாந்தெரிந்த பெரியோருக்குச் சொல்லா லுணர்த்துவ தியாதொன்றுமில்லையே, தோன்றலே! இவ்வுலகத்தில் தவஞ்செய்வதும்யாகம்புரிவதும் தீர்த்தமாடுவதும் தெய்வந்தொழுவதும்பெரிதன்று. அபயமென்றுவந்து அடைக்கலம் புகுந்தவர்களை யாதரிப்பதுவே தருமங்க ளெல்லாவற்றினுஞ் சிறந்ததென்று சதுமறைப்புரோகிதன் பிரமசூத்திரத்திலுஞ் சொல்லியிருக்கின்ருனே! அதற்குத்திட்டாந்தங் கேளும். முற்காலத்திலொருநாள் பிரமனுடையசபைக்குத் தேவேந்திரன்சென்ருன். அவனைக் கண்ட பிரமன்சந்தோடங்கொண்டு இந்திரனே! சுவர்க்கமத்தியபாதலத்தோர் நடத்துகின்ற தர்மா தர்மங்கள் உன்னதீனமா யிருக்கிறபடியால் நீ தருமசூக்குமமறிந்து நடத்தவேண்டியதா யிருக்கின்றது. நீஅவ்வண்ணம் நடத்தாவிட்டால், இப்பூலோகத்தார் செய்யும் பாவங்களிற் பாதி யுன்னைப்பிடியாமற் போகாது. அப்படிப்பிடித்த பாவங்களை நீ நீக்கிக்கொள்ள வேண்டுமானுல், பற்பலஅதர்மஞ் செய்கின்றவர்களை உடனேயழித்துவிட வேண்டுமென்றனர். இப்படிப் பலவாருகிய அதர்மஞ் செய்யும் பாவிகள்யாரென்று தேவேந்திரன் கேட்க, வேதவிதியும் நீதிவழியும் உலகநடையுந்தவிர்ந்து நடந்தவர்கள்யாரோ அவரோபாவிகள். இவர்களில் நன்றிகெட்டவர் அடைக்கலம்புகுந்தோரையாதரியாதவர் இவர்களையே மகாபாவிக ளென்னப்படும். ஆதலால் இனிக்கொடிய அதர்மிகளை வச்சிராயுதத்தால் மண்டைகிழியமோதிப் பண்டுசெய்த பாவங்

களைப்போக்கித் தருமத்தைப் பிரகாசிக்கச் செய்வையானால் அவர்கள்செய்த புண்ணியங்களிற்பாதியுனக்குண்டாகும்.மும்மையுலகிற்குமுதற்பதியாகையால் இத்தருமசூட்சுமத்தை யுனக்குச்சொன்னே னென்றனன். அச்சதுமுகன் மொழியைக்கேட்ட இந்திரன் பூலோகத்தில்வந்து துட்டர்களைச் சிட்சித்துச், சிட்டர்களை இரட்சித்துப், புண்ணியம்பெருகப். பொருந்திவாழ்ந்திருந்தானென்று பெரியோருரைக்கக் கேட்டிருக்கின்றேன். விராட ராசனே! உன் மனைவியினிடத்தில் வந்துசேர்ந்த அந்நாள்முதலிந்நாள்வரையிலும் இத்தன்மையாகியதுன்பம் நான்கண்டறியேன். இன்றென்பொல்லாவினையால், வல்லாண்மைக்காரக் கீசகன் இக்கொடிய எண்ணமே கொண்டனன். அவனேயப் படி நினைத்தாலும், உலகந்தாங்கிய நீரும் பேசாமலிருப்பதும் என் தீவினைதான். ஐயா! உம்மிடத்தி லிப்படிப்பட்ட குணமிருக்குமாகில், அரசாட்சியெவ்வாறுநடக்கும். உம்மை யார் மதிப்பார்கள்? உம்மையார் துதிப்பார்கள்? உம்மை யாரடுப்பர்? வருந்திவந்தவர்கள் துன்பத்தைமாற்றிக்காக்கவேண்டியது உமதுகடமையன்றோ? நீர் அவ்வாறு செய்யாமற்போனால், சாத்திரப்படி உமக்கு மோட்சங்கிட்டாதே. இரௌரவமுதலிய நரகமும் உம்மை விட்டகலாதே. அதிலும் பேதைப்பெண்கள் நாதனற்றவர்கள் முடவர் ஊமை செவிடு குருடு பிணியாளர் தரித்திரர் தவசிகள் முதலானோருக்குத் தாயுந்தந்தையும் அரசனே ஆகையால், அவர்களைத்தன்பிராணனைப்போலாதரிக்கவேண்டுமே. பழிக்குடன்படாத பார்த்திபனே! நான் அநாதையாயிருக்கின்றேன். நீரென்னை நிராதரவு செய்யாமல் காக்கவேண்டுமென்று சொல்லிமுடித்தனள்.

இவ்வாறு அவ்விரதசாரணி மொழிந்ததை விராடராசனறிந்து, அம்மா! நான்கீசகனை விசாரிக்கவில்லையென்று கிலேசப்படுகின்றனை. உனக்கும் அவனுக்கும் நேரிட்டநேசமும் நீஅவன் வீட்டுக்குப்போன காரணமும் உன்னைத்தூரத்திவந்த விசுவாசமும் இன்னதென்று எனக்குத் தெரியாமையால் ஒருதலைவழக்காகத் தண்டிப்பதும்உத்தமமன்றே.பின்காரணகாரியந் தெரிந்துகொண்டு தீர்க்கவிசாரணைசெய்ய வேண்டியிருப்பதனாலும் உனக்குவந்த தீங்கு ஒருவாறாக விலகிப்போனதினாலும் நான்சும்மாவிருந்தேன். அம்மா! நீ இவ்வேளை மனம்பொறுத்துக் கொள்ளென்றுவாய்குளிரப் பேசிமுடித்தான். அவனது இன்சொல்லைக் கேட்ட பாஞ்சாலியோ அவ்விராட ராசனுக்கு மனோதைரிய மில்லையென்றுணர்ந்து ஐயா! நீர் சத்தில்லாவசனஞ்சொன்னீர்; நான் உற்றதுரைக்கிறேன்கேளும், அடியேனுக்குக் கந்திருவரைந்துபேர் கணவர்கள்; புயபல பராக்கிரமசாலிகள்; ஒப்பற்றவர்கள்;விற்பனவிவேகிகள்; அவர்கட்குப்பகைவரில்லை. யாருக்கேனும் அழிவுகாலநேரிட்டால், அவர்களேதாம் சத்துருவாய்த் தோன்றி அழிப்பார்கள். அக்கந்திருவர் வருகின்ற தேரோசையும் அவர்கள் கைக்கொண்டிருக்கும் வில்லோசையும எட்டுத் திக்குப்பாலரையும் திடுக்கிட்டு விழிக்கச்செய்வது மன்றிச் சக்கிரவாள முடிமட்டும் உக்கிரமாக வுடைபட்டும் தத்தளித்தாடப்பண்ணுமே. அவர்களை அண்டினோருக்கு

வேண்டிய பாக்கியங்களுண்டாமே. அப்படிப்பட்ட மகாபுருஷர்களை மாலை யிட்டு மருவிவாழுமென்னை இப்படிப்பட்ட நாணத்துக்கிடமாக்கி விட்ட கீசக னுக்கு நாசகாலங் கிட்டியதென்பதற்கு ஐயமேயில்லை. ஐயோ! இரும்பை நசுக்கி யொடிக்குஞ் சம்மட்டி நெருப்புக்கும்படுவதுபோல், உம்மையெங்கே மாட்டிக் கொள்ளுகிறதோ வென்னுந் துக்கத்தால் இவ்வளவு தூரஞ் சொல்லி யழுகிறேன். ஐயா! மச்சராசனே! இத்தியாதி வல்லமைபெற்ற கந்திருவர் கட்கு மனைவியாகிய நீ என்மனைவிக்கு வேலைசெய்ய வருவானேனென்றால், வினைப்பயனை வெல்ல வல்லாரில்லாமையால், என் கணவரைவரும் தீவினை வசத்தால் தங்களுருமாறி யிருக்கின்றார்கள், அவ்வாறிருந்தபோதிலும், (கடுகு சிறுத்தாலுங் காரம்போகா தென்பதுபோல்) தங்கள் பேராற்றல் மாறினர்க ளல்லர்; இப்பொழு திவ்விடத்தில்நடந்திருக்கின்றகலகத்தையும்அவர்களுமறிந் திருப்பார்கள்; தடையின்றி எங்குஞ் சஞ்சரிக்கும் நெஞ்சுரமுள்ளவர்கள், தமக்குத்தாமே சங்கதி தெரிந்துகொள்ளுஞ் சத்தியுடையவர்கள்; இந்நேரம் இவன் பிராணனுக்கு முடிவுதேடி உலைவைத் திருப்பர். ஆயினும் மண் ணாளும் வேந்தன் வாய்பேசாதிருந்தால் பெண்ணாகிய நான் போவதெவ்வா றோ? அறியேனே! நான் ஒருவரையும் நோகத்தக்கதில்லை. முன்னே தேடிக் கொண்ட வினையையே நோகவேண்டுமென்று பொருமி விம்மிப் புலந்து சபைநிறைந்த புண்ணியவான்களே! சத்திய தருமமென்றும் அசத்தியதரும மென்றும் இரண்டு உண்டு, அவ்விரண்டினுள் சத்திய தருமமேமுக்கியம். அச் சத்தியதருமம் எவ்விடத்தில்விளங்குமோ? அவ்விடத்தில் திருமகளுடன் கள்ளமாமாயப்பிரானிருப்பான். அப்பரமபதி யிருக்குமிடத்தில்கிளர்ச்சியும் சத்துரு செயமுமுண்டாம்.

அசத்திய தருமம் எவ்விடத்திலிருக்கின்றதோ? அவ்விடத்தில்மூத்தாள் குடிபுகுவாள்; மூடருறவே எய்தும்; அன்றியும், கொடுநோருக் காளாகத் தளர் ச்சியடைந்து தூக்கமும் சோம்பலும் ஏக்கமும் அடைவார்களென்றே சுருதி முறையிடுகின்றன. ஆதலால் ஆணைப் பெண்ணைப் பெற்ற நீங்களேனு மென் தருமத்தை ய்நுசரித்துப் பொதுவாய்ப் பேசப்படாதா? 'அரசனெவ்வழி அவ் வழிகுடிகள்' என்பதைநிலைநாட்டினீர்களே. நீதிநெறி யழிந்தீர்களோ? ஓகோ! இந்நெடுங் கடலுலகத்தில் நான் பெண்ணாகப்பிறந்த பெரும்பிழையாதோ? தெய்வமே! என்று தளர்ந்து வாடினாள். அவ்வன்னை தளர்ச்சியைச்சபையி லிருந்த யாவரும் பார்த்துக் கீசகனையும் விராடராசனையும் நிந்தித்து விரத சாரணியின் பதிவிரதா தருமத்தைச் சிந்தித்துப் பெண்ணிலக்கணம் பூரண மாக அமைந்து கிடக்கின்ற இப்புண்ணிய சாலியை நிதானித்து இவ்வன்னை நல்ல குடிப்பிறப்பாகக்காணுகின்றது, தேவபுருடசம்பந்தம்போற்றோன்றுகின் றது. குணம் மணம் குரல் வசனம் இவற்றை நோக்குங்கால், பதுமினிமாதா யிருக்கிறாள். இத்தன்மையராகிய உத்தமிகள் நினைத்த காரியங்களெல் லாம் சித்தியாகாமல் போமோ? இலேசானமாதரைப்போல் எண்ணப்படாது. கெடுமதியுள்ள கீசகன் துட்டநினைப்பால் தொடர்ந்த மூடத்தனம் அவன் பிராணன்முடிவுக்கோ? யாதுகாரணமோ? தெரியவேயில்லை. முன்னாள் சானகி

யாருக்குத் துன்பம் நேரிட்டாற்போல் நேரிட்டதன்றோ? என்று தம்மனத்தைத் தாங்களே தேற்றிக்கொண்டு அம்மா! சும்மாவிரு. விசனப்படவேண்டாம். உமக்கு நல்லகாலம் இவ்விராடபுரத்தில் வரப்போகின்றதென்று வாழ்த்தினர். அக்காலையில் இவற்றையெல்லாம் பார்த்து உள்ளே மாச்சரியமும் வெளிக்கு ஆச்சரியமுங் கொண்டிருந்த கங்கபட்டர் சைரந்திரிப் பெயர் பெற்ற பெண்பாவாய்! பெண்களுக்குரிய நாணமட முதலிய நாற்குணங்களு மாறி அரசசபையேறி அத்துமீறிப் பேசுகின்றாயே. அநியாயக்காறி! தரும பதியாகிய விராட பூபதியோ மகாதயாநிதி. சத்திய வாக்கியர். சாதுசங்கப் பழக்கமுள்ள யோக்கியர். பலவகையான சம்பத்துடைய பாக்கியர். சதுர் வேத மறிந்தவர். தநுர்வேதந் தெரிந்தவர். மனுமுறை கற்றவர். மக்களைப் பெற்றவர். நடுவுநிலையாகவிசாரிப்பவர். பக்ஷபாத மிராது;நீ யஞ்சவேண்டாம் அவசரப்படாதை. இம்மச்சராசன் விசாரியாமல் போனாலும் உனக்குரிய கந்திருவர்கள் அவசியம் விசாரிப்பார்களென்று உன்சொல்லினாலேயே விளங்குகின்றதே. நீ இச்சபையில் ஆத்திரப்படவேண்டாம். உன் எசமானிகட்டளையைப் பரிபாலிப்பதே சிறந்த தர்மம். சாந்தகுணமே தகுந்த பூஷணம். பெண்ணாகப் பிறந்தோருக்கு அடக்க மிருக்கவேண்டும். ஆதரவற்றவர்க்கு அரசனே தெய்வமென்று நம்பி வாயடங்கி ஒடுங்கிப்போக வேண்டும். அன்றித் தாங்களெவ்விடத்தில் வேலை செய்கின்றார்களோ அவ்விடத்திற் சொல்லி அவர்கள் மூலமாக விசாரணைக்கு வரச்செய்யவேண்டும். அப்பொழுது மனக்குறை எப்பொழுது மில்லாமல் நீங்கும். இப்பொழுது நீ அந்தப்புரம்போய்ச் சேர்வதே நன்றென்றார். கங்கபட்டருரைத்த கருத்தைத் தெரிந்துகொண்ட பாஞ்சாலி அங்கைகுவித்துப் புத்தியென்று போற்றிச், சுதக்கணை யிடத்திற் சென்று பெருங்காற்றி லலைந்த சருகேபோற் சுருங்கி ஒடுங்கி நின்றாள். இவ்வாறு ஓய்ந்துநின்ற மாதை அரசன்பத்தினி பார்த்துக் கருங்குவளை நெருங்கிய கண்களும் வெண்டாமரைபோன்ற முகமும் சண்பகப்பூவனைய மூக்கும் முல்லை யரும்பைப் பழிக்கும் பல்லும் அமுதமாகிய சொல்லும் கொவ்வைக் கனிக் கொப்பாகிய விதழும் இராகுவினால் தீண்டப்பட்ட சந்திரன்போல் குறைந்து அடங்கிய உடலும் வாடியநடையுமாய் வருவானேன்? கண்ணீர் சொரிவானேன்? கழுத்து முத்தாரம் பழுத்துப் போவானேன்? போன இடத்தில் பொல்லாங்குண்டோ? அப்படியா தாயினுமுண்டானால் இப்பொழுதே சொல்லும் தப்பாமல் தண்டிக்கிறேனென்று கேட்டாள். அப்படி அன்புடன் கேட்ட சுதக்கணையைத் பாஞ்சாலி பார்த்து, அம்மா! கைவிரலாற் கண்ணைக் குத்திவிட்டு யார்குத்தினார்கள்? குத்தியதற்குக் காரணமென்ன? என்று கேட்பது அதிசயத்தின்மே லதிசயமன்றோ? என் நிர்வாக முதலிய வற்றையும் முன்னமே சொல்லியிருந்த என்னை உன் தம்பியினிடத்திற் கனுப்பிவைத்துப் பின்னே ஒன்றுந் தெரியாதவள்போல் துடிதுடித்துப் பேசுகின்றாயே. ஆயினும் பெரிதன்று. உன்சொல்லின் வண்ணம் பூவும் தேனும் கொண்டுபோய்க் கொடுத்தேன்; அக்கீசகன் என்னைக்கண்டவுடனே எழுந்தோடிவந்து என்கையிலிருந்த மாலையையும் மதுவையும் வாங்காமல்

என்மேல் விழுந்து அநுபவிக்கக் கருதினன். நான் அப்பாதகன் கையிலகப்படாமல் தப்பியோடி விராடராசன் சபையில் விழுந்தேன். அப்பாலென்னைத் தொடர்ந்து வந்தபாவி எப்பாடுபட்டானோ? என்னகதி கெட்டானோ? நானறியேன். உத்தமியே யென்றழுதாள்.

இவ்வாறு உருகி யழுகின்ற விரதசாரணி துக்கத்தையும் சோபத்தையும் போக்கி அம்மா! வண்ணமாதே! அப்படுபாவி என் தம்பியானாலும் மகா பதிவிரதையான உன்சித்தஞ் சிதையப் பண்ணியபடியால் கடைகட்டனாகிய துட்டனானன். தாய்க்காகாதபிள்ளை ஊர்க்காகா தென்பதுபோல் உனக்காகாத சாவான் எனக்கு மாகாமற் போனவனே. உனக்கொருநாளுங் குறைவில்லை. பங்கமில்லாத சங்கமே! காமி வாமி வெறியன் மூறியன் வறியன் சிறியன் இவர்களுக் கெல்லாம் மட்டுமரியாதை கட்டுத்திட்டம் ஈனமானம் விதிவிலக்கு விவேக முதலியனவுங் கிடையா. நன்மையினால் வமிசவிர்த்திக்கு வரமாட்டார்கள். சவுக்கடியே தெய்வம். ஆதலின், முறைகெட்ட மூடனாகிய அக்கீசனைக் கொல்லவேண்டு மென்னும் நினைப்பிருந்தாற் சொல்லும். விராடராசனுடன் கலந்துபேசி வேலையை முடிக்கச் செய்கிறேன். உமதெண்ணத்தை எமக்குணர்த்துமென்று சுதக்கணை கேட்டாள். அம்மொழியைக்கேட்ட விரதசாரணி அம்மா! ஏதோ என்னுடைய கர்மாநுபவம் இப்படி யிருந்தது; இராசசபையி லிருந்தவர்கள் நகைப்பதற் கிடமுண்டாயிற்று; திக்கற்ற எனக்குத் தெய்வமிருக்கின்றது; 'அடாது செய்பவர் படாது படுவார்' என்னும் பழமொழியுண்டு; அதுவும் பழுதுபடாது. என்விடயத்தில் அபராதியாகிய கீசகன்கந்திருவர்ஐவரால்கால்சாய்ந்து போவதுதிண்ணம். எனக்குரியகணவர்கள் இன்றைக்கோ நாளைக்கோ வரப்போகின்றனர். அப்பொழுதிவன் தலையொடு போமோ?யாதோதெரியேன்.நான்உன்னைவந்தடுத்து உன்னுடையஉப்புந்தண்ணீருமுண்டு காலங்கழித்துவந்த என்னால் உனக்கு ஒருகுறைவும் இல்லாதிருக்க என்னிட்ட தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொண்டேன், அன்னையே! என்று வண்ணமகள் வாழ்த்தினள். அப்பெண் சொல்லைக்கேட்ட சுதக்கணை யானவள் கண்ணீர்விடுத்து அவள் கண்ணைத்துடைத்து விம்மி மெலிந்து, நம்மிலொருவனாகிய தம்பி வெம்பி விழுங்காலம் வந்ததே. புத்திரமித்திராதிகளை யிழந்துபோக நேரிட்டதேயென்று கலக்கமுற்று மிகவும் ஏக்கங்கொண்டிருந்தாள். இப்படி துக்கப்பட்ட சுதக்கணையாகிய வண்டு விழியாளுக்குப் பண்டுதொட்டுத் தொண்டு புரிந்து அண்டையில் நின்ற பெண்டுகளெல்லாம் ஒன்றுகூடி அம்மாதைக்கண்டுமதிமருள்கொண்டுஐயோ! கண்டகனாகிய கீசகன் பண்டை வினையால் பொன்றுங்காலம் தேடிக்கொண்டானே. அது பெருந்தீயைப்போல் மூண்டு விட்டதே. விராடராசனுக்கும் விதண்டையான வியாகூலம் விளைந்ததே. இம்மோசத்திற்கு நாம் தப்பிப்பிழைக்கும் வகை யெப்படியென்று சிந்தித்து எண்ணமிட்டுக்கொண் டிருந்தார்கள். இப்பால், பாஞ்சாலியைப் பிடிக்கவந்த கீசகன் ஆதித்தன் அனுப்பிய கிங்கரனால் வீசியெறிய வீழ்ந்து மிகவும் வேட்கையால் தாழ்ந்து நாம் வாழ்ந்தவாழ் விதுவோவென்று மனமெலி வடைந்து தாட்டீகந் தளர்ந்து மோக சமுத்திரம்

வடிந்து, நிம்மை திரும்பிச் சிந்தைதெளிந்து மயக்கமாறித் தன்மாளிகை சென்று சேர்ந்தான். இவனது நிலை யிப்படியிருக்க, அச்சமில்லாதிருந்த மச்சராசன்குயில் மொழிப்பாஞ்சாலி கேட்ட கேள்வியினுல் நாணப்பட்டுச்சபையிலுள்ளோர் சொல்லிய தன்விவகாரத் தாழ்வையும் கீசகன் தேடிக்கொண்ட நாசத்தையும் தன்மனத்திற்கொண்டு மைத்துனனைக் கொல்லுந்திறம் தனக்கில்லாமையாற் புல்லியர்களைப்போல் பொருமலுற்றிருந்தான்.

இத்தன்மையாயிருந்தவிராடராசனை, வேதவிதியுநீதிவழியுந் தெரிந்தகங்கபட்டர் பார்த்துச் சாந்தகுண வேந்தனே! ஆண்மையுடன் அரசு புரியும் அரசர்கள் துட்டரைக் கொட்ட மடக்காவிட்டால் அப்பட்டணத்துச்செல்வமும் அரசநீதியும் நிலைபெறுவாம். புகழும் பிரதாபமுங் கைகூடாது. செங்கோல் செலுத்துந் திறமையுடையவர்கள் விவகாரநிசையில் தன்னவன் பிறன் என்னும் பட்சபாதம் பார்க்கப் போகாது. வயிறு வளர்ப்பதற்கே வந்து உம்முடைய பனைவியை யடுத்துக் குற்றேவல்செய்து சீவனம் பண்ணுகிற ஒரேழைமேல் மச்சராசன் மச்சான் இச்சை வைச்சானென்பது வசையே அன்றி இசையோ? பெரியமனிசன் நேயமாயொருபெண்ணைத் துரத்திவந்தது ஞாயமா? சுத்தவீரன் கொடுமை நினைத்தது தர்மமா? நீர்சும்மா இருந்துவிட்டது மர்மமா? இது கீழ்மக்கள் செய்கையல்லவோ? அக்கீசகன் தன்னைவிடப் பிரபஞ்ச மில்லையென்றுஉம்மைமதியா திருக்கின்றனே, உமதுதுனைத்தனத்தில் இப்படிப்பட்ட கெடுதியைச் செய்து கெலித்துப் போனுன். இவனுக்கு எதிரொருவரு மில்லை. அப்பணிப் பெண்ணுக்குத் திக்கொருவரு மில்லை. அப்படி இருந்தபோதிலும் எல்லோருக்கும் பொதுவில் தெய்வமொன்றிருக்கின்ற தன்றே? பாவ புண்ணியங்களைப் பார்க்குந் தருமதேவதை சற்றேனுஞ் சகிக்கமாட்டாதே. அரசன் அன்றேகொல்லும். தெய்வம் நின்றே கொல்லும். உலகமாயை யொழித்த ஞானியையும், தீவினை தொடராமல் விடாது. 'தருமத்திற்கு விரோதமான காரியம் கழுத்தறுப்பு,' என்பது கதையிலுங் கேட்டறியீரோ? இது சகலஆத்மகோடிகளுக்கும் இயற்கையாயிருப்பது; அவ்வாறிருப்பினும் இலைமறைவோ காய்மறைவோ வென்று தராதரமறிந்து காலமிடந்தெரிந்து காற்றடித்தது தாழை பூத்ததென்னுங் கற்பனைபோல், அநுபவியாமல் அதுவே உற்பனமாய்க் கண்டவிடத்தில் கண்ணுங் கருத்துஞ் செலுத்திப் பெண்ணுசைகொண்டு பிதற்றித் தவிப்பது துன்பத்திலும் பெருந்துன்பமாய்முடியுமே. ஐயோ! நீரிதுவனாயிலும் பெற்ற மகிழ்ச்சியும் புகழ்ச்சியுங் கெட்டுப்போமே. இனி இகழ்ச்சிக் கிடமாமே. இறைவனே! என்று தருமராசன் சொல்லினுன். இங்ஙனமுரைத்த கங்கபட்டர் சொல்லும் விரதசாரணிக்கு நேரிட்ட அபாக்கியமும் அதனுல் தனக்கு வந்த பிலாக்கியமும் தன்னிருகாதையுந் துளைத்து உருவிப்போனதினுல்களைத்துப் புத்தியுமிளைத்துச் சிங்காசனம் விட்டெழுந்து தன்மனைக்குட் புகுந்து, தியங்கித் திகைத்து மயங்கி மலைத்துப் பிரக்ஞை தப்பியிருந்தான். அக்கொலுமுகத்திலிருந்த விமன் நெருப்பிலும் அதிகமாகப் பொங்கிப் பொறிதெறக்கண்களை யுருட்டிவிழித்து நறநறவென்று பல்லைக் கடித்துக் கையிரண்

டையுர் தேய்த்து முறுக்கி மோதி முகஞ்சுளித்து விராடனைப் பழித்து, விண்ணு மண்ணும் வேகக் கலகலவென்று சிரித்துக் குகைக்கட்புகுஞ் சிங்கம்போல் மடைப்பள்ளியிற் புகுந்தான், பின்பு தருமராசனும் மற்றதம்பிமாரும் தம்காலத்தையே மிகநினைந்து நாடி வருந்தித் தம்மிருக்கையை நாடிச் சேர்ந்தனர்.

வெற்றிவேலேந்திய விராடராசன் படுக்கை பொருந்தாமல் புரண்டு, அழிவில்லா அரசுக்கு பொல்லாங்கு வந்ததேயென்று பழிகாரக் கீசகனைவெறுத்துக் குறுகுறுத்துத் தன்தீவினையை யொறுத்து இனிநாம் முடிபொறுத்திருப்பது எப்படியென்று ஏங்கியிருந்தான். திருமாமகளுக்கொப்பாகிய சுதக்கணையும் துன்பமடைந்து எப்படி விளையுமோ? என்னநேரிடுமோ? நமது செல்வங்கள் எவ்வாறுமோ? என்று திகிலடைந்திருந்தனள். அம்மச்சநாட்டில் மருவிய நான்குவருணத்தவரும்தங்களுயிரின்மேலும் உடலின்மேலும் இச்சைவிட்டு அச்சமோடிருந்தனர்.

இக்கொடிய செய்கைக்கு யார்தான்விசனப்படமாட்டார்கள். அரசனே! என்று வைசம்பாயனர் சொல்லிவரும்போது, சந்திரகுலத் தோன்றலாகிய ஜெனமேஜய மகாராஜன் மனத்தாபமடைந்து, இதென்னபாவமென்றேங்கிப் பக்கத்திலிருந்த தன்மனைவியாகிய வபுஷ்டாதேவியுடனெழுந்து, புராணிகனைப்பணிந்து சுவாமி! மகாபதிவிரதையாகிய பாஞ்சாலி அத்துன்மார்க்கனாகிய கீசகனைச்சபித்துத், தன்மகத்துவத்தை நிலைநாட்டி வரிசைபெறப்படாதோ? ஏன் சும்மாவிருந்தனள்? மானங் கெடுங்காலத்திலில்லாத மகத்துவம் மற்றொருகாலத்தில் இருந்தென்ன?போயென்ன? அக்கீசகன் எம்மாத்திரமனுஷன்? எவ்வளவு பலமுள்ளவன்? எக்குலத்திற் பிறந்தவன்? சுதக்கணைக்கும் அவனுக்கும் சகோதரசம்பந்தம் எவ்வாறுண்டாயிற்று? இவனுக்கு விராடனடங்கியிருக்கவேண்டிய காரணமென்ன? இவ்விவரங்களையெல்லாம் எனக்கு அறிவிக்கவேண்டும்; புண்ணியனே! என்று ஜெனமேஜயன் கேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

கீசகன் வரலாறு.

கேளும். ஜெனமேஜயமகாராஜனே! பிரம சிருட்டியாலுண்டான பிரபஞ்சத்தில் பிராமணமாதுக்கும் அரசனுக்கும் பிறந்தோர்களைச் சூதகுலத்தாரென்று சொல்லுவார்கள். அச்சூதகுலம் அரசகுலத்திற்குத் தாழ்ந்ததென்றும் வைசியர்க்கு உயர்ந்ததென்றும் சாதிநூலில் சொல்லியிருக்கின்றது. அப்படியிருந்தாலும்; அதுமுதலிதுவரையிலும் சூதகுலத்தில் அரசர்கள் சம்பந்தம் பண்ணிக்கொண்டிருக்கின்றனர். அரசர் குலத்தில் சூதகுலத்தாருக்குச் சம்பந்தமில்லை. இப்பரத கண்டத்திலுள்ளவர்கள் அச்சூதவமிசத்தைக் குறைவாகவே பேசிக்கொள்வர். அபபடிப்பட்ட சூதகுலத்திற் கேகயராசனொருவனிருந்தான்; அக்கேகயராசன் இராசகன்னி யென்பவளை விவாகம்பண்ணிக்கொண்டு லகப்பிரசித்தனாய் வாழ்ந்திருந்தான்; அவனுக்கொரு

பெண்பிறந்தாள்; அப்பெண்தான் ஐயா! இச்சுதக்கணையென்பவள். இவள்பிறந்தபின்பு வேறேபிள்ளைகளில்லாமையால், இச்சுதக்கணையைநாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்துவந்தனன். இப்படிவளர்த்துவருகையில், இவள்தந்தையாகியகேகயராசன் ஆண்பிள்ளை பிறக்கவேண்டுமென்னும் ஆசையால், மாளவதேவியென்பவளைஇரண்டாவதுமணம்புரிந்துகொண்டனன்அவள் கருப்பத்தில்நூற்றுநாலுபிள்ளைகள்பிறந்தனர். அவர்களில்இக்கீசகன்தான்மூத்தவன்; சிங்கபலனென்று பேர்வாய்ந்தவன்; மகாபலசாலி. இப்படியிருக்க, விராடராசனுடைய முதற்பெண்சாதி சுரதையென்பவள் சதானீகன் சங்கன் வராகன் ஆதிவராக கேதுஎன்னும் இந்நால்வரைப் பெற்றுவைத்து இறந்துபோயினள். பின்னர் இச்சுதக்கணையைக் கலியாணஞ்செய்து கொண்டனன். இவள்வயிற்றில் உத்தரன் உத்தரையென்னும் ஆணும் பெண்ணும் ஒருபேறாய்ப் பிறந்தனர். இவ்விராடனுக்கு அபிமானபுத்திரனாக முதலிற்பிறந்த சுவேதனென்பவ னொருவனுளன், இவர்கள்யாவருங் குழந்தைக ளாகையாலும் விராடன் தம்பிமார்கள் பதின்மர் திடந்தப்பினவர்களாகையாலும் விராடனுடைய மச்சதேசம் சகலவளங்களும் உள்ளதாகையாலும் சத்துருக்கள் அநேகரிருந்தனர். அதனால் விராடன் சித்தங்கலங்கி இச்சுதக்கணைக்குத் தம்பியாகிய கீசகன் சத்துரு சங்காரனென்று கேள்விப்பட்டு அவனைவருவித்துத் தனக்குதவியா யிருக்கும்படி கேட்டுக்கொண்டனன். அதற்குடன்பட்ட கீசகன் உபகீசகர்களாகிய தன் தம்பிமார்களுடன் இவ்விராடபுரத்தையடுத்துச் சேனாபதிப் பட்டமுடையானாய்த் திக்குவிசயம்புரிந்து சகலகாணியாட்சிக்கும் தானேசுதந்தரனானான்.

இப்பொழுது நான்சொன்ன கீசகர்கள்யாவரும் பூர்வசநநத்திற் காலகேயர்களென்னுங் கந்திருவர்கள். பாணனென்பவன் முதலாக நூற்றுநாலுபேர்கள் வாமகாரிகளாகவும் காமவிகாரிகளாகவும் சாமவேதியர் சாபம்பெற்றுப் பூமியிற்பிறந்தனர். பாணனென்னும் சிங்கபல கீசகன் அத்திர சத்திர சாத்திரங்களை அப்பியசித்துப் பகைவரைக்கொன்று பலரையும்வென்று விராடபுரத்தரசை நிலைநிறுத்திவைத்தனன். இவனைப்பகைத்தெதிர்த்த திரிகர்த்த தேசாதிபன் தசார்ணவதேசத்தரசன் கம்போருக தேசாதிபதி மாளவ தேசபோசன் யவனதேசராசன் புளிந்தநகர்த்தலைவன் கோசலதேசமுதல்வன்அங்கராசன் வங்கதேசன் களிங்கராசன் தக்கண தேசாதிபன் நிட்டததேசாதிபதி முதலானோர்களும் கிராதகுலத்தலைவர்களும் இவனுடன்போர்செய்து வெல்லமாட்டாமல் தேரழிந்து வில்லொடிந்து இனிச்சாமளவும் இவனுடன் சண்டைக்கு வருவதேயில்லையென்று சபதம்பண்ணிக்கொண்டு புறமுதுகிட்டோடிப்போயினர். அதனால் இவன் மிக்கவெற்றிபெற்றவனாய் மதிமந்திரி யுத்திகற்றவனாய் இத்தேசமுழுவதும் தனக்குச் சுவாதீனமாக்கிக்கொண்டு ஏதேச்சையாக விருக்கின்றனன். எல்லாமர்மங்களுந் தெரிந்தவனாகையால் இவனுக்கு விராடராசனடங்கி யிருக்கின்றான். இதனாலேதான் துரோபதியைத் துரத்திவந்த துராக்கிருதத்தைப்பற்றி யொன்றுங்கேளாமற்போனது. இதன்றியும் பாஞ்சாலி கீசகனைச் சபிக்கப்படாதா வென்று வினாவினீரே அதற்குக்

காரணஞ்சொல்லுகின்றேன் கேளும். தனக்குரிய கணவர்கள் கண்குத்திப்பாம்புபோல் பிரத்தியட்சமாகப் பார்த்திருக்கும்போது சபிப்பததருமமன்றென்றும் சூரியநமஸ்காரஞ்செய்த சுகிர்தத்தால் தனக்குத் துன்பமில்லாமற் போயிற்றென்றும் எப்படியும் வீமன் தப்பாமற் கொல்லுவானென்றும் தைரியங்கொண்டே சபிக்காமல் விடுத்தாள். வெண்கதிர்க்குலத்தோனாகிய வேந்தனே! நீர் கேட்ட சங்கதியை ஐயமறச் சொன்னேன். மேல்நடக்குங் கீசகனுடைய அழிவையுஞ் சொல்கின்றேனென்று வைசம்பாயனர் ஸ்ரீவேதவியாசபகவானைச் சிந்தித்து வந்தித்துச் சொல்லத்தொடங்கினர்.

கீசகசங்காரம்.

இப்பால் மாதமொன்றுக்கோவ் வொருவராக மகாமேருவை வலம்வருகின்ற துவாதசாதித்தர்களில் அம்மாசத்தி லுதயமான மித்துருவென்னுஞ் சூரியன் துரோபதிதன்னைப் பூசித்தபடியால் துரோபதா தித்தனென்று பேர்பெற்று விரதசாரணிக்கு விளைந்த துன்பத்தைக்குறித்துச் சூரியகுலத்தோனாகிய கீசகனைவெறுத்துக் குலதர்மத்தைவிடுத்து வழுவினனென்று கோபித்து வித்தாரமான தன்கிரணத்தைக்கூட்டி அத்தமானகிரியில் தேரோட்டி மேற்றிசை சிவக்க நாற்றிசையுவக்கச் சாய்ந்து சமுத்திரத்தில் தோய்ந்தனன். பொழுதுபடவே அந்நகரிலுள்ளோர் யாவரும் அடிவயிற்றில் வடவாமுகாக்கினியைக் குடிவைத்துக்கொண்டு பகீரெனத் திகிலடைந்து நித்திரைவிட்டு நினைவுங்கெட்டு நெட்டுயிர்ப்பெறிந்து உயிராசைதுறந்து உறக்கமற்றிருந்தனர். சுதக்கணையிடத்திலிருந்த பாஞ்சாலி தீராத்துயரத்தினால் சிந்தைவருந்திக் கண்கலங்கிக் கவலைகொண்டு செப தப நான போசனாதிகளுந்துறந்து எண்ணாதுமெண்ணி நமது புகழுக்குப் பழுதுவந்ததே யென்று அனலிடையிட்டமெழுகேபோல் நெஞ்சமுருகி ஏக்கமேலிட்டுத் தூக்கங்கொள்ளாமல் பாதிராத்திரியில் வெளிப்பட்டுத் தருமராசனுடைய சரணாரவிந்தத்தைத் தியானித்துக் காவலாளிகளின் கண்ணிற்படாமல் மடப்பள்ளிக்குச்சென்று வெண்பட்டுமெத்தைமேற்சயனித்து நித்திரைசெய்வதுபோலிருக்கின்றபலாயனனைப் பார்த்து வருஷாகாலத்துவிருஷபம்போன்ற மதகரிமன்னவனே! என்மானங்கெட நினைத்த கீசகனை வாட்டாமல் மெய்ம்மறந்து உறங்குவதுயாதோ? கவலையுள்ளவர்க்குங் கண்ணுறக்கம்வருமா? நான் பட்டபாட்டைப் பார்த்திருந்த நீர்சிறிதேனும் படபடப்பின்றி முற்றிலும் மறந்துவிட்டீரோ? நல்லது; எழுந்திருமெழுந்திருமென்றாள். இவள் வருவதற்குமுன்னரே எண்ணமிட்டுக் கண்ணைமூடிக்கொண்டு கலவரத்திலிருந்த வீமசேனன் திடுக்கென்றெழுந்து பேதையே! நீ இவ்வேளையில் தனித்துவருவானேன் என்றான். அச்சொல் பொறுக்கமாட்டாமல் பாஞ்சாலிபதைத்து ஆகா! ஆரோ எவரோ ஏனோ தானோ வென்று கேட்கின்றீர். பாஞ்சால புத்திரியாயும் பாண்டவர்க்குப் பத்தினியாயும் இந்திரப்பிரத்தத்தி லிருந்த என்னை அத்தினபுரத்திற் கழைத்துவந்து நூறுதுட்டரை வெளியிட்ட பட்டத்தேவியை எளக்கிட்டமான யாமியென்று அவள்

அருகேவைத்துப்போய்ச் சொக்கட்டாளுடித்தோற்றுத்,திக்கெட்டுமுள்ளதரா துரைகள் நிறைந்தசபையில் அத்துச்சாதனன் என்னைமற்கட்டி யிழுத்துவரக் கர்ணன் துரியோதனன் முதலியபலரும் இகழ்ந்து தீயமொழிகள்வழங்க அத ஞல் என் அங்கம் பங்கப்படுநாளில் வீட்டுமர் துரோணர் கிருபர் விதுரர் திரி தராட்டிரர் ஊமைபோலிருக்க, நீங்களைவரும் ஐம்பொறி யடக்கியென்னும் ஆமைபோலிருக்க, ஆபற் பாந்தவனும் ஆதிமத்தியாந்தனும் ஆதிமூலப்பொ ருளும் அநந்தகல்யாணகுணனும் யதுகுலமுதல்வனுமாகிய கள்ளமாமாயப்பி ரானே சன்மானத்துடன் என்மானங்காத்தருளினன். நீங்கள் அந்நாளிலிருந்த தன்மையாகவே இந்நாளிலும் இருக்கப்போகின்றீர்களென்று முன்சாக்கிரதை செய்ய முழுராத்திரியில் வந்தேன். நான் பிறந்தகத்திலும் புகுந்தகத்தி லும் மின்கோவமாய் ஓராயிரஞ்சேடியர் புடைசூழ்ந்து ஊழியஞ்செய்ய வாழ்ந்திருந்தேன். உங்களைநம்பிக் கற்களும் முட்களுமுள்ள கானகமெங் குந் திரிந்தலைந்து கலங்கிவருந்திக் காய்கனிபருந்திப் பன்னிரண்டாண்டுங்கழி த்தேன். ஓராண்டும் அஞ்ஞாதவாசஞ்செய்வதற்கு உருமாறிப் பெயர்வேறு கொண்டு என்னிருகையுங்கன்றி என்மெய்யொளியுங்குன்றிக் குற்றேவல்புரி ந்து வருகையில், கொடியகீசகன் இவ்வகை அவதிப்படுத்தினன். பூமண் டலமுழுதும் புகழ்பெறவிளங்கிய தருமபுத்திரரோ வைதிகவேடம்பூண்டு ஒரு மார்க்கமாயிருக்கின்றார். திரிபுவனகண்டக செயசிகாமணியாகியகாண்டீவதர ரோபேடியுருக்கொண்டு நாடகத்தொழிலடுத்து ஆடல்பாடல்தொடுத்துழமூடு காடிட்டுக்கொண்டிருக்கின்றனர். நகுலசகாதேவரிருவரும் வெளியில் தத்தமக் கேற்ற தொழிலில் அமைந்திருக்கின்றனர். இவரிடத்திலெல்லாஞ்சொல்லிக் காரியமென்ன? பயனுமில்லை. எனக்குரிய ஐவரில் உம்மைப்பார்க்கிலும் வே ருேர்துணையுமில்லை. எனக்கு உற்றதுணை நீரோ. வாயாற்கூறிய சபதத்தை யும் மனத்தால்நினைத்த குரோதத்தையும் முன்பின்பாராமலே முடிக்கத்தக்க பலசாலி ஆகையால், உம்மிடத்தில் என்குறையை யெடுத்துச்சொல்லி மு றையிட்டுக்கொண்டேனென்றனள். கொண்டல்போன்ற கூந்தலையுடைய பா ஞ்சாலி மொழியை வீமன்கேட்டு வெடுக்கென் றெழுந்து காரணகாரியங்களை நினைத்துபெண்கள்நாயகமே! புருஷர்களுக்குரியஆபரணம்பொறுமை.அதிலும் நீதிவழுவியகிர்மூடரைக்கணப்போதாயினுந்தாமதியாமல் குப்புறத்தள்ளியுதை த்துத் தலைபிளக்கமிதித்துக் கீர்த்தியை நிலைநாட்டுவதே சிறந்த ஆபரணமாம். கலனிறைந்தமங்கையருக்கு நலனிறைந்த ஆபரணம் நாணமென்பதேதான். மாதராடவர்கள் கூடுங்காலத்திலும் அந்நாணம்நீங்காமல் சரசஞ்செய்துஅநுப விப்பதுவே பொன்னுபரணங்களிற் சிறந்த நல்லாபரணமாகும். இப்படியிருக்க, எனக்குப்போதுமான பலமிருந்தும் என்கைக்குத்தக்க கதாயுதமிருந்தும், தனஞ்செயனுக்குச் சௌரியபராக்கிரமமிருந்தும் காண்டீவமிருந்தும் என்ன லாபம்? அத்தினபுரத்தில் மாயச்சகுனியுடன் சூதாடித்தோற்றபோதும் உன் னைத் துச்சாதனன் இழுத்துவந்தபோதும், இராசசபையில் மானபங்கம் பண் ணியபோதும், துரியோதனன் கர்ணன் இவர்கள் வய்புவார்த்தைகள் பிதற்றிய போதும், ஆற்றக்கூடாமல் உடல்பதறியெழுந்த எங்களை ஆத்திரப்படவே

ண்டாமென்று அடக்கிய எங்கள் இறைவனாகிய தருமராசன் இப்போதும் இவ்விராடன் சபையில் உன்னைத்துரத்திவந்த கீசகனைக் கொல்லவெண்ணிய என்கோபக்குறிதெரிந்து சவுக்ஞையாகச் சொல்லியுஞ் சாடைகாட்டித் தடுத்துவிட்டனர். இவர் என்றும் இவ்வாறாகவே இருந்தால் எங்கள் மானமழிந்து போவோமென்பதற்கு ஐயமில்லையே; எங்களைச் சமயத்தில் மீறவொட்டாமற் வருத்தப் படுத்திவரும் யுதிட்டிரரா லுண்டாகிய என் மனத்தாபத்தையும், துரியோதனாதியரால் விளைந்திருக்கும் கோபத்தையும், இக்கீசகன்மேற் காட்டி என் இசையை நிலைநாட்டி யானை மத்தகத்தைப் பிளக்குஞ் சிங்கம்போற் பாய்ந்து, அவனுடலைவாட்டிக் குடலைப் பிடுங்குகிறேன். இனிமேல் இவன்விடயத்தில் யார்குறுக்கிட்டாலும், நானுடன்படப் போவதுமில்லை. இவனை ஆருயிருடன் விடப்போவதுமில்லை. இவ்வுலகத்தில் அற்பர்களுடைய மனைவிமா ரெல்லாரும் அதிக சுகமடைந்திருக்கும்போது, விற்பனர்களாகிய எங்கள் மனைவியான நீ மெலிந்து துன்பப்படவேண்டிய விதியென்ன? நல்லதாகட்டும். வல்லவருக்கு வாழ்க்கைப்பட்டும் இப்படி வருத்தப்படுகின்றோமேயென்று நீசற்றும் மனம்வருந்தாமலிரு. மாதரசியே! முன்னாளில் தீவினைவசத்தால் அகத்தியருக்கு அன்புடைய மனைவியாகிய உலோபாமுத்திரையென்பாள் தன்கணவனுக்குப் பணிவிடைசெய்து ஆகாரம் நித்திரையின்றி நெடுநாள் வருத்தப்பட்டுப் பின்னேநல்வினைப் பயத்தால் சுபமும் சுகமும் கீர்த்தியும் பெற்றாள், இதன்றியும், யயாதிமகாராசன் மகளாகிய சுகன்னி சவனகமகா முனிவனுக்குச் சிசுரூஷைசெய்து சிலநாள் வருத்தப்பட்டுப்,பின்பெரு நாளும் பாக்கியத்துடன் வாழ்ந்து கண்ணியம்பெற்றுப் புண்ணியலோக மடைந்தாள்.

வீமராசன்மகளாகிய தமயந்திமக்களைப்பிரிந்து கணவனைநீங்கித் தன்னந் தனியளாய்க் காட்டில்அலைந்து கரும்பாம்பின்வாய்ப்பட்டு,வேடனால் வெளிப்பட்டுச் சிற்றன்னை வீடுசேர்ந்து, அங்கே குற்றேவல் செய்துகொண்டிருந்து, சிலநாளைக்குள் தாய்தந்தையரையடுத்துத் தூதுவிடுத்து தன்னைப்பிரிந்த கணவனைக்கண்டுகூடித் தன்சேயொடுமகிழ்ந்து, சிந்தைசிறந்து வாழ்ந்திருந்தனள். இவ்வாறு எத்தனையோகோடி அரசமாதர் படாதபாடும்பட்டுக் கற்புக்கோரிடையூறுமின்றிப் பதம்பெற்றிருந்தனர்; ஆகையால் தேவர்களானாலும் நல்வினை தீவினைகளை அநுபவித்தே தீரவேண்டும். இப்போது நமக்குண்டாகிய துன்பம் இன்னும் முப்பது நாளைக்குமேல் இன்பத்தை விளைவிக்கக் காத்திருக்கின்றது. 'பட்டவர் பதத்திலிருப்பர்' என்னும் பழமொழியறியாயோ? அப்படியிருந்தாலும், இப்பகையை எவ்வகையிலும் விரைவாய் நானேமுடிக்கிறேன். பாக்கியவதியே அஞ்சவேண்டாமென்று வீமசேனன் சொல்லி முடித்தான். இம்மொழியைப் பாஞ்சாலிகேட்டு முரசக்கொடி முதல்வனாகிய தருமராசன் உமது குறிப்பையறிந்து கோபமேவிட வொட்டாமல், தடுத்தாரென்று மனக்குறைகொள்ள வேண்டாம். நம்பகைவர் நிச்சயித்த பன்னிரண்டு ஆண்டுங் கழித்து ஓராண்டு அஞ்ஞாதவாசஞ் செய்யும்படியாக இவ்விராடபுரத்திற்கு வந்து சிறிதுநாளாயிற்று. இன்னுஞ் சிலநாள் ஒருவரும் அறியாமலே இருந்து

காலம்போக்கவேண்டுமென்றும், இதற்குள்ளாக நம்மையாவனோனுங் கண்டால் பகை வெல்லவந்த நற்காலம் துர்க்காலமாமென்றும், பழயபடி வனவாசம் பண்ணவருமென்றும், அதனால் உங்கள் சீருஞ் சிறப்பும் சபதமும் பலவீனப் படுமென்றும் நினைத்து, உம்மை அவசரப்பட வொட்டாமல் அடக்கினர். அவர் காலதேச வர்த்தமானம் தெரிந்த புத்திமானுகையால், உமது வெகுளி யைக் கண்டவுடன் அடக்கவேண்டிய கடமையே. அதனால் அவர்மேற்குற்ற மில்லை. இப்பஞ்சையாகிய கீசகன் என்னைக் கொஞ்சமாக நினைத்தானே! அவனை நான் பார்த்து அடாபாவகாரி! உனக்குக் கேடுகால நேரிட்டது; துரோகி! எனக்கு கந்திருவர் ஐவர் கணவர்கள்; மிகுந்த திடவான்கள்; சத் துருவை வீரசொர்க்கஞ் சேர்க்கும் விடயத்தில் மகாவல்லவர்; மித்துருக் களுக்கு உத்தமகுணமுள்ள நல்லவர்; எல்லாமறிந்தவர்கள்; பொல்லாங் கொழிந்தவர்கள்; எங்குமிருப்பவர்கள். நீ செய்த தீமைகள் அனைத்தையும் தெரிந்துகொள்ளத்தக்க ஞானமுள்ளவர்கள்; சொல்லாமற் சொல்லிக் கொல் லாமற் கொல்லத்தக்கவர்கள். நீயும் உன்குடும்பமும் நீறுயழிந்துபோகவேண் டாமென்று, பலநீதிகளையும் பழமையாக நடந்திருக்கிற சில செய்திகளையுஞ் சொன்னேன். அக்கீசகன் நான் சொல்லியவற்றை அலட்சியஞ்செய்து போ போ அவர்கள் எப்படிப்பட்ட கந்திருவரானுலும் என்முன்னிற்பரோ? என்று ஏசித் துரத்திக்கொண்டு வந்தான். அந்தப்பதிதன் உமக்குமுன் எதிர்ப்படு வானுயின் என்னபாடுபடான். கருடனது நிழல்பட்ட பாம்புபோல் கெடு வான். என்மனம் பற்றி எரிகின்றதே. அந்நாசகால கீசகன் வந்தவழிபோன வழிதெரியாமல், நொந்தழியும்படி நீர் பிரவேசிக்கவேண்டும். ஆனல் ஆத்திரப் படவேண்டாம். இன்னும் இரண்டொருநாள் காலதாமதஞ்செய்து இவனைத் முடித்தால் விரதசாரணிக்கு அன்பர்களாகிய கந்திருவர் கீசகனைப் பிடித்துத் துடிதுடிக்க அடித்து முடித்துவிட்டார்களென்று பேசிக்கொள்வார்கள். அப் போது உம்மேல் ஐயங்கொள்ளவே இடமிராது. ஆகையால் உமதுயுத்திக்கு இசைந்தபடி பார்த்துக்கொள்ளுமென்று துரோபதி சொன்னாள். அக்கற்புடை யாள் வார்த்தையை வீமன்கேட்டுப் பாஞ்சாலியே! கீசகனைக் குறித்துச் சிறி தேனும் நீ யோசிக்கவேண்டாம். அவனென்றைக்கு உன்னைத் தொடர்ந்தா னே? அன்றைக்கே அழிந்தானென்று நம்பு.உன்னிட்டமெப்படியோ? அப்படி யே அவனுயிரை நட்டப்படுத்திவிடுகின்றேன்.

ஆனல், இப்பொழுதோ விடியற்காலமாயிற்று. இனிநாம் அக்காரியத்திற் குப் பிரவேசித்தால், அஞ்ஞாதவாச ரகசியம் வெளிப்பட்டுப்போய்விடும். தருமபுத்திரர் சித்தத்திற்கு மெத்தவருத்தம்வரும். அன்னமே! நீ முன்னே சொன்னவண்ணமே எண்ணித்துணிவது கருமமாதலால், இன்றிரவு முழு தும் நாளைப்பகல் முப்பதுநாழிகையும் பொறுத்து நாளையிரவை எதிர்பார்த் துக்கொண்டிருக்கிறேன். நீ அச்சுதக்கணைமாளிகைக்குப் போவையேயாகில், அத்துர்ப்புத்தியுள்ளகீசகன் நாளைக்காலமே உன்னிடத்திற்குவந்து இறுமா ந்து கெர்வங்கொண்டு இப்பொழுது என்னசொல்லுகிறாய்? விரதசாரணி! நானுன்னைத் துரத்திவந்தபோது என்னை யார்கேட்டார்கள்? யார்தடுத்தார்

கள்? எனக்கும் எதிரில்லை. உனக்குந் திக்கில்லை யென்றுசொல்லி, மிக்கதாராளமாய்க் கிட்டிப்பேசுவான். அவனை நீ பார்த்தவுடனே அன்புள்ளவளைப்போல் அரைக்கண்பார்வைநாட்டி, அதிமோக முகநய சாடைகாட்டி, ஆசை விநய அபிநயமீட்டி, மோகவிடத்தை அவன் முடிமேலேற்றி, உன்கற்புக்கு மாத்திரம் பழுதில்லாமல், அக்கயவனுடன் கலந்துபேசி விராடபுரத்திற்கு மேற்கில் மாஞ்சோலைசூழ்ந்த வசந்தமண்டபத்தில் நாளைஇரவிலே பத்துநாழிகையில் அவனை வரும்படியாகப் பக்குவப்படுத்திக் கொள்ளென்று யுத்திசொல்லித் துரோபதியை அனுப்பி விட்டுத் தருமராசனுக்கிளைய சத்தியவிரதனும் கருமலைபோல் வளர்ந்த இருபுயமுள்ளவனும் பதினாயிரம் யானைப்பலம் பெற்றவனுமாகிய வீமசேனன் செய்வார்த்த நெருப்பெனப்பொங்கி முகம்வேர்த்து, நித்திரைபிடியாமற் சித்தம்பிரமித்துப் பகலிரவென்பதொன்றும் பாராமல் தான்குறித்த கால அளவைக்கருதிச் சுடச்சுடவே முடிப்பதற்கில்லையே என்று மனக்கலக்கங்கொண்டே படுக்கையில் மல்லாந் தெண்ணமிட்டுக் கொண்டிருந்தான். இத்தன்மையனாயிருந்த வீமனிடத்தில் விடைபெற்றுச்சென்ற விரதசாரணி சுதக்கனைமாளிகைக்குச் சென்று பொழுது விடியுமளவும் ஒரு வகையாய் முகங்கவிழ்ந்து கொண்டிருந்தாள். அப்படி யிருந்த பாஞ்சாலி மனோதுக்கம் பரிகரிப்பதுபோல், ஒளியைக்கூட்டி இருளையோட்டி அவள்முகத்தை மலரச்செய்வதுபோல், தாமரைமலர்களை மலரக்காட்டிக் கதிர்க்கிரணங்களை நீட்டிக்கொண்டு சூரியன் உதயமானான்.

அழகிய உதயகிரியிலெழுந்த அருக்கனைக்கண்ட விரதசாரணிவழக்கப்படி காலைக்கடனைமுடித்துச் சுதக்கனைக்கு மலரொடுத்துத் தொடுத்துக் கொடுப்பதற்குப் பூஞ்சோலைக் குட்புகுந்து வரும்போது, இராசபத்தினியாகிய சுதக்கனைமுன் தன்னை நிந்தித்த நிற்பாக்கியவசத்தால் மனம்வருந்திச்சென்ற கீசகன் தன்தமக்கையைச் சந்தித்துப் பொறுமைகேட்டுக்கொண்டு வருவோமென்று நினைத்து மந்தமாருதமுலாவிய நந்தனவனத்தினைநாடி வந்தான். அவன்வந்தவழியில் சந்திரவுதயம்போல் கொத்துமலர் பறித்துக்கொண்டு நின்ற கோதையன்னவள் அந்தகனைக்கண்ட ஆருயிர்போலநடுங்கித் தெளிந்த சிதேந்திரியர்களைப்போல் உடனேதேறி மனந்தளராமல் சங்கடப்படாமல் தள்ளாடி ஓடாமல் தவித்து வாடாமல் சற்றும் அச்சமில்லாமல் தலைகுனிந்து தன் காற்புறவடியைப்பார்த்து நிமிடத்திற்கொருதரம் கீசகன் முகத்தைநோக்கிச் சற்றேபுன்சிரிப்பாக நகைத்து அவனது துர்ப்புத்தி படருவதற்குத் தானே கொழுகொம்பாகி வீமனிடத்தில் பேசிக்கொண்ட சங்கேதப்படி நிலை செய்ய வெண்ணினாள். இவ்விடத்தில் கற்புநிலைதவறாமல் பொற்பாவைபோலிருந்த மாதினைப் பழிவழிக்குவந்தமூடமூடன் கண்ணுற்றுச் சந்திரனைக்கண்ட கடல்போல் பெருகிச் சந்திரகாந்தக் கல்லைப்போலுருகிச் செல்வத்தைக்கண்ட தரித்திரன்போல் மகிழ்ந்து கல்விப்பொருளிற் கற்பனையலங்காரக் கவிதைமேற்கொண்ட கனவான்போல் முகமலர்ந்து விழிகுளிர்ந்து அவள் கால்முதல் தலைவரைக்கும் இமையாமல் பார்த்துத் தன் அறிவுகெட்டு அற்பப்புத்திமேலிட்டுத் திக்குநோக்கிக் கும்பிட்டு விரதசாரணி! நீ எனக்குப்பிரா

ணாதாரமேயன்றி வேறன்று. நான்சொல்லப்போவதை நன்றாய்க்கேள். இப்பட்டினமும் இந்நாட்டுவளப்பமும் விராடராசனுடைய வாழ்க்கையும் எந்த மக்கையாரது மாங்கலிய சூத்திரமும் இதோ! என் இடதுகையில் மூடிவைத்திருக்கின்றேன். என்கையை விரித்துவிடுவேனாயின் அவைகளெல்லாம் தூருவாசர்சாபத்தால் சமுத்திரம் போயழுந்திய இந்திரன் செல்வம்போலாய்விடும். என்னை என்னமோ வென்றெண்ணாதை. முன்னமே என்வல்லமையாவுஞ் சொல்லியிருக்கிறேன். உன்னைநான் துரத்திவந்தபோது சபையில் யாரென்னைத்தடுத்தார்கள்? எவர்கள் என் அருகில்வந்தார்கள். விராடராசனாவது ஏனிப்படிசெய்தாயென்று கேட்டானோ? உனக்காயினும் உதவியேதேனுஞ் செய்தானோ? ஒன்றுமில்லையே. இன்னும் நான் சொல்லவேண்டுமோ? இவ்வேலை என்னையல்லாமற் இன்னொருவன் செய்திருப்பானாயின், இந்நேரம் அவனை எமலோகத்தில் புழுவாய்த்துடிக்கச்செய்வேன். யாவரும் என்காலில் வீழ்வதினால், சகலமுமெனக்கேசொந்தமென்று உனக்கே தெரியவில்லையா? இவ்விராடராசனுக்கு நான்கட்டிவைத்திருக்கின்ற பட்டத்தை இப்பொழுதேஉனக்குங்கட்டி உன்னைப் பெண்ணரசியாக்கிவைக்கிறேன். வேண்டுமானால் பிரத்தியக்ஷமாய்ப்பார். இஃதன்றியும் உன்னைக்காக்குங் கந்திருவருண்டென்று பேதைமதியால் நம்பிப் பெருமோசம்போயிருக்கின்றாயே! என்னைப்பேசாதும் பேசிக்கருக்குகின்றாயே! வீண்கர்வங்கொண்டு செருக்குகின்றாயே! இப்படிப்பட்ட சமையத்தில் உதவிசெய்யவாராதவர்களையும் உனக்கு உரியவர்களென்றும் எண்ணலாமா? அவர்கள்பண்டவாளத்தையும் பட்சத்தையுங் கண்டுகொண்ட நீ இனிவேறுபேசவும் போமோ! அற்பமனிதர்பேச்சு அவலமாய்ப் போயிற்று. நான் ஆருக்குமடங்காதவன், ஆர்படைக்குந்தோராதவன், என்னைக்குறித்து இன்னுமென்ன சொல்லப்போகின்றாய். உன் எண்ணந்தானென்ன; அடிவண்ணமகளே! ஒருவேளைஎன்மேற்குற்றம் எத்தனையோ இருக்கலாம். சிறியோர்செய்தபிழையைப் பெரியோர் பொறுக்கவேண்டுமென்று புண்ணியவான்கள் பேசியிருக்கின்றனர். அம்மொழிக்கு விக்கினமின்றி மன்னித்து என்னைக்காத்துப் பொறுமையுடன் ஆதரிப்பது உன்கருணைக்குரியகடனென்று தன் இருகரத்தையுந் தலைமேற்குவித்துச்சேவித்து என்கன்மனம் இளகி என்கருத்து முற்றவேண்டுமென்று காலில்வீழ்ந்தான்.

அவனை வண்ணமகள் பார்த்து, முகநயத்துடன் புன்முறுவலுங்காட்டி, நாம் நினைத்தகாரியம் இன்றைக்கே நிறைவேறுமென்று மாயச்சாயல் மயக்க நோக்கம் வஞ்சனைப்பேச்சுமுதலிய மார்க்கங்களினால் வசனிக்கத்தொடங்கினாள். சிங்கபலகீசகராசனே! நான் உம்மைத்தடுத்ததும் விரகதாபப்பட விடுத்ததும் என்னத்தினாலென்றால், என்மேலான மரபினாலும் நல்லொழுக்கத்தினாலும் நான்கொண்டிருந்த விரதத்தினாலும் உமது எண்ணத்தைப் பின்னப்படுத்தினேன். நீர் என்மேல் ஆசைப்படுமுன்னமே நான் உன்மேல் ஆசைகொண்டிருந்தேன். அஃதல்லாமலும், நீரென்மேல்வைத்த மோகம் நிலையானதுவோ? நெறியானதுவோ! வேறொரு பெண்ணைக்கண்டால் பின்வாங்குமோ? மனமேங்குமோ? என்னமோ? ஆண்பிள்ளைகள்புத்தி சபலமாமே

யென்று சோதிக்கு நிமித்தமாக இட்டமில்லாதவள்போன்று, அபிநயித்தேன். என்மெய்தொட்டிருந்த கந்திருவர் ஐவரும் என்னைக் கைவிட்டார்போலுங் காண்கின்றது, இனிக்காரியமேயில்லை, கனவானே! என்மேல்காவலுமில்லை, நிராதாரவான என்னைத் தராதரமறியத்தக்க நீர் அபேட்சித்தபோதே நான் புநிதவதியாயினேன். என்னைப் பெண்டாளநினைத்த உமக்குச் சீக்கிரத்தில் மேலான பாக்கியமுண்டாம். என்னால் உமக்கு விளைந்த வருத்தம் இன்றே கூண்டோடு போய்விடும். பெண்கள் குணமறிந்திருந்தும், வீணாக இத்தனைதூரம் பிரபலப்படுத்நிவைத்தீர். நீர் காணாதுகண்டு கருநிமே கித்ததும் வீணாசைகொண்டு விறுதாவாகப்பழிசுமந்ததும் நான் நாணாதுநாணி நலிபவாதித்ததும் நீரென்னைப் பிடிக்கவந்ததும் நான் இராசசபையிலோடிவிழுந்ததும் அங்கே உமக்கோர் அனர்த்தம் விளைந்ததும் ஊர் நாடெல்லாஞ் சிரிக்க உடம்பெடுத்ததும் ஏதோ? காலவித்தியாசத்தால் நடந்துபோய்விட்டது. போனது போகட்டும், இவ்வுலகத்தில் ஆலவிடத்தையும் அந்தகனையும் களிற்றியானையையும் வேங்கைப்புலியையும் அறிவில்லாத மூடரையும் ஒருவாறு நம்பலாம். சேலைகட்டியமாதரைக் கணமும் நம்பப்படாது. அஃதெவ்வாறெனில்,இந்திரன்முதலியதேவர்கள் வந்து, ஆடையாபரணந்தந்து ஆசைப்பட்டாலும் மாதர்கள் தாங்கள்கொண்ட மையலை வெளிப்படுத்தாமல், ஆசையற்றவர்போல் முகத்தைச்சுளித்து, முடுக்காய் முறுக்கி ஏன்என்னைப்பார்க்கின்றனை, நானென்னவேசியா? தாசியா? உங்களுக்குத் தங்கைதமக்கையில்லையா? எங்கள் வீட்டார் கண்டால், சும்மா விடுவார்களா? என்றுதலைகுனிந்து கலகலவென்று கண்ணீர் சொரிந்து சிறுநகைகாட்டிக் குறுவிபர்வுவழித்தெறிந்து மாராப்புத்துணியைப் பத்துத்தரமிழுத்திழுத்துச்சொருகி வாயைமூடிக் கையைநெரித்துச் சாலமான மாயநடைகளைக்காட்டிக் கால்கடுக்க நிற்பானேனென்று தனக்குத்தானே பேசிக்கொண்டு அப்பாற் சிலதூரம்போய் இப்பால்வந்து எட்டிப்பார்த்து ஒருபக்கத்திலொதுங்கித் தலையை நீட்டிக்காட்டி மறைந்து மறுபடியுங்கிட்டி உறவுபோற்கலந்து உடனே ஓடி ஊடிக்கலந்துகூடித்திரிவர். இதுபெண்களின் கெட்ட இயற்கை. இப்படிப்பட்டவர்கள் மனத்தையும் எப்படித் தெரிந்துகொள்ளலாமென்றால் அந்நிய மாதர்களாவது தாதிமார் முதலிய வேலைக்காரிகளாவது குழந்தைகளாவது அருகே நின்றால் அவர்கள் மேல்விழுந்தும் வல்லிக்கொடிபோல் துவண்டு வளைந்தெழுந்தும் பிள்ளையை அணைத்துக் கொஞ்சி முத்தாடியும் பூவைமுகந்தும் பெருமையாய் டம்பம்பேசியும் விறுதாவாய் ஒருவரையேபேசியும் அற்பமான மொழிகளை ஒடியமாய்ச் சொல்லியுங் கூசுவார்கள். கணவன் அவர்களைக் கண்டால், மாதர்கள் நிலநோக்குவார்கள். கணவன் அம்மாதர்களைப் பார்க்காதபோது தலையெடுத்துக் கணவனை நன்றாய்ப்பார்த்து நாணிநகைப்பர். இப்படி இன்னும் அநேக சால தந்திரங்களுண்டு. இக்குறிப்புகளையெல்லாம் வேறுபாடின்றிச் சரசநாயகன் தெரிந்து மேளத்திற்குத் தகுந்த தாளம் போட்டு எண்ணத்தை முடித்துக்கொள்வான். மற்றவன் கண்டால் அச்செய்தியறியாமல் இஃதெப்படிபோமோ? என்னுமோ? என்று பயந்து

ஓடிப்போவர்ன். ஆதலால் பெண்கள் கொண்ட மோகம் கல்லாதான்கற்ற கல்வியைப்போல் வெளியாய்ப்போய்விடும். இக்காரியந்தெரியாமல் அவசரப்பட்டவர்கள் பலனடையார்கள். நீரும் அவ்வாறே ஆத்திரப்பட்டுவிட்டீர். இப்பொழுதுதானென்ன? உம்து இட்டத்தை என்னிட்டப்படி முடிப்பதனுற் பாவமில்லே. உமக்குள்ள காமவெள்ளத்தைக் கடந்து கரையேறுவதற்கு வழியும் காட்டுகின்றேன். நீர் கள்ளமில்லாமல் வாரும். எத்தனை வகைச் சாகசங்கற்றிருந்தாலும், உள்வீட்டிற்கரணம்போடலாகாது. என் கணவராகிய கந்திருவர்கள் ஒருவேளை இச்செய்தியைத்தெரிந்துவந்துவிட்டால் உம்முயிரும்போம் என் தலைமயிரும்போம். அல்லாமலும்! நேற்று என்னைத் துரத்திய உம்மை இந்நாட்டிலுள்ள பெண்டுகளும் புருடர்களும் இராசன் முதலிய அனைவரும் நன்ருயறிந்தார்கள். உலகப்பிரசித்தியாய்விட்டது. அப்படியிருக்க நாமிருவரும் இன்றைக்கு உறவாடுவதைப் பார்த்தால் மெத்தவும் எளிதஞ்சொல்லிப் பழிப்பர்.

உம்முடைய தமக்கையாகிய சுதக்கணைக்குத் தெரிந்தால் என்னை மிகவுநம்பமாட்டாள். இதுவரையிலும், நான்பிழைத்த பிழைப்பும் பேய்ப்பிழைப்பாய்விடும். அல்லாமலும் பல பொல்லாங்குகளும்விளையும். இது நன்றன்று. சந்தனமணிந்த தோளானே! நீஇன்றிரவில் பத்துநாழிகைக்குமேல் வருவாயாகில், உன்னிட்டப்படி முடியுமென்று பாஞ்சாலி சொன்னுள். அத்தேன்மொழியோ கீசகன்காதிற்புகுந்து அமுர்தாரைபோல் விரகாக்கினியை ஆற்றியபோது வெளிவெழும்பிப்போக வழிபார்த்திருந்த பிராணன் நிலைத்து இளைத்தவுடம்பும் பூரித்துத் துன்பங்கள் நீங்கி இன்பப்பயிரேறத் தேகம் பரவசமடைந்து மோகஞ்சிறந்து மேகங்கண்டாடு மயிலே! இப்போதன்ரே உன்சொல்லாகிய ஆபரணம் என்காதிற்கணியாயது. இக்கர்மபூமியில் நான் உடலெடுத்தபயன் இன்றுதான் பயன்பட்டது. துர்ப்பலனுகிய நான் நற்பலனுற்றேன். என்பாவங்கள்யாவும்பறந்தோடிப்போயின. நானிதுவரையிலும் பண்ணிய புண்ணியம் இன்றே ஈடேறிற்று. என் பாக்கியமே பாக்கியம். நான் பிழைப்பதற்குத் துணைக்காரணம் உன்வாக்கியமே வாக்கியமென்று வாய்புதைத்துக் கைகட்டி மெய்யொடுங்கி வணங்கிப்பணிந்து என் ஆவியே! பாவியாகிய நான்எவ்விடத்தில் வரும்படியாய்க்கட்டளையிட்டருளுகின்றனை! என்னிட்டகாமியமே! என்று கேட்டான் கனவானே! நமது விராடராசனது கோட்டைக்கு மேலண்டையிலிருக்கின்ற மாஞ்சோலையிற் குயில்கள் கூவவும் மயில்களாடவும் கிளிகள்கொஞ்சவும் அளிகள் மிஞ்சவும் அலங்காரமாகப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட வசந்தமண்டபத்தில் வந்து சேர்ந்துவிடு. நீவருமுன்னமே நான்வந்திருக்கிறேன். மலைகள்மேலும் ஒட்டுந்தேரினையுடைய வல்லவனே! இப்பொழுது நான்சொன்ன இடம் சந்தடியற்ற தனியிடமன்ரே? என்று விரதசாரிணி வினவினுள். அம்மொழியைக்கேட்ட கீசகன் ஆகா! அதுவே யெனக்கும் தகுந்த இடம். தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் விரைவாய் வருகின்றேன். உமது திருமேனி புழுதிபடிந்து அசுத்தமாயிருக்கின்றதெ

ன்று கூச்சம் வேண்டாம். உமக்கு நல்லநல்ல ஆபரணங்களும் விலையேறப்பெற்ற ஆடைகளும் புநுகு சவ்வாது கதம்பம் கத்தூரி அந்தர் பனிநீர் முதலிய பூச்சுவைசளும் பூச்செண்டுகளும் பஞ்சகச்சாய் பரமான்னமும் பலகாரங்களும் பழவர்க்கங்களும் பஞ்சவிடய தாம்பூலங்களும் என்தலைமேல் சுமந்துகொண்டு வருகின்றேன். நீர் அவைகளை யங்கீகரித்து என் கோரிக்கையை யீடேற்றவேண்டும். கோமளமே! என்குலதெய்வமே! சித்தசன் கொலுக்கூடத்திற் கமைத்த பொக்கிடமே! என்பிராணனைஉமக்கே யொப்பித்தேன். இதையன்றி வேறேயுபசாரஞ் சொல்ல அறியேன். அடிமையாகிய சிறியேன். என்னுயிருள்ளவரையும் உம்மை நான் பிரியேன்; மறுமாதரைநோக்கேன். என்மேல் கருணைபாலிக்கவேண்டுமென்றுவிடைபெற்றுக்கொண்டு காளவிடத்தைத் தாகத்திற்கு உட்கொள்ளக்கருதியதரித்திரன்போலும், கீசகன்சென்று இச்சூரியனெப்பொழுது தொலைவானென்று அந்தகன் பாசந்தன்னைக்கலக்கும் அத்தமானத்தை நாடியிருந்தான். இப்பால் கொலைசெய்யுங் கூரியவேல்போன்ற கண்ணுளாகிய பாஞ்சாலி சுதக்கணை மனைக்குப்போய்ப் பூமாலை தொடுத்து பூசுவனவுங் கொடுத்து அவளுத்தரவின்மேல் மடைப்பள்ளிக்குச்சென்று மதகரி வீமனைக்கண்டு நாம் பேசிக்கொண்டபடி அவனும்இசையச்செய்துகொண்டேன். அப்பால் தெய்வச்செயலெப்படியோ? என்றாள். அந்தப் பாஞ்சாலியை வீமசேனன் பார்த்து காதலி! நீயேன் கவலைப்படுகின்றாய். ஒருவேளை அக்கீசகன் வாராமல் போவானாகில், அவனுடைய வீட்டுக்கு நானேபோய்க் கொல்லுகின்றேன். அஞ்ஞாதவாசத்தவணைக்குள் இவ்வூரார்அறிவார்களேயென்று நினைப்பையாகில் இந்தவிராடபுரத்திலுண்டாகிய ஆண்பெண்அடங்கலையுங் கொன்று துரியோதனாதியருக்குச் செயல்தெரியாமல் பண்ணுகின்றேன். சிலவேளை துரியோதனனறிந்து பெரும்படை கொண்டுகொண்டுவந்து அஞ்ஞாதவாசம் பூரணமாய் நிறைவேறாமற் குறைவுபட்டுக் கெட்டுப்போனமையால் மீண்டும் பன்னிரண்டாண்டு வனவாசம்பண்ணவேண்டிய நிபந்தனைப்படி போகவேண்டுமென்று புகன்றானாகில், அப்போதே அத்துரியோதனனையும் கௌரவரையுங் கொன்று, பள்ளத்திற்புதைத்து அத்தினபுரம் விராடபுரம் உபபிலாவிய முதலிய நரகங்களுக்கெல்லாம்தர்மராசனைப்பட்டங்கட்டிவைத்து, யாவருங் கொண்டாட எங்கும் பிரக்கியாதியாயிருப்பேன். 'சண்டி புரண்டால் காடு கொள்ளாது' என்னும் செய்தி யறியாயோ? சமுத்திரந் தடையாயிருப்பது கரையினாலேயா? சத்தியத்தினாலேயா? பாஞ்சாலி! நீயாதொன்றுக்கும் பயப்படவேண்டாம். போவென் றனுப்பினான்.

அவ்வாறே விடைபெற்றுக்கொண்ட பாஞ்சால ராசகுமாரிவீமசேனனைப்பார்த்து கெடிவீரசிங்கமே! அங்கம் பங்கப்பட்டழியப்போகின்ற கீசகன் என்சொல்லைநம்பி எப்படியுந் தப்பாமல் வருவான். நீரின்று இரவில் வந்து, காலதாமசஞ்செய்யாமல் சந்தடிகாட்டாமல், வேலையைமுடிக்கவேண்டும். வேந்தனே! இப்படியாக இதனை நடத்திவிட்டால்சாந்தமூர்த்தியா

கிய தருமராசனுடைய சித்தமுங்களிக்கும். இச்சொல் வெளிப்படுமாயின் நமதெண்ணமெல்லா மழிந்துபோய்விடும். அன்றியும் பதிவிரதையைக்கருதிய பாவியாகிய கீசகன் பாழாய்ப்போனான் பார்த்தீர்களாவென்று உலகிலுள்ள பதிவிரதைகள் மகத்துவமாய்ச் சொல்லிக்கொள்ளும் வார்த்தைகளுங் கெட்டுப்போய்விடும். பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம்பண்ணும்போது தவணையொருவருடங் கழிப்பதற்கு முன்னமே வெளிப்பட்டு விட்டார்கள். சொற்சோர்வுடையவர்கள். பஞ்சவர் பேச்சுப் பஞ்சுபோலாச்சே, பாரும் பாருமென்று யாவரும் நகைப்பர். நீங்காப் பழிச்சொல்லுமிலேபெற்றிருக்கும். ஆகையால் நீர்மனம்பொறுத்து அவசரப்படாமல்ஆடம்பரங் காட்டாமல் யாருமறியாமல் அடக்கமாய் முடிக்கவேண்டுமென்று கூறினாள். அம்மொழியைக்கேட்ட பலாயனன் சிந்தைமகிழ்ந்து நல்லதப்படியேயாகட்டும். நீமாத்திரம் பிறரறியாமல் விரைவாய் அவ்விடம் வந்துசேரென்று தலைவாயல் வரையிலும் வந்து, விடைதந்து இச்சூரியனெப்பொழுது தொலைவானென்பதாய்ச் சிந்தைவருந்தி மயங்கியிருந்தான். இவ்விடத்தில் பாஞ்சாலி சுதக்கணைக்கு வேண்டிய சித்திரான்னமும் திவ்வியமணக்குழம்பும் கச்சாயவகைகளும் கதம்பப்பொரியதும் அறுசுவை யுண்டியும் சுயம்பாகியாகிய வீமனிடத்தில் வாங்கிவந்து கொடுத்து வழக்கப்படிவேடிக்கையாக விளையாடிச் சந்தனுதிகந்தந்திமிர்ந்து சிந்தைநோயற்ற செல்வியைப்போல் கபடமில்லாமல், யாருடனுங் கலந்துறவாடிக்களங்கமில்லாமற் காலம் பார்த்திருந்தாள். அப்படி யிருக்கும்போது எட்டுத்திசையுங்கெட்டழிந்தோடிய இருளெல்லாந் திரண்டு தம்பகையாகிய சூரியனை வெல்வான் வந்ததுபோல் சூழ்ந்து கொண்டது. அவ்விருளைக்கண்டுபாவத்திற்குப்பயந்தோடும் பாக்கியவான்களைப்போல் புண்ணியப்பொருளாகியவெய்யவன் மேற்றிசைபுகுந்து அத்தமான கிரியை அணைந்தான். அக்காலத்தில் அளவிறந்த ஆசையை அடைத்து வைத்திருந்தான் மோசம்போவதறியாமல், வண்ணப்பெண்மேல் மையல்கொண்ட காமவிகாரத்தினால்வாசநீராடிபூசாவிதி முடித்துப் போசனமுண்டு இளைப்பாறவுஞ் சமயமெய்தாமல் சந்தன குங்கும சிந்தூர பாளித கந்த கதம்பமிகுந்த சுகந்த நிறைந்த மகரந்த மலர்மாலையும் நவமணிபதித்த அழகிய ஆபரணமும் சித்திரித் தெழுத்தினிற் பிரித்துக் கொத்து முத்து வைத்திழைத்த சரிகைகள் சுற்றிய ஆடையும் கொத்துச்சரப்பணி இரத்தினமுருகு முத்திரை மோதிரம் அத்தகடகம் விசித்திரமகுடம் பவித்திர முதலிய வணிகளுமணிந்து வாசத்தாம்பூலமும் போசனபாயச பொரிவிளங்காயும் பண்டுபலாதிகளுங் கொண்டு கறுத்த இருளில் காலால்வழிதேடி தென்றிசைக் கோமகன் திசைநோக்கிச் செல்வதுபோல் அந்த மடந்தை சொன்ன வார்த்தையை மெய்யென்றேநம்பிச் சுதக்கணை தம்பி மாஞ்சோலையிலிருக்கிற வசந்தனுக்கிசைந்த மண்டபமே நாடி யோடிவந்தான். இவ்வாறுவந்த கீசகனுடைய பிராணனென்னும் பனியைக்கெடுக்கப்புகுந்த சூரியன்போன்ற பாஞ்சாலி இரவுதோன்றியவுடனே விரைவினீராடி நித்திய செபமுடித்துச் சூரியன் முதலிய தேவர்களையுந் தொழுது அந்தப்புரம் விட்டுப் புறப்பட்டுப் பகைவர்களுயிரையும்

சமையல் வேலைகளையும் இம் என்பதற்கு முன்முடிக்கும் செம்பொன்மலை நிகர்த்த தோளும் வீரகண்டை தாங்குந்தாளும் உடைவாளுமுடைய வீமசேனனிடத்திற்குப்போய் விரைவிற் புறப்படுமென்றாள். அவள்சொல்லைக்கேட்ட வீமசேனன் எவ்வேளையில் எவ்வேடமெடுக்கநினைத்தாலும், அவனிட்டப்படி அமைய வரங்கொடுத்திருக்கும் எமதருமராச னருளினாற் சகலாபரண அலங்கார சௌந்தரியப் பெண்ணுருவெடுத்துக் கையில் அள்ளிக்கொள்ளத் தக்கதாய்க் கலந்த கள்ளிருளில் மெல்லமெல்லச்சென்று, கீசகக்கள்ளன் வருவானோ வாரானோவென்று மனக்கவலைகொண்டு கநகமயங்கொசித சிகரமாடமுடைய பளிங்குமண்டபத்தை அடுத்துத் தெய்வப்பெண்ணாகியபாஞ்சாலியை அவ்விடத்திலொளித்து வண்ணமகள் போலாகிய தன்னுருவத்தைத் தூணில் மறைத்துக் கண்சிமிட்டாமல் காட்டுவழிமேல் நாட்டம் வைத்திருந்தான்.

அவ்வேளையில் செத்தபிணம் மிக்கபணிபூண்டு வருவதுபோலும் எக்கியத்திற்கிசைந்த நெய்யை நக்கிப் புசிக்கவரும் நாய்போலும் வருகின்ற கீசகன் உயர்ந்த மாமரச்சோலையில் சாந்தினால் மெருகிட்ட வெண்ணிறமுள்ள வசந்தமண்டபத்தைக்கண்டு கெண்டையங்கண்ணாளிங்குவந்தனளோ ஒண்டியாய் வரப்பயந்து நின்றனளோ! வந்து என்னைக் காணாமையாற் சென்றனளோ! மறைந்திருந்து மனஞ்சோதிக்கின்றனளோ! என்னமோ! அவளெண்ணம் அறியேன், வாசப்பூமலர்மேனிமானே! என்று கூவிக்கொண்டு நின்றான். அவனை ஆசானுபாகுவாகிய தண்டதரனென்னும் வீமன்கண்டு வெட்கங்கொண்டொதுங்கும் மாதரேபோல் அத்தூண்மறைவிலொதுங்கித் தலையைநாட்டிச் சந்திர பிம்பமுகங்காட்டி, இன்னும் பற்பல அபிநயங்களால் அவனைப்பேய்போலாட்டி அடங்கிக்கிடந்தகாமத்தீயைத்தொடங்கச்செய்த சிமாட்டியை அக்கீசகன் கண்களாரக்கண்டு பெண்ணுருவெனச் சிந்தையுட்கொண்டு குனிந்து நேராக அத்தையல் கால்மேற்பணிந்து இவ்வனத்துள் என்னைபொருபொருளாகவேமதித்து, என்மேலிட்டம்வைத்து, இத்தனைதூரம் தனித்துக் கால்வருந்தத்தக்கதாக வரும்படி பொருத்துகின்ற தவம் யாருடைதோ! இத்தலம்புரிந்த தவமோ! என்குலம்புரிந்த நலமோ! வலம்புரிக் கழுத்தினையுடைய மாதே! அறியேனறியேன். காலதாமசமாயிற்றேயென்று கோபங்கொள்ளவேண்டாம். நான் மானபிமானம் பாராமல் உம்மைத்துரத்திவந்து மனக்குறையினை விளைத்தேன். அப்பிழைபொறுத்து எளியேனை ஆண்டருள வேண்டுமென்று நலம்பொலிமணிமுடி நிலம்பட வீழ்ந்து மீண்டுமெழுந்து பின்னும் விழுந்து அன்னமே! என்று புகழ்ந்து செங்கையிரண்டையுஞ்சிரமேற்குவித்து அவள்முகத்தைப் பார்த்துச் செவ்விளநீரைப்பழித்துத் திரண்ட இரண்டு கொங்கையையுடைய மங்கையே! புனல்படிந்து புகைபரந்து புதுகளைந்துபூவணிந்து புள்ளுறைந்து பொங்கு மங்குலைப் பொருத்தித் தங்குகங்குலைத்திருத்தி முடித்த குழற்பூங்கோதையே! குழலிசைக்கினிய மொழிபல பயிலும் பேதையே! உமக்குத் தீதுநினைத்த மாபாவியானதையால் நீர் மனவைரம் வையா

மல் என்னை யாட்கொள்ளவேண்டும். இக்கடுங்காட்டில் கொடிய கயவர் மனமேபோற் கறுத்த இருளில் அடியேன் பொருட்டுக் கலவியை நாடிவந்து காத்திருக்கும் உமக்கு நானென்ன உதவி செய்யப்போகின்றேன்! எவ்வகை யுபசாரம் பண்ணுவேன்! நீர் கிருபைவைத்து நடத்த நினைத்த உதவிக்குப் பிரதியுபகாரம்புரிய வகையறியேன். நீரின்றுகொடுக்கப்போகிற தனத்திற்கு நான்கோடிதனங் கொடுத்தாலும் ஈடாகாதே. என்னுசைக்கண்ணே! இனிமேல் நானென்செய்வேன், ஆயினும் பதிலுதவி செய்வதற்கு ஒருவகையிருக்கின்றது. அதென்னெனில், என்னுயிரை உமக்கு ஒப்பிப்பதுதான் உயர்ந்த கைம்மாறு. இதைப்பார்க்கிலும் விதியில்லை. இப்போதும் தமக்குவேண்டிய பொருள்களெல்லாம் இதோ கொண்டுவந்திருக்கின்றேன். தயைபாய் அங்கீகரித்துக்கொள்ளும். திப்பிரமைகொண்ட என்னைத்தாங்கிக்கொள்ளும். ஏன்சும்மா விருக்கிறீர்! ஐயோ! பொழுது அநியாயமாய்ப் போகின்றதே. பலவுணவுப் பொருள்கள் ஆறியழிந்து போகின்றதே. கிஞ்சுகவாய்திறந்து கொஞ்சம் பேசப்போகாதோ! அஞ்சாதையென்று ஆதரிக்கப்படாதோ! கெஞ்சியவென்னை ஈடேற்றப் போகாதோ? தித்திப்பான உன்மொழி என்செவிக்கேறுங் காலமாயிற்று நீயிப்படி மர்மமாயிருந்தாயானல் மன்மதனல் நொந்து வெந்துபோன நான் கடைத்தேறுங் காலமெதுவோ! நீயெனக்கிசைந்து இவ்வளவுதூரம் அருகில் வந்திருந்தும் ஒட்டாமலெட்டி யிருப்பது என்னபாவமோ! உத்தமமாதர்களுக்குள்ள இயற்கையோ! எதுவும் உன்கருணைக்கெதிர் நிற்கமாட்டாதே. தழைந்திருக்குந்தோப்பில் தனித்திருக்கு நாமிருவரும்கொஞ்சிவிளையாடவேண்டாமோ! ஆவிதளங்கத் தாவித்துளைக்கும் பாவிமதன் கணைபோபொல்லாதே. என்னிட்டதெய்வமும் எவ்வகை ஐசுவரியமும் உன்னையன்றி வேறென்றும் இல்லை. உண்மையாக நம்பினேன். உன்காலடியழகுக்கிடபடாத என்மனைவிமார்கள் தேகத்தையும் அவர்கள்மேலுண்டான மோகத்தையும் இன்றேதுறந்தேன். உன்னுணை. என்கண்ணுணை. இன்றுமுதல் என்றென்றைக்குங் கண்ணெடுத்தே பார்க்கமாட்டேன். இதுவே சத்தியம். என்சொல்லே நித்தியம், உன்னையிணங்காத நாளே அநித்தியம். என்னைப்பற்றி யெரிக்குங் காமாக்கினி வெதுப்பிக்கருக்கிக் கவிழ்க்கப் பார்க்கின்றதே. இத்தருணத்தில் நீகைகொடுக்க வேண்டுமே, இனித்தாளமாட்டேன். இன்னுஞ் சற்றுநேரம் போனல் உன்னை நான் ஆளமாட்டேன். வாளாயுதக்கண்வாய்ந்த என் மனோரதமே! என்று அவளுக்கு நேர்சென்று நின்று ஆகா! நீ முந்திப்பேச லாகாதோ! பேசினல் உன்வாய்முத்தஞ் சிந்திப்போய்விடுமோ! என்மேல் கோபமோ! அல்லது மனத்தாபமோ! பெண்ணரசே! என்று பலவாறுகப் பஞ்சைப்பாட்டைப்பாடினன்.

அவன்பிதற்றிய மொழிகளைக் கொஞ்சநேரம் வரையிலுங் கேட்டிருந்த வீமன் தன்முகத்தைக் கீசகனுக்குக்காட்டாமல் தூணில் மறைந்து ஒருபக்கத்திற் கொருபக்கந்திரும்பி அவனைப் பாக்கப் பார்க்க

மனமுறிந்த ஆணவமல முதலான அஞ்ஞான விருள்மூடி நிற்போர் வா சாகயிங்கரியஞ் சொல்லி ஊர்மெச்சப் பால்வார்த் துண்பார்போல் உலகமெச்சச்செய்கின்ற வெளிப்பகட்டுப் பூசாவிதியின் புன்பயனுல் அப்பூசைசெய்பவரையும் அவர் கால்வழியையும் நாசமாக்க நகைக் கும் கடவுள்போல் நகைத்துக் கோபாக்கினியால் கீசகனைக்குறித்து வெறித்துப் பார்த்தான். அப்போது கீசகன் கவுரவமாய்ச் சிறித்து வண்டுலாவு மலர்க்குழன்மாதே! என்மேலன்பு இன்றுதான் வந்ததோ? இத்தனைநாட்சென்றதோ! இவ்வளவு தயவு போதுமென்று தன்னிருகரத் தினுந்தாவி என்பிராண சஞ்சீவியேஎன்று தழுவப்போனான். அத்தூணில் மறைந்திருந்தவீமன் கீசகன்கைக்குச்சிக்காமல் யானைத்துதிக்கைபோன்ற தன்னிருகையையுநீட்டி முறைவழுவித் துறைதப்பித் தழுவ நீட்டிய கீசக ன்கையிரண்டையும் பற்றிக்கொண்டு நெருக்கினான். நெருக்கவே செந்தே ள்கொட்டித் திகைப்பதுபோல் துடித்து உதட்டைமடித்து ஈதென்னவதி சயம்! ஐயோ! விபரீதமாகத் தோன்றுகின்றதே. பெருமோசம்போல் கா ணுகின்றதே, நாமெண்ணிய வண்ணமகளாயின், அவளுடைய உள்ளங்கை தாமரைமலர்போலு மெல்லியதாயிருக்குமே இக்கை கல்லினுங்கடிதாகக் காணுகின்றதே. இப்படி எமலோகத்திற் கிழுக்துக்கொண்டு போகவந்த காலதூதராற் கழுத்திற்கிடுங்கத் திரித்த கயிறுபோலு மிருக்கின்றதே. இது ஆர்செய்தமாயமோ? அவள்தேடிய உபாயமேயாமோ? என்னுமி ருக் கபாயமோ? ஒருவேளை நம்மை நம்பவைத்து மோசம்பண்ணி யிருப் பாளா? ஏறவிட்டேணியைவாங்கும் புன்னெறியுடையாரைப்போலு மினை ப்பாளா? நமது தமக்கையினிடமாய் அண்டிப்பிழைக்கவந்த அநாதை வ ஞ்சனை விரோதமனத்தில் வைப்பாளா? கொஞ்சமேனும் நன்றிகிளையா ளா! என்னைச்செய்யும் வினைச்செயலெப்படியோ வறியேனே. ஆயினும் 'மாதர்களை நம்பலாகாது' என்பது பெரியபேச்சு, அச்சொல்லை யெண்ணு மிடத்தில், எல்லாப்பெண்களும் மோசமுள்ளவர்களா யிருப்பார்களா? சிலவேளை நாம்கொண்ட மோகசோபத்தினால் மதிமருண்டு சத்திமாறிய தோ! நம்மை இங்கே வரச்சொன்னகாதலி அவளோ? அல்லது இன்ன மெவளோ! இதை நன்றாய்ச் சோதித்தறியவேண்டுமென்று தனக்குள்ளே மனக்கலக்கங்கொண்டு என்கையைப்பிடித்த அடி தையலே மையலா கிரிவந்தது நீவசமாய்ப்பிடித்த என்கையைச்சற்றே விட்டுவிடடி. நீபிடித்த பிடிப்புக் கிளையாதிருக்கின்ற என்வல்லமையைப்பாரடி. உன்பலத்திற்கெ ன்பலம் ஒன்பதுபங்குயர்ந்ததடி. உன்னைநான் அடிபிடி யென்பதாய்ப் பேசுகின்றேனென்று நீ ஆயாசப்படவேண்டாமடி. காமச்சரசக்கலவிக்க ளிப்பால்கசிந்துவருகின்ற உசிதவார்த்தையடி. என்னிருகண்ணே! காதலி ப்பெண்ணே! என்றுதன்கையைப் பிடுங்கினான். இவனெத்தனையோ பரா க்குக்காட்டி அயர்ப்பில் தன்கையை யிழுத்தபோது, சாக்கிரதையிலிருந்த வீமன் தான்பிடித்தபிடிவிடாமல் வலதுகையைநீட்டி இடதுகையையிழுத் து இடதுகையைநீட்டி வலதுகையையிழுத்து, கிலமத்திட்டுத் தயிர்கடை யுந் தன்மைபோல் மாறிமாறியிழுத்து, வலித்துத் தூணுடன்தேய்த்து, அவனிருகரத்தையுஞ்சேர்த்துத் தன்னொருகரத்தால் பற்றிக்கொண்டு,மற் றொருகரத்தினால் மொத்தியும் குத்தியும் கிள்ளியும் நிமிட்டியும் பிசைந்து ம் சரசக்குத்து சரசக்கிள்ளென்றுசொல்லியும் ஒவ்வொருகிள்ளுக்கு அள் ளுச்சதை தள்ளும்படியாயும் ஒவ்வொருகுத்துக்கு உழக்கிரத்தம் பீறிட

வுஞ்செய்து அவன்தேகத்தைவருத்தியுந் தீமைபுரியும்போது, கீசகன் சகிக்கமாட்டாமல் வாய்விட்டிரைந்து நாடாதும்நாடி வாடாமுகமும்வாடி தேகம்வியர்த்துச் சூரசங்காரச் சுப்பிரமண்யக்கடவுளோ! இராக்கதவைரியாகிய மகாவிஷ்ணுவோ என்று நிலவரம்விண்டு கலக்கக்கொண்டு வகைகப்பி மாட்டிக்கொண்ட தனகைகளைத் தன்னாற்கூடியமட்டும் சாகசஞ்செய்து வாங்கினன்.

அப்போது அவ்வீமசேனன் மின்னொளிபோல விளங்கிக் கீசகனுடைய இரண்டுகையில் ஒருகையைவிட்டுவிட்டு, மற்றொருகைப்பிடித்தபிடிதளராமலிறுக்கி விறுவிறென்று சுற்றி விசைக்கயிற்றை இழுப்பதுபோல் அவனுடைய தலைமயிரைப் பற்றிப்பிழுத்து, நான்குதிசையிலுங் கரகரவென்று சுழற்றி மேலேதூக்கிக் கீழேதாக்கினன். அப்போது கீசகன் பெருமூச்சிட்டெழுந்து ஐயையோ!- ஆண்டவனே! பெண்ணென்றெண்ணியஎண்ணம்போயிற்றே, இப்போதிது பேயுருவாய் வந்துவாய்த்ததே; இனிப்பிழைக்கும் வழியெப்படி? இவ்வேளையில் இளைப்போமாயின் வந்திருப்பவன் மனிதன் எப்படியும் நம்மை மாட்டுவான்போலிருக்கின்றது; நாமிவனை முந்திமுடித்துவிட்டால், பின் அப்பெண்ணுடன் கூடிப்பேசிக்கொள்ளலாம். இவனைப் பிராணனுடன் விடப்போகாதென்று விரைந்தோடிவந்தான் வந்தகீசகனை வீமன் மடக்கினன்; மடக்கியபிடியைச் சடுக்கென்று தட்டினன்; தட்டியகீசகன் தலையில்குட்டினன்; குட்டியவீமனை முகத்தைப் பார்த்துக்குத்தினன்; குத்தியகீசகன்மேல் கொதித்தெழுந்து குதித்து அவன்மூக்கில் தாக்கினன்; தாக்கியவீமனைத் தடுத்துப்பிடித்தான்; பிடித்த கீசகனைப்புரட்டிப் பூமியில்சாய்த்தான்; சாய்த்தவீமனைக் காலால்தளைத்தான்; தளைத்தகீசகனைப் புரட்டியுதைத்துத் தள்ளினன்; அவ்வாறு தள்ளியவீமனுக்கிளையாமல் பின்னுங்கீசகனெழுந்து, முன்பேசிய ஆணவமும் நாணமும் மானமும் விடாமல், மற்போர் கொடுக்கவந்தான்; அவ்வேளையில் வீமன் ஆக்ரமித்தெழுந்து எதிரிதோள்மேற் கோடையிடிபோல் இடித்தான், அவ்விடியைப்படியத்தாங்கிய கீசகன் இவனை முடியப்பார்ப்பேனென்று, விடியற்காலத்துக் காக்கைபோல் கதறிக்குத்துக்குத்தவதில் கதறக்குத்தினன், அவன்குத்தியகுத்தை மகமேருவோடொத்த தோளில் தாங்கிய வீமன்வருந்தாமல், முகஞ்சுளித்துத் தன் கைவிரல்களை மடக்கிக் கீசகன் மார்புகிழியவும் அவன் தலையெழுத்து அழியவும் முதுகெலும்பு நொறுங்கவும் பழுவெலும்பு முறியவுந் தலையோடுடைந்து இரத்தந்ததும்பி வழியவும் தாக்கினன்.

அத்தாக்குதலைமேற்கொண்ட கீசகன் கார்காலமேகமேபோல்கனைத்து, வீரங்கொண்டுசுழன்று, இருகையையுமுடக்கி உக்கிரங்கொண்டெழுந்தான்; எழுந்தவன் கையிரண்டும் கொழுந்தென வாடும்படி தட்டிவிட்டுக்குலத்திற்குப் பழுதுதேடிக்கொண்ட கீசகனைத்தன்னித் தன்காலால் அவன்காலைப்பின்னிச்சேர்த்துத் தூக்கியெடுத்துப் பாஞ்சாலியை யழைத்துத் தீராமோகங்கொண்ட விகாரவடிவனைப்பாரென்று சூறுவளியிலகப்பட்ட துரும்பேபோலும் வானிற்சுழலுங் கறங்கோலைபோலவும் சுழற்றிக்கொக்கரித்துப் போர்த்திறம்கொண்ட சிங்கம்போல் பூரித்துப் பூமியிலெறிந்தான்; வீமனால் எறியப்பட்டுவிழுந்தகீசகன் காமவின்பத்தைக் கட்டுடன்மறந்து மதிகுலந்துலங்கப்பிறந்த பாண்டவர்களில் இவன் வீமனென்றே அறிந்து தன்பதிவறைந்து ஐயோ! இவனையிம்மட்டும் விட்டுவிட்டு என்னேட்டத்தை நீ பிடிக்கமாட்டாய் போடா போவென்று

ஓடலாமென்றால் இவன்நம்மைஎந்நாளைக்கும்பிராணனோடுவிடப் போவதேயில்லை; நாமிதுவரையிலும் பிழைத்தபிழைப்புக்கெல்லாம்பழுதுநேர்ந்துபோமே; நம்மையாருஞ்சட்டைபண்ணார்களே; பெட்டாகிய குட்டுக்கெட்டுப்போய்விடுமே, ஆதலால் இவனை ஒருகைபார்ப்போம். நமக்கு நல்வினைப்பயன் கைகூடுமாயின் இவனை நமனுலகஞ்சேர்ப்போம். ஆகாமற்போனால் இவனிடத்தில் நமது உயிரைத் தாரைவார்ப்போமென்று எழுந்துவிரைந்து கந்துபாய்ந்து வீமன்தலைமயிரைப்பிடித்துக் கைவிரலிற்சுற்றி நொடிந்துக் கறகறவென்றுசுழற்றி நிலத்திடையேதள்ளித் தன்னிருகாலாற் புரட்டிப்புரட்டி யுதைத்து அவனுடலைத் தேய்ந்துமழுங்கிய திரண்ட கற்றூண்போலாக்கி உள்ளங்கையிரண்டும் உதிரவெள்ளங்காணமிதித்துத் தேகஞ்சிவக்கச்சீறி அறைந்தான். இவ்வாறாகக் கீழே வீழ்த்தி மோதிப்பிடித்துமாறியடித்து மொத்துகின்றகீசகன் இடத்தில் வகைமோசமாய் மாட்டிக்கொண்ட வாயுகுமாரனைப் பாஞ்சாலிகண்டு, பரதவித்துப் பாவம்பெரிதோ? புண்ணியஞ்சிறிதோ? சத்தியக்குறைவோ? அசத்தியநிறைவோ? தெய்வங்களா! வனதேவதையே! வீமராசனுக்குப் பொல்லாங்குநேரிட்ட பின்னர் இம்மேதினியில் நானும் பிராணனோ டிருக்கவேண்டுமோ? அவருக்கு முன்னே என் உயிரைமாய்த்துவிடுகின்றேன். முதல்வனே! என்றழுதுபரதவிக்கும்போது, இப்பாஞ்சாலியினதுதுன்பம்வீமசேனன்காதில்நுழைந்தது. அதனால், வீரசந்தமேறி மேலாள் கீழாளாகப்புரட்டிக் கீழாள் மேலாளாகிக் கண்ணுருட்டி அஞ்சவேண்டாம், உயிர்விடமிஞ்சவேண்டாம், பாஞ்சாலி! பதறாதை, இதோ நான்பிழைத்தேனென்று தேக ஆயாசந்தீர்ந்து, பிராணனைத்திரணமாகமதித்து, நீருண்டு வேகங்கொண்டெழுந்த மேகம்போலிரைந்து பூமியில்தோய்ந்து குபீரெனப்பாய்ந்து கீசகனைப்பற்றிக் கிறுகிறெனச்சுழற்றி வானத்திலெறிந்தான். ஆகாயத்திற்போன கீசகனானவன் வாயுவைத்தம்பித்துக் கேசரி மார்க்கத்திற்கிளம்பி விறுவிறெனச்சுழன்றுவீமசேனன்றலைமேற்குதித்து அவன்கழுத்தைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டு தொங்கினான்.

அக்கீசகனை வீமசேனனெடுத்துக்கொண்டு அவனிருகரத்தையுந் தன்னொருகரத்திலடக்கி ஆளையிழுத்துக் கீழேபோட்டுமடக்கி வயிற்றைமிதித்து வாயிலுமுதைத்துப் பற்கள்பதினாறையும் உதிர்த்தான். வீமனிடித்த இடியினால் கீசகன்வாய்கிழிந்து கெட்டநினைப்பழிந்து பல்லெல்லாம் பதர்போற் பறந்துபோனமையால், பொக்கைவாய்க் கீசகன் புறங்கொடுக்காமல் உரங்கொண்டோங்கி மரங்களைப்பிடுங்கி வரிசைகள்தொடங்கினான். வீமசேனனும்அவனை விடாமல்தொடர்ந்து வேண்டியமரங்களைவேருடன்களைந்து வகைவகையான போர்புரிந்து வீரவெறிகொண்டாடினான். ஒருவரையொருவர்விடாமல், இடம் வலம்வருதல்கெடாமல், இருவரும் அடிகள்படாமல், ஆயுதமென்பதே எடாமல் அடிக்கடி முதுகுகொடாமல் சோபதாகந்தொடாமல், மிகசூக்குமமாயொட்டிநடத்திய போரையும் அவர்கள் மனோதிடத்தையும் தேகாபிமானம் விட்டு அமர்செய்கின்றதிறத்தையும் நாச்சொல்லத்தக்கதன்றே, வல்லவனாகிய ஜனமேஜயமகாராஜனே!

இவ்வாறாக இவர்களிருவரும் தத்தம் முழுவலியையுங்காட்டி மாறாமல் போராடிவரும்போது பொழுதுவிடியப் போகின்றதே, நமது பூர்வோத்திரம் வெளிப்படுமே யென்று வீமசேனன் துடித்து இவனை விரைவில்முடித்துவிடவேண்டுமென்று நினைத்துப் பங்கப்படாத சிங்கமானது அற்பமிருகத்தை அமுக்குவதுபோல் அக்கீசகனை அமுக்கிக்காலிரண்டையும் மேலாகத்தூக்கிக் கவிழ்ந்தவகையாய்ப் பூமியில்தாக்கி, அவன்மீதேறி அமுக்கி உட்கார்ந்து, மார்பும் தோளும் வயிறும்பிடரும் வலிப்பெடுக்கக் குத்தினான். அவன் குத்தியகுத்தைச் சிங்கபலம்பெற்ற கீசகன் தடுத்து அதையொருவரவு செலவில்வைக்காமற் காலால்வீமன் கழுத்தைமடக்கித் தன்னிருகையையும் தறையில்தேய்த்து வாயுகுமாரன் தலையோடு நெறியத்தாக்கினான். அக்கீசகன் அறைந்த அறை வீமன்தலைமேல் விழ்ந்தகாலையில் அரைநாழிகைவரையிலும் அறிவுமயங்கி நெருப்பில் நெய்விட்டதுபோற் கோபங்கொண்டோங்கிக் கருப்பைக்குள் கட்டுப்பட்ட பாலகனைப்போல் அடங்கியகீசகனை அசையவொட்டாமல் ஒரே அழுத்தாக அழுத்தி அவன்தலைமயிரைக் கெட்டியாய்ப்பிடித்து வச்சிராயுதத்தால் மாட்டுவதுபோல் கையைமுடக்கி நகங்களைநீட்டி முட்டி அடிக்கொப்பாய் அவன் உச்சியில் குட்டினான். அதனால் கீசகன் தலைகிழிந்து மலசலாதிவழிந்து கண்ணிரண்டுங்குவிந்து காதில் உதிரம்பொழிந்து அந்தக் கரணவாதனையாற் பதறி வந்த மரணவேதனையினால் கதறி ஆவியழிந்து பூமிமேல் சாய்ந்துவிழ்ந்தான். மண்மேற் கிடந்தவிராடன் மைத்துனனை அம்மட்டில் விட்டுவிடாமல் வாரிப்பிடித்து மார்பொடிய இடித்துக் கையைமுறித்துக் காலைக்குறைத்து மெய்யைச் சுருக்கிக் கையால் பிசைந்து மாவிளக்குப் போடுவதுபோல் மாமிசத்தைத்திரட்டி உண்டையாகவைத்து அவ்வுண்டையின் மேல் மீசையும்கண்களும் விரிந்தவாயும் பரந்தமுகமுமுடைய தலையைநாட்டித் தன்தலையையாட்டிப் பணிப்பெண்ணுக்காகக் கொண்டுவந்த வஸ்திராபரண வலங்கார புட்பங்களையும் சூட்டிப் பண்டுபலாதி கச்சாயங்களையும் அவன்கொண்டுவந்த தலைவாழையிலைபிற் படையல்போட்டுக் கந்தகதம்ப கஸ்தூரிகளை வாரி இறைத்து இவ்வுலகவழக்கத்தில் பேயோட்டிப் பதிபோடப் பூசாரிகள் சிங்காரிக்கும் பொம்மை முகம்போலமைத்து இந்தவேடிக்கையைப் பாஞ்சாலிக்குக் காட்டிக் காமப்பேயோட்டிக்காட்டில் பூசைபோட்டுப் பேய்ப் பதிசிங்காரித்திருக்கின்றேன் பாரென்று சொல்லுவோ மென்பதாக நினைத்துக் காயுங்கனியும் பூவுமாயிருந்த ஒருபெரிய மரத்தைப் பிடுங்கிக் கசக்கித் தீயெழத்தேய்த்து பூ பூ வென்று வாயினாலூதிப் பக்கத்திருந்த காட்டைக் கொளுத்திவிட்டு எங்குஞ் சோதியாய் எரியும்போது வெற்பெனத்திரண்ட சொர்க்கத்தைச் சுமந்த கற்பினி லுயர்ந்தபத்மினிப்பெண்ணே! உன்கால் மேல் விழ்ந்த கடையனைப்பார், கசடனைப்பார், கயவனைப்பார், காமக்கலிப் போடாடிய பேயனைப்பாரென்று காட்டினான்.

வேலுஞ்சேலும் விழியாயமைந்து பாலுந்தேனும்மொழியாய்ச் சமைந்த பங்கயப் பெண்பெருமாள்பார்த்துத் தன்வயிறும் வாயும் மனமும் பதறிக் கதறிய வாட்டமொழிந்து வீமசேனன்மேல் நாட்டமாயிருந்தாள். அவரவர்தே

டிய வினைப்பயன்களை அநுபவித்தே தீரவேண்டுமல்லது அநுபவியாமல்விட மாட்டாது. தாம் ஒருகாரியத்தைப்பெற எண்ணினால் நினைத்தபடிமுடியாது. எண்ணியவண்ணம் எவர்களும் பெறவில்லை. எண்ணமுன்னுக்குவாராது. உண்மைக்குத் தெய்வபலமிருந்தொருவேளை முடிந்தால்முடியும். சிங்கபலம் பெற்ற கீசகன் பாஞ்சாலியினளவில் நினைத்தபொல்லாங்கனைத்தும் நாமெல் லோரும் நாவால் பேசப்படாத கொடுங்காரியமாதலால், அதனால்வந்த மித மற்றபலனை உடனே அவன் அனுபவித்தான். அதைப்பற்றி நாம் பேசவேண் டும் அவசரமில்லை. கோபதியாகிய பூபதியே! என்று ஜெனமே ஜெயனுக்குச் சொல்லி வைசம்பாயன முனிவர்மேலுஞ் சொல்லத்தொடங்கினர். இப்பால் வாயுமகனாகிய வீமசேனன் அக்கினியில்பிறந்த அணங்கைநோக்கி உமக்குப் பகையான கீசகன் ஒருவகையாய் அழிந்துபோனான். உன்விட்யத்தில்இன்னும் யாராவது மன்மதகோலாகல மயக்கத்தைக் கொண்டார்களாகில், அவர்களு மிப்படியே அநுபவிப்பார்கள். நீ ஒன்றுக்குமஞ்சாதை. இனி நாம் இவ்விடத் திலிருப்பது தகாது. பொழுதுவிடியுமுன் போய்விடவேண்டுமென்று காட் டைவிட்டுப் புறப்பட்டு, மச்சநாட்டைநோக்கி வருகையில், வழியில் ஓர்தாம ரைக் குளத்திலிறங்கித் தேகப்பரிசுத்தஞ் செய்துகொண்டு தீர்த்தமருந்தித் தெய்வப் பிரார்த்தனையுடன் சுதக்கணே அரண்மனைக்குப் போம்படி பாஞ் சாலியை அனுப்பி வீமசேனன் மடைப்பள்ளிக்குப்போய் மலரணைமேற்படு த்து நித்திரைவாராமல் குத்துக்காலிட்டுக் கொண்டிருந்தான்.

இப்படியிருக்க மடலவிழ்ந்து இதழ்பரந்து மலர்விரிந்து மதுநிறைந்து மணமுறைந்து தளிர்தழைந்து தலைசெறிந்து கிளைமிகுந்து மிகவுயர்ந்து இருளடர்ந்து கொடிபடர்ந்து காய்சொரிந்து கனியுதிர்ந்து கதிர்மதிநுழை யாக் கவிப்போடிருந்த மாந்தோப்பில் இவரிருவரும் பேசியவோசையும் கைக் குத்தின்முழக்கமும் மண்டபத்திலுண்டான எதிரொலியும்மரங்களைப் பிடுங்கி மாட்டிய ஆர்ப்பும் சத்தமடங்கிய இருபதுநாழிகைச்சமயமாதலால்விராடநகர முதலியசுற்றுக்கிராமங்களிலும் கேட்டது கேட்டும்,சனங்கள்அப்போதுஇராக் காலமாகையாலும்நித்திரைமயக்கத்தாலும் எப்பொழுதும்யுத்தம் இல்லையென் றிருந்த மப்புப்புத்தியினாலும்பயத்தினாலும்விசாரிக்கவேண்டிய அவசியமில்லா மையினாலும் கலவரப்படாமல் நிதானித்துக் காரணகாரியங்களை யெண்ணா மல் திகிலடைந்து திரும்பிப்பாராமல் நித்திரை செய்தார்கள்.

ஆனால் முன்னமே கலவரங்கொண்டிருந்தகீசகன் தம்பிமார் இப்பேரோ சையைக்கேட்டுப் படுக்கைவிட்டெழுந்து உப்பரிகைமே லேறிப்பார்த்து அச்சத்தம் வருகிறவழியை யுற்றுக்கேட்டுத் தங்கள் அண்ணன் நினைத்த எண் ணமும் வண்ணப்பெண்வாடிய வயிற்றெரிச்சலும் ஊரார் பேசிக்கொண்ட வலதும் தம்மைச் சந்தேகத்தில் கொண்டுவந்து விட்டதாக அச்சப்பட்டுக் கீசகன் படுக்கை வீட்டைப்பார்த்து அவன் அவ்விடத்தி லில்லாமையால் பாங்கிமார் முதலாகிய பணிப்பெண்களைக் கேட்க, அவர்கள் இன்றிரவில் பத் துநாழிகைக்கு நீராடி சகலவலங்கார சம்பிரமமாய் மேனிமினுக்கி வெளியே போனாரொன்றுரைக்க, அம்மொழிகேட்ட உபகீசகர்கள் பரதவித்து நன்று

நன்று! நமது சுதக்கனேக்குச் சாந்து சந்தனநி மலர்முதலியதும் புனேந்துவந்த தெய்வப்பெண்மேல் இச்சைவைத்தமையால் அன்னத் துவேஷங்கொண்டு தனக்குரிய போகமாதனையும் விண்டு மன்மதன்கணையா லுடைந்து பாகொத்த மொழியாளாகிய பணிப்பெண்ணைத் தொடர்ந்து சோகமேலிட்டுத் தூக்கமுங்கெட்டுத் துபரமாயிருந்தவன் தான்கொண்ட விரகவேதனை தணிவதற்காக மாமரச்சோலையடர்ந்தவசந்தமண்டபத்திற்குப் போனவனுகவேண்டும். அவ்வேளையில் வண்டமுமலர்க் கொண்டையையுடைய சைரந்திரி ஏதோ ஒரு காரணார்த்தமாய் அவ்விடத்திற்குப் போயிருக்கவேண்டும். பிரசண்டவேக மதயானைபோன்ற கீசகன் அவளைக்கண்டு ஏதடா! நமக்குடன்படாதவள் இவ்வளவுதூரம் வந்திருக்கிறுள். இவ்விருளில் தனித்து வருவதற்குக் காரணமென்ன? என்று சற்றேனும் கருதாமல், காமக்கலவியைக் கருதினவனுக வேண்டும். இதற்கு முன்னுள் இவளைத் துரத்திச் சின்னுபின்னப் படுத்தியசெய்தியை அவளுக்குரிய கந்திருவரைவர்கட்குத் தெரிவித்திருந்தவளாக வேண்டும். அவர்கள் அவ்வாறே வசந்தமண்டபச்சோலையில் வந்திருந்தவராகவேண்டும். இவனுடைய பொல்லாத வினைவசத்தால் போர் மூண்டதாக வேண்டுமென்று தங்களுக்குள்ளே துணிந்து இனி நாம் சும்மாவிருக்கலாகாது. விரைவாய்ப்போய்ப் பார்ப்போம். அப்படிப் பார்க்குமிடத்தில் நிந்தனைக்குடன்பட்ட கிட்டேன், உயிரோடிருப்பானுயின் வந்திருக்குங் கந்திருவருடன் மூந்திப் போர்விளைத்து, அவரைக் கைப்பிடியாய்ப் பிடித்துக் கண்கலக்கப் படுத்துவோம். ஒருவேளை கீசகன் நாசமடைந்திருப்பானுயின் அவனைப் பறிகொடுத்து நாம் உயிருடனிருந்து மானமில்லாமல் வாழ்வது மரியாதையன்றே! உடன்பிறந்த தோடத்துக்காக அந்தக் கந்திருவருடன் போராடி அவன் மடிந்த விடத்திலேயே நாமுமடிந்துபோவோம். இதைப் பார்க்கிலும் உறுதி வேறில்லையென்று, தம்பியர் யாவருமொன்ருய்க் கூடிக் கண்பொறியெழ விழித்துக் கடகடவென்று பல்லைக்கடித்து, விடவிடவென்று வில்லைப்பிடித்து, மடமடவென்று பலபடைகளுங்கொண்டு, தடதடவென்று விரைந்து வந்து கசந்தமனம்கொண்டு, கருகியவிருளில்வசந்தமண்டபத்தைச் சேர்ந்து, சங்குச்சுண்ணந்தடவிய சோதி திங்களொளிபோல் எங்கும் விளங்கக் கொழுந்துவிட்டெரியும் வெளிச்சத்தில் அழிந்து சிதைந்து அரைந்து நொறுந்து திரண்டுருண்டு மொத்தாகாரமாயிருந்த மாமிசத் திப்பையின் மேல் தமையனுடைய தலைமாத்திரம் அழியாமலிருக்கக்கண்டு, திக்கென்று வயிறெரிந்து திடுலென்று விழுந்து வாடிவதங்கி வயிற்றைப்பிசைந்து கைகளை நெறித்துச் செய்வதென்னென்று வெம்பித் தேம்பி விம்மி விழித்து மண்டபத்தைச் சுற்றிப் பார்த்து, ஒருவரையுங் காணுமல் வாய்விட்டழுது முகத்திலும் தலையிலு மோதிக்கொண்டு புலம்பி அண்ணனுடைய கால்கை முதலான அவயவங்களொன்றுங் காணுதவர்களாய்ப் பிண்டாகாரமாயிருக்கும் பேருடலைக்கண்டு ஓ கோ கோ! இதென்னவிந்தை! இதுவரையிலும் வாழ்ந்த எங்களுக்கு நேரிட்ட நிந்தை, அளவிறந்த பல பராக்கிரமங்களுள்ள நமது மூன்னேனை இப்படியாகக்கொன்ற பேரெவர்களோ? இவனைக் கொல்லத்

தக்க வல்லவருந் தொல்லுலகிலுளரோ? இவனைக்கொன்றவன் மானிடனே யல்லன், தேவப்பிறப்பா யிருக்கவேண்டும். வேறொருபிறப்பில்விளைந்தவ ஞயின் கழுத்தை முறித்து வயிற்றைக்கிழித்துக் கை காலை யொடித்துக் கசக்கிக் கோசபிசத்துடன் நையக்குத்தி மொத்தையாகவுஞ் செய்வானு? ஐயோ? வைச்சபதமிருக்கப் பிச்சைக்குப்போவானேன்? வசந்தப்பித் தூர்மரணமடைவானேன்? அவனெப்படிப்பட்டதேவனு யிருந்தபோதிலும், இவனவன் கையா லிறக்கமாட்டானே! ஏதோ சூதுவிளைத்துத்தீதுசெய்துவிட்டார்கள். அப்பெண் மோகத்தாலும் இவனது தீவினை வசத்தாலு மாண்டானென்றே மார்பிலடித்துக்கொண்டு மண்மேல் வீழ்ந்து புரண்டு மானம்போயிற்றே, வையகத்தார் பழிக்கும்படி ஈனமாயிற்று. ஆகா, தெய்வமே! இவனிப்படி அழிந்ததைப் பிறரறியாம லடக்கம்பண்ணிவிடவேண்டும் பிறரறிந்தால் பெருமோசம் வந்துவிடும். நமது சுதக்கணைக்குமாத்திரந் தெரிவித்து அவள் கருத்தின்வண்ணம் நடந்துகொள்வோமென்று அவளிடத்திற்குச் சென்று அடித்து மோதிவீழ்ந்து அவள் பதத்தில் தாழ்ந்துநாம்வாழ்ந்தவாழ்வுஇன்றோடழிந்தது. மாதரசி? நமது வண்ணப்பெண்மேல்மோகங்கொண்ட அண்ணன் விண்ணுல கேகினுன், இனிமேல் நடத்துங் காரியங்களுக்கு நாங்கள் ஆலோசனைசெய்ய வந்தோமென்றுஞ் சொன்னுர்கள். அவர்கள் கருத்தை அச்சுதக்கணை கேட்டுத் தம்பிமாரைத் தழுவி நின்று கொம்பிலாக் கொடிபோற்றுவண்டும் தரைமேற் புரண்டும் தலையி லடித்துக்கொண்டும் பெருமூச்சடைந்தும் பதறி யெழுந்தும் அடாபாவி! எங்களைத் தெருவில்விட்டாயே; வாழ்ந்தவாழ்வு இவ்வளவுதானு சாய்ந்தது; மன்மதபாணமா உன்மேற் பாய்ந்தது அதனுலேயா நீ மரணமடைந்தது? ஐயோ? அப்பாவென் றுடல்தளர்ந்து உயிருலைந் தூசலாடி ஓ சகோதரர்களே! நானெவ்வளவோ சொல்லியும் பாவி கீசகன் கேளாமற் போக்கழிந்தான். அன்னியமாதராசை யென்றும் ஆயுளழிக்கு மென்று மோகநிவாரண நூலில் மொழிந்திருந்தும் காலாந்தரத் தாற் கதிசேர்ந்தானே, ஐயோ! கீசகக்களிறே! யென்று கண்ணீர்வடித்து அவனது புயபலபராக்கிரமங்களைப் படித்து ஒருவருமுணராமலொப்பனையிட்டழுது கீசகனிறந்தானென்னுங் கேள்வி பலராசர்களுணர்ந்தால் படையெடுத்துப் போர்கொடுத்து இப்பட்டத்தை அபகரிப்பார்களே! என் நாயகனுக்குமெனக்கும் இந்நட்டத்தை வைத்தானே. நடுக்கடல்துரும்பானேமே. நடுத்தெருப் புழுதியானேமே. அடடா, என்று பட்டப்பகலில்தோன்றிய சந்திரன்போல், முகத்தொளிமழுங்கி என்சோதரர்களே! நானிந்தவார்த்தையை உங்கள் மைத்துனராகிய விராட ராசனுக்குப் பக்குவமாய்ச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் சீக்கிரத்திற்சென்று அண்டை அயலாரறியாமல் அடக்கம் பண்ணிப் போடுங்கள்; பரப்பில் விடாதீர்கள்; பழிப்புக்கிடம் பண்ணுதீர்கள்; பதருதீர்கள்; என்னைப் பரதேசி யாக்கிப்போடாதீர்கள்; நமக்கு நான்குதிக்கிலும் பகைவர்களிருப்பதினுல் கீசகனுயிருடனிருக்கின்றுனென்னுங் கொடியைக்காட்டி அவனுக்குச் செய்யவேண்டிய உரிமைக்கடன்களைத் தீர்த்துவிடுங்களென்று உறுதி மொழிகள்சொல்லி யனுப்பிவிட்டு, உள்ளநடுங்கி யொ

டுங்கி வெள்ளம்போல் கண்ணீர்விடுத்துப் பூமிமேற்படுத்துத், தெய்வமே! என்று தேம்பித் தொழுது துக்கமற்றவள்போல் பக்கத்தி லிருப்பவர்கட்குத் தெரியாமல் விக்கியிருந்தாள்.

அச்சுதக்கலை சொன்னவண்ணம் அண்ணனைத் தகனஞ்செய்வதற்கெண்ணிய தம்பிமார் நூற்றுமூவரும் பிரேதத்திற்குவேண்டியசல்லா சாதராஷால் வைசந்தனக்கட்டைகள் ஸ்நானதிரவியங்கள்முதலிய சகலமுங்கொண்டு, தமக்கை யரண்மனையிலிருந்து சுறுக்கில் குறுக்குவழிவரும்போது, வீமசேனனை விட்டுவரும் வண்ணப்பெண்ணைத்தாங்கள் கண்ணிற்கண்டு வழிமறித்துநின்று மனத்தாபங்கொண்டு மனோதிடமுடைய நமது தமையன் மாள்வதற்கு இவளே காரணமல்லது வேறில்லை. நாமெண்ணியபடி இப்பொழுதுதான் முடித்துவருகிறாள். இதற்கியாதொரு சந்தேகமுமில்லை. அவனிவள்மேல்வைத்த ஆசையும்இவளவனைக்கெடுத்த மோசமும்அடியோடு நாசமாகும்படி இவளையு மவனுடன் சேர்த்துக் கொளுத்திவிடுவது உத்தமதர்மம். இம்மையிற் கலந்தெரிந்தால் அம்மையிலும் உம்மையிலும் பிரியாவிடையா யிருப்பார்கள். ஆகையால், இவளைக்கூசாமல் பிடியுங்களென்று நான்குதிசையிலும் பரந்து நாய்போல் வளைந்து மான்போல் மருண்டுசெல்லும்பாஞ்சாலியைத் துரத்தினார்கள்.

வனவேடர்போன்ற உபகீசகர்களைக்கண்ட சைரந்திரி எப்பேச்சும்பேசாமல் அல்லலடைந்து, ஆவிபதியக்கதறும் அன்னம்போற்பதறிப் பொறிபுலன் சிதறிக் கைகாலுதறியோடி ஆ,கந்திருவர்களே! எனக்குக்காவலாகிய தெய்வங்களே! பேய்களுலாவுங்காலமாகியஇவ்விரவில்யமதூதனைப்போல், சிலதுட்டர்களடுத்து என்னைப்பிடித்து நெருப்பிலிட்டுக் கொளுத்தும்படி நிச்சயித்தார்கள். அதனால் கொழுகொம்பில்லாக் கொடிபோல் துவளுகிறேன். என்ன செய்வார்களோவென்று வாடுகிறேன். இவ்வீணர்கையி லகப்படாம லோடுகிறேன். இப்பாவிகள் வசப்பட்டு ஆவியழியுந் துன்பத்தைப் பார்க்கிலும் இப்போது தானே உயிரையொழித்து விடுவது இன்பமென்று நாடுகின்றேன். இப்பஞ்சைகள் கையிலகப்பட்டுப் பரதவிக்குமுன்னே அஞ்சேலஞ்சேலென்று நீங்களேவரு மோடிவாருங்கள். இவ்வாபத்து வேளையில் வந்தென்னைக்காக்க வேண்டும் மலைகளை மண்ணாகவாட்டும் புயபலத்தைக் காட்டுங்கள். அத்துன்மார்க்கர்களைமுடித்ததுபோல்,இக்கயவர்களையும்வாட்டுங்கள்.மனோவேகத்திலுங்கடுகியோடிவந்து இவர்களைத் தென்றிசைக் கோட்டுங்கள் ஜயவிஜயஜயந்த ஜயசேனஜயற்பலனேயென்று அஞ்ஞாதவாசமுதலில் நேமித்துக்கொண்ட சங்கேதப் பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்டாள். இவள் கெட்டியாய்க்கூவிய ஓசையை மடைப்பள்ளியிலிருந்த வீமசேனன்கேட்டு, வாரிச்சுருட்டியெழுந்து ஏதோ பிரமாதம் விளைந்ததென்று இடையிற் கச்சையையிறுக்கி வரிந்து தொடையிலுதிரந் துடிக்கப்பரிந்து, இதோ வந்தோம், உன்மனந் தளரேலென்று பேரிடிபோ லிரைச்சலிட்டுக் கொக்கரித்து, எக்களிப்புடன் எதிரிலிருந்த மரங்களைப்பிடுங்கி, விறுவிறெனச் சுழற்றிக் கையொடுகையறைந்து, காடுகலங்கக்குதித்துநீண்டவிருட்சங்கள் நெறியும்படி மிதித்துவந்தான்.அவன்வருகிறதி

சையையும் வந்தவிசையையும் உபகீசகர்கள் பார்த்து, உடனே முகம்வேர்த்துத்தங்களுக்குள் தயங்கித் தைரியமில்லாமல்மயங்கி ஆ, தம்பிகளே! இவளினாந்துகூவியபோது, இதோ விரைந்து வந்தோமென்று ஒருபேரொலிகேட்டது, அவ்வோசை யடங்குவதற்கு முன்னே பெருங்காற்றுப் புறப்பட்டது. மரங்களியாவும் மடமடவென்றொடிந்தது.இவளுக்குரிய கந்திருவர் துணைவருகிறது போலுமிருக்கின்றது. நம்முன்னோனையடித்து முடித்துவிட் டிப்போததான் போகிறவர்கள்போலுங் காண்கின்றதே. நம்முன்னோன் இக்கேடு கண்டவர்கள் நம்மையுமெளிதில் விடார்கள்போலுந் தோன்றுகின்றதே. இனி என்செய்வோமென்று பயந்து, உடல்பதறி நடுங்கிக் கட்டழகமைந்த விரதசாரணியை விட்டுவிட்டோடிப் பிழைப்பதேமேலென்று துணியுமுன்னமே, காலபாசச்சூலங்கொண்ட காலனைப்போலும் ஆலகால விடம்போலும் வீமன்வந்து புகுந்து விளாசும்போது, புத்தித்தாழ்வாற் பிராணனைப்போக்கடித்துக்கொண்ட கீசகன்தம்பியர்கள்சுற்றியோடி விலகினார்கள். அவர்களைக்கொத்துப்போற் சேர்த்து வளைத்துப் பத்துப்பேர்க் கோரடியாயடித்து, ஒருவருந் தப்பிப்பிழைக்காமல் மடித்து, அவரவரொடும் பையுமொடித்து மேலுலகிலேற்றினான். அவ்வுபகீசகர்கள் சகோதரவாற் சல்யந்தப்பாமலுந்தமையனைப்பிரியாமலும்அவன் போனவழியே இவர்களும் போயினர்கள்.

இப்பால் துவளுமிடையுஞ் சுவணப்பட்டுடையும் அன்னநடையும் அரம்பைத்தொடையும் அருட்கட்கடையும் அணிபூஞ்சடையும் கற்புடைமையுமுள்ள விரதசாரணிமேல்விருப்பம்வைத்த கீசகனை வீமசேனனழித்தபோது அவன் ஒருவருமறியாமல் உபாயத்திலொழிந்தான். இவ்வுபகீசகர்களை மடித்தபோது, பொழுதுவிடியுஞ் சமயமாகையாலும் பேரோசையாலும்,ஊாரறிந்து உறக்கமற்றுவருந்திக் கலங்கிப்பயந்து சரிசரி திண்ணியனாகியகீசகனைவண்ணமகளாகிய அப்பெண்ணுக்கிசைந்தகந்திருவர்வந்து கொன்றார்கள்போலும். அவனுக்காகப் பரிந்துவந்த கீசகன் தம்பிமார்கள் ஒன்றுகூடிசண்டைவிளைக்க அந்நூற்றுமூவரையும் வென்றார்கள்போலும். ஆயினும் தேவமாதினை மனிதன் நாடுவது தீங்கு! தேவர்களுடன் மனிதரெதிர்த்துச் சண்டைசெய்வது தீமையிலுந்தீமை. தன்பலமும் எதிரிபலமும்எண்ணுமற்சண்டையிட்ட கீசகர்களில் ஒருவரேனும் பிழையாமல் விண்ணுலகடைந்தார் போலும், இதனாலன்றோ 'வினைவலியுந் தன்வலியு மாற்றான்வலியுந் துணைவலியுந்தூக்கிச் செயல்,' என்று பெரியோருஞ் சொல்லியிருக்கின்றன ரென்று பட்டினத்திலுள்ளவர் யாவரும் பேசிக்கொண்டார்.

இவ்வாறு உலகநடுங்கி யொடுங்கும்படி அன்றிரவில் கண்டகராகிய கீசகர்களைக்கொன்று, நாய் நரி பேய் பிசாசம் காக்கை கழுகு கூளி காளிமுதலியவற்றிற்குவிருந்தளித்துச் சுயம்பாகியாகிய வீமசேனனும்பரிவினுற்பதமளித்த பாஞ்சாலியும் திரும்புகையில்வாயுகுமாரன் பாஞ்சாலியையணைத்து வண்டறுமலர்க் கொண்டைமாதே! கற்புடையமாதர்க் கெப்போதும் ஆபத்துநேரிடாது. ஒருவேளை தீவினைப்பயனால் நேர்ந்தாலும் சூரியனைக்கண்ட பனிபோலகலும். மேலும் நற்குண நற்செய்கையுடையபதிவிரதைகள் தாங்களெவ்

வண்ண நினைத்தாலுமுடியும். அதற்கொப்பாக ஒருகதை சொல்லுகிறேன்,
கேளும். பூருவத்தில் இமையபர்வதராசகுமாரியாகிய பவானியிடத்தில்பணி
விடைபண்ணிக்கொண்டிருந்தசயையென்னும்பெயரினையுடைய தெய்வப்பெண்
ணொருத்தி இப்பூவுலகத்தில்வாழு மாதர்களுடைய இல்லறதருமமெப்படியோ
வென்று ஐயங்கொண்டு பார்வதியாரைக்கேட்டாள். அதற்கு அம்பிகையோ
அப்பெண்ணை நோக்கி நான்சொல்வதினாலுனக் கனுபவமாகாது. நீபோய்ப்
பூமியிற்பிறந்து, இல்லறவொழுக்கத்தைக் காட்சிப்பிரமாணமாகக்கண் டநுப
வித்துவரக் கடவாயென்று அநுக்கிரகம்பண்ணினாள். அவ்வாறே மண்ணிற்
பிறந்து வளர்ந்து சிறந்துவருங்காலையில், தேவராதனென்றொரு முனிவன்
தனக்குபசாரஞ்செய்வதற்கு உத்தமகுணசாலியான பத்தினியொருத்தி வே
ண்டுமென்று தேசமுழுதுந் தேடித்திரிந்து வாடிவருந்தி வரும்போது, ஒரு சீ
றூர் அக்கிராரத்திலிருந்த இப்பெண்ணைக்கண்டு கன்னிகையென்றுணர்ந்து
அவளது பதிவிரதாகுணத்தைச் சோதிக்கவேண்டுமென் றெண்ணிப்பெரியரா
க்கதவடிவங்கொண்டு கோரமாயெதிர்சென்று நின்று அவளைப் பருந்துராய்
ஞ்சும் பாவனைப்போல் தூக்கிக்கொண்டு பெரியவாரணியத்திற்சென்று நூறு
யோசனை விசாலமுள்ள தாமரைத்தடாகக் கரைமேல்வைத்து வெகுவகை
யான சந்தோடமுண்டாக்கிப் பற்பல கனிதேன் கிழங்குகளுங்கொடுத்து உற்
பலந் தாமரைமல்லிகை முதலிய புட்பங்களுமளித்துப் போகப்புணர்ச்சியின்
பொருட்டுப் பேசுவனவெல்லாஞ் சரசமாய்ப்பேசித் தன்னாற்கூடியமட்டுந்
திருத்தி நயபயங்காட்டிப் பொருத்திப் பார்த்தான். அவளெவ்வகையிலுமய
ங்காமல் திடசித்தமாயிருந்து கலவியமளிக்கலத்தலுக்குச் சம்மதியாமற்போ
னாள். அப்போது இராக்கத வடிவங்கொண்டவன் தன்கையிற் பிடித்திருந்த
கோலால் அவளைக் கீழேதள்ளிப் பலவந்தமாய் ஒருதலைக்காமப் புணர்ச்சிசெ
ய்ய ஆரம்பித்தான். அவளதற்குமஞ்சாமல் தன்னிருகையையுந் தலைமேற்
குவித்து ஓ தர்மதேவதையே! நானிதுவரையிலும் மனோவாக்குக் காயங்களி
னால் வழுவுதன்முதலிய பழுதுமில்லாமல் கற்புடைமைகாத்து ஒப்புவமை
யில்லாதிருந்தேன். இப்போதிந்த விராக்கதன் கையென்மேற்படுமுன்னமே
அற்பமாகிய என்னுடலங் கருங்கல்லாய்ப் போகக்கடவதென்று கூவினாள்.
அவ்விடத்தில் உரத்திக்கூவினவளை யதட்டி அவ்வரக்கன் வெருட்டிப் பயங்
காட்டி மேல்விழுந்து தழுவப்போகையில் அவள் கல்லாய்ச்சமைந்தாள். அவ
ளுக்குநேரிட்ட அபாயங்கண்ட முனிவன் இராக்கத வடிவத்தைவிட்டுப்
பழையவடிவெடுத்து அவளுடல் கல்லாகியதைத் தடுத்துத்தான் அதுவரையி
லுந் தேடிய தபோமகிமையை அதற்கீடாகக்கொடுத்து, அவளைத் தன்வாழ்க்
கைத் துணைநலத்திற்குரிய மனைவியாக்கத்வேதவிதிப்படி மணந்து கொக்
கோகநூலிற்கூறியவண்ணம் ஆலிங்கனமுதலிய யாவுநடத்தி அநேகவரங்க
ளுமளித்துத் தன்னாச்சிரமமடுத்து, அறம் பொருள் இன்பம் வீடு திறம்பாம
லடைந்து இல்லறவொழுக்கை இத்தன்மையதென்றே யாவருமறிய இகத்
தில் அவ்விருவரும் நாட்டிவைத்தார்கள்.

கேளாய் பாஞ்சாலி, நல்லவர்களுக்கொருநாளும் பொல்லாங்குவராதே, வந்தாலும் நிலையாயிராது. பின்னே நன்மையுண்டாம். ஆனால் எப்படிப் பட்ட ஆபத்துகள் வந்தாலும் அதற்கஞ்சி விசனப்படலாகாது. இப்போது உனக்குநேரிட்ட கஷ்டநிஷ்டூரங்களுக்காகத் துக்கப்படவேண்டாம். இன்னுஞ் சிலநாளைக்குள் நமக்கு நல்லகாலம்வருமென்று நயந்துபேசிச் சுதக்கணையிடத் திற் கவலையனுப்பிவிட்டு, ஒரு தடாகத்திலிறங்கி நீராடி நித்தியவிதி நிறைவே ற்றிக்கொண்டு தான் வெளியே போய்வந்தசெய்தி ஒருவரு முணராதிருக்கும் படி மடைப்பள்ளிக்குப் போய்விட்டான்.

இப்படி வீமசேனன்போகவே பாஞ்சாலி பொழுதுவிடிந்து போயிற்றே யென்றுபயந்து ஒடுங்கியொதுங்கி வாடிவதங்கி நம்மையார்பார்ப்பார்களோ? என்னநினைப்பார்களோ?என்னவென்றேசுவார்களோ? நாம்போகிறவழியில் சந் திப்பார்களோ? ஏதோ என்னவோவென்று அச்சத்துடன்போய்ச் சுதக்கணை யரண்மனைக்குட்புகுந்தாள். இவ்வகையாகச்சொன்ன வைசம்பாயனரை ஜெ னமேஜெயமகாராஜனெழுந்து எதிர்விழுந்து பணிந்து புகழ்ந்து மகிழ்ந்து சுவாமி! உபகீசகர்கள் கையிலகப்பட்ட பாஞ்சாலியை வீமசேனன்வந்து விடு விக்காமற்போனாற் கீசகனுடன் சேர்த்துக்கொளுத்திப் போடுவார்களே. கிர் தார்த்தனேயென்று பரிக்ஷித்துவின் பாலன்கேட்க, வைசம்பாயனர் சொல்லு கிறார். மதிமரபிலுதித்த மன்னவனே கேள். கள்ளமாமாயப்பிரானாகிய கண் ணனுடைய கடைக்கண்ணருளாலும் தருமபுத்திரமகாராசனுடைய சத்திய நித்திய தவத்தினாலும் பாஞ்சாலியினது பத்தினித்தன்மையாலும் அப்படிப் பட்ட பொல்லாங்கு நேரிடாது. ஒருவேளை நேரிட்டாலும் தான்பெற்றபெ ண்ணைத் தானே கொளுத்துவானா? தானே சுட்டெரிப்பானா? தந்தையாகிய அக்கினிதேவன் அப்படி நேரிடுங்காலையில், தருமதேவதையும் அதற்குச்சகா யப்படுமா? தருமந்தலைகாவாமற் போமா? சந்திரகுலாதிபனே! என்று ஐயந் தீர்ந்து மேல்நடந்த வர்த்தமானங்களையுஞ் சொல்லத்தொடங்கினர். இப்பால் கறுத்தவிருள்கலந்து கவிந்துபரந்து நிறைந்து சகத்தைமறைத்துப்போர்த்த திரைக்களங்கத்தை வெறுத்து விலக்கி நிலத்தைநோக்கி விளர்த்த கிழக்கின்க ணுதித்த கதிர்க்கிரகணமாலிகையின்சோதி உதயகிரிமுடிமேலேற்றிய மணிவி ளக்கேபோல் எட்டுத்திசையும் பிரகாசிக்கப் பிரபைவிட்டொளிகாட்டிச் சூரி யோதயமானவுடன் அன்றிரவில்நடந்த யுத்தவிபரீதமும் சத்தப்பிரதாபமும் விராடபுர மெங்கும்பரவி,ஆயிரங்கிரணனிலு மதிகமாய்விரிந்து,மச்சநாட்டுள்ள மகாசனர்களும் கோட்டைக்கு மேற்புறத்தடைந்து வனத்தில் மாண்டுகிடக் கின்ற உபகீசர்களையும் அவியாமலெறிகின்ற மாஞ்சோலையில் மகமாயிக்குப் பூசைபோடச்செய்த பதியலங்காரம்போலிருக்கும் கீசகன்தலையையுங்கண்டு விசனமேற்கொண்டுபயந்து ஓட்டமாயோடிவந்து விராடராசனுக்குச்சொல்லி வெறுப்படைந்தனர். கீசகனழிந்தசெய்தியைத் தன்பெண்சாதி சொல்லக் கேட்டு முன்னமே மன்னன்வருந்தி இனிநா னென்னசெய்வேன்? கன்னியன் னமே! என்தோள் போயிற்றேயென்று துடிதுடித்துக்கண்ணீர்வடித்துப் படுக் கையைவிட்டெழுப்பலமற்றவனாய்ப் பரதவித்தான்,அப்படியிருந்த பார்த்திவன்

செவியில் உபகீசகர்களு முயிரொழிந்தார்களென் றுரைத்தவுடனே இடிமே லிடியும் அடிமேலடியும் எய்தியவாறுபோ லிரங்கி இனைந்து விரைந்தெழுந்து கொலுச்சாவடியிற் கூடிய தூதர்களைக்கூவி, என்மைத்துனரிறந்த காரணகாரியங் கண்டறிந்து வாருங்களென் றனுப்பினன். அப்படியே அவர்களும் போய்ப் பார்த்துச் சிதைந்து வதைந்த கீசகரைக்கண்டு ஆச்சரியமு மாச்சரியமு முள்ளவர்களாய் அரசன் திருமுகத்தைப் பார்த்து இராசகுலராசனே! பராக்கு. கீசகராசனுடன் உபகீசகராசரும் இறந்துபோயினர். அவர்கள்பேரு மிறந்துபோயிற்று. அப்பிணங்க ளலங்கோலமாய்க் கிடப்பதைநோக்கி, அப்பட்டணத்துச் சனங்களெல்லோரும் பயங்கொண்டு, வெளிவரமாட்டாமல் வேசாறி வெம்புகின்றார்கள். இவ்விபரீதமெல்லாம் சைரந்திரியென்னும் பெண்ணால் விளைந்ததன்றி மற்றொன்றுமில்லை. அப்பாக்கியசாலி இன்னுஞ் சிலநாளிவ்விடத்திலிருந்தால், இவ்வூரிலுள்ளோர்யாவருஞ் சாகாமற்போகார்கள். தருமசீலதயாளுவாகிய தராபதியே! இப்பால் தாங்களே யோசிக்கத்தக்கதென்று சரணஞ்செய்தார்கள். அவர்களுரைத்த் மொழியை யோசித்து மந்திரிகளுடன் கலந்து வார்த்தையாடித் தந்திரயுத்தியினாலும் மந்திரசித்தியினாலும் அக்கந்திருவரைக் கைப்பிடியாய்ப் பிடிப்பதற்கான உபாயந்தேடி விற்படை வேற்படை யோங்கிய வீரர்களைவிடுத்து மற்புயவலிமிகுத்த என்மைத்துனரை அற்பமாயெண்ணிச் சர்ப்பனைசெய்து பிராணனைவாங்கித் துர்ப்பலமுள்ள துட்டர்களை எப்படியாயினுங் கைப்பிடியாகப்பிடித் தென்சொற்படி வரச்சொல்லுங்களென்று பற்கடித்து விராடன்பகர்ந்து இறந்துபோன மைத்துனருக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்முடித்து இனி என்னமோசம் வருமோவென்று ஏக்கமேலிட்டுத் தூக்கம்பிடியாம லிருந்தான்.

நேற்றிரவில் நடந்தசங்கதிகளைப் பாண்டுமக்களைவரும் பாஞ்சாலியும் தனித்தோரிடத்திற் சேர்ந்து கலந்து வார்த்தையாடி அஞ்ஞாதவாசஞ் செய்யவந்த நமதவதிநாளாயிற்று. இன்னுமிருக்கும் கொஞ்சநாளுந் தொலைந்தால், வெறுப்பாயெடுத்த வேடத்தைவிடுத்து விருப்பாம் பழையவேடமடுத்து வெகுசனங்களுங்காண வெளிப்பட்டுப் பேசவேண்டிய செய்திகளையெல்லாம் பேசிக்கொள்ளலாம். அதுவரையிலுஞ் சந்தடிபண்ணாதிருப்போமென்று பேசிக்கொண்டு விற்பன விவேகிகளாகிய அவ்வேந்தர்கள் தங்கள் கற்பனைத்தொழிலில் பக்குவமாக விருந்து காலங்கழித்தார்கள். அதுமுதல் விராடராசனும் சுதக்கணையும் புறம்பேயுண்டான சுற்றத்தவரும் மற்றையரும் அவ்விரதசாரணியிடத்தி லதிகமாய் நெருங்கவும் வேடிக்கையாய்க் கொஞ்சவும் குலாவவும் போவாவென்று வாய்ப்பேச்சுப்பேசவும் பயந்து, அவ்வளாலாகவேண்டிய வேலைகளைத் தாங்களேசெய்துகொண்டு அம்மா தாயே! சும்மாவிருவென்று பசரித்து எங்களுக் குயிர்த்துணையாயிருந்த கீசகர்கள் உன்மேலாசைவைத்து மானமதிகெட்டு நாசமாயினர். நீ யெங்கள்மே லியாதொரு குற்றங்குறை வையாமற் கோபதாபஞ்செய்யாமல் உனக்குக் காவலாகிய கந்திருவரிடத்திற் சொல்லி எங்களைக் காக்கும்படி பிராணபிக்ஷைதரவேண்டும். நீரெங்களுக்குப் பக்கத்துணையிருந்து காத்தருளாயென்று உபசாரம் பண்ணிப் பொன்னைப்

போற்றுமாறுபோற் பூசித்துவந்தனர். அங்கரிலுள்ள நான்கு வருணத்தவரும் பாஞ்சாலியைக்கண்டால் எதிர்சென்றோடித் தீர்க்கதண்டனிட்டு மரியாதையுடன் பாதபூசைபண்ணி, மஞ்சள் குங்குமம் கங்கதசதம்பம் சந்தனுதி அக்ஷதைகளைச்சாத்தித் தூபதீபங்கொடுத்து வணங்கி வாய்க்குற்றம் கைக்குற்றம் வரப்போகின்றதென்று வயிற்றில்வாள்கட்டிக்கொண்டவர்போல் பயங்கரத்துடன் மதித்துத் துதித்துச் சன்மானம்புரிந்து தேவதா வுபசாரம் இராசோபசாரம்போல் பலஉபசாரங்களையுஞ்செய்துவந்தனர். பாஞ்சாலியோ இப்பூஜையும் பாலைக்குடிக்குமா வென்பதுபோல், எனக்கென்னதெரியும்; நானென்ன அறிவேன் அம்மாவென்னச் சுதக்கணைதுயரம் பொருந்தி அமர்ந்து வாழ்ந்திருந்தனள்.

பாண்டவர்கள் அத்தினபுரத்திற் சொக்கட்டாஞடித் தோற்றுப் பன்னிரண்டாண்டும் வனவாசஞ்செய்யப்புகுந்து, காடாக்கினியோங்கிய காட்டிலும் காளவிடாக்கினிதங்கிய பாலைநிலத்திலும் வடவாமுகாக்கினிவந்து குடிகொண்டமலைச்சார்பிலும் திரிபுராக்கினிசிறந்த பருக்கைக்கல் மேட்டிலும் மதனக்கினிமலர்ந்த மடுக்கரை குளக்கரை நதிக்கரைகளிலும் திரிந்து மழை பனி காற்று வெயில் முதலாகிய வருத்தங்களையும் பொறுத்து அலைந்த சரித்திரத்தைச் சொன்னேன். பஞ்சவரைக் காட்டிலோட்டிவிட்டு வீரகண்டைதாங்கிய தன்பாதத்தில் சத்துருவெல்லாம் மித்துருவாய்ப்பணிந்து கப்பணங்கட்டிவரப் பொற்பணிமுடிபூண்டு எப்புவனங்களுக்கும் ஏகசக்ராதிபதியாயிருந்து துரைத்தனஞ்செய்துவருகின்ற பாவமே குடிகொண்ட இனம்படைத்த துரியோதனமகாராசன் அச்சமில்லாத சேனைகளுடன் மச்சநாட்டைப் பகைத்து இச்சையின்படி பசுநிரைகளைக் கொள்ளையிடலாமென்று கொச்சைமதியால் இலச்சைகெட்டுவந்த தக்ஷணநிரைமீட்சி உத்தரநிரைமீட்சி யென்னும் மாடுபிடி சண்டையைச் சொல்லுகின்றேன். கேளும் ஜெனமேஜெயமஹாராஜனே ! என்று வைசம்பாயனர் சொல்லிவருகின்றனர்.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

கீசகன்யுத்தமுற்றிற்று.

தக்ஷணநிரைமீட்சிச்சருக்கம்.

கண்ணன்துதி.

தொழுவார்தம் வினைதீர முற்கோல மாய்வேலை சூழ்பாரெயிற்
றுழுவானை நன்னுமமொன்றாகி லுங்கற்றோ ருருவோதினேர்
வழுவாத சுரராக நரராக புள்ளாக மாவாகபுன்
புழுவாக வொன்றிப் பிறந்தானு நரகிற் புகார்காணுமே.

மராடமன்னர் முதலிய யாவரும் வணங்கும் விராடபுரத்திற் கீசகர்களை வென்றபின்னர், பாண்டவர்களும் பாஞ்சாலியும், அஞ்ஞாதவாசஞ்செய்துவரும்போது கீசகர் நூற்றுநால்வருங் கேடுண்டதைக் குறித்து, மச்சராஜன்

பெருமுச்செறிந்து கிலேசமுற்று இந்நாள்வரையிலும் இந்தராச்சியத்திற் கிடையூறுவாராமற் காத்துச் சேனாபதித்துவ விசாரணையுஞ்செய்து எனக்குத்தினிலுந் தீங்குமில்லாமல் தன்சொந்தம்போற் பார்த்துவந்த என்மைத்துனனுமாண்டானே. ஆ! இனிநானெப்படிப் பகைவரைவெல்லுவேன்? இறைகேட்டனுப்பும் குறைமையுடைய வேந்தற்கு இல்லையென் றென்னமாய்ச்சொல்லுவேன்? எங்கும்பகைவர்களாகப் படைகொண்டு சண்டைசெய்யவருவார்களே. அப்படி வருபவர்களுக்குப் பயிர்களை பலித்தபாவனையாயிற்றே. கோட்டையைப்பிடித்த கொள்கைபோலாயிற்றே, என்னிடத்தில்வைத்த மதிப்புமுதலிய கௌரவமும் இன்றோடொழிந்ததே, நமது கீசகனுக்குச் சமானமான பலசாலியைச் சம்பாதித்துச் சேனாபதி யாக்கவேண்டும். தெய்வமேயென்று மனக்கவலையுற்றிருந்தான். அந்தச்சமையத்தில் பக்கத்திருந்த கங்கபட்டர் மச்சராசன் மனத்தைத்தேற்றி, வாய்பிதற்றலை மாற்றித் துட்டகீசகர்களுடைய நஷ்டத்தைப்பற்றிக் கஷ்டப்படுகின்றீரே. அந்நியராசபயங்கரங்கொண் டச்சப்படுகின்றீர். நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். படுபாவியான கீசகன் பட்டதே உமதிட்டதெய்வானுக்கிரகமென் றெண்ணிக்கொள்ளும். இனியுமக்கேநல்லகாலம், அக்கீசகனின்னுமிருப்பானுயின் சத்தியவாக்கியமும் சகலபாக்கியமும் யோக்கிய சிலாக்கியமும் பாழாய்ப்போய்விடும். இதுவரையிலும் உம்மைப் பிடித்திருந்த ஏழரைநாட்டுச்சனி இன்றோடேபோயிற்று. துட்டத்துரோகியை நினைத்துத்துன்பப்படாதிர்; நமதுமடைப்பள்ளிமல்லனைவிட வேறு சேனாபதியும் வேண்டுமோ? இனி உமக்குப் பகைவரென்பாரு மில்லை. உம்மைப் பகைத்துவந்து பிழைப்பாருமில்லை. உமது சத்திய சவுசவாசாரவிரதம் உற்றதுணையாயிருந்து மேலானசம்பத்தையுமக்குண்டாக்கிவைக்கும். நீர் வருத்தப்படவேண்டாம். சாந்தகுணனே! என்று தருமராசனுரைத்துச் சமாதானப்படுத்தியபோது, விராடராசன் வேதியர்பெருமானுரைத்த புத்தியைக்கேட்டு மிகமகிழ்ச்சிகொண்டு மேன்மையோடிருந்தான். அன்னிய மாதர்மேல்வைத்த ஆசாபாசத்தால் மோசம்போய்த் தம்பிமார்களுடன் கீசகன்பட்டானென்று தேசாதேசமெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

இதுநிற்க, நிலைபெற்ற இருபுறத்திலும்அலையெறிந்தொதுங்கிய பொற்சன்னங்களும் நவமணிக்குப்பைகளும் இராசிராசியாய்ப்புரண்டு பிரகாசித்திருக்கின்ற கங்கைவளமோங்கிய குருநாட்டுக்கதிபதியான துரியோதனமகாராசன் அஸ்த்தினபுரத்தை யாண்டுவருங்காலத்தில் ஒருநாள் வஞ்சகச்சூதால் தோற்றுப்போனகுந்திமக்கள் இன்னும் வனவாசஞ்செய்யவேண்டியிருக்குமா? அல்லது, அஞ்ஞாதவாசம் பண்ணப்போயிருப்பார்களா? அவர்கள் நாட்டைவிட்டுக் காட்டுக்குப்போன நாளைக் கணக்கிட்டுப்பாருங்கள். சம்பிரதிகளேயென்றான். அவ்வரண்மனைக்கணக்கரில் பெரியராயசக்காரனெழுந்திருந்து வணங்கி, இராசாதிராசபரமேசுவரா! ராசமார்த்தாண்டா! ராசவுத்தண்டா! ராசகெம்பீரா! ராசப்பிரபுடீகா! ராசதுரந்தரா! ராசராசேசுவரா! வணங்காமுடிபெற்ற துரியோதனமகாராசனே! பராக்கு. ஆண்டவனுத்தரப்படிப் பாண்டவர்கள் வனவாசங் கழித்து அஞ்ஞாதவாச முங்கால்வாசியுந் தொலைத்துவிட்டார்களென்றான்.

அம்மொழியைக்கேட்ட அரவகேதனன் சிந்தைவருந்தி அவசரப்பட்டு அருகில் நிறைந்திருந்த சாரணர்களையழைத்து, அடா தூதரே! பாண்டவருறைந்திருக்கும் பதியையும் அவர்கள்கொண்ட மாறுவேடத்தையுங் கண்டறிந்து நமக்கு வெளிப்படுத்துவீர்களாகில் உங்களுக்குக் கோடிதிரவியமும் குதிரை யானை தேர் குடை கொடி பட்டுப்பட்டாவளி ரத்னுபரணம் சிவிகை அருகுதிவட்டி செயபேரி பாங்காவாத்தியம் கிராமம் பூமி முதலாகிய வெகுமதிகளுங் கொடுப்பேன். நான்கு திக்கும் நன்றாய்த்தேடிப்பார்த்து வாருங்களென்று, சந்தனதாம்பூலங் கொடுத்துவிடுத்தான். அரசன் சொல்லிய வாசையை நம்பி அநேக தன்தூதர் புறப்பட்டுச் சபைமெச்சும்படி வெகுமதிபெறவேண்டுமென்னுஞ் சந்தோடமிகுதியால் வானமளாவிய மதில்வளைந்த கோட்டைகளும் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களுமுள்ள பட்டணங்களும் சிறூர்களும் கிராமங்களும் அக்கிராரங்களும் துருவங்களும் நதி குளம் ஏரி தடாகம் ஓடை கயம் கால்வாய் முதலியவைகளும், வாழை கமுகு கரும்பு தெங்கு வருக்கை மாமுதலிய வளப்பமும்பெற்ற காடுகளும் மேன்மை பொருந்திய விடுகளும் வண்டோலஞ்செய்யும் பூங்காடுகளும் விண்டலமுயர்ந்த மலைகளும் சுரபுன்னை தாழை கரும்பனையடர்ந்த மணல்மேடுள்ள கழிக்கரையும் வழிக்கரையுந் தேடித்தேடிப் பாண்டவர்கள் காலடிச்சுவடுண்டோவென்று நாடி நாலுதிக்கும் பிரிந்தவர்கள் கூடி வேசாறிவாடி நாமெல்லோரும் அதிர்ஷ்டமில்லாதவர்களென்று தங்களைத் தாங்களே நொந்துகொண்டு அத்தினபுரத்திற்கு வந்து சூரியபுத்திரனுகிய கர்ணன் சௌபலராச குமாரனுகிய சகுனி பாரத்துவாச குமாரராகிய துரோணச்சாரியர் அவர்குமாரராகிய அசுவத்தாமா சரத்துவந்த மகாரிஷி சந்ததியில்வந்த கிருபாசாரி சந்தனு குமாரராகிய வீட்மர் பச்சைமுதலிய ரத்னுபரணமும் வெட்சிமாலையும் புனைந்த திரிகர்த்தன் வியாசன் வழித்தோன்றலாகிய விதுர திரிதாாட்டிரர்கள்! இன்னுமுள்ள பலதேசராசரும் மந்திரி சாமந்தரும் தந்திரி சாளுவருஞ் சூழ்ந்திருக்கச், சந்திரனை விட்டகலாத தாராகணம்போல் தம்பிமார் மொய்த்திருக்க, முடிமன்னர் முறைமையுட னிணங்கிக் கப்பஞ்செலுத்திக் கால்மேல்வணங்கக், கட்டியக்காரரொச்சரிக்கைகூறப் பட்டுவர்புகழத் துட்டர்கள்தாழக் கவிவாணர்துதிக்க இசைவாணரிசைக்க மறையவர் ஆசீர்வதிக்கப் பரதநாட்டியப் பாவையராடச் சுருதிகூட வெண்சாமரைபோட வீரர்களெதிரோட வெண்பட்டுக்குடை நிழற்றச் செம்பதுமராகத்தாலமைத்த வீரசிங்காதனத்தின்மேல் மத்தியான சூரியன்போல் வேந்தர் பெருமானுகிய சுயோதனராசன் கொலுவீற்றிருந்தான்.

வினைப்பயனுக்கேற்ப விதியைக் கதியாக்கிக்கொண்ட வேந்தனிருந்த கொலுமுகத்தில் பாண்டவர்களைத்தேடி இளைத்துவந்த தூதர்கள் போய் நின்று தீர்க்கதண்டனிட்டு நந்தியாவட்ட மாலைபுனைந்த நராதிபனே! கொன்றைமாலையணிந்த பரமசிவனுக்கு வலக்கண்ணுகிய சூரியகிரணங்கள் பாயுமிடத்திலும் அப்பெருமானுக்கு இடக்கண்ணுகிய சந்திரப்பிரகாசம்பரவுமிடங்களிலும் அவ்வாதி பாண்டரங்க னெற்றிக்கண்ணுகிய அக்கினிதேவன் பொரு

ந்த மிடங்களிலும் காலகண்டன் காலருள்கண்ட காலனுடைய கரும்பாசஞ் செல்லுமிடங்களிலும் புகுந்து சோர்வில்லாம லாராய்ந்து பார்த்தோம். எங்கும் பாண்டவரைக் காணாமல் பங்கப்பட்டே இங்குவந்தோம். தங்கள் சமுகத்தில் நாங்களுண்மையாய்ச் சொல்லுகின்றோம். ஆண்டவ னருளால்பாண்டவர் மாண்டேபோயினர். ஐயமேயில்லை. தேவரீரிடத்தில் தவணைவைத்துக்கொண்டு போனநாள்முத லிதுவரையிலுந் தேடித்தேடி விருதாவாய்க் காலம் போக்குவதிற் பயனில்லை; விரைந்து சென்று மன்னர்பெருமானுக்கு முன்னே சொல்லிவிட்டால் இன்னும் வேண்டியவுபாயந் தேடிக்கொள்வாரென்று எண்ணியே வந்துவிட்டோம். தேவரீர் கட்டளையின்படி நடக்கின்றோமென்று வணங்கி வாய்புதைத்துக் கைகட்டிப் புத்திபுத்தியென்று விண்ணப்பம்பண்ணினார்கள்.

மன்மதனையொத்த வடிவமைந்த துரியோதனராசன் சாரணருரைத்த லோபமொழியைக் கேட்டுக் காதிரண்டுங் கும்மென்றடையக் கதறி, உடல் பதறி இருகரத்தையுமுதறித் தன்னருகேயிருந்த சாதுக்கள்முகத்தைநோக்கி ஐயா! பெரியோரே! இத்தூதர்கள் அவனிமுழுதுந்தேடி யலைந்துவந்து உரைத்ததைக்கேட்டீர்களே. இனிநான் செய்யவேண்டிய காரியமின்ன தென்றே யியம்புங்கள். பாண்டுமக்களைவரும் பாஞ்சாலன் தையலும்பன்னிரண்டாண்டும் வனவாசம்பண்ணித் தேகமிளைத்துக் களைத்து ஆவியழிந்து போனார்களோ? அல்லது அஞ்ஞானவிருளைப் போக்கிச்சுஞ்ஞானச் சுடரொளிக்கச்செய்யுந் தவமுனிவர்களினால் மண்ணாசையும் பெண்ணாசையும் பொன்னாசையும்விட்டு, மனோதிடம்பெற்று விஞ்ஞான விளக்கத்தால் வேதாந்திகளானார்களோ? ஒருவேளையாருமறியாமலஞ்ஞாத வாசங்கழித்து முடிவிலிவ்விடம்வந்து மூளப்பார்களோ? தெரியவில்லை. உங்களுங்களுள்ளத்தில் செவ்வையாக நிதானித்து யோசித்துச் சொல்லுங்களென்று கள்ளமனத்தோனாகியகாந்தாரிபுதல்வன்கேட்கச் சூரியன்புத்திரனாகிய கர்ணன் சொல்லத்தொடங்கினான். அரவக்கொடி நிலவிய கௌரவகுலமுதல்வனே! என்சொல் லுறுதியைக்கேளும். பாண்டவரைவரும் வனவாசம்பண்ணிப் பன்னிரண்டு வருடத்தையுங் கழித்துக் காடு விட்டகன்று நாடுபற்றிச் சென்று கூடுவிட்டுக் கூடுபாய்வதுபோல் மாறுவேடம்பூண்டு பெயர்வேறுகொண்டு குலம்வேறுகாட்டிக் குணம்வேறுகாட்டி நீதிநெறிபிசகாமல் ஆசாரம் வழுவாமல் பழமைச்செல்வம் பாராட்டாமல் அடங்கி ஆயுதங்களை மறைத்துவைத்துக் காலத்துக்குத்தக்ககோலமாக ஒவ்வொரு வேலையிலிருந்து, அஞ்சாதவாசவருடமுந் தொலைத்து அப்பால் வெளிப்பட்டு ஆபரணமணிமாலைகள் பிரகாசிக்கு மார்பினையுடையவராய் ஆயுதபாணிகளாய் இருமாந்திவ்விடம்வந்து, நாங்கள் முன்னஞ் சூதாடித்தோற்ற நாடுகொடுப்பையா? அல்லது, போர் தொடுப்பையா? என்று நம்மைக் கேட்பார்கள். அவர்களுயிருடன் வருவார்களென்பதற் கையமேயில்லை. வேறாக நினைக்கவேண்டாம். இலங்கியவலம்புரி மாலையைப்பார்த்து அரிவையராசை கொண்டடரும் அலங்கார மார்பனே! என்று வீரப்பிரதாபம் பொருந்தியமார்த்தாண்டபுத்திரவாரோதயனாகிய அங்கதேசாதிபன்எடுத்துக்கூறினான்.

இவ்வாறிசைத்த கர்ணன் கருத்தைத் துச்சாதனன்கேட்டுத் துடிதுடித்து மனங்கொதித்தெழுந்து கண்ணுங்கருத்துங் காதும்புகையக்கனன்று அண்ணனடிமலரிற் பணிந்து மலையிரண்டுபோலும் திரண்டதோளாகிய வள்ளலே! ஏழையாகிய வென்சொல்லையு மிரங்கிக்கேட்டருளும். பாண்டவர்கள் நாட்டைவிடுத்துக் காட்டையடுத்தபோதே செத்தபிணத்தோ டொத்தபிணமாயினர். மனுடத்தன்மையுள்ள மானிகள் இந்நாள்வரையிலும் உயிரோடிருந்து இனியிவ்விடம் வரப்போகிறார்களென் றெண்ணுகின்றீர்களா? ஐயோ, பாவம்! அவர்களப்போதேகெட்டு மண்ணில் மட்கிப்போயினர். அவர்களைப் புதைத்த விடமும் புல்முளைத்தாயிற்று. ஐவர்கள்பேரு மறைந்துபோயிற்று, அக்காரியங்களை நிதானிக்காமல் கர்ணராசன் இப்படிசொன்னது தப்படியன்றோ? இதன்றியும் அவருயிருடனிருந்தால் பாதாளபேத வஞ்சனம்போன்ற நம்முடைய தூதர்களின் கண்ணிலகப்படாமற் போவார்களா? இதுவே நமக்குப் போதுமான சாட்சியாயிருக்க வேறுவேறெண்ணி விரிக்கவேண்டியதென்ன? தேவரீர் கட்டளையிட்டருளுவீராகில், காட்டிற்றுன்பப்பட்டுக் காலங்கழித்த ஐவர்கள் தாறுமாறாயிறந்ததற்குக் காரணஞ் சொல்லுகிறேன். காவலர்க்கிறையே! கவனித்தருளும். வாரேறியமலைபோலுமுலையும்வாடியவல்லிக்கொடியிடையும் வாழைத்தொடையும் அன்னநடையும் வர்ணவுடையுமுடைய மங்கைமார்க்கெல்லாங் கடைப்பட்ட அந்தஸ்தினால் வறுமையுடைய பாஞ்சாலி மர்மம் விட்டுத் தருமராசனைநோக்கி ஐயோ பாவியே! அன்னமில்லாமல் நானழிகின்றேனே; ஆவியொழிக்கின்றேனே; ஏழையெளியவர்க்குப் பெண்சாதியானவர்கள் எவ்வளவோ செல்வங்களை இன்பமாயநுபவிக்கிறார்களே. கோழையாகிய உங்களுக்குப் பெண்டாகிய நான் ஏழையாகிக் குந்தித்தவித்துக் கண்டார் நகைக்கக் கலங்குகின்றேனே. முகத்திற்கு மஞ்சளுண்டா? நெற்றிக்குக் குங்குமமுண்டா? கூந்தலுக்குமாலைகளுண்டா? வயிற்றுக்குக் கஞ்சியுண்டா? அஞ்சலென்பவருண்டா? ஆதரிப்பாருண்டா?ஒஞ்சரித்துப்படுக்க வோலைப்பாயுண்டா? குந்தியிருக்கக் குடிசையுண்டா? வஞ்சியர்களைப்போல் வரிசைகளுண்டா? வெளுத்தவாய்க்கு வெற்றிலையுண்டா? ஆகா,தெய்வமே! சாண்பிள்ளையானாலும், ஆண்பிள்ளை மேலென்பர். நீங்கள் வேலும்வில்லும் வாளும் பூரித்த தோளுமுடையவர்களாய் இருந்தென்ன பலன் பெற்றீர்கள் எனக்கென்ன நலம்வைத்தீர்கள்?நீங்களைவரும் ஆண்பிள்ளைகளிற் சேர்க்கைதானா? உம்மைப் போன்றவர்களைப் பார்க்கும்போது, வெட்கமில்லையா? என்று நாடோறும்சலித்துக்கொண்டுபேசி வீணாய்வெறுத்து அவமதித்தேசிமுகங்கடுத்துத் தினமுஞ் சண்டைதொடுத்துவந்தாள். அதனால் தருமராசன் குக்கல்வாய்ப்பட்ட முசல்போல் மனங்கூசிவருத்தமுற்றநாளையில் தம்பிமார்நால்வரும் தமையனையடைந்து வடவைக்கனல்போற் கொதித்துக் கோபித்து அடாதுரோகி! உன்னுடன்பிறந்து என்னபலங்கண்டோம்?பெண்சாதிபிள்ளைகளையும் விட்டோம். நாடுநகரங்களைச் சூதாலிழந்துகெட்டோம். சகோதரர்களாகிய துரியோதனாதியரைப் பிரிந்தோம். உண்டுதின்று உறங்கும் பருவத்தில் உண்ணாமல் தின்னாமல் ஓட்டாண்டியானோம். ஒருவருக்கொரு காசுகொடுக்கவும் கதியற்றோம்.

யுத்தமுனையில் வெற்றிபெறுதற்கும் வகையற்றோம், இனியுன்னிடத்தில் பொருந்தியிருப்பது தர்மமா? எங்களையிப்படி பரிதாபஞ்செய்தது மர்மமா? பாண்டுவுக்குப் புத்திரராகப்பிறந்த கர்மமா? உனக்கு ஊழியஞ்செய்ய எங்களை யடக்கிவைத்துக்கொண்டாயே. வேப்பம்வித்துக்கொப்பானவனே! என்று மரியாதை தப்பி யெதிர்த்துக்கொண்டார்கள். தன்னேடொருநாளு மாறுபட்டுப்பேசாத தம்பிமார்கள் வாயில்வந்தபடி பேசியவருத்தத்தினலும் துரோபதி படுத்துந் தொந்தரையினலும் தனக்குள்ளிருக்கும் சில அசந்தர்ப்பங்களினலும் அகாலபோசனத்தினலும் காட்டுத் தீவெப்பத்தினலும் மலைக்கானலினலும் பனியினலும் தன்னைப்பிடித்த சனியினலும் சமானமானவரசர்கள் பழித்துச்சின்னத்தனஞ் சொல்வதினலும் பாவமும்பழியுமேலிட்டதனலும் நம்மிடத்தில்வந்து முகத்தில்விழிக்க வியலாததினலும் தன்னுற்கூடியவரையிலுந் தாழ்ந்து குழைந்து விரகாக்கினியால்வெந்து சஞ்சலத்துடன் சலித்து உயிர்விட்டான். பிரியாமலிருந்த தருமராச னுயிர்பிரிந்தபோது தம்பிமாரும் பாஞ்சாலியுந் தழுவியழுது அந்தோ! பழுதுவந்ததேயென்று பரதவித்து, அண்ணனைப் பறிகொடுத்து முன்னிலிருந்தென்ன வாரிக்கொள்ளப் போகின்றோம். என்றைக்கிருந்தாலும், நமக்குமிதுவே கதியெனத் தேறியிறந்துபோயினர். அவ்விடமிருந்த கழுகு பருந்து காக்கைமுதலிய பட்சிகளும் மிருகங்களும் வயிறாரத்தின்று கழித்துவிட்ட வெலும்புகள் மண்ணில்மட்கி மறைந்துபோயின. அவர்களைக் குறித் தின்னும்பேசுவதுவீண். எனக்கநேக விதங்களினல் திருட்டாந்தமாயிற்று. அண்ணு! நான் திண்ணமாய்ச் சொல்லுகின்றேன். கருமானுலையிற் காய்ச்சித்துவைத்த இரும்பிலேறிய நீர் திரும்பிவந்தாலும் வரும் காடேறிய பாண்டவர்கள் இனி நாடேறப்போவதில்லை. என்சொல்லுக்கு எதிரெவர்சொன்னலும், அதுஈடேறப்போவது மில்லையென்றுரைத்தான். அத்துச்சாதனன் சொல்லைத் தேவர்கள் விரும்புந் திவ்வியஞான இச்சாசுதந்தரராகிய துரோணர் கேட்டுப் பச்சாதாபப்பட்டுப் புன்னகைவிளைத்துப் பாண்டவர் பட்சத்தில் வைத்த பட்சமும் பண்பும் அன்பும் செவ்வையாய்த் தெரியும்படி சொல்லத்துணிந்தனர்.

இராசாதிராசனுகிய சுயோதன மகாராசனே! கேளும் உம்முடைய தம்பியாகிய துச்சாதனராசனின் க்ஷாத்திரமாகச்சொன்ன ஆத்திரவார்த்தையை யோசித்துப்பார். பாண்டவர்களை இலேசாகவே நினைக்கவேண்டாம். சிறுபிள்ளையுடுத்த சிற்றுடைபோற் பேசவேண்டாம், முன்பின் எண்ணிப்பாராமல் முழுமோசம் போகவேண்டாம், முறைதப்பான ஆலோசனை பண்ணவேண்டாம், பாண்டவர்களெத்தன்மையர்; அவர்கள் வேதமுறை வழுவாத வித்தகர்கள். விண்ணவர்கொண்டாடு மேன்மைபெற்றவர்கள். யாவருடைய நாவுக்குமினிமையானவர்கள். எத்தலத்தவர்க்கு முதன்மையானவர்கள். முற்றத்துறந்த முனிவராலுங் காணுதற்கருமையான கண்ணுதலான் தந்த பாசுபதமுதலிய பாணவலிமையுடையவர்கள்; மிகுந்த சுகந்த கற்பகமாலைபுனைந்தவர்கள், விற்பனவிவேக முயர்ந்தவர்கள். எங்கும் விளங்கும் இளஞ்சூரியன்போல் சரீர காந்தியுடையவர்கள். மந்திரஞானிகள். எப்புவனமுமதிக்கும் ஒப்புவமையில்லா

தவர் மருதமரத்தை யுதைத்துக்காத்துக் குருந்தமரத்திற் குதித்துவிளையா டிய பன்னகசயனனுகிய திருமாலைப் பாண்டவர் சகாயனென்று யாவருஞ் சொல்லும் பதம்பெற்று இறுமாந்திருக்கும் பார்த்திபர். காலகேயநிவாத கவசர் களுடைய உரத்தையும் வரத்தையும் சிரத்தையும் புரத்தையும் போக்கித் தே வர்களிடரை நீக்கித் தேவேந்திரனுக் காதிக்கமுண்டாக்கி வைத்து அழியாத கீர்த்தியைப் படைத்தவர். கடலிலுமுயர்ந்த கண்ணருளுடையோர். அமுதினு மினிய அன்புடையோர். சற்றும் பிசகாத சத்தியசம்பன்னர். வித்தகமனு நூல் மேம்படுமன்னர். இத்தன்மையராகிய அதியுத்தமவேந்தரைச் செத்தன ரென்பதுதகுமோ? அத்தனபுரியில் உத்தமர்கூடிய சபையிற்கூறிய உறுதிச் சபதமுடிக்காமற் போவரோ? மத்திமர்கூடி வசைபேசும்படியாய்ச் சாவ ரோ? பாண்டவரை மாண்டவரென்று மனப்பால் குடிக்கவேண்டாம்; பகை வருக்கு ஆண்டவரென்று யோசிக்கவேண்டியது. தங்களுண்மையை நிலை நிறுத்தும்படி தவணைகழித்து இன்னுஞ் சிலநாளையி லிவ்விடம்வந்து சேரப் போகின்றனர். நாமெல்லோருங் கண்ணுற் காணப்போகிறோம். தேனேங்கு மாலையணிந்த பூமானே! நான் சொல்லியதைச் செவ்வையாய்த் தெரிந்துட் கொள்ளுமென்று துரோணசாரியர் சொன்னர். இப்பால் வில்லின்மறை வல்ல வராகிய கிருபர் சொல்லத்தொடங்கினர். நல்லவிவேக சுகபோக முற்றஇராச னே! சத்தியம்விட்ட அசத்தியர்களுக்கு மிர்த்தியுகிட்டிவருமேயன்றிச் சத்தி யந்தொட்ட உத்தமர்கட்கு உரியகாரிய நிறைவேறுமுன் மிர்த்திபு எட்டிப் பாராது; ஆதலால் உண்மையுள்ளபாண்டவர்கள்மரணமாயினரென்று அகால மரணத்திற்கு இடமானவர்களே சொல்வார்கள். புத்திமான்கள் அவை களையொருபோதும் ஒப்புக்கொள்ளார்கள். விம்முதலுடன் சென்ற வேந்தர் கள் ஐவரும் நம்மிடத்திலொப்புக்கொண்ட ஈராருண்டு மெளிதிற்கழித்து அஞ்ஞாதவாசங்குறித்து அவரவருருவமறைத்து, எந்நகரத்திலாவதடுத்து எடுத்தகாரிய முடிப்பதற்குந் தொடுத்தவேலை நடத்துவதற்குங் காலங்கருதிக் காத்திருப்பார்கள். அவர்களைக்கண்டு பிடிப்பவர்களுமுண்டோ? மண்டலதுரந் தர மதிகுலத்தவனே! அவர்கள் மகாசூரர்கள், தருமமறைமுதலிய சாத்திரமறி ந்த வீரர்கள். சாதுசங்கப் பழக்கமுற்ற தீரர்கள். தனகனகவஸ்துவாகன தரும விசாரணையிற் குபேரன் போன்றவர்கள். தவம்பெற்றவர்கள். மதிமந்திரிகள். ஒருமையும் பெருமையு முறவாய்க்கலந்தவர். இவ்வைவர்களில் தருமநந்தனர் சதாசிட்டைகூடினவர். அவாவறுத்தலும், பொறுமையும் அழுக்காறின்மை யும் நற்குணநற்செய்கையும்புறங்கூறாமையுமுடையவர். தம்பிமாரிடத்தி லன்பு தவறாமல் அவர்களிட்டப்படி மாறுபடாமல் நடந்து, காலத்துக்குத் தகுந்த புத்தியுத்திகளை யெடுத்துக்காட்டி அவர்களைத் தன் வசப்படுத்திக்கொண்டிரு க்கத் தக்கவர். அத்தம்பிமார்களோ தமையன் சொல்லுக் கிரண்டில்லாமலிரு ந்து அவராற்கீறியகோட்டைக் கடவாமல்நடந்து தமையனைத் தந்தையாகவே நெஞ்சிற்கொண்டு நிந்தைதேடாதிருப்பவர்கள். ஆதலால் அவர்களுக் கொருக் காலும் பொல்லாங்குநேரிடாது. அப்படிப்பட்ட அறிவாளிகள் மனவெறுப்பி னல் தமையனைத் தாறுமாறுய்ப்பேசி அவருமிறக்கத்தாங்களும்இறந்தார்களே

ன்பது மாச்சரியமன்றி ஆச்சரியமன்று. அங்கினைப்பைமுற்றும்மறந்து எப்படியுமிவ்விடம் வருவார்களென்னும் எண்ணம்வைத்துஅவர்கள்வந்துவிட்டால், அதற்குளென்செய்வோமென்று அச்சத்தோடிருக்கவேண்டும். அர்ச்சுனனோவென்றால் அசகாயசூரன்,அதிரதவீரன்,மூன்றுலகையும்வெல்லுந்தீரன்,சுந்தரத்திற்சொகுசுடையமாரன்,தேவதாஸ்திரந்தெரிந்தகௌமாரன்.வீமனெப்படிப்பட்டவனென்னில்,ஊழிகாலத்துநமன்போல யுத்தம்பண்ணத்தக்கசண்டப்பிரசண்ட தண்டதரன். சாந்தகுண தருமராசன்சண்டைசெய்யவந்தால் திரிபுவனமுந்திக்கென் றெரிந்துபோம். வடவாமுகாக்கினியும்வாடிச் சாம்பராய்ப்போய் விடுமே. அவருடைய மகிமையை யாருமறியார்கள். அறியத்தொடங்கினால் அளவிறந்திருக்கும், அரவக்கொடியோனாகிய அரசனே இளையவரிருவர் எத்தன்மையரெனில், இராமபாணத்திலுங் கொடிய அம்பினையுடையவர்கள். பரதன்போலும் இலக்குமணன்போலும் விரதங்காப்பவர்கள். பாஞ்சாலியோ பதிவிரதைகளிற் சிறந்தவள், சொல்லைக்கடந்து சொற்புகலாதவள், பல்லைத்திறந்து நகைக்கறியாதவள், இல்லையென்றுரைத்தல் என்றுமில்லாதவள்,வல்லவர்தம்பால் மாறுகொளாதவள், துடியிடையுடையவள். தூற்றலிலாதவள். நற்குணநற்செய்கைவாய்ந்தவள், இப்படிப்பட்ட எழிலுடைமாதுள். இவள் தருமராசனுடன் சண்டைபோடலாகுளென்பது தவறினுந்தவறே இவர்கள்முக்கியமாய் அஞ்ஞாதவாசந் தொலைத்து இவ்விடம்வருவார்கள். உங்களெண்ணத்தைப்பார்த்தால் அநத்தம் விளையுமென்பதற் கையமேயில்லை. அவர்கள் வெளிப்படுவதற்குமுன் எவ்வகையிலாவது கண்டுபிடித்துச் சபையிற் பேசியிருக்கிறபடி மறுபடியும் வனவாசம்போகச் செய்வோமாயின் நாம் சுகப்படலாம். அப்படி செய்யாவிடின் அர்ச்சுனன்கணை அதிக்கிரமித்து வந்து நம்மைக் கொண்டுபோய் நமனுலகத்திற் சேர்ப்பிக்கும்.

இதல்லாமலும் வேதியருக்குவேதமேகண்கள்.அரசருக்குத் தூதரேகண்கள். ஆகையால் நீங்கள் சாரணரைவிடுத்து முன்சாக்கிரதைப் படவேண்டும். நம்புத்திக்கு மேலான புத்தியையுடைய பாண்டவர்கள் ஆண்டவனருளைப் பெற்றவர்கள். எவர்கண்ணுக்கும் அகப்படார்கள். பகலளவுபோனாலொழிய இரவுவாராது. இரவளவு சென்றாலல்லது பகல்தோன்றாது. அதுபோல் உருவமறைந்துறையும் பாண்டவர்கள் அஞ்ஞாதவாசங்கழித்து வெளிப்படுவார்கள். நமது பலாபலத்தை நாமெண்ணி மெச்சும்போது எதிரிகளின் பலாபலமுணர்ந்து துணியவேண்டும். இப்படியெல்லாம் யோசித்து ஒன்றைச்செய்தால், என்றென்றைக்கும் பழுதுபடாது. அதைவிட்டுத் துராலோசனை செய்வதினாற்பயனென்ன? என்று மதியிலுயர்ந்த கிருபாச்சாரியர் வகுத்தார். இந்தப்படி துரோணரும் கிருபரும் பேசிய விவரங்களைச் சபை நிறைந்த சகலருங்கேட்டுப்பெரியோர்கருத்தைத் தங்கள் தங்கள் புத்திக்கிசைந்தபடி யோசித்து முடிப்பபோகிற காரணகாரியங்களையும் நிதானித்து வாய்மூடி மௌனம்போலிருந்தார்கள். அவ்வேளையில் கௌரவகுல பிதாமகராகிய வீஷ்மாசாரியார் துரியோதனனைப் பார்த்து அப்பா! திரிதராஷ்டிரனுக்குச் சுபுத்திரனும் எனக்குப் பௌத்திரனுமான சுகுணனே! நீ தூதர்

களையனுப்பிப் பாண்டவர்களைத் தேடச்சொன்னது ஞாயமே. அவர்கள் தேசமெங்குந் தேடிப்பார்த்துத் திரும்பிவந்துரைத்தது அபாயமே. அதற்காகக் கர்ணராசன் பேசியது நேயமே. உன்தம்பி துச்சாதனன் சொன்னதுனக் கநியாயமே. துரோணருங் கிருபரு மொழிந்தது காயமே. நீ அப்பாண்டவர்களை எப்படியுங் கைப்பிடியாய்ப் பிடிக்கவேண்டுமென் றெண்ணுவ துபாயமே. இதனுற்காரியமில்லை. பாண்டவர்கள் பன்னிரண்டாண்டு வனவாசஞ்செய்து அஞ்ஞாதவாச மோராண்டுக்தொலைப்பதற்குன்னி உருவமறைந்து ஒருதேசத்திலுறைந்து முக்காலேமூன்றுமாமுக்காணியாண்டுங் கழித்துவிட்டனர். இப்போது நீங்கள் ஐவர்களைக்கண்டுபிடிக்குமுன் மற்ற நிகரமுள்ள மாகாணிவருஷத்தையு மொழித்துவிட்டு வெளிப்படுவர். அப்படிப்பட்ட அறிவுடையாரை மரணமடைந்தாரென்று பேசினவர்கள் அப்பாண்டவர்களால் மரணமடையத்தக்கவர்களே. அத்தன்மையான அவசரப்பேச்சை எத்தன்மையோரெடுத்துரைத்தாலும் புத்தியானுகிய நீ எவ்வளவும்நம்பப்படாது. ஆயின் ஐவரிருக்குமிடத்தை நீங்களறியவேண்டுமென்னு மெண்ணமுண்டாகில், முந்நூலாசிரியர்களால் அதற்கோருபாயமுண்டாயிருக்கின்றது. அந்தக்குறிப்பின்வழியை நான்குறிக்கின்றேன். நீங்கள் நிதானித்துக்கொள்ளுங்களென்று காங்கேயர் சொல்லத்தொடங்கினுர்.

முற்றத்துறந்த முனிவர்களால் மதிக்கத்தக்க தருமராசனும் பாஞ்சாலியும் நால்வரும் பொருந்திவாழ்கின்ற நாடும் நகரமும் மாதமும்மாரி வருஷிக்க வளங்கொண்டிருக்கும். காடு கரம்புள்ள மலைகளெல்லாம் தேன்வாரிகசிந்துகொண்டிருக்கும். ஆறுகுளத்தி னலைகள் யாவும் நவரத்தினங்களைக் கொழித்துக்கொண்டிருக்கும். கழனிகளிலூர்ந்து தவழாநின்ற இப்பிகள் முத்துக்களை முறைமுறையே ஈன்றுகொண்டிருக்கும். கருங்கடற்கரைகளில் சிவந்த பவளக்கொடிகள் படர்ந்திருக்கும். காடுகள்தோறுந் தேடற்கரிய பொருள்வளம் நிறைந்திருக்கும். பசுவினங்கள் வேளைக்குப் பத்துப்படி பால்கறக்கும். வெகுசனர்கள் நடக்கும்வழிகளெங்கும் கரும்பாலைசிறக்கும். எப்போது முப்போகந் தப்பாமல்விளையும், நித்திய சுபமங்களமாயிருக்கும். அருந்ததிபோலும் பதிவிரதையான மாதர்கள் பொருந்தியிருப்பர். சாரபயம்வராது. சோரபயமிராது. தெருக்கடோறுந் தருமக்கொடி நாட்டியிருக்கும். போர்முகத்தில் வெற்றிகொள்ளுஞ் செயக்கொடி காட்டியிருக்கும், வண்டினம் மதுவுண்டு மகரந்தந்தோய்ந்து காந்தாரம்பாடும். அந்நகரப்பதியோர் அண்டினபேரை யாதரித்துக் கீர்த்திப்பிரதாபம்பெற்று சிவகாருணியராயிருப்பார்கள். துர்ச்சோபம் துர்ப்பயங்கரம் துர்மரணம் துர்வியாதி முதலிய தேகபீடை வாரா யோகமார்க்கவழிதேடித் தீவினையொழிந்திருப்பர். பொதுச்சாலையிற்கட்டிய ஆராய்ச்சிமணி யென்றுமசையாது. அசையும்படியான அக்கிரமங்களுமிராது. எளியவரென்றும் வலியவரென்றும் பாராமல் யாவர்க்கும்நடுவுநிலைமையாகிய நீதியொன்றுமிருக்கும். எவர்க்கு மறிவுகுறையாது. சகலகலைஞானங்களுந் தவறாது. உடனுக்குடனே துட்டநிக்கிரகசிட்டபரிபாலனம்நடந்தேறிவரும். ஆசாரபூசாவிதிக ளதிகமாயிருக்கும். தேவாலயம் விஷ்ணுவாலயமிகுதியாய்ச்

சிறப்புற்றிருக்கும். பாவத்திற்குங் கோபத்திற்கும் பயந்தடங்கி வாழ்வார்கள். புண்ணியத்திற்கும் பொறுமைக்கும் போக்கிடமாயிருப்பர். தைரியம் கல்வி ஞானம் குணம் பெருமை மேன்மை தபம் செபம் தானம் நிதானம் வெகுமானம் சன்மானம் வேதமந்திரவேள்வி ஓமம் பூரணகும்பம் புண்ணியாவசனம் போசனம் நவமணிமாளிகை யாண்டும் எங்குஞ்சிறந்திருக்கும். சுமங்களகல்யாண முரசும் தியாகமுரசும் வெற்றிமுரசும் எங்கெங்கும் வலம்புரிச்சங்கங்களு முழங்கிக்கொண்டிருக்கும். காயாமரங்காய்க்கும். பூவாமரம் பூக்கும். கமலக்கருணைக் கண்ணனும் மகாலட்சுமியுடன் வாசமாயிருப்பர். இத்தன்மையாகிய உத்தம நகரமெதுவோ? அதுதான் புண்ணிய புருஷர்களிருக்கும் பதியென் றுணர்ந்துகொள். இதைப் பெரியோர்கள் பேசியவண்ணம் நானு முண்மையாய்ச் சொன்னேன். இனிமேலுன்னுடைய வல்லமையினால் யோசித்து உறுதிசெய்துகொள்ள வேண்டியதென்று விட்டுமர் விளம்பினர்.

பக்கத்திலிருந்த கிருபாசாரி மகிழ்ந்து வணங்காமுடி மன்னனைநோக்கி வில்லும்வேலுந் தாங்கிய வேந்தனே! உன்னெண்ணப்படி முடியும் வண்ணம் சுலுபமாகியசூட்சியை உங்கள் பாட்டனார் சொல்லிவிட்டபடியால் திண்ணிய தூதரை விடுத்துத் தேடச்செய்வதற் கிதுவே நல்ல ஆதரவென் றுரைத்து மேலுஞ் சொல்லுகின்றனன். அன்புடைமையுடைய பாண்டவர்கள் இராச சபையிற் சொக்கட்டாஞடித் தோற்றநாளையில் என்போலொத்தவர்க ளேற்படுத்திய வாக்கியம் பழுதுபோகாமல், பன்னிரண்டாண்டுங் காடுறைந்து ஒரு வருடநாடுறைந்து காலங்கழிப்பதற்காகவே தங்கள் தங்கள் வடிவத்தை மறைத்திருப்பார்களென்பதற் கையமின்று. முன்னாள் நாமிருந்த இவ்விராச சபையி லுடன்பட்டுப் பேசினபேச்சின்படி சொற்சோர்வுபடாமல் தவணையைத்தவிர்த்து விவகாரப்பழுது வாராமல் மெய்வழி நிற்கின்றனன். அப்பதின் மூவாண்டுஞ் சென்றபிற்பாடு பாண்டவர்களே! நீங்களிவ்விடம் வருவீர்களாயின் உங்கள் நாட்டையொப்பித்துவிடுகிறேனென்று உறுதியுடன் எங்கள் முன்பாக நீ சொல்லியிருக்கின்றா யன்றோ? நீ அப்போதுரைத்த வாக்கியத்தை இப்போது தவறியேதேதோ பேசுகின்றனை! இன்னும் பாண்டவரைக் கண்டுபிடித்துப் பின்னும் பன்னிரண்டுவருடம் காட்டிலோட்டிவிடவேண்டுமென்று மிகப்பிரயாசத்துடன் சித்தப்பிரமையடைவது அநியாயமன்றோ? ஐயோ! தலைபோங்கால நேரிட்டாலும், சரீரத்தைவிட் டுயிர்கெட்டாலும், உன்னைப்போலொத்த உத்தமன் சொன்னிலைதவறிச் சோர்வடையலாமோ? அப்படி நிலைதவறுவையாயின் உன்னரசாட்சி யென்னபயன்பெறும்? உன்னை யார்தான் மதிப்பர்? ஆயின் எனக்கொன்று தோன்றுகின்றது. பாவங்களைந்து பாராளும் பார்த்திவரிடத்தில் சத்தியந்தப்பிய குணம் தோன்றுமாயின், அவர்களரசாட்சி பராரசர் பங்காய்விடும். அஷ்டலட்சுமியு மகன்று கஷ்டலட்சுமி கலந்துற வாடுவளென்றே வேதத்தில் விளம்பிய மொழியொன்றுண்டு. அதை யுன்னுங்கால் உன்னுடைய செல்வமுழுமையும் சத்தியவான்களாகிய ஐவர்களுடைய தென்பதற்கு யாதொரு சந்தேகமேயில்லை. இதைநீ செவ்வையாயோசித்துப்பார். உன்னுடைய ராவைத்திரமாகக்காக்கவேண்டும், முற்காலத்தில்

நாங்களெல்லோரும் உன்னுடன்கூடிக் குலாவியிருந்து பேசியவித் மென்ன வெனில், பாண்டவர்கள் வனவாசம்பண்ணிவந்தால் அவர்கள் நாட்டைக் கொடுத்துவிடுவதென்னுந் தீர்மானமேயன்றி வேறொன்றில்லை. இப்போது உனக்கிட்டமாகிய தம்பிமார்முதலியோர்களும் நீயுந் தாறுமாறாய்ப்பேசுவது சரியன்றே; அறியாதவர்க ளெப்படிபேசினாலும் பெருமையுடைய பெரிய வனாகிய நீ பேசப்படாதே. உங்கள்குணத்தை நிதானிக்குமிடத்தில் நீங்கள் நினைத்தகருத்தை நேரேயறிந்தோம்; நீங்களொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்னு நெறியறியீரோ? நீங்களெண்ணிறந்தநாள்தேடினும்உங்கள் கண்ணுக்குப் பாண்டவரகப்படப்போவதேயில்லை; அவர்களைக் கண்டுபிடிக் குஞ்சாமார்த்தியமுங்களிடத்திலில்லை. அப்படியன்றென்றுகாண்பதற்கெத் தனிப்பீர்களாயின் வீணேநாள்கழியும்; மேலானவிழிவுங்குறைவும் நேரிடுமே யல்லது நிறைவேறாது. அவர்களெந்நாளும் நன்னாளாகவே யனுபவிப்பார்கள். ஆயிற்று அஞ்ஞாதவாசமும் பண்ணிவிட்டார்கள். நீ கங்கணங் கட்டிக்கொண்டு இதுவரையிலுந் தேடவிட்டிருந்த தூதரால் பாண்டவரிருக்குந் தானந் தெரிந்துகொள்ளாமற்போனாய். இனிமேல் தேடவிட் டென்னலாபங் காணப்போகின்றாய். விருதா ஆலோசனையாற் பிரயோசனமில்லை. யாதொரு காரியத்திற்கும் முன்சாக்கிருதை யிருக்கவேண்டும். பின்னெண்ணிப்பார்ப்பது பேதையர்பக்ஷம். தவறினநாள்கழியுங்காலையில் தடவிப்பார்க்கத் துணிவது மேலானோர்பட்சமன்று. ஆயினும் பாகீரதிபெற்ற கோமுனியாகிய பரிசுத்த இருதயரான வீஷ்மர் சொன்னகுறிப்பின்படி தூய்மையும் வாய்மையும் பொருந்திய தேசம் எவ்விடமிருக்கின்றதென்று அதையாயினுந் தெரிந்துகொள். அப்பால் மற்றகாரியம்யோசிக்கலாமென்று வில்லாசாரியர் பேசியபோது, அவரிடத்தில் நேசவிசுவாசமுள்ள துரியோதனமகாராசன் மனம் வருந்தி நானிலமெல்லாந்தேடித் திரிந்தலைந்துவந்த சாரணர்களைநோக்கி நீங்கள் பார்த்ததேசத்தில் எங்கள் மூதாதையாருரைத்த வார்த்தையின்படி அழகும் வளப்பமும் அன்பும் நோன்பும் நேயமும் நிலையும் நீதியும் நெறியும் மானமுந் தியானமும் வண்மையும் பண்பும் இசைந்திருக்கும் பட்டணமியாதோ அதைத் தெரியச் செய்யுங்களென்று சுயோதனன்கேட்க, உடனே வேவுகாரரெல்லோருங்கூடி அரவக்கொடிக் கதிபனுடைய அடிமேற்பணிந்து விளம்பினார்கள், ஓ சுவாமி பராக்கு! பெரியமூதாதை பேசியபடியே மாதமும்மாரியின் யோகமும் பூதலப்பயிர் பொருந்துமுப்போகமும் ஆதுலர்க்களிக்கும் அன்னமுதலாகிய தியாகமும் சீருஞ்சிறப்புந் திகழுநற்செல்வமும் அறம்பொருளின்ப மானமேம்பாடும் நிறந்தரும்பசுக்கள் நெருக்கமுஞ்சுத்தமும்பாவச்சுருக்கமும் படையின்பெருக்கமும் வாழையுங் கமுகும் வளந்தருதெங்குங் கரும்பும் வளம்படவிளைந்து பார்ப்பவர் மனத்தையுங்கவர்ந்து மேன்மேற் சிறந்த நாடு மச்சநாடல்லது வேறில்லை; வேறே மாற்றிச்சொல்லுவதற்கும் வகையில்லை; எங்கு மாராய்ந்துணர்ந்தோம். அந்நாட்டின் மகிழ்ச்சியை நாங்களென்னென்றே சொல்லுவோம்? இந்நாட்டுக்கிசைபெற்ற ஏந்தலே! நம்முடைய பிதாமகன்பேசியவார்த்தைக்குபிசகில்லை; சத்தியந்தானென்று பேசிவந்த தூதர்

கள் மற்றோரதிசயத்தையுங் கேள். யாரோவொருபெண் சைரந்திரியென்றும் மாலினியென்றும் பிரகன்னளையென்றும் வண்ணமாமகளென்றும் பேர்கொண்டு விராடராசன் மனைவியினிடத்தில் வந்துசேர்ந்திருக்கின்றாளாம்; அவள்மேற் கீசகன் ஆசைகொண்டு தூரத்தினனும்; எவனேவொரு கிங்கரன் குறுக்கே நுழைந்து அவனைப்பிடித்தெறிந்து விசினனும்; சபையிலிருந்தவர்களேசினர்களாம். அக்கீசகனையும் அவன் தம்பிமார்களையும் சிலர் மோசஞ்செய்து பொழுதுவிடிபுமுன்னமே கொன்றுபோட்டார்களாம். இவ்வகையாகக்கொன்றவர்கள் யாரென்று விசாரிக்குமிடத்தில் மேற்கூறிய வண்ணமா மகளுக்கு மெய்க்காவலாக விண்ணுலகிற் சஞ்சரிக்குங் காந்திருவரைவரென்று அந்நகரெல்லாம் பேசிக்கொள்ளுகின்றனர். நாங்களதை நன்றாகயோசிக்குங்காலையில் அக்காந்திருவரைவரும் பாண்டவர்களென்றும் அவர்க்குரிய பாஞ்சாலியே வண்ணமாமகளென்றுந் துணிவாகச் சொல்லுவோம்; இதுவே நிச்சயமென்றுஞ் சொன்னார்கள்.

இவ்வகைகூறியசாரணர்களுடைய ஸ்திரவார்த்தையும் வீஷ்மாச்சாரியர் மனங்குவிந்துரைத்த சத்தியமொழியையுஞ் சேர்த்துத் தன்கருத்துக்கிசையச் சீர்தூக்கிப் பார்த்துக் காரணகாரியத்தை யோசித்துத் துரியோதனன் பூரணமனத்தோடு பேசத்தொடங்கினன். ஐயா! கிருபர் வீஷ்மர் முதலிய கிருபைக்கடலாகிய பெரியோர்களே! கேளுங்கள். வீமசேனன் சராசந்தன் பகாசுரன் மத்திரராசன் பலதேவன் இவர்களியாவரும் இந்திரன்முதலியபேர்கள் புகழத்தக்க தோள்வலிமையுள்ளவர்களாய்ப் பதினாயிரம்யானை பலம் படைத்தவரென்றும், இவர்களில் ஒருவரையொருவர் கொல்லலாமேயன்றி மற்றொருவரால் மடியாரென்றும் பெரியோர்கள்பேசக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படியிருக்க, காந்திருவர் வந்துகீசகர்களை மடித்தாரென்பதை யெப்படிநம்பலாம். அச்சைரந்திரி நிமித்தமாய்க் கீசகர்கள் சங்கரிக்கப்பட்டார்களென்பதை நன்றா யோசிக்குமளவில் அவள் சைரந்திரியல்லள், துரோபதையென்றும், காந்திருவரல்லர் பாண்டவரென்றும் அப்பாண்டவரில் வீமசேனனேகீசகர்களைநாசஞ்செய்தவனென்றும் பெட்டிப்பாம்புபோலடங்கிவிராடநகரத்தி லிருக்கின்றார்களென்றும் கெட்டியாய்ச்சொல்லுவதற்கு யாதொரு அட்டியுமில்லை. அதேனெனில் வல்லிரும்பென்னத் திருந்திய புயவலி பொருந்திய இயக்கர்கள் அமரர்கள் நாகர்கள் அசுரர்கள் இராக்கதர்கள் காந்திருவர்கள் முதலாகிய யாவரும் அக்கீசகன் வல்லமைக்கு ஆற்றமாட்டாமல் கால்கைநடுங்கியொடுங்கி யிருந்தார்கள். இவர்களிலோர்பிரிவாகிய காந்திருவர்வந்து கொன்றார்களென்பது எனக்குமிகவு மாச்சரியமாகவேயிருக்கின்றது; தேன் துளிக்கு மூடியாறுகிய கீசகனை மடித்தவன் காமனுக்கொப்பாகிய வீமனென்றே துணிவதற்கியாதுமையமில்லை; நிச்சயமே. வண்டுமொய்க்குங் கொண்டையினையுடைய வண்ணப்பெண் வடிவினள்; ஐவர்க்குமுரியதேவியே, இதற்கையமென்பதேயில்லை. ஆகையால் பாண்டவர்கள் விராடநகரில் மறைந்திருக்கின்றார்கள். அஞ்ஞாதவாசத்தவணை கழிக்குநா ளின்னுமிருக்கிறபடியால் தாங்கள் வெளிப்படாமற் சிங்கபல கீசகனுயிரைத் தீர்த்துவிட்டார்கள்.

இதற்குமேல் நடக்கவேண்டிய யோசனையென்ன? இன்னதென் றுரையுங்கள், பொன்னனைய பெரியோர்களேயென்று சயங்கொண்டாளும் புயங்கக் கொடியோன்கேட்க, சூரியகுமாரனாகிய கர்ணன் ஓர்மொழி யுரைக்கலானான். மனங்காதலிக்கும் வணங்காமுடி மன்னனே! முன்னமெண்ணியதே நிசம். இன்னுமேன் தாமசம். மேகமண்டல மளாவிய தேர்விதங்களும் மும்மதம்பொழியும் யானையினங்களும் குப்புற்றுலவுங் குதிரைத்திரள்களும் ஆலாலம்போன்ற காலாட்களும் இக்கணமே புறப்பட்டு மச்சநாட்டைவளைத்துப் போர்கொடுத்துப் பசுக்கணங்களைத் தடுத்து நமதூர்புகவிடுத்துக் சண்மூடிக் கண்திறப்பதற்கு முன்னமே கலகம் விளைத்துவிடுவோம். நாமெண்ணியவண்ணம் பாண்டவர்களிருப்பார்களாயின் விராடராசனுக்குப்பரிந்து நம்மேற்சண்டைதொடுக்க வருவார்கள்; சும்மாவிருக்க மாட்டார்கள்; அவர்களைக்கண்டுபிடித்துவிவகாரஞ்செலுத்தலாம். அவர்களவ்விடத்திலில்லாமற்போனால்,மடக்கியபசுமந்தைகளெல்லாமுங்கட்கடைக்கலந்தானே.இரண்டுவகையிலுநமக்கிலாபமிருக்கின்றது.இதுவே பாங்கென்று அங்கதேசத்தரசன் சொல்ல, அங்கிருந்தவரசர் யாவரும் பொங்கிப்பூரித்து இதுவே யாவருக்குஞ் சம்மதமென்றிசைந்தார்கள். பெருமையுடைய துரியோதன மகாராசனும் இக்கருத்துக் கொத்திருந்தான்.

அவ்வேளையில் திரிகர்த்த தேசாதிபனாகிய சுசர்மனெழுந்து, கரத்தைச் சிரத்திற்குவித்துப் பணிந்து கௌரவகுலாதிபனே! முன்னொருநாள் சேனாதிபதியாகிய கீசகனுக்கும் எனக்கும் போர்விளைந்து மன்னர்களுடன் வந்துவளைந்து என்னைப்பிடித்து இறுகப்பிணித்துத் தன்னகரத்திற்குக் கொண்டுபோய் விட்டான். அவனே கையைவிட்டுத் தப்பித்து வரப்பட்டபாடு தெய்வமறிந்தது; அச்சத்துருவை வெல்லுவதற் கென்னான்முடியாமையால்,அந்நாள்முதலிந்நாள்வரையிலும்நன்னாள்நமக்கெப்போது வருமென்றே தான்காத்திருக்கின்றேன்.முன்னாள்செய்தமுழுவினைவசத்தால்அவனே அகப்பட்டுக்கொரண்டார்ன்; காமாந்தகனாகிய கீசகன் வாசஞ்செய்த மச்சதேசத்திற்கு என்னைப் போகச் சொல்லுவீராயின் விராடராசன்முதலியவேந்தரையும்பிடித்துக்கட்டிஎன்மனத்தில் வெந்துகொண்டிருக்குங் குரோதத்தையும் காட்டித் திட்டி அவ்விராடராசன்மைத்துனனாகியகீசகன் என்னைப்படுத்தியஅவமானத்தைஇவன்பாற்படுத்தி, அவ்விடத்திலொளிக்கும் பாண்டவரைப் பக்குவமாயறிந்து மச்சராசன் வளப்பங்களைக் கைவசப்படுத்திக் கீசகன்பலத்தால் நமக்குக் கப்பங்கட்டாதிருந்த கருவத்தையடக்கிப்பசுநிரைகளையுமடக்கி அத்தினாபுரமேவந்து சேருகின்றேன். கர்த்தனே! என்று திரிகர்த்தன் சொல்ல, இராசாதிராசன் நகைத்துமகிழ்ந்து படையிலுமொருவன் கொடையிலுமொருவனெனப் புகழ்ந்து, அண்ணா கர்ணா!சுசர்மன்சொல்லியவாக்கியம்உமக்கெப்படியிருக்கின்றதென்று கேட்டான். அடடா! இப்போதே அப்படிசெய்வது உத்தமமென்றான். அப்போதே சேனாசயிலியங்களைச் சேகரிக்கும்படி உத்தரவளித்து, சுசர்மனுக்கு வரிசைகளுந் தாம்பூலமரியாதையுநடத்தி அண்டகடாகமதிரும் வாத்தியங்களுடன் சண்டைக்கனுப்பினான். அவ்வாறு விடைகொண்டு திரும்பிய திரிகர்த்தன் விந்தகிரிக்கொப்பாகிய தேரேறிப்பூலோக தேவேந்திரன்போல்

புறப்பட்டுச் சிறப்புப்பொருந்திய விராடநகரத்தின்மேற் போர்புரியப் போனான். இப்பால் நந்தியாவட்டமாலை யணிந்தராஜாதிபன் சபையிலுயர்ந்த சாதுக்களை நோக்கி, ஐயா! பூரணஞான சிலபுண்ய மூதாதையாவார் புகன்ற குறிப்பிற்கிணங்க நமது தூதருரைத்த சொற்களினாலும் என்னுடைய நிச்சயத்தினாலும் அவ்விராடநகரத்தில்பாண்டவரிருக்கின்றனரென்பது பரிஷ்காரமாய்த் தெரியவந்தது. அதற்குக் காரணமென்னவெனில், கேகயராஜ குமாரனாகிய கீசகனிறந்த காட்சியே சாட்சியாய்விட்டது. அவ்விடத்திற்குத் தண்டெடுத்துப்போன திரிகர்த்தன், மச்சநாட்டிற்புகுந்து மாட்டை மடக்குங்காலத்தில், எதிரிகள் சும்மாவிருக்க மாட்டார்கள். அவர்கள் மேல்விழுந்து போர்தொடுத்து மாட்டைத் திருப்பிக் கொள்வார்கள். ஆயுதங்களாலடிபட்டு மூனைகெட்டுப் படைமுறிபட்டு பிடித்த பசுக்களைவிட்டு முதுகிட்டோடிவருந் திரிகர்த்தனுடைய வருத்தத்தைகேட்டுப் பின்பு நாம் படைத்துணைபோவது நன்றோ? அல்லது, இப்போதே செல்வது நன்றோ? குற்றமற்ற வுத்தமர்களே! நீங்கள் சொல்லுங்களென்று வெற்றிபெற்ற துரியோதன மகாராசன் கேட்கப் புத்தியிற்சிறந்த கர்ணராசன் மனம்பூரித்துக் கொற்றவனே! வித்தகவிராடராசன் மைத்துனனாகியகீசகனையனுப்பி, அடிக்கடி யுத்தம்பண்ணச்சொல்லி நம்மைத் திடுக்கிடப் பண்ணிக்கொண்டிருந்தானே. அந்தவஞ்சந்தீர நாமவனைத் தண்டிக்கவேண்டுமாதலால், உமது பெரியவர்களுடைய அனுமதிகேட்டுப்பெருஞ் சேனைப் படைகூடிப் புறப்பட்டுப் போர்செய்யட்டுமென்று கவசகுண்டலன் கழற,அவன்மொழியைச் சிவன்மொழியா யுட்கொண்டு பின்னும் பெரியோர்களைப்பார்த்து நான்நினைத்தநினைப்புக்கென்னசொல்லுகின்றீர்கள்? உங்கள்கருத்தையு மொளிக்காமல் வெளியிடுங்களென்று திங்கள்குலத்துதித்த துரியோதனன் வினவினான். அப்போதங்கிருந்த விரதப்பொருளாகிய கிருபாசாரியரும், மெய்த்தவவித்தக வீட்டுமரும், வேதவித்தாகிய துரோணருமுக்கியமாகப் படையெடுத்துப் போகவேண்டியதென்று சம்மதித்துப்கொண்டு போனபிற்பாடு போவோமென்றுரைத்தனர். அம்மொழியைச் சர்ப்பக்கொடியோன் கேட்டுச் சந்தோஷித்துத் துச்சாதனனையழைத்து எனக்கு நற்றுணையாகிய தம்பி! இரத கச துரக பதாதிகள் முதலிய சேனைகளைப் பிரயாணபேரிகை அறைந்து புறப்படச்செய் என்றான். அப்படியே செய்வேனென்று பிரயாணபேரி முழக்கச்செய்து மிக்கவிடங்கொண்ட நாகக்கொடிபொருந்திய சுயோதனன் தம்பிமார் தொண்ணூற்றொன்பதுபேரும் சௌபலன் சகுனி கர்ணன் முதலாகிய அரசர்களையுங்கூட்டித் தங்களெண்ண மிவ்வாறென்று தெரியக்காட்டி யுத்தகோலங்கொண்டிருந்தனர். கொத்துச் சித்திரவேலை பதிந்த இரதத்தை செலுத்தி,மச்சநாட்டின்மேற் சென்ற திரிகர்த்ததேசாதிபனுடைய செய்தியைச் சொல்லுகிறேன். கேளும் ஜெனமேஜெயமகாராஜனே! என்று வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

பெருமையிலுயர்ந்த பெரியோர்பேச்சைப் பொருளாகக்கொள்ளாத துரியோதனன் கட்டளையிட்டவண்ணம் படைசேர்த்தெழுந்த வெட்சிமாலைபெற்ற திரிகர்த்தனே முரசவாத்தியம்பேரி டங்கா பாங்கா காகளம் சங்கம்தாரை

பூரி வீராசின்னம் தப்பட்டை முதலாகிய வாத்தியங்களைத் திக்கெட்டுஞ்செவி
டுபட முழக்கிக் கத்தி கட்டாரி கேடயம் ஈட்டி எறிவேல் சூலம் பிண்டிபா
லம் வாள் முசலம் தோமரம் குந்தம் சக்கராயுதம் மற்றுமுள்ள ஆயுதங்களெ
ல்லாம் பளபளவென்று விளக்கொளிபோல் மின்னப்பிடித்துக் கவசகுண்டல
கிரீடமதாணிகடகங்கணை தோளணிப்பதக்கமுதலியனதுலங்கியிலங்கும் வீரர்
களையும் திடகாத்திரதேகத்திரர்களையும் திசாதிசைகளிற்போகவிட்டுஓரக்குரோ
ணிப்படைகளுடன் மச்சதேசத்திற்குத்தட்சணத்தில்வந்து இறங்கிக்கட்டுக்கா
வலில்லாமல் எதேச்சையாகத்தின்று கொழுத்துக் கன்றுடன்தழைத்துத் திரி
கின்ற பசுமந்தைகளனைத்தையு மடக்கினான். அப்போதந்த மாடுகளெல்லாம்
காதுகளைநெறித்துக் கண்களையுருட்டி விழித்துக் கடைப் பார்வைபார்த்துத்
தலையேறிட்டுத் தங்களை மடக்கினவர்கள் அன்னியரென்றறிந்து தத்தங்கன்று
களுடன் பெயர்ந்து, கும்பலினின்று முறிந்து கும்மாளமிட்டு காலுபக்கமும்
பிரிந்து அம்மாவென்றலறி வீரிட்டதிர்ந்து அயர்ந்துபயந்துசெம்மான்பாய்வது
போற் பாய்ந்து, சும்மாவொருமூலையிற் கொம்பசைத்துக் கூட்டமாய்ச் சாய்
ந்து வெருண்டு பதறிக்கதறிக் கால்கள்தவறிக் கலங்கித்திகைத்துமயங்கித் தய
ங்கிய கன்றோடும் பசுநிரையைச் சுசர்மனுடைய சேனாசயின்யங்கள்துரந்தித்
துரத்தி மறித்துப்பிரித்து இருப்புக்கண்ணியால் தடுத்தார்கள். அப்பசுநிரை
களைக் காத்திருந்த காவலர்களும் அவற்றை மேய்த்திருந்த கோவலர்களும்
ஆக்கிரமித்து அதிர்த்தெழுந்து மூவுலகதிரும்படிதாவிப் பகைவர் சேனைமேல்
விழுந்து அஸ்திரசஸ்திரங்களாலும்கொடுதடிகுண்டாந்தடி சுக்குமாந்தடி வளை
தடி கிலுக்குத்தடி முறுக்குத்தடி பாணத்தடி ஈட்டி எறியீட்டி திருகீட்டி
சொருகீட்டி உருகீட்டி சூலத்தீட்டி குயிட்டி பாலா பல்லயம் பட்டா பா
ங்கு சாங்கு கத்தி கட்டாரி பிச்சுவா கவண்கல் உண்டைவில் சுண்டுவில் அம்
புவில் இத்தன்மையவாகிய படைகள் பலவுங்கொண்டெதிர்ந்து சினமுதிர்ந்து
பாய்ந்து சினத்தாற் காய்ந்து அவர்கள் மாய்ந்துபோம்படி சிலரைவெட்டியும்
பலரைக்குத்தியும் அடித்தும் மடித்தும் சிலரையுதைத்தும் சிலரைவதைத்
தும் பலரைமறித்தும் பலரைமுறித்தும் துண்டித்தும் கண்டித்தும் சுற்றிய
வரைக் குத்தியும் பற்றியவரை யெற்றியும் தங்கள்மாட்டைத் திருப்பினர்.
திரிகர்த்தனைச்சேர்ந்த சேனைகள் சித்தப்பிரமைகொண்டு ஒருமுகமாய்ச் சாய்
ந்து கணக்குமிதமற்ற கடுங்கணைகளைத் தாண்டி மும்மதயானைகளை முடுக்கிக்
கோட்டைமதில்போற் குறுகிவகுத்துச் சிகரம்பெற்ற தேர்களைச் செலுத்தித்
திசைகளிலோடி நிரைகளைவளைத்துக் குப்புற்றுப்பாயுங் குதிரைகளைவிடுத்
துக் கூட்டமாகியசேனைகள் நிலைகெட்டழியக் கெடுத்துத் தன்சேனைகளாலச்
சேனைகள் குறைந்துபோம்படிசெய்து மீண்டு நிரையைத் திருப்பிக்கொண்டு
கட்டுக்காவலமைத்துச் செயஞ்செயமென்னச் சங்காதமுழக்கி அப்பசுநிரை
க்காக மேலிட்டுவந்த கோபாலரையும் பூபாலரையும் வில்லெடுத்துவளைத்துச்
சரமாரிதொடுத்துத் திசைமாறவிடுத்து விசனப்படும்படி மாட்டி வாட்டிய
போது இடையர்களெல்லாம் உடைந்திடைந்து கையிழந்தவரும் காலழிந்த
வரும் மெய்புளைந்தவரும் மேனுளைந்தவருந்தலைகளற்றவரும்தாள்களற்றவரும்

முன்னைகெட்டவரும் நிலைகெட்டவரும் கண்ணீராறு கரையின்றிப்பெருகி வாரி நீர் வழிவதுபோல் வழிபவர்ந்து விராடநகரத்திற் புகுந்து முடிவேந்தனுடைய கொலுமுகத்தின்முன்சென்றுநின்று சங்காழிமுகுந்தனைப்போற்சிங்காதனத்தி ருந்தருளியஅரசனைநோக்கி,எங்கோனே!என்றுவணங்கிச்சுசர்மனுடன்திரிகர்த் தர்களும் குருசேனுசகிதமாய் நேர்ந்து தென்திசையில் நிறைந்த பசுநிரையை மடக்கினர்; அவருடன் நாங்களும் பகைத்து எங்களாற்கூடியவரையும் போரி ட்டுப் பார்த்தோம்; அவர்களைவெல்ல வல்லமையில்லாமலடிபட்டு வெம்பி வெதும்பியோடி வந்துவிட்டோம்; அறுபதினுயிரம் பசுக்கள் அவர் வசப்பட் டன; இன்னும் நாற்பதினுயிரம் பசுக்களையுங் கைக்கொள்ளப் பார்க்கின்றனர். நாதனே!தேவரீர்ஆலசியம்செய்யாமல் அமர்க்கெழவேண்டுமென்றனர். முல்லை நிலமாக்கள் மொழிந்ததைக்கேட்ட வல்லவன் நகைத்துக் கண்ணிரண்டுங் கறு கறுத்து வெறுத்துக் கைந்நெரித்துப் பற்கடித்துச்சிரித்து ஓகோ! விசுவாசமோ சத்தைக் கண்டீர்களா? சொப்பனத்திலும் நினைக்கப்படாத அற்பனுகியதிரிகர் த்தனே எங்களால் கட்டுப்பட்டு நொந்து கால்மேல்வீழ்ந்திரந்து என்றென்றை க்கும் அடிமையென்று புகன்று இழிவுபட்டுப்போனதையுமறந்துமூவர்முதலிய தேவர்களாலும் வேறுநினைக்கப்படாதஇவ்விராடநகரத்துக்குவந்துமிக்கசேனை யுட னெதிர்த்துப் போர்தொடுத்து வெகுபேரையுங் கெடுத்து மாட்டையுமட க்கி யிருக்கின்றானும்; நல்லதாகட்டும். சேனுபதிகளே!வீரபட்டம்பெற்ற இரத கச துரக பதாதிபலமுள்ள ஓரக்குரோணி சேனையையும் யுத்தசன்னுகப் படுத் துங்களென்று மெத்தமுழக்கமாய் வெடிபடச்சொன்னுன். அச்சொல் செவி யிற்புகுமுன்னமே கரத்தில்வில்லும் கழுத்தில்மாலையுந்தரித்தகாவலர் அநேகர் எட்டுத்திசையிலு மடங்கப்படாத வாத்தியமுழங்கத் திரண்டதேரேறி வெள் ளம் புரண்டுவருவதுபோல் வந்துமொய்த்தனர். இதல்லாமலும் வெல்லும்படி யான அதிரதர்களெழுந்து நவமணிகளாற் சிறந்தமுடியும் சூரியனுநாணத்தக்க மாணிக்கப்பதக்கமும் ஆணிப்பொன்னுலாகிய மதாணிப்ப தக்கமும் நிரை வென்றோர் அணியும் தும்பைமாலையும் கேயூரமணி குண்டலகண்டியும் பிர தாபவில்லும் சபதச்சொல்லும் பொங்கமாக்கொண்டு சிங்கம்போற்சென்று பொன்னுலகைவிட்டிழிந்த இந்திரனென்னும்படி திக்கசங்களை நிகர்த்த யானையின்மேலேறிப் பெரும்புலியென்னச் சீறிப்புறப்பட்டனர். எண்ணிய எண்ணத்தை நிறைவேற்றும் திண்ணியபுய நிடகாத்திர தீரர்கள் யாவரும் ஒருங்குகூடி விராடராசன் வெளிப்படுமுன்னமே நாம்போய்த் திரிகர்த்தனு டன்அவன்சேனைகளையுங்கொன்று பசுநிரைகளையுங்கைக்கொண்டு விராடராச னுக் கெதிர்சென்று நாங்கள் வென்று வந்தோம்; நீங்கள் போகவேண்டிய அவ சரமில்லை என்றுசொல்லிஉயர்ந்தவிருதுகள்பெறுவோமென்பதாகஆணிவில்லை வளைத்து நாண்பூட்டி அம்பறுத்தூணிமாட்டி வாளுங்கேடகமும் வல்லயமும் பல்லவமுங்கொண்டு பகைவர் பட்டார்; அவர்கள் கெட்டார்களென்று கெரு வித்தெழுந்து கட்டுக்கடங்காமல் அட்டாளதேசமு மூலவிவரும் பட்டாளக் குதிரையேறி வந்தனர். சேனுவீரர்கள் திரண்டு திக்கென்றெரியச் சேல்விழி காட்டிச் சிறிப்புகைந்து செம்பொறிசிதறக் காய்ந்து வீரகண்டையை யாட்டி

வெதுப்பும் வெறுப்புங்காட்டி படைகளைப்பிடித்து அரைக்கணமுந் தாமதியாமல்துடித்து அலைபரந்த கடலேழும் அடியோடுபெயர்ந்த அந்நாளேயிந்நாளென்று அகிலசராசரமும் பேசிக்கொள்ளும்படிபேரோசைமுழக்கிப்பெருங்கும்பு சேர்ந்தார்கள். இவ்வகையாகச் சதுரங்கசேனைகள் புறப்பட்ட வீராவேசத்தை விராடராசனுடைய முதற்பிள்ளை சுவேதனென்பவன் கேள்விப்பட்டு நாமிருக்க நம்முடைய தந்தை வருந்துவானேனென்று தனது பிராணனையும் எதிராளியையும் துரும்பாகமதித்துப் பம்பரம்போற்சுழலும் செம்பொற்றேரேறி வீரலட்சுமியை விவாகஞ்செய்வதற்கு விரும்பிவருந் தீரபுருடனைப்போற் கூரம்புப்புட்டிலும் கார்முகவட்டமும் தாங்கிக் குவலயநடுங்கக் கவலையோடடைந்தனன்.

இரண்டாவதுபிள்ளை சதானீகனென்பவன் சங்கதிகளறிந்து முகச்சுளிப்புடன் வெளியேவந்து அப்படியா? இந்நாள்வரையிலும் பின்னமில்லாத இம்மச்சநாட்டிற்புகுந்து சிறிதேனுமச்சமில்லாமல் மாட்டைமடக்கிய லச்சைகெட்ட திரிகர்த்தனுடைய சேனையென்னுஞ் செய்கால்நிலத்தை என் வில்லம்புகொண்டுழுது உதிரநீர்பாய்ச்சி உயிராகிய விரையைவிரைத்து அக்கிரமமென்னுங் களைகளைக்களைந்து வெற்றிப்பயிர்விளைத்துப் பூபாரப்பிணப்போர் கட்டி எமனுக்கு மேல்வாரங்கொடுத்து என்தந்தைக்கு இசையென்னு நிலவாரம் கொடுக்கிறேனென்று திடுக்கென்றெழுந்து வில்லைவளைத்து நாணோசை தெறித்துப் பங்கப்படாதசிங்கக்குருளைதங்கமலையில்தாவும்தன்மைபோல் விசாலமான தேரேறி வீதியில்வந்தான். மூன்றாவதுபிள்ளை சங்கனென்பவன் சிங்காதனஞ்செய்தெழுந்து எங்கள்மாமனாகிய கீசகராசனிருக்கிறவரைக் குஞ்சிறிதேனும்கோப்பியமாயிருந்தது, அவனிறந்தபின்பு மெத்தநொந்தனைக் கிடமாய்விட்டதே; இனிமேற் பலரும் வசையாயேச, அம்மொழியைக்கேட்டு நானுயிரோடிருந்து இன்பமனுபவிக்கவேமாட்டேன். இதோ! வாளாயுதமெடுத்துப் புறப்படுகின்றேன்; வந்தவர்நொங்கழியக்கொந்தித்தள்ளுகின்றேன்; அவர்களை வெல்லாமலுங் கொல்லாமலும் போவேனாயின், என்னுயிரழிந்து பொன்னுலகம்போய்ச் சேருகின்றேன்; இதுவேசத்தியமென்று சபதம்பேசி விசையுடனோடித் திசையசையுந் தேரேறிக் கவசமணிந்து தன்னையொத்த தாராபதிக்குமரரும் மின்னுக்கிணையாம் ஆயுதந்தாங்கி வீராவேசங்கொண்டு வரத் தானும் பிரயாணமானான். நான்காவதுபிள்ளை வராககேது நான்குவேதமும் தநுர்வேதமும் தருமசாத்திரமும் மநுவிஞ்ஞானமும் தேர்ந்து அறம் பொருளின்பம் வீடென்பவற்றையறிந்து பொறுமைக் கவசம்பூண்டு,மன்னுயிரனைத்தையுந் தன்னுயிராய்ப்பரிந்து பாதுகாக்கும் பருவநாயகன்; குலமன்னர்கூட்டமும் பலமன்னரீட்டமும் காலாட்படைகளும் கசரததுரகமும் வேற்படை விற்படையுங்கொண்டு மச்சதேசத்துத் தட்சணதிசையிற்சென்றிலட்சியம்வையாமல்,அத்திரிகர்த்தனை இக்கணமே கொன்றுகளைந்து,வீரசொர்க்கத்திலேற்றிவிட்டு, வேறுவேலைபார்க்கிறேனென்றுவிசித்திரக்கவசம்பூண்டு தேரேறிப்போரேறுபோற் புறப்பட்டான். இவ்வகையாக நான்குமக்களும் நால்வகைச்சேனைகளும் ஆரவாரித்தெழுந்து சத்திரம் சாமரம் ஆலவட்டம்

கொடி குடை பீலிச்குஞ்சம் மகரதோரணம் டால்வகைகளும் படைமன்ன ரும் வாத்தியகோஷமும் பின்னுமுன்னும் பெரும்புறக்கடல்போல்வரச் சிங் காதம் சங்காதம் எங்குநாதமாய் முழங்கத் தேர்நிரை யானைநிரையுடன் சேர்ந்தசேனையை விராடராசன் கண்குளிரக்கண்டு பிள்ளைகள் நால்வரும் செல்வதைப்பார்த்து ஐயோ! இந்நாள்வரைக்கும் என்னைவிட்டுப்பிரியாமலும் போர்முகமறியாமலுமிருந்த அறியாத சிறுபிள்ளைகள் முன்பின் எண்ணுமல் போயிருக்க, நாமிவ்விடமிருப்பது நியாயமோ? அவ்விடம் விளைவது என்ன அபாயமோ? என்றெண்ணித் தன்சகோதரர்களாகிய சதானீகனையும் மதி ராசுவனையு மழைத்து, வாருங்கள் தம்பிமார்களே! தட்சணநிரை மீட்கக் குப்போன நமதுபிள்ளைகளின் போர்த்திறத்தையும் குருசேனையுடன் வந்த திரிகர்த்தனது போர்த்திறத்தையும் நான் பார்க்கவேண்டியிருப்பதால், சீக்கிர த்தில் தேர்கொண்டுவரச் செய்யுங்களென்றான். தமையன்மொழிதவருத தம்பிபிருவரும் இரதவலங்காரம் புரிந்து, திடவேகமுள்ள குதிரைகள்பூட்டி மதிமோகனென்னுஞ் சாரதியுடன் கொண்டுவந்து நிறுத்தினர்கள். பொற் றகடு வேய்ந்து நவரத்தினமிழைத்த அஸ்திர சஸ்திர திரஸ்காரவயக் கவசந் தரித்து, அம்பப்புட்டிலும் வரிநெருங்கியவில்லும் வாளும் வேலும்ம குடமும் மகரகுண்டலமும் வாகுவலயமும கச்சையும் வீரகண்டையும் விரற்சாடும் கரச்சாடும் மின்னுகின்ற நெற்றிப்பட்டமும் புனைந்து தம்பிமாரும் அரசகுமா ரநும் மிக்க பிரபலமான சேனைகளும் - விருதுமேளவாத்தியங்களும் வெண் சாமரையும் வெண்கொற்றக்குடையும் மயிற்பீலியும் புடையேதாங்கிவரப் புற ப்பட்டுச், சேனாதிபதிகளும் படைவீரரு முன்னோடக் கட்டியக்காரரும் பட்டு வான்களும் புகழ்பாடப் பரதநாட்டிய மாடத், திருநீறணிந்த திரிநேத்திர தாரியாகிய உருத்திரமூர்த்தி இவனேயென்று சாதிக்க வடிவில்லாமரபோனு கிய விராடபூபதிவந்தான். அம்மன்னவனைத்தொடர்ந்து வழிவிடப்போன தருமராசனை வீமசேனன் நகுல சகாதேவ ரிவர் மூவரும்பார்த்து, இவ் விராடராசன் யாடுபிடிசண்டைக்கு நம்மைச்சகாயமாயழைக்காமற் போகிறு னே; இதென்னகாரணமென்று கண்சாடையிற் பேசிக்கொண்டனர். அவர் கள் கருத்தையறிந்த கங்கபட்டர் மச்சராசனைநோக்கி, நமது மடைப்பள்ளி யிலிருக்கின்ற பலாயனன் மல்லர்களைவென்றபோதே மிக்கபலசாலியென்றே தேறியிருந்திரல்லவா? அவன் மிஞ்சியமற்போரினும் நெருஞ்சம்விற்போரினும் பழ கினவனுகத் தோன்றுகின்றது. இதோ! நிற்கின்ற தந்திரபாலனும் தாமக்கிர ந்தியும் போர்புரிவார்கள்போ லு மிருக்கின்றது. இவர்கள் தருமராசனிடத்தி லிருக்கும்போது, கௌரவர்களுடன்கூடி ஆயுதப்பரிட்சையில் பயின்றிருக் கின்றனர்; சிலசமையத்தில் சண்டையிலுஞ் செயங்கொண்ட நாட்டிகர்; அவர்களைக்காக்கும் நீர் சண்டைக்குப்போய்போது இவர்கள் உம்மைவிட்டுத் தனித்திருப்பது தருமமன்றே; இம்மூவரையும் அம்மூவராகப் பாவித்துக் கூட்டிப்போவதே நலமாம்; நான்மாத்திரந்தனித்திருப்பதுநியாயமன்று; நீங்க ளியாவரு முன்னேசெல்லுங்கள். நான் நடந்து பின்னேவருகின்றேனெ ன்று கங்கபட்டர்சொல்ல, அவர்சொன்ன மொழியை அன்பாகக்கேட்டவிராட

ராசன் சிந்தைமகிழ்ந்து இது என்தவப்பயனே யென்றுரைத்துத் தம்பியா கிய சதானீகனையழைத்து இம்மகானுபாவராகிய கங்கபட்டருக்கும் மற்ற வர்களுக்கும் சிங்கமுக லலாடத்தேரும் பங்கப்படாதவில்லும் அம்பறாத் தூணியும் தினுசுவாரி ஆபரணங்களும் ஆயுதங்களுங்கொடுத்து அதிசீக்கிரத்தி லுன்னுடன் அழைத்துக்கொண்டுவாவென்று ஆக்கினைசெய்து போக்கினான். அரசனுத்தரவின்படி சகலவரிசையுஞ் சதானீகனுற் பெற்றுத் தடந்தேரேறி எவர்களுக்குமுன்னே இவர்கள்சென்று விராடராசன் தெற்குக்கோட்டை வாசலில் யாவர்க்குமுன்னமே சேனையுடன்கலந்து போயினர். அக்காலையில் பொன்மலையையொத்த எண்ணுயிரந் தேர்களும் மும்மதம்பொழியும் ஐயா யிரம் யானையும் இம்மெனப் பறக்கும் இருபதினுயிரங் குதிரையும் பொம்மெ னநெருங்கிய இலட்சம் காலாட்களும் தம்பியரும் சாதுரியமுள்ள சூரர்களும் மந்திரிமாரு மகுடவர்த்தனரும் சுந்தரமைந்தரும் சுதந்தரவேந்தரும் மேவி னார்கள். கொம்பு கொடிமுரசு வாத்தியகோஷங்கள் எட்டுத்திக்குஞ் செவி டுபட்டுப்போகத் தும்புதுாசிகள் அம்பரமட்டு மேகச் செம்பரத்தம்பூப்போற் சிவந்தவிழிகளையுடைய படையைத் தூசியணியாகநிறுத்தித் தன்மாட்டை மடக்கிய பகைவர் சேனைகள்மேற் சென்று போர்தொடுத்தான்.

அவ்விராடராசன் கோபாக்கினியால்பகைவராருயிரை வாங்கச்செறிந்து வெற்றிவேல் தாங்கித்திரிந்து முகங்கரிந்து புரிந்தசண்டையைத் தேவேந்தி ரன்முதலிய தேவர்களும் காணச் சொர்ணமயமான விமானமூர்ந்து சென்று ஆகாயத்திலிடமில்லையென்ன நெருங்கத்திரண்டு வேடிக்கைபார்த்திருக்கும் வேளையில் இருதிறப்படைகளுங் கைகலந்து யானையும் யானையும், குதிரையும் குதிரையும், தேரும்தேரும், காலாளும் காலாளும் தொந்தயுத்தம்பண்ணினர். அப்போரில் யாரையாரழித்தனர், யாரையார் துவைத்தனர், யாரையார் வதைத்தனர், யாரையார் சிதைத்தனர், எவரைஎவர்கொன்றனர், எவரை எவர் வென்றனர். எவரையெவர் துன்பப்படுத்தினர், எவரை யெவரோட்டி னர், எவரையெவர் மாட்டினர், எவரையெவர்வாட்டினர்; இன்னவகையெ ன்று நானெப்படிதான் சொல்லுவேன்? ஆயினும் வரிசையாகப்புகுந்து மாச்சு ரியத்துடன் உடலைவகிர்ந்து இரத்தவெள்ளம் புரண்டோடச் செய்தமையால் போரின்பெருமையைப் புகழ்ந்துபேச வல்லவரில்லாமற்போயினர். இத்தன் மையான காலத்தில் நூறுநூறுயிரம் இரதங்கள் நீறுநீறுகி யழியக் குதிரைக ளிறந்துகுவிய கொம்புள்ள யானைக் கும்புகள் யாவுமொழிய மாறுமாறுகிய மன்னவருடல்களும் வேறுவேறுகிய வீரர்குடல்களும் தாறுமாறுகச்சிதைய மலைநிகர் புயபல மண்டலேசுவரர்கள் தலைம்பாயுருண்டு சங்கடமடைய, இத னைக்கண்டயாவருமஞ்சி இன்சொல்லுரைக்கத் திறங்காட்டிவந்த திரிகர்த் தன் சேனைகள் புறங்காட்டிநொந்து புலம்பியோடும்படியாக விராடராசன் சேனைகள் மேலிட்டுச் சாடியபொழுது கோபமாயெழுந்த குருகுலச்சேனைகள் கூறுகூறுய்நிலைகெட்டோடினர்; வீரிட்டடர்ந்தவிராடராசன்சேனைகள்வீரரோ டெதிர்த்துப் போர்விளைத்தலால், அப்போரிலாற்றமாட்டாம லஞ்சிப்பயந் தோடுகின்ற அலங்கோலத்தைத் திரிகர்த்தன் தம்பியாகிய நிடனென்பவன்

கண்டு முகம்வேர்த்து அண்டகடாகம் பிளக்கமிக ஆரவாரித்து வில்லெடுத்து நாணிதொடுத்து புங்கானுபுங்கமாய் பாணங்களைவிடுத்துச் சூரியனுமஞ்சியோ துங்கத் தேரைச்செலுத்திப் போராடினான். வாரிநீரைவாரிய மாரிபோற் பொழியும் வாளியின் வல்லமையால் விராடராசனது நால்வகைப்படையும் இரதிகர்களும் பின்னிட்டு இரதமுமுடைந்து யானைகுதிரைகளுமழிந்து மானு பரணமகிபருமொழிந்துபோயினர். தனுர்வேதசாத்திரிகளும்விராடராசன்மக்கள் நால்வரும் சதானீகன்முதலியதம்பிமாரும் வெற்றிப்பயிர்விளைக்கும் வீர வேந்தரும் விதரணசாலிகளாகிய மாந்தரும் இசைகெட்டழிந்து திசைவிட்டோடும்படி திரிகர்த்தன்தம்பியாகிய திடனென்பவன்மலைந்து செயம்பெறுகின்ற நன்மையைத் திரும்பிப்பாராமலோடிய துரியோதனன் சேனைகள் கண்டு வருந்தியதோஷம் போக்கிப்புகழ்ந்து புளகாங்கிதமாய் வாடியபயிர் மழைகண்டவாறுபோன் மனமகிழ்ந்து கடல்முழக்கம்போலிருந்து திரும்பி விரைந்தோடிப் புகுந்து திரிகர்த்தன் தம்பியைக் கலந்து நாற்புறமும் பரந்து அணியணியாய்ப் பிரிந்து வில்லினை வளைத்து கார்காலமேகம்போற் பாணவருஷங்களைக் சொரிந்தனர்.

அத்தெப்பலினால் விராடராசன் சேனைகள் வெருண்டு அரண்டு புரண்டு மருண்டு மேனிபுண்ணாகி விலங்கிக் கண்களிருண்டுகலங்கி எண்ணாதெல்லா மெண்ணிக்கசிந்துருகிவியாகுலமடைந்துஅச்சமேலிட்டுஅமர்முனைவிட்டோடி நின்றஅரசனைவிராடராசனுடையமுதற்குமாரனாகியசுவேதன்கண்டு கோபத்தாற்கொதித்து நெஞ்சம்பதைபதைத்து ஓடாதிருங்களென்று கையமைத்துத் திரிகர்த்தனையுங் குருசேனைகளையுஞ்சிதைத்துவிடுகின்றேனென்றுதேரைச்செலுத்திச்சென்று வயிரவில்லைவளைத்து நாணிதொடுத்துக் குணத்தொனிசெய்து அஸ்திர சஸ்திரங்களை யெய்து மாறுபடாத யானைப்பெருக்கத்தையும் கூறுபடாத குதிரைக்கூட்டங்களையும் வேறுபடாத மிகுதீரவீரர்களையும் நீறு நீறாக நெரித்ததுமன்றி மேலிட்டுவரும் வேந்தரையுமாட்டி நூறிரதங்களை நொடியிற் பொடிபடக்காட்டி மற்றோர் திசையில்வளைந்து போர்மூட்டிச் சுற்றிய பெருஞ்சேனைகளின் தலைகள்சுழலப் பேய்போலாட்டிப் பின்னிட்டோட்டினான். இவனுக்கிளையவனாகிய சதானீகன் மன்னவர் மதிக்க வயச்சிலை வளைத்துப் பொன்னுருள்பூண்ட தேர்மேல்வந்த மன்னவர்முடிகளைத் தென்னங் குலைபோற் சிதறவுதிர்த்து முன்னும்பின்னு முடுக்கியதிர்த்துச் சின்னாபின்னப் பட்டுப் பயந்தோதுங்கும்படி துன்பப்படுத்தி உருத்துச்சினந்து உறுக்கிச்சிரித்து உரத்துஉள்முனைந்து ஒருதிசைபுகுந்தான். அவனுக்குத் தம்பியான சங்கனென்பவன் முன்னவன்காட்டிய முடுக்கைப்பார்த்து வன்னத்தேரோட்டி வரிச்சிலைநாட்டி நவமணிபதித்த கிரீடம்பொறுத்த வெற்றிவீரக் கொற்றவரேறிய ஆயிரந்தேர்களை யடித்துக்குறைத்து அச்சுமச்சுமுறிய நிறைத்து அநேகரைமடித்துப் பிணமலைகுவித்துத் தானொருதிக்கிற்சென்று செயசிங்கம் போலத் தாங்கிச் சத்துருக்களை யமனிடத்திற்குப் போக்கினான். இவனுக்கிளையவனாகிய வராககேது வாசமாலைகள் மணக்கவணிந்து பூசலுக்குரிய புகழுடனெதிர்த்து பலம்பெற்ற வில்லைவளைத்துப்பாணத்களால்உருவத்துளைத்துப்பதறிக்

கதறிச் சிதறிமுறியும்படிசெய்து வேங்கைப்புலிக் கெதிர்ப்பட்ட மான்போலோடிய பகைவர்யாவரும் கெட்டொழியும்படி நிர்த்தூளியாக்கிவிட்டுப் பூணணியும்புயஞ்செழிக்கப்பொருந்தினன். இப்படிபாற்கடலைமந்தரகிரி கலக்கிக்கடைந்தவாறுபோல்விராடராசனதுநான்குமக்களும்நால்வகைச் சேனைகளையும் எட்டுத்திக்கும் புகுந்துமிருந்த போராடியவேளையில் தந்தையாகிய விராடராசன் அம்மக்கள் சாமர்த்தியங்கண்டு உற்சாகங்கொண்டு ஆலமரத்தின் விழுது அம்மரத்தைத் தாங்குமாறுபோல் தனக்குத்துணையாய் வந்துவளைந்த தன்மக்களைப் புகழ்ந்து மகிழ்ந்து தளர்ச்சியில்லாமற் களித்து வெற்றிமாலையுமுடியுந்தரித்த விராடராசன் தானும்வெகுண்டு எக்களித்து விசித்திர வின்னாணேற்றி முச்சட்டை முழங்கக்காட்டி அச்சுடனமைந்த தேரோட்டிச் சங்குகளீன்ற முத்தினங்கள் சந்திரனைப்போல் பிரகாசிக்கும்படி வயல்சூழ்ந்த நாட்டுக்கதிபனாகிய திரிகர்த்தன் தம்பியை வளைந்து பத்துக்கணைகளைப் பாயத்தொடுத்து அவன் விடுத்தபாணங்களை யழித்துக்கெடுத்துக் கொடி குடை தேர் குதிரை சாரதி வில்லையுமழித்து அவனுடன்வந்த வீரரையுங் குறைத்து நேருக்குநேர் தாராளமாக நெருங்கி அவன்மேற்கூரிய வடிக்கணைமுடுக்கிச் சேனைவேறு யானைவேறு தேசராசர் கூட்டம்வேறு ஆகச்சிதறும்படித் தாறுமாறாக முறித்துத் தனிப்படப் பிரித்துப் போர்விளைத்த மச்சராசனால் திரிகர்த்தன் தம்பி சிந்தைநைந்துவருந்தி தோளுந்தொளைபட்டு வாளுந்தறிபட்டுச் சேனையுங்கெட்டுச் செருத்துச் செருமுகம்விட்டு ஓடுகின்ற பதாதிகட்கோரடி முந்திப் புறங்கொடுத்தோடும் புன்மையைத்திறம்படைத்தவிராடராசன்கண்டு ஊழிகாலத் தொருவனாகிய உருத்திர மூர்த்திபோ லுருத்தெழுந்து வாடிப் போங் குருசேனைகளை மறித்துத் தறித்து மடியச்சிதைத்து ஒருவருந் தனக்கெதிர்ப்படாமல் வதைத்துப் பிணக்குப்பைமேற் சக்கரம்புதையத் தேர்விடுத்துச் சென்றான்.

இவ்வகையாக விராடராசனால் நிலையழிந்துவிட்ட குருசேனையும் திரிகர்த்தன்தம்பியும் பலங்குறைந்து படைமுறிந்து நொந்துபோகவே, அப்போரில் உதிரம்பெருகி ஆறுபோலோடப் பிணங்கள் மலைபோற்குவிந்து கூறுடக் காக்கையுங் கழுகுங் கலந்துவிளையாட நாயுநரியுஞ் சீறிப்போராடப் பேயும் பூதமும் புகழ்ந்துகொண்டாட எமபடர்களுயிரை யிழுத்துக்கொண்டோடக்கூளியும்பருந்தும் விருந்துண்டாடப் பைசாசகணங்கள் பாடிநின்றாட அறுபட்ட தலைகளைப்பூமிதேவியம்மனையாடப் புயமுந்தலையும் பொருந்திப்புரளப்பொடிப்பொடியாக்கிஒருகோடிசுடுசரங்களையும்அருகோடியதேரையுந்தூண்டிச்சயங்கொண்டுவருகின்ற விராடராசனது பிரதாபத்தைத் திரிகர்த்தன்கண்டுவெகுண்டுகொதித்துவெருண்டு வில்லைவளைத்துப்புரண்டுபோனசேனைவெள்ளத்தைப்போகவொட்டாமல் திருப்பிச் சந்திரனைக்கண்ட சமுத்திரம்போற் பொங்கி அட்டதிக்கயங்களும் அயர்ந்து நடுநடுங்கி மதம்பொழியும்படிகானொலிசெய்து வெற்றிப்பாடல்கள் பாடுகின்ற நால்வகைப்படைகளுடன் சேர்ந்து மகாமேருவைப்போன்ற இரத்தினத்தேர்மேலிருந்து கடுவிடநாகக் கணைமழைபொழிந்து விராடராசன் சேனைகள்யாவும் விருதிழந்து புறங்காட்டச்செய்து திக்

கெட்டுக் நிடுக்கிட்டு திக்குமுக்கிட்டு விக்கிட்டோடச்செய்து மதயானைக் கூட்டத்தில் வந்துபுகுந்த மடங்கல்போற் பாய்ந்து தேரனிகத்தையும் யானையினத்தையும் குதிரைப்பந்தியையும் காலாள்களையும் போக்கிவிட்டுச் சோர்வடையாத தோளாண்மைபூண்ட சுசர்மனைச்சுற்றிச்சுற்றித் துமிசஞ்செய்கையில்விராடராசன்மக்கள்வந்துமேல்விழுந்துகொள்ளைகளானகொடுஞ்சமர்விளைத்தனர். அவர்களை வெங்கணையாயுதமும் வில்லுமிழந்து கரிபரிதேர் காலாளுங்குறைந்து குடர்கலங்கி உடல்நடுங்கிக் குலைகுலைந்து தலைகடுங்கி, உயிரோடுங்கிப் பெருமூச்செறிந்து உடன்பட்டோருடன் திடங்கொண்டோடவும் தேகத்தில்தங்கிய காயங்களுடன் சேனைகள் மருண்டோடவும் பசுக்காவலரும் படைவீரரும் பறந்து பின்வாங்கவும் படாதபாடும்படுத்தி மச்சராசனுடைய பசுநிரையைத் தன்னிச்சையின்படி கைக்கொண்டு நச்சரவக்கொடியை காட்டி நாம்வெற்றிகொண்டோமென்று சயபேரியடித்துச் சிந்தைமகிழ்ந்து சிலதூரத்திற்கப்பால் சேனைகளையும் பசுக்களையுஞ்சேர்த்துத் திரும்பேசியிருந்தான். இவ்வகையாக வீரகண்டையும் வீரபட்டமும் விண்மணிமுடியுஞ் செங்கழுநீர்மாலையும் கரந்தைமாலையும், பொருந்தித் திருந்தியிருந்த பெருந்தகையாகிய திரிகர்த்தராசனை மச்சநாடன்கண்டு மதிமுகம்வேர்த்துத் தேருடனெதிர்த்துச சிலைவளைத்திழுத்து முறுக்குநாணியை யிறுக்கி யேறிட்டு, ஐம்மலர்வாளி ஐம்முகவாளி. ஐஞ்சிகைவாளி ஐம்பூதவாளி ஐம்பிறைக்கணை ஐந்துவடிக்கணை ஐந்து இடிக்கணை ஐந்துவிடக்கணை முதலிய வேறுவேறு அத்திரங்களை விறுவிறெனவிடுத்துத், திரிகர்த்தனேறிய தேரை முறித்துச் சாரதிதலையைத் தறித்துக் கொடியைக் குறைத்துக் குதிரையை வதைத்து வில்லைப்பிளந்து நாணைத் துணித்துக் கவசத்தைப் பொடித்துக் கருத்தைக்கலக்கி அச்சமுண்டாகும்படி கொத்தாகிய பத்தம்பை அவனுடைய மார்பில் விடுத்தான். அவ்விராடன்விட்ட கணைகளினால் சோர்புகுந்த சுசர்மன் தேரழிந்து சிலைமுறிந்து சிரமொழிந்து பரதவித்துப் பின்பு நெஞ்சுரமற்று இவ்விராடராசனைநாமெளிதில் விடமாட்டேனென்றுசேமத்தேரேறிச் சிலைக்கணைகொண்டு சென்று நேர்நின்று ஆரவாரித்து இருபதுபாணம் இடிபோல் தொடுத்து அவனது தேர்ச்சுடர்ச்சு குற்றுக்கால் கொடுங்கை கொடி குடை குதிரை சாரதி முதலியவெல்லாந் தூள் தூளாக்கி, பஞ்சுபோற் கொட்டிப் பறக்கவிரட்டி அவனுடைய இடக்கைவில்லினைச் சடக்கெனத் தறித்துத் துவசமழித்துக் கவசங்கிழித்தான் சாடும்பொழுது, தட்டுக்கெட்டுத் தமோறியுலைந்து கட்டுவிட்டுக் காவலழிந்து நிலத்திலின்று மலர்த்திவிழித்த கண்களுடன் வாடிவருந்தினன். அப்பொழுது அவனுடன்வந்த சேனைகளழுது ஐயையோ! மச்சராசனுக்கும் வந்ததோபழுது ஆகா! தெய்வமேயென்று தொழுது காவறவிட்டு நாணமேலிட்டு யுத்தமுனைவிட்டுச் சித்தம் பிரமித்தோடும்படியாகச் சிறகாட்டிப் பலம்பெற்ற வில்லாளியாகியவிராடராசன்கழுத்தில் வில்நாணியைமாட்டி இரதக்காலுடன்பூட்டிச் சயசங்கபேரி முழக்கி நால்வகைச் சேனையோடு சென்று நான்கு புறத்திலும் காவலாகவடர்ந்து பசுமந்தைகளுந் தொடர்ந்து வரும்படி ஓட்டிக்கொண்டு பணிக்கொடி தரித்த பார்த்

திவனை நாடிப்போனான். அவ்வபசயத்தைக்கண்ட விராடராசன் மைந்தரும் பசுக்கூட்டங்களுக்குக் காவலான ஙந்தரும் படைத்துணைவந்தவேந்தரும் பராக்கிரம வீரமாந்தரும் தங்களாற் கூடியவளாயிலு நோந்து காலகதியை யோர்ந்து, மனநொந்து கங்கப்பட்ட ரிருக்குமிடத்திற்குவந்து அவர்கால்மேல்விழுந்து தந்தையை யிழந்தோம்; எந்தையாகிய அரசனைப் பிரிந்தோமென்றேங்கி யழுதார்கள்.

அவ்வேளையில், நெடுந்தூரத்திலிருந்து யுத்தவிந்தையைப் பார்த்திருந்த தருமராசனென குருகுலக்கோமகன், பயப்படாதீர்களென்று அவர்கள் படும் பரிதாபத்தை மாற்றித், தன்பக்கத்திருந்த பலாயனனாகிய தம்பியைக் கடைக் கண்ணாற் பார்த்தனர்; அவரது கண்சாடையைக்கண்ட வீமசேனன் ஊழித் தீயைப்போற்கனன்றெழுந்து தன் உடலையுமறந்து யுகமுடிவில் தோன்றும் சங்கார கர்த்தாவாகிய உருத்திர மூர்த்திபோல் பேரோசைகொண்ட வாயு தேவன் உயர்ந்தமலைகளையும் உவரியலைகளையும் உலைத்துமோதிச் சிதைக்குமாறுபோல் மற்றொரு தேனைவாரித் திரிகர்த்தன் தேர்மேல்மோதி அவன் படைவீரர்களையும் கொன்று பசுநிரைகளையும் வென்று விராடராசனையும் விடுவித்துக்கொண்டு திரும்புதற்கெண்ணித் திடுதிடெனச்சென்றான். எடுத்தடி வைக்கு முன்னமே ஏற்றக்கோல்தூரம் போய்விட்ட இளஞ்சிங்கத்தின் ஆத்திரக்குறிப்பைத் தருமராசனுணர்ந்து, ஓகோகோ! மோசம்வந்து விட்டதே என்றுணர்ந்து தம்பியைத் தனியாக வழைத்து, அடாகுழந்தாய்! அப்பனே! வீமா! ஒப்பிலாத சுப்பிரதீபம்போன்ற உத்தமனே! என்றணைத்துப் புகழ்ந்து உன்கருத்தை நானறிந்துகொண்டேன்; என்கருத்தை நீ கண்டு கொள்ளவில்லை, ஆத்திரப்படவேண்டாம் நமதடக்கம்விடாதே. இதுவளாயிலுங்கழித்த வனவாசத்தைக் கெடுத்துப்போடவேண்டாம். இப்போது உதயமான சூரியன் அத்தமனமாகிற வளைக்கும் நாம் இன்னாரென்று எவர்களு மறியப் படாதே; ஒருகாற் பகைவர்கள் நம்மைத் தெரிந்துகொண்டால் நாமிதுவளாயிலும் பட்டபாடு பாழாய்ப்போய்விடுமே; இது உன்கருத்திலிருத்திச் சென்று பெருஞ்சண்டை விளைத்து, வீமசேனனென்னும் பெயரை வெளிப்படுத்தாமல், வில்லும் பாணமுங்கொண்டு தேர்மேற்சென்று திரிகர்த்தனுக்குன் திறங்காட்டிநின்று அவனைத் தேருடன்வென்று நம்விராடராசனை மீட்டுவிடென்று வேண்டிய புத்தி யுத்திகளை வீமனுக்குரைத்து வீராவேச மிவனுக்கு மேலிடாதிருக்கும்படி எமதருமராசனாகிய தன்தந்தையைச் சிந்தனைசெய்து விடுவித்தான். அவ்வாறு அண்ணன்சொல்லுக்கடங்கியவீமசேனன்கேயூரமணிமகுட குண்டல முதலிய பணிபூண்டு அம்பறாத்தூணிமுதலியனதரித்துஆகாயமளாவிய குன்றனைய தேர்மேற்பாய்ந்து வில்லைவளைத்து நாணேற்றி வெற்றி பெற்ற சிங்கம் யானைமேல்தாவும் வீறுப்புப்போலும் வேகின்ற தீயைப்போலும் வெறித்துப்போகின்றான். அவ்வீமசேனன்செல்லும்வேடிக்கையைப்பார்க்கும் படி இந்திரன் முதலிய தேவர்களும் ஆகாயத்தினிறைந்து அழகிய விமானத்தமர்ந்து பார்த்திருந்தனர். இப்பால், வீமசேனனுக்குப் புத்திமதி சொல்லி விடுத்த முரசக்கொடிபடைத்த தருமராசன் மனந்தளராமலும் தம்பியை

கம்பாமலும் நகுல சகதேவர்களாகிய தாமக்கிரந்தி தந்திர பாலர்களைப்பார்த்து ஐயா,இளந்தம்பிமார்களே! உங்களண்ணனாகியவீமசேனனையனுப்பியிருக்கின்றேன்; அவனோ மிகுந்த ஆத்திரமுடையவன்; அவசரக்காரன்; முன்கோப முடையவன்; அவனொருகாற் சுசர்மன்மேற் பாய்ந்துசுடுசரந்தொடுத்துச் சமர்புரியும் காலையில் அவனுடைய நீண்டவில்லும்பாணமுமுறிந்துமேனிவருந்தி வம்பு நேரிடுமானால் தேரைவிட்டுக் கீழே குதித்து அம்புகள் பறக்குங் கும்பலிற் புகுந்து விற்போர்விடுத்துமற்போர்கொடுத்துமலைகளையுமரங்களையும் வன்னத்தேர்களையும்வாரியடித்துமாறுகொடுப்பான் வீமசேனனென்றுவெளியாய்ப் பாண்டவ ரிவ்விடத்திலிருக்கின்றனரென்று பகைவரறிந்து கொள்வார்களே; அவர்களறிந்தால் மறுபடியும் காம்வனவாசம் பண்ணவருமே; நாமெண்ணிய வெண்ணம் சிறிதும்பலிக்காமற் போய்விடுமே; உலகமும்பழிக்க இடமுண்டாகுமோ என்றுதம்பியரிருவர்க்கும்தழைக்கச்சொல்லி,நீங்களிரண்டுபேருமுடன்சென்றிருந்து,வீமசேனனைமிஞ்சவொட்டாமலடக்கித் திரிகர்த்தனைமடக்கி யுத்தந்தொடங்கிப் பசுக்களையும் விராடராசனையும் விலக்கி வேடிக்கை பார்ப்பவர்தலைகுலுக்கிவியக்கும்படி அமர்முடித்துச் சயத்துடன்வருவதேபெருமையென்றுரைத்தனுப்பினன். அத்தருமராசன்சொன்ன இதோபதேசஞ்சிரமேற்கொண்டு அவ்வாறே முடிப்போமென்றுஅண்ணனைத்தொழுது வெகுளிமேற்கொண்ட இளங்காளையரிருவரும்பொன்மயமானநெடுந்தேரூர்ந்து கல்லென்றிசைக்குங் கார்முகம்வளைத்து நூற்றிலொருவன் ஆயிரத்திலொருவனென்னு மதிரத வீரருடைய தலைகள் குதிரையினுடைய காலிலும் யானையின தடியிலு மகப்பட்டுருளச் சேனைகளை நடாத்திப் பாணப்பிரயோகம் பண்ணிக் கண்ணுக்கெட்டிய தூரம் பறந்து ஓட்டமாயோடிவருகின்ற வாயு புத்திரனாகிய வீமசேனன்மேல் நாட்டமாய்நாடிச் சென்றவர்களாகித் திரிகர்த்தன் சேனைவெள்ளத்தை நீந்திப்போய்த் தேருடன் தேர்கலக்கப் போராடினர். தேவர்களும் புகழ்கின்ற குருகுலத்தரசர்பெருமான் தருமராசன், தம்பிமார் மூவரும் போயிருக்கிறார்களே; தாழ்வென்னவோ? சண்டையாதோ? என்று மனந்தரியாதாராய்த் தானெடுத்த வேடத்திற்குத் தக்கமரியாதையும் மகிமையும் தப்பாமற் சங்கார காலத்திற் புரண்டெழுகின்ற சலதிபோல் குணக்கடலு மருட்கடலுங் குலவத்தேரேறி அட்சதையிறைத்துக் கட்டுகளெட்டும் குச்சுப்பட்டுமுடைய வில்லைத்தொட்டெடுத்து வாயுவேக மனோவேகத்துடன் வந்து தம்மைத் தம்பிமார் பார்க்கும்படி சமர்முனையிற் கலந்தார்.

இவருக்கு முன்சென்ற தம்பியரிருவரு நெருங்கி எப்புறத்துச்சேனைகளு மப்புறத்திலகலாமல் துப்புறவொழித்து மன்னர்களுயிரை வானுலகேற்றிச் சின்னபின்னம்படச் செய்துவரும் தம்பிமார் செய்கையை வீமசேனன்கண்டு மேலாகிய சந்தோடங்கொண்டு பலம்பொருந்திய வில்லிற் சரங்களைப்பூட்டித் தலம்புரண்டோடத் தாக்கினன். அப்போது திரிகர்த்தன், இவர் ஆரடா, அப்பா! என்று, சென்றதேரைத் திருப்பி யெதிர்நின்று, வீரலட்சுமி விளையாடுகின்ற வில்லைவளைத்துப் பாணங்கள் பற்பலதிசையிலும் பரந்திடச்சொரிந்தான். அக்காலையில் அழிவில்லாத பலம்படைத்த ஆண்சிங்கம்போன்ற வீம

சேனன் தன்தேரைத் திரிகர்த்தன் தேருக்கெதிரே முடுக்கி அயிந்திராஸ்திரங்களை விட்டுமடக்கி அவன்தொடுத்த கணைகளை யெல்லாம் தறித்து வில்லையு முறித்து நாணியுமறுத்துச் சாரதிகுதிரைகள் தலைகளையும் பறித்துத் தேரையு முடைத்து மயக்கினன். அப்போது திரிகர்த்தன் திடதைரியம் விடாமல் வேறுதேரேறி மின்னெனவிளங்கும் வடிவேலை வீமசேனன்மேல் வீசினன்; அவ்வேலாயுதம் பூரணசந்திரனைப் பிடிக்கத் தாவிய செம்பாம்புபோற் புரண்டு திசாதிசையிலுந் தீப்பொறியிறைத்து வருவதை மாருதி கண்டு மடமடவென்று பற்களைக் கடித்துநின்று அதைப் பிரமாத்திரத்தால் ஒடித்தான். வேற்படை முறிந்ததைச் சுசர்மன்கண்டு வெகுண்டு வச்சிரக்கட்டு முட்கட்டுகளுடைய கதையைச் சுழற்றிக் காகரவென் றெறிந்தான். விறுவிறெனச் சுழன்று வெங்கதை வீமசேனனையேநோக்கிவருவதைப்பார்த்துநெருப்புத்தலைபெற்ற இருப்புக் கணைகள் பத்தெடுத்துத் தொடுத்துத் தனக்கு நேர்வருங் கதாயுதத்தைநொடியில் பொடிபடுத்து அசைவற்றிருந்தான். புலவர்கள் புகழும்படி பொடிப்பொடியா யுதிர்ந்தழிந்த தன்கதாயுதத்தைக் திரிகர்த்தன் நோக்கி, நாம் வந்தவேளை யெந்தவேளையோ? என்று மனநொந்துவாடி வாளை யுருவிவிண்டலத்துயர்ந்துமண்டலத்திற்பாய்ந்து வீசிய வீரத்தை வீமசேனன் பார்த்து நகைத்து நாகம்போற் பொங்கிச் சினந்து மேகக்கணைபோக்கித் தேகஞ் சோகங் கொள்ளும்படி தொளைத்துத் தாக்கி அவனைச்சார்ந்த யானை சேனை பரிவாரங்களையுங் கலக்கி அப்பாலோட்டிச் சுசர்மனையும் அவன்கையிற்பிடித்த வாளையும் அலங்கோலமாக்கி எங்குமில்லாமல் இலவம் பஞ்சுபோற் பறக்கடித்து அவன்தலைமயிரையும் பற்றியிழுத்தான். அக்காலையில் திரிகர்த்தன் பொறிபுலன்மயங்கித்திக்குமுக்கிட்டுத் தலையிறக்கமாய்த்தளர்ந்தான். அதெப்படி இருந்ததென்னில், பாண்டவர் வனவாசம் பண்ணும்போது அவர்களைப் பங்கப்படுத்தவந்ததுரியோதனன்சித்திரசேனனிடத்திற் சிக்கிப் புத்திரமித்திர களத்திரத்துடன் தாமணிப் பிணையாகத் தானுங்கட்டுண்டுபரதவித்த தன்மைபோல் யுத்தமுகத்தில் மற்றொருவரையும் வெற்றிபெற வொட்டாத சுத்தவீரத்தன்மையுள்ள திரிகர்த்தனென்னுஞ் சுசர்மன் சிங்கத்தினிடத்திற் சிக்கிக்கொண்ட மத்தகயம்போல் வல்லமை குறைந்து வாயுகுமாரனுகிய வீமசேனனிடத்தி லகப்பட்டுப் போனன். உடனே வீமசேனன் விராடராசனைக் கட்டவிழ்த்து அவனைத் திரிகர்த்தன் தேரினின்றுந் தன்தேரி லேற்றிக்கொண்டு தான்பிடித்த சுசர்மன் தலைமயிரைச் சுற்றிப்பிடித்த பிடிவிடாமல் தன்தேர்மேலிழுத்து இரத்தத்துளி பீறிட்டுச் சுற்றிலுந் தெறிக்கும்படி, மடலோடு மடல்சேர மணிக்கயிற்றினல் இறுக்கிக்கட்டி அவனைத் தன்னெதிரிலிருக்குங் குருசேனைகளுக்குங்காட்டி இதோ சண்டைசெய்யச் சமர்த்துள்ளவர்கள் வாருங்களென்று அவர்கள்மேற் சரமாரிபொழிந்து கோபாவேசங்கொண்டு நின்ற வீமசேனனைச் சுசர்மன் சேனைகள்கண்டு பயங்கொண்டு புறங்காட்டி யோடிப்போயினர்; அவ்வேளையில் சர்வசங்கார காலவுருத்திரன் போலுருத்தெழுந்த வாயுகுமாரனை விராடராசன் நோக்கி, நமது பங்குத் தெய்வமோ இவ்வுருக் கொண்டெழுந்ததென்று மிக மகிழ்ச்சியடைந்தபோது

பதினாயிரங் குதிரை வீரர்கள்பாய்ந்து கோபாலருடன் சேர்ந்து திரிகர்த்தன் கைக்கொண்ட விராடராசனுடைய பசுநிரைகளைத் திருப்பிக்கொண்டு சயம் சயம் சயமென்று சயக்கொடிநாட்டிச் சிறுபறைகொட்டிப்பலவகை வாத்தியங்களு முழக்கிக்கொண்டு, தங்கள் எதாஸ்தானமாகிய மச்சதேசத் திற்குத் தென்புறத்திற்கலந்து முன்போலிருந்தனர். கங்கபட்டராகிய தரும ராசன் நமது பக்கஞ்சயமென்றறிந்து முந்தக் கூடாரத்துக்குப்போய் ஒன்றும் அறியாதவர்போல் தாமிருக்கத்தக்க ஆதனத்தி லிருந்தருளினர். இப்பால், சத்துருவாகிய திரிகர்த்தனை வென்று அவனைத் தேர்க்காலில் இறுகக்கட்டிக் கோணர்ந்த வீமசேனனும் விராடராசனும் தேரூர்ந்துசென்றுசேனைகளுடன் பிள்ளைகளுந் தம்பியருஞ்சூழத் தர்மராசனுக் கெதிரில்போய்ப் பணிந்துநின்று, சுவாமீ! தேவரீருடைய அனுக்கிரகத்தாற் சயங்கொண்டு வந்தோமென்று செப்பினர். இணையில்லாத கங்கபட்டரும் அவர்களையாசிர்வதித்துத் தம்மருகி லிருந்த ஆசனத்தி லிருத்தினர். அப்போது கங்கபட்டரை விராடராசன் பணிந்தெழுந்து ஆண்டவனே! போர்முகத்தில் வீரர்களைப் பொருதோட்டி ஊர்முகத்தில் என்னைக்கொண்டுவந்து காட்டி உலையாப்பெரும்புகழை நிலை நாட்டி எனக்குக் குலதெய்வமாகத் தோன்றிபகைவர்கைப்பட்டவென்னையும் பசுக்களையும் மீட்டுக்காத்த பலாயனனுடைய பேருதவிக்கு நானென்னகை ம்மாறு செய்யப்போகின்றேன்? அப்படியன்றென்றுசெய்தாலும் இவர்செய்த உதவிக் கீடாகமாட்டாதே. இதற்கொத்த கைம்மாறுண்டோவென்று யோசிக்குமிடத்தில் இப்புவியினு மெப்புவியினும் இப்பிறப்பிலுமெப்பிறப்பிலு மில்லையென்றுரைத்துப் பலாயனனைத் தன்மார்போடணைத்து என் மைத்துனனாகிய கீசகனைப் பறிகொடுத்துக் கதியற்றிருந்த என்னை நீங்களிவ்வேளையி லடுத்து எதிரிகையிற்பட்ட சிறையைவிடுத்து எனக்குயிர்ப்பிக்ஷைகொடுத்தீர் களே. நீங்கள் இவ்வுதவிசெய்யாவிட்டால்இக்நேர மென்கதி யெப்படியாமோ? அறியேன். ஆகையால் என்னரசுரிமையும் என்பட்டணமும் என்செல்வ முதலாகிய யாவும் என்னுயிரும் உங்களுக்கேதத்தமாகக்கொடுத்தேன். உங் கள்பெருமைக்கும் அருமைக்கும் நீங்கள்செய்த நன்மைக்கும் நான் தத்தம் பண்ணியபொருள்கள் தகுதியற்றனவா யிருப்பினும், பக்தி சிரத்தையாக ஏழையேன்செய்கின்ற பூசையை எப்பொருட்குமுரிய ஈசன் அங்கீகரித்துக் கொள்வதுபோல் தாங்களுந் தயைபுரிந்து ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும் எப்பொழுது மென்னைவிட்டு நீங்காமலிருந்து காக்கவேண்டுமென்றும் பற் பலவகையாக உபசார வார்த்தைகளைச்சொல்லிப் பிரார்த்தித்தான்.

அவ்வரசன் மொழியைக்கேட்ட தருமராசனும் தம்பியர் மூவருமகிழ்ந்து புகழ்ந்து வாழ்த்தினர்கள். பின்னும் முரசக்கொடியுடைய முதல்வன் நகைத்து மச்சதேசாதிபனாகிய மன்னனே! பாண்டவர்களிடத்தில் பட்சமாயிருந்த நாங்களைவரும் ஒருவரைவிட்டொருவர் பிரியாமல் உத்தமனாகிய உம்மிடத்தில் வந்தடைந்த அந்நாள்முத லிந்நாள்வரையிலும் விரதசாரிணியுடன் நன்னாளாகக்கழித்துச் சோறுங் கூறையு மனுபவித்து மகிழ்ச்சியுடன்வாழ்ந் தோம்; இன்னுஞ்சிலநாளிருக்கின்றன நாங்கள் வெளிப்பட்டுப் போவதற்கு,

அப்படியே நாங்கள்போயினும் உமக்கென்னாளுங் குறைவில்லையென்று உபசா ரஞ்சொல்லிப் பரிசுத்த இதயம்படைத்த பார்த்திபனே! நீரளித்த சகலசம் பத்தையும் நாங்கள் அநுபவித்ததைப்போல் ஆயிரம்பங்கதிகமாக ஆநந்தப் படும்படியான உமதுதேரிற் கட்டுப்பட்டிருக்கின்ற திரிகர்த்தனைக் கட்டவிழ்த் துவிட்டு உபசரித்துச் சன்மான வெகுமானத்துடன் ஓரிரதமுங் கொடுத்து அனுப்பவேண்டுமென்றார். தன்னருகிருந்து இரக்கமாகச்சொல்லிய தரும ராசனுடைய கருணைமொழியைக் காதாரக்கேட்டு மறுவாய்திறவாமல் தானே யெழுந்துபோய்க் கட்டவிழ்த்துவிட்டு ஆபரண வஸ்திராதிகளும் வழங்கி அழ கிய தேருமளித்து திரிகர்த்தனே! முன்னொருநாள் நீ அவமானப்பட்டிருக்கப் பின்னும்வந் தகப்பட்டமையால் மன்னர் முறைமைப்படி உன்னை வாளால் வெட்டவேண்டிய வெட்டை இம்மகானுபாவராகியகங்கட்டர் தப்புவித்தனர். இவரால் கிடைத்தது பிராணபிச்சை யென்று எப்போது மறவாமலிருவென் றனுப்பினன். அத்திரிகர்த்தன் விராடராசனைப்பார்க்க வெட்கப்பட்டு மெ த்தவிசனமுற்றுப் புத்திமயங்கிச் சித்தப்பிரமைகொண்டு சுயோதனன்முதலா கிய கொற்றவர்கள் தனக்குப் பின்னுதவிவந்து கைகொடுக்காமற் போயினரே, அவர்முகத்தில் நாமெப்படிப்போய் விழிப்போமென்று மனமெலிந்து ஓடி யொ துங்கிப்பதுங்கிய தன்படையுடன் கலந்து கங்கபட்டரொன்பவரைக் கருணை யில் தருமராசனென்றே புகழ்ந்து பிழைத்தது போதும்போதுமென்று போ னன். அப்பால் தருமராசன் விராடராசனைப் பார்த்து இப்பொழுதுபோன திரிகர்த்தன் ஒருவேளை மேற்படை கூட்டிக்கொண்டுவந்தாலும்வருவானென் றுரைக்க, அதைக்கேட்ட மதிகுலவேந்தனாகிய மச்சராசன் இரத கச துரக பதாதிகளாகிய நால்வகைப் படையையும் பிள்ளைகள் மூவரையும் பேரணிநிறு த்தி மேற்படை வருமார்க்கத்தில் வேவுகாரரை யனுப்பிவைத்து, அன்றிரவு முழுது மவ்விடத்தில் முகாம்போட்டுச் கொண்டிருந்தனன். மூத்தபிள்ளை யாகிய சுவேதன் திரிகர்த்தனாலடியுண்டு முறிபட்டோடி முக்கட்பெருமா ஞகிய முதல்வனைப்பூசித்து எக்காலத்து மரம்பெற்றெவர்களுக்கு மிளையாம லிருக்கும் வரம்பெறக்கருதித் தவஞ்செய்திருந்தனன். இங்கே சூரியனஸ்த மனமானன். அதெப்படி யிருந்ததென்றால் வீமசேனன் திரிகர்த்தனைத் தே ருடன்கட்டிய திறத்தை கடற்கரசனாகிய வருணராசன்கண்டு, இன்னும் ஐவரை வெளிப்பட வொட்டாமல் தடுத்திருக்கின்றான் சூரியனென்று கோப ங்கொண்டு மேனிசிவக்கக்காட்டி மேற்றிசையிற் கொண்டுபோன வகைபோ லிருந்தது ; கேளாய் ஜெனமேஜெய மஹாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லிவந்தனர்.

தட்சணகோமீட்சிச்சருக்கம்

முற்றிற்று.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

உத்தரநிரைமீட்சிச்சருக்கம்.

கண்ணன் துதி.

உரூவ மாயரு வாயகம் புறத்தினு முலாவும்
ஒருவன் மூவுல கோரடி யளந்தசே வடிகள்
வருவ தாகியும் போவதா கியுந்தடு மாறுங்
கருவெ னும்பெருங் கடற்கரை யேறலாங் கலமே.

இப்பால் திருமாலின் திருவடிகளைச் சிந்தையால்தொழுது எந்தையாகிய வேதவியாசரையும் வந்தித்து ஒப்பற்ற சித்திரமணித் தேரேறிக் குருசேனையுடன் வந்த திரிகர்த்த னென்னுஞ் சுசர்மன் விராடபுரத்தின் தென்பால்சேர்ந்து ஆதிசேடனாற் சுமக்கப்பட்ட இப்பூமியதிரும்படி பெரும்போர்தொடுத்து விராடராசனுடைய மாட்டுமந்தைகளை மடக்கிப்பிடித்துச் சயம்படைத்துத் திரும்புங்காலையில் பசுக்காவலரடிபட்டோடி விராடராசனுக்கறிவித்தவுடனே அவ்வரசன் ஓரக்குரோணி சேனையுடன்வந்து திரிகர்த்தனுடன் சண்டைபுரிந்து தேரிற்கட்டப்பட்டுச் சுயம்பாகியினால் விடுபட்டு மறுபடியுந் திரிகர்த்தனைப்பிடித்துத் தேர்க்காலிற்கட்டி அவமானப்படுத்திக்கங்கபட்டர் மொழியால்விடுத்து அவன் கைக்கொண்ட மந்தைகளைத் திருப்பிக்கொண்ட கதையைச்சொன்னேன். அத்திரிகர்த்தனுக்குப் பின்படையாகவந்த துரியோதனனும் பெருஞ்சேனைகளும் மச்சநகரத்தின் வடபாலடுத்து அங்கிருந்த மாட்டுமந்தையை மடக்கியதையும்பேடியினால் மானங்கெட்டுப் பசுநிரைகளை விட்டோடியதையும் சொல்கின்றேன்கேள்.ஜெனமேஜெயமஹாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர். குவலயம்புகழுங் குருகுலக்கோமகனே! திரிகர்த்தன் கைவசப்பட்ட மாட்டையும்விட்டுத் தானுங்கட்டுண்டு விடுபட்டுச் சேனையுடன்முதுகிட்டுத் திரும்பிவிட்டசெய்தியைச் சுயோதனன் கேட்டு ஆக்ரமித்து வியாக்கிரம்போலெழுந்து பாண்டவர்கள் ஐவரும் பதுங்கியிருக்கும் பருவமும்பாராமல் பசுநிரைமடக்கிய பக்குவத்துடன் பட்டணம் வந்துஞ்சேராமல் விருதாவேலை செய்துவிட்டான் சுசர்மனென்றுவெம்பி ஐயோ! ஆண்டன்மையுடையவ னிவனென்று நம்பி வீண்மோசம்போனேமே, அடா துச்சாதனனாகிய தம்பி! நமது நால்வகைப்படையு மெழும்படி விளம்பி நான் போர்க்கோலங்கொள்ள வெற்றிமுடி கொண்டுவாவென்று கிளம்பி நாம் திக்கெட்டுஞ் செவிடுபடப் பேரிகைமுழக்கிக்கொண்டு பட்டப்பகலில் புறப்படுவது பக்குவமன்றென்று சொல்லிவிட்டெதிக்குங் கிரணங்களையுடைய சூரியன் உதயஞ்செய்யுமுன்பாக எட்டுக்களிற்றிற்கிணைப்பட்ட துட்டயானைகளை நடாத்திக் கட்டுக்காவலுடன் மட்டுப்படாத சேனைகள் புடைசூழப் புறப்பட்டு விராடநகரத்து உத்தரதிசையிற்சென்று நவதானியம்விளைந்த நாடு காடுகளையழித்து நால்வகைச்சேனையை நிறைத்து ஊரிலுள்ளோரை யோட விட்டடித்து ஓடியவரை யோடாமல்மறித்துச் செழித்துவளர்ந்த கருப்பங் கொல்லைகளைத் திபிட்டுக்கொளுத்தி நன்செய் புன்செய்ப் பயிர்களை நாசப்படு

த்தி ஆழ்ந்தகுளங்கள் அனைத்தையுந் தூர்த்துத் தங்கள் படங்களைச் சரிய விடித்து ஆறு கால் ஏரி அணைக்களை அழித்துப் போராக்குவித்த நெற்களைப் பொரிபறக்கக் கொளுத்தி நாடுகாடாகக் காடுமேடாகக் கெடுத்து மாடுகளைப் பிடித்து அறம்பறந்தேங்கவும் மறஞ்சிறந்தோங்கவும் வில்லைவளைத்து அல்லல் விளைத்தனர். அப்போது அம்மந்தைகளுக்குக் காவலாயிருந்த கோவலர்வக் கெதிர்த்துப் போர்புரிந்து சிந்தைநொந்து திறனழிந்து ஊர்புகுந்துஇராசகுமாரனுகிய உத்தரகுமாரனேடுரைத்தனர்.

அவர்களைநோக்கி என்னதுன்ப நேரிட்டதென்றுகேட்க அவர்கள் இராசகுமாரனடிமேல் வீழ்ந்தெழுந்து இருகையையுங் குவித்து இளஞ்சிங்கக் கன்ருகிய சுவாமி பராக்கு! தென்திசையில் திரிகர்த்தன்வந்து புகுந்து பசுமந்தையைமடக்கிய செய்தியறிந்து அப்பசுக்குலங்களை மீட்கவேண்டிச் சேனைகளுடன் விராடராசன் சென்றிருக்கு மமையம்பார்த்து அரவக்கொடியோனுகிய துரியோதனராசன் பலம்பொருந்திய படைகளுடன்வடதிசையிற் பதாதிகளைப்பிரித்துவிட்டு நாட்டிலுள்ள பலன்கள் யாவையுமழித்து அதஞ்செய்து மாட்டையுங்கவர்ந்து கூட்டாமாயெதிர்ந்த எங்களையு மாட்டிப்பிளந்தான். நீர் இத்தருணம் வீட்டிலிருப்பது தகுதியோ? சந்திரகுலேந்திரனே! என்று முறையிட்டார்கள். இவ்வண்ணம் தன்பிள்ளையினிடத்தில் வினையுளாப்போர் விளம்பிய சொல்லை உத்தரனுகிய சுபுத்திரனைப்பெற்ற சுதக்கணையறிந்து ஆ! இதென்ன? நாட்டில் அரசனில்லாத சமயம்பார்த்து மாட்டை மடக்குவார்களோ அரசநீதிக் கேற்குமோ? பெண்பாலாகிய நானென்செய்வே னென்றேங்கித் தன்பக்கத்திலிருந்த பாங்கியபை நோக்கி அடிதாதியரே! இவ்வேளை தப்பித்துக்கொள்வதற் கெவ்வழியுங் காணேமே. வந்திருக்குங் குருகுலச் சேனைகள் நம்மதிற்புறம் புகுந்து தொந்தரை செய்யுமுன்னமே சாக்கிரதைப் படவேண்டும். அதற்கு என்சிந்தையிலொரு தந்திரந்தோன்றுகின்றது. அதைக்கேள். எப்படிப்பட்டவர்களும் பெண்மேற் படையெடுக்க லாகாதென்று அரசநீதியு மிருக்கின்றது; அதைப் பலரறியாவிட்டாலும் சிலராயினும் அறிந்திருப்பர். ஆதலால் நீங்கள் யாவரும் ஆயுதபாணிகளாய்ப் புறப்பட்டுக் கோட்டை மதிலிலேறிக் கூட்டங்காட்டி, நமது மச்சநாட்டைக் காத்திருங்களென்றுள். அவளுரைத்த மொழியைக்கேட்ட உத்தரன் நெருப்பில்விழுந்த புழுப்போல் துடிதுடித்துப்பெருமூச்சுவிட்டுப்பெற்றதாயைவணங்கிஅம்மா! நானிருக்க நீ யாதுகூறினுய்,ஓகோகோ!நீஇப்போதுசொல்லிவிடுத்தமொழிமிகவுநன்ருயிருந்ததென்று வெகுண்டு நகைத்து ஐயையோ! என்னைக் கொல்லமாட்டாமல் புல்லியமொழி சொல்லினையே, உன் வயிற்றிற்பிறந்து சகலகலைகளுமுணர்ந்து செல்வச் சிறுவனுயிருந்து செழித்து அமுதருந்திய வென்னை மன்னனுக்குப்பிறந்த மைந்தர்களிற் கடைசியிற்பிறந்த மகனென்னப்பூரித்து ஆதரித்து அன்னையாகிய நீ என்னையருமையாக இதுகாறும் வளர்த்தது பகைவர்களால் பகைவந்து நேர்ந்தபோதுபெண்டுகள்கூடிச் சண்டைசெய்துதாங்குவதற்கோ? இம்மாதரால் மச்சநாட்டுக்குவந்த வருத்த நீங்கிப்போமாயின் நானுனக்குப் பிள்ளையென்றிருந்து பயனென்ன? எனக்கு வீரனென்றே மேம்பாடென்ன?

நான் கற்றகல்வியாற்பயனென்ன? நானொருவ னிருக்கின்றேனென்று சற்றுமதி யாது பயனற்ற சொல்லையுஞ் சொல்லினையே! நானந்தப் பகைவர்களைவெற்றி கொள்ளமாட்டேனென்றெண்ணினைபோலும்.ஒலிக்குமெழுகடல் போற்படை யெடுத்துவந்து நமதுபசுநிரைகளைக்கவர்ந்த பகைவருக்கெதிரே நானொருவனு முனைந்து முழுப்போர்புரிந்து இமைகொட்டு முன்னமே பிளைத்தோடவா ட்டி விசயக்கொடிநாட்டி சயபேரியடித்து யாவரும்புகழ்ந்து மெச்சும்படி திரும்பிவந்து உன்பொன்னடியைப் பூசிக்கின்றேனம்மே! ஆயினும் அப்போர் முகத்திற் காலமறிந்து சமயந்தெரிந்துமனக்கருத்துணர்ந்து முகக்குறிப்போர்ந் துஎதிரியினெண்ணங்கண்டுதேர்விடுக்கத்தக்கவனும் என்மனத்துக்கொத்தவ னுமிருக்கின்றசாரதியொருவன் கிடைப்பனுயின்யாரென்னைவெல்லவல்லவர். அம்மணி! அப்படிப்பட்ட சாரதியொருவன் இல்லாக்குறையால் நீயுரைத்த பேதைமைச் சொல்லுக்குப் பின்னிட்டுத் தவிக்கிறேன். இப்போது வந்தெ திர்க்கின்ற கர்ணராசன் வீஷ்டுமாசாரியர் கிருபாசாரியர் துரோணசாரி யர் அரவக்கொடிபடைத்த துரியோதனன் இவர்களியாவரும் புறங்கொ டுத்தோடப் போராடி அவர்கள்குலத்தில் அவதரித்திருக்கின்ற மகாவீரசிகா மணியாகிய அருச்சுனனும் அதிசயிக்கவேவெற்றிகொண்டுநமது மாட்டுமந்தை யை மீட்டுக் காட்டுக்கோட்டிவிட்டு இந்நாட்டில்வந்து அடிவைப்பேன்; அம் மாவென்று உத்தரகுமாரன்சொல்ல, அதைக்கேட்ட சுதக்கணை என் அப்ப னே! நீயிப்போதுரைத்ததெல்லாஞ் சரிதான். உன்னிட்டப்படி தேரைச் செலுத்தத் தக்க வல்லவனை நானெங்கேகண்டு தேடுவேன்? உனக்குச் சாரதி தேடுதற்குமுன்னமே எதிரிகள்வந்து கோட்டையைக் கைக்கொண்டுபோவ ரேயென்றுசொல்லித் தாயும்பிள்ளையும் ஏக்கமுற்றிருக்கையில், இக்கருத்தைப் பக்கத்தினின்றுங்கேட்டிருந்த பணிப்பெண்ணுகிய விரதசாரணி உத்தரனுரை த்த உறுதிச்சொல்லையும் அருச்சுனனைப் புகழ்ந்துபேசிய அன்பையும் தன் சித்தத்திற்குறித்துச் சற்றுநிதானித்துச் சித்திரவிற்கொண்டு சிவபெருமான் தலைமேற்புடைத்துப் பாசுபதாத்திரம் பெற்ற தனஞ்சயனுகிய பேடியிருக்கும் நாடகசாலையிற் புகுந்தாள்.

மிக்க அவசரமாகவந்த விரதசாரணி அக்கறையையும் முகக்குறிப்பை யும் பிரகனளையாகிய பேடிகண்டு ஓடிவந்து உட்காரென்றுபசரித்து இது வரையிலும் பேதமில்லாமற் பேசுவதுபோற்பேசித் தங்களுக்குள் அமைத்துக் கொண்ட சைகையிருல்தனித்துச்சென்றுதென்றிசையில் திரிகர்த்தனையனுப் பிவிட்டுத்திரண்டசேனையுடன்வடதிசையிற்புகுந்துமாட்டை மடக்கினுன்துரி யோதனனென்று கோவலர்வந்தகூறினர். அம்மொழியைக்கேட்ட சுதக்கணை சிந்தைநொந்து அருகிருந்ததாதியரையழைத்துவிராடராசன்வருமளவும் கோ ட்டைமதில்மேற்கூட்டங்காட்டிநாட்டைக்காக்க வேண்டுமென்று நவின்றாள். அப்பேச்சைக்கேட்ட உத்தரகுமாரன் மனம்பொறாமல் மாதாவைவெறுத்துத் தன் விரப்பிரதாப வெற்றியைப் தன்மனத்துக்கிசைந்த வலவனிருப்பானுயின் தனஞ்சயனுங் கொண்டாடச் சண்டைபோடுவேன், பகைவரைச்சாடுவேன்; க்ஷத்திரியத்திறத்தைச்சாதிப்பேன், நீயேன்சஞ் சலப்படுகின்றாயென்றுசொன்

னாள். அம்மொழிகேட்ட விவேகத்தில்வல்லபேடி ஆத்திரப்படாமல் தாங்கள் கடத்தவேண்டிய அஞ்ஞாதவாசத் தவணைநாளைக் கணக்குப்பார்த்து, ஊர்வசி சாபமுற்ற ஒருவருடத்தொகையும் காலமும்பலமுங் கண்டறிந்துகொண்டு வெளிப்படுங்காலம் இதுதானென்று மிக்கமகிழ்ச்சியுடன் துரோபதியைப்பார்த்துப் பெண்கணாயகமே ! இவ்வளவு தூரம்வந்து என்காதிலேற்றிய வீரரசம் விருதாவாய்ப்போகாமல், எப்படியேனும் சுதக்கணைக்கும் உத்தரனுக்குந் தெரியப்படுத்திச் சாரதித்தொழிலுக்கென்னை யிசைவிப்பது உன் கடமையேயென்று, ஒருதரத்திற் கொன்பதுதரமாகச்சொல்லி வேண்டினாள். அவ்வாறே நல்லதென்றுநடந்த வண்ணப்பெண் நெருங்கித்திணிந்த தனமும் சுருங்கிக்கனிந்த மனமும் துவண்ட விடையுஞ் சிறந்த நடையுமுடைய உத்தரைக்குச் சங்கதியாவுந்தெரிவித்து அவளுடன்சென்று விராடபுத்திரனாகிய வீரகண்டைதரித்த இளஞ்சிங்கத்தைக்கண்டு, ஐயா! நானொரு நன்மைசொல்கின்றேன். ஐயமில்லாமல்அங்கீகரியும். வையமுழுது மும்மையேவாழ்த்தும்; பொய்யில்லாப் புகழணிபூணலாம். இப்போது நேரிட்டிருக்கின்ற துட்டரை வெல்லுவதற்கிட்டமிருந்தால் திருத்தமாகியதேரைப் பொருத்தமாகச்செலுத்துஞ் சாரதியில்லையென்றே சங்கடப்படவேண்டாம். நம் உத்தரையாருக்கு நடனத்தொழில் பயிற்றிவரும் பிரகநளையென்னும் பேடிக்கொப்பாகிய சாரதி இப்புவனத்திலுமில்லை, எப்புவனத்திலுமில்லை. அவள் கண்ணபிரான் தங்கையாகிய சுபத்திரையைத் திருமணமுடித்தவன் காண்டாவனத்தை யெரித்த காலத்தில் அக்கினிதேவன்கொடுத்த அழிவில்லாத இரதத்தைச்செலுத்தி, யாவருந்துதிக்கத் தேவருங்களிக்க அடுபோர்புரிந்து வெற்றிபெற்றிருக்கின்றாள். நான் பாண்டவர்க்குரிய பத்தினியிடத்திருந்தகாலத்தில், இப்பேடிதிறத்தையறிவேன். மெத்தமகிமைபெற்றவள்; வீரப்பிரதாபமுற்றவள்; மேலும் வல்லவள் ; மிகவு நல்லவள் ; என்பேச்சை நம்பி யோசித்துப்பாரும். வேந்தன்மைந்தனே ! என்று விரதசாரணிசொல்லவும் உத்தரகுமாரனுக் குடன்பிறப்பாகிய உத்தரை அலர்ந்த செந்தாமரைக்கொப்பாகிய தமயன்முகத்தைத் தயவுடன்நோக்கி, என்னண்ணாவே ! இம்மாதரசிசொன்ன வாக்கியம் ஒருக்காலும் பிசகாது. ஒருநாள் பரதசாத்திரத்தைக்குறித்து நானும் அப்பேடியும் பேசிக்கொண்டிருக்கும்போது, சாரதித்தொழிற்குரிய சாத்திரப்பேச்சும் வந்தது; அவ்விடயங்கள் யாவையும் கிரமமாகப்பிரசங்கித்து என்சித்தம் பிரமிக்கச்செய்து தேர்விடுந்திறமெல்லாந் தனக்குத் திட்டமாய்த்தெரியுமென்று உண்மையைச் செப்பியிருக்கின்றாள். அதனால் அப்பேடியையொப்புக்கொள்ளும்படி நானும்விரும்புகின்றேனென்று தங்கைபேசவும் இவ்விருவர் பேச்சையுங்கேட்ட உத்தரகுமாரன் கலீரென நகைத்துப் பளாபளா ! நல்லவார்த்தை சொன்னீர்கள், கேடில்லாக் கீர்த்தியையுடையவர்கள் பேடியையுஞ் சாரதியாகப் பெறுவர்களோ ? ஆணும்பெண்ணுமல்லாத அலியைச் சாரதியாகக்கொண்டு போர்க்களத்திற்சென்று பகைவர்களைவென்று வெற்றிபெற்றாலும், அது நிலைநின்ற புகழாமோ ? என்பெருமைக்கழகாமோ ? பேடிமுகத்தில் விழித்துவிட்டு ஒருவேலைக்குப்போனாலும் அக்காரியங் கெட்டேவிடும், நமக்

குண்டாகிய ஆண்மையும் அறிவும் புகழ்ச்சியும் மகிழ்ச்சியும் பொருளாகாமற் போய்விடுமே; அடடா! இப்படிப்பட்ட அலிகள் முகாலம்பனம் பண்ணவும் படாதே. அந்தோ! பேதைமைப்புத்தியாற் பேசவந்தீர்களே! போங்கள் போங்களென்று பொருமியுரைத்தான். அறியாதவன்கொண்ட ஆத்திரங் கண்ட சைரந்திரி சரசவிராடராசன் தனயனே! நான் சொன்னவளைப் பேடியென்றெண்ணிப் பேசவேண்டாம். அவளுடையகாரிய மிப்போதுதெரியாது. இனிமேல் தெரியவரும். அப்போது என்னை நீ எப்போதுங்கொண்டாடப் போகின்றாய். ஐயனே! இவளைவலவனுகக்கொண்டுவெற்றியடையப்போகின்ற மேன்மையும் நான்சொன்னவாய்மையும் நீ சொன்ன தூய்மையும் இன்னுஞ் சற்றுநேரத்தில் அறியப்போகின்றாய். வெகுகாலத்திற்கு முன்னமே இவளுடன்கூடி ஓரிடத்திருந்து பழகியறிந்தவளாகையால், இப்படிப்பட்டவளென்று இவள் குணங்களையெல்லாம் எடுத்துச் சொல்லத்துணிந்தேன். இன்னுஞ் சொல்லுகின்றேன்; உனக்கு நல்லகாலமிருந்து இவ்வல்லவியைச் சாரதியாகக்கொண்டு போர்க்களத்திற்புகுவையானல், வீரமும் பிரபலவெற்றியும்பெற்றுப் பசுமந்தைகளையு மீட்டுக்கொண்டு, சுபகரமாய்த்திரும்பிவந்து உன் அன்னையாகிய சுதக்கணையைத்தொழுது மகிழ்வாய். இவளுக்குக் கைவாசியுண்டு. இப்பேடியைவிட்டு நீ வேறொருசாரதியைக் கொண்டுபோனாலும், போர்முனையில் இழிவாகிய அபசெயமடைவதற் கையமேயில்லை. அல்லாமலும் சாரதியெப்படிப்பட்டவனு யிருந்தாலும் சாமர்த்தியனுகிய உனக்குத் தாழ்ச்சியென்ன? 'வல்லவனுக்குப்புல்லாயுதம்'என்னும் வாசகமறிந்திலையா? மண்பூனையானுலும் எலியைப்பிடிப்பதேகாரியம். நானுங்கட்குப் பகையாளியன்றே, உங்களுடைய சுகதுக்கங்களுக்குடன்பட்டவளே இனிநானுனக்குச்சொல்லவேண்டியது யாதொன்றுமில்லை இளங்களிறே! என்று பணிப்பெண்ணியம்பினுள். உத்தரையும் அதற்கொத்துப்பேசினுள். இவற்றையெல்லாங்கேட்ட இளஞ்சிங்கம் சாரதித்தொழிற்குவேறுவழியில்லாமையால், ஒருவாறியைந்து, மண் குதிரையைநம்பி யாற்றிலிறங்கும் வகையாயிருக்கின்றதே; வண்ணமாமகளே! உன்சொல்லையே நம்பினேன். நல்லது அப்படியேயாகட்டும். தெய்வச்செயல் உள்ளபடியே நடக்கட்டும்; அப்பேடியை யழையுங்கள் பார்ப்போமென்றான். அவனுடன்பட்டமையைத் தெரிந்துகொண்டு, பத்தரைமாற்றுப் பசும்பொனாகிய பணிப்பெண்ணும் உத்தரையும் ஓரடியாகவோடிப் பேடியுருவந்தாங்கிய பெருந்தகையைக்கண்டு வாடியமைந்தன் மனத்தையுந்திருப்பினோம். கூடியவரையிலுடன்பட்டு உன்னையழைக்கிறான் என; அப்படி வாவென்றழைக்கு முன்னமே பிரகன்னை இதோ வந்தேன்வந்தேனென்றெழுந்து அதிவேகமாகநடந்து கையிலணிந்தவளையல் கலகலவென்றொலிக்கக் கமலக்கண்ணிலங்கு மதிமுகஞ்சொலிக்கவந்து, இராசகுமாரனைக்கண்டு, உபசரித்து நின்றாள். இப்படியாகவந்த பேடியை இராசபுத்திரன்பார்த்துப் பேடியே! அசுவங்களுடைய சுபாவமறிந்து எசமானன் கருத்துணர்ந்து காலசமயங்கண்டு கைத்திறங்காட்டிச் சமயோசிதமாகக் குதிரைகளைநடத்திப் போர்முகத்தில் தேரைச்செலுத்துந்திறம் உனக்குண்டோவென்று சிறுவன்கேட்க, எதிரில்வணங்கிநின்றபேடி

எங்களிளஞ்சிங்கமே! கூலிக்குக்குற்றுசிறவனைக் கேளிக்கையாடச்செய்வது போல், நாட்டியங்கற்பிக்கும் அலியாகிய பேதையை விற்பூட்டிப்பொருதும் போர்முனையில் தேர்விடச்செய்வதுந்திறமோ? இராசராசர்களறியுந்தொழிலை நானறியத்தக்கவளோ? ஐயா! அச்சாரதித்தொழிலென்ன சாமானியமோ சொல்லும். அழகு ஈகை குணம் புகழ் மெய்ம்மை வண்மை முதலிய யாவுமுள்ள மச்சராசன் மகனே! ஆணும்பெண்ணுமல்லாத பேதை உமதுள்ளக் குறிப்பும் குதிரைகளின் குணநிசயங்களு முணர்ந்து தேர்விடத்தக்க திறமுடையவளாவேனோவென்று, தலையையசைத்துக் கையைநெரித்துக் குறுநகைகொண்டுசொன்னாள். அவள்காட்டிய புன்னகையின்குறிப்பை மன்னன் மகனறிந்து இவளிடத்தில்ஏதோ, கொஞ்சம் வித்தையின் இறுமாப்பிருக்கின்றதென்றோர்ந்து அடிபேடி! என்மனமொத்தசாரதி மாண்டுபோய்விட்டான்; அதுமுதல் என்பராக்கிரமமும் ஓய்ந்துபோய்விட்டது. இனியெனக்குத்தக்க சாரதி யெப்படியகப்படுவானென் றேக்கமுற்றிருந்தேன்; இப்போதுன்னுடைய திறமையுந் தெளிவும் நெளிவும் அநுபோகசாலிகள்சொல்லத் தெரிந்து கொண்டேன்; தேர்விடுந்தொழிலுக்கு உன்னையே விரும்பியிருக்கின்றேன்; சுத்தவீரனாகிய அரசன் எத்தனை பலசாலியாயிருந்தாலும், யுத்தஞ்செய்தல் ஓய்ந்திருத்தல் உடன்சென்றெதிர்த்தல் திரும்பியோடல் போர்மறுத்தல் பிராணனிறத்தல்முதலாகிய இவைகட்கெல்லாம் சமயம் காலம் இடம் திடமறிந்து தேரைச்செலுத்துஞ்சாரதி தீர்க்காலோசனைசெய்யாவிட்டால், எசமானனுக்கும் இன்பமென்பதெவ்வளவுமிராது. அல்லாமலும் அரசன் வெற்றிமாலையணிவதும் பெரும்புகழ்பெறுவதும் பெரியகாரியங்களைமுடிப்பதும் எதிரிகளை யோடவிட்டொடிப்பதும் இவைகளியாவும் சாரதியின் பேருதவியினாலுண்டாகத்தக்கனவேயன்றி வேறன்று. ஆதலால், நான் விரித்துச்சொல்லவேண்டுவதுமில்லை. நாமிப்போதுசெல்லுகின்ற போர்முகத்தில் தேர்செலுத்தும் உன்றிறமையை நன்றாய்க் கண்டுகொண்டால், அளவுபடாத என்சம்பத்துகள் யாவும் உனக்கே சொந்தமென்று ஐயமில்லாமற் கைமேற்கொண்டு வையம் வாழ்த்த மகிழ்வுற்றுய்யலாம். வாசனைதங்கிய கருங்குழலோங்கிய பேடியே! என்னை நீ வேறாகநினையாதை, உன்மனம்போலவேநடந்துகொள்வேன். நமது விராடநகரத்திற்கு வடதிசையில் வளைந்திருக்கிற பகைவர்களோடெதிர்த்துச் சண்டைவிளைத்து வென்று மாட்டுமந்தையை மடக்கிவருவோம். சீக்கிரந் தேர்கொண்டுவாபோவென்று கட்டளையிட்டான்.

உத்தரனுரைத்ததைக்கேட்ட பிரகநளை நான் பலவகைச்சாதுரியமுள்ள இச்சாரதித்தொழிற்கு வல்லமையற்றவளாயினும் அரசலட்சணமமைந்தஉமது கருணைக்கண்ணின் கடாட்சவீட்சண்ணியத்தினாலும் மேன்மைதங்கிய விராடராசனது சத்தியநெறியினாலும் பொன்னாட்டினர்புகழ இந்நாட்டினர்மகிழ என்னாற்கூடியமட்டும் தேர்விடுகின்றேன். மன்னா! நீ யாதொன்றுக்கும் மயங்காமல் யுத்தகோலங்கொள்ளென்று பேடிகூறிய தீரமொழியை உத்தரன் சிந்தித்துத் தேர்விடுந்திறம் இவளிடத்திலில்லாவிட்டால் நமது பணிமாது இத்தனை துணிவாகப்பேசுவளா? ஏதோ கொஞ்சம் பசையிருக்கின்றது. இனி

நமக்குப்பயமில்லையென்று மனங்களிகூர்ந்து யுத்தகோலச்சாலையில் நுழைந்து, குத்தினிச்சல்லடங் தொடுத்துத் தட்டிவரிந்து அரைப்பட்டிகைகட்டிவச்சிரக் கவசம் உருக்குக்கவசம் இருப்புக்கவசம் தரித்துப் பாசிபந்து கடககங்கண மணிந்து வாகுவலயம் புனைந்து, அங்கைமூடி புறங்கைமூடி விரற்சாடு கரச் சாடு முன்கைப்பூண்தொடுத்து முழங்கைத்தோற்கட்டு இருப்புச்சிரா மார் புறை பூண்டு குண்டலம்பரித்துத் திரிபுண்டரந்தரித்து செந்தூரத்திலகமு மிட்டு, முத்தாரம் இரத்தினாரம் மோகனாரங்களும் அணிந்து மாணிக்கப்பதக் கம் வயிரப்பதக்கம் தும்பிப்பதக்கம் துத்திப்பதக்கம் சரப்பணிகண்டசரம் உத்தரசஞ்சம் மோகனமாலைமுதலிய ஆபரணங்களும் தொடுத்தமாலை கோத் தமாலை தும்பைமாலை வெட்சிமாலை முதலிய மாலைகளுந்தரித்து சாந்துசவ் வாதும்பூசி நவமணிபதித்த சோதிமாமகுடந் தலைமேல்தாங்கி வீரபட்டங் கட்டி வாளும்வேலு மருங்கிற்சேர்ந்து உச்சிதமான பச்சைவில்லேந்தி அம்ப றாத்தூணி யழகுடனிறுக்கிக் காலில் வீரகண்டாமணி தொடுத்துப்போ ரலங்கிர்தம்யாவும் புகழ்பெறக்கொண்டு யுத்தசன் னுத்தனாகத்தோன்றித் தலைவாயிலிற்சென்று நின்றான். இத்தன்மையான உத்தரகுமாரனைப்பெற்ற தாயாகிய சுதக்கணைதன்மகனைக் கண்ணாரக்கண்டு கருத்துமகிழ்ந்து ஒன்றுந் தோன்றாமல் உள்ளங்குளிர்ந்து திருட்டிபடப்போகின்றதென்று சிந்திக்கும் வேளையில், மைந்தனோடிவந்து எட்டுறுப்பு நிலமுறப்பணிந்து வணங்கினான். அச்சேய் தன்னைத் தொழுதகாட்சியைத் தாயானவள்பார்த்து ஆசையாகத் தழுவி முத்தமிட்டு அன்பினாலுருகி ஆநந்தம்பெருகி அடா என்கண்மணியே! தேர்மேற்சிறந்து போர்முனைபுகுந்து தீரசத்தியினருளால் வீரவேந்தரைவெ ன்று வெற்றிமேற்கொண்டு பசுக்களுடன்மீண்டு பட்டினம்வரக்கடவாயென்று வாழ்த்தினாள். இதற்குள்ளே பேடியோ னோர்பாய்ந்து குதிரைப்பந்தியையாரா ய்ந்து சுழி சுத்தம் சாதி குணம் தேசம் வாசம் இரவிற்பிறந்தது பகலிற்பிறந் தது மானம் வயிரம் தீரம் திடம் உரோஷம் வேகம் இவைமுதலியவற்றிற்சிற ந்த சுபகரமுள்ள குதிரைகளை நாடிப்பிடித்து இரதத்திற்பூட்டி, அம்புமுதலிய ஆயுதவகைகளும் வைத்துச் சுற்றிலும் பத்திபத்தியாக வெற்றிக்கொடிநாட்டி ஆசாரவாசலிற்கொண்டுவந்து தேரைநிறுத்தினாள். அத்தருணத்தில் உத்தரன் தங்கையாகிய உத்தரையும் முத்து இரத்தினமுதலிய நவமணிகளாலமைத்த ஆலஞ்சுற்றி வெண்ணிறளித்துத் தமயனைப்போற்றி அருமையான என் அண் ணாவே! தேவரீர் போர்முகத்திற்சென்று பகைவர்களைவென்று அவர்கள் தேரிற்கட்டிய சித்திரவத்திர விருதுத்துணிகள் எல்லாவற்றையுங்கொண்டு வந்துகொடும், நான்விளையாடும் பொம்மைகட்குக்கட்ட வேண்டுமென்றாள். இளையவள் வார்த்தையைக்கேட்ட அரசகுமாரன் வளையாத்தலையைவளைத்து "அங்காடிவெட்டிப் பருத்திவிளைக்கில் அப்பாவெனக்கொரு துப்பட்டிதா" என்னும் பழமொழியை ஒத்திருக்கின்றதே; நமது தங்கைமொழியென்று மாறுத்தரஞ் சொல்லமாட்டாமல் நகைத்துக்கொண்டிருந்தனன். அவனுக் கருகிலிருந்தபேடியோ ஆகாகா, அம்மா! அவ்வாறேகொண்டுவருவதற் கட்டி யென்ன? ஆண்டன்மையுள்ள உன்தமையனுக்கிதுவுமொருபெரிதா? தேர்த்

துணியுடன் அவரவர் தலைத்துணிகளையுங்கொண்டு வெற்றிபெற்றுவருவது மரிதோ. நீ சந்தேகப்படவேண்டாமென்று உறுதியாகச்சொல்லி உத்தரனை நோக்கிச் சகுனங்களெல்லாஞ் சரியாயிருக்கின்றன ; இதுவே நல்லவேளை இரதமீது ஏறுமென்றாள். அவன் அப்படியே யாகட்டுமென்று அன்னைமுதலிய பெரியோர்யாவரையும் வணங்கி, விடைபெற்றுப் பொன்மலைபோன்ற தேரிற்பொருந்தி போர்ச்சிங்கம்போற் பூரித்திருந்தான். அப்பொழுது, சுதக்கணை தன்புத்திரன் முன்னழகையும் பின்னழகையும்பார்த்துப் பொங்கிப் பெருமூச்சுவிட்டு ஒருபக்கம் பூரிப்பும் மற்றொருபக்கத்தில் அறியாச்சிறுவன் யுத்தத்திற்குச் செல்லுகின்றானேயென்ற ஏக்கமுங்கொண்டவளாகி நின்றாள். அவ்வேளையில் அரண்மனைப்பெண்களியாவரும் கர்ப்பூரதீப நீராஞ்சனமெடுத்துத் தங்கள்தங்கள் இட்டதெய்வங்களைத் துதித்துப் பேடியைவாழ்த்தி எங்கள்பிள்ளை பத்திரம்பத்திரமென்றுசொல்லிநின்றார்கள். பேடியும் அவர்களைப் பார்த்து நாங்கள் போய்வருகின்றோமென்றுசொல்லி அரசமாதினிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு, குதிரைகளின் கலினக்கயிற்றை இடக்கையாற்பிடித்துக் குறடாவை வலக்கரத்தில் தாங்கித் தேரின்மேல் ஒருகால் ஊன்றுமுன்னமே கதி கவனம் தாவலென்று சொல்லப்பட்ட ஐந்துவேகத்தையுமுடையனவாய்ப் பூமி கிடுகிடென்றதிரவும் தும்புகள் மேலெழுந்து ஆகாயத்தைக் கப்பிக்கொள்ளவும் புரவிகள் அதிவேகமாகச்சென்றன, அந்த விராடபுரத்திலுள்ள பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திராதிகளில் ஆண்களும் பெண்களும் அணியணியாகநின்று எங்கள் இளவரசாகிய உத்தரனுக்கு மங்களமுண்டாகுகவென்று மனமாரவாழ்த்தித் தங்கள்தங்கள் வழிபடுகடவுளைத்தொழுது துதித்தார்கள். இப்படியிருக்கக் கண்மூடிக்கண்திறப்பதற்குமுன்னமே வானுறநிமிர்ந்து ; வளைந்தமதில்சூழ்ந்த அரசவீதியையும் மற்றும் பற்பல வீதிகளையுந் தாண்டி ஒற்றைச்சக்கரமும் சப்தாவென்னுங் குதிரையுமுடைய தேர்மேற்பிரகாசிக்குஞ் செங்கதிர்போல சங்கிராமசயவுத்தண்ட தீரனாகிய உத்தரன் உத்தரதிசைக்கு வந்துவிட்டான். இப்படி விராடநகரத்தின் வடதிசையைநோக்கி அதிவேகமாகவருகின்ற இரதத்திற்பொருந்திய இளஞ்சிங்கம்போன்ற அவ்வுத்தரன் சிராமனைப்போற் குபேரதிசையைக் குறிக்குங்காலையில், வான் இடமறச்செறிந்து நிறைந்த நட்சத்திரங்கள்போலும் அளவிடுதற்கரிய கடற்கரைமணல்போலும் திரண்டுபரவிய துரியோதனன் சேனைகள் தன் கண்களுக்கெட்டியதூரம்வரையில் விரிந்து நிறைந்திருப்பதைக்கண்டு ஆகா ! அடி பேடி! பொறு பொறு பொறு பொறு; அவசரப்படாதை. நீ விடுந்தேர் விறுவிறென்றோடுகின்றதே, ஐயோ ! என்தலை கிறுகிறென்று சுற்றுகின்றதே, பூமி நெறநெறவென்று நெரிகின்றதே, என்குலையோ நடுங்குகின்றதே, குடல் குழம்புகின்றதே. எதிர்நிற்குஞ் சேனைகளைப்பார்த்தால் கர்ப்பங்கலங்குகின்றதே. பாவி! தேரைச் சற்றே நிறுத்தடி. நமக்கெதிராகிய படைகளைக் கண்ணால் தான்பாரடி. யானையெத்தனை யெத்தனை கோடியோ ? குதிரையெத்தனை யெத்தனைகோடியோ ? சேனையெத்தனை யெத்தனைசேனையோ? தேர்களெத்தனையெத்தனை இலட்சமோ? நாம் எப்படிகணக்கிடப்போகின்றோம்; என்செய்

வோம்? ஐயையோ! பேடி நீயாகிலும்பார்த்துச் சொல்லடியென்றேங்கி உள்
ளங்கலங்கிக் கைகால்கள்நடுங்கி கண்களிருண்டு உடல்பதைத்து உயிர்துடித்து
நாவரண்டு முடிசோர்ந்து பிணம்போல் தேர்மேற்சாய்ந்துபோனான். இவ்வாறு
பிதற்றி முருகக்கடவுளாகிய செவ்வேள்விட்ட வேலாயுதத்தாற் கிழிபட்டு
விழ்ந்த கிரவுஞ்சமலைபோற் போர்முனைபுகுதற்கு ஆற்றலில்லாதவனாய்த் தேர்
மேற்சாய்ந்த உத்தரனைப் பேடிபார்த்துத் தன்னிருகையாலு மணைத்து, எடு
த்து நிறுத்தி வேர்வைதுடைத்துச் சோபந்திரத்தாகமளித்து ஆளைத்தேற்றி
அவன்முகத்தைநோக்கி ஏனப்பா இப்படியானாயென்று அறிவானுயர்ந்த பேடி
சொல்லத்தொடங்கினாள்.

வாளும்வேலுங்கொண்ட விராடன் மைந்தனே! நீ எதிர்நிற்கும் படை
யைப் பார்த்துப் பயந்தாயோ? ஏன் கலங்கிவிழ்ந்தாய், இருமாந்தெதிர்த்த
பகைவரை யெங்குமில்லாமல் அழித்துவிடுவதொன்று அல்லது நாமாவது
யுத்தகளத்தில் மாள்வதொன்று; இதுவே சுத்தவீரருடைய துணிவு; வேறே
சிந்திக்கத்தக்க தொன்றுமில்லை. இதனினும் யாதேனுமுண்டா யிருக்குமா
னால், அதை யெனக்குச்சொல்லு. முற்றிலும்வளைந்த பகைவர்களை வெற்றி
பெற்றுவருகின்றேனென்று நீஉன் அன்னைமுதலியயாவரிடத்திலும் உரைத்து
விட்டு உத்தரதிசையைநாடி இன்னுஞ் சற்றுநேரமாகவில்லையே! இதற்குள் மற
ந்துபோனாயோ? நல்லது கைப்பிடித்தவில்லைவளைத்துக்கடுங்கணைதொடுத்துப்
போர்செய்து அணுவத்தனையேனுங் காயம்பட்டுத்திரும்புவையேயானால் அப்
பொழுதும் சிலர் உன்னைக்கிஞ்சித்துச்சூரத்துவமுள்ளவனென்றுமதிப்பார்கள்.
இல்லாவிட்டால் அதிக இலேசாக எண்ணுவார்கள். சற்றுமுன் நீ வீட்டிற்பேசி
வந்த வீரவாசகங்களை முற்றிலுமறந்து இப்பொழுது முதுகிட்டோடும் இழிவை
யோசிக்குமிடத்தில் குறைந்த பெண்டுகள்கூடக் குலுக்கென்று நகையார்
களோ? இப்படிப்பட்ட உடம்பும் எடுக்கலாமோ? உன்னையார்தான் பூசித்துப்
புகழ்வார்கள்? ஐயோ! அடா தம்பி! நீபுறப்படும்போது புலிபோற்கர்ச்சித்து
பார் சத்துருக்களையெல்லாம் அதஞ்செய்து நமதுமாடுகளை மடக்கிக்கொண்டு
வருகின்றேனென்று வாய்ப்பதட்டமா யுளறினையே; அப்படி மகாவீரம்பேசி
வெளிப்பட்ட நீ எதிராளிகளிருக்குமிடத்தை மிதிக்குமுன்னமே உயிருலைந்து
உடல்நடுங்கித் திடனொழிந்து மயங்கிவிட்டனையே உலகமென்ன சொல்லும்?
படையைப்பார்த்துப் பதறிக்கதறி யோடினானென்னும் பழிப்பிற்கிடமாகுமே,
இத்தன்மையாகிய நிந்தைநேரிட்டபின்பு உயிரிருந்தென்ன? மானங்கெட்டும்
பிராணனைவைப்பது மரியாதையோ? நீயே யோசித்துப்பார், பயப்படாதை,
இடமாக இரதத்தின்மேல் உட்கார், அலைகடற்கொப்பாகிய பெரும்படைகளை
வென்றுவருவோம் அப்பா! இன்னொன்று சொல்லுகின்றேன்; கேள்.
'கற்றூண் பிளந்திறுவதல்லாற் பெரும்பாரந்தாங்கித் தளர்ந்துவளையுமோ'
என்பதுபோல், அளவிடப்படாத யானை சேனையடுத்தாலும் கூடியமட்டுஞ்
சண்டைசெய்துதளர்ந்தவிடத்து அப்போர்க்களத்திலேயே யுயிரையொழித்து
விடவேண்டும். மெலிந்து வெருண்டு புறங்கொடுத்தோடுவது வேந்தர்க்குத்
தக்கதன்றென்று விளம்பியிருக்குஞ் சாத்திரத்தை விசாரித்ததில்லையோ? இப்

பொழுது தானென்ன? ஒன்று முழுகிப்போகவில்லை. போர்முகநிலையுங் கார் முகமுறையும் கடுங்கணைத்தொகையுங் கற்றிருக்கின்ற நீ பெரியமலையைக் குறி யாகக்கொண் டடிப்பதுபோல் பெருங்கும்பாகிய சேனைகளின்மேல் மொத்த மாகப் பாணங்களைத் தூற்றிவிட்டால் கும்பலிற் கோவிந்தம் போடுவதுபோல் அம்புகள் போய்விழுந்து இன்னாரினியாரென்று பாராமல் யாவரையுங்கொல் லும், உனக்குத் தகுந்தபடி யானுந் தேரைச்செலுத்துவேன். அப்போதுன க்கு மேலான புகழ்விளையும், வைத்தகுறிதப்பாமல் மாட்டுகிறான் விராட ராசன் மைந்தனென்று கடல்சூழ்ந்தவுலகக் காவலரும் படைகளும் உனக்கெ திர்வாராமல் ஒருமிக்க வொழிவார்கள். அப்பனே இப்படியாக அடித்து வேந் தர் யாவரையுமுடித்து அவர்கைக்கொண்ட பசுக்கூட்டங்களைப் பிடித்துச் சயபேரிகையடித்து விராடநகரம்போய்ச் சேருவோமானால் சந்திரவமிசத்தா சர் அனைவரும் பந்துவருக்கத்தா ரெல்லோரும் உன்னைப் புகழ்வார்கள்; நெடு நாளைக்குன்புகழ் நிலைபெற்றிருக்கும். அவ்வாறன்றிப் புறங்காட்டி யோடுவை யானால் உலகுள்ளளவுந் தீராதவசையடைவாய், வந்தபகைவரைவென்று திரு ம்புவோமானால் வையகமெல்லாங் கைகுவித்துப் போற்றுவதுமன்றி உன்தந் தையுஞ் சிந்தைமகிழ்ந்து அளவில்லா ஆனந்தத்தையடைவான், ஒருவேளை நமதெண்ண முன்னுக்குவாராமல் நாமிறந்துபோனாற் புகழுடம்புபெற்று அரம் பாஸ்திரீகளுடைய இளமுலைப்போகந்துய்த்து வீரசொர்க்கமுற்றுக் கற்பகத் தருவினீழலில் வீற்றிருந்துவாழலாம். இரண்டுவகையிலும் இன்பநமக்குண் டாம். இளங்கன்றே! பேடியாயிருப்பவரைப் பேடியென்றுபேசுவது பெருமித மன்று, பெரும்போர் புரிவேனென்றுவந்து பேச்சுத்தடுமாறிச்சோர்ந்து படை யைக்கண்டு பயந்து ஓடவழிபார்க்கும் ஒருவனையே பேடியென்று உயர்ந்தோ ருரைப்பார்கள். 'சொற்சோர்வுபடேல்' 'சோம்பித்திரியேல்'என்னும் வாக்கி யங்களை விற்போருடையவேந்தர் மறக்கவே துணியார்கள். கலகத்திற்சென்று கல்நாட்டநின்று உயிரழிந்த வீரர்கள் கதைத்திறத்தையும் உணர்ந்திலையோ? அரசிளங்காளையே! என்று பற்பல வகையினாலும் உத்தரனைத்தேற்றிக் கல வரத்தைமாற்றிக் கட்டுரையாகிய சரிதங்களாற் கரைத்தாள்.

இவைகளை யெடுத்துக்காட்டிய பேடியின்கருத்திற் கிணங்காமல் தேரோ டும் வீதியில் தேரழுந்துஞ் சிறப்பினையுடைய மச்சநாடன் மைந்தனாகிய உத் தரகுமாரன் விற்பிடித்து வெகுண்டு, பற்கடித்து மருண்டு கண்ணிருகுத்துக் கடைவாய் குழைத்துப் புருவநெறித்து நெற்றிவியர்த்துப் பொருமிச்சொல்லு கின்றான். ஆரடி? அடிபேடி, உற்றுப்பாரடி! குடிகேடி உனக்குக் கண்ணி ல்லையோ? அவர்கள் சேனைக் கெண்ணில்லையோ? இப்படையோ டெதிர்ப்ப தாரடி? இப்படியே திரும்பிப்போவது சீரடி, அப்பப்பா! என்கர்ப்பங் கலங்கு கின்றதே, குடைகளும் நாற்படைகளும் கருங்கடல்போற் றுலங்குகின்றதே, பூமிமுழுதுஞ் சேனைக்காடாகப் பொங்கி நிறைகின்றதே, ஐயோ! என்சித்தம் பிரமிக்கின்றதே, இந்தக்கும்பலில் நானொருவனுஞ்சென்று மீண்டுவருவேனெ ன்பது விந்தைப்பேச்சே, பெற்ற தந்தைக்கும் ஏச்சே, என்மதியுங் கெட்டுப் போச்சே, ஏதேது? இனிக்காரியமேயில்லை. நான் சண்டைக்குப்போனால் தப்

பாமற்சாவேன், சந்தேகமில்லையடி பேடி! என்கதியை இன்னதென்றறியடி, என்தந்தைதாய்க்கு நான் கடைக்குட்டிப் பிள்ளையானதால் இனிப் பெறப் போகின்றோமா வளர்க்கப்போகிறோமா? என்று செல்வமாகவும் மிக அருமையாகவும் வளர்த்தார்களே, நானும் என்போல்பவராகிய சிறுவர்களோடு சேர்ந்து உண்டைவில் கையிற்பிடித்து விளையாடித் திரிந்துகொண்டிருந்தேனே, என்னைச் சண்டைமுகத்திற்கொண்டுபோகாதையடி, யுத்தஞ்செய்யும் பருவம் எனக்கின்னுமில்லையடி, நான் அறியாதபிள்ளையடி, எனக்கேனிந்தச்சள்ளையடி, ஆகா! இதென்னஅநியாயம்? கொடையாளியாகிய கர்ணன் வீட்டுமர் துரோணர் கிருபர் அசுவத்தாமா மற்றுமுள்ளவீரர் பலருஞ்சேர்ந்து முனைந்த போர்முகத்திற்புகுந்து போராட அறிவேனோ? போடிபோ அடிபேடி! நல்லது தெய்வச்செயலுள்ளபடி யாகின்றதென்று மனோவேகதிடங்கொண்டு சண்டைசெய்வோமென்றெண்ணினாலும் தேர்கள் அநேககோடி, யானை பலகோடி, குதிரை வெகு கோடி, பதாதிகள் கோடாகோடி, இவையன்றியும் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் அதிரதர் சமரதர் மகாரதர் அர்த்தரதர் இவர்களையெல்லாம் படைத்துணையாகக் கொண்டுவந்து நமது பசுமந்தைகளைக் கவர்ந்த வணங்காமுடியோனுக்கெதிரில் வணங்குகின்ற முடிபெற்ற பேடியாகியவுன்னை உதவியாக நம்பிப்போய்ச் சண்டைதொடங்கலாமோ ? சொல்லடி பேடி! காலமும் தன்பலமும் மாற்றான்பலமும் துணைப்பலமும் ஆராய்ந்துணராத அரசனது முயற்சிகள் அனைத்தும் பயன்படாதென்று பெரியோர்கள் சொல்வார்கள். நானோ மெத்தவுஞ் சிறியவன் அதிலுஞ்சொற்ப வலியுள்ளவன் இத்தன்மையனாகிய வென்னை அதிரதரிற்சிறந்து பின்பலம் விரும்பாமற் போர்முகத்திற் புகுந்து மதயானைகளைப்பிளந்து புயபலபராக்கிரம விக்கிரமம்பெறும் போர்விசய சிங்கம்போன்ற அருச்சுனராசனென் றென்னை மதித்திருக்கின்றனையோ? ஐயோ பேதையே! அவ்விசயன்புரியும் போர்க்களத்தில் எழுந்து பறந்துபோகின்ற பரமாணுவுக்கும் ஈடாகுவேனோ? பாவி! ஏண்டி வம்புசெய்கிறாய்? அடிபேடி! யாரெப்படியானாலும், விளைந்தபோர் எப்படிபோனாலும் உனக்கென்ன? நயநட்டங்கள் என்னைத்தானே சாரும், நீயேன் வீணே துள்ளுகிறாய். அரசமாதர்களுக்கு ஆடல்பாடல் கற்பித்து பத்துநாளைக்கிருந்து வயிறுவளர்த்துப் போகின்ற உனக்கேன் இத்தனைவீம்பு? பிள்ளையருமை யறியாத பெருமூடிபோடி, இப்பொழுதுதான் புதிதாக வில்வித்தையிற் கைப்பழகிவருகின்ற நான் நெடுநாளாகக்கற்ற வில்லாளருக்கெதிர்போய் வில்வளைப்பேனானால் மானங்கெட்டு ஈனம்பட்டு மாள்வேனென்பதற்கு ஐயப்பாடென்ன ? ஐயையோ! உன்னாலென்னாவி ஒழியவந்திருக்கின்றதே என்று கண்சிவந்து கடுங்கோபங்கொண்டு என்பேச்சுக்கெதிர்பேசாதை பேசாதை என்று பின்னுஞ்சொல்லுகின்றான். ஆ, பிரகந்நளையென்னும் அலியே! எங்கள் பசுமந்தைகளையெல்லாம் பகைவர் கொண்டுபோனாலும் மச்சநாடுமுழுவதும் நாங்கள்இழந்தாலும் குடிபடை அமைச்சுநிதி நிட்சேபங்குறைந் தொழிந்தாலும், முடிமுதற்செங்கோல் முனையழிந்தாலும் இதனால்வருங் பெரும்பழி எனக்கடுத்தாலும் எங்களைத் தெய்வம் நடுத்தெருவில்விடுத்தாலும் உனக்கொன்றுமில்லையே; என்னைத்தடுத்

துரைக்கவேண்டிய அவசியம் உனக்கென்ன? நானிப்போது சொல்லுகின்ற சொற்படி வாயைமூடிக்கொண்டு அப்படி யிப்படிப்போகாமல் ஊரைப்பார்க்கத் தேரைத்திருப்படி. அடிமகராசி! உனக்குக் கோடி புண்ணியமுண்டடி; தயைசெய்து என்தாய்முகத்தில் விழிக்கப்பண்ணடி, உனக்கு வேண்டியவையெல்லாம்தருகின்றேன். நான் சொன்னசொல்லுமாறேன். சண்டைசெய்யப் போகின்றேனென்று என்னுயிருள்ளவரையிலும் இனிப் பதறிப்பேசேனென்று கூகூவெனக்கதறிநின்ற அச்சிறுவன்மொழியை அர்ச்சுனன்கேட்டு அந்தோ! ஏது இனிக்காரியமில்லை. இவன்கருத்தைப் பார்க்குமிடத்துத் தேரைவிட்டுக் குதித்துப் புறங்கொடுத்தோடுவான்போலும் இருக்கின்றதென்றெண்ணி, மறுபடியும் மனவெறுப்பில்லாமல் மன்னவன்மகனை மகிழ்ந்துநோக்கி அப்பா க்ஷத்திரியகுலாதிபனே! மும்மையுலகத்திலும் ஏகசக்ராதிபத்தியமும் ஆக்கினைச் சக்கரமுஞ்செல்லும்படிசெய்து இப்பொழுது நிரைநிரையாகவந்தடர்ந்த பெருஞ்சேனைகளை யொருகணையால் மாளச்செய்து உன்சிந்தைமகிழ இக்கணத்தே திரும்பிவந்துவிடுவோம், நீயாதொன்றுக்கும்பயப்படாதை, உன்னை நம்பிவந்த வென்னையே நீ திடமாகநம்பு, இப்பகைவருடைய வாளாயுதம் வேலாயுதம் குந்தாயுதம் சக்கராயுதம் தோமராயுதம் வில் கணைமுதலிய ஆயுதங்களெல்லாம் நெற்பதர்போல் நெருப்பெழப் புடைத்துச் சேனையானைகளைத் துடைத்து வெற்றிபடைத்து மேன்மையாகத் திரும்புவதைவிட்டுக் கீர்த்தியைப்போக்கி விராடராசன்பெற்ற பெரும்புகழையும் பாழாக்கி எதிரிகளுக்கஞ்சி யோடினனென்னும் நிந்தையுண்டாக்கி என்புகழையு மண்ணுக்கிப்போட நினைப்பதும் அரசகுலத்திற்பிறந்த உனக்குத்தகுதியோ? உன்தாயாகியசுதக்கணையும் உனக்கிளையாளாகிய உத்தரையும் உன்பந்துவர்க்கங்களும் உன்னிடம்வந்து வணங்கும் பணிப்பெண்களும் பட்டணத்திலுண்டாகிய வெகுசனங்களும் நமதிளவரசாகிய உத்தரன் யுத்தத்திற்குப்போயிருக்கின்றான். பகைவர்களைவென்று அவர்கள் கைக்கொண்ட பசுமந்தையைத் திருப்பி வருவானென்று மேகத்துளியைவிரும்பிய பயிர்போல் வாட்டமுற்று வாய்திறந்து நீ வரும்வழியைப் பார்த்திருப்பார்களே! அப்படிப்பட்டவர்கண்முன்னர் நீயெப்படிபோய் விழிப்பாய்! என்னசொல்லிசைப்பாய்! ஐயோ! இவ்வவமானத்தைப்பார்க்கிலும் நான் சொல்வது கசப்பா? நினைக்கநினைக்கவெனக்கும் துக்கந்தோன்றுகின்றதே! நான் பேடியானாலும் இதுவரைக்குந் தேர்விடுத்த போர்முகத்தில் யார்பிழைத்தார்கள்; கண்டதுண்டம்படக்கொன்று கைகண்டதன்றிச் சண்டைக்குப்பயந்தோடிய செய்தியைப் பார்த்துமறியேன். கதைகளிற்கேட்டுமறியேன். என்னாற்பிழைவந்ததுமில்லை, என்னை நம்பியபேருக்கிடர்தந்ததுமில்லை. இப்போதுமென்ன? இதழ்விரிந்த மலர்செறிந்த மணமுறைந்த வரிநிறைந்த தொடையணிந்த படைதிணிந்த பலவான்கள் அடங்கலும் விறுவிறென்று தலைசுழன்று தந்நிலைதெரியாமல் மயங்கும்படி இரதஞ்செலுத்துகின்ற என்கைச் சாகசத்தினால் செல்வமிருந்த நமது பசுமந்தையைத்திருப்பிக்கொள்வோம். திடதைரியமுடைய சிந்தைசிதையாமல்வா, நான்விடப்போகின்ற தேர்ச்சாகசத்தைப் பார், ஒருவேளை உனக்குப்பகைவர்களாற் குற்றநேரிடுமானால் உடனே உன்

னுயிருக்கென்னுயிரைத் துணையாகக் கொடுக்கின்றேன். நீ யென்னை நம்பித் தேரிலுட்கார், எத்தனையோ கோடானுகோடி சேனைகளென் றிதயங்கலங் காதை, இன்னுமெழுகடல்போற் படையெழுந் தெதிர்த்தாலும் பெரும்புறக் கடல்போற் பெயர்ந்துவந்தாலும் வரட்டுமென்று உறுதியாய் மனத்துணிவு பெறுவையேயானுல் தேவர்கள் மதித்துத் துதித்துச்செய்யும் ஆசீர்வசனமும் வெற்றித்திருவின் கருணைப்பெருக்கமும் பூதலத்தோர் காதலித்துப்புகழும் புகழ்ச்சியும் உனக்குண்டாமென்பதற்கியாதொரு ஐயமுமில்லை. நீமாத்திரங் குருகுலநாயகன் போரைக்குறித்து வில்வளைத்துக் குணத்தொனி யெழுப்புமுன்னமே பெருங்காற்றிற்பறக்கு முருங்கைச் சரகேபோலடித்துக் காலேயமந்தையைக் கைப்பிடித்துக்கணப்பொழுதில் உன்னை மச்சதேசத்திற்கொண்டுபோய் விட்டு மறுவேலைபார்க்கின்றேன். இன்னுரைக் கொல்லவேண்டும். இவ்வாறு வெல்லவேண்டும். இப்படிக்குச் செய்யவேண்டுமென்னும் வருத்தம் உனக்கெவ்வளவும்வேண்டாம். நீபஞ்சாதை, நன்மை தீமைகட்குடன்பட்ட வென்னுடன்கூடிவாவென்று புத்தியிலுயர்ந்த பேடிமெத்தவு மனம்வருந்திச் சொன்னுள். தன்னுற்கூடியமட்டும் உத்தரனுடைய மனத்தைக் கரைத்துரைத்த வார்த்தையத்தனையினும் அணுவத்தனையேனும், அவன்சித்தத்திற்பொருந்தாமல், யுத்தவீரந்திருந்தாமல், மானம்போமென்னவருந்தாமல், வேறொன்றுந் தோன்ருமல், புறங்காட்டியோட நாணுமல், புகழாபரணம் பூணுமல், போக்கின்மேல் நோக்கமுள்ளவனுய்ப் பெண்யானைகள்போன்ற வெருமைகள் கடைபுரளவிழித்துக் கன்றைநினைந்து, மடிசுரந்து வழியப்பொழிகின்ற பால் காலில் வீழ்ந்துசென்று, மேலாகியநெற்பயிரிற்பாய அப்பயிர் கர்ப்பம்போற்றழைத்துக் கதிருடன்சாயும் வளம்பொருந்திய மச்சநாட்டுக்கதிபதியாகிய விராடகுமாரன் பெருமூச்செறிந்து, பேச்சுந்தளர்ந்து, பேடியைநோக்கிப்பேசத்தொடங்கினுன். அடி, மோசக்காரி! நான் எத்தனைவிதத்திற் சொன்னுலும், எள்ளத்தனையுந் தெரிந்துகொள்ளச் சத்தியுனக்கில்லையே. உன் சுயபுத்தியாற் றுணிவுபெறுவையென்ருலோ வதுவுமில்லை. சொற்புத்தியுஞ் சுயபுத்தியுமில்லாத் துட்டியைக்கொண்டு சண்டைக்கெப்படிபோகலாம்? இவ்விடத்தில் மேகம்போற் கவிந்த துரியோதனனுடைய சேனைக்கெதிரில் யுத்தஞ்செய்யத்தெரியாத என்னைக் கொடும்போரில்விட்டு நீ வெற்றிபெறலாமென் றெண்ணினையோ? நரிவாலைக்கொண்டு கடலாழம் பார்க்கலாமோ? அதற்குநான் ஆளல்லவே. என்னைப் பெற்றவனுனுலும், அவனைப்பெற்ற பாட்டனுனுலும், தனுர்வேதங்கற்ற சாதுரியரானுலும், இப்படையைவெல்லும் வல்லமையெவர்க்குண்டாயிருக்கும்? சொல்லடிபெருமூடி. புத்திகெட்டபேதையே! உனக்கென்னதெரியும்? நீயென்னவறிவாய்! மறுமன்னர்க்குண்டாகிய வுறுதியும் போர்மேற்செல்லும் திறனும் காலபலமும் காரியாகாரியங்களுந் தெரியாத கயவருக்கென்னசொன்னுலுங் கண்டறியமாட்டார்கள். ஐயோ! இதென்னபாவம்? அடியேண்டி பழிசுமந்து கொள்ளுகின்றனை. வேண்டாமடிபாவி! நான்சொல்வதை யின்னுங்கேளடி, லோபி! படமுடைய பாம்புக்கொடிபடைத்த பார்த்திபனுடன் சத்தியவிரதசரதநெறிபெற்ற சார்தரும் வெற்றிவேலேந்திய வேந்தரும் மூண்ந்து சண்டை

செய்யும் போர்முகத்திற் குற்றமற்ற தனுர்வேதங்கற்றவருங்கால்வைக்க மாட்டார்களே. நமனும் எட்டிப்பார்க்கநடுங்கிக் கண்கலங்குவானே. அப்படிப்பட்ட அதிரதர்களுக்குமுன் விற்பிடிக்க அறியாச்சிறுவனாகிய என்னைக் கொண்டு போய்விட்டுச் சண்டைபோடென்பதுந் தகுதியோ? அவர்கட்கெதிரில் நானெப்படிபோய் நிற்பேன்? என்னயுத்தம்பண்ணுவேன்? நல்லது, உன்பேச்சை நம்பி நானெதிர்த்தபோதிலும், தொலைதூரத்திலிருந்து பாணம்விடுப்பேன் நானொருகணைவிடுக்குமுன்னமே அவர்கள் ஓராயிரங்கணை தொடுப்பார்களே. அவர்களெய்யுமம்பினால் உன் கையும்மெய்யுங் கலங்கி முதற்பலியாய் நீ விழுவையே. அப்பால், நான்செய்வதென்ன? அடிகுடிகேடி! பின்னர் என்தேருஞ் சாரதியுங் குதிரையு மொழிந்து, வில்லுந்துணிந்து, நானுமழிந்துபோனால், வெற்றி யெவர்பட்சமாகும்? ஐயா வொருவேளை தெய்வச்செயலால் தப்பிப்பிழைத்தால் சுடுகணையேவித் துரத்தியடிப்பார்களே. அதனால் துயருழந்து, அருமையான தேகமலக்கழிந்து, கால்நடுங்கிக், கைநடுங்கிக், கண்கலங்கிப, புன்கண்பட்டுக் கருத்தழிந்து விழுந்து புரண்டெழுந்து, உள்ளங்கால் சிவக்க வுரங்கெட்டோடி, மச்சநாட்டிற்போய்ச்சேர்ந்து வாடிவருந்துவது உனக்கிச்சையோ, அஃதுனக்கு இலச்சையோ? அதனாலிகழ்ச்சியோ, புகழ்ச்சியோ? நிதானித்துப்பாரடி. இதைவிட, நான் சொல்வதைக்கேளடி. நாமேறிவந்த இரதமுறியாமல்! வில்லழியாமல் குதிரைசாகாமல் நீ மடிவுறாமல் நான்டிபடாமல், ஒருகுறைவுமில்லாமல் உயிருடன்திரும்பி, வீரம் பெறாதவர்போல் மீண்டூர்புகுவது பெருமையோ; சிறுமையோ? யோசித்துச் சொல்லடி. உயிரழிக்கும் பேடியென்று பற்பலவகையாகப்பேசி, மலையருவிபோற் கண்ணீருகுத்து, உண்ணீருலர்ந் துள்ளமுருகிக், கொடியபாவியாகிய இந்தப்பேடி நம்மையும்பிராணனுடன் விடமாட்டாள் குடிகேடியென்றுயோசித்துக் கைப்பிடித்தவில்லையும் அம்பறாத்தூணியையும் வீரகண்டையையும் தேர்மேற் போட்டுவிட்டுப் பின்புறமாய்ப் பூமியிற்பாய்ந்து விராடபுரத்தை நோக்கி விரைவிலகன்றோடினான். வாரணப் போர்முனைவெல்லப் பூரணவாண்மைபெறாத விராடகுமாரன் தேர்விட்டிழிந்தோடுவதைக் கருணைக் கடற் கொழுந்தலாகிய அருச்சுனன்கண்டு, பச்சாத்தாபப்பட்டுக் குதிரைக்கடிவாளத்தைத் தேர்க்காலிற் பிணித்துவிட்டு, நிலத்திற்குதித்து இளைத்தோடுகின்ற உத்தரகுமாரனைப் பின்றொடர்ந்தான். திரண்டகற்றூணையொத்த தோளாற்றலையுடைய விசயன் உத்தரகுமாரனுக்குப் பின்னோடியபோது, நந்தியாவட்டமாலையணிந்த துரியோதனனுடைய படைமன்னர்பார்த்துச் சங்கதியொன்றுந் தெரியாதவர்களாய், ஒல்லென்று சமுத்திரம்போலிரைந்து, தம்மிற்றாமே பொங்கிமகிழ்ந்து கைகொட்டிக் கலீரென்று நகைத்தனர். அவ்வேளையிற் சிவந்தகண்களையுடைய வீட்டுமரும் மற்றபெரியோர்களும் தம் விவேகத்தால் நிதானித் துரைத்தார்கள். நமக்கெதிராக வந்த தேரைவிட்டோடுஞ் சிறுவனைத் தொடர்ந்துசெல்லுஞ் சாரதியை நோக்குமிடத்தில், விசாலமாகநீண்ட விழிப்பார்வையும் ஏறுநெற்றியும் ஆசானுபாகுவாகிய துணைக்கரமும் வயிரமலைபோன்றமார்பும் பச்சைவர்ணத் தாமரைமலரையொத்த முகமும் பருத்த

விடையுங் கனத்ததொடையும் சிவந்தபதமும் சிரித்தநகையுமுள்ள சிலே விசயனைப்போற் றோன்றுகின்றது. ஆனால் அணிந்திருக்குங் காதோலையினு லும் திணிந்திருக்கும் ஆபரணங்களினாலும் கலகலக்கும் வளையல்களினாலும் கட்டியிருக்கும் புடைவையினாலும் பின்புறமுடித்த கொண்டையினாலும் முன்புறமை விழிக் கெண்டையினாலும் பெண்ணுருவாயுங் காண்கின்றதே. ஆகையால், பெண்ணுருவென்றும் ஆணுருவென்றும் பெண்ணும் ஆணுமல் லாத பேடியுருவென்றும் எப்படிபேசலாம்? இதன்றியும் முத்துச்சரக் குடை கள் பத்திப்பத்தியாகச்சிறந்த விராடநகரத்திலிருந்து ஒருதேரோ புறப்பட்டது. அத்தேரிற் பொருந்தினவன் சிறுபிள்ளையாகவே தோன்றினன். அவன் நம்மு டன் யுத்தஞ்செய்யத்துணிந்து விற்பிடித்து வந்தவன்போலு மிருக்கின் றது. அவனுக்குத் தேர்விடுஞ்சாரதி ஆணென்றும் பெண்ணென்றுந் தெரியாம லையப்படுதற் கிடமுண்டாகின்றது. அவர்களின்னுரொன்றும் இன்னகாரண மாக வந்தார்களென்றும் எடுத்துரைப்பவர் யாருமில்லையே. அந்தோ! இச் சூதை யெவ்வாறறியலாம், எப்படியுணரலாம், ஈதென்ன சூதோ, இனி விளையப்போகின்ற தென்னவாதோ? என்று மனமறுகி, மறுபடியுந் தெளிந்து ஆலோசனைச்சங்கங்கூடி அவரவர்களும்நாடித் திரமாய்ச்சொல்லலாயினர்.

திரிகர்த்ததேசத்தரசனானசுசன்மாவென்பவன்விராடநகரத்திற்குத்தென் பால்சேற்றடைந்து, பசுக்கூட்டங்களை யோட்டியகாலையில் விராடராசன் துடித்து மலைபோற்றிரண்ட தனது தோண்மேலடித்து வைரங்கொண்டு பற் கடித்து விற்பிடித்து நால்வகைத்தானையுடனடந்து பகையையடர்ந்து எவ ரையும்வென்று தங்கள் பசுநிரையைக் கைக்கொண்டு, மண்ணுலகத்தோரும் விண்ணுலகத்தோருங்கொண்டாடும்படி பாண்டுமைந்தரைவரும் வெற்றிபெற் றவராகவேண்டும். இப்பதியிலவரிருந்தாரென்பதற்கு ஐயமே வேண்டுவதில்லை. மச்சராசன் தென்றிசையிற் சண்டைக்குப்போம்போது, உத்தரகுமாரனென் னும் இளங்காளையைவிட்டு, மற்றபிள்ளைகளுட னுடன்பட்டு அஞ்ஞாத வாசஞ்செய்வதற்கு மாறுவேடத்துடன் அமர்ந்திருந்த தருமராசன் வீமன் நகுலன் சகாதேவன் இவர்களனைவரும் தன்னுடன்வரச் சென்றவனாகவேண் டும். ஊர்வசிசாபம்பெற்ற பேடியுருவத்துடன் வெளிப்புறப்பட வெட்கப் பட்டு அரசகன்னிகைக்கு நாட்டியம்பழக்கிய நபுஞ்சனானவன் நரனாகவேண் டும். நாமெல்லோருந்திரண்டு சமுத்திரம்போற்புரண்டு மச்சநாட்டின் வட திசையையடைந்து, விட்டை நாட்டை வேகக்கொளுத்தி, மாட்டைக்கூட்டி மடக்கிய வன்மையைத் தூதர்களோடித் துயருடன்சொல்ல வில்வேளைப் போல வீட்டிலிருந்துகேட்ட உத்தரகுமாரன் விசனமெய்திக் கண்சிவப்பேறி என்றந்தைமாருந் தமையன்மாருமில்லாத சமயம்பார்த்துவந்தார்களே! எனக் கொருசாரதியுமில்லையேயென்று மயங்கிச் சோர்வடைந்தவனாக வேண்டும். இக்காரியங்களைக் கேள்விப்பட்ட அருச்சுனன் எக்களிப்புடனெழுந்து, பயிர்க் கொள்ளைக்குத் திட்டிபரிகாரமாகச்செய்துவைத்திருக்கிற புல்லாடவனையொ த்த உத்தரகுமாரனுக்குப்போர்க்கோலஞ்செய்து தானேசாரத்தியம்பண்ணச்

சமைந்தவனாகவேண்டும். அப்பேடிஎடுத்துக்கூறிய சாதுரியவசனச்சமர்த்தி னாலும், உறுதியூக்கமுடைமையினாலும் தான் சிறுவனாயிருக்கின்ற தன்மை யாலும், பின்முன் னெண்ணிப்பாராமல், பகைவரையுந் தன்னையுமெண்ணா மல் மானாபிமானத்தையுமறியாமல், "இளங்கன்றுபயமறியாதென்பதுபோல்" தேர்மேலேறிப் போர்மேல்வந்ததாகத் தெரியவருகின்றது. இதுவேயுண்மை. இதற்குவேறாக நினைக்கவேண்டியதில்லை. அப்பேடிநடத்திய தேரில்வந்த உத் தரகுமாரன் கங்குகரைகாணாத நமது சேனைக்கடலைப்பார்த்துக் கருப்பமுமன மும் கண்ணுங்கலங்கித் தானினைத்துவந்த சண்டைநினைப்பையுமறந்து, தாய் தங்கையரிடத்திலுரைத்த தைரியத்தையுந் துறந்து வாட்டத்துடன் ஓட்டங் கொள்ளநினைத்தோடினவனாகவேண்டும். அவன்மடமையைத்தெரிந்து சாரதி சொல்லவேண்டிய கடமையையும் தீரவீரத் திறமையையும் மிகத்தேற்றியுந் தேறாமே தேர்விட்டிழிந்து உயிர்க்குறுதிதேடி யூரைப்பார்த்தோடுகின்றான். மிக்க பயங்கொண்டோடுகின்ற அவ்விராடகுமாரனைச் சாரதியாகவந்த பேடி நோக்கிப் பின்றொடர்ந்தோடுகின்றாள். இதுதானிப்பொழுது நடந்திருக்கின்ற காரியமென்று ஆலோசனைச் சங்கமாகக்கூடிய யாவருந் தங்கள்பேரறிவினால் நிச்சயித்தார்கள். இவர்கணிதானத்தைக்கேட்ட துரியோதனனும் அவன்மன த்திற்கிசைந்த மன்னவரும் பயங்கொண்டு, இதயத்திற் பசுமரத்தாணிபோற் பதித்துக் காதினுழைந்த நாராசமென்ன நலிந்து, நாமென்னினைந்தென் செய் தோம், என்னவோ ஏதோவென்று பிராந்தியாற் பதைத்தோடுகின்ற உத்தர குமாரனைக் கண்சிமிட்டாமற்பார்த்துகொண்டேயிருந்தனர். இப்படியிருக்க, ஊர்முகமாயோடிய உத்தரகுமாரனைப் பிடிக்கப்போன பேடி கணப்பொழுது செல்லுமுன்சென்று எதிர்நின்றுமறித்து அவனுடையமுன்கையைத் தொட் டிழுப்பதற்கஞ்சினாள். அதேனெனின், வீரப்பிரதாபமேன்மையில்லாத வேந் தனானாலும் தான் சாரதித்தொழிற்கிசைந்த தன்மையினால், எசமானன் கை யைத்தொடுவது மரியாதையன்றென்றிருந்தாள். இப்பால், ஏமபாசம்போல் இருகரத்தையும் விரித்துத்தடுத்தெதிர்நின்றபேடியைப் பிதிர்கலங்கி யோடுகி ன்ற உத்தரகுமாரன்கண்டு மதிமயங்கிமிகவு மனம்வாடி என்னடி பேடி குடி கேடி, நிர்மூடி! இன்னுமென்னை விட்டுவிடாயா? கொடியாளேயென்று பூனை யைக்கண்ட கிளிபோலும், பூதத்தைப்பார்த்த வுயிர்போலும், பயந்து மெய்ந் நடுங்கி யொடுங்கி யுளறிப்பேசுகின்ற உத்தரகுமாரனைப்பேடிவேடப்பிரதாபன் பார்த்து இளவரசாகிய இறைவனே! உன்னைத்துணையாகநம்பித்தேர்செலுத்தி வந்தவென்னை நோக்குமிடத்தில், வினையைத் துணையாகநம்பியவீணாவோ த்தேனென்று வெறுத்துச் சற்றுநேரம் பொறுத்து, அரசிளங்கன்றே! இப்படி யுஞ் செய்யலாமா வென்றிசைத்தனள். அவள் பேச்சைக்கேட்டுக் கலகல த்த உத்தரகுமாரன் அப்பேடியின் அழகிய முகத்தைப்பாராமல் நிலத்தைப் பார்த்து நெடுமூச்செறிந்து திக்குமுக்காடித் திடுக்கிட்டோடிக் கண்ணீர் சொரியவும் விடவிடவென்று கைகால்நடுங்கவும் முத்துப்போல் வேர்வை முகத்திற்றுளிக்கவும் எண்ணங்குலையவும் இதயந்துடிக்கவும் வாய்நின்றும் வரும் சொல்லுங்குழற வெருண்டு விம்மிச்சொல்லலாயினான்.

அடிசிமாட்டி! இவ்வுலக வாழ்க்கையைவிரும்பிய வுயிரானது நமனைக் கண்டு நடுக்கங்கொள்வதுபோல், உன்னைக்கண்டு ஒடுங்கிவிட்டேனடி பேடி! நான்சொல்லு நன்மையைக்கேளடி. பிள்ளையாகப்பிறந்த அந்நாண்முதல் இந் நாள்வரையிலும் தாய்தந்தையரைவிட்டுப் பிரியாத தனயனடி. நான்போர்க் கோலங்கொண்டு தேரேறிவரும்போது, என்னைப்பெற்ற சுதக்கனை என்முக நாடி தன்முகம்வாடி வாயிற்படிவரைக்கும்வந்து வழிவிட்டனளே. அவளுடையமனமும் வயிறும் எப்படிவருந்தியதோ? என்னதிகிலடைந்ததோ? நானறியேன் சிறியேன். அவளப்படி அவலமுற்றிருக்க, நானிவ்விடத்திற் கோடிச்சேனைகளைக்கொன்று வென்று வெற்றியுடன் திரும்பினால் தாய்வயிறெரியச் சம்பிரமங்கொண்டாடுந் தறிதலையர்களில் நானொருபாவியல்லவோ! அடிசதிகாரி! உனக்கு வெகுகோடிபுண்ணியமுண்டு. கண்ணியமுண்டு சுகிர்தமுண்டு சுபமுமுண்டு நான்வந்த களிப்புமாறுமற் கொண்டுபோய் விராடநகரத்திற் சேர்த்துவிடுவையானால், என் தாய்தந்தையர் பக்கம் உன்மேலதிகமன்புண்டாகும். அவர்களுனக்கு வெகுமானஞ்செய்யுமுன்னமே யானை தேர் குதிரை ஆடையாபரணங்களும் அடியேன்கொடுக்கின்றேன். அடி பேடி! உன்னை நான் கனவிலுமறவேன். நீயுநானும் உடலிரண்டு உயிரொன்றென மிகவுமொருமையாயிருப்போம், எக்காலமும் உன்பேர்விளங்கும்படியாக இவ்வுலகிலுன் உபகாரச்செய்கையைத் தாபித்து என்னிட்டதெய்வமாக உன்னைக்கொண்டாடுவேன். நான்மாத்திர நகரம்போய்ச் சேர்வேனானால், மன்னரையடக்கி மாட்டைமடக்கிப் பின்னமில்லாத வெற்றிபெற்றதுபோலாவேனடி, அடியுத்தமி! ஏதோ என்மனங் கலவரப்படுகின்றது. இன்னொருதரமென் தாயைப்பார்க்கவிச்சைமேலிடுகின்றது. மச்சநாடுபோய்த் திரும்பிவாராமல், சண்டைக்கடியெடுத்துவைக்கமாட்டேன். என்மண்டைக் கோலைகொண்டுவைத்த கொடும்பாவி! கண்மூடித் திறக்குமுன்னம் பட்டணம்போய்ச்சேரடி. கலங்கவிடாதையடி. கடவுண்முகத்தைப்பாரடி. என் மார்பைத் தொட்டுப்பாரடி. ஐயோ! குலைதுடிக்கின்றதே. கரைந்துருகிய வென்னைக்காவடி. அடிபேடி! நீயென்பங்கிற் கட்டமத்துச்சனிபோல் எங்கிருந்துவந்தாயடி? நீயாரடி? ஒட்டா, உறவா? ஒன்றுமில்லையே. ஆனாலும் இவ்வேளை நீதான் எனக்குத்தாயடி. இரும்போ, கருங்கல்லோ? உன்னிதயமிரங்கடி. எனக்குமுனக்குமென்னபகையடி. எங்களுக்குந்தெரியாத சன்மப்பகையுண்டோடி? தாட்சண்யம்வையடி, தைரியஞ்சொல்லடி. நீயெனக்குச்செய்யுமுபகாரம் நன்மை தீமையிரண்டும்வேண்டாம். ஓடிப்போமென்னைத்தடுக்காமல் விட்டுவிடுவதே கோடிபுண்ணியமடியென்று இவ்வாறு பற்பலவகையாகக்கூறி இச்சனியைத் தப்பியோடுவதற்கு வழியில்லாமல் மிரளமிரளவிழித்துவெம்பிய விராடபுத்திரனை விசயன்பார்த்து மிக்கவிசனப்பட்டு, ஏதேதிவனினித் திரும்பானென்றெண்ணியபோதிலும் இப்போதிவனை விடப்படாது. மற்றொருவகையால் மனந்தேறச்செய்வோமென்று, உத்தரகுமாரனை நோக்கி, விராடராசகுமாரனாகிய வுத்தமனே! உனக்கு நித்தியவாழ்வைத் தரவேண்டுமென் றெண்ணியிருந்த என்னெண்ணத்தையுங்கெடுத்து, நீயுமயங்

கிப்போய் விட்டாய். போனதுபோகட்டும். இனியாவது செவ்வைப்படும் படி உன்சித்தப்பிரமையை விட்டுவிடு. நான்சொல்லப்போகிற வுறுதிமொழி யைக் கேட்டு, உன்மனத்தைத்தேற்றி, என்மனம்போலிசைந்து வருவையா னால் மேலானதிறம்பெற்ற வில்வல்லவர்களினுஞ் சிறந்தவனீயேயென்று யாவ ருமதிக்க உன்னை முதன்மையாக்கி, இப்பொழுது நேரிட்டிருக்கும் பகைவர் கள் வாடும்படியாய்மாட்டி, நமது ஆனிரைகளையெல்லாங் கூட்டிப் பெரும் புகழினை நிலைநாட்டி விராடநகரம்போய்ச்சேர்வோம். இவ்வாறு வெற்றிபெறு வதற்குமுன் மனந்தளர்ந்து வந்தவழியே திரும்பியோடுவதைக்கண்டால், என்னைப்போலொத்தவர்கள் நகைசெய்யார்களோ? விராடராசன்மகனே! பேயென் றென்னைப் புறகிடநினையாதை. நீயெப்போது வெற்றிகொண்டு வருவாயென்றுன்வரவை யெதிர்பார்த்திருக்குமுன் தாய் தந்தையரும் உறவி னரும் களிப்புடன் உன்னைத்தழுவவும் அன்பினாலுருகிப் பேரானந்தக் கண் ணீர்பெருகி முத்தந்தரவும் பொன்னுலகத்திற் கிணையாகிய உன்னுலகத்தவர் யாவரும் உன்னையும் என்னையும்புகழ்ந்து மகிழ்ந்து புகன்றெதிர்கொள்ளவும் மலையாகிய புகழினை வளர்த்து, நிலையாகியவெற்றியைவிளைத்து, ஒருகணத் திற்குக்கணம் வெற்றிபெறுகின்ற விசயனென்றென்னைப் பலரும் நினைக்கவும் மந்தரகிரியாலலைபட்ட பாற்கடல்போல், பகைவரது சேனைக்கடலைப் படுபா ழாகக்கலக்கியடித்துக் கருந்தாள் செந்தூளெழும்பமுடித்து நீடூழிவாழ்வையுன க்கு நிலைபெறச்செய்வேன். மச்சராசன் மாதவப்பேறே! நீ இச்சொல்லுக்கிண ங்கிச் சப்தாவென்னும் பச்சைப்புரவித் தேர்க்கொப்பாகிய அச்சுவச்சிரத்தா லமைத்திட்ட நமதுசிதத் தேர்மேலிருந்து அச்சமில்லாமற் சாரதித்தொழி லாயினுஞ்செய்வையானால் முச்சகங்கொண்டாடு முதன்மையைப் பெறலாம். இதற்காகிலும் உடன்பட்டு வருவையோ வரமாட்டையோ? என்று போரு க்கு முதற்பாதமான பேடிகேட்க, உத்தரகுமாரன் சற்றாழ்ந்து நினைத்து நிதானித்து நாம் தனித்திவள்கையிற் சிக்கிக்கொண்டோம்! என்னவோ கால கதியின்னதென்றுதெரியவில்லை. நாம் போர்செய்வோமென்றுபுறப்பட்டகால மெப்படிப்பட்டதோ? இன்றுதயத்தி லியார்முகத்தில் விழித்தோமோ? இப் பேடிப்பாவி நமக்கெமன்போல்வந்து நேர்ந்தாளே! இவள் நம்மை யுயிருடன் விடாள்போலுமிருக்கின்றதே. சேனையைப் பார்க்கப்பார்க்கப் பயமேலிட்டிரு க்குகின்றதே, ஐயோ வாய்க்கொழுப்புச் சீலையால் வடிந்ததுபோல என்வாய்ச் சொல்லே யெனக்கிடர் விளைத்துவிட்டதே, இனித் தெய்வச்செயலெப்படி யோ? தெரியாதே, தாய்தந்தைதேடிய தவம் இதுதானோ, தர்மந்தலைகாக்கு மென்பது பொய்யோ, இந்தபுஞ்சகி வெற்றிபெறுகின்ற வில்வல்லமையை தீரர் களைப்போற் பேசுகிறாளே என்று பயமகன்று சாரதித்தொழிலாவது பண்ணெ ன்று பகர்கின்றாளே, இதற்கும் மாட்டேனென்று குதர்க்கம்பேசுவது தகுதி யல்லவே,நல்லதுள்ளபடியாகின்றது, நாமுங்கொஞ்சஞ் சாரதிசாத்திரம் பார்த் திருக்கின்றோமே ஆதலால் தேர்விடுந்தொழிற் கிசைந்துகொண்டாற் போர் முனைபுகுந்த பேடியைத்தெரிந்து சமயத்திற்குத் தக்கபடி பார்த்துக்கொள்ளு வோமென்று ஒருவாறுடன்பட்டு நடுக்கமுமேக்கமுநீங்கி ஊக்கமேலிட்டுள்ளங்

தேறித்திடுக்கிடமுடைக்குஞ்சிங்கம்போற்சிறி வீரப்பார்வைகாட்டி அடிமோட்டி, உனக்குமெனக்கு மேதோவொரு சம்பந்தமுண்டாயிருக்கின்றது; அதின்ன தென்றுந் தெரியவில்லை. உன்னிட்டப்படியே யொப்புக்கொண்டேன். என்னிடத்திற் றப்பொப்பிருந்தாலும், நீயே பொறுக்கவேண்டுமென்று உத்தரகுமாரனுரைத்தான். அதைக்கேட்ட பேடி சித்தமகிழ்ந்துதிரும்பி உத்தரனுந்தானும் ஒருமையுடனேடிவந்து தேர்மேலேறிக்கடிவாளம்பிடித்துக் குதிரைகளைமுடுக்கச்செய்து அதிரதனுகிய அருச்சுனன் நாயகனுகவமர்ந்து முன்செய்தவப் பயனிப்போது கூடியதென்று களித்து வில்லும்பாணமுங்கரத்திலேந்தி வேந்தனுகிய உத்தரகுமாரனுக்குத் தயிரியஞ்சொல்லி ஐயா விராடகுமாரனே! நமக்கு நேர்வடக்காகிய வுருத்திரபூமியிற் சாமுண்டி சந்நிதானத்திலிருக்கும் வன்னிமரத்திற்குநேராக நமது தேரைச்செலுத்தென்றான். அவள்சொல்லி யடங்கு முன்னமே என்னவோகாரணந் தெரியவில்லையென்றெண்ணிப் பொன்மயத்தேரை வன்னிமரத்திசையிலோட்டினுன். இச்செய்தி யிவ்விடத்திலிப்படியிருக்க, நேராக வடதிசையைநாடிவந்த தேர்மாறி வடகிழக்கிற் போவதைத் துரியோதனன்முதலிய பெரியோர்களும்பார்த்து நமது படையின்மேல் இலட்சியம்வைத்துவருகின்றவன் அருச்சுனனல்லது மற்றொருவருமல்லர், அன்னியரென்னுமையப்பாடு வேண்டுவதில்லை. அவனைப் பேடியென்றுமதித்தது நமது பேதைமைத்தன்மையென்றெண்ணிப் போர்முனைவிட்டோடிப் புத்திமயங்கிப் பொறிபுலன்குன்றிக் கண்கலங்கிக் கவலைகொண்டார்கள். உடனே அநர்த்தமான அவசகுனங்கள்விளைந்தன. இவற்றையெல்லாந்துரோணர்கண்டு ஆராய்ந்து விசனப்பட்டு அரவக்கொடிபடைத்த அண்ணலுக்குச் சொல்லுகின்றார்.

மதிமரபிற்றோன்றிய வணங்காமுடிபெற்றமகிபனே! யான்சொல்லுகின்றதைக்கேள். வானமுழுதுமதிர்ந்து, திக்கெட்டுங் கம்பிதமெழுந்து பகற்காலத்தில் நட்சத்திரமுதிர்ந்து மேகம் இரத்தமழைபொழிந்து பூமாலைகள் கரிந்து புலால்நாற்றமிகுந்து யானைகுதிரைகள் கண்ணீர்சொரிந்து பருந்துங் காக்கையும் பறந்து மேல்விழ்ந்து நாயும் நரியும் புரண்டுளையிட்டுக் கழுகுங் கூளியுங் கவிந்து நிறைந்து ஆயுதமுனைகளனற்புகைமலியச் சேனைகள்மயங்கித் திடுக்கிட்டலையப் பற்பல துர்ச்சகுனங்களு முண்டாவதை யாயுமிடத்தில், சகுன நூற்படி அரசனுக்குத் தீங்குமபசயமும் விளையுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. சாத்திரந்தப்பென்றெண்ணுமல் நீ முன்சாக்கிரதைப்படவேண்டுமென்றுரைத்து விட்டுமர் கிருபர் முதலிய மேலோரைநோக்கி விளம்புகின்றனர்.

அதிரத மகாரத சமரதத்தலைவர்களே! சமுத்திரம்போற்பரவிய நமது தேர்வீரர்கட்கெதிரே ஒற்றைத்தேர் செலுத்திவருகிற வுறுதி யுணர்ந்தீர்களே, அவன் நமது எண்ணிறந்த சேனைகளையு மொருகணையால் வெற்றிபெறத்தக்க வீரப்பிரதாபனல்லனுயின், தானொருவனுந் தனித்துவரத்துணிவனே? ஆதலின் நம்முடன் எதிர்ப்பவர்களில்லையென்றிறுமாந்து வாய்மதம்பேசிமகிழ்ந்திருத்தல் தகுதியன்று. சுத்தவீரர்கள் தங்கள்தங்கள்படைகளை யணிவகுத்துக் காத்துக்கொள்வதே உத்தமம். தெற்கே ஆனிரைமீட்கிக்குச்சென்ற திரிகர்த்தனைப் பிகழ்ந்த சாதுரியவான்களே! நமது தேகமழிந்தாலும், பிராணனொழிந்தா

லும், மானமழியாமலும், மட்க்கியமாட்டை விடாமலும், தீரவிரதிடங்கா ட்டி வெற்றிபெறுவதே திடவான்கட்குரிய கடனுமென்றுரைத்து, அப்பொழுதே யானை குதிரை தேர் காலாட்களை யணிபெறவகுத்து, இடைக்கிடைப் படைத்தலைவர்களை நிறுத்தி, அவர்கட்குநடுவிற் பசுநிரையை மடக்கிவைத்துக்கொண்டு, கட்டுக்காவல் திட்டப்படுத்தி மட்டுப்படாத தனுர்வேதவரோதயனின்றான். இத்திறமோர்ந்த அரசவீரர்களனைவரும் இனிஇப்பசுநிரையைக் கவர்வாருமுண்டோ வென்றிரைந்து பேசிக்கொண்டிருந்தனர். அவ்வேளையில், தேவர்கள் கொண்டாடுஞ் சத்தியவிரத வுத்தமனாகிய வீட்டுமருடைய அரிய முகக்குறிப்பைத் துரோணருணர்ந்துகொண்டு தேவரீரெண்ணிய கருத்துக்குமாறில்லை. வருகின்றவன் தனஞ்சயனே. அவன் வாளாண்மை வில்லாண்மையிற்சிறந்த குருகுலச்சேனையை மதியாதானாய் ஒற்றைத்தேருடன் வெளிப்பட்டிருக்கிறான். இவன் வருகிறவகையை யோசிக்குமிடத்தில், சூரபன்மன்மேலெதிர்த்த சுப்பிரமணியக்கடவுள்போலிருக்கின்றது. இதில் யார் யார் மாள்வர்களோ, யார்யார் பிழைப்பார்களோ, என்ன அனர்த்தம்விளையுமோ ? அறியேனறியேனென்று சொல்லிய துரோணரை அருச்சுனன்மேல் உள்ளன்புடைய வீட்டுமர்பார்த்து; வீரர்கள்மதிக்கும் வில்லாசிரியனே! பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் பண்ணவேண்டிய ஒருவருடமுங்கழித்து வெளிப்பட்டிருப்பார்களா ? அல்லது; மாடுபிடிசண்டையென்று மகிழ்ந்து கோபத்தினால்வெளிப்பட்டிருப்பார்களா? ஒருவேளை, காலவளவையைக்கடந்து அவசரப்பட்டிருப்பார்களானால், மேல்நடக்கவேண்டுவதென்னவென்று வேந்தர் அவையிலியமித்த நிபந்தனையைச் சிந்தித்துப்பார்த்தேனன்றி வேறொன்று நினைக்கவில்லையென் றிருவருங்கலந்துபேசிக்கொண்டு, துரியோதனனிடத்தில் தாங்களெண்ணியகருத்தைக்காட்டாமல், வேறுவகையாய்ச்சொல்லநினைத்து குருகுல சிந்தாமணியே! எதிரியுடனெதிர்த்துப் போர்புரியத்தக்க நாளின்றேயென்று அப்பாண்டவாளிதுவரையிலும் பொறுத்தனுபவித்த கடவநாள் முழுவதும்போக்கிப் புறப்பட்டார்போலுங் காண்கின்றதென்று வீட்டுமர்சொல்ல, அம்மொழியைக்கேட்ட தனுர்வேதசம்பன்னர் தெவிட்டா வமிர்தமுண்ட தேவர்போற்களித்து ஒருவசனஞ்சொல்லுகின்றார்.

ஐயா, மதிகுலவரோதய விரதசிகாமணியே! இவ்விடமிருக்கும் நமது சேனையைநாடி ஒருவில்லுடன் தேர்செலுத்திவரும் ஒருவன்றிறத்தை யுன்னுமிடத்தி லெப்படியிருக்கின்றதென்னில், ஒருபுருடசிங்கமானது வெகுகாலங் குகைக்குளடங்கிப் பசிதாகத்தாலிளைத்து, நற்காலநேரிடுகிறவரையிலும் வாட்டமுற்றிருந்து, கரடகுஞ்சரக்கூட்டங்களைக்கண்டு களித்துத் தாவியெழுந்து தனித்துவருந் தன்மைபோலிருந்தது. கறைமிடற்றண்ணலாகிய பிறைமுடிப் பிஞ்ஞகனளித்த பாசுபதாத்திரம்பெற்ற பார்த்தனையெதிர்த்துப் போர்தொடங்கத்தக்க வில்வீரர்கள் இத்தொல்லுலகிலுமில்லை. வெயிலுக்கிணையாக மின்மினி பிரகாசிக்குமோ ? சொல்லுங்கள் வல்லவர்களேயென்று துரோணர் சொல்லினர். அச்சொல்லாகிய நாராசம் கன்னன்காதில் நுழைந்தமாத்திரத்தில், செயலுஞ்சிந்தையுந் திகைத்துநொந்து வாயுங்கண்ணும் வறண்டுபுகைந்து

வேசாறி யுள்ளம்வெந்து, வெகுளிமிகுந்து, வில்வேதந்தெரிந்த வேதியனைப் பார்த்து, இருகண்களுஞ்சிவந்து, துரோணரே! இப்போ தென்னசொன்னீ ரென்றுகறுவி, அங்கிருந்த மணிமகுடமன்னரெல்லாங்கூசி மடங்கவும், தடவி கடகுஞ்சரவீரர்கள் வாய்பேசாமலொடுங்கவும், சுற்றிநின்ற மற்றசேனைகள் குலைகுலைந்தேங்கவும், மிக்க இறுமாப்புடன் ஒருத்தரஞ்சொன்னன். தனுர் வேதியரே! சதுர்வேதமொழிந்த தன்மமுணர்ந்தீர! 'நன்மை கடைப்பிடி' 'நன்றிமறவே'யென்ப தல்லவா மகுடமன்னர்கோடி வந்துவணங்கு மகாமண் டலேசனுகிய சருப்பக்கொடிதரித்த துரியோதனராசன் உன்னிடத்திற் பட் சம்வைத்து இராசவைபவ வலங்கார வணிமணிப் பணியாடையும் படையும் வீரபட்டமும் பெருமையுங்கொடுத்துச் சவுக்கியபோசன சம்பிரமத்துடன் சிர்பெறச்செய்து உன்னுதவியினுல வெற்றிபெறலாமென்னு மாசையைமிகுதி யும்வைத்திருந்தான். நானு மஃதுத்தமமென்றெண்ணினேன். இப்பொழுதும தென்னத்தை நிதானிக்குங்காலையில், எதிரிகளைக்கொண்டாடி, அவர்கள்புய பலத்தைப்புகழ்ந்து, அன்னமிட்ட ஆண்டவனுடைய ஆண்மையைக் குறைத் துப்பேசி, யுலகமிகழும்படிசெய்து, நன்றிகுன்றி, தன்னைவைத்து வளர்த் தவனுக்குப் பலன்கொடாமல், அண்டைவீட்டுக்காரன் அனுபவிக்கும்படியா கச்சாய்ந்த முடக்குத் தென்னமரம்போற் குறைந்த மதியைக்கொண்டிருக் கின்றாய். தருணத்தில் தண்ணீர்வார்த்துவளர்த்த கௌரவகுல முதல்வனை விட்டுச் சொல்வண்மையும் வில்வண்மையுமுள்ள பாண்டவர்கள்மேற் பட்சங் கொண்டீர். ஐவர்மேல் அன்புமாசையும் உனக்குண்டாயிருக்குமானல், அப்பஞ்சைகட்கு நீரிளைத்ததாகப் புகழ்ந்து பேசவேண்டுமேயன்றி, மற்ற வர்களைக் குறைத்துப்பேசுவதி லுமக்கென்னலாபம்? எவ்வளவேனு மேன் மைகிடைக்குமோ? எம்போல்வாரை வெல்லும்வலலபம் அந்தப் புல்லியருக் குண்டாயிருக்குமானல், போர்க்களத்திறங்கண்ட வீரர்கள் அவர்களைப்புகழா திருப்பார்களோ? 'கற்றாரைக்கற்றாரேகாமுறுவர்' என்பதுபோல் வீரரைவீரர் விரும்புவாயாரோ? மணங்கமழுமாலைபுனைந்த தோளிணையுடைய மறையோ ரே! நீரிப்படிக்கெல்லாம் பூச்சிக்காட்டவேண்டாம். இவ்வேளை நம்மையெதிர்த் தவன் அசகாயசூரனுகிய விசயனுயினும், அவனுக்கெதிர் நானெருவனேமுனை ந்து வில்வளைத்தமர்புரிந்து, மண்ணுளவிரும்பிய அவனை விண்ணுளவிடுகின் றேன். இதுவேயுண்மை. உலர்ந்த சருகு எரிநெருப்பிற்கரிந்து வேகாதிருக்கு மானல், தேர்மேலேறிப் போர்மேல்வருஞ் சிலைவிசயனுங் கீர்த்திபெறுவா னென்றுணரலாம். நீயேன் விருதாவாகச் சொற்சோர்வுபடுகின்றனை. வேதிய குலத்தனுகிய நீயேன் வீண்பழிசுமக்கின்றனையென்றான். கன்னன்சொன்ன வார்த்தைகளைக் காதிற்கொண்ட துரியோதனராசன் அண்ணு! எதிரியைப் புகழ்ந்து பெருமையாகப் பேசுகின்றவர்களெல்லாம்பேசட்டும். நீரேன் அவ சரப்படுகின்றீர்? போர்செய்யவருகின்றவன் பார்த்தனுயிருப்பானுனல், நமக்கு நல்லகாலமென்றே எண்ணும். அதேதெனில், அவர்களொப்புக்கொண்டு போனபன்னிரண்டாண்டு வனவாசத்திலும் ஓராண்டு அஞ்ஞாதவாசத்திலும் நாட்குறைவிருக்கின்றது. அதைக்கண்டுபிடித்து மறுபடியும் அவர்களை வன

வாசம்பண்ண வனுப்பிவிடலாம். அப்படியல்லவென்றால், இப்போர்க்களத்தி லுயிரழிந்து போவார்களென் றுறுதியாகச்சொல்லிவிடும். தாட்சணியமாக முன்பின்பார்க்கவேண்டுவதில்லையென்று மனக்களிப்புடன்சொல்லத் தாமரை மாலைதரித்த தனுர்வேதியரும் பனைமாலைதாங்கிய வீட்டுமர்முதலாகிய வேந்தரும் சரிதான்சரிதானென்று சிரக்கம்பனஞ்செய்து வரவரக்கண்டறிவோமென் றிருந்தனர்.

இப்பால், உத்தரகுமாரனை யுடன்படுத்திக்கொண்டுவந்த பேடியானவள் அரசகுமாரனே! எப்படிப்பட்டவனானாலும், எக்குலத்தானானாலும், போர்முகவீரனென்று பேர்பெற்று யுத்தமுனைபுகுந்தவன் முன்காயம்பெறாமல், முடிசாய்க்கப்படாது. புறங்கொடுத் தோடிவருங்காலையினும், புகழுண்டாக மார்பிற்காயம்வாங்கி வரவேண்டும். அப்படிவரத்தக்க வல்லமையில்லாதவன் தேகம் ஆறில்லா நாட்டையும், அரணில்லாக் கோட்டையையும், தர்மபத்தினியில்லா வீட்டையும், வளநீங்கிய காட்டையும், பொறையிலா வரசையும், ஞானமில்லாக் கல்வியையும், நன்மணமில்லா மலரையும், மதியில்லாவிசும்பையும், மைந்தனில்லாச் செல்வத்தையு மொப்பானென்று, இராச தருமங்களால் அவன் மனத்தைத்தேற்றி, பயங்கரத்தைமாற்றி, வீராவேசம்விளைத்து, ஆறுகோடி மாயாசத்தியாலு மாறுபடா வரன்போன்ற வீபற்சு வன்னிமரத்தைச் சேர்ந்தான். பராசத்திகோயிலும் பாலைநிலமுஞ்சிறந்தடர்ந்த வன்னிமரத் தோப்பில்வந்த உத்தரகுமாரன் கன்னிப்போரால்வந்த சந்தித்தோடத்தாற் கண்விழிக்கமாட்டாதவர்போற்கலங்கி, யசைவற்றிருந்தான். அப்படிக்கிருந்த சாரதியைப் பேடிபார்த்து, அப்பா! நீ என்சொல்தப்பாமல் இந்தமரத்திலேறி வடபுறத்திற் பிணத்துப்பருத்த கிளையின்பொந்திற் சேமஞ்செய்திருக்கின்ற ஐவர் ஆயுதங்களையும் அம்பறாத்தூணியையு மெடுத்துவாவென்று கூறினாள். அப்பேடிமொழியால் தேறியமைந்தன் இதென்னவதிசய மென்றெண்ணி, உயர்ந்து தழைத்துவிரிந்த வன்னிமரத்தை நோக்கி, ஐயோ! பூதப்பிரேதங்கட்குரிய பிணக்காட்டகத்திலென்னை அநியாயமாகக்கொண்டுவந்து நிறுத்தி இப்பெரியமரத்திலேறென்பதென்ன பேதைமையடி பேடி! ஓரோமட்டாயென்னுயிர்வாங்குவதற்கோ? அடிபாவி! இம்மரம் என்னிரண்டு கைகளுக்கும் அடங்காதே. நானெப்படி யணைத்தேறுவேன் என்மார்பிடம்போதாதே. காலணைத்தேறும் வல்லமையுமில்லையே. உனக்குக் கொஞ்சமேனுஞ் சீவகாருண்ய மில்லையா? அடி நபுஞ்சகி! நானொரு யுத்திசொல்லுகிறேன் கேள். மச்சநாட்டைநோக்கிச் சற்றுதூரம்போவேனானால், வேண்டியவேலைக்காரராகப் படுவார்கள். அவர்களா லாயுதமெடுப்பிக்கிறேன், இப்படிப்பட்ட மரமேறுகின் றவழக்க மெனக்கில்லை. கடன்வாங்கி யிறைகொடுத்தவரும் மரமேறிக் கைவிடுத்தவருந் தலையெடுக்கப்போகிறதில்லையே. நானுன்கையிலகப்பட்டேன்; வீரமாகாளி! உன்சந்நிதானத்தில்வந்தேன்; இனியென்னுயிராசைவிண்டேன்; ஆகெட்டேனென் றிருகண்ணிலுங் கண்ணீருகுத்தேங்கினான். இவ்வாறிரங்கிப் பின்வாங்கியபாலனை யவன்பாங்கிலிருந்த பேடியானவள் கைகளாற்றாங்கி, மார்போடணைத்து, மகிழ்ச்சியாய்த்தழுவித் தடவிகொடுத்து, உள்ளன்புகர

ட்டி, அப்பா! நீ அஞ்சாமலேறி ஆயுதமெடுப்பையானல், உனக்கதிக மங்கள காமுண்டாமென்று, அவனைத் தேர்க்கொடுங்கைச்சிகரத்திலேற்றி, மரக்கிளையிற் றூண்டிப்போம்வகையான உபாயஞ்சொல்லிப்போக்கினள். அப்பேடிப் பேச்சுப்பிழைமாமல், பின்னுற்பெற்றனுபவிக்கப்போகின்ற பெரும்பயனென்று காத்திருப்பதினல், மச்சகுமாரன் அச்சமில்லாமல் கிளைமேற்றாவி, ஆயுதங்களைப் பாண்டவர்கள் மறைத்துவைத்தார்களென்னும்பேச்சு நிச்சயமோ வென்னவோ நிதானிப்போமென்று, கிட்டிக் கிருஷ்ணசலத்தினுற் கட்டியிருந்த கட்டை யவிழ்த்துப் பார்க்கும்போது, உசிதமான கிருட்டின சருப்பமொன்று சீறித் தூத்தியதைக்கண்டு, மதிமருண்டுமயங்கி, வருந்திநின்று, அடிவஞ்சகப்பேடி! சண்டைமுகத்திற்கு வரோனென்ற வென்னை உபாயமாய்க்கூட்டிவந்து, வன்னிமரத்திலேற்றிப் பாம்புக் கிரையாக்கவோ பார்த்தாய். நான் பண்ணியபாவ மென்னவோ! உன்னைச்சாரதியாக வெண்ணிவந்ததோடமோ? இன்னமுமென்னை யென்னசெய்யப்போகின்றாய்? இம்மட்டுமென்னை விட்டுவிடடி. எனக்குப் புத்திவந்தது. அடிசதிகாரியென்று மயங்கி யிறங்கிவரத் திரும்பிய உத்தரனியற்கையைப் புத்திசாலியாகிய பேடிகண்டு, இறங்காதை யிறங்காதையென்றுகையமைத்து நீகண்டபாம்பானதுன்னைப்பதறிக்கடியாது. அதற்கு நீ பயப்படாதை. அதிகுணசாலியாகிய வரசகுமாரனே! உனக்குப் பொல்லாங்கு விளைக்கும்படியான பொறாமை யெனக்கில்லை. நீ விருதாவிற் கவலைப்படுகிறாய். இன்னஞ்சற்றுநேரத்தி லுனக்கு மேலானசுபங் கிட்டப்போகின்றது, எப்போதுமென்சொ லுனக் கொப்பில்லாவின்பத்தை யுண்டாக்கக் காத்திருக்கின்றது, உத்தரகுமாரனேயென்று அவன் கருத்திலெழுந்த கலவரத்தைக்களைந்தாள். அம்மரத்தின்மேலிருந்த அரசகுமாரன் என்பிராணன் போனுலும்போகட்டும். பேடியறிந்து வருந்திசொன்ன பேச்சைப் பார்ப்போமென் றுளந்தெளிந்து, பேடியிடத்திற்சிக்கிப் பேய்போலலைவதிலும், பெரும் பாம்பின் வாய்ப்பட்டிறப்பது புண்ணியவசந்தானென்று துணிந்து, பாம்புருவாய்க்கண்ட படையின்மேற் கைவைத்துக்கலைத்தான். அப்போதொரு பொல்லாங்கு மில்லாதிருந்ததைப்பார்த்து, அடடா! இதிலென்னவோ மகத்துவமிருக்கின்றதென்று, தன்னுக்குள்தானேமகிழ்ந்து, பூமியினின்ற பேடியை நோக்கி, வீணுகிய நிட்ரேத்திற்காளாகிய வித்தைக்காரி! இம்மரப்பொந்தில் வைத்திருக்கும் ஆயுதங்களுடன் மலைப்பாம்பொன்று சுற்றிக்கொண்டிருக்கின்றது. உன்னுலெனக் கென்னதைரிய நேரிட்டாலும், 'பாம்பென்றூற் படையுநடுங்கும்' என்னும் பழமொழி யுண்டன்றோ? அதனல், அளவுபடாமலென் மனம்வருந்தி வாடுகின்றது. அப்படியிருந்தபோதிலும, பாண்டவர்களின்படைகளிவ்விடத்தில்வந்த வரலாறும் விடாக்கினியுள்ள பாம்பொன்று சீறிக்கொண்டிருக்குந் தன்மையும் அவர்களில் வன்னிமரத்திலொளித்துவைத்த காரணமும் இவ்விரகசிய முனக்குத்தெரிந்தவகையும் எனக்கொளியாமல் விவரமாகச் சொல்லுவையானல், நானிந்தவாயுதங்களை யெடுத்துக்கொண் டுன்னுடன் கூடவருவேன். இல்லாவிட்டால், இம்மரத்தைவிட்டிறங்கமாட்டேனென்று உத்தரகுமாரனுரைத்து அம்மரத்தி லட்டகாசஞ்செய் தமர்ந்திருந்தான். அம்

மைந்தனறைந்த வார்த்தைகளைப் பேடிகேட்டுச், சிந்தைமகிழ்ந்து, சிரித்து மகிழ்ந்து, தேர்த்தட்டின்மீதினின்று, அடுத்தோரைக்காக்கும் அரசிளஞ்சிங்கமே! பாண்டவர்கட்குரியபடைகளை யிவ்வன்னிமரத்தில் மறைத்துவைத்தபோது, இருவர்தவிர மற்றவர்கள் கண்ணுக்குப் பாம்புருவமாய்த் தோன்றக்கடவனவென்று தருமராசனுரைத்த சத்தியவாக்கின்படிச் சருப்பமாகத் தெரிவதைக்கண்டு சஞ்சலப்படாதை. அதுவொரு பெரியவில்லென்றறிந்து கொள்ளக்கடவை. அவ்வில்லின் பிரதாபமும் அதுகிடைத்த முறைமையும் எப்படிப்பட்டதென்னில், சிருட்டிகருத்தாவாகிய பிரமனிடத்தில் நூறுயிரவருடம், தக்கனிடத்தில் பதினாயிரவருடம், தேவேந்திரனிடத்தில் ஆயிரவருடம், சந்திரனிடத்திலைஞ்ஞூறுவருடம், வருணனிடத்தில் நூறுவருடம், மற்றும்பலரிடத்தில் நெடுங்காலமிருந்து இவர்கட்குண்டாகிய பகைகளைக்களைந்து பின்னும் வருணனிடத்தில் வந்துசேர்ந்து பொன்னுமணியும் பூசையாகக்கொண்டு, சிலவருடஞ்சென்றபின்பு, கடைசியில் அக்கினிதேவனடுத்துக்கேட்க அவனிடத்திலாசைவைத்து வருணராசன் தீக்கடவுட்குக்கொடுத்தான். இவ்வில்லினால் வெற்றிபெற்றுவரும் அக்கினிதேவன் காண்டாவன தகனகாரணத்தில்அருச்சுனனுக்குக்கொடுத்துத் தனக்குவேண்டியகாரியங்களை முடித்துக்கொண்டான். அதுமுதலிதுவரையிலும் அறுபத்தைந்துவருடமாக அருச்சுனன் கைக்கிசைந்து அநாவிர்தகண்டம் அளாவிர்தகண்டமுதலிய வெண்டிசையும்வென்று வாகைமாலைபுனைந்து தன் எண்ணமனைத்துமுடித்து வெகுவிதவதிசய வெற்றியைப்பெறக் கடவதென்று தேவர்களுரைத்தருளிய வாசீர்வதத்தினால் அசைவற் றிசைபெற்றிருக்குங் காண்டீவப் பேர்கொண்ட வில்லென்றறிய இவ்வில்லுக்கொப்பாகிய வில்லு இந்திரவுலகமுதலிய வெவ்வுலகத்தினுமில்லை. இந்திரநீலம் வைத்திழைத்தவொளிபோற் பிரகாசிக்கும் அதனை நீ நன்றாய் நிதானித்துப்பார்த்தால் உனக்கே செவ்வையாய்த்தெரியும் அல்லாமலும் பஞ்சபூதங்களினாலும் மானிடர்முதலிய பதினெண் கணங்களினாலும் பழுதுபடாத காண்டீவமென்பது அதன்பெயர்; பூருவம் சொர்க்கலோகத்திற் குற்ற துன்பத்தினை நீக்கும்பொருட்டுக் காலகேயநிவாத கவசர்களைவென்று எமபுரத்திற் கனுப்பியதிறமையும் இராயசூயத்திற்காக விசயம்பெற்றுத் திரவியஞ்சேகரித்த முறைமையும் சித்திரசேனன்முதலிய கந்திருவரைக் கலக்கித் துரியோதனனைக் குடும்பத்துடன் கட்டவிழ்த்துமீட்ட கருணையும் காண்டீவனடைந்த பெருமையும் இவ்வில்லின் வலியேயன்றி மற்றொன்றுமன்று; இம்மட்டுமிதுநிற்க, பாற்கடலைக்கடைந்த மத்தாகிய மந்தரகிரிபோன்று கொத்தாகிய மற்றவாயுதங்களுடன் கலந்து வெவ்விய கதையானது வீமசேனனுக்குரியது மற்றுமுள்ள வாயுதங்களியாவும் தருமராசன் நகுலன் சகாதேவன் என்பவர்களுடைய வாமென்று பேடிசொல்ல, வெற்றிமேற்கொண்ட விராடகுமாரன் தன்மனக் கலக்கந்தெளிந்து சகலபடைகளையுங் கண்களாரக்கண்டு சொல்லுகின்றான். கடையேனாகிய எனக்கு இவற்றையெல்லாங் காண்பித்தென்னை யாளாக்கிவிட்ட காரிகையே! இட்டதெய்வம் போலென்னைத் தடுத்தாட்கொண்ட ஏந்திழையே! மகாபுண்ணியவதியாகிய குந்திதேவியின்ற மைந்

தனைவரும் தத்தமுயிர்போற்கருதிய வாயுதங்களையொருநாளும் பிரியார்களே! அப்படிப்பட்ட மகாபுருஷர்கள் இவ்வன்னிமரத்தில் மறைத்துக் குறிப்பிட்டு வைக்கவேண்டிய அவசரமென்னவோ இப்பொழுதவர்களெங்காட்டிலிருக்கின்ருர்களோ எப்படி யானுர்களோ? அதையெனக்குணர்த்தவேண்டும்; பாக்கியசாலி! என்று உத்தரன்கேட்க, வாசநிறைந்த மலர்போற்சிறந்த கருணை ததும் புங்கடைக் கண்ணினையுடைய பேடியானவள் முகநயந்து புன்னகைபுரிந்து அகமகிழ்ந்து அன்புள்ள வாசனையணிந்த நராந்தகனுடைய வஞ்சத்திற்குள்ளாகச்சொக்கட்டானுடித் தோற்றுச் சோர்வடைந்தவராய்ப் பன்னிரண்டாண்டு வனவாசமும் ஓராண்டு மஞ்ஞாதவாசமும் போக்குவதற் குடன்பட்டுச்சென்று காட்டிற்கழிக்கு நாட்களைக்கழித்து நாட்டிலிருக்கு நாளினைத்து யாவராலுந் தங்களை யின்னரென் றறியாதிருக்கும்படித் தங்களாயுதங்களை இம்மரத்தில் மறைத்துவிட்டு வேடமாறி வேற்றுருக்கொண்டு எவரும் ஐயப்பாடடையா வண்ணம் அவரவர்க்குத் தக்கதொழிலை மேற்கொண்டனர். இப்பொழுதவர்களெவ்விடத்திலிருக்கின்ருர்களோ எனக்குத்தெரியாதென்ருன், திங்கள்குலஞ்சிறக்கப்பிறந்த சிலைவிசயன் மறுவில்லாதமச்சகுமாரன்பெருந்தகைப் பேடிபேசிய வார்த்தையைக் கேட்டுப் பெருமூச்செறிந்து உடல்பதைத்து உயிர்துடிதுடித்து ஒருவாக்கியம் புகன்ருன். ஐயோ தெய்வமே! சத்தியந்தவருத சாதுக்கள் அதிகதுட்டராகிய சுயோதனுதியரா லிப்பாடுபடத் தக்கவரோ? பாவமேலிட்டதோ? நீதிவழுவிக்கெட்டதோ? கொடியோர்களிக்கப் பாண்டவர்கள் துன்புற்றுத் தேம்பிவாடச்செய்தது தீவினையோ மெய்த்தவத்தையும் மேலான தருமத்தையும் சத்தியத்தையும் இவ்வுலகிலுள்ளோர்கள் கொண்டாடுகின்றர்களே; அந்தோ! இனியெப்படி தருமத்தை நம்பலாம், அசத்தியமேலிட்டு அக்கிரமிகளுக்குத் துணைசெய்யுமானல் சத்தியத்தை நம்பிச் சங்கடப்படுவதுந் தகுதியோ; தருமமே சத்தியம் சத்தியமேநித்தியமென்றிருந்த தருமராசனும். தோள்வலியைத் துணையாய்க்கொண்ட வீமசேனனும், திறம்பெற்ற சிலையுடைய விசயனும், இரட்டையரும் பெருமையாகவாழ்ந்த புண்ணியர்கள். வாசமணக்கு மலர்க்குழலினையுடைய பாஞ்சாலியாருடன் எவ்விடத்திற் றுன்பமனுபவிக்கின்ருர்களோ எத்தொழிற்சொல்கின்ருர்களோ! ஐயோ! பற்பலயாகங்கள் செய்து சோடசமகாதானமும் பண்ணி, மேலாகிய வாழ்வனுபவித்து மும்மைப்புவனமும் வெற்றிபெற்றிருந்தாலும் அவ்வாழ்வைக்கீழ்ப்படுத்தித் தாழ்வைமேற்படுத்தி நல்லோரைப் பொல்லராக்கிப் பொல்லரை நல்லோராக்கி வீரர்களை விதவையாக்கி விதவைகளை வீரர்களாக்கி சாதிபீனரைத் தனவானுக்கித் தனவான்களைத் தரித்திரராக்கிப் புனிதமுடையவர்க்குப் பிணியைவிளைத்துப் பொய்யரை மெய்யராக்கி மெய்யரைப் பொய்யராக்கி இவ்வாறு தலைகீழாகப்பண்ணுவதோ, ஊழ்வினைப்பயனென்றுருகித் தன்மனங்கருகிக் கண்ணீர் பெருகியோடக்கசிந்து பெருமூச்செறிந்து தெய்வமே! பாண்டவர்கள் இப்போ தெங்கிருக்கின்ருர்களோ! நல்லவர்கட்குத் தீவினைவிளையும் காரணமென்னவோ என்று உயிர்வேதனையுடனேக்கங்கொண்ட உத்தரகுமாரனுடைய உண்மையையும் உறுதியையும் பேடிதெரிந்து கொண்டு உள்ளமகிழ்ந்து உரைக்கத் தொடங்கினுள்.

பள்ளநீர்க்கயங்கடோறும் பால்பெருகியோடும் மச்சநாட்டிறைவன் மைந்தனே! நிந்தையில்லாப் பாண்டவர்களைக்குறித்து நைந்துவருந்தாதை, அவர்களிப்போதுன் ஞட்டிலும் நகரிலும் படைவீட்டிலு மிருக்கின்றனர்களென்று சொன்ஞள். அவள் வார்த்தையைக்கேட்ட உத்தரகுமாரன் சித்தம்பிரமித்து அம்மம்மா என்ஞட்டிலும் வீட்டிலு மெப்படியிருக்கின்றனர். அவ்விந்தையை யெனக்கு விவரமாகச்சொல்லுந் தாயேயென்று உத்தரன்கேட்கப் பேடி சொல்லுகின்ருள். அப்பா! முதன்மையான குலத்தையும் முடிவில்லாத நலத்தையுமுடையவராய் விராடராசனுக்கருகாசனத்திலிருந்து திவ்விய மங்களவிக்கிரகமாய்விளங்கி விவகாரதரும நீதிகளைவிளம்பிக் கங்கபட்டனென்னுங் கருணையாளனே முரசக்கொடிபடைத்த தருமராசன், நாவிற்கினிய அறுசுவைப் பதார்த்தத்துடன் அன்னஞ்சமைக்கும்படியாக உங்கள் மடைப்பள்ளியிலிருக்கும் பலாயனனென்னுஞ்சுயம்பாகிதான் வீமசேனன், எங்கும்பிரசித்தமாகிய குதிரைக்கூட்டங்களுக் கெசமானஞகிய தாமக்கிரந்திதான் நகுலராசன், உங்கள் பசுநிரைகட்குத் தலைவனெனவந்த தந்திரபாலன் சகாதேவன், உன்தாயாகிய சுதக்கணையினிடத்திற் பணிப்பெண்ணுயமைந்த விரதசாரணியே திருமகட்கிணையாகிய பாஞ்சாலி, உன்தங்கையாகிய உத்தரைக்கு மத்தளதாளவ்கையுடன் திதித்திமிதாவென நடனம் பழக்கிக்கொண்டிருந்த பிருகநளையென்னும்பேர்கொண்ட பேடியாகிய நானே அருச்சுனன்; அல்லாமலும் உன் அம்மாஞகிய கீசகன் பாஞ்சாலிமேற்காதல்கொண்டு துன்மார்க்க நினைத்தமையால் அவனை வசந்தமண்டபச்சோலையிலடித்து அவன் தம்பிமார்களையுமுடித்துக் கந்திருவர்மேற்பழிவைத்தவன் வீமசேனனென்று தெரிந்துகொள்; வீமன் கொன்றுபோட்டுக் கந்திருவர்மேற் பழிசுமத்திய தென்னெனின் நாங்கள் கழிக்கவந்த அஞ்ஞாதவாசத்திற்கிடையூறுவருமென்றஞ்சி மந்திரத்தால் தடையுண்டிருந்த மாநாகமேபோ லடங்கியிருந்து தவணைநாளைக் கழித்துவிட்டோம். நாங்கள்கழிக்கவேண்டிய பதின்மூன்ருண்டும் நேற்ருேடே தீர்ந்து போய்விட்டன, இனிமேலெங்கட் கியாதொரு பயமுமில்லையென்றுசொல்ல உத்தரகுமாரன்கேட்டு அதிசயத்துடன்புகழ்ந்து இது நல்லகாலமாயிருப்பதால், இவ்வேளையிலின்னஞ்சில இரகசியங்களை வெளியாக்கிக்கொள்ளவேண்டுமென்றேவிரும்பி ஒரோமனமாய்த்துணிந்து ஐயா தேவர்கள்கொண்டாடாநின்ற பேரழகும் சிவபெருமானளித்த வருளாண்மையும் சிலைவிசயத் திறமும்பெற்ற தீரவீரஞகிய வருச்சுனன் நானே யென்று நீரே சொன்னசொல்லை நானம்பமாட்டேன். நீரே நரனென்று திரமாகச்சொல்லுவீரோயாஞல் உமக்கெத்தனை பெயர் கிடைத்திருக்கின்றன? அப்பெயர்கள் வந்ததற்குக் காரணமென்ன? நீ ரிதுவரையிலும் பெற்ற பெருமைகளென்ன? அவற்றை என்மனக் கலக்கந் தீரச் சொல்லிமுடித்தால் நானுனக் கடிமையாவேனென்பதற் கியாதொரு தடையுமிராதென்று உத்தரகுமாரனுரைக்கச் சித்திரப்பாவைபோ லிருந்துகேட்ட விசயன் சிந்தைகளித்துச் சொல்லத்தொடங்கினன்.

அருச்சுனனுக்குற்றபெயரும், அப்பெயர்வந்தவரலாறும்.

வெற்றிபெற்ற விராடபுத்திரனாகிய உத்தரகுமாரனே! எனக்குக் கிடைத்திருக்கின்றபெயர் பதினொன்று. அவற்றின் விவரமென்னையெனிற் பற்குனன் பார்த்தனன் கிரீடி தனஞ்சயன் விசயன் சுவேதவாகனன் வீபற்சு சவ்வியசாசி சிட்டினன் அருச்சுனன் கிருட்டினன் என இவ்வாறமைந்தஎன்பெயரைப்பெரியோர்முதலியயாவரும் பெருமையாகவே கொண்டாடிப் பேசுவர். இப்பெயர் வந்ததற்குக் காரணம் யாதெனிற் பங்குனியுத்தரத்திற் பிறந்தமையால் பற்குனனென்றும், என்னையீன்ற அன்னைதன்பெயர் பிருதையாதலிற் பிருதை சம்பந்தம் பார்த்தனென்றும், தேவலோகத்திற்புகுந்து இந்திரன்கொடுத்த கிரீடம்புனைந்து சிங்காதனத்தில் வீற்றிருந்தமையாற் கிரீடியென்றும், இராசசூயமியற்றியவந்நாளில் உத்தரகுரு கண்டத்துச்சென்று சித்தர்கள் தேவர்கள் கந்திருவர்முதலிய பேர்களைவென்று எண்ணிறந்த பொருட்குவையை மாமேருபோற் குவித்தமையான் தனஞ்சயனென்றும், மும்மைப்புவனத்து மென்னை வெற்றிகொள்பவரின்றித் திசைமுற்றும் யானொருவனேவென்றுவிசயங்கொண்டமையால் விசயனென்றும், பரமசிவத்தின் வெள்ளிவிடைபோல் விளங்கும் நான்கு வெள்ளைப்புரவிகள்பூட்டிய தேரேறிநடாத்துகின்றமையாற் சுவேதவாகனனென்றும், என்னைக்கண்டவேந்தர் யாவரும் மண்பொன் பெண்ணாசைகளைவிட்டுக் கண்ணைப்பிசைந்து கலங்கிப்பின்னிட்டு விண்ணாடுசேரவிடுக்குந்திறத்தால் வீபற்சென்றும் இடக்கை வலக்கை இரண்டினாலும் பாணந்தொடுக்குந்திறத்தால்சவ்வியசாசியென்றும், என்னையும்என்வில்லையும் என்தமையனையும் இகழ்ந்துபேசுகின்றவர்கள் மட்டற்ற வல்லமைபெற்ற வானவராயினும் மன்னவராயினும் அவர்தலையை கட்டப்படுத்திநாசஞ்செய்வேனென்று சபதங்கொண்டிருக்கின்றமையால் கிட்டினனென்றும், யான் மரகதமணிபோல் நிறம்பெற்ற வுடல்கொண்டிருத்தலால் அருச்சுனனென்றும், காண்டாவன தகன காலத்தில் மாதவனும் யானும் வேற்றுமையின்றி மருவியவாற்றால் கிருட்டினனென்றும், இத்தன்மையாயிசைந்த பதினொருபெயரும் தேவர்கள்முதலிய யாவராலும் வந்தனைவென்றேத்தி ஐயா, உத்தரகுமாரனே பூர்வம் திரிபுர நீறெழச்சிரித்தருளிய சிவபெருமான் அநுக்கிரகஞ்செய்த திவ்வியாத்திரங்களும் பிரமன் விட்டுணு இந்திரன்முதலிய தேவர்களளித்த கூரிய பாணங்களும் பெற்றிருக்கின்றேன், அவைகளைநாங்கள் அஞ்ஞாதவாசஞ்செய்ய எத்தனித்தபோது இவ்வன்னிமரப்பொந்தில் வைத்திருக்கின்றோம். இப்போது உனக்குப் பாம்புருவமாய்க் காணுகின்ற காண்டீவமும் அட்சயதூணியும் அக்கினிபகவானாற்கிடைத்தன. முப்பத்துமுக்கோடி தேவர்களும் இந்திரனுங் கொண்டாடிக் கொடுத்த தேவதத்தத்துடன் பதினாயிரங்குதிரைபூட்டிய இந்திரவிமானத்தை மாதலியோட்டிய காலத்தில் அதன்மே லாரோகணித்துத் தோயமாபுரத்திற் சென்று மூன்று கோடிநிவாதகவசர்களைக்கொன்று வெற்றிகொண்டு தேவமாதர்களாலத்தியெடுக்கவும், புட்பமழை பொழிந்து புகழ்ந்துவாழ்த்தவும் பிரதாபம்பெற்றேன். இரணியபுரவாசிகள் அறுபதினாயிரம்பேர் காலகேயர்களையும்

அவர்கட்குதவியான பதினாயிரமரக்கரையும் பாசுபதக்கணையால் மாய்த்து யான் மந்தாரமாலைபுனைந்து வரிசைபெற்றுப் பூலோகத்திற்குவந்த மேன்மையை நீ கேட்டறியாய்போலு மிருக்கின்றது. நல்லது உத்தரகுமாரனே. ஆயிரம் பேச்சென்னத்திற்கு? ஒருவார்த்தை சொல்லுகின்றேன். நீ யோசிக்கத் தக்கது சத்துருவைமுடிப்பதும் தாகத்திற்குச்சலங்குடிப்பதும் இவ்விரண்டும் எனக்கு அதிசொற்பமான வேலையன்றி வருத்தமிராது ஆதலால் நானருச்சுனனென்பதற்கு ஐயப்பாடில்லை, இப்போது நமக்குநேராகிய சேனைகளைக் கண்காணமலோட வடிக்கிறேன். கன்றுகளுடன்கலந்த பசுநிரைகளைமீட்கிறேன், நீ இனித் தாமதஞ்செய்யாமற் புறப்படென்றுசொன்னான். அம்மொழிகேட்ட உத்தரன் ஒருவாறுதேறி மகிழ்சிறந்து இனிநமக்குப் பயமில்லையென்று தானேறியிருந்த விருட்சத்தைவிட்டிறங்கிஇரதத்தின்மேல் இளஞ்சூரியனைப் பனிமூடியவாறுபோல் பேடியுருவமமைந்த பெருமானைக்கண்டு நெடுநாளாகத்தேடிய தேவைப்பணியும் அன்பர்போற்பணிந்து துன்பமுந்துயருந் தொடராச் சொருபனுடையதிருவடியைச் சிரத்திலுங்கண்களிலும் முகத்திலுஞ்சேர்த்து முத்தமிட்டுத் தன்னைத்தானே மறந்து தனக்குத்தானே திடுக்கிட்டுப்பயந்து இனிய வசனமொழிந்து நயந்துநின்றான். அக்காலையில் பார்த்தன் விணாவிற்றேர்விட்டிழிந்து பிரியாப்பிரியத்துடன் முகமலர்ந்து உத்தரகுமாரனை உடல்குழையவணைத்து ஐயனே! இன்னமுனக்குப் பயமுண்டாயிருக்கின்றதோ? என்னளவில் ஐயமுண்டோ? நீயாதொன்றுக்கும் அஞ்சாதை, தீதில்லாத வெற்றிபெற்று வாழ்வாயென்று உறுதிவார்த்தைகளுரைத்துத்தேற்றினான். அதனாலுத்தரகுமாரன் களித்து முகமலர்ந்து சிவந்தகைகளைச் சிரத்திற்குவித்துக் கண்ணீர்பெருகக் கசிந்துள்ளமுருகிப் பாற்கடல்போற் கீர்த்திபடைத்த பார்த்தனே தேவரீரின்னாரென் றறியாமல் கன்னமின்னுவென்று ஏழைமதியாற்பிதற்றிய அபசாரங்களைப் பெரிய மூட்டையாகக் கட்டிக்கொண்டேன். நான் மகாபாவியானேன், சிறியேன்செய்த பிழையைப்பொறுத்து அருள்சுரந்தாளவேண்டும்அத்தனே என்னிட்டமாகிய இறைவனேஎன்று பற்பலவசனங்களினாற் பரதவித்துக்கூறி மேலுஞ் சொல்லுகின்றான். கருங்கடலகடுகிழிய ஒருங்குடனோடிக் கலக்கும் கங்கைநீர்வளம்பெருகிய குருநாட்டரசே! கேட்டருளும், தேவரீர் திருவடிபெயர்த்தருளிய சாரதித்தொழில் எமக்குக்கிடைக்குமா? சன்மாந்திரபுண்ணிய பலன் எண்ணியவண்ணங் கைகூட்டுமோவென்று வெகுநாளாகக் கவலைகொண்டு மனநொந்திருந்தேன். அண்ணாமலை மெத்தப் பிரயாசப்பட்டுத் தான்கற்றவித்தையைப் புகழ்ந்து பேசுகிறவர்களைப்போற் பேதப்படாதென் னிருந்தாலும் தமது கருணை என்னைப் பேசச்செய்கின்றது. அருமையறியும் பெருமானிடத்திற் பேசாமல் பின்னை யாரிடத்திற் பேசப்போகிறேன். அரவாபரணம்பூண்ட பெருந்தகைக்கு வேதப்பரிதூண்டிய பிரமனல்விதித்திருக்கின்றசாரதி நூல்களெல்லாம்பார்த்து எல்லா வல்லமையிலுங் கைதேர்ந்திருக்கின்றேன், கருணைக்கண்ணையுடைய காண்டீவத்ரனேயென்று சொல்லிப்பணிந்தான். அவ்விராடகுமாரனை அருச்சுனன்தழுவியணைத்துஎன்னிதயத்திற்குவந்த இளஞ்சிங்கமே நீயும்நானும் நெருங்கிய இட்டமானோம்.

இனி நெருப்புங்காற்றுஞ் சேர்ந்த பின்பு சத்துருவாகியகாடு நீறுபடாதிருக்கக் கூடாது இன்னம் யோசனைக்கிடங்கொடாது விரைவிலேறி இம்மரத்திலொளித்து வைத்திருக்கும் வில்லும் பாணமும் எடுத்துவாவென்று விசயன் விளம்பினான் உடனே உத்தரகுமாரன் தடையில்லாமல் ஏறிஉத்தரவின்படி தேவதத்தமும் காண்டீவமும் அட்சயதூணியும் எடுத்துக்கொண்டு மற்றவாயுதங்களை முன்போல்வைத்து மான்தோலாற்கட்டி மறைத்துவிட்டு மரத்தைவிட்டிழிந்து அருச்சுனனைத்தொழுது அவர்கையிற் கொடுத்துத்தனக்குத் சாரதித்தொழில்கிடைத்த சந்தோடத்தால் திடீரென்று தேரிற்குதித்துக் குதிரைக்கடிவாளங்களைக் கையிற்கொண்டான். அப்பொழுது அருச்சுனன் இந்திரன் முதலிய தேவர்களையும் ஊர்வசியையுஞ் சிந்தித்துத் தந்தைதாய் தமையன் முதலானவர்களையும் வந்தித்துத் தர்மதேவதையையும்போற்றினான்; அவ்வேளையில் பாண்டுமகனாகியபார்த்தன் பேடியுருவ நீங்கி ஆதிபுருட ரூபலாவண்ணியவடிவமானான், ஆகாயத்திலுள்ள அமரரியாவரும் வாழ்த்தினார்கள் அருச்சுனனைக்கண்ட ஆடவர்யாவரும் பெண்மையை அவாவுந்தன்மையால் அருகிலிருந்த மச்சகுமாரன் இச்சைமேற்கொண்டான். கணத்திற்குமுன்னேஇருள் மூடியவாறுபோற் பேடியாயிருந்து இப்போது பச்சைமணியின் பிரகாசம்வீசிச்சொலிப்பதுபோற் றுலங்கியதன்மை யெவ்வாறிருந்ததென்னில் இந்திரசாலங்கற்றவர்கள் கணத்திற்குக்கணம் வெவ்வேறு வடிவங்காட்டுகின்ற விந்தைபோன்றிருந்தது. அருச்சுனனது தேககாந்தியைக்கண்ட உத்தரகுமாரன் மின்னலுக்கெதிரில் விழித்தவர்கண்போற் கூசிக்கவிழ்ந்து, இரண்டுகையினாலுஞ் சேர்த்திறுகத்தழுவி என்னையனே! உன் மாசற்ற திருமேனிக்கு மறுவுவந்த காரணம் யாதோவென்று வணங்கிக்கேட்க, விசயன்சொல்லுகின்றான். அரசச்செல்வமே! தேவர்கட்குப் பகையாகிய காலகேயநிவாதகவசர்களை வெற்றிகொண்டு வெள்ளையானைமேற் பவனிவந்து, அமுதபோசனமுண்டு, இந்திராசனத்திலிருந்த எனக்குச் சந்தோடமுண்டாக்கும்படித் தேவேந்திரன் நினைத்து, அரம்பை ஊர்வசி மேனகை திலோத்தமை இவர்களால் நாட்டியமாடுவித்தான். அவர்களாடிய ஆட்டிலும் பாடியபாட்டிலும் சிறந்த முகநயமுள்ள ஊர்வசியை நான் மெச்சிச் சிரக்கம்பஞ்செய்தேன். அங்கிருந்த தேவர்முதலிய யாவரும் ஊர்வசியின்று செவ்வையாய் நடித்தனளென்று கொண்டாடினர். அற்றையிரவில் எனக்கமைத்த அரண்மனையிற்போயிருந்தேன். நள்ளிரவில், இவ்வூர்வசி என்னிடத்திற்குவந்தாள். எங்கள் பாட்டனான புரூரவச்சக்கரவர்த்தி பத்தினியென்று மிகப்பயந்து நானெழுந்து அவள் பாதத்தில்விழுந்துநின்றேன். கொழுந்துவிட்டெரியுஞ் சுடர்போற்கோதித்து நானெண்ணிவந்த எண்ணத்தைப் பின்னம்பண்ணியபடியால் மண்ணினில் வாழு மனுக்களில் நீ பேடியாகவென்று சபித்துப்போயினள். பொழுதுவிடிந்த பின்பு அவ்வுருவத்தோடு வெளியேவருவதற்கு நாணங்கொண்டிருந்த என்னை இந்திரன்கண்டு, விசனமடைந்து நடந்தசெய்தியறிந்துகொண்டு ஊர்வசியினிடத்திற்குச்சென்றுஅவட்குவேண்டியஉறுதிமொழிபுகன்று என்சாப நிவர்த்திசெய்தான். அச்சாபம் நானினைந்தபோதுதொடர்ந்திருக்கவும் நானினையாத

போது என்னைவிட்டு நீங்கியிருக்கவும் அனுக்கிரகித்தனள். அவ்வூர்வசி யனுக்கிரகத்தால், உன்னுடையவிராடபுரத்திலோராண்டளவும் பேடியாயிருந்தஞ்ஞாதவாசம் பண்ணும்படி நேரிட்டது. அப்பனே! எனக்குப் பேடியுருவம் அமைந்த வரலாறிதுவென்றுரைத்து இப்பால் அருச்சுனன் தன்தந்தையாகிய இந்திரனையும் வமிசநாயகனாகிய சந்திரனையும் துரோபதியைப்பெற்றவனாகிய அக்கினிதேவனையுஞ் சிந்தையிற்றுதித்து வந்தனைபுரிந்து தனக்குவேண்டிய அணிமணிப்பணிகளைக்குறித்து விரும்பினான். அவ்வேளையில் இந்திரன் தன் மைந்தன் பழையவடிவங்கொள்ளப் போவதுகண்டு மகிழ்ந்து கதிர்மணிக் குண்டலம் கனகமகுடம் நவமணியிழைத்த இரத்தினாபரணங்கள் ஒப்புவமையில்லா முப்புரிநூலுடன் கற்பகமாலையுங் கந்தமூந்தந்தான். அவற்றையெல்லாம் அருச்சுனன் பெற்றுக்கொண்டு, ஊர்வசியன்னையை உள்ளத்தில் நினைத்துப் பஞ்சாயுதம்போலும், செஞ்சிலைமதன்போலும், அஞ்சனமேனி யழகனானான். இவ்வாறு கட்டழகமைந்த காண்டீவனென்னுங்காளை அக்கினிதேவனாகிய அனுமக்கொடியும் அசுவகதியும்வரும்படிச்செய்துகொண்டு சகலாபரணமுந்தரித்துப் பூரணவலங்காரத்துடனிருந்து, தானேறிய தேரில்நாட்டிய சிங்கக்கொடியைமாற்றி, அண்டமுகடதிர ஆகாயமார்க்கமாய்வந்த அனுமக் கொடியை உத்தரகுமாரனுடைய சிங்கக்கொடி கண்டு துவண்டு நாமிவ்வனுமக்கொடிக்குச் சரியாகோம் இவ்வனுமான் இராமராவணயுத்தத்திற் சங்கை தீர்ந்திருக்கிறவனென்று தைரியம்விட்டு சந்துபார்த்து நுழைந்துகொண்டதோ எனச்சாதுரியவான்கள் சாற்றும்படியாய் அதனை வன்னிமரப்பொந்தில் மறைத்துவைத்தார்கள். இப்பால் அருச்சுனனும் உத்தரகுமாரனும்ஒருவரையொருவர்நோக்கிக்களித்து, அவ்விடத்திருந்த காளியைக்கைதொழுதெழுந்து, இரதத்தின்மேலேறி, ஆகாயமளாவித்தழைத்தவன்னிமரத்தைவலம்வந்துதொழுது, விசயகாண்டீவவில்லைநிறுத்தி, வாசமலர்மாலைசாத்திப் பூசைபுரிந்து, நாணேற்றி டங்காரஞ்செய்தான். அக்குணத்தொனியினால் உலகெல்லாம்பெயரும் ஊழிகாலம்போ லோசையெழுந்து எங்குநெருங்கிப் பொங்குகடல்போன்ற சேனைகளெல்லாம் நின்றநிலையில் நிலைதவறிப்போய், யானைவீரர் அசுவவீரர் அழகியதேராள் அணிபடைக்காலாள் அதிரத மகாரத சமரதர்முதலிய யாவரும் பேரிடிமுழக்கங்கேட்ட பெரும்பாம்பினம்போல், தலையெடுக்கமாட்டாமல், தட்டழிந்தார்கள். அக்காலையில், கற்பகமாலையணிந்த மற்புயகோலாகல விற்பனவிவேக விதரணசாலியாகிய விபற்சு யாவருந்திடுக்கிட்டுக்கண் கலங்கும்படியாகத் தேவதத்தத்தை யெடுத்துத் தன் செய்யவாயில்வைத் தூதினான். அவன்செய்த சங்கத்தொனியால் மகமேருமுதலாகிய மலைகளும் அதிர்ந்து, கடலும் கீழ்மேலாகக்குழம்பிச் சப்தமேகமும்பிதிர்ந்து, அட்டநாகமும்பிதிர்ந்து, நட்சத்திரங்களும் உதிர்ந்து, அண்ட முகடு விண்டு நொறுங்கிப் போயின. இவ்வகைச் சங்கத்தொனியினாலும் வில்லொலியாலும் நாணோசையாலும் தேரிற்கட்டிய புரவிகளும்பதைக்கச் சாரதியாகிய உத்தரகுமாரனும் சங்கடப்பட்டுத் தலைகட்டுக்கொண்டு பிடித்த கடிவாளத்தையும்விட்டு கண் பொறிகலங்கிச் செவிடுபட்டு உணர்வுகெட்டு ஓடுங்கிவீழ்ந்தான். இவ்வாறு

நடுங்கி நிலத்திற்சாய்ந்த உத்தரகுமாரனைக் காண்டாவனதகன காண்டீவன் கண்டு தன் நீண்டகைகளாலெடுத்தணைத்து ஆலவட்டம் சாமரைகளினால் வீசி ஆயாசந்தணித்து வியர்வுபோக்கி அயர்வுநீக்கிப் பனிநீர்தெளித்து, வெந்நீரளித்துக் களையாற்றினான். களைதீர்ந்தெழுந்து கண்விழித்துப்பார்த்த உத்தரகுமாரன் நடுக்கமுங்கவலையு நீங்காதவனாய்க் கும்மென்று காதடைபட்டு ஈனசுரமாய்ப்பேசினான். அப்பிள்ளையை இரக்கமாகப்பார்த்துப் பொருப்பைக் குடைந்து கடைந்துபொருத்திய புயப்பூரிப்பு படைத்த விராடராசனளித்த புவிதகுமாரனே! நான்செய்த சங்கத்தொனியினால், ஐம்புலன்களுமயங்கி அவசமடைந்த உன்பேதைத்தனம் யாதோவென்று அருச்சுனன்கேட்டான். ஐயா! சப்தசமுத்திரங்களும்பொங்கி நெருங்கிவழிந்து உலமழியுஞ் சர்வசங்கார ஊழிகாலத்தோசையென்பது தேவரீர் முழக்கிய சங்கோசையைப்பார்க்கிலும் பெரிதாமோ? எல்லாவுலகிலும் எழும் பற்பலவோசைகளியாவும் இப்போதிவ்விடத்தில் உமது வில்லாலுண்டாகிய விபரீதத்தைப்போலும் விந்தையைப்போலும் விளைக்குமோ? இத்தன்மையாகிய பேரோசையைக்கேட்ட தேவர்களினும் திக்குப்பாலர்களிலும் யார்தான் பயந்து நடுங்காமற்போவார்கள்? அப்படியிருக்க, உமது கால்மாட்டிலிருந்த நான் பயப்பட்டுவீழ்ந்தது பெரிதன்றே, அம்மட்டும் உயிர்தப்பிப்பிழைத்துத் தேவரீருடன் பேசப்புறப்பட்ட நான் மிகவுந் தயிரியசாலியன்றோ? முத்தொழில்நடத்துகின்ற மும்மைத்தேவருநடுங்கி முழக்கத்திற்குச் சித்தப்பிரமைகொண்டு தேறியவென்னை ஆதரித்தருளும். அருச்சுனராசனே! இனி நானென்னசொல்லப்போகின்றேன் என்றிரங்கிய விராடராசகுமாரனை அன்புடனோக்கித், தோளுடன் மார்பு தோயத்தழுவி, மாதவமுனிவரால் தான்கற்ற மயக்கந்தீரு மந்திரத்தை உபதேசித்து, ஓ உத்தரகுமாரனே! உனக்குங் குதிரைகளுக்கும் இனியொரு நாளும்பயமில்லை. ஈரேழுலகுங் குலுங்கினாலும், ஓரேழ்கடலுங்கலங்கினாலும், என்றென்றைக்குங் கவலையில்லாதிருக்கலாம். இப்பொழுது, விரைவில் தேர் செலுத்தென்று தனஞ்சயன் சொன்னான். அச்சொல்லைக்கேட்ட மச்சராசன் மதலை அருச்சுனன்தனக்குக்கிடைத்த ஆசையினால் அன்புமேலிட்டு, கையிற் கடிவாளம்பிடித்து, உச்சவான்கதிர்த் தேரிற்பூட்டிய பச்சைமாஏழையுமோட்டிய அருணனைப்போலும், அக்குதிரைகளைப் படபடவென்று செலுத்தினான். அப்பொழுது, பனியினால் மறையப்பட்டு ஒளிமழுங்கி உடலொடுங்கிய ஆயிரங் கிரணங்களையுடையமார்த்தாண்டன் உதயமானதன்மைபோல், பேடியுருவால் மறைந்து பெருமைகுறைந்திருந்த அருச்சுனன் பின்னழகும் முன்னழகும் பிரகாசிக்கச்சிறந்து, நெடுஞ்சிலையுங்கொடுங்கணையுங்கைப்பிடித்துக்கௌரவமுதல் வன் சேனையிலுள்ள நிருபர்களியாவரும் நடுநடுங்கி நாவறண்டு திடுக்கிடத்துப் போகும்படி அவர்களுக்கு நேரகத்தோன்றினான்.

இவ்வகையாக அழகியதேர்மேல்வந்த அனுமக்கொடியுடையானை வீட்டுமேர்முதலாகிய வீரர்களுங்கண்டு, வேறுவேறெண்ணங்கொண்டு, விருதுமுதலிய விரச்சின்னமும் சோரநின்றனர். அவ்வேளையில், நான்மறைக்கொடி படைத்த துரோணர் பாம்புக்கொடியும் நந்தியாவர்த்தமாலையுமுடைய துரி

யோதன மகாராசனைப்பார்த்து வணங்காமுடிபெற்ற மகிபனே! இசைபெற்ற விசயன் சர்வசங்காரகாலக் கடவுள்போற் சலனமில்லாமல் வருகின்றான், பா ரென்று சொல்லத்தொடங்கினர். இதோ நமக்கெதிரில் ஓடிவருகின்ற தேர் வேகத்தினால் இப்பூமியைத்தாங்கும் பணாமகுடமுடைய ஆதிசேடன் என்ன பாடுபடுகின்றானோ? அத்தேரிலிருக்கிற மகாபுருடன் கைப்பிடித்தவில்லின் நாணோசையால் தேவலோகந்தத்தளியாதிருக்குமோ, போர்முகத்தின் முழக் குஞ் சங்கத்தைப்பூரித்த பேரொலி எட்டுத்திசையுஞ் செவிடுபடுத்தாமல் விட்டுவிடுமோ, இப்படியிராவிட்டால் ஒற்றைத்தேரும் ஒற்றைவில்லுங்கொ ண்டு ஒன்றுக்கும் அஞ்சாமல்தனிமையாய்வருவானோ? இவ்விடத்திலிருப்பவர் இன்னாரின்னாரென் றறியாமலும் நன்மை தீமைகளை நாடாமலும் நம்மோடெ திர்த்து யுத்தஞ்செய்யவருகின்றவன் அசகாய சூரனென்றுந் திடதைரிய தேக காத்திர முள்ளவனென்றுந் தேர்ந்தாயோ, எப்போதும் யாதொரு காரியங் களையும் செவ்வையாய்ப்பார்த்து ஆராயவேண்டியதே ஐயா துரியோதனராச னே! சோதிப்பிரகாச குண்டலம் சுடர்விடுகதிர்மணி மகுடமும் உதயகிரியி லெழுகிற சூரியன்போற்றுலங்கும்படி வருகின்றவன் இந்திரன் மைந்தனென்ப தற்கு ஐயமேயில்லை. அதற்குத் திருட்டாந்த மென்னவென்றால் சந்திரனைப் பாதியாகப்பிளந்து வைத்ததையொத்த கோரதந்தம்பெற்ற கொடிய இராக் கதப்படைகளை அடியோடு மடியப்படுத்திய அநுமக்கொடிக் காட்சியே சாட் சியாயிருக்கின்றது. அல்லாமலும் அவன் வருகின்றதிறத்தை நோக்குமிடத் தில் வெற்றிபெற்ற வில்லைப்பற்றி ஈரேழுலகையும் இன்றேவென்று செல்லுவே னென்று இறுமாப்படைந்து யாவரையும் ஒரு பொருளாகவெண்ணிப்பாராமல் யானைகளை நோக்கித்தாவும் ஆண்சிங்கமேபோலும் வந்துவிட்டான் மேல்நட க்கவேண்டியதென்ன இனிச் சும்மாவிருப்பது காரியமன்று; நம்சேனைகளை வீரியங்கெடச்செய்து சூரியனுக்கெதிர்ப்பட்ட பனிபோலோடப் பண்ணுவான் இதல்லாமலும் ஆழ்ந்தபேரறிவுடைய அருச்சுனன் இதுவரையிலும் வாழ்ந்த நமக்கெதிரில்வந்து வெல்லவேண்டுமென்று வில்வளைத்தானானால் இவ்விடத் தில் நிறைந்த பெருங்கும்பலில் அவனோ டெதிர்த்துப் போராடத்தக்கவர் யாரிருக்கின்றனர்? ஒருங்கிவனைத் தப்பி ஓடிப் பிழைப்போ மென்றாலோ அவன் கையிலிருக்கும் அத்திரவலிமையால் அதலசுதல பாதலம் போ னாலும் அங்கும்வந்து போர்புரிந்து கொல்வான் நாம் அறிந்த அருச்சுன னேயன்றி வேறன்று; ஆகையால் நானொன்று நினைக்கின்றேன் நம்மோடவன் எதிர்க்கு முன்னே அத்தினாபுரத்திற்குப் போய்விடுவோமானால் ஒருவருக்கும் ஒன்றுமில்லை, ஊர்சிரிக்கும் பழியுமில்லை; யோசிக்குமிடத்தில் வேறு வழியு மில்லை. அப்படிக் கல்லாமல் தானென்னுங் கருவத்தால் தலைகாட்டி நிற்போ மானால் என்றைக்கும் அவனைவெல்லும் வல்லப நமக்கில்லாதிருந்தாலும் இன் றைக்கும் உண்மையாக நாமவனை வெற்றிகொள்ளமாட்டோம்; அதேனென் றால் நாம் நாடுவிட்டுப் புறப்பட்டதுமுதல் மாடுமடக்கிய இதுவரையில் நேரிட் டதுர்ச்சகுனத்தினாலும் மனச்சோர்வினாலும் வெற்றிபெறுவதரிது, ஆதலால் நாமடக்கிய பசுக்கூட்டங்களை ஓட்டிக்கொண்டு பட்டணம் போய்ச்சேர்வோ

மானல் நமக்கு இலாபமுண்டு, நாம்பயந்து ஓடிவிட்டோமென்று யாவரும்பழி யார்கள். அதற்கு ஓர் உபாயமுமுண்டு அவ்வுபாய மென்னவென்னில் குல நாயகனாகிய வீட்டுமரும் கிருபரும் அஸ்வத்தாமாமுதலிய பலரும் நானும் இங்கே நெருங்கிநின்று எதிர்வருகின்ற தனஞ்சயனைமறித்து யுத்தஞ்செய்கின் றோம் நீயும் உனக்குரிய சிலவேந்தரும் வீரர்களும் பாதிப்பதாதிகளும் மடக் கிய பசுக்கூட்டங்களும் இவ்விடம்விட்டுப்பெயர்ந்து அரவக்கொடிநாட்டிய தேரைத்திருப்பிக்கொண்டு நாடுபோய்ச்சேர்ந்து விடுவையானால் துரியோதன ராசன் பெரும்படையுடன்வந்து விராடராசனுடைய பசுமந்தைகளை மடக்கிக் கொண்டுபோய்விட்டானென்று உன்னைப்பலருங் கொண்டாடுவார்கள். "ஆரி யக்கூத்தாடினாலுங் காரியத்தின்மேற்கண்" என்பதை எண்ணவேண்டும். அப் பனே! நான்சொல்வது உனக்கு ஒப்போ ஒப்பில்லையோ? சொல்லென்று துரோணர்கேட்க அவருரைத்த சொற்சூசகத்தையுணராத துரியோதனன் பதைத்துச்சொல்லலாயினன்.

சதுர்வேத பாராயணராகிய தனுவேதியரே! பாண்டுபுத்திரர்கள் எங்கள் மாமனிடத்திற் சொக்கட்டானாடித்தோற்று நீர்வளம்பெற்றநாடும் சீர்நலமுற்ற நகரும் மற்றும்பற்பல செல்வங்களும்சேனைகளும் இழந்து காட்டிற்பன்னிரண் டாண்டுங்கழித்து நாட்டில் ஒருவருடம் அஞ்ஞாதவாசமொழித்து ஒருவருக் குந் தெரியாமலிருந்து வெளிப்படும்படியாக உங்களைப்போல் தேறித்தெளிந்த பெரியோர்களால் நிச்சயித்த நிபந்தனையை ஒத்துக்கொண்ட காலத்தில் மற் றொருவகை நிருணயம் பண்ணியிருந்ததை மறந்து பேசுகின்றீரோ? ஐயரே! ஐவரும் உருவமறைந்து கருவங்குறைந்து அஞ்ஞாதவாசத்திலிருக்கும்போது அவர்கள் இன்ன இடத்திலிருக்கின்றனரென்று நாமறிந்தால் அன்றுமுதற் பன்னிரண்டாண்டும் வனவாசம்பண்ணி ஓராண்டு அஞ்ஞாதவாசஞ்செய்ய வேண்டுமென்று தாபித்திருக்கின்ற மொழிப்படி சத்தியந்தவறுமற் போக்க வேண்டுமென்றோ? அப்படியிருக்க அந்த அஞ்சாதவாசத் தவணைநாள் அகல்வ தற்குமுன்னே எப்படி வெளிப்படலாம்? என்னுடைய நல்லகாலம் இப்போது வருகின்றவன் அருச்சுனனாக விருப்பானானால் நமக்கு மேலான நியாயவழி யைத் தருவதல்லாமல் தாழ்வான தீமையைத் தரமாட்டாதே! தநுவேதிய ரே! மாறுபட்டுப்போராடும் பெருஞ்சமரில் வல்லவராகிய பாண்டவர்கள் இம்மச்சநாட்டிலிருந்ததை தெரியாமல் வந்தோமோ? விராடபுரத்தின்மேல் நமக்கிருந்த வெகுநாளைப் பகையைக் கெடுத்துவிடவேண்டுமென்று ஓமென மாய்முன்னே திரிகர்த்தனை யனுப்புவித்துப் பின்னடி நாமெல்லோரும் ஆலோ சித்துப் பஞ்சவர்களின் அஞ்ஞாதவாசத்தைக் கெடுத்துவிட வேண்டுமென்று தானே வந்தோம். துரோணரே! இப்படியெல்லாமிருக்க அருச்சுனன் வந்தா னென்று அதயிரியமாய்ப் பேசுகின்றீரோ ஐயோ அவனேவந்து நமக்கெதிர்நின்று போர்செய்யத் தொடங்குவானானால் நாம் அவனுடன் பகைத்துப் போர்செ ய்யவேண்டிய அவசர விவகாரமென்கின்ற கயிற்றினால் அவனையும் அவனு டைய சகோதரர்களையும் அவனுக்குத் துணையாக வருவோர்களைக் குண்டுக் கட்டாகக்கட்டி உருட்டிவிடலாமே; அவனெவ்வகை நம்மை வெல்லக்கூடும்?

இன்று வருகின்றவீரனைப் புறங்கண்டு விவகாரமேற்கொண்டு செயபேரிமுழக்கி என்தேசத்திற்குப் போவேனன்றித் திருடனைப்போற்பதுங்கி யோடிப்போக மாட்டேன் நூலுணர்விற்பயின்ற நுண்ணியனே இதுவனைக்கும் பகைவர்கள் மேல் போர்செய்ய வேண்டுமென்று சொல்லுமுன்னமே கண்கள்சிவந்து கறு விப்புகைந்து கைதேர்ந்த காரியவான்கள்போல் மேகமண்டலம் அளாவிய தேர்மேலேறி ஆயுததீர ஆரவார வீராவேசத்துடன் அடுத்து வீரச்சேவகங்கா ட்டி எட்டுத்திசையிலும் இசையைநாட்டிவந்த உங்களுடைய பகல்வேடமெல் லாம்மெய்யென்று நம்பியிருந்தேன். இப்போது வெட்டவெளியாயிற்று. ஐயா நமக் கெதிரோடிவந்த பகைவனைக் கண்டவுடன் வருந்தி மயங்கி வாடி ஒருவர் முகத்தை யொருவர்பார்த்து நெடுமூச்சுவிட்டு நீ நாட்டைநோக்கி ஓடிப்பிழை; நான் காட்டைப்பார்க்க ஓடிப்பிழைக்கிறேனென்று கண்கலங்கப்படுவதற்குத் தானே இவ்வளவு பிரயாசமெடுத்துக்கொண்டு வந்தது? என்னத்திற்காக இவ் விடம்வந்தோம்; புறங்கொடுத் தோடுவதற்கோ இதை நீர் நன்றாய்த்தெளிந்து சீர்தூக்கிப்பாரும் தேசிகனே! விற்றிறமேன்மைபடைத்த வேந்தர் யாவரும் விசயனுக்கெதிர்நின்று மேன்மைபடைத்து வெற்றிகொள்ளுந் திறத்தைச் சிந் தையினினைக்கமாட்டார்கள். அப்பப்பா! மகாதீரனென்று சொல்லித் தளரு கின்ற சிலைக்குருவாகிய உமது சொல்லைக்கேட்டு மீதலத்தோரும் பூதலத்தோ ரும் கலகலவென்று கைகொட்டிநகையார்களோ? இனி உம்மைக்கண்ட கைம் பெண்களும் அலட்சியமாக நினைத்துப் பகையார்களோ! காயத்திரிதேர்ந்த கலைவேதியனே! மற்போர்நிறைந்த விற்போர்சிறந்த வானவர்கோமான் மகன் வருவதைப்பார்த்து நான்மாத்திர மாட்டையோட்டிக் கொண்டொதுங்கி மாநகர்க்குப்போவேனாகில் அதனாலெனக்கு வருவது வசையோ? இசையோ? அல்லது வருகிறவனைக்கண்டு பயமில்லாமல் எதிர்நின்று போர்புரிந்துவென்று செயம்பெறுவது புகழோ ? சொல்லும். மித்துருவையிகழ்ந்து சத்துருவைப் புகழ்ந்து மகிழ்ந்து பாடாநின்ற நைச்சியனே! தனுமறைகற்ற சதுமறையோ னே! எண்ணிறந்தகோடிகளாக இவ்விடத்திற்சேர்ந்த நமதுவீரப்படைகளெல் லாஞ்சேர்ந்து ஒருவனாகத் தனித்துவருகின்ற வில்லாளியைச் செயிக்கமாட் டார்களென்றால் ஒற்றைத்தேரோட்டிவருகின்ற ஒருவன் இத்தனைபேர்களை யும் எப்படி வெற்றிகொள்வான் ? வருகின்ற சுத்தவீரன் பிராணனைத்துரும் பாக மதிப்பானென்றால் அத்தன்மை பெற்றவர் நமது சேனைகளில்லையோ? ஆனாலும் போர்செய்யப் புகுந்தபேருக்கு பிராணன் பெரிதோ? மானம்பெரி தோ? கடல்புடைசூழ்ந்த காசினியிற் பெருமையும் மானமும்பின்னர் நடைப் பிணம்போல் பிராணனுடனிருப்பதில் என்னபயன் புண்ணிய வடிவனே ! இனி நான்பலவாறாகப்பேசுவதில் பயனில்லை, ஓரேவசனஞ் சொல்லுகின்றேன் கேளும் ; இதோவருகின்ற என்பகைவனைக்கண்டுபயந்து அத்தினாபுரத்திற் குப் போகமாட்டேன்; எனக்குபகாரம்போற் சொல்லுகிறவர்கள்பேச்சையுங் கேட்கமாட்டேன் இது அவரவர்கள் புத்தியிற் கெட்டியா யிருக்கட்டும். ஆனால்இப்பொழுதுவருகின்ற அருச்சுனன் சண்டைக்குப்பயந்தவர்கள் ஆவிக் காசைப்பட்டவர்கள்; பெண்சாதி பிள்ளைகள் மண் மனை நிதி நிட்சேபமிகுதியு

முள்ளவர்கள். இவர்கள் யாவரும் நன்மையுடன் பட்டணம்போய்ச்சேரலாம். நாம் வகைக்கொண்ட மாடுகளை அவனெவ்வாறு கைப்பற்றக்கூடும்? அவன் கழிக்கவேண்டிய அஞ்ஞாதவருடத் தவணையில் இன்னம் ஒருநாள் போக்கவேண்டியதா யிருக்கின்றது. இதற்குள் அவசரமாக வெளிப்பட்டிருக்கின்றான். எங்கள் குலமுதல்வராகிய வீட்மெருக்கு இவ்வித்தியாசங்களெல்லாம் நன்றாய்த்தெரியவரும். மகாநுபாவரோ இவ்விவகாரத்தைக் கண்டறிந்து மறுபடியும் பாண்டவர்கள் வனவாசம்பண்ணும்படித் தாபிக்கப்போகின்றார். இதற்குள் நீரோன் ஆத்திரப்படுகின்றீர் யுத்தத்திற்கிளைத்த உலோபனைப்போல் என்னை ஊருக்கு ஓடிப்போவென்று உறுதி சொல்லவந்தீரே என்னகாரணத்தால் இவ்வாறு கூறினீர்? நல்லது துரோணரே! நீர்சொல்லிய வண்ணம் ஒற்றைத் தேர் வருகின்றவன் தனஞ்சயனுகிச் சண்டைதொடுத்தாலும் அவனுக்குச் சகாயமாகத் திக்குப்பாலர்கள் தடுத்தாலும் தேவர்கள் கந்திருவர் அரக்கர் இயக்கர் அரசர்முதலியோர்வந்து என்னுடன் போர்கொடுத்தாலும் நம்மை அசைக்கப்படாது; எப்படியும் நாமெண்ணிய வண்ணம் பழுதுபடாமல் மாட்டுமந்தையை மடக்கி நம்வசம்பண்ணிக்கொண்டோம் ; நாமுந்துணிந்து வந்திருக்கின்றோம்; ஆகையால் இவ்விடம்விட்டுப் பெயராமலிருந்து ஒருகைபார்த்து விடுவோம், அப்படிப்போக மனமுடையவர்களுக்கு யாதொருதடையுமில்லை, இவ்விடத்தில் வந்திருக்கும்படைகள் அடங்கலையுஞ் சாய்த்துக்கொண்டுபோனாலும், என்னதிட்டம்போவதில்லை. ஒருவருக்கொருவர் துணையென்பதில்லை. அவரவர்கட்குத் துணையாய்நிற்கும். அறிவிலுயர்ந்த மறைவேதியரோ ! நீர் நன்றாயறிந்துட்கொள்ளுமென்று, அடங்காக்கோபங்கொண்டு, துச்சாதனன் முதலாகிய தம்பிமார்களையும் தார்வேந்தர்களையு நோக்கி, இடபமுழக்கம்போற் களைத்துத் தழல்நெருப்பைச்சிந்தி அதிகப் படபடப்புடன் சொன்னான். என் வன்புக்குரிய தம்பிமார்களே ! எனக்கு வெற்றிதரவந்த சம்பிரமவீரராகிய வேந்தர்களே ! பிரமதேயசுடைய முதற்குலத்தோனுகிய விற்குருவாகிய துரோணர் நன்னெறிகற்றபெரியோராயிருந்து, சமையோசிதப்பேச்சை துரிதமாய்ப்பேசி சாப்பாட்டுக்கு சங்கடப்படமாட்டாமல், காலபோசனங்கொண்டு காலங்கழித்திருப்பதேகாரியமென்று, ஆரியசித்தாந்தமுதலிய சாத்திரம் யாவும் படித்தவர். அல்லாமலும், தநுவேதத்திலுள்ளனவெல்லாந் தப்பாமலுணர்ந்து, புத்திமான்களுக்குப்போதிக்கத்தெரிந்தவர். வாதித்துவரும் பகைவர்களுடன் போர்க்குச்சென்று, வென்றுவருகின்ற வீரத்திறம் இவருடைய தன்றென்று நன்றாய்ப் பிரசித்தமானவர். ஆகையால், இப்படிப்பட்டவரை நீங்கள் நம்பியிராமல், வருகின்ற எதிரியென்னும் போர்யானையின் முனையிற் புகுந்து, தனிமுகச்சிங்கம்போற் சாதித்து விடுங்கள். சண்டைபோடப்பயந்த வைதிகர்களெல்லோரும் அர்த்தரதப்படைக்குப்பின்னின்று, நமக்கு வெற்றி கொள்ளும்படி சபம்பண்ணிக்கொண்டிருக்கட்டும், உங்கள்வேலையில் நீங்கள் சாக்கிரதையாயிருங்கள். ஒருவருதவியைப் பார்க்கவேண்டாம்; போங்களென் றுரைத்தான். இப்படியாக, துரியோதனன்சொன்னசொல் அங்ஙனமிருந்தவர்கள் செவிகளில் நுழையுமுன்னமே துரோணர் குமாரனுகிய அசுவத்

தாமாகேட்டு, நெருப்பில்வீழ்ந்த புழுப்போற்றுடித்துக் கண்கள்சிவந்து பொறி பறந்து, புகைமலிந்து, பொருப்பெழும்படியான புயம்படைத்த புயங்ககேதனனைப்பார்த்து,வணங்காமுடியையுடைய மன்னவனேயென்றுமத்தகயம் போற் கூவியழைத்து நம்மரபுக்கொருவராகிய வீட்டுமரும் கிருபரும் கர்ணராசனும் துச்சாதனன்முதலிய தம்பிமார்களும் மன்னமண்டலீகரும் மற்றுமுண்டான முடிமன்னரும் கண்ணிரண்டுமூடிக் காதிரண்டு மடைத்து, உள்ளங்கலங்கி, உடலுநடுங்கி, உயிரொடுங்கும்படி சிலவார்த்தைகள் சொல்லத்தொடங்கினன்.

அசுவத்தாமன் தந்தைக்காகப்பரிந்து பேசுதல்.

கௌரவகுலாதிபனே! நாம் அத்தினபுரத்தைவிட்டுவந்ததும் விராடராசனுடைய பசுமந்தையை மடக்கிக்கொண்டதும் கூட்டமாகிய நால்வகைச் சேனைகளை வசப்படுத்தி வைத்ததும் வெற்றி பெறுவதற்கோ? அல்லது அபசயமடைவதற்கோ நீர்சொல்லும். அப்படியிருக்க, விசயலட்சுமிவாசமாயிருக்கும் வெற்றிவேல்பெற்ற துரோணருடைய மனம் நொந்து நையும்படி வசைமொழிகளை வழங்கி வைவது தகுதியோ? கூரியவேலும் வில்லுங்கொண்ட கோமானே! நீ பிள்ளையாய்ப்பிறந்த நாள்தொடங்கி இதுவரையிலும், யுத்தமென்பதுசெய்து எங்கே வெற்றியடைந்திருக்கின்றாய்? இவ்விராடநகரத்திற்கு வந்து, பசுக்காவலாளரையடக்கி மந்தையைமடக்கிவிட்டோம்; இதுவொரு வெற்றி. முதலிலே சுகமாயிருந்த பாண்டவர்களையழைத்து, மோசச்சூதாடிப் பூமிமுதலிய செல்வங்களை அபகரித்துக்கொண்டு காட்டுக்கோட்டிவிட்டோம்; இதுவொரு வெற்றி. இதுதானே நீ கண்காட்சியாய்க்கண்டிருப்பது. இதைப் பார்க்கிலும் வேறுசொல்ல யோக்கியதை உண்டா? என்னமோ பெரியயுத்தங்களெல்லாஞ்செய்து, சூரர்களைவென்று, வாகைமாலைபூண்டு, கோட்டைகொத்தளங்களை முற்றுகையிட்டதுபோல், மெத்தமெத்த இறுமாந்துபேசுகின்றாய். இதென்ன கட்டுக்கதை. இவ்வீரம் ஒருகாசும்பெறாதே. நமது திறத்தை நாமே யெடுத்துப் பேசிக்கொள்ளுகிறதா? இது நன்றாயிருக்கின்றது. போம்போம். அரசனே! இராசசபையிலிருக்கும் பெரியோர்களுக்குக்கடமையென்னவென்றால், காமாந்தகராகிய காவலருக்குக் காரியாகாரியங்களை யெடுத்துக் காட்டிக்கொண்டிருக்கவேண்டுமென்பதாக நீதிநூல் முறையிடுகின்றதே. ஆதலால், அந்நீதிப்பழக்கத்தையும் உலகவழக்கத்தையும் அனுசரித்துச்சொல்லவேண்டிய தருமத்தைச் சொன்னார்போலும். அவ்வாறிடித்துச்சொல்லுந் தருமவாக்கியம் உனக்குச் சம்மதமில்லாமற்போனால், வருகிற வீரனுக்கு எதிரோபோய்நின்று போர்புரியலாமே! அப்படிப்போகின்ற உன் வீரத்திறத்தை யார் தடுத்தவர்கள்? நீயென்ன சண்டைபோடாதவனா? பூர்வத்தில் நீபுகுந்த போர்முகத்தில் எங்கேயானாலும் அடிபட்டுப் புறங்கொடுத்து ஓடியிருக்கின்றையா? இல்லையே. கையில் வில்லுங்கணையுமிருக்கச் சத்துருக்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு சண்டைபோடமாட்டாமல், கட்டுப்பட்டிருக்கின்றையா? இல்லையே. இப்போதுதானென்ன? நீ தேரோறிப் புறப்படுவதே

தான் தாமதம். துரியோதனன் வில்வளைத்தானென்று கேட்டவுடனே போர் முகத்திலுள்ள அதிரதவீரர்கள் முதலியவரும் அபசயமடைந்து உயிர்தொலைவார்கள். அப்படிப்பட்டவாகையாலைபெறுஞ்சேவகனாகிய அரசனைப்பார்த்து, நீ மாட்டையோட்டிக்கொண்டு, ஊர்முகநோக்கி, ஓடிப்போவென்று இவ்விருத்தவேதியர் சொல்லலாமா? ஐயோ, உத்தமனே! அவர்சொன்னசொல்லானது, நீ இதுவரையிலும் பெற்றிருந்த வீரத்திற்கு மிகவுங் குறைவாயிற்றே. அப்பா, சுத்தவீரனே! சகோதரர்களிடத்திற்சூதாடிப் பூமியைப்பறித்து, மூத்ததமையன் பெண்சாதியாகிய துரோபதையின் தலைமயிரைப் பிடித்திழுத்துச் சபைநடுவே ஆடையை உரிந்து, மானக்கேடுண்டாக்கிக், காட்டுக்கு வழிகாட்டிவிட்ட கதைபோல், நினைத்தையோ? அல்லது, உன்மாமனாகிய இச்சகுனி முதலியவரும் வாய்கொண்டமட்டும்பேசி வெற்றிகொண்ட வீரமென்றெண்ணினையோ? ஐயோ! அப்படி வெற்றிகொண்ட வெற்றியெல்லாம் கரும்பூமியில் பாவமென்னுங் காணியாட்சியைக் கொடுக்கத்தக்கது. அவ்வளவு எளிதென்று இப்போது எண்ணாதை; வருகின்றவன் தனஞ்சயன். இவனுக்கெதிரிலிருந்து, வில்வளைத்துப் பாணந்தொடுத்துப் போர்செய்தே தீரவேண்டும். வேந்தனே! சூதாடித்தோற்ற அந்நாளையிலிருந்த அர்ச்சுனன்தானேயென்று, அலட்சியமாய் நினைத்தால், இந்நாளையில் உங்களை யெளிதில் விடுவானென்று எண்ணங்கொள்ளவேண்டாம். உன்னம்மானான சகுனிராசன் உனக்காகப் பாடுபட்டுச்சம்பாதித்த தருமமானது, சீக்கிரத்தில் திரண்டுருண்டு வளர்ந்து இப்போது வந்தெதிர்த்துக்கொண்டது. இதைக்குறித்து நீ யொருவருக்குச் சொல்லவேண்டிய அவசரமில்லையே. ஒருவரும் உங்களுக்குச்சொல்லவேண்டிய அவசியமுமில்லையே. நீ யாரையுந் துணைப்பற்றவேண்டாம். நீயொருவரை விரும்பித் துணைவரக்கேட்பையாகில், யாருந்துணையாகமாட்டார்கள். அந்த ஆசையைவிட்டுவிடு. சூதாடி உனக்குச் சந்தோடமுண்டாகப் பண்ணினவன் இதோ உனக்குநேராக நிற்கின்றான். இப்போது நேரிடப்போகிறபோர்முனைக்கெதிரில், அவனைப்போகச்செய்வது நியாயம். ஆயுதபாணியாய் அவன் போர் மேற்புறப்படும் வகையைப்பார். நல்லநல்ல ஆயுதங்கள் அவனிடத்திலிருக்கின்றன, யாரொருத்தர் உடன்படுகின்றார்களோ அவர்கள்குடித்தனத்தைக் கெடுத்துவிடும். அப்படிப்பட்ட ஆயுதமிருக்க, உனக்கென்னகுறைவு. அத்தன்மையான ஆயுதம் எத்தன்மையுடையதென்றால், பன்னிரண்டு - எட்டு - இருக்கால் - துகை முதலிய சில்லறைப்படைகள். இவைகளினால், கட்டு - வெட்டு - குத்து - பிரித்துவிடு - தனியே ஓட்டிவிடு-கீழேதள்ளிப் படுக்கவை யென்று இப்படியெல்லாஞ்சொல்லி, விசயனுக்கெதிராகி வெல்லுவான். அப்பார்த்தனைவெல்லும் பராக்கிரமம் எங்களைப்போன்றவர்களாலுமில்லை. எங்களையல்லாமல் நாகலோகத்தார்முதலிய மூன்றுலோகத்தாரும் நரனுக்கெதிரில் நிற்கவேமாட்டார்கள். ஒருவருக்கரில்லாதவனாய் வருகிற அருச்சுனனைக்கண்டு நான் வெல்லுகிறேனென்று, வாய்வன்னம்பேசுகிற வல்லவர்களுமுண்டு. வாய்சொற் சொல்லுவதற்கென்ன பஞ்சமா? வருகிறவனை வெற்றிகொள்ளலாமென்பதென்ன கொஞ்சமா! சந்திரகுலத்திற்பிறந்தவனே! பெரியோனாகிய

சிலையாசிரியனை அவமதித்து, சொல்லத்தகாத சொல்லையெல்லாஞ்சொல்லி, வெல்லவல்லவன் நீயே யாகையால், இதோ நான் சொல்லுகிறேன். இம்மண் டலத்திலும் அவ்விண்டலத்திலும் அருச்சுனனுக்கு ஒப்புச்சொல்வது தப்பு; அவனுக்கெதி ரொருவருமில்லை. அவனுடைய போர்முனையில் நீதானவது இன்னம் எப்படிப்பட்டவர்களாவது கிட்டி எட்டிப்பார்த்து வந்தாலும் போதுமே. இதுவே அவனை வெற்றிகொண்டபுகழினும் எண்மடங்கதிகமான பெருமையை விளைவிக்குமே. அவனுடைய போர்முகத்தில் நீ நேர்முகமாகப் போய் வரமாட்டுவையோ? உனகண்ணிற்கண்டு கலங்காதிருப்பையோ? நாகக் கொடியோனே! உன்னிடத்தில் விசுவாசம்வைத்த ஆசிரியர் எதிரியெப்படிப் பட்டவன் அவனோடு சண்டைசெய்ய வல்லவர் எண்டிசையிலுமில்லையென்று சொன்னால், இதற்குத் தகாத வார்த்தைகளைப்பேசினாய். அருமையறியாத உன்னுடைய யுத்தமுனையில், எங்களைப்போன்றவர்க ளிருக்கமாட்டோம். வீரத்தைவிட்டு நாணமுங்கெட்டிருக்கிற துரோணர் தனுமறைக்குருவாயிருந் தும், துரியோதனன்பேசிய ஈனவார்த்தைகளைக்கேட்டும், இன்னமும் போகா மலிருக்கின்றார். இவர் இவ்விடத்திலிருந்து யுத்தமுஞ்செய்வார்போலுமிருக் கிறது. ஐயோ! அவமரியாதை நேரிட்டபோதே அந்த அரசனுடைய உறவை நீக்கிவிடவேண்டும். அல்லது, பேசினவன்பிராணனை அறப்போக்கிவிடவேண் டும். இவ்விரண்டிலொன்றும் இல்லாதிருப்பது, மனுடத்தனமல்லவேயென்று அசுவத்தாமா தன்தந்தையை நொந்துகொண்டு, அரவக்கொடிக் கதிபனைப் பார்த்து, அரசனே! இப்போது நான் சொல்லுகின்றதைக்கேள். எல்லாவுயி ரையுங்கவரும்படியான எமதருமராசனையும் கடல்நீரைவறட்டும் வடவாமுகா க்கினியையும், உருத்திரமூர்த்தியின் கண்டத்தைக்கருக்கிய ஆலவிடத்தை யும், மட்டுப்படாத எட்டுத்திக்கையும், அட்டமாநாகத்தையும், ஒருநொடியில் மடிக்கப்பார்ப்போம். அல்லது, வெற்றிகொள்வோம். இந்திரகுமாரனாகிய சிலைவிசயனைமாத்திரம் வெற்றிகொள்ளமாட்டோம். நீ உன்சிந்தையில் இதை விந்தையாகக்கொண்டு, மனவுறுதியோடுநின்று தெளிந்துபாரென்றுகூறினான். அச்சொற்களையெல்லாம் துரியோதனனுக்குச் சமீபத்திலேநின்ற கர்ணன்கே ட்டு, றநறவென்று பல்லைக்கடித்து, வெற்றிவேல்பெற்ற பெரியோர்களைநோக் கிப்பேசத்தொடங்கினான்.

கர்ணன்பேசுவது.

பூலோகபுரந்தரராகிய புசிதர்களே! விராடராசனுடைய பசுநிரைகளை மடக்கும்படி நிதானித்து, அத்தினாபுரத்தைவிட்டு புறப்பட்ட நாம், வாசு மாலைதரித்துவராநின்ற விசயனென்னும் வில்லாளியை வியந்து, புகழ் ந்துபேசுவது மேன்மையோ? குந்திதேவியின் மைந்தர்தொடுக்குங் கொடுங் கணைக்கஞ்சிப் பயப்படுகிறவர்கள், விருதாவில் இவ்வளவுதூரம் ஏன்வரவேண் டும்; ஐயோ! வீட்டிலிருக்கப்போகாதா? அப்படியே வேலைவினைகெட்டு வந்தவர்கள் எதிரியைச்சிக்கத் திறமில்லாவிட்டாலும், வாயைமூடிக்கொண்டு சும்மாவிருக்கலாகாதா? திறவான்களாகிய தீரர்களுக்குநேரில் வாய்க்குவந்த

மட்டும் பிதற்றுவானேன்? இவ்வளவுகாரியத்திற்குப் பெரியவர்களென்று பேர் வைத்துக்கொள்ளுவானேன்? தனக்குவெல்ல வல்லமையில்லாவிட்டால், தரணியிலுள்ளவர்களெல்லோரும் வெல்லமாட்டார்களென்று தப்புந்தாறுமாய் வீண் பேச்சுப்பேசவேண்டிய வேலையென்ன? சுத்தவீரர்கள் மனமுறிய மெத்த வருத்தப்படுத்துவானேன்? இருளைக்கெடுத்துவந்த மத்தியான சூரியன்போன்ற நானொருவனுமெழுந்து, நெருப்புக்கொழுந்துபோல் வருகிற விசயனையடுத்து, அச்சமில்லாமல் நாணிதொடுத்து, அபாரமாகக் கணைகளைவிடுத்து, என்னிச்சையின்படி எதிர்த்துப் போர்கொடுத்து, அவனேறிவந்த தேரின் அச்சுமச்சுச்குத்துக்கால்களைமுறித்துக், குதிரை நான்கையும் அறுத்துக், காண்டீவத்தையும் அனுமக்கொடியையுங்குறைத்து, வெற்றிபெறப்போகின்ற என் வீரத்தை அருச்சுனனைக்கண்டு கொண்டாடுகிறவர்கள் அச்சப்படுகிறவர்கள் யாவருமிருந்து காட்சியாய்க்காணுங்கள். மேலும், மண்டலத்தைக்கீறி, விண்டலத்தைப்பீறி, குண்டலமசையவருந் தேரோஞ்கிய தண்டதரன் தம்பியைக் கண்டவுடனே, எண்டிசையதிர, மண்டலாகிர்தியாகிய வில்லைவளைத்து, வருணாத்திரம் பிரயோகஞ்செய்து, வடவைத்தீவேகத்தை மாற்றுந்தன்மைபோல ஒருகணத்தில் அவன் வன்மையைமாற்றி, நீங்கள்கண்டு கண்களிக்கச்செய்கின்றேன் பாருங்கள். பன்னிரண்டாண்டும் அஞ்ஞாதவாசமான ஓராண்டும் துரும்பிடித்து, அழுக்கடைந்து, மழுங்கிக்கிடந்த காண்டீவத்தையும் கணைப்புட்டிலையுங் கைக்கொண்டு கலங்காமல், நமக்கெதிர்வருகின்ற நரனுடைய திடத்தையுந் தீரத்தையுந் தேகத்தையும் சின்னபின்னமாம்படிச் சேதிக்கின்றேன். நீங்களெல்லோருங்கூடிப் பார்க்கலாம். பெரியோர்களே! அருச்சுனனுக்கெதிரி அங்கர்கோனென்று இச்சகமெல்லாம் பிரசித்தமாகப் பேசிக்கொண்டிருக்க, நான் அவனை யெளிதில்விடப்போவதில்லை. நானும் ஒருவில்லைப் பிடித்து, மலைபோலெதிர்த்து, மலைந்து, போர்த்திறந்தெரிந்த புண்ணியவான் களைப்போல், புகழ்பெறுகின்ற பிரதாபத்தைக் காணவாருங்கள், குளம்படியாற்கிளம்பும் மண்பொடிகள் ஓயாமற்கிளம்பப் பாய்ந்துவருங் குதிரைகள்மேலும் அக்குதிரைகள்பூட்டிய தேரின்மேலும் கோடிகோடி பாணங்களைச் செலுத்திக் கொல்லுவதல்லாமலும், அவனது ஆசானுபாகுவாகிய கரங்கள் தறிபடவும் கால்கள் முறிபடவும் விரிந்தமார்பு தொளைபடவும் அணிந்த முடியுடன் தலையறுபடவும் விரைந்து போர்புரிந்து நான் வெற்றிக்கொள்ளப்போகின்ற வித்தையைப்பார்த்து நீங்கள் மகிழுங்கள். இவ்விடத்தில், நானுறுதியாகச்சொல்லுகிறேன். ஞாபகமாய்க்கேளுங்கள், நானிதுவரையில், நரபதியாகிய துரியோதனனிடத்தில் உண்டு, வளர்ந்துவந்த செஞ்சோற்றுக்கடனும் கர்ணன் அருச்சுனன் என்றுசொல்லப்படும் எங்களிருவரில், வல்லவர்யாரோவென்று ஐயங்கொண்டிருந்த யாவருக்கும் ஐயந்தீருஞ்சமயமும் இளமைப்பருவத்தில் தனுர்வேதபரிட்சை பார்த்தபோது அருச்சுனன் தலையையறுத்து அரங்குபூசை செய்கின்றேனென்றுஅரசருக்குமுன்னே நான் கூறியிருந்த சபத வார்த்தை முடியுங்காலமும் பற்குனனைவெல்லும் வல்லவரில்லையென்று சிலையாசிரியனும் அசுவத்தாமாவும்பேசிய கட்டுக்கதைகேட்டோடச்செய்யுஞ்

தருணமும் இப்போதெனக்கு நேரிட்டிருப்பதினால், என் பரமகுருவாகிய பாசுராமர் அற்புதமாகக் கற்பித்துவைத்த அத்திரவித்தைகளை நிலைபெறச் செய்து, அவருடைய திருவடிகளைத் துதிக்குங் காலங்கிடைத்திருக்கின்றதை நினைக்குங் காலங்கிடைத்திருக்கின்றதை மதிக்கும் விவேகிகளாகிய மன்னவர்களே பாருங்கள். பெருந்தேரிலோங்கி ஒருசிலைதாங்கி வருகின்றவனைக்கண்டேங்கி மயங்குகின்ற ஒருகோடி நரபாலரும் என்சுற்றிலுமிருந்து, வெற்றி பெறும் வேடிக்கையை முற்றிலும் அறியுங்களென்று உருத்திரமூர்த்திக்கொப்பான வீட்டுமர்முதலியயாவருக்குங் கேட்கும்படியாகச் சொன்னான். அந்தச் சொல்லைக் கிருபர்கேட்டுமனம்பொறாமல் பேசத்தொடங்கினர்.

கிருபர் கர்ணனோடு பேசுதல்.

ஆகா அங்கதேசத்தரசாகிய அறிஞனே! நெடியகடல்சூழ்ந்த உலகத்தை ஆளுகின்ற அரசருக்குச் சாம பேத தான தண்டமென்னுஞ் சதுர்வித உபாயமுண்டு. இந்நான்கில் தண்டமென்னும் உபாயத்தை அநுசரித்துச் சண்டை செய்யக் கற்றிருக்கின்றாயன்றி மற்றமூன்று உபாயமும் அறியமாட்டாய்போலுமிருக்கின்றது. அவ்வுபாய மூன்றையும் அறிந்துகொள்ளத்தக்க சுயபுத்தி உனக்கில்லாவிட்டாலும் தெரிந்தபெரியோர்கள் சொல்லுகின்ற நற்புத்தியானாலுங் கேட்டு நடக்கவேண்டும், தண்டமென்பதைத் தாமதகுணத்தோர் விரும்புவார்கள்,சாத்வீககுணமுள்ளவர்களுக்கு மற்றமூன்றும்தகுதியுடையனவாகும். அதெவ்வாறெனில் அரசனானவன் காரியத்தைக் கருதி யோசியாமல் பகைவர் மேற் செல்லுதல் அப்பகைவரைத் துன்பமில்லாமல் நிலைக்கச்செய்வதாகும். மேலும் தொழில்வல்லமையையும் தன்வல்லமையையும் எதிரிவல்லமையையும் துணைவல்லமையையும் ஆராய்ந்து தன்வல்லமை மேலிட்டிருக்குமாயின் தானெடுத்த காரியத்தை முடிக்கலாம். ஆகையாற் காரியாகாரியங்களெல்லாவற்றையுங் கருதிப் பின்னே போராடப் புகுந்தவர்களுக்கு எவ்வுலகத்தும் எக்காலத்தும் ஒப்பில்லாத புகழையுண்டாக்குமென்று நீதி நூலோர் பேசியிருக்கின்றார்கள். அதுவுமல்லாமல்தன்வலியும் பகைவலியும்மாற்றான்வலியுந்துணைவலியும் அறிந்து வீரியமாகப் போர்செய்யக்கற்ற புத்திமான்களானபோதிலும் 'பெரியாரைத் துணைக்கொள்' என்னும் நீதிவாக்கியப்படி தனக்குமேற்பட்ட மிக்க அறிவாளர்களைக்கேட்டு அவர்கள் புகன்ற புத்திவழி நடக்க வேண்டும்; அப்படிகேளாத அரசன் உன்மத்தனாயிருப்பானாகில் அவனது சுகதுக்கத்திற் கொக்கப்பொருந்திப் பக்கமிருக்கும் எம்மைப்போன்ற பெரியோர்கள் அவனுக்கு இடித்துச்சொல்லவேண்டியகடமை. திசையளவுநாறும் உதிரப்பசைவீறும் வேலேந்திய கர்ணனே! வருகின்றதேர் ஒன்றென்றும் அத்தேர் மேல்வருகின்றவன் தனியனென்றும் அவன் கைப்பிடித்தவில்லொன்றென்றும் அவனெம்மாத்திரமென்றும் வெகுசொற்பமாக வெண்ணி ஆத்திரப்பட்டுச் சொல்லினையல்லவா? உன்னைப்போலொத்தவன் இவ்வாறுரைத்தால் மாற்றுயர்ந்த பொன்னைப்போன்று வருகின்றவன் என்ன என்னவென்று புகலவேண்டும். அவனுன்னுவுக்கடங்கினவனா! இலேசானவனா? அந்தோ! மாசானவனே!

இப்பாராளூர் துரியோதனன்முதலாகிய பலபடைக் கூட்டங்களையும் விஷ்டு மர்முதலிய என்னையும் விரிபம்பேசுகின்ற உன்னையும் ஒருபொருளாய் நினைக்காமல் திரஸ்காரஞ்செய்யத் தக்கவனென்று உனக்குத்தெரியாதது ஆண்சிங்கஞ்சிறு யானைக்கூட்டத்தின்மேலே பாயுந்தன்மைபோல் வருகிறானே அவனுக் கெதிர்நின்று போராடுபவர்களுமுண்டோ? சிவபெருமானொருவனுஞ்சென்று திரிபுரம் நீறுகக்கண்டு திரும்பினனென்று இதுவரையிலும் நீகேட்டிருக்கவில்லையோ? செருமுகப்புலியே! சீர்படைத்த பாஞ்சாலராசனுடைய பட்டணத்தில் பாஞ்சாலிக்குத் திருக்கலியாண முகூர்த்தமென்று சுயவரஞ் சாட்டியபோது மச்சேந்திர இலட்சியத்தைமுடித்து இச்சைவைத்து வந்த அரசரெல்லோரையும் ஓடவிட்டடித்துக் கச்சணிந்த பெருந்தனக் காரிகையையுங் காண்டீபத்தையுங் கைப்பிடித்துக் கலகலவென்று விசயலட்சுமி நடித்துவரக் கண்ட காளைவருகின்றான்; அவனுடனெதிர்த்துப் போராடுந் திறமுள்ளவர்கள் எவருமில்லையே, மாலைபுனைந்தமணிமுடியணிந்த வண்மையோய்! நீ அச்சுயம்வரகாலத்தில் பாஞ்சாலியைக் குறித்துப்போயிருந்த தில்லையோ! எல்லாவரசராலும் வளைக்கப்படாத வில்லை நீ தாங்கி வளைக்கவில்லையோ? அங்ஙனநடந்த விந்தையான வார்த்தைகளையேனும் வேடிக்கையாய்க் கேள்விப்படவில்லையோ? இதன்றியும் கொடுமையாளராய்த் தொடர்ந்த யதுகுலத்தாரையெல்லாம் அடக்கி வெற்றிகொண்டு சுபத்திரையை மணம்புணர்ந்து கொணர்ந்த காலத்திலும் முப்பத்துமுக்கோடி தேவர்கள் முதுகுகாட்டியோட ஓட்டி அட்டவசுக்களுடன் அட்டதிக்குப்பாலரும் எழுகடலுடன் மேகமுஞ்சலிக்கக்கெலித்துக் காண்டாவனத்தை அக்கினிதேவனுக்கு ஆகாரமாக ஊட்டிவைத்த காலத்திலும் அனுவிர்தகண்டம் அளாவிர்தகண்டமுதலாகிய உத்தரகுருகண்டத்தி லுள்ளோர்யாரும் முடிவணங்கித்தொழுது கண்ணீர்விட்டழுது எங்கட்குப் பழுதுவாராமற் காத்தருளும்,கடைக்கண்பாருமென்று உபசாரத்துடன் மிக்கதிரவியங்கள் குவிக்கப்பெற்றகாலத்திலும் மாயாவரத்துடன் தோயமாபுரத்திலிருந்த காலகேயநிவாத கவசர்களையும் இரணியபுரவாசிகளையுமடித்து அவர்களுடைய தோள்வலியுந் தாள்வலியும் உரத்தின்வலியும் வரத்தின்வலியும் உபயோகமாக வொட்டாமலடித்து முடித்தநாளையிலும் அட்டதிக்கும் புகழ்பெற்ற சித்திரசேனனென்னுங் கந்திருவராசனைக் கொட்டமடக்கி நமதரசனாகிய துரியோதன மகாராசனையும் தம்பிமார்களையும் அவரதுபத்தினிகளையும் கட்டவிழ்த்துமிட்டமானங்கெட்ட பிராணனைக்காப்பாற்றிவிட்ட காலத்திலும் இதோவருகிற கட்டழகனாகிய அருச்சுனனுக்குயார் துணையாயிருந்தவர்கள் ஒருவருமில்லையே! எக்காலத்திலும் அவன்கைப்பிடித்த விசயகாண்டீபமே துணையல்லது வேறுதுணை கண்டதில்லையே! அப்படி யாதாயினும் துணைநாடிப்போய் வெற்றிகொள்வதுண்டானுற் பேசு கர்ணராசனே! உன்னுடைய குறைநிசய மென்னவென்னில் அரசர் முதலியோர் கூடியசபையில் எனக்குமிஞ்சி யெவருமில்லையென்றும்,புயவலிமை எனக்கே பொருந்தியதென்றும்,என்னுடன் போராடும்பகைவர் பூமியிலில்லையென்றும், பலவாறுகப் பேசுகிற வழக்கமுனக்குண்டு. நீசொல்லிபவண்ணம் எங்கேயாவது சோர்வற

முடித்து வெற்றிகொண்டிருக்கின்றையா? நீஎப்பகைவர்கள்மேல் போர்க்குச் சென்றுய் எவ்விடத்தினின்று கீர்த்தி கொண்டுவந்தாய்? இந்நரனுக்கு நேராகப் போய் நிற்கத்தக்க திறமுமுனக்குண்டா? அப்படியிருந்தால் அனுபவங்கொண் டுவா? அப்பா! நான்பேசுவதென்னதப்பா? சிவபெருமானுஞ் செங்கண்மாலும் பிரமனும் தேவேந்திரனும் தேவர்களும் மற்றுமுள்ளவர்களுங் கோலாகலமாய் வந்தெதிர்த்தும் போர்செய்வதற்குக்கூடாத வல்லவன் வில்லேவளைத்தானகில் அவனுடைய வீரியத்தைப்பழித்து இங்கிருக்கும் அரசர்முதலிய ஆரியர்களுக் கெதிரில் உன்காரியத்தைக்காட்டிவெற்றிபெறப்போகின்றுயோ? எண்ணுமற் பேசிஇழிவடையப்போகின்றையோ? இதுகாறும் உன்திறத்தைநாங்களுமிருந்து பார்த்ததுதானே; அடா அப்பனே! சிறந்தவில்லாளியாகிய வீட்டுமரும் சிலேக்கு ருவாகிய துரோணரும் சிவசுப்பிரமணியக் கடவுள்போன்ற அஸ்வத்தாமாவும் நானும் நீயும் தேனிறைந்த வலம்புரிமாலேயணிந்த துரியோதன மகாராசனும் மற்ற தார்முடிவேந்தர் பலரும் ஒன்றுகச்சேர்ந்து அழகிய தேரைச்செலுத்தி வில்லம்புகள்தாங்கி மேலான யுத்தஞ்செய்தாலும் இவ்வர்ச்சுனனேவெல்வது அரிதரிதென்று கருதிக்கரையும் எங்கட்கெதிரில் நானெருவனும் போர்முனே புகுந்துவெல்லுகிறேன். அவனேக்கொல்லுகிறேனென்று நீசொல்லுவதுகாலிலி காதவழிநடப்பேனென்றுசொல்வதுபோலாம், நீசொன்னசொற்படி முடிப்பை யானல்பனி சூரியனே விழுங்கிப்போடுமென்று ஐயமறப்பேசலாமே! கொடைக் கரசனே! நீர்வளமுள்ளகுருநாட்டுக்கதிபனுகிய கௌரவகுலமுதல்வன் உன்னி டத்தில் நேயம்வைத்திருந்தால் அவனுக்குத்திரமான உறுதிவார்த்தைகளேச் சொல்லி நீதிநெறிகுறையாமல் பாராளுமுறையைப் போதித்துப் பக்கத்தில் மந் திரிபோலிருந்து தந்திரத்துடனடத்துவதைவிட்டுப் பயன்படாத வார்த்தைக ளேப்படித்து அதிசயத்தைச் சத்தியமென்று துடித்துச்சண்டைமுகத்தி லிழுத் துவிட்டுஇரண்டுபுறத்தும் இடியுண்டிளேத்து மருண்டுநிற்கவைத்து அந்தச்சமய த்தில்நீ அப்பால்நீங்கிப்போவதற்காகவோ? இவ்வளவு தூரநினேத்துச் சொல்லவந் தனே, உத்தமனே! அம்மட்டும் நீயதிந்ததுபோதும், இம் மட்டும் உன்கடையைக் கட்டென்று மூவரையும்வெல்லுங் கிருபர் சொல்லிமுடித்தனர். அவர்மொழி யைக்கேட்ட கர்ணராசன் நெருப்பில்விட்ட நெய்போலுருகிப் புகைந்து கண் ணிரண்டுஞ்சிவந்து கடுங்கோபம்பிறந்து குற்றமாகியமொழியைமெத்தமெத்தப் பேசிக் கிருபருடைய முகத்தைப்பாராமல் மற்றவர்கள் பக்கமாய்த்திரும்பி அவர்கள் முகத்தைநோக்கிச் சொல்லத்தொடங்கினன்.

கர்ணன்பேசுவது.

முடியரசர்களே! வாசங்குலாவும் மாலேநிலாவும் வணங்காமுடிவேந்த னுடைய வளப்பங்களேயும் சகலசுப சந்தோடசவுக்கியங்களேயும் தாழ்ச்சியில் லாமல் தத்தம் பந்துவர்க்கங்களுடன் காலங்கருப்புத்தோன்றுமல் அனுபவித் துச் சிறுமையின்றிப் பெருமையாய் அண்டிப்பிழைத்தவர்கள் சண்டைமுக த்தில் வந்துநின்று அன்னமிட்டாரையிகழ்ந்து கன்னமிட்ட சத்துருவைப்புக ழ்ந்து சித்தங்களித்துமகிழ்ந்து தோள்வலியைத் துதித்துத் தாள்வலியைமதித்

துக் கொண்டாடா நின்றவர்களால் நமக்கு வெற்றிகிடைக்காமற் போமோ? இவ்வுலகத்தில் நன்னெறியில்லாமற்போமோ? மழைமாரி குறையுமோ? வள ரறங்குன்றுமோ! ஆ அகாலமே! வருகிறவன் மிகவுந் திறவானென்று புகழ்ந்து பேசுவதினல் பயனென்ன? அவன்மேல் உங்களுக்கு அன்பிருக்குமாகில் அவ் வன்பு விருதாவாய்ப்போகாமல் ஒண்டியாய்வருகின்ற அவனுடன்போய்க் கூடிக்கொள்வதுதகுதியாகும். அப்படிக்கில்லையென்னஅவரவர்களுடைய வீட்டுக்குப்போய்ப் பெண்சாதி பிள்ளைமுகத்தில் விழிக்கலாம்; இதற்கு யாதொரு தடையுமில்லை, நேரேவருகிற பார்த்தனுகிய பஞ்சைக்கு நானேயெதிராகின் றேன். அவனு என்னை வெற்றிகொள்பவன்? அடடா! பாதலமேழும் மீதல மேழும் பரந்த அகண்டசக்கரவாளப்பரப்பும் தப்பாமற் பெருமைபெறுஞ் சுப் பிரதீபக்கணைகளினுல் சிவனுக்கெதிரான மதனைப்போலாக்கித் திக்குத்திகாந் தத்திலும் சொக்குப்பொடிபோல் தூற்றிவிடுகின்றேன், உங்களுக்குஞ் சேதி சொல்ல ஓலைவிடுக்கிறேன், நீங்க ளூருக்குப்போய் உறங்குங்களென்று உரத் துக்கொதித்து உரைத்துச்சிரித்தான். இப்படி கொடைக்கரசாகிய கர்ண ராசன்பேசினபோது சேமித்துவைத்த திரவியம் போலுற்ற சிலநூலும்பெற்ற பலநூலுங்கற்ற வீட்டுமர் உன்மத்தனையொத்த துரியோதனராசனையழைத் துத் தராசினிலைபோல் நடுவுநிலைமையாய்த் தெரிவிக்கத்துணிந்தனர்.

வீஷ்டுமர் சொல்வது.

திங்கள் மரபிற்றோன்றிய மங்களமுகசுந்தர துரியோதனராசனே! சிலை யாசிரியனுகிய துரோணர்சொன்னது மேன்மைமிகுந்த பெரியோர்கள் பேச வேண்டிய விதிதான் சகலகலைஞானமுந் தேர்ந்த அசுவத்தாமா பரிந்தெழுந்து காரியாகாரிய மெடுத்துக்காட்டிக் கண்டிக்கவேண்டியகடமைதான்;மலைபோல் நிலைபெற்ற கிருபர் மடக்கிமடக்கித் தெரியவைத்தது மநுநெறிமுறைதான், இலைபோலொளிரும் வேலேந்திய கர்ணராசன் தாராதரமறியாமற்பேசியது தகுதியற்றதுதான். பெரியாரை நிந்தித்துப்பேசப்போகாது,பெரியோர் சிந்தை நொந்தால் வறுமைநிறையும், வாழ்நாள்குறையும், இது எவர்களுக்கும் எப் போதுந்தகாது. மல்லின்வலியும் மலையின்வலியும் தளர்வில்லாமல்வளருந் தடம்புயனே! அரவக்கொடியும் அணிமணிமுடியும் பொறுத்த என் கண் மணியே! திரிதராட்டிரபுத்திரனே! துரியோதனனென்னும் என்பௌத்தி ரனே! நான்சொல்வதைக் கேட்கவேண்டும். மெய்யறிவுள்ள மேலோர் செய்கை யெவ்வகையெனில், தங்களுக்குத் தற்காலநடந்துவருகிற திசாபல னும் காலபலனும் தெய்வபலனும் செய்கையேதுவும் காரணகாரியங்களும் செவ்வையாகநாடித் தீரவாராய்ந்து, வெல்லத்தக்கவல்லமை தங்களுக் குண்டாயிருந்து துணிவுபற்றியபோதிலும், பகைவரை எவ்வாறுவெல்வது, அருமையாயிருக்கிறது, அசாத்தியமென்று அஞ்சாது அலட்சியமாகவெண்ணி அவசரப்படார்கள். தங்களாலாகின்ற காரியமானுலும், என்னவோ போய்ப் பார்ப்போமென்பார்கள் மேம்பாடுடைய விவேகிகள். அதெப்படியென்றால், முன்பின்னெண்ணுமல், வாய்க்குவந்தமட்டும் வல்லமைபேசி, எதிரியின்

பலத்தையென்னுமலேசிக் காரியங்களிற் பிரவேசித்து, நாலுபேரும் சீசீ யென்றுநகைக்க முகங்கூசி நாணிவந்தால், சொன்னசொல்லின்படி வெல்லாமல், பல்லைக்காட்டிப் பாதவித்து, ஓடிவந்துவிட்டானென்று, உலகமுள்ள வரையிலும் பெரியவசையாகப் பாடுவார்கள். அதனால், நல்லோர் அடங்கியிருந்து காரியபாவங்களிலும் கருத்துமுற்ற நேரிட்டகாலங்களிலும் தங்கள் வல்லமையைக்காட்டிக் கிளர்ச்சிபெறுமல், புகழுடன் மனக்கிளர்ச்சிபெறுவார்கள். அப்படிப்பட்ட வீரர்களை யாவருங்கொண்டாடவேண்டுமே. இதுதான் பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் புத்திமான்களுக்கும் புத்தியீனர்களுக்கும் இருக்கிறவேறுபாடு. இஃதிப்படியிருக்க, நாம்பூசிக்கப்பட்ட ஆசாரியபுருடர்கள் யுத்தகளத்தில்வரும் சத்துருவைக்கண்டமாத்திரத்தில் வெற்றிபெற விரும்பிப் போர்முனைபுகுந்து வில்வளைத்துக் கூரியகணைகளைச்செலுத்திக், கருக்குலையச் செருக்கலையக், கால்மாடு தலைமாடாக்கி வெற்றிபெறக்கற்ற திடவான்களாவார்கள். இத்தன்மைவாய்ந்த உத்தமர்களை யுத்தகளம்விட்டோடிப்போங்களென்றும் எனக்குப் பின்னிருந்து பாருங்களென்றும் அஞ்ஞான தேவலனைப்போல், பெண்டாட்டிப்பிள்ளைகளைச்சேர்ந்து பிழையுங்களென்றும் இப்படிக்கெல்லாஞ் சொல்லலாமோ? அல்லாமலும், அவர்கள் முன்பாக நானே வீரமுள்ளவனென்றும் அருச்சுனனுக்கு வைரி நானேயென்றும் சொல்லப்போமோ? மானமுள்ளவர்கள் இவ்வாறு வெளிப்படையாகப் பேசி வெளிப்படுவார்களோ? மானங்கெட்டவர்கள் இன்றைக்கு வீரனென்பார்கள்; நாளைக்கு அடிபட்டோடுவார்கள்; எனக்கவன் பகையென்பார்கள்; நாளைக்கு உறவாடும்வேலையிலிருப்பார்கள்; எப்போதும் மெத்த நல்லவனென்பார்கள், சற்றுப்போதைக்கெல்லாம் அப்பா! அவனு கெட்டவனென்பார்கள். அவர்களுக்கு ஈனமான மில்லாமையாலும், நாணம் வெட்கம் நலிந்தமையாலும், களிம்புநீங்கிய செம்புபோல்விளங்கி, முன்சொன்ன வார்த்தைக்குப் பின்சொன்னவார்த்தை மாறுபடுமேயென்றும் மதிகெட்டலைவார்கள்; மானமுள்ளவர்கள் சொற்சோர்வுபடாமலிருந்து, மானக்கேடுவராமற் காத்துத் தங்கள்பிராணனைத் துரும்பாய்மதித்து, சத்துருநேரிட்டால், யுத்தமும்பண்ணி வெற்றியும்பெற்று, வாகைமாலையுற்றுத் தீரலட்சுமிக்கு இருப்பிடமாவார்கள். ஆதலால், "பழம்புண்ணுளி பரிகாரி யென்பதுபோல்" நாலு துறையுமறிந்த அநுபவசாலியாகிய பெரியோர்கள் இப்படிபோனல், இப்படிமுடியும் இன்னதுசெய்தால், இன்னதுவருமென்று நம்போல்பவரைத் தடுத்துச்சொல்லவெண்ணிய சம்பந்தமுண்டா யிருந்தபடியால், சொல்லிமுடித்தனர். வழியே போகிறவர்கள் நமக்கு நற்புத்திசொல்ல வருவார்களா? அப்பா துரியோதனு! முதுமறையாளராகிய இம்மூவரும் மும்மூர்த்திகளுக்கொப்பானவர்கள். சாபாநுக்கிரக சாமர்த்திய முள்ளவர்கள். இத்தன்மையராகிய சீவன்முத்தரை இக்கர்ணனெதிர்த்து இழிவாகப்பேசுதற்குத் தகுதியானவனோ? நல்லது. இப்போதுவருகிற அருச்சுனனுக்குமுன்னின்று, போர்கொடுத்து, வெல்லுந்திடமுள்ள ஆரியருள்ளமும் அவர்களுடைய காதுகளும் வெம்பிவெதும்பி வெந்துபோகும்படியாய் விளைத்துவிட்டீர்களே. ஆகா! இப்படியும்பேசலாமா?

ஐயோவென்று தன்கையையோடுகையறைந்து, முகம்வாடித் தேர்விட்டிழிந்து, சூரியன்போற் புகழ்படைத்த வீட்டுமர் துரோணர் கிருபர் அசுவத்தாமா இவர்களிடத்திற்குச் சென்றுகின்றனர். பிரதாபம்பெற்ற பாட்டனுர் தேர் விட்டிறங்கு முன்னமே துரியோதனன்மயங்கி, தானும் தேர்விட்டிறங்கி ஓடி வந்தான்.

அப்போது, துரோணர்முதலிய மூவருக்குஞ் சந்தோடமுண்டாம்படி யாகத் துரியோதனனைப்பார்த்து வீட்டுமர் சொல்லுகின்றனர். அப்பா துரி யோதனு! இம்மூவரும் எப்படிப்பட்டவர்களென்றால், தேவருங் கொண் டாடுகின்ற சீலத்திறமுடையவர்கள். நம்மைப்போன்றவர்களால் வணங்குவ தற்கும் வழிபடுவதற்கும் வாழ்த்துவதற்கும் பூசிப்பதற்கும் விசுவாசிப்பதற் கும் நேசிப்பதற்கும் தருமநீதிகளை யோசிப்பதற்கும் தானம்பெறுவதற்கும் நன்னெறியாய்ந்து நன்மார்க்கம் போதிப்பதற்கும் நமதுமனத்தைச் சோதிப்ப தற்கும் கருணைக்கண்வைப்பதற்கும் ஆசீர்வசனம் செய்வதற்கும் உன்னதத் தானத்திலிருந்து உயர்ந்த பூஜிதையாய்ப் பெருமைபெறத்தக்க பெரியோர் கள். இவர்களுடையதிருவடி நமது மணிமுடிமேற் பதிக்கத்தக்கதன்றி வேற ன்று. இப்படியிருக்க, இவர்களைக்கோபித்து, அற்பமாகப்பேசி, அவமதிப்பாக மதித்து, அவர்கள் சிந்தைவருந்தத் திடுக்கிடச்செய்து, நாம் வீண்பழிசுமந்து வினைமூட்டை கட்டிக்கொள்ளுவதற்கு உரியோரன்றே. துரியோதனுவென்று பாரமார்த்திய தருமங்களைப்படித்து, இவ்வளவுதானு உன்னுடையஇராசாங்க மென்று வெறுத்து, "பெற்றார் அகடழித்தால் பிறரும் அகடழிப்பர்" என்னும் பழமொழியு மெடுத்துக்காட்டிப் பெரியாரைப்பிழைத்த பேதைமையால், கண்டவர் நின்றவர் கொண்டவர்கொண்டபடி கொழிப்பார்கள்; அண்டையய லுஞ்சிரிப்பார்கள்; சண்டையின்தன்மை உனக்கென்னதெரியும்; சாதுக்கள் சேதியை நீ யெப்படி அறிவாய்; சாதுசங்கப்பழக்கம் எவ்வாறு உணர்வாய்; காரியத்தாழ்வுசெய்து, கலகப்படுத்திக் கலைத்துவிட அறிவாய். போபோ வென்று கடுஞ்சொற்சொல்லி, ஆசிரியருடைய பாதங்களில் வீட்டுமர் வீழ் ந்து கையுமெய்யுங்குவிய நேயமும் அன்பு நிறைய, வெற்றிக்குவித்தாகிய வேதவேதியரைப்பார்த்து சொல்லலாயினர்.

ஆசாரியசுவாமிகளே! தனுர்வேத சதுர்வேத சம்பன்னர்களே! சரணம் சரணம். புல்லறிவுடையோர் என்னசொன்னுலும், கற்றறிவுள்ள உத்தம ராகிய தங்களைப்போன்றவர்கள் அதைக் குற்றமாய்க்கொள்ளார்கள். மேலும், தங்களை யிகழ்ந்துபேசிய தறுகண்ணுளனை வதிலுக்கு தாங்களிகழாமல், சீவ காருண்யத்தால் பொறுக்கவேண்டும். அதுவுமல்லாமல், ஊழ்வினைப்பயத் தால் இகழ்ந்தவர்கள் மீளாநரகத்திற்கு ஆளாகாமல், இறைவனைக்குறித்து, மந்திரசெபார்ச்சனைசெய்து மன்னிப்புக்கேட்டு வரம்வாங்கி பொறுத்தலும் சான்றோர்க்குரிய கடனுகையால், பூரணகிருபாநோக்கமுள்ள புண்ணியர் களே! இந்தப்புத்தியில்லாத பேயருக்குக் குற்றநேரிடாமல், சித்தமிரங்கித், திருவருள் பாலிக்கவேண்டும். பகைவர் நேரிட்டசமையத்தில், இப்படிதா பேசிய வீண்வீரப்பேச்சும் விருதாக்கைவீச்சும் பயன்படாது. காற்றுக்குப்

பதர் கலங்காதிருக்குமா ? கலங்காமணியாகிய காரணர்களே! அடிமைபுகுந்த எங்கள்பேரில், அன்புவைத்து ஆதரிக்கவேண்டும். இனி நான்சொல்லவேண் டிய உபசாரமென்ன விருக்கின்றது, தனுவேதக்கடலும் சதுர்வேதக்கட லும் உள்ள நிறையக்கொண்டிருக்கும் உத்தமர்களே! குற்றமற்ற உங்களுக் கொப்பாக வேறொருவரை நினைக்கத்தக்கதோ? அதுநிற்க, மற்றொருகாரியம் குருகுலநாதனுக்கும் அவன்சேனைக்கும் ஏதாகிலும் ஒருதீங்குவருமாகில், அப்பழியாவது துரியோதனனுக் குரிமையாகிப் பிரியாதிருக்கிற தனுவேத சம்பன்னராகிய உங்களைச்சாராமல்விடாது. அப்போது, மதிப்பிலுயர்ந்த உங்களை நாடெங்குந் தூறுவார்கள் ; மதிப்பற்றவர்களைக்குறித்து யாரும்பேச மாட்டார்கள். ஆதலால், தம்மனத்திற் பலவாறாகிய குற்றங்குறைகளிருந் தாலும், அவைகளைத் தீர்க்கவயிரமாகப் பாராட்டாமல், தம்மையடுத்த மன் னவனுக்கு எப்போதுங் கீர்த்தியுண்டாம்படியாகச் சகாயஞ்செய்யவேண்டும். மநுநெறிமுதலிய மற்ற நூல்களிலும் சொல்லியிருக்குமுறையு மிதுதானே. அப்படிப்பட்ட சாத்திரங்கள் முற்றுங் கற்றிருக்குங் கருத்தினையுடைய கடவு ளரே! மற்றோர்விண்ணப்பம். இக்கர்ணராசன் கழறியவார்த்தைகள் களங்க முள்ளனவென்று சிந்திக்கவேண்டாம். அவனுடைய கருத்தை வேறுவகை யாகக் கண்டுகொண்டேன். அதென்னவெனில், தானிப்படிப்பேசினால், உங்க ளுக்கு இன்னுமேலாகிய வீரமுந் தீரமும் உண்டாய் அருச்சுனனை வெற்றி கொள்வீர்களென்றும் துரியோதனன்மேற் கொண்டிருக்கின்ற உங்களன்பு வெளிப்படுமென்றும் புருஷயுத்தியாகச்சொன்னான். ஆதலால், தாங்கள்மனம் பொறுத்துக் காத்தருளவேண்டும். இதோ நமக்கெதிரில், அதாகதஞ்செய்யக் கருதிவருகிற சுவேதவாகனனென்னுங்காளை சூரியபகவானுக் கொப்பாகக் காணுகின்றான். அவனுக்கு முன்னே நாமும் நமதுசேனையும் பனிபோலாய் விடுவோம். இது பிரத்தியட்சமாகத் தெரிந்திருந்தும், நீங்கள் மனவெறுப் படைவானேன்? அப்பால், தங்களுடைய சித்தமென்று அளவிடுதற்கரிய மிக்க பிரதாபத்தையுடைய வீட்டுமர் வேண்டிக்கொண்டார். உடனே, துரி யோதனராசனும் கர்ணராசனும்பணிந்து, துரோணர் கிருபர் அசுவத்தாமா முதலிய மூவரையும் துதித்துச் சுவாமிகளே! விளையப்போகின்ற தீங்கு இவ் வகையானதென்று தெரியாமல், ஏதோதோ பேசிவிட்டோம். எங்கள்பிழை யைப் பொறுத்துக் காக்கவேண்டுமென்று, எட்டுறுப்பு நிலமுறப்பணிந்து வேண்டிக்கொண்டு அவர்கள் மனக்குறையை மாற்றினார்கள். இப்படி இவ் விருவரும் வேண்டிக்கொண்டபோது, சான்றோர் சினமாதலால், நீர்கிழிய வெய்த வடுப்போலுமாறி ஆசீர்வதித்துப் பக்கத்திலுள்ள பலரையுநோக்கிச் சிலமொழி பகர்ந்தார்கள். இதழ்விரிந்த வலம்புரிமாலையணிந்த குருகுலவேந்த னும் அங்கதேசத்தரசனும் எங்களைப்பேசியசொல்லானது முடிவில்லாத துன் பத்தை விளைத்துவிட்டது. இத்துன்பம் தேவர்கள் கைகூப்பிச் சிந்தித்துவந் திக்கப்பெற்ற விரதசீல வீட்டுமருடைய சாந்தவசனமென்னும் அமுததாரை யால் தணிந்துவிட்டது. இனிச்சிந்தனையில்லை. இப்பால், நம்மேல் கோபங் கொண்டுவருகிற நரனுக்குத் தப்பிப்பிழைக்கத்தக்க வழியையும் மேல்நடக்க

வேண்டிய வகையையுந் துரியோதனராசனுக்காகவேண்டிய உறுதியையும் யோசித்துச்சொல்லுங்கள். நாமெல்லோரும் படைகூடிநின்று, வருகின்ற வனைவனைத்துப் போர்புரியும்போது, அந்த அருச்சுனன் இந்தத்துரியோதனன் மேலும், இலட்சியம்வைத்து வருகின்றவனுகையால், எதிரில்நிற்கிற நம்மை யெல்லாம் ஒருபுறமாயொதுக்கிவிட்டு, வணங்காமுடி மன்னனைவனைத்துத் தனித்து, விசயகாண்டீபக் கணையாற்றொளைத்து, அடிநாளைப்பகையை ஆற்று வானாகில், அநேககோடி அசுவரதங்களும் திரளாகியசேனையானைகளும் வெகு வாகிய வீரர்களும் நாமும் கும்புகூடியிருந்து என்னபிரயோசனம்? துரியோ தனன் அடிபட்டான்; அருச்சுனன்கையிற் பிடிபட்டான்; வில்லாசிரியர்முத லிய பல்லோரு மிருக்கின்றார்கள். பார்த்தீர்களாவென்று, பழிப்பும் அவ மதிப்பும் வருமல்லாமல், வேறு புகழுண்டோ? ஐயா வீஷ்மோசாரியரே! நமது நேரில்வருகிறவன் நீலமேனியுடையவனாதலின், அருச்சுனனென்பதற்கு ஐய ப்படவேண்டியதில்லை. ஆகையால், அவனுடனெதிர்த்துச் சண்டைபோடுவ தொன்று. அல்லது, ஒருவருடம் அஞ்ஞாதவாசத்தவணைக்கு ஒருநாட்குறை வென்று துரியோதனமகாராசன் எண்ணிச்சொன்னபடி, வழக்கிட்டு மறுபடியுங் காட்டுக்கோட்டி விடுவதொன்று. இவ்விரண்டு காரியத்தினுல், ஒன்றை நிச்சயித்து, திரமாய்ச் செய்துவிடுங்கள். மிஞ்சிப்போனபிற்பாடு, விழிப்பது காரியமல்லவென்று துரோணர்சொல்ல, அம்மொழியை வீட்டுமர் கேட்டுச் சிந்தைதெளியச் சொல்லத்தொடங்கினர்.

அஞ்ஞாதவாசத்தவணைநாளைக்குறித்துவீஷ்மர்பேசுவது.

அப்பா துரியோதனு! தப்பானகாரியத்திற் பிரவேசிக்கவேண்டாம், நானு னக்குச் சொல்லுவதைக்கேள், அஞ்ஞாதவாசத்தவணைநாளைக்குறித்துப் பாண் டவர்கள்மேல்வழக்கிட்டு மீட்டும் வனவாசத்திற் கனுப்ப வல்லவர்கள் ஆண்ட வனுற்படைத்த நமது குலமுதல்வனுகிய சந்திரனுடையநிழல்படிந்த மண்ணு லகமுதலிய மும்மைபுலத்திலுங்கிடையாது; அதெனப்படியென்றால் இறைவ னுடைய ஆஞ்ஞையினுல் காலசக்கரஞ்சுழன்றுவருகின்றகாலையில் அகப்பட்ட சூரியசந்திரர்முதலாகிய நவக்கிரகங்களின்சாரத்தினாலும் தினசாரபேதத்தினு லும் சற்றேறக்குறைய ஐந்துவருடத்திற்கொருதரம் அதிகமாசம்வருகின்ற கணிதப்படிக்குயோசிக்குமிடத்தில் இப்போது இரண்டுமாதமும் பன்னிரண்டு நாளும் உயர்ந்திருக்கின்றது, அவ்வுபநாளைக்கூட்டி நேற்றுஉதயத்திற்கே பதின் மூன்றுவருடமுங்கழித்துப்போட்டார்கள், இன்றையத்தினம் தவணைநாளுக்கு மேற்பட்ட நாளாகையால் நேர்புகுந்து போர்செய்யப் புறப்பட்டிருக்கின்றான். நீயதை யாராயாமற்சொன்னாய்; மன்னவனே! பாண்டவர்கள் எப்பொழுதுஞ் சொற்சோர்வு படார்கள். வார்த்தைதப்பி வசனிக்கமாட்டார்கள் ஒருவர் தினையத்தனை நன்றிசெயினும் அதைப் பனையத்தனையாகக்கொண்டு பிராண னுள்ளவரையிலு மறவாமற் புகழ்ந்துபேசத்தக்கவர்கள், ஒருவர்செய்த பல பொல்லாங்குகளையும் அருவிநீர்போல் ஆற்றிமறப்பார்கள்; தீர்க்கவைரிக ளல்லர், சத்தியநெறியும்நித்தியவிரதமுந்தப்பார்கள், வானவர்கொண்டாடும் ஞான

முள்ளவர்கள் வண்மை உண்மை திண்மையுடையவர்கள், நல்லொழுக்கமும் அவ்வொழுக்கத்திற்குத் தக்க நடைப்பழக்கமுமுடையோர், பொறுமையற்றவர்கள் அயலார்சொத்துக்கு ஆசைவைக்காதவர்கள், புறங்கூறாதவர்கள், அக்கிரமத்திற்கு உடன்படாதவர்கள், குலமுறைகுன்றாதவர்கள் ஆகையால் அவர்களொருநாளும் அபகீர்த்திபெறமாட்டார்கள் அபசெயமடையார்கள். இப்படிப்பட்ட இதயசுத்தியுள்ளவர்கள் இராசசபையில் ஒப்புக்கொண்டுபோன தவணைநாள்கழிப்பதற்குமுன்னமே தர்ராளமாகச் சண்டைக்குவருவார்களோ? அவர்கள் சாத்திரங்கல்லாதவர்களோ? கணிதநூலுணராதவர்களோ? நல்லது அப்படி தப்பிவருந் தன்மை பாண்டவர்களிடத்தி லுண்டாயிருக்குமானால் அத்தினபுரத்தில் நீங்களாடிய தலையறுந்த ஆட்டத்திற்கும் சொக்கட்டானாட்டத்திற்கும் துரோபதையைத் துகிலுரிந்த வாட்டத்திற்கும் இராசசபைகூடிய உங்கள் துன்மார்க்கக்கூட்டத்திற்கும் உட்பட்டுத் தடைக்கஞ்சிய நாகம்போலும் கரையின்றிக் கட்டுப்பட்டிருக்குங் கடல்போலும் பெருமையாயிருப்பார்களா? இதனாலாவது நீதெரிந்துகொள்ளவேண்டாமோ? கழனியிற்றழைத்த கருப்பஞ்சோலையின் செழுமையைச் செந்நெற்பயிர்காட்டவும் செந்நெற்பயிரின் கொழுமையைப் படப்பையில்வளர்ந்த கமுகஞ்சோலைகாட்டவும் கமுகஞ்சோலையின்வளமையை முடக்கின்றியுயர்ந்த தென்னஞ்சோலை தெரிவிக்கவும் தென்னஞ்சோலையின் சீர்மையை இன்னுமுள்ள சோலைகள் விளக்கவும் தங்குநிலவளத்தினையுடைய குருநாட்டுக்கதிபதியான குபேரனே! பன்னிரண்டாண்டு வனவாசம்பண்ணிய பாண்டவர்கள் சந்திரனுடைய சாரகதியினால் அஞ்ஞாதவாசவாண்டொன்றையும் நேற்றோடு தொலைத்துவிட்டார்கள்; நீயதைக்குறித்தையப்படவேண்டாம்; பதின்மூன்றுவருடமும் போக்கிவந்தால் உங்கள் நாட்டை விட்டுவிடுகிறேனென்று நீ ஆதியிற் சொல்லியவண்ணம் பாண்டவர்களுக்குரியதாய பாகத்தைக்கொடுத்து அவர்களுடன் கலப்பது இராசதர்மத்திற்கும் உத்தமம் சத்தியவாக்குந்தப்பாது இப்படி நடவென்று மனத்தழுக்ககன்ற விஷ்டுமர் சொல்லிமுடித்தார்.

இவ்வாறாகச்சொல்லிய குலகுருவாகிய பிதாமகனைத் துரியோதனமகாராசன்நோக்கி முகங்கருகி மனங்குறுகி இதயந்தளர்ந்து எங்களையாவே! தேவரீர் சொன்னசொல் எனக்குச்சம்மதமில்லை முன்னே நிச்சயித்தனுப்பிய பதின்மூன்றாண்டுங் கடந்துபோனால் தானென்ன? இன்னமும் ஒருமுறை வனவாசம்பண்ணிவர ஓட்டிவிடுவனேயன்றி நான் நாடுகொடுக்கப் போகிறதுமில்லை நீங்களந்தத் தவணைநாளைநாடிக் கணக்குப்பார்க்கவேண்டுவதுமில்லை. இதோ மின்னல்போற் பிரகாசிக்கும் வில்வேந்தர்களுக்குமுன்பாக விளம்புகின்றேன். சங்கினமீன்ற முத்துக்களால் அடைபடுமடைநீர் தடைபடாதோடுங் கழனிகள்சூழ்ந்த நாடேனும் நகரேனும் ஐவர்க்களிக்கமாட்டேன், அதேனெனில் நான் என்னகொடுத்து இணங்கினாலும் என்னிடத்திலாசைவையாமல் எந்நாளுஞ் சத்துருவாயிருப்பர்களன்றி எனக்குமித்துருவாகார்கள். ஆகையால் நான்கொடுத்துப் பொல்லாங்கு பெறுவதைவிடக் கொடாமல் விரோதப்படுவதே நன்மை; அவர்கள் வேண்டுமானால் சண்டைபண்ணி மூன்றுலகத்

தையும்வென்று தாமே ஆளட்டும், அவர்கள் செல்வஞ்செருக்கி வாழுங்காலத்தில் துரியோதனனால் சுகப்பட்டோமென்று சொல்லிக்கொள்வார்கள். மேலும் எக்காரியமெப்படியானாலும் எவர்களெவ்வாறு சொன்னாலும் அவைகளுக்கெல்லாம் அசையாமலிருந்து ஓரேநிலையாகப்போர்புரிந்து போர்முனையிலிறந்தானென்று எனக்கொரு கீர்த்தியுமுண்டாம் என்றான்.

இப்படி வணங்காமுடிபெற்ற மன்னன் திரமாகச்சொன்ன கருத்தையும் வீஷ்மர் சொல்லிவந்த வகையையும் காலநிதானத்தையும் படைமன்னர்களுடைய எண்ணத்தையும் வெற்றிமாலை பொறுத்த துரோணரறிந்து பெரும்பிரதாபமும் பெருமையும்படைத்த கௌரவகுலச் சிங்கமே! பாண்டவர்களுக்கு நாடுகொடேனென்று நீசொன்னது மெய்யானால் உனக்கு அவர்கள் ஓடு கொடுப்பார்களென்பது உண்மையே இனியொருகணப்பொழுதும் நீயிவ்விடத்தில்நிற்கப்போகாது, எங்களையும்திரமாகநம்பாதை, நாமிப்போது கைக்கொண்டிருக்கின்ற மாட்டையோட்டிக்கொண்டு ஓட்டமுநடையுமாய் ஊர்போய்ச்சேருகையில் நீயும்வெற்றிபெற்றதுபோலாம். நமது யுத்தியும் நிறைவேறும் இவடத்திலிருந்து போர்புரிந்து வெற்றியடைந்து போகலாமென்றால் நாம் ஓட்டிய மாட்டையுங் குருநாட்டையுமிழந்து அநியாயமாக உயிரிழக்கவேண்டிவரும்; ஆனதால் நம்முடையசேனைகளை இரண்டுபிரிவாக்கி ஒருபிரிவை ஆவினங்களுக்குக்காவலாக அழைத்துக்கொண்டு நீ அத்தினாபுரம்போய்ச்சேர்வதே உத்தமம். மற்றசேனைகளுடன் நாங்கள் கும்பலாகநின்று வருகின்ற தனஞ்சயனை உன்மேல் வரவொட்டாமற்றடுத்து எங்களாற்கூடியமட்டுஞ் சண்டைதொடுத்துச் சமயம்பார்த்து நாங்களும் பட்டணம்வந்து சேர்ந்துவிடுகிறோம்; விரதங்கெட்டாலுஞ் சுகந்தக்கவேண்டும் சுகங்கெட்டாலும் விரதந்தக்கவேண்டும்; இரண்டுங்கெட்டால் என்னபலனுண்டாம். இறைவனே! நாங்களெப்படியாகிலும் அடிபட்டு அவதிப்பட்டுத் தட்டுக்கெட்டுத் தடுமாறிவந்தாலும் விராடபுரத்திற்குப் போய் மாட்டுமந்தைகளை மடக்கிவந்தோமென்று பெருமைபாராட்டிப் பேசித்திரியலாம், இழிவென்பது நம்மை யெட்டிப்பாராதென்று தனுவேதசம்பன்னருரைத்தருளினர். அக்காலையில் வில்லாளியாகிய வீட்டுமரும் கிருபரும் மகிழ்ந்து அந்தோ! இந்தயுத்தி மேன்பாட்டை விளக்குமென்று விளம்பிஇரத கச துரக பதாதிகளை இருகூறாக்கி ஒருகூறு துரியோதன மகாராசனுக்குத் தேகசவாட்சணைக்காவலும் மற்றோர்கூறு பசுமந்தைக்குக் காவலுமாக அமைத்து அத்தினாபுரத்தைநோக்கிப் போம்படியாக அனுப்புவித்தார்கள்பெரியோருரைத்த பேச்சின்படி உடன்பட்ட பிரதாபமுடிவேந்தன் புறப்பட்டு அரவக்கொடிநாட்டிய தேரிலமர்ந்து ஆனினங்களையும் அநேகவீரப்படைகளையுந் தனக்குமுன்னாநடத்தித் தானுந்தேரை விரைவிற்செலுத்திக்கொண்டு சந்தடிசெய்யாமற்போயினான்.

இப்பால் துரோணர்கிருபர்வீட்டுமர் அசுவத்தாமா கன்னன்முதலியமன்னர்மன்னர்களும் இங்ஙனநின்ற சேனைப்பிரிவைக் கடல்போற் பெருக்கிக்கொண்டு எங்குந்தாமாய் எதிர்த்திருந்தார்கள். எவ்வகைப்பட்ட திறமுடையோ

ரும் இவர்களுக்கு முன்சென்று நின்று யுத்தஞ்செய்வது மெத்தவும் அருமை
யென்று இளைத்துவாடி ஓடிப்போம்படியாகச் சிலசேனைகளைப் பலசேனைக
ளாகப் பலசேனைகளைச் சிலசேனைகளாகத் தோற்றும்படியமைத்து உத்தர
திசைக்குக் கிருபர் தட்சணதிசைக்கு அஸ்வத்தாமா இந்திரதிசைக்குக் கர்ணன்
தூசிப்படைக்குத் துச்சாதனன் கூழைப்படைக்கு விகர்ணன் இவர்களை மெய்
க்காவலாக நிறுத்திச் சேனைகளுக்கு மத்தியில் சகுனி சயிந்தவன் சோமதத்
தன் பாகுலீகன் முதலாகிய முதன்மையோரை யிருத்திப் புறமிடாப்
புகழ்பெற்ற புண்ணியசீலனாகிய வீட்டுமரும் மங்களம்பொங்கி மகிழ்ச்சிதங்கிய
துரோணரும் சேனைகளின் முனைமுகத்தினும் நடுநிலத்தினும் முயற்சிவிடாமற்
பொருந்தினார்கள். வானமளாவிய குடைகளும் வாலொளிமின்னும் படை
களும் வகைவகையானகொடிகளும் வளைதடிமுதலிய தடிகளும் பாலா பல்ல
யங்களும் மகரதோரணங்களும் நிறைந்து முரசு காகளம் கொம்பு பம்பை தா
பூர வீரசின்னம் சங்கம் பேரி மற்றுமுள்ள வாத்தியங்களெல்லாம் பூமி
செவிடுபட முழக்கி இத்தன்மையாக ஆர்ப்பரித்திருந்த இவர்கள் துணியும்
சேனாசயினியங்களைத் திருத்தியமைத்ததிறமும் துரியோதனன்பசுமந்தையுட
னீங்கிப் பட்டணம்போகின்ற ஒழுங்கும் தேவேந்திரன்கண்டு விட்டேற்றியாய்
ஒருதேரில்வருகிற அர்ச்சுனனுக்கும் கெட்டிக்காரத்தனமாய்ப் பட்டணம்
போகின்ற கௌரவர்களுக்கும் இவ்விடத்தில் நடக்கப்போகின்ற யுத்தத்திறத்
தைப் பார்ப்போமென்று அக்கினி எமன் வருணன் குபேரன் பிரமன் விஷ்ணு
உருத்திரன் முதலாகிய சகலதேவதைகளுடனே அந்தரநிறைய இந்திரவிமா
னத்தின்மேல் வந்துநின்றனன்; அவ்வேளையில் பரவாசுதேவ னநுக்கிரகஞ்செ
ய்ய அவனுக்கிணைப்படி சொர்க்கலோகநிவாசம்பெற்ற அஷ்டகன் வசுபத்திரன்
வாருகன் நகுடன் மாந்தாதா சிபி புரூரவன் கார்த்தவீரியன் பரதன் பகீரதன்
சகரன்தசரதன் அரிச்சந்திரன்பாண்டு இவர்கள்முதலாகியமகாராசரும் விருது
டால்மேளங்களுடன் அரிச்சந்தனாதி கற்பகப் பூமாலைவாசங் கமகமவென்று
பரிமளிக்கவந்து விளங்கி வேடிக்கை பார்த்திருந்தார்கள்; அவர்களில் தன்
மகனைக்கண்ட சந்திரகுலத்தோன்றலான பாண்டுமகாராசன் மகிழ்ச்சி
கொண்டு இரண்டுதோளும் பூரித்துத் திரண்ட உடலும்பாரித்து இன்பமது
வுண்டு மகிழ்ச்சியுமேற்கொண்டு களித்தவர்போல் இந்திரனுக்கு அருகாசனத்
திற்பொருந்தியிருந்தான்.

இப்படி தேவதைகளுடன் தேவேந்திரனும் வானத்தில் தானமில்லாமல்
விமானத்திலிருந்து வேடிக்கை பார்க்கும்போது தேனிறைந்த மாலைபுனைந்த
சூரியகுலத்தோன்றல்களும் சந்திரகுலத்தரசரும் சற்றும் ஏமாறாமல் விழித்த
கண்விழித்த வண்ணம் பார்த்துக்கொண்டிருக்கும்போது விசயப்பிரதாப விர
காண்டீப விசயன் பானுகோடி சொலிதசோப்யம்போல் வெளியேவந்தான்.
இப்படி தேர்செலுத்தி அணிவகுத்திருக்கும் கௌரவசேனைக்கெதிரில்வந்த
காண்டீபனது தேரொலியென்னும் பேரொலியால் அட்டகிரிகளும் அட்டநா
கங்களும் அட்டதிக்குகளும் உலகபாலர்களும்அட்டவசுக்களும் திடுக்கிட்டுத்
திகைத்தார்கள். அத்தேரிற்பூட்டியகுதிரைகளின் அங்குரத்தெழுந்த தூசிப்

படலமானது எண்டிசையுமொய்த்து எழுகடலூர்ந்தூற்றுச் சக்ரவாளச்சுற்றும்
அண்டமுகடுமுற்றுங் கப்பிக்கொண்டதுகள் வேடிக்கைபார்க்க நின்ற தேவரு
மோதுங்கினார்கள். சக்ரவர்த்திகள்முதலிய யாவரும் பதுங்கினார்கள். சேனை
முனையிற்செறிந்திருந்த தீரருநடுங்கினார்கள். சேனையும்சேனாபதிகளானவீரரும்
ஒடுங்கினார்கள் தங்கள்தங்கள் சீவன் தப்பாமயங்குகின்ற துரியோதனனுடைய
நால்வகைச்சேனைகளின் திறத்தையும் சுற்றுநின்ற படைவீரர்களின் மறத்தை
யும் எளிதிற் றெரிந்துகொண்ட விசயன் தனக்குச்சாரதியாகிய உத்தரகுமார
னைப்பார்த்து, எதிரிசேனைகளிருக்கின்ற இறுமாப்பைப்பார்த்தாயா? நீரோட்ட
முள்ள நெடுங்கடல்போல், நிலைகொள்ளாதிருக்கின்றது, ஆனாலும் நமக்கொரு
இலட்சயமன்று. இப்போதவர்கள்செய்திருக்கிற உபாயமான அபாயத்தை உன
க்கு நானெவ்வாறுரைப்பேன், என்னுடைய வெட்கம் என்வாயை மூடுகிறது
நம்மையவர்கள் மோசம்பண்ணிவிட்டார்கள் அந்தச்சங்கதியை உனக்குச்
சொல்லாமல் வெல்லக்கூடாது. அதென்னவென்றால் காட்டுக்குப்போன
பாண்டவர்களில் பார்த்தனே தலைமாட்டுக்குத் தீங்குவிளைக்க வந்துவிட்
டான்; நீ காட்டுக்கு நல்லதுரையானதால் நாம்கூட்டிய மாட்டுமந்தையை ஓட்
டிக்கொண்டு உன் வீட்டுக்குப்போய்விடென்று வணங்காமுடி மன்னனுடைய
மனத்தைத்திருத்திப் பாதிச்சேனையை அவனுக்குக்காவலாகப்பொருத்தி யனு
ப்பிவிட்டு மீதிச்சேனையை நமக்கெதிர்நிறுத்திப் போரணிவகுத்துப் போராட
நினைத்துப் பெரியோர்கள் நிற்கின்றார்கள், இவர்களுடன் யுத்தஞ்செய்வோமா
னால் பசுக்கூட்டங்களோடுதுரியோதனன்பட்டணம்போய்ச்சேர்ந்துவிடுவான்.
அப்பால் இவர்களைவென்று நாமடையப்போகிற பயனென்ன? ஆகையால்
நமக்கு நேர்நிற்கிற பெரியோர்களுமறியாமல் மன்னனுக் குரியோர்களு மறி
யாமல் நாம்செய்யப்போகிறவேலை இன்னதென்று யாருங்குறியாதிருக்கும்படி
யாகத் தேரோட்டிக்கொண்டு போகாநின்ற துரியோதனனுக்குக். குறுக்கே
போய்நின்று மறித்துவருத்தி நமதுமாட்டைமடக்கிக்கொள்வது மதியூகியாகிய
மன்னவர்செய்யும்போர்த்திற உபாயமாவது, மைந்தனே! நாம் மீட்கவந்த பசு
மந்தைகள் அத்தினாபுரம்போய்ச் சேர்ந்துவிட்ட பின்பு அவ்விடத்திலுள்ள
பல்லோரையொழித்தும் வல்லோரையழித்தும் பிரயோசனமென்ன? ஆரியக்
கூத்தாடினாலும் காரியத்திற் கண்ணாயிருக்கவேண்டும், ஆதலால் முன்னதாக
கப் பசுமந்தைகளைமடக்கி விராடபுரத்திற் கனுப்பிவிட்டு அப்பால் பெரியோர்
முதலிய உரியோர்களுடன் சமராடித் துரியோதனனையுஞ் சுற்றவிட்டு வெற்றி
பெறுவதற்குத்தரிதமாயிருக்கின்றோம், ஒருவேளை நாம் துரியோதனனைத்தடு
க்க நாடிப்போங்காலையில் இந்தப்பெரியோர்கள் மேல்விழுந்து போர்கொடுப்
பார்களானால் நாம் நேர்புகுந்து கடுங்கணைப் பிரயோகங்காட்டிக் கலங்கிக்கண்
ணூர்க்குக்காணாமல் ஓடிப்போய்படியாய் விலக்கிக்காரியானுகூலங் காண்போம்;
இதைவிட யோசனையில்லையென் றிசைத்து எக்களிப்போடொழுந்த பற்குன
னைப்பணிந்து உத்தரகுமாரன் சித்தமகிழ்ந்து சரிதான், இப்படிப்பட்ட கால
த்திலன்றோ? என் சாமர்த்தியத்தை யறியவேண்டும் அத்தனே! என்று
குதிரைக் கடிவாளத்தை குறுக்கிப்பிடித்துக் குலுக்கி விடுத்துச் சிகரக்குன்றம்

போன்ற தேரைச் செண்டுபோலெழுப்பிப் பெரியவர்களுக்கு வலசாரிவருவது போல் சூழ்ச்சிகாட்டித் துரியோதனன்போன திசையைத்தொடராமல் மேலுக்குமேலாக மேற்றிசையைநோக்கி விரைவில்விட்டுவிட்டான்.

அக்காலையில், அனுமக்கொடியாடுந்தேர்மேல், அமர்ந்துவருகின்ற அருச்சுனனே தென்றிசையணியிலிருந்த சிலைக்குருவாகிய துரோணாசாரியருக்குக் குருபாதவணக்கம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று குறித்துக், காண்டீபம் வளைத்து, நாணேற்றி, நாணோசைகாட்டி, இரண்டுகணையெடுத்துப் போற்றிப் பணிந்துவிடுத்தான். காமதகனனாகிய கண்ணுதல்பால்கடாட்சம்பெற்ற காண்டீபன் அபிமந்திரித்துவிட்ட அத்திரம் இரண்டும் அந்தரம்புகுந்து, ஆகாய கங்கையைகவர்ந்து, அலர்ந்துவிரிந்த மலர்களைப்பறித்துவந்து, துரோணாசாரியருடைய பொன்னடிமேற்பொழிந்து, பூசித்துவரும்போது, பின்னும் இரண்டு பாணங்களைப் பிரயோகஞ்செய்தான். அவ்விரண்டுந் திரண்ட உருண்டை போன்ற அண்டத்திற்பரந்து, அவற்றுள் ஒன்றுபிரிந்து, ஆசிரியரைச்சூழ்ந்து வலம்வந்து திருவடியிற்பணிந்தது. மற்றொன்று பதின்மூன்றுவருடம் வனவாசஞ்செய்து, அஞ்ஞாதவாசமும்பண்ணித்துன்பந்தொலைத்துத் தேவரீருடைய அனுக்கிரகத்தால் இன்பம்பெற வெளிப்பட்டோம்; என்னுடன்கூடவே யாவரும் க்ஷேமமாயிருக்கின்றார்களென்று சுபஞ்சொல்ல வந்ததுபோல் ஆசாரியருடை செவியினிடத்திலொதுங்கி ரீங்காரமிட்டுநின்றது; இந்தவிந்தையைக் கண்ட துரோணாச்சாரியர் சிந்தைதளர்ந்து திப்பிரமைகொண்டு தியக்கமடைந்து ஒன்றுந்தோன்றும விருந்துவிட்டார். அவரத்தன்மையி லிருக்கும்போது மேற்குத்திசையிற்படர்ந்த அர்ச்சுனனே அங்கிருந்த தங்கள்குலமுதல்வனாகிய வீஷ்மாசாரியரைக்கண்டு அவரைத் தொழும்படியாகக் கருதித் துரோணாசாரியரைக் குறித்துத் தொடுத்த பிரகாரம் நான்குபாணம்விடுத்துக் கங்கை நீராட்டிக் கர்ச்சித்துப் புஷ்பங்களினால் அர்ச்சனைபுரிந்து செவிகளுக்கு க்ஷேம சமாசாரந்தெரிவித்து வடதிசையில்மேருவைப்போல்படைக்காவலிருக்கின்ற கிருபாச்சாரியருக்கும் நான்குபாணஞ்செலுத்தி வந்தனைவழிபாடுசெய்து காதுகளிடத்துங் கணைவிடுத்துக்காட்டித் தன்மேல் அவர்கள் நெடுநாளாக வைத்திருந்தகாதலை விருத்திசெய்து அவரவர்கள் தம்மைத்தாம் மறக்கும்படியாகத் தலைமயக்கங்கொள்வித்து இந்தச்சமயத்தில் தன்னையவர்கள் தொடராதிருக்கவும் தேடாதிருக்கவும் மோகனமுண்டாக்கிச் செவ்வானத்திற்கலந்து மறைந்து செல்கின்ற செங்கதிர்ச் செல்வனுடைய தேர்போல் தன்னுடைய தேரைச் செந்துகளால்மறைத்து அருகுநிறைந்த பெரியோர்களும் பிறமன்னர்முதலாகிய யாவரும் அறியாதிருக்கும்படியாக அவர்கட்குப்பின்பக்கமாக நெறிபற்றிப் போயினன். இவ்வண்ணம் பார்த்தனேறிய தேரை மூர்த்தண்யமாகத்திருப்பி முடுக்கி வேகமாய்விடுத்த உத்தரகுமாரன்திறத்தை வீஷ்மாசாரியர் துரோணாசாரியர் கிருபாசாரியர் அஸ்வத்தாமாமுதலிய யாவரும்பார்த்துப் பார்த்தனுக்குத்தகுந்ததேர்ப்பாகன் அகப்பட்டானென்று பட்சமாய்ப்பேசி மேலும் என்றுங்காணாத அதிசயம் இன்று கண்டவர்களைப்போல் ஆநந்தங்கொண்டு ஆ தெய்வமே! இந்நாள்வரையிலுந் தனுவேதங்கற்றுச் சம்பிரதாயமுற்று மந்தி

ரார்த்தங்களைப்பெற்றுச் சமர்த்தாயிருந்து சம்பிரமமாய்க் காலங்கழித்து வாழ்ந்த நாம் கதையிலுங்கேட்டில்லாத கற்பனையிலுங் கண்டறியாத அக்கினியாதி சயமான அம்புகளையனுப்பிக் கும்பலினின்ற நம்மைக்குறித்துஅன்புபாராட்டினனே யென்று ஒருவரோடொருவர் கூடிக்கசிந்து ஆகா! இந்தவல்லவனுக் கீடாகிய புருஷர்களுமுண்டோ? அடடா! 'விசயன்விட்ட கணைகளில் ஒரு கணையானது ஆகாயகங்கையை அள்ளிக்கொண்டுவந்து சளசளவெனப்பொழிந்து சரணங்களில் அபிஷேகம்பண்ணவும் மற்றொருபாணம் புஷ்பங்கள் பறித்துவந்து அர்ச்சனைசெய்யவும் மற்றொரு அஸ்திரம் வஸ்திரம்போல்வளைந்து வலஞ்சுற்றிவரவும் பின்னுமோரம்பு தன்செய்தியைக்காதிற்போதிக்குந் திறம் போலிரையவும் இப்படிக்கெல்லாஞ்செய்த பிரதாபம்வாய்ந்த பெருமையேய்ந்த தனுமறைமுதலிய சாஸ்திரங்களாய்ந்த தனஞ்சயன் சண்டைமுகத்திற்றொடுக்குஞ்சரத்தைத் தடைசெய்யப்படித்த தாட்டிகர்களுமுண்டோ? இதன்றியும் பெரும்பாரமேறினுந் தளர்ந்துவளையாத கற்றூணைப்போல் எத்தனை கோடி கொடிப்படைகள்சுற்றினுஞ் சற்றுமஞ்சாத தனஞ்சயனே மெத்தவல்லமைகொண்டு ஒருசாரதிதுணையைக்கண்டு சண்டைபோடத் தலைப்பட்டிருக்கின்றான்,இன்றுஇவனது போர்முகத்திற்கு நேர்முகங்காட்டித் தேர்செலுத்தியார்வெல்லப்போகிறார்கள். நாம் பிழைக்குமாறெப்படி? என்னிடத்திற் கற்காதகணையுங் கற்றிருக்கின்றானே கங்காபுத்திரனேயென்று துரோணாசாரியர் கண்கலக்கப்பட்டுக் கழற வீஷ்டுமாசாரியர் சொல்லத்தொடங்கினர்.

ஐயா துரோணாசாரியரே! அநுமக்கொடிபடைத்த அருச்சுனராசன் எனக்கு மரியாதை நடாத்திய மந்திராஸ்திரத் திறத்தையும் நம்மேலவனெதிர்த்து நாணுமல்வருகிற மனோதிடத்தையும் நிதானிக்குமிடத்து அவனோடெதிர்த்து அவனைத்தொடர்ந்து அமராடிவெல்வதற்கு யாவராலுங்கூடுமோ? அல்லாமலும் பாஞ்சசன்யப் பரந்தாமனாகிய ஸ்ரீகண்ணபிரானுடைய பரம தயாள பாத்திரனாயிருப்பவன் தந்தையாகிய இந்திரனுடைய சொந்தக் கருணையையும் மந்திரக்கணையையுந் துணையாகப்பற்றி அன்புக்குந் தயைக்கும் இடமாயிருப்பவன் ஏற்றுவாகன மூர்த்தியாகிய கூற்றுதைத்தோனது கடாட்ச வீட்சண்ய முண்டாயிருப்பவன், இப்படிப்பட்ட நல்வினைப்பயனுற்ற நரன்றன்னைச் சற்றேனும் சயம்பெறுகின்ற தன்யரில்லையே! நாமென்னசெய்யலாம்? நமதுசொல்லை உட்கொள்ளாமல் தள்ளிநடக்குந்துரியோதனன்துள்ளுங் காளைபோற் றுடித்துப் பாண்டவருடன் சொக்கட்டானாடி அவர்களுடைய நாடுநகரத்தைப்பிடுங்கிக்கொண்டானே. அதுவுமல்லாமல், பட்டமகிஷியாகிய பாஞ்சாலியம்மனைத் தலைமயிரைப்பற்றியிழுத்துச் சபையேற்றுவித்து, துயிலுரிந்து, மானபங்கம்புரிந்து பன்னிரண்டாண்டு வனவாசம்பண்ணப்போக்கிய அபாக்கியனானவன் ஒருபோதுஞ் சிலாக்கியனாகவேமாட்டான்.சத்தியவாக்கியனை தருமராசனுக்கிளைய தம்பியினாற்கெடுவான்; உயிர்விடுவான். இன்றைக்கு அவமானப்படுவான். இதற்குச் சந்தேகமிராது. அதப்படியிருக்க, அணிநிறுத்திச் சேனைக்குக்காவலாயிருந்த நம்மை ஆவலாய்ப்பூசைபண்ணிப் போய் விட்டானே; அவன்செய்த உபசாரத்திற்கு நாம் ஒருஆசீர்வசனமுஞ்சொல்ல

வகையில்லாமற் போனோமே. நமக்கெதிராகிவந்த மலைப்புயன் சிலைக்கரன் வானவர்கோன் மைந்தன் நந்தனையனாகிய நராமனுக்குச் சரியாகாமற் போனோமே. நல்லது, நாமடக்கிய மாட்மெந்தையை விடுவிக்கவந்தவன்படை மேல், விழுந்துஅமராடவேண்டுமே. நம்மையுமயக்கி, நமது சேனையையும்வில க்கி, நான்குதிக்குங்கலக்கி, ஊரைநாடிப்போகின்ற துரியோதனனையும்விடா மல் நாடிப்போனான்போலிருக்கின்றதே. ஐயா! மற்றமொழிகளை யுத்தமுனை யிற்கலந்துபேசித் தெரிந்துகொள்ளுவோம். வெற்றிவீரவிசயன் போனவழி யைச்சுற்றிப்பாருங்கள். பிரசித்தனாகியதுரியோதனனை உற்றுக்காத்திருங்கள். யாருஞ்சேர்ந்துவாருங்கள். சித்தப்பிரமைகொண்டு தியக்கப்படாதீர்கள், சிலை விசயன்தேரைத் தெற்கு மேற்கு வடக்கில்விட்டாலும் கிழக்கில் விடாதீர்கள். சேனைமன்னர்களேயென்று யானை சேனை பரிவாரங்களுடனின்று ஒன்றுந் தோன்றாமல், யோசித்துக்கொண்டு ஒருவாறு உறக்கம்பிடித்திருந்தார்கள். அத்தருணத்தில், கடுமையாகவீசிய காற்றின்வாட்டத்தால் கருங்கடலைக்கிழித் தோடுகின்ற கப்பலைப்போல், திக்குத்திசைகள் நெக்குவிட்டசைய, மடமட கடகட தடதட கிடுகிடு படபடவென்று மண்ணுங்குலுங்க, விண்ணுங்கலங் கப், பார்ப்பதற்குக்கண்களுமயங்க, மனோவேகத்திலு மிஞ்சியவேகங்காட்டிச் சிகரத்தேரையோட்டித், துரியோதனனுடன் ஒட்டமுநடையுமாய்ச் செல்லு கின்ற சேனைக்குமுன்சென்று, செயஞ்செயமென்று தடுத்துநின்றான். அப் போது, அந்தப் பசுக்கூட்டங்களுக்குக் காவலாகப்போகின்ற ஆயர்களும் கோபச்சத்தங்கூறும் வாயர்களும் யுத்தஞ்செய்யவிரும்பிய நேயர்களும் ஆயுத பாணிகளாய் அதிர்த்து, யாருடனும் போர்புரிவதற்கு எதிர்த்து, வாளும் வேலும்பிடித்து, விதிர்த்து ஓடும்படைகள் உரக்கக்கொக்கரித்துக்கர்ச்சிக்கும் பலத்தை அருச்சுனன் அறிந்து ஏ ஏ யென்றிரைந்து, இருதோளும் பூரி க்க விரைந்து, காண்டீபத்தில்நாரிபிகிந்து, காய்த்துத் தோய்த்துக் கடைச்சல் பிடித்த கணைகளைத்தொடுத்து, ஆகர்ணபரியந்தமும் இழுத்தான். அச்சமயத் தில், கிரீடியின்தேரோடிவந்து கிட்டிவளைந்த கெடுதியைச் சடுதியிற்கண்ட துரியோதனன் துபரப்பட்டுப் பெரியோர்கள்பேசிய மொழிகளைக்கேளாமற் பெருமோசமாயிற்று. அவர்களங்கும் நாமிங்குமாகப்பிரிந்து இவனிடத்திலகப் பட்டோமேயென்று பெருமூச்செறிந்து, சற்றுநிதானித்துச் சித்தம்பேதித்து ஓடவுங்கூடாமல் திரும்பிப்போய் வீட்டுமர்முதலியவர்களுடனும் கூடவுங் கூடாமல் வாடிவதங்கி மரத்தினீழலிலொதுங்கி, மறைதலும் வெளிப்படுதலு மின்றிப் பதுங்கிநின்றான். இவ்வாறு,தீரகண்டகனாகிய துரியோதனன் மதின் மேற் பூனைபோற் சமயத்தைநோக்கி, இளைத்துக்காட்டிய செய்கையையும் அவன்சேனைகள் சிலைவிசயனால் வளைக்கப்பட்டவகையையும் வீரகண்டை தரித்த விராடராசகுமாரன்தெரிந்துகொண்டு, விசயலட்சுமியருளால், இன்று நமக்கு செயமென்று முகமலர்ந்து, விந்தகிரிபோலமைந்த தன் சொந்தரதத் தை வாரிதியிற்சூழ்ந்த மந்தரகிரிபோற்திருப்பிக், கரகர கரகர வென்று கர்க் கரத்தொனிகாட்டி விற்கரத்தனாகிய விசயனைநோக்கினான். அவ்வேளையில், விசயனே தான் பேரிடிமுழக்கம்போல் காண்டீபம்வளைத்து நாணிதொடுத்து

ஷ்டங்காரஞ்செய்தான். அத்தொனியை வீஷ்டுமர் கிருபர் துரோணர் அஸ்வத்தாமா கர்ணன் சகுனி முதலானோருங்கேட்டுத் திடுக்கிட்டு, ஓகோ! என்னவோ மோசம்வந்தது; நாணோசையுந் தனுவோசையுங் கேட்கின்றது; சமர்புரியவந்த குமரனைக்காணோம். ஆரபார தீரவீர மூர்த்தண்யமாகத் தேரோடிவந்த போர்வீரனெங்கே? ஈசானமூலையில் இடிக்கின்றதுபோலிருக்கின்றது. ஆனால், இதுமழைப்பிடியன்று மகரமச்சமுலாவுகின்ற கடலொலியுமன்று. வாடைக்காற்றின் முழக்கமுமன்று. கெடிவீரசிங்கக் கிரீடிகைக்கொண்ட காண்டீவக்கிண்கிணி நாணோசைபோற்காணுகிறது. கவனமாகக் காதுகொடுத்துக்கேளுங்கள். தீதனுகவொட்டாமற் றிசைகளைப்பாருங்கள். சிந்தையும் எண்ணமுஞ் சிதறுமலுய்த்துணருங்கள். பார்த்திபன் கதியைப் பதறாமற் பாருங்களென்று, வடகிழக்குமூலையிற் கண்வைத்து, ஏதேது இதற்குள் அருச்சுனன் இவ்வளவுதூரங் கடந்துபோவானோ? இப்போதுதானே நாம் பார்த்தோம். மேற்குத்திசையில் வெகுதூரம் போனானேயென்று, ஒருவருக்கொருவர் வாதுகொடுத்து நான்குபக்கமுங் காதுகொடுத்திருந்தார்கள்.

அப்போது, பசுமந்தையையும் பாம்புக்கொடியுடைய பார்த்திபனையும் சேனைகளுடன் மடக்கிய செஞ்சிலைவீரச் சேவகன் தனக்குத்தானேயோசிக்கத்தொடங்கினான். அதென்னவென்றால், நாமின்னுஞ் சற்றுநேரந் தாழ்ந்து வருவமாகில், மாட்டுமந்தைகளுடன் மன்னனுஞ்சேனையும் அத்தினபுரத்தின் எல்லைபோயணைவார்கள். அவர்களந்த எல்லையைமிதித்துவிட்டால், அப்பால் நாம் அபசெயமடைந்து திரும்பியதுபோலாம். பிராணன் வைத்திருக்கவேண்டிய பெருமையேயிராது. ஏதோ, தெய்வானுகூலத்தினாலும் பெரியவர்களைப் பூசைபண்ணிய பூசாபலத்தினாலும், துரியோதனன் பசுமந்தையுடன் அகப்பட்டுக்கொண்டான். மேற்படையோ சமீபத்திலிருக்கின்றது, நமது வில்லோசை கேட்டவுடனே வீட்டுமர் அசுவத்தாமாமுதலிய பல்லோரும்வந்து கவிந்துகொள்வார்கள். இப்பால், மிகுந்த பிரயாசத்துடன் பசுமந்தைகளை மீட்கவேண்டிவரும். ஆகையால், முன்னே மாட்டைமடக்கி மச்சநாட்டுக்கனுப்பிவிட்டு, அப்புறம் வருகிறவர்களுடன் போராடுவது உத்தமமென்றுன்னிக், காண்டீவத்திற்கணைதொட்டுப் பொருப்புமுதற் பூமியெல்லாம் நெருப்புமழைபொழிவித்துத், திக்குமுக்காடச்செய்து, திசாதிசைளனைத்துஞ் சின்னாபின்னப்படுத்திவிட்டான். அவனுடைய தீரவீரத்தைத்தேவர்கள்கண்டு திக்கென்றேங்கிப் பக்கென்றெழுந்து, இனிக்காரியமில்லை, இப்பூமியில் பலிகொடுப்பதற்கெண்ணிச் சேனைகளைக்கூட்டிவந்தான் துரியோதனனென்று அவனைநிந்தித்து, ஐயோ, தெய்வமே! தீவினையேயென்றுநைந்து, எவ்வகையினுஞ் சவ்வியசாசிபத்திரத்து வென்றுவிடுவானென்று சிந்தித்துக் கண்ணிமையாதிருந்தார்கள்.

அக்காலையில் விசயனுடைய வில்லோசையும் நாணோசையும் தேவதத்த முழக்கமும் தேரோடுமொலியும் குதிரைகள்அனுமானிக்கும்பழக்கமும் சாரதியினாயும்வழக்கமும் அனுமக்கொடியாடுகின்ற படபடாகாரமும் அத்திரங்களோடுகின்ற படபடாகாரமும் போராடுமிடங்கள்தோறும் புறப்படுமொலியும்,

வீரர்கள்மாளும் வலியும், புவனமூன்றும் பயங்கொள்ள வயம்பெறும் செய சிங்கம் வருகிறவழியில், திரளாகக்கூடிய யானைக்கும்புகள்போல, துரியோதனனைச்சேர்ந்த சேனைகளும் வெற்றிவாளேந்திய வீரர்களும்பொங்கித் தங்களாற்கூடியமட்டும் போராடி, விசயனுக்கெதிர் நிற்கமாட்டாமல், தலைநாணிப் புறங்கொடுத்தோடினார்கள். அச்சமயத்தில், அருச்சுனன்தொடுத்த அனல் மூனைக்கணையானது கொதித்தெரிந்து கோபித்துவிழுந்து குதிரையைத்தறித்து யானையைத்தறித்துக் கொடிமுடிமன்னரைக்குறைத்துக் குலாவி யுலாவித்திரியுங் கொடுமையைத் தேவேந்திரனும் தேவர்களும் மூவர்களும் குபேரன்முதலாகிய இயக்கர்களும் பார்த்துக் கிரீடியைக்கொண்டாடி ஒப்புச்சொல்லுவதற்கு உவமைதேடினார்கள். பின்னும், புகழ்ந்துமகிழ்ந்து, ஆனந்தவெள்ளத்திற்குதித்து, ஆசைமேலிடக்களித்து, ஆடினார்கள். அருச்சுனனேவிய அக்கினிபாணத்தின் பிரசண்டவேகக்காற்றினால், பாதலமூமீதலமு நைந்து, பூதலமும் பஞ்சுபஞ்சென்னப்பறந்தது. சுயோதனனாதியர் முதலியயாவரும் நெஞ்சுலர்ந்து நாவறண்டு, நாபிவரையிலும் புகைந்து, நாடாதும்நாடி, இதென்ன! அக்கினிநட்சத்திரவுதையமோ? அல்லது, ஆலாலஞ்சேகரித்த புகையோ? வடவைத்தீயின் அம்பாரமோ? வாடைக்காற்றின் வன்மையோவென்று, அவர்களன்று பட்டபாட்டை நானென்னென்று சொல்லுவேன்? நான்குவகை இரதிகளையும் உயிருடன் சுடும்போது, சும்மாவிருப்பாருமுண்டோ, ஐயா, ஜனமேஜய மகாராசனே! இந்தப்பிரகாரம், நரனேவிய அக்கினிபாணத்தால், படைநான்கும் மண்ணோடுமண்ணாய்ப்படிந்து, பதறிப்பெதறிச் சிதறிப்பிரிந்து, பலர்மாய்ந்து, சிலர்தேய்ந்து, படையோய்ந்துபோன பக்குவத்தை உத்தரகுமாரனறிந்து, காவற்கட்டுக்குட்பட்டிருந்த தங்களிடையரைப்பார்த்து, ஓஓ, கோவலர்களே! உமக்கு யாதொருதடையுமில்லை. உங்களோடெதிர்க்கப்படையுமில்லை. நீங்கள் உற்சாகத்துடன் காலேயங்களை யோட்டிக்கொண்டு ஊர்போய்ச்சேருங்களென்று உரக்கக்கூவி, இருகரங்களையும்வீசி ஏகுங்களென்றும் போங்கள்போங்களென்றுஞ் சொல்லினான். அப்போது, தங்கள் இராசகுமாரன்கூறிய இனியவார்த்தையைத் தனிமையாய்ச் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த சகல யாதவருங்கேட்டுச் சம்பிரமங்கொண்டாடி, நமது இளஞ்சிங்கமே யுத்தஞ்செய்ய ஏற்பட்டுப் புறப்பட்டபடியால், கௌரவகுலச்சேனைகளை எங்குமில்லாமற் சங்கரிப்பார். நாமும் வெற்றிபெறலாமென்று, பொங்காரத்துடன் ஓங்காரமிட்டு, அகமகிழ்ந்து, முகமலர்ந்து, மூனைகலந்து, கலகலென்று, மணிமுழங்கு பசுவடர்ந்துநின்ற இடமடைந்து, ஊசென்று வாய்குவித்து ஊதி புள்ளாங்குழலிசையையுஞ் சவுஞ்ஞையையும் வழக்கப்படிகாட்டினார்கள். இடையர்களுடைய குறிப்போசையைக்கேட்ட காட்டுப்பசுக்களும் நாட்டுப்பசுக்களும் தலையெடுத்துப்பார்த்து, வாலெடுத்துக் காலசைத்து உடல்குலுக்கிக் கொம்புகளைத்தாழ்த்தித் தங்களைக் கிடைகட்டியிருந்த மச்சநாட்டெல்லையைக்குறித்து இறுமாந்துநெறித்துச் சேனைக்கும்புகளலைய மூறித்து அம்பரமுழுதுந் தும்புகளடையக் கம்பளத்தாயர் கலந்துபின்னடையப் பம்பரமென்னச்சுழன்று கும்பாளமிட்டு, மானினந்தாவுதல்போற் குதித்து,

வண்டெனப்பரந்து, சென்டெனவெழுந்து, கண்டவர்கலங்க, மண்டலமயங்கச் செந்தாள் கருந்தாள் வெண்டேள்பறக்கத் திசைதமோறிப் பசுக்களுமோடத் திரைகடல்வறள, யானைகள்கதறச், சேனைகள்பதற அரைக்கணப்பொழுதில் திரும்பிய பசுக்களைத் துரியோதனனும் அவனுடன்கலந்துவந்த தேசாசவீர பூபாலர்களும் கோபாலர்களும் திக்குவேறில்லாமல், வருந்தி மடக்கிவந்தபசுவை விடப்படாதென்று மானப்போர்வைபூண்டுவந்து வல்லமையுள்ளனவெல்லாங்காட்டி, மனநொந்து தங்களாலாகாமல், காய்ந்துருகிக்கொதிப்படங்கிய நெய்போல வாயடங்கிமடங்கினார்கள். மச்சராசனுடைய கோபாலர் இச்சைமேற்கொண்டு உருகி ஓசையடங்கிப்போனநெய்யில் ஒருதுளிப்பால் தெறித்ததைப்போல, சளசளவென்று உரத்துக்கூவி எதிரி கைக்கொண்டுபோன எங்கள்மந்தையை மீட்டோமென்று, எங்கும் பிரகாசிக்கத்தாவி, எந்நாளும் பெறக்கூடாத வெற்றியை இந்நாளடைந்தோமென்று, இறைவனைப் புகழ்ந்து, மந்தையைவிடாமற் றொடர்ந்துவந்தார்கள்.

இவ்வாறு, புள்ளாங்குழற்றொனியாலும், கண்டத்தொனியாலும், கால் வீசியோடும், பசுக்கள் பசும்பொற்குடம்போன்ற மடியையுடைய கபிலைகள், பருவக்கன்றுகளுள்ள கோவினங்கள், சூற்கொண்டசுரபிகள், சூற்படாக்கடாரிகள் இளமையானவிடைகள் முதிர்ந்த இடபங்கள், கட்டுப்படாக் காவிகள், கறுப்பு வெளுப்பு சிவப்பு கலப்பு இவைமுதலான பலவர்ணப்பசுக்களும் துரியோதனன்சென்ற விடந்தொடங்கி வீட்டுமர் துரோணர் முதலியோர்கள் அணிவகுத்துநின்ற இடம்வரைக்கும் காலாற்சிலரையெறிந்துமிதித்து, வாலாற் பலரை யடித்துமடித்து, உடலாற்சிலரை யுராய்ந்திடித்துக் கொம்பாற்பலரைக் குத்திவீழ்த்திக் கோலாகலமாய்க் கும்பலைக்கலைத்து, அம்புபோற்பறந்து நேருக்குநேராய் கிளைகிளையாய்ப் பாய்ந்துபோகின்ற பசுமந்தையைப் பார்த்தன்பார்த்து, வீட்டுமர்முதலியோரும் மாடுகள்போகின்ற மார்க்கத்திற் படைவைத்துக்கொண்டிருக்கின்றபடியால், ஒருவேளை இந்தப்பசுமந்தைகளை மடக்கட்டும். நாம் இந்தப்பசுவுடன் கூடப்போய் மச்சநாட்டில்விட்டு வரலாமென்றுநினைத்தால், விபற்சுவந்தான்; எங்களை மயங்கவைத்து, மாட்டையோட்டிக்கொண்டு போய்விட்டான். சண்டைசெய்து வெற்றிகொண்டு போனவ னல்லவென்று, பல்லோரிடத்திலும் பழிப்பாய்ச்சொல்லிக்கொள்வார்கள். மேலும், நாம்போய்த்திரும்பிவருவதற்கு முன்னே துரியோதனன் தப்பிப்பிழைத்தேனென்று, அத்தினபுரத்திற்குப் போய்விடுவான் போலுந் தோன்றுகின்றது. ஐயோ! அவனைக்காணவும் அவனுடன் ஆசையாய்ப்பேசவும் அவசரப்பட்டுப், பதின்மூன்றுவருடங்கழித்துஓடிவந்தோமே. ஆகையால் நாம் இவனைவிட்டுப்போகலாகாது. வேறுவகையாகிய காவல்செய்ய வேண்டுமென்றெண்ணி, விசயகாண்டீபத்திற் சோனுமேகம்பொழிவதுபோல, பாணப்பிரயோகம்பண்ணிப், பசுமந்தையைக்காக்க அண்டச்சுவருக் கொப்பாகச் சரக்கூடமேயமைத்து, மந்திரமென்னுங் கட்டுகளிட்டு, வைராக்கிய புருடனாயு நிறுத்தினான். அந்தப்படியே யாதொரு ஆட்சேபனையுமில்லாமல், நிரந்தரமங்கள தூர்ந்தாபுரந்தானாகிய விராடராசனது மச்சநாட்டில், இதுவரையி

லும் வசித்திருந்த வனங்களிற்போய்ச்சேர்ந்தன. எமன்கைக்கொண்ட உயிர் மீண்டவாறுபோல், பகைவர்மடக்கிய பசுக்கணம்வந்ததை அந்நாட்டிலுள்ள பலரும்பார்த்து, செயசெயமென்று சிந்தைமகிழ்ந்து, பத்திரமாகப் பசுமந்தையைப் பாதுகாத்துக்கொண்டிருந்தார்கள்.

இப்பால் வணங்காமுடிமன்னனும் தாங்கள் வகுத்தனுப்பிய சேனைகளும் சாய்த்துக்கொண்டுபோன பசுக்கணங்களுங் கோபாலர்களும் தங்களுக்குநேரிற்போராடி ஊரிலோடியவிதத்தைத் தேரிலேறியிருந்தசிலைக்குருவாகிய துரோணாசாரியர் வீஷ்டுமாசாரியர் கிருபாசாரியர் அசுவத்தாமா கர்ணன் சகுனி சாலுவன் விகர்ணன் துச்சாதனன் முதலியவரும் பார்த்து, சரிதான் நாம் ஆலோசனைப்பண்ணிப் பசுநிரைகளையும் பார்த்திபனையும் அத்தினபுரத்திற்கு முன்னடி அனுப்பிவைத்த உளவை அர்ச்சுனன் எப்படியோ அறிந்துகொண்டு இங்கிருந்த நம்மெல்லோருக்கும் இன்பமுண்டாகும்படியாய் அம்புகளைவிடுத்து அசரப்படுத்திச் சாரதியுந்தானுந் தேரூர்ந்துசென்று சமர்த்தாக வென்று மாட்டையும் சேனையையும் மன்னனையுமடக்கிவிட்டான். நாம் எண்ணிய எண்ணங்கைகூடவில்லையே, "பண்ணியபயிரிற்புண்ணியந்தெரியும்"என்பதுபோல் அவனெண்ணியவண்ணம் இசைவாக்கிக்கொண்டான். இவ்விடத்திற் கூட்டமானநமக்கு இனியென்ன ஆட்டபாட்டமிருக்கின்றது? அவன் நம்முடனெதிர்த்தால் நாமெடுப்பது ஓட்டமேயென்று ஓரோட்டமாய் மனநொந்துறங்கினர்கள்.

இங்ஙனம் சிலைவிசயன் உருத்திராம்ஸமுண்டாய் அரைக்கணத்தில் நிரைக்கணத்தைமீட்டுச் சரக்கூடங்கட்டிப் பெருக்கவிடுத்த தன்மைப்படி வடகிழக்கு மூலையிலிருந்து தென்மேற்குமூலையில் மாடுகள்போய்ச்சேர்ந்த வாறுணர்ந்து மனமகிழ்ந்து நல்லது இராசாதிராசனெங்கே அவனேறிச்சிறக்குந் தேரெங்கே? அத்தேரிற்பறக்கும்பாம்புக்கொடியெங்கே? என்று எட்டுத்திசை மட்டிட்டுப் பார்த்துவரும்போது ஆனினங்களை முன்னுக்கிச் சேனைக்கணங்களைப் பின்னுக்கி முடுக்காய்ச்சென்ற துரியோதனராசன் அர்ச்சுனன்தெறித்த விற்குணத்தாலும் வாய்வைத்து முழக்கிய சங்குநாதத்தாலும் பாணக்குழாத்தாலும் வீரர்படும்பாட்டாலும் சேனைகெடுங்கேட்டாலும் வெருண்டு அலமருண்டு புத்திபுரண்டு கண்கலங்கி ஒருபுறமொதுங்கி நெறிமயங்கி யொடுங்கி நின்றுவிட்டான். இவ்வகையாகிய துரியோதனராசனைச் சவ்வியசாசி கண்டு கண்கள்சிவந்து முகஞ்சுளித்து பற்கடித்து மீசைதுடித்து வியர்வுபொடித்து வெகுளிமேற்கொண்டு எத்திசையிலும்பிரசித்தனுகிய உத்தரகுமாரனைப்பார்த்து ஒரு உத்தரஞ்சொல்லத்தொடங்கின். வெற்றிபெற்ற வேலாயுதம் பற்றிய விராடகுமாரனே! நம்முடைய இரதத்தைக்கண்டு பயங்கொண்டு தன் படைகளையும் கன்றுந்தாயுந்துன்றிய பசுக்கூட்டங்களையும் விண்டு தானுந் தலையிறக்கங்கொண்டு இந்நிலத்தைவிட்டகன்று அதோ ஒரு மரத்தினீழலில் ஐம்பொறியடக்கிய ஆமைபோலிருப்பவன் கௌரவகுலாதிபனுகிய துரியோதன மகாராசன்; அவனண்டையில் நமதுதேரைக்கொண்டுபோய்நிறுத்துவையானுல் அற்பமிருகத்தைச் சொற்பமாயழிக்கும் ஆண்சிங்கம்போல் அவனுதிரத்

தை எய்பாணத்திற்கு ஆகுதிகொடுக்கிறேனென்றுபல்லைக்கடித்துஉடம்புதுடித்துக் குறிப்பினாற் றெரியப்படுத்தினான். அர்ச்சுனனுரைத்த வார்த்தையைக் கருங்குவளை மலர்த்துயிறைந்த வாவிசெறிந்த கழனிகள்சூழ்ந்த மச்சநாட்டிறைவன் மைந்தனாகிய உத்தரகுமாரன்கேட்டு மனோவேகமும்வாயுவேகமும் மட்டென்றுரைக்கத் தக்கதாகத் தன்தேரைவிடுத்துத் துரியோதனனுடைய சேனையைத்தடுத்து அவன்தேரையடுத்து தன்தேர்க்குதிரைகளின் முன்னங்கால் அவன் தேர்க்குதிரைகளின் தலைமேலேற்றுவித்தான்.

அந்தவேளையில் சந்தேகங்கொண்டு சலிப்பாயிருந்த வீஷ்மாசாரியர் துரோணாசாரியர் முதலிய மேன்மையோர் மாடுகள்திரும்பிவிட்டமார்க்கத்தினாலும் சங்கத்தொனி வில்நாணித்தொனி சரமாரித்தொனிகேட்ட தன்மையினாலும் செவ்வையாய்க் காரியபாவந் தெரிந்துகொண்டு ஓகோ! மிஞ்சிப்போச்சுது அத்திருபுரத்தைநோக்கி ஆனினங்களுடன்போன நமதரசனைப்போர் முகப்புலியாகிய புருஷன் மடக்கிக்கொண்டான். இவ்விடத்திலிருந்த நம்மையேங்கவைத்துச் சிங்கமானது நரியடிதேடிச் செல்லுமாறுபோல் மேற்குமுகத்தில் போக்குக்காட்டிக் கிழக்குமுகம்வந்து கிட்டிவிட்டான். இவன் எந்தவழி வந்தானோ, அந்தரவாசிகளாகிய அமரர்கள் இவனுக்கு உளவாயிருப்பார்களோ வணங்காமுடியோன்சென்றமார்க்கம் இவனுக்கெப்படித்தெரியும் என்னமாயறிவான்? இத்தனைபேர்களின் கண்களுக்குத்தெரியாமல் இவனெப்படித்தேருந்திப்போனான்? அவன்மனத்துக்குத்தகுந்ததுபோல் சாரதியுங்குதிரையுஞ் சமைந்ததே, ஆகிறகாலத்தில் எல்லாம் அடுக்காய் அமையச்செய்யும் நல்லவினையை யாவரும் புகழ்ந்தேத்துவார்கள்; ஆதலால் நாம் சும்மாவிருக்கப்போகாது; இந்நேரம் நமது மன்னன் என்னகெதி யானானோதெரியாது; இப்படியே நாமெல்லோரும் பிரியாதுசென்று துரியோதனனுக்கு உபபலமாகநின்று அபாயநேரிடாமல் அர்ச்சுனனைவென்று மறுபடியும் விராடபுரத்தைத் திரும்பிப்பாராமல் ஊர்போய்ச் சேரவேண்டுமென்று உள்ளத் துறுதியாய்க்கொண்டு தாங்களிருந்த இடத்தைவிட்டு நீங்கி வச்சிரயூகம் பத்மயூகம் அர்த்தசந்திரயூகம் இவைமுதலிய அணியைக்கலைத்துப்போட்டு அவசரப்பட்டு மந்தமாருதமும் பிற்படும்படியாய் முந்தி நால்வகைச்சேனைகளுடன் ஓடிவந்தார்கள். ஐயா செனமேசெயமகாராசனே! இவர்கள் எவ்வளவுவேகமாய்த் தேர்செலுத்திவந்தாலும் நந்தநந்தன் மைத்துனன் இந்திரன் மைந்தன், இவனுந்திய சயந்தன வேகத்திற் கிணையில்லையென் றியம்பத்தக்கதாம் ஆதலால் அவனோ தன் தேரைத் துரியோதனனிடத்திற் திருப்பித் தான் பேசவேண்டியவரைக்கும் பேசித் தன்மனம் வெறுத்துத் திரும்பப்போகிற சமயத்தில் இந்த வீட்டுமர் முதலியவர்களின் தேர்வந்துகூடுவதை இனிப் பேசப்போகின்ற கதையால் தெரிந்துகொள்வாயென்று வைசம்பாயனர் சொல்லிமுடித்தனர்.

அர்ச்சுனன்துரியோதனனுடன்பேசுவது.

அர்ச்சுனன் தேரானது அரவக்கொடியோனுடைய தேரை நாடியோடிச் சென்றுகண்டபோது அவனெப்படியிருந்தானென்றால். பெருக்கமானவெள்ளங்

குறுகிச் சுருக்கமாயோடுஞ் சோர்வைப்போல் குதிரைகள் நடையோய்ந்து சாரதியொருபுறஞ்சாய்ந்து தானும்மாய்ந்தான்போலிருந்த மன்னனுக்குநேரிற் சென்ற அர்ச்சுனனானவன் துரியோதனனுடையமுகத்தைப்பார்த்துப்பேசவேண்டுமென்று ஆசைகொண்டு நோக்கினான், அப்போது சுயோதனனுடையதேர் அர்ச்சுனனுக்குத் தெரியவொட்டாமல் அவன்தேரிலிருந்த சாரதியும் அந்தரத்திற்கட்டிய நான்கு அசுவங்களும் தடையாயிருந்தமையால் திடீரென்று வடிக்கணையெடுத்து அபிமந்திரித்து விடுத்து சாரதியையும் குதிரைகளையும்போக்கி வெட்டவெளியாக்கி இந்திரப்பிரத்தத்தில் இராசபோகத்திலிருந்த அவர்கள் ஐவர்களையு மழைப்பித்துப் பொய்ச்சூதுடைய சகுனியைச்சேர்த்து இக்கட்டானசொக்கட்டானாடி வஞ்சகினைப்பினால்நாக்குவருந்தப்பேசிஅவர்களுடைய ஐஸ்வரியமுதலியவும் ஒன்றொழியாமல் ஒருங்கே கைக்கொண்டு சிறிதேனும் நெஞ்சிரக்கமில்லாமல் வனவாசம்பண்ணவிட்ட பஞ்சமபாதகனாகிய பாம்புக்கொடியோனைச்சங்கடப்படாமல் தாராளமாய் எதிராகப்பார்த்து சற்றே நகைத்தான்; அதுபோது துரியோதனனுடைய சாரதியுங்குதிரைகளுந் தலைசாய்ந்துபோனவுடனே உத்தரகுமாரன் கைப்பிடித்தகடிவாளத்தை உலுக்கிப்பின்னுக்கிழுத்து முன்னுக்கு முடுக்கி குதிரையை ஓரடியடித்தான்; எக்காலத்தும் அடிபடாக்குதிரைகள் உடம்பு சிலிர்த்து ஹூவென்றிரைந்து விளித்து விரைந்து கலினத்தைத் தடாரித்துக் கைக்கடங்காமல் கால்மீறியெழுந்து துரியோதன மகாராசனுடைய தேர்த்தட்டின்மேற்காலூன்றிநின்றது, தேரும் தேரும் முட்டியபோது சிலைவிசயன் தேரிற்கட்டிய அநுமத்துவசமும் துரியோதனன் தேரில்நாட்டிய அரவத்துவசமும் காற்றினாலாடி கடுகடுப்பாயூடி ஒன்றினோடொன்று துன்னிப்பின்னிப் படபடாகாரமாய் அடிபட் டிடிபட் டளைபட்டுளைபட் டுரிபட் டொடிபட் டுடைபட்டு உடனேவிடுபட்டுக் கோபமேவிட்டு அண்டமும் அண்டமும் அதிரும்படியாய்விட்டு அனுமக்கொடியானது அரவக்கொடியைப்பார்த்துச் சிலவார்த்தைகள் சொல்லியதுபோலுமென்று புராணிகர் கற்பித்தருளினார்.

அஃதென்னையோவெனின் என் தந்தையான வாயுதேவனுக்கும் உன் தந்தையான ஆதிசேடனுக்கும் பலத்தைக்குறித்து நீசிறியவன் நான்பெரியவனென்று பேச்சுவிளைந்து இருவருடைய திடத்தை யெவர்களுங் காணும்படியாய் மகமேருவின் அடிமுதல்முடிவரைக்கும் ஆயிரஞ்சுற்றாக ஆதிசேடன் வளைந்து தன் வல்லமையைக் காட்டியபோது என்தகப்பனாகிய வாயுதேவன் இரைந்துவிரைந்து தன்னாற் கூடியமட்டுஞ் சாதித்து உங்களவனாகியசேடன் பதறிக் கதறிச் சிதறி பதறிப்போகப்புரட்டி அந்தமேருவின்சிகரத்தில் மூன்று முடியை வாரிக்கொண்டுபோய்ச் சமுத்திரகதியாக்கித் தன்னாண்மையை நிலைநாட்டிச் செயங்கொண்டான். அன்றுமுதலின்றளவும் பாம்பினங்களுக்கும் பகைவிளைந்திருக்கின்றது. அதுபற்றி நானந்தவாயுதேவனுடைய மைந்தனாகையால் முன்னேநடந்தபொல்லாங்கையேபாராட்டி உன்னைவெல்லாமலுங் கொல்லாமலும் விடுவதில்லையென்றுமேல்விழுந்து துரியோதனன்பாம்புக்கொடியைப் படாதபாடும்படுத்தி அருச்சுனன் துவசத்தில் அநுமான்வந்து நடனம்பண்

ணினர். மேலும்காண்டாவனதகனநிமித்தம் அக்கினிதேவன் இவ்வநுமக்கொடியைஅருச்சுனனுக்கு அளித்தகாலத்தில், ஆஞ்சனேயர் பிரசன்னமாய் இராவண கும்பகர்ணாதிமுதலிய மூலபலங்களையெல்லாமுடித்து, தாயாகிய சீதாபிராட்டியாருக்குத் திருவாழிகொடுத்து, தந்தையரானஸ்ரீராமலட்சுமணரையும் தன்றோளிலெடுத்து, அவர்களுடைய திருவடியையடுத்துபட்டாபிஷேக சம்பிரம பாக்கியங்களையும்பார்த்த கண்களால் இந்தப்பஞ்சையானபோரையும் பார்க்கும்படிக்கமைத்ததோவென்றுபரதவித்தபோது, அக்கினிதேவன் அருட்கண்ணோக்கி, அடியேனிமித்தம்அமைந்தருளவேண்டுமென்றறைய, அவ்வாறே நலமென்றமர்ந்த அநுமான்கொடியணுகிய துரியோதனனுடைய சேனைக்கடலைக் கலக்கிக்கடக்கவும் விசயவீரியன் செயம்படைக்கவும் உதயகிரியிலெழுந்த சூரியன்போல், கோபச்சுடர்விரித்துக் கூசாமலெரித்துக் கோரதந்தெறித்துக் குறுகுறுத்ததிர்த்து உண்மையாகி அருச்சுனனுடைய தேர்க்கொடியாடையில் அநுமான்வந்து தோன்றினர்.

இப்பால், வேடன்கையில் அகப்படாமல், விடுபட்டுப்போன மிருகம் மீண்டும் அகப்பட்டவாறுபோல், அருச்சுனன்கையிற்சிக்கிக்கொண்ட அரவக்கொடியோன் இடிமுழக்கங்கேட்ட உரகம்போலேங்கித் தானிருக்குமிடந்தெரியாமல், மயங்கியொடுங்கினன். அருச்சுனன் அவனைப்பார்த்துச் சிலவார்த்தை சொல்லத்தொடங்கினன். ஆ, வணங்காமுடிபெற்ற மன்னனே! நீ எங்கே ஓடுகின்றாய், ஏன்வாடுகின்றாய், ஓடவேண்டிய அவசரமென்ன? ஐயோ! உன்கையிற் பருத்தவில்லும் பக்குவமான் அத்திரங்களும், போதுமான பலமுமிருக்கப் புண்ணியவான்களாகிய பெரியோர்கள் பக்கத்துணையாகவிருக்க வேண்டியமட்டுந் தனங்களிருக்கத் தம்பிமார்களும் ஏவலாளிகளும் எழுகடல் சூழ்ந்த பூமியும் மாயச்சூதாடும் மாமனும் மகாபிரபலனாகிய கர்ணனுமிருக்க, போர்முனைகண்டு நீயும் புறமிட்டோடகினைத்து வாயைத்திறவாமல் மயங்கிப் பேய்போலோடிப்போவது திறனோ? நல்லகாரியம், நீ இப்படியே அத்தினாபுரம்போய்ச்சேர்ந்தாலும், விரபட்டமும் சிந்தூரப்பொட்டுமிட்ட பட்டத்துயானைமேலேறிப் பவனிவரும் இராசவீதியில், உன்னைப்பார்ப்பதற்கு ஓடிவராநின்ற பொற்பாவையைப்போன்ற அநேகமாகின கச்சணிந்த கனதனத்துமாதர்களும்கன்னியர்களுங்கண்டு இச்சகத்தையாண்ட துரியோதனராசன் பித்தன் பித்தனென்று இகழ்ந்துபேசிச்சிரிப்பார்களே. நீபோகலாமோ? இதல்லாமலும், சோடசகலைநிறைந்த மதியம்போலவிளங்கிய சுவேதகூத்திரமென்னும்வெள்ளைக்குடைபிடிக்க, இருபக்கத்திலும் பால்நுரைபோன்ற சாமரைவீச, வந்தியர்சூழ்ந்து வாழ்த்திப்புகழச் சிந்தைகளிக்கச் சிங்காதனமேறிப் பராசர்வந்து ஆசீர்வதிக்க, புத்ரமித்ர பந்துவுடன் கூடிவாழ்கின்ற வேந்தர்வேந்தனென்னும்உலோகாதிபதியாகிய நீ சண்டைமுகத்தைக்கண்டு பெண்டுகள்போல்ஓடுவது தீரத்துவமோ? நீ இப்போதென்னிடத்தில் தனித்தகப்பட்டாய். உன்னையும் உன்சகோதரர்களையும் ஒருகணப்போதில், என்கணைகளினாலே சல்லடைக்கண்களாகத்தொளைத்து அவற்றிற்கு இரையாக்கிவிடுவேன். ஆனால், சிங்கக்கொடிக்கதிபனாகிய என்தமையன் வீமசேனன் உங்கள் நூற்றுவரையும்

கொல்வேனென்று, இராசசபையிற்சொல்லிய சபதம்வீணாகிப்போமேயென்று, உன்வாணாளைவிடுத்தேன். பகற்பொழுதைவிளக்கிய சூரியன் அத்தமிக்கிற வரைக்கும் பார்த்திருந்து, முறையிற்பிரகாசிக்கவருஞ் சந்திரன்போல், எங்களைக்காட்டிலோட்டிவிட்டு, நீங்கள் நாட்டிலிருந்து, சகலபாக்கியங்களை அநுபவித்துக் காலந்தப்பாமற்புசித்து, ஆக்கினைசக்கரஞ்செலுத்தி அரசாட்சிசெய்து வந்தீர்கள். மறுபடியும் விடியற்காலத்தில், அந்தச்சந்திரனொளியைத் தவிர்த்துத் தானே பிரபுத்துவஞ்செய்யவந்த சூரியனைப்போல், நாங்கள் வெளிப்பட்டோம். சங்கினங்கள் தவழும் வயல்கள்சூழ்ந்த கங்கைவளநாடனாகிய வீமசேனமகாராசன் கதையினால் தாமசமின்றி, நாளைக்கே உங்களைக்களப்பலியூட்டிவைக்கப்போகின்றான். மேலும், வீமசேனனுடைய சமயந்தப்பினாலுந்தப்பப்படும். பாவியாகிய உன்னைப்பார்த்துங் கொல்லாமல்விடலாகாதென்று, கடுங்கோபம் உண்டாயிருந்தபோதிலும் இரப்பவர்கள்யுத்தத்திலிளைத்தவர்கள் புறங்கொடுத்தோடினவர்கள் குழந்தைப்பருவமுடைய இளையவர்கள் யாவரும்புகழும் கவிராசர்கள் தவராசர்கள் தூதுவர்கள் நோயாளிகள் விருத்தர்கள் பிரமஞானமுள்ள பிராமணர்கள் மாதர்கள் இவர்களைக் கொல்லுவது மகாபாவமென்று பெரியோர்கள் பேசியிருக்கின்றார்கள். அந்தத்தருமம் என்னைப்பிசகவொட்டாமற்றடுக்கின்றது; அதனால் இப்போது இளைத்து ஓடிப்போன உன்னை நானென்னசெய்வேன்? அவர்கள்கூறிய நீதிவாக்கியத்தைநினைத்து நான் உன்னுயிரைத் தப்பவிட்டேன். அடா வஞ்சகனே! பாவபுண்ணியத்தை எண்ணிப்பாராத பொய்யனே! நீயெண்ணிய எண்ணம் சித்திக்குமென் றிருந்தையோ? வனவாசஞ்சென்ற பாண்டவர்கள் மறுபடியுந் திரும்பி வரமாட்டார்களென்னுமதியோ, இனியெப்படி உன் தலைவிதியோ? 'வாழ்வாரைப்போலும் வாழ்வார்' இதைச்சற்றேனும் உன் மனத்தில்வையாமற் போனதென்ன, ஊழோ? 'சமத்திற்குண்டுபோயுமோ' சதுராயிருக்கின்றோமென்றே யெண்ணப்போகாதே. தருமத்திற்கொருநாளும் பிசகுவராது. தானென்னும்செருக்கு நிலைநில்லாது. ஐயையோ! அதுபொல்லாது. சொல்லாது போகின்ற தூர்த்தனே யென்று இன்னம்பலவாறாக இழியக்குத்தினான். இவ்வாறிகழ்ந்துபேசியபோது, துரியோதனராசன்மறு மொழியொன்றும்பேசாமல், சோபமேற்கொண்டு ஆபத்துவேளையிதுவென மனத்தாபத்துடனிருந்தான். அவன், இவ்விடத்திலிவ்வாறிருக்கும்போது, இந்தமுகநோக்கித்திரும்பிய வேதக்கொடியுடைய துரோணாசாரியர் கிருபாசாரியர் அஸ்வத்தாமா. வீஷ்மாசாரியர் கற்பகக்காவைப்போல் அற்புதமாகக்கொடுக்குங்கர்ணராசன். சகுனி சயிந்தவன் விகர்ணன் துச்சாதனன் சாலுவன் முதலிய சாமர்த்தியவான்களும் சர்ப்பக்கொடிதரித்த மற்புயமகாராசனுக்குத்துணைவந்துகூடினார்கள். அவ்வாறு வந்தவர்களில் துச்சாதனன் விகர்ணன்முதலிய தம்பியரிற் சிலரும் முடிவேந்தர்களிற்பலரும் வெற்றிமாலையணிந்த சுத்தவீரர்களும் மாமனும் மைத்துனனும் உடல்பதறி யோடிவந்து மதயானைபோற்புகுந்து நந்தியாவட்ட மாலைதரித்த நராதிபனைத்தாங்கி ஆதரித்துத் தேற்றினார்கள். இதற்குள்ளாகக் கார்ோசை கடலோசை ஊழிப்பேரோசை இடியோசை முதலியவெல்

லாம் ஒன்றுசேர்ந்து ஓரிடத்திற்பிறந்து முழங்கியவாறுபோல் தேரோசை குதிரைகளின் குரலோசை மதயானைகளினோசை பதாதிகளினோசை வில்லோசை நாணோசை சங்கத்தொனி தாரை பூரி சின்னமுதலிய வாத்தியவோசை சரங்களினோசையாகிய விவைகளெங்குமுழங்கப் படையாளர்வந்து குவிந்தார்கள். சப்தசமுத்திரம்போலிரைந்து ஆர்ப்பரித்து இருபக்கத்திலுங் கவிந்த படைமன்னர்களைத் துரியோதன மகாராசன்கண்டு சற்றுத் திடங்கொண்டு குனிந்ததலையைநிமிர்த்துப்பார்த்தான். இவன்பார்த்தபோதே படைகளுக் கருகிலிருந்த கர்ணன் நெற்றிவியர்த்து நறநறவென்று பல்லைக்கடித்து வெம்பிக்கிளம்பி வெதும்பிச்சீறிக் கனைத்துச் சினத்துத் திசாதிசைகளுந் திடுக்கிடத்திரும்பிச் சடக்கெனத் தேரைத் தடதடவென்றுமுடுக்கி மின்னுடன் மின்மினியும் வேங்கையுடன் மானும் சிங்கத்துடன் யானையும் கன்மலையுடன் மணற்குன்றும் எதிர்ப்பதுபோல் கர்ணராசன் அர்ச்சுனன்தேருக்கு நேர்சென்று நின்று ஓ அர்ச்சுனா! என்முகமாகத்திரும்பு, வணங்காமுடிமன்னனாகிய துரியோதனனைவளைத்துத் தகுதியற்ற சொல்லாலிகழ்ந்து கண்டவாறு பேசுவது நியாயமன்று, நாங்கள் யாவருமிருக்க நராதிபனை யெதிர்த்தது வீரியமுமன்று. நீ ஏன்வீணாகக்கிடந்து மயங்குகின்றாய்? இதோ நான் உனக்கு முன்வந்திருக்கின்றேன், என்னுடன் பகைத்துப் போர்புரிவதற்கு உனக்குத் திடமுண்டாயின் இங்கே திரும்பிப்பாரென்று போர்த்திறக் குறிப்பாற்புகன்று அக்கினிகக்கும் பொறியும் புகையுந் திக்கென்றெழுவதுபோல் பொழிந்தான் இவ்வண்ணமாக அங்கதேசாதிபன் சொன்னவார்த்தையை அருச்சுனன்கேட்டுக் குபீலென்று பொங்கியெழுந்த கோபாக்கினியானது கால்முதல் தலைவரையிலும் உதிரத்தை முறித்துவிட்டதனால் முகங்கறுத்துக் கும்பகரடகுஞ்சரத்தை மடக்கியபெரிய யாளியானது சிற்றத்தைக்கண்டு செறுத்துப்பாய்கின்ற செயல்போல் துரியோதனனைவிட்டு அறைகூவி வந்த விருந்தினனாகிய அங்கராசனுக்கு நேரே இரதத்தைமுடுக்கி யெதிர்த்தான்.

காண்டீபவிசயனுக்கும் கர்ணராசனுக்கும் சண்டை.

அர்ச்சுனன்தேரும் கர்ணன்தேரும் கிட்டிநெருங்கி ஒருவரோடொருவரெதிர்ந்து யுத்தஞ்செய்யப் புகுந்தபோது கர்ணனைச்சேர்ந்த காவலர்களும் இரதகசதுரகபதாதிகளும் கனைத்துக்கனன்று சிங்கத்தைத்துரத்திவருஞ் சேங்கன்றுகள்போல், பங்கப்படாத பற்குனனை வளைந்துபற்றினார்கள். இவர்களல்லாமலும், துரியோதனன்தம்பிமாராகிய சித்திராங்கதன் விகர்ணன் சித்திரசேனன் சங்கிராமசித்து சித்திரவிரதன் துன்முகன் துச்சாதனன் முதலாகியவர்களும் கர்ணனுக்கு உபதம்பிமாராகிய ராதைமக்களும் கர்ணனைப்பின்னாக்கித் தாங்கள்முன்னாகிக் கனகனவென்றுவீசிய காலகாலாக்கினி கதித்தெழுந்தவாறுபோற்சேர்ந்து, விசித்திரமான வில்லைவளைத்து, வில்லில்நாணேலியேற்றிச், சற்குருவைப்போற்றி, உடனுருவிப்பாய்கின்ற கொடியவடிக்கணைகளை ஒன்பது ஒருபது ஐம்பது எண்பது நூறுநூறென்று தொடுத்துத், திக்குத்திசையெங்கும் அக்கினிமயமாக்கி, அதிகவேகமுங் கோபமுங்கொண்டு, யாருக்கு

மடங்காமனின்று, அமராடுவதைக்கண்டு சுப்பிரமணியக்கடவுளை நிகர்த்த சுவேதவாகனனாகியகிரீடி இவ்வளவுபேருக்கும்இவ்விடத்திலேயே மரணமென்றெண்ணித் திறமிகுத்த செஞ்சிலையைத் திடமொன்று வணக்கிக் கட்டுப்படாத நாணோசைகாட்டியபோது எதிரிகளுக்குண்டாகிய இறுமாப்பழிந்து, தன்னந்தனியே சரீரமயர்ந்து தேராகிய சயனத்திற்சாய்ந்து, மறுபடியுந் தெளிந்தெழுந்து கண்கள்சிவந்து போரிற்புகுந்து தேரிற்சிறந்து சாணைபிடித்து தயிலதூபஞ்செய்த சரங்களைமாரிபோற் சொரிந்தார்கள். அப்பாணவருஷத்தைப் பார்த்த பார்த்தனனைவன் இவர்களை எளிதில் விடலாகாதென்றெண்ணிச் சோனமழை சொரிவதுபோல் நானாவித அத்திரங்களைவிடுத்துத் துரியோதனன் தம்பியாகிய சித்திராங்கதனுடைய வில்லையும் அவனேறிய தேரையும் அழித்து குடையையுங்குறைத்து உடலையுஞ் சல்லடைக்கண்ணாக்கி, அவன் தம்பியான மதிநூகி விகர்ணனைப்பார்த்துப் பிறைமுகக்கணைகளினாற்பிளந்து புறங்காட்டிப்போகக்கிளர்ந்து சித்திரசேனனென்பவனை வளைந்து அவனேறிவந்த தேரையுமழித்து அவன்சேனையையுமொழித்து இடியோசைகேட்டிளைக்கும் பாம்பைப்போற் பூமியிற்புரளவிட்டு உடலெங்கும் புண்ணாக்கி, மேலிட்டுவந்த சங்கிராமசித்து வென்பவனைச் சலிக்கவடித்து அவனுடலைப் பீறி,உதிரம்பெருகவிடுத்துத்,துன்முகனோடெதிர்த்துத் துச்சாதனனைநோக்கி, நச்சரவக்கொடியோனுடன்பிறந்த நாசகாலர்களேயென்று கலியத்தாக்கி, நால்வகைத்தானைகளும் நானிலவீரர்களும்இரதகசதுரகபதாதிகளும், அதிரதமகாரதசமரதர்களும், சூரியகிரணத்துக்குமுன் பனிநெருக்கம்போற்சூழ்ந்து, நாம் வாழ்ந்தவாழ்வு இம்மட்டோவென்று சோர்ந்து, நிலத்திலாழ்ந்து சிலர்நின்கிப் பலர்பின்வாங்கி பலங்குறைந்து அபர்ந்துபோவதைக்கர்ணராசன்கண்டு, மிக்க கோபங்கொண்டு காண்டீபனெங்கேயென்றுவரும்போது, அசுவத்தாமாகுறுக்கிட்டு, ஓ அங்கராசனே! நீயெந்த அருச்சுனனை யிகழ்ந்துபேசினையோ அந்தச்சங்கிராமவிசயன் இவன்தான். இவனை எவ்விதத்திலுமாட்டி, இவ்விடம் விட்டோட்டி, எங்கள்முன் நீவெற்றியடைந்து வரவேண்டும். அபசயத்திற் கிடங்கொடாதை? அப்பனே! செவ்வையான ஆலோசனைசெய், உன்மேல் வெகுநாளைய அடம் வைத்திருக்கின்றான் இந்தக்கிரீடி; நீ இராசசபையிற் பேசியசங்கதிகளைச் சரக்கோவையாய்க் கோத்துவைத்திருப்பான். இவை கனி[illegible]ல், நீ தப்பிவருவது அருமை. சாக்கிரதையென்றுஞ்சொன்னான். இவ்வாறு அசுவத்தாமா சொன்னதைக்கேட்ட கர்ணராசன் மனந்தாளாமல், அசுவத்தாமாவே! நான் பிராமணசாதியிற் பிறந்திருந்தால், யுத்தஞ்செய்வதற்கு அஞ்சுவேன், அப்படிப்பட்ட நைச்சிக இனத்திற்பிறவாமல் க்ஷத்திரியகுலத்திற் பிறந்தவனாகையால், க்ஷத்திரியதருமத்தை அநுசரித்துக் கையில் விற்பிடித்த நரன் அமருக்கஞ்சுவேனென்று நினையாதை. இப்போதென்னுடன் எவரெதிர்த்தாலும், அவர்களுக்கு இந்தப்பூமியே சமாதியிடமாக அடக்கம்பண்ணித்திரும்புவேன். இதற்கு வேறுபேச்சில்லை, என் பராக்கிரமத்தையும் யுத்தத்தின் அதிசயத்தையும் நீயே கண்ணாரக்கண்டு களிக்கப்போகின்றாய் பாரொன்று வெற்றிக்கொடியும் வாகைமாலையுஞ் சுற்றிலுங்கட்டித்தூக்கிய

கொற்றத்தேரைநெருக்கி யுத்தத்திற்குக் குறுகினன். அவ்வகையா யடுத்த சமயத்தில், இந்திரகுமாரனுடைய இரதமுங்கிட்டியது. கர்ணராசனுடைய இரதமும் அருச்சுனன்தேரில் முட்டியது. அவ்விருவர்தேரிலும் பூட்டிய குதிரைகள் கனைக்கவும், சாரதியிருவருஞ் சப்தித்திரையவும், தேர்ச்சக்கரங்கள் கிறீச்சிட்டொலிக்கவும், சிறுமணிச்சதங்கைகள் கணகணவென்னவும், தீரர்களிருவரும் வில்லையெடுத்துப்பிடித்து நிறுத்தி வளைத்து இழுத்து நாணிதொடுத்து,நாணிதெறித்து ஷ்டங்காரஞ்செய்து, பொன்மலைபோற் பிரகாசிக்கின்ற வில்லிலிருந்து விறுவிறென்று விடுத்த வேகக்கணைகளின் வீரத்திறத்தால், சமுத்திரம் சுவறி நிலைதடுமாறி தளதளவென்று கொதித்துக் குறையவும், பூமிப்பரப்புப் புகையால்மறையவும், யுகமுடிவோவென்று உலகத்தோரிரையவும், என்டிசைக்காதாரமாகிய எட்டுக்கிரியும் எதிரொலிசெய்யவும் திசையானைகள் திடுக்கிட்டுவாடவும் அட்டமாநாகங்கள் அலறியஞ்சவும், ஆகாயத்தில்வேடிக்கைப்பார்க்குந் தேவர்முதலியோர்களும் பூபாலராகியபோர்வேந்தர் பலரும் எப்புவனங்களிலும் இதைவிட அதிசயமில்லையென்று அற்புதமடைந்தார்கள். அன்றியும், சங்கநாதமுதலிய வாத்தியவொலிகள் செவிடுபடமுழங்கின தீவுகளனைத்துந் திகைக்கும்போழ்து சிங்கலலாடத் தேர்க்கிறையாகிய அங்கர்கோனனவன் ஆலாலவிஷத்திற்கொப்பாகிய அம்புகளைக்கும்பலாய்ப்பொழிந்து, அருச்சுனனுடைய வில் பாணம் தேர் குதிரை சாரதி முதலியவெல்லாஞ் சீர்குலையப்பண்ணினன். அவன்தொடுத்தஅத்திரம்வருகின்ற அகோரத்தை அருச்சுனன்கண்டு, வாய்மடித்து, அடையாளம்பொறித்தலும், அக்கினிப்பொறியையுமுடைய அனலாத்திரங்களேவிக் கர்ணன்விட்ட கணைகளத்தனையையும் ஒருகொடியிற் செத்தைபோலாக்கி, வில்லில் மேகாஸ்திரந்தாக்கி, வந்தித்து மந்திரித்து வள்ளலாகிய கர்ணன்மேற் கொள்ளைகொள்ளையாகக் கூசாமலிறைத்தான். வெள்ளையானைமேற் பவனிவரும் வேந்தன்மகனுந்திய பாணங்கள் காரிடி கடலிடி காலிடி நீரிடி நெருப்பிடிபோல் நெறிப்போடுவருதலைக் கர்ணன்கண்டு, சுடுகணைகள் கோடாகோடிகளைப் படபடெனத்தாக்கி, எதிரியுந்திய மேகாஸ்திரங்களைச் சிந்துசிந்தாக்கினன். இவ்வாறாக இருதிறத்தவர்களும் திரண்டபகழிகளைப் பரபரவென்று செலுத்தித் தேரைக் கரகரவென்றுசுழற்றிச், செஞ்சிலைச்சதங்கைகள் குலுங்க அசைத்துக் கொஞ்சமேனும், ஒருவரையொருவர் மிஞ்சவிடாமல், அடர்த்துப் போர்கொடுத்துவரும்போது, கனகக்கொடையாளுகிய கர்ணன் கைமிஞ்சிக் காய்த்துத்தோய்த்துக் கடைச்சல்பிடித்த பத்துப்பாணங்களையெடுத்து, உத்தரகுமாரன்பேரிலோச்சி இரதத்தின்மேல் இருபது கணைகளை யெடுத்துச்செலுத்தி அசுவங்கள் மீது குறிபிசகாது நாற்பதுசரங்களைப்போக்கி, அருச்சுனன்மேல் நூறுகணைகளைவிடுத்தான். உடனே அண்டச்சுவரின் அடியைப்பெயர்த்து, எண்டிசைமுழுதும் இடியப்பொடித்துச் சரசரசரசரவென விரைந்துவருங்கணைகளைத் தனஞ்சயன்கண்டு ஒருசதுமுகக்கணைகொண்டு அவற்றையெல்லாம் பிளந்து பொடிபடுத்தினன். அந்தவிபரீதத்தைப் பார்த்திருந்த அமரர்களியாவரும் போர்த்திறப்பார்த்தனைப் புகழ்ந்துகொண்டாடினர்கள்.

இப்பால் பற்குனன் வெகுண்டு வில்லையெடுத்துக் கணைகள்தொடுத்துக் கர்ணன்மேலும் அவன்தேரின்மேலும் குதிரைகளின்மேலும்சாரதிமேலும் பிரயோகித்தான். அக்கணைகளெல்லாம் ஒரேமுகமாய்க்கூடி இந்திரனாட்டைநாடி சத்தமேகம்போலெழுந்து இரைந்து இரதகசதுரகபதாதிகளைநாடித் தேடிவருகின்றவேகத்தைக் கர்ணராசன்கண்டு காலாக்கினிபோன்ற பாணங்கள்விடுத்து அவற்றை அணுவினும் பரமாணு வாக்கிவிட்டான்; அவனாண்மையைக்கண்ட யாவருந்துதித்து இவனுக்கெதிருண்டோவென்று மதித்தார்கள். உடனே இருவரும் பிரிந்து பின்னுமெதிர்ந்து வாசாமகோசரமாய் வடிக்கணைசொரிந்து அமர்புரிந்தார்கள்; இருவர்விழிகள் எரியவும் இருவர்மனம் பதறவும் குதிரையினங்கள் கதறவும் சேனைகளெங்குஞ் சிதறவும் கட்கனலும் தேர்ச்சக்கரங்கள் திருவாகியசெங்கனலும் கணைகள்கக்குங் கடுங்கனலும் பொங்கிப்புகையவும் ஒருவரொருவரை வெகுண்டுபுகன்ற உலையினின்றெழுந்த பெருங்கனல்விரிந்து எரிந்துநிறைந்தது, இருவர்தேரும் இடைந்துமிடைந்து இடைவிடாமலுழன்று குயவன்திகிரிபோற்சுழன்று பாதலபூதல முழுவதும் பள்ளமாகி மறுபடியுஞ் சேனைகளாலெழுந்த புழுதிகளால்நிறைந்தது இவ்வகையாகத்தொடர்ந்து தாறுமாறாய் வேறுவேறுபாணங்களை நூறுநூறாகத் தொடுத்துச் சண்டைகொடுத்து நின்றார்கள். அவ்வேளையில் அர்ச்சுனனே அங்கராசன்செய்த அமர்த்திறத்தைக்கண்டு, அதிககோபங்கொண்டு ஆ கர்ணா! உனது சாமர்த்தியமும் நீ செய்யுஞ்சண்டையும நீ கற்றகல்வியும் இவ்வளவென்றறிந்துகொள்ளும் பொருட்டாகவே இதுவரையிலும் உன்னைப் பிராணனுடன்விட்டு வைத்திருந்தேன்; இனி நான் தாமதிக்கமாட்டேன், பொறுமைக்கிடங்கொடுத்தால் அது வறுமைக்கிடமாகும், இவ்விடத்திலுள்ள பெரியாரும் சிறியாரும் அறியத்தக்கதாக ஒருகணையால் உன்னைவாட்டி இசையைநாட்டி நானடையப்போகின்ற வென்றியை நீயே நன்றாயோசித்துப்பாரென்று இரண்டு அர்த்தசந்திரபாணங்களைவிட்டு அதிசீக்கிரத்தில் கர்ணன் கையிற்பிடித்தவில்லைச் சடுக்கென்றொடித்தான். அப்பொழுதுகர்ணன் கலீரென்றுநகைத்து மலைபிளந்ததுபோலொடிந்தவில்லைவிட்டெறிந்து கண்களையுருட்டிவிழித்துக் காரும்பாருங் கருகநோக்கி வேறுவில்கொண்டு பற்குனன்பேரில் சிகைவிரிந்த செங்கதிர்வேலெடுத்துச் செலுத்தினான். அங்கதேசாதிபன் எறிந்தவேலாயுதமானது வெளிப்பட்டுப் பொன்னிறமாகச்சொலித்துச்செஞ்சிலைவிசயனை நோக்கிப்பூர்ணசந்திரனைப் பிடிக்கவருகின்ற இராகுக்கிரகம்போல்வந்தது? அந்தவேலாயுதம் கந்தமாதனமுதலியவரைகளும் கடலுங்கலங்கமுப்புவனமுந்திடுக்கிடவந்தவிதத்தைச் சர்ப்பக்கொடிதரித்த கௌரவகுலத்துரியோதனனும் இரதகசதுரகபதாதியுடன் காவலர்களுங்கண்டு ஓகோகோ! அருச்சுனனுடையசௌரியம் இப்போதன்றோ தெரியப்போகிறதென்று இமையுடனிமைகொட்டாமற் கண்விழித்துப்பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். யாவருநடுங்க எதிரேறிவந்த வேலாயுதத்தை அநுமக்கொடிக்கதிபனாகிய அருச்சுனன்பார்த்து வலிதிருந்தி மணிபொருந்தி மலரணிந்துவிளங்குகின்ற வச்சிரக்கணையொன்றெடுத்துஅசைவற்ற வில்லிலமைத்து அபிமந்திரித்து ஆவேசங்கொண்டேற்றினான். அந்தக்கணையா

னது பந்துபோலெழுந்துவந்துமேல்விழுந்து அந்தவேலாயுதத்தை அரப்பொடியாக நூறி அந்தப்பொடியை வணங்காமுடி மன்னன்முதலாகிய கௌரவச்சேனைகளின் கண்களிற்றூவியது, விழித்தகண்விழித்தபடி வேடிக்கைபார்த்திருந்த வேந்தர்களியாவரும் இதற்கோ இந்தக்கொள்ளை! அடாபாவியென்று தலையிறங்கிக்கொண்டார்கள், அதைக்கண்ட தேவர்கள் அகங்களித் தாடினர்கள். அங்கதேசராசனுகிய கர்ணன் அருமையாய்ப் பெற்றிருந்த வேலாயுதம் அருச்சுனன்கணையால் அழிபட்டுப்போனதைக்கண்டு சற்றுந்தளராமல் மனோதிடங்கொண்டு வைரவில்லெடுத்துத் தீர்க்கமாய்வாங்கிச் சிறுநாணேசைகாட்டிச் சிலைவிசயனுக்கு எதிரில் அளவுபடாத அத்திரங்களை அமோகமாகச்செலுத்திப் போர்விளைவித்தசமயத்தில் இந்திரன்மைந்தனுகியதனுவேதசுந்தரதனஞ்சயன் மகாதேவனைவணங்கி அருச்சனைபுரிந்து பரிந்து சிறந்தபொற்கட்டமைந்த அத்திரங்களைத்தெரிந்தெடுத்துவிடுத்துச் சங்கமுங்குறித்துச் சொர்னமயமாய் விளங்கிநின்ற கர்ணனுடைய தேரையும் மின்னெழில்போன்ற கச்சைக்கொடியையும் நான்குபுரவியையும் அப்புரவிகளைப்பாங்குறவிடுக்குஞ் சாரதியையும் பொடியாக்கி அவனுடற்காப்பாகிய மணிக்கவசத்தையுந் துணித்துவிட்டு விரபட்டத்தையுந் தூளாக்கித் தலையிறக்கமாய்ப் பூமியினிற்கச்செய்து மிகமகிழ்வுற்றுப் புகழ்பெற்ற பார்த்தன் சிற்சிலவார்த்தைகள் சொல்லலாயினன்.

ஐயா கர்ணு! இளமைதங்கிய இடபம்போன்ற உன்னைநான் நெடுநாளாக அறிவேன், உன்யோக்கியம் எப்படிப்பட்டதென்னின் புத்தியில்லாத புரவலர் சேர்ந்த புன்சபையில் என்னை வெற்றிகொள்ளத்தக்க சுத்தவீரர்கள் ஒருவருமில்லையென்றும் யுத்தத்தில் நான் அதிசமர்த்தனென்றும் வித்தாரம்பேசுவாய், நான் நிகரற்றவனென்பாய், இப்படி புலம்பிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் உன்பொல்லாதவேளை யுத்தநேரிட்டால் அற்பபலம்பெற்ற அறிவில்லாதானைப்போல் அபலிற்பதுங்குவாய், ஒருவேளை அடுத்துப்போர்கொடுக்கத் துணிந்தானமட்டும்பார்ப்பாய், அபசயப்பட்டு ஓட்டமெடுப்பாய், இக்குணம் உன்னுடன்கூடப் பிறந்திருக்க வேறே வாவென்றால் வருமா? ஐயோ! எவர்களென்னகேட்டாலும் இல்லையென்னுமற் கொடுக்குந்தன்மை உன்னிடத்திலுண்டென்றும் ஓயாமலீயுங் கொடையாளியென்றும் இடையெழுவள்ளலிலொருவனென்றும் உன்னைப்போற்றிப் புகழ்கின்றார்களே! ஆனல் யுத்தகளத்தில்வந்து ஒரு தெப்பல்பட்டவுடனே அப்பாவென்று புறங்காட்டியோடுகின்ற விடயத்தில் நீமிகவுங்கொடையாளிதான்,நானும் உன்னைமதித்திருக்கின்றேன். வாய்மதம் பேசும்வள்ளலே! போர்முகத்திற் றேர்செலுத்திப்போர்புரிந்து புறமிடாதிருந்து பிராணனை விட்டுவிடுவையானல் உலகத்திலுள்ள எல்லோரும் புகழ்வார்கள் பரத்திலுள்ள தேவர்களும் எதிர்கொண்டுசென்று மகிழ்வார்கள் அரம்பாஸ்திரிகள் போகமுமுண்டாம், வீரசுவர்க்கமடைவாய், இல்லாவிட்டாலும் நம்பித்திருக்கின்ற அரவக்கொடியோன் கொண்டாடும்படியாகத் தப்புகளைக்குழறி உன்காலத்தைக்கழித்து நமனுக்குமாளைஒப்பிவிப்பதுஉத்தமம்; அப்படிசெய்யாமல் அமர்செய்யவந்து புகுந்து பிறைமுனைப் பகழிசொரிந்து

நானும் போராடுகின்ற வீரபுருடனென்று தேரேறிவந்து எதிர்த்ததுமதியீனம். திறனற்றவனே! மேலும் பாஞ்சாலராசன் பண்ணிய யாகாக்கினியிற்பிறந்த துரோபதையை நமது அத்தினபுரியிற்கூடிய கொற்றவர்சபையிலேற்றி வத்திர பங்கஞ்செய்த காலையிற் பொறிபுலன்கலங்கிக் கண்ணீர் தாரைதாரையாய்ச் சொரிய மெய்சோர்ந்து நடுநடுங்கிநின்று மானந்தன்னதென்று மனம்வாதித் துத்தன்னுடைய புடவையைத் தடுத்துக்கொள்ள மாட்டாமல் வத்திரத்தைக் கைவிட்டுத் தேகாபிமானநீங்கி அவள்அரிவாசுதேவா ஸ்ரீகிருஷ்ணா! மானுபி மானமுன்னுடையதென்று, வாழ்த்திவணங்கி மரம்போனின்றனளே! அது போது துட்டராகிய நீங்கள்பார்த்து நகைத்துப் பரிகாசவார்த்தை பகர்ந்தீர் களே. அவ்வேளையில் எங்கள் தமையனாகிய தருமராசன் அப்பா தம்பிமார் களே! இப்போதொன்று முழுகிப்போகவில்லை. இதுவரையிலும், நாம் தருமந் தப்பி நடந்தோமென்னும் பேருமில்லை. பழிச்சொற்பெறுமற் பொறுத்திருங்க ளென்றுஅடிக்கடி எங்கட்கு அறிவுறுத்திச் சாந்தம் பத்தினி தனயன் பொறு மையென்று தருமஞ்சொல்லித்தடைப்படுத்தினர். அவரோதியமூலமந்திரத் தால் மாநாகமபோலடங்கித் தடைப்பட்டுக் கருமாநுபவப்பிரகாரங் காலங் கடத்தினோம். ஆகாகா! வைதீக சாந்தத்தராகிய தருமராசனது அரு ணிறைந்த கடைக்கண் சிறிதசையுமாயினும், எங்களை நோக்காதிருக்கினும் போதுமே. இதுவரைக்கும் கர்ணன் துரியோதனன் என்கின்ற பெயர்கள் இந்தக்காசினியோர் பேசிக்கொள்ளவுமிருக்குமோ? உங்கட்குச் செல்வ முஞ்செருக்குமோ? தீரமும் பெருக்குமோ? ஆ பாவி! அப்படி நாங்கள் ஒடுங்கியிருந்தும், அந்தச்சபையில் நீங்கள்நடந்த அநியாயத்தால், வீமசேனன் வெகுண்டு மனநொந்து துரியோதனன்முதலாகிய நூற்றுவரையும் என்கதை யால்,நானேநொறுக்குகிறேனென்று சபதம்பேசி இவர்களை முடிக்கிறபரியந்தம் தாகத்திற்குச் சலங்குடிக்கமாட்டேனென்று கூறினன். அந்தச்சொல்லைக் கேட்ட ஒவ்வொருவரும் தலைகுலுங்கிச் சாய்ந்தார்கள். அவ்வேளையில் நானுமெழுந்து மின்னியகணையால் உன்னுயிர் போக்குகிறேன் என்று உறுதி மொழி உரைத்திருக்கின்றேனே. அது உனக்கு நன்றாய்த்தெரியவருமே! என்றைக்கிருந்தாலும் என்பாணத்திற்கு உன்தலை யிரவலே. இப்போதும் என்ன! ஒருமுழுக்கில் மண்ணெடுக்க வேண்டுமென்னும் அவசரமில்லை. நீயிப்போதிருக்கிற கதியை யோசித்துப்பார். உனக்கு என்னுடன் போர் செய்யத் தெரியுமானல், தாராளமாய்வந்து போர்புரிந்து என்னைவெல்லலாம். நான் உனக்கு இப்பூமியை இடம்பண்ணியிருக்கின்றேன். ஐயையோ! பாவம், எங்கேபிறந்தாய்; எங்கேவளர்ந்தாய்; எங்கேயிருந்தாய்; இங்கேபுகுந்தாய்; அங்கதேசாதிபனே! அவ்வாறு சாகாமல் இன்னுஞ் சிலநாளைக்கு இருக்க வேண்டுமென்றெண்ணினல், இதோ! நான் தொடுக்கப்போகின்ற இந்துமுகா த்திரங்களினல் தப்பாமல் உன்தலை தத்திவிழப்போகின்றது. அப்பா! நான் முன்னே உனக்கறியச்செய்தேன் இப்போதாவதும், உன்னுயிரைத் தப் பிக்கொண் டோடிப்போவென்று உறுக்கிவிழித்தான்.

இந்தப்படி, அர்த்தநாரீஸ்வரம்பெற்ற அம்பிகையுடன் ஏன்கர்த்தனாகிய பரமேசுவரன் மழவிடைமேலெழுந்தருளி வரும்படிக்குத் தவயோகஞ் சாதித்த தனஞ்சயன் சொற்றபோது, அவனிசைத்த கடுமொழிகளெல்லாங்கலந்து பிலம்புகுந்து உறையுமாறுபோல், கர்ணனுடைய காதிற்புகுந்து கலங்கச்செய்தது. அதனாற் கர்ணன் சூரியன்போற் கண்கள் சிவந்து, நெருப்புக்காற்று வீசுவதுபோல் நெட்டுயிர்ப்பெறிந்து, இரத்தினமிழைத்த கடககங்கணந் தோளணிதாங்கிய இருகரத்தையும் பளபளவென்று தட்டி, இரண்டுகையுங்கூப்பிக்கொட்டி, கக்கட கக்கட சிரித்துக் காதுடன் சிரத்தையசைத்துத் திக்கென்றெரிய விழித்துப் பக்கத்திற்குப்புறப்பாய்ந்தோடிப் போனான். இவ்வாறோடிய கர்ணன் மனந்துணிந்து, மலைபோற்றிணிந்த சேமத்தேரேறி வச்சிரக்கவசம் உச்சிதகவசம் மணிக்கவசம் பொற்கவசம் பூண்டு விசாலமாகியமார்பில் முப்புரிநூலும் முத்தாரமும் கொத்துச்சரப்பளியும் மின்னும்படியாகத் தரித்துக், கடலின் அலைபோற்றுலங்கிய நாரிமாட்டி வில்லைப்பிடித்து விசையாயிழுத்துத் தடதடவென்று தேரைச்செலுத்திச் சற்றுநேரத்திற்கு முன்னே சண்டைபோட்டு இளைத்தோடிய தடத்திற்போய் நின்று, மீசைமுனைக்கு மிகுமுறுக்கேற்றிக், கண்டவர்கலங்கக் கனைத்துக் கொண்டல்வாகனன்குமாரனான கிரிடியை அண்டையிற்கண்டு, அடா அர்ச்சுனா! எங்கே ஓட வழிபார்க்கின்றாய்? சண்டைபோட வகையில்லாமற்போகின்றாய். இதோ! நான் வந்திருக்கின்றேன். இளைத்துப்போய்விடாமல், என்னை வளைத்துப் போர்புரியவாடாவென்று அவனைமடக்கி ஏண்டா என்னை யிழிவாய்ப்பேசினையென்று தன்னுக்குக்குத் தழும்பேறும்படியாய்க் கோபங்கொண்டு கொடிதாகியசொற்களைக் கொட்டினான். அடா! பஞ்சவரில் இடைப்பட்ட பஞ்சையே! நீயென்னடா கொஞ்சமேனும் அஞ்சாமல், மெத்தவுங் கற்ற சுத்தவீரன்போல், கருவங்கொண்டு மிஞ்சிப்பேசுகின்றாய். தலையறுந்த ஆட்டமாய்த் தனக்குத்தானே சுழன்றோடுகின்றாய். ஊரில் உலகத்தில் உள்ள பெரியோர்கள் உரியோர்கள் சிறியோர்கள்முதலாகிய வறியோர்கள் இவர்களியாவரும், உன்னைக்குறித்து இவனும் ஒருவீரன்தானாவென்று, ஏளனஞ்செய்துசிரிக்கும்படி ஏமாந்தசூதாடி நாட்டை நகரத்தை நலத்தைப்பலத்தைத் தாயத்தார்கள்கையில் ஒப்பித்துப்போட்டு, மானம்போனாலும் பிராணனிருந்தாற்போதுமென்று, இருளுக்குப் பிறப்பிடமும் இருப்பிடமுமாகிய வனத்திற்சென்று கதியற்றிருந்து கஞ்சிக்கலைந்து வயிறுகட்டி வாணாளொட்டிக் காலங்கழிக்கக் கற்றாயேயன்றிப் போர்முனைக்கண்ணே புகுந்து, வில்லாளராகிய வல்லாளருடன் விதண்டைவிளைத்து, வெற்றிபெறுகின்றவகை இன்னதென்றறிவாயோ? வீரப்பிரதாபம்பெற்ற விவேகிகளை உணர்வாயோ? நீயும் ஒரு வில்வீரனென்று வீரபட்டங்கட்டிக்கொண்டு வில்லெடுத்துப் போர்கொடுக்கவந்தாயே போதும்போதும். அரசர்கோட்டியுள், வட்டாடித்தோற்று மரியாதைகெட்டதுமன்றி உங்கள் நாட்டைப்பறித்துக்கொண்ட நரேந்திரனானவன் உங்கள் பெண்சாதியையும் மயிரைப்பற்றி யிழுத்துவந்து சபையிலேற்றி மானபங்கஞ்செய்வித்தானே. அக்காலத்தில் இல்லாத முனையும் மூக்கும்

இந்தக்காலத்தில் எங்கடாஇருந்து எழுந்தது. என்னைக்காணவே கிளைத்தோடிவந்ததோ? அல்லது, முளைத்தோடிவந்ததோ? மானமும் வல்லமையும் மாறுதவனே! போகட்டும் கீழ்கிடப்பவன் கீழேகிடப்பானு என்பது போல், ஒருவேளை சூரத்துவம் இப்போதுதான் வந்தாலும், என்னைசெயித்து இசைபெறப்போகின்றவன் நீதானு? விசயகாண்டீபமெடுத்து வெற்றிவாகை பெறுதற்கு வந்தாயோ? ஆ பைத்தியக்காரா! இராசராசேசுவரனுகிய துரியோதனமகாராசன் சமுகத்தில் பேச்சுமூச்சுமில்லாமற் சிதறிக்கிடந்த பாண்டவர்களில் பின்னிட்டிருந்த நீ என்னை மிரட்டவந்தாயென்னடா, பேதையே! இதோ இப்போது நான் விடுக்கப்போகின்ற இரவியாத்திரங்களால், உன்னுயிர் வெளிப்பட்டு, உடல்முறிபட்டு, உன்போன்றவர்கள் நிந்திக்கத்தலைப்பட்டு, நீ நெடுநாளாய்த்தேடிச் சேகரித்த கீர்த்தியுங்கெட்டு, கிட்டேரமாகிய வசைமேலிட்டுப் பொன்றுடுபோய்ச்சேரும்படியாய் நாளிட்டுவைத்தநன்னுள் வந்து ஒத்துக்கொண்டது. இனியென்ன இருக்கின்றது. தாய் தமயன் தம்பியர்கள் தாரம் தயன்முதலியபேர்களை ஒழித்துவிட்டுச் சண்டைக்குத் தலையிட்டு, விராடபுரத்தெல்லையிற் செத்துப்போகப்போகிற வுன்னைக் குற்றமாகிய கொடுஞ்சொற் கூறுவானேன்? அப்படிப்பேசுவதினுல் எனக்கென்ன பயன்? பார்த்தனே! சற்றுநேரத்திற்குமுன்னே என்னை வென்று ஓட்டிவிட்டதாய் இறுமாந்து முன்னுலோசனை பின்னுலோசனை யெண்ணுமல், குறைகுடந் தளும்புவதுபோலும், நொய்யரிசி கொதிபொறுக்காத் தன்மைபோலும், சின்னப்பேச்சுகளைக் கொட்டிப்போட்டாயே. உன்னுடனெதிர்த்த என்கைவில்லும் நானேறியதேரும் ஒழிந்து, நானும் போர்முனையிலழிந்துபோனதை இன்னவகையென்றறியாமல், வெற்றியடைந்தோமென்னும் உற்சாகங்கொண்டு, உனக்கிச்சையானமட்டும் பேசினைபோலும், அப்பா அர்ச்சுனு! யானையைச் சிங்கம் பங்கப்படுத்துவது இயற்கை, அப்படிப்பட்ட யானைக்குச் சிங்கம் இளைத்துப்போமானுல், அவ்யானை களிபெருமகிழ்ச்சியடைந்து சிங்கத்தைப்பழித்துப்பேசுவது தீரமோ? இதுவுமொரு வீரமோ? நீ யென்னவோ மிகத் தெரிந்தவனென்று பேசிக்கொள்ளுகிறுர்களே. உனக்கென்னதெரியும்? வில்லானது எவ்வளவு துவண்டுவளைகிறதோ அவ்வளவும் வேகத்திற்கிடமென்றுதோன்றவில்லையா? ஆட்டுக்கடா பின்னுக்கிடைவது இன்னெருஆட்டின் தலையோட்டுக்குக் கேடென்றுணராயா? ஏதோ ஒருகாரியத்தினுற்பின்னிட்ட சிங்கமானது மறுபடியும்புகுந்து மத்தகத்தைப்பிளந்து, உதிரமூளையை நிரம்பப்புசிக்குமென்று, சற்றேனும் நீ நினைக்காமற்போனதென்ன? நல்லது; இப்போது நானுன்னைச் செய்யப்போகின்ற செய்கையினுலும் காரணகாரியங்களினுலும் என்னை இன்னுரென்றறியப் போகின்றுய்! உன்னிடத்தில் விருதாவாய்ப்பேசுவதிற் பயனென்றுமில்லை. அப்பிரயோசனுவென்று உரத்துத் தொனியிட்டதட்டிக் கரத்திலிருக்கும் வில்லைநாட்டி நாணிபூட்டி வலிய கணைகளை வந்தித்துமாட்டி விரலைக்கணங்காட்டி மிக்கவிசையுடன் தகுந்த சரங்களை விறுவிறுவிறுவிறென்று பொழிந்தான். சூரியகுமாரனுகிய கர்ணன் தொடுத்த சரங்களினுலும் அவன் தூறிப்பேசிய வீரியச்சொல்லினுலும் அருச்

சுனன் மனம்பதைத்து வருணாத்திரம்முதலியவைகளை அபிமந்திரித்துப்போக்
கிப்பற்பலதேயமாந்தரும்விற்படைவேற்படையையுடைய வேந்தரும் வீரமுள்
சேனைகளும் இருண்டுமருண்டு இளைத்துப்போம்படியாக்கிக் கர்ணன்மேலுங்
கணைக்கமாட்டினான். இவ்வாறுகும்புகும்பாகமூந்திய அம்பினங்களைக்கண்டு எதி
ரெதிர்தடுக்கும்படிக் கோடிபாணங்களேவிப் போராடி மாறாடிய தங்கள்சேனை
யுடன்வளைந்து நூறாகிய வேந்தருடன்சேர்ந்து விற்கிரீடியை மொய்த்துக்
கொண்டு ஈட்டி கதை வாள் வேல் சூலம் பிண்டிபாலம் தோமரம் கத்தி
கட்டாரி வாங்கு சாங்கு முசுண்டி முள்முனை சக்கரமுதலாகிய சஸ்திரங்களை
எடுத்தெடுத்தெறிந்து மூடுபனிபோற்சாடுங்காலையில் தனிச்சிங்கமென்னநின்ற
தனஞ்சயன் செஞ்சுடர்க் கணையைத்தெரிந்து சிரத்தையாயெடுத்துப் பரிந்து
பூசைகளநேகம்புரிந்து காண்டீபகாரியில் வரிந்து கால்தலைதெரியாமற்சொரிந்
தான். அக்கணைகளெல்லாஞ்சேர்ந்து கும்பலிற்போய்விழுந்து துன்புறவேசுட்
டெரிக்கும்போதுகாவலர்முதலாகியசேனைகளும்கடலின்முகட்டெழுந்த கதிர
வனைக்கண்ட பனிபடும்பாடு பட்டழிந்தனர். விண்படரும்மேகம்போலடர்ந்த
நாற்படைகளில் புண்படாமற்போனவர்களில்லை இப்படிவந்த சேனைகளெல்
லாம் கரமுறிந்து கால்தறித்து சிரமெரிந்து சிலைநெரிந்து சிதைந்தன இதனால்
வந்த சேதத்தையும் வதைந்து சாய்ந்ததையும் பிணச்சேற்றிற் புதைந்து
போனதையும் ஒதுங்கியோடுவதையும்பதுங்கிவாடுவதையும் பானுகுமாரனாகிய
கன்னன்பார்த்துப் படபடத்துச்சினத்துக் குருகுலசேனையிற்கூடிய பலபடை
மன்னரும் அன்புகூர்ந்து இன்புறும்படி ஆசிரியராகிய பரசுராமனைப்பணிந்து
அழல்வாளிகோடி அனல்வாளிகோடி அரிவாளிகோடி யெடுத்துத்தொடுத்
தான். அக்கணைகளியாவும் செந்தியிறைத்துச் சகமுற்றுநிறைத்து விண்ணைக்
கருக்கி மேகங்களைச்சுருக்கி வேலைநீரைவெதுப்பி வெந்நீராகக்குழப்பி விண்
டலமளாவிப் பிடித்து மேலிட்டுநின்ற மலையையிடித்துப் பெருங்காற்றடித்துச்
சோனாமேகம்போற்பொழிந்து சற்றேனுந் தங்காமற்றிரிகின்ற அத்திரங்களைப்
போர்முகவிசய புருடசிலாக்கியன்கண்டு தனக்குக்கைவந்த இந்துமுகாத்திரம்
ஐந்து ஆய்ந்தெடுத்து அபிமந்திரித்து எதிரிவிட்டபாண முழுதையும் சற்று
நேரத்திற் சிதறவடித்து பொய்யெனப்பிளந்து மெய்யெனத்தழைந்து வெற்றி
வீரப்பிரதாபத்துடன்வரக்கடவதென்றுவிட்டான். அவனுந்தியவண்ணம்வந்து
முந்திய கணைகளைப்பிளந்து மேவலர்கண்டோடக்களைந்து நிற்கையில் மூவுலக
முங் கொண்டாடக்கொடுக்குங் கொடையாற் பெயர்பெற்றுக் சீர்த்திவிளக்கிய
அரசர்பெருமானாகிய கர்ணனும் தொடுக்கும்படையாற் றுட்டர்களழியக் கொ
ட்டமடக்கிப் பெயர்விளக்கும் பாண்டவனாகிய பார்த்தனும் ஒருவருக்கொருவ
ரெதிர்த்துப் போர்புரிந்தனர். இருவர்கணையும்பறிந்து இருவர் இரதமுஞ்செ
றிந்து இடைப்பட்ட சேனையுமுறிந்து ஆகாயமும்பூமியு நிறைந்து சூரியனொ
ளியுங் குறைந்து வேடிக்கைபார்த்திருந்த மூவரும் தேவருமறைந்து இடம்
பெயர்ந்தார்கள். வாயுதேவனும் உலகிலுலாவுதலொடுங்கித் தப்பித்துப்போ
னான். இருவரும் பிரயோகஞ்செய்த பாணவேகத்தினால் வெகுபேர்மாண்டார்
கள். அடிக்கடி அவசகுனங்களும் விபரீதங்களும் உண்டாய்த்திகிலும் விளைந்

தது. யுத்தஞ்செல்கின்ற இருவர்கண்களுஞ் சுழன்று இருவரெண்ணங்களு மழ ன்று சிறப்பாய்வருந் தேருந்தேரும் நெறிப்பாய்வருங் குதிரையுங்குதிரையும் தேர்ப்பாகருந் தேர்ப்பாகரும் ஆர்ப்பாகிய கொடியுங்கொடியும் ஒன்றோடொன் றாடுதாக்கி அனர்த்தமுண்டாக்கியபோது கர்ணன்கனைத்து இடம்வலம் வலம் இடமாகத் தேரைத்திருப்பி பெருநகைநகைத்துப் பெரும்புலியென்னப்புகுந்து அடா அர்ச்சுனா! அஞ்ஞாதவாசஞ்செய்யப்போன ஒருவருடத்தில் இன்னும் ஒருநாள் இருக்கவேண்டியிருக்க அதற்குள் அவசரமாய்வெளிப்பட்ட உன்னால் நீங்களைந்துபேரும் இனி அநுபவிக்கப்போகின்ற வனவாசத்துன்பமும் உங்கள் தலைமேலேறிக்கொண்டது சபையிற்சொல்லிய சத்தியவசனத்துறுதியன்றோ? அதுதெரியாமல் என்னடா! மெத்தத்தத்திச் சுற்றித் தலைகீழாய்வீழ்கின்றாய், கற்றவித்தையெல்லாங்காட்டுகின்றாய், குற்றமற்றவர்களைப்போற் கொண்டான டிக்கின்றாய், இதோநான்விடப்போகின்ற சிலீமுகங்களினால் இறந்துபோவாயா னால் "கூண்டோடுபோயிற்று குளிருங்காய்ச்சலும்" என்றுகூறும் பழமொழிப் படிக்குஉங்களைமன்னித்து விடப்படும், சிலவேளை என்கணைக்குத்தப்பிப் பிழை ப்பாயானால் இன்னும் பதின்மூன்றாண்டு வனவாசம் செய்யவேண்டும், இவ்வா றேஅந்தந்த அஞ்ஞாதவாசந்தோறும் உங்களை எப்படியானாலுங் கண்டுபிடித்து நீங்கள் காட்டுக்கு ஆட்சியாய்ப்பொருந்த நாங்கள் நாட்டுக்கு அரசாட்சியா யிருந்து எங்கள்காலத்தை இன்பமாய்க் கழிப்போம், உங்கள்காலத்தை உத வாம லொழிப்போம், இத்தஞாலத்தை இசையுடன் புரப்போம், நீங்கள்பண்ணு கின்ற இந்திரசாலத்தைப்பசையறக் களைப்போமென்று சிந்தைவெதும்பித் தீப் பொறிபம்பிய கம்பிக்கணைகளை ஒன்றன்பின் ஒன்றாகவுந்தி நிரைநிரையாகச் சிந்திக் கும்பல்கும்பலாகக் கொளுவிக்குப்பைகூளமாகக்குவித்து அர்ச்சுனனை யும் தேரிற்பூட்டிய பரிகளையும் சாரதியையும் அலரும்படிசெய்தான். அந்தக் கர்ணன்சிந்திய கணைகளோ ஆகாய பாணம்போல்விரைந்து இராகுக்கிரகம் போல் விரைந்து பரந்துஎரிந்துவருகின்றகோரத்தைப் பார்த்தன்பார்த்துக்கண் ணும் மனமும் வேகச்செறுத்து வின்னாணிவீக்கி ஒன்றுபட்டோடச் சரங்க ளைத்தாக்கி பட்டப்பகற்போல் வெட்டவெளியாக்கிப் பானுகுமாரன்பாணம் எட்டும் பாதிவழியில் நாணம்பட்டுப் போகப்படுத்தி வேண்டியமட்டும் போர் நடத்தி இத்தக்கர்ணனை எதிரியாகக்கொண்டு நாமிவனுக்கு நேராகநின்று போ ராடுவதும் இவன் நம்மையடிப்பதும் நாம் இவனையடிப்பதும் பெருமையாயிரு க்கவில்லை. பார்க்கின்றவர்கள் இவனுஞ் சுத்தவீரன்தான், இவனால் அர்ச்சுன னும் அடிபட்டான், வெகுநேரம்போர்செய்தானென்று சொல்லுவதற்கு இடம் கொடுக்கின்றது, ஆதலால் இது நமக்குத்தகாது, இவனோடெதிர்த்து வெகுநேர மாகின்றதென்று நெற்றிவியர்த்து புருவமத்தியைநெறித்து சற்றுநகைத்து முற் றப்பகைத்து உசிதமான வச்சிராத்திரந்தொடுத்து அவனுக்கு உடற்காப்பா கியகவசத்தையும் துவசத்தையும்மார்பையும் உடலையும் பீறிக்கிழித்துப்பெருந் தொளைபோக்கி உதிரம் பெருகியோடச்செய்து அந்தமட்டும் விட்டுவிடாமல் இரண்டு காளமேகக் கணையைத்தாக்கி வீணைப்பிதற்றும் வாய்மேலடித்துக் கச்சக்கொடியைப்பிச்சியெறிந்தொடித்துக் கண்ணிரண்டிலும்புண்படவடித்து

மின்னும்பூச்சி பறக்கவிடுத்து நவரத்தினமுடி தவறக்கெடுத்து வாகுவலயமுத விய மதாணிப்பதக்கங்களையுமாற்றிப் பெரியவில்லைப் படீரெனமுறித்து பாவி யான கர்ணனைப் பார்க்கப்பார்க்கப்பற்றிக்கொண்ட வயிற்றெரிச்சலுடன் வை ரம்பற்றிய எரிக்கணையிறைத்து அவன் இருதோளையுந்தொளைத்து பகைத்தெ திர்த்த பரிவாரங்களையும்வளைத்து கொட்டியபஞ்சுபோற் குமுக்கிக்குவித்துக் குலைகுலைத்தோடப் பிடித்து பொறுத்து எதிரொருவரில்லாமல் எங்குந்தனி த்து ஊடாடிவருந்தாட்டாளனாகிய தனஞ்சயனைவக்ஷஸ்தலத்தில் மகாலக்ஷ்மியை வைத்தருளிய மாயனும் அவனது திருநாபிக்கமலத் தெழுந்தருளிய சேயனும் பட்சத்துடன்மகிழ்ந்து பரிந்தார்கள். தேவர்களும்புகழ்ந்து கொண்டாடினர். இப்பால் அங்கதேசாதிபன் அர்ச்சுனனா லடிப்பட்டுத்தனக்கு உயிர்த்துணையா கிய வில்லும் ஒடிபட்டு சிவரத்தினத்தையிழந்த செந்தலைநாகம்போற் சிந்தை தளர்ந்துபின்னுந் தைரியம்விடாமற்கிளர்ந்து வேறுவிற்பிடித்து மின்போற் பிர காசிக்கின்ற நாணியிறுக்கித் திசாதிசைகளும்பிதிரச் சந்திரசூரியரும் அதிரவா னிறைந்த மோனமுனிவரரும் ஞானமுனிவரரும் முப்பத்துமுக்கோடி தேவர் களும் முக்குணமுத்தொழில் விளையாட்டுடைய மூவர்களும் பேராநந்தங்கொ ள்ளும்படியாய்க் கொஞ்சநேரத்திற் குள்ளாகத் துரோண மேகம்பொழியுங் கொள்கைபோற் கொடியவிடநெருப்புள்ள காந்தியகணையைக் கைக்கொண்ட மட்டுங் கட்டாகத்தொடுத்தான். இப்படியாகக் கர்ணன்றொடுத்த கணைகளி னால் அர்ச்சுனனுடைய தேரும் நான்குகுதிரையும் உத்தரகுமாரனாகிய சாரதி யும் அலக்கழிந்து கலக்கங்கொண்டனர். அதுபோது எங்கும்புகழப் பங்கு வைத்திருக்கின்ற பற்குனன் அமுதாகரனென்னும் அர்த்தசந்திரபாணத்தை நிமிடீகரிக்கக் காண்டீபத்திற்பூட்டிக் கடுகத்தெறித்துக் கர்ணனால் விடப்பட்ட காலாக்கினிக் கணைகளையெல்லாம் ஒன்றுபோனவழி ஒன்றுபோகவொட்டா மல் உடைத்துக் கிழித்து ஒழித்துப்பழித்து இடியாத்திரங்களை முடியப்பரப்பி வடுவில்லாக் கர்ணன்பிடித்திருந்த வில்வளைவை நிமிர்த்தி மளமளவென்று நடுவறமுறித்தான். அப்போது துட்டரைக் கொட்டமடக்கும் அங்கதேச பட்டாபிடேகம் துரியோதனனாற் கட்டிக்கொண்ட கர்ணராசன் தன்கையி லிருந்த வட்டவரிவில் அர்ச்சுனனால் வெட்டுப்பட்டுப் போனபோதே அதுகெ ட்டதென்று விட்டெறிந்துவிட்டு எட்டுத்திக்குங் கெட்ட யரும்படியாய் ஆர் ப்பறிந்து வயிரக்கட்டிட்ட மலைபோன்ற கதாயுதமெடுத்து விறுவிறெனச்சுழ ற்றி விட்டெறிந்தான். அதனாற் குவலயநடுங்கிப் பின்வாங்க அலைகடல் நிலை தவறி முன்னோங்க திசையானையெட்டுந் திடுக்கிட்டு ஒதுங்க சக்கரவாளந் தலை தாழ்த்திப்பதுங்க இப்படியாகக்கலக்கி எங்குமில்லாமலுழக்கிவருகின்ற கதாயு தக்கடுமையை காண்டீவன்கண்டு வயிரக்கணையொன்றுமந்திரித்தெடுத்து மலை யுடன்மலை மலையுமாறு கதாயுதம்வருவதைக்காட்டி காதுபரியந்தம் இழுத்து மாட்டினான். அவ்வயிரக்கணைவந்து கர்ணன்வீசியகதையை வழிமறித்துக்கொ ண்டு அனந்தங்கோடி சக்கைசக்கையாயுடைத்து வென்றிபெறுவதற்கு விரு ம்பிவந்த அவன்சேனைகளின் மேலிரைந்து அவர்களையுஞ் சின்னபின்னமாக்கி யது ; அதனாற் சேனைகளுந்தானும் பொறுக்கமாட்டாமற் கவண்கல்லடியுண்

டழிந்தவர்களைப்போல் கை வாய் சிரம் உரம் கால்முதலிய உறுப்புகளும் வருந்தி மடங்கியோடினர். இவ்வாறாகத்தன்படைமன்னர் முதலாகியசேனைகளும் அவ்விடத்திற்பொருந்திப் போர்கொடுக்கமாட்டாமல்மாறுபட்டோடினதையும் தானெடுத்தெறிந்த தண்டாயுதமானது உமியுந்தவிடும்போலமுறிந்து பறந்து சிதறிப்போனதையும் எதிரியாகிய இந்திரகுமாரனும் அவனேறிய தேரும் அத்தேரிற்பூட்டிய குதிரையும் சாரதியும் அணுவத்தனையேனும் பழுதுபடாமலிருந்தஅச்சயத்தையும் தன்னுடையகதாயுதம் அநியாயமாய்ப்போன புதுமையையும் அந்த அர்ச்சுனன்கணைகள் அதிக்கிரமித்துக் கொல்லுகின்ற மந்திரத்திறமையையும் கர்ணன்கண்டு பெருமூச்செறிந்து ஏக்கங்கொண்டு ஏதொன்றுந் தோன்றாமல் இளைத்து நின்றுவிட்டான். அப்படியாகநின்ற அங்கராசனைச் சங்கிராமவிசயன்பார்த்து வெறுஞ்சிரிப்புச் சிரித்து மெத்தப்பேர் வீரர்களையடித்து செத்துப்போகமுடித்து வெற்றிபெறப் படித்திருக்கின்ற பத்துக்கணைகளை ஆராய்ந்தெடுத்துப் பற்பல பூசையும்பண்ணி உபசாரத்துடன்வணங்கி அபிமந்திரித்துத் தெறித்தான். அக்கணையானது பந்தபாசம்போற்பற்றி எட்டுத்திக்கிலுஞ்சுற்றிக் கர்ணன் ஊர்ந்துவந்த கனகமயமான இரதமும் அவ்விரதத்திற்பூட்டிய வேகக்குதிரையும் அப்புரவியின்மனமும் எசமானுடைய இட்டத்திற் கேற்கும்படியாய்த் தேர்செலுத்துஞ் சாரதியும் ஒருகணத்திலழிய ஒழித்து அக்கம்பக்கத்தில்நிற்கும் படைகளைக்கழித்து அண்டகடாகம்வரையிலுஞ் செழித்து உலவிக்கொண்டிராநின்ற பாணங்களையும் கலைமதிமுகங்கடுத்துக் கறுத்துநிற்கின்ற காண்டீபனையும் கர்ணன்கண்டு கனல்வீசக்காய்ந்து சாய்ந்துபோன தேர்விட்டிறங்கிப்பாய்ந்து உதடுமடித்து முகஞ்சுளித்துக் கைவேல் கதிர்வேல் வடிவேல் நெடுவேல் முதலிய கொடிய ஆயுதங்களைப்போக்கி பூமியில்நின்று செவ்வையானயுத்தஞ்செய்தான் இதன்றியும் நான்குபுறம்பிலுந் திரும்பி யாங்குவரிசைகள்விரும்பி வனைந்து விளையாடிவருகின்ற செங்கதிர்க்குமாரனைச் சிலைவிசயன்பார்த்து இனியிவனை இவ்விடத்திலிருக்கச் செய்யலாகாதென்றெண்ணி விருதுகட்டிய அம்பொன்றெடுத்து பிரமாத்திர மந்திரத்தை யுச்சரித்து ஆசாரியவணக்கஞ்செய்து அரைக்கணத்திற்றூற்றினன் அப்பிரம்மாத்திரம் புறப்பட்டு கர்ணனெறிந்த வேலாயுதங்களையெல்லாம் அதாகதஞ்செய்து அந்தக்கர்ணனுடைய மார்புந்தோளும் புண்பட்டுத் தொளைபட்டு மயிர்க்கால்தோறுங் கண்விட்டு இரத்தப்பிரவாகம் வரத்தக்கதாய் வருத்தப்படுத்தியது. அதனால் கர்ணனுடைய தேகமுழுதுஞ் சரங்கள்பாய்ந்து அப்புப்பயிர்நட்ட செம்பொன்மலைபோலோய்ந்து வருந்திக்கால்சாய்ந்து எதிர்ந்து போராடுவதற்கு வேறுவகையில்லாமல் படுகுழியில்வீழ்ந்து பரதவிக்கும்யானைபோல் நிலத்தில்நிற்கின்ற கர்ணனை சுவேதவாகனன்கண்டு வேகத்தக்கோபங்கொண்டு இரக்கமென்பது எவ்வளவுமில்லாமல் மகிமைபெற்ற சரங்களை வாரி வாரிச் சொரிந்தான். அர்ச்சுனன் அத்தலாகவத்தால் அமோகமாகப்பொழிந்த அத்திரங்களியாவும் காடாக்கினிபோலெரிந்து வாடாமல்லிகையென்ன வந்து விழுந்து கர்ணன்நெற்றியிற்கட்டியிருந்த வீரபட்டத்தைத் துட்டத்தனையாய்ப் பொடித்து அந்தப்பட்டங்கட்டிய நெற்றியிற் பொட்டிட்டதுபோன் முத்திரை

யடித்து ஊசிநுழைதற்கிடமில்லாமலுருவி அவன்தேகத்தில் ஊடாடிமருவிய காலையில் யாதொன்றும் யோசிப்பதற்கிடமில்லாமல் பெருமைபெறக்கருதிய சாமர்த்தியமும் சண்டைமுனையுங்கெட்டுதானும்புறமுதுகிட்டுச்சங்கைமேலிட்டோடினான். அப்போது அர்ச்சுனன்தேரிலிருந்த உத்தரகுமாரன் பளபளவென்று இரண்டுகைகளையுங்கொட்டிக் கலகலவென்று நகைத்து ஓகோவென்றிரைந்து விரைந்து தேர்விட்டான். இங்ஙனம் எப்போதும் வஞ்சகத்தில் கருத்துப்பொருந்திய துரியோதனனும் அவன் தம்பிமார்களும் குற்றத்திற்கு மிக்க திடஞ்சொல்லித்தேற்றுகின்ற சகுனிமுதலியமற்றையோர்களும் வித்துவச்சிரேட்ட மேன்மையோர்களும்அர்ச்சுனன்செய்தயுத்தமுகத்திற் புறங்கொடுத்தோடுகின்ற கர்ணனைக்கண்டு கவலைமேற்கொண்டு ஐயையோ! இனியெக்காலத்திலும் நமக்குவெற்றியில்லை; இப்போதிருக்கின்ற அரசாட்சியும் போய்விடுமென்று ஏங்கித்தளர்ந்தார்கள்; சூரியனுக்கொப்பாகிய ஆரியர்களாகியவீட்டுமர் கிருபர் துரோணர்முதலிய பெரியோர்களும் முகமலர்ந்து அகமகிழ்ந்து புளம்பூரித்துத் தேகம்பூரித்து வெற்றியுஞ்செல்வமும் தனஞ்சயன் பெறுவானென்பதற்குத் தடையாதாயினு முண்டோவென்று வாழ்த்தினார்கள்.

அவ்வேளையில் அதிரதத்தலைவர்களில் யாரும் எனக்கிணையாகமாட்டார்களென்று ஆவிப்பதிபப்பதிபப் பலகாலுங் கூறித்தேறிய அங்கதேசாதிபன் சங்கடப்பட்டுநொந்து, பின்காற் பிடரியிலடிபட ஓடுகின்றதைக்கண்டு, அழகியதேர்மேல் அமர்ந்திருந்த அசுவத்தாமாவெகுண்டு, அவசரத்தில் தன் தேரை முடுக்கிச்சென்று, இக்காலத்தில் அந்தக்கொடையாளியைத் தடுத்துப்பேசவேண்டுமென்று போனான். இவன்தேரோடிவருகின்ற பேரோசையைக்கேட்டு முன்னமே கலவரங்கொண்டோடிவருகின்ற கர்ணன் திரும்பிப்பார்க்கச் சாவகாசமும் திடதைரியதீரமுமில்லாதவனாய் அருச்சுனன் துரத்தி அடிக்கவருகின்றானோ வென்பதாய் மேன்மேலும் திகிலடைந்து, பின்னு முடுக்காய்ப்பதறிப் பூமிமேலிடறிவிழுந்தோடினான். இவ்வாறிளைத்துப் பிராணபயங்கொண்டோடுகின்ற கர்ணனைப் போய்வளைத்துப்பேசுகின்றான்; அசுவத்தாமா அமரழிந்தோடுகின்ற அங்கதேசராசனுக்கு நேர்நின்று படையாளியாகியபாரமார்த்தியனே! நான் அசுவத்தாமா, இப்போதுநீர் கண்பொறிகலங்கி, தலைகவிழ்ந்தோடும்போது, என்னை அருச்சுனனென்று மதித்து, ஆத்திரப்பட்டு ஓடவேண்டாம். நில்லும்நில்லும். ஐயையோ பாவம், சற்றே நிதானித்துப்பாரும், இங்கேவாரும், கொஞ்சம் இளைப்பாறும். ஓகோகோ! இதென்ன கோலம், ஐயையோ பொல்லாதகாலம், ஏனிவ்வாறோடுகின்றீர், மண்மகளிற் புரண்டோடுங்கிக் கண்களிற் சலங்கலங்கி மார்புந்தோளுங் காலுங்கையும் நடுக்கிப்போவானேன்? எதிரிகள் வாயெடுக்கவொட்டாமல் வாயாடுகின்ற உமது மொழி ஒடுங்கிப்போவானேன்? காரணஞ்சொல்லும், காரியவானே! நாமெல்லோருங்கூடி மாடுமடக்கிய அவ்விடத்தில் சற்றுநேரத்திற்குமுன்னே இதோ, ஓடிவருவது ஒருதேரொன்றும், அதன்மேல் வருகின்றவன் ஒண்டிக்காரனென்றும், அவன் கைப்பிடித்திருப்பது ஒருவில்லென்றும், அவன் எனக்கெம்மாத்திரமென்றும், ஆணவமாய்ப்பேசி நீங்களியாவரும் எனக்குப்பின்

னின்று வேடிக்கைப்பாருங்களென்றேசி, பக்திப்பாகிய படைகளுடன் சென்று முந்திப்போய்நின்று, முனைந்து போர்புரியப்போனாயே, அப்பா கர்ணா! நீ கைப்பிடித்திருந்த வில்லெங்கே, வெற்றிகொள்வேனென்ற சொல்லெங்கே, அங்கதேசராச பட்டாபிடேகம்பெற்ற முடியெங்கே, கச்சக்கொடியெங்கே, கூசாமலோடுங் குதிரையெங்கே, தருணத்திற்காக்குஞ் சாரதியெங்கே; நால் வகைச்சேனையெங்கே, மந்திர உச்சரிப்பெங்கே, வீரபட்டமெங்கே, முத்தார மெங்கே, மணிக்கவசமெங்கே, துணிக்கவசமெங்கே, சொல்லப்பா வெல்லப் பாகினு மினிதாய்ச்சொல்லுஞ் சொற்சோர்வில்லாத விற்சாதுரியனே! வேந் தன் தம்பியாகிய துச்சாதனனெங்கே, மச்சானெங்கே, மாமனெங்கே, பச்சா த்தாபம்பார்க்காத பதிதனே! மாறுபட்டுவரும் பகைவர்களைப்பேறுபெற்ற ஆயுதங்களினால் கூறுகூறாக்கி, தாறுமாறாக வேறுலகாளவிட்டு, வலம்புரி மாலையணிந்த துரியோதனமகாராசனை இந்நிலம்புரக்கப் பட்டாபிடேகம் பண்ணிப் பெருஞ்செல்வத் தமைக்கிறேனென்றும், அருச்சுனனுக்குவைரி நானொருவன்தானென்றும், பெருமைபாராட்டி அருமையாகச்சொல்லிய நீ அந்த அருச்சுனனாலடிபட்டுப் பெருகிவழிகின்ற இரத்தவெள்ளத்தில் நீந்தி விசனமாந்தி இருகையேந்தி நிலத்தில்வீழ்ந்து நிணச்சேற்றிலழுந்தி நெடுங்காற் புதைந்து, ஓடவேண்டியதென்ன? உத்தமனே! உங்களைப்போன்றவர்கள் ஒரு வனுடைய அன்னத்தையுண்டு யுத்தநேரிட்டகாலத்தில், எசமானனையிகழ் ந்து எதிரியைப்புகழ்ந்து நன்றிகுன்றி மானங்கெட்ட நாணம்விட்டு நடக்கத் தக்கவர்கள்; இதல்லாமலும் தீரத்துடன் வெற்றிகொள்ளப்போகின்ற உம்மை ப்போன்ற சுத்தவீரர்களுக்குப்பக்கத்திலிருந்து நச்சுநச்சென்று இலச்சைகெட் டுப்பேசி வெற்றிகொள்பவர்களையுந்தடுத்துஅவர்களுக்குள்ள திடதைரியத்தை யுங்கெடுத்து நாங்களுங்குப்புறப்படுத்து வெல்லாமலும் வெல்லுகின்றவர்கட்கு உற்சாகஞ்சொல்லாமலும் காரியத்தாழ்வுசெய்கின்ற நாங்களாதலால் எங்களை ஊரைப்பார்க்கப் போகச்சொன்னாய்? அப்படிப்போக மனமில்லாதவர்கள் அருச்சுனனையடித்து வெற்றிபெறப்போகின்ற உன்னுடைய யுத்தவல்லபத் தைப்படித்து எனக்கும்பின்னாலேநின்றுகண்டு சந்தோடப்படுங்களென்று பேசினாய் போகட்டும்; எங்கள் கதிதான் அப்படியானாலும் வாய்ப்பகட்டுரை த்த உன்கதியை யோசிக்குமிடத்திற் போர்முனையைவிடுத்து சாதுவாகிய பாண்டவர்களுக்குச் சந்தோஷங்கொடுத்து உனக்கு அன்னமிட்டுக்காத்த துரி யோதனராசனுக்குத்துன்பமூட்டை கட்டிப்போட்டு நீபெற்றிருந்த புகழுங்கெ ட்டு நன்றிமறவாத வெற்றிவீரனானாயே? வீரசுதந்தரனே இப்போது ஓடுகின்ற நீ ஒருவேளை திரும்பிவருவையானால் உன்னைக்காப்பாற்றியதுரியோதனனுக்கு என்னசொல்லுவாய், பெரியோர்முதலிய பிராமணர்களுக்கு க்ஷாத்திரமில்லை, வைதிக சாந்தஸ்தமுடையவர்கள்க்ஷாத்திரமுள்ள க்ஷத்திரியகுலாதிபன் நான் தானென்று மார்புதட்டிப்பேசிய தராதிபனே! எதுகாரியங்களையும் எண்ணித் துணியாமல் விண்ணாணம்பேசுகின்ற வீணனே! இத்தருணத்தில் நானிசைப் பதைக் கேட்பாயாக உலகத்தில் மௌடீகர்களா யிருக்கின்றவர்கள் இருந்த இடம்விட்டெழுந்திராமல் வாய்கொண்டமட்டும் பேசுவார்கள், சொல்லிய

வண்ணநடத்தமாட்டார்கள். அப்படிநடத்தலாமென்பதுசிருட்டிகர்த்தாவாகிய திசைமுகனுலுங்கூடாது. ஆகையால் கெடித்தலாதிபனுனகௌரவகுலமுதல் வனல் தனம் தானியம் சம்பத்து பசு பத்தினி புத்திர மித்திர பாக்கியமும் படைத்து பொக்கிஷப்பொருளைப் பூரியாய்க்கொடுத்து புகழுடம்பெடுத்துப் பூரித்திருக்கும் புயபல வலிமையால் முன்பின் யோசிக்காமல் வம்புப்பேச்சுகளைப் பேசிவிட்டதனுல் மகான்களுக்கு மனம் ரோசிப்போயிற்று. உன் பேச்சின்படிமுடிப்பதற்கு உனக்கும் அசாத்தியமாயிற்று இன்னும் ஒருசிங்கத்தைப் பதினுயிரம் யானைகள் வளைத்துக்கொண்டாலும் குப்பைமேடு தங்கத்தை மறைத்துக்கொண்டாலும் சிங்கத்திற்கும் தங்கத்திற்கும் பங்கம்வருமென்று பொங்கிவழிகின்ற நீ உன்சிந்தையிலெண்ணுதை? அங்கர் கோனே! யென்று பலபலவிதமா யெடுத்துப்பிடித்து தவடையிலு மிடித்ததுபோற் பேசியபோது சூராதிசூரனும் அத்திரசத்திர சாமர்த்தியனுமாகிய கர்ணன் யாதொன்றும்பேசாமல் எதிர்த்துவாயாடாமல் தலையெடுத்துப்பாராமல் சமயத்திற்குத் தக்கபடி சொல்லாமல் அர்ச்சுனனுல்மடிந்த பிணமலைகளுக்குப் பின்னுலொதுங்கி ஆமைபோற்பதுங்கி ஆகுதிபோன்றுநின்றுன். அவன்கதியப்படியிருக்க; வாசத்தேன் மருவிக்குலவிய வனசத்தார் மாலைநிலவிய வீரத்தோள் பூரித்திலகிய தநுவேதியர் குமாரனெனமருவிய அசுவத்தாமாவென்னும் அதிரதமுதல் வன் வீரத்திற்பின்னிட்டோடும் விதவைமுகத்தில் விழிக்கலாகாது, விழித்து வசனிப்பதுமிகுபாவமென்று அவ்விடம்விட்டுநீங்கித் தனதுதந்தைமுதலாகிய பெரியோர்களிருக்குஞ் சார்பிற்போய்ச் சார்ந்தான், இப்பால் அர்ச்சுனனிடத்தில் நடந்த அதிசயத்தைச்சொல்லுகிறேன். கேளுஞ் செனமேசெய மகாராசனேயென்று வைசம்பாயனர் சொல்லிவந்தார். பிற்பாடு விசயவீரப்பெருமையாற்சிறந்த விசயன் பொற்சிகரங்கூடிய அனுமக்கொடியாடிய தேர்மீதிருந்து கர்ணன் ஓடும்போது கைகொட்டிநகைத்த உத்தரகுமாரனை அதட்டி ஆ ஆ வென்றுன். அந்த அமட்டலைக்கேட்ட உத்தரகுமாரன் கர்ப்பங்கலங்கி சர்ப்பம்போல் வளைந்து ஒருவாறு வாடி தாயூட்டிய செவ்வெண்ணெயுங்கழன்று உறங்கியுழன்று ஒடுங்கியழன்று தேரிற்சாய்ந்தான்; இவ்வாறிளைத்த விராடபுத்திரனைப் பாண்டுபுத்திரன் பார்த்து பச்சாத்தாபங்கொண்டு மெத்தவும் பயந்துவிட்டானென்று தன்னுடைய சித்தத்திற்றேர்ந்து மகிழ்ந்தமுகமும் குளிர்ந்த பார்வையும் கனிந்தசொல்லுங் கசிந்த அன்புமுள்ளவனுய்ச் சொல்லுகின்றுன். மச்சகுலத்திற் கணியாகிய மணியே! இச்சகத்திற் பிரகாசிக்கின்ற இரவி மைந்தனுகிய கர்ணன் என்னுடனெதிர்ந்து அதிர்ந்து போர்புரிந்து வெறுங்கை வீணன்போற் பின்னிட்டோடிப்போனுன். அவனேடிவிட்டானென்று நாம் அலட்சியமாயிருக்கலாகாது; அரசவீரர்கள் யுத்தத்தில் இளைத்து ஒட்டமெடுப்பதுமுண்டு மறுபடியுங் கிளைத்துவந்து போர்கொடுப்பது முண்டு இதன்றி அங்கர்கோனை அடித்துத் துரத்தியவாறுபோற் பெருங்காடென்னக் கலந்து நமக்குநேரில் அடர்ந்து பெருமுழக்கமிட்டிருக்கின்ற சேனைகளுடன் அதிரதர்முதலாகிய வேந்தர்களையும்வென்று வெற்றிபெற வேண்டியிருப்பதனுல் இவ்விடத்திற் கூடியவர்கள் இன்னுரின்னுரென்று நீ தெரிந்துகொள்ளும்படி சொல்லுகின்றேன் கேளென்றுன்.

மாலையணிந்த தோள்வாட்படை மைந்தனே! இதோ, நமக்கு எதிரில்நிற்கின்றவர். நெய்தனிலக்கருப்பொருளாகியபனையைக் கொடியிலெழுதிப்படைத்திருக்கின்றவர். பாரியதேரினையுடையவீரியர். தெய்வத்தன்மைபெற்ற அட்டவசுக்களில் முதல்வரானவர். இவ்வுலகமுதலாகிய எவ்வுலகுங்கொண்டாடநின்ற எங்கள்குலத்தலைவர். இவரது தந்தையாகிய சந்தனுமகாராசனுக்குப் பரிமளகந்தியினுடைய போக நலங்கிடைக்கும்படியாய் விவாகம்பண்ணிவைத்தவர். அந்த விவாகமுன்னிலையில் இவர் அனுபவிக்கவேண்டிய சகலவைபவ சம்பிரமங்களையுஞ்சிறுவயதிற்கைவிட்டு, இராசயோகமானவிரதவழியில்நின்று வீட்டுமனென்று பேர்கொண்டு மெய்வழிகண்ட மேன்மையோர்களால், மேன்மைபெற்றவர். இவர் எந்தக்காலத்தில் இறக்கவேண்டுமென்று எண்ணுகின்றாரோ? அக்காலத்தில் எமராசன் இவரிடத்திற்கு வரவேண்டுமல்லது, மற்ற ஆன்மகோடிகள்போற் கருதிவரப்படாது. இவருடைய ஆயுள்முடிவில்,தண்ட பாசசூல கோலகண்டகனாகிய நமன்வந்தாலும், அவனுடைய அதிகாரவேதை அற்றுப்போம்படி சத்தியசீலவுத்தமனாகிய சந்தனுமகாராசன் வரங்கொடுக்க, ஆசீர்வசனமுந் தந்தருளப்பெற்றவர். இவ்வுலகத்தில் இவரொத்தனைநாளைக்கிருந்தாலுமிருக்கலாம். இவர்தான் ஐயாஎங்கள்மூதாதையாகியபாட்டன். சத்துவகுண புத்திநுட்பத்தால் கற்றறிவுடைய உத்தரகுமாரனே! இந்த வீட்டுமருக்குஅண்டையில் சண்டைக்குவந்திருக்கின்ற நான்குவேதத்தையும் பொறித்த நான்மறைக்கொடிதரித்த சக்கரத்தேர்மேலமர்ந்திருக்குஞ்சுவாமியவர்கள் தேன்சாறுபாய மாஞ்சோலைவீறும் பாஞ்சாலதேசத்தையாளும் துருபதராசன் கொண்டகர்வத்தைப் பங்கப்படுத்தினவர், அறுபத்துநான்கு கலைஞானங்களும் ஐயந்திரிபில்லாமல் விருத்திப்பொருளுடன் ஆராய்ந்துணர்ந்தவர் தேவதாத்திரங்கள்முற்றும் திரம்பெறத்தேர்ந்தவர் சாம்பிரதாயத் தனுவேதமோர்ந்தவர் திரவியசம்பன்னர்களாகிய பக்குவர்களுக்கு சிலைத்திறந்தெரிவிக்கும் விற்குருவானவர் முடிதாங்கிய தேவர்களும் படியோங்கிய முற்றத்துறந்த முனிவர்களும் பணியும்படியானபதம்பெற்றவர் உத்தம க்ஷத்திரியகுலத்தி லுற்றவர் போல் வெற்றிவாகைபடைத்த வீரப்பிரதாபர். மதாணிமுதலிய திராணியுடையவர். இவர்தானையா எங்களுக்குக்குருவாகிய துரோணாசாரியர். சங்கிராமவிற்குருவாகிய துரோணாசாரியருக்கும் கங்காபுத்திரரானவீஷ்மாசாரியருக்கும் நடுவில், வெள்ளைக்கொடியும் பொன்னிறமுடியும் வீரபட்டமும் வேகப்புரவியும்பூட்டி, மேகமளாவிய வெண்கலத்தேரோட்டி, ஊக்கத்துடன் வந்திருக்குந்தீர்க்கமும், அமுதங்குலாவிய மதிமுகமும் குமுதமனைய சிறுநகையும் குறுவியர்வும் பெருமிதமும் அருள்விழியும் குருமணியாற்செய்த ஆபரண அலங்காரமும் பிரமதேயசும் பணைத்ததோளும் வீரகண்டைதரித்த தாளும் சௌந்தரியகாந்தியும், தவமும் சபமும் வரமும் உரமும் பொறுமையும் உடையவர். தனுவேதத்திலும் மநுவேதத்திலும் சமர்வேதத்திலும் சதுர்வேதத்திலும் நிபுணர் இக்குவலயமெல்லாங் கொண்டாடுங் குணநிதியாகிய கிருபர். இக்கிருபாசாரியருக் கண்டையில்நிற்கின்ற அழகியதோராளியானவர் பஞ்சபாணந்தரித்த மன்மதனென்று சிலர்பேச, வேலாயுதந்தரித்த

பாலசுப்பிரமணியனென்று பலர்சொல்ல, சோடசகலைநிறைந்த சந்திரனென்று சிலர்துதிக்க, வச்சிராயுதந்தாங்கிய இந்திரனென்னப்பலர்மதிக்க, மூதண்ட நடுங்குங் கோதண்டராமனென்று சிற்சிலர்கொண்டாட, பிதுர்வாக்கிய பரிபாலனஞ்செய்த பரசுராமனென்று பற்பலர்வந்திக்க, இப்படி எப்புவனமுங் கொண்டாட ஒப்புவமையில்லாத தோற்றம்படைத்த புண்ணியர். முப்புரமெரித்த எப்பொருட்கிறையாகிய முக்கண்மூர்த்தியின் திருவருட்பரிசுபெற்ற காளை, ஒருகணத்தில் திரிபுவனத்தையும் அழிக்குங் குழக்கன்றுபோன்ற அசுவத்தாமா, எங்கள்குருவாகிய துரோணருடைய குமாரன், எனக்குரிய மித்திரன், விராடபுத்திரனாகிய உத்தரகுமாரனே! இப்போது நான்சொல்லிவந்த வித்தக விஷ்டுமாசாரியரும் துரோணரும் கிருபரும் அசுவத்தாமாவும் என்னிடத்தில் அருமைபாராட்டி, அன்புவைத்திருக்கின்றவர்கள். குற்றமற்ற வில்திறம் பெற்றவர்கள். அப்படியிருந்தபோதிலும் அவர்களுடன் போர்புரிய வேண்டிய அவசியமில்லை, இன்னம், நாம் வெல்லவேண்டிய ஆசாமிகள் வேறிருக்கின்றார்கள். அவர்களை முன்பின் பாராமல் முதலறக்கொன்று வென்றிபெறுவது நமக்கு மேலாகிய கீர்த்தியாம். இன்று பூர்த்தியாகப்போர்புரிந்து புகழுறச்செய்வமானால், நல்லதிடத்தையும் திறத்தையும் அறத்தையுமகிமையையும் நமக்கு விளைக்காமற்போகாது. ஆகையால் நாம்வெல்லவேண்டிய மேவலரைச் சொல்லுவதேனென்று விளம்பலுற்றான்.

ஐயா, உத்தமனென்னும் உத்தரனே! உனக்குநேராக நீலக்கொடியாடை பறக்குந் தேரிலிருப்பவன் வணங்காமுடிமன்னனை வணக்கி, அவனது மதியை மயக்கி, தன்வசமாயிணக்கி, இந்திரபிரத்தத்திலிருந்த எம்மைவரவழைத்து வஞ்சகச் சூதாடச்செய்த கொடும்பாவி. மகாசபைகூடிய மன்னர்முதலாகிய மாநகரச்சனங்களும் எங்களைக்கண்டு கண்கலங்கும்படியா யியற்றிய காந்தார தேசவீரன் சவுபலராசகுமாரன், எங்கள் சமஸ்தானத்தைக்கெடுக்கப்புகுந்த கறுப்பன் கபடமடைத்த குடுக்கை கொடியவாலகாலவிடங்கொண்ட செந்தேள். ஒருகாலத்தும்நம்பப்படாதஉரகம்,இவன்தான் ஐயா சகுனியென்பவன். அச்சகுனிமாமனுக்குச்சமீபத்தில் குச்சிதமில்லாச் செச்சைக்கொடியோடு, அச்சடித்ததுபோல், உச்சிதவிற்பிடித்து, வச்சிரத்தேரேறி விசித்திரப்பணி பூண்டிருப்பவன் நச்சரவக்கொடியோனுக்குத் தம்பி, இளவரசுபட்டங்கட்டிக்கொண்டதுநம்பி, சர்வதந்திரவுபாயசுதந்தரன் பழிபாவத்திற்கஞ்சாத பஞ்சமாபாதகன். கொஞ்சமேனும், நெஞ்சிரக்கமில்லாத துச்சாதனன். இவன்தான் பாஞ்சாலியயினைப் பற்றியிழுத்துக் கண்ணியர்களிருந்த சபைக்கேற்றிவைத்து வஸ்திரபங்கம்பண்ணிய புஞ்ஞியவான். அதோ, ஈசானதிசையில், பன்றிக்கொடிபறக்க சண்டைத்தேரேறி துச்சாதனனுக் கண்டையிலிருப்பவன் துரியோதனன்முதலாகிய நூற்றுவருக்குமைத்துனன். தங்கை, துச்சளையைக் கலியாணஞ்செய்துகொண்ட தோன்றல். சிந்துதேசராச சயத்திரதன், எங்களாற்பெற்ற வெகுமானங்களையுஞ் சன்மானங்களையுமறந்து, நாங்கள் காட்டிலுறைந்து, வேட்டையாடப்போயிருக்கும்போது முறைதுறைபாராமல், துரோபதையை யெடுத்துப்போனான். அச்சங்கதியைக் கேட்டுவந்த நாங்கள் ஓட்ட

மாகச்சென்று, அவனைக்கண்டுபிடித்து வாட்டப்படுத்தி ஐந்துசிகைவைத் திருந்து, முகத்திற் புள்ளியிட்டு பேர்வேறிட்டு தருமராசனுக்கெதிரில்நிறுத்தி, கட்டவிழ்த்து, வெட்டவெளியில் அவமானப்படுத்திவிட்டுத்துரத்தினேம்.

இப்பால், வாயுமூலைமடக்கிலிருக்கின்றவன், காந்தாரிதிரிதராஷ்டிரனென் னுஞ்சேற்றிற்பூத்த பலவகைப் புட்பங்களில் ஒரு செங்கழுநீர் சிறந்ததன்மை போல் பிறந்திருக்கின்ற விகர்ணன். இந்த நீதிமான் நெறிமுறைதவறுமலுன் னிப் பாவபுண்ணியங்களெண்ணி துரோபதிகேட்டகேள்விக்கு அரசசபையில் ஞாயஞ்சொல்லி, பாஞ்சாலிபட்ட துயரத்தைமாற்றித் தேற்றிவிட்ட தரும வான். இவனை இவ்வுலகத்திற்புகழாதவர்களில்லை, புத்திமானுகிய உத்தரனே! இதோ, நமதுதேருக்கெதிராக நட்சத்திரக்கூட்டம்போல், தேர்மேல் விளங்கு கின்ற பசகள் துரியோதனனுக்குத் தம்பிமார்கள். காலாந்தகனென்று கருது வதற்குத் தடையில்லை கொடியதுட்டர்கள். அதோ, தத்தித் திமிதிகுதா வென நர்த்தனங்காட்டிய குதிரைகள் பூட்டிய ரதத்திலமர்ந்தவன் சோமதத் தன் இதோ சித்திரவில்வளைப்பவன் அச்சுவசேனன் அதோ தென்புற நிற்பவர் களியாவரும் தேசராசபோசர்கள் இப்போது நானுனக்குக்காட்டிய இவர்களை யெல்லாம் எதிர்த்துச் சண்டைவிளைத்துக்குலைகுலைந்தோடவடித்து மந்தரகிரி யாகிய மத்தாலடிபட்டலைபட்ட பாற்கடல்போலுழக்கிச் சுழலவிட்டுக் கலக்கு கின்றேன். விராடவேந்தன்மைந்தனே! நீ சற்றேமனங்கொண்டு காணென்று சொல்லித் தன்னுள்ளக்கருத்தையும் அவனுக்கு விள்ளும்படியாய் மெள்ளத் தெரிவித்தான். அதெவ்வாறென்னில்; யுத்தமுனையிலடிபட்டு ஓடிப்போன கர் ணனைக்கண்டு உத்தரன் கைகொட்டி நகைத்ததைப்பற்றி இனிமேல் வீஷ்மர் துரோணர் கிருபர் அஸ்வத்தாமாமுதலிய நால்வரும் தன்னோடெதிர்த்துச் சண்டைவிளைத்து அடிபட்டுப் புறங்கொடுத்தோடப் போகின்றார்களென்பது தனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கின்றபடியால் ஒருவேளையப்படி ஓடும்போது இந்தச்சாரதி கைகொட்டிச்சிரிப்பானாுல் குலமுதல்வனுகிய வீஷ்மர்முதலா கிய பெரியோர்கள் தங்களிடத்தில் அன்புவைத்தவர்கள் அவர்களுக்குவந்த குறைவும் அவமானமும் தனக்குவந்ததுபோலு மென்றெண்ணி பட்சமிச்ச மான அர்ச்சுனராசன் மச்சராச குமாரனுக்கு அச்சமுண்டாகப்பேசி மற்ற சத்துருக்களையுந்தெரிவித்து ஒருவேளை அவர்களோடும்போது அவர்களைநோ க்கி உத்தரகுமார னகைத்தாலும் அதனுல் தாழ்ச்சியொன்று மில்லையென்று எண்ணிய தன்கருத்தை இவர்கள் சத்துரு இவாகள் மித்துருவென்று உத்தர னுக்குச்சொல்லிப் பெரியோர்கள் மேலிருக்கின்ற பக்ஷமும் துரியோதனுதிய ரென்னும் பகைவர்மேலிருக்கும் அபக்ஷமும் அடாஅடங்களும் வேறுவிதமாய் வெளிப்படுத்தினுன். அப்பா உத்தரகுமாரனே! பரிசுத்தவான்களாகிய ஆசா ரிய புருஷர்கள் மேலெதிர்த்துப் போர்பொரவேண்டிய கருத்தையொழித்து மற்றவர்கள்மேல் யுத்தஞ்செய்ய வேண்டியிருப்பதால் நமது தேனைச்செலு த்திக்கணத்தில்வெற்றிபெறலாமென்று சிந்தைமகிழ்ச்சிகொண்டு செப்பினுன். இப்படிக்குச்சொல்லிய சுப்பிரதீபம்போன்ற அருச்சுனனதுகருத்தை உத்தர குமாரன் மிகுந்தநுட்பமாயறிந்து தானகைத்ததைக்குறித்துமிகப்பயந்திளைத்

துத் தன்னிடத்தில் அர்ச்சுனன் கலந்துபேசினனென்று தன்னை மறந்துபோகா மல் சாக்கிரதைபாய் மரியாதையுடன் அடங்கி அர்ச்சுனனுரைத்து வாய்மூடு முன்னமே மனோவேகத்திலும் வாயுவேகத்திலு மிஞ்சும்படி மண்டலமதிகர எண்டிசைபிதிர அண்டர்கள் ஒதுங்க அட்டமாநாகங்கள் கண்பிதுங்க கட லேழுமதிர நட்சத்திரங்களுதிர கதிர்மதிவெருவ கல்மலைகளுருவ கடகடகட கடவென்ரேடி தடமகுடவாசர் படையைச்சாய்த்துச் சக்கரங்கள் சுழல உக் கிரமானவிக்கிரம பராக்கிரமத்துடன் விசயசாரதியாகிய உத்தரகுமாரன் பரி களைமுடுக்கி விரைவுடன் இரதத்தைவிடுத்தான். கேளும் செனமேசெயமஹா ராசனேயென்று வைசம்பாயனர் சொல்லிவந்தார்.

துரோணசாரியருக்கும் அர்ச்சுனனுக்கும் சண்டை.

இந்தப்படி உத்தரகுமாரனுக்குத் தெளிவுண்டாகும்படியாய்த் தெரி வித்து, போர்மேல் வருகின்ற தீரன்கருத்தையும், அவனேறிய செம்பொற்றே ரின் வேகத்தையும் சேனைகளின்பேரிற் செல்கின்ற மர்மத்தையும் ஆழ்ந்த கேள்விஞானமுயர்ந்த துரோணசாரியர்கண்டு கண்ணருள்கொண்டு பெற்றதந் தை பிள்ளையைநாடிப் போவதுபோல், தன்னுடையதேரைச் செலுத்திக்கொ ண்டுபோய் அருச்சுனன் தேருக்குநேர்சென்று நின்று மறித்து அப்பா அர்ச் சுனா நாங்களெல்லோரும் உனக்கு நேராயிருக்க நீ யெங்களைவிட்டுவிட்டு எங் கேபோகின்றாய் நீயப்படி ஒதுங்கிப்போனாலும் நானுன்னைவிடமாட்டேன், என்னுடன் யுத்தஞ்செய்யவாவென்று வில்வளைத்து நாணிதொடுத்து ஷ்டங் காரங்காட்டினார். இந்தப்படி வார்த்தையாடிச் சண்டைசெய்யவந்த துரோ ணசாரியை தர்மராசனுக்கிளைய தனஞ்சயன்கண்டு தேர்விட்டிழிந்து அன்பு கூர்ந்து சிந்தைமகிழ்ந்து செந்தாமரைமலர்போன்ற அவர் திருவடியிற்பணி ந்து கரங்குவித்துத் துதித்து அந்தணர்க்கரசே! தேவரீரநுக்கிரகத்தால் பன் னிரண்டுவருடமும் அக்கியாதவாசமுங்கழித்து வெளிப்பட்டோம். இனிமேல் தர்மாதர்மந்தெரிவித்து நடத்தவேண்டியகடமை தங்களைப்போன்ற பெரி யோர்கள் தன்மை ஆசாரியஸ்வாமிகளே யென்று இணக்கமாகப்பேசி வணக்க மாகத்தொழுது மேலுஞ்சொல்லுகிறான். மாதவமணியே! வரிசிலைக்கணியே! யாதொரு காரியங்களும் இன்னதென்றறியாத வென்னை எல்லாந்தெரிந்தவ னென்றாக்கி இவனுக்குமிஞ்சிய செஞ்சிலைவீரர்கள் இவ்வுலகத்தும் எவ்வுலகத் தும் இல்லையென்றுமதித்து, பல்லோருங் கொண்டாடும்படியாய் வில்வேதமும் அஸ்திரசத்தியும் சஸ்திரசத்தியும் குற்றமறக் கற்பித்தருளிய சத்தியவுண்மைச் சம்பன்னதெய்வமே! தேசிகனாகிய தேவரீர் என்னைவெறுத்து ஒருபொருளாக மதித்து யுத்தஞ்செய்யப் பகைத்துவரத் தக்கதோ, அடியேன் பயமில்லாமல் வெளிவந்து, குருசுவாமியோடுஉருத்து, விற்பிடித்து, நாணிதொடுத்து, கணை கள்விடுத்து, பூசல்புரிய விதரணைபெற்றிருக்கின்றேனோ அவ்வளவுவித்தை கற் றிருக்கின்றேனோ விற்குருவாகிய வேந்தனே! வேதியகுலசாந்தனே! அப்படி யன்றென்று அறிவீனத்தால் ஆசாரியருடனெதிர்த்து அடித்துப்போர்விளைத் துத் தமது திருவடிக்குத் துரோகநினைப்பது பஞ்சமாபாதகத்திலொன்றாகிய

பெரும்பாவமல்லவோ, பாபரகித புண்ணியவானே! என்னுடைய எண்ண மென்னவென்றால், தேசராசவீரர்களுடன்சேர்ந்து நால்வகைச்சேனைகளுடன் புகுந்து, விராடராசனது மாட்டுமந்தைகளை மடக்கிய துரியோதனராசனையும் அவன்தம்பிகள்முதலாகிய சகுனியையும் வளைத்துக்கொண்டு, இடியுடனிடி மின்னலுடன்மின்னல் மேகத்துடன்மேகம் எதிர்ந்து எரிந்து, புகைந்தெழு மாறுபோல், போர்த்திறங்காட்டியார்த்து, தேவரீர்உபதேசித்தருளிய மந்திரக் கணைகளைத்தொடுத்து அவர்களுயிரை வதைத்துக்கெடுத்து எமலோகத்திற் குடிபுகவிடுத்து, இணையில்லாமலிருப்பதல்லாமல், தேவரீருடனேயும், கிருபா சாரியருடனேயும் தங்கள்குமாரனாகியும் என்சிநேகனாகியுமிருக்கின்ற அசுவத் தாமாவுடனேயும் பாட்டனாராகியவீட்டுமாசாரியருடனேயும் சண்டைபோடப் படாது. அப்படியொருவேளை சண்டைசெய்யநேரிடுமாகில், அதுதர்மமன்று. தகுதியான தன்மையுமன்று. கொடியபாவத்தைக் கூட்டிவைக்குமென்று என்றென்றைக்கும் சத்தியமாய் எண்ணியிருக்கின்றேன். முற்றத்துறந்த முனிவனாகிய மூதறிவோனேயென்று வணங்கிச்சொன்னான். இப்படியாக அர்ச்சுனன்சொன்ன அம்மொழியைக்கேட்ட துரோணாசாரியர் சற்றுநேரம் வரையிலும் புத்திநிதானித்து, சம்மதியாகிய பேரன்புடன் நிர்மதியாயிருந்து எம்மதிபுந்தோன்றாமல், நன்மதியோடாசீர்வதித்து, விண்மதிகுலத்து வேந்தனான விசயராசனே! என்னிஷ்ட மெப்படிப்பட்டதென்னில், யுத்தகளத்தில் உனக்காக உழைக்கிறேனென்று, உறுதியாகச்சொல்லி, ஒருவனுடைய உப்புந் தண்ணீருமுண்டு அவனுடைய நன்மைதீமை என்னுடையதென்று நாடியிருந்த நான் சமயம்வந்தபோது, அவனுக்குத் துரோகம்பண்ணாமல் உடன்பட வேண்டுமென்பதுதான். இதுகாரியம், உனக்குத்தெரியாமலிராது. ஆதலால் துரியோதனனுக்கு செஞ்சோற்றுக்கடன் கழிக்கும்படியாய், அமர்தொடங்கி, சிஷனென்றும், பிள்ளையென்றும் படகளத்தில் ஒப்பாரிபாராமல், கலகம்புரியத்தக்க காரணம்வந்தது. இதன்றியும், தேவேந்திரன்முதலிய தேவர்களையும் வருத்தப்படுத்தி, திரிலோகத்தையும்பயமுறுத்தி நடுக்கப்பண்ணிக்கொண்டிருந்த காலகேய நிவாதகவசர்கள் மூன்றுகோடி அறுபதினாயிரம்பேர்களை ஒருகணத்தில் மடித்து, செயக்கொடி பிடித்து, சிவசுப்பிரமணியக் கடவுள் போல் தேவசேனாபதிப் பட்டமும் கிரீடியென்னும் பெயரும்பெற்று சிறப்படைந்தாயென்று சிலநாளைக்கு முன்னேகேட்டுச் சிந்தைமகிழ்ந்திருந்தேன் அந்தத் திறமை யெப்படிப்பட்டதோ அம்முறைமையை எனக்குக் காண்பிக்கவேண்டுமென்று வருந்திக்கேட்கின்றேன், அதற்கு நீ யுடன்படா விட்டால் உனக்குக் கோபம் பிறக்கும்படியாய் நான்முன்னால் உன்னையடிக்கிறேன் பாரென்று இந்துமுகாஸ்திரம் இந்திர மோகாஸ்திரம் செந்தீக் கணைகள் கொத்தலர்ப்பகழிகள் கூர்வாயம்புகள் சதாகதிச்சரங்கள் சகஸ்திரபாணங்கள் இவைமுதலியவைகளையெடுத்து வந்தித்து மந்திரித்து அநுசந்தித்து செந்தூள் கருந்தூளெழும்ப மந்தரவரையனையதேரை வலமிடமாக மாறுவிடுத்து வானமும்பூமியும் மழைபோனிறைத்து வாசாமகோசரமாக வாரியிறைத்துச் சாரதிகுதிரைகளைச் சற்றுந் தெரியவொட்டாமல்மறைத்துத் தனு

வேத சாகசங்காட்டிய உத்தமகுணத் துரோணசாரியை கொற்றவர்முதலிய பலரும் மெத்தப்புகழ்ந்து சித்தமுவந்துகொண்டாடி இத்தினம் அர்ச்சுனன் இற்றனன் அற்றனன் செத்தனனென்று சிறந்துகூத்தாடினார்கள் இதல்லாமல் ஆகாயநிறைய வேடிக்கைபார்த்திருந்த தேவேந்திரனும் தேவர்களும் பாண்டு முதலாகிய பார்த்திபர்களும் ஆகாகா! துரோணசாரியர் இதுவரையிலும் இப் பேர்ப்பட்ட வித்திறங்காட்டிய வீரத்திறங்கண்டறியோமே, ஐயோ சிடனாகிய விசயனுடன் வேடிக்கையாய்ப்பேசி விளையாட்டுச்சண்டை விளைத்தாரே யென்று மேன்மேலும் பேசிக்கொண்டார்கள். இவ்வாறு பலம்பெற்ற பாணங் களைப்பொருந்தி யுத்தஞ்செய்கின்ற துரோணசாரியைச் சுத்தவீரனான பார்த் தன்பார்த்து சுவாமி அடியேன் தேவரீருடைய அடிமைப்புத்திரனென்று முடி தாழ்த்தி வணங்கினேன், தேவரீர் என்னை மன்னிக்காமல் சன்னபின்னலாய் சரவருஷம் வருஷித்துப்போட்டீர். இனிமேல் தன்னைத்தான் தப்பித்துக் கொள்ளவேண்டிய தருமந்தானே தாமறியாத காரியமொன்றில்லை என்பே ரில் தப்பிதமுமில்லை நீர் சாக்கிரதையாயிருமென்று தனிப்புலிபோற் குமுறி யினைந்து புகுந்து விரைந்து தேரூர்ந்து புகழெழுதிய பிரதாபவில்லைப் பிடித்து நிறுத்திநாணிமாட்டி ஷ்டங்காரங்காட்டி நாலிரண்டோராசக்கணைபூட்டி நாராய ணமந்திரமேற்றி நான்குதிசையுநடுங்கமுடுக்கி துரோணசாரியர் தொடுத்தபா ணங்களத்தனையும் கொள்ளைப்போற் குனிந்து எள்ளைப்போல் இடிந்துபோகச் செய்தான். அவனது பாணத்திறத்தைப்பார்த்த துரோணசாரியரும் ஆசா ரிய பக்ஷமறவாத அர்ச்சுனராசனும் ஒருவருக்கொருவர் குறுகிநேரிட்டு புய மிரண்டும்பூரித்து மேலிட்டு மலைபோன்றவில்லில் பிறைபோல நாணிபிகிந்து ஆகர்ணபரியந்தமிழுத்து அநேகவிதஅஸ்திரங்களைவிதைத்து வருஷருதுகால த்து மேகம்போல் கோடாகோடிசரங்களைச்சொரிந்தார்கள். அப்படி கையோ யாமற்பொழிந்த அதிரதத்தலைவர்களில் கோபத்தில் முதன்மையான துரோ ணரும் கோபத்தில் யமுகனாகிய காண்டீபனும் படபடத்துவிட்ட பகழி களானவை சிறிப்புகைந்து தீப்பொறிமிகுந்து சினங்கொண்டுபுகுந்து கதிர்மு னையும் வாயுவேகமுங்கலந்து ஒன்றினோடொன்றுய்ந்து நேர்நேர்சென்றுநின்று போர்மூண்டு ஒன்றையொன்றுபற்றி ஒன்றையொன்றுகவ்வி ஒன்றையொன்று கிழித்து ஒன்றையொன்று அழித்து ஒன்றோடொன்றுகலந்து இதுவுமதுவும் அதுவுமிதுவும் பிசறிக்கொண்டு பேதித்துப் பேசக்கூடாம லிருந்ததல்லாமல் அர்ச்சுனன்மேல் துரோணர்பாணமும் துரோணர்பேரில் அர்ச்சுனன்பாண மும் பட்டதினால் அப்பால் வேதக்கொடியாடிய சூரியன் தேருக்கொப்பான தேர்மேலேறிய துரோணசாரியரும் அனுமக்கொடியுடைய இரதத்திலேறிய அர்ச்சுனராசனும் கரகரவென்று தேரைச்சுழற்றிச் சரசரவென்று சரமாரி பொழிந்தார்கள். துரோணசாரியர் இந்திராத்திரம் எடுத்து மந்திரித்துவிட் டார். அருச்சுனனும் இந்திராத்திரம்போட்டு அதைக்கெடுத்தான். துரோ ணர் அக்கினியாத்திரம்போட்டார். அருச்சுனன் அக்கினியாத்திரந்தொடுத்து அதைத்தடுத்தான். துரோணர் சூரியாத்திரம்விசினர். அருச்சுனன் சூரியாத் திரஞ்செலுத்தி அதைத்துகளாகப்படுத்தினன். அருச்சுனன் சந்திராத்திரம்

உந்தினன். துரோணருஞ் சந்திராத்திரம்போக்கிச்சிந்தினர். துரோணர்வரு ணாத்திரந்தாக்கினர். அருச்சுனனும் வருணாத்திரம் பூரித்து மாற்றினன். துரோணர் வாயுக்கணை தூவினர். அருச்சுனன் வாயுக்கணையேவிக் குறைத் தான். இப்படி தேயுக்கணைமுதலிய, கருடாத்திரம் நாகாத்திரம் மேகா த்திரம் பருவதாத்திரம் மோகாத்திரம் விருட்சாத்திரம் கமலாத்திரங்களும் தேவதாத்திரங்களும்வீசி, தெய்வலோகத்தார் மெய்புளகுற்று வாழ்த்தும் படி வெகுநேரந்திரிந்து, ஒருவரையொருவர்பிரிந்து, மறுபடியும் போர்புரியப் பரிந்து, ஆர்ப்பரித்து, பாணந்தொடுத்தார்கள்.

அதேனென்னில், நல்ல புத்திமான்களிடத்தில், கல்விமுதலியவற் றைப்பேசப்பேச ஆசைமிகுக்குமாறுபோல், வீரனுடன்வீரனெதிர்ந்து போர் கொடுக்கக்கொடுக்க வீராவேச மேறுகின்றவகையால், துரோணாசாரியர் பிராணபதமான விசயனைப்புகழ்ந்து சூரியாத்திரந்தொடுத்தார். அருச்சுனன் மேகாத்திரம்விடுத்து, அந்தச் சூரியக்கணையின் வெப்பத்தையொடுக்கி காள கூடம்போற்கறுத்து மின்னல் இடியுடன் வெள்ளம்பொழியப் பண்ணினன். அந்த விசயனுடைய பாணத்தின் விந்தையைக்கண்ட துரோணாசாரியர் வாயு வாத்திரங்களை மந்திரித்து விடுத்து, மேகாத்திரத்தைச் சிதறவடித்தார். ஆசா ரியரேவிய வாயுக்கணை அனர்த்தம்பண்ணுவதை அருச்சுனன்கண்டு வாயுபட் சணஞ்செய்கின்ற நாகாத்திரத்தைப் பிரயோகஞ்செய்து நாசமாக்கினன். நர னுந்தியநாகாத்திரத்தைதுரோணாசாரியர் பார்த்துநடுநடுங்கி கருடாத்திரமுய்த் துக்கெடுத்தார். கருடாத்திரக்கடுமையைக் காண்டீபன்கண்டு கலகலவென்று நகைத்து, நாராயணாத்திரத்தால் நன்மையுண்டாகச்செய்தான். இவ்வாறு கருடாத்திரத்தைக் காண்டீபனெடுக்கிய கதியைக்கண்ணுற்ற தனுவேதியர் சத்துருமித்துருவாகிய அத்திரங்களையெறிந்து உத்தம மத்திம மந்திர சுத ந்தர மார்க்கமுந்தெரிந்து, மனங்களிகூர்ந்து, மீண்டுந் தன்றேரூர்ந்து, வலமிடஞ்சுழன்று, கர்க்கரத்தொனியுடன் கலகலவென்று சப்திக்க இருவர் தேரும்நெருங்க இருவர்வில்லுங்குனியஇருவர்நாரியுமொலிக்க இருவர்கண்டை யுங்கலிக்கப் பூமியும் பொருப்பும் கிடுகிடுவென்றதிர தாரகணங்கள் பலபல வென்று தரைமேலுதிர உலகமதிக்கக் கலகம்விளைத்தார்கள். இவ்வாறிருவரு மேவியபாணங்களால், சக்கரவாளம்வளைந்தத டமெல்லாநிறைந்து, பேரோசை பிறந்து, அண்டச்சுவரடங்கலுமுட்டி, எட்டுத்திசைமட்டுமெட்டி, மட்டுப் படாமல் வாட்டுகின்றது. இதன்றியும், முப்புரத்தையெரித்தருளிய தர்ப்பர னுதற்கண்ணிற்பிறந்த அக்கினிப்பொறிக் கிணையாகச்சிறந்த அந்தப்பாணக் கினியின்வெப்பத்தினல், மகரமச்சங்குலாவிய மற்றமச்சங்களுக்காதாரமாகிய கடலும், பரந்துவிரிந்தபாதாளத்தினீரும், மேலுலகடைந்த ஆகாயகங்கையும், வறண்டதென்று பேசுவதற்கு வாய்கூசாமற்சொல்லுவார்கள்.

இப்பால், துரோணர்ச்சுனர்க ளிருவருமுனைந்து, ஓட்டம் கோணம் வட் டம். வளைவு திருகல் மாறல் முன்செல்லுதல் பின்செல்லுதல் முதலாகிய தேரோட்டத்தைச் சாரதிகள்காட்டுந் தன்மைகளினல், பூமிபிளந்து ஆதி சேடனுடைய ஆயிரம்பணாமகுடங்களுமுடைந்து, திசைகளசைந்து திக்கு

முக்கிட்டு மேருவுங்குலுங்க ஈரேழுலகுமலங்கக் காட்டிலுள்ள மிருகங்களுங் கலங்க நாட்டிலுள்ளயாவருநடுங்க வித்தென்னப்பரவிய நக்ஷத்திரங்கள் கொத் துக்கொத்தாய் முத்துப்போலுதிர இத்தன்மையாகிய யுத்தஞ்செய்தார்களெ ன்று யாவருஞ் சொல்லுதற்கிடமில்லாமல் வல்லமையேறிய வில்லாளர்க ளும் வல்லாளர்களும் சொல்லாமலோடும்படி நேரிட்டது. அவ்வேளையில், துரோணருடைய சேனைகளோ, கடல்போலிறைந்து, பூரித்துப்பொங்கிஉரு த்திரசன்னதங்கொண்டு, தேவேந்திர குமாரனாகிய சிலைவீரனைவளைத்து அவ னது தேர்ச்சக்கரங்களைத்தொளைத்து, ஈட்டி தோட்டி துறட்டி பாலா பல்ல யம் தண்டாயுதம் சக்ராயுதம் வேலாயுதம் பாலாயுதம் குந்தாயுதம் வாளாயுதம் சூலாயுதம் மழுவாயுதம் எழுவாயுதம் கொழுவாயுதம் வச்சிராயுதம் பிச்சுவா கட்டாரி முதலிய வளைதடி குடுதடி குண்டாந்தடி பாணத்தடி முறுக்குத்தடி இருப்புத்தடி கிலுக்குத்தடி, உக்குலக்கை செக்குலக்கை, இன்னம் பற்பல வாகிய அத்திரசத்திரங்களுங் கொண்டுமோதி அமராடியபோது, அந்தரவாசிக ளாகிய தேவர்கள் ஆச்சரியங்கொண்டு, யுத்தஞ்செய்கின்ற மாச்சரியங்கண்டு, இது என்னகாரணத்திற்கோ இப்படிப்பட்ட விபரீதச்சண்டையென்றுபார்க்க ஏக்கங்கொண்டிருந்தார்கள். அந்தவேளையில் கலங்காக்கருத்தினனாகிய காண் டீபனும் குந்திதேவிக்குவந்த புத்திரசிகாமணியும் நாராயணனுக்கொப்பாகிய நரனும் நானிலம்புகழுங் கோமானும் வானிலமகிழுஞ் சீமானுமாகிய அருச் சுனன் சற்றுநகைத்து, இதுவுமொருநிமித்தமென்றுபார்த்து, மட்டுப்படாதன வாகியும் எதிரிகளின் வாளியினால் வெட்டுப்படாதனவாகியும் வீரங்காட்டி வெங்கனலைக்கொப்புளிக்கும் அம்பினங்களை விரகாண்டீபத்தில் அநுசந்தித்து ஒன்றின்மேலொன்றாகச்செலுத்தி, உப்புக்கடலுடெரியும்வடவையை ஒப்பக் குப்பென்றோங்கி வெகுளிமேற்கொண்டு விரைந்துமுன்னின்றான். இவ்வித மாக, சவ்விபசாசிதொட்ட அத்திரமடங்கலும்போய்விழுந்து, எதிரிவிட்ட ஆயுதங்களையும் நால்வகைச்சேனைகளையும் நலியப்படுத்தி,நாசப்படுத்தி,இரத்த வெள்ள மெத்தவோடும்படி அத்தனையை அதாகதஞ்செய்தான். இத்தன் மையாக எள்ளத்தனைபோதுந் தாழாமல் முற்றிவித்த முறைமையை துரோ ணாசாரியர்கண்டு, அருச்சுனன்தேருக்கு நேர்சென்று நின்று, தன்படைகளு க்குநேரிட்ட இடரை நீக்கும்படியோசித்து, நெறெனெறென வில்லைவளைத்து, நீண்டபாணங்களை வேண்டியமட்டும் போக்கி, அருச்சுனன்செலுத்திய கணை களத்தனையையு மண்ணாக்கி, பின்னும் ஈட்டுக்கிடாகப் பெருஞ்சரங்களேவி கணைக்கிடைபுகுந்து இடைக்கிடை நுழைந்து இரண்டிரண்டாகத் துண்டு பண்ண; அதைப் பராக்கிரம விசயனேக்கி, படபடத்து, பசையழிக்கும் நாராச்சுணைகளைப் பார்த்தும்பாராமல் வசவசவென்று மொய்த்துக்கொள் ளும்படிக்கு வாரிச்சொரிந்து, நேரில்வந்த துரோணாசாரியையும், அவராலுந் திய அத்திரங்களையும், மாறிமாறி தாறுமாறாகப்போக நூறுவகையாகக்கண் டான், மண்டலமுழுதும் பொழியுஞ் சோனமழைபோற் சோர்வில்லாமலடி த்த துணிவையும், விசயனது வீரவில் வேகவித்தையையும், சிந்தைசெய்யு மிடத்தில் மான்மழு சூலப்படை தரித்தருளிய மகாதேவனும் இவனுக்கெ

திர்வந்து மலேந்து போராடமாட்டான்போலுமிருக்கின்றது, அப்படியா என் போன்றவன் என்னசெய்யப்போகிறேனென்று, வண்டுதுன்றுந் தாமரைமா லேயணிந்த துரோணர் கண்டுங்காணுதவர்போல் சற்றுநின்று, மயங்கி ஆதி யில் இவனுக்கு வில்வித்தைகற்றுக்கொடுத்து வீட்டுமர்முதலாகியவேந்தர்கட் கெதிரிற் பரிட்சித்து யாவருமெச்சும்படியாய் லட்சயம்பெற்ற தனுசாத்திரங்க ளும் மந்திரங்களும் தந்திரங்களும்யந்திரங்களும், அப்போதைக்கப்போது ஒன் றுக்குப்பத்து பத்துக்குநூறு உயர்ந்திருக்கின்றான், இத்தன்மையான வில் திறத்தினுல், முத்தலம்புகழுங்கீர்த்திபெற்றுவைத்தவனுய், இறுமாந்து நம்மை யெங்குமில்லாம லடித்து வென்ருன், ஆதலால் செயவிசயனென்னும்பேர் இவர்க்கேதக்கது, இனிவேறு கூறுவதற்கிடமில்லை, ஆனுல் நாம் ஒருகாரியஞ் செய்தால் உத்தமமாயிருக்கும். அதென்னவென்ருல் இவ்வருச்சுனனுக்கு நாம் தொண்டுசெய்து அவனண்டையிற்காத்திருந்து, அருமையான வில்வித் தையைக் கற்றுக்கொள்வது, நலமென்பதாக நினேத்தேனென்று உரைத் தருளினர். இவ்வாருக வெண்ணங்கொண்டுரைத்த, துரோணுசாரியருடைய நினைப்பு ஒருமுடிவுபெறுவதற்கு முன்னமே, ஊரோடுயிர்களை வேரோடுகளை கின்ற உகாந்தகாலப் பேரொலிநாட்டி, உருத்திடித்துப் பயங்கரங்காட்டி, இடியாத்திரமுதலிய பர்வதாத்திரங்களையேவினுன். அவ்வத்திரங்களானவை வந்துவிழுந்து ஆசாரியருடைய தேரை மளமளவென்று முறித்து, வேதக் கொடியை வெடுக்கென்ருெடித்து, குதிரைநான்கையுங் குறுகக்குறைத்து, சாரதிதலையைச் சரியத்தறித்து, கையிற்பிடித்தவில்லையுமுறித்து, வில்லில் மாட்டிய நரம்பையுமறுத்து, வேஷ்டையாக நடுக்கம்புரிந்து, வானுலகத்து வாய்விட்டிறைந்து, மண்ணுலகத்துத் திண்ணெனச் சார்ந்தது, அதனுல் வே றுவில்லுந் தேருங்கொண்டு மாறுகணை தொடுக்கமாட்டாமல் வெட்கப்பட்டு முய்யும்வகையொன்றுந்தெரியாமல்மறங்கெடமயங்கிகீதநாதவேதவேதியரான தநுவேதமுனிவர் புறங்கொடுத் தோடினர். இப்படியாகச் சமர்முனைவிட் டோடுகின்ற தன்தந்தையாகிய துரோணுசாரியையும் அர்ச்சுனன்தொடுத்த தனுர்ப்பாணங்களின் கிளர்ச்சியையும் இவர்விடுத்த அஸ்திரங்களின் தளர்ச்சி யையும் அஸ்வத்தாமாகண்டு சீற்றங்கொண்டு வெம்பி வெதும்பி கண்ணீர்த தும்பி தனதுதேரைச் சடுதியிலுந்தித் தனஞ்செயனுக்கு முந்திச்சண்டைசெய் யத் தொடங்கினுன். இவ்வாறு தனுவேதசாஸ்திரச்சாலைச் சிரேஷ்டரும் ஆரிய குமாரனும் வீரியசானுமாகிய அஸ்வத்தாமாவானவர் அர்ச்சுனராஜனைத் தடுத்துப் போர்கொடுக்க வந்தது எத்தன்மை போன்றதென்னில் மேன்மே லாக நெருப்புப்பொறிவீசியபெருந்தீக்கடவுளைப் பகைத்து ஆலகாலவிடத்தில் முளைத்த அருங்கனல் வந்தெதிர்ந்தது போலிருந்தது. இப்படியாக முனைந்த அஸ்வத்தாமன், அர்ச்சுனனுடைய தேரின்மேல், ஐம்பது அஸ்திரங்களும் அஸ்வங்களின்மேல்நூறுகணையும் சாரதிமேல் இருநூறுசரமும் அனுமக்கொ டிமேல் ஐந்நூறம்பும், பச்சைநிறப் பார்த்தன்மேல் ஓராயிரம்பகழியும் முன் பின்பாராமல் பிரயோகம் பண்ணித் தன்பின்பலத்தைத் தேடாமல் பங்கப் படாத சிங்கக்குட்டிபோற் சீறினுன். அப்படிநடக்கையில் அஸ்வத்தாமன்

கோர்த்த அம்புக்கும்புகளைப் பார்த்த தேவேந்திரன் முதலிய தேவர்களும் ஆரவாரித்து ஆச்சரியமாகக் கொண்டு அதிசயப்பட்டார்கள்.

அப்போது ஜயவிஜய சௌரிய பராக்கிரம கண்டீரவ காண்டீபதனஞ் செயன்கண்டு அண்டமுகடதிரவருகின்ற பிரசண்டக்கணைகளாகிய ஓராயிரத்தெண்ணூறு பாணங்களையும் ஒருநொடியில் நறுக்கென்று குறுக்காகவெட்டி குறுந்துளாகக்கொட்டிவிட்டுக் கூர்மையான இருபது சூரியாஸ்திரங்களைக் குறித்துக்கைப்பிடித்து ஆரியமந்திரம் உச்சரித்துத்தொடுத்துஅஸ்வத்தாமன் இரதத்தினூட்டிய சுவேதத்துவஜத்தை அடியோடுமோட்டி தீரப்பார்வைகாட்டி நின்றான், அதைக்கண்ட அஸ்வத்தாமன் கச்சிதமானவச்சிரவாளிதக்ஷணமே கொண்டு பிரயோகம்பண்ணி மெச்சியமேன்மைக்கு உச்சிதமாகிய அர்ச்சுனராசனது வீரபட்டத்தையறுத்து ஒடியாத காண்டீபத்திற்பூட்டிய அருதநாணியைக்குதை நீக்கித் தளரப்படுத்தி அநந்தங்கோடி தாம்புகளினால் ஆகாயம் பூமிமுழுவதுந்தெரியாமல் மறைத்து அர்ச்சுனனுடைய தேரையுமூடினான்; இத்தன்மையாகக் குருபுத்திரனடாத்திய யுத்தத்திறத்தைவெற்றிவீரப் பிரதாபவிசயன்கண்டு புன்சிரிப்புக்கொண்டு ஓ! அஸ்வத்தாமா வென்னுஞ் சிரஞ்சீவியே! என்னுடைய வின்னாணியைத் தளர்த்திவிட்டதினால் உனக்குப் போர்ச்சேவகனென்னும் புகழ்கிடைத்ததுண்டோ போ போ இதுபைத்தியமாவென்று வீரதீரகாண்டீப வின்னாணியையிறுக்கி கோரபாரசரங்களைக் குறையாமனிறைத்தான்; அஸ்வத்தாமாவும் அதற்கிடாகிய அஸ்திரங்களை அபரிமிதமில்லாமல் அமோகமாய் நிறைத்தான். இப்படிக்கு இருதிறவருஞ் செப்பிடுவித்தை செய்பவர்போல ஒப்புவமை உரைப்பதற்கின்றி எப்புவனமுநடுநடுங்க அப்புமாரிபொழிவதை செப்புதற்கரிய துரியோதனனுடைய சேனைகள்நோக்கி தங்களுக்குச் சயகாலமென்றுட்கொண்டு சந்திரனைக்கண்ட சமுத்திரம் போல இறைந்து பொங்கி ஆசாரியகுமாரன் செய்த அமர்த்தொழிலைப் புகழ்ந்து, மகிழ்ந்தார்கள் இவர்களிருவரும்விட்ட அஸ்திரங்களானது ப்ரவி எட்டுத்திசையும் எட்டுக்கரியும் எட்டுக்கிரியும் வட்டம்புவியும் அட்டமாநாகமும் மேலிட்ட சுவர்க்கலோகமும் நடுங்கி நாணடைந்து நலியச்செய்தது. இந்தப்படிக்கு ஒருவருக்கொருவ ரோயாமல் ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரம் லக்ஷம் லக்ஷாலக்ஷம் கோடி கோடா கோடி அர்ப்புதம் நிர்ப்புதம் பொற்புதமென்று கங்குகரைகாணாமல் எங்குமிறைந்துறைய ஒருமுகூர்த்தபரியந்தம் நெறநெறநெறநெறவெனப்பொழிந்தகாலையில்; தோள்வல்லமையுடைய துரோணர் மகனது அம்பறுத்தூணினிறைந்த அஸ்திரங்களியாவும் வறண்டுபோய் சொற்பத்தரித்திரன்போற் சோர்வடைந்திருந்தான். அஃதெப்படியென்னில் கீழ்மக்கள் மேன்மக்களாவார்களென்பது கனவிலுங்கிடையாது? ஒருவேளை தந்தைவிந்தெழுந்து மூந்திவந்த தெந்தவினையோ அந்தச்சம்பந்த அருவினையதனால் நடுவது பாதிமுதலிய நாட்களிற் செல்வ நேரிடலாகும்; அவ்வாறுநேரிட்டால் அதைப்பாதுகாத்து தன்னிலுஞ்சிறந்த சாதுக்களுடன் சாவாசஞ் செய்து விற்பனவிவேகம் விளங்கக் கற்பனையான கல்வியையறிந்து அக்கல்வியிற் கழுவிய கருத்தைபுணர்ந்து அந்தக்கருத்திற்கிணங்க அடங்கியிருந்து மூன்

பின்னுலகமுறைமையுந் தேர்ந்து அடக்கம் வணக்கம் அன்பு பூண்டொழுகி இரக்கந் தயை பெற்றிருப்பவர்தமக்குச் சம்பத்தெந்நாளுந் தவறடையாது; அப்படிக்கில்லாமற் பற்பல அகந்தைகள் விளைத்து தலைகால் தெரியாச் சன்னதமாடியிளைத்து பெரியாரைப்பணியாத பெருமைமூளைத்து வீஷ்மத் தாற்றிளைத்து வெறும்பொய்யாற் களைத்து விசனத்தால் உளைத்து வெதுப்புண்டு அறிவில்லாதஅற்பர்களுக்குச் செல்வம் பகையென்பதற்கிணங்கக் கிடைத்திருந்த ஐஸ்வரியத்தைப் பிரயோசனப்படவொட்டாமற் போக்கடித்துக் கொண்ட வெறும்வீணரைப் போலிருந்தது; அஸ்வத்தாமன் அருமையாய்ச் சம்பாதித்த அஸ்திரங்க ளடங்கலும் வழிதுறையில்லாமல் வாரியிறைத்துப் போட்டு வருந்தியிருந்த வண்மையானது. இந்திரகுமாரனுகிய அர்ச்சுனனது அம்பறாத்தூணி இறைக்கச்சுரக்கு மணற்கேணிபோல் எடுக்கவெடுக்கக் குறையாமல் அக்ஷயமாய் எப்போதும்போலிருந்தது. அதெப்படியென்னில் தப்பிதமில்லாமற் கற்கவேண்டிய ஆசு மதுரம் சித்திரம் வித்தாரமென்னும் நான்கு கவிகளையும் ஆராய்ந்து தெளிந்த பூரணவித்துவான்களின் விவேக விளைவினல் கற்பனை அலங்காரங்காணச் சுரக்கும் பாவின் விருத்திபோலிருந்தது. இப்படியிருக்க குற்றமற்ற வெற்றிபெற்ற கொற்றவர் தம்மைப்போல் தேரின்பேரிலசையாமலிருந்த சிங்கக்குருளைபோன்ற அஸ்வத்தாமனது செயலையறிந்தோ? அல்லது திறமாகிய சிலைவிசயனுடன் போர்புரிந்து சயம்பெற நினைந்தோ? அல்லது மைத்துனராகிய துரோணரும் மருமகனுகிய அசுவத்தாமாவும் இளைத்துப்போனுர்களே! அப்படியே நாமும் இளைத்துப்போவோமென்னமுனைந்தோ? என்னவோதெரியாது. செவந்தநிறமுந் திறமும்படைத்த கிருபர், தம்முடையதேரைக் கடகடவென்றுவிடுத்து, கணைகளைவெகுவாய்த்தொடுத்து, தனஞ்சயனேடெதிர்த்து, சண்டைவிளைத்துத்தடுத்தார். அந்தவேளையில் கடல்நிறங்கொண்ட காண்டீபனுனவன் சாரதியாகிய உத்தரகுமாரனைப்பார்த்து புத்திமானே! அசுவத்தாமன் அம்புக்கூட்டிலுள்ள அஸ்திரங்களெல்லாவற்றையும் வாரியிறைத்துப்போர்செய்திளைத்துப்போனுன், அவனுக்குநேரிட்ட அவமானத்தை வெளிப்படுத்தலாகாதென்று அவனல்லம்மானுகிய கிருபர் நம்முடனெதிர்த்துப் போர்புரியவருகின்ருர் பாரென்று அருட்பார்வையாற்காட்டினுன். அந்தக்குறிப்பையறிந்துக்கொண்ட உத்தரகுமாரன் சக்கரங்களுள்ள தேரைக் கர்க்கரத்தொனிகாட்டி, முட்கரமாகவோட்டி பூர்வ ஆசாரியருடைய தேருக்கெதிர்வந்துவளைத்தான்; அதுகாலையில் அருச்சுனராசன் காண்டீபத்துள்ள நாணியையிறுக்கி, மின்னலிடி பின்னியமுழக்கத்துடன்பொழிகின்ற மேகமூநாணி வெட்கப்படும்படி, சரசரவென்னச் சரதாரையாய்ச்சாய்த்தான்; அதைக்கண்ட கிருபருங்கிட்டி இரதத்துடன் இரதமுமுட்டி நாலாவித கோலாகலபாணங்களைக்கொட்டி அவனுந்தியகணைகளை வெட்டி ஒட்டியுத்தம்பண்ணினுர்.

இவ்வாறிருவரும் போராடிய வல்லமையை இவ்வகையென்று மதித்துச் சொல்லவல்லவரில்லை ஆனல், வானத்தில் வேடிக்கைப்பார்த்திருந்த வானவரும், மாதவர்முதலாகிய பிதிர்த்தேவதைகளும், வெகுதூரம் ஒதுங்கிச்சென்

ரூர்கள். பிரசண்டவாயுவுங்கலங்கிப்பிரகாசிக்கு மகமேருவுங்குலுங்கி, எட்டுத்திக்குச் செவுடுபட்டொடுங்கிப்போயிற்று, அம்பரஞ்சுழன்று பம்பரம்போலாடி அக்கினிமிகுந்து அனற்பொறிமலிந்து வீசியது, அண்டகூடந்தொட்டு அகண்டமுநெக்குவிட்டுச்சாய்ந்தது, அந்தரகதியாய்த்தொக்கி அஞ்சனமேகமும்விக்கி அதனதுவாயின்பெருக்கி நீரிடி நெருப்பிடியைக்கான்று மலைக்குகைகளிலும் பிலத்துவாரங்களிலும் புகுந்து மிகவொடுங்கிப்போகப் பிரமாதம் விளைந்தது. இப்படியாக வில்த்திறங்காட்டி விக்ரமக்கிர்பாச்சாரியரும், பராக்கிரமப்பற்குணனும், தங்களுக்குத்தெரிந்த சிலைத்திறங்களைக் கணைத்திறங்களைச் சீராட்டிப்பாராட்டி முன்னோட்டம் பின்னோட்டமாகத் தேரையுந்தி, வெகுநேரம்வரையிலும் பகழிகளுந்தி, ஒருவருக்கொருவர் உதிரஞ்சிந்தி, உடலெல்லாஞ் சிந்துசிந்தாய்க்கொந்தி, உருத்து முந்திப்போர்புரிந்தார்கள். அதுகாலையில் கிரீடியானவன் கைம்மிஞ்சி கிருடிச்சரங்களைச் சரேலெனப்புகுத்திப் புட்பகவிமானம்போன்றசக்கரத்தேரினையும் வேதவெள்ளக்கொடியையும்சாரதி குதிரையையும்தத்திவீழத்தாக்கி,கிருபருடையஉடல்முழுதுந்தொளைபோக்கி, மறுபடியும் பாதமுதறலைவரைக்கும் பாணங்கள்ஊடுருவிப்போம்படி நாணிவிக்கி, ஷ்டங்காரஞ்செய்தான், அனையகாலையில் கிருபர் மதிமயங்கித்தியங்கிக் கண்கலங்கிமானந்துலங்கி மண்மேற்கரைந்தார். அந்தக்கிருபருக்கு இரண்டுபக்கத்திலுந்திரண்டமலைபோலிருந்தசக்கரரட்சகர்கள், சந்திரகேது சுஸேஷணன் மணிமந்தன் ஏமவான்முதலிய வெற்றிவில்வீரவேந்தரநேகர்ஆரவாரித்துஅருச்சுனனைமடக்கி, வெற்றிபெறுமல் விடமாட்டோமென்று திறப்போர்விளைத்தார்கள் ; அவர்களை அருச்சுனன்பார்த்து, அதிகோபமாய்வேர்த்து, மறுகிக்கொதித்து, மாறிமாறி வீரக்கும்புகள்மேல் நூறுநூறுயிரம் அம்புகளேவி, அன்னோருடைய ஆயுதங்களையும் பாணங்களையும் விற்களையும் தேரையும் சிகரத்தையும் நொறுக்கிப்பறக்கவடித்து, மலையொத்த புயத்தைக்குறைத்து, இடையுந்தொடையும் இடையத்தறித்து, கரமுங்காலும் புறம்படமுறித்து, தலையைச்சிதைத்துத் தரணிமேற்குவித்துத் தாவியகாலையில் வீரத்தேரோறி நிரம்விடாத விருத்தராகிய கிருபரும் வெளிப்பட்டார் ; அவருடைய வில்லையும் தேரையும் சாரதிகுதிரையையும் அழித்து, அவருக்குப் பின்னுதவிவந்த மன்னர் பலரையுஞ்சிந்தினன். தன்னுதவியான மன்னரையுமடித்து, தன்கையிலிருந்த வில்லையுமொடித்து, தானேறிவந்த தேரையும்பொடித்து, தானைகள் நான்குந் தவிடாயிடித்து,வெற்றிபடைத்திருக்குந் தனஞ்சயனைக்கிருபர்கண்டு போரிடமாட்டாமல் வருந்தி, உடல்படபடத்து பூமியிலுட்கார்ந்துபாய்ந்து எறிவேலெடுத்து பூசைமுடித்து பற்குணன்மேல் விட்டெறிந்தான், அந்த வேலாயுதம் அதிர்ந்துவருகிற ஆர்ப்பாட்டத்தை அருச்சுனன்தெரிந்து நகைமுகமாகச்சிரித்து அக்கினியாஸ்திரந்தொடுத்து வெட்டையாகிய வெண்கலப் பொடிபோலுடைத்துத்தள்ளினன். அப்போது கிருபாசாரியர் தானெறிந்த வேலாயுதம்போனவிதத்தையும், அதைமுறித்த அருச்சுனனது திறத்தையுங் கண்டு ஆக்கிரமித்துவெகுண்டு உடல்மறந்து சிறந்த வாளாயுதமுங் கேடயமுங்கைக்கொண்டு ஓரேவீச்சாகவிசிவிடக்கருதி விசயனுடைய தேரிற்பாய்ந்

தார், இப்படியாக எண்ணிப்பாய்ந்த பூர்வாசாரியனைக் காண்டாவனமழித்த காண்டீபன்கண்டு வெந்திடச்செய்யும் இந்துமுகாஸ்திரச் சுந்தரக்கணைகளுந்தி வாளாயுதமும் பரிசையும் நீறாகப்படுத்தி பூளைப்பூப்போற் போக்கினன், அதனால் யுத்தமுனையில் வெற்றிபெறக்கற்றவீரம்பெற்ற கிருபாசாரியர் வேறு போர்புரிவதற்கு விதியில்லாமல் சற்றுநேரம்வரைக்கும் அசைவற்றிருந்து தன்னறிவைத்தானே நிதானித்து தனக்குமுன்னே சண்டைவிளைத்த தாஷ்டீகர்களையும் யோசித்து கீழ்க்கண்பார்வையாய்க் கிரீடியைப்பார்த்துச் சிறுநகைவிளைத்துத் திடீரென்றோடி வீரகண்டாமணிகட்டிப் பிரகாசிக்கின்ற துரோணாசாரியர் புத்திரனாகிய அசுவத்தாமனுடைய தேரின்மேலேறிக்கொண்டார். இங்ஙனம், முனைவீரங்காட்டிப் போர்புரிந்த கிருபாசாரியர் பின்னிட்டோடி மருமகனுடன் இரதத்திலிருந்த வண்மையை அவரைநம்பிப் போனசேனைகள்கண்டுவாடி அருச்சுனன்பாணத்தால் அடிபட்டோடினார்கள்; முன்னிட்டடுத்து யுத்தமுனையேறிய கிருபாசாரியர் இழிவுதேடிக்கொண்டு தன்முதுகுகொடுத்துப் போயினனென்று பொற்சக்கரம் பூட்டிய தேர்மேலிருந்த போர்ச்சிங்க வீஷ்மாசாரியர் புறப்பட்டு மேகங்களை மின்னுடன் பிகிர்ந்ததைப்போல் விளங்கிய செஞ்சிலை தாங்கியோங்கிய சேவகத்திறங்காட்டிப் பேரணிப்படை புடைசூழ்ந்து வரும்படியாய்ப் புகுந்து பிரதாபனாகிய சவ்வியசாசியை வளைத்து நாணொலிசெய்தார். அந்தக் குருகுலக்கோமான் தெறித்த குணத்தொனிகேட்டு கரையுடைத்த ஏரிநீர்போலிருந்த சகுனி துச்சாதனன் முதலாகிய சங்கிராமவேந்தர்கள் கூடி வீஷ்மாசாரியர் ஆதரவின்மேல் அர்ச்சுனனைநாடி அளவற்ற அம்புகளைத் தொடுத்தார்கள். அம்புகும்புகளைக்கண்ட நரனானவன் பம்பியமேகம்போல் நச்சரவப்பாணங்களைநாட்டி அவர்கள் தூற்றிய அத்திரங்களையெல்லாம் நாலிரண்டாயொடித்து நாணோசையடித்து தேவதத்தத்தையுந் தொனியெழும்பப் பிடித்தான். அதனொலியால் மடங்கி யாவருமயங்கி நலியாலடங்கினார்கள்.

இப்பால், சந்திரகுலத் திந்திரனாகத்தோன்றிய தனஞ்செயன் தானேறி வந்த மந்தரமலைபோன்றஇரதத்தைத்தந்திரமாகச் செலுத்தும்படிசாரதியாகிய உத்தரகுமாரனுக்குச் சாற்றினன்; அவனப்படியே முடுக்கி ஒருநொடிப்பொழுதில் குலக்குரவன் கலக்கவருந் தலத்தினிற் சார்ந்தான். இவ்வகையாகச் செவ்விசேர்ந்த மன்மதவடிவம்பெற்ற வாசவன்மதலை உலகமுடிவிலெழுகின்ற ஆலகாலம்போலும் காலகாலன்போலும்போர்முனையிற்கலந்ததைகாங்கேயன் கண்டு களிக்குங்காலையில் வாளாயுதவல்லமை கற்ற இடபசேனன்குறித்து அர்ச்சுனனை மறித்து கேதுராகுக்கிரகங்கள் போற்செறிந்து பலம்பொருந்திய பாணங்களைத்தெறித்து கிரமமாகப்பிரித்து தானும்நெறித்து நின்றான். அந்த இடபசேனன்செய்த போரைப்பார்த்த நரனானவன் ஆங்காரங்கொண்டு ஸ்திரமானசரங்களைப் பலமாகச்செலுத்தியடித்து அவனுடையதேர் சாரதிகுதிரைகள் முதலிய சொடுங்கையும்போக்கி மடித்து கைப்பிடித்தவில்லையுங் கரணையாயொடித்து செங்கதிர்ச் சிலீமுகந்தெறித்து அவனதுதேகத்தையுந்துளைத்து அந்த அடியினாற்களைத்த இடபசேனன் உடலெரிந்து உயிர்கரிந்து வீஷ்மா

சாரியருக்காகப்பரிந்து புகுந்தபக்ஷம் போதுமென்று முனைகெட்டழிந்து முதுகிட்டயர்ந்து முறைபட்டோடிப்போனான், அவனோடுவதை நோக்கிய சிந்து தேசாதிபனென்னுஞ் சயிந்தவனும் காந்தாரதேசாதிபனாகிய சௌபலச்சகுனியும் வெம்புமனத்தினராகிய துரியோதனன் தம்பிமார்களும் மற்றுமுள்ள மன்னவர்களும் எதிர்த்து அதிர்ந்து விதிர்விதிர்ந்து வெந்தழற்கணை சிந்திய காலையில் மதத்தகஜகேசரியாகிய மாதவிகொழுநன் நகைத்து மனவேஷ்டையாய்ப்பகைத்து முப்புரத்தையெரித்த உரத்த அத்திரங்களையுந்தி அவரவர் பிடித்திருக்கின்ற வில்லையும் பாணங்களையுஞ் சிந்திக்கொடியும் நாணியுங்குறைத்து குதிரை சாரதியைத்தறித்து குடையுடைத்தேரையுமுறித்து பின்னும் நூறுபெருங்கணைதாக்கி விறுபட்டசேனைகள் தாறுபட்டயானைகள் கூறுபட்ட குதிரைகள்மாறுபட்ட இரதங்கள் இவ்வாறு பட்டதென்று சொல்வதற்கிடமில்லாமல் வெவ்வேறுபட்டு நீறுபட்டழிய நிமிஷத்திற்பொடித்து சேறுபட்ட உதிரவெள்ளத்தின்மேல் தேர்செலுத்தி எதிரொருவரில்லாமல் வருகின்ற பராக்ரமனை யடைந்து பறக்கச்சிறந்த தேர்மேலிருந்த பிதாமகன்கண்டுபார்த்தனே யிதோநான் காத்திருக்கின்றேன் வாவென்றெதிர்ந்தான். அப்படிக்கெதிர்த்த விஷ்டுமாசாரியரை அர்ச்சுனன்வணங்கி ஒடுங்கி ஐயா அவர்கட்கு நானெம்மாத்திரம் என்னை ஒருபொருளாகக்கொண்டு சண்டைபோடச் சம்மதியுண்டோ ஆண்டவனேயென்று நிம்மதியாய்நின்று மேகம்போன்ற காண்டீபங்கொண்டு மின்னற்கிணையாகிய நாணிபிகிந்து கன்னங்கலங்க நாணொலிசெய்து தீரஜெயவாளி வீரவயவாளி மகேந்திரபாண முதலியவற்றை வாரிவாரி வரிசையாய்ச்சொரிந்தான். விஷ்டுமாசாரியரும் உகாந்தகாலமே காந்தகார மழைபோல் வாகார்ந்தவாளிபொழிந்தார் இவ்வாறு மலையுமலையுமெதிர்த்து மாறுமாறுபோற் போராடினார்கள். அவர்களிருவரும் புரிந்தகலகத்தினால் ஏழுசமுத்திரமும் எட்டுத்திக்குப்பாலரும் ஒன்பதுகிரகங்களும் பத்துதிசையும் பதினொரு ருத்திரரும் பன்னிரண்டு சூரியரும் பட்டபாடின்னதென்று பாவாணரும் பகர்வதற்கிடம் பெறவில்லை, அந்தரவாசிகளாகிய இந்திரன்முதலாகிய தேவர்களும் வேடிக்கைபார்த்துவெருண்டு அநேகயோசனைதூரம் அகன்றுபோய் நின்றார்கள் சந்திர சூரியர்களுங் கதிமாறினார்கள் அவர்களிருவரும் உதயமாகி பொடுக்கமாகின்ற உதயகிரியும் அஸ்தமனகிரியும் ஒதுங்கி நடுங்கியதுகள் கடலுங்கொதித்து கனலும் பொருந்திகளகளவென்றிறைந்தது. எட்டுத்திசையானையும் தட்டுக்கெட்டயர்ந்தது. இவ்வுலகமும் எவ்வுலகமும்ஏங்கித்தளர்ந்தது, இவ்வாறு பிரமாதமுண்டாகும்படியாய் அவர்களிருவரும் அமராடியகாலையில் விஷ்டுமாசாரியர் கைம்மிஞ்சி பஞ்சபூதம்போன்ற அஞ்சுகணைகளை சாரதியாகிய உத்தரகுமாரன் மேற்றாக்கினார் அந்தக்கணைகள்வருகின்ற நிருடியைக் காண்டீபன்கண்டுகாலாக்கினிக்கணையைப்போக்கி பஞ்சுப்பொதியில்நெருப்புப் பற்றிய பான்மைபோலெரித்து வஞ்சம் அறியாமனத்தோனாகிய வீஷ்டுமாசாரியருடைய நெஞ்சுதிடுக்கிடும்படி அவர்கையிலிருந்த வில்லையொடித்து விட்டான், தன்பேரனாகிய அருச்சுனனால் ஒடிபட்டவில்லை அப்பாலெறிந்துஇப்பாலொருவில்லையெடுத்து மலைபோல்வளைத்துப்புறத்திலிருந்துபுறப்படுங் கிருஷ்ண

சர்ப்பம் பேரோசைகொண்டு புகுந்தவாறென்ன அத்திரமாரியைத் துத்தரமாகச்சொரிந்தார், தாஷ்டீகமாக வீஷ்டுமாசாரியர் சாய்த்தகணைகள் யாவற்றையும் இணையில்லாத அருச்சுனன் நிரணபரிகாரமாய்ப்போக்கி க்ரணபரியந்தங் காண்டீப நாரியிழுத்து அநுஞ்ஞையம்போற் செஞ்சரங்கள் விஞ்சத்தாக்கி அஞ்சிப்பயந்தோடச் சேனைகளைப்புடைத்து அசையாக்கீர்த்திபடைத்து அமராடியகாலையில் எழுகடல் நீருஞ்சுண்ட மலைமுதல் யாவுங்குன்ற உலகிலுள்ள யாவரும்இருந்தஇடத்தைவிட் டெழாமற்பதுங்க அட்டகசமும் உதிரங்கான்று முகம்வாட அமரர்கள் முதுகிட்டோடப் பிரமப்பிரளயத்தில் உண்டாகா நின்ற பெருநெருப்பேபோல் சரங்களிறைத்துப் புலிங்கநிறைத்துத் தகுதியான இருவரும் தேரைச்செலுத்தி ஓரிடத்திலுந்தங்காமல் அண்டச்சுவரின் அடிவாரமட்டுந் திரிந்துகொண்டிருந்தார்கள். இவர்களேறிய தேர்கள் வாயுவேகம் மனோவேகம் என்பவற்றைக்கடந்துவட்டமாகச்சுழன்று ஒன்றுக்கொன்று மிகவுநெருங்கியுராய்ந்து ஒன்றையொன்றுவிட்டுப்பிரிந்து பாய்ந்துநெடுந்தூரமோடி ஓய்ந்து யிடசாரி வல்சாரியாய்த்திரிந்து சூரியன்றேரையுஞ் சுழலவிடுத்தன; இதன்றியும் இந்திரன்மைந்தனை விசயனுடைய வில்லும் கங்காபுத்திரனை வீஷ்மொசாரியருடைய வில்லும் குலால சக்கரம்போற் கூசாமற்சுழன்று கூரம்புமுதலாகிய பாணங்கள்புரண்டு முடிகளோடுமுடிகள் தலைகளோடு தலைகள் இடிபட உடைபடச் சாடியபடியால் தேரிற்கட்டிய குதிரைகள் பிடிபடாமற்கனைத்துக் கறுளித்துக் கலித்துப்பறிபட்டோடவும் இருவர் சாரதிகளும் எக்களிப்பிட்டு இறைந்து விரைந்து பரிகளைத்தடுக்கவும் அருச்சுனனுடைய அனுமக்கொடியும் வீஷ்மருடைய பனைமரக்கொடியும் ஆகாயமளாவி நீடியவாயுதேவனுடன் போராடியாடவும் வாள்வீரர்முதலாகிய மன்னவர்க்கெல்லாம்தோள்கள்பூரிக்கவும் நெற்றிவியர்க்கவும் புருவநெறிக்கவும் உரோமாஞ்சிலிர்க்கவும் வாள்விழி செவந்து மலர்ந்து தீப்பறக்கவும் அத்திரந்தொடுக்கும் விரல்கள் நெளிக்கவும் விற்பிடித்தகரங்கள் மரங்கள்போலாகவும் வீரகண்டை முழங்கவும் வெற்றிப்பட்டமிலங்கவும் நெற்றிபட்டந்துலங்கவும் வேடிக்கை பார்த்தவேந்தர்கள் கலங்கவும் மேலுலகத்தோர் வெதும்பியொதுங்கவும் நாகலோகத்தார் நலிந்துவிலங்கவும் சர்ாசரம் பூமிசலித்துக்குலுங்கவும் இவ்வகையாக இருவருநிலைத்து ஒருவருக்கொருவர் ஈடுதாழ்த்தியில்லாமல் சமராடுகின்ற தன்மையினாலே மதுசூதனன் மைத்துனனாகிய அர்ச்சுனன்யுத்திசெய்து கொற்றமுற்ற பத்துக்கணைகளெடுத்துக் கொத்துகொத்தாகத்தொடுத்து வெற்றிப் பனைக்கொடிவீறிய வீஷ்மாசாரியரேறிய தேரைத்தடுத்து வில்லையுமுறித்தான், அவனால் முறிந்தவில்லையெறிந்து வேறேவில்லெடுக்கு முன்னமே விசயன்முனைந்து அட்டகாசம்பண்ணி அர்த்தசந்திரபாணம் ஆயிரமாயிரமாக எய்து பாட்டனுடைய தேகத்தைக்கொய்துசெல்லெரிப்பதுபோற் சல்லடைக் கண்ணுப்த் தொளைத்துவிட்டான், முன்னமே செவந்திருந்த வீஷ்மருடைய திருமேனியானது உகிரத்தினாற்பசந்து பாணக்துளைத்த வருத்தத்தினாற் களைத்துவருந்திவாடி அறிவழிந்த நெறிபுரண்டு நிலைதவறி மெய்ம்மறந்து பெருமூச்சுவிட்டு கரைபுரண்ட கருங்கடல்போல தேர்மேல்வீழ்ந்து அசை

வற்திருந்தார், அப்போது எசமானிளைத்த சமயத்தையறிந்த தேர்ச்சாரதியான வன் அருச்சுனனுடைய போர்முனைவிட்டு தேரைச்செலுத்தி நேர்முகமான திசையிற்கொண்டு போய்நிறுத்தி சிர்பெறத்தேற்றி அவிழ்தாதிகளாட்டி களை தெளியச்செய்து அன்புபாராட்டினன். அவ்வேளையில் பகல்விளக்காகிய பரிதி யினிரதமானது ஆகாயத்தி னுச்சியையடுத்தது. அதுகாலையில் வீஷ்மோசாரி யர் மாத்தியான கருமத்தைமுடிப்பவர்போல யுத்த முனையைமறந்து மறை ந்துபோயினர். அவரிடைந்துசென்ற செயலைக்கண்டு துரியோதனன் தம்பி மார்களும் புத்திரர்களும் சயந்தவனும் சகுனியும் சதுரங்கப்படைகளும் பயந்து மயங்கி தங்களுக்குதவியாய்ப் பின்புறநின்று தாங்குவாரில்லாமையால் தனித்தனியேங்கி பற்குணன் பாணத்தாற்பங்கப்பட்டு நிற்பதற்கிடமில்லாம லுழன்றுமனமழன்று போர்முனைகழன்று புறமிட்டோடினார்கள். அந்த வேளை யில் மந்தரப்புயத்தோனாகிய அருச்சுனன் யுத்தமுகத்திற் பிரவேசித்து விசித் திரசரங்களை விதவிதமாய்த்தொடுத்து துன்னியசேனைகளைத்தாக்கி மன்னவர் வேருகப்போக்கினன், இந்தப்படி மேலுமேலுங் கோடி கோடி கணைகளை விக்கிபகாலையில் நாலுமூலையிலும் கோலாகலமாயிருந்த வணங்காமுடிதிருந் திய துரியோதனமஹாராசன் படைகளானது பின்னிட்டுப்பறிந்து இரதங்கள் முன்னிட்டுமுறிந்து கொடிமரஞ்சாய்ந்து குதிரைகளுங்காலோய்ந்து தேரிற் பூட்டிய சித்திரத் துகிலுங்கிழிந்து சக்கரங்களுமுடைந்து அச்சுகள்பிளந்து மச்சுகள்சரிந்து குற்றுக்காலுங் கொடுங்கையும விழ்ந்து போதிகை பீடிகை பொடியாயிடிந்து சிகரமுதிர்ந்து சிதறிக்கழிந்து குடையுஞ்சுருங்கி சாரதி குடலுங்குலுங்கி வரிசைலிட்டு கிரிசைகெட்டு மாரொடிந்து வாருந்து பேத மாய்ப்போனது மல்லாமல் வஞ்சமனத்தனான துரியோதனனுடைய வெற்றி பெற்ற மத்தகசமுற்றும் மத்தகக்கும்பமும் பிளந்து வித்தகதந்தமும் முறிந்து களவுபோன்ற காதுகளுமறுந்து பனைமரத்திற்கீடாகிய துண்டமுந்துண்டாய் நான்குகாலும் கழுகனையவாலும் போய் வாய் வறண்டு உடலுடலும் ஒன் ருகிப்புறண்டு வட்டக்கடலுலகில் மலையெட்டுந் தலைகட்டுப்பட்ட வாறுபோல் ஒன்றொழியாமல் உயிர்கெட்டொழிந்தன. தெய்வலோகத்தில் இந்திரசிங்கா சனமேறியகிரீடந்தாங்கிய கிரீடியானவன் நிருடியாய்ச்சிந்தியசரோருகக்கணை களால்துரியோதனனுடைய குதிரைக்கூட்டங்களியாவும் படைமுறிந்து பலங் குறைந்து வால்தறிந்து தலையறுந்து கழுத்துமயிருதிர்ந்து கடிவாளங்கழன்று கழிந்து கலந்து அழிந்து மார்புகிழிந்து கால்மடிந்து மேலொடிந்து சப்பையு முகமுங் குப்புறவிழ்ந்து சடக்கெனவெரிந்தது நாகக்கொடிபடைத்த நராதிப னுடைய பதாதிகளானவைசிரஞ்சிதைந்துடைந்தன; கரந்தறிந்தழிந்தன, எலும் பொடிந்துதிர்ந்தன, குடல்சரிந்துடைந்தன நரம்பறுந்துழன்றன, உதிரம் பொ ழிந்தெழுந்தன, நெற்றியும் புருவமும் நிமிர்ந்து பிளந்தன, புயமும் மார்பும் புண்ணாய்க்கிருந்தன குதமும் பதமுற்குறைந்து சுருங்கின எவ்விடங்களிலும் பிணக்குவியலுயர்ந்தன இனியொருவர் எதிர்த்துப் போர்கொடுப்பார்களே னறுகனவிலுங்காணேம். இதனறியும்சவ்வியசாசிவிட்ட சரங்களுக்குத் தப்பிப் பிழைத்தவர்கள் இப்புவியிலில்லை, இப்பால் யுத்தஞ்செய்தவிடத்தில் நெஞ்

சுரம்பொருந்த நஞ்சுபோலிருந்த நரனென்னுங் காலாக்கினிக்கு எதிர்ப்பட்ட பூளைப்பூப்போல் துரியோதனன் சேனைகளெரிந்து பொடிந்து பொரிந்து புகைந்துபறந்து புறண்டுபோய்விட்டது. இவ்வாறுமுன்னாளில் திரித்துப்புரமெரித்த சிவபெருமான்போனின்ற செஞ்சிலை விசயனுக்கெதிரில் திரிபுராதிகட்கொப்பாய்துரியோதனன் படைகள் பட்டார்கள். இன்னும் அனுமக்கொடிபடைத்த அர்ச்சுனன் அநுசந்தானஞ்செய்த அத்திரங்களினால் அறுபட்டோடிய உதிர வெள்ளமானது சேறுபட்டுச் சிதைந்து செந்தூளாகியது; பின்னும் அர்ச்சுனனுடன் மாறுகொண்டு மடிந்தவர்களின் வல்லுடலானது நீறுபட்டுநெரிந்து ஊறுபட்டொழிந்தது. அசைவில்லாமலெழுந்த விசயன்கணைகளானவைதங்களிஷ்டப்படி சண்டைபோட்டுத் திசையின் கடைவரைக்கும்போய் முட்டிப்பார்த்துத்திரும்பி அப்பாலுந்தன் விசையடங்காமல் பூமிதுளைத்து போமென்றிராமல் சுழற்காற்றுடன் கலந்து வன்மைகுறையாமற்றிரிந்தன, மேலும்மாதவிகாதலனாகிய பார்த்தனேவியவார்கணைகளானவைதிக்கெட்டுங்கிட்டிதிசைப்பாலர்தனையுயிலுங்குட்டிஅட்டகசங்களைத்தட்டி அண்டச்சுவரையுமுட்டிஇன்னம் ஆராயினும் பகைவருண்டோவென்று ஆராய்ந்துவிட்டன; இதன்றியும் சிற்சில நெருப்புக்கணைகளானவை பற்பலதேர் நிரைகளையும்யானைப்பெருக்கங்களையும் குதிரைநெருக்கங்களையுகால்பிலவருக்கங்களையும்கசியக்கரைத்து கண்ணுக்கிடுமைபோலரைத்து கால்வாய்கொண்டோடுகின்ற உதிரங்களிற்கரைந்து கடலிற் பெருங்காயங் கலத்தல்போற் கலக்கி விட்டிரைந்தன வீபற்சுவினைத்தவினையால் கொற்றவர்களும் மெத்தவருந்திச் செத்ததல்லாமலும் தலைமேற்குவித்த கரத்தினராய்த்தறிந்துவீழ்ந்த சிரத்தினராய் தைரியங்கெட்ட உரத்தினராய் தங்கள் தங்கள் வாய்விட்டரற்றினராய்ப்போய்த்தமக்குரிய பெரியபெரிய சந்திரவட்டக்குடைகளும் வெண்சாமரைகளும் பல்லக்குகளும் பலவாகனங்களும்பேரிகை பூரிதாளமேளம் தவிலடிகாளம் கொம்பு கெடிமுரசு முதலிய வாத்தியக்கருவிகளும் வில்லும்பாணமும் வேலும்வாளும்வெவ்வேறுயழிந்து பூமியிற்குப்பையாப் பொருந்திக்குவிந்தன. இந்தப்படியாகச் சண்டைபுரிந்தஇந்திரன்மைந்தன் அணடச்சுவரையளாவிய சமுத்திரம்போலிரைந்தெழுந்த துரியோதனனுடைய சேனைகளை மகரமச்சம்போற் குடைந்துவாட்டியிட்டான்; மேன்மேலுந்தெரித்த வெங்கனற்கணைகள் மிதமறப்படர்ந்து வெளியெல்லாமடர்ந்து காடெல்லாங்கடந்து கடையுகாக்கினி போலெரிந்து விரோதியைத்தொடர்ந்து மேனியைப்பிளந்து சேனையைச்சிதைத்து ஊனைப்புசித்து உதிரங்குடித்து தாராகணங்களைததரையிலுதிர்த்துதேவர்கண்டுங்கச் செந்தீயெரிந்து விரித்துக்கலித்துத் திரம்பெற்றுகின்றன,

இவ்வாறு மாடுபிடிசண்டைபோடுவதற்காகப்புகுந்தவணங்காமுடியோன் முதலாகிய மன்னவர்கள்மேல் குதிப்பறிந்து நெறிப்பறிந்து கூசாமலேவிய பாசுபதன் பாணங்கள் எப்படியிருந்ததென்னில் தசரதச்சக்கரவர்த்தி தந்த மைந்தனாகிய தாசரதியாவான் தர்ப்பசயனத்திலிருந்து வருந்தியழைக்கும்போது வாராத சமுத்திரராசன்மேல் வலுக்கொண்டேந்திய வன்னிக்கணைபோலிருந்தன. ஆண்சர்ப்பக்கொடிநாட்டிய துரியோதனனுடன் பொருந்திப்

போர்புரிந்த போர்வீரர்கள்மேல் புரந்தரதுரந்தரன்போக்கிய புங்கவங்களானது எவ்வாறிருந்ததென்னில் தீரம்பெறுஞ்சூரனையும் அவன்சேனைகளையுங் களைந்த சிவசுப்பிரமணியக்கடவுளின் வேலாயுதம்போன்றிருந்தது மேலுங் கருங்கடற்போற்கலந்த கௌரவகுலமுதல்வன் சேனைகளியாவும் கண்கலங்கப் புண்துலங்கக் கசக்கிவதக்கிக் கருக்கும்படிக்கு கேசவற்றோழன் முடுக்கிய கிளைக்கணைகளானவை எத்தன்மையொத்ததென்னின் எமதருமராசனுமேவி விசிய தண்டபாசத்திற் கிணையாயிருந்தன. வேந்தர்கள் முடிமேற்கவித்த வெள்ளைக்குடைகள் காம்புமுறிந்து பூமியிற்கவிழ்ந்து காற்றினால் நிமிர்ந்து கலந்துகிடப்பது எவ்வாறிருந்ததென்னில் சுபத்திராநாயகன் துரியோதனனுடைய படையைவென்று அடையச்செய்யும் யாகத்தில் அவிர்ப்பாகம்பெறவேண்டிச்சந்திரன் வந்துதலைகவிழ்ந்திருப்பதுபோலிருந்தது. வெற்றிவீரமுள்ள வேந்தர்கள் கையிற்பற்றிய வலம்புரிச்சங்கமுதலிய வெல்லாவற்றையும் அருச்சுனன் அம்பாலடித்துத்தள்ளுதல் எவ்வாறிருந்ததென்றால் ஏகசக்கராதிபனாகிய துரியோதனனது கீர்த்தியை வேரறக்களைந்தவாறு போலிருந்தது. தேர்களிலும் யானைகளிலும் பொருந்தியிருந்த பலநிறசுப்பட்டுக்கொடிகள் பார்த்தன்விட்ட பாணங்களால் அறுபட்டு முறிபட்டு தறிபட்டு மாலையாய்விழ்வது எப்படியிருந்ததென்றால் வெகுநிறமேகங்கள் விண்டலம்விட்டுநீங்கி மண்டலத்தில் ஒரேமொத்தமாய்விழாமல் தனித்தனிவரிசையாய்விழுந்தவாறு போன்றிருந்தது. மாசற்ற தேசுற்ற வளம்பெற்ற மனமுற்ற தருமராசனுக்கிளவலாகிய தனஞ்சயனானவன் விசயலட்சுமியைக் கலியாணம் பண்ணிக்கொள்வதற்குதனித்தனியெடுத்துத்தொடுத்தசரக்குவையலானவை தூசிப்படைச்சூரர்களின் வீரவில்லைவெடுக்கென்று முறியப்படுத்திய வேடிக்கை எவ்வகையென்னில் சனகராசனுடையவில்லைச்சீதாபிராட்டியாருக்காக செங்கண்மால்வளைத்தொடித்த செயல்போன்றிருந்தன. இதன்றியும் கரும்பைப்பரிந்தெடுத்துண்ணும் வாயும்பனைக்கையும் விரிந்தகாதும் பொருந்திய மெய்யுமுள்ள திடகாத்திர கும்பகரடதடயானைகளின்மேல் முழங்கால்நின்ற முரசவாத்தியங்களை நரனுந்திய நாராசப்பகழிகளுடைத்தன எப்படியிருந்ததென்றால் உயர்ந்தமலைமேலுற்ற பெருங்கருங்கற்களைப்பேரிடிவிழுந்து பிளந்தவாறொத்தது. மேலும், வெற்றிப்போரிற்புகுந்த மத்தகசங்கள் வீரபட்டங்கட்டிய கும்பம் பிளப்புண்டு இரண்டுப்பக்கங்களிலும் உதிரம்புரண்டோடும்படியாகத்திரிகின்றது, எத்தன்மையொத்ததென்னில், சித்திரைப்புயலடிக்குங்காலத்தில் மெத்தவெள்ளஞ்செவந்து கறுத்தமலைமேல் கால்கொண்டு, வழிந்த காட்சியையொத்திருந்தது. இதல்லாமலும் அருச்சுனன் ஒருயாகஞ்செய்து தேவர்களுக்குப் பூரணாகுதிகொடுத்த செயல்போன்றிருந்தது. அஃதெவ்வாறென்னில், மாடுபிடிசண்டைவிளைந்த காடுகுடிகொண்டு பரந்த நிலமானது வேள்விச்சாலைபோலும்வீரர்களெதிர்த்து போர்புரிந்த இடமானது ஓமகுண்டமாகவும், அவர்கள்மேற் பிரயோகம்பண்ணிய பாணாக்கினிகள் யாகாக்கினியாகவும், போர்க்கோலங்கொண்டவீரர்களுடையதேகமானதுசமித்துக்களாகவும், அன்னோருடம்பிலிருந்துவழிந்த உதிரங்கள் நெய்யாகவும், நிணங்கள்

வகையாகவும், போர்பொரவழைக்கும் வீரப்பேச்சுகள் வேதமந்திரங்களாக வும், இயாவருடைய உயிரும் அவிர்ப்பாகமாகவும், தேர்ச்சிகரங்கள் பூரணகல சங்களாகவும், அயமேதம் கயமேதம் புருஷமேதம் பசுமேதமென்னும் யாக த்தை ஒருநாள்விரதத்தில் உத்தமன்செய்ததை ஒத்திருந்தது. மேலும், பிரமசிருஷ்டிக்குட்பட்ட ஆன்மகோடிகளின் கண்ணுக்குள் மணிபோனின்ற கண்ணனைப்போல் அந்தயுத்தபூமியைச்சாரிவரும் அருச்சுனனைக்கண்டபாரிய தேர்வீராளெல்லோரும் தங்களைநாடித் தனஞ்சயன் தேடிவருகிறுனென்று தளர்ச்சியடைந்தார்கள்.

இப்படியாகப்போர்விளைத்த யுத்தகளம் எப்படியிருந்ததென்றால், பருந் துகளிருந்து விருந்துகளருந்த, கழுகுகள்குழுமிக் கொழுமிணங்கொள்ள, காக் கைகள்வீரர்கள் கண்ணைப்பிடுங்க, ஆக்கையைப்பேயுநாய் அடுத்துக்கடிக்க, பிணந்தின்னும் கூளிக்கணங்கள்பறக்க, ஈரலைமூளையைக் குழிநரியிழுக்க மிகுந்த ஓசையுள்ள பட்சிகளின் இரகைநெருக்கத்தினுல் வானமும் மலையும் மரங்களும் மறைய, ஆறுகவும், சேறுகவும், மடுவாகவும், ஓடையாகவும், கய மாகவும், காலாகவும்பெருகியோடிய உதிரங்களினுல்கடலால்வளைந்த உலகஞ் செவக்க பைசாசங்களும் இணங்கி வராகியைவணங்கி கைகோத்து ஆடியும் பாடியும் ஓடியுமிருக்க ; பாம்பாரமும் என்புமாலையும் சூலகபாலமும யாளி வாகனமும் உடுக்கை பம்பையுங்கொண்டுதிரிகின்ற காளிக்கூட்டமும், ஞாளி யீட்டமும். மணிமுடியணிந்த மயிடனைத்துணித்த கன்னிப்படையும், கன கக்குடையும், குத்துவெட்டுச்சண்டையிற்றேறிய குறள் கூளி பாரிடங்களுங் கூடிக்குலாவி போர்க்களமுழுவதும் பொருமித்திரியவும். சண்டையிலுரு ண்ட தரியலர்தலைகளை அண்டையிற்கிடக்கும் யானைத்தலைகளை குப்பை குப்பையாய்க்குவித்த குதிரைத்தலைகளை மலைப்பாம்புகளில்வரிசையாய்க்கோ த்து தாலியுருவுமுதலிய மங்கலசூத்திரமாய்க் கழுத்திற்றரித்து முடித்துத்தெ றிக்க உருவுகள் கோத்துக்கொண்டேனென்று, பிரதாபம்பேசி தன்னைமற ந்துவந்த பேய்ப்பெண்ணானவள் சற்றேதவறி உதிரநதியில் வீழ்ந்து ஆழ்ந்து சுழியிற்றாழ்ந்து செத்தேனென்று முழுகியெழுந்து வருந்திக் கூச்சலிடும் போது ஒருபூதம் ஓடிவந்து, ஏற்றக்கோல்போன்ற நீண்டகையைக்காட்ட(அக் கரத்தைப்பிடித்துக் கரையேறுபவர்போல்) அக்கரத்தைப்பிடித்துக் கரை யேறிவந்து, இன்றைக்கொருதத்தென்று, சந்தோஷிக்குஞ் சந்தடிப்பெருக்க மும் அவ்வாறுபிழைத்த பெண்பேய்களானவை தங்களைக்கரையேற்றிவிட்ட பூதத்தைப்பிடித்துக்கொண்டு எப்போ துமதுகைப்பிடித்தேனே அப்போதே. உமக்குநான் பெண்சாதி எனக்குநீர்புருஷன் இனி வேறுபுருஷர்களைவிரும்பே னென்று, பந்துசனங்களுக்குச்சொல்லி அவர்களநுமதியில் கலியாணஞ்செய் துகொள்ளுகின்ற ஆரவாரமும், அருச்சுனராசனுடைய புகழ்ப்பிரதாபத் தைப்பாடி அவருக்கு நன்மையுண்டாகக்கடவதென்று வாழ்த்திக்கூடி காண் டவத்தை தோத்திரஞ்செய்கின்ற பேரொலியும் கிணமாமிசத்தை நிரம்பத் தின்று மயங்கிவீழ்ந்து புரளுகின்ற வயிறுதாரிப்பேய்களின் வார்த்தையும் சோரிவெள்ளமானது வாரிபோலோடவும் ; அவ்வாரியிற்படிந்த திமிங்கிலம்

போலவும்; குதிரைப்பிணங்கள் திமிங்கிலமென்னு மீன்போலவும், வாளாயுத முதலியமற்றவாயுதங்களெல்லாம் பற்பலவிதமச்சமாகவும், பொருமலைக்கருதிய பிணங்கள்குவிந்த மேடானது, என்காற்பட்சிகளிருக்கும் பெருமலையாகவும் மண்மேலோடுகின்ற தேர்களும் தேர்த்தட்டுகளும் கடல்மேற்செல்லுகின்ற கப்பல் கட்டுமரம் படவு பஃறி பரிசுபோல் உதிரக்கடலூடோடவும், மத யானைகள் கொம்பொடிந்து, கூக்குரலிடும் ஓசையானது தீரவீரபுருடர்கள் ஒருவருக்கொருவர் கூரியகணையால் குத்திக்கொண்டிறையும் பேரோசையா லடங்கிப்போகவும், கடையாணிகழன்றோடுகின்ற சக்கரங்களும் தலையறுந்த முண்டமாடும் ஆட்டங்களும் பாதகாட்டிய மாதர்கள் வெட்கமுறும்படி யாயிருக்கவும், இந்தப்படி கற்பகப்பூமாலையணிந்த பொற்பிரகாசப்பொன் னுலகிற்சிறந்த தேவேந்திரகுமாரனாகிய பார்த்தன் ஆர்த்துப்பாரிடங்கின்றும் போர்க்களத்தில் யாளிக்கும் சிங்கத்திற்கும் யானைக்கும் புலிக்கும் நிகராகிய வேந்தர்முதலாகிய வீரர்களை, கூளிக்கும ஞாளிக்கும் காக்கைக்கும் நரிக்கும் குழுவாகிய கழுவுக்கும் பருந்துக்கும் குறைவில்லாத தன்கைவாளிக்கும் விருந்தாக்கி தேவர்கள்கண்களிக்கும்படி விசயலட்சுமியைத் திருமணங் கண்டருளினன். வீரப்பிரதாபதீரகாண்டீப மோக யோக வைபோக திபாக விசயமகாராசன், செலுத்திய வேந்தழற்கணைகளுக்கு யாவரும் பஞ்சு போற்பறந்து, அஞ்சிப் பல்லைக்காட்டிக்கெஞ்சி எஞ்சிப்போனர்கள், சிலர் சண் டையைத்துறந்தார்கள், பலர்மண்டைகிழிந்து இறந்தார்கள், சிலர்முகம்விட்ட வாறே ஓடினார்கள், பலர் மூச்சுத்திணறிவாடினர்கள். இவ்வாறானநிலையைச் சவ்வியசாசிகண்டு வெவ்வியகையுடன் வெகுண்டு ஆபத்தினாலோடுகின்றவர் களைப் பாவத்திற்குப்பயப்படாமற்றுரத்தி விடாதைவிடாதையென்று வெருட் டினன். இதுவுமல்லாமல், திரிதராட்டிரகுமாரராகிய துரியோதனன், துச்சா தனன், சிந்துராசமைந்தன் சௌபலராசகுமாரன், குந்திதேவி முதற்பிள்ளை யான சூரியதநயன்; இவர்முதலாகிய வெற்றிவீரர்கள்யாவரும், திசைமயங்கி மதிமயங்கி நிலைகலங்கித் தலைகுலுங்கிப்போகும்படியாய்ச் செந்தீக்கணைகளை முன்னும் பின்னுமுடுக்கித் தேருர்ந்தசாரதியாகிய உத்தரகுமாரனும் நடுங்கிப் போம்படியாய் ஒருவித்தைவிளைத்தான், (அந்தவித்தை யெந்தவிதமென்னில்) கைப்பிடித்த காண்டீபத்தை காணிதளர்த்தித் தோள்புறமாட்டிய அம்பறாத் தூணியைநீக்கி விரச்சாடு கரச்சாடு முன்கைத்தோற்கட்டு பின்கைத்தோற் கட்டுமுதலிய கவசமுங்களைந்து இரதத்தின்மீதுவைத்து அஸ்வசஞ்சீவிமந்தி ரத்தாற் குதிரைகளைத்தேற்றிச் சாரதியின்சலிப்பையுமாற்றி தனதாசிரிய னைப்போற்றி இன்னமும் பகைவர் ஒன்றுகூடிவருவார்களாகில் மெத்தவுநேத் தியென்று பூர்த்தியான தன்சரீரவருத்தந்தீர்த்து முகம்வேர்த்து நின்றான். அந்தநேரத்தில் உத்தரகுமாரனும் தேர்விட்டிழிந்து, குதிரைக்கடிவாளத் தைக் குறுக்காலுடன்சேர்த்துக் குதிரைநடத்துங்கோலையுங் கையிலணியுங் கவசமார்த்தோலையும் தேர்மேல்வைத்துக்கட்டி குதிரைகளைத் தடவித்தட்டி அருச்சுனராசனைக்கிட்டி மாடுபிடிசண்டைநடந்த மகத்துவத்தையும் இனி மேல் நடக்கவேண்டிய மார்க்கத்தையும் பேசிக்கொண்டிருந்தான். இப்பால்

பச்சைநிறம்படைத்த பார்த்தனுடன் கொச்சைப்போர்புரிந்துலெச்சைக்கெட் டழிந்து, அடிபட்டோடியவர்களின் செயலைச்சொல்லுகின்றேன் கேளுஞ் செனமேசெயமகாராசனே யென்று வைசம்பாயனர் சொல்லிவந்தார்.

இவ்விதமாக ஒவ்வுதலில்லாச் செவ்வையதான சவ்வியசாசிபௌவமாம் படையில் அவ்வவர்மீதில் கௌவுமம்பேவி எவ்வமாகென்று, வின்னுட்டிவிழு த்து விடுத்தான்; திவ்வியபாணம் தெவ்வர்களுடைய கொவ்வியபிடரியைக் குறைத்தழித்தொழிந்தகௌரவக்குலமகன்கண்டு செவ்வியகண்கள்செவ்வரக் கினும்செவந்துநாப்புரண்டுலர்ந்து தீப்பொறிமலிந்துநாடாதுநாடிவாடாதுவாடி க்ஷாத்திரத்தால்முனைந்துநான் இந்தநரனுடன் சண்டைவிளைத்து நலிந்துமெலி ந்துதறிந்துமுறிந்து இறந்துபோனாலும்போவதேயல்லதுஇவனால் என்படைகெ ட்டுஇவ்வளவுஅவமானப்பட்டு அத்தினாபுரிமட்டும் போய்ச் சேரமாட்டேனெ ன்றுநடநடவென்று பற்கடித்து மடமடவென்று விற்பிடித்து பளபளவென்று தோளடித்துக் கிடுகிடுவென்னக்கர்ச்சித்து தடதடவென்றோடித் தேரோறிகட கடவென் றுருளைகளோடப்புரவிசெலுத்தி;படபடவென்று அரவக்கொடி நீட ஆண்மைப்பேயாட அஞ்ஞானமேலாட அருவினையூடாட மராடகர்நடர்முத லிய மன்னவர் சூழப்படாடம்பங்காட்டி வந்தான். அப்படி வராநின்ற துரி யோதன மகாராசனைக் கர்ணன்பார்த்துக்கடுங்கோபங்கொண்டார்த்து (தம்பி) நானுயிருடனிருக்கும்போது நீ சண்டைக்குப்போகவேண்டுமோனில்லுநில்லு மென்று தடுத்து தன்னுடைய தேரை முன்னதாகவிடுத்து மன்னவன் இரத த்தைப் பின்னுறவமைத்தான் அன்னகாலையில் பொன்னணிபூண்ட துரியோ தனன் தம்பிமார்களும் பூபாலர்முதலிய பேர்களும் மின்னெனவெழுந்து கன் னனுடன்கலந்து முனைந்தார்கள் வீஷ்மாசாரியர் துரோணாசாரியர் கிருபா சாரியர் அசுவத்தாமாமுதலிய நால்வரும் துரியோதனனுடைய மனோபாவ மறிந்து தவறு பேசாமற்றவிர்ந்து போனவருடனேர்ந்து புகுந்தார்கள்; மகமே ருவுக்கொப்பாகிய அத்தினபுரியென்னும் வெற்றியானை மேற்கொண்டு அருச்சு னன் சண்டையையிப்போது அமராடிப் பொடியாக்குவேன்.தப்பாது எப்போ தும் எங்கள் பெருமைக்கொப்பேது பாருங்களென்று விண்டலமுதலாகிய மே கங்களும் எண்டிசைதாங்கிய நாகங்களும் மண்டலமுதலாகிய அண்டங் களும் விண்டுதிர்ந்துபோம் என்னத்தக்கதாய் இற்றைப்போரில் வெற்றிபெறு வானென்று கொற்றவர்பலரும் மற்றவரொவரும் குறித்துக் கொண்டாடும்படி யாய் விகர்ணனென்னுங்கரளை செண்டெனவெழுந்து திரண்டசேனையுடன் வந்துகலந்தான் இதல்லாமலும் பார்த்தன் பாணத்திற்குப்பயந்து போர்க்களம் விட்டுப்பிரிந்து பெண்டுபிள்ளைகள் மேற்பரிந்து பல பக்கங்களிலும் இரிந்து நாடியோடித்திரிந்து வயிறெரிந்துபோன மகாரதர்முதலிய பேர்களுஞ்சேர்ந்து எமதர்மராசன்மேல் எதிர்க்கின்ற உயிர்வகைக்கூட்டம்போலத் திரும்பினார் கள்,நான்குபடைகளும் அதிரதர் மகாரதர்சமரதர் அர்த்தரதர்முதலிய வீராதி வீரர்களும் பொருந்தி பிருதுவி அப்பு தேயுவாயு ஆகாயம் இவ்வைம்பெரும் பூதமும் கலங்கும்படியாய் ஆதிசேடனுடைய பணமகுடங்குலுங்கும்படியாய் த்துணிந்து திடதைரியதீரத்துடன் இளைப்பாறிக்கொண்டு தனித்து நின்று

சாரதியுடன் பேசிச்சண்டை வென்றுநின்ற தனஞ்செயச்சிங்கத்தைத் தட்டி யெழுப்பிவிளைத்தார்கள். சற்றுநேரத்திற்கு முன்னே தனஞ்சயனுற் பட்ட பாடுங் கெட்டகேடும் அத்திரங்துளைத்தநோயும் பச்சையுதிரம் ஒடிவரும் புண் வாயும் காயுமுன்னமே ஆயும்அறிவினர் ஆயாசம்பாராமல் போர்புரியப்புகுந்து அத்திர சத்திர ஆயுதங்களை விஸ்தாரமாகவிடுத்து அடுத்தார்கள். அவ்வவர் தொடுக்கும் அம்புக்கும்புகளைக்கண்டு இரதத்தின் மேற்கொண்டு எதிர்வந் தபேர்கள் பிதுர்கலங்கிப் போகும்படி விசயகாண்டீபம் வளைத்து நாணை விவிளைத்து முளைத்த முழுமதிபோல் மதர்த்துநின்றான் நாயகனுகியநரன் தேரோறுமுன்னமே வாரோறுதனச் சுதக்கணைமைந்தனுகிய உத்தரகுமார னென்னுஞ் சாரதி களையாதிய குதிரைகளைத் தேரிற்பூட்டிக் கலகலவென்று ஒலிக்குஞ்சதங்கைகள் கர்க்கரத்தொனியுடன் கலந்து முழக்க முடுக்கினன். அருச்சுனராசன் தேர் அசைந்தாடியோடும்பொழுது மணிமுடிதரித்த மன்ன வர் பலரும் காரிடி நீரிடி நெருப்பிடி பேரிடியென்ன நெடுநாணோசைகாட்டி அளவுபடாத அம்புகளைச்சொரிந்தார்கள் அதுவுமல்லாமல் அக்கினிபற்றியெ ழுகின்ற கொழு மழு தண்டாயுதம் சூலம் அங்குசம் பாசம் உலக்கை சக்கரா யுதம் தோமரம் ஈட்டிவாங்குமுதலியஆயுதங்களை முக்கண்முதல்வனுக்கொப் பான பற்குனன்மேலும் சாரதிமேலும் தேர்மேலும் குதிரைகளுடம்பிலும் படும்படியாய் முட்கரமாய்விசி முடுக்கினர்கள் அதன்றியும்இயானைமேலிருந்த வர்கள் தேர்மேலமர்ந்தவர்கள் வேகமான குதிரைமேற்கொண்டவர்கள் பூமி மேல்நின்றவர்கள் தங்கள் தங்களுக்கிஷ்டமானபடிமுனிந்து தனிப்படைகொ ண்டு சாடினர்கள். அப்போது பூண்டயங்குந் தேரிலிருந்தவர்கள் பாண்டுபுத் திரனுகிய பார்த்தன் ஏமந்தருதுகாலத்தில் மூடுபனியினல் மறைக்கப்பட்ட சூரியன் போலிருந்தான். அவ்வகையாகச்சற்றுநேரம் ஒளிமழுங்கி உருத்தெரி யாமலிருந்து உடனே யோசித்து விரைந்து தனக்கெதிர் நேரிட்ட தரியலர் களையும் அவர்களாற்றுக்கிய சரக்கணைகளையுஞ் சட்டைபண்ணுதவனுய்ப் பட்டங்கட்டிய முடித்தலையாட்டி பகபகநகைத்துப் பற்காட்டிய உடலுயிர் பகைத்து நம்முடன் அடல்விளைத்துவந்த இத்தனைபேர்களும் படவதைத்து விடவேண்டுமென்று பதறிநினைத்து மறுபடியும்பொறுத்து விசயகாண்டீபத் தையெடுத்து நிறுத்திவளைத்து நாணேற்றி பூர்வத்தில் தனக்குத்தேவேந்திரன் கொடுத்திருந்த இந்திராத்திரத்தையேந்தி மந்திரஞ்சொல்லி வணங்கி இந்திர த்திக்கினிலுந்தி எமதர்மராசனுற் பெற்ற எமாஸ்திரத்தை யெடுத்துப் பூசித் து தென்திசையிலமைத்து; வருணுஸ்திரத்தை வணங்கி வழங்கி மேற்குத்திக் கிலிருத்தி குபோஸ்திரத்தைக் கைக்கொண்டு கும்பிட்டுப் பணிந்து வடக்கு த்திக்கில் விடுத்து இந்திரன் முதலிய ஈசானதேவனையுந் துதித்து நான்குதிக் கிலும் பாங்குடனிறுத்தி நாணிதளர்த்திய காண்டீபத்தையும் அம்பறாத்தூணி யையும் இரதத்தின்மேல் வைத்துப்போட்டு இப்பால் நடக்கின்ற விந்தையான வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இப்படியாகத் தருக்குடன் செருக்கிநின்ற தனஞ்சயனையும் அவனுலே விப சாயகங்களையும் அந்தச்சரங்கள் தங்களைத் தடைப்படுத்துகின்ற தந்திர

ங்களையும் தநுர்வேதமந்திரசுதந்தரங்களையும் தெரிந்துகொள்ளமாட்டாதவர்களாய், பண்டாட்டமாவதே கொண்டாட்டமென்னக்குறித்து, சத்தமேகமெழுவதுபோற்கவிந்து, மின்னலிடியும் வில்லிட்டவாறுபோல்முழக்கி விற்பிடித்து; கல்மழைபொழியுங் காட்சிபோல் அத்திரங்களைச்சொரிந்து வேண்டியமட்டும் பரிந்து சலிப்பில்லாமற் பாடுபட்டார்கள். இவ்வாறு தம்மாற்கூடியவரையிலும்தாழ்ச்சியில்லாமல் முடுக்கிப்பிரயோகித்த சரங்களையெல்லாம் அப்பாலிப்பாற் செல்லவொட்டாமலடக்கி அருச்சுனன்மேல் போகவொட்டாமல்மடக்கி அப்பாணத்தின் வேகத்தையும் அடக்கி ஆவெனத்திறந்த வாயால்விழுங்கி முறுக்கி வாரியடித்து நொறுக்கித் தாறு மாறு வேறு கூறு வாறு செய்யுந்தன்மையை, மந்தரமலைபோலுயர்ந்த தோளினையுடைய வீட்டுமர் துரோணர் கிருபர் அசுவத்தாமாமுதலியசாந்தரும் துரியோதனன்முதலாகிய வேந்தரும் மகாரதர்முதலிய மாந்தரும்பார்த்துத்தலைகவிழ்ந்து குனிந்து மதிமயங்கி முனிந்து மனந்தியங்கிநினைந்து, ஐயோ! இவ்வருச்சுனனால் முன்னமே அடிபட்டு இடைந்தோமே அந்தத்தெப்பலுடன்போய்விடாமல் திரும்பியெதிர்த்து அவன் தெப்பலுக்குள்ளானோமே, ஓகோகோ! வெகுநாளைக்கு நிலைநிற்கும்படியான அபகீர்த்தியையடைந்தோமே! இதுவரையிலும் நாம்பெற்றிருந்தசுபகீர்த்தியுமிழந்தோமே, வீணாகவேசாறிநொந்தோமே பூணாரம்பெற்ற புரந்தரன்மைந்தன் செய்வனவற்றைச்செய்து விட்டு மெய்வருத்தமில்லாமல் விலாசமுற்றிருக்கின்றானே! நாம் இதற்கென்னசெய்வோமென்று வெட்கப்பட்டு வெந்து வெதும்பி யொதுங்கிப்போயினர். இப்பால் வானத்தினின்று வேடிக்கையைக் கண்ட வானவர் மாதவர் மகிழ்ச்சிமேற்கொண்டு, மாதவிகொழுநனைமகிழ்ந்து மனமாரப்புகழ்ந்து மலர்மழைபொழிந்து வாழ்த்தினார்கள். சரசுவதிநாயகனாகிய சதுர்முகப்பிரமனே சாட்சாத்காரமான சங்காழிமுகுந்தனுடைய தனியருளென்று சந்தோடங்கொண்டாடினான். அமராவதிக்கதிபதியாகிய தேவேந்திரன் காலகேயர்களை வென்று நமராயுளளித்த விசயன் நவநீதசோரநாதன் மைத்துனனென்று நாடிப்புகழ்ந்தாடினான். அளகாபுரிக்கிறைவனாகிய குபேரன் சந்திரசேகரசடாதரனருளால் இந்திராதிபரெவர்க்கும் முந்தியமுதற்காரணமாகிவந்தவதரித்த மரகதநிறத்தன் அருச்சுனநாமனென்றானந்தங் கொண்டாடினான். பாண்டுவும்வேண்டிய பார்த்திபர்பலரும் காண்டீவன் வெகுண்டு காண்டீவந்தன்னால் தூண்டியவேகச் சுடுசரம்பொடிக்கச் செத்தழிந்தொழிந்த சேனையும்யானையும் இத்தனைகோடியென் றியம்பப்படாமையால் புத்திரப்பேறு பெற்றனமென்று மெத்தவுமபேசிமேன்மையடைந்தனர். அமரர் சித்தர் அசுரர் தைத்தியர் கருடர் கின்னரர் நிருதர் கிம்புருடர் காந்தருவர் இயக்கர் விஞ்சையர் பூதர் பைசாசர் அந்தரர் முனிவர் உரகர் ஆகாயவாசிகள்போகபூமியர் ஏகாதசருத்திரர் துவாதசாதித்தர் அட்டவசுக்கள்முதலானவர்களியாவரும் இச்சவ்வியசாசியின் சாதுரியத்தைக் கண்களாற்கண்டு களித்துத் தங்களாலுந்தாங்கமாட்டாமல் ஓங்கியமலைக்கண் ணுவப்புற்றிருந்தனர். இவ்வாறெல்லாரும் கொண்டாடிக்கொண்டிருக்கின்ற அந்தவேளையில் வீபற்சு என்னும்பெயர்பெற்ற விசயன்மறுபடியும் வில்லையெடுத்து நாணி

தொடுத்துத் தானினைத்த காரியசித்தியாம்வண்ணம்கருதி மோகனுத்திரம்பிடி த்துபூசாவிதிகள்முடித்துபிரணவமந்திரம்படித்துபிரதாபராமன்போல்விடுத்து பெரும்கும்புகள் தும்புகளெழும்படியாய்ப்பேதுற்றவாடி ஓடி அவர்கள்படும் பாட்டை யோகபுருடன்போல் நாடிப்பார்த்துக்கொண்டிருந்தனன். இங்ஙன மென்றெழுந்த மோகனுத்திரமானது தியாகம்வாங்கச்சென்ற தெரிவைபோற் சென்று பிராணத்தியாகம்பண்ணுவதற்குப் பின்வாங்காமல் முன்னோங்கி மற் போர்விளைக்கும் பற்பலவீரர்களையும் விற்பனவிவேகிகளையும் சொர்ப்பனங் காண்பவர்போற் சோர்வுறச்செய்து மயக்கியபோது சண்டைசெய்யவந்ததிற மும் தாங்கள்புரிந்த வீரமறமும் தேகநிறமுமறத் துறந்துமறந்துமடிந்தவர் தம் மைப்போற் பூமிமேற்படிந்துபோனார்கள். இதல்லாமலும் தேர்மேலிருந்தவர் தேரின்மேலும் யானைமேல்வந்தவர் யானையின்மேலும் குதிரைவீரர்கள் குதிரைகள்மேலும் இருந்தவரிருந்தபடிபெருந்திகிலடைந்து இந்தலோகம்அந்த லோகம் எந்தலோகமோவென்று நிலைதவறித்தலையுதறிப் பொறிசிதறிப்புலன் பதறிச்சாய்ந்துவிட்டார்கள். அவர்கள் படும்பாட்டைப்பார்த்த பார்த்தனே மனத்துக்கிசைந்த சாரதியான உத்தரகுமாரனது சித்திரமுகத்தைநோக் கிப்பரிந்து பிரயோசனமற்ற நகைபுரிந்தான், பிரயோசனமில்லாத நகை யாதென்னில், இரும்புக்குவிழுகின்ற சம்மட்டியடியானது செருப்புக்கும்விழு வதுபோல் துரியோதனன்முதலானோர்படப்போகின்ற அவமானம் ஆசாரியர் முதலிய வரும் வீஷ்மாசாரியரும் படப்போகின்றார்களேயென்று வெறுப்பி னால் நகைத்த வெறுநகையென்பர். ஆதலால் சந்துருஷ்டியில்லா மனநகைத்த தனஞ் சயனானவன்விராடகுமாரனைப்பார்த்து,அப்பா!உத்தரகுமாரனே, உன் சகோதரியான உத்தரைசொல்லியசங்கதி ஞாபகத்திலுண்டோ இல்லையோ மறந்துவிட்டாயோ வெற்றிகொண்ட தன்மையால் மகிழ்ந்துவிட்டாயோ? வென்றுகேட்டான் அவ்வசனங்கேட்ட உத்தரகுமாரன் கண்களிருண்டு,மன மருண்டு, சிந்தைகலங்கித் தீரம்விலங்கித் திடுக்கிட்டலமலந்து தியங்கி ஒன் றுந்தோன்றாமல்மயங்கி உறக்கமுந் துன்பமும் ஒருவாறடைந்து இப்படிப் பட்ட மகாபுருடனுடைய அருமை பெருமைதெரியாமல் நமதுதங்கை என்ன சொன்னாளோ ஏதுகாரணமோவென்று பெருமூச்செறிந்து பற்குனனைப்பணி ந்து பயம்விட்டுத்துணிந்து எனக்கிட்டதெய்வமானஏந்தலே அறியாதவளான சிறியாள் குறியாமற்பேசிய கொடுமொழியை என்னைப்பற்றி மன்னிக்கவேண் டும் மகாராசனேயென்று வாய்பொத்திக்கைகட்டி மனநடுங்கிச்சொன்னான். அவனது, அடக்கம் ஒடுக்கம் நடுக்கம் வணக்கம் முதலியவற்றைக் குறிப்பினு லுணர்ந்துகொண்ட நரனானவன் உத்தரகுமாரனுடையமுதுகைத்தட்டி மற் றொன்றுமன்று,நீ வாய்வறளாதை மனந்தளராதை மதிபுரளாலத வல்லவனே! இப்போது நான்செலுத்திய மோகனக்கணையால் அயர்ந்துவிழுந்த யாவரும் இன்னமொருநாழிகைக்குள்ளாக மயக்கநீங்கி யெழுந்திருப்பார்கள், இதற்கு முன் நீ அவர்களிடத்துக்குப்போய் அவர்கள் கிரீடத்தில் சாம்பிரதாயமாய்க் கட்டிக்கொண்டிருக்கின்ற துஸ்தரவத்திரங்களையும், விருதுகருதித்தொடுத்த இரதச்சிலைகளையும் பக்குவமாய்ப்பறித்துவருவையானால்,உன்தங்கைகேட்டுக்

கொண்டவண்ணம் பொம்மைகட்கணிந்து விளையாடக்கொடுக்கலாமென்று புகன்ற அருச்சுனன்வார்த்தையை உத்தரன் பத்தரைமாற்றுப் பசும்பொன் போல் சித்தமுவந்துதேர்ந்து சிந்தைதெளிந்து செயமென்றெழுந்து சீக்கிரஞ் செல்கின்ற உத்தரகுமாரனை, பராக்கிரமக்கொடிபடைத்த பார்த்தனழைத்து விராடகுமாரனே! அரசருக்கரசனாகிய துரியோதனமகாராச னணிந்திருக்கும் கறுத்தமணிகள் பொறுத்த நிறத்தையுடையன, அசுவத்தாமாமுதலியவரும் துச்சாதனனும்தரித்திருக்கும் வத்திரம் நீலமணிகளழுத்தியகோலத்தையுடையன, கொடையாளனாகிய கர்ணராசனது சிரோவத்திரமானது நாற்புறமும் நவமணிபதித்து மரகதநிறத்தைமாற்றியிருப்பது, மநுவேதமறிந்ததநுர்வேதியரிருவருந்தரித்தகலையானது சுற்றுமுத்து வைத்ததொத்த குற்றமற்ற வெண் பட்டாற்சமைந்தது, இன்னமுள்ளமன்னவர்துணிகள் பன்னிறவன்னமாயிருக்கும். அன்னவைகளில் உன்கண்ணுக்கிசைந்தன வெல்லாங்கட்டிக்கொண்டு வந்துவிடு, அப்படிக்குவருகையில்; எங்க ளையாவாகிய வீஷ்மரிடத்துக்குப் போகாதை, அவரது தலைவேட்டியானது மெத்த சிறந்திருக்கும், அதன்மேலாசைவையாதே அவரிந்த மோகனாஸ்திரமயக்கத்தில், மூழ்கமாட்டாரோ, நீயொருவேளை அவரைக்கிட்டிப்போவையாகில் ஓரேவெட்டாய் வெட்டியெறிவாரே! ஆகையாலவரை யெட்டிப்பாராதை. மற்றையர்களிடத்தில் தாராளமாகச்சென்று அவரவர்களுடைய தலைத்துணியைக்கைக்கொண்டு, விரைவில் வந்துவிடென்று பின்னுஞ்சொல்லுகின்றான். உத்தரனே, நீ கால்நடையாகச்செல்லாதை, அவர்கள் படும்பாட்டைக்கண்டு, ஒன்றுஞ்சொல்லாதே, கண்மூடிக்கலங்கிக்கசங்கிக்கிடப்பவரைக்கொல்லாதே அவர்களுன்னைக்கண்டு விட்டால் ஐயோ! அதுபொல்லாதேநீயவ்விடங்களில் தாமசப்பட்டுநில்லாதை நமது தேரைச்செலுத்திக்கொண்டு, போய்ச்சீக்கிரத்தில்வரக்கடவாயென்று காண்டீவன்சொல்ல அவ்வண்ணஞ்செய்வேனென்று இரதமூர்ந்துசென்று அவரவர்கள் கால்மாடு தலைமாடாகவீழ்ந்து உறங்கிக்கிடக்கின்ற கலக்கத்தைக் கண்டு, அவரவர்களுடைய தலைத்துணியைக் கவர்ந்துகொள்ளும்படியே பாய்ந்து பாய்ந்து பறிக்கும்போது மாய்ந்தவர்தம்மைப்போற் சாய்ந்துகிடக்கின்ற வேந்தர்களெல்லாம் மூடியகண் திறவாமலிருந்தார்கள். சிலரோ விழித்தபார்வையுடன் விறைத்தாப்போலிருந்தார்கள்; ஆவெனத்திறந்தவாயர்கள்சிலர், கூவெனக்குறைந்த பேயர்கள்சிலபேர், ஊவெனவோசையிட்டுளறினோர்பலபேர், நாக்கைக்குழப்பி நலித்தோர்பலபேர், வாக்குக்குளறி வலிப்போர்சிலபேர், நழுவாமற்பிடித்த மழுவாயுதத்துடன் விழுவார்பலர், எழுவார்பலபேர் கால்தவறிமண்ணைக்கவ்வுவோர்சிலபேர், மேல்சுவறியொத்த வெறியாஞ்சிலபேர், இல்லாமலும் கைகாலசைவது குறியாமலும் மெய்சாய்வதில் உயிர்பிரியாமலும் வாயில் ஈப்புகுவதுந்தெரியாமலும் நோயில்தீப்படுவது தரியாமலும் பல்லைப்பல்லைக்காட்டிப் பரதவித்து வில்லைநாட்டிப் பலவகைச் சாலமாய்த்தலைவிரிகோலமாய்ப்பதைத்திருந்தார்கள், இப்படியாயிருந்தவர்களைப் பார்த்த உத்தரகுமாரன் ஐயமடைந்து பையநடந்து என்செய்வோமென்று அருச்சுனன்சொன்ன சைகையையுமறந்து அவனது ஆதரவையும் போதரவை

யும் பூரணமாகினைத்து கையுங்காலும் மெய்யும்வாயும் கடகடவென்றுகுலுங்கி நடுங்கிப்படபடவென்று அலமந்தே 'யொடுங்கி பேய்போற்பதறி முடங்கி பேய்மனம்பெதறியடங்கி பின்னுமுன்னும்போகத்தொடங்கி வீட்டமிருந்த நிலையைப்போய்ப்பார்த்தான், அந்தமெய்விரதசீலராகிய வீஷ்மரானவர் கண்ணையுருட்டிக்காட்டிவிழித்து வீரப்பார்வை நாட்டியிருந்தார், அவரைக்கண்ட மாத்திரத்தில் ஒருதரம்வேர்த்துப் பயங்கரத்துடனூர்த்து நாற்புறமும்பார்த்துச்சித்திரச்சிலைவிசயனைச்சிந்தித்துத் திடதீரத்துடன் கனைத்துவந்தகாரியத்தைகினைத்துவத்திரம்பறிக்கத்தனித்துக்கிரீடியுரைத்த உத்திரத்திற்கு துஸ்தரமாகிய துட்டத்தனஞ்செய்யப்படாதென்று மதித்து வெற்றிவீரர்களின், பட்டுத்துணிகளை விட்டுவிடாமற்றெட்டுப்பறித்துப்பெருமூட்டைகட்டித்தேர்மேலேற்றிக் கார்போலிரைந்து வாராடுங்குதிரைத்தேரோடவந்தான். இந்தப்படியே அச்சமில்லாமற்சென்று மச்சராசன்மைந்தன் கொண்டுவந்த துணிமூட்டையைப் பச்சைமேனிப்பற்குனன்கண்டு, கொண்டாடி மகிழ்ச்சியடைந்து புகழ்ச்சியாய்ப்பார்த்திருக்கும்போது, அருச்சுனன் கணையால் அடிபட்டு நொந்து மேனிமுழுவதும் வேஷ்டையால்மெலிந்து மோகனக்கணையால்முனைகெட்டழிந்து வில்முதலிய பாணமும்பிளந்து வெறுங்கையராய்த்தளர்ந்து முடிசாய்ந்துவிட்ட கெடிவீரவர்க்கமும் படியாளுமன்னரும் பார்த்திபன்படைகளும் கொஞ்சங்கொஞ்சமாய்க் கலக்கம்பிறந்து நஞ்சொழிந்த நாகம்போல் நெளிந்து தங்களைத்தாங்களேயறிந்து தலைக்கேறிய மயக்கந்தெளிந்து தத்தித்தடுமாறிச்செறிந்து மெத்தனவெழுந்து பித்தன்போல்விழுந்து செத்தவர்போற்கிடந்து எக்காலுநீங்காத துக்கமுந்துயரமும் வெட்கமும் நாணமும் விசனமும் மேலிட ஏதேது இனிதலையெடுக்கப் போவதில்லையென்று சொல்லும்படி இருந்தார்கள். இப்படிப்பட்ட விசனத்தினல் திப்பிரமைகொண்டிருந்தவர்கள் சுப்பிரதீபம்போன்ற அருச்சுனனை யெண்ணிமதித்து அற்புதமடைந்து அவனுக் கெதிர்வரமாட்டாமல் சிவனுக்கெதிர்செல்ல நாணும் திரிபுராதிகளைப்போற் கனமற்றவர்களாய்த் திகிலடைந்த மனமுற்றவர்களாய் வறண்டுபோனநெஞ்சும்நாக்கும்சுருண்டுபோன ஈரலுங்குடலும் துன்பப்படாமல்நனையச்செய்து இச்சையுடன் காக்குங்கருணைக்கடலாகிய கங்காபுத்திரரை நோக்கி எங்கோனேஇதற்கென்செய்வோமென்றுஏங்கியகாலையில் அதற்கிடங்கொடாதமாணியாம் விரதன் எப்புவனத்தும் ஒப்பில்லாத மற்புயவல்லவனுகிய சுயோதன பாக்கியவானுக் கெதிர்சென்று நின்று யோக்கியவானே! என்னெரு வாக்கியங்கேளென்று பேசத்தொடங்கினர், அப்பா துரியோதனு! இடுபதைத்து பதறிப்போயெதிர்த்து யுத்தஞ்செய்வதற்கு தேவர்களாலும் தெய்வத்தன்மைபெற்ற மூவர்களாலும் ஆகாது, மற்றெவர்கட்கும் வெற்றிபெறும் விதக்காட்சியும் யுத்தஞ்செய்யுந் திடசூழ்ச்சியும் வாராது இதிவ்வாறிருக்கின்றமையால் இனிமேல் யுத்தகளநாடி வெற்றிப் போர்புரிவோமென்று என்றென்றைக்கும் எண்ணவேண்டாம், ஒருவேளை கிரகசாரசாமானியத்தால் சண்டைபோடக் கருதுவீராகில் மெய்யாகவே பிராணன் பெறமாட்டீர்கள். அதென்னவெனில், அவனூந்திய மோகனாத்திரத்தால் நாமெல்லாரும் உயிர்சிந்தியவாறு

போலயர்ந்து தலைசாய்ந்துகிடந்த சமயத்தில் ஏதோ ஒருநினைவுகொண்டு தன் சாரதியையனுப்பி அவர்தலையை விரைவிற்கொண்டுவாவென்றுவிட்டால் அச்சொல்லுக் கிரண்டில்லாமல் இதுவரையில் நமதுபிராணன் போயிருக்கலாம், இதற்குச் சாட்சியாதென்னில்; சற்றுநேரத்திற்குமுன்னே செத்தவர்போலொடுங்கிக்கிடந்தநம்மைச்சுற்றிப்பார்த்து வரும்படியாகஉத்தரகுமாரனையனுப்பித் தனக்குவேண்டியவற்றைச் சுற்றிக்கொண்டுபோனான்; அதற்குத்திருட்டாந்தம் உங்களுங்கள் தலைகளையெல்லாம் தடவிப்பாருங்களென்றார், அப்போது தங்கள் தங்கள் தலையைத்தடவிப் பார்த்ததுமல்லாமல் ஒருவர்தலையை யொருவர்பார்த்து உன்தலைத்துணியெங்கே என்தலைத்துணி யெங்கேயென்று பெருங்கூச்சலிட்டு ஐயையோ! தலைத்துணியைக் கொண்டுபோன சாதுரியனுக்கு நமது தலையைத்தறித்துக்கொண்டு போவது தாட்சியா? ஓகோகோ! சுளுவில் முடித்துக்கொள்ளலாமே! அம்மட்டும் நம்மைச்சும்மா விட்டுப்போனது நமது பெண்சாதிமார்களின் மாங்கல்யபலமேயென்று மகிழ்ந்து வீஷ்மரைப்புகழ்ந்து தேவரீர் சொன்னவார்த்தைக்கு மாறுபாடில்லையென்றார்கள். அப்போது வீஷ்மர் இப்படியே யென்சொல்வழிநிற்பீர்களாகில் நாமெல்லோருஞ்சௌக்கியம்பெறலாம். அதெப்படியென்னில், கடல்நிறம்பெற்ற காண்டீவனே பிராணபிட்சை கொடுத்தானென்று உரக்கக்கூவி அவனுக்கு மங்களாகரமுண்டாகும்படியேவாழ்த்தி நம்முடைய படைமுழக்கத்தைத்தாழ்த்தி அத்தினபுரத்தை நோக்கிப்போவதே நேத்தியென்று சொன்னார். இவ்வகையாக மாதவத்திலுயர்ந்த வரதன் கூறக்கேட்ட மன்னன்முதலிய தம்பியர் பலரும் கன்னன்முதலிய சகுனியும் மன்னரும் சத்தியஞ்சத்தியமென்று திரும்பி பாகீரதி புத்திரனுரைத்த புத்தியை விரும்பிப்போனார்கள். அத்தருணத்தில்அரவக்கொடிக்கதிபனாகிய துரியோதனனுடைய சகோதரர்களில் விகர்ணராசனென்பவன் பட்டத்துயானைமேலேறி தன்தமயனைமுன்னடத்தி அவனை மறைத்துக்கொண்டு தான்பின்னாகப்போனான்; இரதகசதுரகபதாதியர்முதலிய மன்னமண்டலீகர் யாவரும் பெருங்காற்றிற்பறக்கின்ற இலவம்பஞ்சேபோல் திசாதிசைகளிலும் பறந்து முறிந்து கரத்தைச் சிரத்திற்குவித்துச் செறிந்து துரியோதனனுடன் படைகளுமுறிந்து மெய்விரதன் தம்பியான விசயனைப் புகழ்ந்து உயிர்ப்பிச்சையளித்தான் உத்தமனென்று மகிழ்ந்து ஊர்முகநாடியோடினார்கள். இப்பால் அருச்சுனன்தொடுத்த பாணங்களினால் அழிந்தவரொழிய ஓடியொளிந்த சேனசயினியங்களும் துரியோதனனுந் திரும்பிப்போவதை ஆண்மையாலுயர்ந்த அருச்சுனன்பார்த்து அடிவயிறெரிய ஆர்ப்பரித்துவேர்த்துக் கௌரவகுலமுதல்வனே! கீர்த்திபடைத்த மூர்த்தண்ணியனே! கெடித்தலாதிபனே! வணங்காமுடிமன்னனே! அரவக்கொடியானே நந்தியாவட்டமாலைதரித்த நரேந்திரனே! துரியோதனராசனேயென்று பற்பலமுறையாகக் கூவியழைத்து தேவர்கள்முதலிய பேருந்திடுக்கிடும்படியாய்ப் பேரிடிபோலிரைந்து சிற்சிலவார்த்தைகள் பேசத்தொடங்கினான். அவனியையாளும் நேயனே பொய்பேசும்வாயனே மாயச்சூதாட்கற்ற வஞ்சகச்சகுனிமாமனிருக்க மகாபதிவிரதைகளை ஆடையுரியக்கற்ற துச்சா

தனத்தம்பியிருக்க வாயாடக்கற்ற தேர்ப்பாகன் வளர்ப்புப்பிள்ளையாகிய
கன்னனிருக்க உனக்குப்போதுமான புத்தியிருக்க சத்துருக்களைவெல்லுஞ்
சமத்திருக்க சத்தியந்தவறி வாயடிப்படிக்குஞ் சாதுரியமிருக்க இத்தனைபல
மும் அபலமாம்படியாய் ஏன் ஓடுகிறாய் பூர்வம் அரசர்கள்கூடிய அத்தினா
புரத்து இராசசபையில் இரத்தினமுடிபொறுத்த உன்தலையாட உன்காதிலணி
ந்தகுழையாட உன்வாயிலடங்கிய நாவாரக் கட்டுரைபேசி நீவாதாடசொக்கட்
டாஞட்டத்தில் எங்களைவென்று காட்டிலோட்டிவிடக்கற்ற நீ இப்போது
சண்டைநேர்ந்த விடத்தில் வில்திறங்காட்டி வெற்றிபெறமாட்டாமல் தலை
கவிழ்ந்து தலைத்துணியிழந்து உயிர்கொண்டுபோவது பொல்லாது இதைப்பார்
க்கிலும் சாவதுமேன்மை காவலனே! யுத்தத்திற்செத்துப்போவது மெத்தவும்
புகழ்ச்சியல்லவோ மானங்கெட்டபிற்பாடு பிராணனிருக்கவேண்டுமோ ஆமன்
னனே! அரவக்கொடியும் அணிமணிமுடியும் வெள்ளைக்குடையும் வேண்டிய
படையும் அசாத்தியமும் முரசவாத்தியமும் சங்கத்தொனியும் எங்குமுழங்கி
நெருங்கும் இந்த விராடபுரத்திற்குவந்து சுத்தவீரக்கர்த்தனைப்போல் பசு
மந்தைகளை மடக்கினையல்லவோ! நீடியோட்டிய மாட்டுமந்தையை எதிரிக
ளிடத்தில் விட்டுப்போட்டு நீ கூட்டிவந்த சேனைகளிலும் படுபாதிமடியக்கொ
டுத்து உயிரிழந்த பிணம்போல ஊரைநோக்கிப் போகின்றனையே ஐயோ
அப்பா! உன்னைக்கலந்த மங்கைமார்கள் என்னசெய்தியென்று எதிர்நின்று
கேட்டால் அந்த உரியவர்களுக்கு என்னசொல்லப்போகிறாய், பெரியதனம்
படைத்த பேயனே! அப்பேர்க்கொத்த பெண்களுக்கெதிரில் நாணாமல் தலை
கோணாமல் மானம்விட்டு நடப்பாயோ? அடாபாவி இப்போது நீயாளும்பூமி
யையும் உன்னுயிரையும் தீங்கில்லாமல் வாங்குவதற்கு என்தமயன் வீமசே
னன் காத்திருக்கின்றானென்றெண்ணிஇன்றைக்குன்றனைக் கொன்றுவிடாமல்
வென்றிமாத்திரங்கொண்டேன், இதன்றியும் பொதுமையாக உன்பிராணனை
யும்விட்டேன், இல்லாவிட்டால் நீயும் உன்னைச்சார்ந்த படைமன்னரும் என
க்கு இலட்சியமென்றும் அலட்சியமென்றும் உனக்கு விலட்சணமாகத்தெரியு
மே! குலட்சயம்பண்ணப்பிறந்த கோமானேயென்று வெகுண்டு நிந்தையாகிய
வார்த்தைபுகன்று நிட்டூரம்பேசிய காலையில்இராசாதிராசன் அருச்சுனன்சொ
ன்ன மொழியைக்கேட்டுங் கேளாதசெவிடனைப்போல் இருதோளும்வாடிப்
பூரிப்படங்கித்துன்ப இருளால் மூடப்பட்டுஆமைபோலடங்கிஊமைபோற்போ
னான். அச்சமயத்தில் பச்சைநிறம்பெற்ற பற்குனனே வச்சிரக்கண்டவாளி
யொன்றேவிவிகர்ணனேறிச்சென்ற வீரபட்டயானையை வெட்டிமுடக்கித்துரி
யோதனன் வெட்டவெளியாய்த்தெரியமடக்கிப் பரியவில்லிற்கூரியமுனைப்ப
கழியடுக்கி அரவக்கொடிதரித்த துரியோதனனுடைய வணங்காமுடியிற்பொ
றுத்த கிரீடத்தையுடைத்து முடுக்கி மொட்டந்தலையுடனிருந்த துட்டனைப்
பார்த்துபொட்டென நகைத்தான்; அதுகாலையில்தாமரைக்கமலம்போலலர்ந்த
துரியோதனனுடைய முகங்குவிந்து கரிந்து பொரிந்து செறிந்த கண்கலக்க
முள்ளவனாய் ஓட்டத்தின்மேல் நாட்டம்வைத்துப்போனான். இவ்வண்ணம்
பொல்லாங்குக் கிருப்பிடமான வஞ்சநெஞ்சனைச்சேர்ந்த பூபாலர்களும் கோ

பாலர்களும் யுத்தமுனைகெட்டுப் புறமுதுகிட்டுப்போராசைவிட்டுப் பேராசை கெட்டுப்போகுங்காலையில்,கற்பகக்காவைப்போக்கபணையும் பிராணதாவைவா ர்க்கும் ஈகையும் பிரக்யாதிபெற்ற வாகையுமுடைத்தால் தேர்மீதிருந்த செஞ் சிலைவிசயன்மச்சகுலாதிபன் முகத்தைப்பார்த்துச்சித்தசனுக்கொப்பாகிய உத் தரகுமாரனே! நமது மச்சதேசத்திலுள்ள மாட்டைமடக்கி யோட்டிக்கொ ண்டுபோகவந்த வேந்தன்முதலாகிய வீரர்களியாவரும் யுத்தம்பண்ணி நம்மை வெல்லத் துவசமற்றவர்களாய்ச் செத்தவர்போக மற்றவர்கள் மெத்தநொந்து சித்தனைந்து உயிர்மாத் திரங்கொண்டுபோகின்றார்கள் நமதுகாரியஞ் செய மாய்விட்டது,இம்மட்டும் இவர்களை விட்டுவிடாமல் இன்னமும் மேல்விழுந்து தொடர்ந்து துரத்தியடிப்போமா; அவர்கள் கெட்டார்கள் பஞ்சைகளென்று விட்டு பெரியமனசுபண்ணி விராடபுரத்திற்குப்போவோமா இன்னுஞ் சற்று நேரம் இவ்விடத்திற்றானே யிருப்போமா உன்கருத்தென்ன சீக்கிரந் திருத்த மாகச்சொல்லுமென்று கேட்க விராடகுமாரன் பேசத்தொடங்கினான்.

வீரியவிசயவெவ்வேலவனே! சீரியமதிகுலச் செஞ்சேவகனே! நின் திருவடிக்கடைக்கலம் காரியங்குறியாக் கடையேன்சிறியேன்! பெரியயுத்தம் பண்ணியானறியேன்! ஆயினுமையா அவர்களெல்லோரும் செத்தபிணத்தோ டொத்தபிணம்போல் தத்துவங்கெட்டுத் தளர்ந்தோடினர். இளைத்தோடு கின்றவர்கள்பேரில் கணைதொடுப்பீராகில் தேவரீர் இதுவரையில் பெற்றிருந்த புகழ்ச்சி யிகழ்ச்சியாய்விடும். மேலும், இன்னம் ஆகவேண்டியகாரியம் பின் னிட்டிருப்பதால் அப்போதுபார்த்துக்கொள்ளலாம்;நாமிப்போது விராடபுரம் போய்ச்சேர்வோம். பலஞ்சுரந்து பொங்குந்தோளிணையுடைய பார்த்திபனே யென்று சாரதிசொன்னான். இவ்வாறு உத்தரகுமாரனுரைத்த விடையைப் பார்த்தனுற்றுக்கேட்டு, உத்தரதிசையைவிட்டு மீண்டு களித்து, விண்ணணி தளர்த்தி அம்பறாத்தூணியுமவிழ்த்துத் தேர்மேலிருத்தி அப்பா! உத்தரகுமா ரனே இளைத்தவர்களைத் தொடரப்படாதென்னும் என்னெண்ணப்படியே நீயும்சொற்றனை நம்மிருவர்மனமும் ஒருமையானதேபெருமை! இன்னும் யுத்த கோலங்கொண்டு, புறப்படும்போது, உன்னைப்பெற்றதாயாகிய சுதட்சணை தேவியானவள் மிகுந்த விசன மடைந்திருந்தாள்; இன்னமும் எப்படியோ வென்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். ஆகையால்; நாம் இவ்விடத்தில் வந்தபகைவர்களைவென்று ஒன்பதுகோடி பசுக்கூட்டங்களை மீட்டு வனத்தி லனுப்பிவைத்த சங்கதிகளை நாமே 'நேரிற்போய்ச்சொல்லி அவள் மனக்கவ லையை ஆற்றவேண்டுமென்று தேவர்கள் மதித்துக்கொடுத்திருந்த தேவதத் தத்தையெடுத்து, உலகமயங்கும்படியாக முழக்கினான். அந்தச்சங்கத்தொ னியைக்கேட்டு வீஷ்மாசாரியர் துரோணாசாரியர் கிருபாசாரியர் அசுவத்தா மாமுதலானோர்களும் பார்த்தன் பின்தொடர்ந்து, ஆர்த்துவருகின்றானோ என்னவோவென்னும் பயத்தால் திரும்பித்திரும்பிப்பார்த்தார்கள். அவ்வாறு பயந்து பார்க்கின்றவர்களை அருச்சுனனும் பார்த்து, தேர்விட்டிறங்கித் தகுதி யுடைய பெரியோர்களைத் தலைவணங்கிப் பணிந்து, மீண்டுந்தேரேறி மிகுந்த சந்தோஷத்துடன் உத்தரகுமாரன் விடுத்த இரதத்தின்மேற்சென்றான்.

இப்பால் கடல்சூழ்ந்த உலகைப்பரித்தஅரவக்கொடிதரித்த துரியோதன மகாராசன் அணிந்திருந்த அழகிய நவமணிமுடியும் ஒளிவிடுமிரத்தினாபரணங்களும் அதுலசங்கிராமசயவிசயனது அத்திரங்களினால் அறுப்புண்டு, பிளப்புண்டு, தள்ளுண்டு, கீழ்த்திசையிற்றோன்றிய சூரியகிரணங்களால் மேற்றிசையிற்றோன்றிய சந்திரன்போல் ஒளிமழுங்கி இன்னமும் வரவரக்கண்டறிவோமென்று ஏக்கங்கொண்டு, எட்டுத் திக்கும்பரவிய சேனைகளுடன் பட்டப்பகலிற் பட்டணம்போகமாட்டாமல் வெட்கப்பட்டு, அத்தினபுரத்திலுள்ள யாவரும் நித்திரைபோனபிற்பாடு, ஆட்டபாட்டங்களடங்கி, கோட்டைமதிலை வளைந்த இராசபாட்டையிற்புகுந்து, ஓட்டமுநடையுமாய் ஊர்போய்ச்சேர்ந்தான். பெரியோர்முதலிய உரியோர்களும் அர்த்தராத்திரியிற்பேய்போற்போனார்கள்; இவர்களிப்படியிருக்க, மாடுபிடிசண்டையைவென்று ஆடுகொடியுடன்றிரும்பிய அருச்சுனராசன் மேடுபடும்பாலைநிலத்தில் காடுபடவடர்ந்து நீடியவன்னிமரத்தைச்சார்ந்து, அம்மரப்பொந்தில் முன்னிருந்த வண்ணம் ஆபரணவலங்காரமுடியும் அனுமக்கொடியும் தேவதத்தமும் வில்லும் அம்பறாத்தூணியும்வைத்துப் பழயபடியேமான்றோலிட்டிறுக்கிஉத்தரகுமாரனையுமிறக்கிமுச்சகங்கொண்டாடாநின்ற முன்னழகையும் பின்னழகையுமாற்றி இனிமேல்நடக்கவேண்டியமுறைமைகளையுந்திறமைகளையும் ஆராய்ந்து பழையபடி பேடியுருவைநினைத்து, வழுவில்லாதவடிவமுமமைந்து, பொன்மயமானதேரில் உத்தரகுமாரனது, சிங்கக்கொடியைநாட்டிக் குதிரைக்கயிறுங்கோலுந்தாங்கிச் சாரதியாகிச் சயிந்தவமூர்ந்தினான். மூந்தியதேகமுகத்திற் குந்தியபேடியுருவைக்கண்ட உத்தரகுமாரன் கோவென்றழுது, ஓ வென்றிரைந்து, ஐயா! நான் மெய்யாகச்சொல்லுகின்றேன். பொய்யாமொழிப்பொறையன் சோதரா நான் செத்தாலுந்தேரோறமாட்டேன், இனிச்சற்றேனும் நாயகனாயிருக்கமாட்டேன்,தேவரீருடையகாலடிப்புறத்திலிருக்கத்தக்காரிற் கடைப்பட்டநாயேன் நடுநாயகத்தட்டிற்பொருந்துநலம்பெறுவேனோ! ஆ! தெய்வமேயென்று சிந்தைசிந்தநொந்து நைந்து தேம்பினான். அத்தன்மையாய்க்கலங்கிய உத்தரகுமாரனைத்தேற்றி அவனது விசனத்தைமாற்றி பிரியவசனங்களினாற் பேடிபேசத் தொடங்கினான். விராடன்தவத்தால்விளைந்த நற்சுதனே! எனக்கு மூத்தவர்களும் இளையவர்களும் தங்களுடைய சுயரூபமெடுத்து வெளிப்பட்டார்களோ இன்னம் வெளிப்படவில்லையோ என்னையெதிர்பார்த்துக்கொண் டிருக்கின்றார்களோ அது இன்னதென்றுஎனக்குத்தெரியவில்லை; அஃதப்படியிருக்க நான்மாத்திரம் சுயரூபங்கொண்டு நடக்கலாமோ, தமயன் கருத்தைத்தள்ளி நடக்கப்போமோ அப்படியேதப்பிநடந்தால் பின்னுக்குப்பாவம் பீடிக்காமல் விட்டுவிடுமோ! தருமவிருத்தனென்னுந் தாழ்ந்தபேர் பெறுவேனன்றோ; அப்பனே உனக்குமெனக்கும் ஒருபேதமில்லை உள்ளன்பென்பது; ஒன்றுமே போதும். என்வார்த்தைதள்ளாமல் இந்தத்தேரிலேறென்றேற்றி விற்பாணங்களும்வீரகண்டையும்பூட்டிக்குதிரைக்கயிறுகோலுந்தாங்கி தேரைச்செலுத்திச் சற்றேனுற்குந்த மனம்பொறாத உத்தரகுமாரனோடு மெத்தவார்த்தையாடிக் கொண்டு, விராடநகரத்துக்கோட்டைமதிலுக்கு வடமேற்குத்திசையிற்சூழ்ந்த

குளிர்ச்சியும் பசுமையுங் கூடிக்குலாவிய செழுமையாகிய சிங்காரத்தோப்பில் வந்திறங்கித் தேகவெப்பந்தீர்த்துக்கொள்ளவேண்டிய சிந்தைகொண்டிருந்து, ஒருவர்க்கொருவர்பரிந்து, பாண்டவர்கள் பன்னிரண்டாண்டு வனவாசம்பண்ணிய துன்பங்களையும் ஓராண்டு அஞ்ஞாதவாசஞ்செய்வதற்காக உருவமாறிய துயரங்களையும் விராடராசனிடத்தில்தாங்கள்செய்துவந்த தொழில்வகைகளையும் வெவ்வேறாகிய மாறுபெயர்வைத்துக்கொண்ட மார்க்கங்களையும் அமுதரசம்பொழிவதேபோலஉத்தரகுமாரனுடன்சொல்லிக்கொண்டிருக்கும்வேளையில் விராடபுரத்திலிருந்து, சிலதூதர்களோடிவந்து, சேமவிசாரணைசெய்தார்கள். அந்தத்தூதர்களிடத்தில் அருச்சுனன்சொன்னதாவது; அப்பாசாரணர்களே! பேடிதேர்செலுத்தச்சென்ற உன்புத்திரனாகிய உத்தரகுமாரன் எதிர்த்துவந்த மன்னருடன் அதிர்த்துப்போர்புரிந்து, கோடிதேராளிகளையும் வென்று குப்புற்றுப்புறமிடக்கண்டு, நமது மந்தையைமீட்டு விட்டானென்று நீங்கள் விரைவிற்சென்று சொல்லுங்களென்று அவர்களையனுப்பிவிட்டு, கங்கைநதிபாயுங் குருநாட்டுக்கதிபதியாகிய காண்டீவன் விராடகுமாரனுடன் இன்னம்பலவாறாகப் பேசிக்கொண்டிருந்தான். இங்கே இவ்வாறிருக்க; இதற்குமுன்னைநாள் தென்றிசைக்குச்சென்ற விராடராசன் திரிகர்த்தனை வென்று, அன்றிரவுமுழுதும் தூக்கமில்லாமற் சேனைகளுடன் காவலிருந்து, மேற்படைவாராமையால் மறுநாட்சூரியோதயமானபின்பு பந்துவர்க்கங்களும் மன்னரினங்களும் மைந்தரனைவரும் தாம்தாமென்று சங்கீதமுழங்க விராடபுரம்வந்துசேர்ந்தார்கள். வெற்றிப்பிரதாபனோஅத்துடன் மச்சநாடுவந்துசேர்ந்த விராடராசனை விடங்கலந்த வேற்கண்ணாளாகிய சுதட்சணாதேவி இச்சைகொண்டு எதிர்சென்று கண்டு, மச்சகுலாதிபனைவணங்கி தேவரீர் தென்பால் நிரைமீட்சிக்குப் போயிருந்தகாலத்தில் வீட்டுமாசாரியர் கிருபாசாரியர் துரோணாசாரியர் அசுவத்தாமா கர்ணன் முதலாகிய துரியோதனாதியர்கள் நமது விராடபுரத்தின் வடதிசை புகுந்து வளைந்து மாட்டுமந்தையை மடக்கினார்கள், அந்தச்செய்திகேட்டு சித்திரபதுமைபோன்ற உத்தரகுமாரத்திக்கு நாட்டியங்காட்டி ஆட்டிவைத்திருந்த பேடியானவள் தேர்செலுத்தவென்று தங்கள் திருமகனாகிய உத்தரகுமாரன் யுத்தகோலங்கொண்டு வெற்றிபெறப் போயிருக்கின்றானென்று விளம்பினாள்; தனது மனைவிகூறிய சங்கதியைக்கேட்ட விராடராசன் உயிரொழிந்த உடம்புபோலொடுங்கி உயிர்ப்போங்கி உருகி வீழ்ந்தான், உடனேபக்கத்திலிருந்தவர்கள் வாரியெடுத்துமார்போடணைத்துச் சீதளசந்திரகாந்தக்கிண்ணங்களிற்பொருந்திய சுண்ணங்களையும் சந்தனபாளிதகுங்குமக்குழம்புகளையும் பூசி பனிநீர்தெளித்து சயித்தியோபசாரஞ்செய்து சிற்றாலவட்டம்பேராலவட்டமுதலியவிசிறிகளசைத்துவிராடராசனைத்தேற்றினார்கள் எவ்விதவுபசாரங்களினாலுந் தேறாதவனாய்ச்சொன்னதைச்சொல்லிச் சோர்வடைகின்ற தோன்றலைப்பார்த்து என்னத்திற்கிவ்வண்ணம் வருத்தப்படுகின்றீர்; மன்னர்மன்னனே! வாரோறுந்தனப் பேடியானவள் தேரூரும்படியாய்ச் சென்றிருப்பளாகில் இன்னஞ் சற்றுநேரத்திற் பொன்னந்தேரேறி வெற்றிபெற்று உன்மகன்வரப்போகின்றான்; அவனைக்குறித்துநீர்சித்தங்கலங்க

வேண்டாமென்று நித்தியவிதிசொல்லுகின்ற உத்தமராகிய கங்கபட்டர்சொன்னர். இப்படியாகச்சொல்லிய தருமதேவதையின் வாக்கியத்தினுல் நிறைந்த பாக்கியம் பெற்றவனைப்போல் தேறித்தெளிந்து சிறப்புற்றிருந்தான்; பின்னுஞ் சற்றுநேரத்திலுன்னிக் கங்கபட்டரோ, என்பாக்கியமெப்படியாமோ உமது வாக்கியமெப்படிப்போமோ நானறியேன் ஆயினும் நால்வகைப்படையுங்கொண்டு நாமே யெதிர்நோக்கிச்சென்று நம்மாலான உதவியுஞ்செய்வோமென்று நாடுகின்றேனென்று விராடராசன் விளம்பினன். அம்மொழிகேட்ட கங்கபட்டரானவர் ஐயோ! நீரப்படி துணைப்படுவீராகில் கனம்பெற்றுவருகிற உன்மகனுக்கு அவமானத்தை விளக்குமல்லது வெகுமானத்தை விளக்கமாட்டாதே; ஆகையால் இன்னங்கொஞ்சநேரம் நீ செவ்வையாக நிதானித்து சிலகாரியத்தரையனுப்பி எதிர்கொண் டழைத்துவரச் சொல்லுமென்று கங்கபட்டர்சொல்ல; அதற்குடன் பட்டிருக்கையில் திறம்படைத்த துரியோதனன் வீட்டுமர்முதலாயினேரும் புறங்கொடுத்தோடிப் போயினரொன்றும் அவர்களால் மடக்கப்பட்ட மாட்டுமந்தையனைத்தும் மச்சநாட்டைச்சார்ந்த காட்டுப்புறத்தில் வந்ததென்றும் ஒருதேரும் வில்லுங்கொண்டு முனைந்து யுத்தம்புரிந்து வெற்றிபெற்று வருகின்றார் உன்புத்திரசிகாமணியாகிய உத்தரகுமாரனென்றுந் தூதரோடிவந்து தொழுதுரைத்தார்கள் அவர்களுரைத்த அமுதரசத்தைச் சென்னிவழியாகத்தெவிட்டி வருந்திக்கொதிப்பாறுக்குளிர்ந்த குளத்து நீர்போலும் குமுதநாதன் அமுதகிரணத்தையுண்ட சகோரம்போலும் சோபதாப துயரமுமாறி சிந்தைகளித்து பந்துசனங்களுடன் வந்தவெகுசனங்கட்கு சுகந்தபரிமளம் சந்தனபோசனமுதலான வெகுமதியுங்கொடுத்து மந்திரிமார்களையும் மன்னர்களையுநோக்கி நானெழியமற்றுள்ள இரதகசதுரகபதாதியர் மந்திரிதந்திரி சாமந்திரிமுதலாகிய பேர்களுடனும் விருது நால்வகை வரிசைகளுடனும்எதிர்கொண்டுசெயசேஷ்டமுடையஎன்சிறியகுமாரனைச்சீக்கிரமழைத்துவாருங்கள், விதிகளெல்லாம் அலங்காரஞ்செய்யப் பறைசாற்றச் செய்யுங்கள் பந்தலமைத்து,மகரதோரணங்கள் கட்டுங்களென்று ஆஞ்ஞைசெய்தான்; இந்தவிராடராசன்கொண்ட சந்தோடமெவ்வாறென்னில்;ஒருவன்மனைவியானவள்அபலாரிடத்திற்சோரத்துவஞ்செய்து பெற்றுக்கொண்ட பிள்ளையைஎனக்குப்பிறந்தபிள்ளையென்று உள்ளங்களித்து, முத்தமிட்டு, மடிமேலுந்தோண்மேலும் வைத்துத்தாலாட்டி கொஞ்சிக்குலாவி ஆசைவைத்துருவுகின்ற அறிவில்லார் தம்மைப்போல விசயபராக்கிரமவிக்கிரமன் வெற்றிபெற்றிருக்க அதனைவிராடன்தெரிந்துகொள்ளாமல் உத்தரகுமாரன்வெற்றிகொண்டானென்று உண்மையாய்நம்பி உடல்பூரித்திருந்தான்; இவனுணையால் ஏவலைக்கொண்ட காரியஸ்தர்கள் விதிகள் திருத்தி புழுதிகளடக்கி செம்பொற்கலசங்கள் பொருத்தி வாழை தாழை கரும்பு கமுகு பலா மரமுதலிய தென்னங்குலைகளுங்கட்டி மாணிக்கத்தீபங்களும் வரிசையாய்வைத்து கொடி குடை ஆலவட்டங்களுநாட்டிமகரதோரணங்களும்பூட்டி ஏழுப்பரிகைகளுயர்ந்தமாடமாளிகைகூடகோபுரமுள்ளவிடுகளலங்கரித்துவிதவிதமாகச்சிங்காரித்தார்கள். இஃதிப்படியிருக்க இவ்விடத்தில் விராடராசன் தர்மராசனைப்பார்த்து உம்முடைய ஆசீர்வசன

வாக்கின்படியே எனது உசிதகுமாரன்வெற்றிப்பிரதாபத்துடன் வருகிறவனாயி லும்நாமிருவரும் சொக்கட்டாணுடுவோமென்று அந்தஆட்டத்திற்குவேண்டிய கருவிகளமைத்து ஆடினர்கள், இவர்களிரண்டுபேரும் ஆடியகாலேயில் சொக் கட்டானட்டத்தில் மெத்தவுசிர்வாகமுள்ள கங்கபட்டர்வென்றார் மச்சராசன் தோற்றுதர்மநந்தனன்முகத்தைப்பார்த்து இன்னேராட்டமாடுவோம்வாருமெ ன்று பவளம் கருமணி மரகதம் புட்பராகங்களினுலேற்பட்டிருக்கின்ற காய் களைவைத்து வயிரப்பாச்சிகைகொண்டுவீசி இந்த ஆட்டத்தில் என்மகனுகிய உத்தரகுமாரன்வெல்ல அவனுக்கீடுபடமாட்டாமல் யுத்தமுனைகெட்டோடிய வெற்றிவீரர்களைப்போல உம்மைநான்ஓடவிட்டடிக்கின்றேன்பாரும்; என்னை யனே யென்று பிரதாபமாய்ப்பேசினன் அவ்வாறுரைத்த விராடராசனை கங்க பட்டர் தடுத்துப்பேடியாகிய இரதசாரதியானவள் வெற்றிகொண்டுவருகின்ற பெருமையைப்போல வெற்றிகொள்வேனென்று பேசுவீராகில் அதுஎனக்குச் சம்மதியாகும் நீரப்படி சொல்லாமல் உத்தரன் வென்றதைப்போலென்று தப் படிசெப்புவதினல் அதற்குநான் ஒருங்காலும் ஒப்பமாட்டேன், இப்புவிக்கிறை வனுகிய ஏந்தலே அதேனென்னில்பிரகளேயென்னும் பேடியைப்பேடியென் றெண்ணுதே அவள் பூருவங்காண்டாவனமழித்த காளைக்குத்தேரூர்ந்து தே வர்களுக்குப் பகையாகிய அரக்கர்களைவென்றுதேவசகாய விசயனென்று பேர் பூண்டு திக்குத்திகாந்தம் வரைக்கும் அதிசொற்பத்தில் வெற்றிகொண்டு திரண்டகீர்த்தி பெற்றிருக்கின்றவள் ஆதலால் இலேசாக மதிக்காதையென்று கங்கபட்டர் சொல்லவும் மச்சராசனுக்கு மிச்சமாகிய கோபம்பிறந்து மனங் கறுத்து மதியுஞ்சிறுத்து கண்சிவந்து கனற்பொறிபறந்து கனைத்துப்பார்த்து ஓ! பெரியவரே கோடாகோடி குருசேனைகளை நீடாதடித்து நிமிரக்கெடுத்து பேடி தேர்விடச்சென்று என் பிள்ளையொருவனுமேசென்று பசுமந்தைகளை யுங் கைக்கொண்டு திரும்பிவருகின்றனென்று தூதர்வந்துசொல்லப் பிரத்தி யட்சத்திற்கேட்டிருந்த தேவரீர் கொல்லமாட்டாத சொற்பமான ஒருபேடி யைக்கொண்டாடி தாபித்துப்பேசுகின்றீர் ஈதென்னபிடிவாதம் ஈதெவர்கள் சொல்லுகின்ற பட்சபாரம் பிரமக்கியானமுடைய பெரியவரே பேசாதிர்வாய் மூடுமென்றுன், அந்த மொழியைக்கேட்ட தருமராசன் சிறுநகைநகைத்து, நான் சொன்னவார்த்தைபழுதல்ல இன்னுஞ்சற்றுநேரத்தில் நீரறியப்போகின் றீரென்றார். அந்தவசனம் பொறுக்கமாட்டாமல் விராடராசன் முகஞ்சுளித்து, இனியென்னத்தையறிகிறது கைப்புண்ணுக்குங்கண்ணுடிவேண்டுமோ வித் தாரங்கற்றிருக்கும் வைதிகமுனியே பேடிக்கும் கிரீடிக்கும் பேதமறியாதவர் நீர் வீண்வாதுபேசுகிறீர் போதும் போதும் தீதில்லாமன்னரானவர் ஏதேனுங் குன்னமான புன்மைபுகன்றரென்றாலும் அச்சபையிலுள்ளவர்கள் நன்மை நன்மையென்றுநாளுஞ்சொல்லி இராசனுக்கிதம்படப்பேசவேண்டுவதல்லாமல் அவன்தயவுக்குக்காத்திருந்து, சீவனஞ்செய்பவர்கள் மன்னன் கருத்துக்கு மறுத்துப்பேசுவதுமுண்டோ. காலஞ்சமயமறிந்துகலந்து கொள்ளவேண்டா மோ? நான்குவேதமும் நன்றாயோதிய ஞானவானேயென்றான். இங்ஙன மமதைகொண்டுபேசிய மச்சராசன் பேச்சுக்கு இடங்கொடாமற்றடுத்து,

விராடராசனே, நீர் கொஞ்சகிதாலியும் கொடையாளியான கர்ணராசன் படையாளியான வீஷ்மாசாரியர் தனுர்வேதசம்பன்னரான துரோணாசாரியர் நீதிவழியோர்ந்த கிருபாசாரியர் வித்வமகத்துவமுடைய அசுவத்தாமா இவர்கள்முதலிய சுத்தவீரர்களை உண்டைவிற்பிடித்துக்கொண்டிருந்த உன்பிள்ளை வெல்லவல்லவனென்று நீ சொல்லமாட்டுவையா? நில்லு நில்லு நிருபனே இதோவந்துரைக்கப்போகிறார்கள். அப்பாலுன்மனத்தப்பென்று உன்மதிஉனக்கே ஒப்புச்சொல்லும்; இப்போது நானுனக்கென்னசொன்னாலும் அது தப்பாகவேதோன்றும், மெய்ப்படும்போது பெருமையடைந்தவன் துப்பார்திருமேனிப்பேடியென்று தருமராசன் பேசினான். இச்சொல்லைக்கேட்ட விராடராசன் இருகண்ணுஞ்செவந்து, கோபச்சிரிப்பாகச்சிரித்து, ஓகோகோ! மெத்தமெத்தக்கற்ற வேதியரே வில்லாண்மையிலுயர்ந்த என்குமாரன் சொல்லாண்மையிற்சிறந்த பகைவரையோட்டி. பசுநிரைமீட்டி,பாரமார்த்தியமாய்வருகிற வீரப்பிரதாபத்தைப்பார்த்த தூதர்வந்து சொல்லக்கேட்டறிந்திருந்தும் எவ்வளவுமெண்ணிப்பாராமல்எதிரியையுமதியாமல்என்னையடுத்துச்சிவனஞ்செய்துவருகிற இயற்கையையுமோராமல் பலதரமுமென்னைவருத்தி வாதுசெய்கின்றீர், சொற்பமான பேடியைப்புகழ்ந்துபேசுகின்ற நீர் என்பிள்ளையைக்கொண்டாடிப் பேசப்படாதோ? இவ்வளவுபொறுமையும் அக்கறையும் உமக்குவந்த காரணமென்னவென்று கொல்லும்விடங்கொண்டெழுந்த நல்லபாம்புபோற்சீறி தன்கைமேலிருந்த பாச்சிகையை நிலத்தில்விட்டெறிந்து, கலகலவென்று நகைத்தான், அவ்வாறு அதிககோபத்தால் வீசிய பாச்சிகையானது, பூமிமேற்பட்டுத்தெறித்தெதிரிலிருந்தகங்கபட்டர்நெற்றியிலடித்து,குங்குமக்குழம்பாற்படிந்ததிலகம்போல் குன்றிமணிபத்தனையிரத்தங்குபீரென்றுகொப்பளித்தது, அப்போதுஉத்தரகுமாரனது க்ஷேமத்தை இராசசபையில்என்னபேசிக்கொண்டார்கள் அதையறிந்துவாபோவென்று சுதக்ஷணாதேவியினால் அனுப்பப்பட்ட பணிப்பெண்ணானவள் சபைகூடிய அவ்விடத்திற்குவந்து சங்கதிவிசாரிக்குஞ்சமயத்தில்தர்மராசன்நெற்றியிலுண்டானதுளியிரத்தத்தைக்கண்டு நீர்வற்றிய தடாகத்தாமரைமலர்போல் நிறங்குன்றி வெருண்டு மருண்டு கூசிக்குலைந்து கைகால்நடுங்கக் கடுகெனவோடி தன்வஸ்திரத்தின்முன்றானையால் வந்து உதிரத்தை யொத்தினாளென்று வைசம்பாயனர்புகல அது யாதுகாரணமென்று செனமேசயன்கேட்கஅந்தத்தருமனுடையஉதிரம்ஒருதுளிபூமியில்விழுமானால் விராடராசனுக்குத் தழைத்திருக்கின்ற கிளைகளும் புத்ரபௌத்ரவருக்கங்களும் மித்திரர்முதலாகிய மென்காய்கனிகளும் புகழ்ப்பிரதாபப் பெருமணச்சிறப்பும் அழகும் வாழ்வும் அமைந்தமூலமும் தாங்களாறுவரும் அஞ்ஞாதவாசஞ் செய்யவந்தடுத்து ஒதுங்கியிருந்தநிழலும் அன்றேகெடுமென்று தானோ? அல்லது தனக்குரிய நாயகனென்னு நேயந்தானோ? அல்லது யாவரேனும் இடையூறுண்டானால் உபசாரஞ்செய்வது எல்லோருக்கும் பொதுவென்பது பற்றியோ? அல்லது அர்ச்சுனன்முதலிய பேர்க்கு உத்தரஞ்சொல்ல வேண்டுமென்பது கத்தியோ? அல்லது பெரியவரென்னும் பத்தியோ? அந்தப்புண்ணியவதியின் சுபாவபுத்தியோ? அவள்கருத்து இன்னவிதமென் றெனக்குத்தெரியாது;

கண்ணீர் துளித்தழுது கடகடவென்று உடல்நடுங்கத்தொழுது ஐயோ பழுது நேரிட்டதேயென்று வெகுநேரம் வரையினும் ஒத்திவகையெடுக்காமல் தரும பத்தினிபோலிருந்தாள். அப்படியிருந்த வண்ணப்பெண்ணின் மரியாதையை யும்அவளுடல்துடிப்பையும் படபடப்பையும் பரிதாபத்தையும் விராடன்பார்த் துச்சந்தேகப்பட்டு இதென்னவாச்சரியம் இதுவரையுமில்லாமல்இப்போதுநேரி ட்டதென்னமாச்சரியமென்று எண்ணமுஞ்செயலும்வேறாய் என்செய்வோம், என்செய்வோமென்று தன்னைத்தானே நொந்து பின்னாலறியப்போகிற பெரு மைதெரியாதவனாய்ஐயோ கோபம் பாவம்சண்டாளனேயென்றுகுறைந்துவீழ் ந்தான்; இந்தவிராடராசனுடையமனோதுக்கத்தைக்கண்டு மறைந்துபோனவன் போல ஆயிரக்கிரணக் கதிரோனாகிய சூரியன் அத்தமனகிரியையடைந்தான். இஃதிவ்வாறிருக்க உத்தரகுமாரனையெதிர் கொண்டழைக்கப்போனயானை சேனைகள்முதலிய மன்னவர் நெருங்க வீரவாத்தியமேளமுழங்க விருதுமால் கொடிகுடைவிதவிதமாய்ச் சூழ்ந்துவர பாலாபல்லயம் சவளக்கோல்கத்தி கட் டாரி ஈட்டிகேடயங்கள்மின்னசங்கத்தொனி பொங்கித்தழங்க பட்டத்துயானை களும் ஆட்டக்குதிரைகளும் உன்னதத்தேர்களும் துன்னியகாலாளும் இருபக் கமுநெருங்கிவரத்தேவேந்திரலோகத்திலிருந்தசெயமுள்ளகாள மேகம்தேர்மே லேறிப் பூலோகத்தில் வருமாறுபோல் பேடிதேர்செலுத்த நீடியகீர்த்திபொறு த்த உத்தரகுமாரன் வண்டுமொய்க்கு மலர்க்காவைவிட்டு நீங்கிவாகுமாலைதா ங்கி மணிப்புயமோங்கி விராடபுரவீதியில் மேவினான். இந்தப்படி சத்துரு ஜெபம் செய்து வருகின்ற உத்திரகுமாரனைவேதியர்முதலாகிய மாதர்களும் கண்டு, அன்புகொண்டு ஆலஞ்சுழற்றி திர்ஷ்டிகழித்து மங்களம் லாலிவாழ் த்தி கொப்பிகள்முதலிய பாடலைப்பாடி ஆசீர்வதிக்க பரதநாட்டியஸ்திரீகள் அபிநயங்காட்டி யாடித்துதிக்க கட்டியர்புகழ செட்டியர்மகிழ பட்டுவான்கள் போற்ற சந்திரவட்டக்குடைநிழற்ற வெண்சாமரைபோட அட்டதிக்குங் கொ ண்டாட இராசசின்னங்களுடன் மகன்வருகிற மகிமையைக் கேள்விப்பட்டு வரைபகவெறிந்த வள்ளிமணாளனைச் சிலைமதனைச்செற்றசிவபெருமான்போல் ஆநந்தங்கொண்டு எதிர்சென்றுகண்டு தேர்மேலிருந்தசிறுவனைச்சிக்கிரந்தழுவி பற்றியெடுத்து சித்தங்குவித்து அணைத்தெடுத்து முத்திகொடுத்து, தந்தை யைப்பணிந்து தடதடென்றோடி கொலுமுகத்திற்கணிபா யெழுந்தருளியிருக் கின்ற வேதவித்தாகிய கங்கபட்டரைவணங்கித்துதித்து அவருடைய திரு வடிகளைச்சிரத்திலும் கண்களிலும்பொருத்தி பற்பலராசகூட்டங்களும் பார்க் கப்பொற்புயத்தைப்புகழ்ந்து அற்புதக்கருணைமுகத்தையுநோக்கினான். அந்த விற்பனவிவேகியானவர் கடாட்சத்துடன் சொற்பலவாய் ஆசிர்வதித்தருளி னார். அப்போதவர் நெற்றியிலிருந்த வடிவைப்பார்த்து உடனே முகம்வியர் த்து அண்டரண்ட சராசரங்களுமதிரும்படியாய்க் கூவி ஓ! என்னாண்டவனே விபூதிரேகை பிரகாசிக்கின்ற தமது நெற்றியினிடத்தில் அபூர்வமானகாயம் பட்டதற்குக் காரணம்யாது? யாவர் வடுச்செய்தவரென்று கார்முகங்கைக் கொண்டான்; நேர்முகமாகநின்ற விராடராசன் நடுங்கி முன்னடந்த காரியங் களைப் பக்குவமாய்ப்பேசினான். அவ்வார்த்தைகூறிய தந்தையைச் சிந்தை

நைந்து வருந்திநொந்து, கைக்கொண்ட வில்லையொடித்து, பல்லைக்கடித்து, நல்லகாரியஞ்செய்தீர் போம்போமென்று நகைத்து, நீ இந்த மஹானுபாவருடையசொல்லை யிகழ்ச்சிசெய்தேனென்றபோது ,என்னுடலாடுதே அதை நினைக்குந்தோறும் என்னுடலைவிட்டு உயிர்வெளியோடுதே;இதனாலுண்டாகிய பயமானது, என்னுளத்தைச்சாடுதே ஐயையோபிரமசிருட்டியினாலுண்டாகிய பெரும்பொறைக்கடலை ஆடையாயுடுத்த அவனியினிடத்தில் பெரியமணிமகுடப்பட்டந்தரித்த விரியவேந்தர்க்கு வேந்தாம்வேந்தே இவருக்கொப்பாகியபேர் எப்பாரினுமில்லை இவரையாரென்றுணர்ந்தாய்! என்னைநினைத்து இப்படி செய்தாய், குன்னமேற்கொண்ட மன்னனே அப்பாற்போமென்றதட்டி, பூசுரனாகிய புண்ணியனைப்பணிந்து, அத்தனே அன்புநீங்காப்பரிசுத்தனே எங்களையாண்டுகொள்ளுங்கர்த்தனே, சிறியேனறியாமற்செய்த தீமையைப்பெரியோர் பொறுப்பது, பெருங்கடனென்று தாங்களே செலவுகொடுத்திருப்பதினால் விவேகமற்ற என்தந்தையின்பேரில் தேவரீர் கோபங்கொள்வது ஞாயமன்று, ஆறுவதுசினமென்று கங்கபட்டருடைய அடியிற்றாழ்ந்து பெரியோருள்ளம் பேதிக்கச்செய்து,கேட்டைமூட்டைகட்டிக்கொண்ட விராடராசனையும் வீழ்ந்திறைஞ்சச்செய்து, பின்னும் பின்னும் தானிறைஞ்சி தடுத்துப்பேசவறியாத தாக்ஷண்யபரராகிய தருமபுத்திரனென்னும் மோனவானுடையமநோதுக்கத்தை மாற்றிவிட்டான். அப்போது நீர்கிழியவெய்தவடுப்போற்கடுப்பாறி சாத்திரங்கற்று மாட்சிமைபெற்று பொறுமையுங்கருணையும் பொருளெனக்கொண்டாட கங்கபட்டர் தருந்தவாழ்த்துதல்வாழ்த்தி உத்தரநிரைமீட்சிக்கும் புகுந்த யுத்தத்தின்பெருமைபேசிவந்தார், மச்சராசனுங்கூசி யிச்சையுடன்தொடர்ந்து வந்தான் மனங்கலந்த உரியோர் பலரும் சினங்குலைந்த பெரியோர் சிலரும் புடைநெருங்கினார்கள். இவர்களெல்லோருஞ்சூழ்ந்து வருவதை உத்தரகுமாரன் கண்டு ஒன்றுஞ்சொல்லாமல் வெட்கி அந்தப்புரம்போனான். செயங்கொண்டு வந்தமைந்தனைச்சுதக்ஷணைகண்டு தவமிருந்து பெற்றபிள்ளையை ஈன்றபோதிருந்த பேராசையைவிட எண்மடங்கதிகமான இன்பமடைந்து எடுத்தாள் முத்தங்கொடுத்தாள் கரஞ்சுற்றி நெரித்தாள் நமது கருப்பஞ்செய்த புண்ணியமென்று சிரித்தாள், இவ்வகையாக சோடசகலைகணிறைந்த சந்திரனெழுச்சிகண்ட சமுத்திரம்போல் தாய்தந்தைமுதலியரும் புகழ்ச்சியாய்ப் பூரித்து, மகிட்சியடைந்து, செகிட்சியாய் கங்குகரைகாணாமற்பொங்கிய பேராநந்தவெள்ளத்தில் மூழ்கிப்பெருமையாகிய பள்ளத்திற்படிந்து செயமென்னுஞ் செய்தியாற்றேறியிருந்தார்கள். அச்சமயத்தில் உத்தரநிரைமீட்சிக்குச்சென்ற உத்தரகுமாரன் கௌரவசேனைகளைக்கண்டு பயங்கொண்டு, புறங்கொடுத்தோடியபோது, அந்த ராஜகுமாரனைத்தேற்றி அவன்திகிலைமாற்றி சாரதித்தொழில்செய்யும்படியாகத்தேர்மேலேற்றித் தனக்கெதிர்நின்றுஉத்தரிக்கமாட்டாமலோடிய துரியோதனாதியரைவென்ற அர்ச்சுனனானவன் இரதத்தின் மீதுவைத்திருந்தஎதிரிகளின்சிரோவேஷ்டிமூட்டையைப் பேடிரூபங்கொண்ட தன்தலைமேற்சுமந்து வந்து உத்தரகுமாரத்தி கையிற்கொடுத்து, உத்தரகுமாரனைப்பெற்ற உத்தமியாகியசுதக்ஷணைக்குப் பின்பக்கத்திலொதுங்கி ஒடுங்கித்

தலைவணங்கிநின்றான். அவனின்றகோலத்தைக்கண்ட உத்தரகுமாரன்கைநெரித்து, கலீரெனச்சிரித்துத்தேம்பிவிம்மித்திகைத்துதிகிலடைந்து,துக்கத்தினால் விக்கித்துயருழந்திருந்தான். அவன் குறிப்பையறிந்த அன்னையுந் தந்தையும் ஆசையுடன்தழுவி அப்பனே ஐயனே அதிசயமென்னடாவென்று ஆயிரந்தரமாகக்கேட்டார்கள். அப்போது உத்தரகுமாரன் ஆயாசந்தீர்ந்து அடிவயிற்றிலிருந்து எரிந்தெழுந்த அக்கினித்தழல் நீங்கும்வழியைத்தேடி அவள்முகத்தைநாடிபேசாமல் வாய்மூடிப்பெருமூச்சுவிட்டு, நானென்னத்தைச்சொல்வேனென்று தந்தைதாய்இருவரையுந்தனித்தழைத்துச்சென்று இனி நாம் பிழைக்கும்விதமெப்படி? எந்தகாலத்திற்குப் புனிதனாகப்போகிறோம்; இப்போது நீர் விளைத்துவிட்ட பகையானது, எப்போது நீங்கும் விராடபூபதியே சமுத்திரம் போற்புரண்டு, சாதுரங்கமுந்திரண்டு நமதுமங்கைமாடுகளுமிரண்டுபோகவந்து மடக்கிய கௌரவகுலாதிபர்கள்நொந்துபோகச்செய்த அடமும்முந்திப்போர் புரிந்த மூர்த்தண்யதிடமும் மந்தைப்பசுக்களைமீட்டமார்க்கமும்வீண்சண்டைக்குவந்தவர்கள்சோர்ந்துவிழும்படி மோகனாத்திரப்பிரயோகஞ்செய்து அவர்களணிந்திருந்த தலைத்துணிகளைப்பிடுங்கி மூட்டைகட்டிக்கொண்வந்த மெய்ம்பும் இவைகளியாவும்என்னாலானவல்லமையன்று,என்னாலாகுமென்பதுமன்று, முன்னொருவர்வென்றதுமன்று, சொன்னாலுங்கட்கு நன்றாய்த்தோன்றும். நன்றாய் செவிகொடுத்துகேளுங்கள்; தேவரீர் தட்சணதிசைமீட்சிக்குச்சென்றவேளைகண்டு, சத்துருக்கள்மொய்த்து, உத்தரதிசையிலொருமிக்கவந்து, மெத்தவருத்தப்படுத்திபத்திரைமந்தைகளைமடக்கினார்களென்றுசித்தநொந்து, ஒற்றரோடிவந்துரைத்தார்கள். நான் அவ்வார்த்தையைக்கேட்டு, என்தாயைத்தொழுது அம்மா எனக்கொருசாரதிகிடைப்பானாற் பழுதுவாராமற்செயிப்பேன் எனக்காரொதிரொன்றுஇயம்பிய அன்றுநமது உத்தனாக்கு நாட்டியம்பழக்கி வருகின்றபேடிமெத்தவும் உத்தமமான சாரதியென்று பணிப்பெண் சொல்லக்கொண்டு தேரேறிச்சென்று கடல்போற்கவிந்த சேனையைக்கண்டு கண்கலங்கி மனம்விட்டு தேர்விட்டிழிந்துஊர்முகமாகஓடிவந்த என்னைதேற்றி ஊர்வசிசாபத்தால் பேடியுருக்கொண்டிருந்ததனஞ்செயனென்னும்புருஷோத்தமன் என்னைவிடாமற் றடுத்துப்பிடித்து தனக்குச்சாரதியாக்கிஎன்பயத்தை மாற்றி தேர்மேலேற்றி வன்னிமரத்தில் மறைத்துவைத்திருந்த விசயகாண்டீப வெம்படைதாங்கி அனுமக்கொடிநாட்டி யாவருமெச்சும்படியாகிய அர்ச்சுனனுருவமுங்காட்டி தேவதத்தமுழக்கஞ்செய்து அரவக்கொடிக்கதிபனுடைய சேனைகளிற்புகுந்தபோது அவ்விடத்தில் நடந்தவிந்தையை நான்சொல்லத்தரமோ, நராதிபனே சூரியனுக்கெதிர்ப்பட்ட பனிபோலவும் சுடருக்கெதிராகிய இருள்போலவும் சிங்கத்திற்கெதிர்ப்பட்ட யானைகள்போலவும் நெருப்புக்கெதிராகிய விட்டிற்பூச்சிபோலவும் இடிக்குநேரிட்ட பாம்புகள்போலவும் எமனுக்கெதிர்ப்பட்ட உயிர்கள்போலவும் சிவனுக்கெதிர்ப்பட்ட சிலைமதன்போலவும் தீச்சலுக்கெதிர்ப்பட்ட பயிர்காச்சல் போலவும் கௌரவசேனாசமுத்திரம் அடங்கலும் அழிந்து ஒழிந்தார்கள், ஐயா அப்போது நான்பயந்து இந்த அர்ச்சுனராசனை விசாரிக்குமிடத்து தேவரீரிடத்தில் உண்மைநண்பாக உயிர்

க்குயிராகிதர்மாதர்மமுதலிய நீதிகளைத்தெரிவித்துக்கொண்டு கங்கபட்டரென் றிருக்குந் தயாளுவானவர் சந்திரகுலத்தோன்றலாகிய தருமராசனென்றும் வாசமலரும் பூசுதல்முதலாகிய புநுகுஞ்சாந்துஞ் சம்பங்கித்தயிலமுந்தரித்துக் கூந்தல்விரித்தவண்ணமகள் பாஞ்சாலராசகன்னிகையாகிய திரௌபதாதேவி யென்றும் மல்லர்களைவாட்டி கீசகாதிபரைமாட்டி மடைப்பள்ளியிற் சமையல் கூட்டி நமக்கூட்டிவராநின்ற வல்லமையாளன் வீமசேனராசனென்றும் குதி ரைச்சேவகத்திலமைந்த கோமான் நகுலராசனென்றும் பசுமந்தைகட்கெச மானுயிருந்த பாக்கியவான் சகாதேவராசனென்றும் வேலாயுதம்பிடித்த வீரர் களைமடித்தபட்டத்துபானை படைத்த பாண்டவரைவரும் பாஞ்சாலியும் அஞ் ஞாதவாசந் தொலைப்பதற்காக இந்த மச்சநாட்டில் மறைந்திருந்து காலங்கழி த்தனரென்றும் நேற்றைவரையிலும் அவர்களுக்குண்டாகிய தவணைகாலைப் போக்கிவிட்டு இன்றுமுதல் வெளிப்படவேண்டிய காரணமென்றுங் கேள்விப் பட்டேன்,இனியிதைக்குறித்துநாம்யோசிக்கவேண்டியிருக்கின்றது. இதுவரை யிலும் நம்மால் என்ன குற்றங்குறைகள் நேரிட்டிருக்கின்றதோ தெரியவில்லை; இப்போது பிரத்தியக்ஷமாய் வடுவில்லாத தர்மராசனுக்கு நெற்றியில்வடுவுண் டாக்கிவைத்திருக்கின்றனை;ஐவருக்கும் அன்பாகிய பாஞ்சாலியை ஆசைப்பட் டனைத்து நேசமுறத்தொடர்ந்த கீசகன்முதலாகிய தம்பிமார்களும் நாசப்பட் டும்போனார்கள்; இதனாற்பெரியமோசம் வந்திருக்கின்ற இவைகளையெல்லாம் யோசியுங்களென்று உத்தரகுமாரன் சொன்னான். இம்மொழிகேட்ட விராட ராசனும் சுதக்கணையும் புதைத்திருந்தபொருள் குதித்துவெளிப்பட்டது போற்கண்டு, ஆ! ஆ! ஆ! பாண்டவர்களா இவர்கள்? பாஞ்சாலியா பணிப் பெண்? ஓ! ஆண்டவனேயென்று அங்ஙனமயர்ந்து, நிலத்திற்சாய்ந்து உயி ருடன்மாய்ந்து, மூர்ச்சையானார்கள். அப்போது உத்தரகுமாரன் அவர்களை யனைத்துச்சோபத்தையும் மனஸ்தாபத்தையுந்தணித்து இனிதுக்கப்படுவதிற் காரணமில்லை சீக்கிரம் இதற்குவேண்டிய பரிகாரந்தேடுங்கள் எனக்கொன்று தோன்றுகின்றது; அஃதென்னவென்னில், மன்மதனுக்கொப்பாகியவடிவமும், மயில்வாகனனுக்கொப்பாகிய வெற்றியும் மகாமந்திரசித்தியும் உமாமகேசுவர ரைப்பூசிக்கும் புத்தியும் விர்ஷபகுஞ்சரசிங்க விராட்டின் சத்தியும் பார்த்தனா கிய பரந்தாமன்மைத்துனனுக்கு எனக்கிளைய உத்தரகுமாரத்தியைகொடுத்து நம்முடன் கலந்து வாழச்செய்புங்கருத்துடையோமானால்தெரிந்துந்தெரியாமற் செய்த தீமைகள் யாவுஞ் சிதறிப்போமென்று என்சிந்தையினினைத்தேனென் றான்; அவ்வாறிபம்பியமைந்தன் வார்த்தையை மகிழ்ந்துகேட்டு, தந்தையுந் தாயுஞ்சிந்தைகளிகூர்ந்து என்றன்மைந்தனே உன்மனத்தின்படியே எங்கட்கு மிச்சைமிச்சந்தானென்று அந்திரவுவிடிவளவும் அச்சத்துடனேடுங்கி அசை வற்றிருந்தார்கள்.

உத்தரகோமிட்சிக்காகப் பார்த்தன் பண்ணிய சண்டையிற் செந்நூள் கருந்தாள்பறந்து படிந்துமறைந்த தன்றொளியைச் சுத்தப்படக்கழுவிக்கொள் வதற்குப்போனவன்போல் மேற்குச்சமுத்திரத்திற் சூரியன்போய்க்குளித் தான். இப்பால் பெருமையிற்பூர்ந்த பாண்டவர்களும் பாஞ்சாலியும் விராட

னுடைய அரண்மனைவிட்டு நீங்கி மச்சநாட்டின் புறம்போய்ச்சேர்ந்து கூடு விட்டுக்கூடுபாய்கிறவர்களைப்போல் தாங்கள்கொண்டிருந்த வடிவத்தைமாற்றி பழயவடிவங்கொண்டு,எமதருமராசனைத் தோத்திரம்பண்ணி வணங்கிமேற்றி சையடைந்த சூரியபகவான் கீழ்த்திசைக்குவருங்காலத்தை நோக்கிக்கொண் டிருந்தார்கள். அந்தவேளையில் கோழிமுதலிய பறவைகளெல்லாம் பாழியம் புயம்படைத்த பாண்டவர்களே நீங்கள் நீடூழிவாழிவாழி ஆழியினலையுடன்மா கிலநடுங்குவதால்சூரியன்வரப்போகின்றானென்று சொல்லுவதுபோற்கூவின. அதுகாலையில் மேற்றிசையில்மறைந்த வெய்யோன் பாண்டவர்கள் சங்கதி யெல்லாந்தெரிந்துகொண்டோமே,இனித் துரியோதனாதியர்களின் கருத்தையு மறிவோமென்று மகாமேருவைச்சூழ்ந்து வந்தவனைப்போல் உதயகிரியில் கிர ணக்கதிர்நீட்டிதாமரைமலர்க்கரங்காட்டித்தண்மதிமுதலிய துட்டரையோட்டி சத்தியசீலைபெற்ற தருமராசனதுஆஞ்ஞாசக்கரத்தைநிலைக்குநாட்டியதுபோல் உதயகிரியினுச்சிமேலெழுந்தான். அப்போது பொழுதுவிடிந்தது, கேளும் ஜெனமேஜெயமகாராசனேயென்று வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

உத்தரகிரைமீட்சிச்சருக்கம்
முற்றிற்று.

பாண்டவர்வெளிப்படு சருக்கம்.

மந்திரமூர்த்தியின் மகிமைப்பலனை சிந்தையுறும் ஜெனமேஜெயனே! பாண்டவர்களும் பாஞ்சாலியும் விராடபுரநீங்கி மாஞ்சோலைசூழ்ந்த வனத்து டமைந்த பூஞ்சோலைசேர்ந்த பொய்கையில்மூழ்கி அருணோதயமானவுடனே ஜப தப விதிகண்முடித்துச் சூரியநமஸ்காரஞ்செய்து ஸ்ரீவேதவியாசரையும், எமதர்மராசனையுந் திக்குநோக்கிப்பணிந்து பாண்டவர்சகாயனது பாதபதும நினைந்து பருதியினொளியினும் பழயவடிவஞ்சிறந்த மகாலட்சுமிபோன்ற பாஞ் சாலியுடன் பாண்டவமுதல்வன் வீற்றிருக்கும்பொழுது வாயுகுமாரனாகிய வீமசேனனும் தேவேந்திரகுமாரனாகிய செஞ்சிலைவிசயனும் ஆயுள்வேதியா ளித்த நகுலசகாதேவரும், தங்கள் குலத்திற்குங்குணத்திற்கும் நலத்திற் கும் நன்மைக்கும் தகுதியாக முரசக்கொடிபடைத்த முன்னோனைத்தொழுது அன்னோனருளிய ஆசிமேற்கொண்டு பெரும்புகழ்ப் பிரதாபத்துடன் தமய னிடஞ்சார்ந்திருந்தார்கள். இவ்வாறிருக்குஞ்சமயத்தில் நிகரிலா விற்றாங்கிய தனஞ்சயன் தர்மராசன் முகத்தைச்சந்துர்ஷ்டியாய்ப்பார்த்து செந்தூரத்தில தம்போற் செவந்தபுண்கண்டு, அண்ணா தேவரீருடைய நெற்றியில் வடுக் கிடமானவாறுயாதென்று திடுக்கிடக்கேட்டான், தர்மராஜன் குறுநகைபுரிந்து யாதொன்றுஞ் சொல்லாமலிருந்தனன், அப்போதுமின்னலைப் பழித்தமேனி படைத்த பாஞ்சாலி விராடராஜனுக்குந்தர்மராஜனுக்கும் வாக்குவாதத்தினல் வந்ததீது ஈதென்றுரைத்தாள், இன்னதென்று சொன்ன அந்நேரமேயெழுந்து இன்னமுந்தாமசமாவென்று நெருப்புப்போலெரிந்து, நெடுமூச்செறிந்து, அண் ணன்மேற்பரிந்து ஐயோ நான் பிரிந்துவந்த துன்பமிதுவோஇப்போதேவிராட புரம் வேகக்கொளுத்தி மச்சநாடன் தலையை வாங்கிவைக்கின்றேனென்று

நச்சரவம்போற்சீறி வெட்பிமாலையணிந்த ஆகமுந் தேகமும் அலறநடுங்கிப் பற்கடித்து விற்பிடித்து அவனுக்கிச்சையான குலத்தைப்பச்சடிபண்ணுகின்றேனென்று புறப்பட்டான். நெருப்புடன் காற்று நேயமானதுபோல் வீமனும் வெகுண்டு விரிட்டெழுந்தான், நகுலசகாதேவரிருவரும் வியாகுலத்தோடு நடுங்கி விராடராஜனுக்கின்று விநாசகாலமாவென்றுமெய்ம்மறந்துவிட்டார்கள். இத்தன்மைவாய்ந்த தம்பிமார்களின் கடுங்கோபத்தைக்கண்ட தருமராசன் ஓகோ கோ மோசமாயிற்றென்று பூசிதவார்த்தைகள்புகன்று நேசவிசுவாசிகளே அரசகுலச்சிரேஷ்டர்களே கிஷ்டூரம்வேண்டாம்,கொஞ்சந்தாமதமாகயோசனை செய்புங்கள். ஒருவருடைய ஆபத்காலத்தில் இன்னொருவர் உதவிசெய்தால் அவ்வுதவியை ஆயுளுள்ளவரைக்குமறவாமல் நன்றிகுன்றாமை யென்னும் நீதியையும் தருமத்தையும் நிறைந்தநாடி முன்னுதவிசெய்தவர்களால் என்ன பிழைவந்தபோதிலும் அதைச்சகித்து மனம்பொறுத்து நன்றிபிழையாமல் நன்மைசெய்பவர்கள் நாளும் பெரியவரென்று நானிலம்புகழ்வதுண்டு. சாதுக்களும் சாத்திரங்களிற்பேசியிருக்கின்றார்கள். பற்பலநாளும் நன்மைபுரிந்து சொற்பமாக ஒருநாளிற்குற்றம்நேரிட்டால் ஒரு அற்பக்குற்றத்திற்காக நன்றி குன்றிமனங்கன்றிப்பொல்லாங்குசெய்யநினைப்பதுபுகழன்று,பூணன்று,பொருளன்று, புலமைகெட்ட கீழ்மக்கள் செய்கையாம், புண்ணியகுலத்திற் பிறந்த மேன்மக்களே ஒரு நன்றிசெய்தபேர்களை உள்ளத்தில்வைத்து பிழைநூறு ஞலும் சான்றோராகிய பெரியோர்பொறுப்பார்கள்,கயவராகிய மூடர்களுக்கு எழுநூறுநன்றிசெய்து ஒன்றுதீதானால் முன்செய்நன்றி எழுநூறுந்தீதாய்க்கெட்டுப்போம், ஆகையால் காடாக்கினிமூண்ட காட்டில் பன்னிரண்டு வருஷங்கஷ்டப்பட்டு பதின்மூன்றாவது வருஷத்தை இவ்விராடராசனுடைய நிழலிலிருந்து இவனது உப்புந்தண்ணிருமுண்டு நாம் எண்ணிய வெண்ணம் பின்னமில்லாமல் அஞ்ஞாதவாசங்கழித்தோமே,எத்தேசத்தரசர்களிலும் இத்தேசத்தரசன் மெத்தவும் சரசன், நாம் எங்கிருந்து அஞ்ஞாதவாசம் பண்ணலாமென்று முன்னம்வினவியபோது விராடபுரத்திற்குமிஞ்சியபுரமில்லை, விராடராசனுக்கு மிஞ்சியஇராசனுமில்லையென்று சொன்னீர்கள்,உங்கள் சொல்லை நம்பி இங்குவந்தடுத்தபோது நமக்கிவன் ஊழியன்போலும் இவனரசாட்சி நமதரசாட்சிபோலும் காலங்கழித்தோமேயல்லது நாமிவனுக்குத்தாழ்ந்து நடுங்கிநடந்ததில்லையே, நம்மையிவன் அதிகாரஞ்செய்ததுமில்லையே, ஏதோகோபபாபமென்னும் கொள்கையாலும் நமது தீவினைவசத்தாலும் குற்றநேரிட்டது, அதற்காக நாம் கடவுளைநோக்கி மன்னித்தல்கேட்டு இவனுக்கொரு பொல்லாங்கு நேரிடாமல் காக்கவேண்டியகடமை நம்முடைய தாயிருக்க நீயவனைக் கோபித்தெழுவது குணமன்று, நம்மைத்தொழுது காத்ததோன்றலின்மேல் பழுதுநினைப்பது பாவம் பாவம் பார்த்தனே பதறாதீர்களென்று தர்மராசன் தடுக்கவே அதன்மேல் வீமார்ச்சுனர்களிருவரும் நகுலசகாதேவரும்மூத்தவர் மொழிந்த முறைபிறழாமல் மச்சராசன் மேல்வைத்த கோபமாறி தருமராசனுத்தரவின்படி வன்னிமரத்திலேறி அவரவராயுதங்கைக்கொண்டுஅந்தப்பாலை நிலத்திலமர்ந்த கோலாகலி நீலிசடாதரி லிலாவதிசூலிகலாதரிகுண்டலி குமரி

சாமுண்டியைப்பணிந்து வன்னிமரத்தை வலம்வந்துவணங்கி எங்கள் தாயின் கருப்பம்போல் ஆயுதங்களைக்காத்தளித்த தமனியமான தருவேயென்று சந்தோஷப்பெரிட்டுச் சம்பிரமங்கொண்டாடி விராடராசனுடைய கொலு முகச்சாவடியிற்கூசாமற்புகுந்து ஐந்து தேவேந்திரர்கள் ஒரு இந்திராணியுடன் வந்திருந்தவாறுபோல்தந்தத்தவிசேறியிருந்தார்கள். அந்தவேளையில் செந்தமிழ் வளர்க்கும் அந்தணர்முனிவர் மந்திரி சாமந்தர் தந்திரி பிரதானிகள் பந்து மித்திரர் வந்தவிருந்தின் மாந்தர் வேந்தர் யாவருஞ் சேர்ந்து வந்து குந்திதேவியார் தந்தமைந்தரைவரும் குருகுலம்விளங்கப் பிரகாசித்து தயமாகிய குமுத நண்பன்போற் சிங்காசனத்திலிருக்கக்கண்டு, தங்களாற்றுங்கப்படாத சந்தோஷங்கொண்டு, விராடராசனுக்கு விரைவிற்றெரிவித்தார்கள். அச்செய்தியைக் கேட்ட மச்சராசன் இச்சைமேற்கொண்டு ஐயோ? நாமென்செய்தோம்! இனியென்செய்வோமென்று மனவருத்தங்கொண்டு சந்தனம் தாம்பூலம் புட்பம் பனிநீர் மஞ்சட்குங்குமவாசனை திரவியம் தேங்காய் வாழை திரள்மாங்கனி பலா பலபல பலகாரங்கள் பருப்புவர்க்கங்கள் தட்டுத்தட்டா யெடுப்பித்துக்கொண்டு; பட்டுப்பட்டாவளிகள் கட்டுக்கட்டாகிய கட்டுவர்க்கங்கள் தாப்தாக்கள் முட்டுப்படாத முத்துமுதலாகிய நவரத்தினங்கள்ஆணிப்பொன்னொடு மாணிக்கங்களும் காணிக்கைவைத்து தானும் புத்திரனும் தருமபத்தினியும் பாண்டவர்களின் பொன்னடியில் வீழ்ந்து புழுதிமேற்புரண்டு, பிழை பொறுத்தருளும் பூரணநிதியே பொறுமைக்கரசேயென்று துதித்துப் பூமியை விட்டெழுந்திராமலிருந்தார்கள். அம்மூவரையும் தருமராசன் வாரியெடுத்து மார்போடணைத்துப் பக்கத்தில்வைத்து ஆதிசேடன்முடிமேற்றாங்கிய பூமியில் உம்மைப்போல் யாரிருக்கிறார்கள். நீர் மெத்தவும் உத்தமர் புண்ணியசாலி பொறுமைக்கு வேலியென்று புகழ்ந்து மகிழ்ந்தார். இவ்வாறு கொண்டாடிய குருகுலக்கோமானது குளிர்ந்த வாசகத்தால் மச்சகுலாதிபனெழுந்து மறுபடியும்பணிந்துவேந்தாகியசாந்தமூர்த்தியே! தோத்திரமென்பது தம்மைப்போல பலர்க்குத்தகுமல்லது, எங்கட்குத்தகாது, நாங்களா அவ்வளவுபாத்திரம், க்ஷேத்திரமுங்கோத்திரமும் பெற்றவர்களன்று, ஆதலால்; அடியேன் மிகவும் பேயன் விவேகமற்ற சேயன் முன்கோபத்தாற் பதறிப்பேசுகின்ற வாயன் அப்படியிருந்த போதிலும் தங்கட்கு நான் தகுந்தநேயனெனப்பாராட்டி என்னால் நேரிட்ட குற்றங்குறைகள் யாதிருந்தாலும் அவைகளை மன்னித்து ஒட்டி தீர்க்கவைராநாட்டாமல் சிலகாலத்திற் சொல்லிக்காட்டாமல் தினைநுகிய என்னை ஆண்டருள் செய்யவேண்டும் பாண்டவர்களேயென்று வேண்டிக் கொண்டான். இவ்வண்ணம் புகன்று அடைக்கலம் புகுந்த விராடராசனை வேந்தர் வேந்தாகிய தருமராசன் பார்த்து; இரக்கமுள்ளவனாய் இஷ்டபூர்த்தியாய் சொல்லத்தொடங்கினான். ஐயா விராடபூபதியே உமது விராடபுரத்தில் நாங்கள் வந்துசேர்ந்த பிற்பாடு துன்பமென்பதில்லாமலும் எங்கட்குரிய சுதேசம்போலும் எங்கும் பெரும்புகழுண்டாகும்படியாய் வேற்றுமையின்றி வீற்றிருந்து வாழ்ந்தோம். இதல்லாமலும் நாற்றிசைடவால் விளையுங்கழனியின் மடையாய் நீரோட்டத்திற் சேற்கண்டைகள் நேரேதிப்பாய்ந்து விளை

யாடுந் தேரோதிய மச்சநாட்டரசே நீயறியச்சொல்லுகின்றேன். எனக்கு உன்னிலுமுயர்ந்த உற்றாருமில்லை பெற்றாருமில்லை மற்றாருமில்லை மாசற்ற மாமேரய்! உன்னைவிட எனக்கு வேறொரு உதவியுமில்லை, நான் இது வரை யிலும் அநுபவித்து வந்த உன் பட்டினத்தின் பதவியினும், வேறொருபதவியு மில்லை, நீயும் உன் சகோதரர்களும் உன் புத்திர மித்திர பௌத்திராதியரும் நால்வகைச்சேனைகளும் எனக்குப்படைத் துணைவந்து, என் பக்கத்தில் நிற் பீர்களானால் துராங்காரமாய் எங்களை வஞ்சித்த சத்துருக்களையும் அவர்கட் குடன்பட்டு வந்த சேனைவேந்தர்களையும் ஒரு நிமிஷத்தில் எமலோகமேற்றி வைக்கிறேன் இதுமெய்யென்று பறைசாற்றிவைக்கிறேன் ஐயமற உட்கொள்ளு மென்று வையகம்வாழ்த்த மரபினன்சொல்ல அதனால் மச்சராசன் தேறி மகிழ்ந்து, புகழ்ந்து, மனத்துயர்மாறி மாதொடுமகனும் தீதகன்றெய்தினர்கள். இப்பால் உத்தரகுமாரன் நமக்கு உறுதிதேடிக்கொள்ளுந் தருணமிதுதானெ ன்று தந்தைதாயிருவரையு முன்னிட்டுக்கொண்டு தருமராசனைப்பணிந்துவாய் பொத்தி நின்றுசமுத்திரத்தை ஆடையாகத்தரித்தருளிய அகிலவுகத்தையும் வெள்ளைக்குடை நீழலிலடக்கியாளும் விதரணவேந்தே! தமக்குத்தக்கபக்குவ மாகப் பேசவறியன் மிகவும் சிறியன் ஆனபோதிலும் இந்த விராடபுரமும் இதனது பூவளம் பொருள்வள முள்ளனயாவும் தேவரீருடையதே யாங்க ளியாவரும் உங்களுடைய ஏவற்பணிவிடைக்கேற்றவர்களே, எங்கட்கு சுதந் தரமான அறுவிதப்படைகளும் தங்களுடையனவே இதல்லாமல் என் தங்கை யாகிய உத்தரகுமாரத்தியும் அர்ச்சுனராசற்குரியவளே இவ்வளவுதயவுசெய்து எங்களையாண்டுகொள்ளவேண்டும் ஆண்டவமாராகியபாண்டுநந்தனரேயென்று வேண்டி விரும்பினன். இவ்விதமாக உத்தரகுமாரன் சொல்லக்கேட்ட விசயகாண்டீபதரன் ஆகா கா வென்று கையமைத்துக் கல்வியின்சாரமும் செல்வியின் அபாரமும் கைப்படைவீரமும் விற்பன விவேகமும் கற்பனை கட ந்த கருணையுதாரமும் காமன்மயமும் சேமன்ஜெயமும் காரியசித்தியும் கூரிய புத்தியுமுடையகாவலன்மகனே உன்தங்கையாகியஉத்தரகுமாரத்திக்கு நான் சிலகாலம் நாட்டியம் பழக்கிவைத்தபடியால் எனக்குப்பெண்மரியாதையாம்,நீ இப்போது கொண்டநினைப்பைநீக்கிவிடு,அல்லதுஉன்னிஷ்டப்படியேகுற்றம்பா ராமல் உறவுகலக்கவேண்டுமானால்நன்னலம்நற்குணம் முதலிய வாய்ந்தஉனக் கிளையவள் பொன்னிலமுதலிய மன்னவர் புகழும் பேர்படைத்த என்மைந் தன்வாளபிமன்னனுக்கே உரியவளாகுமென்றான். இப்படியே அற்புதமாய் விளம்பிய பற்குனன் மொழியைக்கேட்டு அவ்விடத்திருந்தசாத்திரசம்பன்ன ரும் தருமராசன் விராடராசன் முதலியபேரும் இதுதக்கதென்று, சம்பிரமங் கொண்டாடினார்கள். உடனே விராடபூபதியானவன் கலியாணமுரசவாத்திய முழக்கிவைத்து பந்து மித்திர பார்த்திபர் தமக்கெல்லாம் பாண்டவர்கள் விராடபுரத்திலிருக்கின்றார்களென்று ஓலைகளெழுதி தூதர்வசத்திலனுப்பி யதிக்கையிட்டான். இதிப்படியிருக்க; விராடராசனுடைய முதற்குமாரன் சுவேதனென்பவன் கைலாசபதியைக் குறித்துத்தவஞ் செய்யப்போனனெ ன்று முன்னமேசொல்லியிருக்கின்றேனன்றோ,ஓ செனமேசயமஹாராசனே

அந்தச்சுவேதனனவன் மனோபக்திமாறாமல் வைராக்கியநிலைகற்று மஹாதேவனைக்குறித்துத் தவமிழைத்து தாழ்ச்சியில்லாத காட்சியும்பெற்று எந்தஆயுதம் பிடித்துப்போர்புரிந்தாலும் திரிபுவனத்தையுஞ் சேதிக்கும் படியாய் அருள் பெற்று மற்றெவரும் எதிரில்லாமலுற்று வெற்றிபெறும்படியாயிருக்கின்ற சித்தியை முத்திக்கு வித்தாகிய ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியறிந்துஇனிமேல்நாம் குருக்ஷேத்திரத்திற் கூட்டிவைக்கப்போகிறயுத்தத்தில் இவனொருவனைவிட்டு விடுவது யுக்தமல்லவே,எவ்விதத்திலுமிவனைக்கொண்டுபோகவேண்டுமென்று அவனிருந்த இடத்திற்குப்போய் பிரிந்துபோன உம்மைப்பார்க்க இத்தனைநாள்சென்றதென்றுஉபசரித்துப்பரிந்து,அழைத்துவந்துதனக்குண்டாயிருந்தபகைவர்களையெல்லாம் அவனாற்போக்கிக்கொண்டு, துவாரகாபுரிக்குப்போய் அந்தச்சுவேதனுக்குவிருந்து செய்வித்துவெகுமதியளித்து கேளிக்கை முதலாகியசம்பிரமங்களில் காலதாமசம்பண்ணிக்கொண்டு பாண்டவர்கள் வெளிப்பட்டசமாச்சாரம் இன்றைக்குவருமோ நாளைக்கு வருமோவென்று எம்பிரானிதயத்தில் எண்ணமுற்றிருக்குஞ்சமயத்தில்தூதர்கள்ஓலைகொண்டுவந்துகொடுத்து, வணங்கினர்கள். அந்தச்சுருளையவிழ்த்து பலபத்திரருக்கெதிரில் படித்துக்காட்டி அண்ணா; நமது பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் அகற்றிவெளிப்பட்டார்களாம் இதல்லாமலும் உமது மருமகன் அபிமன்னனுக்கு திருக்கலியாணம்நடக்கப் போகின்றதாமென்றுசொல்லி நீருண்ட கருங்கடல்போல் நிறங்கொண்ட கோபாலன் பலராமன் சாத்தகிகிருதபன்மன் கிருதவிரியன் முதலாகிய குடும்பங்களும் வண்டுசெறிந்த மலர்மாலையணிந்த சுருள்கருங்கொண்டைசிறந்ததங்கை சுபத்திராதேவியும் அபிமன்னனும்கூரியவேற்படைகொண்ட சுவேதனும் குடிபடைகளும் சூழ்ந்துகொண்டு வரும்படிக்குக் கூட்டிக்கொண்டு விராடபுரம் வந்துசேர்ந்தார்கள். இப்படியே மேகவண்ணனாகிய கண்ணனும் அவரண்ணனும் வருகின்றார்களென்று தூதுவராற்கேள்விப்பட்டு சோகநீங்கி சுகம்பெற்றிருந்தபாண்டவர்களும் விராடராசனுடன் வேதநாயகனைக்காணவேண்டுமென்று எதிர்கொண்டு சென்றுகண்டு இருவர்தேகமும் ஒன்றென்று சொல்லும் படியாய் இறுகத்தழுவியணைத்து ஆகாயமளாவிய சிகரகோபுரஞ்செறிந்த பேரவையிலழைத்துவந்த பலராமன் சாத்தகி யாதவகுமாரர்முதலிய பேர்களுக்கும் அரவணைப்பள்ளி நீங்கிய ஆதிமத்தியாந்தரகிதனோடு வந்த பெரியோர்முதலிய உரியோர் யாவர்களுக்கும் தகுதியாகிய சன்மானமும் ஆசனமும் வெகுமானமுங்கொடுத்து பிரியவசனங்கள் பேசிக்கொண்டார்கள். மந்திரி பிரதானிகள்சிலரும்வந்தவர்யாதவர்முந்தினவர்பலரும் மரியாதைகுறையாமல் வணங்கி நின்றார்கள், சுபத்திராதேவியும் யாதவஸ்திரிகளும் ஸ்ரீகிருஷ்ணபிரானுடைய அஷ்டபாரியர்களும் தேவகிதேவியார் உரோகணிதேவியார் மற்றுமுள்ள தாய்மாரும் திரௌபதாதேவியிருந்த அந்தப்புரம்போய்ச்சேர்ந்து சகலவித மரியாதையுடன் உபசாரமும்பெற்று அன்புபாராட்டி சுபங்கொண்டாடியிருந்தார்கள்.

இப்பால் அபிமன்னனெருங்கி தந்தையர்களை வணங்கி பாஞ்சாலியைப் பணிந்து மாஞ்சோலைக்குயில்கூவும் உன்னுடைய மச்சநாடனுக்கும் வந்தனந் தந்தான், அவர்களியாவரும் ஆலிங்கனம்பண்ணி ஆசீர்வதித்துஆச்சரியமடைய

ஆண்மையுடைய பாண்டவர் பக்கத்தில் இளஞ்சிங்கம் வீற்றிருக்குந் தன்மை போல் இருக்கச்செய்தார்கள். அப்போது அந்தப் பிள்ளையைப்பெற்றவர்கள் கண்டு மிகவுமகிழ்ந்து வியப்புடன்புகழ்ந்து நயந்து வியந்து பூர்வஞ்செய்த புண்ணியபலமே பிள்ளையாகப்பிறந்ததென்று கொள்ளைகொள்ளையாய் கொண்டாடிக்கொண்டிருக்கும் பொழுது தருமசொரூபமுள்ள தருமராசன்விடாத கடாக்ஷவிக்ஷண்யப் பார்வையால் விரப்பிரதாபத் தோள்பூரித்த அபிமன்னனை நோக்கி ஸ்திரமானவார்த்தைகளைப்பேசி சொல்லுக்குச்சொல் சாஸ்திரயுக்த மாய்ச்சொல்லுந் துணிவைத்தேர்ந்து ஆசைமேலிடச்சிறந்து அகமகிழ்ந்திருந்தார். இவ்வகையாகப்பெரிய தந்தையினிடத்திற்பேசிய அபிமன்னனும் மருமகன்திறத்தால் மாமனுகப்போகிற விராடராசனும் மைத்துனனுகிய உத்தர குமாரனும் சுவேதன்முதல் மற்றுள்ளோரும் சுதக்ஷணுதேவியும் கண்களிகூர்ந்துசெவிகுளிர்ந்து முகமலர்ந்து அகமகிழ்ந்து ஆநந்தங்கொண்டாடினர்கள். இப்படியாக விருக்கின்ற சமயத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய திருவருட்பயனுல் விராடபுரம் வந்துசேர்ந்த சுவேதனென்பவன் தன்தந்தையான விராடனையும் பிறியதந்தைமார்களையும் தருமராசன்முதலிய பேர்களையும் தாயாகிய சுதக்கணையையும் பணிந்தான்; இவர்களெல்லோரும் ஏந்திமுத்தமிட்டார்கள், மச்சராசனொருவனும் இச்சைமேலிட்டெழுந்து மைந்தன்மேல் விழுந்து விவேகக்கொழுந்தேயென்று மார்போடணைத்து புயத்துடன் புயமொத்திமுகத்துடன் முகஞ்சேர்த்து இருகரத்தையும் எடுத்துப்பிடித்து உச்சிமோந்து கருத்திலுற்களித்து கண்ணருள்தழைத்துச் சிலமொழிபுகன்றான். அப்பா! ஐயா! என்கண்மணியே நீ எந்த இடத்திலிருந்தாய் தந்தவண்ணனுக்கினிய நந்தகுமாரன் உன்னையெங்கே கண்டார், இவருடன்கூடி நீ யெப்படிவந்தாய் எவ்விடத்தில், நீங்களிருவருஞ்சந்தித்தீர்கள் இது எனக்கு நல்லகாலம் என் மனங்குளிரச்சொல்லையா என்சுதனுகிய சுவேதனேயென்று விராடராசன்கேட்க கடல்நிறவண்ணக் கண்ணன் சொல்லத்தொடங்கினுன். ஓ! விராடபூபதியே உமதுகுமாரன் தவவேடம்பூண்டு அருந்தவமிருந்து சிவனருள்பொருந்திப் பெருந்திறற்படைகளும் பெருமையும்பெற்றுன் இத்தன்மையாகச் சித்திபெற்றிருக்கிற திடத்தையானறிந்து இந்த உத்தமனை யானழைத்துக்கொண்டு துவாரகைக்குவந்தெனக்கு அசாத்தியமாயிருந்த சத்துருக்களையெல்லாம் இவனுலொழித்துவிட்டு இவனுக்கு விருந்துமுதலிய வுபசாரஞ்செய்து என்னிடத்தில் வைத்துக்கொண்டிருக்கும்போது நீங்களெழுதியனுப்பிய ஓலையைக்கண்டு மச்சநாடடைந்தோம் பூபாலவென்றுகோபாலன்சொல்ல,அச்சொற்கேட்ட விராடராசன்பக்ஷமேலிட்டு மகன்வனத்திற்சென்று தவம்புரியப் போனதுமுதல்வந்ததுவரையிலும் சாங்கோபாங்கமாக க்ஷேமலாபங்களைவிசாரித்து பகையென்னும் யானைகளைக்கொல்லுகின்ற சிங்கம்போன்ற பாண்டவருடன் யாவரையும்பணிந்து சபாமண்டபத்திற்பொருந்தியிருந்தார்கள். விராடராசனுடைய மற்றப்பிள்ளைகள் யாவரும் தமயனுகிய சுவேதனை சாஷ்டாங்கமாகத்தொழுது அவனுலுபசரிக்கப்பட்டுத்தருக்கியிருந்தார்கள். அன்னையாகிய சுதக்ஷணுதேவியும் தன்னைப்பணிந்த சுவேதனைவாழ்த்தி பொன்னுக்கிணை

யாகிய புத்திரியின் கண்ணுக்கினிமையான கணவனைப்பார்த்துக் களிப்போ
டிருந்தாள். அதுவேளையில் பாஞ்சாலதேசராசனும் சோமகர்களும் அவர்கட்
குரிய நால்வகைச்சேனைகளும் இளம்பஞ்சபாண்டவர்களும் திர்ஷ்டத்துய்மன்
முதலாகியபேரும் வந்தார்கள், அவர்களை விராடராசனும் பாண்டவர்களும்
எதிர்சென்று கண்டு ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு தகுந்தமரியாதை
களுடன் புகழ்ந்து சபாமண்டபஞ் சேர்ந்திருந்தார்கள். இப்பால் குந்திபோஜ
குலராசர்களும்மந்திரதேசாதிபர்களும்புத்திவர்க்கங்களும்மித்திரவேந்தர்களும்
பாண்டிநாட்டரசரும்சோழராசனும் சேரபூபதியும் மற்றதேசாதிபர்களும்இன்
னம்பலபலதேசத்திறைவரும்வன்னவன்னவாகனமேறிவந்தார்கள், அன்னவர்க்
கெல்லாம்மன்னவர்வரிசையிற்சொன்ன வண்ணங்குன்ன லில்லாமலுபசரித்து
ஆசனத்திலமர்த்தினார்கள்வந்தவேந்தர்கள். சிந்தையுவந்துபாண்டவர்களைப்பார்
த்து அந்தோ நீங்கள்பன்னிரண்டாண்டுங்காட்டில்வாசம்பண்ணும்படியாயும்நா
ங்களுங்களைப்பிரிந்திருக்கும்படியாயுநேரிட்டதல்லவா! ஆகா! வினையேயென்று
மனநொந்தார்கள். தம்மைக்குறித்துவெம்மையடைகின்ற தராதிபர்களைத்தரும
ராசன்நோக்கி சகலசாத்திரங்களுங்கற்றசம்பன்னர்களே மேல்வினையெவரையு
மிகுந்திடாதே மேதினியிற்பிறந்த வேதனானாலும்வினைக்குப்புறம்பாய்மீளப்போ
காதே ஆகையால் நடந்துபோன காரியத்தைப்பற்றி விசனப்படுவதினால் லாப
மொன்றில்லை இனிநடக்கவேண்டிய காரியங்களை நன்காராயவேண்டியதென்று
சாந்தமாகப்பேசி ஓ! தரணிபர்களே; தாமரைச்சேக்கையிற்படுத்த அன்
னங்கள் அம்மலர்த்தேன்களானவைந்த இறகுகளைவானத்தில் விரித்துலாவச்
செய்கின்ற வண்மையும் தானத்தைப்பொழியுந் தந்தாவளத்திண்மையும் நீர்
வளநிலவள நன்மையுமுடைய இந்தமச்சராசன்வசந்தகால மன்மதன்போன்ற
மகாராசன் இவருடையநாட்டிற்கு நாங்களெப்போதுவந்தோமோ அப்போதே
காட்டிற்றிரிந்த வருத்தமும் எங்களைமாட்டிவருத்திய தீவினைப்பொருத்தமுங்
கேட்டையடைந்து போய்விட்டது. இந்த அன்பருடைய பேருதவியால் துன்
பகன்றிருந்தோம். முன்பு நான் மாட்டிக்கொண்ட தெவ்வாறென்னில் சுர
லயை பேதமில்லாத சரிகமபதநியென்னும் சப்தசுரதாதுடன் சேர்ந்த குரல்
துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் இவைமுதலிய ஏழிசைப்பாட
லுக்குவிரும்பிவந்துருவாகிய அசுணப்பக்ஷிகளானவைபறையடியோசைகேட்டு
சிறைபாடியயர்ந்து கைப்படுமாறுபோல் விண்ணுக்கிறைவனென்பதுபோன்ற
மண்ணுக்கொருவனெனவாண்ட திரிதராட்டிர மஹாராசனென்னும் எமது
பெரியதந்தையின் வார்த்தையால்மயங்கி துரியோதனன் சகுனி துச்சாதனன்
கன்னன் இவர்கள் கூடியெண்ணிய வஞ்சனையிலகப்பட்டு மாய்ந்தவாறுபோற்
றெய்ந்து வருந்தினேன். இனி நான்செய்யவேண்டிய காரியமென்னை, நீங்க
ளிருவரும் என்னைக்காக்கும்படி கண்ணுக்கிமைபோற் கலந்திருக்கின்றீர்கள்
உங்கள் சித்தம் என்பாக்கியமென்று மெத்தவருந்தியுரைத்த உத்தமன் சொல்
லைக்கேட்ட கொற்றவர்பலரும் பதைபதைத்துஇப்போதிவ்விடத்திற் சேர்ந்திரு
க்கின்ற நாமெல்லோரும் இதுவேபயணமாகப்புறப்பட்டு இன்றைக்கே சண்டை
விளைத்துத் துரியோதனன் மண்டையோலையைக்கிழித்து அவனுக்குத் துணை

வந்தவர்களைக்கொன்றுகழித்துசெயஞ்செயமென்னவென்றுவருவோம்வாருமெ
ன்றுதருமநந்தனன்கருத்திற்குப் பொருத்தமாகவற்புறுத்திச்சொன்னார்கள். இன்
னவாறு மன்னர்மன்னர்கள்பின்னிடையாமல்முன்னிட்டுரைத்த மூர்த்தண்ய
மொழியை விராடர்கோன்கேட்டு சபையைவிட்டெழுந்துசாஷ்டாங்கமாகவிழு
ந்து கோபாலகிருஷ்ணனைச்சிந்தித்து பூபாலவேந்தனைச்சந்தித்து இருகரங்குவி
த்து வந்தித்து தான் சிந்தித்திருந்ததைத் தெரிவித்துக்கொண்டான் அதாவது
இச்சிலங்காக்கு மிறைவர்காள் கேண்மின்மலைகள் மதித்துத்துதித்து வணங்கப்
பூரித்த : யமும் நீதிசாஸ்திர நெறிமுறைப்பயனும் சொற்பொருணயமும் விற்
பன விசயமும் சௌந்தரியமும் கூர்வேல்தாங்குந்தைரியமுமுடையபாண்டவ
சுபுத்ரனென்னும் அபிமன்னராசனுக்கும் என்தவக்கொழுந்தாகிய உத்தரைக்
கும் கலியாணவைபவம் கண்டருளியபிற்பாடுவாளைகள்பாய கமுகம்பாளைகள்
சாயவளிதையருடிமகிழ்நருங்கூடி விளையாடும்வளமாகிய குருநாட்டைச்சண்
டையிட்டுவாங்கப்புறப்படுவோம். அதுவரையில் நீ விரியாவருமன்னிக்கவேண்
டும் மேலும் மாயனுக்கு மருமகனாகவாய்த்த வாளபிமன்னன் எனக்கு மருமக
னாகவாய்க்கின்றமையால் பற்பலதேசாதிபர்கள் இராசாதிபர்கள் வரும்படியே
முன்னைப்பிறப்பிற்செய்தமுதுதவம்இப்பிறப்பிற் கைவல்லியமாச்சென்று சிறப்
புற்றேன்மாலைதாங்கிய வண்புயமோங்கிய மன்னவர்களே! சீக்கிரத்தில் மூகூர்
த்த நடக்கும்படியாகச் செலவுகொடுத்தருள வேண்டுமென்று சந்தன பாளித
புஷ்ப தாம்பூல பலாதிகளுந் தட்டேத்தட்டாய்வைத்து முட்டுப்பாடில்லாமல்
கைகட்டிக்கொண்டு விராடராசன் கேட்டான். அதன்மேல் சகலருஞ்சம்மதி
த்து தருமராசனது தயாநோக்கத்தைநோக்கி அவ்வாறு நடாத்துவதே அதி
கஸ்ய அதிகபலமென்றார்கள். அப்போது அன்புக்கொருவித்தாகிய தரும
ராசன் சொல்லியதும் அவர்மொழியைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி முத
லாகியபேரும் புயங்கள் குவிந்து சுபங்கள்மலிந்து அகமுகமலர்ந்து ஆசைமே
விட்டார்கள். பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம்பண்ணப்புகுந்த காலையிற்பிரிந்த
தௌமியரும் பன்னீராயிரம் பிரமஞானிகளும்வந்தார்கள். அவர்களைக்கண்டு
அன்புமேற்கொண்டு சுவாமிகளே எங்கள்தொண்டு அகன்றதென்று புகன்று
சரண்மேற்பணிந்தார்கள். அவ்வாறு உபசரித்துத்தொழுத ஐவர்கட்கும் ஆசீர்
வதித்து திரௌபதாதேவி வேதிகைசுபத்திரை ரேணுமதி விசயை முதலிய
பேரும்பணிந்தார்கள்; அவர்களுக்கும் மங்களாசாசனஞ்சொல்லி இளம்பஞ்ச
பாண்டவர்கள் வமிசாதேயன் அபிமன்னன் நிர்மித்திரன் செயக்ஷேத்திரன்
முதலியபுத்திரர்களும் பந்திபாய்ப்பணிந்தார்கள். முத்திக்குமூலமாகியமுனி
வரர் வாழ்த்தி முத்திக்கும்புகழும்படி கீர்த்திபெறுங்க ளென்றிசைத்து தரும
நந்தனனைப்பார்த்து ஓ! தவிகளே எம்மைவிட்டு நீங்கி அஞ்ஞாதவாசமிழைத்த
ஒருவருடம்வரையிலும் நடந்த சங்கதி யாவும் உரைத்தருளவேண்டுமென்று
கேட்டார்கள். இப்படியாகக்கேட்ட தௌமியர்முதலிய மகான்களும் மன்ன
வர்களு மகிழ்வுறும்படியாய் நிறைவுறுஞ்செய்திகளைக் குறைவறக்கூறினார்.
இவ்வண்ணந் தருமராசன் சொல்லக்கேட்டுச் சந்தோஷித்து முனிவர்களை
யும் தௌமியாசாரியனையும் பார்த்துக் கைகுவித்து வேதவேதியர்களே நமது

வாளபிமன்னனுக்கும் உத்தரகுமாரத்தியாருக்கும் பாணிக்கிரகணமுகூர்த்தம் நடக்கவேண்டியபடியால்இதற்குத்தகுந்த நாள்வைக்கவேண்டுமென்று தருமராசனும் விராடராசனும் விளம்பினார்கள். அவ்வாறே நன்கென்று நக்ஷத்திரம் இலக்கினம் திதி ஓரை யோகம்கரணம் பொருத்தம்திருத்தமாகிய விவாகசக்கர முதலியவுஞ்சோதித்து, தாங்கள்கற்றுணர்ந்ததருமசாத்திரத்திறங்களெல்லாங் காட்டித் தகுதியான பலங்களூட்டி முகுர்த்தநாள் வைத்தார்கள். அந்தக்கலியாண நாள்வரையிலும் பந்தர்ப்பாடிகள்முதலிய அலங்காரங்கள் பண்ணவேண்டியிருப்பதால் பாண்டவர்களையும் அவர்கட்கு வேண்டியவர்களையும் உபலாவியத்திற்கனுப்பிவைத்து அவ்விடத்திற் சவுக்கியமாயிருக்கும்படிசெய்து சகல சாமக்கிரியைகளும்உடுப்பனமுதலியஉசிதங்களுங்கொடுத்து ஒருநாளைப்போல் பலநாளுஞ்சலிப்பில்லாமல் விசாரணைசெய்துவந்தான். இவ்வாறு தடையற நிறைவேற்றிய விராடராசன்தனது நகரலங்காரஞ்செய்யும்படியாய்ப்பேரிகை முழக்கிவைத்து, கருங்கடற்கலையுடுத்த காசினியையாளுங் காவலர்க்கெல்லாம் கலியாணவோலையுந் தூதும் ஒருமிக்கவிடுத்துவிராடபுரமுழுதும் பவளக்கால் நாட்டி தவளவிட்டம்பூட்டி மரகதவோலைகணிட்டிவச்சிரப்பிரதிமைமாட்டி மாணிக்கமலர்மாலைதூக்கி முத்துக்கொத்துவடங்கள்வீக்கி ஆணிப்பொன்இரேகையமைத்து, தொங்கொளிவட்டம் சுவரொளிவட்டம் நிலவொளிவட்டம் நிழலொளிவட்டமுதலிய தூங்காவிளக்குப்பாங்குறவமைத்து, வாழை கமுகு மாங்கனி பலாக்கனி தாழையிளநீர் சரக்கொன்றையீந்து பாளைகரும்பு பற்பலமலர்களும் இரசிதக்குண்டு சாலர்கள் சடைமாலைகள் தமனியப்படங்கள் நிலக்கண்ணாடி நிலைக்குங்கண்ணாடிகள் முத்தின்பூண்கள் இரத்தினப்பூண்கள் வேடிக்கைமான்கள் விநோத ஆண்கள் வாரணங்குதிரைகள் வத்திரசித்திரங்கள் தோரணநிரைகள் சோடித்தவரைகள் மேல்விதானங்கள் விதவிதக் கொடிகள் பலவிதக்குடைகள் பைம்பொன்மேடைகள் வேதிகைச்சாலைகள் மென்மலர்ச்சோலைகள் கும்பக்குடங்கள் கூடமாடங்கள் விம்பவேடங்கள் வெயில்மணிச்சிகரங்கள் எண்டிசையண்டருங்கொண்டாடச்சமைத்து, சாந்து சந்தனத்தினால் தரையெலாமெழுகி முத்துச்சுண்ணத்தினால் மொக்கிட்டு கலியாணமண்டபக் கவசந்திருத்தி மணவறைமாலைபொருத்தி மதுகரநிறைந்த பூமாலை மகிழ்ச்சி சிறந்தபொன்மாலை வாடாப்பவளமலர்மாலை தேடாப்படிகத்திரண்மாலை ஆணிமுத்துமாலை அழகியரத்னமாலை அரிமரகதப்பசுமாலை அரமின்மாணிக்கமாலை வச்சிரமாலை முதலிய பலவகைமாலைகளும் புகழ்மாலை கண்டு பூமியோர்கொண்டாடச் சோடித்தார்கள். இப்பால் கலியாணவாசலில் சாலுடன்கரகம் முளைப்பாலிகை தழல்வளர்க்குமேடை சூடவிக்குவாடை அரசு ஆல் முருக்கு இம்மூன்றிலொன்றாவது அல்லது இம்மூன்றுஞ் சேர்ந்தாவது நாட்டுவதற்கு அரசாணிக்காலெனப்பெயர்பெற்றதுவும் மாவிலை தருப்பை அறுகு மஞ்சள் குங்குமம் சந்தனம் தாம்பூலம் வாழைப்பழம் தேங்காய் புட்பம் வெல்லம் அக்ஷதை சாம்பிராணி சூடம் சமித்து நெய் இன்னமுள்ள பாலொடுதயிரும் பயறொடு பொரியுமமைத்து நாளையுதயத்தில் பத்து நாழிகைக்கு முகூர்த்தமென்று பாண்டவர்களுக்குத் தெரிவித்துத் தன்னாடு

முதலிய பன்னாட்டுக்கும் பறைசாற்றுவித்தான். இச்சங்கதியைக்கேட்ட
தருமராசன் முதலிய தந்தையர்களும் பந்துவருக்கத்துடன் செயமென்றெ
ழுந்து சிந்தைமகிழ்ந்து தேவாலயம் விஷ்ணுவாலயங்களுக்குப் பூசைகளெல்
லாஞ்செய்து திங்கள்மரபிற்றோன்றிய சிறுவனை மணக்கோலமாகக்கொண்டு
போகவேண்டுமென்று பொங்குந்தடத்துப் புனிதநன்னீரைத் தங்கக்குடத்
திற்றானெடுத்து வந்து சங்கையில்லாத சாத்திரம் பாராட்டி ஓங்கியபுதல்வ
னையுவந்து, நீராட்டி வெண்டுகிலால் நீர்துவட்டிச்சிங்காசனத்திலேற்றிச் சிகை
சிவிவகுந்து சிலம்பணிபுனைந்து தேமலரணிந்து திரிபுண்டரந்தீட்டித்திலகமுங்
காட்டிக்குண்டலமாட்டிப்பச்சைக்கன்முருகிட்டுமுத்தாரமுதலியபொன்னாரம்
வித்தாரப் பதக்கங்களுந் திருமுடிபொருத்தி தங்கச்சஞ்சந்தரித்துப் பாஜி
பந்துதோளணியுடன் காகங்கணங் கடகங்கனையாழிபூட்டி அரைப்பட்டிகை
அரைஞாண் வீரகண்டை முதலியவைகளும் விக்கி திவ்வியவேஷ்டிகளால்
அலங்கரித்து உயரமுஞ்சுற்றும் உன்னதமாக்கி ஏழுறுப்பும் பூமியிற்படிந்து
கிம்புரிப்பூண் கொம்புகட்கிட்டு முகபடாஞ்செறித்து கவுட்குழிக்கன்னமகரி
ரிகை பொறித்துக் கும்பக்கலசஞ் சொம்புடனமைத்து வெண்கவரி செங்கவரி
தூக்கி ஒன்பதுவகை இரத்தின அவுதாவமைத்து அரசக்களிறாகிய பட்டத்து
யானைமேல் அபிமன்னனையேற்றி முத்துக்குச்சுடன்பவளமமைந்தசந்திரவட்ட
க்குடைகவிக்கவெள்ளைக்கொடிகணெருங்க ஆலவட்டஞ்சுருட்டிபீலிக்குஞ்சம்
மேற்கட்டி தோரணமுதலியவைநெருங்க இளம்பஞ்சபாண்டவராஞ்சுபேரும்
பஞ்சவர்ணக்குதிரையேறிப் பக்கத்தில்விடுக்க மத்தகஜத்திலமர்ந்த மற்றப்
பிள்ளைகள் சுற்றுநடக்க பல்லக்கிலேறிய பார்த்திபர்முடுக்க மல்லர்கள் சிலம்ப
வரிசைமுன்கொடுக்க மாதவர் வேதியர் வாணர்களடுக்கக் கீதநாதக்கிளரொலி
தொடுக்கமதகஜபேரிகடன முன்னடிக்கத் துரகஜதுந்துமி சுரஜதியடுக்க ஐந்து
கருவியும் முந்திமுன்னேங்க பந்திபந்தியாய்பந்துஜனவேந்தர் அந்தணர் ஆதுல
ர்க்குத் தானங்கொடுத்துக்கொண்டுபோக மத்தளதாளமேளத்துடன் நாட்டிய
மாதர்கள் நடிக்கச் சங்கு சிங்கநாதக்கொம்புபிடிக்கக் கட்டியக்காரர் மன்னர்
களைச் சுட்டிக்காட்டிக் கொண்டாடப்பட்டுவான்கள் வேந்தர்களின் பிரதாப
விருதுகளை யெடுத்தப்பேசக் குலமுறைவந்திப்போர் தலமுறையடுக்கக் கூறப்
புகழ்வோர்தொடர்ந்து அடர்ந்துவந்தொரங்க இந்திரவாத்தியந் துந்துந்தும்
மென எண்டிசையுஞ்செவிடுபட்டொலிக்க நந்தகோபாலரும்தந்தவண்ணனும்
கோந்தலர்க்கூந்தலார்வந்தவர்பலரும் தேரின்மேலும்வண்டிகள்மேலுஞ்சென்
றார்கள் திரௌபதாதேவியும் சுபத்திராதேவியும் அஷ்டலக்ஷ்மியான பாரியர்க
ளும் ஆயமாதரும் முத்துப்பவளம் மாணிக்கத்தாலமைத்த சித்திரப்பல்லக்கி
லேறிச்செல்ல ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுஞ்சென்றனர். இப்படியாக இவர்கள்வரப்
பார்த்த ஆரியர்களும் சீரியர்களும் பூமாரி பொன்மாரி மணிமாரி நவதானிய
மாரி அக்ஷதையுடன் வாரிச்சொரிந்து வாழ்த்தினார்கள். மங்கிலிப்பெண்டு
கள் மகிழ்ந்து, மஞ்சள் குங்குமம் தாம்பூலம் தேங்காய் வாழைப்பழமுத
லிய மாங்கனி தேங்கனி இவைகளை வருவார்போவாராகிய மங்கையரைப்
பூசித்து, விசுவாசித்துக்கொடுத்துப்போற்றினார்கள்; தண்ணீர்வெந்நீர் ததி

பெருக்கியநீர் உண்ணிருண்ணிரென்று, உபசரித்து வழியிளைப்புமாற்றினார்கள், இவ்வாருகிய எக்களிப்புடன் விவாகமுரசங்களும் தியாகமுரசங்களும் பூரணக்கலசங்களும் தோரணமாடங்களும் வாரணகூடங்களும் ஆரணபாடங்களும் கோபுரவிசேடங்களும் பவளப்பட்டை முத்துப்பட்டை பத்தியாய்ப் பித்தியாய் அடித்திராநின்றசுவர்களும் திண்ணைகளும் தெருவாசல்களும் பனிநீர்தெளித்துக்கோலமிட்டுத் தீபமேற்றிவைத்து, முத்தாலாத்திபவளாலாத்தி நீராலாத்தியெடுத்து, கண்ணெச்சில்கழித்தலும் மங்கல லாலி சுபசோபன வாழிப்பாடல் படித்தலும் கையைச்சுழற்றிமடக்கி கன்னத்தில் நெட்டையொடித்தலும் இப்படிப்பட்ட மணமகன் நமக்கிசையாமற் போனுனென்று கன்னியர்கலங்கிக் கவலைகொண்டு, துடித்தலும் கட்டியிளமாதர் நடித்தலும் இவ்வாருக இன்னம்பலவிதச் சிங்காரவலங்காரங்களையுடைய விராடபுரவீதியைக்கடந்து, பவனிவருகின்ற பரந்தாமன் மருகனைக்கண்டு மாதர்மயங்கி வழிமேற்பணிந்து, மயல்கொள்ளும்படியாய் விவாகமண்டபத்தின் முன்முகப்பிற்கு வந்தார்கள். இவ்வண்ணமாக கோலங்கொண்டுவந்தவர்க ளபிமன்னனைச் செவ்வண்ணமேனிச் திர்ஷ்டத்துய்மனும் திருமாலும் பெருமன்னர்குழுவுங்கை கொடுக்க மேகம்விட்டிழியு மின்னொளிபோல் பட்டத்துயானை விட்டிழிந்து பிராமணர் முனிவர் பாவலர் பூவலர் கோவலர்முதலிய வெவரையும் பணிந்து, குருசாமியார் பெண்கொடுக்கவருமாமியார் இவரிருவரையும்போற்றி அவர்களன்புறவளித்த அருண்மொழியும்பெற்றுச் சம்பிரமமாகச் சதிர்ச்சாலையிலிருந்து, உம்பர்கொண்டாடச் சுவர்ணதானமளித்து, ஓங்கிய தருமதானம்புரிந்து, உற்ருர் பெற்ருர் கற்ருர் பரிந்து உடனிருந்து விருந்து அருந்தச்செறிந்து, வருந்தி உபசாரவரிசையளித்துவரும்வண்மையைக்கண்டு, மகிழ்வுற்ற வாளபிமன்னனை முகுர்த்தசமயமென்று தௌமியர்முதலிய முனீஸ்வரர்கள்வந்தழைத்தார்கள். உடனே கலியாணமாப்பிள்ளையானவர் இராஜவைபவத்துடன் கைலாகுகொடுக்குங் காரியஸ்தர் பக்கத்தினெருங்க மணப்பந்தலில்வந்தார். அப்போதங்கிருந்த வேதவேதியரியாவருமெழுந்து, வேதநான்குமொழிந்து, மன்மதனுந்தலைசாய்க்கும் வடிவமைந்த மால்மருகனை வாளபிமன்னனை அறுகாற்பீடத்திலேற்றி மந்திராட்சதையுடன்வாழ்த்தி மான்போலும்விழியுடைய உத்தரகுமாரத்தியை தேன்போலுஞ்சொல்லமைந்த சேடியர் இரதிதேவியைப்போற் சிங்காரித்து சகலவிதமேளசம்பிரமங்காட்டித் தலைவணங்கா நாணத்துடன்கூட்டிவந்து, நாயகனுக்குவலப்பாகம்வைத்து, திரையான்மறைத்து, நலங்குமுதலிய சடங்குகளும்புரிந்து, நாகரீகமாதர் வாழ்த்தொலிசெய்ய சிலம்பொலிக்காலால் பிரதட்சணம்வந்து அந்தணர்வேதமந்திரமோதச் சந்திரகுலத்திந்திரர்சேரச் சுந்தரக்கனல் சோதியாய்வளர நந்தகுலாதிபர் வந்தனை சொல்லக் கந்தனை கணேசனைக் கமலனைப் பூசித்து, இந்திராதியரையேத்தி வணங்கி மாசுதீர்ப்போனல் மறைநெறிமுடித்துப் பிரமசரிய விரதங்களைந்து ஸ்நானஞ்செய்வித்து முந்நூல்தரித்து வைதிகச்சடங்குமரர்க்கங்காட்டிக்கங்கணங்கட்டி காலாழிமாட்டி கரத்தில் வாள்கொடுத்துக் கருணையாளர்க்குக் கனகமே கொடுத்து மேற்பட்டுடையைவிரித்து, மேன்மூடி விதிமுறைசெவி

யில் விதம்படவுரைத்து தேங்காய் வாழைப்பழம் சிற்சிலபுட்பம் அட்சதை மஞ்சள் அடைகாய் கண்ணாடி சந்தனம் திருமங்கிலியம் இவைகளையெல்லாம் பொற்றாம்பாளத்திலிட்டு, கற்றவர்முதலிய சுற்றவர்பலரும் உற்றார் பெற்றார் உறவினரெவரும் இருகரத்தாலும் பரிசித்து, இஷ்டதெய்வப் பிரார்த்தனையுடன் வாழ்த்தவும் தாய்தந்தையிருவரும் தத்தம்பண்ணவும் மாப்பிளை மைந்தன் குருவைத் தந்தையை வாழ்த்தவும் செந்தீயினெய்யைச்சிதறுமற்கொட்டத் திரைச்சீலையைத்தாழ்த்திச் சற்றேபிடிக்கவும் செயஞ்செயமென்னவும் தேவவுலகத்தினோர்தேமாரிபொழியவும்பங்கஜமுகமாதர்வாழ்த்தவும் அங்குஜயமள்ளர்போற்றவும் எங்கணும் பருணிதர்களேத்தவும் மதகஜதுந்துமியொலிக்கவும் சுரசதிதாளங்கலிக்கவும் சங்குமுழக்கந் தழைக்கவும் திங்கட்குலத்தார் செழிக்கவும் நன்னயவீணை யிசைக்கவும் கீதநாதங்கதிக்கவும் புள்ளாங்குழல்பூரிக்கவும் யாழ்வகைகள் மற்றகருவிகளெல்லாமினையவும் தாரைபூரி வீரசின்னம் தடாரி பம்பை காளம் முரசம் கலியாணமுழவம் சர்வவாத்தியம் இவைகளியாவுங்கோஷிக்கவும் மறைவாணர் இறையவர்கலைவாணர்முதலானவரும் சோமசூரியாக்கினியுஞ்சாட்சியாக தாழ்ச்சியில்லாக்காட்சியுடன் கலியாணங்கண்டருளினார்கள். இப்பால் பெண்ணும் பிள்ளையும் வலமிடமாக மாறியிருந்து ஓமவிதிநடாத்தி அக்கினியிற் பொரியிறைத்து, பூரணாகுதிகொடுத்து, பிரதட்சணம்வந்து, பணிந்து, மாலைமாற்றி மறைவாணரைப்போற்றி மாமுனிவரையேத்தி மங்களாசனங்கொண்டு, பெண்ணும் பிள்ளையும் சுண்டுவிரல் மாட்டி நின்று, நிறைகுடம் வெண்சாமரம் கண்ணாடி யானைக்குடாரி மணிமுரசு விளக்கு விருதுக்கொடி இணைக்கயல் இவைகளாகிய அஷ்டமங்கலமெடுப்பித்து, அம்மிமிதித்து, அருந்ததியைத்தரிசித்துப்பூசித்து, அரசாணிக்காலையும் ஆயிரச்சோதி விளக்கையும் நைவேத்தியத்துடன்தொழுது, மற்றப்பேர்களையும்பணிந்து திருவனையமாதரொடுத்துவராகின்ற திருவிளக்குத்துணையுடன் சிற்றறைக்குட்போந்து, வாழ்த்துதல் ஏசல்நடத்தி பெண்பட்சத்திலும் பிள்ளைபட்சத்திலும் நிந்தாஸ்துதியாகப் பிரதாபம்பேசி பிரபந்தம்படித்து, பாலும்பழமுங்கொடுத்து, மாப்பிள்ளையும் பெண்ணும் மருவியிருக்குஞ்சமயத்தில் அத்தை மாமி அம்மான் முதலியபேர்களும் மச்சான் மச்சினிமார்களும் இச்சையுடன் கொச்சைமொழிபேசி கொடித்து, வெள்ளிலைச்சுருள்மடித்து, குணப்பெண்பிடிக்க மணப்பிள்ளைகடிக்கக் கூசாமற்கொடுத் துக்கோதிவந்தெடுக்க இவ்வாறு இராசவிவாகச்சடங்கின் வண்ணமுடித்து, மஞ்சணீர் வசந்தமாடி மஹோற்சவங்கொண்டாடிச் சந்தன புட்ப தாம்பூல சுகந்த நிறைந்த பந்திச்செண்டுடன் ஆரமுமணிந்து, குந்தாதேவியார்நந்தனராகிய பாண்டவர்கட்கும்மற்றவேந்தர் தமக்கும் பிராமணமாதர்கள்முதலிய இராஜமர்தர்கள் யாவருக்கும் சம்பந்தத்தட்டுடன் மரியாதைத்தாம்பூலமும்வைத்து, எம்மன்னருங்கண்டு, சந்தோஷப்படும்படியாய்ச் சீதனமுங்கொடுத்தார்கள்.

நவரத்னக்கசிதப்பன்கள் கபடாம் விரதண்டை தீரண்டை அவுதாக்களுடன்சேர்ந்த யானைகள் துராமுதலிய முத்துக்குச்சுகள் கழுத்துக்குப்பிகள் துமிச்சிப்பில்லைகள் பாதசரவண்டையங்கள் பின்கவரி முன்கவரி கல்லணைகளுடன்கூடிய குதிரைகள் பொன் வெள்ளி பட்டுகள் முதலியவற்றாலாகிய பெரிய இரதங்கள் கால்பலங்கள் தாதிகள்சேடிகள் தோழிகள் நல்லஆளடிமைகள் பால்பொழிமாடுகள் மேலுயர்ந்த விடுகள் •வளப்பமுள்ளமாடுகள் இளப்பமில்லாக் காடுகள் ஜோதிப்பிரகாசம்பெற்ற ஆபரணத்திரளுகள் பலவித வஸ்திரப்பட்டுப்பட்டாவளிகள் இந்திரநாட்டிலும் பூவேந்தர்நாட்டிலும் அகப்

படாத அருமையான வஸ்துக்கள் சித்திரப்பொம்மைகள் விசித்திரப்பஞ்சணை கள் பெட்டி பேழைகள் தங்கக்கட்டிமாடைகள் பஞ்சலோகப்பாத்திரங்கள் அவள்படித்த சாஸ்திரங்கள் இவைகள்முதலிய யாவும் விராடராசன் தன்மக ளுக்குச் சீதனமாகக்கொடுத்ததைக்கண்டு, இராசராசர்களெல்லாருஞ் சிரக் கம்பஞ்செய்தார்கள். இதன்றியும் இந்தக்கலியாணத்துக்கு வந்த காசாம்பூ வண்ணன்முதலாகிய காவலர்களுக்கும் குந்திதேவியின்புத்திரர்களாகிய பாண் டவர்களுக்கும் விராடபுரத்திலுற்ற சகலருக்கும் வேறுவேறாய் அவரவர்களு டைய ஆசார பூசாவிதிகுலமுறைக்கடுத்ததாய்திருந்திய, போசனமும் வெகு மதிகளும் சந்தன தாம்பூலங்களும் தாழ்ச்சியில்லாமற்கொடுத்து, மரியாதை செய்து, பூசித்தான் நேசித்தான்விசுவாசித்தான் விராடராசனெனவன்; பின்பு க்ஷத்திரிய விதிப்படி ஐந்துநாளும் ஓமஞ்செய்து கங்கணவர்ச்சிதங்காட்டி மங்கள நீரும் ஆட்டி நல்லசுபமுகூர்த்தத்திற்கூடடி காப்புதான முஞ் செய்து, நற்பயன்சேர்ந்த நலம்போற்செறிந்த விற்பனவிவேகிகளாகிய பெண்ணும் பிள்ளையும் சொற்பழுதுறாமல் அற்பமேனும் ஒருவரைவிட்டொரு வர்பிரியாமல் கற்பனையலங்காரம்போற்கலந்து வாழ்வுற்றார்கள்.

மந்திராலோபங் கிரியாலோபமில்லாமல் வளர்த்த ஓமாக்கினியாகத்தால் முப்பத்துமுக்கோடி தேவர்கள் அஷ்டவசுக்கள் திக்குப்பாலர்கள் துவாத சாதித்தர்கள் முதலியபேர்களுந் திர்ப்தியடைந்து, களித்தார்கள். பூசித்தன் புடனளித்த பெரும்பொருட்சுவையால் வேதவேதியராகியசாதியரியாவரு மிக்ககளிப்படைந்தார்கள், கனிந்துநற்கவிசொலுஞ் கவிவாணர்களெல்லாருங் கனகக்கொடையாற் கலிநீங்கிக்களித்தார்கள்காசினிக்குரிய காவல்வேந்தர்கள் கலியாணச்சம்பவங்கண்டு களித்தார்கள், பூமியிலுள்ள பேர்களெல்லோரும் போசனசௌக்கியத்தாற் புகழ்ந்துகளித்தார்கள். தரித்திரர் யாசகர்முதலிய சகலரும் தனத்தாற்கனத்துக்களித்தார்கள். நெறிநிலையற்றவர்கள் நீதியாற் களித்தார்கள், ஸ்ரீகிருஷ்ணதேவராகிய என்னுண்டவனும் பாண்டவர்முத லிய மற்றியாவரும் உத்தரகுமாரத்தியின்சற்குணத்தாற்களித்தார்கள். வரை பகவெறிந்த வள்ளிமணாளனையொத்த அபிமன்னன் உத்தரையின் சரசசல் லாபவுல்லாச இங்கிதக்கலவியமளியாற்கலந்துகளித்துவாழ்ந்திருந்தான், மற்ற அரசர்கள் யாவரும் இஷ்டப்படியிருந்து செலவுபெற்றுக்கொண்டு, தங்கள் தங்கள்பட்டணம் போய்ச்சேர்ந்தார்கள், பிள்ளையும் பெண்ணும் பாண்டவர்க ளும் திரௌபதையும் சுபத்திரையும் உபலாவியஞ்சேர்ந்து, வீற்றிருந்தார் கள். கேளும் செனமேசெயமகாராசனேயென்று வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

பாண்டவர்வெளிப்படுசருக்கம்
முற்றிற்று.

விராடபர்வம் முற்றுப்பெற்றது.
